உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# கந்தபுராணம்.

சுப்பிரமணியசுவாமி வரப்பிரசாதியாயும்
குமரகோட்டத்தருச்சகராயும்
காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருந்த

**கச்சியப்பசிவாசாரியசுவாமிகள்**

அருளிச்செய்தது.

---

இது,
யாழ்ப்பாணத்து நல்லூர்
ஸ்ரீலஸ்ரீ.

**ஆறுமுகநாவலரவர்கள்**

திருத்திவைத்த திருத்தத்தோடு
நாவலரவர்கள் மருகரும், மாணாக்கருமாகிய

**பொன்னம்பலப்பிள்ளையால்**

பிழையறப் பரிசோதித்து,

---

**வை. ஆறுமுகப்பிள்ளையால்**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச்
சைவப்பிரகாசயந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

சுபானு ௵ ஆவணி ௴.

1883.

Digitized By Roja Muthiah Research Library

உ

கணபதி துணை.

# சிவபுராணபடனவிதி.

நால்வகையோனிகளுள் ஒருயோனிவாய்ப்பட்டுப் பிறப்பவை யாவை அவையெல்லாம் பசுக்கள், அப்படிப் பிறத்தலில்லாதது யாது அது பதிப்பொருள் என்னும் இதுவொன்றே எளிதில் அவ்விரண்டுக்கும் தம்முள் வேற்றுமை அறியும்வண்ணம் நிற்பது. ஆதலால், வேதம் புராணம் இதிகாசம் முதலிய நூல்களிலே மற்றைத் தேவர்களெல்லாம் அப்படிப் பிறந்திறத்தல் சொல்லப்படுதலானும், சிவபெருமானுக்கு அது உண்டென்பது எங்காயினும் சொல்லப்படாமையானும், அநாதிமுத்தசித்துருவாகிய முழுமுதற்கடவுள் சிவபெருமானே என்பது தெள்ளிதிற்றுணியப்படும்.

சிவஞானசித்தியார்.

யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக ஞர்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா லிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே.

அருணகிரியந்தாதி.

எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தோநஞ் சோணேச — ரில்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம்.

உ. இப்படித் துணியப்படும் முன்னைப்பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாகிய சிவபெருமானை வேதசிவாகமவிதிப்படி மெய்யன்போடு வழிபடுவோர் சைவசமயிகள் என்றும், சிவனடியார்கள் என்றும் சொல்லப்படுவர்கள். இச்சைவர்கள் பலசமயத்தாருக்கும் பொதுவகையால் வேண்டப்படும் இலக்கணங்களை முன்னே வழுவாது தழுவிக்கொண்டே பின்பு தங்களுக்குச் சிறப்புவகையால் வேண்டப்படும் இலக்கணங்களை உடையர்களாய் ஒழுகல்வேண்டும்.

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST - TAMIL NADU - INDIA
Digitized By Roja Muthiah Research Library

ங. பொதுவிலக்கணங்களாவன கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை, வரைவின்மகளிர் நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். இந் நன்மைகளில்லாத கிரியை ஞானங்கள் சிறிதும் பயன்படாவாம்.

பட்டணத்துப்பிள்ளையார் பாடல்.

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவ ரோடிணங் காமற் கனவினும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

சிவஞானதீபம்.

கொலையாதி நெறியகன்ற ஞானந் தானே
கூறரிய மேலான ஞான மாகுங்
கொலையாதி யகன்றொழுகுந் தவங்க டாமே
குற்றமிலா நற்றவமென் றுரைக்கு நூலுங்
கொலையாதி யகற்றியநல் லறங்க டாமே
குவலயத்தி லொப்பரிய வறங்க ளாகுங்
கொலையாதி யகன்றுபெறுஞ் செல்வந் தானே
கூறினுயிர்க் கிதமான வாழ்வ தாமே.

எவ்வுயிரும் பராபரன்சந் நிதிய தாகு
மிலங்குமுயி ருடலனைத்து மீசன் கோயி
லெவ்வுயிரு மெம்முயிர்போ லென்று நோக்கி
யிரங்காது கொன்றருந்து மிழிவி னோரை
வவ்வியமன் றூதருந் தண்டஞ் செய்து
வல்லிரும்பை யுருக்கியவர் வாயில் வார்த்து
வெவ்வியதீ யெழுநரகில் வீழ்த்தி மாறா
வேதனைசெய் திடுவரென வோது நூலே.

பதிபசுபாசவிளக்கம்.

அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
யிம்மா னுடரெல்லா மின்புற் றிருக்கின்றா
ரம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரயமென்றாற் புசித்தவர்க்கென் சொல்லுவதே.

கங்கையிற் படிந்திட் டாலுங் கடவுளைப் பூசித் தாலு
மங்குல்போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கி னாலுஞ்
சங்கையி லாத ஞான தத்துவ முணர்ந்திட் டாலும்
பொங்குறு புலால்பு சிப்போன் போய்நர கடைவ னன்றே.

கொலையிலா னுதவு மன்னங் கூறிற்பே ரமுத மாகுங்
கொலையுளா னுதவு மன்னங் கூறிற்பேர் விடம தாகும்
புலையர்த மனையி லுண்போன் புலையனு மாறு போலக்
கொலைஞர்த மனையி லுண்போன் கொலைஞனே யாவ னன்றே.

Digitized By Roja Muthiah Research Library

கலையெலா முணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனு
மலையென வுயர்ந்தா னேனு மனமய லகன்று னேனு
முலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கையனேனு
மிலகிய விரக்க மின்றே லெழுநர கடைவ னன்றே.

கூர்மபுராணம்.

கள்விலை பகர்வோர் கள்ளினை நுகர்ந்தோர் கள்ளருந் துதற்குடன் படுவோர்
கள்ளருந் துநரை மகிழுநர் நரகிற் கற்பகா லங்கிடந் தழுந்தி
யெள்ளுறுந் தீய மலப்புழு வாகி மலத்தினை நுகர்ந்துபின் னிறந்து
விள்ளருங் கொடிய ரௌரவ நரகின் மீட்டுமீட் டுழந்துநாள் கழிப்பார்.

திருவிளையாடற்புராணம்.

காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணோ டாத
காமமே களவுக் கெல்லாங் காரணங் கூற்ற மஞ்சுங்
காமமே கள்ளுண் டற்குங் காரண மாத லாலே
காமமே நரக பூமி காணியாக் கொடுப்ப தென்றான்.

௪. சிறப்பிலக்கணங்கள் புறத்திலக்கணம், உடலிலக்கணம், அகத்திலக்கணம் என மூவகைப்படும். அவற்றுள், புறத்திலக்கணம் பத்து; உடலிலக்கணம் பத்து; அகத்திலக்கணம் மூன்று. ஆகச்சிவனடியாரிலக்கணம் இருபத்து மூன்று.

உபதேசகாண்டம்.

செய்ய மேனிச் சிவனடி யார்க்கய
லெய்தக் காணு மிலக்கணம் பத்துள
மெய்யி லெய்து மிலக்கண மெய்மைசா
லையி ரண்டக்த் துள்ளன மூன்றரோ.

அலக்க ணீக்கு மரனடி யார்க்கென
விலக்க ணங்க ளிருபத்து மூன்றுள
பலப்ப டுத்து முதற்படு பத்தையும்
புலப்ப டுத்தி நுமக்குப் புகலுவாம்.

௫. புறத்திலக்கணம் பத்தாவன விபூதி உருத்திராக்ஷம் என்னுஞ் சிவசின்னங்களைத் தரித்தல், குருவை வழிபடல், சிவபெருமானைத் தோத்திரஞ்செய்தல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவபெருமானைப் பூசைசெய்தல், சிவதருமங்களைச் செய்தல், சிவபுராணங்களைக் கேட்டல், சிவாலயதரிசனஞ்செய்தல், சிவனடியாரிடத்தன்றிப் பிறரிடத்துப் போசனம்பண்ணாமை, சிவனடியார்களுக்குக் கொடுத்தல் என்பவைகளாம்.

உபதேசகாண்டம்.

வாசப் பூதி யுருத்திர மாமணி
பூசிப் பூணல் குரவரைப் பூசித்த
லாசைப் பாட்டி னரனைப் புகழுத
லீசற் குள்ளன நாம மியம்புதல்.

Digitized By Roja Muthiah Research Library

எந்தை யீச னருச்சனை யோம்புத
றந்தி ரச்சிவ தன்மம் புரிகுதன்
முந்தை யோன்கதை கேட்டன் முறைமையாற்
புந்தி கூர்ந்தர னாலயம் போற்றுதல்.

ஒத்த பத்த ரிடத்தல தோரிடந்
துய்த்த னீத்தலத் தொண்டரிற் றொண்டராய்ச்
சித்த மன்புற வீதன்முன் செப்பிய
பத்து மீங்கிவை காணப் படுதிரால்.

௬. உடலிலக்கணம் பத்தாவன சிவபெருமானுடைய பெருமையைச் சிந்திக்குந்தோறும் பேசுந்தோறும் கண்டம் விம்முதல், நாக்குத்துடித்தல், உதடு துடித்தல், சரீரநடுங்குதல், உரோமஞ் சிலிர்த்தல், குறுவேர்வை கொள்ளல், நாக்குத் தழுதழுத்தல், ஆனந்தக்கண்ணீர் சொரிதல், வாய்விட்டழுதல், பரவசமாய்த் தன்னை அயர்த்தல் என்பவைகளாம்.

உபதேசகாண்டம்.

தொண்டர் மெய்யிற் றுலங்கு மிலக்கண
முண்டொர் பத்தென் றுரைத்த துரைக்குதுங்
குண்டை யூர்தி சிவத்தியல் கூறுங்காற்
கண்ட முற்றொரு விம்மிதங் காட்டுதல்.

ஏத்து மெந்தை யியற்கை யுணர்தொறு
நாத்து டித்தெழும் பாமை நகைப்புறம்
பூத்த முத்தந் துடித்தல்வி பூதிகொண்
டார்த்த ணிந்ததன் னங்கங் குலுங்குதல்.

மயிர்ப்பு றம்புள கித்தல் வரன்முறை
வியர்த்த றன்வச மன்றி விளம்புநாப்
பெயர்த்தி டாமையா னந்தப் பெருங்கணீ
ரயற்ப டுத்துதல் வாய்விட் டழுதலே.

பரவ சத்தின னாகிப் படர்சடை
யரனு ளப்படத் தன்னை யயர்க்குதல்
விரவு பத்தும் விடுத்துரைத் தோமிவை
வரமு னித்தலை வீர்மனக் கொள்விரால்.

௭. அகத்திலக்கணம் மூன்றாவன பஞ்சாக்ஷரத்தை மானதமாகச் செபித்தல், மானதபூசை, சிவபெருமானைத் தன்னோடு பிரிவறக் காண்டல் என்பவைகளாம்.

உபதேசகாண்டம்.

உளத்தி லக்கண மூன்றென் றுரைத்தன
மளக்கி னஞ்செழுத் துன்ன லகப்பட
வளர்க்கு மானத பூசனை மைக்கடுக்
களத்த னைத்தனை யொன்றெனக் காண்குதல்.

Digitized By Roja Muthiah Research Library

அ. இவ்விருபத்து மூன்றிலக்கணங்களுள் ஒன்றாகிய சிவபுராணங் கேட்டல் தான் ஓரிலக்கணமாய் நிற்றலன்றித் தன்னையும் தன்னையொழிந்த சிறப்பிலக்கணங்களையும் மற்றைப் பொதுவிலக்கணங்களையும் வருவித்தற்குக் கருவியாயும் நிற்றலுடையது. யாதினாலெனின், விபூதி ருத்திராக்ஷதாரணம் முதலிய புண்ணியங்களையும் அவற்றின் பயனாகிய இன்பத்தையும் கொலை முதலிய பாவங்களையும் அவற்றின் பயனாகிய துன்பத்தையும் அறிவிப்பது சிவபுராணமாகலினென்க. ஆதலால், சைவசமயிகள் யாவரும் சிவபுராணங்கேட்டல்வேண்டுமென்பது துணிவு.

கூ. புராணங்கள் பதினெட்டு. அவையாவன பிரமபுராணம், பதுமபுராணம், வைணவபுராணம், சைவபுராணம், பாகவதபுராணம், பவிடியபுராணம், நாரதீயபுராணம், மார்க்கண்டேயபுராணம், ஆக்கினேயபுராணம், பிரமகைவர்த்தபுராணம், இலிங்கபுராணம், வராகபுராணம், காந்தபுராணம், வாமனபுராணம், மற்சபுராணம், கூர்மபுராணம், காருடபுராணம், பிரமாண்டபுராணம் என்பனவாம். இப்பதினெட்டும் நாலிலக்ஷத்தெண்ணாயிரங்கிரந்தமுடையன.

க0. அவற்றுள், சைவபுராணம், பவிடியபுராணம், மார்க்கண்டேயபுராணம், இலிங்கபுராணம், காந்தபுராணம், வராகபுராணம், வாமனபுராணம், மற்சபுராணம், கூர்மபுராணம், பிரமாண்டபுராணம் என்னும் பத்துஞ் சிவபுராணங்கள். இவற்றுள், சைவபுராணம் இருபத்துநாலாயிரங்கிரந்தமும், பவிடியபுராணம் முப்பத்தோராயிரங்கிரந்தமும், மார்க்கண்டேயபுராணம் முப்பத்தீராயிரங்கிரந்தமும், இலிங்கபுராணம் பதினோராயிரங்கிரந்தமும், காந்தபுராணம் இலக்ஷங்கிரந்தமும், வராகபுராணம் இருபத்துநாலாயிரங்கிரந்தமும், வாமனபுராணம் பதினாலாயிரங்கிரந்தமும், மற்சபுராணம் பதினாலாயிரங்கிரந்தமும், கூர்மபுராணம் ஆறாயிரங்கிரந்தமும், பிரமாண்டபுராணம் பன்னீராயிரங்கிரந்தமுமுடையன. ஆகச் சிவபுராணம் பத்துக்குங் கிரந்தம் இரண்டிலக்ஷத்தறுபத்தெண்ணாயிரம்.

கக. காருடபுராணம், நாரதீயபுராணம், வைணவபுராணம், பாகவதபுராணம் என்னு நான்கும் விட்டுணுபுராணங்கள். இவற்றுள், காருடபுராணம் ஆறாயிரங்கிரந்தமும், நாரதீயபுராணம் இருபத்தையாயிரங்கிரந்தமும், வைணவபுராணம் ஆறாயிரங்கிரந்தமும், பாகவதபுராணம் பதினெண்ணாயிரங்கிரந்தமுமுடையன. ஆக விட்டுணுபுராண நான்கிற்குங் கிரந்தம் ஐம்பத்தையாயிரம்.

கஉ. பிரமபுராணம் பதுமபுராணம் என்னுமிரண்டும் பிரமபுராணங்கள். இவற்றுள், பிரமபுராணம் பதினாயிரங்கிரந்தமும், பதுமபுராணம் ஐம்பத்தையாயிரங்கிரந்தமுமுடையன. ஆகப் பிரமபுராணம் இரண்டிற்குங் கிரந்தம் அறுபத்தையாயிரம்.

கங. ஆக்கினேயம் அக்கினிபுராணம். இது எண்ணாயிரங்கிரந்தமுடையது.

Digitized By Roja Muthiah Research Library

கச. பிரமகைவர்த்தம் சூரியபுராணம். இது பன்னீராயிரங்கிரந்தமுடையது.

கரு. சிவபுராணம் பத்தும் சாத்துவிகங்களாம். சத்துவகுணம் வெண்ணிறமுடையதும் சுகத்துக்கும் ஞானத்துக்கும் இடமுமாம். யோகிகளுக்கு ஞானம் உபதேசிக்குஞ்சிவபெருமான் தெளிபளிங்குவடிவினராய் எங்குமுறங்காது பிராமணுதிபதியாயிருப்பர்.

கசு. விட்டுணுபுராணநான்கும் தாமசங்களாம். தமோகுணம் கருநிறமுடையதும் உதாசீனரூபமும் கூடகிருத்தியசமர்த்தமுமாம். நித்திரை, சோம்பு, பிரமாதம், வஞ்சனம் முதலியவைகள் தாமசங்கள். விட்டுணு கரியரும் சேஷசயனஞ்செய்வோரும் பத்தரை மோகிப்பிப்பவருமாயிருப்பர்.

கஎ. பிரமபுராணம் இரண்டும் இராசசங்களாம். இரசோகுணம் சிவந்தநிறமுடையதும் துக்கத்துக்கிடமும் சஞ்சலரூபமுமாம். பிரமாச் செந்நிறமுடையராய்ச் சஞ்சலரூபியாயிருப்பர்.

கஅ. அக்கினிபுராணமும் சூரியபுராணமும் திரிகுணயுத்தமாம். அக்கினியுஞ்சூரியனும் முக்குணவடிவினராயிருப்பர்.

ககூ. ஆதலால், இப்பதினெட்டினுள்ளுஞ் சிவபுராணங்கள் பத்துமே உயர்ந்தனவாம். ஆகையாற் சிவனடியார்கள் சிவபுராணங்களையே விதிப்படி மெய்யன்போடு கேட்கக்கடவர்கள்.

உபதேசகாண்டம்.

நடத்து மூவறு சரிதையுண் முக்கணன் சரிதைநா யகமென்றே
யெடுத்து ரைப்பது சுருதிமற் றுகம மிப்படி யெடுத்தோதுங்
கடுக்க ளத்தனுக் கன்புடைத் தாகிய புராணகா தையை யன்றோன்
றெடுத்த சோதிமா மயமெனப் பகர்வர்நற் றொண்டரிற் றலைநின்றோர்.

வேட்டு நிற்சிவ பதவியே வேட்டுற விரும்பிக்
கேட்டு நிற்சிவ புராணமே கேட்டுற விழைகொண்
டாட்டு மன்பதை யீறுகண் டந்தகன் றூதர்
வீட்டு முன்னரே சிவத்தினில் விருப்புற வேண்டும்.

உ0. சிவபுராணம் படித்துப் பொருள் சொல்லுதற்கு உரிய இடங்களாவன தேவாலயம், திருமடம், நதிக்கரை, குளக்கரை, திருநந்தனவனம், யாகசாலை முதலிய சுத்தஸ்தானங்களாம்.

உபதேசகாண்டம்.

புண்ணி யச்சிவ புராணமோ திப்பொருள் விரிப்பி
னண்ண லாலய நதிக்கரை குளக்கரை யன்றேன்
மண்ணு றுந்திரு மடமெனு மித்தலை மருவிக்
கண்ணு தற்பர னைத்தொழு தோதுறக் கடவார்.

Digitized By Roja Muthiah Research Library

பிரமோத்தரகாண்டம்.

மூவ ராதி முழுதுல கத்துள
தேவர் வாழுஞ் சினகர முன்னருந்
தூவு தண்ணற வுண்டு சுரும்பிமிர்
பூவர் சோலைப் புனித விடத்தினும்.

தீதி லாத செழுநதி தீரத்துங்
கோதி லார்கள் குழீஇய விடத்தினும்
வேத வேதியர் வேள்வித் தலையினு
மாதி மாதவ ரம்மனை முற்றத்தும்.

மற்றும் வேறுள புண்ணிய மல்குசீ
ருற்ற தெவ்விட மவ்விடத் தோதுவர்
பற்றி நாளும் பரமன் றிருக்கதை
முற்று மோதி முழுதுணர் கேள்வியார்.

உக. சிறியோர்கள் களிக்குமிடத்திலும், சூதாடுமிடத்திலும், பெண்கள் உண்டாட்டுச் செய்யுமிடத்திலும், அறிவில்லாதவர்கள் இருக்குமிடத்திலும் புராணம் படிக்கலாகாது.

பிரமோத்தரகாண்டம்.

சிறியர் தீக்களி செய்யு மிடத்தினு
மறிவி லாளர்சூ தாடு மரங்கினு
முறவில் வஞ்சிய ருண்டாட் டிடத்தினும்
பொறியி லாளர் பொருந்து மிடத்தினும்.

கம்ப மால்கரி நல்கினுங் கண்ணக
னிம்பர் நாடு முழுவது மீயினுஞ்
செம்பொன் மாரி பொழியினுஞ் செஞ்சடை
நம்பன் காதை நயந்து நவிற்றிடார்.

உஉ. திருக்கோயிலிலே சிவபுராணமண்டபஞ்செய்வித்து, அதிலே சிவபுராணபுத்தகத்தைப் பீடத்தின்மீது வைத்து, நாடோறும் விதிப்படி பூசை செய்துகொண்டுவரின், அது கோடிசிவலிங்கப் பிரதிட்டைக்குச் சமமாகும்.

உபதேசகாண்டம்.

எந்தை கோயிலுட் டிருமுறை மண்டப மெடுத்துத்
தந்த பீடிகைத் தலத்தினிற் றிருமுறை தந்து
சிந்தை யன்பினோ டாங்கதற் கருச்சனை செய்தா
லுந்து மேற்றினன் பிரதிட்டை கோடியொப் புறுமால்.

உங. சிவபுராணம் படித்துப் பொருள் சொல்லுதற்கு அதிகாரிகளாவார் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நான்குவருணத்துட் பட்டவராய், உடற்குற்றங்களில்லாதவராய், நல்லொழுக்கமுடையவராய், நிகண்டு கற்று இலக்கியவாராய்ச்சி செய்து இலக்கணநூலிற்பயின்றவராய், நீதிநூல்களையும் சைவநூல்களையும் ஓதியுணர்ந்தவராய், சந்தியாவந்தனம் சிவபூசை முதலிய நித்தியகருமங்களைத் தவறாமல் விதிப்படி சிரத்தையோடு செய்பவராயுள்ளவர்.

Digitized By Roja Muthiah Research Library

உபதேசகாண்டம்.

பெருகுநூற் புராண மோதிப் பிரித்துரைத் திடுவோ னன்கு
வருணத்தி லொருவ னாகிப் பொறையொடு மரபி னோங்கி
முருகவே ளடிக்கீழ்த் தொண்டு முயன்றவ னாகி யம்பொற்
றிருவொடுந் தனய ரோடுங் கிளையொடுஞ் சிறக்க வேண்டும்.

சிவஞானதீபம்.

நிலையுறுதி யாசார மொழுக்கஞ் சீல
  நிறையறிவு கருணைதவ நெறிநி லாமற்
கொலைகளவு கட்காம முதலா வுள்ள
  கொடும்பவமே தவமாகக் கொள்ளுந் தீயோ
ருலைவிலருஞ் சிவனருணூ லோத லாகா
  தோதினுமங் கவருரைகொள் ளொணாது நீலம்
புலையர்மரு விடுந்தெருவிற் பொல்லாக் கும்பி
  பொருந்தியிடுங் குழியதனுட் பூத்த தாமே.

உச. சிவபுராணஞ் சுபதினத்திற் சுபமுகூர்த்தத்தில் ஆரம்பித்தல் வேண்டும். ஆரம்பிக்குந்தினத்திலும், முடிக்குந்தினத்திலும், திருக்கல்யாண முதலிய சுபசரித்திரங்கள் படிக்குந்தினங்களிலும், சிவபுராணமண்டபத்தைக் கோமயத்தினாலே திருமெழுக்கிட்டுக் கமுகுகளையும் வாழைகளையும் கரும்புகளையும் நாட்டி மேற்கட்டிகட்டி, கொய்யப்பட்ட பட்டுக்களையும் பூமாலைகளையுந்தூக்கி அலங்கரித்தல்வேண்டும். சிவபுராணபோதகர் நாடோறும் ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரமிரண்டு தரித்துச் சந்தியாவந்தனமுஞ் சிவபூசையும் முடித்துக்கொண்டு, சிவபுராணபுத்தகத்தைப் பீடத்தின்மீது வைத்துச் சந்தனம் புட்பம் தூபம் தீபம் முதலியவற்றினாலே பூசை செய்து நமஸ்காரம் பண்ணி, ஆசனத்திருந்துகொண்டு புராணம் போதித்தல்வேண்டும். அவர் அங்கேயாரையும் அஞ்சலி செய்தலாகாது.

உபதேசகாண்டம்.

மங்கல தினத்திற் றேவ ராலயங் குரவர் வாயில்
பொங்குநீர் நதியின் பாங்கர் புண்ணிய தலங்கண் மன்றந்
தங்குகோ மயத்தா னீவித் தண்மலர்த் தொடைய னாற்றி
யங்கண்மாக் கரும்பு வாழை தீபமிட் டமையச் செய்து.

பட்டுடை கொய்து நாற்றிப் பசுங்கமு கமைத்துப் பின்ன
ரிட்டபொற் பீடந் தன்னிற் புத்தக மினிதி னேற்றி
மட்டுவார் தூபஞ் சாந்த மலரினா லருச்சித் தாங்க
ணட்டவர் கிளைஞ ரோடுங் கேட்பது நன்மைத் தாமால்.

பிரமோத்தரகாண்டம்.

ஓங்கு சீர்த்திருக் காதை யுரைக்குநர்
தாங்கு பீடிகை யின்றித் தரையிரா
ராங்கண் யாரையு மஞ்சலி செய்திடார்
தீங்கி னோநறை சிற்றவை சேர்ந்திடார்.

Digitized By Roja Muthiah Research Library

உரு. சிவபுராணங்கேட்போர் நாடோறும் ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து நித்தியகருமமுடித்துக்கொண்டு புத்தகபூசை முற்றியவுடனே சிவபுராண போதகரைக் கிழக்குமுகமாக ஆசனத்திருத்திச் சிவபெருமானைப் பாவித்துச் சந்தனம் புட்பம் முதலியவைகளினாலே பூசித்து நமஸ்காரஞ்செய்து, சுற்றத்தார்களோடுஞ் சிநேகிதர்களோடும், சித்திரப்பாவைபோல அசைவற மௌனமாக இருந்து, மெய்யன்போடு கேட்டுக்கொண்டு மீட்டும் நமஸ்காரஞ்செய்தல்வேண்டும்.

உபதேசகாண்டம்.

ஏசறு புராண காதை படித்தெடுத் திசைப்போர்க் கென்ன
வாசன மளித்துப் பூவாற் சாந்தத்தா லவர்க்கு வேண்டும்
பூசனை யியற்றி யன்னோர் பூருவ நோக்கி வைக
மாசறு சரிதை கேட்போ னிருப்பது வடக்கு நோக்கி.

பிரமோத்தரகாண்டம்.

நாய கன்கதை நாடொறுங் கேட்குநர்
தூய நீரினிற் றோய்ந்துவெண் ணீறணிந்
தேய நித்த கரும மியற்றிப்பின்
காய வைம்புல னுங்கருத் தொன்றியே.

வல்ல தேசிக னுக்கு மணித்தவி
சொல்லை நல்கி யுறுபொரு ளீந்துநன்
கல்ல வாணி கிளத்த லடங்கிவன்
புல்ல ரானவ ரைப்புறம் போக்கியே.

பத்தி யோடொல்கு பாவகத் தோடுறு
வொத்த நற்றவி சேற லொழித்துநூல்
வித்த கற்குக்கீழ் மென்றவி சொன்றியே
சித்தம் வேறறக் கேட்பது செவ்விதால்.

சிவதருமோத்தரம்.

புத்த கத்தினைப் பூசை புரிகிலார்
சித்தங் கூர்தரத் தேசிகன் றன்னையு
மத்த கைப்பல நீங்குவ தன்றியுங்
கொத்தை சேர்நிர யக்குழி கூடுவார்.

ஆத லாற்புத்த காதி யருச்சனை
காத லாற்செய்க காமுறு வார்பலம்
வேத னாநர கக்குழி வேண்டிலா
ரேதெ னுந்தம சத்திக் கிசையவே.

சைவசமயநெறி.

படிக்கும் பொழுது பணிகுர வன்றுண்
முடிக்கும் பொழுது முயன்று.

உசு. நாடோறும் புராணந் தொடங்கும்போதும் முடிக்கும்போதும் காப்புச்சொல்லல்வேண்டும். காப்புக்கு முன்னும் பின்னும் "திருச்சிற்றம்பலம்" என்று உச்சரித்தல்வேண்டும். காப்புச் சொல்லும்பொழுது யாவருங் கும்பிட்டுக்கொண்டிருத்தல்வேண்டும்.

Digitized By Roja Muthiah Research Library

உஎ. புராணம் வாசிப்பவர் சபையார் யாவருங் கேட்கும்பொருட்டுத் தெளிவு பெற வாசித்தல்வேண்டும். வாசிக்குங்காலத்துக்கும் எடுத்துக் கொண்ட விஷயத்தினது குணத்துக்கும் ஏற்ற இராகத்தில் வாசித்தல்வேண்டும். எச்சுதியில் எவ்விராகத்தில் வாசிக்கப்படுகின்றதோ அச்சுதியில் அவ்விராகத்திற்றானே பொருள் சொல்லப்படல்வேண்டும். இலக்கணப் பிழையில்லாமலும், வெளிப்படையாகவும், இன்றியமையாவிடங்களில் விரிவாகவும் பொருள் சொல்லல்வேண்டும்.

உஅ. சிவபுராணபோதகரைச் சிவபெருமானாகப் பாவியாது மனுஷராகப் பாவிப்போரும், சிவபுராணம் படிக்குஞ்சபையிலே உயர்ந்த ஆசனத்திருப்போரும், காலை நீட்டிக்கொண்டிருப்போரும், சயனிப்போரும், நித்திரை செய்வோரும், வெற்றிலை பாக்குண்போரும், உடம்பு போர்த்துக்கொள்வோரும், பிறவார்த்தைகளைப் பேசுவோரும், குதர்க்கஞ் செய்வோரும், பொறாமையினாலே பிறிது பொருளைக் கற்பிப்போரும், அன்பின்றிக் கேட்போரும், சிரிப்போரும், இடையில் எழுந்து பிறிது கருமத்திலே செல்வோரும், புராணத்தைப் பொய்யென்போரும் நெடுங்காலம் நரகங்களிலே கிடந்து துன்பம் அநுபவித்துப் பின்பு இழிவாகிய பிறப்புக்களிலே பிறந்து வருந்துவர்கள்.

உபதேசகாண்டம்.

அறந்த ருஞ்சிவ புராணமோ துறுமவை யகத்துப்
பிறங்கு வெள்ளிலை நுகர்பவர் பிறமொழி பகர்வா
ருறங்கு கின்றவர் நீட்டுறுங் காலின ருவற்றைத்
திறம்பு பொய்மையென் றுரைப்பவர் களிபடச் சிரிப்போர்.

இழுதை மாக்கண்மற் றீங்கிவ ரிறுதியிற் றென்பாற்
செழுக நீடிய நெடுங்குழிச் செலற்கரு நிரயத்
திழிவ ராங்கது விழுங்கிமீண் டெதிரெடுத் துமிழ
வழுவி மற்றது விழுங்குற வருந்துவர் நெடுநாள்.

பிரமோத்தரகாண்டம்.

எக்கு லத்தவ ரையினு மீர்ஞ்சடை
மூக்க ணன்கதை யோது முதல்வனை
மக்க ளுள்ளிவ னும்மக னென்பவர்
கக்கு வாய்புழுக் கான்றிடு நோய்கொள்வார்.

ஆன்ற காதையின் மேல்விருப் பற்றவர்
தோன்று முற்கதை பொய்யென்று சொல்பவர்
மூன்று கோடி நரகத்தின் மூழ்கியே
நான்ற நாவுடை நாய்ப்பிறப் பெய்துவார்.

அன்றிக் கேட்கு மிடத்தழுக் காற்றினாற்
கன்றி வேறோர் பொருளினைக் கற்பிப்பா
ரொன்ற லாத துரைத்தெதிர் வாதிப்பார்
பன்றி யாயிந்தப் பாரி லுதிப்பரே.

Digitized By Roja Muthiah Research Library

அன்பி னிற்கதை கேட்ப தலாற்பிறர்
வன்பி னெய்தி மனம்வைத் துக் கேட்பவர்
துன்ப மெய்து சுடலையி லோங்கிய
வின்ப மில்கனி யெட்டிய தாகுவார்.

கூறு மாக்கதை கூட்டுமு ளுப்பனே
வேறு தங்கரு மத்து விரைந்துபோஞ்
சீறு சிந்தையர் செல்வத்தைத் துய்க்குங்கா
வீறு செல்லா திடையி லிழப்பரே.

மஞ்ச மேறியும் வெள்ளிலை மாந்தியு
நஞ்ச முண்டவர் நற்கதை கேட்குந
ரஞ்சி யோவென் றரற்றிக் கழுநுனைத்
தஞ்ச மாகக் கிடந்து தவிப்பரே.

கயிலை யண்ணல் கதையை நிகழ்த்துழித்
துயில்பு ரிந்திடுந் தொல்வினைப் பாதகர்
வெயில்க ரந்தடு வெங்கொடிக் கஞ்சியே
யயின்முட் காட்டுறை கூகைய தாகுவார்.

படர்ந்த வேணிப் பரமன் றிருக்கதை
கிடந்த சேக்கையிற் கேட்கு மறிவிலோர்
மிடைந்த மால்வரை யுச்சி விடர்புகுந்
தடைந்த மாசுண மாகிப் பிறப்பரே.

ஈசன் காதைசொல் வானன்றி யின்னுமோர்
தேசி கன்பிற னுண்டென்று செப்புமோ
காசு தீர்க்குங் கதைவிளக் கங்கொடு
மாசின் மாக்கண் மனவிரு ணீக்கலால்.

உகூ. சிவபுராணத்தை முதற்றொடங்கி முடிவு வரையும் இடைவிடாது நியமமாகக் கேட்டல்வேண்டும். தினந்தோறும் ஒவ்வொருசிவபத்தருக்கு அன்னங்கொடுத்தல்வேண்டும். புராணம் ஆரம்பித்த காலத்திலும், திருக்கல்யாணமுதலிய சுபசரித்திரங்கள் படித்த காலங்களினும், காண்டங்கள் முடிந்த காலங்களினும், புராணமுடிந்த காலத்தினும், சிவனடியார்களுக்கும் பிராமணர்களுக்கும் இயன்றமட்டும் அன்னதானஞ்செய்து, புராணபோதகருக்குப் பூசை பண்ணி வஸ்திரம் ஆபரணம் முதலியவை கொடுத்தல்வேண்டும். புராணமுடிந்தபின், புராணத்திருமுறையையும் போதகரையும் மங்கலவாத்தியங்கள் ஒலிக்க வீதிவலஞ்செய்வித்தல்வேண்டும்.

உபதேசகாண்டம்.

ஆதிதொட் டீறு காறு முடக்குறு தருளிற் கேட்க
வோதிய புராணத் தெம்மா னுமையினை மணக்கு நாளிற்
காதுவேற் குமரற் கம்பொற் கதிர்முடி கவிக்கு நாளிற்
றீதறு தெய்வ யானை திருமணஞ் சிறக்கு நாளின்.

மறையவர்க் கினிய வேண்டும் போசன மரபி னீந்து
நிறைதமிழ்ப் புராண காதை நிகழ்த்தினோர்ப் பணிந்து போற்றி
யுறுகதிர்ப் பசும்பொ னுடை பொலங்கல னுவந்து நல்கி
நறைகம ழலரிற் சாந்தி னருச்சனை நடத்தல் வேண்டும்.

Digitized By Roja Muthiah Research Library

கo. சிரத்தையோடு சிவபுராணபுத்தகத்தை எழுதிச் சிவனடியார்களுக்குக் கொடுத்தவரும், எழுதித் தம்வீட்டில் வைத்துப் பூசை செய்தவரும், சிவபுராணத்தை வாசித்தவரும், அதற்குப் பொருள் சொன்னவரும், அதனைக் கேட்டவரும் சிவபதத்தையடைவர்.

உபதேசகாண்டம்.

எழுதி யோர்ந்துண ரெம்முறைச் சரிதைகேட் டிருப்பவ ரிரக்கங்கூர்ந்
தழுதல் விம்முத லுத்தடு மாறுத லணிமயிர்ப் புளகெய்தித்
தொழுத லெய்தினோர் பெறுகுவ தியாமலாற் சொலற்கரி தெவர்க்கேனும்
பழுதி லுன்மறை நுனுக்கமு மின்னணம் பகர்வது பல்லூழி.

கள்ளு யிர்த்தபூங் கொன்றையா னருட்சிவ காதை
யெள்ளில் சிந்தையால் விதிமுறை யினிதுகேட் டுவந்து
வெள்ள வார்சடை யெம்பிரான் றிருவருள் விளைவித்
தெள்ள ருங்கதி புகுந்தவர்க் கிலக்கமா ரிசைப்பார்.

ஓது நாவினுங் கேட்பவர் செவிப்புலத் துள்ளுந்
தீதில் சிந்தையோர் சிரத்தினுந் திருவரு ளிரங்கி
மாது பாகனுற் றுறைகுவன் மாதவத் துறையீ
ராத லாற்கதி யடைந்தன கேட்டவை யனைத்தும்.

எழுதி யன்பருக் கீந்தவர் திருமுறை யெழுதித்
தொழுது தம்மனைத் தொகுப்பவர் பெருநலந் துய்த்தீண்
டொழுகு காலம்வீற் றுவ்வொரு கற்பமோ ரெழுத்திற்
கழிவி லாப்பெருங் கயிலையுற் றருங்கதி யடைவார்.

திருச்சிற்றம்பலம்.

---

☞ சகலவேதாந்தங்களின் சாரத்தையும் உள்ளடக்கினதாய் ஐம்பதுகண்டங்களாற் புனையப்பட்டதாய் ஓரிலக்கங்கிரந்தமுடைத்தாயிருக்குங் காந்தபுராணமானது சனற்குமாரசங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விட்டுணுசங்கிதை, சங்கரசங்கிதை, சூரசங்கிதை என ஆறுசங்கிதையுடையது. அவற்றுள், சனற்குமாரசங்கிதை ஐம்பத்தையாயிரங்கிரந்தமும், சூதசங்கிதை ஆறாயிரங்கிரந்தமும், பிரமசங்கிதை மூவாயிரங்கிரந்தமும், விட்டுணுசங்கிதை ஐயாயிரங்கிரந்தமும், சங்கரசங்கிதை முப்பதினாயிரங்கிரந்தமும், சூரசங்கிதை ஆயிரங்கிரந்தமுமுடையன. முப்பதினாயிரங்கிரந்தமுடைய சங்கரசங்கிதை பன்னிரண்டுகண்டமுடையது. அவற்றுள் முற்பட்டது சிவரகசியகண்டம். அது பதின்மூவாயிரங்கிரந்தமுடையதாய், சம்பவகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், உபதேசகாண்டம் என ஏழுகாண்டங்களையுடையதாயிருக்கும். அவற்றுள், முதலாறுகாண்டத்தையும், கச்சியப்பசிவாசாரியசுவாமிகள் கந்தபுராணமெனப் பெயரிட்டுத் தமிழில் அருளிச்செய்தனர். ஏழாவதாகிய உபதேசகாண்டத்தைக் கோனேரியப்பமுதலியார் தமிழில் அருளிச்செய்தனர்.

---

Digitized By Roja Muthiah Research Library

கச்சியப்பசிவாசாரியசுவாமிகள்

# சரித்திரச்சுருக்கம்.

தொண்டைமண்டலத்திற் சிறந்து விளங்காநின்ற காஞ்சிபுரத்தின் கண்ணே, ஆதிசைவர் குலத்திலே, கல்வியறிவொழுக்கங்களினாலுஞ் சிவபத்தி சிவஞானங்களினாலுஞ் சிறப்புற்றோங்கிய காளத்தியப்பசிவாசாரியர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் காஞ்சிபுரத்துள்ள குமரகோட்டத்தருச்சகருள் ஒருவர். அவர் நெடுங்காலம் புத்திரனில்லாமையாற் பெருங்கவலை கொண்டு, புத்திரபாக்கியத்தின்பொருட்டுக் குமரகோட்டத்தின்கண் எழுந்தருளிய பெருங்கருணைக்கடலாகிய சுப்பிரமணியக்கடவுளை விதிப்படி சிரத்தையோடும் உபாசித்துக்கொண்டு வந்தார். வரும்பொழுது, அக்கடவுளது திருவருளினாலே, தமிழ்நாட்டார்கள் சுப்பிரமணியபத்தி பெற்றுய்யும்பொருட்டு, அச்சிவாசாரியருக்கு அவருடைய கற்பினிற்சிறந்த பத்தினியாரது அருமைத்திருவயிற்றின் ஒருசற்புத்திரர் திருவவதாரஞ்செய்தார்.

அப்புத்திரருக்குக் கச்சியப்பர் என நாமகரணஞ்செயப்பட்டது. அவர் ஐந்தாம்வயசிலே வித்தியாரம்பஞ்செயப்பெற்று, சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இரண்டுபாஷைகளையுங்கற்பாராயினர். அன்பு அருள் வாய்மை பொறை அடக்கம் முதலிய நற்குணங்களெல்லாம் அவரோடுடன் பிறந்து அவரோடுடன் வளர்ந்தன. அவர் ஏழாம் வயசிலே உபநயனஞ்செயப்பெற்று, வேதாத்தியயனஞ்செய்வாராயினர். சிலகாலத்துள்ளே சம்ஸ்கிருதத்தில் வேத வேதாங்கங்களையும் தமிழில் இலக்கணவிலக்கியங்களையுங் கற்று வல்லராயினர்.

அவர் சிலகாலமாயபின் சமயதீக்ஷை பெற்று, தமிழ்வேதமாகிய தேவாரதிருவாசகங்களை ஓதுவாராயினர். அதன்பின் விசேஷதீக்ஷை பெற்றுச் சைவாகமங்களிற் கிரியாகாண்டங்களைக் கற்றறிந்துகொண்டார். அதன்பின் நிருவாணதீக்ஷையும் ஆசாரியாபிஷேகமும் பெற்று, சைவாகமத்தின் ஞானகாண்டங்களை ஓதி, அவற்றின் பொருளையும் தேவார திருவாசகங்களின் பொருளையுங்கேட்டு, அப்பொருள் வேதத்தின் ஞானகாண்டங்களாகிய உபநிடதங்களின் பொருளோடு அபேதமாயிருக்கக் கண்டு, அதனைச் சிந்தித்துத் தெளிந்துகொண்டார்.

இவ்வியல்புடையாராய் விளக்கமுற்ற கச்சியப்பசிவாசாரியர் குமரகோட்டத்துச் சுப்பிரமணியக்கடவுளை மெய்யன்போடு பூசை செய்து

Digitized By Roja Muthiah Research Library

கொண்டுவந்தார். ஒருநாட் சுப்பிரமணியக்கடவுள் கச்சியப்பசிவாசாரியருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே, நீ காந்தபுராணத் தாறுசங்கிதைகளுட் சங்கரசங்கிதையின் முதற்கண்டமாகிய சிவரகசியகண்டத்தினுள்ள நமது சரித்திரத்தைக் கந்தபுராணம் எனப் பெயரிட்டுத் தமிழிலே பெருங்காப்பியமாகப் பாடக்கடவாய்" என்று ஆஞ்ஞாபித்து, "திகட சக்கரச் செம்முக மைந்துளான்" என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளினார். உடனே கச்சியப்பசிவாசாரியர் விழித்தெழுந்து, அழலிடைப்பட்ட மெழுகுபோல நெஞ்சநெக்குருக, உரோமஞ்சிலிர்ப்ப, உரை தடுமாற, கரையற்ற இன்பக்கடலின் அழுந்தி, "ஒன்றுக்கும் பற்றாத புழுத்த நாயினுங்கடையனாகிய தமியேனையும் ஒருபொருட்படுத்து வந்தருளிச்செய்த எம்பெருமானாகிய சுப்பிரமணியக்கடவுளது பெருங்கருணைத்திறம் இருந்தபடி என்னே என்னே" என்று ஆனந்தக்கூத்தாடினார்.

மற்றைத்தினத்திலே கச்சியப்பசிவாசாரியர் நித்தியகருமமுடித்துக்கொண்டு, சுப்பிரமணியபூசை செய்தபின், புராணம் பாட ஆரம்பித்தருளினார். நாடோறும் நூறு செய்யுள் பாடி, அவை எழுதப்பட்ட ஏட்டையும், எழுத்தாணியையும், இராத்திரி காலபூசை முற்றியபின் குமரகோட்டத்தடிகளுடைய திருவடிக்கீழ் வைத்துவிட்டுத் திருக்கதவந் திருக்காப்பிட்டுக்கொண்டு தமது திருமாளிகைக்குப் போவார். பிற்றைநாட் காலையிலே நித்தியகருமமுடித்துக்கொண்டு, பூசையின்பொருட்டுத் திருக்கோயிலினுள்ளே புகுந்து, ஏட்டை எடுத்துப் பார்த்து, அதிற்சிலவிடங்களிலே திருத்தப்பட்டிருத்தல் கண்டு, அதனைச் சிரமேற்கொண்டு ஆனந்தபரவசராய்ச் சிறிது பொழுது நின்று பின் பூசை செய்வார்.

இவ்வாறே கச்சியப்பசிவாசாரியர் கந்தபுராணம் பாடி முடித்தபின், அதனைக் குமரகோட்டத்தில் அரங்கேற்றும்பொருட்டுச் சுபதினமுஞ் சுபமுகூர்த்தமும் நிச்சயித்துக்கொண்டு, எங்குமுள்ள சிவனடியார்களெல்லாருக்கும் பத்திரம் விடுத்தருளினார். ஏவலாளர்கள் திருக்கோயிலையும் திருவீதிகளையும் மிக அலங்கரித்தார்கள். சுட்டப்பட்ட சுபதினத்திலே, திருநெறித்தமிழாகிய தேவார திருவாசகங்களில் வல்ல பெரியோர்களும், சிவாகமவிற்பன்னர்களும், வேதவேதாங்கபண்டிதர்களும், தமிழ்ப்புலவர்களும், இராசாக்களும், பிரபுக்களும், பிறருமாகிய எல்லாரும் வந்து கூடினார்கள்.

கச்சியப்பசிவாசாரியர் குமரகோட்டத்தடிகளைப் பூசை செய்து, அவர் சந்நிதானத்திலே மெழுகிப் பீடமிட்டு, அதின்மேற் பட்டை விரித்து, புஷ்பங்களைத் தூவித் தூபங்கொடுத்து ஆசனங்கற்பித்து, கந்தபுராணத் திருமுறையை அதன்மேல் வைத்து அருச்சித்து வணங்கித் துதித்தார். பின்பு இருந்து கொண்டு, "திகட சக்கரச் செம்முக மைந்துளான்" என்னும் முதற்செய்யுளை ஒருமுறை வாசித்து, "திகழ் தசக்கரச் செம்முகம் ஐந்து உளான்" என்றெடுத்து, "விளங்காநின்ற பத்துத்திருக்கைகளும் செவ்விய ஐந்து திருமுகங்களுமுள்ள சிவபெருமானுடைய"

Digitized By Roja Muthiah Research Library

என்று பொருளருளிச்செய்தார். உடனே அங்கிருந்த தமிழ்ப்புலவர்களுள் ஒருவர் "சுவாமிகாள், திகழ் தசம் திகடசம் எனப் புணர்தற்கு விதி தொல்காப்பியமுதலிய இலக்கணநூல்களுள் ஒன்றிலாயினும் இல்லையே" என்றார். அதற்குக் கச்சியப்பசிவாசாரியர் "தாங்கள் கூறியதொக்கும்; ஆயின் இம்முதலடி என்வாக்கன்று; சங்கப்புலவராகிய சுப்பிரமணியக்கடவுளது திருவாக்கு; அவரே எனக்கு இவ்வடியெடுத்துத் தந்தருளினர்" என்றார். அது கேட்ட அப்புலவர் புன்முறுவல் செய்து, "சுப்பிரமணியக்கடவுள் சுவாமிகளுக்கு இவ்வடியெடுத்துத் தந்தருளியது சத்தியமாயின் ஆருக. ஆயினும், அது இரகசியம். அதனை நாங்கள் அங்கீகரிப்பதெங்ஙனம்! அக்கடவுள் சுவாமிகளுக்குத் தோன்றியதுபோல எங்களுக்குந்தோன்றி 'இவ்வடி நாமே எடுத்துக்கொடுத்தருளினோம்' என்று திருவாய்மலர்ந்தருளின் அங்கீகரிப்பேம்; அன்றேல், இதற்கு யாதானுமோர் இலக்கணநூலில் விதி காட்டின் அங்கீகரிப்பேம்; அல்லாக்கால், அரங்கேற்றவொட்டேம்" என்றார். கச்சியப்பசிவாசாரியர் "இவ்விரண்டினுள் ஒன்று நாளைச்செயப்படும்" என்றருளிச்செய்து சபையாரைப் போக்கிவிட்டு, அற்றைத்தினத்திலே திருவமுது செய்யாது, இராத்திரிகாலபூசை முற்றியபின் திருக்கதவந் திருக்காப்பிட்டுக்கொண்டு சந்நிதியிலே தரையிலே சயனித்தருளினார். அப்பொழுது சுப்பிரமணியக்கடவுள் கச்சியப்பசிவாசாரியருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே, சோழதேசத்தில் வீரசோழியம் என்று ஓரிலக்கணநூலிருக்கின்றது; திகழ்தசம் திகடசம் எனப் புணர்தற்கு விதி அந்நூலிற்சந்திபடலத்திற் பதினெட்டாஞ்செய்யுளிலிருக்கின்றது; சோழதேசத்துப் புலவனொருவன் அந்நூலை நாளைக்கு இவ்விடத்திற்கொண்டுவந்து அவ்விதியை எல்லாருக்குங் காட்டுவன்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார்.

மற்றநாட்சபையாரெல்லாருங் கூடியிருந்தபொழுது, கச்சியப்பசிவாசாரியர் தமக்கு முருகக்கடவுள் சொப்பனத்தில் அருளிச்செய்தமையை அவர்களுக்குச் சொல்லியருளினார். உடனே ஒரு புலவர் ஒருபுத்தகங்கையிற்கொண்டு அங்கே வந்தனர். அவரை அங்குள்ளோர்கள் நோக்கி, "நீர் யாவர்? உமது கையிற்புத்தகம் யாது?" என்று வினவினார்கள். அதற்கு அப்புலவர் "நாம் சோழதேசத்துள்ளேம்; இப்புத்தகம் வீரசோழியம்" என்றார். அப்பொழுது முன்னைநாளின் ஆக்ஷேபித்த புலவர் விரைந்து சென்று, அப்புத்தகத்தை வாங்கிச் சந்திபடலத்திற் பதினெட்டாஞ்செய்யுளை வாசித்துத் திகடசக்கரம் என்னும் புணர்ச்சிக்கு விதி அதிலிருத்தலை உணர்ந்து விம்மிதமும் மகிழ்ச்சியுமுற்றனர். மற்றைத்தமிழ்ப்புலவர்களும் ஒருவர் பின் ஒருவராக அதனை வாங்கிப் பார்த்து விம்மிதமும் மகிழ்ச்சியுமுற்றார்கள். இறுதியிலே சோழதேசத்துப் புலவர் அப்புத்தகத்தைக் கச்சியப்பசிவாசாரியர் கையிற்கொடுத்து, சபையாரெல்லாரையும் நோக்கி, "ஆக்ஷேபம் ஒழிந்ததா ஒழிந்ததா!" என்று சொல்லிவிட்டு மறைந்தருளினார். உடனே கச்சியப்பசிவாசாரியர் தமையாண்டருளிய அறுமுகக்கடவுளது பெருங்கருணைத்திறத்தை நினைந்து நினைந்து, சரீரம்

Digitized By Roja Muthiah Research Library

விதிர்ப்புற, மயிர்க்காறேறும் திவலை உண்டாக, என்பெல்லாம் நெக்கு நெக்குருக, மதகிடைப் புறப்படுஞ்சலம்போல ஆனந்தபாஷ்பம் பொழியப் பரானந்தபரவசராய் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது சபையார் எல்லாரும் "இங்ஙனம் எழுந்தருளிவந்த புலவர் குமாரக்கடவுளே" என்று துணிந்து ஆச்சரியமடைந்து, வெயிலிடைப்பட்ட வெண்ணெய் போல மனங்கசிந்துருக உரோமஞ்சிலிர்ப்பக் குறுவேர்வை கொள்ள ஆனந்தவருவி சொரிய ஆனந்தக்கூத்தாடிக் கச்சியப்பசிவாசாரியருடைய பெருமையை நன்குணர்ந்து, அவர் திருவடிகளில் அடியற்ற மரம்போல் விழுந்து நமஸ்கரித்து, அவரைத் தோத்திரஞ்செய்தார்கள். ஆக்ஷேபஞ் செய்த புலவர் கச்சியப்பசிவாசாரியரைப் பலதரமும் நமஸ்கரித்து, "எம்பெருமானே, புழுத்த நாயினுங்கடையேனாகிய தமியேன் சுவாமிகளுடைய மகிமையைச் சிறிதும் அறியாது ஆக்ஷேபித்த பெருங்குற்றத்தைப் பொறுத்து அடியேன்மீது திருவருள் சுரந்தருளுக" என்று அதிவிநயத்தோடு பிரார்த்தித்து, மீட்டும் அடியற்ற மரம்போல் வீழ்ந்து கிடந்தார். கச்சியப்பசிவாசாரியர் எழுந்து, அப்புலவருடைய இரண்டு கைகளையும் தம்முடைய அருமைத்திருக்கைகளினாலே பற்றியெடுத்து இறுகத் தழுவி, "ஐயரே, தங்கள் ஆக்ஷேபத்தினாலன்றோ இச்சபையாரெல்லாருக்கும் திருவருளினுண்மை வெளிப்பட்டது. இதன்பொருட்டுத் தங்களுக்குச் செயற்பாலதாகிய கைம்மாறு யாது! அறியேம் அறியேம்" என்று பாராட்டியருளினர்.

அதன்பின் சபையாரெல்லாரும் நமஸ்கரித்து, "சுவாமிகாள்,இனிப்புராணத்தைத் தடையின்றி அரங்கேற்ற ஆரம்பித்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அங்ஙனமே கச்சியப்பசிவாசாரியர் அரங்கேற்றுவாராயினர். காஞ்சித்திருநகரத்துள்ள ஆதிசைவர்கள் முதலானவர்களுக்கும் கந்தபுராணங்கேட்க வந்த எண்ணிறந்த அடியார்களுக்கும் போசன முதலியவைகளெல்லாம் தொண்டைநாட்டுள்ள இருபத்துநான்குகோட்டத்து வேளாளப்பிரபுக்களுடைய செலவினாலே நடந்தன. எல்லாரும் நியமமாக வந்து பேராசையோடு கேட்கக் கச்சியப்பசிவாசாரியர் தினந்தோறும் புராணம் வாசித்துப் பொருள் சொல்லி ஒருவருஷத்திலே முடித்தருளினர்.

புராணமுற்றுப்பெற்றவுடனே கச்சியப்பசிவாசாரியர் புராணத்திருமுறையை விதிப்படி அருச்சனை செய்து நமஸ்கரித்தார். அப்பொழுது அங்குள்ள எத்திறத்தார்களும் அன்பினோடு விம்மி விம்மித் தண்டாகாரமாக விழுந்து, கச்சியப்பசிவாசாரியரை நமஸ்கரித்தெழுந்து இரண்டு கைகளுஞ் சிரசின்மேலேறிக் குவிய நின்று, துதித்தார்கள். கச்சியப்பசிவாசாரியர் கந்தபுராணத்திருமுறையோடுந் தந்தச்சிவிகையில் எழுந்தருளி, இருபத்துநான்குகோட்டத்துமுள்ள வேளாளப்பிரபுக்களுள்ளே சிலர் சிவிகை தாங்க, சிலர் வெண்சாமரம் வீச, சிலர் குடை கொடி பிடிக்க, நானாவித மங்கலவாத்தியவொலியினாலே திக்குகளெல்லாஞ்

Digitized By Roja Muthiah Research Library

செவிபெட, பிராமணர்கள் வேதகோஷஞ்செய்ய, சிவனடியார்கள் சரவணபவ சரவணபவ என்று சொல்லும் பேரொலி தழைக்க, திருநகரவாசிகள் திருவீதிகடோறுஞ்சுத்திசெய்து வாழைகள் நாட்டித் தோரணங்கள் நிரைத்துப் பூமாலைகள் தூக்கிப் பூரணகும்பங்கள் வைத்துப் பொரி தூவித் திருவிளக்கேற்றி அறுகெடுக்க, தமது அருமைத் திருமேனியிலே தரிக்கப்பட்ட திரிபுண்டரத்தின் அழகையும், உருத்திராக்ஷமாலைகளின் அழகையும், சின்முத்திரையையும், திருக்கண்களினின்று பொழியும் பரமானந்த வாரியையும், அடியார்கள் கண்டு மனநெக்கு நெக்குருக வணங்கித் துதித்து ஆனந்தக்கூத்தாட, திருவீதிவலஞ்செய்து, குமரகோட்டச்சந்நிதியை அடைந்து, சிவிகையினின்றும் இறங்கித் திருமுறையைத் திருக்கோயிலினுள்ளே கொண்டுபோய்த் திருமுன்னே வைத்தருளினார். உடனே எல்லாரும் கச்சியப்பசிவாசாரியரை, அவர் "அமையும் அமையும்" என்ற வழியும் தவிராது, ஆராமையினாலே பலகாலும் நமஸ்கரித்து, "பரம கருணாநிதியாகிய எம்பெருமான் தமிழ்நாட்டாரெல்லாரும் பிழைக்கும் பொருட்டுத் திருவாய்மலர்ந்தருளிய இப்புராணமாகிய திவ்வியாமிர்தத்தை அடியேங்கள் எஞ்செவிவாய் மடுத்து உய்ந்தனம் உய்ந்தனம்" என்று விண்ணப்பஞ்செய்து இன்பமுற்றார்கள்.

தமிழ்நாடெங்குமுள்ள சிவனடியார்களெல்லாரும், இக்கந்தபுராணத்தை மிகப்பாராட்டி, சிரத்தையோடு எழுதுவோரும், வாசிப்போரும், பொருள் சொல்வோரும், கேட்போருமாய், இதன் சொற்சுவை பொருட்சுவைகளை அநுபவித்துப் பேரானந்தப்பெருஞ்செல்வம் அடைந்தார்கள்.

பெருங்கருணைப் பிழம்பாகிய கச்சியப்பசிவாசாரியர் பின்னருஞ் சில காலம் குமரகோட்டத்தடிகளைப் பூசை பண்ணிக்கொண்டும் ஞானநிட்டை செய்துகொண்டும் இருந்து, அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப்பிழம்பாய் நின்ற சிவத்தோடும் இரண்டறக் கலந்தனர்.

இக்கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள், நோய்நீக்கம், செல்வம், புத்திரபாக்கியம், சத்துருஜயம், இராசவசியம் முதலிய பயன்களைத் தாந்தாம் வேண்டியவாறே பெறுவர்கள். இது நெடுங்காலம் பலராலும் அநுபவத்தினால் நிச்சயித்துணரப்பட்ட விஷயம். இது சத்தியம் சத்தியம், முக்காலுஞ் சத்தியம்.

வேலுமயிலுந்துணை.

---

Digitized By Roja Muthiah Research Library

## அபியுக்தர் வாக்கு.

உச்சித மாஞ்சிவ வேதியன் காளத்தி யோங்குமைந்தன்
கச்சியப் பன்செய்த கந்த புராணக் கலைக்கடலின்
மெச்சிய கல்வி மதியும்வெண் டாமரை மேவுமின்னு
மிச்செவி நாவினுக் கின்பா மமுது மெழுந்தனவே.

---

வேதமொடு வேதாங்கம் பயின்று வல்லோன்
விரிந்தசிவா கமமுணர்ந்து மேன்மை பூண்டோன்
போதநிறை சிவமறையோன் காஞ்சி வாழும்
புனிதமிகு கச்சியப்ப குரவ னானோன்
வாதமுறு புலவர்குழா மகிழ்ந்து போற்ற
மதிமலிமா டம்புடைசூழ் குமர கோட்டத்
தேதமறு சகாத்தமெழு நூற்றின் மேலா
யிலகுகந்த புராணமரங் கேற்றி னானே.

---

## திருக்கைலாசபரம்பரைத் தருமபுரஞானசம்பந்ததேசிகராதீனத்துச் சம்பந்தசரணாலயசுவாமிகள் அருளிச்செய்த கந்தபுராணச்சுருக்கம்.

போதமுறு சூதமுனி புகன்ற காந்தப்
புகழ்க்கடலிற் படிந்ததன்கட் பொருளா தான
மேதகுவண் புனலருந்தி வைய முய்ய
வெய்யதுயர்ப் பிறவியெனும் வெம்மை தீரத்
தாதவிழ்பூம் பொழிற்காஞ்சிக் குவட்டி லேறிச்
சலதியமு தினைநிகர்செந் தமிழ தான
காதன்மழை பொழிந்தவருட் கொண்ட லான
கச்சியப்ப னிருபாத முச்சி வைப்பாம்.

---

## சைவாசாரியராகிய படிக்காசுப்புலவர் செய்த தொண்டை மண்டலசதகம்.

அந்தப் புரமு மறுநான்கு கோட்டகத் தாருமொன்றாய்க்
கந்தப் புராணம் பதினா யிரஞ்சொன்ன கச்சியப்பர்
தந்தப் பல்லக்குச் சிவிகையுந் தாங்கியச் சந்நிதிக்கே
வந்தப் புராண மரங்கேற்றி னார்தொண்டை மண்டலமே.

---

Digitized By Roja Muthiah Research Library

## காண்டவகராதி.


| காண்டம். | பக்கம். |
|---|---|
| அசுரகாண்டம் | ௧௭௧ |
| உற்பத்திகாண்டம் | ௩௯ |
| தக்ஷகாண்டம் | ௭௩௫ |
| தேவகாண்டம் | ௭௦௧ |
| மகேந்திரகாண்டம் | ௩௪௭ |
| யுத்தகாண்டம் | ௪௪௯ |


## படலவகராதி.


| படலம். | பக்கம். | படலம். | பக்கம். |
|---|---|---|---|
| அகத்தியப்படலம் ... | ௨௭௭ | அவைபுகுபடலம் ... | ௩௯௨ |
| அக்கினிமுகாசுரன் வதைப்படலம் .. ... | ௫௫௯ | அவையடக்கம் | ௫ |
| அசமுகிசோகப்படலம் | ௩௧௪ | அனந்தன்சாபநீங்குபடலம் | ௮௩௩ |
| அசமுகிநகர்காண்படலம் | ௩௨௧ | ஆற்றுப்படலம் ... | ௭ |
| அசமுகிபுலம்புறுபடலம் | ௩௨௪ | இந்திரபுரிப்படலம் | ௭௨௯ |
| அசமுகிப்படலம் | ௩௦௬ | இந்திரனருச்சனைப்படலம் | ௨௯௩ |
| அசுரர்தோற்றுபடலம் | ௧௮௪ | இந்திரன்கயிலைசெல்படலம் | ௩௦௫ |
| அசுரர்யாகப்படலம் | ௨௧௮ | இந்திரன்கரந்துறைபடலம் | ௨௭௧ |
| அசுரேந்திரன்மகேந்திரஞ்செல்படலம் ... | ௧௪௯ | இந்திரன்மீட்சிப்படலம் ... | ௩௧௭ |
| அடிமுடிதேடுபடலம்... | ௮௯௫ | இந்திராணிமறுதலைப்படலம் | ௩௧௦ |
| அண்டகோசப்படலம் | ௨௩௫ | இரணியன்புலம்புறுபடலம் | ௬௯௫ |
| அதிவீரன்வதைப்படலம் | ௩௫௯ | இரணியன்யுத்தப்படலம் | ௫௪௬ |
| அமரர்சிறைபுகுபடலம் ... | ௩௩௨ | இரண்டாநாட் சூரபன்மன் யுத்தப்படலம் ... | ௪௮௮ |
| அயனைச்சிறைநீக்குபடலம் ... | ௧௧௮ | இலங்கைவீழ்படலம்... | ௩௫௬ |
| அயனைச்சிறைபுரிபடலம் | ௧௧௬ | உபதேசப்படலம் ... ... | ௭௩௫ |
| அயிராணிசோகப்படலம் | ௨௯௮ | உமைகயிலைநீங்குபடலம் | ௭௫௨ |
| அரசுசெய்படலம் ... | ௨௬௧ | உமைதவம்புரிபடலம் ... | ௭௫௮ |
| | | உமைவருபடலம் ... ... | ௮௪௦ |


Digitized By Roja Muthiah Research Library

| படலம். | பக்கம். |
|---|---|
| உருத்திரர்கேள்விப்படலம் | ௨௫௬ |
| எதிர்கொள்படலம் | ௨௫௫ |
| ஏமகூடப்படலம் | ௪௪௯ |
| கடல்பாய்படலம் | ௩௫௨ |
| கடவுள்வாழ்த்து | ௨ |
| கணங்கள்செல்படலம் | ௭௨ |
| கந்தவிரதப்படலம் | ௮௭௫ |
| கந்தவெற்புறுபடலம்... | ௭௨௮ |
| கயமுகனுற்பத்திப்படலம் | ௮௧௨ |
| கயமுகன்வதைப்படலம் | ௩௬௫ |
| காசிபனுபதேசப்படலம் | ௧௮௭ |
| காசிபன்புலம்புறுபடலம் | ௧௭௯ |
| காமதகனப்படலம் | ௫௨ |
| காவலாளர்வதைப்படலம்... | ௪0௮ |
| காவிரிநீங்குபடலம் | ௨௮௬ |
| காளிந்திப்படலம் | ௭௫௬ |
| கிரவுஞ்சப்படலம் | ௨௭௯ |
| குமாரபுரிப்படலம் | ௧௫௭ |
| சகத்திரவாகுகள்வதைப்படலம் | ௪௧௬ |
| சதமுகன்வதைப்படலம் | ௪0௫ |
| சந்திரசாபப்படலம் | ௭௪௭ |
| சயந்தன்கனவுகாண்படலம் | ௩௮௬ |
| சயந்தன்புலம்புறுபடலம் | ௩௭௯ |
| சரவணப்படலம் | ௯௮ |
| சாலைசெய்படலம் ... | ௭௭0 |
| சிங்கமுகாசுரன்வதைப்படலம் | ௬0௯ |
| சுக்கிரனுபதேசப்படலம் | ௨௩௨ |
| சுரம்புகுபடலம் ... ... | ௧௬௫ |
| சூரபன்மன்வதைப்படலம் | ௬௪௮ |
| சூரனகர்புரிபடலம் | ௪௩௧ |
| சூரனமைச்சியற்படலம் | ௪௩௩ |
| சூரனரசிருக்கைப்படலம் | ௩௧௮ |
| சூரன்றண்டஞ்செய்படலம் | ௩௨௬ |
| தகரேறுபடலம் | ௧௧௪ |
| தக்கன்கயிலைசெல்படலம் ... | ௭௬௫ |
| தக்கன்சிவபூசைசெய்படலம் | ௮௭௪ |
| தக்கன்மகப்பெறுபடலம் | ௭௪௧ |
| தக்கன்றவஞ்செய்படலம் | ௭௩௮ |
| ததீசிப்படலம் | ௭௭௪ |
| ததீசியுத்தரப்படலம் | ௭௮0 |
| தருமகோபன்வதைப்படலம் | ௫௮௪ |
| தவங்காண்படலம்... | ௬௫ |
| தாரகன்வதைப்படலம் | ௧௨௭ |
| தானப்படலம் | ௮௩௬ |
| திக்குவிசயப்படலம் | ௨௪௩ |
| திருக்கல்யாணப்படலம்... | ௭௫ |
| திருக்குற்றாலப்படலம் | ௨௯௧ |
| திருக்கைலாசப்படலம் | ௩௯ |
| திருச்செந்திப்படலம் | ௧௬௯ |
| திருநகரப்படலம் | ௧௭ |
| திருநாட்டுப்படலம் | ௧௧ |
| திருப்பரங்குன்றுசேர்படலம் .. | ௭0௧ |
| திருமணப்படலம் | ௭௬௧ |
| திருவவதாரப்படலம் | ௮௪ |
| திருவிளையாட்டுப்படலம் | ௧0௨ |
| துணைவர்வருபடலம் | ௯௪ |
| தெய்வயானையம்மை திருமணப்படலம் | ௭0௩ |
| தேவகிரிப்படலம் | ௧௪௬ |
| தேவரையேவல்கொள்படலம் | ௨௬௩ |
| தேவர்கள்போற்றுபடலம்... | ௬௯௪ |
| தேவர்புலம்புறுபடலம் ... | ௨௯௫ |
| நகரழிபடலம் | ௪௧0 |
| நகர்செய்படலம் | ௨௫௮ |
| நகர்புகுபடலம் ... | ௩௬௯ |
| நகர்புகுபடலம் | ௫௪௧ |
| படையெழுபடலம் | ௧௨௫ |
| பட்டாபிடேகப்படலம் | ௨௬0 |
| பாயிரப்படலம் ... | ௩0 |
| பார்ப்பதிப்படலம்... | ௪௧ |
| பானுகோபன்வதைப்படலம் | ௫௯௧ |
| பிரமயாகப்படலம்... | ௭௬௭ |
| புதல்வரைப்பெறுபடலம் | ௨௧௬ |
| மகாகாளர்வருபடலம் | ௩௧௧ |
| மகாசாத்தாப்படலம்... | ௩00 |
| மகேந்திரஞ்செல்படலம் | ௩௬௨ |
| மணம்பேசுபடலம் | ௬௮ |
| மாயைநீங்குபடலம் | ௨௧௭ |
| மாயைப்படலம் ... | ௧௭௧ |
| மாயையுபதேசப்படலம் | ௨௧௫ |
| மார்க்கண்டேயப்படலம் | ௧௯0 |
| மீட்சிப்படலம் | ௬௯௭ |
| முதனாட்பானுகோபன் யுத்தப்படலம் ... ... ... ... | ௪௫௬ |


Digitized By Roja Muthiah Research Library

| படலம். | பக்கம். | படலம். | பக்கம். |
|---|---|---|---|
| மூவாயிரர்வதைப்படலம் ... | ௫௭௮ | விண்குடியேற்றுபடலம்... | ௭௨௪ |
| மூன்றுநாட்பானுகோபன் யுத்தப்படலம் | ௫௨௩ | விந்தகிரிப்படலம் ... | ௨௭௫ |
| மேருப்படலம் ... | ௪௪ | விந்தம்பிலம்புகுபடலம்... | ௨௮௧ |
| மோனநீங்குபடலம் | ௬௨ | வில்வலன் வாதாவிப்படலம் | ௨௬௮ |
| யாகசங்காரப்படலம் ... | ௮௪௯ | வில்வலன்வாதாவிவதைப்படலம் ... | ௨௮௨ |
| யாளிமுகன்வதைப்படலம்... | ௬௨௭ | வீரசிங்கன்வதைப்படலம் | ௩௫௪ |
| வச்சிரவாகுவதைப்படலம் | ௪௧௮ | வீரபத்திரப்படலம் ... ... | ௮௪௪ |
| வரம்பெறுபடலம் | ௨௨௯ | வீரவாகுகந்தமாதனஞ்செல்படலம் ... ... | ௩௪௭ |
| வரவுகேள்விப்படலம் | ௪௫௩ | வீரவாகுசயந்தனைத்தேற்றுபடலம் ... ... | ௩௮௮ |
| வரைபுனைபடலம் | ௭௦ | வீரவாகுமீட்சிப்படலம்... | ௪௩௦ |
| வழிநடைப்படலம் | ௧௫௫ | வேள்விப்படலம் | ௮௩௯ |
| வள்ளியம்மைதிருமணப்படலம் | ௮௮௮ | | |
| விடைபெறுபடலம் | ௧௨௨ | | |


ஆ படலம் ௧௪௧ க்கு திருவிருத்தம் ௧௦,௩௪௬.

---

☞ தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள்ளே திருக்கோணமலை திருக்கேதீச்சரம் என்னும் இரண்டையும் திருப்புகழ் பெற்ற சுப்பிரமணியஸ்தலங்களுள்ளே கதிர்காமம் என்னும் ஒன்றையும் உடைத்தாகிய ஈழதேசமெங்குமுள்ள சிவாலயம் விக்கினேசுராலயம் சுப்பிரமணியாலயம் என்னும் திருக்கோயில்களெல்லாவற்றினும் இக்கந்தபுராணம் பண்டைக்காலந்தொடங்கி வருஷந்தோறுந் தவறுது வாசித்துப் பொருள் சொல்லப்பட்டுவருகின்றது. அங்கங்குள்ள ஆண் பெண் என்னும் இருபாலாரும் வாசிப்போரையும் பொருள் சொல்வோரையும் வழிபட்டு இதனை நியமமாகக் கேட்டுக்கொண்டுவருகின்றார்கள். இத்தேசங்களினுள்ள திருக்கோயிலதிகாரிகளும் மடாதிபதிகளும் தங்கள் தங்கள் திருக்கோயில்களினும் மடங்களினும் இக்கந்தபுராணத்தை வருஷந்தோறும் வாசித்துப் பொருள் சொல்லும்படி செய்வார்களாயின், இங்குள்ள சைவசமயிகளும் இதனை நியமமாகக் கேட்டுய்வார்களே.

---

Digitized By Roja Muthiah Research Library

Digitized By Roja Muthiah Research Library

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# கந்தபுராணம்.

## விநாயகர் காப்பு.

திகடசக்கரச் * செம்முகமைந்துளான்
சகடசக்கரத்தாமரைநாயக
னகடசக்கரவின்மணியாவுறை
விகடசக்கரன் o மெய்ப்பதம்போற்றுவாம். (க)

உச்சியின்மகுடமின்னவொளிர்தரநுதலினோடை
வச்சிரமருப்பினொற்றைமணிகொள்கிம்புரிவயங்க
மெய்ச்செவிக்கவரிதூங்கவேழமாமுகங்கொண்டுற்ற
கச்சியின்விகடசக்ரகணபதிக்கன்புசெய்வாம். (உ)

---

* திகழ் தசக்கரம் திகடசக்கரமெனப் புணர்ந்தமைக்கு விதி:—வீரசோழியத்துச் சந்திபடலத்திற் பதினெட்டாஞ்செய்யுள் "நான்கொடு மூன்றொன்ப தாமுயி ரின்பின்பு நவ்வருமே - லென்ற ஞகாரம தாம்பதி னைந்தினொ டெண்ணிரண்டாய்த் - தோன்று முடற்பின் றகாரம் வரினிரண் டும்மொருகா - லான்றவைந் தாமுட லாமுன்பி லொற்றுக் கழிவுமுண்டே."

o தக்கன்யாகம் அழிந்தபொழுது விட்டுணு விடுத்த சக்கரத்தை வீரபத்திரக்கடவுள் பூண்ட வெண்டலையொன்று கௌவியது. விட்டுணுவின்பொருட்டு அச்சக்கரத்தைப் பெறக் கருதி, அவருடைய சேனாதிபதியாகிய விடுவசேனன் காஞ்சிபுரத்திற்சென்று, சிவலிங்கந்தாபித்துப் பூசை செய்தான். வீரபத்திரக்கடவுள் அங்கெழுந்தருளியபொழுது விடுவசேனன் அச்சக்கரத்தைத் தரும்படி பிரார்த்திக்க, அவர் "சக்கரம் நமது கையிலில்லை; கபாலம் கௌவியதாயின் எவ்விதத்தாலாயினும் அதுவே தரப் பெற்றுக்கொள்" என்றார். விடுவசேனன் காலிரண்டையும் கையிரண்டையும் வளைத்து வாயையும் நாசியையும் கண்களையும் சுரித்து அசைத்துப் பற்கடோன்ற விகடக்கூத்தாடினான். அதனைக் கண்டோரெல்லாரும் நகைக்க, வெண்டலையும் நகைத்தது. நகைத்தலும், சக்கரம் அதன்வாயினின்றும் பூமியில் விழ, விநாயகக்கடவுள் அதனை விரைந்து கவர்ந்துகொண்டு ஒன்றுமறியாதார்போன்றிருந்தனர். விடுவசேனன் அது கண்டு, அவர் திருமுன்னும் விகடக்கூத்தாடி வேண்ட, அவர் அச்சக்கரத்தை அவன்கைக் கொடுத்தருளினார். இக்காரணத்தால் அவ்விநாயகக்கடவுளுக்கு விகடசக்கரவிநாயகர் என்னுந்திருநாமம் உண்டாயிற்று.

Digitized By Roja Muthiah Research Library

சுப்பிரமணியர் காப்பு.

மூவிருமுகங்கள்போற்றிமுகம்பொழிகருணைபோற்றி
யேவருந்துதிக்கநின்றவிராறுதோள்போற்றிகாஞ்சி
மாவடிவைகுஞ்செவ்வேண்மலரடிபோற்றியன்னான்
சேவலுமயிலும்போற்றிதிருக்கைவேல்போற்றிபோற்றி. (௩)

நூற்பயன்.

இந்திரராகிப்பார்மேலின்பமுற்றினிதுமேவிச்
சிந்தையினினைந்தமுற்றிச்சிவகதியதனிற்சேர்வ
ரந்தமிலவுணர்தங்களடல்கெடமுனிந்தசெவ்வேற்
கந்தவேள்புராணந்தன்னைக்காதலித்தோதுவோரே. (௪)

வாழ்த்து.

வான்முகில்வழாதுபெய்கமலிவளஞ்சுரக்கமன்னன்
கோன்முறையரசுசெய்கக்குறைவிலாதுயிர்கள்வாழ்க
நான்மறையறங்களோங்கநற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள்சைவநீதிவிளங்குகவுலகமெல்லாம். (௫)

# கடவுள்வாழ்த்து.

சிவபெருமான்.

திருவந்ததொல்லைப்புவனத்தொடுதேவர்போற்றிப்
பெருவந்தனைசெய்தறிதற்கரும்பெற்றியெய்தி
யருவந்தனையுமுருவத்தையுமன்றிநின்ற
வொருவன்றனதுபதந்தன்னையுளத்துள்வைப்பாம். (௧)

ஊனாகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானாதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
றானாகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானான்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம். (௨)

வேறு.

பிறப்பதுமிறப்பதும்பெயருஞ்செய்கையு
மறப்பதுநினைப்பதும்வடிவும்யாவையுந்
துறப்பதுமின்மையும்பிறவுஞ்சூழ்கலாச்
சிறப்புடையரனடிசென்னிசேர்த்துவாம். (௩)

பூமலர்மிசைவருபுனிதனாதியோர்
தாமுணர்வரியதோர்தலைமையெய்தியே
மாமறைமுதற்கொருவடிவமாகியோன்
காமருசெய்யபூங்கழல்கள்போற்றுவாம். (௪)

பங்கயன்முகுந்தனும்பரமென்றுன்னியே
தங்களிலிருவருஞ்சமர்செய்தற்றுழி
யங்கவர்வெருவரவங்கியாயெழு
புங்கவன்மலரடிபோற்றிசெய்குவாம். (௫)

Digitized By Roja Muthiah Research Library

காண்பவன்முதலியதிறமுங் * காட்டுவான்
மாண்புடையோனுமாய்வலிகொள்வான்றொடர்
பூண்பதின்றாய்நயம்புணர்க்கும்புங்கவன்
சேண்பொலிதிருநடச்செயலையேத்துவாம். (௬)

## சிவசத்தி.

செறிதருமுயிர்தொறுந்திகழ்ந்துமன்னிய
மறுவறுமரனிடமரபின்மேவியே
யறுவகைநெறிகளும்பிறவுமாக்கிய
விறைவிதன்மலரடியிறைஞ்சியேத்துவாம். (௭)

## விநாயகக்கடவுள்.

மண்ணுலகத்தினிற்பிறவிமாசற
வெண்ணியபொருளெலாமெளிதின்முற்றுறக்
கண்ணுதலுடையதோர்களிற்றுமாமுகப்
பண்ணவன்மலரடிபணிந்துபோற்றுவாம். (௮)

## வைரவக்கடவுள்.

பரமனைமதித்திடாப்பங்கயாசன
னொருதலைகிள்ளியேயொழிந்தவானவர்
குருதியுமகந்தையுங்கொண்டுதண்டமுன்
புரிதருவடுகனைப்போற்றிசெய்குவாம். (௯)

வெஞ்சினப்பரியழன்மீதுபோர்த்திடு
மஞ்சனப்புகையெனவாலமாமெனச்
செஞ்சுடர்ப்படிவமேற்செறித்தமாமணிக்
கஞ்சுகக்கடவுள் 0 பொற்கழல்களேத்துவாம். (௧௦)

## வீரபத்திரக்கடவுள்.

அடைந்தவியுண்டிடுமமரர்யாவரு
முடிந்திடவெருவியேமுனிவர்வேதிய
ருடைந்திடமாமகமொடியத்தக்கனைத்
தடிந்திடுசேவகன்சரணம்போற்றுவாம். (௧௧)

## சுப்பிரமணியக்கடவுள்.

இருப்பரங்குறைத்திடுமெஃகவேலுடைப்
பொருப்பரங்குணர்வுறப்புதல்விதன்மிசை
விருப்பரங்கமரிடை ‡ விளங்கக்காட்டிய
திருப்பரங்குன்றமர்சேயைப்போற்றுவாம். (௧௨)

சூரலைவாயிடைத்தொலைத்துமார்புகீண்
டீரலைவாயிடுமெஃகமேந்தியே
வேரலைவாய்தருவெள்ளிவெற்பொரீஇச்
சீரலைவாய்வருஞ்சேயைப்போற்றுவாம். (௧௩)

---

* காண்பவன் முதலிய திறமென்றது காண்பான், காட்சி, காட்சிப்பொருள் என்னுமூன்றையும்.

0 வைரவக்கடவுள் வாமனரூபங்கொண்டு தருக்குற்ற விட்டுணுவினது நீலநிறத்தையுடைய தோலை உரித்துச் சட்டையாக்கித் தரித்தவரென்றறிக.

‡ அரங்கல் - அழிதல்.

Digitized By Roja Muthiah Research Library

காவினன்குடிலுறுகாமர்பொன்னகர்
மேவினன்குடிவரவிளியச்சூர்முதல்
பூவினன்குடிலையம்பொருட்குமாலுற
வாவினன்குடிவருமமலற்போற்றுவாம். (கச)

நீரகத்தேதனைநினையுமன்பினோர்
பேரகத்தலமரும்பிறவிநீத்திடுந்
தாரகத்துருவமாந்தலைமையெய்திய
வேரகத்தறுமுகனடிகளேத்துவாம். (கரு)

ஒன்றுதொருடலையொருவியாவிமெய்
துன்றுதொருடலைத்தொடங்கியைவகை
மன்று * தொருடியவள்ளல்காமுறக்
குன்றுதொருடியகுமரற்போற்றுவாம். (கசா)

எழுமுதிரைப்புனத்திறைவிமுன்புதன்
கிழமுதிரிளநலங்கிடைப்பமுன்னவன்
மழமுதிர்களிறெனவருதல்வேண்டிய
பழமுதிர்சோலையம்பகவற்போற்றுவாம். (கள)

ஈறுசேர்பொழுதினுமிறுதியின்றியே
மாறிலாதிருந்திடும்வளங்கொள்காஞ்சியிற்
கூறுசீர்புனைதருகுமரகோட்டம்வா
ழாறுமாமுகப்பிரானடிகள்போற்றுவாம். (கஅ)

## திருநந்திதேவர்.

ஐயிருபுராணநூலமலற்கோதியுஞ்
செய்யபன்மறைகளுந்தெரிந்துமாயையான்
மெய்யறுசூள்புகல்வியாதனீட்டிய
கையடுநந்திதன் o கழல்கள்போற்றுவாம். (ககூ)

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்டைவல்வினையினாற்பாயுடுத்துழல்
குண்டரைவென்றுமுன்கூடல்வைகியே
வெண்டிருநீற்றொளிவிளங்கச்செய்திடு
தண்டமிழ்விரகன்மெய்த்தாள்கள்போற்றுவாம். (உ0)

## திருநாவுக்கரசுநாயனார்.

பொய்யுரைநூல்சிலபுகலுந்தீயமண்
கையர்கள்பிணித்துமுன்கடலகத்திடு
வெய்யகற்றோணியாய்மிதப்பமேற்படு
துய்யசொல்லரசர்தாடொழுதுபோற்றுவாம். (உக)

---

* பஞ்சசபைகளாவன திருவாலங்காட்டில் இரத்தினசபையும், தில்லையிற் கனக சபையும், மதுரையின் வெள்ளிச்சபையும், திருநெல்வேலியிற்றாமிரசபையும், திருக்குற்றாலத்திற் சித்திரசபையுமாம்.

o வியாசமுனிவர் காசியிலே விசுவநாதர்சந்நிதியில் இரண்டுகைகளையும் உயர்த்தி நின்று விட்டுணுவே பரப்பிரமம் என்று சொல்லியபொழுது திருநந்திதேவர் கோபங்கொண்டு அக்கைகள் எடுத்தவண்ணமே அசைவற நிற்கும்படி சபித்தருளினார்.

Digitized By Roja Muthiah Research Library

சுந்தரமூர்த்திநாயனார்.

வறந்திடுபொய்கைமுன்னிரம்பமற்றவ
னுறைந்திடுமுதலைவந்துதிப்பவன்னதா
லிறந்திடுமகன்வளர்ந்தெய்தப்பாடலொன்
றறைந்திடுசுந்தரனடிகள்போற்றுவாம். (உஉ)

மாணிக்கவாசகசுவாமிகள்.

கந்தமொடுயிர்படுங்கணபங்கம் * மெனச்
சிந்தைகொள்சாக்கியர்தியங்கமூகராய்
முந்தொருமூகையைமொழிவித்தெந்தைபால்
வந்திடுமடிகளைவணக்கஞ்செய்குவாம். (உ௩)

திருத்தொண்டர்கள்.

அண்டருநான்முகத்தயனும்யாவருங்
கண்டிடவரியதோர்காட்சிக்கண்ணவா
யெண்டகுசிவனடியெய்திவாழ்திருத்
தொண்டர்தம்பதமலர்தொழுதுபோற்றுவாம். (உ௪)

சரசுவதி.

தாவறுமுலகெலாந்தந்தநான்முகத்
தேவுதன்றுணைவியாய்ச்செறிந்தபல்லுயிர்
நாவுதொறிருந்திடுநலங்கொள்வாணிதன்
பூவடிமுடிமிசைப்புனைந்துபோற்றுவாம். (உ௫)

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௩0.

## அவையடக்கம்.

இறைநிலமெழுதுமுனிளையபாலகன்
முறை ○ வரைவேனெனமுயல்வதொக்குமா
லறுமுகமுடையவோரமலன்மாக்கதை
சிறியதோரறிவினேன்செப்பநின்றதே. (க)

வேறு.

ஆனசொற்றமிழ்வல்லவறிஞர்முன்
யானுமிக்கதைகூறுதற்கெண்ணுதல்
வானகத்தெழும்வான்கதிரோன்புடை
மீனிமைப்பவிரும்பியபோலுமால். (உ)

முன்சொல்கின்றமுனிவடநூறெரீஇத்
தென்சொலாற்சிறியேனுரைசெய்தலான்
மென்சொலேனும்வெளிற்றுரையேனும்வீண்
புன்சொலேனுமிகழார்புலமையோர். (௩)

* உயிர் கந்தமொடு கணபங்கம் படும் - ஆன்மாப் பஞ்சகந்தங்களுடன் கணந்தோறும் தோன்றியழியும் எ-று. பஞ்சகந்தங்களாவன உருவம், ஞானம், வேதனை, குறி, வாசனை என்பனவாம். கந்தமென்பது சமூகமென்னும் பொருட்டு.

○ முறை - புத்தகம்.

Digitized By Roja Muthiah Research Library

சிந்துமென்புசிரம்பிறைதாங்கினோன்
மைந்தனாதலின்மற்றவன்றானுமென்
சந்தமில்லுரையுந்தரிப்பானெனாக்
கந்தனுக்குரைத்தேனிக்கதையினை. (௪)

வெற்றெனத்தொடுத்தீர்த்துவெளிற்றுரை
முற்றுமாகமொழிந்தவென்பாடலிற்
குற்றநாடினர்கூறுபதொல்லைநூல்
கற்றுணர்ந்தகலைஞரல்லோர்களே. (௫)

குற்றமேதெரிவார்குறுமாமுனி
சொற்றபாவினுமோர்குறைசொல்வராற்
கற்றிலாவென்கவிவழுவாயினு
முற்றுநாடிவல்லோருய்த்துரைக்கவே. (௬)

வேறு.

குறைபலமாமதிகொளினுமன்னதா
லுறுபயனோக்கியேயுலகம்போற்றல்போற்
சிறியவென்வெளிற்றுரைசிறப்பின்றாயினு
மறுமுகன்கதையிதென்றறிஞர்கொள்வரே. (௭)

நாதனாரருள்பெறுநந்திதந்திடக்
கோதிலாதுணர்சனற்குமரன்கூறிட
வாதராயணமுனிவகுப்பவோர்ந்துணர்
சூதனோதியதுமூவாறுதொல்கதை. (௮)

சொல்லியபுராணமாந்தொகையுளீசனை
யல்லவர்காதைகளனையர்செய்கையு
னல்லனவிரித்திடுநவைகண்மாற்றிடு
மில்லதுமுகமனாலெடுத்துக்கூறுமே. (௯)

பிறையணிசடைமுடிப்பிரான்றன்காதைக
ளிறையுமோர்மறுவிலயாவுமேன்மையே
மறைபலசான்றுளவாய்மையேயவை
யறிஞர்கணாடியேயவற்றைக்காண்கவே. (௧௦)

புவியினரேனையர்புராணந்தேரினுஞ்
சிவகதையுணர்கிலரென்னிற்றீருமோ
வவர்மயலரசனையடைந்திடாரெனி
லெவரெவராக்கமுமினிதுபோலு * மால். (௧௧)

மங்கையோர்பங்குடைவானநாயகற்
கிங்குளபலபுராணத்துளெஃகவேற்
புங்கவன்சீர்புகழ்புராணமொன்றுள
தங்கதிலொருசிலவடைவிற்கூறுகேன். (௧௨)

புதுமயிலூர்பரன்புராணத்துற்றிடாக்
கதையிலையன்னதுகணிதமின்றரோ
வதுமுழுதறையவெற்கமைதற்பாலதோ
துதியுறுபுலமைசேர்சூதற்கல்லதே. (௧௩)

---

* போலும் - ஒப்பில்போலி.

Digitized By Roja Muthiah Research Library

காந்தமாகியபெருங்கடலுட்கந்தவேள்
போந்திடுநிமித்தமும்புனிதன்கண்ணிடை
யேந்தல்வந்தவுணர்கள்யாருமவ்வழி
மாய்ந்திடவடர்த்ததுமற்றுங்கூறுகேன். (கச)

வேறு.

ஏதிலாக்கற்பமெண்ணிலசென்றன
வாதலாலிக்கதையுமனந்தமாம்
பேதமாகுமப்பேதத்தினுள்விரித்
தோதுகாந்தத்தினுண்மையைக்கூறுகேன். (கரு)

முன்புகூறதன்மொழிவடநூற்கதை
பின்பியான்றமிழ்ப்பெற்றியிற்செப்புகே
னென்பயன்னெனிலின்றமிழ்த்தேசிகர்
நன்புலத்தவைகாட்டுநயப்பரோ. (கசு)

தோற்றமீறின்றித்தோற்றியசூர்ப்பகைக்
கேற்றகாதைக்கெவன்பெயரென்றிடி
னாற்றுமைம்புலத்தாறுசென்மேலையோர்
போற்றுகந்தபுராணமதென்பதே. (கஎ)

பகுதிகொண்டிடுபாக்களினத்தினுண்
மிகுதிகொண்டவிருத்தத்தொகைகளாற்
றொகுதிகொண்டிடுசூர்கிளைசாய்த்தவன்
றகுதிகொண்டதனிக்கதைசாற்றுகேன். (கஅ)

செந்தமிழ்க்குவரம்பெனச்செப்பிய
முந்துகாஞ்சியின்முற்றுணர்மேலவர்
கந்தனெந்தைகதையினைநான்முறை
தந்திடென்னத்தமியனியம்புகேன். (ககூ)

வெம்புசூர்முதல்வீட்டியவேற்படை
நம்பிகாதையைநற்றமிழ்ப்பாடலா
லும்பர்போற்றவுமையுடன்மேவிய
கம்பர்காஞ்சியிற்கட்டுரைத்தேனியான். (உ0)

அவையடக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ரு0.

# ஆற்றுப்படலம்.

செக்கரஞ்சடைமுடிச்சிவனுக்கன்பராய்த்
தக்கவரறிஞர்கடவத்தர்செல்வராய்த்
தொக்கவர்யாரும்வாழ்தொண்டைநாட்டினின்
மிக்கதோரணியியலதுவிளம்புகேன். (க)

சுந்தரமாயவன்றுயிலுமாழிபோ
லிந்திரனூர்முகிலியாவுமேகியே
யந்தமில்கடற்புனலருந்தியார்த்தெழீஇ
வந்தனவுவரியின்வண்ணமென்னவே. (உ)

Digitized By Roja Muthiah Research Library

பார்த்தெனதுலகடும்பரிதியென்னொடும்
போர்த்தொழில்புரிகெனப்பொங்குசீற்றத்தால்
வேர்த்தெனப்பனித்துவெள்ளெயிறுவிள்ளநக்
கார்த்தெனவேதடித்தசனிகான்றவே. (௩)

சுந்தரவயிரவத்தோன்றன்மீமிசைக்
கந்தடுகளிற்றுரிகவைஇயகாட்சிபோன்
முந்துறுசூன்முகின்முழுதுமுற்றுற
நந்தியம்பெருவரைமீதுநண்ணிய. (௪)

வேறு.

வாரை * கான்றநித்திலமெனவாலிகண்மயங்கச்
சீரைகான்றிடுதந்திரிநரம்பெனச்செறிந்த
தாரைகான்றவோரிருதுவினெல்லையுந்தண்பால்
வீரைகான்றிடுதன்மையதாமெனமேகம். (௫)

பூட்டுகார்முகந்தன்னொடுந்தோன்றியபுயல்வா
யூட்டுதண்புனனந்தியங்கிரிமிசையுகுத்தல்
வேட்டுவக்குலத்திண்ணனார்மஞ்சனம்விமலற்
காட்டுகின்றதோர்தனிச்செயல்போன்றுளதன்றே. (௬)

கல்லென்பேரிசைப்புனன்மழைபொழிதலாற்கானத்
தொல்லும்பேரழல்யாவையுமிமைப்பினிலொளித்த
வெல்லுந்தீஞ்சலமருவுமிக்காருக்குவியன்பார்
செல்லுங்காலையிலங்கண்வீற்றிருப்பரோதீயோர். (௭)

தேக்குதெண்டிரைப்புணரிநீர்வெம்மையைச்சிந்தி
யாக்கிவாலொளியுலகில்விட்டேகலாலடைந்தோர்
நீக்கரும்வினைமாற்றிநன்னெறியிடைச்செலுத்திப்
போக்கின்மேயினதேசிகர்ப்பொருவினபுயல்கள். (௮)

கழிந்தபற்றுடைவசிட்டனதிருக்கையாக்கவினார்
மொழிந்தநந்தியம்பெருவரைமொய்த்தசூன்முகில்கள்
பொழிந்தசீதநீர்பொற்புறுசாடியிற்பொங்கி
வழிந்தபாலெனத்திசைதொறுமிழிந்தனமன்னோ. (௯)

சீலமேதகுபகீரதன்வேண்டலுஞ்சிவன்றன்
கோலவார்சடைக்கங்கையம்புனலினைக்குன்றின்
மேலைநாள்விடவந்தெனநந்திவீழ்விரிநீர்
பாலியாறெனும்பெயர்கொடுநடந்ததுபடிமேல். (௧௦)

வாலிதாகியகுணத்தினன்வசிட்டனென்றுரைக்குஞ்
சீலமாமுனிபடைத்ததோர்தேனுவின்றீம்பால்
சாலநீடியேதொல்லைநாட்படர்ந்திடுதன்மைப்
பாலிமாநதிப்பெருமையான்பகர்வதற்கெளிதோ. (௧௧)

எய்யும்வெஞ்சிலைப்புளிஞரையெயிற்றியர்தொகையைக்
கையரிக்கொடுவாரியேசிறுகுடிகலக்கித்
துய்யசந்தகில்பறித்துடன்போந்ததுதொன்னாள்
வெய்யசூர்படைவான்சிறைகவர்ந்துமீண்டதுபோல். (௧௨)

---

* வாரை - நீட்டல்விகாரம்.

Digitized By Roja Muthiah Research Library

நாகபந்தரிற்கருமுகிற்காளிமங் * கனூஉ
மாகநீள்கரியாவையுங்குழுவொடும்வாரிப்
போகன்மேயினமேற்றிசைப்புணரியுண்டமையா
மேகராசிகள்குணகடன்மீதுசெல்வனபோல். (௧௩)

குவட்டுமால்கரிக்குருகுதேரரிபுலிக்குவையுண்
டுவட்டியுந்திடுதிரைப்புனன்மதூகநல்லுழிஞ்சில்
கவட்டிஞெமைசாய்த்தாறலைகள்வரூர்கலக்கித்
தெவிட்டிவந்ததுபாலையுட்கொண்டிடுசெருக்கால். (௧௪)

காலைவெம்பகல்கதிரவன்குடதிசைக்கரக்கு
மாலையாமம்வைகறையெலாஞ்செந்தழல்வடிவாய்
வேலையும்பருகியவெழும்வெம்மைபோய்விளிந்து
பாலைகாண்கிலாவாரியின்பெருமையார்பகர்வார். (௧௫)

குல்லைமாலதிகொன்றைகாயாமலர்க்குருந்து
முல்லைசாடியேயானிரைமுழுவதுமலைத்து
மெல்லமற்றவைநீந்தலுங்கரைக்கண்விட்டுளதாற்
றொல்லைமாநதியான்வழித்தோன்றியதொடர்பால். (௧௬)

சுளையுடைப்பலவாசினிபூகமாந்துடவை
யுளைமலர்ச்சினைமருதமோடொழிந்தனபிறவுங்
களைதலுற்றுமாட்டெறிந்ததுகண்ணகன்குடிஞை
யளவின்மிக்குறுபாணிபெற்றதற்கவையரிதோ. (௧௭)

இலைவிரித்துவெண்சோறுகால்கைதையுமெழுதுங்
கலைவிரித்திடுபெண்ணையுங்களைந்திடுங்களைபோ
யலைவிரித்திடுகடல்புகவொழுகுமாறனந்தன்
றலைவிரித்துழியுடனெளித்தன்னதோர்தகைத்தால். (௧௮)

கொங்குலாமலர்க்கொன்றைகூவிளைகுரவுழிஞை
பொங்குமாசுணந்தாதகிபாடலம்புன்னை
துங்கமார்திருத்தலைமிசைக்கொண்டுறுந்தொடர்பா
லெங்கணாயகன்றன்னையுமொத்ததவ்விருநீர். (௧௯)

கொலைகொள்வேன்மறவீரர்தமிருக்கையிற்குறுகாச்
சிலையும்வாளொடுதண்டமுந்திகிரிவான்படையு
நிலவுசங்கமுங்கொண்டுசென்றடல்புரிநீரா
லுலகமேழையுமுற்பகலயின்றமாலொக்கும். (௨0)

தேன்குலாவியமலர்மிசைப்பொலிதருசெயலா
னான்கவாமுகந்தொறுமறையிசையொடுநணுகிக்
கான்குலாவியகலைமரைமான்றிகழ்கவினால்
வான்குலாமுலகளிப்பவனிகர்க்குமால்வாரி. (௨௧)

மீதுபோந்திரிசங்கைவிண்ணிடையின்மீனோடும்
போதலாயுறவீசலாற்சலமிகும்புலனாற்
றீதின்மாக்களைச்செறுத்தலாலளித்திடுஞ்செயலாற்
காதிகாதலனிகர்க்குமாற்கன்னிமாநீத்தம். (௨௨)

* காளிமம் - கருமை.



Digitized By Roja Muthiah Research Library

தெழித்தமால்கரியினங்கடமெயிற்றினாற்சிதையக்
கிழித்தபேரிறால்சொரிந்ததேன்கிரியுளவெல்லாங்
கொழித்துவந்துறவணைதரும்பாலியின்கொள்கை
சுழித்தநீர்க்கங்கையமுனையைக்கலந்தெனத்தோன்றும். (உ௩)

சங்கமார்த்திடத்திரையெழநதியுறுந்தகைமை
யங்கம்வெம்பினைபனிக்கதிரலைநீயழலோ
யிங்குவாதினைத்தேருதியெனக்கரமெடுத்தே
பொங்கும்வாய்விடாவிரவியைவிளிப்பதுபோலும். (உ௪)

வேதமேமுதல்யாவையுமுணர்கினுமேலா
மாதிவானவன்கறைமிடற்றிறையெனவறியாப்
பேதைமாக்கடமுணர்வெனவலைந்துபேர்கின்ற
சீதநீரெலாந்தெளிதலின்றாயதுசிறிதும். (உ௫)

செம்பொன்மால்வரையல்லனகிரிகளுந்திசையு
மும்பர்வானமுந்தரணியுந்துளங்கவந்துறலா
லெம்பிரான்முனம்வருகெனநதிகளோடெழுந்த
கம்பைமாநதியொத்ததுகரைபொருபாலி. (உ௬)

உதிருகின்றசிற்றுண்டிகொண்டொலிபுனற்சடைமேன்
மதுரைநாயகன்மண்சுமந்திட்டமாநதியின்
முதிருமுத்தமிழ்விரகனதேடெனமொய்ம்மீ
னெதிர்புகுந்திடப்போவதுபாலியாமியாறு. (உ௭)

வேறு.

மாசறத்துளங்குதுப்புமரகதத்திடைவந்தென்னப்
பாசடைநடுவட்பூத்தபங்கயத்தடாகம்யாவுந்
தேசுடைத்தரங்கநீத்தச்செலவினாற்சிதைந்தமன்றே
பேசிடிற்சிறுமையெல்லாம்பெருமையாலடங்குமன்றே. (உ௮)

வளவயன்மருதவைப்பின்வாவியங்கமலம்யாவுங்
கிளையொடும்பறித்துவாரிக்கேழுறப்பொலிந்ததோற்றம்
விளைதருபகையிற்றோலாவெவ்வழற்சிறுமைநோக்கிக்
களைதலைப்புரிந்துபற்றிப்பெயர்ந்தெனக்காட்டிற்றன்றே. (உ௯)

திரைகடனீத்தங்கொண்மூவினத்தொடுசேண்போய்நோக்கித்
தரையிடையிழிந்துசென்றுதன்பொருள்கொடுபோந்தென்னப்
பரதவரளவர்வாரிப்படுத்தமீனுப்பின்குப்பை
யிருபுடையலைத்துவௌவியேகியதெறிநீர்ப்பாலி. (௩0)

பாரிடையினையபண்பிற்படர்ந்திடுபாலியந்தத்
தாருயிரனைத்துந்தத்தமருவினைக்கமைத்தநீராற்
சேருறுகதிகளென்னமரபினிற்றிறமேயென்னத்
தாருவின்கிளைகளென்னத்தனித்தனிபிரிந்ததன்றே. (௩௧)

கால்கிளர்கின்றநீத்தங்கவிரிதழ்க்கலசக்கொங்கைச்
சேல்கிளர்கரியவுண்கட்டிருநுதன்மிழற்றுந்தீஞ்சொன்
மேல்கிளர்பரவையல்குன்மெல்லியலறன்மென்கூந்தன்
மால்கிளர்கணிகைமாதர்மனமெனப்போயிற்றுமால். (௩௨)

Digitized By Roja Muthiah Research Library

பாம்பளைபுகுவதேபோற்பாய்தருபரவைத்தெண்ணீர்
தூம்பிடையணுகுமாற்றூற்சொன்முறைதடைசெய்வோரிற்
றும்புடைபெயராவண்ணந்தலைத்தலைதள்ளுமள்ள
ரேம்பலோடார்க்குமோதையுலகெலாமிறுக்குமாதோ. (௩௩)

பணையொலியிரலையோதைபம்பையின்முழக்கமங்கட்
கிணையொலிமள்ளரார்ப்புக்கேழ்கிளர்தரங்கநன்னீ
ரணையொலியவற்றைவானத்தார்ப்பொலிக்கவனிதானு
மிணையொலிகாட்டிற்றேவென்றெண்ணுவார்விண்ணுளோரும். (௩௪)

இயல்புகுங்களிநல்யானைமினந்தெரிந்தெய்துமாபோற்
கயல்புகுந்துலவுஞ்சின்னீர்த்தடம்புகுங்காமர்காவி
னயல்புகுங்கோட்டகத்தினகம்புகுமார்வத்தோடி
வயல்புகுங்களிப்புநீங்காமாக்களின்மயங்குமாதோ. (௩௫)

எங்கணுநிறைந்துவேறேரிடம்பிறிதின்மையாகச்
சங்கமாயீண்டுமள்ளர்தாங்குபல்லியமுமார்ப்பப்
பொங்கியநகரந்தோறும்புறமெலாம்வளைந்தநீத்த
மங்கண்மாஞாலஞ்சூழுமளக்கரைநிகர்த்ததாமே. (௩௬)

மாறடுமள்ளருய்ப்பமருதத்தினிறைந்துவிஞ்சி
யேறியநாரமீட்டுமிருங்கடலணுக்கிச்சென்ற
வேறுகொள்புலனைவென்றோர்மேலைநன்னெறியுய்த்தாலுந்
தேறியவுணர்விலாதோர்செல்வழிச்செல்வரன்றே. (௩௭)

வாளெனச்சிலையதென்னவால்வளையென்னத்தெய்வக்
கோளெனப்பணிகளென்னக்குலமணிகுயிற்றிச்செய்த
மீளிவெஞ்சரங்களென்னவேலெனமிடைந்துசுற்று
நாளெனப்பிறழுமீன்கணடவினநாரமெங்கும். (௩௮)

மாண்டகுபொய்கைதோறும்வயறொறுமற்றுமெல்லாம்
வேண்டியவளவைத்தன்றிமிகுபுனல்விலக்குகின்ற
வாண்டகைமள்ளர்தம்பாலமைந்திடுங்காலையெஞ்சி
யீண்டியவெறுக்கைவீசுமிடைப்படுவள்ளலொத்தார். (௩௯)

ஆற்றுப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௪௬.

# திருநாட்டுப்படலம்.

அவ்வியல்பெற்றிடுமாற்றன்மள்ளர்கண்
மைவருகடலுடைமங்கைதன்னிடை
மெய்வளங்கொள்வதைவேண்டியந்நிலச்
செவ்விகணுடியேயினையசெய்குவார். (௧)

சேட்டிளந்திமிலுடைச்செங்கணேற்றொடுங்
கோட்டுடைப்பகட்டினம்விரவிக்கோன்முறை
காட்டினர்நிரைபடவுழுபகாசினி
பூட்டுறுபொலன்மணியாரம்போலவே. (௨)

Digitized By Roja Muthiah Research Library

காற்றினுமனத்தினுங்கடுமைசான்றன
கோற்றொழில்வினைஞர்தங்குறிப்பிற்செல்லுவ
வேற்றினஞ்சேறலுமிரிந்தசேலினம்
பாற்றினமருளவிண்படர்ந்துபாயுமால். (௩)

சால்வளைதரவுழும்வயலிற்றங்கிய
வால்வளையினம்வெரீஇயலவன்மாப்பெடைச்
சூல்வளைபுகுவதங்கறிஞர்சூழ்விலைக்
கோல்வளைமகளிர்பாற்கூட்டமொத்ததே. (௪)

உலத்தொடுமுறழ்புயத்துழவர்பொன்விளை
புலத்தினும்வியத்தகுவயலிற்போக்கிய
வலத்திடைப்பிறழ்மணிவேள்வியாற்றிடு
நிலத்திடைப்பிறந்தமின்னிகர்க்குநீர்மைய. (௫)

நாறுசெய்குநர்சிலர்நாரநீர்வய
லூறுசெய்குநர்சிலரொத்தபான்மையிற்
சேறுசெய்குநர்சிலர்வித்திச்செல்லுநீர்க்
காறுசெய்குநர்சிலரளப்பின்மள்ளரே. (௬)

குச் * செனப்பரிமிசைக்குலாயகொய்யுளை
வைச்செனத்தளிர்த்தெழுநாற்றின்மாமுடி
யச்செனப்பதித்தனர்கடைஞராவியா
நச்சினமகளிரைநினைந்துநைந்துளார். (௭)

வாக்குறுதேறலைவள்ளமீமிசைத்
தேக்கினருழவர்தந்தெரிவைமாதரார்
நோக்குறுமாடியினுனித்துநோக்கினர்
மேக்குறுகாதலின்மிசைதன்மேயினார். (௮)

வாடுகின்றார்சிலர்மயங்கிநெஞ்சொடு
மூடுகின்றார்சிலருயிர்க்கின்றார்சிலர்
பாடுகின்றார்சிலர்பணிகின்றார்சில
ராடுகின்றார்சிலர்நறவமார்ந்துளார். (௯)

அந்தரப்புள்ளொடுமளிகடம்மொடும்
வந்தடுத்தவரொடுமயக்குதேறலை
யிந்திரத்தெய்வதமிறைஞ்சிவாமமாந்
தந்திரக்கிளைஞர்போற்றாழுமேயினார். (௧௦)

விள்ளுறுநாணினர்விரகத்தீயின
ருள்ளுறுமுயிர்ப்பினருலையுநெஞ்சினார்
தள்ளுறுதம்முணர்வின்றிச்சாம்பினார்
கள்ளினுமுளதுகொல்கருத்தழிப்பதே. (௧௧)

பளிக்கறையன்னதோர்படுகர்ப்பாங்கினுந்
தளிர்ப்புறுசெறுவினுந்தவறுற்றேகுவார்
தெளிப்பவரின்மையினெறியிற்சென்றிலர்
களிப்பவர்தமக்குமோர்கதியுண்டாகுமோ. (௧௨)

* குச்சு - பாவாற்றி.

Digitized By Roja Muthiah Research Library

இன்னனபற்பலவியற்றியீண்டின
ருன்னருந்தொல்லையிலுணர்வுவந்துழிக்
கன்னெடுந்திரள்புயக்கணவரேவலிற்
றுன்னினரவரொடுந்துவன்றிச்சூழ்ந்துளார். (கங)

மள்ளர்தம்வினைபுரிமழலைத்தீஞ்சொலார்
கள்ளூறுபுதுமணங்கமழும்வாலித
ழுள்ளூறுநறுவிரையுயிர்த்துவீசிய
வெள்ளியகுமுதமென்மலரின்மேவுமே. (கச)

நட்டதோர்குழுவினைநடாததோர்குழு
வொட்டலர்போலநின்றெறுத்தலுன்னியே
யட்டனராமெனவடாதவான்களை
கட்டனர்வேற்றுமையுணருங்காட்சியார். (கரு)

ஏயினசெயலெலாமியற்றிவேறுவே
றாயிடைவேண்டுவதமையவாற்றியே
மாயிரும்புவிமிசைமகவைப்போற்றிடுந்
தாயெனவளர்த்தனர்சாலியீட்டமே. (கசு)

மன்சுடர்கெழுமியவயிரவான்கணை
மின்சுடர்தூணியின்மேலகீழுறத்
தன்சுடர்பொலிதரச்செறித்ததன்மைபோற்
பொன்சுடரிளங்கதிர்புறத்துக்கான்றவே. (கஎ)

பச்சிளங்காம்புடைப்பணையின்மீமிசை
வச்சிரத்தியற்றுமோரிலைகொள்வான்படை
யுச்சிமேலுறநிறீஇயொருங்குசெய்தெனக்
குச்சுறுசாலிமென்கதிர்குலாவுமால். (கஅ)

சுற்றுறுபஃறலைச்சுடிகைமாசுணம்
பெற்றுறுகுழவிகள்பெயர்தலின்றியே
முற்றுறுநிவப்பொடுமுறையினிற்றல்போ
னெற்றுறுபசுங்கதிர்நிமிர்தன்மிக்கவே. (ககூ)

மையுறுகணிகையர்மகிழ்நர்வந்துழிப்
பொய்யுறுமளியெனப்பயனில்புன்கதிர்
கையுறுமுவகையாற்பணியுங்கற்பினோர்
மெய்யுறுபரிவெனவிளைந்துசாய்ந்தவே. (உ0)

மாலுறுபொன்னகர்மருவுமன்னற்குப்
பாலுறுதீம்பதம்பலவுமார்த்தியே
மேலுறுசாலியின்விளைவுநோக்கியே
கோலிநின்றரிந்தனர்குழாங்கொண்மள்ளரே. (உக)

அரிந்திடுசுமைகளாலவனிப்பேருட
னெரிந்திடச்சேடனுநெளிந்துநீங்கிடத்
தெரிந்திடும்போர்கள்சேணளவுஞ்சேறலால்
விரிந்திடுகதிர்சுலாமேருவாயவே. (உஉ)

Digitized By Roja Muthiah Research Library

ஏற்றொடுபகட்டின மிசைத்துப்போருரு
மாற்றினர்வலமுறைதிரித்துவாழ்த்தொலி
சாற்றினர்பரனொடுதமதுதெய்வதம்
போற்றினர்மீமிசைபொலிகென்றோதுவார். (உங)

தொங்கலம்பூமுடித்தொழுவர்போரினை
யங்குறப்படுத்துவையகற்றியாக்கிய
பொங்கழிப்பதடிகள்புறத்துவீசியே
யெங்கணுநெற்குவையியற்றுவாரரோ. (உச)

களப்படுகைவலோர்கால் * களான்முகந்
தளப்புறுநெற்குழாமவற்றுண்மன்னவற்
குளப்படுகடன்முறையுதவிமள்ளருக்
களித்தனர்வேண்டியதனையநாட்டுளோர். (உரு)

சொற்குவைவழிபடப்புகழிற்றோன்றுதம்
மிற்குவைவேண்டுவதேவியெஞ்சிய
நெற்குவைகுரம்பையினிரப்புவித்தனர்
பொற்குவையரிந்தனர்பொதிவித்தென்னவே. (உசு)

தலத்திடைவேறிடத்தொதுங்குந்தண்ணிய
குல o த்திடைப்பிறந்தவர்கூட்டமாமென
நலத்திடைவந்திடுமுதிரைநல்வள
நிலத்திடையொருசிறைவிளையுநீரவே. (உஎ)

பிறப்பதும்வளர்வதும்பின்னர்மூப்புவந்
திறப்பதும்வைகலுமுலகிலேய்ந்தெனச்
சிறப்புடனடுவதும்பருவஞ்செய்வது
மறுப்பதுந்தொகுப்பதுமுலப்பின்றாயவே. (உஅ)

முழவொலிவிண்ணவர்முதல்வற்காக்குறும்
விழவொலிகிணையொலிவிரும்புமென்சிறார்
மழவொலிகடைசியர்வள்ளைப்பாட்டொலி
யுழவொலியல்கலுமுலப்புறாதவே. (உகூ)

காவுறநிமிர்ந்திடுகாமர்சோலையு
நீலமுங்கமலமுநிறைந்தபொய்கையு
மாலை ‡ யங்கழனியுமநங்கற்காயுத
சாலைகளிவையெனச்சாற்றநின்றவே. (கூo)

நெறியிடையொழுகலாவிழுதைநீரரை
மறலிதன்னகரிடைவருத்தல்போலுமாற்
குறைபடத்துணித்தவண்குவைசெய்கன்னலை
யறைபடுமாலைகளிடையிட்டாட்டலே. (கூக)

ஏறுகாட்டியதிறலிளைஞரெந்திரங்
கூறுகாட்டியகழையழுங்கக்கோறலுஞ்
சாறுகாட்டியதரோயாதுந்தம்மிடை
யூறுகாட்டினர்க்கலாலுலோபரீவரோ. (கூஉ)

* கால் - அளக்குங்கருவி, o தண்ணியகுலம் - எளியகுலம், ‡ ஆலை - கரும்பு.

Digitized By Roja Muthiah Research Library

மட்டு * றுகழையினும்வலிதிற்கொண்டபி
ணிட்டகொள்கலங்களிணிருந்ததிம்புன
ெறுட்டிடுகடலெனத்தோன்றுமன்னவை
யட்டதோர்புகைமுகிலளாவிற்றெருக்குமே. (௩௩)

கூடினதேனிசையிளமென்கோகிலம்
பாடினமயில்சிறைப்பறையடித்தன
வாடினவஞ்சிதந்தலையசைத்திடா
நாடினபாதவம்புகழ்வநாரையே. (௩௪)

காசொடுநித்திலப்பொதியுங்காட்டியே
பாசடைமாதுளைசினையிற்பைங்குயில்
பேசிடநிற்பனபெறீஇயர்வம்மென
வீசுதல்கருதியேவிளித்தல்போன்றவே. (௩௫)

சித்திரக்கதலிமாவருக்கைத்தீங்கனி
துய்த்திடவரும்பயனுதவுந்தோற்றத்தா
லுத்தமமுதலியகுணத்திறேங்கிய
முத்திறத்தவர்கொடைமொழியநின்றவே. (௩௬)

வீசுகால்பொரவசைவிசும்பிற்றுழைக
டேசுலாம்பரிதிமெய்தீண்டுஞ்செய்கைய
காசினிதன்கையாற்கலைவெண்டிங்கள்போன்
மாசுறுவகைதுடைத்திடுதன்மானுமே. (௩௭)

வாசநீள்பொதும்பரின்மைந்தர்மாதர்கள்
காசுநூன்மேகலைபரியக்கைவளை
பூசலிட்டலமரப்புணருஞ்செய்கைகண்
டாசைமிக்கழுங்குவபிரிந்தவன்றிலே. (௩௮)

கானுலாநந்தனவனமுங்காரென
வானுலாந்தண்டலைமருங்கும்வைகலும்
வேனிலானன்னவர்மகளிர்மேயினு
ரூனுலாங்குரம்பையுளுயிருற்றென்னவே. (௩௯)

அசும்புறுமகன்புனலறுதகுழலின்
விசும்புறவோச்சியவிரைமென்றுதிறுற்
பசும்பொனிற்குயிற்றியபதியிற்றூபிகைத்
தசும்பெலாம்வெள்ளியதாக்குந்தாழையே. (௪0)

உற்றிடவரிதவனுழவர்நீத்ததார்
சுற்றிடுந்தாண்மிசையிடறுஞ்சூல்வளை
தெற்றிடும்பூங்கொடிபுடைக்குஞ்சேலின
மெற்றிடுந்தேம்பழமிழுக்குந்தேன்களே. (௪௧)

காணிமிர்கந்திகள்கான்றபாளைமேன்
மீனினம்பாய்தலுஞ்சிதறிவீழ்வுறு
வானதோர்மருதவைப்படையுந்தன்மைய
வானுறுதாரகைவழுக்கிற்றெருக்குமால். (௪௨)

* மட்டு - அளவு.

மாகுலவல்லியின்மஞ்ஞையாடல்போற்
கோகிலமார்தருக்குழாத்தினூசன்மேற்
பாகுலவின்சொலார்பணிக்குமெல்லிடைக்
காகுலம்பிறர்கொளமகிழ்வினாடுவார். (௪௩)

வேறு.

ஊசலுற்றவர்குழைக்குடைந்திடுதலாலுவரை
வீசலொப்பனவாடுதல்கிளிமொழிவெருவிப்
பேசலொப்பனவீழ்ந்திலர்பிழைத்ததீதென்னா
வேசலொப்பனகோகிலப்பறவைகளிசைத்தல். (௪௪)

கூர்ப்புக்கொண்டகட்கொடிச்சியர்குளிர்புனங்காப்போ
ரார்ப்புக்கொண்டுகைவிசைத்தெறிமணிக்கல்வந்தணையச்
சார்ப்புக்கொண்டதஞ்சிறகரால்விலக்கியத்தடத்துப்
பார்ப்புக்கொண்டுகொண்டெழுவனதோலடிப்பறவை. (௪௫)

வேறு.

கடற்பருகியமுகில்பெய்யுங்காட்சிபோ
லடற்பெருமேதிகளனைத்தும்புக்குராய்த்
தடப்புனல்வறிதெனப்பருகித்தம்முலைக்
குடத்திழிபாலினாற்குறையைத்தீர்க்குமே. (௪௬)

பாட்டியலளிமுரல்பதுமக்கோயி * லி
னாட்டியநிமலன்முனந்தி ௦ நீரிடை
யாட்டியபல்பெருஞ்சுடரைமானுமாற்
கோட்டுயர்தடந்தொறுங்குவளைபூத்தவே. (௪௭)

கலனிடைத்தருவதுங்கானத்துள்ளதும்
பொலனுடைப்பொருப்பிடைப்பொருளுமல்லது
நலனுடைநாட்டவர்நயத்தலின்றியந்
நிலனிடைப்பொருள்பகர்வழக்கநீத்ததே. (௪௮)

யாழ்க்கையர்பொருநருக்கிறைவரேழிசை
வாழ்க்கையரளவையின்வகுத்தபாடலைக்
கேட்குநர்நன்றெனமருப்புக்கிம்புரிப்
பூட்கைகளுதவுவார்பொதுவிறேறுமே. (௪௯)

கஞ்சிதேய்ப்புண்டகில்கமழும்பூந்துகில்
வஞ்சிதேய்ப்புண்டனமருங்குலாரடி
பஞ்சிதேய்ப்புண்டனபணியத்தாக்கலாற்
குஞ்சிதேய்ப்புண்டனகுமரர்கூட்டமே. (௫௦)

அன்றிலம்பெடைகளையணுகியன்னைகே
ணன்றெனவினையின்மேனடந்தநாயக
ரின்றுவந்திடுவரிங்கெம்பொருட்டினா
லொன்றுநீயிரங்கலென்றுரைக்கின்றார்சிலர். (௫௧)

ஆடியல்கருங்கணுஞ்சிவப்புற்றங்கமும்
வாடுவதாகியேமதனவேர்வுறாக்
கூடியமகளிருங்குமரர்தங்களை
யூடியமகளிருமுலப்பின்றாயினார். (௫௨)

* பதுமக்கோயில் - கமலாலயம். ௦ நந்தி - நமிநந்திஅடிகள்.

Digitized By Roja Muthiah Research Library

அகனமர்கணிகையரடிகள்சூடியே
முகனுறுமுவகையான்முயங்கியன்னவர்
நகனுறுகுறிகொளீஇநாளுங்காமநூற்
றகைமைசெய்காளையர்தொகுதிசான்றதே. (௫௩)

வாளைகளிகல்புரிவயலும்வாவியும்
பாளையொடுற்பலம்பதுமநாறுமால்
வேளயர்தடங்கணார்விரைமென்குளினை
காளையர்குஞ்சியுங்கரமுநாறுமால். (௫௪)

சேவகமனையவனகரிகள்சேனைகள்
காவகமனையவனகலைகள்புள்ளினம்
பூவகமனையவனபொறிவண்டாயிடைப்
பாவக * மனையவனபாடலாடலே. (௫௫)

ஆடகமாமதிலம்பொற்கோபுர
நீடியமண்டபநெறிகொளாவணம்
பாடலொடாடிடம்பிறவும்பாலிநன்
னாடுளபதிதொறுநண்ணியோங்குமே. (௫௬)

தெண்டிரையுலகினிற்சீர்பெற்றோங்கிய
மண்டலமெங்கணுமதிக்கநின்றதோர்
தொண்டைநன்னாட்டணிசொல்லினமினித்
தண்டமிழ்வளநகர்த்தன்மைகூறுவாம். (௫௭)

திருநாட்டுப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௪௬.

---

# திருநகரப்படலம்.

மாவுலகெங்குமலர்த்தடமாகத், தாவறுசீர்புனைதண்டகநாடே
மேவியகஞ்சமதாவதின்மேவுந், தேவினையொத்ததுசீர்பெறுகாஞ்சி. (௧)

பூங்கமலத்துறைபுங்கவன்மாயோன், பாங்குறைதேவர்பல்லாண்டிசைபரவ
வோங்கியபுள்ளினமூர்ந்தவனுறலா, லாங்கவர்மேவுமரும்பதமாமே. (௨)

இன்னியறேர்தருமிந்திரன்முதலா, மன்னியவானவர்மற்றுளர்யாருந்
துன்னினராயிடைசூழ்ந்துறைசெயலாற், பொன்னகரென்றுபுகன்றிடலாமால்.()

கின்னரர்சித்தர்கெழீஇயதனாலத், தந்நிகரில்லவர்தம்பதிபோலும்
பன்னகவேந்தர்பராயினருறலா, லன்னவர்தம்பதியாகியதன்றே. (௪)

எண்டிசைகாவலர்யாவருமீண்டப், பண்டவர்பெற்றபதங்களைமானு
மண்டலமார்சுடர்மற்றையவுறலா, லண்டமுமாகியதப்பதியென்பார். (௫)

இப்படியாவருமெய்தியதிறனு, லொப்பனபோலவுரைத்திடலொப்போ
வப்பதியேயதனுக்கிணையன்றிச், செப்பரிதாற்பிறசீர்கெழுகாஞ்சி. (௬)

* ஆடலுக்கியையப்பொருள்கொள்ளுங்கால் பாவகம் - அபிநயம்.

ந

Digitized By Roja Muthiah Research Library

மறைமுதலோர்தனிமாவினிழற்கீ, ழுறைதருகாஞ்சிதனக்குலகெல்லாம்
பெறுமயனுதியர்பெற்றிடவன்று, னிறுவியதொன்னகரோநகராமே. (எ)

மேயதொல்லூழியில்வேலைகளேழுந், தூயதனெல்லைசுலாவுறநிற்ற
லாயபரஞ்சுடராங்குளதாயு, மாயைகள்சுற்றியமன்னுயிரொக்கும். (அ)

வேறு.

பாழிமால்வரையெறிதிரைவையகம்பலவும்
வாழுமண்டங்கள்சிற்றுருவமைந்துவந்தென்னச்
சூழுநேமியம்புள்ளினமுதலியசுருங்கு
மாழிநீத்தமதொத்ததுமதிற்புறத்தகழி. (கூ)

மண்டலப்பொறைபாற்றுவான்பற்பலவுருத்து
முண்டகாசனமீமிசையிருந்திடுமுதல்வ
னண்டகோளகைதாங்கவோர்சுவர்த்தலமதுவும்
பண்டுசெய்தெனவோங்கியநெடுமதிற்பரப்பு. (க0)

சென்றுமூவெயிலழலெழநகைத்தவன்செழும்பொற்
குன்றுதோளுறவாங்கலுமுலகெலாங்குலைந்த
வன்றுநான்முகனனைத்தையுந்தாங்குகென்றருள
நின்றதென்னவும்பாதலம்புகுந்துமேனீண்ட. (கக)

மேகநாட்டிற்கும்விஞ்சையர்நாட்டிற்கும்விண்ணோர்
மாகநாட்டிற்குமலரயனுட்டிற்குமற்றை
நாகநாட்டிற்கும்பாதலநாட்டிற்குநணுகிப்
போகநாட்டியபொன்மதிலானதப்புரிசை. (கஉ)

முதிரைவண்ணமாநவமணிக்குவையும்வான்முளைக்குங்
கதிரினெல்லெனும்பொருளுடனேனவுங்காட்டிப்
பொதிவதாகியேமுழுவதுநிரம்புதல்பொருந்தா
நிதியமேயகூடொத்ததுநெடியமாமதிலே. (கஈ)

நிறையும்வார்கடல்சுற்றியநேமியுநேமிக்
குறையுளாகியகணிப்பிலாவண்டமுமொப்ப
சிறையில்வான்கிரிநிரையெனச்செவ்விதிற்கிளர்ந்து
மறுகெலாந்திகழ்மாளிகைப்பத்திசூழ்மதிலே. (கச)

தடுக்குமாற்றலர்நால்வகைப்படையொடுஞ்சாய
முடுக்கும்வாள்கொடுவிதிர்த்திடுமெழுவினுன்முருக்கு
மெடுக்குமெற்றிடுமெறிந்திடும்விழுங்கிடுமீர்க்கும்
படுக்குங்கன்மழைசொரிந்திடும்விற்படைபயிலும். (கரு)

உருக்குஞ்செம்பினைவங்கத்தையிழுதொடுமோச்சும்
வெருக்கொணேமிகளெறிந்திடும்வச்சிரம்வீசி
யிருக்குநின்றிடுங்குப்புறுஞ்செறுநரையிகலி
நெருக்குந்தாழ்ந்திடுமுலகளந்தோனெனநிமிரும். (கசா)

பீடுதங்கியபணைமுரசியம்பிடும்பிடிக்குங்
கோடுமார்த்திடுந்துடிகளுமொலித்திடுங்கொட்புற்
றூடுமீயுயர்புள்ளையுமெறிந்திடுமரண்மே
லோரநீளுமக்கதிரையுந்தடுப்பபோலுந்தும். (கஎ)

சூலம்வீசிடுந்தோமரம்வீசிடுஞ்சுடர்வே
லாலம்வீசிடுஞ்சுடுமணல்வீசிடுமளப்பில்
சாலம்வீசிநின்றீர்த்திடுமகழியிற்றள்ளுஞ்
சீலம்வீசியபாரிடமாமெனத்திரியும். (கஅ)

திசழும்வெங்கனலுமிழ்ந்திடுமொன்னலர்செலுத்தும்
பகழிமாரியைவிழுங்கிடும்பறவையிற்படரு
மிகழுநாவையுமனத்தையுமெறிந்திடுமென்றற்
புகழுநீரவன்றம்மதின்மேலுறும்பொறிகள். (க௯)

பூணினேர்தரும்பொன்னவாம்புரிசைமேற்புனைந்த
வாணிலாநெடுந்துகிலிகைபெயர்வனமலரோன்
சேணுலாயதீஞ்சுடரெனுங்கோபுரசிகரங்
காணவேபலவெகினமாய்த்தேடல்போற்கவினும். (உ0)

ஈர்த்தமாமதிசசியென்பதுலகுளோரிட்ட
வார்த்தையல்லதுசரதமோகடிமதின்மருங்கிற்
றூர்த்தகேதனமவன்மணிமேனியிற்றுடக்கப்
போர்த்தவெண்ணிலாக்கஞ்சுகம்பீறியபோலாம். (உக)

காட்சிமேயவக்கடிமதிற்கதலிகைகாணூஉச்
சூட்சிநாடியபரிதியுங்கீழுறத்தொடர்ந்தான்
மாட்சிதேய்ந்திலன்வரன்முறைமனப்படுமதியோர்
தாட்சிசெய்யினுமனையர்பாலணுகுமோதவறு. (உஉ)

புடைபரப்பியபுரிசையினாற்றிசைப்புறத்துந்
தடநிலைப்பெருங்கோபுரமுளதழணிறத்துக்
கடவுளூச்சியின்வதனமொன்றின்றியேகாண்பா
னடைதலுற்றிடுதிசைமுகம்பொருவினவவையே. (உ௩)

என்றுமாமதிக்கடவுளும்பிறருமீரியல்பாங்
குன்றமேயெனக்கீழ்த்திசையதனெடுங்குடபா
னின்றகோபுரங்கடக்கலர்வாய்தலினெறியே
சென்றுசென்றுபோயப்புறத்தேகினர்திரிவார். (உ௪)

தீபுரத்திடைமடுத்தவனாணையாற்சிறந்த
மாபுரத்திடைவான்ருெடுங்கடிமதில்வரைப்பி
லாபுரத்தவாய்க் * கிளர்ந்தவேயமைத்தவன்றென்னக்
கோபுரத்திடைக்கொழுந்துபோலோங்கியகொடிகள். (உ௫)

மாடமாளிகைமண்டபங்கோபுரமறுகிற்
கோடிகோடியின்மேலுமுண்டன்னதார்குணிப்பா
ராடுகேதனத்தளவையுமன்னதேயகல்வா
னூடுபோகலாதலமரும்பறவைகளொப்ப. (உ௬)

சிகரமால்வரையன்னமாளிகைதொறுஞ்சிவணு
மகரதோரணமாடிகள்பலவுறவயங்க
லிகலும்வெய்யகோளிரண்டுமாயொருவடிவெய்தி
யகல்விசும்பிடைக்கதிர்களின்புறமறைத்தனைய. (உஎ)

* ஆபுரத்தவாய் - புரத்தோடுபொருந்தினவாய்.

Digitized By Roja Muthiah Research Library

செம்பொனிற்புரிநிலையுடைத்திகிரியந்தேர்க
ளம்பரத்திடைவசியுறவீற்றுவீற்றுருந்
தம்பமுற்றலமருவனசெய்யகோற்றலையிற்
பம்பரத்துருத்திரிப்புறக்கறங்கியபடிய. (உஅ)

பளிங்கினாற்செய்ததெற்றியின்றலைமிசைப்பணிதோய்
வளங்கொணித்திலஞ்செம்மணிகுயிற்றியவைப்பிற்
றுளங்கநாற்றியபொன்மணிப்பாலிகைதொகுவ
குளங்கொடாமரைமலர்ப்பொகுட்டாயினகுறிக்கின். (உகூ)

ஓவியத்தியன்மரகதத்தலத்தினதும்பர்த்
தாவிலாடகத்தலமிசைநித்திலத்தலமேற்
கோவைபட்டசெம்மணித்தலம்பொலிதலாற்கொண்மூ
மூவகைக்கதிர்வியலிடந்தெரிப்பதம்மூதூர். (௩0)

கன்னல்வேளெனுமைந்தருமாதருங்கலந்து
மன்னுநித்திலமாளிகைப்பத்தியின்மாடே
பொன்னவாஞ்சிறைமணிமயிற்குழாத்தொடும்போகு
மன்னமாமதிமுகிலிடைநுழைந்துபோயனைய. (௩க)

தண்டமாகி * யேபுவியுறுபணியெலாந்தழுவி
யண்டமீமிசையிரவியுமதியுமடைதல்
கண்டுமாளிகைச்சூளிகைமருங்குபோய்க்கவர்வான்
கொண்டசீற்றத்தினெறிந்தன்னபூங்கொடிகள். (௩உ)

தேனையென்றசொல்லாரொடுமைந்தருந்திளைக்கு
மீனவாவிபோல்வியன்படிகத்தினால்விளங்குந்
தானமீமிசைத்தயங்கியமுழுமணித்தலர்தான்
வானநின்றிடுதெய்வதமானமேமானும். (௩௩)

தேவர்தானவர்முனிவரர்சித்தரோடியக்கர்
வாவுகின்னரருவணர்கந்தருவர்மற்றுள்ளோ
ரேவருந்தமதகன்பதியிகந்தவணெய்தா
மேவுகின்றனதனித்தனியிருக்கைகண்மிகுமால். (௩ச)

தூங்குகுண்டிகையருகுறக்காலெதிர்தூண்டி
யோங்குநாசிமேல்விழிமுறைநயனங்களுறுத்தி
யாங்கொராசனத்திருந்தரனடியகத்தடக்கிப்
பாங்கர்மாதவம்புரிகுநர்சாலைகள்பலவால். (௩ரு)

பாடுநான்மறையந்தணர்வேள்விகள்பயில
மூடுதண்புகையண்டமுங்கடந்தனமுன்னந்
தேடுகின்றதோர்பரஞ்சுடர்மீட்டுமித்திறத்தா
னீடுகின்றதோவென்றுநான்முகத்தனுநினைய. (௩சு)

நான்மறைக்குலத்தந்தணர்நவையறுகாட்சி
யூன்மறைத்திடுமுயிரெனவோம்பியவொழுக்கார்
மேன்முறைக்கனோரைம்புலப்படிற்றினைவென்றோர்
வான்மறைத்திடுமாளிகைவீதியுமலிந்த. (௩எ)

* தண்டமாகி - தண்டாகாரமாய்.

Digitized By Roja Muthiah Research Library

ஏவுபல்படைவலியினர்வெஞ்சமமிசைந்தோர்
நாவினுன்மறைபயில்பவர்நணுகுறுநலத்தாற்
கோவுநீணகர்மறுகெலாங்குருமணிச்சிகரத்
தேவுநீணகர்நிலைமையேபோல்வதுதெரியின். (௩௮)

அணியினோங்கலும்பன்மணிக்குவால்களுமார்வந்
தணிவிலாடகக்குவைகளும்பிறவுமுன்றழைப்பக்
கணிகளுணுறுகற்பகமனையனகாட்சி
வணிகராவணத்தெற்றிகள்வயின்றொறும்வயங்கும். (௩௯)

கங்கைமாமகடொல்பெருங்குலத்தர்காசினியின்
மங்கையாளருள்புரிதருமகாரெனும்வழக்கோர்
செங்கண்மாணிகர்வெறுக்கையரயன்பதஞ்சேர்ந்தோர்
துங்கவீதியுமேனையர்மறுகொடுந்தொகுமே. (௪௰)

கண்டுகேட்டவையுண்டுயிர்த்துற்றறிகருவி
கொண்டவைம்புலனொருங்குறநடாத்தியகொள்கைத்
தொண்டர்கூட்டமும்விழிவழிப்புனலுகத்தொழுங்கை
யண்டர்கூட்டமுமாலயந்தொறுந்தொறுமருவால். (௪௧)

ஆதிநான்முகனெனினத்தினடிகளுமமலன்
பாதியாளன்றனுவணத்தினடிகளும்பணிக்கார்
நாதனூர்தருதந்தியினடிகளுநாளும்
வீதிவீதிகடொறுந்தொறுங்காண்வரவிளங்கும். (௪௨)

மாவினோதையுங்களிற்றினோதையுமருங்கின்
மேவுதேர்களினோதையுங்கவிகையாய்விரிந்த
காவுசூழ்தருமன்னர்சீரோதையுங்கறங்குந்
தேவதுந்துபியோதையுமிறுத்திலதெருவு. (௪௩)

நாட்டியச்செயல்யாவையுஞ்சிவனதுநடனம்
பாட்டிசைத்திறம்யாவையுமன்னதேபதியோர்
கேட்டிருப்பனயாவையுமவனிசைக்கேள்வி
கூட்டம்யாவையுமன்னவன்றொண்டுசெய்கூட்டம். (௪௪)

பாலுறுந்ததியிழுதுதேனிருக்கைகள்பலவுங்
கோலமாகுமந்நகரிடையவையுறைகூவல்
போலுமாயிடைமாதவத்தவளறம்புரியுஞ்
சாலையாயினவரம்பிலாவடிசிலஞ்சாலை. (௪௫)

அளவில்பற்பகறம்மினுநீங்கியோரடுத்த
கிளைஞர்வந்துழியெதிர்தழீஇநன்னயங்கிளத்தி
யுளமகிழ்ந்தவர்க்கூட்டுமின்னடிசில்போலுறுவோ
ரெளிதினுங்கிடவழங்குமாலோதனவிருக்கை. (௪௬)

வேறு.

மாடமாளிகைவாயிற்றொறுந்தொறு, நீடுகண்ணுளராமெனநின்றுநின்
றுடுசித்திரப்பத்தியமரரு, நாடிநோக்கிநயந்திடப்பட்டதே. (௪௭)

எல்லைதீர்ந்தவிரவிகடேண்டிய, சில்லியாழித்திகிரிகண்மானுமான்
மல்லன்மாநகர்மைந்தர்களூர்தரும், பல்வகைச்சுடர்ப்பண்ணுறுதேர்களே. (௪௮)

வெள்ளையாதியின்கவியாவையுந், தெள்ளிதின்மொழிதென்கலையேமுத
லுள்ளபல்கலையோதுகின்றார்களும், வள்ளியோர்களுமன்றுதொறீண்டுவார். (௪௯)

இகலும்வேழத்தெயிற்றினையேய்ந்திடு, நகிலினார்கணாறுங்குழன்மேலிடு
மகிலினாவியுமாய்மணிமாடமேன், முகிலும்வேற்றுமையின்றிமுயங்குமே. (௫0)

பண்ணினோசையும்பானலைவென்றிடுங், கண்ணினார்கள்களிநடவோசையுந்
தண்ணரம்பியறந்திரியோசையும், விண்ணுளோர்க்கும்விருந்தெனலாயவே. (௫௧)

அணிகுலாவுமரம்பையர்காளையர், நணியதோளைநயப்புறநாகருங்
கணிகைமாதரைக்காமுறமேவலான், மணிகொள்காஞ்சிமதனரசாயதே. (௫௨)

கூற்றிற்செல்லுங்கொலைக்கரித்தானமு, மேற்றிற்செல்லுமிடையர்தஞ்சேரியி
னாற்றிற்செல்லுமொண்பாலுமுடனுற,வாற்றிற்செல்லுமவ்வாவணந்தோறுமே. ()

வேறு.

பண்ணுளார்நரம்பியல்பாணிக்கேற்றிட, வெண்ணுளகணிகையரினத்தொடாடலுங்
கண்ணுளாராடலுங்காமனாடலும், விண்ணுளராடலும்வெறுப்பமேவுமே. (௫௪)

அரிவையர்மைந்தர்களணிந்துநீத்தவே, திருமகள்காமுறுஞ்செல்வமாகுமேற்
கருதருநான்முகக்கடவுட்காயினும், பொருவருநகர்வளம்புகலற்பாலதோ. (௫௫)

வேறு.

மாறாய்ச்சிறார்களெறிந்தாடியமான்மகத்தாற்
சேறாய்ப்பொற்சுண்ணத்துலர்வாய்ப்பனிநீர்கள்சிந்த
வாறாய்ப்பளிதத்தினில்வாலுகத்தாறுமாகி
வேறாய்ப்புலியோருணர்வாமெனமேயவீதி. (௫௬)

தண்டாமரையேந்தியவானவன்றன்னை * யொத்தா
னெண்டாவியமாமதனேந்திழையாரிலஞ்சி
வண்டாமரைபூத்தனவொத்தனர்வந்துசெந்தே
னுண்டாடியதேன்களையொத்தனரோங்கன்மைந்தர். (௫௭)

ஏமங்குலவுமுரசங்களிரட்டவாசத்
தாமங்கமழ்பந்தரினூடுதமக்கியன்ற
வோமங்களின்மாமணஞ்செய்தனரூர்குலாவு
மாமங்கலமேயுலப்பின்றிமலிந்ததன்றே. (௫௮)

மாகந்திகழுமகிலாவிகொண்மாடமீதிற்
பாகின்மொழியாரிளமைந்தர்தம்பாலினேச்சப்
போகுஞ்சிவிறிப்பனிநீர்புறஞ்சிந்தவென்று
மேகஞ்சிதறும்பெயலென்னவிளங்கும்வீதி. (௫௯)

வன்மாமுலையேந்தியமங்கையர்மைந்தரானோர்
தொன்மாடமீதிலெறிந்தாடுபொற்சுண்ணமோடு
நன்மாமலர்த்தாதுவிசும்புறநண்ணமேகம்
பொன்மாமுகிலாய்ப்பனிநீரிற்பொழியுமன்றே. (௬0)

* தண்டாமரையேந்திய வானவன் என்றது சூரியனை. இவன் இரண்டு புயங்களினும் பொருந்திய நாளத்தோடு கூடிய இரண்டு வெண்டாமரைமலர்களைப் பிடித்த இரண்டு கைகளையுடையவனென்றறிக.

Digitized By Roja Muthiah Research Library

தாராற்பொலிபொற்புயவீரர்தவாதுசெல்லுந்
தேரார்ப்புநால்வாய்க்கரியார்ப்பும்வெஞ்சேனையார்ப்பு
மேரார்ப்புமிக்கபதிமானவரீண்டுமோர்ப்புங்
காரார்ப்பும்வேலைக்கடலார்ப்புங்கடுத்தலன்றே. (௬௧)

வானோக்கிநிற்குமுலகென்னவுமன்னவன்செங்
கோனோக்கிநிற்குங்குடியென்னவுங்கோதிலும்ப
ரானோர்க்குநாகருலகோர்க்குமவனியோர்க்கு
மேனோர்க்குநாடுநகராகியிருந்ததவ்வூர். (௬௨)

கோடுநெறியுமிகலும்மனக்கோட்டமாய
கேடும்பிணியுமுதலாகியகேதம்யாவு
நீடும்பரிவோடுறைவாரிடைநீங்கலாலே
வீடந்நகரேயெனிலென்னினிவிளம்பவற்றே. (௬௩)

வேறு.

ஏமமேதருவாச்சினைகளுமனைத்தாவிலைதளிர்செய்யபூந்துகிராக்
காயர்பூமணி * யாவுதித்தொருகாஞ்சிகண்ணரோரைவர்முன்கண்டு
தாமினிதருளும்பொய்கையின்மருங்கேதன்னிழல்பிரிகிலாதுறலாற்
பூமியெண்காஞ்சிமாபுரமெனும்பேர்புனைந்ததப்பொருவிலாநகரம். (௬௪)

சுருதியானுறங்குமிராத்தொறுமுடிவிற்றுஞ்சியவூழிகடோறும்
விரையவந்துலகமழித்திடுங்கடலவ்வியன்பதியெல்லையுட்சிறிதும்
வருவதையஞ்சிப்புறந்தனிற்சூழவந்தொருசத்திகாத்திடலாற்
பிரளயசித்தென்றொருதிருநாமம்பெற்றதக்காஞ்சியம்பேரூர். (௬௫)

கயிலையிலரனையம்மைபூங்காவிற்கண்களைமூடவுமுலகிற்
பயிலுறுகொடியவினையிருளகலும்பான்மையால்வந்துமாநிழற்கீ
ழியலொடும்பரமன்பூசனையியற்றியிரைத்தெழுகம்பைகண்டஞ்சிச்
செயன்முறைதழுவக்குழைந்தருள்செய்யச்சிவபுரமானதச்சீரூர். (௬௬)

விண்ணுறைமகவான்கரிபுரிதவத்தால்வெற்பதாய்த்தன்னைமுன்றாங்கு
புண்ணியகோடி ο யிபகிரிமிசையேபொருவிலாவேதியுத்தரத்தி
லண்ணலங்கமலத்திசைமுகன்வேள்வியாற்றவுமவற்கருள்செய்வான்
கண்ணன்வந்திடலால்விண்டுமாபுரமாங்கட்டுரைபெற்றதக்காஞ்சி. (௬௭)

கார்த்திருமேனித்தண்டுழாய்மௌலிக்கண்ணனுங்கமலமேலயனு
மார்த்திடுந்தரங்கப்பகீரதிமிலைந்தவிர்சடையமலனுமாகு
மூர்த்திகடத்தமுலகமேபோலமுன்னியப்பதியமர்செயலாற்
சீர்த்திரிமூர்த்திவாசமாகியபேர்சிறந்ததக்கச்சிமாநகரம். (௬௮)

தரணிகண்முழுதும்புரிதரும்விரிஞ்சன்றன்மனம்புனிதமாம்பொருட்டாற்
றிருமகள்கணவன்கமடமாய்ப்பூசைசெய்திடுகச்சபாலயத்தி
லரனடிபரவியருச்சனையியற்றியங்கண்வீற்றிருந்திடுநெறியால்
வரமிகுபிரமபுரமெனவொருபேர்மன்னியதன்னதோர்நகரம். (௬௯)

வீடுறுமுத்திபோகமென்றவற்றில்வெஃகியவெஃகியாங்கென்றுங்
கூடுறுதவத்தால்வழிபடுவோர்க்குக்கொடுத்திடுந்தன்மையாற்காம
பீடமென்றொருபேர்பெற்றதுமலர்மேற்பிரமனேமுதலினோர்தவத்தை
நாடினர்செயலாற்றபோமயமெனும்பேர்நணியதுகச்சிமாநகரம். (௭0)

---

* காஞ்சிப்பூ நீலநிறமாதலால், மணி என்பதற்கு நீலமணியெனப் பொருள்கொள்க.
ο புண்ணியகோடி - வரதராசப்பெருமாள் சிவலிங்கபூசை செய்த ஆலயம்.

Digitized By Roja Muthiah Research Library

சகங்களோர்மூன்றிலறம்பெரிதுளதித்தரணியித்தரணிமாநகர்க்கு
மிருந்தருமத்தின்பலத்தினைத்தரலால்வியன்சகற்சாரமென்றொருபேர்
புகும்பரிசுடையதட்டசித்திகளும்பொருவின்மாதவர்க்கருடிறத்தாற்
பகர்ந்திடுஞ்சகலசித்தியென்றொருபேர்படைத்ததுகச்சியம்பதியே. (எக)

உன்னருங்கயிலைநாயகனுமையையொருபகனீவியென்றுரைப்ப
வன்னவடனதுகாளிமங்கழிப்பவங்கதிலையைவந்தெழலு
முன்னவனவளையிந்நகரிருந்துமுறைபுரிந்தருளெனவிடுப்பக்
கன்னிகாத்திடலாற்கன்னிகாப்பென்னுங்கவின்பெயருடையதுகச்சி. (எஉ)

அரியதோர்கயிலைக்கணங்களிலொருவனனதுண்டீரன்மாலதிபாற்
பெருமயல்கொள்ளச்சிவனிவளொடுநீபிறந்திருந்தின்பமுற்றெம்பால்
வருகெனநிலமேன்மன்னர்பாற்றோன்றிமற்றவளோடுசேர்ந்தரசு
புரிதருசெயலாற்காஞ்சிதுண்டீரபுரமெனப்புகலநின்றதுவே. (எங)

தன்னையேயருச்சித்திடமலர்க்கேகித்தடந்தனிற்கராவின்வாய்ப்பட்டுத்
தன்னையேநினைந்துதன்னையேயழைத்ததந்தியைக்காத்தவொண்புயமா
றன்னையேவேண்டித்தழன்மகஞ்செய்யத்தண்டகற்கெண்டிசையரசு
தன்னையீந்திடலாற்றண்டகபுரமாந்தனிப்பெயர்பெற்றதத்தனியூர். (எச)

அழகியவயோத்திமதுரையேமாயையவந்திகைகாசிநற்காஞ்சி
விழுமியதுவரையெனப்புவிதன்னின்மேலவாய்வீடருள்கின்ற
வெழுநகரத்துட்சிறந்ததுகாஞ்சியென்றுமுன்னெம்பிரானுமைக்கு
மொழிதருநகரந்நகரெனிலதற்குமூவுலகத்துநேருளதோ. (எரு)

பங்கமில்வசிட்டன்பசுப்பொழிபாலிபடர்ந்திடுமுத்தரஞ்சேயைச்
செங்கமலத்தோன்முதலினோராட்டுந்திருநதிதென்றிசைச்செல்லு
மங்கவற்றிடையேகம்பமேமுதலாமாலயத்தந்தருவேதி
கங்கைகாளிந்தியிடைப்படுந்தலத்தின்மூற்படுங்காஞ்சிமாநகரம். * (எசு)

தொல்லையோர்பிரமன்றுஞ்சியகாலைத்தோன்றியநீத்தமேலரிபோற்
செல்லுமார்க்கண்டன்கரத்தினிற்கம்பைசேர்ந்ததோர்தனிப்பெருஞ்சூத
மெல்லைநீரிகந்துவளர்தலுமருப்பொன்றெய்தவக்கொம்பர்தொட்டிழிந்து
நல்லுமைகுறிக்கொண்முதல்வனைவணங்கிநயந்தவணிருந்ததந்நகரம். (எஎ)

சமயமாறினையுந்தாயெனவளர்த்துச்சராசரவணுக்களுய்ந்திடுவா
னமைதருமெண்ணான்கறத்தினைப்போற்றியாதிபீடத்தில்வீற்றிருக்கு
முமையமர்காமக்கோட்டியைக்கதிரோனுடுபதிகணங்கள் ० சூழ்தரலா
லிமையவர்தமக்குந்திசைமயக்குறுதவியல்புடைத்தந்நகரென்றும். (எஅ)

பாவமோர்கோடிபுரியினுமொன்றும்பரிவினிற்றருமமொன்றியற்றி
னேவரும்வியப்பக்கோடியாய்மல்குமின்னதோர்பெற்றியைநாடித்
தேவர்கண்முனிவர்தம்பதம்வெறுத்துச்சிவனருச்சனைபுரிந்தங்கண்
மேவினர்தவஞ்செய்திருத்தலாற்காஞ்சிவியனகர்ப்பெருமையார்விரிப்பார். (எகூ)

---

* சேயாற்றுக்கும் பாலியாற்றுக்கும் நடுவேயுள்ள அந்தர்வேதியாகிய காஞ்சீபுரம், கங்கையாற்றுக்கும் யமுனையாற்றுக்கும் நடுவேயுள்ள அந்தர்வேதியாகிய காசியினுஞ் சிறந்ததென்பது கருத்து. அந்தர் - நடு. வேதி - சமபூமி.

० கணம் - நக்ஷத்திரம்.

Digitized By Roja Muthiah Research Library

கங்கைதன்சிறுவனருள்பெறுவேதாக்கண்படைகொண்டகாலையினு
மங்கவன்றுஞ்சும்பொழுதினுங்காஞ்சியழிவுறாதிருந்தபான்மையினாற்
றுங்கவெண்பிறையுமிதழியுமரவுஞ்சுராதிபர்முடிகளுமணிந்த
மங்கையோர்பங்கன்படைத்ததேயன்றிமலரயன்படைத்ததன்றதுவே. (௮0)

அரியபல்லிசையுமறைபுனல்கங்கையருஞ்சிலையிலிங்கமங்குறைவோர்
சுரர்தருவனைத்துங்கற்பகமின்பந்துய்ப்பதுவேள்வியூண்பூசை
யுரைசெபநடத்தல்வலம்வருந்தன்மையுன்னலேதியானம்வீழ்ந்திடுதல்
பரனடிவணக்கமாவதுகாஞ்சிப்பதிக்கலாலெந்நகர்க்குளதே. (௮௧)

கணமுகில்செக்கர்போர்த்தெனுங்கரியகஞ்சுகச்செந்நிறக்கடவுண்
மணிசுடர்வயிரக்கிம்புரிமருப்புமால்கரிமுகத்தவன்வருசூர்
துணிபடவெறிந்தவேலவனயன்போற்றோன்றியசாத்தன்மால்விசயை
யிணையில்சீர்க்காளிமுதலினோரென்றுமினிதுகாத்திடுவதந்நகரம். (௮௨)

அறுசமயத்திற்கடந்தசைவத்தினன்றிவீடிலதெனத்தெளிந்து
பிறரறியாதுதொன்மைபோலிருந்தபிஞ்சகன்மீதுகன்மலரா
லெறிதருதேரனன்பர்தங்கலிங்கமெழிலிகணனைத்தலுஞ்சிரத்தை
முறைபுரிசிலைமேன்மோதினோன்முதலோர்முத்திபெற்றுடையதம்மூதூர். (௮௩)

ஈசனதருளாற்கயிலையைநீங்கியிமையமாமயிலறம்புரிவான்
காசியிலிருந்துமுடிவுறாதேகிக்கனகமாநீழலிற்பரனைப்
பூசனைபுரிந்துகம்பைகண்டஞ்சிப்பூண்முலைவளைக்குறிப்படுத்தி
யாசிலாவருள்பெற்றின்னுநோற்றிடலாலனையகாஞ்சிக்குநேரதுவே. (௮௪)

ஆரு * யிர்முழுதும்வீடுபெற்றுய்வானறம்புரிசாலையதணித்தாப்
பேரரவிறைவன்றவத்தின்முனிருந்தபிலத்திடைக்கோயில்கொண்டென்றும்
பூரணிநோற்றுவழிபடவனையாள்பூசனைகொண்டியாவர்க்குங்
காரணமானபரசிவனநந்தகலையொடுநிலையதக்காஞ்சி. (௮௫)

இன்னமுமுமையாணோற்றிடமாங்கேயிறப்பினும்பிறப்பினுநிலையாய்
மன்னியேயுறினுமொருகணமேனும்வைகினுமறைகளாந்தனிமா
நன்னிழலிருந்தபரஞ்சுடர்புரியுநடந்தரிசிக்கினுமதனை
யுன்னினுமுத்திவழங்குகாஞ்சியைப்போலுலகில்வேறொருநகருளதோ. (௮௬)

கண்ணுதற்பரனுந்தண்டுழாய்மௌலிக்கடவுளுங்கமலமேலயனும்
விண்ணவர்க்கிறையுங்கொற்றமாலினியுமேலைநாட்பிறந்ததொன்மனுவுந்
தண்ணளிபுரிதுண்டீரனுநள்ளார்சமர்த்தொழில்கடந்ததண்டகனு
மண்ணலங்கரிகால்வளவனும்பிறருமரசுசெய்தளித்ததந்நகரம். (௮௭)

வேலைசூழுலகினெங்கணுமிருபால்வீட்டினைவெஃகினோர்க்குதவு
மாலயநூற்றெட்டுள்ளமற்றவற்றுளெம்முகப்பரஞ்சுடரமருங்
கோலமார்நிலயமிருபதுமாயோன்கோநகரெட்டுமாக்குழுமி
நாலெழுதானமுள்ளவந்நகர்போலும்புகழ்நகரமற்றெவனே. (௮௮)

---

* ஆர் - அருமை.



Digitized By Roja Muthiah Research Library

கச்சபாலயமேகம்பமேமயானங்கவின்கொள்காரோணமாகாளம்
பச்சிமாலயநல்லநேகபங்கடம்பைபணாதரமணீச்சரம்வராக
மெய்ச்சுரகரமுன்னிராமம்வீரட்டம்வேதநூபுரமுருத்திரர்கா
வச்சிரனகரம்பிரமமாற்பேறுமறைசையாஞ்சிவாலயமிருபான். * (அகூ)

கரிகிரியட்டபுயந்திருவெஃகாக்கருதுமூரகஞ்சகாளாங்கஞ்
சுரர்புகழ்நிராகாரர்நிலாத்திங்கட்டுண்டநற்பாடகமினைய
வரிதிருமுற்றமெட்டவை ○ யன்றியறுபதினுயிரநிலயம்
பரசிவன்சத்திகுமரர்மால்புறத்தோர்பலரும்வீற்றிருப்பதப்பதியே. (கூ0)

ஒன்றுதீவிளக்கமீரிடமொருமூன்றூற்றிடுதெற்றிநான்கரண
நின்றிடுதருவைந்தாறுபுள்ளேழுநெடுநதியெண்பொதுவொன்பான்
மன்றலம்பொய்கைவியன்சிலையொருபான்மன்றவைபத்தின்மேலொன்று
நின்றமர்ந்தொழுகுநெறியிலற்புதமாய்நிகரிலாதுறையுமந்நகரம். (கூக)

சிறந்திடுமதியுமிரவியுமாழ்கச்செகமெலாந்தனதொளிபரப்பி
யறம்புரிகாமக்கோட்டிமந்திரத்துளம்மைவாழ்பிலத்தினுளழியா
துறைந்திடுதூண்டாவிளக்கமொன்றுதித்தவுயிர்த்தொகையிறந்திடாவிடமொன்
றிறந்திடுமுயிர்கள்பிறந்திடாவிடமொன்றெம்பிரானிருந்தவீரிடமே. (கூஉ)

தோற்றுயிர்க்குணவுநல்குமோர்தெற்றிசொற்றவையுதவுமோர்தெற்றி
தேற்றுசொன்மூகர்க்களிக்குமோர்தெற்றிதெற்றிமூன்றிவைநகரெல்லை
யீற்றினிற்கீழ்பாலளக்கருந்தென்பாலியற்பெரும்பெண்ணைநன்னதியு
மேற்றிசைப்பவளசயிலமும்வடபால்வேங்கடவெற்புநான்கரணே. (கூங)

மறைகளினுருவாய்ப்பொன்மலர்தணிமாமலரொடுகாயிலாதென்றுஞ்
செறிதருபலங்களுதவிநுங்கினர்க்குச்சித்திகள்வழங்குறுமெகினம்
வெறிமலர்பலவுமலர்ந்திடுமதூகம்விண்ணினைநோக்குமோரத்தி
நறுநிழல்பிரியாதிருந்ததோர்காஞ்சிநன்னகர்தன்னிலைந்தருவே. (கூச)

உம்பருண்பகிருஞ்சாதகமணிகளுதவிடுமன்னநூலுரைத்துக்
கொம்புறுகிள்ளையலகுசொல்லாந்தைகுறைபெறிற்கூவுறுக்கோழி
யிழ்பரிற்பாவந்துடைத்திடுசேமியிவையறுபுள்ளெழுநதிதான்
கம்பைநற்பம்பைமஞ்சணிபிச்சிகலிச்சிபொன்மண்ணிவெஃகாவே. (கூரு)

குரைபுனல்வேட்டோர்க்குதவியேதிரியுங்கூவலம்பொதுக்குறுமுயல்போய்க்
கரிதொடர்பொதுவேழிசையுறுபொதுமால்கண்டுயின்றிடுபொதுவேரு
ருருவுசெய்பொதுவோர்புற்றின்மாமுழவமொலித்திடும்பொதுத்திசைமயக்கம்
புரிதருபொதுவென்னம்மைநோற்றருளும்பொற்பொதுவிவைகளெண்பொதுவே.

---

* சிவாலயம் இருபது:—கச்சபாலயம், திருவேகம்பம், திருமயானம், திருக்காயாரோகணம், மகாகாளேசம், திருமேற்றளி, அநேகபேசம், கடம்பை, பணாதரேசம், மணீசம், வராகேசம், சுரகரேசம், பரசுராமேசம், வீராட்டகாசம், வேதநூபுரம், உருத்திரர்கா, இந்திராலயம், சதுர்முகசங்கரம், திருமாற்பேறு, திருவோத்தூர்.

○ விஷ்ணுவாலயம் எட்டு:—அத்திகிரி, அட்டபுயம், வெஃகா, ஊரகம், சகாளாங்கம், நிராகாரம், சந்திரகண்டம், பாடகம்.

Digitized By Roja Muthiah Research Library

முன்னுறுபிணிகண்மாற்றிடும்பொய்கைமுதல்வர்கண்முடிவுறுங்காலைச்
செந்நிறமாகும்பொய்கைமுக்காலந்தெரித்திடும்பொய்கைகண்ணுதலோன்
றன்னடிகாட்டும்பொய்கைவேண்டியதுதந்திடும்பொய்கைமெய்ஞ்ஞானம்
பொன்னிறஞ்செல்வம்வசீகரந்தருநாற்பொய்கையோடொன்பதாம்பொய்கை. ()

விடந்தனையகற்றுமொருகலாருயிர்கண்மெய்ப்பிணிமாற்றிடுமொருக
லடைந்தவரெல்லாமிமையவராகவளித்திடுமொருகல்வெம்படையாற்
றடிந்திடவேறாய்த்துணிபடுமுடலஞ்சந்துசெய்வித்திடுமொருக
னெடும்படைவரினுமவையிரிந்தோடநிலைபெறீஇநிற்குமாங்கொருகல். (௯௮)

துஞ்சினர்தம்மையெழுப்புமாங்கொருகறொல்வழக்கறுத்திடுமொருக
லெஞ்சலினிதியங்கெடுத்துளோர்வினவிலீதெனக்காட்டிடுமொருகல்
விஞ்சியவினைகடீர்த்திடுமொருகல்வேந்தருக்கரசியலுதவித்
தஞ்சமதாகநின்றிடுமொருகறக்ககல்லையிரண்டவையே. (௯௯)

அயன்மனைச்சென்றோர்கணவரைப்பிழைத்தோரடிகளையிகழ்ந்துளோரனுகிற்
றுயருறுமூகையாக்குமோர்மன்றஞ்சோரர்முன்சுழலுமோர்மன்றம்
வியனிறம்பலவாத்தோன்றுமோர்மன்றம்விஞ்சைகள்வழங்குமோர்மன்ற
மயல்புரிகின்றபொழுதொடுநிசையின்மயக்கறத்தெளிக்குமோர்மன்றம். (௧00)

நாகருருய்க்கும்பிலத்ததோர்மன்றநவமணியுதவுமோர்மன்ற
மாகர்பேரமிர்தமிருக்குமோர்மன்றம்வடிவினைமறைப்பதோர்மன்ற
மேகநின்றரூதுபொழியுமோர்மன்றம்வியன்பகல்கங்குலாக்கங்கு
லாகியபகலாவிருப்பதோர்மன்றமையிரண்டொன்றுமன்றவையே. (௧0௧)

ஈங்கிவையன்றிச்சிலைகளுந்தருவுமிடங்களுங்கூவலுநதியும்
பாங்குறுகுளனுந்தீர்த்தமும்பிலமும்பழனமுஞ்சோலையும்பிறவு
மாங்கவையநந்தகோடியுண்டோரொன்றளவிலற்புதத்தனவவற்றைப்
பூங்கமலத்தோன்சுருக்கறவிரித்துப்புகலினுமுலப்புறவற்றோ. (௧0௨)

தோட்டலர்வனசத்திசைமுகன்முன்னஞ்சொற்றனனவனடிவணங்கிக்
கேட்டருள்சனகன்வியாதனுக்குரைப்பக்கேடில்சீர்வியாதனங்குணர்ந்து
மாட்டுறுசூதன்றனக்கியம்புதலுமற்றவன்முனிவரர்க்கிசைத்த
பாட்டினிலடங்காக்காஞ்சியின்பெருமைபகர்ந்திடத்தமியனுக்கெளிதோ. (௧0௩)

வேறு.

சொற்படுமிலையகாஞ்சித்தொன்னகரதற்குநாப்பண்
கற்புறுமிமையவல்லிகருணையால்வைகிநோற்கும்
பொற்புறுகாமக்கோட்டம்போலவேயதற்கோர்சாரி
லெற்படுகுமரகோட்டமென்றோராலயமுண்டன்றே. (௧0௪)

ஆவதோர்குமரகோட்டமதனிடையரன்கண்வந்து
தாவுடையெஃகமொன்றூற்சூர்முதறொலையச்செற்றுந்
தேவர்வெஞ்சிறையைமாற்றிச்சேண்மகபதிக்குநல்கி
மேவியகுமரமூர்த்திவியத்தகவுறையுமாதோ. (௧0௫)

மேவருங்கூடன்மேலைவெற்பி * னிலலைவாய்தன்னி
லாவினன்குடியினல்லேரகர்தணிற்றணிகையாதிப்
பூவுலகுள்ளவெற்பிற்பொற்புறுமேனைவைப்பிற்
கோவில்கொண்டருளிவைகுங்குமரகோட்டத்துமேயோன். (௧0௬)

* கூடன்மேலைவெற்பு - திருப்பரங்குன்று.

Digitized By Roja Muthiah Research Library

வச்சிரமெடுத்தசெம்மல்வைகியதுறக்கந்தன்னி
லச்சுதன்பதத்துக்கப்பாலானதன்பதத்தில்விண்ணோர்
மெச்சுறுகந்தவெற்பில்வீற்றிருந்தருளுமாபோற்
கச்சியிற்குமரகோட்டங்காதலித்தமருங்கந்தன். (க0எ)

ஈண்டுளதரணிமுற்றுமெல்லைதீர்வானவைப்பு
மாண்டகைமகவான்சீருமம்புயன்முதலோர்வாழ்வு
மாண்டிடல்பிறத்தலின்றிமன்னியவீடும்போற்றி
வேண்டினர்வேண்டியாங்குவேலவன்புரிந்துமேவும். (க0அ)

கொண்டலையளக்குநொச்சிக்குமரகோட்டத்துச்செவ்வேள்
கண்டிகைவடமுந்நூனீர்க்கரகமுங்கரத்திலேந்திப்
பண்டையிலயனைமாற்றிப்படைத்தருள்வேடந்தாங்கி
யண்டர்களெவரும்போற்றவருள்புரிந்தமர்ந்தானன்றே. (க0கூ)

ஆயதோர்காஞ்சிமூதூரதனிடையம்புயத்தின்
மேயவன்றனதுபுந்திவிமலமாம்பொருட்டான்மேனாண்
மாயவன்கமடமாகிவழிபடுதலத்தின்முக்க
ணாயகன்றனையர்ச்சித்துநாமகளுடனுங்குற்றான். (கக0)

உற்றிடுகின்றநாளினுலகிலில்லறத்தையாற்றி
நற்றவம்பலவும்போற்றிநண்ணிய * முனிவரெல்லா
மற்றவனைக்கஞ்சமலர்மிசையிருந்தவையன்
பொற்றிருவடியைத்தாழ்ந்துபோற்றினர்புகலலுற்றார். (ககக)

அத்தகேளிந்நாள்காறுமடியமில்லறத்தையாற்றி
யித்தலநகரமெங்குமிருந்தனமினிமேனாங்கள்
சித்தமதொருங்கநோற்றுச்செய்கடனியற்றிவைக
மெய்த்தவவனமதொன்றைவிளம்பியேவிடுத்தியென்றார். (ககஉ)

என்றலுந்தருப்பையொன்றையேழுலகளித்தோன்வாங்கி
யொன்றொருதிகிரியாக்கியொய்யெனவுருட்டிப்பாரி
வின்றிதன்பின்னராகியெல்லிருமேகியீது
நின்றிடும்வனத்தினூடேநிலைப்படவிருத்திரென்றான். (ககங)

திருப்பதுமத்துவள்ளல்சேவடிக்கமலந்தாழா
விருப்பொடுவிடைகொண்டேகவிரைவினிலன்னான்விட்ட
தருப்பையினேமிசென்றோர்தனிவனத்திறுத்தலோடு
மிருப்பிடமெமக்கீதென்னவிருந்தவரிருந்தாரங்ஙன். (ககச)

தாமரையண்ணலுய்த்ததருப்பையினேமிதன்ன
ணமமதொன்றுபெற்றநைமிசாரணியம் o வைகுந்
தூமுனிவரர்களெல்லாஞ்சொல்லருந்தவத்தையாற்றி
மாமறைநெறியினின்றுமகமொன்றுபுரிதலுற்றார். (ககரு)

---

* நண்ணியவென்பது இங்கே வினையெச்சம்.

o நேமி - சக்கரம். ஸீ - கிடத்தல்; அல்லது ஸூ - ஒழிதல். நைமிசம் - சக்கர மோய்ந்தவிடம்.

Digitized By Roja Muthiah Research Library

அனைமர்புலனோர்நான்குமான்றமைபொருட்டாலாங்கோர்
மகவினைசெய்துமுற்றிவாலிதாமுணர்ச்சியெய்தி
யிகலறுமுளத்தராகியிருந்தனரிதனைநாடிச்
சுகனெனவுணர்வுசான்றசூதமாமுனிவன்போந்தான். (ககசு)

முழுதுணர்சூதன்றன்னைமுனிவரர்கண்டுநேர்போய்த்
தொழுதனர்பெரியோயெம்பாற்றுன்னலாலின்னவைகல்
விழுமிதுசிறந்ததென்றுவியத்தகுமுகமன்கூறித்
தழையொடுதருப்பைவேய்ந்ததம்பெருஞ்சாலையுய்த்தார். (ககஎ)

திருக்கிளர்பீடமொன்றுதிகழ்தரநடுவணிட்டுச்
சுருக்கமில்கேள்விசான்றசூதனையிருத்தியாங்கே
யருக்கியமுதலநல்கியவனதுபாங்கராகப்
பொருக்கெனயாரும்வைகியிஃதொன்றுபுகலலுற்றார். (ககஅ)

முந்தொருஞான்றுதன்னின்முளரியந்தேவன்சொல்லால்
வந்திவணிருந்தேமாகமற்றியாம்புரிந்தநோன்பு
தந்ததுநின்னையற்றாற்றவப்பயன்யாங்கள்பெற்றேஞ்
சிந்தையினுவகைபூத்தேஞ்சிறந்ததிப்பிறவியென்றார். (கககூ)

அன்னதுசூதன்கேளாவாதியம்பரனையேத்தி
மன்னியவேள்வியாற்றிவாலறிவதனையெய்தித்
துன்னியமுனிவிர்காணுந்தொல்குழுவடைதலன்றே
வென்னிகராயினோருக்கிம்மையிற்பெறும்பேறென்றான். (கஉ0)

அவ்வழிமுனிவர்சொல்வாரருமறைகண்டவண்ணல்
செவ்வியமாணாக்கர்க்குட்சிறந்துளோய்திறற்சூராவி
வவ்வியநெடுவேலண்ணன்மாண்கதைதேர்வான்பன்னு
ளிவ்வொருநசைகொண்டுள்ளேமியம்புதியெமக்கென்றார். (கஉக)

அம்மொழிசூதன்கேளாவழல்படுமெழுகேயென்னக்
கொம்மெனவுருகவுள்ளங்குதூகலித்தவசமாகி
மெய்ம்மயிர்பொடிப்பத்தூநீர்விழித்துணையரும்பவாசான்
பொய்ம்மையில்படிவமுன்னித்தொழுதிவைபுகலலுற்றான். (கஉஉ)

மன்னவன்மதலையாசான்மாமகன்றனதுமைந்தன்
பன்னுசொற்கொள்வோனீவோன்வழிபடுபண்பின்மிக்கோ
னென்னுமிங்கிவருக்கீவதேனைநூலுங்கள்போலச்
செந்நெறியொழுகுவார்க்கேசெப்புவன்புராணமுற்றும். (கஉங)

தனைநிகர்பிறரின்றாயசண்முகற்கன்புசான்ற
முனிவிர்காளுரைப்போர்கேட்போர்முத்திசேர்காந்தத்துண்மை
வினவினீரதனையின்னேவிளம்புவன்புலன்வேறின்றி
யினிதுகேண்மின்களென்றுவெடுத்திவையியம்பலுற்றான். (கஉச)

திருநகரப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் உஎ0.

Digitized By Roja Muthiah Research Library

# பாயிரப்படலம்

முன்றொருகாலத்தின் * மூவுலகந்தன்னில்
வந்திடுமுயிர்செய்தவல்வினையதனாலே
யந்தமின்மறையெல்லாமடிதலைதடுமாறிச்
சிந்திடமுனிவோருந்தேவருமருளுற்றார். (௧)

நெற்றியில்விழிகொண்டநிமலனதருளாலே
யற்றமின்மறையெல்லாமாதியின்வரலாலே
மற்றதனியல்பெல்லாமயலறவோராடித்
தெற்றெனவெவராலுஞ்செப்புவதரிதாமால். (௨)

ஆனதொர்பொழுதிற்கணமரருமுனிவோரு
மாநிலமிசைவைகுமாக்களுமிறையுள்ள
ஞானமிலராகிநவின்மறைநெறிமாற்றித்
தீநெறிபலவாற்றிப்பனுவல்கள்சிலசெய்தார். (௩)

அவனியிலறமெல்லாமருவினையெனநீக்கிப்
பவநெறியறமென்றேபற்பலருஞ்செய்யப்
புவனமதுண்டோனும்போதனுமதுகாணாச்
சிவனருளாலன்றித்தீர்கிலதிதுவென்றார். (௪)

வேறு.

இன்னபான்மையையெண்ணியிருவரும்
பொன்னினாடுபுரந்திடுமன்னனுந்
துன்னுதேவருஞ்சுற்றினர்வந்திடக்
கன்னிபாகன்கயிலையிலேகினார். (௫)

அந்தில்செம்பொனணிமணிக்கோயிலின்
முந்துகோபுரமுற்கடையிற்புகா
நந்திதேவரைநண்பொடுகண்டுநீ
ரெந்தையார்க்கெம்வரவிசைப்பீரென்றார். (௬)

தேவதேவன்றிருமுன்னரேகியே
காவனந்திக்கடவுள்பணிந்தெழீஇப்
பூவைவண்ணனும்போதனும்புங்கவ
ரேவருஞ்செறிந்தெய்தினரீண்டென்றான். (௭)

என்றகாலையின்யாரையுமிவ்விடைக்
கொன்றைசூடிகொணர்கெனச்செப்பலு
நன்றதேயெனநந்திவணங்கியே
சென்றுமான்முதற்றேவரையெய்தினான். (௮)

செம்மைபோகியசிந்தையரைக்கெழீஇ
யெம்மையாளுடையானருளெய்தினு
னும்மையங்குவரநுவன்றானினி
வம்மினீரெனவல்லையிற்கூவினான். (௯)

---

* ஆதிகற்பத்திற்றுவாபரயுகத்திலென்றறிக.

Digitized By Roja Muthiah Research Library

யளித்தசாலைவிழிவழிபோதநீர்
துளிக்கநின்றுதொழுதுகவலொரீஇக்
களிக்குநெஞ்சினர்கண்ணுதலெந்தைமுன்
னளித்தியாலெல்றவனுடனேகினார். (க0)

புடைகடந்திடுபூதர்கள்போற்றுமத்
தடைகடந்துதடுப்பரும்வேனிலான்
படைகடந்தவர்பாற்படுமெண்ணிலாக்
கடைகடந்துபினண்ணலைக்கண்டனர். (கக)

முன்னரெய்தித்தொழுதுமுறைமுறை
சென்னிதாழவிறைஞ்சினர்சேணிடைத்
துன்னுமாதரந்தூண்டவந்தண்மினா
ருன்னுமன்பினுததியினாழ்ந்துளார். (கஉ)

ஈர்க்கும்பாசத்திருவினையின்றொடே
தீர்க்கின்றாமிவணென்னுஞ்செருக்கினாற்
றார்க்கின்றார்மலர்சோதிபொற்றாண்மிசைப்
போர்க்கின்றார்மெய்ப்பொடிப்பெனும்போர்வையே. (கங)

நேயமுந்தநெடும்பசணீங்கிய
தாயெதிர்ந்திடுகன்றின்றகைமையாய்த்
தூயவந்தனையோடுதொழுமவர்
வாயின்வந்தவைவந்தனபோற்றினார். (கச)

அண்ணலீசன்வடிவையகந்தனி
லெண்ணினெல்லையிலின்பம்பயக்குமாற்
கண்ணினேர்வருகாட்சியராயிடி
னெண்ணுமோவவர்தஞ்செயலோதவே. (கரு)

மேலைவானவர்வேந்தொடுமெம்பிரான்
சீலமேயதிருமுன்புமேவினார்
மாலுநான்முகத்தண்ணலும்வந்திரு
பாலுமாகிப்பரவினரென்பவே. (கசு)

வேறு.

அம்புயாசனமுடையண்ணலாழியா
னும்பரோடித்திறமுற்றுப்போற்றழிச்
செம்பொனேர்முடிமிசைத்திங்கள்சேர்த்திய
வெம்பிரானருள்புரிந்தினையகூறுவான். (கஎ)

ஒன்றொருகுறைகளுமுறாதபான்மையா
னன்றுநும்மரசியனடந்தவோவெனாக்
குன்றவில்லுடையவோர்குழகன்செப்பலு
நின்றமாறொழுதிவைநெறியிற்கூறுவான். (கஅ)

ஆதியிலயன்படைப்பல்லதென்னருண்
மேதியனடுதொழிலேனைவிண்ணவ
ரேதமில்செயன்முறையாவுங்கண்ணுத
னாதநின்னருளினானடந்தநன்றரோ. (ககூ)

Digitized By Roja Muthiah Research Library

கருமணிமிடறுடைக்கடவுளின்னுநீ
யருளுவதொன்றுளததனைக்கூறுவ
னிருநிலமேலவர்யாருநின்றனைப்
பரமெனவுணர்கிலர்மாயைப்பான்மையால். (௨0)

நின்றனதுரிமையைநிகழ்த்திமேன்மையா
வென்றனையயன்றனையெண்ணுவார்சில
ரன்றியுநின்னுடனேகர்தம்மையு
மொன்றெனவேநினைந்துரைக்கின்றார்சிலர். (௨௧)

காலமுங்கருமமுங்கடந்ததோர்பொருண்
மூலமுண்டோவெனமொழிகின்றார்சிலர்
மேலுமுண்டோசிலவிளம்பவிஞ்சையின்
பாலுறுமுணர்ச்சியேபரமென்பார்சிலர். (௨௨)

ஆற்றுறுபுனல்படிந்தழுக்குநீக்கலார்
சேற்றிடைவீழ்ந்தெனமறைகள்செப்பிய
நீற்றொடுகண்டிகைநீக்கிவன்மையால்
வீற்றுருகுறிகொடுமேவுவார்சிலர். (௨௩)

காமமோடுவகையுங்களிப்புநல்கலால்
வாமமேபொருளெனமதிக்கின்றார்சிலர்
தோமிலாமூவகைத்தொழிலும்வேள்வியு
மேமமார்பொருளெனவியம்புவார்சிலர். (௨௪)

உரையிசையாதியாமொலிகள்யாவையும்
பிரமமதேயெனப்பேசுவார்சில
ரரிதுசெய்நோன்பினாலடைந்தசித்திகள்
பொருள்பிறிதிலையெனப்புகல்கின்றார்சிலர். (௨௫)

பெருமைகொள்குலந்தொறும்பிறந்துசெய்திடும்
விரதமுஞ்சீலமும்வினைகண்மாற்றிட
வருகலும்பிறவுமாயங்கம்விட்டுயிர்
பரவுதல்வீடெனப்பகருவார்சிலர். (௨௬)

அறிந்தறிந்துயிர்தொறுமதுவதாகியே
பிறந்திறந்துணர்வெலாம்பெற்றுநோன்பொடு
துறந்துகொன்றிட்டனதுய்த்துக்கந்தமற்
றிறந்திடன்முத்தியாமென்கின்றார்சிலர். (௨௭)

நன்னலமாதரைநண்ணுமின்பமே
யுன்னருமுத்தியென்றுட்கொள்வார்சில
ரின்னனதுறைதொறுமெய்தியாவருந்
துன்னரும்பிறவியுட்டுன்பநீங்கலார். (௨௮)

இறந்தனவரம்புலகெவரும்வேதநூன்
மறந்தனர்பவநெறிமல்கினாடொறுஞ்
சிறந்தனவவையுயிர்செய்ததொல்வினை
யறிந்தருளையநீயமைத்தவாயினும். (௨௯)

Digitized By Roja Muthiah Research Library

அங்கவர்போதமுற்றுசொரீஇமனச்
சங்கையுமகன்றுநின்சரணமேயுறப்
புங்கவசிறிதருள்புரியவேண்டுமா
லெங்கடம்பொருட்டெனவிறைவன்கூறுவான். (௩௦)

இனிதொருதிறமதற்கிசைத்துமாருயி
ரனையவும்புரப்பவனுதலாலவர்
வினையறுநெறிமையால்வேண்டுகிற்றிநின்
மனனுறுமெண்ணினைமறுத்திமாசிலாய். (௩௧)

காதலினருளுமுன்கலையின்பன்மையிற்
கோதறுமோர்கலைகொண்டுநேமிசூழ்
மேதினியதனிடைவியாதனென்றிடு
போதகமுனியெனப்போந்துவைகுதி. (௩௨)

போந்தவனிருந்தபின்புகரிலாமறை
யாய்ந்திடின்வந்திடுமவற்றைநால்வகை
வாய்ந்திடநல்கியேமரபினோர்க்கெலா
மீந்தனையவரகத்திருளைநீத்தியால். (௩௩)

அன்னதோர்மறையினையறிந்துமையமா
வுன்னியநிலையினருள்ளந்தேறவு
மன்னவரல்லவர் * மரபிற்றேரவு
மின்னமோர்மறையுளதிதுவுங்கேண்மதி. (௩௪)

ஏற்றமதாகியமறைக்கும்யாமுனஞ்
சாற்றியவாகமந்தனக்குமாங்கது
வீற்றுறவருவதுமன்றுமேன்மையா
லாற்றவுநமதியலதையுநீரதே. (௩௫)

என்பெயரதற்கெனிலினிதுதேர்ந்துளோர்
துன்பமதகற்றிடுந்தொல்புராணமா
மொன்பதிற்றிருவகையுண்டவற்றினை
யன்புடைநந்திமுன்னறியக்கூறினேம். (௩௬)

ஆதியினந்திபாலளித்ததொன்மைசேர்
காதைகள்யாவையுங்கருணையாலவன்
கோதறவுணர்சனற்குமாரற்கீந்தன
னீதியொடவனிடைநிலத்திற்கேட்டியால். (௩௭)

என்னலுநன்றெனவிசைந்துதாழ்ந்தெழீஇ
முன்னவன்விடைகொடுமுளரியான்முதற்
றுன்னியவானவர்தொகையொடேகியே
தன்னுலகத்தின்மால்சார்தன்மேயினான். (௩௮)

* மன்னவரல்லவர் - (வேதத்துக்கு) அதிகாரிகளல்லாதவர். அவர் நான்குவருணத்துப்பெண்களுஞ் சூத்திரருமென்றறிக.



Digitized By Roja Muthiah Research Library

சார்தலுமயன்றனைச்சதமகத்தனை
யார்தருமமரரையருளினவ்வவர்
சேர்தருபுரந்தொறுஞ்செல்லற்கேவியே
கார்தருமெய்யுடைக்கடவுள்வைகினான். (௩௯)

திருவொடுமருவியோன்செறிவுற்றெங்கணும்
பரவுறுமியல்பெறுபகவனாதலாற்
றரணியிலருளினாற்றனதுசத்தியி
லொருகலைதன்னுடனுதிக்கவுன்னியே. (௪௦)

பங்கயத்தயன்வழிப்பராசரப்பெயர்த்
துங்கநன்முனிபனித்தூவலெல்லையிற் *
கங்கையிலியோசனகந்தியோடுற
வங்கவர்தம்மிடையவதரித்தனன். (௪௧)

மற்றவன்வதரிகாவனத்தில்வைகியே
யற்றமில்வாதராயணனெனும்பெயர்
பெற்றனனாகியெம்பிரான்றனாணையாற்
கற்றிடாதுணர்ந்தனன்கரையில்வேதமே. (௪௨)

மோனகமுற்றியமுனிவர்மேலவன்
ஞானுணர்மறையெனுந்தரங்கவேலையி
லானதோர்பொருளினையறிஞர்பெற்றிடத்
தூநெறிகொண்டநாற்றுறைசெய்தானரோ. (௪௩)

கரையறுவேதமாங்கடலைநான்கவாய்ப்
பிரிநிலையாக்கியேநிறுவுபெற்றியாற்
புரைதவிர்முனிவரன்புகழ்வியாதனென்
றொருபெயர்பெற்றனனுலகம்போற்றவே. (௪௪)

விரவியமறைதெரிவியாதனாமவன்
குரவனேயாஞ்சனற்குமாரன்றன்னிடை
யிருவகையொன்பதாயியல்புராணமு
மரபொடுகேட்டவைமனத்துட்கொண்டபின். (௪௫)

ஏத்திடுசுருதிகளிசைக்குமாண்பொருண்
மாத்திரைப்படாவெனுமாசில்காட்சியர்
பார்த்துணர்பான்மையாற்பலவகைப்படச்
சூத்திரமானவுஞ் o சொற்றுவைகினான். (௪௬)

---

* பனித்தூவலெல்லையில் - பனித்தூவலினாலே சூரியகிரணம் மறைக்கப்பட்ட பகற்காலத்தில். எல்லை - பகல்.

o வியாசசூத்திரம் வேதாந்தசூத்திரமெனவும்; பிரமமீமாஞ்சையெனவும், உத்தரமீமாஞ்சையெனவும் பெயர் பெறும். அதற்கு நீலகண்டசிவாசாரியர், சங்கராசாரியர், இராமாநுஜாசாரியர், மத்துவாசாரியர் என்னும் நால்வர் பாஷ்யங்கள் செய்தனர். சைவர்களாற் கொள்ளப்படுவது நீலகண்டபாஷ்யம், மாயாவாதிகளாற் கொள்ளப்படுவது சங்கரபாஷ்யம், வைஷ்ணவர்களாற் கொள்ளப்படுவது இராமாநுஜபாஷ்யம், மாத்துவர்களாற் கொள்ளப்படுவது மாத்துவபாஷ்யம். வியாசசூத்திரத்தின் உண்மைப்பொருள் சைவசித்தாந்தப்பொருளேயாமென்பது "தேவர் குறளுந் திருநான் மறை

Digitized By Roja Muthiah Research Library

மயலறுபயிலரேவைசம்பாயனர்
சயிமினிசுமந்துவாந்தவத்தர்நால்வர்க்கும்
வியலிருக்காதியாம்வேதநான்கையு
முயர்வுறுதவத்தினான்முறையினோதினான். (௪௭)

தோல் * வருமறைகளின்சூத்திரத்தையு
மேல்வருசயிமினிமுதலமேதையர்
நால்வருமுணரியநவின்றுநல்கினா
னால்வருகடவுளையனையதன்மையான். (௪௮)

மெய்ம்முனியனையரைவிளித்துநீரினி
யிம்மறையியல்பினோரெவர்க்குமீமென
வம்முறைநால்வருமனையவேதநூல்
செம்மையொடளித்தனர்சிறந்துளோர்க்கெலாம். (௪௯)

அன்னதோர்முனிவரனதற்குப்பின்னரே
பன்னருந்தொகையினாற்பதினெண்பான்மையாய்
முன்னுறுபுராணநூன்முழுதுமுற்றிய
வின்னருணிலைமையாலெனக்குநல்கினான். (௫0)

வேதமதுணர்தருவியாதமாமுனி
காதலனாமெனைக்கருணைசெய்திவை
யோதுதியாவருமுணரவென்றனை
னாதலினுலகினிலவற்றைக்கூறினேன். (௫௧)

காமருதண்டுழாய்க்கண்ணனாகிய
மாமுனியருளினான்மறைகள்யாவையுந்
தோமறுபுராணநூற்றொகுதியாவையு
நேமிகொளுலகெலாநிலவியுற்றவே. (௫௨)

நம்பனார்க்கொருபதுநாரணற்குநான்
கம்புயத்தவற்கிரண்டலரியங்கியா
மும்பர்வான்சுடர்களுக்கோரொன்றென்பரா
லிம்பரிலிசைக்குமப்புராணத்தெல்லையே. (௫௩)

---

முடிவு—மூவர் தமிழு முனிமொழியுங் - கோவை—திருவா சகமுந் திருமூலர் சொல்லு—மொருவா சகமென் றுணர்'' என்னும் ஔவையார் திருவாக்கானுணர்க. முனிமொழியென்றது வியாசசூத்திரத்தை. புறப்புறச் சமயமும், புறச்சமயமும், அகப்புறச்சமயமும், அகச்சமயமுமெனச் சமயம் நான்குவகைப்படும். அவற்றுள், புறப்புறச்சமயம் உலோகாயதம், நால்வகைப்பௌத்தம், ஆருகதமென அறுவகைப்படும். புறச்சமயம் தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என வறுவகைப்படும். இங்கே மீமாஞ்சையென்றது சைமினிசூத்திரமாகிய பூருவமீமாஞ்சையை. ஏகான்மவாதம் மாயாவாதமும், பாற்கரியவாதமும், கிரீடாப்பிரமவாதமும், சத்தப்பிரமவாதமுமென நான்குவகைப்படும். சங்கரபாஷ்யத்துப்பொருள் மாயாவாதப்பொருளேயாம். மாயாவாதம் உலோகாயதமுதலியவற்றோடு சேர்த்துக் கண்டிக்கப்படுதல் ''மிண்டிய மாயாவாத மென்னுஞ் - சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த் - துலோகா யதனெனு மொண்டிறற் பாம்பின் - கலாபே தத்த கடுவிட மெய்தி - யதிற்பெருமாயை யெனைப்பல சூழவும்'' என்னுந் திருவாசகத்தானுமுணர்க.

* தோல் - இழுமென்மொழியால் விழுமியது நுவறல். நீட்டல் விகாரம் என்பாருமுளர்.

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

எதிரில்சைவமேபவிடியமார்க்கண்டமிலிங்க
மதிகொள்காந்தநல்வராகமேவாமனமற்சம்
புதியகூர்மமேபிரமாண்டமிவைசிவபுராணம்
பதுமமேலவன்புராணமாம்பிரமமேபதுமம். (௫௪)

கருதுகாருடநாரதம்விண்டுபாகவத
மரிகதைப்பெயராக்கினேயம்மழற்கதையா
மிரவிதன்கதைபிரமகைவர்த்தமாமிவைதாந்
தெரியுமொன்பதிற்றிருவகைப்புராணமாந்திறனே. (௫௫)

இத்திறத்தவாம்புராணங்களோரன்பதிற்றிரண்டி
னத்தனுக்குளபுராணமீரைந்தினிலடல்வேற்
கைத்தலத்தவன்காந்தத்துளன்னவன்கதையை
மெய்த்தொகைப்படவுரைப்பனென்றேமுனிவிளம்பும். (௫௬)

வேறு.

பூமிசையிருந்தபுத்தேள்புரிந்திடுபுதல்வர்தம்மு
ளேமுறுதக்கனீன்றவிருந்தனிக்குமரியான
தீமையையகற்றவம்மைசிந்தைசெய்திமையமன்னன்
மாமகளாகிநோற்றுவைகினாள்வைகுநாளில். (௫௭)

அவுணர்களோடுசூரனவனிமேற்றோன்றிநோற்றுச்
சிவன்வரமளிக்கப்பெற்றுத்தேவர்யாவரையும்வென்று
புவிதனிலுவரிதன்னிற்புங்கவர்புனைவன்செய்த
தவலருமகேந்திரத்தில்வைகினான்றானைசூழ. (௫௮)

அனையதோர்காலைவெள்ளியடுக்கலிற்சனகனாதி
முனிவரர்தமக்குத்தொல்லைமூவகைப்பதமுங்கூறி
யினியதோர்ஞானபோதமித்திறமென்றுமோனத்
தனிநிலையதனைக்காட்டித்தற்பரனிருந்தானன்றே. (௫௯)

வீற்றிருந்தருளுமெல்லைவெய்யசூர்முதலாவுள்ளோ
ராற்றவுந்தீங்குசெய்தேயமரர்கள்சிலரைப்பற்றிப்
போற்றிடுஞ்சிறையிலுய்ப்பப்புரந்தரன்முதலாவுள்ளோர்
மாற்றருந்துயரின்மூழ்கிமறைந்தனராகிவைகி. (௬0)

சங்கரன்மோனத்தன்மைசதுர்முகற்குரைப்பவன்னான்
வெங்கணைவேளையுய்ப்பவிழித்தவன்புரநீறாக்கிப்
பங்கயன்முதலாவுள்ளோர்பலரும்வந்திரங்கிப்போற்ற
வங்குறைமோனநீங்கியவர்க்கருள்செய்தானையன். (௬௧)

ஓரெழுமுனிவர்தம்மையோங்கலுக்கிறைவன்றன்பாற்
பேரருண்முறையாற்றூண்டிப்பெருமணம்பேசுவித்துப்
பாரறுநோன்பின்மிக்கபராபரையன்புதேர்ந்து
காரணிகண்டத்தெந்தைகணங்களோடிமையம்புக்கான். (௬௨)

புடையகலிமையந்தன்னிற்புவனங்கண்முழுதுமீண்ட
வடபுவிதாழ்ந்துதென்பாலுயர்தலுமலயந்தன்னிற்
கடமுனிதன்னையேவிக்கவுரியைமணந்துபின்ன
ரடன்மதவேளைநல்கியநங்கனேயாகச்செய்தான். (௬௩)

Digitized By Roja Muthiah Research Library

மன்புனைகயிலைதன்னின்மலைமகளோடுமீண்டு
முன்பெனவமர்ந்துநாதன்முழுதுலகுயிர்கட்கெல்லா
மின்பமும்புணர்ப்புநல்கியிமையவர்யாரும்வேண்டத்
தன்பெருநுதற்கட்டீயாற்சரவணபவனைத்தந்தான். (௬௪)

அந்தமில்விளையாட்டுள்ளவறுமுகக்கடவுடன்னைத்
தந்திடுமெல்லையன்னோன்றனையந்தலைவராக
முந்தியவிறல்சேர்மொய்ம்பன்முதலியவிலக்கத்தொன்பா
னந்திதன்கணத்திஞைரைநங்கைபாலுதிப்பச்செய்தான். (௬௫)

அண்ணலங்குமரப்புத்தேளலகிலாவாடல்செய்து
மண்ணுறுகடலும்வெற்பும்வானமுந்திரிபுசெய்து
துண்ணெனக்குழவியேபோற்றோன்றிடவதனைநோக்கி
விண்ணவர்யாருஞ்சூழ்ந்துவெஞ்சமர்புரிந்துநின்றார். (௬௬)

ஆரமர்செய்துளாரையிட்டடனுயிருநல்கிப்
பேருருநிலைமைகாட்டிப்பெறலருங்காட்சிநல்கி
நாரதன்மகத்திற்றோன்றிநடந்ததோர்செச்சைதன்னை
யூர்தியதாகக்கொண்டேயூர்ந்தனனொப்பிலாதான். (௬௭)

மறைமுதற்குடிலைதன்னின்மாண்பொருண்முறைகடாவி
வெறிகமழ்கமலப்புத்தேள்விடைகொடான்மயங்கக்கண்டு
சிறையிடையவனைவைத்துச்செகமெலாமளித்துத்தாதை
குறையிரந்திடவேவிட்டுக்குறுமுனிக்கதனையீந்தான். (௬௮)

ஆவதோர்காலையீசனறுமுகப்பரனைநோக்கி
யேவருமுடிக்கவொண்ணுதிருந்தசூர்முதலோர்தம்பான்
மேவினைபொருதுவென்றுவிரிஞ்சனேமுதலாவுள்ள
தேவர்தமின்னனீக்கிச்செல்லுதிகுமரவென்றான். (௬௯)

விராவியவிலக்கத்தொன்பான்வீரரைவெய்யபூத
ரிராயிரவெள்ளத்தோரையிகற்படைமான்றேரோடு
பராபரனுதவித்தூண்டப்பன்னிருபுயத்தனேகித்
தராதலம்புக்குவெற்பைத்தாரகனோடுசெற்றான். (௭௦)

பூவினன்முதலாவுள்ளபுங்கவர்வழிபட்டேத்தத்
தேவர்தங்கிரியின்வைகித்தென்றிசைநடந்துதாதை
மேவருமிடங்கள்போற்றிமேதகுசேய்ஞனண்ணி
மூவிருமுகத்தன்முக்கண்முன்னவன்படையைப்பெற்றான். (௭௧)

பரனருள்படையைப்பெற்றுப்பராசரன்சிறார்வந்தேத்தத்
திருவருள்புரிந்துசென்றுசெந்திலின்மேவிச்சூரன்
வரமொடுதிருவுஞ்சீரும்வாசவன்குறையும்வானோர்
குரவனைவினவியன்னான்கூறவேகுமரன்றேர்ந்தான். (௭௨)

அறத்தினையுன்னியையனுடல்சேர்மொய்ம்பன்றன்னை
யுறத்தகுமரபிற்றூண்டியொன்னலன்கருத்தையோர்ந்து
மறத்தொடுகடலுள்வீரமகேந்திரமணுகியேதன்
புறத்துளதானையோராற்சூர்கிளைபொன்றச்செற்று. (௭௩)

Digitized By Roja Muthiah Research Library

சீயமாமுகத்தனென்னுஞ்செருவலான்றனையுமட்டு
மாயையுந்திருவுஞ்சீரும்வரங்களும்பிறவுமாற்றி
யாயிரவிருநாலண்டத்தரசனுஞ்சூரன்றன்னை
யேயெனுமளவில்வேலாலிருதுணிபடுத்துநின்றான். (எச)

துணிபடுசூரனோர்பால்சூட்டுவாரணமாயோர்பால்
பிணிமுகமாகிநிற்பப்பெருந்தகையவற்றையூர்தி
யணிபடுதுவசமாக்கியப்பகல்செந்தில்வந்து
மணிசொரியருவிதூங்கும்வான்பரங்குன்றஞ்சேர்ந்தான். (எரு)

தெய்வநயானையென்னுஞ்சீர்கெழுமடந்தைதன்னை
யவ்விடைவதுவையாற்றியங்ஙனஞ்சிலநாள்வைகி
மெய்வியனுலகிற்சென்றுவிண்ணவர்க்கரசனுக்கி
யெவ்வமின்மகுடஞ்சூட்டியிந்திரன்றன்னைவைத்தான். (எசு)

சில்பகலங்கண்மேவிச்சேனையோடணங்குந்தானு
மல்லலங்கயிலையேகிமங்கைபங்குடையவண்ணன்
மெல்லடிவணங்கிக்கந்தவெற்புறைநகரினேகி
யெல்லையிலருளால்வைகித்தணிகையிலெந்தைவந்தான். (எஎ)

சாரலினோங்குதெய்வத்தணிகைமால்வரையின்மீது
வீரமதுடையவேலோன்வீற்றிருந்திடலுமங்க
ணாரதன்வந்துதாழ்ந்துநவைதவிரெயினமாதின்
சீரெழினலத்தைக்கூறவவள்வயிற்சிந்தைவைத்தான். (எஅ)

வள்ளிமால்வரையிற்போந்துமானிடைப்பிறந்ததெய்வக்
கிள்ளையையடைந்துபோற்றிக்கேடில்பல்லுருவங்காட்டிக்
கள்ளமோடொழுகிப்பன்னாட்கவர்ந்தனன்கொணர்ந்துபின்னர்த்
தெள்ளுசீர்வேடர்நல்கத்திருமணஞ்செய்துசேர்ந்தான். (எகூ)

செருத்தணிவரையில்வந்துசிலபகல்வள்ளிதன்னோ
டருத்தியின்மேவிப்பின்னரவளொடுங்கந்தவெற்பின்
வரைத்தனிக்கோயில்புக்குவானமின்பிரிவுநீக்கிக்
கருத்துறவிருவரோடுங்கலந்துவீற்றிருந்தான்கந்தன். (அ0)

என்றிவையனைத்துஞ்சூதனியம்பலுமுனிவர்கேளாத்
துன்றியமகிழ்வாற்சென்னிதுளக்கியிங்கிதனைப்போல
வொன்றொருகதையுங்கேளேமுரைத்தனைசுருக்கியாங்க
ணன்றிதனகலங்கேட்கநனிபெருங்காதல்கொண்டேம். (அக)

என்னவேமுனிவரானோர்யாவருமெடுத்துக்கூற
மன்னியவருள்சேர்சூதன்மற்றவரார்வநோக்கி
யன்னவசுருக்கமின்றியறைந்தனனவ்வாறோர்ந்து
தொன்னெறிவழாதியானும்வல்லவாதொகுத்துச்சொல்வேன். (அஉ)

பாயிரப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௩௫உ.

Digitized By Roja Muthiah Research Library

உ

திருச்சிற்றம்பலம்.

முதலாவது

# உற்பத்திகாண்டம்.

## திருக்கைலாசப்படலம்.

பாசநீக்கித்தன்பாற்படுநல்லரு, ளீசனல்குமியல்பெனவெய்தினோர்
தேசுமாற்றிச்சிறந்ததன்மெய்யொளி, வீசுகின்றதுவெள்ளியங்குன்றமே. (௧)

ஆறுசூடியவாதியம்பண்ணவ, னேறுமூரிவெள்ளேறுமக்கண்ணுத
னீறுசேர்தருகோலமுநித்தனைத், தேறுமன்பர்தஞ்சிந்தையும்போன்றதே. (௨)

மோனநன்னிலைமுற்றியபெற்றியர், ஞானமார்பிழம்பன்னநலத்ததா
பூணுலாயவுயிர்த்தொகைமாசொரீஇத், தானெலாஞ்செறிந்தென்னவுஞ்சான்றதே.

சானமார்ந்தகடுக்கைநற்கூவிளைத், தேனவாம்பொழிற்றிண்சிகரத்திடை
வானயாறுவருதலின்மாசிலா, ஞானநாயகன்போலநணியதே. (௪)

தண்ணறுந்துளவாற்புனைதார்முடிப், பண்ணவன்கண்படுத்திடுபாற்கடல்
கண்ணுதற்குமொர்காமருபீடமாய், நண்ணுகின்றதுபோலுநலத்ததே. (௫)

பொதியுமின்னமுதோடுபொருந்துவ, கதிரின்மிக்கறையறுகாட்சிய
மதியமாயிரகோடிமணந்துதா, முதயமானதுபோன்றதவ்வொண்கிரி. (௬)

நெற்றிமேனிமிர்கண்ணுநிலாவொளிர், பொற்றடம்புயநான்கும்பொருந்துறப்
பெற்றெம்மானருளாற்பிரம்பொன்றுகைப், பற்றுநந்திபரிவொடுகாப்பது. (௭)

புரந்தரன்முதலாகியபுங்கவர், வரம்பின்யாதவர்மாசறுகாட்சியர்
நிரந்தபூதகணவர்நிரந்தரம், பரிந்துபோற்றிப்பயில்வதம்மால்வரை. (௮)

மின்னரம்பையராடலும்விஞ்சையர், கின்னரம்பயில்பாடலுங்கீழ்த்திசை
மன்னனாதியர்வாழ்த்துமவ்வானவ, ரின்னியங்களுமெங்கணுமார்ப்பது. (௯)

வேறு.

கீணிலாவுறுமுலகெலாநீங்கியேகீழ்போய்ச்
சேணிலாவுறுபதமெலாமுருவிமீச்சென்று
மாணிலாவுறுமண்டத்தினடிமுடிமருவத்
தாணுவாயுலகிறுதியினிற்பதச்சயிலம். (௧௦)

Digitized By Roja Muthiah Research Library

மாடுசூழ்தருமேருவேயாதியாம்வரைகள்
பாடுசேரினுமுலகெலாமழியினும்பரந்து
கூடுமெண்டங்கள்சூலையினுங்கொன்றைவேணியன்போற்
கேடிலாமலேயமர்வதுகயிலையங்கிரியே. (௧௧)

நலம்வருங்கலைமதியமுமிரவியுநாகர்
குலம்வருந்தனுக்குறையலாமற்றையகோளு
மலமருஞ்சுடருடுக்களுமமரரும்பிறரும்
வலம்வரும்படியிருப்பதுகயிலைமால்வரையே. (௧௨)

ஏற்றமேருவேயாதியாம்வரைகளேழ்வகையாற்
சாற்றுநேமிகளாழியங்கிரிபெருஞ்சலதி
ஈாற்றிசைக்கணுநொச்சிபோற்சூழ்தரநடுவண்
வீற்றிருப்பதுகயிலையாகியதனிவெற்பு. (௧௩)

படியெலாமுண்டுமேனமாய்த்தாங்கியும்பண்டோ
ரடியினுலகப்படுத்தியுமிடந்துமுற்றருளு
நெடியமாயனுமுலகிறுமெல்லையினிமலன்
வடிவமேயெனக்காணுதற்கரியதவ்வரையே. (௧௪)

வேறு.

அன்னதோர்கயிலைநாப்பணம்பொனின்சுடர்மேல்கொண்ட
நன்னெடுஞ்சிமயத்தோங்கனவையொரீஇநண்ணிற்றென்னக்
கன்னியங்காப்புமேவிக்கதிர்மணிக்கற்றைசுற்றப்
பொன்னெடுங்கோயிலொன்றுபொலிவொடும்பொருந்திற்றன்றே, (௧௫)

திணிகதிராரந்தன்னிற்சிறந்தவச்சிரத்திற்செக்கர்
மணிதனின்முழுநீலத்தின்மற்றையவெறுக்கைதன்னிற்
பணிபடவருளாற்றுனேபலித்திடுசிகரமாதி
யணியினுக்கணியாய்மல்குமாலயச்சூழலெங்கும். (௧௬)

என்றுமீறென்பதின்றியிருந்திடுங்கயிலைவெற்பிற்
பொன்றிகழ்நகரந்தன்னுட்பொருவிலாக்கோளுநாளுந்
துன்றியதன்மைத்தென்னத்தூமணிக்கதிர்கள்சூழ
மன்றமருறையுளொன்றுவனப்பொடுவைகிற்றன்றே. (௧௭)

வேறு.

சோதிசேருமத்தூமணிமண்டபத், தாதியானவரியணையும்பரிற்
காதலாகுங்கவுரியொர்பாங்குற, வேதநாயகன்வீற்றிருந்தானரோ. (௧௮)

பீடுகொண்டபெருந்தவப்பெற்றியோர், தேடுகின்றசிறப்புடைத்தாம்புகழ்
நாடுதும்புருநாரதர்விஞ்சையர், பாடுகின்றனர்பாணியின்பாற்பட. (௧௯)

அதிகன்வேணியிலார்தருகங்கையை, விதிபுரந்தரன்விண்டுலகத்துள
நதிகடாழ்ந்தெனநன்னயத்தேவல்செய், கதியினோர்கள்கவரிகள்வீசினார். (௨0)

சிலவட்டமுடிப்பிறைதேடுவான், ஞாலவட்டத்தெழுதருநாகர்போ
லேலவட்டமுகத்தருகெங்கணு, மாலவட்டமசைத்தனரன்பினோர். (௨௧)

ஆதிதன்னருளெய்தியவன்றிருப், பாததாமரைசூடியபண்ணவன்
கோதிலாததிருவுருக்கொண்டுளோர், பூதராதியர்போற்றிமுனீண்டினார். (௨௨)

திருக்கைலாசப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௩௭௪.

Digitized By Roja Muthiah Research Library

# பார்ப்பதிப்படலம்.

அன்னுழியுமையவளகத்துளோர்செய
லுன்னினடுணுக்கமுற்றொல்லைதானெழீஇத்
தன்னிகரில்லவன்றாளிறைஞ்சியே
முன்னுறநின்றிவைமொழிதன்மேயினாள். (க)

கற்பனைமுதலியகடந்தகண்ணுதற்
றற்பரநிலையிகழ்தக்கன்றன்னிடைப்
பற்பகல்வளர்ந்தவன்பயந்தமாதெனச்
சொற்படுநாமமுஞ் * சுமந்துளேனியான். (உ)

ஆங்கதோர்பெயரையுமவன்கணெய்தியே
யோங்கினான்வளர்ந்தவிவ்வுடலந்தன்னையுந்
தாங்கினன்மேலவைதரித்தற்கஞ்சினே
னீங்குவனவ்வகைபணித்திநீயென்றாள். (ந)

மன்னுயிராகியமரபுமுற்றவு
முன்னுறவருளியமுதல்வியன்பினா
லின்னணமியம்பலுமிதனைத்தேர்ந்திடாத்
தன்னிகரில்லதோர்தலைவன்கூறுவான். (ச)

பத்திமையெம்வயிற்பழுத்தபண்பினாற்
சத்தியேநின்னிகர்சகத்தினில்லைநீ
யித்திறமுயலுதலெல்லைதீர்ந்தநின்
புத்திரர்வீடுறுபொருட்டுப்போலுமால். (ரு)

நற்றிறமேயிதுஈங்கைசிந்தனை
முற்றியவேண்டுமேன்மொழிதுமேருவின்
சுற்றமதாகியவிமையத்தொல்வரைக்
கொற்றவன்புரிவனாற்கொடியமாதவம். (சு)

ஏதவன்பெறத்தவமியற்றுமென்றியேன்
மாதுனைமகண்மையாமரபிற்போற்றியே
காதலொடெமக்கருள்கருத்ததாகுமா
லாதலிற்குழவியாயவன்கணெய்துநீ. (எ)

தளர்ந்துடன்மெலிவுறத்தவஞ்செய்வெற்பினா
னிளஞ்சிறுகுழவியாயெய்திமற்றவ
னுளங்களிகூரவாண்டோரைந்தின்றனை
வளர்ந்தனைபுரிதிமேன்மாசின்மாதவம். (அ)

அணங்குநீநோற்றுழியகிலத்துள்ளதோர்
கணங்களுந்தலைவருங்கணிப்பிறேவரு
மிணங்கினர்சூழ்தரவெய்திநின்னையா
மணம்புரிந்தேகொடுவருதுமீண்டெனா. (கூ)

---

* தக்கன்மகளெனப் பொருள்படும் பெயர் தாக்ஷாயிணி.



Digitized By Roja Muthiah Research Library

கடல்விடமுண்டிடுகடவுளித்திற
கடைமுறையருளலுநன்றெனுமகிழ்ந்
தடியிணைவணங்கிநின்றன்பிற்போற்றியே
விடையதுபெற்றனள்விமலையேகினுள். (௧௦)

அல்லதுமுவகையுமன்புமெம்பிரா
னெல்லையிலருளுமாயீண்டிமுன்செல
மெல்லியலுமையவள்வெள்ளிவெற்பொரீஇ
வல்லையினிமையமால்வரையிற்போயினுர். (௧௧)

வள்ளியன்கடகரிவடிவின்வீழ்தரு
துள்ளியம்பனிமழைச்சேர்லைசூழ்தலா
லெள்ளருந்தன்மைசேரிமையமால்வரை
வெள்ளியங்கிரியெனவிளங்குகின்றதே. (௧௨)

எண்டகுமிமையமுமிமையமேலுறு
கொண்டலுமொன்றியேகுலவுகாட்சிய
தெண்டிரைமிசையெழுநஞ்சுந்தீயநஞ்
சுண்டிடுமணிமிடற்றிறையுமொக்குமால். (௧௩)

நீலுறுமழைமுகினிலவுமின்னெடு
மேலுறவிளங்கியவிமையவெற்பது
மாலவன்றிருவொடுமருவிக்கண்டுயில்
பாலுறுபன்னகப்பாயல்போன்றதே. (௧௪)

கரும்புயலார்த்துறுகாட்சித்தாகியே
யிரும்பனியிடையுறுவிமையப்பொன்வரை
சுரும்பினமிசையொடுதுவன்றிச்சுற்றிட
வரும்பவிழாதவெண்கமலமன்னதே. (௧௫)

நீடியமண்மகணிதியின்குப்பையைப்
பாடுறுதண்ணிலாப்படாமதொன்றினுன்
மூடினள்வைத்திடுமுறையதேயெனக்
கோடுயர்பனிகொள்பொற்குன்றநின்றதே. (௧௬)

பொன்னெனிங்கிரியெனவீண்டும்புங்கவர்
துன்னினர்சூழ்வரென்றுன்னித்தொன்மனு
வன்னதைமறைத்தனனிரதத்தாவியா
லென்னவுநின்றதாலிமையப்பொன்வரை. (௧௭)

குடகடல்குணகடல்கூடுறுவகை
யிடையொருவாலிதாமேனமெய்தியே
தடைபுரிசிறப்பெனவிமையத்தாழ்வரை
நெடுநிலவளவையுநிமிர்ந்துபோயதே. (௧௮)

விண்ணவர்ததிக்கடல்கடைந்தவெண்ணெயு
ளண்ணலம்பாற்கடலமுதம்வைத்தெனக்
கண்ணகன்பெரும்பனிகலைஇயவெற்பின்மே
லுண்ணிறைபுனற்றட *மொன்றுவைகிற்றே. (௧௯)

* இதன்பெயர் பத்மை.

அன்னதோர்தடத்திடையசலமன்னவன்
மன்னியகௌரிதன்மகண்மையாகவுந்
தன்னிகரிலாவரன்றனக்குநல்கவு
முன்னுறவருந்தவமுயன்றுவைகினான். (உ0)

மெய்த்தவமியற்றியவெற்பன்காணிய
வத்தடமலருமோரரவிந்தத்தின்மேற்
பைத்ததோர்குழவியின்படிவத்துற்றன
ளெத்திறத்துயிரையுமீன்றதொன்மையாள். (உக)

வேறு.

ஆங்கவட்கண்டுவெற்பனடியனேன்பொருட்டாலம்மை
நீங்கினள்போலுமுக்கணிருமலன்றன்னையென்று
வேங்கினன்றனதுநோன்புக்கிரங்கினனிவைகளீச
னோங்குபேரருளேயென்றுவுவகையங்கடலுட்பட்டான். (உஉ)

கண்ணுறுபோதவாரிகான்றிடவுரோமராசி
யுண்ணிகழன்புமிக்குப்புறந்தனிலொழுகிற்றென்ன
வண்ணன்மெய்பொடிப்பத்துள்ளியடியனேனுய்ந்தேனென்றுத்
திண்ணெனப்பாடியாடியமலையைத்தொழுதுநின்றான். (உங)

பங்கயத்தவிசின்வைகும்பராபரைதனைத்தனது
செங்கையினெடுத்துவல்லேசென்னிமேற்றாங்கியேகித்
துங்கநல்லிமையத்தண்ணறொன்முறையிருக்கைபுக்கு
மங்கலமேனையென்னுமனைவிகைக்கொடுத்தான்மாதோ. (உச)

கொடுத்தலுந்தொழுதுவாங்கிக்கொற்றவவிவணின்பாங்க
ரடுத்ததங்கெவனோவென்னவரசனுநிகழ்ந்தவெல்லா
மெடுத்துரைசெய்யக்கேளாவீசனதருளோவென்று
வடுத்தவிர்கற்பின்மேனைமனமுறமகிழ்ச்சிகொண்டாள். (உரு)

சுரந்தனகொங்கைபாலுந்துண்ணெனவொழுகிற்றெங்கும்
பரந்தனபொடிப்பின்போர்வைபரைதனதருளேயுள்ள
நிரந்தனகவலையாவுநீங்கினபவமுன்னுள்ள
கரந்தனவிமையத்தண்ணல்காதலிதனக்குமாதோ. (உசு)

பரிபுரந்தண்டையம்பொற்பாடகம்பாதசாலம்
விரவியதொடியேசங்குவியன்மணிச்சுட்டியார
மரிகெழுமதாணிபொற்றோடங்கதம்பிறவுஞ்சாத்தி
வரையுறழ்தனப்பாலார்த்திவரம்பெறுகாப்புநேர்ந்தாள். (உஎ)

வனைதருபவளங்காலாவயிரமேமருங்கிற்கோலாப்
புனையிரும்பலகைநீலாப்புரிந்தபொற்றொட்டின்மேலா
வனையவடன்னையுய்த்துமங்கையிற்கொண்டுந்தன்கோன்
மனமகிழ்திறனாற்போற்றிமதியெனவளர்க்கலுற்றாள். (உஅ)

மன்னுயிர்புவனமேனைமற்றுளபொருளுக்கெல்லா
மன்னையாயுதவிநாளுமவற்றினைவளர்த்துநிற்பா
டன்னையும்வளர்ப்பாருண்டோவளர்ந்ததுசழக்கேயந்தக்
கன்னிதன்னருளினீர்மைகாட்டினள்போலுமன்றே. (உகூ)

Digitized By Roja Muthiah Research Library

இந்தவாறினையர்பாலாயெம்பெருமாட்டிவைகி
யைந்தியாண்டகன்றபின்றையயன்முதற்றேவர்யார்க்குந்
தந்தையாரருளையுன்னித்தவமினிப்புரிவனென்னாச்
சிந்தியாவிமையத்தோங்கற்செம்மலுக்குரைக்கலுற்றாள். (௩0)

நாற்பெருந்தடந்தோளண்ணனலத்தகவரைந்துகொள்வா
னோற்பனாலினையவெற்பினுவலருமொருசார்வைப்பி
னேற்பதோர்கன்னிமாரோடெனைவிடுத்தருண்மோவென்னாப்
பார்ப்பதியியம்பலோடும்பனிவரையரசன்சொல்வான். (௩௧)

அன்னைகேளெம்மினீங்கியருந்தவமாற்றற்கொத்த
தின்னதோர்பருவமன்றாலியாண்டுமோரைந்தேசென்ற
நின்னுடல்பொறாதாலீண்டிந்நிலைமையைத்தவிர்தியென்னக்
கன்னிகைநகைத்துக்கேண்மோவிஃதெனக்கழறலுற்றாள். (௩௨)

ஈசனேகாப்பனல்லால்யாரையும்பிறராற்றம்மா
லாசறப்போற்றலாகாததுதுணிவாகுமீண்டுப்
பேசியதிறனுமன்னோன்பேரருண்மறாதியென்ன
நேசமோடியைந்திட்டன்னைநினைந்தநோன்பியற்றுகென்றான். (௩௩)

மன்னனுமியைந்துபின்னர்மால்வரையொருசார்தன்னி
லன்னமென்னடையினாளுக்கருந்தவச்சாலையாற்றித்
தன்னுறுகிளைஞர்தம்பாற்றவத்தினால்வந்தபான்மைக்
கன்னியர்பலரைக்கூவிக்கௌரிபாலாகச்செய்தான். (௩௪)

நீலுறுமணிதோய்மேனிநிமலையங்கிமையத்துச்சி
மேலுறுமரசன்றேவிவிடையினான்மடவார்பல்லோர்
பாலுறுபணியிற்சூழப்பரமனையுன்னியந்தச்
சாலையையடைந்துமிக்கதவத்தினையிழைக்கலுற்றாள். (௩௫)

தங்கியவைகறோறுந்தாதையுந்தாவில்கற்பின்
மங்கையும்போற்றியேகமாதுநோற்றிருந்தாளிப்பா
லங்கவட்பிரிந்தபின்றையரும்பெருங்கயிலைமேய
வெங்கடம்பெருமான்செய்தபரிசினையியம்பலுற்றேன். (௩௬)

பார்ப்பதிப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௪௧0.

---

# மேருப்படலம்.

பன்னருஞ்சிறப்பின்மிக்கபனிவரையரசன்றன்பாற்
கன்னியம்புதல்வியாகிக்கௌரிநோற்றிருந்தகாலைத்
துன்னியவவுணர்சூழச்சூரபன்மாவாம்வெய்யோ
னிந்நிலவரைப்பினண்டத்திறைவனேயாகியுற்றான். (௧)

Digitized By Roja Muthiah Research Library

மற்றதுபோழ்திற்றொல்லைமறைப்பொருள்வடத்தின்பாங்கர்ப்
பெற்றிடுசனகனாதிமுனிவரர்பின்னும்பன்னா
ளற்றமிறவஞ்செய்தெர்ந்தையருளினாற்கயிலைநண்ணி
முற்றுணர்நந்திபோற்றுமுதனிலைவாயில்புக்கார். (௨)

நோன்மையின்முனிவரானோர்நுவலருங்காட்சிநந்தி
சான்முறைவணங்கிநிற்பவனையவன்கருணைதன்னால்
வான்மலிகடவுட்கோயின்மந்திரங்கொண்டுசெல்ல
நான்முகன்முதலோர்க்கெய்தாஞானநாயகனைக்கண்டார். (௩)

மொழியதுதவறல்செல்லமுற்றுடல்பொடிப்புக்கொள்ள
விழிபுனல்பெருகத்தீசேர்மெழுகெனவுள்ளம்விள்ள
வழகியமறைக்குமெட்டாவாதிநாயகனைநோக்கித்
தொழுதனருவகைபூத்துத்துள்ளினர்துளக்கமுற்றார். (௪)

மண்ணவரமரர்யாரைவணங்கினுமவைகளெல்லா
நண்ணியபரமன்றாளினாற்பெருந்தவத்தினோருந்
தண்ணளிநெறியிற்பல்காற்றாழ்ந்தனரெழுந்துநின்று
பண்ணிசைமறைகடம்மாற்றுதித்திவைபகர்தலுற்றார். (௫)

இருட்பெருங்கடலுள்யாமத்தெறிமருத்திடைப்பட்டாங்குப்
பொருட்பெருங்கடலாம்வேதம்புடைதொறுமலைப்பவிந்நா
ளருட்பெருங்கடலேயெய்த்தேமமைந்திலதுணர்வியாங்கண்
மருட்பெருங்கடலினீங்கும்வண்ணமொன்றருடியென்றார். (௬)

நவையறுதவங்களாற்றிநல்லருள்படைத்ததொல்லோ
ரிவைபுகன்றிடலுமன்பர்க்கெளிவருங்கருணைவள்ள
லவர்முகந்தெரிந்துநுங்களறிவமைந்தடங்குமாறு
தவலருஞ்சிறப்பினன்னூல்சாற்றுதுமிருத்திரென்றான். (௭)

என்றிவையருளவெந்தையிணையடிதனாதுமுன்னர்
நன்றுணர்காட்சிகொள்ளுநால்வருமிருந்தாரங்கட்
சென்றிடுநந்திப்புத்தேள்சிறப்புடைவதனநோக்கிக்
கொன்றையந்தொடையல்வேய்ந்தகுழகனொன்றியம்புகின்றான். (௮)

பூங்கணைக்கிழவனன்றிப்புங்கவர்யார்போந்தாலு
மீங்குறத்தருதியல்லையீதுனக்கடைத்ததென்ன
வாங்கதுபுரிவனென்னாவமலனையிறைஞ்சியங்க
ணீங்கியக்கணத்தினந்திநெறிமுதல்போற்றல்செய்தான். (௯)

நந்திமுற்கடையைப்போற்றஞானநாயகனுமண்ணன்
முந்துறைசனகனாதிமுனிவரர்தொழுதுகேட்ப
வந்தமிலாகமத்தினரும்பதமூன்றுங்கூறப்
புந்தியதொடுங்குஞானபோதகம்போதியென்றார். (௧௦)

என்னலுநகைத்தியாதுமெதிர்மொழிபுரிந்தானல்லன்
பன்னுவதன்றான்மற்றிப்பரிசினாலிருத்தல்கண்டூ
ரந்நெறியாகுமென்றேயனையவர்க்குணர்த்துமாற்றா
லுன்னரும்பரத்தின்மேலோனொருசெயல்புரிதலுற்றான். (௧௧)

Digitized By Roja Muthiah Research Library

இருவருமுணராவண்ணலேனவெள்ளெயிறியாமை
சிரநிரையநந்தகோடிதிளைத்திடுமுரத்திற்சீர்கொள்
கரதலமொன்றுசேர்த்திமோனமுத்திரையைக்காட்டி
யொருகணஞ்செயலொன்றின்றியோகுசெய்வாரினுற்றான். (௧௨)

இளையதோர்தன்மைகாட்டியெம்பிரானுணர்த்தக்கண்டு
சனகனேமுதலாவுள்ளோர்தவலருஞானபோதம்
பனுவலினளவன்றென்னும்பான்மையைத்தெரிந்துமுக்கட்
புனிதனதருளாற்றத்தம்புந்தியினொடுக்கம்பெற்றார். (௧௩)

தத்தமுள்ளொடுங்கல்பெற்றதாபதகணத்தர்யாரு
முத்தொழில்புரியுமூவாமுதல்வனுமுக்கண்மூர்த்தி
மெய்த்தவவடிவமுன்னிமேவினர்சூழ்ச்சிமேலோன்
சித்திரம்புணர்த்தபாவைசெயலறவிருக்குமாபோல். (௧௪)

தற்பரனிளையவாற்றாற்றாபதருணருந்தன்மை
யற்புதஞானபோதமளித்திடுங்கணமதொன்றின்
முற்படுகமலப்புத்தேண்முதலியவமரர்க்கெல்லாம்
பற்பலயுகங்கள்சென்றபிறர்க்கினிப்பகர்வதென்னே. (௧௫)

இத்திறஞானபோதமென்றுதொன்முனிவர்க்கெந்தை
கைத்தலங்கொண்டுகாட்டுங்கணத்தினிலமரர்க்கெல்லா
மெத்துபல்லுகங்கள்சென்றவிழுமியகாஞ்சிதன்னி
லத்தன்மெய்குழைத்தநங்கையவன்விழிபுதைத்தநாட்போல். (௧௬)

காரணமுதல்வன்மோனக்காட்சியாலமரரெல்லாஞ்
சூரரமகளிர்தங்கடுணைமுலைப்போகமின்றி
யாரிடர்நிலைமைதன்னையடைந்தனரளக்கர்சூழ்ந்த
பாரிடையுயிருங்காமப்பற்றுவிட்டிருந்தவன்றே. (௧௭)

ஆரணன்றனதுமைந்தர்க்கரும்பெறன்ஞானபோத
மோரிறைகாட்டுமுன்னருலகெலாமொருப்பாடொன்றி
பீருடன்முயங்குமார்வமின்றியேயிருந்தயார்க்குங்
காரணன்சிவனேயென்கைகழறவும்வேண்டற்பாற்றே. (௧௮)

பிணைவிழைச்சூழ்தந்துய்ப்பப்பெருமறைவிதிவழாம
லிணைவிழைச்சடங்கிற்கொண்டவரிவையரோடுதேவ
ரிணைவிழைச்சியற்கைகூடாதிரங்கினர்கவற்சியெய்திப்
புணைவிழைச்சலதியாழ்ந்துபுலம்புகொண்மாக்களேபோல். (௧௯)

வன்முலையணங்கினோரும்வானவர்யாருங்காமத்
தன்மையும்புணர்ப்புமின்றித்தளர்ந்தனர்வறிஞர்தம்பா
லின்மைகொண்டோர்கள்செல்லவீவதுகூடாவெல்லைப்
புன்மையொடிருவர்தாமும்புலம்புறுதன்மையேபோல். (௨0)

பொற்புருக்குறைவின்றுற்றும்புவனமேன்மகளிர்மைந்த
ரற்பொடுகலந்துகாமத்தரும்பயன்கோடறேற்றார்
தற்பரவடிகளுணைத்தன்மையாலலகையீட்ட
நற்புனனீழல்பெற்றுநணுகருந்தன்மையேபோல். (௨௧)

Digitized By Roja Muthiah Research Library

மாடகவெழாலையன்னபணிமொழி * மகளிர்மைந்தர்
கூடினரிருந்துமின்பங்கொண்டிலர்சிறார்குழாமு
மாடவர்குழாமும்வாட்கணரிவையர்குழாமுமேனைப்
பேடியர்குழாமும்வெவ்வேறுற்றிடுபெற்றியேபோல். (௨௨)

இருந்திடவிரிஞ்சன்மாயோனிருவருமீசன்றன்பாற்
பொருந்திடுமுணர்ச்சிகொண்டுமுத்தியிற்புக்கசேயுந்
திருந்துசீர்வசிட்டன்சொல்லாற்சிலையென o ப்பன்னாணின்ற
வருந்ததிமாதும்போன்றாராடவர்மகளிரெல்லாம். (௨௩)

ஏமருபுவனமூன்றுமினிதருள்கமலக்கண்ணர்
பூமடமாதர்தம்பாற்புணர்கிலர்பொருவில்வேளுங்
காமருமகளிர்கூட்டங்கருதலனிவர்போற்சிந்தை
யாமையினெடுங்கல்பெற்றாராசையுள்ளோர்களெல்லாம். (௨௪)

மண்ணகத்துயிர்கண்முற்றுமாதிரத்துயிர்கண்முற்றும்
விண்ணகத்துயிர்கண்முற்றும்வேற்றகத்துயிர்கண்முற்றும்
பெண்ணகத்தாண்மைகூடுஞ்சிறுநலம்பிழைத்தஞானக்
கண்ணகத்திறைவற்கண்டுகடைநின்றகாட்சியார்போல். (௨௫)

நாகமார்சடிலத்தண்ணனாற்பெருந்தவருமுய்ய
யோகுசேர்நிலைமைகாட்டுமொருகணத்துயிரின்பொம்மல்
வாகைவேடானுநிற்கமையலும்புணர்ப்புமற்ற
வாகையாலகிலமெல்லாமவனென்கைதெரிந்ததன்றே. (௨௬)

சிலையொடுபகழிவாடத்திருமதிக்குடைசீர்குன்ற
வலிதளர்வெய்தத்தென்றன்மறிகடற்சுறவுதூங்க
வலைபுரியானைநீங்கியாடன்மாமதனுமாதின்
கலவியதொழிந்தானென்னிற்பிறர்செயல்கழறற்பாற்றே. (௨௭)

சாலிகள்வளருமெல்லைதடம்புனல்வறுமைத்தாக
வாலிதுகுரல்வாங்காதுவருத்தொடுமாய்வதேபோன்
மேலவனருளாற்போகம்வெறுத்தலிற்கருமல்கின்றி
ஞாலமன்னுயிர்கண்முற்றுநாடொறுங்குறைந்தவன்றே. (௨௮)

முள்ளரைமுளரிப்புத்தேண்முதற்புரிதுணையேயன்றித்
தள்ளருமுயிர்கள்பின்னுந்தலைத்தலைமல்காதுற்ற
தெள்ளிதினுலகமீன்றதேவியின்றாகியீசன்
வெள்ளியங்கயிலைதன்னின்மேவியமேலைநாட்போல். (௨௯)

இம்முறைநிகழநாதனீரிருதவத்தினோர்க்கு
மெய்ம்மைகொளுணர்ச்சிகாட்டிவீற்றிருந்தருளுமெல்லை
தெம்முயல்சூரன்றீங்குசெய்தலான்மகவான்வானோர்
தம்மொடுந்துறக்கம்விட்டுச்சசியொடுந்தரணிபுக்கான். (௩0)

மேகமூர்கடவுள்வெள்ளிவெற்பினிலேகிமுக்க
ணேகநாயகனைக்காணுமெல்லையின்றாகமீண்டு
சோகமோடம்பொன்மேருத்துன்னியேசூரன்மைந்தன்
மாகநாடழித்துச்சேயைச்சிறைசெய்தவண்ணந்தேர்ந்தான். (௩௧)

---

* பணிமொழி - மெல்லியமொழி.
o சிலையென - கல்லைப்போல அசைவற.

Digitized By Roja Muthiah Research Library

தமனியமேருவெற்பிற்றன்னுளமொருப்பாடெய்த
நிமலனையுன்னிப்பன்னாணெடுந்தவமுழத்தலோடு
மிமில்விடைமிசைக்கொண்டங்கணெம்பிரானேகக்காணூஉ
வமரர்கோன்வணங்கிப்போற்றவனையவனருளிச்செய்வான். (௩௨)

நொந்தனையளப்பில்காலநோற்றனையாற்றதீர்ந்தா
யிந்திரநினக்குவேண்டிற்றென்னையதியம்புகென்னா
வந்தமிலறிவின்மேலோனறிகிலன்போலக்கேட்ப
வந்தனைபுரிந்துபோற்றிமகபதிபுகலலுற்றான். (௩௩)

பன்னரும்பழிசேர்சூரன்பருவரற்படுத்திப்பின்ன
ரென்னொருபுதல்வன்றன்னையிமையவர்பலரைவாட்டித்
தன்னகர்ச்சிறையிட்டெம்மூர்தழல்கொளீஇத்தவறுசெய்தா
னன்னவன்றன்னையட்டேயளித்தியாலெம்மையென்ன. (௩௪)

மெய்ம்மையதகன்றதக்கன்வேள்வியினிருந்தபாவ
தும்மிடையிருந்ததற்றோதகவுழந்தீர்மேனா
ணம்மிடையொருசேய்வந்துநணுகிவெஞ்சூரைக்காதி
யிம்மெனவும்மைக்காப்பனெனப்புகன்றிறைவன்போனான். (௩௫)

மறைந்தனனிறைவனேகமகபதியிரக்கமெய்திக்
குறைந்தனனுணர்வுதுன்பங்கூர்ந்தனன்குமரனங்கட்
பிறந்துமைக்காப்பனென்றேபிரானருள்புரிந்தபெற்றி
சிறந்ததன்மனத்திலுன்னித்தேறினனுவகைசெய்தான். (௩௬)

மாசறுகாட்சிகொண்டமாதவர்க்கருளியெங்கோன்
றேசுறுகயிலையுற்றானுமையவளிமையஞ்சேர்ந்தா
ளாசறுகுமரனன்னார்க்கடைவதெத்தன்மையென்னா
வாசவனிருந்துநாடிமனமிசைக்கவலைகூர்ந்தான். (௩௭)

மயர்வொடுதுறக்கமன்னன்மனோவதியென்னுமாண்டை
வியனகரெய்தியாங்கண்வீற்றிருந்தருளும்பொன்னி
னியன்முறைமனைவிதன்பாலில்லினையிருத்தல்செய்தாங்
கயனுறுகடிமாண்கோயிலடைந்தனனமரரோடும். (௩௮)

இனையதோர்காலைமுக்கணெம்பிரான்ஞானபோத
முனிவரர்க்குணர்த்திவைகுமுறையினாற்படைப்பின்றாகித்
துனியொடுவேதாவைகுந்தொன்முறையவையைநண்ணி
யனையவன்கழன்முன்றாழூஉவளப்பிலவழுத்திநின்றான். (௩௯)

நிற்றலுமகவான்றன்னைநீடருள்புரிந்துநோக்கிப்
பொற்றனிக்கமலமேயபுங்கவர்முதல்வன்வானோர்
கொற்றவவந்ததென்னைகூறுதியென்னலோடுஞ்
சொற்றனன்சூரபன்மன்செய்திடுந்துன்பமெல்லாம். (௪0)

வெய்யதோர்சூரன்செய்கைவிளம்பியேமுனிவர்க்கீச
னையமிலுணர்வுகாட்டியமர்வதுமுரைத்துத்தான்பின்
செய்யுறுதவங்கண்டன்னானருளியதிறனுஞ்செப்பி
யுய்வதோர்பரிசதென்னோவும்பரும்யானுமென்றான். (௪௧)

Digitized By Roja Muthiah Research Library

என்றலுமலரோன்கேளாவெவர்க்குமேலாகுமீச
னொன்றியவருளினோனுமுற்றவர்க்குதவுவோனு
மன்றியுமுறைசெய்வோனுமாதலின்முனிபோல்வெள்ளிக்
குன்றிடையெம்மையாளுங்குறிப்பின்வீற்றிருந்தானன்றே. (௪௨)

செங்கண்மாலுநானுந்தேடுதற்கரிதாய்நின்ற
வெங்கடம்பிராற்குமேலாவெண்ணவோர்தேவுமுண்டோ
வங்கவன்ஞானபோதமறிவருக்குணர்த்திவைக
னங்குறைமுழுதுமாற்றுநல்லருளாகுமன்றே. (௪௩)

படர்மதிமிலைச்சுஞ்சென்னிப்பகவனாருயிர்களெல்லா
மடுவதும்வருத்தந்தீர்க்குமாரருளானவாபோற்
கொடியவெஞ்சூரன்றன்னைக்கொண்டெமக்கலக்கண்செய்கை
விடலரும்பவப்பேறார்த்திவீடருள்கருணையன்றே. (௪௪)

பெற்றிடுங்குரவரானோர்பிள்ளைகடம்பாலேயொன்
றுற்றிடிற்பிறரைக்கொண்டுமுறுதுயர்செய்துதீர்ப்பார்
மற்றவர்தம்பாலன்போவன்கனோவதுபோனம்பாற்
பற்றியபவங்கடீர்ப்பான்பரமனுமிவைகள்செய்தான். (௪௫)

தெருமருகின்றநம்பாற்றீங்கெலாநீங்குமெல்லை
யொருசிறிதணுகிற்றாகுமாதலாலுணர்வின்மேலோன்
பரிவொடுநின்பால்வந்துபரிசிவையருளிப்போனா
னிருவினைப்பௌவவேலையேறினம்போலுமன்றே. (௪௬)

ஆதலினிறைவனேமேலருள்செயுமதற்கியாமுந்
தீதறமுயலுமாறுசிறிதுளதிவற்றைமாயோற்
கோதினம்வேண்டுஞ்செய்கையொல்லையிற்செய்துமென்னா
வேதமில்கமலப்புத்தேளிருக்கைவிட்டெழுந்தானன்றே. (௪௭)

வேறு.

அன்னகாலையதுநன்றுநன்றெனாத், துன்னும்வானவர்சூழலொடிந்திரன்
பின்னராகப்பெயர்ந்துடன்வந்திடச்,சென்னிநான்கினன்செல்லுதன்மேயினான்.()

ஞாலம்யாவையுநல்கியபுங்கவன், வாலிதாந்தன்மனோவதிநீங்குறா
மேலைவைகுந்தமென்னும்வியனக, ராலயத்தினகன்கடையேகினான். (௪௯)

அங்கவெல்லையதுகண்டுநேமியுஞ், சங்குமேந்தியதானையங்காவலன்
செங்கண்மாயன்முன்சென்றுவிண்ணோருடன்,பங்கயத்தன்படர்ந்ததுசெப்பினான்

பணிலமேந்தியபண்ணவனன்னரைக், கொணர்தியாலெனக்கூறிவிடுத்துழி
யிணையில்காவலனுய்த்திடவிந்திரன், கணமொடேகினன்காசினிநல்கியோன். ௫௧

பொருவின்மாமுனிபுங்கவர்போற்றுதன், னுருவுகொண்டவுலப்பறுகண்ணர்கண்
மரபினேத்தமணிப்பணிப்பீடமே, லரியிருந்தவவைக்களநண்ணினான். (௫௨)

அன்னமூர்தியமருலகாளுறு, மன்னனோடுமவ்வானவர்தம்மொடும்
புன்னகாசனப்பங்கயக்கண்ணவன், பொன்னின்மாணடிபோற்றிவணங்கினான்.()

தரையளந்திடுதாளினனவ்வழிக், கருணைசெய்துதன்காதலனாகிய்
பிரமனுக்கொருபீடிகைபெற்றியா, லருளியங்கணவனையிருத்தினான். (௫௪)

எ

Digitized By Roja Muthiah Research Library

சூல்லைமாமுடிக்கொண்டவனத்துணை, யல்லிமாமலரண்ணலைநோக்குற்றி
யொல்லுகின்விதியூறிலதாகியே, செல்லுகின்றகொலென்றனுஞ்செப்புவான். (௫௫)

கனகனச்சுநக்கந்திடைவந்தெழு, மனகவித்திறங்கேட்கவறிவுடைச்
சனகன்முற்படுதாபதர்நால்வரு, மெனகருத்திடைமுற்பகலெய்தினர். (௫௬)

அறிவின்மிக்கவனையரைநோக்கியான், பெறுவதாமிப்பெருந்தொழிலாற்றியீண்
டுறுதிரென்னவுளத்ததுகொண்டிலர், முறுவல்செய்துமொழிந்தனரிவ்வுரை. (௫௭)

பாசவன்சிறைப்பட்டுப்படைப்பெனப், பேசலுற்றபெருந்தளைபூணல
மீசன்மாணடியெய்துதும்யாமெனு, மாசில்காட்சியர்வல்விரைந்தேகினர். (௫௮)

மாதவத்தினைமைந்தர்களாற்றலு, மாதிநாயகனவ்வுழிவந்துமக்
கேதுவேண்டியதென்றலுமெண்ணிலா, வேதவுண்மைவிளம்புதியாலென்றூர். ௫௯

என்றலோடுமிறையவன்வெள்ளியங், குன்றமீதுதென்கோட்டிடைநிற்புறு
மொன்றொரானிழலுற்றுமறையெலா, நன்றுணர்த்திடநால்வருந்தேர்ந்தனர். (௬0)

முந்தைவேதமுழுதுமுணர்த்தியே, யெந்தையேகவிருநிலம்போந்துதஞ்
சிந்தையொன்றுந்திறனரிதாதலி, னேர்துபின்னருநோற்றலைமேயினர். (௬௧)

பின்னுமைந்தர்பெருந்தவமாற்றியே, தொன்னலம்பெறுதூயவுளத்தரா
யென்னையாளுடையீசனருளினன், மன்னுவெள்ளிவரையிடையேகினர். (௬௨)

ஏகல்பெற்றிடுமக்கட்கினிதுளம், பாகமுற்றபரிசுணர்ந்தெம்பிரா
னாகமத்தினரும்பதமூன்றையு, மோகைபற்றியுணர்வகைகூறியே. (௬௩)

கூனன்மாமதிக்கோடுமிலைச்சிய, வானநாயகன்மற்றவர்காண்டக
ஞானபோதநவிலருந்தன்மையான், மோனமேயமுதற்குறிகாட்டினன். (௬௪)

அந்தவெல்லையரனருள்கண்டுதம், புந்தியொன்றியப்புங்கவன்றூண்மலர்
சிந்தைசெய்துசெயலற்றுவைகினர், முந்தியாப்புறுமுத்தளைமூட்டற. (௬௫)

வேதநாயகன்மெய்த்தவர்க்கோர்கணம், போதயோகின்பொருண்மையைக்கா
ட்டுழி, யோதலாகுமுகம்பலசென்றன, சீதவானதிசேர்ந்ததொன்னுளினே. (௬௬)

அன்னைதன்னையகன்றரன்யோகிபோ, லென்னதுஞ்செயலின்றியிருத்தலான்
முன்னையாண்பெண்முயக்கமதின்மையாய், மன்னுயிர்த்தொகைமல்கலின்றுயதே

நவிறலென்னினிஞாலம்விசும்புளா, ரிவறுகாமப்புணர்ச்சியதின்றியே
கவறல்கொண்டுகலங்கஞரெய்தினர், தவறல்கொண்டதுநல்குந்தனிச்செயல். ௬௮

நல்கல்பெற்றதமியனுநாமகட், புல்கல்பெற்றபுணர்ச்சியின்றாகியே
யல்கல்பெற்றவருந்தவயோகரி, னெல்கல்பெற்றனனுண்மையிதாகுமால். (௬௯)

நிற்கவிங்கிதுநித்தன்வரத்தினு, லொற்கமில்வளனுண்டிடுவெய்யசூ
ரெற்குநித்தலுமேவலொன்றிட்டனன், சொற்கநாட்டிற்றுயரினைநாட்டினன். (௭0)

தேசுசேர்ந்துறுதேவரையீண்டுள, வாசவன்றனைமாதிரத்தோர்களைப்
பாசனத்தொடுபற்றினனித்தலுங், கூசலின்றிக்குற்றேவல்கொண்டானரோ. (௭௧)

நிறைபுரிந்தநிலவினைவாளரா, மறைபுரிந்தெனவானகத்தோருட
னிறைபுரிந்தவிவ்விந்திரன்மைந்தனைச், சிறைபுரிந்தனன்றீத்தொழிலாற்றியே. ()

நிரந்தபல்லுயிர்தங்கட்குநித்தலு, மரந்தைமல்கவறிகிலன்போலவே
யிருந்தனன்சிவனென்னினிச்செய்வது, விரைந்துகூறுதியென்றுவிளம்பினன். ()

Digitized By Roja Muthiah Research Library

அரியதத்துவமையைந்தின்பேதமு, மரபினுடினர் * வாலுணர்வெய்திய
திருவினாயகன்செங்கமலந்திகழ், பிரமன்மாமுகநோக்கினன்பேசுவான். (எச)

வேறு.

ஆவிகளனைத்துமாகியருவமாயுருவமாகி
மூவகையியற்கைத்தானமூலகாரணமதாகுந்
தேவர்கடேவன்யோகின்செயன்முறைகாட்டுமென்னி
லேவர்கள்காமங்கன்றித்தொன்மைபோலிருக்குநீரார். (எரு)

ஊழ்வினைநெறியான்முன்னமொருபெருவேள்வியாற்றித்
தாழ்வினையடைந்ததக்கன்றன்புடையிருந்தோர்தம்பாற்
சூழ்வினையெச்சமுற்றுமருத்தியேதொலைத்துத்தொல்லை
வாழ்வினையருளநாதன்மனத்திடைநினைந்தானன்றே. (எசு)

சூரெனுமவுணர்க்காற்றல்புரிந்ததுஞ்சுரர்கள்யாருஞ்
சார்வருந்திறத்தாலீசன்றவத்தருக்குணர்வுகாட்டி
யாருயிரெவைக்குமின்னலாக்கியவாறுந்தூக்கிற்
பேரருண்முறையேயன்றிப்பிறிதொருசெயலுமன்றால். (எஎ)

முனிவருக்குணர்வுகாட்டுமோனத்தைமுதல்வனீங்கிப்
பனிவரையணங்கைமேவிற்படைப்பயன்முற்றுமன்னோர்க்
கினியொருகுமரன்றோன்றிற்சூர்கிளையனைத்தும்பொன்றுந்
துணியுறுமுலகமெல்லாந்தொன்மைபோலுய்யுமாதோ. (எஅ)

அத்திறமுற்றுமாறன்றறைகுவனகிலந்தன்னி
லெத்திறத்தருயால்கொள்ளவெய்திடுங்காமன்றன்னை
யுய்த்திடின்முனிவர்தங்கட்குணர்வுசெய்யோனநீங்கிச்
சத்தியைமணந்துசேயைத்தந்திடுமெந்தையென்றான். (எகூ)

பதுமபீடிகையோனன்னபரிசுதேர்ந்துவகையெய்தி
யிதுசெயன்முறையேயெந்தாயேற்றனபுகன்றாயென்ன
வதுபொழுதவனைநோக்கியச்சுதனமலன்றன்பான்
மதனனைவிளித்துவேண்டிவிடுத்திநீவல்லையென்றான். (அ0)

என்னலுமலரோனுள்ளத்திசைவுகொண்டெழுந்துமாயன்
பொன்னடிவணக்கஞ்செய்துவிடைகொடுபுலவரோடு
மன்னெடுமங்கணீங்கிமனோவதியதன்பாற்சென்று
தன்னகரடைந்துகஞ்சத்தவிசின்வீற்றிருந்தானன்றே. (அக)

மேருப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் சகூக.

---

* தத்துவம் இருபத்தைந்தெனவும், இருபத்துநான்காந்தத்துவமாகிய குணதத்துவத்தின்மேல் இருபத்தைந்தாந் தத்துவம் வாசுதேவனென்றொருவனுளனெனவும், அவனே பரம்பொருளெனவும், கூறுவோர் பாஞ்சராத்திரிகளென்றறிக.

Digitized By Roja Muthiah Research Library

# காமதகனப்படலம்.

இந்திரன்வானவரீட்டமொடேகி, முந்துறுகஞ்சமுகட்டிடையுற்றா
னைந்திறனாகியவாசுகவில்வேள், வந்திடுமாறுமனத்தினினைந்தான். (௧)

நினைந்திடுகின்றுழிநீணிறமாயோன், முனந்தருகின்றமுரண்ட்குவில்வேண்
மனந்தனிலுன்னுமலர்ப்பகவன்முன், னினந்தருசூழலொடிம்மெனவந்தான். (௨)

மாமறையண்ணன்முன்வந்துபராவித், தாமரைநேர்தருதாடொழுதென்னை
நீமனமீதுநினைந்ததெனென்னாக், காமன்வினாவவயன்கழறுற்றான். (௩)

கங்கைமிலைச்சியகண்ணுதல்வெற்பின், மங்கையைமேவநின்வாளிகடூவி
யங்குறைமோனமகற்றினையின்னே, யெங்கள்பொருட்டினிலேகுதியென்றான். ()

வேதனிவ்வாறுவிளம்பியகூற்றார், தீதுறுபொங்கழல்செய்யவள்சேயோன்
காதிடையேநெறியாக்கடிதிற்போ, யேதமிலுள்ளமெரித்ததையன்றே. (௫)

கிட்டியரன்செயல்கேடுசெயென்னுங், கட்டுரையேவருகாமனுளெங்குஞ்
சுட்டதெனிற்பிறைசூடியவன்மெய், யட்டிடுகின்றதுமற்புதமாமோ. (௬)

இத்திறமாமலரேந்தலியம்பக், கைத்துணைகொண்டிருகன்னமும்வல்லே
பொத்தியினைந்துபுராந்தகனாமஞ், சித்தசவேளுரைசெய்தனனம்மா. (௭)

ஈட்டுறுபல்பவமெய்துவதோர்சொற், கேட்டனனென்றுகிலேசமதாகி
வாட்டியமென்மலர்போலணிமாழ்கிப், பூட்டுவிலண்ணல்புகன்றிடுகின்றான். (௮)

வேறு.

வன்கண்ணருமாசறுகாட்சியர்பா, னன்கண்ணுறினுய்யுநலம்புகல்வா
ருன்கண்ணுறினித்தவறோதினையா, லென்கண்ணடிகட்கிலையோவருளே. (௯)

வன்னப்புவிமங்கையைமாமலர்மேற்,பொன்னைப்பிறரைப்புணர்வுற்றிடுவான்
கன்னற்சிலைபூங்கணைகொண்டமர்செய்,தென்னத்தனைவென்றிசைகொண்டிலனோ

வெள்ளைக்கமலத்தியைமெய்யுறவுந், தெள்ளூற்றணிசெய்ததிலோத்தமைபா
லுள்ளப்புணர்வுற்றிடவும்முனையான், பிள்ளைச்சமர்செய்திசைபெற்றிலனோ. (௧௧)

சீர்பெற்றிடுசெந்திருவைத்திருமான், மார்பிற்குடியாயுறவைத்திலனோ
கார்பெற்றவிழிக்கலைமங்கையையுன், னேர்பெற்றிடுநாவிலிருத்திலனோ. (௧௨)

தண்ணின்றகுழற்சசியென்றுரைசெய், பெண்ணின்றலையுற்றிடுபெற்றியலால்
விண்ணின்றலைவற்குளமெய்ம்முழுதுங், கண்ணென்றிடுபல்குறிகண்டிலனோ. (௧௩)

விசையுற்றிடுசெங்கதிர்மேலவர்கீழ்த், திசையுற்றவராங்கொருசேயிழைபோ
லிசையுற்றிடுபாகனிடைப்புணரா, வசையுற்றிடுபான்மைமயக்கிலனோ. * (௧௪)

---

* சுவர்க்கத்தில் இந்திரனது சபையிலே அரம்பையர்கள் செய்த நிருத்தத்தைச் சூரியனுடைய தேர்ப்பாகனாகிய அருணன் பெண்வடிவங்கொண்டு சென்று பார்த்தான். நிருத்தமுடிந்தபின், இந்திரன் அருணனுடைய பெண்வடிவத்தைக்கண்டு மயல்கொண்டு புணர்ந்தான். புணர்ந்தபின், அருணன் முன்னைவடிவங்கொண்டு சூரியனிடத்துச் செல்ல, சூரியன் "நீ இதுகாறுந்தாழ்த்ததென்னை" என்றான். அருணன் நிகழ்ந்ததைச் சொல்ல, சூரியன் "அவ்வடிவத்தைக் கொள்ளக்கடவாய்" என்றான். அருணன் அவ்வடிவங்கொள்ளச் சூரியனும் மயல்கொண்டு புணர்ந்தான்.

Digitized By Roja Muthiah Research Library

கதனத்தொடுவந்துகலந்தவர்பா, லிதாட்புறுமாமதியென்கணையான்
மதனத்தொடுதேசிகன்மாதையுருப், புதனைத்தருபான்மைபுணர்த்திலனே. (௧௫)

முற்றேதின்மறைத்தொகைமூதறிவாற், கற்றேதுமுணர்ந்திடுகாட்சிபெறு
நற்றேவர்கள்யாரையுநாரியர்தங், குற்றேவல்செயும்படிகூட்டிலனே. (௧௬)

ம்றைதேரும்வசிட்டன்மரீசிமிகக், குறிதாமுனியத்திரிகோதமனல்
லறிவாலுயர்காசிபனாதியரார், துறவோர்தமதாற்றறொலைத்திலனே. (௧௭)

மன்னான்மரபுற்றிடுமானவரைப், *பின்னாகியமும்மைகொள்பேதகரை 0
மின்னார்கண்மயக்கினில்வீட்டிலனே, வென்னாணைகடந்தவர்யாருளரே. (௧௮)

அறைபெற்றிடுமித்திறமானவெலா, முறைபெற்றிடுமென்னின்முடிந்திடுமோ
பிறைபெற்றிடுகின்றபெருஞ்சடையெம், மிறைபெற்றிடுசத்தியியற்றிடுமே. (௧௯)

மாலேமுதலாகியவானவர்தம், பாலேயடல்வாகைபடைப்பதலான்
மேலேநதிசூடியமேலவன்மேற், கோலேவினன்வென்றிடல்கூடுமதோ. (௨0)

ஐதாகியசீர்கொடவன்முறைசெய், நொய்தானவர்போலநுவன்றனையால்
வெய்தாமழலாகியமேலவன்மே, லெய்தானுமென்வாளிகளெய்திடுமோ. (௨௧)

கையுந்நகையுங்கதிரார்விழியு, மெய்யுந்தழலாம்விமலன்றனையா
னெய்யும்படிசென்றிடினிவ்வுயிர்கொண், டுய்யுந்திறமுமுளதோவுரையாய். (௨௨)

பற்றோடிகலற்றபரம்பொருளை, யெற்றோமயல்செய்குவதீசனையு
மற்றோரெனநின்னின்மதித்தனையாற், சற்றோவவனுற்றறவிர்த்திடவே. (௨௩)

சூறாவளிவைகியசூழலின்வா, யேறாவொருபூளையெதிர்ந்துளதே
னீறாடியமெய்யுடைநின்மலன்மேல், வீறாய்வினையேன்பொரமேவுவனே. (௨௪)

ஆறுற்றிடுசெஞ்சடையண்ணலுடன், மாறுற்றவருண்டெனின்மற்றவர்தா
மூறுற்றனரல்லதுளத்துயர்கொண், டூறுற்றனரல்லதிருந்துளர்யார். (௨௫)

இந்நாரணனாதியர்யாவர்களு, மந்நாளமலன்பணியாற்றிடலு
முன்னாவவர்சிந்தனைமொய்ந்நகையா, லொன்னார்புரமட்டதுணர்ந்திலையோ. (௨௬)

எந்தாயருளென்றொரிளங்குமரன், வந்தாதியையேத்தலும்வைதுசினக்
கொந்தாரழல்போல்வருகூற்றுவனை, யந்தாள்கொடுதைத்ததறிந்திலையோ. (௨௭)

முன்னைப்பகனீயுமுகுந்தனுமாய்ப், பன்னற்கரிதாயபரம்பொருள்யா
மென்னச்சிவனெய்தியிகழ்ந்தவனைச், சென்னித்தலைகொண்டதுதேர்கிலையோ. ()

அடன்மேவுசலந்தரனாதியராய்ப், படிமேலுளதோர்பஃறானவர்தா
முடிவாரரனோடுமுரண்டிடலுங், கெடுமாறுபுணர்த்ததுகேட்டிலையோ. (௨௯)

வீடெய்துறுநின்மகன்வேள்விநிலத், தூடெய்தினர்யாவருமொப்பிலரன்
மாடெய்தியவீரனின்மானமொரீஇட், பாடெய்தியபுன்செயல்பார்த்திலையோ. ()

அண்டாதவகந்தையொடாழியின்வாய், விண்டானவரச்சுறமேவுவிட
முண்டானிகழ்கங்கையையோரணுவிற், கொண்டானவன்வன்மைகுறிக்கிலையோ

தரியாவுளமால்கொடுதன்னிகழு, மரியோடுகைம்மாவையடற்புலியை
யுரியாமிசைபோர்வையுடுக்கையெனப், பரியாவரனுற்றதுபார்த்திலையோ. (௩௨)

---

* நான்மரபுற்றிடுமானவரென்றது பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னு நான்குவருணத்தாரை.

0 மும்மைகொள்பேதகரென்றது அநுலோமர், பிரதிலோமர், சங்கரசாதியார் என்னு மூன்றுசாதியாரை.

Digitized By Roja Muthiah Research Library

ஓரார்தனதுண்மையையுள்ளமிசை, யாராயினுமாற்றவகந்தைபெறின்
வாராவவர்தம்வலிமாற்றிடுமாற், றோராய்கோல்பரஞ்சுடர்செய்கையதே. (௩௩)

இறுகின்றகடைப்பகலீறிலதோர், கறைதுன்றுமிடற்றிறைகண்ணினும்வீழ்
பொறியொன்றதனாற்பொடிபட்டிடுநீ, யறிகின்றிலையோவகிலங்களுமே. (௩௪)

இப்பெற்றியனாகியவீசனையென், கைப்பற்றியவிற்கொடுகந்தமல
ரப்பிற்பொருகின்றிலனாருயிர்மேன், மெய்ப்பற்றிலரிச்செயல்வேண்டுவரே. (௩௫)

மேனாளிலந்தரமெல்லியலா, வானவருடன்னையளித்தொருபாற்
றானாகவிருத்தியதற்பரனை, நானுமயல்செய்வதுநன்றிதுவே. (௩௬)

வேறு.

என்னுமதவேளிசையாமறுத்திடலும்
பொன்னார்கமலப்பொகுட்டுத்தலைவந்த
மன்னானவேதாமனக்கவலைகொண்டுசில்போ
துன்னாநெடிதேயுயிராவுரைக்கின்றான். (௩௭)

வெண்மையறிவாற்றமைவியக்கும்விண்ணவர்பா
லண்மையிலனாகுமண்ணலியல்கூறினையா
லுண்மையிதுவாமுவனைப்பொருவதுவு
மெண்மையதுவோவெவர்க்குமரிதன்றே. (௩௮)

அன்னபரிசேயெனினுமடைந்தோர்த
மின்னலகற்றுமிறையருளாலிக்கரும
முன்னின்முடியுமொழிந்தோரான்முற்றுவதோ
முன்னினிதற்குமுதற்காரணநீகாண். (௩௯)

எல்லார்செயலுமிறைவனியற்றுவதே
யல்லாதிலையோரணுவுமசையாதெவையு
நில்லாதருளின்றேனீயின்றவன்பாலிற்
செல்லாயுனதுசெயலுமவன்செய்கையதே. (௪0)

செம்மாந்துதற்புகழுந்தேவர்குழுவும்மருள
வெம்மான்பிறன்போலிருந்தோர்துரும்புநிறீஇ
யம்மாதன்செய்கையனைத்துமெனக்காட்டினனே *
நம்மாலுமுற்றுஞ்சிலவென்கைநாணன்றே. (௪௧)

* முன்னொருகாலத்திலே தேவர்களும் அசுரர்களும் யுத்தஞ்செய்தபொழுது தேவர்களை அசுரர்கள் வென்றார்கள். பின்பு சிவபெருமானுடைய திருவருளினால் அசுரர்களைத் தேவர்கள் வென்றார்கள். வென்ற பின்பு, தேவர்களெல்லாரும் தங்கள் தங்களையே புகழ்ந்து செருக்கடைந்து தங்களுள்ளே பிணக்குற்றபொழுது, சிவபெருமான் ஓரியக்கவடிவங்கொண்டு எழுந்தருளிவந்து, அவர்களெதிரே ஒருதுரும்பை நட்டு, இருமாந்திருந்துகொண்டு, அவர்களை நோக்கி "இத்துரும்பைத் துணிக்க வல்லவனெவனோ அவனே அசுரர்களை வென்ற வீரன்" என்றார். இந்திரன் முதலிய எட்டுத்திக்குப்பாலகர்களும் பிரமவிட்டுணுக்களும் தனித்தனியே தத்தம்படைக்கலத்தை விடுத்து, அத்துரும்பை அசைக்கவும் ஆற்றலில்லாதவர்களாகிச் செருக்கழிந்து, அவ்வியக்கரை நோக்கி "நீர் யாவர்" என்றார்கள். உடனே அவ்வியக்கர் மறைந்தருளினார். உமாதேவியார் தேவர்களெதிரே வெளிப்பட்டு இயக்கவடிவங்கொண்டு எழுந்தருளிவந்தவர் சிவபெருமான் என்று உணர்த்தியருளினார்.

Digitized By Roja Muthiah Research Library

பாடுதிகழ்பாவைபல்லுயிருமல்லனவு
மாடல்புரிவிப்பானருவுருவாய்நின்றபர
னாடிலவனையின்றிநம்மாலொன்றாகவற்றோ
வேடவிதனிலைமையிந்நாளுமோர்ந்திலையோ. (௪௨)

கையம்புபூட்டிக்கருப்புச்சிலைகோட்டி
யெய்யும்படிவழிக்கொண்டேகாயிறுதியிலா
வையன்றனைநீயதுவுமவனருள்காண்
மெய்யங்கதற்கேதுமேனாளேகண்டனம்யாம். (௪௩)

ஈங்கிதுவுமன்றியெவரேனுந்தம்மடங்காத்
தீங்குபெறினுதவிசெய்யென்றிரந்திடலு
மாங்கொருவன்செய்யாததுமறுத்துத்தன்னுயிரைத்
தாங்கலுலகநடைதனக்குத்தக்கதுவோ. (௪௪)

என்னானுமோருதவியாதொருவன்யார்க்கெனினுந்
தன்னான்முடிவதெனிற்றானேமுடித்தறலை
சொன்னான்முடித்தலிடையாகுஞ்சொல்லுகினும்
பன்னாண்மறுத்துப்புரிதல்கடைப்பான்மையதே. (௪௫)

எவரெனினுமிடருற்றனராகி
யோவில்குறையொன்றுளரேலதுமுடித்தற்
காவிவிடினுமறனேமறுத்துளரேற்
பாவமலதுபழியுமொழியாதே. (௪௬)

உய்கைபொருளாவொருவர்க்குமோருதவி
செய்கையிலனேற்சிறியோன்கழித்தபகல்
வைகலதுவோவறிதேயவன்வாழ்க்கை
பொய்கைமலர்ந்தகொட்டிபோலும்பொலிந்துளதே. (௪௭)

அந்நாரணனோடமர்முற்றியமுனியைப்
பொன்னாடருளும்புலவோரிறையிரப்ப
வென்னாருமென்புவிருத்திரனுக்காவுதவித்
தன்னாருயிர்விட்டதன்மைதனைக்கேட்டிலையோ. (௪௮)

மேலொன்றுளதோவிளம்பவெவரெவர்க்கு
மூலந்தலைதெரியாமுன்னோன்கடலெழுந்த
வாலந்தனையுண்டமரர்க்கமுதளித்த
சீலந்தனைநீசிறிதுந்தெளிந்திலையோ. (௪௯)

தேக்குஞ்சலதியிடைத்தீப்போலெழுந்தவிடந்
தாக்கும்பொழுதுதளரேலெனவுரையா
வூக்கங்கொடுமொருகணநின்றேநம்மைக்
காக்கும்படிக்குக்கறுத்தசெயல்கண்டிலையோ. (௫0)

ஆராயினுமொருவரன்பிற்றலைப்பட்டுப்
பேராதரத்தாற்பிறர்க்குதவிசெய்வாரேற்
றீராதவெந்துயரிற்சேர்தலேமாய்தலிவை
பாரார்புகழேபயனென்றுகொள்வாரே. (௫௧)

Digitized By Roja Muthiah Research Library

சூரந்தனில்வலிசேர்சூரபன்மனேவலின்யா
மாருந்துயர்கொண்டழுங்கினோமன்னதினித்
தீரும்படிக்குச்சிவனொருசேயைத்தருவா
னோரைம்படைசெலுத்தவுன்னையாம்வேண்டினமே. (௫௨)

ஆதலினாலெங்களலக்கணகற்றும்பொருட்டுச்
சாதல்வரினுந்தவறேபுகழ்செய்வா
ரேதுவரினுமெதிர்செல்வாரெம்பணியிற்
போதியினிமாறுபுகலேலெனவுரைத்தான். (௫௩)

வேறு.

பங்கயப்பொகுட்டிருந்தபகவனீதுபுகறலு
மைங்கணைக்கரத்தினோரந்தையெய்தியாதியாம்
புங்கவற்குமாறுகொண்டுபொருகிலேனிதன்றியே
யிங்கெனக்கடுத்ததொன்றியம்புசெய்வலென்றனன். (௫௪)

என்னும்வேலையமரரோடிருந்தவேதன்முனிவுறா
நன்னயந்தழீஇயுரைத்தநமதுசொன்மறுத்தியா
லன்னபான்மைபுரியினுய்தியல்லதேலுனக்கியாந்
துன்னுசாபமிடுதும்யாதுதுணிவுசொல்லுகென்றனன். (௫௫)

வெய்யசாபமிடுதுமென்றுவெகுளியான்மொழிந்தகேட்
டையமேனிமதனவேளழுங்கிவெய்துயிர்த்தினிச்
செய்யலாவதென்னெனத்தெரிந்துசிந்தைதேற்றியே
வையகம்படைத்தவண்ணல்வதனநோக்கியுரைசெய்வான். (௫௬)

கேளிதொன்றுரைப்பல்வேதகேடுசூழ்நினதுவாய்ச்
சூளின்மேலையியல்பகன்றுதுன்புழந்துபடுதலிற்
காளகண்டன்முன்புசென்றுகடியவெய்யகணைகடூஉய்
மாளினுஞ்சிறந்ததம்மமற்றுமுய்யலாகுமே. (௫௭)

செற்றநீர்மைகொள்ளலையசெஞ்சடைப்பிரானிடத்
திற்றைவைகலமரியற்றவேகுவேனியானெனக்
கொற்றவேளுரைத்தலுங்குளிர்ந்தபூவிருக்கைமே
லுற்றபோதன்மகிழ்சிறந்துளங்களித்துமொழிகுவான். (௫௮)

பணிந்தசொல்லனாகிநாம்பணித்தவாபுரிந்திடத்
துணிந்தவாறுநன்றுநன்றுசூலிபாலினுனைவிடாத்
தணந்திடேன்தொடர்ந்துபின்புசார்துமஞ்சல்போகெனா
வுணர்ந்துகூறிமாரவேளையோவிலன்பொடேவினான். (௫௯)

ஏவுகாலைமதனைவேள்வியிறைதெரிந்துமைந்தயான்
றேவரோடுதுயருழந்துசிறுமைபெற்றதறிதியே
யோவில்வாழ்வுதருதியென்னினுமைமடந்தைதனையரன்
மேவுமாறுபுரிகெனாவிரைந்துசெல்லநல்கினான். (௬0)

நல்கலுங்கரங்கள்கூப்பிநான்முகத்தனுலகொரீஇ
யல்குதன்புரத்துநண்ணியவ்வியற்கைகூறியே
யொல்குதேவியைத்தெளித்தொருப்படுத்திநறியதேன்
பில்குவாளியிட்டதூணிபின்னியாத்திறுக்கினான். (௬௧)

Digitized By Roja Muthiah Research Library

கயக்கணின்றபூவின்மிக்ககாமகாண்டங்கன்னல்வில்
லியக்கமானபாரவில்லெடுத்துமொய்ம்பிலேந்தியே
தயக்கமுற்றுலாயசெய்யதண்ணென்மாவிளந்தளிர்
வயக்கடுங்கண்வாளமொன்றுமாமருங்குவைத்தரோ. (கூஉ)

கோகிலங்களானவுங்குழாங்கொள்வேலையானவுங்
காகளங்கண்முரசமாய்க்கறங்கவோதம்யாவதுஞ்
சீகரங்களாயசைந்துசெல்லமீனகேதன
மாகவும்பருலவவெண்மதிக்குடைநிழற்றவே. (கூ௩)

பொருவில்கிள்ளையென்னுமாக்கள்பூண்டதென்றல்வையமே
லிரதியோடுமேறிவேளிருந்ததொல்லையுலகினை
யரிதகன்றுகுறிகள்வெய்யவளைவயின்றிநிகழவே
பரமன்வைகுகயிலையம்பருப்பதத்தையணுகினான். (கூச)

கயிலைகண்டுதொழுதுதேரிழிந்துகாமவேடனக்
கயலின்வந்தபரிசனத்தையவணிறுத்திமாதுடன்
பயிலும்வில்லும்வாளியும்பரித்துவல்லியத்தினைத்
துயிலுணர்த்துமானெனத்துணிந்துபோதன்மேயினான். (கூரு)

கூறுலாவுமதிமிலைந்தகுழகன்வைகுகயிலைமே
லேறியேதனாதுகையிருந்தகார்முகம்வளைஇ
மாறிலேவுபூட்டியங்கண்வைகுபுள்ளுமாக்களு
மூறிலாதிருந்தகாமமுன்னுவித்தன்முன்னினான். (கூகூ)

பொருவில்காமனின்னதன்மைபுந்திகொண்டுமற்றவண்
விரவுபுள்ளின்மீதினும்விலங்கின்மீதினும்மலர்ச்
சரமெலாம்விடுப்பவாதிதனதுமந்திரத்துமுன்
னருளினோடிருந்தநந்தியடிகளன்னகண்டரோ. (கூஎ)

கொம்மெனச்சினம்புரிந்துகொடியபூசன்மதனனார்
தம்மியற்கையாமிதம்மசரதமென்றுநினைவுறு
வும்மெனத்தெழித்துரப்பவொலிகொள்புள்விலங்கின்மேல்
வெம்மையிற்செலாதுமாரன்விசிகம்விண்ணினின்றவே. (கூஅ)

நிற்றலோடுமவ்வியற்கைநின்றுநோக்கிநெடியவேள்
கொற்றநீடுசூரலொன்றுகொண்டுகோபுரத்தலைத்
தெற்றிமேலிருந்தநந்திதேவர்காப்புமாணையு
முற்றுநோக்கிநெடிதுயிர்த்துளந்துளங்கிவிம்மினான். (கூகூ)

விம்மிநந்திதேவர்முன்விரைந்துசென்றுதாழ்ந்தெழூஉச்
செம்மைசெய்கருத்தனைத்திகழ்ந்துபோற்றெடுத்தனு
மிம்மலைக்கண்வந்ததென்னையெனவயன்புணர்ப்பெலா
மெய்ம்மையாவுணர்த்தலும்வினாவியீதுளங்கொள்வான். (எ0)

வேதனாதியானதேவர்விழுமநோயகன்றிடு
மேதுவால்விடுத்துளார்களிவனையீசன்யோகுறும்
போதில்யாவர்வருகினும்புகாதுசெய்திமதனவேள்
சாதலெய்துவான்வரிற்றடேலெனாவியம்பினான். (எக)

அ

Digitized By Roja Muthiah Research Library

புன்மையாம்பசுத்தடிந்துபுரையில்வேள்வியாற்றியே
தொன்மைபோலெழுப்புமாறுசுருதிசொற்றவாறுபோன்
மன்மதன்றனைப்படுத்துமாதைவேட்டுமற்றதன்
பின்முறைக்கணல்கவெம்பிரானினைந்தனன்கொலாம். (௭௨)

ஆகையாலிதருளதேயிவன்வரத்துமாணையென்
றுரைகையாலுணர்ந்துவேளைநோக்கியும்பராகுலம்
போகுமாறியற்றல்செய்தபொருவிலாதகருணைசே
ரேகநாயகன்றன்முன்னரேகல்வேண்டுமோவென்றான். (௭௩)

நந்திதேவனிளையவாறுநவிலவேயுணர்ந்துவே
ளெந்தைகேட்டியாலிதொன்றெனக்கொரீறுகுறுகினா
மந்திவேணியண்ணன்முன்னமணுகுமாறமைந்திவண்
வந்தனன்னதற்கியைந்தவகைமைநல்குவாயென. (௭௪)

இகலுமன்புமிறையுமின்றியெவ்வுயிர்க்குமுள்ளதோர்
புகுதிநாடிமுறையினைப்புரிந்துசேர்பவர்க்குமேற்
றகுதிசெய்துகருணைகூர்சயம்புமுன்புசார்தியேன்
மிகுதிகொண்டமேலைவாய்தன்மேவியேகுகென்றனன். (௭௫)

என்றலுங்கரங்குவித்திறைஞ்சிமாரனேர்புறீஇ
நன்றிலங்குவேத்திரக்கைநந்திதேவர்விடைதரச்
சென்றுமேலைவாயில்சார்ந்துதேவதேவனீற்றழற்
குன்றமென்னமோனமோடிருந்தவெல்லைகுறுகினான். (௭௬)

வேறு.

ஒருதனிச்சிம்புள்வேந்தனுறைந்ததுகண்டசீயக்
குருளையினமலன்றன்னைக்கோலமால்புதல்வன்காணா
வெருவருமுளத்தனாகிவியர்த்துமெய்பனியாவுட்கிப்
பருவரலுழந்துகொண்டபடையொடுங்கடிதில்வீழ்ந்தான். (௭௭)

எழுதருமதனாமேகமிறைவனைக்கண்டேயஞ்சி
விழியிருண்மூடக்கோலவில்விட்டுவியர்ப்பின்வாரி
மழைபடவிடியார்ப்பெய்தமார்புமற்றதுவீழ்கின்ற
தொழின்முறைபுதரங்காட்டத்துளங்கிவீழ்ந்திட்டதன்றே. (௭௮)

அஞ்சிவீழ்குற்றமாரனறிவிலாதவசமாகத்
துஞ்சினன்கொல்லோவென்னாத்துயருழந்தெடுத்துத்தேவி
கஞ்சநேர்கரத்திற்றாங்கிக்கடிவகையுய்த்துத்தேற்ற
நெஞ்சமேலுணர்ச்சிகூடவினையவைநினைந்துநைவான். (௭௯)

முறுவலினெயின்மூன்றட்டமுதல்வனைப்பொருதியென்றே
நறைமலரயனுமேனைத்தேவருநாகர்கோனு
முறுதுயரகலவிங்ஙனுய்த்தனர்வினையேற்கின்னே
யிறுதிவந்தணுகிற்றாகுமிதற்குமோரையமுண்டோ. (௮0)

எண்டருகுணத்தின்மேலாமிறையவனிருந்தவண்ணங்
கண்டலும்வெருவியாவிகாண்கிலனவனையென்கைக்
கொண்டதோர்கணைகள்வாகைகொள்ளுமோவினையபான்மை
யண்டருமயனும்யாருமறிகிலர்போலுமன்றே. (௮௧)

Digitized By Roja Muthiah Research Library

தாக்கினால்வலிபெற்றுள்ளமருத்தின்முன்றனித்ததீபம்
போக்கினாணிற்பதுண்டோவனையதுபோலத்தேவர்
வாக்கினான்மனத்தாலெட்டாவள்ளன்முனாய்த்தாரன்றா
னோக்கினாலினிச்சில்போதினுண்பொடியாவன்போலாம். (அ௨)

ஏமுறவுலகமெல்லாமீறுசெய்முதல்வன்றன்னைப்
பூமலர்கொண்டியானேபொருகின்றேனகையீதன்றோ
வாமிதுவிதியின்செய்கையதனையார்கடக்கவல்லார்
தாமரைமுதல்வற்கேனுந்தள்ளருந்தகையதன்றோ. (அ௩)

ஈங்கிவையமலன்சூழ்ச்சியாவதோமுடிவதோரேன்
றாங்கியான்கிடத்தலொல்லாதுண்ணெனவெழுந்துவில்லும்
வாங்கினன்சரமும்பூட்டிவல்லவாறிழைப்பனையன்
பாங்குறநின்றுமேலேபட்டவாபடுகவென்றான். (அ௪)

இனையனபலவுமுன்னியெழுந்துமாமதவேளிட்ட
தனுவினையெடுத்துவாங்கித்தண்மலர்விசிகம்பூட்டி
மனைவிதன்னகலாள்செல்லமதிக்குறைதவழ்ந்தசென்னிப்
புனிதனதொருசார்போகிப்பொருவகைமுயன்றுநின்றான். (அ௫)

மாரவேளீண்டுநிற்பமனோவதிநகரின்மேய
வாரணமுதல்வன்றன்னையமரர்கோன்றொழுதுநோக்கிக்
காருறழ்கண்டன்றன்பாற்காமனைவிடுத்தியன்னான்
போரியலுணர்வானங்கட்போதரல்வேண்டுமென்றான். (அ௬)

சதமகனினையகூறத்தண்மலர்க்கடவுணேராக்
கதுமெனவெழுந்துவானோர்கணத்துடனையன்போற்றப்
பொதிதருகயிலையந்தண்பொருப்பின்மேலொருசார்போகி
மதனியறெரிந்துமுக்கண்வள்ளலைவழுத்திநின்றான். (அ௭)

எறிதருகணிச்சிச்செங்கையீசன்மேலிலக்கநாடுங்
குறியினர்போலநின்றகொடுந்தொழின்மாரன்றுஞ்சு
நெறியினர்க்கச்சமுண்டோநினைத்ததுமுடிப்பனென்றா
நறுமலர்வாளியைந்துநாதன்மேற்செல்லவிட்டான். (அ௮)

விட்டவெம்பகழியைந்தும்வியத்தகுவிமலன்மீது
பட்டலுஞ்சிறிதேவேளைப்பார்த்தனன்பார்த்தலோடுங்
கட்டழல்பொதிந்தநெற்றிக்கண்ணதுகடிதேகாமற்
சுட்டதுகயிலைமுற்றுஞ்சூழ்புகைபரவிற்றன்றே. (அ௯)

ஆலயஞ்சிலைவேளாகமழல்படக்கயிலையின்க
ணேலவெம்புகையுந்தீயுமெழுதருமியற்கைநாடின்
மாலயன்முதலோர்யாருமதித்துழிவிரைந்துபாலின்
வேலையினடுவுதீயவிடமெழுந்தனையதம்மா. (௯0)

செறிந்ததீப்புகையின்மாலைசெல்லலுங்குணபால்வாய்த
லுறைந்ததோர்நந்திதேவனெல்லையிலதனைப்பாரா
விறந்துபாடாயினான்கொலேகியமதனனென்றா
வறிந்தரோவடைந்தார்க்கோதியொருசெயலறையலுற்றான். (௯௧)

Digitized By Roja Muthiah Research Library

நுண்ணியவுணர்வின்மிக்கீர்நுமக்கிதுபுகல்வனெங்கோன்
கண்ணுதலுமிழ்ந்தசெந்தீக்காமனைப்பொடித்ததன்று
லண்ணலையெய்வனென்றவனையவன்றுணிவிற்கூறித்
துண்ணெனவீண்டுவெந்தசெயற்கையேசுட்டபோலும். (௯௨)

இன்னினிமகிழ்நன்றுஞ்சு:மியற்கையையிரதிநாடி
வன்னிபெய்யலங்கல்போலாய்வயிறலைத்திரங்கியெங்கோன்
றன்னைவந்திரப்பவேளைத்தருகுவன்காண்டிரந்த
முன்னவனனுக்கட்காயமுறைபுரியருளாலென்றான். (௯௩)

ஐந்தொகையாற்றின்மாடேயமலனைநினைந்துநோற்ற
நந்தியந்தேவனின்னநவிறலுமவற்சூழ்கின்ற
வந்தமில்கணத்தோர்கேளாவகிலமுய்பொருட்டாலெங்கோன்
புந்திகொளருளின்செய்கைபோற்றெடுத்தனராயுற்றார். (௯௪)

வாவலங்கிள்ளைமான்றேர்மதன்புரிவினையாலன்றன்
வேவரப்புணர்த்துநோக்கிமிகைபடாதவன்சாரான
தேவியைமுடிக்குமாற்றல்செய்திலனிகல்பற்றின்றி
மூவரைவிடுத்துத்தொன்றுண்முப்புரம்பொடித்தமுன்னோன். (௯௫)

கண்ணழல்சுடுதலோடுங்காமவேள்யாக்கைமுற்றுஞ்
சுண்ணமதாகிவீழத்துஞ்சினன்போயபின்னை
யண்ணலம்பகவன்றொல்லையமைதியினிருந்தானெல்லா
மெண்ணிநின்றியற்றுமெங்கோற்கினையதோவரிதுமாதோ. (௯௬)

பாடுறுகணவன்செய்கைபார்த்தலுமிரதியுள்ளங்
கூடினதுயரம்வீந்தகொண்டதொல்லுணர்ச்சிகண்ணீ
ரோடினவியர்த்தமெய்மூக்குயிர்த்தன வொடுங்கிற்றாவி
வீடினளிவளுமென்னவிரைந்துகீழ்த்தலத்தின்வீழ்ந்தாள். (௯௭)

சுரிதருகுடிஞையாற்றிற்சுழித்தலைப்பட்டமான்போற்
பருவரல்வாரிநாப்பட்படிந்துபற்றின்றிச்சோரு
மிரதிசில்பொழுதிற்பின்னரிறந்ததொல்லுணர்வுதன்பால்
வருதலுமறித்துச்செங்கைவயிறலைத்திரங்கலுற்றாள். (௯௮)

வேறு.

செம்பதுமைதிருக்குமராதமியேனுக்காருயிரேதிருமான்மைந்தா
சம்பரனுக்கொருபகைவாகன்னல்வரிச்சிலைபிடித்ததடக்கைவீரா
வம்பவளக்குன்றனையசிவன்விழியால்வெந்துடலமழிவுற்றாயே
யும்பர்கடம்விழியெல்லாமுறங்கிற்றோவயனுருமுவப்புற்றாரோ. (௯௯)

முன்னாளிற்புரமூன்றுமட்டவன்மேற்பொரப்போதன்முறையோவென்று
சொன்னாலுங்கேட்டிலையேயமரர்பணிபுரிவதுவேதுணிந்திட்டாயே
யுன்னாகம்பொடியாகிப்போயினதேயிதுகண்டுமுய்வாருண்டோ
வென்னாவியாகியநீயிறந்தபின்னும்யான்றனியேயிருப்பதேயோ. (௧00)

மாறாகப்பரமன்விழிநின்றாற்றலிலதாகமற்றுன்மெய்யு
நீறாகவிண்டெல்லாநெருப்பாகக்கவலைவிண்ணோர்நெஞ்சத்தாக
வாறாதபெருந்துயரமெனக்காகவெங்கொளித்தாயருவாயேனுங்
கூறாயோவறிதிருந்தாயென்கணவாயான்செய்தகுறையுண்டோதான். (௧0௧)

Digitized By Roja Muthiah Research Library

உம்பர்கடம்பாலேயோவிந்திரனார்பாலேயோவுன்னையுய்த்த
செம்பதுமத்திசைமுகத்தோன்பாலேயோவரன்செயலைச்சிதைப்பனென்று
விம்பரிடைவல்விரைந்துவந்திடுநின்பாலேயோவீசன்கண்ணால்
வெம்பொடியாய்நீயிறந்தவிப்பழிதானெவர்பாலின்மேவிற்றையோ. (௧0௨)

வில்லான்முப்புரமெரித்தபரம்பொருள்யோகந்தவிர்க்கவேண்டில்விண்ணோ
ரெல்லாருமிறந்தனரோவென்கணவாநீயோதானிலக்காய்நின்றாய்
கொல்லாதுபோலவுனைக்கொன்றனரேயென்னுயிர்க்குங்கொலைசூழ்ந்தாரே
பொல்லாதபேர்க்குநன்றிசெய்வதுதம்முயிர்போகும்பொருட்டேயன்றோ. (௧0௩)

என்னபவஞ்செய்தேனோவென்போல்வார்தமக்கென்னவிடர்செய்தேனோ
முன்னையுளவிதிப்பயனையறிவேனோவிப்படியேமுடிந்ததையோ
கன்னல்வரிச்சிலைபிடித்தகாவலவோதமியேனைக்காத்திடாயோ
வன்னிவிழியாவுடையபெருமானைநோவதற்குவழக்கொன்றுண்டோ. (௧0௪)

பொன்செய்தார்முடிகாணேனழகொழுகுந்திருமுகத்துப்பொலிவுகாணேன்
மின்செய்பூணணிகுலவும்புயங்காணேனகன்மார்பின்மேன்மைகாணேன்
கொன்செய்பூங்கணைகாணேன்சிலைகாணேனுடல்புரிகோலங்காணே
னென்செய்வேனென்கணவாவென்னையொழித்தெவ்விடத்தேயிருக்கின்றாயே.()

அந்நாளிலழற்கடவுள்கரியாகவானவரோடயன்மால்காணப்
பொன்னாருமங்கலநாண்பூட்டியெனைமணஞ்செய்துபுணர்ந்தகாலை
யெந்நாளுமினியுன்னைப்பிரியலமென்றேவாய்மையிசைத்தாய்வேனின்
மன்னாவோமன்னாவோவெனைத்தனியேவிட்டேகல்வழக்கோசொல்லாய். (௧0௬)

போவென்றுவரவிட்டதேவரெலாம்பொடியாகிப்போனவுன்னை
வாவென்றுகடிதெழுப்பமாட்டாரோநின்றாதைவலியனென்பா
ரோவென்றுநானிங்கேயரற்றிடவும்வந்திலனாலுறங்கினோ
வேவென்றுநின்சிரத்தில்விதித்திருந்தாலவரையெலாம்வெறுக்கலாமோ. (௧0௭)

நேயமொடுமறைபயிலுந்திசைமுகனைப்புரந்தரனைநின்னைத்தந்த
மாயவனைமுனிவர்களையாவரையுநின்கணையான்மருட்டிவென்றா
யாயதுபோன்மதிமுடித்தபரமனையுநினைந்திவ்வாறழிவுற்றாயே
தீயழலின்விளக்கத்திற்படுகின்றபதங்கத்தின்செயலிதன்றோ. (௧0௮)

தண்பனிநீர்ச்சிவிறிகொண்டுவிளையாடிமலர்கொய்துதண்கானண்ணி
யெண்படும்பூம்பள்ளிமிசைச்சிறுதென்றல்கவரிகளாயினிதுசெல்ல
வெண்பளிதநறுஞ்சாந்தச்சேறாடியிருவருமாய்விழைந்துகூடிக்
கண்படைகொண்டமர்வாழ்வும்பொய்யாகிக்கனவுகண்டகதையாயிற்றே. (௧0௯)

மருகென்றேயவமதித்ததக்கனார்வேள்விசெற்றவள்ளறன்னைப்
பொருகென்றேதேவரெலாம்விடுத்தாரேயவராலேபொடிபட்டாயே
யெரிகின்றேனுனைப்போலவாறாதபெருந்துயரால்யானுமங்கே
வருகின்றேன்வருகின்றேனென்னுயிரேயெனப்புலம்பிவருந்துகின்றாள். (௧௧0)

காமதகனப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௬0௧.

Digitized By Roja Muthiah Research Library

# மோனநீங்குபடலம்.

இரதியின்னணம்வருந்திடத்தொன்மைபோலெங்கோமான்
விரதமோனமோடிருத்தலுமுன்னரேவிறற்காமன்
கருதுமுன்பொடிபட்டதுகண்டனர்கலங்குற்றார்
சுருதிநன்றுணர்திசைமுகன்முதலியசுரரெல்லாம். (௧)

சிதலைமெய்த்தொகைவன்மீகத்தெழுந்தெனச்செலக்கண்ணீர்
பதலையொத்தனவல்லல்கூர்ந்தரற்றிடப்பகுவாய்கள்
விதலைபெற்றுமெய்வியர்ப்புறவுளநனிவிதிர்ப்பெய்த
மதலையிற்றுழிதாய்கள்போற்றுயர்க்கடன்மறிகின்றார். (௨)

மையுலாவருகறைமிடற்றிறையவன்மருங்காக
வெய்யுமாரனைவிடுத்தனமவனையுமிறச்செய்தான்
பொய்யிறன்னிலைதவிர்ந்திலன்றொன்மையேபோலுற்றா
னையகோவினிச்செய்வதென்னோவெனாவயர்கின்றார். (௩)

பூத்தருங்கணைமாரனைவிழியினாற்பொடிசெய்த
வாத்தனாற்றலைப்புணர்ப்பினானீக்குவதரிதன்னான்
காத்துநந்துயரகற்றிடவேண்டுமேற்கடிதேயா
மேத்தல்செய்வதேகடனெனயாவருமிசைவுற்றார். (௪)

எகினமூர்பவன்முதலியகடவுளரெல்லோரு
மகனமர்ந்திவையிசைந்துதொல்கயிலையினகநாப்பட்
புகலதாயபொன்னகரிடைக்கோபுரப்புறனேகித்
தொகுதியோடெமதிறைவனையொல்லெனத்துதிக்கின்றார். (௫)

நஞ்சருந்தியுநதியினைச்சூடியுநடுநெற்றித்
துஞ்சும்வெங்கனல்பரித்தும்வெவ்வலியரைத்தொலைத்திட்டு
மஞ்சலென்றுமுற்காத்தனையின்றெமக்கருளாயேற்
றஞ்சமாருளர்தாதையரல்லதுதனயர்க்கே. (௬)

கோளிலன்பர்களிழுக்கியபுரியினுங்குணனாக்கொண்
டாளுமெம்பிரானின்னடியரணமென்றடைந்தேங்க
ணாளும்வெந்திறற்சூரபன்மாவினானலிவெய்தி
மாளுகின்றதோசிறிதுமெம்முறுதுயர்மதியாயோ. (௭)

தையலைப்பிரீஇயோகியல்காட்டிடுதனிச்செய்கை
யையநிற்கிதோரிறைவரையாகுமாலதுகாலை
நையுமெங்களுக்குகம்பலசென்றனநாமெல்லா
முய்வதெப்படியின்னுநீபுறக்கணித்துறுவாயேல். (௮)

நோற்றுமாயவன்முதலினோர்யாவருநுனதாளைப்
போற்றியர்ச்சனைபுரியவித்திருவெலாம்புரிந்துற்றாய்
தோற்றமின்றியேயைந்தொழிலியற்றியதொல்லோய்நீ
யாற்றுகின்றதோர்தவநிலையெம்பொருட்டளவன்றோ. (௯)

Digitized By Roja Muthiah Research Library

எய்த்திடுஞ்சிறியேங்களைத்தவறுகூரிடர்வாளா
ளித்தலுந்துணித்தீருதிசெய்வினைநெறிநேடி
யத்தவிங்கினிக்காத்தருளல்லதேலடுவல்லே
சித்தமென்னுனக்கன்னவாறென்றினைச்செய்வாயே. (கO)

கங்கைவேணியாயம்மையைமணந்தெமைக்கடிகொள்ளத்
திங்கள்வெண்குடைமதனனைவிடுத்தனந்தெளிவில்லே
மங்கவன்புரம்பொடித்தனைமுன்புபோலமர்ந்தற்று
யிங்கியாந்தளர்கின்றதேயினிச்சிறிதிரங்காயோ. (கக)

ஆரழற்சினவயப்புலிமுதலியவுடன்மாவின்
பேருரித்திறந்தரித்தனைசிறுவிதிபெருவேள்வி
வீரனைக்கொடுதடிந்தனையஃதெனமிகவெய்ய
சூரபன்மனைத்தொலைவுசெய்தெந்துயர்தொலைக்கென்றார். (கஉ)

முரற்கொள்வண்டுசூழ்சததளப்பண்ணவன்முதலோர்க
ளுருக்கரக்கெனமெய்தளர்ந்திவ்வகையுளநொந்தே
யரற்றியேத்தலுமவர்பவமுடிவதற்கணித்தாக
விரக்கமாயருணந்தியைநினைந்தனனிறையோனே. (கங)

எந்தைநந்தியையுன்னலுமவனறிந்திறைவன்முன்
வந்துவந்தனைசெய்துகைதொழுதலுமறைமேலோன்
கந்தமாமலர்க்கடவுளாதியர்தமைக்கடிதெய்முன்
றந்திடென்றனனன்றெனமுதற்கடைதனில்வந்தான். (கச)

கணங்கள்காப்புறுமுதற்கடைகுறுகலுங்கண்டேத்தித்
தணங்கொள்பங்கயன்வாசவன்விண்ணவர்தாமெல்லாம்
வணங்கவெம்பிரானுமைத்தருகென்றனன்வறிதேனு
மணங்குகொள்ளவீர்வம்மினோநீவிரென்றருள்செய்தான். (கரு)

சீர்த்தநந்திவந்திவ்வகையுரைத்தசொற்செவிதோறும்
வார்த்தபேரமுதாதலுமுவகையின்மதர்ப்பாகிப்
பேர்த்தொர்மாற்றமுமுரைத்திலர்பிரமனேமுதற்றேவ
ரார்த்துநாதனைப்பாடினராடினரலமந்தார். (கசு)

பெரிதுநோயுழந்தருள்பவரின்றியேபெருங்கால
நிரயமுற்றுளோர்தங்களையெடுத்திடுநிலைத்தன்றே
வருளினீர்மையாலுமையரன்விளித்தனனெ[?]வீரும்
வருதிரென்றசொற்பங்கயன்முதலியவானோர்க்கே. (கஎ)

செய்யலாவதொன்றின்றியேமகிழ்ச்சியிற்றிளைத்தோராய்
மையலாகியபண்ணவர்தங்களைவல்லேகொண்
டையன்முன்னுறவுய்த்தனனிருவகையறத்தோரு
முய்யவெஞ்சமனுடைதரப்புவியினிலுதிக்கின்றோன். (கஅ)

வேறு.

வண்டுளர்கமலமேன்மதலைவாசவ, னண்டர்களனைவருமன்பொடேகியே
பண்டுயிர்முழுதருள்பரனைக்கண்களாற், கண்டனர்வழுத்தினர்கரங்கள்கூப்பினார்.()

விண்மதிபடர்சடைவேதகீதனை, யண்மினர்வணங்கினரரிமுனூற்றிய
வுண்மகிழ்பூசனையொப்பப்போதநீர், கண்மலரதனொடுகழல்கள்சேரவே. (உO)

வணங்கியபண்ணவர்வல்லவல்லவா, பணங்கிளரரவரைப்பரமற்போற்றலு
முணங்கியசிந்தையீருமதுவேண்டலு,மணங்குறுநிலைமையுமறைமினென்னவே. ()

பேருகமளப்பிலபெயர்தலின்றியே, சூரனதாணையிற்றுயர்ப்பட்டாழ்ந்தனங்
காருறழ்கந்தரக்கடவுணீயலா, தாருளரடியரேமலக்கணீக்குவார். (௨௨)

ஆயவெஞ்சூரனதாவிநீக்கவோர், சேயினையருளுவான்சிமையமாகிய
மீயுயர்வரையிடைமேவிநோற்றிடு, மாயையின்முதல்வியைமணத்தல்வேண்டுநீ. ()

என்றிவைகூறியேயாருமெம்பிரான், மன்றலந்தாண்மலர்வணங்கிப்போற்றலு
மின்றிகழ்பசுங்கதிர்மிலைச்சும்வேணியா,னன்றெனவிசைந்திவைநவிறன்மேயினன்

புங்கவர்யாவரும்பொருமல்கொள்ளலீ, ருங்கடம்பொருட்டிலவ்வோங்கல்வைகிய
மங்கையைமணந்துநும்வருத்தநீக்குது, மிங்கினியாவருமேகுகென்றனன். (௨௫)

முழுதுணர்பரனிதுமொழியப்போதனுஞ், செழுமையில்பொன்னகர்த்தேவும்யா
வருந், தொழுதனர்விடைகொடுதுயரஞ்சிந்தியே, விழுமியமேருவின்மிசைக்க
ணேகினர். (௨௬)

வேறு.

அன்னார்விடைகொண்டேகியபினதுகண்டிரதியெம்பெருமான்
முன்னாவிறைஞ்சிப்போற்றிசெய்துமுறையோமுறையோவிறையோனே
பொன்னார்கமலத்தயன்முதலோர்புணர்ப்பாலெங்கோன்போந்திங்கே
யுன்னான்முடிந்தானவன்பிழையையுளங்கொளாயலருளென்றாள். (௨௭)

வேறு.

இனையகூறினளிரதிவேண்டிடுதலுமினைதீர்ந்த
புனிதனல்லருளெய்தியேமங்கைநீபுலம்பாய்கேள்
வனைகருங்குழற்கவுரியைமேவியாம்வரைபோதி
னுனதுகேள்வனையளிக்குதும்போதியென்றுரைசெய்தான். (௨௮)

தன்னையேதனக்கொப்பவனிரதியைத்தளரேலென்
றின்னவாறருள்செய்தலுமகிழ்ந்தடியிறைஞ்சிப்போய்ப்
பொன்னின்மாலிமையக்கிரிபுகுந்தொருபுடையுற்றாள்
வன்னமாமுகில்வரவுபார்த்துறைதருமயிலேபோல். (௨௯)

வேறு.

தமியளாயிரதிபோய்த்தானங்குற்றிட, வமரர்களாயுளாரரந்தைதீர்க்கவு, மிமைய
மால்வரைமிசையிருந்துநோற்றிடு, முமைதனைமணப்பவுமுதல்வனுன்னினான். ()

மனந்தனிலித்திறமதித்துவானதி, புனைந்தவன்சனகனென்றுரைக்கும்புங்கவன்
சனந்தனற்சனாதனன்சனற்குமாரனா, மினந்தருமுனிவரையினிதுநோக்கினான். ()

நன்னலமைந்தர்காண்ஞானபோதகஞ், சொன்னடையன்றதுதுயரநீங்கியே
யிந்நிலைமோனமோடிருந்துநந்தமை, யுன்னுதலேயெனவுணரவோதினான். (௩௨)

கட்படுமிமைத்துணைகாட்சியோகினை, நுட்பமதாகவேநுதலிக்காட்டினா
னொட்பமொடிவ்வகையுரைப்பவாற்றவுந்,தெட்பமதடைந்தனர்விதியின்சேயினோர்

அந்தநல்வேலையிலாற்றுநோன்பினோர்,சிந்தைகொளன்பொடுசிவன்பொற்றாண்முறை
வந்தனைசெய்துநம்மருட்கைநீங்கியே,யுய்ந்தனம்யாமெனவுரைத்துப்போற்றினார்.

போற்றலுமத்துணைப்புனிதனின்னினி, யேற்றிடுகிட்டையிலிருந்துவீடுறீஇ
மேற்றிகழெம்பதமேவுவீரெனாச்,சாற்றினன்விடுத்தனன்றவத்தினோர்தமை. (௩௫)

மோனநீங்குபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௬௩௬.

# தவங்காண்படலம்.

தீதறுமுனிமைந்தர்செல்லலுமதுபோழ்தின்
மாதவநெறிநிற்குமலைமகடனியன்புங்
காதலுமெனைவோர்க்குங்காட்டுதலருளாகிச்
சோதனைபுரிவாரிற்றுண்ணெனவெழலுற்றான். (௧)

செறிதுவருடையுளன்சிகையினனணிநீற்றின்
குறியினனொளிர்நூலன்குண்டிகையசைகைய
னுறைபனிகதிர்போற்றுமோலையனுயர்கோலன்
மறைபயின்முதியோர்போல்வடிவிதுகொடுபோனான். (௨)

போயினனிமையத்திற்புவனமொடுயிர்நல்குந்
தாய்தளர்வொடுநோற்குஞ்சாலையினிடைசாரத்
தூயவரிவரென்றேதோகையர்கடைகாப்போ
ராயவர்பலர்வந்தேயடிதொழுதுரைசெய்வார். (௩)

தளர்நடைமுதியீரித்தடவரையிடைசேற
லெளிதலவடிகேள்வந்தெய்தியதெவனென்ன
வளமலையரசன்றன்மகள்புரிதவநாடற்
குளமுடனிவண்வந்தேனுவகையினுடனென்றான். (௪)

என்றலுமினிதென்றேயிமையவளிடைசில்லோர்
சென்றனர்கிழவோன்றன்செயலினையறைகாலை
யொன்றியமுதியோரேனுய்க்குதிரிவணென்ன
நின்றதொர்பெரியோனைநேரிழைமுனமுய்த்தார். (௫)

உய்த்தலுமிவரெந்தைக்குறுபரிவினரென்றே
பத்திமைபடுபாலாற்பார்ப்பதிதொழலோடு
மெய்த்துணையெனநின்றவிசயையொர்தவிசிட்டு
நித்தனையுறைவித்தாணிமலையுமயனின்றாள். (௬)

அப்பொழுதுமைதன்னையாதரவொடுபாராச்
செப்புதலரிதாமுன்றிருநலனழிவெய்த
மெய்ப்படுதசையொல்கமிகுதவமுயல்கின்றா
யெப்பொருள்விழைவுற்றாயெண்ணியதுரையென்றான். (௭)

வேறு.

முடிவிலானிவையுரைத்தலும்விசயையைமுகநோக்கிக்
கொடியினொல்கியநுசுப்புடையுமையவள்குறிப்பாலே
கடிதினீங்கிவர்க்கெதிர்மொழியீகெனக்கண்காட்ட
வடியனேற்கிதுபணித்தனளெனவறிந்தவள்சொல்வாள். (௮)

மன்னுயிர்க்குயிராகியகண்ணுதன்மணஞ்செய்து
தன்னிடத்தினிலிருத்தினன்கொள்வதேதானுன்னிக்
கன்னிமெய்த்தவமியற்றினளென்றுகாதலிகூற
முன்னவர்க்குமுன்னானவனகைத்திவைமொழிகின்றான். (௯)



Digitized By Roja Muthiah Research Library

புவியளித்தருண்முதல்வருநாடரும்புனிதன்று
னிவடவத்தினுக்கெய்துமோவெய்தினுமினையானை
யவன்விருப்பொடுவரையுமோவுமையவளறியாமே
தவமியற்றினளெளியனோசங்கரன்றனக்கம்மா. (௧0)

அல்லல்பெற்றிடநோற்றிடுபகுதியாலாம்பாலொன்
றில்லையித்துணைப்பெறலரும்பொருளிவட்செளிதாமோ
பல்பகற்றனதெழினலம்வறிதுபட்டனவன்றோ
வொல்லையித்தவம்விடுவதேகடனினியுமைக்கென்றான். (௧௧)

இந்தவாசகங்கேட்டலுமெம்பிராற்கிவரன்ப
ரந்தண்மாமுதுகுரவரென்றுன்னினளறியேனால்
வந்துவெம்மொழிகூறுதலெனச்சினமனங்கொண்டு
நொந்துயிர்த்துநாணீக்கியேபொருதுமைநுவல்கின்றாள். (௧௨)

முடிவிலாதுறைபகவனென்வேட்கையைமுடியாது
விடுவனென்னினுந்தவத்தினைவிடுவனோமிகவின்னங்
கடியநோன்பினையளப்பிலசெய்துயிர்கழிப்பேனு
னெடிதுமூத்தலின்மயங்கினைபித்தனோநீயென்றாள். (௧௩)

ஈட்டுமாருயிர்த்தொகையெலாமளித்தவளிவைகூற
மீட்டுமோர்புணர்ப்புன்னியேமாதுநீவெஃகுற்ற
நாட்டமூன்றுடைப்பிஞ்ஞகன்வளத்தியனன்றாய்ந்து
கேட்டிலாய்கொலாமுணர்த்துவனஃதெனக்கிளக்கின்றான். (௧௪)

ஆடைதோல்விடையேறுவதணிகலமரவென்பு
கேடில்வெண்டலைமாலிகைகேழலின்மருப்பின்ன
வோடுகொள்கலமூண்பலிவெய்யநஞ்சுலப்புற்றோர்
காடதேநடம்புரியிடங்கண்ணுதற்கடவுட்கே. (௧௫)

வேய்ந்துகொள்வதுவெள்ளெருக்கறுகுநீர்வியன்கொன்றை
பாந்தளெச்சியேமத்தமென்றினையனபலவுண்டாற்
சாந்தம்வெண்பொடிசூலமான்மழுத்துடிதழலங்கை
யேந்துகின்றதுபாரிடஞ்சூழ்படையிறையோற்கே. (௧௬)

அன்னைதாதைகேள்வடிவொடுகுணங்களிலனையானுக்
கின்னவாகியபலவளனுண்டவையெவையுந்தா
நின்னவாகவோதவம்புரிந்தெய்த்தனைநெடுந்தொல்சீர்
மன்னன்மாமகட்கியைவதேயித்துணைவழக்கென்றான். (௧௭)

வேறு.

புரங்கண்மூன்றினையுமட்டபுங்கவனினையகூற
வரங்கண்மேதகையவெற்பின்மடமயில்கேட்டலோடுங்
கரங்களாற்செவிகள்பொத்திக்கண்ணுதனுமம்போற்றி
யிரங்கிவெஞ்சினத்தளாகியிடருழந்தினையசொல்வாள். (௧௮)

கேட்டியாலந்தணாளகேடிலாவெம்பிரான்றன்
மாட்டொருசிறிதுமன்புமனத்திடைநிகழ்ந்ததில்லை
காட்டுறுபுள்ளின்சூழல்கவருவான்புதன்மேற்கொண்ட
வேட்டுவனியல்போன்மேலோன்வேடநீகொண்டதன்மை. (௧௯)

Digitized By Roja Muthiah Research Library

நேசமிலாதுதக்கனிமலனையிழித்துநின்போற்
பேசியதிறனுமன்னான்பெற்றதுங்கேட்டிலாயோ
வீசனையிங்ஙனென்முனிகழ்ந்தனையிந்நாள்காறு
மாசறுமறைகளேதுமாய்ந்திலைபோலுமன்றே. (உ0)

முறைபடுசுருதியெல்லாமொழியினுமதுவேசார்வா
வுறுகிலராகிப்பொல்லாவொழுக்கமேகொண்டுமுக்க
ணிறைவனையிகழ்ந்துமுத்தியெய்திடாதுழலமுன்னாண்
மறையவர்பெற்றசாபநின்னையுமயக்குறாதோ. (உக)

தாதையாய்த்தம்மைநல்கித்தந்தொழிற்குரியனாகி
யாதியாய்த்தங்கட்கின்றியமைவுறாச்சிவனைநீங்கி
யேதிலார்பக்கமாகியில்லொழுக்கிறந்தார்போலும்
வேதியர்முறையேசெய்தாய்வெறுப்பதெனின்னையானே. (உஉ)

ஆயினுமறையோர்தம்மினருமறைமுறையேவேடந்
தூயனதாங்கியெங்கோன்றொண்டுசெய்வோருமுண்டா
னீயவர்தன்மைத்தாயுநித்தனையிகழ்ந்தாயென்னிற்
றீயவருனைப்போலில்லையவுணர்தந்திறத்துமாதோ. (உங)

வேண்டுதல்வேண்டிடாமையில்லதோர்விமலன்றன்னை
யீண்டுநீயிகழ்ந்தவெல்லாம்யாரையுமளிக்குமன்பு
பூண்டிடுகுறிகாணற்றாற்புகழ்ச்சியாமன்றிமுக்க
ணாண்டகையியற்கையெல்லாமார்கொலோவறியகிற்பார். (உச)

போதனேமுதலாவுள்ளபுங்கவர்வழிபட்டேத்த
வேதமிலிறைமையாற்றலியாவையும்புரிந்தநாதன்
காதலும்வெறுப்புமின்றிக்கருணைசெய்நிலைமையேகாண்
பேதைநீயிகழ்ச்சியேபோற்பேசியதன்மையெல்லாம். (உரு)

இம்முறைமறைகளாதியிசைத்தனவனையவெல்லாஞ்
செம்மைகொளுணர்வினான்றோர்தெளிகுவரிறையையெள்ளும்
வெம்மைகொள்குணத்தாய்நிற்குவிளம்பொணாவிளம்பிற்பாவம்
பொய்ம்மறைவேடத்தோடும்போதிநீபுறத்திலென்றாள். (உசா)

அறத்தினைப்புரிவாளிவ்வாறறைதலுமணங்கேயீங்குன்
றிறத்தினிலார்வஞ்செய்துசென்றவென்செயல்கேளாது
புறத்திடைப்போதியென்றிபுரைவதோபுகுந்தபான்மை
மறைச்சடங்கியற்றிநின்னைவரைந்திடற்காகுமென்றான். (உஎ)

வஞ்சகமுதல்வன்சொற்றவாசகமின்றயிகேளா
வஞ்செவிபொத்தியாற்றாதழுங்கிமெய்பதைப்பவிம்மி
யெஞ்சலின்முதியோன்போகானேகுவன்யானேயென்னாப்
பஞ்சடிசேப்பவாண்டோர்பாங்கரிற்படர்தலுற்றாள். (உஅ)

படர்ந்தனள்போதலோடும்பணிபடுமிமையம்வைகு
மடந்தைதன்னியற்கைநோக்கிவரம்பிலாவருண்மீதூர
வடைந்ததொல்பனவக்கோலமகன்றுமால்விடைமேல்கொண்டு
தொடர்ந்துபல்கணங்கள்போற்றத்தோன்றினன்றொலைவிலாதோன். ()

Digitized By Roja Muthiah Research Library

தொலைவறுபகவன்வான்மீத்தோன்றலுந்துளங்கிநாணி
மலைமகள்கண்டுபல்கால்வணங்கியஞ்சலியாற்போற்றி
யலகிலாவுணர்வாலெட்டாவாதிநின்மாயைதேறேன்
புலனிலாச்சிறியேனின்னையிகழ்ந்தவாபொறுத்தியென்றாள். (௩0)

நற்றவமடந்தைகேண்மோநம்மிடத்தன்பானீமுன்
சொற்றனயாவுமீண்டேதுதித்தனபோலக்கொண்டாங்
குற்றமுண்டாயினன்றேபொறுப்பதுகொடியநோன்பான்
மற்றினிவருந்தனுன்னைமணஞ்செயவருதுமென்றான். (௩௧)

சிறந்தநின்வதுவைமுற்றச்செல்லுதுமென்றுதொல்லோன்
மறைந்தனன்போதலோடுமலைமகளுள்ளந்தன்னி
னிறைந்திடுமகிழ்ச்சிகொண்டுநித்தனைநினைந்துபோற்றி
யுறைந்தனளிதனைவேந்தற்குரைத்திடச்சிலவர்போனார். (௩௨)

அண்ணல்வந்தருளிச்செய்கையரசனுக்குரைத்தலோடு
முண்ணிகழயர்ச்சிநீங்கியொல்லைதன்னில்லினோடு
நண்ணினனுமையைக்கொண்டுநலங்கொடன்னகரத்துய்த்தான்
கண்ணுதலிறைவனங்கட்செய்தனகழறலுற்றேன். (௩௩)

தவங்காண்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௯௯.

---

## மணம்பேசுபடலம்.

பொருடருமலைக்கொடிபுரியுநோன்புகண், டருடனைநல்கியவாதிநாயகன்
றெருடருகயிலையிற்சேர்வுற்றேழ்வகை, யிருடிகடங்களையிதயத்துன்னினான். (௧)

நினைதலுங்கண்ணுதனிமலனேழ்பெரு, முனிவருமன்னதைமுன்னியுள்வெரீஇப்
பனிவருமெய்யொடுபடர்ந்துவல்லையி, லனையனையிறைஞ்சிநின்றறைதன்மேயினார்

பங்கயன்மான்முதற்பகரும்பண்ணவ, ருங்குனதேவனுக்குரியராயுற
வெங்களையுன்னினையாங்கள்செய்தவ, மங்கவர்தவத்தினுமதிகம்போலுமால். (௩)

எந்தையெம்பெருமநீயெம்மைவம்மென, முந்துறுகருணையின்முன்னிற்றாதலி
னுய்ந்தனமடியரேமுடையதீப்பவஞ், சிந்தினமினியொருதீதுண்டாகுமோ. (௪)

ஒருதலையைந்தொழிலுலப்புறுவகை, புரிதருபகவநம்புன்மைநீக்குவான்
கருணையொடுன்னினைகடிதிற்செய்பணி, யருளுதியென்றனராற்றுநோன்பினோர்.()

வேறு.

அமலனம்முனிவர்மாற்றங்கேட்டலுமவரைநோக்கி
யிமையமேலிறைவன்றன்பாலேகியேயெமக்கிவ்வைக
லுமைதனைவதுவைநீராலுதவுவான்வினவிவல்லே
நமதுமுன்வம்மினென்னாநன்றருள்புரிந்தானன்றே. (௬)

நாயகனருளக்கேளாநன்றெனவிறைஞ்சியேகி
யேயதொன்முனிவர்யாருமிமையமேலிறைமுனண்ணா
வாயவன்மனைவியோடுமடைந்தெதிர்கொண்டுதாழ்ந்து
நேயமொடருச்சித்தேத்திநின்றிதுபுகலுகின்றான். (௭)

Digitized By Roja Muthiah Research Library

படியறுநுந்தாளீண்டுப்படுதலாலிமையமேருத்
தடவரையதனிற்றூய்தாய்த்தலைமையும்பெற்றதன்றே
நெடியவென்பவமுமின்னேநீங்கினநீவிரெல்லா
மடியனேன்றன்பால்வந்தநிமித்தமென்னறையுமென்றான். (அ)

அங்கதுவினவுமெல்லையருந்தவரகிலமீன்ற
மங்கையைவதுவைசெய்வான்மன்னுயிர்க்குயிராய்நின்ற
சங்கரனினைந்துன்னோடுசாற்றுதற்கெம்மையுய்த்தா
னிங்கிதெம்வரலாறென்னவிசைவுகொண்டிறைவன்சொல்வான். (கூ)

துன்னியவுயிர்கள்யாவுந்தொல்லுலகனைத்துமீன்ற
கன்னிகையுமையாடன்னைக்கடிமணமுறையினல்கி
யென்னையுமடிமையாகவீகுவனிறைவற்கென்ன
மன்னவனயலேநின்றமனைவியீதுரைக்கலுற்றாள். (க0)

மலரயன்புதல்வன்றன்னோர்மடந்தையைமணத்தினல்க
வலைபுனற்சடிலத்தண்ணலவன்றலைகொண்டானென்பர்
நிலைமையங்கதனையுன்னிநெஞ்சகமஞ்சுமெங்கள்
குலமகடனையவற்குக்கொடுத்திடலெவனோவென்றாள். (கக)

என்றலுமவளைநோக்கியெழுமுனிவோருஞ்சொல்வா
ரொன்றுநீயிரங்கல்வாழியொப்பிலாமுதல்வன்செய்கை
நன்றுதேர்ந்திலையாற்றக்கனலத்தகுமவியைமாற்றி
யன்றுதன்னிகழ்தலாலேயவன்றலைமுடிவுசெய்தான். (கஉ)

அடைந்துளோர்க்கருளுமாறுமல்லவர்தமக்குத்தண்டம்
படுந்துணைதெரிந்துகூட்டும்பான்மையும்பரமன்செய்கை
மடந்தையித்தன்மையாருமனப்படுத்துணர்வரீதே
திடம்படவுணர்திவேறுசிந்தனைசெய்யேலென்றார். (கங)

வேறு.

இயலுறுமுனிவோர்களிவைமொழிதலுமோரா
மயலறுவரையண்ணல்வாய்மையிதெனலோடு
மயலுறுமனைமேனையஞ்சினளமலன்றன்
செயலிதுவுணராதேசெப்பினனிவையென்றே. (கச)

உண்ணலிவொடுமேனையவர்மலரடிதாழுஉப்
பெண்ணறிவெவையேனும்பேதைமைவழியன்றோ
வண்ணறனருணீர்மையணுவதுமறிகில்லேன்
புண்ணியமுனிவீரென்புன்மொழிபொறுமென்றாள். (கரு)

பணிவுடனிவைமேனைபகர்தலுமவடன்பாற்
கணிதமிலருள்செய்யக்காவலனதுகாணூ
வினைதவிர்முனிவீர்காளிவளுரைகருதன்மின்
மணமியலிறையோனைவரமொழிகுதிரென்றான். (கசா)

பனிபடுவரையண்ணல்பகர்மொழியதுகேளா
மனமிகமகிழ்வாகிமற்றவர்தமையங்க
ணினிமையொடுறநல்கியெழுவருமவணீங்கித்
தனைநிகர்பிறிதில்லாத்தண்கயிலையில்வந்தார். (கஎ)

Digitized By Roja Muthiah Research Library

வந்தெழுமுனிவோருமாநகரிடைசாரா
நந்திகண்முறையுய்ப்பநாதனைநணுகுற்றே
யந்தமிலளியோடுமவனடிதொழுதேத்தி
யெந்தையையிதுகேளென்றியாவதுமுறைசெய்தார். (கஅ)

வரைமிசையரசாள்வோன்மணவினையிசைவெல்லா
முரைசெயவருள்செய்தேயும்பரின்முனிகாணீர்
புரிதருசெயலாற்றப்போகுதிரெனலோடு
மரனடிதொழுதேத்தியவர்பதமணுகுற்றார். (கக)

வேறு.

எங்குறைதீர்ந்ததென்றெழுதவத்தருந், தங்கடம்பதத்திடைத்தணப்பின்றெய்தினா
ரிங்கிதுநின்றிடவிமையமேலிறை, யங்கினிச்செய்தவாறறியக்கூறுவாம். (உ0)

மணம்பேசுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் சுஅக.

---

# வரைபுனைபடலம்.

கண்ணுதலுமைதவங்கண்டுநின்னையா, மண்ணவர்புகழ்வகைமணத்துமென்றது
ம், விண்ணெழுமுனிவரின்வினவிவிட்டது, மெண்ணினன்மகிழ்ந்தனனிமையத்த
ண்ணலே. (க)

கணிதமிலுயிரெலாங் கலந்தமற்றவை, யுணர்வுதொறிருந்தவற் கொருதன்கன்னி
யை,மணமுறைபுரிதிறமதித்துத்தேவர்தம், பணிபுரிதச்சனைப்பரிவொடுன்னினான்.

உன்னியபோதினிலும்பர்கம்மியன், மன்னவனெதிருறவந்துகைதொழு [ன்.
தென்னைகொல்கருதினையாதுசெய்பணி,யன்னதைமொழிகெனவறைதன்மேயினா

என்னையாள்கண்ணுதலிறைவற்கியான்பெறு, மன்னையாமுமைதனையளிப்பனி
வ்வரைக், கன்னிமாநகரெலாங்கவின்சிறந்திடப், பொன்னினாடாமெனப்புனைதி
யாலென்றான். (ச)

அப்பொழுதத்தினிலடுக்கன்மேலையோன், செப்பியவாசகஞ் செவிக்கொண்டுள்ள
மேன்,மெய்ப்பெருமகிழ்ச்சியைமேவியந்நக,ரொப்பனைசெய்திடவுன்னினானரோ.

நீடுறுதருநிரைநிமிருங்கால்களாய்ப், பாடுறுகழிகளாய்ப்பரம்பும்பல்பணை
மூடுறவதன்மிசைமுகில்களெங்கணும், பீடுறுபந்தர்போற்பிறங்கும்வெற்பின்மேல்.

மலையுறழ்கோபுரமன்றஞ்சூளிகை, நிலைகெழுசெய்யதேர்நிழற்றுமண்டபம்
பலவுடனறுமலர்ப்பந்தரன்னவை, தொலைவறுமாவணந்தோறுநல்கினான். (எ)

நீக்கமில்கதலிகைநெடியகேதன, மேக்குயர்காவணமிசைத்தந்துள்ளிடை
யாக்குறுகம்பலமணிசெய்தாயிடைத், தூக்கினன்கவரியுஞ்சுடர்கொண்மாலையும்.()

குரகதமுகம்புரைகுலைகடேங்கிய, மரகதவொளிபடுவாழைபூகநன் [ன்.
னிரைகெழுதன்மையினிறுவிப்பூந்துணர், விரைகெழுதோரணம்விசும்பினாற்றினா

ஒண்ணிதியியக்கர்கோனுறையுளானதும், விண்ணவர்தொழுதிடவீற்றிருந்திடு
மண்ணறன்கோயிலுமாகவீதிக, ளெண்ணருந்திருவுறவெழில்படுத்தினான். (க0)

Digitized By Roja Muthiah Research Library

ஒருபுறத்தினையினியுமைக்குநல்குவோ, னிருபுறத்தினும்வருமெண்ணிறேவருந்
தருபுறப்பொருளெலாஞ்சாரச்சாலைக, டிரிபுறத்திரிபுறச்செய்தமைத்தனன். (கக)

ஆயிரப்பத்தெனவறையும்யோசனை, பேரியதோரளவையிற்புரிசையொன்றினைக்
கோயிலினொருபுடைகுயிற்றிக்கோபுரம்,வாயில்களுண்கினுமரபினல்கினான். (கஉ)

அங்கதனடுவுறவகன்பரப்பினின்,மங்கலமணஞ்செயவதுவைச்சாலையைச்[போல்.
செங்கனகத்தினாற்றிகழச்செய்தனன், கங்கையஞ்சடையினான் கயிலைக்கோயில்

சாலையினிலத்திடைச்சந்தமான்மத, மேனுறுநாவிநீர்விரவிப்பூசியே
கோலமென்மலர்கடூஉய்க்குறுகும்வானவர்க், கேனுறுபலதவிசிருப்பச்செய்தனன்.

வானவின்மணிமுகில்வனசமாமலர், நீனிறம்விரிதருநெய்தல்சண்பக
மேனையநிறங்களாலெண்ணில்வேதிகை, யானவைபுரிந்தனனயனுநாணவே. (கரு)

கண்ணடிபூந்தொடைகவரிபல்லுறுகின், மண்ணியசெழுமணிமாலைதூங்குறப் [வே.
பண்ணுறுவித்தனன் பரமன்பால்வரும், விண்ணவர்விழியெலாம் விருந்துகொள்ள

தேவருமுனிவருந்திருவனூர்களும், பாவையினுயிருறுபண்பினுக்கியே
மேவருகவரிதார்வீணையேந்தியே, யேவலர்தொழின்முறையியற்றநல்கினான். (கஎ)

பெண்ணியலாரெனப்பிறங்கும்பாவைக, டண்ணுமைமுதலியதாக்கித்தண்டியல்
பண்ணொடுகளிநடம்பயிலுவித்தனன், விண்ணவரரம்பையர்யாரும்வெஃகவே. ()

நெருங்கியகிளிமயினேமிதண்புறாப், பொருங்கரியரிபரிபொருநர்வானுளோ
ரொருங்குடன்மணிகளாலோவியப்பட, வருங்கடியிருக்கையுளமரநல்கினான். (கசு)

குறைதவிர்நிலைமையாற்குயிற்றுஞ்சாலையு, ணிறைதருமிந்திரநீலத்தாலொரு
திறலரியணையினைச்சிறப்பிற்செய்தன, னிறைவனுமிறைவியுமினிதுமேவவே. உ0

குண்டமும்வேதிகைவகையுங்கோதில்சீர், மண்டலமானதும்வகுத்துவேள்விசெய்
பண்டமதானதும்படுத்திப்பண்ணவ, ரெண்டொகைமங்கல*மிருத்தினனரோ.உக

கண்டெறுகதிர்மதிக்காந்தங்காஞ்சன,மொண்டுகிர்நித்திலமொளிறுவச்சிர [ன்.
முண்டகவெயின்மணிமுதல்வெறுக்கையான், மண்டபமெண்ணிலமருங்கினல்கினா

காவிகண்மலர்தருகயங்களோர்பல, வோவறுமுற்பலவோடையோர்பல
பூவியல்வாரிசப்பொய்கையோர்பல, வாவிகளோர்பலமருங்கிலாக்கினான். (உங)

பாசடைமரகதம்பளிங்குவச்சிரங், காசறுநன்மணிகனகமன்னதாற்
றேசுறுநளிமலர்செறிந்தபூந்தடம், வாசவன்கண்டுளமருளத்தந்தனன். (உச)

கற்பகஞ்சந்தகில்கதலிபூகமே, பொற்புறுவருக்கைமாப்புன்னையாதிய
பற்பலமணிகளாற்படுத்தியன்னவை, நற்பயன்வழங்கவுநல்கினனரோ. (உரு)

இன்னவாறளப்பிலவிமையவர்க்கெலா, முன்னுறுகம்மியன்முன்னிச்செய்தலும்
பொன்னியலிமகிரிப்புரத்துமேவிய, மன்னவன்கண்டவைமகிழ்ச்சியெய்தினான்.

சீதரனயன்முதற்றேவர்மாத்தொகை, மாதவமுனிவரர்மடந்தைமாரொடு
காதலினுமைமணங்காணவந்திடத், தூதரையெங்கணுந்தூண்டினனரோ. (உஎ)

ஒற்றர்தம்முரைதெரிந்தும்பர்யாவருங், குற்றமின்முனிவருங்குன்றவில்லினாற்
பற்றலர்புரமடுபரமற்போற்றியே, மற்றவன்றன்னொடுவருதுமென்றனர். (உஅ)

* தேவமங்கலம் எட்டு:—கண்ணாடி, பூரணகும்பம், இடபம், இரட்டைச்சாமரம், ஸ்ரீவற்சம், சுவஸ்திகம், சங்கம், தீபம்.

Digitized By Roja Muthiah Research Library

வெற்றிகொள்வயப்புலிமிசையுயர்த்திடுங், கொற்றவையாமவைகுழீஇயகாளிகள்
சுற்றுறுமெழுநதியிமையத்தொல்கிரி, யுற்றனர்தொழுதனருமைமுனண்ணினர்.உகூ

செந்திருநாமகள்சீர்பெறுஞ்சசி, பந்தமிருபதபன்னியாயுளா
ரந்தமிலணங்கினர்யாருமவ்வரை, வந்தனரவரவர்மகிழ்நரேவலால். (௩0)

பங்கயமிசைவருபாவையேமுத, னங்கையர்யாவருநற்றவத்திறு
லங்கநொந்துறைதருமம்மைதாடொழா, மங்கலவதுவையின்வனப்புச்செய்தனர். (௩க)

நெறிதருதவத்துருநீக்கிக்காமருக், குறையுளதாகியவுமைதன்மெய்யினைக்
குறைதவிர்நிலைமையிற்கோலஞ்செய்தன, ரிறைவனைவழிபடுமியல்பினரென (௩உ)

மேதகுபொலஞ்சுடர்மேருமந்தர, மாதியவாகியவலகில்சுற்றமு
மோதருங்கடல்களுமுரகவேந்தரு, மாதிரயானையும்பிறவும்வந்தவே. (௩௩)

வேறு.

ஈங்கிதுகாலைதன்னிலிமகிரிபுரக்குமன்னன்
பாங்குறுதமர்களோடும்பரிவொடுஞ்சென்றுவெள்ளி
யோங்கலினந்தியுய்ப்பவுயிர்க்குயிரானவண்ணல்
பூங்கழல்வணங்கிநின்றாங்கினையனபுகலலுற்றான். (௩௪)

ஆதியினுலகமெல்லாமளித்திடுமன்னைதன்னைக்
காதலின்வதுவைசெய்யக்கருதினைகணிதநூலோ
ரோதுபங்குனியின்றிங்களுத்தரமின்றேயாகு
மீதுநன்முகூர்த்தமெந்தாயிமையமேல்வருதியென்றான். (௩௫)

அல்லுறழ்கண்டத்தெந்தையரசனைநோக்கியின்னே
யெல்லையில்கணங்கள்சூழவிமையமேல்வருதுமுன்னஞ்
செல்லுதியென்றலோடுந்திருவடிவணங்கிப்போற்றி
வல்லையின்மீண்டுபோய்த்தன்வளநகரிருக்கைபுக்கான். (௩௬)

வரைபுனைபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் எஉ௫.

# கணங்கள்செல்படலம்.

அந்தவேலையிற்கயிலையிலெம்பிரானருளா
னந்திதேவரைவிளித்துநம்மணச்செயனுட
மூந்துசீருடையுருத்திரகணங்கண்மான்முதலோ
ரிந்திராதியர்யாரையுந்தருதியென்றிசைத்தான். (க)

இன்னலின்பமின்றாகியபரமனீதுரைப்ப
நன்னயப்புடனிசைந்துபின்னந்தியம்பெருமா
னன்னர்யாவருமணப்பொருட்டுற்றிடவகத்து
ளுன்னல்செய்தனனவரெலாமவ்வகையுணர்ந்தார். (உ)

உலகமுய்ந்திடவெம்பிரான்மணம்புரியுண்மை
புலனதாதலுமவனருண்முறையினைப்போற்றி
மலியும்விம்மிதம்பத்திமைபெருமிதமகிழ்ச்சி
பலவுமுந்திடக்கயிலையைமுன்னியேபடர்வார். (௩)

Digitized By Roja Muthiah Research Library

பாலத்தீப்பொழிவிழியுடைப்பஞ்சவத்திரனே
மூலத்தீப்புரைவிடைப்பெருங்கேதுவேமுதலாஞ்
சூலத்தீக்கரத்தாயிரகோடியோர்சூழக்
காலத்தீப்பெயருருத்திரன்வந்தனன்கடிதில். (ச)

சுழலலுற்றிடுகுறையும்வடவையுந்தொலைய
முழுதுயிர்த்தொகையலமரவுயிர்க்குமொய்ம்புடையோ
ரெழுபதிற்றிருகோடிபாரிடத்தொகையீண்ட
மழுவலத்தினனுயகூர்மாண்டனும் * வந்தான். (ரு)

நீடுபாதலத்துறைபவர்நெற்றியங்கண்ணர்
பீடுதங்கியபல்வகைநிறத்தவர்பெரியர்
கோடிகோடியாமுருத்திரகணத்தவர்குழுவோ
டாடகேசனுமுருத்திரன்கயிலையிலடைந்தான். (சு)

கோரமிக்குயர்நூறுபத்தாயிரகோடி
சாரதத்தொகைசூழ்தரச்சதுர்முகன்முதலோ
ராருமச்சுறச்சரபமாய்வந்தருள்புரிந்த
வீரபத்திரவுருத்திரன்வந்தனன்விரைவில். (எ)

விண்டுதாங்குறுமுலகுயிர்முழுதுமோர்விரலிற்
கொண்டுதாங்குறுகுறட்படைகோடிநூறீண்டப்
பண்டுதாங்கலந்தரியரனிருவரும்பயந்த
செண்டுதாங்குகைம்மேலையோன்மால்வரைசென்றான். (அ)

முந்தைநான்முகன்விதிபெறான்மயங்கலுமுக்கட்
டந்தையேவலாலாங்கவனெற்றியந்தலத்தின்
வந்துதோன்றிநல்லருள்செய்துவானுணர்வளித்த
வைந்துமாறுமாமுருத்திரர்தாமும்வந்தடைந்தார். (கூ)

இத்திறத்தராமுருத்திரரல்லதையேனை
மெத்துபல்புவனங்களுமளித்தவண்மேவி
நித்தனன்புறுமுருத்திரகணங்களுநெறிசேர்
புத்தியட்டகமுதல்வரும் ο வந்தனர்பொருப்பில். (க0)

தொட்டதெண்கடல்யாவையுந்துகளினுற்றூர்க்கு
மெட்டுநூறெனுங்கோடிபாரிடத்தொகையீண்டக்
கட்டுசெஞ்சடைப்பவர்முதலாகவேகழறு
மட்டமூர்த்திகடாங்களுமொருங்குடனடைந்தார். (கக)

ஏறுகொண்டிடுதெழிப்பினரெம்பிரான்விழிநீர்
நாறுகொண்டுளகலத்தொடுபொடிபுனைநலத்தோர்
நூறுகொண்டிடுகோடிபூதத்தொடுநொடிப்பின்
வீறுகொண்டகுண்டோதரன்போந்தனன்வெற்பில். (கஉ)

---

* கூஷ்மாண்டன் - கூர்மாண்டனென்றாயிற்று.

ο புத்தியட்டகமுதல்வர் - புத்திதத்துவத்திலுள்ள சூக்குமபுவனமெட்டின் அதிபதிகள். அச்சூக்குமபுவனட்டகமாவன பைசாசம், ராக்ஷசம், யாக்ஷம், காந்தர்வம், மாகேந்திரம், சௌமியம், பிராசேசுவரம், பிராமம் என்பனவாம்.



Digitized By Roja Muthiah Research Library

அண்டம்யாவையுமுயிர்த்தொகையனைத்தையுமழித்துப்
பண்டுபோலவேதந்திடவல்லதோர்பரிசு
கொண்டசாரதர்நூற்றிருகோடியோர்குழுமக்
கண்டகன்லனும்பினுகியும்வந்தனர்கயிலை. (கந)

ஆனனங்களோராயிரமிராயிரமங்கை
மேனிவந்தபொன்மால்வரைபுரைநிறமேவித்
தானைவீரர்நூற்றைம்பதுகோடியோர்சாரப்
பானுகம்பனுந்தலைவனெண்கயிலையிற்படர்ந்தான். (கச)

தங்கள்சீர்த்தியேமதித்திடுகடவுளர்தலையும்
பங்கியாகியகேசமும்படைகளும்பறித்துத்
துங்கமெய்தியகணங்கள்பல்கோடியோர்சூழச்
சங்குகன்னன்வந்திறுத்தனன்றடவரைதன்னில். (கரு)

காளகண்டனுந்தண்டியுநீலனுங்கரனும்
வாள்வயம்பெறுவிச்சுவமாலியுமற்று
மாளிமொய்ம்பினராயபல்பூதருமனந்த
நீளிருங்கடற்றானையோடணைந்தனர்நெறியால். (கசு)

கூற்றின்மொய்ம்பினைக்கடந்திடுசாரதக்குழுவோர்
நூற்றுமுப்பதுகோடியோர்சூழ்ந்திடநொய்தின்
மாற்றலார்புரமட்டவன்றளிணைவழிபட்
டேற்றமிக்கவீசானனக்கயிலையிலிறுத்தான். (கஎ)

எகினமாகியமா * லயன்வாசவனிமையோர்
புகலுமாதிரங்காவலர்கதிர்மதிபுறக்கோண்
மிகையதாரகையன்னைகள்வசுக்கள்வேறுள்ளார்
மகிழும்விஞ்சையர்முனிவரர்யாவரும்வந்தார். (கஅ)

வாலிதாகியமறைகளாகமங்கண்மந்திரங்கண்
ஞாலமாதியபூதங்களுலகங்கணகர்கள்
காலமானவையேனையபொருளெலாங்கடவுட்
கோலமெய்திவந்திறுத்தனகயிலையிற்குறுகி. (கசு)

இந்தவாற்றினுற்கயிலையில்யாவரும்யாவும்
வந்ததன்மையைநோக்கியேயாற்றவுமகிழ்ந்து
நந்தியுள்புகுந்தமலனுக்கித்திறநவில
முந்தையன்னவர்யாரையுந்தருகெனமொழிந்தான். (உ0)

புராரியித்திறமொழிதலுஞ்சிலாதனுர்புதல்வ
னொராய்முதற்கடைகுறுகியேயுருத்திரகணங்கள்
முராரியாதியாம்விண்ணவர்முனிவரெல்லோரும்
விராவுநீர்மையிற்சென்றிடக்கோயிலுள்விடுத்தான். (உக)

விடுத்தகாலையிலரியணைமீமிசைவிளங்கிக்
கடுத்தயங்கியகண்டன்வீற்றிருப்பதுகாணூஉ
வடுத்தவன்புடன்யாவருமிறைஞ்சியேயவன்சீ
ரெடுத்துநீடநின்றேத்தியேயனுகினரிமைப்பில். (உஉ)

* முன்னொருகாலத்தில் அன்னவடிவங்கொண்டு, விட்டுணு வேதங்களை யருளிச் செய்தமைபற்றி, எகினமாகிய மாலெனப்பட்டது.

Digitized By Roja Muthiah Research Library

நீண்டசீருருத்திரர்தமைநிறைந்தபல்கணத்தை
யீண்டுதேவரைமுனிவரைவீற்றுவீற்றிசையா
வாண்டுதன்விரற்சுட்டியேயாதிநாயகற்குக்
காண்டல்செய்துநின்றேத்தினன்வேத்திரக்கரத்தோன். (உ௩)

ஆரழற்பெயரண்ணல்கூர்மாண்டனுடகத்தோன்
வீரபத்திரன்முதலுருத்திரகணமேத்தப்
பாரிடத்தவர்யாவருமெம்பிரான்பாங்கிற்
சேரலுற்றுநின்றேத்தினர்பணிந்தசிந்தையராய். (உ௪)

அன்னகாலையினுன்முகனெம்பிரானணிவா
னுன்னியேமுடிமுதலியபல்கலனுதவிப்
பொன்னினுயதோர்பீடிகையிற்கொடுபோந்து
முன்னராகவைத்திறைஞ்சியேயித்திறமொழிவான். (உ௫)

ஐயகேளுனக்கில்லையாற்பற்றிகலடியே
மய்யுமாறிவண்மணஞ்செயவுன்னியினையுன்பான்
மையன்மாசுணப்பணியெலாமாற்றிமற்றிந்தச்
செய்யபேரணியணிந்தருளென்றுசெப்பினனே. (உ௬)

பங்கயாசனன்குறையிரந்தினையனபகர
வங்கண்மூரல்செய்தன்புடனீயளித்திடலா
லிங்குநாமிவையணிந்தெனயகிழ்ந்தனமென்னுச்
செங்கையாலணிகலத்தினைத்தொட்டருள்செய்தான். (உ௭)

பிரமனன்புகண்டிவ்வகையருள்செய்தபின்ன
ரொருதன்மெய்யணிபணிகளேயணிகளாயுறுவான்
றிருவுளங்கொளவவ்வகையாகியசெகத்தை
யருள்புரிந்திடுபராபரற்கிச்செயலரிதோ. (உ௮)

கண்டியாவருமற்புதமடைந்துகைதொழுவும்
வண்டுலாங்குழற்கவுரிபாலேகுவான்மனத்திற்
கொண்டுபொங்குறைதலைவருக்குணர்த்தியேகுறிப்பாற்
பண்டுமாலயற்கரியவனெழுந்தனன்படர. (உ௯)

கணங்கள்செல்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் எ௫௪.

# திருக்கல்யாணப்படலம்.

நாற்றடம்புயக்கண்ணுதனந்தியம்பெருமான்
போற்றிமுன்செலவமரருமுனிவரும்புகழ
வேற்றதும்புருநாரதர்விஞ்சையர்யாரும்
பாற்றியக்கமுநீழுமாமெனப்பாட * (க)

* பருந்து பறக்கின்றவிடத்து முறையே உயர்ந்து தன்னிலத்தின்கணின்றுய்ந்து பின்னும் அம்முறையே மேன்மேலுயர்கின்றாற்போலப் பாடவேண்டுதலின், மிடற்றிசைக்குப் பருந்தினியக்கம் உவமையாயிற்று. அப்பருந்தினியக்கத்தை அதனது நிழலியக்கம் பின்செல்லுமாறுபோல அம்மிடற்றிசையை யாழிசை பின்செல்லவேண்டுதலின், யாழிசைக்குப் பருந்துநிழல் உவமையாயிற்று.

Digitized By Roja Muthiah Research Library

சொன்மறைத்தொகையாகமமுதலிய துதிப்பப்
பொன்மைபெற்றதன்கோநகர்நீங்கியேபொற்றுள்
வன்மைபெற்றகுண்டோதரன்மொய்ம்பிடைவைத்துச்
சின்மயத்தனிமால்விடையேறினன்சிவனே. (௨)

யிடையின்மீமிசைத்தோன்றியேயெம்பிரான்விளங்கப்
புடையின்வந்தவரல்லதுதிருநகர்ப்புறத்துக்
கடையினின்றவர்யாவருங்கண்டுகண்களியா
வடையவேபணிந்தேத்தினரளக்கரினார்த்தார். (௩)

நந்திமேல்கொண்டுநந்திமேவுறுதலுநந்தித்
தந்திமாமுகத்தவுணர்கோனலமரத்தடிந்தோ
னைந்துநூற்றெழுகோடிபூதப்படையனுக
வந்துவந்தனைசெய்துமுன்போயினன்மாதோ. (௪)

கதிருஞ்சோமனுங்கவிகையுஞ்சீகரங்காலு
முததியண்ணல்சாந்தாற்றியுமும்பர்தங்கோமான்
புதியகால்செயும்வட்டமுமெடுத்தனர்புடைபோய்
முதிருமார்வமோடப்பணிபுரிந்தனர்முறையால். (௫)

பேரிகொக்கரைசல்லிகைகரடிகைபீலி
சாரிகைத்துடிதண்ணுமைகுடமுழாத்தடாரி
போரியற்படகொகளம்வயிர்முசற்புகலுஞ்
சீரியத்தொகையியம்பினர்பாரிடத்திறலோர். (௬)

அத்தனேவலாலுருத்திரர்குழுவுமாலயனு
மெய்த்தவம்புரிமுனிவருமேனைவிண்ணவரு
மொய்த்ததேரொடுமானமாப்புள்ளிவைமுதலாந்
தத்தமூர்திமேல்கொண்டனர்செய்பணிதவாதோர். (௭)

தாழ்ந்துதன்பணிபுரியுமத்தலைவருந்தவர்தாற்
காழ்ந்தநெஞ்சுடைப்பூதருமேனையகணமுஞ்
சூழ்ந்துசென்றிடக்கயிலையையகன்றுதொல்லுலகம்
வாழ்ந்திடும்படியேகினனிமையமால்வரைமேல். (௮)

வார்ப்பெரும்பணையாதியவரம்பில்பல்லியத்தி
னார்ப்புமெங்கணும்வெள்ளிடையின்றியேயகல்வான்
றூர்ப்பினீண்டியதானையினேதையுஞ்சுரர்க
ளார்ப்பும்வாழ்த்தொலியரவமும்புணரியுண்டெழுமால். (௯)

வேறு.

அனையதன்மையிலாதியம்பண்ணவன், பனிகொள்வெற்பிற்படரவம்மன்னவ
னினியகேளொடெதிர்கொடுதாழ்ந்துதன், புனிதமாநகரிற்கொடுபோயினான். (௧௦)

போதலோடும்புனிதன்வரத்தினைக், காதலாற்கண்டுகண்களிப்பாகியே
யாதமெய்திநின்றஞ்சலித்தேத்தியே, வீதியாவும்விழாவயர்ந்திட்டவே. (௧௧)

மிண்டிநின்றிடும்வீதியின்மாதரா, ரண்டர்நாயகனற்புதப்பேருருக்
கண்டுதாழ்ந்துகரைதவிர்காதலாந், தெண்டிரைப்படிந்தார்செயல்வேறிலார். (௧௨)

நிறைத்தபூண்களுநேர்ந்தபொன்னுடையு, நறைத்தசாந்தமுநாண்மலர்க்கண்ணியும்
பிறைத்திருச்சடைப்பிஞ்ஞகன்பேரெழின், மறைத்ததென்றுமனந்தளர்வார்சிலர்,

Digitized By Roja Muthiah Research Library

உய்யுமாறெனுவர்தமைக்காண்டலும், வெய்யகாமக்கனல்சுடவேவுறுந்
தையலார்கடனுவுறுநீறுகொ, லையரர்கத்தணிந்ததென்பார்சிலர். (கச)

எழாலையன்னசொலேந்திழைமாதரார், குழாமகன்றுகுழகனைச்சேர்தலுங்
கழாலுகின்றபல்காழுடைமேகலை, விழாதிறைஞ்சினர்மெல்லியலார்சிலர். (கரு)

அல்லிசேர்தருமம்புயமீமிசை, வல்லியன்னவர்வான்றுகில்சோர்வுறு
மெல்லவீழ்தலுமின்னிடையார்க்கெலா, மில்லையோபுனையென்றுரைப்பார்சிலர்.

வாசம்வீழ்தலும்வந்துவந்தில்லிடைத், தூசுடுத்திலமென்றொர்துகில்புனைந்
தாசையோடுசென்றன்னதும்வீட்டியே, யூசல்போன்றனரொண்டொடிமார்சிலர்.

மாண்டசாயன்மடந்தையரேதனை,வேண்டிமால்கொடுவீடுறும்வேலையி
லீண்டுபோற்றுகெனவுமெண்ணுதரோ, வாண்டகைக்கியலாகுமென்பார்சிலர். கஅ

கரும்புநேர்மொழிக்காரிகைமாதரார், விரும்பிவேண்டவுமேவலர்போலுமா, லரும்
பொன்மேனியெம்மண்ணலுக்குள்ளமு, மிரும்புகொல்லென்றியம்பிடுவார்சிலர்.()

நெருக்குபூண்முலைநேரிழையார்க்குமால், பெருக்குறுரவர்பேதுறலோர்கிலா
ருரைப்பதென்கொலுயிர்க்குயிராகியே,யிருக்குமிங்கிவரென்றுரைப்பார்சிலர் (உ0)

திருகுவார்சடைச்செய்யனைநோக்கிநின், றுருகுவார்சிலருள்ளுறவெம்பியே
கருகுவார்சிலர்காதலிமாரொடும், பெருகுகாதலைப்பேசுகின்றார்சிலர். (உக)

வேறுளார்மெய்விளர்ப்பினைநோக்கியே, யீறிலாரையிவரணைந்தார்கொலோ
நீறுமெய்யினிலவியதென்றவர்ச், சீறியேயிகல்செய்திடுவார்சிலர். (உஉ)

கட்டுசெஞ்சடைக்கான்மிசையூர்தர, விட்டவெண்மதிமெல்லியலார்தமைச்
சுட்டதம்மசுமப்பதென்னீரெனுக், கிட்டிநின்றுகிளத்திடுவார்சிலர். (உங)

கஞ்சமேலயனுதிக்கடவுளர், தஞ்சமென்றுசரண்புகவுண்டதோர்
நஞ்சின்வெய்யகொனங்கையர்கொங்கையேற், றுஞ்சுகின்றதுயிலதென்பார்சிலர்.

பின்னருள்ளபெருந்தொழிலாற்றுவான், றன்னுவீரெனிற்றொல்குழுவாடவர்
நன்னலத்தொடுநண்ணமின்னுரையே,யின்னல்செய்வதெனென்றுரைப்பார்சிலர்.

சாற்றியிங்கினியாவதென்றையன்மீ, ரேற்றின்மேவினரெம்மைமணந்திட
மாற்றிலாதமலைமகள்போலயா, நோற்றிலோமெனநொந்துயிர்ப்பார்சிலர். (உசு)

தேவருய்யத்திருமணஞ்செய்திட, மேவுகின்றவர்மெல்லியன்மங்கைய
ராவிகொள்ளவமைந்தனரித்திற, மேவர்செய்வரெனவுரைப்பார்சிலர். (உஎ)

மையல்வேழம்வயப்புலிபோல்வரும், வெய்யர்தம்மைமெலிவிப்பதன்றியே
நொய்யமான்புரைநோக்கியர்க்குந்துயர்,செய்யுமோவெனச்செப்புகின்றார்சிலர். ()

நங்கள்கொற்றவனற்றவத்தாற்பெறு, மங்கைபாலின்மணப்பொருட்டேகின
ரிங்கெமக்கினிமைத்திறஞ்செய்கலார், சங்கரர்க்குத்தகாதிதென்பார்சிலர். (உகூ)

பேதைநீரவர்பேரிளம்பெண்மையோ, ராதியந்தத்தணங்கினரின்னணம்
வீதிதோறும்விரவியத்தாருக, மாதராரினுமாதர்பெற்றாரரோ. (௩0)

பண்டைவேதன்பதத்தினும்பேரெழில், கொண்டுநின்றவக்கோநகர்வீதியி
னண்டம்வெஃகவணிபடுத்திட்டவை, கண்டுபோந்தனன்கண்ணுதலண்ணலே. ௩க

Digitized By Roja Muthiah Research Library

செய்யதாளசெழுங்கமலாசனத், தையல்காமுற்த்தக்கனவீதிகள்
பையநீங்கிப்பராபரையாகிய, வையைகோயிலணித்தெனநண்ணினன். (௩௨)

வேந்தனேவலின்வேதங்களின்றுகா, ருய்ந்துநாடற்கரியவெம்மண்ணன்முன்
பூந்தடம்புனல்பூரித்தபல்குட, மேந்திவந்தனர்மாதவரெண்ணிலார். (௩௩)

இருவகைப்படுமெண்வகைமங்கலப், பொருண்மைமுற்றவும்பூவையர்பற்பல
வரிசையிற்கொடுவந்தெதிரெய்தினு, ரரியயற்கரிதாகியவண்ணன்முன். (௩௪)

அறுகுநிம்பமடிசிலரிசனஞ், சிறுகுமையவிசெம்பஞ்சின்வித்திவை
குறுகுதண்புனற்கொள்கலமேந்தியே, மறுகில்வந்தனர்மங்கையரெண்ணிலார். ()

நெருக்குபூண்முலைநேரிழையாரவர், பொருக்கெனுவெதிர்போந்துயிர்யாவினு
மிருக்குமாதியிறைவனையேத்தியே, தருக்கொடேநின்றுதந்தொழிலாற்றினர். ௩௬

எங்கணுதனெதிருறவெண்ணிலா, மங்கைமார்சுடர்மன்னியதட்டைகள்
செங்கையிற்கொடுசென்றுவலன்வளை இ,யங்கண்மும்முறையன்பொடுசுற்றினர். ()

ஆனகாலையருமணச்சாலைமுன், ஞானநாயகனட்பொடுநண்ணியே
வானுலாயமழவிடைநீங்கினன், யானமீதினின்றியாருமிழிந்திட. (௩அ)

விடையிழிந்துழிமேனைவிண்ணாட்டவர், மடமின்னரொடுவந்துபராபர
னடிகண்மீதினிலான்பொழிபால்கொடு, கடிதினாட்டினள்கைதொழுதேகினள். ()

நாதனவ்வழிநந்திகளுய்த்திடும், பாதுகைக்கட்பதமலர்சேர்த்தியே
போதன்மாதவன்பொற்கரந்தந்திடக்,கோதின்மாமணக்கோயிலுளெய்தினன். ௪0

வேறு.

பல்லியமியம்பவானோர்பரவவிஞ்சையர்கள்பாட
வொல்லெனக்கணங்களார்ப்பவுருத்திரர்யாருஞ்சூழ
மெல்லெனச்செல்லுமண்ணல்விரிஞ்சனுமாலும்வேண்ட
மல்லலங்கோயிலுள்ளவனப்பெலாநோக்கலுற்றான். (௪௧)

உலாவுறுசுரும்புமூசாவொண்மலர்ச்சோலைவாவி
நிலாவுறழ்புனல்சேரோடைநெடுந்தடநிறம்வேறாகிக்
குலாவுமண்டபங்களின்னகொண்டியல்வனப்புக்காட்டிச்
சிலாதனன்மதலைகூறச்சென்றுசென்றிறைவன்கண்டான். (௪௨)

கண்டலுந்தம்போற்றங்கள்காமர்விண்ணகருந்தானு
மண்டலவரைப்பின்வந்துவைகியதாங்கொலென்னு
வண்டர்கள்வாவிகேணியகன்புனல்குடைந்துங்காமர்
தண்டலையாடல்செய்துந்தலைத்தலைதிரிதந்துற்றார். (௪௩)

நந்தியந்தேவுகாட்டநல்வனப்பனைத்துநோக்கிக்
கந்தமென்போதுவேய்ந்தகடிமணச்சாலைதன்னி
லிந்திரநீலத்திட்டவெழினலத்தவிசினும்பர்
வந்துவீற்றிருந்தானெல்லாமறைகட்குமறையாய்நின்றான். (௪௪)

வீற்றிருந்தருளுமெல்லைவீரபத்திரன்றீப்பேரோ
னாற்றல்கொள்கூர்மாண்டேசனாடகனையனேனோர்
போற்றிசெயயனேமாலேபுரந்தரன்முனிவர்தேவ
ரேற்றிடுதவிசுதோறுமிருந்தனரிறைவற்சூழ. (௪௫)

Digitized By Roja Muthiah Research Library

### வேறு.

அமையப்படுமப்பொழுதத்தினிலாதியண்ணல்
விமலத்திருமாமணங்காணுறமேலையண்டச்
சுமையுற்றிடுமெப்புவனத்தருந்தொக்கநீரா
லிமையச்சயிலந்துளங்குற்றிடுக்கணெய்தி. (௪௬)

பொன்பாலிமையந்துளங்குற்றுழிப்போற்றுசேடன்
றன்பாலவனியெனலாந்துலைத்தட்டிரண்டின்
வன்பாலதானவடபாலதுதாழமற்றைத்
தென்பாலதாற்றவுயர்ந்திட்டதுதேவருட்க. (௪௭)

ஓங்குற்றதுதென்புவியாதலுமும்பரெல்லா
மேங்குற்றனர்மண்ணுலகோர்களிடுக்கணுற்றுத்
தீங்குற்றனவோவெமக்கென்றுதியக்கமுற்றார்
பாங்குற்றிடுதொன்முனிவோரும்பரியலுற்றார். (௪௮)

இன்னோரெவருஞ்சிவனேயென்றிரங்கலோடு
முன்னோனுமன்னசெயல்கண்டுமுறுவலெய்தி
யன்னோர்குறைநீத்திடநந்தியைநோக்கியாழி
தன்னோர்கரத்திற்செறித்தானைத்தருதியென்றான். (௪௯)

என்றானதுகாலையினந்தியிறைஞ்சியேகிக்
குன்றாதகும்பமுனிவன்றனைக்கூவவங்கட்
சென்றானவனைக்கொடுபோய்ச்சிவன்முன்னருய்ப்ப
மன்றார்கழல்கள்பணிந்தான்மலயத்துவள்ளல். (௫0)

தாழுந்தவத்தோன்றனைக்கண்ணுதற்சாமிநோக்கித்
தாழுங்குறியோயிவண்யாவருஞ்சார்தலாலே
தாழும்புவிதக்கிணமுத்தரஞ்சாலவோங்கத்
தாழுஞ்சுவர்க்கநிலனுந்நனிதாழுமன்றே. (௫௧)

தெருமந்துழலுந்தரைமன்னுயிர்செய்ததொல்லைக்
கருமந்தனைவிட்டயர்வெய்திக்கலங்குகின்ற
பெருமந்தரமேமுதலாயபிறங்கல்யாவு
மருமந்தமேருவரையுந்தவறுகுமம்மா. (௫௨)

ஆனான்முனிகேளொருநீயிவ்வசலநீங்கித்
தேனார்மருதவளமேயதென்னாடுநண்ணி
வானார்பொதியமலைமேவுதியையமெல்லா
மேனாளெனவேநிகராகிவிளங்குமென்றான். (௫௩)

பிறையொன்றுவேணிப்பரனிங்கிதுபேசலோடு
மறையொன்றுதீஞ்சொற்றமிழ்மாமுனியச்சமெய்திக்
குறையொன்றியான்செய்துளனோகொடியேனையீண்டே
யுறையென்றிலைசேணிடைச்செல்லவுரைத்தியெந்தாய். (௫௪)

என்னக்குறியமுனிவன்றனையெந்தைநோக்கி
யுன்னைப்பொருவுமுனிவோருலகத்திலுண்டோ
வன்னத்தவனுமுனைநேர்கிலனாதலானீ
முன்னிற்றெவையுந்தவறின்றிமுடித்திமன்னோ. (௫௫)

Digitized By Roja Muthiah Research Library

வேறுற்றிடுதொன்முனிவோர்களின்விண்ணுளோரி
னீறுற்றிடுமோவிதுசெய்கையெவர்க்குமேலாம்
பேறுற்றநின்னான்முடிவாகும்பெயருமென்று
கூறுற்றிடலுமுனியீதுகுறித்துரைப்பான். (௫௬)

வான்செய்தமேனிநெடுமான்மகவேள்விமன்னன்
றேன்செய்தகஞ்சத்தயனிற்கவிச்செய்கைநீயேன்
றான்செய்திடவேபணித்திட்டனைதன்மையீதே
னான்செய்ததுவேதவம்போலுநலத்ததெந்தாய். (௫௭)

ஈங்கிப்பணியையளித்தாயெனிலெந்தையுந்தன்
பாங்குற்றபுத்தேண்மணக்காட்சிபணிந்திடாம
னீங்கற்கரிதாங்கவல்கின்றதென்னெஞ்சமென்ன
வோங்கற்கயிலைத்தனிநாயகனோதலுற்றான். (௫௮)

வேறு.

சிந்தையதழுங்கலின்றித்தென்மலைச்சேறியங்கண்
வந்துநம்வதுவைக்காட்சிவழங்குதுமகிழ்ந்துகாண்டி
நந்தமையுன்னியாங்கோர்நாள்சிலவிருத்திபின்னர்
முந்தையிலெமதுபாங்கர்வருதியான்முனிவவென்றான். (௫௯)

என்றிவையமலன்செப்பவிசைதருபுலத்தனாகி
மன்றமர்கழல்கடம்மைப்பன்முறைவணக்கஞ்செய்து
நின்றுகைதொழுதுபோற்றிநெடிதுயிர்த்தரிதினீங்கித்
தென்றிசையெல்லைநோக்கிச்சிறுமுனிகடிதுபோனான். (௬௦)

கிற்புறுமாயைவல்லகிரவுஞ்சவரையும்விந்த
வெற்பதும்வன்மைசிந்தவில்வலனொடுவாதாவி
கற்பனையகன்றுமாயக்காவிரிநீத்தத்தோடு
முற்பகல்படர்ந்ததென்னமுனிவரன்றென்பாற்போனான். (௬௧)

மறைபுகல்வேள்வியாற்றுமாவலிவலிகொள்காட்சிக்
குறியவன்றனையாய்மற்றோர்குறளுமுண்டாங்கொலென்ன
நெறியெதிரவுணர்தம்முளொருசிலர்நில்லாதோடச்
சிறுமுனிவானநீந்திச்சிமையமாமலயம்புக்கான். (௬௨)

முண்டகன்வலிகொண்டுற்றமூவெயிலழிப்பான்முன்னி
யண்டரும்புவனமுற்றுமாகியகொடிஞ்சிமான்றேர்
பண்டொருபதத்தாலூன்றிப்பாதலத்திட்டவண்ணல்
கொண்டதொல்லுருவமுன்னிக்குறுமுனியங்கணுற்றான். (௬௩)

பொதியமதென்னும்வெற்பிற்புனிதமாமுனிவன்வைகத்
துதியுறுவடபாற்றென்பாற்புவனியோர்துலைபோலொப்ப
வதுபொழுதுயிர்களானோரணங்கொரீஇயரனையேத்தி
மதிமகிழ்ந்தமர்ந்தார்தொல்லைவதுவையின்செய்கைசொல்வாம். (௬௪)

கதுமெனமலயந்தன்னிற்கடமுனிசேறலோடு
முதுமைகொளிமையம்புக்கமுனிவருஞ்சுரருந்தேர்ந்து
மதிமலிசடையெம்மண்ணல்வரம்பில்பேரருளுமன்னோன்
பதமுறைவழிபட்டோர்தம்பான்மையும்பரவலுற்றார். (௬௫)

Digitized By Roja Muthiah Research Library

அங்கதுபொழுதுதன்னிலரசனதிசைவாலெங்கள்
சங்கரியையைகாப்பச்சசியென்பாளடைப்பையேந்தக்
கங்கைகள்கவரிவீசக்காளிகள்கவிகைபற்றப்
பங்கயமான்கைபற்றிப்பாரதிபரவவந்தாள். (சுசு)

வந்திடுமுலகையீன்றாள்வதுவையஞ்சாலைநண்ணி
யந்தமொடாதியில்லானடிகளைவணங்கமுன்னேன்
முந்துறுதவிசின்றன்பான்முற்றிழையிருத்தியென்ன
விந்திரைமுதலோர்யாருமேத்திடவிருந்தாளன்றே. (சுஎ)

இருந்திடுமெல்லைதன்னிலேலவார்குழலியென்னுங்
கருந்தடங்கண்ணிதனைக்கண்ணுதற்பராபரற்கு
விரைந்தருள்செய்யவுன்னிவேந்தனதிசைவான்மேனை
பெருந்தடம்புனலுஞ்சந்துமலர்களும்பிறவுந்தந்தாள். (சுஅ)

தருதலுமிமையத்தண்ணலாழ்ந்தனனிருந்துதேவி
சிரகநீர்விடுப்பவாதிதிருவடிவிளக்கிச்சாந்தம்
விரைமலர்புனைந்துநின்றவியன்கடன்பலவுஞ்செய்து
பொருவருமகிழ்ச்சியோடுபூசனைபுரிந்தான்மாதோ. (சுகூ)

பூசனைபுரிந்தபின்னர்ப்புவனமீன்றாடன்கையைப்
பாசமதகன்றதொல்சீர்ப்பரஞ்சுடர்கரத்துள்வைத்து
நேசமொடளித்தேனென்றுநெடுமறைமனுக்கள்கூறி
வாசநல்லுதகமுய்த்தான்மருகனென்றவனையுன்னி. (எ0)

எங்குளபொருளுங்கோனுமீதலுந்தானேயாகுஞ்
சங்கரனுலகமெல்லாந்தந்திடுங்கன்னிதன்னை
மங்கலமுறையர்ற்கொண்டான்மலைமகன்கொடுப்பவென்று
லங்கவனருளினீர்மையாரறிந்துரைக்கற்பாலார். (எக)

ஆனதோரமையந்தன்னிலாடினரமரர்மாதர்
கானமதிசைத்தார்சித்தர்கந்தருவத்தரானோ
ரேனையவிருவர்தாமுமேழிசைக்கீதஞ்செய்தார்
வானவர்முனிவர்யாருமறைகளையறையலுற்றார். (எ௨)

அல்லியங்கமலந்தன்னிலரிவையும்புண்டரீக
வல்லியுமற்றுளோருமங்கலம்பாடலுற்றார்
சல்லரிதிமிலைகாளந்தண்ணுமைசங்கமாதிப்
பல்லியமியம்பிச்சூழ்ந்துபாரிடத்தொகையோரார்த்தார். (எஙு)

அதுபொழுதிமையத்தண்ணலாபொழிந்திட்டதீம்பால்
கதலிமாப்பலவின்றீயகனிவகைநெய்தேனுதி
மதுரமாஞ்சுவையின்வர்க்கம்வரம்பிலவீற்றுவீற்று
நிதிகொள்பாசனத்திலிட்டுநிருமலன்முன்னருய்த்தான். (எச)

மறைநெறியினையவெல்லாமலைமகனுய்த்துமற்றெம்
மிறையிவைநுகர்தல்வேண்டுமெனத்தொழவினிதேயென்னுக்
கறைமிடற்றணிந்தமேலோன்கரத்தினலவற்றைத்தொட்டாங்
குறுபெருங்கருணைசெய்தேயுவந்தனங்கோடியென்றான். (எரு)



Digitized By Roja Muthiah Research Library

தொன்மைகொளருளினீராற்றுய்த்தனவாகத்தொட்ட
நின்மலவுணவைமன்னனேயமோடங்கண்மாற்றி
யின்மலர்கந்தந்தீர்த்தமிவற்றொடுமொருசாருய்ப்ப
நன்மகிழ்வோடுவேதாநாயகற்குரைக்கலுற்றான். (எசு)

படங்கிளர்சேடன்றாங்கும்பார்விசும்புறையுநீரா
ரடங்கலுமணஞ்செய்போதத்தவ்வவர்க்கடுத்ததாற்றி
நடந்திடுமொழுக்கமெந்தைநடத்திடல்வேண்டுமன்றற்
சடங்கினியுளதுமுற்றத்தண்ணளிபுரிதியென்றான். (எஎ)

என்னலுமுறுவல்செய்தேயிறையருள்புரியவேதன்
வன்னியுமதற்குவேண்டும்பொருள்களுமரபிற்றந்து
பொன்னொடுபுகருமேனைமுனிவரும்புடையிற்சூழத்
தன்னிகரில்லாமன்றற்சடங்கெலாமியற்றல்செய்தான். (எஅ)

அந்தணர்கரணமெல்லாமாற்றியேமுடிந்தபின்னர்த்
தந்தையுந்தாயுமாகியுலகெலாந்தந்தோர்தம்மை
முந்துறவயனும்பின்னர்முகுந்தனுமதற்குப்பின்ன
ரிந்திரன்முனிவர்வானோர்யாவருமிறைஞ்சலுற்றார். (எகூ)

அரனுடனுமையாடன்னையாங்கவர்பணிதலோடு
முருகெழுநிலையுட்கொண்டவுருத்திரத்தலைவரேனோர்
பரிசனர்கணங்கள்யாரும்பணிந்தனரதன்பின்னாகக்
கிரியுறையிறைவன்மைந்தன்கேளொடுவணக்கஞ்செய்தான். (அ0)

தமதுமுன்பணிகின்றோர்கடமக்கெலாமீசன்றானு
முமையுநல்லருளைச்செய்யவோர்ந்திதுபதமென்றுன்னி
யிமகிரிபுரந்தவண்ணலீண்டுறைநீரர்க்கெல்லா
மமலனதுணவுமற்றுமளிப்பனென்றகத்துட்கொண்டான். (அக)

ஆய்ந்திடுமறைகள்போற்றுமாதிதன்றீர்த்தம்போது
சாந்தமொடவிகடம்மைச்சதுர்முகன்முதல்வானோர்க்கும்
வாய்ந்திடுமுனிவர்யார்க்குமற்றுளார்தமக்குமன்ன
னீந்திடவவற்றையன்னோரியாவருமணிந்துட்கொண்டார். (அஉ)

ஆலமாமிடற்றோற்கானவமலமாம்பொருளையேற்றுச்
சீலமோடணிந்துட்கொண்டுசிந்தையுண்மகிழ்ந்துநந்த
மூலமாம்வினைகட்கின்றேமுடிபொருங்குற்றதென்றார்
மேலவரன்றுபெற்றவியப்பினைவிளம்பலாமோ. (அங)

அனையதோர்காலைதன்னிலமலமாம்பொருள்கடம்மைப்
பணிவரையிறைவன்றானும்பன்னியுந்தமருளாரு
மெனைவருமருந்திமேற்றொண்டெல்லையிலின்பமுற்றார்
வினைவலியொருவிமேலாம்வீடுபேறடைந்துளார்போல். (அச)

தன்னுறுகணவன்றுஞ்சத்தாபதநிலை * யளாகி
யின்னலையடைந்தங்குற்றவிரதியவ்வெல்லைவந்து
மன்னுயிர்முழுதுமீன்றமங்கையைமணந்தவள்ளல்
பொன்னடிவணங்கித்தீயேன்புன்கணைத்தவிர்த்தியென்றாள். (அரு)

---

* தாபதநிலை - விதவைவிரதம்.

Digitized By Roja Muthiah Research Library

சீருறுகணவனில்லாள்செப்பியமாற்றங்கேளா
வாருயிர்முழுதுநின்றேயனைத்தையுமுணர்ந்துகூட்டும்
பேரருளுடையநாதன்பேதுறன்மடந்தையென்று
மாரன்வந்துதிக்கும்வண்ணமனத்திடைநினைந்தானன்றே. (அசு)

நினைதருமெல்லைதன்னினெடியமான்முதலாவுள்ள
வனைவருமருட்கையெய்தவழுங்கியவிரதிநோக்கி
மனமகிழ்சிறந்துகார்காண்மஞ்ஞையிற்களிப்பவங்கட்
குனிசிலைகொண்டமாரன்கொம்மெனத்தோன்றினானே. (அஎ)

முன்பொடுதோன்றுமாரன்முதல்வியோடிருந்தநாதன்
பொன்புனைகமலத்தாண்முன்போந்தனன்றாழ்ந்துபோற்றி
யென்பிழைபொறுத்தியென்னயாமுனைமுனியினன்றே
பின்பதுதணிவதுள்ளம்பேதுறன்மைந்தவென்றான். (அஅ)

எரிபுனைநமதுநோக்காலிறந்தநின்னுடலநீறாய்
விரைவொடுபோயிற்றன்றேவேண்டினளிரதியன்னாட்
குருவமாயிருத்தியேனையும்பரோடிம்பர்க்கெல்லா
மருவினையாகியுன்றனரசியல்புரிதியென்றான். (அகூ)

செய்வினைமுறையாலீசன்சித்தசற்கினையகூறி
யவ்வவனரசுஞ்சீருமாணையும்வலியுநல்கி
மைவிழியிரதியோடுமென்னுதொல்புரத்துச்செல்ல
மெய்விடையுதவவன்னோர்விரைந்துடன்றொழுதுபோனார். (கூ0)

இரதியுமதனுமேகவிந்திரநீலத்திட்ட
வரியணையிருந்தநாதனம்மையொடிழிந்துதன்னேர்
திருவுருவுடையமேலோர்தேவர்மாமுனிவரேனோர்
பரவினர்செல்லப்பூதர்பல்லியந்தெழிப்பச்சென்றான். (கூக)

மன்னுயிர்க்குயிராய்நின்றோன்மால்விடையேறிமாதைத்
தன்னொருபாங்கிற்கொண்டுதழீஇக்கொடுநடத்திவானோர்
தொன்னிலையமைந்துசெல்லத்துவன்றியேகணங்கள்சுற்றப்
பொன்னியலிமையர்தீர்ந்துவெள்ளியம்பொருப்பில்வந்தான். (கூஉ)

அன்னதோர்காலைமாலையயனைவெற்பரசைவேள்வி
மன்னனையமரர்தம்மைமுனிவரைமாதரார்க
ளென்னவர்தமையுந்தத்தமிடந்தொறுமேகும்வண்ண
முன்னுறவிடுத்தானென்பமூலமுமுடிவுமில்லோன். (கூங)

அடுகனலவன்கூர்மாண்டனாடகனையன்சிம்புள்
வடிவினனாதியானவரம்பிலாவுருத்திரர்க்குங்
கடகரிமுகத்தினாற்குங்கணங்களிற்றலைமையோர்க்கும்
விடையினையுதவியையன்வியன்பெருங்கோயில்புக்கான். (கூச)

ஏறெனுங்கடவுண்மீதினிம்மெனவிழிந்துதன்னோர்
கூறுடைமுதல்வியோடுங்கோநகர்நடுவணெய்தி
யாறணிசடையெம்மண்ணலரியணைப்பீடமீதில்
வீறொடுதொன்மையேபோல்வீற்றிருந்தருளினானே. (கூரு)

Digitized By Roja Muthiah Research Library

அன்பினர்க்கெளிவந்துள்ளவாதியன்பரமன்மாது
தன்புடையாகச்சீயத்தவிசின்வீற்றிருந்தலோடுந்
துன்பகன்றிருபாலாகித்துவன்றியவுயிர்களெல்லா
மின்பொடுபோகமாற்றியினிதமர்வுற்றவன்றே. (௬௬)

திருக்கல்யாணப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் அ௫௦.

---

# திருவவதாரப்படலம்.

பற்பகலினையவாற்றாற்படர்தலும்பின்னோர்வைகன்
முற்படுமயன்மால்வேள்விமுதலவன்றிசைகாப்பாளர்
சொற்படுமுனிவர்வானோர்யாவருந்தொல்லைமேரு
வெற்பினிற்குழுமிச்சூரான்மிகமெலிந்திரங்கிச்சொல்வார். (௧)

உலகினையவுணர்க்கீந்தேயோகிபோல்வைகிநம்பான்
மெலிவினைப்படுத்தியாம்போய்வேண்டலுமிரக்கமெய்தி
மலைமகடன்னைவேட்டான்மைந்தனைத்தந்துநம்மைத்
தலையளிபுரியான்வாளாவிருப்பதென்றுனுவானேன். (௨)

இவறலுமிகலுமின்றியார்க்குமோர்பெற்றித்தாகி
யவரவர்வினைகளுடியதற்படுபொருளைநல்குஞ்
சிவனையாம்வெறுத்தல்குற்றஞ்சிறந்தோன்பியற்றிடாதே
தவறுசெய்தனமென்றெம்மைநோவதேதக்கதென்றார். (௩)

ஆயினுமவன்றாள்போற்றியடையினன்கனைத்துமாகுந்
தீயனவகலுமீதுதிண்ணமாமதனாலின்னுங்
காய்கதிர்மதிசூழ்கின்றகயிலையங்கிரியின்முக்க
ணாயகற்கிதனைக்கூறநாமெலாம்போதுமென்றார். (௪)

போதரவிசைந்தகாலைப்பொன்னலர்கமலப்புத்தேன்
மேதகுபரமன்செய்கைவினவியேயேகல்வேண்டுந்
தூதுவனொருவன்றன்னைத்தூண்டிமுன்னறிதுமென்றே
பூதையங்கடவுடன்னைநோக்கியீதுரைக்கலுற்றான். (௫)

வடவரையதனின்மூன்றுமாண்குவடெறிந்துவெளவி
யுடல்சினவரவமுட்கவுததியிலுய்த்தமைந்த
படர்மதிமிலைச்சுஞ்சென்னிப்பண்ணவன்செயலைவெள்ளிக்
கடிவரைநகரத்தெய்திக்கண்டனைமீடியென்றான். (௬)

பல்லிதழ்வனசமேலோனிணையனபகரநோன்றாள்
வில்லுடைமதனவேளைவிழித்தடுகடவுண்முன்னஞ்
செல்லுவதரிதுசெல்லிற்றீமையேபயக்குமென்பா
லொல்லுவதன்றிச்செய்கையுள்ளமும்வெருவுமென்றான். (௭)

கூற்றிதுநிகழ்ந்தவேலைக்கோகனதத்துமேலோன்
காற்றினுக்கரசைநோக்கிக்கம்பலைகொள்ளேல்யாண்டு
மூற்றமொடுலவல்செய்யுமொருவனைநீயேயன்றி
வீற்றொருதேவருண்டோமேலிதுபுரிதற்பாலோர். (௮)

Digitized By Roja Muthiah Research Library

உற்றுழியுதவிசெய்வோருலப்புறுதேவையுமீவோ
ரற்றமிறவத்தாறுற்றோரமர்புரிவீரராவோர்
மற்றொருபொருளும்வெஃகார்வருத்தமுமோரராவி
யிற்றிடவரினுமெண்ணாரினிதெனமகிழ்வரன்றே. (௯)

ஆதலினெங்கட்கெல்லாமாற்றிடுமுதவிக்காகப்
போதியாலையவென்றுபுகழ்ச்சியாலினையபல்வே
றோதிடுபொருண்மைகூறவிசைசந்தனனெழுந்துதியின்
காதலன்விடைகொண்டேகிக்கயிலைமால்வரையிற்சென்றான். (௧0)

குன்றதன்புடையில்வீழுங்குரைபுனலாற்றினாடி
மன்றலங்காமர்காவின்மலர்மணமளாவிவாரித்
தென்றியாயசைந்துமெல்லச்சினகரம்புகுதுமெல்லை
நின்றதோர்நந்திகாணூஉவரப்பினனெடிதுசீறி. (௧௧)

பொற்பிரம்பொன்றுபற்றிப்பொலன்முதற்கடையைப்போற்றி
நிற்புறுமானைவள்ளனெடுஞ்சினத்துரப்பலோடுங்
கற்பொழியெழிலிகான்றகனையொலிகேட்டபாம்பின்
முற்படர்கின்றகாலோன்மொய்ம்பிலன்வெருவிவீழ்ந்தான். (௧௨)

வேறு.

ஒல்லெனவீழ்வுறுமுயிர்ப்பின்காவல,னெல்லையிலச்சமொடிரங்கியேயெழீஇத்
தொல்லையினுருக்கொடுதோன்றிநந்திதன், மல்லலங்கழல்களைவணங்கிக்கூறுவான்.

மாலயன்மகபதிவானுளோரெலா, மாலமர்கடவுளையடைதன்முன்னிநீ
காலையதறிந்தனைகடிதுசெல்கென, மேலுரைசெய்தனர்வினையினேனுடன். (௧௪)

கறுத்திடுமிடறுடைக்கடவுளாடலைக்,குறிக்கரிதஞ்சுவல்குறுகவென்றியான், மறுத்
தனனேனையர்தம்வருத்தங்கூறியே,யொறுத்தெனைவிடுத்தனருடையவன்மையால்.

ஆதலினடியனேனஞ்சியஞ்சியே, மேதகுதென்றியாய்மெல்லவந்தன
னோதிடநினைந்திலனுனக்குமற்றிது, பேதைமையுணர்வினேன்பிழைபொறுத்திநீ()

தானவர்தொழவருதகையில்சூரனான், மானமதொருவியேவருத்துற்றோய்ந்தன
னானதொன்றுணர்கிலேனறிவுமாழ்கினே, னேனையதேவருமினையநீரரே. (௧௭)

அறைதருகணத்தருளாதியாகிய, விறைவநின்முனிவினுக்கிலக்குற்றாரிலை, சிறிய
வென்பொருட்டினாற்சீற்றங்கோடியோ, பொறைபுரிந்தருளெனப் போற்றிவேண்
டினான். (௧௮)

ஆண்டகைநந்தியெம்மடிகளவ்வழி, மூண்டெழுதன்பெருமுனிவுதீர்ந்தியா
மீண்டுநின்னுயிர்தனையீதுநிற்கலை, மீண்டனைபோகெனவிடைதந்தேவினான். (௧௯)

சீரியநந்தியந்தேவனேவலு, மாருதனவனடிவணங்கிவல்லையி
னேரறுகயிலையினீங்கிநீடுபொன், மேருவில்விண்ணவர்குழுவைமேவினான். (௨0)

மேவருகாலினான்விரிஞ்சன்மாயவன், பூவடிவந்தனைபுரிந்துநந்திதன்
காவலின்வன்மையுநிகழ்ந்தகாரியம், யாவதுமுறைபடவியம்பினானரோ. (௨௧)

காற்றுரைவினவியேகமலக்கண்ணனு, நாற்றிசைமுகத்தனுநாகர்செம்மலுஞ்
சாற்றருந்துன்பினர்தம்மிலோர்ந்திடாத், தேற்றமொடினையனசெப்பன்மேயினார்.

எந்தைதன்செயகைதேர்ந்தேகுநீயென, வெந்திறன்மருத்தினைவிடுத்துமாங்கவ
னந்திதன்னாணையானடுக்கமுற்றிவண், வந்தனனச்சுறுமனத்தனாகியே. (௨௩)

Digitized By Roja Muthiah Research Library

மன்னியகயிலைமால்வரையின்யாமெலா, மின்னினியேகியேயீசன்றன்முன
முன்னருங்காலமொடுற்றநங்குறை, பன்னுதறுணியெனப்பலருங்கூறினர். (உ௪)

இவ்வகையவரெலாமிசைந்துசெம்பொனின், மெய்வரைநீங்கியேவெள்ளிவெற்பிணிற், றெய்வதக்கோயின்முன்சென்றுநந்தியை, யவ்விடைதொழுதிவையறைதன்மேயினர். (உ௫)

வேறு.

நந்தியந்தேவுகேணங்கள்பாற்றுன்பெலாஞ்
சிந்தைசெய்திடுதியத்தேவதேவற்கியாம்
வந்தவாறோதியேவல்லைநீயெமையவன்
முந்துறக்காட்டெனுமுகமனேடுரைசெய்தார். (உ௬)

மற்றிவாறுரைசெயும்வானவத்தொகையினை
நிற்றிராலென்றவணிறுவியேயுறையுள்போய்க்
கற்றைவார்சடைமுடிக்கண்ணுதற்கடவுடன்
பொற்றடந்தாள்களைத்தொழுதனன்புகலுவான். (உ௭)

அண்ணலேயுனதுபொன்னடிகளைக்காணிய
விண்ணுளோர்யாவரும்வேந்தன்மாலயனொடு
நண்ணினரென்றநுநந்தியைத்தெரிகுறீஇத்
தண்ணிலாவேணியான்றருதியென்றருள்செய்தான். (உ௮)

அருள்புரிந்திடுதலுமாதியம்பண்ணவன்
றிருமலர்த்தாள்களைச்சென்னியிற்சூடியே
விரைவுடன்மீண்டுறேவேதன்மாலாதியாஞ்
சுரரெலாம்வம்மெனத்தூயவன்கூவினன். (உ௯)

கூவியேயருடலுங்கொண்டல்பேரொலியினாற்
றுவிலாமகிழ்வுறுஞ்சாதகத்தன்மையாய்ப்
பூவினாயகன்முதற்புகலும்வானவரெலாந்
தேவதேவன்முனஞ்செல்லுதன்மேயினார். (௩0)

அம்மையோர்பங்குறவரியவணைக்கண்ணுறு
மெம்மையாளிறைவன்முன்னெய்தியேயாங்கவன்
செம்மைசேர்தாள்களைச்சென்னியாற்றாழ்ந்தெழீஇப்
பொய்மைதீரன்பினாலிவையவாபோற்றுவார். (௩௧)

வேறு.

நோக்கினுநுழைகிலைநுவலுகின்றதோர்
வாக்கினுமமைகிலைமதிப்பவொண்கிலை
நீக்கருநிலைமையினிற்றியெந்தைநீ
யாக்கியமாயமீதறிகிலேமரோ. (௩௨)

இருமையுமொருமையுமிரண்டுமொன்றிய
வொருமையுமன்றெனவுலகம்யாவையும்
பெருமையினியற்றியபெருமநின்செய
லருமறையானவுமறிதற்பாலவோ. (௩௩)

உருவொடுதொழில்பெயரொன்றுமின்றியே
பரவியநீயவைபரித்துநிற்பது
விரவியவுயிர்க்கெலாம்வீடுதந்திடுங்
கருணையதேயலாற்கருமம்யாவதே. (௩௪)

Digitized By Roja Muthiah Research Library

அவ்வுயிர்யாவுநின்னருளிலாவழிச்
செய்வினைபுரிகிலசிறிதுமாதலால்
வெவ்வியநயப்பொடுவெறுப்பிலாதநீ
யெவ்வகையோவுலகியற்றுந்தன்மையே. (௩௫)

முன்னதின்முன்னெனமொழிதுமேயெனிற்
பின்னதின்பின்னுமாப்பேசநிற்றியா
லன்னவையேயெனிலொழிந்ததல்லையோ
வென்னெனநின்னையாமேத்துகின்றதே. (௩௬)

புல்லியபுரம்பொடித்ததுவுங்காமனை
யொல்லெனவெரித்ததுமுனக்குச்சீர்த்தியோ
வெல்லையில்விதிமுதலெனைத்துமீண்டுநின்
னல்லருளாணையேநடாத்துமென்கையால். (௩௭)

எங்களைமுன்னரேயியல்பினீந்தனை
யெங்களையிவ்வரசியற்றுவித்தனை
யெங்களொடொருவனென்றிருத்திநின்செய
லெங்களினறிவரிதென்றுபோற்றினார். (௩௮)

வேறு.

அவ்வகையமரரெல்லாமன்புசெய்தேத்துமெல்லை
மைவருமிடற்றுப்புத்தேண்மற்றவர்வதனநோக்கி
நொவ்வுறலெய்திச்சிந்தைநுணங்கினீர்நுங்கட்கின்னே
யெவ்வரமெனினுமீதும்வேண்டியதிசைத்திரென்றான். (௩௯)

என்றலுமமரர்சொல்வார்யாமெலாமிந்நாள்காறும்
வன்றிறலவுணர்தம்மால்வருந்தினமதனைநீங்கி
நன்றிகொடொல்லையாக்கநண்ணுவானாகநின்பா
லொன்றொருவரம்வேண்டுற்றாமதனியல்புரைத்துமன்றே. (௪0)

மும்மையினுயிர்கள்பெற்றமுகிழ்முலைக்கன்னியாகு
மம்மையைமணந்ததன்மையாங்கவளிடமாவீங்கோர்
செம்மலையளித்தற்கன்றேதீவினைக்கடற்பட்டுள்ள
வெம்மையாளுவதற்கேதுக்காட்டியவியற்கையல்லால். (௪௧)

ஆதியுநடுவுமீறுமருவமுமுருவுமொப்பு
மேதுவும்வரவும்போக்குமின்பமுந்துன்புமின்றி
வேதமுங்கடந்துநின்றவிமலவோர்குமரன்றன்னை
நீதரல்வேண்டுநின்பானின்னையேநிகர்க்கவென்றார். (௪௨)

வந்திக்குமலரோனாதிவானவருரைத்தல்கேளாப்
புந்திக்குளிடர்செய்யற்கபுதல்வனைத்தருதுமென்று
வந்திக்குநிகர்மெய்யண்ணலருள்புரிந்தறிஞராயோர்
சிந்திக்குந்தனதுதொல்லைத்திருமுகமாறுங் * கொண்டான். (௪௩)

* திருமுகமாறுதல் "ஐந்து முகத்தோ டதோமுகமுந் - தந்து - திருமுகங்க ளாறா
கிச் செந்தழற்க ணாறு - மொருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப" எனத்
திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பாவிற் கூறியவாற்றானுணர்க.

Digitized By Roja Muthiah Research Library

நிற்புறுமமரர்யாருநெஞ்சுதுண்ணென்னநீடு
மற்புதகீரராகியருண்முறையுன்னிப்போற்றச்
சிற்பரன்றன்கொண்டுள்ளதிருமுகமாறுதன்னிற்
பொற்புறுநுதற்கண்டோறும்புலிங்கமொன்றொன்றுதந்தான். (௪௪)

ஆவதோர்காலையீசனாறுமுகநுதற்கண்மாட்டே
மூவிருபொறிகடோன்றிமுளரியான்முதலாவுள்ளோ
ரேவருமணுகல்செல்லாவெல்லைதீர்வெம்மைத்தாகிப்
பூவுலகண்டமுற்றும்பொள்ளெனப்பராயவன்றே. (௪௫)

மாதண்டங்குலவுநேமிவால்வளைவயிரவொள்வாள்
கோதண்டம்பரித்தோன்வேதாக்குறித்துணர்வரியசோதி
வேதண்டம்பரவிற்றென்னமேதினிசூழ்ந்துவிண்போய்
மூதண்டங்காறுஞ்சென்றமுதல்வன்கண்ணுதலிற்செந்தீ. (௪௬)

வேறு.

மங்கையோர்பங்குடைவள்ளலேந்திய, செங்கனலூழியிற்செறிவதாமென
வங்கவன்விழிபொழியனலம்யாவையு, மெங்குளவுலகமுமீண்டலுற்றவே. (௪௭)

ஆங்கனந்தழலெழவகிலமுற்றுமா, யோங்கியகால்களுமுலைவுற்றோய்ந்தன
வாங்கியதிரைக்கடல்வறந்ததாயிடைத், தீங்கனல்வடவையுஞ்செருக்குநீங்கிற்றால்.

பக்கனபாரகம்பதலைமுற்றுற, நெக்கனபணிகண்மெய்நெளித்துநீங்கிய
திக்கயமரற்றியேதியக்கமுற்றன, தொக்கனவுயிர்த்தொகைதுளக்கமுற்றவே. (௪௯)

காரணமில்லவன்கண்ணிற்கான்றதீப், பேரருள்புரிந்திடப்பிறந்தபான்மையா
லோருயிர்தன்னையுமொழிவுசெய்தில, வாரையுமெவற்றையுமச்சஞ்செய்தவே (௫0)

அன்னதன்வெம்மைகண்டமலன்பாங்குறை, கன்னியும்வியர்த்தனள்கலங்கியே யெழீஇப், பொன்னடிநூபுரம்புலம்பித்தாக்குறத், தன்னதோருறையுளைச்சாரவோடினாள். (௫௧)

முண்டகனுதியாமுன்னர்நின்றுள, வண்டர்கள்யாருமவ்வழல்கண்டஞ்சியே, விண்டனர்தலைத்தலைவெருவியோடினார், பண்டெழுவிடத்திறைப்பட்டபான்மைபோல்.

தீங்கனலடர்தலுஞ்செம்பொற்கோயிலின், யாங்கணுமாகியேயிருந்தபண்ணவர்
வீங்கியவுயிர்ப்பொடுமீண்டுமெந்தைதன், பாங்கரில்வந்தனர்பரியுநெஞ்சினார். (௫௩)

வலைத்தலைமானெனவன்னிசூழ்ந்துழித், தலைத்தலையிருந்துளோர்தம்மின்மீள்குறு
நலத்தகுகண்ணுதனுதற்சேர்ந்தனர், கலத்தலையகன்றிடாக்காகம்போலவே. (௫௪)

தோற்றியநுதல்விழிச்சுடரின்சூழ்வினுக், காற்றலராகியேயடைந்தவானவர்
நாற்றடம்புயமுடைஞானநாயகற், போற்றிசெய்திவையனபுகல்வதாயினார். (௫௫)

வெந்திறலவுணரைவீட்டுதற்கொரு, மைந்தனையருள்கெனவந்துவேண்டினே
மந்தமிலழலைநீயருடல்செய்தனை, யெந்தையேயெங்ஙனம்யாங்களுய்வதே. (௫௬)

பங்குறையுமையவள்பாணியின்வரு, கங்கையெவ்வுலகமுங்கலந்ததாமென
விங்குநின்னுதல்விழியிருந்துநீங்கிய, பொங்கழலெங்கணும்பொள்ளென்றீண்டிய. ()

கற்றையஞ்சுடர்பொழிகனல்களின்றொகை, சுற்றியெவ்வுலகமுந்துவன்றலுற்றவான், மற்றொருகணத்தவைமாற்றிடாயெனின், முற்றுயிர்த்தொகையையுமுடிவுசெய்யுமால். (௫௮)

Digitized By Roja Muthiah Research Library

விஞ்சியபேரழல்வெம்மையாற்றலா, தஞ்சினமிரிந்தயாமையநின்னிரு
செஞ்சரணடைந்தனந்தெரியினீயலாற், றஞ்சமதுளதுகொலெம்மைத்தாங்கவே.

மலக்குறுமனத்தினேம்வருத்தமுற்றவு, முலக்குறநீக்குநீயொல்லையெம்மிடை
யலக்கணதியற்றுதியாயினன்னதை, விலக்குறுநீரினர்வேறியாவரே. (௬0)

நிறைமுடிப்பணிமிசைநிலனும்வானமு,மிறைமுடிக்கின்றவிவ்வெரியைநீக்கியே,
பிறைமுடிக்கொண்டிடுபெருமவெம்முடைக், குறைமுடித்தருளெனக்கூறிவேண்டினர். (௬௧)

அஞ்சலினவர் * புக்ழண்ணலாதியோ, ரஞ்சலிசெய்திவையறைந்துவேண்டலு
மஞ்சலிலஞ்சடையணிந்தநாயக, னஞ்சலிரென்றுகையமைத்துக்கூறினன். (௬௨)

பொன்மலைவில்லினன் புதிதின்வந்திடு, தன்முகமைந்தையுங் கரந்துதாவில்சீர்,
நன்முகமொன்றொடு நண்ணியத்துணைத், தொன்மையினியற்கையாய்த் தோன்றிவைகினன். (௬௩)

தன்னருணிலைமையாற்சண்முகத்திடை, நன்னுதல்விழிகளினல்குதீப்பொறி
யிந்நிலவரைப்புவானீண்டலுற்றவை,முன்னுறவரும்வகைமுதல்வன்முன்னினன்.

அந்தியம்பெருநிறத்தமலனவ்வகை, சிந்தைகொண்டிடுவழிச்செறிந்தபேரழன்
முந்தையின்வெம்பொறியூவிரண்டவாய்,வந்துமுன்குறுகலுமகிழ்ந்துநோக்கினன்.

ஆதருகாலையிலமரர்தங்களு, ளோ ௦ தகுசெயலிலாவுலவைத்தேவையு
மூதருதீயையுமுகத்தைநோக்குறா, மேதகுகருணையால்விமலன்கூறுவான். (௬௬)

நீங்களிச்சுடர்களைநெறியிற்றாங்கியே, வீங்குநீர்க்கங்கையில்விடுத்திரன்னவை
யாங்கவள்சரவணமமரவுய்க்குமா, லீங்கிதுநும்பணியென்றியம்பினன். (௬௭)

கூற்றுயிருண்டதாட்குழகனிவ்வகை, சாற்றியதுணர்தலுந்தாழ்ந்துமும்முறை
போற்றினர்நடுங்கினர்புலம்புநெஞ்சினர், காற்றொடுகனலிவைகழறன்மேயினர்.()

ஒருநொடியளவையினுலகம்யாவுமாய்ப், பெருகியவித்தழல்பெருமநின்னுடைத்
திருவருணிலைமையாற்சிறுகிற்றதலா, லரிதரிதடியரேமாற்றலாகுமோ. (௬௯)

ஈற்றினையுலகினுக்கிழைக்குநின்கணே, தோற்றியகனலினைச்சுமத்தற்கோர்கண
மாற்றலையுடையரோவவனிகேள்வனு,நாற்றிசைமுகமுடைநளினத்தேவுமே.(௭0)

பண்டெழுவிடத்தினிற்பரந்ததீச்சுடர், கண்டலுநின்றிலங்கவலுற்றோடின
முண்டவும்வெருவுதுமவற்றையாந்தலைக், கொண்டனமேகுதல்கூடற்பாலதோ. ()

அப்பெருங்கனலினையடைதற்குன்னினும், வெப்புறுமெமதுளம்வியர்க்கும்யாக்கையு, மெப்பரிசேந்துவம்யாங்களென்றலுந், துப்புறழ்படர்சடைப்பகவன்சொல்லுவான். (௭௨)

ஒன்றொருநொடியினிலுலகமுற்றுமாய்த், துன்றியவிச்சுடர்சுமந்துகங்கையிற், சென்றிடநுங்கள்பாற்றிண்மையெய்துக,வென்றலுநன்றெனவிசைந்துபோற்றினர்.()

மற்றதுதெரிதலுமாலயன்முதற், சொற்றிடுமமரர்கடுளக்கநீங்குறா
விற்றதுகொல்லெமதின்னலின்றெனா, வுற்றனருவகையையுடலம்விம்மினர்.(௭௪)

ஆங்கனமவர்தமையாதிநோக்கியித், தீங்கனல்சரவணஞ்செறிந்தொர்செம்மலா
யோங்குபுசூர்கிளைக்கொழிவுசெய்யுமா, லீங்கினியாவருமேகுவீரென்றான். (௭௫)

* அஞ்சலினவர் - பரஞ்சராத்திரிகள். ௦ ஓ - முதனிலைத்தொழிற்பெயர்.

இறையவனிணையனவியம்பவுய்ந்தனங், குறையிலமினியெனக்கூறிக்கஞ்சமே
லுறைபவனாதியாமும்பரன்னவ, னறைகழலடிதொழுதங்கணீங்கினார். (எசு)

முன்னுறமாருதன்முதல்வன்றாள்களை, வன்னியந்தேவொடுவணங்கியேயெழீஇ
யன்னவனருளினாற்சுடர்களாறையுஞ், சென்னியின்மேற்கொடுசேறன்மேயினான்.

அரனுறுகடிநகரதனைத்தீர்ந்தொரா, யெரிகெழுசுடர்முடியேந்திமாருதன்
வருதலுமயன்முதல்வானுளோரெலாங், கருதருமகிழ்வொடுகண்டுகூறுவார். (எஅ)

செந்தழன்மேனியன்றீயின்வண்ணமாத், தந்தனன்குமரனைத்தனாதுகண்ணினா
லுய்ந்திடயாமெலாமுலகின்முன்னரே, வந்திடுவீரனுமதலைமானவே. (எகூ)

தொன்னிலையாம்பெறச்சூரன்பாடுற, வின்னமுஞ்சில்பகலிருத்தலாலரன்
றன்னிகர்திருமகன்சரவணத்திடை, மன்னுபுகுழவியாய்வளரநல்கினான். (அ0)

போற்றலர்புரமடுபுனிதநாயக, னாற்றிடுசெய்கைகளருளினீர்மையா
லேற்றதோர்சான்றிவணெரியைத்தந்ததுஞ்,சாற்றருங்கருணையிற்றலைமையானதே

என்றிவைபற்பலவியம்பியின்னினிப், பொன்றினரவுணர்கள்புலம்புநங்குறை
நன்றிவண்முடிந்ததுநாமுமத்தடஞ், சென்றிடுவாமெனச்செப்பினாரரோ. (அஉ)

உருப்பமதாகியவொளிறுதீஞ்சுடர், தரிப்பதோர்மருத்துவன்றம்முன்சென்றிடத்
திருப்பயின்மான்முதற்றேவர்வெள்ளியம்,பருப்பதமொருவியேபடர்தன்மேயினார்.

இறத்தலுங்கன்னலொன்றெரியின்றீஞ்சுடர், பொறுத்திடலரிதெனப் புலம்பிக் காலினோன், மறுத்தவிர்பிறைமுடிவரதனாணையாற், றிறற்படுவன்னிதன்சென்னி சேர்த்தினான். (அச)

சேர்த்தலுமொருபதந்தீயின்பண்ணவன்,வேர்த்துடல்புழுங்குறமெலிவிற்றூங்கியே
பேர்த்தொருபதமிடப்பெறாதுவல்லைபோ,யார்த்திடுகங்கையினகத்துய்த்தானரோ

கூர்சுடர்ப்பண்ணவன்கொடுவந்துய்த்திடு, மார்சுடர்த்தொகுதிவந்தடையமூவெயி
லூர்சுடச்சிவந்தகண்ணொருவன்றப்புறழ், வார்சடைக்கரந்தெனவறந்தகங்கைநீர்.

அரனருண்முறையினையறிந்துகங்கைதன்,சிரமிசையேந்தியேசென்றோர்கன்னலி
ற்,சரவணமெனுந்தடந்தன்னிற்சேர்த்தனண், மரையிதழாயிடைமல்குற்றாலென.

ஆவயின்காறும்வந்தரியயன்முதற், றேவர்களுவகையாற்றெரிந்துசூழ்ந்தனர்
மேவரவணியதாம்விளைவுநாடியே, காவல்கொணிரப்புடைக்காதலோரென. (அஅ)

ஆரணன்விண்ணகமச்சுதன்புவி, வாரணன்முதலியமாதிரத்துளோ
ரேரணவமரர்களெண்டிக்காகியே, சீரணிசரவணஞ்சேர்ந்துபோற்றினார். (அகூ)

வேறு.

கங்கையுமொல்கப்புக்ககடுங்கனற்கடவுட்சோதி
யங்கிருமூன்றுமுன்னரம்மைவாழிமையச்சாரற்
றங்கியகமலம்பூத்தசரவணம்புகலுமுக்கட்
புங்கவனருளாற்றான்மைபோன்றதுவறத்தலின்றி. (கூ0)

விண்ணிடையிழிந்தகாலின்மேவருகனலிற்றோன்றும்
வண்ணவொண்கமலஞ்செய்யமுளரியைமாறதாகத்
தண்ணளியோடுநல்கித்தரித்தெனச்சரவணப்பேர்க்
கண்ணகன்பொய்கையீசன்கட்டழன்மிசைக்கொண்டன்றே. (கூக)

Digitized By Roja Muthiah Research Library

அருவமுமுருவுமாகியநாதியாய்ப்பலவாயொன்றாய்ப்
பிரமமாய்நின்றசோதிப்பிழம்பதோர்மேனியாகக்
கருணைகூர்முகங்களாறுங்கரங்கள்பன்னிரண்டுங்கொண்டே
யொருதிருமுருகன்வந்தாங்குதித்தனனுலகமுய்ய. (௯௨)

தோன்றல்வந்திடலும்விண்பாற்றுந்துபிகறங்கலுற்ற
வான்றதொன்மறைகளெல்லாமார்த்தனவயனுமாலும்
வான்றிகழ்மகத்தின்றேவுமுனிவருமலர்கடூவி
யேன்றெமையருளுகென்றேயேத்திசையெடுத்துச்சூழ்ந்தார். (௯௩)

ஏவர்தம்பாலுமின்றியெல்லைதீரமலற்குள்ள
மூவிருகுணனுஞ்சேய்க்குமுகங்களாய்வந்ததென்னப்
பூவியல்சரவணத்தண்பொய்கையில்வைகுமைய
னாவிகளருளுமாற்றாலறுமுகங்கொண்டானன்றே. (௯௪)

மல்லலம்புவனத்துள்ளமன்னுயிர்க்கணங்கட்கெல்லா
மொல்லையின்மகிழ்ச்சியெய்தியுவகையின்குறிப்புண்டான
தொல்லையிலவுணனுஞ்சூரனேமுதலாவுள்ள
வெல்லவர்தமக்குமாயுமிருங்குறிப்புற்றவந்நாள். (௯௫)

மறைகளின்முடிவால்வாக்கான்மனத்தினாலளக்கொணும
னிறைவுடன்யாண்டுமாகிநின்றிடுநிமலமூர்த்தி
யறுமுகவுருவாய்த்தோன்றியருளொடுசரவணத்தின்
வெறிகமழ்கமலப்போதின்வீற்றிருந்தருளினனே. (௯௬)

பாங்குறுதருச்சூழ்காலாப்பஃறழைச்சினைமென்கொம்பர்
நீங்கறப்புடைபோய்வானினிரந்தனபந்தராகத்
தூங்கியபழனுங்காயுந்துணர்களுமகத்துட்டுன்ன
வாங்கதனடுவட்பொய்கையணிநிழலமர்ந்தானையன். (௯௭)

முடிபொருதசையுநாகர்முதியகால்பலகைவையந்
தொடர்கரைமரனேவானந்தூங்குபன்னுணந்தெண்ணீர்த்
தடமலர்பாயலாகச்சரவணமஞ்சமீதி
னடைதருமைந்தன்மென்காலசைப்பவீற்றிருந்தானன்றே. (௯௮)

எண்பெருநாகர்சேடனேந்தெழிலரிமானாகத்
தண்பொலிபுனற்பூம்பொய்கைதவிசுருவாகநாள்கோள்
விண்படர்விதானமாகவேலையந்தலைவன்காலை
யொண்பகலாடிகாட்டவுமைமகனங்கணுற்றான். (௯௯)

தரணியினடுவண்வைகுஞ்சரவணப்பொய்கைதன்னில்
விரைசெறிகமலப்போதில்வீற்றிருந்தருளுஞ்செவ்வேள்
பெருவடிவமைந்தமாயன்பிறங்கியமனத்திற்றண்ணென்
றெரிசுடர்விளக்கத்துச்சியிருந்திடுமீசன்போன்றான். (௧00)

பெருந்தரைநடுவணாகிப்பிறங்கியசரவணத்தி
லிருந்தனிக்கமலமொன்றிற்குமரவேளிருந்தபான்மை
திருந்துநல்லண்டப்புத்தேள்சிந்தையாம்புண்டரீக
புரந்தனில்விரும்பித்தாதைவைகியவியற்கைபோலும். (௧0௧)

Digitized By Roja Muthiah Research Library

பாசிலைபரவித்துள்ளிபடுவனவுடுவைப்பாக
வீசுசைவலங்காராகவேறுசூழ்கமலமெல்லா
மாசறுபகலோராகவவற்றிடைமலர்ந்தகஞ்சந்
தேசுடையிரவியாகச்சிவனெனச்சேயங்குற்றான். (௧0௨)

மாலயனெழிலிமேலோன்வானவரேனோர்யாரும்
பாலுறமரனுமாவும்பறவையும்பிறவுஞ்சூழ
வேலுறுகுமரன்கஞ்சத்திருந்ததுபரமனுதிக்
காலையினுயிர்கணல்கிக்கமலமேலிருத்தல்போலும். (௧0௩)

சலங்கிளர்தரங்கத்தெய்வச்சரவணக்கமலப்போதி
னலங்கிளர்குமரன்சேர்தனுன்முகற்சிறைமேல்வீட்டிப்
புலங்கிளருயிர்கணல்கப்பொருந்துநற்பகலின்முன்ன
ரிலங்கெழிற்பதுமபீடத்தேறியவியற்கைபோலும். (௧0௪)

முண்டகமொன்றில்வைகுமுருகனைச்சுற்றிச்செங்கேழ்
வண்டுளர்கமலக்காடுவான்புனற்றடத்தினிற்ற
லண்டர்கண்முதல்வவோர்பாலன்றியெம்மெல்லாம்பீடங்
கொண்டருண்முறையினென்றுநோற்றிடுங்கொள்கைத்தன்றே. (௧0௫)

அணங்குசெய்தோற்றத்துப்பினவிர்சுடர்க்குமரற்சூழ
மணங்கிளர்கமலக்காடுமலர்ந்தனவவனைச்சேர்வான்
றணங்கெழுபுனலிற்புக்குத்தபனன்மேனாட்டஞ்சேர்த்தி
நுணங்கிடைமடவார்பல்லோர்நோற்றவணிற்றல்போலும். (௧0௬)

ஒண்ணகையுயிர்க்குஞ்சங்கமொருசிலகமலம்வைகத்
தண்ணுறுநறவைப்பஃறாட்டாமரைபரித்துச்சூழ்த
லண்ணலம்பொய்கைதற்சேரறுமுகப்பிள்ளைதுய்ப்ப
வெண்ணெயுஞ்சங்குஞ்சூழவிட்டதுபோலுமன்றே. (௧0௭)

ஆரமும்வனசத்தோடுமணிமகரந்தச்சேறும்
வேரியம்பூந்தண்டேனுமுறைமுறைவீசிக்கையாற்
சேரவேகொண்டுமேலோன்றிருவடிதினைப்பவுய்த்தல்
வாரியந்தடாகமன்பால்வழிபடும்வண்ணம்போலும். (௧0௮)

பங்கயச்செம்மற்போதுபதனழிந்தவிழ்ந்துபாங்க
ரங்குளவிலைமேல்வீழவவைபுறத்தசையுநீர்மை
சங்கரன்குமரற்சூழச்சரவணம்பசும்பூந்தட்டிற்
றுங்கநல்விளக்கமாட்டித்திரைக்கையாற்சுலவல்போலும். (௧0௯)

காசுறழ்பதுமப்போதுகளாசியதாகமீச்செல்
பாசடைகவிகையாகப்பலநனைவிளக்கமாக
வீசிகள் * கவரியாகமிழற்றுபுள்ளியமதாக
மாசறுபொய்கைசேய்க்குவளம்படவொழுகிற்றன்றே. (௧௧0)

அழனிவந்தன்னகஞ்சத்தகன்றடத்திரைகளுப்ப
ஞுழிபடராதுசூழ்போந்துலவுவதானைநீரால்
விழுமியகுமரன்பொய்கைவெளியுறுதமரரிட்ட
வெழினிகள்புடையேமென்காலெறிதலினிரட்டல்போலும். (௧௧௧)

---

* வீசி - திரை.

Digitized By Roja Muthiah Research Library

கொண்படைசேவலாகுமெனைமோர்கோடியீசன்
றன்பெருங்குமரற்குழத்தடத்தினின் மிழற்றலெந்தை
பொன்பிறழ்பதுமன்செய்கைபுரியுநாளூர்தியாவ
லென்புடையிருத்தியென்றேதமித்தமியிரத்தல்போலும். (௧௧௨)

வளஞ்செறியிணையபாலால்வான்சரவணமாம்பொய்கைத்
தளஞ்செறிபதுமமொன்றிற்சராசரம்யாவுங்காப்பா
னுளஞ்செறிகருணையெய்தியொப்பிலாக்குமரமூர்த்தி
யிளஞ்சிறுமதலைபோலவினிதுவீற்றிருந்தான்மன்னோ. (௧௧௩)

தீர்த்திகைக்கங்கைதன்னிற்றிகழ்சரவணத்தில்வந்த
மூர்த்திகைக்குழவியேபோன்முதற்புரியாடனோக்கி
யார்த்திகையுறாதவுள்ளத்தரிமுதலமரர்யாருங்
கார்த்திகைத்தெரிவைமாரைவிளித்திவைகழறலுற்றார். (௧௧௪)

சாற்றருஞ்சரவணத்திற்சண்முகத்தொருவனாகி
வீற்றிருந்தருளுகின்றவிமலனோர்குழவிபோலத்
தோற்றினனவனுக்குங்கடுணைமுலையமுதமூட்டிப்
போற்றுதிர்நாளுமென்னநன்றெனப்புகன்றுவந்தார். (௧௧௫)

மறுவறுமாரலாகுமாதர்மூவிருவர்தாமு
நிறைதருசரவணத்தினிமலனையடைந்துபோற்ற
வுறுநர்கடமக்குவேண்டிற்றுதவுவோனுதலாலே
யறுமுகவொருவன்வேறாயறுசிறுருருவங்கொண்டான். (௧௧௬)

ஆறுருவாதலோடுமறுவருமகிழ்ந்துவேறு
வேறுதாமெடுத்துத்தத்தம்வியத்தகுதுணைமென்கொங்கை
யூறுபாலமுதமன்னோற்குதவலுமுறுவல்செய்து
மாறிலாவருளாலாற்றவருந்தினன்போலவுண்டான். (௧௧௭)

உண்டபினறுவராகுமொருபெருமுதல்வன்றன்னைத்
தண்டலைபொதுளுநீபத்தண்ணிழற்பொய்கைதன்னில்
வண்டயிலுறாதகஞ்சமாமலர்ப்பள்ளிசேர்த்திக்
கண்டுயில்செய்வித்தேத்தக்கருணையாலினையசெய்வான். (௧௧௮)

துயிலவோருருவந்துஞ்சித்துண்ணெனவெழுந்துமென்சொற்
பயிலவோருருவம்யாய்தன்பயோதரம்பவளவாய்வைத்
தயிலவோருருவநக்காங்கமரவோருருவமாட
லியலவோருருவம்வாளாவிரங்கவோருருவஞ்செய்தான். (௧௧௯)

ஓருருத்தவழமெல்லவோருருத்தளர்ந்துசெல்ல
வோருருநிற்றல்செல்லாதொய்யெனவெழுந்துவீழ
வோருருவிருக்கப்பொய்கையோருருவுழக்கிச்சூழ
வோருருத்தாய்கண்வைகவொருவனேபுரிதலுற்றான். (௧௨0)

ஆடவோருருவஞ்செங்கையறையவோருருவநின்று
பாடவோருருவநாடிப்பார்க்கவோருருவமாங்க
ணோடவோருருவமோர்பாலொளிக்கவோருருவம்யாண்டுந்
தேடவோருருவமாகச்சிவன்மகன்புரிதலுற்றான். (௧௨௧)

Digitized By Roja Muthiah Research Library

இத்திறமிருமூன்றானயாக்கையுங்கணமதொன்றிற்
பத்துநூறாயபேதப்படும்வகைபரமாய்நின்ற
வுத்தமகுமரன்றானெவ்வுயிர்தொறுமாடலேபோல்
வித்தகவிளையாட்டின்னமாயையால்விரைந்துசெய்தான். (௧௨௨)

சிற்பரனாகிவந்தசெய்யவேளாடற்றன்மை
பற்பலதிறமுநாடிப்பங்கயத்தயனுமாலுஞ்
சொற்படுமகத்தின்றேவுமுனிவருஞ்சுரரும்யாரு
மற்புதமகிழ்ச்சிகொண்டாங்கின்னவாறறைதலுற்றார். (௧௨௩)

சேயவனொருவனேபல்சிறாருருக்கொண்டுநம்மு
னேயெனுமளவைதன்னிலெண்ணில்பேதத்தனாகு
மாயினிக்குமரனுடலறிவரிதெமக்குமெல்லா
மாயமுமியற்றவல்லன்வரம்பிலாவறிவன்மாதோ. (௧௨௪)

கைப்பயில்குழவிபோலக்காட்டியகடவுள்செய்யு
மிப்பெருமாயைபோலயாவரும்புரிதறேற்றார்
செப்பியென்வேறியாமுஞ்செய்ததொன்றில்லையன்னா
னொப்பறுபரனேயாமென்றுரைசெய்துதொழுதுநின்றார். (௧௨௫)

அழலெனுமீனவர்க்கத்தறுவருங்குமரனுடன்
முழுவதுநோக்கிநோக்கிமுதிருமற்புதநீரெய்திக்
குழவிகளென்றேயுள்ளங்கோடல்விட்டகலாதஞ்சி
வழிபடுகடவுளோரிற்போற்றினர்மனங்கொளன்பால். (௧௨௬)

அம்புயமுறழுஞ்செங்கேழறுமுகம்படைத்தகோல
நம்பிதன்வரவுதன்னைநவின்றனமினிமேலங்க
ணெம்பெருமுதல்விதன்பாலிலக்கத்தொன்பதின்மர்செவ்வே
டம்பியராகிவந்ததன்மையைவிளம்பலுற்றாம். (௧௨௭)

திருவவதாரப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௬௭௭.

## துணைவர்வருபடலம்.

நஞ்சயின்றவனெற்றிநாட்டத்தினனல்கு
வெஞ்சுடர்ப்பொறிவெம்மையையாற்றலள்விமலை
செஞ்சிலம்படிதாக்கலினவமணிசிதற
வஞ்சியோடினளித்திறமுணர்ந்தனளகத்துள். (௧)

மாயவன்முதலமரர்களீசனைவணங்கி
நீயோர்மைந்தனைத்தருகெனநெற்றிநாட்டத்தா
லாயவன்சுடருதவியோர்ம்தலையாயமர்வா
னேயினான்சரவணத்தெனத்தெரிந்தனளிறைவி. (௨)

அன்னதற்பினருமையவளெனதுபாலமலன்
றன்னருட்பெறுமதலைதோன்றாவகைதடுத்த
பொன்னகர்க்கிறைவிரிஞ்சன்மான்முதலபுத்தேளிர்
பன்னியர்க்கெலாம்புதல்வரின்றாகெனப்பகர்ந்தாள். (௩)

Digitized By Roja Muthiah Research Library

இமையமாமகளித்திறம்புகன்றுமீண்டேகிச்
சமயம்யாவையுநிறுவியகண்ணுதற்றலைவ
ணமலமாந்திருமுன்னர்வந்தரிக்குமுன்னரிதாங்
கமலமாரடிகண்டனள்பணிந்துகண்களித்தாள். (௪)

உம்பர்யாவருங்குறையிரந்திடலுநீயுதவுஞ்
செம்பொறித்தொகையாற்றலும்வெம்மையுந்தெரிந்து
வெம்பிமுற்றுடல்பதைப்புறவகன்றிவண்மீண்டே
னெம்பெருந்தகையவ்வழனீக்கலாலென்றாள். (௫)

கன்னியிங்ஙனம்பகர்தலுங்கருணைசெய்தருளித்
தன்னிடத்தினிலிருத்தினனிருந்திடுதையன்
முன்னயோடலிற்சிதறுநூபுரமணிமுழுது
மென்னையாளுடைநாயகன்முன்னிலங்கினவால். (௬)

தளிரின்மெல்லடிப்பரிபுரமாயினதணந்து
மிளிருமந்நவமணிகளினாணையால்விமலை
யொளிருநல்லுருத்தோன்றினவைம்முகத்தொருவன்
றெளிருமுச்சுடரகத்திடையமர்ந்திடுஞ்செயல்போல். (௭)

எண்ணிலாநவமணிகளினுமையுருவெனைத்துங்
கண்ணினாற்றெரிந்தருளினால்வம்மெனக்கழற
வண்ணமேலோர்வகைமணிக்கொருசத்திகளாக
நண்ணினார்நவசத்திகளமரர்நற்றவத்தால். (௮)

பருப்பதக்கொடிபுரைநவசத்திகள்பரமன்
றிருப்பதத்திடைவணங்கிநின்றவணிடைச்சிந்தை
விருப்பம்வைத்தலுமுனிவர்தமகளிர்போல்விரைவிற்
கருப்பமுற்றனர்யாவதுமுமையவள்கண்டாள். (௯)

முனம்புரிந்துலகளித்தவளனையர்பான்முதிருஞ்
சினம்புரிந்திவணெமக்குமாறாகியதிறத்தாற்
கனம்புரிந்தவிக்கருப்பமோடிருத்திர்பல்கால
மினம்புரிந்தநீர்யாவருமென்றருளிசைத்தாள். (௰)

ஆவதெல்லையினடுக்கமுற்றஞ்சியேயங்கண்
மேவுமாதர்மெய்வியர்த்தனரவ்வியர்ப்பதனிற்
றேவதேவனதருளினாற்றினகரத்திரள்போ
லோவிலாவிறல்வீரர்களிலக்கர்வந்துதித்தார். (௧௧)

வடுத்தனைப்பொருங்கண்ணினர்வியர்ப்பினில்வந்தாங்
கடுத்தமானவரோரிலக்கத்தருமசனி
கடுத்தசொல்லினர்பொற்றுகிலுடையினர்கரத்தி
லெடுத்தவாளினர்பலகையராகியீண்டினரால். (௧௨)

அனையர்யாவருமீசனையடைந்தனரன்புற்
றினியவாகியவமலனுமங்களையேத்தி
வனைகருங்கழல்வணங்கிமுன்னிற்றலுமற்றப்
புனிதநாயகனவர்தமைநோக்கியேபுகல்வான். (௧௩)

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
R. M. DIST - TAMIL NADU - INDIA
Digitized By Roja Muthiah Research Library

மைந்தர்கேண்மினோநீவிர்கள்யாவரும்வயத்தா
லிந்திராதியர்பகைவரையடுவதற்கெமது
கந்தவேள்படையாகுதிரென்னவேகழறி
நூந்துபேரருள்புரிந்தனன்யாவர்க்குமுதல்வன். (கச)

இன்பநீருடனிவையருள்புரிதலுமிலக்க
நன்பெருந்திறன்மைந்தர்களாயினோர்நாளு
மன்புமேதகுபரிசனராகியேயமலன்
முன்புநீங்கலாதொழுகினர்செய்பணிமுறையால். (கரு)

மாற்றருஞ்சினத்தம்மைமுன்கொடுமொழிவழங்கத்
தோற்றுநன்மணியுருவமாந்தோகையர்துளங்கிப்
போற்றிவந்தனைசெய்துபின்னவள்பணிபுரிந்தே
யாற்றுதொல்கருப்பத்துடன்பற்பகலமர்ந்தார். (கசு)

இகலுமாமணிமகளிர்தங்கருவினுள்ளிறைவற்
புகழுநந்தியங்கணத்தவர்குழவியாய்ப்போந்து
நிகரில்காளையராகிவீற்றிருந்தனர்நெறிசேர்
சுகனெனும்படிபரமனைமுன்னியேதொழுது. (கஎ)

அரதனங்களிற்றோன்றியமங்கையரகட்டிற்
கருவின்வந்திடுமாடவரீசனைக்கருதிப்
புரியும்யோகுடனிருத்தலினுற்றரும்பொறையாய்ப்
பரமதாதலுமுமையுடன்பரமனைப்பணிந்தார். (கஅ)

இருவர்தம்மையும்பணிந்தவரின்றுகாறினைய
கருவினோந்தனமின்னினியாம்பரிக்கல்லே
மருள்புரிந்திடுமென்றலுமாதியங்கடவுள்
பரிவினுமைதிருமுகநோக்கியேபகர்வான். (கசு)

ஏலவார்குழற்கவுரிநின்செய்யதாளிடையிற்
சாலுநூபுரத்துதித்தவருனதுசாபத்தாற்
சூலினன்மிகமெலிந்தனர்பற்பகல்சுமந்தார்
பாலரைப்பெறவினியருள்புரிகெனப்பணித்தான். (உ0)

இறைவனிங்கிதுபணித்தலுநன்றெனவிசையா
முறுவல்செய்துமைமாதரைநோக்கிமொய்ம்பினரைப்
பெறுதிராலினியென்றலுமவர்வயிற்பெயரா
துறையும்யோகுடைவீரர்களித்திறமுணர்ந்தார். (உக)

மறத்தலில்லதோருணர்வுடைவீரர்கண்மற்றித்
திறத்தைநாடியேயோகுவிட்டுளமகிழ்சிறப்ப
விறத்தனீங்கியபரம்பொருளருண்முறையிறைஞ்சிப்
பிறத்தலுன்னியேமுயன்றனராயிடைப்பெயர்வார். (உஉ)

பரிபுரந்தனின்முன்வருமங்கையர்பரைதன்
கருணைகொண்டசொற்கேட்டலுங்கவற்சியையகன்று
விரைவின்மேலவர்பதம்பணிந்தேத்தியேவிடைகொண்
டொருவிமைந்தரையளித்தனர்யாவருமொருசார். (உங)

Digitized By Roja Muthiah Research Library

நந்திதன்கணமுதல்வர்களாகியேநணியோர்
பந்தநீங்கியேசனித்தனரொன்றிலாப்பதின்ம
ரெந்தையாரருள்பெயர்கொடேயிருநிலவரைப்பிற்
சுந்தரன்விடைமுகத்தவன்றோன்றியவாபோல். (உச)

பேரவாகுவையுடையவனிளவல்பேரருளாற்
சூரவாகுலம்வானவர்பெருவகைதொலைப்பா
னேரவாகுறுஞ்செம்மணிப்பாவைதன்னிடத்தில்
வீரவாகுவந்துதித்தனனுலகெலாம்வியப்ப. (உரு)

விரள * வல்லியார்தந்திசூரரிவியன்படையாங்
கரளவல்லிருளகற்றுவானெழுந்தவெண்கதிர்போற்
றிரளவல்லிணையிணையபூண்முலையுடைத்தெய்வத்
தரளவல்லிபாற்றோன்றினன்வீரகேசரியே. (உசு)

மக்கள்வானவர்க்கருந்துயர்புரியும்வல்லவுணர்
தொக்கவீரமாமகேந்திரப்பெருவளந்தொலையச்
செக்கர்நூபுரப்புட்பராகத்திபாற்சிறப்பாற்
றக்கவீரமாமகேந்திரன்வந்தவதரித்தான். (உஎ)

ஆதவத்தனிக்கடவுளும்வடவையாரழலுஞ்
சீதளப்புதுமதியமும்வெள்குறத்திகழ்கோ
மேதகத்தமர்பாவைபால்விண்ணவர்புரியு
மாதவத்தினால்வீரமாமகேச்சுரன்வந்தான். (உஅ)

தானமாநிலத்தேவர்கண்மகிழ்வுறத்தருவ
ரானபேரெலாமுடிவுறவறந்தலையெடுப்பக்
கானல்சேர்வயிடூரியமின்னிடைக்கழற்கான்
மானவீரமாபுரந்தரனென்பவன்வந்தான். (உகூ)

சூரராக்கமுந்துணைவர்தம்மாக்கமுஞ்சூழுந்
தீரராக்கமும்வானவரேக்கமுஞ்சிதைய
வாரராக்கமழ்கொன்றைவேணியனருளதனால்
வீரராக்கதன்வந்தனன்வயிரமெல்லியல்பால். (௩0)

கரகதத்தனிமால்வரையெடுத்தொருகணத்திற்
புரகதத்தினையிழைத்தவனருளினாற்புணரிக்
குரகதத்திடைப்பைங்கனல்கொம்மெனவெழல்போன்
மரகதத்திபால்வீரமார்த்தாண்டன்வந்தனனே. (௩க)

மையன்மாக்கரிவாம்பரிவிரவியமணித்தேர்
வெய்யதானவர்பஃறொகையிமைப்பினில்விளிய
மொய்யினார்த்தமோனவன்பவளமாமொழிப்பேர்த்
தையறன்வயின்வலியவீராந்தகன்சனித்தான். (௩உ)

கந்துதித்திடுவியனரமடங்கலுங்கடலின்
முந்துதித்திடுமாலமும்வடவையுமுரண
நந்துதித்தநற்களமணி ○ ப்பாவைநற்றவத்தால்
வந்துதித்தனன்வீரதீரப்பெயர்வலியோன். (௩௩)

---

* விரளம் - நீக்கம், நெகிழ்வு. ○ மணி - இந்திரநீலமணி.



Digitized By Roja Muthiah Research Library

இந்தவீரரொன்பதின்மருமீசனதருளாற்
றந்தமன்னையர்நிறங்கொடேபோலந்துகிருங்கி
வந்துபற்பகல்வளர்தருமுறுப்பொடுமடவா
ருந்தியின்வழிநான்முகத்தண்ணல்போலுதித்தார். (௩௪)

வேறு.

உதிதருமத்திறல்வீரரரியணைமேலம்மையுடனுறைந்தநாதன்
பதமலர்கள்பணிந்தெழுமவர்க்கண்டுபார்ப்பதியைப்பரிவானோக்கி
மதியுடையர்திறலுடையர்மானவருங்கலத்தினர்நம்மைந்தரின்னோர்
புதியரலர்நந்திதனிக்கணத்தவரென்றான்சுருதிப்பொருளாய்நின்றான். (௩௫)

தேவியதுகேட்டுமைந்தர்க்கருள்புரியவவர்க்கெல்லாஞ்சிவன்வெவ்வேறு
தாவில்சுடர்வாளுதவிவியர்ப்பில்வருமோரிலக்கந்தனயரோடு
நீவிர்களுமொன்றிநுங்கட்கிறையவனுகியசேயைநீங்கலின்றி
யேவலவன்பணித்தனசெய்தொழுகுதிரென்றானவருமிசைந்துதாழ்ந்தார். (௩௬)

ஒன்பானுமிலக்கத்தோரோரிலக்கத்தோர்தம்மோடொன்றிப்புல்லி
யன்பாகியெம்பெருமான்சினகரத்தையகலாமலங்கண்வைக
மென்பானல்புரையும்விழிச்சத்திகளோன்பதின்மர்களும்விமலக்கன்னி
தன்பாலையிகவாமலவள்பணித்ததொழில்புரிந்துசார்தலுற்றார். (௩௭)

துணைவர்வருபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,0௧௪.

---

# சரவணப்படலம்.

ஏற்றயானவரொன்றொழிபதின்மரோடிலக்கர்
தோற்றமெய்தியதன்மையையித்துணைசொற்றா
மாற்றல்சேர்புனற்சரவணத்தடந்தனிலறுவர்
போற்றவைகினன்கயிலையிற்புகுந்தமைபுகல்வாம். (௧)

தருப்ப * மிக்குளார்காணுறாத்தாவில்சீர்வெள்ளிப்
பொருப்பிலுற்றிடுபரம்பொருள்கருணையாற்பொறைகூர்
கருப்பமற்றுயிர்முழுவதுந்தந்திடுங்கன்னிப்
பருப்பதக்கொடிக்கவ்வழியினையனபகர்வான். (௨)

பொம்மலுற்றிடுநான்முகனுதியோர்புந்தி
விம்மலற்றிடமுந்துநம்விழியிடைத்தோன்றிச்
செம்மலர்ப்பெருஞ்சரவணத்திருந்தநின்சேயை
யிம்மலைக்கணேயுய்க்குதும்வருகெனவிசைத்தான். (௩)

வேறு.

செம்புலியதளினன்செப்பிற்றோர்தலு
மம்பிகையுவகையோடன்புகொண்டெழீஇ
நம்பெருமதலையைநாங்கொண்டேகுது
மெம்பெருமுதல்வநீயெழுதியாலென்றாள். (௪)

---

* தருப்பம் - அகங்காரம்.

Digitized By Roja Muthiah Research Library

கொம்மைவெம்முலையினாற்குறிபடுத்திய
வம்மையீதுரைத்துழியருளினாலெழா
மைம்மலிமிடறுடைவானநாயக
னிம்மெனவவளொடுமேறதேறினான். (௫)

நந்தியினெருத்தமேனங்கையாளொடு
நந்திவந்திடுதலுநாகமேலுளார்
நந்தியவினைத்தொகைநந்திற்றென்றிடா
நந்திதன்கணத்தொடுநண்ணிப்போற்றினார். (௬)

அந்தமில்விடத்தினையடக்குகையுடைச்
சுந்தரனாதியார்தொல்கணத்தினோ
ரெந்தைதனுருவுகொண்டிருந்தமேலவர்
வந்திருமருங்குமாய்வழுத்தியீண்டினார். (௭)

ஆன்முகநந்தியெம்மடிகளுய்த்திடத்
தேன்முகநறுமலர்சிதறிச்செங்கையாற்
கான்முறைவணங்கியேகமலக்கண்ணவ
னான்முகன்மகபதிபிறருநண்ணினார். (௮)

சல்லரிவயிர்துடிதடாரிசச்சரி
கல்லெனவிரங்குறுகரடிகாகளஞ்
செல்லுறழ்பேரிகைதிமிலையாதியாம்
பல்லியமியம்பினபாரிடங்களே. (௯)

வேறு.

வேதநான்குங்குடிலையும்வேறுள, பேதமாயகலைகளும்பேரிசை
நாதமோடுநணுகினவிஞ்சையர், கீதம்யாவுமிசைத்துக்கெழுமினார். (௧0)

வள்ளல்வேணியின்மாமதியீண்டியே, பிள்ளைவெண்பிறையைப்படர்பேரராக், கொ
ள்ளுமென்றுகுறித்ததுபோற்றல்போல், வெள்ளிவெண்குடைவெய்யவரேந்தினார்.

சகரரென்னுந்தலைவர்கடம்வழிப், பகிரதப்பெயர்ப்பார்த்திவன்வேண்டலு
நிகரிலோனருணீத்தத்தொழுக்கெனப், புகரில்சாமரம்பூதர்கள்வீசினார். (௧௨)

சீறுமால்கரிசீயம்வயப்புலி, யேறுபூட்கையிரலையெண்கேமுதல்
வேறுகொண்டவியன்முகச்சாரதர், நூறுகோடியர்நொய்தெனச்சுற்றினார். (௧௩)

இமிலுடைப்பலவேற்றிருங்கேதனந், திமிலவிண்புனனக்கிச்சிதறுவ
வமலனைத்தொழுதாற்றுமெய்யன்பினாற், கமலமுய்த்திடுங்காட்சியர்போன்றவே.

அன்னகாலையகிலமுமீன்றருள், கன்னிதன்னொடுகாமர்வெள்ளேற்றின்மேன்
மன்னிவைகுமதிமுடிவானவன், றன்னதாலயத்தைத்தணந்தேகினான். (௧௫)

வேறு.

தன்னதாலயநீங்கியேகயிலையைத்தணந்து
பொன்னினீடியவிமையமால்வரைப்புறத்தேகி
யன்னமாடுறுஞ்சரவணப்பொய்கையையடைந்தா
னென்னையாளுடைநாயகனிறைவியுந்தானும். (௧௬)

Digitized By Roja Muthiah Research Library

பிறையுலாஞ்சடைத்தேவனுமவன்றனைப்பிரியா
துறையுமாதுமோராறுவகையுருவுகொண்டுற்ற
சிறுவனீர்மையைநோக்கியேதிருவருள்செய்து
நிறையும்வான்புனற்பொய்கையங்கரையிடைநின்றார். (௧௭)

முண்டகச்சரவணந்தனின்மூவிருவடிவங்
கொண்டுலாவிவீற்றிருந்திடுமொருபெருங்குமர
னண்டர்நாயகன்றன்னுடனகிலமீன்றாளைக்
கண்டுமாமுகமலர்ந்தனன்றனதுளங்களித்தான். (௧௮)

அந்தவேலையிற்கவுரியைநோக்கியெம்மைய
னிந்தநின்மகன்றனைக்கொடுவருகெனவியம்பச்
சுந்தரங்கெழுவிடையினுந்துண்ணெனவிழிந்து
சிந்தைகொண்டபேராதரந்தன்னொடுஞ்சென்றாள். (௧௯)

சரவணந்தனிற்றனதுசேயாறுருத்தனையு
மிருகரங்களாலன்புடனெடுத்தனள்புல்லித்
திருமுகங்களோராறுபன்னிருபுயஞ்சேர்ந்த
வுருவமொன்றெனச்செய்தனளுலகமீன்றுடையாள். (௨௦)

எந்தைசத்திகளுயிரெலாமொடுங்குறுமெல்லை
முந்துபோலவொன்றாகியேகூடியமுறைபோ
லந்தமில்லதோர்மூவிருவடிவுமொன்றாகிக்
கந்தனென்றுபேர்பெற்றனன்கவுரிதன்குமரன். (௨௧)

முன்புபுல்லியகுமரவேண்முடிதொறுமுயிர்த்து
மின்பிறங்கியபுறந்தனைநீவலும்விமலை
தன்பெருந்தனஞ்சுரந்துபால்சொரிந்தனதலையா
மன்பெனப்படுகின்றதித்தன்மையேயன்றோ. (௨௨)

ஆதிநாயகன்கருணையாயமலமாய்ப்பரம
போதநீரதாயிருந்ததன்கொங்கையிற்பொழிபா
லேதிலாததோர்குருமணிவள்ளமீதேற்றுக்
காதன்மாமகற்கன்பினாலருத்தினாள்கவுரி. (௨௩)

கொங்கையூறுபாலருத்தியேகுமரனைக்கொடுசென்
றெங்கணாயகன்முன்னரேயிறைஞ்சுவித்திடலு
மங்கையாலவன்றனையெடுத்தகலமேலணைத்துப்
பொங்குபேரருணீர்மையாலிருத்தினன்புடையில். (௨௪)

அருத்திதந்திடுகுமரவேளொருபுடையமரப்
பெருத்தமன்னுயிர்யாவையுமுன்னரேபெற்ற
வொருத்திதன்னையுங்கையினாலொய்யெனவாங்கி
யிருத்தினான்றனதிடந்தனிலெம்மையாளிறைவன். (௨௫)

ஏலவார்குழலிறைவிக்குமெம்பிரான்றனக்கும்
பாலனாகியகுமரவேணடுவுறும்பான்மை
ஞாலமேலுறுமிரவொடுபகலுக்குநடுவாய்
மாலையானதொன்றழிவின்றிவைகுமாறொக்கும். (௨௬)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

விடையுற்றிடுபரமற்குமவ்விமலைக்கும்விறற்சே
யிடையுற்றதுகண்டாரயன்மகவான்முதலிமையோர்
கடையுற்றிடுகடலாமெனக்கல்லென்றிரைத்தணுகாப்
புடையுற்றனரெதிருற்றனர்புறனுற்றனர்புகழ்வார். (உஎ)

காமாரிதன்விழிதந்திடுகழிகாதலவொழியாத்
தோமாரியல்புளனாகியசூரன்கொடுந்தொழிலால்
யாமாரினுமிழுக்குற்றனமெமையாளினியென்னாப்
பூமாரிகள்பொழிந்தார்பணிந்தெழுந்தாசிகள்புகன்றார். (உஅ)

வாரற்புதமுறவீங்கியவன்னத்தனமுருந்தின்
மூரற்பவளச்சேயிதழ்முழுமாமதிவதனத்
தாரற்பெயர்பெறுமங்கையரதுகாலையிலரன்முன்
பேரற்பொடுபணிந்தேயெழப்பெருந்தண்ணளிபுரிந்தான். (உகூ)

கந்தன்றனைநீர்போற்றியகடனாலிவனுங்கண்
மைந்தன்னெனும்பெயராகுகமகிழ்வாலெவரேனு
நுந்தம்பகலிடையின்னவனோன்றாள்வழிபடுவோர்
தந்தங்குறைமுடித்தேபரந்தனைநல்குவமென்றான். (௩0)

என்னாவருள்புரிகின்றுழியிமையத்தவள்சேயைத்
தன்னாரருளொடுசென்றெதிர்தழுவித்தனத்திழிபால்
பொன்னார்மணிவள்ளத்துமுன்பூரித்தருத்திடவே
யன்னாண்முலையமுதுக்கவையாறாத்தொழுகினவே. (௩க)

வானார்சுரநதிபோற்சரவணத்தூடவைபுகலுந்
தூநான்மறைகரைகண்டவன்முதல்வந்திடுதுணைவ
ராறுவறுசிறுவோர்தமையளித்தோன்சபித்திடலான்
மீனாயவண்வதிகின்றவர்புகும்பாலினைமிசைந்தார். (௩உ)

கயிலைக்கிறையவண்மெய்த்தனகலசத்தினுமுகுபா
லயிலுற்றிடுபொழுதத்தினிலறலிற்புடைபெயரு
மயிலைத்தனுவொருவித்தவவடிவுற்றெழுதருவார்
துயிலுற்றுணர்பவரொத்தனர்மயலற்றிடுதொடர்பால். (௩௩)

அன்னாரறுவருமாயெழுந்தகன்பொய்கைவிட்டமலன்
முன்னாய்வணங்கினர்போற்றலுமுனிமைந்தர்கள்பரங்கோ
டென்னாவுரைபெறுகுன்றிடையிருந்தேதவம்புரிமின்
சின்னாண்மிசையிவண்வந்தருள்செயுமென்றருள்செய்தான். (௩ச)

நன்றாலெனத்தொழுதன்னவர்நாதன்விடைபெற்றே
சென்றாருமடவாரொடுதிருமாலயன்முதலா
நின்றார்தமக்கருள்செய்தவர்நிலயம்புகவருளிப்
பொன்றாழ்சடையினன்வெள்ளியம்பொருப்பின்றலைபுக்கான். (௩ரு)

அடையார்புரமெரிசெய்திடுமமலன்கயிலையிற்போய்
விடையூர்தியினிழிந்தேதனிவிறற்சேயொடும்வெற்பின்
மடவாளொடுடவாப்பொலன்மாமந்திரத்தவையு
ளிடையாரரியணைமீமிசையிருந்தானருள்புரிந்தே. (௩சு)

Digitized By Roja Muthiah Research Library

சேயோனெனுமுன்னோன்றனைச்சிலம்பின்வருமொன்பான்
மாயோருதவியமைந்தருமற்றுள்ளவிலக்கத்
தூயோர்களுந்தொழுதேமலர்தூவிப்பணிந்தேத்தி
யாயோர்தமதுயிரேயெனவவனைக்குறித்தணைந்தார். (௯௭)

சரவணப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௱௫௧.

# திருவிளையாட்டுப்படலம்.

அனந்தரமதாகவுமையம்மையொடுபெம்மா
னனந்தலையில்வைகியநலங்கொள்குமரேச
னினங்கொடுதொடர்ந்தவிளையாரொடுமெழுந்தே
மனங்கொளருணீர்மைதனினுடலைமதித்தான். (௧)

தட்டைசெறிகிழங்கழல்சதங்கைகள்சிலம்பக்
கட்டழகுமேயவரைஞாண்மணி * கறங்க
வட்டமணிகுண்டலமதாணிநுதல்வீர
பட்டிகைமினக்குமரனுடல்பயில்கின்றான். (௨)

மன்றுதொறுலாவுமலர்வாவிதொறுலாவுந்
துன்றுசிறுதென்றறவழ்சோலைதொறுலாவு
மென்றுமுலவாதுலவும்யாறுதொறுலாவுங்
குன்றுதொறுலாவுமுறையுங்குமரவேளே. (௩)

குளத்திலுலவுந்நதிகுறைந்திடுதுருத்திக்
களத்திலுலவுந்நிரைகொள்கந்துடை o நிலைத்தாந்
தளத்திலுலவும்பனவர்சாலையுலவும்மென்
னுளத்திலுலவுஞ்சிவனுமைக்கினியமைந்தன். (௪)

இந்துமுடிமுன்னவனிடந்தொறுமுலாவுந்
தந்தையுடன்யாயமர்தலங்களினுலாவுங்
கந்தமலர்நீபமுறைகண்டொறுமுலாவுஞ்
செந்தமிழ்வடாதுகலைசேர்ந்துழியுலாவும். (௫)

மண்ணிடையுலாவுநெடுமாதிரமுலாவு
மெண்ணிடையுறாதகடலெங்கணுமுலாவும்
விண்ணிடையுலாவுமதிவெய்யவனுடுக்கோள்
கண்ணிடையுலாவுமிறைகண்ணில்வருமண்ணல். (௬)

கந்தருவர்சித்தர்கருடத்தொகையரேனோர்
தந்தமுலகாதியதலந்தொறுமுலாவு
மிந்திரனிருந்ததொல்லிடந்தனிலுலாவு
முந்துதவர்வைகுமுலகந்தொறுமுலாவும். (௭)

---

* அரைஞாண்மணி - கிங்கிணி. o கந்து - ஆதீண்டுகுற்றி.

Digitized By Roja Muthiah Research Library

அங்கமலநான்முகனரும்பதமுலாவு
மங்கலநிறைந்ததிருமால்பதமுலாவு
மெங்கள்பெருமாட்டிதனிரும்பதமுலாவுந்
திங்கண்முடிமேற்புனைசிவன்பதமுலாவும். (அ)

இப்புவியிலண்டநிரையெங்கணுமுலாவு
மப்புவழலூதைவெளியண்டமுமுலாவு
மொப்பில்புவனங்கள்பிறவுள்ளவுமுலாவுஞ்
செப்பரியவோர்பரசிவன்றனதுமைந்தன். (௯)

வேறு.

இருமூவகைவதனத்தொடுமிளையோனெனத்திரியு
மொருமாமுகனொடுசென்றிடுமுயர்காளையினுலவும்
பெருமாமறையவரேயெனமுனிவோரெனப்பெயருந்
தெரிவார்கணைமறவீரரிற்றிரிதந்திடுஞ்செவ்வேள். (க0)

காலிற்செலும்பரியிற்செலுங்கரியிற்செலுங்கடுந்தேர்
மேலிற்செலுந்தனியாளியின்மிசையிற்செலுந்தகரின்
பாலிற்செலுமானத்திடைபரிவிற்செலும்விண்ணின்
மாலிற்செலும்பொருசூரொடுமலையச்செலும்வலியோன். (கக)

பாடின்படுமணி * யார்த்திடும்பணைமென்குழலிசைக்குங்
கோடங்கொலிபுரிவித்திடுங்குரல்வீணைகள்பயிலு
மீடொன்றியசிறுபல்லியமெறியும்மெவரெவரு
நாடும்படிபாடுங்களிநடனஞ்செயுமுருகன். (கஉ)

இன்னேபலவுருவங்கொடியாண்டுங்குமரேச
னன்னேயமொடாடுற்றுழிநனிநாடினள்வியவா
முன்னேயுலகினையீன்றவண்முடிவின்றுறைமுதல்வன்
பொன்னேர்கழலிணைதாழ்ந்தனள்போற்றிப்புகல்கின்றாள். (கங)

கூடுற்றநங்குமரன்சிறுகுழவிப்பருவத்தே
யாடற்றொழிலெனக்கற்புதமாகும்மவன்போல்வார்
நேடிற்பிறரிலைமாயையினினைநேர்தருமனையான்
பீடுற்றிடுநெறிதன்னையெம்பெருமான்மொழிகென்றாள். (கச)

அல்லார்குழலவளின்னணமறியார்களின்வினவ
வொல்லார்புரமடுகண்ணுதலுன்றன்மகனியல்பை
யெல்லாவுயிர்களுமுய்ந்திடவெமைநீகடவினையா
னல்லாயிதுகேண்மோவெனவருளாலிவைநவில்வான். (கரு)

வேறு.

ஈங்கனநமதுகண்ணினெய்தியகுமரன்கங்கை
தாங்கினள்கொண்டுசென்றுசரவணத்திடுதலாலே
காங்கெயனெனப்பேர்பெற்றான்காமர்பூஞ்சரவணத்தின்
பாங்கரில்வருதலாலேசரவணபவனென்றானன். (கசு)

* பாடின்படுமணி - ஓசையினிதாகிய அசைகின்ற மணி. பாடு - ஓசை.

தாயெனவாரல்போந்துதனங்கொள்பாலருத்தலாலே
யேயதோர்கார்த்திகேயனென்றொருதொல்பேர்பெற்றான்
சேயவன்வடிவமாறுந்திரட்டிநீயொன்றாச்செய்தா
யாயதனாலேகந்தனாமெனுநாமம்பெற்றான். (௧௭)

நன்முகமிருமூன்றுண்டானமக்கவைதாமேகந்தன்
றன்முகமாகியுற்றதாரகப்பிரமமாகி
முன்மொழிகின்றநந்தமூவிரண்டெழுத்துமொன்றா
யுன்மகனாமத்தோராறெழுத்தெனவுற்றவன்றே. (௧௮)

ஆதலினமதுசத்தியறுமுகனவனும்யாமும்
பேதகமன்றானம்போற்பிரிவிலன்யாண்டுநின்றா
னேதமில்குழவிபோல்வான்யாவையுமுணர்ந்தான்சீரும்
போதமுமழிவில்வீடும்போற்றினர்க்கருளவல்லான். (௧௯)

மேலினியவனையசெவ்வேள்விரிஞ்சனைச்சுருதிக்கெல்லா
மூலமதாகிநின்றமொழிப்பொருள்வினவியன்னான்
மாலுறச்சென்னிதாக்கிவன்சிறைப்படுத்தித்தானே
ஞாலமன்னுயிரையெல்லாநல்கியேநண்ணும்பன்னாள். (௨0)

தாரகன்றன்னைச்சீயத்தடம்பெருமுகத்தினானைச்
சூரபன்மாவையேனையவுணரைத்தொலைவுசெய்தே
யாரணன்மகவானேனையமரர்களிடுக்கணீக்கிப்
பேரருள்புரிவனின்சேய்பின்னர்நீகாண்டியென்றான். (௨௧)

என்றலுமிளையோன்செய்கையெம்பெருமாட்டிகேளா
நன்றெனமகிழ்ச்சிகொண்டுநணுகலுமுலகமெல்லாஞ்
சென்றருளாடல்செய்யுந்திருத்தகுகுமரன்பின்ன
ரொன்றொருவிளையாட்டுள்ளத்துன்னியேபுரிதலுற்றான். (௨௨)

குலகிரியனைத்துமோர்பாற்கூட்டிடுமவற்றைப்பின்னர்த்
தலைதடுமாற்றமாகத்தரையிடைநிறுவுமெல்லா
வலைகடறனையுமொன்றாவாக்குறுமாழிவெற்பைப்
பிலனுறவழுத்துங்கங்கைப்பெருநதியடைக்குமன்றே. (௨௩)

இருள்கெழுபிலத்துள்வைகுமெண்டொகைப்பணியும்பற்றிப்
டொருள்கெழுமேருவாதியடுக்கலிற்பூட்டிவீக்கி
யருள்கெழுகுமரவள்ளலாவிகட்கூறின்றாக
வருள்கெழுசிறுதேராக்கொண்டொல்லெனவுருட்டிச்செல்லும். (௨௪)

ஆசையங்கரிகடம்மையங்கைகொண்டொன்றோடொன்று
பூசல்செய்விக்கும்வானிற்போந்திடுங்கங்கைநீராற்
காய்சினவடவைமாற்றுங்கவின்சிறைக்கலுழனோடு
வாசுகிதன்னைப்பற்றிமாறிகல்விளைக்குமன்றே. (௨௫)

பாதலநிலயத்துள்ளபுயங்கரைப்படியிற்சேர்த்திப்
பூதலநேமியெல்லாம்புகுந்திடப்பிலத்தினுய்க்கு
மாதவமுதல்வன்றன்னையவிர்மதிப்பதத்திலோச்சுஞ்
சீதளமதியைவெய்யோன்சென்னெறிப்படுத்துச்செல்லும். (௨௬)

Digitized By Roja Muthiah Research Library

எண்டிசைபுரந்ததேவரிருந்ததொல்பதங்களெல்லாம்
பண்டுளதிறத்தினீங்கப்பறித்தனன்பிறழவைக்குங்
கொண்டலினிருந்தமின்னின்குழுவுடனுருமுப்பற்றி
வண்டினமுறுதசெந்தண்மாலைசெய்தணியுமன்றே. (உஎ)

வெய்யவர்மதிகோளேனோர்விண்படர்விமானந்தேர்கண்
மொய்யுறப்பிணித்தபாசமுழுவதுந்துருவனென்போன்
கையுறுமவற்றில்வேண்டுங்கயிற்றினையிடைக்கணீர்ந்து
வையகந்திசைமீச்செல்லவானியில்விடுக்குமைந்தன். (உஅ)

வடுத்தவிர்விசும்பிற்செல்லும்வார்சிலையிரண்டும்பற்றி
யுடுத்திரள்பலகோளின்னவுண்டையாக்கொண்டுவானோர்
முடித்தலையுரந்தோள்கண்டமுகம்படக்குறியாவெய்தே
யடற்றனுவிஞ்சைகாட்டுமாறிருதடந்தோளண்ணல். (உகூ)

இத்திறமுலகந்தன்னிலிம்பரோடும்பரஞ்சச்
சித்தமெய்தளர்தலன்றிச்சிதைவுறுவகைமைதேர்ந்து
வித்தகவெண்ணிலாடல்வியப்பொடுபுரிந்தானாவி
முத்தர்தம்விழியினன்றிமுன்னுறுநிமலமூர்த்தி. (௩0)

ஆயதுகாலைஞாலத்தவுணர்களதனைநோக்கி
யேயிதுசெய்தார்யாரேயென்றுவிம்மிதராயெங்க
ணாயகன்வடிவந்தன்னைநனிபெரும்பவத்துட்டங்குந்
தீயவராதலாலேகண்டிலர்தியக்கமுற்றார். (௩க)

சிலபகல்பின்னும்வைகுந்திறத்தியலாயுள்கொண்டே
யுலகினிலவுணர்யாருமுறைதலினவர்க்குத்தன்மெய்
நிலைமைகாட்டாதுசெவ்வேணிலாவலுநேடியன்னோர்
மலரயன்றெரியாவண்ணன்மாயமேயினையதென்றார். (௩உ)

ஆயதோர்குமரன்செய்கையவனியின்மாக்கள்காணத்
தீயனமுறையால்வெங்கோல்செலுத்தியவவுணரெல்லா
மாய்வதுதிண்ணம்போலுமற்றதற்கேதுவாக
மேயினயிம்மிதங்கொலிதுவெனவெருவலுற்றார். (௩௩)

புவனியின்மாக்களின்னபுகறலுந்திசைகாப்பாளர்
தவனனேமதியமேனோர்சண்முகன்செய்கைநாடி
யவனுருவதனைக்காணாரவுணர்தம்வினையுமன்று
லெவரிதுசெய்தார்சொல்லென்றிரங்கினர்யாருங்கூடி. (௩௪)

தேருறுமனையதேவர்தேவர்கோன்சிலவரோடு
மேருவிலிருந்தான்போலும்வேதனுமங்கண்வைகு
மாருமங்கவர்பாலேகியறைகுதுமென்றுதேறிச்
சூரர்கோன்றனக்குமஞ்சித்துயரொடுபெயர்தலுற்றார். (௩ரு)

வடவரையும்பர்தன்னில்வானவரானோரேகி
யடைதருகின்றகாலையாறுமாமுகங்கொண்டுள்ள
கடவுள்செய்யாடனோக்கியவனுருக்காணானாகி
யிடருறுமனத்தினோடுமிருந்தவிந்திரனைக்கண்டார். (௩௬)



Digitized By Roja Muthiah Research Library

அரிதிருமுன்னரெய்தியடிதொழுதங்கண்வைகி
விரிகடலுலகின்வானின்மேவுதொன்னிலைமையாவுந்
திரிபுறவெவரோசெய்தார்தெரிந்திலமவரையீது
புரிகலரவுணர்போலும்புகுந்தவிப்புணர்ப்பென்னென்றார். (௩௭)

வானவரிறைவனன்னோர்மாற்றமங்கதனைக்கேளா
யானுமிப்பரிசுநாடியிருந்தனனிறையுந்தேரே
னானதையுணரவேண்டினனைவருமேகியம்பொன்
மேனிகொள்கமலத்தோனைவினவுதுமெழுதிரென்றான். (௩௮)

எழுதிரென்றுரைத்தலோடுமிந்திரன்முதலாவுள்ளோர்
விழியிடைத்தெரியவன்னோர்மெய்த்தவம்புரிந்தநீரா
லழிவறவுலகிலாடுமறுமுகன்வதனமொன்றிற்
குழவியதென்னவன்னகுன்றிடைத்தோன்றினால். (௩௯)

வாட்டமொடமரர்கொண்டமயக்கறத்தனதுசெய்கை
காட்டியவந்தோன்மேருக்கனவரையசைத்துக்கஞ்சத்
தோட்டிதழ்கொய்துசிந்துந்துணையெனவுயர்ந்தசெம்பொற்
கோட்டினைப்பறித்துவீசிக்குலவினன்குழவியேபோல். (௪0)

தோன்றியகுமரன்றன்னைச்சுரபதிசுரராயுள்ளோ
ரான்றதோர்திசைகாப்பாளரனைவருந்தெரிகுற்றன்னோ
வான்றரைதிரிபுசெய்தோன்மற்றிவனாகுமென்னாக்
கான்றிரியரியைநேரும்விலங்கெனக்கலங்கிச்சொல்வார். (௪௧)

வேறு.

நொய்தாங்குழவியெனக்கொள்கிலநோன்மைநாடின்,
வெய்தாமவுணக்குழுவோரினும்வெய்யன்யாரு
மெய்தாதமாயமுளனாலிவன்றன்னைவெம்போர்
செய்தாடல்கொள்வமிவனென்றுதெரிந்துசூழ்ந்தார். (௪௨)

சூழுற்றவெல்லையிமையோர்க்கிறைதொல்லைநாளிற்
காழுற்றதந்தமறவேகிவெண்காட்டிலீசன்
கேழுற்றதாளர்ச்சனைசெய்துகிடைத்துவைகும்
வேழத்தையுன்னவதுவந்ததுமேருவின்பால். (௪௩)

தந்தங்கள்பெற்றுவருகின்றதனிக்களிற்றின்
கந்தந்தனிற்போந்தடல்வச்சிரங்காமரொள்வாள்
குந்தஞ்சிலைகொண்டிகல்வெஞ்சமர்க்கோலமெய்தி
மைந்தன்றனைவானவரோடும்வளைந்துகொண்டான். (௪௪)

வன்னிச்சுடர்கால்விசையோடுமரீஇயபாங்கிற்
பன்னற்படுகுன்றவைசூழ்தருபான்மையேபோ
லுன்னற்கரியகுமரேசனையும்பர்கோனு
மின்னற்படுவானவரும்மிகல்செய்யவுற்றார். (௪௫)

தண்ணார்கமலத்துணைமாதரைத்தன்னிரண்டு
கண்ணாவுடையவுமையாடருகந்தன்வானோர்
நண்ணாரெனச்சூழ்வதுநோக்கிநகைத்தியாது
மெண்ணாதுமுன்போற்றனதாடலிழைத்தவேலே. (௪௬)

Digitized By Roja Muthiah Research Library

எட்டேயொருபான்படைதம்முளொறிவவெல்லாந்
தொட்டேசடவுட்படைதன்ளெடுந்தூர்த்தலோடு
மட்டேறுபோதிற்படுகின்றுழிவச்சிரத்தை
விட்டேதெழித்தான்குமரன்மிசைவேள்விவேந்தன். (௪௭)

வயிரத்தனிவெம்படையெந்தைதன்மார்புநண்ணி
யயிரிற்றுகளாய்விளிவாகவதனைநோக்கித்
துயரத்தழுங்கவிமையோரிறைதொல்லைவேழஞ்
செயிருற்றியம்பிமுருகேசன்முன்சென்றதன்றே. (௪௮)

செல்லுங்கரிகண்டுமையாண்மகன்சிந்தையாலோர்
வில்லுங்கணைகள்பலவும்விரைவோடுநல்கி
யொல்லென்றிடநாஞ்ஞலிசெய்துயர்சாபம்வாங்கி
யெல்லொன்றுகோலொன்றதனெற்றியுளேகவுய்த்தான். (௪௯)

அக்காலையில்வேள்செலுத்துங்கணையண்டர்தம்மின்
மிக்கானயிராவதநெற்றியுண்மேவிவல்லே
புக்காவிகொண்டுபுறம்போதப்புலம்பிவீழா
மைக்கார்முகிலச்சுறவேயதுமாண்டதன்றே. (௫௦)

தன்னோர்களிறுமடிவெய்தலுந்தானவேந்த
னன்னோவெனவேயிரங்காவயல்போகின்று
மின்னேறுறழ்தன்சிலைதன்னைவெகுண்டுவாங்க
முன்னோன்மதலையொருகோலவன்மொய்ம்பிலெய்தான். (௫௧)

கோலொன்றுவிண்ணோர்க்கிறைமேற்குமரேசனுய்ப்ப
மாலொன்றுநெஞ்சன்வருந்திப்பெருவன்மைசிந்திக்
காலொன்றுசாபத்தொழினீத்தனன்கையிலுற்ற
வேலொன்றதனைக்கடிதேகுகன்மீதுவிட்டான். (௫௨)

குந்தப்படையோர்சிறுபுற்படுகொள்கையேபோல்
வந்துற்றிடவற்புதமெய்தினர்மற்றைவானோர்
கந்தக்கடவுள்சிலையிற்கணையொன்றுபூட்டித்
தந்திக்கிறைவன்றடம்பொன்முடிதள்ளியார்த்தான். (௫௩)

துவசந்தனையோர்கணைகொண்டுதுணித்துமார்பிற்
கவசந்தனையோர்கணையாற்றுகள்கண்டுவிண்ணோ
னவசம்படவேழ்கணைதூண்டினனூழிவேண்டிச்
சிவசங்கரவென்றரிபோற்றியசெம்மன்மைந்தன். (௫௪)

ஈங்காகியவோரெழுவாளியுஞ்செல்லமார்பி
னுங்காரமிக்கமகவானயர்வாகிவீழ்ந்தா
னோங்காரமேலைப்பொருண்மைந்தனையும்பரேனோர்
பாங்காய்வளைந்துபொருதார்படுகின்றதோரார். (௫௫)

இவ்வாறமரர்பொருமெல்லையிலீசன்மைந்தன்
கைவார்சிலையைக்குனித்தேகணைநான்குதூண்டி
மெய்வாரிதிகட்கிறைவன்றனைவீட்டிமற்று
மைவாளியினூற்சமனூற்றலடக்கினானல். (௫௬)

Digitized By Roja Muthiah Research Library

ஓரம்பதனான்மதிதன்னையுமொன்றிரண்டு
கூரம்பதனாற்கதிர்தன்னையுங்கோதின்மைந்த
னீரம்பதனாலனிலத்தையுமேவுமூன்றால்
வீரம்பகர்ந்தகனலோனையும்வீட்டிநின்றான். (௫௭)

நின்றாரெவருங்குமரேசனிலைமைநோக்கி
யின்றாரையுமற்றிவனேயடுமென்றுதேறி
யொன்றானசிம்புள்விறல்கண்டரியுட்கியோடிச்
சென்றாலெனவேயிரிந்தோடினர்சிந்தைவிம்மி. (௫௮)

ஓடுஞ்சுரர்கடிறநோக்கியுதிக்கும்வெய்யோ
னீடுங்கதிர்கணிலவைத்துரக்கின்றதேபோ
லாடுங்குமரனவரைத்துரந்தண்டர்முன்னர்
வீடுங்களத்தினிடையேதனிமேவிநின்றான். (௫௯)

ஒல்லாதவரிற்பொருதேசிலவும்பர்வீழ
நில்லாதுடைந்துசிலதேவர்கணீங்கநேரில்
வில்லாளியாகித்தனிநின்றவிசாகன்மேனா
ளெல்லாரையுமட்டிலவுந்தனியீசனொத்தான். (௬0)

வேறு.

சுரர்கள்யாருந்தொலைந்திடவென்றுதா, னொருவனாகியுமைமகன்மேவுழி
யருளினாரதனச்செயல்கண்டுவான், குருவையெய்திப்புகுந்தனகூறினான். (௬௧)

நற்றவம்புரிநாரதன்கூற்றினை, யற்றமில்லுணர்வந்தணன்கேட்டெழீஇ
யிற்றதேகொலிமையவர்வாழ்வெனாச், சொற்றுவல்லைதுயருழந்தேகினான். (௬௨)

ஆதபன்மதியண்டர்தமக்கிறை, மாதிரத்தவர்மால்கரிதன்னுடன், சாதல்கொண்
டசமர்க்களந்தன்னிடைப், போதன்மேயினன்பொன்னெனும்பேரினான். (௬௩)

ஆவியின்றியவர்மறிகுற்றது, தேவராசான்றெரிந்துபடருறாத்
தாவிலேர்கெழுசண்முகனவ்விடை, மேவியாடும்வியப்பினைநோக்கினான். (௬௪)

முழுதுணர்ந்திடுமொய்சுடர்ப்பொன்னவ, னெழுதொணாதவெழினலந்தாங்கியோர்
குழவிதன்னுருக்கொண்டகுமரனைத், தொழுதுநின்றுதுதித்திதுசொல்லுவான். ௬௫

வேறு.

கரியரிமுகத்தினன்கடியசூரனென்
றுரைபெறுதானவரொறுப்பவல்கலும்
பருவரலுழந்துதன்பதிவிட்டிப்பெரு
வரையிடைமகபதிமறைந்துவைகினான். (௬௬)

அன்னவனின்னடியடைந்துநிற்கொடே
துன்னலர்தமதுயிர்தொலைத்துத்தொன்மைபோற்
றன்னரசெய்தவுந்தலைவனாகவு
முன்னினன்பிறிதுவேறொன்றுமுன்னலான். (௬௭)

பற்பகலருந்தவம்பயின்றுவாடினன்
றற்பரசரவணத்தடத்திற்போந்தவுன்
னாற்பவநோக்கியேயுவகைபூத்தனன்
சொற்படுதுயரெலாந்தொலைத்துளானென. (௬௮)

Digitized By Roja Muthiah Research Library

கோடலுமராத்தொடுகுரவுஞ்செச்சையுஞ்
சூடியகுமரநின்றொழும்புசெய்திட
நேடுறுமிந்திரனீயித்தன்மையி
னுடல்செய்திடுவதையறிகிலானரோ. (கூகூ)

நாரணன்முதலினோர்நாடிக்காணொணு
வாரணமுதல்வனுமுமையுமன்னவர்
சீரருளடைந்தனர்சிலருமல்லதை
யாருனதாடலையறியுநீரினர். (எ0)

பற்றியதொடர்பையுமுயிரையும்பகுத்
திற்றெனவுணர்கிலமேதந்தீர்கிலஞ்
சிற்றுணர்வுடையதோர்சிறியம்யாமெலா
முற்றுனதாடலையுணரவல்லமோ. (எக)

ஆதலால்வானவர்க்கரசனுற்றவு
மோதிதானின்மையாலுன்றனுடலைத்
தீதெனவுன்னிவெஞ்செருவிழைத்தன
னீதிசேர்தண்டமேநீபுரிந்ததனை. (எஉ)

மற்றுளதேவருமலைந்துதம்முயி
ரற்றனரவர்களுமறிவிலாமையாற்
பெற்றிடுங்குரவரேபிழைத்தமைந்தரைச்
செற்றிடினெவரருள்செய்யற்பாலினோர். (எ௩)

சின்மயமாகியசெம்மல்சிம்புளாம்
பொன்மலிசிறையுடைப்புள்ளினுயகன்
வன்மைகொள்விலங்கினைமாற்றலல்லது
மின்மினிதனையடல்விசயமாகுமோ. (எச)

ஒறுத்திடுமவுணர்களொழியவேரொடு
மறுத்தருளுணர்விலாவளியருன்னடி
மறத்தலிலன்பினர்மற்றின்னோர்பிழை
பொறுத்தருள்கருணையாற்புணரிபோன்றுளாய். (எரு)

பரமுறவணிகரைப்பரித்துப்பல்வளந்
தருகலங்கவிழ்ந்திடச்சாய்த்துமற்றவ
ரொருதலைவிளிதல்போலுன்னிற்பெற்றிடுந்
திருவினர்பொருதுனைச்செருவிற்றுஞ்சினர். (எசு)

தொழுதகுநின்னடித்தொண்டராற்றிய
பிழையதுகொள்ளலைபெருமசிந்தையு
ளழிதருமினையவரறிவுபெற்றிவ
ணெழுவகையருளெனவிறைஞ்சிக்கூறினன். (எஎ)

பொன்னவனின்னனபுகன்றுவேண்டிட
முன்னவர்முன்னவன்முறுவல்செய்துவான்
மன்னவனுதியர்மால்களிற்றொடு
மந்நிலையெழும்வகையருள்செய்தானரோ. (எஅ)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

அந்தியின்வனப்புடையமெய்க்குகனெழுப்புதலுமன்னபொழுதே
யிந்திரனுமாதிரவரைப்பினரும்வானவரும்யாவருமெழாஅச்
சிந்தைதனின்மெய்யுணர்வுதோன்றுதலுமுன்புரிசெயற்கையுணராக்
கந்தனொடுகொல்சமர்புரிந்ததெனவுன்னினர்கலங்கியெவரும். (எகூ)

கலங்கினரிரங்கினர்கலுழ்ந்தனர்புலர்ந்தனர்கவன்றனருள
மலங்கினர்விடந்தனையயின்றவரெனும்படிமயர்ந்தனலிசே
நலங்கென * வுலைந்தனரொடுங்கினர்நடுங்கினருரந்தனையிழந்
திலங்கெழின்முகம்பொலிவிகந்தனர்பொருந்தமையிகழ்ந்தனர்களே. (அ0)

துஞ்சியெழுமன்னவர்களேழுலகுமுன்னுதவுசுந்தரிதரு
மஞ்சனருளோடுவிளையாடுவதுகாண்டலும்வணங்கியனையான்
செஞ்சரணிரண்டினையுமுச்சிகொடுமோயினர்சிறந்தலர்துணைக்
கஞ்சமலரிற்பலநிறங்கொளளரியின்றொகைகவைஇயதெனவே. (அக)

கந்தநமவைந்துமுகர்தந்தமுருகேசநமகங்கையுமைதன்
மைந்தநமபன்னிருபுயத்தநமநீபமலர்மாலைபுனையுந்
தந்தைநமவாறுமுகவாதிநமசோதிநமதற்பரமதா
மெந்தைநமவென்றுமிளையோய்நமகுமாரநமவென்றுதொழுதார். (அஉ)

பொருந்துதலையன்புடனெழுந்தவர்களிவ்வகைபுகழ்ந்துமனமே
லரந்தைகொடுமெய்ந்நடுநடுங்குதலுமன்னதையறிந்துகுமரன்
வருந்தலிர்வருந்தலிரெனக்கருணைசெய்திடலுமற்றவர்கடாம்
பெருந்துயருமச்சமுமகன்றுதொழுதேயினையபேசினர்களால். (அங)

ஆயவமுதத்தினொடுநஞ்சளவியுண்குநரையவ்விடமலாற்
றூயவமுதோவுயிர்தொலைக்குமதுபோலுனதுதொல்லருளினா
லேயதிருவெய்திடவிருந்தனமுன்னோடமரியற்றியதனா
னீயெமைமுடித்தியலையன்னதவறெம்முயிரைநீக்கியதரோ. (அச)

பண்டுபரமன்றனையிகழ்ந்தவன்மகத்திலிடுபாகமதியா
முண்டபவமின்னமுமுடிந்திலவதன்றியுமுனைப்பொருதுநேர்
கொண்டிகல்புரிந்தனமளப்பில்பவம்வந்தகுமரேசவெமைநீ
தண்டமுறைசெய்தவைதொலைத்தனையுளத்துடையதண்ணளியினால். (அரு)

ஆதலினெமக்கடிகள்செய்தவருளுக்குநிகராற்றுவதுதா
னேதுளதுமற்றெமையுனக்கடியராகவிவணீதுமெனினு
மாதிபரமாகியவுனக்கடியம்யாம்புதிதளிப்பதெவனோ
தாதையர்பெறச்சிறுவர்தங்களையவர்க்கருள்கைதக்கபரிசோ. (அசு)

அன்னதெனினுந்தெளிவில்பேதையடியேம்பிழையனைத்துமுளமே
லுன்னலைபொறுத்தியெனவேகுமரவேளவையுணர்ந்துநமைநீர்
முன்னமொருசேயெனநினைந்துபொருதீர்நமதுமொய்ம்புமுயர்வு
மின்னுமுணரும்படிதெரித்துமெனவோருருவமெய்தினனரோ. (அஎ)

எண்டிசையுமீரெழுதிறத்துலகுமெண்கிரியுமேழுகடலுந்
தெண்டிரையுநேமிவரையும்பிறவும்வேறுதிரிபாகியுளசீ
ரண்டநிரையானவுமனைத்துயிருமெப்பொருளுமாகியயனும்
விண்டுமரனுஞ்செறியவோருருவு 0 கொண்டனன்விறற்குமரனே. (அஅ)

---

* உலங்கு - கொசுகு.

0 இவ்வுருவம் பாரமேசுவரரூபமெனவும் விசுவரூபமெனவும் பெயர்பெறும்.

Digitized By Roja Muthiah Research Library

மண்ணளவுபாதலமெலாஞ்சரண, மாதிரவரைப்புமிகுதோள்,
விண்ணளவெலாமுடிகள், பேரொளி * யெலாநயன, மெய்ந்நடுவெலாம்,
பண்ணளவுவேதமணிவா, யுணர்வெலாஞ்செவிகள், பக்கமயன்மா
லெண்ணளவுசிந்தையுமை, யைந்தொழிலுநல்கியருளீசனுயிரே. (அகூ)

ஆனதொருபேருருவுகொண்டுகுமரேசனுறவண்டர்பதியு
மேனையருமற்புதமிதற்புதமிதென்றுதொழுதெல்லவருமாய்
வானமிசைநோக்கினர்கண்மெய்வடிவம்யாவையும்வனப்புமுணரார்
சானுவளவாவரிதுகண்டனர்புகழ்ந்தினையசாற்றினர்களால். (கூ0)

வேறு.

சேணலம்வந்தசோதிச்சிற்பரமுதல்வவெம்முன்
மாணலமுறநீகொண்டவான்பெருங்கோலந்தன்னைக்
காணலமடியேங்காணக்காட்டிடல்வேண்டுமென்ன
நீணலங்கொண்டுநின்றநெடுந்தகையதனைக்கேளா. (கூக)

கருணைசெய்தொளிகண்மிக்ககண்ணவர்க்கருளிச் 0 செவ்வே
ளருணமார்பரிதிப்புத்தேளநந்தகோடிகள்சேர்ந்தென்னத்
தருணவில்வீசிநின்றதனதுருமுற்றுங்காட்ட
விரணியவரைக்கணின்றவிந்திரன்முதலோர்கண்டார். (கூஉ)

அடிமுதன்முடியின்காறுமறுமுகனுருவமெல்லாங்
கடிதவனருளானோக்கிக்கணிப்பிலாவண்டமுற்று
முடிவறுமுயிர்கள்யாவுமூவருந்தேவர்யாரும்
வடிவினிலிருப்பக்கண்டுவணங்கியேவழுத்திச்சொல்வார். (கூங)

அம்புவிமுதலாம்பல்பேரண்டமுமங்கங்குள்ள
வும்பருமுயிர்கள்யாவுமுயிரலாப்பொருளுமானுஞ்
செம்பதுமத்தினோனுஞ்சிவனொடுஞ்செறிதல்கண்டோ
மெம்பெருமானின்மெய்யோவகிலமுமிருப்பதம்மா. (கூச)

அறிகிலமிந்நாள்காறுமகிலமுநீயேயாகி
யுறைதருதன்மைநீவந்துணர்த்தலினுணர்ந்தாமன்றே
பிறவொருபொருளுங்காணேம்பெருமநின்வடிவமன்றிச்
சிறியம்யாமுனதுதோற்றந்தெரிந்திடவல்லமோதான். (கூரு)

முண்டகனொருவன்றுஞ்சமுராரிபேருருவாய்நேமிக்
கண்டுயிலகந்தைநீங்கக்கண்ணுதற்பகவனெல்லா
வண்டமுமணிப்பூணாரமாகவேயாங்கோர்மேனி
கொண்டனனென்னுந்தன்மைகுமரநின்வடிவிற்கண்டேம். (கூசு)

நாரணன்மலரோன்பன்னாடவுந்தெரிவின்றாகிப்
பேரழலுருவாய்நின்றபிரான்றிருவடிவேபோலுன்
சீருருவுற்றதம்மாதெளிகிலரவருமெந்தை
யாரருளெய்தினம்போலடிமுடிதெரிந்திடாரோ. (கூஎ)

அரியொடுகமலத்தேவுமாடல்செய்தகிலந்தன்னோ
டொருவரையொருவர்நுங்கியுந்தியான்முகத்தானல்கி
யிருவருமிகலுமெல்லையெடுத்தபேருருநீகொண்ட
திருவுருவிதனுக்காற்றச்சிறியனபோலுமன்றே. (கூஅ)

* இங்கே ஒளியென்றது சோமசூரியாக்கினியை.
0 மாமிசநேத்திரமன்றித் திவ்வியநேத்திரங்கொடுத்தருளினர்.

Digitized By Roja Muthiah Research Library

ஆகையாலெம்பிரானீயருவுருவாகிநின்ற
வேகநாயகனேயாகுமெமதுமாதவத்தாலெங்கள்
சோகமானவற்றைநீக்கிச்சூர்முதறடிந்தேயெம்மை
நாகமேலிருத்துமாற்றானண்ணிணைகுமரனேபோல். (கூகூ)

எவ்வுருவினுக்குமாங்கோரிடனதாயுற்றவுன்றன்
செவ்வுருவதனைக்கண்டுசிறந்தனமறம்பாவத்தி
னவ்வுருவத்தின்றுப்புமகலுதுமின்னும்யாங்கள்
வெவ்வுருவத்திற்செல்லேம்வீடுபேறடைதுமன்றே. (க00)

இனையனவழுத்திக்கூறியிலங்கெழிற்குமரமூர்த்தி
தனதுபேருருவைநோக்கிச்சதமகன்முதலாவுள்ளோர்
தினகரன்மலர்ச்சிகண்டசில்லுணர்வுயிர்களென்ன
மனமிகவெருவக்கண்களலமரமயங்கிச்சொல்வார். (க0க)

எல்லையிலொளிபெற்றன்றாலெந்தைநின்னுருவமின்னு
மொல்லுவதன்றாற்காணவொளியிழந்துலைந்தகண்க
ளல்லதும்பெருமைநோக்கியஞ்சுதுமடியமுய்யத்
தொல்லையினுருவங்கொண்டுதோன்றியேயளித்தியென்றார். (க0உ)

என்றிவைபுகன்றவேண்டவெம்பிரானருளால்வான்போய்
நின்றபேருருவந்தன்னைநீத்தறுமுகத்தோனாகித்
தொன்றுளவடிவத்தோடுதோன்றலுந்தொழுதுபோற்றிக்
குன்றிருஞ்சிறைகளீர்ந்தகொற்றவன்கூறலுற்றான். (க0ங)

தொன்னிலைதவாதுவைகுஞ்சூரனேமுதலாவுள்ள
வொன்னலருயிரைமாற்றியும்பரும்யானும்பாங்கர்
மன்னிநின்றேவல்செய்யவானுயர்துறக்கநண்ணி
யென்னரசியற்றியெந்தாயிருத்தியென்குறையீதென்றான். (க0ச)

இகமொடுபரமும்வீடுமேத்தினர்க்குலப்புறாம
லகனமருளானல்குமறுமுகத்தவற்குத்தன்சீர்
மகபதியளிப்பான்சொற்றவாசகஞ்சுடரொன்றங்கிப்
பகவனுக்கொருவனல்கப்பராவியபோலுமாதோ. (க0ரு)

வானவர்கோனைநோக்கிவறிதுறநகைத்துச்செவ்வே
ணீநமக்களித்ததொல்சீர்நினக்குநாமளித்துநீவிர்
சேனைகளாகநாமேசேனையந்தலைவனாகித்
தானவர்கிளையையெல்லாம்வீட்டுதுந்தளரேலென்றான். (க0சு)

கோடலங்கண்ணிவேய்ந்தகுமரவேளினையகூற
வாடியல்கடவுள்வெள்ளையடற்களிற்றண்ணல்கேளா
வீடுறவவுணரெல்லாம்வியன்முடிதிருவினோடுஞ்
சூடினனென்னப்போற்றிச்சுரரொடுமகிழ்ச்சிகொண்டான். (க0எ)

அறுமுகத்தேவைநோக்கியமரர்கோனிந்தவண்டத்
துறைதருவரைகணேமியுலகுயிர்பிறவுநின்றான்
முறைபிறழ்ந்தனவாலிந்நாண்முன்புபோலவற்றையெல்லா
நிறுவுதியென்னவேலோடுநகைத்திவைநிகழ்த்தலுற்றான். (க0அ)

Digitized By Roja Muthiah Research Library

இன்னதோரண்டந்தன்னிலெம்மில்வேறற்றவெல்லாந்
தொன்னெறியாகவென்றோர்தூமொழிகுமரன்கூற
முன்னுறுபெற்றித்தானமுறையிறந்திருந்ததெல்லா
மந்நிலையெவருநோக்கியற்புதமடைந்துநின்றார். (க௦கூ)

வேறு.

சிற்குமெல்லையினிலத்திடையாகிட், பொற்கெனத்திகழ்பொருட்பிடைமேவுஞ்
சிற்குணக்குரிசில்சேவடிதாழூஉச், சொற்கநாடுளசுரேசனுரைப்பான். (ககO)

ஆண்டகைப்பகவவாரணமெய்நூல், பூண்டநின்னடிகள்பூசனையாற்ற
வேண்டுகின்றனம்விளையேமது செய்ய, வீண்டுநின்னருளையீகுதியென்றான். (ககக)

என்னலுங்குகனிசைந்துநடந்தே, பொன்னிறவுயர்பொருப்பினைநீங்கித்
தன்னதொண்கயிலைசார்ந்திடுஞாங்கர், மன்னிநின்றதொருமால்வரைபுக்கான். ()

குன்றிருஞ்சிறைகுறைத்தவனேறு, ரொன்றியேதொழுதவப்புளமெய்தி
யென்றுநல்லிளையனாகியவெங்கோன், பின்றொடர்ந்தனர்பிறங்கலில்வந்தார். ()

சூரல்பம்புதுறுகன்முழைகொண்ட, சாரல்வெற்பினிடைசண்முகன்மேவ
வாரும்விண்ணவரவன்கழறன்னைச், சீரிதர்ச்சனைசெயற்குமுயன்றார். (ககச)

அந்தவேலையமரர்க்கிறைதங்கண், முந்துகம்மியனைமுன்னுறவன்றன்
வந்துகைதொழலுமர்திரமொன்று, நந்தமாநகரினல்கிவனென்றான். (ககரு)

அருக்கர்தந்தொகையனைத்தையுமொன்று, வருக்கியாற்றியெனவொண்மணித
ன்னுற், றிருக்கிளர்ந்துலவுசெய்யதொர்கோயில், பொருக்கெனப்புனைவர்கோன்
புரிகுற்றான். (ககசா)

குடங்கர்போன்மகுடங்கெழுவுற்ற, விடங்கொள்கோபுரவிருக்கையினுப்பண்
கடங்கலுழ்ந்திடுகரிக்குருகுன்னூ, மடங்கல்கொண்டதொர்மணித்தவிசீந்தான். ()

ஈந்தவெல்லைதனிலிந்திரனேவப், போந்துவானெறிபுகுந்திடுநாகீர்
சாந்தமாமலர்த●புகையாதி, யாய்ந்துதந்தனர்களண்டர்கள்பல்லோர். (ககஅ)

வேறு.

அன்னகாலையிலண்டர்கண்மேலையோன், சென்னியாறுடைத்தேவனைவந்தியா
வுன்னதாளருச்சித்தியாமுய்ந்திட, விந்நிகேதனமேகுதியென்றான். (கககூ)

கூற்றமன்னதுட்கொண்டுவிண்ணோரெலாம், போற்றமந்திரம்புக்குநனந்தலை
யேற்றரித்தொகையேந்தெழிற்பீடமேல்,வீற்றிருந்தனன்வேதத்தின்மேலையோன்.

ஆனகாலையமரர்கள்வாசவன், ஞானநாயகநாங்களுனக்கொரு
தானையாகுந்தலைவனையென்று, வானநீத்தத்துமஞ்சனமாட்டினார். (கஉக)

நோதுமல்பெற்றிடுநுண்டுகில்சூழ்ந்தனர், முதியசர்தமுதலமட்டித்தனர்
கதிரு * நன்பொற்கலன்வகைசாத்தினர்,மதுமலர்த்தொகைமாலிகைசூட்டினார்.()

ஐவகைப்படுமாவியும்பாளித, மெய்விளக்கமும்வேறுளபான்மையு
மெவ்வெவர்க்குமிறைவற்குரால்கியே, செவ்விதர்ச்சனைசெய்தனரென்பவே.(கஉங)

புரந்தரன்முதற்புங்கவர்தம்முளத், தரந்தைநீங்கவருச்சனைசெய்துபின்
பரிந்துதாழ்ந்துபரவலுமாயிடைக், கரந்துவள்ளல்கயிலையிற்போயினான். (கஉச)

* கதிரும் - பெயரெச்சம்.

வெற்பின்மிக்குயர்வெள்ளியம்பொற்றையிற், சிற்பரன்மறைந்தேகலுந்தேவரும்
பொற்பின்மேதகுபொன்னகரண்ணலு, மற்புதத்துடனவ்வரைநீங்கினர். (௧௨௫)

ஈசன்மைந்தனிலையனிமையவர், பூசைசெய்யப்பொருந்தலினவ்வரை
மாசில்கந்தவரையெனயாவரும், பேசவாங்கொர்பெயரினைப்பெற்றதே. (௧௨௬)

ஆனகந்தவடுக்கலைத்தீர்ந்துபோய், வானமன்னன்மனுவதிநண்ணினு
னேனைவானவர்யாவருமவ்வவர், தானமெய்தினர்தொன்மையிற்றங்கினர். (௧௨௭)

உயவ * லூர்திகொண்டொய்யெனமுன்னரே, கயிலையங்கிரியேகியகந்தவேள்
பயிலும்வீரரும்பாரிடமள்ளரு, மயலின்மேவரவாயிடைவைகினன். (௧௨௮)

திருவிளையாட்டுப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௧௭௯.

---

# தகரேறுபடலம்.

சூரன்முதலோருயிர்தொலைக்கவருசெவ்வே
ளாருமகிழ்வெள்ளியசலத்தினமர்போழ்தின்
மேருவிலுடைப்பரன்விரும்பவகிலத்தே
நாரதனோர்வேள்வியைநடாத்தியிடலுற்றான். (௧)

மாமுனிவருஞ்சுரருமாநிலவரைப்பிற்
றேமறுதவத்தினுயர்தொல்லைமறையோரு
மேமமொடுசூழ்தரவியற்றியமகத்திற்
றீமிசையெழுந்ததொருசெக்கர்புரைசெச்சை. (௨)

அங்கிதனில்வந்ததகராற்றுமகந்தன்னி
னங்களினமேபலவுநாளுமடுகின்றா
ரிங்கிவரையானடுவனென்றிசைவுகொண்டே
வெங்கனலையேந்துபரி ० மீதெழுதல்போலும். (௩)

மாருதமுமூழிதனில்வன்னியும்விசும்பிற்
பேருமுருமேறுமொருபேருருவுகொண்டே
யாருவதுபோல்விரைவுமத்தொளி † யுமார்ப்புஞ்
சேரவெழுமேடமடுசெய்கைநினைந்தன்றே. (௪)

கல்லெனமணித்தொகைகளத்தினிடைதூங்கச்
சில்லரிபெய்கிங்கிணிசிலம்படிபுலம்ப
வல்லைவருகின்றதகர்கண்டுமகத்துள்ளோ
ரெல்லவருமச்சமொடிரிந்தனர்களன்றே. (௫)

இரிந்தவர்கள்யாவரையுமிப்புவியும்வானுந்
துரந்துசிலர்வீழ்ந்துதொலைவாகநனிதாக்கிப்
பரந்ததரைமால்வரைபராகமெழவோடித்
திரிந்துயிர்வருந்தவடல்செய்ததுசெயிர்த்தே. (௬)

எட்டுளதிசைக்கரியிரிந்தலறியேங்கக்
கிட்டியெதிர்தாக்குமதிகேழ்கிளருமானத்
தட்டிரவிதேரொடுதகர்ந்துமுரிவாக
முட்டுமவர்தம்பரியைமொய்ம்பினொடுபாயும். (௭)

* உயவல்-எண்ணம். ० கனலையேந்துபரி-ஆட்டுக்கடா. † அத்தொளி-செவ்வொளி.

Digitized By Roja Muthiah Research Library

இனையவகையாற்றகரியாண்டுமுலவுற்றே
சினமொடுயிர்கட்கிறுதிசெய்துபெயர்காலை
முனிவர்களுநாரதனுமொய்ம்புமிகுவானோ
ரனைவர்களுமோடினரருங்கயிலைபுக்கார். (அ)

ஊறுபுகவன்னவருலைந்துகயிலைக்க
ணேறிவருகாலையிலிலக்கமுடனென்பான்
வீறுதிறல்வீரரொடுமேவியுலவுற்றே
யாறுமுகவண்ணல்விளையாடலதுகண்டார். (௯)

ஈசனிடைநண்ணுகிலமீண்டுகுமரேச
னேசமொடுநந்துயரநீக்கவெதிர்வந்தா
னுசிறுவனல்லனிவனண்டர்பலரோடும்
வாசவனைவென்றுயிரைமாற்றியெழுவித்தான். (௧0)

எங்குறைமுடித்திடலிவற்கெளிதுநாமிப்
புங்கவனொடுற்றதுபுகன்றிடுதுமென்னாத்
தங்களிலுணர்ந்துசுரர்தாபதர்கள்யாரு
மங்கவன்முனேகினருந்துதிகள்செய்தே. (௧௧)

வந்துபுகழ்வானவருமாமுனிவர்தாமுந்
தந்திமுகவற்கிளவறன்னடிவணங்கக்
கந்தனவர்கொண்டதுயர்கண்டுமிகநீவிர்
நொந்தனிர்புகுந்ததுநுவன்றிடுதிரென்றான். (௧௨)

கேட்டியிளையோய்மறைகிளத்துமொருவேள்வி
வேட்டனமியாங்களதுவேலையிடைதன்னின்
மாட்டுகனலூடொருமறித்தகரெழுந்தே
யீட்டமுறுமெம்மையடவெண்ணியதையன்றே. (௧௩)

ஆடெழுகிளர்ச்சியையறிந்துமகம்விட்டே
யோடியிவணுற்றனமுருத்ததுதரந்தே
சாடியதுசிற்சிலவர்தம்மையதனாலே
வீடியதளப்பிலுயிர்விண்ணினொடுமண்மேல். (௧௪)

நீலவிடமன்றிதுநிறங்குலவுசெக்கர்க்
கோலவிடமேயுருவுகொண்டதயமேபோ
லோலமிடவெங்குமுலவுற்றதுயிரெல்லாங்
கால்முடிவெய்துமொருகன்னன்முடிமுன்னம். (௧௫)

சீற்றமொடுயிர்க்கிறுதிசெய்துலவுமேடத்
தாற்றலையடக்கியெமதச்சமுமகற்றி
யேற்றகுறைவேள்வியையுமீறுபுரிவித்தே
போற்றுதியெனத்தொழுதுபோற்றிசெயும்வேலை. (௧௬)

எஞ்சுமவர்தம்மையிளையோன்பரிவினோக்கி
யஞ்சல்விடுமின்களெனவங்கையதமைத்தே
தஞ்சமெனவேபரவுதன்பரிசனத்துண்
மஞ்சுபெறுமேனிவிறல்வாகுவொடுசொல்வான். (௧௭)

Digitized By Roja Muthiah Research Library

மண்டிகனல்வந்திவர்மகந்தனையழித்தே
யண்டமொடுபாருலவியாருயிர்கடம்மை
யுண்டுதிரிசெச்சைதனையொல்லைகுறுகுற்றே
கொண்டணைதியென்றனையகுமாரனுரைசெய்தான். (கஅ)

வேறு.

குன்றெழுகதிர்போன்மேனிக்குமரவேளினையகூற
மன்றலந்தடந்தோள்வீரவாகுவாந்தனிப்பேர்பெற்றா
னன்றெனவிசைந்துகந்தனுண்மலர்ப்பாதம்போற்றிச்
சென்றனன்கயிலைநீங்கிச்சினத்தகர்தேடலுற்றான். (ககூ)

மண்டலநேமிசூழுமாநிலமுற்றுநாடிக்
கண்டிலனாகிச்சென்றேழ்பிலத்தினுங்காணகில்லா
னண்டர்தம்பதங்கணாடியயன்பதமுன்னதாகத்
தண்டளிர்ச்செக்கர்மேனித்தகர்செலுந்தன்மைகண்டான். (உ0)

ஆடலந்தொழின்மேல்கொண்டேயனைவருமிரியச்செல்லு
மோடமஞ்சுறவேயார்த்துவிரைந்துபோய்வீரவாகு
கோடவைபற்றியீர்த்துக்கொண்டேராய்க்கயிலைநண்ணி
பேடுறுநீபத்தண்டாரிளையவன்முன்னருய்த்தான். (உக)

உய்த்தனன்வணங்கிநிற்பவுளமகிழ்ந்தருளித்தேவர்
மெய்த்தவர்தொகையைநோக்கியேழகமேவிற்றெம்பா
லெய்த்தினிவருந்துகில்லீர்யாருநீர்புவனியேகி
முத்தழல்கொடுமுன்செய்தவேள்வியைமுடித்திரென்றான். (உஉ)

ஏர்தருகுமரபுத்தேளிவ்வகையிசைப்பவன்னோர்
கார்தருகண்டத்தெந்தைகாதலவேள்வித்தீயிற்
சேர்தருதகரினைறைச்சிறியரேமுய்யுமாற்றா
லூர்தியதாகக்கொண்டேயூர்ந்திடல்வேண்டுமென்றார். (உங)

என்னலுந்தகரையற்றேயானமாக்கொள்வம்யாமேல்
முன்னியமகத்தைநீவிர்முடித்திரென்றருளயார்க்கு
நன்னயமாடல்செய்யுநாரதன்முதலோர்யாரு
மன்னதோர்குமரனெந்தையடிபணிந்தருளாற்போந்தார். (உச)

நலையில்சீர்முனிவர்தேவர்நாப்பணாரதனென்றன்னோன்
புவிதனில்வந்துமுற்றப்புரிந்தனன்முன்னர்வேள்வி
யவர்புரிதவத்தினீரலன்றுதொட்டமலமூர்த்தி
யுவகையாலினையமேடமூர்ந்தனனூர்தியாக. (உரு)

தகரேறுபடலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம் க,உ0ச.

---

# அயனைச்சிறைபுரிபடலம்.

மேடமூர்தியாகவுய்த்துவிண்ணுமண்ணுமுருகவே
ளாடல்செய்துலாவிவெள்ளியசலமீதிலமர்தரு
நீடுநாளிலொருபகற்கணெறிகொள்வேதன்முதலினோர்
நாடியீசனடிவணங்கவேகுவாரைக்கண்ணினான். (க)

Digitized By Roja Muthiah Research Library

ஏறுதியானெனுஞ்செருக்கிகந்துதன்னுணர்ந்துளார்
மறுதிகொண்டசெய்கைதாங்கிமரபின்முத்திவழிதரு
மறுதியீசனடிவணங்கியருளடைந்துமற்றவன்
றறுதுமன்றநீங்கிவாயில்சாருகின்றவேலையில். (உ)

ஒன்பதோடிலக்கமானவணிகவீரருண்மகிழ்ந்
தன்பினோடுசூழ்ந்துபோற்றவமலனம்பொனாலய
முன்புநீடுகோபுரத்துண்முழுமணித்தலத்தின்மே
லின்பொடாடிவைகினனிராறுதோள்படைத்துளான். (௩)

அங்கண்வைகுமுருகனம்பனடிவணங்கிவந்திடும்
புங்கவர்க்குளாதியாயபோதனைநோக்குறு
விங்குநம்முன்வருதியாலெனாவிளிப்பவேகியே
பங்கயாசனத்தினோன்பணிந்திடாதுதொழுதலும். (௪)

ஆதிதேவனருளுமைந்தனவனுளத்தைநோக்கியே
போதனேயிருக்கெனப்புகன்றிருத்திவைகலு
மேதுநீபுரிந்திடுமியற்கையென்னநான்முக
னேதனையாலனைத்துநான்படைப்பனென்றனன். (௫)

வேறு.

முருகவேளதுகேட்டலுமுறுவல்செய்தருளித்
தரணிவானுயிர்முழுவதுந்தருதியேயெனிற்
சுருதியாவையும்போகுமோமொழிகெனத்தொல்சீர்ப்
பிரமனென்பவனித்திறம்பேசுதலுற்றான். (௬)

ஐயகேளெனையாதிகாலந்தனிலளித்த
மையுலாவருகளத்தினனளப்பிலாமறைகள்
செய்யவாகமம்பற்பலபுரிந்ததிற்சிலயா
னுய்யுமாறருள்செய்தனனவையுணர்ந்துடையேன். (௭)

என்றுநான்முகனிசைத்தலுமவற்றினுளிருக்கா
மொன்றுநீவிளம்புதியெனமுருகவேளுரைப்ப
நன்றெனுமறையெவற்றிற்குமாதியினவில்லா
னின்றதோர்தனிமொழியைமுன்னோதினனெறியால். (௮)

தாமரைத்தலையிருந்தவன்குடிலைமுன்சாற்றி
மாமறைத்தலையெடுத்தனன்பகர்தலும்வரம்பில்
காமர்பெற்றுடைக்குமரவேணிற்றிமுன்கழறு
மோமெனப்படுமொழிப்பொருளியம்புகென்றுரைத்தான். (௯)

முகத்திலொன்றதாவவ்வெழுத்துடையதோர்முருக
னகைத்துமுன்னெழுத்தினுக்குரைபொருளெனநவில
மிகைத்தகண்களைவிழித்தனன்வெள்கினன்விக்கித்
திகைத்திருந்தனன்கண்டிலனப்பொருட்டிறனே. (க0)

ஈசன்மேவருபீடமாயேனையோர்தோற்றும்
வாசமாயெலாவெழுத்திற்குமறைகட்குமுதலாய்க்
காசிதன்னிடைமுடிபவர்க்கெம்பிரான்கழறு
மாசிறூகப்பிரமமாமதன்பயனோர்ந்தான். (கக)

தெருளதாகியகுடிலையைச்செப்புதலன்றிப்
பொருளறிந்திலனென்செய்வான்கண்ணுதற்புனித
னருளினாலதுமுன்னரேபெற்றிலனதனான்
மருளுகின்றனன்யாரதன்பொருளினைவகுப்பார். (௧௨)

தூமறைக்கெலாமாதியுமந்தமுஞ்சொல்லு
மோமெனப்படுமோரெழுத்துண்மையையுணரான்
மாமலர்ப்பெருங்கடவுளுமயங்கினனென்றா
னாமினிச்சிலவறிந்தனமென்பதுநகையே. (௧௩)

எட்டொணாதவக்குடிலையிற்பயனினைத்தென்றே
கட்டுரைத்திலன்மயங்கலுமிதன்பொருள்கருதாய்
சிட்டிசெய்வதித்தன்மையதோவெனாச்செவ்வேள்
குட்டினானயனான்குமாமுடிகளுங்குலுங்க. (௧௪)

மறைபுரிந்திடுஞ்சிவனருண்மதலைமாமலர்மே
லுறைபுரிந்தவன்வீழ்தரப்பதத்தினாலுதைத்து
நிறைபுரிந்திடுபரிசனரைக்கொடேநிகளச்
சிறைபுரிந்திடுவித்தனன்கந்தமாஞ்சிலம்பில். (௧௫)

அல்லிமாமலர்ப்பண்ணவன்றனையருஞ்சிறையில்
வல்லிபூட்டுவித்தியாவையும்புரிதரவல்லோ
னெல்லைதீர்தருகந்தமால்வரைதனிலேகிப்
பல்லுயிர்த்தொகைபடைப்பதுநினைந்தனன்பரிவால். (௧௬)

ஒருகரந்தனிற்கண்டிகைவடம்பரித்தொருதன்
கரதலந்தனிற்குண்டிகைதரித்திருகரங்கள்
வரதமோடபயந்தரப்பரம்பொருண்மகனோர்
திருமுகங்கொடுசதுர்முகன்போல்விதிசெய்தான். (௧௭)

உயிரினுக்குயிராகியேபரஞ்சுடரொளியாய்
வியன்மறைத்தொகைக்கிறைதாய்விதிமுதலுரைக்குஞ்
செயலினுக்கெலாமாதியாய்வைகியசெவ்வே
ளயனெனப்படைக்கின்றதுமற்புதமாமோ. (௧௮)

தண்ணெனம்புயத்தவிசினோன்சிறைபுகத்தானே
யெண்ணிலாவுயிர்த்தொகையளித்தறுமுகனிருந்தா
னண்ணலந்திசைமுகனொடுவந்துசூழமர
ருண்ணடுங்கியேதொழுதுதம்பதங்களிலுற்றார். (௧௯)

அயனைச்சிறைபுரிபடலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௧,௨௨௩.

---

## அயனைச்சிறைநீக்குபடலம்.

ஆலமாமிடற்றண்ணல்சேயித்திறமளப்பில்
காலம்யாவையுமளித்தனனிருத்தலுங்கரியோ
னாலுமாமுகனுவளகநீக்குவானாடிச்
சீலவானவர்முனிவரைச்சிந்தனைசெய்தான் (௧)

Digitized By Roja Muthiah Research Library

சீதரத்தனிப்பண்ணவன்சிந்தனைதேறி
யாதபத்தினர்பரிமுகர்வசுக்களன்னையர்க
ளேதமற்றிடும்விஞ்சையருவணரோடியக்கர்
மாதிரத்தவர்யாவரும்விரைந்துடன்வந்தார். (உ)

மதியுமேனையகோள்களுங்கணங்களும்வான்றோய்
பொதியமேயவனுதியாம்பொருவின்மாதவரும்
விதிபுரிந்திடுபிரமரொன்பதின்மரும்வியன்பா
ரதனையேந்தியசேடனுமுரகருமடைந்தார். (ங)

இன்னதன்மையிலமரருமுனிவருமெய்த
வன்னர்தம்மொடுஞ்செங்கண்மால்கயிலையையடைந்து
முன்னர்வைகியநந்திகண்முறையினுய்த்திடப்போய்த்
தன்னையேதனக்கொப்பவன்பொற்கழறாழ்ந்தான். (ச)

பொற்றிருப்பதமிறைஞ்சியேமறைமுறைபோற்றி
நிற்றலுஞ்சிவனருள்கொடேநோக்குறீஇநீவி
ரெற்றைவைகலுமில்லதோர்தளர்வொடுமெம்பா
லுற்றதென்கொலோவென்றலுமாலிவையுரைப்பான் (ரு)

வேறு.

இறைவநின்மகனீண்டுறுபோதனை, மறைமுதற்பதவான்பொருள்கேட்டலு
மறிகிலானுறவன்னவன்றன்னைமுன், சிறைபுரிந்தனன்சிட்டியுஞ்செய்கின்றான்.()

கந்தவேளெனக்கஞ்சனுமையநின், மைந்தனுமவன்வல்வினையூழினு
லந்தமில்பகலாழ்சிறைப்பட்டுள, னொந்துவாடினனேவுழந்தானரோ. (எ)

ஆக்கமற்றவயன்றன்சிறையினை, நீக்குகென்றுநிமலனைவேண்டலுந்
தேக்குமன்பிற்சிலாதனற்செம்மலை, நோக்கியொன்றுநுவலுதன்மேயினன். (அ)

குடுவைச்செங்கையினனைக்குமரவே, ளிடுவித்தான்சிறையென்றனராண்டுநீ
கடிதிற்சென்றுநங்கட்டுரைகூறியே, விடுவித்தேயிவண்மீள்கெனச்சாற்றினன். ()

எந்தையன்னதிசைத்தலுநன்றெனு, நந்தியக்கணநாதனைத்தாழ்ந்துபோ
யந்தமற்றவடற்கணஞ்சூழ்தரக், கந்தவெற்பிற்கடிநகரெய்தினன். (க0)

எறுழுடைத்தனியேற்றுமுகத்தினு, னறுமுகத்தனமர்ந்தநிகேதனங்
குறுகிமற்றவன்கோலமலர்ப்பத, முறைதனிற்பணிந்தேத்திமொழிகுவான். (கக)

கடி.கொள்பங்கயன்காப்பினையெம்பிரான், விடுதல்கூறிவிடுத்தனனீங்கெனைத்
தடைபடாதவன்றன்சிறைநீக்குதி, குடிலையன்னவன்கூறற்கெளியதோ. (கஉ)

என்னுமுன்னமினையவன்சீறியே, யன்னவூர்தியருஞ்சிறைநீக்கல
னின்னையுஞ்சிறைவீட்டுவனிற்றியே, லுன்னியேகுதியொல்லையிலென்றலும். (கங)

வேறதொன்றும்விளம்பிலனஞ்சியே, யாறுமாமுகத்தண்ணலைவந்தியா
மாறிலாவெள்ளிமால்வரைசென்றன, னேறுபோன்முகமெய்தியநந்தியே. (கச)

மைதிகழ்ந்தமணிமிடற்றண்ணன்முன், வெய்தெனச்சென்றுமேவியவன்பதங்
கைதொழூஉநின்றுகந்தன்மொழிந்திடுஞ், செய்திசெப்பச்சிறுநகையெய்தினன்.()

கெழுதகைச்சுடர்க்கேசரிப்பீடமேல், விழுமிதுற்றவிமலன்விரைந்தெழீஇ
யழகுடைத்தனதாலயநீங்கியே, மழவிடைத்தனிமால்வரையேறினன். (கசு)

Digitized By Roja Muthiah Research Library

முன்னர்வந்தமுகில்புரைவண்ணனுங், கின்னரம்பயில்கேசராதியோர்
நன்னர்கொண்டிடுநாகருநற்றவ, ரென்னருந்தொழுதெந்தைபின்னேகினர். (க௭)

படைகொள்கையினர்பன்னிறக்காழக, வுடையர்தீயிளூருகெழுசென்னிய, ரிடி
கொள்சொல்லினரெண்ணரும்பூதர்கள், புடையிலீண்டினர்போற்றுதன்மேயினர்.

இளையகாலையிளையவர்தம்மொடும், வனிடைபாதியன்மால்விடையூர்ந்துராய்ப்,
புனிதவெள்ளியம் பொற்றைநணந்துபோய்த், தனதுமைந்தன் றடவரையெய்தி
னான். (க௯)

சாற்றருந்திறற்சண்முகவெம்பிரான், வீற்றிருந்தவியனகர்முன்னுறு
வேற்றினின் றிழிந்துவிண்ணோரெலாம், போற்றமுக்கட்புனிதனுட்போயினன். ()

அந்திபோலுமவிர்சடைப்பண்ணவன், கந்தன்முன்னர்க்கருணையொடேகலு
மெந்தைவந்தனனென்றெழுந்தாங்கவன், வந்துநேர்கொண்டடிகள்வணங்கியே. ()

பெருந்ததன்மணிப்பீடிகைமிசை, யிருத்திநாதனையேழுலகீன்றிடு
மொருத்திமைந்தனுயிர்க்குயிராகிய, கருத்தநீவந்தகாரியம்யாதென்றான். (உஉ)

மட்டிலாவுமலரயனைச்சிறை, யிட்டுவைத்தனைபாமதுநீக்குவான்
சுட்டிவந்தனமாற்சுரர்தம்முடன், விட்டிடையவென்றெந்தைவிளம்பினன். (உ௩)

நாட்டமூன்றுடைநாயகனிவ்வகை, யீட்டுமன்பொடிசைத்திடுமின்சொலைக், கே
ட்டகாலையிற்கேழ்கிளர்சென்னிமேற், சூட்டுமௌலிதுளக்கினன்சொல்லுவான். ()

உறுதியாகியவோரெழுத்தின்பய, னறிகிலாதவனுவிகள்வைகலும்
பெறுவனென்பதுபேதைமையாங்கவன், மறைகள்வல்லதுமற்றதுபோலுமால். ()

அழகிதையநின்றாருள்வேதமுன், மொழியநின்றமுதலெழுத்தோர்கிலா
னிழிவில்பூசையியற்றலுநல்கிய, தொழில்புரிந்துசுமத்தினையோர்பரம். (உ௬)

ஆவிமுற்றுமகிலமுநல்கியே, மேவுகின்றவியன்செயல்கோடலாற்
றூவில்கஞ்சத்தவிசுறைநான்முக, னேவர்தம்மையுமெண்ணலன்யாவதும். (உ௭)

நின்னைவந்தனைசெய்யினுநித்தலுந், தன்னகந்தைதவிர்கிலனாதலா
லன்னவன்றனருஞ்சிறைநீக்கல, னென்னமைந்தனியம்பியவேலையே. (உ௮)

வேறு.

மைந்தநின்செய்கையென்னேமலரயன்சிறைவிடென்று
நந்திநம்பணியாலேகிநவின்றதுங்கொள்ளாய்நாமும்
வந்துரைத்திடினுங்கேளாய்மறுத்தெதிர்மொழிந்தாயென்னாக்
கந்தனைவெகுள்வான்போலக்கழறினன்கருணைவள்ளல். (உ௯)

அத்தனதியல்புநோக்கியறுமுகத்தமலனைய
சித்தமிங்கிதுவேயாகிற்றிசைமுகத்தொருவன்றன்னை
யுய்த்திடுசிறையினீக்கியொல்லையிற்றருவனென்னாப்
பத்தியினிறைஞ்சிக்கூறப்பராபரன்கருணைசெய்தான். (௩0)

நன்சிறையெகினமேனநாடுவானருளாநல்கத்
தன்சிறைநின்றோர்தம்மைச்சண்முகக்கடவுணோக்கி
முன்சிறையொன்றிற்செங்கேழ்முண்டகத்தயனைவைத்த
வன்சிறைநீக்கிநம்முன்வல்லைதந்திடுதிரென்றான். (௩௧)

Digitized By Roja Muthiah Research Library

என்றலுஞ்சாரதர்க்குட்சிலவர்களேகியங்க
ணொன்றொருபூழைதன்னுளொடுங்கினனுறையும்வேதா
வன்றனைவிடுத்தல்செய்துமற்றவன்றனைக்கொண்டேகிக்
குன்றுதொறாடல்செய்யுங்குமரவேண்முன்னருய்த்தார். (௩௨)

உய்த்தலுங்கமலத்தண்ணலொண்கரம்பற்றிச்செவ்வே
ளத்தன்முன்விடுத்தலோடுமோங்கவன்பரமன்றன்னை
மெய்த்தகுமன்பாற்றாழ்ந்துவெள்கினனிற்பநோக்கி
யெய்த்தனைபோலும்பன்னாளிருஞ்சிறையெய்தியென்றான். (௩௩)

நாதனித்தன்மைகூறிநல்லருள்புரிதலோடும்
போதினையவுன்றன்புதல்வனாற்றியவித்தண்ட
வேதமன்றுணர்வுநல்கியானெனுமகந்தைவீட்டித்
தீதுசெய்வினைகண்மாற்றிச்செய்ததுபுனிதமென்றான். (௩௪)

அப்பொழுதயனைமுக்கணாதியம்பரமன்காணூஉ
முப்புவனத்தின்மேவுமுழுதுயிர்த்தொகைக்குமேற்ற
துப்புரவதனைநன்றூதாக்கினைதொன்மையேபோ
லிப்பகற்றொட்டுநீயேயீந்தனையிருத்தியென்றான். (௩௫)

அருளுருவாகுமீசனயற்கிதுபுகன்றபின்னர்
முருகவேண்முகத்தைநோக்கிமுறுவல்செய்தருளைநல்கி
வருதியாலையவென்றுமலர்க்கையுய்த்தவனைப்பற்றித்
திருமணிக்குறங்கின்மீதுசிறந்துவீற்றிருப்பச்செய்தான். (௩௬)

காமருகுமரன்சென்னிகதுமெனவுயிர்த்துச்செக்கர்த்
தாமரைபுரையுங்கையாற்றழுவியேயயனுந்தேற்றா
வோமெனவுரைக்குஞ்சொல்லினுறுபொருளுனக்குப்போமோ
போமெனிலதனையின்னேபுகலெனவிறைவன்சொற்றான். (௩௭)

முற்றொருங்குணருமாதிமுதல்வசேணுலகமெல்லாம்
பெற்றிடுமவட்குநீமுன்பிறருணராதவாற்றாற்
சொற்றதோரினையமூலத்தொல்பொருள்யாருங்கேட்ப
விற்றெனவியம்பலாமோமறையினாலிசைப்பதல்லால். (௩௮)

என்றலுநகைத்துமைந்தவெமக்கருண்மறையினென்னாத்
தன்றிருச்செவியைநல்கச்சண்முகன்குடிலையென்னு
மொன்றொருபதத்தினுண்மையுரைத்தனனுரைத்தல்கேளா
நன்றருள்புரிந்தானென்பஞானநாயகனுமண்ணல். (௩௯)

அன்னதோரையமாற்றியகமகிழ்வெய்தியங்கட்
டன்னிளங்குமரன்றன்னைத்தலைமையோடிருப்பநல்கி
யென்னையாளுடையநாதன்யாவரும்போற்றிச்செல்லத்
தொன்னிலையமைந்துபோந்துதொல்பெருங்கயிலைவந்தான். (௪0)

முன்புறுமயன்மாறேவர்முனிவரைவிடுத்துமுன்னோன்
றன்பெருங்கோயில்புக்கான்றவில்சீர்க்கந்தவெற்பிற்
பொன்புனைதவிசினேறிப்புடைதனில்வயவர்போற்ற
வின்பொடுகுமரமூர்த்தியினிதுவீற்றிருந்தானன்றே. (௪௧)

கஅ

Digitized By Roja Muthiah Research Library

ஆங்குறுகுமரப்புத்தேளருமறைக்காதியாகி
யோங்குமெய்ப்பொருட்குமேலாமோரெழுத்துரையினுண்மை
தீங்கறவணங்கிக்கேட்பச்சிறுமுனிக்குதவிமற்றும்
பாங்குறுமிறைவனாலும்பரிவினாலுணர்த்தினானால். (சுகூ)

அயனைச்சிறைநீக்குபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,உசுரு.

---

# விடைபெறுபடலம்.

எல்லையன்னதின்மாலருள்கன்னியரிருவர்
சொல்லரும்பெருவனப்பினர்சுந்தரியமுத
வல்லியென்றிடும்பெயரினர்கந்தவேள்வரைத்தோள்
புல்லுமாசையாற்சரவணத்தருந்தவம்புரிந்தார். (க)

என்னையாளுடைமூவிருமுகத்தவனிரண்டு
கன்னிமாருமாயொன்றிநோற்றிடுவதுகருத்தி
னுன்னியேயெழீஇக்கந்தமால்வரையினையொருவி
யன்னைதோன்றியவிமகிரிச்சாரலையடைந்தான். (உ)

பொருவில்சீருடையிமையமால்வரைக்கொருபுடையாஞ்
சரவணந்தனிற்போதலுந்தவம்புரிமடவா
ரிருவரும்பெரிதஞ்சியேபணிந்துநின்றேத்த
வரமளிப்பதென்கூறுதிரென்றனன்வள்ளல். (ங)

மங்கைமார்தொழுதெம்மைநீவதுவையான்மருவ
விங்கியாந்தவம்புரிந்தனங்கருணைசெய்யென்ன
வங்கவ்வாசகங்கேட்டலுமாறுமாமுகத்துத்
துங்கநாயகனவர்தமைநோக்கியேசொல்வான். (ச)

முந்துமின்னமுதக்கொடிமூவுலகேத்து
மிந்திரன்மகளாகியேவளர்ந்தனையிருத்தி
சுந்தரிப்பெயரினையவடொல்புவிதன்னி
லந்தண்மாமுனிபுதல்வியாய்வேடர்பாலமர்தி. (ரு)

நன்றுநீவிர்கள்வளர்ந்திடுகாலையாநண்ணி
மன்றனீர்மையாலுங்களைமேவுதுமனத்தி
லொன்றுமெண்ணலீர்செல்லுமென்றெம்பிரானுரைப்ப
நின்றகன்னியர்கைதொழுதேகினர்நெறியால். (சு)

ஏகுமெல்லையிலமுதமாமென்கொடியென்பாள்
பாகசாதனன்முன்னமோர்குழவியாய்ப்படர்ந்து
மாகமன்னநின்னுடன்வருமுபேந்திரன்மகள்யா
னாகையாலெனைப்போற்றுதிதந்தையென்றடைந்தாள். (எ)

பொன்னின்மேருவிலிருந்தவன்புதல்வியைநோக்கி
யென்னையீன்றயாயிங்ஙனம்வருகெனவிசைத்துத்
தன்னதாகியதனிப்பெருங்களிற்றினைத்தனது
முன்னராகவேவிளித்தனனித்திறமொழிவான். (அ)

Digitized By Roja Muthiah Research Library

இந்தமங்கைநந்திருமகளாகுமீங்கிவளைப்
புந்தியன்பொடுபோற்றுதியினையவள்பொருட்டா
லந்தமில்சிறப்பெய்துமேலென்றனுமவளைக்
கந்த * மேற்கொடுநன்றெனப்போயதுகளிறு. (கூ)

கொவ்வைபோலிதழ்க்கன்னியையமனேவதிகொடுபோ
யவ்வியானையேபோற்றியதனையகாரணத்தாற்
றெய்வயானையென்றொருபெயரெய்தியேசிறிது
நொவ்வுறாதுவீற்றிருந்தனள்குமரனைநுவன்றே. (க0)

பெருமைகொண்டிடுதெண்டிரைப்பாற்கடல்பெற்றுத்
திருமடந்தையையன்புடன்வளர்த்திடுந்திறம்போற்
பொருவில்சீருடையடலயிராவதம்போற்ற
வரிசைதன்னுடனிருந்தனடெய்வதமடந்தை. (கக)

முற்றுணர்ந்திடுசுந்தரியென்பவண்முருகன்
சொற்றதன்மையையுளங்கொடுதொண்டைநன்றாட்டி
யுற்றவள்ளியஞ்சிலம்பினைநோக்கியாங்குறையு
நற்றவச்சிவமுனிமகளாகவேநடந்தாள். (கஉ)

இந்தவண்ணமிவ்விருவர்க்கும்வரந்தனையீந்து
சுந்தமால்வரையேகியேகருணையோடிருந்தான்
றந்தையில்லதோர்தலைவனைத்தாதையாய்ப்பெற்று
முந்துபற்பகலுலகெலாம்படைத்ததோர்முதல்வன். (கரு)

வேறு.

இத்திறஞ்சிலபகலிருந்துபன்னிரு, கைத்தலமுடையவன்கயிலைமேலுறை
யத்தனைடன்னைதன்னடிபணிந்திடச், சித்தமதுன்னினனருளின்செய்கையால்.()

எள்ளருந்தவிசினின்றிழிந்துவீரரா, யுள்ளுறும்பரிசனரொருங்குசென்றிடக்
கொள்ளையஞ்சாரதர்குழாமும்பாற்பட, வள்ளலங்கொருவியேவல்லையேகினன். ()

ஏயெனவெள்ளிவெற்பெய்தியாங்கனங், கோயிலினவைக்களங்குறுகிக்கந்தவே
டாயொடுதந்தையைத்தாழ்ந்துபோற்றியே, யாயவர்நடுவுறவருளின்வைகினன். ()

அண்ணலங்குமரவேளங்கண்வைகலும், விண்ணவர்மகபதிமேலைநாண்முத
லுண்ணிகழ்தங்குறையுரைத்துநான்முகன்,கண்ணனைமுன்கொடுகயிலையெய்தினர்.

அடைதருமவர்தமையமலனலய, நடைமுறைபோற்றிடுநந்திநின்மெனத்
தடைவினைபுரிதலுந்தளர்ந்துபற்பக, னெடிதுறுதுயரொடுநிற்றன்மேயினர். (கஅ)

அளவறுபற்பகலங்கணின்றளார், வளனுறுசிலாதனன்மதலைமுன்புதம், முளமலியின்னலையுரைத்துப்போற்றலுந், தளர்வினிவிடுமினென்றிதனைச்சாற்றினன்.()

தங்குறைநெடும்புனற்சடிலமேன்மதி, யங்குறைவைத்திடுமாதிமுன்புபோய்
நுங்குறைபுகன்றவனேய்தினுய்ப்பனு, லிங்குறைவீரெனவியம்பிப்போயினன்.()

போயினனந்தியம்புனிதன்கண்ணுதற், றூயனைவணங்கினனொருழுதுவாசவன்
மாயவனான்முகன்வானுளோரெலாங், கோயிலின்முதற்கடைகுறுகினரென்றுன்.

அருளுடையெம்பிரானவையர்யாரையுந், தருதிநம்முன்னரேசாரவென்றலும்
விரைவொடுமீண்டனன்மேலையோர்களை, வருகெனவருளினன்மாசில்காட்சியான்.

---

* கந்தம் - கழுத்தினடி.

Digitized By Roja Muthiah Research Library

விடைமுகனுரைத்தசொல்வினவியாவருங், கடிதினிலேகியேகருணைவாரிதி
யடிமுறைவணங்கினரதற்குள்வாசவ, னிடருறுமனத்தினனினையகூறுவான். உரு

பரிந்தலகருள்புரிபரையொடொன்றியே, யிருந்தருண்முதல்வகேளெண்ணிலாவுக
மருந்திறற்சூர்முதலவுணர்தங்களால், வருந்தினமொடுங்கினம்வன்மையின்றியே.()

அந்தமிலழகுடையரம்பைமாதரு, மைந்தனுமளப்பிலாவானுளோர்களும், வெந்
தொழிலவுணர்கள்வேந்தன்மேவிய,சிந்துவினகரிடைச்சிறைக்கண்வைகினர். உரு

இழிந்திடுமவுணராலியாதொர்காலமு, மொழிந்திடலின்றியேயுறைந்தசீரொடு
மழிந்ததென்கடிநகரதனையானிவண், மொழிந்திடல்வேண்டுமோவுணர்திமுற்றுநீ.

முன்னுறயான்றவமுயன்றுசெய்துழித், துன்னினைநங்களோர்தோன்றலெய்துவா
னன்னவனைக்கொடேயவுணர்ச்செற்றநும்,மின்னலையகற்றுதுமென்றியெந்தைநீ

அப்படிக்குமரனுமவதரித்துள, னிப்பகல்காறுமெம்மின்னறீர்த்திலை
முப்புவனந்தொழுமுதல்வநீயரேந்,துப்புறுபவப்பயன்றொலைந்ததில்லையோ,(உஅ)

சூருடைவன்மையைத்தொலைக்கத்தக்கதோர், பேருடையாரிலைபின்னையானினி
யாரொடுகூறுவனுரைநோகுவ, னீருடைமுடியினோய்நினதுமுன்னலால், (உகூ)

சீகரமறிகடற்சென்றுநவ்விசேர், காகமதென்னவுன்கயிலையன்றியே
யேகவோரிடமிலையெமக்குநீயலாற், சோகமதகற்றிடுந்துணைவரில்லையே. (௩0)

ஏற்றெழுவன்னிமேலினிதுதுஞ்சலாந், தோற்றியவெவ்விடமெனினுந்துய்க்கலா
மாற்றலரலைத்திடவந்தவெந்துய, ராற்றரிதாற்றரிதலமிப்புன்மையே. (௩க)

தீதினையகற்றவுந்திருவைநல்கவுந், தாதையரல்லதுதனயர்க்காருள
ராதலினெமையினியளித்தியாலென, வோதினன்வணங்கினனும்பர்வேந்தனே.()

அப்பொழுதரியயனையவெய்யசூர், துப்புடனுலகுயிர்த்தொகையைவாட்டுதல்
செப்பரிதின்னினிச்சிறிதுந்தாழ்க்கலை, யிப்பொழுதருள்கெனவியம்பிவேண்டினர்.

இகபரமுதவுவோனிவற்றைக்கேட்டலு, மிகவருளெய்தியேவிடுமினீரினி
யகமெலிவுறலெனவருளிபாங்கமர், குகன்முகநோக்கியேயினையகூறுவான். (௩௪)

வேறு.

பாரினையலைத்துப்பல்லுயிர்தமக்கும்பருவரல்செய்துவிண்ணவர்த
மூரினைமுருக்கித்தீமையேயியற்றியுலப்புறுவன்மைகொண்டுற்ற
சூரனையவுணர்குழுவொடுந்தடிந்துசுருதியினெறிநிறீஇமகவான்
பேரரசளித்துச்சுரர்துயரகற்றிப்பெயர்தியென்றனனெந்தைபெருமான். (௩௫)

அருத்திகொள்குமரனினையசொல்வினவியப்பணிபுரிகுவனென்னப்
புரத்தினையட்டகண்ணுதல்பின்னர்ப்பொள்ளெனவுள்ளமேற்பதினோ
ருருத்திரர்தமையுமுன்னமுமன்னோருற்றிடவிவன்கையிற்படையா
யிருத்திரென்றவரைப்பலபடையாக்கியீந்தனனெம்பிரான்கரத்தில். (௩௬)

பொன்றிகழ்சடிலத்தண்ணறன்பெயரும்பொருவிலாவுருவமுந்தொன்று
மொன்றுபெற்றுடையவுருத்திரகணத்தோர்நவிலருந்தோமரங்கொடிவாள்
வன்றிறற்குலிசம்பகழியங்குசமுமணிமலர்ப்பங்கயந்தண்டம்
வென்றிவின்மழுவுமாகிவீற்றிருந்தார்விறன்மிகுமறுமுகன்கரத்தில். (௩௭)

Digitized By Roja Muthiah Research Library

ஆயதற்பின்னரேவின்மூதண்டத்தைம்பெரும்பூதமுமடுவ
தேயபல்லுயிருமொருதலைமுடிப்பதேவர்மேல்விடுக்கினுமவர்தம்
மாயிருந்திறலும்வரங்களுஞ்சிந்திமன்னுயிருண்பதெப்படைக்கு
நாயகமாவதொருதனிச்சுடர்வேனல்கியேமதலைகைக்கொடுத்தான். (௩௮)

அன்னதற்பின்னரெம்பிரான்றன்பாலாகிநின்றேவினபுரிந்து
மன்னியவிலக்கத்தொன்பதுவகைத்தாமைந்தரைநோக்கியேயெவர்க்கு
முன்னவனுமிக்குமரனோடேகிமுடிக்குதிரவுணரையென்றாத்
துன்னுபல்படையுமுதவியேசேய்க்குத்துணைப்படையாகவேகொடுத்தான். (௩௯)

நாயகனதற்பினண்டவாபரணனந்தியுக்கிரனொடுசண்டன்
காயெரிவிழியன்சிங்கனேமுதலாங்கணப்பெருந்தலைவரைநோக்கி
யாயிரவிரட்டிபூதவெள்ளத்தோடறுமுகன்சேனையாய்ச்சென்மி
னீயிரென்றருளியவர்தமைக்குகற்குநெடும்படைத்தலைவராவளித்தான். (௪௦)

ஐம்பெரும்பூதவன்மையுமங்கணமர்தரும்பொருள்களின்வலியுஞ்
செம்பதுமத்தோனுதியாமமரர்திண்மையுங்கொண்டதோர்செழுந்தேர்
வெம்பரியிலக்கம்பூண்டதுமனத்தின்விரைந்துமுன்செல்வதொன்றதனை
யெம்பெருமுதல்வன்சிந்தையாலுதவியேறுவான்மைந்தனுக்களித்தான். (௪௧)

இவ்வகையெல்லாம்விரைவுடனுதவியேகுதிநீயெனக்குமரன்
மைவிழியுமையோடிறைவனைத்தொழுதுவலங்கொடேமும்முறைவணங்கிச்
செவ்விதினெழுந்துபுகழ்ந்தனனிற்பத்திருவுளத்துவகையாற்றழுவிக்
கைவருகவானுய்த்துச்சிமேலுயிர்த்துக்கருணைசெய்தமலைகைக்கொடுத்தான். (௪௨)

கொடுத்தலும்வயின்வைத்தருளினாற்புல்லிக்குமரவேள்சென்னிமோந்துன்பா
லடுத்திடுமிலக்கத்தொன்பதுவகையோரனிகமாய்ச்சூழ்ந்திடப்போந்து
கடக்கருமாற்றலவுணர்தங்கிளையைக்காதிக்கடவுளர்குறையை
முடித்தனைவருதியென்றருள்புரிந்தாண்மூவிருசமயத்தின்முதல்வி. (௪௩)

அம்மையித்திறத்தாலருள்புரிந்திடலுமறுமுகன்றொழுதெழீஇயனையோர்
தம்விடைகொண்டுபடர்ந்தனன்றனைத்தலைவராமிலக்கமேலொன்பான்
மெய்ம்மைகொள்வீரர்யாவருங்கணங்கள்வியன்பெருந்தலைவருமிருவர்
செம்மலரடிகண்மும்முறையிறைஞ்சிச்சேரவேவிடைகொடுசென்றார். (௪௪)

நின்றிடுமயன்மான்மகபதியெந்தாய்நீயெமையளித்தனைநெஞ்சத்
தொன்றொருகுறையுமில்லையாலிந்நாளுய்ந்தனமுய்ந்தனமென்று
பொன்றிகழ்மேனியுமையுடனிறைவன்பொன்னடிபணிந்தெழநமக்கு
நன்றிசெய்குமரன்றன்னுடனீருநடமெனவிடையதுபுரிந்தான். (௪௫)

விடைபெறுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௩௧௦.

---

## படையெழுபடலம்.

கண்ணுதல்விடைபெற்றரியயன்மகவான்கடவுளர்தம்மொடுகடிதி
னண்ணலங்குமரன்றன்னொடுசென்றேயயல்வருமருத்தினைநோக்கித்
தண்ணளிபுரியுமறுமுகத்தெந்தைதனிப்பெருந்தேர்மிசைநீபோய்ப்
பண்ணொடுமுட்கோன்மத்திகைபரித்துப்பாகனுய்த்தூண்டெனப்பணித்தான். (௧)

Digitized By Roja Muthiah Research Library

மன்புரிதிருமாலினையனபணிப்பமாருதனிசைந்துவான்செல்லும்
பொன்பொலிதேரின்மீமிசைப்பாய்ந்துபொருக்கெனமருத்துவர்நாற்பா
னொன்பதுதிறத்தார்புடைவரத்தூண்டியுவகையோடறுமுகத்தொருவன்
முன்புறவுய்த்துத்தொழுதுமற்றிதன்மேன்முருகநீவருகெனமொழிந்தான். (௨)

மாருதனினையபுகன்றுகைதொழலுமற்றவன்செயற்கையைநோக்கிப்
பேரருள்புரிந்துகதிரிளம்பரிதிபிறங்குசீருதயமால்வரைமேற்
சேருவதென்னக்குமரவேளனையசெழுமணியிரதமேற்செல்லச்
சூரினியிறந்தானென்றுவாசவனுஞ்சுரர்களுமார்த்தனர்துள்ளி. (௩)

வேறு.

ஓங்குதேர்மிசைக்குமரவேண்மேவலுமுவப்பா
லாங்கவன்றனதருள்பெறுந்திறலினோரணுகிப்
பாங்கர்நண்ணினர்முனிவருந்தேவர்கள்பலரு
நீங்கலின்றியேயவர்புடைசூழ்ந்தனர்நெறியால். (௪)

இனந்தனோடவர்முருகனையடைதலுமிருநீர்
புனைந்தசென்னியன்கயிலையிலிருந்தவெம்பூத
ரனந்தவெள்ளத்திலிராயிரமாகும்வெள்ளத்தர்
வனைந்தவார்கழற்றலைவர்தம்முரைகொடுவந்தார். (௫)

எழுவியன்கதைநேமிவெஞ்சூலம்வாளெறிவேன்
மழுமுதற்படையாவையுமேந்தியவலியோர்
நிழன்மதிப்பிறைஞெலிந்தனநிலாவுமிழெயிற்ற
ரழலுகுத்திடும்விழியினரசனியினறைவார். (௬)

நெடியர்சிந்தினர்குறியினரைம்பெருநிறனும்
வடிவில்வீற்றுவீற்றெய்தினர்வார்சடைக்கற்றை
முடியர்குஞ்சியர்பலவதனத்தரோர்முகத்தர்
கொடியரென்னினுமடைந்தவர்க்கருள்புரிகுணத்தோர். (௭)

நீறுகண்டிகைபுனைதரும்யாக்கையர்நெடுநஞ்
சேறுகண்டனையன்றிமற்றெவரையுமெண்ணார்
மாறுகொண்டவருயிர்ப்பலிநுங்குவோர்மறலி
வீறுகொண்டதொல்படைதனைப்படுத்திடுமேலோர். (௮)

அண்டம்யாவையுமாண்டுறையுயிர்த்தொகையனைத்து
முண்டுமிழ்ந்திடவல்லவரன்றியுமுதரச்
சண்டவங்கியாலடுபவரட்டவைதம்மைப்
பண்டுபோற்சிவனருளினால்வல்லையிற்படைப்போர். (௯)

முன்னைவைகலினிறந்திடுமிந்திரன்முதலோர்
சென்னிமாலைகந்தரத்தினிலுரத்தினிற்சிரத்திற்
கன்னமீதினிற்கரத்தினின்மருங்கினிற்கழலிற்
பொன்னின்மாமணிக்கலனொடும்மிரவினர்புனைவார். (௧0)

இந்தவண்ணமாஞ்சாரதப்படையினரீண்டித்
தந்தம்வெஞ்சமர்த்தலைவர்களோடுசெண்முகன்பால்
வந்துகைதொழுதேத்தியேயிறுதிசேர்வைக
லந்தமில்புனலண்டமதுடைந்தெனவார்த்தார். (௧௧)

Digitized By Roja Muthiah Research Library

ஆர்த்தசாரதரெந்தைபாலாயினரதுகாற்
பேர்த்துமாயவரிடத்தெனப்பூதரிற்பெரியோர்
வார்த்தயங்கியதண்ணுமைதிமிலையான்படகஞ்
சீர்த்தகாகளமுதலியவியம்பினர்சிலரே. (கஉ)

ஆனகாலையிலதுதெரிந்தறுமுகத்தொருவன்
வானளாவியபுணரிகள்சூழ்ந்திடவயங்கும்
பானுநாயகன்வந்தெனப்பரந்துபாரிடத்துச்
சேனைசூழ்தரக்கயிலைநீத்தவனிமேற்சென்றான். (கங)

கொள்ளைவெஞ்சினச்சாரதரிராயிரங்குணித்த
வெள்ளம்வந்திடக்கந்தவேளவனிமேன்மேவக்
கள்ளவான்படையவுணர்கள்கலந்துசூழ்ந்தென்னப்
பொள்ளெனத்துகளெழுந்ததுவளைந்ததுபுவியை. (கச)

எழுதருந்துகண்மாதிரவரைப்பெலாமேகி
யொழியும்வான்பதஞ்சென்றதாலங்கவையுறுதல்
குழுவின்மல்கியசாரதரார்ப்புமுன்குறுகி
மொழிதல்போன்றனவிண்ணுளோரிமைப்பில்கண்மூட. (கரு)

கழியடைத்திடுநேமிகள்பலவொடுககன
வழியடைத்திடுபூழியுமொலியுமன்னுயிர்கள்
விழியடைத்தனநாசியையடைத்தனவிளம்பு
மொழியடைத்தனவடைந்தனகேள்வியின்மூலம். (கசா)

பேரிடங்களாந்தனுவுடைப்பூதர்கள்பெயரப்
பாரிடங்கடாமிடம்பெறாவாதலிற்பல்லோர்
காரிடங்கொளும்வான்வழிச்சென்றனர்கண்டோ
ரோரிடங்களும்வெள்ளிடையிலதெனவுரைப்ப. (கஎ)

அவனிவானெலாம்பூழியான்மறைத்தலுமதனைச்
சிவன்மகன்றனதொளியினாலகற்றினன்செல்வான்
கவனவாம்பரியிரதமேற்பணிபடுங்காலைத்
தவனநாயகனதுதடிந்தேகுதன்மையைப்போல். (கஅ)

படையெழுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,ஙஉஅ.

---

## தாரகன்வதைப்படலம்.

வெம்மைதீர்ந்திடுமெப்பெருநெறியிடைவிரைந்து
செம்மைசேர்தருகுமரவேள்படையொடுசெல்ல
வம்மசேர்ந்ததுதாரகற்குறையுளாயடைந்தோர்
தம்மைவாட்டியேயமர்கிரவுஞ்சமாஞ்சயிலம். (க)

விண்டுலாய்நிமிர்கிரவுஞ்சகிரியினைவிண்ணோர்
கண்டுளம்பதைபதைத்தனர்மகபதிகலக்கங்
கொண்டுநின்றனனாரதனாகியேகுமரன்
புண்டரீகநேர்பதந்தொழுதின்னனபுகல்வான். (உ)

Digitized By Roja Muthiah Research Library

தூயநான்மறையந்தணர்முனிவரிச்சுரத்திற்
போயவெல்லையினெறியதாய்வரவரப்புணர்த்து
மாய்வுசெய்துபின்குறுமுனிசூளினிவ்வடிவா
யேயதொல்பெயர்க்கிரவுஞ்சமால்வரையிதுகாண். (௩)

நேரிலிக்கிரிக்கொருபுடைமாயநீணகரிற்
சூரெனப்படுமவுணனுக்கிளவலாந்துணைவன்
போரிலச்சுதனேமியையணியதாப்புனைந்தோன்
றாரகப்பெயர்வெய்யவன்வைகினன்சயத்தால். (௪)

இன்னவன்றனையடுதியேலெளிதுகாணினையோன்
முன்னவன்றனைவென்றிடலெனமுனிமொழிய
மின்னுந்தண்சுடர்வேலவனவற்றினைவினவி
யன்னவன்றனைமுடிக்குதுமிவணெனவறைந்தான். (௫)

வேறு.

சிறந்திடுமுருகவேளினையசெப்பலு, நிறைந்திடுமமரருமிறையுநெஞ்சினி
லுறைந்திடுகவலொரீஇயுவகையெய்தினா, ரிறந்தனன்றாரகனின்றேடேயெனா. (௬)

ஐயர்கள்பெருமகிழ்வடையவாறிரு, கையுடைமுருகனக்காலைதன்புடை
மெய்யருளெய்தியவீரவாகுவாந், துய்யனைநோக்கியேயினையசொல்லுவான். (௭)

உற்றவக்கிரிகிரவுஞ்சமாகுமான், மற்றதனொருபுடைமாயநொச்சியுட்
செற்றியவசுரர்தஞ்சேனைதன்னுட, னற்றமில்றாரகனமர்தன்மேயினான். (௮)

ஏயநின்றுணைவர்களிலக்கத்தெண்மர்க, ளாயிரவெள்ளமாமடல்கொள்பூதர்கள்
சாய்வறுதலைவர்கடம்மொடேகியே, நீயவன்பதியினைவளைத்திநேரிலாய். (௯)

தடுத்தெதிர்மலைந்திடுமவுணர்தானையைப், படுத்தனைதாரகப்பதகனெய்துமே
லடுத்தமரியற்றுதியரியதேலியா, முடித்திடவருகுதுமுந்துபோவென்றான். (க0)

நலமிகுகுமரவேணவிலவின்னணம், வலமிகுசிறப்புடைவாகுநன்றெனாத், தலை
மிசைக்கூப்பியகரத்தன்றாழ்ந்துமுன், னிலமிசையிறைஞ்சினனேர்ந்துநிற்பவே. ()

ஏந்தலந்துணைவராமிலக்கத்தெண்மரை,யாய்ந்திடுபூதரையாதிநோக்கியே, வாய்
ந்திடுபெருந்திறல்வாகுதன்னுடன், போந்திடுமவுணரைப்பொரவென்றேவினான். ()

ஏவலுமனையவர்யாருமெம்பிரான், பூவடிவணங்கியேபோதற்குன்னலு
மாவியுளாவியாமமலன்பாங்குறுர், தேவர்கள்கம்மியற்கிதனைச்செப்புவான். ()

மேதகுபெருந்திறல்வீரவாகுவை, யாதியர்தமக்கெலாமளிக்கும்பான்மையா
லேதமிலாதபல்லிரதநல்கெனா, வோதினனுலகெலாமுதவுந்தொன்மையோன். ()

அத்திறங்கேட்டதோரமரர்கம்மிய, னொத்ததோர்மாத்திரையொடுங்குமுன்னரே
சித்திரவயப்பரிசீயங்கூளி * க, ளித்திறம்பூண்டபல்லிரதநல்கினான். (க௫)

வேறு.

அன்னதேர்த்தொகையதனையெம்பிரான், மின்னுகாலவேல்வீரவாகுவும்
பின்னரெண்மரும்பிறருஞ்சாரத, மன்னரும்பெறவழங்கினனரோ. (க௬)

பாகர்தூண்டிடப்படருந்தேர்கண்மேல், வாகைசேர்தரும்வாகுவேமுத
லாகினோரடைந்தம்பொன்மால்வரைத்,தோகைமைந்தனைத்தொழுதுபோற்றினார்.

* கூளி - இடபம்.

Digitized By Roja Muthiah Research Library

தொழுதுவள்ளலைச்சூழ்ந்துமும்முறை, விழுமிதாகியவிடைபெற்றேகினோர்
பழுதினீத்தமோர்பத்துநூறெனக், குழுமிப்பாரிடங்குலவிச்செல்லவே. (கஅ)

பாயபூதர்தம்படைக்குவேந்தரா, யேயினோர்க்குவீறிலக்கத்தெண்மராய்
மேயினோர்க்கெலாம்வீரவாகுவோர், நாயகம்பெறீஇநடுவட்போயினான். (கக)

அமர்வினைக்கமுந்தவனையேவியே, தமரவேலையிற்றனைசூழ்தர
விமையவர்க்கிறையேனையோர்தொழக், குமரவேள்கடைக்கூழையேகினான். (உ0)

வேறு.

பிற்படவெம்பிரான்பெயரவேவலான்
முற்படுவீரனைமுயங்கிப்பாரிடச்
சொற்படைபடர்வனதூமந்தன்னொடு
சிற்பரனகையழல்புரத்துச்சென்றபோல். (உக)

அரிநிரைபூண்டதேரலகைபூண்டதேர்
பரிநிரைபூண்டதேர்படைக்குளேகுவ
விரிகடல்வரைப்பினின்மேகராசியுங்
கிரியுறழ்கலங்களுங்கெழுமிச்செல்வபோல். (உஉ)

இடையகலிரதமோடிரதந்தாக்கிய
படையொடுபடைவகைசெறிந்தபல்வகைக்
கொடியொடுகொடிநிரைதுதைந்தகூளிய
ரடுசமர்பயின்றிடுமமைதிபோலவே. (உங)

சங்கொடுபணைதுடிதடாரிகாகளம்
பங்கமிறண்ணுமையாதிப்பல்லிய
மெங்கணுமியம்பினவெழுந்துபூழிபோய்ச்
செங்கமலத்தவன்பதத்தைச்செம்மிற்றே. (உச)

சாற்றுமிவ்வியல்புறத்தானைவீரருஞ்
சீற்றவெம்பூதருஞ்செல்லவாகையான்
கோற்றொழிலகற்றியகோட்டுமாமுகன்
போற்றியமாயமாபுரியைச்சேர்ந்தனன். (உ௫)

வேறு.

சேர்ந்திடுமெல்லைபூதர்சேனைபோய்நகரம்புக்கு
நேர்ந்திடுமவுணரோடுநின்றமர்வினைத்துநின்று
ரோர்ந்தனரதனைத்தூதரோடித்தங்கோயில்புக்குச்
சார்ந்திடுதிருவில்வைகுந்தாரகற்றொழுதுசொல்வார். (உசு)

எந்தைமற்றிதுகேணும்முனிமையவர்தொகையையிட்ட
வெந்துயர்ச்சிறையைநீக்கவிரிசடைக்கடவுண்மைந்தன்
கந்தனென்றொருவன்வந்தானவுணரைக்கடக்குமென்னா
வந்தரநெறிசெல்விண்ணோரறைந்திடக்கேட்டுமன்றே. (உஎ)

என்னிவர்மாற்றமென்னாயாந்தெரிகுற்றேமாக
வன்னவரியம்பியாங்கேயாயிரத்திரட்டியென்னப்
பன்னுறுபூதவெள்ளம்படர்ந்திடக்குமரன்போர்தான்
முன்னுறுதூசிநந்தமுதுநகரலைத்ததென்றார். (உஅ)



Digitized By Roja Muthiah Research Library

என்றலும்வடவைத்தீயிலிழுதெனுமளக்கர்வீழ்த்
துன்றியவெழுச்சிமானத்துண்ணெனச்செற்றந்தூண்ட
மின்றிகழரிமானேற்றுவியன்றவிசிருக்கைநீங்கிக்
குன்றுறழ்மகுடமண்டகோளகைதொடவெழுந்தான். (௨௯)

எழுந்துதன்மருங்குநின்றவொற்றரைநோக்கியிந்தச்
செழுந்திருநகர்மேல்வந்தசேனையைமுளிபுற்கானிற்
கொழுந்தழல்புகுந்ததென்னக்கொல்வனந்தானைமுற்று
முழுந்துருள்கின்றமுன்னரொல்லைதந்திடுதிரென்றான். (௩௦)

வேறு.

அன்னபணிமுறைபுரிவானொற்றுவர்கள்போயிடலுமவுணனின்ற
கொன்னுறுவேற்பரிசனரைக்கொடுவருதிரிரதமெனக்கூறலோடு
முன்னமொருநொடிவரையிற்றர்திடலுமதனிடையேமொய்ம்பிற்புக்குப்
பின்னர்வருமமைச்சர்கடந்தொகைபரவமதர்ப்பினொடுபெயர்தலுற்றான். (௩௧)

வீடுவான்போலுமினித்தாரகனென்றவன்சீர்த்திவிரைவில்வந்து
கூடியேபுரள்வதுவுமரற்றுவதுங்காப்பதுமாங்கொள்கைத்தென்ன
நீடுசாமரத்தொகுதிபலவிரட்டவெள்ளொளியணிமிர்ந்துவீசப்
பீடுசேர்தவளமதிக்குடைநிழற்றவலம்புரிகள்பெரிதுமார்ப்ப. (௩௨)

ஈமத்தேநடம்புரியுங்கண்ணுதலோனெடாதசிலையென்னமாலோன்
மாமத்தேயெனக்கிடந்தமுழுவயிரத்தண்டமொன்றுவயிரக்கண்டைத்
தாமத்தேர்பெறுகின்றமடங்கல்பலவீர்த்துவருஞ்சகடத்திண்காற்
சேமத்தேர்மிசைப்போதவேலையபல்படைக்கலமுஞ்செறிந்துநண்ண. (௩௩)

ஒற்றர்கூவியவேலையேற்றெழுந்தவவுணர்கடலொருங்குசெல்லக்
கொற்றமால்கரிபரிதேரினத்தினொடுவந்தீண்டக்குழவித்திங்கட்
கற்றைவார்சடைக்கடவுள்வாங்கியபொன்மால்வரையைக்காவலாகச்
சுற்றுமால்வரையென்னப்படைத்தலைவர்பஃறேரிற்றுவன்றிச்சூழ. (௩௪)

மொய்யமர்செய்கோலமொடுமுப்புரமேனடந்தருளுமுக்கண்மூர்த்தி
பையரவின்றலைத்துஞ்சுங்கணைதூண்டமூண்டதழல்பதகரானோர்
மெய்யுடலமுழுதுநுங்கித்தலைக்கொள்ளப்பெருந்தூமமிசைக்கொண்டென்னச்
செய்யமுடியவுணர்பெருங்கடலினிடையெழும்பூழிசேட்சென்றோங்க. (௩௫)

கார்க்குன்றமன்னதிறற்கரிமீதும்பரிமீதுங்கடிதிற்றூண்டுந்
தேர்க்குன்றமதன்மீதும்வயவர்கடங்கரங்களினுஞ்செறிபதாகை
யார்க்கின்றதுயர்ந்தோங்கியசைகின்றதெம்மருங்குமம்பொனாட்டிற்
றூர்க்கின்றபூழியினைத்துடைக்கின்றபரிசேபோற்றுவன்றித்தோன்ற. (௩௬)

வாகையுளபல்லியமுமியம்பத்தன்னகர்நீங்கிமன்னர்மன்ன
னேகியதோர்படிநோக்கியுவரிமிசைக்கங்கைகள்வந்தெய்துமாபோற்
சாகையுளபன்மரனும்பல்படையுங்குன்றுகளுந்தடக்கையேந்திச்
சேகுடையபெருஞ்சீற்றப்பூதர்படையார்த்தெதிர்ந்துசென்றதன்றே. (௩௭)

எல்லோருந்தொழுதகையகுமரனடியிணைவழுத்தியிகல்வெம்பூதர்
கல்லோடுமரனொடுங்கதையோடுங்கணிச்சியொடுங்கழுமுள்வீச
வில்லோடுங்கணையோடும்வேலோடுநேமியொடுமிக்கவெல்லா
மல்லோடும்புரையுமனத்தவுணர்படையெதிர்சிதறியமர்செய்திட்டார். (௩௮)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

எண்ணுறுபடைகளிவ்வாறெதிர்தழீஇயடரும்வேலை
விண்ணுறுபூழியென்னும்விரிதருபுகைமீச்செல்ல
மண்ணுறுகுருதியானவன்னியையமாற்றுவார்போற்
கண்ணுறுமிமையோர்கண்கள்கடிப்புனல்கான்றவன்றே. (௩௯)

இரிந்திடலின்றிநேர்வந்தேற்றமர்புரிதலாலே
சொரிந்திடுகுருதிபொங்கத்தோளொடுசென்னிதுள்ளச்
சரிந்திடுங்குடர்கள்சிந்தத்தானவர்பல்லோர்மாயப்
பொருந்திறல்வயத்தான்மேலாம்பூதருஞ்சிலவர்பட்டார். (௪0)

தேருடைத்தெறிந்துபாய்மாத்திறத்தினைச்சிதைத்துநீக்கி
யாருடைத்திகிரிச்சில்லியங்கையாலெடுத்துச்சுற்றிப்
போருடைத்திறலோர்தம்பாற்பொம்மெனநடாத்தும்பொற்பாற்
காருடைப்பூதர்சில்லோர்கண்ணனேபோன்றாரன்றே. (௪௧)

தேர்பரித்தெழுந்துமண்ணிற்செல்லுறுப்பவளச்செங்காற்
கார்பரித்தன்னதோகைக்கவனவாம்புரவியீட்டம்
போர்பரித்தொழுகுசீற்றப்பூதர்கள்புடைத்துச்சிந்திப்
பார்பரித்திடவேசெய்தார்படிமகளிடும்பைதீர்ப்பார். (௪௨)

வாலுடைக்களிற்றினீட்டம்வாரியேகரத்தாலெற்றிக்
காலுடைத்திகிரித்திண்டேர்கழல்களாலுருட்டிக்காமர்
பாலுடைப்புரவித்தானைபதங்களாலுழக்கிச்சென்றார்
வேலுடைத்தடக்கையண்ணல்விடுத்தருள்வீரவீரர். (௪௩)

வாருறுபுரசைபூண்டவன்களிற்றொருத்தல்யாவுஞ்
சூருறுநிலையவாகித்துஞ்சியதொகுதிசூழப்
பேருறுகுருதிநீத்தம்பிறங்கழற்கதிர்காணாது
காருறவூர்கோடோன்றுங்காட்சியையொத்ததன்றே. (௪௪)

கண்ணெதிர்நின்றுபோர்செய்கார்கெழுமவுணர்ப்பற்றித்
துண்ணெனப்பூதர்வீசத்துளங்கியகலன்களோடும்
விண்ணிடையிறந்துநொய்தின்வீழ்வதுவிசும்பிற்றப்பி
மண்ணிடைமின்னுவோடும்வருமுகில்போன்றதன்றே. (௪௫)

ஆயிரவெள்ளமாகுங்கணவருமாங்கணுள்ள
பாயிருங்குன்றமெல்லாம்பன்முறைபறித்துவீசி
மாயிருந்தகுவர்தானைவரம்பிலபடுத்துநின்றா
ரேயெனவுலகைச்சிந்துமிறுதிநாளெழிலிபோல்வார். (௪௬)

கிணங்கவர்ஞமலியோர்சார்ஞெரேலெனக்குரைப்பப்புள்ளின்
கணங்களுமலகைதானுங்கறங்கிடக்ககனத்தோங்கிப்
பிணங்களினடுக்கலீண்டிப்பேரமர்விலக்கியார்க்கு
மணங்குறுநிலையவாகியடுத்தனநடுவணம்மா. (௪௭)

தரைத்தடஞ்சிலையதாகத்தறுகண்வெம்பூதராஞேர்
வரைத்துணையன்னதாளேவலிகெழுகுழவியாகத்
திரைத்திழிகுருதிநீராத்தீர்ந்திடுதிறலோர்யாக்கை
யரைத்தெனநடப்பவேற்றாரவுணருமடுபோர்செய்வார். (௪௮)

Digitized By Roja Muthiah Research Library

தத்துறுபுரவித்திண்டேர்த்தானவர்களைத்தந்தி
பத்துநூறொன்றில்வீழப்பழுமரப்பணைகொண்டெற்றி
முத்தலையெஃகம்வீசிமுசலத்திற்புடைத்துமொய்ம்பாற்
குத்திநின்றுழக்கிப்பாய்ந்துகொன்றனர்பூதவீரர். (௪௯)

விழுந்தனபடிவம்யாண்டும்விரிந்தனகவந்தமேன்மே
லெழுந்தனகுருதித்தாரையீர்த்தனநீத்தமாக
வழுந்தியவிறந்தோர்யாக்கையார்த்தனபறவைசெய்ய
கொழுந்தசைமிசைந்துநின்றுகுரவையாட்டயர்ந்தகூளி. (௫௦)

கண்டனனிணையதன்மைதாரகன்கடியசீற்றங்
கொண்டனன்வையநீங்கிக்குவலயமிசைக்குப்புற்றுத்
தண்டமொன்றெடுத்துப்பூதப்படையினைத்தரையில்வீட்டி
யண்டமுங்குலுங்கவார்த்திட்டடிகளாலுழக்கிச்சென்றான். (௫௧)

அல்லெனப்பட்டமேனியவுணர்கட்கரசன்கையிற்
கல்லெனப்பட்டதண்டாற்புடைத்தலுங்கரங்கள்சென்னி
பல்லெனப்பட்டசிந்திப்பாய்புனலொழுக்கிற்சாய்ந்த
புல்லெனப்பட்டவம்மாபூதர்தஞ்சேனையெல்லாம். (௫௨)

பிடித்திடுவயிரத்தண்டம்பெருங்கடற்பூதவெள்ள
முடித்திடல்புகழோவன்றாற்றாரகமொய்ம்பின்மேலோ
னடித்திடுங்காலைகீண்டதம்புவியடிப்பானோங்கி
யெடுத்திடுங்காலைகீண்டதெண்டிசையண்டச்சூழல். (௫௩)

தாரிடங்கொண்டமார்பத்தாரகன்வயிரத்தண்டம்
போரிடங்கொண்டோர்சென்னிபுயமுரங்கரங்கள்சிந்திக்
காருடங்கண்டபாந்தட்கணமெனத்துடிப்பவீட்டிப்
பாரிடந்தன்னையெல்லாம்பாரிடமாக்கிற்றம்மா. (௫௪)

அன்றரிவிடுத்தவாழியாரமாவணிந்ததீயோன்
கொன்றனனனிகமென்னுங்கொள்கையுமவன்மேற்செல்லும்
வன்றிறறம்பாலில்லாவண்ணமுமதித்துநோக்கி
நின்றிலர்பூதர்வேந்தர்நெஞ்சழிந்துடைந்துபோனார். (௫௫)

திண்கணநிரையின்வேந்தர்சிந்துழிச்சீற்றந்தூண்ட
வெண்கணமாகியுள்ளவிலக்கருஞ்சிலைகாலூன்றி
மண்கணைமுழவம் * விம்மவயிரெழுந்திசைப்பவாங்கி
யொண்கணைமாரிதூயியவுணனையொல்லைசூழ்ந்தார். (௫௬)

சூழ்ந்தனர்துரந்தவாளிதோன்முகத்தவுணன்யாக்கை
போழ்ந்திலவூறதேனும்புணர்த்திலபுன்மையாகித்
தாழ்ந்திடுநிரப்பின்மேலோனொருமகன்றலைமைதாங்கி
வாழ்ந்தவர்தமக்குச்சொல்லுஞ்சொல்லெனவறிதுமீண்ட. (௫௭)

தரைபடப்புகழ்வைத்துள்ளதாரகன்றடமார்பத்தைப்
புரைபடச்செய்திடாதுபொள்ளெனப்பட்டுமீண்டு
நிரைபடத்திறலோருய்த்தநெடுங்கணையானவெல்லாம்
வரைபடச்சிதறுங்கல்லின்மாரிபோலானவன்றே. (௫௮)

---

* மண்கணைமுழவம்-முழவின்விசேடம். "கொற்றமண்கணைகுமுற" என்றார்பிறரும்.

Digitized By Roja Muthiah Research Library

விடுகணைமாரியாவுமீண்டிடவெகுண்டுவிண்ணோர்
படைமுறைவழங்கிநிற்பப்பதகன்மேலவைகளெய்தா
வுடையதம்வலியுஞ்சிந்தியொல்லெனமறிந்துசெல்லக்
கடவுளரதனைநோக்கிக்கரங்குலைத்திரங்கலுற்றார். (௫௯)

மற்றதுகாலைதன்னில்வலியினன்வயிரத்தண்டஞ்
சுற்றினன்றற்சூழ்கின்றசுடர்மணிக்கடுமான்றேர்க
ளெற்றினன்புழைக்கைநீட்டியிலக்கர்தந்தொகையும்வாரிப்
பொற்றனுவோடும்வீழப்புணரியின்மீதுவிட்டான். (௬௦)

துளும்பியவளக்கர்தன்னிற்சூழுறநின்றதெங்கின்
வளம்படுபழுக்காய்வர்க்கமாருதமெறியச்சிந்திக்
குளம்புகுதன்மையென்னவீழ்தருகொற்றவீர
ரிளம்பிறைபுரையும்வில்லோடெழுந்தொருபுடையிற்போனார். (௬௧)

கொற்றவினுழவன்வீரகோளரியதனைநோக்கிச்
செற்றமொடேகிச்செவ்வேள்சேவடிமனத்துட்கொண்டு
பற்றியதனுவைவாங்கிப்பகழிநூறுய்த்துத்தீயோன்
பொற்றடமவுலிதள்ளிப்புணரியுநாணவார்த்தான். (௬௨)

ஆர்த்திடுமோதைகேளாவண்டர்களனையன்மீது
தூர்த்தனர்மலரின்மாரிதோன்முகனதனைக்காணா
வேர்த்தனன்மானமுற்றான்வீரகேசரிமேலங்கைத்
தார்த்தடந்தண்டமுய்த்துத்தனதுமான்றேரிற்சென்றான். (௬௩)

வேறு.

சென்றோர்மாமுடிபுனைவுழித்தண்டமத்திறலோன்
மன்றன்மார்பகம்படுதலும்வீழ்ந்தனன்மயங்கி
வென்றிமொய்ம்புடையாண்டகையதுகண்டுவெகுண்டு
குன்றமன்னதோட்டாரகனொடுபொரக்குறித்தான். (௬௪)

வேறு.

குறித்தேவிறற்புயன்றாரகக்கொடியோனெதிர்குறுகி
வெறித்தேன்மலர்த்தொடைதூங்குதன்விறற்கார்முகங்குனியாப்
பொறித்தேயுறுகனல்வாளிகள்பொழிந்தேயவன்புரத்திற்
செறித்தேயுறவளைத்தானொருசிலைதானவர்தலைவன். (௬௫)

பொழிந்தான்சரமழைநம்மவன்புரமேலதுபொழுதி
னிழிந்தான்சிலையுயர்ந்தான்கணையீரேழுதொட்டிறுப்ப
வழிந்தாயெனையெதிர்ந்தாயிதற்கையமிலையென்னா
மொழிந்தானொருசூலந்தனைமொய்ம்பிற்செலவுய்த்தான். (௬௬)

பொருமூவிலைவேலங்கவன்பொன்மார்புறப்பொருமிப்
பெருமோகமொடேநின்றிடப்பின்னங்கதுகாணா
வுருமேறெனவதிர்தாரகனுடனேயவன்றுணையாய்
வருமூவருமொருநால்வருமாறுற்றமரிழைத்தார். (௬௭)

அமர்செய்திடுமெழுவீரருமவுணன்றனக்குடையக்
குமரன்பதந்தலைக்கொண்டிடுங்கோமானதுகாணா
வெமர்மற்றிவரெல்லோர்களுமிரிந்தார்பொருதென்னாச்
சமர்முற்றிடவருதாரகத்தகுவன்முனமடைந்தான். (௬௮)

Digitized By Roja Muthiah Research Library

ஒருகார்முகமிருகால்வளைவுறவேகுனித்துகுதே
னருகாதொழுகியதன்மையினவிர்நாணொலியெடுப்பத்
திருகாநெடுவரையானவுந்தெருமந்தனவவுண
ரிருகாதையுநனிபொத்தினரேங்குற்றனரிரிவார். (௬௯)

நாண்கொண்டிடுமொலிகேட்டலுநடுங்காவெருவுற்றார்
பூண்கொண்டிடுசிலைவாங்கலுமகிழ்வுற்றிடுபுலவோர்
சேண்கொண்டிடுமுகில்வேண்டினரதுவந்திடச்சிறந்தே
மாண்கொண்டதனுருமுச்செலமயங்கித்தளர்வதுபோல். (௭0)

வேறு.

மேதாவியர்கள்பரவுந்திறல்வீரவாகு
மாதாருவன்னசிலைதன்னைவளைத்துவாகைத்
தாதார்பிணையல்புனைதாரகன்றன்னைநோக்கித்
தீதாமழல்போல்வெகுண்டேயிதுசெப்புகின்றான். (௭௧)

பொன்றாவலிகொண்டமராடியபூதர்தம்மை
வன்றாழ்சிலைகொண்டிடுவீரரைவன்மைதன்னால்
வென்றாமெனவுன்னினைபோலும்விரைந்துநின்னைக்
கொன்றாவியுண்பனெனலுங்கொடியோனுரைப்பான். (௭௨)

மாயன்றனைவென்றவனேமியைமாசில்கண்டத்
தேயும்படியேபுனைந்தேன்வலியெண்ணுறாதே
நீயிங்கடுவாமெனக்கூறினைநீடுமாற்றஞ்
சீயந்தனையுநரிவெல்வதுதிண்ணமாமோ. (௭௩)

சாருங்குறள்வெம்படையாவையுஞ்சாய்ந்தவீர
ராருந்தொலைவுற்றனர்நீயுமயர்ந்துநின்றாய்
வீரம்புகல்வாய்விளிகின்றவிளக்கநேர்வாய்
பாரென்வலியாலுனதாவிபடுப்பனென்றான். (௭௪)

என்னுந்துணையிற்சரமாயிரமேந்தலுய்ப்பத்
தன்னங்கையிலோர்சிலைவாங்கினன்றாரகப்பேர்
மன்னன்கடிதுகணையாயிரமாறுதூண்டிச்
சின்னம்புரிந்துகணைநூறுசெலுத்தினனால். (௭௫)

எவ்வக்கொடியோன்றொடுவாளியையேந்தல்காணா
வவ்வக்கணைகள்விடுத்தேயவைமுற்றுமாற்றக்
கைவிற்கொருவனிவனுக்குமிக்காளைதன்னைத்
தெய்வப்படையான்முடிப்பேனெனச்சிந்தைசெய்தான். (௭௬)

வேறு.

வெங்கனற்படைதாரகன்விடவீரவாகுவெகுண்டுபின்
செங்கனற்படையேவியன்னதுசிந்தவேவருணப்படை
யங்கணுய்த்திடவவுணர்கோமகனடுபுனற்கிறைபடையினைத்
துங்கமுற்றியவீரனுய்த்ததுதுண்டமாம்வகைகண்டனன். (௭௭)

இரவிதன்படையவுணன்விட்டனனிவனுமப்படையேவியே
விரைவிலன்னதுதொலைவுகண்டனன்வீரமேதகுதாரக
னுரமிகுந்தனியூதைவெம்படையுந்தினனதுகந்தவே
ளருண்மிகுந்தனியடியன்மாற்றினனனையதொல்படைதனைவிடா. (௭௮)

Digitized By Roja Muthiah Research Library

அனிலவெம்படைவீறழிந்திடவவுணர்கோமகனம்புயன்
றனதுதொல்படையேவினனதுதணிவில்செற்றமொடேகலும்
வினைகருங்கழல்வீரவாகுவுமற்றவன்படைதூண்டியே
நினையுமுன்னதுதொலைவுசெய்தனனிகரில்வானவர்புகழவே. (எ௯)

ஆயதன்மைகள்கண்டுதாரகனற்புதத்தினனாகியே
மேயவானவர்படைகள்யாவையும்வீரன்மற்றிவன்வென்றனன்
மாயநீர்மையினிங்கிவன்றிறல்வன்மைகொள்ளுதுமினியெனாத்
தீயபுந்தியிலினையவாறுதெரிந்துசிந்தனைசெய்துமேல். (அ0)

தொல்லைமாயையின்விஞ்சைதன்னைநவின்றுளங்கொடுதுண்ணென
மல்லன்மேவருதாரகாசுரன்வடிவமெண்ணிலதாங்கியே
யெல்லைதீர்தருபடைவழங்கினனெங்குமாகியிருட்குழா
மொல்லைவந்துபரந்தபோலவனொருவனின்றமர்புரியவே. (அக)

கண்டுமற்றதுவானுளோர்கள்கலங்கியேங்கினர்முன்னரே
விண்டுநீளிடைநின்றபூதர்வெருண்டுபின்னருமோடினார்
மண்டுபேரமர்செய்தயர்ந்திடுமானவீரருமச்சமேல்
கொண்டுநின்றனர்முறுவல்செய்தனர்குணலையிட்டனரவுணரே. (அஉ)

வேறு.

தாரகப்பெயரவுணர்கோன்மாயையின்சமரு
மாருமச்சுறுகின்றதுமாடன்மொய்ம்புடையோன்
பேரழற்பொறிகதுவுறநோக்கியேபிறங்கும்
வீரபத்திரனெடும்படையெடுத்தனன்விடுவான். (அ௩)

துங்கவுக்கிரச்சிம்புண்மாப்படையினைத்தூயோன்
செங்கைபற்றலுமன்னதுதாரகன்செயலா
லங்கணின்றிடுமாயைகண்டச்சமுற்றழுங்கிப்
பொங்குபானுமுன்னிருளெனமுடிந்ததப்பொழுதே. (அ௪)

தன்புணர்ப்புறுமாயைதானுடைதலுந்தமியாய்
முன்புநின்றதோர்தாரகன்மொய்ம்புளான்றன்னைப்
பின்புமாயையிற்படுத்தவோர்சூழ்ச்சியைப்பிடித்து
மின்பொலிந்ததன்றேரைவிட்டோடினன்விரைவில். (அ௫)

தாரகன்றொலைந்தோடலுந்தனக்கிணையில்லோன்
போரழிந்துவென்னிட்டவன்றன்மிசைப்புத்தேள்
வீரவெம்படைவிடுப்பதுவீரமன்றென்னாச்
சீரிதாகியதூணியுளன்னதைச்செறித்தான். (அ௬)

அற்றபோர்வலித்தாரகன்பின்விரைந்தணுகிப்
பற்றிநாண்கொடுபுயந்தனைப்பிணித்தெனைப்பணித்த
கொற்றவேலன்முனுய்க்குவன்யானெனக்குறித்து
மற்றவன்றனைத்தொடர்ந்தனனெடுந்திறல்வாகு. (அஎ)

வேழமாமுகற்கிளவலையுன்னியேவீர
னாழிமால்கடலாமெனவார்த்துவைதனுகச்
சூழுமாயையினிருக்கையாந்தொல்கிரவுஞ்சப்
பாழியொன்றுசென்றொளித்தனன்றாரகப்பதகன். (அ௮)

Digitized By Roja Muthiah Research Library

முன்னமாங்கவன்போகிய பூழையுண்முடுகிப்
பொன்னின்வாகையந்தோளுடையாண்டகைபுகலு
மன்னதோர்வரையகமெலாமாயிரங்கதிரின்
மன்னனேகுறுவிருணிலம்போன்றுவைகியதே. (அகூ)

நீளுமாலிருள்படர்தலுஞ்சில்லிடைநெறியாற்
றுளிதொற்றியேபடர்ந்தனன்றாரகற்காணு
ளுளிமொய்ம்புடைமேலையோனடுக்கலின்புணர்ப்பான்
மீளுகின்றதோர்நெறியையுங்கண்டிலன்வெகுண்டான். (கூ0)

செற்றமிக்கவன்மாயையிவ்வரையெனச்சிந்தித்
துற்றகாலையிலவுணனாகியகிரவுஞ்சப்
பொற்றையன்னதுகண்டுமோகத்துயில்புரிந்து
மற்றவன்றனதுணர்வினைமையல்செய்ததுவே. (கூக)

இயலிசைத்தமிழ்முனிவரனிசைத்தருளிசைவால்
வியலுடைத்திறல்வாகுவையவ்வரைமிகவு
மயலுடைப்பெருமாயமதியற்றலுமயங்கித்
துயிலலுற்றனன்றொல்லையிலுணர்வெலாந்துறந்தே. (கூஉ)

அஃமலைக்கணேமுன்னவனுறங்கலுமனைய
செம்மலுக்கிளையோரிருநால்வருஞ்சிறந்த
தம்மினத்தரோரிலக்கருஞ்சாரதர்பலரும்
விம்மலுற்றனர்சிறையிலாப்பறவையின்மெலிந்தார். (கூங)

உடைந்துபோயினதாரகன்றன்னைநம்முரவோன்
றொடர்ந்துசென்றனன்மீண்டிலனவனொடுந்துன்னி
யடைந்துவெற்பினிற்போர்புரிவான்கொலோவங்கட்
படர்ந்துநாடுதும்யாமுமென்றெண்ணினர்பலரும். (கூச)

எண்ணியேயிசைந்திளையரோரெண்மருமிலக்க
நண்ணும்வீரரும்பாரிடந்தன்னுளையகரு
மண்ணல்வான்படையேந்தியேயாயிடையகன்று
விண்ணுலாவுறுகிரவுஞ்சமெய்தினர்விரைவில். (கூரு)

ஆயவெற்பினில்வீரவாகுப்பெயரடலோன்
போயபூழையுண்மற்றவர்யாவரும்புகலுந்
தீயதொல்வரைமுன்னவற்கிழைத்திடுதிறம்போன்
மாயமெண்ணிலபுரிதலுமயங்கியேவதிந்தார். (கூசா)

வெற்றிவீரவாகுப்பெயரண்ணலும்வீரர்
மற்றியாவருமயங்கலுந்தாரகன்வாரா
வுற்றுநோக்கிநம்மாயையாலிவரெலாமொருங்கே
யிற்றுளாரெனமகிழ்ந்துமால்வரைமிசையெழுந்தான். (கூஎ)

அண்டமீமிசைநின்றவானவர்களிவ்வனைத்துங்
கண்டுகேட்புனல்பனிவரவரற்றியேகலங்கிக்
கொண்டதுன்பொடுபதைபதைத்தோடினர்கூளித்
தண்டம்யாவையும்வெருவினதலைவரின்மையினால். (கூஅ)

Digitized By Roja Muthiah Research Library

மலையின்மீமிசையெழுதருதாரகன்மற்றோர்
தலைமையாகியவிரதமேல்கொண்டுதானவர்கள்
பலரும்வந்துவந்தார்த்தனர்சூழ்தரப்பைம்பொற்
சிலையதொன்றினைவாங்கியேசெருநிலஞ்சென்றான். (கூகூ)

நீடுதன்சிலைநாணொலிகொண்டுநீள்சரங்கள்
கோடிகோடிமற்றொருதொடையாகவேகொளுவி
யாடல்சேர்தருபூதர்மேற்பொழிதலுமலமந்
தோடலுற்றனர்திசையினும்விண்ணினுமுலைந்தே. (க00)

ஆனகாலையின்நாரதனிதனையகண்டழுங்கி
மேனிதுண்ணெனவியர்ப்புறவழிக்கொடுவிரைந்து
போனவிண்ணவர்தம்மொடுசென்றுபுத்தேளிர்
சேனைகாவலனின்றதோர்கடைக்கூழைசேர்ந்தான். (க0க)

அரிதுமாதவம்புரிதருநாரதனடலின்
விரவுமாயிரம்பூதவெள்ளத்தொடுமேவுங்
கருணைசேரறுமுகத்தனைக்கண்டுகண்களித்துச்
சுரர்களோடுபோயிறைஞ்சியேயினையனசொல்வான். (க0உ)

ஐயநின்படைவீரர்கள்பெருஞ்சமராடி
வெய்யதானவர்தானைகள்வரவரவீட்டிச்
செய்யமந்திரித்தலைவரையமைச்சரைச்செற்றுப்
பொய்யின்மொய்ம்புடைத்தாரகன்றன்னொடும்பொருதார். (க0௩)

தலைக்கணாகியவீரனுந்தம்பியர்பிறரு
மிலக்கவீரரும்பாரிடத்தலைவர்கள்யாரும்
புலைக்கொடுந்தொழிற்றாரகன்றன்னொடும்பொரத்தன்
மலைக்கணுய்த்தனனவர்தமைச்சூழ்ச்சியின்வலியால். (க0௪)

உய்த்தகாலையிலவுணனாகியகிரவுஞ்ச
மெத்துமாயைகளனையவர்க்கிழைத்தலும்வெருவிப்
பித்தராமெனமயங்கினர்போலுமாற்பின்ன
ரித்திறந்தனையுணர்ந்தனன்றாரகனென்போன். (க0௫)

தெரிந்துதாரகன்மகிழ்வொடுபறந்தலைசென்று
துரந்துநம்பெருந்தானையைக்கணைமழைசொரிய
முரிந்துபோயினநிகழ்ச்சியீதுயிர்த்தொகைமுற்று
மிருந்தநாயகவறிதியேயாவையுமென்றான். (க0௬)

என்றகாலையினாரதனுள்ளமுமிமையோர்
நின்றுதாமயர்கின்றதுமமரர்கோனெஞ்சிற்
றுன்றுசோகமுநான்முகனாதியோர்துயரு
மொன்றநோக்கியேயறுமுகப்பண்ணவனுரைப்பான். (க0எ)

வேறு.

ஆருமிதுகேண்மினமராடுகளனேகித்
தாரகனைவேல்கொடுதடிந்தவுணர்வைகு
மோரரணமானகிரவுஞ்சகிரிசெற்றே
வீரர்தமையோரிறையின்மீட்டிடுவனென்றான். (க0அ)



Digitized By Roja Muthiah Research Library

எந்தையிவைகூறுதலும்யாருமவைதேர்ந்து
சிந்தையுறுகின்றதுயர்செற்றுமுடிவில்லா
வந்தமின்மகிழ்ச்சியுடனாடியிசைபாடிக்
கந்தனடிவந்தனைபுரிந்தனர்களிப்பால். (௧0௯)

கந்தமுருகேசனதுகாலைமுதுபாசாய்
வந்ததொருவர்தினைமகிழ்ச்சியொடுநோக்கிச்
சிந்தைதனின்முந்தும்வகைதேரதனைவல்லே
யுந்துதிவிரைந்தெனவுரைத்தருளலோடும். (௧௧0)

என்னவினிதென்றுதொழுதெழுவகைத்தாந்
தன்னினமதாகியவர்தாங்கள்புடைபோதக்
கொன்னுனையதாமுளவுகோல்கயிறுபற்றித்
துன்னுபரிமாநிரைகடூண்டிமிகவார்த்தான். (௧௧௧)

வேறு.

ஆனகாலைதனிலண்டமும்மையயந், தானுமங்குளதடங்கிரியாவு
மேனைமாகடலுமெண்டிசையுள்ள, மானவேழமுநடுங்கினமன்றே. (௧௧௨)

வாவுகின்றபலமாநிரைதூண்டத், தேவர்தங்கள்சிறைதீரியசெல்வோன்
மேவுதொல்லிரதம்விண்ணெறிகொண்டே, யேவரும்புகழவேகியதன்றே. (௧௧௩)

ஆதியங்குமரனவ்வழிபொற்றேர், மீதுசெல்லுதலும்விண்முகில்பல்வே
றோதும்வண்ணமுடனுற்றெனவானிற், பூதசேனைபுடைபோயினவன்றே. (௧௧௪)

போரழிந்துபுறகிட்டெதிர்பூத, ராருநேர்ந்துதொழுதாற்றலொடெய்த
நாரணன்றனதுநன்மருகானோன், றாரகன்றிகழ்சமர்க்களமுற்றான். (௧௧௫)

கவனமோடுபடர்காலினுமுந்திச், சிவன்மகன்றனதுசேனையதானே
ருவரியாமெனவுறுந்திறநோக்கி, யவுணர்தானையையணிந்தெதிர்சென்றார். (௧௧௬)

சகந்துதிக்கவருசாரதர்தாமு, மகந்தையுற்றவவுணத்தொகையோரு
மிகந்தவன்மையொடெதிர்ந்திகலெய்தி, வெருண்டுபேரமர்விளைத்திடலுற்றார். ()

கரங்கொணேமிகள்கணிச்சிகடைவாய்ச், சரங்களாதியனதானவர்விட்டா
ருரங்கொண்மால்வரைகளோங்குமெழுக்கண், மரங்கள்விட்டனர்மறங்கெழுபூதர்.

முரிந்ததேர்நிரைமுடிந்தனமாக்க, ணெரிந்ததானவர்நெடுந்தலைசோரி
சொரிந்த்பூதர்மெய்துணிந்தனவானிற், றிரிந்தபாறுகள்செறிந்தனவன்றே. (௧௧௯)

நிறங்கொள்செங்குருதிநீத்தமதாகிக், கறங்கியோடினகவந்தமொர்கோடி
மறங்கொடாடுவவயின்றொறுமாகிப், பிறங்குகின்றனபிணங்கெழுகுன்றம். (௧௨0)

அனையவாறிவரருஞ்சமராற்றப், புனையல்வாகையுளபூதர்கடம்மால்
வினையம்வல்லவுணர்வெவ்வலிசிந்தி, யினைதலோடுமிரிகுற்றனரன்றே. (௧௨௧)

தன்படைத்தொலைவுதாரகனோக்கிக், கொன்படைத்தகுனிவிற்குனிவித்தே
மின்படைத்தபலவெங்கணைதூவி, வன்படைக்கணம்வருந்தநடந்தான். (௧௨௨)

நடந்தெதிர்ந்தகணநாதரையெல்லாந், தொடர்ந்துபல்கணைசொரிந்துதுரந்தே
யிடந்திகழ்ந்தவிமையத்திறைநல்கு, மடந்தைதந்ததிருமைந்தன்முனுற்றான். (௧௨௩)

உற்றகாலைதனிலொற்றரைநோக்கிச், சற்றுநீதியறுதாரகவெய்யோன்
செற்றமென்னுமழல்சிந்தையின்மூள, மற்றிவன்கொலரன்மாமகனென்றான். (")

Digitized By Roja Muthiah Research Library

என்னனுங்குமரனிங்கிவனேயா, மன்னவென்றிடனுமற்றவனேறுந்
துன்னுதேர்கடிது தூண்டியெவர்க்கு, முன்னவன்மதலைமுன்னுறவந்தான்.(௧௨௫)

வேறு.

முழுமதியன்னவாறுமுகங்களுமுந்நான்காகும்
விழிகளினருளும்வேலும்வேறுளபடையின்சீரு
மழகியகரமீராறுமணிமணித்தண்டையார்க்குஞ்
செழுமலரடியுங்கண்டானவன்றவஞ்செப்பற்பாற்றே. (௧௨௬)

தற்ப * மதுடையசிந்தைத்தாரகனிணையவாற்றாற்
சிற்பரமூர்த்திகொண்டதிருவுருவினைத்துநோக்கி
யற்புதமெய்திநம்மேலமர்செயவந்தானென்றாற்
கற்பனைகடந்தவாதிக்கடவுளேயிவன்கொலென்றான். (௧௨௭)

இந்தவாறுன்னிப்பின்னர்யார்க்குமேலாகுமீசன்
றந்ததோர்வரமும்வீரத்தன்மையும்வன்மைப்பாடு
முந்துதாம்பெற்றசீருமுழுவதுநினைந்துசீறிக்
கந்தவேடன்னைநோக்கியினையனகழறலுற்றான். (௧௨௮)

நாரணன்றனக்குமற்றைநான்முகன்றனக்கும்வெள்ளை
வாரணன்றனக்குமல்லான்மதிமுடியமலனுக்குந்
தாரணிதனிலெமக்குஞ்சமரினையிழைப்பவிங்கோர்
காரணமில்லைமைந்தாவந்ததென்கழறுகென்றான். (௧௨௯)

அறவினைபுரிந்தேயார்க்குமருளொடுதண்டஞ்செய்யு
மிறையவனுகுமீசனிமையவர்தம்மைநீங்கள்
சிறையிடைவைத்ததன்மைதிருவுளங்கொண்டுநந்தம்
விறலொடுவன்மைசிந்தவிடுத்தனனெம்மையென்றான். (௧௩0)

வேறு.

கூரியவேற்படைக்குமரநாயகன்
பேரருணிலைமையாலினையபேசலும்
போரினையிழைத்திடும்பூட்கைமாமுகத்
தாரகனென்பவன்சாற்றன்மேயினான். (௧௩௧)

செந்திருத்திகழுமார்புடையசெங்கணன்
சுந்தரக்கனுழன்மேற்றோன்றிப்போர்செய்தே
யந்தரக்கதிர்புரையாழியுய்த்ததென்
கந்தரத்தணிந்ததுகாண்கிலாய்கொலோ. (௧௩௨)

இன்றுகாறெம்முடனிகலிப்போர்செயச்
சென்றுளார்யாவருஞ்சிறிதுபோழ்தினுட்
பொன்றுவாரிரிந்தனர்போவரல்லது
வென்றுளாரிலையதுவினவலாய்கொலோ. (௧௩௩)

முட்டிவெஞ்சமரினைமுயலமுன்னநீ
விட்டிடுதலைவரையென்றுவெற்பினிற்
பட்டிடவியற்றினன்பலகணங்களை
யட்டனனவற்றினையறிந்திலாய்கொலோ. (௧௩௪)

* தற்பம் - செருவம்.

Digitized By Roja Muthiah Research Library

ஆகையாலெம்முடனமரியற்றியே
சோகமதடையலைசூலபாணிபா
லேகுதிபாலநீயென்றுகூறலும்
வாகையங்குமரவேண்மரபிற்கூறுவான். (கஙரு)

தாரணிமறையவன்றதீசிதன்மிசை
நாரணன்விடுத்ததோர்நலங்கொளாழிதன்
கூரினையிழந்துபோய்க்குலாலன்சக்கர
நீர்மையதானதுவினவலாய்கொனீ. (கஙசு)

சூற்புயன்மேனியான்றுங்கச்செங்கையின்
பாற்படுதிகிரிபோற்பழியிற்றுஞ்சுமோ
வேற்புறுபடைக்கெலாமிறைவனுருகும்
வேற்படைநின்னுயிர்விரைவினுண்ணுமால். (கஙஎ)

உங்கள்பேராற்றலிவ்வுலகைவென்றன
விங்குநாம்வருதலுமிமைப்பின்மாய்ந்தன
வங்கண்மாஞாலமுண்டமருமாரிருள்
பொங்குபேரொளிவரவிளிந்துபோனபோல். (கஙஅ)

ஈட்டியமாயைகளவையுந்தன்வழிக்
காட்டியகிரியையுங்கள்வநின்னையுந்
தீட்டியவேல்கொடுசெற்றுச்சேனையை
மீட்டிடுகின்றனன்விரைவினுலென்றான். (கஙகூ)

என்றலுஞ்சீறியேயிகலித்தாரகன்
குன்றுறழ்தன்சிலைகுனியக்கோட்டியே
மின்றிகழ்நாணொலியெடுப்பவிண்மிசைச்
சென்றிடுமமரருந்தியக்கமெய்தினார். (கச0)

எய்தியகாலையிலெந்தைகந்தவேள்
கைதனிலிருந்ததோர்கார்முகந்தனை
மொய்தனில்வாங்கிநாண்முழக்கங்கோடலு
மைதெனவுலகெலாமழுங்கிற்றென்பவே. (கசக)

நாரியின்பேரொலிநாதன்கோடலு
மாரணன்முதலினோர்தாமுமஞ்சினார்
பேருலகெங்கணும்பேதுற்றேங்கின
தாரகமுதல்வனுந்தலைதுளக்கினான். (கசஉ)

துளக்கியதாரகசூரன்கைத்தலங்
கொளற்குரிவில்லுமிழ்கொள்கைத்தாலென
வளக்கதிர்நுனைகெழுவயிரவான்கணை
யளக்கருமெண்ணிலவார்த்துத்தூண்டினான். (கசங)

ஆயதோர்காலையிலாறுமாமுகன்
மீயுயர்சிலைதனின்விரைவிலாயிரஞ்
சாயகந்தூண்டியேதாரகாசுர
னேயினபகழிகளியாவுஞ்சிந்தினான். (கசச)

Digitized By Roja Muthiah Research Library

சிந்தியகாலையிற்செயிர்த்துத்தாரக
னுந்தினன்பின்னருமொராயிரங்கணை
கந்தனுமனையதுகண்டுவல்லையி
னைந்திருபகழிதொட்டவற்றைநீக்கினன். (கசரு)

மீட்டுமத்தாரகன்விசிகம்வெஞ்சிலை
பூட்டிய * வாங்கலும்புராரிகாதல
னீட்டமொடொருகணையேவியாங்கவன்
ரேட்டுணைவில்லினைத்துண்டமாக்கினன். (கசசு)

வேறு.

அங்கோர்சிலையைக்குனித்தானதுகாலைதன்னி
லெங்கோமுதல்வனொருபாணியினேந்துவில்லிற்
செங்கோல்வகையாயிரம்பூட்டினன்செல்லவுய்த்தான்
வெங்கோனடாத்திவருதாரகவெய்யன்மீதில். (கசஎ)

சேரார்பரவுந்திறல்வேலவன்செய்கைநோக்கித்
தாரார்முடித்தாரகவீரன்றனதுவில்லி
லோராயிரம்வாளிகள்பூட்டினனெல்லையுய்த்து
நேராய்விரவுங்கணையாவையுநீறுசெய்தான். (கசஅ)

வெய்யானநந்தங்கணைதூண்டவிமலனல்குந்
துய்யானவைகளறுத்துக்கணைகோடிதூண்டி
மையாரவுணர்புகழ்தாரகமானவேழ
மெய்யாகும்வண்ணஞ்செறித்தானவன்யாக்கையெங்கும். (கசகூ)

ஒருகோடிவாளியுறலோடுமுருத்துநீச
னிருகோடிவாளிவிடவன்னதையேவினீக்கி
முருகோடியதாரசுரேசன்முகங்கொள்கையும்
பொருகோடும்வீழவிடுத்தானிருபுங்கவாளி. (கரு0)

வந்தங்கிரண்டுசரமும்படமாயைமைந்த
னந்தங்கள்கையோடிறலோடுந்தளர்ச்சியெய்தி
முந்துங்கணையாயிரந்தன்னைமுனிந்துதூண்டிக்
கந்தன்றடந்தேர்த்துவசந்துகள்கண்டுநின்றான். (கருக)

மல்லற்கொடியிற்றதுகண்டுமெறங்கொள்வெய்யோன்
வில்லைக்கணைநான்கிரண்டானிலமீதுவீட்டித்
தொல்லைக்கனலின்கணையாயிரந்தூண்டியன்றேன்
செல்லுற்றதிண்டேர்பரிபாகொடுசிந்திநின்றான். (கருஉ)

வேறங்கொருதேர்மிசையேறியொர்வில்லைவாங்கி
நூறைந்திருதீவிசிகந்தனைநொய்தினேவி
மாறின்றிவைகும்பரமன்வடிவானசெவ்வே
ளேறுந்தடந்தேர்வலவன்புயத்தெய்தவுய்த்தான். (கருங)

வென்றோர்புகழுங்குமரன்வியன்றேர்கடாவிச்
சென்றோன்வருத்தந்தெரிந்தாயிரந்தீயவாளி
வன்றோண்முகத்தாரகனெற்றியுண்மன்னவுய்ப்பப்
பொன்றோய்தனதுதடந்தேரிற்புலம்பிவீழ்ந்தான். (கருச)

* பூட்டிய - வினையெச்சம்.

Digitized By Roja Muthiah Research Library

வீழுற்றிடலும்விழுசெம்புனல்வெள்ளமிக்கே
தாழுற்றபாரிற்புகுந்தேபுடைசார்தலுற்ற
பாழிக்கடலிற்பரிமாமுகம்பட்டசெந்தீச்
சூழிக்களிற்றின்வதனத்தினுந்தோன்றுமென்ன. (௧௫௫)

மன்னுகியதாரகனங்கண்மயங்கிவீழ
வன்னோன்றனதுபடைவீரதனைநோக்கிக்
கொன்னார்சினங்கொண்டடுபோரைக்குறித்துநம்பன்
றன்னோருதவுந்திறன்மைந்தனைச்சூழ்ந்துகொண்டார். (௧௫௬)

சூலந்திகிரிப்படைதோமரந்துய்யபிண்டி
பாலஞ்சுடர்வேலெழுநாஞ்சில்பகழிதண்ட
மாலங்கணையங்குலிசாயுதமாதியாக
வேலும்படைகள்பொழிந்தார்த்தனரெங்குமீண்டி. (௧௫௭)

கறுத்தானவர்தஞ்செயல்கண்டுதன்கார்முகத்தை
நிறுத்தாவளையாக்கணைமாமழைநீடவுய்த்து
மறுத்தானுடையகொடுந்தானவர்வாகைசிந்தி
யறுத்தான்விடுதொல்படையாவையுமாடல்வேலோன். (௧௫௮)

வெய்தாகியதீங்கணைமாரிவிசாகன்மீட்டும்
பெய்தானவுணர்முடிதன்னைப்பிறங்குமார்பைத்
துய்தானுறும்வாயினையங்கையைத்தோளைத்தாளைக்
கொய்தான்குருதிக்கடலெங்கணுங்கொண்டதன்றே. (௧௫௯)

வில்லோர்பரவுந்திறல்வேலவன்வெய்யகோலா
லல்லோடியதீமனத்தானவராயினோரிற்
பல்லோரிறந்தார்குருதிக்கடல்பாய்ந்துநீந்திச்
சில்லோர்கடத்தமுயிர்கொண்டுசிதைந்துபோனார். (௧௬0)

மைக்கார்சிவந்ததெனுந்தாரகன்மையனீங்கி
யக்காலதன்னிலெழுந்தேயயல்போற்றிநின்று
தொக்கார்தமையாரையுங்காண்கிலன்றுன்பமெய்தி
நக்கானவர்தஞ்செயல்கண்டுநவிறலுற்றான். (௧௬௧)

வேறு.

செய்யவார்சடையீசனல்கியசிறுவனிங்கொருவன்பொரக்
கையிழந்துமுகத்தினூடுகவின்கொள்கோடுமிழந்தனன்
மையலெய்திவிழுந்தனன்பொரும்வலியதானையுமாண்டன
வையவீங்கொருதமியனின்றனனழகிதாலெனதாண்மையே. (௧௬௨)

தாவில்வெஞ்சிலைவன்மைகொண்டுசரங்களெண்ணிலதூண்டியே
மேவலானிவனுயிர்குடிப்பதும்வெல்லுகின்றதுமரியதாற்
றேவர்மாப்படைதொடுவனிங்கினியென்றுசிந்தனைசெய்துபி
னேவரும்புகழ்தாரகாசுரனினையசெய்கையியற்றினன். (௧௬௩)

வேறு.

அடலரிநான்முகனுதிவானவப், படையினையாவையும்பவஞ்செய்தாரகன், விட
விடவந்தவைவெருவிமேலையோன், புடைதனிலொடுங்கியேபோற்றிநின்றவே. ()

செங்கண்மாலயன்முதற்றேவர்மாப்படை, துங்கமோடேகியேதுளங்கிவேலுடைப்
புங்கவன்பாங்கரிற்போற்றிநிற்றலு, மங்கதுகண்டனனவுணர்மன்னவன். (கசுரு)

ஒருவினனகந்தையையுள்ளமோரிறை, வெருவினன்விம்மிதமிகவுமெய்தினா
னெரிகலுழ்விழியினனிவனைவென்றிட, லரியதுபோலுமென்றகத்திலுன்னினான்.

பாங்கரின்மாதுடைப்பரமன்றொல்படை, யீங்கினிவிடுதுமென்றெண்ணியப்படை
வாங்கினனருச்சனைமனத்தினாற்றின, னோங்கிருஞ்சினமுடனொல்லையேவினான். ()

சங்கரன்றொல்படைதறுகணாலமும், புங்கவர்படைகளும்பூதராசியு
மங்கதநிரைகளுமளப்பில்சூலமும், வெங்கனலீட்டமும்விதித்துச்சென்றதே. கசுஅ

கலைகுலாம்பிறைமுடிக்கடவுண்மாப்படை, யலகிலாவுயிர்களுமண்டம்யாவையு
முலைகுறுதலமரவுருத்துச்சேறலு, மிலைகுலாமயிலுடையெந்தைநோக்கினான். கசுகூ

கந்தவேளனையதுகண்டுதந்தையைச், சிந்தையிலுன்னியோர்செங்கைநீட்டியே
யந்தவெம்படையினையருளிற்பற்றினான், றந்தவன்வாங்கியதன்மையென்னவே. ()

நெற்றியில்விழியுடைநிமலன்காதலன், பற்றியபடையினைப்பாணிசேர்த்தினான்
மற்றதுதாரகவலியன்கண்ணுறீஇ, யிற்றதுநந்திருவினியென்றேங்கினான். (களக)

தேவர்கடேவனார்தெய்வத்தொல்படை, யேவினனதனையுமெதிர்ந்துபற்றினான்
மூவிருமுகமுடைமுதல்வன்வன்மையை, நாவினிலொருவரானவிறப்பாலதோ. ()

ஆயினுமரன்மகனறத்தின்போரலாற், றீயதோர்கைதவச்செருவதுன்னலான், மாயைகளாற்றியே மறைந்துநின்றுநா, னேயெனவியற்றுவ னமரென்றெண்ணினான். (களங)

கையனுமிவ்வகைகருத்திலுன்னியே, யொய்யெனவேகிரவுஞ்சவெற்பின்முன்
வையமொடேகிநீவல்லமாயைகள், செய்குதிசெய்குதியென்றுசெப்பினான். (களச)

வேறு.

செப்பியவிறுவரைகிரவுஞ்சந்திகழ்வுறுமாயையினிகழ்வுன்னி
முப்புரவகைபலவெனநிற்பமுரணுறுதாரகமுதல்வன்று
னப்புரநிருதர்களெனநின்றனகல்வரைபலபலமுகிலாக
வொப்பறுசூரனதிளையோனுமுருமெனவவையிடையுலவுற்றான். (களரு)

வேலைகளுருவினைவரைகொள்ளவிசயமதுடையதொரசுரேசன்
காலமதிறுதியிலுலகுண்ணுங்கனையொலியனலிகளெனநின்றான்
சீலமின்முதுகிரிநெடுநேமித்திருவரைசூழ்தருமிருளாக
மால்கரிமுகமுளவவுணன்றன்வரையறுபாரிடநிரையானான். (களசு)

இந்திரன்முதலுளசுரர்வைகுமேமுடனொருதிசைவேழம்போ
லந்தநெடுங்கிரிவரலோடுமருகினிலுறுகுலகிரியாகித்
தந்தியின்முகமுளவவுணன்றன்சடசடமுதிரொலியுடன்வந்தான்
முந்தியதந்தமதுருமாறிமுறைமுறைநின்றதொர்திறனேபோல். (களஎ)

வாயுவினுருவெனமலைசெல்லமதகரிமுகமுளபதகன்றன்
றேயுவினுருவெனவரலுற்றான்றிரியவுநெடுவரைவிரைவோடுங்
காய்கனலுகுநெகிழிகளாகிக்ககனமதிடையுறமிடைகாலை
யாயிரகோடிவெய்யவரேபோலலமரலுற்றனனறமில்லான். (களஅ)

Digitized By Roja Muthiah Research Library

அவ்வகைதாரகன்வரையோடுமௌவறுமாயையின்வடிவெய்தி
யெவ்விடையுஞ்செறிதரலோடுமெம்பெருமானவனிவைகாணுத்
தெவ்வலிகொண்டுறுமிவனுவிசிந்துவனென்றுளமிசைகொண்டே
கைவருவேற்படைதனைநோக்கியினையனசிலமொழிகழறுற்றான். (கஎகூ)

தாரகனென்பதொர்பேரோனைச்சஞ்சலமுறுகிரவுஞ்சத்தை
யோரிறைசெல்லுமுனுடல்கீறியுள்ளுயிருண்டுபுறத்தேகிப்
பாரிடர்தம்மையிலக்கத்தொன்பதின்மர்களாகவுரைக்கின்ற
வீரரைமீட்டிவண்வருகென்றேவேற்படைதன்னைவிடுத்திட்டான். (கஅ0)

சேயவன்விட்டிடுதனிவைவேல்செருமுயறாரகன்வரையோடு
மாயிடைசெய்தபுணர்ப்பெல்லாமகிலமுமழிதருபொழுதின்கண்
மாயையினாகியவுலகெங்குமலிதருமுயிர்களுமதிசூடுந்
தூயவன்விழியழல்சுடுமாபோற்றுண்ணெனவட்டதுசுரர்போற்ற. (கஅக)

வேறு.

அரண்டருகழற்காலையனறுமுகத்தெழுந்தசீற்றந்
திரண்டொருவடிவின்வேறாய்ச்சென்றதேயெனவுநான்கு
முரண்டருதடந்தோளண்ணன்முத்தலைபடைத்தசூல
மிரண்டொருபடையாய்வந்ததென்னவுமேகிற்றவ்வேல். (கஅஉ)

முடித்திடலரியமாயமூரிநீர்க்கடலைவற்றக்
குடித்திடுகின்றசெவ்வேற்கூற்றம்வந்திடுதலோடுந்
தடித்திடுமெயிற்றுப்பேழ்வாய்த்தாரகனிதனைப்பற்றி
யொடித்திடுகிற்பேனென்றுவொல்லெனவுருத்துவந்தான். (கஅங)

அச்சமொர்சிறிதுமில்லாவவுணர்கோனவன்றன்மேற்செ
னச்சரவென்னச்சீறிநணுகலுமவன்மார்பென்னும்
வச்சிரவரையின்மீதுவானுருமேறுற்றென்னச்
செச்சையந்தெரியல்வீரன்செலுத்தும்வேல்பட்டதன்றே. (கஅச)

தாரகன்மார்பமென்னுந்தடம்பெருவரையைக்கீண்டு
சீரியகிரவுஞ்சத்திற்சேர்ந்துபட்டுருவிச்சென்று
வீரமும்புகழுங்கொண்டுவிளங்கியதென்னவங்கட்
சோரியுந்துகளுமாடித்துண்ணெனமீண்டதன்றே. (கஅரு)

மீண்டிடுசீற்றவைவேல்வெற்பினுட்டுஞ்சுகின்ற
வாண்டகைவீரர்தம்மையாயிடையெழுப்பியான்போய்
மாண்டகுகங்கைதோய்ந்துவாலியவடிவாயையன்
றாண்டியகரத்தில்வந்துதொன்மைபோலிருந்ததம்மா. (கஅசு)

தண்டமதியற்றுங்கூர்வேறாரகவவுணன்மார்பும்
பண்டுளவரையும்பட்டுப்பறிந்தபேரோசைகேளா
விண்டதுஞாலமென்பார்வெடித்ததுமேருவென்பா
ரண்டமதுடைந்ததென்பாராயினரகிலத்துள்ளோர். (கஅஎ)

வடித்ததையன்னகூர்வேன்மார்பையூடறுத்துச்செல்லத்
தடித்திடுகின்றயாக்கைத்தாரகனனந்தகோடி
யிடித்தொகையென்னவார்த்திட்டிம்மெனவெழுந்துதுள்ளிப்
படித்தலந்தன்னில்வீழ்ந்துபதைபதைத்தாவிவிட்டான். (கஅஅ)

Digitized By Roja Muthiah Research Library

தடவரையனையமொய்ம்பிற்றாரகன்வேலாற்பட்டுப்
புடவியில்வீழாநின்றான்பொள்ளெனவானிற்றுள்ளிக்
கடலுடைந்தென்னவார்க்குங்காலையிற்கலங்கமெய்தி
யுடுகணமுதிர்ந்ததஞ்சியோடினனிரவியென்போன். (கஅகூ)

தளர்ந்திடலில்லாவீரத்தாரகன்பட்டுவானிற்
கிளர்ந்தனன்வீழுமெல்லைக்கீழுறுபிலமும்பாரும்
பிளந்தனவரைகள்யாவும்பிதிர்ந்தனவதிர்ந்தவண்ட
முளந்தடுமாறியோலிட்டோடினதிசையில்யானை. (ககூ0)

தண்ணளிசிறிதுமில்லாத்தாரகன்கிளர்ந்துவான்போய்
மண்ணிடைமறிந்ததன்மைவன்சிறையிழந்தநாளிற்
றிண்ணியமேருவின்னுஞ்செல்லலாங்கொல்லென்றுன்னி
விண்ணிடையெழுந்துவல்லேவீழ்ந்ததேபோலுமன்றே. (ககூக)

வெற்றியதாகுங்கூர்வேல்வெற்பினையட்டகாலைச்
செற்றியபூழியீட்டஞ்சிதறியபொறிகளெங்கும்
பற்றியபுகையும்வந்துபரந்தனகரந்தவண்டம்
வற்றியகடல்கள்வானிற்கங்கையும்வறந்ததன்றே. (ககூஉ)

சிறந்திடுமாயவெற்பைத்திருக்கைவேல்பொடித்தகாலைப்
பிறந்திடுகின்றதீயைத்தீயெனப்பேசலாமோ
வறிந்தவர்தெரியிற்குன்றமவுணனுகையினுன்மெய்யி
லுறைந்திடுகுருதிதுள்ளியுகுத்தவாறாகுமன்றே. (ககூங)

யானுற்றகுன்றந்தன்னையெறிந்தனனென்றுசெவ்வே
டானுற்றநதியைவந்துதடிந்ததேயென்னவெற்பி
னூனுற்றநெடுவேல்பாயவுதித்திடும்பொறியினீட்டம்
வானுற்றகங்கைபுக்குவறந்திடுவித்ததன்றே. (ககூச)

திறலுடைநெடுவேலட்டசிலம்பினிற்சிதறித்தோன்றும்
பொறிகளுந்துகளுமார்ப்பும்பொள்ளெனச்செறிந்ததன்மை
மறிகடன்முழுதுமங்கண்வடவையுமடைந்தொன்றாகி
யிறுதியிலுலகங்கொள்ளவெழுந்ததுபோலுமாதோ. (ககூரு)

தந்தியின்வதனங்கொண்டதாரகவவுணன்மார்பிற்
சிந்துறுகுருதிச்செந்நீர்திரைபொருதலைத்துவீசி
யந்தமினீத்தமாகியயிற்படையட்டகுன்றில்
வந்திடுபூழைபுக்குமறிகடன்மடுத்ததன்றே. (ககூசா)

விட்டவேன்மீண்டுகந்தவேள்கரத்திருப்பத்தீயோன்
பட்டதும்வெற்புமாய்ந்தபான்மையுமவுணர்யாருங்
கெட்டதுநோக்கிமாலுங்கேழ்கிளர்கமலத்தேவு
முட்டிலாமகத்தின்வேந்துமுனிவருஞ்சுரருமார்த்தார். (ககூஎ)

ஆடினர்குமரற்போற்றியங்கைகளுச்சிமீது
சூடினர்தண்பூமாரிதூர்த்தனரவனைச்சூழ்ந்து
பாடினர்தொழுதுமுன்னம்பன்முறைபணிந்துநின்றார்
நீடியவுவகையென்னுநெடுங்கடலாழ்நீரார். (ககூஅ)



Digitized By Roja Muthiah Research Library

ஆங்கதுகாலைதன்னிலளப்பிலாமாயைவல்ல
வோங்கலதிறப்பவங்கணுறங்கியவீரரெல்லாந்
தீங்குறுமையனீங்கிக்கதுமெனச்சென்றுசெவ்வேள்
பூங்கழல்வணங்கிநின்றுபோற்றியேபுடையினின்றார். (ககூகூ)

வாருறுகழற்கால்வீரவாகுவேமுதலாவுள்ள
வீரர்கடம்மையெல்லாம்வேலுடைக்கடவுணோக்கித்
தாரகன்வரையுட்பட்டுத்தகுமுணர்வின்றிநீவி
ராருநொந்தீர்கள்போலுமாயையூடழுந்தியென்றான். (உ00)

செய்யவனினையவாறுசீரருள்புரியவீர
ரையநின்னருளுண்டாகவடியமூறடைவதுண்டோ
மையலோடுறங்குவார்போன்மருவுமின்புற்றதன்றி
வெய்யதோர்கிரிமாயத்தான்மெலிந்திலமிறையுமென்றார். (உ0க)

என்றலும்வீரமொய்ம்பினேந்தலைவிளித்துச்செவ்வேள்
வென்றிகொள்சூரன்பின்னோன்விட்டிடத்தான்முற்கொண்ட
வன்றிறற்படையின்வேந்தைமற்றவன்கரத்தினல்கி
நன்றிதுபோற்றுகென்றேநவின்றுநல்லருள்புரிந்தான். (உ0உ)

தாரகன்போரிற்றுஞ்சுஞ்சாரதர்தம்மையெல்லா
மாருநீரெழுதிரென்னுவவரெலாமெழவேசெய்து
பாரிடவனிகஞ்சூழப்பண்ணவர்பரவல்செய்யச்
சீரியவயவரீண்டச்செருநிலமகன்றான்செவ்வேள். (உ0ங)

தாரகன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,ருங.

---

# தேவகிரிப்படலம்.

மாகவந்தங்கள்கூளிவாய்ப்பறைமிழற்றவாடு
மாகவந்தங்குமெல்லையகன்றுசெங்கதிர்வேலண்ணல்
சோகவந்தங்கொண்டுள்ளசுரருடனனிகஞ்சுற்றி
யேகவந்தங்கணின்றவிமகிரியெல்லைதீர்ந்தான். (க)

அரியயன்மகத்தின்றேவனமரர்களிலக்கத்தொன்பான்
பொருதிறல்வயவரேனைப்பூதர்கள்யாரும்போற்றத்
திருநெடுவேலோன்றென்பாற்செவ்விதினடந்துமேல்பா
லிரவியினிரவிசெல்லவிமையவர்சயிலஞ்சேர்ந்தான். (உ)

ஒப்பறுசூர்பின்னோனையொருவன்வேலட்டதன்மை
யிப்புறவுலகினுள்ளார்யாவருமுணர்வரின்னே
யப்புறவுலகினுள்ளாரறிந்திடயானேசென்று
செப்புவனென்பான்போலச்செங்கதிர்மறைந்துபோனான். (ங)

பானுவென்றுரைக்குமேலோன்பகற்பொழுதெலாங்கைக்கொண்டா
னேனையமதியப்புத்தேளிரவினுக்கரசனானா
னிவற்றிடையேசென்றுநண்ணுவனென்றுசெந்தீ
வானவன்போந்ததென்னவந்ததுமாலைச்செக்கர். (ச)

Digitized By Roja Muthiah Research Library

வம்பவிழ்குமுதமெல்லாமலர்ந்திடுமாலைதன்னில்
வெம்படைபயிலத்தோன்றும்வேலுக்குத்தான்முன்வந்த
வம்புதிமுரசமாயிற்றாகையாற்றானும்வெற்றிக்
கொம்பெனவிளங்கிற்றென்னவெழுந்ததுகுழவித்திங்கள். (ரு)

ஏற்றெதிர்மலைந்துநின்றவிகலுடையவுணர்தம்மேற்
காற்றெனத்தேர்கடாவிக்கடுஞ்சமர்புரிந்தவெய்யோன்
மாற்றருஞ்செம்பொன்மார்பில்வச்சிரப்பதக்கமிற்று
மேற்றிசைவீழ்ந்ததென்னவிளம்பிறைவிளங்கிற்றன்றே. (சு)

கானத்தினேனமொத்தகனையிருட்சூழன்மற்றவ்
வேனத்தினெயிற்றையொத்ததிளம்பிறையதனைப்பூண்ட
கோனொத்ததண்டமந்தக்கூரெயிறுகுத்தமுத்தந்
தானொத்துவிளங்குகின்றதாரகாகணங்களெல்லாம். (எ)

அல்லிதுபோந்தகாலையாரமாமாலையென்னக்
கல்லெனவருவிதூங்குங்கடவுள்வெற்பொருசாரெய்தி
மெல்லிதழ்வனசத்தேவும்விண்டுவும்விண்ணின்றேவும்
பல்லிமையோருஞ்செவ்வேள்பதமுறைதொழுதுசொல்வார். (அ)

வன்கணையுடையசூர்பின்வருத்திடவிந்நாள்காறும்
புன்கணையுழந்தேமன்னான்பொருப்பொடுமுடியச்செற்றா
யுன்கணைவழிபாடாற்றவுன்னினமின்னவெற்பின்
றன்கணையிருத்தல்வேண்டுந்தருதியிவ்வரமதென்றார். (கூ)

பசைந்திடுமார்வங்கொண்டபண்ணவரினையதன்மை
யிசைந்தனர்வேண்டுமெல்லையெஃகுடையண்ணலங்க
ணசைந்திடுதன்மையுன்னியருள்செயவஃதுகண்டன்னோர்
தசைந்துமெய்பொடிப்பத்துள்ளித்தணப்பில்பேருவகைபூத்தார். (க0)

ஒண்ணிலவுமிழும்வேலோனொலிகழற்றாளையோடுங்
கண்ணனைமுதலாவுள்ளகடவுளர்குழுவினோடும்
பண்ணவர்கிரிமேற்சென்றுபாங்கரிற்றொழுதுபோந்த
விண்ணவர்புனைவன்றன்னைவிளித்திவைபுகலலுற்றான். (கக)

புகலுறுஞ்சூழ்ச்சிமிக்கோய்புங்கவராயுளோருந்
தொகலுறுகணர்கள்யாருந்துணைவரும்யாமுமேவ
வகலுறுமினையவெற்பினருங்கடிநகரமொன்றை
விகலமதின்றியின்னேவிதித்தியால்விரைவினென்றான். (கஉ)

வேறு.

குழங்கல் * வேட்டுவக்கோதையராடலுங், கழங்குநோக்கிக்களிப்பவன்மற்றிது
வழங்குமெல்லைவகுப்பனென்றன்னவன், றழங்குநூபுரத்தாள்பணிந்தேகினான். ()

மகரதோரணம்வாரியின்மல்கிய, சிகரமாளிகைசெம்பொனின்சூளிகை
நிகரில்பற்பலனொள்ளல்களீண்டிய, நகரமொன்றினையாயிடைநல்கினான். (கச)

அவ்வரைக்கணகன்பெருநொச்சியுட், கைவல்வித்தகக்கம்மியர்மேல்வ
னெவ்வெவர்க்குமிறைவனிருந்திடத், தெய்வதக்குலமொன்றுசெய்தானரோ. ()

---

* குழங்கல் - மாலைவிசேடம். "குழங்கன்மாலை மல்லுப்பூத்தகன்றமார்பீர்" என்றார் பிறரும்.

Digitized By Roja Muthiah Research Library

மாற்றரும்பொன்வரையுண்மணிக்கிரி, தோற்றியென்னச்சுடர்கெழுமாளையி
னேற்றகோட்டத்திழைத்தனன்கேசரி, யாற்றுகின்றவரதனப்பீடிகை. (கசு)

இனையதன்மையுமேனவுநல்கியே, மனுவின்முறைதவருதலுமள்ளர்த
மணிகமோடுமமரர்கடம்மொடு, முனையின்வேற்படைமொய்ம்பனங்கேகினன். ()

அறுமுகத்தவனங்ஙகரேகியே, துறுமலுற்றிடுந்தொல்பெருந்தானையை
யிறுதியற்றவிருக்கைகொளாவண, நிறுவலுற்றுநிகேதனத்தெய்தினன். (கஎ)

இரதம்விட்டங்கிழிந்துபொற்பாதுகை, சரணம்வைத்துத்தணப்பரும்வீரருஞ்
சுரருமுற்றுடன்சூழ்தரத்துங்கவே, லொருவன்மற்றவ்வுறையுளினேகினன். (ககூ)

ஊறில்வெய்யவர்யாருமொரோவழிச், சேறலெய்திச்செறிந்தெனவில்விடு
மாறில்செஞ்சுடர்மாமணிப்பீடமே, லேறினைகினன்யாரினுமேலையோன். (உ0)

பொழுதுமற்றதிற்பூவினனாதியா, விழுமைபெற்றிடும்விண்ணவர்யாவருங்
குழுமலுற்றுக்குமரனையவ்விடை, வழிபடத்தம்மனத்திடையுன்னினர். (உக)

புங்கவன்விழிபொத்தியவம்மைதன், செங்கைதன்னிற்சிறப்பொடுதோன்றிய
கங்கைதன்னைக்கடவுளருன்னலு, மங்கண்வந்ததையப்பெருமாநதி. (உஉ)

சோதிமாண்கலன்றூயனபொற்றுகில், போதுசாந்தம்புகைமணிபூஞ்சுட
ராதியாகவருச்சனைக்கேற்றன, வேதுமாயிடையெய்துவித்தாரரோ. (உங)

அண்டர்தொல்லையமுதமிருத்திய, குண்டமுற்றகுடங்கர்கொணர்ந்திடா
மண்டுதெண்புனல்வானதிதன்னிடை, நொண்டுகொண்டனர்வேதநுவன்றுளார்.

அந்தவெல்லையயன்முதற்றேவரு, முந்துகின்றமுனிவருஞ்சண்முகத்
தெந்தைபாங்கரினீண்டியவன்பெயர், மந்திரங்கொடுமஞ்சனமாட்டினர். (உரு)

வெய்யவேற்படைவிண்ணவற்கின்னண, மையமஞ்சனமாட்டிமுன்சூழ்ந்திடுந்
துய்யபொன்னந்துகிலினைநீக்கியே, நொய்யபஃறுகிலாதனஞ்சாத்தினர். (உசு)

வீற்றெர்சீயவியன்றவிசின்மிசை, யேற்றிவேளையிருத்தியவன்பெயர்
சாற்றிமாமலர்சாத்தித்தருவிடைத், தோற்றுபூவின்றொடையலுஞ்சூட்டினர். ()

செய்யசந்தனத்தேய்வைமுன்கொட்டின, ரையபாளிதமப்பினர்நாவியுந்
துய்யநானமுந்துன்னமட்டித்தனர், மெய்யெலாமணிமேவரச்சாத்தினர். (உஅ)

சந்துகாரகிறண்ணென்கருப்புரங், குந்துருக்கமொண்குக்குலுவப்புகை
செந்தழற்சுடர்சீர்மணியார்ப்பொடு, தந்துபற்றித்தலைத்தலைசுற்றினர். (உகூ)

இத்திறத்தவுமேனவுமெஃகவேற், கைத்தலத்துக்கடவுட்குநல்கியே
பத்திமைத்திறனாற்பணிந்தேத்தினர், சித்திசங்கற்பஞ்செய்திடுஞ்செய்கையோர். ()

தேவுகொண்டசிலம்பினிற்பண்ணவ, ரேவருங்குழீஇயின்னணம்பூசனை
யாவதாற்றவதுகொண்டமர்ந்தனன், மூவிரண்டுமுகனுடைமொய்ம்பினோன். ()

அமரர்வெற்பிலயிற்படையேந்திய, விமலனுற்றதுசொற்றனமேலினிச்
சமரிடைப்படுதாரகன்றந்திடு, குமரனுற்றதுமற்றதுங்கூறுகேம். (ஙஉ).

தேவகிரிப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க;ருசுங.

Digitized By Roja Muthiah Research Library

# அசுரேந்திரன்மகேந்திரஞ்செல்படலம்.

எந்தைகுமரனெறிந்ததனிவேற்படையாற்
றந்திமுகமுடையதாரகன்றான்பட்டதனை
முந்துசிலதூதர்மொழியவவன்றேவி
யந்தமிலாக்கற்பிற்சவுரியலக்கணுற்றாள். (௧)

வாழ்ந்ததுணைவியர்கண்மற்றுள்ளோரெல்லோருஞ்
சூழ்ந்துபதைத்திரங்கத்துன்பத்துடனேகி
யாழ்ந்தகடல்படியுமம்மென்மயிலென்ன
வீழ்ந்துகணவன்மிசையேபுலம்புறுவாள். (௨)

சங்குற்றிடுசெங்கைத்தண்டுளவோன்றன்பதமா
மங்குற்றனையன்றயன்பதஞ்செல்வாயன்று
கங்கைச்சடையான்கயிலையிற்சென்றாயல்லா
லெங்குற்றனையவ்விறைவனருள்பெற்றாயே. (௩)

உந்துதனியாழியுனக்கணியாத்தந்தோனு
மிந்திரனுமேனையிமையவர்களெல்லோரு
மந்தகனுந்தாமுமனைவர்களுமின்றன்றோ
சிந்தைதனிலுள்ளகவலையெலாந்தீர்ந்தனரே. (௪)

பொன்னகரோர்யாரும்புலம்புற்றிடவவுணர்
மன்னவரோடென்பால்வரும்பவனிகாணுதேன்
றுன்னுபறவையினஞ்சூழத்துயிலுமுனை
யின்னபரிசேயோகாண்பேனுலெம்பெருமான். (௫)

புல்லாதிருந்தனையான்புல்லுவதுகண்டுமது
பல்லோருங்காணிற்பழியென்றொழிந்தாயேன்
மல்லாருந்தோளாய்மயக்குற்றேற்கோருரையுஞ்
சொல்லாய்வறிதேதுயின்றாய்துனியுண்டோ. (௬)

மையோடுறழுமணிமிடற்றோன்றந்தவர
மெய்யாமெனவேவியந்திருந்தேனிந்நாளும்
பொய்யாய்விளைந்ததுவோபொன்றினையாலென்றனைவா
வையோவிதற்கோவருந்தவமுன்செய்தாயே. (௭)

தன்னோடிணையின்றித்தானேதலையான
முன்னோனருள்புரிந்தமுன்னோனிளவல்வரி
னென்னோவவனோடெதிர்ந்தாயிறந்தனையே
யன்னோவிதிவலியையாரேகடந்தாரே. (௮)

சந்தார்தடம்புயத்துத்தானவர்கடற்சூழ
வந்தார்கமழுமரியணைமேல்வைகியநீ
சிந்தாகுலத்திற்செருநிலத்திற்றுஞ்சினையா
லெந்தாய்புகலாயிதுவுஞ்சிலநாளோ. (௯)

வென்றிமழுவேந்தும்விமலனுனக்களித்த
துன்றும்வரத்தியலையுன்னினையாற்சூழ்ச்சியினை
யொன்றுமுணராதுயிருந்தொலைந்தனையே
யென்றுதமியேனினியுன்னைக்காண்பதுவே. (௧௦)

Digitized By Roja Muthiah Research Library

வன்னிவிழியுடையான்மைந்தனமர்புரிய
முன்னைவலிதோற்றுமுடிந்தாயெனக்கேட்டுப்
பின்னுமிருந்தேனென்னிற்பேரன்புடையோர்யா
ரென்னினியான்செய்கேனெனவேயிரங்குற்றாள். (கக)

மற்றைத்துணைவியரும்வந்தீண்டிமன்னவனைச்
சுற்றிப்புலம்பித்துயருற்றிடும்வேலை
யற்றத்தினனாகியாசுரத்தின்பாற்போன
கொற்றப்புதல்வன்வினவிக்குறுகினனால். (க௨)

தண்டாவிறல்சேருந்தன்றாதைவீந்ததனைக்
கண்டானுயிர்த்தான்கலுழ்ந்தான்கரங்குலைத்தா
னண்டாதசோகத்தழுங்கினான்வெய்யகன
லுண்டானென வீழ்ந்தயர்ந்தானுணர்ந்தனனே. (க௩)

என்றுமுறாவின்னலிடைப்பட்டவனெழுந்து
சென்றுதனதன்னைதிருத்தாளிடைவீழா
வுன்றலைவன்யாண்டையானோதாயன்னேயென்று
நின்றுபுலம்பிநினைந்தினையசெய்கின்றான். (க௪)

அன்னைமுதலோரையகல்வித்தொருசாரிற்
றுன்னுதிரென்றேவித்தொலையாததானவரிற்
றன்னுழையோர்தம்மாற்றழலிந்தனமுதலா
மன்னுகருவிடலவும்வருவித்தான். (க௫)

வந்தபொழுதுதனில்வன்களத்திற்றுஞ்சுகின்ற
தந்தைதனைமுன்போற்றகவுபெறவொப்பித் * தோ
ரெந்திரத்தேர்மீதேற்றியீமத்திடையுய்த்துச்
சந்தனப்பூம்பள்ளிமிசையேதருவித்தான். (க௬)

ஈமக்கடன்களியற்றித்தன்றாதைதனைத்
தாமக்கனலாற்றகனம்புரிந்திடலுங்
காமுற்றனனென்கணவனுடன்செல்வதற்குத்
தீமுற்றருதியெனவன்னைசென்றுரைத்தாள். (க௭)

நற்றாய்மொழிந்ததனைக்கேட்டுநடுநடுங்கிப்
பொற்றாள்பணிந்தென்னைப்போற்றியிருத்தியெனச்
சொற்றானதுமறுத்துத்தோகைசுளித்துரைப்ப
வற்றாகவென்றானசுரேந்திரனென்பான். (க௮)

ஏனையதோர்தாயர்களும்யாமுங்கணவனுடன்
வானகம்போயெய்தவழங்கென்றிடவிசையா
வானபடியேயழலமைக்கவன்னையரா
மானையாரெல்லோரும்வான்கனலினுள்புக்கார். (க௯)

புக்கதொருகாலைபுலம்பியேயந்நகரை
யக்கணமேநீங்கியசுரேந்திரனென்போன்
றக்கிளைஞர்சிலர்தற்சூழவேயேகி
மைக்கடலுள்வைகுமகேந்திரமூதூருற்றான். (உ0)

---

* ஒப்பித்து - அலங்கரித்து.

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

உளந்தளர்வெய்தித்தொல்லையொளிமுகனிழந்துமேனி
தளர்ந்தனன்வறியன்போன்றுதாரகமுதல்வன்றந்த
விளந்தனிமைந்தன்வல்லேயேகனுமனையநீர்மை
வளந்திகழ்தொல்லைவீரமகேந்திரத்தவுணர்கண்டார். (உக)

உரங்கிளரவுணர்காணூஉவொய்யெனத்துளங்கியேங்கிக்
கரங்களைவிதிர்த்துக்கண்ணீர்கானெறிபடர்ந்துசெல்லப்
பெருங்கடலுடைந்ததேபோற்பேதுறவெய்தியாற்ற
விரங்கியிக்குமரனுற்றதென்கொலென்றிசைக்கலுற்றார், (உஉ)

வஞ்சமுங்கொலையுஞ்செய்யான்மற்றிவனிதற்குத்தாதை
வெஞ்சினங்கொடுபோகென்றுவிடுத்தனன்போலுமென்பார்
தஞ்சமதாகியுள்ளதாரகன்கொடுமைநோக்கி
யஞ்சியேயவனைநீங்கியடைந்தனன்கொல்லோவென்பார், (உங)

சீரொடுதுறக்கநீத்துத்தேவர்கோனுருவமாற்றிப்
பாரிடையுழந்தானென்பார்மற்றவன்பரனைவேண்டிப்
பேரிகன்மாயம்வன்மைபெற்றுவந்தடுபோர்செய்யத்
தாரகனிறந்தான்கொல்லோதளர்ந்திவன்வந்தானென்பார். (உச)

மாண்கிளர்தாரகப்பேர்மன்னவன்பகைஞராற்று
மேண்கிளர்சமரில்வீந்தானென்பதற்கேதுவுண்டாற்
சேண்கிளர்நிவப்பாலெங்குந்தெரிகிரவுஞ்சவெற்பிற்
காண்கிலமவுணர்தம்மைப்பூழியேகாண்டுமென்பார். (உரு)

பையரவணையிற்றுஞ்சும்பகவனதாழிதன்னை
யையபொன்னணியதாகவணிந்திடுமவுணனோடு
மொய்யமர்புரிவார்யாரேமுரனொடுவெம்போர்சில்லோர்
செய்யினுமவராலன்னோன்முடிகிலன்றிண்ணமென்பார். (உசா)

அங்கையையொருவன்வாளாலறுத்திடப்புலம்பிநங்கோன்
றங்கைவந்தமரர்தம்மைச்சயந்தனைச்சிறைசெய்வித்தா
ளிங்கிவன்றானுந்துன்புற்றேகுவானின்றுமற்றே
புங்கவர்தமக்கேயின்னல்புரிகுவன்போலுமென்பார். (உஎ)

மணிகிளரெழிலிவண்ணன்மற்றவனொடுபோராற்றா
னணியுலகளித்தசெம்மலமர்த்தொழில்சிறிதுந்தேறான்
றணிவறுசெயிர்மீக்கொண்டதாரகனொடுபோர்செய்யி
னிணையகலீசனன்றியாவரேவல்லரென்பார். (உஅ)

இமையவர்கருடர்நாகரியக்கர்கந்தருவரேனோர்
நமரிடுபணிகளாற்றிநாடொறுந்திரிந்தாரற்றாற்
சமரெதிரிழைப்பாரின்றித்தளர்ந்தனமிந்நாள்காறு
மமரினியுளதுபோலுமையமதில்லையென்பார். (உகூ)

சேயிவனலக்கணெய்திச்செல்லுறுபரிசாலங்க
ணுயதோர்தீங்குபோலுமையமின்றிதனைநாடி
நாயகன்விடுக்குமுன்னநம்பெருந்தானையோடு
மாயமாபுரிகாறேகியறிந்தனம்வருதுமென்பார். (ஙO)

Digitized By Roja Muthiah Research Library

எனைப்பலவினையவாற்றலியாவருமவுணரீண்டி
மனப்படுபைதலோடும்வயின்வயினுரையாநிற்ப
நினைப்பருந்திருமிக்குள்ளநெடுமகேந்திரத்திற்சென்று
வனைப்பெருங்கழற்காற்சூரமன்னவன்கோயில்போந்தான். (௩௧)

போந்துதாரகன்றன்மைந்தன்பொள்ளெனப்படர்தலோடும்
வாய்ந்தபேரவையமன்றில்வரம்பிலாவவுணர்போற்ற
வேந்தெழிலரிகடாங்குமெரிமணித்தவிசின்மீக்கண்
வேந்தர்கள்வேந்தன்சூரன்மேவிவீற்றிருந்தான்மாதோ. (௩௨)

வீற்றிருந்தரசுபோற்றும்வேந்தனையெய்தியன்னோன்
காற்றுணைமுன்னர்வீழ்ந்துகரங்களாலவற்றைப்பற்றி
யாற்றவுமரற்றல்செய்யவவுணர்கோனதுகண்டைய
சாற்றுதிபுகுந்ததன்மைதளர்ந்தனைபுலம்பலென்றான். (௩௩)

என்றலுமைந்தன்சொல்வானிந்திரன்புணர்ப்பாலீசன்
வன்றிறற்குமரன்பூதவயப்படைதன்னொடேகி
யுன்றனதிளவறன்னையொண்கிரவுஞ்சமென்னுங்
குன்றொடும்வேலாற்செற்றுக்குறுகினன்புவியிலென்றான். (௩௪)

வெய்யசூரதனைக்கேளாவிழுமிதென்றுருமினக்குச்
சையமாமவுணனோடுதாரகவலியோன்றன்னை
மையுறழ்கண்டத்தண்ணன்மைந்தனோவடுதல்செய்வான்
பொய்யிதுவெருவன்மைந்தவுண்மையேபுகறியென்றான். (௩௫)

தாதைசேர்சரதமீதுதாரகத்தந்தைதன்னை
மேதகுகிரவுஞ்சத்தைவேல்கொடுபரமன்மைந்தன்
காதினன்சென்றானீமக்கடன்முறையெந்தைக்காற்றி
மாதுயர்கொண்டுநின்பால்வந்தனனென்றான்மைந்தன். (௩௬)

வேறு.

தோட்டுணைவனுமிளவறுஞ்சினனெனுஞ்சொற்
கேட்டலுமுளத்திடைகிளர்ந்ததுசினத்தீ
நாட்டமெரிகால்வபுகைநண்ணுவனதுண்ட
மீட்டுபொறிசிந்துவனயாக்கையுளுரோமம். (௩௭)

நெறித்தபுருவத்துணைகணெற்றிமிசைசென்ற
கறித்தனவெயிற்றினிரைகவ்வியதரத்தைச்
செறித்தனதுடித்தனதெழித்தவிதழ்செவ்வாய்
குறித்ததுமனங்ககனகூடமுமுடிக்க. (௩௮)

இவ்வகைசினத்தெரியெழுந்துமிசைகொள்ள
வவ்வெரியினாற்றலையவித்தததுபோழ்தில்
வெவ்வினைகொடாரகன்மிசைத்தொடருமன்பாற்
றெவ்வர்புகழ்சூரனிடைசேர்ந்ததுயராழி. (௩௯)

துப்புநிகர்கண்புனல்சொரிந்தநதியேபோன்
மெய்ப்புறம்வியர்த்தமிகவெள்ளமவையீண்டி
யப்புணரியானதுயராழியதுவென்றே
செப்புபொருளுண்மையதுதேற்றியதுபோலும். (௪௰)

Digitized By Roja Muthiah Research Library

பருவரலெனும்புணரியூடுபடிவுற்றே
யரியணைமிசைத்தவறியம்புவியில்வீழா
வுருமெனவரற்றினனுணர்ந்ததனையஞ்சி
நரலையொடுபாரகநடுங்கியதையன்றே. (௪௧)

கூற்றுளநடுங்கியகுலைந்ததுசெழுந்தீக்
காற்றுவெருவுற்றதுகதிர்க்கடவுள்சோம
னேற்றமிகுகோளுடுவிரிந்தபுவிமுற்று
மாற்றியபணிக்கிறையுமஞ்சியதலைந்தே. (௪௨)

பாங்கருறுதானவர்கள்பாசறையின்மூழ்கி
யேங்கினர்விழுந்தனரிரங்கினர்தளர்ந்தா
ராங்கவையபோழ்துதனிலந்நகரமெல்லா
மோங்குதுயர்கொண்டுகலுழோசைமலிந்தன்றே. (௪௩)

ஆனபொழுதத்தினிலழுங்கலுறுசூரன்
போனதொருசீற்றவழல்புந்தியிடைமூள
மானமொடுநாணமடவல்லையிலெழுந்தே
தானுடையவேவலர்தமக்கிவையுரைப்பான். (௪௪)

மன்னிளவலாருயிரைமாற்றிவருகந்தன்
றன்னிகல்கடந்துசயமெய்திவரல்வேண்டு
மென்னிரதம்வெம்படையிடுங்கவசம்யாவு
முன்னுகணமொன்றின்முனமுய்த்திடுதிரென்றான். (௪௫)

இறையிவைபுகன்றிடலுமேவலர்கள்யாரு
முறையிலவையுய்த்திடுதன்முன்னினர்கள்போனா
ரறைகழலுடைத்தருவரன்னசெயனாடிக்
குறைவிலணிகங்களொடுகொம்மெனவணைந்தார். (௪௬)

ஆயசெயல்காண்டலுமமைச்சரிலமோகன்
மாயைதருசூரனடிவந்தனைபுரிந்தே
யேயதொருமாற்றமதிசைப்பலதுகேண்மோ
தீயசினமெய்திடலெனாவினையசெப்பும். (௪௭)

வேறு.

நஞ்சுறைபடைகள்கற்றுநவையுறுதொன்னலாரை
வஞ்சினத்தெறியும்வீரர்வளநகரதனைமாற்றா
ரிஞ்சியைச்சூழ்ந்துபோருக்கெய்தினுமெண்ணியன்றி
வெஞ்சினத்தினைமேல்கொண்டுவிரைந்தமரியற்றச்செல்லார். (௪௮)

குலத்தினைவினவியுள்ளக்கோளினைவினவிவந்த
நிலத்தினைவினவித்தொல்லோர்நெறியினைவினவிக்கொண்ட
சலத்தினைவினவிப்போர்செய்தானையைவினவியன்னோர்
வலத்தினைவினவியல்லான்மற்றொன்றுமனங்கொள்வாரோ. (௪௯)

வரத்தினில்வலியினாரோமாயையில்வலியினாரோ
கரத்தினிற்படைக்கலத்தின்கல்வியில்வலியினாரோ
வுரத்தினில்வலியினாரோவுணர்ச்சிசேருக்கமான
சிரத்தினில்வலியினாரோவென்றிவைதேர்வரன்றே. (௫0)

௨0

Digitized By Roja Muthiah Research Library

ஒற்றரைத்தூண்டியன்னோருறுவலியுணர்வரேனு
மற்றுமோரொற்றினல்லாலன்னதுமனத்துட்கொள்ளார்
சுற்றுறுமணிகமன்றியொருபுண்டதுவன்றிச்சூழும்
பெற்றியுமுளதோவென்னாவே * யொரீஇத்தேர்வர்பின்னும். (௫௧)

வினையதுவிளைவையென்றுமெல்லியவென்கைவெஃகா
ரண்கமுயனையர்தன்மையதனையுஞ்சிறுமைத்தாக
நினைகிலர்தமக்குமாற்றார்நேர்ந்தவராகின்மேலோர்
முனையுறுபுலத்திலாற்றுமும்மையுமுன்னிச்செய்வார். (௫௨)

மூவியன்மரபினாலுமுற்றுறாதொழிந்தகாலைக்
கோவியன்மரபுக்கேற்பக்கொடுஞ்சினந்திருகிக்கொட்புற்
றேவியல்படைஞரோடும்படையொடுமெதிர்ந்துசுற்றி
மேவலர்பான்மையுன்னிவெற்றிகொண்டணைவரன்றே. (௫௩)

நேர்ந்திடவலியிலோருஞாட்பிடைநேர்திரென்னாச்
சேர்ந்திடும்போழ்தும்வேந்தர்செருவினைக்குறித்துச்சென்று
சார்ந்திடல்பழியதன்றோவெல்லினுந்தானைதூண்டிப்
பேர்ந்திடச்செய்வரஃதேபெறலரும்புகழதன்றே. (௫௪)

ஈதரோவுலகினுள்ளவிறைவர்தமியற்கையாகு
மாதலானின்னைப்பாரிலழிவிலாயகிலமாள்வா
யேதமொன்றடையாய்வானோர்யாரையுமேவல்கொண்டாய்
போதனுநெடுமாலோனும்வைகலும்புகழவுற்றாய். (௫௫)

இன்னதோர்மிடல்பெற்றுள்ளவிறைவநீயளியனாகும்
பொன்னகரவன்சொற்கேட்டுப்பூதமேபடையாவீச
னென்னலினுதவும்பிள்ளைநேர்ந்திடினவனைவெல்ல
வுன்னினைடோதியென்னினுனக்கதுவசையதன்றோ. (௫௬)

மாற்றலர்வன்மையோராய்மற்றவர்படைஞர்தங்க
ளாற்றலையுணராய்நின்றனரும்பெருந்தலைமையுன்னாய்
போற்றிடுமமைச்சரோடும்புரிவனசூழாய்வாளா
வேற்றமங்கதுமேல்கொண்டுசெல்லலுந்திறலின்பாற்றோ. (௫௭)

வீரமும்வலியுமிக்கோராயினும்விதிவந்தெய்திற்
பாரிடைவலியிலோரும்படுத்திடப்படுவர்நின்போற்
பேருடலழியாவாற்றல்பெருமையாலிறுவாயெய்தத்
தாரகன்மழலைதேறாச்சிறுவனுந்தடியப்பட்டான். (௫௮)

கலகலமிழற்றுந்தண்டைக்கழலடிச்சிறுவன்கைம்மாத்
தலையுடையிளவறன்னைத்தடிந்ததற்புதத்ததன்றால்
வலியருமொருகாலத்தில்வன்மையையிழப்பராற்ற
மெலியருமொருகாலத்தில்வீரராய்த்திகழ்வரன்றே. (௫௯)

யாருநேரன்றிவைகுமிறைவநீசிறுவன்றன்மேற்
போரினைமுன்னியேகல்புகழ்மையதன்றாலன்னான்
சீரொடுமதுகையாவுந்தேர்ந்துபின்னவனிற்றீர்ந்த
வீரரைப்படையொடேவிவெற்றிகொண்டமர்தியென்றான். (௬௦)

---

* வேய் - ஒற்று.

Digitized By Roja Muthiah Research Library

அறிதருமமைச்சர்தம்முளமோகனித்தன்மைதேற்ற
வுறுதியீதென்றுசூரனுர்ளுறுசினத்தைநீத்து
விறல்கெழுமரிமானேற்றுவிழுத்தகுதவிசினேறிச்
செறிதருமுழைஞர்தம்முட்சிலவரைநோக்கிச்சொல்வான். (௬௧)

பகனெடுமயூரன்சேனன்பரிதியம்புள்ளின்பேரோன்
சுகனிவர்முதலாவுள்ளதூதரைத்தருதிரென்னப்
புகழ்புனைசூரபன்மன்பொன்னடியிறைஞ்சியேத்தித்
தகுவர்கடலைவர்மற்றச்சாரணர்தம்மையுய்த்தார். (௬௨)

சாரணரினையர்போந்துதாண்முறைபணிந்துநிற்பச்
சூரனங்கவரைநோக்கித்துண்ணெனநீவிரேகிப்
பாரிடைவந்தகந்தன்பான்மையும்படைவெம்பூதர்
சேருறுதொகையும்யாவுந்தேர்ந்திவண்வருதிரென்றான். (௬௩)

ஒற்றுவருணர்ந்தந்நீர்மையுச்சிமேல்கொண்டுதங்கோன்
பொற்றடங்கழல்கடாழ்ந்துபுடவியைநோக்கிச்சென்றார்
மற்றவர்போயபின்னர்மாறிலாச்சூரபன்மன்
வெற்றிகொளவுணர்போற்றவீற்றிருந்தரசுசெய்தான். (௬௪)

ஏதமில்சூரபன்மனிளவற்ன்முடிவுநேடி
மாதுயர்கொண்டுதேறிவைகியதன்மைசொற்றாம்
மாதியங்கடவுண்மைந்தனமரர்தங்கிரியைநீங்கிப்
பூதலமீதுவந்தநெறியினைப்புகலலுற்றாம். (௬௫)

அசுரேந்திரன்மகேந்திரஞ்செல்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,௬௨௮.

---

# வழிநடைப்படலம்.

குருமணிமகுடமாறுங்குழைகளுந்திருவில்வீசத்
திருமணிவரையின்மேவுந்திருக்கைவேற்பெருமானுக்குக்
கருமணியாழிப்புத்தேள்கையுறையாகவாங்கோர்
பருமணிநீட்டிற்றென்னப்பானுவந்துதயஞ்செய்தான். (௧)

வேறு.

மங்குல்வானமேல்வெய்யவன்கதிரெனவழங்குஞ்
செங்கைகூப்பியேதொழுதிடுவானெனச்செல்ல
வங்கவ்வேலையிலறுமுகன்கடவுள்வெற்பகன்று
பொங்குதானையுமமரருஞ்சூழ்தரப்போந்தான். (௨)

தன்னைநீக்கியேசூழ்வுறுந்தவமுடைப்பிருங்கி
யுன்னிநாடியமறைகளின்முடிவினையுணரா
வென்னையாளுடையானிடஞ்சேர்வனென்றிமையக்
கன்னிபூசனைசெய்தகேதாரமுன்கண்டான். (௩)

பையராவின்மேற்கண்டுயில்பண்ணவன்றனக்குந்
தையல்பாதியனேபரம்பொருளெனுந்தன்மை
மையன்மானுடருணர்ந்திடமறைமுனியெடுத்த
கையதேயுரைத்திட்டதோர்காசியைக்கண்டான். (௪)

Digitized By Roja Muthiah Research Library

பருப்பதப்பெயர்ச்சிலாதனற்பாலகன்பரம
னிருப்பவோர்வரையாவனென்றருந்தவமியற்றிப்
பொருப்பதாகியேயீசனைமுடியின்மேற்புனைந்த
திருப்பருப்பதத்தற்புதம்யாவையுந்தெரிந்தான். (ரு)

அண்டமன்னுயிரீன்றவளுடன்முனிவாகித்
தொண்டகங்கெழுசுவாமிதன்மால்வரைதுறந்து
மண்டுபாதலத்தேகியேயோர்குகைவழியே
பண்டுதான்வருவேங்கடகிரியையும்பார்த்தான். (சா)

சிலந்திமாசுணமும்மதக்கரிசிவகோசன்
மலைந்திடுஞ்சிலைவேட்டுவன்கீரனேமடவார்
பலந்தரும்வழிபாட்டினாற்பாட்டினாற்பரனைக்
கலந்துமுத்திசேர்தென்பெருங்கயிலையுங்கண்டான். (எ)

கொடியவெஞ்சினக்காளியிக்குவலயமுழுது
முடிவுசெய்வனென்றெழுந்தாண்முளரியான்முதலோ
ரடையவஞ்சலுமவள்செருக்கழிவுறவழியாக்
கடவுளாடலால்வென்றதோர்வடவனங்கண்டான். (அ)

அம்புராசிகொள்பிரளயத்தினுமழிவின்றி
யும்பர்மாலயற்குறையுளாய்க்கயிலைபோலொன்று
யெம்பிரான்றனிமாநிழறன்னில்வீற்றிருக்குங்
கம்பைசூழ்தருகாஞ்சியந்திருநகர்கண்டான். (கூ)

ஏலவார்குழலுமையவள்பூசைகொண்டிருந்த
மூலகாரணமாகியமுதல்வனாலயமு
மாலும்வேதனுமமரரும்வழிபடுமற்றை
யாலயங்களாயுள்ளவுங்கண்டனனையன். (க0)

வேறு.

என்னிகரெவருமில்லென்றிருவருமிகலுமெல்லை
யன்னவர்நடுவுதோன்றியடிமுடிதெரியாதாகி
யுன்னினர்தங்கட்கெல்லாமொல்லையின்முத்திநல்கித்
தன்னிகரின்றிநின்றதழற்பெருஞ்சயிலங்கண்டான். (கக)

மண்ணுலகிறைவன்செய்யுமணந்தனைவிலக்கியெண்டோ
ளண்ணலோர்விருத்தன்போல்வந்தாவணவோலைகாட்டித்
துண்ணெனவழக்கில்வென்றுசுந்தரன்றனையாட்கொள்ளும்
பெண்ணையம்புனல்சூழ்வெண்ணெய்ப்பெரும்பதிதனையுங்கண்டான். (கஉ)

தூசினலம்மைவீசத்தொடையின்மேற்கிடத்தித்துஞ்சு
மாசிலாவுயிர்கட்கெல்லாமஞ்செழுத்தியல்புகூறி
யீசனேதனதுகோலமீந்திடுமியல்பாலந்தக்
காசியின்விழுமிதானமுதுகுன்றவரையுங்கண்டான். (கந)

விரிகனல்வேள்விதன்னில்வியன்றலையரிந்துவீட்டிப்
பொருவறுதவத்தையாற்றும்பதஞ்சலிபுலிக்காலண்ண
லிருவருமுணர்வாற்காணவெல்லையிலருளாலீசன்
றிருநடவியற்கைகாட்டுந்தில்லைமூதூரைக்கண்டான். (கச)

Digitized By Roja Muthiah Research Library

தண்டளிர்ச்சோலைத்தில்லைத்தபனியமன்றிலென்றுந்
தொண்டையங்கனிவாய்மாதுதொழச்சுராட்புருடனுள்ளத்
தண்டருமதிக்கலாற்றுவற்புதத்தனிக்கூத்தாடல்
கண்டனன்கசிவாலுள்ளங்களிப்புறவணங்கிப்போனான். (கரு)

குடமுனிகரத்திலேந்துங்குண்டிகையிருந்துநீங்கிப்
படிதனில்வேறுவேறாய்ப்பற்பலநாமந்தாங்கிக்
கடல்கிளர்ந்தென்னச்செல்லுங்காவிரியென்னுமாற்றின்
வடகரைமண்ணிபின்பால்வந்தனன்கருணைவள்ளல். (கசு)

வழிநடைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,சுசுஅ.

---

# குமாரபுரிப்படலம்.

அளவில்பூதவெம்படையொடுமண்ணியாறதன்கட்
குளகன்வந்துழியெழுந்திடுபூழிவான்குறுகி
யொளிரும்வெய்யவன்கதிர்தனைமறைத்தலாலோடி
வளைநெடுங்கடன்மூழ்குவான்புக்கெனமறைந்தான். (க)

மறைந்தகாலையிற்றோன்றினமாலையுநிசியுங்
குறைந்ததிங்கள்வந்துதித்ததுதாரகைகுறுகி
நிறைந்தெழுந்தவோர்மன்னவனிறந்துழிநீங்கா
துறைந்தவொன்னலர்யாவருங்கிளர்ந்தவாறொப்ப. (உ)

மிக்கதாருகவனத்தினையொத்ததுவிசும்பிற்
றொக்கபேரிருண்மாதரொத்தனவுடுத்தோற்றஞ்
செக்கரீசனையொத்ததொண்போனகஞ்செறிந்த
கைக்கபாலமதொத்ததுகதிரிளம்பிறையே. (ங)

நிலவுலாவியககனமாநீடுபாற்கடலிற்
குலவுகின்றதோர்பொருளெலாங்கொண்டுகொண்டேகி
யுலகினல்குவான்முயலெனுமொருமகனுய்ப்பச்
செலவுகொண்டதோர்தோணிபோன்றதுசிறுதிங்கள். (ச)

ஆனகாலையிலறுமுகப்புங்கவனமல
மேனிசேரொளிநிலவொடுகங்குலைவீட்டிப்
பானுமேவருமெல்லெனச்செய்தலிற்பரமாம்
வானநாயகன்கயிலைபோன்றிருந்ததவ்வையம். (ரு)

வேறு.

வீசுபேரொளிவிறற்குகனிவ்வா, றீசின்மண்ணியினகன்கரைநண்ண
வீசனுமவனையெய்துபுவேதாக், கேசவன்முதல்வரின்னகிளப்பார். (சு)

ஆண்டவிந்தியகன்கரையெல்லா, மாண்டவாலுகமலிந்தினிதாகு
நீண்டசோலைகணிரந்தனதோன்றி, யீண்டியீண்டையினிறுத்துளவன்றே. (எ)

பிறைபுனைந்திடுபெருந்தகைதான, மிறுதியில்லனவிருந்தனவற்று
னறியதாகுமிந்நதிக்கரைதன்னி, லிறைவவிவ்விடையிருந்தருளென்றார். (அ)

Digitized By Roja Muthiah Research Library

வளையுமேனியயன்மான்முதல்வானோ, ரிளையசெப்புதலும்யாரினுமேலோன்
விளையமெத்தவுளவிச்சுவகன்மப், புனைவனுக்கிதுபுகன்றிடுகின்றான். (௯)

மெய்விதித்தொழிலில்வேதனிகர்க்குங், கைவலோயொருகணம்படுமுன்ன
ரிவ்விடத்தினிலெமக்கொருமூதூர், செவ்விதிற்புனைவுசெய்குதியென்றான். (௧0)

என்னலோடுமவ்விடந்தனிலெங்கோன், றுன்னுதொல்படைசுராதிபரோடு
மன்னவங்கணொருமாநகர்நெஞ்சத், துன்னிநல்கலுமுவந்தனர்யாரும். (௧௧)

அப்புரத்தையறிவன்கடிதாற்றி, முப்புரத்தையடுமுன்னவனல்கு
மெய்ப்புரத்தவனைநோக்குபுமேலோ, யிப்புரத்திடையெழுந்தருளென்றான். (௧௨)

என்றலோடுமிரதத்தினிழிந்தே, துன்றும்வானவர்சுராதிபரானோர்
சென்றபூதர்கள்செறிந்துடனேக, மன்றன்மாநகரில்வள்ளல்புகுந்தான். (௧௩)

செல்லுமாமுகில்செறிந்திடுகோப்பின், மல்லன்மாநகர்வளந்தனைநோக்கி
யெல்லையில்லறிவன்யாமுறைதற்கு, நல்லமாநகரிதென்றுநவின்றான். (௧௪)

வீரவேளிதுவிளம்புதலோடு, மாரும்வானவர்களம்மொழிகேளா
வேரெலாமுடையவிந்நகர்சேய்ஞ, லூரதென்றுபெயரோதினரன்றே. (௧௫)

ஆயகாலையனிகப்படைசூழ, வேயபின்னிளைஞரிந்திரன்வேதா
மாயனேனையர்வழுத்திடவாண்டைக், கோயில்செல்லுபுகுமாரனிருந்தான். (௧௬)

வேறு.

பன்னிருபுயத்தொகைபடைத்தகுமரேசன்
றன்னருளடைந்துவிதிதன்னைமுதலானோ
ரன்னவன்விடுத்திடவகன்றுபுடையேகித்
தொன்னிலையிருக்கைகடொறுந்தொறுமடைந்தார். (௧௭)

தானைகடமக்குரியசாரதரிலக்க
ரேனையர்வழுத்தவெமையாளுடையவள்ளல்
கோனகரிருக்கவிடைகொண்டுசெல்குழாத்துள்
வானவர்தமக்கிறைசெயற்கையைவகுப்பாம். (௧௮)

வேறு.

தாங்கரும்பெருந்திறற்றாரகாசுரன்
பாங்கமர்குன்றொடும்பட்டபான்மையா
லாங்கனம்புரந்தரனவலம்யாவது
நீங்கினனுவகையானிறைந்தநெஞ்சினான். (௧௯)

விருந்தியலமிர்தினைவிழுமமில்வழி
யருந்தினனுமனவாகந்தண்ணெனப்
புரந்தரனிருந்துழிப்புக்குத்தாழ்ந்ததால்
வரந்திகழ்சிரபுரவனத்திற்றெய்வதம். (௨0)

முகில்பொதிவிண்ணகமுதல்வன்பூண்களு
நகில்பொதிசாந்துடைநங்கைபூண்களுந்
துகில்பொதிகிழியொடுதொல்லைவைத்தவை
யகில்பொதிகாட்டகத்தடிகளுய்த்ததே. (௨௧)

Digitized By Roja Muthiah Research Library

முந்துறவுய்த்தபின்முதல்வகேட்டி
பைந்தொடியணங்கொடுபரமன்காழியில்
வந்தனைநோற்றநாள்வைத்தபூணிது
தந்தனன்கொள்கெனச்சாற்றிநின்றதே. (௨௨)

நிற்புறுகின்றுழிநேமியண்ணற்கு
முற்படுகின்றவன்மூளரிப்பண்ணவன்
கிற்புறுசெய்யபூண்கிழியைநோக்கினான்
கற்புடையாள்விடுந்தூதின்காட்சிபோல். (௨௩)

எரிமணியணிகலனிட்டபூந்துகில்
விரிதருபொதியினைவிரலினீக்கினான்
றிருமகளமர்தருதெய்வத்தாமரை
வரியளிசூழ்வுறமலர்ந்ததென்னவே. (௨௪)

துண்ணெனக்கிழியதன்றொடர்புநீக்கலு
மொண்ணுதற்றுணைவிபூணும்பர்தோன்றலுங்
கண்ணுறக்கண்டவட்கருதினானரோ
வெண்ணுதற்கரியதோரின்பந்துய்த்துளான். (௨௫)

பூட்கையின்முலையுடைப்பொன்னங்கொம்பின்மேல்
வேட்கையதாயினன்மிகவும்பற்பகல்
வாட்கையின்றிருந்ததுமனத்தின்முன்னினான்
காட்கொளுங்காமநோய்க்கவலையெய்தினான். (௨௬)

நெய்ம்மலிதழலெனநீடிக்காமநோ
யிம்மெனமிசைக்கொளவிரங்கியேங்கினான்
விம்மினன்வெதும்பினன்வெய்துயிர்த்தனன்
மைம்மலிசிந்தையன்மருட்கையெய்தினான். (௨௭)

பசையறவுலர்வுறுபராரைப்பிண்டியிற்
றசைமலிமுழுதுடறளர்ந்துவாடினா
னிசைவருசைவலோனெழுதுபாவைபோ
லசைவிலனிருந்தனனனங்குற்றென்னவே. (௨௮)

முருந்துறழெயிற்றினாண்முலைத்தடங்களிற்
பொருந்துறமூழ்கியேபுணர்ந்துவைகலு
மிருந்திடுகின்றவனிடர்ப்பட்டின்னணம்
பிரிந்திடின்வருந்துதல்பேசல்வேண்டுமோ. (௨௯)

மெய்ந்நனியலசுறவிரகமீக்கொள
வின்னணஞ்சசிபொருட்டினையுநீர்மையோன்
பொன்னணிதன்னையும்புனைதல்வேண்டலன்
றன்னுழையவர்தமைநோக்கிச்சாற்றுவான். (௩௦)

இக்கிழியொன்றினையேந்திமுந்துபோற்
சிக்குறவீக்கியேசேமித்துங்கள்பால்
வைக்குதிரென்றலும்வணங்கிநன்றெனா
வக்கணமனையவரதனையாற்றினார். (௩௧)

Digitized By Roja Muthiah Research Library

அன்னதோரளவையிலடவித்தேவினைக்
கொன்னுனைவச்சிரக்குரிசிலேனுக்குரு
நின்னுழையளித்திடநீசெல்கென்றனு
மன்னவனன்றெனவணங்கிப்போயதே. (௩௨)

போந்திடுகாலையிற்புலோமசைப்பெய
ரேந்திழைகாமநோயெரியின்றுப்பினாற்
காந்தியவுளத்தினன்கனலும்யாக்கைய
னேய்ந்தனன்றட்பமேலுளம்வைத்தேகினான். (௩௩)

ஒளியிழையுழத்தியரொளிமென்கூந்தலி
னளியினநறவுதுய்த்தலரிற்கண்படு
நளியிருந்தண்டலைஞாங்கர்பொங்கிய
புளினமொன்றதன்மிசைபுக்குவைகினான். (௩௪)

தீந்தழல்வெங்கதிர்திளைத்தவாறென
நீந்தருங்கங்குலினிலவுத்தீப்படப்
பூந்துணர்பரவியபுளினம்பொன்னகர்
வேந்தனுக்காற்றவும்வெம்மைசெய்ததே. (௩௫)

சூற்புயன்மாறியசுரத்திற்றெருக்குறு
மாற்பரல்வரைபுரைமணலின்றிட்டையின்
பாற்படுகின்றனன்பனிமதிக்கதிர்
மேற்படவசைந்தனன்வினையம்வேறிலான். (௩௬)

திங்களும்வெங்கனல்சிதறிக்காய்ந்திடத்
துங்கவேள்படையுடன்பிறவுஞ்சூழ்ந்திட
மங்கியவுணர்ச்சியன்மயலின்வன்மையான்
புங்கவர்மன்னவன்புலம்பலெய்தினான். (௩௭)

மட்டமர்புரிகுழன்மடந்தையென்னுட
லிட்டுயிர்வவ்வினளிருந்தயாக்கையுஞ்
சுட்டிடுகிற்றியாற்றூயதிங்கணீ
பட்டவர்தம்மையும்படுப்பரோவென்பான். (௩௮)

எஞ்சலிலமுதினையார்க்குநல்குநீ
நஞ்சினையுகுத்திநண்ணலரிற்றப்பியே
யுஞ்சனனிவனுயிரொழிப்பன்யானெனா
வஞ்சினம்பிடித்தியோமதியமேயென்பான். (௩௯)

நிற்றலும்வருதிநீநீடுதண்ணளி
யுற்றிடலன்றியேயொறுத்திலாய்மதி
யற்றமின்றுன்னிவந்தடுதியாரிடைக்
கற்றனையித்திறங்கள்வநீயென்பான். (௪0)

பெண்ணியலாரிடைப்பிறங்குகாமமு
முண்ணிகழ்விரகமுமுனக்குமுண்டதை
யெண்ணலையழல்சொரிந்தென்னைக்காய்தியாற்
றண்ணளிமதிக்கிதுதகுவதோவென்பான். (௪௧)

Digitized By Roja Muthiah Research Library

அரியநற்றவம்பலவாற்றியின்றுகா
றுரியதோரென்பலநூனில்யாக்கையேன்
பரிவுறச்சுடுவதிற்பயனென்பாரிலிவ்
வொருவனைவிடுகெனவுரைத்துவேண்டுவான். (சஉ)

அண்டமேனின்றனையவனிவானக
மெண்டிசையெங்கணுமெளிதுகாண்டியா
லொண்டொடியொருத்தியென்னுயிர்கொண்டுற்றனள்
கண்டதுண்டோமதிக்கடவுணீயென்பான். (சங)

யான்முதற்றோன்றினனெனதுபின்னவன்
கான்முளையாகியகாமநீபல
பான்மையினெனையடல்பழியதேயலான்
மேன்மையதாகுமோவிளம்புவாயென்பான். (சச)

பரேருளவுனதுமெய்படுத்தகண்ணுதன்
னொரேலெனவுதவியநிமலனீண்டுள
னொரேகணமொடுங்குமுனுயிரும்வாங்குமாற்
பொரேலினிமதனநீபோகுபோகென்பான். (சரு)

வானுழைதிரிதருமதியம்போக்கிய
தீநுழைபுண்ணில்வேல்செறித்ததென்னவேள்
கோனுழைகின்றனவதனிற்கூடளி
யீநுழைகின்றனபோலுமென்கின்றான். (சசு)

வன்றிறற்கொலைஞர்கண்மானிற்கூவிமா
னொன்றறக்கவர்தல்போலுயிரென்காலினை
யின்றதுபோலவந்துள்புக்கீர்த்ததாற்
றென்றலுக்கியான்செய்ததீதுண்டோவென்பான். (சஎ)

வாகுலப்பரியதோர்மாதர்மாலெனு
மாகுலப்புணரியுளழுந்தினோரையும்
வீகுலத்தொகையினுள்விட்டிசைத்திடுங்
கோகிலப்பறவையுங்கொல்லுமோவென்பான். (சஅ)

நம்முருவாயினனசர்கோனெனத்
தம்மனமுன்னியேதளர்வுநீக்கில
கொம்மெனவரற்றியுங்கூவலின்றியு
மெம்முயிர்கொள்வனவிருபுளாமென்பான். (சகூ)

தண்டுதலின்றியேதானுநானுமாய்ப்
பண்டொருவனிதை * யைப்பரிவிற்கூடினே
மண்டருமறிகுவரற்றைநாட்சின
முண்டுகொல்கதிரினமுதிக்கிலானென்பான். (ருo)

கோழிலைமடற்பனைக்குடம்பைசேர்தரு
மாழையம்பசலைவாய்மகன்றிலென்பவை
காழகவரிசிலைக்காமன்கோடுபோ
லாழியும்வீந்திடாதொலிக்குமோவென்பான். (ருக)

* பண்டொருவனிதையென்றது - பெண்வடிவங்கொண்ட அருணனை.



Digitized By Roja Muthiah Research Library

துன்னலராகியதொகையினோர்தமைத்
தன்னிடைவைத்தெனைத்தளர்வுகண்டதா
லன்னதுமன்றியின்றுவிகொள்ளவு
முன்னியதோகடலுறங்கலாதென்பான். (ருஉ)

இவ்வகையாமினியெல்லைமுற்றவும்
வெவ்வழல்சுட்டிடும்விரகநோய்தெற
வுய்வகையொன்றிலனுயங்கலல்லது
செய்வதுபிறிதிலன்றெருளில்சிந்தையான். (ருங)

வேறு.

ஆக்கமித்திறமடைவுழிப்பத்துநூறடுத்த
நோக்கமுற்றவன்சசிபொருட்டுற்றநோயதனை
நீக்குகின்றனன்யானெனுநினைந்துளானென்ன
மாக்கள்பூண்டதேர்வெய்யவன்குணதிசைவந்தான். (ருச)

வெம்புதொல்லிருளவுணர்தங்குழுவினைவீட்டி
யும்பர்மேற்செலுமதியெனுமடங்கலையுருத்துப்
பைம்பொன்வெஞ்சுடர்க்கரங்களாலதன்வலிபடுக்குஞ்
சிம்புளாமெனத்தோன்றினன்செங்கதிர்க்கடவுள். (ருரு)

தொடர்ந்தஞாயிறுவிடுத்திடுங்கதிர்களாந்தூசி
படர்ந்தகாலையினிலவெனுமணிகமுன்பட்ட
வடைந்தமீனெனுந்துணைவரும்பொன்றினரமர்செய்
துடைந்தமன்னரிற்போயினனுடுபதிக்கடவுள். (ருசு)

விரிந்தபல்கதிரனிகத்தைவெய்யவன்விடுப்பத்
துரந்தசோமனையவன்புறங்காட்டினன்றொலைந்து
கரந்துபோதலும்பின்னுறச்சென்றிலகளத்தி
லிரிந்துளோரையுந்தொடர்வரோசூரர்தமினத்தோர். (ருஎ)

திங்கடன்குறையுணர்த்தவாய்திறந்தெனச்செய்ய
பங்கயங்கள்போதவிழ்ந்தனகுமுதங்கள்பலவுந்
தங்கணாயகனுடைந்ததுநோக்கியேதபனற்
கங்கைகூப்பியதிறனெனவொடுங்கியவன்றே. (ருஅ)

வனமெழுந்தனவனசமுமெழுந்தனவரியி
னினமெழுந்தனமாக்களுமெழுந்தனவெழில்சே
ரனமெழுந்தனபுள்ளெலாமெழுந்தனவவற்றின்
மனமெழுந்தனவெழுந்தனமக்களின்றொகையே. (ருகூ)

ஞாயிறுற்றவவ்வளவையினனந்தலையுலகி
லேயெனச்செறியிருளெலாமறைந்திருந்தென்னச்
சேயரிக்கணிதந்திடுதெளிவில்காமத்து
மாயிருட்டொகையொடுங்கியதிந்திரன்மனத்துள். (சு0)

கையிகந்துபோய்த்தன்னுயிரலைத்தகாமத்தீப்
பையவிந்திடுபாந்தள்போற்றணிதலும்பதைப்புற்
றெய்யெனக்கடிதெழுந்தனனகைத்துவெள்குற்று
னையகோவிதுவருவதேயெனக்கெனவறைந்தான். (சுக)

Digitized By Roja Muthiah Research Library

தீமையுள்ளனயாவையுந்தந்திடுஞ்சிறப்புந்
தோமில்செல்வமுங்கெடுக்குநல்லுணர்வினைத்தொலைக்கு
மேமநன்னெறிதடுத்திருளாய்த்திடுமிதனாற்
காமமன்றியேயொருபகையுண்டுகொல்கருதில். (௬௨)

என்பதுன்னியேயிந்திரனுண்டைவைப்பிகந்து
தன்புறந்தனிற்கடவுளர்குழுவெலாஞ்சார
வன்பொடேபடர்ந்தறுமுகனடிகளையடைந்து
முன்புதாழ்ந்தனனுரோமமுஞ்செங்கையுமுகிழ்ப்ப. (௬௩)

தொழுதகையினன்கோட்டியமெய்யினன்றுகிலத்
தெழுதுபாவையிலான்றமைபுலத்தினனிறைஞ்சிப்
புழுதிதோய்தருமுறுப்பினன்சுருதியின்பொருண்மை
முழுதுமூறியதுதியினனாகிமுன்னின்றான். (௬௪)

கரியவன்றனைச்செய்யவன்கருணைசெய்தருளி
வருதியென்றுகூய்மறைகளும்வரம்புகாண்கில்லா
வரனதாள்களையருச்சனைபுரிதுநாமதனுக்
குரியவாயபல்கரணமுந்தருதியென்றுரைத்தான். (௬௫)

உரைத்தவெல்லையிற்றொழுதுபோயுழையரிற்பலரைக்
கரைத்துவீற்றுவீற்றேவியேகடிமலர்க்கண்ணி
திரைத்துகிற்படாநறும்புனலவிபுகைதீபம்
விரைத்தகந்தங்களேனவுந்தந்தனன்விரைவில். (௬௬)

அவ்வக்காலையிலாறுமாமுகனுடையடிக
டெய்வக்கம்மியற்கொண்டொருசினகரமியற்றிச்
சைவத்தந்திரவிதியுளிநாடியேதாதை
யெவ்வெக்காலமுநிலையதோருருவுசெய்திட்டான். (௬௭)

தேவுசான்மணிப்பீடத்திலீசனைச்சேர்த்தி
யாவினைந்துமமுதமும்வரிசையாலாட்டித்
தாவிலாததோர்வாலிதாமணித்துகில்சாத்திப்
பூவின்மாலிகைசெய்யசாந்தத்தொடும்புனைந்தான். (௬௮)

மருந்தினூற்றவுஞ்சுவையனவாறுவநூல்போய்த்
திருந்தினார்களும்வியப்பனதிறம்பலவாகிப்
பொருந்துகின்றனநிரலமைகருனையம்புழுக்கல்
சொரிந்துபொற்கலத்தருத்தினன்மந்திரத்தொடர்பால். (௬௯)

கந்தம்வெள்ளிலைபூகநற்காயிவைகலந்து
தந்துபின்முறையருத்தினன்புகைசுடர்தலையா
வந்தபான்மைகளியாவையும்வரிசையானுதவி
முந்துகைதொழூஉப்போற்றினன்மும்முறைவணங்கி. (௭0)

வேறு.

இருவருமுணர்கிலாதிருந்ததாள்களைச்
சரவணமிசைவருதனயன்பூசனை
புரிதலுமுமையொருபுடையிற்சேர்தர
வருள்விடைமீமிசையண்ணறோன்றினான். (௭௧)

Digitized By Roja Muthiah Research Library

கார்த்திகைகாதலன்கறைமிடற்றுடை
மூர்த்திநல்லருள்செயமுன்னிவந்தது
பார்த்தனனெழுந்தனன்பணிந்துசென்னிமேற்
சேர்த்தியகரத்தொடுசென்றுபோற்றினான். (எஉ)

செயிர்ப்பறுநந்திதன்றிறத்தில்வீரரும்
வியர்ப்பினில்வந்தெழுவீரருங்குழீஇக்
கயற்புரைகண்ணுமைகணவற்காணுறீஇ
மயிர்ப்புறம்பொடிப்புறவணங்கியேத்தினார். (எங)

முண்டகன்முதல்வரு * முரண்கொள்பூதருங்
கண்டன்ரனையதுகரங்கள்கூப்பியே
மண்டனின்மும்முறைவணங்கிவானக
மெண்டிசைசெவிடுறவேத்தன்மேயினார். (எச)

வேறு.

ஆயதுகாலைதன்னிலருவுருவாகுமண்ணல்
சேயினைநோக்கியுன்றன்வழிபடற்குவகைசெய்தே
நீயிதுகோடியென்னாநிரந்தபல்புவனமுற்று
மேயெனமுடிவுசெய்யும்படைக்கலத்திறையையீந்தான். (எரு)

மற்றிதுநம்பாற்றோன்றும்வான்படைமாயன்வேதாப்
பெற்றுளதன்றியாரிப்பெரும்படைபரிக்குநீரார்
முற்றுயிருண்ணும்வெஞ்சூர்முரட்படைதொலைப்பானீது
பற்றுதிமைந்தவென்னாப்பராபரனருளிப்போனான். (எசு)

கருணைசெய்பரமன்சேணிற்கரந்தனன்போனகாலை
யருள்பெறுநெடுவேலண்ணலன்னவற்போற்றிப்பின்னை
விரவியவிலக்கத்தொன்பான்வீரருமயனுமேனைச்
சுரர்களும்வழுத்திச்செல்லத்தூயதன்றேரிற்புக்கான். (எஎ)

சில்லியந்தேர்மேற்செவ்வேள்சேர்தலுமுலவைவேந்தன்
வல்லைதன்றமர்களோடும்வாம்பரிகடாவியுய்ப்ப
வெல்லையிற்பரிதிதோன்றவெழுதருமுயிர்களேபோ
லொல்லெனவெழுந்ததம்மாவுருகெழுபூதவெள்ளம். (எஅ)

சாரதநீத்தமெல்லாந்தரையினின்றெழுந்துசூழ்ந்து
போரணியணிந்துபோந்தபுடைதனிலிலக்கத்தொன்பான்
வீரருஞ்சுரர்கள்யாருமேவினர்வந்தார்வான்றோய்
தேர்மிசையவர்க்குநாப்பட்சென்றனன்குமரச்செம்மல். (எகூ)

மண்ணியங்கரையிற்றென்பால்வகுத்தசேய்ஞல்லூர்நீங்கி
யெண்ணியவுதவும்பொன்னியிகந்திடைமருதினோடு
தண்ணியன்மஞ்ஞையாடுந்தண்டுறைபறியலூருங்
கண்ணுதலிறைவன்றானமேனவுங்கண்டுபோனான். (அ0)

எழில்வளஞ்சுரக்குந்தொல்லையிலஞ்சியங்கானநோக்கி
மழவிடையிறைவன்பொற்றாள்வணங்கியேமலர்மென்பாவை
முழுதுளதிருவுமென்றுமுடிவின்மங்கலமுமெய்த
விழுமிதினேற்றுப்பெற்றவியன்றிருவாரூர்கண்டான். (அக)

குமாரபுரிப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,எஉரு.

---

* முண்டகமுதல்வரும் எனவும் பாடம்.

Digitized By Roja Muthiah Research Library

# சுரம்புகுபடலம்.

புற்றிடங்கொண்டபுத்தேள்புரந்தரற்கருள்செய்திட்ட
நற்றலந்தன்னைச்சேர்ந்தநகரமுள்ளனவுங்காணூஉக்
கொற்றவெங்கதிர்வேலண்ணல்கொல்லுலையழலிற்செக்கர்
பற்றியவிரும்புபோலும்பாலையங்கானத்துற்றான். (௧)

வேறு.

எழுநேமியும்பெரும்புறக்கடலுமெண்டிசையுஞ்
சூழவன்னதாலழிவின்றித்தொன்மைபோலாகி
யாழியுள்ளூறும்வடவையினவற்றினைப்பருகி
யூழிதன்னினுமிருப்பதவ்வுயர்பெரும்பாலை. (௨)

அண்டர்நாயகனுலகடுமகந்தனக்காகும்
பண்டமேசெறிபல்வளமாருயிர்பசுக்கண்
மண்டுநேமிநெய்நிலங்கலமாயுறமலர்தீக்
குண்டமாயதுகள்ளிசூழ்கொடியவெம்பாலை. (௩)

வண்ணவொண்சுதைமெய்யுடைவரநதிகேள்வ
னண்ணுதொல்லுலகாகியேநரலையுற்றென்னத்
தண்ணிலாவெழுநாத்தலையிரண்டுடைத்தழலின்
பண்ணவற்குலகாயதுமுதுபெரும்பாலை. (௪)

உடையதொல்குலக்கேண்மையாலவ்வனத்துறையுங்
கொடியவன்னிபாற்சென்றதோவெப்பமேல்கொண்டு
நடுநடுங்கிவெம்புகையுமிழ்ந்தரற்றிநாவுலர்ந்து
கடல்படிந்துநீர்பருகுமால்வடவையங்கனலே. (௫)

கற்றையங்கதிர்ப்பரிதியுமதியுமக்கானஞ்
சுற்றியேகுவதல்லதுமிசைபுகார்சுரரு
மற்றுளார்களுமனையரேயெழிலியுமருத்து
மெற்றைவைகலுமதன்புடைபோகவுமிசையா. (௬)

சேனம்வெம்பணியொண்புறாவிரலைமான்செந்நா
யானையாதிகளவ்வனத்திருக்கவுமாவி
போனதில்லையாலங்கியிற்றோன்றியபொருள்கள்
மேனிகன்றுவதன்றியேவிளியுமோவதனால். (௭)

எண்ணினுஞ்சுடும்பாலையங்கானிடையெழுந்த
கண்ணகன்புகையழல்படுகின்றகாட்சியவே
விண்ணினீலமுஞ்செக்கருமவற்றினால்வெடித்த
புண்ணுமொக்குளுங்கதிர்களுமுடுக்களும்போலாம். (௮)

வேகவெய்யவன்புடையுறாதவ்வனமிசையே
போகவோரிறையெழுந்தழல்சுட்டதுபோலு
மேகுதேரொருகாலிலாதிழந்ததாலிருகால்
பாகிழந்தனனவன்சதிரங்கிபட்டனவே. (௯)

தங்கடொல்பவமகன்றிலாவிண்ணவர்தம்மைத்
துங்கமுத்தியின்பொருட்டினாலடைபவர்தொகைபோ
லங்கநோர்ந்துதம்போலவேவெப்பமுற்றயருங்
கங்கநாடியேநீழலுக்கடைவனகலைகள். (௧0)

கோலவெங்கதிர்மதியிவர்வைகலுங்கொடிய
பாலைவெஞ்சுரத்தாரழல்வெம்மைபட்டனரோ
காலைதன்னினுமாலையம்பொழுதினுங்கங்குல்
வேலைதன்னிலும்பிறவினும்வேலைநீர்படிவார். (௧௧)

தொடரும்வானவர்யாவருமையைதாடொழுவார்
கொடியபாலைமுன்னுணர்கிலாதணுகினர்கொல்லோ
...டிசிவந்தகம்வெம்பியேயமுதமுண்டதற்காப்
படியின்மேலென்றுஞ்செல்கிலர்விண்மிசைப்படர்வார். (௧௨)

ஒள்ளிதாகியதலைமையிற்பிறந்துளோருலக
மெள்ளுநல்குரவெய்தலாவிழிந்தவர்கண்ணுங்
கொள்ளுமாறொருபயன்குறித்தேகல்போற்கொடிய
கள்ளிதன்புடைநீழலுக்கொதுங்குவகரிகள். (௧௩)

இரவிகம்மியன்சுட்டுறுகோல்கதிரெரிதீ
மருவுசெந்தரைபொறிமணிகொள்கலம்வறுங்கான்
கரிகளேகரிகாற்குழறுதிக்கைநீர்கானல்
புரிதரும்பணிவெந்திடும்பணிக்குலம்போலும். (௧௪)

ஆன்றவான்புவிநதிப்புனல்பாதலமதன்கட்
டோன்றுநீத்தநீர்யாவையுமொருங்குறத்துற்றுச்
சான்றபாலையஞ்செந்தழலப்புனறன்னைக்
கான்றவாறெனக்கிளர்வனவந்நிலக்கானல். (௧௫)

விஞ்சுகானல்வெண்டேரினையாறெனவிரும்பி
நெஞ்சிலுன்னியேயிரலைமான்மடப்பிடிநெடுந்தாட்
குஞ்சரந்திரிந்துலைவனகொடியவெம்பணிகா
னஞ்சுதன்னையுமருந்துவருமலிநீர்நசையால். (௧௬)

செய்யமண்மகளுலப்புறுவுந்தியந்தீயாய்
வெய்யவன்செலற்கரியவப்பாலைமேவுதலான்
மொய்யில்வெம்பணிபுகையழலுமிழ்வனமுரணு
மையுறுங்கொடுநஞ்சொடுகான்றசெம்மணிகள். (௧௭)

முளையினஞ்சொரிமுத்தமுமுந்துசெம்பரலு
மளவில்பாந்தளின்மணிகளுமீண்டியேயமர்தல்
விளிவிலவ்வனத்தீச்சுடத்தனதுமெய்வெடித்தே
யுளையுமண்மகண்மொக்குளுற்றிடுதிறனொக்கும். (௧௮)

கள்ளிபட்டனபாலையுந்தீந்தனகரிந்து
முள்ளிபட்டனவெரிந்தனகுராமரமுளிந்து
கொள்ளிபட்டனகாரகிலன்னதாற்கொடுந்தீப்
புள்ளிபட்டதுபோன்றதுபாலையம்புவியே. (௧௯)

Digitized By Roja Muthiah Research Library

இன்னதாகியபாலையஞ்சுரத்திடையிறைவன்
றன்னதாகியதானைகளொடுந்தலைப்படலு
மின்னுமாமுகில்பொழிந்தபின்றண்ணளிமிக்கு
மன்னுகின்றபூங்குறிஞ்சிபோலாயதவ்வனமே. (உ0)

ஆற்றருந்திறலங்கிதன்னரசியன்முறையை
மாற்றியெம்பிரான்வருணற்குவழங்கினானென்ன
வேற்றமாகியவெம்மைபோய்நீங்கியேயெவரும்
போற்றுநீரொடுதண்ணளிபெற்றதப்புவியே. (உக)

காதனீங்கலாதலமருமாருயிர்க்கரண
மாதியீசனதருளினாலவனதாகியபோ
லேதுநீரிலாதழல்படுவெய்யகானிலையோன்
போதலாற்குளிர்கொண்டதுநறுமலர்ப்பொழிலாய். (உஉ)

புறநெறிக்கணேவீழ்ந்துளோர்சிவனருள்புகுங்கா
லறிவுமாற்றலுங்குறிகளும்வேறுபட்டனபோல்
வறியசெந்தழல்வெவ்வனம்வேலவன்வரலா
னறியதண்மலர்ச்சோலையாயுவகைநல்கியதே. (உங)

வேறு.

நீரறுமுரம்பின்றன்மைநீங்குமச்சுரத்தின்றன்பா
லீரறுபுயத்தன்செல்லவெழில்செழுபரங்குன்றத்திற்
பாரறுதவம்பூண்டுள்ளபராசரன்சிறார்களாய
வோரறுவகைமையோருமோதியாலதனைக்கண்டார். (உச)

தத்தனேயனந்தனந்திசதுர்முகன்பரிதிப்பாணி
மெய்த்தவமாலியென்னமேவுமூவிருவர்தாமு
மத்தனதருளைமுன்னியடுக்கலினிருக்கைநீங்கி
யுத்தரநடவையெய்தியொய்யெனப்படர்தலுற்றார். (உரு)

ஆர்வலராகுமைந்தரறுவருமளகைநேடிப்
பார்வல்வந்தணையுமாபோற்பாலையென்றுரைக்குமெல்லை
நேர்வருகின்றகாலைநெடும்படைநீத்தஞ்சூழச்
சூர்வினைமுடிப்பான்செல்லுந்தோன்றல்வந்தணியனானான். (உசு)

அணிமையிற்சேயோனன்னவாறுமாமுகமும்பன்னி
ரிணைதவிர்புயமுங்கையுமேந்தெழிற்படையின்சீரு
மணியணிமார்புஞ்செங்கேழ்வான்றுகின்மருங்கும்பாதத்
துணையுமத்துணையிற்கண்டுதொழுதுகண்களிப்புக்கொண்டார். (உஎ)

மூவிருதிறத்தினோருமுற்றொருங்குணர்ந்தவள்ளல்
பூவடிவணங்கித்தேனீப்புதுநறாவருந்தியார்த்து
மேவருந்தன்மைத்தென்னவியப்பொடுவழுத்திநின்று
தேவர்கடேவவெம்பாற்றிருவருள்செய்தியென்றார். (உஅ)

என்றிவையிருமூவோருமிசைத்துழியுயிர்கட்கெல்லா
மொன்றியவுயிருமாகியுணர்வுமாயிருந்தமூர்த்தி
தன்றிருமலர்த்தாண்முன்னந்தலையளியோடுதாழ்ந்து
நின்றுகைதொழுதிட்டன்னோர்நிலைமையைமகவான்கூறும். (உகூ)

Digitized By Roja Muthiah Research Library

மறுவறுபராசரன்றன்மதலைகளாகுமின்னோ
ரறுவருஞ்சிறாரேயாகியாடுறுசெவ்விதன்னி
னிறைதருசரவணத்துநெடுந்தடம்புனலிற்பாய்ந்து
முறைமுறைபுக்குமூழ்கிமுகேரெனவலைக்கலுற்றார். (௩௦)

உலைத்தலையுணர்ச்சிகொள்ளவுள்ளுயிர்திரியுமாபோ
னிலைத்தலையின்றியார்க்குநீந்தல்செய்குண்டுநீத்த
மலைத்தலையடையுமெல்லையாயிடைவதிந்தமீன்க
டலைத்தலைபிரியவின்னோர்தன்மையங்கதனைக்கண்டார். (௩௧)

அங்கதுதெரிந்துநின்றோராண்டுறுமீன்கள்பற்றித்
துங்கமதுடையகோட்டின்சூழலுய்த்துலவுமெல்லைச்
செங்கதிருச்சிவேலைச்செய்கடனிரப்பவுன்னிப்
பங்கமினோன்மைபூண்டபராசரனங்கண்வந்தான். (௩௨)

வள்ளுறைகொண்டதெய்வவான்சரவணத்துவந்தோன்
பிள்ளைகளாகுமின்னோர்பிடித்தபுன்றொழிலைநோக்கித்
தள்ளருஞ்சினமேல்கொண்டுதனயர்காணீவிரீண்டே
துள்ளுறுமீனமாகிச்சுலவுதிரென்றுசொற்றான். (௩௩)

அவ்வுரையிறுக்குமுன்னரறுவருமேனாளாற்றும்
வெவ்வினையூழின்பாலான்மீனுருவாகியஞ்சி
யெவ்வமிதகலுகின்றதெப்பகலுரைத்தியென்னச்
செவ்விதினுணர்ந்துமேலைத்திருமுனிபுகலலுற்றான். (௩௪)

இத்தடந்தன்னின்மேனாளிராறுதோளுடையவண்ண
லத்தனதருளால்வைகவனையனையெடுக்குமம்மை
மெய்த்தனமுகுக்குந்தீம்பால்வெள்ளமாமதனைநீவிர்
துய்த்திடுமெல்லைதன்னிற்றொல்லுருவாதிரென்றான். (௩௫)

என்றிவைமுனிவன்கூறியிரும்பகற்கடனையாற்றிச்
சென்றனனதற்பின்மீனின்றிருவுருவமைந்தவின்னோ
ரன்றுதொட்டளப்பில்காலமலமருமுணர்ச்சியெய்தி
மன்றலஞ்சரவணத்துமாண்பெருந்தடாகத்துற்றார். (௩௬)

ஐயநீயனையபொய்கையமர்தலுமவ்வைகண்டாங்
கொய்யெனவெடுப்பக்கொங்கையுகளநின்றிழிந்ததீம்பா
றுய்யதோர்நீத்தமாகித்துறுமலுமதனைத்துய்த்து
மையனீங்குற்றுத்தொல்லைவாலியவடிவம்பெற்றார். (௩௭)

தொல்லுருவடைந்தவின்னோர்தூமதிவேணியண்ண
னல்லருளதனால்வந்துநவையகல்பரங்குன்றத்தி
னெல்லையில்விரதம்பூண்டாங்கிருந்தனரெந்தையீண்டுச்
செல்லுவதுணர்ந்துபோந்தாரென்றனன்றேவர்செம்மல். (௩௮)

தம்மகவுரைக்குங்கூற்றந்தாதையர்வினவுமாபோ
லம்மகபதிசொற்கேளாவருள்செய்துபராசரன்றன்
செம்மல்கடம்மைநோக்கிச்செயிரறுகுணத்துநீவி
ரெம்மொடுசெல்வீரென்றான்யாவையுமுணர்ந்தபெம்மான். (௩௯)

Digitized By Roja Muthiah Research Library

பராசரன்மைந்தரன்னபான்மையைவினவிச்செவ்வேற்
கராசரணடைந்தேமென்றுகட்டுரைத்திறைஞ்சிச்செல்லச்
சராசரம்யாவுந்தந்தசண்முகன்றழல்கட்கெல்லா
மிராசர்தந்தன்மையெய்துமிருஞ்சுரங்கடந்துபோனான். (௪0)

சுரம்புகுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௭௬௫.

---

# திருச்செந்திப்படலம்.

சுரமதுகடந்துநீங்கிச்சோதிவேலுடையவள்ளல்
விரிபுனற்சடிலத்தண்ணன்மேவுசெங்குன்றூர்நோக்கிப்
பருமணிவயிரமுத்தம்பலவளம்பிறவுமாழித்
திரையெறியலைவாயாகுஞ்செந்திமாநகரம்புக்கான். (௧)

அறுமுகனங்கணேகியகிலகம்பியனைநோக்கி
யிறையிலோர்சினகரத்தையியற்றுதியீண்டையென்னத்
திறனுணர்புனைவர்செம்மல்சிந்தையினுடித்தேவ
ருறைதிருநகரம்வெஃகவொருதிருக்கோயில்செய்தான். (௨)

பொன்னுறுமிரதநீங்கிப்புறனெலாந்தானைநண்ண
வந்நகரதனுளேகியரும்பெருந்துணைவர்பூதர்
மன்னவரயன்மாலாதிவானவர்யாரும்போற்ற
மின்னுபொற்பீடத்தையன்வீற்றிருந்தருளினானே. (௩)

வேறு.

பாணிமிர்மென்குரற்பாற்படுநல்யாழ், கானமிசைத்தனர்கந்தருவத்தோ
ரானபல்சட்டுவமங்கைதொறேந்தி, வானமிர்தைச்செவிவாக்குறுமாபோல். (௪)

சுருதியெலாமுணர்தூயவன்வானோர், புரவலன்மாமுனிபுங்கவர்யாரு
மருமலர்மாரிவழுத்தினர்வீசி, யிருபுடைதன்னினுமெய்தினரீண்டி. (௫)

வாலியதூயொளிவானதியாவும், பாலகன்மெய்யணிபார்த்தனராடி
யேலுறுபாங்கரினீண்டியவாபோற், காலினர்சாமரைகைக்கொடசைத்தார். (௬)

ஒண்ணிழன்மாமதியோரிருவடிவா, யண்ணன்முகத்தெழிலார்ந்திடநண்ணி,விண்
ணிடைநின்றெனவெங்கனல்வருணன், றண்ணிழல்வெண்குடைதாங்கினர்நின்றார்.

கட்டழல்கான்றிடுகாமருநாக, மெட்டுமெலாதனயாவையுமீண்டி
யுட்டெளிவாற்பணிவுற்றெனவால, வட்டமசைத்தனர்வானவர்பல்லோர். (௮)

வானுயர்தோள்விறல்வாகெனுமண்ணன், றானுடைவாள்கொடுசார்ந்தயனிற்ப
வேனையதம்பியரெண்மரிலக்க, ரானவர்போற்றியகன்கடைநின்றார். (௯)

வேறு.

பொருந்தியின்னவர்புறத்துறவங்க, ணிருந்தஞானமுதலெல்லையில்காலம்
வருந்துகின்றமகவான்முகநோக்கித், தெரிந்திடாதவரினின்னனசெப்பும். (௧0)

துறந்துநீதியமர்சூர்முதலானோர், பிறந்தவாறுமவர்பேணியநோன்பு
மிறந்தசெய்யவரமெய்தியவாறுஞ், சிறந்துபின்னரசுசெய்திடுமாறும். (௧௧)

மற்றவெய்யவர்தமாயமுமுற்கொள், வெற்றியும்வலியுமேன்மையுநம்பா
லிற்றைநாள்வரையியற்றியதுன்பு, முற்றுமொன்றறமொழிந்திடுகென்றான். (கஉ)

கோக்குமாரனிவைகூறவிசைந்தே, மீக்கொள்பொன்னுலகவேந்தயனின்ற
வாக்கின்வல்லகுரவன்றனையன்பா, னோக்கிநீயிவைநுவன்றருள்கென்றான். (கங)

வச்சிரங்கொள்கரன்மற்றதுசெப்ப, வச்செனக்குரவனன்னதிசைந்தே, செச்
சைமொய்ம்புடையசேயிருபொற்றா, ளுச்சிகொண்டுதொழுதின்னதுரைப்பான்.()

அறிதியெப்பொருளுமாவிகடோறுஞ், செறிதியெங்கடுயர்சிந்துதன்முன்னிக்
குறியசேயுருவுகொண்டனையார்க்கு, மிறைவநின்செயலையாருணர்கிற்பார். (கரு)

எல்லையில்புவனம்யாவையும்யாண்டு, மொல்லுமூவருமுயிர்த்தொகையாவுந்
தொல்லைமேனிகொடுதோன்றினையானீ, வல்லமாயவியன்மற்றெவர்தேர்வார். ()

வெய்யர்தன்மையைவினவியதன்மை, யையவன்னதையறிந்திடவன்றே
கையரேந்துயர்களைந்துளமீதிற், செய்யவின்புதவுசீரருளாமல். (கஎ)

ஆகையாலவுணர்தன்மைகளெல்லாம், போகுமெல்லைபுகல்கின்றனனென்று
வாகைசேர்குமரவள்ளலைநோக்கி, யோகையோடரசனோதிடுகின்றான். (கஅ)

திருச்செந்திப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,எஅங.

---

உற்பத்திகாண்டமுற்றுப்பெற்றது.

கச்சியப்பசிவாசாரியர்திருவடிவாழ்க.

---

Digitized By Roja Muthiah Research Library

திருச்சிற்றம்பலம்.

---

## இரண்டாவது

# அசுரகாண்டம்.

---

## மாயைப்படலம்.

ஊரிலான்குணங்குறியிலான்செயலிலானுரைக்கும்
பேரிலானொருமுன்னிலான்பின்னிலான்பிறிதோர்
சாரிலான்வரல்போக்கிலான்மேலிலான்றனக்கு
நேரிலானுயிர்க்கடவுளாயென்னுளேநின்றான். (க)

வீறுகாசிபன்சிறார்களாய்மேவியவறுபா
னாறுகோடியதாகியவவுணருக்கரசன்
மாறின்மங்கலகேசியாமரக்கியைமணந்து
பேறதாகவேசுரசையென்றொருமகட்பெற்றான். (உ)

தூயவம்மகள்வளர்ந்தபின்புகரெனுந்தொல்லோன்
றீயமாயையின்கல்விகள்யாவையுந்தெருட்டி
யாயவிஞ்சையின்வல்லபநோக்கியேயவட்கு
மாயையென்றுபேர்கூறினன்மனத்திவைமதிப்பான். (ங)

இன்னலெய்தியவவுணர்கள்சிறுமையுமிமையோர்
மன்னனாதியர்பெருமையும்வானநாட்டுறைவோர்
நன்னலந்தொலைந்தசுரரான்மெலிந்திடநந்தி
சொன்னவாய்மையுங்கருதினன்புகரெனுந்தூயோன். (ச)

கருதியின்னணமேல்வருந்தன்மையுங்கண்டு
குருதிதோயும்வேலவுணர்கோன்பயந்தகோற்றொடியை
வருதியென்றுகூய்வரம்பறுபேரருள்வழங்கி
யொருதிறந்தனைக்கேளெனத்தேசிகனுரைப்பான். (ரு)

வனசமங்கைதன்கணவனால்வாசவன்றன்னான்
முனிவர்தேவராலளப்பிலாவவுணர்கண்முடிந்தா
ரனையர்மேன்மையையாவருமுணர்குவரதனா
லுனதுதந்தையும்வலியிழந்தேயொடுங்குற்றான். (சு)

மின்பொருட்டினாற்கேதகைமலர்ந்திடும்விளங்கு
மென்பொருட்டினான்மாமழைசொரிந்திடுமீட்டும்
பொன்பொருட்டினால்யாவுமுண்டாமதுபோல
வுன்பொருட்டினாலவுணர்க்குமேன்மையதுளதாம் (எ)

Digitized By Roja Muthiah Research Library

வாசமாமலர்மடந்தையும்வந்தடிவணங்கப்
பேசொணாததோர்பேரழகுருக்கொடுபெயர்ந்து
காசிபன்றனையடைந்துநின்வல்லபங்காட்டி
யாசைபூட்டியேயவனொடும்புணருதியல்லில். (௮)

அல்லிடைப்புணர்ந்தசுரர்கடம்மையுண்டாக்கி
மெல்லவங்கவர்தங்கட்குநாமமும்விளம்பி
யெல்லையில்வளம்பெற்றிடவவுணருக்கியலுந்
தொல்லைவேள்வியும்விரதமுமுணர்த்துதிதோகாய். (௯)

இன்னதன்மைகண்முடிந்தபினின்சிறாரெவரு
நன்னலர்தனையடையவுநண்ணலரெல்லாம்
பன்னரும்பழிமூழ்கவுமருந்தவம்பயில
வன்னைமீளுதியென்றனன்புகரெனுமாசான். (௧0)

குரவன்வாய்மையைவினவியேகோதில்சீரவுணர்
மரபுமேம்படுதன்மையான்மற்றிவையெல்லா
மருளுகின்றனையாதலாலிப்பணியடியேன்
புரிகுவேனெனவவனடிவணங்கியேபோனாள். (௧௧)

மயிலையன்னவளவுணர்தமன்னற்குமினைய
செயலையோதியேயவன்விடையுங்கொடுசென்று
கயிலையென்னநீறாடியேகாசிபனிருந்து
பயிலுநோன்புடையெல்லையைநாடியேபடர்ந்தாள். (௧௨)

திருவுமாரவேளிரதியுந்திலோத்தமையென்ன
மருவுதையலுமோகினியென்பதோர்மாது
மொருதனித்திருவடிவுகொண்டாலெனவுலகிற்
பொருவின்மாயவள்பேரழகுருக்கொடுபோனாள். (௧௩)

மண்ணுற்றோர்களுமாதிரத்தோர்களுமதிதோய்
விண்ணுற்றோர்களுமன்னவளெழினலம்விரைவிற்
கண்ணுற்றோர்கிளரணுகினர்காமவேள்கணையின்
புண்ணுற்றோர்விளக்கழலுறுபறவையிற்புலர்ந்தார். (௧௪)

மதியுஞாயிறுஞ்சூழ்தருமேருவின்வடபால்
விதிமகன்றவம்புரிதரும்வியனிலமருங்கி
னதிர்சிலம்பொடுமேகலைபுலம்புறவனையா
டிதிகொலென்றெலாத்தேவருமையுறச்சென்றாள். (௧௫)

சென்றமாயையக்காசிபனிருக்கையிற்றிருவாழ்
மன்றல்வாவியுந்தடங்களுஞ்சோலையுமணிசெய்
குன்றுமாமலர்ப்பள்ளியுமண்டபக்குழாமுந்
தன்றனாணையாற்றுண்ணெனச்சூழ்தரச்சமைத்தாள். (௧௬)

இனைத்தெலாமவண்வருதலுமெந்தைதன்னடியை
மனத்தினிற்கொடுபொறியினையுரத்தினால்வாட்டித்
தனித்துநோற்றிடுங்காசிபன்புகுர்தவத்தகைமை
யனைத்துநோக்கியீதென்கொலென்றதிசயமடைந்தான். (௧௭)

Digitized By Roja Muthiah Research Library

முற்றுமாங்கவையாசையினெடிதுபன்முறையா
னுற்றுநாடியேமாயைதன்செயலெனவுணரா
னிற்றெலாமிவணியற்றினர்யாரெனவெண்ணிச்
சுற்றுநோக்கினன்யாரையுங்காண்கிலன் றூயோன். (௧௮)

வேறு.

மெய்த்தவவுணர்ச்சியைவிடுத்துமேலையோ
னத்தனருளினாலணங்குமாயையால்
வைத்தனகண்ணுறுமனங்கொள்காதலாற்
சித்திரமென்வெரீஇயினையசெப்புவான். (௧௯)

வானநாடிழிந்ததோமகத்தின்வேந்துறை
தானநாடிழிந்ததோதனதனுதியோ
ரேனைநாடிழிந்ததோவிதுவன்றேலிவை
யானவாறுணர்கிலேனழுங்குசிந்தையேன். (௨0)

ஆரணன்செய்கையோவகிலமுண்டுமிழ்
நாரணன்செய்கையோவவர்க்குநாடொணாப்
பூரணன்செய்கையோபிறர்புரிந்ததோ
காரணந்தேர்கிலேன்கவலுநெஞ்சினேன். (௨௧)

புன்னெறிக்கானிடைப்புகுந்தவித்திரு
நன்னெறிக்கேதுவோநலந்தவிர்ந்திடுந்
துன்னெறிக்கேதுவோதொல்லைஞாலமே
லெந்நெறிக்கேதுவென்றிதுவுந்தேர்கிலேன். (௨௨)

என்றிவைசொற்றிவண்யாவதாயினு
நன்றதனியற்கையுநமக்குமுன்னரே
யொன்றறத்தெரிவுறுமுணர்ச்சியிங்ஙனஞ்
சென்றதுபழுதெனச்சிந்தித்தானரோ. (௨௩)

தெற்றெனத்தன்மனந்தேற்றித்தொன்மைபோ
னற்றவமியற்றுவானனுகும்வேலையின்
மற்றதுதெரிந்திடுமாயைதூமணிப்
பொற்றையிற்றமியளாய்ப்பொலிந்துதோன்றினள். (௨௪)

தோன்றினணிற்றலுந்தொல்லைநான்முகற்
கான்றதொர்காதலனவளைநோக்கினன்
வான்றிகழ்கற்பகவல்லிசெய்தவத்
தீன்றதொர்கொடியிவணெய்திற்றோவென்றாள். (௨௫)

நாற்றலையான்மகனம்முனிக்கொடி
தோற்றியதற்புதச்சூழ்ச்சிக்கேதுவென்
றாற்றுறுதவத்திறனகற்றியாயிடை
வீற்றிருந்திடுவதுவிடுத்துப்போயினான். (௨௬)

கண்ணகன்வரைமிசைக்கடிதுபோயுறீஇ
யண்ணியனுதலுமரிவையாயுறப்
பெண்ணுருவேகொலிப்பெற்றித்தாலென
வெண்ணினன்மையலுக்கெல்லைகாண்கிலான் (௨௭)

Digitized By Roja Muthiah Research Library

புண்டரிகத்திகொல்பொன்னம்பாவைகொ
லண்டர்தமணங்குகொலென்னினன்னரைக்
கண்டறிவேனெனைக்காதல்பூட்டிய
வொண்டொடியினையளென்றுணர்கிலேனரோ. (உஅ)

சேயிருங்கமலமேற்செம்மல்செய்கையா
லாயவளென்னிலிவ்வழகுபெற்றிடா
ளேயதுதேறினனெல்லையில்லதோர்
மாயையேபெண்ணெனவந்தவாறென்பான். (உகூ)

புகன்றிவைபற்பலபொருவினான்முகன்
மகன்றனதருந்தவவலியும்போதமு
மகன்றனன்புணர்ச்சிவேட்டமுங்கினைவதோர்
மகன்றிலின்பரிசெனவருத்தமெய்தினான். (௩0)

உண்ணிகழன்பொருட்டுயிர்கொல்வேட்டுவர்
கண்ணியுட்பட்டதோர்கலையின்மாழ்குவான்
பெண்ணரசாயவிப்பேதைக்கென்கொலோ
வெண்ணமென்றிடருழந்திரங்கியேங்கினான். (௩க)

அதுபொழுதவுணரையளிக்கவர்திடுந்
திதிநிகர்மடமகள்சிறந்தகண்களாற்
பொதுவியனோக்கொடுபுணர்ச்சிநோக்கினைக்
கதுமெனக்காட்டினண்முனிவன்காணுற. (௩உ)

கண்டனன்முனிவரன்கலங்கினான்பொதுக்
கொண்டதோர்நோக்கியல்குறித்துக்கூடுத
லெண்டருநோக்கினாலிவளெய்துமா
றுண்டெனநினைந்தனனுவப்பினும்பரான். (௩௩)

பெருந்துயருதவுவெம்பிணியுந்தீர்ப்பதோர்
மருந்துமற்றுதலுமையன்மேதகு
மருந்தவமுனிவரனனையமாதுதன்
றிருந்தியநோக்கியறெளிந்துசெப்புவான். (௩௪)

கற்பனைமுதலியகடந்தகண்ணுதற்
சிற்பரன்யாவையுஞ்சிதையவீறுசெ
யற்புதமும்மவனருளும்போன்றதாற்
பொற்புறுகின்றவிப்பூவைநாட்டமே. (௩௫)

மாயையுங்கொலையுமேமருவிவைகலு
மாயதோருலகினையளிக்குநீர்மையாற்
பாயிருந்திரைக்கடனடுவட்பள்ளிகொ
ளேயனைநிகர்த்ததித்தோகைநோக்கமே. (௩௬)

இயலிருண்மேனியாலிடியினார்ப்பினால்
வியனுயிர்முழுவதும்வெருவச்செய்துடன்
பயனுறுதீம்புனல்பரிவினீதரு
புயலையுநிகர்த்தனபூவைபார்வையே. (௩௭)

Digitized By Roja Muthiah Research Library

என்பனபலபலவெண்ணியன்னவ
டன்படிவத்துருத்தகைமைகாணுறீஇ
யன்பினில்வியந்துநின்றழுங்குநெஞ்சொடு
நன்பெருநயப்பினனவிறன்மேயினன். (௩௮)

வேறு.

வானுறுபுயலின்றோற்றம்வரம்பில்சீர்க்கங்குல்வண்ண
மேனையகருமையெல்லாமிலக்கணத்தொருங்கேயீண்டி
மீனுறழ்தடங்கணாள்பான்மேவியவென்பதல்லா
ஞனமார்கூந்தற்கம்மாநாம்புகலுவமையாதோ. (௩௯)

கோட்டுடைக்குழவித்திங்கள்குனிசிலையிரண்டுமொனின்
சூட்டுடைநுதற்கொவ்வாதுதொலைந்துபோய்த்தொல்லைவான
நாட்டிடைக்கரந்துந்தோன்றநணுகியுந்திரியுமென்னின்
மீட்டிதற்குரைக்கலாகுமுவமைகள்வேறுமுண்டோ. (௪௰)

அருவத்திற்றிகழுங்காமனுடலஞ்சிலையுநெற்றி
யுருவத்துக்குடைந்துவான்புக்கொதுங்கியமகவான்வில்லு
மருவத்தந்துரைத்துமென்னின்மற்றவையிரண்டுமாதின்
புருவத்தைப்போலாதம்மின்மீமிசைப்பொருந்துமன்றே. (௪௧)

வண்ணமாவடுக்கோணீலம்வாளயில்கயல்சேலென்றே
யெண்ணினவவற்றிலொன்றும்யாவதுமியல்புற்றன்றாற்
கண்ணிணைக்கிணையேதென்னிற்காமர்பாற்கடலுளெங்கோ
னுண்ணியவெழுநஞ்சென்னிலொருசிறிதொப்பதம்மா. (௪௨)

எள்ளென்றுமோத்தியென்றுமோர்கொள்சம்பகப்போதென்றுந்
தள்ளருங்குமிழதென்றுஞ்சாற்றினரவைகணுடிற்
றெள்ளிதுமன்றுவேறுசெப்பவோர்பொருளுமில்லை
யுள்ளதொன்றுரைக்கவேண்டுந்துண்டத்துக்குவமைதேரின். (௪௩)

கெண்டையந்தடங்கட்பாவைகேழ்கிளரிதழ்க்கொப்புன்னிற்
றொண்டையங்கனியுண்டென்றுசொல்வனேலதுவுந்துப்பா
லுண்டிடும்விருப்பினோருக்குலப்புறுவமிர்தநல்கிக்
கொண்டிருந்திடினேயொப்பாமில்லையேற்கூடாதன்றே. (௪௪)

முகையுறுதளவும்புள்ளின்முருந்தமுங்குருந்துமுத்து
மகையுறுமுடுவுஞ்சாற்றினணியெயிறதற்கொவ்வாவா
னகையதுதெரிந்தோர்வெஃகநன்னலப்புரியுநீரா
ணிகர்பிறிதில்லைதிங்கணிலாவெனிலாகுமன்றே. (௪௫)

மயிரெறிகருவிவள்ளைதோரணமணிப்பொன்னூசல்
பெயர்வனநிகர்க்குமென்றுபேசுதல்பேதைநீர்த்தாஞ்
செயிரறவுலோகமாக்குந்திசைமுகக்கொல்லன்செய்த
வுயிரெறிகருவிபோலுமொண்குழைக்காதுமாதோ. (௪௬)

கொங்குறுகூந்தலாடன்கோலவாண்முகத்துக்கொப்பாந்
திங்களென்றுரைக்கிற்றேயும்வளர்வுறுஞ்சிறப்பதன்றாற்
பங்கயமெனினுமுண்டோர்பழுதுமற்றதற்குமென்னி
லங்கதற்கதுவேயல்லாலறையலாம்படிமற்றுண்டோ. (௪௭)

Digitized By Roja Muthiah Research Library

சரந்தெறுவிழியினுடன்களத்தினதெழிலைச்சங்கங்
கரந்தனகமுகுமற்றேயன்னதுகண்டுநேரா
வரந்தருபுலவர்சொற்றார்மற்றவரதற்கோநாளு
மிரந்திடுதொழிலராகியிழுக்கமுற்றார்களன்றே. (௪௮)

மாயவனதரஞ்சேர்த்திவரன்முறையிசைத்தபச்சை
வேயெனுமதுவும்யான்செய்மெய்த்தவமனையநீரா
டேயபொற்றோள்கண்டஞ்சித்தோற்றதாலென்னிலன்றன்
சேயவன்வணக்காதேந்துஞ்சிலைசொலோநிகர்ப்பதம்மா. (௪௯)

பூந்தளவனையமூரற்பொற்கொடிகரத்துக்கொவ்வா
காந்தளுநறியசெய்யகமலமாமலருமென்னின்
மாந்தளிர்பொருவதுண்டோவவள்ளுகிர்கிள்ளைநாசி
யேய்ந்தளவற்றுக்காமரிலைச்சினையாயதன்றே. (௫௦)

பொருப்பெனவெழுந்துவல்லின்பொற்பெனத்திரண்டுதென்னந்
தருப்பயிலிளநீரென்னத்தண்ணெனவமுதுட்கொண்டு
மருப்பெனக்கூர்த்துமாரன்மகுடத்தில்வனப்புமெய்தி
யிருப்பதோர்பொருளுண்டாமேலிணைமுலைக்குவமையாமே. (௫௧)

அந்திருவன்றண்மேனியமைத்துவெம்முலைக்கண்செய்வான்
சுந்தரவள்ளநீலுண்டுகிலிகைவிதிகொள்போழ்திற்
சிந்தியதுள்ளியொன்றினொழுக்கங்கொல்சிறப்பின்மிக்க
வுந்தியின்மீதுபோயவுரோமத்தினொழுக்கமன்றே. (௫௨)

மாசடையாதநீலமணியுறழ்வண்ணமாலோன்
காசடையகலந்தாங்குங்கனங்குழைத்திருவும்போற்றுந்
தேசுடைமாதினுந்திச்சீரினுக்கனையன்றுஞ்சும்
பாசடைநேர்வதாமோபகரினும்பழியதன்றே. (௫௩)

கண்டுழிமாயுமன்றேமின்னெனிற்ககனமாகக்
கொண்டிடினுருவின்றாகுங்கொடியெனிற்றுடியதென்னிற்
றிண்டிறனுகமென்னிற்சீரிதன்றணங்கினுப்ப
னுண்டிலையென்றுமானுமுண்மைக்கோருவமையுண்டோ. (௫௪)

மயலுடைப்பணியுமாலவட்டமும்வனப்புச்செய்த
வியலுடைத்தேருமச்சுற்றிரங்கியேயுயிர்க்குமென்றாற்
கயலுடைக்கண்ணாளல்குற்கொப்பவோகாமர்வீடவ்
வியலுறுப்பென்பர்யாருமேலதுகாண்டுமன்றே. (௫௫)

கோழிலையரம்பையீனுங்குருமணித்தண்டைவேழத்
தாழிருந்தடக்கைதன்னைநிகரெனிற்றகுவவன்றன்
மாழையுண்கருங்கண்மாதின்மகரிகைவயங்குபொற்பூண் *
சூழுறுகவானேபோலுமவையெனிற்சொல்லலாமோ. (௫௬)

---

* மகரிகைவயங்குபொற்பூண் - ஒருகூறு கிம்புரிவடிவாயிருக்குங் குறங்குசெறியென்னுமணி. "மகரிகைவயங்குபொற்பூண்" என்பதற்கு மகரிகைபோல விளங்குமாபரணம் எனப் பொருள்கொள்க. குறங்குசெறி - தொடையிலணியப்படுமாபரணம்.

Digitized By Roja Muthiah Research Library

அலவனுறென்ணடையன்னுளணிகெழுமுழந்தாட்கொப்பாப்
புலவர்கள்புகலாநின்றவழக்கலாற்பொருந்திற்றன்ருற்
றிலகநன்மணியேபோல்வாடெய்வதவடிவுக்கிந்த
வுலகினுளிழிந்ததொன்றையுரைக்கினஃதுவமையாமோ. (ருஎ)

தமனியத்தியன்றபொற்பிற்ருவிலாவாவந்தானுஞ்
சிமையநேர்கொங்கைமாதின்றிகழ்கணைக்காலுந்தூக்கிற்
சமமிதுபொரு * ளிதென்றேதமியனேன்றுணிந்துசிந்தை
யமைவுறவறிதறேற்றேனையமுற்றிடுவன்யானே. (ருஅ)

அரும்புறுகாலைக்கொங்கைக்கழிவுற்றுமுகமொவ்வாது
சுரும்புறமலர்ந்தபின்னுந்தொலைந்துகையினுக்குந்தோற்றுத்
திரும்பவுமடிக்குமஞ்சிச்சிதைந்ததுகமலமென்றாற்
பெரும்பயமுற்றுநோற்றும்பிழைத்ததுபோலுமன்றே. (ருகூ)

மேக்குயர்கூனலாமைவிரைசெறிகுவளைத்தோடு
தாக்குறுபந்துபிண்டித்தண்டளிர்சார்புகூறிற்
றாக்குறுதுலையின்றட்டுத்தொகுத்தொருவடிவில்வேதா
வாக்குறின்மாதின்றாளுக்கதுநிகராகும்போலும். (கூ0)

ஆவியிஞெய்யபஞ்சுமணிச்சமாமலருமன்னத்
தூவியுமிதிக்கிற்சேந்துதுளங்குறுமடிகளென்று
ஞவியங்குழலின்மாதுநடந்திடஞாலமாங்கோர்
பூவதோவதுபூவன்றேற்பொன்னடிபொருந்துமோதான். (கூக)

கயலுறழ்கருங்கட்செவ்வாய்க்காரிகைதனதுசாயன்
மயிலெனக்கூறினல்லான்மற்றதற்குவமையில்லை
யியலுறுவடிவிற்கொப்பதேதுளதிவளேபோலச்
செயலுறுத்தெழுதிற்றுண்டேற்சித்திரமஃதேபோலும். (கூஉ)

ஆனநான்குசெய்தாட்காயிரமடங்கேர்கொண்ட
மாணிணிதன்னைவேதாவகுத்திலன்கொல்லோவன்னுன்
ருனமைத்துளனேயென்னிற்றலைபலதாங்கியிந்தத்
தூநிலாநகையினுளைத்தொடர்ந்துபின்றிரிவனன்றே. (கூங)

மையறுபுவியில்வந்தமாதிவளடியினுள்ள
துய்யதோர்குறிகள்வானிற்றெல்பெருந்திருவில்வைகுஞ்
செய்யவன்றனதுதேவிசிரத்தினுமில்லையென்றான்
மெய்யுறுகுறிகளெல்லாமினைத்தெனவிளம்பற்பாற்றே. (கூச)

வேறு.

என்றுமுன்னியவ்வேந்திழைதன்முனஞ், சென்றுகாமர்திருவினுஞ்சீரியோய்
நன்றுநன்றுநினல்வரவேயெனு, நின்றுபின்னுநெறிப்படவோதுவான். (கூரு)

யாதுநின்குலம்யாதுநின்வாழ்பதி, யாதுநின்பெயர்யாருனைத்தந்தவ
ரோதுவாயென்றுரைத்தனனுள்ளூறு, காதலான்மிகுகாசிபனென்பவே. (கூகூ)

வனிதைகூறுவண்மாதவநீயிது, வினவிநிற்றல்விழுமிதன்றென்னிடைத்
தனியனுகியுஞ்சார்ந்தனைநோற்பவர்க், கினியவேகொலினையதோர்நீர்மையே. ()

* பொருள் - உபமேயம்.



Digitized By Roja Muthiah Research Library

ஏதினோன்பையிகந்துணர்வில்லதோர், பேதைமாந்தரிற்பேசியெற்சார்வது
நீதியேயன்றுநின்கடனாற்றிடப், போதியென்னமுனிவன்புகலுவான். (௬௮)

மங்கைகேட்டிவரம்பறுபற்பக, லங்கம்வெம்பவகமெலிவுற்றிடச்
சங்கையின்றித்தவம்பலசெய்திட, லிங்குவேண்டியதெய்துதற்கேயன்றோ. (௬௯)

பொன்னைவேண்டிக்கொலோபொன்னின்மாநகர், தன்னைவேண்டிக்கொலோ
சசியாம்பெயர், மின்னைவேண்டியேயல்லதுவேறுமற், றென்னைவேண்டியவ்விந்
திரனோற்றதே. (௭௦)

ஐதின்மேனியலசுறயான்றவஞ், செய்ததிங்குனைச்சேருதற்கித்திற
னோய்தின்மேவினைநோற்றதற்குப்பய, னெய்தியுற்றதினித்தவம்வேண்டுமோ. (௭௧)

பேருமூரும்பிறவும்வினவினேற், கோரவொன்றுமுரைத்திலையாயினுஞ்
சேரவேயின்றெளிகுவன்காமநோ, யீருகின்றதிரங்குதிநீயென்றான். (௭௨)

மாயைகேட்டுவறிதுநகையளாய், நீயிவ்வாறுநெடுந்தவஞ்செய்தது, மாயிலென்
பொருட்டோவஃதன்றரோ, தூயைவஞ்சஞ்சொலன்முறையோவென்றாள். (௭௩)

மற்றிவ்வண்ணமயில்புரைசாயலாள், சொற்றகாலையனையவள்சூழ்ச்சியை
முற்றுமோர்ந்துமுதிர்கலையாவையுங், கற்றுணர்ந்திடுகாசிபன்கூறுவான். (௭௪)

பொய்ம்மையாதும்புகல்கிலனான்முகன், செம்மல்யானதுதேருதிபோலுமா
லிம்மையேபரமீந்திடுவோயிவண், மெய்ம்மையேயுரைத்தேனுளவேட்கையால். ()

பன்னெடுந்தவம்பற்பகலாற்றியான், முன்னிநின்றதுமுத்திபெற்றுய்ந்திட
வன்னதேயெற்கருள்செயவந்தனை, யுன்னைமேவலன்றோவுயர்முத்தியே. (௭௬)

ஏதலான்மற்றெனக்கொருபேறிலை, யாதலானுனையேயடைந்தேனெனக்
காதன்மாதுமக்காசிபற்கண்ணுறீஇ, யோதலாம்பரிசொன்றையுணர்த்துவாள். (௭௭)

வேறு.

மங்கலமியைந்திடுவடாதுபுலமுள்ளேன்
செங்கனகமேருவரைசேர்ந்ததொருதென்பாற்
கங்கைநதியின்கரைகலந்திடநினைந்தே
னங்கணுறுகின்றதொரரும்பயன்விழைந்தே. (௭௮)

வல்லையவணேகுறுவன்மாதவவலத்தோய்
நில்லிவணெனப்பகரநீநிறமதாகுஞ்
செல்லுறழுமேனிதருசெம்மலருண்மைந்த
னெல்லையிதுகேண்மெனவுரைக்கலுறுகின்றான். (௭௯)

கங்கைநதியாதியகவின்கொணதியேழு
மங்கணுலகந்தனிலரன்பதிகள்யாவு
மங்குறவழ்மேனியவன்வாழ்பதியுமற்று
மிங்குறவழைப்பனொரிமைப்பொழுதுதன்னில். (௮௦)

பொன்னுலகும்விஞ்சையர்கள்போதுலகுமேனோர்
மன்னுலகுமாதிரவர்வாழுலகுமங்கட்
டுன்னியதொர்தேவரொடுசூழ்திருவினோடு
மின்னபொழுதேவிரைவினீண்டுதரவல்லேன். (௮௧)

Digitized By Roja Muthiah Research Library

மூவகையதேவரையுமுச்சகமதுள்ளோர்
யாவரையுநீதெரியவெண்ணுகினுமிங்ஙன்
மேவரவியற்றிடுவன்வெஃகல்புரிவாயேற்
காவலுறுபேரமிர்தமுங்கடிதினீவேன். (௮௨)

எப்பொருளைவேண்டினுமிமைப்பினுனவாக
வப்பொருளியாவையுமளிப்பனஃதல்லான்
மெய்ப்புதல்வர்வெஃகினும்விதிப்பனவர்தம்மை
யொப்பிலையிவர்க்கெனவுமும்பரிடையுய்ப்பேன். (௮௩)

அந்தமிகுமேனகையரம்பைமுதலானோர்
வந்துனடியேவல்செயவல்லைபுரிகிற்பேன்
சிந்தைநனிமால்கொடுதியங்குமெனதாவி
யுய்ந்திடநினைந்தருடியொல்லைதனிலென்றான். (௮௪)

வேறு.

முனியிதுபுகறலோடுமுற்றிழைமுறுவலெய்தித்
தனியினளொன்றுசொல்லோசாற்றிலையினையநீர்மை
யினியதுதவிர்திமேலோர்க்கிசையுமோயானுமுன்ன
நினைவுழிச்செல்வனேற்றுநீயிவணிருத்தியென்றே. (௮௫)

சங்கையின்றிசையைமுன்னிக்கடிதவட்செல்வாளென்ன
வங்கவள்போதலோடுமருந்தவன்றொடர்ந்துசெல்ல
மங்கையுமருவமெய்திமாயையிற்கரந்துநிற்ப
வெங்கணுநோக்கிக்காணுனிடருழந்திரங்கிநைவான். (௮௬)

மாயைப்படலமுற்றிற்று.

---

# காசிபன்புலம்புறுபடலம்.

தேனீர்மையெனப்புகல்வாள்சிறிதுந், தானீரமிலாடனிமாயவளே
மானீருமதாம்வயினுற்றனளோ, வேனீர்மொழியாதிரிகின்றதுவே. (௧)

சிலைவாணுதலாடிறன்மாயையெனும், வலைவீசியெனுருயிர்வவ்வினளாற்
கலையீரிவணீரதுகண்டனிரோ, நிலையீர்வெருளாநெடிதோடுதிரால். (௨)

கடிதேர்களிறேகழிகாதலையாய்ப், பிடிதேர்பரிசாற்பெயர்வாய்தமியே
னெடிதேதளராநெறிநேடினையக், கொடியாடனையுங்கொணராய்கொணராய். (௩)

அருளாலுனையேயளியென்றனராற், பெரியாரவர்சொற்பிழையாகுவதோ
தரியாவரியேதமியேனுயிரைத், தெரிவானினைவோதிரிகின்றனையே. (௪)

மேவிப்பிரிவாள்விழிபோலடுவா, யாவிக்குறவோவலைமன்மதனப்
பாவிக்குமினிப்படையாய்வருவாய், வாவிக்குவளாயெனைவாட்டுதியோ. (௫)

செந்தாமரைமேற்றிருவாமெனவே, வந்தாடணியாமயல்செய்தகல்வா
ளந்தோவினவாவவளைக்கொணர்வான், சந்தாகிலையென்சந்தேயுரையாய். (௬)

Digitized By Roja Muthiah Research Library

பொன்னிற்பொலிவுற்றிடுபூங்கமலந், தன்னிற்றுணையோடுதழீஇத்தணவா
வன்னப்பெடைகாளறனேபுகலீ, ரென்னைத்தனிவைத்தவளேகியதே. (எ)

தணியாவகைமாறமியேற்கருளித், துணியாவகல்வாள்படர்தொன்னெறியைக்
குணியாவுரைசெய்குதியென்றிடினுங், கணியாயிதுவோகணிதன்னியல்பே. (அ)

படைவேள்கணையேபரிதிக்குறவே, மடவார்முகமேமதியின்பகையே
விடமேபுரையும்விழிமெல்லியனின், னிடமேவருவாளொளியாதிசையாய். (கூ)

நின்றீர்மிகவுங்நெடியீர்பெரியீ, ரின்றீரமிலாதெனைநீங்கினண்முன்
சென்றீரவள்போஞ்செயல்காணுதிர்செய், குன்றீர்மொழியீர்குறைசெய்துளனே.

மயிலேரியலாளொருமாயவளே, யியலேதறியேனிவணின்றனளோ
பயிலேசிலநீபகர்வாயதனாற், குயிலேயெனதாருயிர்கொள்ளுதியோ. (கக)

நின்பால்வரவேநினைவாய்மொழிவா, ளென்பாலிலையிவ்வழியேகினளான்
மென்பாலெனமேவியமாருதமே, தென்பால்வருவாய்செயல்கூறுதிநீ. (கஉ)

ஆரத்தடமேயருணீரினையுள், ளீரத்தினையென்றெவரும்புகல்வார்
சாரிற்சுடுவாய்தளரேலெனவே, சோர்வுற்றிடுமென்றுயர்தீர்க்கிலையே. (கங)

களிசேர்மயிலேகவிராகியவாய்க், கிளியேகுயிலேகிளைதானலவோ
தளராவகைநீர்தகவேமொழியா, வளியேனுயிருக்கரணாகுதிரால். (கச)

அறவேதுயர்செய்தனுகாதிகலித், துறவேதுணிவாடொடர்புந்தொடர்போ
வுறவேயினிநீருவள்போநெறியைப், புறவேதமியேன்பெறவேபுகல்வீர். (கரு)

எனவேபலவுமியல்சேர்முனிவன், மனமால்கொடுசொற்றிடமற்றதனை
வினவாமகிழாவியன்மெய்ம்மறையா, வனமேயனையாளவணுற்றிடலும். (கசு)

வேறு.

நோற்குறுமுனிவன்றன்பானெய்தெனமாயையெய்தித்
தீர்க்கலாமையல்பூட்டிச்செய்தவமழித்தாளந்தோ
பார்க்கிலனிதனையென்னாப்பரிவுசெய்தகன்றுன்போலக்
கார்க்கடல்வரைப்பினேகிக்கதிரவன்கரந்தானன்றே. (கஎ)

தந்தைகாசிபனென்றேதுந்தவமுனியவன்பாற்சார
வந்துளாள்யாயேயன்றேமற்றிவர்தலைப்பெய்கின்ற
முந்துறுபுணர்ச்சிகாண்டன்முறைகொலோபுதல்வற்கென்னாச்
சிந்தைசெய்தகன்றுன்போன்றுதினகரக்கடவுள்சென்றான். (கஅ)

அந்தமினிருதரென்னுமளவைதீர்பானாட்கங்குல்
வந்திடுமின்னேயென்னாவல்லையின்மதித்துவானத்
திந்திரனனைபோற்றுமிலங்கெழினேமிப்புத்தேள்
சிந்துவிற்கரத்தல்போன்றுசெங்கதிர்ச்செல்வன்போனான். (ககூ)

வேலையினிரவிசெல்லவிண்ணவர்யாருங்கொண்ட
வாலியதிருவுஞ்சீரும்வன்மையுமகலமாயை
பாலுறுமவுணர்தானைப்பல்குழுப்பரவிற்றென்ன
மாலையுமிருளின்சூழ்வும்வல்லைவந்திறுத்தவன்றே. (உ0)

Digitized By Roja Muthiah Research Library

மாகமேனிமிர்ந்தசெக்கர்மாலையம்பொழுதுநல்கூர்ந்
தீகெனுவிரக்குநீரார்க்கிம்மி * யின்றுணையதேனு
மோகையால்வழங்காநீதியொன்னலாரொருவன்செல்வம்
போகுமாறென்னவாளாபொள்ளெனப்போயிற்றுமால். (உக)

இரும்பிறையுருவினெஃகார்கூர்ங்குயத்தினுமீர்க்கலா
வரம்பறுமிருளின்கற்றைகணங்களுமருளுநீராற்
பரம்பியதியாண்டுமோகிப்பாரெனப்பட்டமாது
கரும்படாமொன்றுமேற்கொள்காட்சியைப்போன்றதன்றே. (உஉ)

வண்டுழாய்மோலிமைந்தன்மாலிருட்கங்குல்வேழத்
தெண்டருவதனம்பட்டவிரும்புகர்ப்புள்ளியென்ன
வண்டர்தந்தருக்கள்சிந்துமணிமலரென்னவான்றோய்
கொண்டலிற்படுமுத்தென்னத்தாரகைகுலவிற்றன்றே. (உங)

துண்ணெனவுலகமுற்றுஞ்சூழ்ந்தபேரிருளாநஞ்சைத்
தெண்ணிலவாகியுள்ளசெங்கையால்வாரிநுங்கி
விண்ணவர்புகழநீலவியனிறந்தன்பாற்காட்டுங்
கண்ணுதல்போன்றுமுந்நீர் o த்தோன்றினன்கதிர்வெண்டிங்கள். (உச)

அழுந்துறுபாலின்வேலையமரர்கள்கடைந்தகாலைச்
செழுந்துளிமணிகளோடுந்தெறித்தெனவுடுக்கடோன்றக்
கழுந்துறுமவுணரென்னுங்காரிருடொலையவங்க
ணெழுந்ததோரமுதம்போன்றுமிலங்கினனிந்துவென்பான். (உரு)

இரவெனும்வல்லோன்ஞாலமென்பதோருலையில்வேலைக்
கரியுறுவடவைத்தீயிற்களங்கொடுவெண்பொன்சேர்த்தி
விரைவொடுசெம்மைசெய்துமீட்டுமோர்மருந்தாற்றொல்லை
யுருவுசெய்தென்னச்செங்கேழொளிமதிவெளியனான். (உசு)

அண்டருங்ககனமென்னுமகலிருந்தடத்திற்பூத்த
விண்டதோர்குவளையாம்பல்போலுமான்மீன்கள்வெள்ளைப்
புண்டரீகத்தைப்போலும்புதுமதியதன்கட்டேனார்
வண்டினமொப்பதன்றேமாசுதோய்களங்கமாதோ. (உஎ)

அலைதருநேமியென்னுமான்றதோர்தடத்தின்பாலா
நிலவெனும்வலையையோச்சிநிழன்மதிப்பரதனீர்த்துப்
பலநிறங்கொண்டமீன்கள்பன்முறைகவர்ந்துவான்மேற்
புலருறவிரித்ததேபோற்பொலிந்தனவுடுவின்பொம்மல். (உஅ)

கழிதருமுவரிநீத்தங்கையகப்படுத்துமாந்தி
யெழிலிகள்வானமீப்போயிருநிலத்துதவல்காணூஉப்
பழிதவிர்மதியப்புத்தேள்பாற்கடல்பருகியாண்டும்
பொழிதருமமிர்தமென்னப்புதுநிலாப்பூத்ததன்றே. (உகூ)

மலர்ந்திடுங்கடவுட்டிங்கள்வாணிலாக்கற்றையெங்குங்
கலந்தனவுலகில்யாருங்களித்தனர்குமுதமாதி
யலர்ந்தனதளிர்த்தசோலையம்புயப்போதுசெவ்வி
புலர்ந்தனவொடுங்குகின்றபுகைந்தனபிரிந்தோர்புந்தி. (நo)

* இம்மி - மத்தங்காய்ப்புல்லரிசி.

o முந்நீர் - படைத்தல், காத்தல், அழித்தலாகிய மூன்றுநீர்மையுடைமைபற்றி வந்தபெயர்.

Digitized By Roja Muthiah Research Library

அல்லவைபுரிபாரேனுமறிவினிற்பெரியாரேனு
மெல்லவர்தமக்குநண்பாயினியவேபுரிதற்பாற்றே
பல்லுயிர்த்தொகைக்குமின்பம்பயந்திடுமதிகண்டன்றே
புல்லியகமலமெல்லாம்பொலிவழிந்திட்டவன்றே. (௩௧)

திங்களின்மலர்ந்தசெவ்வித்தேன்முரல்குமுதமெங்கோன்
பங்கமுற்றார்கண்மேவான்பதுமமேனொடுங்கிற்றென்னத்
தங்களிலுரைத்தல்போலாஞ்சசிக்கதுவுண்மையெம்பா
லிங்கிலையென்பபோன்றவிசையளிபொதிந்தகஞ்சம். (௩௨)

கங்குல்வந்திறுத்தகாலைக்கடிமனைக்கதவம்பூட்டிச்
செங்கண்மாறன்னைப்புல்லித்திருமகளிருந்தாளென்னக்
கொங்கவிழ்கின்றசெங்கேழ்க்கோகனதங்களெல்லாம்
பொங்கிசைமணிவண்டோடும்பொதிந்தனபொய்கையெங்கும். (௩௩)

வேறு.

ஆனதோர்காலையிலமரர்தம்மையுந்
தானவர்தம்மையுந்தந்தகாசிபன்
வானகமெழுதருமதியின்றெண்ணிலா
மேனியதடைதலும்வெதும்பினானரோ. (௩௪)

குலைந்தனன்றன்னுளங்குறைந்தவன்மைய
னலந்தனனுயிர்த்தனனறிவுசோர்ந்தனன்
புலர்ந்தனனொடுங்கினன்புலம்பியங்கண்வா
னிலந்தனிலெழுதருநிலவைநோக்கினான். (௩௫)

காலையிலெழுந்தசெங்கதிரினாயகன்
மாலையம்பொழுதினின்மறைந்துகீழ்த்திசை
வேலையில்விரைவுடன்மீண்டும்வந்துளான்
போலுமற்றோவிதுபுதுமையோவென்பான். (௩௬)

ஞாயிறுமன்றெனினடுவணாகியே
பாயிரும்புணரியுட்பயின்றுதோன்றலா
லேயெனவுலகடவெண்ணியாண்டுறுந்
தீயெனுங்கடவுளேதிங்களன்றென்பான். (௩௭)

இந்துவென்றுலகெலாமிசைப்பநின்றதோர்
செந்தழற்கடவுளித்திசையிற்செல்வுழி
வந்ததோர்சோதிகொல்வானமெங்கணு
மந்தியஞ்செக்கரென்றடைந்தவாறென்பான். (௩௮)

காண்டகுமதியெனக்கழறுஞ்செந்தழன்
மூண்டிடுபுகைகொலோமுன்னம்வானமு
மீண்டுறுதரணியுந்திசையுமெங்குமாய்
நீண்டதோரிருளெனநிமிர்ந்தவாறென்பான். (௩௯)

தெண்டிரைப்பிறந்திடுந்திங்கட்செந்தழல்
கொண்டதுவாலிதாங்கோலங்காரிடைக்
கண்டனணித்திறங்கரையிலாவிக
ளுண்டதிற்பெற்றதிவ்வுருவமேயென்பான். (௪௦)

Digitized By Roja Muthiah Research Library

ஊனமில்செக்கராயுதித்துப்பின்னரே
வானிறனுகியமதியத்தீத்தரத்
தானிறைபுலிங்கமேயலதுதாரகை
மீனெனப்படுவதுவேறுண்டோவென்பான். (சக)

மால்கடலதனிடைவந்தபான்மையா
லாலமிதாகுமாலமரர்க்கன்றெழு
நீலமெய்யுருவினைநீத்துத்திங்களின்
கோலமொடின்றிவட்குறுகிற்றேவென்பான். (சஉ)

இங்கிவையாவுமன்றோர்கொள்வேலையில்
வெங்கனன்முழுவதும்விடமுமார்ந்தெழீஇ
மங்குலிற்சிதறிடவானிற்புக்கனன்
றிங்களேயாமிதுதிண்ணமென்கின்றான். (சங)

இனையனமருட்கையாலிசைத்தகாசிப
முனிவரனென்பவன்முன்னைமாயையை
நினைபவனுகியேநெடிதுகாதலா
லனையவடனைவிளித்தரற்றன்மேயினன். (சச)

வேறு.

கொங்குண்கோதைத்தாழ்குழனல்லீர்கொடியென்மு
னெங்குமெங்குங்காணுறுகின்றீரெழின்மின்னின்
பொங்குஞ்சோதிபோலெதிர்புல்லும்படிநில்லீர்
மங்கும்போதோசேருதிர்நெஞ்சம்வலியீரே. (சரு)

முன்னஞ்செய்தீர்காதலைநோன்புமுதலோடும்
பின்னஞ்செய்தீர்மாரனையேவிப்பிழைசெய்தீர்
சின்னஞ்செய்தீர்நல்லுணர்வெல்லாஞ்சிறியேனுக்
கின்னஞ்செய்யும்பெற்றியுமுண்டேலிசையீரே. (சசு)

வாகாய்நின்றகுன்றமும்யாவும்வருவித்தீ
ரேகாநின்றீரிவ்விடைதன்னிலெனைநீங்கிப்
போகாநின்றீர்வல்லையின்மீண்டும்புவியெங்கு
மாகாநின்றீர்நுஞ்செயல்யாரேயறிகிற்பார். (சஎ)

பற்றேநும்பாலாயினன்முன்னம்பயில்செய்கை
யற்றேன்வேளாலாற்றவுநொந்தேனவைதாயு
முற்றேனல்லேனும்மொடுமின்னுமுழல்கின்றேன்
பெற்றேன்வாளாமாய்ந்தனனென்னும்பிழையொன்றே. (சஅ)

நேயங்கொண்டீராமெனவந்தீர்நெறிநில்லா
மாயங்கொண்டீர்வன்றிறல்கொண்டீர்மயல்செய்யுங்
காயங்கொண்டீராருயிர்நிற்கக்கருதீரேற்
றேயங்கொண்டீர்கூற்றெனுபோலுந்தனிவந்தீர். (சகூ)

வேண்டேன்வேறோர்மாதரைநும்பால்வியன்மோகம்
பூண்டேனும்மைமாயவரென்னும்பொருள்கண்டே
னீண்டேசென்றீர்போற்கரவுற்றீரெய்தீரேன்
மாண்டேனின்னேயாருயிர்நிற்பான்வருவீரே. (ருo)

Digitized By Roja Muthiah Research Library

ஒன்றேயாகுமாயமதானீருலகெல்லாம்
வென்றேசெல்வீரென்னுயிர்கொள்வான்விழைவீரே
னன்றேநன்றேநல்குவன்யானேநனிநண்பாற்
சென்றேயோர்கான்மாமயநீரச்சேர்வீரே. (ருக)

என்றுவென்றுவித்தகைபன்னியிடராழித்
துன்றுமாழ்கிச்சோர்தருமெல்லைத்துகடீரு
மின்றுகின்றமாயவளன்றுன்விழிகாண
முன்றாய்நின்ருளெவ்வினைகட்குமுதலானுள். (ருஉ)

காசிபன்புலம்புறுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் கநஅ.

---

# அசுரர்தோற்றுபடலம்.

கந்தார்மொய்ம்பிற்காசிபனென்போன்கடிதங்கண்
வந்தாள்செய்கைகாணுதலோடுமகிழ்வெய்தி
யந்தாவுய்ந்தேன்யானெனமின்கண்டலர்கின்ற
கொந்தார்கண்டல்போனகையோடுங்குலவுற்ருன். (க)

ஆடாநின்ருன்குப்புறலுற்ருனவடன்மேற்
பாடாணின்ருன்யாக்கைபொடிப்பிற்படர்போர்வை
மூடாநின்ருனன்னதொர்மாயைமுன்சென்ருன்
வீடாநின்றதன்னுயிர்காக்கும்விதிகொண்டான். (உ)

வேறு.

என்னேசெயவேண்டிற்றவையெல்லாமிசைவாலே
முன்னேபுரிகிற்பேனிவண்முனிகின்றதையொருவி
நன்னேயமொடென்னையாளுதிர்நனிவல்லையிலென்றுப்
பொன்னேரடிமிசைதாழ்தலுமவளின்னதுபுகல்வாள். (ங)

வெருவுற்றிடலிவணின்றவென்வியன்மெய்யினுக்கியையுந்
திருமிக்குறுதகவாகியதிறன்மேனியுமேற்கொ
ளுருவொப்பதொர்வடிவும்முடனுடனெய்திடுவாயேன்
மருவுற்றிடுகின்றேனெனமயில்சொற்றனளன்றே. (ச)

ஏமுற்றிடுமுனிவற்கிறையிதுகேட்டலுமுன்னங்
காமக்கடல்படிகின்றவன்களிசேர்தருமுவகை
நாமக்கடலிடையாழ்ந்தனனன்ருலிஃதென்ருன்
சேமத்திருநிதிபெற்றிடுமிரவோனெனத்திகழ்வான். (ரு)

அற்றேமொழிதருதன்மையிலார்வத்தொடுதமியேன்
குற்றேவல்செய்கிற்பேனிளங்கொடியேரிடையென்னுச்
சொற்றேதவமுயல்வன்மையிற்றுகடீர்தருமனிலப்
பொற்றேரவற்கிலதென்பதொர்புத்தேளுருக்கொண்டான். (சு)

Digitized By Roja Muthiah Research Library

அன்றாயதொருருவெய்தியவறிவன்றனைவியவா
னன்றானதியல்பாமெனநகையாக்கரம்பற்றாக்
குன்றாகியமுலையாளவற்கொடுபோந்தனளங்கட்
பொன்றாழ்கிரியெனவோங்குமொர்பொலன்மண்டபம்புகுந்தாள். (எ)

வேறு.

கற்பனையின்றியேகடிதின்முன்னூறு, மற்புதமண்டபத்தாணையால்வரும்
பொற்புறுசேக்கையிற்பொருந்தினாரரோ, வெற்படுகங்குலின்முதலியாமத்தில். (அ)

சூருறுவெம்பசிதொலைப்பவைகனு, மாரணாரெய்தினோனரிதின்வந்திடு
பேரமுதுண்குறுபெற்றிபோலவக், காரிகைதனைமுனிகடிதிற்புல்லினான். (௯)

புல்லலுமெதிர்தழீஇப்புகரில்காசிபன்,றொலையிலுணர்வொடுதொலைவில்செய்தவம்,வல்லையில்வாங்குறுமரபிலன்னவன்,மெல்லிதழமிர்தினைமிசைதன்மேயினான்.

பின்னுறமாயவள் பெரிதுங்காமுறு, மன்னவன்புணர்தர வறிவதொன்றையுந், தொன்னெறியளித்தெனத்தொண்டைச்சேயிதழ், முன்னுறுமமிர்தினைமுனிக்குநல்கினாள். (௧௧)

உட்டெளிவின்றியேயுலப்பின்றோடிய, மட்டறுகாமமாம்வாரியுற்றுளா, னட்டொளிர்பொன்னனாளல்குலாஞ்சுழிப், பட்டனனின்பமாம்பரவைநண்ணுவான். ()

தோமறுமுனிவரன்சுரதத்தாற்றினாற், காமருமதனநூல்கருத்திற்சிந்தியாத்
தேமொழிமயிலொடுசெறிந்தபோகமார், பூமியினோரெனப்புணர்தன்மேயினான்.

செம்மயிலன்னவித்தெரிவைதன்னிடை, யெம்மையுமில்லதோரின்பமிங்ஙன, மெய்ம்மையினல்கிய விதியினார்க்கியா, னம்மசெய்கின்றதோ ரளவுண்டோவென்றான். (௧௪)

ஆறறிமுனிவரனநங்கநூன்முறை, வீறொ* டுபுணர்தலும்வெய்யமாயவள்
கீறினகத்தினாற்கீண்டபாறொறு, ஊறியகாமநீரொழுகிற்றென்பவே. (௧௫)

உணர்வுடைமுனிவரனுயர்ந்தவிஞ்சையர்,மணமுறையிதுவெனமாயைதன்னொடு,புணர்தொழில்புரிந்தனன்போகமுற்றினான், றுணையறுமின்பெனுங்கடலிற்றோய் ○ ந்துளான். (௧௬)

வேறு.

அந்தவேலையின்முகுந்தனுமம்புயத்தவனு
மிந்திராதியர்யாவருமுனிவரரெவருந்
தந்தமுள்ளமேனடுக்குறமாயவடன்பால்
வந்துதோன்றினன்சூரபன்மாவெனும்வலியோன். (௧௭)

துயக்கமில்லதோர்சூரன்வந்திடுதலுந்தொல்லை
முயக்கவேலையிலிருவர்பான்முறைமுறையிழிந்த
வியர்ப்பில்வந்தனர்முப்பதினாயிரவெள்ளம்
வயக்கடுந்திறற்றானவர்யாரினும்வலியோர். (௧௮)

அன்னர்தம்மையுமுதலவன்றன்னையுமங்க
ணின்மினீரெனநிறுவியேயாயிடைநீங்கி
மின்னுநூலணிமுனியொடுமாயவள்வேறோர்
பொன்னின்மாமணிமண்டபமதனிடைப்புகுந்தாள். (௧௯)

---

* வீறு - மதனநூலிற்சொல்லப்பட்டவேகம்.
○ இன்பெனுங்கடலிற்றோய்தல்-புணர்ச்சிமுடிவிலவசமாய் முலையிடைத்துயிறல்.



Digitized By Roja Muthiah Research Library

மானைநேர்பவளாயிடைத்தொல்லுருமாற்றி
மேனசூரரிப்பிணாவுருக்கொள்ளலும்விரைவிற்
றானுமோர்திறன்மடங்கலேறுமெனச்சமைந்தான்
மோனமாய்முனமருந்தவமியற்றியமுதல்வன். (௨௰)

மங்கையோடவன்மடங்கலாய்மகிழ்வுடன்புணரக்
கங்குல்வாயிரண்டாகியயாமமேற்கடிதே
யங்கையோரிரண்டாயிரமாயிரமுகமாய்ச்
சிங்கமாமுகன்றோன்றினன்றிடுக்கிடத்திசைகள். (௨௧)

இத்திறத்திவரிருவரும்புணர்வுழியாக்கை
மெத்திவீழ்தரும்வியர்ப்பினில்விறலரிமுகராய்ப்
பத்துநால்வகையாயிரவெள்ளமாம்படைஞர்
கொத்தினோடுவந்துதித்தனர்கூற்றுயிர்குடிப்பார். (௨௨)

மற்றுமத்தொகையோரையுமாமகன்றனையு
நிற்றிரீண்டெனமாயவள்வீற்றிருநிலயந்
தெற்றெனப்புகுந்தோர்பிடியுருக்கொடுசேரக்
கொற்றமால்களிற்றுருவினைமுனிவனுங்கொண்டான். (௨௩)

பெருமும்மதமால்களிற்றுருக்கொடுபிடிமேற்
சேருகின்றுழிமூன்றெனச்செல்லும்யாமத்தி
லீரிரண்டுவாளெயிற்றுடன்யானைமாமுகத்துந்
தாரகாசுரன்றோன்றினனவுணர்கடழைப்ப. (௨௪)

ஏலுமங்கவர்மெய்ப்படுவியர்ப்பினுமிபத்தின்
கோலமானவர்தோன்றினரவர்குழுக்குணிக்கி
னாலுபத்தின்மேலாயிரவெள்ளமாநவின்றார்
மூலநாடியேயிப்பரிசுணர்த்தியமுனிவர். (௨௫)

ஆண்டுதாரகன்றன்னையுமவுணர்கடமையு
மீண்டுநிற்றிரென்றோர்மணிமண்டபத்திருத்து
மாண்டயாமமேற்றகர்ப்பிணாவுருக்கொளமாயை
பூண்டவன்பினான்செச்சையினுருக்கொடுபுணர்ந்தான். (௨௬)

புணர்ந்தகாலையிலசமுகிதோன்றினள்புவியோர்க்
கணங்குசெய்தகர்முகவராயங்கவர்வியர்ப்பிற்
கணங்கொண்முப்பதினாயிரவெள்ளமாங்கணிதத்
திணங்குதானவருதித்தனரிமையவர்கலங்க. (௨௭)

மீளமற்றவர்தம்மையுநிறுவிவேறுள்ள
சூளிகைப்பெருமண்டபந்தொறுந்தொறுமேகி
யாளிவல்லியம்புரவிமானேரியெண்கேனங்
கூளி * யாதியாம்விலங்கினதுருவெலாங்கொண்டார். (௨௮)

இறுதியில்லதோர்விலங்கினதுருவுகொண்டிரவின்
புறமதாகியபுலரிசேர்வைகறைப்பொழுதின்
முறையின்மாயையுமுனிவனுமாகியேமுயங்கி
யறுபதாயிரவெள்ளமாமவுணரையளித்தார். (௨௯)

---

* கூளி - இடபம்.

Digitized By Roja Muthiah Research Library

மிகுதிகொண்டிடுமிரண்டுநூறுயிரவெள்ளந்
தகுவர்தம்மையுஞ்சூரனைமுதலினோர்தமையும்
புகலுமோரிராப்பொழுதினிலளித்தநற்புதமோ
வகிலமும்வலமாயவட்கிச்செயலரிதோ. (௯0)

ஆங்கவெல்லையினண்டமாயிரத்தெட்டினுள்ளுந்
தீங்குகொண்டிடுங்குறிகளுள்ளனவெலாஞ்செறிந்து
நீங்கலின்றியேநிகழ்வனநீர்மைகண்டெவரு
மேங்குகின்றனர்விளைவதென்னோவெனவிரங்கி. (௯௧)

அல்லெனும்பொழுதிறத்தலுமாயவளரிவைத்
தொல்லைநல்லுருக்கோடலுமுனியுமத்துணையே
வல்லைதன்னுருமுன்னையிற்கொண்டனன்மற்றவ்
வெல்லைதன்னிடையுதயவாயணுகினனிரவி. (௯௨)

நிட்டைக்கேற்றிடுமுனிவனைமாயவணிசியில்
விட்டுப்போந்திலளற்புதமென்வினைந்ததுவோ
கிட்டிக்காண்பனென்றுதயமாங்கிரிப்புறத்தணுகி
யெட்டிப்பார்த்தனனென்னவேயுதித்தனனிரவி. (௯௩)

வேறு.

எல்லைவந்திடுதலுமீன்றமாயவள், செல்லுறுமடப்புவிசெறிந்துசேணினுஞ்
சொல்லியதிசையினுந்துவன்றியார்த்திடு, மொல்லெனுஞ்சனத்தினையுவந்துநோக்
கினாள். (௯௪)

விண்டுறுதானவர்வெள்ளம்யாவையுங், கண்டனனெந்தைதன்கருமமிச்செயல்
கொண்டிலமாயையிற்கூடிற்றீதென்று, வண்டருமற்புதமடைகுற்றான்முனி. (௯௫)

பற்பகலருந்தவம்பயின்றதூயனும், பொற்புறுமாயையும்புதல்வர்தந்தொகை
யற்புதமோடுகண்டன்பினீரராய், நிற்புழித்தெரிந்தனனேரில்சூரனே. (௯௬)

இருமுதுகுரவருமீண்டுற்றாரவர், திருவடிவணங்கியாஞ்செய்திறத்தினை
மரபொடுவினவுதும்வம்மினீரென்று, வரிமுகன்றாரகனறியக்கூறினான். (௯௭)

அறைகழலிளையவரதனைத்தேர்வுறீஇ, யுறுதியிதாமெனவுரைத்துப்பின்வரத்
துறுமல்கொண்டிருந்ததன்றொல்பதாதியை, நிறுவினனவ்விடைநின்றுநீங்கினான்.

அசுரர்தோற்றுப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௧௭௬.

# காசிபனுபதேசப்படலம்.

நீங்கியசூர்முதனெறியினேகியே
யாங்கவரடிதொழுதருள்செய்மேலையீர்
யாங்கள்செய்கின்றதென்னிசைமினீரென
வோங்கியகாசிபனுரைத்தன்மேயினான். (௧)

Digitized By Roja Muthiah Research Library

உறுதியதொன்றினையுணர்த்துகின்றன
னறைகழன்மைந்தர்காளரியமாதவ
நெறிதனின்மூவிருநிற்றிறன்னதன்
முறைதலைவாய்மையான்மொழிவன்கேண்மினோ. (௨)

சான்றவராய்த்திடத்தக்கவாம்பொருண்
மூன்றுளமறையெலாமொழியகின்றன
வான்றதோர்தொல்பதியாருயிர்த்தொகை
யான்றிகழ்தளையெனவகுப்பரன்னவே. (௩)

அளித்திடல்காத்திடலடுதன்மெய்யுணர்
வொளித்திடல்பேரருளுதவலேயெனக்
கிளத்திடுசெயல்புரிகின்றநிலமார்
களத்தினன்பதியதுகழறும்வேதமே. (௪)

பற்றிகலில்லதோர்பரமனீர்மையை
யிற்றெனவுரைப்பரிதெவர்க்குமென்பராற்
சொற்றிடும்வேதமுந்துணிகிலாவவன்
பெற்றியையினைத்தெனப்பேசவல்லமோ. (௫)

மூவகையெனுந்தளைமூழ்கியுற்றிடு
மாவிகளுலப்பிலவநாதியுள்ளன
தீவினைநல்வினைத்திறத்தின்வன்மையா
லோவறமுறைமுறையுதித்துமாயுமே. (௬)

பாரிடையுதித்திடும்பாரைச்சூழ்தரு
நீரிடையுதித்திடுநெருப்பில்வாயுவிற்
சீருடைவிசும்பிடைச்சேருமன்னவைக்
கோரிடைநிலையெனவுரைக்கற்பாலதோ. (௭)

மக்களாம்விலங்குமாமாசில்வானிடைப்
புக்குலாம்பறவையாம்புல்லுமாமதின்
மிக்கதாவரமுமாம்விலங்கருணுமாந்
திக்கெலாமிறைபுரிதேவும்யாவுமாம். (௮)

பிறந்திடுமுன்செலும்பிறந்தபின்னர்மெய்
துறந்திடுஞ்சிலபகலிருந்துதுஞ்சுமாற்
சிறந்திடுகாலையிற்றேயுமூப்பினி
லிறந்திடுமதன்பரிசியம்பலாகுமோ. (௯)

சுற்றுறுகதிரெழுதுகளினும்பல
பெற்றுளவென்பதும்பேதைநீரதாற்
கொற்றமதுடையதோர்கூற்றங்கைக்கொள
விற்றவும்பிறந்தவுமெண்ணற்பாலவோ. (௧௦)

கலைபடுமுணர்ச்சியுங்கற்பும்வீரமு
மலைபடுவெறுக்கையும்வலியுமற்றது
மலைபடுபுற்புதமாகுமன்னவை
நிலைபடுபொருளெனநினைக்கலாகுமோ. (௧௧)

Digitized By Roja Muthiah Research Library

தருமமென்றொருபொருளுளதுதாவிலா
விருமையினின்பமுமெளிதினுக்குமா
லருமையில்வரும்பொருளாகுமன்னது
மொருமையினோர்க்கலாலுணர்தற்கொண்ணுமோ. (கஉ)

தருமமேபோற்றிடினன்புசார்ந்திடு
மருளெனுங்குழவியுமணையுமாங்கவை
வருவழித்தவமெனுமாட்சியெய்துமேற்
றெருளுறுமவ்வுயிர்சிவனைச்சேருமால். (கங)

சேர்ந்துழிப்பிறவியுந்திருந்தொன்மையாய்ச்
சார்ந்திடுமூவகைத்தளையுநீங்கிடும்
பேர்ந்திடலரியதோர்பேரின்பந்தனை
யார்ந்திடுமதன்பரிசறைதற்கேயுமோ. (கச)

ஆற்றலையுளதுமாதவமதன்றியே
வீற்றுமொன்றுளதெனவிளம்பலாகுமோ
சாற்றருஞ்சிவகதிதனையுநல்குமாற்
போற்றிடினனையதேபோற்றல்வேண்டுமால். (கரு)

அத்தவம்பிறவியையகற்றிமேதகு
முத்தியைநல்கியேமுதன்மையாக்குறு
மித்துணையன்றியேயிம்மையின்பமு
முய்த்திடுமுளந்தனிலுன்னுந்தன்மையே. (கசு)

ஆதலிற்பற்பகலருமையாற்புரி
மாதவமிம்மையுமறுமையுந்தரு
மேதுவதாகுமாலிருமையும்பெற
லாதியம்பகவனதருளின்வண்ணமே. (கஎ)

ஒருமைகொண்மாதவமுழந்துபின்முறை
யருமைகொள்வீடுபேறடைந்துளோர்சிலர்
திருமைசொளின்பினிற்சேர்கின்றோர்சில
ரிருமையுமொருவரேயெய்தினோர்சிலர். (கஅ)

ஆற்றலிற்றம்முடலலசப்பக
னோற்றவரல்லரோநுவலல்வேண்டுமோ
தேற்றுகிலீர்கொலோதேவராகியே
மேற்றிகழ்பதந்தொறுமேவுற்றோரெலாம். (ககூ)

பத்திமைநெறியொடுபயிற்றிமாதவ
முத்திபெற்றரனடிமுன்னுற்றோர்தமை
யித்துணையெனலரிதிருமையும்பெறு
மெய்த்தவர்மாலொடுவிரிஞ்சனாதியோர். (உ0)

பல்லுயிர்தன்னையுமாய்த்துப்பாரினுக்
கல்லல்செய்தருந்தவமாற்றிடாதவர்க்
கில்லையேயிருமையுமின்பமாங்கவர்
சொல்லரும்பிறவியுட்டுன்பத்தாழுவார். (உக)

Digitized By Roja Muthiah Research Library

அறிந்திவையுரைப்பினுமவனிமாக்கடா
மறங்கொலைகளவொடுமயக்கநீங்கலர்
துறந்திடுகின்றிலர்துன்பமற்றிலர்
பிறந்தனரிறந்தனர்முத்திபெற்றிலார். (௨௨)

தவந்தனின்மிக்கதொன்றில்லைதாவில்சீர்த்
தவந்தனைநேர்வதுதானுமில்லையாற்
றவந்தனினரியதொன்றில்லைசாற்றிடிற்
றவந்தனக்கொப்பதுதவமதாகுமே. (௨௩)

ஆதலின்மைந்தர்காளறத்தையாற்றுதிர்
தீதினைவிலக்குதிர்சிவனையுன்னியே
மாதவம்புரிகுதிர்மற்றதன்றியே
யேதுளதொருசெயலியற்றத்தக்கதே. (௨௪)

வேறு.

உடம்பினையொறுத்துநோற்பாருலகெலாம்வியப்பவாழ்வ
ரடைந்தவர்க்காப்பரொல்லார்க்கழிவுசெய்திடுவர்வெஃகு
நெடும்பொருள்பலவுங்கொள்வர்நித்தராயுறைவரீது
திடம்படவுமக்கோர்காதைசெப்புவனென்றுசொல்வான். (௨௫)

காசிபனுபதேசப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௨0௧.

## மார்க்கண்டேயப்படலம்.

நச்சகவமிர்தமன்னநங்கையர்நாட்டவைவே
றைச்சகமயக்கல்செய்யாத்தடுப்பருந்தவத்தின்மிக்கா
னிச்சகம்புகழுகின்றவிருபிறப்பாளர்கோமான்
குச்சகனென்னும்பேரோன்கொடிமதிற்கடகம்வாழ்வோன். (௧)

அவற்கொருபுதல்வனுண்டாலருமறைபயின்றநாவான்
கவுச்சிகனென்னும்பேரோன்கரையொருசிறிதுங்காணுப்
பவக்கடல்கடக்குமாற்றாற்பராபரமுதல்வற்போற்றித்
தவத்தினையிழைப்பவாங்கோர்தண்புனற்றடாகஞ்சார்ந்தான். (௨)

அத்தலையொருசாரெய்தியானினந்தீண்டுகுற்றி
யொத்தெனவசைதலின்றியுயிர்ப்பொரீஇயுலகமெல்லாம்
பித்தெனவுன்னிமாயாப்பேரின்பவளக்கர்மூழ்கி
நித்தனையெழுத்துமன்னுனிலைமையுநினைந்துநோற்றான். (௩)

ஓவியமவனமுற்றுங்குணவொடுமுறக்கநீங்கித்
தாவறநோற்கும்வேலைத்தடமரைகட்மையாதி
மேவியவிலங்குதத்தமெய்யகண்டேயம்யாவும்
போவதுகருதியன்னான்புரத்திடையுரைத்துப்போமால். (௪)

Digitized By Roja Muthiah Research Library

இப்பரிசியன்றபோழ்தும்யாவதுமுணரானாகி
யொப்பறநோற்கும்வேலையொல்லையிலதனைநாடி
முப்புரஞ்சிதையமேனாண்முனிந்தவனருளிதென்னாச்
செப்பினனிமையோர்சூழச்சேணிடைத்திருமால்சேர்ந்தான். (௫)

அற்புதமெய்திமைந்தனருர்தவம்புகழ்ந்துமுன்போ
யெற்படுமவன்றன்மேனியெழின்மலர்க்கரத்தானீவி
வெற்பனமுனிவநின்பேர்மிருககண்டுயனென்னாச்
சொற்பயினுமஞ்சாத்தவெழுந்துகைதொழுதுநின்றான். (௬)

தொழுதெழுமுனியைநோக்கித்தூமதிச்சென்னியோன்றன்
முழுதுறுகருணைநின்பான்முற்றுகமுன்னஞ்செய்த
பழுதவைநீங்கவென்னாப்பரிவுசெய்தருளிவானோர்
குழுவுடனுவணவூர்திகொம்மெனமறைந்துபோனான். (௭)

போனபின்முனிவர்மேலோன்புரமெரிபடுத்தமுக்கண்
வானவனருளினாலேவல்விரைந்தேகித்தாதை
யானவன்முன்னரெய்தியடிமுறைவணங்கவன்னான்
றானுளமகிழ்ந்துகண்டாங்கெடுத்தனன்றழுவிக்கொண்டான். (௮)

தவத்திடையுற்றதன்மைமொழிகெனத்தனயன்றானு
முவப்புறுதாதைகேட்பவுள்ளவாறுரைத்தலோடு
நிவப்புறுமுவகைமிக்குநின்குலத்தவர்க்குநின்போ
லெவர்க்குளதினையநோன்மையாதுநிற்கரியதொன்றே. (௯)

பாருளார்விசும்பின்பாலார்பயனுகர்துறக்கமென்னு
மூருளாரல்லாவேனையுலகுறுமுனிவர்தம்மி
லாருளார்நின்னையொப்பாரையநீபுரிந்தநோன்மை
காருளார்கண்டத்தெந்தையன்றிமற்றெவரேகாண்பார். (௧0)

எனப்பலபுகழ்தலோடுமிவன்வழிமரபுதன்னின்
மனப்படுமொருசேய்பின்னாண்மறலியைக்கடக்குங்கூற்றால்
வினைப்பகையியல்புநீக்கும்விமலனதருளால்வேறோர்
நினைப்பதுவரலுந்தாதைநெடுமகற்குரைக்கலுற்றான். (௧௧)

கிளத்துவதுனக்கொன்றுண்டாற்கேண்மதியையமேனா
ளளப்பருமறைகளாதியறைந்தனயாவரேனுந்
தளத்தகுபரிசுமன்றாற்சால்புடையந்தணாளர்
கொளப்படுகடனேயாகுநாற்பெருங்கூற்றதன்றே. (௧௨)

உனற்கரும்பிரமர்தன்னிலொழுகலில்லறத்தினிற்றல்
வனத்திடைச்சேறல்பின்னர்மாதவத்துறவில்வாழ்த
லெனப்படுமவற்றினாதியற்றினையின்றுகாறு
நினக்கதுபுகல்வதென்னோநீயவையறிதியன்றே. (௧௩)

பின்னவையிரண்டும்பின்னர்ப்பேணுதல்பேசவொண்ணா
முன்னதுமியற்றலாலேமுற்றியதிடையின்வைத்துச்
சொன்னதோர்கடனிஞ்ஞான்றுதொடங்கியவேண்டுந்தூயோ
யன்னதனிலைமைதன்னையாற்றினைகோடியென்றான். (௧௪)

Digitized By Roja Muthiah Research Library

முனிவரனிதனையாங்கள்மொழிதலுமிதனைக்கேளா
வினியதோருறுதிசொற்றுரெந்தையாரெனக்கீண்டென்று
மனமுறமுறுவல்செய்துமதலையாமொருவற்கீது
விளையறுதவத்தினீரும்விளம்புதன்மரபோவென்றான். (கரு)

வேறு.

பேதைப்படுக்கும்பிறவிக்கடனீந்து
மோதித்திறத்தையுணர்ந்துடையோனாதலினாற்
சாதற்புதல்வன்கவுச்சிகனென்போனறனது
தாதைக்கிளையபரிசுதனைச்சாற்றுகின்றான். (கசு)

முன்னருளபாசமுயக்கறுக்கவேண்டியநான்
பின்னுமொருபாசம்பிணிக்கப்படுவேனோற்
றன்னிகரிலீசன்றனையெவ்வாறெய்துவன்யா
னின்னலெனுமாழியிடைப்பட்டுலைவேனே. (கஎ)

மொய்யானதில்லாமுடவனொருவன்றனது
கையாலவையிரண்டுங்கந்தாத்தவழ்தருவா
னையாவதற்குமரும்பிணியொன்றெய்தியக்கா
லுய்யானேயானுமுவன்போற்றளர்வேனே. (கஅ)

மொய்யுற்றிடவேமுயலுந்தவத்தினன்றிப்
பொய்யுற்றவில்லொழுக்கம்பூண்டுவினைபோக்குவது
மெய்யுற்றிடுதுகளைமிக்கபுனலிருக்கச்
செய்யற்சின்னீரிடத்துத்தீர்க்குஞ்செயலன்றே. (கக)

மண்ணுலகிலுள்ளவரம்பில்பெரும்பவத்தைப்
பெண்ணுருவமாகப்பிரமன்படைத்தனனா
லண்ணலடிதுணர்தியன்னவரைச்சிந்தைதனி
லெண்ணவரும்பாவமெழுமையினுநீங்குவதோ. (௨0)

ஆதரவுகொண்டேயலமந்தவைம்புலமாம்
பூதவகையீர்க்கப்புலம்புற்றபுன்மையினேன்
மாதரெனுங்கணமும் * வந்தென்னைப்பற்றியக்கா
லேதுசெய்கேனந்தோவெனக்கோவிதுவருமே. (௨க)

பன்னாளும்பாரிற்பருவரலின்மூழ்குவிக்கும்
பின்னாணிரயப்பெரும்பிலத்திலூடுய்க்கு
மெந்நாளிலாண்டகையோர்க்கின்பம்பயந்திடுமோ
மின்னார்கடம்மைவிழைவுற்றவேட்கைபதே. (௨௨)

துன்பநுகரும்வினையின்றொடர்ச்சியினே
ரின்பநுகர்வார்போலேந்திழையார்கட்பட்டார்
தன்பன்மி... ங்களைளிதசையில்லா
வென்புகறித்திட்டாலிருஞ்சுவையும்பெற்றிடுமோ. (௨௩)

அஞ்சனவைவேற்கண்ணி...ர்தம்பேராசை
நெஞ்சுபுகினொருவர்நீங்கு...மைத்தோ
வெஞ்சல்புரியாதுயி...நாளுமீர்ந்திடுமா
னஞ்சமினிதம்மவோர்...நகலியாதே. (௨௪)

* கணம் - பிசாசு.

Digitized By Roja Muthiah Research Library

கள்ளூற்றகூந்தற்கனங்குழைநல்லார்கருத்திற்
கொள்ளப்படுமெண்குணிக்குந்தகைமையதோ
தள்ளற்கரிதாகித்தம்மொடுபன்னாட்பழகி
யுள்ளூற்றதேவுமுணர்தற்கரிதன்றோ. (௨௫)

ஓதலுமொன்றாவுளமொன்றாச்செய்கையொன்றாப்
பேதைநிலைமைபிடித்துப்பெரும்பவஞ்செய்
மாதர்வலைப்பட்டுமயக்குற்றாரல்லரோ
சாதல்பிறப்பிற்றடுமாறுகின்றாரே. (௨௬)

ஆனாலுலகிலருங்கற்பினையுடைய
மானாரிலரோவெனவேவகுப்பீரேற்
கோனானதங்கள்கொழுநனியல்வழுவாத்
தேனார்மொழியாருமுண்டுசிலர்தாமே. (௨௭)

உற்றவுலவையிடையோர்புலிங்கமூட்டியக்காற்
கற்றைவிடுசுடர்மீக்கான்றுகனன்மிக்குப்
பற்றுதல்செல்லாதபலவினும்போய்ப்பற்றிடுமா
லற்றெனலாமீங்கோரரிவைமுயங்காதரமே. (௨௮)

சந்திரற்கோருவமைசாலுந்திருமுகத்துப்
பைந்தொடிக்கைநல்லார்பலரும்புடைசூழக்
குந்தமொத்தநாட்டத்துக்கோதமனார்பன்னியினா
லிந்திரற்கீங்காவிடர்ப்பழியொன்றெய்தியதே. (௨௯)

வேறு.

கூன்முகத்திங்கணெற்றிக்கோதையர்குழுவுக்கெல்லாந்
தான்முதலிறைவியாகத்தன்கையாற்சமைக்கப்பட்ட
மான்முகநோக்கிமுன்னோர்மலரயன்மையலெய்தி
நான்முகனானானென்பநாமுணராததன்றே. (௩0)

மற்றுளமுனிவர்தேவர்மாயமாங்காமந்தன்னா
லுற்றிடுசெயற்கையெல்லாமுரைப்பினுமுலப்பின்றாமா
லற்றெலாநிற்கயானவ்வாயிழைமடந்தைகூட்டம்
பெற்றிடுமொழுக்கந்தன்னைப்பேணலன்பிறப்புநீப்பேன். (௩௧)

பூண்டகுவிலங்கற்றிண்டோட்புரந்தரன்முதலோர்சீரும்
வேண்டலனில்வாழ்வென்னும்வெஞ்சிறையகத்தும்வீழேன்
மாண்டகுபுலத்தின்மாயுமயக்கொரீஇத்தவமென்றோது
மீண்டியவெறுக்கைமேவியின்பமுற்றிருப்பனென்றான். (௩௨)

இவைபலவுரைத்தலோடுமிருந்தகுச்சகன்றானிந்தக்
குவலயமதிக்குமாற்றாற்கூறுமில்லொழுக்கந்தன்னை
நவையெனவிகழாநின்றானன்மறைத்துணிவுங்கொள்ளான்
றவமயல்பூண்டானென்னாத்துயர்கொடுசாற்றலுற்றான். (௩௩)

புலத்தியன்போலுமேலோய்பொருவின்மங்கலஞ்சேர்பொன்னின்
கலத்தியல்வதுவைபூண்டோர்கன்னியைக்கலத்தல்செய்து
குலத்தியன்மரபினோம்பக்குமரரைப்பயந்தே[illegible]ன்றோ
நலத்தியறவத்தையாற்றிநண்ணருங்கதியிற்சேரல். (௩௪)



Digitized By Roja Muthiah Research Library

மன்பதையுலகமேபோன்மாலுறுமயங்குகாம
லின்பநீநுகர்தற்கேயோவிசைத்தனனிறந்தமேலோர்
துன்பமுநிரயஞ்சேர்வுந்துடைத்திடுந்தொன்மைநோக்கி
யன்புறுபுதல்வர்க்காகவரிவையைக்கோடியையா. (௩௫)

சித்திரமிலகுசெவ்வாய்ச்சீறடிச்சிறுவர்தம்மைப்
புத்திரரென்னுஞ்சொற்குப்பொருணிலையயர்த்திபோலா
மித்தகவதனைநாடியில்லறம்பூண்டுநிற்ற
லுத்தமநெறியேயாகுந்தவத்தினதொழுக்குமஃதே. (௩௬)

குவவுறுநிவப்பின்மிக்ககோடுயர்குடுமிக்குன்றி
னிவர்வுறுகாதலாளரியற்படுசாரலெய்தித்
திவவொடுபோதலன்றிச்சேணுறவுகளுந்தன்மைக்
குவமையதாகுமின்னேயுயர்தவத்தொழுகவுன்னல். (௩௭)

தருவினில்விலங்கிலன்னதகையனபிறவிற்சால
வருபயன்கோடற்கன்றேமற்றவைவரைதல்செய்யார்
பெருகுமில்லறத்தினோடும்பெருமகப்பொருட்டானீயு
மரிவையைமணந்துபின்றைருந்தவம்புரிதியன்றே. (௩௮)

இந்தநன்னிலைமேனாளேயெண்ணிலையிந்நாள்காறு
முந்துசெய்கடனதாற்றிமுற்றினைமுறையேபன்னாட்
சிந்தனைசெய்தவானோர்க்கவிமுதற்சிறப்புச்செய்யாய்
மைந்தநீயின்னேநோற்கும்வண்ணமேயெண்ணற்பாற்றே. (௩௯)

இந்திரர்புகழுந்தொல்சீரில்லறம்புரிந்துளோர்க்குத்
தந்தமதொழுக்கந்தன்னிற்றகுமுறைதவறிற்றேனுஞ்
சிந்திடுந்தீர்வுமுண்டாற்செய்தவர்க்கனையசேரி
னுய்ந்திடலரிதால்வெற்பினுச்சியிற்றவறலொப்ப. (௪0)

சுழிதருபிறவியென்னுஞ்சூழ்திரைப்பட்டுச்சோர்வுற்
றழிதருதுயரநேமியகன்றிடல்வேண்டுமேனுங்
கழிதருநாளானல்லாற்கதுமெனத்துறக்கலாமோ
வழிமுறைநும்முன்னோரின்மற்றதுபுரிதிமன்னோ. (௪௧)

தேவருமுனிவர்தாமுஞ்செங்கண்மாலயனுமற்றும்
யாவருமடந்தைமாரோடில்லறத்தொழுகுந்தன்மை
மேவரப்பணித்தானன்றேவிமலையோடணுகிமேனாட்
டாவரும்புவனமாதிசராசரம்பயந்ததாணு. (௪௨)

மறுக்கலையவன்றுன்செய்தவரம்பினைவழியைவேண்டி
வெறுக்கலையெனதுகூற்றைவிலக்கலையுலகின்செய்கை
செறுக்கலையிகலுமாற்றுற்செப்பலைசிறிதுமாற்றந்
துறக்கலையமரையின்னேதொன்முறையுணர்ந்ததூயோய். (௪௩)

வேறு.

ஆடகவனப்புடையருந்ததியைநீங்கான்
மாடுறவிருத்தியும்வசிட்டமுனியென்போ
னீடுதவநோன்மைகொடு[illegible]றனனதன்றிப்
பீடுசெழுஞாலமிசைபெற்றபழியுண்டோ. (௪௪)

தூயக்குறுபவத்திடைதொடர்ச்சியறுதூயோர்
நயப்பொடுவெறுப்பகலினாளுமடமானார்
முயக்குறினுமாதவமுயன்றிடினுமன்னோர்
வியத்தகுமனத்துணர்வுவேறுபடுமோதான். (௪௫)

மேனவியல்பான்வரையுமெல்லியலைமேவிற்
றானமுளதாகுமரீதானதவமாகும்
வானமுளதாகுமிவண்மண்ணுமுளதாகு
மூனமில்தாகுமரிதொன்றுமிலையன்றே. (௪௬)

காண்டகையதங்கணவரைக்கடவுளார்போல்
வேண்டலுறுகற்பினர்தமெய்யுரையினிற்கு
மீண்டையுளதெய்வதமுமாமுகிலுமென்றா
லாண்டகைமையோர்களுமவர்க்குநிகரன்றே. (௪௭)

ஆயிழையொடின்புறுமறத்தைமுதலாற்றாய்
தூயதவநன்னெறிதொடங்கல்புரிவாயேன்
மாயமிகுகாமவிடம்வந்தணுகினம்மா
மேயவிதிகாக்கினும்விலக்கியிடலாமோ. (௪௮)

துறந்தவர்கள்வேண்டியதொர்துப்புரவுநல்கி
யிறந்தவர்கள்காமுறுமிருங்கடனியற்றி
யறம்பலவுமாற்றிவிருந்தோம்புமுறையல்லாற்
பிறந்தநெறியாலுளதொர்பேருதவியாதோ. (௪௯)

மெத்துதிறலாடவருமெல்லியனல்லாருஞ்
சித்தமுறநன்கினொடுதீதுசெயலூழே
யுய்த்தபடியல்லதிலையாமுழவரொண்செய்
வித்துபயனேயலதுவேறுபெறலாமோ. (௫௰)

நற்றவமதாகுமிலறந்தனைநடாத்திச்
சுற்றமறநீங்குதுறவேதுறவதம்மா
மற்றதுபுரிந்திடினுனக்குநவைவாரா
வற்றதுமறுத்துரையலாணைநமதென்றான். (௫௧)

அன்னபலயாமுனியறைந்திடலுமோரா
முன்னமறையாதியமொழிந்ததுணிவென்றார்
பன்னகமணிந்திடுபரன்பணியுமென்றா
ரென்னினியுரைப்பதெனவெண்ணியினைகின்றான். (௫௨)

தத்தமதருட்குரவர்தாவில்வளநீங்கி
யத்தியிடையாழ்கெனினுமன்பினதுசெய்கை
புத்திரர்கடங்கள்கடனாம்புதுமையன்றே
யித்திறமறுக்கலனிசைந்திடுவன்யானும். (௫௩)

தந்தைசொன்மறுப்பவர்கடாயுரைதடுப்போ
ரந்தமறுதேசிகர்தமாணையையிகந்தோர்
வந்தனைசெய்வேதநெறிமாற்றினர்கண்மாறாச்
செந்தழலவாயநிரயத்தினிடைசேர்வார். (௫௪)

Digitized By Roja Muthiah Research Library

ஆதலின்விலக்கன்முறையன்றெனவலித்துக்
கோதறுகுணத்தின்மிகுகுச்சகர்தமம்பொற்
பாதமதிறைஞ்சிமுனியேல்பணியினிற்ப
னோதுவதுனக்குளதெனக்கழறலுற்றான். (௫௫)

தன்னுரைகொளாதமனைவாழ்க்கையதுதன்னின்
வெந்நிரயம்வீழும்வகையேவிழுமிதம்மா
வன்னரொடுமேவியமராடவர்தமக்குப்
பின்னுமொருகூற்றுமுளதோபிணியுமுண்டோ. (௫௬)

என்னுரையினிற்சிறிதுமெஞ்சலிலவாகி
மன்னுமியல்பெற்றிடுமடந்தையுளளேலக்
கன்னிதனையான்வரைவல்காயெரிமுனென்னாச்
சொன்னமொழிகேட்டுமகிழ்வுற்றுமுனிசொல்லும். (௫௭)

வேறு.

யானுமுய்ந்தனனென்கிளையுய்ந்தனவினையதானினையீன்றா
டானுமுய்ந்தனளடங்கலுமுய்ந்தனதண்ணளியதுமற்றால்
வானுமுய்ந்தனமண்ணுலகுய்ந்தனவாசவனெனவாழுங்
கோனுமுய்ந்தனனென்னுரைமறாமலுட்கொண்டனையதனாலே. (௫௮)

வேண்டும்வேட்கையையுரைத்தியான்மைந்தநீவிளம்பியவியல்பெல்லாம்
பூண்டுகுற்றமோர்சிறிதுமில்லாததோர்பூவையைப்புவியின்பாற்
றேண்டிநின்வயிற்புணர்க்குவனங்கதுசெய்கலாதொழிவேனேன்
மாண்டிறந்திடுங்குறைமதிக்கதிரெனமாய்கவென்றவமென்றான். (௫௯)

இனையபான்மையிற்குச்சகன்சூளுரையியம்பலுந்திருமான்முன்
புனையுமெய்ப்பெயர்தரித்தசேயாங்கவன்பொலங்கழறனைப்பூண்டோர்
தனயனுய்பொருட்டாலிதுபுகன்றனைதவத்தினிற்றலையான
முனிவநீயுனக்கரியதாயொருபொருண்முச்சகந்தனிலுண்டோ. (௬0)

ஆவதேனும்யானுரைப்பதுண்டத்தனையற்றவரருளும்யாய்
சாவதாயினர்தன்னையரில்லவர்தங்கையரிலரானோர்
காவலாடவர்தம்முடனுதித்திடார்காசினிதனிலன்னோர்
வீவதாயினர்பெருங்கிளையில்லவர்வியத்தகுதிருவற்றோர். (௬௧)

குடிப்பிறந்திலர்பிணியுறுமிருமுதுகுரவர்பாற்குறுகுற்றோர்
கடுத்தயங்கியமிடற்றிறையாதியாங்கடவுளர்பெயர்கொள்ளா
தடுத்தமாக்கடம்பெயர்பெறுபீடிலரலகைதன்னுமத்தோர்
படித்தலந்தனிற்புன்னெறிச்சமயமாம்படுகுழிப்பட்டுள்ளோர். (௬௨)

பிணியர்மூங்கையர்பங்கினர்வெதிரினர்பிறர்மனைதனிற்செல்வோர்
கணிகைமாதரின்விழிப்பவர்பன்முறைகாளையர்தமைநோக்கி
நணியகாதலான்முன்கடைநிற்பவர்நலம்பெறப்புனைகின்றோர்
தணிவிலுண்டியர்துயின்மிகுமியல்பினர்தன்னினுமூப்புற்றோர். (௬௩)

ஒருமைதங்கியகோத்திரமரபினருயர்ந்தவர்குறளானோர்
பருமைதங்கியயாக்கையர்மெல்லுருப்படைத்தவர்பயனில்லாக்
கருமைதங்கியவடிவினர்பொன்னெனக்கவின்றெழுகாயத்தோ
ரிருமைதங்கியபசப்பினர்விளர்ப்பினரெருவையினுருமிக்கோர். (௬௪)

Digitized By Roja Muthiah Research Library

நாணிலாதவராடவர்புணர்ச்சியினணியவர்நகைக்கின்றோ
ரேணிலாதவர்பெருமிடல்சான்றவரிருமுதுகுரவோர்த
மாணைநீங்கினர்சினத்தினரிகலினரடுதிறமுயல்கின்றோர்
காணவேண்டினர்நடமுதலாயினகாமனூற்கவல்கின்றோர். (சுரு)

ஈசனன்பிலர்பெருந்தகைமுனிவரையிகழ்பவருயிர்மீது
நேசமென்பனவில்லவர்தங்குலநெறிதனினில்லாதோர்
மாசுதங்கியகுணத்தினர்நிறையிலார்மனமெனுங்காப்பில்லோர்
தேசிகன்றனைமனிதனென்றுன்னினர்தேவரைச்சிலையென்றோர். (சுசு)

பத்தின்மேற்படுமாண்டினர்பூத்திடுபருவம்வந்தணுகுற்றோ
ரொத்தபண்பிலரச்சமின்மனத்தினருருமெனவுரைசெய்வோ
ரத்தனன்னையீந்தருளுமுனொருவர்பாலார்வமுற்றவர்ச்சேர
வைத்தசிந்தையர்பெருமிதமுற்றுளோர்மடமொடுபயிர்ப்பில்லோர். (சுஎ)

பிறப்பினெல்லையில்விழியிலார்தோற்றியபின்னையேயிழக்கின்றோர்
மறுப்பயின்றிடுங்கண்ணினர்படலிகைவயங்கியநோக்கத்தார்
குறிப்பின்மெல்லெனவெஃகியேவிழித்திடுங்குருடர்சாய்நயனத்தோர்
சிறப்பில்பூனையினாட்டத்தர்கணத்தினிற்றிரிதருசெங்கண்ணோர். (சுஅ)

நாறுசென்னியர்நரைமுதிர்கூந்தலர்துகளூறுமைம்பாலார்
வீறுகோதையர்சின்னமார்குழலினர்விரிதருமளகத்தோ
ரீறில்செம்மயிர்ப்பங்கியர்நிலனிடையிறக்கியகேசத்தோ
ரூறுசேர்தருமோதியர்விலங்கெனவுரமிகுகுரலுள்ளோர். (சுகூ)

சிறுகுகண்ணினர்மிகநெடுந்துண்டத்தர்சேர்ந்திடுபுருவத்தோர்
குறியகாதினருயர்தருமெயிற்றினர்கோணுறுகண்டத்தோர்
மறுவிராவியமுகத்தினர்சுணங்குறுமணிமுலைமார்பத்தோர்
வெறியதாகியநுசுப்பிலர்சிலையெனவியன்மிகுவயினுள்ளோர். (எ0)

காயநூன்முறையுரைத்திடுமியல்பிலாக்கடிதடநிதம்பத்தோர்
வாயுமங்கையுநகமுமுள்ளடிகளும்வனப்புறுசிவப்பில்லோர்
மேயசின்மயிர்பரந்திடுபதத்தினர்மென்சிறையெகினம்போற்
றூயநன்னடையில்லவரங்குலிதொல்புவிதோயாதோர். (எக)

இனையதன்மையராகியமாதர்களேனையரிவர்யாரும்
புனையுமங்கலமாகியகடிவினைபுரிதரவரையாதோ
ரனையரேயெனின்வேண்டலன்முழுவதுமவரியலணுகாத
வனிதையுண்டெனின்வேண்டுவன்றேர்ந்தனைமரபினிற்றருகென்றான். (எஉ)

காட்டினின்றிடுகுற்றியினோற்புறுகவுச்சிகனிவைகூறக்
கேட்டுமூரலுமுவகையுங்கிடைத்தனன்கேடில்சீருலகுள்ள
நாட்டகந்தனினாடிநல்லியல்புளநங்கையைநின்பாலிற்
கூட்டுகின்றனன்மானுதலொழிகெனக்குச்சகனுரைசெய்தான். (எங)

உரைத்தகுச்சகன்மைந்தனைநிறுவியேயொல்லைசென்றகிலத்திற்
றிருத்தகுஞ்சுடர்மலிதருசெம்பொனிற்செய்ததோரணிநாப்ப
ணருத்திசேர்தரக்குயிற்றிடவேண்டியோரருமணிதனைக்கொள்வான்
கருத்திலுன்னுபுதெரிபவன்போலொருகன்னியைத்தேர்கின்றான். (எச)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

அன்னவன்றன்னேர்முனிவரர்சிலர்வந்தணுகலுமவரொடும்விளுவிச்
சென்னிதன்றேயத்தநாமயமென்னுஞ்செயிரிலாவனத்துசத்தியன்பாற்
கன்னிகைவிருத்தலுணர்ந்துமற்றவன்பாற்கதுமெனச்சேறலுங்காணூஉத்
தன்னடிவணங்கவெதிருறத்தொழுதுதழுவியேயவனெடுஞ்சார. (எரு)

மாசறவியன்றவுறையுளிற்கொடுபோய்வரன்முறைவழாமலேயமைத்த
வாசனத்திருத்திக்கன்னிகையொடுதன்பன்னியையாயிடையழைத்துத்
தேசிகனூற்றுன்பணிமினீரென்னச்சென்னிபாலிறைஞ்சுவித்துரிய
பூசனைபுரிந்துநகையொடுமுகமன்புகன்றளவளாயினன்புனிதன். (எசு)

அறுசுவைகெழுவுநறியசிற்றுண்டியமுதினிற்றூயனவருத்திக்
குறைவறுமடிகட்கென்னிடைவேண்டுங்கொள்கையதென்னெனக்கூற
மறுவறுதவத்துக்குச்சகமுனிவன்மகிழ்ந்துநீமாதவம்புரிந்து
பெறுமகடன்னையெனதொருமகற்குப்பேசுவான்பெயர்ந்தனனென்றான். (எஎ)

இனையசொல்வினவிமுனிவரன்மகிழாவென்மகள்விருத்தையையியல்சே
ருனதுமைந்தற்குநல்கமுன்செய்தவுயர்தவமென்கொலென்றுரைத்து
மனமுறநகையுமுவகையுங்கிளரமணவினையிசைந்துமாதவத்துப்
புனிதனையங்கட்சிலபகலிருத்திப்போற்றிசெய்தொழுகுறும்பொழுதின். (எஅ)

வேறு.

பங்கமிலுசத்தியன்பன்னியாகிய, மங்கலைவிடுத்திடமகள்விருத்தைதா
னங்குளவிகுளையராயந்தன்னுடன், செங்கயல்பாய்புனறிளைப்பப்போயினாள். ()

காடுறவந்திடுகெலுழிமாண்புன, லாடினண்மகிழ்சிறந்தணங்களுரொடு, மாடுறு
பொதும்பர்போய்மலர்கொய்தன்னவை, சூடினளிருந்தனடொடலையாற்றியே. ()

பாசிழைமங்கையர்பண்ணையோடெழீஇ, யாசறுபொதும்பினுமணங்கையன்ன
வண், மாசறுதாரகைமரபிற்சூழ்தருந், தேசுறுமதியெனத்திரும்பும்வேலையே. ()

உருகெழுகனையொலியுருமுக்கான்றிடுங், கருமுகிலிஃதெனக்கனன்றுகாய்கனல்
சொரிதரும்விழியதுசூர்த்தமெய்யது, பெருமதநதியொடுபெயருகின்றதே. (அஉ)

தாழுறுகரத்ததுதடத்தின்சால்பெனக், காழுறுமெயிற்றதுகறைகொள்கால
தா, லேழுயர் * குறும்பொறையிபமொன்றேற்றெதிர், பாழியவரைதுகள்படுத்துச்
சென்றதே. (அங)

காண்டலும்வெருவினர்கவன்றவ்வாறுசெ, லாண்டகையோர்களுமகன்றுசிந்தி
னார், நீண்டிடுகடலிடைநிமிர்ந்தவெவ்விட, மீண்டலுமிரிந்தபுத்தேளிரென்னவே.

கன்னிகைவிருத்தையாள்கண்டுதுன்புறு, வன்னமென்னடையினரகன்றுசிந்த
லு, மென்னினியிழைப்பதென்றிரங்கியேங்கியே, யுன்னருங்கடுப்பினிலுளாற்றி
யோடலும். (அரு)

கீழ்ந்தறைபோகியகிளைஞராமெனத், தாழ்ந்திடுபசும்புதல்செறியத்தான்மறைந்
தாழ்ந்திடுகூவலொன்றனுகவன்னதில், வீழ்ந்தனளழுந்தினள்விளிவுற்றாளரோ. ()

முடங்குளையலங்குறுமுதியபூநுதன், மடங்கலினேறெதிர்வரினுமாறுகொள்
கடங்கலுழ்மால்கரிகல்லென்னார்ப்பொடு, நடந்ததுமலையமானுடுசாரவே. (அஎ)

* ஏழுயர் - ஏழிடமுயர்ந்த.

Digitized By Roja Muthiah Research Library

இரிந்திடுமொர்தரரார்யாண்டுமொகியே, விரிந்திடுவோர்குழீஇவியர்க்குழைனியர்
சரிந்திடுகூந்தலர்தளருநெஞ்சினர், பிரிந்திடுமுவகையர்பெயர்ந்துஈாடினார். (௮௮)

தண்டமதெங்கணுந்தானஞ்சிந்திடக், கொண்டலினெய்தியகோட்டுமாதிரங்
கண்டிலர்கன்னிகைதனையுங்காண்கில, ருண்டிலையெனவுயிருயிர்ப்புநீங்கினார். ()

மண்ணிடையாறெனவழிக்கொண்டேகவே, கண்ணிணைபுனலுகக்கலுழ்ந்து சோர்வுறுத், துண்ணெனவுணர்வறத்துளங்கிச்சூழ்கனல், புண்ணுறுவோரெனப் புலம்பன்மேயினார். (௯0)

வேறு.

பெண்ணுக்கணிகலமேயேரழகுக்கோருருவே
கண்ணுக்கணியேகமலத்துச்செந்திருவே
மண்ணிற்புனல்படிந்தாய்வானதியுமாடுவதற்
கெண்ணித்துணிந்தோவெமைவிட்டுப்போயினையே. (௯௧)

வன்னப்புனலாட்டிவல்லேபுறங்காத்தென்
மின்னைத்தருதிரெனவேவிடைகொடுத்த
வன்னைக்கென்சொல்வேமடுகளிற்றின்முன்னாக
வுன்னைத்தனிவிட்டுயிர்கொண்டுபோந்தனமே. (௯௨)

ஐயருசத்தியருமன்னையெனுமங்கலையும்
வையம்பரவுகின்றமாதுலராங்குச்சகருங்
கையறவின்மூழ்கக்கரந்தாயினியொருகாற்
செய்யமுகமுந்திருநகையுங்காட்டாயோ. (௯௩)

என்னப்பலவும்புலம்பியிரங்குற்றே
யுன்னற்கருஞ்சீருசத்தியன்றனற்றவத்தின்
மன்னுற்றதெய்வவனத்தின்மனைவாழ்க்கைப்
பன்னிக்கிவையுரைத்துப்பாவைநல்லாராவலித்தார். (௯௪)

கேட்டிடலுமன்னைவயிறதுக்கிக்கேழ்கிளர்தீ
யூட்டரக்கேயென்னவுருகிமனமறுகி
வாட்டடங்கணீர்குதிப்பவாய்வெரீஇத்தன்கணவன்
றாட்டுணையில்வீழ்ந்துபுகுந்தபடிசாற்றினளால். (௯௫)

ஒன்றுபுரிகாட்சிமுனிவனவைகேட்டுக்
கன்றுபிரிதாயிற்கலன்றரற்றிக்கன்னியொடு
சென்றுபிரிவுற்றோரைநோக்கிச்சினக்களிறு
கொன்றதுவோவஞ்சாதுகூறுமெனச்செப்புதலும். (௯௬)

தூயபுனலாடித்துறைபுகுந்துசூழ்பொதும்பி
லாயமுடனாடியகன்றிங்குவந்திடலுங்
காயுமழல்வெங்கட்கடகளிறுவந்ததுகண்
டோயுமுணர்வெய்தியெல்லோமுமோடினமால். (௯௭)

ஓடியுலையாவொருவர்நெறியொருவர்
கூடலிலதாவணியின்குழாஞ்சிந்திச்
சாடுமதகரியிற்றப்பிவிருத்தைதனைத்
தேடியங்ஙன்காணாதுசென்றனம்யாமென்றிடலும், (௯௮)

Digitized By Roja Muthiah Research Library

சென்றாங்கவ்வெல்லைதனிற்றேடித்தியங்குற்று
நின்றான்மகடனிறங்கிளரும்பொற்கலனே
ரொன்றாகவெவ்வேறொருநெறியிற்சிந்திடக்கண்
டென்றாய்படர்ந்தநெறியீதுகொல்லென்றேமுற்றான். (௯௯)

பூண்போகியநெறியேதொட்டுப்புதல்விதனைக்
காண்போமெனவேகனங்குழையாரோர்டேகி
மாண்போயகூவலொன்றுவந்தணுகவாங்கதனிற்
சேண்போயதன்மகளைக்கண்டுதெருமந்தான். (௧00)

வேறு.

கூவலுறுவதுநோக்கிநெடிதுயிர்த்துவிழிவழிநீர்குதிப்பக்குப்புற்
றாவலியாமகளையெடுத்தகன்கரையின்பாற்படுத்தியழுங்கலோடும்
பாவையர்கடழீஇக்கொண்டுபுலம்பினராலதுகேட்டுப்பயந்தநற்றாய்
காவிலுறுகோகிலம்போனெடிதரற்றிப்பெருந்துயரக்கடலுட்பட்டாள். (௧0௧)

தன்பால்வந்தவதரித்தநங்கைதனைக்கைவிட்டுத்தரியாளாகி
யன்பாலேயுயிர்பதைப்பவயிறதுக்கியாகுலியாவரற்றியேங்கி
மின்பாலோர்மின்படிந்ததன்மையெனவவளாகமிசையேவீழ்ந்து
தென்பாலிற்புகுந்தனையோவோமகளேயெனப்புலப்பித்தேம்பலுற்றாள். (௧0௨)

அன்னையோவன்னையோவாகொடியதறனேயோவறியேனந்தோ
முன்னையோநெடுங்காலங்குழவியின்றிப்பெருநோன்புமுயன்றுபெற்ற
மின்னையோவுயிரிழந்துவெள்ளிடையிற்கிடந்திடுமால்விதியார்செய்கை
யின்னையோயானொருத்திபெண்பிறந்துபெற்றபயனிதுவேயன்றோ. (௧0௩)

புலிக்கணங்கடிரிகானிலொருமானைவளர்த்ததனைப்போக்கிநின்றே
யலக்கணுறுவோரெனவேகைவிட்டுத்தமியேனுமழுங்காநின்றேன்
மலர்க்கமலத்திருவைநிகரென்மகளைக்கொல்லியமுன்வந்ததந்தக்
கொலைக்களிற்றின்வடிவன்றேகொடியேன்செய்பெரும்பவத்தின்கோலமன்றோ. ()

அறங்காட்டிற்சென்றதுவோதெய்வதமுமிங்கிலையோவரிதாமுத்தித்
திறங்காட்டுந்தவநெறியும்பொய்த்தனவோகலியுமினிச்சேர்ந்ததேயோ
மறங்காட்டும்வனக்களிறுவந்தடர்க்கவீண்டெனதுமாதுமாண்டு
புறங்காட்டிற்கிடந்திடுமோவென்னேயென்னேயிதுவோர்புதுமையாமே. (௧0௫)

வேறு.

என்றிவைபலவும்பன்னியிடருழந்தரற்றும்வேலை
மன்றலங்குழலின்மாதர்வளைந்தனரிரங்கிமாழ்க
வொன்றியகேளிரல்லாரியாவருமுருகிநைந்தா
ரன்றவணிகழ்ந்தபூசலாகுலமறைதற்பாற்றோ. (௧0௬)

கோட்டமில்சிந்தையோனுங்குச்சகன்குறுகியங்க
ணூட்டநீர்பனிப்பச்சோருநங்கையர்தம்பாலெய்தி
மீட்டினித்தருவன்மாதைவிம்மலிரென்னுவேறோர்
மாட்டுறவிருந்ததந்தைக்கினையனவகுத்துச்சொல்வான். (௧0௭)

மறைமுதலாயநுண்ணூன்மருளறவுணராமாக்கள்
சிறியரேமுதியர்பாலர்சேயிழைமகளிரின்னோ
ருறுவதோரவலஞ்செய்தாயூழ்வினைமுறையுமோரா
யறிவனீயின்னையாயினரிதுதணிக்கற்பாலார். (௧0௮)

Digitized By Roja Muthiah Research Library

கேளையாமனத்திற்றன்பங்கிளத்தலைகேடுநீங்கி
நீளயாவுயிர்த்தார்போலிந்நேரிழைக்கன்னிதன்னை
நாளையான்விளித்துநின்பானல்குவனல்கநீநங்
காளையானவற்குப்பின்னாட்கடிமணம்புரிதியன்றே. (௧0௯)

ஐயமென்றுளத்திலுன்னியழுங்கலைவிதியுமற்றே
மெய்யுணர்வதனாற்கண்டாம்விருத்தைதன்யாக்கைதன்னை
மொய்யுறுதயிலத்தோணிமூழ்குவித்திருத்தியின்றே
யொய்யெனநோற்றுமீட்டுத்தருகுவனுயிரையென்றான். (௧௧0)

சாற்றியதுணர்ந்துதாதைதயிலத்திலிட்டுமாதைப்
போற்றினனிருப்பமேலோன்போயொருபொய்கைமூழ்கிக்
கூற்றுவற்புகழ்ந்துநோற்பக்கொடுங்குழைமடவாரஞ்சக்
காற்றெனமுன்னர்வந்தகளிறுமீண்டணைந்ததம்மா. (௧௧௧)

தடமிகுபுனலுட்புக்குத்தாளினாலுழக்கிச்சாடிப்
படவரவனையசெய்கைப்பருவலித்தடக்கைதன்னா
லிடைதொறுந்துழாவிநின்றவிருந்தவமுனிவற்பற்றிப்
பிடர்மிசையேற்றிக்கொண்டுபெரிதுசேண்பெயர்ந்ததன்றே. (௧௧௨)

கோதறுகுணத்தின்மேலாங்குச்சகனென்னுந்தொல்பேர்
மாதவனுணர்ந்துபின்னர்மதக்களிறதனைநோக்கி
யீதெனைப்பற்றிச்செல்வதென்கொல்காரணமென்றெண்ணி
யோதியின்வலியாலன்னதூழ்முறையுன்னலுற்றான். (௧௧௩)

வேறு.

மாவதத்தினையிழைத்திடும்பூட்கையின்மதநீர்
காவதத்தினுங்கமழ்தருகலிங்கநாட்டதன்பா
லாவதத்தநேர்மாக்கள்வாழரிபுரமதனிற்
றேவதத்தனென்றுளனொருவணிகரிற்றிலகன். (௧௧௪)

தவத்தினன்னவன்பெறுமகன்றருமதத்தனெனப்
புவிக்கண்மேலவர்புகழ்செயவறம்புரிபுகழோன்
கவற்சியின்றியேமூவகைப்பொருளையுங்காண்போ
னுவப்புநீடியவிருநிதிக்கிறையினுமுயர்ந்தோன். (௧௧௫)

தந்தையன்னையுமிறத்தலுந்தமியனேயாகிச்
சிந்தைவெந்துயருழந்துபினொருவகைதேற
வந்தவேலையினவன்பெருந்திருவினையகற்ற
வந்துதோன்றினன்மனமருள்செய்வதோர்வாதி. (௧௧௬)

முண்டிதப்படுசென்னியன்றாதுவின்முயங்கு
குண்டலத்தினன்கோலநூன்மார்பினனீற்றுப்
புண்டரத்தியனெற்றியன்கஞ்சுகன்புதியோன்
கண்டிகைக்கலன்புனைந்துளோன்வேத்திரக்கரத்தோன். (௧௧௭)

அவனைக்கண்டனனடிமுறைவணங்கினனருவாஞ்
சிவனைக்கண்டனனாமெனப்பெருமகிழ்சிறந்தான்
புவனிக்குள்ளவரென்னினுஞ்சாலவும்புதியர்
தவமிக்கோரிவரென்றுகொண்டுறையுளிற்சார்ந்தான். (௧௧௮)

பொன்னருங்கலந்திருத்துபுகுய்யுடைப்புழுக்க
னன்னலம்பெறவருத்தினன்முகமனுநவின்றான்
பின்னரன்னவன்றனையெதிர்நோக்கினன்பெரியோ
யென்னிவண்வந்ததென்றனன்வணிகருக்கிறைவன். (௧௧௯)

ஈசன்றந்திடுவிஞ்சையொன்றெமக்குளதெவர்க்கும்
பேசுந்தன்மையதன்றதுகுரவர்பாற்பெரிது
நேசம்பூண்டவர்க்குரைப்பதுநெஞ்சினிற்சிறிது
மாசின்றுயரிற்குணர்த்துவனஃதெனவகுத்தான். (௧௨0)

சரதமேயிதுசம்புவின்வந்ததோர்தகைசா
லிரதமுண்டதுபொன்னெனச்செய்தனமெமக்கோ
ரரிதுமன்றதுபோல்வனபலவுளவவைதாம்
விரதமாதவரல்லதியார்கொலோவிரும்பார். (௧௨௧)

காரிரும்பையுநாகத்திற்காட்டுதுங்கரிய
சீரிரும்பினைப்பொன்னெனவுரைபெறச்செய்வா
மேருவுங்கயிலாயமுமென்றிருவெற்பை
யாருநோக்கவேகாட்டுதுமிவைநமக்கரிதோ. (௧௨௨)

எய்துமீயமுமிரதமும்வெள்ளியதெனவே
செய்துமன்றியும்வங்கத்திற்செம்பொனுந்தெரிப்பா
நொய்தினன்னதுவலியுறக்காட்டுதுநுவனுங்
கைதவம்பயின்மாக்களுக்கிணையனகழறும். (௧௨௩)

இரும்பினிற்செம்புவாங்குவமீயமுமற்றே
வரம்பிலாததோர்தரணியண்டங்களஃமரபி
னரும்பொன்வண்ணமதாக்குவம்வல்லவாறறைய
விரும்பினுமெனின்யாண்டுமோரளப்பிலவேண்டும். (௧௨௪)

ஒன்றுகோடிபொன்னுக்குவங்கோடியதுளவேற்
குன்றுபோலவேகோடியிற்கோடிசெய்குவமா
னின்றனக்குளபொருளெலாந்தருதியேனினது
மன்றன்மாளிகைநிதிக்கிடமில்லெனவகுப்பாம். (௧௨௫)

என்னவேமொழிசோரனைவணங்கினனிமைப்பின்
முன்னருள்ளதுந்தான்றனதுரிமையான்முயலப்
பின்னரெய்தியநிதியமும்பேழையானவற்றின்
மன்னுபூண்களுங்கொணர்ந்தனன்முன்புறவைத்தான். (௧௨௬)

வைத்தமாநிதிநோக்கலும்வணிகரிற்றிலக
ருய்த்தசெல்வமுமிதுகொலோவோவெனவுரையாக்
கைத்தலங்கொடுகைத்தலம்புடைத்துடுக்கணங்க
ணத்தவேலையிலொருங்குபட்டாலெனநகைத்தான். (௧௨௭)

இந்தநின்பொருணம்முடைவிஞ்சையிலிறைக்கும்
வந்திடாதுநாமுருக்குறுமுகந்தனில்வழுவிச்
சிந்துகின்றதற்கிலையிதுநமதுபின்றிரியி
னந்தமில்பொருள்கொடுக்குவம்வைத்தியென்றறைந்தான். (௧௨௮)

Digitized By Roja Muthiah Research Library

முனியலையநீவேண்டியபெருநிதிமுழுது
மினிதுநாடியேகொணருவனிருத்தியென்றுரைத்துப்
புனையுமாடையுநிலங்களுமணிகளும்பூணு
மனையுமாக்களும்பகர்ந்தனனிகரிலாவணிகன். (க௨௯)

பொருமதத்தினையிழைத்திடும்ருப்புயர்புழைக்கைப்
பெருமதக்கரியென்னவேமயங்கினன்பெரிதும்
வருமதத்தமென்றறத்தையும்பகர்ந்துமெய்வணிகன்
றருமதத்தனும்பெயரினைநிறுவினன்றரைமேல். (க௩0)

இத்திறத்தினிற்றேடிய பெருநிதியெனைத்துங்
கைத்தலங்கொடுதாங்கியேகரவன்முன்காண
வைத்துநிற்றலுமகிழ்ந்தனனவையெலாம்வாங்கி
மொய்த்தசெங்கனற்றீயிடையுருக்குதன்முயன்றான். (க௩க)

திரட்டியாவையுமோருருவாக்கினன்செழும்பொ
னிரட்டிதூக்கியவிரதமாங்கொருசிலையிட்டு
மருட்டியாடகமுழுவதுமுரைத்தவைவலிதா
வுருட்டிமட்பெருங்குகையினின்மருந்தையுள்ளுறுத்தான். (க௩௨)

பண்ணுறுத்தியகனகமுள்ளிட்டதன்பாலு
மெண்ணுறுத்தியமிசைக்கணுங்களங்கமொன்றிட்டு
மண்ணுறுத்திறற்றுகில்கொடுபொதிந்தனன்மருங்கிற்
கண்ணுறுத்தியசெந்தழற்புடைமிசைகரந்தான். (க௩௩)

நூற்றுநான்கொடுநான்குகுக்குடபுடநொய்தின்
வீற்றுவீற்றதாவிட்டதுநோக்கினன்மிகவு
மாற்றுவந்ததுபழுக்குமோர்வராகியின்மருளேல்
காற்றிலாததோருறையுள்காட்டென்றனன்கரவன். (க௩௪)

சேமஞ்செய்ததோருறையுளைக்காட்டலுஞ்சென்று
வாமஞ்செய்ததோரிந்தனக்குவான்மிசைமறவோ
ரீமஞ்செய்தசெந்தழற்கொடுவராகிமேலிட்டுத்
தூமஞ்செய்தனனங்கியுமவனெதிர்துரந்தான். (க௩௫)

ஓங்கிநாட்டநீர்பொழிதரவாருயிருலைய
வீங்குகின்றமெய்வெதும்புறவெங்கணும்வியர்ப்ப
மூங்கையாமெனமொழிகிலான்போவதுமுயலான்
பாங்கிருந்திடுவணிகர்கோன்பட்டதார்பகர்வார். (க௩௬)

எல்லையன்னதிற்பொதிந்திடுபொற்குகையெடுத்து
மெல்லெனத்தனதாடையிற்கரந்தனன்வெய்யோன்
வல்லையக்குகைபோலவொன்றிருந்ததுமருங்கிற்
செல்லவைத்தனன்றழற்பெரும்புகையையுந்தீர்த்தான். (க௩௭)

தத்தவிக்குகைநின்கையிற்றுங்கினைதழன்மேல்
வைத்தியென்றனனவனதுபரிதலுமரபி
னத்தகுஞ்செயற்குரியனயாவையுமமைத்து
வித்தகம்பெறச்சேமியாவொருசெயல்விதித்தான். (க௩௮)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

உண்டியிகந்துரையாடலையாகிப்
பெண்டிரைவெஃகல்பேறாய்பிறர்தம்மைக்
கண்டிடலின்றுகருத்தினிலெம்மைக்
கொண்டிருமுப்பகல்கோதில்குணத்தோய். (௧௩௯)

நெய்கமழ்செஞ்சடைநீலிதன்முன்னோர்
மொய்கனல்வேள்விமுடித்திடலுண்டாற்
செய்கடனன்னதுதீர்த்தபினாலாம்
வைகலினேகுதுமற்றிவணென்றான். (௧௪0)

அம்முறைசெய்கெனவாங்கவனடியை
மும்முறைதாழ்ந்துமுதற்பெருவணிகச்
செம்மலவன்புடைசென்றிலனின்றான்
மைம்மலிசிந்தையன்வல்லையகன்றான். (௧௪௧)

காவதமோரொருகன்னலினாகப்
போவதுசெய்துபுறத்துருமாறி
வாவினன்வேறோர்வளாகமதற்றா
னேவலின்வைகினனித்தலைவணிகன். (௧௪௨)

முப்பகல்போதலுமூதறிவுள்ளோன்
செப்பியநாள்வரைசென்றுளவன்றே
யிப்பகல்வந்திலனென்னையவன்சொற்
றப்புவனோவெனவேதளர்கின்றான். (௧௪௩)

நீடியதொல்புகழ்நீலியிருக்கை
நாடினன்மேதகுநன்னகரெங்குந்
தேடினன்மாலுறுசிந்தையனானன்
வாடினன்மீண்டனன்மாளிகைவந்தான். (௧௪௪)

அடுத்துமுன்வைத்தவருங்குகைதன்னை
யெடுத்ததுநோக்கலிரும்பதுவாக
வடுத்தவிர்சிந்தையன்மாயைகொலென்னா
விடுத்தனனன்னதுவீழுமுன்வீழ்ந்தான். (௧௪௫)

அத்தமனைத்துமகன்றிடலோடும்
பித்தின்மனத்தொடுபீழையனாகி
யெய்த்தனனாயுளினெல்லையுமெய்தத்
தத்தனும்விண்ணிடைசார்ந்தனனன்றே. (௧௪௬)

அறந்தனைவிற்றவருஞ்செயலாலே
மறந்தருதத்தனுமால்கரியாகிப்
பிறந்தனன்முன்னுறுபெற்றியதெல்லா
மறந்தனனென்றுமனத்திடைகொண்டு. (௧௪௭)

மாற்றுவணிப்பவம்வல்லையினென்னாச்
சாற்றினன்முன்புதவம்புரிவேலை
நோற்றிடுமோர்பகனோன்பவைதானிவ்
வாற்றலிபத்தழையாகுகவென்றான். (௧௪௮)

Digitized By Roja Muthiah Research Library

இப்பரிசங்கணியம்புதலோடு
மப்பொழுதன்னவனுண்டுறுவேழ
மெய்ப்படிவந்தனைவீட்டினன்யாருஞ்
செப்பரிதாகியதேவுருவானான். (௧௪௯)

அந்தரதுந்துபியார்த்தனவானோர்
சிந்தினர்பூமழைசேணிடைநின்றும்
வந்ததுதெய்வதமானமதன்பா
லிந்திரனுமெனவேறினனன்றே. (௧௫௰)

பாசிழைமங்கையர்பற்பலர்சுற்று
வீசினர்சாமரைவிண்ணுறைகின்று
ராசிகள்கூறினரங்கவணிற்குந்
தேசிகனாரடிசெங்கைகுவித்தான். (௧௫௧)

நோக்கினன்மாதவநோன்மையுளானை
வாக்கினில்வந்தனவந்தனைசெய்தா
னீக்கரும்வல்வினைநீக்கினையென்னா
மேக்குயர்புங்கவர்விண்ணுலகுற்றான். (௧௫௨)

விண்ணிடையேயவன்மேவுதலோடு
மண்ணிடைநின்றிடுமாதவன்முன்போ
லெண்ணருநோன்பதியற்றலுமன்னோன்
கண்ணியதென்றிசைகாவலன்வந்தான். (௧௫௩)

முன்னுறுகூற்றுவன்முப்பகைவென்றோ
யுன்னிலைநோக்கியுவந்தனநம்பா
லென்னைகொல்வேண்டியதென்றலுமன்னோன்
றன்னடிவீழ்ந்திதுசாற்றுதலுற்றான். (௧௫௪)

உந்தியசீர்த்தியுசத்தியன்மானென்
மைந்தன்மணஞ்செயவந்தனனன்னான்
மூந்துறுநென்னன்முடிந்தனன்முன்போற்
றந்தருளென்றிதுசாற்றுதலோடும். (௧௫௫)

அத்தகுபோழ்தினிலந்தகனென்போ
னித்தவன்வேண்டியவேந்திழையாவி
வைத்தனமேயதுவல்லையின்மீட்டிங்
குய்த்திடுவாயெனவொற்றொடுசொற்றான். (௧௫௬)

கொற்றவனிங்கிதுகூறிமறைந்தான்
சொற்றதுணர்ந்திடுதூதுவன்முன்போ
யுற்றிடுமவ்வுயிரைக்கொடுபோந்து
மற்றவள்யாக்கையுள்வந்திடுவித்தான். (௧௫௭)

வேறு.

உடற்குளுயிர்வந்திடலும்புகுந்ததுமெய்யுணர்வுசிறிதுயிர்த்தநாசி
துடித்தனகால்பதைத்ததுரந்துளங்கிமுகம்விளங்கியதாற்றுவண்டதாக
மெடுத்தனகையசைந்தனதோளிமைத்தனகண்விழித்தனவாலினையகாலை
மடக்கொடியுந்துயிலுணர்ந்தாள்போலெழுந்தாளெல்லோருமருங்கிற்சூழ்ந்தார். ( )

Digitized By Roja Muthiah Research Library

அன்னையவடனைத்தழுவியிரங்குற்றாடந்தையெடுத்தணைத்துப்பல்காற்
சென்னிதனிலுயிர்த்தேதனிருகுறங்கின்மீமிசையேதிகழச்சேர்த்தி
யென்னடிகளென்கடவுளெனதுதவப்பயனாகுமெந்தைநென்னற்
சொன்னபடிதவமியற்றியுய்வித்தானிவனையென்றுதுணிவிற்சொற்றான். (௧௫௯)

சுற்றுகின்றகிளைஞர்களுமல்லோரும்திசயிப்பத்தொல்லைஞாலம்
பெற்றதிருவனையாடன்பெண்ணணங்கைமுகநோக்கிப்பேதைநீயீண்
டுற்றதுவுமிறந்ததுவுமீண்டதுவுமுறைப்படவேயுரைத்தியென்னப்
பொற்றொடியாளதுவினவிப்புகுந்ததொருபரிசனைத்தும்புகலலுற்றாள். (௧௬௦)

நீடியமங்கையர்பண்ணைதன்னுடனேபோந்ததுவுநெடுநீர்க்கான்யா
றாடியதுமீண்டதுவுங்கடகளிறுபோந்ததுவுமதனைக்கண்டே
யோடியதுந்தானொருத்திதனித்ததுவுங்கூவலிடையுலைந்துவீழ்ந்து
வீடியதுமீண்டதுவுந்தென்றிசைக்கணிகழ்வனவும்விரித்துச்சொற்றாள். (௧௬௧)

சொன்னமொழியதுகேளாமிகமகிழும்வேலைதனிற்றுகளிறூயோன்
கொன்னவிலுமுத்தலைவேற்கூற்றுவன்றனருள்பெற்றுக்குறுகலோடு
முன்னுறவேயெதிர்சென்றுபெருங்கிளையும்பன்னியுமாமுனியும்பெற்ற
கன்னியும்வந்தடிவணங்கிப்போற்றிசெயவரன்முறையேகருணைசெய்தான். (௧௬௨)

என்னுயிரும்பெருங்கிளைஞர்தம்முயிருமில்லறத்திற்கியன்றபன்னி
தன்னுயிருநட்டோர்கடமதுயிருநின்றிடயான்றவத்திற்பெற்ற
மின்னுயிர்தந்தருளினையாலரிதோநிற்கிதுவம்மாவேலைஞால
மன்னுயிர்காத்தளிப்பவனுநீயெனவேயெனதுள்ளமதித்ததன்றே. (௧௬௩)

வள்ளலையுன்றிருவுளத்தையாருணர்வார்கவுச்சிகனுமகற்கியான்பெற்ற
தெள்ளமிர்தமனையமொழிவிருத்தையெனுங்கன்னிகையைத்திசையினாடிக்
கொள்ளுதற்குவந்தனையோகூற்றுவனாற்போனவுயிர்குறுகிமீண்டு
மெள்ளவரும்படியழைத்துத்தந்திடுவான்வந்தனையோவிளம்புகையா. (௧௬௪)

எனமுனிவன்றனைநோக்கிமுகமன்களிவைபலவுமெடுத்துக்கூறி
யனையவனையுடன்கொண்டுசுற்றத்தாரெல்லாருமடைந்துசூழ
மனைவியொடும்புதல்வியொடுமடமாதர்தங்களொடும்வல்லையேகித்
தனதுறையுளிடைப்புகுந்துவீற்றிருந்தானாற்றரியதவத்தின்மேலோன். (௧௬௫)

பின்புமொருசிலவைகல்குச்சகனையவணிருத்திப்பெரியோயிங்ங
னென்புதல்விதனையளிப்பனுன்மதலைதனைக்கொண்டேயேகுகென்னத்
தன்புதல்வற்கொடுவரலும்விருத்தையெனுங்கன்னிகையைத்தழல்சான்றாக
வன்பினொடுநன்னாளிலோரைதனில்விதிமுறையேயருள்செய்தானால். (௧௬௬)

வேறு.

அருள்புரிந்திடுதலுமன்பினானியைந்
திருவருமில்லறமியற்றப்பல்பகல்
கருணைசெய்குச்சகன்கண்டுமாதவம்
புரிதரவேவடபுலத்திற்போயினான். (௧௬௭)

போதலுமிருந்திடும்புனிதவேதியன்
மாதவவலியினான்மாதினோன்பினான்
மேதினியயந்திடமிருகண்டென்னவோர்
காதலனுதித்தனன்கணிப்பில்காட்சியான். (௧௬௮)

Digitized By Roja Muthiah Research Library

அட்புதல்வற்கியாண்டாறுசென்றுழி
மெய்ப்பிரமச்செயல்விளங்குபான்மையான்
முப்புரிநூல்வினைமுடித்துத்தாதைபோற்
செப்பருமாதவஞ்செய்யப்போயினான். (௧௬௯)

ஊற்றமாமிருககண்டேயனென்றிடு
மாற்றன்மாமுனிவரனகலவன்னவன்
றேற்றமாகியசுதன்றொன்மைநாடியே
போற்றினானதியிற்புரியுஞ்செய்கடன். (௧௭0)

சொற்கலைதெரிமருத்துவதியென்றிடு
முற்கலன்மகடனைமுறைவழாதுபின்
னற்கலையணிகலனல்கிநீக்கிய
வற்கலையுடையினான்வதுவைமுற்றினான். (௧௭௧)

இருந்தனனகாமயமென்னும்பேரொடு
பொருந்தியவனத்திடைப்புதல்வரின்றியே
வருந்தினன்றமரொடுமாதுதன்னொடு
மருந்தவன்காசியையடைதன்மேயினான். (௧௭௨)

அடைந்ததோர்பொழுதினிலமரர்யாவருங்
கடைந்திடுதிரைக்கடலனையகங்கைநீர்
குடைந்தனனாடினன்குழூமிமாதவர்
மிடைந்திடுமறுகிடைவிரைவின்மேவினான். (௧௭௩)

பொன்றிரண்மாமதில்புடையதாமணி
கன்றிகையென்பதோர்கடவுளாலயஞ்
சென்றனன்சூழ்ந்தனன்றிங்கள்வேணியான்
மன்றமர்திருவடிவணங்கிப்போற்றினான். (௧௭௪)

மெய்ப்படுமறையுணர்மிருகண்டென்பவ
னப்பெருங்கோயிலுக்கணித்தொர்பாங்கரிற்
செப்புறுமாகமத்தெளிவுநாடியே
மைப்பெருங்கண்டனைவழிபட்டானரோ. (௧௭௫)

ஆதவம்பனிமழையனிலத்தச்சுருப்
பாதவமாமெனப்பருவமாறினும்
பேதைபங்குடையவெம்பிரானையுன்னியே
மாதவம்புரிந்தனன்மதலைவேண்டியே. (௧௭௬)

அருந்தவமோரியாண்டாற்றத்தொல்லைநாட்
பொருந்தியமூவெயில்பொடித்தபுங்கவன்
வரந்தனையுதவுவான்வந்துதோன்றலு
மிருந்தவமுனிவரனிறைஞ்சிப்போற்றினான். (௧௭௭)

முந்துறுமுனிவரன்முகத்தைநோக்கிநீ
சிந்தையில்விழைந்ததென்செப்புகென்றலு
மைந்தனைவேண்டினன்வரத்தைநல்கென
வெந்தையுமுறுவல்செய்தினையகூறுவான். (௧௭௮)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

தீங்குறுகுணமேமிக்குச்சிறிதுமெய்யுணர்விலாமன்
மூங்கையும்வெதிருமாகிமுடமுமாய்விழியுமின்றி
யோங்கியவாண்டுநூறுமுறுபிணியுழப்போனாகி
யீங்கொருபுதல்வன்றன்னையீதுமோமாதவத்தோய். (௧௭௯)

கோலமெய்வனப்புமிக்குக்குறைவிலர்வடிவமெய்தி
யேழுறுபிணிகளின்றியெமக்குமன்புடையோனாகிக்
காலமெண்ணிரண்டேபெற்றுக்கலைபலபயின்றுவல்ல
பாலனைத்தருதுமோர்நின்னெண்ணமென்பகர்தியென்றான். (௧௮0)

மாண்டகுதவத்தின்மேலாமறைமுனியவற்றையோரா
வாண்டவைகுறுகினாலுமறிவுளனாகியாக்கைக்
கீண்டொருதவறுமின்றியெம்பிரானின்பாலன்பு
பூண்டதோர்புதல்வன்றானேவேண்டினன்புரிகவென்றான். (௧௮௧)

என்றிவைதுணிவினாலேயிசைத்தலுமீசனிற்கு
நன்றிகொள்குமரன்றன்னைநல்கினமென்றுசொல்ல
நின்றிடுமுனிவன்போற்றிநெஞ்சகமகிழ்ச்சியெய்தி
யொன்றியகேளிரோடுமுறைந்தனனுறையுநாளில். (௧௮௨)

பூதலவிடும்பைநீங்கப்புரைதவிர்தருமமோங்க
மாதவமுனிவருய்யவைதிகசைவம்வாழ
வாதிதன்னருளினாலேயந்தகன்மாளவன்றான்
காதலியுதரத்தாங்கோர்கருப்பம்வந்தடைந்ததன்றே. (௧௮௩)

அடைதலுமதனைநோக்கியறிதருமுனிவனண்டை
விடையவனடியார்யார்க்கும்வேண்டியவேண்டியாங்கே
நெடிதுபல்வளனுமீந்துநிறைதருதிங்கடோறுங்
கடனியன்மரபுமாற்றிக்காசியின்மேவினானே. (௧௮௪)

கறையுயிர்த்திலங்குதந்தக்காய்சினவரவங்கவ்வக்
குறையுயிர்ப்படிவத்திங்களமிர்தினைக்கொடுத்திட்டாங்கு
மறையுயிர்த்தருளுஞ்செவ்வாய்மதலையைவயாவின்மாழ்கிப்
பொறையுயிர்த்தருளிற்றந்தாள்பொறைதருதிருவைப்போல்வாள். (௧௮௫)

மீனமுமுடிந்தநாளுமேவுறமிதுனஞ்செல்ல
ஊனமில்வெள்ளிதானுமொண்பொனுமுச்சமாகுந்
தானமுற்றினிதுமேவத்தபனனேமுதலாவுள்ள
ஏனையர்முனிவர்நாகரிடந்தொறுமிருப்பமன்றே. (௧௮௬)

நண்ணினன்புவியின்மைந்தனவமணிக்குலமும்பொன்னுஞ்
சுண்ணமுமலருந்தாதுந்தூயமென்கலவைச்சாந்துந்
தண்ணுறுநானச்சேறுந்தலைத்தலைக்கொண்டுதாவில்
விண்ணவர்மண்ணுளோர்கள்வியப்புறவீசியார்த்தார். (௧௮௭)

தேவதுந்துபிகளார்த்தசெய்தவையோம்பிமாற்று
மூவர்களன்றியேனோர்முறைமுறையாசிசெய்தார்
யாவதென்றுணர்தறேற்றாதிந்நகரன்றிநேமி
காவல்செயுலகம்யாவுங்களிமயக்குற்றவன்றே. (௧௮௮)

Digitized By Roja Muthiah Research Library

தந்தையுமதனைக்கேளாத்தடம்புனற்கங்கைமூழ்கி
யந்தணர்முதலோர்க்கெல்லாமாடகம்பலவுநல்கி
முந்துறுகடன்களாற்றமுளரிமேன்முனிவன்மேவி
மைந்தனுக்குரியநாமமார்க்கண்டனென்றுசெய்தான். (௧௮௯)

மறுப்படாத்திங்கள்போலவளர்தலுமதியந்தோறு
முறுப்படையுபநிட்டானமோதனம்பிறவுமுற்ற
நெறிபடுமோரியாண்டினெடுஞ்சிகைவினையுமாற்றிச்
சிறப்புடையிரண்டாமாண்டிற்செயிநெறிபுரிதலுற்றான். (௧௯0)

ஏதமிலைந்தின்முந்நூலிலக்கணவிதியுஞ்செய்தே
யோதிடுங்கலைகளெல்லாமுள்ளுறவுணர்த்துங்காலை
வேதமும்பிறவுங்கொண்டவியன்பொருடெரிந்துமேலா
மாதியேசிவனென்றெண்ணியவனடியரனென்றுற்றான். (௧௯௧)

அரனைமுன்னிறைஞ்சியன்னானன்பரைத்தாழ்ந்துதங்கள்
குரவனைவணக்கஞ்செய்துகோதறுமுனிவர்தம்மைப்
பரவியேபயந்தமேலோர்பாதபங்கயங்கள்சூடிப்
பிரமமாமொழுக்கநாளும்பேணினன்பிறப்புநீப்போன். (௧௯௨)

இந்தவாறியலுங்காலையெண்ணிரண்டானயாண்டும்
வந்ததாலதனைநோக்கிமைந்தனைநோக்கிவாளா
தந்தையும்பயந்ததாயுந்தனித்தனியிருந்துசால
வெந்துயர்க்கடலின்மூழ்கிவிம்மலுற்றிரங்கினைந்தார். (௧௯௩)

ஆங்கதுமதலைகாணுவடியிணைவணங்கியன்னோர்
பாங்குறவணுகிநீவிர்பருவரலுறுகின்றீரா
லீங்கிதுவென்னேயின்னும்யாதுமொன்றறிதறேற்றே
னீங்குமினவலநும்பாலெய்தியநிகழ்த்துமென்றான். (௧௯௪)

கூறியமொழியுட்கொண்டுகுமரநீயிருக்கநம்பால்
வேறொருதுயரமெய்திமெலிவதுமுண்டோமேனா
ளேறுடையமலமூர்த்தியாண்டுநின்றனக்கீரைந்து
மாறுமென்றளித்தானந்நாளடைதலினவலஞ்செய்தேம். ௧௯௫)

என்றுரைசெய்ததாதையிடருறுமுகத்தைநோக்கி
யொன்றுநீரிரங்கல்வேண்டாமுயிர்க்குயிராகியென்று
நின்றிடுமரனையேத்தியருச்சனைநிரப்பிக்கூற்றின்
வன்றிறல்கடந்துநும்பால்வல்லைவந்தடைவன்மன்னோ. (௧௯௬)

இருத்திராவீண்டேயென்னாவேதுக்கள்பலவுஞ்செப்பிக்
கருத்துறநெடிதுதேற்றிக்கான்முறைவணங்கிநிற்பத்
திருத்தகுகுமரற்புல்லிச்சென்னியுமோந்துமுன்னர்
வருத்தமுநீங்கிச்சிந்தைமகிழ்ந்தனர்பயந்தமேலோர். (௧௯௭)

இருமுதுகுரவர்தத்தமேவலினீசனென்னு
மொருவனதருளுமன்புமுடனுறுதுணையாய்ச்செல்லப்
பொருவருமகிழ்ச்சிபொங்கப்பொள்ளெனப்பெயர்ந்துபோகித்
திருமணிகன்றிகைப்பேர்ச்செம்பொனாலயத்திற்புக்கான். (௧௯௮)

௨௭

Digitized By Roja Muthiah Research Library

என்புநெக்குருகக்கண்ணீரிழிதரவலஞ்செய்தீசன்
முன்புறவணக்கஞ்செய்துமுடிமிசையடிகள்சூடித்
தென்புலத்தொருசாரெய்திச்சிவனுருச்செய்துபன்னு
ளன்புடனருச்சித்தேத்தியருந்தவமியற்றியிட்டான். (க௯௯)

வேறு.

ஈசனுமவ்வழியெய்திநற்றவம், பூசனையதனொடுபுரிதியாலது
மாசிலதாதலின்மகிழ்ந்துநீயினிப், பேசுகவேண்டியபெறுதற்கென்னவே. (உ00)

ஐயனேயமலனேயனைத்துமாகிய, மெய்யனேபரமனேவிமலனேயழற்
கையனேகையனேன்காலன்கையுறு, துய்யநோர்வந்துநீயுதவென்றோதலும். உ0க

அஞ்சலையஞ்சலையந்தகற்கெனுச், செஞ்சரணிரண்டையுஞ்சென்னிசேர்த்தனு,மு
ஞ்சனனினியெனவோதவொல்லையி, னஞ்சணிமிடற்றிறைன்மறைந்துநண்ணினன்.

நண்ணியபின்னரேநவையின்மைந்தனுக், கெண்ணிரண்டாண்டெனுமெல்லைசெ
ல்லலும், விண்ணிடைமுகிலெனவிசைகொண்டொல்லையிற், றுண்ணெனவோர்யம
தூதன்றோன்றினன். (உ0௩)

பண்டுமுப்புரமெரிபடுத்தபுங்கவன், புண்டரீகப்பதம்பரவும்பூசனை, கண்டனன்
வெருவிமார்க்கண்டன்றன்னையா, னண்டுவதரிதெனவகன்றுபோயினன். (உ0௪)

தீயெழநோக்கியேசென்றிடாதுசேண், போயதோர்வல்லியம்போலுந்தன்மை
யான், வேயெனவந்துபின்மீண்டுதென்புல, நாயகனடிதொழாநவிறன்மேயினன்.

இந்திரர்புகழ்தருமிறைவகேட்டியா, லந்தியினிறமுடையண்ணல்பாலுறு, சிந்தை
யனவனடிசேருஞ்சென்னியோன், சந்ததமவன்புகழ்சாற்றுநோன்மையோன். ()

ஈசனதருச்சனையியற்றுகின்றன, னாசறுமனத்தினனறிவனந்தணன், காசியினி
டத்தன்மார்க்கண்டனெனப், பேசியசிறப்புடைப்பெயர்பெற்றோங்குவான்.உ0௭

அன்னதோர்பாலனையணுகவஞ்சினன், முன்னருமேகலன்முக்கணெம்பிரான்
றன்னுழையிருந்தனன்றண்டநாயக, வுன்னுதியிதுவெனவுணரக்கூறினன். (உ0௮)

கூறியவளவையிற்கூற்றன்றூப்பினை, யாறியசெந்தழற்கருத்தினனெனச்
சீறினனுயிர்த்தனன்சிறுவனுங்கவ, னீறிலனுகியவிறைவனேயென்றான். (உ0௯)

தருதியென்கணகரையென்றுதண்டக, னுரைசெயநின்றதோரொற்றனேடியே
வருதிர்நும்மழைத்தனன்மன்னனென்றிடக்,கரணர்கள்வந்தனர்கழல்வணங்கினர்

இறையவனவ்வழியெவருங்காணுறு, வறைகழலண்ணலையருச்சித்தேத்திய
மறுவறுகாட்சியான்மார்க்கண்டப்பெயர்ச்,சிறுவனுக்கிறுவரைசெப்புமென்னவே

சித்திரகுத்தரென் றுரைக்குஞ்சீரியோ, ரொத்திடுமியற்கைய ருணர்வின்மேலை
யோர், கைத்தலமிருந்ததங்கணக்குநோக்கியே, யித்திறங்கேளெனவிசைத்தன்மே
யினர். (உ௧௨)

கண்ணுதலிறையவன்கருதியேலைநா, ளெண்ணிரண்டாண்டெனவிறுதிகூறினு
னண்ணலேசென்றதாலதுவுமாங்கவன், பண்ணியபூசனையறத்தின்பாலதே.(உ௧௩)

முதிர்தருதவமுடைமுனிவராயினும், பொதுவறுதிருவொடுபொலிவராயினு
மதியினராயினும்வலியராயினும், விதியினையாவரேவெல்லுநீர்மையார். (உ௧௪)

ஆதலினமருலகடைவதாயினன், பேதுறுநிரயமும்பிழைத்துநீங்கினு
னீதவனிலைமையென்றிருவருஞ்சொல,மேதகுதண்டகன்வெகுட்சியெய்தினன்.()

அந்தகனத்துணையமைச்சனாகிய, வெந்திறற்காலனைவிளித்துக்காசியி
லந்தணனொருமகனவனதாவியைத், தந்திடுகென்றலுந்தரணியெய்தினான். (உகசு)

மற்றவன்காசியில்வந்துமாசிலா, நற்றவனிருந்துழிநணுகினான்மறைக், கொற்றவ
ன்பூசையுங்குறிப்புநோக்கியே, யெற்றிவன்வருவதென்றெண்ணியேங்கினான். ()

விழியிடைத்தெரிவுறமேவிமைந்தனைத், தொழுதனன்யாரைநீசொல்லுகென்றலு
முழுதுலகுயிரெலாமுடிக்குமாணையான், கழலிணையடிமைசெய்கின்றகாலன்யான்.

போந்ததிங்கெவனெனப்புகலுவீரெனி, னாய்ந்ததுமொழிகுவனாதிநாயக
னீந்திடுகாலமெண்ணிரண்டுநென்னலே, தேய்ந்ததுதென்புலஞ்சேர்தல்வேண்டுநீர்.

வேறு.

தடுக்குந்தன்மையதன்றிதுசதுர்முகத்தவற்கு
மடுக்குந்தன்மையேபுதுவதுபுகுந்ததோவன்றே
கொடுக்குந்தன்மைபோற்காத்திடுந்தன்மைபோற்கூற்றன்
படுக்குந்தன்மையுங்கறைமிடற்றிறையருட்பணியே. (உஉ0)

ஆதலாலுமைவிளித்தனனன்றியுமமலன்
பாதமாமலரருச்சனைபுரிவதுபலரு
மோதவேமனமகிழ்ந்துமைக்காணியவுன்னிக்
காதலாகியேநின்றனன்றென்றிசைக்கடவுள். (உஉக)

அடுதலோம்பியசெய்கையனென்பதாலவனைக்
கொடியனென்பராலறிவிலார்செய்வினைகுறித்து
முடிவிலாருயிரெவற்றிற்குமுறைபுரிந்திடலா
னடுவனென்கின்றதவன்பெயருலகெலாநவிலும். (உஉஉ)

சிந்தைமீதினில்யாவதுமெண்ணலீர்தென்பா
லந்தகன்புரமடைதிரேலவனீதிரணாகி
வந்துகைதொழுதேத்தியேநயமொழிவழங்கி
யிந்திரன்பதநல்குவன்வருதிரென்றிசைத்தான். (உஉ௩)

மாற்றமிங்கிதுகேட்டலுமதிமுடியரனைப்
போற்றுமன்பர்களிந்திரனுலகினும்போகார்
கூற்றுவன்றனதுலகினுநும்மொடுகுறுகா
ரேற்றமாகியசிவபதமடைந்தினிதிருப்பார். (உஉச)

நாதனார்தமதடியவர்க்கடியவனானு
மாதலானுமதந்தகன்புரந்தனக்கணுகேன்
வேதன்மாலமர்பதங்களும்வெஃகலன்விரைவிற்
போதிபோதியென்றுரைத்தலுநன்றெனப்போனான். (உஉரு)

போனகாலனுமறலியைவணங்கியேபுகுந்த
பான்மையாவையுமுரைத்தலுமுளம்பதைப்பதைப்ப
மேனிமார்பகம்வியர்ப்புறவிழிகனல்பொழியக்
கூனல்வார்புருவக்கடைநிமிர்ந்திடக்கொதித்தான். (உஉசு)

அழைத்திர்மேதியையென்னலும்போந்ததாலதன்மேற்
புழைக்கைமால்கரியாமெனவெரிநிடைப்புகுந்து
நிழற்றுகின்றதோர்கவிகையுந்துவசமுநிவப்ப
வழுத்திவீரர்கள்சுற்றிடவந்தகன்வந்தான். (உஉஎ)

Digitized By Roja Muthiah Research Library

போந்துகாசியின்முனிமகனிருந்துழிப்போகிச்
சேந்தகுஞ்சியுமுகில்புரையேனியுஞ்சினத்திற்
காந்துகண்களும்பிடித்ததோர்பாசமுங்கரத்தி
லேந்துதண்டமுஞ்சூலமுமாகியேயெதிர்ந்தான். (உஉஅ)

வேறு.

வந்துதோன்றலுமார்க்கண்டனென்பவ, னந்தகன்வந்தணுகினனுமெனச்
சிந்தைசெய்தவன்செய்கையைநோக்கியே, யெந்தையாரடியேத்தியிறைஞ்சினான்.

அன்னவேலையிலந்தகன்மைந்தநீ, யென்னினைந்தனையாவதியற்றினை
முன்னையூழின்முறைமையுமுக்கணான்,சொன்னவாறுந்துடைத்திடலாகுமோ. ()

சிறிதுமூழ்வினைத்திண்மையுந்தேர்கிலா, யுறுதியொன்றுமுணர்கிலைபோலுமா
லிறுதியேபிறப்பென்றிவையாவரும்,பெறுவரன்னதுபேசுதல்வேண்டுமோ. (உஙக)

பீடுசாலும்பெருந்தவர்க்காயினுங், கூடுறுவிதுகூடுமென்றுன்னியே
நாடியின்னணநண்ணுதல்கற்றுண, ராடவர்க்குமியற்கையதாகுமோ. (உஙஉ)

ஈசனார்தமிணையடிமீமிசை, நேசநெஞ்சினைநித்தலுநீபுரி
பூசைவெம்பவம்போக்குவதன்றியான், வீசுபாசம்விலக்கவும்வல்லதோ. (உஙங)

சிந்துவின்கட்செறிமணலெண்ணினு, முந்துவானத்துடுவினையெண்ணினு
மந்தமின்றியெனுணையின்மாண்டிடு, மிந்திரன்றனையெண்ணிடலாகுமோ. (உஙச)

இற்றவானவர்தம்மையுமெண்ணினீ, ருற்றதானவராகியுள்ளோரையு
முற்றவோதின்முடிவிலதாதலான், மற்றையோரைவகுத்திடல்வேண்டுமோ. ()

கனக்குமுண்டகக்காமருகண்ணினன், றனக்குமுண்டுசதுர்முகற்குண்டுமற், றெனக்குமுண்டுபிறப்பிறப்பென்றிடி, னுனக்குமுண்டென்றுரைத்திடல்வேண்டுமோ.

வாசமாமலரிட்டுவழிபட, வீசனார்முன்னெனக்கருள்செய்தன
வாசிலாவிவ்வரசியலேந்திய, பாசசூலம்படைமழுத்தண்டமே. (உஙஎ)

தேவர்காப்பினுஞ்செய்தளித்தீறுசெய், மூவர்காப்பினுமொய்ம்பினராயினோ
ரேவர்காப்பினுங்காத்திடவின்றுநின், னுவிகொண்டன்றிமீண்டுமகல்வனே. உஙஅ

துன்பமென்பதுகொள்ளலைசூலித, னன்பராயினுமந்தம்வந்தெய்திடிற்
றென்புலந்தனிற்சேர்த்துவன்றிண்ணமே, யென்பினீயினியேகென்றியம்பலும். ()

மைந்தனுங்கதுகேட்டுமறலிகே, ளெந்தையாரடியார்தமக்கில்லையா
லந்தமென்பதுண்டாயினுநின்புரம், வந்திடார்வெள்ளிமால்வரையேகுவார். (உச0)

அனையர்தன்மையறைகுவனுங்கவர், புனிதமாதவராயினும்பொற்புடை
மனையின்வாழ்க்கையின்மல்கினராயினும், வினையினீங்கியவீட்டின்பமெய்துவார்.

ஏதந்தீர்சுடர்தன்னையுமெண்ணுமைம், பூதந்தன்னையும்போதிகன்றன்னையும்
பேதஞ்செய்வர்பிறப்பொழித்தோரவர், பாதஞ்சேர்தல்பரபதஞ்சேர்வதே. (உசஉ)

உன்னையெண்ணலரும்பரையெண்ணலர், மன்னையெண்ணலர்மாமலர்ப்பண்ணவன், றன்னையெண்ணலர்தண்டுளவோனையும், பின்னையெண்ணலர்பிஞ்ஞகனன்பினோர். (உசங)

நாதன்றன்னையுநாதனதம்புயப், பாதஞ்சேர்ந்துபரவினர்தம்மையும்
பேதஞ்செய்வதுபேதைமைநீரென,வேதங்கூறும்விழுப்பொருள்பொய்க்குமோ.()

Digitized By Roja Muthiah Research Library

செம்மையாகியசிந்தையர்சிரியோர், வெம்மையென்பதைவிட்டிவிளங்கினோர்
தம்மையுந்துறந்தேதலைநின்றவ, ரிம்மைதன்னினுமின்பத்தைமேவுவார். (உசரு)

இன்மையாவதியாண்டுமில்லாதவர், நன்மையென்பதியல்பெனநண்ணினோர்
புன்மையானபொருள்விரும்பாரவர், தன்மையாவரேசாற்றவல்லார்களே. (உசசு)

வேறு.

அன்னார்தன்மைதேர்கிலைவையத்தவர்போல
வுன்னாநின்றுயாங்கவர்தம்பாலுறுகின்ற
வென்னுவிக்குந்தீங்குநினைத்தாயிவையெல்லா
முன்னுவிக்குமித்தலைமைக்குமொழிவன்றே. (உசஎ)

தீதாகின்றவாசகமென்றன்செவிகேட்க
வோதாநின்றாய்மேல்வருமூற்றமுணர்கில்லாய்
பேதாய்பேதாய்நீயிவணிற்கப்பெறுவாயோ
போதாய்போதாயென்றுரைசெய்தான்புகரில்லான். (உசஅ)

கேட்டான்மைந்தன்கூறியமாற்றங்கிளர்செந்தீ
யூட்டாநின்றகண்ணினனையானச்சுறுமாற்றல்
காட்டாநின்றாய்நம்முயிர்கூற்றன்கைக்கொள்ள
மாட்டானென்றேயெண்ணினைகொல்லோவலியில்லாய். (உசகூ)

என்றான்வானத்தேறெனவார்த்தானிவனேரே
நின்றால்வாரானென்றுநினைந்தேநெடுநீலக்
குன்றாமென்னப்பாலகன்முன்னங்கொலைவேலான்
சென்றான்பாசம்வீசுவதற்குச்சிந்தித்தான். (உரு0)

எறிந்தான்பாசமீர்த்திடலுற்றானிதுபோழ்தி
லறிந்தானானுமீசனையேத்தியடிநீழற்
பிறிந்தானல்லன்மற்றினியிர்தப்பெருமைந்தன்
மறிந்தானன்றேவென்றிமையோருமருளுற்றார். (உருக)

ஈர்க்கும்பாசங்கந்தரமுற்றுமிடரில்லா
மார்க்கண்டன்முற்றான்றினனின்பால்வருதுன்பந்
தீர்க்கின்றாநீயஞ்சலையென்றேதிரையாழிக்
கார்க்கண்டத்துக்கண்ணுதலையன்கழறுற்றான். (உருஉ)

மதத்தான்மிக்கான்மற்றிவன்மைந்தனுயிர்வாங்கப்
பதைத்தானென்னவுன்னிவெகுண்டான்பதிமூன்றுஞ்
சிதைத்தான்வாமச்சேவடிதன்னாற்சிறிதுந்தி
யுதைத்தான்கூற்றன்விண்முகில்போன்மண்ணுறவீழ்ந்தான். (உருங)

வீழுங்காலத்தம்புயனாதிவிண்ணோர்கள்
வாழுந்தன்மைத்தெவ்வுலகென்னுமறுகுற்றார்
சூழும்வேலையார்த்திலதண்டத்தொகையெல்லாங்
கீழும்மேலுநெக்கனபாருங்கிழிந்தன்றே. (உருச)

பாங்காய்நின்றதானையுமூரும்பகடுந்தா
னேங்காநின்றேபார்மிசைவீழாவிறவுற்ற
தீங்காய்நின்றசெய்வினையாளர்சிதைவாகிப்
போங்காலத்திற்சேர்ந்தவர்தாமும்போகாரோ. (உருரு)

Digitized By Roja Muthiah Research Library

அந்தக்காலத்தெம்முயிர்காப்பவரனுண்டால்
வந்தக்கூற்றனென்செய்வனென்றுவடதொன்றூற்
சந்தப்பாவிற்போற்றுதல்செய்தேதனிநின்ற
மைந்தற்கானூஉவெட்பெருமானுமகிழ்வுற்றான். (உருசு)

வேறு.

மைந்தனீங்கையைவழுத்திமாசிலா, முந்துபூசனைமுயன்றதன்மையா
லந்தமில்லதோராயுணிற்கியாங், தந்துநல்கினுமென்றுசாற்றினன். (உருஎ)

சாற்றுமெல்லையிற்றனதுதாளிணை, போற்றுகின்றவன்பூசைசெய்திடு
மேற்றதாளுவுக்கிடையதாகவே, கூற்றின்கூற்றுவன்குறுகுற்றனரோ.. (உருஅ)

மறையவன்கணுமன்னுதென்புலத், திறையவன்கணுமிகல்பற்றின்றரோ
வறிவர்தேர்குறிணையன்செய்தன, முறையதாகுமான்முதன்மைப்பாலதே.(உருகூ)

நின்றமைந்தனுநித்தன்மேனியை, யொன்றுமன்பினுளுன்னியேமணி
கன்றிகையெனுங்கடவுளாலயஞ், சென்றுநாதன்றாள்சென்னிசேர்த்தினன். ()

புந்திநைந்திடப்புலம்பிராட்டநீர், சிந்தும்வேலையிற்றிளைத்துச்சாம்பிய
தந்தையன்னைதாடழுவித்தாழ்ந்திடா, முந்துமாகுலமுழுதுமாற்றினன். (உசுக)

அங்கண்சில்பகலமர்ந்துநீங்கியே, செங்கணேறுடைச்செல்வன்மல்கியே
தங்குகின்றநற்றானம்யாவையும், பொங்குகாதலிற்போற்றன்மேயினன். (உசுஉ)

அத்தனாலயமனைத்தும்வைகலும், பத்தியோடுமுன்பரவியேமிகுஞ்
சுத்தனாகியேதொலைவிலாருயிர், முத்தியெய்தினன்முழுதுணர்ந்துளான். (உசுங)

விண்ணின்பாலுளன் விரும்பிப்போற்றுவோர், கண்ணின்பாலுளன் கருத்தின்பா
லுளன், மண்ணின்பாலுளன்மற்றவன்செய, லெண்ணின்பாலதோவிசையின்பா
லதோ. (உசுச)

முண்டகத்திடைமுளைத்தவன்றுயில், கொண்டவெல்லையைக்குணிக்கிலாவதெ
னண்டநல்கியோன்றுஞ்சவாங்கவன், கண்டகற்பமோகணக்கிலாதவே. (உசுரு)

அன்னவன்றனையலக்கண்செய்திடுந், தென்னவன்னுயிர்சிதைந்துபோதலாற்
பன்னகத்திறைபரித்தபார்மிசை, மன்னுபல்லுயிர்வளர்ந்துமல்கிற்றே. (உசுசு)

முடிவின்றாமுயிர்முற்றும்பற்பகன், மடிவின்றாகியேமலியும்பான்மையாற்
படியின்மங்கையும்பரம்பொறாதுமா, லடியின்வீழ்ந்துதன்னயர்வுகூறினள். உசுஎ

கொண்டல்வண்ணனுங்குலிசபாணியும், புண்டரீகமேற்பொலிந்தபோதனு
மண்டர்யாவருமணுகியாலமார், கண்டன்மேவுறுங்கயிலைமேவினர். (உசுஅ)

காவியம்மலர்கடுத்தகந்தரத், தேவுபொற்பதஞ்சென்னிசேர்த்தியே
தாவில்பங்கயச்சதுர்முகத்தனும், பூவைவண்ணனும்போற்றன்மேயினர். (உசுகூ)

நீலகண்டனாநிமலன்முன்னரே, சாலுமன்பொடுந்தாழ்ந்துபோற்றலு
மாலைரோக்கிநீர்வந்ததென்னென, வேலுமாற்றினாலிதனைக்கூறுவான். (உஎ0)

வேறு.

பங்கயமிசைவருபகவனாதியா, விங்குளதலைவர்களெவருமித்துணைத்
தங்கடமரசியறவாதுபோற்றினா, ரங்கவர்தமக்குநீயளித்தவண்ணமே. (உஎக)

ஐயநீயெனக்குமுன்னளித்தகாப்பினைத், துய்யநின்றிருவருடுணையதாகவே
வைகலும்புரிகுவன்வழாதுமற்றதற், கெய்தியதோர்குறையிசைப்பன்கேட்டிநீ. ()

Digitized By Roja Muthiah Research Library

நின்பெருந்திருவருணினைகிலாமையாற், றென்புலக்சோமகன்சிதைந்துபோயினான்
மன்பதைக்குலம்பிறவளர்ந்துமிக்கன, துன்பமுற்றனளவைசுமக்கும்பூமகள். ()

தன்புடையெவற்றையுந்தாங்குகின்றவ,டுன்புறவுயிரெலாந்தோன்றித்தோன்றியே
பின்பிறவாமலேபெருகிவைகுமே, லென்படுமென்படுமெனதுகாவலே. (உஎச)

இறத்திடுமரசினுக்கெவருமில்லைநீ, செறுத்திடலந்தகன்செய்சதீமையைப்
பொறுத்தருளவன்றனைப்புரிதியீங்கிது,மறுத்திடலென்றடிவணங்கிவேண்டவே.()

அந்தகவெழுகெனவமலநாயகன், முந்தருள்புரிதலுமுடிந்தகூற்றுவன், வந்தனன்றொழுதனன்வணங்கித்தாள்பட, வுய்ந்தனனடியனென்றுணர்ந்துபோற்றினான்.

போற்றிடுதருமனைப்புராரிநோக்கியே, சாற்றிடுகின்றனன்றயங்குகண்டிகை
நீற்றொடுபுனைந்தெமைநினையுநீரர்பாற், கூற்றுவன்யானெனக்குறுகுவாயலை. உஎஎ

நண்ணருங்கதிபெறுநமதுதொண்டரை, மண்ணுலகத்தவர்மனிதரேயென, வெண்ணலையவர்தமையாமென்றெண்ணுதி, கண்ணுறினன்னவர்கழலின்வீழ்தியால்.

கண்ணியமனமொழிகாயமீறதா, வெண்ணியகருவிகளிடையதாகவே
புண்ணியமொடுபவம்புரியுமேனையர், விண்ணொடுநிரயமேன்மேவச்செய்திநீ. உஎகூ

என்றருள்புரிந்துநின்படையொடேகென,மன்றமராடிமிசைவணங்கிமுன்னரே, பொன்றியபகட்டொடும் பொருநர்தம்மொடுந், தென்றிசைபுகுந்துதன் செயலின்மேவினான். (உஅ0)

சித்தசற்புரிதருசெங்கண்மான்முதன், மொய்த்திடுகடவுளர்முனிவர்மும்முறை
நித்தனைவணங்கினர்கயிலைநீங்கினர், தத்தமதுறையுளிற்சார்தன்மேயினார். (உஅக)

கொன்னவிலடுபடைக்கூற்றன்பண்டுபோ, லின்னமும்விளைகுவதென்கொலோவென, மன்னருள்பெற்றமார்க்கண்டன்மாக்கதை, பன்னினர்முன்னமும்படர்தற்கஞ்சுமால். (உஅஉ)

ஆதலிற்குச்சகனருந்தவத்திலோர், மாதுயிரளித்தனன்மால்களிற்றினைக்
காதுகைநீக்கியொண்கடவுளாக்கியே, மேதகுவிண்ணிடைமேவச்செய்தனன். ()

உதவியமிருககண்டுயென்மாலயன், முதலவர்புகழ்தருமுதன்மைபெற்றனன், விதிமுறையவனருண்மிருகண்டொப்பிலோர், புதல்வனைப்பெற்றனன்புரிந்தநோன்மையால். (உஅச)

அப்பெருந்திருமகனுற்றுநோன்பினாற், றப்பரும்விதியினைத்தணந்துகூற்றுவன்
றுப்பினையகற்றியேதொலைவுகண்டுபின், னெப்பொழுதத்தினுமிறப்பின்றாயினான்.

மார்க்கண்டேயப்படலமுற்றிற்று.

ஆகு திருவிருத்தம் சஅகூ.

# மாயையுபதேசப்படலம்.

அன்னதுசரதமேயறிதிராதலா, லின்னமுமொழிகுவனியற்றுநோன்பென
முன்னுறுகாசிபமுனிவன்செப்பலு, நன்னயமாயவளகைத்துக்கூறுவாள். (க)

மறைதெரிமுனிவநீவாய்மையாகிய, வுறுதியைமொழிந்தனையுயர்ந்தவீடுறு
மறிவுடைமுனிவரர்க்கன்றிநாமருள், சிறுவருக்கித்திறஞ்செப்பலாகுமோ. (உ)

Digitized By Roja Muthiah Research Library

நன்பெருஞ்செல்வமுநவையில்கொற்றமு, மின்பமுமழிவிலாதிருக்குமாயுளு
மன்பெருஞ்சீர்த்தியுமறுவில்வாழ்க்கையு,மன்புடையிளையவரடைதல்வேண்டுமால்

காதலாலவையெலாங்கடிதிற்பெற்றிட, மாதவமுனிவரவகுத்தியென்றனு
மீதுகொலோவுனதெண்ணநீயவர்க், காதகுமியல்பினையறைதியென்னவே. (ச)

மாயவடன்சிறுர்வதனநோக்கியே, தூயவிம்முனிவரன்சொற்றதுண்மையே
யாயினுமுங்களுக்காவதன்றவை, நீயிர்கள்கேண்மெனநெறியிற்கூறுவாள். (ரு)

மாற்படுபுர்திமின்மறுவில்சேதனம், பாற்படுமுயிர்க்கெலாம்பவத்தின்மாண்பய
னூற்படுகல்வியினுவல்வளத்தினின், மேற்படுகின்றதில்விழுமிதில்லையே. (சு)

திருமைகொள்வளனொடுநிதில்கல்வியா, திருமையினென்றினையெய்திடாதெனி
னருமைகொளவ்வுயிரதனினுற்றவும், பெருமையதுடையதுபேயின்றேற்றமே. ()

பிறந்தநல்லுயிர்க்கெலாம்பெருமைநல்கிய, விறந்தமேதோர்பொருண்மையதிரண்டி
ன்வன்மையு, மறிந்தவர்தெரிவரேலரியகல்வியிற், சிறந்ததுதிருவெனச்செப்பலா
குமால். (அ)

சொற்றருகலையெலாந்தொடர்ந்துபற்பகல், கற்றவராயினுங்கழிநிரப்பினு
லற்றவராவரேலாக்கம்வேண்டியே, பற்றலர்தம்மையும்பணிந்துநிற்பரால். (கூ)

அளப்பருங்கல்வியுமாக்கம்யாவையுங், கொளப்படுதன்மையிற்குறைவுறுதவை
வளர்த்தலின்மேதகவனப்புச்செய்தலிற், கிளத்திடின்மேலதுகேடில்செல்வமே.()

நூலுறுகல்வியைநுனித்துநாடியே, வாலறிவெய்தியவரத்தினோர்களு
மேலுறுதிருவொடுமேவுறுரெனின், ஞாலமங்கவர்தமைநவையுள்வைக்குமால். ()

அளப்பரும்விஞ்சையேயன்றிமேன்மையு, முளப்படுதருமமுமுயர்ந்தசீர்த்தியுங்,
கொளப்படுகொற்றமும்பிறவுங்கூட்டலால், வளத்தினிற்சிறந்ததுமற்றொன்றில்லை
யே. (கஉ)

ஆக்கமிங்கொருவராலணுகவேண்டுமே, லூக்கமுண்டாவரேனுறுவரன்னது
நீக்கமில்கொள்கையினிற்பரேயெனின், மேக்குறுபெருந்திருவிரைவின்மேவுமால்.

அவ்வளம்பலவகைத்தாகுமாங்கவை, யெவ்வரும்பெறுகிலரியல்பின்யாவையுஞ்
செவ்விதினீர்பெறச்சிந்தைசெய்யுமி, னுய்வதுவேறிலையுறுதியீதலால். (கச)

எங்கள்பானென்னலின்யாமங்தோன்றலாற், றுங்கமாநிருதர்தங்கதியிற்றுன்னினீ
ருங்களுக்கொன்னலரும்பர்யாவருந், தங்கடம்முயற்சியாற்றலைமைபெற்றுளார். ()

நீவிர்களனையரினிவந்தகொள்கைய, ராவிர்கள்போலுமாலாக்கமெய்துவான்
மூவிருமுயலுதிர்முயலும்பெற்றியை, யேவிருங்கேட்கயானெடுத்துக்கூறுகேன்.()

ஆனதோரித்திசையாலந்திவெளுத், தானறைகிற்பரித்தரைக்குநேரதாய்ப்
போனதோருத்தரபூமியாயிடைத், தானவர்நோற்றிடத்தகுவதென்பவே. (கஎ)

அப்புவியதனிடையாற்றற்கீறிலா, விப்பரிசனமொடுமேகியாயிடை
யொப்பறுகுண்டமுமொழிந்தசெய்கையு,மெய்ப்படவியற்றுதிர்வேள்விசெய்யவே.

காரிகொளிந்தனங்கதழவிட்டுமுன், றூரழன்மூட்டியேயழலின்பண்டமுஞ்
சோரியுமூன்களும்பிறவுந்தூவியே, வீரர்கள்புரிதிரால்வெய்யவேள்வியே. (கஅ)

செங்கண்மாலயன்முதற்றேவர்யாவரு, மெங்கணுயகனெனவிறைஞ்சமேதகு,க
ங்கைவார்சடைமுடிக்கடவுட்போற்றியே, பொங்குதீவேள்வியைப்புரிதிர்பற்பகல்.

Digitized By Roja Muthiah Research Library

அம்மகம்புரிதிறலருளின்முன்னுறீஇ, மைம்மலிமிடறுடைவானநாயகன்
மெய்ம்மையினவிர்கள்வெஃகியாங்கெலா, மிம்மையினெய்துமாறினிதுநல்குமால்

மூண்டவிவ்வேள்வியைமுயலமூவிரு, மாண்டுசென்றுற்றுழியன்னதற்கவண்
வேண்டியபொருளெலாம்வேறுவேறதா, யீண்டுறவுதவுவனேகுவீரென்றாள். (உஉ)

தந்திரநெறிகளுந்தவறில்பான்மையு, மந்திரமுறைகளுமற்றுமுள்ளவு
மிந்திரவளனுறுமியல்பின்மூவர்க்கு, முந்திரவுதவியமுதல்விநல்கினாள். (உங)

இன்னதோர்காலையிலின்றமாயவ,டன்னொடுதந்தையைத்தாழ்ந்துபோற்றியே,ய
ன்னவர்விடுத்திடவுணர்மேலையோன், பின்னவர்தம்மொடும்பெயர்வுற்றேகினான்.

மாயையுபதேசப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ருக0.

# மாயைநீங்குபடலம்.

ஏகியகாலையிலிளையின்மாயவள், மோகமொடயலுறுமுனியைநோக்கியே
போகுவன்யானினிப்புதல்வர்ப்பேணுவா, னீகவலேலெனநிறுவிப்போயினாள்.(க)

போதலுமுனிவரன்புந்தியுள்ளுறு, மாதரவுந்திடவவள்பின்னேகியே
யேதிலனாமெனவெனைவிட்டேகுத, னீதியதாகுமோவுரைத்திநீயென்றான். (உ)

ஆயிழைபுகலுவாளழுங்கன்மாதவ, சேயினர்பொருட்டுனைச்சேர்ந்ததன்றியீண்
டேயதுநின்னுடனிருக்கவன்றியான், மாயவளறிகெனமறைந்துபோயினாள். (ங)

அருவினள்சேறலுமற்புதத்தவன், வருபொருள்யாவையுமறைந்துபோயின
வெருவருமுறைபுரிவேந்தைவிட்டக, றிருவொடுபெயர்வதோர்செல்வம்போலவே.

மாணலனெய்தியமாயைதன்னுருக், காணலனாகியகமலத்தோன்மகன்
பூணலன்றெளிவினைப்பொருமியேங்கியே, யாணலனழிவுறவழுங்கிமாழ்குவான்.()

வாவியுந்தடங்களும்வரையுமேனவுந், தேவருங்காமுறச்செறிந்தவற்புதம்
யாவையுங்காண்கிலானிரங்கிநின்றனன், னாவியில்குரம்பையனாகுமென்னவே. (சு)

மைந்தனதுறுதுயர்மலரின்மேவிய, தந்தைதனுணர்வினாற்றகவினாடியே
யந்தரநெறியில்வந்தங்கண்மேவலு,மெந்தைவந்தனன்கொலென்றெழுந்துதாழவே

ஆசிகள்செய்துநின்னரியநோன்பொரீஇக், காசிபமெலிவதுகழறுகென்றலும்
பேசினனிகழ்ந்தனபிரமன்கேட்டுளங், கூசினனவன்மனங்கொள்ளத்தேற்றுவான்.

வேதமுங்கலைகளுமுணர்ந்துமேலதா, மூதறிவெய்தியமுனிவநீயொரு
மாதுதன்பொருட்டினான்மையலெய்தியே,பேதுறுகிற்றியோபேதைமாந்தர்போல்

கண்டதோர்நறவமேகாமமேயென, வெண்டருதீப்பொருளிருமைத்தென்பரா,
லுண்டுழியழிக்குமொன்றுணர்வையுள்ளமேற்,கொண்டுழியுயிரையுங்கொல்லுமொ
ன்றரோ. (க0)

உள்ளினுஞ்சுட்டிடுமுணருங்கேள்வியிற், சொள்ளினுஞ்சுட்டிடுங்குறுகிமற்றதைத்
தள்ளினுஞ்சுட்டிடுந்தன்மையீதினாற், கள்ளினுங்கொடியதுகாமத்தீயதே. (கக)



Digitized By Roja Muthiah Research Library

ஈட்டுறுபிறவியும்வினைகள்யாவையுங், காட்டியதினையதோர்காமமாதலின்
வாட்டமில்புந்தியான்மற்றந்நோயினை, வீட்டினரல்லரோவீடுசேர்ந்துளார். (கஉ)

நெஞ்சினுநினைப்பரோநினைந்துளார்தமை, யெஞ்சியதுயரிடையீண்டையுய்த்து
மேல், விஞ்சியபவக்கடல்வீழ்த்துமாதலா, னஞ்சினுந்தீயதுநலமில்காமமே. (கங)

ஆதலிற்காமமுற்றழுங்களிபுணர், மாதரும்வஞ்சகமாயையாகுமாற்
றீதிவணிழைத்தனைநீரத்தொன்மைபோ,னீதவம்புரிகெனநிறுவியேகினன். (கச)

மாறகனன்முகன்வாய்மைதேர்தலுந், தேறினன்மையனுய்தீர்ந்துகாசிப
னேறமர்கடவுளையிதயத்துன்னியே,வீறுடுநோற்றனன்யினையினீங்குவான். (கரு)

ஆண்டவணகன்றிடுமணங்குதன்சிறூர், மூண்டிடுதீமகமுயலுமெல்லையில்
வேண்டியதுதவுவான்விமலற்போற்றியே,பூண்டனள்பெருந்தவம்புகரினேவலால்.

காசிபன்மாயையைக்கலந்தவண்ணமு, மாசுறுமவுணர்கள்வந்தவண்ணமும்
பேசினமங்கவர்பெற்றபேற்றினை, யீசனதருளினுலினியியம்புவாம். (கஎ)

மாயைநீங்குபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ருஉஎ.

# அசுரர்யாகப்படலம்.

அன்னதனேவலாலழன்மகஞ்செய, வுன்னினளுகியேயொல்லையேகிய,முன்ன
வனிளைஞர்தம்முகத்தைநோக்கியே, யின்னதுகேண்மெனவிசைத்தன்மேயினன்.

அடல்கெழுபெருமகயதனையாற்றவே, வடதிசைசெல்வுழிமல்குதானையின்
கடையொடுநெற்றியிற்காவலாகியே, படருதிராலெனச்சூரன்பன்னினன். (உ)

இனிதெனவடிதொழுதிளவலூரக, னனிகமதீற்றினிலடைவலென்றனன்
முனிதருகோளரிமுகத்துமொய்ம்பினன், றனியகனெற்றியிற்சார்வலென்றனன்.()

பின்னவரிருவரும்பேசியித்திற,முன்னவன்விடைகொடுமுறையிற்போயின,ரன்
னவர்பணியினுலார்ப்புற்றேயெழீஇச், சென்னெறிபடர்ந்தனசேனைவெள்ளமே.()

வேறு.

தானவரனிகவெள்ளந்தரைமிசைப்பெயர்தலோடு
மானிலமடந்தையாற்றுள்வருந்தினள்பணிகளோடு
கோனுமங்கயராநின்றன்குலவரைகரிகண்மேரு
வானவுஞ்சலித்தவாதிகமடமுமழுங்கிற்றன்றே. (ரு)

மண்டுறுபூழியீட்டமலரயனுலகந்தாவி
விண்டலமீதுபோதன்மேதினியசுரவெள்ள
மெண்டருநிலைமைத்தன்றல்யான்பொறுக்கல்லேனென்றுக்
கொண்டல்வண்ணத்தனேடுகூறுவான்சேறல்போலும். (சு)

காழுறுமவுணர்தானைக்கனைகழற்றுழனிமுன்ன
ராழியங்கடலுநேராயார்த்திடுங்கொல்லோவென்று
வூழுறுசினங்கொண்டென்னவுலப்பிலாவவுணர்தாளிற்
பூழியதெழுந்துசென்றுபுணரிவாய்பொத்திற்றன்றே. (எ)

Digitized By Roja Muthiah Research Library

மரந்துகள்பட்டமேருவரையெனச்சிறந்தமெய்ப்பூ
தரந்துகள்பட்டயாதுந்தனதெனத்தாங்குசேட
னுரந்துகள்பட்டநேருமுயிர்துகள்பட்டதொன்னாட்
புரந்துகள்பட்டதேபோற்புவிதுகள்பட்டதன்றே. (அ)

ஆடலினவுணவெள்ளத்தரவமுமளையர்செல்ல
நீடியபூழிதானுநெறிப்படவருதலோடு
நாடியவமரரஞ்சிநடுக்குறுநமதுவேதா
வீடினன்கொல்லோநீத்தம்விண்ணுறும்போலுமென்றார். (கூ)

மாசகறிருவின்மிக்கமாயவண்முன்னந்தந்த
தேசுறுமவுணவெள்ளந்திசையெலாமயுதமென்னும்
யோசனையெல்லையாகவும்பரினிடத்துமற்றைக்
காசினியிடத்துமாகிக்கலந்துடன்றழுவிச்சென்ற. (க0)

அஞ்சினனமரர்வேந்தனயர்ந்தனனங்கிப்புத்தே
ளெஞ்சினன்வன்மைகூற்றனினைந்தனனிருதியெய்த்தான்
றஞ்சமில்வருணன்வாயுத்தளர்ந்தனன்றனதன்சோர்ந்தா
னெஞ்சழிந்தனனீசானனிருதர்பேரரவஞ்சூழ. (கக)

வள்ளுறுமெயிற்றுச்செங்கண்வலிகெழுமவுணர்தானை
வெள்ளமதேகப்பூழிவிரிந்தெழீஇயாண்டும்போகிப்
பொள்ளெனமெய்யேதீண்டிப்புறத்தெழிலழித்தவானோ
ருள்ளுணர்வழித்ததன்றேயனையர்களார்க்குமோதை. (கஉ)

பேருமிவ்வவுணர்தானைப்பெருக்கினதணியின்முன்ன
ராரழல்வெருவுசீற்றத்தரிமுகன்செல்லக்கூழை
தாரகவிறலோன்செல்லத்தலையளிபுரிந்துநாப்பட்
சூரனென்றுரைக்கும்வெய்யோன்றுண்ணெனவேகினானால். (கங)

வேறு.

ஆனபொழுதத்தவர்க்காணியநினைந்து
தானவர்கள்போற்றுந்தனிக்குரவன்றண்டரள
மானமிசையூர்ந்துவந்தணுகிவல்லவுணர்
சேனையெனச்செல்லுந்திரைக்கடலைக்கண்ணுற்றான். (கச)

கண்ணின்றவீரர்கடுப்பும்பெருமிடலு
முண்ணின்றகாழ்ப்புமுரனுங்கொடுந்திறலு
மெண்ணங்கொள்வேர்வுமிகலுந்தெரிவுற்றுத்
துண்ணென்னநெஞ்சம்புகருந்துளக்குற்றான். (கரு)

கண்டேனிவர்தங்கடுந்திறலினாட்சிதனைப்
பண்டேயவுணரளப்பிலரைப்பார்த்துணர்வேன்
றண்டேனிதழியான்றன்னருளின்வண்ணமோ
வுண்டேயிவருக்கொருவர்நிகருற்றாரே. (கசு)

வானோரிறையுடனுமாலுடனுமற்றுள்ள
வேனோருடனுமிகலாடிவென்றிடுகை
தானோர்பொருளோதமையெதிர்ந்தமாற்றலர்த
மூனோடுயிரையொருங்குண்ணுந்தீயவர்க்கே. (கஎ)

Digitized By Roja Muthiah Research Library

இன்னோர்தம்வன்மைக்கிறுதியிலவேனு
முன்னோர்தமைப்போன்முயனுந்தவவலியும்
பின்னோர்வரமும்பெரும்படையுங்கொண்டிலரா
லன்னோவிவர்க்குங்குறையுண்மையாகியதே. (கஅ)

தண்டத்திறையைக்கடந்ததனியாற்றல்
கொண்டுற்றவற்கேகுறைகண்டிலமேனை
யண்டத்தவர்க்குமனைவர்க்குமொவ்வொர்குறை
யுண்டத்தகைமையெவருமுணர்குவரால். (கக)

ஆதலினின்னோர்பாலடைவுற்றிடும்வறுமை
போதுசிலநோன்புபுரியினகன்றிடுமோ
வீதுநிலைத்தன்றேயிழிந்தோருயர்ந்திடுவர்
காதிபுதல்வனிதற்குக்கரியன்றே. (உ0)

என்னப்பலவுமிசைத்துநின்றுதானவர்கண்
மன்னர்க்குமன்னுகவாழ்வெய்துசூரபன்மன்
முன்னுற்றிடவுமுகமன்மொழிந்திடவு
முன்னுற்றனனுணர்வுசேர்காப்பியனே. (உக)

தீயின்றிறமுருக்குஞ்சீற்றத்தவுணனெதிர்
போயங்குறவும்புகன்றிடவுந்தானரிதா
லேயுந்தகுவருடனென்னுழையிற்சார்வதற்கோர்
மாயங்கொள்விஞ்சைபுரிவேனெனமதித்தான். (உஉ)

மண்ணிலுயிரைவசிகரிக்குமந்திரமொன்
றெண்ணிவிதிமுறையேநோக்கியெதிர்சென்று
நண்ணியவெஞ்சேனைநரலைநடுவட்புக்கா
னண்ணலவுணற்கணித்தாயடைகுற்றான். (உ௩)

கள்ளமிகுமவுணர்சிந்தையெனுங்காழிரும்பா
யுள்ளவுருகியுரைகெழுமாயத்தீயி
னெள்ளவருங்கறையுமேகியயந்திட்டனவால்
வெள்ளிமிகப்புணர்க்கின்மேலையுருநின்றிடுமோ. (உச)

சூழிக்கடலிற்றுவன்றுமவுணப்படைஞர்
காழற்றபுந்தியொடுகைதொழலுங்கேசரிக்கும்
பூழைக்கரன்றனக்குமுன்னைப்புரவலன்முன்
கேழுற்றவாசிகுரவன்கிளத்திடுவான். (உ௫)

வாலாதிமான்றேர்மகபதிக்குமேனையர்க்கு
மேலாதிதானவர்கள்வெய்யதுயர்நோயகற்ற
வேலாதியேகடுகமென்றுரைக்குமின்மருந்து
போலாதியென்னவவுணன்புகன்றிடுவான். (உசு)

காரையூர்கின்றகடவுளர்கோன்வைகலுறு
மூரையோமேலையுலகுதனிலுள்ளாயோ
பாரையோகட்செவிகள்பாதலத்தையோவெந்தா
யாரைநீதேற்றேனினி வனுற்றவாறென்னே. (உஎ)

Digitized By Roja Muthiah Research Library

உன்பாலென்னெஞ்சமுருகுமஃதன்றி
யென்பானதுமுருகாநிற்குமெனையறியா
தன்பானினின்றதருந்தவத்தையாற்றவனந்
தன்பாலணுகுதற்குத்தாளுமெழுகின்றிலவே. (உஅ)

நன்னேயம்பூண்டுநடந்தாயுயிரெல்லா
மன்னேயெனவந்தளிக்குந்தகையாயோ
வின்னேயுனையெதிர்ந்தேன்யாக்கைமிகவருந்தி
முன்னேதமியேன்புரிந்ததவமொய்ம்பன்றே. (உகூ)

வேறு.

என்றலுங்கவிஞன்கேளாவிருவிசும்பாற்றிற்செல்வே
னுன்றனிமரபிற்கெல்லாமொருபெருங்குரவனானே
னன்றிகொள்புகரோனென்னுநாமமுற்றுடையேனின்பாற்
சென்றனனுறுதியொன்றுதெளித்திடல்வேண்டியென்றான். (௩0)

அவுணர்கண்முதலாயுள்ளோனங்கதுவினவியாற்ற
வுவகையனாகியெந்தாயுய்ந்தனனிவண்யானென்னாக்
கவிஞனையணுகிநின்றுகைதொழூஉப்பரவலோடுஞ்
சிவனருணெறியாலன்னோனித்திறஞ்செப்பலுற்றான். (௩௧)

நாற்றொடர்கேள்விசான்றோய்நோற்றுநீயிருக்குமெல்லை
யூறுசெய்கிற்பரொன்னாருளையவைகுறுகாவண்ணங்
கூறுதுந்திறனொன்றென்னாக்கூற்றுவற்கடந்தமேலோன்
மாறின்மந்திரமதொன்றுமரபுளிவழாமலீந்தான். (௩௨)

மொய்கெழுகூற்றைவென்றமுதல்வன்மந்திரத்தைநல்கி
வைகலுமிதனையுன்னிமனத்தொடுபுலனொன்றாக்கிப்
பொய்கொலைகளவுகாமம்புன்மைகளுறாமேபோற்றிச்
செய்குதிதவத்தையென்னாச்செவியறிவுறுத்தல்செய்தான். (௩௩)

அப்பரிசனைத்துந்தேராவவனடிவணங்கியெந்தா
யிப்பணிபுரிவனென்னவெல்லைதீராசிகூறி
மெய்ப்புகர்மீண்டுசென்றான்மேதகுமவுணர்சூழ
வொப்பருமாயைசெம்மல்வடபுலத்தொல்லைபோனான். (௩௪)

வழிமுறைபயக்கநோக்கும்வடபுலந்தன்னிலேகிப்
பழுமரவனத்திலாங்கோர்பாங்கரிற்குறுகிச்சூர
னழல்கெழுமகத்தையாற்றவயுதயோசனையுள்வைத்துச்
செழுமதிலதுசூழ்பான்மைசெய்திடச்சிந்தைசெய்தான். (௩௫)

அடல்கெழுதானையாகுமவுணர்தங்குழுவைக்கூவிப்
படிதனிலடுக்கல்யாவும்பறித்தனர்கொணருவித்து
வடவரைநிவப்பிற்சூழவாரியாப்புரிவித்தாங்கே
நடுநெடுவாயில்போக்கிஞாயிலுமியற்றுவித்தான். (௩௬)

நூற்படுசெவ்விநாடிநொய்தெனவங்கட்செய்த
மாற்பெருமதிலைச்சூழவரம்பறுதானைதன்னை
யேற்புடையரணமாகவியற்றுவித்தியாருஞ்செல்ல
நாற்பெருந்திசையினூடுநலனுறவாய்தல்செய்தான். (௩௭)

Digitized By Roja Muthiah Research Library

பூமியும்வானுமொன்றப்பொருப்பினுற்புரியப்பட்டு
நாமியம்பரிதாநின்றநாமநீள்காப்புமப்பா
லேமுறுமவுணவெள்ளத்தெடுத்திடுமெயிலுஞ்சேர்ந்து
நேமியங்கிரியுஞ்சூழ்ந்தநிசியுநேர்ந்திருந்தவன்றே. (௩௮)

ஞாயிலின்வேலிமானநகங்களாலடுக்கல்செய்த
பாயிருநொச்சிதன்னிற்படைகுலாம்புரிசைதன்னில்
வாயில்கடோறும்போற்றமந்திரமுறையாற்கூவி
நேயமொடடுபோர்மாதைநிறுவினனிகரிலாதான். (௩௯)

ஆளரிமுகத்தன்முன்னோனடுக்கலாற்படையாற்செய்த
நீளிகல்வாரிமுன்னர்நெறிகொண்மந்திரத்தாற்கூவிக்
கூளிகடொகையுமோட்டுக்குணங்கரின்றொகையுஞ்சீற்றக்
காளிகடொகையுஞ்சூழ்போய்க்காப்புறநிறுவிவிட்டான். (௪0)

கயிரவமனையசெங்கட்காளிகண்முதலோர்தம்மைச்
செயிரறநிறுவிப்பின்னர்ச்சீர்கொண்மந்திரத்தாற்பன்னி
யயிரறநெடிதுபோற்றியவுணர்கோனங்கண்வந்த
வயிரவகணத்தைவேள்விகாத்திடவணங்கிவைத்தான். (௪௧)

வேறு.

தள்ளரிதாகியகாப்பிவைசெய்திடுதனிவீர
னுள்ளுறவாயிரவாயிரயோசனையுறநீளங்
கொள்வதொராழமுமாயிடவோரோமகுண்டந்தா
னள்ளிடையேபுரிவித்தனன்மாமகநலமாக. (௪௨)

ஆதிதனக்கனல்வேள்வியியற்றிடவடுசூரன்
வேதிதனைப்புரிவித்திடுகாலையில்வியன்ஞாலம்
பாதகரெம்மைவருத்தினரென்றுபதைப்புற்றுப்
பேதுறவெய்தியிரங்கியொடுங்கினள்பெயர்வில்லாள். (௪௩)

ஆழமதாயிரயோசனையாவவணகழ்செய்கை
யூழுறநாடியசேடனுமாயிடையுறைவோருங்
கீழுறுவாரிவணெய்துவர்தானவர்கிளையென்றுத்
தாழுறவேகினர்முன்னுறுதொன்னிலைதனைநீங்கி. (௪௪)

ஆழ்ந்திடவம்மகவேதியியற்றலுமதுபோழ்திற்
றாழ்ந்திடுநீத்தமெழுந்திடநாடியதனிவேந்தன்
சூழ்ந்தனர்நுங்களையுண்குவர்மீதெழறுணிபன்றே
போழ்ந்தனைபாதலமேகெனவவ்வழிபோகிற்றால். (௪௫)

போதலுமப்புனலவ்வழிகீழிடைபோகின்ற
பாதலமீறெனுமேழ்நிலையோரதுபாராநின்
றீதிவண்வந்துளதென்னெனவற்புதவியலெய்தாப்
பேதுறுகின்றனர்தீங்கிதுவென்றுபிடித்தாராய். (௪௬)

சீறரிமாமுகன்முன்னவனாகியதிறன்மேலோன்
மாறகல்குண்டமதிவ்வகைகாப்பண்வகுப்பித்தே
நூறுடனெட்டதுசூழ்தரவாக்குபுநவல்வேதி
வேறுமொராயிரவெட்டவைசுற்றவிதிப்பித்தான். (௪௭)

Digitized By Roja Muthiah Research Library

மூவகைவேதியுமானபின்வேள்வியைமுயல்வாளு
யாவதோர்பல்பொருள்வேண்டிநினைந்தனளருள்யாயைப்
பாவனைபண்ணலுமங்கதுகண்டனள்பரிவெய்தித்
தேவர்கடேடவனதின்னருளாலிவைசேர்விப்பாள். (சஅ)

சேயம்வயப்புலியாளியொடெண்குதிறற்கைம்மாப்
பாய்பரிசெச்சைகளாதியவாகியபன்மாவின்
றூயபுழுக்கலினூனவிநேமிதொகுப்பித்தா
ளாயவுடற்குருதிக்கடறன்னையுமமர்வித்தாள். (சகூ)

பழிதருமெண்ணெயெனுங்கடலோரிடைபயில்வித்தா
ளிழுதெனும்வாரிதிதானுமோர்சாரிலிருப்பித்தா
டொழுதகுபாறயிர்நேமியுமோரிடைதொகுவித்தாள்
வழிதருமட்டெனும்வேலையுமோரிடைவருவித்தாள். (ருo)

ஐயவிகாருறுதீங்கறியேமுதலழல்காலும்
வெய்யனபல்வளன்யாவையுமோர்புடைமிகுவித்தா
ணெய்யுறுமுண்டியின்மால்வரையோர்புடைநிறைவித்தாண்
மையறுதொல்பசுயாவையுமோர்புடைவருவித்தாள். (ருக)

அரும்பெறனுயகமாகியவேதியினகனுப்பண்
வரும்பரிசானிறுவுற்றிடமேலுயர்வடிவாகிப்
பெரும்புவியுண்டுமிழ்கண்ணபிரான்றுயில்பெற்றித்தா
யுரம்பெறுவச்சிரகம்பமதொன்றினையுய்த்திட்டாள். (ருஉ)

தெரிதருசெந்நெலின்வாலரியோர்புடைசெறிவித்தா
ளரிசனநீவியதண்டுலமோர்புடையமைவித்தாண்
மருமலர்மான்மதமாதியவோர்புடைவருவித்தாள்
சுருவையுநீடுதருப்பையுமோர்புடைதொகுவித்தாள். (ருங)

ஆல்முயிர்க்கும்வரம்பிலதாருவினணிகொம்பர்
வாலிதின்மெய்ச்சமிதைக்குலமாமெனவரையேபோற்
சாலமிகுத்தனளோர்புடைவேள்விதனக்கென்றோர்
பாலினிரைத்தனள்கொள்கலமாகியபடியெல்லாம். (ருச)

பொன்னினகந்தொறும்வெள்ளிமுளைத்திடுபொருளேபோற்
செந்நெலினூற்றிடுதீம்பொரியோர்புடைசெறிவித்தே
துன்னியவெண்முதிரைக்குலமோர்புடைதூர்த்திட்டாள்
பின்னரும்வேண்டுவயாவையுநல்கினள்பெருமாயை. (ருரு)

மூவகையாயிரயோசனையெல்லையின்முரண்வேள்விக்
காவனநல்கினள்போதலும்யாய்செயலதுநோக்கி
யோவிதுயாரின்முடிந்திடும்வேண்டுவவுய்த்தாளே
யேவருமெண்ணவிவ்வேள்வியியற்றுவனினியென்றான். (ருசு)

ஊன்புகுபல்வகையாவியுமீண்டியவுலகெல்லாந்
தான்புகுதன்விறல்காட்டியநாட்டியதானுப்போன்
மேன்புகுசூரனடுத்திகழ்வேதியின்மிகுநாப்பண்
வான்புகுவச்சிரகம்பநிரீஇயினன்வலிதன்னால். (ருஎ)

Digitized By Roja Muthiah Research Library

வச்சிரகம்பரிதீஇயினபின்னர்மகம்போற்று
நொச்சியினூற்றிசைவாயிற்றொறுந்தொறுநொய்திற்போ
யச்சுறுவீரமடந்தையையுன்னியருச்சித்துச்
செச்சைகளாதியவூன்பலிநல்குபுசெல்கின்றான். (ருஅ)

வேறு.

செல்லுஞ்சூரனொச்சியினுப்பட்செறிகின்ற
கல்லென்வெஞ்சொற்பூதர்தொகைக்குங்கணமென்றே
சொல்லும்பேயின்பல்குழுவுக்குஞ்சோர்வின்றி
யொல்லும்பான்மையூன்பலியாவையுமுதவுற்றான். (ருகூ)

சிற்றத்துப்பிற்காளிகளுக்குந்தென்பாலிற்
கூற்றைக்காயும்வயிரவர்தங்கள்குழுவுக்கு
மேற்றத்தோடுமர்ச்சனைசெய்தேயினிதாகப்
போற்றிப்போற்றியூன்பலிவேண்டுபுரிகுற்றான். (சு0)

சூழாமெட்டேயாயிரவேதிதொறுநாப்பட்
காழார்நஞ்சினிந்தனமிட்டுக்கனன்மூட்டித்
தாழாமேதன்றம்பியரோடுந்தகுசூர
னூழானுற்றானவிவர்க்கமுறநேர்ந்தான். (சுக)

நேருந்தோறுமெந்தைதனுமநெறிசெப்பிச்
சேருமன்பாலன்னதவன்பாற்செலவுய்த்துச்
சூரன்பின்னரிம்மகமாற்றுந்தொழில்வல்லோ
னாரென்றுன்னித்தாரகனைப்பார்த்தறைகின்றான். (சுஉ)

ஏற்றஞ்சேரிவ்வேதிகடோறுமிறைதாழா
தாற்றங்கொண்டேயேகினைவேள்வியுலவாம
லாற்றுந்தன்மைவல்லவனீயேயதுவல்லே
போற்றிங்கென்னாக்கூறிநிறுத்திப்போகுற்றான். (சுங)

அப்பாலேகிநூறுடனெட்டாமகல்வேதி
துப்பாலெய்திமுன்னவையேபோற்றொடர்வேள்வி
தப்பாதாற்றிச்சீயமுகத்தோன்றனைநோக்கி
யிப்பாலுற்றிம்மாமகமாற்றாயினிதென்றான். (சுச)

வேறு.

தெரியவின்னணஞ்செப்பியவுணர்கோ, னரியின்மாமுகத்தானையவணிறீஇப்
பெரிதுநள்ளுறுபெற்றியிற்செய்ததன், னூரியவேதியினெல்லையின்மேயினான். ()

வேதியெய்திவிதியுளியர்ச்சனை, யாதுமோர்குறையின்றியியற்றியே
மாதொர்பங்குடைவள்ளலையுன்னியோ, ரேதில்வேள்வியியற்றுதன்மேயினான். ()

நஞ்சுபில்குநவையுடைத்தாருவின், விஞ்சுசாகைவியன்றுணியாவையும்
புஞ்சமோடுபொருக்கெனவேதியிற், றுஞ்சிடும்வகைசூரனுந்தூவினான். (சுஎ)

ஆலமாகியமர்தருவின்ஞெலி, கோலினுக்கியகொந்தழலிட்டுமுன்
னேலமூட்டியிழுதெனுமாமழை, சீலமந்திரத்தோடுசிதறினான். (சுஅ)

அன்னதற்பினரம்பொற்குழிசிக, டுன்னுகின்றதுணிபடுமூன்றொகை
வன்னியின்கண்மரபினின்றுய்த்தனன், செந்நிறக்குருதிக்கடல்சிந்தியே. (சுகூ)

Digitized By Roja Muthiah Research Library

செய்யதோர்மகச்செந்தழன்மீமிசைத், துய்யவோதனஞ்சொன்முறைதூர்த்தன
னெய்யுமெண்ணெயுநீடியசோரியும், வெய்யபாலுந்ததியும்விடுத்துமேல். (எ0)

மேனசாலியின்வெண்பொரியின்குவை, யானநல்கியழிதருமீற்றினில்
வானுலாயமறிகடலாமெனத், தேனுமாலியுந்தீமிசைச்சிந்தியே. (எக)

தோரையையவனஞ்சூழ்தடத்துற்றநீ, வாரமேனலிறுங்கொடுமற்றவு
மூரியெள்ளுமுதிரையின்வர்க்கமுஞ், சேரவுய்த்தனனெய்க்கடல்சிந்தினன். (எஉ)

கொடியவையவிசூர்கறியாதியாப், படியில்வெய்யபலபொருள்யாவையு
நெடிதுமோச்சினனேயமதாகிய, கடலைவன்னிகவிழ்த்தனனென்பவே. (எங)

இன்னபல்வகையாவுமியல்பினுற், பொன்னுலாஞ்சடைப்புண்ணியன்றன்னையே
முன்னிவேள்விமுயன்றனன்ஞாலமேற், றுன்னுசீர்த்தியன்சூரபன்மாவென்பான்.

வேறு.

சூரனுமவனவ்வழிப்பெருவளஞ்சுட்டி
வீரவேள்வியைவேட்டலுஞ்செந்தழல்விரைவி
னூருமச்சுறவெழுந்துமீச்சென்றனவடுதீப்
பாரைநுங்கிவானுலகெலாமுணவெழும்பரிசின். (எரு)

வானம்புக்கதுமாதிரம்புக்கதுமலரோன்
றானம்புக்கதெவ்வுலகமும்புக்கதுதரைக்கீ
ழேனம்புக்குமுன்னுடருங்கழலினுற்கியற்றுங்
கானம்புக்கதோர்வேள்வியினெழுங்கொழுங்கனலே. (எசு)

பானுவின்பதஞ்சுட்டதுபனிமதிபதமு
மீனெனும்படிநின்றவர்பதங்களுமேலோர்
போனமேக்குயர்பதங்களுஞ்சுட்டதுபுலவோர்
கோனுறும்பதஞ்சுட்டதுவேள்வியிற்கொடுந்தீ. (எஎ)

செற்றுவாசவன்பதந்தனைச்சுட்டபின்சேண்போய்
மற்றைமேலவர்பதமெலாஞ்சுட்டதுமருங்கிற்
சுற்றுபாலர்தம்புரங்களுஞ்சுட்டதுசூர
னற்றமில்வகையாற்றியவேள்வியுளனலே. (எஅ)

காலமெண்ணிலதவம்புரிகாசிபமுனிவன்
பாலனீண்டையில்வலியினோர்மகமதுபயில
வேலைநீடுதீயுலகெலாமுருக்கியதென்னின்
மேலவன்செயும்பரிசெலாம்யாவரேவிதிப்பார். (எகூ)

கார்மறைத்தனகதிர்மதிமறைத்தனகரியோ
னூர்மறைத்தனவயன்பதமறைத்தனவுலவா
நீர்மறைத்தனநெருப்பையுமறைத்தனநீடும்
பார்மறைத்தனவிடையிடையெழும்புகைப்படலை. (அ0)

சொற்றவேதியிவ்வியற்கையாலெரிந்ததுசூரன்
பிற்றையோர்கடமெட்டுநூறுயிரபேத
முற்றவேதிகள்யாவையுமெரிந்தனவொருங்கே
முற்றும்வன்னிகளிறுதிநாளுலகின்மொய்த்தெனவே (அக)



Digitized By Roja Muthiah Research Library

வேள்வியித்திறஞ்சூர்புரிதன்மையைவிரைவிற்
கேள்வியாலுணரிந்திரனச்செயற்கேடு
சூழநாடினன்முடிப்பருந்தன்மையிற்றுளங்கி
யாழ்வதோர்துயர்க்கடலிடையழுந்தினனயர்ந்தே. (அஉ)

சூன்முகக்கொண்டன்மேனியுமுனிவரர்தொகையு
நான்முகத்தனுஞ்சூரபன்மன்செயனுடிப்
பான்மைமற்றிதுயாவரேபுரிவரிப்பதகன்
மேன்மைபெற்றிடமுயன்றனன்கொல்லெனவெருண்டார். (அங)

இந்தவண்ணத்தினொருபதினுயிரம்யாண்டு
முந்துசூர்தனதிளைஞரோடருமகமுயல
வந்திவார்சடைக்கண்ணுதனின்மலனவன்பால்
வந்திலானதுதேர்ந்தனனிருதர்கோன்மாதோ. (அச)

கண்ணுதற்பரனருள்செயாத்தன்மையைக்கருத்தி
லெண்ணியிச்செயற்குறுவனேசிவனெனவிசையாப்
பண்ணுமத்தொழில்பின்னவர்தங்கள்பாற்பணித்து
விண்ணகத்தின்மீச்சென்றனன்கடவுளர்வெருவ. (அரு)

வானகத்திடைநிற்புறுசூரபன்மாவாந்
தானவர்க்கிறைவாள்கொடேயீர்ந்துதன்மெய்யி
லூனனைத்தையுமங்கிமேலவியெனவோச்சிச்
சோனையொத்ததன்குருதியையிழுதெனச்சொரிந்தான். (அசு)

சோரிநெய்யவாவூன்களேயவியவாச்சூரன்
வீரமாமகம்புரிவுழித்தனதுமெய்ம்மிசையூ
னீரவீரவேமுன்னையின்வளர்தலுமிதுகண்
டாருமச்சுறத்தெழித்தனன்விம்மிதமானுன். (அஎ)

சிந்தையிற்பெருமகிழ்ச்சியனுகியிச்செய்கை
யெந்தையற்புறுநிலையதோவெனமனத்தெண்ணு
மந்தரப்புயநிருதர்கோன்பின்னுமம்மரபா
லந்தரத்திடைத்தசைப்பெருவேள்வியையயர்ந்தான். (அஅ)

ஆண்டோராயிரமிம்மகமந்தரத்தியற்ற
நீண்டமாலுடனுன்முகன்றேடருநிமல
னுண்டும்வந்திலன்சூரனத்தன்மைகண்டழுங்கி
மாண்டுபோவதேயினிக்கடனெனமனம்வலித்தான். (அகூ)

உன்னியித்திறஞ்சூரப்ன்மாவெனுமொருவன்
வன்னிசுற்றியவாதிகுண்டத்திடைவதிந்து
செந்நிறத்ததாயாணையாலங்கியிற்சிதையாக்
கொன்னுனைத்தலைவச்சிரகம்பமேற்குதித்தான். (கூ0)

கடிதினுச்சிநின்றுருவியேவச்சிரகம்பத்
தடிதனிற்சென்றுசூரபன்மாவெனுமவுணன்
படிவமுற்றுநுண்டுகளுறவுளம்பதைபதைத்து
முடியமற்றதுகண்டனன்மடங்கன்மாமுகத்தோன். (கூக)

Digitized By Roja Muthiah Research Library

கண்டகாலையினுளம்பதைபதைத்ததுகண்கண்
மண்டுசோரிநீர்கான்றனகரங்களும்வாயுங்
குண்டவேள்வியிற்றொழின்மறந்திட்டனகுறிப்போ
ருண்டுபோலுமென்றையுறவொதுங்கியதுயிரே. (௯௨)

துயர்ப்பெருங்கடனடுவுறவாழ்ந்துதொல்லுணர்ச்சி
யயர்த்துமால்வரையாமெனமறிந்தனன்றிவு
பெயர்த்தும்வந்துழிப்பதைபதைத்தலமந்துபெரிது
முயிர்த்துவாய்திறந்தனனவன்புலம்புதலுற்றான். (௯௩)

வேறு.

மாயைதரும்புதல்வாமாதவஞ்செய்காசிபற்கு
நேயமுருகாநிருதர்குலத்திறைவா
காயமுடனின்னையான்காணேனாலெங்கொளித்தாய்
நீயமகம்பலநாட்செய்துபெற்றபேறிதுவோ. (௯௪)

தாயுந்தலையளிக்குந்தந்தையுநீதானவரை
யாயுந்தலைவனுநீயாவியுநீயென்றிருந்தோ
நீயங்கதனைநினையாதிறந்தனையே
மாயுஞ்சிறியோர்க்குமற்றிங்கோர்பற்றுண்டோ. (௯௫)

வீரனேதானவர்க்குண்மிக்கோனேமிக்கபுகழ்ச்
சூரனேநின்போற்றொடங்கியிந்தவேள்விதனை
யாரனேகம்வைகலாற்றினராற்றியநீ
யீரநேயங்கொள்ளாதெம்மையகன்றேகினையே. (௯௬)

நின்கணருளில்லாநீர்மையுணராய்பன்னாட்
புன்கணுறுவாய்புரமூன்றுமுன்னெரித்த
வன்கணரைக்குறித்தேமாமகஞ்செய்தாயதற்கோ
வுன்கணுளதாமுயிர்தனையுங்கொண்டனரே. (௯௭)

உன்போலுயிர்விட்டுயர்மகஞ்செய்தோருமரன்
றன்போலருளாத்தகைமையருமாங்கவைகண்
டென்போலுயிர்கொண்டிருந்தோருமில்லிவருள்
வன்போடியமனத்துவன்கண்ணராரையா. (௯௮)

ஈசனருளாலெரிவேள்வியையோம்பிப்
பேசரியவன்மைதனைப்பெற்றுநமதுயிரு
மாசில்வளனுமகற்றுவரென்றேயயர்ந்த
வாசவனுமின்றேமனக்கவலைதீர்ந்ததுவே. (௯௯)

எல்லாரும்போற்றவெரிவேள்வியையோம்பிப்
பல்லாயிரநாட்பழகியெமக்குமிது
சொல்லாதிறந்தாய்துணைவராய்நம்முடனே
செல்லாரிவரென்றுசிந்தைதனிற்கொண்டனையோ. (௧00)

ஈண்டாருங்காணவெரியினிடைத்தம்பமிசை
வீண்டாயுயிர்போய்விளிந்தாய்மிகும்வன்கண்
பூண்டாய்நின்மெய்யுமொளித்தாய்புலம்புமியா
மாண்டாலுமுன்றன்மதிவதனங்காண்போமோ. (௧0௧)

Digitized By Roja Muthiah Research Library

என்றின்னனசொற்றிரங்கியரிமுகத்தோன்
முன்றன்னைநல்கிமுலையளிக்குந்தாய்காணுக்
கன்றென்னவீழ்ந்தழுங்கக்கண்டதனைத்தாரகனுங்
குன்றென்னத்தன்கைகுலைத்தரற்றிவீழ்ந்தனனே. (௧௦௨)

வீழ்ந்தானுயிர்த்தானவ்வேள்விக்களமுற்றுஞ்
சூழ்ந்தான்புரண்டான்றலைக்கையினானிலத்தைப்
போழ்ந்தானெனவேபுடைத்தான்றுயர்க்கடலு
ளாழ்ந்தான்விண்ணஞ்சவரற்றினான்றாரகனே. (௧௦௩)

சிங்கமுகனுந்திறல்கெழுவுதாரகனுந்
தங்கண்முதல்வன்றவறுற்றதுநோக்கி
யங்கணரற்றவதுகண்டதானவர்கள்
பொங்குங்கடல்போற்பொருமிப்புலம்பினரே. (௧௦௪)

தாரகனுஞ்சீயத்தனிவீரனுமவுண
ராருநெடிதேயரற்றுமொலிகேளாச்
சீரில்வியனுலகிற்றேவர்கோன்றன்னொற்றாற்
சூரன்மகத்தீயிற்றுஞ்சுசெயலுணர்ந்தான். (௧௦௫)

தண்டாரகலச்சதமகத்தோன்றானவர்கோன்
விண்டானெனவேவிளம்புமொழிகேளா
வண்டாமகிழ்ச்சியெனுமார்கலியிற்பேரமுத
முண்டானெனவேதனுள்ளங்குளிர்ந்தனனே. (௧௦௬)

சிந்தைகுளிர்ந்துசெறியுமுரோமஞ்சிலிர்த்து
முந்துதுயரமுழுதுந்தொலைத்தெழுந்து
வந்துபுடைசூழும்வானோருடன்கடவுட்
டந்திமிசையெய்தித்தனதுலகநீங்கினனே. (௧௦௭)

பொன்னுலகநீங்கிப்புரைதீர்மதிக்கடவு
டன்னுலகநீங்கித்தபனன்பதங்கடந்து
துன்னுமவுணர்துயருஞ்செயல்காண்பான்
மின்னுலவுமேகவியன்பதத்தில்வந்தனனே. (௧௦௮)

விண்ணாடர்தங்களுடன்வேள்விக்கிறைவிசும்பி
னண்ணாமகிழாநகையாத்தன்னற்றவத்தை
யெண்ணாவியவாவிரங்குமவுணர்தமைக்
கண்ணாரநோக்கிக்களிப்புற்றுநின்றனனே. (௧௦௯)

நின்றதொருகாலைநிருதருடனரற்றித்
துன்றுதுயர்மூழ்கிச்சோர்கின்றசீயமுக
னன்றெனுயிர்போகநானிருப்பதேயிங்ங
னென்றுகடிதுமனத்தெண்ணியெழுந்தனனே. (௧௧௦)

அன்னதிறலவுணனாயிரமென்றுள்ளவகன்
சென்னிபலவுந்தனதுசெங்கைவாளாலீர்ந்து
முன்னமுதல்வன்முயன்றபெருவேள்வி
வன்னியதனுண்மறம்பேசியிட்டனனே. (௧௧௧)

Digitized By Roja Muthiah Research Library

ஈர்ந்துதலைகளெரியிலிடுமுன்னர்ச்
சேர்ந்தவனையான்சிரங்களவைமுழுதும்
பேர்ந்துமரிந்துபிறங்குதழலினிடை
நேர்ந்துதனிநின்றனிருதர்க்கிறையோனே. (௧௧௨)

முன்னோனெழுந்துமுயலுஞ்செயனோக்கிப்
பின்னோன்றனதுபெருஞ்சிரமுந்தான்கொய்து
மன்னோன்மகமியற்றும்வான்றழலினுள்ளிட்டா
னன்னோவெனவேயவுணர்குழுவிரங்க. (௧௧௩)

சென்னிதலையரிந்துசெந்தழலினுப்பணிடு
முன்னமதுபோலவேறேமுளைத்தெழலும்
பின்னுமனையானப்பெற்றிதலையேபுரிய
வன்னபடிகண்டவவுணர்தமிற்சிலரே. (௧௧௪)

தங்கள்சிரமுந்தனிவாளினுற்றுணியா
வங்கிமிசையிட்டுமதன்கணுறவீழ்ந்து
மங்கியுயிரதனைமாற்றிடலுஞ்சூரன்போற்
சிங்கமுகனுமெரிசெல்லத்துணிந்தனனே. (௧௧௫)

மோனத்தின்வேள்விமுயன்றதொருமுன்னவன்போல்
வானத்தெழுவான்வலித்துமனங்கொண்டிடலுங்
கானக்கடுக்கைகலைமதிசேர்செய்யசடை
ஞானப்பொடிபுனையுநாதனதுகண்டனனே. (௧௧௬)

அசுரர்யாகப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௬௪௩.

---

# வரம்பெறுபடலம்.

கண்டகறைமிடற்றுக்கண்ணுதலோன்சுந்தரனை
விண்டுமுதலோர்வியப்பவேவெண்ணையிலாட்
கொண்டதொருபனவக்கோலந்தனைத்தரித்துத்
தண்டுமொருகைதனிலூன்றிவந்தனனே. (௧)

அங்கண்மகவேதியணித்தாகவேகுறுகிச்
சிங்கமுகனைச்சிவபெருமான்கண்ணுற்றே
யிங்குமிகநீரேவருமிரங்குகின்றீர்
நுங்கள்பரிசுநுவலுமெனமொழிந்தான். (௨)

எந்தைபெருமானியம்பவதுநாடித்
தந்தையனையார்தமியேந்துயர்கண்டு
வந்துவினவுகின்றார்மற்றிங்கிவரருள்சேர்
சிந்தையினரென்றுசீயமுகனுன்னினனே. (௩)

உன்னியமலனுகளமலர்ப்பதமேற்
சென்னிபலவுஞ்செறியப்பணிந்தெழுந்தெம்
மின்னல்வருவாயுமெமதுவரன்முறையும்
பன்னியிடுவனெனவேபகர்கின்றான். (௪)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

தந்தையாவான் காசிபனே தாயுமாயை தானென்பாள்
மைந்தர்யாங்களொருமூவர்மக்கள்பின்னும்பலருண்டா
லெந்தமன்னைபணிதன்னாலியாங்களீசன்றனக்காக
விந்தவனத்தின்மூவருமிவ்வேள்விதன்னையியற்றினமே. (௫)

அங்கப்பரிசேயாண்டுபலவகலமகத்தையாற்றிடவுங்
கங்கைச்சடையோன்முன்னின்றுகருணைசிறிதுஞ்செய்திலனா
லெங்கட்கெல்லாமுன்னவனாமிகல்வெஞ்சூரனதுநாடி
மங்குற்செறியும்வானிற்போய்வாளாற்றசையீர்ந்திட்டனனே. (௬)

மின்போலிலங்கும்வாளாற்றன்மெய்யிற்றசைகளீர்ந்துளத்திற்
றுன்போரிறையுமில்லாதசூரன்மகத்தீமிசையிடலு
முன்போற்றன்னூன்வளர்ந்திடவேபின்னுமஃதேமுயன்றதற்பின்
றன்போலொளிர்வச்சிரகம்பத்தலைவீழ்ந்துருவித்தழல்புக்கான். (௭)

புக்குமுன்னோனீறாகிப்போந்தகாலையாங்கண்டு
மிக்கமனத்திற்றுயர்கொண்டுவெருவிப்புலம்பியெமதுயிரு
மொக்கவிடவேநினைந்தேமாலும்மைக்கண்டோரிறைதாழ்த்தோந்
தக்கதிதுநம்வரன்முறையுந்தமியேந்துயருமெனமொழிந்தான். (௮)

மொழிந்தகாலையங்கணின்றமுக்கணிறைநம்முன்னோன்போ
லொழிந்துநீறுமாயாதேயுமதுசூரன்றனையின்னே
யழிந்ததீயுணின்றெழுவித்தருள்செய்கின்றாமதுகாண்டிர்
கழிந்தசோகம்விடுதிரெனாக்கங்கைதன்னைநினைந்தனனே. (௯)

முன்னாளம்மையங்குலியின்முளைத்தகங்கைதனிலெங்கோன்
மின்னார்சடையிற்கரந்தனவேயன்றிமகவான்விரிஞ்சன்மா
லென்னாநின்றமும்மையினோரிருக்கைதோறுமளித்தவற்றாட்
பொன்னாட்டிருந்தநதிதன்னைப்புந்திமீதிலுன்னினனே. (௧0)

மாயோன்றன்பான்முற்கொண்டவலிசேர்தண்டமேந்திவரு
தூயோ * னுன்னவக்கங்கைதுண்ணென்றுணர்ந்துதுளங்கிவிண்ணோ
ராயோரெவரும்வெருக்கொள்ளவளப்பின்முகங்கொண்டார்த்தெழுந்து
சேயோரெல்லாமணித்தாகத்திசையோரஞ்சச்சென்றதுவே. (௧௧)

மேலாகியவிண்ணுலகனைத்தும்விரைவிற்கடந்துமேதினியின்
பாலாயெங்கள்பிரான்பதங்கள்பணிந்துபணியாற்படர்செந்தீ
யேலாநின்றநடுக்குண்டத்திடையேபுகலுமெறிகடல்வா
யாலாலம்வந்துதித்ததெனவவுணர்கோமானார்த்தெழுந்தான். (௧௨)

தொன்மைபோலவேதியினிற்சூரபன்மாத்தோன்றலுமத்
தன்மைகண்டவரிமுகனுந்தாரகப்பேர்வீரனுமா
யின்மைகொண்டோர்பெருவளம்பெற்றென்னமகிழ்வுற்றெல்லையிலா
வன்மையெய்திக்கடிதோடிமன்னன்பதமேல்வணங்கினரே. (௧௩)

தங்கோன்றன்னைப்பின்னோர்கடாமுஞ்செயலைத்தானவர்கண்
டெங்கோன்வந்தான்வந்தானென்றெவருங்கேட்பவெடுத்தியம்பிப்
பொங்கோதஞ்சேர்கடன்மதியப்புத்தேள்வரவுகண்டதென
வங்கோதையினால்வாழியவென்றவனைப்போற்றியார்த்தனரே. (௧௪)

---

* சிவபெருமான் தருக்குற்ற விட்டுணுவினுடைய முதுகெலும்பைப்பிடுங்கித் தண்டமாக வூன்றினவரென்றறிக.

Digitized By Roja Muthiah Research Library

எண்மேற்கொண்டநிருதர்குழாமேத்தவெரிநின்றெழுசூரன்
மண்மேற்கொண்டதிறங்காணூஉவானோர்தொகையுமகபதியும்
விண்மேற்கொண்டபுயல்கண்டவியன்கோகிலம்போல்வெருவித்தம்
முன்மேற்கொண்டசெல்லலொடுமோடித்தம்மூருற்றனரே. (கரு)

வேறு.

அரந்தைதனையிகந்தவிருதுணைவர்களும்பாங்கருறவவுணர்சேனை
பரந்துபலவாழ்த்தெடுப்பச்சூரபன்மன்றிகழ்வேலைப்படியும்வானு
நிரந்தபுனற்கங்கைதனைவருவித்துமறையவன்போனின்றவெம்மான்
கரந்துதனையுணர்கின்றவுருவினொடுதோன்றினனாற்ககனமீதே. (கசு)

நாரிபாகமுமிமையாமுக்கண்ணுந்திருப்புயங்களுனன்குடாகி
யூரிமால்விடைமேல்கொண்டெம்பெருமான்மேவுதலுமுன்னிநோக்கிப்
பாரின்மீமிசைவீழ்ந்துபணிந்தெழுந்துபலமுறையும்பரவிப்போற்றிச்
சூரனாராதபெருமகிழ்சிறந்துதுணைவரொடுந்தொழுதுநின்றான். (கஎ)

நின்றுபுகழ்சூரபன்மன்முகநோக்கிநமையுன்னிநெடிதுகாலம்
வன்றிறன்மாமகமாற்றியெய்த்தனையால்வேண்டுவதென்வகுத்தியென்னப்
பொன்றிகழுமலர்க்கமலப்பொகுட்டுறைவோன்முதலியபுத்தேளிர்யாரு
மின்றெமதுதலைமையெலாம்போயிற்றாலெனவிரங்கவிதனைச்சொல்வான். (கஅ)

கொன்றுரும்புவிப்பாலாய்ப்பலபுவனங்கொண்டவண்டக்குழுவுக்கெல்லா
மன்றுகியுறல்வேண்டுமவைகாக்குந்தனியாழிவரனும்வேண்டு
முன்றுமுனைவயனைத்துஞ்செல்லுவதற்கூர்திகளுமுதவல்வேண்டு
மென்னாளுமழியாமலிருக்கின்றமேனியுமெற்கீதல்வேண்டும். (ககூ)

அலையாழிமிசைத்துயில்கூர்பண்ணவனேமுதலோர்களமர்செய்தாலு
முலையாதுகடந்திடுபேராற்றலொடும்பலபடையுமுதவல்வேண்டுந்
தொலையாமேயென்ஞான்றுமிருந்திடலும்வேண்டுமெனச்சூரன்வேண்டக்
கலையார்வெண்மதிமிலைச்சுஞ்செஞ்சடிலத்தனிக்கடவுள்கருணைசெய்வான். (உ0)

மண்டனக்காயிரகோடியண்டங்களுளவாகுமற்றவற்று
ளண்டமோராயிரத்தெட்டுகநூற்றெட்டாள்கவெனவருளானல்கி
யெண்டொகைபெற்றிடுகின்றவவ்வண்டப்பரப்பெங்குமேகும்வண்ணந்
திண்டிறல்பெற்றிடுகின்றவிந்திரஞாலமதென்னுந்தேருநல்கி. (உக)

எண்ணுபலபுவனங்கள்கொண்டவண்டத்தொகைதன்னையென்றும்போற்றக்
கண்ணனதுநேமியினும்வலிபெறுமோரடலாழிகடிதினல்கி
யண்ணலுறுசினவேற்றுக்கோளரியூர்தியுநல்கியகிலத்துள்ள
விண்ணவர்கள்யாவருக்குமன்றுமுதன்முதல்வனுமேன்மைநல்கி. (உஉ)

மேற்றிகழும்வானவரைத்தானவரையேனவரைவெற்றிகொள்ளு
மாற்றலொடுபெருந்திறலும்பாசுபதமாப்படையேயாதியாகித்
தோற்றமுறுகின்றதெய்வப்படையனைத்துமென்னாளுந்தொலைந்திடாம
லேற்றமிகும்வச்சிரமாகியமணிமேனியுமுதவியிதற்குப்பின்னர். (உங)

ஆறுசேர்கங்கைதனைவிண்ணுலகுதனிலேவியக்கங்கைக்குங்
கூறுசேர்பெருவேள்விச்செந்தழற்குந்தோற்றமெய்திக்குலவும்வண்ணம்
வீறுசேர்பெருங்கடல்போலொருபதினாயிரகோடிவெள்ளமாகுந்
தாறுபாய்கரிதிண்டேர்வயப்புரவியவுணரெனுந்தானைநல்கி. (உச)

வேறு.

துன்னுறுபெரும்புகழ்ச்சூரபன்மனுக், கின்னதோரருள்புரிந்திட்டவெல்லையி
னன்னவற்கிளைஞர்வந்தடிபணிந்தெழத், தன்னிகரில்லதோர்தலைவன்கூறுவான்.()

வேறு.

சூரனென்பவன்றோளிணைபோலவே, வீரமெய்திவிளங்கிநூற்றெட்டுகஞ்
சீரின்மேவுதிர்தேவர்கள்யாரையும், போரில்வென்றுபுறந்தரக்காண்டிரால். (௨௬)

தேவர்யாவருஞ்சென்றுதொழப்படு, மூவராகிமொழிந்திடுநுங்களைத்
தாவிலாதநஞ்சத்தியொன்றேயலா, லேவர்வெல்பவரென்றுவிளம்பிமேல். (௨௭)

ஈறுறாதவிரதமுந்தன்பெயர், கூறுதெய்வப்படையுங்கொடுத்திடா
வேறுவேறுமிகவருள்செய்துமே, லாறுசேர்சடையாண்டகையேகினன். (௨௮)

வரம்பெறுபடலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௬௭௧.

# சுக்கிரனுபதேசப்படலம்.

அற்றாகின்றவேலையின்முன்னோரரணம்போற்
சுற்றாநிற்குந்தானவர்தங்கோன்றொலைவில்சீர்
பெற்றானென்னுந்தன்மையையுன்னிப்பெருவன்மை
யுற்றாரொல்லென்றார்த்தனராற்றவுவப்புற்றார். (௧)

ஊழியில்வேதன்கண்டுயில்வேலையுலகஞ்சூ
ழாழிகளேழுமாணையினிற்றலதுநீங்கி
மாழைகொண்மேருச்சுற்றியதென்னமகத்தெல்லை
சூழுறநீங்கிச்சூர்முதறன்பாற்றுன்னுற்றார். (௨)

கண்டாரார்த்தார்கான்மிசைவீழ்ந்தார்கமழ்வேரி
கொண்டாரொத்தார்கைதொழுகின்றார்குப்புற்றா
ரண்டாவோகைபெற்றனர்தொன்னாளயர்வெல்லாம்
விண்டார்வெஞ்சூர்தன்புடையாகிவிரவுற்றார். (௩)

மூன்றாகுற்றோரிற்சிலர்தம்மைமுகநோக்கி
யிந்நாள்காறுநீர்வலியீர்கொலெனவோதி
மன்றாகுற்றோனல்லருள்செய்யமகிழ்வெய்தி
யன்னார்யாருமின்னதோர்மாற்றமறைகுற்றார். (௪)

தீயுண்டாகுங்கண்ணுதல்கொண்டசிவனுண்டு
நீயுண்டெங்கட்கோர்குறையுண்டோநிலையாகி
யேயுஞ்செல்வஞ்சீரொடுபெற்றோமிடரற்றோந்
தாயுண்டாயின்மைந்தர்தமக்கோர்தளர்வுண்டோ. (௫)

என்பார்தம்பாலன்பினனாகியிறைபின்னோர்
தன்பாலாகநிற்புழியிந்தத்தகுவன்றன்
வன்பாலானன்செய்வதெனென்னாவானோர்க
டுன்பாயச்சுற்றேங்கினராவிதொலைவார்போல். (௬)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

சேனைநள்ளிடைச்சீர்கெழுவன்மையான், மேனதன்மைவிருப்பினிற்கண்ணுறீஇ
மானமேற்சென்றுமன்னெடுந்தானவர், சோனைமாரியிற்றூமலர்தூவினர். (௭)

தூசுவீசினர்சூர்முதல்வாழியென், றாசிகூறினராடினர்பாடினர்
பேசலாதபெருமகிழ்வெய்தினர், வாசவன்றன்மனத்துயர்நோக்கினர். (௮)

அண்ணலாரருளாலழல்வேதியின், கண்ணில்வந்தகணிப்பில்படைக்கெலா
மெண்ணிலோரையிறையவராக்கினு, னெண்ணிநாளுநவையறப்போற்றவே. (௯)

கண்ணகன்புயக்காவலன்றனைகண், மண்ணும்வானமுமாதிரவெல்லையுந்
தண்ணறச்செலத்தம்பியர்தம்மொடு, மெண்ணிவேள்வியிருங்களநீங்கினன். (௧0)

நீங்கிமீண்டுநெடுந்தவத்தந்தைதன், பாங்கரெய்திப்பணிந்துபரமனால்
வாங்கலுற்றவரத்தியல்கூறியே, யாங்கள்செய்வகையென்னினியென்னவே. ௧௧

தந்தைகேட்டுச்சதமகள்வாழ்வினுக், கந்தமாகியதோவண்டருக்கிடர்
வந்ததோவெம்மறைநெறிபோனதோ, வெந்தையாரருளித்திறமோவென. (௧௨)

உன்னியுள்ளத்துணர்வுறுகாசிபன், றன்னின்வந்ததனயரைநோக்கியே
முன்னைநுங்கண்முதற்குருப்பார்க்கவ, னன்னவன்கணடைகுதிரன்பினீர். (௧௩)

அடைதிரேயெனினன்னவனுங்களுக், கிடையறுவகையித்திருமல்குற
நடைகொள்புந்திநவின்றிடுநன்றென, விடைபுரிந்துவிடுத்தனன்மேலையோன். ()

விட்டகாலைவிடைகொண்டுவெய்யவன், மட்டிலாதவயப்படையோடெழா
விட்டமானவியற்புகரோனிடங், கிட்டினனதுகேட்டனனுங்கவன். (௧௫)

கேட்டுணர்ந்திடுகேழ்கிளர்தேசிகன், வாட்டநீங்கிமகிழ்நறைமாந்தியே
வேட்டமெய்திவிரைந்துதன்சீடர்தங், கூட்டமோடெதிர்கொண்டுகுறுகவே.(௧௬)

கண்டசூரன்கதுமெனத்தன்பெருந், தண்டமுன்சென்றுதம்பியர்தம்மொடு
மண்டுகாதலின்மன்னியதேசிகன், புண்டரீகமென்பொன்னடிதாழ்ந்தெழ. (௧௭)

நன்றுவாழியநாளுமென்றாசிக, ணின்றுகூறிநிருதர்க்கிறைவனைத்
தன்றுணைக்கரத்தாற்றழுவிப்புக, ரென்றும்வாழ்தன்னிருக்கைகொண்டேகினன்.

ஏகுமெல்லையிளவற்கிளவலை, வாகுசேர்ந்தநம்மாப்படைபோற்றென
யூகமோடுநிறீஇயுரவோனெடும், போகன்மேயினன்புந்தியில்சூரனே. (௧௯)

ஆருயிர்த்துணையானவரிமுகன், வாரமுற்றுடன்வந்திடவந்திடுஞ்
சூரபன்மனைச்சுக்கிரன்றன்னிடஞ், சேரவுய்த்துச்செயன்முறைநாடியே. (௨0)

ஆசனங்கொடுத்தங்கணிருத்தியே, நேசநெஞ்சொடுநீடவுநல்லன
பேசிநீர்வரும்பெற்றியென்னேவெனத், தேசிகன்சொலச்செம்மலுரைசெய்வான்

ஓங்குவேள்வியுலப்பறச்செய்தது, மாங்கனம்வந்தரனருள்செய்ததுந்
தாங்கரும்வளந்தந்ததுங்காசிபன், பாங்கர்வந்தபரிசும்பகர்ந்துமேல். (௨௨)

தாதைகூறியதன்மையுமுற்றுற, வோதியாமினியூக்கியியற்றிடு
நீதியாதுநிகழ்த்துதிநீயெனத், தீதுசான்மனத்தேசிகன்கூறுவான். (௨௩)

பாசமென்றும்பசுவென்றுமேதகு, மீசனென்றுமிசைப்பர்தலையெனப்
பேசன்மித்தைபிறிதிலையாவியுந், தேசுமேவுசிவனுமொன்றாகுமே. (௨௪)



Digitized By Roja Muthiah Research Library

தீயநல்லனவேயெனச்செய்வினை, யாயிரண்டென்பரன்னவற்றேதுவா
லேயுமாற்பிறப்பென்பரின்பக்கட, ஹேயுமென்பர்துயருறுமென்பரால். (௨௫)

ஒருமையேயன்றியூழின்முறைவிரா, யிருமையுந்துய்க்குமென்பரவ்வெல்லையி
லரியதொல்வினையானவையீட்டுமேல், வருவதற்கென்பர்மன்னுயிர்யாவையும். ()

ஈட்டுகின்றவிருவினையாற்றலான், மீட்டுமீட்டும்விரைவினுதித்திடும்
பாட்டின்மேவும்பரிசுணர்ந்தன்னவை, கூட்டுமென்பர்குறிப்பரிதாஞ்சிவன். (௨௭)

சொற்றவாதியுந்தோமுறுவரன்றனை, யுற்றவாவியுமொன்றலவொன்றெனிற்
குற்றமாகுமக்கோமுதற்கென்பரான், மற்றதற்குவரன்முறைகேட்டிநீ. (௨௮)

ஆதியந்தமின்றாகியமலமாஞ், சோதியாயமர்தொல்சிவனுடலின்
காதலாகிக்கருதுதன்மாயையாற், பூதம்யாவும்பிறவும்புரிவனால். (௨௯)

இடங்கொண்மாயையின்யாக்கைகளாயின, வடங்கவுந்நல்கியன்னவற்றூடுதா
ன்,கடங்கொள்வானிற்கலந்துமற்றவ்வுடன்,மடங்குமெல்லையின்மன்னுவன்றொன்
மைபோல். (௩0)

இத்திறத்தினெஞ்ஞான்றுமவ்வெல்லைநீர், நித்தனுடனிலைமைபுரிந்திடு
மித்தையாகும்வினைகளும்யாவையு, முத்திதானுமுயல்வதுமன்னதே. (௩௧)

பொய்யதாகும்பொறிபுலமென்றிடின், மெய்யதோவவைகாணும்விழுப்பொருண்
மையில்புந்தியும்வாக்கும்வடிவமுஞ், செய்யநின்றசெயல்களுமன்னதே. (௩௨)

அன்னசெய்கைகளன்மையதாகுமேற், பின்னரங்கதன்பெற்றியின்வந்திடு
மின்னலின்பமிரண்டுமெய்யாகுமோ, சொன்னமுன்னைத்துணிபினவாகுமே. ௩௩

மித்தைதன்னையுமெய்யெனக்கொள்ளினு, மத்தகுந்துயரானதுமின்பமு
நித்தமாகுமலனையெய்துமோ, பொத்திலானபொதியுடற்காகுமே. (௩௪)

தோன்றுகின்றதுந்துண்ணெனமாய்வது, மேன்றுசெய்வினையாவதுஞ்செய்வது
மான்றதற்பரற்கில்லையினையதை, யூன்றிநாடினுடற்குறுபெற்றியே. (௩௫)

போவதும்வருகின்றதும்பொற்புட, னுவதும்பினழிவதுஞ்செய்வினை
யேவதும்மெண்ணிலாதகடந்தொறு, மேவுகின்றதொர்விண்ணினுக்காகுமோ. (௩௬)

அன்னபோலெங்குமாவியொன்றாகியே,துன்னிநின்றிடுதொல்பரன்வேறுபா,டெ
ன்னதும்மிலனென்றுமொர்பெற்றியான், மன்னுமங்கதுவாய்மையென்றோர்திநீ.

தஞ்சமாகுந்தருமநன்றாலென, நெஞ்சகத்துநினைந்துபுரிவதும்
விஞ்சுகின்றவியன்பவந்தீதென, வஞ்சுகின்றதுமாமறிவின்மையே. (௩௮)

யாதுயாதுவந்தெய்தியதன்னதைத், தீதுநன்றெனச்சிந்தைகொள்ளாதவை
யாதிமாயையென்றாய்ந்தவையாற்றுத, னீதியானநெறிமையதாகுமே. (௩௯)

தருமஞ்செய்கதவறுளபாவமாங், கருமஞ்செய்யற்கவென்பர்கருத்திலா
ரிருமைதன்னையும்யாவர்செய்தாலுமேல்,வருவதொன்றிலைமாயம்வித்தாகுமோ.()

கனவினெல்லையிற்காமுறுநீரவு, மினையவந்தவுமேனையியற்கையு
நனவுவந்துழிநாங்கண்டதில்லையா, லனையவாமிவனூற்றுஞ்செயலெலாம். (௪௧)

இம்மையாற்றுமிருவினையின்பய, னம்மையெய்திநன்றோவடையப்படும்
பொய்ம்மையேயதுபொய்யிற்பிறப்பது,மெய்ம்மையாகுமதோசுடர்வேலினோய்.()

நெறியதாகுமிந்நீர்மையெலாம்பிற, ரறிவரேயெனினன்னதொர்வேலையே
பெறுவர்யாமுறும்பெற்றியெலாமவை, யுறுதியுண்டெனினுண்மையதாகுமே.(௪௩)

Digitized By Roja Muthiah Research Library

சிறியரென்றுஞ்சிலரைச்சிலரைமே, னெறியரென்றுநினைவதுநீர்மையோ
விறுதியில்லுயிர்யாவுமொன்றேயெனு, வறிதல்வேண்டுமஃதுண்மையதாகுமே. சச

உண்மையேயிவையோதியிருணர், நுண்மையாமினிநுங்களுக்காகிய
வண்மையுந்தொல்வழக்கமுமற்றவுந், திண்மையோடுரைசெய்திடக்கேட்டிநீ. (சரு)

தேவர்தம்மினுஞ்சீதரனுதியோ, ரேவர்தம்மினுமேற்றமதாகிய
கோவியற்கையுங்கொற்றமுமாணையு, மோவில்செல்வமுமுன்னிடையுற்றவே. சசு

வேறு.

உற்றதோர்மேன்மைநாடியுன்னைநீபிரமமென்றே
தெற்றெனத்தெளிதிமற்றத்திசைமுகன்முதலோர்தம்மைப்
பற்றலைமேலோரென்றுபணியலையிமையோருங்கள்
செற்றலரவரைவல்லேசெறுமதிதிருவுஞ்சிந்தி. (சஎ)

இந்திரனென்போன்வானோர்க்கிறையவனவனேநென்ன
லந்தமிலவுணர்தங்களாருயிர்கொண்டானன்று
னுய்ந்தனன்போகாவண்ணமொல்லையிலவனைப்பற்றி
மைந்துறுநிகளஞ்சேர்த்திவன்சிறைபுரிதிமாதோ. (சஅ)

சிறையினையிழைத்துச்செய்யுந்தீயனபலவுஞ்செய்து
மறைபுகன்முனிவர்தம்மைவானவர்தம்மைத்திக்கி
னிறையவர்தம்மைநாளுமேவல்கொண்டிடுதியன்று
ருறைதருபதங்களெல்லாமுதவுதியவுணர்க்கம்மா. (சகூ)

கொலையொடுகளவுகாமங்குறித்திடுவஞ்சமெல்லா
நிலையெனப்புரிதியற்றூனினக்குமேல்வருந்தீதொன்று
மிலையவைசெய்திடாயேலிறைவநீவிரும்பிற்றெல்லா
முலகிடையொருங்குநண்ணுவுனக்கெவர்வெருவுநீரார். (ருo)

வண்டுழாய்மிலைச்சுஞ்சென்னிமால்விடைப்பாகன்றந்த
வண்டமாயிரமேலெட்டுமனிகமோடின்னேயேகிக்
கண்டுகண்டவணீசெய்யுங்கடன்முறையிறைமையாற்றி
யெண்டிசைபுகழமீண்டேயீண்டுவீற்றிருத்தியென்றான். (ருக)

சுக்கிரனுபதேசப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் எஉஉ.

---

# அண்டகோசப்படலம்.

தீயதோரினையமாற்றஞ்செப்பலுமிதுநன்றெந்தை
யேயினபணியினிற்பணிறையவனெனக்குத்தந்த
வாயிரத்தெட்டென்றோதுமண்டங்கணிலைமையாவு
நீயுரையென்னவாசானிருபனுக்குரைக்கலுற்றான். (க)

மேலுளபொருளுந்தத்தம்விளைவதுநிற்கவிப்பான்
மூலமாம்பகுதிதன்னின்மூளைத்திடும்புந்திபுந்தி
யேலுறுமகந்தையொன்றினெய்துமைம்புலனுமாங்கே
வாலியககனந்தொட்டுமாநிலங்காறும்வந்த. (உ)

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106

Digitized By Roja Muthiah Research Library

அப்பெரும்புவிக்குத்தானோராயிரகோடியண்ட
மொப்பிலவென்னவுண்டாலொன்றினுக்கொன்றுமேலாச்
செப்புறுநிலைமைத்தன்றுதெரிந்திடிற்பரந்துவைகும்
வைப்பெனலாகுமன்னவற்றவையம்பொன்வண்ணம். (௩.)

அங்கண்மாஞாலத்தண்டமாயிரகோடிதன்னி
லிங்குநீபெற்றவண்டமாயிரத்தெட்டினுள்ளுந்
துங்கமாமண்டமொன்றினியற்கையைச்சொல்லுகின்றேன்
செங்கைசேர்நெல்லியென்னச்சிந்தையிற்காண்டியன்றே. (௪)

கதிரெழுதுகளெண்மூன்றுகசாக்கிரகந் * தானகு
மிதுதொகையிருநான்குற்றதிலீக்கை ๐ யவ்விலீக்கையெட்டா
லுதிதரும்யூகை † யன்னயூகையெட்டியவையென்ப
வதினிருநான்குகொண்டதங்குலத்தளவையாமே. (௫)

அங்குலமறுநான்கெய்தினதுகரங்கரமோர்நான்கு
தங்குதறனுவென்றுருகுந்தனுவிரண்டதுவோர்தண்ட
மிங்குறுதண்டமானவிராயிரங்குரோசத்தெல்லை
பங்கமில்குரோசநான்கோரியோசனைப்பாலதாமே. (௬)

அந்தயோசனையினெல்லையைம்பதிற்றிரண்டுகோடி
வந்ததிவ்வண்டத்திற்குமாயிரும்பரவைவைப்பு
முந்தியநிவப்புமாகுமொழிந்திடுமண்டங்கட்கு
மிந்தவாறளவைத்தென்றேயெண்ணுதியிலைகொள்வேலோய். (௭)

ஒண்புவனிக்குக்கீழாம்யோசனையைம்பான்கோடி
திண்புவிதனக்குமேலாய்ச்சேர்தருமளவுமஃதே
மண்புகழ்மேருவுக்குமாதிரமவையோரெட்டு
மெண்படுமைம்பான்கோடிகடாகத்தினெல்லையோடும். (௮)

அண்டமார்கடமோர்கோடியதற்குமீதினிலோர்கோடி
திண்டிறற்காலச்செந்தியுருத்திரர்செம்பொற்கோயி
லொண்டழற்கற்றையுள்ளதொருபதுகோடிமீக்கட்
கொண்டெழூதுமவெல்லைகுணிக்கினங்கோடியாமே. (௯)

அரித்தவிசுயர்ச்சியாங்கோராயிரமளவைத்தாகும்
பரத்தலுமதற்கிரட்டிபடர்தருகாலச்செந்தீ
யுருத்திரரழலின்மேனியோசனையயுதமாகுந்
திருத்தகுபலகைவாள்விற்செஞ்சரமேந்திச்சேர்வார். (௧௦)

ஓங்கியகாலச்செந்தீயுருத்திரர்தம்மைப்போல்வா
ராங்கொருபதின்மர்சூழ்வரன்னவரேவலாற்றிப்
பாங்குறவொருபான்கோடிபரிசனமேவுமன்னோர்
பூங்கழல்வழுத்தியாதிகமடமப்புவனம்வைகும். (௧௧)

அன்னதோர்புவனமீக்கணடுக்குறுநிலையவாகித்
துன்னுறுநாலேழ்கோடிதொகைப்படுநிரயத்தெல்லை
யுன்னதமானகோடியொன்றேழிமுப்பான்மேலும்
பன்னிரண்டிலக்கமண்டத்தளவுறும்பரப்புமன்றே. (௧௨)

---

* கசாக்கிரகம் - மயிர்நுனி. ๐ இலீக்கை - ஈர். † யூகை - பேன்.

Digitized By Roja Muthiah Research Library

உற்றிடுநிரயமீதிலொன்றிலாவிலக்கநூறு
பெற்றிடுமுயர்வுதன்னிற்பிறங்குமோர்புவனங்கீழ்மண்
பற்றியவிரும்புநாப்பண்பச்சிமம்பசும்பொற்சோதி
மற்றதன்மேல்பாகத்தில்வதிவர்கூர்மாண்டரென்போர். (கங)

காழகமுகத்தர்கூர்வாய்க்கணிச்சியம்படைசேர்கைய
ரூழியங்கனலையன்னவுருவினர்திரியுங்கண்ணர்
மாழையம்பீடமீக்கண்வைகுகூர்மாண்டர்தம்பாற்
சூழுருத்திரராயுள்ளோர்தொகுதியையளக்கொணாதால். (கச)

அப்புவனத்துமீதேயந்தரமிலக்கமொன்பான்
செப்புவரதனுக்கும்பர்சிறந்தபாதலங்களென்ப
வொப்பறுபிலமொன்றற்கேயொன்பஃதிலக்கமாக
விப்படியறுபான்மூன்றுமிலக்கமேழ்பிலத்தினெல்லை. (கரு)

பரத்தினிலுறுங்கனிட்டபாதலமெட்டிலக்க
மரத்தினுக்ககற்சிவெவ்வேறியுதமாமவைமுப்பாக
முரத்தகுமவுணர்கீழ்பாலொள்ளெயிற்றுரகர்நாப்பண்
டிருத்தகுமரக்கர்மேல்பாற்சிறந்துவீற்றிருந்துவாழ்வோர். (கசு)

இதன்மிசையிலக்கமொன்பானுடகரிருக்கையாகு
மிதன்மிசைவெளியோர்கோடியிலக்கமுமிருபதுண்டா
லிதன்மிசைக்களிறுபாந்தளெட்டுடன்சேடனேர்ந்து
மிதன்மிசைப்புவியினீட்டமெண்பஃதிலக்கமாமே. (கள)

ஈறுறுபிலங்கட்கெல்லாமிறைவராய்ப்பாதுகாப்போ
ராடகர்தாமேநாகரவுணர்வாளரக்கரன்னார்
தாடொழுசனங்களண்டகடமுதற்றரையீறாகக்
கோடியோரைம்பானுருங்குணித்தனைகோடியன்றே. (கஅ)

பலவகைப்பிலங்கட்கெல்லாம்பரமதாயுற்றதொல்பா
ருலகினுள்விரிவுமங்கணுள்ளவுமுரைப்பன்கேட்டி
குலவியசம்புசாகங்குசைகிரவுஞ்சங்கோதி
லிலவுகோமேதசம்புட்கரமிவையேழுதீவே. (கக)

பரவுமிவ்வுலகினுப்புப்பாறயிர்நெய்யேகன்ன
லிரதமாமதுநீராகுமெழுகடலேழுதீவும்
வரன்முறைவிரவிச்சூழுமற்றதற்கப்பாற்சொன்னத்
தரையதுசூழ்ந்துநிற்குஞ்சக்கரவாளச்சையம். (உ0)

அன்னதற்கப்பால்வேலைக்கரசனும்புறத்திலாழி
பின்னதுதனக்குமப்பாற்பேரிருள்சேர்ந்தஞால
மன்னவகாண்டியப்பால்வலிகெழுமண்டத்தோடு
துன்னுமிப்பொருள்கள்யாவுஞ்சூழ்ந்துகொண்டிருக்குமன்றே. (உக)

எல்லைதீர்முன்னைத்தீவோரிலக்கமாங்கடலுமற்றே
யல்லனதீவுநேமியதற்கதற்கிரட்டியாகச்
சொல்லினராங்ஙன்கண்டதொகையிருகோடியன்றி
நல்லதோரைம்பான்மேலுநான்கெனுமிலக்கமாமே. (உஉ)

Digitized By Roja Muthiah Research Library

ஐயிருகோடிசொன்னத்தணிதலமதுசூழ்நேமிச்
சையமோரயுதமாகுஞ்சார்தருபுறத்தினேமி
யெய்தியகோடிமேலுமிருபதோடிலக்கமேழா
மையிருள்சேர்ந்தபாரினெல்லைமேல்வகுப்பன்மன்னோ. (௨௩)

ஆரிருளுலகமுப்பானஞ்செனுங்கோடிமேலு
மோரொருபத்தொன்பானூறுற்றநான்கயுதமாகும்
பேரிருள்சூழ்ந்தவண்டப்பித்திகைக்கனமோர்கோடி
பாரிடையகலந்தேரிற்பாதியோரைம்பான்கோடி. (௨௪)

நடைதருதொன்னூலாற்றுணும்புகல்கணிதர்தன்னை
யுடையதோர்திசையேயிவ்வாறொழிந்தமாதிரத்தும்வைக்கின்
வடகொடுதென்றிகீழ்மேன்மற்றுளகோணமுற்று
நொடிதரிற்கோடிகோடிநூறுயோசனையதாமே. (௨௫)

முள்ளுடைமூலமானமுண்டகத்தவிசின்மேய
வள்ளறன்வலதுமொய்ம்பான்வந்தசாயம்புமைந்த
னள்ளிலைவேற்கைநம்பியன்புடைவிரதன்ஞால
முள்ளதோரெல்லைமுற்றுமொருதனிக்குடையுள்வைத்தான். (௨௬)

ஆங்கவன்றனதுமைந்தரங்கிதீரன்மேதாதி
துங்கமாம்வபுட்டினோடுசோதிட்டுத்துதிமான்றொல்சீர்
தங்குமவ்வியனேமிக்கசவனனுமெழுவர்தாமும்
பங்குகொண்டேழுதீவும்பாதுகாத்தரசுசெய்தார். (௨௭)

வேறு.

சீரியசம் புத்தீபம் புரந்த வங்கி தீரனென்போன் றனருளுஞ் சிறுவ ராயோர், பாரதன்கிம் புருடனரி கேது மாலன் பத்திரா சுவனலிளா விருத னென்போ, னேருடைய விரமியனல் லேமப் பேரோ னியற்குருவா மொன்பதின்ம ரிவர்கள் பேரா, லோரொருவர்க் கொவ்வொன்று நாவற் றீவை யொன்பதுகண் டமதாக்கி யுதவி னானல். (௨௮)

விண்ணுயர்சம் புத்தீவி னடுவு நின்ற மேருவரை செங்கமலப் பொகுட்டுப் போல, நண்ணுமதற் கியோசனையுன் னதமெண் பத்து நான்குளவா யிரமாகு ஞால மாழ்ந்த, தெண்ணிரண்டா யிரஞ்சென்னி யகல முப்பா னிராயிரமாம் பரா ரையெல்லை யிதனிற் பாதி, வண்ணமிகு மேகலைமூன் றதனு ளுச்சி வாய்த்திடுமே கலையினிற்பல் சிகர மல்கும். (௨௯)

மேருவரை யதற்குநடுப் பிரமன் மூதூர் மிக்கமன்னோ வதியதற்கு மேலைத் திக்கி, னாரணன்வாழ் வைகுண்டம் வடகீழ் பாலி னாதனமர் சோதிட்கந் திசைக ளெட்டுஞ், சீரியவிந் திரன்முதலா மெண்மர் தேயந் தெற்குமுதல் வடக்களவு மருங்கு தன்னி, னேரியதோர் தேசமது செவ்வே போகு நெடும்பூழை யொன்றுளது நினைக மாதோ. (௩0)

அந்தவரைக் கீழ்த்திசைமந் தரமாம் வெண்மை யதன்றெற்குக் கந்தமா தனம்பொன் மேல்பால், சுந்தரமாம் விபுலநீ லம்வ டக்குச் சுபார்சுவமா துணைப்போது கடம்பு சம்பு, நந்தியதோர் போதியால் குணபா லாதி நாற்றிசையில் வரைமீது நிற்கு நாவன், முந்துமிரண் டாயிரயோ சனையா மேனை முத்தருவு மிதிற்பாதி மொழியு மெல்லை. (௩௧)

Digitized By Roja Muthiah Research Library

அத்தகைய கீழ்த்திசையி லருண மேல்பா லசிதோதந் தென்றிசைமா ணதமே
யல்லா, வுத்தரத்தின் மாமடுநீர் நிலையாய் மேவு முய்யானஞ் சயித்திரதங் குணக்கு
வைகும், வைத்தபெரு நந்தனந்தக் கிணத்தி லோங்கும் வைப்பிரசங் குடக்கமரும்
வடாது பாங்கின், மெத்துதிரு தாக்கியமுற் றிடுமிவ் வாறு மேருவரைச் சாரலி
டை விரவு மன்றே. (௬௨)

கடிகம்மூ நாவலொன்று தென்பா னின்ற காரணத்தாற் பாரதன்றன் கண்ட
முற்று, மிடனுடைய நாவலந்தீ வெனப்பேர் பெற்ற தித்தருவின் றீங்கனிநீ ரா
றாய் மேருத், தடவரையைப் புடைசூழ்ந்து வடபாற் சென்று சாம்புநதப் பெயர்
பெறுமச் சலிலந் துய்த்தோ, ருடன்முழுதும் பொன்மயமா யயுத மேனு மொரு
மூவா யிரமாண்டங் குறுவ ரன்றே. (௬௩)

நாற்றிசையில் வரைப்பரப்பு மேல்கீழ் தானு நவின்றிடின்மே ருவிற்பாதி யத
ற்குக் கீழ்பான், மாற்றரிய மாலியவான் மேல்பாற் கந்த மாதனந்தென் றிசைநி
சத மேம கூட, மேற்றவிமம் வடபானீ லஞ்சு வேத மியற்சிருங்க மெட்டுவரை
யிவையா நீல, மேற்றிகழ்பொன் மணிகனகம் பனியே நீலம் வெண்மைமதி காந்த
மிவை மேனி தாமே. (௬௪)

நிசதமொடு பொற்கூட மிமையங் கீழ்மே னெடுங்கடலைத் தலைக்கூடி நிமிருஞ்
சோமன், றிசையுளபூ தரமூன்று மலைய வெட்டுத் திண்கிரியு மிராயிரயோ சனை
வான் செல்லும், வசையில்கந்த மாதனமா லியவா னென்னு மால்வரைக டமத
கல மயுத மற்றை, யசலமிரு மூன்றுமிரா யிரமித் தீவு ளமருநவ கண்டவெல்லை
யறைவன் மாதோ. (௬௫)

கோதில்வட கடன்முதலாச் சிருங்கங் காறுங் குருவருடஞ் சிருங்கமுதற் சுவேத
மட்டு, நீதியிர ணியவருடஞ் சுவேத நீல நெடுங்கிரியி னடுவணிர மியமா மேருப்,பூ
தரஞ்சூழ் வருடமிளா விருத மாகும் பொலிந்தகந்த மாதனமேற் புணரி நாப்பண்,
கேதுமால் வருடமா லியவான் றொட்டுக் கீழ்கடலி னிறுவாய்பத் திரம தாமே.()

அம்புவியி னிசதமுத லேமங் காறு மரிவருட மேமமுத லிமைய நாப்பண், கிம்
புருடந் தென்கடற்கு மிமைய மென்னுங் கிரிக்குநடுப் பாரதமாங் கேது மாலோ,
டிம்பர்புகழ் பத்திரமுப் பத்து நாலா யிரநின்ற தொன்பதினா யிரமா மெல்லை,யும்பர்
தம துலகனைய பரத மென்னு மொன்றொழிந்த கண்டமெட்டு முற்று ளோர்க்கே.

ஆங்குருநாட் டுறைபவரோர் பொழுதின் யாய்பா லாடுவே மகவே மாகத் தோ
ன்றித், தாங்கள்விழை விற்புணர்வ ரவர்க்குத் தெய்வத் தருமலர்க ளுதவுமுணுக்
கனியுங் காயு, மோங்குபச்சை நிறமாயு ளயுத மேனு மொருமூவா யிரமதற்குள்
வடபா கத்திற், பாங்கமர்வர் முனிவரர்சா ரணரே சித்தர் பதின்மூவா யிரமாயுள்
படிகம் வண்ணம். (௬௮)

பரவுபத்தி ராசுவத்தோர் கனிகாய் துய்ப்போர் பதின்மூவா யிரமாயுள் படை
த்த சேயோ, ரிரமியத்தோர் பலநுகர்வோர் மதிநேர் மெய்ய ரீராயிரமைஞ் ஞூற
யுத மாண்டு பெற்றோர், பொருவரிய விரணியத்தி னுள்ளோ ராலின் புன்கனி
கண் மிசைகுவர்பூங் குவளை போல்வார், வருடமவர்க் கொருபதினா யிரமே யன்றி
மற்றுமிரண் டாயிரமாச் சொற்ற தொன்னூல். (௬௯)

விராவுமிளா விருதத்தோர் வெளிய மெய்யர் மிசைவதுதீங் கரும்பிரத மயுத
மேனு, மிராயிரமா யுகங்கேது மாலந் தன்னி லிருப்பவர்பைங் குவளைநிற மினிதி
னுண்டல், பராரையுள கண்டகியின் கனியே யாயுள் பத்துளவா யிரமாிகண்
டத்து வாழ்வோ, ரோராயிரமோ டொன்பதினா யிரம தெல்லை யுணவுகனி காய்
மதிய மொளிய தன்றே. (௭0)

Digitized By Roja Muthiah Research Library

போற்றியகிம் புருடத்தோ ரிறலித் தீய புன்கனியே மிசைவர்நிறம் பொன்மை யாயுள், சாற்றியிடு மோரயுத மேம கூடத் தடவரைத்தென் பாலிமைய வடபா றன்னி, லேற்றமிகுங் கயிலைநிற்கு மதற்கு மீதே யிமையாமுக் கட்பகவ னுமையா ளோடும், வீற்றிருப்ப னூழிதனி லண்டங் காறு மேலொடுகீழ் சென்றிடுமவ் வெற்பு மாதோ. (௪௧)

இந்தவிரு நாற்கண்டத் துறையு நீரா ரின்னல்பிணி நரைதிரைமூப் பிறையுஞ் சேரார், முந்தையுகம் போலேலை மூன்றி னுள்ளு மொய்ம்புநிறை யறிவுடல முயற்சி யாயு, ளந்தமில்சீர் முதலெல்லா மொருதன் மைத்தா வடைகுவர்முன் பா ரதத்தி லவத ரித்து, வந்துபுரி வினைப்பயனை நுகர்வ ரென்பர் வானமுகில் சென் றுபுனல் வழங்கா தங்ஙன். (௪௨)

பாரதத்துள் ளாரவனி கிளைத்து மற்றும் பஃறொழிலும் புரிந்துமறம் பாவ மீட் டிப், பேரருள்பௌ திகமெழுவா யான மூன்றிற் * பெறுபயன்கொண் டுய்வரென் பர் பெருமை யாற்றல், சீரறிவு நிறையாயு ளுருவ முண்டி செய்கையுகங் களுக்கி யைந்த திறனே சேர்வர், தோரைமுதற் பலபைங்கூழ் விளையு ளாக்கந் தூயகனி காய்கந்தம் பிறவுந் துய்ப்பார். (௪௩)

நாலிருகண் டத்தோரும் விண்ணு ளோரு நரகினரு மவ்விடத்தி னண்ணி வைகி, மேலையிரு வினையாற்றி யவற்றிற் கேற்ற வியன்பயன்க டுய்ப்பரென விளம்பு மா ற்றாற், சீலமிகு பாரதமாங் கண்ட மொன்றே தீவினைநல் வினையாகுஞ் செயற் கைக் கெல்லா, மூலமொரு குறைபெறினே வந்து தேவர் முனிவர்களுந் தவம் பூசை முயல்வ ரங்கண். (௪௪)

கவிபுகழும் பரதனுமிந் திரனும் பேரோன் கசேருகன்று மிரபன்னன் கபத்தி நாகன், சவுமியனே கந்தருவன் வருண னென்னுந் தனயருடன் குமரியெனும் வனிதை தன்னை, யுவகைதனி லுதவியவர் தத்தம் பேரா லொன்றற்கோ ராயிரம் யோ சனைய தாகப், புவிபுகழ்பா ரதத்தைநவ கண்ட மாக்கிப் பொற்பினுட னனை யவர்க்குப் புரிந்தா னன்றே. (௪௫)

கங்கைகவு தமியமுனை கவுரி வாணி காவிரிநன் மதைபாலி கம்பை பம்பை, துங்கபத் திரைகுசைகோ மதிபாஞ் சாலி சூரிசிகி பாபகரை தூத பாபை, சங்கவா கினிசிகைபா ரத்து வாசி சார்வரிசந் திரபாகை சரயு வேணி, பிங்கலைகுண் டலைமு கரி பொருநை வெஃகாப் பெண்ணைமுத லாறனந்தம் பெருகி நண்ணும். (௪௬)

மன்னுமகேந் திரமலயஞ் சையஞ் சத்தி மாநிருடம் பாரியாத் திரமே விந்த,மெ ன்னுமலை யோரேழுங் காஞ்சி யாதி யெழுநகருந் தானமொரா யிரமே லெட்டும், ப ன்னுமரு மறைமுதலோர் மேய தேயம் பற்பலவுஞ் சுருதிமுறை பயில்வு மேவி,மெ ய்ந்நெறிசேர் வதுகுமரி கண்ட மேனை மிலேச்சரிட மோரெட்டும் வியப்பி லாவே.

இங்கிவைசம் புத்தீவி னிடனே தண்பா லிருங்கடல்சூழ் சாகத்தி னெல்லை தன் னிற், றங்கியகோ மேதாதி யவற்கு மைந்தர் சாந்தவயன் சிசிரன்கோ தயனு னந் தன்,றுங்கமிகு சிவனெடுகே மகன்சி றந்த துருவனிவர் பேராலேழ் வருட மாக்கி, யங்கவருக் கருள்புரிந்தான் கடவுள் வாயு வாரியர்விந் தகர்குகர ராண்டு வாழ்வார்.

சோமகமே சுமனஞ்சந் திரமே முந்துந் துந்துபிவப் பிராசனநா ரதியந் தொல் சீர்க், கோமதமா மெழுகிரியுஞ் சிவைவி பாபை குளிரமிர்தை சுகிர்தைமநு தத் தை சித்தி, மாமைதரு கிரமையெனு மாறங் கேழு மருவியிடுந் ததிக்கடமுன் வளைய நின்ற, வேமமுறு குசத்தீவில் வபுட்டுவென்னு மிறையவற்குஞ் சிறுவர் களா யெழுவ ருண்டால். (௪௯)

* பௌதிகமெழுவாயானமூன்று-ஆதிபௌதிகம்,ஆதிதைவிகம்,அத்தியான்மிகம்.

சுப்பிரத னுரோகிதனே தீரன் மூகன் சுவேதகன்சித் தியன்வயித்தி தன்னென்
ருேது; மிப்புதல்வர் பேராலேழ் வருட மாக்கி யீந்தனனுன் னதங்குமுதங் குமார
மேகம், வைப்புறுசந் தகமகிட மேது ரோண மலையேழுஞ் சோனைவெள்ளி மதி
யே தோமை, யொப்பறுநேத் திரைவிமோ சனைவி ருத்தி யோரேழு நதியுளவா
லுவை புத்தேள். (௫0)

தர்ப்பகரே கபிலர்சா ரணர்நீ லத்தர் தண்டர்விதண் டகராண்டைச் சனங்க
ளாவா, ரப்புறநெய்ப் புணரிகிர வுஞ்ச தீப மதற்குமன்னன் சோதிட்டா மவன்
றன் மைந்தர், மெய்ப்படுசா ரணன்கபிலன் கிருதி கீர்த்தி வேணுமா னிலம்பகனுற்
பிதனே யென்னச், செப்புமெழு பேராலேழ் வருட மாக்கிச் சிறப்புடனே யவ
ரரசு செய்தற் கீந்தான். (௫௧)

மன்னுகுசே சயமரிவித் துருமம் புட்பா வருத்தமிமந் துதிமானே மந்த ரந்தா,
னென்னுமலை யேழுசிவை விதூத பாபை யிமைபுனிதை பூரணையோ டகில பா
பை, சென்னெறிசேர் தம்பையெனு நதியோ ரேழு சேர்ந்துளது தபதர்சடா வக
ர்மந் தேகர், பன்னுபுக ழனேகரவர் சனங்க ளாவார் பங்கயனே யங்குடைய
பகவ னம்மா. (௫௨)

மற்றதனுக் கப்பாலை யளக்கர் கன்னல் வளைந்துடைய தீபஞ்சான் மலியா மங்
கட், கொற்றவனுந் துதிமான னவன்றன் மைந்தர் குசலன்வெய்யன் றேவன்
முனி யந்த கார, னற்றமிலா மனோரதன்றுந் துபியா மன்னோர்க் களித்தனனேழ்
கூறுக்கி யசல மேழுஞ், சொற்றிமிரஞ் சுரபிவா மனம்வி ருத்தந் துந்துபிசம்மி
யத்தடம்புண் டரீக நிற்கும். (௫௩)

போதுகுமு தங்கவரி யாதி யாமை புண்டரிகை மனோபமைசந் தியையென்
ருேதுஞ், சீதநதி யேழுசெல்லும் புட்க லாதர் சிறந்திடுபுட் கரர்தனியர் சிசிர
ரென்போ, ரேதமிலா துறைசனங்கள் கடவு ளீச னிதற்குமப்பான் மதுக்கடல்
சூழ்ந் திருந்த தீப, மேதகுகோ மேதகமவ் வியனே தொன்னுள் வேந்தனவற்
கெழுமைந்தர் மேனுள் வந்தார். (௫௪)

தூயவிமோ கனன்மோகன் சகலன் சோமன் சுகுமாரன் குமாரன்மரீ சகனு
மைந்தர்க், காயதையேழ் கூறுபுரிந் தளித்தான் சிங்க மத்தமுத யஞ்சலகங் கிர
வுஞ்ச மாம்பி, கேயமிர மியங்கிரியே ழயாதி தேனுக் கிளர்கபத்தி சுகுமாரி
குமாரி யிக்கு, மாயைநதி யேழுளமந் தகரா மங்கர் மாகதர்மா னசர்மாக்கண் மதி
முன் றெய்வம். (௫௫)

புடையினது தூயபுனற் கடலாந் தீபம் புட்கரமன் னன்சவனன் புதல்வ ரா
னோ, ரடல்கெழுவு தாதகிமா பீத னென்போர்க் கதனையிரு கூறுபடுத் தளித்தா
னென்ப, விடபமகேந் திரம்வருணம் வராக நீல மிந்திரமந் திரியமெனு மேழு வெ
ற்புக், குடிலைசிவை யுமைதரணி சுமனை சிங்கை குமரியெனு மெழுநதியுங் கொ
ண்டு மேவும். (௫௬)

மேனிலா வியநகரர் நாக ரென்போர் மேவியமர் பரிசனம்வெய் யவனே புத்
தே, ளானதோர் புட்கரத்தின் முடிவி லைம்ப தாயிரம்யோ சனைதன்னி னசல
மொன்று, மானசோத் தரமெனவே சகடக் கால்போல் வட்டணைபெற் றிடுமெதன்
கண் மகவா னுக்கு, மேலையோ ரெழுவருக்குங் குணபா லாதி யெண்டிசையி
னுழ்பதங்க ளெய்து மன்றே. (௫௭)

௩௧

Digitized By Roja Muthiah Research Library

பொங்குதிரைப் புணரிகளின் முடிவு தோறும் புடையுறவே வளைந்தொவ்வோர் பொருப்பு நிற்கு, மிங்குளதோர் சாகமுதற் றீப முற்று மிருக்குநர்க்கு நரைதிரை மூப் பின்ன வில்லை, யங்கவர்கள் கலியினுங்கிம் புருடர் தன்மை யடைவர்பதி னுயிரமாண் டமர்வ ரப்பாற், றங்கியது நபனியப்பா ரதனைச் சூழ்போய்த் தடம் பெருகே மிப்பொருப்புச் சார்வுற் றன்றே. (௫௮)

நேமிவரை யதற்கிப்பாற் சுடரே யப்பா னிசிப்படலஞ் செய்யமணி நிறனே மன்னர், காமருச் ரியக்கரிராக் கதரே வெம்பேய்க் கணங்களமர்ந் திடுவர்திசைக் கடவு ளோருந், தாமுடைய மாதிரத்தின் மேரு வின்கட் டங்குதல்போல் வைகு வரங் கதனுக் கப்பா, லேமமுறு புறக்கடலங் கதனுக் கப்பா லிருளாகு மதற்கப் பா லெய்து மண்டம். (௫௯)

ஊழிநெறி யாற்றத்த முயிரைத் தாமே யொழிவுசெய்தோ ருந்தெருளு முண ர்வி லோரு, மாழிவரைப் புறஞ்சூழ்வ ரப்பா லாகு மாரிருள்சே ரெல்லைதனி லாதி யீசர், வாழுமொரு பெருங்கயிலை யுண்டவ் வண்ட மருங்கதனிற் கணநிரை கள் வதிந்து மல்குஞ், சூழுறுசம் புத்தீப முதலா வண்டச் சுவர்காறும் புவியெ ன்பர் தொல்லை யோரே. (௬0)

இப்புவியின் மேற்கணத்தி னுலக மாகு மிதன்மிசைக்குய் யகலோக மிதற்கு மீது, வைப்புடைய வீரைங்கால் வயங்கு தேய மற்றதன்மே லெழுபுயனும் வழ ங்கு மெல்லை, முப்பதினு யிரகோடி முகிலொவ் வொன்றை முறைசூழ்வுற் றிடுமத ற்கு முன்ன ராகச், செப்பரிய கிம்புருடர் கருட ரானோர் சித்தர்கள்விஞ் சையரி யக்கர் செறியு மூதூர். (௬௧)

இங்கிதன்மேற் சுரநதிசெல் லிடனே யப்பா லிரவிபதந் தரணிக்கோ ரிலக்க மாகு, மங்கதனின் முப்பான்முக் கோடி தேவ ருக்கனுடன் வழிக்கொள்வ ரத ற்கு மீதே, திங்களுல கோரிலக்க மும்பர் தன்னிற் செறிதருதா ரகையுலக மிலக் கஞ் சேணிற், பொங்கொளிசேர் புதனுலகி ரிலக்க மப்பாற் புகருலக மீரிலக்கம் பொருந்திற் றன்றே. (௬௨)

அந்தரமேற் சேயுலகீ ரிலக்க மேலே யரசனுல கீரிலக்க மதற்கு மீதே, மந்த னுல கீரிலக்க மதன்மே லோரேழ் மாமுனிவ ருலகிலக்க மாகு மப்பா, ணந்துருவ னுலகிலக்கம் புவர்லோ கத்தி னலத்தகைய தொகைபதினைந் திலக்க மாகு, மிந்தவுல கத்துமிசை யுடைய தேய மெழுவகையா மருத்தினமுங் கெழுவு மெ ல்லை. (௬௩)

தொகலோடு சேர்தருமிப் பதத்தின் மீதிற் சுவர்லோக மெண்பத்தஞ் சிலக்க மாங்கே, புகலோடு வானவரும் பிறரும் போற்றப் புரந்தரன்வீற் றிருந்தரசு புரிவ னப்பான், மகலோக மிருகோடி மார்க்கண் டாதி மாமுனிவர் பலர்செறிவர் மற்ற தன்மே, லிகலோகம் பரவுசன லோக மெல்லை யெண்கோடி பிதிர்தேவ ரிருப்ப ரங்கண். (௬௪)

தவலோக முன்னதமீ ராறு கோடி சனகர்முத லாவுடைய வனகர் சேர்வ, ரவண்மேற்சத் தியவுலக மீரெண் கோடி யயனின்பத் தலமுலக மளிக்குந் தான, நலைதீரும் பிரமபத மூன்று கோடி நாரணன்வாழ் பேருலக மோர்முக் கோடி, சிவலோக நாற்கோடி யதற்கு மீதே திகழண்ட கோளகையுங் கோடி யாமே. ()

Digitized By Roja Muthiah Research Library

வேதமொடு தந்திரமு மவற்றின் சார்பு மிருதிகளும் பிறநூலும் வேறு வேறா, வோதிடுமண் டத்தியற்கை மலைவோ வென்றா லுண்மை தெரிந் திடிற்படைப்பு முலப்பில் பேத, மாதலினா லவ்வவற்றின் றிரிபு நாடி யறிந்தவுனக் கீண்டுண்மை யதுவே சொற்றா, மேதமிலிவ் வண்டத்திற் புவன நூற்றெட் டிறையருள்சே ருருத்திரர்தம் மிருக்கை யாமே. (சுசு)

வே று.

இந்தவண்டத்தினியற்கையமுன்னுனக்கிறைவன்
றந்தவண்டங்களாயிரத்தெட்டுமித்தகைமை
மைந்தநீசென்றுகாணுதியெனவகுத்துரைப்ப
வந்தமில்லதோர்மகிழ்ச்சியினுணர்ந்தனனவுணன். (சுஎ)

அண்டகோசப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் எஅகூ.

---

# திக்குவிசயப்படலம்.

குணங்கள்பற்பலவுணர்த்தியசூரவன்றன்கழல்கள்
வணங்கிவாளரிமுகனெடுவிடைகொண்டுவயமா
னணங்குவைகியதிறலுடைச்சூர்கோனவுண
ரிணங்குதானையங்கடலிடைப்புக்கனனிமைப்பில். (க)

சேனையின்றலைபுகுதலுந்தாரகன்சென்று
கோனைவந்தனைசெய்துதன்முன்னவற்குறுகி
யானபான்மையின்வணங்கிமுன்னின்றிடவாசான்
போனவெல்லையிற்புகன்றனபரிசெலாம்புகன்றான். (உ)

ஆவதாகியபரிசெலாங்கேட்டுணர்ந்தவனுந்
தாவிலாததன்மனங்கொடுநன்றிதுதலைவ
மேவலார்களையாமினிவென்றிடவிரைவிற்
போவதேகடனென்றனனன்னதோர்பொழுதின். (ங)

அந்திவார்சடைக்கண்ணுதற்கடவுடன்னருளான்
மைந்தர்மூவரும்பெற்றதொல்வரங்களும்வலியுஞ்
சிந்தையுள்ளுறநாடியேயளியொடுஞ்சேணில்
வந்துதோன்றினடொல்லைநாளீன்றிடுமாயை. (ச)

தோன்றுமெல்லையின்முந்துறக்கண்டுவெஞ்சூர
னுன்றதம்பியர்தம்மொடுமெசமுகியோடு
மூன்றுமன்பொடுபணிதலுமன்னைதன்னுள்ள
மீன்றஞான்றினுமுவந்தனளாசிகளிசைத்தாள். (ரு)

ஆசிகூறியேவேள்வியிற்செய்கையுமதனுக்
கீசனல்கியவரங்களுங்கேட்டனளீண்டு
நேசமோடுமைக்காணியவந்தனனீவிர்
வாசவன்முதலோர்தமைவெல்லுதிர்வலியால். (சு)

Digitized By Roja Muthiah Research Library

வென்றபின்னரெவ்வுலகமும்புரந்துமேதினியி
லென்றும்வாழுதிர்மாயைகள்வேண்டிடினென்னை
யொன்றுமன்புடனுன்னுதிருன்னியபொழுதே
சென்றுவெஃகியதன்மைகள்செய்தியான்முடிப்பேன். (௭)

ஈதலாலுமைப்பிரியலன்பன்முறையானே
காதலோடுமைக்காணியசெல்குவன்கலந்து
பேதநீரறவிருத்திராலீண்டெனப்பேசி
மாதுமேகினண்மைந்தர்கண்மூவரும்வணங்க. (௮)

தோடுலாவிழிப்பொற்றொடியேகலுஞ்சூரன்
கோடிதேருடன்றுனவர்தங்களைக்கூவி
நீடுநம்பெருந்தானைகணிதிபதிக்கேகப்
பாடன்மாமுரசறைமினேகடிதெனப்பணித்தான். (௯)

அரசனேவலுமவுணர்களன்னவாறறைந்து
முரசமெற்றினர்கேட்டலுமத்திசைமுன்னி
யுரைசெய்நான்முகனுறங்குழிப்புவிகொளவொருங்கே
திரைசெய்வான்கடல்சென்றெனச்சென்றதுசேனை. (௧௦)

பத்துநூறுடனுயிரமாதியாய்ப்பலவாங்
கொத்துநீடியசென்னியர்கொடுமைசேர்குணத்தோர்
மெத்துபல்படையேந்தியகரத்தினர்விறலோர்
கத்துவார்கடலார்ப்பினரவுணர்தங்கணத்தோர். (௧௧)

விண்ணிற்பாய்வனவிரவிதேர்பாய்வனவேலைக்
கண்ணிற்பாய்வனதிசைகளிற்பாய்வனகனன்மேற்
பண்ணிற்பாய்வனவரைகளிற்பாய்வனபரவை
மண்ணிற்பாய்வனபுரவிகளளப்பிலமாதோ. (௧௨)

பாறுசென்றிடக்கொடியினஞ்சென்றிடப்பலபேய்
வேறுசென்றிடப்பாரிடஞ்சென்றிடவிண்மேன்
மாறுசென்றிடப்பிளிறொலிசேன்றிடமதநீ
ராறுசென்றிடச்சென்றனயானையினனிசம். (௧௩)

மேருச்சையமுங்கயிலையுமல்லதுவேறு
நேரற்கொத்திடுகிரிமிசைச்செல்வனநீலக்
காரிற்செல்வனவிண்மிசைச்செல்வனகடல்சூழ்
பாரிற்செல்வனசெல்வனவாழியம்பஃறேர். (௧௪)

மூன்றுகோடியோசனையதாய்நாற்றிசைமுற்று
மான்றவெல்லையினவ்வகைத்தாகியவனிக
மேன்றுசென்றனசென்றதோரளவையினினன்போற்
றோன்றுபொன்சுடரளகையையடைந்தனதூசி. (௧௫)

பூதமைந்தினுமிகவலியுடையதுபொலஞ்சே
ராதவன்றனித்தேரினுஞ்சிறப்புற்றதவனிற்
சோதிபெற்றதுபேருணர்வுள்ளதுதொல்சீர்
மாதிரங்களையகற்சியான்மறைப்பதுமன்றே. (௧௬)

Digitized By Roja Muthiah Research Library

என்றுமேயழிவில்லதுமேருவோடிகலுங்
குன்றுபோலுவதகிலமுமிமைப்பினிற்குறுகிச்
சென்றுமீள்வதுகுறிப்பினிற்செல்வதுசிதையா
வொன்றுகோடியவாம்பரிபூண்டுளதொருங்கே. (௧௭)

அழிவிலாப்பலசாரதியுள்ளதங்களப்பில்
விழுமிதாகியபடையெலாங்கொண்டதுமேவா
ரொழியவன்னவர்தேர்மிசைச்செல்லுவதுருமேற்
றெழிலியச்சுறப்பன்மணிகறங்குவதென்றும். (௧௮)

பாரைநேர்தருபரப்பினதுலகெலாம்படைத்த
நாரிபாதியனளித்தருளிந்திரஞாலத்
தேரின்மால்வரைமிசையுறும்வயப்புலிசெலல்போற்
சூரனேறியேபோந்தனனவுணர்கடொழவே. (௧௯)

ஆண்டவ்வெல்லையிலாயிரமாயிரம்யாளி
தாண்டுவெம்பரியாயிரமாயிரந்தடந்தோ
ணீண்டபாரிடமாயிரமாயிரநிரலே
பூண்டதேர்மிசையேறியேயரிமுகன்போந்தான். (௨௰)

காலுமுள்ளமும்பின்னுறமுன்னுறுகவனக்
கோலமாப்பதினாயிரம்பூண்டதோர்கொடிஞ்சிச்
சாலமார்தருவையமேற்புகுந்துதாரகனு
மாலமென்பதுசென்றெனநடந்தனனன்றே. (௨௧)

அன்னதாரகவீரனுமரிமுகத்தவனு
மன்னனோரிருபாங்கருமாயினர்வந்தார்
துன்னுதானவத்தானையந்தலைவர்கடொலையாப்
பொன்னின்மாமணித்தேரொடுமேகினர்புடையில். (௨௨)

விரவுகின்றதோரேனையர்சேனையின்வீரர்
கரியெனுங்கடன்மீதினுங்கலினமார்கவனப்
பரியெனுங்கடன்மீதினுமுதல்வனைப்பரவி
யிருமருங்கினும்போயினர்கூற்றனுமிரங்க. (௨௩)

அடல்செறிந்திடுமொன்பதிற்றிருவகையாகும்
படைகளேந்தியேயளவிலாவவுணர்கள்பரவிக்
கடல்கிளர்ந்தவண்சூழ்வனபோன்றுகாவலர்தம்
புடையில்வந்தனரசனியுமச்சுறப்புகல்வார். (௨௪)

இன்னதன்மையினாற்படைசூழ்தரவிதன்பாற்
றுன்னுதேரெனவுள்ளவுந்துரகமுள்ளனவும்
பன்னெடுங்கரியுள்ளவுமவுணர்கள்பலரு
மன்னிவந்திடநடுவுறவேகினன்மன்னன். (௨௫)

வயங்களார்த்திடுதானவரோதையுமான்றே
ரயங்களார்த்திடுமோதையுமன்னவையணித்தாய்க்
கயங்களார்த்திடுமோதையுங்கண்டையின்கலிப்பு
மியங்களார்த்திடுமோதையுமிக்கனவெங்கும். (௨௬)

Digitized By Roja Muthiah Research Library

அரியெனுந்திறலவுணர்களங்கையிலேந்து
முரியவெம்படைமுழுவதுமொன்றொடொன்றுரிஞ்ச
வெரியிறந்தனசெறிந்தனவெம்பிரான்முனிந்த
புரமெனும்படியாகியவரைகளும்புவியும். (௨௭)

நிரந்ததானவரெழுந்திடப்பூழிகணிலமேற்
பரந்துவானகம்புகுதலுமினையதுபாரா
விரிந்துபோவதைநீங்கியேயவைதனையெய்தக்
கரந்துவைகினனாழியந்தேருடைக்கதிரோன். (௨௮)

பூநடுங்கினபணிக்குலநடுங்கினபுரைதீர்
வானடுங்கினமாதிரநடுங்கினவரைக
டாநடுங்கினபுணரிகணடுங்கினதறுகட்
கூநடுங்கினநிருதர்கோன்பெரும்படைசெல்ல. (௨௯)

இனையதன்மையிற்சேனைகடம்மொடுமிறைவன்
றனதன்மாநகர்வளைந்தனனன்னதோர்தன்மை
வினவியேயோடியேதூதுவரியக்கர்கோன்மேவுங்
கனகமாமணிக்கோநகர்சென்றனர்கடிதின். (௩0)

வேறு.

சென்றிடுமொற்றர்தங்கோன்சேவடிக்கமலந்தாழ்ந்து
வன்றிறற்சூரபன்மன்மாநகர்வளைந்துகொண்டா
னின்றினியழியும்போலுமீண்டுநீயிருத்தல்சால
நன்றலவனிகத்தோடுநடத்தியாலமருக்கென்றார். (௩௧)

தூதுவருரைத்தல்கேளாத்துன்புகூர்துளக்கமெய்தி
யேதமிலவுணர்தம்மையாம்வெலற்கரிதுமுக்க
ணாதிதன்வரங்கொண்டுள்ளாரவர்ப்புகழ்ந்தாசிசெய்வான்
போதுதல்கடனேயென்னாப்பொருக்கெனவெழுந்துபோனான். (௩௨)

போயினனளகையண்ணல்புட்பகமீதுசென்று
தூயதோரியக்கரோடுஞ்சூரனைத்தொழுதுபோற்றி
யேயினவாசிகூறியானுமக்கடியனென்ன
நீயினிதிருத்தியென்றேவிடுத்தனனிருதர்போற்ற. (௩௩)

வேறு.

அன்னதுகண்டுழியவுணர்மாப்படை, மின்னவிர்முகிலினம்வெருவவார்த்தன
துன்னுறுமிளையவரோடுஞ்சூரனு, மன்னவனவ்வழிமகிழ்ச்சியெய்தினான். (௩௪)

அதுபொழுதவுணர்களளகையூடுபோய், நிதிகளுமணிகளுநீடுமானமுஞ்
சிதைவறுபடைகளுந்தேருமாக்களுங், கதிகெழுகளிறுடன்கவர்ந்துமேவினார். ()

மைம்மலிதானவர்வலிந்துவவ்வலாற், பொய்ம்மையில்பெருவளம்யாவும்போக்கிய
செம்மையிலந்நகர்திருவுநீங்கிய, கைம்மைதன்வடிவெனுங்காட்சித்தாயதே. (௩௬)

ஆறலைகள்வரினவுணர்யாவருஞ், சூறைகொண்டந்நகர்தொலைத்துப்போதலு
மூறுகொணிதிபதியுள்ளநாணியே, வீறகலளகையின்மீண்டுமேகினான். (௩௭)

ஆண்டுறுதனதனையடித்தொண்டாற்றுவான், மாண்டனனிவனெனமனத்திலு
ன்னியே, யீண்டியதானையொடிமைப்பிற்பாகரைத், தூண்டுதிர்தேரெனச்சூரன்
போயினான். (௩௮)

Digitized By Roja Muthiah Research Library

அளகையைநீங்கியேயாசைக்கிறதா, யுளநகரெய்தினனொளிருநீலமார்
களனுருவெய்தியகடவுள்வைகிய, வளநகரீதெனமன்னனுன்னினான். (௩௯)

அந்தமாநகரைவிட்டவுணர்கோமகன், முந்துதன்படையொடுமுனிந்துகீழ்த்திசை
யிந்திரனகர்புகவிதனைநாடியே, வெந்துயரமரர்கோன்விண்ணிற்போயினான். (௪0)

போயதைநாடியப்புரத்தைமுற்றவுங், காயெரிகைக்கொளக்கடிதினல்கியே
யாயிடையணிகமோடகன்றுவெய்யசெந், தீயுறுநகரிடைச்சேறன்மேயினான். (௪௧)

சேறனுநாடியத்தீயின்பேரினா, னீறகல்வெஞ்சினமெய்தியாயிர
நூறெனுங்கோடியர்நொய்திற்சூழ்தர, மாறிகல்புரிந்திடவந்துநேர்ந்தனன். (௪௨)

நேர்தலுமங்கிதனீடுதானையுஞ், சார்தருமவுணர்தம்படையுந்தாமுறுப்
போர்தலைமயக்குறப்பொருதவெல்லையிற், சூர்தருகனல்படைதொலைந்துபோயதே.

தன்படையுடைதலுந்தழலின்பண்ணவன், றன்படைமனத்தனாய்த்தொல்லையூ
ழினா,ளின்படையுலகெலாமீறுசெய்திடு,வன்படைபேருருவல்லைதாங்கினான். (௪௪)

சிறந்திடுமவுணர்கோன்சேனைமாக்கடல்,வறந்திடவிப்பகன்மாய்ப்பன்யானென்னா,
நிறைந்திடுமவுணமா நீத்தமெங்கணுஞ், செறிந்தனன்வளைந்தனன் சிதைத்தன்மே
யினான். (௪௫)

கடல்கெழுசேனையைக்கலந்துபாவகன்,சடசடமுதிரொலிதழங்கப்புக்குலா
யடலுறுமெல்லையிலதுகண்டாழிவாய், விடமெனவுருத்தனன்வீரன்றாரகன். (௪௬)

உருத்திடுதாரகனொருதன்றேரொடு, மருத்தினும்விசையுறவந்துதானையை
யெரித்திடுமங்கியையெதிர்ந்துசெங்கையிற், றரித்திடுகார்முகந்தன்னைவாங்கினான்.

வானவர்தமையுமிவ்வன்னிதன்னையு, மேனையர்தம்மையுமுடிப்பனின்றெனாத்
தேனிவரிதழியந்தேவன்மாப்படை, யானதையெடுத்தனனருச்சித்தேத்தியே. ()

எடுத்திடுமெல்லையிலெரிகண்டிங்கிது,தொடுத்திடினுலகெலாந்தொலைக்குமென்னையு
முடித்திடுநான்முகன்முதலினோரையும், படுத்திடுமின்றெனப்பையுளெய்தினான்.()

சுடுங்கனற்கடவுளுஞ்சுருக்கித்தன்னுரு, வொடுங்கினனுகுலமுற்றுச்சிந்தையு
நடுங்கினன்றாரகன்முன்னர்நண்ணினான், கடுங்கதியதனொடுங்கரங்கள்கூப்பியே.()

தோற்றுவித்துலகெலாந்தொலைக்குமெம்பிரான், மாற்றரும்படைக்கலமற்றென்
மேல்விடப், போற்றினையெடுத்தியெப்புவனத்துள்ளவ, ராற்றலுமுயிர்களுமதன்மு
னிற்குமோ. (௫௧)

கழிதருசினங்கொளல்கடவுண்மாப்படை, விழுமியதன்னதைவிடுத்துளாயெனி
னழிதருமுலகெலாமதுவுமன்றியே, பழிபெறுமன்னதோர்படையின்வேந்துமே.()

பொறுத்தியென்பிழையெனப்போற்றிநிற்றலுங், கறுத்திடுமிடறுடைக்கடவுண்
மாப்படை, செறுத்தவன்மீமிசைச்செல்லவிட்டிலன், மறுத்தனன்சினத்தினைமகி
ழ்ச்சியெய்தினான். (௫௩)

எற்றிடுமெற்றிடுமிவனைவல்லையிற், செற்றிடுஞ்செற்றிடுந்தீயன்சாலவுங்
குற்றிடுங்குற்றிடுமென்றுகூறியே, சுற்றினரவுணர்கடமைச்சூழவே. (௫௪)

தானவர்யாரையும்விலக்கித்தாரக, னீநமதேவலினிற்றிநின்னுயிர்
போனதையுதவினம்போதிபோதினின், மாநகரிடையெனவல்லைகூறினான். (௫௫)

விடுத்தனனங்கியைவிடுக்குமுன்னரே, யடுத்திடுதானவரவன்றனூர்புகா
மடுத்திடுவளனெலாம்வாரிவாரிமீன், படுத்திடுகொலைஞர்தம்பரிசின்மீண்டனர். ()

வேறு.

மீண்டனரவுணரங்கிவெள்கியேதன்னூர்புக்கா
னாண்டவணகன்றுபோனான்றாரகனவ்வாறெல்லாங்
காண்டலுஞ்சூரனென்போன்கலினமான்றேரைப்பாக
னூண்டுதிநடுவன்மேவுந்தொல்லைமாநகரத்தென்றான். (௫௭)

கடவுதிதேரையென்னக்கைதொழுதையநொய்தி
னடுதொழிலவன்பாலுய்ப்பனன்னதுகாண்டியென்னாப்
படர்தரும்வலவரோடும்பலிங்கனென்றுரைக்குமேலோன்
சுடர்மலிகதிருநாணத்துண்ணெனத்தூண்டியார்த்தான். (௫௮)

ஆர்த்தனபடருஞ்சேனையதிர்ந்தனமுரசமெங்கும்
போர்த்தனகரிதேர்வாசிபுகுந்தனபூழிவேலை
தூர்த்தனதுவசம்விண்ணைத்தொடர்ந்தனதூசியென்னுந்
தார்த்தொகைமுன்னமேகித்தண்டனூரடைந்தவன்றே. (௫௯)

அடைதலுநடுவன்றன்பாலாங்கொர்தூதெய்திநந்தங்
கடிநகர்கலந்தவந்தக்காசிபமுனிவன்மைந்தர்
கொடியவெஞ்சேனையென்னக்கூற்றெனுங்கடவுள்கேளா
விடியுறுமரவமென்னவேங்கினனிரங்குகின்றான். (௬0)

வேறு.

முன்னுறுதனதனுமுளரித்தேவனு, மன்னனையெதிர்கொளாவழுத்திப்போயினா
ரன்னதுபுரிவதேயழகிதாமென, வுன்னினனடுவனுமுணர்விலும்பரான். (௬௧)

தேற்றமொடெழுந்துதன்மகிடஞ்சேர்ந்தன, னேற்றமில்படைஞருமீண்டவேகியே
கூற்றுவனிமைப்பினிற்குறுகிச்சூரனைப்,போற்றினன்றொழுதனன்புகலுமாசியான்

திருத்தகுமறலிதன்செய்கைநோக்கியே, யருத்தியின்மகிழ்வுறுமவுணனம்பணி
பரித்தனையீண்டுநின்பரிசனத்தொடு, மிருத்தியென்றனையனையேவிப்போயினான்.

இறுதியையியற்றுவானிருக்கையென்பதோர்,மறிகடலதனிடைவளங்கொள்வா
ரியைத், திறலுறுமவுணர்தஞ்சேனைசென்றரோ, முறைமுறைகவர்ந்தனமுகிலின்
றன்மைபோல். (௬௪)

கூற்றுவன்பெருவலிகுறைந்தவண்ணமும், போற்றினன்போயதும்புந்தியுன்னியே
யாற்றவுமகிழ்வுறீஇயனிகமோடுதென்,மேற்றிசைநிருதிமேல்விரைவினேகினான்.()

நிருதியுமிஃதெலாநேடியாமிவர்ப், பொருவதுமரியதாற்போரியற்றினும்
வருதிறலில்லையால்வசையதேயெனாக், கருதினனவரொடுகலத்தற்குன்னினான். ()

உன்னினன்றானையோடொருங்குமேவியே,'மன்னவனெதிர்புகாவழுத்திமற்றவன்
றன்னடிவணங்கியுன்றமரியானெனாப், பன்னினன்றாரகன்பாங்கரேகினான். (௬௭)

அருகுறவருதலுமவுணர்கோமக, னிருதியினகரினைநீங்கியேகலும்
வருணனுமருத்துவும்வாரிதன்னினு, மிருள்செறியுலகினுமிமைப்பிற்போயினார். ()

போதலுமவரவர்புரத்தைச்சூறைகொண்,டேதமதியற்றுவித்தெழுவகைத்தெனும்
பாதலவுலகினிற்படர்ந்துதானவ, ராதியர்போற்றிடவருள்செய்தேகினான். (௬௯)

உற்றனனாகர்கோனுலகிலன்னவன், செற்றமொடேசெருச்செய்யத்தானையால்,
வெற்றிகொண்டேயவன்வியந்துபோற்றிட, மற்றவனிருக்கையோர்வைகல்வைகி
னான். (௭0)

Digitized By Roja Muthiah Research Library

அத்தலையுரகர்கோனமரர்தந்திட, வைத்திடுமமுதினைவலிதின்வாங்கியே
மெய்த்தருதம்பியரோடுமேன்மையாற், றுய்த்தனனகன்றனன்சூரபன்மனே. ()

ஏனையபிலந்தொறுமேகியவ்வயின், மேனதோர்விருந்தினைவியப்பினுடியே,மான
வர்படையொடும்வல்லைமீண்டனன், போனதோர்நிலைதொறும்புகழைநாட்டினான்.

வேறு.

பூவுலகிடையேபோந்துபுணரியொன்றகன்றுமற்றைத்
தீவினையொருவிச்சூரன்சேனைமாநீத்தஞ்சூழ
மாவொடுபுவனிபோற்றவரியராவணையினேமிக்
காவலன்றுயில்கூர்பாலின்கடலிடைக்கடிதுபுக்கான். (௭௩)

புக்கதோர்வேலையன்னான்போர்ப்படையவுணர்யாரு
மைக்கடன்மேனிமாயோன்மன்னினனீண்டையென்னா
வக்கடலதனைத்தொன்னாளமரர்கள்கடைந்ததேபோன்
மிக்கதோராரர்ப்பினோடும்விரைவுடன்கலக்கலுற்றார். (௭௪)

ஆர்த்திடுமுழக்கங்கேளாவம்புயத்திருவும்பாரும்
வேர்த்துடல்பதைப்பவஞ்சிவெருக்கொடுகரியமேனித்
தீர்த்தனதகலத்தூடுசேர்ந்தனர்தழுவவன்னோன்
பார்த்தனனஞ்சலென்றுபகர்ந்தனன்றுயிலைநீங்கி. (௭௫)

இம்மெனப்பணியின்மீதுமெழுந்தனனிறுதிசெய்யும்
வெம்மைகொள்கடவுட்டையும்வெருவரவுருத்துச்சீறி
நம்மையும்பொரவுந்தீயோர்நண்ணினர்போலுமன்னார்
தம்வலிகாண்டுமென்னாத்தடக்கைகள்புடைத்துநக்கான். (௭௬)

சிந்தையிலுன்னுமுன்னர்த்திறன்மிகுமுவணர்கோமான்
வந்தனனவன்பொற்றோண்மேன்மடங்கலேறென்னப்புக்குச்
சந்திரனனையசங்கஞ்சக்கரங்கதைவாள்சாப
மைந்தெனும்படையுமேந்தியவுணர்தம்படைமுற்சென்றான். . (௭௭)

கோட்டினன்சார்ங்கமென்னுங்குனிசிலையினைநாணோதை
காட்டினனவுணருள்ளங்கலக்கினன்கொண்டசெற்றம்
வீட்டினன்றனையாவும்விலக்கினன்பகழிமேன்மேற்
பூட்டினன்சோனைக்கொண்மூவாமெனப்பொழிதலுற்றான். (௭௮)

பொழிந்திடுகின்றகாலைப்போர்கெழுமவுணர்தானை
யழிந்தனதேருமாவுமாடலங்கரிகடாமு
மொழிந்தனவிறலும்போரினூக்கமும்படையுமெல்லாங்
கழிந்தனசூறையுற்றகாரெனலாயவன்றே. (௭௯)

சூழ்ந்திடுமவுணர்சென்னிதுணிந்தனதோளுந்தாளும்
வீழ்ந்தனகரங்கள்சிந்திவிரவினகுருதிநீத்த
மாழ்ந்திடுபுணரியெல்லாமாயினவவனிதானுந்
தாழ்ந்தனபிணத்தின்குன்றந்தகைந்தனதபனன்றேரை. (௮0)

ஒடிந்தனவிரதமாழியுருண்டனகவனப்பாய்மா
மடிந்தனகளிறுநொந்துமாண்டனவயவர்பல்லோர்
முடிந்தனர்குருதிநீத்தமூடினவதனுண்மூழ்கிப்
படிந்தனவலகையீட்டம்பாரிடம்பரந்தவன்றே. (௮௧)



Digitized By Roja Muthiah Research Library

சுடர்கெழுநேமியண்ணறுயிலுறுபாலின்வேலை
யிடையொருசிறிதுமின்றியெங்கணுமெருவையாகி
யடைவதுகடவுளாடுமாரழலதனையுண்ணக்
கடையுகம்விரவுகின்றகாட்சியைப்போன்றதம்மா. (௮௨)

விண்ணுலாம்படிவமாயோன்மேதகுமுவணத்தோடு
மண்ணுலாங்கடலாமென்னவவுணரைவளைந்துசுற்றி
யெண்ணிலாவுருவங்காட்டியாவரும்போகாவண்ண
மண்ணல்வாம்பகழிசிந்தியமர்செய்தானமரரார்ப்ப. (௮௩)

அடுசமர்புரியுமெல்லையாங்கவையுருத்துநோக்கி
யுடைவதோரனிகந்தன்னையொன்றுநீரஞ்சலென்று
வடவரையனையவாற்றன்மாபெருந்தனுவொன்றேந்தி
யிடியுறழ்கலிமான்றேர்மேற்றாரகனிமைப்பின்வந்தான். (௮௪)

வானிலமளவுசெய்தமலர்ப்பதத்தண்ணன்முன்னந்
தானெதிர்புகுந்துவெய்யோன்றன்பெருந்தனுவைவாங்கி
மேனகுசரங்கள்கண்ணன்மிசையுறவேலைமீதிற்
சோனைவிண்பொழிவதென்னத்துன்னெனத்தூவியார்த்தான். (௮௫)

ஆர்த்திடுமளவைதன்னிலச்சுதனயில்வேலென்னக்
கூர்த்திடுமுலப்பில்வாளிகொடியதாரகன்றன்மேனி
தூர்த்தனன்றேரும்பாகுந்தொலைத்தனுஞ்சோர்விலாதான்
பேர்த்தொருதடந்தேருற்றுப்பெருஞ்சிலைவாங்கினானால். (௮௬)

உற்றிடுமவுணன்மான்மேலோராயிரம்பகழியோச்சி
யற்றமில்கருடன்மீதுமாயிரம்விசிகமுய்ப்ப
மற்றவையவன்பாற்றீயமாசுணம்பலவுந்தங்கள்
பற்றலன்றன்னைவவ்வும்பரிசெனச்செறிந்தவன்றே. (௮௭)

ஆயிடையவுணர்கோமானலக்கணுற்றதனைநோக்கி
மாயவனுலப்பிலாதவடிவினையெய்தியந்தத்
தீயவற்சூழ்ந்துவெம்போர்செய்துழியவனுந்தங்க
டாயருண்மனுவையுன்னித்தானுமந்நிலையனானான். (௮௮)

தாரகவசுரன்றானுந்தணப்பில்பல்லுருவங்கொள்ளா
வீரிருவைகல்காறுமிந்திரைகேள்வனோடு
பேரமர்புரிந்தவெல்லைப்பிதாமகனிதனைநோக்கி
யாரிவனெதிர்நிற்பாரென்றதிசயநீரானான். (௮௯)

எல்லையங்கதனின்மாயோனெறுழ்வலியவுணனேறுஞ்
சில்லியந்தேருமாவுந்திறன்மிகுவலவன்றானும்
வில்லொடுதுணிந்துவீழவிசிகமோர்கோடியுய்த்தா
னெல்லையினதனைநாடியும்பர்கோனுவகைபூத்தான். (௯0)

திண்டிறற்பரியுந்தேருஞ்சிலையொடுவலவன்றானுந்
துண்டமதடைதலோடுஞ்சூரனுக்கிளையதோன்ற
றண்டமொன்றெடுத்துக்கீழ்போய்த்தலைபணித்தமரரஞ்ச
வண்டமுங்குலுங்கவார்த்தங்கரிதனையெதிர்ந்துசென்றான். (௯௧)

Digitized By Roja Muthiah Research Library

எதிர்வருமவுணன்றன்மேலெண்ணிலாப்பகழிமாரி
விதியினையளித்தமாயன்வீசலுமவற்றையெல்லாங்
கதைகொடுவிலக்கிச்சிந்திக்கனன்றுமூழ்க்கடிதிற்செல்ல
வதுதனைநோக்கிமாலுமாழியம்படையையுய்த்தான். (௯௨)

ஓரிமையொடுங்குமுன்னருலகெலாந்தொலைக்குந்தன்மைப்
போரயினேமிதானும்புராரிதன்வரத்தாற்சென்று
தாரகவசுரன்கண்டந்தன்னைவந்தணுகிச்செம்பொ
னாரமதாயிற்றம்மாதவத்தினுமாக்கமுண்டோ. (௯௩)

பணியுறுகடவுணேமிப்படையுமாங்கவுணன்கண்டத்
தணியதாயிருத்தலோடுமரனருள்வரத்தையுன்னித்
தணிவிலற்புதத்தனாகித்தாரகன்வலியனென்னா
மணிகிளர்மேனிமாயோன்மற்றிதுபுகலலுற்றான். (௯௪)

அயனொடுதீசியென்னுமருந்தவத்தோனும்வெம்போர்
முயலுறுமவுணர்யாருமொழிந்திடினுனக்கொப்பல்லார்
செயலுரையின்றியுண்டாற்சிறுவிதிமகத்தைச்செற்ற
வயமிருகழற்கால்வீரன்மற்றுனக்கிணையாமென்றான். (௯௫)

வன்றிறற்கடவுளாழிமணிப்பணியாயிற்றென்றால்
வென்றியுமுனதேயன்றேவேறினிப்போருமுண்டோ
வுன்றிறமிதுவேயென்னினுனக்குமுன்னவராயங்க
ணின்றவர்பெருமைதன்னையாவர்கொனிகழ்த்தற்பாலார். (௯௬)

சங்கரன்மகிழுமாற்றாற்றழன்மகம்பன்னாளாற்றி
யுங்களின்வலிபெற்றுள்ளாரவுணரிலொருவரில்லை
யிங்குமைவெல்வார்யாரேயெமக்குநீர்தமரேயென்னா
மங்கலமரபினாசிவரம்பிலபுகன்றுபோனான். (௯௭)

பார்த்தனரனையதெல்லாம்பாயிருள்கான்றமேனி
நீர்த்திரையனையசெங்கைநிருதராம்புணரியாயோ
ரார்த்தனரமரர்யாருமகன்றனரஞ்சியங்கம்
வேர்த்தனர்விளிவோரென்னமெலிந்தனர்விழுமத்துள்ளார். (௯௮)

மாதவனகன்றகாலைமற்றுமோர்வையத்தேறித்
தாதவிழ்தொடையல்வாகைத்தாரகன்றம்முனோராய்ப்
போதலுமவனுமீண்டுபுகுந்தவாறுணர்ந்துபுல்லி
யாதரமகிழ்ச்சியெய்தியனிகமோடகன்றனப்பால். (௯௯)

ஆழியங்கிரியின்காறுமகலிடவரைப்புமுற்றச்
சூழுறநாடிப்போந்துதொல்லிருவிசும்பினேகித்
தாழுறுநிலையிற்செல்லுந்தபனனேமுதலோர்யாரும்
வாழியென்றுசிகூறவானுயர்துறக்கம்புக்கான். (௧00)

வேறு.

இந்தவாறவுணர்கோன்றுறக்கத்தேகலு
முந்தியவொற்றரிற்சிலவரோடியே
வந்தனன்சூரனும்வலியன்றானென
வந்தரநாயகனறியக்கூறவே. (௧0௧)

Digitized By Roja Muthiah Research Library

அஞ்சினனுயிர்த்தனனலர்ந்துதேம்பினன்
றுஞ்சினனேயெனவுணர்வுசோர்ந்துளா
னெஞ்சலில்வன்மையதிகந்துதன்னுடை
நெஞ்சினிலினையனநினைத்தன்மேயினான். (௯0௨)

அவ்வயிற்போந்திடுமவுணன்றன்னெதிர்
செவ்விதிற்சென்றியான்செருவினேர்வனே
லிவ்வுயிர்க்கிறுதியாமிருப்பனேலிடர்ப்
பவ்வமுற்றிறந்திடாப்பழியின்மூழ்குவேன். (௧0௩)

புன்செயலாயிவட்புகுந்திடுஞ்செய
லென்செயலால்வருமியற்கையல்லது
பின்செயலொன்றிலைபிறர்செய்கின்றதுந்
தன்செயலென்பராற்சார்பின்மேலையோர். (௧0௪)

திருவுறுகின்றுழிமகிழ்ந்துந்தீர்வுழிப்
பருவரலெய்தியும்பாசந்தன்னிடை
யரிதுணர்கேள்வியரழுங்குவார்கொலோ
வருவதுவருமதுமறுக்கலாகுமோ. (௧0௫)

ஆதலினமரிழைத்தாவிநீங்கலன்
பேதுறுகின்றிலன்பீழையுற்றுளோ
ரோதருமகிழ்ச்சியுமுறுவராங்கது
நீதுசெயவுணர்தந்திறத்துக்காண்பனால். (௧0௬)

நாணொடுமொன்னலர்நகையுங்கொள்ளலன்
றாணமதுறழ்புயச்சூரபன்மனைக்
காணுவனென்னினுங்கறுவுசிந்தையா
னேணுறுதளையிடுமெனையென்றெண்ணினான். (௧0௭)

இம்முறைவாசவனெண்ணியேயெழீஇக்
கொம்மெனமனையுடன்குயிலுருக்கொடே
விம்முறுபீழையன்விண்ணிற்போயினான்
றெம்முனையவுணர்கடேடிக்காண்கிலார். (௧0௮)

ஒன்னலர்நாடுவதுணர்ந்துவானவர்
மன்னவனுக்கழுமாயும்போதுமா
லென்னினிச்செய்வதென்றிரக்கமெய்தியே
பொன்னகரெங்கணும்பொலிவுமாய்ந்ததே. (௧0௯)

பிடித்தனரமரரையவுணர்பேதுற
வடித்தனர்குற்றினரனையர்தாமையாற்
றடித்திடுந்தோள்களைத்தமதுகைகளா
லொடித்தனராமெனவொல்லைவீக்கினார். (௧௧0)

தண்ணளியாவுமின்றுயதானவர்
விண்ணவர்தங்களைவிழுமஞ்செய்திடா
வண்ணலந்திருவுறுமரசன்முன்னுறத்
துண்ணெனவுய்த்தலுந்தொழுதுபோற்றுவார். (௧௧௧)

Digitized By Roja Muthiah Research Library

அவுணரிலுதித்தனையாற்றுநோன்புரீஇச்
சிவனருள்பெற்றனைதிசையினோர்முத
லெவரையும்வென்றனையென்னினிங்கெமை
நவைபடச்செய்வதேநன்றுபோலுமால். (௧௧௨)

மறலியுமிருக்குமோமற்றைமாதிரத்
திறைவருமிமையவர்யாருமுய்வரோ
விறுதியின்றுருகுமேயுலகமீங்கொரு
சிறிதுநீவெஞ்சினஞ்சிந்தைசெய்யினே. (௧௧௩)

இற்றையிப்பகன்முதலென்றுமெங்களுக்
குற்றதோர்கடவுணீயோம்பும்வேந்துநீ
பற்றுளதமருநீபலரும்யாமினி
மற்றுனதேவலைமரபிற்செய்துமால். (௧௧௪)

வேறு.

என்றிவைபுகன்றுபோற்றுமிமையவர்தம்மைநோக்கி
நன்றுநுஞ்செய்கையென்னாநகைசெய்துயாப்புநீக்கி
மன்றநம்பணிமேல்கொண்டுவைகுதிரினிநீரென்னா
வன்றவர்தம்மைவிட்டானழன்மகத்தாவிவிட்டான். (௧௧௫)

வாசவன்வளத்தையெல்லாமவுணர்கள்வவ்விச்செல்லப்
பேசருமகிழ்ச்சிகொண்டுபின்னவர்பாங்கரேகக்
காசிபனளித்தமேன்மைக்காதலனனிகஞ்சூழ
வோசைகொண்மறைகளார்க்குமுயர்மகலோகம்புக்கான். (௧௧௬)

கற்றுணர்கேள்வியான்மார்க்கண்டேயனாதிவானோ
ருற்றிடும்பதமாந்தொல்பேருலகமேமுதலமூன்று
மற்றவர்பரவநீங்கிமலரயன்பதத்திற்போகத்
தெற்றெனவதனைத்தேர்ந்துதிசைமுகன்றுணுக்கமுற்றான். (௧௧௭)

வேறு.

வசையினேன்புடைவாலறிவுள்ளோ, ரிசைகொள்வேதமியம்பினர்சூழ
நசையினீரொடுநான்முகவேதா, வசுரர்கோனையடைந்தனனன்றே. (௧௧௮)

ஆழிமால்கடலன்னதொர்சேனை, சூழவேவருசூரனையெய்தி
வாழிவாழியவைகலுமென்னாக், கேழிலாசிகளித்தியபின்னர். (௧௧௯)

மன்னநீயிவண்வந்திடமேனா, ளென்னநோன்பையியற்றினனோயா
னன்னவாறுணரேன்சிவனல்லா, லுன்னிநாடியுணர்ந்துளர்யாரே. (௧௨0)

கற்றைவார்சடையான்கழல்பேணி, யற்றநீங்கியருந்தவமாற்றி
மற்றிவ்வாறுவளத்தியல்யாவும், பெற்றுளாய்பெருவன்மைபிடித்தாய். (௧௨௧)

பொன்னைமேவுபொலன்கெழுமார்பன், றன்னைவானவர்தங்களையெல்லா
மின்னநாளிளையோற்கொடுவென்றா, யுன்னைநேருளரோவுலகத்தில். (௧௨௨)

காதலான்மிகுகாசிபன்மைந்த, னாதலாலவுணர்க்கிறைநின்மூ
தாதையான்சரதம்மிதுநின்சீ, ரேதுமென்புகழ்யான்பிறனன்றே. (௧௨௩)

என்றுபன்முகமன்களிசைத்தே, நின்றுதம்பியர்தங்களைநேர்ந்து
பொன்றிடாதபொலஞ்சிலைதிண்டே, ரொன்றுதன்படையுமுதவுற்றான். (௧௨௪)

Digitized By Roja Muthiah Research Library

வெருவரச்சுரர்வீற்றுறுபான்மை, யிருவருக்குமளித்தனும்யாரும்
பரவுகொற்றவனன்னதுபாராப், பெருமகிழ்ச்சிகொள்பெற்றியனுனன். (கஉ௫)

அருத்தியெய்தியயன்றனையங்க, ணிருத்திமாயைமுனீந்தருண்மைந்தன்
மருத்துழாய்முடிமன்னவன்வைகுந், திருத்தகும்முலகத்திடைசென்றான். (கஉ௬)

அந்தவேலையிலாண்டுறுமாலோன், வந்துசூரபன்மாவினையெய்தி
நந்தலில்லதொர்நாளொடுவாழ்கென், றந்தமில்பலவாசிபுகன்றான். (கஉ௭)

ஆசிகூறினனுற்றவுமின்சொற், பேசவேபெருமாமகிழ்வெய்தி
மாசிலவ்வுலகெங்கணும்வல்லே, பாசனத்தொடுபோர்த்தனனன்றே. (கஉ௮)

பார்த்தபின்பணியின்மிசைவைகுந், தீர்த்தனுண்டுதிகழ்ந்துறநல்கிக்
கார்த்திலங்குறுகந்தரமுக்கண், மூர்த்திவைகியமூதுலகுற்றான். (கஉ௯)

வேறு.

அரியயன்முதலாவுள்ளவமரர்கள்யார்க்குந்தத்த
முரியதோராணையெல்லாமுலப்புறுதுதவிவைகும்
பரமனதுலகநண்ணிப்பரிசனம்யாவுநீங்கிச்
சுரர்புகழ்சூரபன்மன்றுணைவர்களோடுபோனான். (க௩0)

போந்தனனமலன்கோயிற்புறங்கடைவாயினின்றே
யாய்ந்திடுநந்தியெந்தையருண்முறையுய்ப்பச்சென்று
காந்தளையனையசெங்கைக்கவுரியோடுறையுமுக்க
ணேந்தன்முனணுகியார்வத்திறைஞ்சியேயேத்திநின்றான். (க௩க)

கண்டநஞ்சுடையவண்ணல்கருணைசெய்தினிநீயேனை
யண்டமுஞ்சென்றுநாடியாணையாலகிலம்யாவு
மெண்டிசைபுகழுமாற்றாலிறைபுரிந்திருத்தியென்னப்
புண்டரீகத்தாள்போற்றிவிடைகொண்டுபுறத்துவந்தான். (க௩உ)

புறந்தனில்வந்துசூரன்பொம்மெனத்தானையெய்திச்
சிறந்திடுகின்றவண்டகோளகைசேர்தலோடு
மறந்தருஞமலிமேலோருருத்திரர்வரம்பிலோர்க
ளுறைந்தனரனையரெல்லாமுமாபதியருளுட்கொண்டார். (க௩௩)

பாங்குறுமண்டஞ்செல்லும்பான்மையில்வாயில்காட்டி
யாங்கவர்விடுப்பமற்றையண்டத்துச்சூரபன்ம
னேங்கியதானையோடுமோல்லையிற்போகியாண்டு
மீங்கிதுபோலநாடியாரையும்வென்றுபோனான். (க௩௪)

ஏனையண்டங்களெல்லாமெம்பிரான்கணமாயுள்ளோ
ரானவரருளிற்போயகிலமுநாடியங்கண்
வானவர்தம்மைவென்றுவளமெலாங்கவர்ந்துதன்பாற்
றானவர்பலரையங்கட்டன்னரசளிப்பவுய்த்தான். (க௩௫)

இத்திறம்வீற்றுவீற்றுவெல்லையிலண்டந்தோறு
மெய்த்தமராகியுள்ளவவுணரைவேந்தராக
வைத்தனன்றுணைவரோடுமீண்டனன்மற்றிவ்வண்டப்
பித்திகையதனுட்சென்றுபெறலருந்துறக்கமுற்றான். (க௩௬)

திக்குவிசயப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௬உ௫.

# எதிர்கொள்படலம்.

திண்டிறன்மாயையின்செம்மலித்திற, மண்டர்தந்துறக்கமேலடைந்தகாலையிற், பண்டிமையோர்களாற்படரும்* தானவர், கண்டனர்மகிழ்ந்தனர்களிப்பின்மூழ்கினார்.

ஆயவன்வருவதையவுணர்தம்பெரு, நாயகற்கொற்றர்போய்நவிலவன்னவன்
றாயநல்லமுதினைக்கிடைத்துத்துண்ணென, மேயினாமெனக்களிப்பின்மேயினான்.

தானையம்படையொடுதகுவர்கோமக, னானவெஞ்சூர்பெறுமளப்பிலாக்கமுங்
கூனலம்பிறைதவழ்குடுமிச்செஞ்சடை, வானவன்கருணையுமனங்கொண்டேகினான்

அன்னவன்புகர்தனையடைந்துநங்குல, மன்னனையுற்றிடவல்லைசெல்லுவன், முன்னுறவேகியெம்முறையுஞ்செய்கையும், பன்னுதியென்றுமுன்படர்வதாக்கினான். ()

அன்னதோர்காலையிலவுணர்தேசிகன், முன்னுறமானமேன்முடுகியேகலுந்
தன்னுறுகிளைஞருந்தானுமாங்கவன், பின்னுறமன்னவன்பெயர்ந்துபோயினான். (௫)

மாசறுபேரொளிமானமீமிசைத், தேசிகன்விரைவொடுசெல்லுமெல்லையிற்
காசிபனருண்மகன்கண்டுசேணிடை, யீசனையெதிர்ந்தெனவெதிர்கொண்டேகினான்

அஞ்சலிசெய்தனனவுணனத்துணை, நெஞ்சகமகிழ்வொடுநின்றுதேசிகன்
விஞ்சுகதிருவொடுவிசயந்தாமெனா, வெஞ்சலிலாசிகளெடுத்துக்கூறினான். (௭)

ஆயதுகாலையிலனையன்பாங்கரின், மேயினவரிமுகன்வேழமாமுகத்
தீயவனிருவருந்தேரொடேகியே, தூயதோர்புகரடிதொழுதுபோற்றினார். (௮)

ஏத்திடுமவர்தமக்கியலுமாற்றினான், மீத்தகுமாசிகள்விளம்பிவேந்தனைப், பார்த்தனனுனக்கியாம்படுத்துகின்றதோர், வார்த்தையுண்டன்னதுவகுத்துங்கேட்டிநீ. ()

பங்கமில்காசிபன்பன்னியாகிய, நங்கையைப்பயந்துளானுனித்தகேள்வியான், சங்கையற்றிருந்தா னவரைத்தாங்கினா, னெங்களுக்கோர்துணை யென்னுந்தன்மையான். (௧௦)

ஈண்டையில்வாசவனெதிர்ந்துபற்பகன், மூண்டிடுவெஞ்சமர்முற்றிவீரத்தைப்
பூண்டனனாதலிற்புழுங்கிமாரிநாண், மாண்டிடுகதிரெனமாழ்கிவைகினான். (௧௧)

அத்தகுமேலையோனவனிமீமிசை, வித்திடுநாறுசெய்விளைவுகாணுறு
வெய்த்திடுநிரப்பினனென்னநின்னையே, நித்தலுநோக்கினான்சிறுமைநீங்கவே. ௧௨

தவங்கொடுமுந்துநீதழலைவேட்டதுஞ், சிவன்புரிவரங்களுஞ்செப்பக்கேட்டன
னுவந்தனாருள்மொழித்துவைகினா, னிவந்தனவாங்கவனெடியதோள்களே. (௧௩)

பற்றலர்புரமடுபரமனீந்திடப், பெற்றதோர்வரத்தொடுபெயர்ந்தியாரையும்
வெற்றிகொண்டிவண்வருமேன்மைகேட்புறா, மற்றுனையடைந்திடவருகின்றானெனா

வன்றிறலவுணர்கோன்வருதல்காட்டியே, புன்றொழில்படுத்தியபுகருரைத்தலுந்
துன்றியகனைகழற்சூரனென்பவ, னின்றனனுவகையானிறைந்தநெஞ்சினான். ௧௫

ஆர்ந்ததொல்கிளையொடு மவுணர்காவலன், சேர்ந்தனன்சூரனைச் செங்கையாற் றொழாப், பேர்ந்திடுமாவியைப்பிரிந்ததோருடல், சார்ந்திடுகின்றதோர்தன்மையென் னவே. (௧௬)

---

* படரும் என்பது படர் என்னும் பெயரடியாகத் தோன்றிய பெயரெச்சம். வருந்தும் என்பது பொருள்.

ஆயிடைவெய்யசூரவுணர்கோவினை, நீயினிதிருத்திகொலென்னநீயுனை, நீயனவ
டையுமோசிறுமையெய்துமோ, மேயநுங்குலமுறைவிளங்கத்தோன்றினுய். (கஎ)

என்றிவைநயமொழியியம்பியேபுடை, சென்றனன்மாயையின்செய்யகாதலன்
றுன்றியதருவர்தமனிகஞ்சூழ்தர, வென்றியொடவணிமேல்விரைவின்மீளவே. ()

வேறு.

மண்ணுலகத்தில்வெஞ்சூர்வந்தனனெனுஞ்சொற்கேளா
வண்ணலங்கமலத்தேவுமமரர்கோமானுமேனை
விண்ணவராயுள்ளோரும்வியத்தகுமுனிவர்யாருந்
துண்ணெனவந்துமாயோன்றுயில்கொளுங்கடலிற்புக்கார். (கசு)

கொய்துழாயலங்கன்மோலிக்குழகனைக்குறுகிநின்று
கைதொழுதிறைஞ்சித்தாங்கள்கனைகழற்சூரன்றன்ஞு
லெய்திடுசிறுமையெல்லாமியம்பினரினிமேல்யாங்கள்
செய்திடுகின்றதென்கொல்செப்புதிபெருமவென்ருர். (உ0)

அன்றவருரைத்தமாற்றமச்சுதக்கடவுள்கேளாப்
புன்றொழிற்றக்கன்வேள்விபுகுந்திடுந்தீமைதன்ஞு
லின்றிதுபொருந்திற்றம்மாயாரிதுவிலக்கற்பாலா
ரொன்றினிச்செய்யுந்தன்மைகேண்மினென்ருேதலுற்ருன். (உக)

பண்டெயின்மூன்றுமட்டபராபரன்வரம்பெற்றுள்ளா
னண்டமெங்கெவையும்வென்ருனதலானம்மால்வென்றி
கொண்டிடுதிறத்தானல்லன்கொடியவச்சூரன்றன்னைக்
கண்டுசென்றிடுதுமீதேகாரியம்போதுமென்ருன். (உஉ)

செங்கமலத்தோனுதிதேவருமுனிவர்யாரு
மிங்கிதுகருமமென்றேயிசைந்தனராகிநிற்ப
வங்கவரோடுமாயோனரவணைப்பள்ளிநீங்கித்
துங்கமதுடையதொல்சீர்ச்சூரனைக்காணவந்தான். (உங)

மருத்துழாய்மவுலியாதிவானவர்முனிவர்யாருந்
திருத்தகுசூரனேரேசென்றுநின்ருசிகூறி
யருத்தியதாகப்போற்றவவர்களுட்பதிஞேர்கோடி
யுருத்திரர்தொகுதியாஞேரொருங்குடனிற்பக்கண்டான். (உச)

கண்டிடுமவுணர்தங்கள்காவலனிமையாமுக்க
ணண்டர்தம்பெருமானென்னவமைந்ததொல்வடிவமுள்ளா
ரெண்டருதொகையின்மிக்காரீங்கிவர்யாவரென்னத்
தண்டுளவலங்கன்மோலிப்பண்ணவன்சாற்றலுற்ருன். (உரு)

எதிர்கொள்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் கூரு0.

# உருத்திரர்கேள்விப்படலம்.

மன்னவர்மன்னகேண்மோமற்றிதுபுகல்வன்வேதா
முன்னொருகற்பந்தன்னின்மூவகையுலகுநல்கித்
தன்னுயிர்முழுதுநல்கித்தண்ணெனவகந்தைகொண்டு
தன்னையும்பரமென்றுன்னித்தாணுவையயர்த்தானன்றே. (க)

Digitized By Roja Muthiah Research Library

எந்தையைமறந்துபோதன்யாவையும்விதித்தலோடுந்
தந்திடுமளவேயன்றிச்சராசரம்பெருகாவாக
நொந்தனன்குறையென்னென்றேநோக்கினனெமைமுன்னீன்ற
வைந்தொழின்முதல்வன்றன்னையயர்த்தனன்போலுமென்றான். (௨)

இனியவனருள்பெற்றன்றியிவ்விதிமுடியாதென்னாத்
தனயனுமளவில்காலந்தவம்புரிந்திடவுமுக்கட்
பனிமதிமுடியோனன்னான்பாற்படாதொழியவந்தோ
வினையினேன்முன்னந்தாதைவெளிப்படுமெவன்கொலென்றான். (௩)

கழியுடல்புயமேற்கொண்டகண்ணுதலுறாததுன்னி
யிழுதையரென்னவேங்கியின்னலுற்றுயிர்த்துவல்லே
யழுதனன்மகவென்செய்வானன்னதோர்வேலைகண்ணீர்
விழவிழவலகையாகிமிகவெழுந்தீண்டிற்றன்றே. (௪)

காண்டலுமலகையீட்டங்கருத்திடருழப்பவீழ்ந்து
மாண்டனன்போலச்சோரமன்னுயிர்க்குயிராய்நின்ற
வாண்டகையுணர்வுநல்கியனையவன்கனவினண்ணி
யீண்டினிவருந்தன்மைந்தவெழுகெனாவருளிச்செய்வான். (௫)

மதித்தனைபரமென்றுன்னைமறந்தனையெம்மையற்றால்
விதித்திறங்கூடிற்றில்லைவிரைந்ததுமுடியநந்தம்
பதத்துளார்தம்மையுன்றன்பாங்குறவிடுத்துமென்றா
னுதித்திடலிறத்தலின்றியுலகளித்துதவுமையன். (௬)

அந்நெறிகனவிற்காணுமற்புதத்தெழுந்துவேதன்
செந்நெறிபூண்டுவைகிச்சிந்தையிற்றேற்றமெய்தி
யுன்னலுமறுவரைவருருத்திரகணத்தோர்தாதை
தன்னருளதனானெற்றித்தலத்தினும்போந்துநின்றார். (௭)

நிற்றலுமவரைநோக்கிநெற்றியந்தலத்தினீவி
ருற்றதையெவன்கொலென்னவுன்செயன்முடியுமாற்றான்
மற்றெமைவிடுத்தானம்பனாதலின்வந்தேமென்றார்
பற்றலர்புரமூன்றட்டபண்ணவன்வடிவங்கொண்டோர். (௮)

பரமனதுருவாய்நின்றோர்பதினொருவோருமிவ்வா
றருள்செயவிரிஞ்சன்கேளாவன்பினாலென்பால்வந்தீர்
விரைவுடனுயிர்கடம்மைவிதிக்குதிரென்னத்தத்த
முருவுபோற்பதினோர்கோடியுருத்திரர்தொகையைத்தந்தார். (௯)

ஆங்கதுதெரிந்துவேதாவாவிகள்வினைக்கீடன்றி
நீங்களிவ்வாறுசெய்கைநெறியதன்றென்னலோடு
மோங்கியவுருத்திரேசரொல்லையெம்பதத்திற்போது
மீங்கிவனுயிரைமுன்போலீந்தனையிருத்தியென்றார். (௧௦)

என்றிவையுரைத்துப்போதன்யாவையும்படைப்பானல்கி
யொன்றியவுணர்வின்மிக்கவுருத்திரர்யாரும்வெள்ளிக்
குன்றுடைமுதல்வன்றானாட்கொடுத்திடும்புவனம்புக்கா
ரன்றுதாமளித்துளோரையமரரோடிருத்திரென்றார். (௧௧)



Digitized By Roja Muthiah Research Library

அவனியையளித்தோன்றன்பாலடைந்துளாரஞ்டந்தன்னிற்
புவனமேலிருந்தாரன்னோர்புரிந்திடத்தெரன்னுள்வந்த
பவர்முதலுருத்திரேசர்பதினொருகோடியுள்ளா
ரிவர்சிவனருளால்வானோரினத்துடனீண்டியுற்றார். (௪௨)

உருத்திரர்கேள்விப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௬௬உ.

## நகர்செய்படலம்.

எனவரிபுகலக்கேளாவின்னதோங்கிழ்ச்சியென்று
னனையதற்பின்னராண்டையமரர்கம்மியனைநோக்கி
வனைகழற்சூரபன்மன்மற்றியாமுறைதற்கொத்த
புனைதிருநகரம்வல்லேபுரிமதிபுலவவென்றான். (௧)

என்றலுங்கடவுட்டச்சனிறைஞ்சியேநமக்குச்செய்யும்
வென்றிகொண்மூதூருக்குவியலிடமுரைத்தியென்ன
நன்றெனப்புகரோன்றானேநகர்களுக்கெல்லைகூற
வன்றவைவினவித்தென்பாலளக்கரையடைந்தானன்றே. (௨)

ஆசறுகடலினூடேயயுதமோரெட்டாயுள்ள
யோசனையெல்லைமுன்னோனுறுநகராகக்கோலிக்
காசினிவரைகடம்மாற்கதுமெனத்தூர்த்துமிக்க
பாசறைகொண்டேயொப்பவணித்தலம்படுத்துப்பின்னை. (௩)

காயுறுகதிர்கள்காஞ்சிக்கம்பைமாநீழல்வைகு
நாயகிநகரமென்னநாடொறுஞ்சூழுமாற்றாற்
சேயுயர்விசும்பிற்போகச்செம்பொனான்மதிலைச்செய்து
வாயில்களுன்கமைத்துஞாயிலும்வகுத்துநல்கி. (௪)

நாற்பெருவாயிலூடுமேருவேநண்ணிற்றென்ன
மாற்பெருங்கோபுரங்கண்மணிவெயிலெறிப்பநல்கி
நூற்படுமொழுக்கநாடிநூறியோசனையொன்றாகப்
பாற்படுமாடவீதிபற்பலவமைத்துமன்னோ. (௫)

மூப்புரமொருங்குற்றென்னமும்மதிலவற்றுணல்கி
யொப்பருந்திருவின்வீதியுலப்பிலபுரிந்துசோமன்
வைப்பெனச்செம்பொன்மாடம்வரம்பிலவகுத்துமாதர்
மெய்ப்படுமாடல்கூரும்வியலிடம்பலவுஞ்செய்து. (௬)

மாளிகைதோறுந்தெற்றிமண்டபமணிசேர்முன்றில்
கோளரிதயங்குபொற்பிற்கோபுரங்குன்றமம்பொற்
சூளிகையரங்கமன்றஞ்சுடருமேற்றலங்கயே
சாளரஞ்சோலைவாவிதனித்தனியாகத்தந்து. (௭)

வேறு.

ஆயதனவேறவயுதவெல்லையிற், பாயதோர்நெடுமதில்பயிலநல்கியே
மாயவடிருமகன்வைகவாங்கொரு, கோயிலையெழில்பெறக்குயிற்றினனரோ. (௮)

வாரணம்விரவுதேர்மாக்கள்போந்திடு, தோரணவாயில்கடொடர்ந்ததெற்றிகள்
சீரணிதபனியச்சிகரகோபுரங், காரணிமணிவரைகவின்கொள்சூளிகை. (௯)

Digitized By Roja Muthiah Research Library

ஆனைகள்பயிலிடமயங்கள்சேரிடஞ், சேனைகளுறைவிடந்தேர்கள்வைகிடங்
தானவர்தலைவர்கள்சாருந்தொல்லிட, மேனையவரக்கர்களினிதுசேரிடம். (க0)

நாடரும்விசும்புறைநாரிமாரெலா, மாடலையியற்றிடுமரங்கமண்டபம்
பாடலின்முறைபயில்பைம்பொன்மண்டப, மாடகயாழ்முரல்வயிரமண்டபம். ()

மயில்புறவோதிமம்வன்னமென்கிளி, குயின்முதலாகியகுலவுமண்டப
மியலுறுயூகமானிரலைசெச்சைகள், பயிலுறுவாரணம்பரவுமண்டபம். (கஉ)

சந்ததமறையொலிதழங்குமண்டப, முந்தியவேள்விகண்முயலுமண்டப
மந்திரவியல்பினோர்மருவுமண்டப, மிந்திரன்முதலினோரிருக்குமண்டபம். (கங)

திருமிகுநிருதர்கோன்றேவர்போற்றிட, வரசியல்புரியுமத்தாணிமண்டப
மிருநிதியுளவெலாமீண்டுமண்டபம், பரனருள்படைக்கலம்பயிலுமண்டபம். (கச)

அருந்துறுமமிர்துறழடிசின்மண்டப, நரந்தையேபாளிதநறைகொள்சாந்தகில்
பெருந்துவர்க்காயடைபிறவுஞ்சாலவு, மிருந்திடுகின்றபேரெழில்கொண்மண்டபம்.

மானனையார்பலர்மருவுமண்டப, மானதோருசலாட்டயருமண்டபம்
பாணிலாவுமிழ்தருபளிங்கின்மண்டபம், வானுயர்சந்திரகாந்தமண்டபம். (கசு)

மாமணியொளிர்தருவசந்தமண்டபங், காமருபவளமார்கவின்கொண்மண்டப
மேமருமரகதத்தியன்றமண்டபந், தாமரையுயிர்த்திடுதரளமண்டபம். (கஎ)

கோவியன்மரபினோர்கொள்கைக்கேற்றன, யாவையுநல்கியேயிதனுக்குள்ளுற
மாவுறுசூரபன்மாவுந்தன்குலத், தேவியுமுறையவோருறையுள்செய்தரோ. (கஅ)

இங்கிதுசூழ்தரவெண்ணிலாதன, மங்கலநிறைதருமாடவீதிக
ளங்கவன்றுணைவியராகிவந்திடு, நங்கையர்மேவரநலத்தினல்கியே. (ககூ)

காவியுங்குமுதமுங்கமலமுஞ்செறி, வாவிகளோடைகள்பொய்கைவான்றொடு
பூவியறண்டலைபொலன்செய்குன்றுடன், யாவையுமுறைபடவியற்றினனரோ. ()

அள்ளலந்திரைக்கடலகழியாகவே, யுள்ளுறுநகரிடையுறையுங்கோயிலிற்
றள்ளரும்பொன்சுடர்தழைத்தபொற்பினால்,வெள்ளியதானதுமேலைப்பொன்னகர்.

வேறு.

இன்னவையுமேனவையுமெண்ணிமனத்தாலருளித்
தன்னிகரிலவுணர்பிரான்சயத்தோடுபெருந்தலைமை
மன்னவருதலின்வீரமகேந்திரமேயாமென்றே
யந்நகருக்கோர்நாமமணிபெறுத்தியளித்தனனே. (உஉ)

ஏமபுரமிமையபுரமிலங்கைபுரநீலபுரஞ்
சோமபுரமெனப்புகலுஞ்சுவேதபுரமவுணர்புரம்
வாமபுரம்பதுமபுரமகேந்திரமாபுரமென்னும்
காமர்புரத்தெண்டிசைக்குங்காட்சிபெறவுதவினால். (உங)

மாண்டகுசீர்கெழுவீரமகேந்திரமிவ்வாறுதவி
யாண்டதுபோலகன்பரப்பிலாசுரமென்றொருநகர
நீண்டவடகடனடுவணிருதர்புகழ்ந்திடுமாற்றாற்
காண்டகையசீயமுகக்காவலற்குநல்கினனே. (உச)

Digitized By Roja Muthiah Research Library

மற்றுளவெம்புணரிதொறும்வயின்வயின்சேர்தீவுதொறுங்
கொற்றமிகுஞ்சூரபன்மன்குலவுபெருந்தானையெலாஞ்
சுற்றமுடன்மேவுதற்குத்தொன்னகரம்பலவமைத்துக்
கற்றுணருஞ்சிறுவரொடுங்கம்மியன்மீண்டேகினனே. (௨௫)

வேறு.

நீடுமேருநெடுவரைத்தென்புடை, நாடுசீர்கெழுநாவலந்தீவினிற்
கூடுகின்றபொற்கூடந்தனக்கொரு, மாடுபோந்தனன்மாமயன்றனையே. (௨௬)

பகருகின்றவப்பாற்படுமெல்லையிற், றகுவர்போற்றிடுந்தாரகற்காகவே
மகிழ்வினீரொடுமாயாபுரமெனு, நகரமொன்றையணிபெறநல்கினான். (௨௭)

வினையர்தம்மொடுவிச்சுவகன்மனு, மினையவூர்களியற்றியம்மாயையின்
றனயனுக்கிவைசாற்றலுநன்றெனு, வனிகமோடங்கடைந்தனனென்பவே. (௨௮)

நகர்செய்படலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௩௩௰.

## பட்டாபிடேகப்படலம்.

மற்றவ்வீரமகேந்திரநண்ணியே, யுற்றுநாடியவ்வும்பர்தங்கம்மியன்
கற்றவிஞ்சைவியந்துகளிப்புறீஇக், கொற்றநீடுதென்கோயிலைநண்ணினான். (௧)

நண்ணுகின்றுழிநான்முகனாதியாம், விண்ணுளோர்கள்வியன்முடிசூட்டுது, மன்
னனுக்கென்றவற்றிற்குவேண்டிய,வெண்ணில்பல்பொருள்யாவுமுய்த்தாரரோ.(௨)

கோவினண்ணியகொற்றவன்மற்றொரு, தாவில்பீடிகைதன்மிசைவைகியே
மாவுலாவியமால்கடற்றெண்புன, றேவராட்டச்சிறப்புடனாடினான். (௩)

ஆடியம்பொனினாடையுடீஇமலர், சூடியொண்கலன்றூயனபூண்டுபின்
பீடுசேர்தருபின்னவர்பால்வர, நீடுகாதனிருதர்புகழவே. (௪)

நிகரிலாதநிருதர்க்கிறைதொழப், புகருமாமுனிவோரும்புகழ்ந்திட
மிகநடுங்கியவிண்ணவர்போற்றிட, மகபதிக்குமனந்தளர்வெய்தவே. (௫)

வந்துசீயமணித்தவிசேறின, னந்தவெல்லையிலச்சுதற்காமெனு
மிந்திரத்திருமாமுடியேந்தியே, சுந்தரத்தொடுநான்முகன்சூட்டினான். (௬)

கண்டுதானவர்காசிபன்காதலன், புண்டரீகப்பொலன்கழறாழ்ந்தெழா
வண்டொணாமகிழ்வாலடுந்தேறலை, யுண்டுளாரினுளங்களிப்பெய்தினார். (௭)

அன்னவேலையமரர்முனிவர்கள், பொன்னவாநறும்போதுகரங்கொடே
மன்னர்மன்னன்மணிமுடியின்மிசை, முன்னிவாழ்த்திமுறைமுறைவீசினார். (௮)

வேறு.

பாங்குறுதவிசின்பாலிற்றுணைவர்பங்கயன்மாறம்மை
யீங்கினிதிருத்திரென்னவிருந்தனரேவலாலே
யோங்கியமகவான்கொண்டான்களாசியொண்ணிதியின்கோமான்
றாங்கினனடைப்பைமற்றச்சமீரணர்கவரிகொண்டார். (௯)

Digitized By Roja Muthiah Research Library

நிருதர்தங்குரிசிலானநெடுந்தகையுடைவாள்கொண்டான்
பரிதியுமதியுமங்கட்பணிக்குடைநிழற்றிநின்றார்
வருணனுமகாருமாலவட்டம்வீசினர்யாழ்வல்ல
கருடர்கந்தருவர்சித்தர்கானமங்கிசையாநின்றார். (௧௦)

முத்தலையயில்வேலேந்திமுறைநெறியாற்றுங்கூற்று
மெய்த்தழற்கடவுடானும்வேத்திரமேந்தியாண்டு
மெத்திறத்தவருநீங்கவெரிவிழித்திடியினார்த்துப்
பத்தியினிறுவிச்சூரன்பல்புகழ்பரவிநின்றார். (௧௧)

குரைகழனிருதியென்போன்கோடிகமதுகைக்கொண்டா
னிருமைசேர்குரவர்தாமுமெல்லைதீர்முனிவர்யாருந்
திரைகெழுகங்கைத்தூநீர்செம்பொனங்கலசஞ்சேர்த்துத்
துருவையின்மறையால்வாங்கித்துவலைதூர்த்தாசிசொற்றார். (௧௨)

அரம்பைமேனகையேமிக்கவுருப்பசியாதியாகி
வரம்பறுமமரர்மாதர்வரன்முறைவிதியினாடி
நரம்பியல்சுருதிபாடலியத்தொடுபடிந்துநண்ணித்
திரம்பயினடனமூன்று *ஞ்செவ்விதிற்புரியலுற்றார். (௧௩)

இத்திறமமரர்யாருமேனையர்தாமுமீண்டித்
தத்தமதுரிமைதன்னைத்தவாநெறிதலைக்கொண்டாற்ற
மைத்தகுசூரபன்மன்மடங்கலந்தவிசின்மீதே
மெய்த்திருநிகழமன்னிப்பின்னிவைவிளம்பலுற்றான். (௧௪)

பட்டாபிடேகப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௦௦௪.

# அரசுசெய்படலம்.

களித்திடுஞிமிறும்வண்டுங்கலந்திடநறவம்பொங்கித்
துளித்திடுதுழாய்மாறன்னைச்சூரனுமவுணன்பாரா
வளித்தவன்றன்மூதாதையாயினையதனானின்னை
விளித்திடுமெல்லைதோறும்விரைந்திவண்மேவுகென்றான். (௧)

செங்கமலத்தின்மேவுந்திசைமுகத்தொருவன்றன்னைத்
துங்கமோடரசுசெய்யுஞ்சூரனும்வீரன்பாரா
விங்குநின்மைந்தரோடுமென்னிடந்தன்னிலேகி
யங்கமைவகையுநாளுமறைந்தனைபோதியென்றான். (௨)

அறத்தினைவிடுத்ததீயோனருக்கனைநோக்கிநம்மூர்ப்
புறத்தினிலரணமீதாய்ப்போகுதலரிதுகீழ்மே
லிறுத்தியசிகரியூடுநெறிக்கொடுபுக்குவான்போ
யெறித்தனைதிரிதிநாளுமிளங்கதிர்நடாத்தியென்றான். (௩)

அறைகழற்சூரபன்மனவிர்மதிதன்னைநோக்கிப்
பிறையெனவளருமாறும்பின்முறைசுருங்குமாறு
மறைவொடுதிரியுமாறுமற்றினிவிடுத்துநாளு
நிறைவொடுகதிரோன்போலிந்நீணகர்வருதியென்றான். (௪)

* நடனமூன்றாவன - தேசிகம், வடுகு, சிங்களம் என்பன.

பொங்கழன்முதல்வன்றன்னைப்புரவலன்விரைவினோக்கி
யிங்குநம்மூதூருள்ளோர்யாவரேயெனினுமுன்னி
னங்கவர்தம்பாலெய்தியவர்பணியாவுமாற்றிச்
செங்கமலம்போல்யாவர்தீண்டினுங்குவிர்தியென்றான். (௫)

சுடர்முடியவுணர்செம்மறோல்பெருங்கூற்றைநோக்கிப்
படிமுழுதுயிரைநாளும்படுப்பதுபோலநந்தங்
கடமதகரியைமாவைக்கணிப்பிலாவவுணர்தம்மை
யடுவதுகனவுமுன்னாதஞ்சியேதிரிதியென்றான். (௬)

அண்டருமுலவையானையவுணர்மாத்தலைவன்பாரா
வெண்டருநம்மூதூரில்யாவரும்புனைந்துநீத்த
தண்டுளிநறவமாலைதயங்குபூண்கலிங்கஞ்சாந்த
துண்டுகளாடுசுண்ணமாற்றுதிநொய்தினென்றான். (௭)

காவலன்வருணன்றன்னைக்கண்ணுறீஇநம்மூதூரி
னாவிவெண்பளிதஞ்சாந்தநரந்தமோடளாவித்தீம்பா
லாவியின்வெளியநொய்யவரும்பனிநீரிற்கூட்டித்
தூவுதியிடங்கடோறுங்காற்றதுதுடைக்கவென்றான். (௮)

வாசவன்றன்னைநோக்கிமால்கெழுதிருவின்மேலோன்
றேசுறுதுறக்கம்வைகுந்தேவர்தங்குழுவினோடு
மாசையங்கிழவரோடுமருந்தவரோடும்போந்து
பேசியபணிகளாற்றித்திரிமதிபிழையேலென்றான். (௯)

இந்நெறிசூரபன்மன்யாவர்க்கும்வீற்றுவீற்றாத்
தன்னூறுபணியினிற்பான்சாற்றலுமனையரஞ்சி
யன்னதுசெய்துமென்றேயனையவாறொழுகவன்னான்
மன்னினனரசிற்பின்றைமணஞ்செயவுன்னினானால். (௧௦)

மதிமுகத்திருவேபோல்வாள்வானவர்புனைவன்றந்த
பதுமகோமளையென்றோதும்பாவையைப்புகரோனாடிச்
சதுர்முகன்முதலாந்தேவர்தானவர்பிறரும்போற்ற
விதிமுறைவதுவைசெய்துவிழைவொடுமேவியுற்றான். (௧௧)

அன்னதற்பின்னர்வானோரசுரர்கந்தருவர்சித்தர்
கின்னரரியக்கர்நாகர்கிம்புருடாதியானோர்
கன்னியரளப்பிலாரைக்கடிமணஞ்செய்துகூடித்
துன்னுபன்மலர்த்தேனுண்ணுஞ்சுரும்பெனவின்பந்துய்த்தான். (௧௨)

அரிமுகத்தவுணர்வேந்தற்கந்தகன்மக * ளாயுள்ள
திருமிகுவிபுதைதன்னைச்சீர்மணஞ்செய்துநல்கி
நிருதிதன்புதல்வியானநேரிழைசவுரிதன்னைக்
கரிமுகவிளவல்சேரக்கடிமணம்புரிவித்திட்டான். (௧௩)

இவ்வகைமணஞ்செய்பின்றையிருதனைவரையுநோக்கி
மெய்வளம்பெறநுங்கட்குவிதித்திடுமூதூரேகி
யவ்விருகோடிவெள்ளமனிகமோடிருத்திரென்னாத்
தெவ்வடுசூரனன்னோர்செல்லுமாறேவினானால். (௧௪)

* அந்தகன்மகள் - யமன்மகள்.

Digitized By Roja Muthiah Research Library

ஏவியேதன்றுதானைக்கிறைவரிற்பலரைநோக்கி
நீவிர்களிரண்டுகோடிநீத்தமாமணிகத்தோடு
தீவுகடோறுமாழியிடந்தொறுஞ்செய்தமூதூர்
மேவுதிர்விரைவினென்னாவவனையரைவிடுத்தான்மன்னோ. (கரு)

மாறிலாத்திசைகளெட்டும்வானுலகேழுமிப்பாற்
கூறுபாதலங்கள்யாவுமொழிந்தவுங்குறுகியேதன்
னீறிலாவாணைபோற்றவெல்லையிலவுணர்தம்மை
யாறெனுங்கோடிவெள்ளத்தனிகமோடேகச்செய்தான். (கசா)

விட்டிடுகாலைதானேவிண்ணுமண்ணுலகுந்திக்கோ
ரெட்டொடுபிலனோரேழுமேனையவரைப்புமாகிக்
கிட்டினசெறிந்துமொய்த்தகேடில்சீரவுணர்தானை
மட்டகல்வானம்பூத்தவுடுக்களின்மலிந்தவன்றே. (கஎ)

எங்கணுந்தனதுதானையிடையறாநீண்டலோடுந்
துங்கவெஞ்சூரபன்மன்றானுறைதொன்மூதூரி
னங்கணோரிலக்கம்வெள்ளத்தவுணர்தந்தானைதன்னை
மங்கலவிருக்கைதோறுமரபுளியிருத்திமன்னோ. (கஅ)

கரிபரியாளியெண்குகடுவயப்புலியேயென
மரிமரைமுகத்துவீரரவுணர்தந்தலைவரானோ
ரிருவகைநான்மையோர்க்குமெண்டிசைநகருமீந்து
வருபடையயுதத்தோடுமகேந்திரங்காக்கச்செய்தான். (ககூ)

ஞாயில்கள்செறிந்தநொச்சிநாற்பெருந்தகைமைத்தான
வாயில்கடோறுநாப்பண்வளநகரிஞ்சிதோறுங்
கோயிலினிருக்கைதோறுங்குணிப்பிலாவீரர்தம்மை
நீயிர்கள்காமினென்னாநிலைப்படநிறுவியிட்டான். (உ0)

துர்க்குணன்றருமகோபன்றுன்முகன்சங்கபாலன்
வக்கிரபாலன்றீயமகிடனேமுதலோர்தம்மைத்
தொக்கமந்திரிகளாகத்துணைக்கொடேசூரபன்மன்
மிக்கவானவர்கள்போற்றவீற்றிருந்தரசுசெய்தான். (உக)

அரசுசெய்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,0உரு.

## தேவரையேவல்கொள்படலம்.

அரசுசெய்தலுமந்தரநாதனுஞ், சுரருமேனைமுனிவருந்தொக்குறீஇ
வரைசெய்மாடமகேந்திரமாபுரந்,தொருவனேவலின்முன்ன * மொழுகுவார். (க)

கொலைவல்சிங்கமுகன்பதிகுஞ்சரத், தலைவன்மாப்பதிசார்ந்தவர்தம்பதி
பலவுமேகிப்பணித்தனவாற்றியே, யுலைவர்வைகலுமூசலினீர்மையார். (உ)

வேறு.

ஊனமுற்றோர்போலிவ்வாறுலைகின்றகாலத்திலொருநாட்சூரன்
வானகத்துத்தலைவனையுமமரரையும்வருகவெனாவலித்துக்கூவித்
தானவர்க்குத்தம்பியர்கீரவர்பணிநும்பணியன்றோதாங்கவேலை
மீனனைத்துஞ்சூறைகொண்டுவைகலுமுய்த்திடுதிரெனவிளம்பினானால். (௩)

* முன்னம்-குறிப்பு. ஏவலின்முன்னம் என்பதற்கு ஏவற்குறிப்பென்பதுபொருள்.

Digitized By Roja Muthiah Research Library

உரைக்குமொழியதுகேளாவனையரெலாமுண்ணடுங்கியுயங்கிவெள்கித்
திரைக்கடலின்மீன்றனக்குத்தருகென்றானிதற்கினிநாஞ்செய்வதேதோ
விரைக்கமலத்தனிக்கடவுளிப்படியுநந்தலையில்விதித்தானென்று
விரக்கமொடுமறுத்தலஞ்சியதிறமேபுரிதுமெனவிறைஞ்சிப்போனார். (ச)

போகின்றநெறியின்கணிமையவரும்புரந்தரனும்பொருமியேங்கி
யாகின்றதெமக்கேயோர்பழியன்றேவலையதுவந்தணுகாமுன்னர்ச்
சாகின்றதேமிகவுமினிதாகுமெமக்கதுவுஞ்சாராதந்தோ
வேகின்றசிந்தையினேஞ்செய்வதெவனெனப்புலம்பிவேலைபுக்கார். (ரு)

அவ்வேலையிமையவர்கோன்வருணனெனுங்கடவுளைநின்றழையாவிந்த
நெடுவேலைதனக்கிறைவனீயன்றோநின்னினுமோர்வலியாருண்டோ
வைவேலைப்பணியியற்றித்திமிங்கிலமேமுதலாயகளிப்பின்மீன்க
ளிவ்வேலையேற்றியேகீட்டர்வேலைக்கரையிலெமையெடுத்தியென்றான். (சு)

வெள்ளைவாரணக்கடவுளுரைசெய்தமொழிகேட்டுவிண்ணுளோர்க்கு
வள்ளனீயிரங்குதியோவத்தொழில்யான்புரிவனெனவருணன்கூறி
யள்ளல்வேலையுட்புகுந்துதனதுபெருங்கரதலத்தாலலைத்துவாரி
யுள்ளமீன்குலங்களெல்லாந்தடங்கரையில்வரையேபோலுயர்த்தலுற்றான். (எ)

தடக்கடலின்வேலைதனில்வருணர்பிரானெல்லைதனிற்றந்தமீனத்
தடுக்கன்முழுவதுநோக்கிக்கடவுளரைவிளித்திவற்றையாற்றலாலே
யெடுப்பதுநுந்தொழிலென்றேயிந்திரன்றான்விளம்புதலுமிமையோரெல்லா
நடுக்கமுடனுளம்பதைப்பவிழிபனிப்பக்கரங்குலைத்துநாணுக்கொண்டார். (அ)

பின்னைதிமிங்கிலகிலமீறுதியமீனடுக்கலினைத்தென்பால்வைகு
மன்னனுயிர்தலைவாங்கச்செங்கதிரோன்பெரும்புனலின்வடிவைவாட்டப்
பன்னகராகியதிறத்தாற்பிணித்திடுமச்சுமையதனைப்பகட்டின்வேந்த
னின்னலுறுவானவர்பாலெடுத்தவவர்கொண்டேகியிரங்குகின்றார். (கூ)

வேறு.

பன்னும்புகழ்ச்சூரபன்மனெனுந்தீயவனான்
முன்னுந்துயர்க்கடலின்மூழ்கிமுரணழிந்தேந்
துன்னும்பழியாந்தொழிலிதுவுஞ்செய்தனமா
லின்னும்படுவதொழிலேதோவுணரேமே. (க0)

பேர்கின்றநீலப்பிறங்கலனையான்பணியா
லார்கின்றதின்றேரலரேயஃதுயிரை
யீர்கின்றதந்தோவிதியேயெமக்கிதுவுந்
தீர்கின்றகாலமுளதோநீசெப்பாயே. (கக)

பூவுலகந்தன்னிற்பொருந்துகின்றமானுடரும்
பாவமெனநூலிற்பகருகின்றவித்தொழிலை
யேவர்புரிகின்றாரெமக்கோவந்தெய்துமதோ
தேவகதியினிரயஞ்சிறப்புடைத்தே. (கஉ)

தக்கதுணராததானவர்கடங்களினு
மக்களினுந்தாழ்வாம்வலைஞர்தொழில்செய்தனமா
லிக்கனவாழ்வைவிரும்பியேயாஞ்செய்த
மிக்கதவமும்வினையாய்விளைந்ததுவே. (கங)

Digitized By Roja Muthiah Research Library

வேதநெறியைவிலக்கினேமிக்குள்ள
போதநெறியாமதற்குப்புறம்பானோர்
தீதுடையவெஞ்சூரன்சீற்றத்தாற்செப்புகின்ற
வேதநெறிசெய்வேமேலெம்மினுயர்ந்தாரெவரே. (கச)

தேனுலவுந்தாருத்திருநிழற்கீழின்பமுறும்
வானவர்களென்றேமதிக்குந்தகைமையினோ
மீனமொடுமீன்சுமந்தேயெல்லோர்களுநகைக்கத்
தானவர்முன்செல்வதினுஞ்சாதன்மிகநன்றுநன்றே. (கரு)

என்னுமொழிகளியம்பிப்புலம்புற்றுத்
துன்னுநிருதர்புகழ்ச்சூரன்றிருநகரின்
மன்னுதிசையாளரொடும்வந்தனராலவ்வளவி
லன்னசெயல்கண்டேயவுணருரைசெய்குவார். (கசு)

மாதோயந்தன்னைவயிறலைத்துமற்றிவர்தா
மீதோசிலமீன்றருகின்றனரென்பார்
மீதோடியபரிதிவெய்யோன்முன்னுண்டவெறுங்
கோதோவெமக்குக்கொணர்கின்றாரென்றுரைப்பார். (கஎ)

தாங்கடற்கண்மீனந்தலைக்கொண்டுமேவுகின்றா
ரீங்கிவர்க்குநாணமிலையோசிறிதென்பார்
தீங்கிழைக்கின்யாரேனுஞ்செய்யாததேதென்பார்
மூங்கையொத்துளாரோமொழியாரிவரென்பார். (கஅ)

முந்துற்றதொல்லைமுழுநீரின்வேலைதொறும்
பந்தத்துடன்வாழ்பரதவரேசெய்கின்ற
விந்தத்தொழிலுமிவர்க்குவருமோவென்பார்
சிந்திப்பதென்னோவிதியின்செயலென்பார். (ககூ)

வேதநெறிமுறைமைவிட்டார்வினைசெய்யும்
பேதைநெறியேபிடித்தாரிவரென்பார்
கோதுபடாநந்தங்குலத்தைமிகநலிந்தா
ரேதுபடாரின்னமிமையோரெனவுரைப்பார். (உ0)

மண்ணோர்களுமிகழும்வன்பழிதன்பால்வரவும்
விண்ணோர்க்கிறைவன்விரைவினுயிர்விட்டிலனாற்
கண்ணோபெரிதுகருத்தோசிறிதென்பார்
பெண்ணோவலி * தானோபேடோ o வெனவுரைப்பார். (உக)

வேறு.

இந்தவாறுபலருமியம்பிடப், புந்திநொந்துபுலம்புபுத்தேளிர்க
டந்தியூருந்தலைவனைமுற்கொடு, வந்துதீயவன்வாய்தலுற்றாரரோ. (உஉ)

பரிதிவேந்தன்பணிமுறைநாடியே, வருதிரீண்டென்றுவாயிலர்கூறிடப், பொருதி
ரைக்கடன்மீன்கொடுபோய்ச்சுர, ரொருதனிப்பெருங்கோயிலுளுய்த்தனர். (உங)

* அலி - ஆணவாய்ப்பெண்ணிழந்தது. o பேடு - பெண்ணவாயாணிழந்தது. இக்கருத்தறியாத நன்னூல்விருத்திகாரர் பேடு அலி என்பன ஒருபொருட்கிளவி என்பர்.



Digitized By Roja Muthiah Research Library

எளித்தலெய்துமிமையவருய்த்தமீன், றுளித்ததேன்றொடைச்சூர்முதல்காணு
றீஇச், களித்துவந்துகடவுளர்வைகலு, மளித்திரென்னவழகிதென்றேகினார். (௨௪)

என்றுமாங்கவரிச்செயலாற்றியே, பொன்றினாரிற்புலர்ந்துபுலம்புறீஇத்
துன்றுகின்றதுயர்க்கடன்மூழ்கியே, யொன்றும்வேதவொழுக்கமற்றாரரோ.(௨௫)

தேவரையேவல்கொள்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,0௫0.

# புதல்வரைப்பெறுபடலம்.

அதுபொழுதவுணர்கோமானாற்றியதவத்தின்சீராற்
பதுமகோமளையென்றோதும்பாவைதனுதரம்போந்து
புதுமதிக்குழவியேபோற்பொற்பொடுபொலிந்துமுன்ன
மதலையங்கொருவன்வந்தான்மறலிக்குமறலிபோல்வான். (௧)

வந்ததோர்மதலைதன்னைமன்னவர்மன்னன்காணூஉ
வந்தமின்மகிழ்ச்சிபொங்கவவுணர்தங்கிளைஞர்க்கெல்லா
நந்தியவெறுக்கைதன்னைநலத்தகவீசலுற்றா
னிந்திரன்முதலினோரும்யாவருமிடுக்கணெய்த. (௨)

வீசியபின்றைவானோர்மெல்லியரவுணர்மாத
ராசிகள்புகன்றுபோற்றியன்னதோர்மைந்தன்றன்னைக்
காசொடுவயிரமுத்தங்கதிர் * பொலந்தொட்டில்சேர்த்தார்
மாசகன்மதியமேபோற்பைப்பையவளர்தலுற்றான். (௩)

கட்டழகுடையமைந்தன்கம்பலங்கொண்டசெம்பொற்
றொட்டிலிற்றுயிலுமெல்லையொருபகற்சுடரினென்றாழ்
விட்டதோர்நூழைதன்னான்மேவியேயனையன்மெய்யிற்
பட்டதங்கதனைநாடிப்பரிதியைச்சுளித்துப்பார்த்தான். (௪)

பார்த்திடுகின்றமைந்தன்பன்மணித்தொட்டினின்றுஞ்
சீர்த்தெழுந்தண்டம்பாய்ந்துசெங்கதிர்ச்செல்வற்பற்றிக்
கார்த்திடுபுயங்கங்கவ்வும்படித்தெனக்கரத்திற்கொண்டு
பேர்த்துமோரிறையில்வந்தான்றவத்தினும்பெரிதொன்றுண்டோ. (௫)

தானுறையிருக்கைதன்னிற்றகுவர்கோன்றனயன்சாரா
வானதோர்செம்பொற்றொட்டிலணிமணிக்காலினூடே
பானுவைவலிதிற்கட்டிப்பண்டுபோற்றுயின்றானங்கண்
வானவரதனைநோக்கிமனம்வெரீஇமறுக்கமுற்றார். (௬)

பரிதிவிண்சேறலின்றிப்பிழைத்தலும்பார்த்துள்ளோன்
கருதியிந்திரனேயேனைக்கடவுளர்யாருஞ்சூழ
நிருதர்கோன்றன்பால்வந்துநீடிருட்பகைவன்றன்னைத்
தருதிநின்மைந்தன்செய்ததனிச்சிறைநீக்கியென்றான். (௭)

* கதிர் - வினைத்தொகை.

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

மறைபுரிந்தநான்முகனிவைபுகறலும்வானத்
திறைபுரிந்திடுமிரவியையென்மகனின்னே
சிறைபுரிந்ததையுணர்கிலேனவனதுசெய்யக்
குறைபுரிந்ததென்பகர்தியென்றுரைத்தனன்கொடியோன். (அ)

சொற்றவாசகங்கேட்டலுமாருயிர்த்தொன்மை
முற்றுநாடியநான்முகனின்மகன்முகமே
லற்றமில்சுடராதபந்தீண்டியததனாற்
பற்றிவெய்யவற்சிறைபுரிந்தானெனப்பகர்ந்தான். (கூ)

மகவுதன்செயல்கேட்டலுஞ்சூரபன்மாவாந்
தகுவர்கோன்மிகமகிழ்ந்துநீரென்மகற்சார்ந்து
மிகவுநன்மொழிகூறியேயாங்கவன்விடுப்பப்
பகலவற்கொடுபோதிராலீண்டெனப்பகர்ந்தான். (க0)

கேட்டநான்முகனன்றெனவிடைகொண்டுகிளர்பொன்
னாட்டின்மேனகைமுதலினோர்பாடலினலத்தா
லாட்டுபொன்மணித்தொட்டிலின்மிசையுறுமண்ணன்
மாட்டுமேவிநின்றளவையிலாசிகள்வகுத்தான். (கக)

அன்பின்மைந்தனைப்புகழ்ந்துமுன்னிற்றலுமனையா
னென்பெறும்பரிசுமக்கெனவின்னதோரிரவி
துன்புறுஞ்சிறையகற்றுதியென்றலுந்தொல்லோ
யுன்பெரும்படைதருதியேல்விடுவனென்றுரைத்தான். (கஉ)

உரைத்தமைந்தனுக்கயன்றனதகன்படையுதவ
நிரைத்தசெங்கதிர்ச்செல்வனை * விடுத்தனனிருதன்
விரைத்தபங்கயக்கிழவனும்புதல்வனைவியந்து
பரித்தியாலெனவுதவினன்மோகவெம்படையே. (கஙு)

படையளித்தலும்பகலொடுபங்கயத்தவற்கு
விடையளித்தனன்குறையந்தன்மையவினவி
நடையளித்தனன்புதல்வனுக்கன்னதோர்நன்றா
ளிடையளித்தனன்பானுகோபனெனுமியற்பேர். (கச)

பானுகோபனென்றொருபெயர்பெற்றவப்பாலன்
மானைநேர்விழிமங்கையர்மதனெனமயங்க
வானபேருருவெய்தியேயம்புயத்திருவின்
கோனொடேபொருதவன்றனைப்பெருந்திறல்கொண்டான். (கரு)

பரிதியின்பகையாமிவற்பெற்றபின்பரிவா
னிருதர்காவலனங்கிமாமுகத்தனைநிறஞ்சே
ரிரணியன்றனைவச்சிரவாகுவையெழிலார்
மருவுலாங்குழற்பதுமகோமளைதரமகிழ்ந்தான். (கசு)

மைத்தகூர்விழியேனையதேவியர்மகிழ்வா
லுய்த்துநல்கிடச்சூரனும்வெய்யவனொருங்கே
பத்துநூறுளமும்மைசேர்பாலரைப்பயந்தா
னித்திறத்தவர்தம்முடனங்கண்வீற்றிருந்தான். (கஎ)

---

* செங்கதிர்ச்செல்வன் - உருவகமன்று; தன்னைத்தான்விசேடித்தது. இவ்வாறு கூறுவர் பிரயோகவிவேகநூலார்.

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

சீற்றமுற்றிடுசிங்கமுகன்கணே, தோற்றினனதிசூரனென்றோர்மகன்
வீற்றுநூற்றுவர்மேவினரன்னவ, ராற்றல்யாவரறைந்திடவல்லரே. (கஅ)

அந்தநாளிலவன்றனிளவலாந், தந்திமாமுகத்தாரகன்றன்னிடை, முந்துசெய்த
வமொய்ம்பினோர்மாமகன், வந்துதோன்றினன்வான்கதிர்ப்பிள்ளைபோல். (கசு)

ஆமிவன்னசுரேந்திரனென்றவற், கேமமானகுரவனிசைப்பவங்
காமமெய்திகலம்பெறுகாளையாய்க், காமனென்னக்கவின்றனன்யாக்கையே. (உ0)

ஓதருங்கலையாவுமுணர்கினு, மேதமாவதோர்விஞ்சையியற்றிடான்
பாதகம்புரியான்பழிபூண்கிலா, னீதியன்றியெவையுநினைகிலான். (உக)

வீறுகொண்டிகல்வீரம்புகன்றெதிர், மாறுகொண்டவருண்டெனின்மற்றவ
ரீறுகொண்டிடவேற்றுரமேற்படை, யூறுகொண்டிடவுன்னுந்தகைமையான். ()

சிகரமெண்ணிலசேட்படுகள்ளிதா, னகருநல்கியமர்ந்தெனவன்னதோர்
மகனைநல்கிவளங்கெழுமாயமா, நகரவாழ்க்கையினண்ணினன்றாரகன். (உங)

புதல்வரைப்பெறுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,0எங.

---

# வில்வலன்வாதாவிப்படலம்.

அன்னவருடன்வந்தாளசமுகியெனுநாம
மன்னினளொருவன்றன்மனையெனுமுறையில்லா
டன்னிறைதவிர்கின்றாடருமமதிலள்வானோர்
பன்னியர்தமைமுன்னோர்படர்புயமுறவுய்ப்பாள். (க)

ஆன்வினைபுரியுள்ளத்தவமுனிவரராற்றும்
வேள்விகையுறும்வண்ணம்வெந்தொழில்புரிகின்றா
ணீள்வினைவடிவானணிருதர்கள்குலமெல்லா
மாள்வினையெனயாண்டும்வைகலுமுலவுற்றாள். (உ)

கட்டழகுளதாகுங்காளையர்தமைநாடிக்
கிட்டினள்புணர்கிற்பாள்கேளிரையிகழ்வோரை
யட்டனளுகர்கின்றாளினையவளொருவைகன்
முட்டினளொருவாசமுனியுறுதனியெல்லை. (ங)

அத்தகன்முனிதன்னையாயிழையவள்காணாச்
சித்தவனிவனின்னேசெய்தவமஃதன்றி
மைந்தர்கள்பெறுவேனால்வல்லையிலிவனென்றுப்
புந்தியினினைவாயேபோயவனெதிருற்றாள். (ச)

உறுதலுமுனிநாடியொண்டொடிதனியேநீ
குறுகியதெவன்மாதோகூறுதியெனலோடு
மறுவறுமுனிகின்பான்மனமகிழ்வொடுமேவிச்
சிறுவர்கள்பெறவந்தேன்செப்புவதிதுவென்றாள். (ரு)

Digitized By Roja Muthiah Research Library

என்றலுமுனிகூறற்கிளையவளெனநாடி
வென்றிகொண்மடமாதேமேலுறுதவமெல்லாங்
குன்றிடுமுனையின்னேகூடுவனெனினீயு
நின்றிடல்பழியல்லானீதியுமலவென்றான். (௬)

முனியிதுபகர்வேலைமொய்குழன்மடமாது
ளினியுனைமருவாதேயேகலனொருவிப்போ
மனநினைவொழிகென்றேவன்மையினெடுபுல்லி
யனையவணிதழூறலாரமுதயினுற்றாள். (௭)

ஆடெனுமுகவெய்யாளனையனைவலிதாகக்
கூடினளதுபோழ்திற்குறுகினரிருமைந்த
ரீடுறுவலிமிக்காரின்னவர்தமையன்னை
மாடுறவருகென்றேமகிழ்வொடுதழுவுற்றாள். (௮)

தழுவினள்பரிவோடுந்தன்புதல்வரைநோக்கி
மழகளிறனையீர்காள்வல்லவுணரில்வந்தீர்
விழுமியதவமாற்றிமேவுதிர்வலியென்ன
வழிதருநிறைகொண்டவசமுகியுரைசெய்தாள். (௯)

தாயினதுருவாயுந்தந்தைதனுருவாயு
மேயினவிருமைந்தர்வில்வலன்வாதாவி
யாயதொர்பெயர்பெற்றோரன்னைதனுரைகொண்டே
தூயதொர்குரவோன்றன்றுணையடிபணிகுற்றார். (௧௦)

மூண்டிடுவெகுளித்தீமுனிவரனடிதன்னைப்
பூண்டிடுதிறன்மிக்கபுதல்வரையெதிர்நோக்கி
வேண்டியதெவனென்னவெய்யவடருமைந்த
ரீண்டுனதவமெல்லாம்யாம்பெறவருளென்றார். (௧௧)

ஆற்றிடுதவமெல்லாமருளெனினவைதாரேன்
வேற்றொருபொருளுண்டேல்வினவுதிரெனமேலோன்
சீற்றமதுளராகிச்சிறுவர்களிவனாவி
மாற்றுதுமிவனென்னாவல்லையினெழலுற்றார். (௧௨)

இறுதிசெய்திடவுன்னியிகலுடனெழுகின்ற
சிறுவர்கள்செயனாடிச்சினமொடுமுனிநீவிர்
மறுவறுதவருக்கேவைகலுமிடர்செய்வீர்
குறுமுனிநுமதாவிகொள்ளுகவினியென்றான். (௧௩)

இனையதுமுனிசொற்றேயெமையடுவர்களென்று
மனமுறுதனிவிஞ்சைமாயையின்மறைபோழ்திற்
றனயர்களிருவோருந்தந்தைதனைக்காணா
ரனைதனைவிடைகொண்டேயாயிடையொருவுற்றார். (௧௪)

வேறொருவனமெய்திமெய்த்தவர்குழுவெல்லாங்
கோறலைமனமுன்னிக்குமரர்களிருவோருந்
தேறியவுணர்வோடுந்திசைமுகவனைநோக்கி
யீறகல்பகலாகவெரியதனிடைநோற்றார். (௧௫)

Digitized By Roja Muthiah Research Library

செந்தழலிடைநோன்புசெய்யவுமயனங்கண்
வந்திலனதுநாடிமற்றொருசெயலுன்னி
வெந்திறலினையோனைவில்வலனெனும்வெய்யோன்
சுந்தரமணிவாளாற்றுணிபடவெறிகுற்றான். (கசு)

கையனதுடல்கீறிக்கறையொடுதசையெல்லா
நெய்யுடனவியாக்கிக்கீடியகனலூடே
வையகமருடாதைமந்திரமுறையுய்த்து
வெய்யவனொருவேள்விவிரைவொடுபுரிகுற்றான். (கஎ)

தவமொடுமகமாற்றச்சதுர்முகனதுகண்டே
யவனியின்மிசைவந்தேயரியதொர்செயல்செய்வா
யெவனருள்பரிசென்னவிணையடிதொழுதேத்தி
யவுணர்கள்வடிவாம்வில்வலனிவையறைகின்றான். (கஅ)

வன்னியிலவியூனாய்மாண்டிடுமொருபின்னோன்
மெய்ந்நிறைவடிவோடும்விரைவுடன்வரல்வேண்டு
மென்னலும்வாதாவியெழுகெனவயனோத
வன்னதொர்பொழுதின்கணார்த்தவனெழுந்திட்டான். (ககூ)

ஆங்கனமசுரேசனதிசயமுளனாகித்
தீங்குடனொருசூழ்ச்சிசிந்தையினிடையுன்னிப்
பூங்கமலத்தோனைப்போற்றிசெய்தடியேனுக்
கீங்கொருவரமெந்தாயீகெனவுரைசெய்வான். (உ0)

புல்லயின்மறியேபோற்பொலிவுறும்வாதாவி
யொல்லையினினிமேலுமுடறுணிபடுவானே
லெல்லையில்பரிவால்யானெம்பியையெழுகென்னத்
தொல்லையில்வடிவோடுந்தோன்றிமுன்வரல்வேண்டும். (உக)

இப்படிவரமொன்றேயான்பெறவருள்கென்றே
மெய்ப்படுமுணர்வில்லாவில்வலனுரைசெய்ய
வப்படிபலகாலமதுமுடிகெனநல்கிச்
செப்பருமறைவேதாச்சேணுடைநெறிசென்றான். (உஉ)

சேறலுமதுகாலைச்சிறுவர்களிருவோரு
மேறெனவமர்சூர்முன்னேகியுன்மருகோர்யாம்
வேறலவெனவோதிமேதினிமுனிவோரைக்
கோறல்செய்பெருவன்மைகொண்டதுமுரைசெய்தார். (உங)

மன்னவனவர்தம்மைமகிழ்வொடுநனிபுல்லி
யென்னுழைமருகீர்காளினிமையொடுறுமென்ன
வன்னவர்சிலவைகலாயிடைதனில்வைகிப்
பின்னுறவிருவோரும்பெருநிலமிசைவந்தார். (உச)

நவைதவிர்குடகின்கணல்வகைநெறிகூடுங்
கவலையின்வளமல்குங்கானகவிடைதன்னி
லவுணர்கடாமங்கோராச்சிரமஞ்செய்தே
யெவரெவரும்வெஃகுயெப்பொருள்களுமுய்த்தார். (உரு)

Digitized By Roja Muthiah Research Library

அன்னதொரிடைதன்னிலாரிடராயுள்ளோ
ரின்னுயிர்கொளவுன்னியிருவருளிளமைந்தன்
பொன்னிவர்திரிகோட்டுப்பொருதகராய்நிற்க
முன்னவன்விரதஞ்செய்முனிவரினினிதுற்ருன். (௨௬)

வில்வலனெனவோதும்வெய்யவனவ்வெல்லைச்
செல்வதொர்முனிவோரைச்செவ்விதினெதிர்கொண்டு
வல்விரைவொடுதாழ்ந்துமற்றுமதடியேன்ற
னில்வருவீரென்ருவியல்பொடுகொடுசென்றே. (௨௭)

இப்பகலடிகேளுக்கிவ்விடையுணவென்று
வொப்பறுநெறிகூறியோதனவகையெல்லா
மப்பொழுதினிலட்டேயயமெனுமிளையோனைத்
துப்புறுகறியாகத்துண்டமதுறுவித்தே. (௨௮)

உள்ளுறுகுறியாகுமூன்முழுவதுநாடி
வள்ளுறுசுடர்வாளால்வகைவகைபடவீர்ந்தே
யள்ளுறுகறியாகவட்டபினவரவ்வூன்
கொள்ளுறநுகர்வித்தேகூவுவனிளையோனை. (௨௯)

கூவியபொழுதின்கட்கொறியெனுமுருவானோ
ளுவிமெய்யுளனாகியன்னவருதரத்தை
மாவலியொடுகீண்டேவருதலுமிருவோருஞ்
சாவுறுமுனிவோர்தந்தசையினைமிசைவாரால். (௩0)

வேறு.

வீடுறுமுனிவருண்மிசைந்துதொன்மைபோ
லாடெனமுனியெனவவனையர்மேவியே
நாடொறுமிச்செயனடாத்தியுற்றனர்
கேடறுமுனிவர்தங்கிளைகண்மாளவே. (௩௧)

வில்வலன்வாதாவிப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௧0௪.

# இந்திரன்கரந்துறைபடலம்.

இப்படியவுணர்களினையரேனையோர், செப்பருமுனிவரைத்தேவர்தங்களை
யொப்பறுசுரர்தமையொறுப்பமாயைதன், வைப்புறுகாதலனரசின்மன்னினன். ()

ஆயிரத்தெட்டெனுமண்டம்யாவையுஞ், சேயுயரிந்திரஞாலத்தேர்மிசை
யேயெனுமளவையிலேகிவைகலு, நாயகமுறையினைநடாத்திநண்ணினன். (௨)

ஒருபகற்பாதலத்தூடுவைகிடு, மொருபகன்மாதிரமுலவிச்சேர்தரு
மொருபகல்விண்பதந்தோறுமுற்றிடு, மொருபகலயன்பதத்துன்னிமன்னுமே. (௩)

தண்ணறுந்துளவினன்றனதுதொல்பத, நண்ணிடுமொருபகனாளுமிவ்வகை
யெண்ணருமுலகுதோறேகிமாலையிற், றுண்ணெனமீள்வனற்சூரபன்மனே. (௪)

அவ்வகையாலரசாற்றுமெல்லையி, லெவ்வமில்சூர்முதலிந்திரன்னெனுந்
தெவ்வினைவன்சிறைசெய்துதேவியை,வவ்வியவுன்னினன்வருவதோர்கிலான். (௫)

உன்னியதீயவனொருதன்றுணையின், மன்னனைவிளித்துநீவாசவன்றனை
யின்னதோர்பொழுதினிலெய்திப்பற்றியென், முன்னுறவிடுகெனமுன்னமேவியே.

நீடியதன்பெருநிலயங்காப்பவர், கோடுறுநிசிசரர்குலத்துட்டோன்றினர்
கேடகம்வாளயில்கெழுவுகையினர்,பாடவமடந்தையர்பவங்கள்போன்றுளார்.(௭)

ஒன்பதுகோடியர்தம்மையொல்லையி, லன்புடன்விளித்துநீரமரர்தம்மிறை
யின்புறுதேவியைப்பற்றியீமென, வன்பொடுபோக்கினன்மன்னர்மன்னனே.(௮)

போக்கலுமவரெலாம்பொன்னினாட்டின்மே, லூக்கமதாகியேயுருத்துச்சேறலு
நோக்கியதூதவர்நொய்திற்போகியே, மாக்கிளரிந்திரன்மருங்குநண்ணினார். (௯)

வந்தனரவுணரும்வயங்கொண்மாதரு, மந்தமில்படையொடுமடல்செய்நீரர்போற்
சிந்தனையாவதோதெரிந்திலோமென, விந்திரன்வினவுறவிசைத்துநிற்கவே. (௧0)

பொம்மெனவவர்தமைப்போக்கித்தீயினும், வெம்மைகொணெஞ்சினார்வினைய முன்னியே, யம்மனைமனைவியோடகன்றுமாயையா, னிம்மெனவிப்புவிதன்னி லேகினான். (௧௧)

ஏகியவெல்லையினிகல்வெஞ்சூர்விடப், போகியமாதரும்பொருவில்வீரரு
நாகர்தம்மிறையமர்நகரைநண்ணினா, ராகரமுதலியவிடந்தொறாய்குவார். (௧௨)

வினைவயிற்சென்றிடும்வீரர்யாவருந், துனைமகத்திறைவனைத்துருவிக்காண்கிலர்
மனைவியைக்காண்கிலர்மாதர்யாவரு, நினைவயர்த்துள்ளுறுகவலைநீடினார். (௧௩)

நாயகனிவ்விடைநம்மைக்கூவியே, யேயினசெயலினையீறுசெய்கிலம்
போயினன்சசியொடும்புலவர்கோனென, வாயவனகரெலாமாய்வுற்றாரரோ. ()

சுற்றினர்நகரெலாந்துருவித்தேவரைப், பற்றினர்விலங்கலின்பகைவற்காட்டெ ன, வெற்றினர்புலோமசையாண்டையாளெனக், குற்றினர்வாய்தொறுங்குருதிபா யவே. (௧௫)

விண்ணவர்யாவரும்வேந்துந்தேவியு,நண்ணியதுணர்கிலநாங்களெங்களைத்,துன் னெனவருத்தலிர்துயர்கின்றேமெனாத், தண்ணளிவருநெறிதளர்ந்துசாற்றவே. ()

விட்டனர்தேவரைவிண்ணைநீங்கினர், முட்டினர்மகேந்திரமுதியமாநகர், கிட்டி னர்வேந்தனைக்கிளர்ந்துவானிடைப், பட்டதுபுகன்றனர்பழிகொணெஞ்சினார். ()

போயினரிருவரும்புறத்தராயென, வாயவர்மொழியவேயவுணர்மன்னவன்
றீயெனவெகுண்டனன்றேடொணாததோர், தூய்மணியிழந்திடுமரவிற்றுன்புளான்.

ஒற்றரிற்பலர்தமையொல்லைகூவியே,பொற்றொடியணங்கொடுபொன்னினாட்டவர்
கொற்றவனிருந்துழிக்குறுகிநாடியே, சொற்றிடுவீரெனச்சூரன்றூண்டினான். ()

தோடவிழ்தெரியலான்றூண்டவொற்றர்க ளோடினர்வீற்றுவீற்றுலகமெங்க ணுந், தேடினர்காண்கிலர்திரிகுற்றாரினி, நீடியபொன்னகர்நிகழ்ச்சிகூறுகேன். ()

வேறு.

செல்லெனுமூர்தியண்ணறேவியுந்தானுநீங்கச்
சொல்லருங்ககனம்பூத்தசோமனுமுடுவும்போன
வெல்லியம்பொழுதுபோன்றேயாதுமோர்சிறப்புமின்றாய்ப்
புல்லெனலாயதன்றேபொருவில்பொன்னகரமெல்லாம். (௨௧)

Digitized By Roja Muthiah Research Library

அழிந்தனவளங்களெல்லாமாகுலமயங்கிற்றின்ப
மொழிந்ததுவானோருள்ளமொடுங்கியதுலகமெங்கு
மெழுந்ததுபுலம்பலோதையாவர்தங்கண்ணுந்தெண்ணீர்
பொழிந்ததுசுவர்க்கமாவிபோனவர்போன்றதன்றே. (உஉ)

இன்னனநிகழுமுன்னரிந்திரனிளவலாகி
மன்னியவுபேந்திரன்றன்வானவருலகைநீங்கி
முன்னைவைகுண்டம்புக்கான்முனிவரர்கலிக்காவஞ்சிக்
கன்னிகைநோற்றுமேவுங்காஞ்சியையடைந்தவாபோல். (உங)

சேண்பதந்தன்னைநீங்குஞ்சிறியதோர்தந்தைதன்னைக்
காண்பதுகருதிப்போந்துகடவுளர்க்கிறைவன்மைந்தன்
றூண்புரைகின்றசெம்பொற்றோளுடைச்சயந்தனென்போன்
மாண்பொடுசிறிதுவைகல்வைகுண்டத்திருந்தானன்றே. (உச)

இருந்திடுசயந்தனென்போனிந்திரனிறைவியோடுங்
கரந்துடன்போந்தவாறுங்காமருதுறக்கந்தன்னில்
விரைந்துவந்தவுணர்தேடிமீண்டிடவிண்ணுளோர்க
ளரந்தையோடுற்றவாறுமங்ஙனந்தேர்ந்தானம்மா. (உரு)

தந்தைதன்மெலிவுகாணிற்றங்குடித்தலைமையெல்லா
மைந்தர்கள்பரித்துக்கோடல்வழக்கதாமறனுமஃதே
யெந்தையுமில்லையான்போயென்னகர்காப்பனென்னுப்
புந்தியிலுன்னிமைந்தன்பொன்னகர்தன்னில்வந்தான். (உசு)

பொன்னகர்புக்கமைந்தன்புலம்புறுசுரரைக்கண்டு
தன்னுயிர்போலுந்தந்தைதாய்தனைக்காணனாகி
யின்னலங்கடலின்மூழ்கியேக்கமோடிரக்கமிக்குப்
பின்னொருசெயலுமின்றிப்பித்தரேபோலவுற்றான். (உஎ)

உற்றிடுமெல்லைதன்னிலும்பர்கோன்மதலையுள்ளந்
தெற்றெனத்தெளிப்பவுன்னிநாரதனென்னுஞ்சீர்சா
னற்றவமுனிவன்செல்லநடுக்கமோடெழுந்துதாழ்ந்து
மற்றொருதவிசுநல்கியிருத்தியேமருங்குநின்றான். (உஅ)

நின்றிடுசயந்தன்சொல்வானித்தலும்வருத்தஞ்செய்யும்
வன்றிறற்சூரற்கஞ்சிமற்றெனைப்பயந்தமேலோர்
சென்றனர்சென்றவெல்லைதெரிந்திலேனெமக்குத்தீமை
யென்றினியகலுங்கொல்லோவெம்பிரானியம்புகென்றான். (உகூ)

தருக்கினையிழந்துநின்றசயந்தனித்தன்மைகூறப்
பொருக்கெனமுனிவனோர்ந்துபொங்குபேரருளானோக்கித்
திருக்கிளர்கின்றதாங்கோர்செழுமணித்தவிசின்மீதி
லிருக்கெனவிருத்திப்பின்னரின்னனவிசைக்கலுற்றான். (௩0)

தீங்குவந்தடையுமாறுநன்மைதான்சேருமாறுந்
தாங்கள்செய்வினையினாலேதத்தமக்காயவல்லா
லாங்கவைபிறரால்வாராவமுதநஞ்சிரண்டினுக்கு
மோங்கியசுவையின்பேதமுதவினர்சிலருமுண்டோ. (௩க)



Digitized By Roja Muthiah Research Library

இன்பமதடைந்தகாலையினிதெனமகிழ்ச்சியெய்தார்
துன்பமதுற்றபோதுந்துண்ணெனத்துளங்கிச்சோரா
ரின்பமுந்துன்பந்தானுமிவ்வுடற்கியைந்தவென்றே
முன்புறுதொடர்பையோர்வார்முழுவதுமுணர்ந்தநீரார். (௩௨)

வறியவர்செல்வராவர்செல்வர்பின்வறியராவர்
சிறியவருயர்ந்தோராவருயர்ந்துளோர்சிறியராவர்
முறைமுறைநிகழுமீதுமுன்னையூழ்வினையேகண்டா
யெறிகதிர்வழங்குஞாலத்தியற்கையுமினையதன்றோ. (௩௩)

ஆக்கமும்வறுமைதானுமல்லலுமகிழ்வுமெல்லா
நீக்கமிலுயிர்கட்கென்றுநிலையெனக்கொள்ளற்பாற்றோ
மேக்குயர்கடவுட்டிங்கள்வெண்ணிலாக்கதிரின்கற்றை
போக்கொடுவரவுநாளுமுறைமுறைபொருந்திற்றன்றே. (௩௪)

ஆதலினுமதுதாழ்வுமவுணர்தமுயர்வுநில்லா
வீதுமெய்யென்றுகோடியிந்நகர்தணந்துபோன
தாதையும்பயந்ததாயுந்தம்முருக்கரந்துபோந்து
மேதினிவரைப்பினூடுமேவினர்போலுமன்றே. (௩௫)

மைந்தநீதோற்றுமுன்னம்வானவர்க்கலக்கண்செய்த
தந்தியின்முகங்கொண்டுற்றதானவன்றுஞ்சும்வண்ண
மந்தநாளுனதுதந்தைமுயன்றனனதனைப்போல
விந்தவெஞ்சூரன்மாயவின்னமுமுயல்வன்கண்டாய். (௩௬)

என்றிவைபலவுங்கூறியின்னினிவெஞ்சூர்தானும்
பொன்றிடுமுமதுதுன்பும்பொள்ளெனவகன்றுபோகு
நன்றிதுதுணிதியென்றேநாரதமுனிவன்றேற்றிச்
சென்றனன்சயந்தனங்கணிருந்தனன்றெட்பமெய்தி. (௩௭)

வருந்தியவமரர்தம்மைமனப்படத்தேற்றிநாளுந்
திருந்தலன்பணித்தவேவல்செய்திடத்தூண்டிவான்மே
லிருந்தனன்சயந்தனென்போனிருநிலத்திடைமுன்போன
புரந்தரன்செய்ததன்மையானினிப்புகலுகின்றேன். (௩௮)

மெய்த்தருநீழல்வைகும்வெறுக்கையைவெறுத்துப்பாரிற்
சித்திரமனைவியோடுந்தெக்கிணதேயம்புக்குப்
பத்துடனிரண்டுநாமம்படைத்ததொல்காழிநண்ணி
யித்தலமினிதேயென்னாவிருந்தனனிமையோர்கோமான். (௩௯)

அந்தநல்லிருக்கைதன்னிலயர்வுயிர்த்திறைவியோடு
மிந்திரனிருந்தபின்னரென்றுநாமிறைவற்போற்றிப்
புந்திகொண்மகிழ்வாற்பூசைபுரிதுமென்றுன்னியாண்டோர்
நந்தனவனத்தைவைப்பானுடியேயினையசெய்வான். (௪0)

சந்தகில்பலவுதேமாச்சரளமேதிலகந்தேக்குக்
கொந்தவிழசோகுபுன்குகுரவொடுநாளிகேர
நந்தியகதலிகன்னலுகிளம்பூகம்வன்னி
மூந்துயர்காஞ்சிவேங்கைமுதலியவேலிகோலி. (௪௧)

Digitized By Roja Muthiah Research Library

சாதியேகோங்குநாகஞ்சண்பகமிதழிஞாழல்
பாதிரிவழையேகுந்தம்பாரிசாதஞ்செருந்தி
போதுறுநரந்தம்வில்வம்பொலிகரவீரஞ்செச்சை
கோதறுமயிலைமௌவல்கொழுந்துசெவ்வந்திமுல்லை. (௪௨)

இவைமுதலாகிப்புள்ளதருக்களும்புதலுமெல்லா
நவையறத்தெரிந்துவைத்தோர்நந்தனவனத்தைச்செய்ய
வவைமிகமலர்ந்தவம்மாவம்மலர்கொண்டுநாளுஞ்
சிவனடியருச்சித்தங்கட்டேவியோடிறைவனுற்றான். (௪௩)

உற்றிடுமெல்லைதன்னிலுலகினிலவுணர்க்கெல்லாங்
கொற்றவன்விடுத்தவொற்றர்குவலயந்துருவிச்செல்ல
வற்றதுதெரிந்துவல்லேயமரர்கோன்றுணைவியோடு
மற்றவண்வேணுவாகிமறைந்துநோற்றிருந்தான்மாதோ. (௪௪)

வேணுவினுருப்போனின்றுமெலிவொடுநோற்றுநாளுந்
தாணுவைவழிபட்டங்கட்சதமகன்சாருநாளிற்
காணிலரொற்றர்போனார்கருமுகிலவுணர்தங்க
ளாணையிற்பெய்யாதாகவவ்வனம்வாடிற்றன்றே. (௪௫)

நீடியகாமர்பூங்காநெருப்புறுதன்மைத்தென்ன
வாடினநீரின்றாகிமற்றதுமகத்தின்கோமா
னாடினன்கவன்றுதொன்னாணான்முகத்தவனுமாலுந்
தேடரும்பரனையுன்னியிரங்கினன்செயல்வேறில்லான். (௪௬)

திருந்தலர்புரமூன்றட்டசேவகற்பரவலோடும்
பொருந்தலர்பூங்காவாடிப்போயினவெனினும்பொன்று
விருந்தலமிதனில்யாரென்றெய்துமான்மகவானின்னே
வருந்தலையென்றோர்மாற்றம்வானிடையெழுந்ததன்றே. (௪௭)

எழுவதோர்செஞ்சொற்கேளாவெம்பிரானருளீதென்னாத்
தொழுதனன்போற்றிமேனிதுண்ணெனப்பொடிப்பச்சிந்தை
முழுவதுமகிழ்ச்சிபொங்கமொய்ம்பொடேயிருந்தானங்க
ணழகியநதியொன்றுற்றவரன்முறையறையலுற்றேன். (௪௮)

இந்திரன்கரந்துறைபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௧௫௨.

---

# விந்தகிரிப்படலம்.

அந்தப்பொழுதத்தளிகொண்டுடையோர், சிந்தைக்கெளிதாஞ்சிவன்மெய்யரு
ளான், முந்துற்றுணர்நாரதமாமுனிவன், விந்தக்கிரிமுன்னுறமேவினனால். (௧)

மேவிப்பலவாசிவிளம்புதலுந், தேவப்படிவங்கொள்சிலம்புதொழா
வாவற்புதம்வந்ததெம்மண்ணலென, வேவப்படுபான்மையிசைத்திடுவோன். (௨)

மேருத்தனிவெற்புவிதிக்கரியோன், மூரிச்சிலையாகியமொய்ம்பதனாற்
றூரித்துலகின்றவடன்மரபாற், பேரற்பொடுவெந்துபிறக்கையினால். (௩)

Digitized By Roja Muthiah Research Library

குன்றுக்கிறையாயுறுகொள்கையினு, லென்றைத்தொடவிண்ணிலெழுந்துறலா
னின்றிப்புவியாவையுநித்தனடு, மன்றைப்பகல்காறுமளித்திடலால். (௪)

ஓராயிரமாமுடியுள்ளதனாற், காரார்களன்மேயகவின்கயிலை
சாராவொருசார்வுறுதன்மையினாற், சூரானவனாற்றொலைவில்லதனால். (௫)

தாழுங்கதிருந்தகுமேனெறியில், வாழுஞ்சசியுமலிதாரகையு
மேழென்றிடுகோளுமியாவர்களுஞ், சூழும்படிநின்றிடுதொன்மையினால். (௬)

கொன்னேயிமையோர்குடிகொண்டதனாற்,பொன்னேர்கொடுயர்ந்துபொருந்து
தலாற்,பன்னேமிகள்சூழ்வருபான்மையினாற்,றன்னேரிலையென்றுதருக்கியதே.()

பரந்தும்பர்நிமிர்ந்திடுபைம்பொன்வரை, பெருந்தன்மைமதித்திடுபெற்றியைநீ,
தெரிந்திலைகொலன்னசெயற்கையெலாம், விரைந்துன்னொடுசெப்பியமேவின
னே. (௮)

என்றன்முனிவோனிதுகேட்டிடலு, மொன்றாகியதேவுருவாயெதிரும்
வன்றாழ்கிரிமாமறமுற்றுயிரா, நன்றாலிஃதென்றுநகைத்துரையும். (௯)

இல்லாயுளதொல்லிறுமாப்பகலப், பல்லாரிகழப்பகரும்விதியா
னல்லாரெனவேநனிநாணமுறா, வில்லாகிவளைந்ததுமேன்மையதோ. (௧0)

பொன்னாரிமவான்புரிநோன்பதனா, லன்னானிடைவந்தமர்வுற்றனளான்
மன்னாகுமவன்மகளாயினளோ, வென்நாளுமியாரையுமீன்றருள்வாள். (௧௧)

பாங்குற்றிடுபாரினையாற்றுவனென், றோங்குற்றனனெவ்வுலகும்பரியா
வாங்குற்றனவோபலவன்னவையுந், தாங்குற்றதுகண்ணுதல்சத்தியதே. (௧௨)

விற்சூழ்கதிரோன்முதல்விண்ணவர்க, டற்சூழ்ந்தனரல்லதுசந்ததமு
மெற்சூழ்ந்திலரோவெழுதீவுளவாங், கற்சூழ்ந்திலரோகடல்சூழ்ந்திலரோ. (௧௩)

பன்னிற்குவடும்பலவுண்டெனவே, யுன்னுற்றிடுமோவுயர்கள்ளிகளின்
சென்னித்தொகையைத்தெரிசிக்கினயன்,றன்னைத்திலனோதலைநான்குளவே. ௧௪

கடிதாகியசூரிதுகல்லெனவே, யடராமல்விடுத்தனனன்றுதனை
நெடிதேயதுவுன்னிலனீள்பரிதிப், படையானினுமாற்றல்படைத்துளனோ. (௧௫)

தண்ணுற்றிடுபொன்மைதயங்குருவ, நண்ணுற்றனமென்றுளநாடினனோ
வெண்ணுற்றவனல்லுணர்வெய்திலனோன், மண்ணிற்புனைபாவைவனப்பதுவே. ௧௬

தன்கண்ணுறுவானவர்தாம்பலரு, மென்கண்ணமராமலிகழ்ந்தனரோ
நன்கண்ணுதனாயகனார்கயிலை, யின்கண்ணருகுற்றிலதெக்கிரியே. (௧௭)

திருவைத்தவர்கண்டுயில்செங்கணரா, மருவித்தனைமுந்துமறைத்திடுநாள்
விரைவிற்படரூதைவெகுண்டுபறித், தொருமுத்தலைகொண்டதுணர்ந்திலனோ. ௧௮

கிளர்ப்புற்றிடுசிம்புளொர்கேசரிமுன், னளப்பற்றிடுதன்னுருவண்டமெலாம்
வளர்ப்புற்றிடுஞான்றோர்மணிப்பரல்போற், குளப்புற்றனனீதுகுறித்திலனோ. ()

வரபத்திரைகேள்வன்மறம்புரியுஞ், சரபத்துருவுற்றுழிதாழ்சிறையின்
விரவிப்படரூதையின்மின்மினிபோற், றிரிகுற்றனனன்னதுதேற்றிலனோ. (௨0)

அறியுற்றிடுபாரதமானவெலாங், குறியுற்றிடுதோன்முகர்குஞ்சரன்மே
லெறியுற்றமருப்பினிலேடெனலாய்ப், பொறியுற்றிடுமென்பதுபொய்த்திடுமோ. ()

Digitized By Roja Muthiah Research Library

தாஞேர்வரையல்லதுதாரணியுண், கோஞேவலனல்லதுகோகனத
வாஞேனலன்வாசவனல்லனவ, னேஞேதனேயேலெனவெண்ணியதே. (௨௨)

என்றுவடவெற்பையிழித்துரையா, வந்நாகம்வியக்குமகந்தையினை
நன்ருரதநீக்குவனுடுகென்று, முன்னுவுருநீத்ததுமொய்வரையே. (௨௩)

வேறு.

எண்டருமுகுந்தர்கோடியெல்லையின்மாயையாக்கை
கொண்டனர்திரண்டுநீண்டுகுலாய்நிமிர்கொள்கைத்தென்ன
விண்டொடர்விந்தமாங்கோர்விஞ்சையாலகன்றுசேண்போய்ப்
புண்டரிகத்தன்மேயபுரத்துணைநிமிர்ந்ததன்றே. (௨௪)

உருக்கிளர்விந்தமென்னுமுருகெழுபிறங்கன்மேல்போய்ப்
பரக்கமதாகியம்பொற்பனிவரைகாறுமான்று
நெருக்கியதனையபான்மைநிலமுழுதளந்தமேலோன்
றிருக்கிளர்பொன்னந்தூசுபுனைந்தெனத்திகழ்ந்ததம்மா. (௨௫)

விந்தமிந்நெறியாலான்றுமேக்குறக்கிளர்ந்துபோகி
யந்தரநெறியைமாற்றவலரிவெண்டிங்கள்சேயோன்
புந்திபொன்புகரேகாரிபுயங்கநாள்பிறருநோக்கிச்
சிந்தையிற்றுணுக்கமெய்தியினையனசெப்பலுற்ருர். (௨௬)

தானவர்செயலோவென்பார்தருமமில்லரக்கவெய்யோ
ரானவர்செயலோவென்பாரல்லவேலயன்மாலென்னும்
வானவர்செயலோவென்பார்மாயமீதாகுமென்பார்
மேனிமிர்பிறங்கலின்றிவெள்ளிடையிலைகொலென்பார். (௨௭)

என்னிதுவென்றுபோதத்தெம்பிரானருளாலுட
வன்னதுதெரிதலோடுமாமிதுவிந்தமேருத்
தன்னுடனிகலொன்றுண்டாய்த்தராதலவரைப்பில்வானிற்
சென்னெறிவிலக்கிற்றென்றுசிந்தனைசெய்துதேர்வார். (௨௮)

செம்பொன்மால்வரையின்பாங்கிற்சிவனடியுன்னிநோற்றே
யம்புராசியைமுன்னுண்டோனமர்ந்தனனவனீண்டுற்ரு
லும்பர்போய்நின்றவிந்தமொடுங்குமென்றியாருமோர்ந்து
கும்பமாமுனியையுன்னியினையனகூறலுற்ருர். (௨௯)

விந்தகிரிப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௧௮௧.

---

# அகத்தியப்படலம்.

பொன்ஞர்கழல்களருச்சித்திடப்போதுகொய்யுங்
கைந்நாகமாலைநினைந்தேகராவொன்றுகௌவ
வென்ஞயகனேயெனத்தன்கையெடுத்தழைப்ப
வன்ஞனங்கெய்திவிடுவித்ததறிகிலாயோ. (௧)

பூவார்கமலத்தயனல்கியபூவைதன்மேற்
றூவாமயலாய்க்கிளியாகித்தொடர்ந்துசெல்லக்
காவாய்பரனேயெனலோடுங்கலங்கலென்றே
தேவாதிதேவனருள்செய்ததுதேர்கிலாயோ. (௨)

Digitized By Roja Muthiah Research Library

சத்தார்பிருகுதனதில்லைத்தடிந்தவெல்லை
யித்தாரணியிலளவில்பிறப்பெய்துகென்ன
வத்தாவருளென்றரிநோற்றுழியையன்வந்து
பத்தாகவென்றுநிறுவுற்றதுபார்த்திடாயோ. (௩)

தேவர்க்கெனினுநிலத்தின்கட்செறிந்துவாழ்வோ
ரேவர்க்கெனினுமொருதுன்புறினெய்திநீக்கல்
காவற்குரியார்கடனுமக்கடமைநூக்கின்
மேவற்கரிதாந்தனிமுத்தியின்மேலதன்றே. (௪)

தெள்ளத்தெளிந்தமறைக்கள்வனைச்செற்றமீன்போ
லள்ளற்கடலையொருநீயகன்கையடக்கிக்
கள்ளத்தவுணனிலைகாட்டிநங்கண்ணில்வைத்த
கொள்ளைக்கருணையுலகெங்கணுங்கொண்டதெந்தாய். (௫)

விந்தக்கிரிநாரதன்சூழ்ச்சியின்மேருவெற்போ
டிந்தப்பொழுதத்திகல்கொண்டுலகெங்குமீறா
மந்தத்துயருங்கயிலைக்கிணையாவலென்றே
சிந்தித்ததுகொலெழுந்திட்டதுசேணதெல்லாம். (௬)

மண்ணுற்றவெல்லையளவிட்டிடுமோல்கொலென்றே
யெண்ணுற்றெவரும்வெருக்கொண்டிடவீண்டைவிந்தம்
விண்ணுற்றவண்டத்துணையாய்மிசைப்போவதையா
கண்ணுற்றநோக்கம்விடுத்தேயிதுகாண்கிலாயோ. (௭)

மல்லற்கிரியிண்ணெறிமாற்றலின்மற்றெமக்குஞ்
செல்லற்கரிதாயதுபாருடைத்தேயமுற்று
மெல்லைப்பொழுதுமயக்குற்றவிவற்றைநீக்க
வொல்லைக்குறியோய்வரல்வேண்டுமென்றுன்னலுற்றார். (௮)

வேறு.

உன்னலோடுமுலகநனந்தலைப், பொன்னின்மேருப்புடையொர்பொதும்பரின்
மன்னிநோற்றுறைவண்டமிழ்மாமுனி, தன்னுளத்திலத்தன்மைகண்டனனரோ. ()

மேக்குயர்ந்திடும்விந்தத்திறற்றலை, நீக்கிவானநெறியினைத்தொன்மைபோ
லாக்கியண்டர்குறையுமகற்றுவா, னூக்கினான்முன்னுததியையுண்டுளான். (௧0)

துள்ளிகண்ணிடைத்தூங்குறக்கைதொழ, வுள்ளமென்பொடுருகவுரோமமார்
புள்ளிபொங்கப்புகழ்ந்துபுரிசடை, வள்ளறன்னைமனத்திடைமுன்னினான். (௧௧)

முன்னுமெல்லையின்மூரிவெள்ளேறெனா, மின்னுதண்சுடர்வெள்ளிவெற்பின்மி
சைப், பொன்னின்மால்வரைபோந்தெனப்புங்கவன், றன்னுபாரிடர்சூழ்தரத்
தோன்றினான். (௧௨)

ஆதியுற்றுழியச்சமொடேயெழீஇ, மூதுரைத்தமிழ்முற்றுணர்மாமுனி
கோதையுற்றிடக்கொம்பொடுவாங்கிய, பாதவத்திற்பணிந்தனன்பன்முறை. (௧௩)

சென்னிபாரிற்றிளைத்திடத்தாழ்ந்துபின், முன்னர்நின்றுமுறைபடப்போற்றலு
மின்னுலாஞ்சடைவிண்ணவன்வெஃகிய, தென்னைமற்றதியம்புதியாலென்றான். ()

விந்தமால்வரைமேருவைமாறுகொண், டந்தரத்தையடைத்ததன்வலி
சிந்தவென்கட்சிறிதருள்செய்கெனாச், சந்தநூற்றமிழ்த்தாபதன்கூறினான். (௧௫)

Digitized By Roja Muthiah Research Library

அக்கணத்துணக்காற்றல்வழங்கினா, மிக்கவிந்தத்தைவேரொடும்வீட்டியத், தெ
க்கிணஞ்சென்றுசீர்ப்பொதியத்திடைப், புக்குவைகெனப்புங்கவன்செப்பினான்.()

என்றலுந்தொழுதேத்திநின்பூசனை, நன்றுசெய்யநளிதடங்கூவலு
நின்றிடாப்புனனீடவுந்தென்றிசைக்,கொன்றோர்தீர்த்தமுதவுகென்றோதினான்.()

அனையகாலையருங்கயிலாயமே, லினிதுவைகியவேழ்நதிதன்னுளும், புனிதமா
கியபூம்புனற்பொன்னியைப், பனிமதிச்சடைப்பண்ணவன்முன்னினான். (௧௮)

அந்தவேலையஃதுணர்ந்தேவெரீஇச், சிந்தைபின்னுறச்சென்றுதிருமுனம்
வந்துகாவிரிவந்தனைசெய்தலு, மெந்தைநோக்கியிதனையியம்புவான். (௧௯)

நீதுநீங்கியதென்றிசைக்கேகிய, கோதிலாதகுறுமுனிதன்னொடும்
போதல்வேண்டும்பொருபுனற்காவிரி, மாதுநீயெனமற்றவள்கூறுவாள். (௨0)

திண்மையைம்பொறிசெற்றுளனாயினு, மண்ணலேயிவனாண்டகையாகுமாற்
பெண்ணியானிவன்பின்செலனீதியோ, வெண்ணினீதுமியற்கையன்றென்னவே.

திரிபில்சிந்தையன்றீதுநன்கிற்படா, வொருமைகொண்டவுளத்தனம்மன்பருட்
பெரியனீங்கிவன்பின்னுறச்செல்கெனா, வருள்புரிந்தனனாலமிடற்றினான். (௨௨)

ஆங்கதற்கிசைந்தந்நதியின்றியான், நீங்கிலாதமுனியொடுபின்செல்வ
னோங்கன்மேயவொருவவிவன்றனை, நீங்குகாலத்தைநீயருள்கென்னவே. (௨௩)

நன்றுநன்றிதுநங்கைநின்காரணத், தென்றுநோக்கியிவன்கரங்காட்டுவ
னன்றுநீங்கியவனியின்பாலதாய்ச், சென்றுவைகெனச்செப்பினனெந்தையே.( )

செப்புமாற்றஞ்செவிக்கமுதாதலு, மப்பெரும்புனலாறவன்பின்செல
வொப்பலோடுமுயிர்க்குயிராகியோன், றப்பின்மாமுனிக்கின்னதுசாற்றினான்.௨௫

நீடுகாவிரிநீத்தத்தைநீயினிக், கோடியுன்பெருங்குண்டிகைப்பாலென
நாடியத்திறஞ்செய்தலுநன்முனி, மாடுசேர்ந்தனண்மாநதியென்பவே. (௨௬)

ஆய்காலையகத்தியதென்றிசைத், தேயமேகெனச்சீர்விடைநல்குருப்
பாயுமால்விடைப்பாகன்மறைந்தனன், போயினான்செறிபூதரினத்தொடும். (௨௭)

வேறு.

அத்தனங்கொருவன்னானருளடைந்தங்கணீங்கி
மெய்த்தகுமதலைவேண்டிவிதர்ப்பர்கோன்பயந்தலோபா
முத்திரைதனைமுன்வேட்டுமுதுக்குறைத்திண்மைசான்ற
சித்தனையளித்தவள்ளறென்றிசைநோக்கிச்சென்றான். (௨௮)

அகத்தியப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௨0௯.

# கிரவுஞ்சப்படலம்.

பொன்றிகழ்வரையினின்றுங்குறுமுனிபுவியேயாறுத்
தென்றிசைக்கேகுமெல்லைத்திறலரிக்கிளவல்வாழ்க்கை
வன்றிறன்மாயமூதூர்வந்தெய்தவாண்டைவைகு
மன்றிலம்பேர்பெற்றுள்ளவவுணனைத்தன்மைகண்டான். (௧)

Digitized By Roja Muthiah Research Library

வானுயருலகந்தன்னைவசுந்தரையாக்கும்பாரை
யேனையககனமாக்குமெறிதிரைப்பரவைதன்னை
மேனிமிர்பிறங்கலாக்கும்வெற்பினைப்புணரியாக்கும்
பானுவைமதியமாக்குமதியினைப்பகலாச்செய்யும். (௨)

அணுவினைமேருவாக்குமன்னதோர்மேருவெற்பை
நுணுகியவணுவேயாக்குநொய்தெனப்புவனிதன்னைப்
புணரியதாக்குநேமிப்புணரியைப்புவனமாக்கு
மிணருறுநேமித்தீயையெல்லைநீராகச்செய்யும். (௩)

கன்னலினயுதத்தோன்றிற்கடவுளர்க்கேனுநீத்தோ
ரென்னவர்தங்கட்கேனுமெனைப்பலமாயஞ்சூழ்ந்து
பன்னெடுங்காலஞ்செல்லப்படுத்திடுமென்னினம்மா
வன்னவன்வன்மையாவுமாரறிந்துரைக்கற்பாலார். (௪)

அத்தகுதகுவர்கோமானடற்கிரவுஞ்சனென்போன்
மெய்த்தமிழ்முனிவன்செல்லும்வியனெறிவிந்தமேபோற்
கொத்துயர்குவடுமல்கிக்குன்றுருக்கொண்டுதன்பா
லுய்த்திடுமாறுபோக்கியுறுதலுங்குறியோன்கண்டான். (௫)

காண்டலும்வியந்துநன்றிக்கடிவரைநடுவணாக
வீண்டிதோரத்தமுண்டாலிவ்வழிநடத்துமென்று
வாண்டதனிடையேபோகவந்நெறிகுரோசவெல்லை
மாண்டலுமிலதேயாகமற்றொருசுரமுற்றன்றே. (௬)

அந்நெறிகண்டுதொன்னூலறைமுனியேகலோடுஞ்
சென்னெறிமேலின்றாகத்திரும்பினன்செல்லுங்காலை
முன்னுளநெறியுங்காணான்முனிவரன்மயங்கவோர்சார்
பின்னொருவட்டைகண்டுபேதுறலோடும்போனான். (௭)

ஆறதுசெல்லுமெல்லையடலெரிகனந்துசூழச்
சூறைகண்மயங்கமங்குறுண்ணெனமாரிதூவ
மாறகலுருமுச்சிந்தவல்லிருட்படலைசுற்ற
வீறகன்மாயைசூழ்ந்தானெறுழ்வலியவுணர்கோமான். (௮)

மட்டுறுகுறியசெம்மன்மற்றதுநோக்கித்தீயோர்
பட்டிமையொழுக்கீதென்னாப்பயின்றிடுபோதநீரா
லுட்டெளிபான்மைநாடவூழ்த்திறந்தெரிதலோடுங்
கட்டழலென்னச்சீறிக்கரதலம்புடைத்துநக்கான். (௯)

நன்றுநன்றவுணன்கொல்லாநமக்கிதுபுரியுநீரா
னின்றிவன்வன்மைநீப்பன்யானெனவவுணவெய்யோன்
குன்றுருவதனிற்குற்றிக்குறுமுனிபாணித்தண்டாற்
றன்றிரும்பூழையாக்கிச்சுளிவைபுகலுற்றான். (௧0)

மாண்மதிபெறாதவெய்யோய்மற்றுநின்றன்மைநீங்கி
நீண்மலையாகியீண்டேநின்றுதீயவுணர்க்கெல்லா
மேண்மிகுமிருக்கையாகியிருந்தவத்தோர்க்குமேனைச்
சேண்மலிகடவுளோர்க்குந்தீத்தொழிலிழைத்திபன்னாள். (௧௧)

Digitized By Roja Muthiah Research Library

மாற்படுமதுபாணிவலிகெழுதண்டாலுன்றன்
பாற்படுபுழைகள்யாவும்பற்பலமாயைக்கெல்லா
மேற்புடையிருக்கையாகவெம்பிரானுதவுஞ்செவ்வேள்
வேற்படைதன்னிற்பின்னாள்விளிகுதிவிரைவினென்றான். (௧௨)

பழிதருமினையசாபம்பகர்ந்துதன்சிரகந்தன்னி
னுழிதருபுனலைவாங்கியுளங்கொண்மந்திரத்தால்வீசி
யழிதரமாயைநீக்கியாண்டொரீஇமீண்டுதென்பால்
வழியதுசெய்வனாடிவண்டமிழ்முனிவன்போனான். (௧௩)

கிரவுஞ்சப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௨௨௨.

---

# விந்தம்பிலம்புகுபடலம்.

அன்னதோரவுணர்கோமானன்றுதொட்டசலமாகித்
துன்னெறியவுணர்யாருந்துவன்றியவரணமாகி
னென்னலின்முதனாள்காறுநின்றனனனையான்றன்னை
யென்னையாளுடையநீயன்றியாவரேயடுதற்பாலார். (௧)

பைந்தமிழ்முனிவன்வான்றோய்பனிவரையதனைநீங்கிக்
கந்தரஞ்செறிபொற்கோட்டுக்கடவுளர்வரைச்சாரெய்தி
யந்தமதடைந்தோர்க்கங்கணருளினாற்றனதுமூல
மந்திரமுணர்த்துமுக்கண்வானவன்காசிபுக்கான். (௨)

கங்கைசென்றொழுகுங்காசிக்கறைமிடற்றகிலநாதன்
பங்கயவடிகடாழ்ந்துபரவல்செய்தாண்டுநீங்கித்
துங்கதைகொண்டவிந்தத்தொல்வரைக்கொருசாரேகி
யங்கதனிலைமைநோக்கியறிவனொன்றியம்பலுற்றான். (௩)

சேயுயர்நிவப்பிற்றாகிச்சேண்புகும்விந்தமென்னு
மாயிருங்குவடுகேண்மோமற்றியாம்பொதியவெற்பிற்
போயிருந்திடவேயுன்னிப்போந்தனமதனுக்கின்னே
நீயொருசிறிதுசெல்லுநெறியளித்திடுதியென்றான். (௪)

எறிகதிர்மதியினுக்குமேகருந்திறத்தால்வான
நெறியினையடைத்துத்தொல்லைநெடியமால்போன்றுநின்றேன்
குறியநிற்கஞ்சியாறுகொடுப்பனோவெனாதுதோற்ற
மறிகிலைமீண்டுபோகென்றவ்வரைமொழிந்ததன்றே. (௫)

கேட்டலுமதனைச்சீற்றங்கிளர்ந்திடநகைத்துநாதன்
றாட்டுணையுன்னித்தொன்னாட்சதமகன்வேண்டவாழி
மாட்டுறச்செறித்தகையைமலரயன்பதத்தின்காறு
நீட்டினன்றவமேயன்றிநெடும்பொருள்பிறவுமுண்டோ. (௬)

அற்புதமமரர்கொள்ளவாற்றவுங்குறியோன்விந்த
வெற்பினதும்பர்தன்னின்மீயுயர்குடங்கைசேர்த்தி
வற்புறவூன்றவல்லேமற்றதுபுவிக்கட்டாழ்ந்து
சொற்பிலம்புகுந்துசேடன்றொன்னிலையடைந்ததன்றே. (௭)

௩௬

Digitized By Roja Muthiah Research Library

அள்ளலையடைகின்றோரிலரம்புகுமடுக்கலஞ்சி
வள்ளலையருளிக்கேண்மோமற்றுனைவழிபடாம
லெள்ளலையிழைத்துமேன்மையிழந்தனன்றமியன்குற்ற
முள்ளலையெழுவதென்ஞான்றுரையெனக்கூறிற்றன்றே. (அ)

அன்னதோர்பொழுதுதன்னிலலைகடல்செறித்தவங்கை
முன்னவன்விந்தவெற்பின்மொழியினைவினவியான்போ
யின்னெறியிடையேமீளினெழுதியாணீயுமென்னா
நன்னகையோடுசொற்றாரதன்சூழ்ச்சிக்கொப்ப. (கூ)

வன்புலப்புவிக்குள்விந்தமறைதலுமறிவினீராற்
புன்புலப்பகையைவென்றோன்கரத்தைமுன்போலச்செய்து
துன்புலப்புற்றசிந்தைச்சுரர்கள்பூமாரிதூர்ப்பத்
தென்புலப்பொதியவெற்பிற்செல்வதுசிந்தைசெய்தான். (க0)

ஆயிடைவிந்தம்பார்புக்கழுந்திடவகல்வானத்துத்
தேயம்வெள்ளிடையதாகத்தினகரன்முதலாந்தேவர்
பாய்சுடர்விளக்கம்யாண்டும்பரந்தனசிறையைநீங்கி
யேயெனவளக்கர்நீத்தமெங்கணுஞ்செறியுமாபோல். (கக)

அதுபொழுதலரியாதியமரர்களகத்தியன்பாற்
கதுமெனவடைந்துபோற்றிக்கைதொழுதெந்தைசெய்த
வுதவியார்புரிவர்நின்னாலும்பராறொழுகப்பெற்றோம்
பொதியமேலினிநீநண்ணியிருத்தியெம்பொருட்டாலென்றார். (கஉ)

என்றலும்விழுமிதென்னாவிசைவுகொண்டமரர்தம்மைச்
சென்றிடவானிற்றாண்டித்தெக்கிணந்தொடர்ந்துசெல்லக்
குன்றமர்குடாதுதேயங்குறுகும்வில்வலன்வாதாவி
யன்றுயிரிழப்பநின்றாரகத்தியன்வரவுகண்டார். (கங)

விந்தம்பிலம்புகுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,உஙரு.

---

## வில்வலன்வாதாவிவதைப்படலம்.

கண்டனரிவனேபோலுங்காய்சினத்தவுணராவி
கொண்டனன்வேலைமுன்னங்குடித்துமிழ்கின்றநீரா
னண்டரையருள்வானுங்கொலடைந்தனனவனுக்கின்னே
யுண்டியையுதவியாவிகொள்ளுதுமூனொடென்றார். (க)

என்றிவைபுகன்றபின்னரிளவல்வாதாவியென்போன்
குன்றதன்புடையிலோர்சார்கொறியுருக்கொண்டுபோந்து
மென்றழைபுதலின்மேயவில்வலனென்னுமேலோ
னொன்றியபுலத்தின்மிக்கோருருவுகொண்டுற்றானன்றே. (உ)

மீதுறுசடையுநீறுவிளங்கியநுதலும்வேடங்
காதணிகுழையின்சீருங்கண்டிகைக்கலனுமேற்கொள்
பூதியுந்தண்டுங்கையும்புனையுரியுடையுமாக
மாதவவேடந்தாங்கிமுனிவனேர்வல்லைசென்றான். (ங)

Digitized By Roja Muthiah Research Library

மெய்தருபுறத்துக்காமர்வியனுருக்கொண்டுதன்னுட்
கைதவங்கொண்டுசெங்கேழ்க்காஞ்சிரங்கனிபோன்மேய
மைதிகழ்மனத்தனேர்போய்வண்டமிழ்முனிவற்போற்றி
யைதெனவணங்கிமுக்காலஞ்சலிசெய்துசொல்வான். (௪)

அடிகணீர்போதவிந்நாளருந்தவம்புரிந்தேனின்று
முடிவுறவந்தீர்யானுமுனிவர்தநிலைமைபெற்றேன்
கொடியனேனிருக்கையீதாற்குறுகுதிர்புனிதமாகும்
படியெனவுரைத்துப்பின்னும்பணிந்தனன்பதங்கடம்மை. (௫)

பணிதலுமொருதன்கையிற்பரவையம்புனலைவாரி
மணிபடுபதுமம்போலவாய்க்கொளுமுனிவன்றீயோன்
றுணிவினையுணரானாகித்துண்ணெனவுவகைதோன்ற
வினையறுதவத்தின்மிக்கோயெழுதியென்றிதனைச்சொற்றான். (௬)

ஆறெதிரெண்மராகுமாயிரமுனிவர்தம்பால்
வேறுளதவத்தர்தம்பான்மிக்கநின்னியற்கைதன்னிற்
கூறுசெயணுவின்காறுங்குணமிலசரதமீது
தேறுதியிருக்கையேதுசெல்லுதும்வருகவென்றான். (௭)

என்றருண்முனியைநோக்கியீதெனதுறையுளென்னச்
சென்றனன்முடிவான்வந்ததீயவனவற்கொண்டேகி
மன்றதன்னிருக்கையுற்றுமரபுறுதவிசிற்சேர்த்திப்
பொன்றிகழடிகட்கேற்றபூசனைபுரிந்துசொல்வான். (௮)

எந்தைநீயானுமேனையென்குலத்தவருமுய்ய
வந்தனைபோலுமிந்நாண்மற்றெனதிருக்கைவைகி
வெந்திடுபுற்கையேனுமிசைந்தனையெனக்குச்சேடந்
தந்தருள்புரிந்துபோதிதவத்தரிற்றலைவவென்றான். (௯)

சொல்வலமுனிவர்மேலோன்சூர்முதன்மருகாயுள்ள
வில்வலன்மாற்றங்கேளாவிழுமிதுபரிவின்மிக்கோ
யொல்வதோருணவுநின்பாலுவந்தியாமருந்திப்பின்னர்ச்
செல்வதுகடனாமென்றுசெப்பினன்றீமைதீர்ப்பான். (௧0)

மேலவனிதனைக்கூறவில்வலன்வணங்கியெந்தாய்
சீலமோடடிசில்செய்வன்சிறிதுபோதிருத்தியென்று
காலையங்கதனிலாண்டோர்க்கயப்புனல்படிந்துமூழ்கிச்
சாலவும்புனிதனாகியடுவதோர்சாலைபுக்கான். (௧௧)

அத்தலைநிலத்தைநீராலாமயம்பூசியாண்டுஞ்
சித்திரமுறுத்தியாவுந்தேடிவால்வளையின்சின்ன
மொத்ததண்டுலமாசேகவொண்புனலிடையேயிட்டு
முத்திறமண்ணிமற்றோர்முழுமணிக்குழிசியுய்த்தான். (௧௨)

தாக்குறுதிறலின்வெய்யதழல்பொதிகருவியான
வாக்கியசெய்ததொன்றிலழலினையதனுண்மூட்டித்
தேக்ககிலாரமாட்டிச்சிறுணத்தசும்பரொன்றில்
வாக்கியவுலைப்பெய்தேற்றிமரபில்வாலரியுள்ளிட்டான். (௧௩)

Digitized By Roja Muthiah Research Library

பதனறிந்துண்டியாக்கிப்பாலுறவைத்துப்பின்னர்
முதிரையினடிசிலட்டுமுன்னுறுதீம்பால்கன்னல்
விதமிகுமுணுக்கள்யாவுமேவுறவமைத்துக்கொண்டு
புதுமணங்கமழுந்தெய்வப்புனிதமாங்கறியுஞ்செய்தான். (௧௪)

ஆற்றலான்மேடம்போலாயாரிடருயிரையெல்லா
மாற்றுவானமைந்துநின்றவிளவலைவலிதிற்பற்றிக்
கூற்றமேபோலமேவுமுனிவன்முற்கொணர்ந்துகையி
லேற்றகூர்ங்குயத்தாற்காதியிருதுணியாக்கினானே. (௧௫)

அணிப்படுபோர்வைநீக்கியங்கமுமகற்றிவாளாற்
றுணிப்பனதுணித்துமீர்ந்துஞ்சுவைத்திடுமுறுப்பூனெல்லாங்
குணிப்பொடுகுட்டமிட்டுக்குழிசிகள்பலவிற்சேர்த்தி
மணிப்புனல்கொண்டுமுக்கான்மரபினான்மண்ணல்செய்து. (௧௬)

உரைத்தவக்கறிக்குவேண்டுமுவர்முதலமைந்தால்கி
வருத்துறுகனன்மேற்சேர்த்திவாலிதிற்புழுக்கல்செய்தே
யரைத்திடுகறியினுண்டுளோதிதூயிழுதுபெய்து
பொரிப்பனபொரித்திட்டாவிபோந்திடாவண்ணம்போற்றி. (௧௭)

கறியினுண்பொடியுமேனைக்கந்தமார்துகளுமங்நாள்
வறையல்போகுற்றதூயவாலரிப்பொடியுநீவி
யுறைகெழுதுப்பும்வாக்கியொழுகுபல்காயங்கூட்டித்
திறனொடுமெளாவியாங்கோர்சிற்சிலபாகுசெய்து. (௧௮)

பின்னரும்பலகால்வேண்டும்பெற்றியிற்கரித்துச்செம்மி
முன்னுறவளிக்கநின்றமுதிரையின்புழுக்கலட்டுச்
செந்நலநீடுங்கன்னற்றீம்புளிங்கறியுஞ்செய்யா
வன்னதோர்தொடக்கம்யாவுமருளினனருளிலாதான். (௧௯)

ஆசினிவருக்கையாதிபளவையில்கனிகள்கீறித்
தேசமர்கன்னறீந்தேன்சேர்தரச்சிவணியேனை
வாசமுமலருமிட்டுவரம்பிலவமைத்துப்புத்தேள்
பூசனைக்குரியவன்பாற்பொருக்கெனக்குவவுசெய்தான். (௨௰)

குய்வகையுயிர்ப்பின்மாந்திக்குவலயம்விரும்புகின்ற
வைவகையுணவுமாறுசுவைபடவளித்துப்பின்னு
மெவ்வகையனவுந்தானேயிமைப்பினிலமைத்துவல்லே
கவ்வையினோடுஞ்சென்றுகடமுனிகழன்மேற்றாழ்ந்தான். (௨௧)

எந்தைநீயின்னகாலையிரும்பசியுடற்றவாற்ற
நொந்தனைபோலுமேனிநுணங்கினைதமியேனீண்டுத்
தந்தனனுணவியாவுந்தளர்வறநுகருமாறு
வந்தருளென்றுவேண்டமற்றதற்கியைந்துபோனான். (௨௨)

அட்டிடுசாலைமாட்டேயகத்தியற்கொடுபோயாங்க
ணிட்டதோரிருக்கைதன்னிலிருத்தியேமுகமன்கூறி
மட்டுறுதூநீர்கந்தமலர்புகைதீபங்கொண்டு
பட்டிமைநெறியிற்பூசைபுரிந்துபின்பதநோர்குற்றான். (௨௩)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

தெள்ளுஞ்சுடர்ப்பொனியல்கின்றதட்டைதிருமுன்னர்வைத்துநிரையா
வள்ளங்கள்வைத்துமிகுநாரமுய்த்துமரபிற்றிருத்திமறையோ
னுள்ளங்குளிர்ப்பவமுதன்னவுண்டியுறுபேதம்யாவுமுதவா
வெள்ளம்படைத்தநறுநெய்யதன்கண்விட்டான்றன்னுவிவிடுவான். (உச)

முறைவைப்புநாடிமுதன்மைக்கண்மேவுமுதிரைப்புழுக்கன்மறியின்
கறிவர்க்கமேனையவைசுற்றின்மேயகவினுற்றகிண்ணமிசையே
யுறவிட்டுநீடமதுரித்தயாவுமுடனுய்த்தொழிந்தவளனுஞ்
செறிவித்துமேலைமுனிகைக்குணீடுசிரகத்தினீருதவினான். (உரு)

பெருநீரடங்குசிறுகையினூடுபெறவுய்த்ததோயமதனை
யிருபான்மையுண்டியதுசூழும்வண்ணமிசையோடுசுற்றியதுதா
னொருகானுகர்ந்துபலகாலினுக்குமுதவிப்பினுள்ளபடியு
மருகாதுசெய்துமிகவேவிரும்பியயில்வான்றவங்கள்பயில்வான். (உசு)

அடுகின்றவுண்டிகறிவர்க்கமேனையவையன்பிலாதவசுர
னிடுகின்றதேதுமுடிவெய்துகாறுமினிதுண்டுபின்றைமுனிவன்
கடிகொண்டநாரமனையன்கொணர்ந்துகரமுய்ப்பநுங்கியெழுவான்
பொடிகொண்டுதன்கைமலர்நீவிமிக்கபுனல்கொண்டுமண்ணல்புரியா. (உஎ)

மைக்காரின்மெய்யனருள்கின்றநாரம்வாய்க்கொண்டுமிழ்ந்துபலகான்
முக்காலினுங்கிவாய்பூசறுத்து * முறைநாடியங்கமெவையு
மிக்கானுமூறுபுரியாவதன்றிவேறுள்ளசெய்கைபலவு
மக்காலையங்கொர்புடையுற்றியற்றியவண்வீற்றிருக்குமளவில். (உஅ)

வேதாவளித்தவரமுன்னியேவில்வலனென்னும்வெய்யவசுரன்
போதாவிருந்தமுனியாவிகோடல்பொருளாகநெஞ்சினினையா
வாதாவிமைந்தவினையாய்விரைந்துவருகென்றுகூறமுனிவன்
றீதார்வயிற்றினிடையேயெழுந்துதிறன்மேடமாகிமொழிவான். (உகூ)

வேறு.

எண்ணுமலேமுன்புகடலுண்டதேபோலவெனதூனுமுண்டகொடியோ
னுண்ணுடுமுயிர்கொண்டுவலிகொண்டுகுறிதானவுதரங்கிழித்துவருவ
னண்ணுவில்வலனேயெனக்கூறியேதம்பியரிபோன்முழங்கியிடலு
மண்ணுடர்புகழ்கும்பமுனிதீயர்செய்திட்டமாயந்தெரிந்துவெகுள்வான். (௩0)

ஊன்கொண்டகறியாகிநுகர்வுற்றவாதாவியுயிர்போகியுண்டவியல்பே
தான்கொண்டுமுடிகென்றுசடரத்தையொருகாலைதமிழ்வல்லமுனிதடவலுங்
கான்கொண்டவெரிமண்டுசிறுபுன்புதற்போன்றுகடியோனுமுடிவாகவே
வான்கொண்டலெனவங்கண்முன்னின்றவன்றம்பிமாய்வுற்றதுன்னிவருவான். ()

மெய்க்கொண்டதொன்னுருக்கொண்டுமுனிதன்னைவெகுளுற்றோர்தண்டமதனைக், கைக்கொண்டுகொலையுன்னிவருபோழ்தின்முனிவன்கரத்திற்றருப்பையொன்றை, மைக்கண்டர்படையாகநினைகுற்றுவிடவில்வலன்றானுமடிவெய்தலு, மக்கண்டகக்கள்வருறையுற்றவிடநீங்கியப்பாலகன்றனனரோ. (௩உ)

வில்வலன்வாதாவிவதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,உசுஎ.

---

* பூசறுத்தல் - சுத்திசெய்தல்.

Digitized By Roja Muthiah Research Library

# காவிரிநீங்குபடலம்.

செங்கைதூங்கியதீர்த்தநீரொடுங், கொங்கின்பாற்செலக்குறியமாமுனி
மங்குகின்றவம்மைந்தர்நேருறு, வங்கண்மேவினாருந்தவத்தர்போல். (க)

நேருமைந்தர்களிருவர்நீனிறக், காரின்மேனியர்கறங்குகண்ணினர்
சீராற்றவுஞ்சினத்தரொல்லென, வாரவாரஞ்செய்தணுகினாரோ. (உ)

அண்மையாகுவரகல்வர்மாமுனி, கண்முனெய்துவர்கரந்துகாண்கிலார்
விண்முகிற்குளேமேவியார்ப்பரான், மண்மிசைப்பினும்வருவர்சூழ்வரே. (ங)

கோதிலாற்றல்சேர்கும்பமாமுனி, யீதுநோக்கியேயிவரைமுன்னமே
காதினாமைக்கருதிவந்தனர், மாதவத்தினேன்மைந்தராதலால். (ச)

பேர்கிலாதவிப்பிரமகத்திநோய், தீருமாற்றினற்சிவனதாள்களை
யார்வமோடிவணருச்சிப்பாமெனு, நேரின்மாமுனிநினைந்துநின்றரோ. (ரு)

ஆசில்கொங்கினுக்கணித்தினோரிடை, வாசமீதெனமகிழ்ந்துவீற்றிரீஇ
யீசனார்தமையிலிங்கமேனியி, னேசநெஞ்சினனினைந்துதாபித்தான். (சு)

தூயகுண்டிகைத்தோயமன்றியே, சேயமாமலர்தீபந்தீம்புகை
யாயபோனகமாதியானவை, யேயுமாற்றினலினிதுதேடினான். (எ)

விழுமிதாகியவிரதர்வீயவே, வழியிருந்திடும்வஞ்சராவிகொள்
பழியகன்றிடப்பரமன்றண்மிசை, யழிவிலன்பொடேயருச்சித்தானரோ. (அ)

மங்கைபாகனைமற்றும்பற்பகல், சிங்கலின்றியேசிறந்தபூசைசெய்
தங்கண்மேவினனவன்கணுகிய, துங்கவெம்பவந்தொலைந்துபோயதே. (கூ)

அனையகாலையிலரியதீந்தமிழ், முனிவரன்செயன்முற்றுநாடியே
துனியினாதன்றொல்லைவானவர்க், கினியகோமகனிருக்கையெய்தினான். (க0)

தாணுவின்பதந்தன்னையுன்னியே, வேணுவாகியேயெய்த்தவஞ்செயுஞ்
சேணின்மன்னவன்செல்லுநாரதற், காணுமெல்லையிற்கழல்வணங்கினான். (கக)

எழுதிமன்னவென்றெடுத்துமார்புறத், தழுவிநன்றிவட்சார்தியோவெனு
வுழுவலன்பினுவுரைப்பவாசவன், றொழுதகையினனினையசொல்லுவான். (கஉ)

இன்றுகாறுநின்னருளின்யானிவ, ணன்றுமேவினனுதன்பூசனைக், கொன்றதுண்டுநீங்குரைப்பன்கேட்டியாற், குன்றமன்னதோர்குணத்தின்மேலையோய். (கங)

கோதின்மாமலர்குழுவுதண்டலைக், கேதுநீரிலையிறந்துவாடுமாற்
போதுமில்லையாற்பூசைசெய்வதற், கீதரோகுறையென்றியம்பினான். (கச)

வேறு.

இன்னவைபலவுங்கூறியிந்திரன்றவிசொன்றிட்டு
முன்னுறவிருத்தித்தானுமுனிவரன்பணியால்வைக
வன்னதோரறிஞனின்னூரரசியல்பிறவுமீசன்
றன்னருளதனுன்மேனாள்வருவதுதளரேன்மன்னோ. (கரு)

ஆறணிசடையினானுக்கருச்சனைபுரிதற்கிங்கோ
ரூறுளதென்றேயையவுரைத்தனையதுவும்வல்லே
மாறிடுங்காலமீண்டுவந்ததப்பரிசையெல்லாங்
கூறுவன்கேட்டியென்னுக்கோமகற்குரைக்கலுற்றான். (கசு)

Digitized By Roja Muthiah Research Library

தன்னிகரிலாதமுக்கட்சங்கரன்பொதியவெற்பின்
முன்னுறைகென்றுகும்பமுனிவனைவிடுத்தவாறு
மன்னவன்விந்தந்தன்னையகன்பிலத்திட்டவாறுந்
துன்னெறிபுரிந்தவெஞ்சூர்மருகரைத்தொலைத்தவாறும். (௧௭)

அப்பழிதீருமாற்றாலைதெனக்கொங்கினண்ணி
முப்புரமெரித்ததொல்லைமுதல்வனையருச்சித்தேத்தி
மெய்ப்பரிவாகியங்கண்மேவியதிறனுமுற்றச்
செப்பினன்பின்னுமாங்கோர்செய்கையையுணர்த்தலுற்றான். (௧அ)

அருந்தவமுனிவன்கொங்கினமலனையருச்சித்தங்க
ணிருந்திடுகின்றானடியேகினனவன்பாலாகப்
பொருந்துகுண்டிகையின்மன்னும்பொன்னியாறதனையிங்கே
வரும்பரிசியற்றினுன்றன்மனக்குறைதீருமென்றான். (௧௯)

குரவனீதுரைத்தலோடுங்குறுமுனிகொணர்ந்துவைத்த
வரநதிதனையிக்காவில்வரவியற்றிடுமாறென்கொல்
பெருமநீயுரைத்தியென்னப்பேரமுதருத்தியேத்திக்
கரிமுகத்தேவைவேண்டிற்கவிழ்த்திடுமதனையென்றான். (௨0)

குணப்பெருங்குன்றமன்னகோதிலாவறிவனின்ன
புணர்ப்பினையிசைத்தலோடும்புரந்தரன்பொருமனீங்கிக்
கணிப்பிலாமகிழ்ச்சியெய்திக்காசிபன்சிறுவர்கொண்ட
வணிப்பெருந்திருவுநாடுமடைந்தனன்போன்றுசொல்வான். (௨௧)

எந்தைநீயினையவெல்லாமியம்பினையதனால்யானு
முய்ந்தனன்கவலையாவுமொருவினன்முனிவன்பாங்கர்
வந்திடுமாறுமீண்டுவரவுனதருளாலின்னே
தந்திமாமுகற்குப்பூசைபுரிகுவன்றக்கோயென்றான். (௨௨)

அருண்முனியிதனைக்கேளாவன்னதேகருமம்வல்லே
புரிகரிமுகவற்கையபூசனையென்றுகூறிப்
பரவியவிமையோர்கோனைப்பார்மிசைநிறுவிப்போந்து
சுரரெலாம்பரவுகின்றதொல்லையம்பதத்தினுற்றான். (௨௩)

சேறலும்புணர்ப்புவல்லோன்றிங்களுமரவுங்கங்கை
யாறொடுமுடித்தவண்ணலருள்புரிமுதல்வன்றன்னை
மாறகன்மேனிகொண்டுவரன்முறைதாபித்தன்னான்
சீறடியமரர்கோமானருச்சனைசெய்துபின்னர். (௨௪)

இக்கொடுதென்னங்காயுமேனலினிடியுந்தேனு
முக்கனிபலவும்பாகுமோதகமுதலமுற்றுந்
தொக்குறுமதுரமூலத்தொடக்கமுஞ்சுவைத்தீம்பாலு
மிக்கபண்ணியமுமாகவிருப்புறநிவேதித்தானால். (௨௫)

இவ்வகைநிவேதித்தேபின்னெம்பிரான்றன்னையேத்த
மைவரையனையமேனிமதகரிமுகத்துத்தோன்றல்
கவ்வையோடனந்தகோடிகணநிரைதுவன்றிச்சூழ
வவ்விடைவிரைவாற்றோன்றவஞ்சினனமரர்கோமான். (௨௬)

Digitized By Roja Muthiah Research Library

அஞ்சலைமகவானென்னவைங்கரக்கடவுள்கூற
நெஞ்சகந்துணுக்கநீங்கிநிறைந்தபேருவகையெய்தி
யுஞ்சனனென்றுவள்ளலுபயமாமலர்த்தாண்மீது
செஞ்செவேசென்னிதீண்டச்சென்றுமுன்வணக்கஞ்செய்தான். (௨௭)

பூண்டிகழலங்கன்மார்பிற்பொன்னகர்க்கிறைவன்முக்க
ணாண்டகைசிறுவன்றாண்மேலன்பொடுபணிந்துபோற்ற
நீண்டதோரருளானோக்கிநின்பெரும்பூசைகொண்டாம்
வேண்டியபரிசென்னென்றான்வேழமாமுகனைவென்றான். (௨௮)

இந்திரனதுகேட்டையவெம்பிராற்காகவீண்டோர்
நந்தனவனத்தைவைத்தேனன்னதுநாரமின்றிச்
செந்தழலுற்றாலென்னத்தினகரன்சுடரான்மாய்ந்து
வெந்துகளானதண்ணன்மேலடுபுரமேயென்ன. (௨௯)

என்னலுமேந்தல்கேளாவேழ்பெருந்தலத்தினீரு
முன்னுறத்தருகோவானமுழுப்பெருங்கங்கைதானும்
பன்னதிபிறவுமிங்ஙன்விளித்திடோபரவையாவுந்
துன்னுறுவிக்கோவொன்றுசொல்லுதிவேண்டிற்றென்றான். (௩0)

ஐங்கரக்கடவுளிவ்வாறறைதலுமனைத்துநல்கும்
பங்கயத்தயனுமாலும்பரவுறுபழையோயிங்ங
னங்கவற்றொன்றும்வேண்டேனதுநினக்கரிதோயானொன்
றிங்குனைக்கேட்பனென்னாவிளையனவிசைக்கலுற்றான். (௩௧)

சகத்துயர்வடபொன்மேருச்சாரலினின்றும்போந்து
மிகத்துயரெவர்க்குஞ்செய்யும்வெய்யவள்சிறுவர்ச்செற்று
ம்கத்துயர்விதியின்சேய்க்குவருவித்தநிமலன்பொற்றா
ளகத்தியன்கொங்கில்பால்வந்தருச்சனைபுரிந்துமேவும். (௩௨)

அன்னவன்றனதுமாட்டோரணிகமண்டலத்தினூடே
பொன்னியென்றுரைக்குந்தீர்த்தம்பொருந்தியேயிருந்ததெந்தாய்
நன்னதியதனைநீபோய்ஞாலமேற்கவிழ்த்துவிட்டா
லின்னதோர்வனத்தினண்ணுமென்குறைதீருமென்றான். (௩௩)

பாகசாதனனிம்மாற்றம்பகர்தலும்பிறைசேர்சென்னி
மாகயானனத்துவள்ளன்மற்றிதுசெய்துமென்னா
வோகையாலவனையங்கணிறுவிப்போயொல்லைதன்னிற்
காகமாய்முனிபாலானகமண்டலமிசைக்கணுற்றான். (௩௪)

கொங்குறுமுனிவன்பாங்கர்க்குண்டிகைமீதிற்பொன்னி
சங்கரனருளின்வந்ததன்மையும்புணர்ப்புமுன்னி
யைங்கரன்கொடியாய்நண்ணவகத்தியனவனென்றோரா
னிங்கொருபறவைகொல்லாமெய்தியதென்றுகண்டான். (௩௫)

கண்டனன்பிள்ளைசெல்லக்கரதலமெடாநின்றோச்ச
வண்டருக்கலக்கண்செய்தகயமுகத்தவுணற்செற்றோன்
குண்டிகையதனைத்தள்ளிக்குளிர்புனற்கன்னியன்னான்
பண்டையிலிசைவுசெய்தான்பாரினீபடர்தியென்றான். (௩௬)

Digitized By Roja Muthiah Research Library

என்னலுங்காஞ்சிதன்னிலெம்பிரானுலகமீன்ற
வன்னைதனன்புகாட்டவழைத்திடவந்தகம்பை
நன்னதிபோலவிண்ணுஞாலமுநடுங்கவார்த்துப்
பொன்னியாறுலகந்தன்னிற்பொள்ளெனப்பெயர்ந்ததன்றே. (௩எ)

பெயர்தலுமுமைதன்பின்ளைபிள்ளையினுருவநீத்துப்
பயிறருமறைநூல்வல்லபார்ப்பனமகன்போற்செல்லச்
சயமிகுதவத்தின்மேலோன்றன்மையங்கதனைநோக்கி
யுயிர்முழுதடவேதோன்றுமொருவன்போலுருத்துநின்றான். (௩அ)

தேவனோவவுணன்றானோவரக்கனோதிறலின்மேலோன்
யாவனோவறிதறேற்றேனீண்டுறுநதியைச்சிந்திப்
போவனோசிறிதுமெண்ணுவகந்தையன்போலுமம்மா
யாவனோவன்மைதன்னையறிகுவன்விரைவினென்றான். (௩௯)

விரைந்தவன்பின்னரேகமெய்வழிபாடுசெய்வோ
ரரந்தையைநீக்குமெங்கோனச்சுறுநீரன்போல
விரிந்தனன்போதலோடுமிருகையுங்கவித்தமாக்கித்
துரந்தனன்முனிவன்சென்னிதுளக்குறத்தாக்கவுன்னி. (௪0)

குட்டுவான்றுணிந்துசெல்லுங்குறுமுனிக்கணியனாகிக்
கிட்டுவான்விசும்பினூடுகிளருவான்றிசைகடோறு
முட்டுவான்பின்புபாரின்முடுகுவானனையன்கைக்கு
மெட்டுவான்சேயனாகியேகுவானெவர்க்குமேலோன். (௪௧)

இப்படிமுனிவன்சிற்றத்தலமரயாண்டுமேகித்
தப்பினன்றிரிதலோடுஞ்சாலவுந்தளர்ச்சியெய்திச்
செப்பரிதிவன்றன்மாயஞ்செய்வதெனினியானென்னா
வொப்பருந்தவத்தோனுன்னவெந்தையஃதுணர்ந்தானன்றே. (௪உ)

ஓட்டமோடுலவுமுன்னோனெல்லையிற்றனதுமேனி
காட்டினன்முனிவன்காணக்கதுமெனக்கலங்கியந்தோ
கோட்டிபமுகனோவீண்டுக்குறுகினனவனையானோ
வீட்டொடுதுரந்தேன்கொல்லென்றேங்கினனிரங்குகின்றான். (௪௩)

இரங்கியமுனிவன்முன்னமேந்தலைப்புடைப்பான்கொண்ட
கரங்களையெடுத்துவானிற்காருருமேறுவெற்பி
னுரங்கிழிதரவேநீங்காதுரப்பினில்வீழ்வதேபோல்
வரங்கெழுதனதுநெற்றிவருந்துறத்தாக்கலுற்றான். (௪௪)

தாக்குதல்புரிந்தகாலைத்தாரகப்பிரமமான
மாக்கயமுகத்துவள்ளல்வரம்பிலாவருளினோடு
நோக்கியுன்செய்கையென்னைநுவலுதிகுறியோயென்னத்
தேக்குறுதமிழ்தேர்வள்ளலினையதுசெப்புகின்றான். (௪௫)

அந்தணகுமரனென்றேயையநின்சிரமேற்றாக்கச்
சிந்தனைபுரிந்தேன்யாதுந்தெளிவிலேனதற்குத்தீர்வு
முந்தினனியற்றுகின்றேனென்றலுமுறுவல்செய்து
தந்தியின்முகத்துவள்ளலமரலிர்தியென்றான். (௪௬)



Digitized By Roja Muthiah Research Library

என்றலுந்தவிர்ந்துமுன்னோனிணையடிமிசையேபல்காற்
சென்றுசென்றிறைஞ்சியன்னோன்சீர்த்தியதெவையும்போற்றி
யுன்றிறமுணரேன்செய்ததவற்றினையுளத்திற்கொள்ளே
னன்றருள்புரிதியென்னநாயகனருளிச்செய்வான். (௪௭)

புரந்தரனெந்தைபூசைபுரிதருபொருட்டாலீண்டோர்
வரந்தருகாமர்தண்காவைத்தனனதுநீரின்றி
விரைந்ததுபொலிவுமாழ்கிவெறுந்துகளாதலோடு
மிரந்தனன்புனல்வேட்டெம்மையியல்புடன்வழிபட்டிந்நாள். (௪௮)

ஆதலிற்கொடிபோல்யாமுன்னரும்புனற்குடிகை * மீது
காதலித்திருந்துமெல்லக்கவிழ்த்தனமதனையீண்டுப்
போதலுற்றிடவுஞ்சொற்றும்பொருதுநீசெய்தவற்றில்
யாதுமுட்கொள்ளேமவ்வாறினிதெனமகிழ்துமன்றே. (௪௯)

ஈண்டுநீபுரிந்ததெல்லாமெமக்கிதோராடலென்றே
காண்டுமாலன்றிநின்பாற்காய்சினங்கொண்டேமல்லே
நீண்டசெஞ்சடையெம்மையனேயனீயெமக்குமற்றே
வேண்டியவரங்களீதுங்கேண்மதிவிரைவினென்றான். (௫0)

வேறு.

என்னவிதுசெப்பலுமெம்பெருமான், முன்னாகியதோர்முனிவன்பணியா
வுன்னாரருளெய்தலினுய்ந்தனன்யா, னன்னாயகனேயெனவேநவில்வான். (௫௧)

நின்பாலினுமந்நெடுமாலுணரான், றன்பாலினுமேதமியேன்மிகவு
மன்பாவதொர்தன்மையளித்தருணீ, யின்பாலதுவெஃதுவனெப்பொழுதும். (௫௨)

இன்னேதமியேனெனவேயினிநின், முன்னேநுதலின்முறையாலிருகை
கொன்னேகொடுதாக்குநர்தங்குறைதீர்த், தன்னேயெனவந்தருள்செய்யெனவே.

முத்தண்டமிழ்தேர்முனியீதறைய, வத்தன்குமரனவைநல்கினமா
லித்தன்மையவேயலதின்னமுநீ, சித்தந்தனில்வேண்டியசெப்பெனவே. (௫௪)

கொள்ளப்படுகுண்டிகையிற்குடிநீ, வெள்ளப்பெருநீர்மிசையுற்றடிக்
டள்ளக்கவிழ்வுற்றதுதாரணிமே, லெள்ளிற்சிறிதுமிலதென்றிடவே. (௫௫)

ஊனாயுயிராயுலகாயுறைவோன், மேனாளருள்செய்வியன்மாநதிதான்
போனாலதுபோற்புனலொன்றுளதோ, நானாடிடவேநலமானதுவே. (௫௬)

அந்நீர்மையினாலடியேற்கிவணீ, நன்னீர்நவையற்றதுநல்கெனவே
கைந்நீர்மையினாற்கடுகின்றனையா, முந்நீரயிலுமுனிவன்மொழிய. (௫௭)

காகத்தியல்கொண்டுகவிழ்த்திடமுன், போகுற்றபுதுப்புனலாற்றிடையே
மாகைத்தலநீட்டினன்வானுலவு, மேகத்திறைமால்கடல்வீழ்ந்தெனவே. (௫௮)

அள்ளிச்சிறிதேபுனலம்முனிவன், கொள்ளப்படுகுண்டிகையுய்த்திடலு
முள்ளத்தைநிரப்பியொழிந்ததெலாம், வெள்ளத்தொடுபார்மிசைமேவியதே. (௫௯)

முன்னுற்றதுபோன்முனிகுண்டிகைநீர், துன்னுற்றதுமேற்றலையாவகையா
லெண்ணிப்புதுமையெனநோக்கினனாற், றன்னுற்றமனத்தவமாமுனியே. (௬0)

பேருற்றிடுமிப்பெருநீரதனில், வாரிச்சிறிதேவருகுண்டிகையிற்
பாரித்தனனிப்படிமுற்றுறுவா, னரிப்படிவல்லவராயினுமே. (௬௧)

* குண்டிகை எனற்பாலது குடிகையென்றாயிற்று.

Digitized By Roja Muthiah Research Library

அந்தத்திருமாலயனேமுதலோர், வந்தித்திடவேவரமீந்தருளி
முந்துற்றிடுமூலமொழிப்பொருளா, மெந்தைக்கரிதோவிதுபோல்வதுவே. (௬௨)

என்றேநினையாவிபமாமுகவற், சென்றேபணியாச்சிறியேன்குறையா
யொன்றேதுமிலேனுதவுற்றனைநீ, நன்றேகவிழுநதிநீரையுமே. (௬௩)

முந்தேமுதல்வாமுழுதுன்னருளா, லந்தேயளவுமளியில்சிறியே
னுய்ந்தேனினியும்முனையுன்னுழிநீ, வந்தேயருள்கூர்மறவேலெனவே. (௬௪)

அற்றாகவெனவருள்செய்தயலே, சுற்றாவருதொல்படையோடுமெழாப்
பற்றானவர்நாடுபரம்பொருள்சேய், மற்றாரும்வியப்பமறைந்தனனே. (௬௫)

வேறு.

மறைகின்றவெல்லைதனிற்குறுமுனிவிம்மிதமாய்மன்னுயிர்களெங்கு
முறைகின்றதனிமுதல்வன்புதல்வன்றன்கோலத்தையுணர்ந்துபோற்றி
யறைகின்றகாவிரியைக்கண்ணுற்றுநகைத்துவெகுண்டருள்கைநாடி
யுறைகின்றகொங்குதனையொருவித்தென்றிசைநோக்கியொல்லைசென்றான். (௬௬)

காவிரிநீங்குபடலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௧,௩௩௩.

---

# திருக்குற்றாலப்படலம்.

செற்றாலமுயிரனைத்துமுண்டிடவேநிமிர்ந்தெழலுஞ்சிந்தைமேற்கொள்
பற்றாலங்கதுநுகர்ந்துநான்முகனேமுதலோர்தம்பாவைமார்கள்
பொற்றாலிதனையளித்தோன்புகழ்போற்றிமுகின்மேனிப்புத்தேள்வைகுங்
குற்றாலமாவதொருவளநகரைக்குறுமுனிவன்குறுகினானால். (௧)

அப்பதியிலச்சுதனுக்காலயமொன்றுளதம்மாவவனிமீதி
லொப்பிலதோர்திருமுற்றமஃதென்பரிம்பரெலாமும்பர்தாமுஞ்
செப்புவராயிடைதன்னிலந்தணர்களளப்பில்லோர்செறிவரன்னார்
மெய்ப்படுநான்மறைகண்டுமோகத்தாற்றமதுமதமேற்கொண்டுள்ளார். (௨)

அன்னவர்களெம்பெருமான்றன்னடியார்தமைக்காணினழன்றுபொங்கி
முன்னுறுதொல்பகைஞரெனமிகவிகழ்ந்துமற்றவர்தமுகநோக்காராய்த்
துன்னெறியேமேற்கொண்டுமறைபயில்வோரென்பதொருசொல்லேதாங்கித்
தந்நெறியும்புரியாதங்கிருந்தனராலஃதுணர்ந்தான்றமிழ்நர்கோமான். (௩)

குறுமுனிவனுங்கவர்தஞ்செயலுணர்ந்துகுற்றாலமென்னுமூதூர்
மறுகினிடையேநடந்துமாயவன்றனாலயமுன்வருதலோடு
நெறிவருமவ்வாலயத்திற்செறிகின்றவைணவர்கணெடிதுநோக்கிச் [வார்.
செறுநர்தமைக்கண்டுபதைபதைப்பார்போல்வெய்துயிர்த்துச் செயிர்த்துச்சொல்

ஒல்லாதகண்டிகையுநீறுமணிந்தனையதனாலுலகிற்றேவ
ரெல்லாருமறியவையமேற்றோனுக்கடியவனீயீண்டுசெல்லச்
செல்லாதுகைத்தலத்திலொருகோலுங்கொண்டனையாற்சிறியைபோது
நில்லாயெம்பெருமான்றன்மாநகரமணுகாதுநீங்குகென்றார். (௫)

Digitized By Roja Muthiah Research Library

என்றிடலும்வெகுளாதுநகைசெய்துமறைநெறியையிகந்துநின்றீர்
துன்றியிவணுறைகின்றதுணரேனித்திறமெவருஞ்சொன்னாரில்லை
நன்றுநெறியென்றுவந்தேனும்பான்மையுணர்வேனேனுனிம்மூதூர்
சென்றிடவுநினையேனுன்முனியற்கயான்மீண்டுசெல்வேனென்றான். (௬)

பொதியமலைதனிலேகுமுனிவனிதுபுகன்றிடலும்பொறாதுநீயிப்
பதியதனில்வருவதுவும்பாவமாமீண்டுநீபடர்தியென்ன
விதுசரதமொழிந்தீர்கடொல்லோர்தநூன்முறையுமீதேயென்னா
விதியருளுந்தக்கனூர்வழிமுறையோர்தமைநீங்கிமீண்டுசெல்வான். (௭)

சிட்டர்புகழ்கயிலைமலைகாத்தருளுந்திருநந்திதேவன்செங்கேழ்
மட்டுறுபங்கயத்துறையுநான்முகத்தோன்றருவாசன்மறைநூல்யாவுந்
தட்டறவேயுணர்பிருகுகவுதமன்கண்ணுவமுனிவன்றதீசியின்னோ
ரிட்டபெருஞ்சாபமெலாம்பொய்த்திடுமோவெனவுன்னியேகலுற்றான். (௮)

ஏகலுறுகுறுமுனிவனுயிர்க்குயிராய்நின்றோனையிகழ்வார்தங்கண்
மோகமுறும்கந்தையினைமுதலோடுங்களைவனெனமுன்னிமுன்னாட்
போகியதன்மாயையினாலிரதத்தினுவிபடுபொன்னேபோலப்
பாகவதமாகுவதோருருக்கொண்டான்கருணையினாற்பரவைபோல்வான். (௯)

ஆளுடையநாயகன்பாலன்புடையான்மாயவன்றனடியனேபோற்
கோளுடையமாயத்தான்மேனிகொண்டுமீண்டுமங்கட்குறுகலோடு
நீளிடையில்வரக்கண்டவயிணவர்களெதிர்சென்றுநெடிதுபோற்றித்
தாளிடையில்வீழ்ந்திடலுநாரணனுக்காகவெனச்சாற்றிநின்றான். (௧0)

அடிமுறையின்வணங்கியெழும்வேதியர்தங்களைநோக்கியரிபாலன்பு
முடிவிலைநம்பாலென்றுமொழிந்தனரங்கதுகாணமுன்னிவந்தாம்
படியதனிலுமக்குநிகர்யாருமிலைநுமைக்கண்டபரிசால்யாமுந்
தொடர்வரியபேருணர்வுபெற்றனமென்றேபின்னுஞ்சொல்லலுற்றான். (௧௧)

முத்திதருபேரழகர்திருமலை * யினிடையுற்றோமுன்னமின்னே
யத்திகிரி o தனிவிருப்பச்செல்கின்றோநம்பெருமானமருங்கோயி
லித்தலமேலுளதென்பரதுபரவும்விருப்புடையோமென்னவன்னோர்
கைத்தலத்தோர்விரற்சுட்டியதுதிருமாலிருக்கையெனக்காட்டலுற்றார். (௧௨)

காட்டுதலுங்கைதொழுதுமாலுறையுமந்திரத்தைக்கடிதுநண்ணி
யீட்டமுடன்வலஞ்செய்துகண்ணபிரானடியிணையையிறைஞ்சியேத்திப்
பாட்டிலுறுதொல்லடியார்தமைநோக்கியிவரைவழிபடுதற்குள்ளம்
வேட்டனமான்மஞ்சனமேமுதலியனகொணர்மின்கள்விரைவினென்றான். (௧௩)

நன்றெனவேசிலரேகித்தூயதிருமஞ்சனமுநறுமென்போது
மன்றலுறுசெஞ்சாந்துமணித்துகிலுமேலையவுமரபிற்கொண்டு
சென்றுமுனிவரன்முன்னமுய்த்திடலுமலையவர்தந்திறத்தைநோக்கி
யின்றிவரையருச்சனைசெய்விதிமுறையைப்பார்த்திடுங்கள்யாருமென்றே. (௧௪)

அறுகுமதிநதிபுனையுஞ்செஞ்சடையெம்பெருமானையகத்துட்கொண்டு
சிறுகுமுருவுடையமுனிநாரணனார்திருமுடிமேற்செங்கையோச்சிக்
குறுகுகுறுகெனவிருத்தியொள்ளரக்கிற்புனைபாவைக்கோலமீது
மறுகுதழலுற்றென்னக்குழைவித்தோர்சிவலிங்கவடிவஞ்செய்தான். (௧௫)

---

* முத்திதருபேரழகர் திருமலை என்பது மேருவையும்,
o அத்திகிரி என்பது பொதியத்தையுங் குறிப்பாலுணர்த்தின.

Digitized By Roja Muthiah Research Library

அல்லிமலர்ப்பங்கயனுநாரணனுமெந்நாளுமறியொணாத
வெல்லையிலாப்பரம்பொருளைத்தாபித்துமந்திரங்களெடுத்துக்கூறித்
தொல்லையுருக்கொண்டுமலர்மஞ்சனமேமுதலியன தூயவாக்கி
யொல்லைதனிலருச்சிப்பக்காண்டலுமவ்வந்தணர்களுருத்துச்சொல்வார். (௧௬)

காயத்தான்மிகச்சிறியன்முப்புரத்தைநீறாக்குங்கடவுட்காற்ற
நேயத்தானிவ்விடையேமுன்வந்தான்யாமிகழநில்லாதேகி
யாயத்தான்பாகவதவடிவாய்வந்திச்சமயமழித்தானந்தோ
மாயத்தான்பற்றுமினோகடிதென்றுகுறுமுனியைவளைந்துகொண்டார். (௧௭)

பற்றிடுவான்வளைகின்றோர்தமைநோக்கியெரிவிழித்துப்பரவைதன்பா
லுற்றவிடம்விடுத்ததெனமுனிவன்றன்வெகுளித்தீயுய்த்தலோடுஞ்
சுற்றியதுசுற்றியவர்தமைப்பின்னும்பொறிபடுத்தித்துரந்துசெல்ல
மற்றவர்களிரிந்தேதம்பதியிழந்துசிதறினரான்மண்மேலெங்கும். (௧௮)

அன்னோர்கள்போயிடலுமின்றுமுதற்சிவனிடமீதாயிற்றென்று
முன்னோனையருச்சித்துப்பணிந்துவிடைகொண்டுதென்பான்முன்னிச்சென்று
பொன்னோடுமணிவரன்றியருவியிழிதருபொதியப்பொருட்பினண்ணி
மன்னோமெய்த்தவம்புரிந்துவீற்றிருந்தானப்பரமன்மலர்த்தாளுன்னி. (௧௯)

வேறு.

பூவிரிகின்றகாமர்பொதும்பர்சேர்பொதியவெற்பிற்
றூவிரிகும்பத்தண்ணல்வந்திடுதன்மைசொற்றாம்
மாவிரிகின்றசாதிவனத்திடைமலர்ப்பூங்காவிற்
காவிரிபோந்தவாறுமேனவுங்கழறுகின்றாம். (உ0)

திருக்குற்றாலப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௩௫௩.

# இந்திரனருச்சனைப்படலம்.

கொடியுருக்கொண்டுமுன்னங்குண்டிகையிருந்தபிள்ளை
படிமிசையதனைத்தள்ளப்படர்ந்தகாவிரியின்றன்மை
விடலருந்தளையினீக்கிவியனெறிப்படுத்தலோடு
மடிகளினருளாற்செல்லுமாருயிர்போன்றதன்றே. (௧)

பண்டொருதந்தியானோன்படர்சிறைப்புள்ளாய்த்தள்ளக்
குண்டிகையிருந்தநீத்தங்குவலயம்படர்ந்தபான்மை
யெண்டருந்தடையால்வல்லோனிருங்கடத்திட்டபாந்தண்
மண்டலத்தொருவனீப்பவழிக்கொளல்போன்றதன்றே. (௨)

ஏதத்தினொழுக்குநீக்குமிறைவனூலொழுக்குந்தொல்லை
வேதத்தினொழுக்குநோற்றுவீட்டினையடையுநீரார்
போதத்தினொழுக்குமெங்கோன்புரிதருகருணையென்னு
மோதத்தினொழுக்குமென்னக்காவிரியோடிற்றன்றே. (௩)

தள்ளரும்பரவையேழுந்தரணியைச்சூழ்ந்துநின்ற
வுள்ளுறுதொடர்புநாடியாவையுமொருங்குநண்ணிப்
பொள்ளெனப்புகுந்ததென்னப்புவியெலாம்பரவியார்த்துத்
தெள்ளிதிற்கலங்கிநீத்தந்தெளிகிலாதொழுகிற்றால். (௪)

Digitized By Roja Muthiah Research Library

தெண்டிரைப்புணரியெல்லாந்தினைத்துணையாகவாரி
யுண்டருண்முனிவன் றீர்த்தமொன்றினைவேண்டுமெல்லை
யண்டர்தம்பெருமானல்கவன்னவன்கரத்திலேந்துங்
குண்டிகைப்புனற்குநேராக்கூறுதற்குவமையுண்டோ. (கு)

தொல்லையிற்குறியோன்வந்தான்றுய்க்குமோவின்னுமென்று
வல்லையிற்றழைகள்பற்றிவாரிதிகூவிப்பாரி
னெல்லையிற்படர்ந்ததென்னவிலசெறிபொதும்பரீட்ட
மொல்லையிற்பறித்துமேல்கொண்டோடியதொலிகொணீத்தம். (சு)

சந்தமுமகிலுஞ்சங்குந்தரளமுங்கவரிதானுஞ்
சிந்துரத்தெயிறும்பொன்னுமணிகளுந்திரைமேற்கொண்டு
வந்திழிநதியின்றன்மைவருணனிப்பொருள்களெல்லா
மிந்திரன்றன்பாலோச்சவேகுதல்போன்றமாதோ. (எ)

வரையெனுந்தடம்பொற்றேருமதகரித்தொகையுமாந்தர்
நிரைகளுந்தரங்கமாவுநெறிக்கொடுமகவான்றன்பால்
விரைவொடுசேறல்சூரன்விண்ணவர்க்கரசன்மீது
பொரவிடுதானைவெள்ளம்போவனபோன்றதன்றே. (அ)

ஆவதோரினையவாற்றலலையினுலகல்வான்முட்டிக்
காவதம்பலவாயான்றுகாசினியளந்துகீழ்பாற்
போவதோர்பொன்னிநீத்தம்புரந்தரனிருந்துநோற்குந்
தாவறுவனத்திற்போதார்தண்டலைபுகுந்ததன்றே. (கூ)

ஓடுநீர்நீத்தப்பொன்னியொல்லையிற்காமர்காவிற்
பீடுறவருதலோடும்பேதுறுமகவான்காணு
வாடினனைத்தானெங்கோனருச்சனைமுடிந்ததென்று
பாடினன்முதல்வன்றாளைப்பரவினன்படர்ச்சிதீர்ந்தான். (க0)

சிரினையகற்றிநீங்காத்திருவினைமாற்றித்தொல்பே
ருரினைக்கவர்ந்துதன்னேருயிருக்குமிறுதிநாடுஞ்
சூரனைவென்றுலென்னத்தொலைவிலாமதர்ப்புமிக்கா
னரவனுளத்திற்கொண்டவுவகையையறைதற்பாலார். (கக)

பாடுறுபொன்னிநீத்தம்பாய்தலுமகவானேபோல்
வாடுறுகின்றதண்காவல்லையிற்கிளர்ச்சியெய்தி
யாடுறுபசிநோயுற்றோருரும்பெறலமிர்தம்வந்து
கூடுறநுகர்ந்தாலென்னக்குளிர்ப்பொடுதளிர்த்ததன்றே. (கஉ)

வானிறைகின்றகொண்மூவார்துளிதலைஇயபின்றைக்
கானிறைமரனும்பூடும்வல்லியுங்கவின்றுலென்ன
மேனிறையடைகண்மல்கிவிரிதருசினையும்போதுந்
தானிறைகின்றதம்மாசதமகன்வளர்த்தபூங்கா. (கங)

வேறு.

வானிலமளவிடவளர்ந்தபுன்னைக, ளானவைமுழுவதுமரும்புகின்றன
தூநகைநித்திலத்தொடையன்மெய்யுடை, நீனிறமாயவனிலைஇயதொக்குமால். கச

தண்ணுறுபாசடைதயங்குபுன்னைகள்,கண்ணுறுவியன்சினைகவினப்பூத்தன,வெ
ண்ணுறுதாரகையீண்டிமொய்த்திட, விண்ணுறுமுகிலினம்விளங்கிற்றென்னவே.

Digitized By Roja Muthiah Research Library

பண்படுமளியினம்பயிலுறுதன, சண்பகவணிமரந்தயங்கிப்பூத்தன
வெண்படுதபனியத்தியன்றபோதிலை, விண்படுதருக்கொடுமேவல்போன்றவே. ()

புயற்படலந்தொடும்புதுமென்பாடலம், வியற்படமலர்ந்தபூவிழுமென்வண்டின
மயற்படவூதுவான்வயந்தக்கம்மியன், செயற்படுமணிச்சிறுசின்னம்போனுமால். ()

விண்டொடர்மதிகதிர்மிளிருந்தாரகை, கண்டிடவைகலுங்கணிப்பில்கண்ணடி
மண்டலநிரைத்துமண்மாதுவைத்தெனக், கொண்டலையளவியகோங்குபூத்தவே.

மாமலர்க்கொன்றையுமணிமென்பூவையுந், தாமிருபுடையுறத்தளிர்த்தசெய்யமா
வேமுறுமாலயணிடையில்வந்தெழு, தோமறுபரஞ்சுடர்த்தோற்றம்போன்றவே. ()

ஆதவன்மீதுபோயசையுந்தாறைழகன், மேதகுபாளைகள்மிசைதந்துற்றன
பூதலமணங்கிஞர்புனையநீட்டிய, கோதறுநித்திலக்கோவைபோன்றவே. (உ0)

வச்சிரமேனியவரைகொள்காட்சிய, பச்சிளம்பூகம்வெண்பாளைகான்றன
நச்சுறுசோலையாநங்கைக்கெண்ணிலா, ரெச்சமில்சாமரையிரட்டவேந்தல்போல்.

மேற்றிகழ்செங்கரவீரமானவை, யாற்றவுஞ்சினைதொறுமரும்புகின்றன
நாற்றடம்புயமுடைநாதற்கிந்திர, னேற்றியமணிச்சுடரென்னலாயதே. (உஉ)

அல்லிடையன்றியேயலர்ந்தமாலதி, வல்லிகடருவெனுமகிழ்நர்தங்களைப், புல்லுவபகலினும்பொருந்துமோவெனு, முல்லைகண்மலர்ந்தனமுறுவல்செய்வபோல்.

ஆசறுவாவியிலலர்ந்தகாவிகள், பாசடையிடையிடைபரவுகின்றன
தேசுறுதருநிழற்றிருவிற்றுஞ்சிய, வாசவன்விழிகளின்மல்குகின்றவே. (உச)

தொல்லையின்முறைநெறியொருவித்தோயமேல், வல்லையிலங்கிகள்வந்துற்றுலென
வல்லியுஞ்சேயனவரத்தவாம்பலும், புல்லியகிடங்கினிற்பொலிந்துபூத்தவே. (உரு)

பாயிரும்புனற்கயம்பரந்தபாசடை, யாயினவிடையிடையவிழ்ந்தபங்கயச்
சேயலர்வண்டினந்திளைப்பச்சேர்வன, காயெரிபுகையொடுகானம்புக்கபோல். உசு

எண்ணுமித்தருக்களுங்கொடியுமேனவுங், கண்ணுறமலர்வதுமரும்புங்காட்சியும், வண்ணமதெற்றெனின்மாலைச்செக்கரும், விண்ணுறுமுடுக்களும்விரவிற்றெருக்குமால். (உஎ)

இந்திரன்மகிழ்வுறவிளையபான்மையா, னந்தனவனமெலாநன்றுபூத்தலு
மந்தநன்மலர்கொடேயாதிக்கன்பினுன், முந்துறுபூசனைமுயலமுன்னினுன். (உஅ)

விடியல்வைகறைதனின்மேவிவண்டுதேன், புடையுறுமுன்னரேபுரையிலாத தோர், கடிமலர்கொய்தனன்கொணர்ந்துகண்ணுத, லடிகளில்விதிமுறையருச்சித்தானரோ. (உகூ)

அப்பெருநாண்முதலாதியண்ணலை, யிப்படியருச்சனையியற்றிவைகலு
மொப்பறநோற்றரோவும்பர்கோமகன், வைப்புறுசண்பகவனத்தின்வைகினுன். ()

இந்திரனருச்சனைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,ஙஅங.

---

# தேவர்புலம்புறுபடலம்.

அந்நாளதனிலவுணர்க்கிறையேவ
றன்ஞன்மிகவுந்தளர்ந்துசிலதேவ
ரெந்நாளிப்புன்மையெமைநீங்குமென்றிரங்கிப்
பொன்னுடுவிட்டுப்புவிதன்னிற்போந்தனரே. (க)

Digitized By Roja Muthiah Research Library

தீந்தமிழின்வைப்பானதெக்கிணதேயநண்ணி
மாந்தர்புகழ்காழிவனம்போந்துவானவர்தம்
வேந்துதனைக்கண்டுவிரைநாண்மலரடிக்கீழ்ப்
போந்துபணிந்துபுகழ்ந்துபுகல்கின்றார். (௨)

ஒன்றேதருமமொழிந்துபுவனமெலாஞ்
சென்றேயடுகின்றதீயவுணர்தந்துடக்கி
லன்றேயெமைவிட்டகன்றாயுனக்கிதுவு
நன்றேயெமையாளுநாயகனுநீயன்றே. (௩)

கோட்டுக்களிற்றோடுங்கோளரியோடும்புவியை
வாட்டுற்றிடுஞ்சூரவல்லியத்தின்வன்சிறையி
லீட்டுற்றதேவரெனும்பசுக்கடம்மையெலாங்
காட்டிக்கொடுத்துக்கரந்ததென்கொல்காவலனே. (௪)

ஏனம்பசுமானிரலைமரைபடுத்த
வூனும்வடியுமொலிகடலினுள்ளபல
மீனுஞ்சுமந்துவிறலசுரர்க்கேவல்செய்து
மானங்குலைந்துமறந்தோமறைகளுமே. (௫)

மையார்களத்தார்வரம்பெற்றசூரனுக்குச்
செய்யாதவேவலெலாஞ்செய்தோநெறிநீதி
யெய்யாதமானமிவையெல்லாந்தானிழந்தோ
மையாமிகவுமலுத்தோமலுத்தோமே. (௬)

முன்னாளுந்தந்திமுகத்தவுணனேவல்செய்து
பன்னாளுழன்றோம்பரமரதுதீர்த்தார்
பின்னாளுஞ்சூரன்பெயர்த்துமெமைவருத்த
விந்நாடிரிந்தோமினித்தான்முடியாதே. (௭)

எந்நாளுமுன்னைப்புகலென்றிருந்தவியாந்
துன்னவுணராற்சோர்ந்துதுயருழப்ப
வுன்னாருயிர்காத்தொளித்திங்கிருந்தனையான்
மன்னவுனக்குத்தகுமோவசையன்றோ. (௮)

சூரன்முதலாச்சொலப்பட்டவெவ்வசுரர்
வீரங்குலைந்துவிளிவதற்குமிவ்வுலகி
லாரும்பழிக்கத்திரிகின்றோமாகுலங்க
டீரும்படிக்குஞ்செயலொன்றுசெய்வாயே. (௯)

என்னாப்பலவுமியம்பியிரங்குதலு
மன்னாகியமகவான்மாற்றமவைகேளா
வன்னார்மனங்கொண்டவாகுலத்தைக்கண்டுநெடி
துன்னாவயராவுயிராவுரைக்கின்றான். (௧௦)

மாயையுதவவருகின்றவெஞ்சூரன்
றீயபெருவேள்விசெய்யத்தொடங்குமன்றே
போயநமதுரிமைபொன்னாடுந்தோற்றனமென்
றோயுமுணர்வாலுமக்கங்குரைத்திலனோ. (௧௧)

Digitized By Roja Muthiah Research Library

அற்றேமகஞ்செய்தமலன்றருவரங்கள்
பெற்றேநமதுபெரும்பதமுங்கைக்கொண்டு
சற்றேனுமன்பில்லாத்தானவர்கோன்றாழ்வான
குற்றேவலைநம்பாற்கொண்டான்குவலயத்தே. (௧௨)

நீள்வாரிதியினெடுமீன்பலசுமந்து
தாழ்வாம்பணிபிறவுஞ்செய்துந்தளர்ந்துலகில்
வாழ்வாமெனவேமதித்திருந்தோமற்றதன்றிச்
சூழ்வாலொருதீமைசூரபன்மனுன்னினனே. (௧௩)

என்னேயத்தீமையெனவேவினவுங்காற்
பொன்னேயனையபுலோமசையைப்பற்றுதற்குங்
கொன்னேயெனையுங்கொடுஞ்சிறையில்வைப்பதற்கு
முன்னேநினைந்தான்முறையில்லாத்தீயோனே. (௧௪)

ஆனசெயலுன்னியனிகந்தனைநம்பால்
வானுலகிலுய்ப்பமதியாலஃதுணர்ந்து
நானுமிவளுநடுநடுங்கியச்சுற்று
மேனிகரந்துவிரைந்துவிண்ணைநீங்கினமால். (௧௫)

மீனும்வடியும்வியன்றசையுந்தான்சுமந்த
வீனமதுவன்றியீதோர்பழிசுமக்கின்
மானமழியவருமேயதுவன்றித்
தீனமுறுசிறையுந்தீராதுவந்திடுமே. (௧௬)

வெய்யவர்தம்வன்சிறையின்வீழின்முடிவில்லா
வையனடிகளருச்சித்தியாமெல்லா
முய்யவவுணருயிரிழப்பமாதவத்தைச்
செய்யுநெறியுண்டோவெனச்சிந்தைசெய்தனனே. (௧௭)

சிந்தையதனிலினையசெயலுன்னி
யந்தமறுதுயரத்தாழுநமைவிட்டு
வந்துபுவியின்மறைந்துதவஞ்செய்துமுக்க
ணெந்தையடிகளருச்சித்திருந்தனனே. (௧௮)

அல்லல்புரியுமவுணர்பணியால்வருந்தித்
தொல்லையுளமேன்மையெலாந்தோற்றனமேமற்றினிநா
மெல்லவரும்வெள்ளிமலைக்கேகியிறைவனுக்குச்
சொல்லிநமதுதுயரகற்றிக்கொள்வோமே. (௧௯)

வம்மினெனவுரைப்பவானோரதுகேளா
வெம்மினதுகண்டவியன்கண்டகியெனவு
மம்மென்மயிலெனவுமாடிநகைசெய்து
தம்மின்மகிழ்ந்துமதர்ப்பினொடுசொற்றலுற்றார். (௨௰)

கோவுநீயெங்கள்குரவனுநீதேசிகனீ
தேவுநீமேலாந்திருவுநீசெய்தவநீ
யாவிநீமற்றையறிவுநீயின்பதுன்பம்
யாவுநீயாகிலெமக்கோர்குறையுண்டோ. (௨௧)



Digitized By Roja Muthiah Research Library

பார்த்துப்பணித்தபணிசெய்துநின்றன்னை
யேத்தித்திரிதலெமக்குக்கடனாகு
நீத்துத்துயரநெறியுறுத்தியெம்மையென்றுங்
காத்தப்புரத்தலுனக்குக்கடனையா. (உஉ)

தேராவவுணர்திறந்தன்னைமுன்றடிந்தாய்
சூராதியருயிருங்கொள்ளுநெறிசூழ்கின்றாய்
பாராள்பவர்க்கும்பலமுனிவர்க்குஞ்சுரர்க்கு
மாராயினீயன்றியாரேதுணையாவார். (உங)

ஆதலாலெங்களலக்கணகற்றிடுவான்
காதலாயத்தன்கயிலைக்கெமைக்கொண்டு
போதுநீயென்னப்புரந்தரனானன்றென்று
கோதிலாவுள்ளத்தொருசூழ்ச்சிகொண்டனனே. (உச)

ஆவதொருகாலையமரர்கோன்றானெழுந்து
தேவர்தமைநோக்கிச்சிறிதிங்கிருத்திரென
வேவரையுமங்கணிருத்தியொருதானேகிப்
பாவையயிராணிபாங்கரணுகினனே. (உரு)

தேவர்புலம்புறுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,௪0அ.

# அயிராணிசோகப்படலம்.

அன்னம்பொருவுநடையாளவன்வரலு
முன்னங்கெதிராமுறையாற்பலமுறையும்
பொன்னங்கழலிணையைப்பூண்டுவணங்கியெழீஇ
யென்னிங்கொரெண்ணமுடனேகிற்றிறையென்றாள். (க)

அம்மொழியைக்கேளாவரசனுரைசெய்வான்
வெம்மைபுரிசூரன்வியன்பணியாலேவருந்தி
யெம்மையடைந்தாரிணையசிலதேவர்
தம்முனிடர்பலவுஞ்சாற்றியிரங்கினரே. (உ)

அன்னார்மனங்கொண்டவாகுலமுநந்துயரும்
பொன்னார்சடைமுடியெம்புண்ணியற்குத்தாம்புகலி
னிந்நாளவுணர்க்கிறுவாய்தனைப்புரிந்து
தொன்னாளுரிமையளிப்பனெனுந்துணிவால். (ங)

ஆகின்றதுன்பத்தழலாற்பதைபதைத்து
வேகின்றசிந்தைவியனமரர்தம்முடன்யான்
பாகொன்றுதீஞ்சொலுமைபாகன்பணிவரைக்குப்
போகின்றேனீதுபுகலுதற்குவந்தனனே. (ச)

என்னும்பொழுதிலிடருற்றிகல்வாளி
தன்னங்கமூழ்கத்தளர்ந்துவீழ்மஞ்ஞையென
வன்னம்பொருவுநடையாளயிராணி
மன்னன்றிருமுன்மயங்குற்றுவீழ்ந்தனளே. (ரு)

Digitized By Roja Muthiah Research Library

வீழ்ந்தாடரிக்கரிதாம்வெய்யதுயர்க்கடலி
லாழ்ந்தாடனதறிவுமற்றாள்பிரியாது
வாழ்ந்தாளென்செய்வாண்மகவானதுகண்டு
தாழ்ந்தாகுலத்தோடெடுத்தான்றடக்கையால். (சு)

ஆர்வமொடுகையாலணைத்தேயவளைத்தன்
னாருமிசையேற்றியுணர்ச்சிவரும்பான்மையெலாஞ்
சேரவொருங்காற்றச்சிறிதேதெளிவுற்றாள்
காரின்மலிகின்றமின்போலுங்காட்சியினாள். (எ)

சிந்தைமயக்கஞ்சிறிதகன்றுதேற்றம்வர
முந்தையிடர்வந்துமுற்றுந்தனைச்சூழ்ந்த
வந்தமடமானதுபோழ்திற்றன்னுள்ள
நொந்துநடுங்கியினையநுவல்கின்றாள். (அ)

பொன்னாடுவிட்டுப்புவியின்வனத்திருந்து
முன்னாரருள்கொண்டுவைப்புற்றுமேவினனா
லென்னாருயிரேயெனைநீபிரிவாயேற்
பின்னார்துணையான்பிழைக்குநெறியுண்டோ. (கூ)

வாகத்துநேமிக்கும்வான்பாடுபுள்ளினுக்கு
மேகத்திறமும்வியன்மதியுமாவதுபோ
னாகத்துறைவோர்க்குநாயகமேநீயலதென்
சோகத்தைநீக்கித்துணையாவார்வேறுண்டோ. (க0)

அன்றியுனைப்பிரிந்துமாவிதனைத்தாங்கவல்லே
னென்றிடினும்யானொருத்தியாருந்துணையில்லை
யொன்றுநெறிநீதியுணராததீயவுணர்
சென்றிடுவர்நாளுமவர்கண்டாற்றீங்கன்றே. (கக)

நீடுபுகழ்சேர்நிருதர்கோன்சூழ்ச்சியினாற்
றேடரியபொன்னுலகச்செல்வத்தைவிட்டிந்தக்
காடுதனில்வந்துகரந்துதவம்புரிந்து
பாடுபடுமாறும்பழிக்கஞ்சியேயன்றே. (கஉ)

தீயவவுணர்திரிவரவர்சிறியர்
மாயைபலபலவும்வல்லார்பவமல்லா
லாயதருமமறியார்பழிக்கஞ்சார்
நீயுமஃதுணராயன்றேநெடுந்தகையே. (கங)

உன்னன்புடையவொருமகனுமிங்கில்லை
துன்னுஞ்சுரருமில்லைதொல்களிற்றின்வேந்துமில்லை
பின்னிங்கொருமாதருமில்லைபெண்ணொருத்தி
தன்னந்தனியிருக்கவஞ்சேனோதக்கோனே. (கச)

பல்லாறொழுகிப்பவஞ்செய்யவுணரெனு
மொல்லாரெனைக்காணினோடிவந்துபற்றினர்போ
யல்லாதனபுரிவராலுலையபழி
யெல்லாமுன்பாலன்றியார்கண்ணேசென்றிடுமே. (கரு)

Digitized By Roja Muthiah Research Library

மன்னேயிதுவோர்துணிவுரைப்பன்மன்னுயிர்கொண்
டின்னேதமியேனிரேனுலகில்யாவரையு
முன்னேபடைத்தளிக்குமுக்கணர்தம்வெற்பினுக்குன்
பின்னேவருவேன்பெயர்வாயெனவுரையா. (௧௬)

பின்றாழ்குழலிபெருந்துயரத்தோடெழுந்து
நின்றாளிறையுன்னிநேயத்தொடுநோக்கி
நன்றானதுதிறனென்றுநாகரிறை
சென்றார்வமோடவளைப்புல்லியிதுசெப்புகின்றான். (௧௭)

வாராய்சசியேவருந்தேலமரருடன்
காரார்களத்தோன்கயிலைக்கியான்போனா
லாராய்ந்துநின்னையளிப்பவரற்றாலன்றோ
பேரார்வமோடெனதுபின்னீவருவதுவே. (௧௮)

செய்யசடைமேற்சிறந்தமதிக்கோடுபுனை
துய்யவனும்வேலைத்துயின்றோனுஞ்சேர்ந்தளித்த
வையனெமக்கோரரணாகியேயிருக்க
நையன்முறையாமோநங்காய்நவிலுதியால். (௧௯)

ஏவென்றகண்மடவாயீசனருளன்றோனை
வாவென்றளியால்வழுத்திமனத்துன்னிநிங்கே
மேவுங்கயிலையில்யான்மீண்டுவருந்துணையுங்
காவென்றுனையவன்பாற்கையடையாநல்குவனால். (௨0)

ஆற்றல்பெரிதுடையவையனேநின்றன்னைப்
போற்றியருள்செய்யும்பொருந்துதியாலீண்டென்று
தேற்றுதலுமன்னான்சிறப்பெவன்கொல்செப்புகெனக்
கோற்றொடிகேளென்னாவமரேசன்கூறுகின்றான். (௨௧)

அயிராணிசோகப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௪௨௯.

---

## மகாசாத்தாப்படலம்.

முன்னம்பரமனருளின்றிமுகுந்தனாதி
மன்னுஞ்சுரர்தானவர்வேலைமதித்தவேலைக்
கன்னங்கரியவிடம்வந்துழிக்காரினங்க
டென்னும்பொழுதிற்குயில்போற்றுணுக்குற்றிரிந்தார். (௧)

அண்ணற்கயிலைக்கிரிதன்னிலடைந்துசெந்தீ
வண்ணத்தமலனடிபோற்றவருந்தலென்றே
யுண்ணற்கரியபெருநஞ்சினையுண்டுகாத்துக்
கண்ணர்குமேனையவர்க்குமிவைகட்டுரைப்பான். (௨)

இன்னுங்கடைமினமுதம்மெழுமென்றுகூற
வந்நின்றவர்பாற்கடலின்கணடைந்துமுன்போற்
பின்னுங்கடைந்தாரிபமாமுகப்பிள்ளைதன்னை
முன்னம்வழிபட்டிலர்வந்துமுடிவதோரார். (௩)

Digitized By Roja Muthiah Research Library

என்னாயகற்குவழிபாடியற்றாதநீராற்
கொன்னார்கடலினடுமெத்தங்குலைந்துவீழ்ந்து
பன்னாகர்வைகுமிடஞ்செல்லவப்பான்மைநோக்கி
யன்னானையர்ச்சித்தனரச்சுதனாதியானோர். (௪)

ஆராதனைசெய்துழிமந்தரமாதிமைந்தன்
பேராவருளாற்பிலநின்றுபெயர்ந்துமுன்போல்
வாராநிலைபெற்றிடலோடுமகிழ்ந்துபோற்றிக்
காரார்திருமான்முதலோர்கடலைக்கடைந்தார். (௫)

கடைகின்றுழிச்செம்மதியாமெனக்காமர்செம்பொ
னடைகின்றகும்பத்தெழுந்திட்டதமுதமங்கண்
மிடைகின்றதொல்லைச்சுரர்தானவர்யாரும்வெஃகி
யுடைகின்றவேலையெனவார்த்தனரொல்லைசூழ்ந்தார். (௬)

எம்மாலிதுவந்துளதாலெமக்கேயிதென்றே
தம்மாசையினாற்சுரர்தானவர்தம்மின்மாறாய்த்
தெம்மானமுடன்பொரவுன்னலுந்தீர்வுநோக்கி
யம்மால்விரைவினொருமோகினியாயினானே. (௭)

மூலம்பிறந்தவிடம்போலழன்மூண்டிடாம
னீலம்பிறந்துபிறரச்சுறநேர்ந்திடாமன்
ஞாலம்பிறந்தோர்சுரர்தானவர்நச்சவாங்கோ
ராலம்பிறந்ததெனமோகினியாகிநின்றான். (௮)

சேணாருலகிற்புவிதன்னிற்றிசையிலெங்குங்
காணாதவப்பெண்ணுருக்கண்டனர்காதல்கைமிக்
கூணாரமுதந்தனைவிட்டுமுன்னொன்றுகண்டோர்
மாணாகியபல்பொருள்கண்டெனவந்துசூழ்ந்தார். (௯)

மெய்த்தாமரையேமுதலாயவிசிகநான்கு
முய்த்தான்மதவேளதுகாலையுலப்பில்காமப்
பித்தாயுணர்வுபிழையாகிப்பெரிதுமாலா
யத்தாருகமாமுனிவோரினுமார்வமிக்கார். (௧௦)

எண்ணாவவுணர்தொகையல்லதையெந்தைமாய
முண்ணாடுவானோர்களும்பெண்மயலுற்றுநின்றார்
மண்ணாசைதன்னிற்பொருளாசையின்மாயவாழ்க்கைப்
பெண்ணாசைநீங்கலெளிதோபெரியோர்தமக்கும். (௧௧)

பூண்டுற்றகொங்கைப்பொலன்மோகினியானபுத்தே
ளாண்டுற்றவர்தங்களைநோக்கியமரைநீங்கு
மீண்டுற்றனன்யானமுதம்முளதேதுநீவிர்
வேண்டுற்றதும்பாலுறக்கொண்மின்விரைவினென்றான். (௧௨)

மாலானவனங்கதுகூறமனந்திரிந்து
நோலாமையினாலிறக்கின்றவர்நோக்கியெங்கள்
பாலாவதுநீயெனமுன்வரும்பான்மைநாடி
மேலாமமுதேயெமக்கென்றனர்விண்ணுளோர்கள். (௧௩)

Digitized By Roja Muthiah Research Library

வானாடவர்நல்லமுதங்கொடுமாயைநீங்கிப்
போனாரொருசாரவரோடுபொருததீயோர்
தேனார்மொழிமோகினியாகியசெங்கண்மாலை
யானாவிருப்பிற்கொடுபோயினராங்கொர்சாரில். (௧௪)

கொண்டேகியதானவர்தங்கள்குழுவைநோக்கித்
தண்டேன்மலர்ப்பாயலினென்னைத்தழுவவல்லா
னுண்டேயிதனிலொருவீரனவனையின்னங்
கண்டேனிலையென்றனன்பெண்ணுருக்கொண்டகள்வன். (௧௫)

ஈறாமவுணர்பலரும்மிதுகேட்டெனக்கு
மாறாயொருவரிலையாரினும்வன்மைபெற்றேன்
வீறாகியவீரனும்யானெனவீற்றுவீற்றுக்
கூறாவெனையேபுணரென்றுகுழீஇயினாரே. (௧௬)

கொம்மைத்துணைமென்முலையண்ணலைக்கூடயாரும்
வெம்மைப்படலாலிகல்கொண்டனர்வேறுவேறு
தம்மிற்பொருதுமுடிந்தார்கிளைதம்மிலுற்ற
செம்மைக்கனலான்முடிவுற்றிடுஞ்செய்கையேபோல். (௧௭)

அன்னார்தொகையிலிருவோரரிமாயையுன்னி
யென்னாமிவரோடிறக்கின்றனமென்றுநீங்கித்
தொன்னாளுருவந்தனைமாற்றிச்சுரர்கள்போலாய்ப்
பொன்னாடவர்தங்குழுவோடுபுகுந்துநின்றார். (௧௮)

மாண்டாரவுணரதுநோக்கிவரம்பின்மாயம்
பூண்டாரும்வெஃகமடமாதெனப்போந்தகள்வன்
மீண்டானமரர்பலரும்விருப்புற்றுமேவ
வீண்டாழிதன்னிலமுதந்தனையீதலுற்றான். (௧௯)

ஈயும்பொழுதினிமையோர்களினத்தினூடு
போயங்கிருந்தவிருகள்வரும்பொற்புமிக்க
மாயன்பகிருமமிர்தந்தனைமந்திரத்தா
லாயும்படிகொண்டிலர்வல்லையினார்தலுற்றார். (௨0)

தண்டாமரைக்குப்பகைநண்பெனச்சாருநீரார்
கண்டார்புடையுற்றவரிங்கிவர்கள்வரேயா
முண்டாரமுதங்கடிதென்றுளத்துன்னியங்கண்
விண்டானவற்குக்குறிப்பால்விழிகாட்டினாரால். (௨௧)

காட்டுற்றிடலுமரிநோக்கியிக்கள்வரேயோ
வீட்டுற்றவானோருடனுண்குவரென்றுதன்கை
நீட்டுற்றிடுசெட்டுவங்கொண்டுநிருதர்சென்னி
வீட்டிச்சுரருக்கமுதூட்டிவிருந்துசெய்தான். (௨௨)

அண்டத்தவர்முன்னருந்துற்றவமுதமன்னார்
கண்டத்திடையேவருமுன்னதுகண்டுமாயன்
றுண்டித்தசென்னியழிவற்றதுணிந்தயாக்கை
முண்டத்துடனேதுணிபட்டுமுடிந்தவன்றே. (௨௩)

Digitized By Roja Muthiah Research Library

மாளாதசென்னியுடைத்தானவர்மாண்புநோக்கி
நீளாரமுதுண்டவர்விண்ணிடைநிற்பரென்றாத்
தாளாலுலகமளந்தோனவர்தங்களுக்குக்
கோளாநிலையையிறையோனருள்கொண்டுநல்க. (௨௪)

புன்னாகநாகமணிவானடிபோற்றிநோற்றுச்
செந்நாகமோடுகருநாகத்தின்செய்கைபெற்றுப்
பின்னாகமுன்னந்தமைக்காட்டியபெற்றியோரை
யந்நாகமீதுமறைப்பாரமுதுண்டகள்வர். (௨௫)

வேறு.

கெழியராகுவுங்கேதுவுமேயென, மொழியநின்றமுதற்பெயர்தாங்கியே
விழுமிதாகியவெய்யவனாதியா, மெழுவர்தம்மொடிருவருமீண்டினார். (௨௬)

ஈதுநிற்கமுன்னின்னமுதந்தனை, யாதரத்தொடயின்றவிண்ணோர்தொழ
வோதவேலையொருபுடையாகவே, மாதருக்கொண்டமாதவன்வைகவே. (௨௭)

நால்வகைப்படநண்ணியசத்தி * யுண், மாலுமாதலின்மற்றதுகாட்டுவா
னாலகண்டத்தனச்சுதனச்சுறுங், கோலமெய்திக்குறுகினனவ்விடை. (௨௮)

தண்டுழாய்முடியான்றனிநாயகற், கண்டுவெஃகக்கறைமிடற்றெம்பிரா
னுண்டெமக்குமுனைப்புணர்காதனீ, கொண்டவேடமினிதென்றுகூறினான். (௨௯)

ஆணினீங்கியவச்சுதனாற்றவு, நாணியிவ்வுருநல்கியதன்மையாள்
காணியாயுனைக்காதலித்துற்றனள், பேணிநிற்பதெனென்னைப்பெருமநீ. (௩0)

ஆதிகாலத்தயன்செயன்முற்றிட, மாதைமேவிடவந்துனைவேண்டினங்
காதலோவன்றுகாரணமாகையின், மீதுசேர்தரும்வீரியனல்லையோ. (௩௧)

நெற்றியங்கணிமலவுனக்கிகல், பற்றதில்லையெப்பான்மையர்கண்ணினு
மற்றதாகவென்னாகந்தழுவுவா, னுற்றகாதலுமுண்மையதன்றரோ. (௩௨)

என்னகாரணமெண்ணிக்கொலேகினை, யன்னபான்மையறிகிலனெம்பிரா
னின்னதாடலைநீயல்லதேவரே, பின்னைநாடியறிவுறும்பெற்றியோர். (௩௩)

அன்பிலாடவராடவரோடுசேர்ந், தின்பமெய்தியிருந்தனரில்லையான்
முன்புகேட்டதுமன்றுமுதல்வநீ, வன்பொடென்னைப்புணர்வதுமாட்சியோ. (௩௪)

என்றுமாயனிசைத்தலுமெம்பிரா, னன்றுநீயுநமக்கொருசத்திகா
ணன்றுதாருகத்தந்தணர்பாங்குறச், சென்றபோழ்தினுஞ்சேயிழையாயினாய். (௩௫)

முன்னைவேதன்முடிந்தனன்போதலு, முன்னொடேவந்துவப்பொடுகூடினோம்
பின்னரிந்தப்பிரமனையுந்தியா, லன்னையாகியளித்தனையல்லையோ. (௩௬)

ஆகையாலுன்னணிநலந்துய்த்திட, வோகையாலிவணுற்றனன்செல்கென
யாகையாரப்பிடிப்பவருதலும், போகையுன்னிப்பொருக்கெனவோடினான். (௩௭)

நாணியோடியநாரணனைப்பிறை, வேணியண்ணல்விரைவுடனேகியே
பாணியாலவன்பாணியைப்பற்றினான், சேணினின்றுதிசைமுகன்போற்றவே. ௩௮

பற்றியேகிப்படிமிசைநாவலாற், பெற்றதீவிற்பெருங்கடற்சார்பினின்
மற்றுநேரில்வடதிசைவைப்பினி, லுற்றசாலத்தினொண்ணிழனண்ணினான். (௩௯)

* நால்வகைச்சத்தி - பார்வதி, துர்க்கை, காடுகிழாள், விட்டுணு.

Digitized By Roja Muthiah Research Library

நண்ணியேதனிநாயகனவ்விடைப், பெண்ணினீர்மையைப்பெற்றிடுநாரண
னுண்ணெகிழ்ந்துமயக்குற்றுருகியே, யெண்ணிலின்புறக்கூடினனென்பவே. (௪௦)

மூன்றுகண்ணன்முகுந்தனிருவரு, மேன்றுகூடியவெல்லையிலன்னவர்
கான்றுமிழ்ந்தபுனல்கண்டகியென, வான்றதோர்நதியாகிய்கன்றதே. (௪௧)

அந்தநீரினகம்புறமாழிக, டந்துவச்சிரதந்தியெனப்படு
முந்துகீடமுறைமுறையாகவே, வந்துதோன்றினமாழையின்வண்ணமாய். (௪௨)

ஆயமண்ணிலகங்கெழுபஞ்சர, மேயெனத்தந்திருந்துசிலபகன்
மாயுமவ்வுயிர்மாய்ந்தபிற்கூடுக, ளேநேமிக்குறிகொடுதோன்றுமால். (௪௩)

நீர்த்தரங்கநிரல்படவீசியே, யார்த்திரங்கியவணைவுறுகண்டகித்
தீர்த்திகைப்புனல்சென்றக்குடம்பைக, ளீர்த்துவந்திடுமிம்பர்கொண்டெய்தவே.

அன்னகீடமமர்ந்தகுடம்பையை, யிந்நிலத்தர்கொண்டேகியகத்துறை
பொன்னைவாங்கிப்பொறியினைநோக்கியே, யின்னமூர்த்தமிஃதெனநாடுவார். ௪௫

நாடியேயவைநாரணனாகவே, கூடுமன்பிற்குவலயத்தேசிலர்
தேடியர்ச்சனைசெய்வரதன்பெயர், கேடில்சாளக்கிராமமதென்பரால். (௪௬)

மாலுமெந்தையுமாண்பொடுகூடியே, சாலமேவுதனிநகரேயிதன்
மூலகாரணமாகையின்முந்தையோர், மேலைநாமமதற்குவிதித்தனர். (௪௭)

இந்தவண்ணமிருக்கமுராரியு, மந்திவண்ணத்தமலனுமாகியே
முந்துகூடிமுயங்கியவெல்லையில், வந்தனன்னெமைவாழ்விக்குமையனே. (௪௮)

மைக்கருங்கடன்மேனியும்வானுலாஞ், செக்கர்வேணியுஞ்செண்டுறுகையுமா
யுக்கிரத்துடனோர்மகன்சேர்தலு, முக்கணெந்தைமுயக்கினைநீங்கினான். (௪௯)

அத்தகுந்திருமைந்தற்கரிகர, புத்திரன்னெனுநாமம்புனைந்துபின்
னொத்தபான்மையுருத்திரர்தம்மொடும், வைத்துமிக்கவரம்பலநல்கியே. (௫௦)

புவனமீந்துபுவனத்திறையென, வவனைநல்கியமரருமாதவ
ரெவருமேத்திடுமேற்றமுநல்கினான், சிவனதின்னருள்செப்புதற்பாலதோ. (௫௧)

முச்சகத்தைமுழுதருண்மேனிகொண், டச்சுதன்றொழவச்சுதன்போற்றிட
மெச்சியேயவருக்குவிடைகொடுத், தெச்சமில்சிவனேகினனென்பவே. (௫௨)

நாயகன்செலநான்முகத்தோனைமுன், றாயெனத்தருந்தாமரைக்கண்ணினான்
சேயவைகுண்டஞ்சேர்ந்தனனையனும், போயினான்றன்புவனத்தரசினில். (௫௩)

அங்கண்மேவியரிகரபுத்திரன், சங்கையில்பெருஞ்சாரதர்தம்மொடு
மெங்குமாகியிருந்தெவ்வுலகையுங், கங்குலும்பகலெல்லையுங்காப்பனால். (௫௪)

மண்ணகத்தரும்வானவரும்மல, ரண்ணலுந்தினமர்ச்சிக்குநீர்மையான்
கண்ணனும்புகழப்படுகாட்சியா, னெண்ணினங்கவனுக்கெதிரில்லையே. (௫௫)

அன்னநீர்மையன்காணெனதன்பினு, முன்னைவந்தினிக்காத்தருளுத்தம
னென்னலோடுமிசைந்துநின்றுளரோ, பொன்னினுடுதணந்தபுலோமசை. (௫௬)

வேறு.

இந்திரன்மங்கையிசைந்ததுகாணு, நந்தமர்கையனுநம்பனுநல்கு
மைந்தனையுன்னிவழுத்துதலோடு, மந்தமிலாவெமதையனறிந்தான். (௫௭)

காருறழ்வெய்யகளிற்றிடையாகிப், பாரிடரெண்ணிலர்பாங்குறநண்ணப்
பூரணைபுட்கலைபூம்புறமேவ, வாரணமூர்பவன்முன்னுறவந்தான். (௫௮)

Digitized By Roja Muthiah Research Library

முன்னுறமேவலுமூவுலகோர்க்கு, மன்னவனாகியவாசவனையன்
பொன்னடிதாழ்ந்துபுகழ்ந்தனனிற்ப, வென்னிவண்வேண்டுமியம்புதியென்றான்.

கேட்டலுமின்னகிளத்தினன்மாயை, மாட்டுறுசூரன்வருத்துதலாற்பொன்
னாட்டினைவிட்டனனாளிவளோடுங், காட்டுறுவேயெனவேகரவுற்றே. (௬௰)

நோற்றிவண்மேவினனாதகும்வானோ, ராற்றரிதாவவுணன்செயுமின்னல்
சாற்றினர்வந்துதளர்ந்தனமெய்ம்மைப், போற்றுதியென்றுபுலம்பினரன்றே. (௬௧)

தள்ளரும்வானவர்தம்மொடுமுக்கண், வள்ளறனக்கெம்வருத்தமுரைக்க
வெள்ளிமலைக்குவிரைந்துசெல்கின்றே, னொள்ளரிதாகியவில்லினைவைத்தே. (௬௨)

தஞ்சமிலாதுதனித்திவ்வனத்தே, பஞ்சுறழ்செய்யபதத்தியைவைத்தால்
வஞ்சகர்கண்டிடின்வெளவுவரென்றே, யஞ்சினனுன்றனடைக்கலமையா. (௬௩)

ஆத்தனமர்ந்தவகன்கிரிநண்ணி, வாய்த்திடுமிவ்விடைவந்திடுகாறும்
பூத்திடுகாமர்புலோமசைதன்னைக், காத்தருளென்றிதுகட்டுரைசெய்ய. (௬௪)

மேதகுசெண்டுளவீரனிசைப்பா, னேதமுறாதநின்னேந்திழைதன்னைத்
தீதடையாதுசிறப்பொடுகாப்ப, னீதனியென்றுநினைந்திடல்கண்டாய். (௬௫)

இல்லுறுநங்கையையிங்ஙனம்வைத்தே, யல்லுறழ்கண்டனருங்கயிலைக்குச்
செல்லுதியென்றருள்செய்துதிரும்பித், தொல்லையெம்மையனோர்சூழலினுற்றான்.

வாளமர்நீந்திவயந்தனின்மிக்க, காளனெனப்படுகட்டுரையோனை
யாளுடையண்ணலருட்கொடுநோக்கிக், கேளிவையென்றுகிளத்திடுகின்றான். ()

மூவரின்முந்தியமூர்த்திவரைக்குப், போவதுமுன்னினன்பொன்னகர்மன்னன்
றேவியிருந்தனளிங்குவராமே, காவல்கொணீயெனக்கற்பனைசெய்தான். (௬௮)

மகாசாத்தாப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௪௯௭.

# இந்திரன்கயிலைசெல்படலம்.

அத்துணைதன்னிலருந்துணையில்லான், மெய்த்துணையாகியமின்னினைநோக்கி
யெய்த்திடலையனளிக்குவனீண்டே, சித்தம்வருந்தலெனத்தெளிவித்தான். (௧)

மாதினையவ்விடைமன்னுறவைத்தே, பேதுறுவானவர்பேரவைநண்ணிப்
போதுமெனக்கொடுபோந்துவிரைந்தே, நாதனகன்கிரிநண்ணினனன்றே. (௨)

அந்தரவைப்பிலமர்ந்தவர்தம்மோ, டிந்திரனக்கயிலைக்கிரியெய்தி
நந்திபிரானுறைநன்கடைசேரா, வந்தனைசெய்துவழுத்தினனின்றான். (௩)

நிற்றலும்வந்ததெனீபுகலென்னச், சொற்றனனங்கதுதொன்மையினாடி
யிற்றிலகொல்லுனிருந்துயரென்னா, நற்றவர்காணுறுநந்தியுரைப்பான். (௪)

நால்வருணர்ந்திடநாயகன்ஞான, மூலவியோகமுதற்பொருள்காட்டி
யேலவிருந்தனன்யாவருமேகக், காலமிதன்றெனவேகழறுற்றான். (௫)

தேறுதவஞ்செய்சிலாதனன்மைந்தன், கூறியவாய்மைகுறிக்கொளவோர்ந்து
மாறியிழிந்திடுவெல்விடமற்று, மேறியதென்னவிடர்க்கடலுற்றான். (௬)



Digitized By Roja Muthiah Research Library

இம்பரின்வாசவனின்னனுழப்ப, வும்பர்கடாமுமுடன்றளர்வுற்றூர்
தம்பமதானதடம்புணைதாழ, வம்புதிதன்னிலழுந்திடுவார்போல். (எ)

செல்லலுழந்துதியங்கியதேவ, ரெல்லவர்தம்மொடுமிந்திரனென்போ
னல்லருள்செய்திடுநந்திபிரான்றன், மெல்லடிபோற்றிவிளம்புதல்செய்வான். (அ)

தூய்நெறிநீங்கியசூரபன்மாவுக், காயுவொடாற்றலளப்பிலசெல்வ
மேயவையாவுமிருந்தவரீரா, ஞயகன்முந்துறநல்கினனன்றே. (௯)

நாங்கள்புரிந்திடுநல்வினைநீங்கித், தீங்குகுறித்தெழுதீவினைசேர
வாங்கவனேவலினல்லலுழந்தே, மீங்கிதுவும்மிறைவன்செயலையா, (௧0)

ஞனரியற்கைசுரர்க்கருள்செய்யு, மாநிருதர்க்கிறைவன்புரிதுன்ப
மானதுணர்த்தியடைந்தனமென்னிற், றூனதுபோழ்துதவிர்த்திடல்வேண்டும். ௧௧

நீர்த்திரைபோலநெறிப்படயாங்கொ, ளார்த்தியகற்றியறந்தவிர்சூரன்
மூர்த்திகொளாவியுமொய்ம்பொடுசீருந், தீர்த்திடுகின்றதிறஞ்செயல்வேண்டும். ௧௨

அன்னதுசெய்திடினன்பறுசூரன், முன்னரருந்தவமுற்றியகாலைச்
சொன்னவரந்தொலையுந்தொலைவானுற்,பின்னரவன்சொல்பிழைத்தனனென்பார்.

அல்லதெம்மல்லலகற்றிலனென்னி, னல்லருளுக்கொருநாயகனென்றே
யெல்லவரும்புகழேற்றமுமின்றூந், தொல்லைமறைப்படியுந்தொலைவாம்மால். (௧௪)

ஆகையினிவ்வகையாய்ந்தெமையாளும், பாகநினைந்துபரம்பொருளானோன்
மோகமிலார்பெறமோனகஞான, யோகியல்காட்டியுறைந்துளனேகொல். (௧௫)

ஈங்கிவனல்லதையித்திறமாகுந், தீங்கினைநீக்கவொர்தேவருமில்லை
யோங்கியமாலவரோடமர்செய்தே, யாங்கவனேமியுமற்றனனையா. (௧௬)

மூவரின்முந்தியமூர்த்திசெயற்கை, யாவதுமீதெனவண்டரும்யானும்
பூவுலகத்திடைபோந்திடினின்னே, தீவினையார்சிறைசெய்வதுதிண்ணம். (௧எ)

ஆதலினுமிடையண்டரும்யானும், போதலிலைப்புனிதன்கழல்காணத்
தீதறுவேலைதனைத்தெரிவுற்றுன், வாய்தலினோர்புடைவைகுவனென்றான். (௧அ)

பேர்பெறுநந்திபிரானதுகேளா, வார்வுறுமின்னலகன்றிவணீவிர்
சேர்வுறுமென்றருள்செய்திடவாங்கே, யோர்புடைவாசவனண்டரொடுற்றான். ()

வானவர்கோனரன்மால்வரைதன்னிற், போனதுமுற்றதுமீண்டுபுகன்று
மானபுலோமசைசெய்கையுமல்லா, வேனையர்செய்கையும்யாவுமிசைப்பாம். ௨0

இந்திரன்கயிலைசெல்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௫௧எ.

---

# அசமுகிப்படலம்.

நீங்காதுறைதனிநாயகனெடுமாலயனுணரா
வோங்காரமுதற்பண்ணவனுறையுங்கிரிசெல்லப்
பாங்காயணங்கினர்போற்றிடப்பயில்காழிவனத்திற்
பூங்காவனந்தனிலேசியிருந்தேதவம்புரிந்தாள். (௧)

Digitized By Roja Muthiah Research Library

சேணுறுபுரக்கின்றவன்சிந்தித்திடுகின்ற
மாணுகியவினைமுற்றுறவருவான்றவம்புரிவாள்
காணுளவன்வருகின்றதுகாலம்பலதொலைய
நாணுடொறுந்தன்மேனியினலமாழ்குறமெலிவாள். (௨)

கொலையாரிசையளிபாடியகுழலிந்திரன்பிரிவா
லுலையாமனம்பதையாத்தவத்துறைகின்றதொரளவில்
வலையார்கலியுலகந்தனில்வாழ்சூரபன்மாவுக்
கிளையாள்பலரிளையார்புணர்ந்தாலுஞ்சிறிதிளையாள். (௩)

கழிகின்றதொர்கடலேபுரைகாமந்தெறுநோயா
லழிகின்றவளெவர்தம்மையும்வலிதேபிடித்தணையு
மிழிகின்றதொரியல்பாண்முகிலினம்வாய்திறந்தெனவே
மொழிகின்றதொர்கடியாளசமுகியென்பதொர்கொடியாள். (௪)

பொறையில்லவளருளில்லவள்புகழில்லவள்சிறிது
நிறையில்லவளணியில்லவணிற்கின்றதொரறத்தின்
முறையில்லவள்வடிவில்லவண்முடிவில்லதொர்கற்பின்
சிறையில்லவளுலகோர்க்கொருசிறையாமெனத்திரிவாள். (௫)

கீழுற்றிடுமுலகெத்தனையவையாவையுங்கிளர்ந்தோர்
வாழுற்றிடுமுலகெத்தனையவையாவையுமாடே
சூழுற்றிடுமுலகெத்தனையவையாவையுஞ்சுற்று
ஆழுற்றிடுதன்னூர்தனிலொருநாழியில்வருவாள். (௬)

பொய்யுற்றவள்களவுற்றவள்புரையுற்றிடுசுரையூன்
றுய்யுற்றவள்களியுற்றவள்சோர்வுற்றவள்கொலைசெய்
கையுற்றவள்விழியாலழல்காலுற்றவள்பவத்தின்
மொய்யுற்றவள்படிறுற்றவண்முனிவுற்றவண்மனத்தின். (௭)

பொங்குஞ்சிகையழன்மைத்தலைபுகுந்தாலெனவொளிருஞ்
செங்குஞ்சியதுடையாளெவர்செருச்செய்யினுமிடையா
துங்கங்கெழுதுணைத்திண்டதோன்றிக்கனகலைமுன்
பங்கம்படுத்துயிருண்டெழுபகுவாயரிநிகர்வாள். (௮)

சீயப்பெருமுகன்றாரகனிகராகியதிறலான்
மாயத்தொழில்பயில்கின்றவண்மணிமால்வரைபுரையுங்
காயத்தவளடற்கூற்றையுங்கடக்கின்றதொர்வலியா
டோயப்புணரிகளேழுமொர்துணையிற்கடந்திடுவாள். (௯)

மாலுற்றிடவாழ்சூரபன்மாவின்கிளைமுழுது
மூலத்தொடுமுடிவித்திடுமுறையூழ்வினையென்னச்
சூலத்திணையேந்தித்தனிதொடர்துன்முகியுடனே
யாலத்தினதுருவாமெனவாங்குற்றனளன்றே. (௧௦)

கானின்றுளபொழிலேர்தனைக்காணுநனிசேணு
ளானன்றெனவியவாப்புவியமர்சோலையிதன்றால்
வானின்றுளவனத்தைக்கொடுவந்தேயிவண்மகவான்
றானின்றுவைத்தானிங்கிதுதப்பாதெனநிற்பாள். (௧௧)

Digitized By Roja Muthiah Research Library

ஏலாவிதுகாணுமெனவீர்ந்தண்பொழிலெழிலை
யாலாலமதெனவேவருமசமாமுகியென்பாள்
பாலானதுன்முகிதன்னொடுபகராவதுகாட்டிக்
கோலாலமதுடனேயதுகுறுகும்படிவந்தாள். (௧௨)

மட்டுற்றிடுதண்காவினைவருடைத்தனிமுகத்தாள்
கிட்டிச்சினைநனைமாமலர்கிளையாவையுநோக்கித்
தட்டற்றிவணுறைகின்றவர்தமைநோக்குவலென்றே
வெட்டுத்திசையினுநாடுதற்கிடையுற்றனள்கடிதின். (௧௩)

அதுகண்டனனவணின்றதொரையன்படைத்தலைவன்
முதுகண்டகியிவளாமசமுகியென்பதொர்கொடியா
ளெதுகண்டிவண்வருகின்றனளென்றேகருத்திவடன்
கதிகண்டனனிற்பேனெனைக்காணுநெறியதனில். (௧௪)

மற்றிங்கிவள்செயல்யாவையும்வரலாற்றொடுகாணுத்
தெற்றென்றவண்மீள்கின்றுழிச்செவ்வேயெதிர்போந்து
குற்றந்தனக்கிசையுந்திறமுடிப்பேனெனக்கொலைசெய்
விற்றங்கியபுயவேடரில்வேறோரிடைநின்றான். (௧௫)

நின்றானவனதுகண்டிலனெஞ்சிற்களிதூங்கக்
குன்றுமுலையசமாமுகக்கொடியாளவளுடனே
சென்றாண்மலர்க்காவெங்கணுந்திரிந்தாடிரிந்தளவிற்
பொன்றாழ்முலைச்சசிமாதவம்புரிகின்றதுகண்டாள். (௧௬)

அந்தாவிவளயிராணிநம்மரசன்றனக்கஞ்சி
நந்தாவளந்தனைப்பெற்றபொன்னகரத்தைவிட்டிங்கே
வந்தாளிவடன்னைக்கொடுவருவீரெனவெங்கோன்
முந்தாதரமுடனுய்த்தனன்முடிவுற்றதன்படையே. (௧௭)

இங்குற்றதையுணராமையினிமையோர்புரநாடி
யங்குற்றிலளயிராணியென்றரசன்றனக்குரைப்ப
வெங்கட்டழலெனச்சீறினன்மீண்டுஞ்சிலர்தமையித்
திங்கட்புரைமுகத்தாடனைத்தேடும்படிவிடுத்தான். (௧௮)

வானெங்கணும்பிலமெங்கணும்வரையெங்கணும்பரவை
தானெங்கணுந்திசையெங்கணுந்தரையெங்கணுந்தரையிற்
கானெங்கணுநமர்தேடினர்காணாரிவடன்னை
யூனெங்கணும்வருந்தத்திரிந்துழன்றாரிதுவுணரார். (௧௯)

தண்டேனமர்குளிர்பூங்குழற்சசியென்பவடனைநான்
கண்டேனினியிவண்மையலிற்கவலாதொழிகென்றே
வண்டோலிடுதொடைமன்னவன்மகிழ்வெய்தமுன்னுய்ப்பக்
கொண்டேகுவன்யானேயிவடனையென்றுகுறித்தாள். (௨௦)

இத்தேமொழிதனையிந்திரனீண்டேதனியாக
வைத்தேகினனிவடன்னைவருந்தாதளித்திடவோர்
புத்தேளிருமிலரிங்கிதுபொழுதாமவன்புகுமுன்
கொத்தேமலர்க்குழலாடனைக்கொடுபோவனென்றடைவாள். (௨௧)

Digitized By Roja Muthiah Research Library

தீனக்குரற்கடுஞ்சொல்லெனுமுருமேறுதெழிப்பக்
கூனற்பிறையெயிறுகியமின்னுப்புடைகுலவக்
கானக்கரும்படிவத்தொடுகால்கொண்டெழுவிசையால்
வானப்புயல்வழுவிப்புவிவந்தாலெனவந்தாள். (௨௨)

ஊற்றங்கொடுவருதுன்முகியுடனேயசமுகிதான்
ரேற்றங்கிளர்யணிவெற்பெனத்துண்ணென்றவண்வரலு
மேற்றம்பெறநோற்றேதனியிருந்தாளதுகாணூக்
கூற்றந்தனைக்கண்டாலெனக்குலைந்தாள்வலிகுறைந்தாள். (௨௩)

நீரோதமிசைத்தங்கியநிருதக்குலமகளோ
பாரோர்மயக்குறுபேய்மகளோபாரிடத்தணங்கோ
சூரோடுறுதனிக்கொற்றவைதொழில்செய்பவடானோ
வாரோவிவளறியேனெனவஞ்சிக்கடிதெழுந்தாள். (௨௪)

எழுகின்றவடனைநில்லெனவிசைத்தேயெதிரெய்தி
மொழிகின்றனளயிராணிநின்முதிராவிளநலனும்
பழியில்லதொர்பெருங்காமரும்பயனற்றிவண்வறிதே
கழிவெய்திடத்தவம்பூண்டிடல்கடனோவிதுவிடுநீ. (௨௫)

ஆரொப்புனக்குலகந்தனிலருளாழியம்பகவன்
மார்பத்துறைதிருமங்கையுமற்றிங்குனக்கொவ்வாள்
பாரிற்கரந்திருந்தேதவம்பயில்வாயிதென்னுன்னைச்
சேரத்தவம்புரிகின்றனன்றிறற்சூரபன்மாவே. (௨௬)

இந்நாள்வரையுனைநண்ணியவிமையோர்க்கிறையுனது
நன்றாயகனாகப்பெருநலனுற்றவனன்றே
தன்றாலுணர்வரிதென்பர்கடன்பேரழகதனாற்
பன்னாளவனுடன்மேவினைபாகிற்படுகரிபோல். (௨௭)

தவறுஞ்சுரருலகொன்றுளன்சதவேள்வியனெம்முன்
புவனம்பலவண்டம்பலபுரக்குந்திருவுளனா
லிவனங்கவன்பணியேபுரிந்திளைத்தேகரந்துழல்வா
னவனிங்கிவன்றனையேவல்கொண்டகிலந்தனியாள்வான். (௨௮)

அழிவில்லவனவனிங்கிவனழியும்பரிசுடையான்
பழியில்லவனவனிங்கிவன்பழிவேலையிற்றிளைப்பான்
கழியும்படருழந்தானிவன்களிப்புற்றுளனவனே
தொழுவன்பலரையுமிங்கிவன்றொழுமோவவன்சிலரை. (௨௯)

அந்நேரிலனொடுமேவுவதறிகின்றிலையனையான்
றன்னேவலினொழுகித்திரிதம்பியோன்றனைத்துணையென்
றின்னேமெலிந்தனையீதுனக்கியல்போநினதெழிலுங்
கொன்னேகழிந்தனபற்பகல்குறியாயிதுகுணனோ. (௩0)

எத்தேவருமுகிலூர்தியுமிகன்மேவருமவுணக்
கொத்தேவருமணங்கோருமுன்குற்றேவல்செய்திடவே
முத்தேவரும்புகழப்படுமொய்ம்புற்றிடுசூர்மு
னுய்த்தேயவனொடுகூட்டுவனுலகாண்டிடனிருக்க. (௩௧)

Digitized By Roja Muthiah Research Library

பொன்னோடிகல்பங்கேருகப்பூங்கோமளைதனையு
மன்னோன்வெறுத்திடுவன்பிறரைவோரையுமஃதே
யுன்னோடளவறுகாதலினூறுமிங்கிதுசரத
மென்னோடிணிவருவாய்கடிதென்றாளறங்கொன்றாள். (௩௨)

அசமுகிப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௫௪௯.

---

# இந்திராணிமறுதலைப்படலம்.

தக்கவேழகத்தலையள்கூறிய, வக்கொடுஞ்சொலையணங்குகேட்டலுந்
தொக்கதன்செவித்துளையிலங்கிவேல், புக்கதேயெனப்பொருமிவிம்மினாள். (௧)

கைம்மலர்க்கொடேகடிதிற்றன்செவி, செம்மிவல்வினைத்தீர்வுநாடியே
விம்மியங்குறும்வெய்யள்கேட்டிட, விம்மெனச்சிலவிசைத்தன்மேயினாள். (௨)

ஏடிநீயிவணிசைத்ததீமொழி, நேடியோர்ந்துளார்நிரயமாநெறி
யூடுசேர்வராலுரைத்தநிற்குமேற், கூடுதீமையார்குறிக்கற்பாலரே. (௩)

வேதம்யாவையும்விதித்தநான்முகன், காதலன்றருங்கடவுண்மங்கைநீ
நீதியில்லதோர்நெறியின்வாய்மையைப், பேதையாரெனப்பேசலாகுமோ. (௪)

தீங்கியாவர்க்குஞ்செய்திடாதவர், தாங்கடுன்புறார்தமக்குவேண்டினோ
ராங்கெவர்க்குமுன்னல்லல்செய்வரா, லீங்குநீயிவையெண்ணலாய்கொலோ. (௫)

தருமம்பார்த்திலைதக்கமாதவக், கருமம்பார்த்திலைகற்பும்பார்த்திலை
பெருமைபார்த்திலைபிறப்பும்பார்த்திலை, யுரிமைபார்த்திலையுறவும்பார்த்திலை. (௬)

பழியும்பார்த்திலைபடியிகழ்ந்திடு, மொழியும்பார்த்திலைமுறையும்பார்த்திலை
வழியும்பார்த்திலைவருவபார்த்திலை, யிழியுந்தீயசொல்லியம்பற்பாலையோ. (௭)

ஆன்றதொல்வளனாற்றலாயுள்பின், ஞான்றுசீர்த்திகளொருவுற்றோர்க்கிது
தோன்றுநீயிவைதுணியல்வாழிகேள், சான்றுநின்குலத்தகுவர்யாவரும். (௮)

இந்திரற்கலாலேவர்பாலினுஞ், சிந்தைவைத்திடேன்றீதில்கற்பினேன்
வந்தெனக்கிதுவகுத்திநின்கிளை, யுய்ந்திடத்தகுமுரையதன்றிதே. (௯)

நூன்மையாவையுநுனித்துநாடிச்செங், கோன்மையன்றியேகொடுமைசெய்துள
மேன்மைமன்னரும்வேறுளார்களும், பான்மையாற்பிலம்படுவர்திண்ணமே. (௧௦)

மீளில்வெந்துயர்வேலைசார்ந்துளா, னாளுநாதனென்றறைதியார்களுங்
கோளுநல்லவுங்குறுகுமல்லது, நாளையுங்கள்பானணுகுறாதவோ. (௧௧)

நீதியாகியநெறியிலாதவ, ளாதலான்மிகவறிவுமாழ்கியே
தீதுகூறினாய்செவ்விதன்றரோ, மாதுநீயிதுமறத்தியுய்யவே. (௧௨)

ஏவரென்றனையெய்தற்பாலினோர், தேவர்சூழ்தரக்காப்பர்சிந்தையென்
னாவியைம்புலமளிக்குமெங்கணுங், காவலுண்டுநீகடிதிற்போகென்றாள். (௧௩)

என்றகாலையிலெயிறுதீயுகக், கன்றுசேயிதழ்கறித்துவெய்துயிர்த்
தொன்றொடொன்றுகையுருமிற்றாக்கியே, நன்றுநன்றெனாநகைத்துச்சீறினாள். ()

Digitized By Roja Muthiah Research Library

மறுவில்வாசவன்மனைவிகூறிய, வுறுதிவெய்யவட்கூற்றஞ்செய்கில, வறிவில்பே
தையாயலகைதேறலால், வெறிகொள்பித்தனுக்குரைத்தமெய்ம்மைபோல். (௧௫)

ஆனகாலையிலசமுகத்தினா, னூனவெந்துயருழக்கும்பெற்றியால்
வானவர்க்கிறைமாதைநோக்கியே, தானுரைத்தனளிளையதன்மையே. (௧௬)

கிட்டிநல்லனகிளத்தினேனெனை, யொட்டிவந்திலையுரைத்திமாறனை
யட்டுநுங்குவனண்ணற்காகவே, விட்டனன்னிதுமெய்ம்மையாகுமால். (௧௭)

ஆர்த்தியாவுநீயகலவென்னுடைச், சீர்த்தியண்ணர்பாற்சேறல்சிந்தியாய்
பேர்த்திடாதுனைப்பிடித்துவன்மையா, லீர்த்துப்போகின்றேன்சரதமீதரோ; (௧௮)

முடிவிலாற்றலார்மூவர்யாவருந், தடைசெய்கிற்பினுஞ்சமரினேற்பினும்
விடுவனல்லன்யான்விரைவினிற்கொடே, படர்வனன்னதுபார்த்திமேலெனா. ௧௯

வெய்யளவ்வயிராணிமென்கரங், கையிற்பற்றியேகடிதினீர்த்துராய்
மொய்யிற்போயினாண்முரணிலாதவ, னையகோவெனாவரற்றன்மேயினாள். (௨0)

பாவிதீண்டலும்புலம்பிப்பைந்தொடி, யாவிபோந்தெனவவசமாகியே
யோவிலாததொல்லுணர்வுமாய்ந்தனள், காவியொண்கணீர்கலுழத்தேம்பினாள். ()

ஐயர்கையில்வந்தவுணரைச்செறுந், துய்யதீம்படைதோகைகண்ணுரு
வெய்யசூர்கிளைவீட்டவந்தென, மையுலாயகண்வாரிமிக்கதே. (௨௨)

காசிபன்றருங்கலதிகூற்றுவன், பாசமன்னகைப்பட்டுவிம்மினாள்
வாசவன்றனிமனைவிவெங்கொலைப், பூசைவாய்ப்படும்புள்ளின்பேடைபோல். ()

நாரிலாதவணலிந்துகொண்டனள், பேருமெல்லையிற்பேதுற்றேயுளஞ்
சோருகின்றவள்சுற்றுநோக்கியே, யாருங்காண்கிலளரற்றன்மேயினாள். (௨௪)

இந்திராணிமறுதலைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௫௭௩.

---

# மகாகாளர்வருபடலம்.

பையராவமளியானும்பரம்பொருண்முதலுநல்கு
மையனேயோலம்விண்ணோர்க்காதியேயோலஞ்செண்டார்
கையனேயோலமெங்கள்கடவுளேயோலமெய்யர்
மெய்யனேயோலந்தொல்சீர்வீரனேயோலமோலம். (௧)

ஆரணச்சுருதியோர்சாரடலுருத்திரனென்றேத்துங்
காரணக்கடவுளோலங்கடணிறத்தெந்தாயோலம்
பூரணைக்கிறைவாவோலம்புட்கலைகணவாவோலம்
வாரணத்திறைமேற்கொண்டுவரும்பிரானோலமென்றாள். (௨)

ஒய்யெனச்சசியிவ்வாற்றாலோலிடவதுகேட்டெங்க
ளையனைக்குறித்துக்கூவியரற்றுவாள்போலுமென்னா
மையினைத்தடுத்துச்சிந்துமருத்தெனவந்தானென்ப
வெய்யரிற்பெரிதும்வெய்யோன்வீரமாகாளனென்போன். (௩)

Digitized By Roja Muthiah Research Library

சாத்தனதருளினிற்குந்தாளையந்தலைவன்வானோர்
வேத்தவையானவெல்லாம்வியத்தகுவீரனுந்தி
பூத்தவன்முதலோர்யாரும்புகழவெவ்விடத்தையுண்டு
காத்தவனுமம்பெற்றான்காலற்குங்காலன்போல்வான். (௪)

இருபிறைசெறிந்திட்டன்னவிலங்கெழிலெயிற்றன்ஞாலம்
வருமுகிறடிந்தாலென்னவாள்கொடுவிதிர்க்குங்கைய
னுருமிடிக்குரல்போலார்க்குமோதையனுரப்புஞ்சொல்லன்
கரவிழைத்தெங்ஙன்போதிநில்லெனக்கழறிவந்தான். (௫)

கொம்மெனவந்தவீரன்கூவியசரியைநோக்கி
யம்மனையழுங்கல்வாழியசமுகியென்னும்வெய்யாட்
கிம்மியின்றுணையுமஞ்சேலீண்டினைத்தீண்டுகின்ற
கைம்முறைதடிந்துவல்லேவிடுவிப்பன்காண்டியென்றான். (௬)

வீரனதுரையைக்கேளாமெல்லியலணங்கினல்லாள்
பேரிடர்சிறிதுநீத்துப்பெயலுறுதுவலைதூங்கு
மாரியின்செலவுகண்டவளவயற்பைங்கூழ்போல
வாருயிர்பெற்றாண்மற்றையசமுகியவனைக்கண்டாள். (௭)

ஓவரும்புவனம்யாவுமொருங்குமுத்தொழிலுமாற்று
மூவருந்துறக்கம்வைகுமுதல்வனுந்திசைகாப்பாளர்
யாவருமென்முன்னில்லாரீண்டெனையிகழ்ந்துசீறித்
தேவர்தங்குழுவினுள்ளானொருவனோசெல்வனென்றாள். (௮)

வெறித்திடுகண்ணினோக்கிவெவ்விதழதுக்கிவல்லே
கறித்தனளெயிற்றின்மாலைகறகறகலிப்பவார்த்து
முறித்திவன்றனையுண்டுமுரண்வலிதொலைப்பனென்னாக்
குறித்தசமுகத்திநிற்பக்குறுகினன்றிறல்சேர்வீரன். (௯)

தட்டறுநோன்மைபூண்டசசிதனைத்தமியளென்றே
பட்டிமைநெறியாற்பற்றிப்படருதியிவளையின்னே
விட்டனைபோதிசெய்தவியன்பிழைபொறுப்பனின்னை
யட்டிடுகின்றதில்லையஞ்சலையரிவையென்றான். (௧௦)

கேட்டலுமுருத்திவ்வார்த்தைகிளத்தினைநின்னையாரே
யீட்டுடனிவளைப்போற்றென்றிப்பணிதலைதந்துள்ளார்
வேட்டனனவரைக்கேட்பவிளம்புதியென்றாண்முந்தூழ்
மாட்டுறுகனலியென்னத்தன்குலமுடிப்பான்வந்தாள். (௧௧)

தாரணிமுதலமூன்றுந்தலையளிபுரிந்துகாப்பான்
காரணிசெறிந்துற்றன்னகரியவன்கடவுள்வெள்ளை
வாரணமுடையவையன்மற்றிதுபணித்தானென்பேர்
வீரரில்வீரனானவீரமாகாளனென்றான். (௧௨)

என்றலுமனையவாய்மையிந்திரன்றனக்குமீசன்
பொன்றிரண்மார்பனல்கும்புதல்வற்கும்பொதுமைத்தாகி
நின்றதுவாகத்தேவர்நிருதரால்வருந்துமூழாற்
சென்றவன்மகவானேவலாளெனச்சிந்தைசெய்தாள். (௧௩)

Digitized By Roja Muthiah Research Library

புந்தியிலி தலையுன்னிப்பொள்ளெனச்சினமீக்கொள்ள
விந்திரன்றெழுவன்கொல்லாமெனையிடைதடுக்குநீரான்
சிந்துவனிவனையென்னாச்செங்கையிற்சூலந்தன்னை
யுந்தினனதுபோய்வீரனுரனைதிர்குறுகிற்றன்றே. (௧௪)

குறுகிமுன்வருதலோடுங்குரூஉச்சுடரங்கிமூன்று
முறையினேரிடையுற்றன்னமுத்தலைப்படையைக்காணூஉ
வறைகழல்வீரன்றன்னாளங்கியையட்டதேபோ
லெறிகதிர்வாளான்மைந்தனிருதுணிபடுத்தினனே. (௧௫)

படுத்தலுமணிகணீலப்பையராவுமிழ்ந்ததென்னக்
கடித்திடுமெயிற்றுப்பேழ்வாய்க்கருங்கணமழல்கான்றென்ன
விடித்திடுகொண்மூவின்பாலெழுந்தமின்னென்னவன்னாள்
விடுத்திடுசூலவைவேல்வெவ்வழல்பொழிந்ததன்றே. (௧௬)

காலத்தினுலகமுண்ணக்கடலுறுவடவைதானே
யாலத்தைமீதுபூசியசமுகிகரத்திற்கொள்ளச்
சூலத்தினமைந்ததம்மாசோதனைகொடுப்பனென்னாச்
சீலத்தின்மிக்கோன்கூர்வாள்செந்தழல்பொழிவித்தன்றே. (௧௭)

சூளினார்த்தெறியும்வீரன்சுடர்கொண்முத்தலைவேறன்னை
வாளினாற்றடிதலோடுமெறிமுகத்தணங்குசீறிக்
கேளினாற்றனதுபாங்கிற்கிடைத்ததுன்முகிகைச்சூலங்
கோளினாற்கடிதுவாங்கிக்கூற்றனுமுட்கவார்த்தாள். (௧௮)

வசிகெழுசூலம்பற்றிமருத்துவன்றுணைவியான
சசிதனையிகுளையாகுந்தையறன்கரத்திற்சேர்த்தி
நிசியின்மால்பாந்தளோடுநெடுங்கதிர்நேர்புக்கென்ன
விசையொடுகொடியள்சென்றாள்வீரமாகாளன்றன்மேல். (௧௯)

ஒற்றைமுத்தலைவேறன்னையொப்பிலான்மருமமீது
குற்றியமுன்னிநீட்டிக்குறுகினளமர்செய்போழ்திற்
கற்றையஞ்சுடர்க்கூர்வாளாற்காவலனெறிதலோடு
மிற்றதுசூலங்கண்டவசமுகியிடைந்துபோனாள். (௨0)

இடைந்தனளேகியாண்டோரிருங்கிரிபறித்திட்டின்னே
முடிந்தனைபோதுமென்னாமொய்ம்புடனவன்மேலோச்சத்
தடிந்தனன்றடிதலோடுந்தாரைவாட்படையும்வல்லே
யொடிந்ததுகொடியள்காணாவொல்லொலிக்கடல்போலார்த்தாள். (௨௧)

வீரமாகாளகேண்மோவேதனேயாதிவிண்ணோ
ராரும்வந்தாசிகூறவகிலமுமாளுகின்ற
சூரனாமெமதுமுன்னோன்றோளிடையுய்ப்பக்கொண்டு
பேருவனிவனையோராய்விலக்கினைபேதைநீராய். (௨௨)

தடுத்திடன்முறையதன்றாற்றாரகன்றனைவீர
ரடுத்திடிற்படுப்பர்கண்டாயன்றியும்யானேநின்னை
யெடுத்தனன்மிசைவன்றுய்க்கினிரும்பசியுலவாதென்னா
விடுத்தனனுய்ந்துபோதிவிளிவுறேலெளியையென்றாள். (௨௩)

௪0

Digitized By Roja Muthiah Research Library

பாதகியிணையமாற்றம்பகர்தலும்வீரன்கேளா
வேதியினிதுசூலப்படையிறவெறிந்தேனின்னை
மாதெனவடாதுநின்றேன்மற்றிதையுணர்ந்துவல்லே
போதியாலிவளைவிட்டுப்போக்கலைகரத்தையென்றான். (உச)

என்றலுங்கொடியள்கேளாவீங்கிவன்வாளுமின்றி
நின்றனனிவனோடேபோர்நேருதனெறியதன்று
லன்றியுமிவனைவெல்லலரிதினிச்சசியைக்கொண்டு
சென்றிடறுணிபாமென்னாத்திரும்பினள்சேடிதன்பால். (உரு)

துன்முகியாகிநின்றதுணைவிதன்சிறைப்பட்டுள்ள
பொன்மிகும்யாணர்மேனிப்புலோமசைதனைத்தான்பற்றிக்
கொன்மலியம்பொன்மேருக்குவட்டினைக்கொடுபோங்காலின்
வன்மையினோடுகொண்டுமறிமுகத்தணங்குபோனாள். (உசு)

போகலுமதனையயன்பொருநரிற்றலைவன்பாரா
வேகுதிபோலுநில்லென்றெய்தியேயுடைவாள்வாங்கிச்
சேகுறுமனத்தாள்கூந்தல்செங்கையாற்பற்றியீர்த்துத்
தோகையைத்தொட்டகையைத்துணித்தனன்விண்ணோர்துள்ள. (உஎ)

இருட்டுறுபிலத்துற்றோரையெடுத்துவெள்ளிடையிட்டென்ன
மருட்டுறுமதியளாகிவருந்தியசசியென்பாளை
யருட்டிறத்தோடுவீடுசெய்துபின்னவுணமாதை
யுருட்டினன்றனதுதாளாலுருமெனவுதைத்துத்தள்ளி. (உஅ)

அயமுகிவீழ்தலோடுமழுங்கியேயயலினின்ற
வயமிகுதுன்முகத்துமங்கைதன்கரத்திலொன்றைச்
செயிரறுசசியைநீயுந்தீண்டினைபோலுமென்னாத்
துயல்வருதொடையல்வீரன்றுணித்தனன்சோரிபொங்க. (உகூ)

வேறு.

மதர்த்திடுதுன்முகிவன்கைவாளினாற்
சிதைத்திடுமொய்ம்புடைச்சேனைகாவல
னுதைத்தனனையளுமோவென்றேயுளம்
பதைத்தனள்புலம்பியேபடியில்வீழவே. (௩0)

மகாகாளர்வருபடலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௧,௬0௩.

# அசமுகிசோகப்படலம்.

அறைபடுகழலினானவுணமாதர்கை
யெறிதலுங்குருதிநீரெழுந்ததன்மையாற்
றிறல்கெழுவெய்யசூர்திருவைச்சுட்டிடுங்
குறைபடுஞெகிழியின்கோலம்போலுமே. (க)

திரைந்தெழுகுடினைபோற்குருதிசென்றிடக்
கரந்துமிபடுதலுங்கவன்றுவீழ்ந்தனள்
வருந்தினளரற்றினண்மறிமுகத்தினாள்
விரிந்திடுகனலுடைவேலைபோன்றுளாள். (உ)

Digitized By Roja Muthiah Research Library

மருண்டனள்பதைத்தனண்மறித்தகையினள்
வெருண்டனணிலனுறவியன்கையெற்றின
ளுருண்டனள்வெரிநுடனுரமுந்தேய்வுறப்
புரண்டனள்செக்கரிற்புயலிற்றோன்றுவாள். (௩)

புரந்தரன்றேவியைப்பொம்மெனப்பிடித்
துரந்தருவாயிலிட்டுண்பனீண்டெனு
விரைந்தெழுஞ்சென்றிடுமீளும்வீழ்ந்திடு
மிருந்திடுஞ்சாய்ந்திடுமிரங்குஞ்சோருமே. (௪)

கடித்திடுமிதழினைக்கறைகண்மீச்செலக்
குடித்திடுமுமிழ்ந்திடுங்குவலயத்திரீஇத்
துடித்திடும்பெயர்ந்திடுந்துளக்குஞ்சென்னியை
யிடித்தெனக்கறித்திடுமெயிற்றின்மாலையே. (௫)

திகைத்திடுநன்றுநஞ்செய்கையீதெனு
நகைத்திடுமங்குலிநாசியிற்றொடும்
புகைத்தெனவுயிர்த்திடும்புவியைத்தாள்களா
லுகைத்திடும்புகையழலுமிழும்வாயினால். (௬)

உம்மெனவுரப்பிடுமுருமுக்கான்றென
விம்மெனச்சினத்திடுமெரிவிழித்திடுந்
தெம்முனைப்படையடுஞ்சேனைவீரனை
விம்மிதப்படுமுடல்வியர்க்கும்வெள்குமே. (௭)

அற்றிடுகரத்தினையுறுதகையினாற்
றெற்றெனவெடுத்திடுந்தெரிந்துநோக்கிடு
மொற்றிடும்விழிகளினுகுக்குஞ்சோரிநீ
ரிற்றெவர்பட்டனரென்னினென்னுமே. (௮)

வீவதேயினியெனும்வினையினேன்றனக்
காவதோவிஃதெனுமையகோவெனு
மேவரும்புகழ்தருமெங்களண்ணர்பாற்
போவதெவ்வாறெனப்புலம்புகொள்ளுமே. (௯)

காசினிதனில்வருங்கணவர்கைதொடக்
கூசுவரேயெனுங்குறியபங்கெனப்
பேசுவரேயெனும்பிறரும்வானுளோ
ரேசுவரேயெனுமென்செய்கேனெனும். (௧0)

தேவர்களனைவருஞ்சிந்தித்தென்கரம்
போவதுபுணர்த்தனர்பொன்றுவேனினி
யாவதன்முன்னரேயவரையட்டுல
கேவையுமுடிப்பனென்றெண்ணிச்சீறுமே. (௧௧)

பாருயிர்முழுவதும்படுத்திடோவெனு
மாரழல்வடவையையவித்திடோவெனும்
பேருறுமருத்தினைப்பிடித்திடோவெனு
மேருவையலைத்தனன்வீ[illegible]கொவெனும்: (௧௨)

Digitized By Roja Muthiah Research Library

பீளுறுமெழிலிகள்பிறவும்பற்றியே
மீளரிதெனும்வகைமிசைந்திடோவெனு
காளினைமுழுவதுநாளுடன்வருங்
கோளினைமுழுவதுங்கொறித்திடோவெனும். (௧௩)

சீர்த்தகையிழந்தியான்றெருமந்துற்றது
பார்த்திகழுங்கொலிப்பரிதிவானவ
ஞர்த்திடுந்தேரொடுமவனைப்பற்றியே
யீர்த்தனன்வருவதற்கெழுந்திடோவெனும். (௧௪)

கண்டதோர்பரிதியைக்கறித்துச்சூழ்ச்சிசெ
யண்டர்கள்யாரையுமடிசிலாகவே
யுண்டெழுகடலையுமுறிஞ்சிக்கைபுறத்
தெண்டிரைதனிற்கழீஇத்திரும்புகோவெனும். (௧௫)

செங்கலநீடியதென்னங்காயிடைத்
துன்னியதீம்பயன்சுவைத்திட்டாலெனப்
பின்னுறுமதியினைப்பிடித்துக்கவ்விமெய்
யின்னமிர்தினைநுகர்ந்தெறிகெனோவெனும். (௧௬)

இந்திரன்களிற்றினையேனைத்தந்தியைச்
செந்துவர்க்காயெனச்சேரவாய்க்கொளா
வைந்தருவிலைகளாவவற்றுள்வெண்மலர்
வெந்துகளாக்கொடுமிசைகெனோவெனும். (௧௭)

தாக்குகோபணிகளைத்தலைகிழக் * குற
நீக்குகோபிலம்படுநிலயத்தோரையுந்
தூக்குகோபுவனியைச்சுழற்றிமேலகீ
ழாக்குகோமாலெனவருந்துகோவெனும். (௧௮)

வேறு.

ஆருமச்சுறவினையனவசமுகிவெய்யாள்
சூரன்றங்கைமாவுளத்தினளிறப்பதுதுணிவாள்
பேரிடும்பையடொலைவுறுமானமேபிடித்தாள்
வீரவன்மையளாதலினுரைத்தனள்வெகுண்டாள். (௧௯)

வெகுளுமெல்லையிற்கண்டனடுன்முகிவெய்ய
தகுவர்தங்குலத்துதித்தனளாயினுந்தகவின்
புகுதிசால்புணர்புந்தியளாதலிற்பொருக்கென்
றிகுளைமுந்துறவந்தனளினையனவிசைத்தாள். (௨0)

வையமென்செயும்வானகமென்செயுமற்றைச்
செய்யவானவரென்செய்வர்வரைகளென்செய்யு
மையமால்கடல்பிறவுமென்செய்திடுமவனுற்
கையிழந்திடினுலகெலாமுடிப்பதுகடனே. (௨௧)

பாரும்வானமுந்திசைகளும்பல்லுயிர்த்தொகையுஞ்
சேரவேமுடித்திடுவதைநினைந்தனைசெய்யி
னூருநின்றனையென்செய்வரவையெலாமுடைய
சூரனேயுனைமுனிந்திடுமவன்வளந்தொலையும். (௨௨)

* கிழக்கு = கீழ்.

Digitized By Roja Muthiah Research Library

ஆதலான்மனத்தொன்றுநீயெண்ணலையவுணர்
நாதனுகியவெய்யசூர்முன்னுறநாம்போ
யீதெலாஞ்சொலினிமையவர்கிளையெலாமுடிக்கும்
போதலேதுணிவென்றனள்பின்னரும்புகல்வாள். (உ௩)

வேறு.

ஞானமில்சிறுவிதிநடாத்தும்வேள்வியில்
வானவர்தங்களின்மடந்தைமார்களிற்
றானவர்தங்களிற்றத்தமெய்களி
னானமில்லோரையாமுரைக்கவல்லமோ. (உ௪)

நினைவருங்கண்ணுதனிமலற்கேயலா
லனையனையடைதருமறிஞர்க்கேயலா
லெனைவகையோர்க்குமெவ்வுயிர்க்குமேற்பதோர்
வினைபடுமிழிதுயர்விட்டுநீங்குமோ. (உ௫)

ஆகையின்மங்கைநீயரற்றல்வெள்கியே
சோகமுங்கொள்ளலைதுயருமின்பமு
மோகமுமுயிர்க்கெலாமுறையிற்கூடுமா
லேகுதுமெழுகெனவியம்பித்தேற்றினுள். (உ௬)

வேறு.

மொழிந்துதுன்முகிதெளித்தலுநன்றெனமுன்னு
வெழுந்துதுண்ணெனவசமுகியென்பவளிலதாய்க்
கழிந்ததுன்பொடுநின்றதோர்சசியினைக்காணூஉ
வழிந்தமானவெந்தீச்சுடவினையனவறைவாள். (உ௭)

துப்புறத்தியவண்டங்கள்யாவினுஞ்சூரன்
வைப்புறத்தியதிகிரியுமாணையும்வழங்கு
மிப்புறத்தினிலொளிப்பினுமிதுவன்றியண்டத்
தப்புறத்தினிலொளிப்பினும்பிழைப்புமக்கரிதே. (உ௮)

மறைதலுற்றிடுமிந்திரன்றன்னையிவ்வனத்தி
னுறைதலுற்றிடுமுன்றனையொழிந்தவானவரை
யிறைதனிற்பற்றியீர்த்துப்போயென்னகர்தன்னிற்
சிறைபடுத்துவன்றிண்ணமெங்கோமகன்செயலால். (உ௯)

உங்கடம்மையான்சிறைபடுத்தேனெனினுலக
மெங்குமாள்கின்றசூரபன்மாவெனுமிறைவன்
றங்கையன்றியானெனதுரந்தனிலெழுந்தனவுங்
கொங்கையன்றியான்பேடியேகுறிக்கொளென்றகன்றாள். (௩0)

அசமுகிசோகப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,௬௩௩.

# இந்திரன்மீட்சிப்படலம்.

அகலநின்றதோர்வீரமாகாளனுமடலோ
னுகவையோடுறுசசியினைநோக்கிநின்னுளத்திற்
றகுவர்தங்களுக்கஞ்சலையன்னையுன்றலைவன்
புகுதுமெல்லையுமளிப்பனீண்டிறைகொன்றுபோனன். (௧)

போனகாலையிற்புலோமசையடவியம்புறனோர்
மானினம்பிரிந்துற்றெனவவ்வனம்வைகிக்
கோனவன்வினைமுற்றியநோற்றனள்குறிப்பா
லானபான்மையைநாரதமுனிவரனறிந்தான். (௨)

மேலைவெள்ளியம்பருப்பதந்தனில்விரைந்தேகிச்
சீலவிண்ணவர்தம்முடன்சிவனடிபரவக்
காலமின்றியேயிருந்திடுமிந்திரன்கடைபோய்
ஞாலம்வைகியபுலோமசைக்குற்றவாநவின்றான். (௩)

நவின்றவாசகங்கேட்டலுமகபதிநனியுட்
கவன்றுதேறியேமுனிந்துபின்னிறையருள்கருதி
யவன்றன்மாமுறைதூக்கியேதன்னைநொந்தழுங்கித்
துவன்றதேவரோடெழுந்தனனரன்புகழ்துதித்தே. (௪)

வந்துநந்தியெம்மடிகளினடிமுறைவணங்கி
யந்தமில்பகல்வேலைநோக்குற்றனமமலன்
சிந்தைசெய்தெமையருள்புரிந்திடுகிலன்றீயே
முந்தியற்றியதீவினைப்பகுதியைமுன்னி. (௫)

கைம்மையாம்பெயரணங்கினோர்பெறுவகைகறுத்த
செம்மையார்களத்தெம்பிரானெமக்கருள்செய்வான்
பொய்ம்மைதீர்தவமியற்றிடநிலமிசைப்போது
மெம்மையாங்கருள்புரிந்தனைவிடுத்தியென்றியம்ப. (௬)

நன்றுபோமெனநந்தியெம்பெருந்தகைநவிலத்
துன்றுவானவர்தம்மொடுங்கழுமலந்துன்னி
நின்றவீரமாகாளனைக்கண்டனனேர்போய்ச்
சென்றுபுல்லியேமுகமனேரளப்பிலசெப்பி. (௭)

போதியையவென்றனையனையயன்பாற்புகுத்தி
மாதுநோற்றுழிக்குறுகியேயவடுயர்மாற்றிக்
கேதமெய்தியவசமுகிகூறுரைகேளா
வேதுசெய்வதென்றுன்னினனிமையவர்க்கிறைவன். (௮)

சுடர்ப்பெருங்குலிசத்திறைசூழ்ந்தனன்றுணியா
வடுத்தமங்கையையுடன்கொடேவிரைந்தவணகன்று
புடைக்கண்வந்திடுங்கடவுளர்தம்மொடும்புராரி
யெடுத்தவார்சிலைப்பொற்றையிற்கரந்தனனிருந்தான். (௯)

இந்திரன்மீட்சிப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௬௪௨.

---

# சூரனரசிருக்கைப்படலம்.

இன்னபான்மையின்மகபதியிருந்தனனிப்பான்
முன்னமேகியவசமுகிவெய்யதுன்முகத்தா
டன்னொடேகியேமகேந்திரத்தனிநகரடைந்தா
ளன்னகாலையிற்சூரன்வீற்றிருந்தவாறறைவாம். (௧)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

மீயுயர்கின்றவிண்ணினின்றிழிந்தவிழுமியமேதினிவரைப்பி
னாயிரகோடிகொண்டவண்டத்திலாடகப்பித்திகையவற்றுட்
டயனவிலக்கிநல்லனவெடுத்துத்திசைமுகத்தவர்கள்செய்தென்ன
வோய்வறவிளங்குதபனியப்பொதுவொன்றோராயிரம்யோசனையுறுமே. (௨)

இத்தரையுளதாந்தொல்லையண்டத்திலிடையிடையெய்தியேயிலங்கு
மத்தமால்வரைகள்கைபுனைந்தியற்றியம்புயாசனர்பலர்கூடி
வைத்தெனச்சூரனரசியனடாத்துமன்றினிலாயிரகோடி
பத்தியினிறுவுமாடகத்தூணம்பரந்ததப்பெருமையார்பகர்வார். (௩)

தொல்லையண்டத்தின்கண்டொறுங்கெழீஇயசுவணமாதரையெலாந்தொகைசெய்
தல்லனவிலக்கிநல்லனதெரிந்தேயமைத்தபோலணிபெறுநிலத்தி
லொல்லுறுபுடையினும்பரிலங்கணுலப்பிலாக்குலகிரிக்குழுவிற்
பல்லிருந்துணிசெய்தணிபடுத்தென்னப்பன்னிறவோவியம்பயிலும். (௪)

பொன்னுலாவண்டத்தும்பர்கடோறும்பொருந்தியசெக்கர்வான்புராரி
தன்னதாணையினொருங்குசூழ்ந்தென்னத்தண்மலர்விதானமீத்தயங்கப்
பன்னிருகோடியாகியெங்கணுஞ்சூழ்பகலவர்சிலவரேயன்றி
யன்னவர்பலரும்பணியினுற்றென்னவணிமணிக்கண்ணடியொளிரும். (௫)

மண்ணுலாவண்டத்திரவிகளென்றூழ்வரம்பிலாமதிகளினுளவாந்
தெண்ணிலாக்கற்றையைம்பெருநிறத்தசெல்லினம்யாவையுஞ்செறிந்தே
யண்ணலார்மேலைக்கம்பலஞ்சூழ்போயமர்ந்தெனவாயிடைக்கவரி
யெண்ணிலாதனவும்பஃறுகிற்குழுவுமிடைவிராய்மிடைவனவெங்கும். (௬)

பரக்குறுமண்டந்தொறுந்தொறுமுளவாம்பகலினைப்பரிமுகத்தெரியி
னுருக்கியொன்றாக்கித்தவிசெனவியற்றியொளிறுதாரகையவட்குயிற்றித்
தருக்குறுகின்றமதிகளைமடங்கற்றகவுசெய்திருத்தியதென்னத்
திருக்கிளரவையத்தவுணர்கோனிருப்பச்சிறந்ததோரரியணைதிகழும். (௭)

ஆனதோர்மன்றத்தரியணைமிசையேயாயிரகோடியண்டத்தின்
மேனிமிர்வடவையங்கியும்விடமுமிசைந்தழியாநெறிமேவித்
தானவர்பரவக்கூற்றெலாமொன்றாய்த்தணப்பில்பேரணிகலந்தயங்க
வானிமிர்ந்துற்றாலென்னவெஞ்சூரமன்னவர்மன்னன்வீற்றிருந்தான். (௮)

மேலைநாளமலனுதவுபல்லண்டமேவரநடாத்துதொல்லாணைக்
கோலொடுவெளியசீர்த்திகண்முழுதுங்குறுகியேயீருருக்கொண்டு
பாலுறவந்துநின்றதேயென்னப்பாங்கரிலவுணர்கடாங்கும்
வாலியதுணைசேர்தவள்வெண்கவிகைமாமதிக்கடவுளைமலைய. (௯)

காருறழ்படிவத்துவரிகளனைத்துங்கண்ணகன்பாற்கடன்முழுது
மீருருவெய்தியெழுந்துமேலோங்கியிருந்தெனவைகலுஞ்செலுமத்
தாரகவிறலோன்பஃறலைச்சீயத்தலைமையான்சார்ந்தயலிருப்ப
வாரழலுருவப்பண்ணவரேபோலமைச்சருங்குமரருமமர. (௧௦)

எவ்வெலாவண்டத்துறைதருமருத்துமிரும்புனற்கிறைவருமாகிச்
செவ்விதினெருங்கித்தத்தமினுலவாச்சீகரம்படுபனிசிதறி
யவ்வயின்வேண்டுமளவையிற்பலவாயவனடிபணிந்தெழுந்திறம்போன்
மைவரையனையவவுணர்களிரட்டும்வாலியகவரிகள்வயங்க. (௧௧)

Digitized By Roja Muthiah Research Library

உரைத்திடுமெண்டங்தொறுந்தொறுமுள்ளவும்பரிலியக்கர்கோனுலகிற்
றரைப்பெருவரைப்பிற்பிறவிலுள்ளதனிற்றவறிலாவற்புதத்தனவாத்
தெரித்தனரெடுத்துப்பொதிந்தெனநறியதிரையன்மெல்லிலைதுவர்ப்பழுக்காய்
விரைத்திடுசுண்ணங்கொள்கலம்பரியாவினைமுறையோர்பலர்விரவ. (௧௨)

நின்றதோரேனையருக்கருட்சிலரைநீரமுய்த்துள்ளகோடிகமேற்
பொன்றரையுழியின்மணிசொரிந்தென்னப்புகட்டுறுதம்பலக்களாசி
மன்றதொல்லறிவர்திருத்தினர்பொருவமற்றவையவுணர்களேந்தித்
துன்றிருந்தவர்க்காயடைபிறபரிக்குந்தொழுவர்தங்குழுவொடுதுவன்ற. (௧௩)

ஆழியங்கிரியிற்கதிர்மணிவெயிலுமன்னதுசூழ்ந்தபேரிருளும்
வாழியவமுதமுவரியுமல்லாவாரிதியும்பலமணியு
மூழியினிறுதியமையமேலெல்லாமொன்றியதென்னமுன்னிருபால்
கேழுறபின்னரவுணர்மாத்தலைவர்கிளையொடுதுவன்றினர்கெழும. (௧௪)

மின்னவிர்விசும்பினகட்டிலையளவிவெண்மதிக்கடவுண்மெய்யணுகிப்
பின்னுறுமமுதநீர்க்கடறிளைத்துப்பெரும்புறப்புணரியிற்படியா
விந்நிலமருங்கில்வானகத்துள்ளவெழின்மலர்க்காவுதோறுலாவித்
தன்னொலியின்றிமென்மெலவசைந்துதண்ணெனவசந்தன்முற்சார. (௧௫)

விண்படுநிறைநீர்ப்புதுமதிக்கடவுள்வியன்பணித்துவலையைத்துற்றுக்
கண்படுதறக்கத்தண்டலைப்பொதும்பிற்காமரம்போதிடைக்கவிழ்த்தி
யெண்படுபன்னாள்கழித்தபின்கவர்ந்தேயெழிலிகள்கரந்துநின்றீண்டைத்
தண்பனியுறைப்பிற்கண்ணுருத்துவலைதணப்பறச்சிதறிடத்தமில். (௧௬)

தேனமரைம்பாலுருப்பசியரம்பைதிலோத்தமைமேனகைமுதலாம்
வானவர்மகளிரியக்கர்தம்மகளிர்வலிகெழுமரக்கர்தம்மகளிர்
தானவர்மகளிர்விஞ்சையர்மகளிர்சாரணர்சித்தர்தம்மகளி
ரேனையர்மகளிரியாவரும்வெவ்வேறியற்படுகளிநடமியற்ற. (௧௭)

ஐந்திறத்துருவங்காலையிலுரைப்பானமையமின்றுகியேவேதா
வந்தொருபுடையிலொதுங்கினனிருப்பமற்றவனுதவுறுங்குமரர்
நந்துறுபெருநீர்க்குடங்கரிற்கன்னனுடினர்நாழிகைப்பறையை
முந்துறவிரட்டிப்பதந்தொறுஞ்சென்றுமுறைமுறையுரைத்தனர்திரிய. (௧௮)

தேர்த்திடுமுழுவைச்சூழலிற்சிலமான்சென்றெனவவுணர்தஞ்செறிவில்
வேர்த்துடல்பதைப்பவரும்பலமுனிவர்வேறுவேறுசிகளிசையா
வார்த்திடுமொலியாற்கேட்டிலவாமென்றஞ்சினரவருறுபுலத்தைப்
பார்த்திடுந்தோறும்வாழ்கெனப்பரவிப்பாணியைவிரித்தனர்நிற்ப. (௧௯)

திருக்கிளர்பொன்னாட்டிந்திரனல்லாத்தேவர்கள்யாவருமவுணர்
நெருக்கினருந்தவேகிநேர்புகுவோர்நெடுங்கடைகாறுமுன்றள்ள
வெருக்கொடுசென்றுமீண்டுமற்றுகிவியன்கடைகாவலர்புடைப்பத்
தருக்குறுமவையங்காணியபெருதுதம்முளங்குலைந்தனர்திரிய. (௨0)

வெற்றவெங்கதத்தரவுணர்கஞ்சுகிசேர்மெய்யினர்வெறுக்கையஞ்சூரல்
பற்றிடுகரத்தர்செல்லெனுந்தெழிப்பர்பணிப்பிறையெயிற்றர்பல்லிமையோர்
பொற்றடமகுடஞ்சிதறிடப்புடைப்போர்புயலுறசூறையிற்றுரந்துஞ்
சுற்றுறநிறுத்துமிருத்தியும்புகுந்தோர்தொல்பெயர்செப்பிமுன்றுதிப்ப. (௨௧)

Digitized By Roja Muthiah Research Library

பொன்றிகழ்கமலத்திதழெலாம்விரிந்தபோதினிற்பொகுட்டிடைதோறு
மின்றிகழ்நுசுப்பிற்றிருமகள்பலராய்வீற்றுவீற்றிருந்தலேபோலக்
குன்றுறழ்கொங்கைமங்கையர்பல்லோர்கொண்டுதன்னுறையுளிற்சென்று
துன்றியபலவாந்தீபிகைத்தட்டஞ்சொன்முறையாசியிற்சுற்ற. (௨௨)

தென்னுறுபாலைகுறிஞ்சியேமருதஞ்செவ்வழியென்னுநாணிலத்திற்
பின்னகம்புறமேயருகியன்மற்றைப்பெருகியலுறழவெண்ணிரண்டாய்
மன்னியநாதத்திசைகளிற்பிறவில்வரம்பிலவாயபாட்டதனுட்
கின்னரர்சித்தரியக்கர்கந்தருவர்கிளைத்துமங்கலத்தனவிசைப்ப. (௨௩)

மாகநல்வேள்வியாற்றியதிறனுமதிமுடிப்பரனருளடைந்தே
யேகியதிறனுந்தனதலைமுதலாயாரையுநிலையழித்தனவுஞ்
சேகுறுயண்டம்யாவையுங்கண்டுதிருவுடனரசியற்றியதும்
பூகத * நிலையத்தவுணர்கள்பல்லோர்புடைதனின்முறைமுறைபுகழ. (௨௪)

கார்த்திடுமவுணர்திசையுளாரேனோர்கைதொழூஉத்தனதுநோன்கழற்காற்
றூர்த்திடுமலருந்தொல்பெருங்கவியுந்தூநெறிமுனிவரர்தொகையுஞ்
சார்த்தினர்வரையாமந்திரநெறியாற்றலைத்தலையாசிகள்சாற்றிச்
சேர்த்தனர்சிந்துந்துணருமக்கத ০ முஞ்சீர்த்தகால்வீசினன்றிரிய, (௨௫)

ஆடியன்முறையையியற்றினர்தமக்குமடைந்துதற்புகழுநர்தமக்கும்
பாடியன்முறையில்வல்லுநர்தமக்கும்பரிவுசெய்தலைவர்கடமக்கும்
பீடுறுமகுடங்கடகநூன்முதலாம்பேரணிமணித்துகில்பிறவு
மாடுறுநிதியுமேனவுநின்றுமலர்க்கைநீட்டினதொறும்வழங்க. (௨௬)

தேவருமேலைமுனிவரும்பிறருஞ்செய்துருத்தங்கள்பாலன்றி
யேவர்பாலானுமிறைவனுமொருதானேதனோக்குற்றனன்வெகுளி
ஞவியதிழப்பார்போல்வெரீஇப்புகழ்ந்துமவனுவப்புற்றிடினுய்ந்து
மோவறநிற்பரசனிவீழ்தோறுமுரைக்குமந்திரத்திஞெரென்ன. (௨௭)

சூரனரசிருக்கைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௬௬௬.

---

# அசமுகிநகர்காண்படலம்.

இன்னனபலபலவெய்தச்சூரனு, மன்னவனிருத்தலுமற்றவ்வெல்லையிற்
றுன்னகரணித்துறத்துன்முகத்தினு, டன்னெடுமசமுகிதான்வந்தெய்தினள். (௧)

மோட்டுறுமகேந்திரமுதியமாநகர், கூட்டுறுதிருவெலாங்குலையமுன்னவண்
மாட்டுறுதுணையொடுவந்துற்றுலெனக், கீட்டிசைவாய்தலைக்கிட்டினளரோ. (௨)

கெழுதருமசமுகக்கெடலணங்குதன், பழிதருகையினைப்பார்த்துநேர்ந்துளா
ரழிதருதுன்புகொண்டழலிற்சீறினு, ரிழிதருமிச்செயல்யார்செய்தாரெனு. (௩)

மானமிலசமுகிமகேந்திரப்புரந், தானுறுதுயர்க்கொருதாரிகாட்டல்போ
லூனுறுகுருதிகையுகுப்பச்சென்றுழி, யான்றுகண்டனரவுணர்யாவரும். (௪)

வட்டுறுபலகையின்வல்லநாய் † நிரைத், திட்டனர்கவற்றினையிசைத்தசூளொடுங்
கிட்டினரிடந்தொறுங்கெழுமியாடினர், விட்டனரத்தொழில்விரைந்துற்றார்சிலர்.

---

* பூகதர் - நின்றேத்துவார். ০ அக்கதம் - அக்ஷதை.
† வல்லநாய் - வல்லினுள்நாய் என விரியும்.



Digitized By Roja Muthiah Research Library

தெரிதருகரியபொன்றிரித்திட்டாலெனப்,புரிதருமருப்புடைப்புயலின்செச்சை
யை,முரிவருபேரமர்மூட்டிக்கண்டுளார்,பரிவொடுபிரிந்தயல்படர்கின்றார்சிலர்.(௬)

கார்ப்பெயலன்னதோர்கடாங்கொண்மால்கரி, கூர்ப்புறுமருப்புமெய்குளிப்பச்
சோரிநீ,ரார்ப்பொடுதத்தமிலாடல்செய்வது,பார்ப்பதுவிட்டனர்படர்கின்றார்சிலர்

துய்யதோர்கிஞ்சுகச்சூட்டுவாரண, மொய்யொடுதன்னுயிர்முடியுமெல்லையுஞ்
செய்யுறுவெஞ்சினச்செருவைநோக்கினு, ரொய்யெனநீங்கியேயுறுகின்றார்சிலர்.()

ஊனமில்பலபணியுடன்றுசீறியே, பானுவைநுகரவிண்படருமாறென
வானி * களோச்சினர்வானிற்கைவிடா, மேனிகள்வியர்ப்புறவெகுண்டுற்றார்சிலர்.

வாம்பரிதேர்கரிமானம்பாண்டில்க, ளேம்பலோடூர்ந்திடவியற்றுங்கற்பொரீஇ,
யாம்பொருளல்லதொன்றடைவதென்னெனச், சோம்புதலின்றியேதொடர்கின்றார்சிலர். (௧௦)

குறிகெழுவெளிலொடுகுற்றிநாட்டியு, மறிகுறிநீட்டியுமவையிலக்கமா
வெறிகுறுபடையினையெய்யுங்கோலினை,நெறிதொறும்விட்டவணேர்கின்றார்சிலர்.

நாந்தகமாதியாநவிலுந்தொல்படை,யாய்ந்திடும்விஞ்சைகளடிகண்முன்னமா,யே
ய்ந்திடுங்கழகமுற்றியற்றுமாறொரீஇப், போந்தனரொருசிலர்பொருமன்மிக்குளார்.

வாட்படுகனலிகால்வானின்கண்ணவாங், காட்புறுநரம்பியாழ்காமர்வீணைகள்
வேட்புறுமீர்ங்குழன்மிடறுகாலிசை o , கேட்பதுவிட்டவண்கிட்டினார்சிலர்.(௧௩)

நாடகநூன்முறைநுனித்துநன்றுணர், கோடியர்சழாயினர்கூத்தரேனையோ
ராடுறுகோட்டிகளகலுற்றங்ஙனங், கூடினரொருசிலர்குலையுமெய்யினார். (௧௪)

புலப்படுமங்கலப்பொருண்முற்றுங்கொடு,நலப்படுவேள்விகணடத்திக்கேளொடு,
பலப்பலவதுவைசெய்பான்மைநீத்தொராய்க், குலைப்புறுகையொடுங்குறுகுற்றார்சி
லர். (௧௫)

மாலொருமடந்தைபால்வைத்துமுன்னுறு, சேல்விழியொருத்திபாற்செல்லவூடியே
மேலுறுசினத்திகல்விளைக்கநன்றிது, காலமென்றுன்னியேகழன்றற்றார்சிலர். ௧௬

தோடுறுவரிவிழித்தோகைமாருடன், மாடமதிடைதொறும்வதிந்தபங்கயக்
காடுறுபூந்தடங்காமர்தண்டலை, யாடலைவெறுத்தெழீஇயடைகின்றார்சிலர். (௧௭)

சுள் † ளினைக்கறித்தனர்துற்றுவாகையங்,கள்ளினைக்கொட்பொடுகளிக்குநெஞ்சின
ருள்ளுறுத்தியபுலனூசல்போன்றுளார், தள்ளுறத்தள்ளுறத்தளர்ந்துற்றார்சிலர். ()

அனையபல்வகையினரவலைக்கண்டுளார், பனிவருகண்ணினர்பதைக்குநெஞ்சினர்
கனலொடுதீப்புகைகாலுயிர்ப்பினர், முனிவுறுகின்றனர்மொழிகின்றாரிவை. (௧௯)

வேறு.

அந்தகனொருத்தற்பேரோனுடல்வல்லியத்தோனுதி
வந்திடுமவுணர்தம்மைமதிக்கிலாவலியோர்தம்மை
முந்துறுபுரத்தையட்டுமுழுவதுமுடிப்பானின்ற
செந்தழலுருவத்தண்ணல்செய்கையோவினையதென்பார். (௨௦)

---

* வானி - காற்றினால் பறக்கும் படம். இக்காலத்திற் பட்டம் என வழங்குப.

o வாட்படுகனலிகால்வானின்கண்ணவாங்காட்புறுநரம்பியாழ்காமர்வீணைகள்வேட்புறுமீர்ங்குழன்மிடறுகாலிசை என்பதை முறை நிரனிறையாக்கி, வாட்படுகனலியின்கண்ணவாங் காட்புறுநரம்பியாழ்காமர்வீணைகள் எனவும் காலின்கண்ணவாம் வேட்புறுமீர்ங்குழல் எனவும் வானின்கண்ணவாம் மிடறுகாலிசையெனவுங் கொள்க.

† சுள் - உலர்ந்தமீன். இது திசைச்சொல்.

Digitized By Roja Muthiah Research Library

மேதியஞ்சென்னிவீரன்வெவ்வலிநிசும்பன் சும்பன்
கோதறுகுருதிக்கண்ணன்குருதியங்குர * த்தன்முந்தே
பூதலம்புரந்தசீர்த்திப்பொருவிறாரகனேபண்ட
னாதியராயுள்கொண்டவையைதன்செயலோவென்பார். (௨௧)

சிரபத்தியளவையில்லாத்திறலரியொருநாற்றந்தக்
கரபத்தினண்ணல்வானோர்யாரையுங்கலக்கஞ்செய்ய
வரபத்திபுரியாவன்னோர்வணங்கினரடையவந்நாட்
சரபத்தின்வடிவங்கொண்டான்றன்செயலாங்கொலென்பார். (௨௨)

வண்டுளர்கமலச்செங்கண்மாயனுந்தூயநீலங்
கண்டமதடைத்ததேவுங்கலந்தனர்தழுவிச்சேரப்
பண்டவர்புணர்ப்புத்தன்னிலுருத்திரர்பரிசாலுற்ற
செண்டுறுகரத்துவள்ளல்செய்கையேபோலுமென்பார். (௨௩)

பிளிற்றுறுகுரலினால்வாய்ப்பெருந்துணையெயிற்றுப்புன்கண்
வெளிற்றுறுதடக்கைகொண்டவேழமாமுகத்தெம்மேலோ
னொளிற்றுறுகலன்மார்பெய்தியுயிர்குடித்துமிழ்ந்ததந்தக்
களிற்றுடைமுகத்துப்பிள்ளைசெய்கையோகாணுமென்பார். (௨௪)

ஈசனைமதிக்கிலாதேயாமுதற்கடவுளென்று
பேசிடுதலைவர்க்கேற்றபெற்றியாற்றண்டமாற்று
மாசறுசங்குகன்னனகட்டழற்குண்டம்போல்வான் 0
றேசுறுபானுகம்பன்முதலினோர்செயலோவென்பார். (௨௫)

நஞ்சுபில்கெயிற்றுப்புத்தேளுகணைப்பள்ளிமீது
தஞ்சமொடிருந்தவண்ணறன்செயலாமோவென்பா
ரஞ்சவணிணையசெய்கைக்கிணையதுநினைவன்றென்பார்
நெஞ்சினுமிதனைச்செய்யநினைக்குமோமலரோனென்பார். (௨௬)

புரந்தரனென்னும்விண்ணோன்புணர்த்திடுசெயலோவென்பார்
கரந்தனன்றிரிவான்செய்யவல்லனோகருத்தன்றென்பா
ரிருந்திடுகடவுளோர்களிழைத்திடுவிதியோவென்பார்
நிரந்துநம்பணியினிற்போர்நினைப்பரோவிதனையென்பார். (௨௭)

கழைத்துணிநறவமாந்திக்களிப்புறுவுணர்ச்சிமுற்றும்
பிழைத்தவராகுமன்றேற்பித்தர்செய்தனராமென்பா
ரிழைத்தநாளெல்லைசென்றோரியற்றியார்யாரோவென்பார்
விழுப்பெருமுனிவர்சொல்லால்வீழ்ந்ததோவிவர்கையென்பார். (௨௮)

அங்கியின்கிளர்ச்சியேபோலவிர்சுடர்க்கூர்வாடன்னைத்
தங்களிலேந்தியின்னோர்சான்றருளறவுசாற்றித்
துங்கமொடமரினேற்றுமுறைமுறைதுணித்தார்கொல்லோ
விங்கிவரிருவர்கையுமிற்றனகாண்மினென்பார். (௨௯)

ஆரிவள்கரத்திலொன்றையடவல்லாரெவர்கண்ணேயோ
பேருறுகாதல்கொண்டுபெண்மதிமயக்கந்தன்னாற்
சீரியவுறுப்பிலொன்றுசின்னமாத்தருவனென்று
கூருடைவாளாலீர்ந்துகொடுத்தனள்போலுமென்பார். (௩0)

* குருதியங்குரன் - இரத்தபீசன். இவனுடைய இரத்தம் விழுந்தவிடமெல்லாம் இவனைப்போ லநேக ருற்பத்தியாவர். இதனைத் தேவிமான்மியத்தாலுணர்க.

0 அகட்டழற்குண்டம்போல்வான் - குண்டோதரன்.

Digitized By Roja Muthiah Research Library

கேடுறுமினையடன்னைக்கேட்பதெனினிரமென்பார்
நாடிநாம்வினாவினோமெனம்மெலாமுனியுமென்பார்
மாடுறப்போவதென்னைமாநிலவரைப்பின்காறு
மோடியேயறிதுமென்பாரினையனவுரைத்தலோடும். (௩௧)

சொல்லியற்சூரன்றங்கைதுன்முகியோடுகைபோய்
வல்லையிற்போதல்கேளாமம்மருற்றவுணமாதர்
சில்லியற்கூந்தறாழத்தெருத்தொறுஞ்செறிந்துகஞ்ச
மொல்லைமுத்துதிர்ப்பதென்னவொண்கணீருகுத்துச்சூழ்ந்தார். (௩௨)

அந்நகர்மகளிர்யாருமாடவர்யாருஞ்சூழ்ந்து
துன்னினரினையவாற்றாற்றுயருழந்திரங்கிச்சோரப்
பின்னவர்தொகுதிநீங்கிப்பிறங்குகோநகரம்போந்து
மன்னவர்மன்னன்வைகுமன்றினுக்கணியளானாள். (௩௩)

அசமுகிநகர்காண்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௭௦௨.

---

# அசமுகிபுலம்புறுபடலம்.

மறிமுகமுடையதீயாண்மன்றினுக்கணியளாகிக்
கிறிசெயுமன்னைதன்னைக்கேளிரைமருகானோரைத்
திறலுடைமுன்னையோரைச்சிந்தையினுன்னியாண்டைப்
பொறிமகளிரியல்போகக்கதறியேபுலம்பலுற்றாள். (௧)

வேறு.

வெறியாருமிதழிமுடிப்பண்ணவர்கோனருள்புரிந்தமேனாள்வந்தாய்
பிறியாதுநுமைப்போற்றித்திரிவனென்றாயம்மொழியும்பிழைத்தாய்போலு
மறியாயோகரம்போனதஞ்சலென்றாயிலைசகுமோவன்னேயன்னே
சிறியேனான்பெண்பிறந்துபட்டபரிபவமென்றுதீருமையோ. (௨)

தாதையானவரளித்தமைந்தர்கணேவிருப்புறுவர்தாயர்பெற்ற
மாதரார்பாலுவகைசெய்திடுவரீதுலகவழக்கமென்பா
ராதலாலென்றுயரமகற்றவந்தாயிலையந்தோவாருமின்றி
யேதிலார்போற்றமியேன்கரமிழந்துமிவ்வுயிர்கொண்டிருப்பதேயோ. (௩)

வருவீரெங்கணுமென்றேயஞ்சாதுபுலோமசையைவலிதேவெளவிப்
பெருவீரமுடன்வந்தேனெனதுகரதலந்துணித்துப்பின்னேசென்று
பொருவீரமாகாளனவனையுமீட்டேகினனப்பொதும்பர்க்கானி
லொருவீருஞ்செல்லீரோநமரங்காணீருமவர்க்கொளித்திட்டீரோ. (௪)

புரங்குறைத்தும்வலிகுறைத்தும்பொங்கியதொன்னிலைகுறைத்தும்புரையுறாத,
வரங்குறைத்தும்புகழ்குறைத்துமறையொழுக்கந்தனைக்குறைத்துமலிசீர்தொல்லை,
யுரங்குறைத்தும்வானவரையேவல்கொண்டோமென்றிருப்பீரொருவன்போந்தெ
ன், கரங்குறைத்ததறியீர்நுந்நாசிகுறைத்தனன்போலுங்காண்மின்காண்மின். (௫)

மேயினான்பொன்னுலகின்மீன்சுமந்துபழிக்கஞ்சிவெருவிக்கானான்
போயினான்போயினான்வலியிலனென்றுரைத்திடுவீர்போலுமன்னா
னேயினானொருவனையேயவன்போந்தென்கரந்துணித்தானில்லக்கூரைத்
தீயினார்கரந்ததிறனாயிற்றேயிந்திரன்றன்செயலுமாதோ. (௬)

Digitized By Roja Muthiah Research Library

எள்ளூற்றனுண்டுகளிற்றுணையாகுஞ்சிறுமைந்தேயெனினும்யார்க்கு
முள்ளூற்றபகையுண்டேற்கேடுளதென்றுரைப்பரஃதுண்மையாமாற்
றள்ளூற்றுந்தள்ளூற்றுமேவல்புரிந்துழல்குலிசத்தடக்கையண்ணல்
கள்ளூற்றுமறைந்திருந்தேயெனதுகரந்துணிப்பித்தான்காண்மின்காண்மின். (௭)

சங்கிருந்தபுணரிதனினடுவிருந்தவடவையெனுந்தழலின்புத்தே
ளங்கிருந்தகுவலயமோடவைமுழுதுங்காலம்பார்த்தொழிப்பதேபோ
லங்கிருந்தென்கரந்துணித்தவொருவோனுமுங்களைமேலடுவன்போலு
மிங்கிருந்தென்செய்கின்றீர்வானவரைச்சிறியரெனவிகழ்ந்திட்டீரே. (௮)

முச்சிரமுண்டிரணியனுக்கிருசிரமுண்டந்தவன்னிமுகற்குமற்றை
வச்சிரவாகுவுக்கொருபான்சிரமுண்டேயவைவாளாவளர்த்திட்டாரோ
விச்சிரங்களென்செய்யுமொருசிரத்தோனென்கரத்தையிறுத்துப்போனா
னச்சுரருக்கஞ்சுவரேபாதலத்திலரக்கரிவர்க்களியரம்மா. (௯)

பிறைசெய்தசீருருவக்குழவியுருக்கொண்டுறுநாட்பெயர்ந்துவானின்
முறைசெய்தசெங்கதிரோனுதபமெய்தீண்டுதலுமுனிந்துபற்றிச்
சிறைசெய்தமருகாவோமருகாவோவொருவனெனைச்செங்கைதீண்டிக்
குறைசெய்துபோவதுவோவினவுகிலாயீதென்னகொடுமைதானே. (௧0)

நீண்டாழிசூழுலகையோரடியாலளவைசெய்தோனேமிதன்னைப்
பூண்டாய்பொன்னுரமெனவிந்நாளுமோர்பழியேபூணுகின்று
யீண்டாருங்குறும்பகைஞரென்கரம்போந்திறமியற்றவினிதுவைய
மாண்டாய்நந்தாரகனேகுறைமதிநீரோநின்பேராற்றலம்மா. (௧௧)

வையொன்றுவச்சிரக்கைப்புரந்தரனைத்தந்தியொடும்வான்மீச்செல்ல
வொய்யென்றுகரத்தொன்றாலெறிந்தனைவீழ்ந்தனன்கிடப்பவுதைத்தாயென்பர்
மெய்யென்றுவியந்திருந்தேன்பட்டிமையோவவன்றாதன்வெகுண்டுவந்தென்
கையொன்றுதடிந்தானேசிங்கமுகவீரவிதுகாண்கிலாயோ. (௧௨)

சூரனும்பெயர்படைத்தவவுணர்கடம்பெருவாழ்வேதொல்லையண்டஞ்
சேரவேபுரந்தனைநின்பரிதிசெங்கோல்குடையெங்குஞ்செல்லாநிற்கு
மாரும்வானவரவற்றிற்கச்சுறுவர்பொன்னகரோனுனைபோற்றும்
வீரமாகாளனிடைக்கண்டிலனுல்வலியர்முனமேவுறாவோ. (௧௩)

ஒன்னார்தஞ்சூழ்ச்சியினாலொருமுனிவனென்சிறுவருயிர்கொண்டேற்று
னிந்நாளிலஃதன்றியொருவனைக்கொண்டெனதுகையுமிழப்பித்தாரே
பின்னுளிவ்வருத்தமுறநன்றரசுபுரிந்தனையாற்பிழையீதன்றே
மன்னுவோமன்னுவோயான்பட்டவிழிவரவைமதிக்கிலாயோ. (௧௪)

காவல்புரிந்துலகாளுமண்ணுவோவண்ணுவோகரமற்றேன்கா
ணேவரெனக்குறவாவருனமுற்றோரிருப்பதுவுமிழுக்கேயன்றே
வாவிதனைவிடுவேனுனதற்குமுனமென்மானமடுவதையோ
பாவியொருபெண்பிறந்தபயனிதுவோவிதிக்கென்பாற்பகைமற்றுண்டோ. (௧௫)

அசமுகிபுலம்புறுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௭௧௭.

Digitized By Roja Muthiah Research Library

# சூரன்றண்டஞ்செய்படலம்.

என்றுபற்பலவுரைத்தனளாவலித்திரங்கிப்
பின்றொடர்ந்திடுதுன்முகிதன்னொடும்பெயரா
மன்றின்மேவருசூரபன்மாவெனும்வலியோன்
பொன்றடங்கழன்முன்னரேவீழ்ந்துபோய்ப்புரண்டாள். (௧)

புரண்டுமற்றவள்சகடையிற்பெயர்ந்திடும்போழ்தின்
மருண்டுபேரவையகத்தினோரஞ்சினர்மறுக
வரண்டருங்கழற்சூரபன்மாவெனுமவுண
னிரண்டுநோக்கினுந்தீயெழவிழித்திவையிசைப்பான். (௨)

என்னையோவிவட்புலம்புதியசமுகத்தினையோ
யுன்னையோர்கிலாதென்னையுநினைகிலாதுன்கை
தன்னையும்மிவள்கரத்தையும்வாளினாற்றடிந்து
முன்னையோரெனவிருந்துளார்யாரெனமொழிந்தான். (௩)

புரந்தரன்புணர்புலோமசைபுவியிலோர்புறத்தி
லிருந்துநோற்றலுமுன்றனக்கென்றுசென்றெடுத்தேம்
விரைந்துவந்தொருவிண்ணவனெங்களைவெகுண்டு
கரந்துணித்துமற்றவளைமீட்டேகினன்கண்டாய். (௪)

என்னுமுன்னரேசொரிந்தனவிழிகனலெரிவாய்
துன்னுதீம்புகைப்படலிகையுமிழ்ந்ததுதுண்டம்
வன்னிகாலுறுகாலெனவுயிர்த்ததுமதிபோன்
மின்னல்வாளெயிறிதழினைமறைத்ததுவிரைவில். (௫)

வெடிக்கலுற்றதெவ்வண்டமென்றையுறவிரைவி
லிடிக்கலுற்றதுதீயவாய்நகைவந்துதிதழுந்
துடிக்கலுற்றதுபுருவமேனிமிர்ந்ததுதுள்ளிக்
கடிக்கலுற்றனவெயிற்றணிகறகறகலிப்ப. (௬)

புயற்புறந்தொறுநித்திலமுதிர்ந்தவாபோல
வியர்ப்புமிக்கனமுறைமுறையன்னதுவிளிய
மயிர்ப்புறந்தொறும்புலிங்கம்வந்தடைந்தனவல்லே
செயிர்ப்பெனுங்கனல்கிளர்ந்ததுசிந்தையினின்றும். (௭)

நீடுவெஞ்சினமித்திறமவனிடைநிகழ
வோடுகின்றனர்திசையுளாருலைந்தனர்முனிவ
ராடுகின்றதோர்தெய்வதக்கணிகையரவன்சீர்
பாடுகின்றவரியாவரும்பதைபதைத்திரிந்தார். (௮)

தாங்கலுற்றிடுதிசைக்கரியோடியதரிக்கு
மோங்கன்மேருவுங்குலைந்தனபணியெலாமுலைந்த
வேங்குகின்றனர்வானவர்நடுங்கினரிரவி
நீங்குநாடியேபோயினன்மீண்டனன்றிரிந்தான். (௯)

பார்நடுங்கினவிண்ணெலாநடுங்கினபரவை
நீர்நடுங்கினவயன்பதநடுங்கினநெடியோ
னூர்நடுங்கினவவுணருநடுங்கினருலகத்
தார்நடுங்கிலரவன்சினஞ்சிறியதோவன்றே. (௰)

Digitized By Roja Muthiah Research Library

அண்ணலம்புகழ்ச்சூரபன்மாவெனவறையுங்
கண்ணில்புன்மனத்தவுணர்கோணித்திறங்கனன்று
துண்ணெனச்சினத்தமரர்கள்யாரையுந்தொலைப்பா
னெண்ணியுற்றிடுமிளையரைப்பார்த்திவையிசைப்பான். (௧௧)

மீனெடுத்துநம்மேவலிற்றிரிந்தவிண்ணவர்கோன்
கானிடத்திருந்தொருவனைக்கொண்டிவர்கரங்க
ளூனெடுத்திடத்தறித்தனனென்றிடினெழுந்த
மானுடத்தருமமிவரேயிங்கினிமாதோ. (௧௨)

பரமனேயலன்பங்கயத்தவிசினோனல்லன்
திருவுலாவருமார்புடைத்தேவனுமல்ல
னிரியும்வாசவன்றானலனவன்பணியியற்று
மொருவனுமிவர்கைதடிந்தாவிகொண்டுறைவான். (௧௩)

விண்மயங்குறுசெருவிடைத்தானையால்வீக்கி
யெண்மைகொண்டுறுமமரரைக்கொணர்தலுமெனது
கண்முனின்றிடுமவுணர்தங்கழிபசியொழிய
வுண்மினீரெனக்கொடுத்திலேனறநினைந்துற்றேன். (௧௪)

மறைவைத்தேயமர்கின்றதோர்வாசவன்றனையு
நறைவைத்தேயமர்பூங்குழற்சசியையுநான்முன்
சிறைவைத்தேனிலன்சிறியரென்றுன்னினன்றீயின்
குறைவைத்தோர்கள்போலாயினேனித்திறங்குறியேன். (௧௫)

கைப்படுத்தியவுயிர்ப்பலிகடிதினுண்ணாது
தப்பவிட்டதோர்மால்கரியொத்தனன்றமியே
னிப்புவிக்கணேயிவர்கரங்குறைத்திட்டதெனது
மெய்ப்படுத்தியவூனமேயலதுவேறுண்டோ. (௧௬)

பூதரந்தனைச்சிறைதடிந்திடுபுரந்தரனை
மாதரார்புகழ்சசிதனைநாடுவான்வழிக்கொ
டேதரின்னமுங்கண்டிலர்கொல்லவர்துணிவா
லேதமின்றியிப்புடவியிற்குறும்புசெய்திருத்தல். (௧௭)

நீரிருந்தனிர்புதல்வருமிருந்தனர்நிகரி
றேரிருந்ததுநேமியுமிருந்ததுசிறிதென்
பேரிருந்ததுயானுமிங்கிருந்தனன்பின்னை
யாரிருந்துமென்னிருந்துமாகின்றதென்னந்தோ. (௧௮)

வானளாவுவெண்பஞ்சியின்மால்வரைவறிதே
தீநிலாயதோரளவையின்முடிந்திடுஞ்செயல்போற்
றூநிலாவெயிற்றினையர்கைச்சோரியின்றுளியாற்
போனதேபலவண்டமுங்கொண்டநம்புகழே. (௧௯)

இழிவுமிங்கிவர்க்குறுவதேயிமையவர்தங்கள்
வழியினின்றதோரரந்தையுமிவ்விடைவருமே
பழியுமென்னிடத்தெய்துமேயென்றுமிப்பழிதா
னொழிவதில்லையேபொறுப்பதேயதனையென்னுயிரே. (௨௰)

Digitized By Roja Muthiah Research Library

மல்லலந்தடந்தேர்கடக்கைம்மலைவயமா
வெல்லையில்லவுமவுணருமெங்கணுமிருப்பச்
சில்லைமென்குழலசமுகிபடுவதித்திறமோ
நல்லநல்லவென்னரசியன்முறையெனநக்கான். (உக)

நக்ககாலையிற்காலுறும்வார்கழனரல
மக்கடங்களிற்பானுகோபப்பெயர்வலியோன்
செக்கரங்கியிற்கிளர்ந்துதன்றந்தைமுன்செவ்வே
புக்குவந்தனைசெய்துநின்றினையனபுகல்வான். (உஉ)

ஐயகேண்மதிமதகுற்றேவலாலமுங்கித்
தொய்யலுள்ளமோடிந்திரன்கரந்தனன்சுரரு
ணொய்யரித்தொழினினைப்பதுஞ்செய்யலர்நங்கை
கையிழந்ததென்மாயமோவுணர்கிலேன்கவல்வேன். (உ௩)

வந்திபெற்றிடுகான்முளையெட்டிவான்றவழு
மிந்துவைக்கரங்கொண்டனனென்பதோரியல்பே
யந்தரத்தரிலொருவனேயினையவரங்கை
சிந்தியுற்றனனென்றுநீயுரைத்திடுந்திறனே. (உ௪)

வலியராகியேபுரிந்தனரெனினுமற்றவர்கண்
மெலியராற்றநீவெகுளுறுந்தகைமைமேவினரோ
வொலிதருங்கடன்மீன்சுமந்துன்பணியுழந்தா
ரலியரல்லதையாண்டகையார்கொலோவனையோர். (உ௫)

நறைமலர்க்கமலத்தனைவெகுளினுமாரத்
துறையுள்வைகியமுகுந்தனைவெகுளினுமும்ப
ரெறிபுனற்சடையிறைவனைவெகுளினுமியல்பே
சிறியர்தம்மையுமுனிதியோபெருமையிற்சிறந்தோய். (உ௬)

முத்திறப்படுந்தேவரேயல்லதுன்முனிவிற்
கெத்திறத்தினரியைந்துளோரினையர்க்குமினைத்தே
சித்தமுற்றிடும்வெகுளியைத்தீருதியின்னோர்
கைத்தலந்தனையிழந்துழிப்பெயருவன்கடிதின். (உ௭)

விசையவாளினாலிங்கிவர்கரந்தனைவீட்டு
மசைவிலாடவன்றன்னைநின்னுளத்தின்மாலளித்த
சசியையிந்திரக்கள்வனைத்தம்முயிர்தமக்குப்
பசையிலாததோரமரரைப்பற்றினன்படர்வேன். (உ௮)

அங்கணுற்றிலர்மறைகுவரேயெனினகில
மெங்குநாடுவனனையர்வாழ்துறக்கநாடேகிச்
செங்கனற்கொளவளிக்குவனமரர்தந்திறத்தை
மங்கைமாரொடும்பற்றியோர்கன்னலின்வருவேன். (உ௯)

ஈதியால்விடைதமியனுக்கென்றுநின்றிரப்பத்
தாதையாகியவவுணர்கோன்முனிவினைத்தணிந்து
போதிமைந்தநின்படையொடுமாங்கெனப்புகல
வாதவன்பகையழகிதென்றுவகையையடைந்தான். (௩0)

Digitized By Roja Muthiah Research Library

ஓகைசேர்தருவிண்ணவர்மணிமுடியுரிஞ்சிச்
சேகைசேர்தருதாதைதாளுச்சியிற்சேர்த்தி
வாகைசேர்சிறுதந்தையர்தம்மையும்வணங்கிப்
போகைசேர்விடைகொண்டுதன்னிருக்கையிற்போனான். (௩௧)

மைந்தனேகலுஞ்சூரபன்மாவெனும்வலியோ
னுந்துதீவிழியுழையரிற்சிலவரைநோக்கி
யந்தநான்முகனிங்ஙனம்வருகுவனவனை
நந்தமுன்னுறக்கொடுவருவீரெனநவின்றான். (௩௨)

எங்கணுற்றுளானயனெனக்கூவினரேகிப்
பங்கயத்தனைக்கண்டுநிற்கொணர்கெனப்பணித்தா
னெங்கள்கொற்றவனென்றலுமொல்லெனநடவா
வோங்கமைந்துடனவுணர்கண்மன்னன்முன்னணைந்தான். (௩௩)

அணைந்தபூமகன்வைகலேபக்கநாளவற்றாற்
புணர்ந்தயோகொடுகரணமேலுள்ளனபுகல
நுணங்குசிந்தையாலகிலமும்படைத்துளாய்நொய்திற்
றணந்தகையிவர்க்குதவுதியென்றனன்றலைவன். (௩௪)

என்றுதானிவைமொழிதலுந்திசைமுகனிசைந்து
வன்றிறற்கரங்கூடுகமற்றிவர்க்கெனலு
மொன்றொர்மாத்திரைப்பொழுதின்முனைவைவளர்ந்துறலு
நன்றுநன்றுநின்வல்லபமென்றுசூர்நவின்றான். (௩௫)

அன்னதற்பின்னரசமுகத்தணங்கிளையரசன்
றென்னகர்க்குளேயிருந்திடச்செய்துதுன்முகத்தி
தன்னைமைந்தனோடுய்த்தனன்புலோமசைத்தையன்
முன்னிருந்துழிகாட்டியேவருகெனமொழிந்து. (௩௬)

உழைத்திரிந்தபல்சிலதரைநோக்கியேயுலகிற்
றழைத்தசெங்கதிர்க்கடவுளைத்தாரகாகணத்தை
யெழுச்சிகொண்டுறுகோளினையாரையுமின்னே
யழைத்திராலெனச்சொற்றனனவுணர்கட்கரசன். (௩௭)

சேடர்பற்பலர்விடைகொடுசேட்புலஞ்சென்று
நேடியன்னவர்தமையெலாங்கொணர்ந்துமுன்னிறுவ
மூடுகொண்டலிற்கரந்தமின்பின்னெழுமுறைபோற்
கேடுகொண்டதொல்சினவெரிசூரனுட்கிளர்ந்த. (௩௮)

வியர்க்குநெஞ்சினன்கதிர்முதலோர்தமைவிளியா
வயர்க்கையின்றியேவானிடைத்திரியுநீரறியா
வியற்கையொன்றிலையெங்கைதன்செங்கையையெறிந்தோன்
செயற்கைகாணுதிர்வறிதுநீரிருந்ததென்சேணில். (௩௯)

இளையடன்கரங்குறைத்திடுமிமையவனுயிரைக்
களைதல்செய்திலீரல்லதேலனையனைக்கட்டித்
தளைசெய்திவ்விடைக்கொணர்ந்திலீரல்லதத்தலையில்
விளைவைவந்தெமக்குரைத்திலீர்நன்றுநும்மிகுதி. (௪0)



Digitized By Roja Muthiah Research Library

மறத்திறத்திஞலெங்கைதன் கையையோர்வலியோன்
குறைத்ததற்குநீரகத்தரேயல்லதுகுறிக்கிற்
புறத்தரன்றுநம்மாணையாலித்தொழில்புரிவீர்
முறைத்திறங்கொலோநுங்களுக்கிதுவெனமொழிந்தான். (௪௧)

நீதியில்லவனிங்கிவையுரைத்தலுநிருப
வேதுமெங்களைவெகுளலையிங்கிவள்கரத்தைக்
காதுவான்றனைக்கண்டிலமின்றுசெல்கதியின்
மீதுசென்றவெம்விழியெனவுரைத்தனர்விண்ணோர். (௪௨)

துண்டமாகியேயிவள்கரந்துணிபட்டசெய்கை
கண்டிலார்களாங்கதியிடைச்சென்றவாங்கண்க
ளண்டர்தஞ்செயலழகிதென்றனையரையெல்லாந்
தண்டலில்லதோர்சிறைபுரிவித்தனன்றலைவன். (௪௩)

வேறு.

தினகரன்முதலினோர்சிறையிற்புக்கபின், வினைஞரிற்சிலர்தமைவிளித்துநீவிர்போ
ய்த், துணைவருமருத்துவர்தொகையைத்தம்மென, முனிவொடுதூண்டினன்முடிவி
லாற்றலான். (௪௪)

ஒற்றரிலொருசிலரொல்லையேகியே, குற்றமின்மருத்துவர்குழாத்தைக்கூவியே,
பற்றிமுன்னுய்த்தலும்பதைக்குநெஞ்சினன், றெற்றெனவாங்கவர்க்கிதனைச்செப்பு
வான். (௪௫)

வானிடைமண்ணிடைமாதிரத்திடை, மேனிகழ்கடலிடைவியன்பிலத்திடை
யூனிடையுயிரிடையொழிந்துநின்றிடு, மேனையபொருளிடையெங்குநிற்றிரால். ()

ஏனுறுகின்றவென்னிளையள்கையையோர், சேணினன்வாள்கொடுசேதித்திட்ட
தைக், காணுதிருமக்கெவர்கரக்கற்பாலினோர், நீணகர்குறுகியிந்நிலைமைசொற்றிலீர்.

தரியலர்சூழ்ச்சியாற்றகுவர்க்கிப்பழி, வருவதுநன்றெனமகிழ்ந்துவைகினீர்
பெருமிதநன்றெனப்பேசமாறுசொல், லுரையறநின்றனருலவைப்பண்ணவர். ௪௮

வன்றிறலின்றியேமனத்திலச்சமாய், நின்றிடுகால்களைநீடுகால்களிற்
றுன்றியகனைகழற்சூரனென்பவ, னென்றொருசிறைதனிலுய்த்திட்டானரோ. ௪௯

சுற்றினையிழைத்திடவிருக்குங்கால்களைச், சீற்றமொடவுணர்கோன்சிறையில்வீ
ட்டினன், சாற்றிடினுலகமேற்றவத்தினால்வரும், பேற்றினுமுளதுகொல்பெருமை
த்தானதே. (௫௦)

திரிதருமருத்தரைச்சிறையில்வைத்தபின், குரைகழல்வினைஞரைக்கூவியிற்றை
யாண், டிருதுநன்மதிமுதலெல்லையாளரைத், தருதிரென்றுரைத்தலுந்தாழ்ந்துபோ
யினர். (௫௧)

ஏவலராயினோரேகியெல்லையின், காவலராகியகடவுளோர்தமைக்
கூவினர்பற்றியேகொடுவந்துய்த்தலுந், தேவர்கண்மாற்றலன்சீறிக்கூறுவான். ()

புல்லியமகபதிபுணர்த்தவச்செய, லொல்லுவதென்றதற்குள்ளமாகினீ, ரெல்லிரு
மனமகிழ்ந்திருத்திரென்னெடுஞ், சொல்லியவந்திலீரியாண்டுந்துன்னினீர். (௫௩)

நிரந்தரநம்பணிநெறியினின்றுநீ, ரிருந்ததிற்பயனெவனிருக்கலாமையால்
வருந்தவறென்சுரர்மருங்குற்றீரெனு, வருந்தலையிட்டனனவர்கடம்மையும். (௫௪)

Digitized By Roja Muthiah Research Library

தூவலிகெழுவியசூரன்பின்சில, வேவலர்தங்களைவிளித்திட்டிப்புவி
காவலர்தமையெலாங்கடிதுவம்மெனக், கூவுதிர்தம்மெனக்கூறித்தூண்டினான். ()

தூண்டலுமளவைதீர்தூதரோடியே, யீண்டியகாவலரினத்தைமாநிலந், தேண்டினர்பற்றியேசென்றுவென்றிகொ, ளாண்டகையிறைவனதவையினுய்ப்பவே. ()

ஆக்கையில்வியர்ப்புறவச்சநாணுயிர், தாக்குறநணியுளந்தளரக்கைதொழுங், காக்குநர்தொகுதியைக்காவன்மன்னவ, னோக்கினன்வெகுண்டிதுநுவறன்மேயினான்.

எளித்துறலின்றிநம்மேவனீங்கியே, களித்திடுசசியொடுங்கடவுள்வாசவ
னொளித்தனனிம்பரினும்பரில்லைநீ, ரளித்ததுசாலவுமழகிதாமரோ. (௫௮)

குறித்திடுபுரைமனக்கொண்டலூர்பவ, னெறித்திகழாணையினின்றதூதுவன்
மறித்திருமுகனுடைமங்கைதன்சர, மறுத்தவணிருந்தனனதுவுந்தேர்ந்திலீர். ()

மறங்கிளர்தேறல்வாய்மடுத்துவைகலுங், கறங்குறுநிலையராய்க்கலங்கினீர்கொலோ, வுறங்கினிரேகொலோவோம்பலீர்கொலோ, பிறங்குதொல்வளமையாற்பித்துற்றீர்கொலோ. (௬0)

ஓயுமென்பகைஞரோடுறவுற்றீர்கொலோ, வாயவர்தங்களுக்கஞ்சினீர்கொலோ, சேயிழையாரிடைச்செருக்குற்றீர்கொலோ, நீயிர்களிருந்ததென்னிலைமையென்னவே. (௬௧)

எண்டருமெந்தைநீயிசைத்ததன்மையிற், கொண்டிலமொன்றுமக்குவலயந்தனைப், பண்டுதொட்டளிக்குநும்பகைஞர்யாரையுங், கண்டிலங்கரந்துறைகதையுங்கேட்டிலம். (௬௨)

தாயெனுமேழகத்தலையடுள்முக, வாயிழையொடும்வரலதுவுமன்னர்கை
போயதுந்தெரிந்திலம்புந்திகொள்ளுநி, மாயமிதாகுமான்மன்னவென்னவே. ௬௩

மிடைதருவெறுக்கையைமிசைந்துமால்கொளீஇப், புடவியையிடைதொறும்போற்றல்செய்திலீ, ரிடையுறவென்வயினிலையதோர்பழி, யடைவதுமாயையாமழகிதேயென்றான். (௬௪)

வேறு.

ஒலிகெழுமுவரிப்புத்தேளுள்ளுறைவடவைச்செந்தீத்
தொலைவுழியெழுவதேபோற்சூரனுட்சினமீக்கொள்ள
மலிகதிரிருள்புக்கென்னவாளுநீஇமருங்கேதானைத்
தலைவர்நின்றாரையேவித்தனித்தனிதண்டஞ்செய்வான். (௬௫)

சிற்சிலர்தமதுநாவைச்செங்கையைச்சேதித்திட்டான்
சிற்சிலர்துண்டந்தன்னைச்செவிகளைக்களைதல்செய்தான்
சிற்சிலர்மருமந்தன்னைச்சிறுபுறத்தொடுகொய்வித்தான்
சிற்சிலர்தாளைத்தோளைச்சென்னியைச்சேதிப்பித்தான். (௬௬)

எறிதருகழற்காற்சூரனித்திறம்பஃறண்டங்கண்
முறையினிற்செய்துசீயமுழுமணித்தவிசிற்றீர்ந்து
விறல்கெழுமிளையர்செல்லவிடைகொடுத்தயனைநோக்கி
மறைமுனிபோதியென்னமற்றவனினையசொற்றான். (௬௭)

மன்னவர்மன்னகேண்மோவான்கதிருடுக்களேனை
ரிந்நிலமடந்தைவேலைக்கிறையவர்யாருமென்று
முன்னுடைப்பணியினிற்பருலகிவரின்றியாகா
வன்னவர்பிழையுட்கொள்ளேலருஞ்சிறைவிடுத்தியென்றான். (௬௮

Digitized By Roja Muthiah Research Library

குறையிரந்திளையகூறிக்கோகனதத்தோன்வேண்ட
நறையிருந்துலவுதாரோனன்றெனவிசைவுகொள்ளா
வுறையிருந்திலங்கும்வாட்கையொற்றரைநோக்கிநந்தஞ்
சிறையிருந்தோரைத்தம்மினென்றலுஞ்சென்றங்குய்த்தார். (௬௯)

வன்றளையுற்றோர்தம்மைமன்னவர்மன்னன்பாரா
வென்றுநம்பணியினிற்றிரிந்திரனொடுசேர்கல்விர்
சென்றிடுநுங்கடொன்மைசெய்திடவென்னவன்னோர்
நன்றிதுபுரிதுமென்னுநயமொழிபுகன்றுபோனார். (௭0)

போதலுங்கமலத்தோற்கும்புதல்வர்க்குமமைச்சர்யார்க்கு
மேதகுமுனிவர்யார்க்கும்வியன்படைத்தலைமையோர்க்கும்
போதலையுதவிச்சூரனுறையுளிற்புகுந்தான்முன்செ
லாதவன்பகைஞன்செய்தசெயலினையறைதலுற்றேன். (௭௧)

சூரன்றண்டஞ்செய்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௭அஅ.

## அமரர்சிறைபுகுபடலம்.

எழிலிகண்மொய்த்ததன்னிருக்கைபோகிய
மழவுறுசூர்மகன்மாறிலாதபே
ரழகினைமெய்கொளவணிந்துதொல்படை
விழுமியகொண்டனன்மிலைச்சித்தும்பையே. (௧)

இருவகைப்பத்துநூறிவுளிபூண்டிடு
மொருதனித்தேர்தனையொல்லையூர்ந்துராய்த்
திருமுதற்கடைதனிற்செல்லுமெல்லையில்
விரைவினிற்சுற்றினவனிகவெள்ளமே. (௨)

நிரைத்தெழுதானவர்நீத்தமாயிரம்
பரித்தொகையன்னதேபாதிதேர்கரி
யுரைத்தவத்தானையோடொல்லையேகினான்
றிருத்தகுமிரவியைச்சிறையில்வீட்டினான். (௩)

கிளர்ந்தனதூளிகள்கெழீஇயவீரர்தோள்
வளர்ந்தனவவரணிமாலையிற்படீஇ
யுளர்ந்தனவண்டினமும்பர்தம்மனந்
தளர்ந்தனநெளிந்தனன்றரிக்குஞ்சேடனே. (௪)

பொள்ளெனவாண்டெழுபூழிபாரினுந்
தள்ளரும்விசும்பினுநிரந்ததானவ
ரெள்ளுறுமமரர்தம்மிருக்கைநாடிய
வுள்ளொடுபவத்துகளொருங்குசென்றபோல். (௫)

வேறு.

ஏறியபூழிநாப்பணீண்டியவிவுளிவாயின்
வீறுகொள்களிற்றுக்கையின்விலாழியுங்கரிக்கபோலத்
தூறியகடமுமொன்றுயொழுகுதன்மழைசூழ்குன்றி
னூறுகளிழிந்துவைய்த்தடைவதுபோலுமன்றே. (௬)

Digitized By Roja Muthiah Research Library

பாணிறமுதலவாயபல்வகைவண்ணத்துள்ள
காணிமிர்துவசக்காடுங்கவிகையின்கானுமொய்த்த
சேனமுங்கழுகுமேனைச்சிறைகெழுபுள்ளும்வெம்போ
ரூனுகர்பொருட்டுத்தாமுமும்பருற்றிடுவதேபோல். (௭)

மண்ணுறுதுகளின்மாலைமகேந்திரமூதூர்முற்றுந்
துண்ணெனமறைத்தலோடுந்துளங்கியேசூரற்கஞ்சி
விண்ணிடைமதிபல்கோடிமேவல்போல்வெளியசெய்ய
தண்ணிழற்கவிகையீட்டந்தலைத்தலையீண்டிற்றன்றே. (௮)

முறையிதுநிகழமைந்தன்முதியமாநகரநீங்கி
யறைகடலகழிதாவியவனியினெல்லையேகிச்
சிறைவருதுன்முகத்துத்தெரிவையையநோக்கிநுங்கை
யெறிசுடர்வாளாலிற்றதெவ்விடையியம்புகென்றான். (௯)

என்னலுங்குமரகேண்மோவெங்கரந்துணித்தோர்வீரன்
மன்னினன்சசியுமுற்றாண்மதுமலர்ப்பொதும்பரொன்றி
னன்னதுமிஃதேயென்றோரணிவிரற்சுட்டிக்காட்டப்
பன்னிருபெயர்ச்சீர்காழிப்பழுமரக்காவிற்சேர்ந்தான். (௧௦)

தேசுறுமிரவிதன்னைச்செயிர்த்திடுசிறுவன்றானைத்
தூசிமுன்சென்றுகாவைத்தொலைத்துவெள்ளிடையதாக்க
வாசவன்மனையைக்கூர்வாள்வயவனைநாடிக்காணான்
காசினியாண்டுந்தேர்ந்துகாமர்பொன்னுலகிற்போனான். (௧௧)

வேறு.

அந்நிலையவுணர்களனிகம்யாவையு, முன்னுறவேகியேமொய்ப்பவாங்கவர், மெய்ந்நிறைமணிவெயில்விரிந்துசூழ்தலாற், பொன்னகர்வேறோர்பொன்னகரம்போன்றதே. (௧௨)

எழுந்திடுமுனியினரிமைக்கும்வெவ்வழல், வழிந்திடுகண்ணினர்மடித்தவாயினர்
கழிந்திடுதிறலினர்ககனவாணர்க, ளழிந்திடமார்ப்பினரவுணரெய்தினார். (௧௩)

மண்டலமேமுதல்வகுத்தவான்கதி, கொண்டிடுகந்துகக்குழுவின்மாலைகள்
விண்டொடர்செலவினில்விரவுபூழியா, லண்டமும்புவியெனவையமாக்கிய. (௧௪)

இலகியபொன்னகரெல்லையெங்கணு, மலைதருமதநதியாக்கியாயிடை
நிலவியகங்கைமாநீத்தம்யாவுமுண், டுலவுதலுற்றனவொருத்தல்யானையே. (௧௫)

வெங்கரிசொரிமதம்விரும்பும்வண்டினங், கொங்கிவர்தருமலர்க்கூந்தல்வாசத்தா
லங்குளமாதர்மேலணுகிவையக, மங்கையர்கொல்லெனமால்செய்கின்றவே. (௧௬)

அற்றமில்வலியரைச்சிறியராயினோர், பற்றிடின்மேனெறிப்பாலராவரால்
வெற்றிகொளவுணர்கோன்வேழத்தின்குழாஞ், சுற்றியபறவையுந்துறக்கம்புக்கவே.

மன்னவனோடினன்மைந்தனேயுளன், முன்னுறுபகையினைமுடித்தும்யாமெனா, விந்நிலவரையெலாமேகிச்சூழ்ந்தபோற், பொன்னகர்வளைந்தனபொலம்பொற்றேர்களே. (௧௮)

விடர்நெறியொழுகியவெய்யர்மேலையோ, ரிடமுறுமகளிரையெய்திப்பற்றல்போற்
கடிகமழ்தருவினைக்கலந்துசுற்றிய, கொடியினையீர்த்தனகொடியின்கானமே. (௧௯)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

செந்தோடவிழுந்தாராணிச்செய்கைநிகழச்சேண்புகலு
மந்தோவென்றுபதைபதையாவலமந்தேங்கியறிவழிந்து
வந்தோன்பா[illegible]ப்பகைவனெனுமகவான்செம்மலொடுவானோர்
நொந்தோடினர்போயுரைத்திடலுமனையோனினைய நுவல்கின்றான். (௨௦)

எந்தையாகுங்குரவனிலையிமையோர்குழுவிற்பலரில்லை
தந்தையெம்மோயிங்கில்லைதமியேனும்மோடிருந்தேனா
லந்தவசுரன்சென்றமையுமல்லல்புரியுந்திறம்போலு
முந்தைவிதியையறிவேனோவென்னோவின்றுமுடிந்திடுமே. (௨௧)

பாடின்றேங்குதிருநீங்கப்பயந்தோர்சரக்கப்பழிவேலை
வீடின்றாகத்தமர்பரியவெஞ்சூர்முதல்வன்பணிபோற்றி
யீடின்றாயுமிப்பகல்காறிந்நகரத்திருந்தேனாற்
கேடின்றாகுமென்செய்கேன்கிளத்தீர்புரைதீருளத்தீரே. (௨௨)

தாயும்பயந்ததொல்லோனுந்தமராகுற்றவமரர்களும்
பாயுங்கடல்சூழ்நிலவரைப்பிற்கரந்தாரதனைப்பல்லவுண
ராயும்படியேதிரிந்தனராலற்றுமெல்லையளியேமும்
போயெங்குறைவோநமையெல்லாம்போற்றும்படிக்கோர்புகலுண்டோ. (௨௩)

போவதில்லையாண்டுமினிப்புலம்புமாறுமில்லையதி
னாவதில்லைவருவதெல்லாமடையுமன்றியகலுவதோ
வீவதில்லையவர்க்குவெரிநிறைஞ்சிப்புகழ்வதில்லையெதிர்ந்து
சாவதல்லாலுய்ந்திடுதலிரண்டேயுறுதிதமியேற்கே. (௨௪)

அஞ்சேன்மன்னோவவர்க்கினியானாவிபொருளாக்கொள்ளாதார்
நஞ்சேபொருவுந்தீங்குறினுநடுக்கஞ்செய்யாரிடர்ப்படியார்
தஞ்சேவகத்தினெறிபிழையாரஃதேபோலத்தானவர்கோன்
வெஞ்சேனைகளேற்றெதிர்செல்வேன்வெல்வேன்பலரைக்கொல்வேனே. (௨௫)

செருவீரமுடனவர்ப்பொருவான்செல்வனீருமெற்போற்றி
வருவீர்வம்மின்வல்லாதீர்வல்லையின்னேவழிக்கொண்மி
னொருவீரன்றியெல்லீருமுள்ளத்தஞ்சியொருவியழி
தருவீரேனுநன்றிறையுந்தளரேன்றுணிந்ததமியேனே. (௨௬)

என்றுசயந்தன்மொழிந்திடலுமிமையோர்கேளாவிடருழவா
வுன்றனுள்ளமீதாயினெமக்குவேறோருணர்வுண்டோ
வென்றியவுணர்பணிபுரிந்துவீடாவிழுமந்துய்ப்பதினும்
பொன்றிவிடுதலினிதம்மாவெழுதிகடிதேபோர்க்கென்றார். (௨௭)

வேறு.

சயந்தனதுகேட்டமரர்தங்குழுவைநோக்கித்
துயர்ந்தநுமசிந்தனைதுணிந்ததுகொலென்னா
வியந்துகனகத்தவிசின்மேவுதல்விடாத்தன்
கயந்தனைநினைப்பவதுணர்ந்ததுகருத்தில். (௨௮)

கல்கெழுநுதற்சிறியகண்சுளகுகன்ன
மல்கியகறைப்பதமருப்பிணையிரட்டை
மெல்கியபுழைக்கரம்வெளிற்றுடலின்வேழம்
பில்கியமதத்தொடுபெயர்ந்துளதையன்றே. (௨௯)

Digitized By Roja Muthiah Research Library

இந்திரகுமாரனையிறைஞ்சியெதிராகி
வந்திடவதன்பிடரில்வல்லைதனிலேறி
யுந்தினனடாத்தியயனும்பர்புறமொய்ப்பப்
புந்திகெழுவேர்வினொடுபொள்ளெனவகன்றான். (௧0)

போகிதருகாலைபசும்பொற்புயனிறத்தா
னாகம்வெளிறுகுமயிராவதமிசைக்கண்
வாகுபெறமேவுவதுமன்னுநெடுமால்பாற்
சீகரவளக்கரிடைசெவ்விதிருந்தன்ன. (௧௧)

பாங்கருறுவானவர்கள்பல்படையுமேந்தி
வீங்குதுயர்கொண்டகலவேறொரிடைகாறா
நீங்கல்வசையென்பதுநினைந்துதுணிவாகி
யாங்கவனொடேகினர்களச்சமிலரேபோல். (௧௨)

பெருந்தவளமெய்க்கரிபிளிற்றொலியுமுள்ளத்
தரந்தையுறுவானவர்தமார்ப்பொலியுமாற்றப்
பரந்தபகுவாய்முரசுபண்ணொலியுமொன்றாய்
வருந்தவறெனக்ககனம்வாய்விடுதல்போலும். (௧௩)

ஊழிவருகாலனையவும்பர்படைசெல்லப்
பூழிநிமிர்ந்தேகினபொலத்துயர்நிலத்த
வாழிகொள்சுவர்க்கமெரிவௌவுநமையென்றுக்
கேழிலுயர்மேனிலைகிளர்ந்தெழுதல்போலும். (௧௪)

முறையிதுநிகழ்ந்திடமுரட்களிறுமேலான்
வறியமகவான்மதலைமாநகரநீங்கி
யெறிகதிரருக்கனையிருஞ்சிறையில்வீட்டுஞ்
சிறுவனணிகத்தினெதிர்சென்றுபுகலோடும். (௧௫)

வற்புறுதயித்தியர்வருஞ்சுரரைநோக்கி
முற்பகலினெல்லையுமுறைப்பணிபுரிந்தார்
தற்பமுடனின்றுசமருன்னிவருவாரோ
வற்புதமிதற்புதமிதென்றறையலுற்றார். (௧௬)

கிட்டினர்கள்வானவர்கிடைத்ததமரென்று
முட்டினர்தெழித்தவுணர்முன்பினிருபாலா
ரொட்டினர்முனிந்தயில்களுய்த்தனர்கைவாளால்
வெட்டினர்குனித்துவில்வடிக்கணைவிடுத்தார். (௧௭)

எழுப்படைவிடுத்தனரெடுத்தகதைவிட்டார்
மழுப்படையெறிந்தனர்வயிர்க்குலிசமுய்த்தார்
நிழற்பரவுமுத்தலைநெடும்படைகடொட்டார்
சுழற்றினருருட்டினர்சுடர்ப்பரிதிநேமி. (௧௮)

மாரியெனவிப்படைவழங்கியிமையோருஞ்
சீரவுணராயினருஞ்சேர்ந்துபொருமெல்லைச்
சோரியதுதோன்றியதுதூயவிரும்பெற்றும்
பாரியவுலத்திடைபரந்தெழுகனற்போல். (௧௯)

Digitized By Roja Muthiah Research Library

அங்கமெழுசெங்குருதியாற்றினிமிர்ந்தோடி
யெங்கணுநிரந்தனவிமைப்பிலவர்வைகுந்
துங்கமிகுமும்பரிடைசூர்மதலைசீற்ற
வெங்கனலெழுந்துமுன்மிசைந்திடுவதேபோல். (௪0)

நீடிருதிறத்தருநெடும்படைகளேந்தி
யாடல்புரிகாலையழிந்தாற்றலிலராகி
யோடினர்கள்வானவர்களொல்லைதொடர்ந்தேபின்
கூடினர்கள்வெவ்வவுணர்குற்றினர்கள்பற்றி. (௪௧)

சேண்கொடுமுரிந்துபடர்தேவர்குழுவோரை
யேண்கொடுவருந்தகுவர்யாத்தனர்புயங்க
ணூண்கொடுதிரும்பினர்நலங்கொள்கலைமானை
மாண்கொடுவரித்தொகுதிவவ்வியகன்றென்ன. (௪௨)

இடுக்கணுறுதேவர்தமையீர்த்தனர்கொடேகி
மிடற்கதிரருக்கனைவெகுண்டவன்முனுய்ப்பக்
கடக்கரியவன்மையொடுகாவல்கொளுமென்றுன்
றடக்களிறுமேல்வருசயந்தனிவைகண்டான். (௪௩)

வேறு.

கண்டான்வெகுண்டான்புகையாரழல்கல்லென்மேக
முண்டானெனவேயுமிழ்ந்தானொருதன்சிலைக்கைக்
கொண்டான்குணத்தினிசைகாட்டினன்கோட்டிநேர்போ
யண்டார்வெருவக்கணைமாரிகளார்ப்பொடுய்த்தான். (௪௪)

பொழியும்பொழுதத்தவுணப்படைபோந்தவீரர்
மொழியுமனமுநணிதாழ்த்திடமுன்னரேகி
யொழியுங்கடைநாளரன்வெற்பையுறுதுசூழ்போஞ்
சுழியுங்கடல்போலவனூர்கரிசுற்றியார்த்தார். (௪௫)

சயந்தன்மிசையும்பொலங்கிம்புரித்தந்தவெள்ளைக்
கயந்தன்மிசையுஞ்சிலைவாங்கிக்கணைகள்கோடி
பயந்தந்திடத்தூர்த்தனர்சோமனைப்பன்னகங்கள்
வயந்தன்னொடுபோய்முயலோடுமறைக்குமாபோல். (௪௬)

கல்லென்றரற்றுங்கழல்வீரர்கனைந்துசுற்றிச்
செல்லென்றுவிட்டகணையாவையுஞ்சிந்திவல்லே
மல்லொன்றுமொய்ம்பிற்சயந்தன்சரமாரிதூண்டி
வில்லும்மனையோர்தனுவும்புவிவீட்டினூல். (௪௭)

வீட்டிக்கணைகளவுணப்படைமீதுதூர்த்து
மோட்டுக்களிற்றின்றுகைதன்னைமுகங்கொள்பாய்மா
வீட்டத்தினைத்தேர்களைவீரரினத்தையெல்லாம்
வாட்டிப்பின்வெள்ளமொருநூற்றினைமாய்வுசெய்தான். (௪௮)

வாலிற்புடைக்கும்புழைக்கைகொடுவாரியெற்றுங்
காலிற்படுக்குமருப்பாலடுங்கந்தரம்போ
லோலிட்டுயிருண்டிடுமோங்கவனூர்ந்தவேழஞ்
சீலக்கதிரைச்சிறையிட்டவன்சேனைதன்னை. (௪௯)

Digitized By Roja Muthiah Research Library

நூறாய்ப்புகுதானவர்வெள்ளநொடிப்பின்மாய
வீறாய்ப்படையும்பலபூண்களுமீனமாக
வாறாய்க்குருதிபெயர்ந்தேயகல்வானநீத்த
மாறாய்ப்பொருதுமிசையோடிவளைந்துகொண்ட. (௫0)

காய்கொல்லிபமேற்சயந்தன்னடுகாலைதன்னிற்
பேய்கொல்லுணைத்தீண்டினமேல்வரும்பெற்றியோராய்
தீகொல்பறவைபுரைவாயமர்சேனைதன்னை
நீகொல்லடுதியெனவந்தனனீலகேசன். (௫௧)

எண்ணத்தவரையலைக்கின்றவிருண்டகேசன்
றண்ணத்தவரைநிகர்கின்றசயந்தன்முன்போய்
விண்ணத்தவரைமுகிறுங்குறும்வேடமென்ன
வண்ணத்தவரைக்குனித்தம்பெனுமாரிதூர்த்தான். (௫௨)

தூர்த்தானதுகாற்சயந்தன்னெதிர்தூண்டிவாளி
தீர்த்தான்சரமாரியையன்றியுஞ்சின்னமாக்கி
யார்த்தான்கவசமவனிட்டதையம்புநூறால்
வேர்த்தானுயிர்த்தானிருட்குஞ்சியன்மேகமொப்பான். (௫௩)

பாசம்பிணித்தவரணம்பரிவெய்தநீல
கேசன்விடுத்தோர்பிறையம்பினைக்கேடில்விண்ணோ
ரீசன்சிறுவன்சிலைநாணையிறுத்திசைத்தான்
காசொன்றரவந்துணியப்பகைகௌவுமாபோல். (௫௪)

சின்னம்படலும்பெருநாண்சிலைவீழவிட்டுத்
தன்னந்தனியாஞ்சயந்தன்சமர்செய்வதற்கு
முன்னம்பயிற்றுமொருமாயையைமுன்னியாற்றித்
துன்னந்தருபல்லுருவங்கொடுதோன்றியுற்றான். (௫௫)

வேறு.

ஒன்றேயெனுங்கரிமேல்வருமொருவன்பலவுருவாய்ச்
சென்றேதிறம்பலவாலடச்செறிபேரிருட்குடுமிக்
குன்றேபுரையவுணர்க்கிறைகுறிப்பாலிதுமாய
மென்றேநினைந்தவைமாற்றிடயாதுஞ்செயலில்லான். (௫௬)

மலைவுற்றெதிர்நின்றார்த்திடவாயற்றனன்மயங்கித்
தொலைவுற்றனனிருட்குஞ்சியன்சூரன்மகனனிக
மலைவுற்றனவிரிகின்றனவலமந்தனவெருவி
யுலைவுற்றனவிறுதிப்பகலொழிவுற்றிடுமுயிர்போல். (௫௭)

சோமாசுரன்மாயாபலிசுரகேசரிபதுமன்
மாமாருதபலிதண்டகன்வாமன்மதிவருணன்
றீமாகதன்முதலாகியசேனைப்பெருந்தலைவ
ராமாயமிதெனவந்தனரவ்விஞ்சையையுணரார். (௫௮)

தாங்கற்றிடுமாயப்பெருந்தனிவிஞ்சைகண்முன்னி
யாங்குற்றிடுமரபாற்பொருதன்னான்புரிமாய
நீங்கற்கருநிலையாதலுநெஞ்சந்தடுமாறி
யேங்குற்றனரென்செய்குதும்யாமென்றுநினைந்தார். (௫௯)



Digitized By Roja Muthiah Research Library

அந்நேருறுகாலந்தனிலாகின்றதுந்தலைவர்
தன்னேவலின்மெலிவுற்றதுஞ்சயந்தன்பெருந்திறலுங்
கொன்னேதனதனிக்கடல்குறைகின்றதுங்கண்டான்
முன்னேயிரவியையோர்பகற்சிறைவீட்டியமுதல்வன். (௬௦)

வேறு.

அந்தரந்தனிலிரவியைச்செயிர்த்திடுமவுண
னிந்திரன்மகன்மாயைகொலிதுவெனவெண்ணு
முந்தைநாட்புகருதவியமூலமாஞான
மந்திரந்தனையுளந்தனில்விதிமுறைமதித்தான். (௬௧)

மதித்துவெஞ்சுடர்ப்பகையினன்சேறலுமாயை
விதித்தபல்லுருப்போயினதமியனாய்விடலை
கதக்களிற்றின்மேற்றோன்றினனாயிரங்கதிரோ
னுதித்தகாலையிற்கலையிலாக்குறைமதியொப்ப. (௬௨)

ஆனகாலையிலிதுபுகர்விஞ்சையென்றறிந்து
மானமுஞ்சினமுஞ்சுடச்சயந்தனுண்மறுகித்
தானவேழமேலிருந்திழித்தேரொடுஞ்சார்ந்து
பானுகோபனும்பெயரினானிளையனபகர்வான். (௬௩)

வருதியிந்திரன்மதலைநின்மாயையும்வலியுங்
கருதியான்வருமுன்னரேபோயினகண்டாய்
பரிதிபோலவேநின்னையுமிருஞ்சிறைப்படுப்பன்
பொருதிவல்லையேலென்றனன்சூர்தருபுதல்வன். (௬௪)

வல்லராயினோர்வெல்வதுமற்றஃதில்லோ
ரல்லராகியேதோற்பதுமில்லையாலரனே
தொல்லையூழ்முறைபுணர்த்திடுநின்னைநீதுதிக்கச்
செல்லுமோவெனவுரைத்தனன்சயந்தனுந்திறலோன். (௬௫)

தேற்றமோடிவைபுகறலுமிரவியைச்செயிர்த்தோ
னாற்றலில்லவர்மொழிதிறம்புகன்றனையன்றே
யேற்றவீரருமித்திறமுரைப்பரோவென்னாக்
கூற்றமேயெனவிருந்ததோர்தன்சிலைகுனித்தான். (௬௬)

சிலைவணக்கியகாலையிற்சயந்தனுஞ்சினத்து
மலைவணக்குதன்புயங்கொடேயொருசிலைவளைத்தா
னலைவணக்கருஞமலியெம்மடிகளையடைந்தோர் *
தலைவணக்கியேதத்தமிலிருவர்தாழ்வதுபோல். (௬௭)

பாற்றிருஞ்சிறைக்கணைபலபரிதியம்பகைஞ
னூற்றமோடுவான்புயலெனச்சொரிதலுமொருத்தன்
மேற்றிகழ்ந்திடுசயந்தனுமனையனவிசிகங்
காற்றெனும்படிதூண்டியேவிலக்கினன்கடிதின். (௬௮)

அன்னவன்விடுஞ்சரமெலாஞ்சூர்மகனறுத்துத்
துன்னுபல்கணைதூண்டினனவனவைதொலைத்தா
னின்னதன்மையினிருவரும்பொருதனரிருளு
மின்னுமாகவேமுறைமுறைமலைந்திடும்விதிபோல். (௬௯)

---

* ஞமலியெம்மடிகளையடைந்தோர் - வைரவசமயத்தார். அவர்க்கு ஒருவரையொருவர் கண்டபொழுதே வணங்கலியல்பு.

Digitized By Roja Muthiah Research Library

இனையவாறமர்புரிவுழியிரவியம்பகைஞன்
வினையனீரிஞற்சொரிந்திடுபகழியைவிலக்கித்
துனையவிந்திரன்மதலையாயிரங்கணை தூண்டி
யனையனேந்தியசிலைப்பெருநாணினை யறுத்தான். (௭0)

அறுத்தகாலையின்ஞாயிறுவெகுண்டுளோனழலிற்
செறுத்துவேறொருசிலைவளைஇக்கணைமழைசிதறி
மறுத்துமாங்கவன்விடுஞ்சரஞ்சிந்திமற்றவன்மெய்
யுறுத்திஞனென்பவோராயிரஞ்சிலீமுகமுய்த்து. (௭௧)

உய்த்தகாலையிற்சயந்தனுமோராயிரங்கணை தூய்ப்
பத்தியோடவன்றேர்கெழுபாய்பரிபடுத்து
மெத்துபல்சரந்தானைமேல்வீசினன்விளிவோர்
வைத்தமாநிதியாவர்க்கும்வழங்குமாறென்ன. (௭௨)

வாய்ந்ததோர்தனதிரதமீறுகமற்றொருதேர்
பாய்ந்துவெய்துயிர்த்தழலெனவெகுண்டுபற்கறித்துச்
சேர்ந்தமெல்லிதழதுக்கிவானுருமெனத்தெழியா
வேந்துவார்சிலைகுனித்தனனெறிகதிர்ப்பகைஞன். (௭௩)

கூனல்வெஞ்சிலைகுனித்துநூறாயிரகோடி
சோனைவெங்கணை தூண்டிவிற்றாணியைத்துணித்துத்
தானவெங்கரிதன்னுடன்முழுவதுஞ்சயந்தன்
மேனிமுற்றவுமழுத்தினன்பகலினைவெகுண்டோன். (௭௪)

வேறு.

வெய்யவற்சிறையிட்டவன்விட்டகோல்
சையமொத்தசயந்தன்மெய்ம்மூழ்கலு
மையலுற்றனன்மற்றொருவெஞ்சமர்
செய்வதற்குத்தெளிதலின்றாயினன். (௭௫)

நீண்டவாளிகளானநிறத்திடை
யாண்டகர்லையரிமகன்றந்திமேல்
வீண்டுவிம்மியுணர்ச்சியும்விட்டனன்
மாண்டிலானமுதங்கொண்டவன்மையால். (௭௬)

நண்ணுபாசடைநாப்பணிடந்தொறுந்
தண்ணென்மாமலர்த்தாமரைபூத்தென
விண்ணவர்க்கிறைமாமகன்மெய்யிடைத்
துண்ணெனப்படுசோரிபொலிந்ததே. (௭௭)

கற்றவாசவன்காளைதன்சீற்றநா
முற்றவோதமுடியுங்கொறன்னுணர்
வற்றபோதுமவன்சினக்கண்ணழல்
வற்றுவித்தமெய்வார்குருதிப்புனல். (௭௮)

சயந்தனவ்வழிதன்னுணர்வின்றியே
யயர்ந்தபோதத்தனையவனூர்தியாங்
கயந்தனக்கிறைகண்டுகலங்கியே
துயர்ந்துநின்றுசுளித்தெதிர்புக்கதே. (௭௯)

Digitized By Roja Muthiah Research Library

காய்ந்ததொன்மைக்கதிரைமுனிந்திடு
மேந்தலூர்தருமெந்திரத்தேர்மிசைப்
பாய்ந்தகாலைப்பரித்தொகைபாகுடன்
வீய்ந்துபோளதெழித்ததுவேழமே. (௮0)

பாண்டில்சேர்தருபண்ணமைசெய்யதேர்
மாண்டகாலையில்வல்லையிற்கீழுறத்
தாண்டிவெள்ளையந்தந்தியைச்சீறினான்
மூண்டுபானுவைமுன்சிறைசெய்துளான். (௮௧)

மற்றவன்றன்மணியணிமார்பிடைச்
செற்றமால்கரிசென்றுமுற்றாக்கலும்
பொற்றையின்கட்புழைத்திடுஞ்சூசியி
ணிற்றவாலதனீரிருதந்தமும். (௮௨)

தந்தநான்குஞ்சடசடவார்ப்பொடு
சிந்தலுற்றனசீர்கெழுசூர்மக
னுந்துதொண்டலம்பற்றிமற்றோர்கையாற்
றந்திவேந்தன்கவுளிடைத்தாக்கினான். (௮௩)

வேறு.

காழ்ந்தநெஞ்சினன்கரங்கொடுதாக்கலுங்கயமா
வாழ்ந்ததெண்டிரைப்பாற்கடலுடைந்தெனவரற்றி
வீழ்ந்தயர்ந்ததுசயந்தனுமறிந்தனன்விரைவிற்
சூழ்ந்ததொல்லுணர்வெய்தலுமவனிவைசொல்லும். (௮௪)

மாயைபோயதுதனித்தனங்குறைந்ததுவன்மை
தீயர்பற்றுவரழியுமிந்நகரெனச்சிறிது
நீயிரங்கலையினிமனனேவிதிநெறிகா
ணாயினிங்கிவையென்றனன்சயந்தனுமறிஞன். (௮௫)

நுணித்துநாடியேயித்திறநுவன்றுநூற்றுணிபு
மனத்தில்வைத்திடுமிந்திரன்கான்முளைமயங்கித்
தனித்தநீர்மையுங்களிற்றொடுவீழ்ந்ததுந்தளர்வு
மனைத்துநோக்கியேதானவத்தலைவர்களார்த்தார். (௮௬)

ஆர்த்ததானவத்தலைவர்கள்சயந்தனையயலே
போர்த்ததாமெனச்சுற்றினர்பற்றினர்புவிமேற்
கூர்த்தவாலெயிற்றரவினம்யாவையுங்குழீஇப்போய்ச்
சிர்த்தவெல்லையிலிரவியைக்கரந்திடுந்திறம்போல். (௮௭)

தடித்தமொய்ம்புடைச்சயந்தனைத்தானவத்தலைவர்
பிடித்தகாலையிற்கைதவன்கைதவன்பெரிது
மடித்திடுங்கள்குற்றிடுங்களிங்கிவனுயிரதனைக்
குடித்திடுங்களென்றாரெலாவவுணருங்குழுமி. (௮௮)

மன்னர்மன்னவன்றிருமகனவ்வழிமற்றோர்
பொன்னெடும்பெருந்தேர்மிசைப்பொள்ளெனவேகிப்
பன்னரும்புகழ்படைத்திடுசயந்தனைப்பற்றித்
துன்னிநின்றிடுமவுணருக்கொருமொழிசொல்வான். (௮௯)

Digitized By Roja Muthiah Research Library

வரிவில்வாங்கியேயான்விடுஞ்சரம்படமயங்கிப்
பெரிதுமெய்தளர்வுற்றனன்பேசவுங்கில்லான்
கருதலானெனவிவன்றனைவருத்தலிர்கடிதே
சுரர்குழாத்தொடுபுரிமினேசிறையெனச்சொற்றான். (௯0)

கொற்றவன்மொழிவினவியேமந்தரக்குன்றைச்
சுற்றுபாந்தள்போலிந்திரன்றிருமகன்றனைத்தோ
ளிற்றகொல்லெனநாணினால்யாத்தனரிமையோ
ருற்றுநின்றதோர்குழுவினுளொருங்குறவுய்த்தார். (௯௧)

வேறு.

தொழிலிதுபுரிந்தகாலைச்சூர்மகன்றனதுமாடே
தழியகாவலரைநோக்கிச்சயந்தனுமிவருமல்லா
லொழியநின்றாரையெல்லாமொல்லையிற்றருதிர்பின்ன
ரழியவிம்மூதூர்செந்தீயரசனுக்களித்திரென்றான். (௯௨)

என்றலுமிறைஞ்சியன்னோரெழிலுடைத்துறக்கம்யாண்டுஞ்
சென்றனர்நாடியேனைத்தேவரைமகளிர்தம்மை
யொன்றொருவரையும்வீடாதுடனுறப்பற்றிநாணுற்
பொன்றிரடடந்தோள்யாத்துப்புரவலன்முன்னருய்த்தார். (௯௩)

உய்த்தபின்பதுமச்செல்வியுறைதருமுறையுள்போலச்
சித்திரங்கெழுவுபொன்னந்திருநகரெல்லையெங்கும்
புத்தழல்கொளுவலோடும்பொள்ளெனப்பொடிபட்டன்றே
முத்திறவரைப்புமெங்கோன்முறுவலான்முடிந்தவாபோல். (௯௪)

ஊழியினன்றியென்றுமொழிவுறாத்துறக்கமூதூர்
பூழியதானதன்றேபுரந்தரன்வறியன்போனான்
வீழுறுசிறையினுற்றார்மிக்கவரென்றால்யாரும்
வாழியசெல்வந்தன்னைநிலையெனமதிக்கலாமோ. (௯௫)

அளிபடலின்றியென்றுமலர்தருநிழற்றுமூதூர்
வெளிபடுசுடலைபோலாய்வேற்றுருக்கோடலோடுங்
களிபடுபானுகோபன்கண்டனனவுணர்தம்மி
லொளிபடுகாவலோரைநோக்கியீதுரைக்கலுற்றான். (௯௬)

தாதுலாந்தெரியலாகச்சயந்தனையவனோடுற்ற
வேதிலார்தம்மைப்பின்னோர்யாரையுங்கொடுமுன்னீவிர்
போதிராலென்னவற்றேபோயினருவணைநீங்கி
யாதவன்பகைஞன்மீளாவணிகமோடவணிவந்தான். (௯௭)

மாநிலமதிக்கும்வீரமகேந்திரபுரத்துப்புக்குக்
கோனகர்முன்னமேகிக்கொடிஞ்சிமான்றேரினீங்கிச்
சேனையைநிறுவிவானச்சிறையினைக்கொண்டுசென்று
தானவர்மன்னன்முன்போய்த்தாண்முறைவணக்கஞ்செய்தான். (௯௮)

தண்டுளிநறவமாலைத்தாதைதாள்வணங்கியெந்தாய்
கண்டிலன்சசியைவானோர்காவலன்றனையுங்காணே
னண்டரைச்சயந்தன்றன்னையாரையுங்கொண்டுசென்றேன்
விண்டொடர்துறக்கமுற்றும்வெங்கனல்கொளுவியென்றான். (௯௯)

Digitized By Roja Muthiah Research Library

என்றுமகிழ்ந்துசூரனிளஞ்சிறுகுமரற்புல்லித்
தன்றிருமுன்னரிட்டசயந்தனைமுதலியோரைக்
கன்றினனுருத்துவாட்கைக்காவலர்சிலரைநோக்கித்
துன்றியவினையரங்கம்யாவையுந்துணித்திரென்றான். (௧00)

இரலைமான்முருகுதன்போலிருஞ்சிறைவீடுபெற்ற
வுருகெழுபுலிபாய்ந்தொப்பவொப்பிலாவரசன்சொல்லாஸ்
விரைவுடனவுணர்பல்லோர்விண்ணவர்தம்பான்மேவித்
துருவையின்முகத்திகாணத்துன்னெனத்துணிக்கலுற்றார். (௧0௧)

கரத்தினைத்தாளைத்தோளைக்கன்னமூலத்தைக்கல்லென்
றரற்றுறுகண்டந்தன்னையணிகெழுதுண்டந்தன்னைச்
சிரத்தினைத்துணிப்பவன்னோர்சிறியரோசெய்தநோன்பி
னுரத்தினிலவைகளெல்லாமுடனுடன்பொருந்தலுற்ற. (௧0௨)

செல்லருநெறிக்கணின்றசேணுளார்தம்மையாருங்
கொல்லரிதிறையுமங்கங்குறைத்தலுமரிதாமென்றாற்
சொல்லரிதினையர்வன்மைதொலைந்ததெம்வரத்தாலென்னா
வல்லரிபுரைவெஞ்சூரன்மதித்துமற்றதனைக்கண்டான். (௧0௩)

கண்டனன்முனிந்தின்னோரைக்காலமொன்றானும்வீடா
வெண்டருநிரயம்போலுமிருஞ்சிறையிடுதிரென்றே
திண்டிறலசுரர்கேட்பச்செப்பலுஞ்சயந்தன்றன்னை
யண்டரைப்பிடர்தொட்டுந்தியாங்ஙனங்கொண்டுபோனார். (௧0௪)

போயினர்சிறையினெல்லைபோற்றினர்தம்மைநோக்கி
யேயினனங்கோனின்னோர்யாரையுங்காவல்கொண்மி
னீயிர்களென்றுவொற்றார்நீங்கினர்நின்றோர்தம்மை
யாயவர்வல்லிபூட்டியருஞ்சிறைக்களத்திலுய்த்தார். (௧0௫)

மன்னவனதற்குப்பின்னர்மைந்தனையன்பானோக்கி
நின்னகரத்திற்போதிநீயெனவனையன்போனா
னன்னதோர்சூரபன்மனவையொரீஇயுறையுள்புக்கா
னின்னலங்கடலிலுற்றாரிருஞ்சிறைப்பட்டவானோர். (௧0௬)

வேறு.

காடுபோந்தனனிந்திரன்பொன்னகர்கரிந்து
பாடுசேர்ந்ததுசயந்தனுஞ்சிறையிடைப்பட்டா
னாடில்விண்பதச்செய்கையீதெம்பிரானல்கும்
வீடதேயலாற்றுன்பறுமாக்கம்வேறுண்டோ. (௧0௭)

வேறு.

படவரவனையதோர்பருமவல்குலா, ரிடுகிய நுண்ணிடையெழிலணங்கினோர்
கொடுமைசெயவுணர்குறுகிவேடர்பாற், பிடியுறுமஞ்ஞையிற்பெரிதுமஞ்சினார். ()

சூரன்வாழ்பெருநகர்துன்னிக்காப்பொடு,சீரிலாவேவல்கள்செய்துமேவினார்,கூரு
ம்வாய்வெங்குரீஇகுடம்பையுய்த்திடப், பேருறுதிலகுமின்மினியின்பெற்றிபோல்.

வாடியமகபதிமதலைவானுளோர், ராடுறுதுயர்க்கடலழுந்திச்சூரர்கோன்
வீடருஞ்சிறையிடைமேவினாரவர், பாடுறுதிறத்தையார்பகரற்பாலினோர். (௧௧0)

இன்னலங்கடலினுமெடுத்துவீடுதந், தன்னவர்பெருஞ்சிறையகற்றும்வன்மையார்
பின்னெவருண்டுயிர்பெற்றுக்காத்திடு, முன்னவர்தமக்கெலாமுதல்வநீயலால். ()

Digitized By Roja Muthiah Research Library

வியந்தருகதிரைமுன்வெகுண்டுளானென்றே, சயந்தன்விண்ணுலகிடைச்சமர்செய் தெய்த்துழி, வயந்தருகோடுகண்மாய்ந்துதந்திவீழ்ந், தயர்ந்ததுபுவியிடையணுகிற் றத்துணை. (௧௧௨)

வாலியவொளிகெழுவன * த்திலேகியே, மூலமதாகியமுக்கண்மூர்த்தியை மேலுளதாணுவின்மேவச்செய்துபின், சீலமொடருச்சனைசெய்துவைகிற்றே. ௧௧௩

அறிவுளமால்கரியமலன்றந்திர, முறையதுநாடியேமுதிருமன்பினன் மறையுறவழிபடஇவைகுமெல்லையிற், குறைபடுநாற்பெருங்கோடும்வந்தவே. ௧௧௪

பார்ப்பதிமருங்குறுபகவனாணையான், மாற்பெருங்களிற்றிடைவல்லைமுன்புபோ னாற்பெருந்தந்தமுநண்ணநோக்கியே, யேற்பருமகிழ்ச்சியோடிருந்ததவ்விடை. ()

வேறு.

ஆயதோரமைதியின்கணணங்கொடுமேருவெற்பிற்
போயினவமரர்கோமான்பொன்னகர்சூரன்மைந்தன்
காயெரிகொளுவியங்கட்கடவுளர்குழுவினோரைச்
சேயொடுபற்றியேகிச்சிறைசெய்ததன்மைதேர்ந்தான். (௧௧௬)

தேர்ந்தனன்றளர்ந்துமேருச்சிலம்பினின்மகவான்பன்னாள்
வார்ந்திடுகங்கைவேணிவள்ளலையுன்னிநோற்பச்
சார்ந்துநிற்கென்னைவேண்டுஞ்சாற்றெனமுதல்வனீதி
பேர்ந்தசூர்கிளையைச்செற்றெம்பேதுறவகற்றுகென்றான். (௧௧௭)

என்றலுமெந்தைசொல்வான்யாமுமைதன்னைமேவி
யொன்றொருகுமரன்றன்னையுதவுவமவனேபோந்து
வென்றிகொள்சூரனாதியவுணரைவிரைவிற்செற்று
மன்றநும்முரிமையீவன்வருந்தலென்றுரைத்துப்போனான். (௧௧௮)

சாதலுந்தொலைவுமில்லாத்தானவர்க்கிறைவனேனோ
ரேதிலர்தம்மால்வீடானென்றுதன்னுளத்திலெண்ணிச்
சோதிகொள்பரமமாகித்தோன்றிடுமுதல்வனீயே
யாதலின்விமலமூர்த்தியவரைமேலடுதியென்றான். (௧௧௯)

அவ்வுரைமகவான்றேறியரியயனோடுசூழ்ந்து
மைவருகளத்தோன்றன்பான்மதனனையுய்ப்பவன்னோன்
மெய்விழியெரியின்மாய்ந்துவெறுந்துகள்படலுந்தேவ
ரெவ்வெவரும்போய்வேண்டவிரங்கியேகருணைசெய்தான். (௧௨0)

அரியயன்மகவான்றேவரருங்கணத்தலைவர்யாரும்
பரவுறவிமயவெற்பிற்படர்ந்துபின்னுமையைவேட்டுப்
பிரிவருங்கயிலைநண்ணிப்பின்னெமதிரக்கநாடிக்
கருணையாலெந்தைநின்னைநெற்றியங்கண்ணாற்றந்தான். (௧௨௧)

எந்தைநீவந்தபின்றையிந்திரனயன்மாறேவ
ரந்தமின்முனிவரேனோரனைவர்க்குமகன்றவாவி
வந்ததுபோன்றதம்மாவலியவெஞ்சூரற்செற்றுத்
தந்தமதரசுபெற்றதன்மையர்போலவுற்றார். (௧௨௨)

ஆழ்தருமுந்நீர்நேமியகன்கடலழுவம்புக்கு
வீழ்தருவோர்கடம்பால்வியன்கலமொன்றுசேர
வாழ்தருதொடர்பாற்பற்றியுய்ந்தெனத்துன்பவேலைக்
கீழ்தருவோர்கணின்னாற்கிளர்ந்துமேலெழுதலுற்றார். (௧௨௩)

* வாலியவொளிகெழுவனம் - திருவெண்காடு.

Digitized By Roja Muthiah Research Library

புரந்தரன்முதலாவுள்ளபுங்கவரெம்மனோர்க
ளரந்தையையகற்றவுன்னியையநீபோந்தபின்னுந்
தெரிந்திடுதுணிபிற்சேர்ந்துந்தெம்முனைச்சூரற்கஞ்சிக்
கரந்தனரிருந்தார்காணிற்கடுஞ்சிறைப்பிணிப்பனென்று. (௧௨௪)

எம்பிரானின்னைமுக்கணெந்தையைவணங்கநேரிற்
றம்பெருவடிவங்காணச்சாருவரொழிந்தகாலை
யும்பர்கோன்முதலோர்தத்தமுருக்கரந்துழல்வர்வான்மேல்
வெம்பணிசிலைகண்மாறும்வெய்யவர்நிலைமையேபோல். (௧௨௫)

மறைந்திடுபாங்கரின்னவாசவன்முதலோர்யாரு
மறந்தவிர்சூரபன்மனடுபடைத்தலைவர்க்காணிற்
பறைந்திடமார்பமுள்ளம்பனித்திடவியர்ப்பயாக்கை
யிறந்தனராகிப்பின்னரின்னுயிர்பெறுவரன்றே. (௧௨௬)

வினைப்பவமுழந்தவிண்ணோர்வெந்தொழிலவுணர்கோனை
நினைப்பினுமவசமாவர்நெடுந்துயில்பெறாதநீரான்
மனப்படுகனவுநீத்தார்மற்றதுவருமேலங்க
ணுனப்படுசூரற்காணினுயிரையுமிழப்பரம்மா. (௧௨௭)

பொன்னகரிறுதிசெய்துபுதல்வனையமரரோடு
துன்னருஞ்சிறையுட்சேர்த்தித்துயர்ப்பெருங்கடலுள்வீட்டி
மன்னியவெறுக்கைவெளவிமனையொடுகரப்பச்செய்து
மின்னமுமவுணர்கோமானிந்திரற்கலக்கண்சூழும். (௧௨௮)

ஒப்பரும்வெறுக்கைதன்னாலோங்கியவிறலாற்சீரான்
மெய்ப்படுமிடலால்யார்க்குமேன்மையாலழியாவாற்றா
லிப்பகல்வானோர்க்கெல்லாமிடர்புரிகொடுமைநீரா
லப்பெருஞ்சூரற்கென்றுமாருநேரன்றுமாதோ. (௧௨௯)

ஏயதோரண்டமொன்றினிழைத்தனவிவ்வாறேனை
யாயிரத்தோரேழண்டத்தவன்செயலறிதறேற்றாந் *
தூயதோர்பரத்தின்மேலாஞ்சோதியாயெம்மைக்காப்பான்
மேயினவொருநீயன்றிவேறியார்தெரிதற்பாலார். (௧௩௦)

தொடர்ந்திடுசீர்பெற்றுள்ளசூரனதாணையென்னிற்
கடந்திடல்புரியார்மாலுங்கமலமேலயனும்வானோ
ரடங்கலுமுனிவர்யாருமாயிரவிருநாலண்டத்
தொடங்கியவுயிருமன்னோன்பெருமையாருரைக்கற்பாலார். (௧௩௧)

முடிவிலிவ்வளம்பெற்றுள்ளமுரண்கெழுசூரபன்மன்
கெடுகிலனன்றுமேலோன்கிளத்தியவரத்தின்சீராற்
படியறுமமலமேனிப்பரஞ்சுடர்குமரநீயே
யடுவதையன்றிப்பின்னரவனையார்முடிக்கற்பாலார். (௧௩௨)

ஐந்தியலங்கஞ்சூரற்கயன்புகன்றுழல்வானொரு
மிந்திரைகேள்வன்போர்செய்தெஞ்சினனெவர்க்குமேலாய்
முந்தியசிவனன்னோற்குமுதல்வரமளித்தான்பின்னர்
வந்தடல்புரியானீயேமற்றவற்கோறல்வேண்டும். (௧௩௩)

---

* தேற்றாம் என்பது "தேற்றாவொழுக்கம்" என்பதுபோலத் தன்வினையாயிற்று.

ஆவதோர்சூரன்றன்னையவன்றுணைவோரைமைந்த
ரேவர்கடமையுமட்டேயெழில்பெறுசயந்தனோடுந்
தேவர்தஞ்சிறையைநீக்கித்திசைமுகன்மகவானாதிக்
காவலர்பதங்கணல்கிக்காத்தருளெம்மையென்றான். (௧௩௪)

இவ்வகைமுகமாறுள்ளவெம்பிரானுளத்துக்கேற்ப
வுய்வுறுமன்பாற்பொன்னோனுரைப்பமுன்னறிந்ததொன்றை
மெய்வருதொடர்பாலின்னோர்விழைவினான்மழலையோவாச்
செவ்வியின்மகார்வாய்க்கேட்குந்திறனெனவினவிச்சொல்வான். (௧௩௫)

புன்றொழிலவுணர்தன்மைபுறத்தவர்செய்கையாவு
மொன்றிடைவிடாதுமுற்றுமுள்ளவாறுரைத்தாய்நம்மு
னன்றிதுபனுவற்கெல்லாநாதனையொருநீயன்றோ
வென்றவன்புறத்தைநீவியினிதருள்புரிந்தானெங்கோன். (௧௩௬)

அறிவினுளறிவாய்வைகுமறுமுகவமலவெஞ்சூ
ரிறுசெயனினைக்கிலாகுமீண்டையோராடலுன்னிக்
குறுகினையதுபோலன்னோன்கொள்கையுந்தேர்ந்தாய்நிற்கோர்
சிறியனேனுரைத்தேனென்னுந்தீப்பிழைபொறுத்தியென்றான். (௧௩௭)

பொறுத்தியென்குற்றமென்றுபொன்னடித்துணையைப்பொன்னோன்
மறத்தலிலன்பிற்பூண்டுவணங்கினன்றொழுதுபோற்ற
வெறித்தருகதிர்வேலண்ணலெம்முரைகொண்டுசொற்ற
யுறத்தகுபிழையில்யாதுமுன்னலையிருத்தியென்றான். (௧௩௮)

வேறு.

பொன்னெனும்பெயரினான்பொருவில்கந்தவே
ளின்னருணிலைமைபெற்றிருந்தபின்னரே
தன்னயனிற்புறுசதமகத்தனை
யந்நிலைநோக்கியேயன்பிற்கூறுவான். (௧௩௯)

ஈண்டிதுகேண்மனத்தேதுமெண்ணலை
யூண்டிடுசூர்குலமுடியவானுளோர்
மீண்டிடவிருஞ்சிறைவிண்பதத்தைநீ
யாண்டிடநல்குதுமையுறேலென்றான். (௧௪0)

இகபரமுதவுவானிதனைச்சாற்றலு
மகபதிபரிவொடுவணங்கிவானவத்
தொகையொடுபோற்றியேதுன்பெலாமொரீஇப்
புகலருமகிழ்ச்சியுட்பொருந்தன்மேயினான். (௧௪௧)

அமரர்சிறைபுகுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௯௨௯.

---

அசுரகாண்டமுற்றுப்பெற்றது.

ஆ காண்டம் இரண்டுக்குத் திருவிருத்தம் ௫,௭௧௨.

கச்சியப்பசிவாசாரியர் திருவடிவாழ்க.

---

௪௪

Digitized By Roja Muthiah Research Library

Digitized By Roja Muthiah Research Library

உ

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது

# மகேந்திரகாண்டம்.

## வீரவாகுகந்தமாதனஞ்செல்படலம்.

விரிஞ்சன்மாறேவராலும்வெலற்கரும்விறலோனாகிப்
பெருஞ்சுரர்பதமும்வேதவொழுக்கமும்பிறவுமாற்றி
யருஞ்சிறையவர்க்குச்செய்தவவுணர்கோனாவிகொள்வான்
பரஞ்சுடருருவாய்வந்தகுமரனைப்பணிதல்செய்வாம். (க)

இந்திரனாதியானவமரருமேனையோரும்
புந்தியினுவகைபூத்துப்புடைதனிலொழுகிப்போற்றச்
செந்திமாநகரந்தன்னிற்சீயமெல்லணைமேல்வைகுங்
கந்தவேளருளினீராலினையனகருதலுற்றான். (உ)

நான்முகனாதியானநாகருமுனிவரும்போன்
மேன்முறையவுணராகும்வியன்றொகையவருமெங்கோன்
கான்முளைநெறியரேனுங்கடியரைமுடிவுசெய்த
னான்முறையியற்கையாகுநுவலருமறனுமஃதே. (ங)

இற்றிதுதுணிபாமேனுமெண்ணெழிற்சூரன்றன்னை
யற்றமில்சிறப்பின்வைகுமவன்றமர்தம்மையெல்லாஞ்
செற்றிடன்முறையதன்றாற்றேவர்தஞ்சிறைவிட்டுய்ய
மற்றவன்றனக்கோரொற்றைவல்லையில்விடுத்துமன்றே, (ச)

தூண்டுநம்மொற்றன்மாற்றஞ்சூரனுமவுணன்கேளா
வீண்டிடுசிறையினீக்கியமரரைவிடுப்பனென்னின்
மாண்டிடலின்றியின்னும்வாழியமறுத்துளானே
லாண்டுசென்றடுதுமீதேயறமெனவகத்துட்கொண்டான். (ரு)

வடித்தசெங்கதிர்வேல்ண்ணன்மாலயன்மகவானாதி
யடுத்தபண்ணவரைநோக்கியவுணர்தங்கிளையையெல்லா
முடித்திடப்பெயர்துநாளைமுன்னமோர்தூதன்றன்னை
விடுத்தனமுணர்தல்வேண்டும்வெய்யசூர்கருத்தையென்றான். (சு)

Digitized By Roja Muthiah Research Library

கடலுடைக்கடுவையுண்டோன்காதலனினையசெப்ப
மடலுடைப்பதுமப்போதில்வைகினோன்மாயன்கேளா
வடலுடைப்பெரும்போரெந்தையாற்றுமுன்சூரன்முன்னோ
மிடலுடைத்தூதன்றன்னைவிடுத்தலேயறத்தாறென்றார். (௭)

என்றலுங்குமரமூர்த்தியிப்பெருந்திறலோர்தம்முள்
வென்றிகொள்சூரன்றன்பால்வீரமாமகேந்திரத்துச்
சென்றிடவிடுத்தும்யாரைச்செப்புதிரென்னலோடு
நன்றெனவதனைநாடிநான்முகனவிறலுற்றான். (௮)

மெல்லெனவுலவைக்கோனும்வீரமாமகேந்திரத்திற்
செல்லரிதெனக்குமற்றேசெய்பணிநெறியாலன்றி
யொல்லையிலங்கணேகியொன்னலர்க்கடந்துமீள
வல்லவனினையவீரவாகுவேயாகுமென்றான். (௯)

சதுர்முகனினையவாற்றாற்சண்முகனுளத்துக்கேற்பக்
கதுமெனவுரைத்தலோடுங்கருணைசெய்தழகிதென்று
மதுமலர்த்தொடையல்வீரவாகுவின்வதனநோக்கி
முதிர்தருமுவகைதன்னாலித்திறமொழியலுற்றான். (௧௦)

மயேந்திரமூதூரேகிவல்லைநீயமலனல்குஞ்
சயேந்திரஞாலத்தேரோன்றனையடுத்தொருநாற்றந்தக்
கயேந்திரன்மதலைவானோர்காப்பைவிட்டறத்தாறுன்னி
நயேந்திரவளத்திலேகுமுறைகொளநவிறியன்றே. (௧௧)

அம்மொழிமறுத்துளானேலவுணனின்கிளையையெல்லா
மிம்மெனமுடித்துநின்னையெஃகவேற்றிரையாநல்கத்
தெம்முனைகொண்டுநாளைச்செல்லுதும்யாமேயீது
மெய்ம்மையதென்றுகூறிமீள்கெனவீரன்சொல்வான். (௧௨)

வெந்திறலவுணரீண்டும்வீரமாமகேந்திரத்திற்
சுந்தரத்திருவின்வைகுஞ்சூரபன்மாவின்முன்போ
யெந்தைநீயருளிற்றெல்லாமிசைத்தவனுள்ளநாடி
வந்திடுகின்றேனென்றுவணங்கியேதொழுதுபோனான். (௧௩)

சூர்ந்திடுகுலிசத்தண்ணல்குமரவேளொற்றன்றன்பின்
பேர்ந்தனன்சென்றுவீரபெருந்திறற்சூரன்மூதூர்
சார்ந்தனைசிறையில்வானோர்சயர்தனோடிருந்தாரங்கட்
சேர்ந்தனைதேற்றிப்பின்னுன்செயலினைமுடித்தியென்றான். (௧௪)

அவ்வழியமரர்கோமானனையனவறைதலோடுஞ்
செவ்விதுநிற்றியற்றேசெய்வனென்றவனைநீங்கி
யெவ்வமிறுணைவராகுமெண்மருமிலக்கத்தோரு
மொய்வருந்தொடர்பிற்செல்லக்கண்ணுறீஇவிடலைசொல்வான். (௧௫)

நீயிர்கள்யாருங்கேண்மினெடுந்திரைப்பரவைவாவித்
தீயதோர்மகேந்திரத்திற்சென்றுசூர்முன்போய்நந்த
நாயகன்பணித்தமாற்றநவிலுவன்மறுத்துளானே
லாயவன்மூதூர்முற்றுமட்டபின்மீள்வனம்மா. (௧௬)

Digitized By Roja Muthiah Research Library

என்றலும்வியந்துபின்ஞோர்யாவருமிறைஞ்சலோடும்
பொன்றிகழாகத்தூடுபொருந்துறப்புல்லிக்கொண்டு
வன்றிறற்பூதர்தம்முண்மன்னவரோடுமங்க
ணின்றிடவருளிவல்லேநெடுங்கடல்வேலைபோந்தான். (கஎ)

அலங்கலந்திரைகொணேமியகன்கரைமருங்கின்மேரு
விலங்கலினுயர்ந்தகந்தமாதனவெற்புத்தன்னிற்
பொலங்குவடுச்சிமீதுபொள்ளெனவிவர்தலுற்ருன்
கலன்கலன்கலனென்றம்பொற்கழலமர்கழல்களார்ப்ப. (கஅ)

புஞ்சமார்தமாலச்சூழல்பொதுளியபொதும்பர்சுற்றி
மஞ்சுநின்றருதகந்தமாதனப்பிறங்கலும்பர்
விஞ்சுநுண்பொடிதோய்மேனிமேலவனிவரும்பான்மை
யஞ்சனவரைமேல்வெள்ளியடுக்கல்சென்றனையதன்றே. (கசு)

கடுங்கலிமான்றேர்வெய்யோன்கையுறநிவந்தசெம்பொ
னெடுங்கிரிமிசைபோய்வீரனிற்றலும்பொறையாற்ருது
நடுங்கியதுருமுற்றென்னநனிபகிர்வுற்றதங்க
ணொடுங்கியமாவும்புள்ளுமொல்லெனவிரிந்தவன்றே. (உ0)

உண்ணிறைபுள்ளுமாவுமோலிடவொலிமேல்கொண்டு
துண்ணெனவருவிதூங்கத்தோன்றியகுடுமிக்குன்ற
மண்ணலைத்தரிக்கலாற்றேனளியனேனந்தோவென்னுக்
கண்ணிடைவாரிசிந்தக்கலுழ்தல்போலுமாதோ. (உக)

அடல்கெழுதிண்டோள்வீரனடிகளின்பொறையாற்ருது
விடர்கெழுகுடுமிவெற்புவெருவலுமாண்டைவைகும்
படவரவுமிழ்ந்தசெய்யபருமணிசிதறும்பான்மை
யுடல்கெழுகுருதிதுள்ளியுகுக்குமாறொப்பதன்றே. (உஉ)

அறைகழலண்ணனிற்பவவ்வரையசையலங்க
ணுறைதருமாக்களஞ்சியொருவிலவெருவிவிண்மேற்
பறவைகள்போயதுன்பம்பட்டுழிப்பெரியர்தாமுஞ்
சிறியருநட்டோர்க்காற்றுஞ்செயன்முறைகாட்டுகின்ற. (உங)

மழையுடைக்கடமால்யானைவல்லியமடங்கலெண்கு
புழையுடைத்தடக்கையாளிபொருப்பசைவுற்றகாலை
முழையிடைத்தவறிவீழ்வமுதியகாலெறியப்பட்ட
தழையுடைப்பொதும்பர்பைங்காய்தலைத்தலையுதிர்க்குமாபோல். (உச)

நன்றிகொள்பரிதிப்புத்தேணகுசிரமாகவென்றூழ்
துன்றிருஞ்சடிலமாகச்சுரநதிதோயத்திங்க
ளொன்றொருபாங்கர்செல்லவோங்கிரும்பிறங்கலுச்சி
நின்றதோர்விசயத்தோளானெற்றியங்கண்ணன்போன்ருன். (உரு)

வலமிகுமொய்ம்பின்மேலோன்மலர்க்கழலுறைப்பவாற்ரு
தலமருகுவட்டினிற்றலன்றுநீமுனிவருய்த்த
கொலைகெழுமுயலகன்மெய்குலைந்திடப்புறத்துப்பொற்ரு
ணிலவணிசடையோனூன்றிநின்றிடுநிலைமைநேரும். (உசு)

மாவிருள்செறியுந்தெண்ணீர்மறிதிரையளக்கர்வேலைப்
பாசடைப்பொதும்பர்வெற்பிற்பண்ணவன்றூதனிற்றல்
காசியிலரற்றத்தள்ளிக்களிறுடல்பதைப்பக்கம்மே
லீசனன்றடிகளூன்றியிருத்தியவியற்கைபோலும். (௨௭)

தாரகன்படைஞர்பல்லோர்சமரிடையிரிந்துபோனார்
பாரிடையுறுமேயந்தப்பருவரைமுழைக்கணுற்றார்
வீரமொய்ம்புடையோனங்கண்மேவலுமவற்கண்டேங்கி
யாருயிருலந்தார்தீயோர்க்காவதோரரணமுண்டோ. (௨௮)

அனையதோர்சிமையக்குன்றமசைதலுமங்கணுற்ற
வனைகழல்விஞ்சைவேந்தர்மங்கையருடன்மாற்றி
யினிதுமுன்கலந்தாரஞ்சியின்புறுதிடைக்கணீத்து
வினைவிளைவுன்னிநொந்துவிண்மிசையுயிர்த்துச்சென்றார். (௨௯)

வரைமிசைநின்றவண்ணல்வனைகழலவுணர்கோமான்
பொருவருநகர்மேற்செல்லப்புந்திமேற்கொள்ளாவெந்தை
திருவுருவதனையுன்னிச்செங்கையாற்றொழுதுமாலும்
பிரமனும்வியந்துநோக்கப்பேருருக்கொண்டுநின்றான். (௩0)

பொன்பொலியலங்கற்றோளான்பொருப்பின்மேற்பொருவிலாத
கொன்பெருவடிவங்கொண்டுகுலாய்நிமிர்கொள்கைசெவ்வேண்
முன்பொருஞான்றுமேருமுடியில்வந்தமரர்க்கெல்லாந்
தன்பெருவடிவங்காட்டிநின்றதோர்தன்மையாமால். (௩௧)

ஆண்டகைநெடுந்தோள்வீரனண்டமேன்மவுலிதாக்க
நீண்டிடுமெல்லையன்னானின்றிடுகுன்றஞாலம்
ஈண்டதுபிலத்திற்சேறல்கேடில்சீர்முனிகையூன்ற
மீண்டுபாதலத்திற்புக்கவிந்தமேபோலுமாதோ. (௩௨)

விண்ணவருய்த்ததேர்மேன்மேவலர்புரநீறாக்கும்
பண்ணவனொருதாளூன்றப்பாதலம்புகுந்தவாபோற்
கண்ணகன்வரையும்வீரன்கழல்படவழுந்திற்றம்மா
வண்ணலந்தாதைவன்மையருள்புரிமகற்குறாதோ. (௩௩)

கன்றியவரிவிற்செங்கைக்காளைபொற்றாளுமந்தண்
குன்றொடுபிலத்துட்செல்லக்குறிப்பொடுவிழிக்குறாமே
சென்றிடமுடியுஞ்சேண்போய்த்திசைமுகத்தயனுமாலு
மன்றடிமுடிகாணாதவசலமும்போலநின்றான். (௩௪)

ஆளரியன்னோன்றாளுமடுக்கலுமழுந்தும்பாரி
னீளிருமுடிசேர்வானினிரந்தமாப்பறவைபோதல்
சூளுடையிமையோர்புள்ளுமாவுமாய்த்தோமில்வீரன்
றாளொடுமுடியுநாடிச்சார்தருந்தகைமைத்தாமால். (௩௫)

அந்தமில்வலியோனிற்பவாயிடைத்துஞ்சும்பாந்த
டந்தொகைவீழுறாதுதழீஇமருங்காகக்கீழ்போய்
முந்துயர்கமடஞ்சேர்ந்துமுழங்குதெண்டிரைக்கண்வைகு
மந்தரமென்னக்கந்தமாதனந்தோன்றிற்றம்மா. (௩௬)

Digitized By Roja Muthiah Research Library

பதுமநேர்கண்ணன்வேதாப்பலவகைமுனிவர்தேவர்
கதிபடருவணர்சித்தர்கந்தருவத்தரொண்கோண்
மதியுடுக்கதிர்களேனோர்வான்பதமுற்றுமோங்கு
மதிர்கழல்வீரன்பல்வேருரமாயொளிரநின்ருன். (௩௭)

எண்டிசைமுழுதுநேமியெழுதிறத்தனவுமற்றைத்
தெண்டிரைக்கடலும்பாருஞ்சேண்கிளராழிவெற்பு
மண்டமுமுலகம்யாவுமகன்விழிபரப்பிநோக்கிக்
கண்டனனமலன்வைப்புங்கைதொழுதையனின்ருன். (௩௮)

ஆணமில்சிந்தைவீரனச்சுதன்முதலோர்வைகுஞ்
சேணகர்நோக்கிச்சூழுந்திசைநகர்நோக்கிப்பாரின்
மாணகர்நோக்கிவீரமகேந்திரநோக்கிச்சூர
னீணகரிதற்கியாவுநிகரிலைபோலுமென்ருன். (௩௯)

விண்ணுலாம்புரிசைவெஞ்சூர்வியனகரதனைநோக்கி
யுண்ணிலாவெகுளிகொண்டாருருகரமங்கணூச்சி
நண்ணலார்யாருந்துஞ்சநாமறப்பிசைகோவென்று
வெண்ணிஞன்சிறையிலுற்ருேர்க்கிரங்கியவ்வெண்ணமீட்டான். (௪0)

விஞ்சையரியக்கர்சித்தர்வியன்சிறையுவணர்திங்கள்
செஞ்சுடர்ப்பரிதிநாள்கோடெய்வதகணத்தர்யாரும்
வஞ்சினத்தடந்தோள்வீரன்மாலுருநோக்கலாற்ரு
தஞ்சினர்வெருவச்செங்கையமைத்தனனமுங்கலென்றே. (௪௧)

கோளியல்கருடர்தாம்வீழ்மாதரைவிழைந்துகூடி
வாளுறுநகத்திஞறுமதிக்கிலர்மயங்கித்துஞ்சி
வேளெனுநெடியோனூன்றும்வெற்பொடும்பிலத்திற்சென்று
கேளுடனெமுந்துநாகர்கிளைதனக்கணங்குசெய்தார். (௪௨)

ஆதியங்குமரன்றூதனூற்றலானூன்றிநிற்பப்
பூதலங்கீண்டுவெற்புப்பொள்ளெனவாழ்ந்துகீழ்போய்ப்
பாதலங்குறுகவங்கட்பயிலராத்தொகையைநாகர்
காதலங்கேண்மைநாடிக்கலந்தனர்விருந்துசெய்தார். (௪௩)

தேன்றிகழ்தெரியல்வாகைச்சேவகன்கழல்கள்வெற்பி
னூன்றலுமனையபாங்கரொருசிலரரக்கர்நோற்ரு
ரான்றுயர்பதத்தைவெஃகியாங்கவர்பிலத்துள்வீழ்ந்து
மான்றனரிரங்கலுற்ருர்வன்கணூர்க்குய்வுமுண்டோ. (௪௪)

புண்டரநீற்றுவள்ளல்புரையுருத்தேவர்நோக்கி
மண்டலம்புகழும்வீரமகேந்திரஞ்சேறற்கன்ருற்
கொண்டவிவ்வுருவநோக்கிற்குரைகழலவுணர்தம்மை
யண்டமுமிடித்துச்சாடுமினைவுகொலையற்கென்ருர். (௪௫)

வீரமாமகேந்திரத்திலவுணரும்வீற்றுவீற்றுச்
சாருறுமவுணர்தாமுஞ்சயங்கெழுபுயத்துவள்ளல்
பேருருநோக்கியிங்ஙன்பிறந்தசொற்சழக்கேயின்னுந்
தேருவதுண்டுநந்தந்திறல்வரைப்புணர்ப்பிதென்ருர். (௪௬)

Digitized By Roja Muthiah Research Library

ஒலிகழல்வீரவாகுவோங்கலையூன்றியிந்த
நிலைமையினிற்றலோடுநெடியமால்சுதனும்விண்ணோர்
தலைவனும்பிறருமன்னோன்றம்பியரளப்பிலோருங்
கலிகெழுபூதர்யாருங்கண்டுவிம்மிதத்திருந்தார். (௪௭)

தேவர்கண்முனிவரேனைத்திறத்தவர்யாருந்தத்த
மோவரும்பதத்தினின்றேயொல்வதோருறுப்பின்மேவக்
காவருகடிமென்பூத்தூய்க்கைதொழுதையவெஞ்சூர்
மேவருநகர்சென்றெங்கள்வியன்றுயரகற்றுகென்றார். (௪௮)

ஆவதோர்காலையெந்தையாறிருதடந்தோள்வாழ்க
மூவிருவதனம்வாழ்கமுழுதருள்விழிகள்வாழ்க
தூவுடைநெடுவேல்வாழ்கதொல்படைபிறவும்வாழ்க
தேவர்கடேவன்சேயோன்றிருவடிவாழ்கவென்றான். (௪௯)

ஆண்டகைதொழுதபாணியணிமுடிக்கொண்டிவ்வாற்று
வீண்டுசீர்க்குமரவேளையேத்தலுமன்பின்கண்ணீர்
வீண்டுதெண்கடலுளேகிவெள்ளமிக்குவரைமாற்றப்
பூண்டகண்டிகையைமானத்தோன்றினபொடிப்பின்பொம்மல். (௫0)

மீதுகொள்பொடிப்புமூடமெய்ப்புலன்சிந்தையொன்ற
வோதுவதவறவென்புமுருகியசெருகநாட்டங்
கோதில்பேரருளின்மூழ்கிக்குதூகலித்திடுதலோடு
மூதுலகனைத்துமாவிமுழுவதுமகிழ்ந்தவன்றே. (௫௧)

அவ்வகைநிகழச்செவ்வேளாரருளதனைப்பெற்று
மொய்வரைமீதுநின்றான்முழுதுலகளந்துசேண்போ
மிவ்வுருவோடுசெல்லினிறந்திடுமுலகமீது
செவ்விதன்றென்னுவேண்டுந்திருவடிவமைந்தானன்றே. (௫௨)

கிரிமிசைநின்றவண்ணல்கிளர்ந்துவானெழுந்துசென்னிக்
குருமணிமகுடமண்டகோளகைபுடைப்பவீர
னுருகெழுசீற்றச்சிம்புளுருவுகொண்டேகிற்றென்ன
வரைபுரைமாடவீரமகேந்திரமுன்னிப்போந்தான். (௫௩)

வீரவாகுகந்தமாதனஞ்செல்படலமுற்றிற்று.

---

# கடல்பாய்படலம்.

அழுங்கியகழற்கால்வீரனவ்வழியவனிக்கீழ்போய்
விழுங்கிரிநிலைமைநோக்கிமீண்டுநீயெழுதியென்று
வழங்கினன்வழங்குமெல்லைவல்லையிற்கிளர்ந்துதோன்றி
முழங்கிருங்கடலின்மாடேமுந்துபோனின்றதன்றே. (௧)

வீரனங்கெழலுமன்னோன்விண்படர்விசைப்பின்காலாற்
பாருறுவரைகள்யாவும்படர்ந்தனபாங்கராகச்
சாரதத்தலைவரேனைத்தம்பியரிலக்கத்தெண்ம
ராருமங்கவன்றன்பாலாயணிந்துடன்சேறலென்ன. (௨)

Digitized By Roja Muthiah Research Library

விரைந்துவான்வழிக்கொள்வீரன்விசைத்தெழுகாலினண்டந்
திரிந்தனவுயிர்கண்முற்றுந்தெருமராலுற்றதெண்ணீர்
சுரந்திடுகொண்டல்யாவுஞ்சுழன்றனவடவையுண்ணா
விருந்திடுமூழிக்காலுமாற்றலாதிரியல்போன. (௩)

பெருமிடல்பூண்டதோன்றல்பெயர்தலும்விசைப்பினாதை
பரவினவெம்மைமாற்றிப்பரிதியைக்கனலைத்திங்கள்
வருணனதியற்கையாக்கிவடவையின்முகத்துத்தோன்றித்
திரைகடலிருந்தவூழித்தீயையுமவித்துச்சென்ற. (௪)

விரைசெறிநீபத்தாரோன்விரைந்துசெல்விசைக்காற்றள்ளத்
திரைகடல்சுழித்துள்வாங்கித்திறன்மகேந்திரத்திற்சேற
லரசியல்புரிவெஞ்சூரனணிகங்களவன்மேற்சென்று
பொருமுரணின்றித்தம்மூர்புகுவனவிரிவபோலாம். (௫)

விடைத்தனியாற்றல்சான்றவிடலைகால்வெற்பினோடும்
படித்தலங்கீண்டுமுன்னம்பாதலங்காட்டிற்றன்று
ணடற்படுவிசையின்காலுமளியதோவலியதன்றே
கடற்புவிகீண்டுநாகருலகினைக்காட்டிற்றன்றே. (௬)

பாசிழையலங்கற்றோளான்படர்தலும்விசையின்காலைக்
காய்சினவுயிர்ப்புச்செந்தீக்கலந்துடன்றழீஇக்கொண்டேகி
மாசறுசூரன்வைகும்வளநகர்சுற்றியன்னோன்
றூசியதென்னமுன்னங்கொளுவியதூமஞ்சூழ. (௭)

பூஞ்சிலம்பரற்றுந்தாளான்போதுமுன்விரைவினோதை
வேய்ஞ்சிலம் * படுதோட்சூரன்வீரமாமகேந்திரத்தி
னுஞ்சிலம்புரிசைபொன்செய்நளிர்வரைகுளிர்பூங்கிள்ளை
தாஞ்சிலம்புற்றசோலையலைத்தனதரையிற்றள்ளி. (௮)

உறைபுகுநெடியவேலானுயிர்ப்புறுகனன்முன்னோடிச்
செறுநனூர்கொளுவவன்றன்சென்றிடுவிரைவின்கால்போ
யெறிபுனற்கடலைத்தாக்கவிடைந்துமற்றதுதானேகி
முறைமுறைதிரைக்கைநீட்டிமூண்டிடாதவித்துப்போமால். (௯)

அண்ணலங்காலையேகவுயிர்த்தகாலவன்செல்லோதை
கண்ணழறுண்டமோச்சுங்கடுங்கனலெதிராதோடு
முண்ணிறைபுணரியாவுமொன்னலன்பதிமேற்சென்று
விண்ணிலமொழிந்தபூதமடுதலின்விளைத்தபூசல். (௧௦)

வெள்வரைக்குவவுத்திண்டோள்வெலற்கருந்திறலோனெண்காற்
புள்விசைகொண்டுசெல்லப்புறந்தரப்புணரியங்க
ணுள்வளைந்துலாயசின்னையொண்சுறாப்பனைமீனாறை
தெள்விளித்திருக்கைதந்திதிமிங்கிலமிரிந்துபாய்ந்த. (௧௧)

நாயகன்றூதனேகநளிர்கடலெதிர்ந்திடாது
சாய்வதுமீனமுற்றுந்தரங்கவெண்கரங்கடாங்கித்
தீயசூர்மூதூருய்த்துச்சென்றதுபொன்றுவோர்க்கு
மேயினவிச்சையுண்டிமிகத்தமர்வழங்குமாபோல். (௧௨)

* வேய்ச்சிலம்பெனற்பாலது எதுகைநோக்கி வேய்ஞ்சிலம்பென்றாயிற்று. இது யகரவொற்று இடைவந்த ஆசெதுகை. மூங்கிலையுடைய மலையென்பது பொருள்.



Digitized By Roja Muthiah Research Library

காழ்தருதடக்கைமொய்ம்பன்கடுமைசால்செலவினோடைதைத்
சூழ்தருகின்றகாலைத்துண்ணெனத்துளங்கிவிண்மீன்
வீழ்தரவேலைதன்னில்வேலையுமறிந்துசெல்ல
வாழ்திரையெறிமீன்முற்றுமந்தரம்புகுவமாறாய். (௧௩)

காமருநயக்குங்காளைகதுமெனச்செல்லப்பாங்கிற்
றாமலர்க்கரத்திலிட்டசுடர்மணிக்கடகவாள்போய்
நேமியங்குவடுசூழ்ந்துநிமிர்தருதிமிரமோட்டி
யேமநல்லண்டவில்லோடெதிர்ந்துபோயிகல்செய்கின்ற. (௧௪)

விண்ணவர்யாருந்தேரும்படையுமாய்விரவமேலோ
னண்ணலர்புரமேலோச்சுநகையழல்போதலொத்தான்
கண்ணழற்செல்வும்போன்றான்கார்முகம்பூட்டியுய்த்த
மண்ணுலகிடந்தகூர்வாய்வாளியுமென்னச்சென்றான். (௧௫)

தரைதனையலைத்துநோற்குந்தாரபதர்க்கலக்கஞ்செய்து
சுரர்திருக்கவர்ந்துவாட்டுஞ்சூரனைக்கிளையினோடும்
விரைவுடன்முடிப்பான்முன்னிவெகுண்டுசெவ்வேளுய்த்த
வொருதனிச்சுடர்வேல்போன்றும்போயினனுயர்திண்டோளான். (௧௬)

இமிழ்தருதரங்கப்பாலினெறிகடன்மதித்துவானோர்க்
கமிர்தினையளிப்பான்வேண்டியகிலமுமுண்டுதொன்று
ளுமிழ்தருதிருமாலுன்னவுணர்ந்துமந்தரமாமோங்க
னிமிர்தருபுணரிசெல்லுநிலைமைபோல்வீரன்போந்தான். (௧௭)

சேண்டொடருலகும்பாருந்தெருமரவனலம்வீசிக்
காண்டகுவிடத்தையீசன்களத்திடையடக்கிவைப்ப
வீண்டெமைவிடுத்தியென்றுவேத்தனுமவனங்குய்ப்ப
மீண்டதுகடல்போந்தென்னவீரருள்வீரன்சென்றான். (௧௮)

பொலங்கழல்வீரவாகுபுணரிமேலிவ்வாறேகி
யலங்கலந்திண்டோள்வெஞ்சூரணிநகர்வடாதுபாலின்
விலங்கலில்வீரன்யாளிவியன்முகத்தவுணன்போற்று
மிலங்கையந்தொல்லைமூதூரணித்தெனுமெல்லைசென்றான். (௧௯)

கடல்பாய்படலமுற்றிற்று.

ஆகதிருவிருத்தம் ௭௨.

---

# வீரசிங்கன்வதைப்படலம்.

அன்னதோர்வேலைமுன்னமகன்றலையாளிப்பேரோன்
றுன்னுபல்லணிகத்தோடுஞ்சூரனைக்காண்பானேக
மன்னதிவீரனென்னுமதலையாயிரமாம்வெள்ளந்
தன்னொடுமிலங்கைவைகித்தணப்பறப்போற்றியுற்றான். (௧)

ஆனதோர்மிக்கவீரத்தாண்டகையவுணர்போற்ற
மாநகர்க்கோயினண்ணவடதிசைவாயிறன்னின்
மேனிமிரவுணர்தானைவெள்ளமைஞ்ஞூறோடுன்றன்
சேனையந்தலைவன்வீரசிங்கனுந்திறலோனுற்றான். (௨)

Digitized By Roja Muthiah Research Library

உற்றதோர்வீரசிங்கனெண்சிறைச்சிம்புளேபோல்
வெற்றியந்திண்டோளேந்தல்விரைந்துசென்றிடலுங்காணூஉச்
சற்றுநங்காவலெண்ணான்றமியன்வந்திடுவான்போலு
மற்றிவன்யாரையென்னாச்சீறினன்வடவையேபோல். (௩)

உண்குவனிவன்றனாவியொல்லையென்றுன்னிக்காலு
மெண்கிளர்மனமும்பின்னரெய்துமாறெழுந்துநேர்போய்
விண்கிளர்செலவிற்றானைவெள்ளமைஞ்ஞூறுஞ்சுற்ற
மண்கிளர்கடல்போல்வீரவாகுவின்முன்னஞ்சென்றான். (௪)

சென்றிடுவீரசிங்கன்றிறல்கெழுபுயனைப்பாரா
வின்றளவெமதுகாப்புளேகினரில்லையார்நீ
யொன்றொருதமியன்போந்தாயுயிர்க்குநண்பில்லாய்நின்னைக்
கொன்றிடுமுன்னீவந்தசெயன்முறைகூறுகென்றான். (௫)

பொன்னியதிண்டோள்வீரன்புகலுவானிலங்கைவாவி
மன்னியல்சூரன்வைகுமகேந்திரஞ்சென்றுமீள்வா
னுன்னினன்போந்தேனீதென்னுறுசெயல்வலியையென்னி
னின்னினிவேண்டிற்றொன்றையியற்றுதிகாண்பனென்றான். (௬)

திறன்மிகுசிங்கனன்னோன்செப்பியமொழியைக்கேளா
விறையுநம்மவுணரானையெண்ணலன்வலியன்போலு
மறிகுதுமீண்டுசேறலழகிதன்றென்னாவுன்னிக்
குறுகியபடைஞர்தம்மையிவனுயிர்கோடிரென்றான். (௭)

என்றலுமரியதொன்மையெயினர்கள்வேட்டைக்கானிற்
சென்றனர்திரண்டுசுற்றிச்செருவினையிழைப்பதேபோற்
பொன்றிகழ்விசயவாகுப்புங்கவன்றன்னைச்சீற்ற
வன்றிறலவுணர்யாரும்வளைந்தமர்புரியலுற்றார். (௮)

வேலினைவிடுப்பர்தண்டம்வீசுவர்முசலந்தூர்ப்பர்
சாலமதெறிவராலந்தன்னையோச்சிடுவர்வார்விற்
கோல்வகைதொடுப்பர்நாஞ்சிற்கொடும்படைதுரப்பர்வெய்ய
சூலமதுய்ப்பர்கொண்டதோமரஞ்சொரிவரம்மா. (௯)

கிளர்ந்தெழுபரிதிதன்னைக்கேழ்கிளருருமுக்கொண்மூ
வளைந்தெனவவுணர்வீரன்மருங்குசூழ்ந்தாடல்செய்யத்
தளர்ந்திலனெதிர்ந்துதன்கைத்தாரைவாளுறையினீக்கி
யுளந்தனின்முனிந்தன்னோரையொல்லைசூழ்ந்தடுதலுற்றான். (௧௦)

அரக்குருக்கொண்டவெற்பினடுகனற்கடவுளெய்தி
யுருக்கியேயதனையெல்லாமொல்லையினுடைக்குமாபோ
னெருக்கியவவுணர்தானைநீத்தமதுடையவீரன்
றிருக்கிளர்வாளொன்றேந்திச்சென்றுசென்றடுதல்செய்தான் (௧௧)

பணிபடர்குழுமறன்னைப்பாயிருட்செறிவையங்கிக
கணிபடர்பொற்பிற்றோன்றுங்காய்கதிர்முடிக்குமாபோ
னணிபடரவுணர்தானைநைந்திடச்சுடர்வாளொன்றாற்
றணிபடர்வீரவாகுதடிந்தனன்றிரிதலுற்றான். (௧௨)

Digitized By Roja Muthiah Research Library

உறைந்தனகுருதிவாரியொல்லையிலுவரித்தெண்ணீர்
மறைந்தனவவுணர்தானைமால்கரிபரிதேர்முற்றுங்
குறைந்தனகரந்தாண்மொய்ம்புகொடுமுடிதுணிந்துவீழ்ந்த
நிறைந்தனவலகையீட்டநிரந்தனபரந்தபூதம். (௧௩)

வெள்ளநூறவுணர்தானைவிளிந்திடவினையபாலால்
வள்ளல்சென்றடுதல்செய்யமற்றுளவவுணர்யாரு
முள்ளநொந்திரங்கித்தத்தமுயிரினையோம்பல்செய்து
பொள்ளெனநிலனும்வானும்புலந்தொறுமிரியல்போனார். (௧௪)

போதலும்வீரசிங்கன்பொள்ளெனச்சினமேற்கொண்டு
மாதிரங்கடந்துமேல்போய்வளர்தரும்வாகைமொய்ம்பன்
மீதொருசூலந்தன்னைவிட்டனன்விட்டகாலை
யேதியங்கதனுலன்னதிருதுணிபடுத்தியார்த்தான். (௧௫)

ஆர்த்தலுமடங்கற்பேரோனண்டகைவீரன்மேன்மை
பார்த்தனன்றனதுபாணிபற்றியபடைகடம்மிற்
கூர்த்ததோர்குலிசம்வீசக்குறுகிவாளதனுன்மாற்றிப்
பேர்த்தொருபடையெடாமுன்பெயர்ந்தவன்முன்னஞ்சென்றான். (௧௬)

சென்றுதன்மணிவாளோச்சிச்செங்கைகடுமித்துத்தீயோ
னென்றொருமுடியுங்கொய்தேயுவர்க்கடலிடையேவீட்டி
நன்றுதன்னுறையுட்செல்லநாந்தகஞ்செறித்துமுன்னோர்
வென்றிகொண்டகன்றனென்பவேலவன்விடுத்ததூதன். (௧௭)

வீரசிங்கன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் அகூ.

---

# இலங்கைவீழ்படலம்.

மலங்கொடுசுறவுதூங்குமறிகடன்மீதுமேரு
விலங்கல்சென்றிட்டதென்னவிண்ணிடந்தன்னினீங்கி
யலங்கலந்திண்டோள்வள்ளலவுணர்தம்மிருக்கையாகு
மிலங்கையங்குவடுமூன்றிலிடைப்படுசிகரம்பாய்ந்தான். (௧)

நெடுவரைதன்னைவேலானீறுசெய்திட்டவண்ணல்
விடவருதமியோன்றொல்லையிலங்கையின்மீதுபாய
வடலதிவீரனேனையவுணர்கள்கலங்கியேங்கி
யிடியுறுபுயங்கமென்னயாருமெய்பனித்துவீழ்ந்தார். (௨)

வேறு.

வைப்புறுமகேந்திரவடாதுபுலமாகி
யிப்புறமிருந்திடுமிலங்கைதனிலேந்தல்
குப்புறுதலுங்குலைகுலைந்தவுணரோடு
முப்புறுகடற்படிதல்கண்டுவைகையுற்றான். (௩)

அந்திமுகமாமதலைதன்னடிவணங்கா
தந்தரவிண்ணோர்கடலலைத்திடலுமன்றேன்
சிந்தைமுனிவெய்தவிடைசேர்த்தகயிறோடு
மந்தரநெடுங்கிரிமறிந்தபடிமானும். (௪)

ஆடல்கெழுமொய்ம்பினனடித்தலமதூன்ற
மூடுதிரைவேலையிடைமூழ்கியவிலங்கை
கூடுமகவண்ணல்குலிசந்தொடரநேமி
யூடுபுகலுற்றிடுமைநாகவரையொக்கும். (௫)

மாமறைகடம்மைமுனம்வஞ்சனைபுரிந்தே
சோமுகன்மறைந்ததிரைதூங்குகடலூடே
யேமமுறுபேருருவெடுத்ததொருமாண்சேல்
போமதெனவாழ்ந்ததுபொலங்கெழுமிலங்கை. (௬)

தொல்லைதனிலோர்விதிதுயின்றகடைநாளி
னெல்லையதிகந்துகடலேழுமெழவங்க
ணொல்லையிலமுற்றபுவியுய்ப்பவொருகேழல்
செல்லுவதினாழ்ந்ததுதிரைக்கடலிலங்கை. (௭)

சிந்துவினகன்கரையொர்திண்கிரியழுந்த
வந்தமிலிலங்கையுமழுந்தியிடுதன்மை
முந்தொருமடக்கொடிவிருப்பின்முனிமூழ்க
விந்திரனுநேமியினிடைப்புகுதல்போலும் *. (௮)

உலங்கொள்புயவீரனடியூன்றுதலுமுன்னோர்
விலங்கல்பணிதன்னுலகமேவியதுகேளா
வலங்கல்பெறுவாகையவனுற்றலதுதாங்கி
யிலங்கையதுகாண்பலெனவேகியதுபோலும். (௯)

இலங்கையிதுபான்மையினிருங்கடலுண்மூழ்கக்
குலங்களொடுவைகியகொடுந்தகுவர்யாருங்
கலங்கினரழுங்கினர்கவன்றனர்துவன்றி
மலங்கினர்புலம்பினர்மருண்டனர்வெருண்டார். (௧௦)

அற்றமுறுதானவர்களாழவனையோரைச்
சுற்றியவளப்பிலசுறுவுழுவைமீனம்
பற்றியவளைந்தனபலப்பலதிரண்டே
செற்றியதிமிங்கிலதிமிங்கிலகிலங்கள். (௧௧)

கையதனையீர்ப்பசிலகால்கள்சிலவீர்ப்ப
வெய்யதலையீர்ப்பசிலமிக்கவுயர்தோள்கண்
மொய்யுடையமார்பதனையீர்ப்பசிலமொய்த்தே
சையமுறழ்யாக்கையுளதானவரைமீனம். (௧௨)

---

* பிரமன் அகலிகை என்பாளைப் பேரழகுடையளாகச் சிருட்டித்து, ஆயிரம் வருடங் கடலிலாழ்ந்து சுவாசம் அடக்கித் தவஞ்செய்வார்க் கிவளுரியள் என்று கூற, இருடிகளனைவரும் அவளுடைய பேரழகைக்கண்டு ஆசையுற்றுப் பிரமன் கூறியபடி தவஞ்செய்தும் அது முடிவுபெறாமையி னொழிந்தனர். அதனையறிந்த கௌதமர் பிரமன் கூறியபடி கடலிலாழ்ந்து தவஞ்செய்யும் பொழுதில், இந்திரனும் அவளைப் பெறும்பொருட்டு, ஓரிருடிவடிவங்கொண்டு, தவஞ்செய்வானைப்போல நடித்துக் கடலிலாழ்ந்து பலமுறை எழுந்தெழுந்து வஞ்சனைபுரிந்தான் எனவுணர்க.

Digitized By Roja Muthiah Research Library

அத்தனொடியானையமனையன்பின்முதிர்சேயைக்
கொத்தினொடுகொண்டுசிலர்கூவியெழுகின்றா
ரெய்த்தனர்கள்செய்வதெனிரும்படையும்விட்டுத்
தத்தமுயிர்கொண்டுசிலர்தாமுமெழலுற்றார். (௧௩)

உற்றசிலதானவரையொய்யெனவளாவித்
திற்றிவிழைவானணிதிரண்டனர்களெல்லாம்
பற்றுழிதனித்தனிபறித்ததுபொருட்டாற்
பொற்றைபுரைமீன்கள்பெரும்போர்வினைபுரிந்த. (௧௪)

தானவர்களோர்சிலவர்தம்முனல்குறித்தே
வானிமிருமோதையெனவந்துதமையெற்றப்
பூநனையவாள்சுரிகைபோரயில்கள்கொண்டே
மீனமொடுவெஞ்சினம்விளைத்தமர்புரிந்தார். (௧௫)

சீர்த்திகொளிலங்கைகடல்சென்றிடலுமங்க
ணார்த்திபெறுமங்கையர்களங்கையவைபற்றி
யீர்த்தபிறரில்லுறவிசைந்துகரம்பற்றுந்
தூர்த்தரைநிகர்த்தனசுறாமகரமீனம். (௧௬)

மீனொருகைபற்றிடவேறொருகரத்தைத்
தானவர்வலித்தொருதடக்கைகொடிசிப்ப
மானனையகண்ணியர்வருந்திடுதலோரைந்
தானபுலனீர்ப்பவுளழுங்குவதுபோலும். (௧௭)

திண்டிறல்வலம்படுதிருக்கைசுறமீன
மண்டியதிமிங்கிலம்வருந்தகுவர்சூழல்
கண்டுமிசையெற்றிடுதலுங்கடிதுவாளாற்
றுண்டமுறவேயவைதுணித்தெழுநர்சில்லோர். (௧௮)

கட்டழல்விழிச்சுறவுகாரவுணர்தம்மை
யட்டுணல்குறித்துவரலன்னவர்கணீவித்
தொட்டனர்பிடித்தகடுதூரும்வகைபேழ்வா
யிட்டனர்மிசைந்தனரெழுந்தனர்கள்சில்லோர். (௧௯)

எற்றபுனலூடுதெரிவின்றியெமரென்றே
வேற்றொருமடந்தையர்வியன்கையதுபற்றிப்
போற்றியெழவங்கவர்புறத்தவர்களாக
மாற்றினரிசைந்துசிலர்வாழ்க்கைமனம்வைத்தார். (௨0)

இல்லிவரெனப்பிறரையேந்தியெழவன்னோர்
புல்லுதனியன்பர்புடைபோகவொருசில்லோ
ரல்லலுறுவார்தமையடைந்ததொருகன்னி
மெல்லவயல்போந்துழிமெலிந்துழலுவார்போல். (௨௧)

தீமைபுரிமால்களிறுதிண்புரவியாவு
மேமருசுறாத்தொகுதியீர்த்துவிரைந்தேகித்
தோமறுபிணாமகரந்துய்ப்பவுதவுற்ற
காமர்கெழுபெண்மயல்கடக்கவெளிதன்றே. (௨௨)

Digitized By Roja Muthiah Research Library

யாற்றறுசுருச்சிலமடப்பிடிகைபற்றி
யேற்றபெண்வழிச்செலவெதிர்ந்ததனைநோக்கி
வேற்றோர்பெடையாயதெனவேர்வுறுகைகையர்க்
காற்றுமுபகாரவியல்பாகியதையன்றே. (௨௩)

சிந்துவதன்மீதிலெழுசில்லவுணராயோர்
கந்தன்முருகேசன்விடுகாளைசெயல்காணு
நந்தமையுநின்றிடினலிந்திடுவன்யாங்க
ளுய்ந்திடுதுமென்றுகடிதோடியயல்போனார். (௨௪)

பீடுசெறிதங்கணவரைப்பிரிகிலாமே
கூடும்வழியாழ்ந்தசிலகோற்றொடிமின்னார்க
ளாடைபுனலூடுபுகவல்குறமகையான்
மூடியெழுவார்முலைமுகத்தின்முகம்வைத்தே. (௨௫)

சேண்டொடரிலங்கைகடல்சென்றுழியதன்பா
லாண்டசிலமாதர்களரத்தவுடைகொண்டார்
மீண்டெழுநீர்படவெளிப்படுவதல்குல்
காண்டகையசெம்மதிகளங்கமடைந்தென்ன. (௨௬)

காரவுணர்மாதர்சிலர்காமர்கடல்வீழ்வார்
நீரமெழவேயுடைநெகிழ்ந்தொருவியேக
மூரன்முகமல்லுருவுமுற்றுறமறைத்தே
தேரையெனவொண்புனல்செறிந்துதிரிவுற்றார். (௨௭)

ஆசுறுமரைத்துகிலகன்றிடவெழுந்தே
தேசுறுமடந்தையரிலோர்சிலவர்சேண்போய்
மாசுறுபுயற்குழுவைவல்லைகரம்பற்றித்
தூசினியல்பானடுவுசுற்றியுலவுற்றார். (௨௮)

இலங்கைவீழ்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௧௭.

---

# அதிவீரன்வதைப்படலம்.

அன்னதொர்பான்மைகளாகவிலங்கை, முன்னுறுவார்கடலாழ்ந்ததுமூழ்க
விந்நகர்போற்றியிருந்திடுகின்ற, மின்னுனைவேலதிவீரனுணர்ந்தான். (௧)

தனதுபுரங்கடல்சாருதல்காணு, நனிதுயரெய்தினனுணுமடைந்தான்
சினவியுயிர்த்தழல்சிந்தநகைத்தா, னனையவனின்னதகத்திடைகொண்டான். (௨)

சுந்தரமேவருசூரபன்மாவோ, வந்தமிறம்பியரோவனையார்தம்
மைந்தர்களோமதியேனவரல்லா, லிந்தவியற்கையையார்புரிகிற்பார். (௩)

ஆயவரென்னினுமாங்கதுசெய்தற், கேயதொரேதுவுமின்றுதம்மூர்க்குத்
தீயதுசெய்கலர்சிந்தையதன்றான், மாயையுமீதுமதிக்கிலள்போலும். (௪)

மூவருமிச்செயன்முன்னலர்பின்னர்த், தேவர்கள்யாரிதுசெய்திடவல்லா
ரேவருநஞ்சிறையெய்தினர்வேள்விக், காவலனாருயிர்காத்துமறைந்தான். (௫)

Digitized By Roja Muthiah Research Library

மாதிரமேலவர்வானிடைவைப்பின், மேதகும்விண்ணவர்விஞ்சையர்சித்த
ராதியர்நம்மிறையாணையினீங்கா, ரீதுபுரிந்திடவெண்ணுவர்கொல்லோ. (௬)

தவ்வறவீண்டமர்தானவராற்ற, மெய்வலிமாயைகண்மேவினரேனுந்
தெவ்வடுசூர்முதறிண்படையஞ்சி, யிவ்வியறன்னையிழைக்கலர்போலும். (௭)

ஆதலினன்னவராற்றலரென்னி, னீதொருசெய்கையிழைத்தவர்யாரோ
தாதையகன்றுழிதானவரோடுங், காதலனிந்நகர்காத்ததுநன்றால். (௮)

ஞாயமொடுங்குகனற்சிரமூடு, போயதுவல்லைபுறஞ்செலநோற்று
மாயைபெரும்படைவன்மைகள்வேத, னீயமுன்வாங்கியவென்செயனன்றால். (௯)

தந்தையுறாதுதணந்துழியாங்கோர், மைந்தனிருந்துதன்மாநகரோடு
மந்திலகன்கடலாழ்ந்தனனென்று, னந்தமரென்னைநகைப்பர்களன்றே. (௧0)

மன்னவனீதுமதித்திடின்மற்றென், றன்னையடும்பெறுதாதையுமற்றே
பின்னுளரெள்ளுவர்பெற்றியிதாமே,லென்னியனன்றெனவெண்ணியிளைந்தான். ()

இளைந்ததிவீரனெனுந்திறன்மைந்தன், களைந்திடுகின்றகடற்கிடையாழ்வோ
னனந்தரமூழ்வினையாற்றலினன்றுன், மனந்தனிலீதொருதன்மைமதித்தான். ௧௨

நல்லொலிசேருவரிக்கடன்மீதாய்ச், செல்லுவன்யாரிதுசெய்தனரென்றே
வல்லையிலோர்குவன்மற்றவர்தம்மைக், கொல்லுவன்மெய்ப்படுசோரிகுடிப்பன். ()

என்றதிவீரனிரும்படையாவு, மொன்றறவாரியுருத்தனிகத்து
ணின்றுளர்தங்களைநேடுபுகொண்டே, வன்றிரைவேலையின்மீமிசைவந்தான். (௧௪)

வேறு.

விடலைதிருமுனமதிவீரனனிகங்கள்
புடையில்வரநீரின்மிசைபொள்ளெனவெழுந்தா
னடுதொழிலியற்றியிடுமாதிதனையெய்தக்
கொடியவிடம்வார்கடல்குலாய்நிமிர்வதேபோல். (௧௫)

விழுந்திடுமிலங்கைதனின்மேவுமதிவீர
னெழுந்தனதானையொடிருங்கடலுளங்கிக்
கொழுந்துமிசைசென்றனையகோலமொடுநின்ற
செழுந்திறல்கொண்மொய்ம்புடையசெம்மலைகண்டான். (௧௬)

கண்டனன்வெகுண்டிதழ்கறித்துநகைசெய்யா
வண்டர்குழுவானிவனொராண்டகைநம்மூதூர்
தெண்டிரையிலாழும்வகைசெய்துமிவணின்று
னெண்டிசைதொழுந்தகுவராணையினிதென்றான். (௧௭)

என்றுமொழியாவிரைவில்யாளிமுகன்மைந்தன்
கொன்றிவனதாருயிர்குடிப்பனெனவுன்னிச்
சென்றிடலுமாழ்ந்தவர்செயற்கையதுகாண்பா
னின்றதொருபேரறிஞனீர்மையதுகண்டான். (௧௮)

ஆனபொழுதத்தினிலவன்புடையில்வந்த
தானவர்கள்சூழ்ந்தனர்சமர்த்தொழிலியற்ற
மானவிறலோன்றனதுவாளுறைகழித்தே
யூனொடுயிர்சிந்தியிடவொல்லையடல்செய்தான். (௧௯)

Digitized By Roja Muthiah Research Library

அற்றனசிரத்தொகுதியற்றனகரங்க
ளற்றனபுயத்தொகுதியற்றனபதங்க
ளற்றனபெரும்புறமுமற்றவுடன்முற்று
மற்றனர்கள்யாருமுயிரற்றதவர்பூசல். (உ0)

பங்கிசெறிசெந்தலைகள்பாய்குருதிநீர்மே
லெங்கணுமிதப்பனவிருங்கடலினூடே
செங்கொடிபடர்ந்திடுசெழும்பவளவைப்பி
லங்கமலமானவையலர்ந்திடுதல்போலும். (உக)

அற்றமகல்வீரனவுணப்படைதுணிப்பச்
செற்றியபிணத்தொகைதிரைப்புணரிதூர்த்து
மற்றுமிசைபோந்துமணியாலுமொரிலங்கைப்
பொற்றையதியற்றியதுபோன்றுளதுமாதோ. (உஉ)

தன்படைவிளிந்துசலதிக்கடலுள்வீழ
முன்பனதிவீரன்முனியாவதனைநோக்கி
யென்புடையினேரையெறிந்தாய்கடிதினின்னைத்
தின்பனதுகாண்டியெனவேசெருமுயன்றான். (உ௩)

சொல்லுமதிவீரன்வருதோற்றமதுகாணு
வல்லைவருகென்றுதிறல்வள்ளலுமழைப்ப
வெல்லையதனிற்செருவினேற்றிவனையின்னே
கொல்லுகெனவங்கணொருகுந்தமதெறிந்தான். (உ௪)

உய்த்ததொருகூரயிலுரத்திலுறுமுன்னர்
மத்தகயநேர்விடலைமற்றதுதெரிந்தே
கைத்தலமிருந்திடுகனற்புரையும்வாளா
லத்துணையிரண்டுதுணியாய்விழவெறிந்தான். (உ௫)

கண்டமுறனாங்கரதுகண்டுதிறன்மைந்தன்
றண்டம்விரைந்தொன்றொருதடக்கைகொடெடுத்தே
மண்டமர்செயுன்னுயிரைவாங்குமிஃதென்னு
வண்டர்புகழ்காளைதனதாகமுறவிட்டான். (உ௬)

வேறு.

விட்டகாலையத்தண்டினைவெலற்கருந்திறலோ
னட்டிடான்றனிவாளினாலேற்றனனகலம்
பட்டுமற்றதுநுண்டுகளாகவப்பதகன்
மட்டிலாததோர்விம்மிதமெய்தினன்மறுகி. (உ௭)

வேறொர்முத்தலைப்படையதுகொண்டதிவீரன்
மாறிலாவிறன்மொய்ம்பினன்றன்மணிமார்பி
னூறுசெய்திறமோச்சலுங்கண்டுநம்முரவோன்
சீறியாங்கதுபற்றினன்செங்கையாலிறுத்தான். (உ௮)

இறுத்தகாலையிலிலங்கையில்யாளிமாமுகன்சேய்
செறுத்துமற்றிவன்றனையடலரிதெனச்சிந்தை
குறித்துமற்றொருநாந்தகமேந்தினன்குறுகி
வெறித்தகொண்டலூட்கொட்புறுமின்னெனவிதிர்த்தான். (உ௯)



Digitized By Roja Muthiah Research Library

கறங்கினிற்பெருவட்டணை புரிந்துதன்கரமே
னிறங்கொள்வாளினையிடம்வலந்திரித்தனனெறியே
பிறங்குமார்கலித்தெண்டிரையலைதரப்பெரிது
மறங்கொணூந்தகமீனுகண்டலமரும்வகைபோல். (௩0)

ஏதியிங்கிதுநான்முகன்றந்துளதெவர்க்கும்
பேதகஞ்செயலரியதாலன்னதுபிடித்தேன்
சாதிதிண்ணமீவருகெனுமிகைமொழிசாற்றிக்
கோதில்வீரன்முன்னனுகலுமனையவன்கூறும். (௩௧)

நன்றுநன்றுநின்னுற்றலுமாண்மையுநம்மை
வென்றியேயெனின்யாவருமேலுனைவியப்பார்
நின்றுநீசிலமொழிவதெண்கடிதுநேருதியால்
வென்றிவீரருந்தமைப்புகழ்கிற்பரோவென்றான். (௩௨)

என்னவொன்னலன்கிடைத்தனன்வீரனுமெதிர்ந்தா
னன்னபான்மையர்வாளமராடினரகல்வான்
மின்னுமாமுகிரேன்றியேயெதிரெதிர்விரிந்து
பின்னருள்புகுந்துடனுடன்செறிந்தபெற்றிமைபோல். (௩௩)

சென்னிநாடுவர்களத்தினைநாடுவர்செவிதாள்
கன்னநாடுவர்புயங்களைநாடுவர்கரங்க
ளுன்னிநாடுவருரத்தினைநாடுவருகளப்
பொன்னின்வார்கழனுடுவர்வாளமர்புரிவார். (௩௪)

இணங்குநீரவரிருவருமினையனவுறுப்பி
லணங்குசெய்திடுமரபினலாயிடையுய்ப்பார்
நுணங்குவிஞ்சையின்வன்மையானெய்தின்மாற்றிடுவார்
மணங்கொள்செந்நிறவாள்கொடேவட்டணைவருவார். (௩௫)

போதமின்னதிலெம்பிரான்றூதுவன்பொருவா
னேதிகொண்டுளான்றன்னையான்வலிந்திடலியல்போ
வாதலாலிவன்படைமுறைவெல்வதேயறனென்
றோதிசேருளங்கொண்டனனிடைதெரிந்துற்றான். (௩௬)

இடைபுகுந்ததிவீரனதடிகளோரிரண்டு
முடியுமாகமுந்தோள்களுமாங்கொருமுறையே
சுடர்பிறங்கியவாளினாலண்டகைதுணித்துக்
கடிதுவீட்டினனடுவன்வந்தவனுயிர்கவர்ந்தான். (௩௭)

அதிவீரன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௫௪.

---

# மகேந்திரஞ்செல்படலம்.

வீரவாகுநின்றவ்வதிவீரனைவீட்டித்
தாரைவாளுறைசெலுத்தியேவெஞ்சமர்தணித்து
நேரில்வீரமாமகேந்திரம்போவதுநினைந்தே
பேருலாவருமிலங்கையினெல்லைநீத்தெழுந்தான். (௧)

Digitized By Roja Muthiah Research Library

எழுந்துவான்வழிச்சேறலுமார்கலியிடையே
விழுந்துகீழுறுமிலங்கைமீண்டெழுந்ததுவிரைவிற்
கழிந்ததொல்பரநீங்கியகாலையிற்கடலூ
டழுந்துகின்றபொற்றோணிமீச்சென்றிடுமதுபோல். (௨)

வார்த்தயங்கியகழலவன்வான்வழிக்கொளலு
மீர்த்ததெண்கடனீத்தமேலெழுதருமிலங்கை
சீர்த்தநான்முகனுறங்குழிச்சிந்துவூடழுந்திப்
பேர்த்துஞாலம்விட்டெழுதருமேருவிற்பிறழும். (௩)

எள்ளுநீரரைப்பற்பகலாற்றலினிலங்கை
கொள்ளைவெம்பவமாசிருளடைந்ததுகுறைதீர்
வள்ளலருள்படநீத்ததுபவந்துகண்மாற்றத்
தெள்ளுநீர்க்கடல்படிந்தெழுந்தாலெனத்திகழும். (௪)

கந்தரந்தவழ்தெண்புனற்கருங்கடனடுவட்
சுந்தரஞ்செறிபொன்சுடரிலங்கைதோன்றியது
முந்துகாலையிலெம்பிரானருள்வழிமுராரி
யுந்திநின்றெழுபிரமன்மூதண்டமொத்துளதால். (௫)

இன்னதாகியவிலங்கைமாபுரத்தைநீத்தெழுந்து
பின்னுமாயிரம்யோசனைவானிடைப்பெயர்ந்து
பொன்னுலாவுறுவாகையம்புயத்தவன்புலவோ
ரொன்னலானுறைமகேந்திரவரைப்பின்முன்னுற்றான். (௬)

நெற்றிநாட்டத்துநந்திதன்கணத்தவனேமிப்
பொற்றையாமெனச்சூழ்ந்துயர்மகேந்திரப்புரிசைச்
சுற்றுஞாயிலும்வாயில்கடோறுந்தொறுந்தோன்றுங்
கற்றைமாமணிச்சிகரியுநனித்துமுன்கண்டான். (௭)

சேரலாரமர்மகேந்திரநகர்வடதிசையில்
வாரிவாய்தனுட்கோபுரத்தெற்றியின்மாடே
கோரனேயதிகோரனேயெனப்படுங்கொடிய
வீரர்தானையோடிருந்தனர்காவல்கொள்வினையால். (௮)

கரிகளாயிரம்வெள்ளமேதேருமக்கணிதம்
பரிகளாங்கதற்கிருதொகையத்தொகைபதாதி
யுரியவப்பெருந்தானையம்பெருங்கடலுலவா
விரவிமேவரவிருந்தனர்காத்திடும்வீரர். (௯)

பகுதிகொண்டிடுதானையஞ்சூழலாம்பரவைத்
தொகுதிகண்டனன்விம்மிதங்கொண்டனன்றுன்னார்
மிகுதிகொண்டுறைகாவலுங்கண்டனன்வியனூர்
புகுதிகொண்டிடுமுணர்வினுணினையனபுகல்வான். (௧௦)

ஈண்டுசெல்லினித்தானைசூழ்ந்தமர்செயும்யானு
மூண்டுநேரினுமுடிப்பவோர்பகலெலாமுடியு
மாண்டதென்னினுமுலவுமோமாநகரிடத்து
மீண்டும்வந்திடுங்கரிபரிபதாதிதேர்வெள்ளம். (௧௧)

Digitized By Roja Muthiah Research Library

வந்தவந்தோர்தானவப்படையொடேமலைவுற்
றெந்தைகந்தவேளருளினல்யானெருவேனுஞ்
சிந்திநிற்பனேலிந்நகர்த்தானைகள்சிதைய
வந்தமில்பகல்சென்றிடுமெளியரோவவுணர். (௧௨)

எல்லையில்பகல்செல்லினுஞ்செல்லுகவினைய
மல்லன்மாநகரவுணர்மாப்பெருங்கடல்வறப்ப
வொல்லுநீர்மையால்யானடல்செய்வனேனுருத்துத்
தொல்லைமைந்தரைத்துணைவரையுய்க்குவன்சூரன். (௧௩)

உய்த்தமைந்தர்கள்சூழ்ச்சியின்றுணைவர்களொழிந்தோ
ரத்திறத்துளோர்யாரையும்வெலற்கரிதயில்வேற்
கைத்தலத்தவன்வலிகொடேபற்பகல்காறு
மித்தலைச்சமராற்றியேமுடிக்குவனெனினும். (௧௪)

ஏவரும்வெலற்கரியசூர்பின்னர்வந்தெதிர்க்கு
மோவில்வெஞ்சமர்பற்பகலாற்றியானுறினும்
வீவதில்லையாலங்கவன்மேலைநாட்டவத்தாற்
றேவதேவன்முன்னருளியவரங்களின்சீரால். (௧௫)

அன்னவன்றனைமாலயன்றனக்கும்வெல்லரிதா
லின்னுமாங்கவனுனைக்கும்வெருவியேயிருந்தார்
பின்னையாரவன்றன்னைவென்றிடுவர்கள்பெருநாட்
டுன்னியான்சமராற்றினுந்தொலைகிலன்சிறிதும். (௧௬)

தொலைந்துபோகிலன்சூரமரியற்றிடிற்றுன்னிக்
கலந்தயான்விறலின்றிமீண்டேகுதல்கடனே
மலைந்துநிற்கவேவேண்டுமோலாயினும்வறிது
மலந்தலைப்படுஞ்சுரர்சிறையகன்றிடவற்றோ. (௧௭)

மற்றிந்நீர்மையிற்பற்பகலவனொடுமலைந்து
வெற்றிகொண்டிலனின்னுமென்றமரினைவீட்டி
யொற்றினீர்மையையுணர்த்துதலொல்லுமோவுலவா
தெற்றைவைகலுமமர்செயவேண்டுமாலெனக்கே. (௧௮)

போதநாயகன்பரம்பொருணாயகன்பொருவில்
வேதநாயகன்சிவனருணாயகன்விண்ணோர்க்
காதிநாயகனறுமுகநாயகனமலச்
சோதிநாயகனன்றியார்சூரனைத்தொலைப்பார். (௧௯)

இம்பர்சூரொடுபொருதுநின்றிடுவனேயென்னி
னம்பிரானறுமாமுகன்பின்னரேநண்ணி
வெம்புசூரனைவேலினாற்றடிந்துவெஞ்சிறையி
லும்பர்யாரையுமீட்டிடவேண்டுமேலொருநாள். (௨௦)

ஆதலாலமராற்றுதன்முறையதோவஃதான்
றீதுநம்பெருமான்றனதருளுமன்றினைய
தூதர்செய்கடனுங்கொலோவமர்பெருத்தொடர்பாற்
போதலேகடனென்றனன்பொருவில்சீரறிஞன். (௨௧)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

இப்பால்வாய்தலினெல்லைநீங்கிய, துப்பார்தானைகடுற்றுநின்றவா
லப்பாலெய்தரிதாமருங்குபோய், வைப்பார்கீழ்த்திசைவாயினண்ணுவேன். (௨௨)

என்னவுன்னியியன்றவுத்தரப், பொன்னார்வேலிபுகாதுபாங்கர்போய்க்
கொன்னார்கின்றகுணக்குவாய்தலின், முன்னாவேகினன்மொய்ம்பின்வீரனே. ()

மேதிக்கண்ணவன்வீரபானுவென், றாதிக்கத்தவுணர்க்குநாயக
ரேதிக்கையரிரண்டுவீரரு, மாதிக்கன்னதன்வாயில்போற்றினார். (௨௪)

திருவுந்தும்வடதிக்குவாய்தலின், விரவுந்தானையின்வெள்ளமெய்த்தொகை
பரவுஞ்சூரர்பயிற்றுபல்பவத், தருவஞ்சூழ்ந்தெனவெர்த்துநின்றவே. (௨௫)

வண்டார்செற்றியவாகைமொய்ம்பினான், கண்டானன்னகடிக்கொள்காவலுந்
தண்டாதுற்றிடுதானைநீத்தமு, மண்டாவற்புதநீரனாயினான். (௨௬)

ஆண்டங்குற்றவளப்பில்சேனையைக், காண்டும்மிவ்வழிகாவல்போற்றியே
சேண்டுன்றும்புவிசெற்றுமாதலா, லீண்டுஞ்செல்லரிதென்றுமுன்னினான். (௨௭)

நின்றிப்பாற்படனீர்மையன்றரோ, தென்றிக்கின்வழிசென்றுநாடுவ [ன். (௨௮)
னென்றுட்கொண்டவணீங்கியேகினான், குன்றிற்றென்மிடல்கொண்டதோளிஞ

மகேந்திரஞ்செல்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௪௮௨.

---

# கயமுகன்வதைப்படலம்.

ஏகாநிற்புழியேந்தல்கீழ்த்திசை, மாகாவற்கொண்மதங்கமாமுகன்
மீகானொப்பவியன்கலத்தினுக், காகாயத்தினமர்ந்துபோற்றுவான். (௧)

நூற்றுப்பத்துநுவன்றதோன்முகன், மூற்றைக்கை * யினன்மொய்ம்பிராயிரன்
சீற்றத்துப்புறுதீயசிந்தையான், கூற்றத்துக்கொருகூற்றமேயனான். (௨)

பொன்னாரேமபுரத்துவைகலு, மன்னாய்வாழ்பவன்மாறுகொண்டுதன்
முன்னாவெய்திமுனிந்துபோர்செய, வொராணின்றியுளங்குறைந்துளான். (௩)

கருமேகங்கள்கறித்துவாரியுண், டுருமேறுமுரற்றவோச்சுவான்
பெருமேதக்கபவஞ்செய்பெற்றியான், செருமேல்கொண்டிடுசிந்தைபெற்றுளான்.

மஞ்சார்வேழம்வனத்தில்வல்லுளி, யெஞ்சாவெவ்வரியாளிவல்லிய
மஞ்சாராயிரமங்கைகொண்டுணைச், செஞ்சோரிப்புனல்சிந்தும்வாயினான். (௫)

காசைப்போதுகடுத்தமெய்யர்தென், றாசைக்காலரொராயிரத்தர்தம்
பாசத்தோடுபயின்றுசேர்ந்தென, வீசித்தூங்கும்வியன்றுதிக்கையான். (௬)

வாணாளஃகினன்மாயுமெல்லையா, னேனாலத்திசையேகும்வீரனைக்
காணாநின்றுகனன்றுசாலவுஞ், சேணாநின்னனசெப்பியேகுவான். (௭)

---

* மூற்றையென்பது இரட்டையென்பதுபோல நின்றது; நிற்பவே, மூற்றைக்கை யென்பதற்கு இங்கே மூவாயிரங்கையெனப்பொருள் கொள்ளப்படும்.

Digitized By Roja Muthiah Research Library

மிக்கார்காவல்விலங்கிநீயிவட், புக்காய்மாயைபுகன்றுளாய்கொலோ
வககாருனுமெம்மாணைநீங்கியே, யெக்காலத்திறுமேகவல்லதோ. (௯)

வறியாராகிமயங்கும்வானவச், சிறியார்வைகியசீரிலூரெனக்
குறியாவந்தனைகோதிலிந்நக, ரறியாயோநமதாணையாற்றலே. (௯)

மூண்டேகுற்றனென்மொய்சினத்தினேன், மாண்டேபோயினைவல்லைநீயினி
மீண்டேபோந்திறமில்லைமேலுனக், கீண்டேமாயவிழைத்தவெல்லையே. (௧0)

சூராள்கின்றதொர்தொல்லைமாநகர், சேராநின்றனைசிறுகேசரி
பேராவெல்லையொர்பீடின்மான்பிணை, யாராய்தற்குவருங்கொலாற்றலால். (௧௧)

தொடுநேமிக்கடறுண்ணெனக்கடந், திடைசேர்கின்றவிலங்கைநீங்கியே
கடிதேயிந்நகர்காணவுன்னியே, யடைவாய்தேவர்கணத்துளாரைநீ. (௧௨)

திருத்தங்கண்ணகறேவர்தம்முளும்,விருத்தன் * போலுமிகத்துணிந்துநீ[றுளாய்.()
யொருத்தன்போந்தனையொன்றெர்வாளொடே, வரத்தென்னிவ்விடைமாயைகற்

ஆலாலத்தையயின்றநம்பனோ, மாலானோவனசத்திலண்ணலோ
பாலார்தந்திபடைத்தகள்வனோ, மேலாரிங்குனைவிட்டதன்மையார். (௧௪)

சுற்றுநின்றனைசூழவிந்நக, ரொற்றாய்வந்தனைபோலுமுன்றனை
மற்றாருய்த்தனர்வந்ததென்கொலோ, விற்றாய்நின்னுயிரெங்கணுய்திநீ. (௧௫)

சிறையிற்பட்டுழறேவர்செய்கையை, யறிகுற்றிந்திரனேயாகியே
நெறியிற்போகநினைந்துளாய்கொலாங், குறுகுற்றாயிதுவுங்குறிப்பதோ. (௧௬)

விண்டோயுங்கனன்மேவுமெல்லையின், மண்டோய்பூளைமருத்தனுய்த்தெனப்
பண்டேநொய்யைபடுந்திறத்திவட், கொண்டேவந்ததுகொல்லும்வல்வினை. (௧௭)

முன்னந்நம்பணிமுற்றுமாற்றியே, கின்னங் ० கொண்டுகரந்தகீழ்த்திசை
மன்னன்பாலுறுவாருளன்றுநீ, யின்னும்மஞ்சலையென்னையெண்ணலாய். (௧௮)

கொல்லாநிற்பதொர்கூற்றமேயெனச், செல்லாநின்றிடுதிண்ணியேன்முனை
நில்லாயெங்கடாநீங்குவாயெனு, வொல்லானேதியுரப்பியேகினன். (௧௯)

வன்றாள்கொண்டமதக்கயாசுரன், சென்றானின்னனசெப்பியிம்மொழி
நன்றாலென்றுநகைத்துநோக்கியே, நின்றான்வாகைநெடும்புயத்தினன். (௨0)

ஓவாதிவ்வகையோதிமுன்வருந், தீவாயோனெதிர்சென்றுவல்லையிற் [ன். (௨௧)
சாவாயென்னிடைசார்ந்துளாய்கொலாம், வாவாவென்றனன்வாகைமொய்ம்பின

வானோரஞ்சவருங்கயாசுரன், றானோர்குன்றுதனைப்பறித்திடா
வூனேடென்னுயிருண்ணுமீதெனு, வானோன்மைந்தன்முன்னார்த்துவீசினன். (௨௨)

விண்டோய்மேனிவியன்கயாசுரன், கொண்டோர்கையில்விடுத்தகுன்றது
வண்டோலம்புரிமாலைமொய்ம்பினன், றிண்டோண்மீமிசைசெவ்வனுற்றதே. ௨௩

வேழத்தோன்முகன்விட்டபூதரம், பாழித்தோண்மிசைபட்டகாலையில்
வாழிப்பூதியின்வட்டுவிண்டெனப், பூழித்தாகியுடைந்துபோயதே. (௨௪)

பொடியுங்காலெதிர்புக்கதீயவன், மிடல்கொண்டுற்றிடுவீரனுற்றல்கண்
டுடனுந்திண்சினமுற்றொராயிரம், படருங்குன்றுபறித்தன்மேயினன். (௨௫)

* விருந்தன் எனற்பாலது விருத்சன் என வலித்தல் விகாரமாயிற்று.
० கின்னம் - துன்பம்.

பறியாநின்றபகட்டுமாமுக, னெறிவீழ்கின்றநெடுங்கைசுற்றிரு
ணிறைசேர்மேருவிருந்தகோடெலாங், கறைசேர்காலவர்கட்டெழுந்தபோல் *. ()

பத்தாநூறுபடுத்தவேலையுண், மத்தாகுற்றனவாசுகித்தொகை
மொய்த்தார்வன்றலைமுன்புசூழ்ந்தெனக், கைத்தாமால்வரைக்காட்சிமிக்கவே. ()

துண்ணென்றேகயாசுரனூறுபத், தெண்ணூந்தொல்கிரியாவுமெம்பிரான்
கண்ணின்றோன்விடுகாமர்காளைமேல், விண்ணங்கான்றெனவார்த்துவீசினான். ()

பாடார்பல்கிரிபற்றிவீசலு, மீடார்வெம்புலியாளிகேசரி
கோடார்தந்திகள்கோடிகோடிகள், வீடாவார்ப்பொடுவிம்மிவீழ்பவே. (௨௯)

கேடாய்மன்னர்கிடப்பவாங்கவர், வீடாவாக்கமிசைந்துளாரெனப்
பாடாவண்டுபராரைமால்வரை, யூடார்தேன்களுகுப்பவுண்டவே. (௩0)

வேறாகும்பலவெற்பிடந்தொறு, மூறாநின்றுலவுற்றவான்புனன்
மாறாமற்கவிழ்வுற்றுவல்லைபே, ராறாகிக்கடலென்னவார்த்ததே. (௩௧)

வரைவீழ்பூம்புனன்மாநதிக்கணே, யிரையாமாக்களியாவும்வீழ்தலாற்
றிரைசேர்வாரிகள்சென்றுசேணெழீஇ, விரைவால்வெய்யவன்வெப்பநீக்குமே. ()

பேசுஞ்சீரிவைபெற்றவெற்பெலா, மீசன்றூதுவன்முன்னரெய்தின
பாசஞ்சுற்றியபம்பரத்தொகை, வீசுங்காலைசுழன்றுவீழ்வபோல். (௩௩)

வேறு.

சுடர்ப்பெருங்கதிராதவன்றுண்ணெனக்கரப்ப
வடுக்கலாயிரமின்னவாறொருதலையாகக்
கடற்புகுங்கணமுகிலெனவருதலுங்கண்டான்
றடக்கைவேலுடையண்ணறன்முன்னினன்றமியோன். (௩௪)

நிற்குமெல்லையின்வெங்கொலைத்தொழின்முறைநிரம்பக்
கிற்கும்வெய்யவன்விடுத்திடுமாயிரங்கிரியும்
பற்கன்மால்வரைகாப்பவன்றன்மிசைபழிதீ
ரற்கன்மேல்வருமெழிலிகளெனவடைந்தனவே. (௩௫)

வேறு.

மறுவரையாததிங்கள்வார்சடைக்கடவுணல்க
வறுவரையனையாப்பெற்றோனருளினாலையனிற்ப
வுறுவரைபத்துநூறுமொருங்குமாயுற்றுமற்றோர்
சிறுவரைதன்னில்யாவுஞ்சிதறியேயுடைந்தவன்றே. (௩௬)

தெளிதருவீரன்றன்மேற்செறிந்திடுமடுக்கல்யாவும்
விளிவொடுமாய்ந்தவன்றிவினைத்திலவேறங்கொன்றும்
வளநனிசுருங்கிவானம்வறந்தநாள்வெளிற்றுக்கொண்மூக்
கிளர்வனபயனின்றாகிக்கெடுபட்டிடையுமாபோல். (௩௭)

மட்பகைவினைஞரானோர்வினைதருகலங்கண்முற்றுந்
திட்பமொடமர்ந்தகற்றூண்சேர்ந்துழிச்சிதறுமாபோற்
கொட்புறுபுழைக்கைவெய்யோன்குறித்தெறிபிறங்கல்யாவு
மொட்பமதடைந்தவீரன்மிசைபடவுடைந்தவன்றே. (௩௮)

---

* கறைசேர்காலவர் கட்டெழுந்தபோல் என்பதற்கு - கரியவாயுக்கள்பிடுங்கி எழுந்தவாறுபோல் எனப் பொருள்கொள்க.

Digitized By Roja Muthiah Research Library

விறல்கெழுபுயத்தினான்மேல்விடுத்திடுகிரிகள்யாவும்
வறிதுபட்டிடலுங்காணாமால்கரிமுகத்தனின்று
னறநெறியொருவிமொய்ம்பாலாற்றியவெறுக்கையாவும்
பிறர்கொளவுகுத்தியாதுமூதியம்பெறுகிலார்போல். (௩௯)

கண்டுவிம்மிதத்தனாகிக்கயாசுரன்முனிந்தோர்தண்டந்
திண்டிறன்மொய்ம்பன்றன்மேற்செலுத்தலுமதனைக்காணா
வொண்டழல்புரையுமொள்வாளுறைகழித்தொல்லைவீழத்
துண்டமதாக்கியன்னோனெதிருறத்துன்னலுற்றான். (௪0)

மத்தவெங்கயமாந்தீயோன்வாகையந்தடந்தோளண்ணன்
மெய்த்தனியாற்றல்காணாவிழுத்தகுபனைக்கையோச்சிப்
பத்துநூறானசாலப்பழுமரம்பறியாவேர்ந்தி
யுய்த்திடவொருதன்வாளாலொய்யெனச்சிந்தியார்த்தான். (௪௧)

காயெரிகலுழும்வெங்கட்கயாசுரன்விடுவான்பின்னுஞ்
சேயுயர்வரைபல்வேறுதெரிந்தனன்பறிக்குமெல்லை
நாயகன்றூதன்காணாநாந்தகங்கொடுபோயன்னா
னாயிரமாகியுள்ளபுழைக்கையுமறுத்தானன்றே. (௪௨)

அறுத்தலுங்கவன்றுதீயோனாயிரத்திரட்டிகையுஞ்
செறித்திவன்றனைப்பற்றித்திற்றியாக்கொள்வனென்றே
குறித்தனன்வளைப்பவாளாற்கொம்மெனவாற்றல்வீரன்
றறித்தனனொருசார்வந்தவாயிரந்தடக்கைமுற்றும். (௪௩)

செற்றமால்கரியின்பேரோன்றிண்கையாயிரமும்வீட்ட
மற்றையாயிரங்கையாலும்வாகையஞ்செம்மன்மார்பி
னெற்றினானெற்றுமெல்லையெல்லையில்வெகுளியெய்தி
யற்றுவீழ்ந்திடவேவாளாலவையெலாமடுதல்செய்தான். (௪௪)

கொலைகெழுதறுகணால்வாய்க்குஞ்சரமுகத்துவெய்யோ
னிலைகெழுபாணிமுற்றுநீங்கியீரைந்துநூற்றுத்
தலைகெழுநிலைமைத்தாகித்தண்சினைபலவுமல்கி
யலைகெழுவீழ்போயுற்றவாலமேபோலநின்றான். (௪௫)

பாணிகளிழந்துநின்றபகட்டுடைவதனத்தீயோ
னாணினனிவனையட்டுநம்முயிர்துறத்துமென்னா
மாணறுமனத்திற்கொண்டுமற்றொழின்முன்னித்தோளாற்
றாணுவின்கயிலைகாப்போன்றடம்புயந்தாக்கியார்த்தான். (௪௬)

ஐயனதொற்றன்காணாவாற்றலின்றாகிமுற்றுங்
கையினையிழந்துநின்றான்கடுங்கதிர்வாளின்வெம்போர்
செய்யலனினியானென்னாச்சிந்தைசெய்துறைவாளோச்சி
யொய்யெனவவன்றன்மார்பினுதைத்தனனொருதன்றாளால். (௪௭)

உதைத்திடுகின்றகாலையொல்லெனவரற்றிவீழ்ந்து
மதத்தினையுறுகபோலமால்கரிமுகத்துவெய்யோன்
பதைத்தனனாவிசிந்திப்பட்டனன்பகிர்ந்தமார்பிற்
குதித்திடுசோரிநீத்தங்குரைகடற்போயதன்றே. (௪௮)

Digitized By Roja Muthiah Research Library

அவ்வியல்கண்டுபல்லோரவுணர்கணமரேயீண்டு
தெவ்வியன்முறையினின்றுசெருவினையிழைப்பார்போலு
மிவ்விவராடற்கேதுவென்கொலோவறிதுமென்றே
கவ்வையினெறிகடோறுங்காண்பதுகருதிப்போந்தார். (௪௯)

சென்றிடல்வீரன்காணுத்தீயரென்செய்கைநோக்கிற்
கன்றிவெஞ்சினமேற்கொண்டுகடுஞ்சமரிழைப்பர்யானு
நின்றமர்புரிதல்வேண்டுநிலைமையீதென்றலம்மா
வின்றுமுடியுங்கொல்லோவியற்றினுமிவர்போரென்றான். (௫0)

ஆரணந்தனக்குங்காணுவாதியங்கடவுள்சொற்ற
பேருண்மறந்தேயின்னேபீடிலார்தம்மோடேற்றுப்
போரினையிழைத்துநிற்றல்புல்லிதுபுலமைத்தன்றாற்
சூருறைமூதூர்தன்னிற்றன்னுவன்கடிதினென்றான். (௫௧)

எப்பெருவாயில்சாரவேகினுமங்கணெல்லாங்
கைப்படையவுணர்வெள்ளங்காவல்கொண்டுற்றவாற்றாற்
றப்பினன்சேறலொல்லாதமியனிப்படிவத்தோடு
மெய்ப்பதியிதற்குச்செல்வன்வேற்றுருவெய்தியென்றான். (௫௨)

கூற்றினையுறழும்வைவேற்குமரவேளருளாலீண்டோர்
வேற்றுருவதனைக்கொண்டுவெய்யராமவுணவீரர்
போற்றுமிக்குணபால்வாய்தல்பொள்ளெனக்கடந்துபின்னர்
மாற்றலனூரிற்செல்வனென்றனன்வாகைமொய்ம்பன். (௫௩)

நொய்யதோரணுவினுற்றநுணுகியுமேன்மைதன்னிற்
பொய்யில்சீர்பெருமைத்தாயும்பூரணமாகிவைகுஞ்
செய்யதோர்குமரன்பொற்றாள்சிந்தைசெய்தன்பிற்போற்றி
யொய்யெனவருளினீரரலோரணுவுருவங்கொண்டான். (௫௪)

நுணுகுதன்னுணர்வேபோலநோக்கருந்திறத்தாற்றானோ
ரணுவுருக்கொண்டுவீரனடுகளமதனைநீங்கி
யிணையறுகுமரற்போற்றியெழுந்துவிண்படர்ந்துமூதூர்க்
குணதிசைவாய்தனின்றகோபுரமிசைக்கணுற்றான். (௫௫)

சயமுகன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௨௩௭.

---

# நகர்புகுபடலம்.

அண்டம்யாவையுமெழுவகையுயிர்த்தொகையனைத்தும்
பிண்டமாம்பொருண்முழுவதுநல்கியெம்பெருமான்
பண்டுபோரித்ததிறமெனமகேந்திரப்பதியின்
மண்டுதொல்வளநோக்கியேயின்னனமதிப்பான். (௧)

எந்தைமுன்னரேசூரபன்மாவினுக்கீந்த
முந்துமண்டங்களலமருமுவரிகண்முழுதும்
வந்துமொய்த்தனபோலுமால்வரைபுரைகாட்சிக்
கந்துபற்றியேயார்த்திடுமெல்லைதீர்கரிகள். (௨)

இயலுமைம்பெருநிறத்தினண்டங்களினிருந்த
புயலினம்பலவோர்வழித்தொக்கனபொருவ
மயிலிருஞ்சரமுயலொடயூகமற்றொழிலைப்
பயில்பரித்தொகையளப்பிலவயின்றொறும்பரவும். (௩)

அண்டமாயிரத்தெட்டினுண்மேதகுமடன்மாத்
தண்டமால்கரியாயினதடம்பெருந்தேர்க
ளெண்டரும்பொருளியாவுமீண்டிருந்தனவிவற்றைக்
கண்டுதேர்ந்தனரல்லரோவகிலமுங்கண்டோர். (௪)

இணையிலிவ்விடைத்தானையின்வெள்ளமோரிலக்க
நணுகுமென்றனனந்தணனூற்பெரும்படையுங்
கணிதமில்லனவிருந்தனவெள்ளிகண்ணிலன்போ
லுணர்விலன்கொலாங்கனகனுங்கேட்டசொல்லுரைத்தான். (௫)

உரையின்மிக்கசூர்பெற்றவண்டந்தொறுமுளவாம்
வரையின்மிக்கதேர்கடல்களின்மிக்ககைமாக்க
டிரையின்மிக்கவாம்பரித்தொகையாயிடைச்செறிந்த
பரவைநுண்மணறன்னினுமிக்கனபதாதி. (௬)

மண்கொளாயிரத்தெட்டெனுமண்டத்தின்வளமு
மெண்கொளெண்பதினுயிரயோசனையெல்லைக்
கண்கொள்பான்மையிலீண்டியதற்புதங்கறைதோய்
புண்கொள்வேலுடைச்சூர்தவத்தடங்கியபோலாம். (௭)

உரைசெயாயிரத்தெட்டெனுமண்டத்தினுளவாங்
கரையில்சீரெலாந்தொகுத்தனனீண்டவைகண்டாந்
தருமமெய்யளிகண்டிலமவற்றையுந்தந்து
சுரர்கடம்முடன்சிறையிலிட்டான்கொலோசூரன். (௮)

அரண்டருங்கழற்சூரன்வாழ்மகேந்திரமதனிற்
றிரண்டபல்லியத்துழனியேழ்கடலினுந்தெழிப்ப
முரண்டிறத்தவையியம்புவாரளவையார்மொழிவா
ரிரண்டுபத்துநூறியோசனையுண்டவரிடங்கள். (௯)

கரிகள்சேவகமொருபதினுயிரங்கடுந்தேர்
விரியுநீளிடையொருபதினுயிரம்விசயப்
பரியினெல்லையோரிருபதினுயிரம்பையத்
துருவினின்னமுமுண்டுகொல்யோசனைத்தொகையே. (௧0)

இவுளிவாயினுமால்கரிக்கரத்தினுமிழிந்து
திவளுநீர்மைசால்விலாழியுந்தானமுஞ்செறிந்து
குவளையுண்கணார்நீத்தசாந்தணிமலர்கொண்டே
யுவளகந்தருமகழிசென்றகன்கடலுறுமால். (௧௧)

வளமைமேதகுமிப்பெருமகேந்திரம்வகுத்தன்
முளரியண்ணலிங்கொருவனுன்முடிந்திடவற்றோ
வொளிறுவாட்படையவுணர்கோனுடையவண்டத்தி
னளவினுன்முகர்யாரும்வந்திழைத்தனராமால். (௧௨)

Digitized By Roja Muthiah Research Library

புரந்தரன்றனதுலகமுமொழிந்தபுத்தேளி
ரிருந்தவானமுமெண்டிசைநகரமும்யாவும்
வருந்தியிந்நகர்சமைத்திடமுன்னரேவண்கை
திருந்தவேகொலாம்படைத்தனர்திசைமுகத்தலைவர். (௧௩)

பொன்புலப்படுதுறக்கம்வான்மாதிரம்புவிகீழ்
துன்பில்போகமாருலகென்பர்தொடுகடற்பெருமை
முன்புகாண்கலர்கோட்டகம்புகழ்தருமுறைபோ
லின்பம்யாவையுமுளநகரீதுபோலியாதோ. (௧௪)

கறைபடைத்ததாட்கரிபரியவுணர்தேர்க்கணங்க
ளறைபடைத்திவணீண்டியவண்டங்களனைத்து
முறைகடற்றொகைமுழுவதுஞ்சூர்கொணர்ந்தொருங்கே
சிறைபடுத்தியபோலும்வேறொன்றிலைசெப்ப. (௧௫)

ஐயபூழியுமாரகிலாவியுமாற்ற
னொய்யவாகியவணுக்களுநுழைவரிதென்னிற்
செய்யவிந்நகராவணமெங்கணுஞ்செறிந்த
வெய்யதேர்கரியவுணர்தம்பெருமையார்விரிப்பார். (௧௬)

அள்ளல்வேலைசூழ்மகேந்திரபுரிக்கிணையாகத்
தெள்ளிதாவொருநகருமின்றுளதெனச்செப்ப
வெள்ளலின்றியவண்டமோராயிரத்தெட்டி
னுள்ளசீரெலாமீதுபோலொருபுரத்துளதோ. (௧௭)

கழிந்தசீர்த்திகொளிந்நகர்தன்னிடைக்களுல
வழிந்துதொல்லுருமாழையின்மணிநிழலாகி
யிழிந்துளான்பெறுதிருவெனப்பயன்பெறுதேவர்க்கு
மொழிந்தவேலைகடம்புகழ்கொள்வதிவ்வுவரி. (௧௮)

ஏற்குநேமிசூழ்மகேந்திரவெறுக்கையிவ்வுலகோ
ரார்க்குமோர்பயன்பெற்றிலதுயிர்ப்பலியருந்துங்
கார்க்குழாம்புரையலகைசூழ்காளிமந்திரத்திற்
சீர்க்கொள்கற்பகம்பிறர்க்குதவாதமர்செயல்போல். (௧௯)

மறக்கொடுந்தொழிலிரவியம்பகையழன்மடுப்பத்
துறக்கமாண்டதுபட்டிமையாகுமத்தொல்லூர்
சிறக்குமிந்நகர்நோக்கியேதன்னலந்தேய்ந்து
பொறுக்கரும்பெருநாண்சுடக்கரிந்ததுபோலாம். (௨௰)

துங்கமிக்கசூர்படைத்திடுமண்டமாத்தொகையுட்
செங்கதிர்த்தொகையாங்கவன்பணியினாற்சென்று
பொங்குதண்சுடர்நடாத்திநின்றென்னவிப்புரியி
லெங்குமுற்றனசெழுமணிச்சிகரமெண்ணிலவே. (௨௧)

மாணிலைப்படுமெழுவகையுலகின்வைப்பென்ன
வேணிலைப்பெருஞ்சிகரிகள்செறிந்தனயாண்டுங்
கோணிலைக்கதிருடுப்பிறர்பதங்களிற்குழுமி
நீணிலைத்தலம்பலவுளமாடங்கணிரந்த. (௨௨)

Digitized By Roja Muthiah Research Library

நூறியோசனைசேண்படுநீட்சியுநுவலு
மாறியோசனைப்பரவையும்பெற்றவாவணங்க
ளேறுதேர்பரிகளிறுதானவர்படையீண்டிச்
சேறலாயிடையருமையால்விசும்பினுஞ்செல்லும். (௨௩)

அடன்மிகுத்திடுதானவரகலிருவிசும்பிற்
கடிதினிற்செலமத்திகைகாட்டுமாறொப்ப
நெடுமுகிற்கணந்தழுவுசூளிகைமிசைநிறுவுங்
கொடிகளெற்றிடப்போவனவிரவிகொய்யுளைமா. (௨௪)

மேலுலாவியபடிகமாளிகைசில்மின்னார்
மாலைதாழ்குழற்கிடுமகிலாவியான்மறைவ
சீலநீங்கியவவுணர்தஞ்சீர்த்திகளனைத்து
மேலவேயவர்பவத்தினுளொடுங்குமாறென்ன. (௨௫)

அணிகுலாயகோமேதகமரகதமாரந்
துணியுநீலம்வச்சிரம்வயிடூரியந்துப்பு
நணியபங்கயம்புருடராகமெனுநவமா
மணிகளாற்செய்துமிளிர்வனவரம்பில்பொன்மாடம். (௨௬)

இயல்படைத்தவெண்படிகத்தினியன்றமாளிகைமேற்
புயல்படைத்திடுகளிமயில்வதிந்திடப்புடையே
கயல்படைத்தகண்ணியர்புரியகிற்புகைகலப்ப
முயல்படைத்திடுமதியினைச்சூழ்தருமுகில்போல். (௨௭)

வளனியன்றிடுசெம்மணிப்பளிங்குமாளிகைமே
லொளிறுபொற்றலத்தரிவையர்வடிமிசைந்துறுதல்
வெளியசேயனபங்கயப்பொகுட்டின்மீமிசையே
யளியினங்கடேன்மாந்தியேவைகுமாறனைய. (௨௮)

துய்யவாலரிபுனற்கிறைமண்ணியேதொகுப்பச்
செய்யதீயவனூன்களோடவைப்தஞ்செய்ய
மையன்மாதரோடவுணர்களரம்பையர்வழங்க
நெய்யளாவுண்டியுண்குவர்மறுசிகைநீக்கி. (௨௯)

துப்புறுத்தனகுஞ்சியங்காளையர்தொகையுஞ்
செப்புறுத்துசீறடிமினார்பண்ணையுஞ்செறிந்து
மெய்ப்புறத்தியல்காட்சியுங்கலவியும்வெறுப்பு
மெப்புறத்தினுநிகழ்வனமதனுலகிதுவே. (௩0)

பூணுமாரமுங்கலாபமுமிழைகளும்பொன்செய்
நாணுமொற்றராற்பரத்தையர்பாற்படநல்கிப்
பேணிமற்றவர்விலக்கினநயந்தனபிறவு
மாணுமைந்தர்கடேறுவானாறுபார்த்தயர்வார். (௩௧)

துன்றுதானவர்தெரியலின்மாதர்பூந்தொடையின்
மன்றன்மாளிகைச்சோலையினிலஞ்சியின்மலரிற்
குன்றமால்கரித்தண்டத்தின்யாழ்முரல்குழுவிற்
சென்றுசென்றெனதுணர்வுபோலளிகளுந்திரியும். (௩௨)

Digitized By Roja Muthiah Research Library

மாறிலாதசூராணையால்வந்திடும்வசந்த
னூறுதெண்கடலளவியேதண்டலையுலவி
வீறுமாளிகைநூழையினிடந்தொறுமெல்லத்
தேறல்வாய்மடுத்தோரெனவசைந்துசென்றிடுமால். (௩௩)

மாடமீதமர்மடந்தையர்தம்முருவனப்புக்
கூடவேபுனைந்தணிநிழற்காண்பதுகுறித்துப்
பாடுசேர்கரநீட்டியேபகலவற்பற்றி
யாடிநீர்மையினோக்கியேயந்தரத்தெறிவார். (௩௪)

வன்னமாடமேலாடவர்பரத்தைமைமகளி
ருன்னியூடியேபங்கியீர்த்தடிகளாலுதைப்பப்
பொன்னினுணறத்தமதுகையெழிலியுட்போக்கி
மின்னுவாங்கியேயார்த்தனர்குஞ்சியைவீக்கி. (௩௫)

முழங்குவானதிதோய்ந்தசின்மாளிகைமுகட்டி
னழுங்கலென்பதையுணர்கிலாமாதராரகல்வான்
வழங்குகோளுடனுருமினைப்பற்றியம்மனையுங்
கழங்குமாயெறிந்தாடுவரலமரக்கண்கள். (௩௬)

ஈண்டைமாளிகைமங்கையர்தஞ்சிறாரிரங்க
வாண்டுமற்றவராடுவான்பற்றியாதவன்றேர்
பூண்டமான்றொகைகொடுத்தலுமாங்கவன்பேரந்து
வேண்டிநின்றிடவாங்கியேயுதவுவார்மெல்ல. (௩௭)

நீடுமாளிகைமிசைவருமாதர்கைநீட்டி
யீடுசாலுருமேறுடன்மின்பிடித்திசைத்தே
யாடுகிங்கிணிமாலையாமைந்தருக்கணியா
வோடுகொண்டலைச்சிறுதுகிலாப்புனைந்துகப்பார். (௩௮)

பொங்குமாமணிமேற்றலத்திரவிபோந்திடலு
மிங்கிதோர்கனியெனச்சிறாரவன்றனையெட்டி
யங்கைபற்றியேகறித்தழலுறைப்பவிட்டழுங்கக்
கங்கைவாரிநீரூட்டுவார்கண்டநற்றாயர். (௩௯)

கண்டுவந்தனைவரும்புகழ்தஞ்சிறார்கலுழ
விண்டுவந்தனைசெய்தெனத்தாழ்ந்தமேனிலத்தில்
வண்டுவந்தணைப்படுகதிர்கைம்மலர்வலிந்து
கொண்டுவந்தனைமாரிரங்காவகைகொடுப்பார். (௪0)

அஞ்சிலோதியர்மாளிகைமிசைச்சிலரகல்வான்
விஞ்சுதேவரைவிளித்தலுமெய்யுறன்மறுப்ப
வஞ்சர்வஞ்சரென்றரற்றியவ்வானவரிசைய
நஞ்சிறாருடனாடுதுமென்பர்நண்ணினர்க்கு. (௪௧)

பொருளின்மாளிகைப்படிற்றியர்புணர்வரென்றுன்னி
வரவுமஞ்சுவர்வராமையுமஞ்சுவர்மடவார்
கரவின்மேவுதலவுணர்கள்காண்பர்கொலென்றும்
வெருவுகின்றனரென்செய்வார்விண்ணெறிப்படர்வார். (௪௨)

Digitized By Roja Muthiah Research Library

மேனிலந்தனின் மங்கையர்சிருர்விடாதிரங்க
வூனமில்கதிர்தேர்வரவவரையாண்டுய்த்து
வானகந்தனிற்சில்லிடையேகிநம்மகவைப்
பானுவந்துநீதருகெனவிடுக்குநர்பலரால். (௪௩)

கலதியாகியவவுணர்தம்மாதர்கால்வருடிச்
சிலதியாரெனவணங்கினேரேவல்செய்கிற்பார்
சலதியார்தருமுலகமேற்றெரிகுறிற்றவமே
யலதியாவுளவேண்டியாங்குதவநின்றனவே. (௪௪)

ஐந்தவாகியதருக்களுமணியுநல்லாவு
நந்துமம்புயநிதியமும்பிறவுமிந்நகரின்
மைந்தர்மாதர்களிருந்துழியிருந்துழிவந்து
சிந்தைதன்னிடைவேண்டியாங்குதவியேதிரியும். (௪௫)

மீதுபோகியமாளிகைக்காப்பினுண்மேவு
மாதர்வானெறிச்செல்லுவோர்சிலர்தமைவலித்தே
காதலாற்பிடித்தொருசிலர்முறைமுறைகலந்து
போதிராலெனவிடுப்பர்பின்னசமுகிபோல்வார். (௪௬)

வேறு.

மேதாவிகொண்டகதிர்வெய்யவனைவெஞ்சூர்
சேய்தான்வலிந்துசிறைசெய்திடலின்முன்ன
மேதாமினங்கொலெனவெண்ணியவனென்றூழ்
வாதாயனங்கடொறும்வந்துபுகலின்றே. (௪௭)

தேசுற்றமாடமுறைசீப்பவருகாலோன்
வாசப்புனற்கலவைவார்புணரிகொண்கன்
வீசப்புலர்த்திடவிண்படரும்வெய்யோ
னாசுற்றதானவரமர்ந்திவணிருந்தார். (௪௮)

பால்கொண்டதெண்கடன்மிசைப்பதுமைதன்னை
மால்கொண்டுகண்டுயிலும்வண்ணமிதுவென்ன
மேல்கொண்டநுண்பளிதமேனிலமதன்கட்
சூல்கொண்டகாரெழிலிமின்னினொடுதுஞ்சும். (௪௯)

வேறு.

குழலினோதையுமெழால்களினோதையுங்குறிக்கும்
வழுவில்கோட்டொடுகாகளவோதையுமற்றை
முழவினோதையும்பாடுநரோதையுமுடிவில்
விழவினோதையுந்தெண்டிரையோதையின்மிகுமால். (௫0)

மதனிழுக்குறுமைந்தருமாதரும்வனமா
மதனிழுக்கியவீதியில்வீசும்வண்கலவை
பதனிழுக்குறச்சேதகமாகுமீன்பலவும்
பதனிழுக்கியவார்தினம்புனைந்தெறிபணிகள். (௫௧)

அளப்பில்வேட்கையங்கொருவர்கண்வைத்துமற்றதனை
வெளிப்படுக்கிலர்மெலிதலுங்குறிகளேவிளம்ப
வொளிப்பதென்னுளம்பகரெனவாற்றலாதுடைந்து
கிளிப்பெடைக்கிருந்தொருசிலமடந்தையர்கிளப்பார். (௫௨)

Digitized By Roja Muthiah Research Library

குருளைமான்பிணித்திளஞ்சிறாரூர்ந்திடுங்கொடித்தே
ருருளையொண்பொனைமணித்தலங்கவர்ந்துகொண்டுறுவ
வெருளின்மாக்களைவெறுப்பதென்முனிவரும்விழைவார்
பொருளினாசையைநீங்கினர்யாவரேபுவியில். (௫௩)

விழைவுமாற்றியதவத்தினரேனுமிவ்வெறுக்கை
மொழியினோரினுமவுணராகத்தவமுயல்வா
ரொழியுமேனையர்செய்கையையுரைப்பதென்னுலகிற்
கழிபெரும்பகனோற்றவரேயிதுகாண்பார். (௫௪)

குழவிவான்மதிக்கிம்புரிமருப்புடைக்கொண்மூ
விழுமெனச்சொரிதானநீராறுபோலேகி
மழலைமென்சிறாராவணத்தாடும்வன்சுண்ணப்
புழுதியீண்டலின்வறப்பவான்கங்கையும்புலர. (௫௫)

கங்கையூண்பயனாகவுந்தூயதெண்கடனீ
ரங்கண்மாநகர்ப்பரிசனமாடவுமணைந்து
துங்கமேனிலைமாளிகையாவணஞ்சோலை
யெங்கும்வாவியும்பொய்கையும்பிறவுமாயீண்டும். (௫௬)

வில்லியற்றுவோர்வாட்படையியற்றுவோர்வேறு
மெல்லையில்படையுள்ளவுமியற்றுவோரிகலான்
மல்லியற்றுவோர்மாயமதியற்றுவோர்மனுவின்
சொல்லியற்றுவோர்கண்ணுறுபுலந்தொறுந்தொகுமால். (௫௭)

நாடிமேலெழத்தசையிலாதுலறியேநரையாய்க்
கோடுபெற்றிமூத்தசைந்திடுவோரையுங்கூற்றால்
வீடுவோரையும்பிணியுழப்போரையுமிடியால்
வாடுவோரையுங்கண்டிலமிதுதவவலியே. (௫௮)

கன்னன்மாண்பயன்வாலளைநெய்கடுந்தேற
றுன்னுதீயபாலளக்கர்தம்பேருருச்சுருக்கி
மன்னனாணையாலிந்நகர்மனைதொறுமருவிப்
பன்னெடுங்குளனாகியேதனித்தனிபயில்வ. (௫௯)

அட்டதேறலுமடாதமைதேறலுமருந்திப்
பட்டுவார்துகில்கீறியேதம்மொடுபறைந்து
விட்டநாணினோரொருசிலமடந்தையர்வியன்கை
கொட்டியாவரும்விழைவுறக்குரவையாட்டயர்வார். (௬0)

திலகவாணுதன்மாதராடவர்சிறுவரையி
னலகிலாமுறைபுனைதலினணிந்தணிந்தகற்று
மிலகுபூண்டுகின்மாலைகந்தம்பிறவீண்டி
யுலகில்விண்ணகரெனச்சிறந்தாவணமுறுமே. (௬௧)

கொய்தலர்ந்தபூநித்திலமணியுடன்கொழித்துப்
பொய்தலாடுவார்முற்றிலாலெற்றுபொற்பூழி
யெய்தலானதிந்நகரளவோகடலிகந்து
நெய்தலங்கரைக்கானலையடைந்துமேனிமிரும். (௬௨)

Digitized By Roja Muthiah Research Library

சுந்தரங்கெழுசெய்யவெண்மலர்களாற்றொடுத்த  
கந்துகங்களைச்சிறுவர்கள்கரங்களினேந்தி  
யந்தரம்புகவெறிதலுமாங்கனமேகி  
வந்துவீழுமாலிருகதிர்வழுக்கிவீழ்வனபோல். (௬௩)

கழகமீதுமுன்போந்திடமுதுகணக்காயர் *  
குழுகுமென்சிறார்தனித்தனிவந்தனர்குறுகிப்  
பழுகுகற்பினூல்பயின்றனர்மாலையிற்பட்ட  
வழுகுசேர்மதிப்பின்னெழுகணங்கண்மொய்த்தனையார். (௬௪)

கள்ளினூற்றலாற்களிப்பவர்தேறலைக்கரத்திற்  
கிள்ளையாணினுக்கூட்டியேகாமரோய்கிளர்த்தி  
யுள்ளமோடியசேவலுயிரங்கவோதிமத்துப்  
புள்ளின்மென்பெடைமீமிசைகலந்திடப்புணர்ப்பார். (௬௫)

உரத்தின்முன்னரேவெளவிவந்தீட்டியவும்பர்  
சிரத்தின்மாமுடித்திருமணிபறித்தொருசிலவ  
ரரத்தமேயதம்பங்கியிற்பஞ்சிகளழுத்தும்  
பரத்தைமாரடிப்பாதுகைக்கணிபெறப்பதிப்பார். (௬௬)

தேவிமார்பலர்வருந்தவுமனையர்பாற்சேரா  
ராவிபோவதுநினைகிலராகியேயயலார்  
பாவைமார்தமைவெஃகியேபட்டிமைநெறியான்  
மேவுவார்சிலர்காண்பதேயிதுவுமென்விழியே. (௬௭)

நெருக்குபூண்முலையியக்கர்தம்மங்கையர்நெஞ்ச  
முருக்குமேருடையமரர்தம்மங்கையருளத்தி  
னிரக்கநீங்கியவவுணர்தம்மங்கையரேனை  
யரக்கர்மங்கையர்கணிகைமங்கையர்களாயமர்வார். (௬௮)

கந்தமானபல்களபமுஞ்சுண்ணமுங்கமழும்  
பந்துமாலையுஞ்சிவிறிநீரொடுபரத்தையர்கண்  
மைந்தரோடெறிந்தாடல்யாருளத்தையுமயக்கு  
மிந்தவீதிகொல்லுருவுகொண்டநங்கன்வீற்றிருத்தல். (௬௯)

பொன்னினன்னமும்பதுமராகம்புரைபுறவுஞ்  
செந்நலங்கிளர்மஞ்ஞையுஞ்சாரிகைத்திறனும்  
பன்னிறங்கெழுபுள்ளினமினையனபலவு  
மின்னதொன்னகர்மங்கையர்கரந்தொறுமிருப்ப. (௭0)

பண்டுவேட்டவர்பின்முறைப்பாவையர்பரிவிற்  
கண்டுபின்வரைமங்கையர்கானமதியற்றிக்  
கொண்டவில்வழிப்பரத்தையர்கணிகையர்குழாத்துள்  
வண்டுபூவுறுதன்மைசென்றுடவர்மணப்பார். (௭௧)

தக்கமெல்லடிப்பரிபுரமுழவுறத்தனமா  
மிக்கதாளங்களொத்தமென்புள்ளிசைவிரவ  
விக்குவேளவைகாணிய பூந்துகிலெழினி  
பக்கநீக்கியேமைந்தரோடாடுவார்பலரே. (௭௨)

---

* கணக்காயர் - உபாத்தியாயர். "கற்றதூஉமின்றிக் கணக்காயர்பாடத்தால்" என்பதனானுணர்க.

Digitized By Roja Muthiah Research Library

பாட்டமைந்திடுகாளையரணிகலம்பாரா
வேட்டுமெங்கையரொருசிலர்தமதுமெய்விளர்ப்பக்
கூட்டமுன்னியேபன்னிறக்கலவையுங்குழைத்துத்
தீட்டுவாரவருருவினைவியன்கிழிதிருத்தி. (௭௩)

சுற்றுவிட்டலர்தாருடைவயவர்தொல்லுருவிற்
பற்றுவிட்டுடனுளத்தையும்விட்டுமென்பார்ப்பைப்
பெற்றுவிட்டிலாப்பெடைமயிறழீஇத்துயர்பேசி
யொற்றுவிட்டனரொருசிலராறுபார்த்துழல்வார். (௭௪)

அகன்றகொண்கரைநனவினெக்காலமுமகத்திற்
புகன்றுமட்டித்தவெம்முலைச்சாந்தொடும்புலர்வார்
பகன்றைபோன்முரல்சிலம்படிப்பாவையர்பல்லோர்
முகன்றனிற்கருமணிகளிற்சொரிதரமுத்தம். (௭௫)

மங்கைமார்சிலராடவர்தம்மொடுமொடத்
துங்கமேனிலத்திடைப்படுசேக்கையிற்றுன்னி
வெங்கண்மெல்லிதழ்வேறுபட்டணிமுகம்வியர்ப்பக்
கங்குலொண்பகலுணர்கிலர்விழைவொடுகலப்பார். (௭௬)

மறிகொள்சோரிநீர்பலியுடனேக்கிளாண்மலர்தூ
யிறைகொளில்லிடைத்தெய்வதம்வழிபடலியற்றிப்
பறைகறங்கவக்கடவுளையாற்றுறப்படுத்தி
வெறியயர்ந்துநின்றுடுவரளப்பிலர்மின்னூர். (௭௭)

அலங்கல்வேல்விழிமாதருமைந்தருமமர்ந்த
பொலங்கொண்மாடமேலாடுறுபெருங்கொடிபொலிவ
மலங்குசூழ்தருதெண்டிரைப்புணரியில்வைகுங்
கலங்கண்மேவியகூம்பெனக்காட்டியவன்றே. (௭௮)

புரசைவெங்கரிபுரவிதேர்பொருபடைத்தலைவர்
பரிசனங்களாதோரணர்வாதுவர்பரவ
முரசமேமுதலியமெலாமுன்னரேமுழங்க
வரசவேழமாவெண்ணிலகோயில்வந்தடைவ. (௭௯)

கள்ளூறைத்திடுமாலையம்பங்கியர்கமஞ்சூல்
வள்ளுறைப்புயன்மேனியரொருசிலர்வார்வி
லொள்ளுறைப்படைபிறவினிற்கவரிதூங்குறுத்துத்
தள்ளுதற்கரும்வயமுரசறையமுன்சார்வார். (௮0)

அறுகுவெம்புலிவலியுடைமடங்கன்மானுமாச்
சிறுகுகண்ணுடைக்கரிமரையிரலையித்திறத்திற்
குறுகுமாக்களைப்படுத்தவற்றூன்வகைக்குவால்கண்
மறுகுளார்பெறப்பண்டிகொண்டளப்பிலோர்வருவார். (௮௧)

மஞ்சுலாவருசிகரியுஞ்சூளிகைவரைப்பும்
விஞ்சுமேனில்வடுக்கமுஞ்சோலையும்வெற்புஞ்
சஞ்சரீகமாரோடையும்வாவியுந்தடமு
மெஞ்சலில்லதோர்மாடங்களெங்கணுமுளவே. (௮௨)



Digitized By Roja Muthiah Research Library

எற்றிமுன்செலுமுரசினர்கம்மியரெல்லித்
பற்றுதீபிகைச்சுடரினர்மாலைதாழ்படைய
ரொற்றைமுக்குடையிருபுடைக்கவரியருலப்பில்
கொற்றவீரரீண்டளப்பிலோர்வந்தனர்குலவி. (௮௩)

மண்படைத்திடுதவமெனுமகேந்திரமலிசீ
ரெண்படைத்தகண்ணிரண்டினர்காணுதலெளிதோ
விண்படைத்தவற்காயினுமமையுமோமிகவுங்
கண்படைத்தவர்க்கன்றியேகண்டிடலாமோ. (௮௪)

வரம்பில்கட்புலங்கொண்டவரேனுமற்றிவ்வூர்
விரும்பியித்திருநோக்கினுமளத்தன்மேவருமோ
வரும்புயற்குழுவைகலும்பருகினுமதனாற்
பெரும்புனற்கடலானதுமுடிவுபெற்றிடுமோ. (௮௫)

கழியுமிந்நகராக்கமோகரையிலவிவற்றுள்
விழிகளெண்ணிலபெற்றுளார்தாங்கண்டவெறுக்கை
மொழிவரென்னினுநாவதொன்றுன்முடிந்திடுமோ
வழிவிலாயிரகோடிநாப்பெறுவரேலறைவார். (௮௬)

வாழ்வின்மேதகுமகேந்திரப்பெருமிதவளத்தைத்
தாழ்விலாநெறிகண்டனர்தாலுவெண்ணிலவாற்
சூழ்விஞடியேபகரினுமெய்யெலாந்துதையக்
கேள்விமூலங்களில்லவரெங்ஙனங்கேட்பார். (௮௭)

ஆயிரம்பதினாயிரங்கோடிநாவளவி
லாயிரம்விழியாயிரமாயிரஞ்செவிக
ளாயிரம்புந்திகொண்டுளார்க்கல்லதிவ்வகன்சீ
ராயிரம்யுகங்கண்டுதேர்ந்துரைப்பினுமடங்கா. (௮௮)

பொய்த்தலின்றியேயிந்நகர்த்திருவையைம்புலத்துந்
துய்த்தன்முன்னியேவிழைந்துகொனேற்றிடுந்தொடர்பாற்
பத்துநூறுடனாயிரங்கோடியாப்பகரு
மித்தொகைச்சிரங்கொண்டனரீண்டுளாரெவரும். (௮௯)

முன்னவர்க்குமுன்னாகியவறுமுகமுதல்வன்
றன்னருட்டிறத்தெல்லையில்பேருருச்சமைந்தே
யிந்நகர்த்திருயாவையுங்காண்குவனின்னே
யொன்னலர்க்கெனைக்காட்டுதறகாதெனவொழிந்தேன். (௯0)

இனைத்தவாகியபெருவளமெல்லையின்றிவற்றை
மனத்தினாடினும்பற்பகல்செல்லுமான்மனக்கு
நுனித்துநன்றுநன்றாய்ந்திவைமுழுவதுநோக்க
நினைத்துளேனெனினிங்கிதுபொழுதினினிரம்பா. (௯௧)

அம்புயாசனன்றெளிகிலாவருமறைமுதலைக்
கும்பமாமுனிக்குதவியேமெய்யருள்கொடுத்த
வெம்பிரான்பணிபுரிகிலாதிந்நகரிருஞ்சீர்
நம்பிநாடியேதெரிந்துபாணிப்பதுநலன்றே. (௯௨)

Digitized By Roja Muthiah Research Library

என்றுமுன்னியேயறுமுகன்றூதுவனிமயக்
குன்றமன்னகீழ்த்திசைமுதற்கோபுரக்குடுமி
நின்றுமாநகர்வளஞ்சிலநோக்கியேநெடுஞ்சீர்
துன்றுசூருறைதிருநகரடைவது துணிந்தான். (௯௩)

வளைந்தமாளிகையொளியினிலிடைப்படுமறுகிற்
கலைந்துசெற்றியேபரிசனம்பரவுதல்காணு
நினைந்தசூழ்ச்சியான்கீழ்த்திசைச்சிகரியைநீங்கி
நனந்தலைப்படநகரத்துவிண்ணிடைநடந்தான். (௯௪)

வானமாநெறிநீங்கியேமறைகளிற்றுணிபா
ஞானநாயகவறுமுகனருள்கொடுநடந்து
தூநிலாவுமிழெயிறுடைச்சூர்முதற்சுதனும்
பானுகோபனதுறையுளையெய்தினன்பார்த்தான். (௯௫)

பாய்ந்துசெஞ்சுடர்ப்பரிதியைப்பற்றினோனுறையு
ளேந்தல்காணுறீஇவிம்மிதப்பட்டவணிகந்து
காந்துகண்ணுடையங்கிமாமுகனகர்கடந்து
சேர்ந்தமெய்யுடையாடகனுறையுளுந்தீர்ந்தான். (௯௬)

உச்சியையிரண்டிருபதுகரதலமுடைய
வச்சிரப்பெருமொய்ம்பினோன்மாளிகைவரைப்பு
மச்செனத்தணந்தேகிமூவாயிரராகு
மெச்சமெய்தியமைந்தர்தம்மிருக்கையுமிகந்தான். (௯௭)

உரியமந்திரத்துணைவரிற்றலைமைபெற்றுறையுந்
தருமகோபன்றன்கடிமனைச்சிகரமேற்றங்கிச்
சுரரும்வாசவன்மதலையுமவுணர்கள்சுற்றப்
பரிவுகொண்டமர்சிறைக்களநாடியேபார்த்தான். (௯௮)

கறையடித்தொகைபிரிதலுங்கயமுனிகவர்ந்து
மறையிடத்தினில்வேட்டுவருய்ப்பவைகுவபோற்
பொறையுடைத்துயரிந்திரன்போந்தபின்புல்லார்
சிறையினுற்றவர்செய்கையிற்சிறிதுரைசெய்வாம். (௯௯)

நகர்புகுபடலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௩௩௬.

---

# சயந்தன்புலம்புறுபடலம்.

பரஞ்சுடர்நெடுங்கணைபடுத்தபாயலில், வருஞ்சசியனையதோர்வாணுதற்சசி
தருஞ்சிறுகுமரனுஞ்சயந்தனவ்விடை, யருஞ்சிறையிருந்தனனமரர்தம்மொடும். ()

வாலிதாமமரர்சூழ்வைப்பிலிந்திரன், கோலமாகியதனிக்குமரன்வைகுதன்
மேலைநாளமுதெழும்வேலைதன்னிடை, நீலமாமுகிலுறைநீர்மைபோலுமே. (௨)

மழைபுரையவுணர்சூழ்வைப்பில்வாலொளி, தழுவியவமரருட்சயந்தன்மேயினான்
கழிதருபணிபலகலரச்சேர்தரு, முழுமதியதனிடைமுயலுற்றென்னவே. (௩)

Digitized By Roja Muthiah Research Library

வென்றிவில்லியற்றியவிஞ்சைநீர்மையாற், கன்றியகரமெனக்காவற்சாலையிற்
பொன்றிகழ்வல்லிகள்பூண்டுபெற்பக, றன்றுணைத்தாள்களிற்றழும்புசேர்ந்துளான்.

இயற்படுமோனமுமிகலுநாணமு, மயற்படவெம்பழியனலஞ்சுற்றிட, வுயிர்ப்பெ
னுமோரதைநின்றுயிரலைத்திடத், துயர்ப்பெரும்பரவையூடழுந்திச்சோருவான். (௫)

அண்டருஞ்சிறையினல்வீடுமல்லதே, லெண்டருமுகம்பலவிடருண்மூழ்கலின்
மண்டுதொல்பழியறவலிதுதுஞ்சுமா, றுண்டநல்லமுதினலவையொழிந்துளான். ()

தணிப்பரும்வெஞ்சினத்தகுவர்மன்னவன்,பணிப்படுசிறைக்களம்பட்டுத்தம்முட,
றுணிப்புறுவோரெனத்துயர்கொண்டோர்கணங், கணிப்பருமுகங்களாக்கழித்து
வைகுவான். (௭)

தேவியன்மரகதந்தெளித்துத்தீட்டிய, வோவியவுருவமாசுண்டதன்மையா
லுவியம்புனலுருதமருங்காவியம், பூவியன்மென்றொடைபுலர்ந்ததேயனான். (௮)

வியலுகநூறுடன்மிக்கவெட்டினு, ளியலுறுசிறுவரையெனினுந்துஞ்சுமேன்
மயல்சிறிதகலுமான்மரபின்வைகலுந், துயில்கிலனுதலாலுருததுன்பினன். (௯)

நெஞ்சழிதுன்பிடைநீடவைகலிற், றுஞ்சலன்வலிதுயிர்துறப்புமாற்றல[லோ.(௧0)
னெஞ்சுமோரிறைவரையிமையுங்கூட்டலன், விஞ்சியதவந்துயர்விளைக்குமாங்கொ

இலங்கியமரகதத்தியன்றுபொன்குலாய், நலங்கிளர்தன்வனப்பிழந்துநாடொறு
ஞ், சலங்கெழுமவுணர்கடமைக்கண்டஞ்சியே, கலங்கினனுய்வகையாதுங்காண்கி
லான். (௧௧)

சுந்தரமரகதத்தனதுதொல்லுரு, வெந்துயருழத்தலின்வெய்துயிர்ப்பென
வந்தெழுபுகைபடமறைந்தகட்புனல், சிந்திடவுடனுடன்றிசழத்தோன்றுமால். ()

முழுதுறுதன்றுயர்முன்னிமுன்னியே, யிழுதையரவுணருமிரங்கவெங்குரு [ல் ()
வழுதிடுங்காப்பினோரச்சஞ்செய்தலும்,பழுதுகொலென்றுவாய்பொத்தும்டாணியா

இந்திரன்சசியொடுமிருந்தசூழல்போய்த், தந்தனர்பற்றினர்தமரெனச்சிலர்
முந்துறுகாவலோர்மொழிந்தபொய்யுரை, யந்தமதடையுமுன்னயர்ந்துவீழுமே. ()

ஐந்தருநீழலைநினைக்குமாய்மலர், தந்தமென்பள்ளியையுன்னுந்தானெனப். [மே.()
புந்திகொண்மங்கையர்புணர்ப்பையுட்கொளு, மிந்திரப்பெருவளமெண்ணிச்சோரு

தன்னிணையில்லதோர்தருவினீழலு, னன்னலந்துய்த்தியாருமில்புறும், பொ
ன்னகர்பூழியாய்ப்போங்கொலோவெனு, வுன்னிடுந்தொன்மைபோலுறுவதென்
றெனும். (௧௬)

நண்டையிலவுணர்கோனேவத்தானைகள்,சேண்டொடர்துறக்கமேற்செல்லநாடியே
காண்டகுதம்முருக்கரந்துபோயினர்,யாண்டையரோவெமையீன்றுளாரெனும். ()

எயினதுறக்கநாடிழிந்துதொல்லைநாட், டாயொடுபயந்துளதந்தைபாரசம்
போயினனெனச்சிலர்புகலக்கேட்டன, னுயிடைப்புகுந்தனவறிகிலேனெனும். ()

அண்டர்களொருசிலரயர்வுகூறவுட்,கொண்டனரேகினர்குறுகியெந்தையைக்[னும்
கண்டனரேகொலோகலந்துளார்கொலோ, விண்டனரேகொலோவிளைவெதோவெ

சீகர * மிக்கசூர்செயிர்த்துச்செய்திடு, மாகுலமுழுவதுமறையவம்மையோர்
பாகமதடையநம்பரமன்மால்வரைக்,கேகினனேகொலோவெந்தையென்றிடும்.()

* சீகரம் - இலட்சுமீகரம்.

பொருந்தலர்கண்ணுமுறுப்பொருட்டுத்தம்முருக், கரந்தனரோவழீஇக்குரவர்கள்வ
ர்பாற், பொருந்தினரேகொலோபுவனமெங்குமாய்த், திரிந்தனரேகொலோதெளிகி
லேனெனும். (உ௪)

மாண்கிளர்சூரபன்மாவினேவலா, லேண்கிளரவுணர்கள்யாயைத்தந்தையை
நாண்கொடுபிணித்திவணல்கப்போயினர், காண்கிலரேகொலோகரந்தவாறெனும்.

அன்புடையம்மனையத்தனீங்கிவர், வன்புடையவுணர்கள்வரவுகாண்பரேற் [னும்.
றுன்புடைமனத்தராய்த்துளங்கியேங்கியே, யென்படுவார்கொலோவறிகிலேனெ

பொன்னகர்கரிந்ததும்புதல்வனுகுமென், றன்னையிம்முதுநகர்த்தந்துதானவர்
துன்னருஞ்சிறையிடுதுயருங்கேட்டபி,னென்னினைந்திரங்குமோவீன்றதாயெனும்

பன்னெடுமாயைகள்பயின்றதானவ,ரன்னையொடத்தனையாய்ந்துபற்றியென்[னும்
முன்னுறக்காண்டகுமுறையினுய்ப்பினு, மென்னுயிர்பின்னருமிருக்குங்கொல்லெ

ஆற்றருஞ்செல்லலுளழுந்தும்பான்மையான், மேற்றிகழ்பரஞ்சுடர்விமலற்போற்
றியே, நோற்றனர்முத்தியினுழைகுற்றூர்கொலோ, பேற்றினரிருந்தசொற்பிறந்ததி
ல்லெனும். (உ௬)

தீங்கதிர்ப்பகையொடுசெருமுயன்றநாட், டாங்கியெற்கொண்டுழித்தந்தமிற்றிட
வாங்கனம்வீழ்ந்ததாலதற்குமேற்பட,யாங்குசென்றதுகொலோயானையென்றிடும்.

பிறப்புறுவைகலைத்தொட்டுப்பின்னரே, யிறப்புறுநாள்வரையாவர்க்காயினு [னும்.
முறப்படுதுயப்பெலாமுழினூற்றமால், வெறுப்பதென்னவுணரைவினையினேனெ

தாவறுதொன்னகர்விளியத்தந்தைதா, யாவியொடிரிந்திடவளியனேர்மகன்
வீவருஞ்சிறைப்படமேலைநாட்புரி, தீவினையாவதோதெளிகிலேனெனும். (உ௯)

துப்புறழ்சடையினன்சூரற்கீறிலா, வப்பெருவரத்தினையளித்தலாலவன்
மெய்ப்படவிளிகிலன்வீடுஞ்செய்கில, னெப்பொழுதிச்சிறைதீருமென்றிடும். (௩0)

மட்டறுவெறுக்கையுநகரும்வாழ்க்கையும், விட்டனர்கடந்தனர்மேலையோரென
வுட்டெளிந்தகன்றிலனுவர்பிணித்திடப், பட்டனனேகொலோபாவியேனெனும்.()

மாற்றலனிவ்வுயிர்வசையுறுவகை, போற்றலன்குரவர்பாற்புகுந்தபுன்கணைத்
தேற்றலன்றமியனுந்தெளிகிலன்சிறை, யாற்றலனாற்றலனையகோவெனும். (௩உ)

துறந்ததோபேரறந்தொலையுந்தீப்பவஞ், சிறந்ததோமாதவப்பயனுந்தேய்ந்ததோ
குறைந்ததோநன்னெறிகூடிற்றோகலி,யிறந்ததோமறைசிவனில்லையோவெனும்.()

கூடலர்வருத்தலிற்குரவர்தங்களைத், தேடினர்விரைவுடன்சென்றதேவர்போ,
லோடினர்புகாவகையொழிந்துளோரையும், வீடருஞ்சிறையிடைவீட்டினேனெ
னும் (௩௪)

அந்தியின்மறைமொழியயர்த்துவைகினன், சந்தியில்வினைகளுந்தழலுமோம்பல
னெந்தையைவழிபடுமியல்புநீங்கினன்,முந்தையினுணர்ச்சியுமுடிந்துளேனெனும்.

மெய்யுயிரகன்றிடவிளிகிலேனெனி, னெய்புறுமலக்கணீத்தினிதுமேவலன் [ம்.
வையுறுநெடும்புரிவடிவம்வெந்தெனப், பொய்யுடல்சுமந்தனன்புலம்புற்றேனெனு

சொல்லுவதென்பிறதொல்லைவைகலின்,மெல்லெனவாற்றியவினையின்பான்மை
யா, லல்லுறழ்மிடற்றினெம்மடிகளேயெமக்,கெல்லையிலித்துயரியற்றினானெனும்.

ஆவியுமுலகமுமனைத்துமாகியு, மோவியுங்கருணையினுருக்கொண்டாடல்செய்
தேவர்கடேவனுஞ்சிவன்மற்றல்லதை, யேவரென்குறையுணர்ந்திரங்குவாரெனும்.

பெறலருந்திருவெலாம்பிழைத்துச்சூருயி, ரறுவதுமவுணர்களவிந்துமாய்வதுஞ்
சிறையிதுகழிவதுந்தீர்கிலாவசை, யிறுவதுமொருபகலெய்துமோவெனும். (௩௯)

நூறொருடர்கேள்வியோர்நுனைங்குசிந்தைசேர், கூறுடைமதிமுடிக்குழகன்றன்னருட், பேறுடையேனெனிற்பெருந்துயர்க்கட, லேறுவன்வினையினேற்கில்லைகொல்லெனும். (௪௦)

இத்திறமளப்பிலவெண்ணியெண்ணியே, மெய்த்துயருழந்துவெய்துயிர்த்துவிம்மியே, யத்தலைசுற்றியவமரர்யாவருந், தத்தமிலிரங்குறச்சயந்தன்வைகினன். (௪௧)

கண்டகனுதாவகன்கராளன்மாபலன், சண்டகனிசங்கனேசங்கனுதியா [ம்பினர்.
வென்டகுமவுணர்களெண்ணிலோர்குழீஇக், கொண்டனர்சிறைக்களங்குறுகியோ

ஆயதோர்காப்பினோரறுமுகத்தனி, நாயகன்றூதுவனனுகுமப்பக
லேயுறுசயந்தனையிமைப்பிலாரொடு, காயெரியாமெனக்கனன்றுசுற்றினர். (௪௩)

வேறு.

[illegible]ன்றுநங்கோன்றன்பணிசில்லாமகவேந்து
பின்றுடாளும்யாண்டிறுகின்றார்விரைவாகிச்
சொன்னூய்வீரல்லதும்மாவிதொலைவிப்பே
முன்னாளேபோலென்னாவிருண்மைமொழிகென்றார். (௪௪)

என்னுங்காலைக்கேட்டசயந்தனெம்மாயு
மன்னும்வானின்றேடினகண்டாமற்றன்னோர்
பின்னங்குற்றதன்மையுமோராம்பிணிநோயுட்
டுன்னுந்தீயெம்யாவதுரைத்துஞ்சூழ்ந்தென்றான். (௪௫)

விண்டோய்மன்னன்முன்னொருநாண்மெல்லியறன்னைக்
கொண்டேபோனானின்னுழியென்றுகுறிக்கொண்டோங்
கண்டோமல்லங்கேட்டிலமுள்ளங்கழிவெய்தப்
புண்டோய்கின்றேமென்சொல்வதென்றார்புலவோர்கள். (௪௬)

சொற்றாரிவ்வாறன்னதுபோழ்திற்றுணிவெய்தி
யுற்றார்போலுமிங்கிவரெல்லாமுளமொன்றி
யெற்றாலுண்மையோதுவரின்னோரெனவெண்ணாச்
செற்றாராகுங்காவலர்துன்பஞ்செய்கின்றார். (௪௭)

வென்னஞ்சென்னாக்காயெரியென்னமிகுதீஞ்சொன்
முன்னஞ்சொற்றேவைவர்தெழிப்பர்முரணோடுங்
கன்னஞ்செல்லத்தோமரமுய்ப்பர்கடைகிற்பார்
சின்னஞ்செய்வார்போலுடன்முற்றுஞ்சேதிப்பார். (௪௮)

கண்டந்துண்டஞ்செய்திடுமங்கங்கடிதொன்றிப்
பிண்டந்தன்னிற்கூடவெகுண்டேபேராற்றல்
கொண்டங்கையால்வாள்கொடுமார்பங்குடைகிற்பார்
கண்டந்தன்னன்போதுவரன்றோர்தலைசீற. (௪௯)

Digitized By Roja Muthiah Research Library

இத்தன்மைத்தாக்காவலர்யாருமெண்ணில்லா
மெய்த்துன்பத்தைச்செய்திடமைந்தன்விண்ணோர்தங்
கொத்துந்தானுமாற்றலனாகிக்குலைவெய்தி
நித்தன்றன்னையுன்னியரற்றாநிற்கின்றான். (ரு0)

சிற்றந்துப்போர்பல்படைகொண்டேசெறுபோழ்து
மாற்றத்துன்பம்பட்டதலான்மெய்யழிவாகி
யீற்றுத்தன்மைசேர்ந்திலன்விண்ணோரிறைமைந்தன்
கூற்றிற்பட்டுச்செல்லலுழக்குங்கொடியோர்போல். (ருக)

நெஞ்சினில்வாலறிவெய்தினரைம்புலநெறிநின்று
மெஞ்சியமேல்வினைபெற்றிலதேயெனவிறும்வண்ணந்
தஞ்செயல்வெய்யோர்செய்யவுமைந்தன்றமரோடுந்
துஞ்சிலனாறும்பெற்றிலனுற்றான்றுயரொன்றே. (ருஉ)

மாடேசூழ்வார்தம்மொடுமைந்தன்சிறைபுக்கான்
காடேபோனானிந்திரனேனோர்கவலுற்றார்
பாடேவிண்ணோர்தம்பதமுக்கட்பரனல்கும்
வீடேயல்லாற்றன்பறுமாக்கம்வேறுண்டோ. (ருங)

அந்தாவாளந்தோமரமெஃகமடுதண்ட
முந்தாவுற்றபல்படையாவுமுரிவெய்தச்
செந்தார்மார்பிற்காவலர்கையுந்திறலெஞ்ச
நொந்தாரின்னுசெய்வதுநீத்தார்நுவல்கின்றார். (ருச)

வீவார்பின்னாளல்லதுவேறார்வினையத்தாற்
சாவாரெஞ்சார்பேரமிர்துண்டார்தவமிக்கார்
நோவார்நாமிங்காற்றியபாலானோய்நொந்து
மாவாயாதுஞ்சொற்றிலரென்றற்புதமுற்றார். (ருரு)

இன்னோர்யாருமைந்தனைவானோரினமோடு
மெய்ந்நோவாகும்பாங்கினலைத்தவினையாலே
கைந்நோவெய்திவன்மையுநீங்கிக்கவலுற்றார்
முன்னோர்தம்பாற்செய்ததுடன்சூழ்முறையேபோல். (ருசு)

வேறு.

அத்தகையகாவலவுணரவர்க்கணித்தாய்
மொய்த்தொருசாரீண்டிமுறைநீங்கலர்காப்ப
வெய்த்தவமரருடனிந்திரன்சேய்பண்ணவரு
ளுத்தமனுங்கண்ணுதலையுன்னிப்புலம்புறுவான். (ருஎ)

வந்திப்பவர்பவங்கண்மாற்றுவோயெத்தேவர்
சிந்தைக்குமெட்டாச்சிவனேசெழுஞ்சுடரே
யிந்தப்பிறவியிடருழப்பச்செய்தனையோ
வந்தித்தநின்புணர்ப்பையாரேகடந்தாரே. (ருஅ)

கைந்நாகத்துக்குங்கயவாய்க்குநாரைக்கும்
பைந்நாகத்துக்கும்படருஞ்சிலந்திக்கும்
பின்னாகியவுயிர்க்கும்பேரருண்முன்செய்தனையா
லென்னாயகனேயெமக்கேனருளாயே. (ருகூ)

Digitized By Roja Muthiah Research Library

கங்கைமுடித்தாய்கறைமிடற்றாய்கண்ணுதலாய்
திங்கள்புனைந்தாய்சிவனேசிவனேயென்
றிங்குநினதடியேமெல்லேலங்களுமரற்ற
னங்களுயிர்க்குயிராநாயகநீகேட்டிலையோ. (௬௰)

பாசங்கொண்டாவிபலவும்பிணிப்போனு
நேசங்கொண்டாங்கதனைநீக்கியருள்செய்வோனு
மீசன்சிவனென்றியம்புமறைநீயிழைத்த
வாசொன்றுமித்தீமையார்தவிர்க்கவல்லாரே. (௬௧)

நாராயணனுமந்தநான்முகனுநாடரிய
பேராதியானபெருமானுயிர்க்கெல்லா
மாராயினீயன்றியாரேதுணையாவார்
வாராய்தமியேனுயிரளிக்கவாராயே. (௬௨)

சீற்றம்விளைத்துமுனந்தேவர்தொகையலைப்பான்
கூற்றமெனவேகுறுகுற்றவந்தகனு
மாற்றலிழப்பவகன்மார்பின்முத்தலைவே
லேற்றியவனீயன்றேயெமக்கேனிரங்கலையே. (௬௩)

ஏங்கியமரரிரிந்தோடவேதுரந்த
வோங்குகுரண்டத்துருக்கொண்டதானவனைத்
தீங்குபெறத்தடிந்துசின்னமாவோர்சிறையை
வாங்கியணிந்தவருளிங்கென்பால்வைத்திலையே. (௬௪)

ஞாலத்தினையளித்தநான்முகனுநின்றவற்றைப்
பாலித்தவனும்பிறரும்பணிந்திரங்க
வோலக்கடலுலகந்தொலைப்பவந்த
வாலத்தையுண்டவருளென்பாலயர்த்தனையோ. (௬௫)

மோடிதரவந்தமுக்கணுடைக்காளி
யோடியுலகுயிர்களுண்ணும்படியெழு
நாடியவள்வெருவிநாணிச்செருக்ககல
வாடியருள்செய்தவருளிங்கனுகாதோ. (௬௬)

பொற்றைக்கயிலைப்புகல்புக்கதேவர்தமைச்
செற்றத்துடனடவேசென்றசலந்தரனை
யொற்றைத்திகிரிப்படையாலுடல்பிளந்தே
யற்றைப்பகலவரையஞ்சலென்றாய்நீயன்றே. (௬௭)

நந்துற்றகங்கைநதிசெறியுங்காசிதனிற்
றந்திக்கொடியோன்றவத்தோர்தமைத்துரந்து
வந்துற்றிடச்சினவிவன்றோலினையுரித்த
வந்தக்கருணைக்களியரேம்பற்றிலமோ. (௬௮)

ஈரஞ்சுசென்னியிருபான்புயங்கொண்டோ
ரோரஞ்சரக்கருலகலைப்பவன்னவரை
வீரஞ்செய்தட்டவிமலவெமையவுணர்
கோரஞ்செய்கின்றகொடுந்தொழிலுட்கொள்ளாயோ. (௬௯)

Digitized By Roja Muthiah Research Library

பண்டைமகவான்பரிசுணராத்தக்கனைப்போ
லண்டர்பிரானின்னையறியாதோர்வேள்விசெயத்
துண்டமதுசெய்துசுரரையவன்றோண்முரித்தாய்
தண்டமதனையின்றுதானவர்பாற்காட்டாயோ. (௭௦)

சிந்தப்புரங்கொடியதீயவுணர்மூவகைத்தா
மந்தப்புரங்களடல்செய்தாயெம்பெருமான்
சந்தப்புரங்கொண்டதானவரோடொன்றாகு
மிந்தப்புரமுமெரிக்குதவவொண்ணாதோ. (௭௧)

அன்பானவருக்கருளுதியாற்பத்திநெறி
யென்பாலிலையாலிறையுமெவனளித்தி
நன்பான்மதியிலைச்சுநாயகனேநல்லருள்கூ
ருன்பான்மிகநொந்தேயோதியதென்பேதைமையே. (௭௨)

ஆனாலுந்தீயேனழுங்கவருள்கொடுநீ
தானாகநண்ணித்தலையளிசெய்தாண்டாயே
லானாதவித்துயரமாறுமேயாறியக்கான்
மேனாளெனயான்றுறக்கவளன்வேண்டிலனே. (௭௩)

வென்றியரக்கரான்மேதகையதானவரா
லன்றிமுனிவராலண்டராலேனையரா
லொன்றுசெயவொன்றாயுறுதுயரத்தாழ்ந்ததன்றி
யென்றுமகிழ்வாயிடரற்றிருந்தனமே. (௭௪)

கீற்றுமதியுங்கிளர்வெம்பொறியரவு
மாற்றினொடுமிலைந்தவாதியேநின்னருளா
லேற்றமிகுமலக்கணேகினிழிந்தவளம்
போற்றுகிலனோற்றல்புரிவேன்புரிவேனே. (௭௫)

தண்டேன்றுளிக்குந்தருநிழற்கீழ்வாழ்க்கைவெஃகிக்
கொண்டேன்பெருந்துயரம்வான்பதமுங்கோதென்றே
கண்டேன்பிறர்தம்பதத்தொலைவுங்கண்டனனாற்
றொண்டேன்சிவனேநின்றொல்பதமேவேண்டுவனே. (௭௬)

அல்லற்பிறவியலமலம்விண்ணாடுறைந்து
தொல்லைத்திருநுகருந்துன்புமலமலமாற்
றில்லைத்திருநடஞ்செய்தேவேயினித்தமியேற்
கொல்லைத்துயர்தீர்த்துனதுபதந்தந்தருளே. (௭௭)

ஒன்றாயிருதிறமாயோரைந்தாயையைந்தா
யன்றாதியின்மீட்டுமைந்தாயளப்பிலவாய்
நின்றாய்சிவனேயிந்நீர்மையெலாந்தீங்ககற்றி
நன்றாவிகட்குநலம்புரிதற்கேயன்றோ. (௭௮)

பொன்பொலியுங்கொன்றைப்புரிசடையாயிவ்வழிசேர்
துன்பமகற்றித்துறக்கத்துட்டாழாது
பின்புநனிநோற்றுப்பெறற்கரிதாநின்னடிக்கீ
ழின்பமொருதலையாவெய்தவருளாயெனக்கே. (௭௯)



Digitized By Roja Muthiah Research Library

வேறு.

என்றுபற்பலவிரங்கியேவிடஞ்செறிந்தென்னச்
சென்றுசென்றிடர்மூடுருவுணர்வெலாஞ்சிதைப்ப
வொன்றுமோர்கிலன்மயங்கினனுயிர்கரந்துலையப்
பொன்றினார்களின்மறிந்தனனிந்திரன்புதல்வன். (௮௰)

ஆங்கவன்றனைப்போலவேயமரருமழுங்கி
யேங்கியாருயிர்பதைத்திடவீழ்ந்துணர்விழந்தார்
தூங்குவீழுறுபழுமரஞ்சாய்தலுந்தொடர்ந்து
பாங்கர்சுற்றியவல்லிகடியங்கிவீழ்பரிசின். (௮௧)

சயந்தன்புலம்புறுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௩௧௭.

## சயந்தன்கனவுகாண்படலம்.

விண்ணுளார்களுஞ்சயந்தனும்வியன்மகேந்திரத்தி
னுண்ணிலாம்பெருந்துயருடன்மாழ்கியதுணர்ந்தா
னெண்ணிலாவுயிர்தோறுமுற்றின்னருள்புரியு
மண்ணலார்குமரேசனுமறுமுகத்தமலன். (௧)

வெஞ்சிறைத்தலைமூழ்கியேயவுணரான்மெலிந்து
நெஞ்சழிந்திடுமெவர்தமையருள்வதுநினைந்தான்
றஞ்சமின்றியேதனித்தயர்சிறுவரைத்தழுவி
யஞ்சலென்றுபோற்றிடவருமீன்றயாயனையான். (௨)

இனியசீறடிக்குமரனிற்செந்திவந்திமையோர்
வினைகொள்கம்பலையகற்றுவானிருந்திடும்விமலன்
றனதுணர்ச்சியின்றகியேயவசமாஞ்சயந்தன்
கனவின்முன்னுறவந்தனனருள்புரிகருத்தால். (௩)

வீறுகேதனம்வச்சிரமங்குசம்விசிக
மாறிலாதவேலபயமேவலமிடம்வரத
மேறுபங்கயமணிமழுத்தண்டுவில்லிசைந்த
வாறிரண்டுகையறுமுகங்கொண்டுவேளடைந்தான். (௪)

தந்தையில்லதோர்பரமனைத்தாதையாவுடைய
கந்தனேகியேயனையதன்னுருவினைக்காட்ட
விந்திரன்மகனுளப்படும்யாக்கையுளிருந்த
முந்துகண்களாற்கண்டனன்றொழுதனன்மொழிவான். (௫)

தொண்டனேன்படுமிடுக்கணைநாடியேதொலைப்பான்
கொண்டபேரருணீர்மையிற்போந்தனைகுறிக்கின்
விண்டுமல்லையப்பிரமனுமல்லைமேலாகு
மண்டர்நாதனுமல்லைநீயேவர்மற்றருளே. (௬)

என்றகாலையிலறுமுகப்பண்ணவன்யாமக்
கொன்றைவேணியின்மிலைச்சியபரஞ்சுடர்குமர
னுன்றனல்லலுமிரக்கமுமையவுமுணர்ந்து
சென்றனம்மெனக்கூறியேபின்னருஞ்செப்பும். (௭)

Digitized By Roja Muthiah Research Library

நுந்தைதன்குறைநுங்குறையாவையுநுவன்று
வந்துநந்தமைவேண்டலும்வரம்பில்சேனையொடு
மிந்தஞாலத்தினெய்தியேகிரவுஞ்சமென்னு
மந்தவெற்பையுந்தாரகன்றன்னையுமட்டாம். (௮)

அனையவன்றனையட்டபின்செந்திவந்தமர்ந்தாம்
வனசமீமிசையிருந்திடுபிரமனுமாலு
முனதுதாதையுமமரருநம்வயினுறைந்தா
ரினையல்வாழிகேணுங்கையுமேருவினிருந்தாள். (௯)

வீரவாகுவாந்தூதனையாமிவண்விடுத்தேஞ்
சூரன்மைந்தனங்கொருவனைப்பலரொடுந்தொலையா
னேரிலாதவிக்கடிநகரழித்துநீறுக்கிப்
பாரின்மாலையின்மீண்டிடப்புரிதுமிப்பகலின். (௧௦)

செல்லுமிப்பகல்கழிந்தபினாளையேசெந்தி
மல்லலம்பதிநீங்கியிந்நகர்க்கயல்வைகிச்
சொல்லுமைந்திருவைகலினவுணர்தந்தொகையு
மல்லலாற்றியசூரனுமுடிந்திடவடுதும். (௧௧)

அட்டபின்னரேநின்னைவானவருடனவுண
னிட்டவெஞ்சிறைநீக்கிநுந்திருவெலாமீதும்
விட்டிடிங்குனதாகுலமென்றனன்வினைதீர்ந்
துட்டெளிந்தவர்போதத்தினுணர்வுமாயுறைவோன். (௧௨)

ஐயனீங்கிவையுரைத்தவைகேட்டலுமகத்துன்
மையன்மாசிருளகன்றனபுகுந்தனமகிழ்ச்சி
மெய்யுரோமங்கள்சிலிர்த்தனவுகுத்தனவிழிநீர்
சையமேயெனநிமிர்ந்தனசயந்தனதடந்தோள். (௧௩)

பற்றினல்வருமமிர்தினையெளிதுறப்படைத்துத்
துற்றுளோரெனத்தண்ணெனத்தனதுமெய்சுருகி
கற்றகற்றனபாடினனாடினன்களித்தான்
மற்றவன்பெறுமுவகையின்பெருமையார்வகுப்பார். (௧௪)

வேறு.

நிகழ்ந்திடுமற்வியைநீங்கியிவ்வகை
மகிழ்ந்திடுமிந்திரன்மதலையெம்பிரான்
றிகழ்ந்திடுபதமலர்சென்றிறைஞ்சியே
புகழ்ந்தனனினையனபுகல்வதாயினன். (௧௫)

நொய்யசீரடியரேநோவுமாற்றியே
யையநீவலிதுவந்தளித்தியானுரை
செய்வதுமுண்டுகொல்சிறிதுநின்கணே
கையடைபுகுந்தனங்காத்தியாலென்றான். (௧௬)

சயந்தன்மற்றிவ்வகைசாற்றயாரினு
முயர்ந்திடுபரஞ்சுடரொருவன்கேட்குறு
வயர்ந்தநுங்குறையறவளித்துந்திண்ணமென்
றியைந்திடமேலுமொன்றிசைத்தன்மேயினன். (௧௭)

Digitized By Roja Muthiah Research Library

இந்நகர்குறுகயாமேயதூதவ
னின்னையுஞ்சுரரையுநோர்ந்துகண்ணுறீஇ
நன்னயங்கூறியேநடப்பவுய்க்குது
மன்னதுங்காண்கெனவருளிப்போயினன். (கஅ)

படைப்புறுதயர்ந்திடுபங்கயன்களு
வடுத்தனைக்கருள்செயவாறுடைவரை
விடுத்துமென்றேகியவிமலன்போலவே
யிடர்ப்படுசயந்தன்முனிவைசொற்றேகினன். (கசு)

ஏகியகாலையினிறந்துமுன்னரே
போகியபுலமெலாம்பொறியிற்றுன்றனு
மாகியகனவினையகன்றுபைப்பய
நாகர்கோன்றிருமகனனவினண்ணினன். (உ0)

வேறு.

தந்தி * நஞ்சந்தலைக்கொளச்சாய்ந்தவர், மந்திரத்தவர்வாய்மைவந்துற்றுழிச்
சிந்தைமையலைத்தீர்ந்தெழுமாறுபோ, லிந்திரன்றன்மதலையெழுந்தனன். (உக)

நனவுதன்னிடைநண்ணியசீர்மகன், கனவினெல்லையிற்கண்டனயாவையு
நினைவுதோற்றினனெஞ்சங்குளிர்ந்துநம்,வினையெலாமிவண்வீடியவோவென்றுன்

கவலைநூங்கிக்கடுந்துயர்நீரதா, யவலமாகியவாழியிலாழ்ந்துளான்
சிவகுமாரன்றிருவருளுன்னியே, யுவகையென்னுமொலிகடன்மூழ்கினன். (உங)

அனையகாலையயர்ந்திடுவானுளோர், கனவுதோறுங்கடிதுசென்றிந்திரன்
றனயனுக்குமுன்சாற்றியவாறுசொற், றினையலீரெனவேகினனெம்பிரான். (உச)

அம்மென்கொன்றையணிமுடிக்கொண்டவன், செம்மலேகலுந்தேவர்களுவொரீஇ
யிம்மிதத்தின்விழித்தெழுந்தேயிரீஇத், தம்மிலோர்ந்துதவமகிழ்வெய்தினர். (உரு)

சில்லைவெம்மொழித்தீயவர்கேட்பரே, லல்லல்செய்வரென்றஞ்சிக்களுத்திற
மல்லன்மைந்தன்மருங்குறுவார்சிலர், மெல்லவங்கவன்கேட்கவிளம்பினர். (உசு)

வேறு.

அண்டர்கண்மொழிதருமற்புதத்தையுட்,கொண்டனனங்கவைகுமரன்முன்முனங்
கண்டதுபோன்றிடக்களித்துப்பாரெலா, முண்டவனுமெனவுடலம்விம்மினன். ()

அறுமுகமுடையதோராதிநாயக, னிறைதருமுலகெலாநீங்கலின்றியே
யுறைவதுங்கருணைசெய்திறனுமுன்னியே, மறைமுறையவனடிவழுத்திவைகினன்

சயந்தன்கனவுகாண்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் சசரு.

# வீரவாகுசயந்தனைத்தேற்றுபடலம்.

இத்திறமமரரொடிந்திரன்மக
னத்தலையிருத்தலுமலையர்யாவரு
மொய்த்திடுசிறையகமுன்கண்டானரோ
வித்தகவறிவனும்வீரவாகுவே. (க)

* தந்தி - பாம்பு.

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

மாகண்டமொன்பான்புகழுந்திறல்வாகுவங்க
ணாகண்டலன்மைந்தனைவிண்ணவராயினரைக்
காய்கண்டகராமவுணத்தொகைகாத்தல்கண்டான்
பேய்கண்டசெல்வந்தனைக்காத்திடும்பெற்றியேபோல். (உ)

கண்ணேடலின்றித்துயர்வேலியிற்காவல்கொண்ட
வெண்ணேரெனைக்கண்டிலராயுணர்வின்றிமாழ்க
விண்ணோர்கள்காணத்தமியேன்செலவேண்டுமென்ருன்
மண்ணேரடியாலளக்குந்தனிமாயனேப்பான். (௩)

ஓங்காரமூலப்பொருளாயுயிர்தோறுமென்று
நீங்காதமருங்குமரேசனைநெஞ்சினுன்னி
யாங்காகுவதோரவன்மந்திரமன்பினேதித்
தீங்காமவுணர்செறிகாப்பகஞ்சென்றுபுக்கான். (௪)

தாமந்தருமொய்ம்புடைவீரன்சயந்தன்விண்ணோ
ரேமந்தருவன்சிறைச்சூழலுளேகலோடுந்
தூமந்திகழ்மெய்யுடைக்காவலர்துப்புநீங்கி
மாமந்திரமாம்வலைப்பட்டுமயங்கலுற்ருர். (௫)

எண்டானவரிற்புடைகாப்பவர்யாருமையல்
கொண்டார்குயிற்றப்படுமோவியக்கொள்கைமேவத்
தண்டாரயில்வேற்படைநாயகன்ருனைவேந்தைக்
கண்டார்சயந்தனெடுதேவர்கருதலுற்ருர். (௬)

ஏமாந்தவுணர்சிறுகாலையினின்னல்செய்ய
நாமாண்டனர்போலவசத்தினனுகுமெல்லை
மாமாண்படையவருள்செய்தநம்வள்ளறூத
னுமாமிவனென்றகங்கொண்டனராார்வமுற்ருர். (எ)

அன்னுரமருங்களஞ்சென்றயிலேந்துநம்பி
நன்னுயகமாந்திருநாமநவின்றுபோற்றிப்
பொன்னுடிறைகூர்திருநீங்கியபுங்கவன்றன்
முன்னுவணுகியிருந்தானடன்மொய்ம்பின்மேலோன். (அ)

செறிகின்றஞானத்தனிநாயகச்செம்மனும
மெறிகின்றவேலையமுதிற்செவியேகலோடு
மறிகின்றதுன்பிற்சயந்தன்மகிழ்வெய்திமுன்ன
ரறிகின்றிலன்போற்ருெழுதின்னவறைதலுற்ருன். (௯)

தாவம்பிணித்ததெனுங்குஞ்சித்தகுவரானேர்
பாவுந்தலைச்சூழ்வதுபோலெமைப்பாடுகாப்ப
மாவெம்படரிலிருந்தேங்கண்மருங்கினைய
நீவந்ததென்னையினிதிங்குநிகழ்த்துகென்ருன். (௧0)

வேறு.

முறையுணர்கேள்விவீரன்மொழிகுவான்முதல்வன்றந்த
வறுமுகவையன்றன்பினடுத்துளேனவன்றூதானேன்
விறல்கெழுநந்திபாலேன்வீரவாகென்பேர்நுங்கள்
சிறைவிடும்பொருட்டுச்சூர்முன்செப்புவான்வந்தேனென்ருன். (௧௧)

Digitized By Roja Muthiah Research Library

என்னலுமமரரோடுமிந்திரன்குமரன்கேளாச்
சென்னியினமிர்துள்ளூறல்செய்தவத்தயின்றமேலோ
ரன்னதற்பின்னர்நேமியமிர்தமும்பெற்றுண்டாங்கு
முன்னுறுமகிழ்ச்சிமேலுமுடிவிலாமகிழ்ச்சிவைத்தான். (௧௨)

அந்தரமுதல்வன்மைந்தனறைகுவானையதுன்பூர்
புந்தியேங்குறைவினாதற்பொருட்டினாற்போந்தாயற்றா
லிந்தவன்சிறையுநீங்கிற்றிடரெலாமகன்றியாங்க
ளுய்ந்தனம்பவங்கடீருமூதியம்படைத்துமென்றான். (௧௩)

பூண்டகுதடந்தோள்வீரன்புகலுவான்சூர்மேலொற்றா
வீண்டெனைவிடுத்தவேற்கையெம்பிரான்வலிதேநும்மை
யாண்டிடுகின்றான்முன்னராக்கமும்பெறுதிர்பின்னும்
வேண்டியதெய்துகின்றீரென்றனன்மேலுஞ்சொல்வான். (௧௪)

உலமெலாங்கடந்ததோளீருன்னுதிருன்னியாங்கு
நலமெலாம்வழிபட்டோர்க்குநல்கியகுமரன்றன்னாற்
றலமெலாம்படைத்ததொல்லைச்சதுர்முகன்முதலாம்வானோர்
குலமெலாமுய்ந்ததென்றாலுமக்கொருகுறையுண்டாமோ. (௧௫)

தேவர்கடேவன்வேண்டச்சிறைவிடுத்தயனைக்காத்த
மூவிருமுகத்துவள்ளன்முழுதருள்செய்தானும்பாற்
பாவமும்பழியுந்தீங்கும்பையுளும்பிறவுமெல்லாம்
போவதுபொருளோதோற்றப்புணரியும்பிழைத்தீரன்றே. (௧௬)

சீர்செய்தகமலத்தோனைச்சிறைசெய்துவிசும்பினோடும்
பார்செய்தவுயிர்கள்செய்தபரஞ்சுடர்நும்மையெல்லாஞ்
சூர்செய்தசிறையினீக்கத்தொடர்ந்திவணுற்றானென்றா
னீர்செய்ததவத்தையாரேசெய்தனர்நெடிதுகாலம். (௧௭)

சங்கையில்பவங்களாற்றுந்தானவர்செறிந்தமூதூ
ரிங்கிதனறிஞர்செல்லாரெம்பிரானருளினால்யா
னங்கணம் * படர்வோரென்னவகமெலிந்துற்றேனீண்டே
யுங்களையெதிர்தலாலேயுலப்பிலாவுவகைபூத்தேன். (௧௮)

என்றலுமகிழ்ச்சியெய்தியிந்திரன்மதலையாங்கள்
வன்றனைப்படுமுன்போனார்மற்றெமைப்பயந்தோரன்னோ
ரன்றுதொட்டின்றுகாறுமாற்றியசெயலுமற்றா
லொன்றியபயனும்யாவுமுரைமதிபெரியோயென்றான். (௧௯)

வீரனங்கதனைக்கேளாவிண்ணவர்கோமான்றன்னா
ளாரணங்குடனேகாழியடைந்ததேயெழுவாயாகச்
சீரலைவாயிலந்நாட்சென்றிடுகாறுமுள்ள
காரியநிகழ்ச்சியெல்லாங்கடிதினிற்கழறினானே. (௨௦)

மேதகுதடந்தோள்வீரன்விண்ணவர்கோமான்செய்கை
யோதலுஞ்சயந்தன்கேளாவுரைசெய்வானன்னைதன்னைத்
தாதையையடிகடன்னைச்சண்முகத்தனிவேற்செங்கை
யாதியையெதிர்ந்தாலொத்தேனையநின்மொழிகேட்டென்றான். (௨௧)

* அங்கணம் - சேற்றுநிலம்.

Digitized By Roja Muthiah Research Library

இறைதருமமரர்தம்மோடிந்திரன்புதல்வன்றன்னை
யறிவரிலறிவன்கண்ணுற்றறுமுகம்படைத்தவண்ணன்
மறையிடைவதிந்தநுங்கள்வன்சிறைமாற்றும்வைகல்
சிறிதிவணிருத்திரென்றுபின்னருஞ்செப்புகின்றான். (௨௨)

தன்னிகரின்றிமேலாய்த்தற்பரவொளியாயாரு
முன்னரும்பரமாய்நின்றவொருவனேமுகங்களாறும்
பன்னிருபுயமுங்கொண்டுபாலகன்போன்றுகந்த
னென்னுமோர்பெயருமெய்தியாவருங்காணவந்தான். (௨௩)

பங்கயமுகங்களாறும்பன்னிருபுயமுங்கொண்டே
யெங்கடம்பெருமான்போந்தவேதுமற்றென்னையென்னிற்
செங்கண்மாலுந்திபூத்தோன்சிறுமையுமகவான்றுன்பு
முங்கடஞ்சிறையுநீக்கியுலகெலாமளிப்பக்கண்டாய். (௨௪)

சிறுவிதிவேள்விநண்ணித்தீயவிநுகர்ந்தபாவ
முறைதனில்வீரன்செற்றுமுற்றவுமுடிந்ததில்லை
குறைசிலவிருந்தவாற்றாற்கூடியதுமக்கித்துன்ப
மறுமுகப்பெருமானன்றியாரிதுநீக்கற்பாலார். (௨௫)

தாட்கொண்டகமலமன்னசண்முகத்தெந்தைவேலாற்
காட்கொண்டகிரியினோடுதாரகற்கடந்தபூச
ரேட்கொண்டமதுகைசான்றசூர்முதல்களையமுன்ன
நாட்கொண்டதன்மையன்றோநறைகொண்டவலங்கற்றோளாய். (௨௬)

காலுறக்குனித்துப்பூட்டிக்கார்முகத்துய்ப்பவோர்செங்
கோலினுக்குண்டியாற்றார்குணிப்பிலாவவுணர்யாரு
மாலினுக்கரிதாமண்ணன்மாமகன்கரத்திற்கொண்ட
வேலினுக்கிலக்கதில்லைவிடுப்பதுமிகையதன்றே. (௨௭)

வாரிதியேழுமெண்ணில்வரைகளும்பிறவுங்கொண்ட
பாருடனுலகீரேழும்படைத்தபல்லண்டம்யாவு
மோரிறைமுன்னமட்டேயுண்டிடுமொருவன்செவ்வேல்
சூரனையவுணரோடுந்தொலைப்பதோர்வினையாட்டம்மா. (௨௮)

சூறமறியளக்கர்வைகுஞ்சூரபன்மாவின்மார்பி
னெறிசுடரெஃகம்வீசியிருபிளவாக்கினல்லாற்
சிறையுளீர்மீள்கிலாமைதேற்றியும்பொருநர்செய்யு
மறநெறிநூக்கியொற்றாவடியனைவிடுத்தானையன். (௨௯)

ஆருடைமுதல்வன்மாற்றமவுணருக்கிறைவன்முன்போய்க்
கேளிதென்றுரைப்பனற்றேகிளத்தினுங்கடனக்கொள்ளான்
மீளுவன்புகுந்ததெல்லாம்விளம்புவன்வினவியெங்கோ
னுளைவந்திவரையெல்லாநாமறமுடிப்பன்காண்டி. (௩0)

நீண்டவன்றனக்குமெட்டாநெடியதோர்குமரன்செவ்வே
லாண்டிருந்தேயுமுய்த்தேயவுணர்யாவரையுங்கொல்லும்
பாண்டிலந்தேர்மேற்கொண்டுபடைபுறங்காத்துச்சூழ
வீண்டுவந்தடுதலன்றேற்கிதுவுமோராடலன்றே. (௩௧)

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST - TAMIL NADU - INDIA
Digitized By Roja Muthiah Research Library

ஈரிரண்டிருமூன்றாகுமிரும்பகலிடையேயெங்கோ
னூரிருஞ்சமரமூட்டியவுணர்தம்மணிகந்தன்னைச்
சூரொடுமுடித்துநம்மைத்துயர்ச்சிறைத்தொடர்ச்சிநீக்கிப்
பேரிருஞ்சிறப்புநல்கும்பிறவொன்றுநினையன்மன்னோ. (௩௨)

என்றிவைபலவும்வீரனிமையவர்குழாத்தினோடுங்
குன்றெறிபகைஞன்மைந்தனுணர்தரக்கூறலோடு
நன்றெனவுவகைபூத்துநாமவேனம்பியாற்ற
வென்றிபெற்றிடுகவென்றுவீற்றுவீற்றாசிசொற்றார். (௩௩)

எண்டகுமாசிகூறியிந்திரன்றனதுமைந்த
னண்டரோடங்கைகூப்பியளியரேந்தன்மையெல்லாங்
கண்டனைதாதைகேட்பக்கழறுதியிவணீயுள்ளங்
கொண்டதுமுடிக்கப்போதிகுரைகழற்குமரவென்றான். (௩௪)

வயந்திகழ்விடலையங்கண்மற்றவர்தம்மைநீங்கிக்
கயந்தகுகாவலோர்தங்கருத்தின்மாலகற்றியேக
வியந்திரமன்னோர்தேறியிமையவர்குழாத்தினோடு
சயந்தனைச்சுற்றிமுன்போற்றடைமுறையோம்பலுற்றார். (௩௫)

வீரவாகுசயந்தனைத்தேற்றுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௪௮௦.

---

# அவைபுகுபடலம்.

மடந்தையொடிரிந்திடும்வாசவன்மக, னடைந்திடுசிறைக்களமகன்றுவானெறி
நடந்தனனவுணர்கோனண்ணுகோனக, ரிடந்தருகிடங்கரையிகந்துபோயினான். ()

அகழியைநீங்கினானயுதந்தன்னினு, மிகுதிகொணூற்படைவெள்ளந்தானைக
ததியின்முறைமுறைசாரச்சுற்றிய, முகிறவழ்நெடுமதின்முன்னரேகினான். (௨)

கா[illegible]கொடிகங்கைநீர்கரப்பமாந்தியே, மீன்கதிருடுபதிவிழுங்கிவிட்டிடும், வான்
[illegible]ழுகடிமதில்வரைப்பின்முன்னரே, தான்கிளர்கோபுரங்கண்டுசாற்றுவான். (௩)

குரைகடலுண்டவன்கொண்டதண்டினால், வருபுழைமீமிசைவாய்ப்பத்தாரகன்
பெருவரைநிமிர்ந்திடுபெற்றிபோலுமாற், றிருநிலைபலவுடைச்சிகரிநின்றதே. (௪)

தூணமதுறழ்புயச்சூரனென்பவன், சேணுறுமண்டமேற்செல்லச்செய்ததோ
ரேணிகொலோவிதுவென்னநின்றதா, னீணிலைபலவுடனிமிர்ந்தகோபுரம். (௫)

துங்கமொடிறைபுரிசூரன்கோயிலிற், பொங்குசெம்மணிசெறிபொன்செய்கோபுர
மெங்கணுமுடியுநாளிவுளிவாய்ப்படு, மங்கிவிண்காறெழும்வடிவமன்னதே. (௬)

அண்டமெங்கெவற்றினுமமர்ந்துநிற்புறும், விண்டொடர்வரைகளுமேருவானவும்
பண்டிதன்மிசையுறப்பதித்ததொக்குமாற், கொண்டியல்சிகரியுட்கூடசாலைகள். ()

மெய்ச்சுடர்கெழுமியவியன்பொற்கோபுர, முச்சியிற்றொடுத்திடமுழங்குகேதன
மச்சுதனுஞ்சிவனளவைதீர்முகத், துச்சிதொறிருந்தராவொலித்தல்போலுமால். ()

Digitized By Roja Muthiah Research Library

திசைபடுசிகரியிற்செறிந்தவான்கொடி, மிசைபடுமெண்டமேல்விடாமலெற்றுவ
பசைபடுமதனுடைப்பணையகத்தினி, லிசைபடப்பலகடிப்பெறிதல்போலுமால். ()

விண்ணவர்தாமுறைவியன்பதத்தொடுந், திண்ணிலையிடந்தொறுஞ்சிவணவைகின
ரண்ணலங்கோபுரமதனிற்கைவலோன், பண்ணுறுமோவியப்பாவையென்னவே.

என்பனபலபலவியம்பியீறிலாப், பொன்புனைதோணியம்புரிசைச்சூழலின்
முன்புறுகோபுரவனப்புமுற்றவு, நன்பெருமகிழ்ச்சியானம்பிநோக்கினன். (கக)

புதவுறுகோபுரப்பொருவில்வாய்தலுண், மத * வலியுக்கிரன்மயூரனுதியோ
ரதிர்தருநாற்படையுதஞ்சுற்றிடக், கதமொடுகாப்பதுகாணைநோக்கினன். (கஉ)

நோக்கியதிறலவனெச்சிதாவியே, யாக்கமொடமர்தருமவுணன்கோயிலு
ளூக்கமொடும்பராஞேடிமுன்னுறு, மேக்குயர்சூளிகைமிசையிற்போயினன். (கக)

வேறு.

சூளிகைமீமிசைதுன்னுபுசூரன், மாளிகையுள்ளவளந்தனையெல்லா
மீளரிதாவிழியோடுளமேவ, வாளரிநேர்தருமாண்டகைகண்டான். (கச)

கண்டதொரண்ணல்கடுந்திறல்வெஞ்சூர், திண்டிறல்வாள ० ரிசென்னிகொள்பீடத்
தெண்டருமாணையியற்றியசெம்பொன், மண்டபம்வைகுறும்வண்மைதெரிந்தான்.

அருந்தவவேள்வியயர்ந்தரனீயும், பெருந்திருமிக்கனபெற்றுலகெல்லாந்
திருந்தடிவந்தனைசெய்திடவெஞ்சூ, ரிருந்திடுகின்றவியற்கையிசைப்பாம். (கசு)

ஐயிருநூறெனும்யோசனையான்றே, மொய்யொளிமாழையின்முற்றவுமாகித்
துய்யபன்மாமணிதுஞ்சிவில்வீசி, மையறுகாட்சிகொண்மண்டபமொன்றின். ()

மேனகையோடுதிலோத்தமைமெய்யி, னூனமில்காமருருப்பசியாதி
வானவர்மங்கையர்வட்டமசைத்தே, மேனிமிர்சீகரம்வீசினர்நிற்ப. (கஅ)

சித்திரமாமதிசெங்கதிர்பாங்காய், முத்தணிவேய்ந்துமுகட்டிளநீல
முய்த்துமணித்தொகையுள்ளமழுத்துஞ், சத்திரமாயினதாங்கினர்நிற்ப. (ககூ)

வெள்ளடைபாகுவெளிற்றுறுசுண்ணங்,கொள்ளுமடைப்பைமென்கோடிகம்வட்டில், வள்ளுடைவாளிவைதாங்கிமருங்காய்த், தள்ளருமொய்ம்புளதானவர்நிற்ப.()

வெம்மைகொள்பானுவைவெஞ்சிறையிட்ட, செம்மனுமேனையசீர்கெழுமைந்தர்
மும்மைகொளாயிரமூவருமாகத், தம்முறையாற்புடைசார்ந்தனர்வைக. (உக)

பாவமுயன்றுபழித்திறனுற்றுங், காவிதியோர்கருமங்கண்முடிப்போ
ராவதொர்சாரணராய்படைமள்ள, ரேவருஞாங்கரினெங்கணுநிற்ப. (உஉ)

நாடகநூன்முறைநன்றுநினைந்தே, யாடவரம்பையராயுளரெல்லாஞ்
சேடியர்கின்னரர்சித்தரியக்கர், பாடுறவீணைகள்பண்ணினர்பாட. (உங)

ஏகனையீசனையெந்தையையெண்ணு, ராகியதொல்லவுணக்குழுவென்ன
வேகுமுளத்தினர்கஞ்சுகர்வெங்கண், மாகதர்சூரல்பிடித்துவழுத்த. (உச)

உள்ளிடுமாயிரயோசனையெல்லை, கொள்ளிடமானகுலப்பெருமன்றந்
தள்ளிடவற்றசனங்கண்மிகுத்தே, யெள்ளிடவெள்ளிடமின்றெனவீண்ட. (உரு)

வச்சிரமெய்வயிரேரியமொண்பு, லச்சியில்வாலுளையேயொளிர்முத்த
மச்சுறுகண்மணியாமரிமாவின், மெய்ச்சிரமேந்துமவியன்றவிசின்கண். (உசு)

---

* மத என்பது - வலி. எனவே மதவலியென்பதற்கு, மிக்க வலியெனப் பொருள் கொள்க.

० வாள் - கொலை.



Digitized By Roja Muthiah Research Library

மீயுயர்நீலவியன்கிரியும்பர், ஞாயிறுகாலையினண்ணியவாபோற்
பாயிருள்கீறியபன்மணிகொண்ட, சேயபொன்மாமுடிசென்னியின்மின்ன. (உஎ)

கறுத்தவராத்துணைகண்டிருவெய்யோ, ருறுப்பிடைகவ்வியொசிந்துதலைப்போய்
முறுக்கியவாவொடுமுன்கலந்தென்ன, மறுத்தவிர்குண்டலம்வார்குழைதூங்க. உஅ

வீறியமாமணிவெற்பின்மிசைக்க, ணேறியவொண்பகலிந்துவியற்கை
மாறியவந்தெனமால்வளமாகு, நீறுசெறிந்திடுநெற்றியிலங்க. (உகூ)

விண்டுமிழ்கின்றவியன்புழைதோறுந், தண்டுளிவந்தமர்தன்மையதென்னப்
புண்டரிகம்பொறைபோற்றியுயிர்க்கும்,வண்டரளத்தொடைமார்பின்வயங்க.(௩0)

பங்கமில்சந்தொடுபொளிதநானங், குங்குமமேனையகந்திகள்கூட்டி
யங்கமதன்கணணிந்தனவண்ட, மெங்குமுலாவியிருங்கடிதூங்க. (௩௧)

வான்றிகழ்நீணிறமாமுகிலின்பாற், றோன்றியமின்புடைசுற்றியதென்ன
வேன்றுளவண்டமெனைத்தையுமாற்று, மான்றுயர்தோளிடையங்கதமல்க. (௩உ)

மெய்த்துணையாமிருவெம்பணிஞாலம், பைத்தலைகொள்வபரம்பொறைபாற்று
தெய்த்தனபூண்கொடியாப்புறுமாபோற், கைத்தலமுன்கடகஞ்செறிவெய்த. ௩௩

நீலமதாயநெடுங்கிரிமேல்பால், வாலியகங்கைவளைந்திடுமாபோற்
கோலமிடற்றிடைகோவைகொண்முத்தின், சால்வுறுகண்டசரங்களிமைப்ப. ௩௪

வீரமடந்தையர்மேதகநாளுஞ், சீரியதோளிணைசெல்கதியென்ன
வேரியல்பன்மணியிட்டணிசெய்த, வாரவடுக்கல்பொன்னுகமிலங்க. (௩௫)

அந்தியின்வண்ணமுமத்தொளியூருஞ், சுந்தரமாலிடைசுற்றியவாபோன்
முந்துபராரைகொண்மொய்ம்மணியாடை, யுந்தியிஞெண்பணியோடுவயங்க.(௩௬)

இருபணிபார்முகமிட்டிடவீட்டி, யுருமொடுமின்னுமுலப்பிலசுற்றிக்
கருமிடறூடுகலந்தெனநுண்ணூல், குரைகழல்வார்கழல்கொண்டுகுலாவ. (௩எ)

மென்மணிமாழையின்வேதனியற்றிப், பன்மணிமீதுபடுத்தியபல்பூண்
டொன்மணிமெய்புனைசூரபன்மாவோர், பொன்மணிமாமுகில்போலவிருந்தான்.()

இருந்திடுகின்றவியற்கைவிழிக்கோர், விருந்தமுதாகவியப்பொடுநோக்கிச்
சுரந்திடுமன்பொடுசூளிகைவைகும், பெருந்திறன்மாமுகிலிங்கிவைபேசும். (௩௯)

மூவரின்முந்தியமுக்கணனம்பொற், சேவடிபேணியதேவர்கடம்முட்
டேவுடைவேலுளசூரபன்மாப்போ, லேவர்படைத்தனரித்திருவெல்லாம். (௪0)

ஓய்ந்துதவம்புரிவோருளுவன்போன், மாய்ந்தவரில்லைமறத்தொடுநோற்றே
யாய்ந்திடின்முக்கணெம்மையனுமின்றோற், கீந்ததுபோற்பிறர்க்கீந்ததுமின்றால்.

பாடுறுவேள்விபயின்றழல்புக்கும், பீடுறுமிவ்வளமாயினபெற்று
நீடுறுமாறுநினைந்திலன்வெய்யோன், வீடுறுகின்றவிதித்திறனன்றே. (௪உ)

வேறு.

மெய்ச்சோதிதங்குசிறுகொள்ளிதன்னைவிரகின்மைகொண்டகுருகார்
கச்சோதமென்றுகருதிக்குடம்பைதனினுய்த்துமாண்டகதைபோ
லச்சோவெனப்பலிமையோரையீண்டுசிறைவைத்தபாவமதனு
லிச்சூரபன்மன்முடிவெய்துநாளையிதனுக்கோரையமிலையே. (௪௩)

Digitized By Roja Muthiah Research Library

மிகையானவீரம்வளமாற்றல்சாலமேவுற்றுளோருமிறையும்
பகையார்கணேனுமுளராகிவாழ்தல்பழுதன்றிநன்றிபடுமோ
மகவானைமங்கையுடனேதுரந்துமவர்மைந்தனோடுசுரரை
யகலாமலீண்டுசிறைசெய்தபாவமதனாலிழப்பனரசே. (சச)

மன்னுந்திறத்தினமர்சூரபன்மன்மாமக்கள்சுற்றநகர
முன்னும்படிக்குமரிதானசெல்வமுடனேயீறுபடுமேன்
முன்னென்பவர்க்குமுன்னாகுமாறுமுகனல்குமுத்தியலதே
லென்னுண்டுநாளும்வினைசெய்துழன்றவிவனாருயிர்க்குநிலையே. (சரு)

என்றித்திறங்களருளோடுபன்னியெழில்கொண்டவேரமிசையே
துன்றுற்றவீரன்வளனோடிருந்தசூரன்முனேகறுணியாக்
குன்றத்தினின்றுமிவரெல்லைபோன்றகுமரேசனெந்தையடிக
ளொன்றக்கருத்தினிடைகொண்டெழுந்துநடைகொண்டவைக்கணுறுவான். (சசு)

வேறு.

நலஞ்செய்சூளிகைநீங்கிவிண்ணெறிக்கொடுநடந்து
கலஞ்செய்திண்டிறல்வாகுவாம்பெயருடைக்கடவுள்
வலஞ்செய்வாட்படையவுணர்கோன்மன்னிவீற்றிருக்கும்
பொலஞ்செய்கின்றவத்தாணிமண்டபத்திடைப்போனான். (சஎ)

எல்லையில்லதோர்பெருந்திருநிகழவீற்றிருந்த
மல்லலங்கழலிறைவனைக்குறுகிமாற்றலரால்
வெல்லருந்திறல்வீரவாகுப்பெயர்விடலை
தொல்லைநல்லுருக்காட்டினனவைக்கெலாந்தோன்ற. (சஅ)

ஒற்றைமேருவினுடையதோர்பரம்பொருளுதவுங்
கொற்றவேலுடைப்புங்கவன்றூதெனக்கூறி
யிற்றையிப்பகலவுணர்கோன்கிழியானெளிவாய்
நிற்றலெம்பிரான்பெருமையினிழிபெனநினைந்தான். (சகூ)

மாயைதந்திடுதிருமகன்மன்னிவீற்றிருக்கு
மீயுயர்ந்திடுமரியணைக்கொருபுடைவிரைவிற்
போயிருப்பதுமேலன்றுபுன்மையோர்கடனே
யாயதன்றியும்பாவமென்றுன்னினனகத்துள். (ருo)

இனையதுன்னியேயறுமுகப்பண்ணவனிருதா
ணினையுமெல்லையினாங்கவனருளினனிசியிற்
றினகரத்தொகையாயிரகோடிசேர்ந்தென்னக்
கனகமாமணித்தவிசொன்றுபோந்ததுகடிதின். (ருக)

நித்திலப்படுபெந்தருஞ்சிவிகையுநெறியே
முத்தமிழ்க்கொருதலைவனுமதலைக்குமுதல்வ
னுய்த்தவாறெனக்குமரவேள்வீரனுக்குதவ
வத்தலைப்படவந்ததுமடங்கலேற்றணையே. (ருஉ)

பன்னிரண்டெனுங்கோடிவெய்யவரெலாம்பரவப்
பொன்னின்மால்வரைதிரைக்கடலடைந்தவாபோல
மின்னுலாவியபொலன்மணிப்பீடிகைவிறல்சேர்
மன்னர்மன்னவனவைக்களத்துவந்ததுவே. (ருங)

Digitized By Roja Muthiah Research Library

சிவன்மகன்விடுபொலன்மணித்தவிசுசேண்விளங்கிப்
புவனமுற்றுறத்தன்சுடர்விடுத்தலிற்பொல்லாப்
பவமனத்தொடுதீமையேவைகலும்பயிற்று
மவுணர்மெய்யையுந்தெய்வதப்படிவமாக்கியதால். (௫௪)

அயிலெயிற்றுடையவுணர்களணிகலந்தன்னிற்
குயிலுடைப்பலமணிகளுங்குமரவேளுய்த்த
வியலுடைப்பெருந்தவிசொளிபரத்தலினிரவி
வெயிலிடைப்படுமின்மினிபோல்விளங்கிலவே. (௫௫)

செக்கர்வானிறமதிக்கதிருடுக்களின்றிரட்சி
தொக்கபாயிருள்பலவகையெழிலியின்றுளக்க
மிக்கெலாஞ்செறிமாலையினும்பர்மேல்வெய்யோன்
புக்கதேயெனத்தொலைத்ததாலச்சபைப்பொலிவை. (௫௬)

திசைமுகத்தனுஞ்செயற்கருந்தவிசொளிசெறிந்தே
யசைவருந்திறற்சூரபன்மாவெனுமவுண
னிசைமைதன்னையுமானைதன்னையுமவனியாக்கை
மிசைகொள்பேரணிக்கதிரையும்விழுங்கினவிரைவில். (௫௭)

அனையவான்றவிசவுணனேரிருத்தலுமதுகண்
டெனதுநாயகன்விடுத்தனன்போலுமென்றெண்ணி
மனமகிழ்ச்சியாலறுமுகப்பிரானடிவழுத்தி
வினையநாடுவானிருந்தனனங்கதன்மிசையே. (௫௮)

பெருந்தனிச்சுடரெறித்திடுபொன்மணிப்பீடத்
திருந்துமேதகுசிறப்பொடுவிளங்கியவேந்தல்
விரிந்தபல்கதிருடையதோர்வெய்யவனடுவட்
பொருந்திவைகியகண்ணுதற்பரமனேபோன்றான். (௫௯)

மின்னிருந்தவேலவுணர்கோனெதிருறும்விட . . பட
முன்னிருந்தவாடகன்றனையடுமுரட்சீயஞ்
செந்நிணங்கவர்ந்தலமரவணுகிமுன்றெற்றப்
பொன்னிருந்தவிசிருந்திடும்வீரனேபோன்றான். (௬0)

வெம்மைக்காலிருள்வேலைபோன்மூடிவிண்புவியைத்
தம்முட்சித்தரிற்காட்டலுஞ்சதுர்முகத்தொருவ
னம்மொத்தாரிலையென்றிடச்சிவன்புகழ்நவிலுஞ்
செம்மைத்தொல்குணமாநேர்ந்திருந்தனன்றிறலோன். (௬௧)

இவற்றியற்கையால்வீரவாகுப்பெயரேந்த
னிவப்பின்மிக்கதோர்பொன்மணித்தவிசின்மேனெஞ்சி
னுவப்பும்வீரமுமேதகவிருத்தலுமுற்ற
வவைக்களத்தினர்யாவருங்கண்டனரதனை. (௬௨)

நோற்றன்முற்றுறும்வினைஞர்பானெய்தின்வர்திறுத்த
வாற்றல்சால்வளம்போலவேயரியணையதன்கட்
டோற்றுமேலவனிலைமையைக்காண்டலுந்துளங்கி
யேற்றவற்புதமெய்தினரவைக்களத்திருந்தார். (௬௩)

வேறு.

வாரிலங்கியகழன்மன்னன்முன்னரே, தாரிலங்கியமணித்தவிசினுற்றுளான்
வீரனும்போலுமால்வினையமோர்கிலேம்,யாரிவன்கொல்லெனவியம்புவார்சிலர். ()

முந்திவட்கண்டில்முடிவிலாற்றல்சே, ரெந்தைமுனிதுபொழுதிருத்தன்மேயினு
னந்தமைநீங்கியேநடுவணேயிவன், வந்ததெவ்வாறெனவழங்குவார்சிலர். (௬௫)

ஒப்பருஞ்சனங்களோடொன்றிநம்மெலாந், தப்பினன்புகுந்தனன்றமியனென்
னினு, மிப்பெருந்தவிசிவணிருந்ததாற்றவு, மற்புதமற்புதமாமென்பார்சிலர். (௬௬)

சீயமெல்லணையொடுசெம்மன்முன்னரே, யேயெனுமளவையினீண்டுதோன்றினு
னுய்பவருண்டெனினறைவனம்மினு, மாயனிங்கிவனெனவகுக்கின்றார்சிலர். ௬௭

அறைகழலொருவனையவையத்தென்முனங், குறுகியவிடுத்ததென்குழாங்கொ
ண்டீரெனு, விறையவனங்களையாதுசெய்யுமோ,வறிகிலமெனப்பதைத்தழுங்குவா
ர்சிலர். (௬௮)

ஒட்டலனொருவனையொறுத்திடாதிவண்,விட்டதெனென்றிறைவெகுளுமுன்னரே
கிட்டினமவன்றனைக்கெழுமிச்சுற்றியே, யட்டனம்வருதுமென்றறைகின்றார்சிலர்.

விளிவிலாத்திறனுடைவேந்தன்றன்னெதிர்,களியுலாமனத்தொடுகடிதினுற்றுளான்
றெளிவிலாமாயையின்றிறலன்போலுமா, லளியனேநுங்களுக்கவனென்பார்சிலர்.

மன்னவனெதிருறவந்துளான்றனை, யன்னவன்பணியினலடுவதல்லதை
முன்னுறவதனையாமுன்னுவோமெனிற், பின்னதுபிழையெனப்பேசுவார்சிலர். ()

யாரிதையறிகுவாரினையனிவ்விடைச், சூருறவுன்னியேதுன்னினன்கொலோ
சேரலர்பக்கமாய்ச்சேர்ந்துளான்கொலோ,வோருதுமேலெனவுரைசெய்வார்சிலர்.

கடுந்தகர்முகத்தவள்கையொன்றற்றநாட், டடிந்தனன்காவலோர்தம்மைமன்ன
வன், றெடுங்கழலிவன்வருஞ்சூழ்ச்சிநோக்கியின், றடும்பலர்தம்மையென்றச்சுற்று
ர்சிலர். (௭௩)

வாசவன்முதலினோர்மருளத்தொல்லைநாட், டேசுறும்விஞ்சையர்வடிவிற்சேர்வு
றீஇ,யாசிலோர்புன்னிறுத்தானைகாட்டிய, வீசனேயிங்கிவனென்கின்றார்சிலர்.()

ஆயதோர்காசிபனதிதிதங்கள்பாற், சேயனுய்வந்தொருசிந்தன்போன்றுலாய்த்
தூயவான்புவியெலாமளப்பச்சூழ்ந்திடு, மாயனேயிவனெனமதிக்கின்றார்சிலர். ௭௫

விண்டொடுகுளினைவிளம்பிவிண்புவி, யுண்டொருகணந்தனிலுந்திகாட்டிய
புண்டரிகத்தனேபுணர்ப்பினிவ்வுருக், கொண்டனனுமெனக்கூறுவார்சிலர். (௭௬)

மூவருளாகுமோமுடிவின்மாதிரத், தேவருளாகுமோசேணில்வைகிய
தாவருமுனிவரர்தம்முளாகுமோ, வேவருளாகுமோவிவனென்பார்சிலர். (௭௭)

மாலைதாழ்மார்புடைமன்னற்கின்னமு, மாலமார்கண்டனேயருளினின்னதோர்
கோலமாய்வரந்தரக்குறுகினன்கொலோ,மேலியாமுணருதும்விளைவென்பார்சிலர்

காற்றுடனங்கியுங்கடுங்கட்காலனுங், கூற்றனுமோருருக்கொண்டுவைகிய
தோற்றமிதன்றியிச்சூரன்முன்வரு, மாற்றலர்யாரெனவறைகின்றார்சிலர். (௭௯)

Digitized By Roja Muthiah Research Library

குன்றமுமவுணனுங்குலைந்துபாடுற, வொன்றொருவேலினையொருவனுய்த்தன
னென்றனரன்னவனீண்டுமென்னன்முன், சென்றனனோவெனச்செப்புவார்சிலர். ()

செற்றியபன்மணிச்செம்பொன்மன்றமு, முற்றிடுமவுணருமொள் ளுவான்கதிர்
மற்றிவனணிகளின்றவிசின்வாள்பட, வற்றதுபகற்சுடராயென்பார்சிலர். (அக)

இருந்திடுமவுணர்கள்யாருமித்திறம், வருந்திறநினைசிலர்மறந்துமிவ்விடை [சிலர்.
தெரிந்திடினிங்கிதுதிறல்கொண்மன்னனே, புரிந்திடுமாயையின்புணர்ப்பென்பார்

சென்னலினிறந்துயிர்நீத்ததாரகன், முன்னுறுதன்னுருமுடியவிப்பக [ன்றார்சிலர்.
லின்னதோர்பொன்னுருவெடுத்துமுன்னைபாற், றுன்னினன்கொல்லெனச்சொல்லி

வேறு.

சங்கமேவினரினையனவளப்பிலசாற்ற
வங்கணோரரிமான்றவிசிருக்கையிலவுணன்
றுங்கமெத்துணையத்துணைச்சிறப்பொடுதோன்றிச்
செங்கைவேலவற்புகழ்ந்துவீற்றிருந்தனன்றிறலோன். (அச)

அறிவர்மேலவன்றவிசில்வீற்றிருத்தலுமவுணர்க்
கிறைவனுங்கதுநோக்கியேயெயிற்றணிகறித்துக்
கறுவியேநகைத்தரப்பிமெய்வியர்ப்பெழக்கண்கள்
பொறிசொரிந்திடப்புகையுமிழ்ந்தினையனபுகல்வான். (அரு)

சுற்றநீங்கியேயிலையுண்டுவிலங்கெனச்சுழன்று
வற்றன்மாமரக்காட்டகத்திருந்துடல்வருத்துஞ்
சிற்றுணர்ச்சியோர்வல்லசித்தியல்பிதுசிறியோய்
கற்றுளாய்கொலாங்காட்டினைநமதுமுன்காண. (அசு)

துன்றுவார்சடையோகிேனாரல்லதுதொலைந்து
பின்றுதேவருமவல்லரிச்சிறுதொழில்பெரிது
மொன்றுமன்னதையிவ்விடைக்காட்டலருன்போ
னன்றுநன்றுநீநம்முனர்க்காட்டியநடனம். (அஎ)

சித்தராயினோர்செங்கண்மான்முதலியதேவ
ரித்திறத்தனகாட்டுதற்கஞ்சுவரென்முன்
றத்தமெல்லையிற்புரிந்திடலல்லதுதமியோய்
பித்தனேகொலாநமக்கிதுகாட்டுதல்பிடித்தாய். (அஅ)

உரைசெயிந்நகர்மகளிருஞ்செய்வருன்முற்றுக்
கருவினுள்ளுறுகுழவியுஞ்செய்திடுங்கருத்தில்
வரைகளுஞ்செயுமாக்களுஞ்செய்யுமற்றதனு
லரியதன்றரோபேதைநீபுரிந்திடுமாடல். (அகூ)

என்னையெண்ணலையெதிருறவிருந்தனையிதனுன்
மின்னல்வாட்படையுறைகழித்தொய்யெனவீசிச்
சென்னிவீட்டுவனின்செயன்முற்றவுந்தெரிந்து
பின்னரத்தொழில்புரிவனென்றேயுளம்பிடித்தேன். (கூ0)

ஏனுற்றோரெலாம்வழுத்தியவவுணரும்யாமுங்
காணக்காட்டினைநீயறிவிஞ்சையைக்கண்டாம்
பூணித்தாயெனவருமுனக்கித்துணைப்பொழுது
பாணித்தாவியையளித்தனனன்னதுபரிசே. (கூக)

Digitized By Roja Muthiah Research Library

வாசவன்கரந்தோடினன்பிறரிதுமதியார்
கேசவன்னிதுநினைகிலன்மறைகளின்கிழவோ
ளுசிகூறியேதிரிந்திடுமவர்க்கெலாமுதலா
மீசனென்னிடைவருகிலன்யாரைநீயென்ருன். (௯௨)

தீயனித்திறமுரைத்தனகேட்டலுந்திறலோன்
காயமீனெனக்காயமேல்வியர்ப்பெழக்கனன்று
மாயைசெய்துழல்வலியிலார்போலெனைமதித்தா
யாயபுந்தியைவிடுமதிகேளிதென்றறைவான். (௯௩)

புரந்தரன்குறையயன்முதலமரர்தம்புன்மை
வருந்தும்வானவர்சிறையெலாநீக்கிமற்றவர்தந்
திருந்துதொல்லிறையுதவுவான்செந்திமாநகர்வந்
திருந்தவாதியம்பண்ணவனடியனேன்யானே. (௯௪)

துன்னுதானைகட்கரசராயறுமுகத்தொல்லோன்
பின்னர்வந்துளாரொன்பதோடிலக்கமாம்பெயரா *
லன்னவர்க்குளேயொருவன்யானந்திபாங்கமர்ந்தே
னென்னலார்புகழ்வீரவாகெனும்பெயருள்ளேன். (௯௫)

தாரகப்பெயரிளவலைத்தடவரைதன்னை
யோரிறைக்குமுன்படுத்தவேலறுமுகத்தொருவன்
சூரெனப்படுநின்னிடைத்தமியனைத்தூதாப்
பேரருட்டிறத்துய்த்தனனென்றனன்பெரியோன். (௯௬)

கொடுத்திடாதவென்கொண்டவனுரைத்தசொற்கொடுங்கோ
னடத்துமன்னவன்கேட்டலுமாங்கவனம்மேல்
விடுத்தகாரணமென்னையோவிளம்புதியென்ன
வெடுத்துமற்றிவையெம்பிரான்றூதுவனிசைப்பான். (௯௭)

மருத்துவன்றனைச்சசியொடுதுரந்துசேண்வதிந்த
புரத்தையாரழற்கூட்டியேயனையவன்புதல்வ
னொருத்தனோடுபல்லமரரையுவளகந்தன்னி
லிருத்தினையெனவினவினனறுமுகத்திறைவன். (௯௮)

இந்திராதிபரயன்முதற்பண்ணவர்யாரும்
வந்துவந்துவேண்டிடுதலுமவர்குறைமாற்றப்
புந்திகொண்டுபன்னிருபுயத்தெம்பிரான்புவிக்க
ணந்தமின்றுறைபாரிடத்தானையோடடைந்தான். (௯௯)

தரையினண்ணிநின்னிளவலைவரையொடுதடிந்து
நெருநலேவந்துசெந்தியின்வைகினனினையும்
விரைவின்வந்தடவுன்னினனின்றுநம்மிசையே
யருள்கொடேசிலபுகன்றெனைத்தூண்டினனதுகேள். (௧00)

நிறையுமிந்துவைப்படவராக்கவர்ந்தெனநிகளச்
சிறைபடுத்தியேயமரரைவருத்தினைசெய்யு
மறையொழுக்கமுநீக்கினையுலகமாண்மன்ன
ரறமுமன்றிதுவீரர்தஞ்செய்கையுமன்ருல். (௧0௧)

* ஆல் - அசை.

தாதையாகியோன்காசிபனுங்கவன்றனய
னுதலானுனக்கமரரைச்சிறைசெய்வதறனோ
வேதமார்க்கமும்பிழைத்தனைசிறுபொருள்விழைந்தாய்
நீதியாலுலகளிப்பதேயரசர்தந்நெறியே. (கOஉ)

உலத்தின்மாண்டதோட்சலந்தரனந்தகனொருங்கே
கலத்தலில்லதோர்புர * த்தவராதியோர்கடவுட்
குலத்தைவாட்டலினிமைப்பினில்வீந்தனர்கொடியோய்
நிலத்தினும்பரைவருத்துதலழகிதோநினக்கே. (கOங)

மெய்மைநீங்கியேகொலைகளவியன்றுமேலுள்ள
செம்மையாளரைச்சீறியேயணங்குசெய்தீயோர்
தம்மிலாற்றரும்பழிசுமந்தொல்லையிற்றமரோ
டிம்மைவீடுவரெழுமையுந்துயரினாடிருப்பார். (கOச)

இங்ஙனந்திருநீங்கியேதுயருழந்திறப்ப
ரங்ஙனம்பெரிதாரிருண்மூழ்குவரதற்பி
னுங்ஙனம்பிறந்தயருவரென்றுமீதுலவா
ரெங்ஙனுய்வரோபிறர்தமக்கல்லல்செய்திடுவோர். (கOரு)

தீதுநல்லனவாயிருதிறத்தவுந்தெரிந்தே
யேதிலார்க்கவைசெய்வரேற்றமக்குடனெய்தும்
பேதைநீரையாயமரரைச்சிறைசெய்தபிழையான்
மாதுயர்ப்படலன்றியேயிறுதியும்வருமால். (கOசா)

அண்டராற்றலைவவ்வியதாரகனுவி
யுண்டகொற்றவேலிருந்ததுவிடுத்திடினுனையுங்
கண்டதுண்டமதாக்குமாலறநெறிகருதித்
தண்டம்வல்லையிற்புரிந்திலனித்துணைதாழ்த்தான். (கOஎ)

கெடுதலில்லதோரமரர்கள்சிறையிடைக்கிடப்ப
விடுதல்செய்தனைபல்லுகமவர்தமையின்னே
விடுதலுய்வகையாகுமான்மறுத்தியேல்விரைந்து
படுதலேநினக்குறுதியாமுறையுமப்பரிசே. (கOஅ)

ஆண்டளப்பிலநோற்றனைவேள்விநின்முற்றி
மூண்டதீயிடைமூழ்கினேயக்கெந்தைமுன்னளித்த
மாண்டிடாதபேராயுளைத்திருவொடும்வாளா
வீண்டொர்புன்னெறியாற்றியேயிழக்குவதியல்போ. (கOகூ)

சையமேற்படுவளத்தொடுநீயுநின்றமரு
முய்யவேண்டுமேலமரர்தஞ்சிறையினையொழித்து
வையமேலறத்தியல்புளிவாழிமற்றிதனைச்
செய்யலாயெனினீங்குவந்தடுவனுற்றிண்ணம். (ககO)

என்றுமற்றிவையாவையும்வரைபகவெறிந்தோ
னுன்றனக்கறைகென்றனனீங்குநீயும்பர்
வன்றளைச்சிறைநீக்கியேயறத்தினிவ்வளத்தை
நன்றுதுய்த்தனைநெடிதுநீவாழ்கெனநவின்றான். (ககக)

---

* ஒருங்கேகலத்தலில்லதோர்புரம் என்பதற்கு நிலையின்றிப் பறந்துதிரியும் புரம் எனப் பொருள்கொள்க.

Digitized By Roja Muthiah Research Library

மறமகன்றிடாவீரனிங்கிளையனவகுத்தே
யறையும்வாசகங்கேட்டலும்வெகுளிமூளகத்தன்
பொறியுமிழ்ந்திடுகண்ணினன்புகையுமிழுயிர்ப்ப
னெறியுமங்கையனிறந்திடுமுறுவலனிசைப்பான். (௧௧௨)

மேலையாயிரத்தெட்டெனுமண்டமும்வென்றே
யேலுகின்றதோர்தனியிறையாகியவெனக்குக்
கோலவாலெயிறின்முந்தோன்றிலாக்குதலைப்
பாலனேகொலாமிளையனபுந்திகள்பகர்வான். (௧௧௩)

விறலின்மேதகுமவுணராம்வலியிலார்மிகவும்
வறியராகியதேவராமேலவர்மழலைச்
சிறுவராந்தனிமுதல்வற்குமமைச்சியல்செய்வா
ரெறியுநேமிசூழுலகத்துவழக்கநன்றிதுவே. (௧௧௪)

நறைகொடார்முடியவுணர்தங்குலத்தினைநலித்து
வறுமைசெய்தனர்கடவுளரவர்திருமாற்றிக்
குறியவேவலுங்கொண்டனனொழுக்கமுங்கொன்றேன்
சிறையும்வைத்தனனங்குடித்தமர்முறைசெய்தேன். (௧௧௫)

நெடியமான்மகனுறங்குநாளாணையைநீங்கித்
தொடுபெருங்கடலுலகெலாங்கொள்ளினுஞ்சுரரை
விடுவனல்லன்யான்வீட்டருஞ்சிறையினைவிண்மே
லுடையவண்டத்தினுச்சியினொருதலையுய்ப்பேன். (௧௧௬)

தப்பல்செய்திடுமகபதிமுதலினோர்தமையு
மிப்பதிக்கணேகொணர்ந்தனன்சிறைசெயவிருந்தேன்
கைப்புகுஞ்சிறைவிடுவனோவிடுகிலன்கண்டா
யொப்பருந்திறற்சூரனென்றொருபெயருடையேன். (௧௧௭)

மின்னுவச்சிரப்படிவமும்வேறுபல்வரமு
முன்னோர்ஞான்றுதன்றாதையெற்களித்திடுமுறையைப்
பின்னர்யாவரேபெயர்ப்பவர்பெருஞ்சமரியற்றி
யென்னையாற்றலால்வென்றிடுநீர்மையோரெவரே. (௧௧௮)

தானமாமுகத்தாரகவெம்பியைத்தடிந்த
மானவேற்படையவன்மிசைவருவதுவலித்தேன்
பானல்வாய்ச்சிறுசேயொடுநீயமர்பயிற
லூனமேயெனத்தடுத்தனராதலாலொழிந்தேன். (௧௧௯)

தூங்குகையுடைத்தாரகவிளவலைத்தொல்லை
யோங்கறன்றொடுமட்டதுநென்னலேயுணர்ந்தேன்
பாங்கினோரையப்பாலன்மேலுந்தியென்பழியும்
வாங்குகின்றனனாளையேகாண்டியான்மன்னோ. (௧௨௦)

அரிகளெண்ணிலரிந்திரரெண்ணிலரல்லாச்
சுரர்களெண்ணிலரண்டங்கடோறுந்தோறுமிருந்தார்
செருவினாற்றலர்வழுத்தியேபோயினர்சிவன்க
ணொருநல்வந்திடுசிறுவனோவென்னெதிர்நிற்பான். (௧௨௧)

ஓதியென்பலவமரரைவிடுகிலனுணர்ச்சி
யேதுமில்லதோர்மகவுதன்புன்மொழியேற்றுப்
பேதையாதலினெற்றனுய்வந்தனைபிழைத்துப்
போதிநின்னுயிர்தந்தனன்யானெனப்புகன்றான். (௧௨௨)

அகிலமாள்பவனிங்கிவைமொழிதலுமையன்
வெகுளிவெங்கனல்சிந்திடவுளஞ்சுடவெகுண்டு
புகையுமங்கியுமுயிர்ப்புறமயிர்ப்புறம்பொடிப்ப
நகையும்வந்திடச்சிவந்திடவிழியிவைநவில்வான். (௧௨௩)

உய்யலாவதோர்பரிசினையுணர்வுறாதுழலுங்
கையகேண்மதிகட்செவிமதியொடுகலந்த
செய்யவார்சடைப்பரம்பொருட்டிருநுதல்விழிசே
ரையன்மேதகவுணர்ந்திலைபாலனென்றறைந்தாய். (௧௨௪)

மானுடத்தரைத்தேவென்பர்வானகத்தவரை
யேனைமூத்தொழிலவரென்பரிருவர்தங்களையு
நானிலத்தினிற்பரம்பொருளிவரெனநவில்வா
ரானசொற்றிறமுகமனேசரதமற்றன்றால். (௧௨௫)

ஆயபுல்லியபுகழ்ச்சிபோற்கொள்ளலையறிவோர்
தேய * மாவதுயார்க்குமெட்டாததுதெளியிற்
றூயவீடுபேறருளுவதுபங்கடத்துணிவாம்
வாய்மையாவதுபுகலுவன்கேளெனவகுப்பான். (௧௨௬)

மண்ணளந்திடுமாயனும்வனசமேலவனு
மெண்ணரும்பகறேடியுங்காண்கிலாதிருந்த
பண்ணவன்னுதல்விழியிடைப்பரஞ்சுடருருவா
யுண்ணிறைந்தபேரருளினன்மதலையாயுதித்தான். (௧௨௭)

முன்னவர்க்குமுன்னுருவோர்தமக்குமுற்பட்டுத்
தன்னைநேரிலாதீசனுந்தனிப்பெயர்தாங்கி
யின்னுயிர்க்குயிராயருவுருவமாயெவர்க்கு
மன்னைதாதையாயிருந்திடும்பரமனேயவன்காண். (௧௨௮)

ஈசனேயவனுடலான்மதலையாயினன்கா
ணுசிலாவவனறுமுகத்துண்மையாலறிநீ
பேசிலாங்கவன்பரனொடுபேதகனல்லன்
றேசலாவகன்மணியிடைக்கதிர்வருதிறம்போல். (௧௨௯)

பூதமைந்தினுட்கீழ்நிலைத்தாகியபுவியு
ளோதுகின்றபல்லண்டத்தினொராயிரத்தெட்டுங்
கோதிலாக்கமும்படைகளுமுனக்குமுன்கொடுத்த
வாதியீசனேயவனெனின்மாற்றுவதரிதோ. (௧௩0)

ஏதமில்புவியண்டங்கள்பெற்றனமென்றே
பேதையுன்னினைசிறிதவன்றன்னருள்பெறுவோர்
பூதமைந்தினுமேனையதிறத்தினும்புறத்து
மீதுமாமண்டமெவற்றிற்கும்வேத்தியல்புரிவார். (௧௩௧)

---

* தேயம் - தியானிக்கப்படுவது.

ஆதியாகியகுடிலையுமைவகைப்பொறியும்
வேதம்யாவையுந்தந்திரப்பன்மையும்வேறா
வோதநின்றிடுகலைகளுமவ்வவற்றுணர்வாம்
போதம்யாவையுங்குமரவேள்பொருவிலாவுருவம். (௧௩௨)

எங்கணும்பணிவதனங்களெங்கணும்விழிக
ளெங்கணுந்திருக்கேள்விகளெங்கணுங்கரங்க
ளெங்கணுந்திருக்கழலடியெங்கணும்வடிவ
மெங்கணுஞ்செறிந்தருள்செயுமறுமுகத்திறைக்கே. (௧௩௩)

தாமரைக்கணான்முதலியபண்ணவர்தமக்கு
மேமுறப்படுமறைக்கெலாமாதிபெற்றியனு
மோமெனப்படுங்குடிலையேயொப்பிலாமுருகன்
மாமுகத்துளொன்றாமவன்றன்மையார்வகுப்பார். (௧௩௪)

முக்கண்மூர்த்தியுமாங்கவன்முண்டகாசனனுஞ்
சக்கரப்படையண்ணலுமாங்கவன்றானே
திக்குப்பாலருங்கதிர்களுமுனிவருஞ்சிறப்பின்
மிக்கதேவருமாங்கவன்யாவர்க்குமேலோன். (௧௩௫)

ஈட்டுமன்னுயிரெவற்றிற்குமிருவினைப்பயனைக்
கூட்டுவானவனுங்கவைதலையெனக்கூடின்
வேட்டமேனிலைக்கதிபுரிவானவன்மேலாய்க்
காட்டுவான்முதற்றிறமெலாமாங்கவன்கண்டாய். (௧௩௬)

சிறுவன்போலுறுங்குரவனேபோலுறுந்தினையிற்
குறியன்போலுறுநெடியவனாகியுங்குறுகு
நெறியினின்னணம்வேறுபல்லுருக்கொடுநிலவு
மறிவர்நாடருங்கந்தவேளாடலாரறிவார். (௧௩௭)

சிவனதாடலின்வடிவமாயுற்றிடுஞ்செவ்வே
ளவனதாணையினன்றியேபெயர்கிலாதணுவு
மெவரவன்றனியாற்றலைக்கடந்தவரிவணீ
தவமயங்கினையவன்றனிமாயையிற்சார்வாய். (௧௩௮)

எல்லையில்லதோர்பொருளெலாமாகுறுமியாவு
மல்லனாகியுமிருந்திடுமருவமுமாகும்
பல்வகைப்படுமுருக்கொளும்புதியசிற்பயிலுந்
தொல்லையாதியாமநாதியுமாகியேதோன்றும். (௧௩௯)

வாரிவீழ்தரும்புன்னுனித்துள்ளிகண்மான
நேரிலாதமர்குமரவேணெடியபேருருவி
னோருரோமத்தினுலப்பிலாவண்டங்களுதிக்கு
மாரவன்றிருமேனியின்பெருமையையறிவார். (௧௪0)

தொலைவிலாவுயிர்த்தொகுதியுந்தொல்லையம்பூதத்
தலகிலண்டமுமேனவுமாதியங்குமர
னிலைகொண்மேனியினிவர்தருமுரோமத்தினின்றே
யுலைவின்றிமுன்னுதித்திடுமிறுதிநாளொடுங்கும். (௧௪௧)

Digitized By Roja Muthiah Research Library

ஆவதாகியவடிவத்தினகிலமுஞ்செறிந்து
மேவுமந்நிலையனையனேயல்லதுவேறிங்
கேவர்கண்டனரவ்வுருவியற்கையையெங்கோன்
றேவர்யாவர்க்குங்காட்டிடக்கண்டனர்சிறிது. (கசஉ)

தண்டலில்லதோரொன்றொருமயிர்நுனித்தலையி
னண்டமெண்ணிலகோடிகள்கோவைபட்டசையப்
பண்டுமேருவிற்கந்தவேள்கொண்டதோர்படிவங்
கண்டிலாய்கொலாங்கணிப்பிலாப்பவம்புரிகடியோய். (கசஙு)

அன்றுகந்தவேளமைந்ததோர்பெருவடிவதனு
ளொன்றுரோமத்தினிருந்ததற்காற்றிடாதுனதாய்த்
துன்றுமாயிரத்தெட்டெனுமண்டமாந்தொகையு
மின்றுநீயதுதெரிகிலைசிறுவனென்றிசைத்தாய். (கசச)

அளப்பருங்குணத்தாதியாமெம்பிரானமரர்
தளைப்படுஞ்சிறைமாற்றவுஞ்சதுர்முகன்முதலோர்
கொளப்படுந்துயரகற்றவுங்கொடியரையறுத்து
வளப்படும்பரிசுலகெலாம்போற்றவும்வந்தான். (கசரு)

வாழியானநின்னாயுளும்வன்மையும்வரமுங்
கேழில்சுற்றமும்படைகளும்வான்றொடக்கிளர்ந்து
பூழியாலுயர்மால்வரைச்சூழலிற்புகுந்த
ஊழிமாருதம்போலடுமெம்பிரானொருவேல். (கசசா)

ஆகையாலிவையுணர்ந்திலையிணையிலாதமர்ந்த
வேகநாயகமுதல்வனைப்பாலனென்றிகழ்ந்தாய்
சேகுலாவியமனமுடைக்கற்பிலாச்சிறியோய்
போகபோகயாமிவ்வொருதவற்றையும்பொறுத்தாம். (கசஎ)

நொய்யசொற்களாலெந்தையையிகழ்ந்தனைநொடிப்பின்
வெய்யநாத்துமித்துன்னுயிர்வாங்குவம்விடுத்த
வையனாணையன்றாதலினளித்தனமதனா
லுய்தியிப்பகல்வேற்படைக்குண்டியாயுறைவோய். (கசஅ)

உறுதியின்னமொன்றுரைக்குவநீயுமுன்கிளையு
மிறுதியின்றியேயெஞ்சுதல்வேண்டுமேலிமையோர்
சிறைவிடுக்குதியிகலினைத்தவிருதிசெவ்வே
ளறைகழற்றுணையரணமென்றுன்னியேயமர்தி. (கசகூ)

வேறு.

என்றிவைபலப்பலவிகப்பில்பெருமாயைக்
குன்றெறிபடைக்குரிசில்கொள்கையதியம்பப்
புன்றொழில்படைத்துடையபூரியனுணர்ந்தே
கன்றினனுயிர்த்திணையகட்டுரைசெய்கின்றான். (கரு0)

கூரெயிறெழாதகுழவிச்சிறுவனுய்த்த
சாரெனநினைந்துனதுதன்னுயிர்விடுத்தேன்
பேரலையவன்பெருமைபின்னுமொழிகின்றாய்
வீரமுமுரைக்குதியென்வெய்யசினமுன்னாய். (கருக)

Digitized By Roja Muthiah Research Library

கொஞ்சுமொழிகொண்டகுழவிச்சிறுவன்மேலா
யெஞ்சலிலதோர்முதல்வனேயெனினுமாக
வஞ்சிடுவனேசிறிதுமண்டநிலேதோறும்
விஞ்சியமர்பண்ணவர்கள்யாவரையும்வென்றேன். (கருஉ)

சேண்புரமதாகியமர்தேவர்சிறைதன்னை
வீண்படுகனுவினும்விடுக்கநினைகில்லே
னேண்பலபகர்ந்தனையெனக்கெதிரிருந்தே
காண்பனதெலாமொருகணத்திலினியென்முன். (கருங)

கொற்றமிகுசூரனிவைகூறியயனின்ற
வற்றமறுமானவருளாயிரரைநோக்கி
யொற்றுமைசெய்தோனுயிரொறுத்தல்பழிவல்லே
பற்றியிவனைச்சிறைபடுத்திடுதிரென்முன். (கருச)

என்னலுமவ்வாயிருமேற்றெரிவிழித்துத்
துன்னுகனலைப்புகைசுலாவுவதுமானப்
பொன்னின்மிளிர்பீடிகையமர்ந்தபுகழ்வீரன்
றன்னைவளைகுற்றனர்தருக்கினொடுபற்ற. (கருரு)

மிடற்றகுவர்சூழ்வரலும்வீரனெழுந்தன்னோர்
முடிச்சிகையொராயிரமுமொய்ம்பினொருகையாற்
பிடித்தவுணர்மன்னனமர்பேரவைநிலத்தி
னடித்தனனொடிப்பிலவராவிமுழுதுண்டான். (கருசு)

மார்புடையமொய்ம்பொசியவார்குருதிசோர
வோர்புடையின்யாவரையுமொல்லைதனினட்டே
சூர்புடையின்முன்னாநனிதுன்னும்வகைவீசிச்
சீர்புடையநம்பியிவைசெப்பல்புரிகின்முன். (கருஎ)

எந்தைநெடுவேலனையினித்தடிதறிண்ண
மந்தமுறுமுன்னமுனைதம்புலனும்வெஃக
வந்தபலதுப்புரவும்வல்லைபெரிதார்ந்தே
புந்திதெளிவாயமர்திபோந்திடுவனென்முன். (கருஅ)

சீயவிறலண்ணலிவைசெப்பியகல்காலை
யாயவனிருந்திடுமரித்தவிசுதானு
மீயுறவெழுந்துவிசும்பிற்றலையினேகி
மாயையெனவொல்லையின்மறைந்துபடர்ந்தன்றே. (கருகூ)

அவைபுகுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் சுஙகூ.

---

## சதமுகன்வதைப்படலம்.

ஒண்ணில்வெயிற்றினரொராயிரரையட்டே
யெண்ணலனவைக்களமிகந்துபடர்காலைக்
கண்ணினழல்காலும்வகைகண்டுபுடையாக
நண்ணுசதமாமுகனைநோக்கிநவில்கின்முன். (க)

Digitized By Roja Muthiah Research Library

ஆறுமுகனுனையிவனுயிரரையிங்ஙன்
கோறல்புரிந்தானெனதுகொற்றமுழுதெள்ளி
வேறலுடையோர்களெனமேன்மைபலசெப்பிச்
சேறல்புரிவான்றவிசுழும்பரிடைசெல்ல. (௨)

ஒட்டியநம்வீரரையொறுத்தகல்வனேனும்
விட்டதொருதூதனெடுவெஞ்சமரியற்றி
யட்டல்பழியாகுமவனுற்றலையடக்கிக்
கட்டிவிரைவால்வருகெனக்கழறலோடும். (௩)

சூற்குலமுகிற்பொருவுசூரனடிதாழா
வேற்கும்விடைபெற்றிசைவினேகுதல்புரிந்தா
னுற்கடலுமேவினுநது * ப்பரியவூழிக்
காற்கனலினேனைதொடர்காட்சியதுமான. (௪)

ஏகுசதமாமுகனிலக்கமறவீரர்
பாகம்வரவெண்ணில்படைபாணிமிசைபற்றி
வேகமொடுசென்றுதனிவேலன்விடுவீர
வாகுவினையெய்தியொருமாற்றமறைகின்றுன். (௫)

காவல்பலநீங்கிவருகள்வவுலகுள்ளோ
ரேவரும்வியப்பவருமெங்களிறைமுன்ன
மேவினையிகழ்ந்துசிலவீரருயிர்வௌவிப்
போவதெவனில்லுனதுபோர்வலியழிப்பேன். (௬)

பட்டிமையுருக்கள்கொடுபாறலரிதானை
யெட்டுளபரப்பதனுள்யாண்டகல்வையேனும்
விட்டிடுவனேவெனவிளம்பிவெரிநெய்திக்
கிட்டுதலும்வீரனிதுகேட்டனனெதிர்ந்தான். (௭)

வேறு.

கொற்றவேலுடையண்ணறன்மொழியினைக்கொண்டிலனிகழ்ந்தென்னைப்
பற்றவாயிரர்தங்களைவிடுத்தலும்படுத்தனன்பெயர்காலை
மற்றுமீதொருவயவனையுய்த்தனன்மன்னவனிவனுவி
செற்றுமாநகரந்தனையழித்தனன்செல்லுவனினியென்றுன். (௮)

கருதியின்னணஞ்சதமுகனெனப்படுகாவலன்றனைநோக்கிக்
குருதிவேலுடைப்பண்ணவனடிமனங்கொண்டுதிண்டிறல்வாகு
பொருதலுன்னியேயீண்டறைகூவினைபொள்ளெனப்படையோடு
வருதியாலெனத்தெள்விளியெடுத்தனன்மறலிக்குமிறைபோல்வான். (௯)

எல்லையன்னதிற்சதமுகற்சூழ்தருமிலக்கருமெதிரூன்றி
வில்லுமிழ்ந்திடுவெஞ்சரந்தொடுத்தனர்வேற்படைவிடுக்கின்றுர்
கல்லெனும்படிநேமிகளுருட்டினர்கப்பணஞ் o சிதறுற்றுர்
வல்லைமுத்தலைப்படையெழுவோச்சினர்மழுக்கொடேயெறிகின்றுர். (௧0)

* நதுத்தல் - கெடுத்தல்.
o கப்பணம் - இரும்பால் யானைநெரிஞ்சிமுள்வடிவமாகச் செய்யப்பட்டது.

Digitized By Roja Muthiah Research Library

அணிகள்பட்டவர்விட்டவிப்படைவகையண்ணன்மேற்புகலோடுந்
துணிகள்பட்டனநெரிந்தனவெரிந்தனதுகளுமாய்ப்போயிற்றான்
மணிகள்பட்டிடுமிருஞ்சிறைக்கலுழர்க்குள்வலியன்மேற்படுநொய்ய
பணிகள்பட்டனபோன்றனவேறிலைபடியெடுத்துரைத்தற்கே. (௧௧)

இலக்கமாகிமுன்னின்றபேராண்டகையிவர்செயலினைநோக்கி
யிலக்கமாய்முழுதுலகமுந்துளக்கியேயிராயிரப்பத்தென்னு
மிலக்கமாமுடிகொண்டதோர்சூளிகையிம்மெனப்பறித்தேந்தி
யிலக்கமாகியேயெதிர்பொருதானவர்தங்கண்மேலெறிந்திட்டான். (௧௨)

ஏதிலான்விடுசூளிகைசிறகர்பெற்றிறந்துவீழ்மேருப்போன்
மீதுசென்றமரியற்றியேநின்றிடும்வெய்யவர்மிசையெய்தித்
தாதுமுற்றவுஞ்சாந்துபட்டொருங்குறத்தனுவெலாஞ்சிதைத்திட்டே
யோதநீர்முகிலார்ப்பொடுபுவிக்கண்வீழ்ந்துடைந்தனவுதிராகி. (௧௩)

கொடிசெறிந்திடுசூளிகைதன்னுடனவுணர்தங்குழாங்கொண்ட
முடிசிதைந்தனநாசிநீடலையெலாமுடிந்தனமுடியில்லா
வடிவமைந்திடுகின்னகூடத்தொகைமாய்ந்தனநிலைகொள்ளு
மடிதகர்ந்தனகொடுங்கையுமாண்டனவொழிந்தவுமழிவுற்ற. (௧௪)

இலக்கர்தம்மையுஞ்சூளிகைதன்னுடனிமைப்பொழுதினிலட்டு
நிலக்கண்வீரனின்றிடுதலுஞ்சதமுகனிரைவிழிகொடுநோக்கிக்
கலக்கநண்ணியேதமரினைக்காண்கிலன்கவன்றனன்றெளிவெய்தி
யுலக்கைசூலம்வேல்சக்கரந்தோமரமோச்சுதலுறுகின்றான். (௧௫)

உற்றகாலையினெண்டிறன்மொய்ம்பினோனுருகெழுசினஞ்செய்தோர்
பொற்றைநேர்தருசிகரியைப்பறித்தனன்பொள்ளெனவெறிகாலை
மற்றொர்வார்சிலைவணக்கியேவெய்யதீவாளியாயிரம்பூட்டி
யிற்றுவீழ்வகையிடைதனிலறுத்தனனெறிதருகதிர்வேலான். (௧௬)

அறுத்துநூறுகோல்பின்னருமாங்கவனகத்தினடுவெய்தச்
செறித்தகாலையின்வீரவாகுப்பெயர்ச்செம்மல்போயவன்வில்லைப்
பறித்தனன்முறித்தெறிதலுஞ்சதமுகன்பற்றவீதிடையென்னாக்
குறித்தொரைம்பதிற்றிருகரமோச்சியேகுரிசிலைப்பிடித்திட்டான். (௧௭)

பிடித்ததானவத்தலைவனையண்ணலோர்பெரும்புயங்கொடுதாக்கிப்
படித்தலைப்படத்தள்ளலும்வீழ்ந்துளான்பதைபதைத்தெழுகாலை
யடித்தலத்தினாலுதைத்தனனசனியாலழுங்குறுமரவம்போற்
றுடிப்பவேயுரத்தொருகழலுறுத்தினன்சோரிவாய்தொறுஞ்சோர. (௧௮)

கந்தெனப்படுமொய்ம்புடைவெய்யசூர்கட்டுரைமுறைபோற்றி
வந்தெதிர்த்திடுசதமுகத்தவுணனைமிதித்திடுமறமைந்த
னந்தகப்பெயரசுரனையாற்றல்பெற்றமர்முயலகன்றன்னைத்
தந்தியைப்பதமொன்றுகொண்டூன்றியதாதைபோற்றிகழ்கின்றான். (௧௯)

வேறு.

மின்னல்வாளெயிற்றவுணன்மார்பகம்விடரெனும்படிவிள்ளவே
தன்னொர்பாதமுறுத்திமற்றொருதாளினைக்கொடுதள்ளியே
சென்னியாவுமுருட்டினான்றிசைமுற்றுநின்றுபரித்திடுங்
கன்னமார்மதமால்களிற்றினும்வன்மைசான்றிடுகழலினான். (௨௰)

Digitized By Roja Muthiah Research Library

நூறுசென்னியுமிடறியாங்கொருநொடிவரைப்பின்முன்னவுணனை
யீறுசெய்தனனதுமுடித்தபினெல்லையில்சினமெய்தியே
யாறுமாமுகவள்ளல்வாய்மையிகழ்ந்துளானவையத்தைமுன்
னீறுசெய்துபினவேனிந்நகரத்தையென்றுநினைந்தனன். (௨௧)

சதமுகன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௬௬0.

# காவலாளர்வதைப்படலம்.

சுடரும்வேற்படைத்தொல்குமரேசன, தடிகண்முன்னியருளுடனுண்டகை
படியளந்திடும்பண்ணவனுமென, நெடியபேருருக்கொண்டுநின்முனரோ: (௧)

திசையளந்தனதிண்புயஞ்சென்றுசேண், மிசையளந்தனமேதகுநீண்முடி
வசுதையாவுமளந்தனவார்கழ, லசைவருந்திறலாடவனிற்பவே. (௨)

திருவுலாங்கழற்சீறடிச்செம்மல்பே, ருருவுதாங்கியுகந்தனனிற்றலு
மரவின்வேந்தருமாதியங்கூர்மரும், வெருவினர்கள்வியன்பொறையாற்றலார். (௩)

கதிரெறித்திடுகோமருபூணினன், மதுகைபெற்றவடிவொடுநிற்றலு
மதுபரித்தற்கருமையினுற்றவும், விதலையுற்றதுவீரமகேந்திரம். (௪)

உலங்கொள்வாகுவினெண்பதமூன்றலும், விலங்கியேதளர்வீரமகேந்திர
மிலங்கைநீர்மையெய்தாமலிருந்ததாற், குலங்கொடானவக்கோமகனுணையால்.()

சேணளாவியசென்னியனெண்டிசை, காணநிற்புறுகாட்சியன்கந்தவே
ளாணைகாட்டிநிறுவியவாடலாந், தாணுவென்னத்தமியன்விளங்கினன். (௬)

சான்றகேள்வித்தலைமகன்முட்டுணை, யூன்றுகின்றவுழிதொறுமாநில
மான்றுநீண்டிடவவ்வப்புழைதொறுந், தோன்றுகின்றனசூழ்கடனீத்தமே. (௭)

ஆத்தனூன்றுமடிதொறுந்தோன்றிய, நீத்தம்யாவுநெடுந்திறல்வெய்யசூர்
வாய்த்தகோயில்வளைந்திறைபோற்றிய, வேத்தவைக்களந்தன்னினுமேவிய. (௮)

பூழைகொண்டுபுறம்படர்நீத்தநீர், மாழைகொண்டவன்கோயில்வளைந்துராய்ப்
பேழைகொண்டபிணிப்பறுபாந்தள்போற், கூழைகொண்டமறுகிற்குலாயதே. (௯)

துய்யபூழைதொறுந்தொறுந்தோன்றுநீர், மையல்வெங்கரிவாம்பரிதேர்படை
கையரிக்கொடுகாசினியாறுபோற், செய்யமாநகர்யாங்கணுஞ்சென்றதே. (௧0)

தோட்டதன்னசுழிப்படுவாரியி, னீட்டமாநகர்வீதிதொறேகியே
பாட்டின்மாளிகைபற்பலசாடியே, மீட்டுமொல்லையின்வேலைமடுத்ததே. (௧௧)

எம்மையாளுடையெந்தைதன்றாதுவன், செம்மைநீடுதிருவுருநோக்கியே
கைம்மறிக்கொடுகண்டனர்யாவரு, மம்மவோவெனவச்சமுற்றோடினர். (௧௨)

மாவுலாவருமன்னவன்கோயிலுட், காவலாளரிக்காளையைக்கண்ணுறீஇ
யோவிதோர்வஞ்சனுற்றனனீண்டெனக், கூவிளித்தனர்தத்தமிற்கூடினர். (௧௩)

கூடுகின்றகுணிப்பருங்காவலோர், நீடுமெய்கொடுநின்றவற்கஞ்சியே
யாடல்பூண்டிலமென்னினரசனே, சாடுமெம்மைச்சரதமென்றெண்ணினர். (௧௪)

Digitized By Roja Muthiah Research Library

குமரிமாமதிற்கோயிலுட்போற்றியே், யமரியோர்களொரைம்பதுவெள்ளத்தர்
திமிரமேனியர்தீயுகுகண்ணினர், சமரியற்றத்தலைத்தலைமண்டினார். (௧௫)

மண்டிமற்றவர்வல்லெழுத்தோமரம், பிண்டிபாலம்பெருங்கதையாதியாக்
கொண்டகொண்டகொடும்படைவீசியே, யண்டம்விண்டிடவார்த்தனராடினார். ()

ஆடுமெல்லையடுபடைத்தானவர், பாடுசூழ்ந்தபரிசினைநோக்கினு
னீடுசான்றவிடித்தொகையாயிர, கோடிபோற்புயங்கொட்டிநின்றார்ப்பவே. (௧௭)

அலைக்கவந்தவவுணப்படையெலாங், கலக்கமுழ்கிக்கருத்துணர்வஃகியே
யுலக்குறாதவுருமிடியுண்டிடும், புலைக்கடுந்தொழிற்புள்ளெனலாயவே. (௧௮)

வேறு.

பன்மழைக்குலங்களிற்படைக்கலங்கள்யாவையும்
வன்மைபெற்றவீரருய்ப்பவந்துமேனிபடுதலுஞ்
சின்மயத்தனூற்றன்மிக்கசெய்யவீழ்விழுத்திய
தொன்மரத்தியற்கைபோன்றுசோரிசோரநின்றனன். (௧௯)

ஆனகாலைவீரவாகுவறிவனங்கியிற்சினை இ
மானவீரர்மீதலாதுவாளெடுக்கலேனெனாத்
தேனின்மாப்பெருங்கடற்றிளைத்தலைக்குமத்தெனத்
தானவப்பதாதியைத்தடிந்தலைத்தன்மேயினான். (௨0)

மிதித்தனன்கொதித்தனன்விடுத்திலன்படுத்தனன்
சதைத்த * னன்புதைத்தனன்றகர்த்தனன்றுகைத்தன
னுதைத்தனன்குதித்தனனுருட்டினன்புரட்டினன்
சிதைத்தனன்செகுத்தனன்செருக்கினன்றருக்கினன். (௨௧)

சிரத்தினைநெரித்தனன்றிறற்புயமிறுத்தனன்
கரத்தினைமுரித்தனன்களத்தினைத்திரித்தன
னுரத்தினைப்பிளித்தனனுருத்தனன்சிரித்தனன்
புரத்தினையுரித்தனன்பொடித்தனன்படைத்திறம். (௨௨)

எடுத்தனன்சுழற்றினனெறிந்தனன்சிலோர்தமைப்
புடைத்தனனிடித்தனன்புயத்தினாற்சிலோர்தமைப்
பிடித்தனன்பிசைந்தனன்பிழிந்தனன்சிலோர்தமை
யடித்தலங்கொடித்தலத்தரைத்தனன்சிலோர்தமை. (௨௩)

பெருத்தனன்சிறுத்தனன்பெயர்ந்தும்வேறுபல்லுருத்
தரித்தனன்னடந்தனன்றணித்தணிதொடர்ந்தனன்
மருத்தெனக்கறங்கினன்வளைந்தனன்கிளர்ந்தன
னொருத்தன்வெள்ளமைம்பதுமுலக்குறக்கலக்கினான். (௨௪)

மஞ்ஞையன்னமொண்புறாமடக்குயிற்றிரட்பயில்
செய்ஞ்ஞலங்கொண்மாடமீதுசேணங்கூளிபிள்ளைகள்
பிஞ்ஞகன்குமாரனாடுபேரமர்க்களம்படு
மஞ்ஞையாளர்குருதியூனருந்துமாறிருந்தவே. (௨௫)

* சதைத்தல் - நசுக்குதல்.

மானினஞ்செறிந்திரைந்துவந்தவெல்லைதன்னிடைத்
தானோர்சிங்கவேறுபுக்கதன்மைபோலவவுணர்தங்
கோனிருந்தவுறையுளிற்குலாயகாவலாளராஞ்
சேனைவெள்ளமைம்பதுஞ்சினத்தின்வல்லைசிந்தினன். (உசு)

முறிந்தனருறுப்பியாக்கைமுற்றும்வேறுவேறவாய்ப்
பிறிந்தனர்தகர்ந்தனர்பிறங்குசென்னிசோரியுட்
செறிந்தனர்புதைந்தனர்சிதைந்தனருருண்டனர்
மறிந்தனரிறந்தனர்மடிந்தனர்கிடந்தனர். (உஎ)

இன்னபான்மைவீற்றுவீற்றினவுணர்தானையாவையுஞ்
சின்னபின்னமாகியேசிதைந்துவீழ்ந்துலந்திட
வுன்னுகின்றமுன்னமட்டிலம்பிறைன்சிலம்பினின்
மன்னன்மங்கைநூபுரத்தின்வந்தவீரவாகுவே. (உஅ)

வள்ளனின்றுசமரிழைப்பமாண்டவீரர்யாக்கையி
னுள்ளதாதுவானவேழுமுருவம்வேறுகாண்கிலா
தள்ளலாகியொன்றுபட்டதங்கிதன்னினுருகியே
வெள்ளியாதியுலகம்யாவும்விரவும்வண்ணமென்னவே. (உகூ)

காவலாளர்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் சுஅகூ.

---

# நகரழிபடலம்.

ஆசுறுமவுணவெள்ளமைம்பதுமுடித்தோனைஞ்ஞா
ரேசனையளவையான்றேயொராயிரமும்பரேகித்
தேசுறுமேருவென்னச்சிகரமோரிலக்கஞ்சூடி
வீசுபொன்சுடரநின்றவேரமொன்றங்கட்கண்டான். (க)

புறத்திருளிரியவைகும்பொலஞ்சுடர்ப்பொன்செய்வேரந்
திறத்தியல்கோயின்முன்னஞ்சேர்ந்ததுதங்கிவீரன்
பறித்தொருகரத்தினேந்திப்பதகனுஞ்சூரபன்ம
னறத்தியலிமுக்கிவைகுமவைக்களம்வீசியார்த்தான். (உ)

பன்மணிசெறிந்தபொற்பிற்பாயொளியெரிபொன்வேர
மன்னவனுறையுஞ்செம்பொன்மாயிருமன்றிற்போதன்
மின்னவிர்மேருவாதிவெற்பெலாமிகலிஞென்றிப்
பொன்னகர்பொடிப்பச்செல்லுந்தன்மையைப்போலுமம்மா. (ங)

வார்த்தருகழற்கால்வீரன்வானுருமேறுமுட்க
வார்த்திடுதுழனியேகியரசன்மேவியவத்தாணி
சேர்த்தவர்கன்னத்தூடுசெறியுமுன்னெறிதனுற்ற
பேர்த்திடுசெம்பொன்வேரம்பேரவைமிசையுற்றன்றே. (ச)

விற்செறிநூபிச்செம்பொன்வியன்மணிகளுமும்வேரங்
கற்செறிபெருந்தோள்வீரனெறிதலுங்கடிதுநண்ணிப்
பொற்செறியார்பிற்குரும்புதல்வருஞ்சிலரும்வைகுஞ்
சிற்சிலவிடையேயன்றியன்றெலாஞ்சிந்திற்றுமால். (ரு)

தடத்தனிவேரங்கீண்டுதபனியத்தவைக்கணோச்சி
யிடித்தனனொருதாணிற்குமெம்பிரானேவற்றூதன்
படைத்தளித்திறுதிவேலைப்பசும்பொனார்தசும்பினண்ட
முடைத்துலகழித்துநிற்குமொருபெருங்கடவுளொத்தான். (௬)

புலவுகொளல்குவெவ்வாய்ப்புட்செறிபொதும்பர்தன்னிற்
பலமுடையுருமுவீழப்பட்டதோர்பரிசதென்னத்
தொலைவகன்மைந்தன்விட்டகுளிகைதகர்ப்பத்தொல்சீர்
மலிவுறுசனங்களோடுமென்றமங்குற்றதம்மா. (௭)

இடிந்தனமிசையினெல்லையிற்றபித்திகையின்சூழல்
பொடிந்தனவுத்திரங்கள்போதிகைபூழியாகி
முடிந்தனமதலையாவுமுரிந்தனகபோதம்வீழ்ந்த
மடிந்தனதிருவுஞ்சீருமன்றழிவுற்றதன்றே. (௮)

பீடிகைபுரைந்தபொற்பிற்பேரவைதகர்தலோடும்
பாடுறவரசற்சூழ்ந்தபரிசனர்தம்முட்சில்லோ
ரோடினர்சிலவர்மெய்யூறுற்றனர்சிலவர்நெக்கு
வீடினர்சிலவராற்றமெலிந்தனர்புலம்பலுற்றார். (௯)

நெக்கதுபொதியிலாகநிரந்ததுசெம்பொற்பூழி
திக்கொடுவியும்வானுஞ்செறிந்தனவவுணராகித்
தொக்கனருடைந்துமாய்ந்துதொகைபிரிந்தழிந்தார்தொல்லைத்
தக்கனினுணர்வுதீர்ந்தகுவர்கோனிவற்றைக்கண்டான். (௧0)

ஆயிரநாமத்தண்ணலனையவன்வன்மைகாணா
வாயிரம்வடவையேபோலழன்றுதன்னயலினின்ற
வாயிரநெடுந்தோளைஞ்ஞூறானனங்கொண்டதீயோ
ராயிரர்தம்மைநோக்கியடலுருமேற்றிற்சொல்வான். (௧௧)

விழிப்பருநிவப்பினோங்கும்வேரமொன்றதனைக்கீண்டே
தெழிப்பொடுகுமரன்றூதன்செலுத்தினன்செம்பொன்மன்ற
மிழிப்புறத்தகர்ந்துவீழ்ந்ததீண்டுசில்லிடமேயன்றிப்
பழிப்பெனக்கிதன்மேலுண்டோபட்டதென்புகழுமன்றோ. (௧௨)

கோறலேகொற்றமன்றாலொற்றனைக்குறுகிநீவிர்
மாறுபோரியற்றியேனுமற்றவன்வழாதவாற்றா
லீறுசெய்திடாதுபற்றியெம்முனர்த்தருதிர்மெய்யி
னூறுசெய்தவனைவானோருடன்சிறையுய்ப்பனென்றான். (௧௩)

அன்னவரதனைக்கேளாவரசவீதருளிக்கேண்மோ
வொன்னலன்றூதன்சோரியுயிரொடுகுடித்தற்குற்றா
நின்னருளாணைநாடிநெஞ்சகம்புழுங்கியஞ்சி
யின்னதோர்பொழுதுந்தாழ்த்தேமினியதுபுரிதுமென்றார். (௧௪)

என்றனர்வணக்கஞ்செய்யவினிதெனவுவகைபூத்துக்
கன்றியவவுணர்தங்கள்காவலன்விடுப்பவங்கட்
சென்றனர்பத்துநூற்றுத்திறலுடைமொய்ம்பர்முன்ன
நின்றிடுவீரவாகுநிலைமையையுரைக்கலுற்றார். (௧௫)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

வேரமதெறிந்தவைவீட்டிநின்றுளான், சூருறைநகர்வளந்தொலைச்சிச்சூழுநர்
சேருறுமிருக்கையுஞ்சிதைப்பனின்றெனு,வோருறுபுந்தியினுன்னினனரோ.(கசு)

மறிப்பிணைமுதலியமான்கள்புள்ளினஞ், சிறப்புறுதண்டலைமணியிற்செம்பொ
னிற், குறிப்பினர்குயிற்றுசெய்குன்றம்யாவையும், பறித்தனன்றிசைதொறும்பரவ
வீசினன். (கஎ)

வரைவயிறுயிர்த்திடுமாசில்பல்வகை, யரதனநிரைகளினணியசெம்பொனின்
மரபினியற்றியவரம்பிறெற்றிகள், விரைவொடுதொட்டனனெடுத்துவீசினன்.()

முடிவகல்பேழையின்மூட்டுநீக்கியே, யடியுறுகொள்கலமவற்றைச்சாய்த்தெனப்
படியுறுமண்டபம்பலவுந்தொட்டெடா,விடிபுரையோதையான்யாண்டும்வீசினன்.

மலரயன்மிசையுறுமாயற்புல்லுவா, னிலமகள்கைகளைநீட்டியென்னவா
னுலகெலாமிகந்துமேலோங்குகோபுரம், பலபலபறித்தனன்பாங்கரோச்சினன்.()

மூளுறுமெரிசிகைமுடித்துத்தானவர், கேளொடுதமித்தமிகெழுமியுற்றென
வாளுறுமாமணிவயங்குதூபிகைச், சூளிகைபலபலதொட்டுவீசினன். (உக)

கற்றிடும்விஞ்சையின்கழகம்பல்கடைத், தெற்றிகள்வேதிகைசிறந்தசாலைக
டுற்றிடுபழுமரச்சோலைவாவிகண், மற்றுளபிறவொடுமட்டித்தானரோ. (உஉ)

கந்துகவியனிரைகரிகடேர்த்தொகை, பந்தியிற்சாலையிற்பயின்றுநின்றன
வந்தமின்றுயினவள்ளியள்ளியே, யுந்தினன்றிசைதொறுமுரற்றிவீழவே. (உ௩)

நிலவரைசூழ்தருநேமிவெற்பென, மலிதருசெம்மணிவகையிற்பண்ணிய
பலவகையியந்திரப்பதணவிஞ்சிக, ளொலிகழற்காலினுனுதைத்துவீட்டினன். ()

பூழியம்பொற்புயப்புனிதன்வெய்யசூர், வாழுறுகோநகர்வளத்தையின்னண
மூழியின்மருத்தெனவுலாவியட்டபின், சூழுறுகிடங்கருந்தூர்த்திட்டானரோ.(உரு)

அறந்தலைநின்றிடாவரசன்கோயினின், றெறிந்திடுசிகரிகளிலங்குசூளிகை
நிறைந்திடுமண்டபநெருங்குகாமர்காச், செறிந்தனபிறவொடுசென்றுசேணெலாம்.

உளர்ந்திடுவரியளியுலாவுதொங்கலான்,வளர்ந்திடுபாணியான்மன்னன்செல்வமா
ய்க்,களைந்தெறிகின்றனகணிப்பிலாதவுங்,கிளர்ந்திடுநெடுமுகில்கிழித்துச்சென்றவே.

சூரெனுமவுணர்கோன்படைத்ததொல்வளஞ், சேரியமிசைவரத்தெரிந்துவானி
டைச், சாருறுகடவுளர்தம்முளேங்கியே, யேரியவுறுகைபிரிந்திரியல்போயினர்.()

ஊனிவர்குருதிவேலொருவனேச்சிய, தானவர்கோன்வளந்தைகந்துவிண்ணவர்
மேனிகழ்பதங்களைவீட்டியேகியே, வானதிதன்னையும்வல்லைதூர்த்தவே. (உகூ)

வெறித்திடுதார்ப்புயவிடலைநொய்தினிற், பறித்தெறியவுணர்கோன்பலவளங்களு
மெறித்திடுதீங்கதிரெல்லைவேந்தனை, மறைத்தனபணிபலமயங்கிச்சூழ்ந்தபோல். ()

சோலையின்மண்டபத்தொகையிற்சூளிகைப், பாலினிற்சிகரியிற்பயின்றபுள்ளெலா
மேலுறுசெலவினில்விரைவினேகியே, மாலயன்புள்ளொடுமருவிவைகிய. (௩க)

செஞ்சுடர்ச்சூளிகைசிகரமாதிகள், விஞ்சியமிசைவரவிழித்துத்தாளிலோ
னெஞ்சியவுடலமுமிறுங்கொலின்றெனு, வஞ்சினனழுங்கினனலரிபாகனே.(௩உ)

Digitized By Roja Muthiah Research Library

வள்ளுறுவசிகெழுவயிரமாமுடி, யுள்ளபல்சூளிகையும்பர்செல்வன [வே.
பிள்ளைகளெறிந்திடப்பிறங்குபம்பரம், பொள்ளெனவீண்டிவான்போவபோன்ற

மீப்படுவியன்முகில்கிழித்துவிண்மிசை, மாப்பெருஞ்சிகரிகள்வல்லைசெல்வன
நீப்பருங்ககனமானெடுங்கதுப்பினிற், சீப்பிடுகின்றதோர்செய்கைபோலுமால். ஙச

பயனுறுபழுமரப்பைம்பொற்காமர்கா, வயனெறிதந்திடவகல்விண்செல்வன
நயனாறுமவுணனூர்நணியகற்பகம், வியனுலகிருந்திடமீள்வபோன்றவே. (ஙரு)

ஐயனதொற்றுவனள்ளிவீசிய,செய்யபல்பொருள்களுஞ்செறிந்துசேணெலாங்[வே
கொய்யுளைவயப்பரிக்கொடிஞ்சித்தேர்மிசை, வெய்யவன்செலவினைவிலக்குகின்ற

திருமிகுசூளிகைசிகரமாதிக, ணிரல்படவேகியேநிரந்தபல்வகைப்
பருமணியெரிசுடர்பரப்பிவான்பட, ரிரவிதன்கதிரையுமிகலிவென்றவே. (ஙஎ)

மின்னவிர்சிகரிபொன்வேரமாதிக, ளென்னவும்வான்படர்ந்தெழாலின்விஞ்சைய
ருன்னுறுமோங்கலுமுவணவைப்பெனும்,பொன்னெயில்வட்டமும்பூழிசெய்தவே

குன்றுறுசூளிகைகோபுரம்பிற, வொன்றுடனொன்றுபட்டுரிஞ்சியாயிடைத்
துன்றியமணிதிசைதோறுஞ்சிந்துவ, மின்றிகழ்தாரகைவிளிந்துவீழ்வபோல். ஙகூ

பொற்றைகள்சிகரகோபுரங்கடத்தமி, லெற்றுழிப்புகையெனவெழுந்தபூழிகள்
சுற்றியபுலிங்கமுந்தோன்றுகின்றன, வெற்றவெம்புயல்களுமின்னும்போலவே.()

ஏழுயர்களிறனனெறிந்தயாவையுஞ், சூழுறவானிடைத்துவன்றவெற்றலிற்
கேழுறுதுண்டுகள்கெழுமிச்சிந்துவ, பூழியினெடுமழைபொழியுந்தன்மைபோல். ()

ஆரியனேச்சியவணிகொண்மண்டபம், வேரமொடகன்பொழில்பிறவும்விண்ணு
றீஇத், தாரகைமுதற்சுடர்த்தனுக்கள்சார்ந்திடச், சோரியுமிடையிடைதுளித்ததெ
ன்பவே. (சஉ)

புந்தியிலான்மகம்புகுந்ததீமையா, லிந்திரனாதியோர்யாருஞ்சூரனு
னெந்தனரவனகர்வளமுநோவுற, வந்தரத்தவரையுமலக்கண்செய்தவே. (சங)

வெற்புறழ்மொய்ம்பினன்விடுத்தசூளிகை, பற்பலபொருந்தலும்பட்டவன்னிபோ
யெற்படுகதிருடையிரவிபச்சைமாப், பொற்புறுகொய்யுளைபூழிசெய்ததே. (சச)

பொன்னவிர்சிகரகோபுரங்களாதிய, துன்னியதாக்கலிற்றோன்றித்தீப்பொறி
யின்னுயிர்வழங்கியவெல்லையெங்கணும்,வன்னிபெய்மழையெனமயங்கிவீழ்பவே.

வழுவுறுமவுணர்கோன்வளங்கள்யாவையுங்,கெழுதகுவிசும்பினைக்கிழித்துச்சேறலி
னெழிலிகள்வயிறுடைந்திரங்கியாற்றலா, தழுதெனவுலகெலாமறல்சிந்துற்றவே.()

வேறு.

ஏசிலாவறிவன்விட்டவின்னபல்வெறுக்கையாவு
மாசகல்விசும்பினேகிமதிமுடியருள்பெற்றுள்ள
கோசிகன்றுறக்கமுய்த்தகொற்றவன்றவறியென்ன
வாசுறமீண்டுஞாலத்தகிலமும்வீழ்ந்தவன்றே. (சஎ)

படிதனிற்றிசையின்பாலிற்பௌவத்திற்பழுவந்தன்னிற்
றடவரைதன்னிலின்னதகையனபிறவிற்சூர
னுடையபல்வளங்களெல்லாமுரற்றியேவீழவாண்டு
மிடைதருமுயிரின்போம்மல்வெருவிவீழ்ந்திரிதலுற்ற. (சஅ)

அலைந்ததுபரிதியோங்கலதிர்ந்ததுமேருச்சையங்
குலைந்ததுசூழுங்குன்றங்குலுங்கியவசலமேழுங்
கலைந்ததுநாகர்வைப்புங்கலங்கியகடலும்பாரு
முலைந்தனவுயிர்கண்முற்றுமோடினதிசையின்யானை. (௪௯)

தண்படுதொடலைமார்பன்றனெறிந்தவற்றிற்பல்வே
றெண்புவிமுழுதுஞ்சிந்திற்றெழிந்தனவுலப்பிலாத
வெண்பதினுயிரப்பேர்யோசனையெல்லைத்தாகிக்
கண்படுசூரனூரிற்கல்லெனவீழ்ந்தமாதோ. (௫௰)

முடிந்திடலரியசூரன்மொய்வளமவனூர்முற்றுந்
தடிந்தெறியுருமேறென்னத்தணப்பறவீழ்தலோடு
மிடிந்தனமாடவீதியாவையுங்கடிகாவிற்ற
பொடிந்தனசிகரியாதிபுரிசைகண்மறிந்துமாண்ட. (௫௧)

மண்டபஞ்சிகரிவேரமணிமதின்மாடகூட
மெண்டகுபொதியின்முற்றுமிடிபடவெழுபொற்பூழி
விண்டொடுதிசைபார்யாண்டும்வெறுக்கையின்வடிவமாக்கி
யண்டர்தமுலகிதென்றேயறிகுறுவகைசெய்தன்றே. (௫௨)

புடையகல்பொன்செய்மூதூர்பொள்ளெனத்தகர்ந்துவீழ
மிடைதருவீதிமுற்றுமேயினசனங்கள்பூசல்
கடைவருநாளதெல்லைக்ககனமூதண்டகூட
முடைதலுமுடியுமாவியரற்றுமாறொத்ததன்றே. (௫௩)

வேறு.

நாகமுந்துநறுநிழன்மாதவி, நாகமுந்துநறுநிழற்பொற்கணி
சேகரம்பலசிந்திடுகாழுடைச், சேகரம்பலவோடுசிதைந்தவே. (௫௪)

கோடரங்குலவுற்றிடவான்றொடுங், கோடரங்குலவுற்றிடுதண்டலைக்
கோடரங்குலங்கோலஞ்செய்பொன்வரைக், கோடரங்குலவுற்றிறைகொண்டவே.

ஓடும்வாவியின்மீனினமோங்குபுள், ளோடும்வாவிவிண்ணுற்றிடவீதியின்
மாடமாலைவரிசையின்மல்கிய, மாடமாலைமறிந்திடிபட்டதே. (௫௬)

அண்டரண்டருமந்நகர்மாண்டன, வண்டரண்டமளவிடுசூளிகை
மண்டபம்மதின்மாடந்தரித்தயர், மண்டபம்மதின்மாதவம்யாவதே. (௫௭)

பூவையன்னமணிமயில்பொற்புறு, பூவையன்னமணிமயில்பொற்புறு
வாவியோடைவண்டானமழிந்திட, வாவியோடைவண்டானமழியுமால். (௫௮)

மொய்யுடைத்தறிமோதித்தலைபரீஇ, மையுடைப்பெருமால்கரிசோரிநீர்
மெய்யிடத்துகவிண்முகிலச்சுறக், கையெடுத்துக்கதறியுடைந்தவே. (௫௯)

ஈடுசான்றவெருத்தமுரிந்திட, நீடுபூநுதனெக்குறக்கிம்புரிக்
கோடுசிந்தக்குருதியுகுத்தரோ, வோடிவீழ்வவுவாக்களரற்றியே. (௬௰)

கார்கொள்சிந்துரங்காயத்திடையிடைச், சோரிசோர்தரத்தோன்றுவவீற்றினின்
மேருவாதிவிலங்கலைமெய்க்கனல், சாரும்வெம்புகைதன்னொடுஞ்சூழ்ந்தபோல். ()

கொடிகளிற்றகொடிஞ்சிமுரிந்தன, விடைகொள்பீடிகையெல்லைகணெக்கன
வடிகொள்சில்லியுமாருஞ்சிதைந்தன, பொடியதாகிப்புரண்டனதேர்களே. (௬௨)

பந்திதோறும்பராவியவைங்கதிக், கந்துகங்கள்கலங்கிநெரிந்திட
நொந்துமேனிநொறில்வருசெம்புனல், சிந்தியோடச்சிதறியதிக்கெலாம். (௬௩)

Digitized By Roja Muthiah Research Library

சித்வல்கொண்டிடுசெம்மயிர்க்கொய்யுளை, மதுகைவெம்பரிவாய்களின்வீழ்தரு
மூதிரவாரியொலிகடற்புக்கதா, லிதுகொலோவடவைக்கனலென்னவே. (சுச)

காளவெங்கரிக்காலின்வயப்பரித், தாளினூடகப்பட்டுத்தரைபுகா
மூளைசிந்தமுழுதுடல்பூழியாய், மாளுகின்றனர்மாநகரோர்சிலர். (சுரு)

ஆளிமொய்ம்புடையண்ணன்முன்வீசின, நீளுமாநகர்ஞெள்ளலின்வீழ்தலுந்
தோளிழந்துசுவன்முரிந்தொய்யெனத், தாளிழந்துதரங்கமுற்றார்சிலர். (சுசு)

பொற்றையன்னபொலன்மணிமாளிகை, யிற்றுவீழ்தலுமென்னிதுவென்றெழீஇ
வெற்றவெள்ளிடைமேவுதன்முன்னியே, முற்றம்வந்திடுமுன்மறிந்தார்சிலர். (சுஎ)

ஊடுமைந்தருமொண்டொடிமாதரு, யாடமோடுமறிந்தனர்தம்முடல்
வீடிவிண்மிசைவேற்றுருவெய்தியே, கூடியேவழிக்கொண்டனரோர்சிலர். (சுஅ)

உவமனில்லவனேச்சினவெங்கணு, மவதியின்றிப்பொழியவவைதெரீஇத்
தவறிலாதுசெய்தாழ்வரைகீண்டெடாக், கவிகையாத்தமைக்காத்துநிற்பார்சிலர். ()

விறற்கொள்வாகுவிடுத்தனகல்லக, வுறைப்பின்வீழவொதுங்கிடமின்மையிற்
சிறக்குமாநகர்ச்செந்தரைக்கொண்டகீ, ழறைக்குளேபுக்கலமருவார்சிலர். (எ0)

மாதர்தங்களைமக்களையன்னையைத், தாதைமாரைத்தமதுகைப்பற்றியே
யேதின்மாடமிகந்துகச்சோரிநீர், வீதிபோந்துவெருவிநிற்பார்சிலர். (எக)

கருவி * வானினுங்கண்ணகன்றிக்கினுந், தரணிதன்னினுந்தாவிலன்வீசிய,திருவ
ளங்கள்செறிந்தனவீழ்தலும், வெருவிப்போய்க்கடல்வீழ்ந்தொளிப்பார்சிலர்.(எஉ)

கிழிந்தசென்னியிற்கேழ்படுசெம்புனல், கழிந்துதோன்றவுங்கண்டனரையுறப்
பொழிந்துமெய்ப்புறம்போர்த்தலுந்தேற்றியே, யழிந்திரங்குறவாகுலிப்பார்சிலர்.()

ஆடன்மொய்ம்பினனூர்த்துமுன்வீசிய, மாடவீதிவளநகரெங்கணு
நீடவீழ்தலுநிற்றலையஞ்சியே, யோடியூறுற்றுயிர்துறப்பார்சிலர். (எச)

திங்கள்சூடிதிருமகன்விட்டன, வெங்கும்வீழுமிறப்பினைநோக்கியே
யங்கிவெங்கணைதொட்டறுத்தன்னவை, தங்களாருயிர்தாங்கிநிற்பார்சிலர். (எரு)

மையன்மாதருமைந்தருமாவியும், பொய்யில்புந்தியுமொன்றிப்புணர்தலுஞ்
செய்யமாடஞ்சிகரமொடேவிழ, மெய்யுமொன்றிவிளிந்திடுவார்சிலர். (எசு)

அந்தண்மாடத்தறிவன்விடுத்தன, வந்துவீழமறிந்துருமேறெனச்
சிந்தவேயுருசெம்பொறிமெய்ப்பட, வெந்துசின்னம்விரவுறுவார்சிலர். (எஎ)

வரங்கொள்வீரமகேந்திரத்தின்னணர், தரங்கமெய்திச்சனங்களெல்லாமிரீஇ
யுரங்கள்சிந்தியழிந்துழியொல்லென, விரங்குமோதையெழுகடலுண்டதே. (எஅ)

மன்றினிற்கரிபொய்த்துமனுநெறி, கொன்றுவாழுங்கொடியர்தம்மில்லெனத்
துன்றுமாடத்தொகைவெள்ளிடையதாய்ப், பொன்றிவீழ்ந்தனபுல்லெனவாகியே.

நீறுபட்டநெடுநகரெங்கணு, மூறுபட்டவுயிர்கடஞ்சோரிநீ
ராறுபட்டிடவங்கவையோடளாய்ச், சேறுபட்டனசெக்கர்விண்போலவே. (அ0)

மலிந்தசீர்த்திமகேந்திரமாபுர, மலைந்துதொலைத்திருமுழுதற்றதான்
மெலிந்திடும்படிவிண்ணவர்தம்மெலா, நலிந்தவன்வளநன்றுறுமேகொலாம். (அக)

நகரழிபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் எஎ0.

* கருவி - தொகுதி. மின்னு முழக்கு முதலியவற்றின்றொகுதி.

# சகத்திரவாகுகள்வதைப்படலம்.

ஏயினபான்மையினிவன்மூதூர், மாய்தருமெல்லையின்வருகின்ற
வாயிரவாகுளவடல்வீரர், மேயினதன்மைவிளம்புற்றும். (௧)

ஓலமுடைக்கடலுமிழ்கின்ற, நீலவிடத்தினைநிகர்மெய்யார்
மாலையுடைப்பலவடவைத்தீக், கோலமெனச்சிகைகொண்டுற்றார். (௨)

திங்களிருதியதிறன்மாக்க, டாங்குவையோடுதலைப்பெய்தே
யாங்குளசோரியருந்தீமப், பாங்கர்களன்னதொர்பகுவாயார். (௩)

எல்லையினேமிகள்யாவுந்தா, மொல்லொலிநீரினுடைந்தென்னக்
கல்லுறைசிந்துகருங்கொண்மூச், செல்லெனவார்த்தனர்செல்கின்றார். (௪)

வேறு.

மைவருநீலவரைத்தொகைதாங்கு, மொய்வருகின்றமுடிக்குழுவென்ன
வைவகைநூற்றினமர்ந்தகல்வானைத், தைவருகின்றதலைத்தொகைகொண்டார். ()

மராமரமானவைமாதிரமெங்கும், பராவவிடுத்திடுபல்கவடென்ன
விராவியவங்கதமேவிவிளங்கு, மோராயிரமாகியவொண்புயமுள்ளார். (௬)

எழுக்கொடுமுத்தலையெஃகம்வின்ஞாஞ்சில்,கழுக்கடைசங் * கொடுகப்பணம்வெ
வ்வாண், மழுக்கதைசக்கரம்வச்சிரமாதி, விழுப்படையாவும்விராவியகையார்.(௭)

எண்டகுநேமிகளேழுமளக்கர், மண்டலமானவுமன்னுயிர்யாவுங்
கொண்டிடினுங்குறைவின்றிநிரம்பா, தண்டமதென்னவகன்றவயிற்றார். (௮)

விழுமியபஃறலைவெம்பணியேனைக், குழுவொடுபோற்றினர்கொண்டுறலாற்றா
தழுதிடநாடியதற்கயர்வார்போற், கழல்களரற்றுகழற்றுணைகொண்டார். (௯)

இருபுயமோர்முகமெய்தியவானோ, ரொருவனைவெல்லவொராயிரரானேம்
பொருவகைசென்றிடல்புன்மையதென்று, வருபழியுன்னிமனந்தளர்கின்றார். ௧௦

மாகரவான்முனமாயையின்வந்தா, ராகையினாலிவனைதெனவானிற்
போகுவனாலிதுபொய்யலவல்லே, யேகுமினேகுமினென்றுசெல்கின்றார். (௧௧)

மீளிகையாலெறிமேதகுவேர, மாளிகைகோபுரமண்டபம்வீழ்வ
காளிகரன்னகரங்கள்கொடேற்றுத், தூளிகள்செய்தனர்தூர்த்திடுகின்றார். (௧௨)

எய்யெனமெய்யிடையெங்கும்வியர்ப்பச், செய்யனகண்வழிசெந்தழல்சிந்த
வெய்யவுயிர்ப்பெழவேர்வுளமூள, வொய்யெனவோடினருற்றிடுகின்றார். (௧௩)

நாகர்தமக்கொர்நமன்றனையன்னோ, ராகியவாயிரராயிரமொய்ம்பர்
வேகமதாகிவிழுத்தகுவீர, வாகுவையெய்திமடங்கலினார்த்தார். (௧௪)

ஆர்த்திடுமோதையகன்செவிசெல்லத், தார்த்தொகைதூங்குதடம்புயவீரன்
பார்த்தனன்மூவெயில்பண்டெரிசெய்த, தீர்த்தனெனச்சிறிதேநகைசெய்தான். ()

மேனிமிர்மந்தரவெற்பெனநின்றே, வானளவோங்குமராமரமொன்றைத்
தேனினம்வான்றிசைசிந்தியரற்ற, வூன்முதிர்கைகொடொசித்தனன்மன்னோ. ௧௬

அண்டமிருண்டிடவாதவரானோர், மிண்டியபேரொளிவீந்திடவீரன்
வண்டழைதுன்றுமராமரமங்கை, கொண்டதுபன்முறைகொட்புறல்செய்தான்.()

* சங்கு - வளை. ஒரு ஆயுதம்.

வேறு.

மாயிருமருப்புளமராமரமிறுத்தே
தூயனமராடன்முயறொன்னிலைமைநோக்கி
யாயிரமடுத்தபுயராயிரருமங்கண்
மூயினர்களண்ணலைமுரட்படைசொரிந்தார். (௧௯)

தொடுத்தனர்கள்வார்கணைகடொட்டனர்கள்வைவே
லெடுத்தபலதோமரமெறிந்தனர்களாலம்
விடுத்தனர்கண்முத்தலைவியன்கழுமுனுய்த்தா
ரடற்குலிசம்வீசினர்களாழிகடுரந்தார். (௧௧)

இப்பரிசினுள்ளபடையாவுமுறைதூங்கு
மைப்புயல்களென்னவரைவின்றிவிரைவாக
வொப்பரியவீரன்மிசையுய்த்திடலுமன்னோன்
றுப்பொடுமரந்தனிசுழற்றியடலுற்றான். (௨0)

விட்டபடையாவையும்வெறுந்துகளவாகப்
பட்டிடமரங்கொடுபராகமவைசெய்ய
வுட்டெளிவின்மானவரோராயிரரும்வீரற்
கிட்டினர்வளைந்தனர்கிளர்ந்தமர்முயன்றார். (௨௧)

ஒட்டியமராடியவொராயிரவர்தாமுங்
கெட்டிரியமேருநிகர்கேழ்கிளர்புயத்தோன்
மட்டுநனைவார்சினைமரங்கொடுபுடைத்தே
சட்டகமிறந்துபடுதன்மைபுரிகுற்றான். (௨௨)

செக்கர்புரைகுஞ்சிகெழுசென்னிகள்கிழிந்தார்
நெக்கனர்கபோலவகைநெற்றிபிளவுற்றா
ரக்கநிரைசிந்தினரலங்குகுழையற்றா
ருக்கனர்கள்பல்லெயிறுடைந்தனர்கடுண்டம். (௨௩)

வாய்நிரைபகிர்ந்தனர்கண்மாழைதிகழ்கண்ட
மானவுமுரிந்தனர்களற்றனர்கள்பொற்றோ
ளூனமகலங்கைகளொசிந்தனர்தசைந்தே
பீனமுறுமார்பிடைபிளந்தனர்தளர்ந்தார். (௨௪)

உந்திகள்குடங்கரினுடைந்துகுடர்யாவுஞ்
சிந்தினர்மருங்கெழில்சிதைந்தனர்புறங்கண்
முந்துதொடரென்பொடுமுரிந்தனர்கள்வாமஞ்
சந்துபொருகின்றமுழந்தாளடிகளற்றார். (௨௫)

வீந்தனர்களோர்சிலவர்வீழ்ந்துமிதிபட்டுத்
தேய்ந்தனர்களோர்சிலவர்செய்யகுடர்சிந்திச்
சாய்ந்தனர்களோர்சிலவர்தங்குருதியாற்றுட்
டோய்ந்தனர்களோர்சிலர்துடித்தனர்கள்சில்லோர். (௨௬)

எறிந்திடுபடைத்தொகுதியேகுமுனம்வீழ்ந்து
மறிந்தனர்களோர்சிலவர்மாய்ந்துககனம்போய்ச்
செறிந்தனர்களோர்சிலர்சிதைந்துதலைபோயு
முறிந்தவுடல்கொண்டமர்முயன்றனர்கள்சில்லோர். (௨௭)

௫௬

ஏரகலும்வீரர்தமியாக்கையிதுவண்ணஞ்
சேரவிறலுற்றுடையசெவ்வியினெழுந்த
சோரிநதிமாநகர்தொலைத்துவளன்வாரி
வாரிநிறைந்தவனிமீதினுமடுத்த. (௨௮)

வேறு.

அறந்தெரிந்துணராண்டகையகன்மரப்புடைப்பக்
குறைந்தசென்னிவான்றிரிவனவெயிற்றொடுகுலவிச்
செறிந்ததேவரோடமிர்தொளித்துண்டவர்சென்னி
நிறைந்திடாமதித்துணைகவர்ந்துலவுதனேரும். (௨௯)

அடல்கொண்மொய்ம்பினன்மரம்புடைத்தலுஞ்சிலவவுண
ருடல்சினப்பரிமுகத்தவர்தலைதுமிந்துதிர
நெடிதும்வாய்வழிசிந்தவீழ்ந்தனர்நெடுங்கடலுள்
வடவைமாமுகமங்கிகான்றிடுவதேமான. (௩0)

வள்ளன்மாமரத்தண்டுகொண்டடித்தலும்வலியோர்
பிள்ளைமாமதியெயிற்றணிசிந்திவிண்பெயர்ந்தே
யள்ளல்வேலையின்முறைமுறைவீழ்வனவதன்கட்
டுள்ளுமீன்கணமுகண்டுவீழ்கின்றதோர்தொடர்பின். (௩௧)

வலிந்தவூழ்முறையாவரேகடந்தவர்மரத்தாற்
பொலந்தயங்குபூண்மார்பினனெற்றிடும்பொழுதிற்
கலந்துபோர்செய்தாரோர்சிலர்வாளொடுகரம்போய்த்
தொலைந்துளார்செலுநெறியின்வீழ்ந்தவர்சிரந்துணிப்ப. (௩௨)

இனையபற்பலநிகழ்ந்திடவிணையிலாவொருவன்
றினையின்வேலையிலாயிரம்புயமுடைத்திறலோ
ரனைவர்தம்மையும்பஃறுணிபடுந்திறனட்டுத்
தனிமைதன்னொடுநின்றனனமர்க்களந்தன்னில். (௩௩)

சகத்திரவாகுகள்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௮0௩.

## வச்சிரவாகுவதைப்படலம்.

கூடியாரமரியற்றினர்தம்வலிகுறைந்து
வீடியாவிபோய்விளிதலுமன்னதுவிரைவி
னேடிவிண்ணிடைநணுகியதூதுவர்நில்லா
தோடியாருடையவுணர்கோன்முன்புசென்றுரைப்பார். (௧)

துன்றுமாயிரமொய்ம்புடைநின்படைத்தொகைஞர்
சென்றுசில்லமர்புரிந்தனரவனதுதெரியா
வொன்றொர்பாதவம்பறித்தனன்புடைத்தலுமொருங்கே
பொன்றிவீழ்ந்தனர்புகுந்தவாறீதெனப்புகன்றார். (௨)

Digitized By Roja Muthiah Research Library

புகன்றவேலையினவுணர்கோன்புரையிலோன்வன்மை
புகன்றவேலையின்வடவையாரழலெனப்பொங்கி
யகன்றனன்பெருமிதத்துடனுணையுந்திறலு
மகன்றனன்பெருந்துயர்கொளீஇயினையனவறைவான். (௩)

உமையளித்திடுசிறுமகன்றூதுவனொருவ
னெமதுமுன்னம்வந்தவமதிசெய்தனனேகி
யமரில்யாரையுமட்டுநின்றின்னமுமகலா
னமதுகொற்றமுநன்றுநன்றுலெனநகைத்தான். (௪)

முச்சகம்புகழவுணர்கோன்முனிவினைமுன்னி
யச்செனக்கிளர்ந்தெழுந்துசென்றவனடிவணங்கி
மெய்ச்சிரங்களோரையிருதிறலுடைவிறல்சேர்
வச்சிரத்திருமொய்ம்புடைக்காதலன்வகுப்பான். (௫)

நொய்யதூதுவன்பொருட்டினலித்திறநுவற
லையகேட்கநிற்கையலுமேயிறையிவணமர்தி
மொய்யில்யான்சென்றுமற்றவன்பெருமுரண்முருக்கிக்
கையகப்படுத்துய்ப்பனலன்னதுகாண்டி. (௬)

வேறு.

என்னலோடுமிறப்பெதிருற்றிடா, மன்னன்மைந்தனைநோக்கிமகிழ்வுறு
வன்னதன்மையையாற்றுதிநீயெனப், பன்னியேகும்படிபணித்தானரோ. (௭)

விடைபுரிந்திடமெய்வழித்தாதைத, னடிவணங்கியகன்றுமன்கோயிற்
புடையிருந்தனபோர்ப்படைச்சாலையி, னிடைபுகுந்தனன்யாரும்வழுத்தவே. (௮)

அட்டலின்றியமர்தருசாலிகை, யிட்டுமார்பினிறுக்கிவயத்தகு
பட்டிகைக்கலன்பாலத்துறுத்தியே, புட்டிலங்குலிபூண்டுபொருக்கென. (௯)

ஆணிகொண்டவயிற்கணைபெய்தபொற், றூணிகொண்டுபின்றும்பைமிலைச்சியே
நாணிகொண்டுநலந்தருகார்முகம், பாணிகொண்டுபடைபிறவேந்தியே. (௧0)

கொற்றமாரமர்க்கோலங்களுள்ளன, முற்றவேகொண்டுமூரிவில்வெஞ்சமர்
கற்றகாளைகதுமெனநோக்கியே, சுற்றுகம்மியர்க்கின்னனசொல்லுவான். (௧௧)

மிக்கரம்படைவெள்ளத்திலோர்சில, தொக்கபூசற்றொழிலினைமுற்றிய
விக்கணந்தருவீரிவணென்றலுந், தக்கதேயெனத்தாழ்ந்தவர்போயினர். (௧௨)

ஆங்குநின்றிடுமேவலரப்பணி, தாங்கியேகத்தகுவர்தங்கோமக
னீங்கலின்றுதன்னீழலின்வந்திடும், பாங்கர்யாரையுநோக்கிப்பகருவான். (௧௩)

குமரவேள்விடுகோற்றொழிற்றூதனைச், சமரில்வென்றொருதாம்பிற்றளைபுரீஇ
யிமையொடுங்குமுனெந்தைமுனுய்க்குவ, னமைதிர்போருக்கனைவிருமென்றனன்.

பாலன்மற்றிவைபன்னலுநன்கெனு, வேனுகின்றவினைஞருமள்ளரு
மேலைவெஞ்சமர்செய்யவிரைந்துபோர்க், கோலமெய்திக்குழீஇயினர்கொட்புற. ()

தாறுகொண்டவன்றன்குறிப்பிற்செலு, நூறுநூறுநொறில்பரிமான்பெறீஇ [ன்.
வீறுபண்ணமைதேரொன்றின்வெய்தென,வேறினன்மொய்ம்பிருபதுகொண்டுள்ளா

தந்திரத்துத்தலைவர்தமைந்தரு, மந்திரத்துமதிஞர்தமைந்தருஞ்
சுந்தரத்துத்தொடர்பினிற்சுற்றுற, வெந்திறப்பெருந்தேர்களிலேறினர். (கஎ)

ஆனவேலையரசன்சுதன்விடப், போனகம்மியர்போர்வினைகூறியே
யானைமேல்கொண்டிரும்பணையெற்றலுஞ், சேனைதம்முட்சிலதிரண்டுற்றவே.(கஅ)

ஒருங்குதாம்பலவோடலினன்னவை, பரங்கொளற்கரிதாகிப்படிமகள்
புரங்கிழிந்திடுபுண்கொண்டரற்றல்போ,லிரங்குமோதைகொண்டேகுவதேர்களே.

கருவிவானங்கடலுண்டுசெல்லுறும், வரைகளாமெனவந்துதம்மேலுறீஇ
யுருமினத்தையுகுத்தொலிகேட்டலும், வெருவிவீழ்விரைவனவேழமே. (உ0)

கிட்டிநாடுநயனமுங்கேடுசெய், தொட்டலார்தமுளமுஞ்சுழன்றிட
வெட்டுமாதிரத்தெல்லையுஞ்சாரிகை, வட்டமாகிவருவனவாசியே. (உக)

ஆடல்வேல்கதையாழியலப்படை, பாடுசேர்ந்தபலகையொள்வாள்சிலை
நீடுசூலநெடுமழுவாதியாக், கூடுபல்படைகொண்டிடுகையினர். (உஉ)

இடித்தசொல்லரிமையவர்போர்பல, முடித்தமொய்ம்பர்முரணியபல்படை
வடித்தகற்பினர்மால்வரையானவை, படித்தலத்திற்படர்ந்தன்னகாட்சியார்.(உங)

விசும்பின்மாலைமிலைச்சியகுஞ்சியர், பசும்பொன்வீரமெய்ப்பட்டிகைநெற்றியர்
நிசும்பரன்னதோர்நேரலர்சோரியி, னசும்பறுதவகன்பிலவாயினர். (உச)

தீமடங்கற்றிறலினர்தென்புலக், கோமடங்கலின்கொள்கையர்தங்கிளை
தாமடங்கத்தறிபிளந்தார்த்தெழு, மாமடங்கறனைப்பொரும்வன்மையார். (உரு)

எகும்வெஞ்சமர்க்கென்றலும்பூண்பரீஇ, மாகமஞ்சவளர்ந்தெழுதோளினர்
மோகமில்லவர்மொய்ம்பினின்மேலவ, ராகும்வீரரளப்பிலரெய்தினர். (உசு)

ஐந்துநூறெனும்வெள்ளமழுங்குதேர், தந்தியின்குழுத்தானுமனையதே
யுந்துமாக்களோராயிரவெள்ளமாம், பந்தமிக்கபதாதியிரட்டியே. (உஎ)

இத்தொகைப்படுமீரிருதானையு, மைத்திரைக்கடல்வாரியினூர்ப்புறீஇப்
பத்திரட்டிபடர்புயத்தண்ணலைத், தத்தமிற்கலந்தொன்றித்தழீஇயின. (உஅ)

துடிவலம்புரிதுந்துபிசச்சரி, கடிகொண்மொந்தைகரடிகைதண்ணுமை
யிடிகொள்பேரியிரலைகளாதியா, முடிவிலாவியமுற்றுமுழங்கிய. (உகூ)

இற்றவெல்லையினீரிருதானையு, நெற்றியேகடைநீடயலிற்செல
மற்றுளார்களும்வந்திடவச்சிரப். பொற்றடம்புயன்பொள்ளெனவேகினன். (ங0)

வல்லியக்கமொன்பொருமானவர், செல்லியக்கமுஞ்செல்வினைமாறுகொள்
சொல்லியக்கமுந்துண்ணெனத்தொக்கெழு, பல்லியக்கடலார்ப்பும்பரந்தவே. ஙக

ஊழிமால்படையொல்லெனவேயெழப், பூழியீண்டிவிண்பொள்ளெனமூடிய
வேழமால்வரைவீழ்தருதானநீ, ராழியென்னவகன்புவிகொள்ளவே. (ஙஉ)

திகந்தமெட்டுந்திருநிழலோச்சியே, யுகந்ததேர்களினெண்கொடியாடுவ
குகன்விடுத்திடுகொற்றவனுற்றல்கண், டகன்சிரங்களசைப்பனபோன்றவே. (ஙங)

ஆகுமெல்லையவுணர்மன்றேர்மிசைப், பேய்கள்சூழ்ந்துபிணங்கிமலைந்தன
காகம்யாவுங்கழுகும்வெஞ்சேனைமுங், கூகையோடுகுழீஇயிரங்குற்றவே. (ஙச)

Digitized By Roja Muthiah Research Library

மடித்தவாயுடைவச்சிரமொய்ம்பினான், பிடித்தகையிற்பெருஞ்சிலைவீழ்ந்தது
தொடுத்தவெந்நூறுதூணியுமிற்றதாற், றுடித்தவாலிடக்கண்களுந்தோள்களும். ()

அண்ணன்மைந்தனதாழியந்தேர்மிசைக், கண்ணகன்கொடிகையறவீழ்ந்தன
விண்ணினேறுவிசும்பின்றியார்ப்பன, வெண்ணிறீக்குறியிவ்வகையுற்றவே. (௩௬)

உற்றகாலவையுள்ளுறக்கொள்கிலன், செற்றமேல்கொண்டுசென்னியோர்ப்பத்து
ளான், மற்றோர்தூணியும்வார்சிலையுங்கொளாப், பொற்றடங்கைபுறந்தனிற்சேர்த்
தினான். (௩௭)

மொய்கொள்வச்சிரமொய்ம்பனித்தன்மையால், வெய்யதன்படைவெள்ளமொ
டேகியே,செய்யவேனுடைச்சேவகனேவல்செய்,யையனின்றவடுகளமெய்தினான்

வண்டுலாந்தொடைவச்சிரவாகுதன், றண்டமோடுசமர்க்களஞ்சேர்தலு
மண்டர்நாயகன்றாதுவனன்னவை, கண்டுநின்றுகழறுதன்மேயினான். (௩௯)

வேறு.

இந்திரஞாலவையத்திறைவனேயல்லன்மற்றை
மைந்தரிலொருவனாகும்வருபவன்வருவான்றன்னை
முந்தியதானையோடுமுரணறமுருக்கிவீட்டி
யந்திவான்புகுமுனெந்தையடிதொழப்போவனென்றான். (௪௰)

எறிதிரையளக்கரென்னவீண்டுறுமணிகம்யாவு
முறைமுறைசாடிவந்தமுதல்வனைமுடித்துமாலை
யுறுதன்முன்விசயமோடுமொய்யெனமீளேனென்னி
னறுமுகவையன்றாதனாவனோவடியனென்றான். (௪௧)

எண்டிசைபுகழும்வீரனினையனவிளம்பிச்செவ்வேள்
புண்டரீகத்துப்பொற்றாள்புந்தியாலிறைஞ்சிப்போற்றி
மண்டமர்முயன்றுநேமிமறிதரவரைகள்கீற
வண்டமுந்திசையும்வானுங்குலுங்கத்தோள்கொட்டியார்த்தான். (௪௨)

ஆர்த்திடுமோதைகேளாவமர்குறித்தெழுதேர்மேலோர்
கார்த்திடுதந்திமேலோர்கவனமாப்புரவிமேலோர்
பேர்த்திடுநிலத்தின்மேலோர்பிறங்குசீரவுணர்யாரும்
வேர்த்தனர்திரிந்துசிந்தைவெருவினர்விளம்புகின்றார். (௪௩)

வாழியவுலகம்யாவுமன்னுயிர்த்தொகையுமாய
வூழியிற்றனிநின்றார்க்குமுருத்திரனார்ப்போவன்றே
லாழிகட்கரசனார்ப்போவண்டங்கணெக்கவார்ப்போ
வேழ்கடலுடைந்தவார்ப்போவித்திறமார்ப்பதென்றார். (௪௪)

செருவலிகொண்டசீற்றச்செங்கணானார்க்குமோதை
மருமலர்த்தொடையலாகவச்சிரவாகுவென்போ
னிருபதுசெவியினூடுமிரவியம்புழைகள்புக்க
வருமெனச்சேறலோடுமுளம்பனித்துரைக்கலுற்றான். (௪௫)

ஈரெழுதிறத்தவானவுலகினுளின்றுகாறிப்
பேரொலிகேட்டதின்றாற்பிறந்ததித்துழனியாதோ
தேருதிரென்றுபாங்கருழையரிற்செப்பத்திண்டேர்ச்
சாரதிவிசயனென்பான்றாழ்ந்திவைபுகலலுற்றான். (௪௬)

Digitized By Roja Muthiah Research Library

தெற்றெனவுணர்திமான்றேர்செலுத்தியவலவனென்றே
மற்றெனதுரையையெள்ளல்வல்லைமேற்காண்டியெந்தை
யற்றமில்படையினோடுமமர்செயவருதனோடி
யொற்றெனநின்றோன்போர்வேட்டார்த்திடுமொலியீதென்றான். (சஎ)

தூதுவனுரப்பிதென்றுசொல்லுமுனுருத்துக்கண்கண்
மீதெரிபொங்கநக்குவெய்துயிர்த்தூரப்பியான்போ
யீதொருகணத்தினன்னோனிகன்முரணழித்துப்பற்றித்
தாதைமுனுய்ப்பன்காண்டிசரதமித்தன்மையென்றான். (சஅ)

என்றிவையுரைத்துப்போதுமெல்லையின்முன்னமாகச்
சென்றிடுமவுணவீரர்சேனையைவருத்துச்சீறித்
தன்றுணைத்தாளுந்தோளுந்தடக்கையுமனிகமாக
நின்றதோர்வீரன்றன்னைநேமியிற்சுற்றியார்த்தார். (சகூ)

கைதனிலிருந்தசெம்பொற்கார்முகங்குனித்துவெங்கோ
லெய்தனர்முசலநாஞ்சிலெறிந்தனர்தண்டஞ்சூலம்
பெய்தனர்கணிச்சிவிட்டார்பிண்டிபாலங்கடூர்த்தார்
செய்தவழயில்வேறோட்டார்நேமிகளுருட்டுகின்றார். (ருo)

வேறு.

தஞ்செனக்கொடுமைசெய்தானவப்படைஞர்கள்
வெஞ்சினத்தன்மையால்விடுபடைக்கலமெலாங்
கஞ்சனைச்சிறைசெயுங்காரணன்றூதுவன்
செஞ்சுடர்ப்படிவமேற்செவ்வண்வந்துற்றவே. (ருக)

துய்யன்மேல்வெம்படைத்தொகுதிவந்தடைதலு
மெய்யெலாமுற்றதான்மிக்கசோரிப்புனன்
மையறீர்காலையின்வந்தெழும்பரிதிபாற்
பையவேசெய்யதண்கதிர்வரும்பான்மைபோல். (ருஉ)

ஆனதோர்காலையெம்மையன்வெஞ்சினமுறா
மானினம்பலபலமருவியேசெறிவுழி
மேனிவந்தேகியோர்வேங்கைபாய்ந்தடுதல்போற்
றானவப்படையினைத்தாக்குதன்மேயினான். (ருங)

ஆயிரமாயிரமவதிசேரவுணர்தஞ்
சேயதண்குஞ்சியைச்செங்கையாற்பற்றியே
பாயிருந்தரையினும்பாற்படுகிரியினு
மேயெனுமளவைமுன்னெற்றியேயெறியுமால். (ருச)

எய்யும்வெம்படைகளுமெறியும்வெம்படைகளுங்
கையினிற்பற்றியேகனலெழப்பிசைதரு
மொய்யெனப்பதைபதைத்தோலமிட்டுயிருகச்
செய்யபொற்றாள்களாற்சிலவரைத்தேய்த்திடும். (ருரு)

மத்தமால்கரிகளும்வாம்பரித்தொகுதியுஞ்
சித்திரந்திகழ்மணித்தேர்களுமவுணர்தங்
கொத்தொடேவீழ்தரக்கோலமாலடிதனக்
கொத்ததன்றாள்களாலுதைபுரிந்துலவுறும். (ருசு)

கிடைத்திடுஞ்சிலவரைக்கிண்டனனீண்டமெய்
துடித்திடக்கழல்களாற்றுகைத்தனன்சிலவரை
யடித்தனன்சிலவரையரைத்தனன்சிலவரைப்
புடைத்தனன்சிலவரைப்புதுமரத்தண்டினால். (௫௭)

மத்தவெங்கரிபரிவயவர்தேராயின
பத்துநூறொருதலைப்படநெடும்பாணியாற்
குத்திடுஞ்சிகரமேற்கோளரிபாய்ந்தெனத்
தத்தியேதிரிதருந்தலைமலைக்குலமிசை. (௫௮)

தேரெலாமிற்றனதிண்டிறற்கவனமாப்
பேரெலாமிற்றனபிளிறுமால்கரிகளின்
றூரெலாமிற்றனதானவத்தலைவர்செய்
போரெலாமிற்றனபுகழெலாமிற்றதே. (௫௯)

ஆங்கதோர்பொழுதினிலவுணருக்கிறைமகன்
பாங்கராய்வந்திடும்பல்பெருங்குமரரு
மோங்குநாற்படையொடுமொருவனைச்சுற்றியே
தாங்குபல்படையினாற்சமர்முயன்றுற்றினர். (௬0)

வேறு.

அன்னகாலையில்வீரவாகுப்பெயரறிஞன்
றன்னதோர்கரத்திருந்திடுபழுமரத்தண்டான்
முன்னர்வந்துசூழ்மைந்தர்கண்முரட்படையோடுஞ்
சின்னமாகியேவிளிவுறப்புடைத்தனன்றிரிந்தான். (௬௧)

செய்யமத்தகமிற்றனவிற்றனசெழுந்தாள்
கைகளிற்றனமருப்பிணையிற்றனகரிகள்
வெய்யகாலுடனெருத்தமுமிற்றனமிலைச்சுங்
கொய்யுளைத்தலையிற்றனகுரகதக்குழுவே. (௬௨)

தட்டழிந்தனபாரகமழிந்தனசகடு
கெட்டழிந்தனகேதனமழிந்தனகிளர்ந்த
மொட்டழிந்தனபாகினமழிந்தனமுரண்மாக்
கட்டழிந்தனவொழிந்தனகனைகுரற்பஃறேர். (௬௩)

கால்களுற்றிடும்வெஞ்சிலையிற்றனகடிய
கோல்களிற்றனபரிதிகளிற்றனகொட்பார்
தோல்களிற்றனநாந்தகமிற்றனதூண்டும்
வேல்களிற்றனநாஞ்சில்களிற்றனவிரைவில். (௬௪)

நெரிந்தசென்னிகணெரிந்தனமார்பகநெடிது
சரிந்தவெங்குடர்சரிந்தனவிழுக்குடைத்தசைகள்
சொரிந்தமூளைகள்சொரிந்தனவிரிந்தெழுசோரி
திரிந்தகூளிகடிரிந்துமாய்வுற்றனசேனை. (௬௫)

கரந்துணிந்தனர்புயங்களுந்துணிந்தனர்காமர்
சிரந்துணிந்தனர்நாசிகடுணிந்தனர்செழும்பூ
ணுரந்துணிந்தனர்கழலடிதுணிந்தனருளதொல்
வரந்துணிந்தனர்வன்மையுந்துணிந்தனர்மைந்தர். (௬௬)

Digitized By Roja Muthiah Research Library

வாக்கினாற்சிலர்தம்முயிருண்டிடும்வன்கைத்
தாக்கினாற்சிலர்தம்முயிருண்டிடுஞ்சமர்செய்
யூக்கினாற்சிலர்தம்முயிருண்டிடுமுலம்பு
நோக்கினாற்சிலர்தம்முயிருண்டிடுநொய்தின். (௬௭)

அங்கணோர்சிலவவுணரையாடல்வெம்பரியை
வெங்கண்யானையையிரதத்தைவாரினன்விரைவின்
மங்குல்வானினுந்தரையினுங்கடலினும்வரைக
ளெங்குமாகியேவீழ்தரவீரனார்த்தெறிந்தான். (௬௮)

அன்புலப்புறுகொடுந்தொழிலவுணர்களமரும்
வன்புலத்துயிர்கொளவருமறலிதன்றூதர்
துன்புமச்சமுமணங்குடனகன்றுதற்றுதிப்பத்
தென்புலத்தவன்முன்னுறவீசினன்சிலரை. (௬௯)

ஒருதலைப்படுங்கேளிரைத்துன்னுவானுய்ப்பக்
கருதினான்கொலோசிற்சிலவவுணர்தங்கணத்தை
நிருதிமாநகர்புகுந்திடவீசினனிகரில்
சுருதிநாயகனேவலாற்றியதனித்தூதன். (௭0)

நேர்ந்துபோர்புரிந்துயிர்தலைவிடாததந்நிலைமை
யோர்ந்துவிண்ணவர்மானங்கள்விடுத்திடாதுயர்வான்
சார்ந்தஞாயிறுபிளந்திடாதாடலின்றன்மை
சேர்ந்துளார்பெறுந்துறக்கமேல்வீசினன்சிலரை. (௭௧)

எண்டிசைப்புறந்தாங்கியேபெயர்கிலாதிரக்கங்
கொண்டவெங்கரிக்கிரையெனச்சிலவரைக்கொடுக்குந்
தெண்டிரைப்புனல்பருகியநிரப்பதுதீர
வுண்டியாகவேவடவைபாற்சிலவரையுய்க்கும். (௭௨)

ஏந்தலின்னபல்வகையினாலடுதலுமிமைப்பின்
வீந்ததானைகடுணைவரும்பொன்றினர்மிக்கோ
ரோய்ந்துவானினுங்கடலினுந்திசையினுமுலைந்து
சாய்ந்துபோயினர்மானமும்வன்மையுந்தவறி. (௭௩)

மற்றிந்நீர்மையைக்காண்டலும்வச்சிரவாகு
விற்றதேகொலாநம்பெருந்தானையென்றிரங்கிச்
செற்றமீக்கொண்டுவலவனைநோக்கியித்தேரை
யொற்றன்முன்னுறவிடுத்தியாற்கடிதெனவுரைத்தான். (௭௪)

உரைக்கும்வாசகங்கேட்டலுந்தொழுதுமுன்னுற்ற
பரிக்குலங்களின்மத்திகைவீசியேபாக
னருக்கனாழியந்திகிரியூர்வலவனுமஞ்சி
வெருக்கொளும்படிதேரினைவீரன்முன்விடுத்தான். (௭௫)

கொடியவெஞ்சினந்திருகியேசூர்தருகுமரன்
கடிதுபோர்செய்வான்வருவதுமேலையோன்காணா
முடிவிலாமகிழ்வெய்தியேமுழுதுலகளந்த
நெடியமாலினுநெடியன்மற்றிவனெனநிமிர்ந்தான். (௭௬)

நெடியதாள்புவியளந்திடப்புயங்கள்விண்ணெருக்க
முடியெலாங்கடந்தண்டகோளகைதனைமுட்ட
வடிவமைந்திடுதிறலினன்பணிபதிமயங்க
வடிபெயர்ந்துபார்வெடிபடவிடிபடவார்த்தான். (எள)

புரமடங்கலுந்தெறுகணை போன்றுளான்பொன்னோன்
வரமடங்கலுஞ்சோரியதடங்கலும்வாணு
ளூரமடங்கலுமுண்டிடத்தறியின்வந்துதித்த
நரமடங்கலும்வெருவரவெரியெழநகைத்தான். (எஅ)

முச்சகம்புகழ்திறலினன்முறுவலுமுழக்கும்
வச்சிரத்தடமொய்ம்பினன்கேட்டலுமறுகி
மெய்ச்சிரத்தொகைதுளக்கியாரழலெழவிழித்து
நச்செயிற்றரவாமெனச்செயிர்த்திவைநவில்வான். (எகூ)

வீரநன்றுநின்னுண்மையுநன்றுமேதக்க
பேருநன்றுபேராற்றலுநன்றுநீபெற்ற
சீருநன்றுநின்விஞ்சையுநன்றுசெய்கின்ற
போருநன்றுநிற்கேற்பதிவ்வார்ப்பெனப்புகன்றான். (அ0)

மற்றுமோருரைபுகன்லுவான்வந்தெதிர்மலைந்த
கொற்றவீரரைப்படுத்தனமென்றுளங்கொண்டா
யற்றெலாமினிவிடுமதிநின்மிடலலைத்துப்
பற்றியெந்தைமுன்விடுப்பனுனையெனப்பகர்ந்தான். (அக)

நின்னைவென்றிடமுயலுவன்றமியனுநீயு
மென்னைவென்றிடமுயலுதியிருவருமதனைப்
பன்னிநிற்பதிற்பயனெவன்கடிதமர்பயிறி
பின்னைவென்றுளார்வெல்லுகவென்றனன்பெரியோன். (அஉ)

என்னுமுன்னரேவச்சிரவாகுவென்றிசைக்கு
மன்னன்மாமகன்றனதுகைக்கார்முகம்வாங்கிப்
பொன்னினுணெலிகொண்டொராயிரங்கணைபூட்டி
மின்னுலாந்தனிவேல்வன்றூதன்மேல்விடுத்தான். (அஙா)

விடுத்தவாயிரம்பகழியும்விடலைதன்மிசையே
யடுத்தவெல்லையிற்காணுமுவங்கையொன்றதனை
யெடுத்துமுன்னுறவோச்சியேயங்கவையெனைத்தும்
பிடித்துவல்லையினுண்டுகள்பட்டிடப்பிசைந்தான். (அச)

விட்டவாளிகள்பூழிபட்டிடுதலும்வெகுண்டு
மட்டுவாகைவெஞ்சிலையினைப்பின்னரும்வணக்கி
நெட்டிலைச்சரமொருபதினுயிரநிறத்திற்
பட்டிடும்படிதொட்டனனவுணர்கோன்பாலன். (அரு)

அசைவிலானதுநோக்கியேமுந்துபோரகத்தி
விசைமைநீங்கியேமுடிந்திடுதானவரிட்ட
முசலமாகியதொன்றினையெடுத்துமுன்வந்த
விசிகம்யாவையும்புடைத்தனன்றிசைதொறும்வீழ. (அசு)



Digitized By Roja Muthiah Research Library

வழுவில்வாளிகள்வறிதுபட்டிடுதலுமற்றும்
விழுமிதாகியவொருபதினாயிரம்விசிகம்
பழுதுருதனதூண்டியேயாண்டகைபரித்த
வெழுவைநுண்டுகளாக்கியேபின்னருமெய்வான். (௮௭)

தலையிலாயிரங்களத்தினிலாயிரந்தடந்தோண்
மலையிலாயிரமுரத்தினிலாயிரம்வயத்தா
ணிலையிலாயிரங்கணைகளாத்தூண்டினனீடுங்
கொலையிலாயிரங்கூற்றினைப்போலுறுங்கொடியோன். (௮௮)

கையிலேந்தியபேரெழுமுரிந்திடக்காமர்
செய்யமெய்ம்முழுதீண்டியேபகழிகள்செறிய
வையனின்றனனோரிறைவருந்தியேயதற்பின்
னெய்யெனச்சென்றுவெய்யவன்றேரினையுதைத்தான். (௮௯)

உதைத்தகாலையிற்பண்ணுறுபரியெலாமொருங்கே
பதைத்துவீழ்ந்தனபாகனுமுருண்டனன்பட்டான்
கதித்தவையமுமழிந்ததுவன்னதுகாணா
மதித்துவேறொருதேரிடைப்பாய்ந்தனன்மறவோன். (௯௦)

பாய்ந்துவச்சிரவாகுவாந்தொல்பெயர்படைத்தோன்
றேய்ந்தவொண்பிறைபணியொடுசேர்ந்தனசிலையி
னாய்ந்தொராயிரமயிற்கணைபூட்டியேயடுபோ
ரேந்தனெற்றியுட்செறித்தனனமரர்களிரங்க. (௯௧)

ஆயிரங்கணைநுதலிடையழுத்தலுமடல்வேற்
றூயவன்றிருத்தூதுவன்சூரருள்புரிந்த
தீயவன்றடந்தேரினைச்செங்கையாலெடுத்து
மீயுயர்ந்திடும்விண்ணிடையெறிந்தனன்விடுத்தான். (௯௨)

விண்ணகத்திடையெறிந்தபின்வீரவாகுப்பே
ரண்ணல்வச்சிரவாகுவந்தேறுவானமைந்து
பண்ணுறுத்தியவேமமாய்நின்றதேர்பலவுந்
துண்ணெனப்புடைத்தெறிந்துதைத்தொல்லையிற்றொலைத்தான். (௯௩)

தொலைக்குமெல்லையினவுணர்கோன்மதலைதொல்புவிக்கோ
ரிலக்கம்யோசனையெல்லையின்காறும்விண்ணேகி
யலக்கணுற்றுமீண்டழிதருதேருடனமரில்
வெலற்கருந்திறலறுமுகன்றூதன்முன்வீழ்ந்தான். (௯௪)

நிலவரைப்புறஞ்சூர்மகனெழுந்துதன்னெடிய
சிலைவளைத்தமர்செய்திடமுன்னலுந்திறலின்
றலைமைபெற்றவன்கண்டுகையோச்சியத்தனுவை
வலிதுபற்றியேமுரித்தனன்பேரொலிமயங்க. (௯௫)

ஏந்துகார்முகந்தனைமுரித்திடுதலுமெரியிற்
காந்துகண்ணுடைவச்சிரமொய்ம்பனோர்கரத்தின்
வாய்ந்தவாள்கொடேயெதிர்தலுந்தன்னுடைமருங்கி
னார்ந்தகந்தனையுறைகழித்தறிவன்மேனடந்தான். (௯௬)

Digitized By Roja Muthiah Research Library

நடந்துவச்சிரவாகுமுன்னுய்த்திடனிதோ
ளடைந்தவாளிணைவிலக்கியேயறிவரிலறிவன்
கடந்தபோர்வலிகொண்டதன்வாளினற்கடிது
தடிந்துவீட்டினனவுணர்கோனுந்தகத்தடக்கை. (கூஎ)

செய்யதோர்கரந்துணிபடத்தியவன்செறுத்தோர்
கையிருந்திடுதண்டினைவெறிதலுங்கண்டு
மையில்கேள்வியன்றுணிபடுத்தவுணர்கோன்மதலை
யையிரண்டவாந்தலையையும்வாளினலறுத்தான். (கூஅ)

வேறு.

எந்தைதன்றாதுவனெறிந்தவாளினு, லைந்திருசென்னியுமற்றுவீழ்தலு
மைந்தியல்வச்சிரவாகுவாகிய, வெந்திறலவுணர்கோன்வீடினனரோ. (கூகூ)

ஆடியலவுணர்தமண்ணறன்மகன், வீடியகாலையின்வெருவிப்பாங்கரி
னுடியவவுணர்கணனிபுலம்புறீஇ, யோடினர்திசைதொறுமுடைந்துபோயினர்.()

துஞ்சினன்வச்சிரத்தோளன்கண்டிது, நெஞ்சகமகிழ்ந்திவணிற்பனேயெனின்,
வெஞ்சினவவுணர்கோன்வினவிற்றீமையென், றஞ்சினன்கரந்தெனவருக்கன்போயினன். (சா0ச)

வச்சிரவாகுவதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் கூ0ச.

# யாளிமுகன்வதைப்படலம்.

திண்டிறலவுணர்கோன்சிறுவன்வீந்தது, மண்டமரியற்றிடவருநரின்மையுந்
தண்டமதுடைந்ததுந்தபனன்மாய்ந்ததுங், கண்டனனிணையனகருதன்மேயினன்.

எந்தையையெள்ளினுனிருந்தகோநகர், சிந்தினன்புரத்தையுஞ்சிறிதுவீட்டினன்
வந்தவர்யாரையுமாய்வுசெய்தனன், புந்தியின்வெகுளியிற்சிறிதுபோக்கினேன். ()

ஏலவெம்போர்செயவெவரும்வந்திலர், ஞாலமதவிரொளிநடாத்துஞாயிறு
மேல்கடனீந்தினன்விரையப்போயினன், மாலையுமிவ்விடைவந்துநேர்ந்ததே. (ங)

அறந்தனைநினைகிலாதல்லல்செய்பவ, ருறைந்திடுநகரிதினெற்றிற்போந்தயான்
சிறந்திடுமறுமுகத்தேவதேவனை, மறந்திடலாங்கொலிம்மாலைகாறுமே. (ச)

ஏவருமவழுத்தியவெந்தைகந்தவேள், பூவடிதணந்திடுபுலம்புமிவ்விடைத்
தேவர்கள்புன்மையுந்தீரவல்லையிற், போவதுதுணிவெனப்புந்திதேற்றினன். (ரு)

தேற்றியதிறலுடைச்செம்மலிம்மென, மாற்றலர்படுநிலவரைப்புநீங்கியே
காற்றெனக்கனலெனக்காலனென்னவெங்,கூற்றெனமறுகிடைக்குலவியேகினன்

திறல்கெழுமொய்ம்புடைச்செல்வன்செல்வுழி, மறுகிடையவுணர்கண்மறலிமற்றிவன், குறுகலிர்நுங்களைக்கொல்வன்கொல்வனென், றறைகுநர்முறைமுறையரற்றியோடினர். (எ)

எஞ்சியவவுணர்கள்யாருமிவ்வகை, யஞ்சினரிரிந்திடவழிந்துமுன்னையா
டுஞ்சியவாவணத்தொகைகடந்தோராய், விஞ்சியமகேந்திரம்விடுத்துநீங்கினன்.()

Digitized By Roja Muthiah Research Library

புடையகன்மகேந்திரபுரத்தைநீத்தபின், விடைபொருவலியினான்விண்ணின்பா
லெழீஇ, முடுகினன்வழிக்கொடுமுருகற்போற்றியே,வடதிசையிலங்கையின்வரை
ப்புநண்ணினான். (௯)

வேறு.

ஆங்கதுகாலையிலனைய, பாங்கரின்மேவருபழையோ
ேனாங்கியமூவெயிலுள்ளோர், தாங்கியவன்மைதரித்தோன். (௧௦)

முடியுமகேந்திரமூதூர், வடதிசையாரரண்மன்னி
யுடையவிலங்கையினோம்பும், படியறுகாவல்பரித்தோன். (௧௧)

ஆயிரமாமுகனடுதோ, ளாய்விலிராயிரமுடையோன்
ஞாயிறுதன்மக * னகரின், வாயில்களன்னதொர்வாயான். (௧௨)

வடவரையாயிரம்வந்தோ,ருடல்கொடுமேவியதொப்பான்
படைபலபாணிபரித்தான், கடையழல்கான்றிடுகண்ணான். (௧௩)

தண்ணளியோரிறைதானு, முண்ணிகழ்வற்றவுளத்தா
னெண்ணரும்வெம்பவம்யாவும், பண்ணினனன்றுபயின்றான். (௧௪)

மீளில்சினத்ததிவேகக், கோளரியைத்தருகொடியோன்
யாளிமுகத்தவனென்போன், வாள்வயமுற்றிடுவலியோன். (௧௫)

வேறு.

பெருந்தகையாங்கவன்பெயர்ந்தகாலையி, னருந்திறற்சூரனையடைந்துமீண்டுபின்
மருந்துறழ்தன்மகன்மாட்சிதேர்வுறீஇ,யிருந்தனன்வருந்தியேயிலங்கைதன்னிடை

சண்டவெங்கதிகொடுதமியன்சேறலுங், கண்டனன்யாரிவன்கள்வன்போலுமால்
விண்டலநீந்தியேமேவுவானெனத்,தொண்டுசெயுழையரிலொருவன்சொல்லுவான்.

நங்குலநாயகநவில்வன்கேட்டிநீ, செங்கதிர்முளைத்துழிச்செல்வர்காணிய
பொங்கொளிமகேந்திரபுரத்திற்போந்தனை, யிங்குநின்றிருமகனிருந்துகாப்பவே.()

போந்திடுகின்றபின்புணரிதன்னுள்வா, னீந்தினனீங்கிவனேரவன்னதை
வாய்ந்திடுபெருந்திறன்மடங்கற்பேரினான், காந்தியகனலெனக்கண்டுசீறினான். ௧௯

சீறினன்படையொடுசென்றுதாக்கலும், வீறுறுவருமவன்வெகுண்டுவாளுரீஇ
மாறமரியற்றியேமற்றவன்றனைக், கோறல்செய்தொருவிறல்கொண்டுமேயினான்.()

மின்னவிர்பூணுடைவீரமொய்ம்பினு,னின்னதோரிலங்கையினிடைக்கட்பாய்ந்
தன,னன்னவனடிபொருதாழியுற்றதாற்,பொன்னகர்வளனெடுமெங்கட்புக்கபோல்

புக்கிடவளப்பிலர்பொன்றவேனையோ,ரக்கணமெழுந்தனரவற்கண்டஞ்சியே
திக்கொடுவானமுஞ்சிந்தநின்மகன், மைக்கடலகமொரீஇவல்லையெய்தினான்.(௨௨)

வெய்தெனவிவண்வரும்வீரனோடமர், செய்தனன்வாள்கொடுசெவ்வியன்னதின்
மைதவழ்மேனியின்மதலைமார்புதாள், கைதலையொருதலைகண்டமாக்கினான்.(௨௩)

பூழியம்புயமுடைப்பொருநன்பின்னுறக், கேழுறுவானெறிகிளர்ந்துபோந்திடா
வாழியமகேந்திரவரைப்பிற்புக்கன, ஞழுறுமிலங்கையுமாழிமேலெழ. (௨௪)

சூருறைதிருநகர்துன்னியாயிடைச், சீரினைமுழுவதுஞ்சிந்திநங்குல
வீரரொடேயமர்விளைத்துவென்றவ, னோருநரின்மையினீங்கினனரோ. (௨௫)

* ஞாயிறுதன்மகன் - இயமன்.

என்னலுமுருமினுமிடித்தசொல்லினன், வன்னிகொளுயிர்ப்பினன்மடித்தவாயினன், றுன்னியவியர்ப்பினன்சுழலுங்கண்ணினன், மெய்ந்நிறைவெகுட்சியன்விளம்பன்மேயினுன். (௨௬)

காண்டியென்கடிமுறைகடந்துமைந்தனே, யீண்டுயிர்வவ்வியேயிறைவனூர்புகாமீண்டிடுகள்வனிவ்வீரந்தன்னெடே, மாண்டிடவடுகுவன்வன்மையாலென்றான்.

என்றிவைவிளம்பியேயாளிமாமுகன், குன்றெனவெழுந்தொரு கொற்றவாள்கொளீஇ, நின்றசில்படையொடுநேர்ந்துவீரன்முன், சென்றனனிவையனசெப்பன்மேயினுன். (௨அ)

நங்கடன்முறையினைநடாத்துமைந்தனே, யிங்கடல்செய்தனையினையகாப்பொரீஇயங்கடற்போந்தனையழிவுசெய்தனே, வெங்கடல்கடந்தனைமீடியேகொலாம். (௨௯)

ஒல்லொலியளக்கரையுகண்டுநிற்கினிச்,செல்லுதலரிதியான்செருவினேர்ந்தனன்கொல்லுவன்பெருவயங்கொள்வனீயிவண், வல்லதுபுரிமதிமதியிலாயென்றான். ()

சொற்றதுகேட்டலுந்துழனிப்பேரொலி, யுற்றெரிகனலெனவுயிர்ப்புமூரலுஞ், செற்றமுமெய்தியேதுளக்கிச்சென்னியைக், கொற்றமொய்ம்புடையதோர்குரிசில்கூறுவான். (௩௧)

ஒருதலையுடையவென்னுயர்வுமாயிரந், தருதலையுடையநின்றாழ்வும்யாமிவட்பொருதலையிழைத்திடும்போதுகாண்புறுங்,கருதலைபெருவடிவமைந்தகாட்சியே. ()

தீயவவிம்மொழிதிண்ணந்திண்ணமுன், மாயிரும்புழைக்கையின்மாமுகங்களோராயிரந்தன்னையுமறுத்துவீட்டியே, நாயினங்கவரியநல்குவேனென்றான். (௩௩)

கருணைகொணந்தியங்கணத்தனிவ்வகை, யுரைதருமெல்லையினுததிமேருமால்வரையினைவிழுங்கியவளைந்ததேயென, விரைவொடுபடைஞர்கள்வீரற்சுற்றினர்.()

சுற்றியதானையர்தோன்றன்மீதுதாம்,பற்றியபடைக்கலம்பலவுந்தூண்டியே[னன்.
செற்றமொடமர்வினைசெய்யச்சூறைபோன், மற்றவர்சூழலுள்வாள்கொண்டெய்தி

துண்டமுமகலமுந்தோளுந்தாளுமொண், கண்டமுஞ்சென்னியுங்கரமுமானவைவிண்டுவிண்டழிவுறவெய்யதானவர், தண்டமதனைத்தையுந்தடிந்திட்டானரோ. ()

வேறு.

அறுகுமாமுகத்தண்ணலாற்றவுங், கறுவுபெற்றிடுங்கருத்தின்வீரனைக்
குறுகியாயிரங்கொண்டகைகளா, லிறுதியூழிநாளிடியினெற்றினுன். (௩எ)

அடித்தகைகளையங்கையொன்றினுற், பிடித்துமேலவன்பெருங்கைவாளினு
லுடைத்தசோரிநீருகுத்துவீழ்ந்திறை, துடித்திடும்படிதுண்டமாக்கினுன். (௩அ)

ஆயிரங்கரமறலுமற்றுள, வாயிரங்கரமவைகணீட்டியே
யாயிரங்கிரியவைபறித்தன, ஞயிரங்கணுடல்கொண்டுளான். (௩௯)

பறித்தவாயிரம்பருப்பதத்தையுங், கறுத்துவீரன்மேற்கடிதுவீசலு
மிறத்தல்கொண்டுமெய்யெங்குமெய்தியே, புறத்துவீழ்ந்தனவுடைந்துபூழியாய்.()

பொற்றையாவையும்பூழியாகியே, யற்றகாலையிலையன்றூதுவன்
மற்றையாயிரம்வான்கரத்தையும், கொற்றவாள்கொடேகுறைத்துவீட்டினுன். ()

இழைக்குமெல்லையினெய்துங்கூற்றினை,யழைக்குமாறெனவார்த்துத்தானவன், றழைக்குமொய்ம்பினான்றன்னைப்பற்றுவான், புழைக்கைமுற்றவும்பொள்ளென்றுய்த்தனன்.

உய்த்தகாலையினொருதன்வாளினா, லெய்த்தவன்மைசேர்யாளிமாமுகன்
பத்துநூறெனப்பட்டசென்னியுங், கொத்தொடேவிழக்குறைத்திட்டானரோ. ()

யாளிமுகன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௯௪௭.

# வீரவாகுமீட்சிப்படலம்.

இன்னபான்மையால்யாளிமாமுகன், றன்னையட்டபின்றன்கைவாளினைப்
பொன்னுலாவுறைபுகுத்திச்சென்றனன், மின்னுசெஞ்சுடர்மேனிவீரனே. (௧)

இந்திரத்திருவிலங்கைநீங்கியே, யந்திரைக்கடலழுவம்வாவியே
கந்தமாதனங்கவின்றவேலைசேர், செந்திமாநகர்சென்றுபுக்கனன். (௨.)

புக்ககாலையிற்பொருவிலாற்றலான், மிக்கசேவகன்மேவல்காணுறாத்
தொக்கபாரிடஞ்சோமற்காணுறு, மைக்கருங்கடன்மானவார்த்தவே. (௩)

பாரிடத்தொகைபரிக்குமன்னவர், சேரவந்துதஞ்செங்கைகூப்பியே
வீரவாகுவைமெய்யுறத்தழீஇ, யார்வமெய்தினாரன்புகூறினார். (௪)

தழுவுவோர்தமைத்தானும்புல்லியே, யிழினார்தம்பதிக்கேகும்வெம்பவ
மொழிவதாயினனுமைக்கண்டேயெனா, முழுவலன்பினான்முகமன்கூறினான். (௫)

விலக்கில்வன்மைகொள்வீரவாகுவை, யிலக்கத்தெண்மருமெதிர்ந்துமற்றவன்
மலர்க்கருங்கழல்வணங்கிக்கைதொழ, வலக்கணீங்குமாறனையர்ப்புல்லினான். (௬)

அமைவில்பாரிடத்தனிகவேந்தருந், தமர்களாயினோர்தாமுஞ்சூழ்வர
விமலனாகியேவீற்றிருந்திடுங், குமரநாயகன்கோயின்மேயினான். (௭)

விண்டுவானுளோர்விரிஞ்சன்மாதவர், கொண்டலூர்பவன்குழுமிப்பாங்குற
வண்டர்நாயகனமருந்தன்மையைக், கண்டுமுந்துகண்களிப்பின்மேயினான். (௮)

உள்ளமென்புடனுருகத்தூயநீர், வெள்ளங்கண்ணுறவிதிர்ப்புமேவரப்
பொள்ளெனப்புரம்பொடிப்பச்சூரடும், வள்ளல்சேவடிவணங்கினானரோ. (௯)

அணங்குசால்வுறுமந்தண்சேவடி, வணங்கிமும்முறைமகிழ்ச்சியன்பிவை
யிணங்கவஞ்சலித்தேத்திநிற்றலுங், குணங்கண்மேற்படுங்குமரன்கூறுவான். (௧0)

சுரரைவாட்டுறுஞ்சூரன்முன்புபோய், விரைவினம்மொழிவிளம்பமற்றவ
னுரைசெய்திட்டதுமொல்லைமீண்டது, மரபினிவ்விடைவருத்தியாலென்றான். ௧௧

வீரன்கூறுவான்விமலநின்மொழி, சூரன்முன்புபோய்ச்சொல்லவிண்ணுளோ
ராரிருஞ்சிறையதனைவீட்டலே, காரியம்மெனக்கருத்திற்கொண்டிலன். (௧௨)

கெடலருஞ்சுரர்கிளையைவெஞ்சிறை, விடுகிலேனெனாவெகுண்டுகூறினா
னடிகளன்னதாலாண்டுநீங்கியே, கடிதுவந்தனன்கருமமீதென்றான். (௧௩)

Digitized By Roja Muthiah Research Library

என்றகாலையின்யாண்டுமொகியே, நின்றமுற்றொருங்குணர்ந்தநீர்மையா
னுன்றன்செய்கையுளொன்றுஞ்சொற்றிலை, நன்றமற்றதுநவிறியாலென்றான். கச

தொடக்கமுற்றுவாழ்சூரன்மாநக, ரடுத்தகாலையினகன்றவேலையிற்
றடுத்துளோரைநின்சரணவன்மையாற்,படுத்துவந்தனன்பான்மையீதென்றான்.()

அருந்திறற்புயனனையசெப்பலு, மிருந்தகந்தவேளிகலினோர்களால்
வருந்தினுய்கொலோமன்றவென்றுதன், றிருந்துபேரருள்செய்தன்மேயினான். கசு

அங்கவ்வெல்லையினுயிரம்பெயர்ச், செங்கண்மாயவன்றிசைமுகத்தவன்
மங்குன்மேலவன்வதனநோக்கியே, யெங்கணுயகனிவையகூறுவான். (கஎ)

தேவரைச்செயுஞ்சிறைவிடுத்துநீ, மேவுநன்கெனுவெய்யசூரனுக்
கேவுதூதைவிட்டியம்புவித்தனம், பாவியன்னதுபயனென்றுன்னலான். (கஅ)

வீதலேயவன்விதியதாதலிற், றீதில்விண்ணவர்சிறைவிடோமென
வோதினனவனுயர்வுநீக்குவான், போதுநாளையாமெனப்புகன்றனன். (ககூ)

ஆறுமாமுகத்தையனிவ்வகை, கூறக்கேட்டுளோர்கொடியசூர்மிசைச்
சேறுமென்றசொற்றெளிவினந்துயர், மாறிற்றென்றனர்மகிழ்ச்சியெய்தினர். (உ0)

ஆணவத்துணையாடன்மொய்ம்பினன், றானவப்பதிச்சயந்தனுற்றது
மேனைச்செய்கையுமெடுத்துக்கூறியே, வானவர்க்கிறையனத்தைத்தேற்றினன்.()

சீருலாமகேந்திரபுரத்தினும், வீரவாகுமீண்டதுவிளம்பினு
மாரனர்க்கடலலைப்பவாண்டுறுஞ், சூரனுற்றதும்பிறவுஞ்சொல்லுவாம். (உஉ)

வீரவாகுமீட்சிப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் கூகூகூ.

# சூரனகர்புரிபடலம்.

ஊகவான்படையுலப்பவச்சிர, வாகுமாண்டதும்வாகைமொய்ம்பினு
னேகுந்தன்மையுமேவற்றூதுவர், சோகமோடுபோய்ச்சூர்முன்கூறினர். (க)

ஈரைஞ்சென்னிசேரிளையகான்முளை, வீரஞ்சிந்தியேவிளிந்தவாற்றினைச்
சூரன்கேட்டலுந்துளங்கித்துன்பெனும், வாரியுள்ளுறமயங்கிவீழ்ந்தனன். (உ)

வேறு.

கண்ணிடைநெடும்புனல்காலமைந்தன்மே, லுண்ணிகழன்புசென்றுயிரையீர்ந்திடத், துண்ணெனவுயிர்ப்பெனும்புகையுஞ்சுற்றிட, வெண்ணருஞ்செல்லல்கொண்டிரங்கியேங்கினன். (ங)

ஏங்கினன்புலம்பலுமினையவெய்யசூர், பாங்கமர்தமர்களும்பரிசனத்தருந்
தீங்குசெயரக்கருந்தெரிவைமார்களு, நீங்கறவழுதனர்நெடுங்கணீருக. (ச)

பழிதவிர்கற்புடைப்பதுமைதன்மக, னழிவுறுதன்மையையோர்ந்துமாமலர்க், குழல்விழ்ந்தலமரக்கொங்கைமேற்புடைத், தழுதனள்வீழ்ந்தனண்மறிக்குமங்கையாள். (ரு)

தொல்லியலிழுக்கியசூரனென்பவன், புல்லியபின்முறைப்புணர்வின்மாதருஞ்
சில்லியற்கூந்தலூழ்சேடிமார்களு, மெல்லவருந்தழீஇயிரங்கன்மேயினர். (சு)

Digitized By Roja Muthiah Research Library

களமெழுமிசையொலிகடிநல்யாழொலி, துளையொலிவயிரொலிதூரியத்தொலி
யளமருமொழியொலியடங்கியப்பெரு,வளநகர்புலம்பொலிமயங்கிற்றென்பவே.()

அன்னதுபோழ்தினிலறத்தைக்காய்தரு, தன்னெறிமந்திரிசூரபன்மனு
மன்னவன்முன்னுறவந்துகைதொழு,தின்னனகேண்மெனவிசைத்தன்மேயினன்.

மெய்ப்புவியண்டங்கள்பரித்தமேன்மையை, யொப்பருந்திருவினையுலப்பிலாயுளை
செப்பருந்திறலினைசிறந்தசீர்த்தியை, யிப்பரிசழுங்குதலியற்கையாகுமோ. (கூ)

தெண்டிரைநேமிவான்செறிந்துகொள்ளினு, மண்டமதழியினுமனைத்துமாயினும்
விண்டிடலின்றிவாழ்வீரநீமனங், கொண்டிடுதிண்மையுங்குன்றற்பாலதோ. (க0)

ஏவரும்வியத்தகுமிறைவநீயிவ, ணேவெனவரற்றியேயுயங்குற்றுயெனின்
மூவருநகைப்பர்கண்முன்னமேவல்செய், தேவருநகைப்பர்கள்புகழுந்தேயுமால்.()

பூதர்தம்படையலபுராரிநல்கிய, காதலனேயலகழறவிட்டதோர்
தூதுவன்செய்தபுன்றொழிலுக்காற்றலை, பேதுறலாகுமோபெருமைக்கீறிலாய். க௨

தந்தையர்தஞ்சினுந்தம்முன்பின்னவர், மைந்தர்கடுஞ்சினுமற்றுஞ்சார்ந்தவர்,
தந்தொகைதஞ்சினுஞ்சயத்தின்மேலையோர்,சிந்தைகொள்வன்மையிற்சிறிதுந்தே
யுமோ. (கூ)

மேதகுபெருந்திறல்வீரர்தம்மையு. மாதரும்வெல்வரான்மாயுமூழ்வரி
னூதலினின்மகற்காயுள்குன்றலிற், றூதனுமட்டனனுகித்தோன்றினன். (கச)

வெவ்வியவொன்னலர்வினையும்வன்மையுங், கைவருநெல்லியங்கனியினுடியே
செய்வகைதேற்றினஞ்செய்கலாதிவ, ணைவதுமாண்மையினலத்திற்காகுமோ. கரு

வரங்களுமதுகையும்வரம்பின்றெய்தியே, யுரங்கிளர்சூரனென்றொருபேர்பெற்றநீ
தரங்கமதடைவதுந்தலைமைக்கேற்பதோ,விரங்கலையிரங்கலையென்றுதேற்றினன்.

மேற்றிகழறத்தினைவெகுளுநாமத்தான், றேற்றலுமவுணர்கோன்றெளிவுபெற்
றெழீஇ, யாற்றருந்துயரினையடக்கித்தன்பணிக், கூற்றியலுழையரைநோக்கிக்கூ
றுவான். (கஎ)

சேயுயிர்வௌவியேசிறந்தவிந்நகர், மாய்வதுபுணர்த்திடுவலியதூதுவன் [வே.
பேயதுதெரிந்திரோபுகலக்கேட்டிரோ, நீயிர்கள்வாய்மையைநிகழ்த்துமென்ன

துப்புடனிவ்வழிதூதிற்சென்றுளா, னிப்புரமகன்றனனிலங்கைநோக்குறு
வப்புறமேகினனதனைக்கண்டன, மெய்ப்பரிசிஃதெனவிளம்பினாரரோ. (கூ)

வேறு.

அம்மொழிவினவலோடுமவுணர்கோன்றன்பானின்ற
கம்மியர்தம்மைநோக்கிக்கடிதுபோயகிலநல்கிச்
செம்மலர்மிசையேவைகுந்திசைமுகத்தொருவன்றன்னை
யிம்மெனக்கொணர்திரென்னவனையவரிசைக்கலுற்றார். (௨0)

ஈங்கிதுகேட்டிமன்னவினையமூதண்டநல்குந்
தேங்கமழ்பதுமத்தண்ணறேவர்கோனுதியான
பாங்கினரோடுமேவிப்படையொடும்புவியில்வந்த
காங்கெயன்றன்கணுற்றனென்பராற்கண்டோரென்றார். (௨க)

Digitized By Roja Muthiah Research Library

தொழுவர்களினையமாற்றஞ்சொற்றலுஞ்சூரன்கேளா
விழுமிதுவிழுமிதென்னுவெய்துயிர்ப்பெய்திச்சீறி
யழலெழநகைத்துமற்றையண்டத்தினிருந்துநல்குஞ்
செழுமலரயனைப்பற்றிச்செல்லுமின்வல்லையென்ருன். (௨௨)

கொற்றவனினையமாற்றங்கூறலுமுழையர்கேளா
விற்றிதுசெய்துமென்னுவிசைவுகொண்டொல்லையேகி
மற்றையண்டத்திற்சென்றுவானவர்முதுவன்றன்னைப்
பற்றினர்கொணர்ந்தார்தங்கோன்பணித்திடுபரிசுகூறி. (௨௩)

பரிசனர்பலருமீண்டிப்பார்புகழ்சூரனென்னு
மரசன்முற்கொணர்ந்துவேருேரண்டத்தினயனையுய்ப்ப
வரிசையாலவனைநோக்கிமாணழிவுற்றமற்றித்
திருநகரதனைத்தொன்மைபோலவேசெய்தியென்ருன். (௨௪)

சூரன்மற்றிதனைச்செப்பச்சொற்பணிதலைக்கொண்டைய
வோரிறையொடுங்குமுன்னருனதுதொன்னகரமாற்ற
வேருறமுன்னமேபோலியற்றுவன்யானேயென்னுப்
பேருலகுதவுகின்றபெற்றியைநினைந்துசெய்வான். (௨௫)

பொன்மதின்மாடவீதிபொலன்மணிச்சிகரம்வேர
மன்மதன்விழையுஞ்சோலைமண்டபம்வாவிபொய்கை
சென்மலியரங்கமன்றந்தெற்றியேமுதலவெல்லாந்
தொன்மைபோலாகத்தன்கைத்தொழின்முறைபடைத்தான்மன்னே. ௨௬

இவ்வகைநகரமுற்றுமெழில்பெறப்படைத்தபின்றை
மைவரைமேனிமன்னன்மாபெருங்கோயிறன்னைச்
செவ்விதின்முதுமைபோலச்சிறப்பினுற்றிருத்தல்செய்தா
னைவகையிருபான்கொண்டவல்லியங்கமலத்தண்ணல். (௨௭)

கோன்பெருநகருமந்தண்கோயிலும்படைத்தலோடு
மன்பெருந்தகையசூரன்மற்றவன்செய்கைநோக்கி
யன்புசெய்துவகையாகியவுணர்கள்யாரும்போற்ற
முன்புபோலரிமானேற்றுமுழுமணித்தவிசினுற்ருன். (௨௮)

உற்றனனுகிப்பின்னரோதிமத்திறையைநோக்கி
மற்றுநின்னண்டஞ்சென்றுவைகுதிநல்கியென்னுச்
சொற்றனனேவவன்னேன்றுண்ணெனவிடைபெற்றேகிப்
பெற்றதன்னண்டஞ்சென்றுபிறங்குதன்னுலகம்புக்கான். (௨௯)

சூரனகர்புரிபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௬௬௮.

# சூரனமைச்சியற்படலம்.

அந்தநல்லமையந்தன்னினவுணர்கோனேவல்போற்றி
முந்துசெல்லொற்றரானேர்மூரிநீர்க்கடலைவாவிச்
செந்தியிற்சென்றுகந்தன்சேனையும்பிறவுந்தேர்ந்து
வந்தனர்விரைவினங்கண்மன்னனைவணங்கிச்சொல்வார். (௧)



Digitized By Roja Muthiah Research Library

ஏற்றவெம்பூதவெள்ளமிராயிரம்படையின்வேந்தர்
நூற்றுடனெண்மர்பின்னுநுவலருஞ்சிறப்பின்மிக்கோர்
மேற்றிகழிலக்கத்தொன்பான்வீரர்மற்றினையரோடுந்
தோற்றமில்பரமன்மைந்தன்றொடுகடலுலகின்வந்தான். (௨)

சரதமீதவுணர்கோவேதாரகவீரன்றன்னைக்
கரையறுமாயைபோற்றுங்காமருபிறங்கறன்னை
யிருபிளவாகவேலாலெறிந்தனனீறுசெய்து
திரைபொருமளக்கர்வேலைச்செந்திமாநகரினுற்றான். (௩)

விலங்கியகதிர்வேலண்ணல்விரைந்திவண்மேவுமாற்றா
லுலங்கிளர்மொய்ம்பிற்றூதனொருவனைவிடுத்தானன்னா
னிலங்கையையழித்துவந்தான்யாளிமாமுகவன்றன்னை
வலங்கையின்வாளாற்செற்றுவாரிதிகடந்துபோனான். (௪)

செங்கதிரயில்வேன்மைந்தன்றெண்டிரைப்புணரிவாவிப்
பொங்குவெங்கணங்களோடும்போர்ப்படைவீரரோடு
மிங்குவந்தாடல்செய்வானெண்ணினனிருந்தானீது
சங்கையென்றுன்னல்வாய்மைதருவனவுணர்தியென்றார். (௫)

ஒற்றர்சொல்வினவிமன்னனொருதனியிளவறன்னை
யற்றமில்கேள்விசான்றவமைச்சரைமைந்தர்தம்மைச்
சுற்றமொடமைந்ததானைத்தொல்பெருந்தலைமையோரை
மற்றொருகணத்தின்முன்னர்மரபொடுகொணருவித்தான். (௬)

வேறு.

ஆங்கவர்யாவருமவுணர்மன்னவன், பூங்கழல்கைதொழூஉப்புடையின்வைகலுந்
தீங்கனல்சுடுவதோர்சீற்றமுள்ளெழ, வீங்கியவுயிர்ப்பினன்விளம்பன்மேயினான்.()

போற்றலராகியபுலவர்யாரையு, மாற்றருஞ்சிறையில்யான்வைத்தபான்மையைத்
தேற்றியமகபதிசென்றுசென்னிமே, லாற்றினைவைத்திடுமமலற்கோதினான். (௮)

கண்ணுதலுடையதோர்கடவுள்வல்லையோ, ரண்ணலங்குமரனையளித்துமைந்த
நீ, விண்ணவர்சிறையினைவீட்டிச்செல்கெனத், துண்ணெனநம்மிசைத்தூண்டினா
னரோ. (௯)

வாய்த்திடுகயிலைமால்வரையைவைகலுங், காத்திடுநந்திதன்கணத்துவீரரு
மீத்தகுபூதரும்விரவமாலய, னேத்திடவரன்மகனிம்பரெய்தினான். (௧௰)

பாரிடையுற்றுளான்பாணிகொண்டதோர், கூருடைவேலினாற்கொடியகுன்றொடு
தாரகவினவலைத்தடிந்துபின்னுற, வாரிதியகன்கரைவந்துவைகினான். (௧௧)

அன்னதோராறுமுகனுங்கோர்தூதனை, யென்னிடைவிடுத்தலுமேகிமற்றவன்,
மைந்நிறநெடுங்கடல்வரைப்பிற்பாய்ந்தொராய்ப், பொன்னவிரிலங்கைமாபுரத்தை
வீட்டினான். (௧௨)

இலங்கையங்காவலுமிகப்புற்றின்னதோர், பொலங்கெழுதிருநகர்நடுவட்புக்கு
லாய், நலங்கிளரென்னவைக்களத்தினண்ணினான், கலங்கலனிறையதுமாயைக்க
ற்பினான். (௧௩)

நண்ணினனெதிருறநவையில்வீரர்போல், விண்ணவர்பாங்கராச்சிலவிளம்பியெ
ன், கண்முனஞ்சிலருயிர்களைந்துவன்மையா. லெண்ணலன்பின்னுறவெழுந்துபோ
யினான். (௧௪)

போயவனிந்நகர்பொடித்துச்சிந்தியா, னேயினவேயினபடைஞர்யாரையு
மாயுறுவித்தனன்மற்றுமென்னிளஞ், சேயுயிர்கொண்டனன்செருக்குநீங்கலான்.()

அழிந்ததித்திருநகரளப்பிலானைகள், கழிந்தனசெறிந்ததுகளேபரத்தொகை
கிழிந்ததுபாரகங்கெழீஇயசோரியா,லொழிந்ததென்னுணையுமுயர்வுந்தீர்ந்ததால்.()

ஒற்றெனவந்தவவ்வொருவன்றன்னையும்,பற்றிவெஞ்சிறையிடைப்படுத்தினேன
லேன், செற்றிலனூறதேயெனினுஞ்செய்திலே, னெற்றினிவசையுரைக்கீறுகூறு
கேன். (௧௭)

இம்பரினிவையெலாமிழைத்ததூதுவ, னம்பதியிகந்துபோயிலங்கைநண்ணிய
மொய்ம்புடையாளிமாமுகவற்சாடியே, யம்புதிகடந்தனனவனியெய்தினான். ௧௮

கார்பொருமிடற்றவன்காதன்மாமகன், வாரிதிகடந்திவண்வந்துநம்மொடும்
போர்பொரநினைகுவான்போலுமிவ்வெலாஞ், சாரணர்மொழிந்தனர்சரதமாகுமால்

நெற்றியிலனிகமாய்நின்றபூதரைச், செற்றிகல்வீரரைச்செகுத்துச்சேயினை [ன்.
வெற்றிகொண்டேனையர்தமையும்வீட்டியே,மற்றொருவிகலைமுன்வரவல்லேனியா

சூரனென்றொருபெயர்படைத்ததொல்லையேன், பாரிடர்தம்மொடும்பாலன்றன்
னொடும், போரினையிழைத்தடல்புரிந்துவெல்லினும், வீரமதன்றெனுவறிதுமேவி
னேன். (௨௧)

துய்த்திடுந்திருவினில்வலியிற்சூழ்ச்சியி, லெத்துணைப்பெரியர்தாமெனினுமேலை
யோர், கைத்தொருவினைசெயக்கருதிற்றம்முடை, மெய்த்துணையோரைமுன்வின
விச்செய்வரால். (௨௨)

ஆதலின்வினவினன்யானுமாற்றுத, லீதெனவுரைத்திராலென்றுமன்னவ
னோதினனன்னதையுணர்ந்துகைதொழூஉ,மேதியம்பெயரினனிவைவிளம்பினான்

மேனுயர்மாயைகள்விளைக்கும்வெற்பினை, மர்லினைவென்றநின்வலியதம்பியை,
யேலவொர்கணத்தின்முன்னெறிந்தவீரனைப், பாலனென்றுரைப்பதுமுணர்வின்
பாலதோ. (௨௪)

மேதகுதாரகவீரன்றன்னையை, யாதிபர்தம்முடனட்டதீரரை
யேதுமோர்வலியிலாவெளியரென்பதும், பூதரென்றிகழ்வதும்புலமைப்பாலவோ.

மீதெழுதிரைக்கடல்விரைவிற்பாய்ந்துநம், மூதெயில்வளநகர்முடித்துநின்னுடைக்
காதலனுயிரையுங்கவர்ந்தகள்வனைத்,தூதனென்றுரைப்பதுமறிஞர்சூழ்ச்சியோ.()

கற்றையஞ்சிறையுடைக்கலுழனூர்தரு, கொற்றவன்றிசைமுகனமரர்கோமகன்
மற்றொருவடிவமாய்வந்ததேயலா,லொற்றுவனிலைமைவேறுணரற்பாலதோ.(௨௭)

உன்றனியிளவலுமொருநின்னோங்கலும்,பொன்றியகாலையேபுராரிமைந்தன்மேற்
சென்றிலையல்லதுன்சேனைதூண்டியும், வென்றிலைதாழ்த்திவண்வறிதுமேவினாய்.()

தீயழல்வறியதேயெனினுஞ்சீரியோ, ரேயிதுசிறிதெனவெள்ளற்பாலரோ
வாயதனாற்றலையடக்கலாரெனின், மாயிரும்புவியெலாமிறையின்மாய்க்குமால். ()

மாற்றலர்சூழ்ச்சியதெனினுமாறதாய், வீற்றெருநிலைமையதெனினுமேவுமுன்,
னேற்றெதிர்காப்பரேயென்னினன்னவர்க், காற்றருமிடுக்கண்வந்தடைதற்பால
தோ. (௩0)

துறந்திடாவளந்தனைத்துய்த்துச்செய்வகை, மறந்தனமாகியேவன்மையாளரை
யெறிந்தவர்தமையிகழ்ந்திங்ஙன்வாழ்துமேற்,சிறந்தவர்யாமலாலேவர்சீரியோய்.()

முன்னமக்குமரன்மேன்முனிந்துசேறியே,லுன்னகர்க்கேகுமோவொற்றுமற்றுநீ
யன்னதுபுரிந்திலையாடன்மைந்தனோ,டிந்நகரழிந்ததென்றிரங்கற்பாலையோ. (௩௨)

மொய்யுடைநின்மகன்முடிந்ததன்மையு, மையநின்றிருநகரழிவதானதுஞ்
செய்யுறுநிலைமைகடெரிந்துசெய்திடா, மையலின்கீழ்மையால்வந்தவாகுமால். ()

கழிந்திடுபிழையினைக்கருதிச்சாலவுள், ளழிந்திடலியற்கையன்றறிஞர்க்காதலா,
லொழிந்தனபோகவொன்றுரைப்பன்கேண்மியா, விழிந்ததென்றுன்னலையிமைப்
பிற்செய்திநீ. (௩௪)

ஆயதுபிறவிலையவுணர்தம்மொடு, மேயினபடையொடும்விரைந்துகண்ணுதற்
சேயினைவளைந்தமர்செய்யப்போதியா, னீயினித்தாழ்க்கலைநெருநல்போலவே. ௩௫

என்றிவைமேதியனிசைப்பக்கேட்டலு, நன்றிதுவாமெனநவின்றுகையெறிந்
தோன்றியமுறுவலுமுதிப்பநல்லறங், கொன்றிடுதுர்க்குணனினையகூறுவான். ()

வன்றிறலுவணன்மேல்வந்தமாயன்மே, னின்றிடுமமரர்மேனேர்ந்துபோர்செயச்
சென்றிலையினையராற்றிறல்கொண்டேகினு, மின்றினிப்பாலன்மேலேகலாகுமோ.

இறுதியிலாயுளுமிலங்குமாழியு, மறுவிலாவெறுக்கையும்வலியும்வீரமும்
பிறவுளதிறங்களுந்தவத்திற்பெற்றனை, சிறுவனோடேயமர்செய்தற்கேகொலாம். ()

மேதகுபசிப்பிணியலைப்பவெம்பலிக், காதல்கொண்டலமருங்கணங்கடம்மையுந்,
தாதவன்றன்னையுந்தொடர்ந்துபோர்செயப், போதியோவமரரைப்புறங்கண்டுற்று
ளாய். (௩௯)

இன்றுநின்பெரும்படைக்கிறைவர்யாரையுஞ், சென்றிடவிடுக்குதிசிறிதுபோழ்
தினிற், குன்றெறிபகைஞனைக்கூளிதம்மொடும், வென்றிவண்மீள்குவர்வினையமீ
தென்றான். (௪0)

கருதிடுதுர்க்குணக்கயவனின்னன, வுரைதருமுடிவினிலொழிகவிங்கெனுக்
கருமணியாழியங்கையமைத்தரோ,தருமவெம்பகையுடையமைச்சன்சாற்றுவான்

குலம்படுநவமணிதுயின்றுபொன்புனை, யலம்படைகொண்டுபுன்முதிரையாக்கத்
தாற், புலம்படக்கிறுவபோலும்வீரநீ,சிலம்படிமைந்தனோடாடல்செய்வதே.(௪௨)

மேலுயர்கண்ணுதல்விமலனன்றெனி, னுலவ * னன்றெனினயனுமன்றெனிற்
காலனுமன்றெனிற்காவல்வீரநீ, பாலனோடமர்செயிற்பயனுண்டாகுமோ. (௪௩)

மன்னிளங்குதலைவாய்மதலைமீதினு, மின்னினியமர்செயவிறத்தியென்னினு, ம
ன்னவனினதுபோராற்றல்காண்பனேல், வென்னிடுமெதிர்ந்துபோர்விளைக்கவல்
லனோ. (௪௪)

நேரலர்தங்களைநேர்ந்துளாரெனப், பேரிகலாற்றியேபெரிதுமாய்வதும்
பூரியர்கடனலாற்புலமைக்கேற்பதோ, சீரியர்கடனவைதெரிந்துசெய்வதே.(௪௫)

---

* ஆலிலையிற்றுயின்றமைபற்றி, விட்டுணுவை ஆலவனென்றார்.

எரிமுகனிரணியனெனுமுன்மைந்தரி, லொருவனுக்காற்றலரிலக்கத்தொன்பது
பொருதிறல்வயவரும்பூதர்யாவரு, மரனருள்புரிதருமறுமுகத்தனும். (௪௬)

நீள்கொடுநகங்கொடு * கிள்ளுமொன்றினை,வாள்கொடுதடியுமோவன்மைசான்ற தோ,ராள்கொடுமுடித்திடுமவரைவென்றிட,நீள்கொடுமரங்கொடுநீயுஞ்சேறியோ.

மாணிமைகூடுருமகவுதன்னொடு, மேணறுசாரதரினங்கடம்மொடும்
பூணுதிசெருவெனும்புகற்சிகேட்பரே, ஞுணுவர்நமரெலாநகுவர்தேவரும். (௪௮)

பொற்றையைமுடித்தனன்பொருவிறம்பியைச், செற்றனனென்றிளஞ்சிறுவன் றன்னையும், வெற்றிகொள்புதல்வனைவீட்டிஞனென, வொற்றையுமதித்தனைதொன்மையுன்னலாய். (௪௯)

ஆறணிசெஞ்சடையண்ணறந்திடும், பேறுடைவேலினைப்பிள்ளையுய்த்தனு
மாறுளபடையினுன்மாற்றலாமையா, லீறதுவாயினனிளவழுரகன். (௫0)

குறுமுனிதொல்லைநாட்கூறும்வாய்மையா, லிறுதியையடைந்ததாங்கிருந்தமால் வரை,யறிகிலைபிதெலாமாற்றல்கூடுருச், சிறுவனசெய்கையேசிந்தைகோடியால்.

எச்ச ο மொடழிவுருவிரதஞ்சாலிகை, கைச்சிலைபெற்றிலன்கருதிநீயவை
யச்சொடுபுரிந்திலையதனிற்றூதஞல், வச்சிரவாகுவாகனுந்துஞ்சினன். (௫௨)

பலவினிமொழிவதென்படியிருனவத்,தலைவரிலொருவனைவிளித்துத்தானையோ, டிலையின்முருகன்மேலேவுவாயெனி, னலைவுசெய்தொல்லையினடல்பெற்றேகுவான். (௫௩)

அன்னதுசெய்கெனவறத்தைச்சீறுவான்,சொன்னதோரிறுதியின்முறுவற்றேன் றிடக், கன்னிகர்மொய்ம்புடைக்காலசித்தெனுங், கொன்னவில்வேலிஞனினைய கூறுவான். (௫௪)

செந்தியினிருந்திடுஞ்சிறுவன்சாரதர், தந்தொகைதன்னொடுமீண்டுசாருமே
லெந்தையொர்சிலவரையேவலல்லது, மந்திரம்வேண்டுமோமற்றிதற்குமே. (௫௫)

வயந்தனதையனைவாசவன்றனைச், சயந்தனைப்பிறர்தமைச்சமரின்வென்றநா, ளியைந்ததெமைவினவலையின்றெுர்பாலற்கா, வியன்பெருமந்திரம் வேண்டிற்றுங் கொலோ. (௫௬)

அண்டர்களொடுங்கினரரக்கரஞ்சின, ரெண்டிசைக்கிழவருமேவலாற்றுவர்
மண்டமரவுணரின்வலியர்பூதராங், கண்டனமின்றியாங்கலியின்வண்ணமே. ௫௭

பணிக்குதிதமியனைப்பரமன்மைந்தனைக், கணத்தொகைவீரரைக்காலபாசத்தாற், பிணித்திவண்வருகுவனென்றுபேசலுந், துணுக்கெனச்சண்டனென்றெுருவன் சொல்லுவான். (௫௮)

கழிபசிநோயடக்கவலும்பூதரு, மழலையம்பிள்ளையுமற்றவற்குறு
தொழில்புரிசிலவருஞ்சூழ்ச்சிப்பாலரோ, வழகிதுமந்திரமவுணர்க்காற்றவே. (௫௯)

கொல்லுவன்பூதரைக்குமரன்றன்னையும், வெல்லுவன்பிறரையும்விளிவுசெய்வ ஞன், மல்லலந்தோளுடைமன்னர்மன்னவுன், சொல்லதின்றென்னவித்துணையுந் தாழ்த்துளேன். (௬0)

* நீள்கொடுநகங்கொடு - என்பதற்கு கிழிக்கின்ற வளைந்தநகத்தால் எனப் பொருள்கொள்க.

ο எச்சம் - யாகம்.

Digitized By Roja Muthiah Research Library

ஏவுதிதமியனையிமைப்பிற்சென்றியான், மூவர்கள்காப்பினுமுரணிற்ருக்கியே
தூவுறுசாரதத்தொகுதிதன்னெடு, மேவலன்றனையிவண்வென்றுமீள்வனுல். (௬௧)

எனவிவைசண்டனுங்கிசைத்தவெல்லையி, னனலியென்றுரைத்திடுமவுணர்காவலன், சின்மொடுமுறுவ லுஞ்சிறிதுதோன்றிட, வினையமொடிம்மொழிவிளம்பல் செய்குவான். (௬௨)

தெம்முனைமரபிலோர்சிறுவனென்னினும், வெம்மையொடேற்குமேல்வெகுண்டுமேற்செலா, தெம்மொடுமந்திரத்திருப்பரேயெனி, னம்மவோசூரருக்கழகிதாற்றலே. (௬௩)

என்றிதுமொழிதலுமெரியுங்கண்ணின, ஞென்றியமுறுவலனுயிர்க்குநாசியன்
கன்றியமனத்தினன்கறித்துமெல்லிதழ், தின்றிடுமெயிற்றினன்சிங்கன்கூறுவான்.

வெந்தொழின்மறவரைவிளித்ததன்மையு, மந்திரமிருந்ததுமனங்கொள்சூழ்ச்சியு
மிந்திரனுதவிசெய்யிளையன்வன்மையைச், சிந்திடவேகொலாநினைந்தசெய்கையே.

இருநிலவண்டமேலிருந்துளோரெலா, மருவலராகியேவருகவந்திடி, னொருதமியேன்பொருதுலையச்செய்வனுற், றெரியலைபோலுநின்னடியன்றிண்மையே. (௬௫)

வன்மையையுரைப்பதுமரபன்ருலெனைச், சென்மெனவிடுக்குதிசேனையோடுபோ
யுன்முனிவுற்றிடுமொன்னலாரையட், டின்மையதாக்கியேவருவனீண்டென்ருன்.

இன்னவைபோல்வனவியல்பினேனைய, துன்னெறியமைச்சருஞ்சூழ்ச்சித்தொல்படை, மன்னருமிசைத்தலும்வயங்குசெங்கதி, ரொன்னலன்கையமைத்துரைத் தன்மேயினுன். (௬௮)

சென்றிடுமுனிவரர்தியங்கமாயைசெய், குன்றுடனிளவலைக்குமரன்கொன்றிடு, மன்றெனைவிடுத்திலை யழைத்தொன்ருேர்ந்திலை, யின்றிதுவினவுவ தென்னையெந்தைநீ. (௬௯)

உள்ளுறுகரவினனெருவனும்பரா, னெள்ளருமொற்றுவந்தீண்டுபோர்செயின்
முள்ளெயிறின்னமுமுற்றுந்தோன்றிலாப், பிள்ளையைவிடுக்குமோபெரியைசாலநீ.

இழித்தகுதூதனுலிடர்ப்பட்டாயெனும், பழித்திறம்பூண்டனைபாலனுவியை
யொழித்தனைநகரமுமொருங்குசீரற, வழித்தனைநீயுனதறிவிலாமையால். (௭௧)

பொருளலதொன்றினைப்பொருளெனக்கொடு,வெருவுதல்செய்வதும்வினையமோர்கிலா, தொருசெயல்விரைந்துசெய்துயங்கிவாழ்தலும், பெரியவர்கடமையோபேதைத்தன்மையே. (௭௨)

பொற்றையொடிளவலைப்பொன்றவீட்டினேன்,கொற்றமும்பூதர்தங்குழாத்தினேற்றலு, மொற்றுவனிலைமையுமுணரிற்சென்றியான், பற்றிமுன்னுய்க்குவன்பிணித்துப்பாசத்தால். (௭௩)

ஆயிரத்தெட்டெனுமண்டத்துக்கெலா, நாயகமுதல்வநீநம்பனல்கிய
சேயமர்குறித்தெழல்சீரிதன்றெனை,யேயினைவெற்றிகொண்டிருத்தியெம்பிரான்.()

ஆண்டெனைவிடுத்தியேலமரதாற்றிட, மூண்டிடுமவர்தொகைமுருக்கித்தேவரா
யீண்டுறுவோரையுமிமைப்பில்வென்றுபின், மீண்டிடுவேனெனவிளம்பினனரோ.

இரவியம்பகையவனினையசிற்சில, வுரைதருமிறுதியினுலைவுறுதகோர்
முரணுறுதானைதன்முகத்தைநோக்கியே,குரைகழலிரணியன்கூறன்மேயினுன்.()

வேறு.

வள்ளற்றன்மைசேர்வயப்பெருஞ்சூரனோர்மழலைப்
பிள்ளைப்போர்வலிக்கிரங்கினனெனுமொழிபிறக்கி
னுள்ளத்தேநினைநினைக்கினும்வெருவுமொன்னலரு
மெள்ளற்கேதுவாம்விடுத்தியான்மந்திரமினியே. (எஎ)

மைதிகழ்ந்திடுமிடற்றவன்மதலைமாநிலத்தி
னெய்தினனமர்க்கென்றனுமென்றனைவிளித்து
வெய்தெனப்பொரவிடுத்திலைவெறுத்தியோவிளையேன்
செய்திடுந்தவறுண்டுகொலுனக்கொருசிறிது. (எஅ)

பானல்போலொளிர்மிடற்றினன்பாலன்மேற்பசிநோய்க்
கூனைவேட்டுழல்பூதர்மேலொழிந்துளார்தம்மேன்
மானவெஞ்சமர்க்கெம்முனோன்சேறலும்வசையே
சேனையோடியானேகுவன்செருத்தொழில்புரிய. (எகூ)

வெற்றிப்பேரமராற்றியேமேவலர்தொகையைச்
செற்றுத்தேவர்கள்யாரையுந்தடிந்துசெல்குவனு
விற்றைக்கங்குலினென்றனையேவுதியெனலு
மற்றைத்தம்பியாமெரிமுகனிளையனவகுப்பான். (அ0)

இணையிலாவண்டமாயிரத்தெட்டினுக்கிறைநீ
துணையதாயொருவீரகேசரியுளன்சுதராய்க்
கணிதமில்லவர்யாருளங்கரிபரிகடுந்தே
ரணிகொடானவப்படையுளவலகிலாதனவே. (அக)

அழிவில்பாகுளதேருளசிலையுளவஃதான்
றொழிவிலாதமரம்புபெய்தூணியுமுளவா
லிழிவிறெய்வதப்படைகண்முற்றும்முளவிறைமைத்
தொழினடாத்துறுபரிதியுமொன்றுண்டுதொல்லோய். (அஉ)

அண்டமாயிரத்தெட்டையுங்கன்னலொன்றதனிற்
கண்டுமீடருமிந்திரஞாலமுங்கவனங்
கொண்டதோர்தனிமடங்கலுமுனக்குளகுறிக்கின்
விண்டுமாலுறுமாயைகள்பலவுளமேலோய். (அங)

இன்னபான்மைசேர்வெறுக்கைபெற்றீறிலாதுறையு
மன்னர்மன்னநிற்போன்றுளார்யாவரேமலையக்
கன்னிபாலகன்றூதுவன்சிறுதொழில்கருத்தி
னுன்னியுன்னியேயிரங்கவுந்தகுவதோவுனக்கே. (அச)

குழந்தைவெண்பிறைமிலைச்சினோன்மதலையைக்குறுத்தா
ளிழிந்தபூதரைப்பிறர்தமைவென்றிடவெமரில்
விழைந்தமானவரொருவரைவிடுப்பதேயன்றி
யழிந்திரங்கியேவினவுமோவிதுகொலுன்னறிவே. (அரு)

மூளும்வெஞ்சமர்புரிந்தவென்னிளவல்பன்முடியும்
வாளினலடுமொற்றனைமற்றுளார்தம்மைக்
கேளொடுந்தடிந்தல்லதுகேடில்சீர்நகர்க்கு
மீள்கலேனெனப்பகர்ந்தனன்வெய்யகுளுரையே. (அசு)

Digitized By Roja Muthiah Research Library

கரந்தைசூடுவான்குமரனைப்பொருதல்காதலியா
விருந்தவீரர்களளப்பிலராயினுமிப்போர்
விரைந்துநீயெனக்குதவுதியேகுவன்மேனாட்
பொருந்துபாதலத்தரக்கர்மேற்சென்றதேபோல. (௮௭)

வலியதோர்சிலையீறிலாக்கவசம்வான்படைத
னாலகுதந்தவனளித்திடமுன்புபெற்றுடையேன்
குலமடங்கவாளரக்கரைத்தடிந்திசைகொண்டேன்
மெலியனன்றியானறுமுகன்மேலெனைவிடுத்தி. (௮௮)

என்னுமாற்றங்களெரிமுகமுடையவனிசைப்ப
வன்னவன்றனைவிலக்கியேகரதலமமைத்துச்
சென்னியாயிரம்பெற்றுளசிங்கமாமுகத்தோன்
மன்னர்மன்னனைநோக்கியேவகுத்துரைசெய்வான். (௮௯)

மந்திரத்தருந்தானையந்தலைவருமகாருந்
தந்தமக்கியல்வன்மையேசாற்றியதல்லா
லிந்திரப்பெருந்திருவுறுமுன்றனக்கியன்ற
புந்திசொற்றிலரிம்மொழிகேளெனப்புகல்வான். (௯0)

வேறு.

பெற்றிடுதிருவினிற்பிறந்தவெஞ்சினங், கற்றவருணர்வையுங்கடக்குமன்னது
முற்றுறுகின்றதன்முன்னமன்பினோ, டுற்றனகூறியேயுணர்த்தல்வேண்டுமால். ()

மன்னவர்செவியழன்மடுத்ததாமென, நன்னெறிதருவதோர்நடுவுநீதியைச்,சொன்னவரமைச்சர்கடுணைவர்மேலையோ, ரொன்னலர்விழைந்தவா றுரைக்கின்றார்களே. (௯௨)

முற்றுறவருவதுமுதலு * மன்னதாற், பெற்றிடுபயன்களும்பிறவுந்தூக்கியே [தோ.
தெற்றெனவுணர்ந்துபின்பலவுஞ்செய்வரேற், குற்றமொன்றவர்வயிற் குறுகவல்ல

மால்வருதொடர்பினால்வனத்துச்செல்லுமீன், கோல்வருமுணவினைக்குறித்துவவ்வியே, பால்வருபுணர்ப்பினிற்படுதல்போலநீ, மேல்வருகின்றதைவினவல்செய்திலாய். (௯௪)

இந்திரனாதியாமிறைவர்தங்களை, யந்தரத்தமரரையலைத்ததீயவர்
முந்துறுதிருவொடுமுடிந்ததல்லதை, யுய்ந்துளரிவரெனவுரைக்கவல்லமோ. (௯௫)

தேவர்கள்யாரையுந்திரைகொள்வேலையின், மேவருமீன்றொகைவிரைவிற்றம்மென, வேவினையினிதுகொலினையசெய்கைதம், மாவியில்விருப்பிலாரன்றியார்செய்வார். (௯௬)

அறைகழல்வாசவற்கலக்கணுற்றியே, யிறையினையழித்தனையிருந்தமாநகர்
நிறைதருவளனெலாநீக்குவித்தனை, சிறையிடையுய்த்தனைதேவர்யாரையும். (௯௭)

அத்தகுதேவராலயங்களுக், கித்துணையலக்கண்வந்தெய்திற்றிங்கிது
மெய்த்திறமாமெனவிரைந்துட்கொள்ளலை,பித்தரின்மயங்கினைபேதையாயினாய்.()

பொன்னகரழிந்தநாட்புகுந்ததேவரை, யின்னமும்விட்டிலையிரக்கநீங்கினா
யன்னதற்கல்லவோவாறுமாமுக, னுன்னுடன்போர்செயவுற்றதன்மையே. (௯௯)

* முதலல் - தொடங்கல்,

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

பேறுதந்திடுபிஞ்ஞகன் பெருந்திருவுடனீர்
நூறுதன்னுடனெட்டுகமிருமெனநுவன்றான்
கூறுகின்றதோர்காலமுங்குறுகியததனைத்
தேறுகின்றிலைவிதிவலியாவரேதீர்ந்தார். (௧௦௦)

எத்திறத்தருநுங்களைவெல்கிலரெமது
சத்திவென்றிடுமென்றனன்கண்ணுதற்றலைவ
னத்திறத்தினாலல்லவோவறுமுகக்குமர
னுய்த்தசெய்யவேலுண்டதுதாரகனுயிரை. (௧௦௧)

பேதைவானவர்தங்களைச்சிறையிடைப்பிணித்தா
யாதலாலுனக்கானதென்றுன்பமேயல்லா
லேதுமோர்பயனில்லதோர்சிறுதொழிலியற்றி
வேதனைப்படுகின்றதுமேலவர்கடனோ. (௧௦௨)

குரவரைச்சிறுபாலரைமாதரைக்குறைதீர்
விரதநற்றொழில்பூண்டுளோர்தம்மைமேலவரை
யருமறைத்தொழிலாளரையொறுத்தனரன்றோ
நிரயமுற்றவுஞ்சென்றுசென்றலமருநெறியோர். (௧௦௩)

அமரர்தம்பெருஞ்சிறையினைநீக்குதியாயிற்
குமரநாயகனீண்டுபோராற்றிடக்குறியா
னமதுகுற்றமுஞ்சிந்தையிற்கொள்ளலனுனை
யிமையொடுங்குமுன்கயிலையின்மீண்டிடுமெந்தாய். (௧௦௪)

சிட்டராகியேயமர்தருயிமையவர்சிறையை
விட்டிடாதுநீயிருத்தியேன்மேவலர்புரங்கள்
சுட்டகண்ணுதல்குமரனங்குலமெலாந்தொலைய
வட்டுநின்னையுமுடித்திடுஞ்சரதமென்றறைந்தான். (௧௦௫)

தடுத்துமற்றிவையுரைத்தலும்வெய்யசூர்தடக்கை
புடைத்துவெய்துயிர்த்துரப்பியேநகைநிலாப்பொடிப்பக்
கடித்துமெல்லிதழதுக்கிமெய்பொறித்திடக்கனன்று
முடித்தனித்தலைதுளக்கியேயின்னனமொழிவான். (௧௦௬)

ஏவற்றொண்டுசெய்தின்னமுங்கரந்தவிந்திரற்குந்
தேவர்க்குஞ்சிறுபாலற்குஞ்சிவனுறைகயிலைக்
காவற்பூதர்க்குமஞ்சினைகருத்தழிந்தனையோ
மூவர்க்கும்வெலற்கரியதோர்மொய்ம்புகொண்டுடையோய். (௧௦௭)

எல்லைநாள்வரையிழைத்ததுமெம்பெருஞ்சத்தி
வெல்லுநுங்களையென்றதுங்கண்ணுதல்விமலன்
சொல்லயான்முன்புகேட்டிலன்வஞ்சமுஞ்சூழ்வும்
வல்லைவல்லைகொலெம்பிநீபுதிதொன்றுவகுத்தாய். (௧௦௮)

நூற்றின்மேலுமோரெட்டுகநுவலருந்திருவின்
வீற்றிருந்தரசியற்றுதிரென்னினுமேனை
யாற்றினைச்சடைவைத்தவன்கொடுத்திடுமழியாப்
பேற்றையாவரேவிலக்குவாரதுபிழைப்படுமோ. (௧௦௯)

ஆதிநாயகனெம்பெருஞ்சத்தியேயல்லா
லேதிலார்வெலாரென்னினுஞ்சத்தியுமிறையும்
பேதமோவரங்கொடுத்தவனடுமென்கைபிழையே
போதலாவதோர்வழக்கமேயுண்மையதன்றால். (௧௧௦)

பழுதுறுதுநம்போலவேவேள்வியைப்பயிலா
தழிவிலாவரம்பெற்றிலன்றாரகனதனு
னொழிவதாயினன்வச்சிரவாகுவுமுணர்வில்
குழவியாதலின்மாய்ந்தனனீதுகொல்குறையே. (௧௧௧)

அண்டமாயிரத்தெட்டையுந்தனியரசாட்சி
கொண்டுவைகினன்குலத்தொடுமமரர்தங்குழுவைத்
தொண்டுகொண்டனன்யாவர்வந்தெதிர்க்கினுந்தொலையே
னுண்டுகொல்லிவனெனக்குநேராகவேயொருவர். (௧௧௨)

தவமுயன்றுழலமரரினரக்கர்கடம்மி
னவுணர்தங்களினுயிரத்தெட்டெனுமண்டம்
புவனமுற்றவுமொருதனியாழியாற்புரந்தே
யெவரெனக்குநேராகவேயழிவிலாதிருந்தார். (௧௧௩)

மாலயன்முதலாகியமுதுவர்கள்வரம்பில்
காலமாகயானமரரைச்சிறைசெயக்கண்டுஞ்
சாலவென்றனக்கஞ்சியேயிருந்தனர்தனியோர்
பாலனேகொலாமழிவிலாவென்னுயிர்படுப்பான். (௧௧௪)

வேறுபாடுறுவச்சிரப்படிவமுமிடலு
மீறிலாததோராயுளும்பெற்றிடுமென்னை
யூறுதான்செயக்கூடுறுதொருவர்க்குமென்றான்
மாறுபோர்செய்துபாலனோவெனையடவல்லான். (௧௧௫)

எண்ணிலாததோர்பாலகனெனைவெல்வனென்கை
விண்ணிலாதவன்றன்னையோர்கனியெனவெஃகிக்
கண்ணிலாதவன்காட்டிடக்கையிலாதவன்போ
யுண்ணிலாதபேராசையாற்பற்றுமாறொக்கும். (௧௧௬)

என்றுமற்றிவைசூரபன்மாவிசைத்திடலுந்
துன்றுபஃறலைச்சீயமாமுகமுடைத்துணைவ
னன்றுநன்றெனவினவியேயின்னமுநானிங்
கொன்றுகூறுவன்முனியலைகேட்டியென்றுரைப்பான். (௧௧௭)

வாலிதாமதிச்சடிலமும்பவளமால்வரையே
போலுமேனியுமுக்கணுநாற்பெரும்புயமு
நீலமாமணிக்கண்டமுங்கொண்டுநின்றனனான்
மூலகாரணமில்லதோர்பராபரமுதல்வன். (௧௧௮)

தன்னைநேரிலாப்பரம்பொருடனியுருக்கொண்ட
தென்னகாரணமென்றியேலைந்தொழிலியற்றி
முன்னையாருயிர்ப்பாசங்கண்முழுவதுமகற்றிப்
பின்னைவீடுபேறருளுவானினைந்தபேரருளே. (௧௧௯)

Digitized By Roja Muthiah Research Library

அப்பரன்றனையுன்னியேயளவைதீர்கால
மெய்ப்பெருந்தவமியற்றினையதுகண்டுவெளிப்பட்
டொப்பிலாவரமுதவியேயாங்கதற்கொழிவுஞ்
செப்பிவைத்தனன்றேர்ந்திலைபோலுமத்திறனே. (௪௨௦)

பெறலருந்திருவுடையநீயறத்தினைப்பேணி
முறைபுரிந்திடாதாற்றலாலமரரைமுனிந்து
சிறையில்வைத்தனையதுகண்டுநின்வலிசிந்தி
யிறுதிசெய்திடவுன்னினன்யாவர்க்குமீசன். (௪௨௧)

வரமளித்தயாமழிப்பதுமுறையன்றுவரத்தாற்
பெருமைபெற்றுளசூரனையடுவதுபிறர்க்கு
மரிதெனப்பரனுன்னியேதன்னுருவாகு
மொருமகற்கொடுமுடித்துமென்றுன்னினனுளத்தில். (௪௨௨)

செந்நிறத்திருமேனியுந்திருமுகமாறு
மன்னதற்கிருதொகையுடைத்தோள்களுமாக
முன்னவர்க்குமுன்னாகியபராபரமுதல்வன்
றன்னுதற்கணாலொருதனிக்குமரனைத்தந்தான். (௪௨௩)

மானுடத்தரின்விலங்கினிற்புட்களின்மற்று
மூனமுற்றுழல்யாக்கையிற்பிறந்துளாரொப்ப
நீநினைக்கலைபரஞ்சுடர்நெற்றியந்தலத்தே
தானுதித்தனன்மறைகளுங்கடந்ததோர்தலைவன். (௪௨௪)

சீலமில்லவர்க்குணரவொண்ணாதசிற்பரனைப்
பாலனென்றனையவனிடத்திற்பலபொருளு
மேலைநாள்வந்துதோன்றியசிறியதோர்வித்தி
னாலம்யாவையுமொடுங்கியேயவதரித்ததுபோல். (௪௨௫)

அருவுமாகுவனுருவுமாகுவனருவு
முருவுமில்லதோர்தன்மையுமாகுவனூழின்
கரும * மாகுவனிமித்தமுமாகுவன்கண்டாய்
பரமனாடலையாவரேபகர்ந்திடற்பாலார். (௪௨௬)

வேதக்காட்சிக்குமுபநிடத்துச்சியில்விரித்த
போதக்காட்சிக்குங்காணலன்புதியரிற்புதியன்
மூதக்கார்க்குமூதக்கவன்முடிவிற்குமுடிவா
யாதிக்காதியா o யுயிர்க்குயிராய்நின்றவமலன். (௪௨௭)

---

* கருமம் - செயப்படுபொருள்.

o புதியரிற்புதியன் மூதக்கார்க்குமூதக்கவன் முடிவிற்குமுடிவாய் ஆதிக்காதியாய் என்பதற்கு - தனக்குப்பின்றோன்றிய யாக்கையையுடையார் எல்லாரும் மூப்பவுந் தான் நிலைபெற்ற விளமையையுடையனாதலின் எல்லார்க்கும் புதியன் - எல்லார்யாக்கைக்கும் முன்னே தனதிச்சையாற் கொள்ளப்பட்ட திருமேனியையுடையனாதலின் எல்லார்க்குந் தான் பழையன்-உலகத்திற்குப் பின்னாய்-அதற்கு முன்னுமாய் எனப் பொருள்கொள்க.

Digitized By Roja Muthiah Research Library

ஞானந்தானுருவாகியநாயகனியல்பை
யானுநீயுமாயிசைத்துமென்றாலஃதெளிதோ
மோனந்தீர்கலாமுனிவருந்தேற்றிலர்முழுதுந்
தானுங்காண்கிலனின்னமுந்தன்பெருந்தலைமை. (௧௨௮)

தத்தமாற்றங்கணிறுவியசமயிகள்பலருங்
கத்துபுன்சொலைவினவினரவன்செயல்காணார்
சுத்தவாதுளமுதலியதந்திரத்தொகுதி
யுய்த்துணர்ந்திடுநீரரேயொருசிறிதுணர்வார். (௧௨௯)

கருவிமெய்ப்புலன்காட்டுவான்காண்பவன்காட்சிப்
பொருளெனப்படுகான்மையுமைவகைப்பொறியு
மிருதிறத்தியல்வினைகளுங்காலமுமிடனு
மரபின்முற்றுறுபயனுமாய்நின்றனன்வள்ளல். (௧௩0)

ஞாலமுள்ளதோர்பரம்பொருளுமெனப்புகலு
மாலும்வேதனுமாயையாம்வரம்பினுட்பட்டார்
மூலமாகியதத்துவமுழுவதுங்கடந்து
மேலுயர்ந்திடுதனிமுதலவனன்றிவேறார். (௧௩௧)

தூயபார்முதலாகவேகுடிலை * யின்றுணையு
மேயவண்டமுமுயிர்களும்வியன்பொருள்பலவு
மாயுநின்றனனல்லனுமாயினனவன்றன்
மாயையாவரேகடந்தனர்மறைகளுமயங்கும். (௧௩௨)

இன்னதன்மைசேர்முதல்வனைச்சிறுவனென்றிகழ்ந்து
பன்னுகின்றனையவுணர்தங்கிளையெலாம்படுத்து
நின்னையுந்தடிந்திடுவனோரிமைப்பினிநிரப்புந்
தன்னருட்டிறங்காட்டுவான்வந்தனன்சமர்மேல். (௧௩௩)

அற்றமில்வகையாயிரத்தெட்டெனுமண்டம்
பெற்றனம்மெனவியந்தனைதத்துவபேத
முற்றுணர்ந்திலைதரணியோவளப்பிலவுளகாண்
மற்றையண்டங்கள்கேட்டியேன்மருளுதிமன்னே. (௧௩௪)

குடிலையீறதாவாரியேமுதலதாக்குழுமி
யுடையவண்டங்களலகிலவென்பரோன்றொன்றி
னடைதலுற்றிடுபுவனத்தின்பெருமையாரறிந்தார்
முடிவுறாததோர்பொருளினைமுடிவுகூறவற்றோ. (௧௩௫)

அன்னவாகியவண்டங்களனந்தகோடியையுந்
தன்னதாணையாலோரிமைப்பொழுதினிற்றரவும்
பின்னர்மாற்றவும்வல்லதோராதியம்பிரான்கா
ணுன்னொடேபொருமாடலாற்செந்திவந்துற்றான். (௧௩௬)

வச்சிரத்தனியாக்கைபெற்றனமெனமதித்தா
யிச்சிரத்தையைவிடுமதியிருவினைக்கீடா
வச்செடுத்திடுமுயிர்கண்மாய்ந்திடுமெனவறிஞர்
நிச்சயித்தனர்முடிவுறுதிருத்திகொளீயே. (௧௩௭)

* குடிலை - சுத்தமாயை,

Digitized By Roja Muthiah Research Library

பெருமைபெற்றிடுவானத்தினிலத்திடைப்பிறந்தோ
ரிருமைபெற்றிடுகாயமுமிறந்திடுந்திண்ணம்
பருமிதத்துநின்வச்சிரயாக்கையும்பாரி
னுரிமைபெற்றுளதாதலாலழிவின்றியுறுமோ. (௧௩௮)

அழிவின்மெய்வரம்பெற்றனமென்றனையதற்கு
மொழிதரும்பொருள்கேண்மதிமுச்சகந்தன்னுட்
கெழியமன்னுயிர்போற்சிலவைகலிற்கெடாது
கழிபெரும்பகலிருந்திடும்பான்மையேகண்டாய். (௧௩௯)

அச்சுதன்னயனமரராகியபெயரவர்க்கு
நிச்சயம்படுமுகமனேயானபோனினது
வச்சிரத்தனியாக்கையுமழிவிலாவரமு
முச்சகந்தொழப்பல்லுகமிருத்தலாய்முடியும். (௧௪0)

வான்செய்தேவரைநீயலைக்கின்றதைமதியா
லூன்செய்கின்றபல்லுயிருக்குமுயிரதாமொருவன்
றான்செய்கின்றதொல்வரத்தினைத்தான்றவிர்த்திடுமே
லேன்செய்தாயெனவினவியேநிறுவுவாரெவரே. (௧௪௧)

கெடுதலில்லதோர்வளனொடுநீயுநின்கிளையும்
படுதலின்றியேவாழ்தியென்றின்னனபகர்ந்தே
னிடுதல்கொண்டிடுசிறையிடைத்தேவரையின்னே
விடுதல்செய்குதியென்றனனறிஞரின்மிக்கான். (௧௪௨)

இன்னபான்மையான்மடங்கலம்பெருமுகத்திளவல்
சொன்னவாசகம்வினவியேமணிமுடிதுளக்கிக்
கன்னமூடுசெங்கனல்செறித்தாலெனக்கனன்று
முன்னையாகியோன்பின்னருஞ்சிற்சிலமொழிவான். (௧௪௩)

காற்றிற்றன்னுண்டுநெருப்பினிற்சூடுண்டுகங்கை
யாற்றிற்றுக்குண்டுசரவணம்புக்கலையுண்டு
வேற்றுப்பேர்முலையுண்டழுதேவிளையாடு
சேற்றைப்பாலனையோபரம்பொருளெனநினைந்தாய். (௧௪௪)

பிரமமாகியவொருபொருளுயிரெனப்பேர்பெற்
றுருவமெண்ணிலகொண்டுதன்மாயையாலுலப்பில்
கருமபேதங்களாற்றிடும்பல்புனற்கடத்து
ளிரவிதன்னுருத்தனித்தனிகாட்டியவியல்பின். (௧௪௫)

கடந்தகர்ந்துழியவற்றிடைவெளிககனத்தோ
டடைந்தவாறுபோல்யாக்கையின்பேதகமனைத்து
முடிந்தகாலையிற்றுன்மைபோலபேதமாமொழிக்குந்
தொடர்ந்தசிந்தைக்குநாடொணாதமர்பெருஞ்சோதி. (௧௪௬)

பிரமமேயிவரல்லவரிவரெனப்பேதித்
திருமையாகவேகொள்ளலையாக்கையேவேறு
பரமமாகியவுயிரெலாமொன்றுபல்பணியும்
பொருளதாகியேயொருமையாய்முடிந்தவாபோல. (௧௪௭)

Digitized By Roja Muthiah Research Library

விறலும்வன்மையுமில்லவர்தாழ்வர்மேதக்க
நெறியரோங்குவரீதுலகத்திடைநிகழ்ச்சி
யிறுதியில்லதோர்பெரியன்யானறுமுகனென்போன்
சிறியனாதலினவனையான்வெல்குவன்றிண்ணம். (௧௪௮)

தொகைமைசான்றநங்குரவர்பல்லோருயிர்தொலைத்த
பகைஞராதலினமரரைச்சிறையிடைப்படுத்தேன்
மிகைசெய்தார்களைநாடியேவேந்தொறுத்திடுத
றகைமையேயெனமனுமுறைநூல்களுஞ்சாற்றும். (௧௪௯)

மாகராயுளோர்காப்பினைவிடுகிலன்மற்றைப்
பாகசாதனன்றன்னையுமருஞ்சிறைப்படுப்ப
னேகநாயகனெய்தினுமெதிர்ந்துபோர்புரிவ
னாகையாலினியிச்சிறுமொழிகளையயர்த்தி. (௧௫௦)

உரைப்பதென்னினியொருவயிற்றென்னுடனுதித்துப்
பெருக்கமுற்றனைநங்குலப்பகைஞரைப்பெரிது
நெருக்கலின்றியேயவர்கள்பாற்பட்டனைநீயே
யிருக்கமற்றொருதெவ்வரும்வேண்டுமோவெனக்கே. (௧௫௧)

பத்துக்கொண்டநூறுடையதோர்சென்னியும்பலவாங்
கொத்துக்கொண்டமர்தோள்களுங்கரங்களின்குழுவு
மெத்துக்காற்றினைவன்மையும்வீரமுமிழந்தாய்
பித்துக்கொண்டவர்தம்மினும்பேதைமைபிடித்தாய். (௧௫௨)

வேறு.

தானவர்வழிமுறைதன்னைவிட்டனை, வானவர்போன்றனைவன்மைசிந்தினை
மேனிகழ்திட்பமும்விறலுமாண்டனை, மோனமொடருந்தவமுயலப்போதிநீ. ௧௫௩

மறந்தனையிழந்தனைமானநீங்கினை, சிறந்திடுமவுணர்தஞ்சீர்த்திமாற்றிடப்
பிறந்தனையீண்டொருபயனும்பெற்றிலை, யிறந்தனைபோலுநீயிருந்துளாய்கொலோ.

மந்திரியாதியாள்மற்றிதற்குநீ, சிந்தையில்வெருக்கொளிற்றிசைமுகத்தர்போ
லந்தியலங்கமொன்றங்கைபற்றுதி, வெந்திறலேயெனப்படையும்வீசியே. (௧௫௫)

இளைத்திடுகள்ளியின்கிளைகளாமென, வளர்த்தனைபலதலைவரம்பில்கைத்தல
நெளித்தனைசுமந்தனைநெடிதுகாலமா, விளைத்தனைவலியிலாயாதுசெய்திநீ. (௧௫௬)

பண்டுணர்வில்லதோர்பருவமாதலிற், சண்டனைவருணனைத்தளையினிட்டனை
யண்டரையலைத்தனையறிவுகூடலிற், பெண்டிரினடுங்கினைபேடிபோலுநீ. (௧௫௭)

பன்னெடுந்தலையுடைப்பாலனாகுமுன், வன்மையுமாடலும்வந்துபார்த்திட
வின்னமும்வந்திலள்வருந்தியீன்றதா, யன்னைதன்குறைகொலோவருவமானதே.()

பகையெனவொன்றுறிற்பதைபதைத்தெழீஇச், சிகையுடைவாலுளைச்சீயஞ்சீ
றியே, தகுவிறல்கொள்ளுமாலவற்றின்றன்மையாய், மிகுதலைபெற்றதும்வீண்கொ
லெம்பிநீ. (௧௫௯)

பூதரைத்தலைவரைப்புராரிமைந்தனை, யேதிலர்யாரையும்யான்வென்றேகுவ
னீதளர்வெய்திடனினதுமாநகர், போதிநீயென்றனன்புலனில்புந்தியான். (௧௬௦)

என்றிலையவுணர்கோனிசைத்தகாலையி, னன்றிவனுணர்வெனாகைத்துக்கண்டொறுந், துன்றியபேரழல்சொரியவெஞ்சினத், தொன்றியதன்னுளத்திலையவுன்னுவான். (கசுக)

உறுதியையுரைத்தனனுணர்விலாதவன்,வழிதெனையிகழ்ந்தனன்வருவதோர்கிலர்.
ணிறும்வகைகாடினன்யாதொர்புந்தியை, யறிவிலர்க்குரைப்பவரவரிற்பேதையோ

உய்த்தனர்தேன்மழையுதவிப்போற்றினுங், கைத்திடறவிருமோகாஞ்சிரங்கனி
யத்தகவல்லவோவறிவிலாதவன், சித்தமதுணர்வகைதெருட்டுகின்றதே. (கசுங)

தொலைக்கருந்திருவுடைச்சூரன்புந்தியைக், கலக்கினுமுய்வகைகருதுகின்றில,னலக்கணுற்றிருந்துநாமிரங்கியாவதென், விலக்கரும்விதியையாம்வெல்லவல்லமோ.

ஆவதுவிதியெனினனைத்துமாயிடும், போவதுவிதியெனினெவையும்போகுமாற்
றேவருக்காயினுந்தீர்க்கத்தக்கதோ, வேவருமறியொணாவீசற்கல்லதே. (கசுரு)

நீண்டசெஞ்சடைமுடிநிமலனீந்தநாண், மாண்டதுமாய்ந்திடுமெல்லைவந்ததா, லீண்டுளார்யாவருமிறையுந்துஞ்சுமாற், பூண்டிடுமமரர்கோன்றவமும்பொய்க்குமோ.

இறப்பதுசரதமேலிறைவனென்னுரை, வெறுத்தனனிகழுமேல்வேண்டியின்னும்யான், மறுத்தெதிர்மொழியலன்மன்னவென்பிழை, பொறுத்தியென்றின்னுரைபுகல்வதல்லதே. (கசுஎ)

மன்னவர்மன்னவன்வள்ளல்வேலினு, லின்னினியிறந்திடுமிதுவுநோக்கியே
பின்னுமிங்கிருந்திடல்பிழையதாகுமான், முன்னுறமுடிவதேமுறையதாமெனு. ()

சிந்தனைசெய்திடுசிங்கமாமுகன், றந்தையைநிகர்வருதம்முன்முடொழா
வந்தனைசெய்தனன்மன்னசீறிடேல், புந்தியிலேன்பிழைபொறுத்தல்வேணமோல்.

சிறியவரொருபிழைசெய்யின்மேலவர், பொறையொடுபின்னரும்போற்றலல்லதை
யிறையதும்வெகுள்வரோயானுஞ்செய்பிழை, யறிவனீயன்றியேயாரதாற்றுவார்.

பொறுத்தனைகோடியென்புன்மையுள்ளமேற், செறுத்தெனையிகழ்ந்திடல்செருவிற்சென்றியான், மறுத்தெதிர்மலைந்திடுமாற்றலார்தமை, யொறுத்திடுகின்றனனனையோர்திநீ. (கஎக)

செருவினுக்கேகுவன்செறுநர்தம்மிசைத், தருதியால்விடையெனத்தம்பிகேட்டலும், பெரிதுளமகிழ்ந்தனன்பிறங்குகாதலால், வருதியென்றனையனைமார்பிற்புல்லினன். (கஎஉ)

பையரவளித்திடும்பாதலத்தினில், வையகவரைப்பினிற்றிசையின்வான்களிற்
செய்யவண்டங்களிற்செய்யும்வென்றியு, லையநிற்கேதுகொலரியதானதே. (கஎங)

நீக்கமில்கேள்வியாய்நீமுன்சொற்றன, றாக்குறினென்மனத்துணிவுந்திட்பமு
மூக்கமுமுணரவேயொன்னலாரெனு, மாக்கலையடுவதோர்மடங்கலல்லையோ. ()

சென்றனர்மாற்றலரென்கைதேர்தியேற், கொன்றபின்னல்லதும்பிட்டோடிட
வென்றபினல்லதுவெகுளிதீர்தியோ, வுன்றனதாற்றலையுணர்கிலேன்கொலோ. ()

இற்றைநாணின்னகரேகியாயிடை, யுற்றிடுபடையெலாமொருங்குகொண்டுநீ
கொற்றமொடிருக்குதிகுமரனீண்டுறின், மற்றவைவிளிக்குவன்வருதியாலென்றான்.

Digitized By Roja Muthiah Research Library

ஒல்லெனமுருகவேளுனதுமாநகர், செல்லினுமேகலைசெருவுக்கன்னது [ன்முன்.
சொல்லினைவிடுத்தியோர்தூதன்றன்னையான், வல்லையினமர்செயவருகின்றேனெ

என்றதுமவுணருக்கிறைவனீங்கிது, நன்றெனவிடையதுநல்கத்தாழ்ந்துபோய்த்
தன்றிருமாநகர்சார்ந்துவைகினான், வன்றிறலுடையதோர்மடங்கற்பேரினான். ()

ஆனதோர்பொழுதினிலரசனாண்டுறை, தானையந்தலைவரைத்தனையர்தங்களை
யேனையர்யாரையுமேகச்செய்துதன், மாநகரிந்திரவளத்தின்வைகினான். (கஎசு)

அந்தமில்வளனுடையவுணர்காவலன், மந்திரமிருந்ததுவகுத்துக்கூறினா
னிந்திரன்முதலினோர்யாருமேத்திடச், செந்தியினமர்ந்தவன்செய்கைசெப்புவாம்.

சூரனமைச்சியற்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் க,கஎஅ.

---

மகேந்திரகாண்டமுற்றுப்பெற்றது.

ஆக காண்டம் மூன்றுக்குத் திருவிருத்தம் ச,அகூ0.

கச்சியப்பசிவாசாரியர் திருவடிவாழ்க.

Digitized By Roja Muthiah Research Library

உ

திருச்சிற்றம்பலம்.

நான்காவது

# யுத்தகாண்டம்.

## ஏமகூடப்படலம்.

நாரணனென்னுந்தேவுநான்முகத்தலனுமுக்கட்
பூரணன்றானுமாகிப்புவிபடைத்தளித்துமாற்றி
யாரணமுடிவுந்தேறுவநாதியாயுயிர்கட்கெல்லாங்
காரணனுயமேலோன்கழலிணைகருத்துள்வைப்பாம். (க)

திண்ணியவவுணர்தம்மைச்செற்றிடவின்னேசெவ்வேற்
பண்ணவனேகுமெல்லாவமரரும்பாங்கிற்செல்வர்
துண்ணெனயானுமேகாதொழிவதுசூழ்வன்றென்று
வெண்ணிவந்திடுவான்போலவிரவிவந்துதயஞ்செய்தான். (உ)

இரவிவந்துதயவெற்பினெய்தியகாலைதன்னி
னரியணைமிசையேவைகுமறுமுகங்கொண்டவண்ணல்
பிரமன்மான்மகவான்றேவர்முனிவரர்பிறருங்கேட்ப
வரமிகுசிறப்பின்வீரவாகுவைநோக்கிச்சொல்வான். (ந)

பாவமேபயிலுஞ்சூரபன்மனுமவுணராறு
ரேவருமுடிவாராகவிமையவரிடும்பைநீங்க
மாவியல்கின்றவீரமகேந்திரபுரத்துக்கின்னே
போவதுபுரிதுநந்தேர்பொள்ளெனக்கொணர்தியென்றான். (ச)

வள்ளன்மற்றிதனைச்செப்பமாலயன்மகவானாதி
யுள்ளபண்ணவர்கள்கேளாவுவகையங்கடலின்மூழ்கித்
தெள்ளிதினெமதுதுன்பந்தீர்ந்ததுதீர்ந்ததென்னாத்
துள்ளினராடிப்பாடியவனடிசூடலுற்றார். (ரு)

ஆயதுகாலைதன்னினரும்பெருங்கயிலைபோற்று
நாயகந்தியண்ணனற்கணத்தலைமைபூண்டோன்
சேயதோர்மனவேகப்பொற்றேரொடுவலவன்றன்னைக்
கூயினன்கொண்டுவல்லேகுமரவேண்முன்னருய்த்தான். (சு)



Digitized By Roja Muthiah Research Library

முன்னுறமருத்தன்றாண்டுமுரண்டகுதடந்தேர்நண்ண
வன்னதையருளினோக்கியறுமுகம்படைத்தவண்ணல்
பன்னெடுஞ்சீயந்தாங்கும்பைம்பொனின்றவிசுதன்னின்
மன்னினனிருத்தனீங்கியெழுந்தனன்மறைகள்போற்ற. (௭)

மாறில்பொன்சுடருமேருவரைமிசையிருமூவெய்யோர்
வேறிலாதொருபாற்பட்டுவிளங்கிவந்திவருமாபோ
லாறுமாமுகத்தெம்மையனனையதொல்லிரதமீக்க
ணேறினானேறிச்சூழ்வோர்க்கினையதொன்றியம்புகின்றான். (௮)

வார்திரையளக்கர்நாப்பண்வரம்பிலாவளவைத்தாகிச்
சீர்திகழ்மகேந்திரப்பேர்த்திருநகர்முன்னரேகிச்
சூர்தனையடுவான்போதுந்துண்ணெனநீவிர்நுந்த
மூர்திகடம்மின்மேவியூர்ந்திவண்வருதிரென்றான். (௯)

இப்படிமுகமாறுள்ளவெம்பிரானிசைத்தலோடு
மப்பணியிசையாவேதனன்னத்துமாழிமேலோ
னொப்பருமுவணமீதுமும்பர்கோன்மானமீதுஞ்
செப்புறுமேனைவிண்ணோர்தத்தமூர்தியினுஞ்சேர்ந்தார். (௧0)

அந்தமிலிலக்கத்தோருமவரலாவெண்மர்தாமு
மந்தரமுறழும்வீரவாகுவாம்வன்மையோனு
மெந்திரவயமான்றேரின்வீற்றுவீற்றேறியார்க்குஞ்
சிந்தையினானுமெட்டாத்தேவர்கடேவற்சூழ்ந்தார். (௧௧)

சுப்பிரன்மேகமாலிசுவேதசீரிடன்கபாலி
யப்பிரசித்துச்சித்திராங்கனேசுவாலதானு
வொப்பில்வச்சிரனேவீமனுக்கிரனுக்கிரேசன்
பிப்பலனந்திசேனன்பிரமசன்பிரமசேனன். (௧௨)

பதுமனேகராளன்றண்டன்பத்திரன்பரிகநேமி
யுதவகன்புட்பதந்தனுருத்திராகாரன்வீரன்
மதிசயன்கேதுமாலிவக்கிரன்பிரமகேச
னதிபதிகலிங்கன்கோரனச்சுதனசலன்சாந்தன். (௧௩)

சித்திரசேனன்பூரிசுசீலன்மாசயனேசிங்க
னுத்தரமடங்கற்பேரோனுபதிட்டன்சயனேயீசன்
மத்தகன்மதங்கன்சண்டிமகாபலன்சுவேதனீல
பத்திரன்சுவாகுவண்டாபரணனேகாகபாதன். (௧௪)

பிங்கலன்சமானன்மாயன்பிறங்கியநிகும்பன்கும்பன்
சங்கபாலன்விசாகன்சதநாவனயக்கிரீவ
னங்கையாயிரத்தன்செங்கணயுதத்தனனந்தன்வாமன்
மங்கலகேசன்சோமன்வச்சிரமாலிசண்டன். (௧௫)

அசமுகன்சரபன்குந்தனுடகன்கவந்தன்மேகன்
விசயன்வித்துருமன்றண்டிவியாக்கிரன்காலபாசன்
றசமுகன்குமுதன்பானுதனஞ்சயனிடபரூபன்
சுசிமுகனனலகேசன்சுபத்திரன்கேதுமோகன். (௧௬)

Digitized By Roja Muthiah Research Library

மத்தனுன்மத்தனந்திமஞேபவன்வாயுவேகன்
பத்துநூறடிகள்பெற்ருேன்பானுகம்பன்புதங்கன்
சுத்தனேயனிகன்சீதன்சுஞதனேசுமாலிமாலி
யத்திரியவுணர்கூற்றனரிகேசன்சுவாலகேசன். (௧௭)

இங்கிவர்பூதவெள்ளத்திறையவரொருநூற்றெண்மர்
பொங்குவெஞ்சினத்தரெல்லாப்புவனமுமடவென்ருலு
மங்கொருநொடிப்பின்முன்னரடுபவராடன்மிக்கோர்
சங்கையில்வலியோர்யாருஞ்சண்முகத்தவனைச்சூழ்ந்தார். (௧௮)

வயெனப்பகருமுன்னமிவ்வகையெவருஞ்செவ்வேற்
சேயினைச்சூழ்தலோடுஞ்செய்கைமற்றதனைக்காணுஉ
மாயிருட்பரவைஞாலம்வரைக்குலம்பனிப்பவார்த்திட்
டாயிரத்திரட்டிவெள்ளத்தனிகமுமெழுந்தவன்றே. (௧௯)

எழுந்தனவனிகவெள்ளமீண்டியவெங்கும்விண்ணோர்
பொழிந்தனர்பூவின்மாரிபூதர்தந்தெழிப்புவிண்ணு
மொழிந்திடுதிசையும்பாருமுற்றனவுலைந்ததாழி
யழிந்தனகருவிவானமண்டநெக்குடைந்தமாதோ. (௨0)

கல்லெனவிரங்குபேரிகரடிகைதுடியேகாளஞ்
சல்லரிதிமிலைதக்கைதண்ணுமைபடகங்கோடு
வல்லியலுடுக்கைசங்கம்வான்குடமுழவமாதிப்
பல்லியமனந்தகோடிபாரிடமியம்பிச்சென்ற. (௨௧)

கள்ளலம்புற்றதண்டார்கவினியமொய்ம்பிற்பூத
வெள்ளமங்கேகலோடும்விரிந்தெழுபூழிமாலை
தள்ளருஞ்சுடர்கண்மாற்றியகிலமுந்தானேயாகி
யள்ளலங்கடலின்பேழ்வாயடைத்ததுதிடரேயாக. (௨௨)

கலகலமிழற்றுநோன்ருட்கழல்புனைபூதவெள்ளம்
வலவயினெஃகமேந்தும்வள்ளருள்வழுத்திச்சூழ்ந்து
செலவுறுகிரிகண்மானச்சென்றுதந்தலைவரோடு
மலைபொருமளக்கர்வேலையகன்கரையிறுத்தவம்மர். (௨௩)

மடங்கலைபுறமூமொய்ம்பின்மாபெரும்பூதவெள்ளந்
தடங்கழல்கலிப்பத்தாளிற்சலசலவொலிப்பமாரு
நெடுந்திரையலமந்துள்ளநேமியங்கடலேயாரு
நடந்தனபொறையாற்ருதுசேடனுநடுக்கமுற்ருன். (௨௪)

படிதவிர்பூதவெள்ளம்படர்தலும்பரட்டின்காருக்
கடலளவமைந்ததன்றேகனல்விழிச்சுறவுசின்னை
கெடலருந்திமிங்கிலாதிகீடம்போலுலவாநின்ற
வடியுறைபரலேபோன்றவதற்படுகிரிகண்முற்றும். (௨௫)

தந்திரப்பூதவெள்ளந்தடங்கடலாற்றிற்சார
வெந்திறற்றுணைவர்யாரும்விரிஞ்சனுமாலுமற்றை
யிந்திரத்தலைவன்ருனுமிமையவர்பலருஞ்சூழ
வந்தரத்தாற்றிற்சென்ருனறுமுகனணித்திண்டேர்மேல். (௨௬)

Digitized By Roja Muthiah Research Library

மாறுபட்டவர்மேற்செல்லும்வயப்பெரும்பூதரேக
வாறுபட்டமருமுந்நீரலமந்துதெளிவின்றாகிச்
சேறுபட்டிறையதொன்றுதேய்ந்திடுமுன்னமஃதே
நீறுபட்டெழுந்துசென்றெவ்வுலகமுநிமிர்ந்துசூழ்ந்த. (௨௭)

இவ்வகையயில்வேலண்ணலிராயிரம்பூதவெள்ளங்
கவ்வையினமைந்துசெல்லக்கனைகடல்வரைப்பினேகி
யெவ்வமதடைந்ததொல்லையிலங்கையங்குவடுநீங்கி
மைவரைபுரைசூர்மேவுமகேந்திரபுரமுன்போந்தான். (௨௮)

வேறு.

போந்தகாலையயலின்வந்துபோற்றியங்கைகூப்பியே
நாந்தகஞ்சிலைகதைநலங்கொள்சங்குசக்கர
மேந்தினோனுநான்முகனுமிந்திரத்தலைவனு
மாய்ந்துநேடியின்னதன்மையார்வமோடியம்பினார். (௨௯)

காண்டியீதுசூரனூர்கடுங்கணீசர்செறிதலா
லாண்டுசேறன்முறையதன்றதற்கடுத்தவெல்லையா
மீண்டுபாசறைத்தலமியற்றுவித்திருந்தபின்
வேண்டுமாறுபுரிதியையவினையநாடியென்னவே. (௩0)

குன்றெறிந்தமுருகனன்னகூற்றுணர்ந்திசைந்திடா
னன்றிதென்றருட்கண்வைத்துநாகர்கம்மியன்றனை
மன்றவன்பொடேவிளித்துவல்லையீண்டுபாசறை
யொன்றுசெய்திடென்னலுமுளஞ்சிறந்துபுகலுவான். (௩௧)

தாரகற்கடந்தவேற்றடக்கைவீரவீண்டியா
னோரிறைக்குமுன்னமாகவோங்குபாசறைத்தலஞ்
சீரிதிற்படைக்குவன்றெரிந்துகாண்டியுனதுபே
ராரருட்டிறத்தினெனவறடித்தலம்பணிந்துபின். (௩௨)

மாடகூடமண்டபம்வளங்கொள்சோலைவாவிகள்
பீடுலாயகோபுரம்பிறங்குவீதியோர்திசை
கோடிகோடியாக்கிமற்றோர்கோநகரியற்றியே
நாடுமேமகூடமென்றுநாமமொன்றுநாட்டினான். (௩௩)

கருத்திலன்னவன்செயுங்கவின்கொள்பாடிவீடுகண்
டருத்தியாய்மகிழ்ச்சியெய்தியருள்புரிந்துகந்தவே
டிருத்தகுஞ்சனங்கள்போற்றிசெய்யவாண்டுசென்றபின்
மருத்தனுந்துதேரிழிந்துமந்திரத்தைநண்ணினான். (௩௪)

அந்தமற்றபூதர்தம்மையாவணங்கணிறுவியே
முந்துகொற்றவயவர்நான்முகத்தனாதியவரொடு
மந்திரத்துளேகியேமகிழ்ந்துவீற்றிருந்தன
னிந்திரப்பெருமடங்கலேறுதாங்குதவிசின்மேல். (௩௫)

ஒன்பதோடிலக்கவீரரோங்கலாளரறுவர்க
ளன்புசெய்துபோற்றிசெய்யவறுமுகேசனமரர்கண்
முன்புசெய்பணித்திறமுறைப்படப்புரிந்திட
வின்பினோடேமகூடவெழிலிருக்கைவைகினான். (௩௬)

ஏமகூடப்படலமுற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

# வரவுகேள்விப்படலம்.

ஏகநாயகனுமையனிவ்விடையிருந்தவெல்லை
நாகர்மேலளிவைத்துள்ளநாரதனவற்றைநாடி.
மாகநீள்புரிசைசூழ்ந்தமகேந்திரபுரத்திற்சென்று
போகமாருலகின்மேலாம்புரவலன்கோயில்புக்கான். (௧)

புக்கனனவுணருய்ப்பப்பொருவிலாவிகல்வெஞ்சூரன்
மிக்குயர்திருவினோடும்வீற்றிருந்திடுதல்காணூஉ
விக் * கெனவினையதீயோனிறப்பவென்றுன்னிவாயாற்
றக்கதோராசிகூறிச்சார்ந்தனன்றவத்தின்மேலோன். (௨)

அங்கைகண்மலரநின்றேயாசிசெய்தானைநோக்கி
யெங்குளையிங்குவந்ததென்னைநீயாரையென்ன
மங்கையோர்பங்கன்மேவும்வடபெருங்கயிலைவாழ்வே
னுங்குலந்தலைமையாகவைகலுநோற்றல்செய்வேன். (௩)

கைதவம்புகலேன்வெய்யகாமமேமுதலநீத்துச்
செய்தவம்பலவுமுள்ளேன்றேவருக்கிடுக்கண்செய்வேன்
மைதவிர்புகரினோடுமருவுநண்புடையேனின்பா
லெய்தியொன்றுரைக்கவந்தேனாரதனெனும்பேருள்ளேன். (௪)

சிந்துவான்மதிதோய்வேணிச்செல்வனின்னடுவதாகக்
கந்தனுமுருகன்றன்னைக்காமர்கண்ணழலானல்க
வந்தமாமதலைதன்பாலையவுன்பணியதாற்று
மிந்திராதியர்களேகியிறைஞ்சியேயேத்தியுற்றார். (௫)

உற்றுளார்தமக்குநின்னாலுறுதுயர்குமரன்கேட்பச்
சொற்றலுமஞ்சலென்றுதொல்சிவனருண்மேற்கொண்டு
கொற்றவெம்பூதவீரர்குழாத்தொடும்புவியினேகி
மற்றுனதிளவறன்னைவரையொடும்வேலாற்செற்றான். (௬)

ஆண்டதுபுரிந்தபின்னராறுமுகன்செந்திமேவித்
தூண்டினனினக்கோரொற்றைத்துண்ணெனவவனும்வந்து
மீண்டபின்புகுதிநாடிவேலையைக்கடந்துதன்பா
லீண்டியபடையொடன்னானிந்நகர்வடபால்வந்தான். (௭)

ஆங்கணம்பாடிவீடொன்றாற்றுவித்தனிகம்யாவும்
பாங்குறவிருந்தான்செவ்வேள்பார்த்தனனினையவெல்லா
மீங்கிதுநிகழ்ந்தவண்ணமென்றலுமவுணர்கோமான்
றீங்கனலென்னச்சீறிநகைத்திவைசெப்பலுற்றான். (௮)

வேறு.

மேனிமிர்கொண்டலுயர்த்தவனம்புயமிசைவேதா
நீணிறமாயவனூரதுபோலநினைந்தானோ
வானதொலண்டமொராயிரகோடியுமரசாள்வேன்
மாநகர்மேலொருபாலகனும்பொரவருவானே. (௯)

* இக்கு - மூங்கில்.

Digitized By Roja Muthiah Research Library

அரியினினஞ்செறிசூழலினன்னவையடலுன்னிக்
கரியதுகன்றுழைகலைபிறவற்றொடுகடிதேகிற்
பொருதுவயங்கொளவல்லதுகொல்லதுபோலன்றோ
முருகனும்வெம்படையுடனிவண்வந்திடுமுறைதானே. (௧0)

வேலைகடந்தெனதானையிகழ்ந்துவியன்பூதச்
சாலநெடும்படைதன்னுடனிந்நகர்சார்வானுங்
காலமிதங்கவன்வீரமழிப்பல்கருத்தில்லாப்
பாலகனென்றும்விடேன்வசையென்பதும்பாரேனால். (௧௧)

முன்னொருசூழ்ச்சியினசமுகியொண்கரமுரிவித்தே
யொன்னலராயமரும்பர்கள்யாவருமுய்ந்தாரோ
வென்னியையானொடும்வெற்பினையட்டனமெனவுன்னித்
தன்னுயிர்போவதறிந்திலனிந்நகர்தனின்வந்தான். (௧௨)

ஆழியதெண்டிரையாழிகடைந்தவனலகில்லா
வேள்விபுரிந்திடுவாசவனம்புயமிசைமேயோன்
வாழியநம்பெயர்கூறினுமஞ்சினர்மறைகுற்றார்
பூழிபுனைந்தவர்பாலகனேவமர்புரிவானே. (௧௩)

அந்தரமேல்வருசெங்கதிரைச்சிறையமர்வித்த
மைந்தனைநாற்படைதன்னொடுமேவிவயப்போரான்
முந்தியபூதரையேனையவீரரைமுடிவித்தே
கந்தனையொல்லையின்வெற்றிகொள்வேனிதுகாண்கிற்பாய். (௧௪)

என்றசுரேசனிசைத்தலுநாரதனிவைகேளா
நன்றிதுநன்றிதுதாழ்க்கலையின்னினிநகர்சூழச்
சென்றவனைப்பொரநின்படையேவுதிசெல்கின்றேன்
வென்றிநமக்குறநோற்றிடுவானெனவிண்போனான். (௧௫)

வேறு.

நாரதனினையகூறிநகையொடுபோதலோடுஞ்
சூரருளாற்றன்மிக்கோன்றுண்ணெனவயலினின்ற
கோரனுற்கோரனென்னுமொற்றரைக்குறித்துநோக்கி
வாரிதியிறைவற்பற்றிவல்லையிற்கொணர்திரென்றான். (௧௬)

என்றலுமனையரோடியெறிகடற்கரசைக்கூவி
வன்றிறலோடுபற்றிவல்லைமுன்கொணர்ந்தேயுய்ப்பக்
கன்றியமனத்தனாகிக்கைதொழுதவலங்கூர்ந்து
நின்றனனவனைநோக்கிநெருப்பெழவிழித்துச்சொல்வான். (௧௭)

பவ்வநீரரசகேண்மோபங்கயத்தவனுமாலுஞ்
செவ்விதினுணராவண்ணமொளித்தவன்சிறுவன்றன்னை
வெவ்வலிகடந்தபூதவெள்ளத்தைநமதுமாறா
லிவ்விடைவிடுத்ததென்னையென்னலுமிசைக்கலுற்றான். (௧௮)

மண்படுபுவனம்போற்றுமன்னகேள்புயங்கமீது
கண்படுமுகுந்தன்வேதாக்கடவுளர்தலைவனோடு
மெண்படுதுணைவரானோர்யாவரும்புடையிற்சூழ
விண்படுநெறியிற்சென்றான்வீரவேற்றடக்கையண்ணல். (௧௯)

Digitized By Roja Muthiah Research Library

மடல்கெழுநீபத்தண்டார்வள்ளல்வானெறியிற்போத
மிடல்கெழுபூதரென்பான்மேவினர்சென்றானு
ரடிகளின்பரட்டின்காறுமமைந்திலனவரையானே
தடைசெயவல்லேன்போலுந்தக்கதேயிதுமற்றன்றே. (௨௰)

ஊழியுமுலையாப்பூதரொல்லெனச்செல்லத்தாளிற்
பூழியாலழுறுபட்டாங்கிடையறப்புலம்பலுற்றே
னூழியனென்னும்பேருமற்றனன்வசையேபெற்றே
னேழையேன்செய்வதென்கொலெதிருண்டோவலியர்க்கம்மா. (௨௧)

தெள்ளிதிற்றமிழ்தேர்காட்சித்திருமுனிகரத்தில்வாரி
யுள்ளுறக்கொண்டதேபோலொல்லையின்மிசைவர்போலாங்
கொள்ளையிற்செறிபூதர்க்குளொருவரோர்குடங்கைதன்னி
னள்ளுதற்காற்றகில்லேனுதலினுய்ந்தேனன்றே. (௨௨)

உடல்சினவசனிதன்னையொண்பணிவிலக்கவற்றோ
கடுமுரணரிமானேற்றைக்களிறெதிர்விலக்கிற்றுண்டோ
மிடல்கெழுவிதியைப்புந்திவிலக்குமோவஃதேயன்றோ
வடன்மிகுபூதர்தம்மையளியனேன்றடுப்பதென்றான். (௨௩)

இற்றெல்லாமளக்கர்கோமானிசைத்துமெய்துளக்கமெய்தி
நிற்றலுநெடுவேலண்ணனீணகர்நணியதன்மை
யொற்றரிற்சிலவர்காணுவோடினரொல்லைசென்று
கொற்றவற்பணிந்துநின்றேயிவையிவைகூறலுற்றார். (௨௪)

அராவணையண்ணல்வேதாவரிமுதலமரர்சூழ
விராவுறுமிலக்கத்தொன்பான்வெலற்கரும்வீரர்போற்ற
விராயிரம்பூதவெள்ளமீண்டிடவெறிநீர்ச்சென்னிப்
பராபரன்மைந்தனந்தம்பதிவடதிசையிற்போந்தான். (௨௫)

வடதிசையதனிற்போந்துவானவர்புனைவற்கொண்டே
படிபுகழ்தகைமைத்தானபாசறைபுரிவித்தாங்கே
புடைதனினனிகமானபூதவெவ்வீரர்மேவ
நடுவணோர்நகரந்தன்னினண்ணிவீற்றிருந்தானன்றே. (௨௬)

கண்டனமிதனையின்னேகடவதுபுரிதியென்னாத்
திண்டிறல்வெய்யதூதர்செப்பலுமதனைக்கேளா
வண்டமும்புவனம்யாவுமலமரவழலிற்சீறிப்
புண்டிகழ்ந்தனையகண்ணனிவையிவைபுகலலுற்றான். (௨௭)

வரவுகேள்விப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௬௩.

Digitized By Roja Muthiah Research Library

# முதனாட்பானுகோபன்யுத்தப்படலம்.

கோதைவேலுடைக்குமரனதாற்றலுங்கொற்றப்
பூதராற்றலுமேலையராற்றலும்போர்செய்
தூதனாற்றலுந்தொலைக்குவன்றுண்ணெனநீவி
ராதவன்றனிப்பகைஞனைக்கொணர்திரென்றறைந்தான். (௧)

ஆனகாலையினன்றெனத்தூதுவரகன்று
பானுகோபனதிருக்கைபுக்கனையவற்பணிந்து
மேனிலைப்படுதந்தைதன்பணிவிடைவிளம்ப
மானவாலரித்தவிசுவிட்டெழுந்தனன்மன்னோ. (௨)

தொல்லைமந்திரத்தலைவருஞ்சுற்றமாயினரு
மெல்லைதீர்தருதானையந்தலைவர்கள்யாரு
மொல்லெனப்புடைசூழ்ந்தனருருமுகான்றென்னப்
பல்லியங்களுமார்த்தனபோர்த்தனபதாதி. (௩)

அக்கணத்தினிவிரவியம்பகைஞனோரணித்தேர்
புக்கொராயிரகோடிவீதிகளொரீஇப்புடையிற்
றொக்கவீரரிற்கண்டுளார்வயின்வயின்றொழப்போய்
மிக்கதாதைதன்றிருநகரடைந்தனன்விரைவின். (௪)

தேரினின்றிழிந்தண்ணலங்கோயிலுட்சென்று
சூரபன்மனையணுகியேயவனடிதொழுது
வீரவீரநீயெனையிவண்விளித்ததென்னென்ன
வாரிருங்கழன்மன்னவனின்னனவகுப்பான். (௫)

முந்துதாரகவெம்பியைவரையொடுமுடித்த
கந்தவேள்செந்திநீங்கியேயளக்கரைக்கடந்து
நந்திதன்கணத்தலைவரும்பூதருநணுக
விந்தமாநகர்வடதிசைவாயில்வந்திறுத்தான். (௬)

சிந்துபோன்றுலகளந்திடுகள்வனுஞ்செயிர்தீர்
சந்தமாமலர்க்கடவுளுமென்பணிகடந்த
விந்திராதியர்யாவரும்பிறருமாயீண்டி
வந்துளார்களாமறுமுகமதலைதன்மருங்கு. (௭)

அளியராகியவமரருமரன்றருமகவு
மொளிறுவாட்படைநந்திதன்கணத்தினுள்ளோருங்
களியின்மூழ்கியபூதருங்கடிதுவந்தடைதற்
கெளிதுபட்டதோநன்றுநன்றினையமாநகரம். (௮)

பின்னைதன்னுடனடுக்கலைமைந்தனைப்பிறரை
முன்னமட்டிடுமாற்றலர்தங்களைமுருக்கச்
சென்னெறிக்கொடுபோதலென்கடனவர்சிறியர்
மன்னர்மன்னன்யானாதலினிருந்தனன்வறிது. (௯)

Digitized By Roja Muthiah Research Library

அந்தண்மாமுகிலுயர்த்தவன்வேண்டலுமமலன்
றந்தகந்தனைச்சாரதத்தலைவர்களோடு
நந்தமைப்பொரவிடுத்தனனாதலினனு
மைந்தநிற்கொடுவென்றிபெற்றிருந்திடல்வழக்கே. (௧0)

ஆதலாலினிப்படையொடமமர்க்களத்தடைந்து
நாதன்மைந்தனைநந்திதன்கணத்துளார்தம்மைப்
பூதர்தங்களைப்பொருதழித்தடல்வயம்புனைந்து
காதன்மைந்தநீமீடியானம்முனங்கடிதின். (௧௧)

வேறு.

என்றிவைசூர்முதலிசைப்பக்கேட்டலும், பொன்றிகழ்தடம்புயம்பொருப்பிற்சேட்செல, வொன்றியகுமிழ்வடிவுட்லம்போர்த்திட, நின்றிடுதிருமகனிவைநிகழ்த்துவான். (௧௨)

இருளுறுமிடற்றினனேவுமைந்தனை, மருளுறுபூதரைமற்றுளார்தமை [றெலாம்.
வெருளுறுசமரிடைவென்றுமீள்வதோர், பொருளெனநினைந்துகொல்புகன்றியிற்

பன்னுவதென்னினிப்பரமன்கான்முளை,யிந்நகர்நணுகுமுனெதிர்ந்துபோர்செய்வா
னென்னலேவினவினனியதோர்ந்திலை, பின்னிதுபுகலுதல்பிழையதாகுமால்.(௧௪)

படைப்பெருந்தொறுவொடும்படர்ந்துகந்தனை, யடுத்தனன்பேரமராற்றிவென்றிகொண், டிடுக்கணில்பூதரையேனையோருடன், முடித்திவண்வருகுவன்முதல்வகாண்டிநீ. (௧௫)

கந்தனைவிறல்கொடேயவன்றன்கட்படு, செந்திருமார்பனைத்திசைமுகத்தனை
யிந்திரக்கள்வனையிமைப்பிற்பற்றிமுன், றந்திடுகின்றனன்றகுவசெய்தியால். (௧௬)

என்றிவைகூறியேயிறைஞ்சமைந்தநீ, சென்றனைவருதியாற்றிறலினோடென [ன்.
நன்றெனவிடைகொடுநடந்துநன்கமை, பொன்றிகழ்தனதுதேர்புகுந்துபோயினு

தொல்லையிற்பரிசனம்புடையிற்சூழ்தரப், பல்பதினாயிரந்துணைவர்பாற்பட [ன்.
வொல்லெனவியம்பலவொலிப்பவேகுறு,வெல்லையம்பகைதனதிருக்கையெய்தினு

பண்டியந்தேரினுந்தணந்துபாங்கரின், மண்டுறுதூதரைவல்லைகண்ணுறீஇ
யெண்டருநம்படையாவுமிவ்விடை, கொண்டணைவீரெனக்கூறிப்போயினான். ௧௯

ஏயிரும்பரிசனர்யாரையுநீநீஇ, மாயிருங்கலைமகள்வதிந்துவைகிய
வாயுதசாலையினவுணர்கோன்மகன்,போயினன்றொழுதனன்பூசையாற்றினான். ()

கயிரவநிறத்தபூங்கச்சுவீக்கினான், வயிரவொள்வாளினைமருங்குசேர்த்தினான்
வெயில்விடுபொன்றுகின்மீதுசுற்றினான், றுயிலறுமரைத்துளக்கங்கண்டுளான்.

செல்லிடையுருமெனத்தெழிக்குநோன்கழல், கல்லெனவரற்றிடக்கழலிற்பூட்டினான், வல்லிதிற்சாலிகைமருமஞ்சேர்த்தினான், சொல்லினுநிவந்தெழுதூண்செய்தோளினான். (௨௨)

கோதையையங்கையிற்கொளுவிச்சுற்றினான், போதுறழங்குலிபுட்டிருங்கினான்
சோதிகொள்சரம்படுதூணியைச்சுவன், மீதுறவீக்கினான்விறலின்மேலையோன். ()



Digitized By Roja Muthiah Research Library

வெம்பெருநுதன்மிசைவிசயப்பாலதாஞ், செம்பொனின்பட்டிகைதிகழச்சேர்த்தினன், பம்புறுமணிகலம்பலவுந்தாங்கினன், றும்பையஞ்சிகழிகைமவுலிசூட்டினன். (உ௪)

வடித்ததோர்பெருஞ்சிலைவயமுண்டாகவென், றெடுத்தனன்விடுத்திடின்யாவர் தம்மையும், படுத்திடுமோகமாம்படையொன்றேந்தினு, னடுத்திடுசெறுநர்தம்மாற்றலுன்னலான். (உ௫)

ஆனதோர்போரணியணிந்துவாய்தலிற், பானுவின்மாற்றலன்படரமுன்னரே [ம்.
போனதோர்தூதுவரெழுதிர்போர்க்கெனத், தானேயோடெழுந்தனர்தகுவர்யாவரு

வேறு.

விசையனேமியன்மிகுந்திறன்மாயன், முசலிகண்டகன்முரன்கரன்மூர்க்கன்
றசமுகன்கனலிசண்டன்விசண்ட, னசமுகன்மகிடனக்கிரவாகு. (உ௭)

விசையசேனன்விடசேனன்விமோகன், வசைகொள்சோமகன்மதுச்சசிசித்துச்
சுசிமுகன்னசனிசூனியகேது, வசுரசேனனிவராதியராஞேர். (உ௮)

தடுக்கொணுவகைதடிந்திடுதெய்வப், படைக்கலங்களவைபற்பலபற்று
வுடைத்தவன்மையுடனெய்யெனவந்தார், கிடைத்ததோவமரெனக்கிளர்கின்றார்.

ஆனகாலைபதிஞயிரவெள்ளந், தானவப்படைஞர்சார்புதொறேகி
மீனவேலைகளும்வெள்குறவார்த்து, மானவத்தலைவர்மாடுறவந்தார். (௩0)

கோலவார்சிலைகொடுங்கதைநீடுஞ், சூலநேமியயிறேமரமீட்டி
யாலம்வாள்கணையமாரெழுநாஞ்சில், காலபாசமிவைகைக்கொடுசென்றார். (௩௧)

கந்துகத்தொகைகடங்கலுழ்கைம்மா, வெந்திரத்திரதமீங்கிவைமூன்று
மைந்தொகைப்படுமிராயிரவெள்ளந், தந்திரத்தலைவர்தம்புடைசூழ்ந்த. (௩௨)

ஐந்துநான்குடையவாயிரவெள்ளத், திந்தநாற்படையுமீண்டுபுசெல்ல
மைந்தினேற்றமிகுமானவர்தத்தஞ், சிந்தைபோற்கடிதுசென்றனரம்மா. (௩௩)

சென்றகாவலர்கள்சேனையினேடு, மென்றவன்பகைஞனெய்துழிநண்ணி
யொன்றவங்கைதொழுதொல்லெனவார்த்துத்,துன்றிவந்துபுடைசூழ்ந்தனரன்றே

இரவிதன்பகைஞனீங்கிவைகாணு, வொருதனேவலனையொல்லையினேக்கித்
திருமைபெற்றதொருதேரினைவல்லே, தருகவென்னவினிதென்றுதணந்தான். ௩௫

செப்புமத்தொழில்சிரங்கொடுசென்றே, மெய்ப்படைக்கருவிமேவுழிநண்ணி
முப்பதாயிரமுரட்பரிபூண்ட, வொப்பிலாவிரதமொன்றினையுய்த்தான். (௩௬)

உய்த்ததேரினுதயக்கிரிவாவு, மொய்த்தவெங்கதிரின்மொய்ம்பொடுபாய்ந்தான்
மெத்துபேரனிகவெள்ளமியாவு, மத்துணைப்பொழுதினுர்த்தனவன்றே. (௩௭)

உரத்தகந்திகளோராயிரகோடி, பெருத்துநீண்டசைவுபெற்றிடுபாலை
விரித்துநீட்டியெனவெவ்வசுரேசர், கரத்தினெண்ணில்கவரித்தொகைவீச. (௩௮)

மற்றவன்றனதுமாசிருண்மேனி, யுற்றிடற்கருமையாலவனெண்சீர்
சுற்றிமீதுலவுதோற்றமதென்னக், கற்றைவெண்குடைகள்காவலரேந்த. (௩௯)

Digitized By Roja Muthiah Research Library

அடைப்பைகோடிகமடுஞ்சுடரொள்வாள், கடிக்கொள்பீலிகவினுற்றகளாசித்
தொடக்கமேந்திமுறைசுற்றியனந்தம், படைப்பெருந்தலைவர்பாங்கொடுபோற்ற. ()

எழில்செறிந்தவிரதத்திடைவைகு, மழலின்வெங்கதிரையாற்றமுனிந்தோ
னுழையரிற்பலரையொய்யெனநோக்கி, விழுமிதோர்மொழிவிளம்புதலுற்றான். ()

காமர்வெம்படைகணிப்பிலகொண்ட, சேமமாகியமர்தேரொருகோடி
யேமமோடுகொணர்வீரெனலோடுந், தாமவேலுழையர்தாழ்ந்தனர்சென்றார். (சஉ)

அண்டரும்படையளப்பிலவுய்த்துத், திண்டிறற்கெழுமுதேரொருகோடி
கொண்டுவந்துழையர்கொற்றவன்மைந்தற், கெண்டிசைப்புறமுமீண்டுறுவித்தார்.

ஆண்டகைக்குமரனன்னதுகாலை, மாண்டசீர்வலவன்மாமுகநோக்கிப்
பாண்டின்மாத்தொகுதிபண்ணினவித்தேர், தூண்டுகெந்தனமர்சூழலினென்றான். ()

என்னலும்விழுமிதேயெனமுட்கோன், மன்னுமத்திகையின்வன்றொழில்காட்டித், துன்னுவாம்புரவியின்றொகைதூண்டிப், பொன்னந்தேர்கடவினன்புகழ்வெய்யோன். (சரு)

வெய்யவன்றனைவியன்சிறையிட்ட, கையனேகவதுகண்டுபுறஞ்சூழ்
மையன்மாலவுணமாப்படையாவு, மொய்யெனப்பெரிதுலம்பினவன்றே. (சசு)

எழுந்ததானவரிகற்படைவெள்ள, மெழுந்ததேர்நிரையெழுந்தனகைம்மா
வெழுந்தவாசிகளெழுந்தனவோதை, யெழுந்தகேதனமெழுந்தனபூழி. (சஎ)

அறைந்தபேரிகையறைந்தனசங்க, மறைந்தகாகளமறைந்தனதிண்கோ
டறைந்தசல்லிகையறைந்ததடாரி, யறைந்ததண்ணுமையறைந்தனதக்கை. (சஅ)

ஆர்த்ததேர்த்தொகுதியார்த்தனவாசி, யார்த்ததந்திநிரையார்த்தனர்வெய்யோ
ரார்த்தவாற்றுவசமார்த்தனகண்டை, யார்த்ததார்நிரைகளார்த்ததுமூதூர். (சகூ)

அதிர்ந்தமாநிலமலைந்தனநாக, முதிர்ந்ததாரகையுலைந்தனர்தேவர்
விதிர்ந்தமேகநிரைவிண்டதுமேருப், பிதிர்ந்துபோயினபிறங்கல்களேழும். (ருO)

ஊழியான்மதலையோங்குபடைப்பே, ராழியோடுறவருக்கன்வெருண்டே
பூழிவான்முகடுபோர்த்தெழல்காணு, வாழியென்றதின்மறைந்துபடர்ந்தான். (ருக)

வாழிமாநகர்வளைந்திடுநொல்பே, ராழியாங்கடையவப்படையாகிச்
சூழும்வேலையிடைதோன்றியுலாவும், பூழிதூர்த்துளதுபூதர்களேபோல். (ருஉ)

விட்டசோதிநிமிர்விண்மிசைதாக்கப், பட்டுலாவருபதாகையினீட்டம்
வட்டவானமெனும்வான்படகத்தைக், கொட்டுமண்மகள்குலாவுகைபோலும். ()

தாழும்வீரர்படைதம்மினுரிஞ்சப், பாழிவெங்கனல்பரந்தபதாகைச்
சூழல்வானநதிதோய்ந்தசைகாலை, வீழுமாலிகளின்வீழ்ந்திடுகின்ற. (ருச)

வானமோடியனமால்கரிதள்ளுந், தானமோடினசரங்களினோடி
மீனமோடுதிரைவேலையினோடுங், கானமோடினகளிற்றினமென்ன. (ருரு)

செப்புதற்கரியசேனைகள்தன்னிற், றுப்புமிக்கெழுவுதொல்படைவெள்ள
மிப்புறத்துநெறியின்றியவ்வானத், தப்புறத்தினுமளப்பிலசென்ற. (ருசு)

மறந்தருங்கதிரைவன்சிறைசெய்தோன், செறிந்ததானையுடனிவ்வகைசெல்ல
விறந்தசீர்நகரினித்திறமெல்லா, மறிந்துநாரதனகன்றிடுகின்றான். (ருஎ)

Digitized By Roja Muthiah Research Library

வானமேனெறிவழிக்கொடிபூதர், மேனபாசறைவியன்பதியுட்போய்
ஞானவாலறிவிஞரதன்விண்ணோர், சேனைகாவலனமர்ந்துழிசென்ருன். (ருஅ)

சித்திரப்பகைசிரத்தவிசுற்ற, கந்தவேளிருகழற்றுணைகாணுப்
புத்திரரொடுபுகழ்ந்துவணங்கி, யெந்தைகேட்கவென்னவின்னதுரைப்பான். (ருகூ)

பூதசேனையொடுபொள்ளெனவேகி, யாதிநீயிவணமர்ந்தனயாவுந்
தூதர்கூறவுயர்சூரபன்மாவென், ருேதுதீயவனுணர்ந்துவெகுண்டான். (சூ0)

திகண்டமுப்பகனெடுங்கதிரோன்டா, துகண்டதன்மகனையொல்லைவிளித்தே
யகண்டசேனையொடுமன்பிலனின்மேல், வெகுண்டுபோர்செயவிடுத்தனனம்மா. ()

விடுத்தகாலையவன்வெஞ்சமராற்றற், கடுத்தகோலமொடளப்பிலவான
கடற்பெரும்படைகலந்துடனேகத், தடுப்பரும்வெகுளிதன்னெடும்வந்தான். (சூஉ)

இவனுடன்சமரினேற்பவர்நீயுஞ், சிவனுமன்றியெவர்தேவரினுள்ளா
ரவனைவெல்வதரிதாகுமுனேர்நாட், புவனியுண்டவர்புறந்தரவென்ருன். (சூங)

கரையிலாவமர்கடந்திசைகொண்டான், வரைவிலாதபலமாயைகள்வல்லா
னுரகவேந்தினுமுரம்பெரிதுள்ளான், பிரமனீந்திடுபெரும்படைபெற்ருன். (சூச)

அறைகடற்கிறைவனங்கைகொள்பாச, மறலிதன்பரசுவவ்வினன்மாயோன்
விறலினேமிகொளவேண்டலன்முன்னஞ், சிறியதந்தையணிகுற்றசிறப்பால். சூரு

ஆகையாலவனையாள்கொடுவல்லே, வாகைகொண்டிடலுமற்றரிதம்மா
பாகுபட்டபடைபாங்குறநீயே, யேகல்வேண்டுமடவென்றுபகர்ந்தான். (சூசூ)

நாரதன்னிவைநவின்றிடுகாலே, மூரலெய்திமுருகன்புடைநின்ற
வீரவாகுவைவிளித்தருள்செய்து, சீரிதாவினையசெப்புதலுற்ருன். (சூஎ)

ஈண்டுபூதரொடியாம்வருதன்மை, யாண்டுசூரனுணர்ந்தந்நகர்தன்னின்
பாண்டதானையுடன்மைந்தனைநம்மேற், றூண்டினனமர்தொடங்கியமன்றே. ()

எள்ளுதற்கரியவெண்மரிலக்க, ருள்ளபேர்களுமொராயிரபூத
வெள்ளமும்படையின்மேவரநீபோய்ப், பொள்ளெனப்புரிசையின்புடைசூழ்ந்தி. ()

சென்றுமுன்கடைசிதைத்தனையங்ஙன், கன்றிநேரவுணர்காவலன்மைந்தன்
றுன்றுசேனைகடொலைத்தமராற்றி, வென்றிகொண்டவனைமீளுதியென்ருன். (எ0)

கரும்வேன்முருகனிவ்வகைகூறி, வீரவாகுவைவிடுத்திளையோரைச்
சாரதத்தலைவர்தம்முடனேவி, நாரதற்கிதுநவின்றருள்செய்வான். (எக)

கேட்டியான்முனிவகேழ்கிளர்சிம்புட, கூட்டமீதுசிலகோளரிமேவின்
வாட்டலல்லனகொன்மாய்குவதல்லாற், காட்டுவாமுடிவுகாண்டியதென்ருன். ()

குமரனல்குவிடைகொண்டுபடர்ந்தே, விமலவாலுணர்வின்மேதகுவீரன்
சிமையமேருநிகர்திண்சிலையொன்றை, யமரர்கோன்புகழவங்கைபிடித்தான். (எங)

லீக்கினன்கவசம்வெற்பிடைதன்னிற், றூக்கினன்பகழிபெய்திடுதூணி
நீக்கமில்விரலினீடுகைதன்னிற், ருக்குகோதையொடுபுட்டிறரித்தான். (எச)

சேமவெம்படைசெறிந்திடுவைய, மாமருங்கினில்வரம்பிலசெல்லத்
தோமில்விரர்குழாமிரைக்கோ, மேமமார்ரதமேறினன்மாதோ. (எரு)

எட்டுவீரருமிலக்கருமேலை, மட்டில்பூதகணமன்னருமாக [கார்
வொட்டியாடமருருக்கொடுகொண்மூ, முட்டுதேர்த்தொகையின்மொய்ம்பொடுபுக்

தேரின்மேற்படுசிறப்புடைவீரர், வீரவாகுவைவிரைந்தயல்சூழ்ந்தார்
நேரிலாயிரநெடுங்கதிரொன்றைச், சூரர்தந்தொகுதிசுற்றியவாபோல். (௭௭)

விரசியேயமர்விளைத்திடவெஞ்சூ, ரரசன்மாநகரினாயிரவெள்ளம்
பரிசனங்கள்படர்மின்கடிதென்று, முரசறைந்தனர்களாயிடைமொய்ம்போர். ()

அறைந்தகாலைதனிலாயிரவெள்ள, நிறைந்தபூதர்நெடுவேன்முருகன்பாற்
செறிந்துபோற்றியிடவேலையர்சென்று, றுறைந்தவார்கலியுடைந்ததுபோல. (௭௯)

அருத்தியிற்படருமாயிரவெள்ளக், கிருத்திமத்தவர்கிளர்ந்திடுதீப்போ
லுருத்துவேலையினொலித்தயரூழி, மருத்தின்வன்மைகொடுவந்திடுகின்றார். (௮0)

பையராவிறைபரித்திடுகின்ற, வையம்யாவையுமொர்வாகுவின்வைக்குங்
கையர்காலனையடுந்தறுகண்ணார், வெய்யரானவர்கள்யாரினும்வெய்யோர். (௮௧)

அரத்தவேணியரடும்படையேந்துங், கரத்தர்வெங்கழல்கலித்திடுதாளர்
வரத்தின்மேதகையர்மாயைகடந்தோ, ருரத்தினண்டமுமுடைத்திடவல்லோர். ()

இனையதன்மையினிலீண்டியபூத, ரனைவருஞ்செலவவர்க்கிறையானோர்
தனதுதொல்லிளைஞர்தம்மொடுசென்றான், வனைகருங்கழல்வயம்புனைவாகு. (௮௩)

செல்லலுந்திமிலைசெல்லுறழ்பேரி, கல்லெனுங்கரடிகாகளமாம்பல்
சல்லரிப்பறைதடாரியுடுக்கை, பல்லியம்பிறழுழங்கினபாங்கர். (௮௪)

மாறில்சேனையிடைவந்தெழுபூழி, நீறுபூசிமுடிநீடியகங்கை
யாறுதோய்ந்தகல்விசும்பிடையாடி, யேறுகொண்டகொடியீசனையொப்ப. (௮௫)

பாயசாரதர்படைக்குளெழுந்தே, யாயபூழியவுணப்படைதன்னிற்
சேயபூழியொடுசேர்வனதாமுன், போயெதிர்ந்தமர்புரிந்திடுமாபோல். (௮௬)

பான்மையின்னனபடைப்புறவெண்ணில், சேனைவெள்ளமொடுதிண்டிறல்வாகு
நூலலர்ந்தவறுகூருறைமூதூர், வானுலாம்புரிசைமாடுறவந்தான். (௮௭)

வேறு.

ஆனதோர்காலையினதனைநோக்குறீஇத், தானவரொருசிலர்தரிப்பின்றோடியே [ர்
சேனையங்கடலினைத்தீர்ந்துவல்லைபோய்ப், பானுவின்பகைஞனைப்பணிந்துகூறுவா

மாயிருந்தானைகண்மருங்குசூழ்ந்திட, நீயமர்செயவருநிலைமைநாடியே
வேயெனமுந்திவண்மேயினன்றனை, யேயினன்குமரவேணிகழ்ச்சியீதென்றார். ()

மற்றிவையவுணர்கோன்மதலைகேட்டலுங், கற்றையங்கதிர்மணிக்கடகக்கையி
னை, யெற்றினன்முறுவல்செய்தெயிறுதீயுகச், செற்றமொடுயிர்த்திவைசெப்பன்
மேயினான். (௯0)

இருந்திடுபொல்லையென்னொடேபொர, விரைந்தெதிர்நூதனைவியன்பதாதியாய்ப்
பொருந்தியபூதரைப்போர்க்களத்தியான், றுரந்திடுகின்றனன்றொலைந்துபோகவே.

அந்தரவரைப்பினிலாசையெட்டினில், வந்திடுமளக்கரின்மற்றைநேமியிற்
கந்தனுமொற்றனுங்கணங்கள்யாவருஞ், சிந்தினர்வெருவியேதிரியக்காண்பனால். ()

Digitized By Roja Muthiah Research Library

புன்மையராகியபூதர்சேனையும், வன்மையிறாதனுமழலைப்பிள்ளையுந்
தொன்மிடலொருவியேதொலைந்துபோகினு, மென்மனவெகுளியுமேகற்பாலதோ.

விடுகிலனவர்தமைமேலையேழ்பெருங், கடற்றிசைமுழுவதுங்கடந்துசெல்லினும்
புடையதுசுற்றியேபோக்குறுதிவட், கொடுவருகின்றனன்குறுகிப்பற்றியே. (கூச)

மேவலிலவர்தமைமேலைநம்பெருங், காவலன்முன்புறக்காட்டியிவ்விடைத்
தேவர்கடம்மொடுஞ்சிறையில்வீட்டுவ, னேவருமெனதுசீரிறைஞ்சியேத்தவே. ()

என்றிவைபற்பலவிசைத்துச்சூர்மகன், கன்றியமனத்தொடுகடிதுசேறலுந்
துன்றியவவுணர்தந்தொறுமுன்போயின, பொன்றிகழ்வடமதிற்புதவுநீங்கியே. ()

ஆனதொர்காலையினடையும்பூதவெஞ், சேனையினாற்றலுந்திறலுங்கண்ணுறீஇத்
தானவர்கூறுவார்சமர்கண்டோடிய, வானவரன்றிவர்வலியர்போலுமால். (கூள)

என்னினுமிங்கிவரெம்மொடேபொரும், வன்மையுமுடையரோவரம்பில்குன்றெலாம், பொன்மலையதனொடுபொருவதேயினு, மின்மினிகதிரினும்விளங்கவல்லதோ. (கூஅ)

என்றிவைபோல்வனவினையிருனவ, ரொன்றலபலபலவுரைத்துவெஞ்சினங், கன்றியவழல்விழிக்கணத்தின்சேனைநேர், சென்றனர்தெழித்தனர்சிலைத்தபல்லியம்.

வயிர்த்திடுபூதர்கண்மறலியென்றுல, கயிர்த்திடுமவுணரைநோக்கியம்புவி, யுயிர்த்தொகையலைத்தவருவர்கொலோவெனுச், செயிர்த்தனரிடித்தனர்தீயின்வெம்மையார். (க00)

கரையறுதானவர்தாமுங்காய்கனல், புரைதருசூர்விழிப்பூதவீரரு
மொருவரினொருவர்போருடன்றுசேறலா, னிருவகையனிகமுமிகலினேற்றவே.()

தந்தியின்கரங்களிற்றண்டமீந்திடா, வந்தெதிர்தெம்முனைமாய்ந்துவீடுறச்
சிந்துதியெனுங்குறிசெப்பிப்பூதர்மே, லுந்தினர்மீமிசையுலப்பிருனவர். (க0௨)

பகைத்திடுபூதர்கள்பலருநாடியே, திகைத்திவையாவெனச்சிந்தித்தையுறத்
தகைத்தடந்தாளவைதரையின்பாற்படா, துகைத்தனர்பரியெனுமோதவேலையே.

காரிடைச்சென்றெனக்களிற்றினுந்திரை,நீரிடைச்சென்றெனநீடுமாவினும்,போரிடைச்சென்றனர்புறத்துப்போற்றியே, தேரிடைச்சென்றனர்வரையிற்சென்றென. (க0ச)

அடுகரித்திரையினையாடன்மாக்களைத், தடநெடுந்தேர்களைத்தணப்பிலாவகை
கடலினைவளைந்திடுகரையதாமெனப், புடைதனிற்சுற்றியேபுவியினேகினர்.(க0ரு)

அத்திறமெதிர்ந்திடுமவுணர்பூதர்மேன், முத்தலைவேற்படைமுசுண்டிதோமரஞ்
சத்தியொடெழுமழுத்தண்டமேமுத, லெத்திறப்படைகளுமெடுத்துவீசினர்.(க0சு)

கரங்கொடுபெரும்படைக்கலங்கள்யாவையும், பரங்கொடுவீசியபதகருட்கிட
மரங்கொடுமெழுக்கொடும்வரைகொடுந்தம, துரங்கொடும்வீசினருலைவில்பூதரே.

வேறு.

செறிந்துநேர்ந்துசெருச்செயுமெல்லையி, னிறந்ததானவரெண்ணிலராவிபோய்த்
தறிந்ததாளுந்தலையுங்கழலுமாய், மறிந்தசாரதரும்வரம்பில்லையால். (க0அ)

மாண்டசாரதர்யாக்கையுமண்மிசை, வீண்டதானவர்மெய்களுஞ்செங்களம்
யாண்டுமாகியிருங்கரைபோலுற, நீண்டநேமியினின்றதுசோரிநீர். (க0கூ)

விரவுபூதர்வெருண்டுசென்றொன்னல், ரிரதமோடிரதங்களையெற்றினார்
கரிகளாற்கரியின்றொகைகாதினார், பரிகளோடுபரிகளைமோதினார். (கக0)

ஆளையாள்கொண்டடர்த்தனராங்கவர், தோளையேதமதோள்கொடுதாக்கினார்
தாளினாலவர்தந்தலைசிந்தினார், கோளரித்தொகைமானடுங்கொள்கையார். (ககக)

ஏற்றசாரதரெற்றிடத்தானவ, ரூற்றமின்றியுடைதலுமவ்வழிக்
காற்றொடங்கிகலந்தன்னகாட்சியா, னாற்றலாளனனலிகண்டானரோ. (ககஉ)

கையின்மேயினகார்முகமொன்றுதன், மொய்யின்வாங்கிமுரண்கெழுநாணொலி
செய்யலோடுமத்தேவர்வெருக்கொளா, வையகோவென்றலக்கணுற்றாரரோ. ()

நாரியார்ப்புநாணுகலுநாற்படை, மூரியார்ப்புமுகிலிடையார்ப்பெனும்
பேரியார்ப்பும்பிறங்குபெருங்கடல், வாரியார்ப்புந்தம்வாய்மடிந்திட்டவே. (ககச)

கொற்றவில்லிற்கொடுங்கனல்வெங்கணை, முற்றுமாரியின்முத்திறந்தூண்டலுஞ்
செற்றுபூதர்தமொய்ம்பினுட்சென்றன, புற்றினூடுபுகுந்திடுபாந்தள்போல். (ககரு)

அங்கிமாப்படையேவலுமவ்வழிச், சிங்கனென்னுந்திறல்கெழுசாரத
னெங்கணுய்தியிறந்தனையீண்டெனாப், பொங்குசீற்றம்புகுந்தனன்புந்திமேல். ககசு

நேர்கொண்டார்த்துநெடுந்தகைதீயவன், றேர்கொண்டார்க்குந்திறற்பரிச்சேக் கையிற், பார்கொண்டார்ப்பப்பரூஉத்தடக்கைதனிற், றார்கொண்டார்த்திடுந்தண் டினிற்சாடினான். (ககஎ)

சாடுமெல்லையிற்சாரதியுந்திய, வாடல்வாம்பரியாவியுலந்திட
வோடலின்றியிரதமங்குற்றதா, னீடுகின்றநிலைப்படுதேரென. (ககஅ)

மாக்களூற்றமடிவினைநோக்கியே, தீக்கனற்பெயரோன்சினமேற்கொளாத்
தாக்கணங்குறுதாழ்சிலைவாங்கியே, யேக்கள்பூட்டியிதுவொன்றுகூறுவான். கககூ

தடுக்கொணாவிச்சரஞ்சொரிந்துன்னுயிர், படுத்துவானவர்பார்த்திடத்தென்றிசை
விடுக்கிலேனெனின்வெஞ்சமரத்திடை, யெடுக்கிலேன்சிலையானெனக்கூறினான். ()

சூளிவ்வாறுபுகன்றுதொலைவிலா, வாளியான்மிசையங்கியின்பேரினான்
கோளியார்பயனாமெனக்கூற்றுறழ், வாளிதூண்டிமறைத்தனன்மேனியே. (கஉக)

மறையவேயுடல்வாளிகடேண்டவு, மிறையுமுன்னலனின்னலுற்றாழ்கிலன்
பொறையினோடுபொருக்கெனப்போகியத், தறையினின்றசயந்தனத்தேறினான். ()

நீர்முகந்தநெடுமுகிலாமெனத், தேர்முகந்தனிற்றீயவனேந்திய
கார்முகந்தனைக்கைக்கொடுவாங்கியே, பார்முகத்துப்பதைப்புறவீசலும். (கஉங)

வலக்கையாலொருவான்கதைபற்றியே, சிலைக்கையீர்த்திடுஞ்சிங்கனைத்தீயினான்
றலைக்கண்மோதலுந்தானவரார்த்தனர், கலக்கமுற்றனர்கண்டவத்தேவரே. கஉச

அடித்ததண்டொடனலிதன்கைத்தலம், பிடித்துமற்றொர்பெருங்கையினாலவன்
றடித்தமார்பத்தடவரைசாய்ந்துக, விடிப்பின்மும்மையிசைத்திடவெற்றினான். ()

எற்றவெய்யவனெல்லையிறுன்புறச், செற்றமிக்கெழுஞ்சிங்கனுஞ்செங்கையிற்
பற்றுதண்டத்தொடுமெப்பதகனைச், சுற்றிவானந்துணுக்குறவார்த்தனன். (கஉசு)

மாறிலாதவவுணனைவன்கையாற், சூறைபோலவச்சிங்கன்சுலவலும்
மீறில்பித்தினிலேமருவோன்மிகத், தேறலார்ந்தெனத்தேற்றமின்றாயினான். கஉஎ

ஆரழற்பெயரண்ணலறிவொரீஇச், சோருமெல்லையிற்றுண்ணெனவேறிய
தேரைவிட்டுத்திறலரிப்பேரினான், பாரினெற்றப்பதைப்பொடுதுஞ்சினான். (கஉஅ)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

அண்டருந்திறலின்மிக்கவனலிபங்கிறந்தவண்ணங்
கண்டனன்கவலாவுள்ளமழலெனக்கறங்குகண்ணன்
சண்டனென்றுரைக்கும்பேரோன்றடுப்பரும்படைகடன்கை
கொண்டிவனுயிரையின்னேகுடிப்பனுலென்றுசென்றான். (௧௨௯)

என்றதோர்மாற்றங்கேளாவெரிவிழித்திடியினக்குப்
பொன்றியவனலியங்கைப்போர்கெழுதண்டம்வாங்கிச்
சென்றனன்விரைவிலன்னான்றேர்மிசைப்பாய்ந்துநீலக்
குன்றெனும்வயிரத்தோண்மேற்புடைத்தனன்கூற்றமுட்க. (௧௩0)

புடைத்தலுமுயிர்த்துநெஞ்சம்பொம்மெனப்பொருமலெய்தித்
தடப்பெருந்தேரில்வீழுஞ்சண்டனுந்தனதுசெங்கை
யெடுத்ததோர்தண்டந்தன்னாலெதிர்புகுஞ்சிங்கன்மார்பத்
தடித்தனனவனுந்தானுமாரஞருழந்துவீழ்ந்தார். (௧௩௧)

அப்பொழுததனைநோக்கியவுணரின்மாயனென்போன்
குப்புறுதடந்தேரோடுங்குறுகலும்பூதர்தம்மி
னொப்பிலாநீலனேர்போயோச்சினன்கதையொன்றண்ணன்
முப்புரமதனிற்றாண்டுமெரிவான்பகழியென்ன. (௧௩௨)

போந்ததோர்தண்டமாயன்பொருவகன்மார்பிற்றாக்க
மாய்ந்தனன்போனின்றுவருந்திமற்றவன்றன்பாணி
யேந்துமுத்தலைவேலொன்றையெறிந்தனனெழிலாகத்திற்
சாய்ந்தது குருதிநீலன்றானுமங்கயராநின்றான். (௧௩௩)

சிறிதுபோழ்ததனிற்றேறித்திரண்மணிக்கடகஞ்சேர்த்த
வெறுழ்வலித்தடக்கைதன்னாலெதிர்ந்தவனுரத்தினெற்ற
வறைகழன்மாயன்றானுமணங்குறநீலனென்போன்
கறைகெழுநாகமென்னக்கனன்றிதுகருதிச்செய்வான். (௧௩௪)

மந்தரந்தழீஇயதொல்லைவாசுகியென்னமாயன்
சுந்தரத்தடம்பொற்றோளைத்துணைக்கையாற்றொடர்ந்துவீக்கிக்
கந்தரந்தன்னிற்றீயகறைசெறியெயிற்றிற்கவ்வி
முந்துறுகுருதிச்செந்நீர்குடித்தனன்மொய்ம்பினோடும். (௧௩௫)

சோரியதுண்டுநீலன்றொல்சினந்துறந்துநின்றா
னுருயிருண்டுபோனனந்தகனனையகாலை
மூரிவிற்றடக்கைமாயன்முடிந்தனன்சண்டன்சிங்கன்
பேரஞருழந்தோர்தேறிப்பின்னும்போர்புரியலுற்றார். (௧௩௬)

கிட்டினர்தடந்தேர்மீதுகிடந்ததண்டேந்திக்கீழ்போ
யொட்டினரொருவர்தம்மினொருவர்மேலுடன்றுபொங்கி
முட்டினரிரண்டுபாலின்முறைமுறைபெயர்ந்தார்மொய்ம்பால்
வட்டணைதிரிந்துதண்டிற்றாக்கினார்மாற்றுகின்றார். (௧௩௭)

இங்கிதுபோலப்பல்வேறியற்கையிற்கதையின்வெம்போர்
சிங்கனுஞ்சண்டன்றானுஞ்செய்தனர்திரிந்தவேலைப்
பொங்கியபூதர்வேந்தன்பொருவருமவுணன்பொன்னு
ரங்கையிற்றண்டஞ்சிந்தவடித்தனனணிப்பொற்றண்டால். (௧௩௮)

Digitized By Roja Muthiah Research Library

வயிர்த்திடுதண்டமங்கண்வலிகெழுசிங்கன்மோத
வயிர்த்தொகையாதலோடுமாற்றல்சேரவுணர்யாரு
முயிர்த்தனரென்கொலாமென்றுன்னினருருமேறென்னச்
செயிர்த்தனன்சண்டனென்னுஞ்செருவலானுரைக்கலுற்றான். (௧௩௯)

தண்டமொன்றிற்றதென்றுதருக்கலைதடம்பொற்றோளாக்
கொண்டதுமஃதேயன்றேகூற்றுவனகருமேலை
யண்டமுமுலையத்தொன்னாளடர்த்தனனுனக்கிங்கஞ்சேன்
மண்டமர்புரிதியென்னாவலிகெழுகரங்கொண்டேற்றான். (௧௪0)

ஏற்றனனிகலும்வேலையெரிசினங்கடவிச்சிங்க
னாற்றலையாங்கொளீயென்றாற்றலையணிபொற்றண்டம்
போற்றுகென்றுய்ப்பவங்கட்புகாநெறிபுடைத்துக்கையாற்
கூற்றனுமுட்கவார்த்தான்குருமணித்திரடோள்கொட்டி. (௧௪௧)

அங்நெடுந்தகையோனார்ப்பவதுபொறாதழன்றுசிங்கன்
பொன்னெடுந்தண்டாலன்னான்புயமிறப்புடைத்தலோடுங்
கன்னெடுந்தோளுமோர்சார்கதுமெனமுரியத்தண்டும்
பன்னெடுந்துணியாய்ச்சிந்திப்படிமிசைக்கிடந்ததன்றே. (௧௪௨)

புயந்தளர்ந்திடலுஞ்சண்டன்போவதுகரமென்றுன்னா
வயர்ந்திலனொசிபொற்றோளையங்கையினிறுத்துவாங்கி
வயங்கெழுதண்டிற்பற்றிவட்டணைபுரிந்தான்வானோர்
வியந்தனரிவனேகொல்லாம்வீரருள்வீரனென்றே. (௧௪௩)

கரங்கெழுபுயப்பொற்றண்டாற்கார்கெழுசண்டன்காம
ருரங்கெழுவுரத்தின்மோதவுருகெழுமடங்கற்பேரோ
னிரங்கிலனுவன்போல்யானுமெற்றலன்கரங்கொண்டென்னாச்
சரண்கொடேயவன்றனாகத்தடவரையதனைச்சார்த்தான். (௧௪௪)

கண்டகன்சாய்தலோடுங்கரமெடுத்தார்த்துவானோர்
புண்டருங்குருதிச்செங்கட்பூதநாயகநீயன்றேற்
சண்டனையுதைப்பார்யாரேதாழ்த்திடலவன்றனாவி
கொண்டருளிறையினென்றுகுறையிரந்தறையலுற்றார். (௧௪௫)

வேறு.

வானவருரைகேளாமறலியொடிகல்வெங்கட்
டானவனிவனேயென்றனியுயிரடுகிற்பா
னீனமதுறுதேவரிவனொடுநுமையின்றே
யூனுடலுயிரோடுமுண்குவனதுகாணீர். (௧௪௬)

என்னலுமிகல்சிங்கனெரிகலுழ்விழியானென்
முன்னிதுபுகல்கின்றாய்முடிகுவையினியென்னாக்
கொன்னவிறருகையாற்கொடிறுடைதரமோத
வொன்னலனதுபோழ்தினொலிமுகிலெனவீழ்ந்தான். (௧௪௭)

போழுறுபகுவாயிற்பொலிதருமெயிறோடும்
வீழுறுநகையாலும்விரிகுருதியினாலுந்
தாழுறுமதிதன்னைத்தாரகைநிரைசூழ
வூழுறவமர்செவ்வானொத்ததவ்வுழியன்றே. (௧௪௮)



Digitized By Roja Muthiah Research Library

சண்டனுமிறலோடுஞ்சமன்விடவருதூத
ரண்டலர்வெருவாமுனலமராலுறுகின்றார்
கண்டனனதுசிங்கன்கையனதுயிர்தன்னைக்
கொண்டனைகுதிரென்னக்குறுகினரதுகொண்டார். (கசக)

ஆனதொர்செயல்பாராவசமுகனெனவோது
மானவனிறைநின்னில்வந்தனதுயிருண்ப
லேனையரெனவேநீயெண்ணலையெனையென்னாக்
காணிமிர்தருதேர்மேற்கடுவிசையொடுசென்றான். (கரு0)

சிங்கனதெதிர்செல்லுஞ்செல்லுறழ்பகுவாயா
னங்கணுகிடும்வேலையதிபலமதுவென்போ
னெங்கினியகல்வாய்நீயிற்றனையிவனென்னாப்
பொங்கியசினமோடும்பொள்ளெனவிடைபுக்கான். (கருக)

செந்தழல்புரைவெங்கட்டிறலசமுகனென்போன்
முந்துறமதுவென்னுமொய்ம்பினனெதிர்கோட
லந்தகனொடுகாலனமர்புரிதரவேமுன்
வந்தெதிரெதிர்தன்மைமானுவதெனலாமால். (கருஉ)

அணுகினரிருவோருமசமுகனதுகாலைக்
குணநனிசிலைகொள்ளக்குலவியசிலைகொள்ளாக்
கணிகையர்மிளிர்வேற்கட்கடைநிலவியதென்ன
நுணுகியநுதிவெங்கணோன்கணைசிதறுற்றான். (கருங)

முன்னதுவரலோடுமுகனுறுசெயலோரான்
றுன்னுபுசெறிபோழ்துந்துணைவிழியிமையாதான்
றன்னிலையிறையேனுந்தவிர்கிலனொருதானே
யந்நிலைதனினின்றானடுதிறன்முயல்கின்றான். (கருச)

பாலுறநிமிர்கின்றபழுமரமதுபற்றா
மேலுறுசரம்வீசான்விடுகணைபடமெய்யிற்
சாலிகையெனநின்றான்றகுவனதிரதத்திற்
காலெனவிசைசென்றேகருமுகிலெனவார்த்தான். (கருரு)

ஆர்த்தனனதுகேளாவசமுகனயர்வெய்தித்
தேர்த்தனினிலமீதிற்சிலையொடுகணைசிந்தி
வேர்த்தனன்வறிதுற்றான்விம்மினன்மெலிதன்மை
பார்த்தனன்மதுவென்போனிவையிவைபகர்கின்றான். (கருசு)

வீரனுமலையெஞ்சாவெஞ்சமர்வலனெய்தச்
சூரனுமலைநின்றேசூர்நிலையதுகாணுந்
தீரனுமலையென்னேசெருமுயலுதிநீநின்
னாருயிர்கொடுபோகென்றவனியின்மிசைபோனான். (கருஎ)

பாரிடனிலன்மேவப்பகரசமுகனென்னும்
பேருடையவன்வெள்கிப்பெருமிதமிலனாகிப்
போரிடைவெருவுற்றேனெனவொருபுரையுற்றே
னாரிடையிதுதீர்வனெனவலமருகின்றான். (கருஅ)

Digitized By Roja Muthiah Research Library

ஆயிடையவுணன்முனமர்புரிகிலனுகிப்
போயினனவனந்தோபொன்றுதலினிதென்னுக்
காயமொடுளமானக்கனல்சுடமனம்வேவத்
தீயெனவெகுளுற்முன்செருமுயறிறல்பெற்முன். (௧௫௯)

ஒல்லையினவனேகியுழிதனிதொடராகிற்
கொல்லுவனினியாண்டுக்குறுகினுமகலாதே
நில்லுநில்லெனவாராநீணிறமுகிலென்னச்
செல்லுறழ்பகுவாயாற்றிசைசெவிடுறவார்த்தான். (௧௬0)

அற்றமின்மதுவென்போனசமுகனுரைகேளாக்
கற்றதுமுளகொல்லோகழறிலைசிலவீரம்
பெற்றிலையெனைநாடிப்பெயருதல்பிழையேனு
முற்றனையிசையெற்கோருறுபழிதருகின்முய். (௧௬௧)

என்றிதுபுகல்கின்றேனெதிருறவிகலிப்போய்ப்
பொன்றிகழ்சிலைகோலிப்பொறியுமிழ்பிறைவாளி
யொன்றலபலவுய்ப்பவுருகெழுசினமெய்தி
நின்றனனவையாவுநெடியகைகொடுவீசி. (௧௬௨)

வேறு.

. வைத்தலைப்பகழிமேல்விடுப்பமாமது, வெய்த்திலனிறையுமென்றெண்ணியெண்ணலன், முத்தலைக்கழுவயின்முசலமாதியாங், கைத்தலப்படையெலாஞ்சிதறுங்காலையே. (௧௬௩)

சாரதன்மெய்யுறத்தளர்ந்துதானவன், றேரினைவிரைந்துதன்செங்கையாலெடா
வாரிதிமேற்செலவிடுப்பவஞ்சகன், பாரிடையொல்லையிற்பாய்ந்துமேயினுன். ௧௬௪

குப்புறுகின்றவன்கூளிவேந்தன்முன், வெப்பமொடணுகுறவீங்குதோளினுற்
றுப்புறுமற்றொழிற்றொடங்கவானகத், தப்புறமவன்செலவடிகொண்டோச்சினுன்.

வெய்தெனவிறந்துவான்மீண்டுபூதன்மு, னெய்தினனவனுரத்திடியினெற்றியே
வைதனன்போயினன்மறைந்துமற்றொரு, கைதவனினைந்தனன்ககனம்புக்குளான்.

வரந்தனிற்பெற்றதோர்மாயனேமியைக், கரந்தனிலெடுத்தனன்கருத்திலர்ச்சனை, புரிந்தனன்றொழுதனன்போற்றிப்பூதன்மேல், விரைந்துறவிடுத்தனன்விளியுந்தன்மையான். (௧௬௭)

மாசுறுமசமுகன்மதுவினுகமேற், பாசனம்வியப்பமால்பரிதியுய்த்தலுங்
காசினியவன்வெறுங்கரத்தனுதலின்,வீசியவப்படைவெகுண்டுமீண்டதே. ௧௬௮

கனையிருளுருவினைக்கனலிசேர்ந்தென, முனைகெழுமசமுகன்முடியையட்டதாற்
றனதுகைநேமிதன்னுலுற்றதோர், வினையிலையென்பதுமெய்ம்மைபோலுமால். ()

உலந்தனனசமுகனுருமுவீழ்ந்தென, நிலந்தனில்வீழ்தலுநின்றதானவர்
புலந்தனராழிமால்புடையிற்போயது, தொலைந்ததின்றமரெனுவமரர்துள்ளவே. ()

சாற்றியவவுணர்தந்தலைவரேனையர், நாற்றிறப்படையொடுநடந்துதம்முளஞ்
சீற்றமதாகியேசெருவிளைத்தலு, மேற்றெதிர்சாரதரிரிந்துபோயினுர். (௧௭௧)

வெற்றிகொடானவர்வெகுண்டுபோர்செயப், பற்றலராகியபாரிடத்தவ
ரிற்றனர்வன்மையையிரிந்துபோயினுர், மற்றதுகண்டனன்வலியதண்டகன். ௧௭௨

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

எற்றமாகுமிலக்கவில்வீருட், சாற்றுபேரிசைத்தண்டகப்பேரினன்
கூற்றைநேர்வதொருசிலைகோட்டியே, மாற்றலார்மிசைவாளிகடூவினன். (௧௭௩)

மின்னுாரிவியன்சிலையேசிலை, துன்னுநாணொலிசூருருமேற்றொலி [வே.
பொன்னின்வாளிமழைபொழிந்திட்டதான், மன்னுதண்டகமாப்பெருங்கொண்ட

தட்டின்மொய்ம்புடைத்தண்டகமேலையோன், விட்டவாளிகள்வெய்யவர்தானை
யுட், பட்டகாலைப்பரந்தெழுசோரிநீர், மட்டிவாதருடிஞையின்வந்ததே. (௧௭௫)

இரதமிற்றனவெண்ணிலவண்ணமார், பரிகள்பட்டனபற்பலமாமதக்
கரிகள்பட்டகணிப்பிலவெண்ணிலா, வரிகணேரவுணப்படைபட்டதே. (௧௭௬)

இந்தவாறிவர்பட்டிடவேனையோர், நொந்துதம்முயிர்காப்பநுதலியே
சிந்தியேயெண்டிசையினும்பாரினு, மந்தரத்தினுமாயிரிந்தோடினர். (௧௭௭)

வேறு.

தண்டாவவுணப்படையிவ்வகைசாய்ந்தவாறு
மெண்டானைமள்ளர்பலரங்கணிறந்தவாறும்
விண்டாழ்கதிரைச்சிறைபூட்டியவீரவீரன்
கண்டான்வெகுண்டானகைத்தொன்றுகழறுகின்றான். (௧௭௮)

மட்டார்தெரியன்மகவான்முதல்வானுளோர்க
ளெட்டாதசேணிற்றலைவெய்தியிரிந்துபோக
வட்டாடல்செய்தநமரங்களின்றுவிமாண்டு
பட்டார்கொலீசன்மகனேவுபடைகடம்மால். (௧௭௯)

எல்லார்கதிரைச்சிறைபூட்டியயானுநிற்க
வொல்லார்களாற்றலுளராயடுமூற்றநன்றாற்
கொல்லாதுசீற்றமிலதாயிகல்கொண்டுறேல்
வெல்லாதுகொல்லோவரிதன்னையும்வேழமெல்லாம். (௧௮௦)

வாரார்கழற்காலமராரடமாய்ந்தவெள்ள
மீராயிரத்தின்மிகுமல்லதையெஞ்சுறுதாற்
பேராமலென்பாங்கரினிற்பனபேசில்வெள்ள
மோராயிரமேயிரிகின்றதொழிந்ததெல்லாம். (௧௮௧)

ஒன்றேவரிவிலொருவேன்பிடித்தொன்னலார்மேற்
சென்றேயடல்செய்திலன்முன்னமென்சேனையெல்லாங்
கொன்றேனியானேபொரவிட்டனன்கூழைதன்னி
னின்றேனிஃதோர்பொருளென்றுநினைந்திலேனால். (௧௮௨)

தீருஞ்செயலைநினைந்தாவதென்சென்றியானே
யோரொன்றுகன்னன்முடிகின்றமுன்னொன்னலார்தம்
பேரின்றெனவேயடுவேனதுபெற்றிலேனேற்
சூரன்குமரனலன்யானெனச்சூள்மொழிந்தான். (௧௮௩)

பானுப்பகைவனிவைகூறிப்பரிதிமான்றேர்
மானக்கடுங்கோல்வலவன்மரபிற்கடாவச்
சேனைக்கடலினுடன்சென்றுதன்செங்கைதன்னிற்
கூனற்சிலையைப்புருவத்திநெடுங்குனித்தான். (௧௮௪)

Digitized By Roja Muthiah Research Library

மேதக்கதன்கைச்சிலைவாங்கிவிளங்கும்வெள்ளி
சோதிக்கிறையாயுறுமெல்லையிற் * சூல்கொண்மேக
மூதக்கபாரிற்சொரிந்தென்னமுனிந்துநேரும்
பூதப்படைமேற்சரமாரிபொழிதலுற்றான். (௧௮௫)

பொழிகின்றகாலைத்திறன்மேதகுபூதர்நோக்கிக்
குழிகின்றகண்ணினழல்காலக்குலாசலங்க
ளொழிகின்றவெற்புமுழுதும்பறித்தொல்லைவீசி
யழிகின்றகாலத்துருமேறெனவார்த்துநின்றார். (௧௮௬)

என்றின்பகைஞன்றனைப்பூதர்கள்யாரும்வீசுங்
குன்றம்பலவும்புடைசுற்றக்குறித்துநோக்கி
யொன்றங்கதனுக்கொருகோடியொண்கோலதாகத்
துன்றும்படியேமுறைதூண்டித்துகள்செய்திட்டான். (௧௮௭)

வண்டேதுபூந்தாரவன்வாளியின்மாய்ந்தகுன்ற
நுண்டேளியாகியதுவானிடைநொய்தினேகி
விண்டோர்கடோறுஞ்செறிகின்றவர்மேனிதோயக்
கண்டேியாற்றாதவர்விண்ணிடைக்கங்கைபுக்கார். (௧௮௮)

தேவுத்தடந்தேரொருவன்செருவெல்லைமுற்று
மேவிக்கறங்கிற்றிரிவான்றனிவில்லைவாங்கிக்
கோவைத்தொடையொன்றினிலாயிரகோடிவாளி
தூவிக்கணத்தின்றொகைமுற்றுந்தொலைவுசெய்தான். (௧௮௯)

நன்காலநீவிமிளிர்கின்றநறுநெய்தோய்ந்த
மின்காலதனின்விரைகின்றசெந்தீயின்வெய்ய
முன்காலுகின்றசுடருள்ளனமூன்றுகண்ண
வன்காலனஞ்சவடவல்லனவஞ்சன்வாளி. (௧௯0)

தோளைத்துணிக்குங்கரத்தோடுதுணிக்குமார்பைத்
தாளைத்துணிக்குமெரிகுஞ்சித்தலைதுணிக்கும்
வாளைத்துணிக்குமணிமெய்வயப்பூதர்வாழ்க்கை
நாளைத்துணிக்குமசுரன்விடுநாமவெங்கோல். (௧௯௧)

சூரற்கினியமகன்வாளிதுணித்துவீச
வீரத்தின்மிக்ககணத்தின்றலைவீழுமுன்னர்ச்
சீருற்றசோரிப்புனல்சிந்துவதீயர்சென்ற
பாரைப்புனிதஞ்செயுந்தன்மைபடைத்ததன்றே. (௧௯௨)

பொன்சென்றிலங்குங்கணைதள்ளலும்பூதர்சென்னி
மின்சென்றவானத்தெழச்சோரியுமீதெழுந்த
வென்சென்றனையாங்குமரன்படையேகலென்னாப்
பின்சென்றுபற்றித்தருவான்றொடர்பெற்றிபோலும். (௧௯௩)

எய்யுந்தொழிலுக்கவன்மேலவர்யாவரெங்க
ளையன்படையாகியபூதர்தம்மாற்றன்மொய்ம்புங்
கையும்வரையுஞ்சிரமுங்கழற்காலுமார்பு
மொய்யென்றறுக்குமவுணன்விடுமொன்றொர்வாளி. (௧௯௪)

---

* விளங்கும்வெள்ளிசோதிக்கிறையாயுறுமெல்லையில் என்பதற்கு - அத்தமயன மின்றிச் சூரியனுக்குமுன்னே உதயஞ்செய்யும் வெள்ளி சோதியிலே ஆட்சி யாக வருங்காலத்தில் எனப்பொருள்கொள்க,

Digitized By Roja Muthiah Research Library

வானோர்தொகையைச்சிறையிட்டவன்மற்றிவ்வாறு
தானோர்சிலையின்வலியாலடத்தாவில்பூத
ரானோரளப்பில்லவர்மாய்ந்திடவாற்றலில்லா
வேனோர்கள்யாருமுடைவாரிவையெண்ணலுற்றார். (௧௯௫)

மின்னும்புகர்வேலவனங்குளன்வீரவாகு
பின்னின்றனனீதுணரான்பிறராருமற்றே
முன்னின்றநம்மையிவனட்டிடுமொய்ம்பிலேம்யா
மென்னிங்குநிற்பதெனப்பூதரிரிந்துபோனார். (௧௯௬)

இரிகின்றபூதரெவரும்படைக்கீற்றினின்ற
வரிகின்றதண்டாரடன்மொய்ம்புடைவள்ளல்பாங்கர்ப்
பரிகின்றநெஞ்சத்தொடுசெல்லவப்பான்மையாவுந்
தெரிகின்றனனுக்கிரனென்பதொர்சேனைவேந்தன். (௧௯௭)

கண்டுக்கிரனாகியபூதன்கனன்றுசெங்கண்
விண்டிற்பெரிதுங்கிவப்புற்றுவிளங்குபொன்னந்
தண்டப்படையொன்றினையங்கையிற்றாங்கியேகி
யண்டத்தவர்கள்புகழத்தனியார்த்துநேர்ந்தான். (௧௯௮)

செற்றத்துடனுக்கிரனேர்புகுசெய்கைதன்னைக்
கற்றைக்கதிரைத்தளையிட்டவன்கண்டுதன்கைக்
கொற்றச்சிலையைக்குனித்தாயிரகோடிவாளி
முற்றத்துரந்தேயவன்யாக்கையைமூடியார்த்தான். (௧௯௯)

மைக்கின்றமேனிநெடும்பூதனைவஞ்சன்வாளி
தைக்கின்றிலவானுதிமாய்ந்துதளர்ந்துவீழ்ந்த
மெய்க்கின்றவின்புமறனும்விளையாதவாளா
பொய்க்கின்றவன்கைப்பொருள்வல்லையிற்போவதேபோல். (௨00)

விடுகின்றவாளிபயனின்றயல்வீழ்தலோடும்
படுகின்றதன்மையதுகண்டனன்பானுகோப
னடுகின்றதெவ்வாறிவன்றன்னையென்றங்கண்வானந்
தொடுகின்றதாங்கோரெழுவத்தைச்சுழற்றிவிட்டான். (௨0௧)

தீயன்முசலந்தனையுக்கிரன்செங்கைதாங்கு
மாய்திண்கதையாற்சிதைத்தேயவன்றேரையண்மிப்
பாயும்பரியைப்புடைத்தொல்லையிற்பாரின்வீட்ட
வேயென்றுபல்காலிகழ்ந்தார்த்தனர்யாரும்வானோர். (௨0௨)

புரவித்தொகுதிவிளிவாகப்பொருவின்மைந்த
னெரியிற்கனன்றுபுடையோரிரதத்தின்வாவி
வரிவிற்குனித்துக்கிரனேந்தும்வலியதண்ட
முரிவுற்றிடவேயொருநூறுமொட்டம்புதொட்டான். (௨0௩)

நூறொண்கணையாலவன்றண்டநுண்டூளதாகச்
சீறுந்திறலுக்கிரன்கைக்கொடுதீயன்மைந்த
னேறுந்தடந்தேர்தனைவானினெடுத்துவீச
வீறும்பரிதிபதத்தின்றுணைமேயதன்றே. (௨0௪)

Digitized By Roja Muthiah Research Library

துன்னான்மதலைவருகின்றதுசூரனோக்கி
முன்னாளினின்றுநமைப்பற்றமுயன்றுளான்கொ
லன்னான்புணர்ப்பையுணரேனணித்தாகுமின்ன
மென்னாவதோவென்றுளத்துன்னியிரிந்துபோனான். (௨௦௫)

தேரோடுசென்றவசுரன்மகன்சேணின்மீண்டு
பாரோடுசேர்வான்வருகின்றபரிசுநோக்கிற்
காரோடுவானந்தவறுற்றுழிக்காமர்தாருத்
தூரோடுசாய்ந்துமறிகின்றதொர்தோற்றமொக்கும். (௨௦௬)

வேறு.

வீழுகின்றதேரொருவியேவெங்கதிர்ப்பகைஞன்
றாழுமெய்யுடையுக்கிரன்றன்னைவந்தணுகி
மாழையொண்கையாலெற்றியேயெடுத்துவானுலகோ
ரேழையுங்கடந்தப்புறஞ்சென்றிடவெறிந்தான். (௨௦௭)

எறியும்வெய்யவன்வேறொருதேரின்மேலேறி
வெறிகொள்பங்கயத்தண்ணலார்விதித்துமுன்னளித்த
செறியுமூவிலையிருதலைவேலினைச்சேண்போய்
மறியுமுக்கிரனெதிர்புகவிடுத்தனன்மன்னோ. (௨௦௮)

விடுத்ததெய்வவேலுக்கிரன்மருமத்தைவிடர்போற்
படுத்தியேபுகுந்தப்புறம்போந்திடப்பாரி
னடுத்துமற்றவன்சிறிதயர்வுற்றனனதுகண்
டெடுத்தகுன்றொடுந்தண்டியென்றுரைப்பவனெதிர்ந்தான். (௨௦௯)

தண்டியாகியபாரிடன்றனதுகைத்தலத்தின்
மிண்டுகின்றதோரடுக்கலையவன்மிசைவீசக்
கொண்டவார்சிலைவாங்கியாயிரங்கணைகோத்துக்
கண்டதுண்டமதாக்கினனதனையோர்கணத்தில். (௨௧௦)

வெற்புநுண்டுகளாதலும்விண்ணுறநிமிர்ந்து
கற்பகம்புரைமராமரமொன்றினைக்களைந்து
வற்புறுங்கரந்தனினெடுத்தவுணர்கோன்மணித்தேர்
நூற்புகுந்திடும்பரிகளைப்புடைத்தனன்மொய்ம்பால். (௨௧௧)

மொய்ம்பினிற்புடைத்திடுதலுங்கவனமாமுழுது
மம்புவித்தலைமறிந்தனவதற்குமுன்னவுணன்
பைம்பொன்முத்தலைப்பலபதினாயிரம்பகழி
செம்புனற்கொளத்தண்டிதன்னெற்றியுட்செறித்தான். (௨௧௨)

செறித்தகாலையின்மெலிந்தனன்றண்டியச்செய்கை
குறித்துநோக்கியேபிணாகியாம்பூதனோர்குன்றம்
பறித்துவீசுவான்முயறலுமாயிரம்பகழி
நிறத்தின்மூழ்குமாறெய்தனனனையனுநின்றான். (௨௧௩)

குன்றுகொண்டகைப்பிணாகியுந்தொல்வலிகுறைந்து
நின்றகாலையிலேனையபூதருநேர்ந்து
சென்றுவீற்றுவீற்றமரினைச்சிலபொழுதியற்றி
யொன்றுதீங்கதிர்ப்பகைஞனுக்காற்றலருடைந்தார். (௨௧௪)

Digitized By Roja Muthiah Research Library

எண்டருங்கணத்தலைவர்கடொலைதலுமிதனைக்
கண்டுவெஞ்சினந்திருகியேயெதிர்ந்தனர்கபாலி
யண்டலோசனனிரஞ்சனனுருத்திரனகண்டன்
றண்டகன்முதலிலக்கமாகியபடைத்தலைவர். (உ௧௫)

மிடல்படைத்திடுமிலக்கமாம்வீரரும்விரவித்
தடமணிப்பெருந்தேரொடுமவுணன்முன்சார்ந்து
சுடருடைக்கடகங்கிளர்செங்கையிற்றுன்னுங்
கொடுமரத்தினைக்குனித்தனர்நாணொலிகொண்டார். (உ௧௬)

கவடுபட்டிடுமீரிருமருப்புடைக்கருபக்
குவடுபட்டதையுரைப்பதெனொருகரிக்கொம்பாற்
சுவடுபட்டிடுமேருவுஞ்சலித்ததுதுளங்கிச்
செவிடுபட்டனவானமும்வையமுந்திசையும். (உ௧௭)

பானுகோபன்மற்றதுகண்டுசிறுநகைபடைத்து
மானவெஞ்சிலையொன்றினைத்தோள்கொடுவணக்கி
மேனலந்திகழண்டங்கள்யாவையும்வெருவத்
தேனின்வீழ்ச்சியைமலைந்திடுங்குணத்தொலிசெய்தான். (உ௧௮)

உலத்தின்மேற்படுமொய்ம்புடையிலக்கருமொருங்கே
வலத்தில்வெஞ்சிலையிடத்தினில்வடிக்கணைதொடுத்து
நிலத்தில்வந்துகார்நெடும்புனல்சிதறியநெறிபோற்
புலத்தியன்முறைப்பேரன்மேற்றலைத்தலைபொழிந்தார். (உ௧௯)

தொடலை * யம்புயத்திலக்கமாம்பொருநருந்தொடுத்து
விடுசரத்தொகையவுணன்மேல்வீற்றுவீற்றேக
னெடியதெண்டிரைப்பேரியாறெண்ணிலநிரந்து
புடவிகொண்டதோரளக்கர்மேற்போவனபோலும். (உஉ0)

இலக்கர்விட்டிடுசரமெலாமவுணர்களெவருங்
கலக்கமுற்றிடவருதலுஞ்சூர்மகன்கண்டே
கொலைக்கொடுஞ்சிலைவளைத்ததிலர்யிரகோடி
விலக்கருங்கணைதொடுத்தவையறுத்தனன்விரைவில். (உஉ௧)

அறுத்துமற்றுமோராயிரகோடியம்பதனைச்
செறுத்துவிட்டிடவறுமுகன்பரிசனர்தெரிந்து
விறற்கடுங்கணையாங்கதற்கெழுமையால்விடுத்து
மறித்துமீண்டிடுவித்தனரவுணர்கோன்வாளி. (உஉஉ)

அறந்திறம்பியசூர்மகன்வாளிகளனைத்து
முறிந்துமற்றவன்றன்மிசையுற்றனமுழங்கிச்
செறிந்தமாமுகிலுயிர்த்திடுஞ்சீகரஞ்செல்லா
தெறிந்துகால்பொரவந்துழிமீண்டுபோமியல்போல். (உஉ௩)

செங்கதிர்ப்பகைசீறியேசெயிரிலாவயிரத்
துங்கவெங்கணையபரித ० மிசைமிசைதுரந்து
வெங்கண்வீரர்கள்செலுத்தியசரமெலாம்விலக்கி
யங்கையிற்கொண்டகார்முகமிலக்கமுமறுத்தான். (உஉ௪)

* தொடலை - மாலை "தொடலைக்குறுந்தொடி" என்பதனுனுணர்க.
० அபரிதம் - வளைவில்லாதது; எனவே நேர் எனப் பொருள்கொள்க.

Digitized By Roja Muthiah Research Library

பிடித்தகார்முகமற்றுழிமானவர்பெயர்த்துந்
தடத்ததேரிடையிருந்திடுஞ்சேமமாந்தனுக்க
ளெடுத்துவாங்கியேசரந்துரந்திரவியம்பகைஞன்
றெடுத்துமேல்விடுங்கணைகளையிடையிடைதுணித்தார். (உஉரு)

சூரன்மாமகன்றொடுசரந்துணித்தபின்றூண்டுந்
தேரிலாயிரம்பரியினாறாயிரந்தெழித்துக்
காருலாவருபதாகையிலாயிரங்கடவி
யூரும்வன்மைசேர்வலவன்மேலாயிரமுய்த்தார். (உஉசு)

வசையில்வீரர்களிவ்வகைவிடுத்தலுமனத்திற்
பசையில்சூர்மகனிரதமும்பரிகளும்பாகு
மசனிகொண்டதோர்துவசமுமற்றனவதற்பின்
விசையில்வேறொருதேரிடைப்பாய்ந்தனன்வெகுண்டு. (உஉஎ)

வையமேற்செலுமவுணர்கோன்றன்சிலைவணக்கிச்
செய்யகூர்ங்கணைநூறுநூறாயிரஞ்செலுத்தி
யையன்விட்டவர்தேரொடுசிலைகளையறுத்து
மெய்யிடந்தொறுமழுத்தினனெண்ணிலாவிசிகம். (உஉஅ)

பரிதிமாற்றலன்பகழிகண்மெய்யெலாம்பட்டுக்
குருதிசோர்தலுமிலக்கருந்தொல்வலிகுறைந்து
பெரிதுநோயுழந்தாற்றலராகியேபின்னர்ப்
பொருதிறந்தனைநினைந்திலருடைந்துபின்போனார். (உஉகூ)

வற்புறுத்தியவிலக்கம்வில்லாளருமலைய
விற்பிடித்தவனொருவனேயாரையும்வென்றான்
முற்பகற்புரிதவப்பயனிஃதெனமொழிமோ
கற்பினாற்றலென்றுரைத்துமோகழறுவதெனவையே. (உ௩0)

ஆனகாலையில்வீரகோளரியெனவறையு
மானவீரன்மற்றதுகண்டுதனதுவில்வளைத்துப்
பானுகோபன்முன்னெய்தியேபிறைமுகப்பகழி
சோனைமாரியும்விம்மிதமுற்றிடச்சொரிந்தான். (உ௩க)

சொரிந்தகாலையிலதுகண்டுசூரன்மாமதலை
சிரந்துளக்கியேயீங்கிவனாற்றலுந்திறலும்
பெருந்தனிச்சிலைவிஞ்சையுநன்றெனப்பேசி
வரிந்தகார்முகங்குனித்தனன்பனித்தனர்வானோர். (உ௩உ)

குனித்தசாபத்தினாறுநூறாயிரகோடி
நுனித்தவச்சிரநொறிலுடைப்பகழிகளாக்கித்
தனித்துநேர்ந்தவன்விடுத்திடுசரமெலாந்தடிந்து
துணித்திடக்கணையாயிரமழுத்தினன்றோண்மேல். (உ௩௩)

தோளிலாயிரம்வெங்கணையழுத்தலுந்தோலாக்
கோளரித்திறற்பேரினன்கோமகன்றுரந்த
வாளியாவையும்விலக்கியேயாங்கவன்மருமஞ்
சாளரம்படச்செறித்தனனாயிரஞ்சரங்கள். (உ௩௪)



Digitized By Roja Muthiah Research Library

சரங்களாயிரமகலமேலழுத்தலுந்தருவ
னிரங்கிரோயுழுந்தாற்றவுமுனிவுசெய்திவனைக்
கரங்கொள்வில்லினால்வெல்லரிதாமெனக்கருதி
யுரங்கொள்விண்டுவின்படைக்கலந்தனையெடுத்துய்த்தான். (௨௩௫)

நாரணன்படையாங்கவனுருக்கொடுநடந்து
வீரகோளரிவிடுத்திடுசரமெலாம்விழுங்கிப்
பாருமண்டமுநடுக்குறவிடிக்குரற்பகுவாய்க்
காரிரிந்திடவார்ப்பொடுகடிதுசென்றதுவே. (௨௩௬)

விண்டுவின்படையணுகலும்விறலரியதனைக்
கண்டுமால்படையெடுக்குமுனப்படைகடிதாய்
வண்டுலாந்தொடைமார்பிடம்புகுந்துமன்னுயிரை
யுண்டதில்லையாலவசமாக்கியதவனுணர்வை. (௨௩௭)

அண்ணலேந்திடும்வேற்படையானையாலனையா
னுண்ணிலாவுயிர்கொளவஞ்சியெருவைநீருண்டு
கண்ணனார்படைசிறிதுதன்வன்மையுங்காட்டித்
துண்ணெனப்பின்னர்மீண்டதுசூர்மகன்றன்பால். (௨௩௮)

மீண்டகாலையில்வீரகோளரியவண்வீழ்ந்து
மாண்டுளானெனமயங்கினனங்கதுவயமார்த்
தாண்டனென்பவன்கண்டுதன்றனிச்சிலைகுனித்து
மூண்டசெற்றமொடணுகினன்கதிர்ப்பகைமுன்னர். (௨௩௯)

ஓங்கல்வாகுடைவீரனோர்ந்திடுமுனொண்கையிற்
றாங்கும்வில்லினையவுணனோராயிரஞ்சரத்தா
லாங்கனந்துணித்தாயிரங்கணைநுதலழுத்த
வேங்கினார்சுரரனையன்வேறொருசிலையெடுத்தான். (௨௪௦)

எடுத்தகார்முகம்வாங்குமுன்னிரவியம்பகைஞன்
றொடுத்துநூறுகோலதனையுமோரிருதுணியாப்
படுத்தோராயிரம்பகழியாற்றேரொடும்பரியை
முடித்துவாளியோரேழுநூறுய்த்தனன்மொய்ம்பில். (௨௪௧)

தேரழிந்திடச்சிலையதுமழிந்திடத்திறல்சேர்
பேரழிந்திடத்தனிமையாய்நின்றவன்பிரியா
வூரழிந்திடவறியனும்பரிதிபோலுற்றுன்
காரழிந்திடவார்த்தனன்கிளர்ந்தெழுங்கதத்தான். (௨௪௨)

பராகமாப்புவியகழ்ந்திடுபணைமருப்பிரட்டை
வராகமாயிரத்தாற்றல்பெற்றுடையசூர்மகன்மேல்
விராகநெஞ்சுடைவிறற்கதிர்பாய்ந்தனன்விண்மே
லிராகுவின்மிசைத்தினகரன்வாவினானென்ன. (௨௪௩)

பாய்ந்துதிண்டிறல்வெய்யவன்வெய்யவன்பகைஞ
னேந்துவார்சிலைபறித்திருதுணிபடுத்தெறிய
வேந்தன்மாமகன்வெகுண்டுதன்மருங்கிடைவிசித்த
சார்ந்தகம்முரீஇக்குற்றினன்மருமத்தினடுவண். (௨௪௪)

Digitized By Roja Muthiah Research Library

வீரவெய்யவனுரமிசைச்செலுத்தியவெங்கட்
கூரும்வாட்படைவாங்குமுன்னுங்கவன்குருதி
சூரியன்பகையகலம்வந்துற்றதுதூயோன்
றூரைவாளொன்றுமாறுபோய்க்குற்றியதகவின். (௨௪௫)

குற்றிவாங்குமுன்வீரமார்த்தாண்டனுங்கொதித்துக்
கற்றைவெஞ்சுடர்ச்சுரிகையைமருங்குறைகழித்து
மற்றவன்மணிமார்பத்துவயிரவான்கவச
மிற்றிடும்படிகுற்றினன்யாவருமிரங்க. (௨௪௬)

கிளைத்திடுந்திறல்வெய்யவன்குற்றலுங்கேடு
விளைத்தசூர்மகன்றன்னுடைச்சுரிகையாண்மீட்டுங்
குளத்தின்மூழ்குறக்குற்றினனன்னதோர்குற்றிற்
களைத்துவீழ்ந்தனன்கால்பொரமறிந்தகற்பகம்போல். (௨௪௭)

தாழ்ந்தசோரியுமலக்கணும்பெருகுறத்தடந்தேர்
வீழ்ந்தவன்றனைவிளிந்தனனிவனெனவிடுத்துத்
தாழ்ந்ததோர்பெருந்தனுவினையெடுத்துழிதன்னிற்
சூழ்ந்ததானையோடேற்றனன்சூரியன்பகைஞன். (௨௪௮)

ஏற்றுநேர்வருசூரன்மாமதலையையெதிர்ந்து
போற்றலார்புகழ்வீரராக்கதனெனும்பொருநன்
காற்றின்வந்தனன்றுணைவர்கடொலைந்ததுங்கண்டான்
சீற்றமுள்ளுறநிமிர்ந்தெழக்குனித்தனன்சிலையை. (௨௪௯)

சிலைகுனித்தொருபத்துநூறயிற்கணைதெரிந்தே
யொலியுடைக்கழற்சூரன்மாமதலைமேலுய்ப்ப
விலகியத்தொகைப்பகழியானம்பிதன்வியன்றேர்
வலவனைத்தலைதுணித்தனன்வாளிநூறதனால். (௨௫0)

நூறுவாளியாற்சூதன்மாண்டிடுதலுநொடிப்பில்
வேறொர்பாகனைவீரராக்கதனிறீஇவெகுளா
வாறுமாமுகனடிநினைந்தாயிரங்கணையாற்
கூறுசெய்தனனவுணர்கோன்றிருமணிமகுடம். (௨௫௧)

உவமைநீங்கியவைவகைத்தாயவேற்றுருவின்
மவுலியிற்றிடத்திருவின்றிமன்றநாணெய்தி
யவதியில்லதோர்பெருஞ்சினமூண்டெழவவுணன்
குவடிலாமணிக்குன்றுபோனின்றனன்குறுகி. (௨௫௨)

மணியிழந்திடுமரவுபோற்கதிரிலாவான்போற்
பணையிழந்திடுங்கற்பகப்பழுமரந்தனைப்போற்
றுணைமருப்பினையிழந்திடுந்தந்திபோற்றொல்லை
யணியிழந்திடுமகளிர்போலழகிலனானன். (௨௫௩)

இற்றொழிந்திடுமகுடநீத்தேவலரளித்த
கற்றையொண்சுடர்மவுலியொன்றினைமுடிகவித்து
வெற்றிவீரராக்கதன்விடுசரமெலாம்விலக்கி
மற்றவன்சிலைதுணித்தனன்வாளியாயிரத்தால். (௨௫௪)

Digitized By Roja Muthiah Research Library

ஆடல்வெஞ்சிலையறுத்தலும்வயமுடையரக்க
னாடியோர்தனுவெடுக்குமுன்னிளங்கதிரை
வீடருந்தலையிட்டவன்விசிகமாயிரத்தாற்
பாழ்செய்தனனவையவன்றனதுதேர்ப்பரியை. (௨௫௫)

மாய்ந்துமாத்தொகைபடுதலும்வீரனோர்மணித்தேர்
பாயந்தகாலையிலிரவிமாற்றலனவன்பாணி
யேந்துவில்லினையாயிரம்பகழியாலிறுப்ப
வேந்தன்மாமகன்றன்மிசையயிலொன்றுவிடுத்தான். (௨௫௬)

விடுத்தவேலினைநூறுகோலெறுடுத்தவன்வீட்டத்
திடத்தின்மேற்படுவீரராக்கதனதுதெரிந்து
தடத்ததேரினுமிழிந்தறைகூவியேதனிபோ
யெடுத்தெறிந்தனன்பானுகோபன்றனியிரதம். (௨௫௭)

எறியுமெல்லையிற்றகுவர்தங்குரிசில்விண்ணெழுந்து
வெறிகொள்பங்கயத்தண்ணன்முன்கொடுத்ததோர்வேலைச்
செறுநனவியையுண்கெனவிடுத்தலுஞ்சென்று
விறலரக்கன்மேற்பட்டதங்கலையனும்வீழ்ந்தான். (௨௫௮)

தரையில்வீழ்ந்திடும்வீரராக்கதனனிதளர்ந்தான்
முருகனுனையாற்போந்திலதவனுயிர்முன்ன
மிரவியம்பகைதிகிரியின்மறிந்துளானெழுந்து
பொருதல்வன்மையின்றுகியேயிடைந்துபின்போனான். (௨௫௯)

போனகாலையில்வேறொருதேரிடைப்புகுந்து
பானுமாற்றலன்வணக்கியோர்கார்முகம்பற்றி
யூனுமாவியுங்கவர்ந்திடுசரமழையோச்சி
யேனைவீரர்கடம்மையும்வெல்லுமாறெதிர்ந்தான். (௨௬௦)

வீரவந்தகன்வீரமாமகேச்சுரன்வீர
தீரன்வீரமாமகேந்திரன்றிறற்புரந்தரனு
நேரிலாரிவரைவருஞ்சிலைகொடுநேர்ந்து
சூரியன்பகைவன்மிசைக்கணைமழைசொரிந்தார். (௨௬௧)

சொரிந்துவேறுவேறளவையிலாதபோர்த்தொழிலைப்
புரிந்துபின்னுறச்சூர்மகன்சரங்கண்மெய்புதைய
வருந்திநின்றனரிருவர்கண்மறிந்தனரொருவ
ரிரிந்துதேர்சிலையழிந்துநொந்தேகினரிருவர். (௨௬௨)

வேறு.

சாற்றுமித்திறம்வீரர்கள்யாரையுந்தனிமைந்தன்
வீற்றுவீற்றமராடியேவென்றிகொண்டிடும்வேலை
யாற்றலின்றிமுன்பின்றியவவுணர்தானைகண்முற்று
நாற்றிசைக்கணும்வந்துவந்தவனைநண்ணியவன்றே. (௨௬௩)

பின்றுசேனைகள்யாவையுந்தன்னயற்பெயர்த்தும்வந்
தொன்றவேயிரவியம்பகைவருதலுமுதுகண்டா
னன்றுநன்றிவனாற்றலின்றிறமெனநகைசெய்தா
னென்றுநாக்கிதன்கணைத்தரிற்றலைமைபெற்றிருக்கின்றான். (௨௬௪)

Digitized By Roja Muthiah Research Library

வாகைமொய்ம்புடைமேலையோன்மாலயன்றனக்கெட்டா
வேகநாயகன்றிருமகன்றாளிணையினிதுன்னி
யோகையானனிவழுத்தியேபோர்த்தொழிலுளங்கொண்டு
சேகுநெஞ்சுடைப்பானுகோபன்முனஞ்செலலுற்றான். (௨௬௫)

அரியுநான்முகத்தொருவனுங்குனித்திடவறத்தேவுஞ்
சுருதிமாமறைத்தொகுதியுங்குனித்திடச்சுரர்கோவு
மிரவியண்ணலுமதியமுங்குனித்திடவிகலாடற்
றிருவுமோடியுங்குனித்திடக்குனித்தனன்சிலைதன்னை. (௨௬௬)

விசையெடுத்திடுமூதையும்வடவையும்வெருக்கொண்டு
வசையெடுத்திடவளக்கருந்தம்மொலிவறிதாகத்
திசையெடுத்திடுமண்டமும்புவனமுஞ்சிதைந்தேமா
றிசையெடுத்திடவெடுத்தனன்சிலையினாணிசைதன்னை. (௨௬௭)

நாணொலிக்கொடுவெஞ்சமர்புரியமேனடப்பானைக்
காணலுற்றனன்றினகரற்சினவியகதக்கண்ணா
னேனுடைப்பெருங்கார்முகமொன்றுவேறெடுத்திட்டான்
சேணிலத்தவர்பணித்திடக்குனித்தொலிசெய்திட்டான். (௨௬௮)

முன்புதிண்டிறல்வாகுவின்வாகுவின்முழக்கத்தை
யன்பினாடியவமரர்களளவைதீர்மகிழ்வெய்திப்
பின்புசூர்மகன்சிலையொலிகேட்டலும்பேதுற்றே
யின்பதுன்பங்களொருவழிக்கண்டனமிவணென்றார். (௨௬௯)

புகழ்ச்சிமேலவன்குணத்தொலிசெவிக்கொடுபொலிந்தோர்க
ளிகழ்ச்சிமிக்கவன்குணத்திசைகேட்டலுமிரங்குற்றார்
திகழ்ச்சியாரமுதுண்டவர்நஞ்சமுண்செயல்போன்றார்
மகிழ்ச்சியீற்றினிற்றுன்புவந்தடைவதோர்வழக்கன்றே. (௨௭௦)

மாயனான்முகன்மகபதிமுதலியவானோர்கள்
காயம்யாவினுநிரந்தனரமர்த்தொழில்காண்பாரா
யாயபோழ்தினிற்சூரபன்மாவருளசுரேசன்
றூயவன்றனைநோக்கியேயினையனசொல்கின்றான். (௨௭௧)

கோதைவேலினாற்றாரகன்றனையடுகனல்லை
யாதியேனமாய்ப்புவியினைக்கிளைத்திடுமரியல்லை
வேதநான்முகத்தவனல்லைவிண்ணுளோர்வேந்தல்லை
தூதனாகியநீகொலென்னெதிர்பொருந்தொழில்வல்லாய். (௨௭௨)

இழைத்தமாயையான்முற்பகற்போர்தனையெங்கோன்முன்
பழித்திறஞ்சிலகூறினையிளவலைப்படுத்திட்டா
யழித்திமாநகர்யானஃதுணர்ந்திலனதனாலே
பிழைத்தியன்றெனினுய்ந்திவண்வந்திடப்பெறுவாயோ. (௨௭௩)

பொருதுவென்றிகொண்டுனதுயிர்நடுவனூர்புகுவிப்பன்
சரதமிங்கிதுபிறந்திடுமளவையிற்றழல்காலும்
பரிதியைச்சிறைபிணித்தவனெற்றனைப்படுத்தானென்
றொருதனிப்பழிகொள்வதல்லாற்புகழுறுவேனோ. (௨௭௪)

Digitized By Roja Muthiah Research Library

முனைமுடித்தநின்றுணைவரைவென்றனன்முரட்பூதர்
தனையடர்த்தனன்சிங்கனனனிகமுந்தனிநேர்ந்த
வுனைமுடிக்குவனுனைவிடுத்தோனையுமுலைவித்தென்
சினமுடிக்குவன்மகபதிதன்னையுஞ்சிறைசெய்வேன். (உ௭௫)

என்றகாலையில்வீரவாகியம்புவானெவரேனுஞ்
சென்றுபோர்புரிவார்தமைவெல்வதேதிறலாகும்
பின்றுவார்தமையடுவதேவசையலாற்பிறிதுண்டோ
வென்றியெய்துவாருரைப்பரோபோர்புரிவிரைந்தென்றான். (உ௭௬)

வேறு.

என்னுமாத்திரத்திரவியம்பகைஞனீரைந்து
பொன்னெடுங்கணையெடுத்துவார்சிலையிடைப்பூட்டி
மின்னுவாமெனவிடுத்தலும்வீரனும்விரைவி
லன்னவீரைந்துவாளிதொட்டவற்றினையறுத்தான். (உ௭௭)

ஆறுநாலுவெம்பகழியுமறுத்தபின்னறிஞ
னூறுவாளிகள்விடுத்தலும்வந்ததுநோக்கி
வீறுமத்தொகைச்சரங்கள்விட்டவையிடைவீட்டி
யீறிலான்மகன்மீதிலாயிரங்கணையெய்தான். (உ௭௮)

ஆயிரங்கணைதூண்டிமற்றவற்றினையறுத்துத்
தூயவன்பதினாயிரஞ்சுடுசரந்துரப்பத்
தீயனத்தொகைவாளியாலங்கவைசிந்தி
யேயெனக்கொடும்பகழிநூறாயிரமெய்தான். (உ௭௯)

உய்த்தவாளிநூறாயிரந்தன்னையுமுரவோ
னத்தொகைப்படுபல்லவந்தூண்டியேயறுத்துப்
பத்துநூற்றின்மேலாயிரம்பெற்றிடும்பகழி
மெய்த்தழற்கதிரிரவியம்பகைஞன்மேல்விடுத்தான். (உ௮௦)

விடுத்தவாளியைப்பத்துநூறாயிரம்விசிகந்
தொடுத்துமாற்றியேசூரபன்மாவருடோன்ற
லெடுத்துநூறுநூறாயிரம்புங்கவமேவ
னொடிப்பில்வீட்டினனனையனசிலீமுகநோக்கி. (உ௮௧)

வஞ்சனேவினைமாற்றியேயெம்பிரான்மதலை
செஞ்சவாளிநூறாயிரகோடிகள்செலுத்தக்
கஞ்சமாமகளுயிர்த்திடுதிருமகன்கணிப்பில்
புஞ்சவார்கணையிறுதிநாண்முகிலெனப்பொழிந்தான். (உ௮௨)

பார்மறைந்தனதிசையெலாமறைந்தனபடர்மூந்
நீர்மறைந்தனகுலகிரிமறைந்தனநிலவுங்
கார்மறைந்தனககனமுமறைந்தனகதிரோன்
றேர்மறைந்தனவிருவர்தங்கணைமழைசெறிய. (உ௮௩)

பாரிவட்டமுமாதிரவட்டமும்பரவை
வாரிவட்டமுநேமியின்வட்டமுமலிவான்
மூரிவட்டமுமண்டத்தின்வட்டமுமுடுகிச்
சாரிவட்டமாய்த்திரிவனவனையவர்தடந்தேர். (உ௮௪)

Digitized By Roja Muthiah Research Library

மாறில்வாளிகண்முறைமுறைசொரிதலான்மறைவ
ரீறுசெய்தவையகற்றுழித்தோன்றுவரிமைப்பில்
வேறுவேறதாயித்திறங்கிழ்த்திடும்வீரர்
சூறைபோலமராடினருலகெலாஞ்சுற்றி. (உஅரு)

இரவிவானவன்றனதிண்டேரினுமீர்க்கும்
புரவிமீதினுமுடுபதிமானத்தும்புறஞ்சூழ்
கரிகண்மீதினும்விண்ணுலாவமரர்தங்கண்ணும்
பொருவிலாளியர்விடுகணைசிதறியேபோமால். (உஅசு)

செங்கண்வீரர்களிருவரும்பொருவதித்திசையென்
றங்குநாடரிதவர்விடும்பகழிகளனந்த
மங்குல்வானெலாநிரந்தனமிசையினும்வருமா
லிங்குநிற்கரிதெமக்கெனவோடினரிமையோர். (உஅஎ)

புடவிகீழ்வனவண்டங்கடுளைப்பனபுறத்திற்
கடலொரேழையும்பருகுவபுவனங்கள்கடப்ப
வடலின்மேதக்கயாவருந்தடுத்திடற்கரிய
வடவைநாவையுந்துணிப்பனவவர்விடும்வாளி. (உஅஅ)

இகல்கடந்திடுதிண்டிறல்வாகுவுமிரவிப்
பகையுமாற்றியபெருஞ்சமர்வலியையார்பகர்வார்
மிகுதிகொண்டபல்கணைமழையுலப்புறவிடுப்பத்
திகிரியம்படைபோன்றனவனையர்கைச்சிலைகள். (உஅகூ)

வெய்யவன்றனைத்தலையிடும்வெய்யவன்விறலார்
துய்யமொய்ம்பினன்விடுசரமாரியைத்தொலைத்துக்
கையிருந்திடுகார்முகமொன்றையுங்கடிதி
னையிரண்டுநூறயிற்கணையாலறுத்தார்த்தான். (உகூ0)

ஆர்த்தகாலையில்வீரவாகுப்பெயரறிஞன்
பேர்த்துமோர்தனுவாங்கியேபெருஞ்சினம்பிடித்துச்
சூர்த்தவெங்கணையாயிரம்விரைவினிற்றூண்டி
மூர்த்தமொன்றினிலவுணனேந்தியசிலைமுரித்தான். (உகூக)

முரித்தகாலையினவுணர்கோனுற்றவுமுனிந்து
கரத்தின்மற்றொருசிலைகுனித்தாயிரங்கணைக
ளுரத்தினம்பியுமணங்குறவிடுத்தலுமோரேழ்
சரத்தினலவன்றனிப்பெருமவுலியைச்சாய்த்தான். (உகூஉ)

வாய்த்தபன்மணிகுயிற்றியகனகமாமவுலி
சாய்த்தகாலையின்வேறொருகதிர்முடிதன்னை
யேத்தல்சான்றிடுசூர்மகன்புனையுமாறெடுத்தான்
பூத்தசெங்கதிரவனைமுன்பிடித்தவாபோல. (உகூங)

எடுத்தபொன்முடிசென்னியிற்கவித்தனனிதன்முன்
வடித்தவெங்கணையாயிரந்தூண்டிமற்றவன்மே
லடுத்தசாலிகைசிந்தினன்சிந்தியவளவி
னடித்துநல்லறம்பாடினபரிதியுநகைத்தான். (உகூச)

Digitized By Roja Muthiah Research Library

நிருதர்போற்றிடுசூர்மகனுயிரநெடுங்கோல்
சுருதிநாயகனிளவறன்னுதலிடைத்துரப்பக்
குருதிநீருண்டுகுழுவொடுந்தோன்றுவகுணபாற்
பரிதிவானவனிளங்கதிர்விரிந்தெழும்பரிசின். (உகூரு)

நெற்றிமீதகோலாயிரம்படுதலுநிறையிற்
சற்றுநீங்கிலன்றன்வலிசுருங்கிலன்றக்கோன்
பற்றியங்கையாற்பறித்தவைவீசினன்பகைஞன்
கொற்றவெய்யகோல்விளிவின்றிநின்றிடுங்கொல்லோ. (உகூசா)

சகத்தைநல்கியவறுமுகற்கிளவலத்தகுவன்
முகத்திணுயிரமகலத்திணுயிரமொய்ம்பி
னகத்திணுயிரங்கரங்களிணுயிரமாக
மிகைத்தவெங்கணைதெரிந்தொருதொடையினில்விடுத்தான். (உகூஎ)

விட்டவாளிகள்சூர்மகனவயவம்விரவிப்
பட்டுமூழ்கலுமவசமாய்த்தளர்ந்தனன்பாணி
நெட்டிருஞ்சிலையூற்றமாய்வறியனாய்நின்றான்
றொட்டதெண்கயத்தூறிமேலெழுந்ததுசோரி. (உகூஅ)

வந்துவந்தெழுகுருதிநீர்முழுதுடன்மறைப்பப்
புந்திதன்னிடைச்சீற்றமுமூண்டெழப்பொலிவான்
செந்தழற்பிழம்பாலுயர்குன்றெனத்திகழ்ந்தா
னந்திமேற்றிசையெழிலியின்வண்ணமுமானான். (உகூகூ)

ஆனபோழ்தினிலவுணமாத்தலைவர்கள்யாரும்
பானுமாற்றலன்பொருவலியின்மையைப்பாராச்
சேனைநாற்பெரும்பரவையினோடுமுன்சென்று
மானவேற்படைவீரவாகுவின்புடைவளைத்தார். (௩00)

இலைபிறங்கியசூலம்விட்டேறுதண்டெழுவ
முலைபிறங்கியகணிச்சிநேமிப்படையோங்குஞ்
சிலைபிறங்கியபகழிகள்வீரன்மேற்செலுத்தி
மலைபிறங்கியவிரவிசூழ்திமிரெனமறைத்தார். (௩0க)

வேறு.

தொடைக்கலனிலவுமார்பிற்றொல்லசுரேசர்கொண்ட
படைக்கலமானவெல்லாம்விடுத்தலுந்தனதுபாணி
யிடைக்கலந்திருந்தவார்விற்குனித்தனனிடுக்கட்பட்டோ
ரடைக்கலம்புகுதும்வெள்ளியருவரையளித்தவண்ணல். (௩0உ)

ஆயிரகோடிகோடியடுசரந்தொடையொன்றாக
மாயிரும்புயத்துவள்ளல்வல்லையின்வலிதுதூண்டித்
தீயவருடன்றுவிட்டபடையெலாஞ்சிந்தலுற்றான்
பாயிருட்படலங்கீறுஞ்செங்கதிர்ப்பரிதியேபோல். (௩0௩)

அவுணர்கள்யாருமுய்த்தவடுபடைமாரிசிந்திக்
குவவுறுவிசயத்தோளான்கொடுஞ்சரமனந்தகோடி
தவறிலவாகவுய்த்துத்தகுவர்தந்தானைமுற்று
முவரியுண்வடவைபோலவொல்லையின்முடிக்கலுற்றான். (௩0ச)

Digitized By Roja Muthiah Research Library

தோலினையறுக்கும்வாளைத்துணித்திடுஞ்சோதிவில்லின்
காலினையறுக்கும்வெய்யகணிச்சியையறுக்கும்வீசுங்
கோலினையறுக்குநேமிக்கொடும்படையறுக்குங்காமர்
வேலினையறுக்குமம்மாவிடலைதன்வீரவாளி. (௧௦௫)

வேறு.

உரந்துணிக்குங்கவசமிடுமுரந்துணிக்கும்புயந்துணிக்குமொன்னலார்தங்
கரந்துணிக்குமடல்புரிமோகரந்துணிக்குங்கழறுணிக்குங்கணிச்சிகைத்தோ
மரந்துணிக்குங்குனித்தகொடுமரந்துணிக்கும்வாய்துணிக்குமவுலிதாங்குஞ்
சிரந்துணிக்குமெறிந்திடும்வச்சிரந்துணிக்குமுரவோன்றன்செங்கைவாளி. (௧௦௬)

கதமறுக்கும்வதமறுக்குந்தூங்குபுழைக்கையறுக்குங்கபோலத்தூறு
மதமறுக்குநுதலறுக்கும்வாயறுக்குஞ்செவியறுக்கும்வயிரக்கோட்டின்
விதமறுக்கும்வாலறுக்குமெய்யறுக்குந்தலையறுக்கும்வேழஞ்செல்லும்
பதமறுக்குமுரணறுக்குமரணறுக்கும்வீரன்விடுபகழிமாரி. (௧௦௭)

ஆரறுக்குஞ்சகடறுக்குமச்சறுக்குநெடுந்துவசமறுக்குந்தேரின்
பாரறுக்குங்கூம்பறுக்கும்பாகறுக்குமங்கணூறும்பதகராவி
வேரறுக்குமடியறுக்கும்விரிதருகொய்யுளையறுக்கும்விளங்குஞ்செம்பொற்
றாரறுக்கும்புரவிகளின்றலையறுக்குநிலையறுக்குஞ்சரங்கண்மன்னோ. (௧௦௮)

கானோடும்வரையோடுங்கரையோடுந்திரையோடுங்கழியினோடு
மீனோடுங்கடலோடும்விசையோடுந்திசையோடுமேகமோடும்
வானோடுநிலனோடுமிருகதிரின்மருங்கோடும்வாளத்தோடுந்
தேனோடும்பூந்தாரான்சிலையோடுநெடும்பகழிசிந்துஞ்சென்னி. (௧௦௯)

வேறு.

பாயிரும்புனல்போலோடிப்படியெனப்பரந்துநீடித்
தேயுவின்றிறன்மேல்கொண்டுசேணெனமுடிவின்றாகி
வாயுவின்விரைந்துசென்றுவள்ளல்கைவாளியொவ்வொன்
றாயிரகோடிசென்னியறுக்கினும்வெறுக்கிலாவே. (௧௧௦)

வரந்தனிற்றலைமைசான்றவொருசிலமானவீரர்
சிரந்தனைத்துணித்துக்கொண்டுசீர்கெழுசூரன்வைகும்
புரந்தனிற்கொடுபோயன்னோர்பொற்றொடிமடந்தைமார்தங்
கரந்தனினுகுத்துச்செல்லுங்கந்தனுக்கிளவல்வாளி. (௧௧௧)

புரண்டனவயவர்யாக்கைபொழிந்தனகுருதித்தாரை
யுருண்டனமான்றேராழியுலவினபலவுங்கூளி
திரண்டனகுணங்கரீட்டஞ்செறிந்தனசேனம்பிள்ளை
யிருண்டனதிசைகண்முற்றுமிரிந்தனவொழிந்ததானை. (௧௧௨)

பட்டனபுரவிப்பந்திபடிந்தனமுடிந்தவேழங்
கெட்டனரவுணர்யாருங்கிடந்தனவொடிந்ததிண்டே
ரட்டனனொருவனின்றானகலிருவிசும்பைவல்லே
தொட்டனபிணத்தின்பொம்மல்சோரியாறொழுகிற்றன்றே. (௧௧௩)

பாய்ந்திடுகுருதிநீத்தம்படர்ந்ததுபுகுந்துபௌவஞ்
சேர்ந்ததுசுறவுமாந்திச்செருக்கியதிறலோனம்பால்
வீந்திடுமவுணராவிவிடுத்தனர்சென்றுதந்தா
ளோய்ந்தனர்நடுவன்றூதரொழிந்தனகழிந்தபூசல். (௧௧௪)



Digitized By Roja Muthiah Research Library

சிந்தியவவுணர்தானைச்செய்தியும்பரிதிக்கூற்ற
ஞெந்தனன்றமியனின்றதன்மையுநோக்கிநோக்கி
நந்தமதண்ணறன்பானன்னுதுமென்ளுமீண்டு
வந்தனமுந்துசாய்ந்தவயப்பெரும்பூதவெள்ளம். (௬௧௬)

இரிந்திடுபூதவீரரியாவருமீண்டார்நின்று
வருந்தியதலைவர்தொல்லைவன்மிடல்பெற்றாரங்க
ணருந்துயருழந்துவீழ்ந்தாராவியோடெழுந்தாரின்னோர்
பொருந்தனிவீரவாகுப்புடையுறவளைந்துபுக்கார். (௬௧௭)

அங்கதுபோழ்துதன்னினயர்வுயிர்த்துணர்வுதோன்றச்
செங்கதிரோனைச்சீறுஞ்சேவகன்சுற்றுநோக்கிச்
சங்கையினிமிர்ந்தகொள்கைத்தன்பெருஞ்சேனைகாணுன்
கங்கமுங்கழுகுமார்க்குங்களேபரச்சூழல்கண்டான். (௬௧௮)

நேருறுதனிவில்லாளிநின்றதுநோக்கிநம்பாற்
சாருறுமனிகமெல்லார்தடிந்தனனிவனென்றுன்னி
யாரிடையடங்கிற்றம்மாவாண்மைக்குமவதியுண்டோ
வீரன்மற்றிவனேயல்லால்வேறிலைபோலுமென்றான். (௬௧௯)

இனையனவியந்துபின்னுமென்னெதிர்பொருதவீர
ரனைவரும்விளிந்தோரன்றியடல்வலிபடைத்தோரில்லை
குனிசிலையொருவனின்றான்கொற்றமுற்றிடுவனம்மா
தினகரன்பகைஞனற்றல்சீரிதுசீரிதென்றான். (௬௨௦)

கன்னலொன்றளவைதன்னிற்கந்தவேளொற்றன்யாக்கை
சின்னபின்னங்களாகச்செய்குவன்செய்திடேனேற்
பின்னுயிர்வாழ்க்கைவேண்டேன்யான்பிறந்தேனுமல்லே
னென்னொருசிலையும்யானுமெரியிடைப்புகுவனென்றான். (௬௨௧)

வஞ்சினமிளையகூறிமாதிரக்கிழவன்மைந்த
னெஞ்சினில்வெகுளித்தீயுமானமுநீடியோங்க
வெஞ்சலிலீசன்முன்னமேகியகொடுஞ்சென்னச்
செஞ்சிலைவீரன்முன்னந்தேரொடுஞ்சென்றுசேர்ந்தான். (௬௨௨)

கைத்தலத்திருந்ததொல்லைக்கார்முகம்வளையவாங்கி
முத்தலைப்பகழியங்கோராயிரம்விடுப்பமொய்ம்ப
னத்திறத்தியன்றவாளியாயிரஞ்சிலையிற்பூட்டி
யுய்த்தனனறுத்துப்பின்னுமோராயிரஞ்சரங்கள்விட்டான். (௬௨௩)

அற்றதுதெரிந்துதீயோனுயிரம்விசிகந்தூண்டி
மற்றவைவிலக்கிப்பின்னும்வாளியோரயுதந்தொட்டுக்
கொற்றவன்றேரும்பாகுங்குரகதக்குழுவுமாயச்
செற்றனனதனைநோக்கிச்சேனுளாரலக்கணுற்றார். (௬௨௪)

வில்லொடும்வீரவாகுவேறொருதேர்மேற்பாய்ந்து
வல்லிதினூற்றுநூறுவாளிகடுரந்துவெய்யோன்
சில்லியந்தேருமாவும்வலவனுஞ்சிலையும்வீழப்
பல்லிருந்துண்டஞ்செய்தான்விண்ணவர்பண்ணையார்ப்ப. (௬௨௫)

Digitized By Roja Muthiah Research Library

பூங்கழன்மிழற்றவேறோர்பொன்னவாந்தேரின்மீப்போ
யாங்கொருசாபம்பற்றியவுணன்றன்செவியின்காறும்
வாங்கினனேழுநூறுவச்சிரப்பகழிபூட்டி
யோங்கலம்புயத்துவீரனுரத்திடைப்புகவுய்த்தார்த்தான். (௩௨௫)

ஆகத்திற்பகழிபாயவறுமுகன்றூதன்முன்னஞ்
சோகத்தையுணர்கிலாதோன்றுயரத்தின்சுவையுங்கண்டு
மாகத்திலிரவிதன்னைவன்சிறைபிணித்தோன்சென்னி
காகத்துக்கிடுவனென்றுவெகுண்டனன்காலன்போல்வான். (௩௨௬)

கறுத்திடுவீரனீரேழ்கங்கபத்திரங்களேவி
யறுத்தனன்சிலையைப்பின்னுமாயிரம்பகழிதூண்டி
நொறிற்பரியிரதந்தன்னைநூறினனூறுகோலான்
மறுத்தெதிர்பொருததீயோன்மருமத்தைவாயில்செய்தான். (௩௨௭)

வருந்திலனதற்குமைந்தன்வயினுறுமிரதமொன்றின்
விரைந்துடன்புகலும்வீரன்விசிகமாயிரத்தைத்தூண்டி
யுரந்திறந்திட்டவாற்றலோச்சியேபுறத்திற்றூங்கு
மரந்திகழ்பகழித்தூணிதுணிபடவறுத்தானன்றே. (௩௨௮)

தூவுறுபகழிதூர்க்குந்தூணியிற்றிடலுநேமிக்
காவலன்றனயனம்மாகார்முகவிஞ்சைதன்னான்
மேவலன்வென்றிகோடலரிதெனவினையமுன்னித்
தேவர்தேவுதவுமோகப்படையினைச்செங்கைகொண்டான். (௩௨௯)

சிந்தனைகவருமோகத்தீப்படையவுணன்செங்கை
வந்திடவனையபோழ்தின்மனத்தினால்வழிபாடாற்றி
வெந்திறலணிகத்தோடுமேவலன்றன்னையெய்திப்
புந்தியையழித்துவீட்டிவருகெனப்புகன்றுவிட்டான். (௩௩0)

விட்டிடுமோகமென்னும்வியன்படைவெகுளிவீங்கித்
தட்டுடைநெடுந்தேர்வெய்யோன்றன்பெருஞ்சுடர்கண்மாற்றி
நெட்டிருட்படலைவீசிநிரந்தபல்லுயிருமஞ்சி
யுட்டெளிவகன்றுமாழ்கவொல்லெனப்பெயர்ந்ததன்றே. (௩௩௧)

பெயர்ந்திடுமோகநாமப்பெரும்படையூக்கநோக்கித்
துயர்ந்தனர்வெருவியாற்றத்துளங்கினர்துணுக்கென்றுள்ள
மயர்ந்தனர்பூதர்யாருமவ்வவர்தலைவரானோர்
சயந்தனையிழந்துநின்றுசாம்பினர்தேம்புகின்றார். (௩௩௨)

வேறு.

மோகப்படைசேறலுமுந்தெதிர்மா, றேகப்படையொன்றையுமேவுகிலார்
சேகப்படையத்தொடைசிந்தினரான், மாகப்படைமொய்ம்புடைவள்ளலினோர்.

அந்தத்திறல்வெம்படையாற்றலுடன், வந்துற்றுழிமேலவன்மற்றிதுதா
னெந்தப்படையாலழிவெய்துமெனாச், சிந்தித்தனன்வேறொருசெய்கையிலான். ()

னொன்றாமுதலோனிவையுன்னுதலு, மன்றாலம்வருந்திறனாமெனவே
சென்றாருணர்வுஞ்சிதைவித்ததுபோர், வென்றார்புகழ்மோகவியன்படையே. ()

இலக்கத்துடனெண்மருமேனையரு, மலக்கத்துடன்வீழ்ந்தனர்மாற்றலரூர்
கலக்குற்றிடுகோளைகருத்தழியா, நிலக்கட்படுகந்தெனநின்றனனால் (௩௩௫)

நிற்கும்பொழுதத்தினிலீட்டகல்வா, னற்கும்பரிதிப்பகையங்கதுகண்
டெற்கின்றெதிராயினர்யாவருளார், நற்கு * ன்னினனென்றுநகைத்தனனே. ()

புகழுற்றிடுமேலவர்புந்தியின்மா, திகழுற்றிடுபெற்றிதெரிந்தவுணன்
மகிழுற்றுநகைத்துவயம்புனையா, நிகழுற்றிடுசீரொடுநின்றனனே. (௩௩௮)

மல்வன்மைகொண்மொய்ம்பனுமற்றவருந், தொல்வன்மையிலாதுடல்சோர்ந்த
னரால், வில்வன்மையினுலிவர்வீடுறவே, கொல்வன்கடிதென்றுகுறித்தனனே.()

வரிகின்றவில்வாங்கினன்வாளுணர்வு, திரிகின்றவன்மேற்சிலைவீரர்கண்மேல்
விரிகின்றகணைப்படைமேல்விசிகஞ், சொரிகின்றனன்யாக்கைதுளைத்தனனே.௩௪௦

ஆங்காகியவேலையிலாறுமுகன், பாங்காம்விறலோனொடுபோரிடர்க
ணீங்காமருண்மால்கொடுநேரலனுற், றீங்காயினதன்மைதெரிந்தனனே. (௩௪௧)

தெரிந்தான்முகமாறுடுசேர்ந்துயிர்தோ, திருந்தாரருள்செய்திடுமெம்பெருமான்
விரைந்தாங்கொரமோகவியன்படையைப், புரிந்தானதனொடுபுகன்றிடுவான். ()

நன்றேதெளிவுற்றெமர்நண்ணும்வகை, நின்றேதிலன்விட்டநெடும்படைபாற்
சென்றேயதன்வன்மைசிதைத்திவணீ, வென்றேவருகென்றுவிடுத்தனனே. ௩௪௩

ஏண்கொண்டசிவன்மகனேவுபடை, சேண்கொண்டுபடர்ந்திருள்சிந்தையராய்த்
தூண்கொண்டிடுதோளவர்துன்னியதோர், மாண்கொண்டசெருக்களம்வந்ததுவே

மிடல்கொண்டவமோகவியன்படைசென், றிடுகின்றுழிவெய்யவனேவுபடை
யடல்கொண்டிடும்வீரரகத்திலிரு, ளுடையும்படிவல்லையினோடியதால். (௩௪௫)

அசைகொண்டவுடுத்திரளானவெலா, மிசைகொண்டவினன்வரவேகியபோற், றி
சைகொண்டிடுநம்மவர்சேனையொரீஇ, விசைகொண்டவுணன்படைமீண்டதுவே.

மோகத்தனிவெம்படைமொய்ம்பிலதா, யேகத்திறல்வாகுவுமேனையரு
மாகத்தினின்மையலகன்றமலன், வாகைப்படைகண்டுமகிழ்ந்தனரே. (௩௪௭)

அழலுற்றதுபோலவகன்மணியி, னிழலுற்றிடுதேர்மிசைநின்றவனு
மெழலுற்றிடுவீரர்கள்யாவர்களுந், தொழலுற்றனர்நின்றுதுதித்தனரே. (௩௪௮)

செயிர்கொண்டகருத்தொடுசெற்றலர்தம், முயிர்கொண்டிடுவோன்படையூற்ற
மெலா, மயிர்கொண்டிடவட்டதனுற்றொரீஇ, மயிர்கொண்டபொடிப்பொடுவாழ்
த்தினரால். (௩௪௯)

தீயோன்படைசெய்தசெயற்கையில்யா, மாயோமருளென்கையகத்தடையா
வாயோடுரைவீரமறுத்தனரா, யேயோவெனவெள்கினர்யாவருமே. (௩௫௦)

அண்டாதவனெம்மகத்திலிரு, ளுண்டாகியதன்மைபுணர்ந்தறிவன்
விண்டானுறவிப்படைவிட்டனனென், றெண்டாவுமுளத்திடையெண்ணினரால்.()

முந்நான்கெனுமொய்ம்புளமூர்த்திதனை, யுன்னுவருணீர்மையுளத்தடையா
வன்னூர்தொழுதேத்தினர்த்துணையின்; மின்னுமெனவப்படைமீண்டதுவே.௩௫௨

மீண்டுற்றவமோகவியன்படைபோய்த், தூண்டுற்றகுகன்புடைதுன்னியதா
லாண்டுற்றிடும்வீரர்களண்டலன்மேன், மூண்டுற்றிடுபூசன்முயன்றனரே. (௩௫௩)

ஆங்குற்றிடுகாலையடுந்திறலின், பாங்குற்றிடுமொய்ம்புபடைத்துடையோ
னீங்கற்கருமானமுனிந்தினமு, மோங்குற்றெழவின்னதையுன்னினனே. (௩௫௪)

* நற்கு - களித்தல்விகாரம்.

Digitized By Roja Muthiah Research Library

அந்நேரலனீண்டொரடற்படையான், முன்னேமயல்செய்தமுரண்டொலைய,வி
ன்னேயடுவேனெனவெண்ணமுறாக்,கொன்னேயரன்மாப்படைகொண்டனனே.

அங்கத்துணைகண்டனனவ்வசுர, னெங்கட்கிறைவன்படையேகியதும்
வெங்கட்படுதன்படைமீண்டதுவுஞ், செங்கட்டிறலண்ணல்செயற்கையுமே. ௩௫௬

வேறு.

இம்மெனச்சூர்மகனிவற்றைநோக்குறா, விம்மிதமெய்தினன் வீரமொய்ம்புடைச்
செம்மலையெதிர்ந்திலன் செருக்குநீத்தனன், கைம்மிகுதுயரினன் கருதன்மேயினான்

இவ்விடையொன்னலரெண்ணம்யாவையும், வவ்வினன்மாநிலவரைப்பின்வீட்
டின, னாய்வகைபெற்றுடனுணர்ந்துதோன்றினார், செய்வதெனையகோகடவுள்செ
ய்கையே. (௩௫௮)

எடுத்தனன்மாற்றலனிறைவன்மாப்படை, தொடுத்திடுவானெனிற்றுன்னியெ
ன்னுயிர், படுத்திடும்யானதுபரித்துவந்திலன், விடுத்துடனப்படைவிலக்கும்வண்
ணமே. (௩௫௯)

வென்றிடலரிதினிவீரவாகுவைச், சென்றனன்முதுநகர்த்தெய்வதப்படை
மன்றவுந்தந்திவன்வன்மைமாற்றுவ, னின்றிடல்பழுதெனநெஞ்சிலுன்னினான். ()

அயன்மகன்மதலைசேயருவமாகியே, வியன்மிகுதனதுதேர்விடுத்துவிண்ணெழீஇப்
பயனறுமுகிலெனப்படர்ந்துவல்லையி, னயனுறுகடிமதினகருட்போயினான். ௩௬௧

கொற்றவன்மறைந்தகல்கொள்கைகாண்டலுஞ், சுற்றுறுதானவர்தொலைந்துபோ
யினா, ரற்றதுதெரிந்திடுமமரர்யாவரும், வெற்றியின்றமதெனவிளம்பியார்த்தனர்.

மாயையினுருவமாய்வஞ்சன்மாநகர், போயினன்காலையேபுகுவன்போர்க்கினி
யாயவன்றனைவிரைந்தடுதியென்றுபூந், தூயினர்வீரன்மேற்சுரர்கள்யாவரும். ()

தினகரன்மாற்றலன்செம்பொற்றேரொரீஇ, யினைவுடனுருவமாயிரிந்துபோதலை
வினையமொடோர்வுறாவீரனின்றனன், முனிவொடுபிழைபடுமூரியானைபோல். ()

விண்டிடுசூர்மகன்வெருவிவெந்நிடல், கண்டவர்துணைவருங்கணத்தின்வீரருந்
திண்டிறலிழந்தனன்றீயன்பற்றினாங், கொண்டலைவாமெனக்கூறன்மேயினார். ()

என்பதுவிளம்பியேயாருமார்ப்பொடு, துன்புறுமவுணனைத்தொடர்ந்துபற்றுவா
ன், முன்பொடுமுயறலுந்தெரிந்தமொய்ம்பினான், றன்புடையோர்க்கிதுசாற்றன்
மேயினான். (௩௬௬)

பேடியர்சிறுதொழில்பேணியுள்வெரீஇ, யோடினன்போகியவொன்னலான்றனை
நாடிநாமடுவதுநலத்தின்பாலதோ, சாடுவனினிவரிற்சரதம்யானென்றான். (௩௬௭)

என்றிவைவள்ளலுமியம்பயாவரு, நன்றெனவிசைத்தலுமவற்றைநாடியே,குன்
றுறழ்புயத்துணைகொட்டிக்குப்புறீஇ, வென்றிகொள்பாரிடவெள்ளமார்த்தவே.()

முற்றியதமரினிமுயல்வதில்லையாற், செற்றலனோடினன்றிரும்பும்வீரனு
நிற்றிலனினியெனநினைந்துநீங்குவா, னாற்றனனாமெனவிரவியோடினான். (௩௬௯)

செந்திருமதுமலர்செறியப்பூத்தழி, முந்துறுநித்திலமுழுதுமொய்த்தென
வந்தரமுழுவதுமடைந்தசெக்கரிற், சுந்தரவுடுநிரைபலவுந்தோன்றிய. (௩௭0)

Digitized By Roja Muthiah Research Library

துன்றுநீர்க்கனைலொடுகுலாவிமாதுளத், தென்டருதமியனையிகலிமாமதி
பன்னுளமுனிவரர்பரமன்மேல்விடு, வென்டலையாமெனவிண்ணிற்றோன்றினன்.

இத்துணைவேலையிவிலக்கத்தெண்மரா, மெய்த்துணையார்களும்வெய்யபூதரு,ம
த்துணைப்படைகளுமயலிற்சென்றிட, மொய்த்துணைவிறலுடைமொய்ம்பன்மீண்டனன். (௲எ௨)

அந்தமில்கயிலையையருளிற்போற்றிடு, நந்திதன்கணத்தரிறுதனுகியோன், விந்தைகொள்செருவிலமொருவிமீண்டுபோய்க், கந்தவேள்பாசறைக்கண்ணுணண்ணினன். (௲எ௩)

நண்ணியதிறலினுறுன்முகன்முதற்,புண்ணியமேலவர்போற்றவாண்டுறு,கண்ணுதலருள்புரிகந்தன்முன்புபோய்த், துண்ணெனவணங்கினன்றுணைவர்தம்மொடும்.

வணங்கினனெழுந்தபின்வள்ளறேர்ந்திட, வினங்கலன்றன்மகனெதிர்ந்துபோர்செயா, வணங்குடனிரிந்ததுமனைத்துஞ்செப்பலும், கணங்களின்முதல்வன்மேற்கருணையாற்றினன். (௲எ௫)

நல்லருள்புரிந்தபின்னம்பியிப்பகற், றொல்லமருழத்தலிற்றுன்பங்கூர்ந்துளா,யெல்லிதுபொழுதுநின்னிருக்கைதன்னிடைச், செல்லுதிதுணைவரோடென்றுசெப்பினன். (௲எ௬)

செப்பலும்விடைகொடுசெம்மல்பின்னவர், மெய்ப்படுபாரிடம்விரவச்சென்றொரா,யொப்பருந்தனதுபேருறையுள்வைகினன்,றுப்புறுதானைகடொன்மைபோலுற.

சேயவன்விடுத்திடுசேனைபாசறை, போயதுமிருந்ததும்புகலுற்றுமினி
மாயிருவளங்கெழுமகேந்திரப்பதி, யாயிடைநிகழ்ந்தவாறறியக்கூறுவாம். (௲எஅ)

ஆடுறுசமரிடையழிந்துமுன்னரே, யோடியவவுணர்கோனுள்ளந்தன்னிடைப்
பாடுறுதுயரமும்பழியுமானமு, நீடினன்பெருமிதநிலைமைநீங்கினன். (௲எ௯)

கோனுறுமந்திரங்குறுகல்செய்திலன், முனுறுதிருநகர்தன்னிலேகியே, யூனமதுடையர்போலுயங்கிவைகினன், பானுவின்பகைஞனென்றுரைக்கும்பண்பினன்.

மந்திரக்கிளையொடுமருவவேண்டலன், றந்திரத்தமரொடுஞ்சார்தல்வேண்டலன், சிந்துரத்தொல்பகைச்சென்னிபோற்றிய, லிந்திரப்பெருந்தவிசிருக்கைவேண்டலன். (௲அ௧)

ஆடுறுமங்கையராடல்வெஃகலன், பாடுறுமங்கையரிசையிற்பற்றலன்
கூடுறுமங்கையர்குழாமுநோக்கல, ஞாடுறுமங்கையர்புணர்ப்புமுன்னலான். ௲அ௨

நிசாவதுசென்றபின்னெடுஞ்செவ்வேனுடை, விசாகனையவன்படைவீரர்தங்களை,யசாவுறுசெருவில்வென்றுடல்கொள்வதற், குசாவினனுளத்துடனூக்கம்வேறிலான். (௲அ௩)

வேறு.

ஆதவன்றன்பகையவ்வழியமர்தலு
மேதகுந்தொல்சமர்விளைவெலாநோக்கியே
தூதகுந்திருநகர்முழுமணிக்கோயிலிற்
றாதர்கைதொழுதுபோய்ச்சூரனுக்குரைசெய்வார். (௲அ௪)

Digitized By Roja Muthiah Research Library

கேட்டியாலுன்மகன்கேடிலாவாகைசேர்
தோட்டுணையானெடுந்தொல்சமராற்றியே
யீட்டுபல்பூதரையீறுசெய்திவ்விடை
மீட்டும்வந்தெய்தினன்வினையமுண்டாங்கொலோ. (௧௮௫)

அன்னபண்புணர்கிலேமதனைமேல்றிதியான்
மின்னுதண்சுடருடைவேலவன்றூதனும்
பன்னரும்படையொடும்பாசறைக்கேகினா
னின்னதால்விளைவெனாவிவையெலாம்பகர்தலும். (௧௮௬)

மாற்றலார்தமையடவலியிலனாகியே
யூற்றமாமைந்தன்வந்துற்றசொற்கேட்குமுன்
சீற்றமாயெரிவிழிசிதறவேவெய்துயிர்த்
தாற்றவுமுறுவலித்தரசனென்றுரைசெய்வான். (௧௮௭)

மைந்தருந்துணைவருமருவுபல்சுற்றமுந்
தந்திரத்தலைவருஞ்சமரினுக்கேகலர்
நந்தலில்படையொடுநாளைநான்சென்றபின்
கந்தனைத்திறல்கொடேகடிதின்மீண்டிடுவனால். (௧௮௮)

போதிரிப்பொழுதெனப்புகறலும்பணிகுருத்
தூதுவர்போயினார்சூரனுமவுணர்கோ
னேதிலார்தம்மைவென்றிசைபுனைந்திடுதன்மேற்
காதலாய்வைகினான்யாவதுங்கருதலான். (௧௮௯)

அடுபெரும்போரினையாற்றியேயாற்றலான்
முடிவிலாவிறல்கொளமுன்னுவீரர்க்கெலா
நெடியளாய்த்திறலிலாநெஞ்சினாருக்கெலாங்
கடியளாய்வைகினாள்கங்குலாநங்கையே. (௧௯௦)

பிரிகுவார்தங்களைப்பிரிகலாதேனையோ
ரருகுதானிற்கலாதச்சநாணின்றியே
விரகநோய்தெறுதலான்மிக்கதோர்தூர்த்தராய்த்
திரிகுவாராமெனச்செல்லுமிவ்வெல்லியே. (௧௯௧)

பாடுசாறென்றிசைப்பார்புரந்திடுமிரா
வீடுசால்வெம்பகலெல்லொடும்வருவது
நேடியேமதியெனுநீள்குடைமுன்செல
வோடல்போற்போயதாலுடுவெனும்படையொடும். (௧௯௨)

மையிருட்கலையினைமகிழ்நனாமதிநிலாக்
கையினானீக்கியேகலவிசெய்தகலுழி
வெய்யவன்வருமெனாவெள்கியத்துகிலுடைஇ
யொய்யெனப்போயினாள்கங்குலென்றுற்றுளாள். (௧௯௩)

முதனாட்பானுகோபன்யுத்தப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௪௫௭.

Digitized By Roja Muthiah Research Library

# இரண்டாநாட்சூரபன்மன்யுத்தப்படலம்.

கங்குல்போந்திடுதலுங்கணபணப்பன்னக
துங்குறுதகலவேநோற்றுமாலேந்திடுஞ்
சங்கமாய்மதிசெலச்சக்கரப்படையெனத்
துங்கமோடெழுதல்போற்றோன்றினன்பரிதியே. (௧)

வேறு.

இரவிசெல்லுமுன்னவுணர்கோன்றுயிலொரீஇயெழுந்து
மரபினிற்புரிநாட்கடன்முடித்துமன்றெய்தித்
திருமணிப்பெருந்தவிசிடையிருந்துதன்சிறுவ
னொருவனுற்றிடும்வசையினையுளத்திடைநினைந்தான். (௨)

நினைதலுற்றுழியுளத்திடைப்பெருஞ்சினநீட
வினியமர்த்தொழிற்கியாரையும்விடுக்கிலன்யானே
யனிகமோடுபோய்மாற்றலர்வன்மையையழித்துப்
புனைவன்வாகையென்றுன்னினனழிவிலாப்புகழோன். (௩)

செங்கண்வாளெயிற்றவுணனித்தன்மையைத்தேற்றி
வெங்கணொற்றரிலளப்பிலர்தங்களைவிளியா
வங்கண்மாநிலமுறைமுறைசூழ்தருமளக்க
ரெங்கணுஞ்செறிதானையைத்தம்மின்களென்றான். (௪)

என்றலுந்தொழுதாயிரகோடியோர்யாண்டுஞ்
சென்றுசென்றுதம்மன்னவன்பணிமுறைசெப்பத்
துன்றுதேர்கரிபரிமிசைப்படர்ந்தனர்தொன்னூர்
வென்றிகொண்டநூறாயிரவெள்ளத்தின்மிக்கோர். (௫)

வேறு.

சூலமேகணிச்சிதண்டந்தோமரங்குலிசஞ்சாபங்
கோலவாள்பலகைவட்டங்குந்தம்வேலுஞ்சில்பிண்டி
பாலமேமுசுண்டிசங்கம்பரிதியேயெழுவேதட்டி
பீலிவன்முசலமாதிபெரும்படைகொண்டுசென்றார். (௬)

எண்டகுமினையவாற்றாலிலக்கம்வெள்ளத்தினோருந்
திண்டிறன்மகேந்திரப்பேர்த்திருநகர்சுற்றியார்ப்ப
விண்டொடுசிகரியென்னுமேருவினுச்சிபோகிக்
கண்டனனவுணர்மன்னன்கடற்பெருந்தானைச்சூழல். (௭)

தேக்கினன்கதிருஞ்செல்லாச்செல்லுறழ்தானையீட்ட
நோக்கினன்சிந்தைகொண்டநோன்மைசார்துயரம்யாவு
நீக்கினன்வன்மைபெற்றானேரலர்ப்பொருதுவென்றி
யாக்கினன்போலநின்றானறத்துடனருளைக்கொன்றான். (௮)

அழிந்திடுகின்றகாலத்தளக்கரினார்த்துச்சூழுங்
கழிந்திடுதானைகண்டோன்கடிதுபோர்க்கேகமுன்னிச்
செழுங்கதிர்மதியமாக்குந்திருமணிச்சிகரிநின்று
மிழிந்தனன்றலைமைநீங்கியிழிதொழில்பயின்றதீயோன். (௯)

Digitized By Roja Muthiah Research Library

எடுத்தனன்சிலையுமேனைப்படைகளுமிமையோர்தொன்னாட்
கொடுத்திடுபடைகள்யாவுங்கொண்டனன்கரத்திற்கோதை
தொடுத்தனன்வெரிநிற்றூணிதூக்கினன்விரல்கடோறு
மடுத்தபொற்புட்டில்சேர்த்தானண்டங்களனைத்தும்வென்றான். (௧0)

குந்தளச்சுழியற்குஞ்சிக்கோலமாமௌலிதன்னிற்
சுந்தரத்துணர்மென்றும்பைதொடுத்திடுபிணையல்சேர்த்தி
மந்தரப்பொருப்புமேருவரையிதென்றையஞ்செய்யு
மிந்திரப்பெருந்தேரொன்றினேறினனிரவியேபோல். (௧௧)

பண்ணுலாம்புரவிப்பந்திபருமிதக்களிற்றினீட்ட
மெண்ணிலாப்புரவிமான்றேரேமமாய்ப்பின்னரேக
வண்ணல்வாளவுணவீரரமைச்சர்களயலிற்செல்ல
விண்ணுலாம்புரிசைக்கோயில்வீதிகள்கடந்துசென்றான். (௧௨)

கோயிலினெல்லைநீங்கிக்கோபுரங்கெழீஇயகொற்ற
வாயிலின்மருங்குசெல்லமன்னவன்வரவுநோக்கிக்
காய்கதிர்த்தபனற்கண்டகலிவியனுலகமென்ன
வாயிரநூறுவெள்ளத்தவுணரும்புடைசூழ்ந்தார்த்தார். (௧௩)

வேறு.

அன்னகாலையிலரிமுகன்சேயதிசூரன்
றன்னுதாரகன்சுதனசுரேந்திரத்தொல்லோ
னென்னநின்றிடுமைந்தர்களிருவருமேகி
மன்னர்மன்னனையடைதலுமினையனவகுப்பான். (௧௪)

திரைகொள்வேலைபோனிறைதருகோட்டகஞ்சிறிதோர்
கரையிலாவழியுடைந்திடுமென்னதுகடுப்பப்
பொருதிறற்படைபலவுளவென்னினும்போற்று
மரசரில்வழிநின்றிடாதன்னவையழியும். (௧௫)

ஆதலாலினிநீரிருவீர்களுமமரின்
மேதகும்பெருஞ்சேனைக்குமுதல்வராய்மேவிப்
போதிர்முன்னுறவென்றலுநின்றிடுபுதல்வ
ரீதுநன்றெனவணங்கியேயேகினரிமைப்பில். (௧௬)

தந்தமான்றடந்தேர்மிசையேறியேசமரிற்
கொந்துலாமலர்வாகையைமிலைச்சியகுமரர்
வந்தநாற்பெரும்படையையுமணிபெறவகுத்து
முந்துதானையந்தலைவராயேகினர்முறையால். (௧௭)

ஆகுமெல்லையிலங்கதுநோக்குறுவடுபோர்
வாகைகொண்டநூறாயிரவெள்ளத்துமறவோ
ரோகையெய்தியேயமர்புரிபறந்தலையுன்னி
யேகன்மேயினர்பணிகளுஞ்சேடனுமிரங்க. (௧௮)

வேறு.

கடந்திகழ்கரிதேர்பாய்மாக்கலந்திடத்தானைவீரர்
படர்ந்திடுகின்றகாலைப்பருமணிவயிரத்தேர்மே
லடைந்திடுமவுணர்மன்னனளக்கரில்வடவைசுற்ற
விடந்தனிநடந்ததென்னவிண்ணவர்மருளச்சென்றான். (௧௯)



Digitized By Roja Muthiah Research Library

தொண்டகந்துடியேபம்பைதூரியமுருடுகோடு
திண்டிறற்படகமொந்தைதிமிலையேதடாரிதக்கை
கண்டையாகுளியேபேரிகாகளமுடுக்கைபேழ்வாய்
கொண்டதோர்பதலைசங்கங்குடமுழாவியம்பிற்றம்மா. (௨0)

தட்டுடைநெடுந்தேரார்ப்புந்தந்தியினார்ப்புஞ்சேண்போய்
முட்டுறுகொடிகளார்ப்புமுரட்பரியார்ப்பும்வீரர்
கட்டுறுகழலினார்ப்புங்கணிப்பில்பல்லியத்தினார்ப்பு
மெட்டுளதிசையுமெல்லாவுலகுமுண்டெழுந்தவன்றே. (௨௧)

நீனிறமுகில்போன்மேனியவுணர்கணீத்தஞ்செல்லக்
கானிறைபூழியீட்டங்ககனமேற்செல்லமுன்னந்
தானுறுகின்றகாலைச்சசியெனத்தயங்கிப்பின்னர்
மீனெனக்கரந்தான்மேலாம்விரிகதிர்படைத்தவெய்யோன். (௨௨)

நேசமோடென்பால்வைகுநெறியினார்தமக்குவீடு
மாசறுபதங்கள்யாவும்வைகலும்புரிவேனென்னை
யேசுவர்போலுங்கீழென்றிகல்புரிந்திடுவனென்னாத்
தூசிபார்விடுத்ததேபோற்றுறக்கமேற்சென்றபூழி. (௨௩)

கன்னிறையழித்தமொய்ம்பிற்கார்கெழுமவுணவெள்ளந்
தன்னுறநடப்பச்செல்லுந்தூளியின்படலைச்செய்கை
யென்னெனவுரைப்பனம்மாவிந்திரனென்போன்வைகும்
பொன்னுலகதனைவல்லேபூவுலகாக்கிற்றன்றே. (௨௪)

கண்ணகன்றடந்தேர்மீதுங்காய்சினக்களிற்றின்மீது
நண்ணியகொடிகள்வான்போய்நளிர்புனற்கங்கைநக்கி
மண்ணுறச்சிதறியாடியலமரன்மகேந்திரத்தி
னண்ணலின்றழிவனென்றேயழுதிறம்போலுமாதோ. (௨௫)

திங்கள்வெண்குடையுநீலத்திருநிழற்கவிப்புஞ்செங்கேழ்ப்
பங்கயமலர்ந்ததன்னபருமணிக்கவிகைமுற்றுந்
தொங்கலின்றொகையும்வெய்யோன்றொல்கதிர்வரவுமாற்றி
யெங்கணுஞ்செறிவுற்றாழியிருளினைவிளக்கிற்றம்மா. (௨௬)

வேறு.

ஆனவியல்பெய்தவவுணப்படைகளோடும்
வானெறிகொடேயவுணன்வையமிசைசெல்லத்
தானதுதெரிந்தமரர்தம்மிறைவனோடிக்
கானமர்கடம்பனடிகைதொழுதுசொல்வான். (௨௭)

அன்றுபுரிவேள்வியிடையாதியருள்செய்த
துன்றுபடையீட்டமொடுசூரனெனும்வெய்யோ
னின்றுபொருவான்விரைவினேகினனெதிர்ந்தே
சென்றவனைவென்றெமதுசீரருளுகென்றான். (௨௮)

ஆம்பரிசுகூறவவனுக்கருள்புரிந்தே
யேம்பலுறுகேசரியினேற்றணையினீங்கிப்
பாம்பின்வலிசெற்றுலவுபாகுதனைநோக்கி
வாம்பரிகொணம்மிரதம்வல்லைதருகென்றான். (௨௯)

Digitized By Roja Muthiah Research Library

என்றிடலுநன்றெனவெழுந்துலவையண்ணல்
குன்றனையதேரதுகொணர்ந்துமுனமுய்ப்ப
வென்றியயிலண்ணலதன்மீமிசைபுகுந்தான்
மன்றன்மலர்சிந்தியயன்மாலொடுவழுத்த. (௩௦)

செழுந்தருணமேதகையதேரின்மிசைவானோர்
தொழுந்தலைவனாகியமர்தொன்முருகனேறக்
கொழுந்தழன்முடித்தலையகுஞ்சிகெழுபூத
ரெழுந்தனர்தெழித்தனரிருங்கடலுமஞ்ச. (௩௧)

நாட்டமொருமூன்றுடையநாதனருண்மைந்தன்
வாட்டமறுவெவ்வவுணர்மன்னன்வலிதன்னை
வீட்டும்வகைசென்றிடுதல்விண்ணவருரைப்பக்
கேட்டனிகபூதர்கள்கிளர்ந்துபடர்கின்றார். (௩௨)

பாரிடர்களாயறுமுகற்பரவுகின்ற
பாரிடர்நடப்பவெழுபூழிபடர்ந்தின்னோர்
பாரிடர்புரிந்தனர்பரிக்குமெனையென்னாப்
பாரிடம்விண்ணோடுபகர்தற்கெழுதல்போலும். (௩௩)

தக்கையொடுடுக்கைதுடிசல்லரிதடாரி
தொக்குடையதண்ணுமைதுவைப்பின்மிகுபேரி
மெய்க்குடமுழாப்படகம்வீணைகுழலாம்பல்
கொக்கரையியம்பினர்கள்கோடிகணநாதர். (௩௪)

நாடுதவநாரதனுநல்லுவணர்தாமுங்
கேடிலிசைவல்லதொருகின்னரருமாகிப்
பாடினர்குமாரனடிபன்முறைபணிந்தே
யாடினர்கள்விண்ணவருமாசின்முனிவோரும். (௩௫)

சண்முகனதேவல்கொடுதாவிலிலையோனு
மெண்மருமிலக்கர்களுமீண்டியகணத்தின்
வண்மைகெழுமன்னவரும்வையமிசையாகித்
திண்மைபடையூக்கமொடுசேனையிடைசென்றார். (௩௬)

மொய்ம்மலிபடைத்தலைவர்முந்தியுறுதானை
யிம்முறையினாலொழுகவீசனருண்மைந்தன்
செம்மணிவில்வீசியமர்தேரினிடையேகிப்
பொம்மலுறுதானவர்கள்போர்முனையடைந்தான். (௩௭)

அடைந்தபொழுதிற்புவியுமந்தரமுமாகி
மிடைந்துவருசூரனிகம்வெய்தெனவளைந்த
தொடர்ந்துநுகர்தீவலிதொலைத்துமெனமுந்நீர்
படர்ந்துபுடைசுற்றியிடுபான்மையதுபோல. (௩௮)

வேறு.

வளைந்திடுகாலையில்வயவெம்பூதர்கள், கிளர்ந்தனர்தெழித்தனர்கெழுவுதானவர்
தளர்ந்தனையடர்த்தனரவருந்தாக்கினார், விளைந்ததுபெருஞ்சமர்விண்டதண்டமே. ()

மாச்சினைமரங்களும்வரையுந்தண்டமுந், தீச்சிகைக்கழுமுளுந்திகிரிநேமியு
மீச்செலுங்கவண்களும்வேலுநாஞ்சிலு,மோச்சினர்பூதர்களொன்னலார்கண்மேல்.

Digitized By Roja Muthiah Research Library

மெய்ப்படுமவுணர்கள்வெகுண்டுவில்லுமி, ழப்பொடுகணிச்சிதண்டாழிநாஞ்சில்
வேன், முப்புகரிலைப்படைமுசலமுற்கரங், கப்பணஞ்சிதறினர்கணங்கடம்மிசை.

பற்றுவர்கரிகளைப்பரியினங்களை, யெற்றுவர்பார்தனிலெறிவர்மாதிரஞ் [வார்.()
சுற்றுவர்விண்ணிடைக்கிழிப்பர்துண்ணென, முற்றுடலெருத்தினைமுரித்துச்சிந்து

இரதமோராயிரமெடுத்துச்செங்கையிற், பொருகளிறாயிரம்புரளமோதுவர்
கரிகளோராயிரங்கரங்கொண்டெற்றியே, பரிபதினாயிரம்பாரின்வீட்டுவார். (சங)

பாய்பரியாயிரப்பத்துப்பாணிகொண், டாயிரகோடியாமவுணர்தங்களைச்
சேயிருநிலத்திடைச்சிதையச்சிந்துவார், காய்கனல்சொரிதருங்கடுங்கட்பூதரே. ()

குரங்குளைப்புரவியர்குஞ்சரத்தின, ரிரங்குறுதேரினர்நிலத்தினேகினோர்
வரங்கெழுமவுணர்கள்வளைந்துபூதரைச், சரங்களிற்பிறவினிற்றடிதன்மேயினார். ()

மலைதனைச்சிந்துவர்மறங்கொள்பூதர்தா, ணிலைதனைச்சிந்துவர்நெடுங்கைசிந்துவ
ர்,கொலைதனைச்சிந்துவர்கொய்வர்மொய்ம்பினைத், தலைதனைச்சிந்துவர்தறுகட்டான
வர். (சசு)

இவ்வகைமாறுகொண்டிகல்செய்கின்றுழித், தெவ்வடுபூதர்தஞ்சேனைமன்னர்க
ளவ்விடையேன்றுநின்றமரியற்றுழி, வெவ்வசுரப்படைமிகவுமாய்ந்ததே. (சஎ)

பொன்றிகழ்படையொடுபுவியும்வானுமாய், நின்றிடுமவுணர்களீடுதொல்பிணக்
குன்றுருவாகியேகுருதியாற்றிடைச், சென்றனரளக்கரைத்திடரதாக்குவார். (சஅ)

நீடியவேற்படைநிமலன்காணுற, வீடினம்யாமினிவெய்யதோற்றமேற்
கூடுவதிலையெனக்குனிக்குமாறுபோ, லாடியவுடற்குறையனந்தகோடியே. (சகூ)

வேறு.

மானப்படைசேரவுணப்படையும்வயமான்றேர்ப்படையு
மேனைப்படையுமுடிவுற்றிடவேயிவ்வாறிகல்செய்யுங்
கூனற்சடிலப்பூதப்படையின்கொற்றந்தனைநோக்கித்
தானைத்தலைவனதிசூரனெனுந்தனயன்வெகுளுற்றான். (ருO)

தேராயிரமாயிரமங்கொருபாற்சேமத்தொடுசெல்லக்
காராயிரமுற்றனதன்படிவங்கதிர்காளிமைசார
வீராயிரமாமிவுளித்தொகைபூண்டூர்க்குந்தேர்மீதே
யோராயிரமாங்கதிர்போலழலாவுரனோடுறுகின்றான். (ருக)

வார்வில்லதனைவிரைவிற்குனியாவடிவாளிகள்போக்கிச்
சோர்வில்லவனுமெதிர்கின்றனரைத்துணிசெய்தனனிற்ப
வோர்வில்லொருவன்றனியேயிவண்வந்துறுபோர்புரிகின்றான்
போர்வில்லறிவனிவனேயெனவேபுகல்கின்றனர்பூதர். (ருஉ)

ஓதக்கடல்போலலமந்தலமந்துலையாவிகல்செய்யும்
பூதர்க்கிறையுக்கிரனென்றொருவன்புகைதீயுமிழ்கண்ணான்
மேதக்கசலந்தரனாருடலம்வீழும்படிகீண்ட
சோதிக்கடவுட்படையுண்டுமிழுந்தொல்லோனிகல்வல்லோன். (ருங)

எண்டானவருக்கிறைவன்குமரனிகல்செய்திடுமாறு
கண்டான்முனியாவிரைவிற்படர்வான்காலன்றிறல்கொள்ளுந்
தண்டானதுகொண்டவனேர்குறுகித்தடமார்பிடையோச்சி
யண்டானிலனென்றவுணப்படையோர்வெருவாவலமந்தார். (ருச)

Digitized By Roja Muthiah Research Library

மாறாகியவுக்கிரனேவுதலும்வருத்ண்டவன்மார்பிற்
கூறாகியசாலிகைசிந்திடவேகொதியாவருகின்றான்
பாறாடுகளத்திடையீங்கிவனைப்பலியூட்டுவனென்னா
நூறாயிரமாசுகமோர்தொடையினெய்திற்செலவெய்தான். (௫௫)

வெய்தாமயில்வாளிகளுக்கிரன்மேல்விறல்சேரதிசூர
னெய்தானதுமற்றவன்மேற்படவேயெருவைப்பெருநீத்த
மெய்தான்முழுதும்பெருகுற்றிடலும்விழுமத்தொடுசெற்றஞ்
செய்தானொருமால்வரைகொண்டவுணன்றேர்மேற்செலவுய்த்தான். (௫௬)

அதிர்பொற்கழலான்விடுதிண்கிரியாலதிசூரன்மான்றேர்
பிதிர்பட்டிடலும்புவிமேற்படர்தல்பிழையாமெனவுன்னா
வுதயக்கிரிபோற்கனகத்தியலுமொருதேர்மிசைநீலக்
கதிருற்றெனவேகடிதிற்பாய்ந்தான்காலன்மிடறீர்ப்பான். (௫௭)

வேறு.

பாயும்வேலையப்ப்ன்மணித்தேரினை, யேயவாற்றல்கொண்டீர்த்திடும்வாசிகண்
மாயும்வண்ணமறம்புரியுக்கிரன், சீயமாமெனச்சென்றுதைத்தானரோ. (௫௮)

உதைக்கவெய்யவனெண்பரிபாரிடைப், பதைத்துவீழ்தலும்பையுளின்மாழ்கியே
சிதைப்பனிந்தச்சிறியனையென்றுமெய், புதைப்பநூறுபொருசரந்தூண்டினான். ()

தூண்டுகின்றசுடர்க்கணையாவையு, மீண்டியேதன்னெதிருறும்பெற்றியைக்
காண்டலுங்கதைகைக்கொடவ்வுக்கிரன், மீண்டிடும்படிவீசினின்றார்க்கவே. (௬0)

வேறோர்தேரிடைவெய்தெனவெய்தியே, யூறுநீங்கியவுக்கிரற்கண்ணுறீஇ
மாறிறெய்வதமாப்படைதொட்டுனை, யீறுகாண்பனிறந்தனைநீயெனா. (௬௧)

முன்னுபூசைமுதலியயாவையு, முன்னியேநின்றொருங்குடன்செய்தபின்
வன்னிமாப்படைவாங்கிவணங்கியே, மின்னுதண்சுடர்மீக்கொளவீசினான். (௬௨)

ஆசைதோறுமழல்சிந்தமாற்றலன், வீசுவெம்படைவீரத்தைநோக்கியே
யீசன்மைந்தனிணைமலர்த்தாள்களை, நேசமோடுநினைந்தனன்போற்றினான். (௬௩)

எவ்வெவர்க்குமிறையவனாகியோ, னவ்வழித்தன்னருள்செயவுக்கிரன்
செவ்விதிற்செலுந்தீச்சரம்பற்றியே, கவ்விநுங்கினன்கண்கனல்கான்றிட. (௬௪)

நுங்குவான்றனைநோக்கியரிமுகன், றுங்கமாமகன்றொல்புனன்மாப்படை
பொங்குச்ண்டப்பொருபடையேவலு, மங்கவற்றையும்பற்றியருந்தினான். (௬௫)

காற்றின்வெம்படையேவினன்கைதவ, னாற்றலுக்கிரனன்னதுநுங்கினான்
றேற்றுகின்றுழிச்செய்தவமன்றியே, யேற்றமானவிரும்பொருள்யாவதோ. (௬௬)

மற்றுமவ்வதிசூரன்மலரய, னொற்றைவெம்படையோச்சலுமுக்கிரன்
பற்றிநுங்கவப்பங்கயன்றாதைபாற், பெற்றிருந்தபெரும்படையேவினான். (௬௭)

ஒய்யெனச்சென்றுருகெழுநாரணன், பொய்யின்மாப்படைபோந்திடவாங்கதுங்
கையில்வாங்கிக்கதுமெனவாய்க்கொளா, வெய்யவுக்கிரன்மேயினனென்பவே. ()

ஆனகாலையரிமுகன்காதலன், யானினிச்செயியற்கையென்னேயிவன், றானவ்
வீசன்சொல்கண்ணன்றொறுமரை, மேனிலாவியவேதன்கொலோவென்றான். ()

மூவராகியமூர்த்திகளல்லதை, யேவரேமற்றிதுசெயும்பெற்றியா
ராவனுவனவர்க்குளிவனெனுத், தேவர்மாற்றலன்பின்னருஞ்செப்பினன். (எ0)

சிற்றங்கொண்டவவுணர்திரைக்கடற், ரேற்றங்கொண்டவச்சூர்கெழுமுக்கிர
னேற்றங்கண்டுழியென்செய்துமென்றனர், கூற்றங்கொண்டவுயிரிற்குலைந்துளார்.

அண்ணல்வாசவனுதியராகிய, வெண்ணில்வானவர்யாவருமிச்செயல்
கண்ணுருவிகல்கண்டருணன்முகப், பண்ணவன்முன்பணிந்திதுகூறுவார். (எஉ)

எங்களால்வருமெண்ணில்பெரும்படை, செங்கணன்படைநீயநின்மாப்படை
யங்கியாவுமனுகவிப்பூதர்கோ, னுங்குமாறென்னுவலுதியென்னவே. (எங)

இந்திராதியர்கேண்மின்களீங்கிவ, னந்திவான்சடையண்ணல்வரத்தினன்
கந்தனெந்தைகழலிணைபோற்றியே, வந்துளானெவ்வலியையுமாற்றுவான். (எச)

எம்மையாளுடையீசனருள்பெறுஞ், செம்மையானவன்செம்பொற்சிலம்படி
மும்மையுந்தொழுமுத்திபெற்ருனிவ, னெம்மினும்பெரியானென்றுமீறிலான். எடு

மைக்கருங்கடல்வண்ணன்முன்னேவிய, சக்கரந்நுகருந்தவத்தோனினு, மிக்க
வாற்றலன்வெற்றியின்மேலையா, னுக்கிரன்னென்றுரைத்திடும்பேரினன். (எசு)

பண்டுநாமருள்பல்படையாவையு, முண்டதோவியப்பொல்லையிலெல்லையி
லண்டமுஞ்சிதைத்தாக்குவனீங்கிவன், கொண்டதொல்புகழ்கூறத்தொலையுமோ.

என்னநான்முகனெண்ணியியம்பலு, மன்னகேட்டலுமண்டர்கள்யாவருந்
துன்னுசென்னிதுளக்கிப்பெருந்திற, லின்னுமாகவிவற்கென்றியம்பினர். (எஅ)

வேறு.

வானமேலிதுநிகழ்ந்துழிமாறிலாவவுணர்
சேனைகாவலன்பூதனைநோக்கிநிற்சிதைப்ப
வூனமாகியபடையெனவுன்னலையுமைபான்
ஞானநாயகன்படைதொடுவேனெனநவின்றான். (எகூ)

மந்திரந்தனிற்பூசனைமுதலியவருத்துச்
சிந்தைமேலுறுவெகுளியோடரன்படைசெலுத்த
வந்தமில்லதோருலகெலாமுறுவலாலடர்க்கு
மெந்தைகொண்டதோருருவெனத்தோன்றியதிமைப்பில். (அ0)

நஞ்சுமாரழனுகமுமடுவன தருவும்
விஞ்சுபூதமுங்கணங்களும்வேறுபல்படையு
மெஞ்சலில்லதோரங்கியும்போற்றவெவ்வுலகு
மஞ்சிடும்படிநடந்ததாலரன்படையதுவே. (அக)

ஈசன்மாப்படைவருதலுமுக்கிரனென்னு
மாசில்வீரன்றன்னங்கையிற்கதையினையகற்றிப்
பாசநீக்குமஞ்செழுத்தினைவிதிமுறைபன்னி
கேசமோடுகைதொழுதரன்பொன்னடிநினைந்தான். (அஉ)

ஆண்டையுக்கிரனிற்றலுமஞ்சலிபுரிவான்
மாண்டதொல்படையில்லவன்றுதிசெயும்வாயா
னீண்டிவன்றனையடுகிலன்யானெனவெண்ணி
மீண்டுசென்றதுசிவனருள்படைக்கலம்விரைவில். (அங)

Digitized By Roja Muthiah Research Library

அண்ணலம்படைதுறந்தவர்மேல்விடினவர்பா
னண்ணுறுதுநம்பக்கல்வந்திடுமெனநல்க
விண்ணுலாம்புகழவுணர்கோன்பெறுதலின்விடையூர்
பண்ணவன்றனையடைந்ததாங்கவனருள்படையே. (௮௪)

ஆனபெற்றிகண்டிங்கிவன்சிவன்கொலென்றயிர்த்துச்
சேனைகாவலன்றுளங்கினன்பூதர்கள்சிறந்தார்
வானுளோர்மலர்மாரிகடூர்த்தனர்மாறு
மேனைவீரர்கள்விழிபொழிதாரைகான்றிரிந்தார். (௮௫)

நீங்குகின்றதோர்தானவர்குழுவினைநீவி
ரேங்குகின்றதைவிடுமின்களென்றுதேரிழிந்து
பாங்கருற்றதோர்தண்டுகொண்டரிமுகன்பாலன்
வீங்குதோளிடையெற்றினனுக்கிரன்வெகுண்டான். (௮௬)

எற்றுதண்டினையங்கையாலுக்கிரனென்போன்
பற்றிவாங்கியேயவன்றனதுரம்பதைபதைப்பத்
தெற்றெனப்புடைத்திடுதலுநிலனிடைச்சேர்ந்தான்
மற்றவன்றனதுயிர்கொடுபோயினன்மறலி. (௮௭)

துஞ்சிவீழதிசூரனைநோக்கியேதுகடீர்
மஞ்சுபோலவேவருமசுரேந்திரன்மனமு
நஞ்சமாமெனக்கொதித்தனனழலெழநகையா
விஞ்சுபூதர்தங்குழுவின்மேற்சென்றனன்விரைவின். (௮௮)

கடிதுசென்றசுரேந்திரனிந்திரன்கரத்தி
னெடியவில்லினுமாயிரத்திரட்டிமேனிமிர்ந்த
கொடியவார்சிலைவாங்கியேகுணத்தொலிகொளுவப்
படியும்வானமுங்குலைந்தனவுயிரெலாம்பதைப்ப. (௮௯)

பூதரங்கதுநோக்கியேதண்டமும்பொருப்பும்
பாதவங்களுந்தாரகன்றந்திடுபதகன்
மீதுசென்றிடவிடுத்தலுமனையனவிலக்கிச்
சோதிவெங்கணையிறுதிநாண்முகிலெனச்சொரிந்தான். (௯௰)

வடிகொள்வார்கணைவிடுத்தலும்பூதர்கள்வலிதின்
விடுபிறங்கலேமுதலியவிடையிடைவீட்டி
முடியுங்கைகளுமாகமுமுகத்தொடுமொய்ம்பு
மடியுஞ்சோரிநீர்கான்றிடவழுந்தியவவர்பால். (௯௧)

மற்றும்வெங்கணையுலப்பிலதூண்டலுமண்மே
லற்றகைகளுந்துணிந்திடுதோள்களுமடியு
மிற்றகண்டமுமாகிவெம்பூதர்களிறப்பக்
கொற்றவீரரிற்கனகனென்பவனெதிர்கொண்டான். (௯௨)

எதிரதாய்வருகனகன்மேற்றாரகனீந்த
வதிரும்வார்கழலண்ணலோர்வடிக்கணையழுத்த
வுதிரவாரியோடன்னவன்றேர்மிசையுற்றான்
கதிரின்மேல்வருசெய்யகோளாமெனக்கடிதின். (௯௩)

Digitized By Roja Muthiah Research Library

பாகன்றன்னுயிருலந்திடவுதைத்துவெம்பனைக்கை
நாகந்தந்திடுமதலைதன்வரிசிலைநாணைக்
காகம்போலவெள்ளெயிற்றினாற்கீறிவெங்கறைசேர்
மேகந்தாரணிமிசையிழிந்தாலெனமீண்டான். (௯௪)

இழிந்துமால்வரையொன்றுகீண்டசுரரிந்திரனுங்
கழிந்தசீர்த்தியான்மீமிசையோச்சலுங்கரத்தி
னழிந்தவில்லினைநீத்துவேறொருசிலையதனைக்
குழிந்தகண்ணுடைப்பூதர்கள்வெருக்கொளக்குனித்தான். (௯௫)

குனித்தநான்கிருசுடுசரந்தொடுத்தறைகூவித்
தனித்துமேல்வருங்கனகனேவியகிரிசாய்த்துப்
புனிற்றிளம்பிறைசெக்கர்வானுழைந்தெனப்புயங்கள்
பனித்திடும்படியழுத்தினனுயிரம்பகழி. (௯௬)

பகழியாயிரம்படுதலுமாடகன்பையு
ணிகழுகிற்றலும்வேறொருவலவனைநிறுவிப்
புகழிருனவன்றேர்கொடுபூதர்மேற்போத
வ்கழுமால்வரையொன்றெறிந்துன்மத்தனூர்த்தான். (௯௭)

அவனெறிந்திடும்பருப்பதம்விரைவில்வந்தடர்க்கக்
கவனவெம்பரியாயினவுலந்தனகாணுப்
பவனவேகத்தின்வேறொருதேர்மிசைப்பாய்ந்தான்
புவனமுண்ணியநின்றதோர்கடவுளேபோல்வான். (௯௮)

மூந்துவெங்கணையுலப்பிலதூண்டலுமுந்நீர்
செந்தகிர்க்கொடிபோர்த்தெனக்குருதிநீர்செறிய
வந்தமுற்றிலன்புவிமிசையிருந்தனனுங்கே
மந்தனென்பவன்குரகன்புதல்வனேர்வந்தான். (௯௯)

வருதலோடுமாங்கவன்மிசையையிருவாளி
குருதிகாலுறவழங்கலுமெரியெனக்கொதியாப்
பரிதிமேவரத்தருவதோர்பருப்பதம்பறித்துக்
கருதியேவினனவுணர்கோனங்கதுகண்டான். (௧௦௦)

சென்றுமார்பெதிரேற்றலும்வந்துழித்தெறித்துக்
குன்றுமீண்டுமற்றவன்புடைபோயதுகொடியோ
னென்றுபோலியவாயிரம்பகழிகளுய்த்தா
னின்றுமந்தனங்கயர்ந்தனன்சிங்கனுநேர்ந்தான். (௧௦௧)

எடுத்துமால்வரையொன்றவனுரத்தினேரெறியத்
தடுத்தோர்வாளியினகற்றினனமரிடைத்தரியார்
விடுத்ததோர்கதையெறிதலுமவனதுவிலக்கித்
தொடுத்துநூறுகோலழுத்தினன்சிங்கனுந்தொலைந்தான். (௧௦௨)

ஒழிந்தசாரதத்தலைவர்களியாவருமுடன்றே
யழிந்துநின்றனர்தாரகன்குமாரனுசுகங்கள்
பொழிந்துமற்றுளபூதரைமுடித்திடும்போதிற்
கழிந்ததுன்பொடுமிலக்கரிற்றண்டகன்கண்டான். (௧௦௩)

தனதுகார்முகம்வாங்கியேதண்டகப்பெயரோன்
முனையிருங்கணையாயிரங்கொடியவன்முகத்தி
னணிபுகுந்திடவிடுத்தலுநடலையுற்றிரங்கி
மனம்வெகுண்டுபின்றன்பெருஞ்சிலையினைவளைத்தான். (௧0௪)

வளைத்துநாலிரண்டம்பினைத்தண்டகமறவோன்
குளத்தின்மேற்படவிடுத்தலுமெழுந்தனகுருதி
யிளைத்துநின்றனன்றேர்மிசையன்னவற்கிளையோன்
கிளத்துசோமுகன்றாரகன்மகனெதிர்கிடைத்தான். (௧0௫)

எதிர்புகுந்தவனகலமேலம்பதிற்றிரட்டி
கதிர்தெறுங்கணையவுணர்கோனழுத்தலுங்கவலா
வதிர்தருந்தனதொண்சிலைவாங்கியாயிரமா
நுதிகொள்வெஞ்சரந்தூண்டினன்சோமுகனொடிப்பில். (௧0௬)

பல்லவங்களாயிரமுமத்தாரகன்பாலன்
சில்லியந்தனித்தேரினைவலவனைச்சிதைப்ப
மெல்லவேறொருதேர்மிசைப்பாய்ந்துவேலொன்றை
யொல்லையிங்கிவனுயிரினையுண்கெனவுய்த்தான். (௧0௭)

உய்த்தவேலவனகலமேற்படுதலுமுயங்கி
யெய்த்துமற்றவன்றேர்மிசைமயங்கினனிருப்ப
நித்தன்வேர்வுறுசோமுகற்கிளையவனெடுமா
லொத்தவன்மையன்விசயனென்பவன்கடிதுற்றான். (௧0௮)

விசயனுங்கொருகொடுமரம்வாங்கியேவெகுண்டு
நிசிதவெங்கணையாயிரமுய்த்துநேரில்லா
வசுரரிந்திரன்வலவனைத்தடிந்துமற்றவன்கை
யிசையும்வில்லொடுநாரியைத்துணிபடவிறுத்தான். (௧0௯)

முற்றுநூலுணர்பாகுயிருலத்தலுமுனியா
விற்றநாணொடுவார்சிலைத்துணியினையேந்திக்
கொற்றமாரசுரேந்திரன்மத்திகைகொண்டு
பொற்றையன்னதன்றேர்விடுவலவனிற்பொலிந்தான். (௧௧0)

தகுவர்கோனொருவலவனைநிறுவியோர்தண்ட
மிகலும்வன்மையாலெடுத்தனனவன்மிசையெறியப்
புகுதுமெல்லையிற்கண்டெதிர்விசயனும்புகழோன்
மிகவுமெல்லையில்சரங்களைத்தூண்டினன்விடுத்தான். (௧௧௧)

தொட்டதொட்டனகணையெலாந்துகள்படத்தொலைத்து
மட்டுலாந்தொடைவிசயன்மார்பகத்திடைவந்து
பட்டகாலையிலவன்றனதிரதமேற்பதைத்து
விட்டவில்லொடுகுருதியுந்தானுமாய்வீழ்ந்தான். (௧௧௨)

விழுந்தகாலையிலிலக்கரிலேனையோர்வெகுண்டு
பொழிந்தவாளியாற்றாரகன்மகனொடுபொருதே
யழிந்தியாவருமிரிந்தனர்போதலுமதுகண்
டெழுந்ததுன்பொடுவீரமொய்ம்பினன்விரைந்துற்றான். (௧௧௩)

௬௩

Digitized By Roja Muthiah Research Library

வீரவாகுவேளிணையடிபோற்றியேவெகுண்டோர்
கோரவெஞ்சிலைவாங்கினனொலிகொளுவி
யாரும்வானவர்வியப்புறவவுணர்களயரத்
தாரகாசுரன்மதலையைமறைத்தனன்சரத்தால். (௧௧௪)

மறைப்பமெய்யெலாங்குருதிகொண்டிடலும்வல்லவுணன்
விறற்கடுஞ்சிலையொன்றினைவளைத்தவன்மிசையே
பிறைத்தலைக்கணையாயிரமழுத்தினன்பெரிது
முறைத்தசெம்புனலிருவருமிளங்கதிரொத்தார். (௧௧௫)

தாரகத்திறலான்மகன்றாண்டியேழ்சரத்தாற்
சூரரித்திறலண்ணல்கைச்சிலைதனைத்துணிப்ப
வீரன்மற்றொருகார்முகம்வாங்கியேவிடங்கால்
கூரயிற்கணையாயிரம்விடுத்தனன்குறியால். (௧௧௬)

ஏரும்வார்கணைதாரகன்மகன்சிலையிறுத்துப்
பாகனாவியுண்டிரதமோடயங்களைப்படுப்ப
வாகையின்றியேவேறொருதேர்மிசைவறியன்
போகலோடுமற்றன்னதுகண்டனர்புலவோர். (௧௧௭)

வெருவரப்பொருந்தாரகன்மதலையைவீரன்
பொருதுவெற்றிகொள்வான்கொலாமினியெனப்புகழ்ந்தா
ரரியவற்புதமோவவன்வென்றிடலவுணன்
கரிதருஞ்சுதன்சிம்புளின்சுதனிவன்கழறின். (௧௧௮)

மாறொர்தேரிடைப்பாய்ந்தவனொருதனுவளைத்து
நூறுகோல்விடுத்தவனிரதத்தினைநூறச்
சீறிவானெழீஇவீரவாகுப்பெயர்த்திறலோ
னாறுமாமுகமுதல்வனைப்பரவினின்றார்த்தான். (௧௧௯)

உறைகழித்துவாளுருவியேயும்பரிற்படர்ந்து
சிறைகழித்திடும்வரைபுரையவுணர்கோன்றேர்மேற்
குறைகழித்திடும்பணிகவர்மதியெனக்குப்புற்
றிறைகழிக்குமுன்னவன்றனைக்கையிலொன்றெறிந்தான். (௧௨௦)

எறிந்தகாலையிலிற்றதோர்கைத்தலமிறலுங்
குறைந்தகையிடைச்சலசலவிழிவனகுருதி
செறிந்தநீலவொண்கிரிதனக்கொருபுடைசென்றே
யுறைந்ததோர்கரும்பணியழன்மணியுமிழ்ந்தொப்ப. (௧௨௧)

கையறுத்தலுந்தாரகன்றன்சுதன்கனன்று
மொய்யுடைக்கதையொன்றெடுத்தவன்மிசைமோத
வொய்யெனத்திறன்மொய்ம்பினன்வானெழுந்தொருதன்
செய்யபொற்பதத்துதைத்தனனங்கவன்சிரத்தில். (௧௨௨)

காமர்தாளினாலுதைத்துவிண்படர்தலுங்கண்டு
தூமமார்விழியானசுரேந்திரன்றொடர்ந்தோர்
சேமவாள்கொடுவானெழமேலையோன்சீறி
யேமநாந்தகத்தாலவன்றலையறவெறிந்தான். (௧௨௩)

எறிந்தசென்னியுமியாக்கையுமிம்பரின்வீழ்ந்து
மறிந்துமற்றவன்மன்னுயிர்போயதுவான்மேற்
செறிந்தவிண்ணவரார்த்தனரின்னதோர்செய்கை
யறிந்ததானவக்கடலெலாமோடினவன்றே. (௧௨௪)

மக்களாயினரிருவருமிறந்ததுமலைந்து
பக்கமேயினதானைகளிரிந்ததும்பாராத்
தொக்கபேரழலுலகடவெழுந்ததோற்றம்போன்
மிக்கசீற்றமேற்கொண்டனனண்டங்கள்வென்றான். (௧௨௫)

சீற்றமேதருகாசிபன்மதலைபோர்செய்யு
மாற்றலார்தமையடுவனால்விரைந்தெனமதித்துக்
காற்றின்முந்துசெறேரிடைக்கடிதுவந்தெய்திக்
கூற்றின்வெம்பசிதணிப்பதோர்சிலையினைக்குனித்தான். (௧௨௬)

வாணிபோற்றிடுசெயமகள்வீரமாமடந்தை
நீணிலைப்படவேறுசோபானத்தினெறிபோற்
பூணளாவியபொன்னவாஞ்சிலைதனிற்புணர்த்த
நாணினோதையைக்காட்டினனணிவிரனகத்தால். (௧௨௭)

கரங்கொள்வில்லொலிகேட்டலும்பாரிடக்கணங்கண்
மரங்கள்சிந்தினர்சிகரிகள்சிந்தினர்மலையு
மூரங்கள்சிந்தினர்வீரமுஞ்சிந்தினருடலுஞ்
சிரங்களானவும்பனித்திடவோடினர்சிதறி. (௧௨௮)

யாண்டுமாகியேயிரிந்தனரல்லதிந்நிலத்தில்
வீண்டுளார்சிலர்பதைத்துநின்றார்சிலர்வீழ்ந்து
மாண்டுளார்சிலர்மயக்கமுற்றார்சிலர்மற்று
மாண்டுபன்னிரண்டொழிந்திலதவுணன்வில்லரவம். (௧௨௯)

வேதனஞ்சினன்மான்முடிதுளக்கினன்விண்ணோர்
நாதனஞ்சினன்மறலியுமஞ்சினனடுங்கிக்
கோதினல்லறமஞ்சினவைவகைகொண்ட
பூதமஞ்சினவுயிர்த்தொகையஞ்சினபொருமி. (௧௩௦)

வஞ்சன்வார்சிலைநாணொலிகேட்டலுமறத்தால்
விஞ்சுபூதமீராயிரவெள்ளமும்வெருவி
யெஞ்சியேயவணின்றிடாதிரிந்துளவென்றா
லஞ்சுபூதங்களஞ்சுவதற்புதத்தனவோ. (௧௩௧)

சூரன்விற்பெருமுழக்கினைக்கேட்டலுந்துளங்கிப்
பாரிடத்தொகையழிதரவன்னதுபார்த்துப்
போரியற்படைத்தலைவர்நூற்றெண்மரும்புகுந்து
மாரியிற்பொழிந்திட்டனர்வரைகளுமரமும். (௧௩௨)

அன்னவேலையிற்பத்துநூறுயிரகோடி
பொன்னின்வெங்கணையவுணர்கோன்முறைமுறைபோக்கித்
தன்னுழைப்புகும்வரையொடுதருக்களைத்தடிந்து
துன்னுபாரிடத்தலைவர்தம்யாக்கையைத்துளைத்தான். (௧௩௩)

முடிதுளைத்தனன்முகத்தினைத்துளைத்தனன்மொய்ம்பைத்
தொடையன்மார்பினைத்துளைத்தனன்பாணியைத்துளைத்தான்
கடிதுளைத்தனன்குறங்கினைத்துளைத்தனன்கழல்சே
ரடிதுளைத்தனன்பாரிடத்தலைவருமயர்ந்தார். (௧௩௪)

துளைத்தமெய்யினைவெஞ்சரம்போதலுந்துயர்கொண்
டிளைத்துநின்றனனதிபலன்வக்கிரனென்போன்
களைத்துவீழ்ந்தனன்வச்சிரனிரங்கினன்கபாலி
யுளத்தின்வன்மையதழிந்தனனுன்மத்தனுலைந்தான். (௧௩௫)

நீடுகுன்றினையேந்தியேயச்சுதனின்றா
னோடுகின்றிலனெதிர்ந்திலன்மாபலனுளைந்தான்
வாடுகின்றனன்மதிசயன்மேகனுமருண்டா
னாடுறுந்துயரறிந்தனனண்டவாபரணன். (௧௩௬)

மேகமாலியுண்ணடுங்கினன்சுப்பிரன்மெலிந்தான்
காகபாதன்மெய்பதைத்தனனுதவகன்கவன்றா
னாகம்வீழ்ந்திடுகுருதியுளழுந்தினனசலன்
மாகவந்தனொந்திரங்கினனத்திரிமறிந்தான். (௧௩௭)

பத்திரன்சிறிதிடைந்தனனுடைந்தனன்பதும
னெய்த்தசைந்தனன்வியாக்கிரன்றனஞ்சயனிரிந்தான்
மத்தன்வைதுவெய்துயிர்த்தனன்பினாகிமெய்மறந்தான்
சித்திராங்கனுங்கனகனுந்துயர்க்கடறிளைத்தார். (௧௩௮)

நெஞ்சழிந்தனர்மாலியுநீலனுநெடுங்கண்
பஞ்சடைந்தனர்கும்பனுநிகும்பனும்பதைப்புற்
றஞ்சியேங்கினர்சண்டியுந்தண்டியுமாலி
துஞ்சல்கூடினர்வாமனுஞ்சோமனென்பவனும். (௧௩௯)

வெங்கணுக்கிரனெழுவதற்குரனிலன்வெருண்டான்
சிங்கனோய்ந்தனன்சுவேதசிரீடன்மறந்தீர்ந்தான்
சங்கபாலன்வீழ்ந்துருண்டனனந்தியுஞ்சலித்தான்
பிங்கலனுயிர்க்கின்றிலனுரோமசன்பெயர்ந்தான். (௧௪௦)

இனையதன்மையாலிவர்முதலானநூற்றெண்ம
ரணிகவேந்தர்கள்போர்வலியின்றியேயழியத்
துனையமற்றதுகண்டுநூறாயிரத்தொகையோர்
கணையும்வார்சிலைவாங்கியேதூர்த்தனர்கணைகள். (௧௪௧)

தூர்த்துமற்றவர்மாறுகொண்டிடுவுழிச்சூரன்
வேர்த்துவெங்கணைமாரிதூயனையனவிலக்கி
யார்த்துவெஞ்சரமாயிரகோடிதொட்டங்கண்
மூர்த்தமொன்றினிலனையவர்சிலைகளைமுரித்தான். (௧௪௨)

முரித்துமற்றவர்வார்சிலையெடுப்பதன்முன்னந்
திரித்துமாயிரகோடிவெங்கணையினைச்செலுத்திப்
பரித்திறம்பலபூண்டிடுந்தேர்களைப்படுத்தி
யுரத்திலன்னவர்க்கிலக்கமாயிரங்கணையுய்த்தான். (௧௪௩)

Digitized By Roja Muthiah Research Library

உய்த்தவாளிகணெஞ்சுபோழ்ந்திடுதலுமுலைந்தே
யெய்த்துவீழ்ந்தனரிலக்கருமனையகண்டிரங்கி
வித்தகங்கெழுவீரமார்த்தாண்டனும்விடலை
கைத்தலங்கெழுசிலையொடுநேர்ந்தனன்கடிதின். (௧௪௪)

வாங்குவில்லினனெதிர்ந்தநாணொலியன்வார்கடல்க
ளேங்குமார்ப்பினனவுணன்மேற்கணையெனுமெழிலி
தூங்குவித்தலுஞ்சரங்கடேயன்னவைதொலைத்துத்
தீங்கடுங்கணையாயிரநுதலிடைச்செறித்தான். (௧௪௫)

செறித்தகாலையில்வீரருள்வெய்யவன்செயிர்த்து
மறித்தும்வெஞ்சரந்தூண்டவேயாயிரம்வாளி
குறித்துவீசியேயவன்விடுகணையொடுங்குனிவில்
லறுத்துரம்பிளந்தம்புபெய்தூணியுமட்டான். (௧௪௬)

அட்டகாலையில்வீரமார்த்தாண்டனுள்ளழுங்கிப்
பட்டுளானெனவீழ்ந்தனன்பரிசதுநோக்கி
யொட்டலான்வலியடக்குவன்யானெனவுருத்து
விட்டதேரொடும்வந்தனனரக்கனும்விறலோன். (௧௪௭)

வந்தவீரராக்கதனெனுநாமத்துவலியோன்
கொந்துலாந்தொடைதூங்குதன்கொடுமரங்குனியா
வைந்துநூற்றிரண்டடுசரந்துரந்திடவதுகா
ணுந்தியார்த்தனனவுணர்கோனோராயிரங்கணைகள். (௧௪௮)

முட்டுவெங்கணைவீரராக்கதனெனுமொய்ம்பன்
றொட்டவாளியைவிலக்கியங்கவன்சிலைதுணிக்க
நெட்டிருஞ்சுடர்வாளமொன்றேந்திநீள்விசும்பி
லெட்டுமாதிரக்கரிகளும்வெருவவார்த்தெழுந்தான். (௧௪௯)

விண்ணெழுந்தவனவுணர்கோனின்றிடும்வியன்றேர்க்
கண்ணில்வாவியேயாங்கவன்கொண்டகார்முகத்தைத்
துண்ணெனச்சுடர்நாந்தகத்தெறிதலுஞ்சூரன்
வண்ணவார்சிலைமுடிந்திலதொடிந்ததுமணிவாள். (௧௫௦)

நெடியவாட்படையிற்றிடவிறலுடைநிருதன்
றொடையன்மார்பகத்தெற்றுவான்முயறலுஞ்சூரன்
படையிழந்திடும்வலியிலற்கொல்வதுபழியென்
றடியின்மேற்படுத்தெறிந்தனனண்டமேற்செல்ல. (௧௫௧)

அரக்கர்வீரனையவுணர்கோனெறிந்திடவலமந்
திரக்கமெய்தியேவீழ்ந்தனன்புவிமிசையிதுகண்
டுரக்கடுங்கணைமாரிகளொன்னலன்றேருங்
கரக்கவீசிவந்தேற்றனன்மகேந்திரன்கடியோன். (௧௫௨)

சூரனங்கதுவிலக்கியேகணைமழைதுரப்ப
வீரன்மற்றதுசிந்தினன்பகழிகள்வீசிச்
சாரிவட்டமதாய்வரவவுணனுந்தக்கோன்
றேரைவட்டணைவந்தனன்சிலீமுகஞ்சிதறி. (௧௫௩)

Digitized By Roja Muthiah Research Library

திரியும்வட்டணைமுறையினாற்சரமழைசிதறி
வருதிறத்தினாலையமதாவவர்வடிவை
யொருதிறத்தருந்தெளிகிலருணர்ந்திடவற்றோ
விருதிறத்தரும்வீரமாமகேந்திரரென்றால். (௧௫௪)

ஆளரிக்குடன்வந்தவனத்துணையழன்று
கோளரிக்குடன்வந்தவன்விடுசரங்குறைத்துத்
தாளின்முப்பதுமருமமீதிருபதுதடம்பொற்
றோளின்முப்பதுகணைவிடுத்தவன்வலிதொலைத்தான். (௧௫௫)

வலிதொலைந்தவன்வீழ்தலுமாக்களின்றொகைமேற்
புலியடைந்தெனவவுணர்கோனுரப்பினன்புகலு
மெலிவிலாற்றலன்வீரதீரனெனும்வெய்யோன்
சிலைகுனிந்திடப்பகழிவானிமிர்ந்திடச்சென்றான். (௧௫௬)

சென்றவீரதீரன்விடுகணையொடுசிலையை
யொன்றோராயிரம்வாளியால்வீட்டியேயுயர்ந்த
குன்றமன்னதோர்தேரையேழ்கணையினாற்குறைப்ப
நன்றுநன்றெனாத்தண்டமொன்றெடுத்துமேனடந்தான். (௧௫௭)

நடத்தலாகியவெல்லையிற்பகழியோர்நான்கு
தொடுத்துமற்றவனேந்தியதண்டினைத்துணித்துத்
தடத்தமார்பினுமொய்ம்பினுமேழிருசரங்கள்
விடுத்துமண்மிசைவீட்டினன்யாரையும்வென்றான். (௧௫௮)

ஆனகாலையில்வீரமாமகேசனுமடலோன்
கூனல்வில்லினாலரிதிவன்றன்வலிகோடன்
மானமார்திறன்மொய்ம்பற்குமெனமனம்வலியா
வூனுமாவியுங்கவர்வதோர்தெய்வவேலுய்த்தான். (௧௫௯)

வேல்விடுத்தழிக்கண்டவன்வெஞ்சிலைகுனித்துக்
கோல்விடுத்தலுமாயிரமன்னவைகுறைத்துச்
சூல்விடுத்திடுமெழிலிபான்மின்வருந்தொடர்பின்
மால்விடுத்திடாவவுணன்மார்புற்றதவ்வைவேல். (௧௬0)

உற்றதோரெஃகநுண்டுகளாகிவிண்ணுலவிச்
சுற்றுமாதிரஞ்சென்றதுசூரன்மேல்வீரன்
மற்றோர்தண்டினைவிடுத்திடவெடுக்குமுன்வல்லோர்
சொற்றசாபத்தின்முந்துமேழ்கணையினைத்தொடுத்தான். (௧௬௧)

எழெனப்படுபகழியுமகேசனுமேந்தல்
பாழிமொய்ம்பினைப்பாழியதாகவேபடுத்த
வீழலுற்றதங்கவனுடலுணர்ச்சிகள்வீந்த
சூழுகின்றதோர்மன்னுயிரடைந்ததுதுரியம். (௧௬௨)

மகேசனென்பவன்மயங்கலுமற்றதுநோக்கிக்
ககேசன்மேல்வருமிராகுவினவுணனைக்கனன்று
நகேசன்மங்கையோடிகலிவேங்கடகிரிநண்ணுங்
குகேசனேவல்செய்வீரகேசரியெதிர்கொண்டான். (௧௬௩)

Digitized By Roja Muthiah Research Library

எதிர்புகுந்தவன்வணக்கியேநாணொலியெறிந்த
துதிகொள்வார்சிலைதன்னையேழ்கணையினாற்றுணியா
வதிர்சூரன்மணித்தேரைநூறம்பினாலறுத்து
நுதிநெடுங்கணையழுத்தினனாயிரந்தலின். (௧௬௪)

ஆயிரங்கணைநுதலிடையழுத்தவம்புவியிற்
பாய்தருங்குருதிப்பெருநதியொடுபாய்ந்து
சேயிருங்குவடொன்றினைச்செங்கையாற்பறித்து
மாயைதந்திடுமதலைமேல்விடுத்தனன்மன்னோ. (௧௬௫)

எறித்தருஞ்சுடர்த்தபனனுஞ்சேடனுமிரங்கப்
பறித்தெடுத்துமேல்வீசியபராரையங்குன்றம்
வெறித்தருந்தொடையவுணர்கோன்விசிகமொன்றதனா
லறுத்துமார்பினூறயிற்கணையழுத்தினனம்மா. (௬௬௬)

கரம்புகுந்திடுங்குனிசிலையுமிழ்ந்திடுங்கணைக
ளுரம்புகுந்திடவீரகேசரிமனமுளைந்து
பரம்புகுந்திடுமவுணர்கோன்றேர்மிசைப்பாயா
வரம்புகுந்தகுன்றன்னமார்பத்திடையடித்தான். (௧௬௭)

வடித்தவிற்படையவுணர்கோன்மருமத்தின்வலிதா
யடித்தகாலையில்வீரகேசரிதனதங்கை
வெடித்ததாமெனக்கீண்டதுவிண்டதுசோரி
துடித்துயிர்ப்பொடுதேரிடைமறிந்தனன்றுயரால். (௧௬௮)

வீரகோளரிபதைத்துமான்றேரிடைவீழச்
சூரன்மற்றிவற்கொல்வதுபழியெனச்சூழா
வோர்கையாலவன்றனையெடுத்தச்சுதனுறங்கும்
வாரிதிக்கிடையெறிந்தனன்விண்ணவர்மருள. (௧௬௯)

பரந்தபாற்கடலெறிதலும்வீழ்ந்தவன்பதைப்புற்
றரந்தையெய்தியேயெழுந்துவிண்ணெறியின்மீண்டணுகி
முரிந்ததம்மினங்கூடினனங்கதன்முன்னம்
புரந்தரப்பெயர்வாகையானேற்றெதிர்புகுந்தான். (௧௭0)

ஏற்றெதிர்ந்திடுவீரமாபுரந்தரனென்பா
னாற்றல்வெங்கணைசொரிந்துபோர்செய்வனேலவற்றை
மாற்றிவென்றிடுமென்னையுமிவனெனமதித்துக்
கூற்றுவன்படைதொட்டனனவுணனைக்குறுக. (௧௭௧)

குறுகுமப்படைவரத்தினைநோக்கியேகொடியோன்
முறுவல்செய்தனனங்கதற்கெதிருறமுரணு
லுறுவதோர்படைதொட்டிலனிகழ்ந்திடவவன்மேன்
மறலிதன்படைபட்டுமாய்ந்திட்டதுவரத்தால். (௧௭௨)

தண்டகன்படைமாய்தலுஞ்சயங்கெழுமகவான்
முண்டகன்படையெடுத்தனன்றொடுப்பதன்முன்னங்
கண்டகன்சிலைவாங்கிநூறாயிரங்கணையை
விண்டகன்பெருமார்பகந்திறந்திடவிடுத்தான். (௧௭௩)

Digitized By Roja Muthiah Research Library

நிறந்தருஞ்சுடர்க்கணைபுகுந்துரத்தினைநெறியாத்
திறந்துபோயினவீரமாபுரந்தரன்செங்கை
யுறைந்தநான்முகப்படையொடுஞ்சோரிநீருமிழ்ந்து
மறிந்துமாய்ந்தனன்வந்தனன்வீரர்தம்மறலி. (கஎச)

தீரராந்திறலவுணர்கள்பூதராஞ்சிதைவார்
சூரராஞ்சிலைவல்லவர்நமரெலாந்தொலையு
நீரராஞ்செருச்செயலிதுநன்றெனநிகழ்த்தி
வீரராந்தகன்வந்தனனந்தகன்வெருவ. (கஎரு)

சார்ங்கமன்னதோர்வலியதாய்மாமதன்றனுவா
ஈர்ங்கரும்பெனவரிபடுசிலைகுனித்தேற்றுக்
கார்ங்கரும்புயலாமெனநாணொலிகாட்டிக்
கூர்ங்கொடுங்கணைசிதறிநின்றார்ப்பிசைகொண்டான். (கஎசு)

ஆர்ப்பெடுத்தலுமஞ்சினன்கதிரவனங்கம்
வேர்ப்பெடுத்தனரமரர்கள்விஞ்சையர்விண்டார்
சிர்ப்பெடைக்குலமலமரக்கின்னரஞ்சிந்திப்
பார்ப்பெடுத்திரிகின்றனகேசரப்பறவை. (கஎஎ)

ஆனகாலையில்வீரரந்தகன்விடும்பின்
சோனைமாரியைக்கணைகளால்விலக்கியேசூர
னானுமாவியுங்கவருமாயிரங்கணையுய்ப்பத்
தானுமாயிரம்பகழிதொட்டன்னதைத்தடுத்தான். (கஎஅ)

தடுத்தகாலையிலவுணர்கோன்சினவிழுத்தலைசேர்
வடித்தவச்சிரச்சிலீமுகமாயிரம்வல்லே
யெடுத்துவிட்டிடவீரரந்தகன்றமக்கெதிரா
விடுத்தபல்லவம்யாவையுஞ்சிந்தியேவிரைந்த. (கஎகூ)

விரைந்துபோய்விறலந்தகன்றேரினைவீட்டிக்
கரந்தனிற்சிலையொடித்துவீரத்தினைக்கலக்கி
யுரந்தனிற்புகுந்துணர்வுண்டுசோரிநீருகுத்துப்
புரந்தரற்குளந்துணுக்குறப்போயதுபுறத்தில். (கஅ0)

விறல்படைத்திடுமந்தகன்கணைபடவீழ்ந்து
மறல்படைத்திடவாங்கதுநோக்கியேமனத்தி
லுறல்படைத்திடுசெற்றமுமானமுமுகைப்பத்
திறல்படைத்திடுமொய்ம்பினனவுணன்மேற்சென்றான். (கஅக)

அரிகளச்சுறும்வீரவாகுப்பெயரறிஞ
னிரதமூர்ந்துவந்தேற்றலுமாங்கவனெழில்சே
ருருவநோக்குறாவொற்றனுமிவனெனவுன்னிப்
பெரிதுவெஞ்சினமெய்தியேயவுணர்கோன்பேசும். (கஅ௨)

எமதுவீரமாமகேந்திரஞ்சாடியெண்ணில்லாத்
தமரையட்டனைதானைகளளப்பிலதடிந்தாய்
குமரர்தங்களைக்கொன்றனைநின்னுயிர்கொண்டே
யமரினாற்றலையின்றொடேமுடிக்குவனம்மா. (கஅ௩)

Digitized By Roja Muthiah Research Library

பற்றுபட்டிமையயிற்றியேயமைச்சரிற்பன்னி
யொற்றனுகியேயின்னும்வந்தாயெனினுய்தி
மற்றதேகடன்வார்சிலைபிடித்தனைமாண்டா
யிற்றைவைகலோநின்னுயிர்க்கிழைத்தநாளென்றான். (க௮௪)

தூதுமாகுவனமைச்சனுமாகுவன்றன்னோர்
மீதுவெஞ்சமராற்றுவனின்னமும்வேலோ
னேதிடும்பணியாவையுஞ்செய்குவனுலகி
லேதும்வல்லன்யான்வேண்டுபோர்புரிதியாலென்றான். (க௮௫)

என்றுவீரனேதிடுதலுமெரிந்தனநயனந்
தின்றவாளெயிறிதழினையுரோமங்கள்சிலிர்த்த
துன்றுசீற்றமுள்ளெழுந்ததுசூரனுமவுணன்
குன்றமன்னவிற்குனித்தனனொலிகொண்டான். (க௮௬)

சிலைபணித்திடக்குனித்திடுகாலையிற்செம்பொன்
மலைபணித்தனபாரகம்பணித்தனவான்றோ
யலைபணித்தனவண்டமும்பணித்தனவங்கட்
டலைபணித்தனனரவினுக்கிறையவன்றானும். (க௮௭)

வேறு.

அம்முறைவேலையிலாடல்கொண்மொய்ம்பிற்,செம்மறனுதுசெழுங்கரமுற்ற,மை
ம்மலிவார்சிலைவன்மையின்வாங்கிக்,கொம்மெனநாணொலிகொண்டனனார்த்தான்.

ஆர்த்திடுபேரொலியாங்கவன்வாங்குஞ், சீர்த்தனுவார்ப்பொடுசென்றிடுகாலை
மூர்த்தமதொன்றினின்முச்சகவைப்பும், பேர்த்தெனவேபெயர்குற்றனவன்றே.()

அங்கதுகாலையிலாயிரகோடி, துங்கநெடுங்கணைதூர்த்தனனார்ப்பப்
புங்கவனுக்கிளையான்புயலென்ன, வெங்கணைவீசிவிலக்கினனின்றான். (க௯0)

விலக்கியகாலைவெகுண்டிவனாவி, கலக்குவனென்றுகடுஞ்சரம்வெய்யோ
னிலக்கம்விடுத்திடவேந்தறுத்தான், கொலைக்கணையாயிரகோடிதொடுத்தே.க௯க

வெற்றிகொள்வான்பினும்வெங்கணைகோடி, செற்றமொடேசெறிவித்திடுகாலை
மற்றவைசிந்தினன்வாளிகணூறு, நெற்றியில்விட்டனனீள்புயவீரன். (க௯௨)

அச்சுதனுமவுணன்குளமெய்தி, மெய்ச்சரநூறும்விளிந்துபின்விண்ட
வச்சிரமாகியமால்வரையொன்றி, னுச்சியினுற்றபொன்னூசிகளென்ன. (க௯௩)

நூறயில்வாளிநுதற்கிடைசென்று, மூறிலனாகியுறுந்திறனோக்கி
யாறுமுகேசனயிற்படையல்லா, லீறுசெயாதிவன்யாக்கையையென்றான்.(க௯௪)

என்றிடும்வீரனிதற்பினும்வாளி, துன்றுபல்கோடிசொரிந்திடவெய்யோன் [ன்.
வன்றிறல்வெங்கணையாலவைமாற்றி, யொன்றுடனேழ்கணையொண்புயமுய்த்தா

அம்பிருநான்குமணைந்துடனுடன், மொய்ம்பினன்மொய்ம்புறமூழ்கியுள்ளூற்ற
செம்புனலுண்டுசெழும்பிடர்போழ்ந்தே, யும்பர்வெருக்கொளவோடியமாதோ. ()

ஓடியவேலையுளைந்திடுநெஞ்ச, னாடல்கொண்மொய்ம்பினனவ்வசுரேசன்
பாடுறுதேர்விடுபாகர்தமெய்யிற், கோடிபல்கோடிகொடுங்கணைவிட்டான். (க௯௭)

அலகினெடுங்கணையாகமழுந்த, வலவர்களாற்றவருந்தினராகிப்
புலவொடுசோரிபுறத்தில்விளங்ச், லில்வமலர்ந்தெனயாருமிருந்தார். (க௯௮)

அங்கதனோக்கியழன்றசுரேசன், செங்கணையைம்பதுதீயெனவோச்சி
வெங்கண்விறற்புயன்மேதகுதேரைப், பொங்குளைமாவொடுபொள்ளெனவட்டான்.

அட்டிடுகொலையடற்புயனுங்கோர், வட்டணையாழிகொள்வையமதேறி
நெட்டழல்வாயுநெடும்படைதன்னைத், தொட்டனனங்கதுசூரனறிந்தான். (உ00)

வேறு.

வீறுகியவசுரர்க்கிறைமிகமூரல்படைத்து
மாறுக்கொர்படைதொட்டிலன்வரிவில்லொடுநிற்பச்
சூறுவளியழன்மாப்படைசூரன்மிசைதாக்கி
யூறுயினநூறுயிரமுதிராயினபிதிராய். (உ0க)

காற்றின்படைகனலின்படைகண்டம்பலவாகக்
கூற்றின்படைகதிரின்படைகூடத்தொடுத்திடலுஞ்
சீற்றங்கெழுசூரன்மிசைசென்றேயவைதாமு
மேற்றந்தனையிழந்தேகடிதிறந்திட்டனவன்றே. (உ0உ)

அருணன்படைமறலிப்படையழிவெய்தலுமம்மை
சரணந்தனில்வருசத்திகடருமைந்தரிற்றலைவன்
வருணன்படைநிருதிப்படைமகவான்படைமூன்று
முரணங்கொடுகொடியோனுரமொய்ம்பிற்புகவிடுத்தான். (உ0௩)

ஏயுற்றவையவுணர்க்கிறையிருதோளுரமெய்தி
வீயுற்றனவதுகாலையில்வீரங்கெழுமொய்ம்பன்
மாயப்படையவுணப்படை * வல்லேசெலவிடுப்பப்
போயப்படையவன்மெய்யிடைப்புகுந்தேபொடியான. (உ0௪)

விண்ணோர்படையிவையாவையும்விளிவாதலும்வீர
னண்ணான்பெருவிறல்கண்டனனனிவிம்மிதனாகி
மண்ணோடுயிர்த்தொகையாவையும்வகுத்தோன்படைநளினக்
கண்ணோன்படையொடுகூட்டுபுகடிதிற்செலவிடுத்தான். (உ0௫)

விடுக்குற்றிடுமயன்மால்படைவிரைந்தேசினம்வீங்கி
யடுக்குற்றிடுமுருமுப்புகையழல்கால்பலபடைகண்
மடுக்குற்றிடுபுணரித்தொகைவகுத்தெவ்வகையுலகு
நடுக்குற்றிடவவுணற்கெதிர்நடந்திட்டனமாதோ. (உ0௬)

ஆண்டேவருமயன்மால்படையவுணன்றடமார்பங்
கீண்டேகுதுமென்றேயவன்கிளர்தாரகலத்தின்
மூண்டேசினமொடுதாக்கியமுழுமாமணிவயிரச்
சேண்டோய்கிரிதுளைப்பான்முயல்சிறைவண்டினமெனவே. (உ0௭)

மாயோன்படையுலகந்தருமறையோன்படையவுணத்
தீயோனுரந்தனிற்பாய்ந்துதிருத்தொல்வலிசிந்தி
மீயோங்கியவசுரேசரும்விண்ணோர்களுநோக்கி
யேயோவெனவசையெய்தியிரிந்திட்டனவன்றே. (உ0அ)

மீளுற்றவையிரியுஞ்செயல்விழிதீயுறநோக்கி
நீளுற்றிடுதிறன்மொய்ம்பினனிமலன்வரமுன்னிக்
கோளுற்றிடுபெருவிம்மிதங்கொண்டுற்றிடவண்ட
மாளுற்றிடுமவுணர்க்கிறைநகைசெய்திவையறைவான். (உ0௯)

---

* அவுணப்படை - ஆசுரப்படைக்கலம்.

முத்தேவரின் முதலாகியமூவாமுதல்வரத்தா
லெத்தேவர்கள்படையுய்க்கினுமெனைவெல்கிலவெந்தப்
புத்தேள்படைவிடினும்மெதிர்பொரவேயொருபடையு
முய்த்தேதடைவினைசெய்கிலனவற்றின்வலியுணர்வேன். (௨௧0)

ஊனீத்திடுதவவிண்ணவருலகம்புகழயன்மா
றானீத்துளபடையென்னிடைசார்கின்றதொர்தன்மை
மாநீத்தமெலாமுண்டிடுவெடவைத்தழலதனைத்
தேனீத்தொங்கைதசையீதெனச்சேருந்திறனன்றே. (௨௧௧)

தெரிந்திட்டனைநீயோச்சியதிறல்வெம்படையென்பாற்
புரிந்திட்டதொர்வயமொன்றிலைபொள்ளென்றுரமேவி
முரிந்திட்டனமறிந்திட்டனமுடிந்திட்டனபொடிந்தே
யெரிந்திட்டனகரிந்திட்டனவிடைந்திட்டனவல்லால். (௨௧௨)

வில்வன்மைகொள்சரவன்மையும்விண்ணோர்படைக்கலத்தின்
பல்வன்மையும்பிறவாகியபடைவன்மையுமியல்பாந்
தொல்வன்மையுங்கண்டேயுனைத்தொலைவில்படையொன்றாற்
கொல்வன்னெனக்காலந்தெரிகூற்றாமெனநின்றேன். (௨௧௩)

என்றுவசுரன்செப்பலுமிளையோனினியொன்றா
லொன்றார்களிற்றலைவன்வலியுணர்வேனெனவுன்னாத்
தொன்றுளெயின்மூன்றட்டருடேயோன்படைக்கலத்தை
மன்றாரருள்புரிசிந்தனைவழிபாட்டொடுவிடுத்தான். (௨௧௪)

விடுங்காலையினிறைவன்படைவிடம்வெங்கனலசனி
கொடுங்காலிருள்கதிர்வெய்யவன்கூற்றம்பலகூளி
தொடுங்கார்முகச்சரமாரிகள்சூலம்புடைசுற்ற
வடுங்காலமிதெனவேநெடிதார்த்துற்றதையன்றே. (௨௧௫)

உறுகின்றதொர்படைநோக்கினனுரமுற்றெனக்குடைந்தே
யிறுகின்றதொர்படைமற்றலவீசன்படையீதாற்
பெறுகின்றவப்படையாலிதுபிழைசெய்குவலென்னாச்
செறுகின்றதொரவுணர்க்கிறைசிவன்றொல்படையெடுத்தான். (௨௧௬)

ஊறேற்றிடுதன்சிந்தையினுறுபூசனைநிரப்பி
யாறேற்றிடுசெடிலத்தவனடன்மாப்படைதொடுப்ப
நீறேற்றிடுமொய்ம்பன்விடுநிமலப்படையெதிர்போய்
மாறேற்றமர்புரிந்திட்டதுவையத்தவர்வெருவ. (௨௧௭)

வேறு.

காண்டகுநுதல்விழிக்கடவுண்மாப்படை, யாண்டவையிரண்டுநின்றுடலாற்றியே
மாண்டிடுமுலகெனவானம்போற்றிட,மீண்டனவொல்லையில்விட்டுளோர்கள்பால்.

அன்னதுநோக்கியேயசுரர்மேலையோ,னின்னவைகொல்லுனக்கியன்றவன்மை
க, ளுன்னுயிரின்னினியொழிப்பன்காண்கெனாத், தன்னெடுஞ்சிலைவளைஇச்சரங்க
ள்சிந்தினன். (௨௧௮)

துன்புறுவடிக்கணைசூரன்சிந்தலுந், தன்பெருஞ்சிலையினைத்தானும்வாங்கியே
முன்புறநெடுஞ்சரமுகிலிற்றூவினன், பொன்புனையலங்கலம்புயத்தவள்ளலே. ()

அத்தகுமெல்லையிலவுணர்மன்னவன், முத்தலைநெடுங்கணைமூவைந்தேவியே
மற்றவனொய்ம்புடைவீரவாகுவின், கைத்தலவில்லினைக்கண்டமாக்கினான். ௨௨௧

சிலையதுதுணிதலுஞ்சிறிவீரனோ, ரிலையுடைவேலினையெடுத்துவீசலுந்
தொலைவறுவரம்பெறுசூரன்மார்பெனு, மலையிடைக்குறுகியேமற்றதிற்றதே. ௨௨௨

இற்றுழியவுணர்களிறைவன்மாலயன், மற்றுளகடவுளர்வலியுங்கொள்வதோர் [ல்.
கற்றையங்கதிர்மணிக்கதையொன்றேச்சினான்,வெற்றிகொண்டுலவியவீரவாகுமே

திண்மைகொள்பஃறலைச்சேடன்பாங்குளா, ரெண்மரோடொன்றியோரியற்கை
த்தாகியே,யுண்மலியார்ப்புடனெழூஇச்சென்றென, வண்மணிகறங்கிடமணித்தண்
டெற்றதே. (௨௨௪)

வெங்கதைவருதலும்வீரவாகுவோர், செங்கதையெதிருறச்செலுத்திநிற்றலு [றே.
மங்கதைநீறுசெய்தவன்றன்மார்பிடைத், துங்கதைதன்னொடுதுன்னென்றெய்திற்

மேக்குயர்பெருஞ்சினவீரவாகுவின், மாக்கிளரகலமேல்வயிரமாக்கதை
தாக்கலும்விண்டதுதாரைச்செம்புனீர், தேக்கியநதிகளிற்றிரைத்துச்சென்றதே.()

ஆழ்ந்திடுசோரியனவுணன்றண்டினாற், போழ்ந்திடுமார்பினன்புகையுநெஞ்சினன்
றாழ்ந்திடும்விறலினன்றளரும்யாக்கையன்,வீழ்ந்தனனமரர்கள்வெருவியோடவே.

ஆற்றலின்றாகியேயண்ணல்வீழ்தலு, மேற்றிகழ்வலவனும்விசாலியென்பவன் [ன்.
றேற்றுறுபான்மையைச்சிந்தித்தோர்புடை, காற்றெனத்தேர்கொடுகடிதுபோயினா

போந்திடுகோலையிற்புலம்பிவீழ்ந்துளான்,மாய்ந்திடுஞ்சரதமாமென்றுமாறிலா[மேல்.
ளுய்ந்தனன்சிலைகுனித்தப்புமாரிதூய்க், காய்ந்தனன்சென்றனன்கணத்தின்றானை

பொன்றிடாவரத்தினான்பூதசேனைமேற், சென்றனன்கணைமழைசிதறிக்கோறலு
நின்றவையிரிந்தனநெடியதீக்கதி, ரென்றினையடைந்திடுபனியினீட்டம்போல். ()

தாக்கிகல்வீரருஞ்சயங்கொண்மொய்ம்பனு, நீக்கமிலிராயிரநீத்தத்தானையு,மூக்
கியவலியழிந்துடைந்ததன்மையை,நோக்கினன்பன்னிருநோக்கங்கொண்டுளான்.

ஆண்டதுவேலையிலாறுமாமுகன், பாண்டிலந்தேர்மிசைப்பாகைநோக்குறா
வேண்டகுசூரன்மேலிரதமொய்யெனத்,தூண்டுதியென்றனன்சுரர்கள்போற்றவே.

வேறு.

இணையறுமுருகனிவ்வாறிசைத்தலுமினையதோரா
வுணர்வுறுபவனனென்னுமொருதனிப்பாகனாகர்
கணமணிசெறிந்தபொற்பிற்காமருகடவுட்டேரைத்
துணையறுசூரன்முன்னர்த்துன்னெனத்தூண்டியுய்த்தான். (௨௩௩)

ஆயதுகாலைதன்னிலவுணர்கோனநந்தகோடி
ஞாயிறுதிரண்டொன்றாகிஞாலமேலிருளையோட்டிச்
சேயுயர்விசும்பைநீங்கிச்செருநிலத்துற்றதென்னத்
தூயதோர்குமரன்போரிற்றோன்றியதோற்றங்கண்டான். (௨௩௪)

முண்டகமலர்ந்ததன்னமூவிருமுகமுங்கண்ணுங்
குண்டலநிரையுஞ்செம்பொன்மவுலியுங்கோலமார்பு
மெண்டருகரமீராறுமிலங்கெழிற்படைகள்யாவுந்
தண்டையுஞ்சிலம்புமார்க்குஞ்சரணமுந்தெரியக்கண்டான். (௨௩௫)

Digitized By Roja Muthiah Research Library

சூரெனுமவுணர்கோமான்றொல்லைநாளேற்றவாறும்
பாரிடைமுடிவின்றாகிப்பல்லுகமிருந்தவாறு
மாரணமறிதறேற்றாவாறுமாமுகத்தெம்மையன்
பேரெழிலுருவநோக்கிப்பெரும்பயன்கோடற்கேயோ. (உ௩௬)

எஞ்சலிலவுணர்செம்மலிங்ஙனமமரதாற்றித்
துஞ்சிலென்றொலைவுற்றாலென்றூயவாலறிவின்மிக்கோர்
நெஞ்சினுமளத்தற்கொண்ணாநிருமலக்குமரமூர்த்தி
செஞ்சுடர்வடிவங்கண்டுதீவினைநீங்கியுய்ந்தான். (உ௩௭)

பூவுலகண்டமெல்லாம்புரந்திடுஞ்சூரன்றன்னைத்
தீவினையாளனென்றேசெப்புவர்சிறப்பின்மிக்க
மூவிருமுகத்துவள்ளன்முன்னர்வந்தெய்தப்பெற்றா
னாவிவன்றவத்திற்கன்றியறத்திற்குமுதல்வனன்றோ. (உ௩௮)

இன்னமுமுனிவர்தேவர்யாவருமிளையனென்றே
யுன்னருந்தலைமைத்தாகுமொருதனிக்குமரன்றன்னைத்
தன்னிருவிழியாற்கண்டான்றானவர்க்கிறைவனென்றா
லன்னவன்றவத்தின்பேற்றையாரறிந்துரைக்கற்பாலார். (உ௩௯)

பொருசமர்விளைப்பான்போலப்பொருக்கெனப்போந்துசூர
னிருவிழிதன்னிற்காண்பானெளிதுதன்வடிவங்காட்டி
யருளதுபுரிந்தானென்னினறியங்குமரன்மாயத்
திருவிளையாடல்யார்க்குந்தெரிகிலபோலுமன்றே. (உ௪0)

சிந்தையாலறிதற்கொண்ணாத்திருவுருவிழியாற்கண்டு
முந்துதானின்றசூரன்முழுதுலகடுவானின்றோன்
மைந்தனுமிவனென்றுன்னிமனத்தினில்வெகுளிதூண்டக்
கந்தவேடன்னைநோக்கியினையனகழறலுற்றான். (உ௪௧)

வேறு.

சேனையாய்நினைச்சூழ்ந்தவர்செருவலியழிந்து
போனபோனதோர்மாதிரந்தெரிந்திலபூத
மானவீரருமழிந்தனர்சிலைத்தொழில்வல்ல
வேனையோர்களுமென்னொடுபொருதனரிறந்தார். (உ௪௨)

இற்றநின்பெரும்படைக்கெலாந்தலைவனாயென்பா
லொற்றுவந்துளவீரனும்பொருதுயிரொழிந்தான்
மற்றுநீயொருபாலனோவென்னொடுமலைந்து
கொற்றமெய்துதிநன்றுநன்றுன்னுளக்குறிப்பு. (உ௪௩)

மேலதாகியநின்னுடைத்தாதையும்விண்ணு
ஞாலமும்புரிந்துதவியநான்முகத்திறையு
மாலும்வெஞ்சமர்புரிதிறங்கருதிலர்மற்றோர்
பாலன்வல்லைகொலென்னொடுபோர்த்தொழில்பயில. (உ௪௪)

முந்தைநாள்வலியில்லதோரடுக்கலுமுன்யான்
றந்தசெல்வத்தின்மயங்கியதாரகாசுரனும்
புந்திநீங்கியவவன்படைத்தலைவரும்போல
மைந்தவென்னையுநினைந்தனைபோலுநின்மனத்தில். (உ௪௫)

Digitized By Roja Muthiah Research Library

தேக்குசீரினேன்வரத்தியனுன்னலைசிதையா
வாக்கமுன்னலைபெருமிடனுன்னலையடலின்
வீக்கமுன்னலைபடைத்திறமுன்னலைவெம்போ
ருக்கமுன்னலைசிறுவநீபெருஞ்சமர்க்குற்றாய். (உசசு)

கமலமேலுறைபகவனுமாயனுங்ககனத்
தமரர்செம்மனுமாதிரக்கிழவருமழுங்கச்
சிமையமங்கையுமிரங்குறவென்னெருசிலையா
லிமையொடுங்குமுனின்வலியழிக்குவனென்றான். (உசஎ)

வேறு.

சூரனென்றுரைபெற்றுள்ளதொல்லையோனினையதன்மை
வீரமுந்திறனுஞ்சீரும்வெகுளியுங்கொண்டுசெப்ப
வாரருளுருவாய்நின்றவாதியங்குமரன்கேளா
மூரலுஞ்சிறிதுதோன்றவித்திறமொழியலுற்றான். (உசஅ)

வெற்றியுமுடையமாற்றன்மிகுதியுமுடையமேன்மை
பற்றியுமுடையமெண்ணில்படைகளுமுடையம்வீயாப்
பெற்றியுமுடையந்தானைப்பெருங்கடலுடையமென்று
மற்றினியகந்தைகொள்ளேன்மாற்றுதும்வல்லமன்றே. (உசகூ)

வரமிகுசிறப்பினேமைமழவிளங்குமரன்கொல்லோ
பொருதுவென்றிடுவான்வல்லனென்றுநின்புந்திகொண்டாய்
பெரிதுநீமடவைமாதோபிரான்றனிநெற்றிநாட்டத்
தொருசிறுபொறியேயன்றேவுலகெலாமடுவதம்மா. (உருo)

அறிவுடைமுதியரென்றுமாண்டினையோர்களென்றுஞ்
சிறியவர்பெரியரென்றுந்திருத்தகுவளத்தரென்றும்
வறியவரென்றும்வீரர்மதிக்கிலர்யாவரேனும்
விறல்வலிபடைத்துநேரின்வெஞ்சமர்விளைப்பரன்றே. (உருக)

நூற்றுடனெட்டதென்னநுவலுறுமுகத்தின்காறும்
பேற்றுடனினிதுவைகும்பெரியநின்வலியையின்னே
தேற்றமதுறுதகொள்கைச்சிறியநம்வன்மைதன்னு
லூற்றுடைப்பாலிற்புக்கவுறையெனவடுதுமென்றான். (உருஉ)

வேறு.

என்னுமுன்வெகுண்டவுணர்கோனிருநிலந்தன்னை
முன்னளந்தவன்போலண்டமுகடுதோய்வுற்ற
கொன்னெடுஞ்சிலையொன்றினைக்கரத்தொடுகுனிப்ப
வன்னபான்மையைக்கண்டனனறுதியங்குமரன். (உருங)

மாலயன்சுரர்பல்லியமியம்பிவாழ்த்தெடுப்ப
வாலமார்வனத்தெம்பிரானுடியவந்நாண்
மேலைமூதண்டமுகடுறவெடுத்ததோர்வியன்றாட்
கோல்மென்னவோர்நெடுஞ்சிலையெடுத்தனன்குமரன். (உருச)

அடற்பெருந்திறற்சண்டிதன்பெருமிதமடக்கிப்
படித்தலந்தனையருளுவானுடல்செய்பரம
னெடுத்தசேவடிபகிரண்டமட்டிடாவியல்பாற்
றடுத்தசெங்கைபோற்குனித்தனனறுமுகன்றனுவை. (உருரு)

குனித்தவில்லிடைக்குமரவேணாணொலிகொண்டா
னனைத்துமண்டங்களுடைந்தபேரோதைபோலவுணன்
சினத்துமாறுதன்குணத்திசையெடுத்தனன்செகத்திற்
பனித்தடங்கடல்யாவுமார்த்துடைந்திடும்பரிசின். (௨௫௬)

அள்ளிலைப்படையவுணர்கோனடுசரமழைதூய்
வள்ளறன்னையுந்தேரையுமுலகையுமறைப்பத்
தெள்ளிதிங்கிவன்விஞ்சையென்றெந்தைசிந்தித்துக்
கொள்ளைவெங்கணைதுரந்தவையாவையுங்குறைத்தான். (௨௫௭)

குறைத்தகாலையிற்சினவியேபின்னருங்கொடுநஞ்
சுறைத்தபொற்கணைபலதொடவாளிகளோச்சி
யறுத்துமற்றவைகுமரவேளவுணர்கோன்றன்னை
மறைத்துவிண்ணெறிமாற்றினன்பகழிமாமழையால். (௨௫௮)

ஆனபான்மைசேர்பகழியின்படலிகையவுணன்
சேனைவாளியாற்றுணித்திடைவீட்டியேசுரர்தஞ்
சேனைகாவலற்கண்டனன்வினைத்தளைசிந்தி
ஞானநாயகத்தாணுவைக்காணுநற்றவர்போல். (௨௫௯)

கண்டுதீயவன்பத்துநூறுயிரங்கணைக
ளண்டர்நாயகன்குமரன்மேல்விடுத்தலுமவற்றை
யெண்டருஞ்சரமாரியால்விலக்கியீரேழு
புண்டருங்கணையுய்த்தனனங்கவன்புயமேல். (௨௬௦)

கயப்பொருப்பினையுரித்தமால்வரைதருகாளை
வயப்பொருப்பினையடுகணைசூரனும்வலியோன்
புயப்பொருப்பினையெய்தியேதுளைத்திலபுரைதீ
ரயப்பொருப்பையுற்றடல்பெறுவழலவன்கதிர்போல். (௨௬௧)

மாயைதன்மகன்வச்சிரயாக்கையின்வலியை
நாயகன்றிருமதலைகண்டழலெழநகைத்துத்
தீயவன்பினும்விடுவதோர்சரமெலாஞ்சிந்தி
யாயிரங்கணையாலவன்சிலையினையறுத்தான். (௨௬௨)

சிலையினைத்துணித்திடுதலுமவுணர்கோன்செயிர்த்து
மலையினைத்தடிந்தவன்மிசைமலரயன்றந்த
விலையயிற்படையொன்றினையெறிதலுமீரேழ்
கொலையுடைக்கணைதூண்டியேயன்னதைக்குறைத்தான். (௨௬௩)

ஏறுசேவகத்தவுணர்கோனயிற்படையிறலும்
வேறோர்கார்முகம்வாங்கினன்சரமழைவீசி
மாறுமாறவன்றொடுந்தொடுங்கணையெலாமாற்றி
யாறுமாமுகன்புயத்திலேழ்வாளிதொட்டார்த்தான். (௨௬௪)

செங்கதிர்ப்பகைதன்னைமுன்னுதவினன்செலுத்தும்
வெங்கணைத்தொகைபரஞ்சுடருருவமாம்விமலன்
றுங்கமிக்கதோள்புக்குநுண்டுளியதாகிப்
பொங்கனற்றிரட்பட்டதோர்பூளைபோன்றனவால். (௨௬௫)

Digitized By Roja Muthiah Research Library

மொய்யிருங்கணைபட்டுநீறுதலுமுருகன்
வெய்யசூர்வலிநன்றுநன்றுலெனவெகுளா
வையிரண்டுவான்பகழியாலவன்சிலையறுத்துச்
செய்யதேரையுமாயிரங்கணையினாற்சிதைத்தான். (உ.சுசு)

ஆழிபூண்டிடுமிரதமுமங்கையிற்சிலையும்
பூழியாதலுமரசனுக்கேமமாய்ப்போந்த
வேழிரண்டுநூறுயிரநந்தேரையுமிமைப்பி
னூழிநாயகன்றன்சரமழையினாலொழித்தான். (உசுஎ)

சேமமாகியேநின்றிடுதேரெலாஞ்செவ்வேள்
காமர்வாளியாற்சிதைத்தலுமன்னதுகண்டான்
றாமவெங்கனறாண்டியவிழியுடைச்சூர
னேமமாகியேகொண்டிடுசூலமொன்றெறிந்தான். (உசுஅ)

நண்ணலன்விடுமுத்தலைப்படையைநாற்கணையாற்
பண்ணவன்றிருமாமகனிருதுணிபடுத்துத்
துண்ணெனக்கணையேழினாலவன்குடைதுணியா
வண்ணலஞ்சுடர்முடியையோர்கணையினாலறுத்தான். (உசுகூ)

மணிபடுத்தியமவுலியையறுத்தபின்வலியோன்
பணிபடுத்தமெய்யெங்கனும்பகழிகள்போக்கி
யணிபடுத்தியேபுனைதருமதாணிகளனைத்துந்
துணிபடுத்தினன்மறைகளுந்துணிந்திடற்கரியோன். (உஎ0)

ஆனகாலையிற்சூரபன்மாவெனுமரசன்
மானவன்மையிற்குறைந்தது நோக்கிமாடுள்ள
சேனைகாவலர்நாற்படைதன்னொடுஞ்சேர்ந்து
சோனையாப்படைவழங்கியேகுமரனைச்சூழ்ந்தார். (உஎக)

ஏழுநேமியுமெறிந்துமேருவைவளைந்தென்னக்
கேழில்பல்படைவீசியேயார்த்துடன்கிளர்ந்து
சூழும்வெய்யவர்தானையைக்கண்டனன்றென்னாட்
பூழியாகவேயவுணரூரட்டவன்புதல்வன். (உஎஉ)

குருதிவேற்படைகொண்டவன்றன்புடைக்குழுமிப்
பொருதிறற்பெருந்தானையைப்பொள்ளெனவடுவான்
கருதியாங்கொருகரத்தினிலிருந்திடுகடவுட்
பரிதியம்படைதொட்டனனிரவியிற்படர. (உஎங)

இலகும்வெய்யவனடுவுநாள்யாமத்தினேகி
யலகில்பேரிருளட்டெனவாழிபோயவுணர்
தலையுமாகமுங்கைகளுமடிகளுந்தடந்தோண்
மலையும்வீசியபடைகளுந்துணித்ததுமன்னோ. (உஎச)

மேனிலாவியதேர்களைத்துணித்திடும்வெங்கண்
மானயானைகளியாவையுந்துணித்திடும்வயமாத்
தானையாவையுந்துணித்திடுஞ்சமரினைத்தாங்குஞ்
சேனைகாவலர்யாரையுந்துணித்திடுந்திகிரி. (உஎரு)

Digitized By Roja Muthiah Research Library

அரந்துணித்தவாளவுணர்களடுசமருன்னி
னாரந்துணித்திடுமிகழினாத்துணித்திடுமுரப்பிற்
சிரந்துணித்திடும்படைதொடுமுயற்சிகள்செய்யிற்
கரந்துணித்திடுமெதிர்ந்திடிற்றுணித்திடுங்கழல்கள். (௨௭௬)

குடைதுணித்திடுங்கவரிகடுணித்திடுங்கொடியின்
றொடைதுணித்திடுந்தேர்நிரைபூண்டமான்றொகையி
னிடைதுணித்திடுமவுணர்தங்கரங்களினிருந்த
படைதுணித்திடுந்துணித்திடும்பல்லியத்தொகையும். (௨௭௭)

கொற்றமிக்கதோர்கோல்கொடுவலியுடைக்குலாலன்
சுற்றிவிட்டிடுதிகிரியின்விரைவொடுசுழன்று
பற்றலார்பெருந்தானையைப்பஃறுணிபடுத்தி
யொற்றைநேமியம்பெரும்படைதிரிந்ததாலுலவி. (௨௭௮)

போரழிந்திடுமவுணர்சமுடற்குறைபுகையாச்
சோரிவன்னியாவதனிடைத்துணிந்துவீழ்பரியுந்
தேரும்யானையுமலிகளாவெம்பிரான்றிகிரி
வீரமாமகமொன்றியற்றுவதெனவிளங்கும். (௨௭௯)

வெஞ்சமர்த்தொழில்புரிதருமவுணரைவீட்டி
வஞ்சகத்தொடுமாயமாம்பேரிருண்மாற்றி
யெஞ்சலுற்றிடுங்குருதியம்பெருநிறமெய்திச்
செஞ்சுடர்க்கதிராயதாலறுமுகன்றிகிரி. (௨௮0)

நச்சுதன்னிடத்தமலையையிருத்தியநம்ப
னிச்சுதன்றனியாழிசென்றுறுமியல்பை
யச்சுதன்கரத்தேந்தியநேமிகண்டதனை
மெச்சுதன்மையிற்புகழ்ந்ததுவிம்மிதமேவி. (௨௮௧)

நீர்த்தனுய்த்திடுநேமியம்பெரும்படைசெருவி
லார்த்ததானைநூறாயிரவெள்ளமுமடைய
மூர்த்தமொன்றினிற்றுணித்ததுமூவிருமுகத்தோன்
வார்த்தையாலவைமுழுவதுமாற்றியவாபோல். (௨௮௨)

ஆடலுற்றவேற்பண்ணவனலர்கதிர்ப்பரிதி
பாடுசுற்றியவவுணர்கோன்றானையைப்படுத்து
மோடுபெற்றதொல்புகழொடுமீண்டதுமுளிபுற்
காடுமுற்றவுந்தனிபடர்ந்துண்டதோர்கனல்போல். (௨௮௩)

கைம்மலிந்திடுகுடைபலகாம்பிடைதுணிந்து
மெய்ம்மலிந்திடுவிழுநிணச்சேற்றிடைவீழ்ந்து
பொம்மல்கொண்டுநிற்புறுவனபூவலர்தடத்திற்
செம்மல்கொண்டமர்தாமரைக்காடுபோற்றிகழும். (௨௮௪)

அழுங்கல்கொண்டதோர்கரிபரியவுணர்பேரணிகம்
வழுங்கலின்றிவீழ்ந்தவிந்திடுகளேவரமலித
றழுங்குதெண்டிரையுலகுளசயிலங்களனைத்து
மொழுங்கதாகிவந்தாயிடைத்தொக்கவாறொப்ப. (௨௮௫)



Digitized By Roja Muthiah Research Library

அகல்விசும்புகாறோங்கியகளேவரமதன்பால்
ஞெகிழிகொண்டவாய்ப்பேயினநிணனுண்டுசிரித்து
மிகவுமார்ப்பெடுத்தீண்டுவமின்னியேயிடித்து
முகிலிருங்கணமுதுவரைச்சாரன்மொய்த்ததுபோல். (உஅசு)

மையல்யானையுமவுணர்தமியாக்கையுமற்று
மெய்யெனக்கொடுகுருதியம்பேரியாறொழுகல்
செய்யதோர்பணிகருங்கடன்மறைத்தல்சிந்தித்து
வெய்யநஞ்சுமிழ்ந்திருநிலம்படர்தல்போல்விளங்கும். (உஅஎ)

மாணிலைப்படுபேய்சிலகளேவரவரைபோய்ச்
சோணிதப்புனலாறுபாய்ந்திடவதன்றலை
சேணிலத்துளாரரிவையர்புனைகலைதெறிப்ப
நாணலுற்றனர்பூப்பெனநகைப்பரென்றுன்னி. (உஅஅ)

சொல்லருந்திறலவுணரிற்சிலர்தலைதுணிந்து
வல்லையிற்கிளர்ந்தார்த்தலும்வலியினுற்றம்மை *
யல்லல்செய்திடுகோளிரண்டல்லதையவைபோ
லெல்லையில்லவைவந்தவென்றிரியுமாவிரவி. (உஅகூ)

நீடிவிண்படர்கொடிசிலநிமிர்கவந்தத்தின்
காடுதன்னிடைப்புகுந்துதந்தலைமிசைக்காட்டி
யாடல்யானையின்களேவரங்குத்துவவடுபோ
ருடுகாக்கையின்முகரும்வந்தார்கொலென்றுரைப்ப. (உகூ0)

நீடலுற்றசீரவுணர்கோனுனையாளிலமேல்
வீடலுற்றிடுவயவர்க்குத்தம்முயிர்மீட்டுங்
கூடலுற்றிடுதிறனெனக்கூளிகைகொட்ட
வாடலுற்றிடுமுடற்குறையநந்தகோடிகளால். (உகூக)

இனையவெல்லையிலெம்பிரானெரிகதிர்ப்பரிதி
முனையில்வந்தடல்செய்ததையுணர்ந்திலன்முன்சூழ்
கனையிருங்கடற்படையெலாம்பட்டவாகண்டு
மனமருண்டொருதமியனாய்நின்றனன்வலியோன். (உகூஉ)

நீண்டதன்னொருவேற்படையுய்த்துநீக்கினனே
பாண்டரங்கமதியற்றுவான்படையின்வீட்டினனே
மாண்டுபோகவென்றொருமொழிதன்னின்மாற்றினனே
வீண்டுதானையைமுடித்ததெவ்வாறிவனென்றான். (உகூங)

தேரிழந்தனன்சிலையதுமிழந்தனன்றிறல்சேர்
பேரிழந்தனன்றானைகளிழந்தனன்பெரும்பூ
ணேரிழந்தனன்மவுலியுங்கவிகையுமிழந்தான்
பாரிழந்திடுமன்னர்போனின்றனன்படிமேல். (உகூச)

நின்றிடுந்திறலவுணர்கோனெடுஞ்சினநெஞ்சிற்
றன்றமார்பகம்வியர்த்திடமுடித்தலைதுளக்கி
நன்றுநன்றொருபாலகன்வலியெனநகையா
வென்றிநான்முகன்படைக்கலமெடுத்துமேல்விடுத்தான். (உகூரு)

* தம்மை என்றது - சந்திரனை உளப்படுத்தி என்க.

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

சூற்புயலன்னதோர்சூரன்விடுக்கு, மாற்படுபோதன்வயப்படைசென்று
பாற்படுமெல்லைபரஞ்சுடர்செங்கை, வேற்படைசென்றுவிழுங்கியதன்றே. (௨௯௬)

விழுங்குதல்கண்டனன்வெய்யவனெஞ்ச, மழுங்குதல்செய்தனனச்சுதமூர்த்தி
வழங்கியதொல்லைவயப்படையேந்தி, முழங்கழலென்னமுனிந்துடன்விட்டான்.()

விட்டிடுமாயவன்வெம்படையேகி, மட்டறுகண்ணர்தமாவுருவின்று
கிட்டியகாலைகிளர்ந்திடுமொள்வே, லட்டதுதன்னையுமார்ந்ததுமன்றே. (௨௯௮)

சயம்புனைசெம்மறனுதருணீரா, லயன்படைதன்னுடனம்புவிகேள்வன்
வியன்படைதன்னையும்வேற்படையுண்ணக், கயம்படுசூரதுகண்டுவிம்முற்றான். ()

கறுத்திடுகின்றதோர்கந்தரவள்ளல், விறற்படைதன்னைவிடுத்திடின்யாரே, மறு
த்திடுவாரஃதென்றுமனத்திற், குறித்தனன்மாயைகொடுத்தருள்கோமான். ௩௦௦)

முப்புரநீறெழமூரல்விளைத்தோன், மெய்ப்படைதன்னைவிடுப்பதுதேற்றி
யப்படையேந்தியருச்சனைநீரா, லொப்பறுசீர்த்தியனுய்யெனவுய்த்தான். (௩௦௧)

அத்தகுவெம்படையாடலியற்று, முத்தலைவேற்படைமூர்த்திகள்கோல
மெத்திசைதன்னினுமீண்டுறவார்த்து, மெய்த்தழல்வீசிவிரைந்ததுமாதோ.(௩௦௨)

ஆடியல்யானைகளாயினவெட்டும், வீடியவேயெனவீழ்ந்தயர்வுற்ற
நீடியநேமியினின்றிடுசெந்தீ, யோடியசேடனுமுட்கியுலைந்தான். (௩௦௩)

படித்தலநெக்கதுபல்வகைமேக, மிடித்தொகைசிந்தியிரிந்தனபானுத்
துடித்ததுதிங்கள்சுழன்றதுமேரு, வெடித்திடந்தொறும்விண்டதிவ்வண்டம். ()

இலக்கர்நடுங்கினரேனையவீரர், கலக்கமடைந்தனர்காண்டகுபூதர்
மலக்கமதெய்தினர்மற்றிதுதன்னை, விலக்கரிதாலெனவோடினர்விண்ணோர். ௩௦௫

புடவிமுதற்புவனங்களனைத்து, நொடிவரைசெல்லுமுனுய்தெனமாய
முடிவதியற்றிடுமூர்த்திதனுமப், படைவரவன்னதுபார்த்தனன்வள்ளல். (௩௦௬)

எந்தைதன்மாப்படையீதெனவையன், சிந்தைபுரிந்தொருசெங்கையைநீட்டி
வந்திடுமப்படைபற்றினன்மாதோ, தந்தவன்வாங்கியதன்மையதென்ன. (௩௦௭)

பெற்றமுயர்த்தபெருந்தகைநாமக், கொற்றநெடும்படையைக்குமரேசன்
பற்றியொர்பாணிபரித்தனனின்றான், மற்றதுகண்டனன்மாயவன்மைந்தன். ()

வேறு.

விட்டவிட்டதோர்படைக்கெலாம்வேறுவேறொன்று
தொட்டிலானதனாலதுமாற்றுதறணியான்
கிட்டுமெல்லையிலவையெலாங்கவர்ந்தனன்கேடி
லட்டமூர்த்திசேயென்பதுகாட்டினனம்மா. (௩௦௯)

என்னொடேபொரற்கிவனலால்வேறிலையிவனையோன்
றன்னொடேபொரற்கியானலாதிலையிதுசரத
மன்னபான்மையினெனக்குநேராமிவனலது
பின்னையாருளர்தமியனுக்குவமையாப்பேச. (௩௧௦)

Digitized By Roja Muthiah Research Library

மானவேற்படைவன்மையும்விற்றொழில்வலியு
மேனையாயுளவன்மையுங்கண்டனனினிமேற்
பானல்வாய்மைந்தன்செய்வதுபார்ப்பனென்றுன்னி
மோனமாகியேநின்றனனவுணர்கண்முதல்வன். (ஙகக)

பொருளினீர்மையாற்புனைகலன்மாற்றலிற்புவிமே
லிருளினீர்மையாய்த்தோன்றினோனற்புதமெய்தி
மருளினீர்மையானின்றதுநோக்கியேவள்ள
லருளினீர்மையாலினையனமாற்றங்களறைவான். (ஙகஉ)

இந்திரன்றனிமதலையையிமையவர்தம்மை
யந்தமில்பகல்சிறையிடைப்படுத்தனையதற்கா
முந்தொரொற்றனைவிடுத்தனமாங்கவன்மொழியுஞ்
சிந்தைகொண்டிலைவிடுத்திலையமரர்தஞ்சிறையும். (ஙகங)

அன்னதன்மையாலீண்டியாம்வந்தனமமரிற்
றன்னைநேரிலாதிருந்திடுதாரகன்றன்னை
முன்னமட்டிடுமுறையெனாநின்னையுமுனிவா
லின்னவைகலேயடுதுமென்றேகினமீண்டும். (ஙகச)

ஈண்டுநின்புடையீண்டியவிலக்கம்வெள்ளத்து
நீண்டதானையுநின்சிலைவன்மையுநின்னுற்
றூண்டலுற்றிடுதெய்வதப்படைகளுந்தொலைந்து
மாண்டுபோயதுகண்டனைவறியனாய்நின்றாய். (ஙகரு)

நெடியதாரகற்செற்றவேலிருந்ததுநின்னை
யடுதலிங்கொருபொருளுமன்றரிதுமற்றன்றாற்
படையிழந்திடுநின்னுயிருண்டிடிற்பழியாய்
முடியுமென்றுதாழ்க்கின்றனந்தருமத்தின்முறையால். (ஙகசு)

பன்னுகின்றதென்பற்பலவிண்ணுளோர்பலருந்
துன்னுதொல்சிறைவிடுத்தியேலுன்னுயிர்தொலையே
மன்னதன்மையைமறுத்திடினெல்லைநாமடுது
மென்னைகொல்லுனதெண்ணங்களுரைத்தியாலென்றான். (ஙகஎ)

வேறுவேறுநின்றுலகெலாமளிப்பதுவெஃகி
யாறுமாமுகம்பன்னிருசெங்கைகொண்டருள்வோ
னூறுசேரவுணன்றனக்கினையனவுரைப்ப
மாறொர்வாசகஞ்சொற்றிலனுளத்திவைமதிப்பான். (ஙகஅ)

படையிழந்தனனிவனெனவுன்னியேபால
னிடைதெரிந்தனன்போலவேயிமையவர்யாப்பை
விடுதியென்னவும்வல்லனாயினன்விளிவில்லே
னடலுமாற்றலுந்தெரிந்திலன்பிள்ளைமையதனால். (ஙககூ)

மன்றலந்தொடையறுமுகன்வரம்பிலாவைக
னின்றுபேரமர்புரியநான்வறிதுநின்றிடினுங்
கொன்றிடுந்தொழில்வல்லனேதந்தைமுன்கொடுக்க
வென்றுமாய்ந்திடாவொருவரம்பெற்றிடுமென்னை. (ஙஉ0)

Digitized By Roja Muthiah Research Library

தொழுதகுந்திருமவுலியுங்கவிகையுந்துணிய
விழிவதாகியேதமியனின்றமரியற்றிடினு
மழிவதில்லையாலாவதுமிலைபுகழதனாற்
பழியதொன்றுறுமங்கதுபாதுகாத்திடுவேன். (௧௨௧)

வேற்றுநீர்த்தடங்கொள்வதையன்றிவெள்ளங்க
ளூற்றுநீர்ப்பெரும்புணரியைக்கொள்வதற்குறுமோ
வேற்றதானையைப்படைகளைத்தொலைப்பதேயன்றி
மாற்றுமோவெனதழிவுறுவரத்தையுமைந்தன். (௧௨௨)

என்னையங்கவன்முடித்திடலரியதாலியானு
மன்னவன்றனையித்துணைவெல்வதுமனைத்தே
தொன்னகர்ப்பெருவளத்தொடும்படையொடுந்துன்னிப்
பின்னர்வந்தமரியற்றியேபெருந்திறல்பெறுவேன். (௧௨௩)

வசையதன்றிதுசெருச்செய்வோர்பற்பகன்மலைந்து
விசையமெய்தினுமேன்மையாம்வியப்புமாமேலுந்
திசைவிளங்குறுபுகழுமாம்யானுமிச்செய்கை
யிசைவதேகடனறிஞர்தஞ்சூழ்ச்சியுமிஃதே. (௧௨௪)

என்றுபற்பலசூழ்ச்சிகண்மனத்திடையெண்ணி
யொன்றோர்மாயையின்மந்திரந்தன்னையுள்ளூறுத்தி
நின்றமன்னவனெல்லையின்மறைந்தவணீங்கிப்
பொன்றிகழ்ந்திடுமகேந்திரக்கோயிலுட்போனான். (௧௨௫)

மறைந்துபோயசூர்முயற்சியைமன்னுயிர்தோறு
முறைந்தநாயகன்கண்டனனொருதனிச்செவ்வே
லெறிந்துமற்றவனுயிர்கொளநினைந்திலனின்னு
மறிந்துதீயவனுய்யுமோவெனுந்திருவருளால். (௧௨௬)

வேறு.

ஆயவேலைதனிலாறுமுகன்பான், மாயனும்மயனும்வானவர்கோவு
மேயதேவர்களும்யாவருமெய்தித், தூயவந்தனையுடன்சொலலுற்றார். (௧௨௭)

என்றுகாசிபனிடந்தனில்வந்தா, னன்றுதான்முதலாவசுரேசன்
வென்றியேகொடுவியப்பொடிருந்தா, னுன்றனோடுபொருதோடினனின்றே. ௧௨௮

நீடுசூரனுடனீயமர்செய்த, லாடலேயலதையாங்கவனாவி
கோடல்சிந்தையிடைகொண்டனையன்னி,னோடுமோபொருதுமுய்திறமுண்டோ.

துங்கமுற்றுடையசூர்தனைவேலான், மங்குவித்திடுதிமற்றதன்முன்ன
மங்கவற்கெதிரருஞ்சமராற்ற, லெங்கள்வைத்துடையவின்னருளன்றே. (௧௩0)

என்றியம்புதலுமெந்தைவினாவி, நன்றுநன்றெனநகைத்தினிநம்முன்
சென்றுநின்றுசமர்செயதிடின்வல்லே, வென்றுசூர்முதலைவீட்டுதுமென்றான். ()

ஆடல்சேருமவுணன்சமராற்றா, தோடினானுறுமுறுகண்ணுளராகி
வீடினார்களெனவீழ்ந்தயர்வாருங், கூடினார்குமரவேள்புடைவந்தார். (௧௩௨)

சங்கமாகியுறுசாரதரானோ, ரெங்கணாயகனையெய்தியிகற்சூர்
மங்குல்வானிடைமறைந்ததுதேரா, வங்கண்ஞாலமலைவுற்றிடவார்த்தார். (௧௩௩)

Digitized By Roja Muthiah Research Library

திகழ்ந்தபூதர்கள்செருத்தனிலெம்மை, யிகழ்ந்தசூர்நகரினிம்மதில்வீட்டி
யகழ்ந்துகோபுரமகன்கடலிட்டு, மகிழ்ந்துமீண்டிடுதும்வம்மினமென்றார். (ருருச)

வம்மின்வம்மினெனவல்லைவிளித்துத், தம்மினங்களொடுசாரதர்மேலோ
ரம்மகேந்திரமழுங்குறவார்த்திட், டிம்மெனக்கடிதெயிற்புறமுற்றார். (ருருரு)

உற்றகாலைதனிலொண்மதில்காக்குங், கொற்றவீரனதிகோரன்மருங்கிற்
சுற்றுதானையொடுசோர்விலனின்றான், செற்றுபூதர்படைசென்றனகண்டான். ()

கண்டுளானனிகனன்றிதழ்கவ்வித், திண்டிபேரிதிமிலைப்பறையார்ப்பத்
தண்டலின்றியமர்தானைகளோடு, மண்டுபோர்புரியவந்தெதிர்புக்கான். (ருருஎ)

எதிர்புகுந்திடலுமேற்றெதிர்சென்று, ரதிர்புகுங்கழலினுடுறுபூதர்
பொதிர்புகுந்தவிருள்போந்துழியெண்ணில், கதிர்புகுந்தனையகாட்சிபடைத்தார். ()

தோமரம்பரசுசூலமொடெஃக, மேமருங்கதைகளேவினர்கோரன்
மாமருங்கவுணர்மற்றிவர்குன்றங், காமரம்படைகலந்துவிடுத்தார். (ருருகூ)

எடுத்துவேழநிரையெற்றினர்தேரை, யொடித்தெறிந்தனருகண்டுகள்பாய்மாப்
பிடித்தொர்கைகொடுபிசைந்தனர்வீரர், துடித்திடும்படிதுகைத்தனர்பூதர். (ருசய)

எறிவர்பல்படையுமெய்குவர்வெங்கோல், குறியவீட்டிகொடுகுற்றுவர்வாளாற்
செறுநர்தங்களுடல்சிந்துவரிவ்வா, றறியும்வெஞ்சமரையாற்றினர்தீயோர். (ருசக)

சோரிபொங்கினசொரிந்தனமூளை, சாருறுங்குடர்சரிந்தனசேனங்
காரிபம்பினகணங்களுமேனை, வீரராமவுணரும்பலர்வீந்தார். (ருசஉ)

ஈடுறுஞ்சமரிழைத்துழியிவ்வா, றுடல்வெங்கணவராற்றமுனிந்தே
சாடிவன்மையொடுதாக்கலுசில்லா, தோடினரவுணராயுளர்முற்றும். (ருசங)

கோரமிக்கவதிகோரனெனும்பேர், வீரன்மற்றதனைநோக்கிவெகுண்டே
யோரெழுத்தனையுரத்தொடுபற்றிச், சாரதப்படைஞர்தம்மொடுநேர்ந்தான். (ருசச)

தலைதனிற்கரதலத்தினின்மொய்ம்பின், மலையினிற்பெரியமார்பின்முகத்தி
னலிகழற்கணமுலைந்திடமோதிக், கொலைவிளைத்தொருவனேகுலவுற்றான். ருசரு

ஈடிலாததொரெழுப்படைபற்றா, வோடியோடியுருமுற்றெனமோதி
வீடுறுந்தமர்விளைத்திடுபூதர், கோடிகோடியொரிமைப்பிடைகொன்றான். (ருசசு)

இந்தவாறவனெழுக்கொடுதாக்க, முந்துதூசிமுரிவுற்றதுகண்டான்
கந்தனேவல்செய்கணப்படைமன்னன், சிந்துமேகன்முனிவோடெதிர்சென்றான்.

சென்றபூதரிறைசெங்கையில்வைகுங், குன்றமொன்றையதிகோரனெனும்பேர்
வென்றியான்மிசைவிடுத்தலுநோக்கித், தன்றடக்கையெழுவாற்றகர்வித்தான். ()

தகருமெல்லைதரியார்கடல்வற்ற, முகிலினுண்டிடுமுரட்பெயரண்ணல்
வெகுளியோடவுணர்வேர்தனையெய்தி, யகலமீதினிலடித்தனன்மாதோ. (ருசகூ)

அடித்தலோடுமவுணர்க்கிறையானோ, னிடுக்கணெய்தியவனுவியையின்னே
முடிப்பனென்றுமுசலங்கொடுமொய்ம்பிற், புடைத்தனன்னுருமுவீழ்வதுபோல.

பூதன்மொய்ம்பிடைபுடைத்தவெழுத்தா, னேதமாமுரியவேற்றெதிர்தெவ்வைக்
காதுகைகொடுகபோலமதன்கண், மோதவேயவுணனுவிமுடிந்தான். (கருக)

Digitized By Roja Muthiah Research Library

வாய்தல்போற்றியவயப்படைவீரன், சாதலுற்றுழிதலைத்தலையார்த்துப்
பூதசேனையர்கள்பொம்மெனவேகி, மூதெயிற்றலைமுதற்கடைசென்றார். (௩௫௨)

ஆண்டியோசனையொராயிரம்வான்போ, யீண்டுசெம்மணிகளாலியலுற்று
மாண்டதீயவடவாமுகமேபோ, னீண்டதோர்சிகரிநின்றதுகண்டார். (௩௫௩)

கண்டதோர்சிகரிகைகொடுதொட்டுத், தெண்டிரைக்கடலின்மேற்செலவிட்டார்
மண்டுமேருவரையின்குவடேந்திச், சண்டவாயுவிடுதன்மையதென்ன. (௩௫௪)

அன்னவேலையிலலைந்ததுஞாலம், பன்னகேசனுமிகப்படருற்றான்
மன்னுசூருறைமகேந்திரமூதூர், துன்னுதானவர்துளங்கியயர்ந்தார். (௩௫௫)

ஈண்டுபூதரெறியுஞ்சிகரந்தா, னண்டவ்வேலையிடையாழ்ந்ததுதொன்று
ணீண்டமேனியிறைநின்றளியாமுன், மாண்டுசாய்ந்துவிழுமந்தரமென்ன. (௩௫௬)

வேறு.

பொலங்கெழுசிகரியப்புணரிசேர்தலிற், கலங்கினவிரிதிரைக்கைம்மறித்ததான்
மலங்கினமொடுசுறாவருந்திமிங்கில, கிலங்களுமிரிந்ததங்கிளைகளோடுமே. (௩௫௭)

மாதலம்புகுந்திடுஞ்சிகரிவாரியுட், பூதரங்குய்த்திடவிரைவிற்போவது
வேதமுன்கொணர்தருமீனம்வேலையிற், பாதலம்புகுந்திடுபான்மைபோலுமே. ()

கழற்கறங்கியதெனுங்கண்ணருந்திய, வழற்கொழுந்தாகியசிகரத்தாய்மணி
நிழற்பொலிந்திடுவனநீலவேலையிற்,றழற்பரந்தெழுவதோர்தன்மைபோலுமே.௩௫௯

நாகரமணிவெயினணுகும்வேலையிற், சீகரமும்பர்போய்த்தெறித்துமீள்வது
சாகரமுற்றதுதழலென்றுன்னியே, மாகரவாரிநீர்வழங்கல்போலுமால். (௩௬0)

காமருசிகரியிற்கவைஇயமாமணி, யேமுறநிழற்றியவெழிலைநோக்கியே
பூமதுநுகர்தருபொறிவண்டானவை, தாமரைவனமெனவயிர்த்துச்சாருமால். ()

பங்கயமணிநிழற்பரப்பைநோக்கியே, யிங்கிவைதசையெனவெண்ணிப்புட்குல
நுங்கியசெல்வனநொய்தினெய்தியே, யங்கிகொலெனச்சிலவகன்றுபோயின. ()

தெழித்திடும்வேலையிற்செய்யசோதியாற், றழற்பொலிகோபுரந்தரிப்பின்றேகலாற்
கிழித்தனபணிபதிகிளர்ந்துமற்றவர், விழித்தனருருமெனவெருவியோடினார். ௩௬௩

பூதர்கள்யாம்விடுபொலங்கொள்கோபுர, மோதநெஞ்சடைதலுமுதிரங்கான்றதாற்
சேதனமோவிதுசெப்புமென்றனர், மீதுறுகதிர்மணிவெயிலென்றுன்னலார். ()

பொற்பகல்சிகரியுட்பொருந்தியாழ்பவ, ரற்பகனுகருமீனவரைநுங்குமான்
முற்பகலோர்பழிமுடிக்கின்மற்றது, பிற்பகறமக்குறும்பெற்றியென்னவே. (௩௬௫)

ஆனதொர்கோபுரமளப்பிலாதமர், தானவர்கிளையொடும்வீழ்ந்ததன்மையான்
மீனுறுதிரைக்கடல்வெள்ளமேற்செலா, மாநகரெயிற்றனைவளைந்துபுக்கதே. (௩௬௬)

காதிடுமியற்கையிற்கால்கொண்டேகலிற், பூதலம்வெருக்கொளப்பொங்குமார்ப்
பினின், மீதமர்காரினில்விமலன்விட்டிடும், பூதரைநிகர்த்ததப்புரிசைசூழ்புனல்.

மைக்கடல்புவியினுமகேந்திரப்புர, மிக்கதுபோலுமென்றையமேற்கொளா
விக்கணநாடுதுமென்றுசென்றபோற், புக்கதுநகரிடைப்புணரிநீத்தமே. (௩௬௮)

Digitized By Roja Muthiah Research Library

மீனெனுமைந்தரைமிசைந்ததானவர்க், கானதொரிறுவரையனுகிற்றிவ்விடை
யாவைர்ப்பொருவனென்றெண்ணிச்சேறல்போற், போனதப்பதியினுட்புணரிநீந்
தமே. (௩௬௬)

இவ்வகைநிகழ்ந்திடவெறிந்தகோபுரம், பௌவமுற்றிடுதலும்பைம்பொன்மாமதில்
வெவ்வலியரசர்கள்விளியவீறிலாக், கௌவைகொடிருநகர்க்காட்சித்தாயதே. ()

எல்லைமற்றனையதிலீண்டுசாரதர், மல்லலம்புரிசையின்வடாதுபாங்கரை
யொல்லையிற்றம்பதத்துதைப்பச்சாய்ந்தது, செல்லுறவீழ்ந்திடுசிகரமேயென. ௩௭௧

மாமதில்சாய்தலும்வலியபூதர்கள், காமருநகரினுட்கலந்துநண்ணினு
ரேமருடங்கலுழிபங்களீண்டியோர், தாமரைமலர்த்தடந்தன்னிற்புக்கபோல். ()

கானுறுபங்கயக்கடவுட்கிப்பகல், போனதோர்காலையிற்புணரியாவையு
மானிலங்கொள்வதுமானப்பூதவெஞ், சேனைகண்மகேந்திரபுரத்திற்சென்றவே. ()

புக்கனர்வீரர்கள்புயலின்மேனியுஞ், செக்கரங்குஞ்சியாந்தீயுங்கைகளாய்
மிக்கெழுபுணரி * யும்வேறுவேறுரு, மைக்கடலுலப்பிலவருவபோலவே. (௩௭௪)

துதித்திடவரியவனகரிற்றுன்னென, வெதிர்த்திடுதானவரினத்தையொல்லையிற்
சிதைத்தனர்மாளிகைசிகரம்யாவையு, முதைத்தனர்வீட்டினருயர்ந்தபூதரே. ()

மதரொடுகுறுகுமவ்வயவெம்பூதர்க, ளதிர்கழலடிகளாலளப்பின்மாளிகை
பிதிர்படவுந்தலும்பிறங்குபூழிகள், கதிருறுகதியினுங்கடந்துபோனவே. (௩௭௬)

வேறு.

அங்கவ்வெல்லையிற்சாரதவேந்தர்களயில்வேற்
புங்கவன்றனைநீங்கியாமவுணர்கோன்புரத்து
ளிங்கினிப்படர்கின்றதுதக்கதன்றென்னுச்
செங்களந்தனின்மீண்டனர்சேனையுந்தாமும். (௩௭௭)

ஆனகாலையிற்பூதர்தஞ்செய்கைகளனைத்து
ஞானநாயகன்காண்குருநல்லருள்புரிந்து
மானவேற்படைவீரருமமரரும்வழுத்தச்
சேனையாவையுங்கொண்டுதன்பாசறைசேர்ந்தான். (௩௭௮)

பாசறைப்புகுகுமரவேள்பாரிடப்பகுதி
யாசறப்புனையாவணச்சூழல்போயமர
வாசவத்தனிக்கடவுளாதியர்புடைவழுத்த
வீசனீற்சிறந்தரியணைதன்னில்வீற்றிருந்தான். (௩௭௯)

ஈண்டுதானவரிலக்கம்வெள்ளத்தருமின்னே
மாண்டுபோயினரனையரைமலிகதிர்க்கரத்தாற்
றீண்டிவான்மையிற்குறைந்தனனென்றுசெஞ்சுடரோ
னுண்டுமூழ்குவான்புக்கெனவளக்கரையடைந்தான். (௩௮0)

வேறு.

புரந்தரனுதியர்புன்மைநீக்கியே, பெருந்திருவுதவுவான்பிரான்றன்காதல
னிருந்தனன்பாசறையீதுநின்றிடத், திருந்தலர்மாட்டுறுஞ்செய்கைசெப்புவாம். ()

ஒருவருமுளத்தினுமுணர்வுறுவகை, யருவமதாகியேயகன்றுசூர்முதல்
பொருவருமகேந்திரபுரத்துக்கோயிலுட், டிருமகண்மணமனைச்சேறன்மேயினன்.

* புணரி - திரை.

பஞ்சடிநூபுரப்பதுமைசோயில்போ, யஞ்சியலடுத்தமெல்லமளிமேலுறுத்
துஞ்சலன்யாரொடுஞ்சொல்லுமாடலன், வெஞ்சமர்வினையமேயுன்னிமேவினன்.

ஆனதொரெல்லையிலரசன்போர்செயப், போனதும்பொருசதும்புறந்தந்தோமென
மாநகரதனிடைவறியன்வந்ததும், பானுவின்பகைஞனுக்கொற்றர்பன்னினர். ()

சொன்னடைமந்திரத்தொடர்புமாயமுந், தன்னுறுபடைகளுஞ்சாதனஞ்செய்வோ
னன்னதுகேட்டலுமலக்கணெய்தியே, மன்னுறுகடிநகர்வல்லையேகினன். ௩௮௫

மணிகிரையிகலியேமாறுவில்லுமி, ழிணையறுசினகரமெய்திச்சேக்கைமேற் [ன்.
றணிவறுசூழ்ச்சியோடமர்ந்ததாதைதன், றுணையடிவணங்கியேதொழுதுகூறுவா

மாற்றலர்யாவருமறியவல்லைபோ, ராற்றுதியாலெனவையமுற்பகல்
சாற்றினைவிடுத்தனைதமியனேகியே, யேற்றவர்தம்முடனிகல்செய்தேனரோ. ()

உற்றிலனறுமுகனெழிந்தவீரர்கள், சுற்றியபடையொடுதுவன்றிப்போர்செய்தார்
பற்றியமோகமாப்படையைத்தூண்டியான்,மற்றவருணர்ச்சியும்வலியுமாற்றினேன்

சென்றமரியற்றியசெறுநர்யாரையும், வென்றனனத்துணைவிமலன்மாமக
னென்றொருமாப்படையுய்ப்பவென்படை, வன்றிறனீங்கியேவருந்திமீண்டதே.()

அன்னதொர்பான்மையாலனையர்யாவரும்,பின்னுணர்வெய்தியேபெயர்ந்துபோ யினு, ரென்னிதுவெற்றியென்றியானுமீண்டன, னுன்னெடுமுரைத்திலனுள்ளம் வெள்கினேன். (௩௯௦)

நெற்றியங்கண்ணுடைநிமலனேனையோர், முற்றருபடைகளான்முடிவின்மாயை யாற், பற்றலர்யாரையும்படுத்துநாளையே, வெற்றிகொள்குவனெனுநென்னன்மீண் டனன். (௩௯௧)

ஞாயிறுவந்தபினண்ணலார்மிசைப், போயமரியற்றிடப்புறத்திற்சென்றன
னுயதன்முன்னரேயனிகந்தன்னுட, னேயெனவேகினையெந்தைநீயென்றார். ()

வரந்தனிலழிவுறுவள்ளலீண்டுறு, திருந்தலருடனமர்செய்தற்காகவோ
ரருந்துணைவேண்டலையதனையுன்னிமீண், டிருந்தனனிப்பகலீதென்செய்கையே.

ஓர்ந்திலையித்திறமுணர்வுளாரொடுந், தேர்ந்திலையென்னையும்விளித்துச்செப்பிலை
சார்ந்திடுநாற்பெருந்தானைதன்னொடும், பேர்ந்தனையமர்க்கிதுபெருமைப்பாலதோ.

அமரருக்காக்கமுமவுணர்க்கேக்கமு, மிமையவர்முதல்வனுக்கின்புநல்கினை
குமரனைக்கணங்களைக்குறித்துமன்னநீ, சமரினுக்கேகுதறலைமையாகுமோ.(௩௯௫)

திகழ்ச்சிகொண்மேலவர்சிறியர்தம்மொடு, நிகழ்ச்சிகொள்போரிடைநேர்வரே யெனிற், புகழ்ச்சியதில்லையாற்பொருதுவெல்லினு, மிகழ்ச்சியின்பாலதாமெவரெ வர்க்குமே. (௩௯௬)

சென்றதுகிடந்திடச்சிறியனென்னினு,மொன்றிவண்மொழிகுவனுள்ளங்கோடியா
லின்றிரவகன்றபின்னேகியாரையும், வென்றிகொண்டேகுவன்விடுத்தியாலெனை.

கொற்றவைசிறுவனைக்கொற்றங்கொள்வதுஞ், சுற்றுறுபடையையான்றொலைக் குந்தன்மையு, மொற்றுவர்கண்டுமுனுரைக்கவெந்தைநீ, தெற்றெனமகிழ்ச்சியிற் சிறந்துவைகுதி. (௩௯௮)



Digitized By Roja Muthiah Research Library

வேறு.

கூரியவேற்படைகொண்டுடையோனை, வீரர்கடம்மொடுவெற்றிகொளேனேல்
வாரலனீண்டுமகிழ்ந்திறைநல்கும், பேரரசாட்சிபிடிக்கிலனென்றான், (௩௯௯)

என்பதுகேட்டலுமெவ்வுலகிற்குந், துன்புபுரிந்திடுசூரபன்மாவா
முன்பன்மகிழ்ந்துமுகத்தெதிர்நிற்குந், தன்புதல்வற்கிதுசாற்றுதலுற்றான். (௪00)

மூவர்கடாங்களுமுச்சகமுள்ள, தேவருமையிருதிக்குடையோரு
மேவருமேற்கினுமெம்பியையட்ட, மேவலனாற்றலைவெல்லரிதம்மா. (௪0௧)

பன்னிருசெங்கைபடைத்துளசேயோன், றன்னொடெதிர்ந்துசமர்த்தொழில்செய்வா, ரென்னலதில்லையிவன்சிறியோனென், றுன்னலைவன்மையினொப்பிலனேகாண். (௪0௨)

குன்றமெறிந்திடுகூரியவேற்கை, வன்றிறலாளனைவன்மையில்யானே
வென்றிடுகின்றனன்மேலதுநிற்க, வொன்றுளதையவுரைப்பதுகேண்மோ. (௪0௩)

ஒற்றெனவந்துநம்மூரலைவித்துப், பற்றலர்நீடுபடைக்கிறையாகுங்
கொற்றவனைத்தனிகூவிமலைந்து, செற்றனையேகுதிசேனையொடென்றான். (௪0௪)

தந்தைபுகன்றிடுதன்மையையோரா, வெந்தைபிராற்குளமித்திறமாமேன்
முந்திறைதன்னின்முடிப்பனிதென்ன, மைந்தனைநோக்கிமகிழ்ந்தனன்மன்னன். ()

அடுசமர்செய்வகையாங்கவனேக, விடையதுநல்கிவியத்தகுமன்ன
னிடையுறுசூழ்ச்சிகளியாவுமிகந்து, மிடைதருதொல்வளமேவியிருந்தான். (௪0௬)

தாதைதனேவறலைக்கொடுசென்றே, யாதவன்மாற்றலனாகியமைந்த
னேதமிறன்குலமேகலுமங்கட், டூதுவர்பற்பலர்துண்ணெனவந்தார். (௪0௭)

துங்கமதற்றுளசூர்தருமைந்தன், செங்கமலம்புரைசீறடிதன்னைத்
அங்கண்முடிக்கொடுதாழ்ந்தனர்நின்றே, யிங்கிவைகேட்கவெனாமொழிகுற்றார். ()

வேறு.

மன்னவனின்றுபோய்மலைந்துமீண்டபி, னென்னலன்மாட்டுறுமூலப்பில்பூதர்க
ளிந்நகர்வடாதுசாரெய்திக்காவலோன், றன்னுயிர்கொண்டனர்தானைசிந்தினார். ()

தகுவர்தமாப்படைதலையழிந்தபி, னகலிருவிசும்பளந்தாண்டுநின்றிடு
சிகரியைக்கீண்டுதஞ்செங்கையாலெடா, வெகுளியொடளக்கரின்மீதுவீசினார். ()

நீடியசிகரிபோய்நேமிபுக்கபின், மாடுறுவடபுலமதிலைமுற்றவுஞ்
சாடினர்மீண்டனர்தலைவவிந்நகர், கோடிலதாங்கடற்குட்டம்போன்றதே. (௪௧௧)

என்றலும்வினவியேயேந்தறன்புடை,சென்றிடும்வயவரிற்சிலரைநோக்கியே [வே.
வன்றிறலுடையநம்மரபிற்றச்சனை, யொன்றொருகணத்தின்முன்னுய்த்திரென்ன

ஆயவர்விரைந்துபோயவுணத்தச்சனை, மேயினரிறைமகன்விளித்துளானெனக், கூயினர்வருகெனக்கொடுவந்துய்த்தனர், மாயிருங்கதிரைமுன்வெகுண்டமைந்தன்முன். (௪௧௩)

தன்னடிவணங்கியேதச்சனிற்றலு, மன்னவர்மன்னவன்மதலைவல்லைநீ [ன்.
யிந்நகர்வடமதில்சிகரியேனவுந், தொன்னெறியமைக்கெனச்சொற்றுத்தூண்டினா

Digitized By Roja Muthiah Research Library

எல்லைமற்றன்னதினெல்லைதன்பகை,கல்லுயர்மொய்ம்பன்மாகாயனென்பதோர்,வல்லவுணன்றனைவருதியென்றுகூ, யொல்லையினிளையதொன்றுரைத்தன்மேயினன். (௪௧௫)

சேயுயர்வடமதிற்சிகரிதன்னிடைப், போயினையந்நெறிபுரத்தியாலெனு
வாயிரப்பத்தெனுமனிகவெள்ளமோ, டேயினன்றனுறுமிருக்கையெய்தினன். ()

அத்துணையேகியேயவுணர்கம்மிய, னுத்தரநெடுமதிலோங்குகோபுரஞ்
சித்திரவுறுப்பொடுசித்தத்துன்னியே, வித்தகவன்மையால்விதித்துப்போகவே.()

அடுகரிபுரவிதேரவுணர்தானையாங், கடலுடன்சென்றுமாகாயனென்பவன்
வடமதிற்சிகரியின்வாய்தல்போற்றியே, சுடர்கெழுதீபிகைசுற்றவைகினன். ௪௧௮

ஆயதுநிகழ்வுழியாழிவெற்பின்வாய், ஞாயிறுநணுகநள்ளிருளின்யாமினி
போயதுமெய்ப்புலன்புந்திசேர்வுழி, மாயையகன்றிடும்வண்ணமென்னவே. ()

கங்குலென்றுரைபெறுகடவுட்கற்புடை, நங்கையைமேவுவானயப்புமேற்கொளா, வங்கவளைத்தொடர்ந்தணுகுவானெனச், செங்கதிரண்ணல்கீழ்த்திசையிலெய்தினன். (௪௨0)

இரண்டாநாட்சூரபன்மன்யுத்தப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௮௭௭.

---

# மூன்றுநாட்பானுகோபன்யுத்தப்படலம்.

இரவிவந்துற்றுழியெழுந்துசூர்மகன், மரபுளிநாட்கடன்வழாமலாற்றியே, செருவினிலுடைந்திடுசிறுமைசிந்தியாப்,பொருவருமாயையைப்போற்றன்மேயினன்.()

போற்றினன்முன்னுறுபொழுதின்மாயவள், கோற்றொழில்கன்றியகுமரன்முன்னரே, தோற்றினணிற்றலுந்தொழுதகையினன், பேற்றினைமுன்னியேயிளையபேசுவான். (௨)

தாதைதனவ்வைகேள்சண்முகத்தவன், றூதுவனோடுபோர்த்தொழிலையாற்றினே
னேதமின்மானமுமிழந்துசாலவு, நோதகவுழந்தனனென்மைநீங்கினேன். (௩)

துன்னலரோடுபோர்தொடங்கியீற்றினிற், பின்னிடுவார்பெறும்பிழையும்பெற்றன, னென்னினிவரும்பழியிதற்குமேலென்று, னன்னதுமாயைகேட்டறைதன்மேயினள். (௪)

மறைநெறிவிலக்கினைவானுளோர்தமைச், சிறையிடைவைத்தனைதேவர்கோமகன்
முறையினையழித்தனைமுனிவர்செய்தவங்,குறையுறவித்தனைகொடுமைபேணினய்.

ஓவருந்தன்மையாலுயிர்கள்போற்றிடு, மூவரும்பகையெனின்முனிவர்தம்மொடு, தேவரும்பகையெனிற்சேணிலுற்றுளோ, ரேவரும்பகையெனினெங்ஙன்வாழ்தியால். (௬)

பிழைத்திடுகொடுநெறிபெரிதுஞ்செய்தலாற், பழித்திறம்பூண்டனைபகைவரிந்நக
ரழித்தமரியற்றிடவவர்க்குத்தோற்றனை, யிழைத்திடும்விதியினையாவர்நீங்கினர். ()

நூற்றிவண்பற்பலநுவலினுவதென், மாற்றருந்திறலுடைமன்னன்மைந்தநீ
சாற்றுதிவேண்டுவதருவனென்றலு, மாற்றவுமகிழ்சிறந்தனையன்கூறுவான். (௮)

Digitized By Roja Muthiah Research Library

நின்றமரியற்றியேநென்னலென்றனை, வென்றனனேகியவீரவாகுவை
யின்றனிகத்தொடுமீறுசெய்திட, வொன்றொருபடையினையுதவுவாயென்றான். (கூ)

அடல்வலிபிழைத்திடுமவுணன்சொற்றன, கெடலருமாயவள்கேட்டுத்தன்னொரு
படையினைவிதித்தவன்பாணிநல்கியே, கடிதினிலொருமொழிகழறன்மேயினாள். ()

மற்றிதுவிடுத்தியான்மறையிற்கந்தவே, ளொற்றனைப்பிறர்தமையுணர்வைவீட்டி
யே, சுற்றிடும்வாயுவின்றொழிலுஞ்செய்யுமா, விற்றையிற்சயமுனதேகுவாயென்
றாள். (கக)

உரைத்திவைமாயவளும்பர்போந்துழி, வரத்தினிற்கொண்டிடுமாயமாப்படை
பரித்தவனெருநலிற்பழியைநீங்கியே, பெருத்திடும்பெருமிதப்பெற்றிகூடினான். ()

கூர்ப்புறுபல்லவங்கொண்டதூணியைச், சீர்ப்புறத்திறுக்கிமெய்செறித்துச்சாலி
கை, கார்ப்பெருங்கொடுமரங்கரங்கொண்டின்னதோர், போர்ப்பெருங்கருவிகள்
புனைந்துதோன்றினான். (கங)

காற்படையழற்படைகாலன்றொல்படை, பாற்படுமதிப்படைபரிதியோன்படை
மாற்படையரன்படைமலரயன்படை, மேற்படுசூர்மகனெடுத்தன்மேயினான். கச

மேனவப்படைமதில்விரவுசாலையுள், வானவப்படைகொடுவாய்தல்போந்தன
னானவப்படைதருமாட்ல்வில்லினான், றானவப்படைஞர்கடொழுதுதாழ்ந்திட. கரு

சயந்தனைப்பொருதிடுந்தார்பெய்தோளினான், சயந்தனைப்பொருதநாட்சமரிற்கொ
ண்டதோர், சயந்தனத்தேறினன்றகுவர்யாவருஞ், சயந்தனைப்பெறுகெனவாசிசா
ற்றவே. (கசு)

ஒப்பறுசெறுநர்மேலுருத்துப்போர்செயத், துப்புறுசூர்மகன்றொடர்கின்றானெனச்
செப்புறுமொற்றர்கடெரிந்துபோமென, வெப்புறத்தானையுமெழுந்துபோந்தவே. ()

பரிபதினாயிரவெள்ளம்பாய்மத, கரிபதினாயிரவெள்ளங்காமர்தே
ரொருபதினாயிரவெள்ளமொப்பிலா, விருபதினாயிரவெள்ளமேனையோர். (சஅ)

நாற்படையிவ்வகைநடந்துகோமகன், பாற்படவிரவினபரவுபூழிகண்
மாற்படுபுணரிநீர்வறப்பச்சூழ்ந்ததான், மேற்படுமுகிலினமிசையவந்தென. (சகூ)

திண்டிறலனிகமீச்சென்றபூழிகண், மண்டலமுழுவதும்வரைகள்யாவையு
மண்டமும்விழுங்கியேயவைகளற்றிட, வுண்டலினடைத்தனவுவரிமுற்றுமே. உ0

முரசொடுதுடிகுடமுழவஞ்சல்லரி, கரடிகைதண்ணுமையுடுக்கைகாகள
மிரலைகளாதியாமியங்களார்த்தன, திருநகரழியுமென்றரற்றுஞ்செய்கைபோல். ()

உழையுடைக்கற்பினருரையிற்சென்றிடா, தழையுடைப்பிடிக்குநீர்தணிக்கும்
வேட்கையாற், புழையுடைத்தனிக்கரம்போக்கிப்பொங்குசூன், மழையுடைத்திடு
வனமதங்கொள்யானையே. (உஉ)

கார்மிசைப்பாய்வனகதிரவன்றனித், தேர்மிசைப்பாய்வனசிலையிற்பாய்வன
பார்மிசைப்பாய்வனபாரிடத்தவர், போர்மிசைப்பாய்வனபுரவிவெள்ளமே. (உங)

அருளிலராகியவவுணர்மாண்மொழித், தெருளுறுமவ்வவர்தெரிவைமாதர்கண்
மருளொடுதன்புறும்வண்ணங்காட்டல்போ, லருளுவவிரங்குவவுலப்பிறேர்களே.

கரிந்திடுமேனியுங்கணிப்பிறானவர், தெரிந்திடுமாலைசூழ்செய்யபங்கியும்
விரிந்திடுஞ்சுபல்லுருவமேவுறீஇ, யெரிந்திடுமங்கிகான்றென்னத்தோன்றுமே. ()

வேறு.

பொங்குவெங்கதிர்போன்றொளிர்பூணினர், திங்கள்வாளெயிற்றார்முடிசெய்யவர்
துங்கவற்புதர்பொன்புகர்தூங்குவே, லங்கையாளரசனியினார்த்துளார். (உசு)

நீளமர்க்குநெருநலிற்போந்துபின், மீளுதற்குடைந்தார்தமைவீட்டுதும்
வாளினுக்கிரையாவென்றுவாய்மையாற், சூளிசைத்துத்தொடர்ந்தனர்வீரரே.உஎ

ஓடுதேரினுவாக்களின்மானவர், நீடுகையினிவந்துறுகேதன
மாடிவிண்ணையளாவுவதாருவைக், கூடவேகொல்கொடியெனுந்தன்மையால். ()

கோலினேங்குகொடியுங்கவிகையுந், தோலுமீண்டலிற்சூழிருளாயின
மாலைசூழ்குஞ்சிமானவர்வன்கையில், வேலும்வாளும்பிறவும்வில்வீசுமே. (உகூ)

இன்னதன்மையியன்றிடத்தானைக, டுன்னுபாங்கரிற்சூழ்ந்துபடர்ந்திட
மன்னன்மாமகன்மாநகர்நீங்கியே, பொன்னவாம்புரிசைப்புறம்போயினான். (௩0)

போயகாலைப்புறந்தனில்வந்திடும், வேயினோர்களின்வெம்பரிமாமுக
மாயிரங்கொளவுணைநோக்கியே, தீயசூர்மகனின்னனசெப்புவான். (௩க)

ஈசன்விட்டகுமரனிருந்திடும், பாசறைக்களந்தன்னிற்படர்ந்துநீ
மாசிலாவிறல்வாகுவைக்கண்ணுறீஇப், பேசலாற்றுதியின்னனபெற்றியே. (௩உ)

மன்னனுணையின்மண்டமராற்றியே, தன்னையின்றுதடிந்திசைபெற்றிட
வுன்னிவந்தனனெல்லையினேகுதி, முன்னைவைகலிற்போரென்றுமுன்னலாய்.௩௩

என்றமாற்றமெனதுரையாகவே, வென்றியோடுபுகன்றனைமீள்கென
நின்றதூதனைநீசன்விடுத்தலு, நன்றிதென்றுநடந்துமுன்போயினான். (௩௪)

ஏமகூடமெனப்பெயராகிய, காமர்பாசறைக்கண்ணகன்வைப்புறீஇ
நாமவேற்படைநம்பிக்கிளவலாந், தாமமார்பனைக்கண்டிவைசாற்றுவான். (௩௫)

எல்லைதன்னையிருஞ்சிறைவீட்டிய, மல்லலங்கழன்மன்னவன்மாமக
னெல்லையிப்பகலுன்னுயிர்மாற்றுவான், செல்லுகின்றனன்செப்பியசூளினன். ௩௬

ஏவினுனெனையித்திறங்கூறியே, கூவிநின்னைக்கொடுவருவாயென
மேவலாளவிரைந்தமர்க்கேகுதி, நாவலோயெனவேநவின்றனரோ. (௩எ)

தூதனிவ்வகைசொற்றெதிர்நிற்றலு, மூதகுந்திறன்மொய்ம்பனகைத்தியா
னுதவன்பகையாருயிருண்டிடப், போதுகின்றனன்போய்ப்புகல்வாயென்றான். ()

ஒற்றனித்திறமோர்ந்துடன்மீடலுஞ், செற்றமிக்கதிறல்கெழுமொய்ம்பினன்
சுற்றமோடுதலைவர்கள்சூழ்ந்திடக், கொற்றவேற்கைக்குமரன்முனண்ணினன். ௩௯

எங்குமாகியிருந்திடுநாயகன், பங்கயப்பொற்பதத்தினைத்தாழ்ந்தெழீஇச்
செங்கைகூப்பிமுன்னிற்றலுஞ்செவ்வியோ, னங்கணுற்றதறிந்திவைகூறுவான். ()

னென்னலோடுநிருதன்றனிமக, னுன்னைமுன்னியுரனொடுபோந்துளான்
றுன்னுதானைத்துணைவர்கடம்மொடு, முன்னைவைகலினேகுதிமொய்ம்பினோய். ()

போயெதிர்ந்துபொருதிபடைகளா, யேயவற்றிற்கெதிரெதிர்தூண்டுதி
மாயைவஞ்சன்புரிந்திடின்வந்துநந், தூயவேற்படைதுண்ணெனநீக்குமால். (௪உ)

போதியென்றுபுகன்றிடவப்பணி, மீதுகொண்டுவிடைகொண்டுபுங்கவன்
பாதம்வந்தனைசெய்துபடர்ந்தனன், றூதுபோயமராற்றியதொன்மையோன்.(௪௩)

துணையுளார்களுஞ்சுற்றமுள்ளார்களுங், கணவர்தங்களிற்காவலர்யாவரு
மணிகொடேர்புகவாடலந்தோளினா, ணிணையிலாத்தன்னிரதத்திலேறினான். (௪௪)

ஏறுமெல்லையிலிச்செயனோக்கியே, யூறில்பூதரோராயிரவெள்ளமு
மாறிலாதவரையுமரங்களும், பாறுலாவுபடையுங்கொண்டெய்தினார். (௪௫)

சாரதங்கெழுதானைகளீண்டியே, காரினங்களிற்கல்லெனவார்ப்புற
வீரமொய்ம்பின்விடலையைச்சூழ்ந்தன, ராரும்விண்ணவராசிபுகன்றிட. (௪௬)

மேனகாலைவிசயங்கொண்மொய்ம்பினான், றானையானவுந்தம்பியர்யாவரு
மேனையோர்களுமீண்டச்சென்றெய்தினான், பானுகோபன்படரும்பறந்தலை. (௪௭)

வேறு.

தேர்த்திடும்பாரிடஞ்செறியும்வெள்ளமுங், கார்த்திடுதானவக்கடலுநேர்புறீஇ
யார்த்தனரிகலினராற்றல்கூறியே,போர்த்தொழின்முறையினைப்புரிதன்மேயினார்

கோடுகண்முழங்கினகுறுங்கணுகுளி, பீடுறவிரட்டினபேரியார்த்தன
மூடினவலகைகண்மொய்த்தபுள்ளின, மாடினனடுவனுமமரர்நோக்கவே. (௪௯)

இலையயிரேறுமரமெழுத்தண்டொண்மழு, வலமொடுவச்சிரமாழிமாப்படை
தொலைவறுமுத்தலைச்சூலமாதிய, சிலைபொதிகணையுடனவுணர்சிந்தினார். (௫0)

முத்தலைக்கழுவொடுமுசலம்வெங்கதை, கைத்தலத்திருந்திடுகணிச்சிநேமிகண்
மைத்தலைப்பருப்பதமரங்களாதிய, வத்தலைப்பூதருமார்த்துவீசினார். (௫௧)

பணிச்சுடர்வாளினாற்பாணிசென்னிதோ, டுணித்தனர்குற்றினர்சுரிகையாதியா
ற்,குணிப்பறுமெழுக்கதைகொண்டுதாக்கினார், கணப்படையொடுபொருமவுணர்கா
ளையர். (௫௨)

பிடித்தனரவுணரைப்பிறங்குகைகளா, லடித்தனர்கிழித்தனரணியகந்தர
மொடித்தனர்மிதித்தனருருட்டுகின்றனர், புடைத்தனரெழுக்களாற்பூதவீரரே. ()

வாசியும்வயவருமாயச்சாரத, ராசறுகரங்களாலள்ளியள்ளியே
காய்சினவிபங்களிற்கணிப்பிறேர்களில், வீசினின்றெற்றினரவையும்வீழவே. (௫௪)

ஓதவெங்கடல்களுமூழிவன்னியு, மேதகுவலிகொடுவெகுளிவீங்கியே
யாதியின்மாறுகொண்டமர்செய்தாலெனப், பூதருமவுணரும்பொருதிட்டாரரோ.()

குழகியலவுணருங்கொடியபூதருங், கழகெனுமுரைபெறுகளத்திற்போர்செய,
வொழுகியசோரியாறூனைவேட்டுலாய், முழுகியகரண்டம்விண்மொய்த்தபுள்ளெ
லாம். (௫௬)

துணிந்தனகைத்தலந்துணிந்ததோட்டுணை, துணிந்தனசென்னிகடுணிந்தவாலுரந்
துணிந்தனகழலடிதுணிந்தமெய்யெலாந், துணிந்தனவலிசிலபூதர்துஞ்சினார். (௫௭)

முடித்தொகையற்றனர்மொய்ம்புமற்றன, ரடித்துணையற்றனரங்கையற்றனர்
வடித்திடுகற்பொடுவலியுமற்றனர், துடித்தனரவுணருமநேகர்துஞ்சினார். (௫௮)

வசையுறுமவுணரின்மன்னர்யாவரு, மிசைபெறுபூதரினிறைவருங்கெழீஇத்
திசையொடுதிசையெதிர்செய்கைபோலவே, யசைவிலராகிநின்றமரதாற்றினார். ()

மால்கிளர்தீயவர்மலைகொள்சென்னியைக், கால்கொடுதள்ளினர்களேவரந்தனைப்
பால்கிளர்பிலத்தினுட்படுத்துச்சென்றனர்,தோல்களையுரித்தனர்சூலபாணிபோல்.()

Digitized By Roja Muthiah Research Library

அரித்திறலடக்கினரவுணவீரர்தம், வரத்தினையொழித்தனர்மாயநூறியே
புரத்தினையழித்தனர்போரின்மாதொடு, நிருத்தமதியற்றினர்நிமலன்போலவே. ()

கங்குலின்மேனியராழிக்கையினர், துங்கமொடவுணரைத்தொலைத்துத்துன்
னெனச், சங்கமதிசைத்தனர்தண்டந்தாங்குவார், செங்கண்மால்பொருவினர்சில
வெம்பூதரே. (௬௨)

அயர்ப்புறுமால்கரியரற்றவேசுலாய்க், குயிற்றியமணிநெடுங்கோடுவாங்குவா
ருயற்படுகற்பமங்கொன்றிலேனத்தி, னெயிற்றினைப்பறித்திடுங்குமரனென்னவே.

கொலைபயில்கரிமுகங்கொண்டுபூதர்தம், மலையிடைமறைந்தனர்மறித்துந்தோன்
றியே, யலமருசமர்புரிந்தவுணவீரரிற், சிலர்சிலர்தாரகன்செயற்கைமேயினார். ()

மாலொடுபொருதனர்மலரயன்றனைச், சாலவும்வருத்தினர்சலதிவேலையின்
பாலர்களவுணரிற்பலர்சலந்தரன், போலுடல்கிழிந்தனர்பூதர்நேமியால். (௬௫)

போன்றவர்பிறரிலாப்பூதநாயகர், மூன்றிலைப்படைகளின்மூழ்கித்தீமைபோய்
வான்றிகழ்கதியும்வாலுணர்வுமெய்தியே, தோன்றினரந்தகாசுரனைப்போற்சிலர்.()

வேறு.

இலக்கவீரருமெண்மருமத்துணை, விலக்கில்வில்லுமிழ்வெங்கணைமாரிதூ
யொலிக்கொள்சூறையினெல்லையிற்சுற்றியே, கலக்கினார்களவுணக்கடலினை.(௬௭)

வேறு.

மிடைந்தகணவீரர்களுமேலவருமாக
வடைந்தமரியற்றியவுணப்படைகண்மாயத்
தடிந்தனரொழிந்தனதடம்புனல்குடங்க
ருடைந்தவழிசிந்தியெனவோடியனவன்றே. (௬௮)

ஓடியதுகண்டனனுயிர்த்துநகைசெய்தான்
காடுகிளர்வன்னியெனவேகனலுகின்று
றுடல்செயமுன்னியொரடற்சிலையெடுத்தான்
றேடுசெறிவாகைபுனைசூரனருண்மைந்தன். (௬௯)

வாகுபெறுதேர்வலவனைக்கடிதுநோக்கி
யேகவிடுகென்றிரவிதன்பகையியம்பப்
பாகனினிதென்றுபரிபூண்டவிரதத்தை
வேகமொடுபூதர்படைமீதுசெலவிட்டான். (௭0)

பாரிடர்கள்சேனையிடைபானுவைமுனிந்தோன்
சேருதலுமாங்கதுதெரிந்துதிறல்வாகு
சாருறுபெருந்துணைவர்தம்மொடுவிரைந்தே
நேரெதிர்புகுந்தொருநெடுஞ்சிலையெடுத்தான். (௭௧)

எடுத்திடும்வில்வீரனையெதிர்ந்தவுணன்மைந்தன்
வடித்திடுதடக்கைதனில்வார்சிலைவளைத்துத்
தடித்தனகுணத்தொலிதனைப்புரியவண்டம்
வெடித்தனமுடித்தலைதுளக்கினர்கள்விண்ணோர். (௭௨)

எண்ணில்பலகோடியுருமேறுருவமொன்றாய்
வண்ணமிகுமின்னிடைமறைந்தொலிசெய்தென்ன
விண்ணுறநிவந்தவியன்மொய்ம்புடையவீர
னண்ணலர்துணுக்கமுறநாணிசையெடுத்தான். (௭௩)

Digitized By Roja Muthiah Research Library

நாணொலிசெவித்துணையினஞ்சமெனவெய்தத்
தூணிகளும்வாகுடையசூர்மதலைசீறி
வாணிலவுகான்றபிறைவாளியுலவாமற்
சேணுநிலனுந்திசைகளுஞ்செறியவிட்டான். (எச)

மாமுருகவேளிளவன்மற்றதுதெரிந்தே
காமர்பிறைபோன்றுகதிரென்னவெயில்கான்று
தீமுகமதாமளவில்செய்யசரமாரி
தூமுகிலுநாணமுறவேநெடிதுதூர்த்தான். (எரு)

ஐயன்விடுவெஞ்சரமுமாதவனுமஞ்சும்
வெய்யன்விடுவெஞ்சரமுமேவியெதிர்கவ்வி
மொய்யுடையராவினமுனிந்திகலிவெம்போர்
செய்வதெனமாறுகொடுசிந்துவனதம்மில். (எசு)

வேறு.

கரிந்திடுமாமுகில்கடந்தனவானவர், புரிந்திடுசேணெறிபுகுந்தனமாலய
னிருந்திடுமூரையுமிகந்தனபோயின, திரிந்தனசாரிகைசிறந்தவர்தேர்களே. (எஎ)

தெண்டிரைநேமிகள்சென்றனசூழ்வன, வெண்டிசைமாநகரெங்கணுமேகுவ
மண்டலமால்வரைமண்டியுலாவுவ, வண்டமுலாவுவவங்கவர்தேர்களே. (எஅ)

மங்குலின்மேலதோமண்டலமார்வதோ, செங்கணனூரதோதெண்டிரைசேர்வதோ, விங்குளரேறுதேரெங்குளவோவெனச், சங்கையினாடினார்தங்களில்வானுளோர். (எகூ)

மன்னியமாமுகில்வண்ணமதாயின, ரன்னதொல்வீரர்களண்மியதேரவை
மின்னுவின்மேவுவவெம்மையில்வீசிய,துன்னியவாளிகடொன்மழைபோல்வவே

ஆங்கவர்தேர்களிலாண்டுறுபாகர்க, டேங்கலில்வாசிகடூண்டியமேல்வர்
தீங்கதிர்வாளிகள்சேண்புடைசூழ்வுற, வேங்கினரோடினரீண்டியவானுளோர். ()

வேறு.

பூசலிவ்வகைபுரிந்திடுகின்றுழிப்புரைதீர்
வாசவன்மகன்றனைச்சிறைசெய்திடும்வலியோ
னாசுகங்களிலாசுகமாயிரந்தூண்டி
யீசன்மாமகன்சேனைநாயகனிறத்தெய்தான். (அஉ)

ஆகமீதிலோராயிரம்பகழிபுக்கழுந்த
வேகவீரனுமிளவலுமுனிவுகொண்டேவி
வாகைவெங்கணைபத்துநூறவுணர்கோன்மதலை
பாகுமாக்களுமிரதமுமொருங்குறப்படுத்தான். (அங)

டுக்கவெய்யவன்வேறொருவையமேற்பாய்ந்து
தடக்கைவில்லினைவளைக்குமுனாயிரஞ்சரத்தைத்
தொடுக்கமற்றவனூரந்தனைப்போழ்தலுந்துளங்கி
யிடுக்கணெய்தினனார்த்தனர்பூதர்களெவரும். (அச)

பூதரார்த்திடுதுழனியைக்கேட்டலும்பொருமிக்
காதில்வெவ்விடமுய்த்திடுதிறனெனக்கனன்றே
யேதமில்லதோர்பண்ணவப்படைகளாலிமைப்பிற்
றூதனுற்றலைத்தொலைக்குவன்யானெனத்துணிந்தான். (அரு)

Digitized By Roja Muthiah Research Library

இணையில்சூர்மகன்வாருணப்படைக்கலமெடுத்துப்
பணிவுகொண்டகார்முகந்தனிற்பூட்டிநீபடர்ந்து
கணிதமில்லதோர்நீத்தமாய்ச்சாரதர்கணத்தைத்
துணைவர்தங்களைத்தூதனைமுடிக்கெனத்தொடுத்தான். (௮௬)

தொடைப்பெரும்படைகடைமுறையுலகெலாந்தொலைக்கு
மடற்பெருங்கடலேழினும்பரந்துபோயான்று
தடப்பெரும்புனனீத்தமாய்விசும்பினைத்தடவி
யிடிப்பெருங்குரல்காட்டியேயேகியதிமைப்பில். (௮௭)

கண்டவானவர்துளங்கினர்பூதருங்கலக்கங்
கொண்டுநின்றனருணர்ந்திலர்துணைவருங்குலைந்தா
ரண்டர்நாயகற்கிளையவனோக்கியேயகில
முண்டுலாவருமங்கிமாப்பெரும்படையுய்த்தான். (௮௮)

புகையெழுந்தனவெம்மையுமெழுந்தனபுலிங்கத்
தொகையெழுந்தனஞெகிழிகளெழுந்தனசுடரின்
வகையெழுந்தனபேரொலியெழுந்தனவன்னிச்
சிகையெழுந்தனசெறிந்தனவானமுந்திசையும். (௮௯)

முடிக்கலுற்றதீப்பெரும்படைசெறியமூதண்டம்
வெடிக்கலுற்றனவற்றினகங்கைமீன்றொகுதி
துடிக்கலுற்றனசுருங்கினவளக்கர்தொல்கிரிகள்
பொடிக்கலுற்றனதளர்ந்துமெய்பிளந்தனபுவியும். (௯0)

தீர்த்தனேவலோன்விடுபடையின்னணஞ்சென்று
மூர்த்தமொன்றினில்வாருணப்படையினைமுருக்கி
நீர்த்திரைப்பெருநீத்தமுமுண்டுமேனிமிர்ந்து
போர்த்ததாமெனச்சுற்றியதவுணர்கோன்புறத்தில். (௯௧)

சுற்றுகின்றவப்பண்டயினைக்கண்டுசூர்புதல்வன்
செற்றமேற்கொண்டுமாருதப்பெரும்படைசெலுத்த
மற்றதூழிவெங்காலுருக்கொண்டுமன்னுயிர்கண்
முற்றுமண்டமுந்துளங்குறச்சென்றதுமுழங்கி. (௯௨)

மாருதப்படைசென்றுதீப்படையினைமாற்றிச்
சாரதப்படைமேலடவருதலுந்தடந்தோள்
வீரன்மற்றதுகண்டுவெம்பணிப்படைவிடுத்தான்
சூரியத்தனிக்கடவுளுந்தன்னுளந்துளங்க. (௯௩)

ஆயிரம்பதினாயிரமிலக்கமோடநந்தந்
தீயபஃறலைப்பன்னகத்தொகுதியாய்ச்செறிந்து
காயமெங்கணுநிமிர்ந்துசெந்தீவிடங்கான்று
பாயிருஞ்சுடர்க்கதிரையுமறைத்ததுபடத்தால். (௯௪)

வெங்கணாகங்களுமிழ்கின்றவங்கியும்விடமு
மங்குல்வானமுந்திசைகளுமாநிலவரைப்பு
மெங்குமீண்டியவிரவினிற்புவியுளோர்யாண்டும்
பொங்குதீச்சுடரளப்பிலமாட்டுதல்போல. (௯௫)

௬௭

Digitized By Roja Muthiah Research Library

உலவைமாப்படையுண்டிடுமெங்கியையொருங்கே
வலவைநீர்மையாற்றம்முழைவரும்படிவாங்கி
யலகில்வெம்பணிவிடுத்தெனவன்னவையுமிழ்தீக்
குலவுகின்றனபுகையெனக்கொடுவிடங்குழூம. (கூசு)

இனையகொள்கையாற்பன்னகப்பெரும்படையேகி
முனமெதிர்ந்திடுமாருதப்படையினைமுனிந்து
துனையவுண்டுதன்மீமிசைச்சேறலுந்தொன்றுட்
கனலியைத்தளைபூட்டியகண்டகன்கண்டான். (கூஎ)

இன்னதேயிதற்கெதிரெனவவுணர்கோனெண்ணிப்
பொன்னிருஞ்சிறைக்கலுழன்மாப்படையினைப்போக்க
வன்னதேகலும்வெருவியேயாற்றலின்றுகிப்
பன்னகப்படையிரிந்ததுகதிர்கண்டபனிபோல். (கூஅ)

ஆலவெம்பணிப்படைமுரிந்திடுதலுமார்த்துக்
காலவேகத்தினுவணமாப்பெரும்படைகலுழன்
கோலமெண்ணிலபுரிந்துநேர்வந்திடக்குரிசின்
மேலைநந்தியந்தேவன்மாப்படையினைவிடுத்தான். (கூகூ)

சீற்றமாயண்ணனந்திதன்பெரும்படைசெலுத்த
நூற்றுநூறுநூறுயிரகோடிநோன்கழற்கா
லேற்றின்மேனிகொண்டுலகெலாமொருங்குறவீண்டி
யாற்றவெய்துயிர்த்தார்த்ததுமூதண்டமதிர. (க00)

களனெனப்படுநூபுரங்கழலிடைகலிப்ப
வளவில்கிங்கிணித்தாமங்கள்கந்தரத்தார்ப்ப
வொளிறுபேரிமிலண்டகோளகையினையுரிஞ்ச
வளருநீண்மருப்புலகெலாமலைப்பவந்ததுவே. (க0க)

திரையெறிந்திடுமளக்கருண்டுலவுசேண்முகிலி
னிரையெறிந்ததுபரிதிதேரெறிந்ததுநெடிதாந்
தரையெறிந்ததுதிசைக்கரியெறிந்ததுதடம்பொன்
வரையெறிந்ததுகுலகிரியெறிந்ததுமருப்பால். (க0உ)

நந்திமாப்படையின்னணமேகியேநணுகி
வந்தகாருடப்படையினைவிழுங்கிமாற்றலனைச்
சிந்துகின்றனனென்றுசென்றிடுதலுந்தெரியா
வந்தகன்படைதொடுத்தனனவுணர்கட்கரசன். (க0௩)

தொடுத்தவந்தகப்படையையும்விடைப்படைதுரந்து
படுத்துவீட்டியதன்னதன்மிடலினைப்பாராக்
கடித்துமெல்லிதழதுக்கியேயயன்படைக்கலத்தை
யெடுத்துவீசினனிந்திரன்பதிகனற்கீந்தோன். (க0௪)

வீசுநான்முகப்படைக்கலம்வெகுண்டுவிண்ணெறிபோ
யீசனூர்திதன்படையினைக்காண்டலுமிடைந்து
நீசவேலவின்வந்தனனின்வரவுணரேன்
காய்சினங்கொளேலெனத்தொழுதுடைந்ததுகடிதின், (க0௫)

Digitized By Roja Muthiah Research Library

நூன்முகத்தினில்விதித்திடுநூற்றிதழிருக்கை
நான்முகப்படைபழுதுபட்டோடலுநகைத்து
வான்முகத்தவரார்த்தனரதுகண்டுமைந்தன்
சூன்முகக்கொண்டன்மேனியன்பெரும்படைதொடுத்தான். (க0சு)

ஊழிநாளினுமுடிகிலாதவன்மகனுந்து
மாழியான்படையாண்டுமோருருவமாயமைந்து
கேழிலைம்படைதாங்கிமாயத்தொடுங்கெழுமி
வாழிநந்திதன்படையெதிர்மலைந்ததுமன்றோ. (க0எ)

நாரணன்படைநந்திதன்படைக்கெதிர்நணுகிப்
போரியற்றியேநிற்புழியதுகண்டுபுனிதன்
சூரரித்திறல்சிந்திடச்சிம்புளாய்த்தோன்றும்
வீரபத்திரப்படையினைத்தொழுதனன்விடுத்தான். (க0அ)

ஏயதாகியவீரபத்திரப்படையெழுந்து
போயகாலையினந்திதன்படையெதிர்பொருத
மாயவன்படைதொலைந்ததுமதியொடுதிகழ்மீ
னாயிரங்கதிரோன்வரக்கரந்தவாறதுபோல். (க0கூ)

செங்கணாயகன்படைதொலைந்திடுதலுந்தெரிவா
னங்கணாய்வுறாவிமைப்பினிலகிலமுமழிக்கு
மெங்கணாயகன் படையினைத்தூண்டுதற்கெடுத்தான்
வெங்கணாயிரங்கதிரினைச்செயிர்த்திடும்வெய்யோன். (கக0)

எஞ்சலில்லதோரெம்பிரான்றொல்படையெடுத்து
மஞ்சனங்கந்தந்தூபிகைமணிவிளக்கமுத
நெஞ்சினிற்கடிதுய்த்தனன்பூசனைநிரப்பி
விஞ்சுமன்பினால்வழுத்தியேதொழுதனன்விடுத்தான். (ககக)

தாதையாயவன்படைக்கலம்விடுத்திடுந்தன்மை
காதன்மாமகன்கண்டனன்றானுமக்கணத்தி
லாதிநாயகன்படைதனையெடுத்தனனளியாற்
போதநீடுதன்புந்தியாலருச்சனைபுரிந்தான். (ககஉ)

வழிபடுந்தொழின்முற்றியபின்னுறமதலை
யழிதகன்மகன்விடுத்திடுபடைக்குமாறாகி
விழுமிதாயிவண்மீளுதியாலெனவேண்டித்
தொழுதியாவர்க்குமேலவன்படையினைத்தொடுத்தான். (ககங)

தூயன்விட்டிடுசிவன்படையெழுதலுந்தொலைத்
தீயன்விட்டிடுபரன்படையெதிர்ந்துநேர்சென்ற
தாயவப்படையிரண்டுமொறாகியவழிக்கு
நாயகத்தனியுருத்திரவடிவமாய்நண்ணி. (ககச)

ஊழிக்காலினையொருபுடையுமிழ்ந்தனவுலவாச்
சூழிப்பாய்புகையொருபுடையுமிழ்ந்தனதொலைக்கும்
பாழிப்பேரழலொருபுடையுமிழ்ந்தனபலவா
மாழித்தீவிடமொருபுடையுமிழ்ந்தனவவையே. (ககரு)

Digitized By Roja Muthiah Research Library

கூளிமேலவர்தொகையினையளித்தனகொடிதாங்
காளிமேலவர்தொகையினையளித்தனகடுங்கண்
ஞாளிமேலவர்தொகையினையளித்தனநவைதீ
ராளிமேலவர்தொகையினையளித்தனவயலில். (௧௧௬)

பேயினங்களையொருபுடையுமிழ்ந்தனபிறங்கி
மூயதொல்லிருளொருபுடையுமிழ்ந்தனமுழங்கு
மாயைதன்கணமொருபுடையுமிழ்ந்தனமறலித்
தீயர்தங்குழுவொருபுடையுமிழ்ந்தனசெறிய. (௧௧௭)

எண்டருங்கடலளப்பிலகான்றனவெரிகால்
கொண்டலின்றொகையளப்பிலகான்றனகொலைசெய்
சண்டவெம்பணியளப்பிலகான்றனதபன
மண்டலங்களோரளப்பிலகான்றனமருங்கில். (௧௧௮)

அனந்தகோடியர்புட்கலையிறைவரையளித்த
வனந்தகோடியர்கரிமுகத்தவர்தமையளித்த
வனந்தகோடியரரிமுகத்தவர்தமையளித்த
வனந்தகோடியர்சிம்புண்மேனியர்தமையளித்த. (௧௧௯)

ஏறுவெம்பரிவயப்புலிவல்லியம்யாளி
சீறுமால்கரிதேரொடுமானமேற்சேர்ந்து
மாறில்பல்படைசிந்தியேமுனிந்துமேல்வருவான்
வேறுவேறெங்குமுருத்திரகணங்களைவிதித்த. (௧௨0)

ஆரணன்படையளப்பிலதந்தனவைவர்
சாரணன்படையளப்பிலதந்தனதந்த
வாரணன்படையளப்பிலதந்தனவளத்தின்
காரணன்படையளப்பிலதந்தனகடிதின். (௧௨௧)

வாயுவின்படையெண்ணிலபுரிந்தனமறலி
யாயவன்படையெண்ணிலபுரிந்தனவளக்கர்
நாயகன்படையெண்ணிலபுரிந்தனநகைசேர்
தீயவன்படையெண்ணிலபுரிந்தனசெறிய. (௧௨௨)

கற்பொழிந்தனஞெருஞ்சிகள்பொழிந்தனகணக்கில்
செற்பொழிந்தனகணிச்சிகள்பொழிந்தனதிகிரி
யெற்பொழிந்தனசூலம்வேல்பொழிந்தனவீண்டும்
விற்பொழிந்தனசரமழைபொழிந்தனவிரைவில். (௧௨௩)

வேறு.

இம்முறையுருவநல்கியெம்பிரான்படையிரண்டு
மைம்மலிகடலும்வானுமாதிரவரைப்பும்பாருங்
கொம்மெனவிழுங்கியண்டகோளகைபிளந்துமேல்போய்த்
தம்மின்மாறுகின்றுசமர்த்தொழில்புரிந்தவன்றே. (௧௨௪)

வற்றியவளக்கரேழும்வறந்தனவான்றோய்கங்கை
முற்றியபுறத்திலாழிமுடிந்ததவ்வண்டத்தப்பாற்
சுற்றியபெருநீர்நீத்தந்தொலைந்தனவாண்டைவைப்பிற்
பற்றியவுயிர்கள்யாவும்பதைபதைத்திறந்தவம்மா. (௧௨௫)

Digitized By Roja Muthiah Research Library

எரிந்தனநிலனும்வானுமிடிந்தனமுடிந்துமேருப்
பொரிந்தனவுடுவின்சூழல்பொடிந்தனவிரவிதேர்க
ணெரிந்தனவண்டம்யாவுநிமிர்ந்தனபுகையினீட்டங்
கரிந்தனகிரிகளேழுங்கவிழ்ந்தனதிசையில்யானை. (கஉசு)

அலைந்தனகுறைவெங்காலவிந்தனவடவைச்செந்தீக்
குலைந்தனபிலங்களேழுங்குலுங்கினவண்டப்பித்தி
யுலைந்தனவுயிர்கள்யாவுமுடைந்தனர்தெரிந்தவானோர்
தொலைந்தனகமடநாகஞ்சுருண்டனபுரண்டமேகம். (கஉஎ)

பூமகள்புவியின்மங்கைபொருமியேதுளங்கியேங்கித்
தாமரைக்கண்ணன்றன்னைத்தழுவினரிருவரோடு
நாமகள்வெருவியோடிநான்முகற்புல்லிக்கொண்டாள்
காமனையிறுகப்புல்லியிரதியுங்கலக்கமுற்றாள். (கஉஅ)

மற்றுளமுனிவர்தேவர்மடந்தையர்தம்மைப்புல்லி
நிற்றலுமாற்றாருய்யுநெறியுமொன்றில்லாராயு
முற்றிடுமச்சந்தன்னாலோடினர்வனத்தீச்சூழப்
பெற்றிடும்பறழ்வாய்கவ்விப்பெயர்ந்திடும்பிணக்களேபோல். (கஉகூ)

திரண்டிடுபூதவீரர்தியங்கினரிலக்கரானோர்
மருண்டனர்துணைவர்தாமுமயங்கினர்வீரற்சூழ்ந்தார்
புரண்டனரவுணர்யாரும்பொடிந்தனபடர்ந்ததேர்க
ளுருண்டனகளிறுமாவுமொருவனேயவுணனின்றான். (கங0)

ஆழிசூழ்மகேந்திரத்திலமர்தருமவுணர்முற்றுஞ்
சூழுமித்தீமைநோக்கித்துண்ணெனவெருவிமாழ்கி
யேழிருதிறத்தவானவுலகங்களியாவுமாயு
மூழிநாளிதுகொலோவென்றலைந்தனர்குலைந்தமெய்யார். (கஙக)

பேரொலிபிறந்ததண்டம்பிளந்தனவளைந்தசூறை
யாரழல்பரவிற்றம்மாவாதவன்விளிந்தானந்த
மூருறைசனங்கள்யாவுமுலைந்தனபுகுந்ததென்றே
தேருதிரென்றுசூரனொற்றரைத்தெரியவிட்டான். (கஙஉ)

விட்டிடுகின்றவொற்றர்செல்லுமுன்விரைந்துபோரிற்
பட்டதுதெரிந்துதூதரொருசிலர்பணிக்குநெஞ்சர்
நெட்டிருவிசும்பினீந்துநெறியினரிறைவன்றன்னைக்
கிட்டினர்வணங்கிநின்றுங்கிளையனகிளத்தலுற்றார். (கஙங)

ஐயகேளுனதுமைந்தனலரிதன்பகைஞனென்ன
வெய்தியதூதனோடுமிருஞ்சமர்விளைத்துப்பின்னர்த்
தெய்வதப்படைகளுய்த்துச்சகமெலாமழிக்குமேலோன்
வெய்யதோர்படையைத்தூண்டவவனுமப்படையைவிட்டான். (கஙச)

அப்படையிரண்டுமாகியகிலமுமொருங்கேயுண்ணு
மொப்பில்பல்லுருவமெய்தியுருகெழுசெலவிற்றாகித்
துப்புடனண்டமுற்றுந்தொலைத்தமர்புரிந்தமாதோ
விப்பரிசுணர்ந்ததென்றாரிறையவன்வினவிச்சொல்வான். (கஙரு)

Digitized By Roja Muthiah Research Library

இரவியைமுனிந்தோன்முக்கணிறையவன்படையையாரும்
வெருவரவிடுத்துமின்னும்வென்றிலனெற்றன்றன்னை
னொருநவிற்சிறியனாகநினைந்தனமவனையந்தோ
வுருவுகண்டெள்ளாதாற்றலுணர்வதேயுணர்ச்சியென்றான். (௧௩௬)

வெருவருமினையபான்மைவிளைந்திடவெம்பிரான்றன்
பொருவரும்படைகடம்மிற்பொருதனவாடலுன்னி
யொருவருநிகர்காணாதவூழியின்முதல்வன்றானே
யிருபெருவடிவமாகியிருஞ்சமர்புரிந்ததேபோல். (௧௩௭)

இவ்வகைசிறிதுவேலையெந்தைதன்படைக்கலங்க
ளவ்விருவோருங்காணவாடலாலமராற்றி
வெவ்வுருவாகத்தம்பான்மேவரவிதித்தவெல்லாஞ்
செவ்விதின்மீட்டும்வல்லேதிரும்பியதிறலோர்தம்பால். (௧௩௮)

திரும்பியபடைகடங்கள்செய்கையாற்றிரிந்தவண்டம்
பெரும்புவியகல்வானேமிபிலம்வரைபிறவுந்தொல்லை
வரம்புறுமாறுநல்கிமாற்றலர்பக்கமல்லா
வரும்பெறலுயிர்கண்முற்றுமருள்செய்துபோனவன்றே. (௧௩௯)

திண்டிறன்மொய்ம்பன்விட்டசிவன்படைமீடலோடு
மண்டலன்விடுத்ததொல்லைப்படையுமாங்கவனைநண்ணக்
கண்டனரமரரார்த்தார்கைதவனிதினும்வெற்றி
கொண்டிலன்முடிவனின்னேகுறைந்ததெம்மிடருமென்றார். (௧௪0)

பாங்கரினிபங்கள்காணான்பாய்பரித்தொகுதிகாணான்
றாங்கெழிற்றேர்கள்காணான்றானவப்படையுங்காணா
னாங்கவைமுடியத்தானேயாயினதன்மைகண்டா
னேங்கினனவுணன்மைந்தனிரங்கிமற்றினையசொல்வான். (௧௪௧)

மூண்டொருகணத்தினெல்லாமுடிப்பவன்படையுநேர்போய்
மீண்டுளதென்னினம்மாவிடுத்திடமேலொன்றுண்டோ
மாண்டனவனிகமுற்றும்வறியனாய்த்தமியனின்றே
னீண்டினிச்செய்வதென்னென்றெண்ணியோர்சூழ்ச்சிகொண்டான். ௧௪௨

மாயத்தானெய்துநிற்கின்மலைவதுஞ்செயலன்றென்னா
மாயத்தானருவங்கொண்டுவல்விரைந்தெழுந்துசென்று
காயத்தானாகிநிற்பக்கைதவன்வெருவித்தோன்றாக்
காயத்தானுடைந்தானென்றேயார்த்தனகணங்களெல்லாம். (௧௪௩)

விடலைவிண்ணெழுந்தகாலைமேவலர்தொகையையெல்லா
முடிவுசெய்கென்றுவஞ்சமுரட்படையவுணன்றாண்டி
னடுமதுநமையுமென்னாவதற்குமுன்னளக்கராற்றைக்
கடிதினிற்கடந்தான்போலக்கதிரவன்கரந்துபோனான். (௧௪௪)

மைப்புயன்மேனித்தீயோன்மறைந்ததுவள்ளல்காணா
விப்பகறானுங்கள்வனிறந்திலனிரிந்துவல்லே
தப்பினனினியான்செய்யத்தகுவதென்னுரைத்திரென்ன
வொப்பருந்துணைவர்கேளாவொருங்குடன்றொழுதுசொல்வார். (௧௪௫)

Digitized By Roja Muthiah Research Library

வந்தெதிரவுணர்தானைமாண்டனதமியனின்றான்
சிந்தினன்கரந்துபோனனினிவருந்திறலோரில்லை
யந்தியுமணுகிற்றம்மாவனிகழுமியாமுமீண்டு
கந்தனையிறைஞ்சிக்காலைவருவதேகடமைத்தென்றார். (கசசு)

வேறு.

இனியதன்றுணைவரின்னனகூற, வினவிஞேன்முருகவேளடிகாணு
நினைவுகொண்டிடலும்விண்ணிடைநின்ற, தினகரன்பகைஞனின்னதெரிந்தான்.()

முன்னைவைகலின்முரிந்தனனென்றே, பன்னுமோர்வசைபரந்ததுமன்றிப்
பின்னுமிப்பகல்பிழைத்தனனென்று,லென்னையாவர்களுமெள்ளுவர்மாதோ.கசஅ

தொக்கபோரில்வெருவித்தொலைவோரைத், தக்கதோர்துணைவர்தந்தையர்தாயர்
மக்கள்பெண்டிருமறப்பர்களென்னின், மிக்குளாரிகழ்தல்வேண்டுவதன்றே. கசகூ

இன்றுநென்னலினிரிந்துளனென்றால், வென்றிமன்னெனைவெகுண்டுதுறக்குந்
துன்றுபல்கதிரினைச்சுளிதொல்சீர், பொன்றுமெந்தைபுகழுந்தொலைவாமால். கரு0

யாதொர்துன்னலரெதிர்ந்திடினின்று, காதலேவலிகடந்திடுசூழ்ச்சி
நீதியன்றதுவுநேர்ந்திலதென்னிற், சாதலேதகுதிசாய்ந்திடனன்றே. (கருக)

வருந்திநின்றெதிர்மலைந்தனனின்று, மிரிந்துளானிவனெனும்பழிகோடல் [டும்.
பொருந்தலன்றுபுணர்வென்னினுமாற்றி, விரைந்துமாற்றலரைவென்றிடல்வேண்

முன்னநின்றொருமுரட்படைதன்னை, யின்னலெய்தும்வகையேவுதுமென்னி
னன்னதற்கெதிரும்படைதூண்டிச், சின்னமாகவதுசிந்துவன்வீரன். (கருங)

இறந்தனன்பொருதிரிந்தனனென்னுப், பறந்தலைச்செறுநர்பன்னுறவின்னே [ம்.
மறைந்துநின்றொருவயப்படைதூண்டிச், சிறந்தவென்றிகொடுசென்றிடல்வேண்டு

தெய்வதப்படைசெலுத்துவனென்னி, னவ்வனைத்துமமராற்றலர்தம்பாற்
செவ்விதுற்றுயிர்செகுத்திடலின்றே, வெவ்வுருக்கள்கொடுமீளுவதல்லால். (கருரு)

பண்ணவப்படைபடைத்திடுகோல, மெண்ணலன்றெரியினேற்றனதூண்டித்
துண்ணெனத்தொலைவுசூழ்ந்திடும்யானும், விண்ணகத்துறல்வெளிப்படுமாதோ. ()

வெளிப்படிற்செறுநர்விண்ணினும்வந்தே, வளைத்திகற்புரிவர்மாறமர்செய்தே
யிளைத்தனன்பொரவுமின்னினியொல்லா, தொளித்துமுற்பகலிஞேடரிதாமால்.()

ஏயெனச்செறுநரீண்டுழிநண்ணி, யாயதொல்லுணர்வனைத்தையும்வீட்டி
வீயுமீற்றினைவிளைத்திடுகின்ற, மாயமாப்படைவிடுத்திடன்மாட்சி. (கருஅ)

என்றுசிந்தைதனிலின்னனவுன்னி, யன்றுமாயவளளித்திடுகின்ற
வன்றிறற்படையைவல்லையெடுத்தே,புன்றொழிற்குரிசில்பூசனைசெய்தான்.(கருகூ)

நெறிகொண்முப்புல * னினெஞ்சினில்யாரு, மறிவரும்பரிசினண்டலர்தம்பாற்
குறுகிமெய்யுணர்வுகொண்டுயிர்மாற்றி,யெறிபுனற்கடலுளென்றுவிடுத்தான். கசு0

விடுதலுங்கொடியவெம்படைதான்வந், தடையும்வண்ணமறிதற்கரிதாகிக்
கடிதுபாரிடைகலந்துகணத்தின், படையையெய்தியதுபாவமதென்ன. (கசுக)

இருங்கணத்தரையிலக்கரையொள்வாண், மருங்குசேர்த்தியவயத்துணைவோரை
நெருங்குதார்ப்புயநெடுந்திறலோனை, யொருங்குசூழ்ந்துணர்வொழித்ததுமன்றோ.

---

* இங்கே முப்புலன் என்றது - சத்தம் பரிசம் ரூபம் என்னும் மூன்றையுமென்க.

Digitized By Roja Muthiah Research Library

ஆன்றபொன்னகரிலண்டர்களஞ்ச, வூன்றும்வில்லிடையுறங்கியமால்போற்
றோன்றுமாயைபடைதொல்லறிவுண்ண, மான்றியாவருமறிந்துகிடந்தார். (கசுரு)

மறிந்துளார்தமதுமன்னுயிர்வவ்விச், சிறந்ததன்வலிசெயற்கரிதாக
வறிந்துமாயைபடையாகுலமூழ்கி, யெறிந்துநேமியிடவெண்ணியதன்றே. (கசுசு)

ஓலமிட்டுலகமுட்கிடவூழிக், காலின்வெவ்வுருவுகைக்கொடுமாயக்
கோலவெம்படைகொடுந்தொழில்கொண்ட, வாலகாலமெனவான்றுளதன்றே. ()

வேறு.

வெள்ளமாயிரமதென்னும்வியனுரைபடைத்தபூத
மள்ளரைத்தலைவர்தம்மைவயங்கெழுதுணையினோரை
நள்ளலர்க்கடந்ததுப்பினம்பியையும்பராற்குற்
பொள்ளெனவெடுத்துமாயப்படைக்கலம்போயிற்றம்மா. (கசுசு)

போயதுசூரன்மைந்தன்புந்தியிற்கதிமேற்கொண்டு
மாயிருநேமியாறும்வல்லையிற்றப்பியப்பாற்
றூயதெண்புனலாயான்றதொல்கடலழுவநண்ணி
யாயவர்தொகையையிட்டேயகன்றிடாதோம்பிற்றன்றே. (கசுஎ)

நின்றிடுசூரன்மைந்தனிலைமைமற்றிதனைநோக்கிப்
பொன்றினன்வீரவாகுபூதரும்பிறரும்வீந்தார்
குன்றமதன்றான்மீளக்குரைபுனல்வேலையாழ்ந்தார்
நன்றுநஞ்சூழ்ச்சியென்னாநகையெயிறிலங்கநக்கான். (கசுஅ)

அண்டருங்களிப்பின்மேலோனவ்விடையகன்றுவல்லே
விண்டொடர்நெறியிற்சென்றுவியன்மகேந்திரத்தினெய்தி
யெண்டிசையுலகம்போற்றவிறைபுரிதாதைதன்னைக்
கண்டனனிறைஞ்சிநின்றுங்கிளையனகழறலுற்றான். (கசுகூ)

இன்றியான்சென்றுபல்வேறிருஞ்சமரியற்றிப்பின்னர்
வன்றொழில்புரிந்தவீரவாகுவையவன்பாலோரை
யன்றியும்பூதவெள்ளமாயிரந்தன்னையெல்லாம்
வென்றுயிர்குடித்தியாக்கைவியன்புனற்கடலுளுய்த்தேன். (கஎ0)

சிறிதுநீகவலைகொள்ளேல்சேனையும்யானுமேகி
மறிகடலெறியுங்கால்போல்வளைந்துபாசறையைச்சிந்தி
யறுமுகன்றனையும்வென்றேயரியயனோடும்விண்ணோ
ரிறைவனைப்பற்றிநாளையீண்டுதந்திடுவெனென்றான். (கஎக)

வேறு.

என்னும்வேலையிலெழுந்தனவுவகையாப்புடைய
பொன்னினங்கதமூட்டறநிமிர்ந்தனபுயங்கண்
மின்னுமாமணிக்கடகங்கணெரிந்துவீழ்கின்ற
துன்னுமாமயிர்பொடித்தனமுறுவறோன்றியதே. (கஎஉ)

எழுந்துநின்றிடுமிரவிதன்பகைஞனையிமைப்பி
லழுந்தமார்புறத்தழீஇக்கொடுமடங்கலேறுற்றுஞ்
செழுந்தனிப்பெருந்தவிசிடையேற்றியச்சேயைக்
குழந்தைநாளெனத்தன்னயலிருத்தினன்கொண்டான். (கஎங)

Digitized By Roja Muthiah Research Library

தந்தையாயினோரினிதுவீற்றிருப்பதுந்தமது
மைந்தர்தங்குடிபரித்தபினன்றிமற்றுண்டோ
வெந்தைவந்துநந்தொன்முறைபோற்றலால்யானுஞ்
சிந்தைதன்னிலோரெண்ணமுமின்றியேசிறந்தேன். (கஎச)

அன்றுநோற்றதும்பற்பகலுண்டரோவதற்காக்
கொன்றைவேணியன் கொடுத்தனனென்பதுகொள்ளாச்
சென்றவார்த்தைகணிற்கவிவ்வரசுமித்திருவு
மின்றுநீதரப்பெற்றனனையயானென்றான். (கஎரு)

என்றுபற்பலநயமொழிகூறிமுன்னிட்ட
வென்றிசேரணிமாற்றியேபுதுவதாவிளித்துத்
துன்றுபொன்முடியாதியாவார்கழற்றினையு
நன்றுதான்புனைந்தொருமொழிபின்னருநவில்வான். (கஎசு)

முன்னநீசொற்றதன்மையேமூவிருமுகத்தோன்
றன்னைவென்றுவெஞ்சாரதப்படையினைத்தடிந்து
பின்னர்நின்றிடுமமரரைச்சிறையிடைப்பிணித்தே
யென்னுடைப்பகைமுடிக்குதிகாலையேயென்றான். (கஎஎ)

என்னவன்னதுசெய்குவனத்தவென்றிசைப்ப
மன்னர்மன்னவன்சமரிடைநொந்தனைமைந்த
பொன்னுலாயநின்றிருமனைக்கேகெனப்புகலப்
பன்னெடுங்கதிர்மாற்றலன்விடைகொண்டுபடர்ந்தான். (கஎஅ)

சூழியானைதேர்வருபரியவுணர்கள்சுற்ற
நாழியொன்றின்முன்சென்றுதன்கோநகர்நண்ணி
வாழ்வின்வைகினனிதுநிற்கவன்புனற்கடலு
ளாழும்வீரர்கடேறியேயெழுந்தவாறறைவாம். (கஎகூ)

வடபெருங்கிரிசூழ்பவன்றொல்பகைமாயப்
படைவிடுத்ததும்பூதருந்துணைவர்கள்பலருந்
தொடையல்வாகுடைவீரனுமயக்குறத்துநீர்க்
கடலுளிட்டதுமாங்கனஞ்சுரரெலாங்கண்டார். (கஅ0)

அண்டரங்கதுநோக்கியேவெய்துயிர்த்தரந்தை
கொண்டுளம்பதைத்தாவலித்தரற்றிமெய்குலைந்து
கண்டுளித்திடக்கலுழ்ந்துநாவுலர்ந்துகைம்மறித்து
விண்டிடும்படிமுகம்புடைத்தலமந்துவியர்த்தார். (கஅக)

இன்னலித்திறமாகியேயமரர்களிரிந்து
சென்னியாறுடைப்பண்ணவற்குரைத்திடச்சென்றா
ரன்னதாகியபரிசெலாநாடியேயவர்க்கு
முன்னமேோடினன்முறைதெரிநாரதமுனிவன். (கஅஉ)

அம்பெனும்படிகால்விசைகொண்டுபோயறிவ
னிம்பராகியபாசறைக்கண்ணுறுமெந்தை
செம்பதங்களைவணங்கிநின்றஞ்சலிசெய்தே
யும்பர்கோமகன்றன்மனந்துளங்குறவுரைப்பான். (கஅங)



Digitized By Roja Muthiah Research Library

சூரன்மாமகன்கரந்துமாயப்படைதுரந்து
வீரவாகுவுந்துணைவரும்வெங்கணத்தவரு
மாருமால்கொளவீட்டியேயன்னதாலவரை
வாரிநீர்க்கடலுய்த்தனன்சூழ்ச்சியின்வலியால். (௧௮௪)

என்றுநாரதமுனிவரன்புகறலுமிமையோர்
சென்றுசென்றுவேள்பதங்களையிறைஞ்சியேதிருமு
னின்றுவீரர்களழிந்திடுசெயன்முறைநிகழ்த்த
வென்றிவேலினைநோக்கியேயெம்பிரான்விளம்பும். (௧௮௫)

கங்கையன்னதோர்வாலிதாகியபுனற்கடற்போ
யங்கண்வைகியமாயமாப்படையினையழித்து
வெங்கண்வீரர்மாலகற்றியேயனையவர்விரைவி
லிங்குவந்திடத்தந்துநீசெல்கெனவிசைத்தான். (௧௮௬)

செய்யவேலினுக்கின்னதோர்பரிசினைச்செப்பி
யையனவ்விடைவிடுத்தலுநன்றெனவகன்று
வெய்யதீங்கதிராயிரகோடியின்விரிந்து
வையமேலிருண்முழுதுண்டுவல்விரைந்ததுவே. (௧௮௭)

அரவுமிழ்ந்ததுகொடுவிடமுமிழ்ந்ததாலடுகூற்
றுருவுமிழ்ந்ததுசெல்லினமுமிழ்ந்ததெவ்வுலகும்
வெருவுபல்படைக்கலங்களுமுமிழ்ந்ததுமிகவுங்
கருநெடும்புகையுமிழ்ந்ததங்குமிழ்ந்ததுகனலே. (௧௮௮)

மின்னல்பட்டனமுகிலிருள்பட்டனவிசும்பிற்
றுன்னல்பட்டனகாரிருள்பட்டனதுன்று
ரின்னல்பட்டிடுமெய்யிருள்பட்டனவெரிமுன்
பன்னல்பட்டனநேமிசூழ்தனியிருட்படலம். (௧௮௯)

எரிநடுங்கியதனிலமுநடுங்கியதெண்பாற்
கரிநடுங்கியவளக்கருநடுங்கியகனக
கிரிநடுங்கியதரவினநடுங்கியகிளர்தே
ரரிநடுங்கியதிந்துவுநடுங்கியதம்மா. (௧௯௦)

அங்கிதன்படைகூற்றுவன்றன்படையனிலன்
றுங்கவெம்படையளக்கர்கோன்றன்படைசோமன்
செங்கைவெம்படைமகபதிபெரும்படைதிருமால்
பங்கயன்படையாவையுந்தொழுதுடன்படர. (௧௯௧)

அடிகள்விட்டிடும்வேற்படையெனப்படுமலரி
கடிதுசேறலும்வானவர்வதனமாங்கமல
நெடிதுமாமகிழ்வெய்தியேமலர்ந்தனநெறிதீர்
கொடியதானவர்முகமெனுங்கருவிளங்குவிய. (௧௯௨)

இரிந்ததானவர்நாளையாமிறத்துமென்றிருக்கை
பொருந்திமாதரைமுயங்கினர்கங்குலும்புலர
விரைந்துஞாயிறுவந்ததென்றேங்கமின்னுரைப்
பிரிந்தவானவர்யாவருஞ்சிறந்தனர்பெரிதும். (௧௯௩)

Digitized By Roja Muthiah Research Library

இத்திறத்தினாலயிற்படைமுப்புரத்திறைவ
னுய்த்ததிநகைபோலவேவல்விரைந்தோடி
முத்திறத்திருநேமியும்பிற்படமுந்திச்
சுத்தநீர்க்கடல்புகுந்ததுவிண்ணுளோர்துதிப்ப. (௧௬௪)

செய்யவேற்படையாயிடைபுகுதலுந்தெரிந்து
வெய்யமாயவள்படைக்கலமாற்றவும்வெருவி
ணைமயல்வீரரைநீங்கியேதொலைந்துபோய்மறிந்து
மொய்யிழந்ததுதன்செயலிழந்ததுமுடிந்தே. (௧௬௫)

ஆயகாலையிலெந்தைதன்படைக்கெதிரடைந்து
தூயதெண்கடலிறையவன்வெருவியேதொழுது
நேயநீர்மையான்மும்முறைவணங்கிமுன்னின்று
காயமுற்றவும்வியர்ப்பெழவொருமொழிகழறும். (௧௬௬)

வேறு.

அந்தமில்வரமடைந்திடுசூரன், மைந்தன்மாயவள்வயப்படைதூண்டி
நந்தம்வீரர்கணநாதரையெல்லாம், புந்திமேன்மயல்புணர்த்தினனம்மா. (௧௬௭)

முன்னுணர்ச்சிமுடிவோர்தமைமற்றென், றன்னிடத்திலிடுதன்மைபுரிந்தா
னன்னதத்துணையிலப்பணியாற்றி, யென்னிடத்தினிலிருந்துளதன்றே. (௧௬௮)

இருந்தமாயைபடையெம்பெருமானீ, மருந்துபோலிவண்வழிப்படல்காணூஉ
வரந்தையெய்தியடல்வீரரைநீங்கி, முரிந்துவீழ்ந்திவண்முடிந்ததுமன்னோ. (௧௬௯)

தொடையல்வாகைபுனைசூரருண்மைந்தன், விடவரும்படையின்வெவ்வலிசிந்தி
யடவும்வன்மையிலனங்கவராலே, யிடர்படுஞ்சிறியனென்செய்வனம்மா. (௨௦௦)

வெந்திறற்பகைஞர்மேலமர்செய்ய, வந்தவீரருமறிந்துணர்வற்றா
ரெந்தவேலையெழுவாரிவரென்றே, புந்திநோய்கொடுபுலம்பினன்யானும். (௨௦௧)

முறுவலாற்புரமுடித்தவனல்கு, மறுமுகேசனசுரத்தொகையெல்லா
மிறையின்மாற்றுமமரெண்ணியநாடற், றிறமதென்றுநனிசிந்தனைசெய்தேன். ()

வள்ளலாயிடைவதிந்துகணத்தின், வெள்ளமோடுவிடுவீரர்கடம்மை
நள்ளலான்மகனலிந்திடலன்றாற், குள்ளமாங்கொலெனவுன்னியயர்ந்தேன். ௨௦௩

ஆதிமைந்தனசுரத்தொகைதன்னைக், காதினுய்குவனெனக்கருதுற்ற
பேதையேன்புரிபிழைப்பிவணுண்டோ, வேதுமில்லைமுனியேலெனையென்றான்.()

வாழுநேமியிறைமற்றிதுகூறித், தாழுமெல்லைதளரேலினியென்ற
வூழியின்முதல்வனுய்த்திடுமொள்வே, லாழுநீரரையடைந்ததுநண்ணி. (௨௦௫)

வேறு.

அடைதருகின்றமுன்னரவருணர்வுண்டமாயப்
படையதுநீங்கிற்றாகப்பதைபதைத்துயிர்த்துமெல்ல
மடிதுயிலகன்றுதொல்லைவாலறிவொருங்குகூடக்
கடிதினிலெழுந்தாரங்கணுதித்திடுகதிர்களென்ன. (௨௦௬)

புழையுறுமெயிற்றுப்பாந்தள்பொள்ளெனச்செயிர்த்துக்கான்ற
வழல்படுவிடமீச்செல்லவலமந்துவியர்த்துமாழ்கிக்
கழிதுயிலடைந்தோர்வல்லோன்காட்சியாலதுமீண்டேக
வெழுவதுபோலவன்னோர்யாவருமெழுதலுற்றார். (௨௦௭)

Digitized By Roja Muthiah Research Library

சாரதக்கணத்துளோருந்தலைவருமிலக்கத்தோரும்
யாரினும்வலியரானவெண்மருமெவர்க்குமேலாம்
வீரனுமெழுந்துவேலைமீமிசைப்பெயர்ந்துசெவ்வேள்
சீரடிமனங்கொண்டேத்தித்தொழுதனர்சிறந்தவன்பால். (௨௦௮)

வீடினவவுணன்மாயைவிளிந்தனபவத்தினீட்டம்
பாடினசுருதிமுற்றும்படிமகளுவகைபூத்தா
ளாடியதறத்தின்றெய்வமார்த்தனபுவனம்யாவு
நாடியமுனிவர்தேவர்நறைமலர்மாரிதூர்த்தார். (௨௦௯)

அன்னதோரமைதிதன்னிலாறுமாமுகத்துவள்ளன்
மின்னிவர்குடுமிச்செவ்வேல்விண்ணிடைவருதல்காணூஉப்
பன்னருமுவகைபொங்கப்பன்முறைபணிந்துபோற்றிச்
சென்னியிற்றொழுதகையாரெதிர்கொடுசென்றுசூழ்ந்தார். (௨௧௦)

சூழ்ந்திடுகின்றகாலைச்சூர்மகன்மாயைதன்னாற்
றாழ்ந்துணர்வழிந்தவாறுந்தடம்புனற்புணரியுய்ப்ப
வீழ்ந்ததுமையன்வேலான்மீண்டதும்பிறவுமெல்லா
மாழ்ந்ததொல்லறிவாற்றேறியறிஞர்க்குமறிஞன்சொல்வான். (௨௧௧)

அந்தமிலொளியின்சீராலறுமுகம்படைத்தபண்பா
லெந்தைகணின்றும்வந்தவியற்கையாற்சத்தியாம்பேர்
தந்திடும்பனுவல்பெற்றதன்மையாற்றணிவேற்பெம்மான்
கந்தனேயென்னநின்னைக்கண்டுளக்கவலைநீத்தேம். (௨௧௨)

நண்ணலன்பிணித்தமாயநலிந்திடயாங்களெல்லாந்
துண்ணெனவறிவின்றாகித்தொல்புனற்கடலுட்பட்டே
மெண்ணரும்படைகட்கெல்லாமிறைவநீபோந்தவாற்றா
லுண்ணிகழுணர்ச்சிதோன்றவுய்ந்தனமுயிரும்பெற்றேம். (௨௧௩)

குன்றிடையெம்மைவீட்டிக்கொடியவன்புணர்ப்புச்செய்த
வன்றும்வந்துணர்வுநல்கியளித்தனையதுவுமல்லா
லின்றும்வந்தெம்மையாண்டாயாதலின்யாங்களுய்ந்தே
முன்றனக்குதவுங்கைம்மாறுண்டுகொலுலகத்தென்றான். (௨௧௪)

தூயவனினையமாற்றஞ்சொற்றலுமயில்வேல்கேளா
நீயிர்கள்விளிந்ததன்மைநேடியேநிமலனென்னை
யேயினனதனால்வந்தேன்யான்வருந்தன்மைநாடி
மாயமதிறந்ததங்கண்வருதிரென்றுரைத்ததன்றே. (௨௧௫)

நன்றெனத்தொழுதுவீரனகையொளிமுகத்தனாகிப்
பின்றொடர்துணையிளோரும்பெருங்கணத்தவருஞ்சூழச்
சென்றனனனையகாலைச்சிறந்தவேற்படைமுன்னேகி
வென்றிகொள்குமரன்செங்கைமீமிசையமர்ந்ததன்றே. (௨௧௬)

மூன்றுநாட்பானுகோபன்யுத்தப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,0௯௩.

Digitized By Roja Muthiah Research Library

# நகர்புகுபடலம்.

முன்னுறச்செவ்வேலேகமுவிருமுகத்துவள்ள
றன்னடிக்கமலமுன்னித்தரங்கநீருவரிவைப்பின்
மின்னெனக்கடிதுபோந்துவிறன்மிகுதடந்தோளண்ண
றன்னிலைத்திருவின்மேவுஞ்சூரன்மூதூரைக்கண்டான். (௧)

கண்டனுமெயிற்றின்மாலைகல்லெனக்கலிப்பக்கண்கண்
மண்டுதீப்பொறிகள்காலவாய்புகையுமிழநாசித்
துண்டமதுயிர்ப்பமார்பந்துண்ணெனவியர்ப்புத்தோன்றத்
திண்டிறன்மொய்ம்பின்மேலோன்செயிர்த்திவைபுகலுற்றான். (௨)

வெஞ்சமர்க்காற்றலின்றிவெருவிப்போய்விண்ணினின்று
வஞ்சனைபுரிந்துநம்மைமாயத்தால்வென்றுமீண்டு
முஞ்சனனிருந்தகள்வனுயிர்குடித்தன்றியையன்
செஞ்சரணதனைக்காணச்செல்லுவதில்லையானே. (௩)

நன்னகரழிப்பனின்றுநண்ணலன்மதலைநேரி
னன்னவன்றனையும்யானேயடுவனாலடுகிலேனேற்
பின்னுயிர்வாழ்க்கைவேண்டேன்யான்பிறந்தேனுமல்லே
னென்னொருசிலையும்யானுமெரியிடைப்புகுவனென்றான். (௪)

சூளிதுமுதல்வன்கூறத்துணைவரும்பிறருங்கேளா
வாளரியனையவீரவடையலர்க்கழிந்தேம்வாளா
மீளுதல்பழியதாகும்வென்றிகொண்டல்லாலெந்தை
தாளிணைகாண்பதுண்டோசரதமேயிதுமற்றென்றார். (௫)

நம்மனத்துணிவுநன்றாறெறிற்படைக்கணத்தோடேகி
யிம்மெனச்செறுநர்மூதூரெரியினுக்குதவிநேர்ந்தார்
தம்மையட்டவுணன்மைந்தன்றனையுந்தடிதும்யாரும்
வம்மெனப்புகன்றானென்பவாகையம்புயத்துவள்ளல். (௬)

ஆரியன்றனதுமாற்றமனைவரும்வியந்துசெல்ல
வோரிமையொடுங்குமுன்னமுவரியினடுவணான
வீரமாமகேந்திரத்தின்மேற்றிசைவாயில்போந்தான்
பாரிடக்கணங்களார்த்தபரவைகளழிந்ததேபோல். (௭)

ஆர்த்தனவவுணர்கேளாவற்புதநிகழவான்போய்ப்
பார்த்தனர்சிலவருள்ளம்பதைத்தனர்சிலவர்யாக்கை
வேர்த்தனர்சிலவரீதுமேவலர்துழனியென்னாச்
சீர்த்தனர்சிலவரம்மாசெருவெனக்கிளருந்தோளார். (௮)

வேறு.

வேழத்தின்றொகைவெம்பரிவெய்யோ, ராழித்தேர்களளக்கரினீண்ட
வூழித்தீச்செறிவுற்றனவேபோற், பாழித்தீபிகைபற்பலமல்க. (௯)

வானாருங்குடவாய்தலில்வைகி, யானாதென்றுமளித்திடுகின்றோன்
மேனாண்மாயைவிதித்திடுமைந்த, னானார்செம்புனலுண்டுமிழ்வேலோன். (௧௦)

Digitized By Roja Muthiah Research Library

அரணங்கொண்டதன்ஞனை கடந்த, முரணுங்கூற்றுவன்முத்தலைவேலும்
வருணன்பாசமும்வன்மையின்வாங்கி, யிரணங்கொண்டுவியன்சிறைசெய்தோன்.

விண்ணிற்றீச்சுடர்போன்மிளர்மெய்யான், வண்ணப்பல்பொறிமாமுகமுள்ளா
னெண்ணற்சீயவரித்தவிசின்க, ணெண்ணூற்ருனடனஞ்சினும்வெய்யோன். (கஉ)

சேணூர்மாமுகில்செல்லொடுசிந்த, மாணூர்பூதவயப்படையார்த்தே
யேணூர்வீரரொடெய்தியதன்மை, காணுநின்றுகனன்றெழலுற்ருன். (கங)

தன்கண்ணின்றிடுதானைகளெல்லா, முன்கண்சென்றிடமொய்ம்புடனேகிப்
புன்கட்டையவனேற்றெதிர்புக்கான். வன்கட்பூதர்கள்வந்துமலைந்தார். (கச)

வில்லுங்வாளிகள்வேன்மழுநேமி, யல்லுங்மெய்யவுணப்படைதூர்த்த
கல்லும்மாமரமுங்கதையாவுஞ், செல்லென்றுய்த்தனர்சீர்கெழுபூதர். (கரு)

முட்டாவெஞ்சினமூண்டிடவின்னோர்: கிட்டாநின்றுகிளர்ந்தமராற்றப்
பட்டார்தானவர்பாரிடர்பல்லோர், நெட்டாருெத்துநிமிர்ந்ததுசோரி. (கசு)

கண்டாரன்னதுகாவலர்சிற்றங், கொண்டார்தாமெதிர்கொண்டமர்செய்ய
வண்டார்நின்றிலராவியுலந்தே, விண்டாரோர்சிலர்மீண்டுதொலைந்தார். (கஎ)

இடித்தார்தேரினையெற்றினர்மாவை, யடித்தார்தந்திகளானவைசிந்த
முடித்தாரொன்னலர்மூளையினின்றே, நடித்தார்பூதர்கணூரதர்பாட. (கஅ)

முன்சூழ்தானைமுடிந்ததுகண்டான், மன்சூழ்வெம்புலிமாமுகவீர
னென்சூழ்விங்கினியென்றுநினைந்தோர், கொன்சூலப்படைகொண்டுநடந்தான். ()

நடக்கின்ருனைநலிந்துகணத்தி, லடக்கின்ருமெனவார்த்தெதிர்நண்ணிக்
கடக்குன்றங்கள்கணிப்பிலவைகுந், தடக்குன்றம்பலசாரதருய்த்தார். (உ0)

சாலங்கொண்டிடுசொரதருய்த்த, நீலங்கொண்டநெடுங்கிரியாவுஞ்
சூலங்கொண்டுபஃறுண்டமதாக்கி, யாலங்கொண்டவளக்கரினூர்த்தான். (உக)

அந்நேர்கொண்டவனூற்றலைநோக்கி, யென்னேநிற்பதியாமிவனென்று
முன்னேநின்றமுரண்கெழுசிங்கன், மின்னேயென்னவிரைந்தெதிர்சென்றுன். ()

## வேறு.

வயமிகுபூதரின்மடங்கற்பேரினோன்,வெயிலுமிழ்முத்தலைவேலொன்றேந்தியே, குயவரிமுகமுடைக்கொடியன்முன்புபோய்ப், புயலினமிரிந்திடத்தெழித்துப்பொங்கினன். (உங)

அத்துணைவேலையிலவுணர்காவலன், முத்தலைவேலினன்முந்துசிங்கன்மேற், குத்தினனனையனுங்கொடியன்மார்பிடைக், கைத்தலமிருந்ததன்கழுமுளோச்சினன்.

செறித்திடுசூலவேல்செருவின்மேலவர், புறத்தினிற்போயினபொழிந்தசெம்புன னெறித்தருபகலவனின்றகுன்றினு, மெறித்தருமிளங்கதிரென்னச்சென்றதே. ()

ஆங்கவர்முறைமுறையயில்கொள்சூலவேல், வாங்கினரிடந்தொறுமற்றுமோச்சுவ ரீங்கிதுபோலநின்றிகலிப்போர்செய்தார், நீங்கருந்தளைபடுநெறியரென்னவே. ()

அற்றதோர்காலையிலனையர்கைத்தலம், பற்றியமுத்தலைப்படைகளானவை யிற்றனவொருதலையிரண்டும்வீழ்தலு, மற்ருெழில்புரிந்தனர்நிகரில்வன்மையார்.()

Digitized By Roja Muthiah Research Library

புலிமுகனவ்வழிப்புரிந்துமற்றெழில், வலியினையிழந்தனன்மையலெய்தினன்
றலமிசைவீழ்தலுந்தனதுதாள்கொடே, யுலமுறழ்தோளினனுதைத்துருட்டினன்.

ஒலிகழன்மேலவனுதைத்தவன்மையா, லலமருதீயவனாவிநீங்கினன்
மலர்மழைதூவினர்வானுளோரரி, புலிதலைவெல்வதுபுதுமைப்பாலதோ. (௨௯)

சூர்கொளுமுத்தலைச்சூலவேல்கொடு, நேர்கொளும்புலிமுகனிறந்தநீர்மைகண்
டார்கலியாமெனப்பூதரார்த்தனர், வார்கழல்வீரனுமகிழ்ந்துநோக்கினன். (௩0)

கழிந்தனதானைகள்காவல்வீரனு, மழிந்தனன்மேற்றிசையரணம்வீட்டியே, செ
ழுந்திருநகரிடைச்சேறும்யாமென, மொழிந்தனர்பூதர்கண்முரணின்முந்தினர். ()

முந்தியபூதர்கண்முனிந்துமேற்றிசை, யுந்தியபுரிசையையொல்லைசேர்வுறுத்
தந்தமதடிகளாற்றள்ளிப்பொள்ளெனச், சிந்தினர்பறித்தனர்சிகரிதன்னையும்.(௩௨)

பொலம்படுசிகரியைப்பறித்துப்பூதர்க, ணலம்படுமகேந்திரநகருள்வீசியே
யுலம்பினரவுணர்களுலைந்துசிந்தினர், கலம்பகிர்வுற்றிடக்கட்டுற்றார்கள்போல். ()

முகுந்தனைவென்றிடுமுரண்கொள்பூதர்கள், புகுந்தனர்மகேந்திரபுரத்துளுள்ள
விற், றெருந்தொறுமவுணரைத்தொலைத்துச்சென்றனர், தகுந்தகுமிவர்க்கெனவம
ரர்சாற்றவே. (௩௪)

நீக்கமின்மாளிகைநிரைகள்யாவையு, மேக்குயர்பூதர்கள்விரைந்துதம்பதத்
தாக்கினிலழித்தனர்தவத்தின்மேலவர், வாக்கினிலகற்றியவண்ணமேயென. ௩௫

ஆர்த்திடுகரிபரியவுணராயினோர், தேர்த்தொகைமாளிகைசிகரமாய்ந்திடக்
கூர்த்திடுநெடுங்கணைகோடிகோடிக, டேர்த்தனர்சென்றனர்துணைவராயினோர். ௩௬

அன்னதோரமைதியினுடன்மொய்ம்பினன், வன்னியின்படையொடுமருத்தின்
மாப்படை, பொன்னெடுஞ்சிலைதனிற்பூட்டிநீவிர்போ, யிந்நகரழித்திரென்றிமைப்
பிலேவினன். (௩௭)

ஏவியவப்படையிரண்டுமொன்றியே, மூவுலகிறுதியின்முடிக்குந்தம்முரு
மேவினநகரெலாம்விரவிச்சூழ்ந்தன, தீவிழியவுணருமிரிந்துசிந்தவே. (௩௮)

ஒட்டலர்நமையினியுருத்துச்செய்வதென், விட்டனனிங்குளன்வெருவலேமென
நெட்டழல்கொளுவியேநிலவிமாநகர், சுட்டனவுடுநிரைபொரியிற்றுள்ளவே. (௩௯)

எரிந்தனசில்லிடையிறந்துபூழியாய், விரிந்தனசில்லிடைவெடித்தசில்லிடை
கரிந்தனசில்லிடைகனலிசூழ்தலாற், பொரிந்தனசில்லிடைபுகைந்தசில்லிடை.௪0

எப்புவனங்களுமிறைஞ்சுசூர்நகர், வெப்புறுகனல்கொளவிளிந்துபோயதா
லப்புறழ்செஞ்சடையமலன்மூரலான், முப்புரமானவைமுடிந்ததேயென. (௪௧)

இன்னணமிந்நகரெரிமிசைந்துழி, யன்னவையொற்றர்களறிந்துவல்லைபோய்ப்
பொன்னிவர்கடிநகர்புகுந்துவாய்வெரீஇ, மன்னவர்மன்னனைவணங்கிக்கூறுவார்.

காய்கதிரண்ணலைக்கனன்றநின்மகன், மாயவெம்படையினன்மலைந்துளார்தமைத்
தூயதோர்புனற்கடறுன்னவுய்த்தன, னீயதுதெரிந்தனைநிகழ்ந்தகேட்டிமேல். ௪௩

அங்கிவைநாரதனறையக்கந்தவேள், செங்கையில்வேற்படைசெலுத்தவன்னது
பொங்குறுதெண்புனற்புணரிசேறலு, மங்கியதோடியமாயைதன்படை. (௪௪)

Digitized By Roja Muthiah Research Library

வஞ்சனிதன்படைமாண்டுபோந்துழித், துஞ்சுதலொழிந்தனர்தொன்மைபோல
வே,நெஞ்சினிலுணர்வெலாநிகழயாவரு,முஞ்சனரெழுந்தனரும்பரார்த்திட.(௪௫)

மாற்படுபுந்திதீர்மறவர்தாமுறு, பாற்படவருவதுபார்த்துக்கைதொழு
தேற்பொடுபணிதலும்யாரும்வம்மெனா, வேற்படைமுன்னுறவிரைந்துமீண்டதே.

மேனிகழ்நெறிகொடுமீண்டசெய்யவே, லானதுகுமரவேளங்கைபோந்ததா
னைமின்மாற்றலரொல்லைவந்துநம், மாநகர்மேற்றிசைவாயினண்ணினார். (௪௭)

மேற்றிசைவாய்தலில்வீரர்சேறலு, மேற்றனன்றானையோடிருந்தகாவல
னாற்றினன்சிறிதமரவனதாவியை, மாற்றினரனிகமுமாண்டுபோயதே. (௪௮)

குடதிசையெயிலினைக்கொடியபூதர்க, ளடிகொடுதள்ளினராண்டுநின்றிடு
படியறுசிகரியைப்பறித்துமாநகர், நடுவுறவீசினர்நமர்கண்மாயவே. (௪௯)

சோர்வறுபூதருந்துணைவராகிய, வீரருந்தலைவனும்வீரவாகுவுஞ்
சீரியநகரிடைச்சென்றுமேற்றிசை, யாரழல்கொளுவினின்றழித்தன்மேயினார். ௫0

அண்டலர்வன்மையாலயுதயோசனை, யுண்டதுகொழுங்கனலுண்டவெல்லையுங்
கண்டனமிதனைநீகருத்திலையமாக், கொண்டிடன்மன்னவென்றொற்றர்கூறினார்.()

வேறு.

ஒற்றரிவ்வகையுரைத்தலுமவுணர்கோனுளத்திற்
செற்றமிக்கனநெறித்தனவுரோமங்கள்சிலிர்த்த
நெற்றிசென்றனபுருவங்கண்மணிமுடிநிமிர்ந்த
கற்றைவெங்கனல்கான்றனசுழன்றனகண்கள். (௫௨)

கறங்குசிந்தனைச்சூரனித்தன்மையிற்கனன்று
மறங்கொள்சாரணர்தங்களைநோக்கிநீர்வான்போய்ப்
பிறங்குமூழியினுலகெலாமழித்திடப்பெயர்வா
னுறங்குமாமுகில்யாவையுந்தருதிரென்றுரைத்தான். (௫௩)

அயலினிற்புறுதூதவர்வினவியேயைய
வியலுமிப்பணியெனத்தொழுதம்பரினேகிப்
புயலினத்தினைக்கண்டுதம்பாணியாற்புடைத்துத்
துயிலெழுப்பியேவிளித்தனனிறையெனச்சொற்றார். (௫௪)

எழுவகைப்படுமுகில்களும்வினவியேயேகி
விழுமிதாகியமகேந்திரத்திறைவன்முன்மேவித்
தொழுதுநிற்றலுமித்திருநகரினைத்தொலைக்கு
மழலினைத்தணிவித்திடுவீரெனவறைந்தான். (௫௫)

அறையுமெல்லையினன்றெனவெழிலிகளகன்று
செறிதரும்புகையுருக்கொடுவிண்மிசைச்சென்றா
ரிறையிலெங்கணும்பரந்தனமாவலியிடைபோய்க்
குறியமாயவனெடியபேருருவுகொண்டதுபோல். (௫௬)

கருமுகிற்கணமுறைமுறைமின்னினகனத்
துருமிடிக்குலமோராயிரகோடியையுகுத்த
பருமுடிக்குலகிரியொடுமேருவும்பகிர்ந்த
திருமுடித்தலைதுளக்கியேவெருவினன்சேடன். (௫௭)

Digitized By Roja Muthiah Research Library

விண்டுலாமதிற்கடிநகர்தன்னைவெங்கனலி
யுண்டுலாவுறுதன்மையுமவுணர்தம்முலைவுங்
கண்டியாமிதுதொலைத்திடினீண்டொருகணத்தி
லண்டர்நாயகன்றனையன்னவனெமையடுமால். (௫௮)

நீட்டமிக்கவித்திருநகர்புகுந்துநீறாக்கி
வாட்டும்வெந்திறலெரியினையகற்றிலம்வறிது
மீட்டுமேகுதுமென்றிடினவுணர்கோன்வெகுண்டு
பூட்டும்வன்றளைசெய்வதென்னென்றனபுயல்கள். (௫௯)

தொல்லைமாமுகிலிவ்வகையுன்னியேசூர
னெல்லையில்பகலிட்டிடுமுவளகத்தெய்தி
யல்லலுற்றிடுகின்றதினாடலம்புயத்தோன்
கொல்லநம்முயிர்வீடினுமினிதெனக்குறித்த. (௬0)

புந்திமேலிவைதுணிபெனநாடியேபுயல்கள்
சிந்துதுள்ளியொன்றிபத்துணையளவையிற்செறிய
முந்தியோரிறைபொழிந்தனபொழிதலுமுடிந்த
வந்தமாநகர்மேற்றிசைபொடித்திடுமழலே. (௬௧)

ஆயதன்மையைநோக்கினானிருதடந்தோ
ணாயகன்படைக்கிறையவனழலெழநகைத்துத்
தீயினாற்றலையழித்தனமேகமோசெறுநர்
மாயமேகொலோவென்றுதேர்வுற்றனன்மனத்தில். (௬௨)

தேருகின்றுழிநாரதன்விண்ணிடைச்சென்று
வீரகேளிவையூழிநாண்முகிலினம்வெய்ய
சூரனாணையால்வந்தனவடவையந்தொல்லோன்
மூரிவெம்படைதொடுத்தியால்விரைந்தெனமொழிந்தான், (௬௩)

விண்ணில்வந்திவைநாரதனுரைத்தனன்மீட்டுந்
துண்ணெனச்செலவினவியேவாகையந்துணைத்தோ
ளண்ணலூழிநாளனற்படைதூண்டினனதுபோய்க்
கண்ணகன்முகிலினத்தினைச்சூழ்ந்ததுகணத்தில். (௬௪)

சூழல்போகியவெழிலிகள்யாவையுஞ்சுற்றி
யூழிமாப்படையவற்றிடைப்புனலெலாமுண்டு
வாழிமொய்ம்பனையடைந்ததுமற்றதுகாலை
யாழிமால்கடற்றொகையெனவீழ்ந்தனவவையே. (௬௫)

மறிந்தவெல்லையிலாறுமாமுகமுடைவள்ளல்
சிறந்தவாறெழுத்துண்மையைவிதிமுறைசெப்ப
விறந்ததொன்மிடல்வருதலுமுய்ந்துடனெழுந்து
புறந்தருங்கடலதனிடையோடினபுயல்கள். (௬௬)

விழுந்துகொண்டல்களிரிதலும்பாரிடவெள்ள
மெழுந்துதுள்ளியேயார்த்தனமலர்மழையிமையோர்
பொழிந்துவானிடையாடினரிவைகண்டொரும
ஒழுந்துகண்ணடிசெல்லுமுன்போயினரொற்றர். (௬௭)



Digitized By Roja Muthiah Research Library

வேறு.

கொற்றவையாடுறுகோநகர்நண்ணி, யற்றமின்மன்னனடித்துணைமீது
தற்றுறுபூமுடிதாழவிறைஞ்சி, மற்றிதுகேண்மியவென்றுவகுப்பார். (சுஅ)

ஊழிபுகுந்துழியுற்றிடுகொண்மூ, வேழும்விரைந்துநின்னேவலின்விண்போய்
வீழ்புனல்சிந்துபுமேற்றிசைதன்னிற், சூழுறுமங்கியினைத்தொலைவித்த. (சுகூ)

மாற்றலர்தூதுவன்மற்றதுகாணூஉ, வீற்றுறுதீப்படையேழ்முகின்மீது
மாற்றலின்விட்டிடவன்னவைவீழ்ந்து, மேற்றிசைவாய்தலில்வேலைபுகுந்த. (எ0)

வன்னிசெறிந்தனமாய்ந்தனவென்றே, யுன்னலைபூதரொழிந்திடும்வீர
னன்னதனொண்மையினுடுறுகின்ற, ரிங்ககரென்றனுமேந்தன்முனிந்தான். (எக)

வேறு.

மயிர்ப்புறம்பொடித்திடவரைகொண்மார்பகம்
வியர்ப்புறவெரிதழல்விழிகள்சிந்திட
வுயிர்ப்பிடைபுகைவரவுருமுக்கான்றெனச்
செயிர்த்திடுமன்னவனிதனைச்செப்பினான். (எஉ)

போரினையிழைத்துவெம்பூதர்தங்களை
வீரர்கடொகையினைவீட்டிப்பின்னுறச்
சாருறுசிவன்மகன்றன்னைவென்றிவட்
சேருதுங்கொணர்திர்நந்தேரையென்றனன். (எங)

நகர்புகுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,கசுசு.

# இரணியன்யுத்தப்படலம்.

ஒற்றரைநோக்கியேயுணர்வின்மன்னவன்
சொற்றதுகேட்டலுந்துளங்கியேங்கினான்
மற்றவனளித்திடுமதலைமாரிநாட்
புற்றுறையரவெனப்புழுங்குநெஞ்சினான். (க)

ஆயிரமறையுணர்ந்தான்றகேள்வியான்
றூயநல்லறத்தொடுமுறையுந்தூக்கினோன்
மாயமும்வஞ்சமுமரபிற்கற்றனன்
றீயதோரவுணருட்டிறனும்பெற்றுளான். (உ)

தரணியின்கீழுறையரக்கர்தங்கண்மேல்
விரணமதாகமுன்வென்றுமீண்டனன்
முரணுறுசென்னியோர்மூன்றுகொண்டுளா
னிரணியனென்பதோரியற்கைப்பேரினான். (ங)

இருந்தனனொருபுடையெழுந்துதாதைதன்
றிருந்தடியிணையினைச்சென்னிசேர்த்திடாப்
பொருந்துவதொன்றுளபுகல்வன்கேளெனாப்
பரிந்துநின்றினையனபகர்தன்மேயினான். (ச)

Digitized By Roja Muthiah Research Library

தேவரைநாஞ்சிறைசெய்ததன்மையா
லாவதுபாவமேயாக்கம்வேறிலை
யாவையுமுணர்ந்திடுமிறைவதிண்ணமே
போவதுநம்முயிர்திருவும்பொன்றுமால். (௫)

சூருடைக்கானகந்தோற்றும்புன்மைபோய்ப்
பாரிடைப்புவனமோர்பலவும்போற்றியே
சீருடைத்தாகியித்திருவின்வைகுத
லாரிடைப்பெற்றனையதனைத்தேர்திநீ. (௬)

மாலைமுன்வென்றதுமலரயன்றனை
யேவுறுமுனிவரையேவல்கொண்டது
மேலுயரமரரைவிழுமஞ்செய்தது
மாலமர்கடவுடனாற்றலாலன்றோ. (௭)

அரிபொரவருவனேலமரர்கோனெடும்
பிரமன்வந்தேற்குமேற்பிறர்கணோர்வரேற்
பொருவதும்வெல்வதும்புறத்தைக்கண்டுபின்
வருவதுமெளிதரோகடனுமற்றதே. (௮)

நோற்றிடுதவத்தினைநோக்கியெண்ணிலாப்
பேற்றினையுதவியபிரானொர்தீமையான்
மாற்றிடவுன்னுமேல்வணங்கிமாறொரீஇப்
போற்றுதலன்றியேபொரவுஞ்செய்யுமோ. (௯)

ஒன்றொருபயன்றனையுதவினோர்மனங்
கன்றிடவொருவினைகருதிச்செய்வரேற்
புன்றொழிலவர்க்குமுன்புரிந்தநன்றியே
கொன்றிடுமல்லதுகூற்றும்வேண்டுமோ. (௧௰)

நந்தனையருள்புரிகடவுளாணையைச்
சிந்தையின்மாறுகொள்சிறியர்யாவரு
மந்தமதடைந்தனரன்றிவன்மையா
லுய்ந்தனரிவரெனவுரைக்கவல்லமோ. (௧௧)

கட்டுசெஞ்சடைமுடிக்கடவுள்காமனைப்
பட்டிடவிழித்ததும்பண்டுமூவெயில்
சுட்டதுமந்தகன்சுழலச்சூலமே
விட்டதுங்கேட்டிலைபோலுமெந்தைநீ. (௧௨)

காலனையுதைத்ததுங்கங்கையென்பவண்
மேல்வருமகந்தையைவீட்டிக்கொண்டது
மாலயனமரர்களிரியவந்ததோ
ராலமதுண்டதுமறிகிலாய்கொலோ. (௧௩)

அண்டரையோரரியலைப்பவன்னது
கண்டநஞ்சுடையவன்கருதிவீரனாற்
றண்டமதிழைத்ததுந்தக்கன்வேள்வியை
விண்டிடுவித்ததும்வினவிலாய்கொலோ. (௧௪)

Digitized By Roja Muthiah Research Library

கடிமலர்மேலவனிகழக்கண்ணுதல்
வடுகனையேவிவள்ளுகிரினன்னவன்
முடிகளைவித்ததுமுகுந்தன்றன்னிடை
யடைதருவித்ததுமறிகிலாய்கொலோ. (௧௫)

முந்தொருமகபதிமொய்ம்பையட்டது
மைந்தியலரக்கரையழித்தசெய்கையுந்
தந்தியையுழுவையையுரித்ததன்மையு
மெந்தைநிற்குணர்த்தினரில்லைபோலுமால். (௧௬)

எழுறவுலகடுமேனக்கொம்பினை
யாமையினோட்டினையணிந்ததன்மையும்
பூமலர்மிசையவன்முதலபுங்கவர்
மாமுடியணிந்ததுமதிக்கிலாய்கொலோ. (௧௭)

கதித்திடுமுனிவரர்கடியவேள்வியி
லுதித்திடுமுயலகனொல்லென்றார்த்தெழப்
பதத்தினிலுதைத்தவன்பதைபதைத்திட
மிதித்ததும்பிறவுநீவினவிற்றில்லையோ. (௧௮)

ஒன்னலர்தன்மைபூண்டுற்றுளோர்தமைத்
தன்னிகரில்லவன்றண்டஞ்செய்தன
வின்னமோர்கோடியுண்டிருந்தியானிவட்
பன்னினுமுலப்புறுசெல்லும்பல்லுகம். (௧௯)

வேறு.

ஆதலாலீசன்றன்னையடைந்தவருய்வரல்லாப்
பேதையர்யாவரேனும்பிழைக்கலரினையவாய்மை
வேதநூல்பிறவுங்கூறும்விழுப்பொருளாகுநீயு
மேதமாநெறியினீங்கியிப்பொருளுணர்தியெந்தாய். (௨0)

இன்னமொன்றுரைப்பனீமுனிருந்தவமியற்றவிந்த
மன்னிலைபுரிந்தமேலோன்மாற்றவும்வல்லனுமா
லன்னவன்குமரன்றன்னோடமர்செய்வதியல்போவைய
தன்னினுமுயர்ந்தாரோடுபொருதிடிற்சயமுண்டாமோ. (௨௧)

பூதலவரைப்பும்வானுந்திசைகளும்புணரிவைப்பு
மேதகுவரையுந்தோன்றுள்வேறுபாடுற்றநோக்கி
யீதெனமாயங்கொல்லென்றெண்ணினமனையவெல்லா
மாதிதன்குமரன்செய்தவாடலென்றுரைத்தாரன்றே. (௨௨)

அண்ணலங்குமரனுடலறிகிலர்மருளுங்காலைக்
கண்ணிடையன்னான்மற்றோர்வடிவினைக்காட்டிநிற்ப
விண்ணவர்பலருஞ்சூழ்ந்துவெருண்டனர்வெம்போராற்றத்
துண்ணெனவவரையட்டாங்கெழுப்பினன்றூயோனென்பர். (௨௩)

எண்டொகைபெற்றவண்டம்யாவையும்புவனவைப்பு
மண்டுபல்வளனுமேனைமன்னுயிர்த்தொகுதிமுற்று
மண்டருமூவர்தாமுமனைத்துமாகியதன்மேனி
கண்டிடவிமையோர்க்கெல்லாங்காட்டினன்கர்த்தனென்பர். (௨௪)

Digitized By Roja Muthiah Research Library

மறைமுதல்வனைமுன்னோர்வைகலின்வல்லிபூட்டிச்
சிறையிடைவைத்துத்தானேதிண்புவியளித்துமுக்க
ணிறையவன்வேண்டவிட்டானென்பராலினையவாற்றா
லறுமுகன்செய்கைகேட்கினற்புதமாகுமன்றோ. (௨௫)

அங்கண்மாஞாலந்தன்னைமேலினியகழூமோட்டுச்
செங்கண்மாலேனயாக்கையெயிற்றையோர்சிறுகைபற்றி
மங்குல்வானுலகிற்சுற்றிமருப்பொன்றுவழுத்தவாங்கித்
தங்கணாயகற்குச்சாத்தச்சண்முகனளிக்குமென்பர். (௨௬)

நேரலர்புரமூன்றட்டநிருமலக்கடவுண்மைந்த
னாரினும்வலியோனென்கையறைந்திடவேண்டுங்கொல்லோ.
பாரினையளந்தோனுய்த்தபரிதியையணியாக்கொண்ட
தாரகன்றன்னைவெற்பைத்தடிந்ததுசான்றேயன்றோ. (௨௭)

அறுமுகத்தொருவனாகுமமலனையரன்பால்வந்த
சிறுவனென்றிகழன்மன்னாசெய்கையாற்பெரியன்கண்டா
யிறுதிசேர்கற்பமொன்றினீறிலாதவன்பாற்றோன்று
முறுவலினழனுமன்னோவுலகெலாமுடிப்பதம்மா. (௨௮)

வாசவன்குறையுமந்தண்மலரயன்குறையுமற்றைக்
கேசவன்குறையுநீக்கிக்கேடிலாவெறுக்கைநல்க
வாசிலோர்குழவிபோலாயறுமுகங்கொண்டானெண்டோ
ளீசனேயென்பதல்லாற்பிறிதொன்றையிசைக்கலாமோ. (௨௯)

கங்கைதன்புதல்வனென்றுங்கார்த்திகைமைந்தனென்றுஞ்
செங்கண்மான்மருகனென்றுஞ்சேனையின்செல்வனென்றும்
பங்கயன்முதலோர்தேறாப்பரஞ்சுடர்முதல்வன்றன்னை
யிங்கிவைபலவுஞ்சொல்வதேழைமைப்பாலதன்றோ. (௩0)

பன்னிருதடந்தோள்வள்ளல்பரிதியம்பகைவன்சூழ்வாற்
றன்னுறுபடைஞர்மாய்ந்ததன்மையைவினவித்தாழா
தன்னவர்மீளுமாற்றாலளக்கர்மேல்விடுத்தவேலை
யிந்நகர்தன்னிற்றூண்டின்யாரிவணிருத்தற்பாலார். (௩௧)

தாரகற்செற்றதென்றாற்றடவரைபொடித்ததென்றால்
வார்புனற்கடலுளுய்த்தவலியரைமீட்டதென்றாற்
கூருடைத்தனிவேல்போற்றிக்குமரன்றாள்பணிவதல்லாற்
போரினைப்புரிதுமென்கைபுலமையோர்கடனதாமோ. (௩௨)

அரனிடைப்பிறந்தவண்ணலாணையால்வந்ததூதன்
றிருநகரழித்தான்முன்னஞ்சேனையுந்தானுமேகி
யொருபகற்பானுகோபனுலைவுறப்பொருதுவென்று
கருதருமவுணர்தானைக்கடலையுங்கடந்துபோனான். (௩௩)

இப்பகல்வந்துவீரனிருஞ்சமரியற்றவெம்முன்
றப்பினன்மறைந்துமாயைப்படைதொடாவுணர்ச்சிதள்ளி
யப்புனலளக்கருய்ப்பவறுமுகன்வேலான்மீண்டுன்
மெய்ப்பதியடுவானென்றாலவனையார்வெல்லற்பாலார். (௩௪)

Digitized By Roja Muthiah Research Library

இறுதியுமெய்தானென்னினேற்றதொல்லுணர்ச்சிமாய்ந்து
மறியினுமெழுவனென்னின்மாயையுந்தொலையுமென்னிற்
செறியும்விண்முதல்வர்தந்தபடைக்குநேர்செலுத்துமென்னி
னறிஞர்களவன்மேற்பின்னுமமர்செயக்கருதுவாரோ. (௩௫)

தூதெனமுன்னர்வந்தோனொருவனாற்றொலையுமிந்த
மூதெயினகரமுற்றுமவுணருமுடிவரென்னி
னாதியுமுடிவுமில்லாவறுமுகனடுபோருன்னிப்
போதுமேலிமைப்பினெல்லாப்புவனமும்பொன்றிடாவோ. (௩௬)

கரங்கள்பன்னிரண்டுகொண்டகடவுள்வந்தெதிர்க்கினந்தம்
வரங்களும்படைகள்யாவுமாயையுந்திறலுஞ்சீரு
முரங்களுந்திருவுமெல்லாமூழிநாயகன்முன்னுற்ற
புரங்களுமவுணரும்போற்பூழிபட்டழிந்திடாவோ. (௩௭)

ஒற்றனைவிடுத்துநாடியும்பரைவிடாமைநோக்கி
மற்றிவட்போந்துநம்மேல்வைகலும்வந்திடாது
சுற்றுதன்றானையோடுந்தூதனைத்தூண்டியங்க
ணிற்றையினளவுநம்பாற்கருணைசெய்திருந்தானையன். (௩௮)

கருணைகொண்டிருந்தவள்ளல்கருத்திடைத்தொலைவில்சீற்றம்
வருவதன்முன்னமின்னேவானவர்சிறையைமாற்றி
யுரியநந்தமரும்யாமுமொல்லையினேகியையன்
றிருவடிபணிந்துதீயேஞ்செய்தனபொறுத்தியென்று. (௩௯)

பணிந்துழியமலமூர்த்திபலவுநாம்புரிந்ததீமை
தணிந்தருள்செய்துதானுந்தணப்பிலாவரங்கணல்கி
யணிந்ததன்றானையோடுமகலுமாலுய்தும்யாமுந்
துணிந்திதுபுகன்றேனீதேதுணிவெனமதலைசொற்றான். (௪0)

வேறு.

பரிந்துதனக்குறுதியிவைதெருட்டுதலுமதுகேளாப்பகுவாய்கால
விரிந்தபுகைப்படலிகைபோய்த்திசையனைத்தும்விழுங்கியிடவெகுளிமூளக்
கரிந்ததனதுடல்வியர்ப்பவுயிர்ப்புவரவிதழ்துடிப்பக்கண்கள்சேப்ப
வெரிந்துமனம்பதைபதைப்பவுருமெனக்கையெறிந்துநகைத்தினையசொல்வான். ()

தூவுடையநெடுஞ்சுடர்வேலொருசிறுவனாற்றலையுந்தூதாய்வந்த
மேவலன்றன்வலியினையும்யான்செய்யப்படுவனவும்விளம்பாநின்றா
யேவருனக்கிதுபுகன்றார்புகன்றாரையுணர்வேனோவின்னேயன்னோ
ராவிதனைக்களைந்திடுவேனுங்கவர்தொல்குலங்களெலாமடுவன்யானே. (௪௨)

ஞாலமெலாமுன்படைத்தநான்முகனைந்தியலங்கநவின்றுபோவா
னாலமிசைத்துயில்கூர்வானென்னிளவறனக்குடைந்தானமரர்கோமான்
வேலைதனின்மீன்முழுதுமென்பணியிற்றந்தனனல்வெள்ளிவெற்பி
னீலமிடற்றவன்மகனோதொலைவறுமென்பேராற்றனீக்குகின்றான். (௪௩)

அரியயனும்புரந்தரனும்விண்ணவர்களெல்லோருமகிலந்தன்னின்
விரவுகணத்தவரெவரும்யார்க்குமுதலாகுமுக்கண்விமலன்றானும்
பொருசமரினேற்றிடினுமெனக்கழிவதன்றிவென்றுபோவதுண்டோ
வொருசிறிதும்புந்தியிலாமைந்தாயான்பெற்றவரமுணர்கிலாயோ. (௪௪)

Digitized By Roja Muthiah Research Library

### வேறு.

ஆற்றல்விட்டனை குலமுறைபிழைத்தனையரசி
னேற்றநீங்கினையொன்னலர்க்கஞ்சினையிசைத்தாய்
மாற்றமொன்றினியுரைத்தியேலுன்றனைவல்லே
கூற்றுவன்புரத்தேற்றுவன்யானெனக்கொதித்தான். (சரு)

கொதித்தவேலையின்மைந்தனுநம்முரைகொடியோன்
மதித்திலன்னிவன்மாய்வதுசரதமேவான்மே
லுதித்தசெங்கதிர்ப்பரிதியங்கடவுள்சூழுலகில்
விதித்திறந்தனையாவரேவன்மையால்வென்றோர். (சசு)

இறுதியாகியபருவம்வந்தணுகியதிவனுக்
குறுதியாம்பலகூறினென்பயனெனவுன்று
வறிவனீசிலவறிந்தனன்போலநிற்கறைந்தேன்
சிறுவனுதலிற்பொறுத்தியென்றுற்றினன்சீற்றம். (சஎ)

வெஞ்சினந்தனையாற்றியித்தாதைதான்விரைவிற்
றுஞ்சுமுன்னர்யானிறப்பதுநன்றெனத்துணியா
வெஞ்சலில்லவன்றுளிணைவணங்கிநீயிசைத்த
வஞ்சினந்தனைமுடிப்பன்யானென்றனன்மைந்தன். (சஅ)

அனையவேலையிலையநீமாற்றலர்க்கஞ்சி
வினையம்யாவுமுன்னுரைத்தனையவர்கள்பால்வீரம்
புனையவுன்னியதென்கொலோவென்றலும்பொன்னே
னுனதுமைந்தன்யானஞ்சுவனோவெனவுரைத்தான். (சகூ)

தாதையன்னதோர்வேலையின்மைந்தனைத்தழீஇக்கொண்
டேதுநன்றுநன்றுன்பெருந்தானையோடெழுந்து
போதியென்றலும்விடைகொடுபுறந்தனிற்போந்து
மாதிரம்புகழ்கின்றதன்னுறையுளில்வந்தான். (ரு0)

நிறங்கொண்மேருவைநிலாக்கதிருண்டநீர்மையைப்போன்
மறங்கொள்சூர்மகனுடகமெய்யில்வச்சிரத்தின்
றிறங்கொள்சாலிகைகட்டினன்றூணிபின்செறித்தான்
பிறங்குகோதையும்புட்டிலுங்கைவிரற்பெய்தான். (ருக)

அடங்கலர்க்குவெங்கூற்றெனுமாடல்வில்லொன்றை
யிடங்கைபற்றினன்வலங்கையிற்பலபடையெடுத்தான்
றடங்கொண்மோலியிற்றும்பைய்ஞ்சிகழிகைதரித்தான்
மடங்கலாயிரம்பூண்டதேர்புக்கனன்வந்தான். (ருஉ)

ஆற்றன்மிக்குறுதுணைவராயிரவருமனிகம்
போற்றுமன்னராயிரவரும்போரணிபுனைந்து
காற்றெனப்படர்கவனமான்றேரிடைக்கலந்து
நாற்றிறற்படைதன்னொடுபுடைதனினடப்ப. (ருங)

நூறொடேயெழுநூறுவெள்ளந்நொறிலுடைத்தேர்
சீறும்யானையுமத்தொகையவுணர்தஞ்சேனை
யாறுநூற்றிருவெள்ளத்தபரிகளுமனைத்தே
சூறைமாருதமாமெனவவன்புடைசூழ்ந்த. (ருச)

துடிகறங்கினகறங்கினபேரிதுந்துபிப்பே
ரிடிகறங்கினவலம்புரிகறங்கினவெடுக்குங்
கொடிகறங்கினதானைகள்கறங்கினகுனித்துக்
கடிகறங்கினகறங்கினகழுகொடுகாகம். (௫௫)

வசலைமென்கொடிவாடியதன்னநுண்மருங்கிற்
கிசலையம்புரைசீறடிக்கிஞ்சுகச்செவ்வாய்ப்
பசலைசேர்முலைமங்கையர்விழிக்கணைபாய
வசலைமங்கைதன்மெய்த்தனுவளைத்திடவகன்றான். (௫௬)

அறந்தலைப்படுமிரணியனனிகநால்வகையும்
புறந்தலைப்படத்துயரமுந்தலைப்படப்போந்து
மறந்தலைப்படுபூதர்களார்ப்பொலிவழங்கும்
பறந்தலைக்களம்புக்கனனமரர்மெய்பனிப்ப. (௫௭)

விண்ணுளோர்களும்பிறருமவ்வியனகர்நோக்கித்
துண்ணெனத்துளங்குறுவதுங்கண்டனன்றொன்றுண்
மண்ணினுள்ளபாரிடமெலாம்வல்லைவந்தழித்து
நண்ணுகின்றதுங்கண்டனனன்றெனநக்கான். (௫௮)

தனதுமாநகரழிந்ததுகண்டனன்றணியா
முனிவுகொண்டனன்வெய்துயிர்த்தனனுடன்முற்று
நனிவியர்ப்புளதாயினன்மருங்குறநணுகு
மனிகவேந்தரைத்துணைவரைநோக்கியீதறைவான். (௫௯)

ஆயிரம்வெள்ளமோரொருதிசையினிலாக்கி
நீயிர்யாவருநால்வகைத்தாகியேநீங்கி
மாயிருந்திறற்சாரதவீரரைவளைந்து
போயெதிர்ந்துவெஞ்சமர்புரிவீரெனப்புகன்றான். (௬0)

அக்கணந்தனிற்றுணைவருமனிகமன்னவருந்
தக்கதேயெனவிரணியன்மொழிதலைத்தாங்கித்
திக்கிலாயிரம்வெள்ளமாச்சேனையைக்கொண்டு
தொக்கபாரிடவெள்ளமேற்போயினார்சூழ. (௬௧)

தானைமன்னருந்துணைவருந்திசைதொறுந்தழுவிப்
போனகாலையிலாடகன்குடபுலம்புகுதுஞ்
சேனைமுன்கொடுசென்றனனின்னதோர்செய்கை
மானவேற்படைக்காவலன்கண்டனன்மன்னோ. (௬௨)

வீரமொய்ம்பினனதுகண்டுவெஞ்சமர்க்குறுவான்
சூரன்மைந்தருளொருவனேசுற்றமாயினனே
வாரிவன்கொலென்றையுறுகாலையினயலே
நாரதன்னெனுமுனிவரன்வந்திவைநவில்வான். (௬௩)

இரணியன்னெனுமைந்தனைச்சூரனிங்கேவ
வருணனென்னவந்தடைந்தனனம்படையலைப்ப
வருணனிந்திரன்மந்திரிமறலிமாதிரத்தின்
முரணுறும்படைநான்கையுமுன்னுறச்செலுத்தி. (௬௪)

Digitized By Roja Muthiah Research Library

மாயைவல்லவன்படைபலபரித்தவன்வஞ்ச
மாயசூழ்ச்சிகள்பற்பலதெரிந்தவனவனை
நீயலாதுவெல்கின்றவரில்லையானினக்கிங்
கேயதன்மையினமர்தனைப்புரிதியாலென்றான். (௬௫)

என்றுகூறியேநாரதன்விண்மிசையேக
நன்றுநன்றெனவன்னதைவினவியேநகைத்துத்
துன்றுபாரிடத்தலைவரைச்சுற்றமாயுளரை
வென்றிமொய்ம்புடையாண்டகைநோக்கியேவிளம்பும். (௬௬)

ஏற்றதானையைநமையெலாஞ்சூழ்ந்திடவேவி
மாற்றலன்மகன்குறுகுவானீவிரும்வல்லே
நாற்றிசைக்கணுஞ்சாரதப்படையொடுநடந்து
வீற்றுவீற்றுநின்றமர்புரிவீரெனவிளம்பி. (௬௭)

வீரரெண்மரையிலக்கரையியன்கணத்தவரைப்
பாரிடங்களைநால்வகைப்படும்வகைபகுத்தே
யீரிரண்டுமாதிரத்தினுஞ்சென்றிடவேவிச்
சூரன்மாமகன்வருதிசைபடர்ந்தனன்றோன்றல். (௬௮)

காலையாங்கதினவுணமாப்பெரும்படைகடிதி
னாலுமாதிரந்தன்னினுநரலைசூழ்ந்தென்ன
வோலமோடுவந்தணுகலுமுருத்துவெம்பூத
சாலம்யாவையுமேற்றனசமரினைப்புரிய. (௬௯)

மற்றவேலையிலவுணர்கண்மழுப்படைநாஞ்சில்
கற்றையஞ்சுடர்ப்பரிதிவார்சிலையுமிழ்கணைகள்
கொற்றமிக்குறுதோமரந்தண்டெழுக்குலிச
மொற்றைமுத்தலைவேன்முதற்படையெலாமுய்த்தார். (௭0)

தோடுசிந்தியதேனறுமராமரத்தொகையின்
காடுசிந்தினர்கதைகளுஞ்சிந்தினர்கணிச்சி
நீடுசிந்துரப்பருவரைசிந்தினர்நேமி
யாடுசிந்தினர்சிந்தினர்பூதரில்வலியோர். (௭௧)

தலையிழந்தனர்கரங்களுமிழந்தனர்தாளி
னிலையிழந்தனர்சாரதரவுணருநெடுங்கை
மலையிழந்தனர்தேர்பரியிழந்தனர்மறவெங்
கொலையிழந்தனர்மடிந்தனர்குருதியுட்குளித்தார். (௭௨)

வசையில்பூதருமவுணருமிவ்வகைமயங்கித்
திசைதொறும்பொருகின்றுழித்தனித்தனிசேர்ந்து
விசையமொய்ம்பினன்விடுத்திடுவீரரும்விறல்சே
ரசுரவேந்தரும்வெஞ்சமர்விளைத்தனரன்றே. (௭௩)

அனையவெல்லையின்வீரவாகுப்பெயரறிஞன்
கனகன்முன்வருஞ்சேனைமாப்பெருங்கடல்கண்டு
முனிவுகொண்டுதன்பாணியின்மூரிவெஞ்சிலையைக்
குனிவுசெய்தனனறத்தனிக்கடவுளுங்குனிப்ப. (௭௪)



Digitized By Roja Muthiah Research Library

மலைவளைத்திடுதன்மைபோல்வானுறநிமிர்ந்த
சிலைவளைத்தனனொலியெடுத்தனன்றெழித்தா
னலைவளைத்திடுகடலெலாநடுங்கியவனந்தன்
றலைவளைத்தனனெண்டிசைநாகமுஞ்சலித்த. (௭௫)

காலையங்கதின்வீரமொய்ம்புடையதோர்காலை
கோலொராயிரப்பத்தினைக்குனிசிலைக்கொளுவி
மேலதாகியகானிடைப்பொழிதருமேக
சாலமாமெனப்பொழிந்தனனவுணர்தானையின்மேல். (௭௬)

பிடிகுறைந்தனகளிற்றினங்குறைந்தனபிடிக்குங்
கொடிகுறைந்தனகொய்யுளைப்புரவிதேர்குறைந்த
வடிகுறைந்தனதலைகளுங்குறைந்தனவம்பொற்
றொடிகுறைந்தனகுறைந்தனவவுணர்தந்தோள்கள். (௭௭)

எறிதலுற்றிடுசூறையாற்பல்கவடிற்று
முறிதலுற்றுவீழ்பொதும்பர்போன்மொய்ம்பன்வாளியினாற்
செறிதலுற்றதம்வடிவெலாஞ்சிதைந்துவேறாகி
மறிதலுற்றனநால்வகைப்படைகளுமயங்கி. (௭௮)

வேறு.

ஆரியன்விட்டவயிற்கணைபாய, மூரிமதக்கரிமுற்றுயர்யாக்கை
சோரியுகுப்பனதொல்பகலின்கண், மாருதமுய்த்திடுவன்னியையொப்ப. (௭௯)

விறல்கெழுமொய்ம்பன்விடுத்திடுகின்ற, பிறைமுகவாளிபெருங்கரியின்கை
யறைபுரிகின்றவராத்தொகைதன்னைக், குறைமதிசென்றுகுறைப்பனபோலாம். ()

வித்தகவீரன்விடுங்கணைவேழ, மத்தகமுற்றிடமற்றவைபோழ்ந்தே
முத்தமுகுப்பமுகந்திடுகும்ப, முய்த்திடுநல்லமுதச்சுவையொக்கும். (௮௧)

கரம்படருங்கவிகைத்தொகைதேரி, னுரம்படுகால்களுலம்புரைதோளான்
சரம்படவிற்றதலைத்தலையுற்ற, வரம்பின்மதிக்குறைமல்கியவென்ன. (௮௨)

மேக்குயர்மொய்ம்பன்விடுங்கணையாற்பாய், மாக்கடுணிந்துமறிந்துகிடந்த
தேக்கியதெண்கடலிற்றிரைமுற்றுந், தாக்கியசூறைதனக்கழிந்தென்ன. (௮௩)

பெருந்தகைவிட்டபிறைத்தலைவாளி, திருந்தலர்தோளுறுசெங்கைதுணிப்ப
வருந்திடமாமதிவெளவுமராவைத், துரந்திடுகின்றதன்சுற்றமதென்ன. (௮௪)

வேறு.

தக்கவன்மையாற்சிறந்துளோர்தமதுமாற்றலர்மேன்
மிக்கவெஞ்சினத்தேகல்போலணிகவெள்ளத்திற்
றொக்குவந்துவந்திழிந்தசெஞ்சோரியின்வெள்ள
மைக்கருங்கடல்வெள்ளத்தினூடுபோய்மடுத்த. (௮௫)

சூரைத்திடும்பெருஞாளியுங்குறுநரிக்குழாமு
நிருத்தமேயினகவந்தமுநிணனுண்டுசெருக்கி
யுருத்தகுந்திறற்காளியுங்கூளியுமொருசார்க்
கிருத்திமங்களுந்தலைத்தலைமயங்கினகெழுமி. (௮௬)

Digitized By Roja Muthiah Research Library

சிலையின்வல்லவனிவ்வகைகணைமழைசிதறி
நிலையவெல்லையின்மலைந்திடுந்தானவர்நீத்த
மூலைபடுங்கனன்முன்னுறுமிழுதெனவுடைந்து
குலைகுலைந்துதம்முயிருடன்யாக்கையுங்குறைந்த. (அஎ)

ஆளியாயிரம்பூண்டதேர்மிசைவருமவுணர்
மீளியாயதுகண்டனனெடுத்ததோர்வில்லின்
வாளியாயிரமொருதொடைதூண்டியேமறவெங்
கூளியாயிரகோடியோரிமைப்பினிற்கொன்றான். (அஅ)

கொன்றகாலையிற்பூதவெம்படைகளுங்குலைந்து
சென்றமாதிரந்தெரிந்திலதழல்விடந்தெறக்கண்
டன்றுபோகியதேவரேயாயினரதனை
நின்றதானையந்தலைவரிற்கண்டனனீலன். (அகூ)

கண்டநீலனுமிறுதிநாளழலெனக்கனன்று
திண்டிறற்கெழுமன்னவன்மதலைமுன்சென்றே
யண்டமுந்தலைபனித்திடவுருமெனவார்த்தா
னுண்டுபோரினியென்றனரமரராயுள்ளோர். (கூ0)

காலையன்னதில்வுணர்தமிறைமகன்கனன்று
வேலதொன்றினையாகமூழ்குற்றிடவிடுப்ப
நீலன்வன்மைபோய்நின்றிலன்சென்றனனெடிய
சாலமொன்றுகொண்டவன்றடந்தேரினைத்தடிந்தான். (கூக)

வையமங்கழிவெய்தலுமவுணர்கோன்மற்றோர்
செய்யதேரிடைவல்லையிற்றாவிநாண்செறித்துக்
கையில்வாங்கியசராசனத்திடையுறக்கடைநாட்
பொய்யின்மாமுகிலாமெனச்சுடுசரம்பொழிந்தான். (கூஉ)

பொழிந்தவார்கணைமுழுவதுமவனுரம்புகநு
மழிந்திலன்சிறிதஞ்சிலன்குலகிரியன்றி
யொழிந்தகுன்றெலாம்பறித்தனன்வீசியேயுடலத்
திழிந்தசோரிநீர்சொரிதரநின்றனனிமையான். (கூஙு)

நிருபனுகியவாடகன்றன்னெதிர்நீலன்
மரபினூக்கியவரையெலாஞ்சரங்களான்மாற்ற
விரைவினேடுபோயவன்றடந்தேரினைவெகுளா
வொருகையாலெடுத்தெறிந்தனனமரருமுலைய. (கூச)

ஆற்றலந்தடந்தேரினைவீசிடவதுவுங்
காற்றுலாய்நிமிர்விண்ணுறப்போயதுகாணா
மாற்றொரர்வையமேற்பாய்ந்திடவுன்னினன்வரலு
மேற்றெழுந்தெதிர்புக்கனனீலனுமிகலோன். (கூரு)

நிற்றிநிற்றிநீயென்றுகொண்டேகியேநீல
னெற்றினனவனுரத்திடையவ்வுணனுமிவனைப்
பற்றிவீசினன்பூதனுமீண்டுதன்பதத்தாற்
செற்றமோடுதைத்துருட்டிவானுருமெனத்தெழித்தான்! (கூகூ)

நெறிந்தபங்கிசேர்நீலனங்குதைத்திடநிருதர்
முறிந்துநீங்கியகளத்திடைவழுக்கிவீழ்முகில்போன்
மறிந்துவீழ்தருமவுணன்மேற்பாய்ந்தனன்மகவா
னெறிந்தவச்சிரப்பெரும்படையிதுகொலென்றிசைப்ப. (௯௭)

வீழ்ந்தகாலையைத்தன்பெருந்தாள்களான்மிதிப்பக்
கீழ்ந்துபோயதுமாநிலமவன்முடிகிழிந்த
போழ்ந்ததாகமும்வாய்வழிகுருதிநீர்பொழிய
வாழ்ந்துவெந்துயருழந்தனன்செய்வதொன்றறியான். (௯௮)

திறலழிந்தனன்சீற்றமுமழிந்தனன்செங்கோன்
மறலிகொள்வதற்கணியனேயாதலுமனத்தி
லிறுதியெய்தியதீங்கினிச்செய்வதெனமக்கோ
ருறுதியாதெனவுன்னினன்பின்னரொன்றுணர்ந்தான். (௯௯)

மாயமொன்றினைப்புரிகுதும்யாமெனவல்லே
யாயமந்திரம்புகன்றனன்பூசனையினைத்துந்
தூயசிந்தையானிரப்பினன்வேண்டியதணியா
வாயதெய்வதமுன்னினனன்னதோரெல்லை. (௧௦௦)

வேறு.

தன்போலொருவடிவன்னதொர்சமரின்றலையணுகா
மின்போலொளிர்தருபல்படைவிரவும்படிபரியா
வென்போலெவர்பொருகின்றவரெனவீரமதுரையா
வன்போரதுபுரியும்படிவலிகொண்டுமுன்வரலும். (௧௦௧)

கண்டானதுவருகின்றதுகடிதேயெதிர்நடவா
வெண்டானவரமரின்றலையிட்டேகியதொருபொற்
றண்டானதுகொண்டேயதன்றலைமோதினனிமையோர்
விண்டானிவற்கழிந்தானெனநீலன்றனைவியந்தார். (௧௦௨)

வியக்கும்பொழுதினிலன்னவன்விடுமாயமும்விசையா
லுயக்குற்றவரெனவிண்மிசையுயர்கின்றதுகாணாத்
துயக்குற்றிடுநீலன்னதுதொடர்ந்தான்கரந்திடலு
மயக்குற்றனனெடிதுன்னினன்மண்மீதுறக்கண்டான். (௧௦௩)

காணுவலமருவானிதுகரவாமெனவுணரா
னூன்மிகுசீற்றத்தொடுநணுகுற்றனனாதவுந்
தூணார்தடந்தோள்கொண்டமர்தொடங்குற்றதுதொடங்கிச்
சேணாகியதணித்தாயதுதிசையெங்கணுந்திரியும். (௧௦௪)

பாரிற்புகும்விண்ணிற்புகும்பரிதிச்சுடரெனவே
தேரிற்புகுமாவிற்புகுஞ்சிலையிற்புகுந்திரைமுந்
நீரிற்புகும்வடவாமுகநெருப்பிற்புகுநீலக்
காரிற்புகுநிரயத்திடைகடிதிற்புகுமெழுமே. (௧௦௫)

முன்னேவருமிடத்தேவருமுதுவெம்பிடர்தழுவிப்
பின்னேவரும்வலத்தேவரும்பெரும்போரினைப்புரியும்
பொன்னேகருதியமங்கையர்புலஞ்மெனத்திரியு
மென்னேயதனியல்யாவையும்யாரேபுகல்வாரே. (௧௦௬)

Digitized By Roja Muthiah Research Library

மாலுந்திறமிதுபெற்றியின்வருகின்றதொர்மாயக்
கோலந்தனிதொடராவலிகுறைந்தான்றிரிந்துலைந்தான்
காலுந்தளர்கின்றானவன்கல்வித்திறம்புகழா
மேலென்செயலெனவுன்னிவெகுண்டானடல்வீரன். (௧௦௭)

வென்றார்புகழ்தருவீரனும்விளையந்தலையுன்னி
நின்றானதுகாலந்தனினிருதன்றனதுருவ
மொன்றாயதுபலவாயுலகெல்லாமொருங்குறலா
னன்றாமிதுமாயம்மெனநாணத்தொடுநவின்றான். (௧௦௮)

திண்டோளுடைநீலன்னிதுதெளிகின்றுழியவனூற்
புண்டோய்தருகுருதிப்புனல்புடைபோதரப்புவிமேல்
விண்டோனெனமறிகின்றவன்மிடல்பெற்றெழுந்திதனைக்
கண்டோர்தடந்தேரேறினன்மாயத்தொடுகலந்தான். (௧௦௯)

கலந்தானொருசிலைவாங்கினன்கனல்வாளிகடெரியா
வுலந்தானுறழ்தருமெய்யிடையுய்த்தானுவன்பொங்கர்
மலர்த்தாலெனவுரம்புண்படவடிவாளிகள்படநின்
றலந்தான்மனமெலிந்தான்பொருதலுத்தான்மிகச்சலித்தான். (௧௧௦)

வேறு.

ஈண்டுசீர்த்திரணியன்மாயமு, மாண்டுநீலனயர்வதுநோக்குறுப்
பூண்டவாகைப்புயத்தவன்சீறியே, தூண்டுதேரொடுதுண்ணெனநண்ணினன். ()

தாங்குகின்றதன்றாழ்சிலைதோள்கொடே, வாங்கிநாணியின்வல்லிசைகோடலும்
வீங்குமொய்ம்பின்விறல்கெழுதானவ, ரேங்கியாருமிரிந்தனர்போயினார். (௧௧௨)

சோதிநெற்றிச்சுடர்த்தனிவேலினான், பாதமெய்த்துணைபன்முறைபோற்றிடா
வாதரத்தினருச்சனையாற்றியே, சேதனப்படைசெங்கையின்வாங்கினான். (௧௧௩)

தூயபோதகத்தொல்படையன்னவன், மாயைமேல்விடமற்றதன்பட்டிமை
யாயிரங்கதிராதவனேர்புறப், போயகங்குனிசியெனப்போந்ததே. (௧௧௪)

போந்தகாலைப்புலம்புறுதானவ, ரேந்தலேதமியாகவெரியெனக்
காந்திநின்றவன்காமர்வில்வாங்கியே, யாய்ந்ததீங்கணையாயிரந்தூண்டினான். ௧௧௫

தூண்டுகின்றசுடுகணைவீரமார்த், தாண்டன்முன்னவன்றன்வரைமார்புறு
மீண்டுநுண்டுகளாதலுமேலது, காண்டலுஞ்சுரர்கையெடுத்தார்த்தனர். (௧௧௬)

பொறுத்தவாகைப்புயன்வலிவெவ்விட, நிறத்தநூறுநெடுங்கணைதூண்டியே
யெறித்தசீர்த்திரணியன்கேதன, மறுத்துவில்லொடூரணமுஞ்சிந்தினான். (௧௧௭)

பொருவிற்சாலிகைபோதலுஞ்சூர்தருந், திருவிற்கோமகன்செங்கரந்தன்னில்வே, ழொருவிற்கொள்ளவொராயிரம்வெங்கணை, விரைவிற்றூண்டினனூல்விறன்மொய்ம்பினான். (௧௧௮)

விடுத்தவாளிகள்வெவ்விறலாடக, னெடுத்தவாளியிருஞ்சிலைபின்னுறத்
தொடுத்ததூணிமுன்றூண்டியபாகுதேர், படுத்துமார்பகம்பஃறுளைசெய்தவே. ()

செய்யவேறொருதேர்மிசைச்சூரருள், வெய்யன்வாவலும்வீரருள்வீரனு
மையன்வாளிகொண்டன்னதுமட்டிட, மையலெய்தியிழந்தனன்வன்மையே. ()

வேறுபின்னருமேதகுசூர்மக, னேறுதேர்களியாவையுஞ்செல்லுமுன்
னூறுநூறுகணைகளினூறியே, யீறுசெய்தலுமேங்கியெண்ணினான். (௧௨௧)

Digitized By Roja Muthiah Research Library

இந்தவேலையிடர்ப்படுமென்றனக், கந்தமெய்தியதன்னவனுயிர்
சிந்துமென்றொடுதீர்வதுவோவினித், தந்தையாருமிறத்தல்சரதமே. (கஉஉ)

இற்றகாலையிருங்கடன்செய்திட, மற்றியாவருமில்லையிம்மாநகர்ச்
சுற்றமானவருந்தொலைந்தாரினி, யுற்றுளோருமிறப்பரிதுண்மையே. (கஉ௩)

உறுதியாவதுரைக்கவுமாங்கது, வறிதுமோர்கிலாமன்னவன்மாயுமு
னிறுவதேகடனிற்றிலனேயெனி, னறுவதோவென்னகத்திடராயினும். (கஉ௪)

ஓய்யெனச்சுரரோடவென்கண்டவென், னையன்மற்றினித்துஞ்சினருங்கடன்
செய்வதற்கொருசேயுமின்றுலெனின், வையகத்தில்வசையதுண்டாகுமே.(கஉரு)

மைந்தனைப்பெறுகின்றதுமாசிலாப், புந்தியன்பொடுபோற்றிவளர்ப்பதுந்
தந்தைமாண்டுழித்தம்முறைக்கேற்றிட,வந்தமில்கடனாற்றுதற்கேயன்றே.(கஉசு)

அசைவிலாதவமரிடைத்துஞ்சிடி, னிசையதாகுமிறந்திலனேயெனிற்
றசையுலாமுடருங்கியுய்ந்தானெனு, வசையதாகுமென்வன்மையுந்துஞ்சுமே. ()

என்னையெய்துமிசையதுவேயெனின், மன்னையெய்தும்வசையுரையாங்கதன்
றென்னையெய்தினுமெய்துகதந்தைபா, லன்னதாதலழகிதன்றுலெனு. (கஉ௮)

ஆவதுன்னியென்னுருயிர்போற்றியே, போவதேகடனென்றுபொருக்கெனத்
தாவிவான்முகிறன்னிடைப்போயொரு, தேவுமந்திரஞ்சிந்தையிலுன்னினன். ()

உன்னலோடுமுருவருவாதலுந், தன்னையாருந்தெரிவருந்தன்மையாற்
பொன்னுலாயபுணரியுட்போயினன், மின்னுதண்சுடர்மீனுருவாகியே. (க௩0)

ஆண்டுபோனவவுணனம்மாநகர், மீண்டுசெல்கிலன்மேல்விளைகின்றன
காண்டுநந்தங்கடன்முடிக்குந்துணை, யீண்டுவைகுதுமென்றவண்மேவினன்.(க௩க)

ஆயகாலையிலாடகன்செய்திடு, மாயையாமெனக்கங்குலுமாய்ந்திடத் [ன்.
தூயபோதகத்தொல்படைதோன்றல்போற்,சேயிருங்கதிர்ச்செல்வன்வந்தெய்தின

ஆங்குவெய்யவனப்படைபோலெழ, நீங்குமாயையினீணிலவற்றிட
வேங்கியோடுமிரணியனுமென, வோங்குதிங்களுததியிற்போயினன். (க௩௩)

நீங்குசூர்மகனீர்மையைநோக்கியே, வீங்குதோளுடைவீரனம்மாற்றல
னோங்குமாழியுளோடினன்றேற்றெனு, வேங்குசங்கமெடுத்திசைத்தானரோ. ()

சங்கம்வாயிடைக்கொண்டுதன்சீர்த்தியை, யெங்குளோருந்தெளியவிசைத்துழிப்
பொங்குபூதர்புகழ்ந்தனர்வாழியென், றங்கண்வானவராசிசெய்தார்க்கவே. க௩ரு

நின்றவீரர்கணோரலர்சேனையைப், பொன்றுவித்தனர்போரிடைத்தூதுவர்
சென்றுகாலொடுசிந்தையும்பிற்பட, மன்றன்மாநகர்மந்திரமெய்தினர். (க௩சு)

மந்திரத்துறைமன்னைவணங்கிநீ, தந்தவக்குமரன்சமர்க்காற்றல
னுய்ந்திடக்கொலுவரையொர்சூழ்ச்சியாற், சிந்திடக்கொலகன்றனன்சிந்துவில். ()

என்றுதூதரிசைத்தலுமன்னவன், குன்றிவெள்கிக்கொடுஞ்சினங்கொண்டிடா
வொன்றுமாற்றமுரைத்திலனவ்வழிச், சென்றனன்கனன்மாமுகச்செம்மலே. ()

இரணியன்யுத்தப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,௩0௪.

# அக்கினிமுகாசுரன்வதைப்படலம்.

எட்டாசையுளோர்களையெண்கரியைக், கட்டாவுறுசில்கதிரைப்பரியை
முட்டாவருதேரினைமுன்கொணரா, வட்டாடியதோர்வலிபெற்றுடையான். (௧)

கருவாயுறுகின்றதொர்காலைமுதற், றிருமாதுடன்முற்றழல்சிந்திடலும்
பெருமாயவள்வந்துபிறந்திடுவோ, னெரிமாமுகனென்றவியற்பெயரான். (௨)

பன்னாகமிசைத்துயில்பண்ணவனூர், பொன்னார்சிறைகொண்டதொர்புள்ளினுட
னந்நான்முகனூர்தியுமாடுறுவான், முன்னாட்கொடுவந்ததொர்மொய்ம்புடையான்.

முன்னூற்றவன்வானெழுமொய்கதிரோன், றன்னைச்சிறையிட்டதுதான்வினவா
மன்னூற்றிடுசோமனைவைகல்பல, வின்னற்படவேசிறையிட்டுடையான். (௪)

தெய்வப்படைதாங்கியசெங்கையினு, ளைவர்க்குளதாகியவாற்றலுளான்
மைவைத்திடும்வஞ்சனைமாயம்வலா, னெவ்வெப்படைதன்னையுமீறுசெய்வான். ()

அந்தார்முடிகொண்டிடுமையன்முனம், வந்தானடிதன்னைவணங்கியிவ
னெந்தாய்மெலிவுற்றனையென்னெனலுஞ், சிந்தாகுலமோடிதுசெப்பிடுவான். ()

உண்ணாடியமாயைகொடொற்றுமையால், விண்ணாடர்பொருட்டிவண்மேவியுளான்
கண்ணாரெயில்வேலிகடந்துநமை, யெண்ணாதுபுரத்திடையேகினனால். (௭)

ஏகுந்தொழில்வெய்யவனிந்நகரம், வேகும்படிசெந்தழல்வீசிடலு
மாகொண்டல்களேவினன்மற்றவைமா, ருகும்புனல்சிந்தியவித்தனவே. (௮)

மடல்கொண்டிடுதாரினன்மற்றதுகண், டுடல்கொண்டசினத்தொடொருங்குலகங்
கடைகொண்டிடுகின்றகனற்படைதொட், டடல்கொண்டமுகிற்றிறலட்டனனே.

அட்டானதுகேட்டனமாட்கலை, விட்டாமணிகத்தொடுவெஞ்சமர்செய்
தொட்டார்வலிநோக்கியுடைந்தவனு, னெட்டாழிபுகுந்துநிமிர்ந்தனனால். (௧0)

நங்கொற்றமிகுத்திடுநாற்படையு, மங்குற்றிடுகின்றனமாநகரை
யுங்குற்றிடுதூதனொறுத்தனனு, லிங்குற்றநிகழ்ச்சியிதென்றனனே. (௧௧)

செங்கோன்முறைகோடியதீயவுண, னங்கோதியகேட்டலுமாரழல்கால்
வெங்கோரமுகத்துவியன்புதல்வன், றங்கோமுகமாவிதுசாற்றிடுவான். (௧௨)

மன்னர்க்கிறையாகியமன்னவநீ, யுன்னூற்றுளமீதிலுருத்திடவே
முன்னூற்றிடுதூதுவன்மொய்ம்பினனோ, வென்னுக்கவனாற்றலையெண்ணுதிநீ. (௧௩)

மிடல்கொண்டிடுதூதனைமிக்கவரைப், புடைகொண்டமர்செய்திடுபூதர்தமை
யடல்கொண்டிவணின்னையடைந்திடுவன், விடைதந்தருளென்றுவிளம்பினனே. ()

நன்றேயிதுசெப்பினைநண்ணலனை, வென்றேவருகென்றுவிடுத்திடலு
நின்றேதொழுதவ்விடைநீங்கினனாற், குன்றேநிகர்தோள்வலிகொண்டுடையோன்.

கார்க்கோலமும்வெய்யகருங்கடலி, னீர்க்கோலமுமன்னவனீடியதன்
சீர்க்கோநகரத்திடைசென்றனனாற், போர்க்கோலமமைந்துபுறம்படர்வான். (௧௬)

மைக்கொண்டல்படர்ந்திடுமால்வரைபோன், மொய்க்கொண்டிடுசாலிகைமுன் னுறவே, மெய்க்கொண்டணிபுட்டில்விரற்பரியாக், கைக்கொண்டனன்விண்ணவர்கைப்படையே. (௧௭)

தன்றாதையினைத்தருதாயுதவும், பொன்றாழ்சிலைகைக்கொடுபொள்ளெனவே
யொன்றாகியதேரிடையொல்லைபுகாச், சென்றான்விழியிற்கனல்சிந்திடுவான். ௧௮

அறமற்றிடுதீயனகன்றுநகர்ப், புறமுற்றனனங்கதுபோழ்துதனிற்
றிறமற்றதுதூதுவர்செப்புதன்முன், மறமுற்றிடுதானைகள்வந்தனவே. (௧௯)

ஓராயிரவெள்ளமொருத்தலினர், தேரானவுமத்தொகைதிண்டிறன்மா
வீராயிரவெள்ளமியாவர்களு, மாராய்வரிதாலவுணக்கடலே. (௨0)

வேறு.

ஆனகாலையிலங்கிமுகாசுரன், மானமேற்கொண்டுமாற்றலர்யாரையும் [றான்.
யானொர்கன்னன்முனீறுசெய்வேனெனாச், சேனைதன்னொடுஞ்சென்றிடன்மேயி

நல்குமாறின்றிநாள்பலநீங்கியே, மல்குகாதலர்வந்துகலந்துழிப்
பில்குகாமத்துப்பெய்வளைப்பேதைய, ரல்குலென்னவசைந்தகல்வுற்றதேர். (௨௨)

அருத்திமெல்லியராதரங்கொண்டுழல், விருத்தர்கூட்டம்வெறுத்திடுமாறுபோ
லெருத்தமீதிலிடிப்பவர்தம்முரைக், கருத்தினிற்கிலகாய்சினவேழமே. (௨௩)

மண்ணிற்பாய்வனமாதிரஞ்சூழ்வன, விண்ணிற்றாவுவவீதியிற்செல்வன
வெண்ணிற்பல்பொருளிச்சைகொள்வேசியர், கண்ணிற்கொப்பனகந்துகராசியே.()

வஞ்சநீடியருளற்றுமாயமே, யெஞ்சலின்றியிருள்கெழுவண்ணமாய்
விஞ்சுதம்மல்குல்விற்றுணுமங்கையர், நெஞ்சமொத்தனர்நீள்படைவீரரே. (௨௫)

தார்த்தடம்புயத்தானவர்பல்லிய, மார்த்தவோதையகிலமும்புக்கதாற் [போல்.
றூர்த்தமங்கையர்சோர்வினிற்செய்பழி, வார்த்தையெங்கணும்வல்லையிற்சேறல்

சோதிமெய்யெழிற்றாயணமாற்றியே, மீதுசெல்லரும்வெவ்விருளுய்த்தலா
லேதின்மாதரையெய்திடும்புன்மையோர், காதல்போன்றகடிதெழும்பூழியே. ௨௭

பீட்டின்மிக்கபெரும்பணைதாங்கிய, மோட்டினொட்டகமுந்தியகந்தர
நீட்டிவாங்குவநேர்ந்தவர்முன்றலை, காட்டிவாங்குங்கணிகையர்போலவே. (௨௮)

சீறுமால்கரிதேர்மிசைப்பூண்டுவிண், ணுறளாவிநின்றுடுவகேதன
மூறுகாதலொருவன்கண்வைகினள், வேறுளாரையும்வெஃகிவிளித்தல்போல். ௨௯

வீழுமும்மதவேழங்கண்மத்தகஞ், சூழிகாலினசைதொறுந்தோன்றுவ
மாழைநோக்கியர்மைந்தர்க்குமாலுறக், காழகத்தனங்காட்டிமறைத்தல்போல். ()

தோமரஞ்சிலைசூலமழுப்படை, நாமவெங்கதைநாஞ்சின்முசலம்வே
னேமிதானவர்நீள்கரஞ்செல்வன, காமர்மங்கையர்கட்டொழிறுங்கியே. (௩௧)

வேறு.

எற்றினபறையின்வீழ்ந்தவெழிலிகளெழுந்தபூழி
சுற்றினவானமீப்போய்த்தூர்த்தனகங்கைநீத்தம்
வற்றினபடையும்பூணும்வயங்கினமயங்கியெங்குஞ்
செற்றினபதாகையீட்டமிருண்டனதிசைகளெல்லாம். (௩௨)

Digitized By Roja Muthiah Research Library

சோமகண்டகனேசோமன்சூரியன்பகைஞன்மேகன்
காமர்பிங்கலனேயாதிக்கடிகெழுதானைவீரர்
மாமருங்கதனிற்செல்லமன்னவர்மன்னன்மைந்த
னேமருபூதசேனைக்கெதிருறவெய்தினால். (௩௩)

எதிர்ந்தனர்பூதர்தாமுமவுணருமிடிப்பிற்பேரி
யதிர்ந்தனதுடியுஞ்சங்குமார்த்தனவண்டமீன்க
ளுதிர்ந்தனவனையர்கூடியுடன்றுபோர்புரியவையம்
பிதிர்ந்தனபொதிந்தவண்டப்பித்திகைபிளந்ததன்றே. (௩௪)

தொட்டனர்வேலும்வாளுந்தூண்டினர்பகழிமாரி
விட்டனர்பிண்டிபாலம்வியன்மழுத்தண்டமோர்சிக்
கிட்டினர்சூலம்வீசிக்கிளர்ந்தனரவுணர்பூதர்
பட்டனரளப்பிலோர்கள்பரந்தனகுருதிநீத்தம். (௩௫)

முத்தலைக்கழுவைத்தண்டைமுசலத்தைநேமிதன்னைக்
கைத்தலத்திருந்தகூர்வாய்க்கணிச்சியைப்பிறங்கறன்னை
யெத்திறத்தவரும்பூதரெறிந்தனரெறிந்தகாலை
யத்தலையவுணவீரரளப்பிலர்பட்டாரம்மா. (௩௬)

தறிந்தனபுரவித்தாளுந்தலைகளுந்தடந்தேரச்சு
முறிந்தனதுவசமற்றமும்மதக்கோட்டுமாக்கண்
மறிந்தனவுடலம்வேறுமடிந்தனர்வயவரெங்குஞ்
செறிந்தனகழுகுகாகந்திரண்டனகூளிதிண்பேய். (௩௭)

இருபெரும்படையுமிவ்வாறேற்றிகல்புரியும்வேலை
வெருவருவேற்கண்மாதர்வியர்ப்பின்வந்துதித்தவீரர்
பொருவருஞ்சிலைகள்வாங்கிப்புங்கவம்பொழிந்துசூழ
வொருவருமவுணர்நில்லாதோடினருடைந்துபோனார். (௩௮)

உடைதலுமவுணன்மைந்தனொய்யெனவிடுப்பமேகன்
கடுமுரட்சோமன்சோமகண்டகன்முதலாவுள்ள
படையுறுதலைவர்பல்லோர்பகழியின்மாரிதூவி
யடுசிலைவீரர்மேற்சென்றமரினையிழைத்தாரன்றே. (௩௯)

இமைத்திடவதனைநோக்கியிலங்கெழிற்றாளில்வீரக்
கழற்புனைகின்றவீரபுரந்தரன்கடியசீற்றத்
தழற்பெருங்கடவுள்போல்வானசனியேறஞ்சவார்க்கு
முழக்கினனொருதன்சேனைமுன்னுறக்கடிதுவந்தான். (௪௦)

வந்தனனங்கைச்சாபம்வாங்கினன்வாளிமாரி
சிந்தினன்றலைவர்தேரைச்சிதைத்தனன்சென்னிதள்ளி
யிந்துகண்டகனைவானிலேற்றினனேனைவீர
ருந்தியசேமத்தேர்மேலுற்றிகல்புரிந்துசூழ்ந்தார். (௪௧)

சுற்றினர்வீரன்மேனிசோரிநீரொழுகுமாற்றான்
முற்றுறுபகழிதூவமுழங்கழலென்னச்சீறி
மற்றவர்சிலையுந்தேருமண்மிசைவீட்டிவல்லே
செற்றியினூரத்திற்றாளிநெடுங்கணைபலவுமுய்த்தான். (௪௨)



Digitized By Roja Muthiah Research Library

உய்த்ததுமவுணர்வேந்தற்குற்றுழியுதவநின்ற
மெய்த்திறலாற்றலாளன்மேகனென்பவனோர்தண்டங்
கைத்தலமிசையிலேந்திக்கணப்படைவீரன்றேர்மேன்
மத்திகைமுட்கோல்கொண்டவலவனைமோதியார்த்தான். (௪௩)

மோதலுந்தனதுபாகன்முடிந்திடுதன்மைகாணூஉ
மேதகுதலைவன்வீரபுரந்தரன்வேலொன்றேந்தி
யீதினின்முடிதியென்றேயேவினனேவலோடும்
பூதலமிசையேவீழாப்பொன்றினன்புயலின்பேரோன். (௪௪)

புயலுறுநாமத்தண்ணல்பொன்றலுமதனைநாடி
யயலுறுதானைவீரரஞ்சினரகன்றுபோக
வியலதுதன்னைநோக்கியெரிமுகனெரியிற்சீறிப்
பயிலுறுசிலையொன்றேந்திப்படையொடுங்கடிதுவந்தான். (௪௫)

வேறு.

வளைத்தான்றனிப்பெருவில்லினைமருவார்மனம்வளைய
விளைத்தானவட்சிறுநாணொலிமிகவார்த்தனன்விண்மேன்
முளைத்தார்தருபிறைபோல்வதோர்முனைவாளிகடெரியாக்
கிளைத்தார்தருபூதப்படைகேடுற்றிடப்பொழிந்தான். (௪௬)

தலையற்றனர்கரமற்றனர்தாளற்றனர்தோளா
மலையற்றனர்மார்பற்றனர்வாயற்றனர்செய்யுங்
கொலையற்றனர்செவியற்றனர்கூறுற்றிடுநாவி
ணிலையற்றனர்படையற்றனர்நெடும்பூதர்களெவரும். (௪௭)

ஆரிற்றனசகடிற்றனவச்சிற்றனகிடுகி
னேரிற்றனகொடியிற்றனமுடியிற்றனவீர்க்கு
மூரிப்பரிமாவிற்றனமுருகன்படைவீரர்
தேரிற்றனபடையிற்றனசெருவிற்றனவன்றே. (௪௮)

ஓடுற்றனகுருதிப்புனலுலகச்சுறவொலியா
வாடுற்றனகவந்தக்குலமலகைக்குலமிகவே
பாடுற்றனஞமலித்தொகைபரவுற்றனகொடிமேற்
கூடுற்றனபாறுற்றனகுறுகுற்றனகழுகே. (௪௯)

அக்காலையினதுகண்டனனழல்கான்றிடநகையா
மைக்காலனும்வெருவுற்றிடுவலிசேர்திறன்மகவான்
கைக்கார்முகந்தனைவாங்குபுகணைமாரிகள்சொரியாப்
புக்கானவுணனுமாங்கெதிர்பொழிந்தான்சரமழையே. (௫௰)

கரவன்விடுநெடுவாளிகள்கந்தன்படைஞன்மேல்
வருகின்றனவுறுகின்றனமன்னன்மகன்முன்னம்
பொருகின்றநம்வீரன்விடுபகர்வெங்கணைபலவு
மிரிகின்றனபடுகின்றனவிருவோர்பகழியுமே. (௫௧)

போரிவ்வகைபுரிகின்றுழிப்புரைதீர்விறன்மகவான்
றேரும்பொருசிலையுங்கணைசெறியாவமுஞ்சிதையா
வீரைம்பதுசரமார்புறவெய்தேயிகலவுண
ராரும்படிபுகழும்படியார்த்தனனம்பேர்த்தான் (௫௨)

Digitized By Roja Muthiah Research Library

மாறுகியவவுணர்க்கிறைவலியுந்திறன்மகவான்
வீறனவையிழந்திட்டதும்விழிதீயுறநோக்கிச்
சீறுச்சிலைவளையாக்கணைசிதறுவசைபலவுங்
கூறுவெதிர்புகுந்தாரவன்றனையாமெழுகுமரர். (௫௩)

இடிகாலுறுமுகிலாமெனவெழுவீரருமேகிக்
கடிதேமுனிவொடுசிந்தியகணையாவையும்விலக்கா
விடமாகியவெரிமாமுகன்விறலோர்புயவரைமேல்
வடிவார்கணைபலசிந்துபுமழையாமெனமறைத்தான். (௫௪)

சகத்தானவர்புகழப்படுதலைவன்மகன்சரங்கள்
மிகத்தான்விடமெலிவுற்றிடுமெழுவீரரும்வெய்யோன்
முகத்தாயிரங்கரத்தாயிரமுரத்தாயிரமொய்ம்பி
னகத்தாயிரங்கணைபாய்ச்சினரவன்றேரையுமறுத்தார். (௫௫)

வேறு.

அறுத்திடுமெல்லையினழலின்மாமுகன்
மறித்துமொர்தேரிடைவாவிவல்லைபோ
யெறித்தருகதிருடையெழுவர்தம்மையுஞ்
செறுத்தெரிவிழித்திவைசெப்பன்மேயினான் (௫௬)

ஒன்றொருபடையினாலுங்களாவியைத்
தென்றிசைமறலியார்தெவிட்டநல்கியே
வென்றிகொண்மொய்ம்புடைவிடலைதன்னையுங்
கொன்றிடுகின்றனனென்றுகூறினான். (௫௭)

கூறுபோதத்தினிற்குமரன்றுணையோர்
வேறுவேறடுகணைவீசிவெய்யவ
னேறுதேர்தன்னையுமிவுளிதன்னையு
நூறினரவனுடனாழையாக்கினர். (௫௮)

ஆயதுகாலையிலவுணன்வேறொரு
பாயிருந்தேரிடைப்பாய்ந்துகண்ணுதற்
றூயவன்படையினையெடுத்துத்துண்ணென
நேயமொடருச்சனைநிரப்பித்தூண்டினான். (௫௯)

அடலெரிமுகத்தினனேவிநாயகன்
படைதொடவன்னதுபடியும்வானமும்
வடவையினுருவமாய்வரவுமச்செயல்
விடலைகளெழுவரும்வெருண்டுநோக்கினர். (௬0)

அனற்படையன்னதாலதற்குமாறதாப்
புனற்படைவிடுக்குவமென்றுபுந்திகொண்
டினப்படுதுணைவர்கள்யாரும்வாருண
முனைப்படைதூண்டினர்முடியுஞ்செய்கையார். (௬௧)

தூண்டியவாருணத்தொல்லைமாப்படை
சேண்டொடர்ந்திடுதலுந்தேவன்றீப்படை
யாண்டெதிராகியேயவற்றைநுங்கிற்று
லீண்டொருமுனிகடலேழுமுண்டெனு. (௬௨)

Digitized By Roja Muthiah Research Library

சலபதிபடைகளைத்தடிந்துவாய்மடுத்
துலகுளோர்வெருவரவாழியான்படை
வலியுடனேகியேழ்வயவர்தம்மையு
மெலிவுசெய்துயிர்கொடுமீண்டுபோயதே. (௬௩)

மீண்டதுபோதலும்வீரரவ்விடை
மாண்டனர்கயிலையின்மருங்குபோயினார்
மூண்டிடுபெருங்கனன் முகத்தனங்கது
காண்டலுமார்த்தனன்களிப்பினும்பரான். (௬௪)

ஒருங்குறவீரர்களுலந்துவீடலு
மருங்குறநோக்கியவயவெம்பூதர்கள்
கரங்களைமறித்தனர்கலங்கிவாய்புடைத்
திரங்கினர்வெருவினரிரிந்துபோயினார். (௬௫)

நெற்றியில்வீரர்தம்விளிவுநீங்கலா
துற்றிடுபூதர்களுலைந்துசாய்வதுந்
தெற்றெனநோக்கினன்செயிர்த்துவிம்மினான்
வெற்றியின்கிழவனும்வீரவாகுவே. (௬௬)

வீரமொய்ம்புடையவன்வெருவலீரெனப்
பாரிடக்கணங்களைப்பாணியாலமைத்
தோரிறைமுன்னரேயொருதன்றேரொடு
மாரழன்முகத்தன்முனணுகப்போயினான். (௬௭)

போய்க்குறுகுற்றுழிப்பொருநர்த்தேய்த்தலின்
வீக்கியகழல்வீரவாகுவைத்
தாக்கெரிமுகமுடைத்தறுகண்வெய்யவ
னோக்கினன்வெகுண்டிவைநுவறல்செய்குவான். (௬௮)

வேறு.

எதிராகியபூதரையேனையரை, மதியேனினையேயடவந்தனனீ
யதுகாலையினிங்ஙனடைந்தனையால், விதியேயுனையென்முன்விடுத்ததுவே. (௬௯)

கொன்றாய்பலரைக்கொடுவெஞ்சமரின், வென்றாய்பலரைமிகைசெய்தனையாய்
நின்றாய்வருவாய்நினதாருயிருக், கின்றுகுவதோவிறுதிப்பகலே. (௭0)

முன்னர்ப்பொருதேமுரிவுற்றவர்போ, லென்னைக்கருதேலினியோரிறையி
னுன்னைத்தலைகொய்தொருசென்னியையு, மன்னர்க்கிறைசேவடிவைத்திடுவேன்.

பூண்பான்முலைமாதர்புணர்ச்சியெனு, மாண்போர்தனிலேவலியற்றழியு
மாண்பாலொருவனவனேயலனோ, வேண்பாலுனையாணிவண்வென்றிலனேல். ௭௨

என்றேவெதிராவிவையொப்பனசொற், சொன்னானதுகேட்டிடுதொல்விறலோன்
பொன்னார்தருசெங்கைபுடைத்துநகைத், தொன்றான்முகநோக்கியுரைத்திடுவான்.

முனையார்தருபோன்னவன்முந்துசமர், வினையாவடிவந்தனைவிட்டகலா
வனையார்புனல்புக்கனனன்னவனுக், கினையாயொருநீயெவனாய்குதியோ. (௭௪)

மூண்டாரமர்செய்திடுமொய்ம்பரெலா, மாண்டார்கதிரோன்பகைமற்றொருவன்
மீண்டானவனும்விளிவுற்றிடுநீ, மீண்டாருயிர்தோற்றிடவேகினையோ. (௭௫)

Digitized By Roja Muthiah Research Library

வீடிச்செருவில்விளிவாகுதியோ, பேடித்தொழில்கற்றிடுபிள்ளையென
வோடிக்கடல்புக்குயிருய்குதியோ, நாடிக்கடிதொன்றைநவிற்றுதியே. (௭௬)

பார்காத்திடினும்பலதானவரு, நேர்காத்திடினுநிலைபெற்றழியாச்
சூர்காத்திடினுந்தொலைவில்விறலோ, ரார்காத்திடினுமடுவேனுனையே. (௭௭)

என்றிங்கிவைவீரனிசைத்திடலுங், குன்றன்னசினத்தழல்கொம்மெனவே
சென்றுள்ளமலைத்துழிதீமுகவன், வன்றிண்சிலையொன்றைவளைத்தனனே. (௭௮)

வேறு.

நடுத்தானகன்றிடுசூர்மகன்ஞாணோதையைச்சிலைநின்
றெடுத்தானெடுத்தலும்வெய்யவனிரவோனுடனிரிந்தா
னுடுத்தானுதிர்ந்தனசேடனுமுலைந்தானுலகனைத்துங்
கெடுத்தானிவனென்னவானவர்கிளையோடினவன்றே. (௭௯)

அக்காலையின்முகமாறுடையமலன்றனக்கன்பன்
னைக்கார்முகமிருகால்வளைத்தொருகாலொலிகாட்டத்
திக்கானனமுடையான்முதற்றேவாசுரர்துளங்கி
யிக்காலமதோபார்முழுதிறுங்காலமதென்றார். (௮௦)

என்றுவிசைத்திடுமெல்லையிலெரிமாமுகனீரேழ்
கொன்னார்கணைவிடுத்தார்த்தனன்குறுகுற்றதுவருமுன்
மின்னுமெனப்பதினாற்கணைவிடுத்தேயவைவிலக்கிப்
பொன்னார்தருதிறன்மொய்ம்பினன்புயலேறெனத்தெழித்தான். (௮௧)

செஞ்ஞாயிறுகதிர்கான்றெனத்தீமாமுகத்தவுண
னைஞ்ஞான்கெனுந்தொகைபெற்றிடுமயில்வெங்கணைதொடுப்ப
வெஞ்ஞான்றுமுற்றிடுசீர்த்தியனிருபான்கணைதுரந்து
மைஞ்ஞான்றிடுமுகின்மேற்செலுமருத்தாமெனத்தடுத்தான். (௮௨)

கண்டங்கதுகனன்மாமுகன்கணையாயிரந்துரந்து
புண்டங்கியதனிவேலுடைப்புனிதன்றனதிளவன்
முண்டம்புகவுய்த்தேதிறன்முதுவால்வளையதனை
யண்டங்கிழிபடவூதினனவுணப்படைபுகழ. (௮௩)

ஆராரும்வியக்குந்திறலடன்மொய்ம்பினனங்க
ணோராயிரம்வடிவாளிகளொருங்கேதொடுத்துய்த்துச்
சூராகியவவுணன்றருதொல்லைத்தனிமைந்தன்
றேரானதும்பரியானதுஞ்சிலையானதுஞ்சிதைத்தான். (௮௪)

சிதையும்பொழுதயல்வேறொருதேரின்மிசைப்பாயாக்
கதையொன்றினைவிடுத்தானெரிகனன்மாமுகனதன்மேற்
குதையொன்றினைத்துரந்தேயருட்குமரேசனுக்கிளையோன்
சுதையொன்றியக்களத்தேவிழத்துண்டம்பலகண்டான். (௮௫)

மாற்றோர்சிலையினைவாங்கிவளைத்தேகனன்முகத்தோன்
காற்றோன்படைதுரக்கின்றுழியிவனும்மதுகடவக்
கூற்றோன்படைதொடுத்தானவன்குமரன்றனக்கிளையோன்
வேற்றோர்படைதுரந்திட்டிலனதுவேசெலவிட்டான். (௮௬)

Digitized By Roja Muthiah Research Library

மாகத்துறுகதிர்வெம்படைமன்னன்றருமதலை
வேகத்தினில்விடவாங்கதுவிடுத்தேயதுவிலக்கி
நாகத்தமர்கறைநீயியநனிகூரியகணைநூ
றுகத்திடைபடவேதுரந்தடன்மொய்ம்பினனுர்த்தான். (அஎ)

தருமத்தியனிறுவுற்றிடுதக்கோன்விடுசரங்கண்
மருமத்தினிற்படுகின்றுழிவானோரமுதருந்துங்
கருமத்தினில்விரவிக்கடல்கடையக்கவிழ்ந்திட்ட
பெருமத்தெனநிலைசோர்ந்துதன்பெருந்தேர்மிசைவீழ்ந்தான். (அஅ)

விழுகின்றதொரெரிமாமுகன்வியன்மார்பெனும்வரைநின்
றிழிகின்றனநதியாமெனவெருவைப்புனலுயிரு
மொழிகின்றதுவருகின்றதுலாவுற்றதுதேற்ற
மழிகின்றதுவருமந்தகனச்சுற்றனனாக. (அகூ)

விளிந்தானெனமயங்குற்றவன்வெஞ்சூருருமேற்று
ளெளிந்தாடரவசைந்தாலெனநெடுந்தேர்மிசைப்பெயராத
தெளிந்தாயிடையிரங்கிப்பொருதிறல்வன்மையதிலனு
யெளிந்தானெளிந்திடுகின்றவனித்தன்மைசிந்தித்தான். (கூ0)

மொழிபட்டிடுதிறன்மாற்றலர்முனைவெஞ்செருத்தனில்யா
னழிபட்டிடின்வருவாயெனவர்நாட்சிறுகாலைப்
பழிபட்டிடும்வெறியாட்டினைப்பயின்றேபலியூட்டி
வழிபட்டதன்னகர்க்காளியைமனத்தின்மிசைநினைத்தான். (கூக)

வேறு.

விஞ்சுந்தொல்விறன்மேவுசூர்தரு, மைஞ்சன்றன்னைமனத்தினுன்னனு
நஞ்சுந்துண்ணெனநண்ணுகாளிதன், னெஞ்சந்தன்னினினைத்தன்மேயினள். (கூஉ)

சூலங்கொண்டலமர்ந்துதோன்றுவாள், சூலங்கொண்டலமந்ததோளினள்
கோலம்பெற்றகுலிங்கவேணியாள், கோலம்பெற்றகுறுங்கொலைக்கணள். (கூ௩)

போதங்கொன்றுபொருமைமிக்குளாள், போதங்கொன்றுபொலஞ்செய்தாளினு
ளேதந்தீர்ந்திடுமெண்ணலார்சிர, மேதந்தீர்ந்திடுமேமவாளினள். (கூ௪)

சங்காரத்தணிதாங்குகொங்கையாள், சங்காரத்தணிதந்தசெங்கையா
ளுங்காரத்தினுரத்தவாடையா, ளுங்காரத்தினுரப்புமோதையாள் (கூரு)

ஞாலத்தேவருநாகர்வேந்தரு, ஞாலத்தேவருமேத்தநண்ணுவாள்
காலத்தீயர்களிற்றின்மேலையோர், காலத்தியர்கலங்குகாட்சியாள். (கூசா)

அஞ்சத்தானடியானவானவ, ரஞ்சத்தானடிபேர்த்துலாவுவா
ளஞ்சத்தானவர்நையவெம்மைசெய், நஞ்சத்தானவர்சுற்றநல்குவாள். (கூஎ)

அங்கத்தன்மையளாயமர்ந்திடு, மங்கத்தன்மையளாயகாளிமால்
சிங்கத்தேறியசெல்வன்மைந்தன்முன், சிங்கத்தேறினள்செல்லன்மேயினள். கூஅ

வில்லுஞ்சூலம்வியன்மழுக்கதை, யெல்லைப்பல்படையாவையுங்கொளா
மல்லற்காளிகண்மாப்பெரும்படை, செல்லக்கூளிசெறிந்துசூழ்தர. (கூகூ)

மூதக்கார்ப்பொடுவிண்ணைமுட்டுற, வேதக்கூளிகளேறுகேதன
மூதச்சங்கமொழிந்தபல்லிய, மேதக்கோதைமிகுத்துமேவவே. (க00)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

விரைவொடுபறந்தலைமேவிவீழ்ந்தய, ரெரிமுகமதலையையெய்திநோக்கியா
னுரமிகுமொன்னலருயிலரயுண்பனீ,பரிவுறலென்றனளமைத்தபாணியாள்.(க0க)

இவ்வகையருளியேயிளவல்பாற்படுந், தெய்வதப்பூதர்தஞ்சேனைமேற்செலாச்,க
வ்வைகொள்செருத்தொழில்கருதியார்த்தன, வைகைப்பூதமுமச்சங்கொள்ளவே.

ஆர்த்திடுமெல்லையிலளக்கர்சூழ்ந்தென,வார்த்திடுமெல்லையிலடல்வெம்பூதரும்[லாம்
வேர்த்தனரழுங்கினர்மேற்சென்றேற்றனர்,வேர்த்தனரழுங்கினர்விண்ணுளோரெ

காளிகள்சூலம்வேல்கணிச்சிகார்முகம், வாளிகள்சிந்தினர்வரைநெடுந்தரு
நீளிகளெழுக்கதைநேமியின்னன, கூளிகள்வீசினர்குறுகிப்போர்செய்தார். (க0ச)

அத்திறனோக்கியேயாடற்பூதர்க, ளத்திறத்தவலரையுமீறுசெய்கெனக்
கைத்தலத்திருந்ததோர்கழுமுள்வீசினாள், பத்திரைதன்னருள்படைத்தகாளியே.()

வீசியமுத்தலைவெய்யவேற்படை, காய்சினவெரிபுகைகான்றுகாளிகண்
மாசகலுருப்பலவகுத்துப்பாரிடர், பாசனமருளுறப்படர்தலுற்றதே. (க0ரு)

சண்டிகைவிடுபடைதனதுவன்மையைக், கண்டனனிளையவன்கணங்களாருயி
ருண்டிடுமிஃதெனவுன்னியேழிரு, புண்டருசிலீமுகம்பொள்ளென்றேவினான். ()

தீக்கலுழ்வேலினான்செலுத்துமாசுக, மேக்குறுமுத்தலைவேலைநுண்டுக [யாள்.
ளாக்கியதாக்கலுமனையதன்மையை, நோக்கினள்காளியென்றுரைக்குநோன்மை

துன்னெனயான்விடுசூலந்தன்னையு, மன்னலம்பகழியாலறுத்தெனனாற்றலை
யெண்ணலனிற்பனாலின்னுமங்கவ, னுண்ணிகழுயிரினையுண்குவேனென்றாள். ()

என்றிடுகாளியோரிமைப்பின்முந்துற,நின்றிடுசேனையங்கடலைநீக்கியே[மேயினாள்.
வென்றிடுவயப்புலிமிசைக்கொண்டார்த்திடாச், சென்றனள்வீரன்முன்செப்பன்

முன்னுறயான்விடுமூவிலைப்படை, தன்னைவெங்கணைகளாற்றடிந்துநின்றனை
யின்னுமொர்சூலமுண்டெறிவன்வீகுதி, யன்னதுகாத்திடலரிதுகாணென்றாள். ()

என்றலுமுறுவல்செய்திலங்குசூலமாங், கொன்றலவாயிரமொருங்குவீசினு
நின்றவைமுழுவதுநீறுசெய்வனென், வன்றிறறெரிந்திலைமாதுநீயென்றான்.(ககஉ)

கொற்றமொய்ம்பினனிவைகூறக்கேட்டுளஞ், செற்றமதாகியேதெழித்துச்சண்
டிகை,யற்றுமொர்சூலவேல்வல்லைவீசினாள், சுற்றியபாரிடத்தொகுதியுட்கவே .()

அருந்திறலமரர்களதுகோலாலமென், றிரிந்தனர்பணியெனுவினனுமிந்துவும்[லே.
வருந்தினர்சூலமுன்வந்ததன்மையைத், தெரிந்தனன்வீரமொய்ம்புடையசெம்ம

எட்டொடிரண்டுநூறெனுந்தொகைப்படு, நெட்டிரும்பகழிகணிசரத்தூண்டியே
யட்டனன்றுணிபடவரியின்மேலவ, டொட்டிடவருவதோர்சூலந்தன்னையே. ()

எறித்தருசூலமதிற்றுவீழ்தலுஞ், செறுத்தனளிங்கிவன்சிரத்தைவாளினு, லறுத்
துதிரப்புனல்சுவைத்திட்டாவியைப், பறித்திடுவேனெனப்பகர்ந்திட்டாளரோ. ()

நாலிருதோளுடைநங்கைதோன்றன்முன், வாலுனைமடங்கலினிருந்தன்மாண்
பொரீஇப், பாலுறுதிரைக்கடற்பரப்பைவிட்டக, லாலமதாமெனவார்த்திட்டேகி
னாள். (ககஎ)

ஆர்த்திடுசண்டிகையங்கைதன்னிலோர், கூர்த்திடும்வாட்படைகொண்டுகொம்மெனத், தீர்த்தனுக்கினியதோர்செம்மணிற்புறந், தார்த்தடந்தேர்மிசைத்தனிவந்தெய்தினாள். (௧௧௮)

நோக்கினன்மொய்ம்பினாணாண்மைபூண்டுளான், றுக்கணங்காமிவடன்னதாவியை, நீக்குதல்செய்வதுநீர்மைத்தன்றெனாத், தூக்கினனவள்வலிதொலைக்கவுன்னுவான். (௧௧௯)

இடித்தெனவுரப்பினனெண்கைதன்னையு, மொடித்தனனுமெனவொருகையாலுறப்,பிடித்தனன்மற்றொருபெருங்கையாலுரத், தடித்தனன்காளிவீழ்ந்தவசமாயினாள். (௧௨0)

கரங்கொடுசேவகன்கல்லென்றெற்றலு, முரங்கிழிவுற்றனளுமிழ்ந்தசோரிநீர்
தரங்கமதெறிகடறன்னைப்போன்றுலா, யிரங்கியதவடுயர்யாவர்கூறுவார். (௧௨௧)

எண்கையுமொருகையாலேந்தல்பற்றியோ, ரொண்கையினீலிதனுரத்திலெற்றலு
மண்கிழிவுற்றனவரைகள்கீண்டன, விண்கிளரண்டபித்திகையும்விண்டதே. ௧௨௨

திரைபெறுகடலெனக்கான்றசெம்புனல், வரைபெறுதனதுமெய்மறைத்தலாற்றுயர்க், கரைபெறலில்லவள்காளியென்றமுன், னுரைபெறுபெயரையுமொழிவுற்றுளரோ. (௧௨௩)

இவ்வகையவசமாயிம்பர்வீழ்ந்தபி, னைவகையுணர்ச்சியுமறுதியானவுஞ் [றாள்.
செவ்விதுதொன்மைபோற்சேரச்சூர்மகள், வெவ்வலியிழந்துகண்விழித்துவிம்மி

ஆண்மையின்மேலவனகலத்தெற்றிட, வேண்மையும்வீரமுமிழந்துவீழ்ந்தது
நீண்மயலானதுநினைந்துநெஞ்சிடை, நாண்மலிவுற்றனணடுங்குமாவியாள். (௧௨௫)

அந்தமிலறுமுகத்தமலனேவலால், வந்தவனெடுபொரின்வாகையெய்துமோ
புந்தியிலாதிவட்புக்கனன்னெனாச், சிந்தைசெய்தெழுந்தனள்வன்மைதீர்ந்துளாள்.

இகழ்ந்தவருரத்தினையிகழ்ந்துகூர்நகத், தகழ்ந்துயிருண்டிடுமணங்குதேர்மிசைத்
திகழ்ந்தனனின்றிடுதிறலினான்றனைப், புகழ்ந்தனளினையனபுகல்வதாயினாள். ௧௨௭

கன்றியகற்புடைக்கனலிமாமுக, னின்றனையருச்சனையியற்றியேத்தியே
யொன்றலவுயிர்ப்பலிவுதவிவேண்டினு, னன்றியதயர்த்திலனுனிங்கெய்தினேன்.()

உன்னுடைவன்மையுமுனதுவீரமுஞ், சின்னமுமுணர்ந்திலன்செருவின்முந்துறீஇ
நின்னுடனிகலியிந்நிலைமையாயின, னின்னினியேகுவனிருந்ததொல்லிடை. ௧௨௯

கறுத்தினிவல்லையிற்கனன்முகத்தனை, யொறுத்துயிருண்குதியொழிந்துளாரையு
மறுத்தனைநிற்குதியலரிதன்னைமுன், செறுத்தவன்றன்னையுமடுதிசெம்மனீ. (௧௩0)

அடையலர்தம்மைவென்றுறுமாமுக, முடையவன்கருணைபெற்றுவகைமேவுதி
நெடிதுபல்லூழியுநீடிவாழ்தியாற், கடைமுறையிவையெலாங்காண்டிநீயென்றாள்.

இத்திறம்யோகினியிசைத்துவெஞ்சமர், வித்தகன்விடைகொடுமீண்டுகோளரிச்
சித்திரவெருத்தமேற்சேர்ந்துதொல்படை,மொய்த்திடப்போயினண்முந்துவந்துழி.

வேறு.

சண்டிகைபோந்தகாலைத்தழன்முகனனையவெல்லாங்
கண்டனன்வெகுண்டுநன்றிக்கள்வனதற்றலென்னாத்
திண்டிறலாற்றல்சான்றுசேண்கிடந்துருமுக்கான்று
கொண்டலதெழுந்தாலென்னக்கொம்மெனவெழுந்துசொல்வான். (௧௩௩)

Digitized By Roja Muthiah Research Library

கொன்றுயிர்பலவுநுங்கிக்குருதியும்வடியுமாந்தி
யொன்றுதன்னைகடுதூராதுலப்புறுப்பசிநோய்மிக்குச்
சென்றிடுகாளியாலோதெவ்வர்தஞ்செருவையான்முன்
வென்றனன்சூரன்சேய்க்குத்துணைகளும்வேண்டுமோதான். (௧௫௪)

சூலமுந்தண்டும்வாளுஞ்சுடர்மழுப்படையுஞ்சீற்றக்
கோலமுங்கொண்டுபொங்கிற்கூளிகள்சூழவைகு
நீலிதன்வன்மைகாண்பானினைந்திவண்விளித்ததன்றி
வேலவன்படையையன்றுள்வெல்லுமென்றுளங்கொண்டேனோ. (௧௫௫)

வாவியுங்குளனும்பொய்தீர்நதிகளுமற்றுமெல்லாந்
தூவுநுண்பனியாலன்றேதளும்புவவஃதேபோலத்
தேவரையேவல்கொண்டசிறப்புடைத்தமியேனிங்ஙன்
மேவியகாளியாலோவெய்துவன்வீரத்தன்மை. (௧௫௬)

இன்னினிக்கணமதொன்றினிளவலாருயிரைவௌவி
முன்னுறவகன்றவொற்றன்முரண்வலியதனைச்சிந்தி
யன்னவனாவிகூற்றுக்கடிசிலாவளிப்பனல்லான்
மன்னன்முன்போவதில்லைவஞ்சினமிஃதேயென்றான். (௧௫௭)

கனன்முகனினையமாற்றங்கழறியேயவுணத்தொல்பே
ரணிகம்வந்தயலினீண்டவாழியந்தேரிற்சென்று
வனைதருசிலையொன்றேந்திவன்மையால்வாங்கிநூறு
முனையிரும்பகழிவீரமொய்ம்பன்மேற்றூண்டியார்த்தான். (௧௫௮)

கொடுந்தொழிலாளன்செய்கைகுரைகழல்வீரன்காணா
முடிந்திடவந்தாய்போலுமுயற்சியீதழகிதென்னா
நெடுந்தனிச்சிலைகாலூன்றிஞெரேலெனவளைத்துத்தானு
மடுந்திறற்கணைநூறோச்சியறுத்தனனவுணன்வாளி. (௧௫௯)

வேறு.

அறுத்தபொழுதத்திலவுணர்க்கரசன்மைந்தன்
மறத்தினெடுநூறுசரம்வாலியனபூட்டிச்
சிறப்புடையசெம்மலுறுதேரினையழித்துக்
குறித்தவிறல்கொண்டுசமர்வால்வளைகுறித்தான். (௧௬௰)

தேரழிதலும்வெகுளிசெய்திளவலீரேழ்
கூரியநெடும்பகழிகொம்மெனவிடுத்தே
யாரழன்முகத்தவுணனங்கையிடைகொண்ட
மூரிவரிவெஞ்சிலைமுரித்தமர்விளைத்தான். (௧௬௧)

வில்லதுமுரிந்திடலும்வேறொர்சிலைவாங்கிக்
கல்லெனவெயிற்றணிகறித்திவனையின்னே
கொல்வனெனும்வெய்யமொழிகூறிமணநாறு
மல்லிமலரோன்படையையண்ணன்மிசையுய்த்தான். (௧௬௨)

அத்தகைமைநோக்கினனயன்படையையானு
முய்த்திடினெனக்குவருமூதியமெனென்னாச்
சித்தமுறுபூசனைசெலுத்திவிறல்வீர
பத்திரநெடும்படையொர்பாணிகொடுவிட்டான். (௧௬௩)



Digitized By Roja Muthiah Research Library

வாரிதிவளாகமலைரமாத்திரையிலுண்ணும்
வீரனெடுவெம்படையிரைந்துபடர்காலை
நாரணன்மகன்படைநடுங்கிநனிதாழா
யாருநகைசெய்திடவிரிந்துளதையன்றே. (கசச)

அன்னமிசையோன்படையழிந்திடலும்வீரன்
றன்னதுநெடுங்படைதடுப்பில்வகையேயி
வன்னிமுகனுவிகொடுமொமுடிகடள்ளி
மின்னுவெனவீரனிடைமீண்டுபடர்ந்தன்றே. (கசரு)

வேறு.

வெய்யவக்கனன்முகன்விளிந்துவீழ்ந்தன, ஞெய்யெனவச்செயலும்பர்நோக்குறு
வையயனைவாழ்த்திநின்றலரின்மாரிதூய், மெய்யணிதுகிலெல்லாம்வீசியாடினூர். கசசு

புறந்தருகலிங்கமும்பூணுநாணமுந், துறந்தனருவகையாற்சொல்லுமாடலர்
சிறந்துடனூர்த்தளர்தேவரற்றைநாட், பிறந்திடுமைந்தர்தம்பெற்றியெய்தினூர். ()

எரிமுகனவ்விடையிறப்பவாங்கவன், பொருபடைவீரர்கள்புலம்பியாமெலா [ர்.
மொருசிறுதூதனுக்குடைதுமோவெனுச், செருவினைக்குறித்தனருலப்பிறீமையோ

முற்படுந்தலைவர்கண்மூவெண்ணுயிரர்,பொற்புடையினையவன்புடையிற்சுற்றிடாக்,கப்பணந்திகிரிகோல்கணிச்சிவேல்கதை,சொற்படுபடையெலாஞ்சொரிந்துபோர்ச்செய்தார். (கசகூ)

செய்ததுநோக்கியேசெயிர்த்துச்சேவகன், கைதனிலிருந்ததோர்கார்முகம்வளைஇ
மொய்தினிலாயிரநூறுகோடிகோ, லெய்தனன்றெழித்தனனவுணரேங்கவே. ()

இத்திறங்கணமதொன்றிடையறுமலே, கைத்தனுவுமிழ்ந்திடுங்கணையின்மாமழை, யுய்த்தனன்றிரிந்தனனுலகம்பேர்த்திடு, மெய்த்திறன்மருத்தினும்விரைவின்மேவியே. (கருக)

எறிந்திடுபடைகளுமெய்தகோல்களு, முறிந்தனதுணிந்தனமொய்ம்புமார்பமுஞ்
செறிந்திடுகரங்களுஞ்சிரமுந்தாள்களுந், தறிந்தனவவுணர்தந்தலைவர்வீடினூர். கருஉ

வேழமும்புரவியுந்துணிந்துவீழ்ந்தன, வாழியந்தேர்நிரையனைத்துமிற்றன
சூழுறுமவுணருந்தொலைந்துபோயினூர், பாழியந்தோளினுன்பகழித்தன்மையால். ()

பாறொழுக்குற்றனககனம்பார்மிசை, வீறொழுக்குற்றதொல்படைகள்வீந்திடச்
சேறொழுக்குற்றனதசைகள்செம்புன, லாறொழுக்குற்றதாலமர்செயாறெலாம். ()

பலவுடைநெடுந்தலைப்பதகர்துஞ்சலு, நிலவுடையெயிற்றிடைநிவந்ததீக்கலல்[வே.
புலவுடைவிழுநிணம்புழுக்கல்செய்ததாற், கலிகெழுகொடியொடுகணமுந்துய்க்க

மாமையிற்செறித்தனவடிவின்மால்கரி, தாமயிர்ப்புறவடிதடக்கைவன்றலை
யேமயிர்த்தோகையோடிற்றுநீங்குற, வாமையிற்போவனகுருதியாற்றினே. கருசு

கார்செழுமவுணருட்கலந்தசோரியின், ஞரைகணீத்தமாயெழுந்துதக்கவர்
பேருடலுட்கொடுபெயர்ந்தபின்னுற, வாரிதிவடலையுண்டுல்வுமாண்டுபென்.(கருஎ)

கரியினும்பரியினுங்கால்கொண்டோங்கிய, குருதியம்புனன்மழைகுலாவும்வைகலின், வரைதொறும்வரைதொறுமாறுமாறெழா, வருவிகள்சென்றென்வழுங்கிச்செல்லுமால். (கருஅ)

Digitized By Roja Muthiah Research Library

பீளிகள்குருதிநீர்வெள்ளமாயதில், வாளுறுவேல்களும்வாளுமற்றவுங்
கோளுறுமயிலையிற்குலவக்கண்டுதங், கேளிரேன்றெதிர்வனகெழுமவேலைமீன். ()

அழல்பொருசெக்கர்வானகத்தின்மாமதிக், குழுவினர்சேர்த்துறக்குலவுங்கொள்கைபோ, னிழல்பொறிகவிகைதந்நெடியதாளற, வொழுகியகுருதியினொருங்குசெல்வவே. (௧௬௦)

அலைகெழுகுருதியாறழுங்குற்றேகலாற், றலைகளுமுடல்களுந்தசையும்வாரிடக்
கொலைபுரிமறவர்தங்குடரிற்பின்னியே, வலையெறிந்தீர்த்தனர்வயவெம்பூதரே. ()

ஞாளிகடிரிவதோர்மருங்குசாமவெங், கூளிகடிரிவதோர்மருங்குகூளியா
மீளிகடிரிவதோர்மருங்குவென்றிடுங், காளிகடிரிவதோர்மருங்குகண்ணெலாம். ()

தேரிடையுலந்தவன்சிரத்துந்துஞ்சிய, சாரதிதலையினும்புரவிதம்மினுஞ்
சோரிகளிழிவனதொலைந்தவையமு, மாருயிரெய்தியாங்கதுபெற்றென்னவே. ()

சினவலியவுணர்தந்திகிரிபூண்டிடு, துனைவருகேசரிதுஞ்சச்சோரிநீர்
கனைகடலிடைசெலக்கண்டுதேரைதம், மினமெனவெதிர்தழீஇயிரங்குகின்றவே. ()

விரிந்தவித்திறமியல்வெங்களத்திடை, யிரிந்திடுதானவரிறந்துநீங்கினர்
கருந்தலையடுக்கலிற்கழல்கடாக்குறத், திரிந்தனரயர்ந்தனர்சிலவர்துஞ்சினர். ௧௬௫

மழுக்களுமயில்களும்வாளுமுத்தலைக், கழுக்களுங்கால்படக்கவலுற்றார்சிலர்
விழுக்கொடுவள்ளுரம்விராயபூழியி, லிழுக்கினரழுந்தினரிறந்துற்றார்சிலர். (௧௬௬)

பாய்ந்திடுகுருதியம்பரவையாற்றிடை, நீந்தினரொருசிலர்நீந்திக்காலெழா
தோய்ந்தனரொருசிலரோடினார்சிலர், மாய்ந்தனரொருசிலர்மாயவீரரே. (௧௬௭)

காண்டொறுங்காண்டொறுமவுணர்கண்ணிடை, யீண்டியவெள்ளிடையிளவன்மேனியாய், நீண்டதொர்பையுளாய்நிகழவேங்கியே, மாண்டனர்சிலர்சிலர்வாய்வெரீஇயினார். (௧௬௮)

துப்புறுபூதர்பின்றொடரத்தாடொழா, மெய்ப்படைமுழுவதும்வீசியாயிடைத்
தப்பினரிறுதியிற்சாய்ந்துமாய்ந்தவர், கைப்படைவாங்கியேகடித்துற்றார்சிலர். ௧௬௯

எண்ணமில்படைக்கலம்யாவும்வீசியே, தண்ணுமைவருதுடிதக்கைபேரியாம்
பண்ணமையியம்பலபற்றியார்த்திடா, நண்ணினர்நடுவனைநடுக்குந்தானவர். (௧௭௦)

பரிக்குவையரிக்குவைபடைத்தமாமுகத், திரக்கமிலவுணர்களிரத்தநத்திற்றம
நெருக்குறுசிரத்தொகைநீட்டிமெய்யெலாங், கரக்குநரொருசிலருயிரின்காதலார். ()

குளுறுபோரிடைத்தொலைந்துபோகியே, நீளிகலுறுகிலாநிருதர்சம்புவா
யாளுடைவயவருனருந்தவாயிடை, ஞாளிகள்கவர்தலுநடுக்குற்றார்சிலர். (௧௭௨)

தீயினைமுருக்குறுந்திறல்வெம்பூதர்க, டாயினர்தொடர்தலுஞ்சாய்ந்துளோர்சிலர்
நாயினதுருக்கொடுநடக்கஞாளிக, ளாயினவடர்த்தலுமஞ்சினார்சிலர். (௧௭௩)

விசையொடுசாரதர்விரவவேற்றுரு, விசைகிலரிறந்தவரினத்துண்மேயினார்
தசைகவர்குமலிகடலைச்சென்றீர்க்கவு, மசைவிலராகியேயழுங்கினார்சிலர். (௧௭௪)

புண்டருகுருதிநீர்புறத்துச்சிந்திட, மண்டமர்தன்னிடைமாண்டகேள்வரைக்
கண்டிலர்சிரந்தெரீஇக்கவன்றரற்றிய, வொண்டொடிமாதரினுலவினார்சிலர். ௧௭௫

Digitized By Roja Muthiah Research Library

சூர்த்திடுநோக்கொடுந்துண்ணென்றெய்தியே, யார்த்திடுபூதர்வந்தனுகவாய்வெ ரீஇ, வேர்த்துடல்பனிப்பவீழ்ந்துதைத்தும்வெய்யதாள், பேர்த்திடலின்றியும்பே துற்றூர்சிலர். (கஎசு)

அழிதருவோர்தமையவரின்முன்னரே, கழிதருமுயிரினர்கணங்களாகிவின் வழிதருசெலவினில்வந்துபற்றியெம், பழிதருவீரெனப்பணிக்கின்றூர்சிலர். (கஎஎ)

வல்விரைபறவையைநோக்கிமற்றவட், செல்லுதிர்பூதர்கடெரியக்கண்டிரே லில்லையிக்கெறிதனிலிறந்துளோரெனச், சொல்லுதிர்நீரெனத்தொழுகின்றூர்சிலர்.

காசினியதனிடைக்கவிழ்ந்தகேள்வரை, யாசையினெடுதழீஇயலமந்தேங்கிய பாசிழைமாதரிற்பரவப்பூதர்க, ளூசியீர்ந்திடுதலுநாணுற்றூர்சிலர். (கஎகூ)

அடல்கெழுதூதனலவுணர்யாவருங், கெடுவதுதிண்ணம்யாங்கெடுகிலோமெனக் குடர்கெழுசோரியங்குடிஞைக்கண்ணுறீஇக்,கடலுறுவரையினுட்கலந்துளார்சிலர்

சாரதர்குழுவினைத்தப்பித்தத்தம, தாருயிருய்ந்தபினங்கண்மாண்டவர் சோரியதுரமிசைதுதையப்பூசியே, வீரர்களிவரெனமேவுவார்சிலர். (௧அ௧)

இவ்வகைதுஞ்சினரன்றியெண்ணிலா, வெவ்வலியவுணர்கள்வெருவியோடலு மைவருநெறிமுயன்மகேந்திரப்புரங், கௌவையினரற்றினகடலுடைந்தபோல்.()

அங்கதுபொழுதினிலாடன்முற்றியே, செங்களநடுவுறுசெம்மறன்புடை யெங்கணுநீங்கியவிலக்கவேந்தருஞ், சங்கையில்பூதருந்தலைச்சென்றீண்டினூர். ()

எரிந்திடுகனன்முகனெய்தவெஞ்சர, முரந்தனையகழ்ந்திடவொருதன்வன்மைபோ யரந்தையின்மூழ்கியேயழிந்தவீரமா,புரந்தரனெழுந்தொருபுடையிலெய்தினன்.()

புண்டரீகறணிபுனிதன்பாங்கரின், மிண்டினரிவரெலாமேவிநிற்றலு மெண்டகுபிளையவரெழுவர்தம்மையுங்,கண்டிலன்கவன்றனன்கழறன்மேயினன்.

ஆண்டகைவீரர்களடையலார்க்கெதிர், மூண்டமரியற்றியமூவர்நால்வரு [ன். மாண்டனரேகொலோமயங்கினூர்கொலோ,யாண்டவர்கிடந்தனரியம்புவீரென்று

என்றலுமுக்கிரனென்னுஞ்சாரத, னுன்றுணையார்களையொன்னலன்மகன் [யால். கொன்றனனவருயிர்கூற்றும்வெளவினன், பொன்றியவைப்பினைப்புகலக்கேட்டி

இம்பரின்முன்னுறவியம்புமோசனை, யைம்பதிற்றிரண்டின்மேலாலமொன்றுள தும்பருஞ்சிறிதெனவோங்குமாயிடைத்,தம்பியர்மாய்ந்தனர்சரதமேயென்றூன்.()

உக்கிரனினையனவுரைப்பயாரினு, மிக்கவன்விழிவியேவிழுமநோயுறீஇப் பக்கமதாயினர்படரவேகினன், றெக்குறுமினைஞர்கடுஞ்சுமெல்லைவாய். (௧அகூ)

வேறு.

ஒசனைநாறுநீங்கியொலிகழல்வீரனெய்தப்
பாசிலைவடத்தின்பாங்கேபரிவுடைத்தம்பிமார்கள்
காய்சினவங்கிசெங்கண்கான்றிடக்களேவரத்து
வாசமென்பள்ளிமீதுமாய்ந்தனர்கிடப்பக்கண்டான். (௧கூ0)

கண்டனன்விழிகள்செந்நீர்கான்றிடவீழ்ந்துபுல்லிக்
கொண்டனனிளைஞர்தம்மைக்கூவினனரற்றிச்செவ்வாய்
விண்டனனுயிர்த்துமேனிவியர்த்தனன்வீரனுவி
யுண்டிலதென்னச்சோர்ந்தானுணர்ந்துபின்னிரங்கலுற்றூன். (௧கூ௧)

Digitized By Roja Muthiah Research Library

தம்பிமீர்தம்பிமீரென்றுரைத்திடுந்தழுவிக்கொள்ளீ
ரெம்பிமீரென்னுமையோவெங்ஙனஞ்சென்றீரென்னும்
வெம்பினனென்னுமென்னைவிட்டகன்றீராவென்னு
நம்பினனும்மையென்னுநானுமக்கயலோவென்னும். (௧௯௨)

அங்கிமாமுகனேநும்மையடல்செயவல்லானென்னு
மிங்குநீர்முடிந்தீரென்றாலென்செய்வன்றமியேனென்னுந்
துங்கவெம்படைகளேந்திச்சூழ்ந்துடன்றுணையாய்வந்த
வுங்களைத்தோற்றியானேயுய்ந்தனன்போலுமென்னும். (௧௯௩)

அம்மவோவிதியேயென்னுமாதகாதுமக்கீதென்னு
மிம்மெனச்செல்லாதின்னுமிருத்தியோவுயிரேயென்னுஞ்
செம்மைகொள்குணத்தீராடுபிறப்பரேசிலரிங்கென்னு
மெம்மையாளுடையவள்ளற்கென்னினியுரைக்கேனென்னும். (௧௯௪)

சீரிளமைந்தர்துஞ்சச்சிலையொடுதிரிவேனென்னி
னாரெனக்கொப்புண்டம்மாவழகிதென்னாற்றலென்னுஞ்
சூரர்தங்கிளையையெல்லாந்துண்ணெனச்சென்றுசுற்றி
வேரொடுமுடித்தாலன்றியகலுமோவெகுளியென்னும். (௧௯௫)

துப்புடைவில்லின்கல்வித்துணைவர்களீண்டுதுஞ்ச
வெப்படைதூண்டினானோவெரிமுகத்தவுணனென்னு
மப்படைநல்குதேவரார்கொலோவறியேனென்னு
மெய்ப்படைவேலினாருக்கடியரோவினையேமென்னும். (௧௯௬)

அடுவனோவவுணர்சூழ்வையென்றிடுமனவியுன்னை
விடுவனோவிவ்வூரென்னுமெந்தைதன்படையைச்சூர்மேல்
விடுவனோவெனனுமந்தோவஞ்சினேன்வேலுக்கென்னும்
படுவனோதுயரத்தென்னுஞ்செய்வதென்பாவியென்னும். (௧௯௭)

ஒன்றியதுணைவர்தம்மையொருங்குடன்படுத்தநீரா
லின்றமர்செய்துபட்டவெரிமுகன்றன்பாலன்றோ
வென்றியதென்னுமென்றன்வீரமாசுண்டதென்னும்
பொன்றிலனெளியன்போலப்புலம்பினன்வறிதேயென்னும். (௧௯௮)

வில்லினைப்பார்க்குஞ்செங்கேழ்வேலினைப்பார்க்குமேனை
மல்லலம்படையைப்பார்க்கும்வாளியைப்பார்க்கும்வீரச்
சொல்லினைப்பார்க்கும்வந்துசூழ்தருபழியைப்பார்க்குங்
கல்லெனவெயிற்றின்பந்திகறித்திடுங்கவலுமன்றே. (௧௯௯)

அருந்துயரெய்தியிவ்வாறழுங்கினோனெளியனாகி
யிருந்தனனல்லனேங்கியாதுமோர்செயலுமின்றி
வருந்தினனல்லன்கானின்மருந்தினுக்குழன்றானல்லன்
விரைந்துதன்னிளையர்தம்மையெழுப்பவோர்வினையங்கொண்டான். ௨00

நாற்றலையுடையவண்ணனாரணன்முதலோர்நல்க
வேற்றிடுபடையிலொன்றையிளையர்களெழுவர்மீது
மாற்றலன்விடுத்தானென்னின்மற்றவராவியுண்டோன்
கூற்றுவனன்றோவென்னாக்குறித்திவைகூறலுற்றான். (௨0௧)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

வானோடாவிக்கின்பம்விரும்பியுழல்கின்ற
வானோரேபோற்றானவரேபோல்வழிசெல்லா
வேனோரேபோலெண்ணினனைகொல்லெமராவி
தானோவுண்பான்கூற்றுவனென்னுந்தமியோனே. (௨௦௨)

விரியுமுணர்ச்சியைமாற்றுவதல்லால்விண்ணோர்க
ளொருபடைதானுநங்களினத்தையுயிருண்ணா
தெரிமுகனென்பானட்டனனன்றேயிளையோரைத்
தரியலனுகிக்கொன்றவளம்மாதானன்றே. (௨௦௩)

போதத்துக்கோர்வைப்பிடமாயோர்பொறியாகி
மூதக்கோரெண்டாரகமூலமொழிகேட்டு
வேதத்தோனைவெஞ்சிறைபூட்டிவிதியாற்று
மாதித்தேவன்றம்பியரென்பதறியானோ. (௨௦௪)

ஆறுட்பட்டவையிருகாலத்தரனுமங்
கூறிட்டோவாச்சேயுயிர்வவ்வக்குறுகுங்காற்
சீறித்தாளாற்றாக்கியசின்னஞ்சிறிதுந்தான்
மாறிற்றில்லைக்கூற்றதுதானுமறந்தானோ. (௨௦௫)

சீலந்தன்னாலோர்விழுபோதைச்சிவனுக்கென்
றாலங்கொண்டேவிண்ணிடைபுக்கோனுயிர்வௌவிச்
சூலந்தன்னிற்கண்ணுதலேற்றச்சுழலுற்றுக்
காலன்பன்னாட்டேங்கியவண்ணங்காணானோ. (௨௦௬)

நஞ்சிற்றீயன்வேட்டுவனன்றோர்நாண்முற்றுந்
துஞ்சற்றூணற்றரன்மிசைவில்வந்தூர்த்தோனை
வெஞ்சொற்கூறிப்பற்றலும்யாங்கண்மிகவெற்ற
வஞ்சித்தன்றூதாயினர்போனதறியானோ. (௨௦௭)

அக்காலத்தினெல்லையின்மைந்தற்கரவென்றே
முக்காலோதித்தீமைகுறித்தேமுடிவோனை *
மெய்க்காலன்றூதாயினர்பற்றவிடுவித்தே
யிக்கால்கொண்டேயவரையுதைத்தேன்யானன்றே. (௨௦௮)

மெய்ச்சியல்கொள்ளாத்துன்மதியானுமிகவெய்ய
துச்சகனுமேனையராலுந்தொன்னாளி
னிச்சகமாற்றுந்தன்னிறைநீங்கியிடரெய்தி
யச்சமுமுந்தேபட்டதுசண்டனயர்த்தானோ. (௨௦௯)

---

* முன்னொருகாலத்திலே வேடனொருவன் சிறிதும் இரக்கம் இன்றி, வழிச்செல்வாரைப்பிடித்தடித்து, அவரிடத்துள்ள பொருளைப்பறித்து, கொலைசெய்து திரிந்தான். பின் அவனுக்கு மரணகாலஞ் சமீபித்தபொழுது புதல்வன் அவனிடத்திற்போய்ப் பிதாவே, நீ இறக்கப்போகின்றாய், இனி நான் செயற்பாலன எவை என்று வினவுழி, அந்த வேடன் தனக்குக் கைவந்ததொழில்களையே அப்புதல்வனுஞ் செய்யவேண்டும் என்னும் நோக்கமுடையனாய், பிடி அடி கொல் என்பனவற்றை உணர்த்தும் ஆகர பிரகர சங்கர என்னும் மொழிகளை அவனுக்குச்சொல்லி இறந்தான். அம்மொழிகள் தீமை குறித்தனவாயினும் ஹர சப்தம் அடங்கப்பெற்றமையால் அவன் யமபுரத்தை அடையாது கைலாசத்தை அடைந்தான். இச்சரித்திரத்தை உபதேசகாண்டத்திலே சிவநாமமான்மியத்திற்காண்க.

Digitized By Roja Muthiah Research Library

நீறுமுகத்தார்கண்டிகைபூண்டார்நிமலன்பேர்
கூறுமுகத்தார்தம்புடைசெல்லக்குலைகூற்ற
ஞறுமுகத்தானடியவராவியலைத்தானே
சேறுமுகத்தாழ்கரியையடாதோசிறுபுள்ளும். (உ௪0)

வேறு.

என்னுமாற்றங்களியம்பியேயிளையவனெழுந்து
பின்னர்யாத்திடுதூணியிலொருசரம்பிடுங்கித்
தன்னகங்கொடேயன்னதன்றலைதனிற்றரும
மன்னர்மன்னவன்கண்டிடவித்திறம்வரைவான். (உ௪௧)

வேலுடைத்தனிநாயகற்கிளையவன்விடுத்தேன்
காலநாடுறுகூற்றுவனென்பவன்காண்க
கோலவெஞ்சிலைத்துணைவர்தமாருயிர்கொண்டாய்
வாலிதோவிதுவிடுக்குதிகடிதெனவரைந்தான். (உ௪௨)

செந்நலங்கிளர்தன்னகத்தின்னவாதீட்டிப்
பொன்னெடுஞ்சிலைவாங்கியப்பகழியைப்பூட்டிப்
பன்னிரண்டுதோள்விமலனைமனங்கொடுபரவி
மின்னெனச்சென்றியமபுரம்புகும்வகைவிடுத்தான். (உ௪௩)

கரந்தைசூடுவான்றிருமகற்கிளையவன்கணைமுன்
விரைந்துதெண்கடலேழையுங்கடந்துவிண்ணோங்கி
யிருந்தமானசோத்தரகிரித்தென்புறத்தியம
புரந்தனிற்சென்றுமறலிதன்முன்புபோந்ததுவே. (உ௪௪)

தொடுத்தவக்கணையந்தகன்முன்புதுண்ணெனப்போ
யடுத்துவீழ்தலும்விம்மிதமெய்தியேயவன்சென்
றெடுத்துநோக்கினன்வீரவாகுப்பெயரிளவல்
விடுத்ததாகலுமுற்றுறவுணர்ந்தனன்விரைவில். (உ௪௫)

அயினெடுங்கணைப்பாசுரத்தகலமதுணர்ந்து
துயருழந்தஞ்சியீண்டிலரிளையவன்றுணைவர்
பயிலவெங்நனஞ்சென்றனரோவெனப்பார்த்தான்
கயிலையேகியேயிருப்பதாவுணர்ச்சியிற்கண்டான். (உ௪௬)

கண்டுதேறினன்கடாமிசையேறினன்கடுங்கால்
கொண்டதானைகள்சூறையங்காலெனக்குழுமப்
பண்டுதானுறைபதியினைநீங்கினன்படரா
வண்டர்நாயகன்கயிலையஞ்சாரலையடைந்தான். (உ௪௭)

ஆனகாலையிலாயிடைப்பொதும்பரொன்றதனின்
மானவேற்படையவுணர்தம்படைகளின்மாண்ட
சேனைவீரர்கள்சூழ்தரவெழுவருஞ்சிறந்து
கானவிஞ்சையர்பாடல்கேட்டிருப்பதுகண்டான். (உ௪௮)

தொழுதுமற்றவர்முன்னுறமறலிபோய்த்துன்னி
முழுதுணர்ந்துளீர்நுங்களைநாடுவான்முன்னே
னழகிதென்றிவணிருப்பதென்னென்னையுமயிர்ப்பா
னெழுவிருங்கடிதெழுவிரிப்பூதரோடென்றான். (உ௪௯)

என்றகாலையினெழுவருமெழுந்திருமருங்கு
நின்றபூதர்கள்யாவரும்போந்திடநீங்கி
யொன்றோர்மாத்திரையொடுங்குமுன்னவுணர்கோனுறையு
மன்றன்மாநகரடுகளம்புக்கனர்மன்னோ. (௨௨0)

புக்ககாலையினெழுவருந்தம்முடல்புகுந்தார்
மிக்கபாரிடத்தலைவர்கள்யாவரும்விரைவிற்
றொக்குவீழ்தருமியாக்கைகளுற்றனர்சுரர்க
ளக்கணந்தனிற்பூமழைதூவிநின்றார்த்தார். (௨௨௧)

இன்னவேலையினெழுவரும்பதைபதைத்தெழுந்து
முன்னவன்றனதடிக்கமலங்களைமுறையாற்
சென்னிதாழ்வுறவணங்கினர்செங்கையாலெடுத்துப்
பொன்னின்மார்புறப்புல்லினனெல்லைதீர்புகழோன். (௨௨௨)

புல்லினானிளவீரரைப்புயங்கமுண்டுமிழ்ந்த
வெல்லினானெனவிளங்கினானவுணரையினிநான்
வில்லினாலடல்செய்வதோவரிதெனவிறலுஞ்
சொல்லினான்மகிழ்வாயினான்புன்கணுந்தொலைந்தான். (௨௨௩)

எண்டகுந்திறலெழுவரும்பிறருமுய்ந்தெழுதல்
கண்டுவீரமாபுரந்தரனுங்கணத்தவருந்
திண்டிறற்புனையிலக்கருமுவகையிற்சிறந்து
கொண்டல்கண்டிடுசாதகம்போலுளங்குளிர்ந்தார். (௨௨௪)

அன்னதாகியவெல்லையிற்கூற்றனுமணிகந்
துன்னலாயிடைவந்தனனிளவலைத்தொழுது
மின்னுலாவியவேலினாய்தமியனைவெகுண்டாய்
முன்னிகழ்ந்திடுவரன்முறைகேளெனமொழிவான். (௨௨௫)

எழுதிறத்தருமிங்ஙனந்தம்முடல்விட்டுக்
குழுவினோடுபோய்க்கயிலையஞ்சாரலிற்குறுகி
வழிபடுஞ்சிலபூதருஞ்சுற்றிடவிருந்தா
ரழிபெருந்துயருழத்தலிற்றெரிந்திலையதனை. (௨௨௬)

அங்கமீதினிநீறுகண்டிகையினையணிந்தார்
தங்கள்பாலினுஞ்செல்லுதற்கஞ்சுறுந்தமியே
னிங்குநின்னினையாருயிர்கொள்வனோவெவரும்
வெங்கனற்பொறியுண்பரோபசிப்பிணிமிகினும். (௨௨௭)

வினையமுன்னிநீவிடுகணைநோக்கியான்வெள்ளித்
தனிவரைப்பெருஞ்சாரலிற்போந்துசாரதரோ
டுனதுதம்பியர்தங்களைவிளித்திவணுய்த்தேன்
முனிவுகொள்ளலையையவென்னிடையெனமொழிந்தான். (௨௨௮)

அந்தகன்மொழிவினவலுமையனுக்கிளவ
லந்துயர்க்கடல்சுவற்றினைகயிலையினமர்கள்
வந்ததன்மையைத்தேற்றிலமயங்கியீண்டுற்றும்
புந்திகொள்ளலையாவதுநீயெனப்புகன்றான். (௨௨௯)



Digitized By Roja Muthiah Research Library

புகலலுற்றபின்விடைகொண்டுகூற்றெனும்புத்தே
ளுவகைதன்னொடுதன்புரத்தேகினனென்னு
ரிகலைவெஃகியேபூதருந்துணைவருமேத்த
நிகரிலாதவனன்னதோர்களத்திடைநின்றான். (உ௩0)

நின்றுமற்றிவைநாடியவொற்றர்நீணகரிற்
சென்றுசூரனைத்தொழுதுநின்மதலைபோர்செய்து
வென்றிமொய்ம்பினன்விடுத்திடுவீரன்மாப்படையாற்
பொன்றினன்பொடியாகிவீழ்ந்தனனெனப்புகன்றார். (உ௩க)

வேறு.

அக்காலைதனிலவுணர்க்குளொலா, மிக்கான்புவியின்மிசைவீழ்ந்தயரா
வெக்காலுமுறாதவிடர்க்கடலுட், புக்கான்மெலிவோடுபுலம்புறுவான். (உ௩உ)

உண்ணேயமதாமுயிரேயுறவே, கண்ணேமணியேகனன்மாமுகனே
விண்ணேகினையோவிவண்மீள்கிலையா,லெண்ணேனுயிர்வாழ்க்கையையிங்கினியே

எந்தைக்கிளையான்றனையிந்நகரின், வந்துற்றதொர்தூதன்மலைந்திடலா
னொந்துற்றனைமெய்யுநுடங்கினையா, லந்தத்துயரிங்ஙனமாறியதோ. (உ௩௪)

தேறாவிகல்செய்திடுதேவரெலா, மாறாமகிழ்வுற்றிடவைத்துமனத்
தாறாவிடரென்வயினுக்கினையாற், கூறாயிதுவுங்குமரற்கியல்போ. (உ௩௫)

காரோதிமருங்குளகாரணனே, சீரோதிமனேதிருமாலவனே
நேரோதியவொற்றடநீமுடிகென், றாரோதினரோவதறிந்திலனே. (உ௩௬)

பொய்விட்டிடுதூதுவர்போரிடைநீ, மெய்விட்டனையென்றுவிளம்பினரா
னெய்விட்டவயிற்படைநேரலன்முன், கைவிட்டனையேகுவதன்கடனே. உ௩௭

தூதானவன்வாளிதுணித்திடவிண், மீதேகினையென்றுவிளம்பினரப்
போதேயதுணர்ந்துபொறுத்தனனு, லேதேதுபொறுதினமென்னுயிரே. (உ௩௮)

ஆவாதமியேனயர்வுற்றிடவே, மூவாவிளமைந்தமுடிந்தனையே
யோவாதுமகப்பெறவோங்குதவத், தேய்வார்களுமுண்டுகொலின்னமுமே. உ௩௯

எல்லேயுனைநம்புவதென்னகல்வாய், சொல்லேதுமுரைத்திலதுன்புறுவேன்
கல்லேபுரைநின்கவின்மார்பதனை, வல்லேதழுவிக்கொளவந்தருளே. (உ௪0)

செய்யாய்கரியாய்திருவேசிறுவா, மெய்யாருயிரேவிடலாயடல்வேற்
கையாயரசேகளிறேதமியேற், கையாவெனைநீயுமயர்த்தனையோ. (உ௪க)

என்றின்னனபன்னியிரங்குதலு, நன்றன்னையதோர்ந்துநடுக்கமுறாத்
துன்றுந்துயரக்கடறுன்னினளா, லன்றந்நகர்மிக்கதழுங்குரலே. (உ௪உ)

அக்கினிமுகாசுரன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,௫௪௬.

---



Digitized By Roja Muthiah Research Library

# மூவாயிரர்வதைப்படலம்.

ஆயதோர்காலைமூவாயிரத்தொகை, மேயினமைந்தர்கள்வினவியீதெலா
மாயிருவிசும்பினையளாவுமன்னவன், கோயிலையடைந்தனர்குழுவொடேகினார்.(க)

துன்னுறுபழியெனுஞ்சூறையெற்றிட, வின்னலந்தெண்டிரையெறியவைகிய,
மன்னியனோக்கியேவணக்கஞ்செய்தெழீஇ, முன்னர்நின்றினையனமொழிதன்மே
யினார். (உ)

உராமிகுமிலக்கருமொழிந்தவெண்மரும், பெருவிறன்மொய்ம்பனும்பிறருமுற்றுழி
யெரிமுகனொருவனையேவினாயவன், செருவினையவரொடுசெய்யவல்லனோ. (ங)

வலியவர்தம்மையும்வரம்பின்மிக்குறின்,மெலியவராயினும்வென்றுபோவரா,லு
லகினில்வழக்கமீதுணர்ந்திலாய்கொலோ, கலைபயில்கற்புடைக்காவன்மன்னனே.

ஒட்டலர்குழுவினுளொருமகன்றனை, விட்டனைமேல்வரும்வினையமோர்ந்திலை
யட்டுறுதாரினாயமரிலங்கவன், பட்டனனென்றிடிற்பரிதற்பாலையோ. (ரு)

நீமுகனொருவனுக்கிரங்கித்தேம்பலை, யாமுளமிரணியனின்னுமுற்றுளன்
றாமரைமகிழ்நனைத்தளைபடுத்திய, கோமகனுளனொருகுறையுண்டாகுமோ. (சு)

நண்ணலராயினோர்நலிந்துசெற்றிடக், கண்ணகன்றேர்பரிகளிறுதானவ
ரெண்ணிலமாய்ந்தவென்றிறையுமாகுலம், பண்ணலையையவப்பரிசுகேட்டிநீ. (எ)

ஏழெனுங்கடல்வறந்திடினுநின்னடி, சூழ்தருபடைக்கொருதொலைவுமில்லையா
லூழியுமழிகுறுவொருவநீயிவட், பீழையினுறுவதும்பெருமைப்பாலதோ. (அ)

நின்றுவானளவெலாநிவந்தமேருவாங், குன்றினோர்தினைத்துணைகுறைந்ததன்ன
தாற், றுன்றுநர்தானையுட்டுன்னலார்பொர, வின்றுகாருகவேயிறந்தசேனையே. ()

சிறந்திடுதலைமையுந்திறலுமாக்கமு, மறந்தனையாகியேவலியனாருநீ
யிறந்தவர்தமைநினைந்திரங்கற்பாலையோ, புறந்தருகின்றதோரமரர்போலவே.(க0)

அண்டர்தமுதல்வனையயனைமாயனைச், சண்டனைப்பவனனைத்தழலையாரையும்,
விண்டொடர்செலவினில்விரைந்துபற்றியே, கொண்டனைகின்றனங்குறிப்பதாகு
மேல். (கக)

விண்ணினையலைக்கவுமேருவெற்பொடு, மண்ணினைமறிக்கவும்வடவைமாற்றவு,
மெண்ணினையெனினும்யாங்களெந்தைநின், னுண்ணினைவின்படிமுடித்துமொல்
லையில். (கஉ)

பன்னுவதென்பலபணித்தியாங்கள்போய்,முன்னுறுபூதரைமுரண்கொள்வீரரை
ப், பின்னுறுகந்தனைப்பிறரையீண்டொரு, கன்னலின்வென்றுநின்கழல்கள்காண்
டுமால். (கங)

என்றிவைபுகறலுமிடுக்கணீங்கியே, நன்றிதுமைந்தர்காணடமின்போர்க்கென
வன்றிறன்முதல்வனைவணங்கிக்கைதொழா, நின்றவரேவருநீங்கினாரரோ. (கச)

வேறு.

வன்னச்சிலைகொண்டனர்வான்கவசந், துன்னுற்றிடுவித்தனர்தூணியினை
வென்னிற்செறிவித்தனர்வெவ்விரலிற், பொன்னூற்றிடுபுட்டில்புனைந்தனரால். ()

Digitized By Roja Muthiah Research Library

சீர்புக்குறுகைப்படைசெங்கைகொளாத், தார்புக்கமர்தும்பைதனைத்தரியா
மார்புக்கலமாக்கலன்வர்க்கமிடாத், தேர்புக்கனர்வந்தனசேனைகளே. (கசு)

சங்கங்கண்முழங்கினதண்ணுமைகோ, டெங்கெங்குமியம்பினவெண்படகந்
துங்கங்கெழுபேரிதுவைத்தனவா, லங்கங்குருமுற்றனவாமெனவே. (கஎ)

அவுணப்படையெண்ணிலவாற்றன்மிகுங், கவளக்கரியெண்ணிலகாமருசீ
ரிவுளித்தொகையெண்ணிலவீட்டமுறு, வுவணுற்றிடுதேருமுலப்பிலவே. (கஅ)

முழங்குற்றனபல்லியமும்மதமாத், தழங்குற்றனதேரொலிதந்தனவா
லழுங்குற்றனவாம்பரியாங்கவைகள், விழுங்குற்றனபாரொடுவிண்ணினையே. (ககூ)

நீடுற்றிடுதேர்களினீடுவெச, மாடுற்றனதாரிலளித்தொகுதி
பாடுற்றனவெங்கொடிபாறுமிசை, கூடுற்றனகூளிகுனித்தனவே. (உ0)

தொகையானைகடம்மொடுசூழ்கரியின், றகையாயினதானவர்தம்முருவஞ்
சிகையாரழலாயினசென்னியெழும், புகையானதுவானெழுபூழியதே. (உக)

இப்பான்மையதாகியெழுந்துபடை, யப்பால்விரவுற்றுழியன்னதுகண்
டொப்பாருமில்சூரனுகந்தருள்கூர், மெய்ப்பாலகர்சென்றனர்வெய்தெனவே. உஉ

மூவாயிரர்தானைகண்முந்துசெல, வேவாமெனவெம்மைகொடேகுதலுந்
தேவானவர்கண்டனர்சிந்தைவெரீஇ, யாவாவெனவஞ்சியழுங்கினரே. (உங)

அக்காலையின்மூவகையாயிரரு, மெய்க்கார்புவிசென்றுவிரைந்தனபோற்
றொக்காடல்புரிந்திடுதொன்னிலமேற், புக்காரதுகண்டனர்பூதர்களே. (உச)

எதிர்கின்றனர்பூதர்களேற்றனரான், முதிர்கின்றசினங்கெழுமொய்யவுண
ரதிர்கின்றனபேரிகளண்டமெலாம், பிதிர்கின்றனநேமிபிளந்ததுவே. (உரு)

வாள்கொண்டெறிகின்றனர்வல்லெழுவுத், தோள்கொண்டிடுவெங்கதைதூண்டினராற், றுள்கொண்டசிலைக்கணைதாஞ்சொரிவார், நீள்கொண்டலையன்னநிசாசரரே. (உசு)

சூலப்படைவிட்டனர்தொல்பரிதிக், கோலப்படைவிட்டனர்குந்தமுட
னாலப்படைவிட்டனராடுகுறட், சாலப்படைநின்றுதளர்ந்திடவே. (உஎ)

அடுகுற்றிடுசூலமடற்கதைக, டொடுகுற்றனர்நேமிகடேண்டிடுவார்
விடுகுற்றனர்வெற்பினைவெவ்வசுரர், படுகுற்றனரார்த்தனர்பாரிடரே. (உஅ)

வீழ்கின்றனபட்டிடும்வீரருடற், றாழ்கின்றனசெம்புனல்சாய்ந்தனவா
லாழ்கின்றனவேலையிலங்கதன்வாய், மூழ்கின்றனபேய்கொடிமொய்த்தனவே. ()

மறக்குஞ்சரமாயினவாம்பரிதேர், சிறக்கின்றனபட்டனதீயவுணர்
துறக்கினறனராவிதொலைந்திடுவா, ரிறக்கின்றகணங்களுமெண்ணிலவே. (ங0)

வேறு.

காணுவதுமூவாயிரர்கனல்வெஞ்சினந்திருகிக்
கோணுகமதெனவேயடுங்கொடும்பூதரைக்குறுகி
நீணுகமதெனவிண்டொடநிமிர்வெஞ்சிலைகுனியா
வேணுர்குணத்தொலிகொண்டனரிதுகொல்லுருமெனவே. (ஙக)

Digitized By Roja Muthiah Research Library

வாங்குற்றிடுசிலைதன்னிடைவல்லேசரமாரி
தூங்குற்றிடுபுயலாமெனச்சொரிந்தார்சொரிந்திடலு
மேங்குற்றனபூதப்படையிரிகின்றனவதுகண்
டாங்குற்றிடுகணவீரர்களவுணர்க்கெதிர்புகுந்தார். (௩௨)

தண்டத்தவர்தடந்தேரினைத்தகர்ப்பார்சிலர்தருவின்
றுண்டத்தவர்பரிமான்றொகைதொலைப்பார்சிலர்பாகன்
கண்டத்தலையுருளும்படியுதைப்பார்சிலர்கரத்தா
லண்டத்தினிலவர்தேரெடுத்தெறிவார்சிலரம்மா. (௩௩)

எழுக்கொண்டவர்தடமார்பினிலெறிவார்சிலரெரிவாய்
மழுக்கொண்டவர்சிலையிற்றிடவெறிவார்சிலர்வரையின்
குழுக்கொண்டவரணிகந்தனைக்கொல்வார்சிலர்வார்விற்
பழுக்கொண்டிடுகவடாமெனப்பறிப்பார்சிலர்முறிப்பார். (௩௪)

தாவாதுயர்கணவீரர்கள்சமரிவ்வகைபுரிய
மூவாயிரரெனுமைந்தர்கண்முனியாச்சிலைகுனியா
வோவாதுகமுடிவெல்லையிலுருமுச்செறிவனபோற்
றீவாயுமிழ்கனல்வாளிகள்சொரிகின்றனர்தெரிந்தே. (௩௫)

நேர்புற்றமர்புரிகின்றவர்நெடுந்தீவடிக்கணைகண்
மார்புற்றிடத்தடந்தோளெனும்வரையுற்றிடமுகத்தின்
சார்புற்றிடக்கரமுற்றிடத்தாளுற்றிடச்செந்நீர்
சோர்புற்றிடத்தளர்ந்தேமனந்துயருற்றிடநின்றார். (௩௬)

கலக்கித்தடமலர்சிந்திடுகளிறாமெனவடல்செய்
விலக்கற்கருமூவாயிரர்வில்லாண்மையும்வல்லா
ரலக்கட்படுகணவீரர்களழிகின்றதுநோக்கி
யிலக்கத்தரிலோராயிரரெரியாமெனச்செயிர்த்தார். (௩௭)

குன்றேயெனமிசைபோகியகொற்றப்புயத்தவன்முன்
சென்றேதொழுதிப்போரினைச்சிறியேங்களுக்கருண்மோ
வென்றேயுரைத்தனர்வேண்டலுமினையோனதற்கிசையா
நன்றேயமர்செயநீவிர்கணடமின்னெனவகன்றார். (௩௮)

விசயன்சயனிடபன்கரவீரன்னதிகோர
னசலன்னதிருணன்வாமனனனந்தன்னகளங்கன்
வசையில்புகழனகன்சதவலிமாருதன்வருணன்
சசிகண்டகன்முதலாயிரர்சமரின்றலைபுகுந்தார். (௩௯)

மூர்துற்றிடுமவர்யாவருமூவாயிரரெதிர்போய்க்
கந்தக்கடவுளையன்பொடுகருத்திற்றொழுதேத்தி
மைந்துற்றிடுதங்கார்முகம்வளையாவடிவாளி
யந்தத்தினின்முகிலாமெனவவர்மேற்சொரிந்தார்த்தார். (௪0)

ஆர்க்கின்றதோர்பொழுதத்தினிலவர்வில்வலிதன்னை
மூர்க்கன்றருமறமைந்தர்கண்மூவாயிரர்காணூக்
கூர்க்கின்றதோர்நெடுவாளிகள்குணிப்பில்லன்பூட்டிச்
சூர்க்கொண்டல்கடும்மோடமர்புரிந்தாலெனச்சொரிந்தார். (௪௧)

Digitized By Roja Muthiah Research Library

மூவாயிரர்விடும்வாளிகண்முடுகிக்கடிதேகித்
தாவாவிறலோராயிரர்தம்வாளியையடுமான்
மேவார்புகழ்விறன்மைந்தர்கள்வெவ்வாளிகளவுண
ரேவானவைதுணியும்படியெதிர்சிந்திடும்விரைவில். (சஉ)

இவ்வாறமர்புரிகின்றுழியிலக்கத்தவர்தேரைத் .
தெவ்வாகியமூவாயிரர்சிதைவித்தனர்சரத்தா
லவ்வாறுதெரிந்தேயெமரவுணன்றருமைந்தர்
கைவார்சிலையொடுதேரினையழித்தார்கணைதூண்டி. (சங)

இலக்கத்தவரெதிர்கின்றவரேமப்படுதேரைச்
சிலைக்கட்படுநெடுவெங்கணைசிந்திச்சிதைவித்தே
நிலக்கட்படமூவாயிரர்தொகைதன்னையுநிறுவி
மலைக்கட்படுமரிபோற்புடைவருதேரிடைப்புகுந்தார். (சச)

சிலைபோய்க்கடவிச்சென்றிடுதேர்போயடல்செய்யுங்
கொலைபோயனிகம்போயுளங்கொள்ளும்பெருமிதத்தி
னிலைபோய்வெகுளூற்றேபுவிநின்றோர்தமைப்பிணித்த
வலைபோகியமானேயெனவலைத்தார்வயமைந்தர். (சரு)

வேறு.

பொலம்படுதேரொடுபொன்றவன்மைபோய்த்,தலம்படுமவுணர்கடளர்தன்மேயினு
ரிலம்படைவந்துழியீதல்சான்றவர், குலம்படுதுயரொடுகுறையுந்தன்மைபோல். ()

பறித்தனர்வரைகளைப்பழுமரம்பல, முறித்தனர்வியர்ப்புறுமொய்ம்பர்தம்மிசைச்
செறித்தனரண்டமுந்திசையுஞாலமு, மறைத்தனரமரருமருட்கையெய்தினர். ()

தெவ்வரையாகியசிறார்கடோன்மரங், கைவரைவீசலுங்கணைகடூண்டியே
யிவ்வரையெனுங்கணத்திறுத்துவீட்டினு, ரைவரைவென்றிகொளனிகவீரரே. ()

அட்டடல்கொண்டிடுமவுணரிவ்வகை, விட்டனகிரியெலாங்கணையின்வீட்டியே [ர்.
நெட்டழற்பகழிகணிறத்தின்மூழ்குறத், தொட்டனருறப்பெலாந்துளைத்தன்மேயினு

துளைத்திடுகின்றுழிச்சோரிசாய்ந்திட, விளைத்தனரொருசிலரிரிந்திட்டார்சிலர்
களைத்தனரொருசிலர்கனன்றுநின்றுபோர்,விளைத்தனரொருசிலர்பிறங்கல்வீசுவார்.

தேவரைவென்றுளார்சிலவர்மால்வரைக், காவலர்தேரினைக்கரங்களாலெடா
மேவரும்புணரியுள்வீசியார்த்தன, ரோவெனவமரர்கள்புலம்பியோடவே. (ருக)

நீசர்களொருசிலர்நேமிசென்றிட, வீசியதேரினும்விரைவினீங்குறாக்
காசினிப்பாலராய்க்கார்முகம்வளைஇ, யாசுகமழைசொரிந்தார்த்துப்பொங்கினர்.()

மீண்டிடுபொருநர்கள்விசிகமாமழை, தூண்டிடவவுணர்கடொகையிற்பற்பலர்
காண்டலும்வடவையின்கணத்திற்சீறியே,யாண்டெதிர்புகுந்தனரசனியார்ப்பினர்

மறத்தொடுமருத்தினமரங்கொள்கொம்பரை, யிறுத்திடுதன்மைபோலெந்தைபி
ன்வரு, திறத்தவர்சிலைகளைச்செங்கைவன்மையாற், பறித்தனர்முறித்தனர்படியில்
வீசினர். (ருச)

பற்றலர்கொடுமரம்பறித்துச்சிந்துழிச், செற்றமொடெம்பிரான்சேனைவீரர்கண்
மற்றவரும்பதைபதைப்பமாண்கையா, லெற்றினரனையருமிடியிற்றுக்கினர்.(ருரு)

Digitized By Roja Muthiah Research Library

பரவியவுவரியும்பாலின்வேலையுந், திரைகளையெதிரெதிர்சிதறியார்த்தெழீஇப்
பொருதிறமேயெனப்பொருவின்மற்றெழுழி, லிருதிறவயவருமிகலியாற்றினர். ருசு

கொடுந்தொழிலாரொடுகொற்றவீரர்க, ளடைந்தனரிவ்வகையாண்மைப்போரி
லைத், தொடர்ந்துநின்றியற்றியேதொல்லைவன்மைபோ, யுடைந்தனர்விசயனங்
கொருவனன்றியே. (ருஎ)

இசையுறுதமரெலாமிரிந்துபோதலும், விசயனேயெனப்படும்வீரன்சீறியே, வ
சையுறுமவுணர்கோன்மகாரைக்கூற்றுவன், றிசையுறுநகரிடைச்செலுத்துவேனெ
ன்றுன். (ருஅ)

வேணியின்மதியுடைவிமலனல்கிய, வேணுறுவரிசிலையீறிலாதது
தூணியினிடையுறத்துன்னிற்றன்னதைப், பாணியிலெடுத்தனன்சமரிற்பாணியான்.

கரதலத்தெடுத்திடுகார்முகந்தனை, விரைவொடுகோட்டியேவிசயனென்பவ
ஞெருதனிமாருதத்தோடிச்சூழ்வுருச், சரமழைபொழிந்தனனவுணர்தங்கண்மேல்.

கரங்களையறுத்தனன்கழல்களீர்ந்தன, னுரங்களையறுத்தனனுயர்திண்டோளொடு
சிரங்களையறுத்தனன்சிலரைக்கானிடை, மரங்களையறுத்திடும்வண்ணமென்னவே

அற்றனவுறுப்பெலாமனுகித்தம்மில்வர், துற்றனகூடியவுணர்வுமாவியு, மற்றவ
ரெழுந்தனர்வாகைவீரன்மேற், பொற்றைகளாயினபொழிந்துபோர்செய்தார். ()

தலையொடுகரங்களுந்தாளுந்தோள்களு, மெலிவொடுதுணிந்தவர்மீட்டுங்கூடினு
ரலர்தருபங்கயத்தண்ணறன்னிடை, வலிதவர்பெற்றிடுவரத்தின்றன்மையால். ()

கண்டமுமொய்ம்பருங்கழலும்வாளியாற், றுண்டமதாயினர்தொக்குமேயினர்,
சண்டவெங்கால்பொரத்தணந்துசிந்திய, தெண்டிரைநெடும்புனன்மீட்டுஞ்சேர்தல்
போல். (சுச)

பன்னருந்திறலினன்பகழிபாய்தொறு, மன்னவன்மைந்தர்கண்மாண்டுதோன்
றுவார், மின்னதுவந்துழிவிளிந்துவெவ்விரு, டொன்னிலையெய்தியேதொடர்ந்து
தோன்றல்போல். (சுரு)

கையொடுசென்னியுங்கழலுமார்பமுங், கொய்யுமுன்றொன்மைபோற்கூடமை
ந்தர்க, ளொய்யெனவெழுந்தனருலகிற்றேர்வுறிற், செய்யுறுதவத்தினுஞ்சிறப்புண்
டாங்கொலோ. (சுசு)

கண்டனன்விசயனுங்காளையாவிபோய்த், துண்டமதாகியேதுஞ்சினுரெழீஇ [ன்.
மண்டமர்புரிவதுமனத்தின்விம்மிதங், கொண்டனன்பொருதிறல்குறைந்துநின்றன

அகத்திடைவிம்மிதமடைந்துநின்றுளான், றிகைத்தனன்வரங்கொலிச்செய்கை
யென்றனன், புகைத்தெனவுயிர்த்தனன்பொங்குகின்றன, னகைத்தனனிவர்செய
லன்றுநன்றெனு. (சுஅ)

தொட்டிடுபகழியாற்றுணிந்துபோரிடைப், பட்டவரெழுந்தனர்பகழிபின்னரும்
விட்டிடினுவதென்மேவலார்தமை, யட்டிடலின்றெனக்கரிதுபோலுமால். (சுகூ)

அன்னவர்தமையடலரியதாமெனி, ஞென்னலர்படையொடுமொன்றிச்சுற்றியே
பன்னெடுநாளமர்பயின்றுநிற்பினு, மென்னுயிர்கொள்வதுமெளிதன்றுலரோ. (எ0)

Digitized By Roja Muthiah Research Library

வென்றிலனிவர்தமைவென்றிலேனெனிற், சென்றெதிர்மாற்றலர்செருவில்வன்மைபோய்ப், பொன்றுதல்பெற்றிலன்பொதுவனோர்மகன், கொன்றிடுமுலவையின்கொள்கையாயினேன். * (௭௧)

பற்றலர்தங்களைப்படுப்பன்யானெனா, வெற்றிகொள்வானெனவிளம்பிவந்தயான்
செற்றிலனாகியேசிலையுங்கையுமாய்க், கொற்றவனோடுபோய்க்கூடலாகுமோ. (௭௨)

மாற்றலர்வரத்தினர்மாயப்பான்மைய, ராற்றவும்வலியரென்றறைந்துமீள்வனேற்
றோற்றனனென்றெமர்துறப்பரன்றியும், போற்றலர்விடுவர்கொல்புறந்தந்தேகவும்.

பித்தரின்மயங்கிலனுணர்வும்பெற்றுளே, னெய்த்திலன்வலியொடுமின்னுநின்றனன், வைத்திலன்புகழினைவசையொன்றெய்துவேன், செத்திலனிருந்தனன்செயலற்றேனென்றான். (௭௪)

விண்டினைமாறுகொள்விசயனிவ்வகை, யண்டருந்துன்புகொண்டகத்திலுன்னுழி, யுண்டொருசெய்கையானுய்யுமாறெனக், கண்டனன்றுயர்க்கடல்கடக்கும்பெற்றியான். (௭௫)

ஆறுமாமுகப்பிரானன்றியிவ்விடை, வேறொருதுணையிலைமெய்மையீதெனத்
தேறினனவனடிசிந்தைசெய்தனன், மாறிழியருவிநீர்வழியுங்கண்ணினான். (௭௬)

அண்ணலங்குமரனையகத்துட்கொண்டுழி, யெண்ணியவெண்ணியாங்கெவர்க்குநல்குவோன், விண்ணிடையொல்லையின்விசயனென்பவன்,கண்ணிடைத்தோன்றியேகழறன்மெயினான். (௭௭)

வேறு.

கேளிதுவிசயவொன்றார்கிளையினைமுடிப்பானுன்னித்
தாளொடுமுடியுங்கையுந்தடிந்தனைதடிந்ததெல்லா
மீளவுந்தோன்றிற்றன்றேமேவலர்பெற்றதோராய்
நீளமர்வயமின்றாகிநின்றனைதளரேனெஞ்சம். (௭௮)

ஏற்றபல்படைகடம்மாலிவர்தமைப்பன்னாணின்று
வீற்றுவீற்றுவையேனும்விளிகிலரொருங்குவல்லே
யாற்றல்சேர்படையொன்றுய்க்கினனைவருமுடிவரீது
நாற்றலையுடையோன்றொன்றனல்கியவரமதென்றான். (௭௯)

என்றிவையுரைத்துவள்ளலிம்பரையளித்தோன்சென்னி
யொன்றினைவாங்கியேனோருளமயலகற்றுமெந்தை
வென்றிகொள்படையைநல்கிவிசயனுக்களித்துமேவார்
பொன்றிடவிதனையின்னேவிடுகெனப்புகன்றுபோனான். (௮0)

தேர்ந்தனன்முருகன்வாய்மைசிறந்தனன்மகிழ்ச்சியுள்ளங்
கூர்ந்தனனுமலியூர்திகொற்றவெம்படையைவாங்கி
யார்ந்தநல்லன்பிற்பூசையாற்றினனதனையெல்லா
மோர்ந்தனனவுணர்தம்முளொருவனுன்மத்தனென்போன். (௮௧)

---

* பொதுவனோர்மகன்கொன்றிடுமுலவையின்கொள்கையாயினேன் என்பதற்கு- இடையன் வெட்டினமரம், பாதி ஈரமும் பாதி உலர்வும் ஆகிய இருநிலைமையுமுடைத்து. அதுபோல, நானும், பகைவரைவெல்லுதல் அவர்க்கு முதுகிடல் என்னும் இருநிலைமையில் ஒன்றைப் பொருந்தாது பொதுவில் நிற்கின்றேனெனப் பொருள்கொள்க. இக்கருத்துப்பற்றி அன்றே "இடைமகன்கொன்றவின்னாமரத்தனேன்" என்று பெரியாரும்பணித்தார்.

Digitized By Roja Muthiah Research Library

ஈண்டிவனமர்களெல்லாமிசைவரப்படையதொன்றான்
மாண்டிடவடுவான்போலுமற்றதன்முன்னர்மாயம்
பூண்டிடுபடையாலின்னோற்கிறுதியைப்புரிவனென்னா
வாண்டுதன்னுளத்திலுன்னியவுணனப்படையைவிட்டான். (௮௨)

மாயவள்படையைமுன்னம்விடுதலும்வள்ளனோக்கித்
தீயுமிழ்கின்றகாரிதிண்படைசெலுத்தச்சென்று
பாயிருள்பரந்துநேரும்படையினைத்தடிந்துமுப்பா
லாயிரர்தமையுஞ்சுற்றியடல்செய்துமீண்டதன்றே. (௮௩)

ஒருகணப்பொழுதின்முன்னரோராயிரமுப்பாலோருஞ்
செருநிலத்தவிந்தாரன்னசெய்கையைவிசயன்காணா
முருகனைப்பரவிநின்றான்முழுமதிதன்னைக்கண்ட
பொருதிரைப்புணரியென்னவார்த்தனர்பூதரெல்லாம். (௮௪)

ஏழுறுமவுணர்தானையிறந்திடாதெஞ்சிற்றெல்லாங்
காமருதிசைகண்முற்றுங்கதுமெனவிரிந்துபோன
மாமலர்பொழிந்தார்விண்ணோர்மற்றிவையனைத்துநாடிக்
கோமகன்முன்புசென்றார்குரைகழலவுணத்தூதர். (௮௫)

வெய்யவன்பகைவன்றாதைவியன்கழல்பணிந்துதூத
ரையநின்மைந்தர்முப்பாலாயிரர்தம்மையெல்லா
மொய்யெனவிலக்கர்தம்முளொருவனேமுடித்தானீது
பொய்யலசரதமென்னப்பொருக்கெனப்புலம்பிவீழ்ந்தான். (௮௬)

வீழ்ந்தனன்பதைத்துச்சோர்ந்துவெய்துயிர்த்தசைந்துவிம்மிப்
போழ்ந்திடநிலத்தைக்கையாற்புடைத்தனன்புரண்டுவெற்பிற்
றாழ்ந்திடுமருவியென்னவிழிபுனற்றாரைபொங்கச்
சூழ்ந்தவரரற்றமன்னன்றுன்பமேற்றுன்பம்வைத்தான். (௮௭)

அன்னதோரெல்லைமைந்தரனைவருமுடிந்ததோரா
மன்னவனிசைமைநீங்கிமாயிருந்தவிசிற்றப்பி
யின்னலின்மறிந்ததென்னவிரவியங்கடவுண்மேல்பாற்
பொன்னெடுங்கிரியினெய்தியொளியிலன்புணரிவீழ்ந்தான். (௮௮)

மூவாயிரர்வதைப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௧,௬௩௪.

---

# தருமகோபன்வதைப்படலம்.

முடிவுறுபுதல்வரைமுன்னிமுன்னியே, யிடரினையுழந்திடுமிறைவன்றன்முனம்
படியறுநல்லறப்பகைஞன்போந்திடா, வடிமுறைபணிந்துநின்றறைதன்மேயினான்.

மன்னவர்மன்னநீமனத்திலிவ்வகை, யின்னல்செய்தாற்றவுமிரங்குவாயெனிற்
றுன்னலர்மகிழுவர்சுரர்கள்யாவரு, நன்னகைசெய்குவர்நமரும்வெள்குவார். (௨)

மூந்துறுமாற்றலர்முனைவெம்போரிடைத், தந்தையர்விளியினுந்தமர்கண்மாயினு
மைந்தர்கள்விளியினுமானவீரர்கள், சிந்தைகொள்வன்மையிற்சிறிதுந்தீர்வரோ. ()

Digitized By Roja Muthiah Research Library

ஏற்றிகல்புரிந்திடுமெமரைவௌவிய,கூற்றுளன்ருன்மைபோற்படைத்துக்கூட்டுவொ,னற்றிசைமுகனுளனுமுளோநம, தாற்றலுழிருந்துளவயர்வும்வேண்டுமோ.()

அந்தமில்வெறுக்கையுமழிவிலாயுளு, நந்தலில்வன்மையுநடாத்துமாணையு மிந்திரனாலமுமிருக்கவெந்தைநீ, புந்தியிலமரர்போற்புலம்பலாகுமோ. (ரு)

விண்ணவர்சிறையினைவிடாதுவைத்திடக், கண்ணியவிரதமுங்கழிந்தமானமு நண்ணலர்தங்களைநலியுந்தன்மையு, மெண்ணலையிடையருதிடுக்கண்போற்றுமோ.

மாற்றலராகியவமரர்மானவர், கோற்ருெடிமடந்தையர்குழவிப்பாலக ராற்றிடுதுயருனக்காவதன்றெனுத், தேற்றினனமைச்சருட்டைமைமிக்குளான்.(எ)

வேறு.

ஆற்றிடுதருமனீத்தவமைச்சன்வந்தினையவாற்ருற்
றேற்றிடுகின்றகாலைச்சிறிதுதன்னவலநீத்துக்
கூற்றெனயானேசென்றுகூடலர்தொகையைவிண்மே
லேற்றுவனென்றுசீறியவுணர்கோனெழுந்துசென்ருன். (அ)

சென்றிடுமன்னர்மன்னன்சேவடிமுறையிற்ருழா
வின்றிவணிருத்தியானுமனிகமுமின்னேயேகி
வன்றிறற்பகைஞர்தம்மைவளைத்துவல்விரைந்துசாடி
வென்றியுற்றிடுவனென்னவேண்டினனமைச்சர்மேலோன். (கூ)

அறந்தவிரமைச்சன்வேண்டவவுணர்கண்முதல்வன்மீண்டு
சிறந்திடுமடங்கலாற்றுஞ்செம்பொன்செய்பீடமேவி
யுறைந்தனனனையகாலையொல்லையில்விடைகொண்டேகிப்
புறந்தனில்வந்துவல்லேபோர்ப்பெருங்கோலங்கொண்டான். (க0)

போதகத்தரசுதம்முட்புண்டரீகப்பேர்பெற்ற
மாதிரக்களிற்றையன்னேன்வல்லையிற்கொணர்திரென்னுத்
தூதுவர்க்குரைத்தலோடுந்துண்ணெனவனையரோடி
மேதகுநிகளநீக்கிவிடுத்துமுன்னுய்த்துநின்ருர். (கக)

புந்தியிற்குறிப்பிற்செல்லும்புண்டரீகப்பேர்பெற்ற
தந்தியந்தலைவன்மீதுதருமத்தைவெகுளும்வெய்யோ
னந்தமில்படைகளேந்தியமைச்சர்கள்பலருஞ்சூழ
விந்திரனிவன்கொலென்னவேறினனெழிலிபோல்வான். (கஉ)

அறைந்தனபடகம்பேரியார்த்தனவிரலைதிபஞ்
செறிந்தனகரிதேர்வாசிதெழித்தனவவுணர்தானை
நிறைந்தனபதாகையீட்டநெருங்கியகவிகைவான
மறைந்தனவெழுந்தபூழிமாதிரமிருண்டவன்றே. (கங)

எண்ணிலாவெள்ளமாவுமிபங்களுமிவுளித்தேரும்
வெண்ணிலாவெயிற்றுச்செங்கண்வீரரும்புடையிற்சுற்றப்
புண்ணுலாமுக * த்துப்பேழ்வாய்ப்புண்டரீகத்தையூர்ந்தே
யண்ணன்மாநகரநீங்கிப்போயினனறத்தைநீத்தோன். (கச)

---

* புண்ணுலாமுகம் என்பதற்கு - பகைவரைக்குற்றிக் கொல்கின்றமையால் அவருடைய தசைபரந்த கோடு எனப் பொருள்கொள்க. முகம் - ஆகுபெயர். "வேலாண்முகத்தகளிறு" என்ருர்பிறரும்.



Digitized By Roja Muthiah Research Library

அண்டர்மற்றிதனைநோக்கியம்மவோவறத்தைநீத்த
கண்டகன்சிலையொன்றேந்திமாதிரக்களிறுதன்னுட்
புண்டரீகத்தையூர்ந்துபெர்ருமெனிலிவனையாற்றல்
கொண்டிடலரிதாமென்னவிரங்கினர்குலைந்தமெய்யார். (௧௫)

ஆவணமனந்தநீங்கியனிகமுந்தானுமேகி
மூவிருமுகத்துவள்ளன்முழுதருள்பெற்றசேனை
காவலன்வெகுண்டுநின்றகளத்திடையனுகலோடு
மேவலரெதிர்ந்தாரென்றுவியன்கழற்பூதரார்த்தார். (௧௬)

பொற்றைகளேந்தியார்க்கும்பூதரையிலக்கர்தம்மைச்
சுற்றுறுதுணையினோரைத்தொலைநாணகரஞ்செற்ற
கொற்றவன்றன்னையன்னோர்வலியினைக்கொடியோனோக்கி
யிற்றதுகொல்லோநந்தம்வாழ்க்கையென்றிரங்கிச்சொல்வான். (௧௭)

வேறு.

பகைஞர்களாயினோர்பரவித்தன்மிசை, யிகல்செயவருவரேலிரங்கியேங்குதன்
மிகுபழியிங்கிதுவினவின்மானவர், நகைசெய்வர்பொருவதேநன்றுபோலுமால். ()

எச்சமில்சேனையும்படையுமீண்டிய, கைச்சிலையிருந்ததுக்ரியுமொன்றுள
தச்சுறுகின்றதெனுவதாகுமாற், பொச்சையர்கடனனிபொருமல்கொள்வதே. ௧௯

வெல்லினுஞ்செறுநர்முன்வெரிநநீயினு, மல்லதுவிளியினுமாஃகயானினி
மல்லலம்படையொடுமொற்றலார்மிசைச், செல்லுவதன்றியேயிரங்கல்சீரிதோ. ௨௦

வேறு.

கண்ணுறுபடையைநோக்கிக்கருத்திடைக்கவலையெய்தி
யெண்ணிநின்றயர்தல்வீரரியற்கையதாமோபின்னர்
நண்ணியவாறுநண்ணானினித்தளரேனென்னாத்
துண்ணெனத்தேறிச்சென்றான்சூரனுக்கமைச்சனானோன். (௨௧)

இங்கிதுபொழுதன்னிலெங்கணுமிருட்குழாஞ்சூழ்
கங்குலும்பகலுமாலைக்காலமுங்கலந்ததென்ன
வங்கவன்றானைவெள்ளத்தவுணரும்பூதர்தாமும்
பொங்கொலிக்கடல்போலார்த்துப்பொள்ளெனவமரினேற்றார். (௨௨)

வேறு.

தலைப்படவெழுக்களிற்றண்டிற்றாக்கினா, ரிலக்குறநேமிகள்கணிச்சியேவினார்
மலைக்குவையெறிந்தனர்மரங்கள்வீசினார், சிலைத்தனர்வயிர்துடிசெறிவெம்பூதரே.

வில்லுமிழ்சரத்தினில்வேலில்வாளினிற், கல்லினினுஞ்சிலிற்கழுமுளாயதில்
வல்லையந்தனிலுடைவாளில்வச்சிரச், செல்லினினுதிகெழுதிகிரிநேமியில். (௨௪)

தண்டினிற்றோமரந்தன்னிற்சங்கினிற், பிண்டிபாலத்தினிலாற்றப்பீடுமேல் [தார்.
கொண்டதோரெழுவினிற்பிறவிற்கொட்புறா, வண்டருமவுணருமணிந்துபோர்செய்

அயர்ப்புறுதானவரமைச்சர்யாவரும், வியர்ப்பினில்வந்திடுவெங்கண்வீரரும், வ
யப்பெருஞ்சிலையினைவணக்கிவாளிதூய்ப், புயற்படுபெயலெனப்பொழிந்துபோர்
செய்தார். (௨௬)

பெய்வதொத்தெங்கணும்பெரிதும்வீழ்தலா,லுய்வதெத்தன்மையென்றுலகமச்சுற
விவ்வகைத்திறத்தினரிரண்டுசாரினுந், தெய்வதப்படைகளுமரபிற்சிந்தினார். (௨௭)

மாய்ந்தனர்பூதரும்வரம்பிறானவர், சாய்ந்தனர்கரங்களுந்தலையுஞ்சிந்தினர்
வீந்தனகரிபரிவிளிந்ததேர்நிரை, பாய்ந்தனசெம்புனல்பரந்தகூளியே. (௨௮)

Digitized By Roja Muthiah Research Library

நொந்தனரிலக்கருநோன்மைநீங்கினூர், முந்துறுமமைச்சர்போர்முயன்றுநின்றன
ரந்திலவ்வேலையிலதனைநோக்கியே, வெந்திறல்வெய்யவன்வெகுண்டுசென்றனன்.

இடித்தெனவுரப்பினனிமைப்பிலெய்திமுன், வடித்திடுசிலையினைவாங்கித்தானவ
ர், முடித்தலைபணித்திடமுழுதும்யாக்கைகள்,பொடித்தெனவழுத்தினன்புங்கவாளி
யே. (௬0)

நீண்டதோர்சிலீமுகநெடிதுமேலவன், றூண்டியகாலையிற்றுணிந்தகையினர்
வீண்டிடுதலையினர்விளிந்தமெய்யினர், மாண்டனரமைச்சர்கள்வறந்ததானையே.()

துறக்கமதலைத்திடுதொலைவிருனவர், மறுக்கமுற்றசைந்தனர்வந்துபோர்செய
விறற்படுசாரதர்வெகுண்டுமேற்செலா, விறப்புறுவரைபலவெடுத்துவீசினூர். (௬௨)

வீசியவேலையில்வெதும்பிவிம்மியே, மாசுறுதானவர்வாகைசிந்தியே
யாசறுபோனகத்தட்டில்சூடுறு, பூசையதாமெனவுடைந்துபோயினூர். (௬௩)

இடைந்தனராகியேயவுணர்யாவரு, முடைந்தனர்போதலுமுலப்பில்பூதர்கள்,
படர்ந்தனர்தெழித்தனர்பையுண்மாலையிற், றொடர்ந்தனர்பற்றினர்தொலைத்தன
மேயினூர். (௬௪)

கண்டனனுங்கவையறத்தைக்காய்பவன், புண்டிகழ்ந்தனைய்கட்பூதர்மேற்செலா
விண்டொடர்பெருந்தனுவாங்கிவெவ்வுயி, ருண்டிடுசரந்தெரீஇயுலப்பின்றேவினன்

ஏவியநோன்கணையாவுமேன்றெழு, தீவிழிப்பூதர்பாற்சேறலிந்திரன்
வாவியவூர்திகள்வாரிநேமியிற், றாவியதுள்ளியின்றேற்றம்போன்றதே. (௬௬)

கைச்சிலையுகைத்திடுகணைகள்யாவையு, நச்செனவிடுத்தலுநடுங்கிப்பூதர்க
ளச்சுறமெலிந்தனரமரர்கோமகன்,வச்சிரமெய்தியவரைகண்மானவே. (௬௭)

வேறு.

வானவர்கள்கோமகன்வயக்களிறிதென்னத்
தானவர்கள்போற்றுதருமப்பகைஞனூர்ந்த
வானையதுபூதர்தமையங்கைகொடுவாரி
யூனொடுயிர்சிந்திடவுடற்றியதையன்றே. (௬௮)

கோடதொருநான்குகொடுகுத்தியதுதாளி
னூடுறமிதித்தவணுழக்கியதுவாலாற்
பாடுறவெறிந்ததுபனைக்கையதுகொண்டே
வீடுறமுனெற்றியதுவீரர்படைதன்னை. (௬௯)

மாறகலும்வெங்கரியிவ்வாறடல்செய்காலை
வீறுகெழுசாரதர்கள்வெற்புமிசைவீசி
யூறுசெயவங்கதினுலப்பில்கணையோச்சி
நாறுநடுவார்தொகையினண்ணினர்கள்வீரர். (௭0)

காயமுழுதொன்றியகணக்கில்படையாவு
மேயதவளக்களிறுமுற்றுமெழுசோரி
பாயவணைகிற்பதுபணிக்குழுவுகவ்வச்
சேயபணிசுற்றமறைதிங்கள்படர்ந்தென்ன. (௭௧)

வெந்திறல்கொள்புண்டரிகவேழமிதுதன்மை
நொந்ததெனினுந்தனதுநோன்மையழியாதாய்
முந்தியிடுசேனையைமுருக்கவதுநோக்கித்
தந்திநிரைசாரதர்தமைத்தடிதலுற்ற. (௭௨)

Digitized By Roja Muthiah Research Library

கண்டைகெழுதாரிறைவிகல்லெனவிரைப்ப
வண்டமுடைந்தென்னநனியார்த்தவுணனாரும்
புண்டரிகவெங்களிறுபோர்த்தொழிலியற்ற
வுண்டைகெழுபூதநிரையோய்யெனவுடைந்த. (சரு)

தண்டமுடைகின்றசெயறன்னைவிறல்வெய்யோன்
கண்டனனழன்றுதனகார்முகமதொன்று
கொண்டனனெடுத்ததுகுனித்தழலின்வாளி
யண்டர்பகையூர்தியினடைச்சிநனியார்த்தான். (சச)

ஆர்த்தடரும்வேலையிலடற்களிறுமங்கோர்
மூர்த்தமயர்வுற்றதுமுனிந்தவுணர்கோமான்
பார்த்திறையினூறுகணைபாலமிசையோச்சத்
தேர்த்துலவுசோரியொடுதேர்மிசையிருந்தான். (சரு)

இருந்ததிறலோன்மிசையொரெஃகமதுவாங்கி
விரைந்துதருமப்பகைவிடுத்திடலுநோக்கி
மருந்தெனமுன்வந்துதிறல்வாசவனவ்வைவேன்
முரிந்துதுணியாகவொர்முரட்கணைதொடுத்தான். (சகு)

மத்தகயமன்னதிறல்வாசவன்விரைந்தே
பொத்திரமதொன்றுகொடுபோரயின்முருக்கிக்
குத்திரமதொன்றவுணர்கூவிவெருக்கொள்ள
வத்திரமென்மாரிகொடவன்றனைமறைத்தான். (சஎ)

மறைத்தலுமறப்பகைஞன்வாளிமழைதூவிக்
குறைத்தனனளப்பில்கணையெனவைகுழீஇப்போய்ச்
செறுத்தவனதாகமிசைசென்றுசெருக்கின்றி
விறற்கவசநக்குபுவிளிந்துபுடைவீழ்ந்த. (சஅ)

வேறு.

மீண்டவேலையின்வெய்யசூழ்ச்சியோன், மாண்டுளானெனவாகைவீரன்மேற்
பூண்டயங்குறுபொன்னந்தண்டமொன், றீண்டவீசினன்யாருமஞ்சவே. (சகூ)

எழுவினீள்கதையிமைப்பிற்சென்றவன், பழுவின்மார்பகம்பட்டவேலையின்
விழுமநோயுறவிம்மினனரோ, வழுவைமேலையோன்வயத்தின்மேவவே. (ருO)

கருத்தினல்லறங்காய்ந்தவன்செய, றெரிந்துநின்றிடுந்திறல்கொள்வாகினு
னுருத்துநோக்கியேயுரையுந்தன்னுளக், கருத்தும்பிற்படக்கடிதுசெல்லுவான். ருக

நின்னிலையநின்னேரலன்புயந், தன்னையாத்துநிற்றருவம்யாமெனப்
பன்னுமானவர்பௌவநீத்தொராய், முன்னுதானவர்முதல்வனேர்புக. (ருஉ)

எதிரிலாமையால்யாருமஞ்சவே, யதிருநோன்கழலாடன்மொய்ம்பனை
மதியிருனவன்மழைகண்மின்குழீச், சிதறியென்னத்தீச்சிந்தநோக்கினன். (ருங)

நோக்கிநீகொலோநோன்மையோடெனைத், தாக்குமாறுவந்தனையையானுனை
யாக்கைசிந்தியவமைந்துநின்றனன், காக்கவல்லையேற்காத்திநீயென்றான். (ருச)

மொழியுமாடல்சேர்மொய்ம்பன்கேட்டிது, விழுமிதாரினும்வெற்றிபெற்றன
னழிவனேநினக்காடல்சொள்வன்யான், கழியைநீந்துதல்கடலிற்பாடதோ. (ருரு)

மற்றுன்வன்மையுமதர்ப்புநின்பெருங், கொற்றமானதும்வரத்தின்கொள்கையு
மிற்றைவைகலேயீறுசெய்வனீ, கற்றபோரினைக்கடிதுசெய்கென. (ருசு)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

கானக்களிவரிபம்பியகமழ்தார்புனையகல
வானக்கிறைதனதூர்திகண்மரபோடுசென்றிசைக்குந்
தீனக்குரலெனநாணொலிதிசையெங்கணுஞ்செல்லக்
கூனற்சிலைதனையொல்லையிற்றருமப்பகைகுனித்தான். (௫௭)

மற்கொண்டிடுமிடன்மொய்ம்புளமதியில்லவனொருபா
லெற்கொண்டெழுகளிற்றின்மிசைச்சிலைவாங்கினனிருத்தல்
கற்கொண்டதொர்வெள்ளிக்கிரிமிசைகாணியகணைதூய்
விற்கொண்டொருபசுங்கார்முகின்மேவுற்றெனலாமால். (௫௮)

அதுவன்றியுமவனுந்தியவடுவெங்களிறலர்தண்
கதிரின்குழுமுழுதொன்றுபுககனந்தனிலெழுசெம்
மதியந்தனதொருபங்கையொர்வயவெம்பணிநுகரப்
புதிதொண்பிறையதுவொன்றிடைபுகநின்றதுபொருவும். (௫௯)

முந்தேயவனெடுக்கின்றதொர்முரண்வெஞ்சிலைகுனியாக்
கந்தேயெனநிமிர்தோளுடைக்கடுஞ்சூழ்ச்சியனெழுகுஞ்
செந்தேனுறழ்குணத்திற்சரஞ்செலுத்தாத்திறன்மொய்ம்பற்
கந்தேயுமெய்வெளியின்றெனவவனைக்கரந்தார்த்தான். (௬௦)

கரக்கின்றவன்விடுவாளிகள்கந்தன்படைஞன்மெய்
யரக்குன்றுபட்டயின்மாய்ந்தவையயல்வீழ்ந்தனகண்டா
னிரக்கின்றவர்க்குதவான்கரந்தேற்காத்திருவினர்பாற்
பரக்கும்பொருளுகுத்தன்னதிற்பயன்பெற்றிலனெனவே. (௬௧)

அயில்சிந்திடமுரண்வெங்கணையயல்வீழ்தலுமடுபோர்
முயலுந்திறல்கெழுமொய்ம்பினன்முனிந்தெஃகமொன்றெடுத்துப்
புயலன்னதொர்வடிவத்தவன்பூணுருநெஞ்செறியச்
செயலன்னதுகண்டாங்கெதிர்தீவாளிகளுய்த்தான். (௬௨)

உய்க்குஞ்சுடர்வடிவாளிகளொருங்கேதவமுருக்கி
மைக்கொண்டலைநிகர்மேனியன்மனந்துண்ணெனவணுகி
மெய்க்கொண்டதொர்நெடுஞ்சாலிகைவிளியும்படிவீட்டிப்
புக்குள்ளுறமூழ்கித்தனிபுறம்போந்ததுவிரைவில். (௬௩)

புறம்போதலுமிகன்மந்திரிபொருமிப்புகையுயிர்த்து
நிறம்போகியசெந்நீரொடுநினைகின்றிலனிருப்ப
மறம்போகியதனிவெங்கரிமகிணன்செயலோரா
வறம்போகியமனத்தான்றனையடவுற்றதையன்றே. (௬௪)

முந்துற்றிடுகரிதிண்டிறன்மொய்ம்பன்னிரதத்தைத்
தந்தத்தொகைகொடுதாக்குபுசமரத்திடையிட்ட
கந்தொத்ததொரெழுவொன்றதுகைக்கொண்டவன்வலவன்
சிந்தப்புடைத்ததுகாண்டலுஞ்செந்தீயெனக்கனன்றான். (௬௫)

வையந்தனதீறுதலும்வறிதேயயல்பாயா
மெய்யங்கையதொன்றாலவன்மேல்வந்திடும்வேழக்
கையங்குறப்பற்றுக்கடங்கலுழுங்கவுண்மோதி
யொய்யென்றெடுத்தப்பாலையினுலகம்புகவுய்த்தான். (௬௬)

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
... M DIST TAMIL NADU - INDIA
Digitized By Roja Muthiah Research Library

எறிந்தானெடுத்ததுகாலையிலிபம்விண்ணிடையேகிப்
பிறிந்தாகவமியற்றெல்லையிற்பெயர்காலையினமைச்ச
னறிந்தான்கயமிழந்தேன்கொலென்றயராவதனோடு
மறிந்தான்புனைகலந்தன்னொடுமணிமாமுடிசிந்த. (௬௭)

வீழ்கின்றதோர்களிறுற்றவும்வெருவிப்பதைபதைத்து
மாழ்கின்றதுபுடைபோகியமதியில்லவனெழுந்தே
காழ்கொண்டதோர்கதையொன்றுதன்கைக்கொண்டுரத்தெறியத்
தாழ்கொண்டதோர்கரத்திற்கடுத்தலைகொண்டதுதறித்தான். (௬௮)

வலிகொண்டதோர்தனித்தண்டதுமடிவாதலுமற்றோர்
குலிசந்தனைவிடவாங்கெதிர்குறுகக்கரம்பற்றிப்
புலிகண்டதோர்கலைமானெதிர்புக்காலெனவவுணர்
தலைவன்றனையடன்மொய்ம்பினன்றடமார்பிடைப்புடைத்தான். (௬௯)

மூளாவுருத்தறைகின்றுழிமுதலற்றிடுதருப்போல்
வாளாபுவிமிசைவீழ்தலும்வயமிக்கவனொருகாற்
றாளாலுதைத்தனனத்துணைதருமப்பகைவிளிந்தான்
கேளாகியவவுணப்படைகெட்டோடியதன்றே. (௭0)

வேறு.

விழுந்தயர்புண்டரீகவெங்கரியுயிர்த்துமெல்ல
வெழுந்ததுதருமகோபனிறந்தபாடதனைநோக்கி
யழுந்திடுமின்னல்வேலைக்ககன்கரைகிடைத்தாலென்னத்
தொழுந்திறல்வீரவாகுத்தலைவனைநேர்ந்துசொல்லும். (௭௧)

செய்யலைவெகுளியெந்தாய்சிறியனையருளிக்கேண்மோ
பொய்யெனநினையல்வாழிபுண்டரீகப்பேருள்ளேன்
வையகம்போற்றுஞ்சீரேன்மாதிரங்காவல்கொண்டேன்
கையனித்தருமகோபன்கடுஞ்சிறைப்பட்டேன்பன்னாள். (௭௨)

வன்றளைமூழ்குந்தீயேன்மதியிலாவமைச்சற்போற்றி
யின்றுகாறார்தியானேனேவினபலவுஞ்செய்தே
னொன்றுநான்மறுத்ததுண்டேலுயிர்குடித்தூனும்வல்லே
தின்றிடுமென்றேயஞ்சித்திரிந்தனன்செயல்வேறில்லேன். (௭௩)

எட்டுளதிசையில்வைகுமரக்கர்தன்னிகழ்ந்தாரென்று
மட்டறுவெகுளிவீங்கிமற்றெனையூர்ந்துதொன்னாட்
கிட்டினனவரையெல்லாங்கிளையொடுமுடித்தோன்றன்னை
யட்டனைநீயேயல்லாலவனையாரடுதற்பாலார். (௭௪)

புந்தியிலறத்தைக்காயும்புரைநெறியமைச்சன்றன்னை
வந்துநீயடுதலாலேவானவர்கவலைதீர்ந்தா
ருய்ந்தனன்சிறந்தேனெற்குமூதியமிதன்மேலுண்டோ
முந்துறுதளையினீங்கிமுத்திபெற்றாரையொத்தேன். (௭௫)

தீதுகொள்பவத்தினீராலவுணர்தஞ்சிறையிற்புக்கேன்
மாதவஞ்செய்தேன்கொல்லோமற்றுனையெதிரப்பெற்றே
னாதலினுய்ந்தேனென்றனாசையையளிக்குமாற்றாற்
போதவன்றமியனென்றுதொழுததுபுண்டரீகம். (௭௬)

Digitized By Roja Muthiah Research Library

புண்டரீகத்தின்வாய்மைபொருக்கெனவினவுவீர
னண்டருமுவகைபொங்கவகலுதியிருக்கைக்கென்ன
விண்டொடர்நெறியிற்சென்றுங்கவுணர்க்குவெருவலின்றிப்
பண்டமர்திசையினண்ணிப்பரிவறவைகிற்றன்றே. (௭௭)

மாதிரங்காவல்பூண்டமதக்களிற்றரசுசெல்ல
வாதியிலறத்தைக்காயுமழிதகனிறுதிநோக்கிப்
பூதர்களார்த்துவீரன்புயவலிபுகழ்தலுற்றார்
தூதுவரதுகண்டோடிச்சூரனைத்தொழுதுசொல்வார். (௭௮)

தண்டகமுதல்வகேண்மோதானையுந்தானுமேகி
மண்டமர்புரிந்துவீரவாகுவாலமைச்சன்மாய்ந்தா
னுண்டையுமழிதலுற்றவுங்குவனூர்ந்துசென்ற
புண்டரீகப்பேர்பெற்றதந்தியும்போயதென்றார். (௭௯)

வேறு.

பழுதுடைத்திறன்மந்திரிபட்டசொல்வினவி
முழுதுசுற்றியவின்னலம்புணரியின்மூழ்கி
யழுதுயிர்த்துமெய்யுயிர்பதைபதைத்திடவங்க
ணெழுதுசித்திரப்பாவைபோலுணர்வுபோயிருந்தான். (௮௦)

தருமகோபன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௭௧௪.

---

# பானுகோபன்வதைப்படலம்.

எள்ளல்செய்தெனைப்பற்றியேசிறையகத்திட்ட
கள்வனிப்பகன்முடிந்திடுமென்னதுகாண்பான்
பொள்ளெனப்படர்வேனெனப்புந்திகொண்டவன்போ
லொள்ளழற்கதிர்வீசியேயிரவிவந்துதித்தான். (௧)

சுருதிநீங்கியவவுணர்கோனித்திறந்துயரம்
பெரிதுமெய்தியேயிருந்துழிக்கண்டனர்பெயர்ந்து
குருதிநோக்குடையொற்றரிலொருசிலர்குறுகிப்
பரிதிதன்பகையடிபணிந்தினையனபகர்வார். (௨)

முன்னமாயமாப்படைக்கலந்தூண்டியேமொய்ம்பு
பன்னிரண்டுளான்றூதனைப்படையொடும்படுத்துத்
தொன்னெடுங்கடலிட்டனையிட்டதைச்சுரர்க
ளன்னகாலையேவிளம்பினரறுமுகத்தவற்கே. (௩)

வெங்கண்மால்கரிக்கிளையவனுங்கதுவினவிச்
செங்கைவேலினையாயிடையிருந்தனன்செலுத்த
வங்கதொல்லையின்மூவிருபுணரிகளகன்று
பொங்குதூயநீரளக்கரினடுவுபுக்கதுவே. (௪)

Digitized By Roja Muthiah Research Library

புக்கவேலையின்மாயமாப்பெரும்படைபுறந்தந்
தக்கணந்தொலைவெய்தியதயர்வுயிர்த்தறிந்து
தொக்கபாரிடர்யாவரும்வீரர்தந்தொகையு
மிக்கதிண்டிறல்வாகுவுமெழுந்திவண்மீண்டார். (௫)

ஆண்டவ்வெல்லைவந்திறுத்திடும்வேற்படையருளி
மீண்டுகந்தவேளிருந்துழிப்போந்ததுவிரைவா
லீண்டிம்மாநகர்சுற்றியேசெறுநர்களிகலி
மூண்டுபோர்செய்வான்புரிசையுட்புகுந்தனர்முரணால். (௬)

அரணமுற்றுளாரிந்நகரலைத்தலுமவற்றைத்
தரணிகாவலன்வினவியேதன்னயனின்ற
விரணியன்றனைக்கனன்முகத்தண்ணலையேனை
முரணின்மக்களையமைச்சனைவிடுத்தனன்முறையால். (௭)

ஆனகாலையில்வந்துவந்தடுசமராற்றி
மானவேற்படைப்பண்ணவன்றூதனுன்மற்றை
யேனையோர்களான்முத்திறவீரர்களிறந்தார்
மீனமாய்க்கடல்புகுந்தனனிரணியன்வெருவி. (௮)

மன்னர்மன்னவனிவையெலாம்வினவியேமனத்தி
லுன்னருந்துயர்வேலைபுக்காற்றலாதுழந்தா
னிந்நகர்ப்படையாவையும்வறந்தனவின்னுந்
துன்னலாரிவணின்றனரென்றிவைசொற்றார். (௯)

சொற்றவாசகம்வினவலுஞ்சூரியன்பகைஞ
னிற்றவேகொலாநம்பெரும்வாழ்க்கையென்றிரங்கிச்
செற்றமோடுதன்பெதிரெதிர்மலைந்திடச்செங்கேழ்ப்
பொற்றையன்னதன்னிருக்கையையொருவினன்போந்தான். (௧௦)

போந்துகோநகரணுகியேதுன்பொடுபுணர்ந்த
வேந்தன்மாமலரடிகளையுச்சியின்மிலைச்சி
யாந்தரங்கமாமளியொடுமுந்துநின்றவுண
ரேந்தலிம்மொழிகேண்மியாநன்கெனவிசைப்பான். (௧௧)

மாயைதந்ததொல்படையினுற்செறுநரைமயக்கித்
தூயநீர்க்கடலிட்டனன்சுரரதுபுகல
வாயகாலையில்வேல்விடுத்தவர்தமைமீட்ட
சேயைவெல்வதுகனவினுமில்லையாற்றெரியின். (௧௨)

தெரிந்தமற்றுனக்குரைப்பதென்முற்பகற்செவ்வேல்
பொருந்துகைத்தலத்தாறுமாமுகனொடுபொருது
வருந்திவன்படையாற்றலுமிழந்தனைவறிதா
யிரிந்துமற்றிவண்வருதலாலுய்ந்தனையெந்தாய். (௧௩)

ஏற்றதோர்சிலையிழந்தனைமானமுமின்றித்
தோற்றுவந்தனைதொல்வரத்தியற்கையுந்தொலைந்தாய்
சீற்றமுற்றிலன்முருகவேளவன்சினஞ்செய்யி
னாற்றுமோவெலாவண்டமும்புவனங்களனைத்தும். (௧௪)

Digitized By Roja Muthiah Research Library

ஆரணன்றனையுலகொடுமுண்டுமுன்னளித்த
காரணன்றனியாழியைக்களத்திடையணிந்த
தாரகன்றனைநெடியமால்வரையொடுந்தடிந்த
வீரவீரனையாவரேவன்மையால்வெல்வார். (கரு)

புல்லிதாகியவிலங்கினைப்படுப்பவர்புதனுள்
வல்லியந்தனக்குண்டியாய்மாய்ந்திடுங்கதைபோ
லெல்லையில்பகலமரரையலைத்திடும்யாமுந்
தொல்லைநாள்வலிசிந்தியேகுமரனாற்றொலைந்தோம். (கசு)

கோடலுஞ்சுனைக்குவளையுங்குளவியுங்குரவு
மேடலர்ந்திடுநீபமும்புனைந்திடுமினையோன்
பாடலந்திறனுரைப்பதென்னங்கவன்பணித்த
வாடலம்புயத்தண்ணலைவெல்வதுமரிதால். (கஎ)

நெடிதுபற்பகல்செல்லினுநிரம்புவதொன்றை
யிடைவிடாமலேமுயன்றுபெற்றிடுகின்றதியற்கை
யுடல்வருந்தியுந்தங்களான்முடிவுறாதொன்றை
முடியுமீதெனக்கொள்வதுகயவர்தம்முறையே. (கஅ)

ஆற்றன்மைந்தரையிழந்தனைநால்வகையணிகத்
தேற்றமற்றனையென்னுடனொருவனீயிருந்தாய்
மேற்றிகழ்ந்தநின்குலத்தினைவேரொடுவீட்டக்
கூற்றம்வந்ததுமுணர்கிலையிகலைமேற்கொண்டாய். (ககூ)

வெஞ்சமஞ்செயவல்லவர்கிடைத்திடின்மிகவு
நெஞ்சகந்தளிர்ப்பெய்துவனேரலர்சமருக்
கஞ்சினேனென்றுகருதலையரசநீயின்னு
முஞ்சுவைகுதியோவெனுமாசையாலுரைத்தேன். (உ0)

உறுதியொன்றினிமொழிகுவன்பொன்னகருள்ளார்
சிறைவிடுக்குதிநம்மிடைச்செற்றமதகற்றி
யறுமுகத்தவன்வந்துழிமீண்டிடுமதற்பி
னிறுதியில்பகனிலைக்குநின்பெருவளமென்றான். (உக)

வெம்புதொல்கதிர்வெகுண்டவனுரைத்தசொல்வினவித்
தும்பையந்தொடைமிலைச்சியமணிமுடிதுளக்கி
மொய்ம்புமாகமுங்குலுங்கிடமுறுவலித்துயிர்த்து
நம்பிமந்திரச்சூழ்ச்சிநன்றுலெனநவில்வான். (உஉ)

வேறு.

என்னிவையுரைத்தாய்மைந்தவின்றியானெளியனாகிப்
பொன்னுலகுள்ளதேவர்புலம்புகொள்சிறையைநீக்கின்
மன்னவர்மன்னனென்றேயாரெனைமதிக்கற்பாலா
ரன்னதுமன்றிநீங்காவசையுமொன்றடையுமாதோ. (உங)

கூறுடுவெதிரேபங்குகுருடுபேரூமையாறோ
ரூனமதடைந்தபுன்மையாக்கையோடொழியுமம்மா
மானமதழிந்துதொல்லைவலியிழந்துலகில்வைகு
மேனையர்வசையின்மாற்றமெழுமையுமகல்வதுண்டோ. (உச)



Digitized By Roja Muthiah Research Library

தேவருமலர்மேலோனுஞ்செங்கண்மான்முதலாவுள்ள
வேவருமாணைபோற்றவிருந்தரசியற்றலுற்றேன்
மூவரின்முதலாமுக்கண்மூர்த்திதன்வரங்கொண்டுள்ளேன்
மேவலர்சிறையையின்றுவிடுவனோவிறலிலார்போல். (௨௫)

பேரெழிலிளமையாற்றல்பெறலரும்வெறுக்கைவீர
நேரறுசுற்றம்யாக்கையாவையுநிலையவன்றே
சீரெனப்பட்டதன்றோநிற்பதுசெறுநர்போரி
லாருயிர்விடினும்வானோரருஞ்சிறைவிடுவதுண்டோ. (௨௬)

இறந்திடவரினுமல்லாலிடுக்கணொன்றுறினுந்தம்பாற்
பிறந்திடுமானந்தன்னைவிடுவரோபெரியரானோர்
சிறந்திடுமிரண்டுநாளைச்செல்வத்தைவிரும்பியானுந்
துறந்திடேன்பிடித்தகொள்கைசூரனென்றொருபேர்பெற்றேன். (௨௭)

இன்னுமோரூழிகாலமிருக்கினுமிறப்பதல்லாற்
பின்னுமிங்கமர்வதுண்டோபிறந்தவரிறக்கைதிண்ண
மின்னெனும்வாழ்க்கைவேண்டிவிண்ணவர்க்கஞ்சியிந்த
மன்னுயிர்சுமக்கிலேன்யான்மாயவன்றனையும்வென்றேன். (௨௮)

அஞ்சினைபோலுமைந்தவளியநின்னிருக்கைபோகித்
துஞ்சுதிதுஞ்சலில்லாவரத்தினேனென்றுலைவதில்லை
நெஞ்சிடையிரங்கியாதுநினையலைநேரலார்மேல்
வெஞ்சமர்புரியப்போவேனென்றனன்வெகுளிமேலான். (௨௯)

இவ்வகைதாதைகூறவிரவிதன்பகைஞன்கேளா
வுய்வகையில்லைபோலுமுணர்ந்திலனுரைத்ததொன்று
மெய்வகைவிதியையாரேவென்றவர்வினையிற்கேற்ற
செய்வகைசெய்வேனென்னாச்சிந்தைசெய்தினையசொல்வான். (௩௦)

அறிவொருசிறிதுமில்லேனடியனேன்மொழிந்ததீமை
யிறையதுமுள்ளங்கொள்ளாதெந்தைநீபொறுத்திகண்டாய்
சிறியதோர்பருவப்பாலர்தீமொழிபுகன்றாரேனு
முறுவல்செய்திடுவதன்றிமுனிவரோமூப்பின்மேலோர். (௩௧)

அத்தநீவெகுளனம்மூரலைத்திடுங்கணங்கடம்மை
வித்தகவன்மைசான்றவிறற்புயனோடுமட்டுன்
சித்தமுமகிழுமாறுசெய்குவன்விடுத்தியென்னாக்
கைத்தலமுகிழ்த்துத்தீயோன்கழலிணைபணிதல்செய்தான். (௩௨)

பணிந்திடுகின்றகாலைப்பதுமைதன்கேள்வன்செற்றந்
தணிந்தனனுவகைபெற்றான்றனயநின்னுள்ளம்போர்மேற்
றுணிந்ததுபோலுநன்றாற்றுன்னலார்தம்மைவெல்வா
னணிந்திடுதானையோடுமேகுதியையவென்றான். (௩௩)

தொடையசைகாமர்பொற்றோட்சூரிதுபுகலமைந்தன்
விடையதுபெற்றுமீண்டுமேதகுதுயரினோடு
கடிதுதன்கோயில்புக்குக்கடவுளர்பலருந்தந்த
வடனெடும்படைகளெல்லாமாய்ந்தனனெடுத்தானன்றே. (௩௪)

Digitized By Roja Muthiah Research Library

மையுறுதடங்கண்மாதர்வனமுலைதிளைக்குமார்பின்
மெய்யுறைமொன்றுவீக்கிவிரன்மிசைப்புட்டில்சேர்த்திக்
கையுறவொருவில்லேந்திக்கைப்புடைகட்டிவாளி
பெய்யுறுமாவநாழிபின்னுறவீக்கியாத்தான். (௩௫)

சேமமாயுள்ளவெண்ணில்படைகளுந்தேருஞ்சுற்றத்
தாமநீள்கவிகைவேந்தன்றனிமகன்கடையிற்சென்று
காமர்சூழ்கனகவையமொன்றின்மேற்கடிதுபுக்கா
னேமமால்வரையினும்பரெழிலியேறணைந்ததேபோல். (௩௬)

மற்றதுகாலைதன்னில்வாம்பரிநிரையுந்தேருங்
கொற்றவெங்களிறும்வீரர்குழாங்களுங்குணிப்பில்வெள்ளஞ்
சுற்றினவியங்கண்முற்றுந்துவைத்தனதுவசகோடி
செற்றினவிரவிசெல்லுந்தேயமதடைத்தவன்றே. (௩௭)

தேரிடைப்புகுந்துநின்றேனிப்பெருஞ்சேனைவெள்ளம்
பாரிடைக்கொண்டுநின்றபுணரியிற்பாங்கர்சூழச்
சூரிடைக்கொண்டவன்புந்துயரமுமுளத்தையுண்ணப்
போருடைத்திசையைநோக்கிப்பொள்ளெனப்போதலுற்றான். (௩௮)

வேறு.

மாவாழ்தெருவுபலகோடிகள்வல்லைநீங்கி
மேவார்பொருதகளத்தெல்லைவிரைந்துநண்ணி
மூவாயிரரும்பிறருமுடிவானநோக்கி
யாவாவெனவேயிரங்கிக்கலுழ்ந்தல்லல்செய்வான். (௩௯)

தாளாண்மைமிக்கவசுரன்மகன்றங்கல்செல்லா
நீளாகுலத்தினழிகின்றதனெஞ்சுதேற்றிக்
கேளார்தொகைமேற்பெருஞ்சீற்றங்கிளர்ந்துசெல்லச்
சூளாலினையதொருவாசகஞ்சொல்லலுற்றான். (௪௰)

மாசாத்தரன்னவயப்பூதரைமாய்வாட்டித்
தேசார்க்கும்வேலோற்கிளையோனைச்செகுத்திடேனேற்
காசாற்பொலியுமகலல்குலின்காமம்வெஃகி
வேசாக்கள்பின்செல்வறியானில்விளங்கயானே. (௪௧)

என்றுவொருசூளிசையாவவனேகலோடு
மன்றான்வரவுதனைநோக்கியவுணர்தங்கண்
மன்றகுநின்றமகனுகுமலைவதற்குப்
பின்றார்வருவாரெனப்பூதர்கள்பேசலுற்றார். (௪௨)

பேசுற்றகாலையவுணப்படைபோர்ந்துசென்றாங்
காசற்றபூதப்படைத்தம்மெதிரார்த்துநேரப்
பூசற்பறைகளியம்புற்றனபூழிபொங்கி
மாசற்றவானைத்திசையோடுமறைத்ததன்றே. (௪௩)

ஆர்த்தார்கிடைத்தாரடற்பூதரடுக்கன்மாரி
தூர்த்தார்படைகள்சொரிந்தார்மரந்தூவலுற்றார்
பார்த்தாரவுணரெழுநாஞ்சில்பரசுதண்டஞ்
சீர்த்தாகியவில்லுமிழ்வாளிசெலுத்திவிட்டார். (௪௪)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

பொங்குவன்மைகொள்பூதரும், வெங்கொடுந்தொழில்வினையரு
மிங்கிவ்வாறெதிரேற்றிடா, வங்கண்வெஞ்சமராற்றினார். (௪௫)

அரியவொண்பகலல்லொடே, பொருதுபார்மிசைபுக்கபோ
லிருதிறத்தருமிகலியே, விரவுபூசல்விளைத்தனர். (௪௬)

உரங்கொள்பாரிடருய்த்திடு, மரங்கள்குன்றுகண்மாண்டிட
நெருங்கிநேர்ந்தநிசாசரர், சரங்கள்கொண்டுதடிந்தனர். (௪௭)

விற்கொளம்பினைவேலினை, யெற்கொணுஞ்சிலெழுக்கதை
வர்க்கமானதைவன்கணர், கற்களாற்றுகள்கண்டனர். (௪௮)

சிவந்தபங்கிகொள்சென்னிக, ணிவந்தமொய்ம்புநிலத்துகக்
கவிழ்ந்துருண்டுகளத்திடை, யவிந்தபூதமனந்தமே. (௪௯)

நெஞ்சமொய்ம்புநெடும்பதஞ், செஞ்செவித்தலைசிந்தியே
யெஞ்சுதானவரெண்ணிலார், துஞ்சினார்பழிதுஞ்சவே. (௫0)

பாய்ந்தவாசிகள்பாரிடங், காய்ந்தயானைகள்காசினி
யேய்ந்ததேர்களியாவையு, மாய்ந்துபாரின்மறிந்தவே. (௫௧)

சோரிதூங்கியதொல்பிண, மேருவின்னணைவிழுங்கின
காரியூர்திகருங்கொடி, யோரிகங்கமுலாயவே. (௫௨)

இந்தவாறிருபாலரும், வந்துநேர்ந்துமலைந்திடப்
புந்திநோவறுபூதர்தம், முந்துதூசிமுரிந்ததே. (௫௩)

தாழுமொன்னலர்தாக்கலா, னீள்கொடிப்படைநெக்கிடக்
கூழைநின்றிடுகூளிக, ளாழியென்னவடுத்தவே. (௫௪)

புடைநிரம்பியபூதர்வந், திடைவிடாதெதிரேற்றிடா
வடலின்மேதகுமவுணமாக், கடலைநின்றுகலக்கினார். (௫௫)

ஓடிந்ததேர்களுலந்துபார், கிடந்தயானைகிளர்ந்தமா
மடிந்ததானவர்மாப்படை, தடிந்துலாயினர்சாரதர். (௫௬)

வேறு.

அதிருங்கழல்சேரவுணப்படைகள், முதிருங்குறளொற்றமுடிந்திடலு
மெதிருஞ்சமரத்திடையெய்தியதோர், கதிரின்பகையங்கதுகண்டனனே. (௫௭)

சிந்தாய்வருமிச்சிலசாரதரே, நந்தானையெலாநலிகின்றனரோ
வந்தாவினிதென்றுதேர்கடவா, வந்தான்விரைவாலிமையோர்மறுக. (௫௮)

கடிதாய்வருகாலொடுகாரெழிலி, படிமேலுறவேபடர்கின்றதுபோற்
கொடிதாகியவிற்குனியாமுனியா, வடிவாளிகடேவுணன்வரலும். (௫௯)

வண்டார்தெரியல்வலியோன்வரவைத், தண்டாதமர்செய்திடுசாரதர்கள்
கண்டாரெதிரேகடிதேநடவா, வண்டார்தொகையச்சுறவார்த்தனரே. (௬0)

தருவுங்கதையுந்தருகுலமுமால், வரையுங்கொழுவுமழுவுமெழுவுஞ்
சொரிகின்றனர்பல்வளனுந்தொலையா, வெரியின்மிசையேயிடுமந்தணர்போல். ௬௧

Digitized By Roja Muthiah Research Library

தொடுகின்றகழற்றெருகுசாரதர்கள், விடுகின்றவெலாமிசைவந்திடலு
மடுகின்றசினத்தவுணன்றழலிற், படுகின்றசரம்பலதூண்டினனே. (௬௨)

பணிபட்டகனற்படைதூண்டுதலுந், திணிபட்டகணத்திறலோர்வரைக
ளணிபட்டதருக்குலமாதியெலாந், துணிபட்டனவேதுகள்பட்டனவே. (௬௩)

கல்லுந்தருவுங்கதையும்பிறவுஞ், சொல்லுந்திறலுந்துகள்பட்டிடலும்
வெல்லுந்தகுவன்மிருசாரதர்மேற், செல்லும்படிவெங்கணைசிந்தினனே. (௬௪)

சிந்துற்றிடுசெங்கனல்வெங்கணைகள், பொந்துற்றிடுகின்றபுயங்கமென
வந்துற்றுடன்முற்றும்வருத்துதலா, னொந்துற்றனரற்றனர்நோன்மையெலாம். ௬௫

விடுகின்றகனற்கணைவெந்திறலோ, ருடலம்புழைசெய்திடவுற்றனராற்
படருங்குறியோன்கதைபஃறுளையா, வடுதொல்கிரவுஞ்சமதாமெனவே. (௬௬)

தெரிகுற்றகனற்கணைசென்றுபுகப், பொருகொற்றமகற்றியபூதர்மிசைப்
பெருகுற்றதுசோரிபெருங்கருவிண், டுருகுற்றிடுசெம்பொழுகும்படிபோல். (௬௭)

கதிருங்கனல்வெங்கணைசாரதர்மெய், புதைகின்றுழிசெம்புனல்வந்தெழுவ
வுதிரம்பிறவுற்றிடுதீயுறவா, லெதிர்வந்தவைதன்னிடனுய்ப்பதுபோல். (௬௮)

விடமெய்க்கணைமாரிகடம்மிசையே, படவெய்த்தனர்சிந்தைபதைத்திடுவார்
கடவுட்கதிரைக்கனலுங்கொடியோற், குடைவுற்றனராலுறுபூதரெலாம். (௬௯)

வேறு.

நிலையழிந்துநெடுங்கடற்பாரிடந், தொலையமுன்னந்தொலைந்திடுதானவர்
வலிதெரிந்துவயம்புனைதானவர், தலைவன்முன்வந்துசார்ந்தனரென்பவே. (௭0)

ஆயகாலையழிந்துவெம்பூதர்கள், போயவாறும்புரையறுசூர்தரு
சேயவன்றிறற்செய்கையுநோக்கினன், காயும்வெவ்வெரிகான்றிடுகண்ணினன்.௭௧

மலைக்குலக்கொடிவாமத்தன்மைந்தரா, மிலக்கவீரருளேனையமைந்தருட் [ன்
டலைக்கணின்றசயங்கெழுமொய்ம்பினன், விலக்கிநேரொடும்வெய்தெனவேகினு

ஆதிதந்தவறுமுகத்தெம்பிரான், பாதமுன்னிப்பரவிக்கடிதுபோய்
மேதகுங்கதிர்வெம்பகைதானையா, மோதமுட்கக்குனித்தனனோர்சிலை. (௭௩)

காமர்மொய்ம்பினன்கைத்தனுக்கோட்டலுந், தாமுனிந்துதகுவர்தந்தானைக
டோமரங்கதைசூலம்வைவாளிவே, னேமியாதிநெருக்குறவீசினர். (௭௪)

வீசுகின்றவியன்படைமாய்ந்துகத், தேசுலாவுதிறலுடைமொய்ம்பினு
னோசைகொண்டதன்சாபமுமிழ்ந்தென, வாசுகங்களளப்பிலதூண்டினன். (௭௫)

தூண்டும்வாளிதுணிபடச்செய்தலு, மாண்டுபோயினமற்றவர்வெம்படை
யீண்டுதானவர்யாருமறைந்திட, மீண்டும்வார்கணைவீசினன்வீரனே. (௭௬)

கற்றைவார்சடைக்கண்ணுதலோன்சுதன், கொற்றவில்லுமிழ்கூர்ங்கணைவிட்டன
பற்றலார்மெய்படுதலுமன்னவர்க், கிற்றதாண்முடிதோள்புயம்யாவுமே. (௭௭)

ஆரழிந்தனவாழியழிந்தன, தேரழிந்தனதிண்பரிகைமுகக்
காரழிந்தகடுந்தொழிற்றானவர், போரழிந்தபுகுந்தனசோரியே. (௭௮)

மற்றவெல்லைவலியநந்தானைக, ளிற்றவேகொல்லிவன்சிலையாலெனுச்
செற்றநீரொடுசெங்கதிர்மாற்றல, னெற்றுதேர்வலவற்கிவையோதுவான். (௭௯)

Digitized By Roja Muthiah Research Library

அடுத்துநம்படையட்டவன்முன்னுற, விடுத்திதேரைவலவனைவெய்தென
வடித்தவிஞ்சையன்வன்மையினன்னதேர், நடத்தியார்த்தனனுகர்நடுங்கவே. ௮()

மாண்டகொள்கையவுணன்வலவன்முன், றூண்டுதேர்மிசைத்துண்ணெனநண்
ணியே, பூண்டதன்சிலைகோட்டிப்பொருஞ்சின, மூண்டுமேலவன்முன்னிதுகூறு
வான். (௮௧)

எஞ்சலின்றியவென்பெருந்தானைக, டுஞ்சும்வண்ணந்தொலைத்தனைநீயினி
யுஞ்சுபோகரிதுன்றனையட்டிட, வஞ்சினங்கொடுவந்தனன்யானென்றான். (௮௨)

என்றலோடுமிருந்திறன்மொய்ம்பினான், பொன்றுவோரையும்போர்த்தொழில்
செய்துபின், வென்றுளோரையும்விண்ணவர்காண்குவர், நின்றுதாழ்க்கலைநேருதி
போர்க்கென்றான். (௮௩)

விளைத்தசீற்றத்துவெந்திறற்சூர்மகன், வளைத்தவில்லிடைவார்கணையாயிரந்
தளைத்தபூந்தொடைவாகையன்றன்னுரந், துளைத்திடும்படிபூட்டுபுதூண்டினான். ()

ஆகமூழ்கியடற்கணைபோழ்ந்துபின், னேகவென்றுமிளையவன்பின்னவன்
சோகமோடுதன்றொல்சிலைவாங்கியே, நாகர்போற்றிடநாணொலிக்கொண்டனன் ()

நாணொலிக்கொடுநஞ்சழல்கான்றெனத், தூணியுற்றசுடுசரமாயிரம்
வேணுவுய்த்துவிரைவினிற்றூண்டினா,னேனுடைக்கொடியோன்புயத்தெய்தவே

ஆயிரங்கணையம்புயமூழ்கலு, நோயுழந்துளநொந்துநொடிப்பினிற்
றீயவன்மகன்செஞ்சரநூற்றினாற், றூயவன்விற்றுணிபடுத்தானரோ. (௮௭)

திண்டிறற்புயன்செஞ்சிலையிற்றிட, வண்டரஞ்சினரன்னவனோரயில் [னான்.
கொண்டுருத்துக்கொடுந்தொழிற்சூர்மகன், முண்டநெற்றியின்மொய்ம்புடன்வீசி

வீசுவெம்படைவெய்யவற்சீறிய, நீசன்மாண்டகுநெற்றியுட்சேறலு
மாசில்வான்மிசைவந்தெழுசெக்கர்போ, லாசில்செம்புனலாறெனச்சென்றதே. ()

சென்றகாலையிற்றீயவனோரிறை, நின்றுதேரினிளைவிலனாகியே [ங்கினான்.
பின்றைமுன்னுணர்வெய்தப்பெருந்தகை, யொன்றொர்வெஞ்சிலையொல்லையில்வா

வாங்கிவாயுவின்மாப்படைதூண்டலு, மாங்கவ்வெய்யனுமப்படையேவியே
தாங்கிவன்மைதணித்தலுந்தாவிலோன், றீங்கனற்படையுய்த்தனன்சீறியே.(௯௧)

மாரியன்னகைமன்னவர்கோமக, னாரழற்படையவ்வழிதூண்டலும்
வீரவாகுவிடுத்திடுதீப்படை, போரியற்றிப்பொருக்கெனமீண்டதே. (௯௨)

சுடுகனற்படைபோந்திடச்சூர்மகன், கடிதுபின்னுங்கதிர்ப்படைதானொடா
வடுதியன்னவனாவியைநீயென, விடுதலோடும்விரைந்ததுசென்றதே. (௯௩)

விரைந்துசென்றதைவீரமொய்ம்புள்ளவன்,றெரிந்துசேணிடைச்செங்கதிரோன்
படை,துரந்துநீக்கலுஞ்சூர்மகன்பங்கயத்,திருந்தவன்படையேவினனென்பவே.()

தேன்முகத்துத்திருமலரோன்படை, வான்முகத்துவருதலுமாங்கவ
னான்முகப்படையொய்யெனத்தூண்டினா, னான்முகத்தனடற்கணநாயகன். ௯௫

தூண்டுவேதன்படைக்கலஞ்சூர்மக, னாண்டுதொட்டபடையையகற்றியே
மீண்டுவந்திடவெய்யவன்வீரன்மே, னீண்டமாயநெடும்படைவீசினான், (௯௬)

Digitized By Roja Muthiah Research Library

வீசுமப்படைதன்னைவிலக்கினன், கேசவன்படையாற்கிளர்மொய்ம்புடை
மாசில்கேள்வியன்மற்றதுநோக்கியே, நீசன்மாமகனுள்ளநினைகுவான். (கூஎ)

தொட்டதொட்டபடைகடொலைவுற, விட்டனன்படைமேலினியாவையு
மட்டுநல்குமரன்படைதூண்டுறி, னெட்டலன்கரத்துண்டதுகண்டதே. (கூஅ)

ஆதலாலியானப்படைதூண்டிட, லூதியத்தையுடைத்தன்றுமாயையா
லேதிலானையினியடல்செய்வதே, நீதியென்றுநினைந்தனனேரலன். (கூகூ)

விஞ்சைமாயவியன்முறைமந்திர, நெஞ்சமீதுநெறிப்படவெண்ணியே
செஞ்சுடர்க்கதிரைச்சிறைசெய்திடு, வஞ்சமைந்தன்மறைந்தனன்றேரொடும். ()

பாங்குமுன்னரும்பின்னரும்பாய்கதிர், தூங்குதேரொடுதன்னலனேகுறு
வீங்குமாற்றல்விறலுடைமொய்ம்பன்மேல், வாங்குவிற்கணைமாரிவழங்கினன். க0க

சூறையென்னத்திரிபவன்றூண்டிய, மாறில்வாளிபடப்படவள்ளன்மெய்
யூறதாகியுலப்பறுசெம்புன, லாறதென்னவழிக்கொண்டதாலரோ. (க0உ)

அண்டர்நோக்கியழிந்தனர்பாரிடர், தண்டமோடுதளர்ந்தனர்சார்பினோர்
விண்டுவிண்டுவெருவினரச்செயல், கண்டுவீரன்கனலெனச்சீறினன். (க0௩)

வேறு.

ஒன்றொருமாயைதன்னுலுய்ந்துமுன்வென்றுபோனு
னின்றுமதுன்னினுனேவினியதுமுடிக்கவற்றோ
நன்றிதுநன்றிதம்மாநானிவன்றன்னையின்னே
கொன்றிடுகிற்பேனென்னக்குறித்தனன்குமரன்பின்னேன். (க0௪)

ஈதுதன்புந்திதேற்றியீங்கிவன்சூழ்ச்சிமாய்ந்து
போதருகின்றவாறுபுரிகுவன்விரைவினென்னுச்
சேதனங்கொண்டதுப்பிற்றெய்வதப்படையைப்போற்றி
மேதகுவழிபாடாற்றியவுணனைக்குறித்துவிட்டான். (க0ரு)

பொருவருந்திறலோன்விட்டபோதகப்படையேபானு
ளிருளினையிரியல்செய்யுமிரவிபோற்சேறலோடும்
விரைவொடுவிஞ்சைமாயம்விளிந்ததுவேந்தன்மைந்த
னொருபெருந்தேருந்தானுமாகியேயும்பர்நின்றான். (க0சு)

தோன்றியேவிண்ணினின்றசூர்மகன்றொலைவிலாற்றல்
சான்றதன்மாயம்போனதன்மையுந்தடந்தோள்வீர
னான்றநல்வலியுநோக்கியயர்ந்தனனயர்ந்துமுன்ன
மான்றிடுமமரர்யாருமனமகிழ்சிறந்துநின்றார். (க0எ)

அவ்வழிவீரமொய்ம்பனந்தரவழிக்கணின்ற
மைவழிசிந்தைமைந்தன்மாண்பினைநோக்கிவஞ்ச
வெவ்வழியினிநீபோதியானிவணடுவனென்னுக்
கைவழிவரிவில்வாங்கித்தேரொடுங்ககனஞ்சென்றான். (க0அ)

விண்ணிடைப்புகுந்தவீரன்வெலற்கருஞ்சூரன்மைந்தன்
கண்ணுறமுன்புநேர்ந்துகணைபலகோடிதூர்த்தா
னன்னலனவனுஞ்சீறிநவின்றதோர்சாபம்வாங்கித்
துண்ணெனவிசிகமாரிசொரிந்தனன்சுரர்களஞ்ச. (க0கூ)

நீரொடுகனலுமாறாய்நெடுஞ்சினந்திருகிநின்று
போரிணையிழைப்பதென்னவிருவரும்பொருதுநின்றா
ரோரிறையளவைதன்னிலோராயிரநூறுகோடி
சாரிகைதிரிந்தவம்மாவனையவர்தடம்பொற்றேர்கள். (௧௧0)

ஏற்றிகல்புரியும்வீரரெதிரெதிர்துரக்கும்வாளி
நாற்றிசைகொண்டவண்டப்பித்திகைகாறுநண்ணி
மேற்றிகழ்பரிதிப்புத்தேள்வியன்கதிர்வரவுதன்னை
மாற்றியெவ்வுலகுளோர்க்குமலிதுயர்விளைத்தவன்றே. (௧௧௧)

செற்றமொடிவர்கள்வீசுந்திருநெடுங்கணைகள்யாண்டு
முற்றிடுகின்றகாலத்துகுவனகவனமான்றே
ரற்றனபுரவிகாலையவிந்தனகளிற்றினீட்ட
மிற்றனவவுணர்சென்னியிறுவனபூதர்யாக்கை. (௧௧௨)

கிட்டுவசேணிற்செல்வகிளருவகிடைத்துப்பின்னு
முட்டுவவொன்றையொன்றையிடம்வலமுறையிற்சூழ்ந்து
வட்டணைபுரிவவானோர்மதிக்கவுமரியவல்லே
யெட்டுளதிசையும்விண்ணுந்திரிவனவிருவர்தேரும். (௧௧௩)

இகழுவர்முனிவர்வெஞ்சூளியம்புவர்வன்மைநோக்கிப்
புகழுவருரப்பிவீரம்புகன்றெடுத்தழைப்பர்பூசன்
மகிழுவர்நகைப்பர்வெற்றிவால்வளைமுழக்கஞ்செய்து
திகழுவர்கணையின்மாரிசிந்துவர்தெழித்துச்செல்வர். (௧௧௪)

புரந்தனையட்டசெல்வன்புதல்வனுமவுணன்சேயும்
விரைந்தெதிர்மலைந்தகாலைமுறைமுறைவெகுண்டுவிட்ட
வரந்தெறுபகழிமாரியகிலமும்விரவிச்செல்லக்
கரந்தனவிரவிதிங்கள்கலைகளுங்குறைந்ததன்றே. (௧௧௫)

வேறு.

காலொப்பனகூற்றொப்பனகனலொப்பனகடுவின்
பாலொப்பனவுருமொப்பனபணியார்புரம்பொடித்த
கோலொப்பனகதிரொப்பனகுன்றந்தனைக்கொன்ற
வேலொப்பனவிருவீரரும்விடலுற்றிடுவிசிகம். (௧௧௬)

வரைபுக்கனபுயல்புக்கனவான்புக்கனமறிதெண்
டிரைபுக்கனகடல்புக்கனதிசைபுக்கனதிசைசூழ்
தரைபுக்கனவண்டத்துழைதனிற்புக்கனபிலத்தி
னிரைபுக்கனவினையோனுடனவுணன்விடுநெடுங்கோல். (௧௧௭)

திரிகின்றனவிருவோர்விடுதீவாளியுமவைபட்
டெரிகின்றனபுயலின்குலமிருநாற்றிசைக்கரியுங்
கரிகின்றனபுவிவிண்டனகடல்வற்றினவுடுமீன்
பொரிகின்றனவுலகெங்கணும்புகைவிம்மியதன்றே. (௧௧௮)

பொடியோங்கியதிறன்மொய்ம்புடைப்புலவன்விடுசரத்தை
வடியோங்கியகணைமாரியினருக்கன்பகைமாற்றுங்
கொடியோன்மகன்விடுவாளியைக்குதைவெங்கணைமழையா
னெடியோன்றனித்துணையானவனறுத்தேயுடனீக்கும். (௧௧௯)

Digitized By Roja Muthiah Research Library

போரிவ்வகையிருவீரரும்பொரலுற்றிடுபொழுதிற்
பாரின்றலைநின்றோர்களுமிமையோர்களும்பார்த்தா
ராரிங்குளரிவரேயெனவமர்செய்தவரடுபோர்
வீரந்தனிலெவரேயிவர்க்கிணையென்றுவியந்தார். (கஉ0)

அவ்வேலையினாறுயிரமடுவெங்கணையதனான்
மைவேலையில்வருபானுவைத்தளைபூட்டியமைந்தன்
செவ்வேலவன்றிருத்தூதுவன்றேரைப்பொடிபடுத்தி
யெவ்வேலையும்வெருக்கொண்டிடவிடியேறெனவார்த்தான். (கஉக)

ஆர்க்கின்றுழிவிறன்மொய்ம்புடையறிவன்சினந்திருகிச்
சீர்க்கின்றவிண்மிசைநின்றுதன்சிலைகாலுறவாங்கிக்
கூர்க்குங்கணையோராயிரங்கொளுவித்துரந்திட்டுக்
கார்க்கின்றமெய்யவுணர்க்கிறைகடுந்தேர்துகள்கண்டான். (கஉஉ)

வையந்துகளாயிற்றிடவானத்திடைநின்ற
வெய்யன்பெருஞ்சினஞ்செய்துவில்வீரன்றனதுரத்தி
னையஞ்சுநஞ்சயில்வாளிபுக்கழுந்தும்படிதூண்டிச்
சையந்தனைக்கடந்தேவளர்தடந்தோள்புடைத்தார்த்தான். (கஉங)

உரத்திற்புகுநெடுவாளியினுளநொந்திடுமுரவோன்
கரத்திற்சிலைதனிலேழிருகணைபூட்டினன்செலுத்தி
வரத்திற்றனக்கிணையில்லதொர்மன்னன்மகன்றனது
சிரத்திற்பொலிமகுடந்தனைச்சிந்தித்துகள்செய்தான். (கஉச)

மாண்கொண்டிடுமுடிசிந்திடவறியானெனத்திகழு
மேண்கொண்டிடுசூரன்மகனேழ்கணைதூண்டித்
தூண்கொண்டிடுதிறன்மொய்ம்புடைத்தொல்லோனுரம்பிணித்த
நாண்கொண்டிடுகவசந்தனைநடுவேதுணித்திட்டான். (கஉரு)

ஆகம்படுநெடுஞ்சாலிகையழிவெய்தலுமழல்கா
றுகம்படுசடையோன்சுதனன்றீதெனநகையாப்
பாகம்படுபிறைபோலெழுபகுவாய்க்கணைசெலுத்தி
மேகம்படுமணிமேனியன்வில்லைத்துணிபடுத்தான். (கஉசு)

வில்லொன்றிருதுணியாதலும்வெங்கூற்றினும்வெகுளா
வல்லொன்றியமளத்தீயவனயன்முன்கொடுத்துள்ள
வெல்லொன்றியதனிவேலினையெடுத்தீங்கிவன்றன்னைக்
கொல்லென்றுரைத்துரவோன்மிசைகுறித்துச்செலவிடுத்தான். (கஉஎ)

வேறு.

விடுத்தகாலையினித்திறந்தெரிந்திடும்விறலோ
னடற்பெருங்கணையாயிரகோடிகளதனைத்
தடுத்திடும்படிசெலுத்தினனவையெலாந்தடிந்து
வடித்தவேற்படைவான்வழிக்கொண்டுவந்ததுவே. (கஉஅ)

வந்தகாலையிலதன்வலிநோக்கியேவள்ள
லிந்துசேகரனுதவியநாந்தகமெடுத்துக்
கந்தவேளடிவழுத்தியேகருதலன்விடுத்த
குந்தவெம்படையிருதுணிபட்டிடக்குறைத்தான். (கஉகூ)



Digitized By Roja Muthiah Research Library

குறைத்தகாலையிலமரர்களாடினர்கொடியோன்
றிறத்தராகியவவுணர்களேங்கியேதிகைத்தா
ரறத்தையாற்றிடுமிளையவனங்கதுநோக்கி
யெறித்தருஞ்சுடர்வாளினையுறையகத்திட்டான். (௧௩0)

அள்ளிலைத்தனிவேற்படையிறுதலுமதனைக்
கள்ளவிஞ்சைகள்பயின்றிடுசூர்மகன்காணுத்
தெள்ளிதம்மவோவென்படைவலியெனச்செப்பிப்
பொள்ளெனக்கரவாளமொன்றெடுத்தனன்பொருவான். (௧௩௧)

கருமுகிற்புரைமேனியன்கரத்தில்வாள்பற்றி
விரவுமின்னுவின்கொடியெனவிதிர்த்துமுன்வீசி
யுருமிடிக்குலத்தாவலங்கொட்டியார்த்துருத்துச்
செருமுயற்சியாற்சீரிளங்கோவின்முன்சென்றான். (௧௩௨)

சென்றகாலையிலிளையவன்றன்பெருஞ்சிலைகா
லொன்றவாங்கியேபகழிபல்லாயிரமுய்த்து
வென்றிவாட்படையானுரங்கிழித்திடவிடர்செய்
குன்றில்வீழ்தருமருவிபோல்வீழ்ந்ததுகுருதி. (௧௩௩)

பரிதிமாற்றலன்மிசைவருபகழியும்பாரான்
குருதிவீழ்வதுமுரம்பகிர்வுற்றதுங்குறியா
னொருதன்மானமுந்தானுமாயோடினன்குறுகிச்
சுருதியன்னவன்சிலையினைவாளினாற்றுணித்தான். (௧௩௪)

வில்லிறுத்திடுவிறலினோன்மிசைபடக்கிளர்ந்து
செல்லெனத்தெழித்தொருதன்வாள்வீசினன்றிரிய
வல்லலுற்றிடுமிமையவரங்கதுநோக்கி
யில்லைமற்றிவனிறந்தபின்னமரென்பதென்றார். (௧௩௫)

அங்கவெல்லையில்வீரவாகுப்பெயரறிஞன்
றிங்கள்சூடியவுலகடுந்தாதையிற்சீறித்
துங்கமிக்கதன்வாளுரீஇக்கறங்கெனச்சுற்றி
யெங்கணேகுதியென்றுபோயவுணனையெதிர்ந்தான். (௧௩௬)

ஏற்றெதிர்ந்திடுமெல்லையினிரவியம்பகைஞன்
காற்றெனச்சென்றுநேர்ந்தனனிருவருங்கலந்து
சீற்றநீர்மையால்வாளமருழந்தனர்செங்கட்
கூற்றுமங்கியுஞ்சமர்புரிகின்றகோட்பென்ன. (௧௩௭)

மாறுமாறுசென்றடிமுதனுறுப்பினைவாளால்
வேறுசெய்திடவெறிகுவரன்னதுவிலக்கி
யூறுசெய்திறநாடுவரிடைதெரிந்துறுமற்
சூறையாமெனச்சுற்றுவர்வட்டணைசூழ்வார். (௧௩௮)

இன்னதன்மையிலிருவரும்வாளமரியற்றி
மன்னுகாலையிற்சூர்மகன்விஞ்சையின்வலியாற்
றன்னைநேரிலாவிளையவன்றடக்கைவாளகற்றி
யன்னவன்றிருத்தோண்மிசையெறிந்தனனன்றே. (௧௩௯)

Digitized By Roja Muthiah Research Library

மாற்றலன்கரவாளினாலெறிதலும்வள்ள
லாற்றன்மொய்ம்பிடைக்குருதியாறிழிதரவதுகண்
டேற்றமெய்தினன்சூர்மகனிவன்றனக்கிளையோன்
றோற்றிடுங்கொலென்றிரங்கினர்வானவர்துளங்கி. (௧௪0)

அன்னகாலையிலிளையவனறுமுகத்தமலன்
பொன்னின்சேவடிபுந்தியிலுன்னியேபுகழ்ந்து
மின்னுவானதன்வாட்படைவீசியேவிரைந்து
துன்னலன்வலத்தோளினைவலியொடுதுணித்தான். (௧௪௧)

துணித்தகாலையில்வலதுகைதன்னொடுதொடர்ந்த
பணித்தனிச்சுடர்வாளினையிடக்கையாற்பறித்து
மணித்தசும்புகொண்மொய்ம்புடையவுணர்கோன்மற்றுந்
தணிப்பருஞ்சினந்தன்னொடுமுயன்றனன்சமரே. (௧௪௨)

தீயவன்றனிமுயற்சியைநோக்கியேதிறலோன்
றூயவாள்கொடேயன்னவனிடக்கையைத்துணிப்ப
மாயைதொல்படைவிடுத்திடுவேனெனமதித்தா
னாயகாலையிலறிஞனுமவன்றலையறுத்தான். (௧௪௩)

வாளிலங்கவனுடலுஞ்சென்னியும்வரைநேர்
தோளும்யாக்கையும்வீழ்ந்தனசூரியன்பகைஞ
னாலந்தனனவனுயிர்வெளவியேநடுவ
னாளிமொய்ம்பனைவழுத்தியேதென்புலத்தடைந்தான். (௧௪௪)

சூரன்மாமகன்முடிந்ததுமுனிவருஞ்சுரரு
மாருநோக்கியேயாடினர்பாடினரார்த்தார்
வீரவீரனீயாமெனவிளவலைவியந்து
மாரியாமெனவவன்மிசைபொழிந்தனர்மலர்கள். (௧௪௫)

நுவலருந்திறற்சூர்மகன்பட்டதுநோக்கி
யவலமெய்தியேயழிந்திடுபூதர்களார்த்துத்
தவலருந்திறல்வீரனைவழுத்தினர்தனது
கவலைநீங்கியேகளித்தனன்செங்கதிர்க்கடவுள். (௧௪௬)

அன்னகாலையில்வீரவாகுப்பெயரறிஞன்
றன்னுளஞ்சிறந்தகலிருவிசும்பினைத்தணவா
விர்நிலத்திடைவந்துதன்றுணைவர்தம்மினத்தைத்
துன்னியாங்கவர்புகழ்ந்திடவினையனசொல்வான். (௧௪௭)

ஆனதொல்பெருமாயையானம்மைமுன்னலைத்த
பானுகோபனையட்டனம்பகர்ந்தசூளுறவு
தானுமுற்றியதாலினியெம்பிரான்றன்முன்
சேனைதன்னொடுமேவுதுஞ்செல்லுதிரென்றான். (௧௪௮)

மிக்கவீரனித்தன்மையையுரைத்தலும்வினவி
முக்கணாயகன்குமரவேளிணையடிமுன்னம்
புக்குநென்னலுந்தொழுதிலநன்றுநீபுகன்றாய்
தக்கதேயிதுவென்றனர்துணைவராந்தலைவர். (௧௪௯)

Digitized By Roja Muthiah Research Library

ஆங்கவ்வெல்லையினம்பிதன்னினைஞருமடுபோர்
தாங்குபூதருந்தானையந்தலைவருந்தழுவிப்
பாங்கர்வந்திடப்பொருகளமொருவியேபடர்ந்து
பூங்கிடங்குசூழ்பாசறையிருக்கையுட்புகுந்தான். (௧௫௦)

சோதிநீடியபாசறைபுகுந்திடுதூயோன்
பூதர்தம்மொடுந்துணைவர்கடம்மொடும்போந்து
காதலாகியேயறுமுகத்தையனைக்கண்டு
பாதபங்கயந்தன்னிடைப்பன்முறைபணிந்தான். (௧௫௧)

பரிந்துபன்முறைவணங்கியேயெழுதலும்பகவன்
றெரிந்துநோக்கிநீசூர்மகனோடுபோர்செய்து
வருந்தியாங்கவற்செற்றனையாதலின்மகிழ்ந்தாம்
விரைந்துகேண்மதிநல்குதும்வேண்டுவதென்றான். (௧௫௨)

என்றுமூவிருமுகமுடைப்பண்ணவனியம்ப
நின்றுபோற்றிடுமிளையவனெம்பிரானின்னை
யன்றியான்செய்தசெயலிலையாயினுமடியேற்
கொன்றுமற்றிவணருளியவேண்டுமென்றுரைப்பான். (௧௫௩)

கோலநீடியநிதிபதிவாழ்க்கையுங்குறியேன்
மேலையிந்திரனரசினைக்கனவினும்வெஃகேன்
மாலயன்பெறுபதத்தையும்பொருளெனமதியேன்
சாலநின்பதத்தன்பையேவேண்டுவன்றமியேன். (௧௫௪)

அந்தநல்வரமுத்தியின்னரியதொன்றதனைச்
சிந்தைசெய்திடுதேவத்தரும்பெறுகிலர்சிறியே
னுய்ந்திடும்வகையருள்செயவேண்டுமென்றுரைப்ப
வெந்தைகந்தவேளுனக்கதுபுரிந்தனமென்றான். (௧௫௫)

உடையதொல்விறல்வாகுவுக்கிவ்வரமுதவிப்
புடையினிற்றொழுதுணைவர்க்குநல்லருள்புரியா
வடையமற்றவரிருக்கைகள்வைகுவானருளி
விடைபுரிந்தனன்யாவர்க்குமேலதாம்விமலன். (௧௫௬)

செங்கதிர்ப்பகையட்டவன்முதலியதிறலோர்
புங்கவன்றனைத்தொழுதுதம்மிருக்கையிற்போனா
ரிங்குமற்றிதுநின்றிடவவுணர்தம்மிறைவற்
கங்கணுற்றிடுசெய்கையைமேலினியறைவாம். (௧௫௭)

வேறு.

ஈதிவர்புரிந்ததேலிறைவன்றன்னையுங்
காதவரென்பதுகருத்துட்கொண்டெழா
வாதுவர்கலனமாவழிக்கொண்டாலெனத்
தூதுவரோடினர்துளங்குநெஞ்சினார். (௧௫௮)

மதிதொடுகடிமதின்மகேந்திரப்புரத்
ததிர்தருமுரசொலியவிந்துதன்பினான்
முதிர்வுறுமழுகுரன்முழங்கும்வீதிபோய்க்
கதுமெனவரசவைக்களத்துளேகினார். (௧௫௯)

Digitized By Roja Muthiah Research Library

துன்னியபெரும்புனறூண்டுகண்ணின
ருன்னருந்துயரினருயிர்க்குநாசியர்
மன்னவனிணையடிவணங்கியுன்மகன்
முன்னுறுதூதனுன்முடிவுற்றானென்றார். (௧௬0)

தாழ்ந்தவர்மொழிந்திடுதன்மைகேட்டலுஞ்
சூழ்ந்திடுதிருவுடைச்சூரனென்பவ
னாழ்ந்திடுதுயர்க்கடலழுந்தியோவெனா
வீழ்ந்தனன்புரண்டனனுயிர்ப்புவீங்கினான். (௧௬௧)

நக்குறுசுடரெனநடுக்கமுள்ளுற
மிக்கெழுகுருதிநீர்விழிகள்கான்றிடத்
தொக்குடல்வியர்ப்பொடுதுளக்கங்கொண்டிட
வக்கணமயங்கினனறிவுசோர்ந்துளான். (௧௬௨)

தளர்ந்துடல்வெதும்புறத்தன்கண்சோர்வுற
வுளந்திரிவுறவுயிருசலாடிட
விளிந்தவராமெனவீழ்ந்துமான்றவன்
றெளிந்தனனிரங்கினனினையசெப்பினான். (௧௬௩)

வேறு.

மைந்தவோவென்றன்மத * களிறேவல்வினையேன்
சிந்தையோசிந்தைதெவிட்டாததெள்ளமுதோ
தந்தையோதந்தைக்குத்தந்தையிலான்கொன்றனனோ
வெந்தையோநின்னையிதற்கோவளர்த்தனனே. (௧௬௪)

வன்னச்சிறுவர்பலர்மாய்ந்தாரவர்மாய்ந்து
முன்னைத்துணையென்றுளங்கொண்டிருந்தனனா
லென்னைத்தனியேவைத்தெந்தையுமேகுற்றனையேற்
பின்னைத்தமியேன்பிழைக்கும்படியுண்டோ. (௧௬௫)

ஒன்னார்சிறையைவிடினுய்வுண்டாமென்றுமுனஞ்
சொன்னாயதுவுமிகழ்ந்துன்னைத்தோற்றனனா
லென்னாமினியதனையெண்ணுவதியாவருக்குந்
தன்னால்வராதவினையுளதோதக்கோனே. (௧௬௬)

நன்றீதலசமர்க்குநண்ணுவதுநண்ணலர்மே
லென்றீரமாகவிசைத்தாயானேகாமற்
சென்றீயெனவேசெலுத்தியுனைப்போக்கினனா
லொன்றீங்குளதோபிழையுன்மிசையையா. (௧௬௭)

கைப்போதுகொண்டுகடவுளர்களெல்லோரு
முப்போதும்வந்துமுறையால்வழிபடுவா
ரொப்போதலில்லாவுனதுமேலுள்ளபகை
யிப்போதுடனீங்கியேமுற்றிருந்தாரோ. (௧௬௮)

உன்றனிணைக்கஞ்சியுறங்காதுழன்றிடுமா
லிந்நாடனினியிறந்தாயெனமகிழ்ந்து
பன்னாகப்பாயல்படுத்திருவர்கால்வருடத்
தொன்றாளெனவேகவலையின்றித்துஞ்சானோ. (௧௬௯)

* மத என்பது - உரிச்சொல்லாதலால் வல்லொற்று மிகாது மதகளிறென்றாயது.

Digitized By Roja Muthiah Research Library

நந்தானவர்குலத்துநாயகமேநண்ணினர்க்கோர்
சிந்தாமணியேதிருவேயென்றௌ்ளமுதே
யெந்தாய்தனியேபோயெங்கிருந்தாயங்கேயான்
வந்தாலுமுன்றன்மதுரமொழிகேட்பேனோ. (கஎ0)

சோராதசூழ்ச்சித்துணைவர்சிறாரெல்லாருஞ்
சோரார்பொருதலைப்பச்சென்றொழிந்துபோயினரா
லாராய்ந்தெனதுதுயராற்றுவதற்காருமிலை
வாராய்புதல்வாகடிதோடிவாராயே. (கஎக)

நீடித்திகழ்கதிராற்றீண்டிநினதுசிறை
வீடிச்சதுர்முகத்தோன்வேண்டிடநீவிட்டபின்னர்
வாடித்தளர்ந்துவசைபடைத்தவெய்யவனு
ரோடிக்கனத்துளமகிழ்ந்துசெல்லாரோ. (கஎஉ)

பற்றாரடித்தொண்டுபேணிப்பரந்துழலு
மொற்றானவனோவுனைத்தானடவல்லா
னற்றார்தமதுடலுக்காவியாய்ச்சென்றிடவே
கற்றாயேலென்னைமறந்திடவுங்கற்றாயோ. (கஎந)

மாகொற்றமைந்தன்மடிந்தானெனக்கேட்டு
மேகிற்றிலையாலிருக்கின்றதின்னுமுயிர்
வேகுற்றதுள்ளமிகுதுயரம்வந்தவழிச்
சாகுற்றதோர்வரமுஞ்சங்கரன்பாற்பெற்றிலனே. (கஎச)

வெற்றியுளமதலைவீந்தால்விளியாமன்
மற்றுமெனதுயிரும்வைகும்வலிதாகச்
செற்றிடலுமாகாதென்செய்கேனழியாமற்
பெற்றவரமும்பிழையாய்முடிந்ததுவே. (கஎ௫)

ஆவியேகண்ணேயரசேயுனைச்சமருக்
கேவியேயிவ்வாறிரங்குதற்கோவிங்கிருந்தேன்
கூவியேகொண்டுசெலுங்கூற்றுவனெற்றேவறியேன்
பாவியேனிந்தப்பதிபுகுந்தனூதுவனே. (கஎசு)

கூற்றேனகரிற்குறுகினையோவன்னதன்றேல்
வேற்றோரிடந்தன்னின்மேவினையோயாதென்றுந்
தேற்றேன்றனியேதியங்குகின்றேனித்துயர
மாற்றேனரசேயென்னுருயிரேவாராயோ. (கஎஎ)

என்னுவிரங்கியிறைவன்வருந்துதனு
மன்னுனுழையிலவுணர்சிலரோடித்
துன்னர்களத்திற்றுணிவுற்றசீர்மதலை
பொன்னுருடலங்கொடுபுலம்பிப்போந்தனரால். (கஎஅ)

வேறு.

சேந்தகுஞ்சிச்சிலதர்செஞ்ஞாயிறு, பாய்ந்தவண்ணலபடிவமிசைக்கொளா
வேந்தன்முன்னுறவுய்த்துவிரைந்தவன், பூந்தண்சேவடிபூண்டுபுலம்பினர். (கஎகூ)

அண்டர்தம்மையருஞ்சிறைவீட்டியே, தண்டகஞ்செய்தனிக்குடைமன்னவன்
றுண்டமாகியதோன்றறன்யாக்கையைக், கண்டரற்றிக்கலுழ்ந்துகலங்கினன், ()

Digitized By Roja Muthiah Research Library

அற்றமைந்தன்சிரத்தினையங்கையாற், பற்றுநல்லெழில்பார்த்திடுங்கண்களி
லொற்றுமுத்தமுதவுமுரனிலாப், புற்றராவினுயிர்க்கும்புரளுமால். (கஅக)

துஞ்சலாகித்துணிவுற்றுந்தெவ்வர்மே, னெஞ்சுகொண்டநெடுஞ்சினந்தீர்கிலை
விஞ்சுமானமும்வீரமும்வன்மையு, மெஞ்சுமேகொலினியுன்றொடென்னுமால். ()

கையிலொன்றைக்கதுமெனப்பற்றிடாச், செய்யகட்படுசெம்புனலாட்டியே
வெய்யவற்கொடுவிண்ணினுந்தந்தகை, யையவீதுகொலோவென்றரற்றுமே. ()

வாளரம்படுவாளிகண்மூழ்கலிற், சாளரங்களெனப்புழைதங்கிய
தோளைமார்பினைநோக்குந்தொலைவிலா, வாளைநீயலதாருளரேயெனும். (கஅச)

பாறுலாயபறந்தலைதன்னிடை, வேறுவேறதுவாகநின்மெய்யினைக்
கூறுசெய்தவனுவிகுடித்தலா, லாறுமோவென்னகத்துயரென்றிடும். (கஅரு)

மூண்டபோர்த்தொழின்முற்றியவென்மக, னீண்டுவந்ததொர்தூதுவனெற்றிட
மாண்டுளானென்றுரைத்திடின்மற்றியா, ஞண்டபேரரசாற்றனன்றேயெனும். ()

சிரத்தைமார்பினைச்செங்கையைத்தொன்மைபோற், பொருத்திநோக்கிப்புரளு
மென்புந்தியை, வருத்துமாகுலமற்றதுகண்டுநீ, யிருத்தியோவுயிரேயின்னுமென்
றிடும். (கஅஎ)

மருளுமங்கைமறிக்குமதலையை, யருளினோக்கியழும்விழுஞ்சோர்வுறும்
புரளும்வாயிற்புடைக்கும்புவியிடை, யுருளுநீடவுயிர்க்கும்வியர்க்குமே. (கஅஅ)

ம்ன்னர்மன்னவன்மற்றிதுபான்மையா, லின்னலெய்தியிரங்கலுமச்செயல்
கன்னிமாநகர்க்காப்பினுள்வைகிய, வன்னைகேட்டனளாகுலமெய்தினாள். (கஅகூ)

நிலத்தில்வீழ்ந்துசரிந்துநெடுமயிர், குலைத்தகையள்குருதிபெய்கண்ணின
ளலைத்தவுந்தியளாற்றருந்துன்பினள், வலைத்தலைப்படுமஞ்ஞையினேங்கினாள். ககூ0

அல்லல்கூர்ந்தவவுணன்றன்காதலி, தொல்லைவைகியசூழலைநீங்கியே
யில்லையாகியவென்மகற்காண்பனென், றொல்லையாவலித்தோடினளேகினாள். ()

மாவலிக்குமடங்கலொப்பான்றனிக், காவலிக்குத்துயர்வந்தகன்னிமீர்
காவலிக்கணநண்ணுதிரென்றுகூ, யாவலித்தனராயிழைமாரெலாம். (ககூஉ)

வாங்குபூநுதன்மன்னவன்றேவிதன், பாங்கர்மங்கையர்பற்பலருஞ்சூழீஇக்
கோங்கமன்னமுலைமுகங்கொட்டியே, யேங்கியேதுயரெய்தியிரங்கினார். (ககூங)

இந்திரைக்குநிகர்வருமேந்திழை, யந்தமில்லதொராயிழைமாரொடு
முந்தியேகிமுடிநதுணிந்திடு, மைந்தன்மீமிசைவீழ்ந்துமயங்கினாள். (ககூச)

மயங்கினாள்பின்மனந்தெளிவெய்தினா, ளுயங்கினாண்மிகவோவென்றரற்றினா
டியங்கினாளுருமேறுநினைத்திடு, புயங்கமென்னப்புரண்டுபுலம்பினாள். (ககூரு)

வேறு.

வெய்யோனென்றாழ்நீண்டுதலோர்டும்விண்ணிற்போய்க்
கையோடன்றாற்பற்றினைவந்தென்கண்முன்ன
மொய்யோடன்றுவெஞ்சிறைசெய்தமுருகாவோ
வையோகூற்றுக்கின்றிரையாவதறியேனே. (ககூகூ)

பண்டேவானஞ்செந்தழன்மூட்டிப்பகைமுற்றுங்
கொண்டேசென்றாயப்பகலுன்றன்கோலத்தைக்
கண்டேனின்றேயிக்கிடைதானுங்காண்பேனோ
விண்டேனல்லேனிவ்வுயிர்தன்னைவினையேனே. (௧௯௭)

செந்தேன்மல்கும்பூமகள்செங்கைக்கிளியொன்று
முந்தேநின்னைவேண்டிடமொய்ம்பாலதுவாங்கித்
தந்தாய்நொந்தேற்கின்றொருமாற்றந்தருகில்லா
யந்தோவந்தோசெய்வகையொன்றுமறியேனே. (௧௯௮)

பாபத்தாலோவிண்ணவரானோர்பலர்கூறுஞ்
சாபத்தாலோயாரினுமேலாந்தனிமூவர்
கோபத்தாலோவெவ்வகையாலோகுறியேன்யான்
சோபத்தியால்வாடினனின்னைத்தோற்றேனே. (௧௯௯)

பொன்போன்மேனிக்கந்தனையிவ்வூர்புகுவித்துக்
கொன்போர்மூட்டிமைந்தரையெல்லாங்கொல்வித்துத்
துன்போடிந்நாணீயுமிறப்பச்சூழ்ந்தாரே
யென்போலாகவானவர்மாதரெல்லோரும். (௨௦௦)

வான்றாவுற்றவச்சிரமொய்ம்பன்வடவைத்தீக்
கான்றாலிக்கும்வன்னிமுகத்துக்கழல்வீரன்
மூன்றாநூற்றுப்பத்தினாயார்க்குமுதல்வந்த
தோன்றாலென்றேநின்னையிறைஞ்சிச்சூழ்ந்தாரோ. (௨௦௧)

துன்றேர்பெற்றமெய்யொடுபுந்திதுணிவாகச்
சென்றேவானிற்புக்கனைநின்பாற்செலும்வண்ண
மொன்றேயுள்ளந்தான்றுணியாதானுலைவெய்து
நன்றேநன்றேசிந்தையும்யானுநண்பம்மா. (௨௦௨)

கருந்தேன்மொய்த்தவண்டெனமின்னார்கட்கெல்லாம்
விருந்தேயாகுநின்னடைகாணும்விதியற்றேன்
மருந்தேயன்னாய்நின்னையிழந்தேன்மற்றிங்ங
னிருந்தேனல்லேன்றுஞ்சினனன்றோவினியானே. (௨௦௩)

நையாநிற்குந்தேவர்தமக்குநனிதுன்பஞ்
செய்யாநிற்றனன்றலவென்றேனதுதேரா
தையாநின்னைத்தோற்றனன்மன்னனவனுந்தா
னுய்வான்கொல்லோதன்னுயிர்தானுமொழியாதே. (௨௦௪)

வேறு.

என்றிவைபன்னித்தேவியிரங்கினளிரங்கலோடு
நின்றிடுதுணைவியாருநீடுதொல்கிளைஞர்யாருங்
கன்றொழிபுனிற்றாவென்னக்கதறினர்காமர்மூதூர்
வென்றியைநீங்கியந்நாள்விழுமநோய்மிக்கதன்றே. (௨௦௫)

அன்னதுகாலைதன்னிலவுணர்கோனிரக்கநீங்கிப்
பன்னருஞ்சிறப்பின்மிக்கபதுமையேமுதலோர்தம்மைத்
தொன்னிலையிருக்கையுய்த்துத்துண்ணெனச்சீற்றங்கொண்டு
தன்னுழைத்தொழுதுநின்றதானவர்க்கிதனைச்சொல்வான். (௨௦௬)

Digitized By Roja Muthiah Research Library

மாற்றலர்தொகையையெல்லாம்வல்லையிலின்றேசெற்றுச்
சீற்றமாய்க்குருதிவீட்டித்தீமகமொன்றையாற்றி
யீற்றுறுமைந்தன்றன்னையெழுப்புவனிந்தமெய்யை
வீற்றொருசாரினிட்டுவிடாதுபோற்றிடுதிரென்றான். (௨௦எ)

அன்னதுபலருங்கேளாவழகிதென்றெடுத்துமைந்தன்
பொன்னுடலொருசாருய்த்துப்போற்றினர்போற்றலோடு
மன்னவன்வெகுண்டுநந்தமாற்றலர்தொகையையெல்லா
மென்னிலையோனுக்கூறாவளிப்பனென்றெண்ணங்கொண்டான். (௨௦அ)

தம்பையஞ்சுழியல்வேய்ந்தசூர்முதலிவ்வாறுன்னிச்
செம்புனலொழுகுபைங்கட்டேர்ற்சிலரைநோக்கி
யம்புவிடாதுபாங்கராசுரத்தரசுசெய்யு
மெம்பியைவல்லையோடிக்கொணருதிரீண்டையென்றான். (௨௦௯)

பானுகோபன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௬௨௩.

---

# சிங்கமுகாசுரன்வதைப்படலம்.

என்னலுமொற்றர்கேளாவிறைவனையிறைஞ்சியேகி
யுன்னுறுநினைப்பின்முந்தியுத்தரத்தளக்கர்நண்ணி
மன்னகர்புகுந்துஞெள்ளல்கடந்துமந்திரத்துட்புக்குச்
சென்னியாயிரங்கொண்டுள்ளசிங்கமாமுகவற்கண்டார். (௧)

களித்தனர்மகிழ்ந்துதூதர்கான்முறைவணங்கிநிற்ப
வளித்திடுமரசின்வைகுமரிமுகன்வந்ததென்னை
கிளத்திடுவீர்களென்னக்கேடிலாவவுணர்மேலோன்
விளித்தனனையநின்னைவிரைந்தனைவருகவென்றார். (௨)

வேறு.

சரத்தினுங்கடியவரினையசாற்றலு, மரித்திறன்முகத்தவன்வினவியாயிடை
விருத்தமுண்டேலதுவிளம்புவீரென, வுரைத்தனனன்றெனவொற்றர்கூறுவார். ()

நும்பியைவரையொடுநுதிகொள்வேலின, லம்புவிவரைப்பில்வந்தட்டகந்தவே
ளம்பதிமுன்வடநகர்வந்தெய்தினன், செம்பதுமன்முதற்றேவர்சூழவே. (௪)

வந்திடுமெல்லைபோய்மலைந்துபையப், புந்திகொளமைச்சருஞ்சிறுரும்பொன்றி
ன, ருய்ந்தனனிரணியனுததியோடின, னெந்தையங்கிருந்தனன்புதுமையீதென்
றார். (௫)

தொழுந்துணைக்கையுடைத்தூதரின்னண, மொழிந்ததுவினவலுமுனிவுமானமு
மழுந்திடுதுயரமுமாகம்போழ்ந்திட, வெழுந்தனனவுணரோடேகன்மேயினான். (௬)

முன்புறுகடையுறுமொய்த்ததூதரை, யென்பெருஞ்சேனையைக்கொணர்திரீண்
டெனத், தென்புலக்கோமகனேற்றிற்செப்பலு, மன்பெருந்தானைகள்வல்லைவந்த
வே. (எ)



Digitized By Roja Muthiah Research Library

தூசிகொணூற்படைதுவன்றிச்சேர்தலு, மாசுறுமரிமுகத்தண்ணல்கண்ணுறீஇப்
பாசனமன்னவர்பாங்கர்சுற்றிடத், தேசுடைமணிநெடுந்தேரொன்றேறினன். (அ)

தாரொலிசெய்தனதாள்வயப்பரி, பேரொலிசெய்தனபிறங்குபூட்கைசேர்
காரொலிசெய்தனகண்டையார்த்தன, தேரொலிசெய்தனதெழித்தசில்லியே. (கூ)

முரட்டுடிசல்லிகைமுரசங்காகள, முருட்டுறுசுரிமுகமுடுக்கைதுந்துபி
திரட்டுறுதண்ணுமைதிமிலையாதிக, ளிரட்டியகேதனமெங்குமீண்டிற்றே. (க0)

தழங்குரன்மால்கரிபுரவிதானவ, ரழுங்குறுதேர்நிரையணிகம்வானமே
வழங்குறுநெறியதாவலிதிற்சென்றன, முழங்கிலபெயர்கிலமுகில்களஞ்சியே. (கக)

வயிதுதன்மையினீண்டுதானைகள், பாயினசென்றிடப்பரிதிபோலொளி
ராயிரமவுலியனவுணர்நாயகன், சேயுயர்விசும்பினிலெழுந்துசென்றனன். (கஉ)

கன்னலொன்றளவையிற்ககனத்தாற்றினூற், சென்னிகள்பலவுடைச்சீயமாமுகன்
மன்னவனுறைதருமகேந்திரப்புரந், துன்னினன்வெருவியேசுரர்களோடவே. கங

அடைத்தலைநீங்கியவம்பொற்கோநகர்க், கடைத்தலைவந்தனன்கனகத்தேரொரீஇப்
படைத்தலைமன்னவர்பரவுள்புகாச், கிடைத்தலைமேயினன்கெழுமுகுரவை. கச

அரசியல்புரிந்திடுமவையைநண்ணிய, முரணுறுசிங்கமாமுகத்தன்முன்னவன்
றிருவடிமலர்களிற்சென்னிதீண்டுறப், பரிவொடுவணங்கினன்றெழுதபாணியான்.

வணங்கியதம்பியைமலர்க்கைதொட்டெடா, விணங்கியமார்புறத்திறுகப்புல்லலு
நிணங்கவர்வேலினுய்நினதுசெம்முக, முணங்கியதற்றதெனுரைத்தியாலென்றான்.

என்னலுமவுணர்கோனிளையவன்றனை, முன்னுறவிருத்தியேமுரணின்மேலையோ,
யென்னிடையுற்றனவிசைப்பன்கேளென, வன்னவனுணர்வகையறைதன்மேயி
னன். (கஎ)

அன்றுநீபோந்தபின்னயில்கொள்வேலினூற், குன்றினையெறிந்திடுகுமரனென்பவன்
றன்றுணைச்சேனையுந்தானுமிந்நகர், சென்றனன்பாசறைசேர்ந்துவைகினன். (கஅ)

மற்றவன்சேனைகண்மலையமைந்தர்க, ளிற்றனரமைச்சனுமிறந்துபோயின
னற்றனதானையுமாடகப்பெய, ருற்றவனிரிந்தனனுததியோடினன். (ககூ)

பொங்குளையரிமுகபுகுதியின்னதாற், சங்கையில்படையொடுசமரினேகியே
யங்கவன்வலியினையடர்த்துமீளுதி, யிங்குனைவிளித்தனனிதனுக்காவென்றான். ()

எஞ்சலில்சூரன்மற்றிதனைச்செப்பலும், வெஞ்சினவரிமுகவீரன்றேர்வுறா
நெஞ்சினிலாகுலநிகழமுன்னவன், செஞ்சரண்வீழ்ந்துநின்றிதனைச்செப்புவான். ()

மல்லலம்புயமுடைமைந்தர்தங்களைத், தொல்லையிலமைச்சரைச்சுற்றத்தோர்களை
யெல்லவர்தம்மையுமிழந்துவைகினாய், புல்லிதுபுல்லிதுன்புந்தியெண்ணமே. உஉ

மூலமுமுடிவுமில்லாதமூர்த்தியைப், பாலனென்றெண்ணினைபடுவதோர்ந்திலை
யாலமதானதேயையவென்மொழி, மேலையின்விதியையார்வெல்லுநீரினர். (உங)

சென்றிடுபுனலினைச்சிறைசெய்தாலதென், னின்றினியேகியேயெண்ணலாரெனத்
தன்றியகுழூவெலாந்துடைத்துநங்கியே, நின்றிடுகின்றனனீயுங்காண்டியால். ()

கந்தனுமொருவனைக்கடக்கப்பெற்றிடின், வந்துனைக்காண்பனன்மற்றதில்லையே
லந்தமதடைவராலாருமையநீ, புந்தியினினைந்தனபுரிதியாலென்றான். (உ௫)

என்றுகைதொழுதுபின்னிறையுமவ்வீடை, நின்றிலன்விடைகொடுநிருதனேகியே
தூன்றியதானைகள்சூழமற்றவ, ணொன்றுதன்மந்திரத்துறையுளெய்தினான். (உ௬)

போனகமேருவும்புடையிற்சூழ்வரு, மூனெனும்வரைகளுமுலப்பில்சோரிநீர்
தேனொடுபாறயிர்தேறலாதிக, ளானபல்கடல்களுமயிறன்மேயினான். (உ௭)

வாசநீர்தோய்ந்திடுநரந்தமான்மதம், பூசினன்பாளிதமிசைபுனைந்தனன்
வீசுபன்மதுமலர்மிலைச்சுகின்றனன், காசினிவரைப்பெலாங்கந்தஞ்சூழ்தர. (உ௮)

களைந்தனன்பழையனகலனப்பூண்டனன், வளந்தருகின்றதோர்யாணர்மாண்கல
ன்,மிளிர்ந்திடுதினகரர்புணரிவீழ்ந்துழி,யொளிர்ந்துடன்பலகதிருதிக்குமாறுபோல்.

படிதவிர்பருப்பதம்பத்துநூற்றினின்,முடிதொறுமிளம்பிறைமுளைத்தவாறுபோ,
னெடுமைகொளரிமுகனெற்றிதோறும்வெண்,பொடிதனையணிந்தனன்புனிதமாயி
னான். (௩0)

தண்டமுநேமியுஞ்சங்கரன்றரக், கொண்டதோர்சூலமுங்குலிசமேமுத
லண்டர்தம்படைகளுமனைவீந்திடு,திண்டிறற்பாசமுஞ்செங்கைபற்றினான். (௩௧)

கைத்தலம்யாவையுங்கதிர்கள்கான்றிட, வெத்திறப்படைகளும்பின்னரேந்துறுப்
பத்துநூறாயிரம்பரிகள்பூண்டதோர், சித்திரமணிநெடுந்தேரிலேறினான். (௩௨)

தந்திரத்தலைவருந்தனயர்யாவருஞ், சிந்துரத்தொகுதியுந்தேருமாக்களு
மிந்திரப்பெருவளம்யாவுஞ்சூழ்தர, மந்திரத்திருநகர்வாயிலெய்தினான். (௩௩)

வேறு.

மேற்படுகேசரிவெம்முகவீரன், மாற்படுகோநகர்வாய்தலின்மேவ
நாற்படையானவுநண்ணினவெம்போ, ரேற்புடைவெள்ளமிலக்கமதன்றே. (௩௪)

வானவரேற்றமுமண்ணவர்வாழ்வுந், தானவரின்னலுநீக்கியதக்கோ [ர்.
ரூனமில்செய்கையரொள்ளொளியுண்ணுங், கானமெனப்பொலிகாட்சியின்மிக்கோ

கார்பயில்கின்றகருத்தினர்காமன், கூர்பயில்கின்றகொடுங்கணையுண்ணுந்
தார்பயிறோளர்சமர்த்தொழில்செய்தே, மார்பகமன்றிவடுப்புனையாதோர். (௩௬)

எண்ணமிறொல்லுயிர்யாவுமலைக்கு, மண்ணலையன்னவராரழல்கானுங்
கண்ணினர்வார்கழல்கட்டியதாளார், விண்ணினையேனும்விழுங்கவும்வல்லோர். ()

நேருதிரென்றெதிர்நேர்ந்தவராகங், கூர்நுதிவேல்கொடுகூறுபடுத்துப்
பேருதிரந்தசைபெய்துநிரம்பா, வாரிதியென்னவகுத்திடும்வாயார். (௩௮)

தண்டமழுப்படைதட்டைமுசுண்டி, விண்டுயர்கொல்சிலைவேலெழுநாஞ்சி
லெண்டகுபல்படையாவையுமேந்தி, யண்டமுடைந்திடும்படியார்த்தார். (௩௯)

அந்தரமாமுகிலாமெனவார்க்குந், தந்திகள்வீழ்த்துறுதானமதோடி
யுந்திகளாயுலவைக்கதிகொண்டு, முந்தியதூசியின்முன்னுறுகின்ற. (௪0)

வேலையதன்னவிலாழியவன்னிக், கோலமதானகுரங்கொள்பதத்த
கால்விசைகொண்டனகந்துகராசி, மாலுறுபூழியின்வான்புவிசெய்வ. (௪௧)

Digitized By Roja Muthiah Research Library

சூழ்வருதேரிடைதுன்றுபதாகைக், காழ்வருகோனுதிகார்முகிலுந்தி
போழ்வனவாடுறுபூந்துகிலங்க, ளூழ்வருபூழையடைத்தனவன்றே. (சஉ)

வரங்கெழுசூர்துணைமாய்ந்திடுமென்றே, யுரங்கொடுமுன்னமுணர்ந்தனகொல்லோ
துரங்கமமுழுங்கினதோல்புலம்புற்ற, விரங்கினபல்லியமேங்கினதேர்கள். (சங)

கட்புலனுசிகவின்செவிதுன்னப், பட்டனபூழிபதாகையுமற்றே [ர்.
யொட்டலர்விண்செலவொட்டலரென்று,விட்டனர்தூக்கம்விரைந்தனர்வெய்யோ

தேரினரோர்பலர்திண்டிறல்வாசி, யூருநரோர்பலரோங்கியவேழம்
பேருநரோர்பலர்பேரடல்கொண்டு, பாரினரோர்பலராற்படைமள்ளர். (சரு)

துங்கமில்சூர்துணைதொல்படைமன்ன, னங்கவனென்னவரித்தலைகொண்டான்
மங்கலமாயவண்மாமகனுடற், சிங்கனெனப்படுசீர்ப்பெயருள்ளான். (சசு)

போர்ப்படைகொண்டுபுறம்படர்கின்ற, தேர்ப்படைகாற்படைசிந்துரம்வாசித்
தார்ப்படைகொண்டுதடங்கடலென்ன, வார்ப்படைநெற்றியனுகியகன்றன்.(சஎ)

நீள்வயிர்பேரிசாளமுடுக்கை, தாளம்வழிப்படுதண்ணுமைதக்கை
காளம்வலம்புரிகைத்துடியாதி, யாளிமுகன்முனளப்பிலவார்ப்ப. (சஅ)

ஆகியதாலமரைதெனயாமு, மேகுதுமுண்டியெமக்குளதென்று
மாகநெருங்கினவன்கழுகீட்டங், காகம்வருந்தியகாளிகள்கூளி. (சகூ)

வேறு.

ஆழியையொத்துயரம்பொற்றேர்களி, லாழியையுண்டெழுபுயல்வந்தார்த்தன
வாழியநிலத்துருண்டமுதியோவெனு, வாழியைவினவியேயமர்தல்போலுமால். ()

இவ்வகைசேனைகள்யாவுமேழ்பெரும், பவ்வமுமொருவழிப்படாந்ததேயென
வவ்வயிற்போந்திடவமரைமுன்னியே, தெவ்வடுமரிமுகன்சேறன்மேயினன். ருக

வேறு.

சேரலராவிகொள்சீயமுகத்தோன், பேரணிகத்தொடுபேர்ந்திடல்காணூஉ
வாரிசமேலவன்வாசவன்வானோ, ராரும்வெரீஇயினரச்சமடைந்தார். (ருஉ)

செய்யகரத்தினர்சிந்தைவியர்த்தே, மெய்யலசுற்றிடமேற்றுகில்சோர
வையுறுமெல்லையிலாகமிரைப்ப, வொய்யெனயாவருமோடினர்போனர். (ருங)

ஆவதொர்பாசறையாலயவைப்பிற், றேவர்களீண்டுறுசிற்சபைதன்னின்
மேவருவேற்படைவிண்ணவன்முன்போய்ப், பூவடிதாழ்ந்துபுகன்றிடுகின்றார். ருச

ஆயிரமானவகன்றலைகொண்டா, னாயிரமாயிரமங்கைபடைத்தா
னாயிரமேற்படுமண்டமும்வென்றா, னாயிரம்யோசனையாவுயர்மெய்யான். (ருரு)

நெஞ்சிலெவர்க்குநினைப்பரிதாகும், வஞ்சமுமாயையின்வன்மையும்வல்லோ
னெஞ்சலில்வன்மையனிவ்வுலகெல்லாந், துஞ்சினுமாருயிர்துஞ்சுதலில்லோன்.()

ஓங்கலினங்களுவாத்தொகைநாகம், பாங்கமராமைபரித்திடன்மாற்றி
யீங்குலகங்களைவற்றையுமோர்நா, ளாங்கொருசெங்கையிலாற்றியதொல்லோன்.

பாந்தள்புனைந்தபராபரமூர்த்தி, யீந்ததுமாற்றலரெல்லையிலோரைக்
காய்ந்துதிருன்டுகறைப்பெருகீத்தந், தோய்ந்திடுகின்றதொர்சூலமெடுத்தான்.(ருஅ)

Digitized By Roja Muthiah Research Library

எண்டிசைமேதினியேழ்பிலமேனை, விண்டலமன்னதன்மேற்படுமெல்லை
யண்டமனைத்துமொரங்கையில்வாரி,யுண்டிமிழ்கின்றதொர்வன்மையுமுள்ளோன்.

தூக்கொருபால்வலிதூங்குறவோர்பான், மேக்குயர்கோலெனமேதினிப்பாங்கர்
தேக்கெறிவேலைகள்சிந்திவிசும்பிற், றூக்குறவேநடைதந்திடுதாளான். (சு0)

தண்டமிதென்றுதருக்கினெடுத்தே, யண்டகடாகமதன்புடைமோத
நுண்டுகளாதலுநொய்திதுவென்றே, விண்டொடுமேருவைமீளவும்வைத்தோன்.()

மாசறுநேமிவடாதுபுலத்தி, ளாசுரமென்னுமகன்பதிவாழ்வோன்
வீசிடினெவ்வுலகத்தையும்வீக்கும், பாசமிரண்டுபரித்திடுகையான். (சுஉ)

துங்கமதாகியசூர்துணையானோ, னங்கவனிற்பெரிதாற்றல்படைத்தோ
னங்களினங்களைநாளுநலித்தோன், சிங்கமுகாசுரனாகியதீயோன். (சுரு)

அந்தமிலாவனிகக்கடல்சூழ, வெந்திறலோடுவியன்சமராற்ற
வந்தனன்மற்றவன்மன்னுயிர்மாற்றி, யெந்தையளித்தருளெங்களையென்றார்.(சுச)

அன்னதையோர்தலுமாறுமுகேசன், றன்னயனின்றிடுதாவறுமோதை
மன்னனைநோக்கிநம்வாலியதேரை, முன்னிவணுய்க்குதியென்றுமொழிந்தான்.()

தீட்டியவேற்படைசெங்கைபடைத்தோன், மாட்டுறநின்றவயம்புனைமொய்ம்பன்
கேட்டனனெந்தைகெழீஇயினமுன்போய்த்; தாட்டுணைவீழ்ந்திதுசாற்றுதலுற்றான்

தந்நிகரற்றசயம்புனைவீரர், முன்னுறுதானைகண்மொய்த்திடயான்போ
யொன்னலனாவியையுண்டிவண்மீள்வ,னென்னைவிடுக்குதியெந்தையையென்றான்

ஆண்டகைசூரலொடம்மொழிகேளா, மாண்டிடவந்திடுமாற்றலன்வெம்போர்
வேண்டினைநன்றுவிடுத்தனமுன்னீ, யீண்டுளதானையொடேகுதியென்றான். (சுஅ)

என்றலும்வீரனெழுந்துகைகூப்பி, வென்றிகொள்சாரதர்மெய்க்கிளைசூழ
மன்றமகன்றுமணிக்கடைநண்ணி, யொன்றுதன்மாளிகையூடுபுகுந்தான். (சுகூ)

நேர்முகமானநிசாசரர்தம்மேற், கூர்முகவாளிகுணிப்பிலகோடி
யோர்முகமாயுலவாதுமிழ்நீராற், கார்முகமாயதொர்கார்முகங்கொண்டான். (எ0)

போதுறழங்குலிபுட்டில்செறித்தான், கோதையதொன்றுகொடுங்கைபிணித்தா
னேதமில்சாலிகையாக்கையினிட்டான், மேதகுதூணிவெரின்புடையாத்தான்.()

மிக்குறுதெய்வவியன்படைமுற்றுந், தொக்குறவேகொடுதும்பைதரித்துச்
செக்கரின்விஞ்சியசெய்யதொர்வையம், புக்கனன்வல்லைபுறங்கடைவந்தான். எஉ

ஏண்மரிலக்கர்களிச்செயல்காளை, வண்மைதரும்படைமாட்சிமையெய்தித்
திண்மையுறுந்தமதேர்களிலேறி, யண்மினர்வீரனையார்ப்பொடுசூழ்ந்தார். (எரு)

மேனிகழாயிரவெள்ளமதாகுஞ், சேனையெழுந்துசெறிந்துபிறங்கல்
வானுயர்தாருவயப்படைபற்றித், தானவர்கேசரிதன்புடைவந்த. (எச)

எறிந்தனபல்லியமீண்டியதானை, செறிந்தனமாண்கொடிசெற்றினபூழி
யறந்தலைநின்றவனன்னதுநோக்கிப், பறந்தலையொல்லைபடர்ந்திடலுற்றான். (எரு)

ஆரும்வியப்புறுமாயிரவெள்ளம், பாரிடர்தானைபடைக்கிறையானோர்
சாருறுகேளிர்கடன்னொடுசெல்ல, வீரனடைந்தனன்வெஞ்சமரெல்லை. (எசு)

Digitized By Roja Muthiah Research Library

ஆனதோர்காலையிலாளரிவெய்யோன், சேனையும்வந்துசெறிந்ததுபூதர்
தானையுமங்கெதிர்சார்ந்ததுகங்கை, வானதிசேர்தரும்வாரிதியேபோல். (௭௭)

கோடுபுலம்பினகொக்கரையார்த்த, மோடுகொள்பேரிமுழங்கினபீலிக்
காடுதழங்கினகண்டைகலித்த, வாடுபதாகைகளார்த்தனவன்றே. (௭௮)

தேரொலிசெய்தனதிண்டிறன்மாவின், னொலிசெய்தனதந்தியினீட்டம்
பேரொலிசெய்தபெருங்கடலோடுங், காரொலிசெய்திடுகொட்சியதென்ன. (௭௯)

வேறு.

அந்தவேலையின்முருகவேடானையோரணுகி
முந்துவெஞ்சமர்முயன்றனரதுகண்டுமுனிந்து
சுந்தரந்திகழ்சிங்கமாமுகன்படைத்தொல்லோர்
தந்திதேர்பரியணியொடும்போர்செயச்சார்ந்தார். (௮0)

தண்டமோச்சினர்கணிச்சிகளோச்சினர்தடக்கைப்
பிண்டிபாலங்கள்வீசினர்தோமரம்பெய்தார்
கொண்டலாமெனத்தனித்தனிவார்சிலைகுனித்துத்
துண்டவெங்கணைதுரந்தனர்தானவத்தொகையோர். (௮௧)

விரைகள்வீசியமலர்த்தருவீசியவிண்டோய்
வரைகள்வீசியதண்டெழுவீசியமழுவி
னிரைகள்வீசியநேமியினிரந்தபல்வளனுந்
திரைகள்வீசியதாமெனப்பூதர்தஞ்சேனை. (௮௨)

வரங்கள்சிந்தினர்வன்மைகள்சிந்தினர்வயத்தாள்
கரங்கள்சிந்தினர்புயமலைசிந்தினர்கலன்சே
ருரங்கள்சிந்தினர்மணிமுடிசிந்தினருருளுஞ்
சிரங்கள்சிந்தினரவுணரும்பூதரிற்சிலரும். (௮௩)

வருதிநீயெனத்தனித்தனியிகல்செயுமறவோர்
கருதியேயடுங்களத்தினிலவருடற்காலுங்
குருதியோடியேயெங்கணும்பரத்தலிற்கொடுந்தேர்ப்
பரிதியோடியசுடர்திசைநிகர்த்ததுபடியே. (௮௪)

கொலைசெறிந்திடும்பூதருமவுணருங்கொடும்போர்
நிலைசெறிந்திடுகளத்திடைநீடுசெந்நீரி
னலைசெறிந்தவூன்செறிந்தனவடுகளேவரத்து
மலைசெறிந்தனசெறிந்தனகழுகுடன்மண்ணை. (௮௫)

வேறு.

வெற்புறழ்தகுவர்சேனைவெள்ளமுங்கணத்துளாருந்
தற்பமொடெதிர்ந்திவ்வாறுசமர்புரிந்திட்டவெல்லை
வற்புடனவுணன்றனைமள்ளர்வந்தடர்ப்பமாய்ந்து
முற்படுகின்றதாசிப்பூதர்கண்முரியலுற்றார். (௮௬)

செல்லுறழ்பகுவாய்வீரர்சிதைந்துழிப்பூதர்தம்முட்
கல்லுறழ்மொய்ம்பிற்சிங்கன்கனன்றொருதண்டமேந்திப்
பல்லுறுதலைகள்சிந்தப்படிமிசைவீட்டிப்பாறு
ணல்லுறுமதிபோனேருமவுணரையடர்த்துச்சென்றான். (௮௭)

Digitized By Roja Muthiah Research Library

அங்கவன்செல்லும்வேலையவுணரிலொருவனேமி
சங்கொடுதரித்தோனன்றன்றசமுகனென்னும்பேரோ
னெங்குநீபோதியில்லென்றெதிருறச்சென்றுவாகைச்
செங்கைவார்சிலையைக்கோட்டித்திருந்துநாணொலிசெய்திட்டான். (அஅ)

வேறு.

விட்டனன்மழையெனவிசிகமாங்கவை, பட்டிடத்தண்டிறுப்படியில்வீட்டியே
யட்டுபூந்தாரினனடியொன்றுலவ, னிட்டதோர்கவசமுமிறுத்துநீக்கவே. (அகூ)

கூற்றுறழ்தசமுகன்கொடியனுவியை, மாற்றவனிவணெனவலிதிறோர்கதை
யாற்றலின்விடுத்தலுமரியின்பேரினு, னேற்றனன்மார்புதண்டிற்றுவீழ்ந்ததே. கூ0

வீண்டதுநோக்கியேவீரவீரனு, மீண்டிவனேகொலென்றெண்ணியாமினிக் [ன்.
காண்டகும்வல்லேயேற்காத்தியீதெனு, வாண்டொருகணிச்சியையவுணனேச்சின

மாலொடுகடவுளர்மறுகத்தீயழற், காலொடுபோந்திடுங்கடுவின்வெம்மைபோன்
மேலுறுகணிச்சியைவீரன்செங்கையின், பாலுறுதண்டிறுப்படியில்வீட்டினன்.()

நீக்கினன்கணிச்சியைநெடியதோர்கதை, போக்கினன்றன்னொடுபோர்செய்கின்றவன், றாக்கணங்கமர்சிலைதன்னைச்சின்னமே, யாக்கினனவுணர்களலக்கணெய்தினர். (கூ௩)

சீலமிறசமுகன்செயிர்த்துக்காய்கனற், கோலமதாகியகுந்தமொன்றினை
யாலமதெனவிடவரியின்பேரினன், மேலுறவருவதைவிரைந்துநோக்கினன்.(கூ௪)

பூங்கழல்புனைகழற்பூதநாயக, னுங்கதுகாலையோராழிமாப்படை
யோங்கியபரிதிபோலுருட்டினனரோ, பாங்குறுசாரதர்பலரும்போற்றவே. (கூ௫)

விடுத்திடுகின்றதோர்வேலையாழிபோய்ப், படுத்ததுதசமுகப்பதகன்றண்டமொன்
றெடுத்ததுவீசலுமிமைப்பிலெய்தியே, யடற்புனைகழலினனகத்துற்றதே. (கூ௬)

ஆகமேலடைதலுமரியின்பேரினன், சோகமேல்கொண்டுசெஞ்சோரிசோர்தர
மாகமேற்செம்புனன்மாரிகான்றிடு, மேகமேயாமெனவிளங்கினனரோ. (கூ௭)

பரந்திழிகுருதிநீர்பருப்பதத்திடைப், பிரிந்திடுநதியெனப்பெருகவோடியே, யருந்திறற்றசமுகனகத்தோர்கையால், விரைந்தனன்புடைத்தலும்வீழ்ந்துபொன்றினன். (கூ௮)

ஐந்திருதலையுடையவுணன்மாய்தலுந், தந்திரவவுணர்தந்தானையாவையுங்
கந்தடுதோளுடைக்கணங்கண்மேற்செலா, முந்துறுபேரமர்முயல்வதாயினர். கூகூ

அவ்வழியிலக்கரிலகனென்பவன், மைவழிசிந்தையன்மடித்தவாயினன்
கைவழிவில்லினன்கடியன்சேனையை,யெவ்வழிபோதிரென்றெதிர்ந்துதாக்கினன்

வெலற்கரும்வில்லுமிழ்வெங்கணவாளியா, லலைக்குநராகியேயடல்செய்மள்ளர்தந், தலைக்குவைசிந்தியேதரையில்வீட்டியே, கலக்கினன்றிரைக்கடல்கடைந்தமாலென. (க0க)

ஆடியருனையானநகனென்பவன், சாடினன்றிரிதலுந்தருவர்யாவரு
மோடினரன்னதையுருத்துநோக்கினன், பீடுறுதுன்முகனென்னும்பேரினன். க0உ

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

தன்முனோடியவவுணரைநோக்கினீர்தளரேன்
மின்மினிக்குலங்கதிரினைவெல்லுமோவெகுளி
னென்முனிற்பரோபூதர்களுள்செருத்தொழிலிழந்தார்
நின்மினின்மினென்றுரைக்கவுமிறையுநின்றிலரால். (௧௦௩)

தானைபட்டனநோக்கினன்றுன்முகன்றஃன்மே
லானெய்ப்பட்டெனமுனிந்தனன்பூதர்களந்தோ
சேனைபட்டதென்றலமரக்குனித்தனன்சிலையைச்
சோனைபட்டனவாமெனவடிக்கணைசொரிந்தான். (௧௦௪)

சொரிந்தகாலையிற்பூதரும்பேரமர்தொடங்கி
விரிந்தவெற்பொடுதருக்களும்படைகளும்விடுப்ப
வெரிந்துபோயினசிற்சிலவிற்றவுஞ்சிலவா
னெரிந்துபோயினசிற்சிலவெதிரெதிர்நெருக்க. (௧௦௫)

ஈறுசெய்திலகணைமழையிவரொடும்யானே
மாறுகொள்வதுந்தனிமையிலரிதெனவலியோ
னூறுசேர்தருமாயையாலொவ்வொர்பூதர்க்கு
நூறுநூறுருக்கொண்டுதாக்குற்றனனொடிப்பில். (௧௦௬)

ஆயகாலையிற்றுன்முகன்வடிவமுமடருந்
தீயெனக்கிளர்சாரதரொடுசெருச்செய்யு
மேயகொற்றமுநோக்கினன்விம்மினன்வெகுண்டான்
மாயைகொல்லெனவுன்னினன்வாகையங்கதிரோன். (௧௦௭)

மாற்றுகின்றதெப்படைக்கலமோவெனமதியாத்
தேற்றுகின்றதோர்போதகப்பெரும்படைசெலுத்தக்
காற்றின்முன்னுறுபூளையினுருவெலாங்கரப்பக்
கூற்றமன்னதோர்துன்முகனொருவனுய்க்கொதித்தான். (௧௦௮)

கொதித்ததுன்முகன்றன்பெருஞ்சிலையினைக்கோட்டி
நுதித்தனிக்கணையாயிரமொருதொடைநூக்க
மதித்துவீரன்றன்னொருபெருஞ்சிலையினைவாங்கிக்
கதித்தநோன்கணையாயிரஞ்சிதறினன்கடிதில். (௧௦௯)

ஆயிரஞ்சரத்தாலவன்விட்டகோலறுத்துத்
தீயவன்றனிச்சிலையையேழ்வாளியாற்சிந்தி
மேயசாலிகைதன்னையோர்பகழியால்வீட்டிக்
காயமெங்கணுமழுத்தினனளவைதீர்கணைகள். (௧௧௦)

வேறு.

அழுந்திடுவடிக்கணையாகம்போழ்தலு, மெழுந்திடுகுருதிநீரிரைத்துச்சென்றிடக், கொழுந்தழல்புரைவதோர்கொடியதுன்முகன், விழுந்தனன்மயங்கினன்விளிந்துளானென. (௧௧௧)

ஊறியகுருதியனூறுகனெய்துவான், றேறினனெல்லையிற்செருவினோர்தமே லீறினிவந்திடுமிரிந்திட்டுய்வதே, யாறெனவுன்னினனமருக்கஞ்சுவான். (௧௧௨)

Digitized By Roja Muthiah Research Library

சிந்தையின்வழிபடல்செய்துமாயையின், மந்திரமொன்றினைமரபினான்னுரு
வெந்திறத்தேரினுமெழுந்துதன்முக, னந்தரத்தாற்றினாலருவிற்போயினான்.(௧௧௩)

ஆயினகாலையிலடல்வெம்பூதரிற், றீயினைமுருக்குறுஞ்சீற்றத்தோர்சிலர்
மாயையின்வலியினன்வஞ்சன்வல்லையிற்,போயினன்பற்றுதும்போதுவீரென்றார்.

ஆங்கதுகேட்டிடுமாடல்வெய்யவ, னீங்கிதுதவிருதிரிகலுக்கஞ்சியே
நீங்கினனொருவனைநெருக்கியாருயிர், வாங்குதல்புகழதோவலியின்பாலதோ. ௧௧௫

ஓடினர்தம்மையுமுற்றுத்தாண்மலர், சூடினர்தம்மையுந்தொழுதகையராய்
வாடினர்தம்மையும்வலியிலோரையுஞ், சாடினரல்லரோநவைக்கட்டங்குவார். ()

வீரரையல்லரைவெகுளலீரெனப், பேரடல்வெய்யவன்பேசவன்னது
காரியமேயெனக்கருத்திலுன்னியே, சாரதர்தொடர்ந்திடுந்தன்மைநீங்கினார். ௧௧௭

வே று.

அந்நேர்காணாவாளரிமாமுகவடல்வெய்யோ
னின்னேநந்தந்தானைகளெல்லாமிரிவாகும்
பின்னேநிற்றலாவதெனென்னாப்பெயர்குற்றே
முன்னேசென்றான்பூதரைநோக்கிமுனிகின்றான். (௧௧௮)

நந்தாவாற்றற்சிங்கமுகத்தோனவனம்முன்
வந்தான்யாமேமாற்றுதுமன்னான்வலியென்னாக்
கொந்தார்தாருச்சூழலும்வெற்புங்கொண்டேகி
முந்தாநின்றபூதர்கள்வெம்போர்முயல்கின்றார். (௧௧௯)

மட்டார்தொங்கற்சிங்கமுகன்மேன்மதிதோய்வா
னெட்டாநின்றவெற்புளயாவுமெறிகின்றார்
விட்டார்தாருச்சூழல்கணிச்சிவீசுற்றார்
தொட்டார்சூலந்தண்டெழுநாஞ்சில்சொரிகின்றார். (௧௨0)

சொரியுங்காலைத்தீயெழநோக்கிச்சுடர்வேலோ
னெரியுங்காலுங்காலவுயிர்ப்பவெதிர்செல்லாக்
கரியுந்தீயும்பூழியதாகுங்ககனத்தே
திரியும்மீளும்மப்படைசெய்யுஞ்செயலீதால். (௧௨௧)

அன்னோவன்னோநம்படையெல்லாமடல்வீரன்
முன்னோசெல்லாதீயவுயிர்ப்பின்முடிவாமாற்
பின்னேசெய்வதொன்றிலையாம்பேரமர்செய்வ
தென்னோவென்னோயாரினுமேலானிவனென்றார். (௧௨௨)

என்றார்பூதர்சீற்றம்விளைத்தார்யாரும்போய்க்
குன்றாயங்கணுற்றனயாவுங்குழுவுற்ற
வன்றாருக்களானவுமாண்கைக்கொடுதொட்டுச்
சென்றாரார்த்தார்சீயமுகன்மேற்செலவுய்த்தார். (௧௨௩)

வே று.

கைக்கொடுசாரதகணங்களார்த்திட, னுய்க்குறுவரையெலாமொருங்குசென்றி
டாத்,திக்குளவரைப்பெலாஞ்செறிந்துஞாயிறு, மெய்க்கதிர்வழங்குறும்விசும்புதூர்
த்தவே. (௧௨௪)



Digitized By Roja Muthiah Research Library

கல்லகத்தொருதிகள்ககனந்தூர்த்துழி, யெல்லுடைச்செங்கதிரிரவிமாய்ந்திட, வொல்லெனத்திமிரம்வந்துறலுநோக்கியே,யல்லெனக்குடம்பையுளடைவபுள்ளெலாம். (௧௨௫)

வெற்பினநிரத்தலுமறையவெய்யவ, னெற்படுமுன்னரேயிரவியோடினு னற்புதமற்புதமடைந்ததம்புயன், கற்பமென்றறிஞருங்கலக்கமெய்தினர். (௧௨௬)

போற்றலன்றன்மிசைப்பூதர்தூண்டிய, மாற்றரும்பதலைகண்மலிந்துவான்பட, ராற்றிலையடைத்தலுமஞ்சிநின்றனன், காற்றினும்விரைந்துசெல்கதிரின்பண்ணவன்.

இன்றுகாறவுணராலிடருழந்தன, மன்றியும்பூதரீண்டடுக்கல்வீசினர் நின்றிடின்வருந்துதுநிகழ்ச்சிதேரலாஞ், சென்றிடறுணிவெனத்தேவரோடினர்.()

செருவலிவீரர்கள்செலுத்தச்சேண்படர், பருவரையிடையிடைபயின்றுசுற்றிய கருமுகிலுண்டநீர்கான்றுதம்வயி, னுருமிடியெங்கணுமுகுத்துவீழ்ந்தவே. (௧௨௬)

வெதிர்படுசிலம்பினும்வழுக்கிவீழ்ந்திடு, மதிர்குரலரியினமண்டச்செற்றின வெதிருறதகுவலையினமென்றுன்னியே, முதிர்தருகாதலான்முன்னுற்றுலென. ()

மைம்மலையிடைவிராய்வதிந்தமோட்டுடைக், கைம்மலையரற்றியேகவிழ்வகாசிபன் செம்மலையரியெனநோக்கித்தேம்பியே, விம்மலையெய்தியேவீழ்வதென்னவே. ()

பொற்றையின்மரங்களிற்பொதிந்தகேசரம், வெற்றிகொளரிமுகன்றேருடையின் மேவின, விற்றவர்தம்மைவிட்டேதிலார்தமைப், பற்றுடுகலந்திடுபரத்தைமாதர் போல். (௧௩௨)

எறிந்திடுவரைகடந்தம்மிலெற்றிடச், செறிந்திடுதீக்கனல்சென்றதிக்கெலாம் பொறிந்தனபுகைந்தனபொரிதலுற்றன, மறிந்தனவுலந்தனமன்னுயிர்த்தொகை.()

ஆயினபல்லியலடையப்பூதர்க, ளேயினகுன்றமுந்தருவுமேகியே [ல்.
சீயமாமுகமுடைச்செல்வற்சேர்ந்தன,தூயவன்கயிலையைச்சூழ்ந்தகொண்டல்போ

செடித்தலையெயினரிற்றிகழுமாயிர, முடித்தலையான்மிசைப்பட்டமொய்வரை பொடித்திலவிற்றிலபூழியாய்த்தில, படித்தலம்வீழ்ந்தனநொய்யபான்மையால். ()

வேறு.

துன்னற்பட்டகுன்றெவையுஞ்சூர்துலையானோன்
மின்னற்பட்டமெய்யிடைபட்டேவெற்பின்கட்
பன்னற்பட்டதாமெனவீழ்கின்றதுபாரா
வின்னற்பட்டார்பூதர்கள்வானோரேங்குற்றார். (௧௩௬)

சேலம்புக்கபாரிடர்வெம்போர்செயல்காணுஉக்
கோலம்புக்கதேரிடைநின்றான்குப்புற்று
ஞாலம்புக்கான்பூதர்கடம்மைநலிதற்கோ
ராலம்புக்காலென்னநடந்தானடல்செய்வான். (௧௩௭)

பார்மேலெற்றுஞ்சிற்சிலர்தம்மைப்பகைவிண்ணோ
ரூர்மேலெற்றுஞ்சிற்சிலர்தம்மையுயர்பானுத்
தேர்மேலெற்றுஞ்சிற்சிலர்தம்மைத்திரைசேர்முந்
நீர்மேலெற்றுஞ்சிற்சிலர்தம்மைநொடிதோச்சும். (௧௩௮)

Digitized By Roja Muthiah Research Library

பற்றுநிற்குஞ்சிலவரைமூரற்பகுவாயிற்
குற்றுநிற்குஞ்சிலவரைவாரிக்குழுவோடுஞ்
சுற்றுநிற்குஞ்சிலவரையண்டச்சுவரின்க
ணெற்றுநிற்குஞ்சிலவரையள்ளியெறிகிற்கும். (கஙகூ)

புண்டரிகன்கட்சிலவரைவீசும்பொருசெங்கைத்
தண்டதரன்கட்சிலவரைவீசுஞ்சதவேள்வி
யண்டமதன்கட்சிலவரைவீசுமகிலஞ்சூ
ழெண்டிசையின்கட்சிலவரைவீசுமிகல்பேசும். (கச0)

மாலெரிவைப்பிற்பலர்தமைவீசும்வானத்திற்
காலெறிவைப்பிற்பலர்தமைவீசுங்கரைதீர்ந்த
வேலைகண்முற்றும்பலர்தமைவீசும்வியன்மிக்க
ஞாலமனைத்தும்பலர்தமைவீசுநணிதூர்க்கும். (கசக)

சிங்கங்கொண்டமாமுகன்வீசுஞ்செறிவாலே
துங்கங்கொண்டபார்முதல்விண்ணின்றுணையுந்தா
னெங்கும்பூதமாயினவம்மாவிதுகொண்டோ
வங்கங்கெல்லாம்பூதமதென்றாரறிவுள்ளார். (கசஉ)

மிதித்துக்கொல்லுஞ்சிற்சிலர்தம்மைமிசையுந்திப்
பதத்திற்கொல்லுஞ்சிற்சிலர்தம்மைப்படிவத்தைச்
சிதைத்துக்கொல்லுஞ்சிற்சிலர்தம்மைச்செல்லென்ன
வுதைத்துக்கொல்லுஞ்சிற்சிலர்தம்மையுலவுற்றே. (கசங)

விள்ளாநிற்குஞ்சிற்சிலர்சென்னிவிரன்மேலாற்
றள்ளாநிற்குஞ்சிற்சிலர்சென்னிதாமுற்றக்
கிள்ளாநிற்குஞ்சிற்சிலர்சென்னிகிளையோடு
மள்ளாநிற்குஞ்சிற்சிலர்சென்னியடுகிற்கும். (கசச)

தாக்கிற்கொல்லுமொருசிலர்தம்மைத்தடிகின்ற
வூக்கிற்கொல்லுமொருசிலர்தம்மையுருமொத்த
வாக்கிற்கொல்லுமொருசிலர்தம்மைமருளுற்ற
நோக்கிற்கொல்லுமொருசிலர்தம்மைநொடிதன்னில். (கசரு)

வாராநிற்கும்பாரிடராசியைவாரிப்பின்
சேராநிற்கும்வாய்தொறுமீண்டச்சேர்த்திட்டே
யாராநிற்குமார்ந்தபினுகவகன்மோட்டைத்
தூராநிற்குந்தூர்த்தபினுடற்றெழில்செய்யும். (கசசு)

எழுவிற்கொல்லுமொருசிலர்தம்மையெரிகூர்வாய்
மழுவிற்கொல்லுமொருசிலர்தம்மைவயநாஞ்சிற்
கொழுவிற்கொல்லுமொருசிலர்தம்மைக்கூர்சூலக்
கழுவிற்கொல்லுமொருசிலர்தம்மைக்கடிதோடி. (கசஎ)

கரத்திற்கொல்லுஞ்சிலவரைநோன்கார்முகமுய்க்குஞ்
சரத்திற்கொல்லுஞ்சிலவரையம்பொற்றண்டத்தி
னுரத்திற்கொல்லுஞ்சிலவரையங்கணெரிக்கின்ற
மரத்திற்கொல்லுஞ்சிலவரைமண்மீதினில்வீட்டும். (கசஅ)

Digitized By Roja Muthiah Research Library

தேர்மேலானோவிண்ணுலகானோதிசையானோ
பார்மேலானோவார்கடலானோபதுமத்தோ
னூர்மேலானோமேருவினானோவுயர்பூதர்
போர்மேலானோதீயவனென்றார்புலவோர்கள். (௧௪௯)

அற்றார்தாள்கள்கைகளிழந்தாரடுதிண்டோ
ளிற்றார்சென்னிசிந்தினர்துண்டமிலரானார்
பொற்றார்மார்பம்விண்டனர்வீழ்ந்துபுரள்கின்றார்
செற்றார்தம்மையட்டிடுபூதத்திறல்வீரர். (௧௫0)

சொரியாநின்றசோரியரரற்றத்துயர்மேலார்
மரியாநின்றாரெண்ணிலரான்மற்றவர்தம்முட்
பிரியாநின்றசென்னியர்பல்லோர்பெயர்வெய்தித்
திரியாநின்றாராடுறுகின்றசெயல்கொண்டார். (௧௫௧)

கருவந்தெய்துமாருயிர்முற்றுங்கவிழ்கின்ற
பருவந்தன்னிற்றீயவனுண்ணும்படியேபோற்
செருவந்துற்றசீயமுகத்துத்திறன்மேலோ
னொருவன்றானேநின்றடுகின்றானுலவாதான். (௧௫௨)

அந்நீராகிப்பூதரைவெய்யோனடுகாலைச்
செந்நீர்நீத்தமாயிடைதோறுஞ்சென்றீண்டித்
தொன்னீர்வேலைபுக்குவர்நீக்கித்துவராக்கி
முந்நீரென்னுந்தொன்மையைவேறாய்முடிவித்த. (௧௫௩)

ஆடாநின்றாணித்திறம்வெய்யோனளவில்லார்
வீடாநின்றார்கண்டனர்வெம்பூதர்க்கெல்லாங்
கேடாநின்றானிங்கிவனென்னாக்கிளையோடு
மோடாநின்றார்வானவரெல்லாமுலைவுற்றார். (௧௫௪)

துன்னாநின்றதொன்மரம்வெற்பின்றொகைவீசி
முன்னாகுற்றபூதர்கள்யாருமுடிவாகக்
கொன்னார்சிங்கமாமுகனட்டேகுலவுற்று
மின்னார்செம்பொன்மேருவெனுந்தேர்மிசைபுக்கான். (௧௫௫)

வேறு.

அவ்வேலையன்னானமர்செய்வினையாடல்பாரா
மைவேலைபோல்வானழற்கண்ணன்மனங்கனன்று
செவ்வேயெதிர்புக்கரிமாமுகற்சீறிவெய்யோ
யிவ்வேலையுன்னைமுடிப்பன்னிகன்முற்றியென்றான். (௧௫௬)

என்றங்குரைசெய்திடுபூதனையேந்தனோக்கி
யொன்றுஞ்சிறிதுன்னலையச்சமுமுற்றிலாதாய்
நின்றிங்கிதுகூறினையென்னினினக்குநேரார்
நன்றுன்வலியென்றுநகைத்தனனாகரஞ்ச. (௧௫௭)

அன்னானகைசெய்ததுகாண்டலுமாழிநாப்பட்
கொன்னார்தழலென்னவெகுண்டனன்கூளிவேந்த
னின்னாடலைநீக்குவன்காணுதிநீயுமென்றோர்
மின்னார்கழுமுட்படையாங்கவன்மீதுவிட்டான். (௧௫௮)

Digitized By Roja Muthiah Research Library

கூற்றனவனேவவரும்படைக்கொள்கைநோக்கி
மாற்றனவனோர்படையும்வழங்காதுநின்றான்
றோற்றனெனவானவரார்த்தனர்சூலமார்பி
னேற்றான்வரைமேற்படுகண்டகத்திற்றதன்றே. (௧௫௯)

உறுகின்றசூலப்படையூற்றமுமோங்கன்மார்பத்
திறுகின்றதுமங்கவணின்றதும்யாவுநோக்கிப்
பெறுகின்றவரிலிவன்பெற்றதுபேறதென்னா
மறுகின்றநெஞ்சனொருதண்டினைவல்லையுய்த்தான். (௧௬0)

வேறு.

உய்த்தலுமஃனயதண்டொருமுற்றுலென, வத்தலையரிமுகத்தவுணன்சாரதி, மெய்த்தலைகோடலும்வெகுண்டுநோக்கியே, கைத்தலமிருந்ததோர்கதையையேவினன்.

மாவலிசேர்தருமடங்கன்மாமுக, னேவியவெங்கதையிமைப்பிற்பூதர்கள்
காவலனகலமேற்கலந்துதாக்கிற்று, லோவெனவலையனுமுளம்வருந்தவே. (௧௬௨)

செயிரறத்திருத்தியசெம்பொற்குன்றின்மேல், வயிரமெய்ப்படையதுவந்தற்றுதலு
மயிருறப்புனைகலனாகங்கீண்டிட, வுயிரினுக்கவ்வழியுலைவுமிக்கதே. (௧௬௩)

தாக்கியவேலையிற்றழலினாட்டத்தான், மூக்கினின்மார்பினின்முழங்குவாயினிற்
றேக்கியகுருதிநீர்சிந்துகின்றது, மேக்குயர்கனன்மழைவிரித்ததாரைபோல்.(௧௬௪)

மறந்தனன்றொல்லுணர்வெனினும்வன்றிற, றுறந்திலன்வெவ்வழல்சொரியுங்கண்ணினான், சிறந்திடுமூசலிற்றிரிந்ததன்னுயி, ரிறந்திலனவற்கொருகூற்றமின்மையால். (௧௬௫)

ஆரழன்முகத்தவனயர்வுற்றவ்வழிச், சோர்வொடுநிற்றலுஞ்சூரன்பின்வரும்
வீரமதுடையவன்வேறொர்பாகனைத், தேரிடைநிறுவினன்சேறன்மேயினன். ()

வேறு.

மூண்டமரியற்றச்சீயமுகத்தவன்வரனுநோக்கித்
தூண்டியவெகுளிமேலோன்சுமாலியென்றுரைக்குந்தொல்லோ
னீண்டிடுமேருவென்னநிவந்ததோரடுக்கறன்னைக்
கீண்டரிமுகன்மேற்செல்லக்கிளர்ந்தனன்வீசியார்த்தான். (௧௬௭)

மற்றவன்விடுத்தகுன்றைவாளரிமுகத்துவீரன்
பற்றினனொருதன்கையாற்பந்தெனமீட்டுமுந்தப்
பொற்றடமார்பிற்றாக்கப்புலம்பியேசுமாலியென்பான்
செற்றமுந்தானுமாகச்செயலற்றுநிலத்தனானான். (௧௬௮)

நிலந்தனிற்சுமாலிவீழநெடுஞ்சினந்திருகியங்கைத்
தலந்தனிற்கதையொன்றேந்தித்தண்டிபோயவுணன்றேரிற்
கலந்தவனுரத்திற்செல்லப்புடைத்தலுங்காமந்தன்னிற்
புலந்தவன்றனக்குக்காட்டுமுணர்வெனப்பொடித்ததன்றே. (௧௬௯)

பொடித்தலும்வயிரத்தண்டம்பூதரின்முதல்வன்பொங்கிக்
கொடித்தடந்தேர்மேனின்றகோளரிமுகத்தன்றன்மே
லிடித்தெனக்கையாலெற்றவெரியெழநகைத்துத்தன்னே
ரடித்தலங்கொண்டுதள்ளியமரர்கள்வெருவவார்த்தான். (௧௭0)

Digitized By Roja Muthiah Research Library

தாளினாலுந்திவிட்டதண்டிசேனைமூந்துமெல்ல
மீளுவானடுவனென்னும்வெகுளியானுயிர்ப்புவீங்கி
யாளிசேர்வதனத்தண்ணலாடகவயிரக்குன்றத்
தோளின்மேற்குப்புற்றேதன்னடிகொடுதுகைக்கலுற்றான். (௧௭௧)

ஆடியவுரனைமன்னனுயிரத்திரட்டிதோளு
மோடினன்றுகைத்துத்தாளுமோய்ந்தனனவற்றைநோக்கி
நாடினன்றிரியாநின்றானகநீள்குடுமிக்குன்றிற்
கோடுயர்பொதும்பர்தன்னிற்பாய்ந்திடுங்குரங்குபோல்வான். (௧௭௨)

குரங் * குளைக்குடுமிச்சூட்டுக்கோளரிமுகத்துவெய்யோன்
கரங்களிற்பாயுமங்கட்கலந்திடுபடையிற்பாயுஞ்
சிரங்களிற்பாயுமீளச்செவிதொறும்பாயும்பூந்தண்
மரங்களிற்பாய்ந்துசெல்லுமணிச்சிறைவண்டும்போன்றான். (௧௭௩)

செறிந்திடுகரமுந்தோளுஞ்சென்னியும்பூதன்செல்வ
தறிந்திலன்சிறியன்போலுமரிமுகத்தவுணனம்மே
லெறிந்துலவுற்றுச்சூழுமீகொலென்றொருதன்கையாற்
சொறிந்தனன்சிறிதுபின்னர்த்தண்டியைத்துடைத்துவிட்டான். (௧௭௪)

ஒருதனிக்கரத்தாற்றீயோனுருட்டினன்றுடைப்பத்தண்டி
பெரிதுநொந்தாற்றல்போகிப்பின்றினன்பெயர்ந்துபோனான்
றெரிதருபூதரஞ்சிச்சிந்தினர்செயலொன்றில்லா
ரரிதுசெய்தவமேயல்லாலாற்றல்பெற்றிடுவதுண்டோ. (௧௭௫)

பூதர்களிரிவுநோக்கிப்பொருதிறலிலக்கத்தெட்டு
மேதகுவீரர்யாரும்வெய்யதேர்கடாவிச்சென்று
தீதறுசிலைகள்வாங்கிச்சீயமாமுகவற்சுற்றித்
தாதவிழ்மலர்பெய்தென்னச்சரமழைபொழிதலுற்றார். (௧௭௬)

பொழிந்திடுபகழியெல்லாம்புகுந்திடுசுவடின்றாகி
யழிந்ததுமின்றிமுன்போலவன்புடைவீழநோக்கி
யொழிந்ததெம்மாற்றலென்னாவுட்கினரொருதன்றேரி
னிழிந்தனனவுணர்கோமானிடிபடத்தெழித்துச்சென்றான். (௧௭௭)

எடுத்தனன்சிலவர்தேரையெறிந்தனனென்றெட்டொன்றி
னடித்தனன்சிலவர்தேரையள்ளினனங்கைதன்னா
லொடித்தனன்சிலவர்தேரையுதைத்தனன்சிலவர்தேரைப்
பொடித்தனன்சிலவர்தேரைப்புதைத்தனன்சிலவர்தேரை. (௧௭௮)

இத்திறமடங்கல்வீரனடுதலுமிலக்கத்தெண்மர்
தத்தமதுயிரேதாங்கித்தனுவொடுபடைகண்மான
மெய்த்திறல்சிந்திச்சாய்ந்தார்மேவலன்றேர்மேற்புக்கா
னத்தலைநின்றவீரவாகுமற்றதனைக்கண்டான். (௧௭௯)

ஆளரியனையவீரனதுகண்டுபூதர்தம்முட்
கோளரிமுகத்துவெய்யோன்கொன்றதோர்பாதியுண்டாற்
றாளுடைவில்லினருஞ்சமரிடத்தழிந்தாரிந்த
நாளினின்முடியும்போலுநம்பெரும்படையுமென்றான். (௧௮௦)

* குரங்கல் - வளைதல்.

Digitized By Roja Muthiah Research Library

அடல்பெறுபுயத்துவள்ளலாட்கவரைபோலுள்ள
கொடுமரமானதொன்றைக்கோட்டினன்சினமேற்கொண்டான்
விடமுறுதறுகட்கேதுவிரைந்தொருபாங்கர்புக்கு
நடுவெலாங்கவரத்தோன்றுநாகிளங்கதிரேபோல. (௧௮௧)

வாங்கியசிலையிற்பூட்டிவடிக்கணையநந்தகோடி
தூங்கலின்மழைகான்றென்னவுலப்புறான்சொரிந்துநிற்ப
வாங்கெதிரடர்த்துப்போர்செயவுணர்தந்தலைகள்பாறத்
தாங்கியபடைகள்சிந்தித்தரைமிசைத்துணிந்துவீழ்ந்தார். (௧௮௨)

பரித்தொகைமுழுதும்பட்டபாழியந்தேர்கள்பட்ட
வொருத்தலும்பிடியும்பட்டவுலப்பிலாவவுணர்பட்டார்
பெருத்தனபிணத்தின்குன்றம்பிறங்கினபேய்கண்மொய்த்த
திரைத்தெழுசோரிநீத்தந்தெண்டிரைமடுத்ததம்மா. (௧௮௩)

தேரெனப்பட்டவீரர்திறமெனப்பட்டமாவின்
பேரெனப்பட்டயானைப்பெருக்கெனப்பட்டதம்முட்
போரிடைப்படாதவெல்லாம்பொருதிரைக்குருதிவாரி
வீரனுக்குதவியாகவேலையுளுய்த்ததன்றே. (௧௮௪)

பேரியினொலியுந்தீயவவுணர்கள்பிடித்தவில்லி
னாரியினொலியுஞ்சூழ்நாற்படையொலியுமாண்ட
காரியினொலியுமோட்டுக்கணங்களினொலியுஞ்செந்நீர்
வாரியினொலியுமாகியடுகளமலிந்தவன்றே. (௧௮௫)

மலைகளையறுக்கும்வேலைவாள்களையறுக்குஞ்செங்கைச்
சிலைகளையறுக்கும்வெய்யோர்திண்டிறல்கொண்டதோளி
னிலைகளையறுக்குமார்பினிரைகளையறுக்குங்கோடி
தலைகளையறுக்குமம்மாவிளையவன்சரமதொன்றே. (௧௮௬)

காழுறுமவுணர்சென்னிகரதலநெடுந்தோண்மார்பம்
வாழியமுருகன்றூதன்வாளிகள்வெளவியேகி
யேழுளகடலுநீங்கியெண்டிசைக்கிரிகடாவி
யாழியங்கிரிபோழ்ந்தப்பாலண்டமும்பிளந்துசெல்லும். (௧௮௭)

கரண்டமதானசெந்நீராற்றிடைக்கவிழ்ந்துமூழ்கித்
திரண்டவூன்வெளவிமீண்டுசிறகரையுதறுகின்ற
முரண்டகுவீரர்சென்னிமூளைபுக்கலைந்துவாரிக்
குரண்டமீதென்னலானகருநிறக்கொடிகளெல்லாம். (௧௮௮)

இவ்வகையவுணர்தானையிறந்திடவீரவாகு
வவ்வயினின்றுசென்றாங்கடுதலுமதனைக்கண்டார்
தெவ்வரைமுருக்கும்வைவேற்சீயமாமுகத்தன்மைந்த
ரைவரைவெல்லுமாற்றலைம்பதிற்றிருவரென்பார். (௧௮௯)

சினத்தனரிதழைப்பல்லாற்றின்றனர்நம்முன்வெம்போர்
வினைத்தொழிலியற்றுவானைவெய்தெனவடுதுமென்னா
விளைத்தொடுதேர்கடாவியேகியேவீரன்றன்மேற்
றனித்தனிவார்விற்கோட்டிச்சரமழைசிதறலுற்றார். (௧௯0)

Digitized By Roja Muthiah Research Library

நூற்றுவரொருங்குநேர்ந்துநோன்றலைச்சிலைகள்வாங்கி
மேற்றிகழ்முகில்கான்றென்னவீசியவிசிகந்தன்னை
யாற்றல்சேர்வீரன்காணுவயிற்கணையநந்தகோடி
காற்றெனத்துரந்துமாற்றிக்கடவுளர்புகழவார்த்தான். (௧௯௧)

தொலைவுறுமவுணன்மைந்தர்துண்ணெனக்கனன்றுபின்னுங்
கொலையுடைநெடுங்கூர்வாளிகோடிகோடிகணின்றுய்ப்ப
வலியுடைவீரவாகுமற்றவைமாற்றியன்னோர்
சிலையொடுதேர்கடம்மைச்செஞ்சரந்தூண்டிவீழ்த்தான். (௧௯௨)

தேரொடுசிலைகண்மாயச்சீயமாமுகத்தன்மைந்தர்
வீரனையெதிர்ந்துவில்லால்வென்றிடலரிதுபோலுங்
கூருடைநுதிவாட்போரிற்கொல்லுதுமிவனையென்னாப்
பாரிடைவந்தோர்சூழ்ச்சிவகையினாற்பகர்தலுற்றார். (௧௯௩)

காட்புடைச்சிலையின்விஞ்சைகற்றதேயன்றியெம்போல்
வாட்படைபயின்றிலாய்கொல்வல்லையேலப்போர்செய்யச்
சேட்படையன்றியெம்முன்சேர்தியால்வீரவென்னாத்
தோட்புடைகொட்டியார்த்தார்கூற்றனுந்துளக்கமெய்த. (௧௯௪)

வன்றிறலவுணன்மைந்தருரையினைவள்ளல்கேளா
நன்றிதுபுகன்றீரென்னாநகைசெய்துநாதன்றந்த
மின்றிகழ்சுடர்வாள்கொண்டுவிரைந்துகீழ்த்தலத்திற்பாய்ந்து
சென்றனனதனைநோக்கித்தேவருமிடுக்கண்செய்தார். (௧௯௫)

வார்ந்திடுகழற்கால்வீரன்வாள்கொடுவரலுநோக்கித்
தீர்ந்தனனுவியின்னேசெருக்கலாமிவனையென்னாக்
கூர்ந்திடுநாந்தகங்கடனித்தனிகொண்டுசென்று
நேர்ந்தனர்வளைந்துகொண்டார்மதியைச்சூழ்நிசியையொப்பார். (௧௯௬)

வளைந்தனர்வீரன்றோளின்மார்பினிற்கரத்தின்மொய்ம்பிற்
களந்தனிற்சென்னிதன்னிற்கருதினரிலக்கநாடிக்
கிளர்ந்திடுநாந்தகத்தாற்கிட்டினரெறிதலோடு
முளந்தளர்வில்லோன்மேனிக்குற்றிலசிறிதுமூறு. (௧௯௭)

ஊறிலாத்தன்மைநோக்கியுவனையாம்பற்றிமெல்லக்
கோறலேகருமமென்னாக்குழுவொடுமவனைப்புல்லச்
சீறினன்றன்வாளோச்சிச்சிறிதுமெய்தெரியாவண்ண
நூறினன்கொல்லோவென்னநூற்றுவர்தமையுமட்டான் (௧௯௮)

அட்டிடுகின்றவீரனமரர்கள்வழுத்தமீண்டு
தட்டுடைநெடுந்தேர்புக்கான்றன்மனக்கினியமைந்தர்
பட்டிடுதன்மைநோக்கிப்பாடுறுமவுணர்கோமான்
மட்டறுதுயரின்மூழ்கிமானத்தாலிரக்கமுற்றான். (௧௯௯)

கோளுண்டவரிமான்றுப்பிற்குமரரையொருவன்கொண்ட
வாளுண்டதென்றுநெஞ்சம்வசையுண்டுவருந்தன்மன்னோ
தாளுண்டுபரித்துநிற்கத்தலைகளுண்டெண்ணிலாத
தோளுண்டுகரங்களுண்டுசுமக்கலாம்போலுமன்றே. (௨00)

Digitized By Roja Muthiah Research Library

என்னுடைமைந்தர்தம்மையாவருங்காணவீண்டென்
முன்னுறவொருவனேதான்முடித்துயிர்கொண்டுநிற்பான்
பின்னினியிதற்குமேலும்பெற்றிடும்வசையொன்றுண்டோ
வொன்னலர்தங்கட்கெல்லாமொருநகைவிளைத்தேனன்றே. (௨0௧)

பொன்றினர்தம்மையுன்னிப்பொருமியேபுன்கணெய்தி
நின்றிடுவதுண்டோநேரலர்தொகுதியெல்லாங்
கொன்றொருகணத்தின்முன்னர்க்குழுவொடும்வாரிவாரித்
தின்றுதேக்கிட்டாலன்றித்தீருமோவெனதுசீற்றம். (௨0௨)

மேவலராகுமின்னோர்குழுவினைவிரைவினட்டுத்
தாவறுசுடர்வேல்கொண்டபாலகன்றனையும்வென்று
தேவர்களெனப்பேர்பெற்றோர்யாரையுமின்றேசெற்று
மூவுலகினையும்யானேமுடிக்குவன்விரைவினென்றான். (௨0௩)

என்னவித்திறங்கள்பன்னியெரியுமெய்விதிர்ப்பச்சீறித்
தன்னுறுதடந்தேருய்க்குஞ்சாரதிதன்னைநோக்கிக்
கொன்னுனையயில்வாட்செங்கைக்குமரர்தங்குழுவைக்கொன்றான்
முன்னுறக்கடவுகென்னநன்றிதுமுதல்வவென்றான். (௨0௪)

பாகுநூலுணர்ந்துவல்லோன்பரியினையெழுப்பிப்பண்ணி
மாகநீடடந்தேர்தூண்டவரிமுகன்வருதலோடு
மேகநாயகனுமூர்த்தியேவலானதனைநோக்கி
யோகையாற்றனதுமான்றேரதனொடுமொல்லைநேர்ந்தான். (௨0௫)

நேர்ந்திடுகின்றகாலைநிரைபடுவிழிகடோறுஞ்
சார்ந்தழல்சிதறநோக்கித்தளைபடுதறுகட்சீய
மார்ந்திடுபகைகண்டென்னவாற்றவுஞ்சினமீக்கொண்டு
சேர்ந்திடுவானைநோக்கிச்சிங்கமாமுகத்தன்சொல்வான். (௨0௬)

ஆதிதந்தருளுமைந்தனறுமுகனவனீயல்லை
யேதிலாவிலக்கரென்றேயிசைத்திடுவோர்கடம்மு
ளாதனேவெண்மர்தம்முளொருவனோநம்மூர்வந்த
தூதனோவினையர்தம்முள்யாரைநீசொல்லுகென்றான். (௨0௭)

அல்லுறழ்கண்டன்றந்தவறுமுகற்கடியனேனென்
றொல்லைநும்மூதூரட்டுத்தூதனுமாகிமீண்டே
னெல்லையினுமரையெல்லாமீண்டொருகணத்தினட்டு
வெல்லுவதமைந்துநின்றேன்வீரவாகென்பேரென்றான். (௨0௮)

வேறு.

திண்டிறற்சேவகன்செப்புமிம்மொழி, விண்டிடுசெவிதொறும்விடம்பெய்தாலெனக், கொண்டனன்வெகுண்டொருகூற்றங்கூறிடு, னுண்டிடுமசனிகளுமிழ்ந்திட்டாலென. (௨0௯)

உறுபடையுழப்பினையுணர்குருதரோர், சிறுவரைவெல்வதுந்திருந்துமாநக ருறைதருமெளியரையுடன்றுகொல்வது, மறிகுதியீதுமோராண்மைப்பாலதோ. ()

நூற்றியற்குமரரைநொய்திற்கொன்றநின், ஞற்றலைக்கெடுக்குவனுவிவாங்கியே, கூற்றுவற்குண்டியாக்கொடுப்பன்மெய்யினைப், பாற்றினுக்குதவுவன்பாலன்காணவே. (௨௧௧)



Digitized By Roja Muthiah Research Library

உன்னுடைவன்மையுமுனதுநாயகன்,றன்னுடைவன்மையுந்தானைவன்மையும்,
பின்னுடையமரர்கள்பெற்றவன்மையு,மென்னுடைவன்மையாலிறையினீக்குவே
ன். (௨௧௨)

வானவர்சிறையினைமாற்றவுன்னியே, தானையொடேகியென்றன்முன்னெய்தினீ
ருனுயிர்வாழ்க்கையுமொல்லைதீர்திரா, லானதொருதியமழகிதாற்றவே. (௨௧௩)

மூண்டதொல்விதியினான்முடிந்தமன்னுயிர், மீண்டுதம்மியாக்கையுண்மேவுமெ
ன்னினு, மீண்டெனைமாறுகொண்டிகல்செய்கின்றவர், மாண்டிடுமொறலான்மற்று
முய்வரோ. (௨௧௪)

என்பதையரிமுகனியம்பவெம்பிரா, னன்பெருந்தூதுவனகைசெய்தங்கையின்,
மன்பெருஞ்சிலையினைவணக்கிவாளியோ, ரொன்பதொடொன்பதையுரத்திற்றூண்
டினான். (௨௧௫)

விரைந்திடுசெலவினால்விசிகமேவலா, னுரந்தனிற்படுதலுமொசிந்துவீழ்ந்தன
விரந்திடுதொழிலவரின்மையாளர்போற், கரந்தவரியற்கையைக்கருதிமீள்வபோல்.

முருகனதேவலான்முன்னம்விட்டிடு, பொருகணையகலமேற்புகாதுவீழ்தலு [ன்.
மரிகெழுமுகமுடையவுணர்நாயகன், கரமிசையிருந்ததோர்கதையொன்றேவினு

வெவியதண்டினையேந்தலீரிரு, தூவயில்வாளியாற்றுண்டஞ்செய்திடா [ன்.
வேவரும்பான்மையாலொராயிரங்கணை, தேவரையலைத்தவன்சிரத்திலோச்சினு

சிரம்படுகின்றதோர்செய்யவாளிகள், பரம்படுபலதுணிபட்டுவீழ்ந்தன
வுரம்படுமவுணர்களுறைதற்கொத்தமுப், புரம்படுகின்றதோர்பூழியாமென.(௨௧௯)

பொன்றிகழ்வடிக்கணைபொடிப்பவின்னுமுன்,ஒன்றமர்புரியுமோவென்னற்றூது
வ,னன்றெனவரிமுகனகைத்துத்தன்கையின்,மின்றிகழ்சூலவேறிரித்துவீசினான்.

காசினியெரிகிளர்காட்சித்தாலென, வாசினிதனில்வருசூலத்தாற்றலுந்
தேசுடைநிலைமையுந்திறலுநோக்கியே, வீசினனெதிருறவிசிகமாயிரம். (௨௨௧)

கெட்டிலைச்சூலவேணிமலற்கன்பினோன், விட்டிடுபகழியைவீட்டிமேற்செலப்
பட்டதுநோக்கினன்பரிந்துபின்னருந், தொட்டனனுயிரஞ்சுடர்கொள்வான்கணை.

வெவியவெல்லையிலெதிரும்வாளியைத், தூவுறுகொன்னுனைச்சூலஞ்சிந்தியே
மேவலர்பரவுறும்வீரவாகுமேற், றேவருமருளுறக்கடிதுசென்றதே. (௨௨௩)

இலக்கருநடுங்கினரெண்மரேங்கியே, கலக்கமதடைந்தனர்கணங்கள்யாவரு
மலக்கணுற்றிரங்கினரமரரிப்படை, விலக்கரிதேகொலென்றுயிர்த்துவிம்மினர்.()

வேறு.

கோள்கொண்டபகழிகளின்கொலைகொண்டுநிலைகொண்ட
தோள்கொண்டுசெல்லவருஞ்சூலத்தின்றிறனோக்கி
நீள்கொண்டலன்னதொருநீலமிடற்றவன்றந்த
வாள்கொண்டுகுறைத்திட்டான்வலிகொண்டதகலாதான். (௨௨௫)

சூலம்போயிற்றிடலுந்துணைவர்களாயுள்ளோரு
ஞாலஞ்சேர்பூதர்களுநனிமகிழ்வுசிறந்தனரா
லாலம்போந்தடர்த்திடலுமமலனுண்டுதமைக்காத்த
காலம்போலமரரெலாந்துயரம்போய்க்களிசிறந்தார். (௨௨௬)

Digitized By Roja Muthiah Research Library

அக்காலைவெள்ளிமலையளிக்குநந்திகணத்திறைவன்
மெய்க்காலவடவையினும்வெகுளியுறுபெற்றியனு
யிக்காலையிவனுயிரையானேயுண்குவனென்று
மைக்காலன்றனைமுடித்தவள்ளறனிப்படைகொண்டான். (௨௨௭)

எந்திரித்தவிருக்கைதனிலிருத்தியேகருவிகளான்
மந்திரத்தின்விதிமுறையின்மனப்படுபூசனையியற்றி
யந்தரத்திலிமையவர்க்குமரியயற்கும்வெலற்கரிய
சுந்தரத்தோளரிமுகனையடுதியெனத்தொழுதுய்த்தான். (௨௨௮)

உய்ப்பதொருபடையழல்கான்றுலகம்வெருக்கொளவரலு
மெப்படையோவிஃதென்றுனிமையவர்தம்படைவென்றுன்
றப்படையுஞ்செஞ்சடிலத்தோன்றல்படையெனத்தெரியா
வப்படையோவடுவெதெனவண்டம்வெடிபடநகைத்தான். (௨௨௯)

அற்பட்டபுலனுடையவரிமுகத்தன்றுேனேற்று
முற்பட்டபகற்கொண்டமுக்கணன்றனதுபடை
யெற்பட்டமணிக்கடகத்தொருகரத்திலிருந்ததனைச்
சொற்பட்டமந்திரத்தால்வழிபட்டுத்தூண்டினனுல். (௨௩௰)

தூண்டலுறுபரன்படையுந்தொல்லைவருமப்படையு
மீண்டியெதிரெதிர்துன்னியினைகொண்டோரிருதலைவர்
காண்டகையகேண்மையினுற்கடிதுவந்துகலந்தேபின்
மீண்டிடுவதேபோலவிடுத்தவர்பான்மேவினவால். (௨௩௧)

வேறு.

தன்படைமீடலுஞ்சயங்கொண்மொய்ம்பினுன், றன்புடைமனத்தனுய்ச்சூரனென்பவன், பின்புடையானுெடுபேசப்பின்னுெரு, முன்புடையாரிலையென்றுமுன்னினுன். (௨௩௨)

ஆற்றலிற்குறைவிலனழிவுறுதமர், பேற்றினிற்குறைவிலன்பிறரையட்டிடு [ல்.
கூற்றினிற்குறைவிலன்கோடிகூற்றுவ, ரேற்றெதிர்மலையினுமிமைப்பிற்கொல்வனு

அவன்பெருமுயற்சியேயாற்றலாமென்கோ, தவங்களின்வன்மையேவன்மைதானென்கோ, சிவன்புரிவரமதேசீரிதாலென்கோ, வெவன்பெரிதென்றியானிசைக்கவல்லனே. (௨௩௩)

விடலுறுபகழியான்மெய்யினூறிலா, னடலுறுபடையினுமழிவுபெற்றிலான்
கொடியதோரரிமுகன்குமரன்செங்கையிற், படைகளினன்றியேபடுகிலானரோ. ()

தீயவனுவியைச்சிந்தல்கூடுரு, தாயினும்வெஞ்சமராற்றியிங்கிவன்
சேயுயர்தேரினைப்படையைச்சேனையை, மாய்வுறுவிப்பனுல்வல்லையானென்றுன்.

இத்திறமிளையவனியம்பியேழிரு, பொத்திரந்தூண்டியேபொருவில்கேசரி
வத்திரமுடையவன்வையமுந்துவான், சித்திரநெடுந்தலைசிந்திநீக்கினுன். (௨௩௭)

சாரதிதலையதுதரையில்வீழுமுன், சூரொடுதோன்றினுன்சுளிந்தோர்தண்டினை
யோரிமையொடுங்குமுனுருமினுய்த்தலும், வார்கழலிளையவன்மருமம்பாய்ந்ததே.

விடலருந்திறலுடைவீரவாகுவின், றடமிகுமுரம்புகுதண்டஞ்சாளரத்
திடையிடைகதிர்வருமெல்லைகாணுறும், பொடியெனலாகியேபுகையிற்போயதே.

Digitized By Roja Muthiah Research Library

தோட்டுணைவாகையான்சுளிந்ததுண்ணென, வோட்டுறுநெடுங்கணையுய்த்தொ ராயிர, மோட்டுடைவிறலரிமுகத்தனேறிய, சேட்டுடைமணிநெடுந்தேரைவீட்டினான். (௨௪0)

தேரழிந்திடுதலுமார்த்துச்சிங்கனை, யாருயிர்கொள்ளுதுமற்றமீதெனுப்
பாரிடர்வரைகளும்படையும்வீசியே, சாருறவளைந்தனர்சமரின்முந்தினார். (௨௪௧)

வெய்யவனங்கதுவெகுண்டுநோக்கியே, செய்யதோர்மணிநெடுஞ்சேமத்தேர்புகா
வையிருநூறுவில்லதனையாயிரங், கையினிலெடுத்தனன்கடிதின்வாங்கினான். ௨௪௨

கருமணிவரைபுரைகாமர்வில்லெலா, மரவுறழ்குணங்கள்கொண்டவுணன்கையுற
திருமுடிபலவுடைக்கிரியிற்செல்லின, முருகெழுமின்னொடுமுறுவபோன்றவே. ()

பிடித்திடும்விற்களிற்பிறங்குநாணொலி, யெடுத்தனனெடுத்தலுமுயிர்கள்யாவையுந்
துடித்தனவண்டமுந்துளக்கமுற்றன, முடித்தலைபணித்தனன்முளரித்தேவனும். ()

வணக்கியவிற்களின்மடங்கன்மாமுகன், கணக்கிலவாகியகடல்கள்வானெழீஇத், தணக்கிலபொழிந்தெனச்சரங்கள்சிந்தலும், பிணக்குவையாயினர்பெயர்ந்தபூதர்கள். (௨௪௫)

தாள்களுங்கரங்களுந்தலையுஞ்சிந்தினர், கோளுறுதசையொடுகுருதிசிந்தினர்
மூளைகள்சிந்தினர்முடியுங்கால்பொரப், பூளைகள்சிந்தினபோலப்பூதர்கள். (௨௪௬)

தருப்பயில்பாற்கடறனதுசீகரந், திரைப்பெருங்கரங்களாற்சிந்தல்போன்றதா
லரிப்பெருமுகத்தவனுயிரங்கையாற், றுரப்புறுகணைகளைத்தூண்டுகின்றதே. ௨௪௭

மண்டலநிரந்தனவானந்தூர்த்தன, வெண்டிசைமறைத்தனகிரிகளீண்டுவ
தெண்டிரையெங்கணுஞ்செறிவவப்புறத், தண்டமும்போவனவவுணன்வாளிகள். ()

மருப்புயர்திசைக்கரிமருமம்பாய்வன, பருப்பதமேழையும்பகிர்வமேருவாம்
பொருப்பையும்போழ்வனபுணரிதோறமர், நெருப்பையுந்தணிப்பனநீசன்வாளியே.

மாறுபட்டவன்விடும்வாளிமாரியா, லீறுபட்டிடாததோருயிரும்யாக்கைகள்
கூறுபட்டிடாததோருயிருங்கொம்மென, வூறுபட்டிடாததோருயிருமில்லையே. ()

எண்படுமரிமுகனெடுத்தவில்லுமிழ், புண்படுகணைமழைபொதிந்துபோகுறு
விண்படுநெறியெலாம்விலக்கிமாற்றியே, யொண்புவியாக்கியதுலகம்யாவையும். ()

தாக்குறுமரிமுகன்சரங்கள்பாரிடர், யாக்கைகளுருவியேயெடுத்துநொய்தெனப்
போக்குறுகின்றனபுலாலின்சூட்டினைக், கோக்குறுசலாகையின்குழுவுபோலவே. ()

மெய்ந்நெறியுணர்கிலார்வெறுக்கைபெற்றது, துன்னியகிளைக்கொருதுன்பமாதல்போ, லொன்னலன்விடுங்கணையுலப்பின்றூடலாற், றன்னுறுபடைகளைத்தானுங்கொன்றவே. (௨௫௩)

நீந்தொழிலரிமுகன்செறித்தவாளிகள், வாய்ந்திடுஞ்சேணெறிமாற்றும்பான்மையாற், காய்ந்திடுஞ்செங்கதிர்க்கடவுண்மேற்றிசைப், போந்திலன்மீண்டிலன்புலம்பினின்றுளான். (௨௫௪)

கொம்பொடுபேரியுங்குணிலுமேனைய, வெம்படையாவையும்விரவிமேற்செலக்
கம்புளுங்கரண்டமுங்களைந்துசுற்றிடச், செம்புனல்கரும்புனலளக்கர்சென்றதே. ()

இத்திறமரிமுகனியற்றும்போரினை, மெய்த்திறன்மொய்ம்புடைவீரன்காணுறாச்
சித்திரத்தவனெதிர்சென்றுவாங்கினான்,கைத்தலத்திருந்ததன்கடவுள்வில்லினை.()

வாக்கியசிலைதனில்வறிதுநாணொலி, யாக்கினனுக்கலுமலைந்ததண்டமுந்
தீக்கிளர்குஞ்சியர்செருச்செய்தானவ,ரேக்கமதடைந்தனரிரிந்துபோயினார். ௨௫௭

மாக்களினிருந்தவர்மதங்கொள்வெங்கரி, மேக்குறவைகினோர்தேரின்மேவினோர்
தாக்குறுபடைகளுஞ்சயமுஞ்சிந்தியே, யாக்கைகணடுக்குறயாரும்வீழ்ந்தனர். ()

வேறு.

அவ்வழிப்படநாணொலியுறுத்தியேயடலோன்
கைவழிப்படுசிலையினிற்கணைமழைசிதறித்
தெவ்வழிப்படுசீயமாமுகத்தவன்செலுத்து
மெவ்வழிப்படுபகழியுமறுத்தனனிமைப்பில். (௨௫௯)

பிரமரெண்ணிலர்பயந்திடுமுயிர்களைப்பின்னா
ளொருவனாகியகண்ணுதறொலைக்குமாறொப்பச்
செருவலாளனுமிளையவன்பகழிகள்சிதறி
யரியின்மாமுகன்விடுகணைத்தொகையெலாமறுத்தான். (௨௬0)

மிக்கநேமியிற்புவனியினகலிருவிசும்பிற்
றிக்கின்மேருவின்வரைகளிற்றீயவன்பகழி
புக்கபுக்கதோரிடங்களிற்றன்கணைபூட்டி
யக்கணந்தனிலவன்விடுவாளிகளறுத்தான். (௨௬௧)

புறத்தராமெனமன்னுயிர்க்கின்னலேபுரியுந்
திறத்தன்வாளியைமைந்தனின்றட்டதுதேவர்
குறித்துநோக்கியேசூர்முதற்கிளையெலாங்குமர
னறுத்தநாள்வருமகிழ்ச்சியைக்கிடைத்துநின்றார்த்தார். (௨௬௨)

அகழியார்கலிநொச்சிசூழ்முதுநகரடர்த்தோன்
றிகழியானைகள்வெருவருமரிமுகத்திறலோன்
பகழியாவையுமட்டதோவங்கவன்படைத்த
புகழியாவையுமட்டதன்றேயெனப்புகன்றார். (௨௬௩)

அள்ளல்செற்றியவளக்கர்சூழாசுரத்தரசன்
றள்ளலுற்றிடுபகழியைத்தனதுகைச்சரத்தால்
வள்ளலத்துணையறுத்தனனகற்றமற்றதனைக்
கள்ளலைத்ததாரரிமுகமேலையோன்கண்டான். (௨௬௪)

வில்லெடுத்ததுநின்பொருட்டாகுமால்விரைவின்
மல்லெடுத்தநின்மொய்ம்பினைக்கரங்களைமார்பைப்
பல்லெடுத்திடுதலையினைநாசியைப்பதத்தைச்
சொல்லெடுத்திடுநாவினைச்சரங்களாற்றுணிக்கேன். (௨௬௫)

திரண்டகையுளேன்சிலைத்தொழில்காட்டுறுசெருவி
லிரண்டுகையுடைநீகொலாமென்முனமேற்பாய்
முரண்டனிச்சிலைதொட்டநின்கையினைமுடித்துக்
கரண்டமுண்ணியபுரிகுவன்முந்துநீகாணா. (௨௬௬)

Digitized By Roja Muthiah Research Library

எமரிருக்குறுமகேந்திரநகர்தனிலீண்டுஞ்
சமரகத்தினிலென்பெருந்தானைகடம்மிற்
குமரர்தங்களிற்கொற்றமாக்கொண்டனமுற்று
முமிழுவிக்குவனுன்னுயிர்தன்னையானுண்பேன். (௨௬௭)

என்னுமாற்றங்களரிமுகனிசைத்தலுமேந்தல்
பன்னுகின்றதென்பற்பலநினக்குளபடையைத்
துன்னுதானைகள்யாவையுஞ்செற்றனைத்துரப்பே
னொன்னுடைச்சிலைவன்மையைப்பார்த்தியாலென்றான். (௨௬௮)

சொற்றமாத்திரத்தவுணனாரழல்விழிதூண்டக்
கொற்றவெஞ்சிலைபத்துநூறொருதலைகுனித்துப்
பொற்றுறையீர்ங்கணையாயிரத்தாயிரம்பூட்டி
வெற்றிமொய்ம்புடையொருவன்மேற்சென்றிடவிடுத்தான். (௨௬௯)

சீற்றமிக்கநம்மிளையவன்சிலையெனக்கொண்ட
கூற்றைவாங்கியேபத்துநூறாயிரங்கொடுங்கோ
லாற்றன்மிக்கனதூண்டியேமேலவையறுத்து
வீற்றுமாயிரமாயிரம்பகழிகள்விட்டான். (௨௭௦)

நம்பிதொட்டிடுகணையினைமகேந்திரநகரோன்
றம்பிபத்துநூறாயிரங்கணைகளாற்சாய்த்து
வெம்பியாயிரகோடிவெவ்வாளிகள்விடுப்ப
வெம்பிராற்கிளையோனுமக்கணையினையெய்தான். (௨௭௧)

குராவணிந்திடுகுமரனுக்கிளையவன்கொடுங்கோல்
பராவலன்விடுபகழியைப்பாரிடைப்படுத்தக்
கராசலங்களையடுமுகனதற்குமுன்கணைக
ளிராயிரந்தொடுத்தண்ணறன்சிலையினையிறுத்தான். (௨௭௨)

மாறில்வெஞ்சிலையிற்றுழியிளையதோர்வள்ளல்
வேறொர்கார்முகம்வாங்குமுன்னகலத்தில்வெய்யோ
னூறுகோடிபுங்கவங்களையழுத்தலுநொய்தி
னாறுகோடியொத்திழிந்தனவகலிருங்குருதி. (௨௭௩)

குருதியாகத்தினிழிந்திடத்தன்சிலைகுனித்துப்
பரிதியொண்கதிரென்னநூறாயிரம்பகழி
கருதிவிட்டிடக்கருதலனங்கதுகாணா
விருதுநாண்முகிலாமெனவவ்வதொடுத்திறுத்தான். (௨௭௪)

அல்லினேர்மதியெழுந்தெனவவுணருளுதித்த
மல்லல்வாலியவரிமுகன்றொடுகணைமாரி
யொல்லென்வாளியான்மாற்றியாயிரங்கணையுந்திச்
சில்லியாழிகளறுத்தவன்றேரினைச்சிதைத்தான். (௨௭௫)

ஏறுதேரழிந்திடுதலுமரிமுகனிமைப்பின்
மாறொர்வையமேற்பாய்ந்தனன்வார்சிலைவளைப்ப
வாறுமாமுகற்கிளையவன்கணைகளாலவுண
னறுபத்தெனுஞ்சிலையையுமறுத்தனனொடிப்பில். (௨௭௬)

Digitized By Roja Muthiah Research Library

வில்லிழந்தனன்மானமுமிழந்தனன்வீரச்
சொல்லிழந்தனன்பெருமிதமிழந்தனன்றொல்சீ
ரெல்லிழந்தனன்பெருமையுமிழந்தனனிலங்கும்
பல்லிழந்திடுவிடவராவொத்தனன்பதகன். (உஎஎ)

ஏதிலானொருங்காயிரஞ்சிலைகளுமிழந்து
மாதுயர்ப்படுநிலைமையைநோக்கியேமறங்கொள்
பூதராரார்த்தனரமரர்களார்த்தனர்புரைதீர்
வேதராரார்த்தனர்முகுந்தருமார்த்தனர்விண்மேல். (உஎஅ)

ஆயிரஞ்சிலையொருதலைதுணிந்ததுமமரர்
நாயகன்றனக்கடியவன்விற்றொழிலனலனு
மாயனுதியரிகழ்ச்சியும்பூதர்தம்வலியுங்
காயுநெஞ்சுடைமடங்கன்மாமுகத்தவன்கண்டான். (உஎகூ)

தேவரார்ப்பையுமிந்திரரார்ப்பையுந்திசையின்
காவலாளர்தமார்ப்பையுமெமையடக்கருது
மூவரார்ப்பையுஞ்சாரதரார்ப்பையுமுனிவோ
ரேவரார்ப்பையுந்துன்பினுக்குதவுவனென்றான். (உஅ0)

வேறு.

தீயாருக்கோரெல்லையதானான்றிறன்மேலான்
றூயாருக்கேயின்னல்புரிந்தான்றொலைவில்லான்
றாயாய்முன்னேதம்மையளித்தாடருகின்ற
மாயாபாசந்தன்னையெடுத்தான்மறமிக்கான். (உஅக)

ஓட்டிப்போர்செய்மாற்றலர்தம்மையொருபாலாற்
கட்டிக்கொள்ளாவாருயிருண்டுகடிதேகிக்
கிட்டித்தொல்லைஞாயிறுதோன்றுங்கிரியுய்த்து
விட்டுப்போதாண்டுறைகென்னாவீசுற்றான். (உஅஉ)

மறியாநிற்குந்தெண்டிரையேழும்வந்தோன்றாய்ச்
செறியாநிற்குங்கொல்லிதுவென்னத்திசைசூழ்போ
யெறியாநிற்கும்பாசமிருட்கோரிடமாகிப்
பொறியாநிற்குந்தீயழல்சிந்திப்புகுந்தன்றே. (உஅங)

சேணுற்றோர்யாருமிரிந்தார்செருவாற்றல்
பூணுநிற்கும்பூதரும்யாரும்பொருமுற்றா
ராணுயுற்றோர்யாரினுமேலோனதுதன்னைக்
காணுவீதோர்மாயைகொலென்றேகருதுற்றான். (உஅச)

ஆர்ப்பாயுற்றதெண்டிரைகொல்லோவஃதன்றேற்
போர்ப்பான்வந்தபாயிருள்கொல்லோபுயம்வீக்கி
யீர்ப்பானுற்றநாணதுகொல்லோயாதேனுந்
தீர்ப்பேன்வல்லேயென்றுநினைந்தான்றிறல்வாகு. (உஅரு)

ஆற்றான்மற்றிவ்வாறுதெரிந்தேயதுதீர்ப்பான்
மாற்றாகின்றதொல்படைதன்னைவாங்காமுன்
கூற்றாய்நின்றோன்வீசியபாசங்குழுவோடுங்
காற்றாய்வந்திங்கியாவரையுங்கட்டியதன்றே. (உஅசா)

பல்லோராகிப்போர்புரிபூதப்படையோரும்
வில்லோராகுமெண்மருமேனைவிறலோருந்
தொல்லோர்கூறுமாடல்கொண்மொய்ம்பிற்றுணையோனு
மெல்லோர்தாமும்வீக்குறுபாசத்திடையுற்றார். (௨௮௭)

மேற்றானெய்திவீக்கியபாசமிடல்வீரர்
மாற்றாநிற்பர்தொல்லுணர்வோடுமெலிவாரே
லாற்றாரென்னச்செய்குவன்யானென்றவர்புந்தி
தேற்றாவண்ணஞ்செய்துளதம்மாசிறுபோழ்தின். (௨௮௮)

வேறு.

தொன்னிலையுணர்வுமாழ்கித்தொல்வலிசிந்திச்சோரு
மன்னவர்தொகையையெல்லாமந்தரநெறிக்கொண்டேகி
மின்னெனவளக்கர்வாவிமேருமால்வரைபோனின்ற
பொன்னவிருதயமென்னும்பொருப்பிடைப்புகுந்ததன்றே. (௨௮௯)

கதிபடர்கின்றகாலிற்கருத்தினிற்கடிதினேகித்
துதியுறுதிருவின்கேள்வன்றுயில்புரிகடலிற்றுஞ்சு
முதயமால்வரையினெய்தியுயிர்ப்பிலாதுறங்குகின்ற
மதவலிவீரர்தம்மைவைத்தடனிருந்ததன்றே. (௨௯0)

விழுமியபூதர்யாரும்வீரரும்விளிந்துவெய்யோ
னெழுதருமுதயம்புக்காரென்பதுதெரிந்துநோக்கிக்
குழுவொடுபொருதுளாரைக்கொன்றுயிர்குடித்தேன்வல்லே
யழகிதென்றூற்றலென்றானமரரையலக்கண்கண்டான். (௨௯௧)

ஓடினான்கொல்லோபோர்க்கென்றுற்றதுமிலையோவெங்குந்
தேடினேன்காண்கிலேனல்யாண்டையான்சிறுவனம்மா
சாடினான்சாடினானென்றுரைப்பதுசழக்கோதம்பி
வீடினானல்லனோவென்றண்டங்கள்வெடிக்கவார்த்தான். (௨௯௨)

கேசரிமுகனிவ்வாறுகிளத்தினனூர்க்குமெல்லைத்
தூசியின்முந்துபோனதூதுவனொருவனண்ணி
யாசறுபூதவெள்ளமாயிரத்தோடுசெவ்வேள்
பாசறையிருந்தான்யானும்பார்த்தனன்வந்தேனென்றான். (௨௯௩)

ஒற்றனதுரையைக்கேளாவொள்ளெயிறிலங்கநக்குப்
புற்றுறையரவமென்னப்புதல்வனைற்பொருவானஞ்சி
மற்றவனுறைந்தான்கொல்லோவல்லையில்யானேயேகி
யிற்றையோர்கணத்திலன்னானிருஞ்சமர்முடிப்பனென்றான். (௨௯௪)

என்றனன்படருமெல்லையின்னதோர்நிகழ்ச்சியாவு
மொன்றறநோக்கிவானோருயங்கினரோடலுற்றார்
சென்றனனதனைநாடிக்காலெனுந்திறலின்வெய்யோன்
குன்றெறிநுதிவேலண்ணல்குரைகழல்பணிந்துசொல்வான். (௨௯௫)

அத்தகேள்பூதரோடுமடுபடைத்தலைவரேகி
மெய்த்திறற்பெரும்போராற்றவெகுண்டரிமுகத்துவெய்யோன்
கைத்தலத்திருந்தசூழ்ச்சிக்கயிற்றினானமரையெல்லா
மெய்த்திடவீக்கிவெய்யோனுதயத்திலிட்டானென்றான். (௨௯௬)

Digitized By Roja Muthiah Research Library

ஆண்டகைவரம்புசான்றவறுமுகனவன்சொற்கேளா
யாண்டுளான்யாண்டுளானவ்வரிமுகத்தவுணனென்னத்
தூண்டிடுகொடித்தேர்மேலான்சூழ்தருபடையின்சீரான்
மாண்டிடுபொறியாலிங்ஙன்வருகுவான்போலுமென்றான். (௨௯௭)

என்னலுநகைத்துச்செவ்வேளரியணையிருக்கைநீங்கிப்
பன்மணிகுயின்றசெம்பொற்பாதுகைசரணஞ்சேர்த்திப்
பொன்னவிர்கழல்களார்ப்பப்புறங்கடைகாறும்போந்து
தன்னயல்வந்தகாலைத்தருதிநந்தேரையென்றான். (௨௯௮)

ஆறுமாமுகத்துவள்ளலருள்பணிதலைக்கொண்டேகி
மாறிலாமுதல்வன்றந்தவையமதழைத்துவெங்கா
றாறுசேர்கோலுநாணுந்தாங்கினன்கடாவியுய்ப்ப
வேறினானதன்மேலையனிமையவர்யாருமார்த்தார். (௨௯௯)

இந்திரன்கவரிசாய்ப்பவிமையவர்வட்டம்வீசச்
சந்திரன்றபனனென்போர்தண்ணிழற்கவிப்புத்தாங்க
வந்தகனுடைவாள்பற்றவியக்கர்கோனடைப்பைகொள்ளச்
சிந்துநீரரசன்செம்பொற்படியகமேந்தச்சென்றான். (௩00)

நாயகன்குமரன்போர்மேனடப்பதுதெரிந்துபூத
ராயிரவெள்ளத்தோருமார்கலிநாணவார்த்துக்
காயெரியுமிழுஞ்சூலங்கணிச்சிதண்டெழுவுநாஞ்சின்
மீயுயர்பழுவங்குன்றங்கொண்டனர்விரைந்துசூழ்ந்தார். (௩0௧)

அடித்தனர்பறைகள்சங்கமார்த்தனரையன்சீர்த்தி
படித்தனர்பாங்கரெங்கும்பன்மணிக்கவிகைவட்டம்
பிடித்தனர்தமதுவீரம்பேசினர்மூரியேற்றுக்
கொடித்தொகையநந்தகோடிகொண்டனர்குணிப்பில்பூதர். (௩0௨)

மூவர்கண்முதல்வன்வந்தான்முக்கணான்குமரன்வந்தான்
மேவலர்மடங்கல்வந்தான்வேற்படைவீரன்வந்தா
னேவருந்தெரிதறேற்றாதிருந்திடுமொருவன்வந்தான்
றேவர்கடேவன்வந்தானென்றனசின்னமெல்லாம். (௩0௩)

ஆசறுபூதர்சூழவமரர்வாழ்த்தெடுப்பவையன்
பாசறைக்களத்தைநீங்கிப்பறந்தலைநிலத்தினெல்லை
வீசுறுமருத்துமின்னும்வெள்குறநொடிப்பிற்செல்லக்
கேசரிமுகத்தினானுங்கிளர்படையோடுநேர்ந்தான். (௩0௪)

பருப்புறுமெழுவும்வான்றோய்பழுவமும்பரசுந்தண்டு
நெருப்புமிழ்சூலவேலுநேமியுங்கொழுவுங்குன்றும்
பொருப்புறழ்பூதர்வீசிப்பொருக்கெனவவுணர்தம்மை
மருப்புயர்களிற்றைமாவைவையத்தையடுதலுற்றார். (௩0௫)

குந்தமுமழுவுந்தண்டுங்குலிசமுமெழுவுங்கோலு
முந்தியகழுமுள்வேலுமுசலமுங்கொழுவுஞ்சங்கு
மெந்திரக்கவண்வீழ்கல்லுமெஃகமும்பிறவுமெல்லாஞ்
சிந்திநின்றவுணர்பூதப்படையினைச்செறுத்தலுற்றார். (௩0௬)



Digitized By Roja Muthiah Research Library

இருதிறப்படைகடம்மிலித்திறம்பொருதவெல்லைக்
குருதிவந்தலைப்பமார்புசென்னிதோள்குறைந்துவேறாய்த்
தரையிடைமறிந்தார்பல்லோர்சங்கரன்விடுத்தமூரல்
விரிகனல்சிதறிப்பற்றவெந்துவீழ்புரமதேபோல். (௩0௭)

கண்டனனனையசெய்கைகனல்பொழிபரிதிக்கண்ணான்
மண்டமர்புரியாநிற்குமாற்றலர்தம்மைவாரி
யுண்டனனெனதுசீற்றமொழிக்குவனெல்லையென்னா
வண்டமுந்திசையுந்தானேயாகவோர்வடிவங்கொண்டான். (௩0௮)

ஆயிரமுடியின்மௌலியண்டத்தின்முகட்டைநக்கப்
பாயிருங்கரங்களண்டப்பாங்கரையலைப்பப்பாருட்
போயினபதங்களண்டத்தடியினைப்பூழைசெய்ய
மாயையாலினையவாறோர்வடிவுகொண்டார்த்துவந்தான். (௩0௯)

வந்திடுசீற்றத்துப்பின்மடங்கலின்றோற்றநோக்கி
யந்தகனசைந்துநின்றானதவனிரியலானா
னிந்திரன்றுளக்கமுற்றானெரிபதைபதைத்துச்சோர்ந்தான்
சிந்தையின்மருட்கையுற்றார்திசைமுகன்முதலாந்தேவர். (௩௧0)

வேறு.

அன்னதோரெல்லையிலாளிமுகத்தோன், முன்னுறுபூதமுழங்கொலிநீத்த
மென்னதுமங்கையிராயிரமோச்சி,யுன்னுமுன்வாரினனுண்டல்பயின்றான். (௩௧௧)

ஈட்டுறுபூதரிருங்குழுவத்தை, மோட்டுறுசிங்கமுகன்கரமுற்று
நீட்டினனள்ளுதனேமிகண்மாறாய், மாட்டுறுகொண்டல்கள்வாருவபோலும்.௩௧௨

ஆயிரகோடியொரங்கையினாகப், போயினபாணிகள்பூதரையள்ளச்
சீயமுகங்கெழுசெம்மலகன்பேழ், வாய்களிலிட்டுவிழுங்கினன்மன்னோ. (௩௧௩)

மீனமதாகவியன்படையங்கைக், கானுறுகுன்றுகறித்திறனாக
வானபல்பூதரையட்டிடுசாலைப், போனகமாமிசைந்தான்புகைவாயான். (௩௧௪)

அண்டமோராயிரமாங்கொருபாங்கர், விண்டுவெவ்வேறுவிளங்குவபோலுங்
கண்டகன்வெய்யகணங்களையெல்லா, முண்டிடுகின்றவுலப்பிலபேழ்வாய். (௩௧௫)

செப்பரும்வென்றிகொள்சீயமுகத்தோன், கைப்புகுபூதகணத்தினர்யாரு
மப்பெருவாய்களினாற்றுறுமாக்க, ளுப்பிடைசென்றெனவுற்றனரன்றே. (௩௧௬)

தானவனங்கைதனிற்படுபூதர், மேனிகழ்வாய்தொறுமேவருபான்மை
யூனமில்விண்ணவரூர்தொறுமிம்பர், மானவரியாரும்வழிக்கொளல்போலும்.௩௧௭

மண்ணிதுவன்றெனின்வானவர்வைகும், விண்ணிதுவன்றெனின்வெவ்வசுரேசர்
நண்ணுலகீதெனநாடினர்தீயோன், கண்ணகன்வாயதுகண்டிடுபூதர். (௩௧௮)

வாய்க்கொளுமெல்லைமடங்கன்முகத்தோன், மூக்குடனஞ்செவிமூலமும்வல்லே
நோக்கினரிங்கிதுநூழைகோலென்னா, வூக்கொடுசிற்சிலரோடினர்போனார். (௩௧௯)

அந்தமில்சீயனகன்பெருவாய்போய்க், கந்தரநீங்கினர்நெஞ்சுகடந்தா
ருந்திபுகுந்தனரொண்புவியுள்ளோர், சிந்துறுகீழ்நிலைசென்றுறுமாபோல். (௩௨0)

Digitized By Roja Muthiah Research Library

சீயமுகங்கெழுசெம்மலுயிர்ப்பிற், போயினருந்திபுகுந்தவர்சில்லோ
ராயிரம்யோசனையந்தரமீண்டு, மேயினரங்கவன்மீண்டவுயிர்ப்பால். (௯௨௧)

வெவ்விடமென்னவிளங்கசுரேசன், றவ்விடவேயகடுற்றிடுதொல்லோ
ரவ்விடம்யாவினுமாதியையுன்னற், கிவ்விடமேயினிதென்றனர்சில்லோர். (௯௨௨)

வேறு.

களித்தவன்மடியுறுகணவராயிடைக்,கிளைத்தனர்கைகளிற்படையிற்கீறினர்[வரால்
துளைத்தனர்கெடாமையிற்றொல்லைவன்மைபோ, யிளைத்தனரொருசிலர்யாதுசெய்

ஆயிரவெள்ளமாமாடற்பூதரை, வாயிடைப்பெய்துதன்னகட்டில்வைத்துள
சீயமாமுகத்தவன்செயலைப்பற்பக, லோய்வறமொழியினுமொழிதற்பாலதோ. ()

இத்திறநிகழ்ந்திடவீண்டுபாரிடர், பத்துநூறெனப்படும்பரவைநீத்தமுங் . [ம்.
கைத்தலம்வாரினன்கயவன்மோட்டினுள்,வைத்தலுங்கண்டனர்வானுளோரெலா

எண்கெழுபூதரைநுங்கினனினி, மண்கெழுபொருளெலாம்வாரிநுங்குமால்
விண்கெழுநம்மையும்விரைவிற்பற்றியே, யுண்குவனெனமருண்டும்பரோடினர். ()

ரேடியவொற்றுவர்நின்றிலார்விரைந், தோடினரவுணர்கோனுபயத்தாண்மலர்
சூடினர்சென்னியிற்றொழுதகையினர், மாடுறுபலசனமகிழக்கூறுவார். (௯௨௭)

ஏதமிலரிமுகத்திளவல்கந்தவே', டேதனைப்பிறர்தமைத்தொலைவில்பூதரிற்
பாதியைநாண்வலைப்படுத்துவீட்டியே, யாதவனெழுகிரியகத்தராக்கினன். (௯௨௮)

ஈங்கிதுவினவியேயீசன்றன்மகன், ருங்கியவேலொடுசமரினேற்றிட
வோங்குமோர்வடிவுகொண்டனதுபின்னவ, ஞங்கெதிர்பூதரையள்ளிநுங்கினன். ()

இவ்வரைநிகழ்ந்தனவினையவித்துணை,மைவருமிடற்றினன்மதலையோடுபோர்க்[ல்
கவ்வையையியற்றிடுங்கன்னலொன்றினிற், றெவ்வர்களிலரெனச்செய்துமீளுமா

என்னலுமரியணையிகந்துபோய்த்தழீஇ, நன்னயமொழிபலநவின்றுதூதுவ [ன்.
. ருன்னினர்விழைந்தசீருதவிமன்னவன், றன்னுழையொருவனைநோக்கிச்சாற்றுவா

கந்தனொடரிமுகன்கனன்றுபோர்செய்வான், முந்துளதானையின்முடியும்பற்பல
விந்தநன்னகருறைபடைகள்யாவையு, முந்துதியாயிடையொல்லைநீயென்றான். ()

சாற்றியவுரைகொடுதாழ்ந்துகம்மியன், காற்றெனவேகியேகறங்குதானையுட்
போற்றலனமரிடைப்போமின்போமினென்,றேற்றுரிமுரசினையெறிவித்தானரோ

பணையொலிகேட்டலும்பதியுள்வைகிய, வினையறுதானைகள்வெள்ளம்யாவையு
மணிகெழுவகுப்புடனார்த்துச்சென்றுசூர்த், துணையவனமர்புரிசூழல்புக்கவே. ()

அம்புதியாமெனவனிகஞ்சென்றுழித்,தும்பையஞ்சிகழிகைச்சூரனென்பவ[னுன்
னெம்பிதன்போர்வலிகாண்பன்யானெனாச், செம்பொனந்தவிசினுந்தீர்ந்துபோயி

தன்பெருமந்திரநடுவட்டங்கிய, கொன்பெருஞ்சிகரியாமேருக்குன்றின்மே
லின்புறுதிருவொடுமேறினனரோ, பொன்புனையுதயமேலிரவிபுக்கென. (௯௩௬)

தாதவிழ்தார்முடித்தம்பிகொண்டதோர், மேதகுவடிவமுந்தமியன்வேளுறப் [ன்.
பூதர்களுண்டியாய்ப்போனதன்மையுங், காதலினவுணர்கோன்கண்ணினோக்கின

Digitized By Roja Muthiah Research Library

வருமிதமென்றுமன்னுயிர்கட்கல்லல்செய், கருமிதவழிக்கொருகனலிற்ரேன்றினன், பெருமிதம்விம்மிதம்பெரிதுமெய்தின,னுருமிதமாமெனநகைக்குமோதையான். (௩௩அ)

இங்கிவனின்றிடவிதற்குமுன்னரே, சங்கையில்பாரிடத்தானைமுற்றவுஞ்
சிங்கமாமுகத்தவனுகருஞ்செவ்வியி, னங்குறுமறுமுகனதனைநோக்கினன்.(௩௩௯)

ஒருத்தனையாகியேயுலகெலாமடு, நிருத்தனதருண்மகனேரலாரொடுஞ் [லான்.
செருத்தொழில்புரிவதோர்சிறியவாடலைக், கருத்திடையுன்னினன்கணிப்பிலாற்ற

வேறு.

செய்யதாமரைவனங்களுஞ்செங்கதிர்த்தொகையு
மையசேயொளியீன்றிருந்தென்னவாறிரண்டு
கையுமூவிருமுகங்களுமுடையவன்காலோன்
வையமுந்திடவடுதொழிலியற்றுவான்வந்தான். (௩௪௧)

வேறு.

வந்திடுகின்றகாலைவயப்பெரும்பூதர்யாரு
மந்தமுற்றதனையோராவடுகரிபரிதேர்செற்ற
வெந்திறலவுணர்கோன்றன்மேதகுபடைஞர்முற்றுங்
கந்தவேடன்னைச்சூழ்ந்தார்கனலிசூழ்கடலேயென்ன. (௩௪௨)

சூழ்தருமவுணவீரர்தொலைவிறம்படைகண்முற்று
மூழ்தருமுருமிற்பெய்யவுலகுடைமுதல்வன்காணுக்
காழ்தருமேருவன்னகார்முகமொன்றுவாங்கி
வீழ்தருமருவிபோலும்வியன்குணத்தோதைகொண்டான். (௩௪௩)

ஆயிரகோடிஞாலத்தண்டங்கள்வெடித்தமற்றைப்
பாயிரும்புனலினண்டப்பத்திகள்பகிர்ந்தபாங்கர்
தீயழலண்டங்கீண்டசெறிமருத்தண்டம்விண்ட
மீயுயர்வெளிமூதண்டம்வெய்தெனவுடைந்தவன்றே. (௩௪௪)

அப்பெருநாணினோதையரிமுகன்றனைமள்ளர்
செப்புறுகேள்வியாற்றுஞ்செவிப்புலம்புகுதலோடுங்
கைப்படைசிந்திவீழ்ந்தார்கவிழ்ந்தனகளிறுமாவு
மொப்பில்சீருருளித்தேர்களொல்லெனவுடைந்தவன்றே. (௩௪௫)

மூரிவிற்கொண்டநாணின்முழக்கினைவினவியற்றாற்
பாரிடைக்கவிழ்ந்ததானைப்பரப்பையுநோக்கிநின்று
ஞாரிதைப்புரியுநீராரரன்மகனிவனுமுன்னந்
தாரகற்கடந்தானென்கைசரதமேபோலுமென்றான். (௩௪௬)

வாலுளையலங்குநெற்றிமடங்கலோனினையகூறிப்
பாலகன்வன்மையானேபடுத்தனன்மீள்வனென்னுக்
காலுடைநெடுந்தேரோடுங்கையனோர்கணத்தினேர்ந்து
வேலுடையண்ணறன்னைநோக்கினன்விளம்பலுற்றான். (௩௪௭)

கண்ணுதன்முதல்வன்மைந்தகழறுவனென்றுகேண்மோ
வெண்ணலர்வலியைமாற்றலிறையவர்கடனேயற்றால்
விண்ணவர்தமைத்தண்டித்தோமவர்க்குளுமல்லைவேறோர்
நண்ணலனெமருக்கில்லைநடந்ததென்னமருக்கென்றான். (௩௪அ)

உறைதருமளியன்றன்னைவலியவனொறுக்கினாடி
முறைகெழுதண்டமாற்றியண்டங்கண்முழுவதுக்கு
மிறையினைப்புரிதுமற்றானீவிர்களிமையோர்க்கிட்ட
சிறையினையகற்றவந்தேஞ்செருவுமத்திறத்துக்கென்றான். (௩௪௯)

எங்கணாயகமாயுள்ளவிறையவனினையகூறச்
சிங்கமாமுகத்துவீரனுருமிடிதிளைத்ததொப்ப
வங்கையோடங்கைதாக்கியண்டமுங்குலுங்கநக்குப்
பொங்குவெஞ்சீற்றமேலானிங்கிவைபுகலலுற்றான். (௩௫0)

ஈங்கெமர்தமையும்வென்றாயிமையவர்சிறையுமின்றே
நீங்கினராவர்நீயுநீக்குதிபோலும்போலு
நாங்களுமளியர்தாமேநன்றுநின்சூழ்வேயாற்ற
லோங்கியதுனதுமாட்டேயுண்மையிதன்றியுண்டோ. (௩௫௧)

இந்திரகுமரன்றன்னையிமையவர்குழுவைவாரி
வெந்தளைமூழ்குவித்துவீட்டியசிறையைநீக்கல்
சந்திரமௌலியண்ணறன்னினுமுடியாதென்றான்
மைந்தநீயொருவன்கொல்லோமுடித்திடவல்லமன்னோ. (௩௫௨)

கண்ணுதலுனக்குத்தந்தகாமருசுடர்வேலாற்ற
லெண்ணலன்மறலியாகியிகழ்ந்துபோரியற்றினானை
யுண்ணிகழாவிகொண்டாயோடினாய்தியீண்டு
நண்ணியதன்மையெங்கணல்வினைதந்ததன்றே. (௩௫௩)

கடம்பமர்கண்ணியாய்கேள்கடவுள்வேல்கொண்டவாற்ற
றிடம்படுநினதுவன்மையாவையுந்தெரிதந்துள்ளேன்
றடம்படுகுவவுத்திண்டோட்டாரகன்போலஞாட்பின்
மடம்படுகின்றதில்லைவல்லைபோர்புரிதிமாதோ. (௩௫௪)

பொருதிறல்வயவர்யாரும்பூதரிற்பலருமாய்ந்தே
யெரிகதிருதயம்புக்காரேனையோர்நீயுங்காண
விரைவிலென்னகடுசேர்ந்துவிளிந்தனர்தமியனின்றாய்
செருவினையிழைத்துமென்னுமூக்கமேசீரிதம்மா. (௩௫௫)

தாதவிழ்தருவினீழற்சயந்தனையமரர்தம்மைத்
தீதுறுசிறையினீக்கச்சென்றநீதுணைவரோடு
பூதர்தந்தொகையைவாளாபோக்கினைதமியனின்றா
யூதியமிதன்மேலுண்டோவுனக்கிதுகிடைத்ததன்றே. (௩௫௬)

முனைகெழுசமரின்வந்துமுடிந்தனர்முடிவிலாதா
ரினைவொடுபுறந்தந்தேகியிரிந்துளார்தொகையுமஃதே
யனையதையுணராய்கொல்லோவமர்குறித்தீண்டுவந்தாய்
கனவினும்விடுவதுண்டோகடவுளர்சிறையையென்றான். (௩௫௭)

என்றசொல்லிறுக்குமுன்னமிராறுதோளுடையவள்ள
னன்றிவன்கொண்டதென்னாநகைசெய்துசிலையிற்பூட்டி
யொன்றொருவயிரவாளியொல்லெனத்துரப்பத்தீயோன்
பொன்றிகழ்மருமம்புக்குப்புறத்துரீஇப்போயதன்றே. (௩௫௮)

Digitized By Roja Muthiah Research Library

அருவியனாகமுள்ளானகன்பெருவிழிகட்கூறு
யருவியனாகமன்னவரிமுகனையன்செங்கோ
லருவியனாகமூழ்கவலக்கணூற்றிழியுஞ்செந்நீ
ரருவியனாகநின்றனமரர்மற்றதுகண்டார்த்தார். (௩௫௯)

கற்றையங்கதிர்வேலண்ணல்காமருபகழிபாய
மற்றவன்புறனுமார்பும்வாயில்களாதலோடு
மற்றதுநோக்கித்தீயோனகட்டுறைகணங்கண்முற்றும்
புற்றெழுசிதலையென்னவந்நெறிதுருவிப்போந்த. (௩௬0)

உய்குறுகணத்தின்றனையுந்தியையொருவிவாளி
செய்குறுவாயினீங்கித்தெழிப்பொடுபுறத்திற்போக
மைகிளர்புந்திவெய்யோன்மற்றதுகண்டுசீறிக்
கைகொடுநெறியைமாற்றிக்கந்தன்மேலொருதண்டுய்த்தான். (௩௬௧)

அண்டம்விண்டதுகொலென்னவணிமணித்தொகுதியார்ப்பத்
தண்டம்வந்திடுதலோடுந்தன்னிகரில்லாவண்ணல்
கண்டனனிமைப்பினான்குகணைதொடக்கதையைச்சிந்தி
யொண்டிறற்சூரன்பின்னோனெற்றிபுக்கொளித்தவன்றே. (௩௬௨)

ஒளித்திடுகின்றகாலையுருகெழுமடங்கற்பேரோன்
களித்திடலொருவிமேலைக்கடுஞ்சினக்கோட்புச்சிந்தித்
தெளித்திடுமுணர்வுமின்றிச்செய்யகோல்செலுத்துமன்ன
னளித்திடலொழிந்தகாலத்துலகம்போலழுங்கிநின்றான். (௩௬௩)

வேறு.

போர்ந்திடுமுணர்வொடும்பிரிவிறுன்பொடுஞ்
சேர்ந்திடுமரிமுகத்தீயனின்றுழி
வார்ந்திடுகுருதிதோய்வாயின்மூடுகை
சோர்ந்தனவருள்வரத்தொலைந்தமாயைபோல். (௩௬௪)

அறந்தவிர்ந்தொழுகினோனகந்தன்னிடைத்
திறந்திடுநெறிகளாற்சிறையின்வைப்பொரீஇப்
பறந்திடுபுள்ளெனப்படர்ந்துகந்தவேள்
புறந்தனில்வந்தனபூதம்யாவுமே. (௩௬௫)

அன்றரிமுகத்தவனலைத்துநுங்கின
கொன்றனவெறிந்தனகூளியாவையும்
வென்றிகொள்வேற்படைவிமலனாணையாற்
றுன்றிவந்தடைந்தனதொன்மைகூடியே. (௩௬௬)

வேறு.

அன்னதொருகாலையறுமாமுகக்கடவு
டன்னிகரிலாததனக்கிளையோர்தங்களையுந்
துன்னலுறுபூதத்தொகையோர்கள்யாவரையு
முன்னியவர்தம்பாலொருகோறொடுத்தனனே. (௩௬௭)

உந்தும்பகழியுததிபலகடந்து
முந்துங்கதிருதயமுன்னுற்றுமொய்ம்பர்தமைப்
பந்தங்கொடுசூழ்ந்தபாசவலைசிந்திடலுங்
கந்தன்றனதருளாற்கண்டுயில்வார்போலெழுந்தார். (௩௬௮)

Digitized By Roja Muthiah Research Library

பாசத்தளையிற்படுவாரதுநீங்கி
மாசற்றநல்லுணர்வுவந்தெய்தவுய்ந்தனராய்ப்
பேசற்கரியவின்பம்பெற்றோர்கடாமாகி
யீசற்கினியானிணையடிகள்வாழ்த்தெடுத்தார். (௩௬௯)

ஆங்கதுகாலத்திலறுமுகவேளுய்த்தகனை
பூங்கமலத்தோனுதவுபுட்பகத்தின்மாட்சியதாய்த்
தீங்கிலிளமைந்தர்தமைச்சேனையொடுமுகந்து
தாங்கிவிசும்பின்றலைக்கொண்டுசென்றதுவே. (௩௭0)

என்றுதிகழ்வெற்பையிகந்தேழ்கடனீங்கிச்
சென்றுகடிதுசெருநிலத்திற்சேனையொடு
நின்றகுமரனெடுந்தாண்முனமுய்த்துத்
துன்றுகணைபொதிந்ததூணியிடைப்புக்கதுவே. (௩௭௧)

அந்தவமையத்திலடல்வீரமொய்ம்பினனு
மிந்திரனும்போற்றுமிலக்கருடனெண்மர்களு
மந்தமிலாப்பூதவனிகங்களுமளியாற்
கந்தனிணையடிகள்கைதொழுதுதாழ்ந்தனரே. (௩௭௨)

நீக்கம்பெறுதுயிர்க்குணின்றனைத்தொல்வறிரு
ணுக்கம்பெற்றென்னவடிவணங்கிப்போற்றுதலும்
வீக்குங்கனைகழற்கால்வீரர்தமைநோக்கித்
தேக்குங்கருணையினுலீதொன்றுசெப்பினனுல். (௩௭௩)

தொக்கீரவுணன்றெடுமாயைச்சூழ்வலையிற்
புக்கீர்புலர்ந்தீர்புலனழிந்தீர்யாப்புறவுந்
தக்கீருதயந்தனிற்புகுந்தீரிவ்வாறு
மிக்கீருநொந்தீர்கள்போலுமிகவென்றான். (௩௭௪)

முந்தையுணர்வுமுடிந்தாலென்னுருயிர்போ
யந்நிரயத்தழுந்தியயர்ந்தாலென்
வெந்துயரமூழ்கிவினைப்பிறவிபுக்காலென்
னெந்தையருளுண்டேலெமக்கென்குறையென்றார். (௩௭௫)

ஆங்காகுமெல்லையருமறையுந்தேறரிய
வோங்காரமூலத்துணர்வாயுறைபகவ
னீங்காநெறியானிறைபேரருள்புரியப்
பாங்காகநின்றபரிசனர்கள்போற்றினரே. (௩௭௬)

வேறு.

அன்னதொரமைதியிலண்ணல்வார்சிலை, துன்னுறுநாணொலிகேட்டுச்சோர்வுறா
முன்னுறவீழ்படைமுதல்வனுடலை, யுன்னுறுசெய்கையாலெழுந்தவொல்லையில். ()

ஈங்கிவனொருமகனைமையெலாஞ்சிலை, தூங்கியநாணினூற்றலைக்குங்கொல்லெ
னுத், தாங்கியபடையுடைத்தகுவர்தானைக,டங்கனல்பரந்தெனச்சினங்கொண்டா
ர்த்தவே. (௩௭அ)

ஆழிமால்கடல்புரையவுணமாப்படை, காழுலாம்பலபடைக்கலமுஞ்சிந்தியே
யூழிநாளெல்லையினுலகெலாமடுங், கேழிலான்மதலையைக்கிளர்ந்துசூழ்ந்தவே. ()

Digitized By Roja Muthiah Research Library

சுற்றியவேலையின்முறுவலோன்றிட, நெற்றியங்கண்ணுடைநிமலன்மாமகன்
கொற்றவெஞ்சிலையினைக்குனித்துப்பூட்டியே,செற்றியகணைமழைசிதறினனரோ.

அங்கியின்வடிவினவாலம்போல்வன, கங்குலைநிகர்ப்பனகாலற்கொப்பன
பொங்கியவெஞ்சினப்புயங்கநேர்வன, செங்கதிர்மலைவனசெம்மல்வாளியே. ()

மின்னினுஞ்சுடரினவுருமின்வெய்யன, பொன்னுறழ்நிறத்தனமணியின்பொற்பின
மன்னியவானவின்மாறுகொள்வன, பன்னிறம்படைத்தனபகவன்வாளியே. ()

வேறு.

சூலம்போல்வனதோமரம்போல்வனசுடர்வா
யாலம்போல்வனநாந்தகம்போல்வனவடல்வேற்
கோலம்போல்வனகழுமுளும்போல்வனகுலிச
சாலம்போல்வனவாறுமாமுகன்விடுசரங்கள். (௩௮௩)

அறத்தைநல்கலினந்தணன்போல்வனவகிலத்
திறத்தையன்பொடுபோற்றலிற்செங்கண்மால்போல்வ
வொறுத்துமன்னுயிருண்குறுமவுணரையொருங்கே
யிறுத்தல்செய்திடுந்தன்மையாலீசனேபோல்வ. (௩௮௪)

காற்றிற்செவ்விதிற்செல்வனகறங்குவகடுங்கட்
கூற்றிற்கொப்பனமனத்தினுங்கடியனகொடுந்தீ
நூற்றுக்கோடிகளனுகினும்விசையிறுநெய்தின்
மாற்றத்தக்கனகுமரவேள்விடுத்திடும்வாளி. (௩௮௫)

ஒன்றுதொட்டிடிற்கோடியாமொல்லையிலவையுந்
துன்றுகோடிமேற்கோடியாமேலுமத்தொகையே
யன்றியாரதற்கெண்கொடுத்துரைப்பவரநந்த
மென்றுசொல்வதேமுருகவேடொடுங்கணைக்கிலக்கம். (௩௮௬)

கார்பிளந்திடுமளக்கரையுண்டிடுங்கதிரோன்
றேர்பிளந்திடும்வடவையைவிழுங்குறுந்தேவ
ரூர்பிளந்திடுமேருவைப்பிளந்திடுமுலவாப்
பார்பிளந்திடுஞானநாயகன்விடும்பகழி. (௩௮௭)

வரைகிழிப்பதும்புவியினைப்பிளப்பதும்வரம்பி
றிரைகடற்குடித்திடுவதும்பிறவுமோர்சிறப்போ
வரியவாயிரகோடியண்டங்களாமனைத்து
முருவிநிற்கிலபின்னருமோடுமென்றுரைக்கின். (௩௮௮)

தொடுநெடுங்கணையிவ்வகைசெறிதலுஞ்சூழ்வா
ரடிதுணிந்தனகைத்தலந்துணிந்தனவணிதோண்
முடிதுணிந்தனவுரந்துணிவுற்றனமுகிரேய்
கொடிதுணிந்தனவிரதமுந்துணிந்தனகுலைந்தே. (௩௮௯)

கரைகள்பட்டெனவவுணர்கள்பட்டனர்கடலி
னிரைகள்பட்டெனக்களிறுகள்பட்டனநிரந்த
திரைகள்பட்டெனப்புரவிகள்பட்டனசெறிந்த
வரைகள்பட்டெனப்பட்டனவளவைநீர்மான்றேர். (௩௯0)

Digitized By Roja Muthiah Research Library

ஒப்புக்கொண்டிடாமேலையோனென்றையொன்றுக்குந்
துப்புக்கொண்டிடுமெற்புதமுணர்ந்தவன்றன்னாள்
வைப்புக்கொண்டபாரண்டங்கண்முழுவதும்வரம்பி
லப்புக்கொண்டதோரண்டமேயாக்கியவதனால். (௱௯௧)

செப்புறத்தகும்விம்மிதமன்றிதுதேவ
ரெப்புறத்தருங்காண்கிலாரெம்பிரான்கணைக
ளொப்புறத்தருமண்டத்தின்றொகையெலாமுரீஇப்போ
யப்புறத்தினிலிடுவனவவுணர்தந்தலைகள். (௱௯௨)

மூரியண்டலர்யாக்கைகளெடுத்துடன்முடுகிப்
பாரியண்டங்களாயிரகோடியும்பகிர்ந்து
வாரியண்டங்களிடையிடைசிந்திமற்றவற்றைச்
சோரியண்டங்களாக்குவவண்ணறொல்கணைகள். (௱௯௩)

ஒண்டுளிப்படுகுருதியுமவுணர்களூரமுங்
கண்டதுண்டமுஞ்சென்னியுந்தோள்களுங்கரமு
முண்டமாங்கரிபரிகளும்விளிந்ததேர்முற்று
மண்டமெங்கணுஞ்செறிந்தனவட்டியதிறம்போல். (௱௯௪)

புள்ளுலாவுவேலறுமுகன்பகழிபோர்புரிந்த
மள்ளர்மாப்படையலைப்பதோவரிதுவல்விரைவா
லள்ளல்வாரிசூழாயிரகோடியண்டத்தி
னுள்ளதானவர்தம்மையுமுடிவுசெய்துலவும். (௱௯௫)

குமரநாயகன்றொடுசரநிரத்தலுங்குளிர்ந்த
கமலமாமலர்முகைபொருமுகத்தினர்கரத்தர்
தமரநேமிகொள்புகழ்ச்சியர்வணங்குறுதலைய
ரமரர்யாவரும்வானிடைப்பிழைத்துநின்றார்த்தார். (௱௯௬)

கங்கமுற்றனகொடிபிறவுற்றனகவந்த
சங்கமுற்றனகுணங்கருமுற்றனதகுவ
ரங்கமிற்றனகரிபரியிரதமிற்றனவாற்
சிங்கமாமுகனொருவனுநின்றனன்செருவில். (௱௯௭)

மீயுயர்ந்துசூழண்டத்தினளவெலாம்விரவ
மாயவன்மையிற்கொண்டிடுபெருந்தகைவடிவந்
தூயன்வாளிகள்பட்டுணர்வழிதலாற்றொலைந்து
சீயமாமுகன்றென்மைபோனின்றனன்றேர்மேல். (௱௯௮)

நின்றதீயவன்றுனுறுமயர்ச்சியைநீங்கிச்
சென்றதன்படையாவையுங்கண்டிலன்சிறுவன்
கொன்றுவீட்டினனென்பதுதெரிந்துளங்கொதியா
வொன்றுபோலவோராயிரஞ்சிலைகள்கொண்டுற்றான். (௱௯௯)

அலைவளைந்தபாற்கடன்மிசைப்பத்துநூறம்பொன்
மலைவளைந்தமர்தன்மைபோன்மன்னன்மாட்டன்றித்
தலைவளைந்திடாவரிமுகன்றனதுகைத்தலத்தாற்
சிலைவளைந்திடக்குனித்தனன்சுடுசரந்தெரிந்தான். (௨00)



Digitized By Roja Muthiah Research Library

வேறு.

சீயமாமுகன்செஞ்சிலைபூட்டிநா, ணாயிரப்பத்தடுசரமேவலு
நாயகன்னதுகண்டுநகைப்புறா, வோய்வில்வாளியோராயிரந்தூண்டினான். (௪௱௧)

ஆற்றன்மேதகுமாயிரம்வாளியான், மாற்றலன்கணைமாரிவிலக்கியே
சாற்றுதற்கரிதாகியதன்மையான், வீற்றுமாயிரம்வெங்கணையுந்தினான். (௪௱௨)

உந்துகோலையோராயிரம்வாளியாற், சிந்தியேதிறற்சிங்கமுகாசுர
னைந்துநூறிரண்டாயிரம்வெங்கணை, யெந்தைமேல்வரவேவினனென்பவே. (௪௱௩)

பதகன்வாளிகள்பத்திலக்கத்தையு, நுதிகொள்வெங்கணைநூறுபத்தாயிரங்
கதமெனத்தொடுத்தேமறைகாண்கிலா, வதிர்கருங்கழலண்ணலகற்றினான். (௪௱௪)

திருத்தருந்திறற்சீயமுகத்தினா, னுருத்துவாளியோராயிரந்தூண்டுறாப்
பரத்தின்மேற்படுபண்ணவன்றேர்விடு, மருத்தின்மார்புறவல்லையழுத்தினான். ௪௱௫

ஆரழற்சினத்தாளரிமாமுகன், கூருடைக்கணைநெஞ்சுகுளித்திட
மாருதப்பெயரோன்வலிசிந்திடாச், சோரிமிக்கெழத்துன்புறவெய்தினான். (௪௱௬)

பாகுபட்டபருவரனோக்கியே, வாகையண்ணல்வரிசிலைகால்வளைஇ
யேகநூறுபகழிதொட்டெண்ணலன், சேகைமாண்கொடித்தேரினைவீட்டினான். ()

தேரழிந்திடத்தீயரிற்றீயவ, னூரழிந்தவுடுபதிபோன்றுளான்
காரழிந்திடக்கல்லெனவார்ப்புறாப், பாரிழிந்தனன்பல்கணைவீசினான். (௪௱௮)

வீசுகின்றவியன்கணையாவையு, மாசில்காட்சியன்வாளியின்மாற்றிடா
வாசில்வெஞ்சரமாயிரந்தூண்டியே, நீசன்விற்களைநீணிலஞ்சேர்த்தினான். (௪௱௯)

அண்டலன்கொண்டவாயிரஞ்சாபமுந், துண்டமாகித்தொலைந்துநிலம்புக
விண்டுநான்முகத்தோனும்விண்ணோர்களுங், கண்டுநின்றுகரமெடுத்தார்த்தனர். ()

கோலுமிழ்ந்தகுனிசிலைக்கூட்டறக், காலவெவ்வழலென்னக்கனன்றுளான்
சூலமொன்றுதுளக்கினன்வீசினா, னுலகாலமளக்கருய்த்தாலென. (௪௧௧)

துன்னலன்விடுசூலத்தையேழிரு, கொன்னுனைக்கணைதூண்டிக்குறைத்திடாப்
பின்னுமாயிரம்பேரழற்புங்கவ, மின்னெனத்துரந்தானடல்வேலினான். (௪௧௨)

கொண்டவேற்கைக்குமரன்சரங்களைக், கண்டுதீயன்கனன்றுகரந்தனிற்
றண்டமொன்றிற்றரைபடச்சிந்தியே, யண்டம்விண்டிடவார்த்தனனேகினான். ()

விடுத்தவாளிபொடித்ததும்வெவ்வியோன், பிடித்ததண்டொடுபேர்வதுங்காண்குறா
வடித்தவேழ்கணைதூண்டினன்வன்கதை, யெடுத்தகையையிருநிலஞ்சேர்த்தினான்.

சேர்த்துமுன்னுறத்தீயவன்றோளினும், பேர்த்துமாங்கொர்பெருங்கைபுறப்படப்
பார்த்தலம்புகுதண்டினைப்பற்றியே, யார்த்துவீசினனாதியந்தேவன்மேல். (௪௧௫)

ஓட்டலன்றொடவுற்றதண்டத்தின்மே, னெட்டழற்குநிகர்கணையாயிரம்
விட்டறுத்தனன்மேல்வருபாந்தளை, யட்டிடுங்கதிராதவனென்னவே. (௪௧௬)

அண்டர்நாயகனாயிரம்வாளியாற், றண்டம்வீழத்தடிதலுமாற்றலன்
கண்டுசீறிக்கடுந்திறற்கூற்றிடைப், பண்டைநாட்கொண்டபாசத்தைவீசினான். ()

சுற்றுபாசத்தொடர்ச்சியைநோக்கிவேள், செற்றொராயிரந்தீக்கணைதூண்டலும்
வற்றன்மாண்கொடிவன்னியின்றீச்சுட, ருற்றதாமெனவொண்பொடியாயதே. ()

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

நாணற்றதுகண்டனனானூறுவர், னேனூற்றிடுசேனையிராயிரமாம்
பாணித்தொகையைக்கொடுபற்றிடுவான், பேணிச்சினமோடுபெயர்ந்தனனே. ()

சிங்கத்திறலோன்வருசெய்கைதனை, யெங்கட்கிறைநோக்கியிராயிரமாம்
வெங்கட்கணையாயினவிட்டவுண, னங்கைத்தொகையாவுமறுத்தனனே. (௪௨0)

கொற்றங்கெழுவுற்றகுகன்கணையாற், செற்றந்திகழாளரிசெய்யகர
மற்றம்புவிவீழுமுனங்கைநிரை, முற்றும்புதிதாகமுளைத்தனவே. (௪௨௧)

அற்றுப்புவிவீழ்தருமங்கைகளை, மற்றத்துணைவந்தெழுமாண்கைகளாற்
பற்றிச்செலவன்னதுபார்த்தனனா, னெற்றிக்கணளித்திடுநீள்சுடரோன். (௪௨௨)

ஓராயிரம்வாளிகளுய்த்தவுண, னோராயிரநீண்முடியொல்லையறு
வீராயிரம்வெஞ்சரமேவியவ, னீராயிரமொய்ம்புமிறுத்தனனால். (௪௨௩)

அன்பற்றவன்மொய்ம்புகளற்றனகண், டின்புற்றனர்வானவரீண்டியவை
முன்புற்றதுபோலமுளைத்தெழலுந், துன்புற்றனர்யாக்கைதுளங்குறுவார். (௪௨௪)

கண்டானிதுவிண்ணவர்காண்பரியோன், பண்டாலவனத்திடைபாணிசிரந்
தண்டாதழல்கொய்திடுதன்மையினா, லுண்டாகியவாறெனவுன்னினனே. (௪௨௫)

உன்னும்பொழுதத்தினிலும்பரெலா, மென்னிங்கிவன்மாய்வதெனத்தளர
முன்னம்பெயர்சிங்கமுகன்முனியாச், செந்நின்றிஃதோர்மொழிசெப்பினனால். ()

உளைக்குங்கணைதள்ளியுகம்பலநீ, கிளைக்குந்தலைமொய்ம்புகெடுத்திடினு
முளைக்கின்றதலான்முடிவுற்றிடுமோ, விளைக்கின்றனைநீகொலெனைப்பொருவாய். ()

மொய்யுந்துதவத்தியன்முன்னலைநின், னையன்றருமாற்றலறிந்திலைபோர்
செய்யும்படிவந்தனைசேயொருநீ, யுய்யும்படியன்றுனதூக்கமுமே. (௪௨௮)

மாண்டேவர்தமைப்புரிவன்சிறைபோ, யாண்டேவருகின்றதுமாற்றலுளே
னீண்டேயழிகின்றதுமில்லையிவண், மீண்டேகுதிநின்னுயிர்விட்டனனால். (௪௨௯)

வேறு.

என்னலுமதனையோராவெம்பிரான்குமரன்சொல்வா
னுன்னுயிரிழைத்தவெல்லையொழிந்ததுகூற்றும்வந்து
பின்னுறநின்றனென்னீபிதற்றுதியுணர்விலாதாய்
முன்னொருகணத்தினின்னைமுடிக்குவன்காண்டியென்றான். (௪௩0)

படைப்பவன்குரவனீதுபகர்தலுமவுணர்கோமா
னிடிப்பெனவார்த்துக்குன்றமிராயிரம்பறித்துவீச
நொடிப்பினிலவற்றைவாளிநூற்றினுண்டுகளதாக்கித்
தடப்பெருமருமமூழ்கச்சரங்களாயிரத்தையுய்த்தான். (௪௩௧)

மாயிருநெடுங்கண்வாளிமார்பத்தையகழ்ந்துதன்னைக்
காயெரிகலுழுங்கண்ணான்கைகளாலளவைதீர்ந்த
பாயிருங்குன்றநாடிப்பறித்தலுங்கண்டுசெவ்வே
ளாயிரங்கணைதொட்டன்னானணிமுடித்தொகையைவீழ்த்தான். (௪௩௨)

Digitized By Roja Muthiah Research Library

அறுத்திடுதலைகள்வீழவாயிரஞ்சென்னிவல்லே
மறித்தும்வந்தெழுதலோடுமடங்கன்மாமுகத்தன்முன்னம்
பறித்திடுகுன்றம்வீசிப்பருவலித்தடந்தோள்கொட்டி
யெறித்தருகதிரும்விண்ணோர்யாவருமுட்கவார்த்தான். (௪௩௩)

ஆர்த்திடுகாலைச்செவ்வேளாயிரத்திரட்டிகொண்ட
கூர்த்திடுபகழிதூண்டிக்குன்றங்கள்செற்றுவெய்யோன்
றூர்த்தடமொய்ம்புமுற்றுந்தள்ளினன்றள்ளுமுன்னர்ப்
பேர்த்தும்வந்தெழுந்தவம்மாதவத்தினும்பெரிதொன்றுண்டோ. (௪௩௪)

அத்திறங்காணுவீதோராடலாவுன்னிநூற்றுப்
பத்துடனெட்டின்காறும்பரஞ்சுடருருவாய்நின்றான்
மொய்த்திடுபகழிமாரிமுறைமுறைதுரந்துமொய்ம்பன்
கைத்தலஞ்சென்னிமுற்றுங்கண்டதுண்டங்கள்செய்தான். (௪௩௫)

திசைகளிற்போகுநேமித்திறங்களிற்போகும்வெற்பின்
மிசைகளிற்போகும்பாரின்மீதினிற்போகுமாந்தர்
நசைகளிற்போகும்விண்ணோர்நாட்டிடைப்போகுஞ்சிங்க
னிசைகளிற்போகுமெங்குமிற்றிடுசிரமுங்கையும். (௪௩௬)

அகரமதாதியானவெழுத்தெலாமாகிப்பின்னர்
மகரமுமானமேலோன் * வடிக்கணைதுணித்துவீசுஞ்
சிகரமுந்துகரமுற்றுஞ்சேணிடைச்சென்றுமாயோ
னகரமுந்தாவியண்டகோளகைநண்ணுகின்ற. (௪௩௭)

தூவுடைநெடுவேலண்ணல்சுடர்க்கணைதுணித்துவீச
மேவலன்றனதுசென்னிமெல்லிதழதுக்கிவிண்மே
லாவலங்கொட்டிச்செல்லவச்சமுற்றங்கணின்ற
தேவர்கண்மயக்கமெய்தித்திருநிலவரைப்பின்வீழ்ந்தார். (௪௩௮)

வஞ்சரைவஞ்சஞ்செய்யும்வள்ளலார்குமரன்றூட்ட
செஞ்சரமநந்தகோடிசென்றுசென்றறுத்துவீட்ட
வெஞ்சலிலவுணன்மொய்ம்புந்தலைகளும்யாண்டுஞ்சிந்தி
விஞ்சையரமர்தற்கொத்தவரைகளின்மேவலுற்ற. (௪௩௯)

தூயவன்விடுத்தவாளிதுணித்திடுமொவ்வோர்சென்னி
வாயினையடுபோர்தன்னில்வந்தசில்கணங்கணோக்கி
யாயிரகோடிகொண்டகளேவரமதற்குளிட்டு
மாயிருஞ்சிகரமாடமற்றிதென்றுற்றவன்றே. (௪௪௦)

பாடுறுசிரத்திலொன்றுபதைத்துவாய்பகிரவங்க
ணூடுறுமலகைகோடியகன்பிணக்குவைகளுய்த்து
மாடமீதென்றுபுக்குமற்றதுகடிதின்மூட
வோடியுள்ளலைந்ததக்கன்வேள்வியிலுற்றுளார்போல். (௪௪௧)

---

* திருவுத்தரகோசமங்கையிலே சிவபெருமான் தாம் உமாதேவியாருக்கு உபதேசஞ்செய்தருளியபொழுது அவரளகத்தில் வண்டுருக்கொண்டொளித்திருந்து கேட்ட முருகக்கடவுளை மகரமீனாகும்வண்ணஞ் சபித்தருளினார். இச்சரித்திரத்தைத் திருவுத்தரகோசமங்கைப்புராணத்துப் பதினோராவது வலைவீசியவத்தியாயத்திற்காண்க. இது நூற்பொருளை நேரே ஆசாரியரை வழிபட்டுக் கேளாது ஒளித்துக்கேட்போர் தண்டிக்கப்படுவரென எம்போலிகள் அறிந்து உய்யும்பொருட்டு நடித்துக் காட்டியதொருநாடகமாமெனத் தெளிக.

Digitized By Roja Muthiah Research Library

மன்புரியவுணர்தோன்றல்வாய்பொதிசென்னிபுக்குத்
துன்புறுமலகைதண்டஞ்செவிநெறிதுருவிப்போன
முன்பொருமுனிவனில்லைமுயங்குவானுறையுள்புக்கோ *
னின்பொடுவன்மைசிந்திநூழையாலிரிந்தவாபோல். (௪௪௨)

ஒன்னலன்றனதுமொய்ம்புமுருகெழுசிரமும்வீழ்ந்து
பன்னெடுங்கிரிகளாகவவற்றிடைப்பலசூர்ப்பேயுந்
துன்னுறுகொடியுஞ்சூழ்வதொல்லையிற்பொறிகணீங்க
முன்னவள்பதாகையோடுமுறையில்வந்துற்றவாபோல். (௪௪௩)

அரண்டருங்கழலானிவ்வாறறுத்தலுமவுணர்கோமான்
முரண்டருசிரமுந்தோளும்பின்னருமுளைப்பநோக்கித்
திரண்டபல்கணைகளோச்சிச்சென்னியிலொன்றுங்கையி
லிரண்டுமேசிறுவிப்பின்னர்யாவையுந்தடிந்தானன்றே. (௪௪௪)

நீளுறுபதலைசிந்திநின்றமரியற்றுகின்ற
கோளரிமுகத்துவீரன்குறைந்திடுமுடியுமிற்ற
தோள்களுமுன்னரேபோற்றோன்றிடப்புகுதுமெல்லை
யாளுடைமுதல்வனுகுமறுமுகனதனைக்கண்டான். (௪௪௫)

நாற்றிசைமுகத்தினுனுநாகரும்பிறருமுட்கச்
சீற்றமதுளன்போலையன்சிறிதவனுரப்பலோடு
மாற்றலனுகின்றமடங்கன்மாமுகத்தன்றன்பாற்
றோற்றிடுசிரமுந்தோளுந்துளங்கிமீண்டொளித்தவன்றே. (௪௪௬)

ஐயனதுங்காரத்தாலரிமுகன்சிரமுமொய்ம்பு
மெய்யிடையொடுங்கிற்றம்மாமேவினர்தம்மைநோக்கி
மையுறுகருந்தாதன்னவன்புறக்கமடஞ்சென்னி
யொய்யெனயாக்கைதன்னிஞெளித்திடுந்தன்மையேபோல். (௪௪௭)

குன்றினையெறிந்தவைவேற்குமரவேள்கணையாலிற்ற
தன்றலைபாணிதோன்றுத்தன்மையையவுணன்பாரா
வொன்றறமுந்துபன்னுளுணர்ந்திடுவிஞ்சைமுற்று
மன்றிடையயர்த்தோனென்னமானமுற்றழுங்கிநின்றான். (௪௪௮)

அங்கதுகண்டுசெவ்வேளருள்புரிகின்றுனந்தம்
வெங்கணைபலவுஞ்சென்றுவீட்டியதலையுமுன்றன்
செங்கையுந்தோன்றிற்றில்லையெழுகெனச்செப்புகைய
விங்குநீபட்டபின்கொன்முளைத்திடவிருந்ததென்றான். (௪௪௯)

இருதலையயில்வேலண்ணலிற்றனசிரந்தோளென்றே
கருதலையென்பேராற்றல்கடவுளர்யாருந்தேர்வ
ரொருதலையிருகைகொண்டேயுலகெலாந்தொலைப்பனென்னுப்
பொருதலையுன்னியாங்கோர்பொருப்பினைப்பறித்துவிட்டான். (௪௫0)

விட்டிடுபிறங்கறன்னைவிரிஞ்சனுக்காசான்காணூஉ
வெட்டிலைவாளியொன்றுனீறுசெய்திடுதலோடும்
பட்டதுதெரிந்துமாய்வோனமரிடைப்பாணியோடு
மிட்டிடுதண்டமொன்றையெடுத்துநின்றிதனைச்சொற்றான். (௪௫௧)

* இந்திரன்.

Digitized By Roja Muthiah Research Library

வேலினாலெறியுமாறும்வெஞ்சிலைவளையவாங்கிக்
கோலினால்விடுத்ததொன்றைக்குறைத்திடுமாறுமல்லாற்
பாலனீபடைகள்வேறுபயின்றதொன்றிலைகொலென்னா
மூலகாரணமாய்நின்றமுதல்வன்மேற்கதையைத்தொட்டான். (௪௫௨)

வெஞ்சினவவுணன்சொற்றதன்மையும்விடுத்ததண்டுஞ்
செஞ்சுடர்மேனிவள்ளல்சிந்தையின்மதித்துநோக்கிக்
கஞ்சமதனையவோர்கைக்காமருகுலிசந்தன்னை
வஞ்சகனுயிருண்டொல்லைவருகெனவிடுத்தான்மன்னோ. (௪௫௩)

விடுத்திடுகுலிசமேகிவிரைந்தெதிர்தண்டந்தன்னைப்
பொடித்ததுபோலுமென்னப்பூழிசெய்தடுக்கல்செல்லு
மிடித்தொகையென்னமார்பத்தெய்தியேயவுணனாவி
குடித்ததுபுறத்துச்செந்நீர்கொப்பளித்தேகிற்றன்றே. (௪௫௪)

வேறு.

தூண்டாவிடுகுலிசந்துண்ணென்றகன்மார்பங்
கீண்டாவிகொண்டுகிழித்துவெரிந்சென்றிடலும்
வீண்டான்பதைபதைத்தான்வீழ்குருதிநீரலைப்ப
மாண்டான்கிடந்தான்மடங்கன்முகவெய்யோனே. (௪௫௫)

அங்கப்பொழுதிலடற்குலிசம்வான்போகிக்
கங்கைப்புனலாழ்ந்துகாமருபூந்தாதாடிச்
சங்கத்தவர்க்குட்டலையாந்தமிழ்ப்புலவன்
செங்கைக்குள்வந்துசிறப்புற்றிருந்துளதால். (௪௫௬)

பார்த்தாரிந்நீர்மைதனைப்பங்கயத்தனாதிவிண்ணோ
ரார்த்தார்முறுவலித்தாராடினார்பாடிமலர்
தூர்த்தார்மகிழ்ந்தார்தொழுதாரெங்கோன்புடையிற்
போர்த்தார்வணக்கம்புரிந்தார்புகழ்ந்திட்டார். (௪௫௭)

என்னாயகனவ்விமையோர்களெல்லோர்க்குந்
தன்னாரருள்செய்துசாரதவெள்ளத்தினொடு
மின்னார்புகரயில்வேல்வீரரொடுமீண்டனனாற்
பொன்னாடெனவேபுனைந்தபொலன்பாசறையில். (௪௫௮)

பாசறையின்கண்ணேகிப்பாரிடத்தோர்சூழ்போத
வாசவனுநான்முகனுமற்றோரும்பாங்காகக்
கேசரிகடாங்குங்கிளர்செம்பொற்பீடிகைமே
லீசனெனவேயினிதருள்செய்துற்றனனே. (௪௫௯)

வெற்றிநெடுவேலோன்வியன்பாசறையிருப்ப
மற்றவனொடாடிமடங்கன்முகத்தவுணன்
செற்றுகொடியுண்ணச்செருநிலத்தின்மாய்ந்ததனை
யொற்றர்தெரிகுற்றேமகேந்திரத்திலோடினரால். (௪௬௦)

ஆடலிளையோனவண்வீழ்ந்ததுநோக்கி
வீடினனோமான்றனனோவென்றையமேல்கொண்டு
நீடுசிகரியிடைநின்றோன்பதங்கண்முடி
சூடியவலித்துத்தொழுதிதனைச்சொல்லினரால். (௪௬௧)

Digitized By Roja Muthiah Research Library

குன்றம்பிளந்தகுமரேசன்வச்சிரத்தா
லொன்றம்பியாவியொழிந்தானவன்மிசையப்
பொன்றுங்கணத்தோர்பொருப்புற்றரெல்லோருஞ்
சென்றுய்ந்தனரீதுதிண்ணமெனச்செப்பினரே. (௪௬௨)

வேயுற்றவர்சொல்லினவியுரோமங்களெலாந்
தீயப்பொறிதூரப்பச்செங்கட்புனல்பெருக
வாயிற்புகைசெல்லவாடிப்பதைபதைத்து
நோயுற்றுவெங்கனலைநுங்கினர்போல்வீழ்ந்தனனே. (௪௬௩)

வண்ணச்சிகரம்வழுவுற்றுக்கீழ்த்தலத்திற்
கண்ணிற்பொழிந்தகடலினிடைவீழ்ந்தனனு
லொண்ணுற்றகாஞ்சியுமையவள்கோட்டத்தினின்றுந்
தண்ணுற்றநேமித்தடத்திடையேவீழ்பவர்போல். (௪௬௪)

மங்குலெனவீழ்ந்துமறிந்துநிலமிசையே
யங்கைபுடைத்திட்டலமந்துதொல்வலியுந்
துங்கவிறலுநலனுந்தொலைவெய்தப்
பொங்குதுயர்க்கடலின்மூழ்கிப்புலம்புறுவான். (௪௬௫)

என்னையோவென்றனிளவலோதாரகற்கு
முன்னையோசிங்கமுகத்தவோதானவர்க
ளன்னையோவென்னவருள்புரியுமாண்டகையோ
வுன்னையோதூதர்விளிந்தனையென்றோதியதே. (௪௬௬)

அன்றுமகவான்முதலாமமரர்தமை
வென்றுதமியேற்குவிசயந்தனையளித்தா
யின்றுசமரிலிளம்பாலகனொருவன்
கொன்றனனேவுன்னுயிரைக்கூற்றுவனுங்கொண்டானே. (௪௬௭)

உண்டுபோரென்னினுளங்களிக்குமுன்னுயிரைக்
கொண்டுபோனனின்றுகூற்றனெனவேகேட்கிற்
றண்டுழாய்மாலுஞ்சதுர்முகனுமிந்திரனும்
பண்டுபோற்றத்தம்பதியாளப்போகாரோ. (௪௬௮)

பொன்னைநிலந்தன்னைப்புதல்வர்களைமங்கையரைப்
பின்னையுளபொருளையெல்லாம்பெறலாகு
மென்னையுடையவிளையோனேயிப்பிறப்பி
னுன்னையினிப்பெறுவதுண்டோவுரையாயே. (௪௬௯)

அண்டார்தமக்கோரரியேயரிமுகனே
விண்டானடைந்தாயெனவேவிளம்புகின்றூர்
தண்டாரகலத்துத்தாரகனைமக்களுடன்
கண்டாயோயானிங்குறுதுயரங்காணுதாய். (௪௭0)

உண்டிக்கடனுமொருவயிற்றோர்செய்கடனு
மெண்டிக்கும்போற்றியிடவின்றுகழித்தேகினைநீ
யண்டத்தவரையலைத்துவருமுன்றிறலைக்
கண்டுற்றிடவேகடனற்றேன்றீயேனே. (௪௭௧)

Digitized By Roja Muthiah Research Library

உற்றதுணைநீயென்னுயிர்நீயுணர்ச்சியுநீ
சுற்றமுநீதாதையுநீயென்னிளையதோன்றலுநீ
நற்றவமுநீயென்றுநானினைந்தேனீயதனைச்
சற்றுநினையாமறற்றனித்திருக்கக்கற்றாயோ. (௪௭௨)

பொற்றைக்கயவிருந்தபூட்கைமுகன்றுஞ்சியபின்
ஞெற்றைப்புயம்போயுளந்தளர்ந்துவைகினன்யா
னிற்றைப்பகனீயிறந்தாயரிமுகனே
மற்றைப்புயமுமிழந்தேன்வறியேனே. (௪௭௩)

என்னத்தனதண்டமெங்குஞ்செவிடுபடத்
தன்னத்தனி;யோனரற்றுமொலிதாங்கேளா
நன்னத்தவனுநளினத்தினிலுதித்த
வன்னத்தவனுமகத்தவனுமார்த்தனரே. (௪௭௪)

இத்தன்மைமன்னனிரங்கித்தெளிந்தெழுந்தே
யுத்துங்கமிக்கவொருதன்றவிசேறி
நித்தன்குமரனுடனேர்போய்ச்சமரியற்றச்
சித்தந்தனிலேநினைந்துசினஞ்செய்தனனே. (௪௭௫)

சிங்கமுகாசுரன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௨,௩௬௮.

---

# சூரபன்மன்வதைப்படலம்.

கொற்றவேற்படைபரித்திடுமாயிரகோடி
யொற்றர்தங்களைநோக்கியேசூரனுமுரவோன்
மற்றெனுட்சியாமண்டங்களெங்கணும்வைகிச்
சுற்றுதானையைத்தம்மினேகடிதெனச்சொன்னான். (௧)

சொன்னகாலையினன்றெனவணங்கியேதூதர்
பன்னருங்கதிகொண்டனர்விண்டனர்படர்ந்து
பொன்னின்மேதகுமண்டங்களிடைதொறும்புகுந்து
மன்னர்மன்னவன்றன்பணிமுறையினைவகுத்தார். (௨)

வகுத்தகாலையிலாண்டுறையவுணமன்னவர்க
டொகுத்தநாற்பெருந்தானையங்கடலொடுந்துவன்றி
மிகுத்தவண்டத்தின்புடைதொறும்புடைதொறுமேனுட்
பகுத்துவைத்திடும்வாயிலினெறிகளாற்படர்ந்தார். (௩)

முந்தையண்டத்தினெறிதனின்முழங்கிருஞ்சேனை
வந்துவந்திவட்செறிவனவிதியொடுமாறாய்ச்
சுந்தரங்கெழுமாயனிவ்வுலகுயிர்துய்ப்ப
வுந்தியின்வழியங்கவைதோன்றுமாறொப்ப. (௪)

பூதம்யாவையுமுயிர்களும்புவனமுள்ளனவும்
பேதநீங்கியசுருதியாகமங்களும்பிறவு
மாதிகாலத்தினாதியாமெம்பிரானளப்பில்
பாதபங்கயத்துதிப்பவும்போன்றனபகரின். (௫)

Digitized By Roja Muthiah Research Library

இலையதன்மையாலண்டத்தினெறிதனிலேகும்
வலைகருங்கழலவுணர்தம்படையிவண்வரலுங்
கனலிதன்சுடர்மறைந்தனநடுங்கினன்கனலு
மனிலன்றானுமெய்வியர்த்தனனெருக்கமுற்றயர்வான். (௬)

ஆர்த்தவோசையாலகிலமுந்துளங்கியவவுணர்
கார்த்தமெய்யொளிகதுவலாலிருண்டனககனந்
தூர்த்தபூழியாலாழிகள்வறந்தனதுணைத்தாள்
பேர்த்துவைத்திடுதன்மையாலண்டமும்பிளந்த. (௭)

கூடுமிப்பெருந்தானையைநோக்கியெய்குலைவுற்
றோடுதேற்கிடமின்றினின்றிரங்கினரும்பர்
வீடினானெனவாசவன்மருண்டனன்விதியு
நீடுமாயனுமுடிவதென்னோவெனநினைந்தார். (௮)

பூதலந்தனிலம்பரநெறிதனிற்புடைசூழ்
மாதிரங்களிலளக்கரில்வரைகளின்வழியிற்
பாதலங்களிற்பிறவினில்வுணர்தம்படைக
ளேதும்வெள்ளிடையின்றியேசென்றனவீண்டி. (௯)

மலரயன்பதமால்பதமுனிவர்கள்வைகு
முலகம்வாசவன்றென்னகரேனையோருறையு
ளலரியாதியர்செல்கதிபிலங்களிலனிகம்
பலவுநின்றனசெல்லிடம்பெறாதபான்மையினால். (௧௦)

மாறிலாதனதொல்லையண்டங்களின்வந்த
வீறிலாததோர்தூசிகள்படர்ந்திடுமெல்லை
நூறுகோடியோசனைகளென்றறிஞர்களுவன்றூர்
வேறுபின்வருந்தானையின்பெருமையார்விதிப்பார். (௧௧)

குறுமையாமுயிர்வாழ்க்கையர்கொண்டதொல்வளம்போற்
சிறுமையோவிதுவிரித்திடவவுணர்கோன்சேனை
யறிஞர்கூறியபெருந்தொகைதன்னினுமடங்கா
பிறிதுமற்றிதற்குவமையுமொன்றிலைபேசின். (௧௨)

அஞ்சுபட்டிடுபூதங்கள்பல்லுருவமைந்து
நெஞ்சுபட்டிடுமுயிர்கொடுநேருமேனிகரு
மஞ்சுபட்டிடுபொருப்பெலாஞ்சூறைமுன்மயங்கும்
பஞ்சுபட்டிடநடந்திடுதூசிமுற்படையே. (௧௩)

அந்தமின்றியேயகன்புவிகொண்டவண்டத்தில்
வந்திடுந்திறற்படைகளின்பெருமையார்வகுப்பார்
முந்துதூசிகண்மகேந்திரப்பெருநகர்மூடி
யிந்தவண்டத்தினிடமெலாநிறைந்தனவிமைப்பில். (௧௪)

ஆனகாலையிலொற்றர்போய்ச்சூரனையடைந்து
பானன்மெல்லடிகைதொழுதையநீபடைத்த
சேனைவந்தயனின்றனதூசிமுற்சென்று
வானுலாவுபேரண்டத்தைநெருக்கினமன்னோ. (௧௫)

என்னுமெல்லையினன்றெனவவுணர்கோனெழுந்து
தன்னதாகியவுறையுள்போய்த்தடம்புனலாடித்
துன்னுமைவகையுணவு * டனறுசுவைதொடர்ந்த
வன்னமுண்டனனஞ்சுகொன்மருந்துகொலதுவே. (௧௬)

நீறணிந்தனனெற்றிமெய்ந்நிறைவிரைகளபச்
சேறணிந்தனன் பூந்தொடைபங்கியிற்செறித்தான்
மாறில்பொற்சுடர்க்கலையுடனணிகலன்மாற்றி
வேறுவேறுநன்கினியனபுனைந்தனன்விரைவில். (௧௭)

ஈசன்மாப்படையேனையோர்பெரும்படையாவு
மாசிலாயிரகோடிதேர்செலுத்தியேயவையுங்
கேசரித்திறல்யானமுங்கேடில்பொற்றேரும்
பாசனத்திறலவுணர்கொண்டேகுவான்பணித்தான். (௧௮)

ஆங்கவெல்லையிற்சூரபன்மாவெனுமவுணன்
பாங்கர்வந்திடுவலவர்தந்தொகையினைப்பாரா
வோங்குமோர்தடந்தேரினைக்கொணர்திரென்றுரைப்பப்
பூங்கழற்றுணைவணங்கியேநன்றெனப்போனார். (௧௯)

வாட்டுகேசரியெழுபதினாயிரம்வயமாக்
கூட்டமங்கணேரெழுபதினாயிரங்கூளி
யீட்டமாகியதெழுபதினாயிரமீர்ப்பப்
பூட்டிநன்குறப்பண்ணினாராங்கொருபொலன்றேர். (௨0)

மண்டலத்தினுமான்றபேரிடத்ததுமருங்கிற்
றெண்டிரைக்கடலாமெனவார்ப்பதுசெறிந்த
வண்டமாயிரகோடியுந்தன்னிடத்தாற்றிக்
கொண்டுநின்றிடும்வலியதுமடங்கலங்கொடித்தேர். (௨௧)

முடியுமெல்லையிலெழுதருமருத்தினுமுந்திக்
கடிதுசெல்வதுசென்றிடுவிசையினாற்கருபத்
தடநெடுங்கிரியலமரத்தபனருங்குளிர
வடவையங்கிகள்விளிந்திடப்புரிவதம்மான்றேர். (௨௨)

ஏழுநேமியுமிடைப்படுதீபமும்யாவுஞ்
சூழுகின்றபேரடுக்கலுமொன்றியதொடர்பிற்
கேழில்பன்மணியோவியப்பத்திகள்கெழுவு
மாழிதாங்கியவண்டமொத்திலங்கியதகன்றேர். (௨௩)

தொழுதகுந்திறலவுணர்கோன்வேள்வியிற்றுஞ்சி
யெழுவதாகியவெல்லையிற்றோன்றியதெதிர்ந்தார்
குழுவிரிந்திடத்துரப்பதுநான்முகக்குரிசி
லழியுநாளினுமழிந்திடாதிருப்பதவ்வகன்றேர். (௨௪)

கண்ணகன்படையளப்பிலபரித்ததுகாமர்
விண்ணவர்க்குளவலியெலாங்கொண்டதுமேனா
ளண்ணனல்கியவிந்திரஞாலமுமனைய
தெண்ணின்மேற்படுமியாணர்பெற்றுடையதவ்விரதம். (௨௫)

* ஐவகை உணவாவன - உண்ணப்படுவது, தின்னப்படுவது, நக்கப்படுவது, பருகப்படுவது, சுவைக்கப்படுவது என்பனவாம்.

அனையதாகியதேரினைவலவர்கொண்டணைந்து
தினகரன்றனைவெகுண்டவன்ருதைமுன்செலுத்தத்
துனையமற்றதிலிவர்ந்தனனிவர்தலுந்தொழுது
புனைதிவாகையென்றவுணர்கள்பூமழைபொழிந்தார். (௨௬)

பொழிந்தகாலையில்வலவர்களங்கதிற்புக்குக்
கழிந்தசீர்த்தியானுனையாற்றேரினைக்கடவத்
தழிந்தழீமெனப்பல்லியமியம்பினசகங்க
ளழிந்தநாளெழுகடலெனவவுணர்களார்த்தார். (௨௭)

அங்கியன்னபொற்படியகங்கோடிகமடைப்பை
திங்கள்வெண்குடைகவரிகொண்டெழுகினர்சிலதர்
துங்கமிக்கவன்சீர்த்தியுமானையுந்தொடர்ந்து
மங்கலந்திகழுருக்கொடுசூழ்ந்திடும்வகைபோல். (௨௮)

அண்ணன்மேவருகோநகரெல்லையுளடைந்த
வெண்ணின்மாப்பெருஞ்சிகரியின்வாயில்களிகந்தே
கண்ணகன்றௌள்ளலாயிரகோடியுங்கடந்து
வண்ணமாமணிக்கோபுரமுதற்கடைவந்தான். (௨௯)

வேறு.

தானவர்கோமகன்றடம்பொற்றேரொடு, மாநகர்முதற்கடைவாயில்போதலு
மானதுநோக்கியேயங்கட்சூழ்தரு, சேனைகளார்த்தனவுடுக்கள்சிந்தவே. (௩0)

ஞெலித் * திடுபரவையினீலவெவ்விட,மொலித்தெழுந்தாலெனவுலப்பிருனைகள்
கலித்தனபடர்ந்தனகண்ணகன்புவி,சலித்ததுகொடியரைத்தரிக்கொணுமையால்.

நேரியம்பரியதோர்நிசாளஞ்சலிகை, பேரியம்பணைவயிர்பிறங்குதண்ணுமை
தூரியங்காகளந்துடிமுதற்படு, சீரியம்பலவுடனியம்பிச்சென்றவே. (௩௨)

சேயினகுஞ்சிகள்செறிந்ததானவர், பாயினதானையிற்படர்ந்தபூழிகள்
வாயினபரவைமேல்வடவைத்தீவிராய்ப்,போயினநாளெழுபுகையைப்போன்றவே

வானினுமண்ணினுமாதிரத்தினுந், தானிறைகடலினுந்தணப்பின்ருகியே [வே.
மேனிறைபூழிகண்மிடையவெங்கணுஞ், சோனைகொள்பின்பனித்தூவல்போன்ற

சூரனிகத்தெழுதூளியந்நக, ராரகிலாவியும்யாருமாடிய [ல்.
பூரிகொள்சுண்ணமும்பொருந்திப்போவது, காரினமின்னெடுகடலுண்டேகல்போ

திண்டிறற்கரிகளிற்றேரில்வெண்கொடி, மண்டுறுபூழிதோய்வானிற்செல்வன,
கொண்டலினிருது ٥ விற்கொக்கின்மாலைக, டண்டுளியுறைப்புழிப்படருந்தன்மை
போல். (௩௬)

படைவகைதிசையெலாம்படரப்பாயிரு, ளடைவதுசூரறிந்தண்டம்யாவினு
மிடைதருகதிர்களைவிளிக்கவந்தெனக், குடைநிரையெங்கணுங்குழுமுகின்றவே. ()

வெம்பரிகரியுமிழ்விலாழிமாமத, மிம்பரினகரெலாம்யாற்றினேகலா
லும்பர்மற்றல்லதையொருவன்ருனைக, ளம்புவிசென்றிடற்கரியதானதே. (௩௮)

இவ்வகைதானைகளீண்டிச்சென்றிடத்,தெவ்வலியவுணர்கோன்செம்பொற்றேரின்மேன், மைவரைமேருவின்வருவதாமெனக்,கவ்வையினமர்புரிகளரியேகினன்.

---

* ஞெலித்தல் - கடைதல்.

٥ கொண்டலினிருது - கார்ப்பருவம்.

Digitized By Roja Muthiah Research Library

பூசலினெல்லையிற்புரவலன்செலத், தூசியதாகியேதொடர்ந்ததானைக
ளீசனதருண்மகனினிதுவைகிய, பாசறைசூழ்ந்தனபடியும்வானுமாய். (சு0)

உரற்றியகணமழையும்பர்சூழ்ந்தென, விரற்ெறுடுசூழ்படையீட்டநோக்கியே
மரற்றுறுப்லங் * களில்வாரிகண்வர, வரற்றினர்வெருவினரமரர்யாவரும். (சுக)

அழுங்கினன்புரந்தரனகிலம்யாவையும், விழுங்குறுமிருவரும்விம்மினுருளம், பு
ழுங்கினர்வீரர்கள்பூதரேங்கினுர், கொழுங்கனலிடைப்படுவிலங்கின்கொள்கை
போல். (சு௨)

ஆவதோர்காலையிலரியுநான்முகத், தேவனுமேனையதிசையினோர்களு
மூவிருமுகமுடைமுதல்வன்றன்னிரு, பூவடிபணிந்திவைபுகறன்மேயினுர். (சுங)

வேறு.

அந்தமிலாதவண்டமாயிரத்தெட்டுத்தன்னில்
வந்திடுதானையோடுமாபெருஞ்சூரபன்ம
னூர்தியதேரின்மேலானுறுசமர்புரிவான்போந்தான்
முந்தியதூசிநந்தம்பாசறைமொய்த்ததென்றூர். (சுச)

என்னலுமுறுவல்செய்தாங்கிலங்கெழிற்றவிசின்வைகும்
பன்னிருகரத்துவள்ளல்பவனனைக்குறிப்பினோக்க
முன்னமதுணர்ந்து o வல்லேமுளவுகோல்கயிறுபற்றிப்
பொன்னவிர்மனவேகப்பேர்ப்புரவிமான்றேர்முனுய்த்தான். (சுரு)

உய்த்திடுகின்றகாலத்தொய்யெனவெழுந்துகாமர்
புத்தலர்நீபத்தாரான்புகர்மழுக்குலிசஞ்சூலஞ்
சத்திவாள்பலகைநேமிதண்டெழுச்சிலைகோல்கைவேல்
கைத்தலங்கொண்டானென்னினவன்றவங்கணிக்கற்பாற்றே. (சுசு)

மாறிலாவருக்கனுப்பண்வைகியபரமனேபோ
லாறுமாமுகத்துவள்ளலலங்குளைப்புரவிமான்றே
ரேறினுன்வீரவாகுவிலக்கரோடெண்மராகும்
பாறுலாங்குருதிவேலார்பாங்கராய்ப்பரசிவந்தார். (சுஎ)

இராயிரவெள்ளமாகுமெண்டொகைப்பூதர்யாரு
மராமரம்பிறங்கலீட்டம்வரம்பறுபடைகள்பற்றி
விராவினர்சூழ்ந்துசென்றூர்விரிஞ்சனேமுதலோர்யாரும்
பராவொடுபுடையினின்றுபனிமலர்மாரிதூர்த்தார். (சுஅ)

தூர்த்திடுகின்றகாலைச்சுருதியின்றுகைக்குமெட்டாத்
தீர்த்தன்மான்றேர்மேலாகித்திண்புவியண்டந்தன்னிற்
பேர்த்திடுமுயிர்கண்மாற்றப்பின்னுறுமுன்னோன்போல
வார்த்திடுதானைவெள்ளத்தவுணர்கண்மீதுபோனுன். (சுகூ)

ஆங்கதுகாலைதன்னிலாறிருதடந்தோளையன்
பாங்குறுபூதர்யாரும்பாரொடுதிசையும்வானு
நீங்குதலின்றிச்சூழுநேரலன்படையைநோக்கி
யேங்கினர்தொல்லைவன்மையிழந்தனரினையசொற்றூர். (ரு0)

---

* மரற்றுறுபலம் - மரற்செடியின் நெருங்கியபழம்.

o முன்னமதுணர்ந்து என்பதற்கு அக்குறிப்பை அறிந்தெனப் பொருள்கொள்க.

Digitized By Roja Muthiah Research Library

தீயனபுரியுஞ்சூரன்செய்திடுதவத்தாற்பெற்ற
வாயிரவிருநாள்கண்டத்தவுணரும்போந்தாரன்றே
யேயதோரண்டமொன்றிலிருந்தனரிவர்மற்றன்றான்
மாயிருந்திசையும்விண்ணும்வையமுஞ்செறிந்துநின்றார். (௫௧)

வரத்தினிற்பெரியர்மாயவன்மையிற்பெரியர்மொய்ம்பி
னுரத்தினிற்பெரியர்வெம்போரூக்கத்திற்பெரியரெண்ணில்
சிரத்தினிற்பெரியர்சீற்றச்செய்கையிற்பெரியர்தாங்குங்
கரத்தினிற்பெரியர்யாருங்காலனிற்பெரியரம்மா. (௫௨)

மாகத்தின்வதிந்தவானோர்வன்மையும்வளனும்வவ்விச்
சோகத்தைவிளைத்துவெம்போர்தொடங்கியேதொலைவுசெய்தோர்
மோகத்தின்வரம்பாய்நின்றோர்முழுதுயிர்க்கடலுண்வேட்கை
மேகத்தின்வலிந்ததீயோர்விரிஞ்சனேற்றிடினும்வெல்வோர். (௫௩)

கூற்றெனுநாமத்தண்ணல்கொண்டிடுமரசுஞ்செங்கேழ்
நூற்றிதழ்க்கமலமேலானுனித்தனன்விதிக்குமாறு
மாற்றிடுஞ்செய்கைவல்லோர்மாநிலமுழுதுண்டாலு
மாற்றரும்பசிநோய்மிக்கோரண்டங்களலைக்குங்கையோர். (௫௪)

வெங்கனல்சொரியுங்கண்ணர்விரிகடற்புரைபேழ்வாயார்
பங்கமில்வயமேற்கொண்டோர்பவத்தினுக்குறையுளானோர்
செங்கதிர்மதியந்தோயுஞ்சென்னியர்செயிர்தீராற்ற
லங்கதவிறையும்பேரவடிபெயர்த்துலவும்வெய்யோர். (௫௫)

அங்கிமாமுகத்தினன்போலடைந்தனர்பல்லோர்யாளித்
துங்கமாமுகத்தினன்போற்றோன்றினர்பல்லோர்சூழி
வெங்கைமாமுகத்தினன்போன்மேயினர்பல்லோர்மேலாஞ்
சிங்கமாமுகத்தினன்போற்றிகழ்ந்தனர்பல்லோரன்றே. (௫௬)

மதுவொடுகைடபன்போல்வந்தனர்பல்லோர்யாருந்
துதியுறுபுகழ்ச்சுந்தோபசுந்தரிற்செறிந்தோர்பல்லோ
ரதிர்கழற்சலந்தரன்போலார்த்தனர்பல்லோராற்ற
முதிர்சினமகிடன்போலமொய்த்தனர்பல்லோரம்மா. (௫௭)

அரன்படைபரித்தோர்பல்லோரம்புயத்தவிசின்மேவும்
வரன்படைபரித்தோர்பல்லோர்மழுவொடுதண்டந்தாங்குங்
கரன்படைபரித்தோர்பல்லோர்கால்படைபரித்தோர்பல்லோர்
முரன்படைபடுத்தகொண்டன்முதுபடைபரித்தோர்பல்லோர். (௫௮)

ஆனதோரவுணவெள்ளமநந்தகோடியதாமென்றே
தானுரைசெய்வதல்லாற்சாற்றவோரளவுமுண்டோ
வானமுநிலனுமேனைமாதிரவரைப்புமெங்குஞ்
சேனைகளாகிச்சூழின்யாமென்கொல்செய்வதம்மா. (௫௯)

ஓரண்டத்தவுணர்போராலுலைந்தயாமொருங்கேயெல்லாப்
பேரண்டத்தோருந்தாக்கிற்பிழைப்புறுபரிசுமுண்டோ
காரண்டவளக்கர்சாடிக்கனவரையெறியுங்கால்க
ளோரண்டச்சூழல்புக்காலவைபின்னுமிருக்கவற்றோ. (௬௰)

Digitized By Roja Muthiah Research Library

ஒருவரேயெம்மையெல்லாமுரப்பியேதுரப்பர்பின்னை
யிருவரேசென்றுதாக்கின்யாரிவணுய்யவல்லார்
துருவரேயனையதுப்பிற்சூழுறுமவுணர்யாரும்
பொருவரேயென்னினேர்போய்ப்பூசலார்தொடங்கற்பாலார். (௬௧)

எல்லையிலாற்றல்கொண்டவெம்முடைத்தலைவர்யாரு
மல்லனவீரர்தாமுமவுணரையெதிர்க்கலாற்றார்
கல்லொடுமரத்தால்யாமோவவர்திறல்கடக்கவல்லே
மொல்லைநம்முயிருமின்றேயொழிந்தனபோலுமன்றே. (௬௨)

நாற்படையவுணர்தாக்கினுமெலாம்விளிதும்வீரர்
காற்படுபூழியேபோற்கதுமெனவிரிவர்வாகைப்
பாற்படுதிறலோனிற்கிற்பழிபடுமிளையரோடும்
வேற்படையொருவனன்றிவேறியாரெதிர்க்கவல்லார். (௬௩)

நீடுறுதிசையும்வானுநிலனும்வெள்ளிடையதின்றிப்
பாடுறவளைந்துகொண்டார்பற்றலரதனால்யாமு
மோடியுமுய்யலாசாவொல்லுமாறவரைத்தாக்கி
வீடுதலுறுதியென்றேவிளம்பிமேற்சேறலுற்றார். (௬௪)

மற்றதுகாலைதன்னின்மாபெரும்பூதசேனைக்
கொற்றவர்பலருமேனைவீரர்தங்குழுவினோரும்
வெற்றிகொண்மொய்ம்பன்றானுமிடைந்துசூழ்படையைநோக்கி
யிற்றனகொல்லோநந்தம்வன்மையென்றெண்ணமுற்றார். (௬௫)

அண்டர்கண்முதல்வன்றானுமமரருமகிலமெங்குந்
தண்டுதலின்றிச்சூழ்ந்தானவரனிகமெல்லாங்
கண்டனர்துளங்கியஞ்சிக்கவன்றனரவருட்காரி
வண்டுளவலங்கற்சென்னிவானவற்கிளையசொல்வான். (௬௬)

ஆண்டகைமுருகன்றன்மேலாயிரவிருநாலண்டத்
தீண்டியதானையெல்லாமிறுத்தனவிவற்றினோடு
மூண்டமரியற்றிவெல்லவூழிநாண்முடியுமென்றான்
மாண்டிடுகின்றதெங்ஙனவுணர்கண்மன்னன்மன்னோ. (௬௭)

அடுதிறல்வலிபெற்றுள்ளவவுணராம்பானுட்கங்குல்
விடிவதுமமரர்தங்கள்வெஞ்சிறைவீடுமாறு
கொடியதொல்வெறுக்கைதன்னைநீங்கியநமதுதுன்ப
முடிவதுமில்லைகொல்லோமொழிந்தருண்முதல்வவென்றான். (௬௮)

இந்திரனிளையதன்மையிசைத்தலுமிலங்கைகாத்த
வைந்திருசென்னியானையடுதிறல்கொண்டுநின்ற
செந்திருமருமத்தண்ணறேவரையளிக்குந்தொல்லோன்
புந்திகொள்கவலைநாடியினையனபுகலாநின்றான். (௬௯)

காலமாய்க்காலமின்றிக்கருமமாய்க்கருமமின்றிக்
கோலமாய்க்கோலமின்றிக்குணங்களாய்க்குணங்களின்றி
ஞாலமாய்ஞாலமின்றியநாதியாய்நங்கட்கெல்லா
மூலமாயிருந்தவள்ளன்மூவிருமுகங்கொண்டுற்றான். (௭௦)

Digitized By Roja Muthiah Research Library

குன்றுதொளுடல்செய்யுங்குமரவேண்மேருவென்னும்
பொன்றிகழ்வெற்பின்வந்துபுவனங்கண்முழுதுமங்கட்
சென்றுறையுயிர்கண்முற்றுந்தேவருந்தன்பாற்காட்டி
யன்ெருருவடிவங்கொண்டதயர்த்தியோவறிந்தநீதான். (எக)

பொன்னுருவமைந்தகஞ்சப்புங்கவனுகிநல்கு
மென்னுருவாகிக்காக்குமீசன்போலிறுதிசெய்யு
மின்னுருவென்னையார்க்கும்வெளிப்படைபோலுமன்னன்
றன்னுருமறைகளாலுஞ்சாற்றுதற்கரியதன்றே. (எஉ)

பாயிருங்கடலிற்சூழ்ந்தபற்றலர்படையையெல்லா
மேயெனுமுன்னம்வீட்டுஞ்சிறுவனென்றெண்ணலைய
வாயிரகோடிகொண்டவண்டத்தினுயிர்கட்கெல்லா
நாயகனவன்காணுஞ்செய்நல்வினைப்பயனல்வந்தான். (எங)

சூரனேமுதலோர்தம்மையிமைப்பினிற்றொலைக்கவுன்னின்
மூரலாலடுவன்கொண்டமுனிவினாலடுவன்வாய்மைச்
சீரினாலடுவனுட்டச்செய்கையாலடுவனென்று
னேரிலாமுதல்வன்வன்மையாவரேநிகழ்த்தற்பாலார். (எச)

பாரிடர்சேனையோடுபடர்ந்ததுமிலக்கத்தொன்பான்
வீரர்கள்புடையிற்போற்றமேயதும்படைகள்பற்றிச்
சூரனையடுவான்வந்தசூழ்ச்சியுந்தூக்கின்மாதோ
வாரணமுதலாமேலோர்க்கனைத்துமோராடலேகாண். (எரு)

துய்யதோர்குமரனேபோற்றோன்றியமுதல்வன்சூழ்ந்த
வெய்யதானவரையெல்லாம்விரைந்துடனறுத்துநீக்கிக்
கையில்வேலதனாற்சூரனுற்றலுங்கடக்கும்யாது
மையுறேல்காண்டியென்றனறிதுயிலமர்ந்தபெம்மான். (எசு)

மாலிவைபலவுங்கூறிமகபதியுளத்தைத்தேற்றி
யோலமொடவுணவெள்ளமும்பருஞ்செறிந்தசெவ்வேள்
பாலுறநின்றுபோரின்பரிசினைப்பார்த்துமென்றே
வேலுடைமுதல்வன்பாங்காவிண்ணவரோடும்போந்தான். (எஎ)

வேறு.

அன்னதன்மைகண்டறுமுகன்முறுவல்செய்தடுபோ
ருன்னியேகலும்வானமும்வையமுமொன்றாத்
துன்னுதானவப்பெருங்கடலார்த்தமர்தொடங்க
முன்னமேகியபாரிடர்யாவருமுரிந்தார். (எஅ)

முரிந்தகாலையிற்பூதரின்முதல்வர்கண்முரட்போர்
புரிந்துசாய்ந்தனரிலக்கரோடெண்மரும்பொருதே
யிரிந்துநீங்கினரின்னதோர்தன்மைகளெல்லாந்
தெரிந்துதிண்டிறன்மொய்ம்பினோன்சிலைகொடுசேர்ந்தான். (எகூ)

சேர்புதன்சிலைவாங்கியேசரமழைசிதறி
நேர்புகுந்திடுமவுணர்கணெடுந்தலைபுயங்கண்
மார்புவெங்கரங்கழலடிவரைகளாய்வீழ
வீர்புநின்றமரியற்றினன்சிறுவரையிகலி. (அ0)

Digitized By Roja Muthiah Research Library

மாகமேனிமிராயிரகோடிமாகடலு
ளாகமொன்றுசென்றலைத்தெனநண்ணலரெதிர்போ
யாகவம்புரிந்துலப்புறுத்தன்மைகண்டழுங்கி
யேகநாயகன்றனதுபால்வந்தனனிளவல். (அக)

காலையங்கதிலவுணர்தந்தானையோர்கணத்தின்
சாலமோடினபூதரிற்றலைவருஞ்சாய்ந்தார்
கோலவெஞ்சிலைவீரருமுரிந்தனர்குழவிப்
பாலனேயிவண்வருமெனச்சூழ்ந்தனர்பலரும். (அஉ)

தண்டுநேமியுங்குலிசமுஞ்சூலமுந்தனுக்க
ளண்டுமிழ்ந்திடுவாளியுமுடம்பிடித்தொகையும்
பிண்டிபாலமுங்கணிச்சியும்பாசமும்பிறவு
மண்டர்தந்திடுபடைகளுஞ்சொரிந்துநின்றார்த்தார். (அங)

பாரிடங்களின்படையெலாநெக்கதும்பாங்கர்
வீரமொய்ம்பனுமிளைஞரும்வருந்திமீண்டதுவுங்
காரினம்புரையவுணர்தஞ்செய்கையுங்கானு
மூரல்செய்தனனெவ்வகைத்தேவர்க்குமுதல்வன். (அச)

நாட்டமூன்றுடைத்தாதைபோற்சிறிதிறைநகைத்து
நீட்டமிக்கதோர்சிலையினைநெடுங்கரம்பற்றிக்
கோட்டிநாணொலிகொண்டிடவண்டருங்குலைந்தா
ரீட்டமிக்கபல்லுயிர்களுந்துளக்கமெய்தினவே. (அரு)

வேறு.

முக்கணனுதவியதிருமுருகன் முரணுறுவரிசிலைமுதிரொலிபோய்த்
தொக்கனசெவிதொறுநுழைதலுமே தொலைவறுமவுணர்கடொகைமுழுது
நெக்கனபகிர்வனவிரதமெலா நிரைபடவருபரிபுரள்வனவே
மைக்கரிதரைமிசைவிழுவனவான் மதிதொடுநெடுவரைமறிவனபோல். (அசு)

மாசறுமறைகளின்மறையதனை மலைமுனியுணர்வகையருள்புரியுந்
தேசிகமுதல்வன்வரிசிலையிற் செறிமுகிலுறைவகைசிதறுவபோ
லாசுகமளவிலகடவினனு லடல்கெழுமவுணர்கள்புடைவளையுங்
காசினியகலமும்விரிகடலுங் ககனமுமிடைவனகணையெனவே. (அஎ)

கொடிகளையடுவனவளவிலவே குடைகளையடுவனவளவிலவே
படைகளையடுவனவளவிலவே பரிகளையடுவனவளவிலவே
கடகரியடுவனவளவிலவே கழலொலியிரதமொடவுணர்கடம்
முடிகளையடுவனவளவிலவே முழுதுலகுடையவன்விடுசரமே. (அஅ)

பரவியதருவினமெனவவுணப் படைநிரைவிழுவனதொடுகடலிற்
றிரையெனவிழுவனபுரவியினந் திருநெடுவரைகளின்விழுவனதேர்
கருமைகொண்மணிமுகிலினமெனவே கடகரிவிழுவனகனவரைசூ
ழிரவியுமதியமும்விழுவனபோ லெழுவனகவிகையும்விழுவனவே. (அகூ)

செல்லுறுதாள்களுமடுபடைகள் சிந்தியசெங்கைகளுந்திறலே
சொல்லியவாய்களும்விம்மலுறுந் தோள்களுநோக்குறுதுணைவிழியுங்
கல்லெனவார்த்திடுகந்தரமுங் கவசமும்வீரர்கடுவசமுட
னெல்லையிலாதமர்தனிமுதல்வ னெய்திடும்வாளிகள்கொய்திடுமே. (கூ0)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

வட்டணைகொண்டிடுமோல்வரையு, மெட்டெனுமோங்கலும்யானைகளும்
பட்டுருவிக்கணைபாறினவா, லொட்டலரெங்ஙனமுய்குவதே. (௯௧)

பொன்னுலகெல்லைபுகுந்துலவு, மன்னமுயர்த்திடுமண்ணல்பதந்
துன்னுறுமச்சுதர்தொல்லுலகின், மின்னெனவேசெலும்வேள்கணையே. (௯௨)

மேதினிகீண்டுவிரைந்துபுகும், பாதலமூடுபரந்துசெலு
மூதகுமண்டமுகட்டுருவு, மாதிரமேகுறும்வள்ளல்சரம். (௯௩)

மூவிருசெய்யமுகத்தொருவ, னேவியசெஞ்சரமெங்குமுரு
மேவலர்தங்களைவீட்டிடும்வே, றேவர்கள்கண்ணுமிறுத்திலவே. (௯௪)

ஆனனமாறுளவண்ணல்சரந், தானவர்சென்னிகடள்ளுதலும்
வானிடைபோயினமாண்கதிர்கண், மேனிமறைப்புறும்வெய்யவர்போல். (௯௫)

வாளெழுவேல்பிறவாங்கினர்தந், தோள்களைவாளிதுணித்தெறிய
நீளிடைசென்றுநிரந்திடுதெங், கேளிரையட்டனகீழ்மையர்போல். (௯௬)

மாசகல்வானகமாதிரவாய், காசினிவேலைகளத்தினகம்
பாசறைசுற்றியபாடியெலா, மாசறவட்டனனற்புதனே. (௯௭)

அட்டிடுகின்றுழியம்புயன்மா, லொட்டுறுவாசவனுண்மகிழாக்
கெட்டனர்தானவர்கேடிறுயர், விட்டனமென்றுவிளம்பினரே. (௯௮)

அடைந்தனர்விம்மிதமாங்கவுணர், மிடைந்ததுநோக்கினர்வேற்படையோன்
றடிந்ததுகாண்கிலர்தாரணிமேற், கிடந்ததுகண்டனர்கேசரரே. (௯௯)

அலமருபாரிடரவ்வவர்தந், தலைவர்களேனையர்தானவர்தம்
மலிபடைசாய்த்துவயம்புனைவிற், புலவனையார்ப்பொடுபோற்றினரே. (௧௦௦)

வள்ளல்சரம்படவான்முகடு, கொள்ளுறுதானைகுழாந்தொலைய
வெள்ளிடையாயினவிண்ணவர்தம், முள்ளகமாற்றவுவப்புறவே. (௧௦௧)

அண்டகடாகமதப்புறமாய்க், கொண்டிடுதானவர்கொள்கையிது
கண்டிறைவன்கழல்காணநெறி, யுண்டினியென்றனருண்மகிழ்வார். (௧௦௨)

காற்றெனவண்டகடாகநெறி, தோற்றியவாயிற்றொடர்ந்துபுகா
மேற்றிகழ்தேர்கரிவெம்பரியி, னேற்றமொடொல்லெனவேகினரால். (௧௦௩)

அந்நெறியேகியிவ்வண்டமெலாந், துன்னினர்வான்புவிசூழ்ந்துவெளி
யென்னதுமில்லெனவீண்டினரான், முன்னுறவந்துமுடிந்தவர்போல். (௧௦௪)

சூரனெனப்படுதொல்லிறைவன், பேரமராற்றிடுபெற்றியினாற்
றேரிடைவந்துறுசெய்கைதெரீஇ, யார்வமொடேநெடிதார்த்தனரே. (௧௦௫)

ஆர்த்தனர்தம்முனடைந்துளர்தாம், பேர்த்திடுகின்றபிணக்கிரியா
யீர்த்திடுசோரியிடைப்படுதல், பார்த்தனர்சிந்தைபரிந்தனரே. (௧௦௬)

பரிந்தனர்நம்படைபட்டிடவே, புரிந்திடுவாரெனுடுபோர்புரியா
விரைந்துவயங்கொடுமீடுமெனுத், தெரிந்தனர்சிந்தனைதேற்றினரே. (௧௦௭)



Digitized By Roja Muthiah Research Library

தேற்றிடுகின்றுழிதேவரெலாம், போற்றிடவீரர்புடைக்கணுற
வாற்றல்கொள்பூதர்களார்த்திடவே, தோற்றினனீறொடுதோற்றமிலான். (க0அ)

சேயுருவாகியசீர்முதல்வன், மேயதுகண்டுமிகச்சிறியன்
பாய்பரியானைபடைத்துமிலா, னேயிவனேநமதெண்ணலனே. (க0கூ)

ஆண்டகைமைந்தனிவ்வண்டமெலா, மீண்டியதானையிமைப்பொழுதின்
மாண்டிடவட்டனன்மற்றிதுதா, னீண்டிடுமற்புதநீர்மையதே. (கக0)

அன்னதுநின்றிடவங்கவன்மேன், மன்னவர்மன்னவன்வந்துபொரு
முன்னமராற்றிமுடிக்குதும்யா, மென்னவியம்பினர்யாவருமே. (ககக)

தற்பமொடின்னனசாற்றியவண், முற்படுதானவர்முக்கணுடைத்
தற்பரனல்கியசண்முகனை, வற்புடனார்த்துவளைந்தனரால். (ககஉ)

வளைந்திடுகாலையில்வானவர்க, ளுளைந்தனர்பூதர்களுட்கிமனந்
தளர்ந்தனர்வீரர்சலித்தனரால், விளைந்ததுபேரமர்மீட்டுமெனா. (ககங)

வேறு.

ஐயன்மருத்தினையத்துணைநோக்கிக், கையணிநெற்றிகடைக்குழையாகி
வெய்யவர்தானைகண்மேவுழியெல்லாம், வையம்விடுக்குதிவல்லையிலென்றான். ()

அட்டுறுநீபவலங்கல்புனைந்தோன், கட்டுரைகொண்டுகரந்தொழுகாலோ
னொட்டுறுநண்ணலருற்றுழிகாணா, விட்டனனம்மவிறற்பரிமான்றேர். (ககரு)

மண்ணிடைசென்றிடுமாதிரநீந்தும், விண்ணிடைசூழ்தரும்வேலையின்மீதாங்
கண்ணுறுமெப்படிகைதொழும்வானோ, ரெண்ணினுநாடரிதெந்தைபிரான்றேர். ()

சேயதுகாலைதிறத்திறமாகி, மூயினதானவர்மொய்ம்புறுதானை
சாய்வுறவோர்தொடைதன்னிலநந்த, மாயிரகோடிகளாக்கணைதொட்டான். ககஎ

பரிந்தனசூழ்ந்தவர்பாணிகண்மொய்ம்பு, சிரந்துணிவுற்றனசெம்புனலாழி
சொரிந்தபிணக்கிரிதுற்றியவற்றா, னெரிந்ததுவையநெளிந்ததுநாகம். (ககஅ)

பொய்கொலையாற்றியபூரியருக்கார், செய்குவர்நன்மைசெறிந்துளரேனுங்
கைகெழுஞாளிகளேகறித்துண்ட, மைகெழுதானவர்மாண்டிடும்யாக்கை. (கககூ)

ஒன்னலர்மீதினுயிர்க்குயிரானோன், மின்னெனவீசியவெஞ்சரமாரி
பின்னுறமுந்துபெயர்ந்திடுமென்றா, லன்னவன்றேர்விரைவார்கணிக்கின்றார். ()

பரத்தினுமேதகுபண்ணவன்வார்விற், கரத்தினையும்விரைவாற்கரந்தூண்டுஞ்
சரத்தினையுந்தடந்தேரினையுங்கா, லுரத்தினையும்புகழ்வார்புடையுள்ளார். (கஉக)

வெவ்விசயப்படைவீட்டிடும்வாளிச்,செவ்விசைதேர்விசைநாடினர்செவ்வேள் [ர்.
கைவிசையோநெடுங்கால்விசைதானோ, வெவ்விசையோவிசையென்றனர்வானோ

துய்யவன்வாளிதுணித்திடவீரர், கையொடுவாளிடைசெல்வகணிப்பி
லையிருவட்டமராப்புடைபற்ற, வெய்யவர்பற்பலர்விண்ணெழல்போலும். (கஉங)

காலொருபாங்கர்கழுத்தொருபாங்கர், வாலொருபாங்கர்மருப்பொடெருத்த
மேலொருபாங்கர்வியன்கையொர்பாங்காத், தோலினமிவ்வகையேதுணிகின்ற.()

பல்லணமற்றனபன்முழுதற்ற, செல்லுறுதாளொடுசென்னியுமற்ற
வொல்லொலியற்றவுரந்துணிவுற்ற, வல்லமர்நீந்துறுமாத்தொகைமுற்றும், (கஉரு)

Digitized By Roja Muthiah Research Library

மாழைகொள்வையமடிந்திடநேமி, யாழிகொள்சோரியினாழ்வனமேருச்
சூழுறும்வெய்யவர்தொல்புவிசீண்டே, கீழுறுமெல்லைகெழீஇயினபோலும். (கஉசு)

ஏறியதேர்களும்யானைகள்யாவுஞ், சூறைகொள்வாசிகளுந்துணிவுற்றே
வீறகல்வீரர்மிசைப்படவீழ்ந்த, மாறவையாற்றிடும்வல்வினையேபோல். (கஉஎ)

ஞாலமும்வானமுநண்ணலராவி, மாலொடுவாரிமடங்கவுலைந்தான்
சாலுமிவற்கிதுதாள்வலியாற்கொல், காலனெனப்புகல்கட்டுரைபெற்றான். (கஉஅ)

எறிபடையாவையுமேமமதாகச், செறிபடையாவையுஞ்சேயவனேவான்
முறிபடுகின்றமுனிந்துவணப்புட், கறிபடமெய்துணிகட்செவியேபோல். (கஉகூ)

முன்னுறுவார்கண்முரட்படைதூவிப், பின்னுறுவார்பெயராதுபுடைக்கட்
டுன்னுறுவார்களெலாந்துணிவாக, மின்னெனவெங்கணும்வேள்கணைதூர்த்தான். ()

சூலமதேகொல்கணிச்சிகொலன்றேல், மாலெறிநேமிகொல்வச்சிரமேகொல்
காலொடுசென்றகனற்குழுவேகொல், வேலதுகொல்லெனவேள்கணைவிட்டான். ()

வேறு.

மழைத்திடுமெய்யுடைமாற்றலர்க, ளிழைத்திடுமாயவியற்கைகளும்
விழுத்தகவீசும்விறற்படையும், பிழைத்தனதாங்கள்பிழைத்திலரால். (கஙஉ)

முக்கணன்மாமகன்மொய்கணைக, டொக்கவர்யாக்கைதுணித்திடலு
மெய்க்கிடுபல்கலன்மீன்விழல்போற், றிக்குலவிப்படிசிந்தினவே. (கஙங)

அண்ணல்சரங்களறுத்திடலு, மெண்ணலர்யாக்கைகளிற்றவைதா
மண்ணையளந்தயின்மாலெனவே, விண்ணையளந்துவிழுங்கினவே. (கஙச)

சூழுறுதானைதுணிந்தவுட, லேழெனுநேமியுமெண்டகுபே
ராழியும்விண்ணுமடைத்திமையோர், வாழுலகங்களைவௌவியவே. (கஙரு)

காடியிழந்துகவந்தமதா, யாடினவெள்ளமுமாயிரமா
கோடியதுண்டுகன்கணையால், வீடினவெல்லைவிதிக்குநர்யார். (கஙசு)

வீழுறுமாற்றலர்மெய்க்குருதி, யாழிகளாகியகன்புவியிற்
பூழைகளோடுபுகுந்துபில, மேழுளவெல்லையுமீண்டியதே. (கஙஎ)

வேறு.

பாதலவெல்லைபரந்திடுசோரி, பூதலமீண்டுபுகுந்துபராவி
யோதநெடுங்கடலோங்கியவாபோன், மாதிரமெங்குமறைத்தனவன்றே. (கஙஅ)

மீனுடுவாகவிளங்கியதிங்கள், பானுமலர்ந்திடுபங்கயமாகச்
சோனைகொண்மாமுகிறேறணியதாக, வானிமிர்செம்புனன்மாகடலொக்கும். கஙகூ

மாசறுகூற்றனுமற்றுளர்தாமுங், கேசரராகியகிங்கரர்யாரும்
பாசமலைந்திடுபல்பிணிபற்ற, வீசினராருயிர்மீன்கள்கவர்ந்தார். (கச0)

பாலுறுகின்றபணிக்கிறைநாப்பண், மாலருளிற்றுயின்மாட்சிமையென்ன
நீலுறுதிங்கணிணங்கெழுசெந்நீர், வேலையின்மீதுவிளங்கியதம்மா. (கசக)

மட்டறுசெம்புனல்வாரிதிரீந்தி, யொட்டலர்யாக்கையினோங்கலறுத்துத்
தட்டுறுசெங்கதிர்சண்முகமேலோன், விட்டிடுநேமியின்விண்மிசைசெல்லும். ()

Digitized By Roja Muthiah Research Library

சிறைப்புறவுக்கருள்செய்திடமெய்யூ, னறுப்பவனென்னவடைந்தனர்விண்ணி
னெறிப்படுவானவர்நேரலர்யாக்கை, யுறப்படுசோரிமெய்யுற்றிடுநீரால். (௧௪௩)

ஆனதோரெல்லையிலண்டநிறைந்த, சேனைகள்வீந்தனசெம்மல்சரத்தா
லூனுயிர்பூதமொழிந்தனமுக்கண், வானவன்மூரலின்மாய்ந்திடுமாபோல். (௧௪௪)

வேறு.

அண்டமீங்கிதுமுற்றொருங்கீண்டியவவுணர்
தண்டமாய்தலுமேனையவண்டங்கடம்மிற்
கொண்டதானைகள்பின்னரும்வந்திடக்குமரன்
கண்டுமற்றவைதொலைத்தனன்செலுத்திடுகணையால். (௧௪௫)

அறுத்துவெம்முனைத்தானையையாண்டுசெல்லனிக
மறித்தும்வந்துவந்தடைதருமிவணெனமனத்துட்
குறித்துவெங்கணைமாரியாலண்டகோளகையி
னெறித்தரும்பெருவாயிலையடைத்தனனிமலன். (௧௪௬)

ஆண்டுசென்னெறிமாற்றியேயண்ணல்வெங்கணையான்
மாண்டதானைகள்சோரியுங்களேவரமலிவு
நீண்டபாதலங்கடற்புவிகொண்டுவானிமிர்ந்தே
யீண்டுகின்றதுகண்டனன்வரைபகவெறிந்தோன். (௧௪௭)

நெற்றிநாட்டத்தினுலகெலாமட்டிடுநிமலன்
பெற்றமாமகன்பன்னிருவிழிகளும்பிறங்கு
கற்றைவெஞ்சுடர்வடவைபோலாக்கியக்கணத்தி
லுற்றுநோக்கினனெரிந்தனகளேவரத்தோங்கல். (௧௪௮)

வெந்துநுண்டுகள்பட்டனகளேவரம்விசும்பி
னுந்துசோரிநீர்வறந்தனமூவகையுலகு
முந்துபோலவேயமைந்தனமுளரியான்முகுந்த
னிந்திராதியரார்த்தனர்குமரனையேத்தி. (௧௪௯)

பாறுலாவருகளேவரத்தமலையும்படிமேல்
வீறுசோணிதநீத்தமும்வேவுறவிழித்து
நீறதாக்கினான்சூரனையட்டிலனின்று
னாறுமாமுகனுடலையுன்னினானுங்கொல். (௧௫0)

ஆகுமெல்லையினொல்லையினடுகளத்தடைந்த
சேகுநெஞ்சுடைச்சூரனித்திறமெலாந்தெரிந்து
மாகநீடுநந்தானையையலைத்தமாற்றலனை
நாகர்தம்மொடுமுடிக்குவன்யானெனநவின்றான். (௧௫௧)

மாற்றமித்திறமிசைத்திடுமவுணர்கோன்மனத்திற்
சீற்றமூண்டிடவமர்வினைகுறித்தனன்றிகிரிக்
காற்றினொல்லைவந்தேற்றலுமருத்துவன்கடவிப்
போற்றுதேர்மிசைமுருகனுஞ்சென்றெதிர்புகுந்தான். (௧௫௨)

புக்ககாலையிலறுமுகன்றோற்றமும்புடையின்
மிக்கபன்னிருகரங்களும்வியன்படைக்கலனுந்
தொக்கவீரமும்வன்மையுநோக்கியேதொல்லைத்
தக்கனேயெனவவுணர்கோனின்னனசாற்றும். (௧௫௩)

Digitized By Roja Muthiah Research Library

சிறந்தவான்மதிமிலைச்சினோனருள்புரிசெயலா
லிறந்திடேனியானென்றுமிப்பெற்றியாயிருப்பேன்
மறந்துமென்னொடுபொருதிலர்தேவருமலைந்தே
யிறந்துளார்பலருணர்ந்திலைபோலுநீயிதுவே. (௧௫௪)

உள்ளநொந்துநொந்தென்பணியாற்றியேயுலைந்து
தள்ளுறுஞ்சுரர்மொழியினைச்சரதமென்றுன்னிப்
பிள்ளைமென்மதியாலிவண்வந்தனைபெரிது
மள்ளலுற்றுழிப்புகுந்திடுங்கயமுனியதுபோல். (௧௫௫)

உடைப்பெரும்படைசெறுத்தனைபாலனென்றுன்னை
விடுப்பதில்லையால்வெரிநதுகொடுக்கினும்விரைவிற்
படுப்பன்வானவர்தொகையுடன்பாரிடர்தமையுங்
கெடுப்பனென்றனன்றன்பெருங்கிளையுடன்கெடுவான். (௧௫௬)

வெம்புரைத்தொழிற்கொருவனுங்கயவநீவெறிதே
வம்புரைத்தனையாவதொன்றில்லைநின்மார்பஞ்
செம்புரைப்படயாம்விடுகின்றதோர்திறல்வா
யம்புரைத்திடுமாறுனக்கென்றனனமலன். (௧௫௭)

ஆருநேரிலாப்புங்கவன்சேயினதறையச்
சூரனாகியவவுணர்கோன்றண்ணெனச்செயிர்த்து
மேருநேர்வதோர்வரிசிலையெடுத்துவிண்ணிழியும்
வாரிபோன்றிடுநாணினையேற்றியேவளைத்தான். (௧௫௮)

வளைத்தடங்கிரிபுரைவதோர்சிலையினைவயத்தால்
வளைத்தசெய்கையைக்காண்டலும்பாரிடர்வானோர்
வளைத்தடங்கடல்வந்திடுநஞ்சொடுமலைவான்
வளைத்ததன்மைபோலவுணர்தமுதல்வனைவளைத்தார். (௧௫௯)

சிலையைவீசினர்கொடுமரம்வீசினர்செறிமூ
விலையைவீசினர்படையெலாம்வீசினரெதிர்ந்தா
ருலையவீசியேயடல்செயுமும்மதத்துவாவை
வலையைவீசியேபிணித்திடமதித்துளாரென்ன. (௧௬0)

கண்டுமற்றதையவுணர்கோன்வில்லுமிழ்கணையாங்
கொண்டனுண்டுளிசிதறியேகணங்கள்கூட்டறுத்து
விண்டுலாவரவரக்கினாற்குயின்றதோர்வெற்பைச்
சண்டவெங்கனலுடைப்பதுபோலவேதடிந்தான். (௧௬௧)

வீடினார்களும்புயங்கரந்துணிந்திடமெலிந்து
வாடினார்களுமயங்கிவீழ்ந்தார்களும்வல்லே
யோடினார்களுமோடவும்வெருவிவேற்றுருவங்
கூடினார்களுமாயினர்பாரிடக்குழாத்தோர். (௧௬௨)

பூதர்சாய்ந்துழியிலக்கரோடெண்மரும்பொருவில்
வேதநாயகன்றூதனுஞ்சூழ்ந்துடன்மேவிக்
கோதைதூங்கியகொடுமரமாயினகுனித்துச்
சோதிவான்கணைமாரிகளவுணன்மேற்சொரிந்தார். (௧௬௩)

Digitized By Roja Muthiah Research Library

சொரிந்தவெங்கணையெங்கணும்வருதலுஞ்சூரன்
றெரிந்துவாளிதொட்டறுக்கலனின்றதோர்செவ்வி
விரைந்துவந்தவையாங்கவன்மெய்ப்படவிளிந்து
பரிந்துபோயினசெய்ததொன்றில்லையப்பகழி. (௧௬௪)

பரப்பினீண்டியவீரர்தஞ்சூழ்ச்சியைப்பாரா
வுரப்பியாவலங்கொட்டியேவெகுளிகொண்டொருதன்
பொருப்புநேர்சிலைகுனித்துவெஞ்சிலீமுகம்பொழிந்து
திருப்பெருந்தடந்தேரொடுஞ்சாரிகைதிரிந்தான். (௧௬௫)

நூறுகோடிவெஞ்சரமொருதொடையுறநூக்கிச்
சூறையாமெனவட்டணைதிரிந்துளான்சூழ்வோர்
மாறுதூண்டியசரங்களைத்துணித்துமற்றவர்க
ளேறுதேருடன்பிடித்திடுசிலைகளையிறுத்தான். (௧௬௬)

வையம்வில்லுடனிற்றபின்மற்றவர்மலைவு
செய்யவுன்னுமுன்மொய்ம்பினுமுரத்தினுஞ்சிரத்துங்
கையினுங்கணையாயிரமாயிரங்கடுந்தீப்
பெய்யுமாரிபோற்செறித்தனன்செம்புனல்பெருக. (௧௬௭)

புரந்தனிற்செறிகறையினார்புலம்புகொண்மனத்தா
ரூரந்தளர்ந்துளார்வில்வலியிழந்துளாரொருங்கே
யிரிந்துநீங்கினரிலக்கரோடெண்மருமிளவ
றிருந்தலன்றடந்தேர்மிசைப்பாய்ந்தனன்சினத்தால். (௧௬௮)

பாய்ந்துதிண்டிறன்மொய்ம்பினன்பரமன்முன்னளித்த
நாந்தகந்தனையுரீஇக்கொடுநண்ணலர்க்கிறைவ
னேந்துவில்லினைத்துணித்தனன்றுணித்தலுமெரிபோற்
காய்ந்துவெய்யவன்புடைத்தனனுரத்திலோர்கரத்தால். (௧௬௯)

அங்கைகொண்டுகூரொருபுடைபுடைத்தலுமகலம்
பொங்குசோணிதமலைத்திடவாகையம்புயத்துச்
சிங்கம்வீழ்ந்தயர்வுற்றிடத்தூதனைச்செகுத்த
லிங்கெனக்கடாதென்றெடுத்தும்பரினெறிந்தான். (௧௭௦)

எறிந்தகாலையில்விண்ணிடைப்படர்ந்திடுமேந்த
லறிந்துமீண்டுசென்றுறுமாமுகன்புடையடைந்தான்
றறிந்துபோகியசிலையினைத்தரைமிசையிட்டுச்
சிறந்ததோர்தனுவெடுத்தனன்றீயரிற்றீயோன். (௧௭௧)

அத்தமேல்கிரியுதயமால்வரைத்துணையான்று
நித்தலும்பிறர்க்கிடர்செய்துமேருவினீண்டு
கொத்துநீடுபல்குவடுடைத்தாகியேகுமரன்
சத்தியாலடநின்றவெற்பனையதத்தனுவே. (௧௭௨)

வனைகருங்கழல்வுணனக்கார்முகம்வளைத்துப்
புனலுமங்கியுங்காலுடனொலிப்பதுபுரைய
வெனைவருந்துளக்குறும்வகைநாணொலியெடுத்தா
னனையபெற்றியையறிந்தனனமரரையளித்தோன். (௧௭௩)

Digitized By Roja Muthiah Research Library

புயலின்மேனியன்புவிநுகர்காலையும்போதன்
றுயிலுமாலையுந்துஞ்சியவேலையுந்தொலையா
தியலுமண்டத்தினடிமுடியுருவிநின்றிலங்குங்
கயிலைபோல்வதோர்நெடுஞ்சிலையெடுத்தனன்கந்தன். (௧௭௪)

வாரியாலுலகழிந்திடுமெல்லையின்மருங்கின்
மேருவாதியாம்வரைகளுங்கிரிகளும்விசும்பிற்
காருமேலுளவுலகமுமமரருங்கயிலைச்
சாரல்சூழ்தல்போல்விரவியார்ப்புடையதத்தனுவே. (௧௭௫)

நீட்டமிக்கதோரப்பெருஞ்சிலையினைநிமலன்
ருேட்டுணைக்கொடுவாங்கியேழ்வகையினுற்றேன்று
மீட்டமிக்கபல்லுயிர்களும்வானுருமேற்றின்
கூட்டமாகியேயார்த்தெனக்குணத்தொலிகொண்டான். (௧௭௬)

குணங்கொள்பேரொலிகோட்டுமிரலையூர்கொற்றத்
தணங்குலாவருகார்முகங்குழைத்துளைய்வதி
யிணங்கவாங்கியேபத்துநூருயிரத்திரட்டி
கணங்கொள்வெஞ்சரமுகைத்தனன்கூற்றினுங்கடியோன். (௧௭௭)

வான்மறைத்தனமாதிரமறைத்தனமதிதோய்
மீன்மறைத்தனகதிர்வெயின்மறைத்தனவேலை
தான்மறைத்தனவசுமதிமறைத்தனதருவார்
கான்மறைத்தனவரைகளைமறைத்தனகணைகள். (௧௭௮)

காற்றிற்செல்வனவங்கியிற்படர்வனகடுங்கட்
கூற்றிற்கொல்வனவேலைவெவ்விடத்தினுங்கொடிய
பாற்றுத்தொல்சிறையுள்ளனபஃறலைபடைத்த
நாற்றிக்கும்புகழவுணர்கோனுணையினடப்ப. (௧௭௯)

பருமிதத்தனமேருவைத்துளைப்பனபாங்கர்
வரைகிழிப்பனவண்டமும்பொதுப்பனவான்றே
யுருமிடிக்குலம்பொருவனவிடத்தையுண்டுமிழ்வ
கருமைபெற்றனசேயனதீயவன்கணைகள். (௧௮0)

துண்டவெண்பிறைவாளெயிற்றவுணர்கோன்றுரப்ப
மிண்டுவெங்கணையெங்கணுஞ்செறிந்திடவிண்ணோர்
கண்டுகண்ணனையணுகியேகைகுலைத்தைய
வுண்டுகொன்னமக்கொளிப்பதோரிடமெனவுரைத்தார், (௧௮௧)

உரைத்துளார்க்குமான்மாறுரைவழங்குமுன்னெள்வேல்
கரத்திலேந்தியகுமரவேளின்னதுகண்ணுற்
றெரித்துவெங்கனல்விடுத்திடுமூதைபோற்சிலதன்
சரத்தினாலவன்றூண்டியகணையெலாந்தடிந்தான். (௧௮௨)

மடிந்திடும்படிமாற்றலன்சரங்களைவள்ள
றடிந்ததன்மைகண்டமரர்களுவகையிற்றழைத்தார்
படர்ந்துநீடியகங்குலின்பாயிருள்புலர
விடிந்தகாலையினெழுங்கதிர்கண்டமேதினிபோல். (௧௮௩)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

அங்கவெல்லையவுணர்கோ, னெங்கணுதனெதிருற
மங்குல்போல்வரம்பிலாச், செங்கண்வாளிசிதறினுன். (கஅச)

ஆயகாலையறுமுகன், றீயனுந்துசெறிகணை
மாயவாளிமாமழை, யேயெனுமுன்னேவினுன். (கஅரு)

எங்கணுதனேவிய, துங்கவாளிசூர்விடும்
புங்கவங்களைப்புரத், தங்கிபோலறுத்தவே. (கஅசு)

அறுத்தபின்னுமறனிலான், மறுத்தும்வாளிமாமழை
கறுத்தகண்டர்காளைமேற், செறுத்துவல்லைசிந்தினுன். (கஅஎ)

சிந்துகின்றசெஞ்சரம், வந்துறுமுன்வந்தெனக்
கந்தனூறுகணைதொடா, வந்தில்பூழியாக்கினுன். (கஅஅ)

பூழிசெய்துபொள்ளென, வூழிநாதனெஞ்சர
மேழுநூறதேவினுன், சூழுமாயைதோன்றன்மேல். (கஅகூ)

மாயைமைந்தன்மற்றதை, யாயவாளியாலறுத்
தேயினுனிராயிரஞ், சேயின்முன்சிலீமுகம். (ககூ0)

வேறு.

விட்டதனையத்தொகைவிறற்பகழிதன்னு
லட்டுவிரைவிற்கடவுளாயிரவிரட்டி
கட்டழலையொத்துளகடுங்கணைகடம்மைத்
தொட்டனன்வருத்தமொடுசூர்கிளைதுளங்க. (ககூக)

முராரியுதவுஞ்சுதனைமுந்துதளையிட்டாண்
டொராயிரமளித்தபரனுய்த்தகணைசெல்ல
விராயிரநெடும்பகழியேவியவைநீக்கி
யராவிறையும்வையமுமழுங்கவுறவார்த்தான். (ககூஉ)

ஆர்த்தவன்விடுங்கணையனைத்தினையுமுக்கண்
மூர்த்திதருகான்முளைசெலச்செலமுடித்தான்
கார்த்தெழுபுகைப்படலைகான்றுமிழ்செந்தீச்
சேர்த்தினவையாவையுமிசைந்திடுதிறம்போல். (ககூஙா)

ஐயன்விடுவாளிகளையவ்வசுரனீக்கும்
வெய்யன்விடுவாளிகளைவேள்கடிதறுக்கு
மெய்யுநெடுவெம்பகழியிற்றவைகள்சிந்தி
வையமிசைபோகியனவானமணித்தென்ன. (ககூச)

முற்றியவமர்த்தலைமுனிந்திவர்செலுத்துங்
கொற்றநெடுவாளிகள்குறைந்துழியெழுந்தீப்
பற்றியதுபாரிடைபகிர்ந்தவரைமுற்றும்
வற்றியவளக்கரும்வறந்துளதுகங்கை. (ககூரு)

தார்கெழுவுவேற்படைதடக்கையுடையோனுஞ்
சூரனுமிவாறமரியற்றுதொழில்காணு
வீரமடமாதுளம்வியந்திவர்தமக்கு
ளாரிடைநடத்துமெனவையமொடுநின்றுள். (ககூசு)

ஆளரிதன்முன்னிளவலானைவதனத்துக்
காளைமகிழ்பின்னிளவல்கார்முகமுதைக்கும்
வாளிமழையேயலதுமற்றவர்கடம்மை
நீள்விழியினாற்றெரிகிலார்புடையினின்றோர். (௧௯௭)

நீடுசமரின்னணநிகழ்ச்சியுறுமெல்லை
மேடமிசையூர்பரன்விடுத்தகணையெல்லா
மீடுபடநூறியவனேறிவருமான்றே
ராடுறுபதாகையையறுத்துவிரைந்தார்த்தான். (௧௯௮)

ஆர்த்துவிறல்வால்வளையையம்பவளவாயிற்
சேர்த்தியிசைத்தான்றனதுசீர்த்தியிசைத்தென்ன
மூர்த்தமதுதாழ்க்கிலன்முனிந்துகணைபின்னுந்
தூர்த்துமுருகன்றனதுதோற்றமறைத்திட்டான். (௧௯௯)

மறைத்தபகழித்தொகையைவாளிமழைதன்னாற்
குறைத்தவுணனூர்ந்திடுகொடிஞ்சிநெடுமான்றேர்
விறற்கொடிதனைக்கொடியவெஞ்சரமொரேழா
லறுத்துமுருகன்பரவையாழ்கடலினிட்டான். (௨00)

வேறு.

தானவர்க்குத்தலைவன்றனிக்கொடி, மீனவேலையிலற்றுடன்வீழ்ந்துழிப்
பானுகம்பனெனப்படுபாரிடர், சேனைகாவலன்றெற்றெனநோக்கினான். (௨0௧)

கண்டுசிந்தைகளித்துப்பெருமிதங், கொண்டுகுப்புற்றிசைத்துக்குனித்திடா
வண்டர்போற்றத்தன்னாயிரம்வாயினு, மொண்டிரட்சங்கமொல்லைவைத்தூதினான்.

கானுகம்படுகந்துகத்தேருடைப், பானுகம்பன்பனிமதியாயிர
மானுகம்பவைவாய்வைத்திசைத்தலுந், தானுகம்பலதங்கிற்றவ்வோசையே. ௨0௩

பாய்பெரும்புகழ்ப்பானுகம்பன்வளை, யாயிரங்களுமார்த்திடவண்டர்த
நாயகன்றன்விறல்கண்டுநாரணன், றூயசங்குமுழங்கிற்றுத்துண்ணென. (௨0௪)

போதமங்கதிற்புங்கவர்யாவருஞ், சோதிவேற்படைத்தூயவனேறுதேர்
மீதுகேதனமில்லைவியன்கொடி, யாதிநீயென்றழலினையேவினார். (௨0௫)

ஏவலோடுமெரிதழற்பண்ணவன், வாவுகுக்குடமாண்கொடியாகியே
தேவதேவன்றிருநெடுந்தேர்மிசை, மேவியார்த்தனனண்டம்வெடிபட. (௨0௬)

படியிலாதமர்பண்ணவன்றேர்மிசைக், கொடியதாய்நின்றுகுக்குடங்கூயது
கடியதானவர்கங்குல்புலர்ந்திடும், விடியல்வைகறைவேலையைக்காட்டல்போல்.()

சங்கமோடுதபனனுமார்த்தலு, மங்குல்வண்ணத்துமாயவனார்த்தனன்
பங்கயாசனப்பண்ணவனார்த்தனன், றிங்களார்த்ததுசெங்கதிரார்ப்பவே. (௨0௮)

மறலியார்த்தனன்மாருதங்கட்கெலா, மிறைவனார்த்தனனிந்திரனார்த்தன
னறைகடற்கரசானவனார்த்தனன், குறைவில்செல்வக்குபேரனுமார்த்தனன். ()

ஆர்த்தவோசைபோயண்டத்தைமுட்டியே,சூர்த்தநோக்குடைச்சூரபன்மன்செ
விச், சீர்த்துளைக்குட்செறிதலுந்தேவரைப், பார்த்தனன்கடுவுண்டன்னபான்மை
யான். (௨௧0)

மாறிலென்முன்வருவதற்கஞ்சியே, பாறுபோன்றுபழுவத்துலைந்துளார்
தேறிவந்துதெழித்தனரென்முனு, மாறுமாமுகனாற்றல்கொண்டேகொலாம். ௨௧௧



Digitized By Roja Muthiah Research Library

நன்றுநன்றிதுநான்முகனுதியா, நின்றதேவர்நிலையழித்தொல்லையிற்
கொன்றுபின்னர்க்குமரனைவெல்வனு, லென்றுசீறினன்யாரையுமெண்ணலான்.()

இருக்கமைந்தனிகலிவண்விண்ணிடைச், செருக்குதேவர்திறலினைச்சிந்துவா
னருக்கனோடியவந்தரத்துய்க்குதி, தருக்குதேரினைச்சாரதிநீயென்றான். (௨௧௩)

மற்றிவ்வாறுவலவனைநோக்கியே,சொற்றகாலைத்தொழுதெந்தைநன்றெனுப்,பொ
ற்றைபோலும்பொலன்மணித்தேரினை, வெற்றியாகெனவிண்மிசைத்தூண்டினான்.

பாகன்றூண்டியபாண்டிலந்தேரெழீஇ, மேகங்கீண்டுமிசைப்படுசூறையி
னுகங்கீறியமரர்களீண்டிய, மாகஞ்சென்றதுவானிழிந்தென்னவே. (௨௧௫)

சென்றதேரொடுசேணிடைப்புக்குளான், குன்றமன்னகொடுஞ்சிலைகோட்டியே
துன்றுதேவர்தொகையிரிந்தோடுற, மன்றவாளிமழைகளைவீசினான். (௨௧௬)

வீசுகின்றுழிவிண்ணவர்மேற்சர, நீசன்விட்டிடுநீர்மையைநோக்கியே
யீசன்மாமகனீண்டுநின்றெண்ணிலா, வாசுகங்களுய்த்தங்கவைசிந்தினான். (௨௧௭)

வேறு.

மற்றவைதுணித்தபின்வடிக்கயிறுமுட்கோல்
பற்றியதடக்கையுளபாகுதனைநோக்கிக்
கொற்றவயிறூண்டியொருகுன்றைவெளிகண்டோன்
றெற்றெனவிண்மேனமதுதேர்விடுதியென்றான். (௨௧௮)

என்னலுமிறைஞ்சியிரலைப்பரியின்மேலோன்
பொன்னுலகுபாருலகுபுக்கெழுவதென்ன
மின்னின்மிளிர்தேரதனைவிண்மிசைகடாவி
நன்னெறிசெலாவவுணர்நாயகன்முனுய்த்தான். (௨௧௯)

வையநெடுவானமிசைவல்லைபுகுமெல்லை
யையனிமையோர்களயர்ந்தோடுவதுநோக்கி
மையலிர்புலம்பலிர்நடுங்கலிர்களென்றோர்
செய்யகரமேந்திமுருகன்கருணைசெய்தான். (௨௨0)

கந்தன்மொழிவானவர்கணத்தவர்கள்கேளா
வெந்தையிவண்வந்திடலின்யாமுயிர்படைத்தே
யுய்ந்தனமெனுவிரைவிலோடுவதுநீங்கிச்
சிந்தைமகிழ்வத்தொடுதிகந்தமுறநின்றார். (௨௨௧)

நின்றிடலும்வெவ்வவுணனீர்மையதுநோக்கிப்
பின்றிடுவராம்பிரமனேமுதலதேவ
ரொன்றொர்சிறுவன்கொலெலையுற்றெதிருநீரா
னன்றிதெனவேவெகுளிகொண்டுநகைசெய்தான். (௨௨௨)

காய்சினமிகுந்தவுணர்காவலனநந்த
மாசுகம்விரைந்துபடராசுகமதென்ன
வீசுதலும்வாளிபலவிட்டவைவிலக்கி
யீசனருண்மாமதலையேற்றிகல்புரிந்தான். (௨௨௩)

சுறுக்கொளமயிர்ப்பொடியுயிர்ப்புவிடுசூரன்
கறைக்கதிரயிற்பொலிகரத்தனிவர்தம்மிற்
செறுத்துடன்வடிக்கணைசெலுத்தியகல்வான
மறைப்பதுமறுக்குவதுமாகிமலைவுற்றார். (௨௨௪)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

விரைந்திருவோர்களும்வியன்கணைமாரிகள்,சொரிந்தனர்பேரமர்தொடர்ந்துசெய்போழ்தினி, லெரிந்ததுமாதிரமிரங்கினர்பாருளர், திரிந்தனசாரிகைசிறந்தவர்தேர்களே. (உஉரு)

கறங்கினம்போல்வனகலஞ்செய்குலாலன,திறங்கொளுமாழிகடிரிந்தனமானுவ, மறங்கெழுசூழ்மைகண்மயங்கினபோல்வன, துறுங்கணைமாரிகள்சொரிந்தவர்தேர்களே. (உஉசு)

பாதலமூழ்குவபாரிடைசூழ்குவ, மாதிரமோடுவவாரிதிசேர்குவ
பூதரமேவுவபூமலரோனகர், மீதினுமேகுவமீளுவதேர்களே. (உஉஎ)

எண்டிசைசூழுமிருங்கடல்பாய்வன, விண்டொடுநேமிவியன்கிரிவாவுவ
கொண்டலிஞாிருள்கொண்டுழிபோகுவ, வண்டமுனேகுவவங்கவரேறுதேர். ()

பெயர்ந்திடுதேருறுபிழம்பவைகாணுபு, தியங்கினர்நான்முகர்தெரிந்திலர்சீருரு
மயங்கினராதவர்மருண்டனர்வானவ, ருயங்கினர்பாருளருலைந்தனர்நாகரே. உஉகூ

முதிர்ந்திடுபோரினர்முழங்கியதேர்செல, வதிர்ந்ததுபாருலகலைந்தனவேலைகள்
பிதிர்ந்தனமால்வரைபிளந்ததுவான்முக, டுதிர்ந்தனதாரகையுகுந்தனகார்களே. ()

வேறு.

தேரிவையிரண்டுமோகித்திகழுமூதண்டமெங்குஞ்
சாரிகைவருதலோடுஞ்சண்முகன்மீதுசெல்லச்
சூரெனுமவுணர்கோமான்றொலையுநாளெழிலிபொங்கி
யாரழன்மழைகான்றென்னவடுசரமாரிதூர்த்தான். (உ௩க)

மழுப்படையநந்தகோடிவச்சிரந்திகழ்முச்சென்னிக்
கழுப்படையநந்தகோடிகப்பணமநந்தகோடி
கொழுப்படையநந்தகோடிகுலிசம்வேலநந்தகோடி
யெழுப்படையநந்தகோடியிடையிடையிடிபோலுய்த்தான். (உ௩உ)

கூற்றுயிர்குடிக்குந்துப்பிற்கொடும்படைமாரிதன்னை
யாற்றலினவுணர்கோமான்விடுத்துழியவற்றையெல்லாங்
காற்றெனப்பகழிதூண்டிமுறைமுறைகடிதிற்சிந்தி
மாற்றினன்றிரிந்தானையன்மூதண்டவரைப்புமுற்றும். (உ௩௩)

இத்திறந்திரிந்தசெவ்வேளிடைதெரிந்தேழொடேழு
பொத்திரந்தன்னைத்தூண்டிப்புகழுறுமவுணர்செம்மல்
சித்திரத்தேருமாவின்றொகுதியுஞ்சிந்திநீக்கக்
கைத்தனுவோடுந்தீயோன்கதுமெனப்புவி * க்கணுற்றான். (உ௩ச)

நாணுடைவரிவில்வாங்கிநண்ணலனஞ்சுபில்கு
மேனுடைவயிரவாளியெண்ணிலதூண்டியேற்பத்
தானுவின்மதலைகண்டுதன்பெருஞ்சிலையைக்கோட்டித்
தூணிகொள்கணையின்மாரிதொடுத்தவைதுணித்துவிட்டான். (உ௩ரு)

துணிப்புறுமெல்லைவல்லேசுடர்க்கணையநந்தகோடி
தணப்பறவிடுத்தலோடுஞ்சண்முகனவற்றையெல்லாங்
கணைப்பெருமழையான்மாற்றிக்காசிபன்றனதுசெம்ம
லணிப்படுதோண்மேற்பின்னுமாயிரம்பகழியுய்த்தான். (உ௩சு)

* புவி - தேர். எனவே வேறொருதேரில் ஏறினான் எனப் பொருள்கொள்க.

Digitized By Roja Muthiah Research Library

ஊழியின்முதல்வன்மைந்தனொராயிரங்கணையுஞ்சூரன்
பாழியம்புயத்துமீதுபடுதலுங்கடிதேயிற்றுச்
சூழுறச்சிதறிற்றம்மாதொலைவிலாவயிரங்கொண்ட
காழ்கிளர்வரைமேல்வீழ்ந்தகன்மழைத்தன்மையேபோல். (௨௩௭)

அந்தமில்வன்மைசான்றவவுணன்மற்றதனைநோக்கி
முந்துறுவெகுளிதூண்டமுறுவலுமுயிர்ப்புந்தோன்ற
வெந்தைதன்மொய்ம்பிற்செல்லவிராயிரம்பகழிவாங்கிச்
சிந்தையிற்கடிதுதூண்டித்தேவருமருளவார்த்தான். (௨௩௮)

உட்டெளிவுற்றோர்காணுமொப்பிலாமுதல்வன்றேண்மேல்
விட்டிடுபகழிமுற்றும்வெந்துவெந்துகளதாகிப்
பட்டனதிசைகண்முற்றும்பரந்தனபரத்தின்மேலோன்
கட்டழலதனான்மாய்ந்தகாமவேள்யாக்கையேபோல். (௨௩௯)

ஆங்கதுகாலைதன்னிலறுமுகம்படைத்தவைய
னீங்கருநெறியாலுய்த்தநெடுஞ்சரமனைத்துமாற்றிப்
பாங்கமர்வயவர்மீதும்பாரிடப்படைகண்மீதுந்
தீங்கணையழுத்தலுற்றான்றேவரையிடுக்கண்செய்தான். (௨௪௦)

தன்னிணைதானேயாகிநின்றிடுந்தனிவேல்வீர
னன்னதோர்தன்மைகண்டோராயிரம்பகழிபூட்டித்
துன்னலன்குனித்தசாபந்துணித்தனன்றுணியாமுன்னம்
பின்னுமோர்சிலையையேந்திப்பெருமுகிலிரியவார்த்தான். (௨௪௧)

இம்பரின்மலைந்தசூரனிம்மெனவருக்கொண்டேகி
யம்பரத்திடையேதோன்றவன்னதுகுமரன்காணா
வும்பரிற்சென்றுதாக்கவோரிறையெதிர்ந்துநின்று
நம்பியொடாடல்செய்வானவிலருமாயைசூழ்வான். (௨௪௨)

விண்ணிடைநின்றசூரன்விரைந்துடன்கரந்துசென்று
மண்ணிடைமீட்டுஞ்செல்லமாநிலவரைப்பிற்செவ்வே
டுண்ணெனவந்துவெம்போர்தொடங்கலுந்தோற்றமாற்றிக்
கண்ணகன்றாயநீத்தக்கனைகடலுவெணுனன். (௨௪௩)

ஆயிடைமுருகவேள்சென்றடுசமரியற்றுமெல்லை
மாயையின்மறைந்துசூரன்மாதிரமுடிவிற்றோன்ற
வேயெனவாண்டுஞ்செவ்வேளேகியேநெடும்போராற்றக்
காய்கனலுமிழும்வேலான்கரந்துபாதலத்தினின்றான். (௨௪௪)

ஆறிருதடந்தோள்வள்ளலதுகண்டுபிலத்துளேகி
மாறமரியற்றுமெல்லைவல்லைதன்னுருவமாற்றி
வீறுளசிமையச்செம்பொன்மேருவின்குவட்டினிற்ப
வேறுடைமுதல்வன்மைந்தனிம்மெனவங்கட்சென்றான். (௨௪௫)

மேருவின்சிகரநண்ணிவேலுடைத்தடக்கைவீரன்
பேரமரியற்றத்தீயோன்பின்னருமாண்டுநீங்கி
காரணனுலகிற்றோன்றநம்பியுந்தொடர்ந்துபோந்து
சூரெனுமவுணனோடுதொல்சமராற்றிநின்றான். (௨௪௬)

Digitized By Roja Muthiah Research Library

ஆற்றிடுகின்றகாலத்தவுணர்கோனண்டகோள
மேற்றிகழ்வாயில்செல்லவிமலனுமங்கணேகி
யேற்றெதிர்மலையாவன்னானேறியவிவுளித்தேரைக்
கூற்றுறழ்பகழிதன்னாலட்டனன்கொற்றங்கொண்டான். (௨௪௭)

கந்துகவிசயமான்றேரிற்றனுங்கடுங்கோன்மன்ன
னிந்திரஞாலமென்னுமெறுழ்மணித்தடந்தேர்தன்னைச்
சிந்தனைசெய்தலோடுஞ்சேண்கிளர்செலவிற்றாகி
வந்திடவதன்மேலேறிவல்லைபோர்புரிதலுற்றான். (௨௪௮)

மண்டமர்புரியுமெல்லைவள்ளறன்பகழிதன்னா
லண்டமதடைந்தவாயிலடைத்ததுமப்பாலுள்ள
தண்டமதெல்லாஞ்செல்லாத்தன்மையுந்தகுவர்கோமான்
கண்டனனன்றாநன்றென்னிறைத்தொழிற்காவலென்றான். (௨௪௯)

இறைத்தொழிலவுணர்செம்மலேந்துதன்சிலையைவாங்கித்
திறத்தொடுமனந்தகோடிசெஞ்சரந்தூண்டியண்ட
நெறிப்படுவாயில்பொத்துநெடுங்கணைக்கதவமுற்று
மறுத்துநுண்டூளியாக்கியம்பரஞ்சுழலவிட்டான். (௨௫௦)

காவலனண்டவாயிற்கணைகளின்கபாடநீக்கி
மாவொடுகளிறுந்தேரும்வயவரும்வரம்பின்றாகி
யோவருநெறியினப்பாலுற்றதன்றானைதன்னைக்
கூவினன்வருகவென்றுகுவவுத்தோள்கொட்டியார்த்தான். (௨௫௧)

ஆர்த்திடுகின்றகாலத்தண்டத்தினப்பானின்ற
தேர்த்தொகைகளிற்றினீட்டந்திறல்கெழுமிவுளிப்பந்தி
சூர்த்திடுமவுணவெள்ளந்துண்ணெனவீண்டையேகிப்
போர்த்தொழின்முயன்றுசெவ்வேள்புடையுறத்தெழித்துச்சூழ்ந்த. (௨௫௨)

நீணுதல்விழியின்வந்தநிருமலக்கடவுடன்னை
யேனோடுமண்டத்தப்பாலிருந்திடுதானைசுற்றச்
சேணுறுநெறிக்கணின்றதிசைமுகன்முதலாந்தேவர்
காணுதலோடுமுள்ளங்கலங்கிமற்றினையசொல்வார். (௨௫௩)

காலமோடுலகமுண்ணக்கனன்றெழுகரியதீயின்
கோலமோவண்டத்தப்பாற்குரைபுனனீத்தந்தானோ
வாலமோவசனிக்கொண்மூவாயிரகோடிசூழ்ந்த
சாலமோயாதோவென்றுதலைபணித்திரியல்போனார். (௨௫௪)

ஆயினகாலைதன்னிலண்டங்கடோறுநின்ற
மாயிருந்தகுவன்றானைவந்துதன்மருங்குசுற்றிப்
பாய்புனன்முகில்கான்றென்னப்படைத்தொகைவீசியார்ப்பத்
தீயுருவானசெம்மல்சிறிதுதன்னாட்டம்வைத்தான். (௨௫௫)

அடலையினலத்தைவீட்டியரும்பெறலாக்கஞ்சிந்தி
யடலையினுணர்வின்றாகுமவுணர்கோன்றானைமுற்று
மடலையினெடுவேலண்ணலழலெழவிழித்தலோடு
மடலையினுருவாயண்டத்தொல்லுருவழித்தமன்னோ. (௨௫௬)

Digitized By Roja Muthiah Research Library

முற்படுமெனிகமுற்றுமுடிதலுமுடிதலின்றி
யெற்படுமெண்டத்தப்பாலீண்டியபதாகினிக்குட்
பிற்படவளப்பில்சேனைபெயர்ந்துமற்றீண்டைதன்னிச்
சிற்பரன்குமரன்றன்பாற்படைமுறைசிதறிச்சூழ்ந்த. (௨௫௭)

பரப்பொடுமிடைந்ததானைப்பரவையைநோக்கியைய
னெருப்புமிழ்தன்மைத்தென்னநெட்டுயிர்ப்பனிலமுந்தி
யுரப்பினன்சிறிதேயற்றாலும்பரிற்குவிந்தபூளைப்
பொருப்பிடையழல்புக்கென்னப்பூழியாயுலகம்போர்த்த. (௨௫௮)

மாட்சியினுலவுசேனைவடிவெலாம்விடுத்துத்தொல்லை
மாட்சியினுயிரேதாங்கிமலைதுமென்றுன்னிப்பின்னுஞ்
சூட்சியின்வளைந்தவாபோற்சோதிவேற்குமரன்றன்பாற்
சூட்சியின்மேவிற்றம்மாதூயநுண்டுகளினீட்டம். (௨௫௯)

அந்தமிறானைமுற்றுமத்தனோருங்காரத்தால்
வெந்துகளாகப்பின்னுமேலையண்டத்துணின்ற
தந்தியும்பரியுந்தேருந்தானவப்படையுமார்த்து
வந்துவந்தயலிற்சூழவரம்பிலாமுதல்வன்கண்டான். (௨௬0)

திருத்தமிழ்மதுரைதன்னிற்சிவன்பொரு * ளிறுக்குமாற்றா
லுருத்திரசரும 0 னாகியுற்றிடுநிமலன்வெம்போ
ரருத்திகொள்கணிச்சிசூலமாழிதண்டெழுவதாகுங்
கரத்தினிற்படைகடம்மைநோக்கியேகழறலுற்றான். (௨௬௧)

---

* சிவன்பொருளென்றது மதுரைச் சோமசுந்தரக்கடவுள் பாண்டியன்பொருட்டு அருளிச்செய்த "அன்பினைந்திணை" என்பது முதலிய அறுபதுசூத்திரத்தையுடைய பொருளிலக்கணநூலை. இது இறையனாரகப்பொருளெனவும், களவியலெனவும் பெயர் பெறும். இதற்குக் கடைச்சங்கப்புலவர்கள் தாங்கள் தாங்கள் உரைத்த உரையே நல்லதென்று மாறுபட்டுச் சோமசுந்தரக்கடவுள்சந்நிதியிற் சென்று, தங்களுக்கு உண்மையை உணர்த்தும்பொருட்டு ஒருபுலவரைத் தரும்படி வரங்கிடப்ப, அர்த்தயாமத்திலே "இவ்வூரில் வைசியர்குலத்திலே ஐந்துபிராயத்தையுடைய உருத்திரசன்மனெனப் பெயர் பெற்ற ஒரூமைப்பிள்ளை இருக்கின்றான். அவன் முருகக்கடவுள்; ஓர்சாபத்தினாற்றோன்றினவன். அவனைக் கொண்டுபோய்ச் சங்கப்பலகையிலிருத்தி உங்களுரையைச் சொல்லுங்கள். மெய்யாகிய உரை கேட்டபோது கண்ணீர் பொழிந்து புளகமடைவன். மெய்யல்லாத உரை கேட்டபோது சும்மாவிருப்பன்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றியது. அது கேட்ட சங்கப்புலவர்கள் அவ்வாறே உருத்திரசன்மரை அழைத்துக் கொண்டுபோய்ச் சங்கப்பலகையிலிருத்தித் தாங்கள் கீழிருந்து தங்கள் தங்கள் உரையை முறையே உரைத்தார்கள். உருத்திரசன்மர் எல்லாருரையையுங்கேட்டுச் சும்மாவிருந்து, இளநாகனாருரையைக் கேட்டபோது ஓரோவிடத்துக் கண்ணீர் பொழிந்து புளகமடைந்தார். பின்பு நக்கீரருரையைக் கேட்டபோது பதந்தோறுங் கண்ணீர் பொழிந்து புளகமுற்றிருந்தார். எல்லாரும் ஆரவாரித்து "இந்நூலுக்கு மெய்யுரை பெற்றோம்" என்று மகிழ்ச்சியுற்றார்கள்.

0 உருத்திரசன்மன் - உருத்திரனால் அடைந்த சன்மத்தையுடையவன். மதுரைச் சோமசுந்தரக்கடவுள் தாம் உபதேசித்தருளிய வேதப்பொருளை விருப்பமின்றிக் கேட்ட உமாதேவியாரை வலையர்மகளாகும்படி சபித்தருளினார். பின்பு அதனை அறிந்து வந்து தமது திருக்கரத்திலிருந்த புத்தகத்தைப் பறித்துக் கடலில் எறிந்த முருகக்கடவுளை மதுரையில் வைசியர்குலத்தில் ஊமையாய்ப் பிறக்கும்படி சபித்தருளினார்.

Digitized By Roja Muthiah Research Library

வென்றியம்படைகாள்கேண்மோவிரைந்துடன்றழுவிநம்பாற்
சென்றிடுமெனிகந்தன்னைச்சென்னெறிபெறுமலப்பா
னின்றிடுபடையையெல்லாநீவிர்பல்லுருக்கொண்டேகிக்
கொன்றிவண்வருதிரென்றுகூறிமற்றிவற்றைத்தொட்டான். (௨௬௨)

ஆதிநாயகன்விட்டுள்ளபடையெலாமநந்தகோடி
சோதியார்கதிருந்தீயும்பணிகளும்போலத்தோன்றி
யேதிலானனிகமாகியிம்பருற்றனவிமைப்பின்
பாதியின்முன்னமட்டுப்பெருவிறல்படைத்தமன்னோ. (௨௬௩)

தூயதோர்குமரற்சூழ்ந்தபடையைமுன்றொலைத்துவீட்டி
யேயினபடையோரைந்துமிம்பரேயொழியநின்ற
வாயிரத்தோரேழண்டத்தகலமுஞ்சென்றுசென்றுங்
கோய்வறவெழுந்ததானைமுழுதுமட்டுலவுகின்ற. (௨௬௪)

ஐவகைப்படைகண்முற்றுமண்டங்கடோறுநின்ற
வெவ்வியவவுணர்த்தேய்த்துவிரைவொடுதிரிதலோடுந்
தெவ்வியலவுணர்மன்னன்செயிர்த்துமற்றிதனைநோக்கி
யிவ்வொருக்ணத்தின்முன்னமிவனுயிருண்பனென்றான். (௨௬௫)

சாற்றியித்தன்மைதன்னைத்தானவர்க்கரசன்முன்னங்
கூற்றுயிர்குடித்தநோன் * றாட்பண்ணவன்கொடுப்பக்கொண்ட
மாற்றருந்திகிரிதன்னைவாங்கினன்வழிபட்டேத்திக்
காற்றினுங்கடிதுசெல்லக்கந்தவேண்மீதுவிட்டான். (௨௬௬)

விட்டிடுதிகிரியாரும்வெருக்கொளவிரைந்துசென்று
கிட்டியகாலைச்செவ்வேள்கிளர்ந்ததோர்பாணிநீட்டி
வட்டணைநேமிதன்னைவருதியாலென்றுபற்ற
வொட்டலனதனைநோக்கியுளந்தளர்ந்துயிர்த்துநின்றான். (௨௬௭)

உண்ணிலாமாயைவல்லவொருத்னித்தேர்மேனின்றே
னெண்ணிலாவுருவங்கொண்டேயிருங்கணைமாரிதூர்ப்பத்
தெண்ணிலாமௌலியண்ணனுதவியசெம்மனேக்கி
நண்ணலானொருவன்மாயநன்றுநன்றென்றுநக்கான். (௨௬௮)

சிறுநகைசெய்துமேலாஞ்சேதனப்பகழிபூட்டி
யறுமுகனவுணர்செம்மலாற்றிடுமாயமுற்று
மிறைதனின்முடித்தியென்றேயேவலும்விரைவினேகி
முறைநெறிபிழைத்தோன்மாயமுற்றொருங்கட்டதன்றே. (௨௬௯)

மாயையினுருவநீங்கவலியழிந்துள்ளமாழ்கித்
தீயவனொருவனாகிச்சேணுயர்தேரினின்று
ளுயதுதெரிந்துவானோராறுமுகத்தவனைப்போற்றிப்
பாய்புனற்கடலினார்த்துப்பனிமலர்மாரிதூர்த்தார். (௨௭0)

தூர்த்தலுந்தேருந்தானுந்துண்ணெனக்கரந்துசூரன்
பேர்த்திடுமண்டகூடப்பித்திகைவாயிலெய்தி
யார்த்தறைகூவிப்புக்காங்கப்புறத்தண்டஞ்செல்லத்
தீர்த்தனுமதனைநோக்கித்தீயனைத்தொடர்ந்துபோனான். (௨௭௧)

* நோன்றல் - சுமத்தல், எனவே, நோன்றாள் என்பதற்குத் தம்மையடைந்தோரைச் சுமக்குந் தாள் எனப்பொருள்கொள்க.

Digitized By Roja Muthiah Research Library

தொடர்ந்துதன்மனத்திற்செல்லுந்தொல்லைமாலிரதத்தோடுங்
கடந்தபேராடன்மிக்ககாசிபன்றளையனின்ற
விடந்தலைப்படலுமன்னுனெந்தையோடிகற்போராற்றி
யடுந்திறன்மாயைகீராலப்புறத்தண்டம்போனுன். (உ௭௨)

இந்நிலையவுணர்கோமானிருநிலத்தண்டமுற்று
மின்னெனப்படர்ந்துதோன்றிவெய்யபோர்விளைத்துநின்று
பின்னருங்கரந்துசெல்லப்பிரானுமவ்வண்டந்தோறுந்
துன்னலன்றனைவிடாதுதொடர்ந்தமரியற்றிப்போனுன். (உ௭௩)

வேறு.

ஆயகாலையயன்முதற்றேவர்க, ணேயமிக்கருரவரைநீங்கிய
சேயினேர்களிற்றேம்பித்திருமக, ணயகன்றனைநோக்கிநவில்ுவார். (உ௭௪)

வலங்கைவாளுடைமாயைதன்மாமகன், பொலன்கொளண்டப்புரைதனுட்போ
யினு, னிலங்குவேற்படையெந்தைதன்போரிடை, விலங்கினுனலனென்றும்விளி
கிலான். (உ௭௫)

மாயையாற்றவும்வல்லவனீண்டொரீஇப், போயதன்மைபுணர்ச்சியதேயலா
லாயின்வேறிலையாதிருமொய்ம்புடைத், தூயன்மற்றதுசூழ்ந்திலன்போலுமால். ()

வாடினுனெனமாற்றலனைத்தொடர்ந், தோடினுனெந்தையொல்லையிற்சூரனைக்
கூடினுன்கொல்குறுகலனுகியே, நாடினுன்கொலறிகிலநாமெலாம். (உ௭௭)

மாகமேனிமிர்மற்றையண்டத்தினுஞ், சேகுலாவியசிந்தையன்றன்னுட
னேகினுனையனென்னினித்தான்விளை, வாகுமோவென்றுமஞ்சுதுமேழையேம். ()

என்றகாலையிலங்கெழிற்பூவைபோ, னின்றமாயவனீண்மலரோன்முதற்
றுன்றும்வானவர்சூழலைநோக்கியே, யொன்றுமன்பொருளப்படவோதுவான். ()

வேறு.

வஞ்சமேதருமவுணர்கோனுற்றலைமதித்தீண்
டஞ்சியஞ்சியேயிரங்கலிரறுமுகத்தொருவன்
செஞ்சிலைத்தனிவன்மையும்வீரமுந்தெரிந்து
நெஞ்சகத்திடையையுறுகின்றதுநெறியோ. (உ௮0)

ஓதியாகியுமுணர்ந்தவர்க்குணரவுமொண்ணு
நீதியாகியுநிமலமதாகியேநிகழுஞ்
சோதியாகியுந்தொழுதிடுமெம்மனோர்க்கெல்லா
மாதியாகியுநின்றவனறுமுகனன்றே. (உ௮௧)

ஈறிலாதமர்பரமனேகுழவியினியல்பா
யாறும்மாமுகங்கொண்டுதித்தானென்பதல்லால்
வேறுசெப்புதற்கியையுமோமேலவன்றன்மை
தேறியுந்தெளிகின்றிலவுமதுசிந்தையுமே. (உ௮௨)

ஐயமெய்தலிராயிரகோடியண்டத்தும்
வெய்யனேகினுந்தொடர்ந்துபோய்வெஞ்சமரியற்றிச்
செய்யவேலவன்றுரந்துவந்திடுந்திளைத்துணையிற்
கையினெல்லிபோற்காட்டுவனீவிருங்காண்டீர். (உ௮௩)

Digitized By Roja Muthiah Research Library

என்றுமாயவன்கழறலுமயன்முதலெல்வரு
நன்றெனத்தெளிவுற்றனரவ்வழிநண்ணா
னொன்றினாயிரகோடியண்டத்தினுமோடி
நின்றுநின்றமராடினனெந்தையைநேர்ந்து. (உஅச)

வெந்திறற்சமராற்றியேயவுணர்கோன்மீட்டு
மிந்தவண்டத்துமகேந்திரவரைப்பில்வந்திறுத்தான்
முந்துநீழலைவிடாதுசெல்வோரெனமுனிந்து
கந்தனுந்தொடர்ந்தவனொடுபோந்தனன்கடிது. (உஅரு)

வேறு.

போந்திடுதன்மைநோக்கிப்புராரிதன்புதல்வனங்க
ளேந்தலைத்தொடர்ந்தானென்னாவிம்பரிலவுணர்தானை
தீந்தழலென்னப்பொங்கிச்செங்கையிற்படைகள்வீசி
யாய்ந்திடுமுணர்வின்மேலாமாதிதன்புடைசூழ்ந்தார்த்தார். (உஅசு)

நாதனுமதனைநோக்கிநன்றிவர்முயற்சியென்னா
வோதினன்முறுவல்செய்யவொன்னலன்றானைதொன்னாண்
மூதெயிலென்னநீறாய்வெந்துடன்முடிந்ததம்மா
தாதைதன்செய்கைமைந்தன்செய்வதுதக்கதன்றோ. (உஅஎ)

ஆனதோர்காலைதன்னிலறுமுகம்படைத்தவண்ண
றாநகையங்கிசெல்லத்துண்ணெனப்பதைத்துவீழ்ந்து
தானவரனிகம்வெந்தசாம்பரின்குன்றைநோக்கி
வானவர்மகிழ்ந்துபூத்தூய்வள்ளலைவழுத்திநின்றார். (உஅஅ)

முருகவிழ்தொடையலான்றன்முறுவலானனிகமுற்றும்
விரைவினுண்டுகளதாகிவீழ்தலுமவுணர்வேந்த
னொருவனுந்தமியனின்றானொண்டமிழ்முனிவனுண்ணத்
திரைகடலின்றித்தோன்றுந்திப்பெருங்கடவுளொத்தான். (உஅகூ)

முன்படைகுமரனங்கண்முறுவலித்திட்டவாறுந்
தன்படையழிந்தவாறுந்தமியன்றானின்றவாறுங்
கொன்படைவீரரோடுகுறட்படையார்க்குமாறுந்
துன்படையவுணன்கண்டாங்குளத்தொடுஞ்சொல்லலுற்றான். (உகூ0)

பின்னுறுதுணைவர்மைந்தர்பேரியலமைச்சரேனோர்
முன்னுறமுடிந்தாரின்றுமுடிவுறாத்தானைமுற்றும்
பன்னிருகரத்துமைந்தன்படுத்தனன்றமியனானே
னென்னிவண்செய்வதென்னாவுயிர்த்தனனெண்ணமிக்கான். (உகூக)

மாயவடன்னைமன்னன்மனத்திடைநினைத்தலோடு
மாயவள்வந்துதோன்றியரும்பெறலாற்றன்மைந்த
நீயொருதமியனாகிநின்றுளந்தளர்ந்தேயென்னைக்
கூயினைமுன்னிற்றென்னைதெரிவுறக்கூறுகென்றாள். (உகூஉ)

அறிந்திடுமாயையிவ்வாறறைதலுங்குமரன்போரின்
மறந்தகுதுணைவர்மைந்தர்மந்திரிதானைமுற்று
மிறந்திடவெஞ்சினேன்யானியாவருமெழுதற்கொத்த
திறந்தனையருண்மோவென்னநகைத்தவள்செப்பலுற்றாள். (உகூங)

அரு

Digitized By Roja Muthiah Research Library

உறுபடைசுற்றந்துஞ்சவொருவனேயாயும்விண்ணோர்
சிறைவிடுத்துய்யுமாறுசிந்தனைசெய்திலாய்நீ
யறுமுகன்றன்னேடின்னுமமர்செயக்குறித்தியாயி
னிறைபெருஞ்செல்வவாழ்க்கைநீங்கினைபோலுமன்றே. (௨௬௪)

பன்னிருதடந்தோள்கொண்டபகவனைப்பாலனென்றே
யுன்னலையவன்கைவேலாலொல்லையிற்படுதிகண்டா
யின்னுயிர்துறக்கநின்றாயென்மொழிகேட்பாயன்றே
சென்னியில்விதியையாவராயினுந்தீர்ந்தாருண்டோ. (௨௬௫)

நின்றிடவனையதன்மைநின்னுளமகிழுமாற்றாற்
பொன்றினரெழுதல்வேண்டிற்புறக்கடற்கொருசாராக
மன்றல்கொளமுதசீதமந்தரகூடமென்றோர்
குன்றுளததனையீண்டேகொணருதிகூடுமென்றாள். (௨௬௬)

இவ்வகையுரைத்துமாயையேகினளேகலோடு
மைவரையென்னநின்றமன்னவர்மன்னன்கேளா
வவ்வைதன்சூழ்ச்சிநன்றாலடுகளத்தவிந்தோர்யாரு
முய்வகையிதுவேயென்னவுன்னினனுவகைமிக்கான். (௨௬௭)

ஆவகையுவகைகொள்ளாவமுதமந்தரங்கொண்டேக
வேவரைவிடுத்துமென்றேயிறைப்பொழுதவுணர்தங்கள்
காவலன்முன்னிமாயக்கடுமுரண்டேரினீங்கித்
தேவியலரிமானேற்றுத்திறலுடையெருத்தம்புக்கான். (௨௬௮)

இந்திரஞாலந்தன்னையிறையவன்விளித்துநீயென்
புந்தியின்விரைந்துசென்றுபுறக்கடன்மருங்கின்மேவி
யந்தமதடைந்தோர்க்காவியளித்திடுமமுதங்கொண்ட
மந்தரகிரியைக்கீண்டுமெற்றிவட்கொணர்தியென்றான். (௨௬௯)

விழுமியமாயமான்றேர்வினவியோர்கணத்தின்முன்ன
மெழுகடலினுக்குமப்பாலிருந்திடுகடலின்சார்போ
யழிவுறுதங்கணின்றவமுதமந்தரத்தைக்கொண்டு
வழிபடர்கதியின்மீண்டுமகேந்திரம்புக்கதன்றே. (௩00)

வேறு.

அக்காலையிலிரதந்தருமமுதத்தனிவரையின்
மெய்க்கால்வரவந்நாள்வரைவெம்பூசலியற்றி
மைக்காலன்மெய்யுயிருண்டிடமடியும்படைமுழுதுந்
தொக்காலமதெழுந்தாலெனத்துண்ணென்றெழுந்தனவே. (௩0௧)

பரியின்றொகைமுழுதுய்ந்தனபனைபோலியநெடுங்கைக்
கரியின்றொகைமுழுதுய்ந்தனகடுந்தேர்த்தொகையீர்க்கு
மரியின்றொகைமுழுதுய்ந்தனவவுணப்படையாகி
விரியுந்தொகைமுழுதுய்ந்தனமெய்யூறதுநீங்கி. (௩0௨)

வடிவற்றுடலழிந்திட்டிடுமுயிரானவுமருமு
மடிகைத்தலமுடிதோண்முதலங்கங்கள்குறைந்தே
முடிவுற்றிடுமுயிரானவுமுளரிக்கனலுண்ணப்
பொடிபட்டிடுமுயிரானவுமெழுந்திட்டனபுவிமேல். (௩0௩)

Digitized By Roja Muthiah Research Library

மிண்டிக்கடிதுயிர்பெற்றெழுவெஞ்சூர்முதலனிக
மெண்டிக்கொடுபுவிபாதலமிருநாற்கடலெங்கு
மண்டிக்ககனத்தேழ்வகையுலகங்களுமல்கி
யண்டத்தனிமுடிகாறுமடைந்திட்டனமிடைந்தே. (௩0௪)

மாதண்டமெழுத்தோமரம்வயிரப்படைவாள்கோல்
கோதண்டமுதற்பல்படைகொடுதானவரனிகம்
வேதண்டமெனச்சேணுயர்வேழம்பரிநிரைகண்
மூதண்டம்வெடிக்கும்படிமுழங்குற்றனவன்றே. (௩0௫)

எழுந்தான்வயப்புலிமாமுகனிரவிப்பகையெழுந்தா
னெழுந்தானெரிமுகவெய்யவனிளமைந்தனுமெழுந்தா
னெழுந்தானறத்தினைக்காய்பவனிருபாலருமெழுந்தா
ரெழுந்தாரொருமூவாயிரரேனோர்களுமெழுந்தார். (௩0௬)

சூர்க்கின்றதொல்வடிவங்கொடுதுண்ணென்றெழுகின்றோர்
பார்க்கின்றனரனிகங்களைப்பகுவாய்திறந்திடிபோ
லார்க்கின்றனர்தமதாடலையறைகின்றனர்நம்மேற்
போர்க்கின்றுவந்தனர்யாரெனப்புகல்கின்றனரிகலால். (௩0௭)

ஈடேற்றிடுசமரெல்லையிலிடையுற்றிடுபடைக
ளூடேற்றிவணெடுத்திட்டனர்நறையுற்றிடுதும்பை
சூடேற்றிடுமணிமாமுடிச்சூரன்புடைதன்னிற்
கூடேற்றனர்வெம்போர்செயுங்குறிப்புற்றனரன்றே. (௩0௮)

வேறு.

உய்ந்திவர்யாவருமொல்லையெழுந்தே, யந்தமில்சேனையொடார்த்திடுகாலை
யிந்திரஞாலமெனப்படுமான்றேர், வந்தததானவர்மன்னவன்முன்னம். (௩0௯)

பொற்றையினோடுபொலன்கெழுமான்றே, ருற்றதுமன்பினருய்ந்தெழுமாறு
மிற்றபதாதியிரைத்தெழுமாறுந், தெற்றெனமாயவள்செம்மறெரிந்தான். (௩௧0)

மகிழ்ந்தனனார்த்தனன்வானவர்தம்மை, யிகழ்ந்தனன்விம்மிதமெய்தினன்யா
யைப், புகழ்ந்தனன்மேனிபொடித்தனனெஞ்சந், திகழ்ந்தனனன்னவைசெய்தன
னன்றே. (௩௧௧)

உந்திநிரப்புறுமுண்டியதின்றி, மூந்திநிரப்பிடைமூழ்கினன்வல்லே
வெந்திறலாளிவியன்றவிசேறி, யிந்திரநல்வளமெய்தியதொத்தான். (௩௧௨)

ஓங்கியசென்னியுயர்ந்தனமொய்ம்பு, வீங்கியதாளுடன்மிக்குமதர்ப்புத்
தேங்கியசிந்தைசிலிர்த்தவுரோம, மாங்கவனெய்தியதாரறைகிற்பார். (௩௧௩)

வஞ்சனிதந்திடுமைந்தனிவ்வாற்று, னெஞ்சமகிழ்ந்தவணின்றிடுகாலை
நஞ்சமெழுந்திடுநாள்கொலிதென்றே, யஞ்சிநடுங்கினரண்டர்களெல்லாம். (௩௧௪)

பொன்னகர்வாழ்க்கைபுவித்திசைவாழ்க்கை, பின்னுறுகின்றபெரும்பதவாழ்க்
கை, யெந்நகர்வாழ்க்கையுமெய்தியவின்னே, யொன்னலர்கொல்லுமுன்னோடுது
மென்றார். (௩௧௫)

ஊர்ந்திடுமூர்திகளோர்புடைதம்பாற், சார்ந்தவரோர்புடைதாமொருபாலாய்ச்
சேர்ந்திடுகைப்படைசிந்திவிண்ணோர்கள், பேர்ந்திரிகின்றனர்பின்னதுநோக்கார்.

Digitized By Roja Muthiah Research Library

கிள்ளைபுறுமயில்கேழ்கிளரன்னம், பிள்ளைமணிக்குயில்பேரிசையாந்தை
கள்ளுணும்வண்டுகரண்டமதாதிப், புள்ளுருவங்கொடுவானவர்போனார். (௩௧௭)

அங்கதுநோக்கியடற்கணவீரர், மங்கியதானையுமாண்டுளர்யாரு
மிங்கெழுகின்றனர்யாமிவண்வீந்தாஞ், சங்கையிலென்றுதளர்ந்தலைவுற்றார். ௩௧௮

இலக்கருமெண்மருமேந்தனுநோக்கி, யலக்கணுமச்சமுமற்புதநீருங்
கலக்கமும்வெய்யகடுஞ்சினமுங்கொண், டுலக்கனலன்னவுயிர்ப்பொடுநின்றார். ()

வேறு.

வென்றிகொண்டவேற்குமரனிவ்விளைவெலாநோக்கி
நின்றவொன்னலன்சூழ்ச்சியும்வலவைசொன்னெறியுங்
குன்றின்வன்மையுமுய்ந்தெழுபரிசனர்குழுவு
நன்றுநன்றெனக்கையெறிந்தழலெழநகைத்தான். (௩௨0)

ஆனகாலையிலரிமுகனலரிதன்பகைஞ
னேனைமைந்தர்களறத்தினைவெகுண்டிடுமேந்தல்
சேனைகாவலர்யாவருஞ்சூரன்முன்சென்று
மானவீரமோடிறைஞ்சிநின்றினையனவகுப்பார். (௩௨௧)

எந்தைநீயிவணிற்குதியாமெலாமேகிக்
கந்தவேளுடனவன்படைவீரரைக்கடிந்து
சிந்தராகியபூதர்தந்தொகையையுஞ்செகுத்து
வந்துநின்னடிவணங்குதும்வல்விரைந்தென்றார். (௩௨௨)

கொற்றவீரர்களிவ்வகையுரைத்தலுங்கொடியோன்
மற்றிவ்வாசகநன்றெனைப்போற்றுவான்வந்தீர்
பற்றலன்பெருவன்மையும்வீரமும்படுத்து
வெற்றியின்றெனக்கருளுதிராலெனவிடுத்தான். (௩௨௩)

விடுத்தகாலையில்விடாதுசூழனிகங்கள்விரவி
யடுத்துவந்திடப்பொள்ளெனவேகியேயார்த்துப்
பிடித்தபல்வகைப்படைகளுமுருமெனப்பெய்து
வடித்தவேற்படைநம்பியையன்னவர்வளைத்தார். (௩௨௪)

தீங்கனற்பெருங்கடவுள்பாற்செறியிருட்டொகைபோல்
வாங்குவிற்கரத்தையனையவுணர்கள்வளைப்ப
வேங்கலுற்றனர்பாரிடரேனையோரெம்மாற்
றுங்குதற்கரிதிப்பெரும்படையெனத்தளர்ந்தார். (௩௨௫)

விறலுடைப்பஃறானையும்வெய்யவர்தொகையு
நொறிலுடைக்கதிகொண்டுசூழ்வுற்றதுநோக்கி
யறுமுகத்தனிப்பண்ணவனுயிர்த்தொகையனைத்து
மிறுதியைப்புரிகடவுண்மாப்படையினையெடுத்தான். (௩௨௬)

அங்கையிற்கொடுசிந்தையால்வழிபடலாற்றிச்
சிங்கமாமுகனுதியாமவுணர்தந்திறத்தைச்
சங்கையின்றியேநின்றிடுதானைகடம்மை
யிங்குவல்லையிலடுதியாலெனவிடுத்திட்டான். (௩௨௭)

Digitized By Roja Muthiah Research Library

விடுத்தகாலையிற்கட்செவிநிரைகளும்விடமூ
மிடிக்குழாங்களுமுருத்திரருக்களுமெரியுங்
கடற்பெருங்கணத்தொகுதியுமளவிலாக்கடவுட்
படைக்கலங்களுமாய்விரிந்தது சிவன்படையே. (௩௨௮)

இன்னதன்மையாலரன்படைமூதண்டமெங்குந்
துன்னியார்த்தெழீஇத்துண்ணெனச்சென்றுசூழ்வுற்று
முன்னருய்ந்தெழுமவுணர்தம்படையெலாமுருக்கி
யொன்னலன்றமர்யாரையுமொருங்குகொன்றதுவே. (௩௨௯)

முந்துவெய்யசூர்ப்பரிசனத்தொகையெலாமுருக்கி
யிந்திரப்பெருஞாலமாந்தேர்மிசையிருந்த
மந்தரப்பெருங்கிரியினைத்துகளெழமாய்த்துக்
கந்தவேள்புடைமீண்டதுசிவன்படைக்கலமே. (௩௩0)

அரிமுகத்தவனுதவன்றனைமுனமழன்றே
னெரிமுகத்தவன்வச்சிரமொய்ம்பனூற்றிருவர்
முரண்மிகுத்தமூவாயிரரறப்பகைமுதலோர்
விரிகடற்படைவெற்பொடுமுடிந்தவண்வீழ்ந்தார். (௩௩௧)

தன்மையங்கவையாவையுங்கண்டனன்றளர்ந்தான்
வன்மைநீங்கினன்கவன்றனனிரங்கிமெய்மறந்தான்
புன்மையாயினனுயிர்த்தனன்செயிர்த்தனன்புலர்ந்தான்
றொன்மைபோலவேதமித்தனன்றுணையிலாச்சூரன். (௩௩௨)

கண்டகன்படைமுற்றொருங்கிறந்ததுகாணூ
வெண்டொகைப்படுபூதருமேனைவீரர்களு
முண்டகந்தனிலிருந்திடுபுங்கவன்முதலா
மண்டர்யாவருந்துயரொரீஇயுவகைபெற்றார்த்தார். (௩௩௩)

அழுந்துமாரிருளொருவிவிண்மிசைதனிலடைவோர்
கழிந்ததோரிடையூற்றினன்மீட்டுமக்கதியில்
விழுந்ததேயெனத்துன்பொடுநின்றனன்விளிவுற்
றெழுந்ததானையையிழந்திடுமவுணருக்கிறைவன். (௩௩௪)

அனையதன்மையினின்றிடுமவுணர்கோனூற்றச்
சினமதெய்தியென்படையெலாஞ்சிதைத்தபாலனையுந்
தனிமைசெய்துபின்வெல்வனென்றுளங்கொடுதழற்கண்
முனைவனல்கியதேரினைநோக்கியேமொழிவான். (௩௩௫)

கொச்சகத்தியற்குதலைவாய்மதலைபாற்குழீஇய
வச்சிரத்தெயிறுடையவெம்பூதரைவயின்சூழ்
கைச்சிலைத்திறல்வீரரைக்கவர்ந்துபோயண்டத்
துச்சியிற்கொடுவைத்தனையிருத்தியென்றுரைத்தான். (௩௩௬)

உரைத்தகாலையினன்றெனவினவியேயோடித்
திருத்தகுந்திறல்வாகுவைமுதலினோர்திறத்தைக்
கிருத்திமப்பெருந்தானையைக்கிளையொடும்வாரிக்
கருத்தைமாமயல்செய்ததுகைதவன்கடுந்தேர். (௩௩௭)

Digitized By Roja Muthiah Research Library

கையர்தன்மையிற்கடற்படைமுழுவதுங்கவர்ந்து
மையல்சிந்தையிற்செய்துதன்வயினிடைத்தாங்கி
யொய்யெனச்சென்றுமூதண்டகோளகையுழிப்போய்
வெய்யவன்பணியாற்றியாண்டிருந்ததுவியன்றேர். (௩௩௮)

நிமலனவ்வழித்தானையம்பெருங்கடனீங்கத்
தமியனின்றனனுங்கதுதகுவர்கோன்காணு
நமதுதேர்வலிநன்றெனவுவகையானகைத்தா
னமரரச்செயனோக்கியேபின்னருமயர்ந்தார். (௩௩௯)

சூரிடத்துறுசூழ்ச்சியுந்துணைவர்கடம்மைப்
பாரிடத்தொடுமுகந்தெழீஇமாயையிற்படர்ந்த
தேரிடத்தியல்வன்மையுமாங்ஙனந்தெரிந்தா
னேரிடப்பிறரின்றியேதமியனுநெடியோன். (௩௪௦)

கண்டுசீறியோர்கார்முகம்வாங்கியேகடிதோர்
திண்டிறற்கணைபூட்டிநஞ்சேனையைப்பற்றி
யண்டகோளகைபுக்குறுமடுமுரண்டேரைக்
கொண்டுவல்லையின்வருகெனவிடுத்தனன்குமரன். (௩௪௧)

விடுந்தனிக்கணைவேலெனச்சென்றுவில்வீசி
யிடந்திகழ்ந்திடுமேழ்வகையுலகமுமிமைப்பிற்
கடந்துமற்றுளபதங்களுநீங்கியோர்கணத்திற்
றொடர்ந்துமூதண்டகோளகைபுகுந்ததுதுன்னி. (௩௪௨)

துன்னிவெஞ்சரமாயமான்றேர்வலிதொலைச்சி
யன்னதைக்கொணர்ந்தொல்லையின்மீண்டுளதம்மா
மின்னுலாய்நிமிரெழிலியைவிண்ணினும்பற்றி
யிந்நிலத்தினிற்கொடுவருமாருதத்தியல்போல். (௩௪௩)

வேறு.

வெந்திறனெடுங்கணைமீண்டுஞாலமே, லிந்திரஞாலமாமிரதத்தைக்கொடு
கொந்தவிழ்மாலைவேற்குமரன்றன்முனம், வந்ததுவானவர்வழுத்தியார்ப்பவே. ()

முப்புரமுடித்தவன்முருகன்றன்கணை, யிப்புவிவருதலுமிலக்கத்தெண்மரு
மொப்பருமிளவலுமொல்லென்பூதருங், குப்புறலுற்றனர்கொடியன்றேரினும். ()

குதித்தனர்புடவியிற்குமரவேளிரு, பதத்திருமலர்தனைப்பணிந்துபன்முறை
துதித்தனர்புடையராய்த்துன்னிநின்றனர், கதித்திடுபேரருட்கடலின்மூழ்கியே. ()

ஆவதோர்காலையிலகிலம்யாவுமா, மூவிருமுகனுடைமுக்கணான்மகன்
வாவியல்வனப்புடைமாயத்தேர்தெரீஇத், தேவர்கள்பரசுறவினையசெப்புவான். ()

தொல்லையில்வரம்பெறுசூரன்றன்புடை, செல்லலையாங்கவன்முடிகைதின்னமான்
மல்லலந்திருவுடைமாயத்தேரைநீ, நில்லிவணென்றனனிகரிலானையான். (௩௪௮)

ஆண்டதுவினவுறுவவுணர்கோன்புடை, மீண்டிடலஞ்சியேமேலைவன்மைபோய்
மாண்டிடல்பிறப்பிலான்மதலைமாடுறப், பாண்டிலந்தேரதுபணியினின்றதே. ௩௪௯

அண்டமதடைந்ததேரையன்வாளியான், மண்டலமிழிந்துதன்மருங்குறுதது
மெண்டகுபூதரும்யாருமீண்டதுங், கண்டனனவுணர்கோன்கனலிற்சீறினான். ()

அன்னதுகாண்டலுமவுணனுங்கொரு,கொன்னெடுஞ்சிலையினைக்குனித்துவல்லையிற்
பன்னிருகரமுடைப்பண்ணவன்மிசை, மின்னிகர்பகழிகண்மீட்டும்வீசினான். ()

மாசறுகங்கைதன்மதலையவ்வழிக், காய்சினங்கொண்டொருகார்முகம்வளைஇ
யாசுகமாரிபெய்தவுணர்கோமகன், வீசியகணையெலாம்விலக்கினனரோ. (கூருஉ)

கையனுமத்துணைகாய்சினங்கொளீஇ, யொய்யெனவெந்தைதேருய்க்கும்வன்
மையோன், மெய்யிடமெங்கணும்வெளியுருவகை, செய்யனபகழிகள்செறித்துப்
போர்செய்தான். (கூருங)

பொருந்தலன்கணைபடப்புலம்பிக்காற்றினோன், வருந்தினன்மயங்கினன்மாக்க
டேண்டல, னிருந்தனன்வறிதவனியற்கையாவையுந், தெரிந்தனன்குமரவேளருளின்
செய்கையான். (கூருச)

கண்டிடுமுருகவேள்கணைகளாயிரம், விண்டொடர்செலவினால்விடுத்துவெய்யசூர்
கொண்டிடுசிலையினைக்குறைத்துப்பல்பெருந், துண்டமதாக்கினனமர்துள்ளவே.

வேறு.

கைச்சிலைமுரியச்சூரன்கண்ணுதற்பெருமான்றந்த
முச்சிகைப்படையொன்றேந்திமுட்டுங்குலையூர்திதனை
யுச்சியினீபஞ்சூடுமுலருடையொருவனூர்ந்த
வச்சுறுதடந்தேர்முன்னரணுறத்தூண்டிச்சென்றான். (கூருசு)

தூண்டியவரிமானேறுசூரனதுளத்திற்போந்து
மாண்டகுதனதுதீயவள்ளுகிர்க்கரத்தாலெந்தை
பாண்டிலந்தேரையாற்றும்பரித்தொகைபதைப்பமோதி
யாண்டயனின்றபூதரலமரவார்த்ததன்றே. (கூருஎ)

அன்னதுபொழுதுதன்னிலரிமிசைச்சென்றசூரன்
றன்னுடைவலங்கைகொண்டதனிப்பெருஞ்சூலந்தன்னைப்
பன்னிருதடந்தோள்கொண்டபகவன்மேற்றிரித்துவீச
மின்னெனநிலவுகான்றுவிண்வழிப்படர்ந்ததன்றே. (கூருஅ)

நீடியசூலஞ்செல்லநிமிர்ந்தனவெழுந்துசெந்தீக்
கூடினவசனியீட்டங்குழீஇயினபடையின்கொள்ளை
யாடியல்கணங்களீண்டியார்த்தனவதனைநோக்கி
யோடினரமரரானோருலகெலாம்வெருவிற்றம்மா. (கூருகூ)

அண்ணலுமதனைநோக்கியாயிரகோடிவாளி
கண்ணகன்சிலையிற்பூட்டிக்கதுமெனவெதிர்தந்துய்ப்பத்
துண்ணெனவவற்றையெல்லாஞ்சூலவேறுணித்துவீட்டி
நண்ணலன்வெகுளித்தீயினுருவெனநடந்ததன்றே. (கூசுO)

நடத்தலுமுகமாறுள்ளோனானநாயகனீர்துள்ள
படைத்திறல்வன்மையுன்னிப்பாணியொன்றதனின்மேவி
யடுத்திடுகுலிசந்தன்னையடையலனுய்த்தசூலம்
பிடித்தனைவருதியென்றுபேசினன்செல்லவிட்டான். (கூசுக)

விட்டிடுகின்றவெல்லைவியன்பெருங்குலிசமேகி
நெட்டழற்சிகைமீக்கான்றுநிமிர்ந்திடுசூலந்தன்னைக்
கிட்டுதலோடும்பற்றிக்கிளர்ந்தமுத்தலையுங்கவ்வி
யொட்டலன்சிந்தையுட்கவொய்யெனமீண்டதன்றே. (கூசுஉ)

Digitized By Roja Muthiah Research Library

முத்தலைப்படையைக்கொண்டுமுரண்மிகுகுலிசஞ்செவ்வேள்
கைத்தலமுய்த்துத்தானுங்கதுமெனவிருந்ததம்மா
பைத்தலைப்பாந்தள்போற்றும்பருவரைச்சிகரமூன்று
மித்தலப்புணரிதன்னிலிடுமெருத்தியற்கையேபோல். (௩௬௩)

ஆண்டதுகாலைதன்னிலறுமுகத்தையன்கையிற்
றாண்டியகுலிசத்தோடுசூலமும்வருதலோடுங்
காண்டகுமமரரெல்லாங்கரதலமுச்சிகூப்பி
யீண்டிவன்றன்னையட்டேயெமையளித்திடுதியென்றார். (௩௬௪)

என்னலுமெந்தைகேளாவிராயிரம்பகழிபூட்டி
யொன்னலனூர்ந்துசெல்லுமொருபெருமடங்கலேற்றின்
சென்னியிலழுத்தலோடுஞ்சேண்கிளர்ந்தரற்றிவீழ்ந்து
தன்னுயிரொல்லைவீந்துதரையிடைப்பட்டதன்றே. (௩௬௫)

ஊர்தியதிறந்துவீழவொருதனிச்சூரன்காணாப்
பார்தனிற்பாய்ந்துநின்றுபராபரன்செம்மல்கையிற்
கூர்தருசூலம்போனகொள்கையுந்தெரிந்துபின்னாட்
சேர்தருவடவையென்னச்செயிர்த்திவைசிந்தைசெய்வான். (௩௬௬)

தேரொடுபடையைவௌவித்திறலுடைமடங்கல்சிந்தி
நேரலன்வலியனேபோனின்றனனையன்றன்னைச்
சாரதர்தொகையையேனைத்தலைவர்கடம்மையெல்லா
மோருருக்கொண்டியானேவிழுங்குவனொல்லையென்றான். (௩௬௭)

என்றிவைமனத்திலுன்னியிணையறுமாயைநீரா
னின்றுளவவுணர்செம்மனேமியம்புள்ளேபோல
வொன்றொருவடிவமெய்தியொலிதிரைக்கடலினார்த்துத்
தன்றுணைச்சிறகர்பெற்றதனிப்பெருங்கிரிபோலுற்றான். (௩௬௮)

கறையடித்தந்திசிந்துங்காய்சினவரிமேலுய்க்கு
நறையடிக்கமலத்தையைஞாட்பிடையாடற்கொத்த
பறையடித்திட்டதேபோற்படிமகளுடலம்விள்ளச்
சிறையடிக்கொண்டுதீயோன்சேணிடையெழுதலுற்றான். (௩௬௯)

மண்ணிடைவரைப்புமுற்றுமணிச்சிறையதனான்மூடி
விண்ணிடைப்பரிதியொள்வாள்விலக்கியேசுழலும்வேலைக்
கண்ணிடைப்பெருமீன்குப்பைகவர்ந்திடவூக்கிற்றென்னத்
துண்ணெனப்பூதர்தானைச்சூழல்புக்கெறியுமாதோ. (௩௭௦)

அடித்திடுஞ்சிறகர்தன்னாலளவையில்பூதர்தம்மைப்
பிடித்திடும்புலவுநாறும்பெருந்தனிமூக்கிற்குத்தி
மிடற்றிடைச்செறித்துமெல்லவிழுங்கிடும்விறல்வேலண்ணல்
கொடித்தடந்தேரைச்சூழுங்கொடியபுள்வடிவக்கூற்றம். (௩௭௧)

சுற்றிடுங்குமரன்றேரைத்தூண்டியவலவன்றன்னை
யெற்றிடுங்கொடிஞ்சியெஞ்சவிறுத்திடும்பரிகடம்மைக்
குற்றிடுமூக்கிற்சென்னிகொய்திடுங்குழீஇயவீரர்ப்
பற்றிடும்படைகண்முற்றும்பறித்திடுமுறித்துவீசும். (௩௭௨)

Digitized By Roja Muthiah Research Library

இத்திறமவுணர்செம்மலிருஞ்சிறைப்புள்ளதாகி
யத்தலைக்கறங்கிவீழ்வுற்றந்தரந்திரிதலோடு
முத்தியையுதவுநோன்றாண்மூவிருமுகத்தன்காணுக்
கைத்தலம்புடைத்துநக்குநன்றிவன்கற்பிதென்றான். (௩௭௩)

எறித்தருசுடர்வேலண்ணலிம்மெனவெகுண்டுபோரி
னிறுத்தியமேருவென்னநிமிர்ந்ததோர்வரிவில்வாங்கி
விறற்கணையநந்தகோடிமிசைமிசைக்கடிதுபூட்டித்
திறத்தியல்புள்ளாய்ச்சூழுமவுணன்மேற்செல்லவுய்த்தான். (௩௭௪)

நெறித்திகழ்பகழிமாரிநிமலன்விட்டிடலும்வெய்யோன்
சிறைப்புடைக்கொண்டுபாங்கிற்சிந்திடவவற்றைமோதிக்
குறைத்திடுந்துண்டந்தன்னாற்கொய்திடுந்தாளிற்பற்றி
முறித்திடுங்கிளர்ந்துவானமுழுவதுஞ்சுழன்றுசெல்லும். (௩௭௫)

வேலைகளெல்லைமுற்றும்படர்ந்திடும்விராவிமேவு
ஞாலமதகலமுற்றும்படர்ந்திடுநாகர்வைகும்
வாலியவுலகமுற்றும்படர்ந்திடும்வந்துபூத
சாலமதெறிந்துகவ்வித்தலைத்தலைமயங்கிச்செல்லும். (௩௭௬)

சூரன்மற்றினையவாற்றாற்சுலாய்க்கொடுதிரிதலோடும்
பூரணனதனைக்காணுப்புள்ளெனப்பெயர்வான்றன்னைத்
தேரொடுந்தொடர்ந்துகோறல்பழியெனச்சிந்தைசெய்து
வாரணமுயர்த்தோன்றன்னைநோக்கினன்வானோர்தம்முள். (௩௭௭)

இந்திரனனையகாலையெம்பிரான்குறிப்புந்தன்மே
லந்தமிலருள்வைத்துள்ளதன்மையுமறிந்துநோக்கிச்
சுந்தரநெடுங்கட்பீலித்தோகைமாமயிலாய்த்தோன்றி
வந்தனன்குமரற்போற்றிமரகதமலைபோனின்றான். (௩௭௮)

நின்றிடுமஞ்ஞைப்புத்தேணெடுநிலங்கிழியமேருக்
குன்றமும்புறஞ்சூழ்வெற்புங்குலைந்திடக்கரிகள்வீழ
வன்றிரையளக்கர்நீத்தம்வறந்திடப்பணிகளஞ்சத்
தன்றுணைச்சிறகான்மோதியினையனசாற்றலுற்றான். (௩௭௯)

ஐயகேளமரரெல்லாம்வழிபடவளியன்றன்பாற்
செய்யபேரருளைவைத்தாயாதலிற்சிறுமைதீர்ந்தே
னுய்யலாநெறியுங்கண்டேனுன்னடிபரிக்கப்பெற்றேன்
பொய்யுலாமாயவாழ்க்கைப்புன்மையுமகல்வன்மன்னோ. (௩௮0)

அல்லல்செய்தெமரையெல்லாமருஞ்சிறைப்படுத்திவீட்டிப்
பல்வகையுலகையாண்டவவுணர்கோன்பறவையாக்கை
செல்லுழிச்சென்றுசென்றுசெருவினையிழைத்துவெல்வா
னெல்லையிலடியேன்றன்மேலேறுதியூர்தற்கென்றான். (௩௮௧)

என்னலுமுளத்திற்செல்லுமிவுளிமான்றேரினீங்கிப்
பன்னிருநாட்டத்தண்ணல்படர்சிறைமயூரமாகி
முன்னுறுமகவான்றன்மேன்மொய்ம்புடன்புக்குவைகி
யொன்னலன்செலவுநோக்கியும்பரினூர்தலுற்றான். (௩௮௨)



Digitized By Roja Muthiah Research Library

ஆறுமாமுகத்தெம்மண்ணலசனிபோலகலியார்க்கு
மாறிலாமயூரமென்னும்வயப்பரிதனைநடாத்தி
யீறுசேர்பொழுதிற்சூழுமெரியினையடுவான்முன்னிச்
சூறைமாருதஞ்சென்றென்னவவுணனைத்தொடர்ந்துசூழ்ந்தான். (௩௮௩)

ஆகியபொழுததன்னிலாழியம்புள்ளாய்த்தோன்றி
மாகமதுலவுகின்றமாற்றலனதனைநோக்கிச்
சீகரவளக்கரென்னத்தெழித்துமேற்சென்றுதாக்கக்
கேகயவரசன்றானுங்கிடைத்தமர்புரிதலுற்றான். (௩௮௪)

நிறங்கிளர்பசலைத்துண்டநீட்டியேயாக்கைமுற்று
மறங்கொடுகீண்டுசெந்நீர்வாய்ப்படக்கவ்விவாங்கிப்
புறங்கிளர்சிறைகடம்மாற்புடைத்துவெங்காலிற்றாக்கிப்
பிறங்குபுள்ளுருவமானோரிவ்வகைபெரும்போர்செய்தார். (௩௮௫)

இத்திறம்பொருதகாலைப்பிணிமுகத்தேந்தறன்னைப்
பைத்தலையுடையதூவிபறித்திடாவதனமுற்றுங்
குத்திவெங்குருதிவீட்டிக்குருமணிக்கலாபமீர்த்து
மெய்த்துயர்புரிந்தானேமிப்புள்ளுருக்கொண்டவெய்யோன். (௩௮௬)

அச்செயன்முருகன்காணாவாரழலென்னநக்குக்
கைச்சிலையதனைவாங்கிக்கடுந்தொழிலவுணர்மன்ன
னுச்சியின்முகத்திற்காலிலுரத்தினிற்சிறைகடம்மில்
வச்சிரநெடுங்கண்வாளிவரம்பிலதொடுத்துவிட்டான். (௩௮௭)

விட்டிடுகின்றவாளிவெய்யவனங்கமெங்கும்
பட்டிடுகின்றகாலைப்பதைபதைத்துதறிச்சிந்தி
யெட்டுளதிசையும்வானுமிருங்கடலுலகமெங்குங்
கட்டழல்சிந்திச்சீறிக்கறங்கெனத்திரியாநின்றான். (௩௮௮)

திரிந்திடுகின்றகாலைச்செஞ்சுடர்த்தனிவேலண்ணல்
புரந்தரனுருவாய்நின்றபொறிமயினடாத்தியேகி
யரந்தெறுகணைகடுண்டியகிலமுமவுணன்றன்னைத்
துரந்தமரிழைக்கலுற்றான்விண்ணவர்தொழுதுபோற்ற. (௩௮௯)

அத்தகுமெல்லைதன்னினவுணர்களெவர்க்குமேலோ
னெய்த்துளமெலிந்துசாலவிடருழந்திரக்கமெய்தி
மெய்த்தழலென்னச்சீறிவேற்படைகொண்டசெம்மல்
கைத்தலத்திருந்தவில்லைக்கறிப்பதுகருதிவந்தான். (௩௯௦)

வருவதுநிமலன்காணாமலர்க்கரமொன்றில்வைகு
மொருதனியொள்வாள்வீசியொன்னலன்பறவையாக்கை
யிருதுணியாகிவீழவெறிந்தனனெறிதலோடு
மரியயன்முதலாந்தேவரனைவருமாடல்கொண்டார். (௩௯௧)

வேறு.

தாரார்வாகைசூடியவேலோன்றன்கையிற்
கூரார்வாளாற்புள்ளுருவத்தைக்குறைவிக்கச்
சூராம்வெய்யோனண்டமுகட்டைத்தொடவோங்கிப்
பாராய்நின்றான்விண்ணவர்யாரும்பரிவெய்த. (௩௯௨)

Digitized By Roja Muthiah Research Library

ஏழுட்பட்டவாழ்திரைநேமியிடைதூர்த்துத்
தாழ்விற்செல்லுமாதவர்தேரைத்தடைசெய்து
சூழிக்கால்கள்வர்னெறிசெல்லுந்துறைமாற்றிப்
பாழித்திக்கைமூடினனின்றான்படியானோன். (௩௯௩)

ஆறார்சென்னிப்பண்ணவன்மைந்தனதுகாணாச்
சீறாநன்றாற்சூர்புரிமாயத்திறனென்னாக்
கூறாவங்கைச்செஞ்சிலைதன்னைக்குனிவித்தே
யூறார்வெங்கோலேழுதொடுத்தேயுரைசெய்வான். (௩௯௪)

நெடுவானத்தின்காறுமெழுந்தேநிமிர்வெய்தி
முடிவான்வெய்யோன்பாரகமாயென்முன்னின்றான்
கடலேழென்னுந்தன்மையினீவிர்கடிதேகி
யடுவீரென்றேவிட்டனன்யார்க்குமறிவொண்ணான். (௩௯௫)

ஒற்றைச்செவ்வேலோன்விடுவாளியுலகெல்லாஞ்
சுற்றிக்கொண்டேயுண்டிடுநேமித்தொகைபோலாய்ச்
செற்றத்தோடுமார்ப்பொடுமேகித்திரைவீசி
மற்றச்சூரன்றன்னுருவத்தைவளைவுற்ற. (௩௯௬)

வளையாவெஞ்சூர்மாயிருஞாலவடிவத்தைக்
களையாவுண்டேயின்மையதாக்கிக்கணையேழுந்
திளையார்நீத்தத்தொல்லுருநீங்கிச்செருவின்கண்
விளையாடுற்றவெம்பெருமான்பான்மீண்டுற்ற. (௩௯௭)

காணாவெய்யோன்பாருருநீங்கிக்கடலெல்லா
மூணாவையம்வானொடுமுண்டற்கெழுமாபோ
லேணார்நீத்தத்தோர்வடிவாகியிறைமுன்ன
நீணாகத்தின்காறுநிமிர்ந்தேநின்றிட்டான். (௩௯௮)

நேரான்மாயத்தொல்லுருவத்தினிலைநோக்கிக்
கூரார்வாளிநாறுதொடுத்தேகொடியோன்பாற்
சேராவூழித்தீயியல்பாகிச்செறிவுற்றுப்
பேராதட்டேவம்மெனவிட்டான்பெயர்வில்லான். (௩௯௯)

அவ்வாறாகவாளிகணூறுமருணீரால்
வெவ்வாயங்கிப்பேருருவாகிவிரவிப்போய்த்
தெவ்வாய்நின்றோனீத்தமதாகுஞ்செயனீங்க
வெவ்வாயுஞ்சென்றுண்டனவம்மாவிறைதன்னின். (௪00)

தண்டாதார்க்குநீத்தவியற்கைதனையெல்லா
முண்டாலித்தேவாளிகண்மீண்டேயுறுகாலைக்
கண்டான்மாயத்தன்மைபடைத்தோன்கனன்மேனி
கொண்டானண்டங்காறுநிமிர்ந்தேகுலவுற்றான். (௪0௧)

குலவுங்காலைக்கண்டுநகைத்தேகூற்றென்ன
நிலவுஞ்செங்கோலாயிரம்வாங்காநீடூழி
சுலவுஞ்சண்டச்சூறையினேகிச்சூர்மாயம்
பலவுஞ்செற்றேவம்மெனவுய்த்தான்பரமானோன். (௪0௨)

Digitized By Roja Muthiah Research Library

உய்க்குங்காலத்தோய்யெனவேகியுலகெங்குந்
திக்கும்வானுஞ்சூழுமருத்தின்றிறனெய்தி
மைக்குந்தூமம்போல்பவன்மெய்த்தீவடிவெல்லாம்
பொய்க்கும்வண்ணஞ்சாடினவையன்புகர்வாளி. (சoரு)

வேறு.

வண்டுலாவருவாகையந்தாரினான், கொண்டெழுந்தகொழுந்தழல்யாக்கையை
யுண்டுவாளிகளோய்யெனமீண்டொரா, யண்டர்நாயகன்பாங்கரணைந்தவே. (சoசு)

ஆங்கவெல்லையிலவ்வடிவத்தினை, நீங்குமாற்றலனீள்சினமேற்கொளா
வோங்குமோதையுருவுகொண்டார்த்தலு,ஞாங்கரெந்தைநகையொடுநோக்கினன்.

ஆய்ந்துவாளியொராயிரநூற்றினை, வாய்ந்தகைக்கொடுமாற்றலன்வன்மையைப்
பாந்தளாகப்படுத்துவம்மோவென, வேந்தல்கூறியிமைப்பினிற்றூண்டினான். ()

அவ்வயிற்கணையந்தரத்திற்செலாச், செவ்விதிற்கிளர்செந்தழல்போலெழீஇப்
பைவிரித்தபஃறலைப்பன்னக, வெவ்வுருக்கொடுசூர்மிசைமேயதே. (சoஎ)

கூற்றமன்னகொடுந்தொழின்மன்னவன், காற்றின்யாக்கைகரப்பமிசைந்திடா
வாற்றன்மேவியணைந்துடன்மீண்டன, வேற்றடக்கைவிமலன்புடைதனில். சoஅ

இன்னதன்மையிலீரிருநாள்வரைத், துன்னலன்றொலையாதமராற்றியே
பின்னுமாயையின்பெற்றியைப்புந்தியு, ளுன்னியேபல்லுருக்கொடுதோன்றினான்.

வேறு.

ஓவாவியல்புரிமூவரிலொருசார்வருமொழியுந்
தேவாசுரர்பிறராமெனவொருசார்வருஞ்சேணுள்
கோவாமெனவொருசார்வருமொருசார்வருங்குறள்போ
லாவாவெனக்கொடுங்கூற்றெனவொருசார்வருமன்றே. (சகo)

பேயாமெனவொருபால்வரும்பிறழ்வெம்புகைப்படலைத்
தீயாமெனவொருபால்வருந்திசையெங்கணுஞ்சுழலு
மோயாமருத்தினமாமெனவொருபால்வருமகிலம்
பாயாவெழுதிரையாழியிலொருபால்வரும்பரவி. (சகக)

ஒருசார்விடமெனவந்திடுமொருசார்வரும்பணிபோ
லொருசார்முகிலெனவந்திடுமொருசார்வருமிருள்போ
லொருசாருருமெனவந்திடுமொருசார்வரும்வரைபோ
லொருசார்தனதுருவாய்வருமொருசார்வருங்கதிர்போல். (சகஉ)

தொக்கார்பலபடையாமெனவொருசார்வருஞ்சூழுந்
திக்கார்களிற்றினமாமெனவொருசார்வருஞ்சினத்தா
னக்கார்தருமரியேறெனவொருசார்வருநலிவா
னக்கால்வருதனிப்புள்ளெனவொருசார்வருமன்றே. (சகங)

கரியின்முகத்துணைவன்னெனவொருசார்வருங்கடுங்க
ணரியின்முகத்திளையோனெனவொருசார்வருமளக்கர்ப்
பரியின்முகத்தினில்வந்திடுபொழிக்கனல்படுக்கு
மெரியின்முகத்தனிமைந்தனிலொருசாரிடையேகும். (சகச)

Digitized By Roja Muthiah Research Library

எல்லோன்றனைவெகுண்டோனெனவொருசார்வருமேனைச்
சொல்லோங்கியதிறன்மைந்தரிலொருசார்வருஞ்சூழ்ச்சி
வல்லோனெனவொருசார்வருமானப்படைமள்ளர்
பல்லோர்களுஞ்செறிந்தாலெனவொருசாரிடைப்படரும். (௪௧௫)

இத்தன்மையிலவுணர்க்கிறையாண்டுஞ்செறிவாகி
யத்தன்றனைப்புடைசூழ்தலுமவைநோக்கியவிமையோர்
சித்தந்தளர்ந்திரிகுற்றனர்திரிகுற்றனரம்மா
கத்துங்கடற்புவிமாய்ந்திடுகாலத்துயிரெனவே. (௪௧௬)

வேறு.

அங்கதனிலைமைநோக்கியாயிரகோடிவாளி
செங்கையில்வாங்கிவாங்குந்திருநெடுஞ்சிலையிற்பூட்டி
யிங்குளவமரர்தங்களிருஞ்சிறையகற்றவந்து
பங்கயற்சிறைசெய்திட்டபகவன்மற்றிதனைச்சொல்வான். (௪௧௭)

தெவ்வடுபகழியென்னுந்தேவிர்காணீவிரேகி
மெய்வலிபடைத்துநின்றமேவலனொருவன்கொண்ட
வவ்வுருவனைத்துமெய்தியாங்கவன்மாயமுற்று
மிவ்விடையட்டுநீக்கியேகுதிரென்றுவிட்டான். (௪௧௮)

விட்டிடுசிலீமுகங்கள்விரைந்துபோய்வெகுளிவீங்கி
யொட்டலன்கொண்டவொவ்வொன்றுருவினுக் * கெழுமையாகி
யெட்டுளபுலமும்வானுமிருநிலவரைப்புமீண்டி
யட்டடல்பெற்றவம்மாவனையவன்மாயந்தன்னை. (௪௧௯)

உடல்சினமோடுசூரனொருவனுயங்கணின்று
னடல்வலிகொண்டவாளியக்தரநெறியான்மீண்டு
புடையுறுசரங்களோடுபொள்ளெனத்தூணிபுக்க
சுடர்நெடுந்தனிவேலண்ணலவன்முகநோக்கிச்சொல்வான். (௪௨0)

வெம்புயலிடையிற்றோன்றிவிளிந்திடுமின்னுவென்ன
விம்பரிலெமதுமுன்னமெல்லையிலுருவங்கொண்டா
யம்பினிலவற்றையெல்லாமட்டனமழிவிலாத
நம்பெருவடிவங்கொள்வநன்றுகண்டிடுதியென்றான். (௪௨௧)

கூறிமற்றினையதன்மைகுரைகடலுலகந்திக்கு
மாறிலாப்புவனமண்டம்வானவருயிர்கள்யாவு
மாறுமாமுகத்துவள்ளன்மேனியிலமைந்ததன்றி
வேறிலையென்னவாங்கோர்வியன்பெருவடிவங்கொண்டான். (௪௨௨)

உள்ளடிவரைகள்யாவுமொண்புறவடியினீத்தம்
வள்ளுகிர்விரல்கண்முற்றும்வானுருமேறுநாள்கோ
ளெள்ளரும்பரடுதன்னிலிரும்புனற்கிறைவன்சோம
னள்ளிருளனையமேனிநிருதியோடரக்கர்நண்ண. (௪௨௩)

அடிதிரள்கணைக்காறன்னிலாரிடர்மணிகள்சானு
வடிவமைமுழந்தாள்விஞ்சைவானவராதியானோர்
தொடைதனின்மகவான்மைந்தன்றொடைமுதனடுவன்காலன்
கடிதடத்தசுரர்பக்கங்கடவுளர்யாருநிற்ப. (௪௨௪)

---

* ஒவ்வொன்றுருவினுக்கு என்பதனை உரு ஒவ்வொன்றினுக்கு என மாற்றிப் பொருள்கொள்க; "ஒன்று தேரினன்" என்பதனைத் தேர் ஒன்றினன் என மாற்றிப் பொருள்கொண்டவாறுபோல.

Digitized By Roja Muthiah Research Library

இருப்பினுகர்கோசவெல்லையின்மருந்தேயுந்திக்
கருப்படுமுயிர்கண்மார்பிற்கலைகண்முந்நூலிற்போத
மருப்பயிலுரோமத்தண்டமங்கையிலகிலபோகந்
திருப்பெருந்தடந்தோள்வைப்பிற்செங்கண்மால்விரிஞ்சன்மேவ. (௬௨௫)

மெல்லிதழனையசெங்கைவிரன்மிசையணங்கினல்லா
ரொல்லொலியங்கி * கண்டமொப்பிலாமணிவாய்வேதம்
பல்லிடையெழுத்துநாவிற்பரமவாகமத்தின்பேத
நல்லிதழ்மனுவின்விஞ்சைநாசியிற்பவனன்மன்ன. (௬௨௬)

கருணைகொள்விழியிற்சோமன்கதிரவன்செவியிற்றிக்குந்
திருநுதற்குடிலைவைப்புச்சென்னியிற்பரமவான்மா
மரபினின்மேவித்தோன்றமாறிலாதிருக்குந்தொல்லை
யொருதனதுருவங்காட்டிநிற்றலுமும்பர்கண்டார். (௬௨௭)

செஞ்சுடரநந்தகோடிசெறிந்தொருங்குதித்ததென்ன
விஞ்சியகதிர்கான்றுள்ளவியன்பெருவடிவைநோக்கி
நெஞ்சகந்துளங்கிவிண்ணோர்நின்றனர்நிமலமூர்த்தி
யஞ்சன்மினஞ்சன்மின்னென்றருளினனமைத்தலைகையான். (௬௨௮)

அண்டர்கள்யாருமெந்தையருண்முறைவினவியுள்ள
முண்டிடுவிதிர்ப்புநீங்கியுவகையாற்றெழுதுநின்றார்
தண்டுளிவரையதென்னத்தணப்பறச்சிதறுமூழிக்
கொண்டலின்றோற்றநோக்கிக்குலவுறுமஞ்ஞையேபோல். (௬௨௯)

இறுதியுமுதலுமில்லாவிப்பெருவடிவந்தன்னைக்
கறைவிடமுறழுஞ்சூரன்கண்டுவிம்மிதத்தினிற்ப
வறிவருமுணர்தரேற்றாவாறுமாமுகத்துவள்ளல்
சிறிதுநல்லுணர்ச்சிநல்கவினையனசெப்பலுற்றான். (௬௩0)

எண்ணிலாவவுணர்தானையாவையுமிமைப்பிற்செற்று
விண்ணுலாவண்டந்தோறும்வியன்சமராற்றியென்பா
னெண்ணினார்தம்மையெல்லாநாமறத்தடிந்துவீட்டி
வண்ணமான்றேருமீண்டுவராநெறிதடுத்தான்மன்றோ. (௬௩௧)

திண்டிறலுடையேன்றாண்டுந்திறற்படையாவுநீக்கிக்
கொண்டவென்மாயமுற்றுங்கொடுஞ்சரமதனான்மாற்றி
யண்டமும்புவனம்யாவுமமரரும்பிறவுந்தன்பாற்
கண்டிடும்வடிவமொன்றுகாட்டியென்கண்முனின்றான். (௬௩௨)

கோலமாமஞ்ஞைதன்னிற்குலவியகுமரன்றன்னைப்
பாலனென்றிருந்தேனந்நாட்பரிசிவையுணர்ந்திலேன்யான்
மாலயன்றனக்குமேனைவானவர்தமக்கும்யார்க்கு
மூலகாரணமாய்நின்றமூர்த்தியிம்மூர்த்தியன்றோ. (௬௩௩)

ஒற்றெனமுன்னம்வந்தோனொருதனிவேலோன்றன்னைப்
பற்றிகலின்றிநின்றபராபரமுதல்வனென்றே
சொற்றனன்சொற்றவெல்லாந்துணிபெனக்கொண்டிலேனா
லிற்றையிப்பொழுதிலீசனிவனெனுந்தன்மைகண்டேன். (௬௩௪)

---

* ஒல்லொலி அங்கி என்பது - உம்மைத்தொகை.

Digitized By Roja Muthiah Research Library

மீயுயர்வடிவங்கொண்டுமேவியதூதன்சொற்ற
வாய்மைகள்சரதமம்மாமற்றியான்பெற்றவண்ட
மாயவைமுழுதுமற்றுமறுமுகம்படைத்தசெம்ம
றூயபொற்பதரோமத்திற்றோன்றியேநிற்குமன்றே. (௪௩௫)

அண்டர்கண்முனிவரேனோரகிலமுங்காட்டியண்ணல்
கொண்டிடுபடிவமுற்றுங்குறித்தியார்தெரிதற்பாலா
ரெண்டருவிழிகள்யாக்கையெங்கணும்படைத்தோர்க்கேனுங்
கண்டிடவாநந்தகோடிகற்பமுங்கடக்குமன்றே. (௪௩௬)

சீர்க்குமரேசன்கொண்டதிருப்பெருவடிவந்தன்னி
லேர்க்குறுமொளியுஞ்சீருமிளமையுமெழிலுமெல்லா
மார்க்குளவுலகிலம்மாவற்புதத்தோடும்பல்காற்
பார்க்கினுந்தெவிட்டிற்றில்லையின்னுமென்பார்வைதானும். (௪௩௭)

நேரிலனாகியீண்டேநின்றிடுமுதல்வனீடும்
பேருருவதனைநோக்கிப்பெரிதுமச்சுறுவதல்லா
லாரிதுநின்றுகாண்பாரமரரிலழிவிலாத
சீரியவரங்கொண்டுள்ளோனுதலிற்றெரிகின்றேனால். (௪௩௮)

ஆயிரகோடிகாமரழகெலாந்திரண்டொன்றாகி
மேயினவெனினுஞ்செவ்வேள்விமலமாஞ்சரணந்தன்னிற்
றூயநல்லெழிலுக்காற்றாதென்றிடினிணையதொல்லோன்
மாயிருவடிவிற்கெல்லாமுவமையார்வகுக்கவல்லார். (௪௩௯)

இங்கெனதுயிர்போலுற்றவிளவலுமிளையசேயுஞ்
செங்கையில்வேலோன்றன்னைச்சிறுவனென்றெண்ணல்கண்டாய்
பங்கயன்முதலோர்காணாப்பரமனேயாகுமென்றா
ரங்கவர்மொழிந்தவாறுஞ்சரதமேயானதன்றே. (௪௪0)

அண்ணலார்குமரன்மேனியடிமுதன்முடியின்காறு
மெண்ணிலாவூழிகாலமெத்திறநோக்கினாலுங்
கண்ணினாலடங்காதுன்னிற்கருத்தினாலடங்காதென்ப
னண்ணினனமருக்கென்கையருளெனநாட்டலாமே. (௪௪௧)

திருகியவெகுளிமுற்றுந்தீர்ந்தனசெருவினூக்க
மருகியதுரோமம்புள்ளியாயினவிழியிற்றூநீர்
பெருகியதிவன்பாலன்புபிறந்தனதமியேற்குள்ள
முருகியதென்புதானுமுலைமெழுகாகுமன்றே. (௪௪௨)

போயினவகந்தைபோதம்புகுந்தனவலத்ததான
தூயதோர்தோளுங்கண்ணுந்துடித்தனபுவனமெங்கு
மேயினபொருள்கண்முற்றும்வெளிப்படுகின்ற* விண்ணோர்
நாயகன்வடிவங்கண்டேனற்றவப்பயனீதன்றோ. (௪௪௩)

சூழுதல்வேண்டுந்தாள்கடொழுதிடல்வேண்டுமங்கை
தாழுதல்வேண்டுஞ்சென்னிதுதித்திடல்வேண்டுந்தாலு
வாழுதல்வேண்டுந்தீமையகன்றுநானிவற்காளாகி
வாழுதல்வேண்டுநெஞ்சந்தடுத்ததுமானமொன்றே. (௪௪௪)

---

* வெளிப்படுகின்ற என்னும் பெயரெச்சம் வடிவமென்னும் பெயர்கொண்டது.

Digitized By Roja Muthiah Research Library

ஒன்னலர்பொருட்டாலேகியுறுசமரிழைத்தசெம்ம
றன்னுருவதனைக்காண்கின்முனிவதேதகுதியாகும்
வன்னிகொள்வெண்ணெயேபோல்வலியழிந்துருகிற்றென்று
லென்னுடைவயத்தவன்றேவுணர்ச்சியுமியாக்கைமுற்றும். (௪௪௫)

ஏடவிழலங்கன்மார்பனென்னுடனிந்நாள்காறு
நீடியவிகற்போராற்றினீங்கலானின்றதெல்லா
மாடலினியற்கையென்றேயறிந்தனனஃதான்றன்னான்
சாடியவேண்டுமென்னின்யாரதுதாங்கற்பாலார். (௪௪௬)

ஏதமிலமரர்தம்மையான்சிறைசெய்ததெல்லாந்
தீதெனவுரைத்தார்பல்லோரன்னதன்செயற்கையாலே
வேதமுமயனுமேலைவிண்ணவர்பலருங்காணா
நாதனிங்கணுகப்பெற்றேனன்றதேயானதன்றே. (௪௪௭)

ஒன்றொருமுதல்வனாகியுறைதருமூர்த்திமுன்ன
நின்றமர்செய்தேனிந்நாணெஞ்சினித்தளரேனம்மா
நன்றிதோர்பெருமைபெற்றேன்வீரனாநானேயானே
னென்றுமிப்புகழேநிற்குமிவ்வுடனிற்பதுண்டோ. (௪௪௮)

வானுளோர்சிறையைநீக்கிவள்ளலைவணங்கியிந்த
வூனுலாமுயிரைப்போற்றியளியர்போலுறுவனென்னி
னானதோவெனக்கிதம்மாவாயிரகோடியண்டம்
போனதோர்புகழும்வீரத்தன்மையும்பொன்றிடாவோ. (௪௪௯)

என்னவித்தகையபன்னிநிற்றலுமெவர்க்குமேலோ
னுன்னருந்தகைத்தாய்நின்றவொருபெருந்தோற்றநீத்து
மின்னிவர்கலாபமூர்ந்தவியனுருக்கொண்டுநண்ணித்
துன்னலன்போதமாற்றித்தொன்மைபோலாகச்செய்தான். (௪௫௦)

காரணனாகித்தானேகருணையாலெவையுநல்கி
யாருயிர்முழுதுமேவியனைத்தையுமியற்றிநிற்கும்
பூரணமுதல்வன்மைந்தன்போதகமளித்துமாற்றிச்
சூரனைமயக்கஞ்செய்யுஞ்சூழ்ச்சியோவரியதன்றே. (௪௫௧)

அத்தகுகாலைதானேயவுணர்கோனுணர்ச்சிநீங்கிச்
சித்தமதிடையேதொல்லைச்சீற்றமுமிகவுமுற்ற
மெய்த்தகுகுழவித்திங்கள்விண்ணெறிசெல்லச்செல்லு
மெத்திசையிருளுமன்னதகன்றுழியெழுந்ததேபோல். (௪௫௨)

பிணிமுகமுயர்த்துநின்றபெருந்தகைதோற்றங்காணாஉத்
தணிவருஞ்சினமேற்கொண்டுசமரின்மேலூக்கஞ்சேர்த்தி
யணியதென்றிண்மையென்னாவங்கையோடங்கைதாக்கி
மணிமுடிதுளக்கிநக்குமற்றிவைபுகலலுற்றான். (௪௫௩)

சேயுருவமைந்தகள்வன்செருவினையிழைக்கலாற்றான்
மாயையினொன்றுகாட்டியெனையிவண்மையல்செய்தா
னாயதுதுடைத்தேனென்றாலாரெனக்கொப்புண்டென்றுங்
காயமதழிவிலாதேன்கருத்தழிகின்றதுண்டோ. (௪௫௪)

Digitized By Roja Muthiah Research Library

குன்றினையெறிந்தவேற்கைக்குமரனோடமரதாற்றி
வென்றிடுகின்றேனெல்லமேலதுநிற்கவிந்த
வன்றிறற்சமரைமூட்டிநின்றவானவரையெல்லாந்
தின்றுயிர்குடித்துமுன்னென்சினஞ்சிறிதகல்வனென்றான். (௪௫௫)

ஆயதுதுணிவாக்கொண்டவவுணர்கண்மன்னன்பின்னுந்
தீயதோர்தொல்லைமாயச்சீர்கொண்மந்திரத்தைப்பன்னி
ஞாயிறுமருட்கைகொள்ளஞாலமுங்ககனமுற்று
மாயிருளுருவங்கொண்டுமறைந்துநின்றார்க்கலுற்றான். (௪௫௬)

தெண்டிரைநேமிதன்னிற்றீவிடமெழுந்ததென்ன
வெண்டிசையெல்லைமுற்றுமிருநிலவரைப்புமெல்லா
வண்டமுமாகியீண்டுமோரிருள்வடிவைவானோர்
கண்டனரவுணன்மாயமீதெனக்கலக்கமுற்றார். (௪௫௭)

அத்துணையவுணர்மன்னனவ்விருளிடையேபாய்ந்து
பத்திகொள்சிகரமன்னபஃறலையளவைதீர்ந்த
கைத்தலமுளதோர்யாக்கைகதுமெனக்கொண்டுவிண்ணோர்
மெய்த்தொகைநுகர்வானுன்னிவிண்ணிடைக்கிளர்ந்துசென்றான். (௪௫௮)

ஆடியல்கொண்டசூரனந்தரத்தெழலும்வானோர்
கூடியவோதிதன்னாற்குறிப்பினாற்றெரிந்துநம்மைச்
சாடியவருவனென்னாத்தலைத்தலைசிதறிநில்லா
தோடினர்கூற்றைநேர்ந்தவுயிரெனவிரங்கலுற்றார். (௪௫௯)

நண்ணினர்க்கினியாயோலஞானநாயகனேயோலம்
பண்ணவர்க்கிறையேயோலம்பரஞ்சுடர்முதலேயோல
மெண்ணுதற்கரியாயோலம்யாவையும்படைத்தாயோலங்
கண்ணுதற்பெருமானல்குங்கடவுளேயோலமோலம். (௪௬0)

தேவர்கடேவேயோலஞ்சிறந்தசிற்பரனேயோல
மேவலர்க்கிடியேயோலம்வேற்படைவிமலாவோலம்
பாவலர்க்கெளியாயோலம்பன்னிருபுயத்தாயோல
மூவருமாகிநின்றமூர்த்தியேயோலமோலம். (௪௬௧)

கங்குலினெழுந்தகார்போற்கனையிருண்மறைவினேகி
நுங்கியசெல்வான்சூரனோடவுநோன்மையில்லே
மெங்கினியுய்வமையவிறையுநீதாழ்க்கல்கண்டா
யங்கவனுயிரையுண்டெம்மாவியையருளுகென்றார். (௪௬௨)

தேற்றலைபோலுமீதுசிறிதுநீபாணிப்பாயே
லாற்றலின்மறைந்துநின்றேயகிலமுந்தானேயுண்ணு
மாற்றலனுவிதன்னைவாங்குதிவல்லையென்னாப்
போற்றினன்முதல்வன்றன்னைமயூரமாய்க்கொண்டபுத்தேள். (௪௬௩)

அங்கவர்மொழியும்வெய்யோனாற்றலுந்தெரிந்துசெவ்வேள்
செங்கையதொன்றில்வைகுந்திருநெடுவேலைநோக்கி
யிங்கிவனகம்போழ்ந்தேயேகுதியிமைப்பினென்னாத்
துங்கமதுடையசீர்த்திச்சூரன்மேற்செல்லத்தொட்டான். (௪௬௪)



Digitized By Roja Muthiah Research Library

ஏயெனமுருகன்றெட்டவிருதலைபடைத்தஞாங்க
ராயிரகோடியென்னுமருக்கரிற்றிகழ்ந்துதோன்றித்
தீயழற்சிகழிகான்றுசென்றிடவவுணன்கொண்ட
மாயிருளுருவமுற்றும்வல்விரைந்தகன்றதன்றே. (௪௯௫)

அன்னவன்றனதுமாயமழிந்ததுமையன்வைவேன்
முன்னுறுமாறுநோக்கிமுடிவிலாவரத்தினேனை
யென்னிவட்செய்யுமம்மாவிவன்விடுமெஃகமென்று
வுன்னினன்முறுவலெய்தியுருகெழுசீற்றங்கொண்டான். (௪௯௬)

வாரிதிவளாகந்தன்னைமாதிரவரைப்பைமீக்கீழ்ச்
சேருறுநிலயந்தன்னைத்திசைமுகன்முதலாவுள்ள
வாருயிரோடும்வீட்டியடுவன்மேலிதனையென்னுச்
சூரெனுமவுணன்மற்றைத்தொடுகடனடுவணுறன். (௪௯௭)

வன்னியினலங்கல்கான்றுவான்றழைபுகையினல்கிப்
பொன்னெனவிணர்களீன்றுமரகதம்புரையக்காய்த்துச்
செந்நிறமணிகளென்னத்தீம்பழங்கொண்டுகார்போற்
றுன்னுபல்கவடுபோக்கிச்சூதமாயவுணனின்றன். (௪௯௮)

மாசறுககனகூடவரம்பதனளவுமேல்போ
யாசையினெல்லைகாறுமளவைதீருலவையோச்சிக்
காசினியகலந்தாங்குங்கச்சபத்துணைத்தூரோட்டிப்
பாசடைபொதுளிவெஞ்சூர்பராரைமால்வரையினின்றன். (௪௯௯)

ஓராயிரநூறதென்னுமோசனையளவையான்ற
பராரைமாவுருவமாகிப்பலவுடைச்சினைமாண்கொம்பர்
விராவியசூழ்ச்சிதன்னால்வேலைகண்முழுதும்விண்ணுந்
தராதலவரைப்புமெல்லாந்தண்ணிழல்பரப்பிநின்றன். (௫௱0)

நெடுங்கலைமுயன்மான்கொண்டுநிலவுமம்புலியுநீத்த
மடுங்கதிர்படைத்தகோவுமளகையையாளிதானுங்
கடங்கலுழ்கின்றவாசைக்கரிகளுங்கடாவிற்செல்லு
மடங்கலும்வெருவச்சூரன்மாவுருக்கொண்டுநின்றன். (௫௱௧)

மிக்குயருவணமன்னமிசைப்படுமெகினப்புள்ளு
மைக்குயில்சேவலாகிமயூரமாம்வலியன்றனும்
புக்கமர்தெரிக்குமாடற்பூவையுங்கொடியதான
குக்குடமுதலுமஞ்சக்கொக்குருவாகிநின்றன். (௫௱௨)

காலெனுமொய்ம்பனுட்கக்கட்செவிகவிழ்ந்துசோர
வாலியவசுக்களேங்கிமலர்க்கரமறிக்கவெய்யோன்
பாலர்மெய்வியராநிற்பப்பணைமுலையரிவைமார்கள்
சேலெனும்விழிகள்பொத்தச்சேகரமாகிநின்றன். (௫௱௩)

அத்தியினரசுபேரவாலமுந்தெரிக்கிலேங்க
மெய்த்திறல்வாகைவன்னிமெலிவுறவீரையாவுந்
தத்தமதிருப்பைநீங்கத்தாதவிழ்நீபத்தாரோ
னுய்த்திடுதனிவேன்முன்னரொருதனிமாவாய்நின்றன். (௫௱௪)

Digitized By Roja Muthiah Research Library

நிலமிசையிவையவாறோர்நெடும்பெருஞ்சூதமாகி
யுலவையின்செறிவுதன்னாலும்பருந்திசையுமெற்றித்
தலைமுதலடியின்காறுஞ்சாலவுந்தளர்ந்துதள்ளாற்
றலமருவாரிற்றானேயசைந்தனனசைவிலாதான். (சஎடு)

மைவிரிபாந்தட்புத்தேள்பரம்பொறாதழுங்கப்பாரின்
மைவிரிபடிவச்சூறைமாருதமெறியமாழை
மெய்விரிகுடுமிக்கோட்டுமேருவெற்பசைந்தாலென்ன
மொய்விரியவுணன்யாக்கையலைத்தனன்முடிவதோரான். (சஎசு)

இடிந்தனசரிந்தஞாலமேழ்வகைப்பிலங்கண்முற்றும்
பொடிந்தனகமடநாகம்புரண்டனபுழைக்கைமாக்கண்
முடிந்தனமறிந்தவேலைமுழுவதுமொன்றாகுற்ற
மடிந்தனவுயிரின்பொம்மல்வரைக்குலமறிந்தவன்றே. (சஎஎ)

தாரகையுதிர்ந்தகோளுந்தலைபனித்திரிந்தவெய்யோன்
றேரொடுமாவுந்தானுந்தியங்கினன்றிங்கட்புத்தேள்
பேருறுமானநீங்கிப்பெயர்ந்தனனேனைவானோர்
மேருவுங்கயிலைவெற்பும்புக்கனர்வெருவுநீரார். (சஎஅ)

ஏற்றமில்சுவர்க்கமுற்றுமிற்றனவதற்குமப்பான்
மேற்றிகழ்முனிவர்வைகுமுலகமும்பகிர்ந்துவீழ்ந்த
நாற்றிசைமுகத்தன்மாயோனண்ணியவுலகுமற்றே
சாற்றுவதென்கொலண்டச்சூழலுந்தகர்ந்ததன்றே. (சஎகூ)

தெண்டிரைநடுவணின்றதீயவன்செயலுமன்னான்
கொண்டிடுமுருவுமுள்ளக்கொள்கையும்வலியுஞ்சீரு
மண்டர்களெவர்க்குமேலாமாதியம்பகவன்றொட்ட
விண்டொடர்தனிவேல்காணவெஞ்சினம்விளைத்ததன்றே. (சஅ0)

தேயுவினெடுத்தவண்டத்திறங்களும்பிறங்குஞாலத்
தாயிரகோடியண்டத்தங்கியுமொன்றிற்றென்ன
மீயுயர்ந்தொழுகியான்றோர்வெருவருந்தோற்றங்கொண்டு
நாயகன்றனதுதெய்வப்படைக்கலநடந்ததன்றே. (சஅக)

வயிர்த்திடுநிலைமைசான்றவன்கணுயிரைவெளவச்
செயிர்த்திடுந்தெய்வச்செவ்வேறிணிநிலவரைப்பிலண்ட
மயிர்த்தொகையாகவேனைப்பூதமுமழியவங்க
ணுயிர்த்தொகைமுருக்கத்தோன்றுமொருவனிற்சென்றதன்றே. (சஅஉ)

மாறமருழந்துபன்னாள்வரம்பறுபிரமமாவார்
வேறிலையாமேயென்றவிருவரும்வெருவிநீங்க
வீறொடுமுதலுமின்றியெழுகிரிவிலக்கிவிண்மேற்
சேறலினிலைமைகாட்டிப்படர்ந்ததுகடவுட்செவ்வேல். (சஅங)

வேதனையகத்தராகும்விண்ணவர்படைகடம்முள்
யாதனையிதற்குநேராவியம்புவதெரியிற்றோன்றிப்
பூதனையுயிருண்கள்வன்புண்டரீகத்தன்வன்மை
சோதனைபுரிந்தமேலோன்சூலமேயென்பதல்லால். (சஅச)

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
R M DIST - TAMIL NADU - INDIA
Digitized By Roja Muthiah Research Library

மண்டலநிலத்தின் வைப்பும்வாரிதியேழுமற்றைத்
தெண்டிரைக்கடலும்வானுஞ்சேணுயர்பிறங்கன்முற்று
மெண்டிசைப்புறமுமண்டத்தேணியின் பரப்புமீண்ட
வொண்டழற்சிகையின்கற்றையுமிழ்ந்ததாலொருங்குஞாங்கர். (௪௮௫)

பற்றியஞெகிழிபாரிற்படர்ந்தனபௌவம்யாவுஞ்
சுற்றியதிசையும்வானுஞ்சூழ்ந்தனசோதிவைகும்
பொற்றையதொன்றேயல்லாப்பொருப்பெலாஞ்செறிந்தபொன்றோய்
கற்றையங்கதிரினண்டச்சூழலுங்கதுவலுற்ற. (௪௮௬)

விடம்பிடித்தமலன்செங்கண்வெங்கனலுறுத்திப்பாணி
யிடம்பிடித்திட்டதீயிற்றோய்த்துமுன்னியற்றியன்ன
வுடம்பிடித்தெய்வமிவ்வாறுருகெழுசெலவினேகி
மடம்பிடித்திட்டவெஞ்சூர்மாமுதறடிந்ததன்றே. (௪௮௭)

ஆடல்வேலெறிதலோடுமாமிரவடிவாயண்ட
கூடமுமலைத்தகள்வனரற்றொடுகுறைந்துவீழ்ந்தும்
வீடிலனென்பமன்றோமேலைநாள்வரத்தினென்றாற்
பீடுறுதவமேயன்றிவலியதுபிறிதொன்றுண்டோ. (௪௮௮)

கிள்ளையின்வதனமன்னசேழ்கிளர்பசுங்காய்தூங்கித்
தள்ளருநிலைத்தாய்நின்றமாவுருச்சாய்தலோடு
முள்ளுறுசினமீக்கொள்ளவொல்லைதொல்லுருவமெய்தி
வள்ளுறையுடைவாள்வாங்கிமலைவதுகருதியார்த்தான். (௪௮௯)

செங்கதிரயில்வாள்கொண்டுசெருமுயன்றருமிஞார்த்துத்
துங்கமொடெதிர்ந்துசீறுஞ்சூருரங்கிழித்துப்பின்னு
மங்கமதிருகூறாக்கியலைகடல்வரைப்பில்வீட்டி
யெங்கணுமறைகளார்ப்பவெஃகம்வான்போயிற்றம்மா. (௪௯0)

புங்கவர்வழுத்திச்சிந்தும்பூமழையிடையினேகி
யங்கியின்வடிவநீங்கியருளுருக்கொண்டுவான்றோய்
கங்கையிற்படிந்துமீண்டுகடவுளரிடுக்கண்டீர்த்த
வெங்கடம்பெருமான்செங்கையெய்திவீற்றிருந்ததவ்வேல். (௪௯௧)

தாவடிநெடுவேன்மீளத்தற்பரன்வரத்தால்வீடா
மேவலனெழுந்துமீட்டுமெய்பகிரிரண்டுகூறுஞ்
சேவலுமயிலுமாகிச்சினங்கொடுதேவர்சேனை
காவலன்றனைநாடியமர்த்தொழில்கருதிவந்தான். (௪௯௨)

மணிகிளர்வரை * யதொன்றுமரகதப்பிறங்கலொன்றுந்
துணையடிசிறகர்பெற்றுச்சூற்புயலழியவார்த்துத்
திணிநிலவிசும்பின்மாட்டேசென்றெனச்சேவலோடு
பிணிமுகவுருவாய்வந்துபெருந்தகைமுன்னம்புக்கான். (௪௯௩)

ஆட்படுநெறியிற்சேர்த்துமாதியினூழ்தந்துய்க்கத்
தாட்படைமயூரமாகித்தன்னிகரில்லாச்சூரன்
காட்படையுளத்தணுகிக்கடவுளரிரியல்போக
ஞாட்பியல்செருக்கில்வந்தான்ஞானநாயகன்றன்முன்னம். (௪௯௪)

* மணிகிளர்வரை - மாணிக்கமலை.

மருள்கெழுபுள்ளேபோலவந்திடுசூரனெந்தை
யருள்கெழுநாட்டஞ்சேர்த்தவாங்கவனிகலைநீங்கித்
தெருள்கெழுமனத்தனாகிநின்றனன்சிறந்தார்நோக்கா
லிருள்கெழுகரும்பொன்செம்பொன்னாகியவியற்கையேபோல். (௪௯௫)

தீயவைபுரிந்தாரேனுங்குமரவேடிருமுனுற்றாற்
றூயவராகிமேலைத்தொல்கதியடைவரென்கை
யாயவும்வேண்டுங்கொல்லோவடுசமரிந்நாட்செய்த
மாயையின்மகனுமன்றோவரம்பிலாவருள்பெற்றுய்ந்தான். (௪௯௬)

அக்கணமெம்பிரான்றனருளினாலுணர்வுசான்ற
குக்குடவுருவைநோக்கிக்கடிதினீகொடியேயாகி
மிக்குயர்நமதுதேரின்மேவினையார்த்தியென்னத்
தக்கதேபணியிதென்னாவெழுந்தது தமித்துவிண்மேல். (௪௯௭)

செந்நிறங்கெழீஇயசூட்டுச்சேவலங்கொடியொன்றாகி
முன்னுறுமனத்திற்செல்லுமுரண்டகுதடந்தேர்மீப்போ
யிந்நிலவரைப்பினண்டமிடிபடவுருமேறுட்க
வன்னியும்வெருவவார்த்துமற்றவணுற்றதன்றே. (௪௯௮)

சீர்திகழ்குமரமூர்த்திசெறிவிழிகொண்டதொல்லை
யூர்தியினிருக்கைநீங்கியுணர்வுகொண்டொழுகிநின்ற
சூர்திகழ்மஞ்ஞையேறிச்சுமக்குதியெம்மையென்னாப்
பார்திசைவானமுற்றும்பரியெனநடாத்தலுற்றான். (௪௯௯)

தடக்கடலுடையமேருத்தடவரையிடியமற்றைப்
படித்தலம்வெடிப்பச்செந்தீப்பதைபதைத்தொடுங்கச்சூறை
துடித்திடவண்டகூடந்துளக்குறக்கலாபம்வீசி
யிடித்தொகைபுரளவார்த்திட்டேகிற்றுத்தோகைமஞ்ஞை. (௫00)

படத்தினிலுலகம்போற்றும்பணிக்கிறைபதைப்பப்பாங்க
ரடுத்திடுபுயங்கமுற்றுமலமரவவனிகேள்வ
னிடத்தமர்கின்றபாம்புமேங்குறவிசும்பிற்செல்லு
முடற்குறையரவுமுட்கவுலாயதுகலாபமஞ்ஞை. (௫0௧)

பாரொடுவிரிஞ்சன்றன்னைப்படைத்திடப்புன்னாண்மாயன்
காரெனவந்துமுக்கட்கடவுளைப்பரித்ததேபோல்
வீரருள்வீரனாகும்வேலுடைக்குமரன்றன்னைச்
சூருருவாகிநின்றதோகைமேல்கொண்டதம்மா. (௫0௨)

வெயில்விடுமநந்தகோடிவெய்யவர்திரண்டொன்றாகிப்
புயறவழ்கடவுள்வானிற்போந்திடுதன்மையேபோ
லயிலினையுடையசெவ்வேண்மரகதத்தழகுசான்ற
மயிலிடைவைகியூர்ந்தான்மாகமுந்திசைகண்முற்றும். (௫0௩)

நேமிகளேழுமொன்றாய்நிமிர்ந்தெழும்வடவைமுற்றுந்
தாமொருவடிவாயங்கட்சார்ந்திடுநிலைமையென்ன
மாமயிலுயர்த்துச்சென்றவாகைவேல்வீரன்மீண்டு
தீமைகொளவுணன்மூதூர்ச்செருநிலத்தெல்லைபுக்கான். (௫0௪)

Digitized By Roja Muthiah Research Library

புக்குளகும்ரமூர்த்திபொறிமயிலுருவமாயுங்
குக்குடமாயுநின்றவமரரைக்குறித்துநோக்கி
மிக்கநும்மியற்கையாகிமேவுதிர்விரைவினென்ன
வக்கணமவருந்தொல்லைவடிவுகொண்டடியில்வீழ்ந்தார். (௫0௫)

வள்ளலைவணங்கிப்பல்கால்வழுத்தியேதொழுதுதத்த
முள்ளமும்புறத்திலென்புமுருகிடவிழியிற்றூநீர்
தள்ளுறவுரைகண்முற்றுந்தவறிடப்பொடிப்பயாக்கை
கள்ளுணவுற்றவண்டிற்களிமகிழ்சிறந்துநின்றார். (௫0௬)

வீசுறுசுடர்வேலையன்வெய்யசூர்முதலைச்சாடித்
தேசுறுமஞ்ஞையூர்ந்துவந்ததுதெரிந்துபோர்செய்
காசினியிடையேநின்றகணங்களும்வீரர்யாரு
மாசறுமிளவலுஞ்சென்றடிதொழுதார்த்துச்சூழ்ந்தார். (௫0௭)

சூரபன்மன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௨,௯0௫.

# தேவர்கள்போற்றுபடலம்.

நேரொருசிறிதுமில்லாநின்மலன்றனதுவேலாற்
சூருடல்பிளந்தியாணர்மஞ்ஞையிற்றோன்றுகாலைப்
பாருலகயின்றகண்ணன்பங்கயனமரர்கட்கோ
னாரமிர்தெய்திற்றென்னவன்னதுகண்டேயார்த்தார். (௧)

ஆர்த்தனரெழுந்துதுள்ளியாடினர்பாடாநின்றார்
போர்த்தனர்பொடிப்பின்போர்வைபொலங்கெழுபூவின்மாரி
தூர்த்தனரருளைமுன்னித்தொழுதனர்சுடர்வேல்கொண்ட
தீர்த்தனையெய்திச்சூழ்ந்துசிறந்துவாழ்த்தெடுக்கலுற்றார். (௨)

வேறு.

கார்தடிந்துதுய்க்குங்கனைகடலினீர்வறப்பப்
போர்தடிந்துசெல்லும்புகர்வேறனைவிடுத்துச்
சூர்தடிந்தாயன்றேதொழுமடியேம்வல்வினையின்
வேர்தடிந்தாய்மற்றெமக்குவேறோர்குறையுண்டோ. (௩)

மாறுமுகங்கொண்டுபொருவல்லவுணர்மாளாம
னூறுமுகமெட்டுநோதக்கனபுரியத்
தேறுமுகமின்றித்திரிந்தேமையாளவன்றோ
வாறுமுகங்கொண்டேயவதரித்தாயெம்பெருமான். (௪)

நீதிமுறையதனினில்லாவசுரர்புரி
தீதுபலவுளவுந்தீர்ந்தோம்பழியகன்றோம்
வேதநெறிதொல்லைவெறுக்கையொடுபெற்றனமா
லேதுமிலையாலெமக்கோர்குறையெந்தாய். (௫)

மன்றவவுணர்வருத்திடவிந்நாள்வரையும்
பொன்றினவரென்னப்புலம்பித்திரிந்தனமா
லின்றுபகைமாற்றியெமக்கருணீசெய்கையினாற்
சென்றவுயிர்மீண்டதிறம்பெற்றனமையா. (௬)

Digitized By Roja Muthiah Research Library

செய்யுமவனும்புலனுஞ்செய்வித்துநிற்போனு
மெய்தவரும்பொருளும்யாவையுநீயேயென்கை
யையவடியேங்களறிந்தனமாலன்னதனால்
வெய்யபவமகன்றுவீடுமினிக்கூடுதுமால். (௭)

ஈண்டேயெமருக்கிடர்செயவுணரெலா
மாண்டேவிளியும்வகைபுரிந்துகாத்தனையால்
வேண்டேமினியாதுமேலாயநின்கழற்கே
பூண்டேந்தொழும்புபுகழேம்பிறர்தமையே. (௮)

என்றுவியம்பியெவருமினிதேத்துதலுங்
கொன்றரயில்வேற்குமரனதுகேளா
வந்நாரணன்விரிஞ்சனாதியாம்வானோர்க்குத்
தன்றாருளின்றலைமைபுரிந்தனனே. (௯)

தேவர்கள்போற்றுபடலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௨,௯௧௪.

---

# இரணியன்புலம்புறுபடலம்.

அதுநிகழ்ந்துழியகன்பதியவுணர்களொருசில்லோர்
கதுமெனச்சென்றுகாவலன்கந்தவேளுய்த்திட்ட
நுதிகொள்வேலினான்மாய்ந்தனனென்பதைநுவலுற்றார்
பதுமையம்மொழிகேட்டனடுணைவியர்பலரோடும். (௧)

காவன்மன்னவனிறந்தனனெனுமுரைகன்னத்துண்
மேவுமெல்லையிலசனியேறுண்டவெம்பணியேபோற்
றேவியாகியபதுமகோமளையெனுந்திருமங்கை
யாவிநீங்கினடலையளியாகியததுவன்றோ. (௨)

எவ்வெவர்க்குமேலாகியவவுணர்கோற்கில்லாகி
யவ்விடத்துறைதுணைவியர்வயிறலைத்தழுங்குற்று
வெவ்வழற்பெருங்குண்டமொன்றாக்கியேவிளிவுற்ற
தெய்வதப்புனைவன்மகள்யாக்கைமுன்செலவுய்த்தார். (௩)

மீன்கிளர்ந்தனவரிமதர்மழைக்கண்மெல்லியரெல்லாம்
வான்கிளர்ந்தெழுகின்றதோர்மாபெருங்கனலூடே
கான்கிளர்ந்திடமலர்தருந்தாமரைக்கானத்திற்
றேன்கிளர்ந்துதம்மினத்தொடும்புகுந்தெனச்செல்லுற்றார். (௪)

செல்லல்போதுமென்றெழுந்திடவரற்றினோர்செந்தீயிற்
செல்லல்போதுநாண்மாலையுமங்கியிற்சேர்ந்தோங்கு
மல்லல்போதுமுனின்றிடுநிசியெலாமகன்றென்ன
வல்லல்போதுமா * நகர்த்திருவேகினளதுகாலை. (௫)

---

* அல்லல்போதுமா என்பதற்கு அல்லல்வரும்படி எனப் பொருள்கொள்க; "பிறக்குமா" என்பதுபோல. மாறு - மாவென விகாரப்பட்டதெனினும் அமையும்.

Digitized By Roja Muthiah Research Library

இந்தவாறிவரங்கியுண்மாண்டனரிதுநிற்கத்
தந்தைபட்டதுஞ்சேவலுமஞ்ஞையுந்தானாகிக்
கந்தவேள்புடைவந்ததுங்கண்டனன்கலங்குற்றுப்
புந்திநொந்துநின்றிரணியன்வானிடைப்புலம்புற்றான். (௬)

வேறு.

நன்றென்பதையுணராய்நானுரைத்தவாசகங்க
ளொன்றுஞ்சிறிதுமுறுதியெனக்கொண்டிலையே
பொன்றும்படிக்கோபொருதாய்புரவலனே
யென்றுன்னைமுன்போலிருந்திடநான்காண்பதுவே. (௭)

அன்புடையன்கொல்லென்றயலாரெடுத்துரைப்பத்
துன்புடையேன்போலத்துயராவயர்கின்றே
னென்புடையேமுன்னரெனதுயிர்கொண்டேகினனா
னின்புடையேநின்றுநெடும்பழியினீங்காதேன். (௮)

மாற்றார்வலிகண்டுமற்றுன்னைவன்செருவிற்
போற்றாதொளித்தபொறியிலியேன்றன்முன்னந்
தோற்றாமலெங்கொளித்தாய்சொல்லாய்சுதன்போலக்
கூற்றானவனையின்னுங்கூடமனங்கொள்ளுதியோ. (௯)

கையாரழலேந்துங்கண்ணுதலோன்றந்தவர
மெய்யாமொருகாலும்வீடாயஃதெல்லாம்
பொய்யாகும்வண்ணம்புதல்வனெனவந்துதித்தோ
னையாவுனக்கோரருங்கூற்றமாயினனே. (௧௦)

நில்லாவுடலைநிலையாமெனக்கருதிப்
பல்லாருங்கண்டுபழிக்கும்படியுனக்குஞ்
சொல்லாதகன்றேனீதுஞ்சியபின்வந்தனனா
னல்லார்களிற்றேரினானேதலையன்றோ. (௧௧)

அத்திரநேர்கூறுமவுணர்தமக்குண்மிகக்
குத்திரனேயாகுங்கொடியேனீதுஞ்சியபின்
மித்திரனேபோன்றிரங்கிமீண்டேனுனக்கென்னைப்
புத்திரனேயென்கைபுவிக்குப்பொறையன்றோ. (௧௨)

ஆழியான்வேதனமரர்க்கிறைமுதலோர்
வாழியாயென்றுவழுத்தியிடவைகியநீ
பூழியார்மேனிப்புராரிசிறுவன்றேரிற்
கோழியாய்நின்றுவிலாவொடியக்கூவுதியோ. (௧௩)

ஓகையாலண்டத்துயிர்களெலாம்வந்திறைஞ்சச்
சேகையாய்மல்குந்திருத்தாள்கொண்டுற்றிடுநீ
வாகையார்கின்றவடிவேற்கரத்தோனைத்
தோகையாய்நின்றுசுமக்குதியோதோன்றாலே. (௧௪)

மேற்றான்விளையுமிஃதென்றேவினையமுட
னாற்றான்மொழிந்தேனதுசிறிதுங்கேட்டிலையே
மாற்றானெனவந்தமைந்தனுடன்போர்செய்தே
தோற்றாயேயற்றான்மயிலாய்ச்சுமக்குதியோ. (௧௫)

Digitized By Roja Muthiah Research Library

மாறுற்றிடாத்தொல்வடிவந்தனையிழந்து
வேறுற்றபுள்வடிவாய்மேவினையாங்கதனு
லீறுற்றனையன்றேயென்செய்கைசெய்வதற்கும்
பேறுற்றிலன்வாளாபேணினேனிவ்வுயிரே. (௧௬)

பிள்ளைப்பிறைபுனைந்தபிஞ்ஞகன்றன்காதலனைப்
புள்ளிக்கலாபப்பொறிமயிலாய்ப்போற்றுமெல்லை
யெள்ளற்பொருட்டாலியான்முன்னுரைத்தவற்றை
யுள்ளத்திடையெந்தாயுன்னுதியோவுன்னுயோ. (௧௭)

பொங்குற்றசீற்றம்பொரும்போரிகனுள்ளந்
தங்குற்றமானஞ்சயமகந்தைவன்மையெலா
மங்குற்றநின்னையடைந்ததிலையவ்வனைத்து
மெங்குற்றதையாவியம்பாயெனக்கதுவே. (௧௮)

என்றுக்னகனிரங்கிநெடுஞ்சேணி
னின்றுதளர்ந்துநெடிதுயிர்த்துப்பூதரெனைத்
தின்றுசினந்தீர்வர்தெரியினெனச்சிந்தைசெய்து
துன்றுதிரைவேலையிடைத்தொன்மைபோற்புக்கனனே. (௧௯)

புக்ககனகன்புலர்ந்துபுகரோன்பா
லக்கணமேயெய்தியழிவுற்றதந்தையர்க்குந்
தக்கதுணைவர்க்குந்தாயர்க்குமேனையர்க்கு
மிக்ககடன்கள்விதிமுறையேசெய்தனனே. (௨௦)

தாக்கிச்சமர்மலைந்ததானவர்க்குச்செய்பரிசே
தூக்கிப்புரிந்துதுயரினுக்கோர்வித்தென்றே
யாக்கத்தினைவெறுத்தேயாதிப்பிரானையுள்ளே
நோக்கிக்கதியடைவானேற்றொருசாருற்றனனே. (௨௧)

இரணியன்புலம்புறுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௨,௬௩௫.

---

# மீட்சிப்படலம்.

மற்றதுகாலத்துமணிதூங்கியபசும்பொற்
பொற்றைபுரையும்பொறிமஞ்ஞைமீதுவைகும்
வெற்றிநெடுவேற்கைவிமலன்விறலோனைப்
பற்றினெடுநோக்கியினையபகர்கின்றான். (௧)

கேட்டியிதுவீரகெடலுற்றவெஞ்சூர
னீட்டுதிருவென்னவிருஞ்சிறையின்முன்வைப்ப
வாட்டமுறுசயந்தன்வானோர்தமையெல்லா
மீட்டுவருதியெனவேவிளம்பினனால். (௨)

குன்றமெறிந்தகுமரனிதுகூறுதலு
நன்றிதெனவேதொழுதுநனிமகிழ்ந்து
வென்றிவிடலைவிடைபெற்றுப்போர்க்களத்தி
னின்றுமவுணனெடுநகரத்தேகினனால். (௩)



Digitized By Roja Muthiah Research Library

மீதுபடுதிண்டோள்விடலையறந்திறம்புங்
கோதுபடுதீயோர்குழீஇயநகருட்புக்குத்
தாதுபடுதண்டார்ச்சயந்தனமரருடன்
றீதுபடுவெய்யசிறைக்களத்துச்சென்றனனே. (௪)

செல்லும்விறலோன்றிறத்தைநனிநோக்கி
யல்லலகலுமரிசுதனும்வானோர்க
ளெல்லவருமற்புதநீரெய்திப்பதம்பூட்டும்
வல்லிபரியமலர்க்கைகுவித்தனரே. (௫)

செங்கைகுவித்தேதிறலோய்சிறைப்பட்ட
நங்கடுயரகற்றநண்ணினையோநீயென்றே
யங்கவர்களெல்லோருமார்த்தெழுந்துகூறுதலு
மெங்கள்பெருமானிளவலிதுபுகன்றான். (௬)

வம்மின்கள்வம்மின்கள்வானத்திரெல்லீரு
நம்மையயர்வித்தநொறில்பரித்தேர்வெஞ்சூரை
யம்மவவுணரனிகத்துடனெங்கோ
னிம்மெனவேவேலாலிதுபோழ்தெறிந்தனனே. (௭)

என்றாங்கிசைப்பவிமையோரதுகேளாப்
பொன்றாதுமுத்திபுகுந்தோரெனமகிழ்ந்து
வன்றாண்மிசைப்பிணித்தவல்லிகளின்பூட்டறுத்துச்
சென்றாரவுணன்றிருநகரநீங்கினரே. (௮)

வேறு.

நுணங்குநூலுடையிளையவன்முன்செலநொய்தென்ன
வணங்கினோருடன்சயந்தனுந்தேவருமவணீங்கிக்
குணங்கரீண்டியகளத்திடைநணுகியேகுமரன்றாள்
வணங்கிமும்முறைபுகழ்ந்தனர்திகழ்ந்தனர்மகிழ்வுற்றார். (௯)

குன்றெறிந்தவனமரர்பாற்பேரருள்கொடுநோக்கி
நன்றியில்லவன்சிறையிடைப்பலபகனுழுகுற்றீர்
துன்றுபேரிடர்மூழ்கினிரீங்கினித்துயரின்றி
யென்றும்வாழ்குதிர்துறக்கமேல்வெறுக்கையிலிருந்தென்றான். (௧௦)

கந்தனிம்மொழிவழங்கலுங்கடவுளர்களிப்பெய்தி
யுய்ந்தனம்மெனப்பின்னரும்வணங்கினருதுகாலை
முந்துதொல்லிடர்நீங்கியேபுந்தியின்முத * மெய்தி
யிந்திரன்றிருப்பெற்றிடுஞான்றினுமினிதுற்றான். (௧௧)

கண்டனன்றொழுமைந்தனைப்புல்லினன்களிப்புள்ளங்
கொண்டனன்புறநீவினன்பல்லுகங்கொடியோன்செய்
யொண்டளைப்புகுந்தெய்த்தனைபோலுமென்றுரைசெய்யா
வண்டர்யாரையுமுறைமுறைதழீஇயினனமரேசன். (௧௨)

செற்றமேதகுமவுணர்தங்காவலன்செருவத்தி
லற்றைநாறுமாவிளிந்திடுபூதர்தமனிகங்கண்
முற்றுமாயிடைவரும்வகைமுருகவேண்முன்னுற்றான்
மற்றவெல்லையிற்றுஞ்சியகணமெலாம்வந்துற்ற. (௧௩)

* முதம் - சந்தோஷம்.

Digitized By Roja Muthiah Research Library

முஞ்சுதானைகளார்ப்பொடுசூழ்இச்சூழ்இமுருகேசன்
செஞ்சரண்முனம்பணிந்துதம்மினத்தொடுஞ்செறிகின்ற
வெஞ்சலில்லதோரெல்லைநீர்ப்புணரியிலெண்ணில்லா
மஞ்சுகான்றிடுநீத்தம்வந்தீண்டியமரபென்ன. (௧௪)

கருணையங்கடலாகியோன்கனைகடற்கிறையாகும்
வருணன்மாமுகநோக்கியேவெய்யசூர்வைகுற்ற
முரணுறுந்திறன்மகேந்திரநகரினைமுடிவெல்லைத்
தரணியாமெனவுண்குதியொல்லையிற்றடிந்தென்றான். (௧௫)

என்றமாத்திரைச்சலபதிவிழுமிதென்றிசைவுற்றுத்
துன்றுபல்லுயிர்தம்மொடுமகேந்திரத்தொல்லூரை
யன்றுவன்மைசேர்புணரியுளழுத்தினனவனிக்கீழ்
நின்றுமாயவனடுவுலகுண்டிடுநெறியேபோல். (௧௬)

ஆனகாலையிலறுமுகன்முகுந்தனுமலரோனும்
வானுளோர்களுமிறைவனும்வழுத்தினர்மருங்காக
வேனைவீரர்கள்யாவரும்புடைவரவிகற்பூதத்
தானையார்த்துடன்சென்றிடச்செருநிலந்தணப்புற்றான். (௧௭)

கலங்கல்கொண்டிடுமகேந்திரவரைப்பினைக்கடந்தேபின்
னிலங்கைமாநகரொருவியேயளக்கரையிகந்தேகி
நலங்கொள்சீருடைச்செந்தியிற்றொல்லைமாநகரெய்தி
யலங்கலஞ்சுடர்மஞ்ஞைநின்றிழிந்தனனயில்வேலோன். (௧௮)

கேகயத்தினின்றிழிந்துதொல்சினகரங்கிடைத்திட்டுப்
பாகசாதனஞ்தியாமமரர்கள்பணிந்தேத்த
வாகைசேரரித்தவிசின்மேல்வதனமூவிரண்டுள்ள
வேகநாயகனுலகருள்கருணையோடினிதுற்றான். (௧௯)

வேறு.

ஈண்டிதுநிகழ்ந்தவெல்லையிப்பகலவுணராகி
மாண்டவர்நமர்களன்றேமற்றவர்படிவமுற்றுந்
தீண்டினங்கதிர்க்கையாலுந்தீர்விதற்கிதுவென்பான்போற்
பூண்டகுதடந்தேர்வெய்யோன்புனற்பெருங்கடலுட்புக்கான். (௨0)

வேலையினடுவுபுக்குமேவரும்வடவைச்செந்தீக்
காலமதிறுதியாகக்கடிதெழீஇக்ககனநக்கிப்
பாலுறவிரிந்தியாண்டும்படர்ந்துகொண்டெனவந்தி
மாலையம்பொழுதிற்செக்கர்வான்முழுதீண்டிற்றன்றே. (௨௧)

வேறு.

அன்னதொருபோழ்துதனிலாறிருதடந்தோண்
முன்னவனைநான்முகவனேமுதலதேவர்
சென்னிகொடுதாழ்ந்துசிறியேங்களிவணுன்றன்
பொன்னடியருச்சனைபுரிந்திடுதுமென்றார். (௨௨)

என்றுரைசெய்காலையெமையாளுடையவண்ண
லன்றெனவிசைந்திடநறைக்கொள்புனல்சாந்தந்
துன்றுமலர்தீபமவிதூபமுதலெல்லா
மன்றொருகணத்தின்முனமைத்தனர்களங்கண். (௨௩)

Digitized By Roja Muthiah Research Library

எந்தையுமைதேர்ந்திடவியம்பியகுமார
தந்திரநெறிப்படிதவாதறுமுகற்கு
முந்தியகுடங்கர்முதன்மூவகையிடத்தும்
புந்திமகிழ்பூசனைபுரிந்தனர்பரிந்தே. (உச)

எஞ்சலிலருச்சனையியற்றியிணையில்லோன்
செஞ்சரணிணைத்தமதுசென்னிகொடுதாழா
வஞ்சலிசெய்தேத்திடலுமாங்கவரைநோக்கி
நெஞ்சுறுமகிழ்ச்சியொடுநீடருள்புரிந்தான். (உரு)

நீண்டவருள்செய்திடுநெடுந்தகைநுமக்கு
வேண்டுகுறையுண்டெனின்விளம்புதிர்களென்னக்
காண்டகையசூர்முதல்களைந்தெமையளித்தா
யீண்டுனருள்பெற்றனமியாதுகுறைமாதோ. (உசு)

ஒன்றினியளிப்பதுளதுன்னடியம்யாக்கை
நின்றிடுபகற்றுணையுநின்னிருகழற்கண்
மன்றதலையன்புறவரந்தருதியெந்தா
யென்றிடலுநன்றெனவிரங்கியருள்செய்தான். (உஎ)

வேறு.

மலரயனுதியாம்வரம்பிலோரெலாம், பலர்புகழ்குமரனைப்பரவிவைகினு
ருலகினில்யாரையுமொறுத்ததானவர், குலமெனமாய்ந்ததுகொடியகங்குலே. ()

கங்குலுந்தாரகாகணமுமாய்ந்திடப், பொங்கொளிவீசியேபொருவிலாதவ
னிங்குளவுலகெலாமீறுசெய்திடுஞ், சங்கரனுமெனத்தமியன்றோன்றினன். (உகூ)

குணதிசையமர்புரிகொடியருய்த்திடுங், கணையெனவிரிகதிர்காட்டியங்கவை, ய
ணைதலுங்குருதிநீரடைந்ததன்மைபோ,லிணையறுசெக்கர்பெற்றிரவிதோன்றினன்

அப்பொழுதவ்விடையமரர்கம்மியன், கைப்படுசெய்கையாற்கந்தவேளொரு
செப்பருநிகேதனஞ்செய்வித்தீசனை, வைப்புறுதாணுவில்வருவித்தானரோ. (௩க)

ஆமயமுதலியவைந்துகந்திகண், மாமலர்மஞ்சனமமிர்தம்வான்றுகி
றாமணிவிளக்கொடுதூபங்கண்ணடி, சாமரையாதிகளமரர்தந்திட. (௩உ)

முழுதொருங்குணர்ந்திடுமுருகன்யாவருந், தொழுதகுமிறைவனூற்றொடர்புநா
டியே, விழுமியகண்ணுதல்விமலன்றாண்மலர், வழிபடல்புரிந்தனன்மனங்கொள்
காதலால். (௩௩)

மீட்சிப்படலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் உ,கூசுஅ.

---

யுத்தகாண்டமுற்றுப்பெற்றது.

ஆகக் காண்டம் நான்குக்குத் திருவிருத்தம் எ,அருஅ.

கச்சியப்பசிவாசாரியர் திருவடிவாழ்க.

---

Digitized By Roja Muthiah Research Library

உ

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது

# தேவகாண்டம்.

## திருப்பரங்குன்றுசேர்படலம்.

இன்னபண்பினாற்சிவனடிவழிபடலியற்றி
யந்நிலைக்களநீங்கியேயமரர்கண்முனிவர்
தன்னதானையந்தலைவர்கள்புடைதழீஇச்சாரப்
பொன்னின்மஞ்ஞையினொருத்தமேல்கொண்டனன்புனிதன். (க)

சீர்தயங்கியமயூரமேலமர்தருஞ்செவ்வேள்
சார்தனுற்றிடுமாலயன்மகபதிதம்மை
நேர்தலில்படைவீரரைநோக்கியேநீவி
ரூர்திமேலராய்வம்மினம்புடையெனவுரைத்தான். (உ)

வேறு.

மற்றதுகாலையில்வண்டுழாய்முடிக், கொற்றவன்முதலியகுழுக்கொடேவரும்
வெற்றிகொள்வீரரும்வேறுதத்தமக், கூற்றிடூர்திமேலொருங்குற்றீண்டினர். (ங)

ஞாயிறுகறங்கெனநணுகும்பொன்முடிக், கோயிலின்மருங்கினிற்குழீஇக்குழீஇ
யிரண், டாயிரவெள்ளமாமடல்வெம்பூதரு, மேயெனவெழுந்தனரெழுந்தபூழியே.

மிக்குயரறிஞரைமேவிற்கீழ்மைசெய், மக்களுமேனெறியடைதல்வாய்மையே
தக்கதொல்பூதர்கள்சரணந்தோய்தலிற், புக்கதுபொன்னகர்புவியும்பூழியாய்.(ரு)

அழற்றியபல்கதிராதபத்திர, நிழற்றியவிண்ணளாய்நிமிர்ந்தகேதனங்
குழற்றியதுளைவயிர்கோடுகாகள, மிழற்றியபேரிகைமிகவுமார்த்தவே. (சு)

மேக்குயர்வட்டமும்விளங்குகாம்புமாய், நீக்கமில்கவிகைகணிழற்றிமல்குவ
மாக்கிளர்பஃறொடைவானக்கம்பலந், தூக்கியதிறனெனத்தோன்றுகின்றவே.(எ)

மேற்றலைகடவியவெய்யன்வெம்மையா, னேற்றலையெய்திவானுணங்கனோன்றி
ரை, யாற்றலுமுயன்றெனவணிகவேலையுட், கோற்றலையசைவவெண்கொடியின்
கானமே. (அ)

பாங்கமைபதலையேமுதலபல்லிய, மாங்கொலிவழங்குவவுணத்தீயரைத், தாங்
கினையென்றிறைதண்டஞ்செய்திட, வாங்கியதிரைக்கடல்வாய்விட்டொக்குமால்.

Digitized By Roja Muthiah Research Library

காந்தளஞ்சென்னியன்கடவுமாமயில், கூர்தொறுங்கூந்தொறுங்குலைந்துபஃறலைப்
பாந்தளங்கசைதலும்பசலைமூக்கிஞ, லாய்ந்திடுகின்றனவகிலங்குத்தியே. (௧௦)

மூக்குடையலகினுன்முகிலைக்கீறியே, யூக்கொடுபரலெனவுருமுப்பற்றுமாற்
றீக்கிளர்வன்னதோர்செய்யசூட்டுடைக், கூக்குரல்வாரணங்கொடியதாகையால்.

இந்நிகழ்வுற்றிடவெழுந்ததானைகண், முன்னயல்கடைக்குழைமொய்த்துச்சென்றி
டப், பன்னிருமொய்ம்புடைப்பகவர்மேலவ, னந்நகரத்தினுமகன்றுபோயினுன்.

பொரியரைவிளவுகால்புனிற்றுத்தீங்கனி, வருபயன்கொண்டுதாம்வறிதுவீழ்த்
தெனக், கரியினம்பாரிடக்கணங்களார்ப்பினுல், வெருவினவுணர்விலமயங்கிவீழ்ந்
தவே. (௧௩)

சாற்றிடிற்றம்வினைதம்மைச்சூழுமா, லாற்றலிற்பெற்றமதலைக்கும்வல்லிய
மாற்றருந்துப்புடைவயவர்தானையு, லேற்றரிமுரசினுக்கிடைந்தழிந்தவே. (௧௪)

குஞ்சரமெறிந்திடுங்கோலைவல்கோளரி, யெஞ்சலில்கயமுகரெண்ணில்பூதர்கள்
விஞ்சியபிளிற்றெலிவினவிமெய்பனித், தஞ்சினநஞ்செழவயர்ந்ததேவர்போல். ()

உரங்குறைபோழ்தில்யாரொடுங்கலில்லவ‌ர், வரங்குறைமான்முகவயவரோதை
யாற், கரங்குறைவின்றிநீள்கடுங்கண்யாளிபோய்க், குரங்குறைசூழலுட்குலைந்துபுக்
கவே. (௧௬)

வசைபடுபாரிடம்வழுக்கலில்வகை, மிசைபடுமூற்றமாய்மேற்கொண்டுற்றன
விசைபடுபாரிடமிடிக்குங்கொட்பிஞ, லசைபடுகின்றனவடுக்கலானவே. (௧௭)

உரகமுமடங்கலுமொடுங்கியுட்கியே, வரைகளின்முழைபுகவானத்தார்ப்பன
வரிமுகவீரர்தம்மரவத்தன்மையா, லிரிவனபுரள்வனவெழிலியேறெலாம். (௧௮)

காட்டகவெயினர்தங்கல்லென்சும்மையாற், கூட்டுறைபுட்குலங்குலைவுற்றுலெனச்
சூட்டுடைவாரணந்தோகையார்ப்பது, கேட்டுளநடுங்கினர்கிலேசங்கொண்டுளார்.

அரங்குறுமதலைமேலாடுநீரரின், மரங்களையலைத்திடுகடுவன்மந்திகள்
கரங்குலைவோடுபற்காட்டிவாய்வெரீஇ, யிரங்கினசேவலங்கொடியிடிப்பினுல். (௨௦)

ஆரணமுழங்கொலியமரர்வாழ்த்தொலி, சீரணவியவொலிசேனைப்பேரொலி
காரணமில்லவன்கடவுமாமயில், வாரணவொலிகளான்மறைதலுற்றவே. (௨௧)

இடனுறுகுறிஞ்சியிலினையதன்மையா, னடவைகொள்பெரும்படைநடுவணேகியே
சுடர்பொழிவேலினுன்றூயகூடலின், குடதிசையமர்பரங்குன்றையெய்தினுன். ()

ஆவதோர்பொழுதினிலங்கண்முன்னுறை, மூவிருதவத்தருமுளரியான்முத
லேவருமெந்தையையிறைஞ்சிவிவ்விடை, மேவுதிசிறந்ததிவ்வெற்பென்றேதினுர்.

என்றலுமுருகவேள்யாமுமிவ்வரைச், சென்றிடநினைந்தனமதனைச்செப்பினீர்
நன்றுமதெண்ணமுமஃதுசிந்தையு, மொன்றியவேயெனவுவப்பிற்கூறினுன். (௨௪)

மைம்மலைதழனியும்வடிவும்பெற்றுடைக், கைம்மலைபொழிதருகடாங்கொள்சாரலி
னம்மலையேறினனமலைதன்னெரு, செம்மலையாகிவந்துதித்தசிற்பரன். (௨௫)

வற்றருந்திரைக்கடல்வடாதுமாதிரப், பொற்றையைநுகர்ந்தெனப்பூதசேனைகள்
கொற்றவன்வருபரங்குன்றின்சாரலைச், சுற்றியமிசையினுந்துவன்றிப்புக்கவே. ()

Digitized By Roja Muthiah Research Library

காலையங்கதுதனிற்கடவுட்கம்மியன், மாலுறுகிரிதனில்வரம்பில்வீதியுங்
கோலநற்றெய்வதக்குலமுங்கோயிலுஞ், சோலையும்வாவியுந்துவன்றநல்கினான். ()

அத்துணையெம்பிரானமரர்கம்மியன், கைத்தொழினோக்கியேகருணைசெய்து
போய்ச், சித்திரமறுகிடைச்சேனைவீரரை, வைத்தனன்மந்திரவரைப்பையெய்தி
னான். (௨௮)

ஏயினமஞ்ஞைநின்றிழிந்துநான்முகன், மாயவன்மகபதிவயவர்மற்றையோ [ன்.
ராயினர்புடைவரவவையினூடுபோய்ச், சீயமெல்லணைமிசைச்சிறப்பின்வைகின

பரீஇயயல்வந்திடுபங்கயன்முதன், மரீஇயினர்தமையெலாம்வயின்வயின்றுறு,
மொரீஇயினனமரரையொல்லையேவினான், பொரீஇயினரில்லதோர்புனிதமேலை
யோன். (௩0)

குலக்கிரிபொருவியகுறளின்வேர்தரும், வெலற்கருந்திறலுடைவீரமொய்ம்பனு
மிலக்கருமெண்மரும்யாருமெந்தைதன், மலர்க்கழறொழுதனர்மருங்கினீண்டினார்.

ஏவலினியன்றனரிணையர்நின்றிட, மூவிருபராசரமுனிசிறார்களுஞ்
சேவலையுயரியதேவநாயகன், பூவடியருச்சனைபுரிந்துபோற்றினார். (௩௨)

வழிபடுபுதல்வர்கள்வழுத்தின்றுழி,யுழுவலன்போடுகண்ணுடிச்செஞ்சடைக்,
குழவிவெண்பிறையினான்கூறுர்தொல்லருண், முழுவதுநினைந்தனன்முற்றுணர்ந்து
ளான். (௩௩)

சலம்புரியும்பராசரனெனும்முனி, குலம்புரிதவமெனுங்குமரர்தேர்வுறப்
புலம்புரிபோதகப்பொருண்மையாவையு, நலம்புரிகுமரவேணவின்றுவைகினான்.

பொருவருமகேந்திரபுரத்தைநீங்கியே, தரணியில்வந்தவாசாற்றினுமினிப், பெ
ருமைகொளிந்திரன்பெண்ணையெம்பிரான், திருமணஞ்செய்திடுஞ்செய்கைசெப்பு
வாம். (௩௫)

திருப்பரங்குன்றுசேர்படலமுற்றிற்று.

---

# தெய்வயானையம்மை திருமணப்படலம்.

காய்ந்திடுதம்பகைகடந்துபொன்னகர், வேந்தியன்முறையருள்வேற்கைவீரற்குக்
கூர்தலஞ்சிறுபுறக்குஞ்சரந்தனை, யீந்திடமகபதியிதயத்தெண்ணினான். (௧)

விருத்தமதாகுமிவ்விழைவையிந்திரன், றிருத்தகுமாலயன்றேவர்தேர்வுற
வுரைத்தனன்வினவலுமுவகைபெற்றுநின், கருத்துநன்றுலெனக்கழறன்மேயினார்.

பன்னிருமொய்ம்புடைப்பகவன்பாற்படப், பின்னலஞ்சுரிகுழற்பிடியும்பொய்
கைவாய், முன்னுறவருந்தவமுயன்றுவைத்தன, ளின்னுழியுதன்பயனெய்திற்றே
கொலாம். (௩)

கயலுறழ்விழியுடைக்கடவுள்யானையை, வியல்வரையெறிந்திடுவேற்கையண்ண
லுக்,கியல்புளிவதுவையாலீதற்கிவ்விடை, முயலுதிகடிதெனமொழிந்துவைகினார்.

Digitized By Roja Muthiah Research Library

மற்றதுபோழ்தினின்மகத்தின்செம்மலோ, ரொற்றனைநோக்கியேயொல்லைமே
ருவாம், பொற்றையின்மனைவியைப்புதல்விதன்னுட, னிற்றையில்விளித்தனையே
குகீயென்ருன். (௫)

என்றலுந்தூதுவனிசைந்துமேருவிற், சென்றனன்புலோமசைத்தெரிவைமுன்பு
போய், நின்றனன்வணங்கினனினைதுசிந்தைபோ, லொன்றியகேளெனவுரைத்தன்
மேயினன். (௬)

மாண்டனன்வெய்யசூர்மதலைதன்னொடு, சேண்டொடரமரருஞ்சிறையினீங்கினு
ராண்டலையுயர்த்தவனனிகந்தன்னொடு, மீண்டனன்றிருப்பரங்குன்றமேயினன்.()

நின்றிடவனையதுநினதுநாயக, னுன்றனைமகளொடுமொல்லையிற்பரங் [ன்.
குன்றிடையிருக்கையிற்கொண்டுசெல்கென, வின்றெனைவிடுத்தனனேகுகீயென்ரு

அம்மொழிவினவலுமணங்கினல்லவள், விம்மிதமுற்றனள்விழுமநீங்கினு [டும்.
ளெம்மையுமில்லதோரின்பமெய்தினள், கொம்மெனவெழுந்தனள்குமரிதன்னொ

புடையுறவணங்கினர்போற்றிமேருவி, னிடையுறுபுலோமசையேமமாகியே
யடலயிராவதவானைமேற்கொடு, மடமகடன்னொடும்வானத்தேகினள். (௧0)

பொருப்பினுண்மேலதாய்ப்புவியிற்பேர்பெறுந், திருப்பரங்குன்றிடைச்சென்று
தேவர்கோ, னிருப்பதோர்மந்திரத்தெய்தினைகினுண்,மருப்பிரண்டுடையதோர்வா
ரணத்துடன். (௧௧)

உறையுமவ்வெல்லையினுயர்மகேந்திரச், சிறையினுமகன்றிடுதெய்வத்தையலா,
ரிறைவியைப்பெற்றனமியாமுய்ந்தோமென, முறைமுறைவணங்கினுர்முகிழ்த்த
கையினர். (௧௨)

சேணுறுமெழிலிவாய்திறந்தமின்னுவைக், காணுறுகின்றதோர்கலாபமஞ்ஞை
போன், மாணுறுபுலோமசைவரலுமாதரா, ரேணுறுகின்றனரேமம்பெற்றுளார். ()

கண்டனண்மதலையைக்கருணையாற்றழீஇக், கொண்டனண்மகிழ்ந்தனள்கொங்
கைபாலுக, விண்டனள்கவற்சியைவெறுமையுற்றுளோர், பண்டுளபெருநிதிபடை
த்தபான்மைபோல். (௧௪)

ஆடுறுபசியினோராக்கங்கண்டுழி, நீடுறுமுவகையானிறைவுபெற்றென
மாடுறுபுலோமசைவடிவங்காண்டலுங், கூடினர்தன்மையுங்குரிசிலெய்தினுன். ()

வேறு.

அப்போதுவானோர்குழுவோடயிராணிகேள்வன்
செப்போது * கொங்கைமகடேஉமணஞ்செப்பன்முன்னி
யொப்போதுநீர்மையிலதாமொருவன்கழற்கே
கைப்போதுதூவிப்பணிந்தேத்திக்கழறலுற்ருன். (௧௬)

கன்னின்றமொய்ம்பினவுணக்களைகட்டல்செய்தா
யிந்நின்றதேவர்சிறைமீட்டனையென்றனக்கு
முன்னின்றதொல்சீர்புரிந்தாயதுமுற்றுநாடிச்
செய்ந்நன்றியாகச்சிறியேன்செயத்தக்கதுண்டோ. (௧௭)

* ஓது - உவமவுருபு.

முந்தேதமியேன்பெறுமங்கையிம்மொய்வரைக்கண்
வந்தேயமர்வாளவடன்னைவதுவைசெய்து
கந்தேபுரைநின்பெருந்தோளிற்கலத்தியாங்க
ளுய்ந்தேபிறவிப்பயன்பெற்றனமோங்கவென்றான். (௧அ)

என்னுந்துணையிலமரேசனையெந்தைநோக்கி
யந்நங்கைதானுமிகநோற்றனளாதலானீ
முன்னும்படியேமணநாளைமுடித்துமென்னத்
தன்னுங்கடந்தமகிழ்வெய்தித்தருக்கிநின்றான். (௧௯)

வடிக்கொண்டவொள்வேற்படைநம்பிதன்வார்கழற்கான்
முடிக்கொண்டடியேஞ்சிறந்தேங்கண்முதல்வவென்னாக்
கடிக்கொண்டவாய்தற்புடைவந்துகணிப்பில்காத
நொடிக்கொண்டபோழ்திற்படர்தூதரைநோக்கினானால். (௨0)

முன்னாகியுள்ளபலதூதர்முகத்தைநோக்க
வன்னாரெவருந்தொழுதேபொன்னடிவணங்கி
யெந்நாயகனேதமியேஞ்செய்வதென்கொலென்னப்
பொன்னாடுடையானிஃதொன்றுபுகலலுற்றான். (௨௧)

மூவர்க்குண்மேலோன்கிரிசேர்முசுகுந்தனாதிக்
காவற்கடவுட்டலைவர்க்குங்ககனமேவுந்
தேவர்க்குமேனைத்திசையோர்க்குமுனிவராயோ
ரேவர்க்குமெந்தைமணநாளையெனச்சொல்வீரால். (௨௨)

கந்தக்கடவுண்மணத்தன்மைகழறிவல்லே
யிந்தப்பொருப்பினிடையாவருமீண்டும்வண்ணந்
தந்திட்டிடுங்களெனவாசவன்சாற்றலோடு
மந்தக்கணத்திற்றொழுதொற்றரகன்றுபோனார். (௨௩)

வேறு.

போனபொழுதிற்புலவர்செம்மல்புலன்மிக்க
வானவர்கள்கம்மியனைவல்லையில்விளித்துக்
கானமர்கடம்புபுனைகாளைதன்மணத்துக்
கானசெயன்முற்றுறவமைத்தியிவணென்றான். (௨௪)

புலவனதுளங்கொடுபொருப்பினொருசாரி
னிலமிசைவரைப்பகனிதிக்கொடுவிதித்துக்
குலமணிகுயிற்றிநனிகோலமதியற்றி
வலனுயர்சிறப்பினொருமண்டபமமைத்தான். (௨௫)

மேலைநிலமுற்றுறவிதானவகைபோக்கி
மாலையொடுபல்கவரிவான்றுகில்கடுக்கி
யாலயநனந்தலையிலாறுமுகன்வைக
நூலின்முறைநாடியொருநோன்றவிசமைத்தான். (௨௬)

வேதநெறிதந்திடுவிசாகனயல்வந்த
மாதவன்விரிஞ்சன்முதல்வானவர்கள்யாரு
மேதிலரும்வைகவியல்கின்றவிடைதோறு
மாதனம்வரம்பிலவமைத்தனனிமைப்பில். (௨எ)

அகூ

Digitized By Roja Muthiah Research Library

மன்றல்பயில்கின்றவதுவைக்களன்மருங்கிற்
குன்றுபுரைபல்சிகரகோபுரம்வகுத்தா
னன்றிமணிமண்டபமளப்பிலவமைத்தா
னின்றியமையாப்பொதுவுமெண்ணிலவிழைத்தான். (உ௮)

காலம்வரையாதுகருதுற்றபொழுதெல்லாஞ்
சாலவெவர்கண்ணுநனிதம்பயன்வழங்குஞ்
சோலைமலர்வாவிகள்சுனைத்தொகைதொகுத்தா
னேனும்வதுவைக்குரியவேனவுமளித்தான். (உ௯)

அவ்வகையெலாம்புலவனங்ஙனம்வகுப்பச்
செவ்விதுதெரிந்துவகைசெய்தமரர்செம்மன்
மெய்வதுவையாற்றும்வழிவேண்டுகரணங்க
ளெவ்வெவையுமங்கணுரிமைப்பில்வருவித்தான். (௩0)

தேவர்முதல்வன்றனதுசெய்கையிதுநிற்க
வேவலரிசைத்திடலுமிவ்வதுவைகாணக்
கோவியல்புரிந்தமுசுகுந்தனெனுநேமிக்
காவலன்வரும்பரிசுகட்டுரைசெய்கிற்பாம். (௩௧)

கல்லருவிதூங்குகயிலைப்பொழிலின்மேனு
ளல்லுறழ்மிடற்றவனுமம்பிகையுமாக
வெல்லையின்மகிழ்ச்சியொடிருப்பமுசுவீட்டம்
வில்லுவமரந்தொறும்வியன்சினையிலுற்ற. (௩௨)

முற்றுணர்கருத்தின்முனிவோர்களெனமுள்காந்
துற்றிடுமுசுக்கலையுளொன்றிருவர்மீது
மற்றொருவில்வத்திலைவரம்பிலபறித்துத்
துற்றிடுவதென்னநனிதூர்த்துளதையன்றே. (௩௩)

தூர்த்ததொருகாலைதனிற்சுந்தரிபொருளாய்ச்
சீர்த்திடலுமாங்கவள்செயற்கைதலையண்ணல்
பார்த்துநமையீண்டுவழிபட்டுளதுதன்னை
வேர்த்திடுவதென்னிதுவிடுத்தியினியென்றான். (௩௪)

என்றிடலுமம்பிகையிகற்சினமிலாளாய்
நன்றருள்புரிந்திடலுஞானவடிவானோன்
வன்றிறன்முசுக்கலைமனத்திருளகற்றி
யொன்றியமர்வாலுணர்வொருங்குதவினால். (௩௫)

மெய்யுணர்வுசேர்தலும்வியன்சினையினின்று
மொய்யெனவிழிந்துமுசுவுட்குவரலெய்தி
யையனையுமாய்தனையுமார்வமொடுதாழ்ந்து
பொய்யடியனேன்பிழைபொறுத்திரெனவோடும். (௩௬)

பிழையிதெனவச்சமொடுபேசலெமையீண்டே
விழுமியதொர்கூவிளையின்மெல்லிலைகளிட்டு
வழிபடல்புரிந்தனைமனுக்குலமுதித்து
முழுதுலகையாளுகெனமுன்னவன்மொழிந்தான். (௩௭)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

அம்மொழிதேர்தலுமாயதொர்கள்வன், கைம்மிகவுற்றகலங்கஞரெய்தி
விம்மியிரங்கிவிதிர்ப்பொடெழுந்தே, யெம்மிறைவற்றொழுதிவ்விவைசெப்பும். ௩அ

நுங்கணைவைகலுநோக்கியுவப்பா, யிங்குறைகின்றதிகந்துநிலம்போய்
மங்குறுசெல்வவலைப்படுவேனே, லெங்கள்பிரான்பிணையெங்ஙனமுய்கேன். (௩௯)

என்னலுமன்னதையெம்மிறைகேளா, நின்னுளநன்றுநிலத்திடைவைகிப்
பின்னிவண்மீள்குதிபேதுறலெய்தி, முன்னலையாதுமுசுக்கலையென்றான். (௪0)

பொய்ம்மறையானபுலாலுடல்போற்றி, யம்மையில்வாழ்விடையற்றமுறாமே
யிம்முகனேறுநெறிவெற்கருளென்ன, மெய்ம்முசுவின்கலைவேண்டியதன்றே. (௪௧)

அற்றமிலவ்வரமையனளிக்கப், பெற்றருள்கொண்டுபெருங்கயிலாயப்
பொற்றையகன்றுபொருக்கெனவிம்பர், மற்றொர்கணத்தினில்வந்ததுமன்னோ. ()

ஆரணர்சூழ்கியுமாக்கமிழந்தும், வாரிசுருங்கியும்வாய்மைநிறுத்தித்
தாரணியாளரிச்சந்திரனென்போ, னோர்மருமா * னெனவேயுதித்தன்றே. (௪௩)

மாமுகமேமுசுமற்றுளவெல்லாங், காமரிலேர்தருகாட்சியதாகிக்
கோமுறைசேர்முசுகுந்தனெனுவோர், நாமவியற்பெயர்நண்ணியதன்றே. (௪௪)

ஆயவழிப்படுமம்முசுகுந்தன், றூயபொலன்முடிதொன்முறைசூடி
மாயிருஞாலவளாகமதுள்ள, தேயமெலாமொர்செகிற் o கொடுகாத்தான். (௪௫)

ஓவறுசீர்க்கருவூரிடைமேவிக், கோவியலோம்புறுகொள்கையனாகித்
தேவரையேவல்கொள்சீர்கெழுசூரன், காவலினாணைகடக்கலனுற்றான். (௪௬)

சொற்றிறன்மேதகுசூரெனும்வெய்யோ, னுற்றிடும்வைப்பினிலோரிடைதன்னின்
மற்றொரிளம்பிறைவைகியவாபோற், கொற்றவனாமுசுகுந்தனிருந்தான். (௪௭)

சூரனையெந்தைதொலைத்ததுகேளா, வாரணர்நீங்கியருஞ்சிறைபெற்ற
மேருவதென்னவியன்மிடல்பெற்றுச், சீரிறைமாட்சிசெலுத்தியமர்ந்தான். (௪௮)

வேறு.

அமருமெல்லையினரசன்முன்னரே, யிமையவர்க்கிறையேவுதூதர்போய்க்
கமலமன்னபொற்கழல்கள்வாழ்த்தியே, தமதுவன்மையாற்சாற்றன்மேயினார். ௪௯

உனதுநண்பனாயுறுபுரந்தரன், றனதுதூதர்யாந்தாவில்சீர்பெறீஇ
நினதுசுற்றமுநீயும்வாழிகே, ளினிதுமங்கலமிசைப்பவெய்தினோம். (௫0)

அடாததீமைசெய்தமரர்தஞ்சிறை, விடாதசூரனைவீட்டிவேலவன்
வடாதுபூமிவாய்வந்துகூடலின், குடாதுசேர்பரங்குன்றில்வைகினான். (௫௧)

கொற்றவேற்படைக்குமரற்கிந்திரன், றெற்றெனத்தருந்தெய்வயானையை
யிற்றைசென்றபினீகின்றானிது, சொற்றிடும்படிதூண்டினனெமை. (௫௨)

மாறிலாதவவ்வதுவைகாணநீ, யீறில்சேனையோடெழுந்துதென்றமிழ்க்
கூறுசீர்ப்பரங்குன்றந்தன்னிடைச், சேறியாலெனச்சிலதரோதினார். (௫௩)

ஓதவன்னவனுவகைசிந்தையின், மீதுபொங்குறமெய்பனித்தெழீஇத்
தூதரைத்தழீஇச்சோபனம்மிதற், கேதுமில்லையாலீயுமாறென்றான். (௫௪)

---

* மருமான் - வழித்தோன்றல்.   o செகில் - தோண்மேல்.

Digitized By Roja Muthiah Research Library

ஈண்டைமாநிதியாவுநல்குகோ, காண்டருங்குடைகவரிநல்குகோ
வாண்டிருந்தவென்னரசுநல்குகோ, வேண்டுகின்றதென்விளம்புவீரென்ருன். ருரு

கோதில்சீர்முசுகுந்தனிந்தவா, ருேதுமெல்லேயிலுவகையுற்றவ
ஞதரத்தினதளவைநோக்கியே, தூதராயினேர்வியந்துசொல்லுவார். (ருசு)

சொல்வினைப்படுந்தூதர்க்கிவ்வெலா, மொல்வதன்றிவையுதவிற்ருேக்குமால்
வல்விரைந்துநீவாசவன்முனஞ், செல்வதேயெனச்செப்பிப்போயினர். (ருஎ)

போயதூதுவர்புவியின்மன்னவ, ராயினேர்க்கெலாமாறுமாமுகச்
சேயவன்மணஞ்செப்பிமாதிர, மேயினேர்க்குமிங்கிதுவிளம்பினர். (ருஅ)

அகல்விசும்பிடையல்கலும்படர், பகலவன்முதற்பகவர்யாவர்க்கு
மிகலின்மாதவரெவர்க்குமிச்செயல், விகலமின்றியேவிளம்பியேகினர். (ருகூ)

வேறு.

ஆயகாலேயின்முசுகுந்தனப்பதிதன்னின்
மேயினர்களுந்தன்பெருஞ்சேனேயும்வேற்கை
நாயகன்மணங்காணியமுன்னரேநடப்பான்
பாய்மதக்கரிமிசைமுரசறைந்திடப்பணித்தான். (சு0)

அந்தநீர்மையைவள்ளுவனகன்கருவூரிற்
றந்தியின்மிசையேறியேதனிமுரசறைந்து
மூந்துசீர்க்கமலாலயத்தரன்விழாமொழிந்தே
யிந்திரன்றிரிந்திடுதல்போற்றிரிந்தனனிசைத்தான். (சுக)

வேறு.

ஆனதோர்பொழுதிலந்நகரின்மாக்களுஞ்,சேனேயின்வெள்ளமுந்திசைகளின்புறம்
போனதோர்பெரும்புறப்புணரிக்கேகுறு, மேனேயகடலெனவெழுதலுற்றவே. சுஉ

எண்டிசையாற்றுவவிபங்களாதலி,னண்டமுந்தாங்குவானயன்படைத்தென,வி
ண்டொடநின்றிடும்வேழமெண்ணில, கொண்டல்கள்சூழிபோற்குலவச்சென்றவே.

வால்கிளர்கற்றையுமதர்வைநோக்கமும்,பால்கிளர்செவிகளும்பழிப்பில்சென்னி
யுங்,கால்கிளர்செலவுமாய்க்கால்கள்சென்றென,மேல்கிளர்புரவியின்வெள்ளஞ்செ
ன்றவே. (சுச)

ஐயிருதிசையினுமணிந்துசெல்வன, கொய்யுளேவயப்பரிக்குழாங்கள்பூண்டன
வெய்யவருதித்தெனவிளங்குகாட்சிய, வையமெண்ணில்லனவையம்போந்தவே.()

வலிபுணர்யாக்கையர்வயங்கொள்வாகையர், கொலேகெழுபல்படைக்கூட்டுண்
வாட்கையர், புலியுறழ்மானவப்பொருநராயினர், தலேவர்கடம்மொடுதழுவிப்போ
யினர். (சுசு)

அடல்வலிமானவரங்கையேந்திய, படைவகைமின்னுவபல்லியங்களு
மிடியொலிகாட்டுவவீண்டுதானேயுட்,கொடிநிரைவிசும்புதோய்கொண்டல்ாயவே.

தாளுறுகழலினர்சரம்பெய்தூணியர், தோளுறுவில்லினர்தொடையற்குஞ்சியர்
வாளுறுதடங்கணர்மருங்குமன்மத, வேளெனவொருசிலவீரரேகினர். (சுஅ)

கறுத்திடுபலகைவாட்கையர்சாலிகை, பொறுத்திடுமெய்யினராகிப்போகுவார்
மறுத்தவிர்மதிமுகமாதர்நாட்டவே,லொறுத்திடுநம்மையென்றுன்னினர்கொலோ

Digitized By Roja Muthiah Research Library

அடைந்திடுதுன்பெலாமாற்றியம்புவி, மடந்தைமுன்செய்திடுமாதவத்தினாற் [னார்.
றொடர்ந்திடுபிடியினந்தொலையப்பூமிசை, நடந்தனர்வரம்பிலாநகைமென்கொம்ப

ஏரகன்மணந்தனக்கெய்துமார்சையால், வாரகமுலையுடைமடந்தைமார்பலர்
பாரகமலிதரப்பரவிப்போயினார், தாரகைவிண்ணெறிபடருந்தன்மைபோல். (எக)

இடையிடைகால்களும்யாறுஞ்சேர்தலிற், படிமிசைநடந்திடுபாவைமார்களை
விடலைகளேந்தியேமெல்லவேகினார், கடலினும்பெரியதாங்காமமூழ்குவார். (எஉ)

தந்திகளின்மிசைத்தையலாருடன், மைந்தர்களேகினார்மாநிலந்தனி
லந்தமில்சீரயிராணிதன்னொடு, மிந்திரர்போவதோரியற்கைபோலவே. (எங)

அதிர்குரற்றேர்களிலரிவைமாருடன், கதுமெனப்போயினர்கணிப்பில்காளையர்
மதிமுகத்தாருடன்வரம்பில்வெய்யவர், முதுவரைச்சிகரமேன்முடுகிச்சென்றென.

கூற்றினைவென்றிடுங்கொலைக்கணார்சில, ரேற்றமில்பிடிமிசையேறிப்போந்தன
ராற்றலதின்மையாலவர்நடைக்குமுன், றோற்றனநாணியேசுமத்தல்போன்றவே.()

காமருகொங்கையாற்கரிமருப்பினை, யேழுறவென்றுளார்யானைக்கோடுகண்
மாமருங்கடைதலுமருண்டங்கோடினார், தாமுதற்செய்வினைதம்மைச்சூழ்ந்தென.

விரிதருசேனையில்விண்ணிற்பாய்தரு, பரிகளின்மடந்தையர்பலரங்கேகினார்
கரையறுமமரர்கள்கடைந்தபாற்கடற், றிரைதனில்வருபலதிருவைப்போலவே. ()

மேகமதுற்றிடுமின்னின்மீமிசைப், போகியசிலையொடும்போந்ததன்மைபோற்
பாகினையன்னசொற்பாவைமார்நர, வாகனமவைகளின்மருவியேகினார். (எஅ)

அவிகையின்முழுமதியளிப்பப்பல்பொறி, குவிகையிலம்புயங்குலவிச்சென்றெனக்
கவிகையிலாதபங்கரப்பமூடுபொற், சிவிகையிலேகினார்தெரிவைமார்சிலர். (எகூ)

வேறு.

பரதனங்கவருமல்குற்பரத்தையர்தம்மைப்பாரா
விரதநன்முனிவர்தாமும்வேதியர்பலருமீண்டிச்
சுரதநண்புடையராகுங்கணிகையர்தோளாற்றாளா
லுரதனந்தன்னாற்றாக்கவுளைந்துளைந்தொதுங்கிப்போனார். (அ0)

வேண்டியமாற்றங்கொள்ளாள்வெகுண்டுசென்றிடுவாண்முன்ன
மாண்டொருமதமால்யானையடர்த்துவந்திடலுமஞ்சிப்
பூண்டிடுபுலவிநீங்கிக்கணவனைப்புல்லிக்கொண்டா
ளேண்டருதோளினானுமிபத்தினைத்தொழுதுநின்றான். (அக)

ஏமருங்கலாபமஞ்ஞையினமெனச்செல்லுமாதர்
மாமருங்கிறுங்கொலிற்றான்மதனரசிறக்குமென்றே
காமருங்கவற்சிகொள்ளக்கரத்தினாலவரைப்புல்லித்
தாமருங்காகப்போனார்தார்முடியிளையரானோர். (அஉ)

கணவன்றன்பிழையையுன்னிக்கனன்றிடுங்கணவன்றானை
யணைவுறாநீர்மையுன்னியழுங்குறுமமலமூர்த்தி
மணவினைதன்னையுன்னிமகிழ்ந்திடுமிவ்வாறாகிப்
புணர்கயிற்றூசல்போலும்புந்திகொண்டொருத்திபோனாள். (அங)

Digitized By Roja Muthiah Research Library

கையிலார்கைகள்பெற்றுங்காலிலார்கால்கள்பெற்று
மொய்யிலார்மொய்கள்பெற்றுமூங்கைகண்மொழியைப்பெற்று
மையல்சேர்குருடரானோர்வாள்விழிபெற்றுஞ்சென்று
ரையன்மேலுள்ளம்வைத்தார்க்கணையதோவரிதுமாதோ. (௮௪)

விடந்தருவேற்கணல்லாள்வெளிப்படுகொங்கைதன்னைப்
படந்தனின்மறைத்தலோடும்பாங்கிலோர்காளைபாராத்
தொடர்ந்தனனவள்பின்போனான்றுணைமுலைப்படத்திற்சிக்கிக்
கிடந்ததன்மதியைமீட்கக்கிலேசமோடேகுவான்போல். (௮௫)

நெய்தலுங்கமலப்போதுநீலமுநெடுநீர்ப்பொய்கை
கொய்தனர்குமரரானோர்கொடுங்குழைமடந்தைமார்தங்
கைதனிற்கொடுத்துச்செல்வார்கன்னிமீரிவையோநுங்கண்
மைதிகழ்விழிக்குத்தோற்றமலரெனக்காட்டுவார்போல். (௮௬)

அரிசனமேனிநல்லாளணிதுகிலசைவின்சீராற்
கரிசன * மன்னகொங்கைகாண்டலுந்தளர்ந்தோர்காளை
தெரிசனந்தன்னிலீதென்சிந்தையைப்பிணித்ததென்றாற்
பரிசனந்தனிலென்னாமோவென்றுயிர்பதைத்துநின்றான். (௮௭)

கற்பகவல்லியன்னாளொருத்திதன்காதன்மூழ்கி
யற்பகலேவல்செய்வானங்கவள்செல்லும்போதிற்
பொற்புறுபடாத்தினீங்கிப்பூண்முலைசிறிதுதோன்றப்
பற்பகனேற்றுவேண்டும்பரிசில்பெற்றானையொத்தான். (௮௮)

ஒப்பிலாவொருவேற்காளையொள்ளெயிற்றூறுதாங்கித்
துப்புறுபவளச்செவ்வாய்திறக்கலள்சொல்லுமாடா
ளப்படியொருத்திசெல்லவநங்கவேளமுதம்வைத்த
செப்பினிற்குறியுண்டாங்கொறிறக்கலீர்சிறிதுமென்றான். (௮௯)

புடைதனிலொருத்தல்புல்லப்போவதோர்பிடியின்மேவு
மடவரல்வெருவலோடுமற்றதுகண்டோர்வள்ள
லிடையகறேருமாவும்யானையும்படையுங்கொண்டீர்
கடகரியொன்றற்கஞ்சுங்காரணம்யாதோவென்றான். (௯0)

ஆழியிலமுதம்பொங்கியலையெறிந்தொழுகிற்றென்ன
வேழிசைநரம்புகொண்டமகரயாழிசையப்பண்ணி
வேழமுந்தேருமூர்ந்துவிறலியரோடுபாணர்
நீழலும்பருந்துமென்னநெறிப்படவிசைத்துப்போனார். (௯௧)

வெங்கரிநுதலிலப்பும்வீரசிந்துரம்வில்வீச
மங்கையர்மைந்தர்பூணும்படைகளும்வயங்கமாடே
தொங்கலுங்கவிகைக்காடுந்துவசமுமிருளைச்செய்யக்
கங்குலும்பகலுமாலைக்காலமும்போலுமாதோ. (௯௨)

கொக்கரைபடகம்பேரிகுடமுழாக்கொம்புகாளந்
தக்கைதண்ணுமைதடாரிசல்லரிகிசாளந்தாள
மெய்க்குழறுடியேபம்பைவேறுபல்லியமுந்தாங்கி
மைக்கடல்வாய்விட்டென்னவரம்பிலோரியம்பிப்போனார். (௯௩)

---

* கரிசனம் - யானைக்கோடு,

Digitized By Roja Muthiah Research Library

ஆரணமுனிவர்தாமுமமரருமகல்வான்செல்வார்
சீரணிமுசுகுந்தன்மேற்றிருமலர்சிதறலுற்றார்
காரணமில்லாவள்ளல்கடிமணந்தாமுங்காண்பான்
றாரணிதன்னிற்செல்லுந்தாரகாகணங்கொலென்ன. (கூச)

இன்னனசனங்களீண்டியெங்குமாயேகுமெல்லைத்
தன்னுறுகிளைஞர்தாமுந்தந்திரக்கிழவர்யாரு
முன்னொடுபின்னும்பாங்குமொய்த்துடன்செல்லத்தானோர்
பொன்னெடுந்தேர்மேல்கொண்டுமுசுகுந்தன்போதலுற்றான். (கூரு)

வேறு.

அடவியுமிகந்தனனகணிநாட்டுட, னிடையிடையடுக்கலும்யாறுநீங்கினன்
படர்தலுமவன்வழிப்பரிதிநாயக, னடுவுறுமுச்சிமேனண்ணினனரோ. (கூசு)

அண்ணலம்படைகளுமளப்பின்மாக்களு, முண்ணெகிழுவகையோடொல்லைவந்
திடத், தண்ணிழல்வெண்குடைத்தரணிகாவலன், பண்ணவன்மேவுறுபரங்குன்றெ
ய்தினன். (கூஎ)

முசுமுசமுடையவன்முன்னர்வந்துழி, வசுமதியிறைபுரிமன்னரேவரு [ய்தினர்.
மசைவறுதிருவொடுமணிகந்தன்னொடுந், திசைதொறுந்திசைதொறுஞ்சென்றங்கெ

முறைநெறியாற்றிடுமுசுகுந்தன்முத, லிறையவர்யாவருமீண்டுதானையுங் [ர்.
குறைதவிர்சனங்களுங்குன்றஞ்சூழ்ந்துற, நிறுவினரொன்றியநெஞ்சங்கொண்டோ

புழையுறுகரங்களாற்போதகஞ்சில, வுழைவருபிடிதனக்கும்பர்தாருவின்
குழைகளைமுறித்தனகொடுத்துக்கோட்டினன், மழைமுகில்கீறியேவாரிநல்குவ.()

படர்சிறைநீங்கியபராரைவெற்பெலா, மடிகளினொற்றியேயசைந்துபோந்தெனக்
கடிகமழ்ம்மதக்கரிகளோர்சில, விடலருந்தளையொடுமெல்லச்சென்றவே. கOக

மூடுறுகணமுகின்முழக்கறுதோர், கோடியர்குன்றினைக்குறித்துநோக்கியே
யீடுறுதிசைக்கரியீதென்றுன்னியே, யோடுவததன்மிசையொன்றோர்யானையே.

வேறு.

கலையகலல்குலார்பாற்காதலான்முயங்கிவல்லே
யுலைவுறுசேக்கைப்போரினுடைந்திடுமரரேபோன்
மலைபொருபிடிகளோடுமலைந்துதம்மதநீர்சிந்தி
நிலையழிவெய்திவெள்கிநின்றதோர்நெடுநல்வேழம். (கOங)

உடம்பிடிபுரையுமொண்கண்மோகினியொருத்திக்காகத்
திடம்படுமவுணர்யாருந்திரண்டுடன்சென்றவாபோன்
மடம்படுபிடியொன்றேகமையன்மேல்கொண்டுமாடே
கடம்படுமொருத்தல்வேழங்கணிப்பிலபடர்ந்தவன்றே. (கOச)

காழுற்றதந்தமின்னக்கபோலத்துமதநீர்வீழ
வூழிப்பேருருமுத்தன்னையுமிழ்ந்தெனவொலிமீக்கொள்ளக்
கேழுற்றமணிவில்லென்னக்கிளர்நுதலோடைபொங்க
வேழத்தினிரைகளெல்லாமேகம்போலுலாவுகின்ற. (கOரு)

இருநெடுவிசும்பிற்செல்லுமெழிலியையெயிற்றாற்பாய்ந்து
சொரிதருபுனலைவாரித்துதிக்கையால்வீசுகின்ற
பருமணியோடையானைபாய்திரைப்பரவையேழுங்
கரதலமெடுத்துச்சிந்துங்கண்ணுதற்களிறுபோலும். (கOசு)

Digitized By Roja Muthiah Research Library

கன்றொடுபிடிகள்சூழக்கடாம்படுகைம்மாவொன்று
நின்றிடுகெந்திற்சேர்ந்துநிகளத்தோடமர்ந்தநீர்மை
குன்றுகள்புடையிற்சுற்றக்குருமணிநீலப்பொற்றை
யொன்றொருதமியதாகியுற்றவாறொத்ததம்மா. (க0எ)

எருத்தமேலிடிக்கும்பாகரிசைக்குறிகொள்ளாதாகி
மருத்தினும்விசைமேற்கொண்டுவன்கரித்தண்டநோக்கி
யுருத்திடுகொடுஞ்சொற்றுயரொறுக்கவுமொருவன்மாட்டே
கருத்துறுகணிகைநெஞ்சிற்போவதோர்கடுங்கண்வேழம். (க0அ)

தூவகங்கொண்டசெங்கேழங்குசந்தூண்டுபாகர்
நாவகங்கொண்டசொல்லானவிற்றுமந்திரத்தால்வாக்காற்
பாவகங்கொண்டபைங்கட்பாரிடம்வழிப்பட்டாங்குச்
சேவகங்கொண்டபொங்கர்சேர்ந்தனசிலகைம்மாக்கள். (க0கூ)

அந்தமிலாதசெல்வத்தவுணருக்கரசன்முன்னம்
வெந்திறற்கால்கடம்மைவியன்சிறைப்படுத்தியென்னக்
கந்திடைப்பிணிக்கப்பட்டகடுநடைப்புரவியெல்லாம்
பந்தியிலொழுங்குகொண்டுநின்றனபாங்கரெங்கும். (கக0)

வீரவேற்றடக்கைவள்ளல்விழாவினைக்காணவிண்ணோ
ரூரொடுதிசையுமேனையுலகமுமொருங்குற்றென்னக்
காரினுமொலிமேல்கொண்டகலினவாம்புரவிபூண்ட
தேர்நிரையநந்தகோடிசெறிந்தனதிசைகளெங்கும். (ககக)

விடங்கெழுவேற்கணாரும்வெலற்கரும்வீரர்தாமுந்
தடங்கெழுதானைவெள்ளத்தலைவருமேனையோரு
மிடங்கெழுதுனைத்துன்னூசியிழைதொடுத்திசைக்கப்பட்ட
படங்கெழுமாடகூடத்தாவணம்பரவிப்புக்கார். (ககஉ)

கன்னெடுந்தாரைகான்றகார்முகில்வளைப்பச்செங்கண்
முன்னவனிரையைக்காத்தமுதுவரைநிலையதென்னப்
பன்னிறப்பசுங்காய்சிந்தும்பழுமரக்காமர்காவுட்
பொன்னிவர்புனைமாண்கோயில்புரவலற்கமைந்ததன்றே. (ககங)

முத்தமுந்துகிரும்பொன்னுமுழுமணிக்கலனுஞ்சந்துஞ்
சித்திரப்படமுமற்றுந்தெற்றிமேனிரைத்துச்சீர்சா
லுத்தமவணிகருற்றுருணர்ச்சியுங்கற்புந்தூக்கி
யத்தகுபொருளையார்க்குமளித்திடுங்கொடையினார்போல். (ககச)

மடப்பிடிமான்றேர்நீங்கிவானிடைத்தவறிமின்னின்
கொடித்திரள்செல்லுமாபோற்குவலயம்படர்ந்துபொங்க
ரிடத்தினிலொதுங்கிவெற்பினெதிரெதிர்கூவிமஞ்ஞை
நடித்திடுமாடனோக்கித்திரிந்தனர்நங்கைமார்கள். (ககரு)

கோலொடுவில்லும்வாளுங்குந்தமும்வயங்கப்பாத
சாலமுங்கழலுமார்ப்பத்தபனியமணித்தார்தாழச்
சோலையினுலவிச்சாரலருவியுஞ்சுனையுங்கண்டு
மால்கரிமலைவுநோக்கிமடங்கலிற்றிரிந்தார்மைந்தர். (ககசா)

Digitized By Roja Muthiah Research Library

தாரிடைப்படிந்தவண்டுதடமலர்க்குவளைசேர
வாரிடைப்படிந்தகொங்கைமாதருமைந்தர்தாமு
மூரிடைப்படிந்தசெங்கேழாதவனுருப்பந்தீர
நீரிடைப்படிதல்வேட்டுநெடும்புனற்றுறையில்வந்தார். (ககஎ)

வெண்ணிறமுகிலினும்பர்விஞ்சையர்வேந்தர்தாமு
மொண்ணுதலணங்கினோருமொருங்குடன்றிரண்டதென்னக்
கண்ணகன்றடாகம்புக்ககனங்குழைமகளிர்மைந்தர்
தண்ணுறுபுனல்பாய்ந்தாடித்தலைத்தலைதிரிதலுற்றார். (ககஅ)

கழியுண்டவுவரிக்கானற்கடைசியர்நாட்டமஞ்சிப்
பழியுண்டுமறைந்தவாபோலொருசிறைபயிலுநெய்தற்
குழியுண்டபோதைநோக்கிக்குரைபுனற்றடத்துக்கம்மா
விழியுண்டுகொல்லோவென்றேகொழுநரைவினவுகின்றார். (கககூ)

பங்கயம்வதனமென்பார்பாசிலைக்கூந்தலென்பார்
செங்கிடையதரமென்பார்புள்ளொலிசெப்பலென்பார்
சங்கினைக்களமேயென்பார்தடாகமுமொருத்தியல்ல
மங்கையர்பலரேயென்பார்திரைகளைமணித்தூசென்பார். (கஉ0)

தத்தையையனையசொல்லாளொருத்திதன்னிழறன்னை
யத்தடந்தன்னினோக்கியளியனையறியாதீண்டோர்
மைத்தடங்கண்ணினாளைமருவினையென்றுகேள்வன்
கைத்தலந்தன்னைவிட்டுவெகுண்டனள்கரையிற்போனாள். (கஉக)

குளத்திடைப்புனல்வாய்ப்பெய்துகொப்பளித்திடுவான்றன்மே
லுளத்திடைவெகுளியெய்தியூடினளொருத்தியேகி
முளைத்திடுகமலக்கானின்முகமலாவுறுப்புமுற்று
மொளித்தனணிற்பநாடிக்காண்கலனுலைதலுற்றான். (கஉஉ)

தாம்பெறுகொழுநர்தம்மைத்தத்தமக்குரியபுத்தே
ளாம்பரிசுன்னுந்தின்மையையமதில்லையென்னக்
காம்புறழ்தடந்தோணல்லார்கணவர்மேற்கரத்தாலள்ளிப்
பூம்புனல்வீசுகின்றார்பூசனைபுரிகுவார்போல். (கஉங)

ஞெண்டொடுவராலுஞ்சேலும்யாமையுநிலாவெண்சங்கும்
புண்டரீகத்தடாகங்குடைந்திடும்பூசலஞ்சித்
தெண்டிரையமுதச்சொல்லார்சிற்சிலவுறுப்புத்தன்னைக்
கண்டுகண்டிரிவதென்னத்திரிவனகலக்கமெய்தி. (கஉச)

ஏந்திழைமகளிர்தாமுமைந்தருமிருநீர்தன்னுட்
பாய்ந்தனராடுமெல்லைப்பங்கயவிலைகடோறுஞ்
சேர்ந்திடுதிவலையீட்டஞ்சிறந்தவர்சேர்தலாலே
பூந்தடம்பொய்கையாக்கைபொடித்தனபோலுமன்றே. (கஉரு)

நோக்கினுநுழைகுறுநுண்டுகின்மறைத்தவல்கு
றேக்குதண்பொய்கையாடுஞ்செவ்வியிற்றெரியத்தோன்ற
நீக்கரும்பெருநாண்கொண்டுநின்றிடாதொருத்தியோடித்
தாக்கணங்கென்னப்போய்த்தன்கொழுநனைத்தழுவிக்கொண்டாள். (கஉசா)



Digitized By Roja Muthiah Research Library

உட்டெளிவில்லாநங்கையொலிபுனற்றடத்திளுடுங்
கட்டழகுளதோர்காளைகவிரிதழ்வெளுப்புநோக்கிக்
கிட்டியானிற்கவுன்றன்கேழ்கிளரதரத்தெச்சி
லிட்டனள்யாரிங்கென்றுவெகுளிகொண்டிகலிப்போனாள். (கஉஎ)

வேறு.

வெளுத்தனசேயிதழ்விழிசிவந்தன,வளித்தொகையெழுந்தனவளகஞ்சோர்ந்தன
குளித்திடுமலர்த்தடங்கொடியனார்க்கெலாங், களித்திடுகணவருங்கள்ளுமொத்ததே

பையரவல்குலார்படியும்பான்மையாற்,றுய்யதோர்குமிழிகள்செறிந்துதோன்று
வ, வையபூந்தடமெலாமவரைநோக்குவான், மெய்யெலாம்விழிகளாய்விழித்தல்
போன்றவே. (கஉகூ)

மன்னருமகளிரும்படிந்தவாசநீர், செந்நிறக்குங்குமநானஞ்சேர்தலான்
மின்னொடுகூடியமுகிலுமெல்லியற்,பொன்னொடுகூடியமாலும்போலுமால்.(கங0)

வேறு.

பூசுசாந்தமுநானமும்பொய்கையில், வாசநீரெங்குமாகிமணங்கமழ்ந்
தாசையெங்குமுலாவியவ்வானவர், நாசியூடுமடுத்துநடந்தவே. (கஙக)

இன்னதன்மையிலேர்கெழுமைந்தரு, மன்னமென்னடையார்களுமத்தடந்
தன்னிளுடித்தடங்கரையேறியே,பொன்னின்மாண்கலைபூணொடுதாங்கினார். கஙஉ

வெளிறுமென்னகைமெல்லியன்மாதரு, மொளிறுமேனியுவாக்களுமொன்றியே
பிளிறுமையற்பிடியும்பெருமதக், களிறுமென்னக்கடிபொழிலேகினார். (கஙங)

ஏகினார்க்கவ்விரும்பொழின்மீச்சென்றி, மேகசாலமுமீன்றொகையீண்டிய
மாகநாடுமவ்வானவர்வந்துசேர், போகபூமிப்பொதும்பரும்போன்றதே. (கஙச)

பளிங்கடுத்திடுபொங்கரின்வேங்கைவீ, விளங்குசாயையைமெய்யெனநோக்கியிக்
குளங்கொள்பூமலர்கொய்துநல்கீரெனத், தளர்ந்தொருத்திதலைவனைவேண்டினாள்.

அங்கொருத்தியைநோக்கியொரண்ணலுன், கொங்கையொத்திடாக்கோங்கலர்
கொள்கென, வெங்கைதன்முலைக்கொப்பதென்றெண்ணியோ, செங்கையாற்பறித்
தீரென்றுசீறினாள். (கஙரு)

வேறு.

மலர்ந்தவாண்முகமங்கையர்நோக்கலும்வறிதாய்ப்
புலர்ந்துநின்றிடுதருக்களும்பொலிவினையெய்தி
யலர்ந்தவேயெனிளுடவர்தங்களையன்னார்
கலந்தபோதுறுமின்பமார்கட்டுரைத்திடுவார். (கஙஎ)

மேற்றலத்தெழுதாரகைமேதினிவரைப்பிற்
றோற்றுகாட்சியோவிங்கிவையென்னவோர்தோன்றல்
கூற்றமன்னவேற்கண்ணிநின்கூரெயிற்றிற்குத்
தோற்றமுல்லையினரும்புகாணிவையெனச்சொன்னான். (கஙஅ)

மலையும்வேற்கணுளொருத்திசொல்வினவிமற்றொருத்தி
முலையின்மேல்விழிவைத்தவன்முறிகளுமுகையு
மிலையுமாப்பறித்துதவலுமுமக்குமாலீந்தா
டலையின்மேலிவைசூட்டுமென்றெறிந்தனடரியாள். (கஙகூ)

Digitized By Roja Muthiah Research Library

காதன்மங்கைபால்வைத்தசிந்தையன்கரவீரப்
போதுகொய்யலனிலைகொய்துபொற்கரத்தளிப்ப
வேதிலாளநிற்சேர்தலினிங்கிவைநுகர்ந்து
சாதலேதலையெனச்சினத்தாளொருதையல். (கசo)

வேறு.

இங்குன்முலைநேர்குரும்பையிவையாய்குயம்போற்
றங்கும்மிளநீருவையன்னவடன்னையீன்றாள்
கொங்கைநிகருமடற்பாளைக்குழுவிதென்றோர்
மங்கைநகைப்பவவைகாட்டியொர்வள்ளனின்றான். (கசக)

ஓவாததெங்கினிளம்பாளையினென்றுதன்னைத்
தாவாவொருவன்கொடுவந்தொருதையன்முன்போய்ப்
பாவாய்தமியேனுயிரேநின்பணைமுலைக்காங்
கோவாதமுத்தத்தொடையிங்கிதுகொள்கவென்றான். (கசஉ)

மின்னார்தமக்கோரரசேவெறிவேங்கைவீயும்
புன்னாகவீயுங்கொணர்ந்தேன்புனைகிற்றியென்ன
மன்னாவுனக்குப்பலருண்டுகொன்மாதரென்னாத்
தன்னாவியன்னான்றனைச்சீறியொர்தையல்போனாள். (கசங)

பொன்பெற்றமார்பனொருவன்சிலபோதுகொய்து
கொன்பெற்றவேற்கண்மடவார்கைக்கொடுத்தலோடும்
பின்பெற்றநங்கைவெகுண்டாள்பழுதென்றுபேசி
முன்பெற்றவளுமவைசிந்திமுனிந்துபோனாள். (கசச)

அப்பூர்விழியாளொருமூவகைத்தாயபூவு
மைப்பூங்குழலிற்புனைந்தாளதொர்வள்ளனோக்கி
மெய்ப்பூவையன்னாய்மருங்குன்முடிவெய்தமென்கார்
முப்பூவிளைந்தபடியென்கொன்மொழிகவென்றான். (கசரு)

இத்தன்மைமைந்தர்பலரும்மிகல்வேற்கணாரு
மெய்த்தண்மலர்க்காவுலவாவிளையாடிமீண்டு
தத்தம்படமாளிகைபுக்கனர்தானுமாங்கே
யத்தம்மயவெற்படைந்தான்கதிராயிரத்தோன். (கசசு)

வேறு.

ஏலக்காவின்மாக்கள்புகுந்தேயினிதாடுங்
கோலச்செவ்விநோக்கினனுங்கொல்குடபாலின்
மாலைச்செக்கர்வானமதாகுமலிதண்பூஞ்
சோலைக்குள்ளேதானுமடைந்தான்சுடர்வெய்யோன். (கசஎ)

முந்தைச்செக்கராகியபுத்தேண்மொய்ம்பிற்சூழ்
தந்திப்போர்வைபோலிருளீட்டஞ்சார்வெய்த
வந்தத்தேவன்மீமிசையண்டத்தவர்வீசுங்
கந்தத்தண்போதொப்பனதாராகணமெல்லாம். (கசஅ)

படையாநேமிப்பண்ணவனூர்பாற்கடலுக்கோர்
தடையாயுற்றாரென்றிமையோர்தண்டயிர்வேலை
கடையாநிற்பவேதிரள்வெண்ணெய்கடிதேவந்
தடையாநிற்றல்போலவுதித்திட்டதுதிங்கள். (கசகூ)

Digitized By Roja Muthiah Research Library

காணப்பட்டான்விண்மதியென்னக்காமத்திற்
பூணப்பட்டமாமதிதோன்றப்புலர்வெய்தி
யாணர்க்கின்னத்துண்ணிறைநேறலினிதட்டிப்
பாணிக்கொண்டேமேவுதலுற்றார்பலமாதர். (க௫௦)

வேறு.

தூயதன்றாகியபுனலெலாநல்கியேசூழ்ந்ததெங்கின்
காயின்வந்திடுபயன்கொள்ளுவார்போற்சிலகாளைமார்க
ளாயதண்டேறலையரிவைமார்நுகருவானருளியன்னார்
வாயின்வந்தூறுமெல்லமிர்தினைக்கொள்வதற்குள்ளம்வைத்தார். (க௫க)

தெள்ளுபேரமிர்தநேர்சொல்லினார்தேறல்பெய்கின்றவெள்ளி
வள்ளமானவையெலாம்பொலிவனவானகத்திடையுதித்த
வொள்ளிதாகியமதியொன்றினைநோக்கியொண்புவியினூடே
கொள்ளையாய்மதிபலமாறுமாறுபெறுங்கொள்கைபோலும். (க௫௨)

அளியினுக்குணவதாந்தேறல்வாய்க்கொண்டதோரரிவையாற்றக்
களிமயக்கெய்துவாளிந்துவைநோக்கியிக்கடியதேறற்
றுளியினைக்கோடியேனைநுமாசுள்ளதுந்தொலையுமின்னு
மொளியினைப்பெறுதிநின்னூனமுந்தவிர்தியென்றுரைசெய்கின்றாள். (க௫௩)

கருதியானுண்டிடுநறவினைக்கண்டுகாமித்துநாளுந்
திரிதியான்மதியமோநாணுற்றாய்கொலோசெப்புகில்லாய்
பரிதியார்தம்மின்வீறெய்துவாயன்னதைப்பகிர்வனிங்ஙன்
வருதியாலென்றனடேறலாற்றெளிவிலாமையல்பெற்றாள். (க௫௪)

என்றொடேதோன்றினாயானெனுந்தன்மையாயாதும்வேண்டாய்
பின்னருமுன்னுமாய்வைகலுந்திரிகுவாய்பிரிகிலாதா
யின்னவுண்கெனுவுதவினுங்கொள்கிலாயென்றொருத்தி
தன்னதாநீழலோடுஞான்வாடினூடலார்தலுற்றாள். (க௫௫)

அங்கைவள்ளந்தனின்மதுவையுண்டயருவாளன்னதற்குட்
செங்கயல்விழியையும்வாலிதழ்ப்பொலிவையுந்தெரியநோக்கி
யிங்கெனைக்கூடியேகணவர்போயினர்கொலாமென்றொருத்தி
பொங்குசீற்றத்தளாயோடினளூடினள்புலர்தலுற்றாள். (க௫௬)

வேறு.

திருந்திழைமார்சிலர்செவ்வித்தேறலை, யருந்தினர்வெறுத்தனரமுதந்தன்னையும்
பொருந்திடுகணவரைப்புணருமாசையால்,வருந்தினர்தழலெனமதியையுன்னுவார்.

வாடுகின்றார்சிலர்மகிழ்நர்வந்திட, வூடுகின்றார்சிலருவக்கின்றார்சிலர்
பாடுகின்றார்சிலர்பணிகின்றார்சில, ராடுகின்றார்சிலர்நறவமார்ந்துளார். (க௫௮)

அந்தரப்புள்ளொடுமெளிகடம்மொடும், வந்தடுத்தவரொடுமடந்தைமார்சிலர்
சுந்தரத்தேறலைத்துய்த்துவாமமார்,தந்திரக்கிளைஞர்போற்றம்மிலீண்டினார். (க௫௯)

விள்ளுறுநாணினர்வீழுந்தூசினை, ருள்ளுறுகளிப்பினருரைமயங்கினர்
தள்ளுறுதம்முணர்வின்றிச்சாம்பினர், கள்ளினுமுளதுகொல்கருத்தழிப்பதே. க௬௦

இத்திறமதுவினையினிதின்மாந்தினோர், மத்தரின்மயங்கினர்மனந்தெளிந்துழித்
தத்தமதிறைவருந்தாமுங்கூடியே, யத்தலைமயங்கினராரவமிக்குளார். (க௬க)

Digitized By Roja Muthiah Research Library

ஏயுறுபரிசனமினையதன்மையான், மேயினவிங்கிதுவிளம்பினுமினி
யாயிடைவந்திடுமரசர்செய்கையு, நாயகன்வதுவையுநவிலுவாமரோ. (௧௬௨)

கொன்னுனைவேன்முசுகுந்தனுதியா, மன்னவர்யாவரும்வையநீங்கியே
தன்னிகரிலாததோர்தலைவன்மேவிய, பொன்னிவர்குடுமியம்பொருப்பிலேறினர்.

ஏறினர்வெற்பின்மேலெவருந்தெய்வத, நூறெறிகம்மியனுனித்துச்செய்திடு
மாறகநிருநகர்வளங்கண்டிந்திரன், சாறயர்வதுவையஞ்சாலைநண்ணினர். (௧௬௪)

அம்முசுகுந்தனையாதியாகிய, வெம்முடிமன்னருமிமையவர்க்கிறை [ளார்.
செம்மலரடிகளைச்சென்னிசேர்த்தினர், கைம்முறைதொழுதனர்களிப்பின்மேலு

கயமலர்குவளையிற்கண்கண்மிக்குளா, னயனுறுமரசருக்கருளியாங்கவர்
செயன்முறைவினவியேசிறப்பினுகிய, நயமொழிபலவுடனவின்றுமேவினன். ()

மேதகுகதியராய்விசும்பிற்சென்றிடு, மாதவன்மதிமுதலமரர்யாவரு
மாதிரவிறைவருமாதவத்தரும், பாதலவாணரும்பரங்குன்றெய்தினர். (௧௬௭)

விண்டொடர்பிறங்கலின்மிசையிவர்ந்துபோ, யண்டரும்பிறருமாயமரர்கோன்ற
னைக்,கண்டனர்தொழுதனர்களிப்பின்மாதவ, ரெண்டருமாசிகளியம்பியெய்தினர்.

விறல்வரைமாதரும்விண்ணின்மாதருஞ், செறிபுனன்மாதருந்திசையின்மாதரு
முறுதவமாதருமுரகமாதரு, மறுவகல்புலோமசைவயின்வந்தீண்டினர். (௧௬௯)

சூரரமங்கையர்தொல்லைவிண்ணவர், பேரரசியற்றியபிரான்றன்காதலி
சீரடிவந்தனைசெய்துதெய்வத, வாரணமென்பவண்மருங்கிலெய்தினர். (௧௭௦)

தெய்வதயானைகேடையசூருயிர், வவ்வியவேலினுன்மனைவியாதியா
லெவ்வுலகிற்குமிறைவியாமென, வவ்வவரடிபணிந்தன்பொடேத்தினர். (௧௭௧)

கயற்புரைநோக்குடைக்கடவுள்யானைபா, லியற்படுதிருநலனிருக்கப்பின்னருஞ்
செயற்படுகோலமுஞ்சிறிதுசெய்திட, மயற்பட * வுன்னினர்மடநல்லாரெலாம். ()

பொன்னகமதனிடைப்புராரிசேயினைத், தன்னகமிசைகொடுதவத்தையாற்றினள்
பின்னகமயிர்முடிப்பிணையற்குழலை, மென்னகவிரல்களான்மெல்லநீக்கினர். ௧௭௩

காசறைவிரவியகடிமென்கூந்தலிற், பூசினர்நாவிநெய்புதியசாந்தமு
மாசறுபனிதருமற்றுநீவியே, நேசமொடொண்பனிநீர்கொண்டாட்டினர். (௧௭௪)

சேந்ததோர்வெம்பணிசீறத்தாற்கரும், பாந்தளைவாய்க்கொடுபற்றுமாறெனப்
பூந்துகிற்கிழிகொடுபுனல்வறந்திடக், கூந்தலையொற்றினர்குழைமென்கொம்பனர்.

மாந்தளிரேயெனவனப்புமென்மையுங், காந்தியுமெய்தியேகடவுட்டன்மையாற்
றேய்ந்திடலின்றியுந்துப்பின்வண்ணமாம்,பூந்துகிலொன்றினைப்புனைந்துடீஇயினர்

ஈரறுகதிர்களுமிம்பர்சேர்தலி, ஞரிருள்யாவையுமஞ்சியவ்வைதன்
வாரொலி o கூந்தலின்மறைபுக்காலெனக், காரகினறும்புகைகமழவூட்டினர். ()

பொலம்புரியுத்தி † யும்பொருதமஞ்ஞை ‡ யும், வலம்புரி § மகர ¶ முமரபில்வானவர்
குலம்புரிதவம்புரைகொம்பின்கூழையி, னலம்புரிமங்கலநவின்றுசாத்தினர். ௧௭௮

* மயற்பட என்பதற்கு மயக்கமுண்டாக எனப் பொருள்கொள்க.
o ஒலித்தல் - தழைத்தல்.
† உத்தி - சீதேவி என்னுந் தலைக்கோலம்.
‡ பொருதமஞ்ஞை - எதிர்முகமஞ்ஞை என்னுந் தலைக்கோலம்.
§ வலம்புரி - வலம்புரிவடிவமாகச்செய்யப்பட்ட தலைக்கோலம்.
¶ மகரம் - சுறவினது அங்காந்தவாய்போலச் செய்யப்பட்ட மகரப்பகுவாய் என்னுந் தலைக்கோலம்.

Digitized By Roja Muthiah Research Library

விரியிணர்க்கோங்கமும்வெட்சியுஞ்செரீஇ, மருமலரிதழிடைவைத்துவாசமார், தெரியலுந்தொடையலுஞ்செறியச்சூட்டியே, சுரிகுழன்முடித்தனர்சுழியத்தன்மையால். (கஎகூ)

ஒருமுயன்முழுமதியுள்புக்காலென, விருவிழிபுருவமாமிலையவற்றொடு
கருநிறங்கண்டிடக்காமர்சாந்தினாற், றிருநுதலதனிடைத்திலகந்தீட்டினார். (கஅ0)

ஊட்டியநறும்புகையோதிநின்றொரீஇத், தீட்டியதிருநுதற்றிலகஞ்சேர்தரப்
பூட்டினர்சுட்டியைப்புயங்கமொன்றுநா, நீட்டிநஞ்சுமிழ்தருநிலைமையீதென. ()

கோல்வளையந்நலார்குழையில்வல்லியஞ், சூல்வளைமிடற்றினிற்றொடையன்முத்தணி, கால்வளைகஞ்சநேர்கரத்துந்தோளினும், வால்வளைதொடியிவைவயங்கச்சேர்த்தினார். (கஅஉ)

கொட்டினர்கலவைகள்கொங்கையின்மிசை, மட்டிமிர்பிணையலுமணியின்கோவையு, மட்டினர்படாமுமொன்றதன்கட்சேர்த்தினா, ரிட்டிடையிடைதனக்கிரக்கம்வைக்கிலார். (கஅ௩)

மாடகயாழ்புரைமழலைப்பெண்பிளை, யாடகவிரைமலரனையதாள்களிற்
பாடகம்பரிபுரம்பாதசாலங்கள், சூடகமுன்கையார்தொழுதுசூழ்வித்தார். (கஅச)

தெய்வதமடந்தையர்திருவின்செல்விபா, லிவ்வகையொப்பனையியற்றியேத்தனு
மைவிரிகுவளைநேர்வடிவக்கண்ணினா, னவ்விடைசெய்திடுமமைதிகூறுவாம். கஅரு

வேறு.

மேலைவானவர்க்கிறையவன்விரிஞ்சனைநோக்கிச்
சாலையாகியதெவ்வெலாத்தேவருஞ்சார்ந்தார்
மாலைதாழ்முடியெம்பெருமுதல்வற்குமணஞ்செய்
காலைநாடியேயிஃதெனக்கழறுதியென்றான். (கஅசா)

அப்புரந்தரன்மொழிதனையம்புயன்வினவிச்
செப்புகின்றதென்னறுமுகப்பரன்மணஞ்செய்தற்
கெப்பெரும்பகலாயினுமினியதேயெனினு
மொப்பகன்றிடுமுகூர்த்தமிவ்வெல்லையென்றுரைத்தான். (கஅஎ)

ஈவதேமுறையாயுளாயிப்பகல்சிறந்த
தாவதேயெனின்யான்பெறுமணங்கையீண்டளிப்பான்
றேவதேவனுமறுமுகச்செம்மலைக்கொணரப்
போவதேகடனெயக்கெனப்புரந்தரன்புகன்றான். (கஅஅ)

அனையகாலையிலச்சுதக்கடவுளுமயனு
மினிதுபோதுமென்றிந்திரன்றன்னொடுமெழுந்து
முனிவர்யாவருந்தேவருஞ்சூழ்ந்துமுன்படரப்
புனிதநாயகனுலயநோக்கியேபோனார். (கஅகூ)

போந்துமற்றவர்பொலன்மணிக்கோயிலுட்புக்குச்
சேந்தன்மாமலரடிகளைமுடிகளிற்சேர்த்திக்
காந்தண்மெல்விரன்மடந்தைபாற்கடிமணம்புரிய
வேந்தனீயவண்வந்திடவேண்டுமென்றிசைத்தார். (ககூ0)

இன்னவாசகம்வினவலுமிராறுதோளுடையோ
னன்னதாகவென்றருள்செய்துமடங்கலேற்றும்
பொன்னின்மாமணியணையினும்பொருக்கெனவெழுந்தான்
றன்னுவீரரும்பாரிடமுதல்வருந்துதிப்ப. (ககூக)

Digitized By Roja Muthiah Research Library

எழுந்துமுன்னுறுமஞ்ஞையஞ்சேவன் * மேலேறிச்
செழுந்தனிக்கமலத்தயனுதியாந்தேவர்
விழுந்துமுன்பணிந்தேத்தியேவிரைமலர்மாரி
பொழிந்துபாங்கராய்வந்திடவீதிவாய்ப்போந்தான். (கக௨)

கொற்றவெண்குடையெடுத்தனர்குளிர்பனிக்கவரிக்
கற்றைவீசினராலவட்டங்கள்காலசைத்தா
ரொற்றைவாட்படையேந்தினருடுபதிக்கடவுண்
மற்றையாதவன்மருத்துவன்சலபதிமறலி. (ககங)

ஆழிமாலயனுவணமுமன்னமுமழியா
வூழிநாயகனூர்தியினொலிகொலென்றுட்கக்
கேழிலாமலர்க்கிஞ்சுகச்சூட்டொடுங்கிளர்ந்து
கோழிநீள்கொடியார்த்ததெவ்வண்டமுங்குலுங்க. (ககச)

வேதரார்த்தனர்வேதமுமார்த்தனவிண்ணோர்
மாதரார்த்தனர்மாதவரார்த்தனர்வயவெம்
பூதரார்த்தனர்பூதமைந்தார்த்தனபுடவி
நாதரார்த்தனர்நாதமிக்கார்த்தனநகமே. (ககரு)

திண்டிபேரிகைதண்ணுமைசல்லரிதிமிலை
பண்டியிற்பெயர்குடமுழாக்காகளம்படகந்
தொண்டகந்துடிதுந்துபிவலம்புரித்தொகுதி
யண்டம்விண்டிடவியம்பினர்பூதரிலநேகர். (ககசு)

அஞ்சிலோதியின்மேனகையுருப்பசியரம்பை
கிஞ்சுகச்செவ்வாய்த்திலோத்தமைமுதலினோர்கெழுமி
மஞ்சமீதினுமானத்துநின்றுவாள்விழிக
ணஞ்சுமிழ்ந்திடவமுதெனப்பாடியேநடித்தார். (ககஎ)

யாணர்வண்டினஞ்சுரும்புடனலமரும்யாழும்
வீணையுங்கரம்பற்றியேவிஞ்சையர்முதலோர்
சேணரம்பையர்களிநடத்தோடுசீர்தூக்கும்
பாணியும்மிசைவுற்றிடவிசைத்தனர்பாடல். (ககஅ)

பொருவில்வீரரும்பூதரும்புரந்தரன்முதலாஞ்
சுரருமாதவர்யாவரும்பிறருமாய்த்துன்னி
யொருவர்மெய்யினையொருவர்மெய்நெருக்கவுற்றிடலாற்
றெருவுமுற்றமுமிடம்பெறுவாயினசிறிதும். (ககக)

வேறு.

இன்னதன்மைகளியலவெல்லைதீர், பொன்னின்வீதிவாய்ப்போந்துபுங்கவர்
மன்னனாற்றியமணத்தின்சாலையின், முன்னர்வந்தனன்முடிவின்முன்னையோன்.

* "சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணு - மாயிருந் தூவிய மயிலலங் கடையே" என ஆசிரியர் தொல்காப்பியரும், "மயிலெழாலல்லாப்புள்ளின்வருத்த வாண்சேவலென்ப" என வீரைமண்டலவரும் மயிலினாண்சேவலென்னும் பெயரேலாவெனவிலக்க, இந்நூலாசிரியர் மஞ்ஞையஞ்சேவலெனப்புணர்த்தல் வழுவன்றோவெனின், சேவற்பெயர்க்கொடையென்னும் மேலைச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியாருரைத்த விசேடவுரையிற் "செவ்வேளூர்ந்த மயிற்காயினதுவும் நேரவும்படும்" எனவுரைத்தலால் வழுவாகாவென்க.

ஆவதாகியவண்ணறன்மிசைத், தாவில்கும்பமேற்றருப்பைதோய்த்தநீர்
தூவியாசிகள்சொற்றுமாதவ, ரேவருந்திரண்டெதிர்கொண்டேத்தினார். (உ0க)

செங்கைதன்னிடைத்தேவர்மாதவர், நங்கைமாரெலாநாலிரண்டெனு
மங்கலங்களுமரபினேந்தியே, யெங்கணாயகற்கெதிர்ந்துபோற்றினார். (உ0உ)

பஞ்சிதூயநொய்பளிதநாவியாய், விஞ்சுதீஞ்சுடர்மிளிர்பொற்றட்டைக
ளஞ்சிலோதியரங்கையேந்தியே, செஞ்செவ்வேண்முனஞ்சிறப்பித்தாரரோ. உ0ங

காலையங்கதிர்க்காலையங்கதிர், மேலைவிண்முகில்விட்டகன்றெனக்
கோலஞ்செய்யநங்குமரநாயக, னீலமஞ்ஞைமேனின்றுநீங்கினான். (உ0ச)

வயமஞ்ஞைநின்றிழிந்துவேள்விசெய், கோயின்முன்கடைக்குமரன்சேர்தலு
மாயபோழ்தினிலரம்பைமாரொடுந், தூயதோர்சசிதொழுதங்கெய்தினாள். (உ0ரு)

எதிர்புகுந்திடுமிந்திராணிதன், புதியதோர்பசுப்பொழிந்ததீயபா
னிதியின்கொள்கலநிரப்பிவந்துவேள், பதயுகங்களிற்பரிவொடாட்டினாள். (உ0சு)

ஆட்டித்தீம்பயனலருங்கண்ணியுஞ், சூட்டிமெல்லடிதொழுதுபல்சுடர்
கூட்டிவைத்ததோர்கொள்கலந்தனைக், காட்டிமும்முறைகடவுட்சுற்றினாள். (உ0எ)

இனையதன்மைகளிபற்றியிந்திரன், மனைவிவெள்கியேமடமின்னாரொடுந்
தனதுமந்திரந்தன்னிற்போதலு, மனகன்கண்டதற்கருள்செய்தேகினான். (உ0அ)

கோலமாமணிகுயிற்றிப்பொன்னரி, மாலைநாற்றியேவனப்புச்செய்திடுஞ்
சாலைபுக்கனன்றனக்குவேறொரு, மூலமில்லதோர்முதலின்வந்துளான். (உ0கூ)

வேறு.

பக்கமாயரிபங்கயனாதியோர், தொக்குவந்திடத்தொன்மணிமண்டபம்
புக்குநம்பிபுரந்தரனுய்த்திடு, மிக்கபீடத்தில்வீற்றிருந்தானரோ. (உக0)

வீற்றிருந்தபின்வேதனுமாயனுந், தேற்றமிக்கமுனிவருந்தேவரு
மாற்றல்வீரருமண்ணறனேவலா, லேற்றவேற்றவிடந்தொறும்வைகினார். (உகக)

அந்தவெல்லையவனியில்வாழ்முசு, குந்தனேமுதற்கொற்றவர்யாவரும்
வந்துவந்துவணங்கியெழுத்திடக், கந்தனெந்தைகருணைசெய்தானரோ. (உகஉ)

ஆனகாலையரியயனாடொரு, ஞானநாயகனங்கையுந்தானுமோர்
மானமேல்கொண்டுமாயிருஞ்சாரதர்,சேனைசூழ்தரச்சேணிடைத்தோன்றினான்.()

அம்மையுந்தனதத்தனும்வந்தது, செம்மல்கண்டுசிறப்புடையோகையாய்
விம்மிதங்கொண்டுமேதகுமன்பினா, லிம்மெனக்கடிதேயெழுந்தானரோ. (உகச)

கண்ணனாதிக்கடவுளர்யாவரு, மெண்ணிலாமுனிவோர்களுமெம்பிரா
னண்ணினானிங்குநாமுய்ந்தனமெனாத், துண்ணெனாவெழுந்தார்கைதொழுதுளார்.

அனையகாலையிலாதியம்பண்ணவ, னினிதுமானத்திழிந்துகணத்துடன்
புனிதநீடுபொலன்மணிச்சாலையுள், வனிதையாளொடும்வந்துபுக்கானரோ.(உகசு)

வேறு.

அதுகண்டுநடந்தறுமாமுகவ, னெதிர்கொண்டுவிரைந்திருவோர்பதமு
முதிரன்பொடுதன்முடிசூடினனாற், கதிருங்கமலங்களுமேவியபோல். (உகஎ)

வந்தஞ்சலிசெய்துவணங்கியதோர், கந்தன்றனையங்கவர்கைகொடெடாத்
தந்தம்முரனொடுதழீஇமுறையே, முந்தன்பொடுயிர்த்தனர்முச்சியையே. (உகஅ)

முதுவானவரும்முனிவோரெவரும், மதுசூதனனும்மலர்மேலயனுஞ்
சதவேள்வியனுஞ்சகமீன்றவர்தம், பதமீமிசைவந்துபணிந்தனரால். (உககூ)

Digitized By Roja Muthiah Research Library

தாழ்வுற்றிடுவோருமைசங்கரனைச், சூழ்வுற்றுவலஞ்செய்துசூழ்வினையூ
டாழ்வுற்றிடுபுன்மையகன்றடியேம், வாழ்வுற்றனமென்றுவழுத்தினரால். (௨௨0)

உன்னற்கரிதாகியுயிர்க்குயிராய், மன்னுற்றவனைமலைமங்கையுடன்
பொன்னிற்புனையும்புதுமன்றன்மனை, தன்னிற்குமரன்கொடுசார்ந்தனனால். ௨௨௧

## வேறு.

ஆகியதோர்போழ்துதனிலானைமுறைதன்னான்
மாகநெறிவந்தொருமணித்தவிசுநண்ணத்
தோகையுடைமஞ்ஞையுறழ்தோற்றமுடைமாதோர்
பாகமுறவாயிடைபராபரனிருந்தான். (௨௨௨)

மங்கையுமையுஞ்சிவனும்வள்ளறனைநோக்கி
யிங்குவருகென்றுபினெடுத்தினிதுபுல்லித்
தங்கள்வயின்வைத்துநனிதண்ணளிபுரிந்தா
ரங்கதுதெரிந்துதொழுதம்புயனிசைப்பான். (௨௨௩)

முன்னமொருவைகறனின்மூவிருமுகத்தோன்
றன்னையசுரப்படைதடிந்திடவிடுத்தா
யன்னபரிசேயவுணராயுளரைவீட்டி
யென்னலிமையோர்சிறையுநீக்கியருள்செய்தான். (௨௨௪)

நன்றியிதனைக்கருதிநாங்கள்புரிகைம்மா
றொன்றுமிலையென்னினுமுளத்தெழும்விருப்பால்
வென்றியசுரேசர்கிளைவீட்டுகுமரேசற்
கின்றுமகவான்மகளையீந்திடநினைந்தான். (௨௨௫)

அற்றமிலிரக்கமுடனாருயிர்கண்முற்று
நிற்றலுமளித்தருளுநேரிழையுநீயு
மற்றிதுபகற்பொழுதில்வந்தனிர்களென்றாற்
சிற்றடியரேங்கள்செயல்சீருளதையன்றே. (௨௨௬)

என்றினையநான்முகனிசைத்திடலுமீச
னன்றெனமகிழ்ச்சிகொடுநாமுமிதுகாண்பான்
மன்றன்மலர்கூந்தன்மலைமங்கையுடனிங்ஙன்
சென்றனமிதற்குரியசெய்கவினியென்றான். (௨௨௭)

நாதனிவைகூறுதலுநன்குமகிழ்வெய்தி
மாதவனுநான்முகனும்வாசவனைநோக்கி
வேதமுறையான்முருகன்வேட்டருளவுன்றன்
கோதைதனையன்பொடுகொணர்ந்திடுதியென்றார். (௨௨௮)

அந்தவமையந்தனிலதற்கிசைவுகொண்டே
பைந்தொடிநல்லார்களமர்பாங்கர்தனிலேகி
நந்தமையளித்தருளுநங்கைவருகென்னா
விந்திரன்விளித்திடலுமேந்திழையெழுந்தாள். (௨௨௯)

கல்லுயர்பொருப்பினிடைகாமரடிசெல்ல
வல்லனகொலென்றுமணிநூபுரமரற்ற
மெல்லிடைவருந்துமெனமேகலையிரங்க
வெல்லவருமுண்மகிழவெம்மனைநடந்தாள். (௨௩0)

௯௧

Digitized By Roja Muthiah Research Library

பஞ்சிதனின்மெல்லடி பணிப்பவரையின்பாற்
குஞ்சரிநடந்தசெயல்கூறுபுதுமைத்தோ
செஞ்சுடர்வைவேலுடையசெம்மலடிநீயே
னெஞ்சகவடுக்கலினுநின்றலவுமென்றால். (௨௩௧)

தந்திமுன்வளர்ப்பவருதையன்மிகநொய்ய
செந்தளிரொதுங்கமிளிர்சீறடியொதுங்கி
யிந்திரையுநாமகளுமேனையருமேத்தப்
புந்திகளிகூர்தருபுரந்தரன்முன்வந்தாள். (௨௩௨)

வேறு.

இன்னவெல்லையிலிந்திரன்றெய்வதக், கன்னிதன்னைக்கடிமணச்சாலையின்
முன்னருய்ப்பமுனிவருந்தேவரு, மன்னைவாழியென்றேயடிபோற்றினர். (௨௩௩)

கணங்கொள்பேரவைகைதொழவாண்டுற, மணங்குதன்னுடனுதியந்தேவனை, வ
ணங்கிவேலுடைவள்ளலைநோக்கியே, சுணங்குசேர்முலைதுண்ணெனவெள்கினள். ()

மங்கைதாழ்தலும்வாலிதினோக்கியே, யங்கணுதனருள்செயவண்ணலைக்
கொங்கையாற்குழைவித்தவள்கோல்வளைச், செங்கையோச்சிச்சிறுபுறநீவினள். ()

திருத்தகுந்திறற்சேயையுஞ்சேண்மிசை, யருத்திபெற்றவணங்கையுமுற்படும்
பெருத்தபொன்மணிப்பீடிகைமீமிசை, யிருத்திவைத்தனள்யாவையுமீன்றுளாள்.

வேறு.

அதிர்கழலீசனொடம்மையிருந்தாங், கெதிரெதிர்விம்பமிலங்கியவாபோல்
வதுவையணிந்திடுமைந்தனுமாதுங், கதிர்மணிதோய்கனகத்தவிசுற்றார். (௨௩௭)

தெய்வதமாதொடுசெங்கதிர்வேலோன், வெவ்வரியேற்றணைமேவுதல்காணு
வெவ்வெவருந்தொழுதேத்தினரீன்ற, வவ்வையுமத்தனுமாரருள்செய்தார். (௨௩௮)

அண்டர்தமக்கிறையாங்கவர்கோலங், கண்டுபுகழ்ந்துகரந்தொழுதுச்சி
கொண்டுமிளிர்ந்தகுளிர்ந்திடுதேற, லுண்டசுரும்பினுமுண்மகிழ்வுற்றான். (௨௩௯)

நெஞ்சமகிழ்ந்தநெடுந்தகைசொல்லான், மஞ்சனமாமலர்மற்றுளமுற்று
மெஞ்சலிலாவகையேந்தியவைக்க, ணஞ்சமுமஞ்சவருஞ்சசிவந்தாள். (௨௪0)

அன்னதொர்காலையிலந்தரநாதன், பன்னிருமொய்ம்புபடைத்திடுபுத்தேண்
முன்னரிருந்துமுறைப்படவன்னான், பொன்னடிபூசைபுரிந்திடலுற்றான். (௨௪௧)

சொல்லருநாணொடுதோகைமடந்தை, நல்லதொர்கன்னனறும்புனலுய்ப்ப
வெல்லவரும்புகழிந்திரனையன், மெல்லடிபற்றிவிளக்கினனம்மா. (௨௪௨)

செம்மல்பதங்கள்செழும்புனலாட்டிக், கைம்மலியுங்களபந்தனையூட்டி
யம்மலர்சூட்டியகிற்புகைகாட்டி, நெய்ம்மலிபூஞ்சுடர்நீட்டினனன்றே. (௨௪௩)

இவ்வகைபூசையியற்றுதலோடு, மவ்வயிராணியயிற்படையோன்றாள்
செவ்விதினாட்டியதீர்த்திகைதன்னைக், கைவகையேந்தியொர்காப்பிடையுய்த்தாள்.

அன்னுழியிந்திரனாறுமுகேசன், றன்னொருகையிடைதந்தியைநல்கி
நின்னடியேனிவளோர்ந்தனனென்னாக், கன்னலுமிழ்ந்தகடிப்புனலுய்த்தான். ()

மருத்துவன்மாமறைமந்திரநீரா, லொருத்திபொருட்டினிலொண்புனலுய்ப்பக்
கரத்திடையேற்றனனாற்கழல்சேர்ந்தார்க்,கருத்திகொண்முத்தியுமாக்கமுமீவோன்

செங்கமலத்திறைசிந்தையினூற்றி, யங்கையினீந்திடவாண்டகைகொண்ட
மங்கலநாணைமணிக்களமார்த்து, நங்கைமுடிக்கொர்நறுந்தொடைசூழ்ந்தான்.௨௪௭

மாவொடுவாழைவருக்கைகொள்பைங்காய், தீவியகன்னல்செறிந்திடுசெந்தே
னாவருள்பாலிவையண்டர்கள்செம்மன், மூவிருமாமுகனைநுகர்வித்தான். (௨௪௮)

வார்த்தொகைசூழ்தருமத்தளிதக்கை, பேர்த்தவலம்புரிபேரிகலித்த
வார்த்தனர்வீரருங்கணநாதர், தீர்த்தனைவந்தனைசெய்துகளித்தார். (௨௪௯)

தண்டுளவண்ணல்சரோருகமேலோ, னெண்டிசைபாலகரிந்திரனென்போ
ரண்டர்களேனையராங்கவர்கோலங், கண்டுசிறந்ததுகட்புலமென்றார். (௨௫0)

ஆயதுபோழ்தினிலம்புயமுற்றோன், காயெரிதந்துகலப்பைகள்கூவித்
தூயமணம்புரிதொன்முறைவேள்வி, நாயகனைக்கொடுநன்றுசெய்வித்தான். ௨௫௧

உலகருள்காரணனெண்ணுதலோடும், வலமுறையாகவயங்கனல்சூழ்ந்து
சிலையிடையன்னவள்சீறடிதந்தான், மலரயனுச்சியின்மேலடிவைத்தான். (௨௫௨)

மாலினிகாளிகண்மாமலராட்டி, பாலினிறத்திபராயினர்சூழச்
சாலினிமங்கலைதன்னொடுகண்டான், வேலினின்மாவினைவீழவெறிந்தோன். ()

இவ்வகைமன்றலியற்றியபின்னைத், தெய்வதமாதொடுசெங்கதிர்வேலோ
னவ்வையொடத்தனையன்பொடுசூழ்ந்து,செவ்விதின்மும்முறைசேவடிதாழ்ந்தான்

வேறு.

அடித்தலத்தில்வீழ்மக்களையிருவருமார்வத்
தெடுத்தணைத்தருள்செய்துதம்பாங்கரிலிருத்தி
முடித்தலத்தினிலுயிர்த்துமக்கெம்முறுமுதன்மை
கொடுத்துமென்றனருவகையான்மிக்ககொள்கையினார். (௨௫௫)

மலைமடந்தையுமிறைவனுமைந்தற்குமகட்குந்
தலைமைசெய்தருள்புரிதலுஞ்சாலையுளிருந்த
வலரவன்முதலமரருமுனிவருமணங்கின்
குலமடங்கலுமவரடிமுடிமிசைக்கொண்டார். (௨௫௬)

அறுமுகன்றனையணங்கினையவையுளோரெவரு
முறையில்வந்தனைசெய்தலுமுழுதருள்புரிந்து
கறைவிளங்கியகண்டனுங்கவுரியுங்கடிதின்
மறைதலுற்றனர்பரிசனந்தன்னொடுமன்றே. (௨௫௭)

மறைந்தகாலையில்விம்மிதராய்மணச்சாலை
யுறைந்ததேவருமுனிவருமுயிர்களுக்குயிராய்
நிறைந்தமேலையோர்நிலைமையைநினைந்துதம்வாயா
லறைந்துகைதொழுதவர்பெயரெடுத்தெடுத்தார்த்தார். (௨௫௮)

வரைபடைத்தவர்மறைந்துழிவானவர்பலரு
நிரைபடைத்துளமுனிவருங்கவன்றதுநீத்தார்
திரைபடைத்துளவாழ்கடற்பட்டுளோர்சிறந்த
கரைபடைத்தெனவணங்கொடுகுமரனைக்கண்டு. (௨௫௯)

உமையுமீசனுமிருந்திடுபீடிகையும்பர்க்
குமரநாயகன்றெய்வதக்களிற்றொடுங்கூடி
யமரவன்னதுகாண்டலுமகிழ்சிறந்தன்னார்
கமலமெல்லடிதொழுதனர்வழுத்தினர்களிப்பால். (௨௬0)

Digitized By Roja Muthiah Research Library

இணையகாலையிலரியணைப்பீடநின் றிழியா
வனைவருந்தொழுதுடன்வரவாறுமாமுகத்துப்
புனிதநாயகன்மங்கலவிசையொடும்போந்து
தனதுகோயிலுட்புக்கனனிறைவியுந்தானும். (௨௬௧)

வேலையன்னதிற்குமரவேள்வேள்விநாயகற்கு
மாலயன்முதலமரர்க்குமற்றுளார்தமக்கு
மேலவேவிடைதந்துதன்பரிசனமெவையு
மாலயந்தனிற்கடைமுறைபோற்றுமாறளித்தான். (௨௬௨)

இன்னதன்மையதாகவேயெம்மையீன்றெடுத்த
வன்னைதன்னுடனறுமுகனுறையுளினடைந்து
பொன்னின்மஞ்சமேற்படுத்துமெல்லமளியிற்புவன
மன்னுயிர்த்தொகையுய்ந்திடமுயங்கிவைகினனால். (௨௬௩)

சேணுதித்திடுதெய்வதக்களிற்றினைச்செவ்வே
ணுணினிற்கட்டிநகரிடைத்தந்துநற்கலன்கள்
பூணுதற்றுறுமங்குசங்கைக்கொடுபுயமாந்
தூணுறப்பிணித்தனைத்தனனருளெனுந்தொடரால். (௨௬௪)

மருந்துபோன்மொழிக்குமரியுங்குமரனுமணந்தாங்
கிருந்தவெல்லையில்விரிஞ்சனுமாலுமேனையரும்
விரைந்துதத்தமக்கியன்றதொல்விருக்கையின்மேவப்
புரந்தரன்பரிசனரொடுந்தன்மனைபுக்கான். (௨௬௫)

முகிலுயர்த்தவன்முசுகுந்தனேமுதலுள்ள
வகிலமன்னர்க்குந்தேனுவின்பலபயனருத்தித்
துகிலுமாரமுமணிகளுமிருநிதித்தொகையும்
விகலமின்றியேகொடுத்தனன்யாரையும்விடுத்தான். (௨௬௬)

எல்லையன்னதின்முசுகுந்தனுதியாமிறைவர்
கல்லகந்தனிலிழிந்துதஞ்சேனையின்கடலை
யொல்லைகூடியேவேறுபல்புலந்தொறுமொருவித்
தொல்லையூர்புகுந்திருந்தனர்வீடுறுந்தொடர்பால். (௨௬௭)

மன்னர்யாவரும்விடைகொடுபோதலுமகவான்
றன்னதாகியகடிமனைக்கிழத்தியுந்தானு
மின்னறீர்தருபோகமதாற்றினனிருந்தா
னன்னபான்மையிற்சில்பகலகன்றனவன்றே. (௨௬௮)

தெய்வயானையம்மைதிருமணப்படலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௩0௩.

## விண்குடியேற்றுபடலம்.

ஆனசிற்சிலவைகல்சென்றிடுதலுமணங்குந்
தானுமுற்றிடுமுறையுளையொருபகற்றணந்து
வானவர்க்கிறைவினைக்குறைநிரப்புதல்வலித்துக்
கோனகர்ப்பெரும்புதவினில்வந்தனன்குமரன். (௧)

Digitized By Roja Muthiah Research Library

உவாவின்மாதுடனுவாவினுக்கிளையவனுவாவிற்
றிவாகரன்மதியாமெனவருதலுந்தெரிந்து
தவாதவன்புடைவயவருஞ்சாரதரேவரு
மவாவொடன்னவரடிமுறைவணங்கினின்றார்த்தார். (௨)

அனிகமார்த்திடல்செவிப்புலம்படர்தலுமடல்வேற்
புனிதநாயகன்போந்தனன்போந்தனனென்று
வனசமேலவன்மாலவன்மகபதிவானோர்
முனிவர்யாவருமெழுந்தனர்விரைசெலன்முன்னி. (௩)

வேறு.

எழுதருகின்றவர்யாருமோரிமைப், பொழுதுறுமளவையிற்போந்துமன்னுயிர்
முழுதருள்புரிதருமுதல்வன்சேவடி,தொழுதனரிறைஞ்சினர்சூழ்ந்துபோற்றலும்.()

கொந்தவிழலங்கலங்குவவுத்தோளினான், வந்துவந்தனைபுரிவதனைநோக்கியே
நந்தனியூர்தியைநடாத்திச்செல்கெனச்,சிந்தையில்விரைதருதேர்கொண்டேகினன்

ஆசுகனுய்த்திடுமம்பொற்றேர்மிசை, வாசவனருள்புரிமடந்தைதன்னுடன்
றேசுடையறுமுகச்செம்மல்கண்ணுத, லீசனுங்கவுரியுமென்னவெய்தினன். (௬)

வேறு.

சூரினோடுதுனைபரித்தேர்மிசைச், சூரினோடுதுணைவன்வந்தெய்தலும்
வாரிவீசினர்மாமலர்பன்முறை, வாரிவீசினர்வானவர்யாருமே. (௭)

பூதவீரரும்போர்ப்படைமள்ளரு, மூதுணர்ந்தமுனிவன்சிறார்களுங்
கோதைவேலுடைக்கொற்றவற்காம்பணி, யேதுமாற்றியினிதயற்சுற்றினார். (௮)

மாகர்யாரும்வணங்கவவரவர், சேகரத்தினிற்சேவடிசூட்டியே
தோகைமாமயிலோன்றன்முன்னின்றதா, லாகையாற்றவமாற்றலதேயன்றே. (௯)

பூவினன்முதற்புங்கவர்யாரையு, மூவிரண்டுமுகத்தவன்கண்ணுறீஇ
நீவிரெல்லிருநேர்ந்தநம்மூர்தியின்,மேவியெம்மொடுசெல்லுமின்விண்ணென்றான்

என்னலோடுமினிதெனநான்முக, னன்னமீதினுமச்சுதப்பண்ணவன்
பன்னகேசன்பகைஞன்றன்மீதினு, முன்னரேறிமுதல்வனையெய்தினர். (௧௧)

மாறில்வெள்ளிமலைப்படுதெண்கயத், தூறுநீத்தத்தொழுக்கெனமும்மதத்
தாறுபாயுமடலயிராவதத், தேறிவந்தனனிந்திரனென்பவன். (௧௨)

மற்றுநின்றுளவானவர்யாவரு, முற்றுணர்ந்தமுனிவருந்தத்தம்க்
குற்றவூர்திகளூர்ந்தெம்மிறைவனைச், சுற்றிநின்றுதுதித்துடன்மேயினார். (௧௩)

வள்ளலித்துணைவானுலகத்திடைப், பொள்ளெனப்புகப்போதுகின்றானெனாக்
கொள்ளையிற்பலர்கூறலுங்கூளியின், வெள்ளமுற்றும்விரைந்தெழுந்திட்டவே. ௧௪

குடமுழாப்பணைகொக்கரைதண்ணுமை, படகமாதியபல்லியமாற்றியே
புடைநெருங்கியபூதரிலெண்ணிலா, ரிடிமுழங்கியதென்னவியம்பினார். (௧௫)

சங்கித்தன்மையினீண்டுபரிசனம், பாங்குற்றேகப்பரஞ்சுடர்ப்பண்ணவ
னோங்கற்கொண்டவொருதனிக்கோநகர், நீங்கிச்சேணினெடுநெறிப்போயினான்.()

அந்தரத்திலமருலகந்தனைக், கந்தனங்கொருகன்னலினீங்கியே
யிந்திரப்பெயரெய்தியமாதலன், முந்திருந்தமுதூநகர்மேவினான். (௧௭)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

விண்டொடர்பொன்னகர்மேலைச்சூர்மக
னுண்டுகள்செய்திடநொய்தினுற்றது
மண்டர்களிறையவனகங்கொள்வேட்கையுங்
கண்டனன்குமரவேள்கருணையாழியான். (௧௮)

வீக்குறுகனைகழல்விமலநாயக
னுக்கமில்விண்ணுலகளிக்கும்பெற்றியாற்
றேக்கியவிஞ்சையின்றெய்வத்தச்சனை
நோக்கினனிளையனநுவறன்மேயினான். (௧௯)

செல்லலையகன்றிடுதேவர்மன்னவ
னெல்லையில்வளனொடுமிருக்கும்பான்மையாற்
றொல்லையதாமெனத்துறக்கநல்குதி
வல்லையிலென்றலும்வணங்கிப்போயினான். (௨0)

வேறு.

நூறெரிந்திடுநோன்மையோன், மாறில்பொன்னகர்மாடே
வீறுமாமதில்விண்ணுலா, மீறுபாயவமைத்தனன். (௨௧)

ஆயிரம்மலரம்புயன், சேயவாய்கடிறந்தென
ஞாயின்மாமதினள்ளுற, வாயினான்குவ்வுத்தனன். (௨௨)

நாற்றிசைக்கணநாதரு, மாற்றவேயரிதாமென
வேற்றகோபுரமேழ்நிலை, வீற்றுவீற்றுவிதித்தனன். (௨௩)

வண்ணமாமதில்வைப்பினு, ளண்ணலங்கிரியாழிசூழ்
கண்ணகன்புவிக்காட்சிபோ, லெண்ணில்வீதியியற்றினான். (௨௪)

பூவின்மேல்வருபுங்கவத், தேவுநாணுறுசெய்கையிற்
காவன்மாநகரத்திடைக், கோவிலொன்றுகுயிற்றினான். (௨௫)

தேவுகாமுறுசெய்வரை, காவிமல்குகயத்தொடு
வாவிபொய்கைவரம்பில, வோவில்பான்மையினுதவினான். (௨௬)

மாடமாளிகைமண்டப, மீடுசேரரியேற்றணை
பாடுசேர்தருபாழிக, ளாடியேர்தகநல்கினான். (௨௭)

வேறு.

ஏறுசீரிந்திரனிருக்குங்கோயிலு, மாறுமாமுகப்பிரானமருங்கோட்டமு
மாறிலாமாலயன்மந்திரங்களும், வேறுளாரிருக்கையும்விதித்திட்டானரோ. (௨௮)

கூன்முகவால்வளைக்குரிசிலூரினு, நான்முகனூரினுநலத்ததென்றிட
வான்முகவியனகர்வளமைசான்றிட, நூன்முகநாடியேநுனித்துநல்கினான். (௨௯)

வேறு.

பொன்னினுக்குப்புகலிடமாகவான், மன்னினுக்குச்செய்மாநகர்வண்மையை
யென்னினுக்குமியம்பவற்றோகலே, மின்னினுக்கும்விதிப்பருந்தன்மையே. (௩0)

இனைத்தியாவுமிமைப்பிடைச்சிந்தையி, னினைப்பிற்செய்தநிலைமையைநோக்கியே
நனைத்துழாய்முடிநாரணனன்முகன், மனத்தினூடுமகிழ்ச்சியைமேயினார். (௩௧)

Digitized By Roja Muthiah Research Library

வல்லைவேதன்வகுப்பதுமற்றுளக், கில்லைநேரென்றினிதுபுகழ்ந்திட
வல்லறீரமரர்க்கிறைகாண்குறீஇப், புல்லினனைப்புனைவனையென்பவே. (௩௨)

அணங்குசால்புரமவ்வகைநல்கியே, நுணங்குநூலவன்சண்முகனேன்கழல்
வணங்கிநிற்பவருள்செய்துமாடுறு, கணங்களோடுக்துமெனப்போயினன். (௩௩)

அன்னகாலையரம்பையரோடொரு, பொன்னின்மானம்புகுந்துபுலோமசை
கன்னலொன்றினிற்காமருபொன்னகர், மன்னன்மந்திரம்வந்தடைந்தாளரோ. ()

அடையுமெல்லையறுமுகப்பண்ணவ, னிடைநிலைப்படுமிந்திரன்கோநகர்க்
கடைமுதற்செலக்கஞ்சனையாதியோ, ருடையதத்தமதூர்தியினீங்கினர். (௩௫)

அக்கணந்தனிலண்டர்கள்யாவருந், தொக்குடன்வரத்தோகையன்னுளுடன்
செக்கர்மாமணித்தேரினுந்தீர்ந்தொராய்ப், புக்குமேயினன்பொன்புனைமன்றமே.

வேறு.

தன்றுணைமஞ்ஞையாகித்தாங்குதறெரிந்தியானு
மின்றிவற்பரிப்பனென்றுவிளவலுமமைந்ததென்ன
மன்றிடையிருந்ததெய்வமடங்கலந்தவிசினும்பர்
வென்றியந்தனிவேலண்ணல்வீற்றிருந்தருளினனே. (௩௭)

அன்னதோரளவைதன்னிலறுமுகனலரிற்புத்தேண்
முன்னவர்தம்மையெல்லாமுழுதருள்புரிந்துநோக்கி
யிந்நகரரசுபோற்றவிமையவரிறைவற்கின்னே
பொன்னணிமவுலிதன்னைப்பொள்ளெனப்புனைதிரென்றான். (௩௮)

என்றிவைகுமரன்கூறவினிதெனவிசைவுகொள்ளா
வன்றொருகணத்தின்முன்னரட்டமங்கலமுந்தந்து
மன்றல்கொள்கவரியொள்வாண்மணிமுடிகவிகையோடு
நின்றுளவுறுப்புமேனைப்பொருள்களுநெறியினுய்த்தார். (௩௯)

அரசியலுரிமைத்தெல்லாமாங்கவரழைத்துக்கங்கைத்
திரைசெறிதெண்ணீராட்டிச்செழுந்துகில்கலன்கள்சாந்தம்
விரைசெய்தார்புனைந்துசீயவியன்பெருந்தவிசினேற்றி
வரிசையோடிந்திரற்குமணிமுடிசூட்டினரால். (௪0)

சுடர்த்தனிமவுலிதன்னைச்சூட்டலுந்துறக்கத்தண்ண
லடித்துணைபணிந்தார்வானோரனைவருமாசிதன்னை
யெடுத்தெடுத்தியம்பலுற்றாரிருடிகளரம்பைமாதர்
நடித்தனர்விஞ்சைவேந்தர்நல்லியாழ்நவின்றிசைத்தார். (௪௧)

இந்திரனனையகாலையெம்பிரான்முன்னரேகி
வந்தனைபுரிந்துபோற்றிவளமலிதுறக்கநாடு
முந்துளவரசுஞ்சீருமுழுதொருங்களித்தியெந்தா
யுய்ந்தனனிதன்மேலுண்டோவூதியமொருவர்க்கென்றான். (௪௨)

என்றலுமருள்செய்தண்ணலிந்நகரரசுபோற்றி
நன்றிவணிருத்தியென்றுநாகர்கோன்றன்னைவைத்து
நின்றுளவமரர்தம்மைநிலைப்படுமிருக்கைக்கேவித்
தன்றுணையணங்குந்தானுந்தன்பெருங்கோயில்போந்தான். (௪௩)

Digitized By Roja Muthiah Research Library

குறிநெடிலளவுசான்றகூளியும்வயவர்யாரும்
வறியதோரணுவுஞ்செல்லாமரபினல்வாயில்போற்ற
வுறையுளினிருக்கைநண்ணியொருபெருந்தலைவியோடு
மறுமுகவள்ளல்பல்வேறுடல்செய்திருந்தானன்றே. (௪௪)

தூவியந்தோகைமேலோன்றுணைவியோடிருந்தகாலைப்
பூவினன்முதலோர்தத்தம்புக்கிடமமர்ந்தாரன்றே
தேவர்களிறைவன்றானுஞ்சேயிழைசசியுமாக
மேவினனின்பந்துய்த்துவிண்ணுலகரசுசெய்தான். (௪௫)

இனைத்தியல்கின்றவெல்லையிந்திரவளனேயன்றி
யனைத்துலகத்துமுள்ளவாக்கமுந்தாம்பெற்றென்ன
மனத்திடையுவகைகொண்டுமாநகரிருக்கைபுக்குத்
தனித்தனியமரரெல்லாஞ்சாறயர்ந்தமர்தலுற்றார். (௪௬)

விண்குடியேற்றுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௩௪௬.

---

# கந்தவெற்புறுபடலம்.

இப்படிசிலநாளேகவிதன்மிசைவைகலொன்றி
லொப்பருங்கந்தவெற்பினுறைவதுகருதிச்செவ்வேள்
செப்புறழ்கொங்கையோடுஞ்சினகரந்தணந்துசெல்ல
வப்பரிசுணர்ந்துவேதாவாதியர்யாரும்போந்தார். (௧)

பெருந்தகையனையகாலைப்பிரமன்மான்முதலோர்யாரும்
விரைந்துதம்பதங்கள்செல்லவிடைபுரிந்தங்கண்வானத்
திருந்தரசியற்றவிண்ணோர்க்கிறைவனைநிறுவித்தெய்வத்
திருந்திழையணங்கினோடுஞ்சென்றுதன்றேரிற்புக்கான். (௨)

தேரிடைப்புகுந்தவையன்றிறலுடைமொய்ம்பன்பாகாய்ப்
பாரிடைச்சென்றுமுட்கோல்பற்றினன்பணியாலுய்ப்பப்
போருடைச்சிலைவல்லோரும்பூதர்தங்கடலுஞ்சுற்றக்
காருடைக்களத்துப்புத்தேள்கயிலைமால்வரையிற்போந்தான். (௩)

போனதோர்காலைவையம்பொள்ளெனவிழிந்துமுக்கண்
வானவன்றன்னையாயோடடிகளைவணக்கஞ்செய்து
மேனதோர்கருணையோடும்விடைபெறீஇவிண்ணுளோர்கள்
சேனையந்தலைவன்கந்தச்சிலம்பினிற்கோயில்புக்கான். (௪)

புக்கதோர்குமரமூர்த்திபொருதிறல்வயவர்யாருந்
தொக்கனர்பணியினிற்பத்தொல்படைக்கணங்கள்போற்ற
மைக்கருங்குவளையொண்கண்மடவரலோடுமேவி
மிக்குயர்மணிப்பீடத்தில்வீற்றிருந்தருளினனே. (௫)

Digitized By Roja Muthiah Research Library

தூய்யதோர்மறைகளாலுந்துதித்திடற்கரியசெவ்வேள்
செய்யபேரடிகள்வாழ்கசேவலுமயிலும்வாழ்க
வெய்யசூர்மார்புகீண்டவேற்படைவாழ்கவன்னான்
பொய்யில்சீரடியார்வாழ்கவாழ்கவிப்புவனமெல்லாம். (சு)

கந்தவெற்புறுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ஙருரு.

---

# இந்திரபுரிப்படலம்.

காசினிவியத்தகுகந்தவெற்பிடைத், தேசுடைமுருகவேள்சேர்ந்தசெய்கையைப்
பேசினனிங்கினிப்பிறங்குபொன்னகர், வாசவனியற்கையுமற்றுங்கூறுகேன். (க)

துண்ணெனவவுணரைத்தொலைத்தவேற்படைப்,பண்ணவனருளினாற்பலரும்போ
ற்றிட, விண்ணரசியற்றியவேந்தனோர்பக, லெண்ணினனுளந்தனிலினையநீரதே.()

பற்றலர்சிறுதொழில்பலவுமாற்றியே, யுற்றதுமளப்பிலாவுகமொளித்தது
மற்றதனிடையிடைவந்ததீமையும், பெற்றிடுதுன்பமும்பிறவுமுன்னினான். (ங)

மறுத்தனன்சசியுடன்வைகும்வாழ்க்கையை, வெறுத்தனன்வெறுக்கையைவே
ந்தியற்கையுஞ், செறுத்தனன்றவத்தினாற்சேர்வன்வீடெனாத், துறத்தலையுன்னின
ன்றுறக்கமேயினான். (ச)

இந்திரனியற்கையையெண்ணிவானவர், மந்திரியாகியுமன்னனாகியு
மந்தணனாகியுமமரும்பொன்னவன், புந்தியிலீதொருபுணர்ப்பையுன்னினான். (ரு)

உன்னியமேலவனும்பருக்கெலா, மன்னவனுழைதனில்வந்துவைகியே
கொன்னவில்வச்சிரங்கொண்டபாணியா,யின்னனகேளெனவியம்பன்மேயினான்.

புன்றொழிலாகியபொய்யும்வாய்மையா, மொன்றொருபெரும்பயனுதவுமாயிடி
னென்றனர்சுரகுருவிந்திரன்பத, நின்றிடவீதொருநிகழ்ச்சிகூறுவான். (எ)

வேறு.

அன்புநீங்கியவவுணருக்கரசனாற்பட்ட
துன்பமானதையுன்னியேதுறக்கமேலரசு
மின்பவாழ்க்கையும்வெறுத்தனையிவைவெறுத்தனையேற்
பின்புநோற்றுநீயாற்றலாற்பெறும்பயன்யாதோ. (அ)

சிந்தைவெந்துயருழந்தவரல்லரோதிருவு
மந்தமில்பெருவாழ்க்கையுமெய்துவரதுதான்
மைந்தவாழிகேணின்னளவன்றுகாண்மதிக்கி
னிந்தமூவுலகந்தனில்வழங்கியவியற்கை. (கூ)

ஓவருந்தவமியற்றியமுனிவரிலுலகத்
தேவர்தங்களிற்பாதலத்தோர்களிற்சிறந்த
மூவரென்றுபேர்பெற்றிடுமுதல்வர்கடம்மி
லேவர்மங்கையர்முலைத்தலைப்போகம்விட்டிருந்தோர். (க0)



Digitized By Roja Muthiah Research Library

போனதன்பினுக்கஞ்சியேபுகுந்தவித்திருவை
யூனமாமெனத்துறந்துநீதமியையோற்றுழலி
னனபோதுறுந்துயரினுக்கவதியுமுண்டோ
கானனீந்திடவெருவியேகடல்புகவற்றே. (கக)

ஆகநோவுறவருத்தியேயைம்புலனவித்து
மோகமாதியாமூவிருகுற்றமுமுருக்கி
யோகுசெய்திடுமேலையோர்பெறும்பயனுரைக்கிற்
போகமன்றியொன்றில்லைகாணெல்லைதீர்புகழோய். (கஉ)

காண்டகும்புலனெடுங்குமாங்கரணமுமிலையாம்
பூண்டசெய்கையுமொழியுமாமியாக்கையும்போமா
மாண்டொர்பேரின்பமுண்டென்பரதனையாரறிந்தா
ரீண்டுகண்டதேமெய்யென்பருலகுளோர்யாரும். (கங)

பொய்ம்மையுற்றிடுகானலைப்புனலெனவிரும்பிக்
கைம்மிசைக்கொண்டவமிர்தினைக்கமருகுத்தாங்கு
மெய்ம்மையிற்சிலருண்டெனும்வீடுபேறுன்னி
யிம்மையிற்பயனிழக்குதினன்றுநின்னெண்ணம். (கச)

மங்கைமாரிடத்தின்பமேயின்பமற்றவரோ
டிங்குவாழ்வுறும்வாழ்க்கையேயியல்புறும்வாழ்க்கை
யங்கவர்ப்பெறுசெல்வமேசெல்வமாங்கவர்தங்
கொங்கைபுல்குறுவறுமையேகொடியதோர்வறுமை. (கரு)

மறுவிலாதவாண்மதிமுகமடந்தையர்புணர்ப்பைச்
சிறியவின்பமென்றுரைசெய்வரன்னதன்சிறப்பை
யறிவரேயெனிறுங்கதேபேரின்பமாகு
மிறைவநீயதுகேட்டியேன்மொழிகுவனென்றான். (கசு)

ஏமஞ்சான்றிடுகுரவன்மற்றிவையிவையிசைப்ப
நாமஞ்சான்றிடுகுலிசமாப்படையினனகையா
வோமஞ்சான்றிடுதீமூன்னரிழுதெனவுடைந்து
காமஞ்சான்றிடுமுளத்தனயினையனகழறும். (கஎ)

பொருந்துமாசினையகற்றிநற்காட்சியைப்புரியு
மருந்துபோலுறுகுரவநீமடந்தையர்சிறப்புந்
திருந்துகாமநல்லின்பமுமெனக்கருள்செய்யா
திருந்தகாரணமென்கொலோவின்றுகாறென்றான். (கஅ)

வேறு.

வெற்றுடலத்தில்விழித்தொகைபெற்ற, சிற்றறிவோனிவைசெப்புதலோடு
மற்றிவனுள்ளமயங்கினனென்னுக், கற்றுணர்மந்திரிகட்டுரைசெய்வான். (ககூ)

மாதர்கண்மேன்மைகண்மன்மதனன்று, லோதிடுமுண்மையையோர்ந்துணர்
கின்ற, காதலிலாவழிகட்டுரைசெய்யா, ராதலினையவறைந்திலனின்னாள். (உ0)

கோண்மதியேகுடையாவருகோன்றன், மாண்மதிநூலெனும்வான்கடன்முற்று
நீண்மதியாலுணர்ந்தேனதனீர்மை, கேண்மதியென்றுகிளத்திடுகின்றான். (உக)

ஈறிலவென்றுமியம்பினர்பத்தே, நூறுடனெட்டெனுநூலுநுவன்றார்
வேறுமிசைத்தனர்மெய்ச்சமயந்தா, றெனவோதினராங்கவைதம்முள். (உஉ)

Digitized By Roja Muthiah Research Library

சுதையமுதேயெனத்துய்த்திடுநீரார்க், கிதமிகநல்குவதிம்மையின்முத்திக்
கதியருள்கிற்பதுகாமருலோகா, யதமெனவேநெறியொன்றுளதன்றே. (உ௩)

அச்சமயத்தலையாற்றிடைநின்றே, யெச்சமில்வீடுபெற்றின்புறுகின்றோர்
மெச்சியலாடவர்மேலதையீவோர், நச்சுறுகூர்விழிநாரியர்தாமே. (உ௪)

அம்மடவாரியலானவுமன்னோர், தம்மையடைந்திடுதன்மையுமேவுஞ்
செம்மைகொளாடவர்செய்கையுமெல்லா,மெய்மையதாகவிளம்பிடும்வேணூல். ()

சாதியியற்கைகடத்துவமாந்தர், தீதில்குணத்தொடுதேசமவத்தை
போதுகருத்திவையாதியபோர்வேள், வேதமுரைக்கும்விழுப்பொருண்மாதோ. ()

வசைதவிர்மானினிமால்வடவைப்பே, ரிசையினியத்தினியேந்திழையோர்க்கா
மசைவறுதொன்மரபாடவர்யார்க்குஞ், சசனிடபன்னசுவன்னிவைதாமே. (உஎ)

முன்னமுரைத்திடும்மரபுக்குட், கன்னியராடவர்காமர்குறிக்கு
மன்னியவாழமுநீளமுமற்று, மின்னனவென்றிடவேற்பதியற்கை. (உஅ)

அந்தமிறேவரருந்தவர்நாகர், கந்தருவத்தர்கணங்கெழுபூதர்
முந்துமரக்கரியக்கர்முரட்பேய், தந்திறனுவதுதத்துவமாமே. (உ௯)

எண்மைகொடத்துவயாற்றிடைநின்ற, பெண்மையரைவளிபித்தெனவோதும்,
வண்மைகொண்முக்குணமன்னினர்மற்றவ், வுண்மைபடைத்திடலொண்குணனு
மே. (௩0)

வேறு.

உருவும்வண்ணமுமோங்குசெயற்கையு, மரிவைமார்கடநாளுமனையவுந்
தெரியநாடித்தெளிந்தறிகிற்பரான், மரபுதான்முதல்வான்குணத்தீறுமே. (௩௧)

ஏறுதேசந்தொறீண்டியமாதர்தம், மூறுநீதியுமுள்ளமுஞ்செய்கையும்
வேறுவேறுவினவியெல்லோர்களுந், தேறநிற்பதுதேசவியற்கையே. (௩உ)

தரித்தவாலைதருணிபிரவுடை, விருத்தையாகும்வியன்பருவங்களி
னுரைத்தகாலமுமுள்ளத்தின்வேட்கையும், பிரித்தறிந்திடப்பெற்றதவத்தையே.()

கோலமாமுக்குணத்தர்முப்பான்மையர், நால்வரெண்மராநாரியர்பற்றுற
வேலுமாடவரெய்துதற்கேற்றபல், காலமுந்தெரிகிற்பதுகாலமே. (௩௪)

மக்கள்காமம்வடிவினில்வைகலும், பக்கந்தோறுமிழிந்துயர்பான்மையாற்
புக்கதோரிடைநாடிப்புரையொரீஇத், தக்கசெய்வதுஞ்சாற்றியமேலதே. (௩௫)

பற்றுளோரையும்பற்றிலர்தம்மையு, முற்றுளோரையுமுற்றிலர்தம்மையு
மற்றுளோரையுமாந்தர்கடேற்றுமா, றுற்றசெய்கையுளங்கொள்கருத்ததே. (௩௬)

வேறு.

இங்கிவையாடவரியல்புஞ்சால்புறு,மங்கையர்பான்மையும்வகுத்ததன்னவர்
பொங்கியபுணர்வகைபுணர்ச்சிக்கேற்பதோ,ரங்கிதம்பிறவுமேலறையநின்றவே. ()

புல்லுதல்சுவைத்திடல்புணர்நகக்குறி, பல்லுறன்மத்தனம்பயிலுந்தாடன [வே.
மொல்லொலிகரணமோடுவகையாதிய, வெல்லையில்புணர்நிலைக்கிளையந்தவென்ப

வேறு.

விரைதலேசமந்தூக்கென்னும்வேகமுமுச்சநீசம்
புரைதவிர்சமமென்றோதும்பொருண்மையுங்குணத்திற்பற்றிப்
பரவுமைவகையிலீரைம்பகுதியாற்பிறவாற்சேர்த
லுரைதருபுணர்ச்சியாகுமுபரியுமனையதொன்றே. (௩௯)

Digitized By Roja Muthiah Research Library

உறுத்தலேநெருக்கன்மெல்லவுரோசுதலுறுதன்முன்னு
மறுத்தவிர்தருவுசூழ்ந்தவல்லியேமரமேற்கோடல்
செறித்தவெள்ளரிசிபாலார்தீம்புனல்செயிர்தீர்காட்சிப்
புறத்திலோருறுப்புறுத்தல்புணர்ச்சியிற்புல்லற்பால. (௪0)

வைத்தலேதுடித்தலொற்றுமரபொப்புயிலங்குசுற்றே
யுத்தரமதுக்கலுள்ளீடோங்குசம்புடாதிதன்னுற்
பத்துடனென்றுமேலைப்பல்வகையுறுப்புநாடி
முத்திறத்தமிர்தமுண்டன்முன்மொழிசுவைத்தலாமே. (௪௧)

சுரிதகமெண்ணுட்டிங்கடயமண்டலமேமஞ்ஞை
நிரலடிமுயலின்புன்கானெய்தலினிதழேவேங்கை
யுருகெழுநாகவிரேகையுருவிலேழுறுப்பிலெங்கும்
வரன்முறைநகத்தாற்றீட்டல்வள்ளுகிர்க்குறியதன்றே. (௪௨)

துவர்படுபவளமாலைசுனகமூடிகமேயேனக்
சவரடிமணிபோழ்வட்டக்கடிகண்டப்பிரதமுற்று
மிவையலபிறவும்போலவின்னமுதுண்டதான
மவைதமினெறியாற்றந்தமழுத்தல்பற்குறியதம்மா. (௪௩)

உரமுதலைந்திலைம்பாலுணர்தொழின்முறையாலேற்பப்
பொருவருபுணர்ச்சிவேலைபுடைத்திடல்புடைப்பதாகுங்
கரிகரமாதியாயகனங்குழைமகளிர்வெஃக
மருவியவழிபாடன்றேமத்தனமென்பவல்லோர். (௪௪)

மயில்புறவன்னங்காடைவண்டுவாரணஞ்செம்போத்துக்
குயிலெனவிசைக்குமெட்டின்குரலினைப்பயின்றுகாம
ரியலுறுமகளிர்பாங்கரெய்துழியிவையில்வேண்டுஞ்
செயல்வகைபுரியுமாறுசிறந்தசீற்காரமாமே. (௪௫)

பாரியல்கிராமியஞ்சீர்ப்பவுத்திகநாகபாச
மேரியனுகரீகமிந்திராணிகமேகூர்மஞ்
சாரிதமாய்தமூர்த்தஞ்சங்கிராணிகமண்டூகம்
பாரிசம்பிடிதஞ்சூலஞ்சுரும்பிதம்பதுமபீடம். (௪௬)

எண்டகுஞ்சம்புடம்வேட்டிதம்விசும்பிதமுற்புல்லம்
பிண்டிதம்பீடிதம்மேபிரேதுகையநுபாதந்தான்
பண்டதங்கடகமத்தபத்மவாசனஞ்சமூர்த்தந்
தண்டகம்லளிதம்வேணுச்சாரிதஞ்சமவேசன்னம். (௪௭)

ஆடவஞ்சமபுடத்தோடமர்பரிவத்தகஞ்சங்
காடகந்தேனுகம்மற்கடகமைம்பதமேசானு
மாடமர்துகிலம்பீனமாத்திகமேகூர்ப்பன்னஞ்
பீடிதோருகமம்பீதம்பீடிகையோடுபின்னும். (௪௮)

ஒட்டுவிக்கிரமமேகோயூதகமென்னுநாற்பா
னெட்டுளதிறத்தினுமிவையலபிறவாற்றானு
மட்டமர்குழலினார்கண்மகிழ்தரமதனாரேருஞ்
சிட்டர்கள்புணரும்பான்மைசித்திரக்கரணமாமே. (௪௯)

Digitized By Roja Muthiah Research Library

திணைநிலைமகளிர்தத்தந்திறங்களுஞ்சேர்தன்மாண்பு
முணர்குவரெனினுமற்றவொண்குழுவதனுணின்ற
கணிகையிற்பரத்தைகாமக்கன்னியரொழிந்தோர்தம்மைப்
புணர்கையும்பிறவுந்தேர்தல்புலமையோர்கடனுமன்றே. (௫0)

முன்னுறமதனநூலின்முறையெலாந்தொகையிற்கூறி
யன்னதன்வகையுங்கூறியகலமுமெடுத்துக்கூறிப்
பொன்னவனிருத்தலோடும்புரந்தரனவற்றையோர்ந்து
கன்னியைப்புணருங்காமக்கலைமேற்கருத்தைவைத்தான். (௫௧)

கொற்றவெங்குலிசவள்ளல்குரவனையிறைஞ்சியெந்தை
சொற்றிடுபான்மையெல்லாந்துணிவதுவாகக்கோண்டேன்
மற்றொருபொருளும்வெஃகேன்வரம்பிலாவின்பந்தன்னைப்
பெற்றனன்போலுமென்னப்பெருமகிழ்வெய்திப்போனான். (௫௨)

வேறு.

திரைசெறிகடலெனத்திளைக்குமின்பநூ,லுரைசெய்துபொன்னவனுவப்பிற்போந்திட, விரைசெறிதொங்கலான்மேலைப்பொன்னக, ரரசினைமதலைபாலாக்கினனரோ. (௫௩)

விண்ணுலகாளுறும்வேந்தியற்கையை, யண்ணலஞ்சயந்தனுக்கருளியிந்திரன்
றண்ணுறுசசிமுகச்சசியைக்கூடியே, பெண்ணரும்போகமுற்றினிதுவைகினான்.()

அலைகடலமிர்தினைவெறுக்குமாயிழை, யிலவிதழமுதமேயினிதென்றுண்டிடுங்
கொலையயிராவதந்துறக்குங்கோல்வளை, முலையயிராவதமுயங்கிமேவுமே. (௫௫)

வெல்குறும்வலியுடைவிருத்திரன்மிசைச், செல்குறுந்தெய்வதத்தேரைச்சீறிடு
மொல்குறுநுசுப்பினையுடையமங்கைத, னல்குலந்தேர்மிசையசைந்துவைகுமே.()

கருங்கடல்சூழ்புவிகவிழ்ந்துதுன்புற,விரங்கியவிடிக்கொடியிகழ்ந்துகாய்ந்திடும், பொருங்கணைவிழியுடைப்புலோமசைத்திரு, மருங்குன்மின்கொடியின்மேன்மகிழ்ச்சிகொள்ளுமே. (௫௭)

இயற்படுதவமுனியாக்கையென்பினாற், செயற்படுவச்சிரஞ்செங்கைநீத்திடு, மயிற்பெடையன்னதோர்மடந்தைகண்ணெனு, மயிற்படைசேர்ந்திடவதனைத்தாங்குமே. (௫௮)

இருணிறவிசும்பினிலிடையறுமலே, வருசிலையிரண்டையுமறக்குமாமலர்த், திருநிகர்வனப்புடைத்தெய்வமங்கைதன், புருவவெஞ்சிலைகளேபொருளென்றுன்னுமால். (௫௯)

ஏந்தலம்புயலினையிகழுமேந்திழை, கூந்தலம்புயன்மிசையுவகைகூர்ந்திடும்
பூந்தருவல்லியைமுனியும்பூண்முலை, வாய்ந்திடுமுரோமமாம்வல்லிபுல்லுமே.(௬0)

இத்திறமிந்திரனிந்திராணிபால், வைத்திடுமுளத்தினன்மறுமையெய்தினுங்
கைத்திடுகருத்தினன்காமத்தின்பமே, துய்த்தனன்மதனனூற்றுணிபுநாடியே. ()

வேறு.

அன்னதோர்நாளிலோர்நாளமரர்கோனுனைபோற்றிப்
பொன்னகர்செங்கோலோச்சிப்புரந்திடுசயந்தனென்போன்
றன்னயல்வந்துவைகுந்தாபதரமரர்தம்முண்
முன்னுறுகின்றவாசான்முகனெதிர்நோக்கிச்சொல்வான். (௬௨)

Digitized By Roja Muthiah Research Library

எந்தைகேண்மலரோனுதியியம்பியவமரர்யாரு
மந்தமின்முனிவர்யாருமாற்றல்வெஞ்சூரன்றன்னால்
வெந்துயருழந்துதொல்லைமேன்மையுமிழந்துதாழ
வந்தகாரணமதென்கொலென்றலுமறையோன்சொல்வான். (௬௩)

விண்ணவராயினோர்க்குமேதகுமுனிவர்யார்க்கு
மெண்ணமில்சூரன்றன்னாலெய்தியதீமையெல்லா
நண்ணலர்புரமூன்றட்டநாதனையன்றித்தக்கன்
பண்ணியமகத்திற்புக்கபாவத்தால்விளைந்ததென்றான். (௬௪)

என்றலுஞ்சயந்தன்கேளாவீதுகாரணமேலந்தப்
புன்றொழிற்றக்கன்வாழ்க்கைபுரமெரிபடுத்ததேவை
யன்றியேசெய்தவேள்வியாயிடைநிகழ்ச்சியாவு
மொன்றறவுரைத்தல்வேண்டுஞ்சிறியனேனுணர்தற்கென்றான். (௬௫)

சயந்தனென்றுரைக்கும்வள்ளல்சாற்றியதுணராவாற்ற
வயந்தனையெய்திவாழிமதலைகேளிதனையென்று
வியந்திடுமகந்தைதன்னான்மிக்குறுதக்கன்காதை
நயந்தருமொழியாலாசானித்திறநவிலலுற்றான். (௬௬)

இந்திரபுரிப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௪௰௧.

---

தேவகாண்டமுற்றுப்பெற்றது.

ஆ காண்டம் ஐந்துக்குத் திருவிருத்தம் அ,௰௭௬.

கச்சியப்பசிவாசாரியர் திருவடிவாழ்க.

---

உ

திருச்சிற்றம்பலம்.

ஆறாவது

# தக்ஷ காண்டம்.

## உபதேசப்படலம்.

மாயையின்வலியோனாகிமான்முதலோரைவென்றே
யாயிரத்தோரெட்டண்டமரசுசெய்துகநூற்றெட்டுக்
காயமதழிவின்றாகிக்கடவுளர்க்கலக்கண்செய்த
தீயசூர்முதலைச்செற்றகுமரன்றாள்சென்னிவைப்பாம். (௧)

உலகினுண்மேலதாகியோங்குபேரொளியாய்வான்மேற்
றலைமையதாகிவைகுஞ்சத்தியவுலகந்தன்னிற்
புலனுணர்முனிவர்தேவர்புதல்வர்கள்புடையிற்போற்ற
மலரயன்றனதுகோயின்மன்றில்வீற்றிருந்தானன்றே. (௨)

இருந்திடுகாலைவேதாயாவையுமளிப்பமேனாட்
டெரிந்தருள்பதின்மராகுஞ்சீர்கெழுகுமரர்தம்முட்
பொருந்தியதக்கனென்னும்புந்தியின்மேலோன்முன்செய்
யருந்தவநெறியாலீதொன்றையனைவினவலுற்றான். (௩)

தேவரின்முதல்வராகிச்சிற்குணத்தலைவராகி
மூவரினுயர்ந்தோராகிமுடிவிலாவொருவராகி
யோவறவுயிர்கடோறுமுயிரெனவுறைவோராகி
மேவினர்தம்மைத்தேறவிளம்புதிமேலோயென்றான். (௪)

என்றுதன்மைந்தனிவ்வாறியம்பலுமலரோன்கேளா
நன்றிதுமொழிவன்கேட்டிநாரணன்றானும்யானு
மன்றமரியற்றுமெல்லையழலெனவெழுந்துவானிற்
சென்றதோர்சிவனேயார்க்குமேலவன்றெளிநீயென்றான். (௫)

தருசெயல்வல்லோனீதுசாற்றலுஞ்செயலோர்மூன்றி
னிருசெயல்புரியுநீவிரேதிலராகப்பின்ன
ரொருசெயல்புரியுமீசனுங்களுக்கிறைவனாகி
வருசெயலென்னேசிந்தைமயக்கறவுரைத்தியென்றான். (௬)

Digitized By Roja Muthiah Research Library

தற்புகழ்கருத்தின்மிக்கதக்கனீதுரைத்தலோடுஞ்
சிற்பரனிலைமையன்னானருளினாற்றெரிந்தவேதாச்
சொற்படுமறைகண்முன்னீதுகளறக்கற்றுத்தூய
நற்பொருடெரிந்தவாறுநன்றுநன்றென்னநக்கான். (௭)

பின்னுறமுடிப்பான்றன்னைப்பிரானெனத்தேற்றுந்தன்மை
யென்னெனவுரைத்திமைந்தவெங்களைச்சுரரையேனைத்
துன்னியவுயிர்கடம்மைத்தொலைவுசெய்திடுவனீற்றி
லன்னவனென்னின்முன்னமளித்தவனவனேயன்றோ. (அ)

அந்தநாளொருவனாகியாருயிர்த்தொகையைத்தொன்னாள்
வந்தவாறொடுங்கச்செய்துமன்னியேமீட்டுமன்னை
தந்தையாயுயிர்கட்கேற்றதனுமுதலளிக்குமுக்க
ணெந்தைதன்செய்கைமுற்றுமினையதென்றிசைக்கற்பாற்றோ. (௯)

செங்கண்மாறன்னையென்னைத்திண்டிறன்மொய்ம்பினல்கி
யங்கண்மாஞாலங்காப்புமளிப்பதுமுதவியாமு
முங்கள்பாலிருத்துமென்றெம்முயிருணின்றியற்றாநின்றா
னெங்களான்முடியுஞ்செய்கையாவதுமில்லைகண்டாய். (௧0)

உயிருணின்றியற்றலன்றியுற்றநஞ்சிந்தையுள்ளு
மியன்முறைவழாதுகாப்போனிருவிழியகத்துமானான்
மயலுறுபொழுதுமெம்பால்வந்தருள்செய்வன்றானோர்
செயல்புரிகின்றான்போலவெம்மொடுசெறிவனன்றே. (௧௧)

எள்ளுறுமெண்ணெயென்னவெறிமணியரவமென்னக்
கள்ளுறுபோதுகான்றகடியெனச்சலாகைதன்னிற்
றள்ளுறவரியசோதிதானெனவுலகமெங்கு
முள்ளொடுபுறமுமாகியொருமையாற்பரவுமன்றே. (௧௨)

வேதமேமுதலாவுள்ளவியன்கலையனைத்துந்தொன்னா
ளோதினானவனேயெங்கட்குரைத்திடவுணர்ந்தாமன்றே
யீதுநீயவற்றிற்காண்டியாருமொன்றாகக்கொண்டாய்
பேதையோபெரிதுமென்னப்பிதாமகனினையசொற்றான். (௧௩)

அவனிதுபுகறலோடுமருண்மகனிசைப்பான்மேலாஞ்
சிவனருள்வேதம்பூதத்திறத்தையுமுயிர்களோடு
மெவரையும்பிரமமென்றேயிசைப்பதென்னெனதுநெஞ்சங்
கவலுறுகின்றதெந்தைகழறுதிகடிதினென்றான். (௧௪)

என்னலுங்கமலத்தண்ணலியாவருந்தெரிதறேற்றா
வுன்னரும்பெற்றியீதென்றுணர்தரக்கேட்டியன்னான்
சொன்னதோர்மறைகடம்மிற்றுணிபுகேளிறுதியில்லா
முன்னவற்காதலுண்மையொழிந்தனமுகமனாமால். (௧௫)

ஆதலாலீசனல்லாவனைவர்க்குமுயிர்க்குமைந்தாம்
பூதமானவைக்குமேற்றம்புகலுதன்முகமனாகு
மோதலாமேலதாகவொருபொருள்புகழவேண்டின்
வேதபாரகரையன்றோயானெனவிளம்புகின்றார். (௧௬)

Digitized By Roja Muthiah Research Library

யாதொருபொருளையாவரிறைஞ்சினுமதுபோய்முக்க
ணாதியையடையுமம்மாவங்கதுபோலத்தொல்லை
வேதமதுரைக்கநின்றவியன்புகழனைத்துமேலா
நாதனையணுகுமெல்லாநதிகளுங்கடல்சென்றென்ன. (௧௭)

கேளினிமைத்தவேதக்கிளையெலாமியம்புகின்ற
சூளுரைசிவனேயெல்லாந்தோற்றுவித்தளித்துமாற்றி
மீளவுந்தருகின்றானும்வியனுயிர்க்கருளைநல்கி
யாளுநாயகனுமாதியந்தமிலோனுமென்னும். (௧௮)

அத்தனும்பகவன்றானுமருவமுமுருவுமாகுஞ்
சுத்தனுமுணர்தற்கொண்ணாச்சோதியுமியாண்டுமேவுஞ்
சித்தனுமநாதிதானுந்தேவர்கடேவுமென்று
நித்தனுமுயிர்க்குணீங்காநிருத்தனுமவனேயென்னும். (௧௯)

மூன்றெனுமுலகந்தன்னின்முளைத்திடுபொருளையெல்லா
மீன்றருள்புரியுந்தாதையெனுந்திரயம்பகனும்யார்க்குஞ்
சான்றெனநிற்கின்றோனுந்தாணுவும்பரனுந்தன்னைப்
போன்றவருயர்ந்தோரில்லாப்புங்கவன்றானுமென்னும். (௨௦)

அண்ணலுமேகன்றானுமளப்பருங்குணத்தினானுங்
கண்ணனுமயனுந்தம்மாற்காணியநில்லான்றானும்
பெண்ணொடாணலியதென்னும்பெற்றியிலோனும்யாரு
மெண்ணியவெண்ணியாங்கேயீபவன்றானுமென்னும். (௨௧)

விதிமுதலுரைக்கநின்றவியனுயிர்த்தொகைகட்கெல்லாம்
பதியெனவருளுந்தொன்மைப்பசுபதிதானுமன்னோர்க்
கதிகனென்றெவருந்தேறவாங்கவர்துஞ்சவெந்த
பொதிதருபலியுமென்பும்புனைபவன்றானுமென்னும். (௨௨)

ஊன்புகுமெவரையுந்தன்னெண்குணத்தொடுக்கித்தானே
வான்புகலாகிநின்றுமற்றவர்குணங்களூடு
தான்புகலில்லாதோனுந்தன்னியலினையதென்றே
யான்புகலரியதேவுமீசனுமவனேயென்னும். (௨௩)

அன்றியுமொன்றுகேண்மோவம்புயனுதியாகி
நின்றவர்தம்மையெல்லாநீக்கியச்சிவனென்றுள்ள
வொன்றொருமுதல்வன்றனேயுய்த்திடுமுத்திவேண்டி
னென்றுமஃதியம்பிற்றென்னின்யாவரேதேவராவார். (௨௪)

பரசிவனுணர்ச்சியின்றிப்பல்லுயிர்த்தொகையுமென்றும்
விரவியதுயர்க்கீறெய்திவீடுபேறடைதுமென்ற
லுருவமில்விசும்பிற்றோலையுரித்துடுப்பதற்கொப்பென்றே
பெருமறையியம்பிற்றென்னிற்பின்னுமோர்சான்றுமுண்டோ. (௨௫)

இன்னமும்பலவுண்டன்னாற்கியம்பியமறையின்வாய்மை
யன்னதையெனக்குமுன்னியறையொணாதறைவனென்னிற்
பன்னெடுங்காலந்தேயும்பகரினுமுலவாதென்பான்
முன்னமீதுணர்ந்தாயேனுமோகமுற்றாய்கொலையா. (௨௬)



Digitized By Roja Muthiah Research Library

காரெழில்புரையுமேனிக்கண்ணனையென்னைப்பின்னை
யாரையும்புகழும்வேதமரன்றனைத்துதித்ததேபோ
லோருரைவிளம்பிற்றுண்டோவுரைத்ததுமுகமனென்றே
பேருலகறியமுன்னும்பின்னரும்விலக்கிற்றன்றே. (௨௭)

நான்மறைதனிலோர்பாகநாரமார்கடவுட்சென்னி
மேன்மையதியம்புமெம்மைவிண்ணவர்தம்மையேனைப்
பான்மைகொள்பூதந்தன்னைப்பல்பொருடனையும்பாதி
தான்மொழிந்திடுமாலீதுதவறலவுணர்திதக்கோய். (௨௮)

நம்மையும்பரமென்றுன்னிநாதனிற்சிறப்புச்செய்யும்
வெம்மைகொணெஞ்சர்தீராவிழுமவெந்நிரயம்வீழ்வர்
தம்மையஃதெடுத்தல்செய்யாசமமெனப்புகல்கிற்போர்க
ளெம்மையுந்துயரமென்னுமிருங்கடற்படுப்பரன்றே. (௨௯)

கானுறுபுலித்தோலாடைக்கண்ணுதற்கடவுட்கன்ப
ரானவரென்றுமன்னுற்கடித்தொழில்புரிந்துவாழும்
வானவரென்றுமெம்மைவழுத்தினர்க்கருள்வோமல்லா
வேனையர்தம்மைத்தெவ்வென்றெண்ணியேயிருத்தும்யாமே. (௩௦)

பதியரன்பாசந்தன்னிற்பட்டுழல்பசுநாமென்றே
விதியொடுமறைகள்கூறுமெய்ம்மையைத்தெளியவேண்டி
னிதுவெனவுரைப்பன்யாங்களிவ்வரசியற்றவீச
னதிர்கழலருச்சித்தேத்துமாலயம்பலவுங்காண்டி. (௩௧)

அவனருள்பெறுதுமுத்தியடைந்தனரில்லையல்லா
லவனருளின்றிவாழுமமரரும்யாருமில்லை
யவனருளெய்தினெய்தாவரும்பொருளில்லையானை
யவனலதிறைவனில்லையவனைநீயடைதியென்றான். (௩௨)

உபதேசப்படலமுற்றிற்று.

# தக்கன்றவஞ்செய்படலம்.

தந்தையிவ்வகையுரைத்தலுங்கேட்டுணர்தக்கன்
முந்துவீடுசேர்நெறியினைமுன்னலன்முக்க
ணெந்தையாலயன்முதலவர்தம்மினும்யானேற்
றந்தமில்வளம்பெறுவனென்றுன்னினனகத்துள். (௧)

ஏதவல்வினையுழந்திடுமெழினலிதனைக்
காதலோடுனித்தந்தையைவணங்கிநீகழறு
மாதிதன்னையான்பரமெனவறிந்தனனவன்பான்
மாதவத்தினாற்பெற்றிடவேண்டினன்வளனே. (௨)

கணிப்பின்மாதவம்புரிதரவோரிடங்கடிதிற்
பணித்துநல்குதிவிடையெனநான்முகப்பகவ
னிணைப்பிலாததன்மனத்திடைத்தொல்லைநாளெழுந்த
மணிப்பெருந்தடத்தேகெனவிடுத்தனன்மன்னோ. (௩)

Digitized By Roja Muthiah Research Library

ஈசனல்லருளன்னதோர்மானதமென்னும்
வாசநீர்த்தடம்போகியோர்சாரிடைவைகி
வீசுகான்மழையாதபம்பனிபடமெலியாப்
பாசநீக்குநராமெனவருந்தவம்பயின்றான். (௪)

காலைநேர்பெறவோட்டியேகனலினைமூட்டிப்
பால்மார்பயன்வீட்டியேதன்னுருபடிவத்
தேனுமன்பினின்மஞ்சனமாட்டியேயிறைக்குச்
சீலமாமலர்சூட்டியுட்பூசனைசெய்தான். (௫)

சுத்தநீடியதன்னுளமொருமையிற்றேடா
வித்திறத்தினாலெம்பிராற்கருச்சனையியற்றிச்
சித்தமேலவனாமமும்விதிமுறைசெப்பிப்
பத்துநூறியாண்டருந்தவம்புரிந்தனன்பழையோன். (௬)

அன்னமூர்த்திசேயன்னமாதவஞ்செயுமதனை
முன்னிநல்வளனுதவுவான்மூரிவெள்ளேற்றிற்
பொன்னின்மால்வரைவெள்ளியங்கிரிமிசைப்போந்தா
லென்னவந்தனனுமையுடனெம்மையாளிறைவன். (௭)

வந்தசெய்கையைத்தெரிதலும்விரைந்தெழீஇமற்றென்
சிந்தையெண்ணமுமுடிந்தனவாலெனச்செப்பி
யுந்துகாதலுங்களிப்புமுள்புக்குநின்றலவ
வெந்தைதன்னடிபரவுவல்யானெனவெதிர்ந்தான். (௮)

சென்றுகண்ணுதலடிமுறைவணங்கியேசிறப்பித்
தொன்றுபோலியவாயிரந்துதிமுறையுரையா
நின்றகாலையினுன்செயன்மகிழ்ந்தனநினக்கென்
னின்றுவேண்டியதியம்புதியாற்கடிதெனலும். (௯)

ஆற்றுதற்கருநோன்மையனாகியோனமலன்
பேற்றின்வேண்டுவகொள்கெனவிசைத்தலும்பிறவி
மாற்றுமுத்தியதிரந்திலன்றால்விதிவழியே
யேற்றபுந்தியுஞ்சேறலின்மயங்கியீதிசைப்பான். (௧௰)

வேறு.

நீணிலப்பெருவைப்புநிகரிலா, வீணைவல்லவரேனையர்மேவிய
சேணுமாலயனாருந்திசையுமென், னாணைசெல்லவளித்தருள்செய்தியால். (௧௧)

உன்னைவந்துவழுத்துமுயிரெலா, மென்னைவந்துவழுத்தவும்யானினி
நின்னையன்றிநெஞ்சாலும்பிறர்தமைப், பின்னைவந்தியாப்பெற்றியுமீதியால். (௧௨)

ஆயதேவரவுணர்கள்யாரும்யா, னேயசெய்கையியற்றவுமெற்குநற்
சேயினோர்களுஞ்சிற்றிடைமாதரு, மாய்வில்கொள்கையின்மல்கவுநல்குதி. (௧௩)

ஆதியாகியனைத்தையுமீன்றநின், பாதியானபராபரையான்பெறு
மாதராகமறையவனாகிநீ, காதலாகக்கடிமணஞ்செய்தியால். (௧௪)

என்றுதக்கனியம்பலுமிங்கிது, நன்றுனக்கதுநல்கினநன்னெறி
நின்றியென்னினிலைக்குமிச்சீரெனா, மன்றுளாடியவானவன்போயினான். (௧௫)

Digitized By Roja Muthiah Research Library

ஈசனவ்வரமீந்தனனேகலு, நேசமோடவனீர்மையைப்போற்றியே
தேசின்மிக்கசிறுவிதியாரினும், பேசொணாதபெருமகிழ்வெய்தினான். (௧௬)

ஓகைமேயவனோதிமவூர்திமே, லேகுமையனையெண்ணுமச்செய
லாகமீதுகண்டன்னவன்மங்கையோர், பாகனீந்தபரிசுணர்ந்தானரோ. (௧௭)

வேறு.

பெற்றிமேதலையெய்தும்பேற்றினையவன்பான்மேல்வந்
துற்றிடுதிறத்தையெல்லாமொருங்குறவுணர்வானாடித்
தெற்றெனவுணர்ந்துதக்கன்சிவனடியுன்னிப்பன்னா
ணற்றவம்புரிந்தவாறுநன்றெனவுயிர்த்துநக்கான். (௧௮)

முப்புரமுடியமுன்னாண்முனிந்தவனிலைமையான
மெய்ப்பொருள்பகர்ந்தேன்மைந்தன்வீடுபெற்றுய்யவன்னா
னிப்பரிசானானந்தோவென்னினிச்செய்கேனிம்பங்
கைப்பதுபோமோநாளுங்கடலமிர்துதவினாலும். (௧௯)

ஆலமார்களத்தோன்றானேயாதியென்றுணர்ந்துபோந்து
சாலவேயிந்நாள்காறுந்தலையதாந்தவத்துட்டங்கி
ஞாலமேலென்றுநீங்காநவையொடுபவமும்பெற்றான்
மேலைநாள்வினைக்கீடுற்றவிதியையார்விலக்கவல்லார். (௨0)

செய்வதென்னினியானென்னாச்சிந்தையினவலஞ்செய்து
மைவளர்தீயபுந்திமைந்தனையடைந்துவல்லே
மெய்வகையாசிகூறிமேவலும்வெய்யதக்க
னிவ்விடைநகரமொன்றையியற்றுதியையவென்றான். (௨௧)

என்னவத்தக்கன்கூறவிமைப்பினிலமைப்பனென்றே
கொன்னுறுகமலத்தண்ணல்குறிப்பொடுகரங்களாலே
தன்னகரென்னவொன்றுதக்கமாபுரியீதென்றே
பொன்னகர்நாணுக்கொள்ளப்புவியிடைப்புரிந்தானன்றே. (௨௨)

அந்தமாநகரந்தன்னிலருந்தவத்தக்கன்சென்று
சிந்தையுளுவகைபூத்துச்சேணகர்தன்னுளொன்று
மிந்தவாறணியதன்றாலினையிதற்கிஃதேயென்னாத்
தந்தைபாலன்புசெய்துதன்பெருங்கோயில்புக்கான். (௨௩)

தன்பெருங்கோயிலெய்தித்தவமுனிவரர்வந்தேத்த
மன்பெருந்தன்மைகூருமடங்கலந்தவிசினும்ப
ரின்புறுதிருவினோடுமினிதுவீற்றிருந்தானென்ப
பொன்புனைகிரியின்மீதுபொலஞ்சுடர்க்கதிருற்றென்ன. (௨௪)

கேசரியணையின்மீதுகெழீஇயினதக்கனெண்டோ
ளீசனல்வரம்பெற்றுள்ளவியற்கையையேமஞ்சான்ற
தேசிகனாகும்பொன்போய்ச்செப்பலுந்துணுக்கமெய்தி
வாசவன்முதலாவுள்ளவானவர்யாரும்போந்தார். (௨௫)

வானவர்போந்தபான்மைவரன்முறைதெரிந்துமற்றைத்
தானவர்குரவனானோன்றயித்தியர்க்கிறையைச்சார்ந்து
போனதுன்னவலமஞ்சேல்புரந்தரன்றனக்குத்தக்க
னானவன்றலைவனானானன்னவற்சேர்தியென்றான். (௨௬)

Digitized By Roja Muthiah Research Library

சேருதியென்னுமாற்றஞ்செவிதனிர்ப்பெய்தக்கேளா
வாரமிர்தருந்தினன்போலகமுறுமுவகைபொங்க
மேருவினொருசார்வைகும்வெந்திறலவுணர்கோமான்
காரெனவெழுந்துதொல்லைக்கிளைஞரைக்கலந்துபோந்தான். (௨௭)

ஆளரியேறுபோலுமவுணர்கோன்சேறலோடும்
வாளுறுகதிர்ப்புத்தேளுமதியமுமற்றுமுள்ள
கோளொடுநாளுமேனைக்குழுவுறுகணத்தினோரு
நீளிருந்தடந்தேர்மீதுமானத்துநெறியிற்சென்றார். (௨௮)

மங்குறோய்விண்ணின்பாலார்மாதிரங்காவலோர்க
ளங்கதனிலயத்துள்ளாரனையவர்பிறருமுற்று
ரிங்கிவர்யாருந்தக்கனினையடிவணங்கியீசன்
பொங்குபேரருளினாற்றல்புகழ்ந்தனராகிநின்றார். (௨௯)

அவ்வகைமுளரியண்ணலாதியாமமரர்தத்தஞ்
செய்வினையாகவுன்னிவைகலுஞ்செறிந்துபோற்ற
மெய்வகையுணராத்தக்கன்வியன்மதிக்குடையுங்கோலு
மெவ்வகையுலகுஞ்செல்லவிருந்தரசியற்றல்செய்தான். (௩0)

தக்கன்றவஞ்செய்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௬௨.

---

# தக்கன்மகப்பெறுபடலம்.

ஆங்கவன்றேவியானாளருந்ததிக்கற்பின்மிக்காள்
வாங்கியநுசுப்பினல்லாண்மறைக்கொடியெனுநாமத்தாள்
பூங்கமலத்துப்புத்தேள்பொன்னடிதன்னில்வந்தா
ளோங்குதொல்லுலகுக்கெல்லாமொருதனிமுதல்வியானாள். (௧)

வேறு.

சேயிழையவளொடுசெறிந்துபுல்லியே, மீயுயர்கமலமேல்விரிஞ்சன்காதலன்
மாயிரும்பணிபதிமணிகளீன்றென, வாயிரமைந்தரையருளினானரோ. (௨)

அப்பெருமைந்தர்களாயினோர்க்கெலா, முப்புரிநூல்விதிமுறையினாற்றியே
செப்பருமறைகளின்றிறமுமீந்துபின், னிப்பரிசொன்றினையிசைத்தன்மேயினான்.

நல்லதோர்மானதநணுகிநீவிர்க, ளெல்லிருமீசனையெண்ணிநோற்றிரீஇப்
பல்லுயிருந்தரும்பரிசுபெற்றிவட், செல்லுதிராலெனச்செப்பியேவினான். (௪)

ஏயினகாலையிலிறைஞ்சிமைந்தர்கள், போயினர்மானதப்பொய்கைபுக்கன
ராயிடைப்படிந்தனரரனையுன்னியே, மாயிருநோன்பினையியற்றிவைகினார். (௫)

நேரறவின்னணநெடிதுநோற்புழி, நாரதனென்பவனண்ணியாயிடை
வாரியுளாற்றவும்வருந்துகிற்றிராற், காரியம்யாவதுகழறுவீரென்றான். (௬)

என்னலுமுனிவகேளியாங்கணல்கிடு, முன்னுறநல்குவான்முயன்றுமுக்கணான்
றன்னடியுன்னியேதவத்தையாற்றுது, மன்னதுமெந்தைதன்னாணையாலென்றார்.

Digitized By Roja Muthiah Research Library

அறிந்திடுமுனிவரனதனைக்கேட்டலுஞ், செறிந்திடுகரத்தொடுசெங்கைதாக்குற
வெறிந்தனனகைத்தனனிதுகொலீசனாற்,பெறும்பரிசேயெனப்பின்னுங்கூறினன்

ஈசனையேநினைந்திறைஞ்சியேத்தியே, பேசருமருந்தவம்பிடித்துமூவகைப்
பாசமதகனெறிபடரச்சிந்தியீ, ராசுறுபடைப்பினுக்கார்வஞ்செய்திரோ. (௯)

சிறப்புளவருந்தவஞ்செய்துநீரினி, யுறப்படுகதிமுறையுரைப்பக்கேட்டிராற்
பிறப்புளதிடருளதன்றிப்பின்னரு, மிறப்புளததுநமக்கினியதாகுமோ. (௧௦)

இன்றுநீர்வெஃகியதியற்றுநான்முகன், றன்றலையைந்தினிலொன்றுசங்கரன்
பொன்றிகழ்கரங்கொளப்புகுந்ததீமையு,நின்றதோர்பழியையுநினைக்கிலீர்கொலோ

என்னலதிறையவரில்லையார்க்கும்யான்,முன்னவனென்றுநான்முகத்தன்மாலொடு
பன்னெடுநாளமர்பயின்றுசோதிகண், டன்னமதானதுமறிந்திலீர்கொலோ. (௧௨)

நேயமெண்ணுற்றெனநிறைந்த*கண்ணுத,லுயகன்விதித்திடநம்மில்யாவையு[யால்
மாயவென்றகர்தையுற்றமர்வனன்னவன்,மாயமென்றுரைத்திடுந்தளையின்வன்மை

பற்றொடுமுழுதுயிர்படைக்கும்பான்மையாற், பெற்றிடுபயனெவன்பெருமைய
ல்லது, நற்றவமுனிவிர்காணன்கிதென்றொரு, பொற்றளைதம்பதம்பூட்டலாகுமோ.

எத்துணையெத்துணையின்பம்வேண்டுநர்க், கத்துணையலக்கண்வந்தடையுமாங்கது
மெய்த்திறநீவிரும்விதியினிற்றிரேற், கைத்துறுதுயரெனுங்கடலிற்சார்திரால். ௧௫

அன்றியுமீசனையயர்த்தியாமிறை, யென்றுளமுன்னுதிரிசைவிற்றீவினை
மன்றவுமாற்றுதிர்மயக்கங்கொள்ளுதி, றொன்றியபேருணர்வொருவிப்போதிரால்.

வீட்டிடுமிச்செயல்வீடுசேர்தர, மோட்டுறுநிலைகொடுமுயன்றுகூடுதி
ரீட்டுறுநன்னெறிக்கியைவதொன்றினைக், காட்டியேயினைத்தெனக்கழறலாகுமோ.

அற்றமிறவம்புரிந்சரியவீட்டினைப், பெற்றவரளப்பிலர்பெறுவதாகியே
யுற்றவரளப்பிலருலகிற்சிற்சில, மற்றவர்தமதியல்வகுப்பக்கேண்மினோ. (௧௮)

சுற்றமதரனடித்தொண்டரல்லது, மற்றிலரவனடிமலர்களேயலாற்
பற்றிலர்சாலவுமினியபண்பினர், குற்றமதகன்றதோர்கொள்கைமேயினார். (௧௯)

நேசமுற்றடைபவர்நினைப்பினீக்கரு, மாசறுத்தருள்பொழியறிவின்மேலையோ
ரீசனைக்குறுகியெஞ்ஞான்றும்வாழ்பவர், பேசுதற்கரியதோர்பெருமையெய்தினார்.

ஆதலினவரெனவவாவின்றுற்றிடு, மேதகுநெறியுறீஇவீடுசேருதி [னவே.
ரேதமில்வெறுக்கைபெற்றெண்ணந்தீர்ந்திடுந், தாதைதன்பணியினைத்தவிர்திரென்

அந்தமில்வீடுபேறடையுமூழுடை, மைந்தர்களோர்புடைவந்துதேர்வுறாத் [ர்.
தந்தைசொல்லினுமிதுதக்கதேயெனப், புந்திகொண்டடிகளைவணங்கிப்போற்றினா

வேறு.

போற்றுமைந்தரைப்பெரும்புறந்தழீஇயரன்புகழ்
சாற்றிவீடுவெஃகுறுந்தவத்தினோர்கணிலையினைத்
தேற்றிமந்திரங்களுஞ்செயற்கையும்புணர்த்தியே
மாற்றினன்றொல்லுணர்வுதன்னைமற்றொருண்மையுதவினான். (௨௫)

---

* நேயமெண்ணுற்றெனநிறைந்த என்பதற்கு எள்ளுக்குளெண்ணெய்போலெங்கும் நிறைந்த என்பதுபொருள்.

வேறொருண்மையுதவல்செய்துவிதியினாடிவேதநூல்
கூறுகின்றமுறைபுரிந்துகுமரர்யாருமின்னண
மீறின்மாதவங்களாற்றியெல்லைதீர்ந்தமுத்தியிற்
சேறிரென்றுமுனிவனொல்லைசேணெழுந்துபோயினான். (௨௪)

போகுநாரதற்புகழ்ந்துபொன்னடித்தலத்தின்மே
லோகையோடுதாழ்ந்துமுன்னுணர்த்துபான்மையுன்னியே
மோகமாதியானதீமைமுழுதுமாற்றிமோனிக
ளாகிமைந்தரெவருமங்கணாற்றினாரருந்தவம். (௨௫)

அருந்தவங்கள்பலவுமாற்றியவர்கள்வீடுசேர்தலு
மிருந்தவம்புரிந்ததக்கனிளைஞர்பெற்றியின்னமுந்
தெரிந்ததில்லையென்றுசிந்தைசெய்துபோதவுணர்வினாற்
பொருந்தநோக்கலுற்றவட்புகுந்தபான்மைகண்டனன். (௨௬)

மானதத்தடத்தினாடுமாற்றருந்தவத்தராய்
மோனமுற்றசிறுவர்பாலின்முன்னிவந்துநாரதன்
ஞானமுற்றுமோதியென்சொனவையதென்றுமாற்றியே
மேனிலைக்கணுய்த்துமீண்டுவிண்படர்ந்துபோயினான். (௨௭)

மிக்கமைந்தரவனுரைத்தவிதியினின்றுவீடுபே
றொக்கலோடுமேயினார்களொருவரின்றியெற்கினி
மக்களின்றெனத்தெரீஇவருத்தமுற்றிருந்திடுந்
தக்கன்மற்றுமாயிரந்தவச்சிறாரையுதவினான். (௨௮)

பெற்றமைந்தரைத்தழீஇப்பிறங்குகாமர்மீச்செல
வற்றமில்சிறப்பின்வேதமறிவுறுத்தியாதியா
நெற்றியங்கணானையுன்னிநீவிர்யாவுநல்குவா
னற்றவஞ்செய்தலைதிர்மானதத்தடத்திலென்னவே. (௨௯)

கேட்டமைந்தர்தாதைதாள்கெழீஇயதங்கள்சென்னியிற்
சூட்டியேவல்போற்றியன்னதூமலர்த்தடத்திடை
யீட்டமோடுசென்றிருந்திருந்தவம்புரிந்தனர்
காட்டிலுள்ளகயமுனிக்கணங்களங்கணுற்றென. (௩0)

வேறு.

ஆனகாலையிலனையமைந்தர்க, ளூனமின்றிநோற்றொழுகமுன்னரே
போனநாரதன்புணர்ப்பொன்றோர்ந்திடா, மானதத்தடமருங்கிலெய்தினான். (௩௧)

எய்தியாவர்நீர்யாருமாதவஞ், செய்திரெப்பொருள்சேர்தல்வெஃகினீர்
நொய்திலன்னதுநுவலவேண்டுமாற், கைதவம்பெறுக்கருத்தினீரென. (௩௨)

தந்தையாகியோன்றக்கனுங்கவற், கந்திவண்ணனாரருளும்பேற்றினால்
வந்தமைந்தரேம்யாங்கண்மற்றவ, னிந்தவான்றடத்தெம்மையேவினான். (௩௩)

தேவதேவனைச்சிந்தையிற்கொடே, யாவியோடுடலலசநோற்றிரீஇ
யோவில்பல்லுயிருதவல்பெற்றிட, வேவினானெமையென்றுசொற்றனர். (௩௪)

சொற்றகாலையிற்றுகளிறாயவ, னற்றவஞ்செய்வீர்நாதன்றாளையே
பற்றதாவுளீர்பயனென்றுன்னலீர், குற்றம்யாவரேகுறுகலார்களே. (௩௫)

Digitized By Roja Muthiah Research Library

போற்றியாவையுநோக்கிச்செய்வினைப், பேற்றையெய்துவீர்பிறப்புமாய்வது
மாற்றுவீரலிர்மயக்கந்தீர்திரோ, வேற்றமென்கொனீரிகின்றீரினும். (௩௬)

மேயமாசுதோய்விழைவின்மெய்யினர், தூயதோர்தடந்துறையையெய்தியுஞ்
சேயசேதகந்தினைத்தல்போலுமா, ளீயிர்கொண்டதோர்நிலைமைதானுமே. (௩௭)

நிலையதாகியதவர்தலைக்குநீர், விலையதாப்பெறும்விதியின்செய்கையு
நிலையதாகுமோநீரோளொடே, யுலகமீதுசீருறுவதன்றியே. (௩௮)

வேறு.

போவதும்வருவதும்பொருமனுநன்குமின்
றுவதோர்கதியதேயாருயிர்க்குறுதியா
நீவிரக்கதியினைநினைகிலீரிறுதியு
மோவரும்பிறவியுமும்மைவிட்டகலுமோ. (௩௯)

சிறுவர்தம்முள்ளமுஞ்சேயிழைமகளிர்தம்
மறிவுமாலெய்தினோர்சிந்தையுமானவா
றுறுவதோர்பனுவலுமுற்றிடும்பெற்றியே
பெறுவதாமன்றியேபின்னரொன்றுகுமோ. (௪0)

ஆதலாலுங்களுக்கருள்செயுந்தன்மையான்
றுதையாகின்றதோர்தக்கனேயெனினவன்
பேதையாமீசனுற்பெருவளம்பெற்றவன்
பாததாமரையினிற்பரிவுறுநெறிமையால். (௪௧)

ஆங்கவன்மையலோனுதலாலவனரு
ளீங்களுமனையரேநெறிதருந்தேசிகன்
றீங்கெலாநீக்கியேசிவகதிப்பாற்பட
வோங்குபேரருளொடுமுணர்த்துவானல்லனே. (௪௨)

மூந்துமாயிரவருமுன்பரிப்பொய்கைவாய்த்
தந்தைதன்பணியின்முதாதைபோனல்கவே
வந்துளார்கோற்றுழிமயலறத்தேற்றியே
யந்தமாநெறிநிறீஇயரியவீடருளினும். (௪௩)

என்னனுநாரதனெழின்மலர்த்தாளிணை
சென்னிமேற்சேர்த்தியேசிறியரேமுய்யவே
யுன்னியீண்டேகிநீருணர்த்துமெய்ந்நெறியினை
யின்னதென்றுணர்கிலேமெமக்கருள்புரிதிரால். (௪௪)

என்பவர்க்கருள்புரிந்தெண்ணிலார்வத்தொடு
நன்பொருட்காட்சியைநானுமக்குதவியே
வன்புலத்தாறுபோய்மதிமருண்டின்பமுந்
துன்புமுற்றுழல்பவர்தொலைவுசெய்திடுவனுல். (௪௫)

ஆதிபார்தாளிணையருளொடேவழிபடு
நீதியாநீரினுர்நிலைமையாய்நின்றிடும்
யாதானவர்பெறும்பதமுநான்கதனுளே
யோதியார்பெறுவதோருயர்பெருங்கதியதே. (௪௬)

Digitized By Roja Muthiah Research Library

முத்தியென்றிடுவதேமொழிவதோர்நாமமா
மத்திறங்கடவுளர்க்காயினுந்தெரிவதோ
நித்தனன்புறுவதோர்நெறியராயிருவினை
யொத்தபண்போர்களாலுணரலாமல்லதே. (௪௭)

அந்நிலைக்கண்ணுளாராதியார்தாளடைந்
தின்னலுக்கிடையதாமிப்பெரும்பிறவியுட்
பின்னருற்றிடுகிலர்பேசுதற்கரியதோர்
நன்னலத்தொடுகெழீஇநாளுமின்புறுவரே. (௪௮)

ஆதலானீவிருமந்நெறிப்பாலுறீஇ
மேதைசால்யோகினால்வீடுசேருதிரென
வாதியாமிறைவனூலறையுமுண்மைகளெலா
நாதனாரருளினாரதனுரைசெய்தான். (௪௯)

அன்றுநாரதமுனியவரெலாமவ்வழி
நின்றிடும்படிநிறீஇநெறிகொள்வானுலகமேற்
சென்றனன்பின்னரச்சிறுவராயிரவரு
மொன்றுசிந்தையினாலுயர்தவத்தொழுகினார். (௫௦)

உயர்தவக்கிழமையிலொழுகியேயுற்றுளோர்
மயறொலைத்தருள்சிவன்மன்னுபேரருளினால்
வியனெறிப்பாலதாம்வீடுபேறெய்தினா
ரயன்மகற்கினிமைகூறாயிரங்குமரரும். (௫௧)

உங்ஙனநாரதனோதியதுணர்வுறா
விங்ஙனம்வீடுபேறெய்தலுஞ்சிறுவர்க
ளெங்ஙனம்போயினாரின்னும்வந்திலரென
வங்ஙனஞ்சிறுவிதியயருவானாயினான். (௫௨)

வேறு.

போதத்துணர்வாலவர்க்கண்ணுறும்போழ்துதன்னின்
மேதக்கமைந்தர்தமைநாரதன்மேவிமேலா
மோதித்திறமுள்ளனகூறவுணர்ந்துநோற்றுத்
தீதற்றுவீடுபுகுதன்மைதெரிந்ததன்றே. (௫௩)

தெரிகின்றவேலைக்கிளர்கின்றதுசீற்றமுள்ளம்
பரிகின்றதாவிபதைக்கின்றதுபையுண்மாலை
விரிகின்றதம்மாவியர்க்கின்றதுமேனிவிண்ணின்
றிரிகின்றதுகோளிரங்குற்றதுஞாலமெல்லாம். (௫௪)

தன்பாலகர்தஞ்செயல்கண்டுதளர்ந்துசோரும்
வன்பாலினனாகியதக்கன்வரத்தைவேண்டு
மென்பாலரென்பாலிலதாக்கினனெண்ணமிக்கு
நன்பாலுலகத்துழல்வானினிநாளுமென்றான். (௫௫)

மேனாரதன்செய்புணர்ப்புன்னிவெகுண்டுதக்க
னோனாதுசாபநுவன்றேநனிநோற்கமைந்த
ரானாரைநல்கேன்மகப்பெற்றதமையுமென்னா
மானார்தமையேபுரியத்தன்மனம்வலித்தான். (௫௬)



Digitized By Roja Muthiah Research Library

வேறு.

இருபதின்மேலுமூவரேந்திழைமாரைநல்கிப்
பெருமைகொடக்கன்றன்மன்பிருகுவேமரீசியென்போன்
கருணைகொள்புலத்தியன்னங்கிராப்புலகன்வசிட்டன்
றிரிவிலத்திரிநீவேள்விசீர்ப்பிதராவுக்கீந்தான். (ருஎ)

துய்யதோர்சுபுத்திபுத்திசுரசையேதிருதிதுட்டை
செய்யநற்கிரியைகீர்த்திசிரத்தையோடிலச்சைமேதா
மைவிழிக்கத்திசாந்தைவபுவைமுன்றருமன்வேட்டுப்
பொய்தவிரிருபானேழுபுதல்வரையளித்தான்மன்னோ. (ருஅ)

கேதமில்பிருகுவென்பான்கியாதியைக்கொண்டுபுல்லி
யேதமில்விதாதாத்தாதாவென்றிருசிறுரையீன்று
சீதளவனசங்கொண்டசெந்திருவையுமுன்றந்து
மாதவன்றனக்குநல்கிமாதவத்திருந்தான்மாதோ. (ருகூ)

தாரணிபுகழ்மரீசிசம்பூதிதன்னைவேட்டாங்
கீரிருபிளுக்களீந்தானிவர்வழிப்பிறந்தார்பல்லோர்
போரியல்புலத்தைவென்றபுலத்தியமுனிவனென்பா
ஞரிசன்னதியைவேட்டுநன்மகார்பலரைத்தந்தான். (சூ0)

அங்கிராமிருதியென்னுமாயிழைதனைமணந்து
பங்கமிலங்கிரீரன்பரதனுமகாரைப்பெற்று
மங்கையர்நால்வர்தம்மைமகிழ்ந்துடனளித்தானன்னார்
தங்குடிப்பிறந்தமேலைத்தவத்தருமளப்பிலோரால். (சூக)

பெருமைகொள்புலகனென்போன்பிருதியைக்கொண்டுதத்தாத்
திரிதனைப்பயந்தானன்னோன்சீர்வழிக்கும்பன்போரந்தா
னொருமைசேர்வசிட்டனென்போனூற்சையைமணஞ்செய்தாங்கோர்
தெரிவையையநல்கிமைந்தரேழுவரைச்சிறப்பிற்றந்தான். (சூஉ)

அத்திரியென்னுமேலோனனசூயைதன்னைவேட்டுச்
சத்திநேத்திரனேதிங்கள்சனிசங்கதானனென்னும்
புத்திரர்தம்மைத்தந்தான்பொங்குதீச்சுவாவைவேட்டு
மெய்த்திறல்படைத்தமைந்தர்மூவரைவிரைவொடீந்தான். (சூங)

கவிபுகழ்கிரதுவாஞேன்கமைதனைமணத்திற்கூடி
யுவகையின்மூன்றுபாலருதவினன்பிதராவென்போன்
சுவதையென்றிசைக்கநின்றதுடியிடைதன்னைவேட்டுத்
தவலருஞ்சிறப்பின்மேனைதரணிமங்கையரைத்தந்தான். (சூச)

அந்தநன்மேனைதன்னையார்வமோடிமவான்கொண்டான்
முந்துறுதரணிதன்னைமுறையினன்மேருவேட்டு
மந்தரகிரியைநல்கமற்றதுநோற்றுமுக்க
ணெந்தைதன்னிடத்தெஞ்ஞான்றுமிருந்திடப்பெற்றதன்றே. (சூரு)

விண்ணுயர்மேருப்பின்னர்வேலையென்பவளைநல்கித்
தண்ணுறுகடற்குநல்கச்சரவணியென்னவாங்கோர்
பெண்ணினையனையன்பெற்றுப்பெரும்புகழ்ப்பிராசினப்பே
ரண்ணலுக்குதவவன்னோயிருமகாரைத்தந்தான். (சூசூ)

தக்கன்மகப்பெறுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் கஉஅ.

Digitized By Roja Muthiah Research Library

# சந்திரசாபப்படலம்.

இன்னபல்கிளைகண்மல்கவிருந்திடுந்தக்கன்பின்னர்த்
துன்னியநாண்மீனத்துட்டொகைபெறுமிருபானேழு
கன்னியர்தம்மைநல்கிக்கடிமணவிதியினீராற்
றன்னிகரில்லாப்பொற்பிற்றண்மதிக்கடவுட்கீந்தான். (௧)

ஈந்தபின்மதியைநோக்கியார்க்குமோர்பெற்றித்தாக
வாய்ந்திடுமோர்வழுய்த்துமருவுதிசிலர்பாலன்பிற்
றோய்ந்தொருசிலரையெள்ளிச்சுளிகிற்பாயல்லையென்று
வாய்ந்திவைபுகன்றுதேற்றியனையரோடேகச்செய்தான். (௨)

ஏகியகடவுட்டிங்களிலங்கெழின்மானத்தேறி
மாகநீணெறியிற்போந்துமடந்தையரவரையெல்லா
மோகையான்மேவவுன்னியோர்பகற்கொருவர்பாலாய்ப்
போகமாரின்பமாற்றிவைகலும்புணர்ச்சிசெய்தான். (௩)

இன்னணம்புணர்ச்சிபோற்றியேகியதிங்கட்புத்தேள்
பன்னியரனையர்தம்மிற்பழுதிலாவாரறானும்
பின்னவடானுமாற்றப்பேரெழிலுடையராக
வன்னவர்திறத்துமேலாமார்வமோடணுகலுற்றான். (௪)

ஏனையர்தம்பாற்சேரானிருதுவின்வேலைபூத்த
தேனிமிர்சொல்லார்மாட்டுச்சேருறுக்கணவரேபோல்
வானிடைமதியப்புத்தேண்மறுத்தனன்றிரியும்வேலை
யானதோர்பான்மைநோக்கியவரெலாமுனிந்துபோனார். (௫)

போந்தனர்தக்கன்றன்பாற்பொருமியேபொலம்பூட்கொங்கை
யேந்திழைமாதர்தங்கள்கேள்வனதியற்கைகூறக்
காந்தியவுளத்தனாகிக்கனன்றவன்கலைகளெல்லாந்
தேய்ந்திலவாகவென்றுதீமொழிச்சாபஞ்செய்தான். (௬)

செப்பருந்திருவில்வைகுஞ்சிறுவிதியென்பான்சொற்ற
விப்பெருஞ்சாபந்தன்னாலென்றுமெஞ்சாததிங்க
ளொப்பருங்கலைகள்வைகற்கோரொருகலையாயஃகாப்
பொய்ப்பெருஞ்செல்வம்பெற்றோன்புகழெனக்குறைந்தவன்றே. (௭)

மூன்றுறழைந்துவைகன்முடிந்துழிமதியமென்போ
னான்றதண்கலையின்மூவைந்தழிதலுமவனேயென்னச்
சான்றுரைசெய்தல்போலோர்தண்கலையிருத்தலோடு
மான்றனன்மெலிந்துவெள்கிவானவர்கோனையுற்றான். (௮)

தக்கனென்பவன்சாபத்தாற்றண்கலையனைத்தும்போகி
யிக்கலையொன்றுநின்றதீதுமின்றிறக்குமென்னின்
மிக்கவென்னியல்புங்குன்றும்வியன்பெயர்தொலையும்யாண்டும்
புக்கதொல்புகழும்போகும்புகல்வசையாகுமன்றே. (௯)

ஈங்கினிச்செய்வதென்னோவுணர்கிலேனெற்கோர்புந்தி
தீங்கறவுரைத்தியென்னச்செப்பினனிரங்கியேங்கித்
தாங்கரும்பையுள்வேலைசார்தலுந்தழுவியெற்கோர்
பாங்கனையஞ்சலென்னாவிவைசிலபகர்தலுற்றான். (௧௦)

Digitized By Roja Muthiah Research Library

எந்தைவாழ்கயிலைதன்னிலிபமுகன்முதிரையாவுந்
தந்தபேரகமெங்கைச்சகுலி * யுநோக்கிநக்கா
யந்தநாளனையான்சீறியாருநிற்காணூராகி
நிந்தைசெய்தகலவேநீசசிற்றிகழ்தியென்றான். (௧௧)

என்றவச்சாபந்தன்னலியாவருமிறப்பவெள்ளி
யன்றுதொட்டனைநோக்காராயகலநீவெள்கிவிண்மேற்
சென்றிலையொடுங்கனூடித்திசைமுகன்முதலோர்வெள்ளிக்
குன்றிடையேகிமுன்னோன்குரைகழல்பணிந்துசொல்வார். (௧௨)

காண்டகுநினதுமேன்மைகருதிடானிகழ்ந்துமாசு
பூண்டனனதனாற்றிங்கள்பொருமனூற்றெருடுங்குமன்னான்
வேண்டுமிவ்வுலகிற்கெந்தைவிதித்திடுசாபத்தன்மை
யாண்டொருவைகல்போற்றவருள்புரிந்தளித்தியென்றார். (௧௩

ஐங்கரனதனைக்கேளாவவ்வகையருளவெய்யோன்
றிங்களின்முதலாம்பாலிற்செல்லுநாலாம்வைகன்
மங்குல்சூழுலகநோக்காமரபினல்வதிந்தாய்மற்றப்
புங்கவற்கந்நாண்மிக்கபூசனைபுரியமேலோர். (௧௪)

இதுபழியொன்றுநிற்கவின்றுநீதக்கன்றன்னாற்
புதியதோர்குறையும்பெற்றாய்பொலிவொடுதிருவுந்தீர்ந்தாய்
மதியினைமதியதற்றாய்மற்றினிவல்லைசென்று
விதியொடுபகர்திசேயைவேண்டியீதகற்றுமென்றான். (௧௫)

வச்சிரமெடுத்தசெம்மன்மற்றிவைபுகனுமெல்லை
யிச்செயலினிதுவல்லேயேகுவலவ்வர்றென்று
வச்செனவெழுந்துதிங்களவன்பணிதலைக்கொண்டேகி
முச்சகந்தன்னின்மேலாமுளரியானுலகம்புக்கான். (௧௬)

தாமரையென்னுந்தண்பூந்தவிசிடைத்திகழ்ந்தவண்ணன்
மாமலரடியின்வீழாமாதுலன்வெகுண்டுசொற்ற
தீமொழியுணர்த்தியுன்றன்சேயினைத்தெருட்டித்தீயேன்
றேமுறுகவலைமாற்றித்துடைத்தியிச்சாபமென்றான். (௧௭)

அன்னதுமொழிந்ததிங்கட்கம்புயன்மொழிவானீண்டுத்
தன்னுளநெறிப்பாலன்றிச்சார்கிலன்றக்கனென்பா
னென்னுரையிறையுங்கொள்ளான்யானவன்மாட்டுஞ்செல்லேன்
முன்னுளனல்லன்யார்க்குமுதல்வனேயாகினின்றான். (௧அ

சொல்லுவபிறவென்வேறுதொல்லைநாள்யானேகூற
வல்லுறழ்கண்டத்தெந்தையரும்பெருந்தன்மையாவு
மொல்லையினுணர்ந்துபன்னாளுழந்ததோர்தவத்தாலிந்த
வெல்லையிறுவின்வைகியிறையுமங்கவனையெண்ணான். (௧௯)

வேறு.

செக்கரிற்படர்சடைத்தீயின்றேற்றமா, முக்கணாயகனெதிர்மொழிந்துவேண்டலா
மெக்குறையாயினுமெவருமீண்டையிற், றக்கன்முன்னேருரைசாற்றலாகுமோ.௨0

---

* சகுலி - மோதகம்.

Digitized By Roja Muthiah Research Library

அண்ணலந்திருவிடையமுந்தியாரையு, மெண்ணலன்செந்நெறியியற்றவோர்கில ன், கண்ணிலன்மதியிலன்களிப்பினேர்மகன், மண்ணிடைவிரைவொடும்வழிக்கொ ண்டாலெனா. (உக)

களியுறுபெற்றியன்கறுவுசிந்தைய, னளியறுமுகத்தினனருளில்வாய்மையன், றெளிதருமுணர்விலன்சிதைந்துமேலிவன், விளிவுறுபொருட்டினிம்மேன்மைபெ ற்றுளான். (உஉ)

ஈண்டிவன்விளிதலுமின்றியெம்மனோர், பூண்டநன்னிலைகளும்போக்கல்சிந்தி யா, னீண்டசெஞ்சடைமுடிநிமலனன்னவன், வேண்டியவரமெலாம்விரைவினல் கினான். (உங)

அன்னதுநிற்கயாமவனைவேண்டுவ, மென்னினுமுனிவுறுவிகழுமெம்மையு
நின்னுறுசாபமுநீக்கலானினிப், பின்னொருநெறியுளபேசக்கேண்மியா. (உச)

செய்யனைக்கண்ணுதற்சிவனையெம்மனோர்க், கையனையடிகளையமலனாகிய [லோ.
மெய்யனையடைந்துநின்மேனிமாசினை, யொய்யெனவகற்றிலையுணர்விலாய்கொ

ஈதவன்முன்புசென்றிசைக்கநீக்குநின், பேதுறவனையதுபேசல்வேண்டுமோ
மேதகுமிருளினல்விளங்கிடாதவை, யாதவன்காட்டுதற்கையஞ்செய்வரோ. (உரு)

சிறுரெனநமையெலாஞ்சிறப்பினல்கிய, விறல்புரைசடைமுடியெந்தைக்கன்பரா
யுறுதவர்தம்மையுமுற்றபான்மையர், பெறுததோர்பொருளையும்பேசவல்லமோ. ()

தெருளொடுதன்னடிசேருந்தொண்டினேர்,பருவரலொழித்திடும்பான்மைக்கல்ல வோ,விரிசுடர்கெழுவியவெள்ளியோங்கலி, னருளுருவெய்தியேயமலன்மேயதே.

இடுக்கணங்கொருவர்மாட்டெய்தினெந்தைதன், னடித்துணையரணமென்றடை வரேயெனிற், றுடைத்தவர்வினைகளுந்தொலைக்குமிப்பொருள், பிடித்திலையாற்றவு ம்பேதைநீரைநீ. (உகூ)

அந்தியஞ்சடைமுடியண்ணறன்னடி, சிந்தைசெய்தடைந்திடுசிறவன்மேல்வரு
வெந்திறனடுவனைவிலக்கியன்றுமுன், வந்தருள்புரிந்ததுமறந்திபோலுமால். (ங0)

விஞ்சியதிரைகெழுவேலைதன்வயி, னஞ்சமன்றெழுதலுநடுங்கிநாமவன்
றஞ்செனவடியிணைசாரத்தான்மிசைந், தஞ்சலென்றருளியதயர்க்கலாகுமோ. நக

வார்த்தனவுமையவண்மலர்க்கைத்தோன்றியே, யார்த்தெழுகங்கையிவ்வகில மெங்கணும், போர்த்திடவெருவியாம்போற்றச்சென்னியிற், சேர்த்தியன்றளித்த துந்தேற்றிலாய்கொலோ. (நஉ)

அளப்பருங்குணத்தினெம்மண்ணலன்பராற், கொளப்படும்பேரருள்கூற்றின்பா லதோ, கிளத்திடவரியதேற்கேடில்பல்பக, வுளப்படவுன்னினுமுலவிற்றுகுமோ.

ஆதலினீண்டுநின்றுதிநாயகன், காதலின்மேயவக்கயிலையுற்றவன்
பாதமிங்கரணெனப்பற்றிவல்லைநின், பேதுறவொழிமதிபெருந்தண்மாமதி. (நச)

என்றலுமயன்பதத்திறைஞ்சியெம்பிரா,னன்றிவைபுகன்றனைஞானமூர்த்திபாற், சென்றடைவேனெனச்செப்பிவெள்ளியங், குன்றினையணைந்துபொற்கோயின்மே யினான். (நரு)

தன்னுறுபருவரல்சாற்றக்காவலோன், மன்னருணிலையொடுமரபினுய்த்திடப்
பொன்னவிர்செஞ்சடைப்புனிதநாயகன்,முன்னுறவணங்கினன்முடிவிலன்பினால்

Digitized By Roja Muthiah Research Library

மேற்றிகழுபநிடவேதவாய்மையாற், போற்றலும்வந்ததென்புகறியாலெனச், சாற்றினானுயிர்தொறுந்தங்கித்தொல்வினை, தேற்றுபுவினைமுறைசெலுத்துந்தொன்மையோன். (௩௭)

நங்களையலைத்திடுநன்னலன்றனை, யிங்கிவணடுதுமென்றிருட்கள்சூழ்ந்தென
மங்குலினிறங்கொடுவடிவம்வேறதாந், திங்கணின்றெம்பிராற்கினையசெப்புவான்.

வன்றிறற்றக்கன்முன்வழங்குதீச்சொலாற், றன்றிருங்கலையெலாந்தொலைந்துபோந்திட, வொன்றிவணிருந்ததாலுதவுந்தேய்ந்திடு, மின்றினிவினையினேனியாதுசெய்வதே. (௩௯)

எஞ்சியவிக்கலையிருக்கத்தேய்தரு, விஞ்சியகலையெலாமேவநல்குதி
தஞ்சநின்னலதிலையென்னத்தண்மதி, யஞ்சலையென்றனனருளினுழியான். (௪0)

தீர்ந்தனவன்றியேதிங்கடன்னிடை, யார்ந்திடுகலையினையங்கையாற்கொளா
வார்ந்திடுசடைமிசைவயங்கச்சேர்த்தினான், சார்ந்திலதவ்வழித்தக்கன்சாபமே.()

மேக்குயர்தலைவராம்விண்ணுளோர்கள்பாற், றுக்குறுவினையையுஞ்சாபம்யாவையு
நீக்கியதலைவனிந்நிலவின்சாபத்தைப், போக்கினனென்பதுபுகழின்பாலதோ. ௪௨

நெற்றியங்கண்ணுடைநிமலத்தெம்பிரா, னுற்றவர்க்கருள்புரிகின்றவுண்மையைத், தெற்றெனவுணர்த்தல்போற்றிங்களின்கலை, கற்றையஞ்சடைமிசைக்கவின்றுபூத்ததே. (௪௩)

வேறு.

எந்தையவ்வழிமதியினைநோக்கிநீயாதுஞ்
சிந்தைசெய்திடேலெம்முடிச்சேர்த்தியசிறப்பா
லந்தமில்லையிக்கலையிவணிருந்திடுமதனால்
வந்துதோன்றுநின்கலையெலாநாடொறுமரபால். (௪௪)

நின்னதொல்கலையைந்துமுப்பகலிடைநிரம்பிப்
பின்னரவ்வழிதேய்ந்துவந்தோர்கலைபிரியா
தின்னபான்மையேநிகழுமெக்காலமுமென்றுன்
முன்னையாவிதோறிருந்தெலாமியற்றியமுதல்வன். (௪௫)

முதல்வனிவ்வகையருள்புரிந்திடுதலுமுளரிப்
பதயுகங்களில்வணங்கினன்விடைகொடுபடரா
மதியவானவன்றன்னுலகடைந்துதொன்மரபிற்
கதிகொள்செய்வினைபுரிந்தனன்வளர்ந்தனகலையே. (௪௬)

ஒன்றுவைகலுக்கோர்கலையாய்நிறைந்தோங்கி
நின்றதொன்னிலைநிரம்பியேபின்னுறநெறியே
சென்றுதேய்ந்துவந்தொருகலைசிதைவுறாதாகி
யென்றுமாவதுமழிவதும்போன்றனனிரவோன். (௪௭)

செங்கணான்முதலனைவருமம்மதித்திறத்தை
யங்கணாடியேதக்கனாலிவன்கலையனைத்து
மங்குமாறுமேல்வளர்வதுமியற்கையாவகுத்தா
னெங்கணாயகன்செய்கையாரறிந்தனரென்றார். (௪௮)

Digitized By Roja Muthiah Research Library

செக்கர்வானமேற்கிளர்ந்தெழுதிங்களின்செயலை
யொக்கநாடியசிந்தையாந்தூதினாலுணர்ந்து
தக்கனென்பவன்கனன்றியானுரைத்தசாபத்தை
நக்கனேகொலாந்தடுக்கவல்லானெனநகைத்தான். (௪௯)

எந்தைதன்றந்தையாவருமருகனுக்கியான்முன்
றந்தவாய்மையைவிலக்கிலர்விலக்கவென்றன்முன்
வந்தும்வேண்டிலரச்சமுற்றிருந்தனர்மற்றத்
தந்தைதாயிலாவொருவனுமென்னுரைதடுப்பான். (௫0)

நன்றுநன்றியாம்பரம்பொருணான்முகன்முதலாந்
துன்றுதொல்லுயிர்யாவையுமழித்துமைந்தொழிலு
நின்றுநாம்புரிகின்றனமெங்கணுநீங்கா
மென்றுதன்மனத்தகந்தையுற்றான்கொலோவீசன். (௫௧)

அன்னதன்றியேயின்னமொன்றுண்டுபாரகத்திற்
றன்னையேநிகர்தக்கனுநோற்றிடுதவத்தா
னென்னலித்திருவுதவினமென்பதைநினைந்தோ
வென்னதாணையையிகழ்ந்தனனித்திறமிழைத்தான். (௫௨)

செய்யதோர்பரம்பொருளியாமென்பதுதெளிந்தும்
வையமீதிலித்திருவெலாம்பெற்றுநம்மலர்த்தாள்
கையினாற்றொழானென்றுகொன்முன்னியான்கழறும்
வெய்யவாய்மையைவிலக்கினன்சிவனெனவெகுண்டான். (௫௩)

தகவுமீரமுநீங்கியபுரைநெறித்தக்கன்
புகலும்வாய்மையைத்தேர்ந்துழிப்புலகனென்றுரைப்போ
னிகரில்கண்ணுதற்கடவுளையெள்ளலைநின்னை
யிகழ்வர்யாவருமெஞ்சுமுன்வெறுக்கையுமென்றான். (௫௪)

என்றவன்முகநோக்கியேதவத்தினாலென்க
ணின்றவித்திருநீங்குமோநெடியமான்முதலோ
ரொன்றுமென்பணிமறுத்திலரெள்ளுவதுண்டோ
நன்றுநன்றுநின்னுணர்வெனச்சிறுவிதிநக்கான். (௫௫)

முறுவலித்திடுதக்கனைக்கண்ணுறீஇமுனிவன்
பிறரிழிப்புரைகூடுறாதென்னினும்பெருஞ்சீர்
குறைவுபெற்றிடாதென்னினுநினக்கருள்கொடுத்த
விறைவனைப்பழித்திடுவதுதகுவதோவென்றான். (௫௬)

புலகனென்றிடுமுனிவரனினையனபுகல
விலகுதீநெறியாற்றியசிறுவிதிவினவி
யலகிலாததன்னாற்றலும்பெருந்திருவனைத்து
முலகினீங்குவான்பெருமிதங்கொண்டிவையுரைப்பான். (௫௭)

நோற்றுமுன்னியான்பெற்றவித்திருநுகர்ந்திடுமுன்
மாற்றுவானலன்செய்வினைமுறையலால்வலிதி
னேற்றமாகவொன்றிழைக்கலனுதலாலென்பா
லாற்றலாலரன்செய்கின்றதென்னெனவறைந்தான். (௫௮)

Digitized By Roja Muthiah Research Library

அறைதலோமெப்புலகனென்றுரைப்பவனனைத்தே
யுறுதியாயினுமீசனையிகழ்ந்தவருய்யார்
மறையெலாமவைசொற்றதுமற்றவன்றன்னை
யிறையுமெள்ளலேமனங்கொடுபராவுதியினிநீ. (௫௯)

தன்னடைந்தவராகுலமாற்றியேதகவா
லென்னதோர்பொருள்வெஃகினுமீகின்றதியற்கை
யன்னவற்கதுமதிதெரிந்தடைதலுமவன்பா
னின்னினுற்றசாபத்தினைநீக்கினனெறியால். (௬0)

கற்றைவான்கலைநிறைந்தபின்முன்னநீகனன்று
சொற்றவாய்மையுநிறுவினனுடொறுஞ்சுருங்கச்
செற்றமென்னினித்திங்கணின்மருகனச்சிவனும்
பெற்றமூர்தியுமம்முறையாவனுற்பின்னுள். (௬௧)

என்னவித்திறமொழிதலுஞ்சினமகன்றிமையோ
ரன்னமூர்தியோனியாவரும்புகழ்தரவனையான்
பன்னெடும்பகலரசின்வீற்றிருந்தனன்பரையாங்
கன்னிமற்றவன்மகண்மையாய்வருதல்கட்டுரைப்பாம். (௬௨)

சந்திரசாபப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௬0.

---

## உமைகயிலைநீங்குபடலம்.

கமலமூர்த்தியுங்கண்ணனுங்காண்கிலா, வமலமேனியையன்பினர்காணுற
நிமலமாகியநீள்கயிலாயமேல், விமலநாயகன்வீற்றிருந்தானரோ. (௧)

வீற்றிருந்தவன்மெல்லடிகைதொழூஉப்,போற்றியுன்றன்பொருவருமெய்மையைச்
சாற்றுவாயெனச்சங்கரிவேண்டலு, மாற்றவன்புசெய்தாங்கருள்செய்குவான். (௨)

வேறு.

உருவொடுகுணஞ்செயலொன்றுமின்றியே, நிருமலமாய்ச்சிவனிறைந்துநின்றதும்
பரவியவுயிர்த்தொகைப்பந்தநீக்குவா, னொருதனிச்சத்தியாலுன்னலுற்றதும். (௩)

ஐந்தியற்சத்திகளாயினோர்தமைத், தந்ததுமருவுருத்தாங்கியவ்வழிச்
சிந்தனையருச்சனைசெய்தியாவரு, முய்ந்திடச்சதாசிவவுருவைந்துற்றதும். (௪)

இருபதின்மேலுமைந்நீசன்கேவல, வுருவமதாகியேயுறைந்தபெற்றியும்
விரவியகுடிலையின்வினைவுசெய்துபின், னருள்புரிமூர்த்திகளாயபேதமும். (௫)

மூத்தியமாயைகண்மூலமாகவே, யந்தமிறத்துவமாறொடாறுமுன் [யும்.
வந்திடவளித்ததுமரபினைந்தொழில், சிந்தைகொள்கருணையானடாத்துஞ்செய்கை

விதித்திடுமூவகைவியனுயிர்த்தொகை, கதித்திடுதத்துவக்கணங்களங்குளா,ருதி
த்திடுமுறைமையினெடுங்கச்செய்துதான், மதித்தொருதன்மையாய்மன்னிநிற்ப
தும். (௭)

Digitized By Roja Muthiah Research Library

ஆனதன்னியற்கைகளனைத்துங்கண்ணுதல்,வானகூறுசமமறையின்வாய்மையான்
மேனிகழ்தொகைவகைவிரியதாகவே, தானருள்புரிந்தனன்றலைவிகேட்கவே.(௮)

சுந்தரியிவ்வகையுணர்ந்துதோமிலா, வெந்தைநிற்குருவிலையென்றிபின்னுற
வைந்தொடுபலவுருவடைந்ததென்னெனக், கந்தனையருளுவான்கழறன்மேயினான்.

உருவிலைநமக்கெனவொன்றுநம்வயி, னருளுருவவையெலாமென்னவன்னதோர்
பொருளெனவுன்னியேபுவனமீன்றவள், பெருமகிழ்வெய்தியிப்பெற்றிகூறினாள். ()

அந்நிலைவடிவெலாமருளினாதலா, லுன்னருள்யானெனவுரைப்பதுண்மையே
யென்னுருவாமவையென்றுபாங்கமர், கன்னிகைவியந்தனள்கழறும்வேலையே. ()

கயந்தனதீருரிகவின்றுபொற்புறப், புயந்தனிலணிந்தருள்புனிதனாங்கைநீ
நயந்தருநின்புகழ்நாடிநம்முனம், வியந்தனையுனையெனவிளம்பிமேலுமே. (௧௨)

இருளுறுமுயிர்தொறுமிருந்துமற்றவை, தெருளுறவியற்றுமதனைத்தீர்துமேன்
மருளுறுசடமதாய்மாயுமேனைய, பொருளுறுநிலைமையைப்புகலவேண்டுமோ. ௧௩

உன்னிடைதனினும்யாமுறுதலில்வழி, நின்னுயிருணர்வுறுமினக்குக்காட்டுது
மன்னதுகாண்கெனவயனையாதிய, மன்னுயிரியற்றிடும்வண்ணநீங்கினான். (௧௪)

தேவர்கணாயகன்செயலிலாமையா, லாவிகள்யாவையுஞ்சடமதாகியே
யோவியமேயெனவுணர்வின்றுற்றன, பூவுலகேமுதற்புவனம்யாவினும். (௧௫)

ஆட்டுவித்திடுபவனதுசெயாவழிக், கூட்டுடைப்பாவைகள்குலைந்துவீழ்ந்தென,
நாட்டியபரனருணடாத்தலின்மையா, லீட்டுபல்லுயிர்த்தொகையெனைத்துமாய்ந்
தவே. (௧௬)

இந்தவாறுயிர்த்தொகையாவுமொல்லையி, னந்தியேசடமதாய்நணியவெல்லையிற்
சிந்தைசெய்திளையதுதெருமந்தஞ்சியே, சுந்தரியரனடிதொழுதுசொல்லுவாள். ()

அறிகிலனெந்தைநீயனைத்துமாகியே, செறிவதுமுழுதுயிர்த்திறனியற்றியே, யுறு
வதையென்பொருட்டொருவிநின்றனை,யிறுதியினவையெலாமிருளின்மூழ்கவே.()

ஓரிறையாகுமீதனக்குயிர்க்கெலாம், பேருகமளப்பிலபெயருமென்பிழை
சீரியவுளங்கொளறேற்றம்பெற்றெழீஇ, யாருயிர்மல்குமாறருளுவாயெனா. (௧௮)

பன்முறைபரவினள்பணிந்துநிற்றலு, மன்மலிகூந்தலுக்கருளியாவிக [யால்.
டொன்மையில்வினைப்பயன்றுய்ப்பநல்குவா,னின்மலனினைந்தனன்கருணைநீர்மை

திருத்தகுதனதருள்சேர்ந்தபல்வகை, யுருத்திரர்தமக்குமுன்னுணர்வுசெய்துழி
நிருத்தனையவ்வழிநினைவுற்றிச்செயல், கருத்திடையாதெனக்கருதிநாடினார். (௨௧)

நாடியவெல்லையினான்முகத்தன்மா, றேடியவண்ணறன்செய்கையீதெனக்
கூடியவோதியாற்குறித்துமுன்னுற, வீடியவுயிர்த்தொகையெழுப்பவெஃகியே. ()

கண்ணுதலெந்தைதன்கழல்களர்ச்சனை, பண்ணுதலுன்னியப்பகவன்றொல்சுட
ர், விண்ணிடையின்மையின்வேலைகாண்கிலா, மண்ணிடையருச்சுனவட்டத்தெய்
தினார். (௨௩)

எங்கணுங்கனையிருளிறப்பவீசலிற், கங்குலேபோன்றதிக்காலைகண்ணுதற்
புங்கவற்கேற்றிடுபூசைசெய்துமென், றங்கவர்யாவருமாய்தன்மேயினார். (௨௪)



Digitized By Roja Muthiah Research Library

முண்டகமலர்கெழுமுக்கண்மேலையோன், கொண்டதோரைம்பெருங்கோலத்
தேவரு, மெண்டகுமூவகையியல்புளாங்கவர், மண்டலவிதியினால்வடிவதாக்கியே.

எண்ணிருதிறத்தவாயியன்றநற்பொரு, ளுண்ணிகழளியொடுமுய்த்துவேதனுங்
கண்ணனும்வழிபடுகங்குற்பூசையைப், பண்ணுதன்முயன்றனர்பரிவின்மேலையோர்

ஆறிருநாலுட * னஞ்செழுத்தையுங், கூறினரெண்ணினர்கோதில்கண்டிகை
நீறொடுபுனைந்திறைநிலைமையுட்கொளா, வேறுளமுறையெலாம்விதியிற்செய்துபின்.

வான்குலாம்வில்லுவமருமென்பாசடை, தேன்குலாமரையிதழ்செய்யசாதிவீ
கான்குலாம்வலம்புரிகடவுட்டொல்பெயர், நான்கியாமத்தினுநவின்றுசாத்தியே. ()

ஏயவான்பயறுபாலென்னவோதனந், தூயநல்லுணவிவைதொகுத்துக்கண்ணுத
லாயகன்முன்னுறநான்கியாமத்து, நேயமொடம்முறைநிவேதித்தேத்தியே. (௨௯)

பின்னருமியற்றிடுபெற்றியாவையுந், தொன்னிலைவிதிகளிற்றொழுமுறுவகை
யுன்னினர்புரிந்துழியுவந்துருத்திரர், முன்னுறவந்தனன்முக்கண்மூர்த்தியே. (௩0)

அவ்விடைமருதினிலைந்துமாறுமா, மெய்வகையுருத்திரர்வேண்டியாங்கருள் [லும்.
செய்வதோர்கண்ணுதற்றேவன்றன்மைபோ, லெவ்வகையுயிரையுமியற்றவுன்ன

எழுந்தனர்மாலயனிந்திராதிய, ரெழுந்தனரெழுந்தனர்யாரும்வானவ
ரெழுந்தனர்முனிவரரேனையோர்களு, மெழுந்தனவுயிர்த்தொகையிருணீங்கிற்றால்

அல்லிடையுறங்கினரறிவுசேர்ந்துழி, மெல்லெனவயர்ந்தகண்விழித்தெழுந்தபோ
லெல்லையிலுயிர்த்தொகையாவுமவ்வழி, யொல்லையிலெழுந்தனவுலகிலெங்கணும். ()

ஓங்கலுங்கரிகளுமுலப்பிலாகமுந், தாங்கினதரணிபாதலத்திற்கூர்மமா
மாங்கதுபோற்றியதண்டந்தன்னிடைத், தீங்கதிர்மதியுடுப்பிறவுஞ்சென்றவே. ௩௪

அன்னதோர்திறமெலாமமலனாணையாற், றன்னிலையமைந்தவத்தொடர்புநோக்
கியே, யிந்நெறியாவையுமீசன்செய்கையே, பின்னிலையென்றனர்பிரமனாதியோர்.

வேறு.

மற்றிவைநிகழும்வேலைமன்னுயிர்க்குணர்ச்சிநல்கி
யுற்றனனெந்தையென்றேயுருத்திரருணர்ந்துதம்முன்
பற்றலரெயின்மூன்றட்டபண்ணவன்வரநேர்சென்று
பொற்றிருவடியில்வீழ்ந்துபோற்றலுமமலன்சொல்வான். (௩௬)

ஈண்டெமையருச்சித்திட்டவியல்பினாலுயிர்கட்கெல்லா
மாண்டதொல்லுணர்ச்சிநல்கியெழுப்பினமற்றுநீவிர்
வேண்டினயாவுங்கேண்மின்விரைந்தெனவமலன்றன்கட்
பூண்டதோரன்புமிக்கோரினையனபுகலலுற்றார். (௩௭)

நிற்றலுமல்லிலெம்போனின்னடியெனையரேனும்
பற்றுடனருச்சித்தோர்க்குப்பழிதவிர்மாகத்திங்க
ளுற்றிருகதிருமொன்றுமொண்பகன்முதனாட்கங்குல்
பெற்றிடுசிறப்புநல்கவேண்டுமாற்பெருமவென்றார். (௩௮)

நீவிர்செய்பூசைதன்னைநெடிதுநாயகிழ்ந்தவாற்று
லாவிகளனைத்துமுய்ந்தவருவினையகன்றுநம்போற்
பூவினிலென்றும்பூசைபுரிந்தவர்க்கெல்லாமுத்தி
மேவரவளித்துமென்றேவியனருள்புரிந்துபோந்தான். (௩௯)

---

* ஆறிருநாலுடன் என்பதற்குச் சோடசகலாப்பிராசாதத்தோடு எனப் பொருள் கொள்க.

Digitized By Roja Muthiah Research Library

எம்பெருந்தலைவனேகவுருத்திரர்யாருமீண்டித்
தம்பதங்குறுகிமுன்போற்சார்ந்தனரனையகாலை
யம்புயனுதிவானோரனைவருங்கயிலைபுக்கு
நம்பனைவணக்கஞ்செய்துதொழுதிவைநவிலலுற்றார். (௪0)

மன்னுயிர்க்குயிராயுற்றவள்ளல்கேள்யாங்களெல்லா
முன்னருளுறாதீராவுணர்வொரீஇச்சடமதாகிப்
பன்னெடுங்காலம்வாளாகிடந்தனம்பவமூழ்குற்றே
மன்னதுதனக்குத்தீர்வொன்றருளெனவண்ணல்சொல்வான். (௪௧)

மங்கியேயுணர்வுசிந்திமறைமுறைபுரியாநீரா
னுங்கள்பால்வருவவெல்லாமுமையிடத்தாகுமன்றே
யிங்குநீரின்றுபற்றியியற்றுநுங்கடன்களென்னப்
பங்கயாசனனுந்தேவர்யாவரும்பணிந்துபோனார். (௪௨)

வேறு.

வாலிதாமயன்முதலினோர்வணங்கினரேக
வேலவார்குழலுமையவள்பிரான்கழலிறைஞ்சி
மேலைநாளுயிர்த்தொகையினுக்கெய்தியவினையென்
பால்வரும்பரிசென்கொலோபணித்தருளென்ன. (௪௩)

முன்புநீயுனைவியந்தனையத்துணைமுனிந்து
நின்பொருட்டினுயிர்கடம்முணர்ச்சியைநீக்கிப்
பின்புணர்த்தினமாதலினன்னவைபெற்ற
மன்பெரும்பவம்யாவையுநின்னிடைவருமால். (௪௪)

முறையதாகுமாற்பின்னுமொன்றுண்டுயிர்முற்றும்
பெறுவதாமுனக்கல்லதுபெரும்பவமவற்றாற்
பொறைபுரிந்திடற்கெளியவோபோற்றுநீயென்றான்
சிறுவிதிக்கருள்பரிசினைமுடிவுறச்செய்வான். (௪௫)

நாதனவ்வுரையியம்பலுமுளநடுநடுங்கிப்
பேதையேன்செயும்பிழைதணித்தென்வயிற்பெருகு
மேதமாற்றவோர்பரிசினையுணர்த்துதியென்னாப்
பாதபங்கயந்தொழுதலுமினையனபகர்வான். (௪௬)

ஆலமேபுரைநிறத்ததாயமிழ்தினுஞ்சுவைத்தாய்
ஞாலமார்தரவொழுகியகாளிந்திநதிபோய்
மூலமெய்யெழுத்தன்னதோர்முதுவலம்புரியின்
கோலமாகிநோற்றிருத்தியாலுலகருள்குறிப்பால். (௪௭)

அந்நதிக்குணீபற்பகலிருந்துழியயன்சே
யென்னநின்றிடுதக்கனென்பவனவணெய்தி
யுன்னைநேர்ந்துசென்றெடுத்தலுங்குழவியினுருவாய்
மன்னியாங்கவன்பன்னிபாற்சிறுமியாய்வளர்தி. (௪௮)

ஐந்தியாண்டெனுமளவைநிற்ககன்றுழியதற்பின்
புந்தியார்வமோடெமைநினைந்தருந்தவம்புரிதி
வந்தியாமதுகாணுறாமணஞ்செய்துமறையா
லிந்தமால்வரையிடையுனைத்தருதுமென்றிசைத்தான். (௪௯)

Digitized By Roja Muthiah Research Library

இசைத்தவாசகமுணர்தலுமிறையுரத்தழுந்தத்
தசைத்தபூண்முலையுமையவளன்னவன்சரணின்
மிசைத்தன்வார்குழறைவரவணங்கியேவிடைபெற்
றசைத்தசிந்தையணீங்கினளுலகுநோற்றதனால். (௫0)

ஆதிதேவனையொருவியேபுடவியிலணுகி
யோதவேலையைமாறுகொள்காளிந்தியுழிப்போய்
வேதமூலநேர்வால்வளையுருக்கொடுயிளங்கி
யேதமில்லதோர்பதுமபீடத்தின்மேலிருந்தாள். (௫௧)

தெளிதருஞ்சிவமந்திரஞ்சிந்தனைசெய்தே
யளவில்பற்பகலன்னைநோற்றிருந்தனளவட்கண்
ளௌமகிழ்ந்தெடுத்தேகுவானெங்குகாளிந்தி
நளிகொள்சிந்துவிற்றக்கனுற்றனவினிநவில்வாம். (௫௨)

உமைகயிலைநீங்குபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௨௪௨.

---

# காளிந்திப்படலம்.

நீளுந்தகைசேர்நிலமாமகடன், கோளுந்தியபூங்குழல்வார்ந்தெனலாய்
நாளுந்தியவீநனுகிக்கரிதாங், காளிந்தியெனுங்கடிமாநதியே. (௧)

முத்துங்கதிரும்முழுமாமணியுந், தொத்துந்தியசெந்துகிரும்மகிலு
நத்தும்பிறவுந்நனிநல்குவபோ, லொத்துந்துவதவ்வொலிநீர்நதியே. (௨)

எண்மேனிமிரும்மிருநீர்பெருகி, விண்மேலுலவாவிரிகின்றதொரீஇ
மண்மேலொலியாமலிகார்தழுவிக், கொண்மூவரவொத்துளதக்குடினை. (௩)

மீனார்விழிமங்கையர்விண்ணுறைவோர், வானார்செலவின்வருநீளிடையிற்
கானுமெனவுங்கடலாமெனவுந், தானுகுவதத்தடமாநதியே. (௪)

பாரின்புடையேபடரந்நதியை, நேரும்படியோர்நெடுநீருளதோ
காருந்தெளியாக்கடலீதெனவே, யாரும்பெருமைத்தஃதாயிடவே. (௫)

துப்பாயினதாய்த்துவர * த்தகைசே, ரப்பாயுவரற்றழிவில்பொருளின்
வைப்பாயருளால்வருமவ்வொலியற், கொப்பாகுவதோவுவராழியதே. (௬)

பாலோங்கியவிற்பணிலம்படர்வா, ணீலோங்கியவம்பொடுநேமியெலா
மேலோங்கியதன்மையின்மெய்த்துயில்கூர், மாலோன்றனையொத்ததுமற்றதுவே.

மீன்பட்டமையால்விரியுந்தொழுதிக், கான்பட்டிடவுங்கழுநீருறலாற்
றேன்பட்டிடவுந்திரைபட்டிடவும், வான்பட்டிடுமோசைமலிந்ததுவே. (௮)

ஊன்பெற்றலகில்லுயிர்பெற்றகிலம், வான்பெற்றவள்வால்வளையாயுறவெங்
கோன்பெற்றிடுமெக்கொடிமெய்யுருவந், தான்பெற்றதையொத்ததுமாநதியே. (௯)

---

* துவர - முற்ற.

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

கஞ்சனக்கொலைசெய்கூர்ங்கணங்கையர்குடையக்கூந்தல்
விஞ்சியநானச்சேறும்விரைகெழுசாந்துமார்ந்து
தஞ்சனக்கொண்டநீலத்தன்மைகுன்றாதுமேலோ
ரஞ்சனப்போர்வைபோர்த்தாலன்னதாலனையநீத்தம். (க0)

இவ்வுலகத்தோருள்ளத்தெய்தியவிருளுமன்னோர்
வெவ்வினையிருளுந்தன்பால்வீழ்த்தியேவிளங்கியேக
வவ்விருளனைத்துந்தான்பெற்றணைந்தெனவங்கக்காரசாய்ச்
செவ்விதினெழுகிற்றம்மாசீர்திகழ்யமுனையாறே. (கக)

எத்திறத்தோருமஞ்சவெழுந்துமால்வரையிற்சார்ந்து
மெய்த்தலைபலவுநீடிவிரிகதிர்மணிகள்கான்றிட்
டொத்திடுகால்கண்மேவியொலிகெழுசெலவிற்றாகி
மைத்துறுபுனற்காளிந்திவாசுகிநிகர்த்ததன்றே. (கஉ)

நிலமகளுரோமவல்லிநிலையெனநகிலினுப்ப
ணிலகியமணித்தாரென்னவிருங்கடற்கேள்வன்வெஃகுங்
குலமகளென்னநீலக்கோலவாரமுதமென்ன
வுலவியயமுனையெம்மாலுரைக்கலாந்தகைமைத்தாமோ. (கங)

இன்னபல்வகைத்தாய்நீடுமிரும்புனல்யமுனையின்கண்
மன்னியநெறிசேர்மாசிமகப்புனலாடவேண்டி
யந்நிலத்தவர்கள்யாருமடைந்தனருலகமெல்லாந்
தன்னிகரின்றியாளுந்தக்கனித்தன்மைதேர்ந்தான். (கச)

மெய்ப்பயனெய்துகின்றவினைப்படுமூழின்பாலா
லப்பெருநதியிலஞ்ஞான்றுடலைவெஃகித்தக்கன்
மைப்படுகூர்ங்கண்வேதவல்லியைமகளிரோடு
மொப்பில்பல்சனத்தினோடுமொல்லைமுன்செல்லவுய்த்தான். (கரு)

மாற்றமர்செம்பொற்கோயில்வயப்புலித்தவிசின்மீதாய்
வீற்றிருந்தருடனீங்கிவிரிஞ்சனுமுனிவர்யாரு
மேற்றதோராசிகூறவிமையவர்கணமாயுள்ளோர்
போற்றிடயமுனையென்னும்புனலியாறதன்கட்போனான். (கசு)

போனதொர்தக்கனென்போன்புரைதவிர்புனற்காளிந்தித்
தூநதியிடைபோய்மூழ்கித்துண்ணெனவரலுமோர்பாற்
றேனிமிர்கமலமொன்றிற்சிவனிடத்திருந்ததெய்வ
வானிமிர்பணிலம்வைகமற்றவனதுகண்ணுற்றான். (கஎ)

வேறு.

கண்ணுறுவானனிமகிழ்ந்தேகையினையுய்த்தெடுத்திடுங்காற்காமர்பெற்ற
பெண்ணுருவத்தொருகுழவியாதலும்விம்மிதப்பட்டுப்பிறைதாழ்வேணி
யண்ணலருள்புரிவரத்தாற்கவுரியேநம்புதல்வியானாளென்று
வுண்ணிகழ்பேருணர்ச்சியினாற்காணுற்றுத்தேவர்குழாமொருவிப்போனான். (கஅ)

அந்நதியின்பான்முன்னரவன்பணியாற்சசிமுதலாமணங்கினோர்க
டுன்னினராய்வாழ்த்தெடுப்பத்துவன்றுபெருங்கிளைஞரொடுந்தூநீராடி
மன்னுமகன்கரையணுகிமறையிசைகேட்டமர்வேதவல்லியென்னும்
பன்னிதனையெய்தியவள்கரத்தளித்தானுலகீன்றபாவைதன்னை. (ககூ)

Digitized By Roja Muthiah Research Library

ஏந்துதனிக்குழவியினைத்தழீஇக்கொண்டுமகிழ்ந்துகுயத்திழிபாலார்த்திக்
காந்தண்மலர்புரைசெங்கைச்சூர்மகளிர்போற்றிசைப்பக்கடிதினேகி
வாய்ந்ததனதிருக்கையிடைப்புக்கனளாற்றக்கனங்கண்வானோரோடும்
போந்துமணிக்கோயில்புக்குத்தொன்முறைபோலரசியற்கைபுரிந்திருந்தான். (உ0)

காளிந்திப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் உசுஉ.

## உமைதவம்புரிபடலம்.

கொண்டுதனதில்லிற்குறுகியபின்வேதவல்லி
மண்டுபெருங்காதலொடுமகண்மையாவளர்த்தனளா
லண்டமளவில்லனவுமலகிலாவுயிர்த்தொகையும்
பண்டுதனதுந்தியினுற்படைத்தருளும்பராபரையை. (க)

வளருமதிக்குழவியெனமாநிலமேற்றவழ்தலொடுந்
தளருநடைபயில்கின்றதாறுமுடன்றப்பியபின்
முளையெயிறுள்ளெழுபோதமுளைத்ததெனத்தோன்றுதலு
மளவிலுயிர்முழுதீன்றானைந்தாண்டுநிரம்பினளால். (உ)

ஆறனவாண்டெல்லையணைதலுமம்பிகைதனக்கோர்
கூறனபிரான்றன்னைக்கோடன்முறைகுணித்தனளாய்
மாறாதுநோற்பலெனமனங்கொண்டியாய்தனக்கும்
பேறானதக்கனெனும்பெருந்தவற்குமிஃதுரைத்தாள். (ஙு)

கூறுவதொன்றுமக்குண்டாற்குரவீர்காளிதுகேண்மி
னூறுபுனைசெஞ்சடிலத்தண்ணலுக்கேயுரித்தாகும்
பேறுடையேனவன்வதுவைபெறுவதற்குநோற்பலியான்
வேறொருசார்கடிமாடம்விதித்தென்னைவிடுத்திரென. (ச)

நன்றென்றுமகிழ்சிறந்துநல்லாயுந்தந்தையுமாய்ப்
பொன்றுஞ்சுதமதிருக்கைப்பொருவினகர்ப்புறத்தொருசா
ரன்றங்கோர்கடிமாடமணிசிறக்கப்புனைவித்துச்
சென்றங்கட்டவமியற்றச்சேயிழையைவிடுக்கின்றார். (ரு)

முச்சகமுந்தருகின்றமுதல்விதனைத்தம்மகளென்
றிச்சைகொடுநனிபோற்றியிருவருநாரொடுநோக்கி
யுச்சியினைப்பன்முறைமோந்துயிர்த்தம்மோவுன்னுளத்தி
னச்சியநோன்பியற்றுகெனநாரியரோடேகுவித்தார். (சு)

மாதவர்பால்விடைபெற்றுவல்விரைவுற்றேகுதலும்
வேதவல்லியதுகாணுமெய்க்கணவன்றனைநோக்கிப்
பேதையிவள்சிவனையுணர்பெற்றிமையென்மொழிகென்ன
வீதனையணிலைமையெனயாவுமெடுத்தியம்புகின்றான். (எ)

பொங்குபுனற்றடத்திடையான்புரிகின்றதவங்காணூஉச்
சங்கரனங்கெய்திடலுந்தாழ்வில்வரம்பலகொண்டுன்
பங்கினளென்மகளாகப்பண்ணவநீயென்மருகாய்
மங்கலநல்வதுவையுறமறையவனுய்வருகென்றேன். (அ)

அற்றாகநின்பாலென்றருள்செய்தானம்முறையே
கற்றாவினேறுயர்த்தகண்ணுதலோன்முழுதுலகும்
பெற்றாளையுமையென்னும்பெருநதியிலுய்ப்பாம்பா
லுற்றாண்மற்றெஞ்ஞான்றுமுணர்வொடுவைகினளால். (௯)

மாதவமோர்சிலவைகல்பயின்றுமதிக்கோடுபுனை
யாதிதனக்கன்பினளாயருந்துணைவியாகின்றாள்
பேதையெனநினையற்கபெருமாட்டிதனையென்னக்
காதலிவிம்மிதமெய்திக்கரையிலாமகிழ்சிறந்தாள். (௧0)

இந்நிலைசேர்முதுகுரவரேவலினாற்சிலதியராங்
கன்னியர்கள்சூழ்போதக்கடிமாடம்போந்துமையாள்
சென்னிநதிபுனைந்தபிரான்றிருநாமமுள்ளுறுத்தி
நன்னியமந்தலைநின்றுநாளுநனிநோற்கின்றாள். (௧௧)

வேறு.

ஈண்டுறுமடவார்சூழவிம்முறையிருத்தலோடு
மாண்டுபன்னிரண்டுசென்றவம்பிகைக்கனையகாலை
வேண்டியவேண்டியாங்குவிரதருக்குதவும்வண்மை
பூண்டிடுபரமனன்னாள்புரிந்திடுதவத்தைக்கண்டான். (௧௨)

கண்டுமற்றவளையாளக்கருதியேகயிலையென்னும்
விண்டினையிகந்துமுந்நூல்வியன்கிழி * தருப்பையார்த்த
தண்டுகைக்கொண்டுவேதத்தலைநெறியொழுக்கம் o பூண்ட
மூண்டவேதியனிற்றோன்றிமுக்கணெம்பெருமான்வந்தான். (௧௩)

தொக்குலாஞ்சூலத்தண்ணெறல்புவியுய்யவேதச்
செக்கர்நூபுரத்தாள்பின்னுஞ்சேப்புறமண்மேற்போந்து
தக்கமாபுரத்தினண்ணிச்சங்கரியென்னுந்தொல்பேர்
மைக்கணாணேற்குந்தெய்வமல்லன்மாளிகையிற்புக்கான். (௧௪)

அன்னைநோற்கின்றகோட்டத்தணுகியேயளப்பின்மாதர்
முன்னுறுகாவல்போற்றுமுதற்பெருங்கடையிற்சாரக்
கன்னியரெவரும்வந்துகழலிணைபணிதலோடு
மென்னிலைதலைவிக்கம்மவியம்புகென்றிசைத்துநின்றான். (௧௫)

நிற்றலுங்கடைகாக்கின்றநேரிழைமகளிர்சில்லோர்
பொற்றொடியுமைபாலெய்திப்பொன்னடிவணங்கியீண்டோர்
நற்றவமறையோனின்பானண்ணுவான்விடுத்தானென்ன
மற்றவன்றன்னைமுன்கூய்வல்லைநீர்தம்மினென்றாள். (௧௬)

தம்மினீரென்றலோடுந்தாழ்ந்தனர்விடைபெற்றேகி
யம்மினேர்கின்றநாப்பணரிவையர்கடைமுன்னேகி
வம்மினோவடிகளெம்மோய்வரவருள்புரிந்தாளென்னச்
செம்மலும்விரைவிற்சென்றுதேவிதன்னிருக்கைசேர்ந்தான். (௧௭)

தேவர்கடேவனங்கோர்சீர்கெழுமறையோன்போலாய்
மேவியகாலையம்மைவிரைந்தெதிரேகிமற்றென்
காவலர்தம்பாலன்பரிவரெனக்கருதியன்னான்
பூவடிவணங்கிவேண்டும்பூசனைபுரிந்துநின்றாள். (௧௮)

---

* கிழி - கோவணம்.   o வேதத்தலைநெறியொழுக்கம் - பிரமசரியம்.

Digitized By Roja Muthiah Research Library

சேயமொடருச்சித்தேத்தினின்றவடனினைநீல
ஞாயிறுநிகர்த்தமேனிநகைமதிமுகத்தாயீண்டியா
மேயினதொன்றைவெஃகிவிரைந்தருள்புரிதியென்னி
ஞயதுபுகல்வமென்னவம்மையிங்கிதனைச்சொல்வாள். (கக)

எனக்கிசைகின்றதொன்றையிசைத்தியேயென்னினின்னே
நினக்கதுகூடுமிங்ஙனினைத்ததென்மொழிதியென்ன
வுனைக்கடிமணத்தினெய்தவுற்றனனதுவேநீயென்
றனக்கருள்புரியுமாறுதடுத்தெதிர்மொழியலென்றான். (உ0)

வேறு.

அத்தனீதுரைத்தலோடுமம்மையங்கையாற்செவி
பொத்திவெய்தெனக்கனன்றுபுந்திநொந்துயிர்த்துநீ
யித்திறம்புகன்றதென்னையென்னையாளுகின்றதோர்
நித்தன்வந்துவதுவைசெய்யநீடவஞ்செய்தேனியான். (உக)

என்னலோடுமினையனென்றியாருமென்றுமிறையுமே
முன்னொணாதநின்றவாதிமுதல்வனின்னைவதுவையான்
மன்னுகின்றதரிதுபோதுமாதவங்களாற்றியே
கன்னிநீவருந்தலென்றுகழறமாதுபுகலுவாள். (உஉ)

பரமனேவிரும்பிவந்துபாரின்மாமணஞ்செய
வரியமாதவங்கள்செய்வலன்னதற்குமுன்னவன்
வருகிலாததவிர்வனென்னின்வலிதினுவிநீப்பன்யான்
சரதமீதுபித்தனேசழக்குரைத்திருத்திநீ. (உ௩)

போதிபோதியென்றுதாஞெர்புடையினேகவுவகையாய்
மாதுநின்றனன்புமுள்ளவன்மைதானுநன்றெனு
வாதிதேவனேனையோர்களறிவுறாதவகையவள்
காதனீடுதனதுதொல்கவின்கொண்மேனிகாட்டினன். (உச)

ஆதிதன்றெருவுருவுகாட்டவமலைகண்டுமெய்பனித்
தேதிலாரெனுநினைந்திகழ்ந்தனன்னெனுவவன்
பாதபங்கயங்களிற்பணிந்துபோற்றிசெய்தியான்
பேதையேனுணர்ந்திலேன்பிரான்மறைந்துவந்ததே. (உரு)

உன்னருட்கணெய்துமேலுணர்ச்சியெய்திநிற்பன்யான்
பின்னொர்பெற்றியில்லையாற்பிழைத்ததுண்டுதணிதிநீ
யென்னுநற்றவத்திதன்னையினிதினோர்ந்தைகண்ணுநீஇ
நின்னியற்கைநன்றுநன்றுநீதுளங்கலென்றனன். (உசு)

என்றநாதனைப்பினுமிறைஞ்சியெம்பிராட்டிபா
னின்றமாதரைத்தனுதநேத்திரத்தினேக்கலா
ளொன்றுமுன்னல்செய்திலாளுலப்பிலெந்தைதொல்புகழ்
நன்றுபோற்றெடுத்துநிற்பநாட்டநீருகுத்தரோ. (உஎ)

கண்டுபோங்கராயமாதர்கன்னியெம்மைநோக்கலாள்
மண்டுகாதலந்தனுளன்மாயம்வல்லனேகொலோ
பண்டுசேர்ந்துளாரையுற்றபான்மைபோலுமேலியா
மூண்டுதேருமாறதென்றுளத்திலையமெய்தினர். (உஅ)

Digitized By Roja Muthiah Research Library

சிலதியர்க்குள்விரைவிரைந்துசிலவர்சென்றுதக்கனென்
றுலகுரைக்குமொருவன்வைகுமுறையுணண்ணியுன்மக
ணிலைமையீதுகேளெனுநிகழ்ந்தயாவுமுறையினால்
வலிதுகூறமற்றவன்மனத்திலோர்தலுற்றனன். (௨௯)

போதநீடுபுந்தியாற்புலப்படத்தெரிந்துழி
யாதியந்தமின்றிநின்றவண்ணல்வந்ததாகலு
மேதிலாமகிழ்ச்சிபெற்றெழுந்துதுள்ளியான்பெறு
மாதையங்கவற்களிப்பன்வதுவையாற்றியென்றனன். (௩0)

உமைதவம்புரிபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௨௯௨.

---

# திருமணப்படலம்.

தொல்லையில்வதுவையந்தொழினடாத்திட, வொல்லுவதெற்றையென்றுளங்கொண்டாய்வுழி, நல்லனயாவுமந்நாளினண்ணலு, மெல்லையிலுவகைமிக்கேம்பலெய்தினான். (௧)

அண்ணலுக்கிப்பகலணங்கையீவனென், றுண்ணிகழார்வமோடுளத்திற்றூக்கியே, விண்ணவர்யாவரும்விரைந்துசெல்லிய, துண்ணெனவொற்றரைத்தூண்டினாரோ. (௨)

தன்னகரணிபெறச்சமைப்பித்தாங்கதற், பின்னுறமுன்னினும்பெரிதுமேர்தக
மன்னுறுகோயிலைவதுவைக்கேற்றிடப்,பொன்னகர்நாணுறப்புனைவித்தானரோ.()

கடிவினைபுரிதரக்காசின்றூக்கிய, படியறுதிருநகர்பையநீங்கியே
கொடியுறழ்மெல்லிடைக்குமரிபால்வரு, மடிகளையணுகினனடிகள்போற்றியே.(௪)

அணுகினனண்ணனீயணைந்துமற்றிவண், மணநயவேட்கையான்மாதுநோற்றன
ணணுகுதியடியனேனகரின்பாலென, நுணுகியுகேள்வியானுவன்றுவேண்டவே.௫

இறையவனன்றெனவெழுந்துசென்றோராய்,நறைமலர்செறிகுழனங்கையாளொடு
மறல்கெழுமனத்தினன்மனையுற்றனரோ, வறைதருநூபுரத்தடிகள்சேப்பவே.(௬)

பூந்திருநிலவியபொருவில்கோயின்முன், காந்தியொடேகலுங்கடவுண்முன்னரே
வாய்ந்ததொரெண்வகைமங்கலங்களு, மேந்தினரேந்திழைமார்களெய்தினர். (௭)

தையலர்மங்கலத்தன்மைநோக்கியே, வையகமுதவியமங்கைதன்னுடை
னையனுமுறையுளினடைந்துதாளொரு, செய்யபொற்பீடமேற்சிறப்பின்வைகினான்.

அன்னதுகாலையிலாற்றுநோன்புடைக், கன்னியைமறைக்கொடிகண்டுபுல்லியே
தன்னுறுமந்திரந்தந்துமற்றவள், பின்னலைமென்மெலப்பிணிப்புநீக்கினாள். (௯)

சிற்பரையோதியின்செறிவையாய்ந்தபின், பொற்புறுநானநெய்பூசிப்பூந்துவர்
நற்பொடிதீற்றியேநவையில்கங்கைநீர், பற்பலகுடங்கரின்பாலுய்த்தாட்டினாள்.௧0

ஆட்டினண்மஞ்சனமணியபூந்தொடை, சூட்டினள்பொற்கலைசூழ்ந்துபல்கலன்
பூட்டினளெம்பிரான்புடையிலுய்த்தன, ளீட்டுறுமுயிர்த்தொகையீன்றவாய்தலை.



Digitized By Roja Muthiah Research Library

மணவணிமுற்றுறுமாதுபோந்ததன், கணவனதொருபுடைகலந்தகாலையிற்
பணைமுதலாகியபல்லியங்களு, மிணையறவியம்பினரியாருமேத்தவே. (கஉ)

தூதவருரைகொளீஇத்துன்னென்றேகியே, மாதவன்முதலியவானுளோரெலாம்
போதிலைவளைதருபொறிவண்டரமென, வாதியையடைந்தனரடிபணிந்துளார்.கங

வீழ்குறுமிழுதெனும்வெய்யநோன்குரற், காழ்கிளர்திவவுடைக்கடிகொள்யாழினை
யூழ்கிளர்கின்னரருவணரேந்துபு, கேழ்கிளர்மங்கலகீதம்பாடினர். (கச)

கானுறுபஃறலைக்காவுகான்றிடு, தேனுறுவிரைமலரடிகள்சிந்துபு
வானவர்மகளிர்கள்வணங்கிவாழ்த்துரை, யான்வைபுகன்றனரமலைபாங்கரில். கரு

எல்லையதாசனுமிருந்தக்கனுங், கொல்லையின்மறைமொழியுரைத்துத்தன்மனை
வல்லிபொற்சிரகநீர்மரபின்வாக்குற, மெல்லெனவரனடிவிளக்கினனரோ. (கசு)

விளக்கியபின்றையில்விரைகொள்வீமுதற், கொளப்படுபரிசெலாங்கொணர்ந்து
மற்றவற், குளப்படுபூசனையுதவிமாதினை, யளித்திடவுன்னினனமரர்போற்றவே.()

சிற்கனவடிவினன்செங்கையுள்ளுமை, நற்கரநல்குபுநன்றுபோற்றுதி
நிற்கிவடன்னையானேர்ந்தனன்னெனுப், பொற்கரகந்தருபுனலொடீந்தனன்.(கஅ)

மூர்த்தமங்கதனிடைமுதல்வனம்பிகை, சீர்த்திடுமணவணிதெரிந்துகைதொழூஉ
நீர்த்தொகைகதிரொடுநிலவுகண்டுழி, யார்த்தெனவழுத்தினரமரர்யாவரும். (ககூ)

மாடுறுதிசைமுகன்மணஞ்செய்வேள்வியிற், கூடுறுகலப்பைகள்கொணர்ந்து நூ
ன்முறை, நேடினன்சடங்கெலாநிரப்பமான்முத, லாடவரிசைத்தனரமலன்வாய்
மையே. (உ0)

அன்னுழியுருவமுமருவுமாவியு, முன்னுறுமுணர்வுமாயுலகம்யாவிற்கு [ல்.
நன்னயம்புணர்த்தியோனுணுநாயகன், றன்னுருவொளித்தனனருளின்றன்மையா

மறைந்தனனிருத்தலுமகிணற்காண்கிலா, ளறந்தனைவளர்க்குமெம்மன்னைநோற்
றுமுன், பெறும்பெருநிதியினைப்பிழைத்துளோரெனத், துறந்தனளுவகையைத்து
ளங்கிமாழ்கியே. (உஉ)

பொருக்கெனவெழுந்தனள்பூவின்மீமிசைத், திருக்கிளர்திருமுதற்றெரிவைமாதர்க
ணெருக்குறுசூழல்போய்நிறங்கொடீமுகத், தருக்கியபொன்னெனவுருகிவிம்மினள்

உயிர்த்தனள்கலுழ்ந்தனளுணர்வுமாழ்கியே, யயர்த்தனள்புலர்ந்தனளலமந்தங்
கமும், வியர்த்தனள்வெதும்பினள்விமலன்கோலமே, மயிர்த்தொகைபொடிப்புற
மனங்கொண்டுன்னுவாள். (உச)

புரந்தரன்மாலயன்புலவர்யாவரு, நிரந்திடுமவையிடைநிறுக்கும்வேள்விவா [மால்.
யிருந்தனன்மாயையாலிறைவன்றுன்னெனக், கரந்தனனுதலிற்கள்வன்போலு

எய்தியெற்கொண்டதோரிறைவன்றன்னையான், கைதவனேயெனக்கருதலாகு
மோ, மெய்தளர்பான்மையின்வினையினேனிவட், செய்தவஞ்சிறிதெனத்தேற்றலி
ன்றியே. (உசு)

வேறு.

என்றென்றுன்னியுயிர்த்திரங்குமிறைவிசெய்கையெதிர்நோக்கி
மன்றனுறுங்குழல்வேதவல்லிபுல்லிமனந்தளரே
லுன்றன்கணவற்பெறும்வாயிறவமேயினுமுனுற்றுகென
நின்றதிருவுநாமகளும்பிறருமினையநிகழ்த்தினரால். (உஎ)

Digitized By Roja Muthiah Research Library

அன்னைவாழியிதுகேண்மோவகிலமுழுதுமளித்தனையா
லென்னபொருளுநின்னுருவேயாண்டுநீங்காநின்கணவன்
றன்னைமறைக்குமறையுளதோதவத்தையளிப்பாணினைந்தனையோ
வுன்னலரிதாநுமதாடன்முழுதும்யாரேயுணர்கிற்பார். (௨௮)

வாக்கின்மனத்திற்றொடர்வருநின்மகிணன்றனையுமுன்றனையு
நோக்கமுற்றோந்தஞ்சமெனநுவறல்செய்யாவினையாவும்
போக்கலுற்றோந்தோற்றமுறும்புரையுந்தீர்ந்தோம்போதமனந்
தேக்கலுற்றோமுய்ந்துமியாஞ்செய்யுந்தவமுஞ்சிறிதன்றே. (௨௯)

என்னுவியம்பிவாழ்த்தெடுப்பவிறைவியவர்க்கண்டினிதருள்செய்
தன்னார்பொய்தலொருவிப்போயருமாதவமேபுரிவாளாய்
முன்னாமுன்னைக்கடிமாடமுயன்றுபோந்தாளிவ்வனைத்து
நன்னாரணனேமுதலானோர்நோக்கிநனிவிம்மிதரானார். (௩0)

எங்குற்றனன்கொலிறையென்பாரிஃதோர்மாயமெனவுரைப்பார்
மங்கைக்கொளித்ததென்னென்பார்வாரி * காண்டுமேலென்பா
ரங்கித்தகையபலபலசொற்றலமந்தேங்கியதிசயித்துக்
கங்குற்போதின்மாசூர்ந்தகதிர்போன்மாழ்கிக்கவலுற்றார். (௩௧)

நோக்குற்றனையபான்மைதனைநொய்திற்றக்கனனிகனன்று
தீக்கட்கறங்கவெய்துயிர்த்துச்செம்பொற்கடகக்கைபுடைத்து
மூக்கிற்கரந்தொட்டகம்புழுங்கமுறுவல்செய்துமுடிதுளக்கி
யாக்கத்தொடியாம்புரிவதுவையாற்றவழ்கிதாமென்றான். (௩௨)

வரந்தானுதவும்பெற்றியினான்மற்றென்மகடூஉவயின்வாரா
விரந்தானதனையான்வினவியியல்பின்வதுவைமுறைநாடி
நிரந்தார்கின்றசுரர்காணநெறியானேர்ந்தேனேர்ந்ததற்பின்
கரந்தான்யாருமானமுறநவையொன்றென்பாற்கண்டானோ. (௩௩)

புனையுந்தொன்மைக்கடிவினையைப்புன்மையாக்கியூறுபுணர்த்
தெனையும்பழியின்மூழ்குவித்தேயிறையுமெண்ணாதொளித்தானே
யனையுந்தாதையுந்தமருமாருமின்றியகன்பொதுவே
மனையென்றாடுமொருபித்தன்மறையோனாகின்மயல்போமோ. (௩௪)

ஆயிற்றீதேயவனியற்கையறிந்தேனிந்நாள்யானென்று
தீயுற்றெனவேயுளம்வெதும்பித்திருமான்முதலாந்தேவர்தமைப்
போயுற்றிடுநும்புரத்தென்றுபோகவிடுத்துப்புனிதன்செய்
மாயத்தினையேயுன்னியுன்னிவதிந்தான்செற்றம்பொதிந்தானே. (௩௫)

பொன்னார்மேனிக்கவுரிமுன்னைப்பொலன்மாளிகையிற்போந்துலப்பின்
மின்னார்செறிந்தபண்ணையுடன்மேவியங்கண்வீற்றிருந்து
பன்னாளீசன்றனையெய்தப்பரிந்துநோற்கப்பண்ணவனோர்
நன்னாளதனிற்றாபதன்போனடந்தானவடனிடந்தானே. (௩௬)

நலனேந்தியவெண்டலைக்கலனுநறியகளபநீற்றணியுங்
கலனேந்தியகண்டிகைதொடுத்தகவின்சேர்வடமுங்கடிப்பிணையு
நிலனேந்தியதாளிடைமிழற்றுநீடுமறையின்பரியகமும்
வலனேந்தியசூலமும்பின்னல்வனப்புங்காட்டிவந்தனனே. (௩௭)

---

* வாரி - வரவுகட்காய ஏது.

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

வந்துமைமுற்படவந்தவனைக்கண், டெந்தைபிராற்கினியாரிவரென்னுச்
சிந்தனைசெய்தெதிர்சென்றுகைகூப்பி, யந்தரிபோற்றினளன்புறுநீரால். (௩அ)

பற்றொடுசென்றுபராய்த்தொழுமெல்லைப், பெற்றமதன்மிசைபெண்ணிடமன்றி
மற்றுளதொல்வடிவத்தொடுநித்த, னுற்றனனவ்விடையொண்டொடிகாண. (௩௯)

பார்ப்பதியாகியபாவைநுதற்க, ணுற்புயனென்வயினண்ணினனென்று
வேற்புறுசிந்தைகொடின்னலிகந்தே, மேற்படுமோகையின்வீற்றினளானள். (௪0)

பன்முறைவீழ்ந்துபணிந்துபராவி, யென்முனமுந்தையிகந்தனையின்றிப் [தாள்.
புன்மையைநீக்குதிபோந்தனைகொல்லோ, சின்மயவென்றெதிர்சென்றுரைசெய்

அம்முறைசெப்புமணங்குதனைக்கூய், மைம்மலிகண்டன்மலர்க்கரமோச்சித்
தெம்முனைசாடுறுசீர்விடைமேற்கொண், டிம்மெனவேதனிடத்தினில்வைத்தான்·

நீல்விடமேயினனேரிழையோடும், பால்விடையூர்ந்துபடர்ந்தனன்வெள்ளி
மால்வரையேகினன்மற்றவள்பாங்கர், வேல்விழிமாதர்விரைந்ததுகண்டார். (௪௩)

இக்கெனவுட்கியிரங்கினரேகித், தக்கனிருந்திடுசங்கமுனுகிச்
செக்கரெனத்திகழ்செஞ்சடையண்ணல், புக்கனனுலொருபுண்ணியனேபோல். ()

கண்டனனின்மகள்கைதவமோரா, வண்டினள்சேர்தலுமாயவன்வல்லே
பண்டையுருக்கொடுபொற்படவன்னுட், கொண்டுசெல்வானிதுகூறுவதென்றார். ()

பாங்கியரின்னபகர்ந்தனகேளாத், தீங்கனன்மீமிசைதீயதொர்தூநெய்
யாங்குபெய்தென்னவளப்பிலசெற்றந், தாங்கியுயிர்ப்பொடுதக்கனிருந்தான். (௪௬)

அக்கணம்வானவராயினரெல்லாந், தொக்கனர்வந்துதொழுங்கடனுற்றிப்
பக்கமதாடுபராவினர்வைகத், தக்கனவர்க்கிவைசாற்றுதலுற்றான். (௪எ)

என்புகல்வேனினியென்மகடன்னை, யன்புறவேட்டருளாலமிடற்றோன்
மன்புனையுங்கடிமன்றலியற்று, முன்புகரந்தனன்முன்னரிதாகி. (௪அ)

அற்றலதின்றுமெனுடவள்பாங்கிற், கற்றைமுடிக்கொள்கபாலியெனச்சென்
றுற்றனனென்முனுறுமலொளித்தான், பற்றினனன்னவளைப்படர்கின்றான். (௪௯)

அன்னையுமத்தனுமார்வமொடீய, மன்னியகேளிர்மகிழ்ந்தனர்வாழ்த்தப்
பின்னர்மகட்கொடுபேர்ந்திலனீன்றோர், தன்னைமறைத்திதுசெய்வதுசால்போ. ()

இங்கிதுபோல்வனயாவர்செய்கிற்பார், சங்கரனேலிதுதான்செயலாமோ
நங்கள்குலத்தைநவைக்கணுறுத்தா, னங்கதுமன்றியென்னுணையுநீத்தான். (௫௧)

வேறு.

இரந்தனன்சிவனெனுமேதமெங்கணு, நிரந்ததுமற்றதுநிற்கவிவ்விடை
கரந்தனனென்பதோருரையுங்காசினி, பரந்ததுவேறுமோர்பழியுண்டாயதே. ௫உ

பண்டொருபாவையைப்பரிந்துமன்றல்வா, யொண்டொடிச்செங்கையினுதக மேவுறக், கொண்டிலனென்பதுங்கொள்ளுநீரரைக், கண்டிலனென்பதுங்காட்டினனரோ. (௫௩)

Digitized By Roja Muthiah Research Library

என்றிவைபற்பலவிசைத்துச்செய்நலங், கொன்றிடுசிறுவிதிகுழூமித்தன்புடைத், துன்றியசுரர்தமைத்தொலைத்தத்தமூர், சென்றிடவேவினன்செயிர்த்துவைகினான். (ருச)

கறுவுகொணெஞ்சொடுகயவனன்றுதொட், டிறைவனைநினைக்கிலனெள்ளுநீர்மையா, னுறுதலுஞ்சிலபகலுயங்கியிச்செய, லறிதருமயன்முதலமரர்தேர்குவார்.

திருமணப்படலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௩சஎ.

## தக்கன்கயிலைசெல்படலம்.

மெய்ம்மாதவத்தாற்றிருத்தக்குவிளங்குதக்க
னெம்மான்றனையெண்ணலனுவியிழப்பன்வல்லே
யம்மாவியாமுமவனேவலையாற்றுகின்றா
நம்மாருயிர்க்குமிறுவாய்நணுகுற்றபோலும். (க)

ஆனாலினித்தக்கனையெண்ணலமாயினன்னான்
மேனாளரனாற்பெறுகின்றதொர்மேன்மைதன்னான்
மானாதசீற்றங்கொடுநம்பதமாற்றுமென்னா
வோநாமினிச்செய்பரிசென்றிவையோர்ந்துசொல்வார். (உ)

ஈசன்கயிலைதனிற்றக்கனெழுந்துசெல்ல
மாசொன்றுசிந்தைகொளத்தேற்றினம்வல்லையென்னி
னேசங்கொடுபோயவற்காணினிலைக்குமிச்சீர்
நாசம்படலுமொழிவாகுநமக்குமென்றார். (௩)

வேதாமுதலோரிதுதன்னைவிதியினாடித்
தீதானதக்கன்றனைமேவிநின்செய்தவத்தின்
மாதானவனைச்சிவனேமறத்திபோலா
மேதாமுனதுநிலைக்கம்மவினையதொன்றே. (ச)

குற்றந்தெரிதலஃதேகுணனென்றுகொள்ளிற்
சுற்றம்மொருவற்கெவனுண்டுதுறந்துநீங்கிச்
செற்றஞ்செய்கண்ணுமகிழ்வுண்டிதுசிந்தியாயேன்
மற்றுன்னைவந்தோர்வசைசூழ்தரும்வள்ளலென்றார். (ரு)

முன்னின்றவர்கூறியபான்மைமுறையினாடி
யென்னிங்கியான்செய்கடனென்னவிறைவியோடும்
பொன்னஞ்சடையோன்றனைக்கண்டனைபோதியென்ன
மன்னுங்கயிலைவரையேகமனம்வலித்தான். (சு)

கானார்கமலத்தயனிந்திரன்காமர்பூத்த
வானாடர்யாருமவனுற்றிடும்வண்ணநல்கி
யானாதமுன்பிற்றுணையோரொடகன்றுதக்கன்
போனானமலனமர்வெள்ளியம்பொற்றைபுக்கான். (எ)

வெள்ளிச்சயிலந்தனிலெய்திவிமலன்மேய
நள்ளுற்றசெம்பொற்பெருங்கோயிலைநண்ணிநந்தி
வள்ளற்குறையுளெனுங்கோபுரவாயில்சாரத்
தள்ளற்றகாவன்முறைப்பூதர்தடுத்தல்செய்தார். (அ)

Digitized By Roja Muthiah Research Library

கடிக்கொண்டபூதர்நிரைதன்னைக்கனன்றியான்முன்
கொடுக்கின்றகாதன்மடமான்றன்கொழுநனோடு
மடுக்கின்றபான்மையிவனோடியறிவனீவிர்
தடுக்கின்றதென்கொலெனக்கூறினன்றக்கனென்போன். (௯)

அவ்வாசகஞ்சொல்கொடியோனையழன்றுநோக்கி
மெய்வாயில்போற்றும்பெருஞ்சாரதர்மேலைஞான்று
மைவாழுங்கண்டன்றனையெள்ளினைமற்றுநீயீண்
டெவ்வாறணைகின்றனைசாலவிழுதைநீராய். (௧0)

முந்துற்றதொல்லையெயின்மூன்றுறைமொய்ம்பினோர்க
ணந்துற்றவையந்தனைவானைநலிவரேனு
மெந்தைக்குநல்லரவரன்பிலிறையுநின்பால்
வந்துற்றதில்லையெவனோவினிவாழ்திமன்னோ. (௧௧)

இறக்கின்றவேலையிமையோர்கடமின்னனீக்கிக்
கறுக்கின்றநீலமிடற்றெந்தைகருணைசெய்த
சிறக்கின்றசெல்வமிசைந்தன்னவன்செய்கையாவு
மறக்கின்றனைநீயெவன்செய்குதிமாயையுற்றாய், (௧௨)

ஈசன்றனதுமலர்த்தாளையிறைஞ்சியாற்ற
நேசங்கொடுபோற்றலர்தம்மொடுநேர்தலொல்லா
பாசந்தனில்வீழ்கொடியோயுனைப்பார்த்தியாங்கள்
பேசும்படியுந்தகவோபவப்பெற்றியன்றோ. (௧௩)

ஆமேனுமின்னுமொருமாற்றமுண்டண்ணன்முன்னர்
நீமேவியன்பிற்பணிவாயெனினிற்றியன்றேற்
பூமேலுனதுநகரந்தனிற்போதியென்னத்
தீமேல்கிளர்ந்தாலெனவாற்றவுஞ்சீற்றமுற்றான். (௧௪)

பல்லாயிரவர்பெருஞ்சாரதர்பாதுகாக்கு
மெல்லார்செழும்பொன்மணிவாயிலிகந்துசெல்ல
வல்லா * னனிநாணினனுள்ளம்வருந்தியங்க
ணில்லாதுமீள்வானிதுவொன்றுநிகழ்த்துகின்றான். (௧௫)

கொன்னாருஞ்செம்பொற்கடைகாக்குங்குழாங்கள்கேண்மி
னெந்நாளுமுங்களிறைதன்னையிறைஞ்சலேன்யா
னன்னோனெனதுமருகோனிதறிந்திலீரோ
விந்நாரணனுமயனும்மெனக்கேவல்செய்வார். (௧௬)

நின்றோரெவருமெனதொண்டர்கணீடுஞாலம்
பின்றாதுபோற்றுமிறையான்பெயர்தக்கனென்பா
ரொன்றாயவுங்கள்பெரும்பித்தனையொல்லைமேவி
யின்றாமரபிற்பணிந்தேதொழுதேத்துகின்றேன். (௧௭)

நில்லிங்கெனவேதடைசெய்தநிலைமைநும்மாற்
செல்லும்பரிசோமருகோனுஞ்சிறுமிதானுஞ்
சொல்லும்படியல்லதுசெய்வதென்றொண்டரானீ
ரொல்லும்படியாற்றுதலுங்கட்குறுதியன்றோ. (௧௮)

---

* வல்லான் - மாட்டான்.

Digitized By Roja Muthiah Research Library

தேற்றுமலின்னவகைசூழ்ந்தநுந்தேவையாரும்
போற்றுமல்வந்துபணியாமற்புகழ்ந்துமேன்மை
சாற்றுமலெள்ளல்புரிபான்மைசமைப்பனென்று
மேற்றுனிழைத்தவினையுய்த்திடமீண்டுபோனான். (௧௯)

வேறு.

மீண்டுதன்பதியையெய்திவிரிஞ்சனையாதியாக
வீண்டுபண்ணவரைநோக்கியென்மகளீசன்றன்பாற்
பூண்டபேரார்வத்தோன்றிப்புணர்ப்பதொன்றுன்னித்தங்கண்
மாண்டகுவாயிலோராண்மற்றெமைத்தடுப்பச்செய்தார். (௨0)

பின்னரும்பலவுண்டம்மாபேசுவித்தனவுமவ்வா
றென்னையென்றுரைப்பனந்தோவெண்ணினுநாணுக்கொள்வே
னன்னவீங்கிசைப்பனேனுமாவதென்னவர்பாற்போந்தேன்
றன்னைநொந்திடுவதன்றித்தாழ்வுண்டோவனையர்தம்பால். (௨௧)

நன்றுநன்றென்னையெண்ணாநக்கனையுமையையீவி
ரின்றுமுன்னாகவென்றுமிறைஞ்சியேபரவுகில்லீ
ரன்றியுமதித்திரல்லீரப்பணிமறுத்தீராயின்
மன்றநும்முரிமையின்னேமாற்றுவன்வல்லையென்றான். (௨௨)

கறுத்திவையுரைத்தோன்றன்னைக்கடவுளர்யாருநோக்கி
வெறுத்தெமையுரைத்தாய்போலுமேலுநின்னேவறன்னின்
மறுத்தனவுளவோவின்றேமற்றுநின்பணியினிற்றுஞ்
செறுத்திடலென்னாத்தத்தஞ்சேணகர்சென்றுசேர்ந்தார். (௨௩)

தக்கன்கயிலைசெல்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௩௭0.

# பிரமயாகப்படலம்.

இப்படிப்பன்னாள்யாருமிவன்றனியாணைக்கஞ்சி
யப்பணியியற்றலோடுமம்புயமலர்மேலண்ணல்
முப்புரமுனிந்தசெங்கண்முதல்வனதருளாலாங்கோர்
செப்பரும்வேள்வியாற்றமுயன்றனன்சிந்தைசெய்தான். (௧)

வேண்டியகலப்பையாவும்விதியுளிமரபினோடு
தேண்டினனுய்த்துத்தக்கன்செப்பியதுன்னியானே
மாண்டிடவரினுமுக்கண்மதிமுடிப்பரமன்றன்னை
யீண்டுதந்தவிமுன்னீவலெனக்கிதுதுணிபாமென்றான். (௨)

இனையனபுகன்றுசிந்தையாப்புறுத்தேவல்போற்றுந்
தனையர்தங்குழுவைக்கூவித்தண்டுழாய்முகுந்தனாதி
யனைவருமவிப்பால்கொள்ளவழைத்துநீர்தம்மினென்னாத்
துனையவேதூண்டிப்போதன்றொல்பெருங்கயிலைபுக்கான். (௩)

கயிலையினடுவணுள்ளகடவுண்மாநகரிலெய்தி
யயிலுறுகணிச்சிநந்தியருணெறியுய்ப்பமுன்போய்ப்
பயிலுமன்பொடுநின்றேத்திப்பணிதலுஞ்சிவனீண்டுற்ற
செயலதென்மொழிதியென்னத்திசைமுகனுரைப்பதானான். (௪)

Digitized By Roja Muthiah Research Library

அடியனேன்வேள்வியொன்றையாற்றுவலரணமூன்றும்
பொடிபடமுனிந்தசீற்றப்புனிதநீபோந்தென்செய்கை
முடிவுறவருடியென்னமுறுவல்செய்திறைவனந்தம்
வடிவுளநந்தியங்கண்வருவனீபோதியென்றான். (ரு)

போகெனவிடுத்தலோடும்பொன்னடிபணிந்துவல்லே
யேகியதாதைதக்கனிருந்துழியெய்தியேயான்
பாகநல்வேள்வியொன்றுபண்ணுவன்முனிவர்விண்ணோ
ராகியதிறத்தரோடுமெனுகுதியையவென்றான். (சா)

என்னலுநன்றுமுன்போயியற்றுதிமகத்தையென்னப்
பொன்னவிர்கமலத்தண்ணன்மஞேவதியதனிற்போந்து
செந்நெறிபயக்கும்வேள்விச்செய்கடன்புரிதலுற்று
னன்னதோர்செய்கைமாலோனுதியரெவருந்தேர்ந்தார். (எ)

வேறு.

அக்கணந்தனின்மாயவனிமையவர்க்கரசன்
மிக்கதேவர்கண்முனிவரர்யாவரும்விரைந்து
தக்கன்முன்னுறமேவலுமவரொடுந்தழுவி
முக்கணாயகற்கவியினைவிலக்குவான்முயன்றான். (அ)

ஏற்றநீங்குறுதக்கனக்கடவுளரியாரும்
போற்றியேதனைச்சூழ்தரத்தாதைதன்புரத்தி
லாற்றும்வேள்வியிலணைதலுமயனெழுந்தாசி
சாற்றியார்வமொடிருத்தினன்பாங்கரோர்தவிசின். (கூ)

கானுலாவுதண்டுளவினனடிகள்கைதொழுதே
யானபான்மையிலோர்தவிசிருத்தினனல்லா
வேனையோருக்கும்வீற்றுவீற்றுதவினனிடையிற்
றானோராசனத்திருந்தனன்மறையெலாந்தழங்க. (க0)

வேறு.

அங்கண்ஞாலமதளித்தவனிவ்வகையமர்தலுமதுபோழ்தி
னங்கையாளொருபங்கினனருளொடுநந்திதேவனைநோக்கிப்
பங்கயாசனன்வேள்வியிற்சென்றுநம்பாகமுங்கொடுவல்லே
யிங்குநீவருகென்றலும்வணங்கியேயிசைந்தவனேகுற்றான். (கக)

நூற்றுக்கோடிவெங்கணத்தவர்சூழ்தரநொய்தினக்கிரிநீங்கி
யேற்றின்மேல்வருமண்ணலையுள்ளுறுத்தேர்கொள்பங்கயப்போதிற்
றோற்றுநான்முகக்கடவுண்முன்னடைதலுந்தண்ணெனவெழுந்தன்பிற்
போற்றியேதொழுதிருத்தினனென்பவோர்பொலன்மணித்தவிசின்கண். (கஉ)

நின்றபாரிடத்தலைவர்க்கும்வரன்முறைநிரந்தவாசனநேர்ந்து
பின்றைநான்முகன்வேள்வியதியற்றலும்பிறங்கெரியுறநோக்கி
நன்றியில்லதோர்தக்கனக்கிரியுறைநக்கனுக்காளாகிச்
சென்றவன்கொலாமிவனெனநகைத்தனன்செயிர்த்திவையுரைக்கின்றான். (கங)

நாரணன்முதலாகியகடவுளர்நளினமாமகளாதிச்
சீரணங்கினர்மாமுனிகணத்தவர்செறிகுநருறைகின்ற
வாரணன்புரிவேள்வியில்விடநுகர்ந்தாடல்செய்பவனுளுஞ்
சாரதங்களுமோநவெுறுவதுதக்கதேயிதுவென்றான். (கச)

Digitized By Roja Muthiah Research Library

மேவலாரெயின்முனிந்ததீவிழியினன்வெள்ளிமால்வரைகாக்குங்
காவலாளனுநந்தியுங்கணத்தருங்கதுமெனவிவண்மேவக்
கூவினரெவரோவெனவுளத்திடைக்குறித்தனன்றெரிகுற்றான்
றேவர்யாவரும்வெருவுறவயன்றனைச்செயிர்த்திவையுரைக்கின்றான். (௧௫)

ஆதிநான்முகக்கடவுளையாகுநீயழன்மகம்புரிசெய்கை
பேதைபாகனுக்குரைத்தனையவன்விடப்பெயருநந்தியையென்முன்
காதலோடுகைதொழுதுநள்ளிருத்தினைகடவதோநினக்கீது
தாதையாதலிற்பிழைத்தனையல்லதுன்றலையினைத்தடியேனே. (௧௬)

இன்னமொன்றியானுரைப்பதுண்டஞ்ஞைகேளீமமேயிடனாகத்
துன்னுபாரிடஞ்சூழ்தரக்கழியுடல்சூலமீமிசையேந்தி
வன்னியூடுநின்றாடுவான்றனக்குநீமகத்திடையவிக்கூற்ற
முன்னைவைகலின்வழங்கலையிப்பகன்முதலவன்றனக்கின்றால். (௧௭)

அத்திவெம்பணிதலைக்கலன்றாங்கியேயடலைமேற்கொண்டுற்ற
பித்தன்வேள்வியிலவிகொளற்குரியனோபெயர்ந்தவிப்பகல்காறு
மெத்திறத்தருமறையொழுக்கெனநினைந்தியாவதுமோராமற்
சுத்தநீடவியளித்தனரன்னதேதொன்மையாக்கொளற்பாற்றே. (௧௮)

மற்றைவானவர்தமக்கெலாநல்குதிமாலையேமுதலாக
விற்றைநாண்முதற்கொள்ளுதியிவற்குமுன்னீகுதியவிதன்னைக்
கற்றைவார்சடையுடையதோர்கண்ணுதற்கடவுளேபரமென்றே
சொற்றமாமறைச்சுருதிகள்விலக்குதிதுணிவுனக்கிதுவென்றான். (௧௯)

என்றவாசகங்கேட்டலுநந்திதன்னிருகரஞ்செவிபொத்தி
யொன்றுகொள்கையினுதிநாமந்தனையுளத்திடைநனியுன்னி
யின்றிவன்சொலுங்கேட்பவுய்த்தனைகொலாமெம்பிரானெனையென்னாத்
துன்றுபையுளின்மூழ்குறாவாயிடைத்துண்ணெனவெகுளுற்றான். (௨௦)

பண்டுமூவெயிலழலெழநகைத்திடுபரம்பரனருணீராற்
றண்டநாயகஞ்செய்திடுசிலாதனார்தனிமகன்முனிவெய்தக்
கண்டவானவர்யாவருமுட்கினர்கனலுமுட்கவலுற்றா
னண்டம்யாவையுநடுநடுக்குற்றனவசைந்தனவுயிர்யாவும். (௨௧)

ஏற்றின்மேயநம்மண்ணறன்சீர்த்தியிலிறையுமேகுறிக்கொள்ளா
தாற்றலோடவிவிலக்கியதக்கனுக்கஞ்சினமிசைந்தோமான்
மாற்றமொன்றுமிங்குரைத்திடறகாதெனமற்றதுபொறாதந்தோ
சீற்றமுற்றனனந்தியென்றுட்கினர்திசைமுகனொடு * மாலோன். (௨௨)

ஈதுவேலையினந்தியத்தக்கனையெரிவிழித்தெதிர்நோக்கி
மாதுபாகனையிகழ்ந்தனைமீண்டுநின்வாய்துளைத்திடுவேனு
லாதிதன்னருளன்றெனவிடுத்தனனுதலினுய்ந்தாய்நீ
தீதுமற்றினியுரைத்தியேல்வல்லைநின்சிரந்துணிக்குவனென்றான். (௨௩)

இவையயன்மகனுள்ளமுந்துண்ணெனவிசைத்துமாமகந்தன்னி
லவியதெம்பிராற்கிலதெனவிலக்கினையதற்கிறையவனன்றேற்
புவனமீதுமற்றெவருளாரரிதனைப்பொருளெனக்கொண்டாய்நீ
சிவனையன்றியேவேள்விசெய்கின்றவர்சிரமறக்கடிதென்றான். (௨௪)

* ஒடு - எண் ஒடு.



Digitized By Roja Muthiah Research Library

வேறு.

இன்னதோர்சாபமதியம்பியாங்கதற், பின்னருமிசைத்தனன்பிறைமுடிப்பிரான்
றன்னியன்மதிக்கிலாத்தக்கநிற்கிவண், மன்னியதிருவெலாம்வல்லைதீர்கவே. (௨௫)

ஏறுடையண்ணலையிறைஞ்சலின்றியே, மாறுகொடிகழ்தருவாய்கொள்புன்றலை
யீறறவுன்றனக்கெவருங்காண்டக, வேறொருசிறுசிரம்விரைவின்மேவவே. (௨௬)

ஈரமில்புன்மனத்திழுதைமற்றுனைச், சாருறுகடவுளர்தாமுமோர்பக
லாருயிர்மாண்டெழீஇயளப்பிலாவுகன், சூரெனுமவுணனாற்றுயரின்மூழ்கவே. ௨௭

என்றுமற்றினையதுமியம்பியோர்புறீஇத், துன்றிருங்கணநிரைசூழவெள்ளியங்
குன்றிடையிறைக்கிதுகூறிக்கீழ்த்திசை, முன்றிருவாயிலின்முறையின்மேவினன்.

முன்னுறநந்தியம்முளரிமேலவன், மன்னுறுகடிநகர்மகத்தைநீங்கனு
மன்னதோரவையிடையமரர்யாவரு, மென்னிதுவிளைந்ததென்றிரங்கியேங்கினர்.

நந்தியெம்மடிகண்முன்னவின்றமெய்யுரை, சிந்தைசெய்தேங்கினன்சிரம்பனிப்
புற,மைந்தனதுரையையுமறுத்தற்கஞ்சினன், வெந்துயருழந்தனன்விரிஞ்சனென்
பவன். (௩0)

முடித்திடவுன்னியேமுயனும்வேள்வியை, நடத்தியவஞ்சினன்வின்றுசெய்கடன்
விடுத்தனனன்னதைவிமலற்கின்னவி, தடுத்தவன்கண்டரோயாதுஞ்சாற்றலன். ()

கறுவுகொள்பெற்றியான்கவற்சிகொண்டுளான், வறியதோருவகையான்மனத்
திலச்சமுஞ், சிறிதுகொள்பான்மையான்றேவரோடெழாக், குறுகினன்றன்னகர்க்
கோயின்மேயினன். (௩௨)

அலர்ந்திடுபங்கயத்தண்ணறன்மகங், குலைந்திடவாயிடைக்குழீஇயதேவர்கள்
சலந்தனினந்திசெய்சாபஞ்சிந்தியாப், புலர்ந்தனர்தத்தமபுரத்துப்போயினர்.(௩௩)

பிரமயாகப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௪0௩.

---

## சாலைசெய்படலம்.

அன்றுமுன்னாகவேயளப்பில்காலமா, வொன்றுமவ்வேள்வியிலோம்புகின்றிலர்
துன்றியமுனிவருஞ்சுரரும்பார்தனின், முன்றிகழந்தணர்முதலினோர்களும். (௧)

ஓர்ந்தனரன்னதையூழின்றீநெறி, சார்ந்திடுதக்கனோர்வைகறன்முனஞ்
சேர்ந்திடுமிமையவர்திறத்தைநோக்கியே, யீர்ந்திடுதீயதொன்றியம்புகின்றனன்.()

எடுத்திடுசுருதியினியற்கைமுற்றுற, வடித்திடுதேவிர்காள்வரம்பில்காலமா
வடுத்திடும்வேள்வியதாற்றலின்றியே, விடுத்ததெனையதுவிளம்புவீரென்றான்.()

வேறு.

எய்யாதுவெய்யவினையீட்டுதக்கனிவைசெப்பலோடுமிமையோர்
மெய்யாரணத்தன்முதனளியற்றுவேள்விக்களத்திலவியூ
ணையானனத்தர்பெறநல்கலென்றியதனாலுநந்தியடிகள்
பொய்யாதசாபவுரையாலும்யாங்கள்புரியாதிருத்துமெனவே. (௪)

அந்நாளிலீசன்விடுகின்றநந்தியறைகின்றசாபமதனுக்
கிந்நாளுமஞ்சிமகவேள்விதன்னில்யாதுஞ்செயாதுதிரிவீர்
முன்னாகயானொர்பெருமாமகத்தைமுறைசெய்வன்முற்றியிடுமேற்
பின்னாகநீவிர்புரிமின்களென்றுபீடில்லவன்புகலவே. (௫)

Digitized By Roja Muthiah Research Library

நீமூன்றோர்வேள்விபுரிகின்றதையநெறியென்றிசைப்பவவரைப்
போமின்கள்யாருமெனவேபுகன்றுபுரிதோறுமேவிமிகவு
மேமங்கொள்சிந்தையுளதக்கனூழினியல்பாலதற்பினொருநா
ளோமஞ்செய்வேள்விபுரிவான்விரும்பியுள்ளத்திலுன்னிமுயல்வான். (௬)

தொட்டாமனுத்தொன்மயனைத்தனதுசுதரென்னமுன்னமுதவிக்
கட்டாமரைக்குள்விதிபோலநல்குகலைகற்றுளானைவிளியா
முட்டாதவேள்வியதுவொன்றுசெய்வன்முனிவோர்கடேவருறைவா
னெட்டாதவெல்லைதனிலின்றோர்சாலையியல்பால்விதித்தியெனவே. (௭)

வேறு.

இனிதெனவிறைஞ்சியேயேகிக்கங்கையம், புனனதியதனொருபுடையதாகிய,
கனகலமென்பதோர்கவின்கொள்வைப்பிடை, வினைபுரிகம்மியன்விதித்தன்மேயி
னான். (௮)

பத்துநூறியோசனைப்பரப்புநீளமு, மொத்திடும்வகையதாவொல்லைநாடியே
வித்தகவன்மையான்வேள்விக்கோரர, ணத்தகுபொழுதினிலமைத்துநல்கினான். ()

நாற்றிசைமருங்கினுநான்குகோபுரம், வீற்றுவீற்றுதவியவியன்கொணொச்சியி
லேற்றிடுஞாயில்களியற்றியன்னதை, யாற்றலையுடையதோரரணமாக்கினான்.(௧௦)

உள்ளுறவணங்கனருறைதற்கோரிடை, தெள்ளிதினல்கியேதேவர்தம்மொடு
வள்ளுறைவேற்கணார்மருவியாடுவான், புள்ளுறைவாவியும்பொழிலுமாக்கினான். ()

அப்பரிசமைத்துமேலமரர்வேதிய, ரெப்பரிசனரும்வந்தீண்டிவெஃகின
துய்ப்பதற்கொத்திடுசுவைகொடீம்பதம்,வைப்பதோரிருக்கையுமரபிற்றந்தனன்.()

அந்தணராதியோரமரர்யாவரும், வந்துணவருந்துவான்வரம்பில்சாலைக
ளிந்திரவுலகெனவிமைப்பிலீந்தனன், முந்தையின்மகவிதிமுழுதுநாடினான். (௧௩)

விருந்தினர்பெற்றிட்விரைமென்பாளித, நரந்தமொடாரம்வீநறைகொண்மான்மத
மருந்துறுவெள்ளடையானபாகிவை, யிருந்திடுசாலையுமியற்றினானரோ. (௧௪)

ஆனபல்வகையுடையாடைசெய்யபூண்,மேனதொரம்பொனின்வியன்கொள்கு
ப்பைக, ளேனையவெறுக்கைகண்மணிகள்யாவையுந், தானமதியற்றிடத்தானநல்கி
னான். (௧௫)

கடிகெழுசததளக்கமலமேலுறை,யடிகடன்னகர்கொலென்றையஞ்செய்திட [வே.
நடைதருவேள்விசெய்நலங்கொள்சாலைய, திடையுறவமைத்தனன்யாரும்போற்ற

நூறெனும்யோசனைநுவலுமெல்லையின், மாறகல்சாலையின்வன்னிசேர்தரக்
கூறியமூவகை * க்குண்டம்வேதிகை, வேறுளபரிசெலாம்விதித்தல்செய்தனன்.()

மேலொடுகீழ்புடைவெறுக்கையின்மிசைக்,கோலநன்மணிகளாற்குயிற்றிவாவியுஞ்
சோலையும்பறவையுந்தோமிறேவரும், போலியவோவியம்புனைந்திட்டானரோ. ()

புண்டரீகாசனம்பொருந்துநான்முகன், றண்டுளவோனிவர்தமக்கிருக்கையு
மெண்டிசைவாணருக்கியவிருக்கையு,மண்டருக்கிருக்கையுமருளல்செய்துமேல்.()

தொக்குறுமுனிவரர்தொல்லைவேதிய, ரொக்கலின்மேயினருறையிருக்கையுந்
தக்கனுக்கிருக்கையுஞ்சமைத்துநல்கினான், வைக்குறுதவிசினூன்மரபினாடியே. ()

தக்கனைவணங்கிநின்சாலைமுற்றிய, புக்கனைகாண்கெனப்புனைவன்செப்பலு
மக்கணமதுதெரிந்தளவிலாதர, மிக்கனன்மகிழ்ந்தனன்விம்மிதத்தினான். (௨௧)

---

* மூவகை - சதுரம், வட்டம், கோணம்.

Digitized By Roja Muthiah Research Library

பூங்கமலத்தமர்புனிதன்கான்முளை, பாங்கரின்முனிவரிற்பலரைக்கூவியே
தீங்கனன்மாமகஞ்செய்யநான்முறை,யாங்கனம்வலித்தனனவர்க்குச்செப்புவான்

தருவுறுசமிதைகள்சாகைதண்ணடை, பரிதிகண்மதலைநாண்பறப்பைபல்பசு
வரணிநன்முதிரைகளாதியாவிதற், குரியனவுய்த்திரென்றெல்லையேவினன். (௨௩)

ஆனெடுநிதிகளைமணியையைந்தருக், கானிலையழைத்துநம்மகத்தைக்காணிய
மாநிலத்தந்தணர்வருவருண்டியு, மேலையபொருள்களுமீமென்றேதினன். (௨௪)

நல்விடைகொண்டுபோய்நவையிலான்முதற், பல்வகையவையெலாம்படர்ந்து
வீற்றுவீற், றெல்வதோரிடந்தொறுமுற்றவாயிடைச், செல்வதோர்பொருளெலா
ஞ்சிறப்பினல்கவே. (௨௫)

தளதுறுகிளைஞராய்த்தணப்பிலாததோர், முனிவரர்தங்களின்முப்பதாயிரர் [ன்.
துனியறுவோர்தமைச்சொன்றியேனவை, யனைவரும்விருப்புறவளித்திரென்றன

மற்றவர்க்கிருதிறமாதவத்தரை, யுற்றனர்யாவருமுண்டியன்றியே
சொற்றனயாவையுந்தொலைவின்றீமென,நற்றவத்தயன்மகனயப்புற்றேவினன் .()

நீதினைநன்றெனத்தெளியுநான்முகன், காதலனோர்மகங்கடிதியற்றுவான்
வேதியர்விண்ணவர்யாருமேவுவான், றூதரைநோக்கியேயிளையசொல்லுவான். ()

நக்கனையல்லதோர்நாகர்தங்களை, மிக்குறுமுனிவரைவேதமாந்தரைத்
திக்கொடுவான்புவியாண்டுஞ்சென்றுகூ,யுய்க்குதிராலெனவுரைத்துத்தூண்டினன்

முந்துறவரித்திடுமுனிவரவ்வழித், தந்தனர்மகஞ்செயத்தகுவயாவையும்
வந்தனநோக்கியேமரபினுய்த்திரென், றெந்தைதனருளிலானியம்பினனரோ. ()

வரித்திடுபான்மையின்வழாதுபோற்றிடு, மிருத்தினர்தமிற்பலர்யாகசாலையுட் [ர்.
டிருத்தியவேதிவாய்ச்செறிபல்பண்டமு, நிரைத்தனர்பறப்பையுநிலையிற்சேர்த்தின

அசைவறுவேதியினணித்தினோரிடை, வசைதவிர்மதலைகண்மரபினாட்டுபு
பசுநிரையாத்தனர்பாசங்கொண்டுபின், னிசைதருபூசையுமியல்பினாற்றினர்.(௩௨)

வேறு.

நடையிதுநிகழும்வேலைநலமிலாத்தக்கனல்கும்
விடைதலைக்கொண்டுபோயவியன்பெருந்தூதர்தம்மிற்
புடவியின்மறையோர்க்கெல்லாம்புகன்றனர்சிலவர்வெய்யோ
னுடுபதிநாள்கோண்முன்னருரைத்தனர்சிலவரன்றே. (௩௩)

காவலராகிவைகுங்கந்தருவத்தராதி
யாவதோர்திறத்தோர்க்கெல்லாமறைந்தனர்சிலவராசை
மேவியகடவுளோர்க்கும்விளம்பினர்சிலவர்முப்பாற்
றேவர்கள்யாருங்கேட்பச்செப்பினர்சிலவரன்றே. (௩௪)

விண்ணகமுதல்வனுக்குவிளம்பினர்சிலவராண்டு
நண்ணியதேவர்க்கெல்லாநவின்றனர்சிலவர்மேலைப்
புண்ணியமுனிவரர்க்குப்புகன்றனர்சிலவரேனைப்
பண்ணவர்முன்னஞ்சென்றுபகர்ந்தனர்சிலவரம்மா. (௩௫)

வானவர்முதுவன்றொல்லைமன்றன்மாநகரத்தெய்திக்
கோனகர்வாயினண்ணிக்குறுகினர்காப்போருய்ப்ப
மேனிறைகாதலோடும்விரைந்தவற்றொழுந்துநின்சே
யானவன்வேள்விக்கேகவடிகளென்றுரைத்தார்சில்லோர். (௩௬)

மேனகுசுடர்செய்தூயவிண்டுலகதனைநண்ணி
மாணிறைகின்றகோயின்மணிக்கடைமுன்னரெய்திச்
சேணையந்தலைவனுய்ப்பச்சீதரற்பணிந்துவேள்விப்
பான்மையதியம்பியெந்தைவருகெனப்பகர்ந்தார்சில்லோர். (௩௭)

மற்றதுபோழ்துதன்னின்மாயவனெழுந்துமார்பூ
டுற்றிடுதிருவும்பாருமுடன்வரவுவணர்கோமான்
பொற்றடந்தோண்மேற்கொண்டுபோர்ப்படைகாப்பத்தன்பாற்
பெற்றனர்சூழத்தானைப்பெருந்தகைபரவச்சென்றான். (௩௮)

செல்லலுமதனைநாடித்திசைமுகக்கடவுளங்க
ணெல்லையிலெழுந்துமுப்பாலொண்டொடிமாதரோடு
மல்லியங்கமலநீங்கியன்னமேற்கொண்டுமைந்த
ரெல்லையின்முனிவர்யாருமேத்தினர்சூழப்போந்தான். (௩௯)

மாலொடுபிரமனீண்டிவருதலுமகவானென்போன்
வேலொடுவில்லும்வாளும்விண்ணவரேந்திச்சூழ
நாலிருமருப்புவெள்ளைநாகமதுயர்த்துத்தங்கள்
பாலுறைகுரவரோடுபாகமார்விருப்பில்வந்தான். (௪0)

ஆயவன்புரத்தில்வைகுமரம்பையேமுதலாவுள்ள
சேயிழைமார்கள்யாருந்தேவரோடகன்றாரெங்க
ணாயகன்போந்தானென்றேநலமிகுசசியென்பாளுந்
தூயதோர்மானத்தேறித்தோகையர்காப்பச்சென்றாள். (௪௧)

எண்டிசைக்காவலோருமீரிருதிற * த்தரான
வண்டருமுடிக்கடாமுமாரிடத்தொகையுளோரும்
வண்டுளர்குமுதம்போற்றுமதியமுமேனைக்கோளும்
விண்டொடரியக்கர்சித்தர்விஞ்சையர்பிறரும்போந்தார். (௪௨)

சேணிடைமதியினோடுசெறிதருமுடிக்களான
வாணுதன்மகளிர்யாருமகிழ்வொடுதந்தைவேள்வி
காணியவந்தாரீதுகண்ணுறீஇயவுணர்கோமான்
சோணிதபுரத்துக்கேளிர்தொகையொடுந்தொடர்ந்துசென்றான். (௪௩)

வனைகலனிலவுபொற்றோள்வாசவன்முதலாவுள்ள
வினையரும்பிறருமெல்லாமிருவர்தம்மருங்குமீண்டிக்
கனகலவனத்திற்செய்தகடிமகச்சாலையெய்த
முனிவரரோடுந்தக்கன்முன்னெதிர்கொண்டுநின்றான். (௪௪)

எதிர்கொடுமகிழ்ந்துமேலாமிருவர்தங்களையுமங்கண்
முதிர்தருகாதலோடுமுறைமுறைதழுவிவானோர்
பதிமுதலோரைநோக்கிப்பரிவுசெய்திளையர்தம்மைக்
கதுமெனக்கொண்டுவேள்விக்கடிமனையிருக்கைபுக்கான். (௪௫)

மாலயன்றன்னைமுன்னர்மணித்தவிசிருத்திவான
மேலுறைமகவானாதிவிண்ணவர்முனிவர்யார்க்கு
மேலுறுதவிசுநல்கியிடைப்படவிருந்தான்றக்கன்
காலுறுகடலாமென்னக்கடவுண்மாமறைகளார்ப்ப. (௪௬)

---

* ஈரிருதிறம் - ஆதித்தன், உருத்திரன், வசு, மருத்துவன்.

Digitized By Roja Muthiah Research Library

அல்லியங்கமலமாதுமம்புயிமகளும்வேதாப்
புல்லியதெரிவைமாரும்பொருவிலாவுடுவினோருஞ்
சொல்லருஞ்சசியுமேனைச்சூரினர்பிறரும்வேத
வல்லிதனிருக்கைநண்ணிமரபின்வீற்றிருந்தார்மன்னோ. (௪௭)

மாமலர்க்கடவுண்மைந்தன்மகத்தினைநாடியாருங்
காமுறுமுண்டிமாந்திக்கதுமெனமீடுமென்றே
பூமிசைமறையோர்தாமுமுனிவரும்போந்துவிண்ணோர்
தாமுறுமவையைநண்ணித்தகவினுற்சார்தலோடும். (௪௮)

அழைத்திடப்போனதூதரனைவரும்போந்துதக்கன்
கழற்றுணைவணங்கிநிற்பக்கருணைசெய்தவரைநோக்கி
விழுத்தகுதவத்தீர்நீவிர்விளித்தனர்தமிலுருது
பிழைத்தனருளரோவுண்டேன்மொழிமெனப்பேசலுற்றார். (௪௯)

அகத்தியன்சனகன்முன்னோரத்திரிவசிட்டனென்பான்
சகத்துயர்பிருகுமேலாந்ததீசிவெஞ்சாபத்தீயோன்
பகைத்திடுபுலத்தைவென்றபராசரனினையபாலார்
மகத்தினையிகழாவீண்டுவருகிலர்போலுமென்றார். (௫௦)

மற்றதுபுகலலோடுமலரயன்புதல்வன்கேளா
விற்றிதுசெய்தார்யாரேமுனிவரிலினையர்தாமோ
நெற்றியங்கண்ணினார்க்குநேயமதுடையரென்னாச்
செற்றமொடுயிர்த்துநக்கான்றேவர்கள்யாருமுட்க. (௫௧)

சாலைசெய்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௪௫௪.

# ததீசிப்படலம்.

அன்னவேலையிலாரிடர்தம்மொடுந், துன்னினானொருதொல்லிறைக்காகவே
முன்னமாலயர்மூண்டெழமற்றவன், றன்னைவென்றததீசியென்பானரோ. * (௧)

கடிதுபோந்துகடிமகச்சாலையி, னிடையதாகியிமையவர்யாவரு
மடையுமெல்லையனுகலுங்கண்ணுறீஇக்,கொடியதக்கன்குறித்துணர்கின்றனன். ()

* ததீசிமுனிவரும் குபன் என்னும் அரசனும் நண்புபொருந்தி வாழுநாளில் ஒரு நாள் இருவரும், பிராமணரோ அன்றி அரசரோ சிறந்தவர் என நகையாடிப் பேசும்பொழுது, முனிவர் பிராமணரே சிறந்தவர் என்று கூற; அரசன் அதனை மறுத்து அரசரே சிறந்தவர் என்றான். அப்பொழுது முனிவர் கோபித்து அரசனை அடிக்க; அவன் பொறாது வச்சிரப்படையை வீசித் ததீசிமுனிவருடைய சரீரத்தை இருதுணியாக்க; அவர் சுக்கிரனைத் தியானித்துக்கொண்டு நிலத்தில் வீழ்ந்தார். அதனை யறிந்துவந்த சுக்கிரன், துணிபட்ட முனிவருடலைப்பொருத்தி எழுப்பி, காஞ்சீபுரத்தில் இட்டசித்தி தீர்த்தத்தில் முழுகி இட்டசித்தீசரை வழிபடின் வச்சிரயாக்கைபெறுவை எனக் கூற; அவ்வாறே முனிவர்சென்று முழுகி வழிபட்டு வச்சிரயாக்கை பெற்று மீண்டுவந்து, இராசசபையில் இருந்த குபன் என்னும் அரசனுடைய சிரத்தில் இடத்தாளால் உதைக்க; உதையுண்ட அரசனுக்காக விட்டுணு ததீசிமுனிவரோடு போர்செய்தார். அங்ஙனம் போர்செய்த விட்டுணுவைத் ததீசிமுனிவர் வென்றார்.

Digitized By Roja Muthiah Research Library

ஆகுமாகுமரற்குரித்தல்லனிப், பாகமாமகம்பார்க்கும்பொருட்டினு
லேகினுனெனக்கஞ்சியெனுநினை ந், தோகையெய்தியுளங்குளிர்ப்பாகியே. (௩)

வருகவீண்டெனமற்றவன்றன்னிடை, யொருபெருந்தவிசுய்த்தலுமாதவ
ரிருமருங்குமிருந்திடவாயிடைப், பொருவின்மாதவப்புங்கவன்மேவியே. (௪)

ஆக்கந்தீருமயன்புதல்வன்றனை, நோக்கியெம்மைநொடித்ததென்னீயிவ
ணூக்கியுற்றதென்னெல்லையில்யாவையு, நீக்கமின்றிநிகழ்த்துதியென்னவே. (௫)

தக்கனுண்டுத்ததீசியைநோக்கியே, நக்கனென்பவனுன்பெறுங்கன்னியை
மிக்ககாதலின்வேட்டொளித்தோர்பக, லுக்கமேனுய்த்துயர்வரையேகினுன். (௬)

போயபின்னைப்புதல்விக்குத்தன்பெரு, மாயைசெய்தனன்மற்றவர்தங்களை
யாயுமாறவ்வகன்கிரியெய்தினே, னேயதன்மையிருவருந்தேர்ந்தரோ. (௭)

அடுத்தபூதரையாங்கவர்கூவியே, தடுத்திடுங்களத்தக்கனைநம்முனம்
விடுத்திரல்லிர்விலக்குதிராலென, வெடுத்தியம்பினரேயினர்போலுமால். (௮)

இற்றுணர்ந்திலனேகினன்பூதர்க, ணிற்றிநீயென்றுநிந்தனையெண்ணில
சொற்றலோடுந்துணையதில்வெள்ளியம், பொற்றைநீங்கிப்புரம்புகுந்தேனியான். ()

தங்கண்மாநகர்சார்ந்தனனீங்குழி, யெங்கண்மாதுமெனைவந்துகண்டிலண் [ள்.
மங்கையென்செய்வண்மற்றவன்மாயையாற், றுங்கமேன்மைதுறந்தனள்போயினு

அந்தவேலையரும்பெரும்வேள்வியொன், றெந்தைசெய்துழியான்சென்றரற்குமுன்
றந்தபாகந்தடுத்தனனவ்வழி, நந்திசாபநவின்றனன்போயினுன். (௧௧)

வேறு.

ஏறும்படுதண்ணுமையியம்புகையுடைச்,சிறுதொழிலவன்மொழிதீச்சொற்கஞ்சி
யே, முறைபடுவேள்வியைமுற்றச்செய்திலன், குறையிடைநிறுவினன்குரவனுகி
யோன். (௧௨)

நஞ்சமர்களனருணந்திகூறிய, வெஞ்சொலுமென்பெருவிரதமுந்தெரீஇ
யஞ்சினரின்றுகாருரும்வேள்வியை,நெஞ்சினுமுன்னலர்நிகழ்த்தும்வேட்கையால்.

ஆனதொர்செயலுணர்ந்தையமேற்றிடும், வானவன்றனக்கவிமாற்றும்பான்மையா
னுனெருவேள்வியைநடாத்துகின்றன,னேனையதோர்பயன்யாதும்வேண்டலன்.()

அப்பெருமகந்தனக்கமரர்மாதவ, ரெப்பரிசனரும்வந்தீண்டுதொக்கன
ரொப்பருந்தவத்தினீருமக்குமித்திறஞ்,செப்பினன்விடுத்தனன்செயலிதென்னவே

வேறு.

தண்ணளிபுரிததீசிதக்கனதுரையைக்கேளாப்
புண்ணியம்பயனின்றம்மாபொருளினிற்பவமேயென்று
வெண்ணினன்வினைகளீட்டுமிழிதகனியற்கைபோலா
மண்ணறன்செயலுமென்றுவணியெயிறிலங்கநக்கான். (௧௬)

நக்கதோர்வேலைதன்னினலத்தகுமூழிக்கான்மேன்
மிக்கெழும்வடவையென்னவெய்துயிர்த்துரப்பிச்சீறி
முக்கணனடியான்போலுமுறுவலித்திகழ்ந்தாயென்னத்
தக்கனீதுரைத்தலோடுந்ததீசிமாமுனிவன்சொல்வான். (௧௭)

மலரயன்முதலேயாகவரம்பிலாவுயிரைமுன்னந்
தலையளித்துதவுகின்றதாதையாயளித்துமாற்றி
யுலகெலாமாகியொன்றாயுயிர்க்குயிராகிமேலா
யிலகியபரனைநீத்தோயாகமொன்றியற்றநின்றாய். (௧௮)

Digitized By Roja Muthiah Research Library

புங்கவரெவர்க்குநல்கும்புவிபுகழவிகொள்வானு
மங்கியின்முதலும்வேள்விக்கதிபனுமளிக்கின்றானுஞ்
சங்கரன்றானேவேதஞ்சாற்றுமான்மகத்துக்காதி
யிங்கொருதேவுண்டென்னினெழுகெனவுரைத்திமாதோ. (௧௯)

மாலயன்முதலோர்யாரும்வரம்பிலித்திருவையெய்த
மேலைநாளளித்தோன்றானும்விமலனுமிளையர்க்கெல்லா
மூலமுந்தனக்குவேறோர்முதலிலாதவனுமெங்க
ளாலமர்கடவுளன்றியமரரில்யாவரம்மா. (௨0)

தேவதேவன்மாதேவன்சிறப்புடையீசனெங்கோன்
மூவரின்முதல்வனேகன்முடிவிற்குமுடிவாய்நின்றோ
னாவியுளாவியானோனந்தணனாதியென்றே
யேவரையிசைத்தவம்மாவெல்லையின்மறைகளெல்லாம். (௨௧)

விதிமுதலாகியுள்ளோர்வியனுயிர்த்தொகையாமீசன்
பதியவன்பணிபதன்றேபரித்தனரிளையரெல்லா
மிதுவுமச்சுருதிவாய்மையிவையெலாமயர்த்துவாளா
மதிமயங்கினையாற்பேராமாயையூடழுந்துகின்றாய். (௨௨)

அந்தணர்க்காதியீசனேனையோர்க்கரியேவேதா
விந்திரனென்றுவேதமியம்பியமறையோர்தங்கண்
முந்தையின்முதலைநீத்துமுறையகன்றொழுகல்பெற்ற
தந்தையைவிலக்கிவேறுதேடுவான்றன்மையன்றே. (௨௩)

ஆதலினெவர்க்குமேலாமாதியையிகழாநிற்றல்
பேதைமையன்றியீதோர்பெருமிதமன்றாலாற்ற
னோதகவுன்னியாரேநோற்பவரனையைநீயே
வேதமதொழுக்கநீத்திவ்வேள்வியைப்புரியநின்றாய். (௨௪)

விலக்கினைமறையின்வாய்மைவேள்விசெய்யினுமுற்றாது
கலக்குமேலமலனாணைகாண்டியாலவனுக்கஞ்சா
வலத்தினர்யாவருண்டேன்மாய்வரேமறையுமெம்முன்
னிலைப்பொலிசூலமேந்துமேகனென்றேத்திற்றன்றே. (௨௫)

ஆதியுமுடிவுமில்லாவமலனுக்கவியைநல்கி
வேதகமுறைவழாதுவேள்வியோம்புவதுநாடாய்
தீதுநின்னெண்ணமென்னச்சிவன்றனக்கருள்பாகத்தை
மாதவன்றனக்குநல்கிமாமகம்புரிவனென்றான். (௨௬)

அவ்வுரைகொடியோன்கூறவருந்தவமுனிவன்கேளா
வெவ்வமீதுரைத்தாய்மேலாயாவரும்புகழநின்ற
செவ்வியர்தமையிழித்துச்சிறியரையுயர்ச்சிசெய்த
ஓய்வகையன்றானுமோருயிர்க்கெலாமுடிவீதென்றான். (௨௭)

ஊறுசேர்தக்கன்சொல்வானுனதுருத்திரனையொப்பா
ராறின்மேலைந்தவானவுருத்திரரமர்வாராசை
யீறுசேர்தருமீசானரிருந்தனரவர்க்கேமுன்னர்
வீறுசேரவியைநல்கிவேள்வியைமுடிப்பனென்றான். (௨௮)

Digitized By Roja Muthiah Research Library

என்னனுமுனிவன்சொல்வானீறுசெய்தகிலமெல்லாந்
தன்னிடையொடுக்கிமீட்டுந்தாதையாய்நல்கியாரு
முன்னருந்திறத்தில்வைகுமுருத்திரமூர்த்திக்கொப்போ
வன்னவன்வடிவும்பேருமவனருளதனுற்பெற்ருேர். (௧௯)

உருத்திரமூர்த்தியென்போனுயர்பரம்பொருளாயுள்ளே
நிருத்தமதியற்றுகின்றநித்தனுமவன்றன்பொற்ருள்
கருத்திடைநினைந்தோரன்னுன்காயமுந்திருப்பேர்தானும்
பரிப்பராலனையரெல்லைபகர்ந்திடினலப்பின்ருமால். (௯0)

ஆதிதன்னுமம்பெற்ருேரவனியலடையார்கொண்ட
வேதமில்வடிவுமற்றேயென்னினுமிறைவரென்றே
பூதலமுழுதும்விண்ணும்போற்றிடவிருப்பரிந்த
வேதனும்புகழுநீரான்மெய்ந்நெறித்தலைமைசார்வார். (௯௧)

ஈசனையளப்பில்காலமிதயமேனுன்னிநோற்றே
யாசகனுருவம்பெற்றவன்பினர்போல்வரின்னோர்
வாசவன்முதலோர்போலவரத்தகாரெந்தைபானீ
நேசமில்லாததன்மைநினைந்திலர்போலுமென்ருன். (௯௨)

வேறு.

என்றகாலையிருந்ததக்கன்னிது, நன்றுநாரணனுன்முகனிற்கவீ
ருென்றுசெய்யுமுருத்திரனுதியாய், நின்றதென்கொனிகழ்த்துதியென்னவே. ௯௩

விதிசிரங்கள்வியன்முடிவேய்ந்திடும், பதிசிவன்றன்பதத்துணையுட்கொடு
மதிசிறந்திடவாலிதின்வைகிய, ததீசியென்னுந்தவமுனிசாற்றுவான். (௯௪)

இருவர்தம்மொடுமெண்ணியதன்மையா, லொருவனுனவுருத்திரமூர்த்தியைப்
பெரியனென்றுபிடித்திலையன்னதுந், தெரியவோதுவன்றேர்ந்தனைகேட்டியால்.()

ஆதியந்தமிலாதவெம்மண்ணலுக், கோதுபேருமுருவுமோர்செய்கையும்
யாதுமில்லையிவ்வாற்றினையெண்ணிலா, வேதம்யாவும்விளம்புந்துணிபிஞல். (௯௬)

அன்னதோர்பரத்தன்னறனுனையான், முன்னையாரிருண்மூடத்துண்மூழ்கிய
மன்னுயிர்த்தொகைவல்வினைநீக்குவா,னுன்னியேதன்னுளத்தருள்செய்துமேல்.()

உருவுஞ்செய்கையுமோங்கியபேருமுன், னருளினுற்கொண்டனைத்தையுமுன்பு
போற்,றெரியநல்கித்திசைமுகனுதியாஞ்,சுரர்கள்யாரையுந்தொன்முறையீந்துபின்.

ஏற்றதொல்பணியாவுமிசைத்தவை, போற்றுசெய்கைபுரிந்துபின்யாவையு
மாற்றுகின்றதுமற்றெமக்காமெனச், சாற்றினனத்தகைமையுங்கேட்டிநீ. (௯௯)

வேறு.

அந்தமாதியின்ருகியேயுயிரெலாமளிக்குந்
தந்தையாகியதனக்கன்றிமுழுதடுந்தகைமை
மைந்தராகியவமரரான்முடிவுருமையினு
லெந்தைதன்வயிற்கொண்டனனீறுசெய்யியற்கை. (௪0)

அன்றுதேவர்கள்யாவருமெம்பிரானடியிற்
சென்றுதாழ்ந்தெமக்கிப்பணிபுரிந்தனைசிறியே
மென்றுநீருதுமிப்பரமென்றலுமெங்கோ
னென்றுகூறுதுங்கேண்மினேநீவிரென்றுரைத்தான். (௪௧)

கூஅ

ஆயுண்மற்றுமக்கெத்துணையத்துணையளவு
நீயிரிச்செயல்புரிமின்கள்பரமெனநினைந்தீர்
தூயவித்தையாலீறுளதாக்கியேதொழுது
காயமேற்புனைந்தஞ்செழுத்துன்னுதிர்கருத்தின். (௪௨)

தன்மையிங்கிவைபுரிதிரேலித்தொழிறரிக்கும்
வன்மையெய்துவீரன்றிநங்கலைகளும்மருங்கு
தொன்மையுள்ளனகாட்டிநின்றருளுமாற்றலைவி
னன்மையெய்துவீரென்றருள்செய்தனனம்பன். (௪௩)

அன்னவர்க்கொடேயெவ்வகைச்செய்கையுமளித்துப்
பின்னையுள்ளதோர்செய்கையும்புரியுமெம்பெருமான்
முன்னைவேதங்களவன்றனையைந்தொழின்முதல்வ
னென்னுமற்றிதுதேருதிகேட்டியாலின்னும். (௪௪)

வேறு.

உருத்திரனென்னுநாமமொப்பிலாவரற்குமன்னான்
றரத்தருசிறார்களானோர்தங்கட்குமனையன்பாதங்
கருத்திடையுன்னிப்போற்றுங்கணங்கட்குமவன்றன்மேனி
பரித்திடுவோர்க்குஞ்செந்தீப்பண்ணவன்றனக்குமாமால். (௪௫)

இன்னலங்கடலுட்பட்டோர்யாரையுமெடுக்குநீரா
லன்னரும்பரமமூர்த்தியுருத்திரனெனும்பேர்பெற்றா
னன்னவன்றரவந்தோர்க்குமடியடைந்தோர்க்குமன்னான்
றன்னுருவெய்தினோர்க்குஞ்சார்ந்ததாலவன்றனிப்பேர். (௪௬)

செந்தழலென்னநின்றதேவனுக்குருத்திரப்பேர்
வந்ததுபுகல்வன்கேட்டிவானவர்யாருமீண்டி
முந்தையிலவுணர்தம்மைமுனிந்திடமுயன்றுசெல்ல
வந்தமினிதியந்தன்னையவ்வழியொருங்குபெற்றார். (௪௭)

பெற்றிடுநிதியமெல்லாம்பீடிலாக்கனல்பால்வைத்துச்
செற்றலர்தம்மேற்சென்றுசெருச்செய்துமீண்டுதேவ
ருற்றுழியதுகொடாமலோடலுந்தொடர்ந்துசூழ
மற்றவன்கலுழ்தலாலேவந்ததுமறையுங்கூறும். (௪௮)

ஓதுமாமறைகடம்மிலுருத்திரனெனும்பேர்நாட்டி
யேதிலார்தம்மைச்சொற்றதீசன்மேற்சாராவந்த
வாதிநாயகனைச்சுட்டியறைந்ததும்பிறர்மாட்டேறா
மேதைசாலுணர்வினான்றோர்விகற்பமீதுணர்வரன்றே. (௪௯)

ஓங்கியசுருதிதன்னுளுருத்திரனெனுநாமத்தாற்
றீங்கனலோனையேனைத்திறத்தரையுரைத்தவாற்றை
யீங்கிவண்மொழியலெங்கோற்கியம்பியவிடங்கணாடி
யாங்கவன்றலைமைகாண்டியறைகுவனின்னுமொன்றே. (௫0)

வேறு.

முந்தையோர்பகன்முனிவர்கள்யாவருமுதலோ
டந்தமில்லதோர்பரமிவரவரெனவறைந்து
தந்தமிற்சென்றுவாதுசெய்தறிவருந்தகவா
னோர்ந்துமற்றவர்பிரமனைவினவுவானுவன்றார். (௫௧)

Digitized By Roja Muthiah Research Library

மல்லன்மேருவின்முடிதனின்மனோவதிவைகு
மல்லிவான்கமலத்திடையண்ணலையணுகி
யெல்லைதீர்ந்திடுபரம்பொருளுணர்கிலேமிவரென்
றொல்லைதன்னினீயுரைத்தருள்செய்யெனவுரைத்தார். (௫௨)

உரைத்தவாசகங்கேட்டலுநான்முகத்தொருவன்
கருத்திலிங்கிவைதெளிதரமறைமொழிகாட்டி
விரித்துமென்னினுந்தெளிவுறார்மெய்மையால்விரைவிற்
றெரித்துமிங்கெனவுன்னினனவர்மயறீர்ப்பான். (௫௩)

காற்றலைச்சிறுமாமகன்றனைதன்னலஞ்சேர்
தோற்றமுள்ளுறவுன்னியேவிழிபுனல்சொரிய
வேற்றெழுந்துமீக்கரமெடாவுருத்திரனென்றே
சாற்றிமும்முறைநின்றனன்றெளிதருந்தகவால். (௫௪)

அங்கணான்முக்கண்சூளினாலாதியம்பகவன்
சங்கரன்னெனக்காட்டியேபொடிப்புமெய்தயங்க
வெங்கனற்படுமிழுதெனவுருகிமீமிசைசேர்
செங்கைமீட்டனன்முனிவருக்கிணையனசெப்பும். (௫௫)

வம்மினோவுமக்கோருரைமொழிகுவன்வானோர்
தம்மையெங்களையளித்தனன்மறைகளுந்தந்தான்
மெய்ம்மையாவர்க்குஞ்செய்பணியுதவினன்மேனாண்
மும்மையாகியசெய்கைநம்பாலெனமொழிந்தான். (௫௬)

அருளினீர்மையாலைந்தொழில்புரிபவனாதி
பரமனின்மலனேதுவுக்கேதுவாம்பகவ
னொருவர்பாலினும்பிறந்திடானருவதாயுருவா
யிருமையாயுறைபூரணனியாவர்க்குமீசன். (௫௭)

முற்றுமாயினான்முடிவிற்குமுடிவிற்குமுடிவா
யுற்றுளானென்றுமுள்ளவனனைத்தையுமுடையோன்
மற்றென்னாவுரைப்பரியதோர்சீர்த்தியன்மலர்த்தாள்
பற்றினோர்க்கன்றியுணரவொண்ணாததோர்பழையோன். (௫௮)

அன்னதோர்சிவன்பரமெனமறையெலாமறையு
மின்னுமாங்கவனிலையினைக்கண்ணனும்யானு
முன்னிநாடியுங்காண்கிலமவன்பதியொழிந்தோர்
மன்னுயிர்த்தொகையென்றனனன்னதொன்மலரோன். (௫௯)

அருள்புரிந்துபின்சிவனடிகைதொழுதந்நாண்
மருளகன்றிடுபிதாமகனிருந்தனன்மற்றப்
பொருளினீர்மையைத்தெரிந்துதம்புந்திமேற்கொண்ட
விருளொழிந்தனர்மகிழ்ந்தனர்முனிவரரிசைப்பார். (௬0)

தாதையாயெமையளித்தனையாங்களுன்றனய
ராதலாலெமக்கித்திறந்தேற்றினையடிகே
ளீதலாலின்றுகுரவனுமாயினையென்றே
பாததாமரைவணங்கினர்முனிவரர்பலரும். (௬௧)

Digitized By Roja Muthiah Research Library

அடிவணங்கினர்தமைத்தெரிந்தின்றுதொட்டமலன்
வடிவமுன்னுதிருச்சனைபுரிகுதிர்வயங்கும்
பொடியணிந்துநல்லஞ்செழுத்தியம்புதிர்புரைசேர்
கொடியவெம்பவமகலுதிரெனவிடைகொடுத்தான். (௬௨)

ஆதலாலெங்களீசனேபரம்பொருளல்லா
வேதிலாரெலாமுயிர்த்தொகையாகுமாலிதனைக்
காதலாலுரைத்தேனன்றுவாய்மையேகாண்டி
வேதமேமுதலாகியகலையெலாம்விளம்பும். (௬௩)

அன்றிமுன்னயனுன்றனக்கரன்புகழனைத்து
நன்றுகேட்டிடவுணர்த்தினனீயதுநாடி
நின்றுமாதவம்புரிந்திதுபெற்றனைநினக்குப்
பொன்றுகாலம்வந்தெய்தலின்மறந்தனைபோலாம். (௬௪)

தந்தையேமுதல்யாவருமுடிவுறுந்தகவால்
வந்துநின்னவையிருந்தனர்மாயையான்மருண்டா
யுய்ந்திடும்படிநினைத்தியேலரற்கவியுதவி
யிந்தமாமகம்புரிந்திடுவாயெனவிசைத்தான். (௬௫)

ததீசிப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௫௧௯.

# ததீசியுத்தரப்படலம்.

இந்தவண்ணமத்ததீசிமாமுனிவரனியம்பக்
கந்தமாமலர்க்கடவுள்சேய்நகைசெய்துகானிற்
சிந்துமென்பொடுசிரத்தொகையணியுமோதேவர்
வெந்தசாம்பரும்பூசுமோபரனெனுமேலோன். (௧)

கழிந்ததீயுடலேந்தியேதிரியுமோகானி
லிழிந்தகேசமுந்தரிக்குமோவேனத்தினெயிறு
மொழிந்தகூருமத்தோடுமேற்கொள்ளுமோவுலக
மழிந்திடும்படியுயிர்களைமுடிக்குமோவமலன். (௨)

புலியினீருரியுடுக்குமோதந்தியின்புன்றோல்
வலியதன்புயம்போர்க்குமோசெந்தழன்மழுமா
னிலைகொண்முத்தலைவேற்படையேந்துமோவெங்கும்
பலியுமேற்குமோநிருத்தமுஞ்செய்யுமோபகவன். (௩)

மிக்கசாரதர்படையெனத்திரியுமோவிடமே
கக்கும்வெம்பணிபூணுமோவெண்டலைகலமாச்
செக்கர்மாமுடிதரிக்குமோவம்பரந்திசையா
நக்கனுகுமோவேற்றுருக்கொள்ளுமோநாதன். (௪)

விடையுமேறுமோவாலமுங்கொள்ளுமோவீந்தோர்
சுடலைதன்னினுமாடுமோவொருத்தியைச்சுமந்தோர்
மடமகட்கிடங்கொடுக்குமோமகவையும்பெறுமோ
கடியதோர்குணம்படைக்குமோபரமெனுங்கடவுள். (௫)

Digitized By Roja Muthiah Research Library

ஆதலாலுங்களீசனோர்குணமிலனவனுக்
கீதலின்றியாம்புரிகின்றமகத்தவியெனலு
நாதனைக்கொலோபழிக்குவனிவனெனநகையாக்
கோதின்மாதவமுனிவரனழலெனக்கொதித்தான். (௬)

தீர்த்தனுண்மையையுணர்கிலனிவனொடுசிறிதும்
வார்த்தைகூறுதற்காதுமாலயன்முதல்வானோ
ரார்த்தசங்கத்திலிகழ்ந்தவற்கெதிர்மொழியறைய
வீர்த்ததென்னுளமுணர்த்துவன்சிலவெனவிசைந்தான். (௭)

இந்தவாறிசைந்தெம்பெருமான்றனக்கிவணீ
நிந்தைபோற்சிலகூறினைநிமலனுக்கவைதாம்
வந்தவண்ணமோர்சிறுவதுமுணர்ந்திலைமருண்டாய்
புந்தியில்லதோர்கயவநீகேளெனப்புகல்வான். (௮)

நிலவுகின்றதன்னருளுருக்கொண்டிடுநிமலன்
றலைமைபெற்றிடுபுங்கவர்தம்மைமுன்றந்தே
யுலகம்யாவையுமளித்தருள்செய்திடவுதவி
யலகிலாவுயிர்யாவையுமயன்கணின்றளிப்பான். (௯)

மாயவன்கணின்றவையெலாம்போற்றிமற்றவைக்குத்
தூயதுப்புரவருத்தியேமேல்வினைதொலைச்சி
யாயவற்றிலோர்பற்பலவீடுறவருளி
மேயவாருயிருலகெலாம்பின்னரேவீட்டும். (௧0)

அன்னவேலையிலவையெலாமழித்தபின்னளிப்போ
ரென்னநின்றவர்தம்மையுமொடுக்குறுமிதற்பின்
முன்னருள்ளதோரேகமாயுறையுமெம்மூர்த்தி
பின்னுமிம்முறைபுரிந்திடுமென்றுமிப்பெற்றி. (௧௧)

பரமனிவ்வகையடுந்தொறுமடுந்தொறும்பலவாம்
பிரமனாதியோரென்பினைத்தரிக்குமப்பெரியோர்
சிரமெலாந்தொடுத்தணியலாவணிந்திடுஞ்சிகைதன்
னுரமுலாவுமுந்நூலெனவேயணிந்துறையும். (௧௨)

அல்லதங்கவர்தங்களைமுத்தலையயிலான்
மெல்லவேயெடுத்தேந்திடுமவர்தமைவிழியாற்
றொல்லைநாளினீறாக்கியும்புனைந்திடுந்தூயோன்
மல்லன்மாதவமனையவரியற்றியவகையால். (௧௩)

ஆதலாற்றனைவியப்பதற்கன்றவையணித
லீதலாதொருதிறமுளதியாவருமெவர்க்கு
நாதனேயிவனென்றுதன்பாங்கரேநண்ணித்
தீதெலாமொரீஇமுத்திபெற்றுய்ந்திடுஞ்செயலே. (௧௪)

என்புநீறொடுகெழியுடல்சிகைமுடியெனைத்து
முன்பணிந்திடுமியல்பினைமுழுதுயிர்த்தொகைக்கு
மன்புசெய்திடுஞ்செயலிதுவாமெனவறிநீ
பின்புமுள்ளதுங்கேண்மதியகந்தையாற்பெரியோய். (௧௫)

Digitized By Roja Muthiah Research Library

விண்ணுளோர்க்கெலாமல்லலேவைகலும்விளைத்து
நண்ணுமாடகக்கண்ணினன்முன்னமோர்நாளின்
மண்ணகந்தனைவெளவியேவயிற்றிடைவைத்துத்
துண்ணெனப்பிலம்புக்கனனுயிரெலாந்துளங்க. (௧௬)

கண்டுவானவர்யாவருமஞ்சினர்கரிய
கொண்டன்மேனியம்பண்ணவன்கோகனதத்தோன்
றுண்டமாகியவிடத்தி * லோரேனமாய்த்தோன்றி
யண்டமீதுபோய்வடவரையெனவளர்ந்தார்த்தான். (௧௭)

ஓரிமைக்குமுன்பாதலந்தன்னின்மாலுற்றுக்
கூரெயிற்றினுற்பாய்ந்துபொற்கண்ணனைக்கொன்று
பாரினைக்கொடுமீண்டுமுன்போலவேபதித்து
வீரமுற்றனன்றன்னையேமதித்தனன்மிகவும். (௧௮)

மாலுமப்பகலகந்தையாயுணர்வின்றிமருப்பான்
ஞாலம்யாவையுமழிதரவிடந்தவைநனிசூழ்
வேலைதன்னையுமுடைத்தனனன்னதோர்வேலை
யாலமார்களத்தண்ணல்கண்டெய்தினனங்கண். (௧௯)

கண்டுகண்ணுதலவன்மருப்பொன்றினைக்கரத்தாற்
கொண்டுவல்லையிற்பறித்தலுமுணர்வுமுன்குறுக
விண்டுமற்றதும்பறிப்பனிங்கிவனெனவெருவிப்
பண்டுபோலநின்றேத்தலும்போயினன்பரமன். (௨0)

அன்றுகொண்டதோர்மருப்பினைச்சின்னமாவணிந்தா
னின்றுமங்கவன்மார்பிடைப்பிறையெனவிலங்கு
மொன்றுமற்றிதுகேட்டனைநின்றதுமுரைப்பா
னன்றுதேர்ந்துணர்மறைகளுமித்திறநவிலும். (௨௧)

அடலின்மேதகுதேவருமவுணருமந்நாட்
கடல்கடைந்திடுமெல்லையின்மந்தரங்கவிழ
நெடியமாலதுநிறுவியேபொருக்கெனநீத்தந்
தடவியுள்ளணைந்தாமையாய்வெரிநிடைத்தரித்தான். (௨௨)

தரித்தவேலையவ்வேலையைமதித்திடத்தன்க
ணருத்திமிக்குறுமமிர்தினைத்தருதலுமதனைத்
தெரித்துமற்றிதுநமதெனநமதெனச்செப்பி
மருத்தினன்மையாலமரருமவுணருமலைந்தார். (௨௩)

மலைந்தபோரினைநீக்கலன்மாயனிவ்வரையை
யலைந்தவேலையினிறுவியேவெரிநிடையாற்றி
யுலைந்திடாவகைகாத்துமாலெனப்பெரிதுன்னக்
கலந்ததாலவனுளத்தினிலகந்தையங்கடலே. (௨௪)

அகந்தையெய்தியேயாவையுந்தேற்றலானலைபோய்த்
திகந்தமுற்றிடவேலைகளுழக்கினன்றிரியச்
சகந்தனக்கழிவெய்தலுந்தனதருட்டன்மை
யிகந்தனன்கொலாங்கண்ணனென்றுன்னினனெங்கோன். (௨௫)

* கோகனதத்தோன்றுண்டமாகியவிடத்தில் என்பதற்குப் பிரமனுடைய நாசியினிடத்தில் என்பது பொருள்.

Digitized By Roja Muthiah Research Library

அற்றைநாளவண்வல்லையிலேகியேயரிதன்
முற்றலாமையினுருவினைநோக்கியேமுனிந்து
கற்றைவார்சடைக்கண்ணுதல்யாப்புறக்கரத்தாற்
பற்றியாங்கவனகந்தையும்வன்மையும்பறித்தான். (௨௬)

நினைந்துதொல்லுருக்கொண்டனன்புகழ்தலுநிலவைப்
புனைந்தசெஞ்சடைநின்மலனவுணரைப்போக்கி
யினைந்ததேவருக்கமிர்தினையீகெனவேக
வனைந்தமேனிமான்மாயையாலவுணரைமாய்த்தான். (௨௭)

மாய்த்துவானவர்க்கமுதினைநல்கினன்வையங்
காத்தகண்ணனென்றுரைப்பராலவனுறுகமட
மீத்தயங்கியகாப்பினைவாங்கியேவிமலன்
சாத்தினன்முனமணிந்திடுமெருப்புடன்சார. (௨௮)

வாரிசூழ்புவியகழ்தருகேழலின்மருப்பு
மோரியாமையினோடுமேற்கொண்டதுமொழிந்தாந்
தாருகாவனத்தெம்பிரான்பலிக்குறுதகவுஞ்
சேரவேயவணிகழ்ந்தவுங்கூறுதுந்தெளிநீ. (௨௯)

வேறு.

முன்புதாருகவனத்தின்முனிவரர்யாருமீசற்
கன்பிலராகிவேள்வியளப்பிலபுரிந்துதாமே
யின்புறுமுத்திதன்னையெய்துவானுன்னியங்கந்
துன்புறவாளாநோற்றுத்துணிவினாலொழுகலுற்றார். (௩0)

ஒழுகியவேலைதன்னிலுயிர்க்குயிராகியுற்றோன்
பழுதினையகற்றித்தன்னோர்பாங்கரினுமையாண்மேவ
விழுமியகயிலைநாப்பண்வீற்றிருந்தருள்வோனங்க
ணிழுதையர்புரியுநீர்மையாவையுமுணர்ந்தானன்றே. (௩௧)

முன்னவனிதனைநாடிமுழுதுணர்முகுந்தன்றன்னை
யுன்னினனன்னபான்மையொய்யெனவுணர்ந்துமாலோ
னென்னையுமுதல்வன்றன்பாலெய்துவான்பணித்தானென்னாப்
பன்னகவமளிநீத்துப்பணியினாற்கயிலையுற்றான். (௩௨)

உற்றனனகர்முனெய்தியுணர்த்தியநந்தியுய்ப்பப்
பற்றலர்புரமூன்றட்டபரனடிபணிந்துமுன்போய்
நிற்றலுங்குறிப்பாலங்கணினைத்தனவுணர்த்திமாயன்
பொற்றடஞ்செங்கைபற்றிப்புனிதனாண்டெழுந்துபோந்தான். (௩௩)

கயிலையங்கிரியைநீங்கிக்கண்ணனைநோக்கித்தொன்னா
ளியலுறுநினதுபெண்மையெய்துதியவணீயென்னப்
புயலுறழ்மேனிமாயோன்பொருக்கெனவளப்பில்காமர்
மயலுறுபான்மையங்கோர்மடந்தையாய்மருங்குவந்தான். (௩௪)

வந்திடுகின்றகாலைமாயைசேர்பொருண்மைமுற்றுந்
தந்திடுமுமையுங்காணிற்றளர்ந்துவீழ்பான்மைதானு
மந்தமில்யாணர்மேல்கொண்டாயிடைப்பெயர்ந்தான்முக்க
ணெந்தைதன்வடிவினீர்மையார்விரித்துரைக்கற்பாலார். (௩௫)

Digitized By Roja Muthiah Research Library

முன்பனதுருவையெல்லாமுகனுறுவிழியான்மாந்தித்
துன்புறுமான்மீக்கொள்ளத்துண்ணெனவரியுஞ்சோர்ந்து
மன்புடையருளால்வந்தான்மற்றவன்றனக்குமாலோ
னென்பதோர்பெயருமஞ்ஞான்றெய்தியபோலுமன்றே. (௩௬)

நராரியினுரிவைநீத்துநக்கனேயாகிமுக்கட்
பராபரன்சூலத்தோடுபலிக்கலனங்கைகொண்டு
முராரிதன்பாங்கர்செல்லமுனிவருக்கிருக்கையாகத்
தராதலமதிக்கநின்றதாருகாவனத்திற்புக்கான். (௩௭)

புக்கனன்மாலைநோக்கிப்போந்துநீநமையெண்ணாது
தொக்குறுமுனிவர்வைகுஞ்சூழல்கடோறுநண்ணி
மிக்கமால்பூட்டியன்னோர்விரதங்கண்மாற்றிநந்தம்
பக்கநீவருதியென்னப்பகர்ந்தனன்விடுத்துச்சென்றான். (௩௮)

விடுத்தலுமுராரியேகிவேள்வியுந்தவமுந்தாமே
கொடுத்திடுமுத்தியென்னுங்கொள்கைசேர்முனிவர்யாரு
மடுத்திடுமவைக்கணெய்தியவைவயிலநங்கர்வல்லே
தொடுத்திடுசரங்களேபோற்றனைவிழிபரப்பிநின்றான். (௩௯)

கண்டனர்முனிவரம்மாகதுமெனக்காமவேட்கை
கொண்டனர்விரதநோன்மைகுலைந்தனர்மகத்தின்செய்கை
விண்டனர்மதனீர்பாயமெலிந்தனர்வெதும்பிவேழ
முண்டிடுகனி * யாமென்னவுணர்வுபோயுருகாநின்றார். (௪0)

ஆலமார்கண்டத்தெந்தையருளினான்மாயோன்கொண்ட
கோலமார்வடிவமெல்லாங்குறிப்புடனோக்கிநோக்கிச்
சீலமாமனைத்தும்வீட்டிச்செழுஞ்சுடர்மலர்ச்சிகண்ட
வோலமார்விட்டிலென்னவொல்லெனவந்துசூழ்ந்தார். (௪௧)

பார்கொலோவிசும்புகொல்லோபங்கயன்பதியோகாம
னூர்கொலோமுகுந்தன்வைகுமுலகமோவுறையுளன்றே
னீர்கொலோவமரர்க்காகநிருதரைத்தொலைத்தீரும்மை
யார்கொலேவுணருகிற்பாரடியருக்கருளுமென்றார். (௪௨)

என்றிவைபலவும்பன்னியிடருழந்தெரியிற்பட்ட
மென்றளிரலங்கலென்னவெதும்பியேவிரகத்தீயாற்
பொன்றினர்போன்றுநின்றார்பொருவருமுனிவர்பொன்னார்
கொன்றையஞ்சடையோன்செய்தசெயலினைக்கூறலுற்றேன். (௪௩)

கண்ணனைவிடுத்துத்தானோர்கலனொடுசூலமேந்தி
யெண்ணருமுனிவர்வைகுமிருக்கையின்மறுகுசென்று
பண்ணிசைமறைகள்பாடியையமேற்படர்வார்போன்று
னுண்ணிகழுணர்வாயென்றுமுயிரினுக்குயிராய்நின்றான். (௪௪)

பாட்டியலிசையையங்கண்முனிவர்தம்பன்னிமார்கள்
கேட்டலுமெவர்கொலம்மாகிடைத்தனரவரைக்காண்பான்
வேட்டனவிழிகளின்னேவிரைவினிற்சேறுமென்னா
வீட்டமொடெழுந்துவீதியெய்தியங்கிறைவற்கண்டார். (௪௫)

* வேழமுண்டிடுகனி என்பதற்கு வேழம் என்னும் நோய்பிடித்த விளாங்கனி என்பது பொருள். வேழம் என்னும் நோய்பிடித்த விளாங்கனி உள்ளீடின்றியிருக்குமெனவுணர்க.

Digitized By Roja Muthiah Research Library

கண்ணுறுமாதர்யாருங்காமனைங்கணையின்மூழ்கி
யுண்ணிகழுணர்வுமாழ்கவுயிர்பதைபதைத்துச்சோர
வண்ணறன்காதலென்னுமாழ்திரைப்பட்டாரன்னார்
பண்ணியசெய்கைதன்னிற்சிறிதியான்பகர்தலுற்றேன். (சசு)

வேறு.

காயமேலணிகண்டிலமித்தவர், தூயபாடலைத்துண்ணெனக்கேட்டனு
மேயகாமத்தின்வீழ்ந்தனமாலையான், மாயமேயிவ்வடிவமென்பார்சிலர். (சஎ)

ஐயர்செய்கையறிந்தனமிவ்விடைப், பையவந்துபலிதனைக்கேட்பது
மெய்யதன்றிதுமெல்லியலார்தமை, மையல்செய்திடவந்ததென்பார்சிலர். (சஅ)

நன்றுநன்றிந்தநற்றவர்க்காந்துகி, லொன்றுநல்கியுணவளித்தோவிலா
மன்றலின்புறன்மங்கையரேவரு, மின்றுகொல்லென்றிரங்குகின்றார்சிலர். (சகூ)

மாறிலாவிவ்வனத்திடைவந்தனன், வேறொரூரிடைமேவிலன்போலுமாற்
றேறில்யாமுனஞ்செய்திடுசெய்தவப், பேறிதாமெனப்பேசுகின்றார்சிலர். (ருo)

ஈண்டுவந்தவிருந்தவன்யாரையும், வேண்டலன்னிதுமெய்மையவன்பதம்
பூண்டுகாதலிற்போற்றுநர்போலமெய், தீண்டுதும்மெனச்செப்புகின்றார்சிலர். (ருக)

பூணிலங்கியபொற்றொடிசங்கின, மாணுறுந்துகின்மற்றிவைசோர்தலுங்
காணுகின்றனர்கைநெரித்தஞ்சியே, நாணிவீதிநடுவிருந்தார்சிலர். (ருஉ)

ஏமம்பாயமெய்யெங்கணுங்காமவே, மேம்பாய்வைசூழ்ந்துயிர்வாட்டிட
வாமம்பாய்புனல்போன்மயிர்க்காறொறுங், காமம்பாயக்கலுழுகின்றார்சிலர். (ருங)

பாசநீங்கிப்பரபதமீதென, வாசையோடுகண்டன்புசெய்வாரென
வாசநீங்கிவளையுகுத்தையர்தங், கோசநோக்கினர்கும்பிடுவார்சிலர். (ருச)

இளையினோடுறுமெந்தைதன்வேட்கையாற், களையினோடுகதுமெனச்சென்றுபா
லளையினோடுறுமோதனமங்கைவீழ், வளையினோடுவழங்குகின்றார்சிலர். (ருரு)

பாவைமார்முன்பலிக்குறுந்தன்மையா, ளீவியின்றியிந்நெற்றியங்கண்ணுதன்
மேவுநந்துகில்வீழ்கினும்வீழுக, வேவமோவெமக்கென்றுரைப்பார்சிலர். (ருசு)

போயநாணம்புகுந்ததுமாளுளர், தீயுமானிறைசிந்தியதாருயிர்
வீயுமெய்யும்விளிந்திடுமெம்முயி, ரீயுமெங்களுக்கென்றுரைப்பார்சிலர். (ருஎ)

தண்டுலங்கொறவத்தரிரப்பெனக், கொண்டுசென்றுகுறுகினர்காமமா
மண்டுதீச்சுடவண்பொடியாதலு, மண்டர்நாயகன்போலணிந்தார்சிலர். (ருஅ)

வடிவிலுலெமைமாலுறுத்தாளுமென், றடியில்வீழினுமாரருள்செய்கிலர்
கடிதுபோவதுபோலுங்கருத்திவர்க், கிடுகிலீரையமென்றுரைப்பார்சிலர். (ருகூ)

ஆரமற்றனராரமும்வீழமெய், யீரமற்றனரீரமதன்படை
தீரமற்றனர்தீரவுமேகலா, பாரமற்றனர்பாரமற்றார்சிலர். (சுo)

சூலமுண்டுசுடர்விழிமேனிமிர், பாலமுண்டுபடர்சடையுண்டுசெங்
கோலமுண்டுகுறைமதியுண்டிவ, ராலமுண்டவராகுமென்பார்சிலர். (சுக)

எந்தையார்தம்மிருங்குறியின்கணே; சிந்துகின்றதிவலையொன்றல்லவோ
வுந்திமேல்வந்துலகனைத்துந்தரு, மந்தரான்முகனெதென்பார்சிலர். (சுஉ)



Digitized By Roja Muthiah Research Library

சங்குமாழியுந்தாங்குதலின்றியே, பொங்குகாமரம்பொன்னந்துகிலொரீஇத்
துங்கமாதவர்துண்ணெனமால்கொள, வங்கண்மேவுமரியையொத்தார்சிலர். (சுங)

கட்டுசெஞ்சடைக்கண்ணியினுள்ளகப், பட்டமானெனப்பார்த்தகண்வாங்கலர்
சட்டுவந்தனிற்றுங்கியவோதன, மிட்டுவெள்ளிடையேமருவார்சிலர். (சுச)

கிளியின்மேற்செலுங்கேழ்கிளரோதிமங் *, களிமயக்குறுகாளகண்டத்திறை
வெளியின்மேனியுமெய்ப்படுகோலமுந், தெளிகிலாதுதெருமருவார்சிலர். (சுரு)

அளியினட்டவடிசில்கொண்டாயிடைக், களிமயக்கங்கருத்துறவேகியே
யொளியினுக்கொளியாகியுள்ளாருரு, வெளியினுக்குவிரைந்தளிப்பார்சிலர். (சுசு)

அண்ணன்மேனிகண்டார்வமுற்றுடைபோய்ப், பெண்ணினீர்மைப்பெருங்குறி
மூடியுங், கண்ணைமூடியுங்கைக்கடங்காமையால், விண்ணைமூடினர்போல்வெள்கி
னார்சிலர். (சுஎ)

விருந்தராயிவண்மேவினிர்விண்ணவர், மருந்துபோல்வதொர்வண்பதமுண்டவை
யருந்தியேநல்லருள்புரிந்தோரிறை, யிருந்துபோமென்றிசைத்திடுவார்சிலர். (சுஅ)

கையிலேந்துகலனொடுசூலமும், வையநம்மனைவந்திடும்பாலொடு
நெய்யுமுண்டியுநிற்றலுமுண்டியா, முய்யநீரிங்குறையுமென்பார்சிலர். (சுகூ)

பார்க்குமாதர்க்கும்பல்குழுவாடவ, ரார்க்குமையலளிக்கும்வடிவுளீர் [ப்பார்சிலர்.
சீர்க்குமோடொன்றுசெங்கைகொண்டெங்கணு, மேற்குமோவிதென்னென்றுரை

இன்றுமைக்கண்டியாங்களுமாடைபோ, யொன்றுகாதலுற்றேய்ந்தனமிங்கிது
நன்றுகூடுதிர்நங்களைநீரென, நின்றுகூறிநெடிதுயிர்த்தார்சிலர். (எக)

நந்துமிவ்வனநண்ணியமாதவ, ரிந்தவேலையிலேகலர்யாவதுஞ்
சிந்தைகொள்ளலிர்சேக்கையுண்டோரிறை, வந்துபோமெனவாய்மலர்ந்தார்சிலர்.

எம்மையாரிடமாதரென்றெண்ணியோ, வெம்மைபேசினுமேவுகிலீர்பவ [ர்.
மும்மைமேவுங்கொலோவொழிந்தார்கள்போ, லம்மவந்தெமையாளுமென்பார்சில

ஆடைதாருமதன்றெனிற்கொண்டதோர், வேடைதீரும்விளம்புகிலீரெனிற்
கூடவாருங்குறிப்புமக்கென்னெனப், பாடுசேர்ந்துபகர்ந்திடுவார்சிலர். (எச)

ஒல்லுகின்றதுமக்கிவ்வடிவினுற், செல்லுகின்றதெரிவையர்யாரையுங்
கொல்லுகின்றதுவோபலிகொள்வதோ,சொல்லுமென்றுதொடர்ந்திடுவார்சிலர். ()

போற்றியிங்கெமைப்புல்லுமென்றுலுமா, லாற்றியின்பத்தணைகிலிர்யாவருஞ்
சாற்றுகின்றனர்சங்கரரென்றுமை, யேற்றதோவதற்கென்றுரைப்பார்சிலர். (எசு)

அணங்கினல்லவரண்ணறன்கோசமே, னுணங்குமாலொடுநோக்கியதற்குமுன்
வணங்குமாறெனமற்றவர்நாணுபு, கணங்களோடுகவிழ்ந்துசென்றார்சிலர். (எஎ)

வேறு.

இன்னவர்பலருஞ்சூழாவீண்டுபுகலையுஞ்சங்குந்
துன்னியகலனுநாணுந்துறப்பருங்கற்புஞ்சிந்தி
மன்னுயிரொன்றுந்தாங்கிமால்கொடுதொடரவெங்கோன்
பொன்னடிக்கமலஞ்சேப்பப்புனிதமாமறுகிற்போனான். (எஅ)

* கிளியின்மேற்செலுங்கேழ்கிளரோதிமம் என்பதற்குத் திலோத்தமையாகிய கிளியின்மேலாசைகொண்டு தொடர்ந்துசெல்லும் அழகுபொருந்திய பிரமாவாகிய அன்னம் என்பது பொருள்.

Digitized By Roja Muthiah Research Library

சில்லிடைவீணைநாதஞ்செய்திடுமஃதேயன்றிச்
சில்லிடைமறைகள்பாடுஞ்சில்லிடைச்சிவநூலோதுஞ்
சில்லிடைத்தன்மெய்காட்டுஞ்சில்லிடையையங்கேட்குஞ்
சில்லிடையன்பர்போற்றன்சீர்த்தியைப்புகழ்ந்துசெல்லும். (எகூ)

தேமலர்க்கமலையன்னதெரிவையர்தொழுங்காலீசன்
மாமலர்த்தாண்மேலிட்டமலர்களுமன்னார்சிந்துந்
தூமலர்த்தொடையுஞ்சங்குந்துலங்குபொற்கலனுங்காமன்
பூமலர்த்தொடையுமீண்டப்பொலிந்ததப்புனிதவீதி. (அ0)

ஊனுலாமுயிர்கட்கெல்லாமுணர்வுடனுயிராய்நின்றோன்
வானுலாம்பலிக்குவந்தவடிவினைநினைக்கின்மாயோன்
றானுமாலாகியின்னுந்தளர்வுறுமென்றாலம்மா
வேலையோர்செய்கைதன்னையினைத்தெனவியம்பலாமோ, (அக)

செந்திருவனையமேனிச்சீறடிக்கருங்கட்செவ்வாய்ப்
பைந்தொடிமகளிர்கற்பாம்பரவைகண்மதிக்குமெண்ணின்
மந்தரம்போன்றானெங்கோன்மற்றவர்க்கெல்லாம்வெவ்வே
றிந்திரஞாலமென்னவெல்லையிலுருக்கொண்டெய்தி. (அஉ)

நீண்டவங்கிகமம்புக்கநிமலன்மேலார்வம்வைத்துக்
காண்டகுமாதர்யாருங்கருவுறுநிலையராகி
மாண்டகுவயாவுமற்றோர்வருத்தமுமின்றியாங்கே
யாண்டகைமகார்களாகவாறெண்ணாயிரரைப்பெற்றார். (அங)

எந்தைபால்விழைவுசெய்தாங்கிமைப்பினின்மடவாரீன்ற
மைந்தர்கள்யாருமையன்மலரடிமுன்னர்த்தாழ்ந்து
புந்திகொளன்பினின்றுபோற்றிடவனையனீவிர்
நந்தமையுன்னியீண்டுநற்றவத்திருத்திரென்றான். (அச)

நெட்டிருஞ்சடிலமீதுநிலவினைமுடித்தவண்ணல்
கட்டுரைசெய்தல்கேளாக்கைதொழூஉவிடைபெற்றேகி
யுட்டெளிவெய்திநோற்றாங்கொருசிறையிருந்தார்நாற்பா
னெட்டுளபத்துநூற்றினெண்டொகைமுனிவர்யாரும். (அரு)

சேயெனவந்தோர்நோற்பச்சென்றுழித்தெரிவைமாரா
மாயிரும்பரவைநீத்தமால்கொடுதொடர்ந்துசெல்லப்
போயினனென்பமன்னோபுரியிகந்தரிமுன்னீந்த
வாயிரங்கமலங்கொண்டோராழியையளிக்கவல்லோன். (அசு)

போதலுமதனைநோக்கிப்பொற்றொடியாகிநின்ற
சீதரனமலன்றன்பாற்சேறலுந்தொடர்ந்துபின்னர்
மாதவர்யாரும்போந்தார்மற்றதனியல்புநோக்கி
னேதமில்கங்கைபாலாம்யமுனையைக்கடுத்ததன்றே. (அஎ)

மெல்லியல்வடிவமாகிமேயினோன்றன்பால்வீழ்ந்து
செல்லுறுமுனிவராற்றத்தீவினைபுரிந்தநீரா
லல்லுறழ்மிடற்றுப்புத்தேளவர்க்கெலாந்தனதாயுள்ள
தொல்லுருமறைத்துவேறோர்வடிவொடுதோன்றிநின்றான். (அஅ)

Digitized By Roja Muthiah Research Library

மடந்தையாய்வந்தமாலோன்மணிமிடற்றிறைவன்றன்பா
லடைந்திடமுனிவர்தத்தமரிவையர்தம்மைநோக்கித்
தொடர்ந்தனரிவருநம்போற்றேற்றனர்கலையுநாணுங்
கடந்தனரிவனைக்கண்டுகாதலித்தார்கொலென்றார். (அகூ)

மோனமாநெறியினோற்குமுனிவரர்முகுந்தன்றன்பா
லானமால்சிறிதுநீங்கியருங்குலப்பன்னிமார்க
ளீனமாநிலையைநோக்கியின்னலுற்றிரங்கியேங்கி
மானமேல்கொண்டுவீடாமன்னுயிரோடுநின்றார். (கூ0)

பொன்னுலாமல்குலாளிப்பொற்றொடியொருத்தியெம்பான்
மன்னியேதவத்தைச்சிந்திமால்செய்தாளொருவன்வந்து
பன்னிமார்கற்பைவீட்டிப்படுத்தினன்மோகமந்தோ
வென்னமாயங்கொலீதென்றெண்ணினர்யாருமீண்டி. (கூக)

எண்ணியமுனிவர்தேறியியம்புவார்கயிலைவைகுங்
கண்ணுதலாகுமின்னோர்கற்பினையுடைத்தான்யாமுன்
பண்ணியதவத்தைவீட்டப்பைந்தொடியாகிவந்தோன்
மண்ணுலகனைத்துமுண்டமாயவன்போலுமன்றே. (கூஉ)

நந்தவந்தன்னைவீட்டநாரணன்றானேநம்பால்
வந்தனனன்றாலீசன்பணியினான்மாயைசெய்தா
னிந்திரைகேள்வன்செய்ததென்கொலோவெமதுநோன்பு
சிந்தினுநன்றாலின்னுந்தீர்வுநேர்ந்தியற்றுகின்றோம். (கூங)

அங்கையிற்கபாலொன்றேந்தியையமேற்றிடுவான்போலச்
சங்கரன்வந்துமற்றித்தாருகாவனத்தின்மேவு
மங்கையர்கற்புச்சிந்தும்வசையுரைக்கொழிவுமுண்டோ
செங்கதிர்மதியஞ்செல்லுந்திசையெலாம்பரவுமன்றே. (கூச)

தானொருவேடங்கொண்டுந்தண்டுளவலங்கற்சென்னி
வானவன்றன்னைவிட்டுமற்றிவையனைத்துஞ்செய்தோன்
கானுறுகடுக்கைவேய்ந்தகண்ணுதலேகொலென்றே
மானவெங்கனலுஞ்சீற்றவன்னியுங்கிளரநின்றார். (கூரு)

நின்றிடுமுனிவர்யாருநெருப்பெழவிழித்துச்செம்பொற்
குன்றுறழ்முலையினார்தங்குழுவினைக்கூவியார்பின்
சென்றிடுகின்றீர்கற்பின்செய்கையதிகந்தீரிங்நன்
பொன்றுதலழகிதன்றேற்போமினும்புரியினென்றார். (கூகூ)

இத்திறமாதர்கேளாவீங்கிவர்தம்மைக்கண்டோர்
முத்தராயுறுவதன்றிமுடிவரோமுனிவர்தாமும்
பித்தர்கொலென்றேயன்னான்பிறங்குருவினையுட்கொண்டு
நித்தனதருளான்மீண்டுநீணகரிருக்கைபுக்கார். (கூஎ)

நீணகர்புகுந்தபின்னர்நேரிழைமகடூஉவாகித்
தாணுவினயலினின்றதண்டுளவலங்கற்புத்தே
ளாணுவினுருவுகொண்டானருளினாலனையதன்மை
காணியவிரிஞ்சனாதிக்கடவுளர்யாரும்வந்தார். (கூஅ)

Digitized By Roja Muthiah Research Library

கடவுளர்யாரும்வந்தகாலையிலங்கணின்ற
முடிவறுமுதல்வன்றன்னைமுனிவொடுநோக்கியீண்டு
கொடியதோர்வேள்வியாற்றிக்கொல்லுதுமிவனையென்னா
மடமைகொண்முனிவர்சூழ்ந்துமற்றோர்தீமகத்தைச்செய்தார். (௯௯)

எள்ளுதற்குரியவேள்வியெரியதனிடையேயாரு
முள்ளுதற்கரியதோற்றத்துருமிடிக்குரலபேழ்வாய்த்
தள்ளுதற்கரியசீற்றத்தழல்விழித்தறுகட்செங்கால்
வள்ளுகிர்ப்புலியொன்றம்மாவல்லையினெழுந்ததன்றே. (௧௦௦)

எழுதருபுலியைநோக்கியீசனைமுடித்தியென்றே
தொழுதனர்விடுப்பவாங்கேதுண்ணெனவருதலோடு
மழல்விழிப்பரமனேர்போயங்கையாலுரித்துமற்றவ்
வுழுவையந்தோலைமுன்னமுடுத்தனன்றானையொப்ப. (௧௦௧)

இங்கிதுபோயபின்றையிறுதிசெய்கணிச்சியொன்று
செங்கனலிடையிற்றோன்றித்தீயவர்விடுப்பவேகிச்
சங்கரன்றனதுமுன்னஞ்சார்தலுமதனைப்பற்றி
யங்கையிலேந்திநம்மடுபடையாதியென்றான். (௧௦௨)

பின்னுறவொருமானங்கட்பிறந்ததுமுனிவரெல்லா
மன்னதையரன்பாலுய்ப்பவந்தரத்தெழுந்துபாய்ந்து
தன்னெடுங்குரலால்வல்லேசராசரம்வீட்டிச்செல்ல
முன்னவனுயிர்களற்றான்முடிவுறாதருட்கண்வைத்தான். (௧௦௩)

மற்றதன்பின்றையெந்தைமான்பிணையதனைநோக்கித்
தெற்றெனவிளித்துநந்தஞ்செவியினுக்கணித்தாய்மேவி
நிற்றலுங்கூவுகென்றேநீடருள்செய்துவாமப்
பொற்றடங்கையிற்பற்றிப்பொருக்கெனவேந்திநின்றான். (௧௦௪)

ஏந்தியபின்னர்வேள்வியெரியழற்கிடையேயெண்ணில்
பாந்தளங்கெழுந்துதீயோர்பணியினாற்சீற்றத்தோடும்
போந்தனவவற்றைமாயோன்புள்ளினுக்கஞ்சித்தன்பாற்
சேர்ந்திடுபணிகளோடுஞ்செவ்விதிற்பூணைந்தானெங்கோன். (௧௦௫)

பணியெலாம்பணியதாகிப்பரனிடைத்திகழப்பின்ன
ரணிகெழுகனலினாப்பணசனிகளெழுந்தாலென்னக்
கணிதமில்பூதவெள்ளங்கதுமெனவெழலுநீவிர்
மணிகிளர்மிடற்றோன்வன்மைமாற்றுதிரென்றேயுய்த்தார். (௧௦௬)

ஆரிடரேவல்போற்றியண்டமுந்துளங்கவார்த்துச்
சாரதர்வருதலோடுஞ்சங்கரனவரைநோக்கி
நீரெமையகன்றிடாதுநிற்றலுந்தானையாகிச்
சேருதிரென்றானுற்றோர்தீவினைதீர்க்கவல்லான். (௧௦௭)

ஆற்றல்சேர்பூதர்யாருமாதியீதுரைப்பவன்னாற்
போற்றியேதானையாகிப்புடையுறநிற்றலோடுஞ்
சீற்றமாமுனிவர்வேள்வித்தீயில்வெண்டலைதானொன்று
தோற்றியேயுலகம்யாவுந்தொலையநக்கெழுந்ததன்றே. (௧௦௮)

Digitized By Roja Muthiah Research Library

நக்கெழுசிரத்தையன்னோர்நாதன்மேல்விடுத்தலோடு
மக்கணமனுகவற்றாலகிலமதிறவாவண்ண
முக்கணனருள்செய்தந்தமுண்டமுண்டகக்கைபற்றிச்
செக்கரஞ்சடைமேற்கொண்டுன்செயலினைப்புரிதியென்றான். (க0கூ)

அறுகுறைமுடிமேற்கொண்டவமலனைநோக்கிநோக்கி
மறுகியமுனிவர்தத்தம்வாய்மைமந்திரங்களேவி
யிறுதிசெய்திடுதிரென்னவினையவைதுடியொன்றாகிச்
செறிதருபுவனம்யாவுஞ்செவிடுறவொலித்ததன்றே. (கக0)

பொருவருந்துடியினோதைபொம்மெனக்கேட்டலோடுந்
தரணியின்வானினுள்ளசராசரம்யாவுமீச
னருளினால்வீடிற்றில்லையசனியினார்ப்புக்கேட்ட
வுரகர்தங்குலங்களென்னவொய்யெனமயங்கிற்றன்றே. (ககக)

அத்துடியார்த்துச்செவ்வேயமலன்முன்னணுகமற்றைக்
கைத்தலமதனிற்பற்றிக்கறங்குதிகன்னத்தென்று
வித்தகமரபில்யாரும்வியப்புறவேந்திநின்றா
னித்திறம்யாரேசெய்வாரென்றனர்முனிவரெல்லாம். (ககஉ)

இனையதுகண்டுபின்னுமிறுதிசெய்யிறைவற்கின்றா
லினையதென்றறிதரேற்றாரடுசினங்கடவத்தொல்லூழ்
வினையதுவிளைவாற்பின்னும்வேள்வியையியற்றலுற்றார்
முனிவரர்கனற்கணேயோர்முயலகனெழுந்ததன்றே. (ககங)

முயலகன்றனைநோக்கிமுகமனுஞ்சொற்றுத்தங்கள்
செயலகன்றிருந்தவேள்வித்தீயையும்விளித்துநந்த
மியலகன்றிடவேசெய்தவீசனைமுடித்திரென்றே
யயலகன்றிலாதாருய்ப்பவல்விரைந்தணைந்தவம்மா. (ககச)

வன்னியர்தேவுமுட்கவந்திடுகனலையார்க்கு
முன்னவனொருகையேந்திமுயலகன்றனைமெல்லத்
தன்னடியதனால்வீழத்தள்ளியக்கமலத்தாளை
வென்னிடையருளாலூன்றிவிண்ணவர்போற்றநின்றான். (ககரு)

நிற்றலுமதனைத்தீயோர்நெருப்பெழவிழியாவின்னு
முற்றனன்பரமனந்தோவுஞற்றியாமுய்த்தவெல்லா
மிற்றனகொல்லோவென்றேயிரங்கியேயெண்ணில்சாபஞ்
சொற்றனருலகமெல்லாந்தொலைப்பவன்றலையவென்றே. (ககசு)

சங்கையின்முனிவர்யாருஞ்சாற்றியசாபம்யாவு
மெங்கடம்பெருமான்முன்னுமெய்தியதில்லையன்னோ
ரங்கவன்றன்பாலுய்க்குமளவையிலிறுதிநாளிற்
பொங்கெரியதன்மேற்செல்லும்பூளைபோன்மாய்ந்தவன்றே. (ககஎ)

சாபமும்பயனின்றாகத்தவத்தர்கள்யாருங்கொண்ட
கோபமுநீங்கியாற்றல்குறைந்தொருசெயலுமின்றிச்
சோபமுநாணுங்கொண்டுதுளங்கியேதொலைவிலாத
பாபமும்பழியும்பூண்டுபடிக்கொருபொறையாய்நின்றார். (ககஅ)

Digitized By Roja Muthiah Research Library

ஏற்றமின்முனிவர்தங்களேழைமைதனையென்னென்று
சாற்றுதுமிறுதியில்லாத்தாணுவைமுடிப்பான்வேள்வி
யாற்றினர்பலவுமுய்த்தாரறைந்தனர்சாபமற்ருன்
மாற்றிடவற்ருேதங்கள்வன்மையுமிழந்தார்மாதோ. (௧௧௯)

கடுக்கையுநதியும்பாம்புங்கலைமதிக்கொழுந்துஞ்சென்னி
முடித்தவன்பதத்திலூன்றுமுயலகன்மெல்லமெல்ல
வெடுத்தெடுத்தசைத்தலோடுமேதுவங்கதனைநோக்கி
நடித்தனனென்றுநீங்காநடம்புரிகின்றதேபோல். (௧௨0)

ஆண்டவணிமையாமுக்கணுதிநாயகனஞ்ஞான்று
தாண்டவம்புரிதலோடுஞ்சகமெலாந்துளங்கிற்றங்க
ணீண்டியவுயிர்களச்சுற்றிரங்கியநடுக்கமெய்தி
வீண்டனர்வேள்விசெய்துவினையினையீட்டும்வெய்யோர். (௧௨௧)

நஞ்சணிகண்டத்தெந்தைநடநவில்செய்கைதன்னைக்
கஞ்சனுமாழியானுங்கண்டுகண்களித்துப்போற்றி
நெஞ்சகமகிழ்ந்துபாங்கர்நின்றனர்மகவான்றன்னே
டெஞ்சியவமரர்யாருமிறைஞ்சுவார்போலவீழ்ந்தார். (௧௨௨)

அருளொடுநிருத்தஞ்செய்யுமண்ணலிப்புவனம்யாவும்
வெருவுறுசெயலும்வீழும்விண்ணவரயர்வுநோக்கித்
திருநடமொழிந்துநிற்பத்தேவருந்தேவர்கோனும்
பரிவுடனெழுந்துநின்றுகைதொழுஉப்பாங்கருற்ருர். (௧௨௩)

மாதொர்பாகத்தோன்றன்னைமதித்திடாமுனிவர்க்கெல்லாம்
போதமேயருளலோடும்பொருக்கெனவெழுந்துபொல்லா
வேதமேயியற்றுகின்றவெம்பெரும்பிழைகள்யாவு
நாதநீபொறுத்தியென்றுநடநவில்கழன்முன்வீழ்ந்தார். (௧௨௪)

பொறுத்தியெம்பிழையையென்றேபோற்றிசெய்முனிவர்தங்க
டிறத்தினைநோக்கிநந்தஞ்செந்நெறியொழுகித்தீய
மறத்தினையகற்றிமேலைமாதவம்புரிதிரென்று
நிறுத்தினனடையாதார்க்குநீடருள்புரியுநித்தன். (௧௨௫)

முனிவரைநிறுவியங்கண்முக்கணன்மீண்டுவெள்ளிப்
பனிவரையேகிமாலும்பங்கயத்தவனும்வானே
ரனைவருந்தத்தம்பாலிலடைந்திடவருளியம்பொற்
புனையிழையுமையினேடும்பொருந்திவீற்றிருந்தானன்றே. (௧௨௬)

உரித்திடுமுழுவைவன்ருேலுரிமுதலுள்ளவெல்லாந்
தரித்ததுமெங்கணுதன்ருருகாவனத்திலன்று
நிருத்தமதியற்றிநின்றநீர்மையும்பிறவுமெல்லாம்
விரித்திவணுரைத்தாங்கேட்டிமேலதுமியம்புகின்ரும். (௧௨௭)

வேறு.

துங்கமால்கரியாக்கையினுலகெலாந்தொலைக்கும்
வெங்கயாசுரனென்பவன்மேருவின்மிசைபோய்ப்
பங்கயாசனற்போற்றிசெய்தருந்தவம்பயில
வங்கணுடியேதோன்றினனுலகெலாமளித்தோன். (௧௨௮)

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106

Digitized By Roja Muthiah Research Library

வேண்டுகின்றதென்மொழிகெனநான்முகன்விளம்ப
வாண்டுநோற்றிடுங்கயாசுரனென்றனக்கடிகேண்
மாண்டிடாதபேராயுளுமாற்றலும்வயமு
மீண்டுநல்குதியென்றலுநகைத்திவையிசைப்பான். (௧௨௯)

இந்தவண்ணநீவேண்டியதளித்தனமிகலி
லந்திவண்ணனேர்சென்றிடல்சேறியேலந்நாட்
சிந்துமிவ்வரங்கடைப்பிடியீதெனச்செப்பி
யுந்திவந்தவன்போயினன்றனதுபேருலகில். (௧௩0)

அன்னகாலையிற்கயாசுரனென்பவனயன்சொ
லுன்னியீசன்மேற்போகலமொழிந்தவர்தம்பாற்
றுன்னிவெஞ்சமராற்றியெவ்வுலகமுந்தொலைத்தே
யின்னலேபுரிந்திருத்துமென்றுன்னியேயெழுந்தான். (௧௩௧)

எழுதல்கொண்டிடுமவுணர்கோனமரர்கள்யாருங்
குழுமியேயமர்வான்பதந்தொறுந்தொறுங்குறுகி
வழுவியேயவர்முரிந்திடப்பொருதுமற்றவரூர்
முழுதுமட்டுமாசுவர்க்கமேலேகினன்முனிவால். (௧௩௨)

போகியோடமராற்றியேயன்னவன்புறந்தந்
தேகவேதுரந்துயர்த்திடுநான்மருப்பியானைத்
தோகைவானுதிபற்றியேபன்முறைசுலவி
மாகயாசுரனேச்சினன்மகபதிமயங்க. (௧௩௩)

பின்னரன்னதோர்பொன்னகரழித்தனன்பெயர்ந்து
தன்னுமெண்டிசைக்காவலர்தமையெலாந்துரந்து
தன்னினங்களாமவுணர்கடம்மையுஞ்சாடி
வன்னியஞ்சிகையரக்கர்தங்குழுவையுமாய்த்தான். (௧௩௪)

மஞ்சுநேர்தருகயாசுரன்புவிமிசைவைகி
வெஞ்சினங்கொடேமக்கடந்தொகையெலாம்வீட்டி
நஞ்சமாமெனத்திரிதலுநாடிநற்றவர்க
ளஞ்சியோடியேயரனமர்காசியையடைந்தார். (௧௩௫)

அருந்தவத்தர்களடைதலுங்கயாசுரனவரைத்
துரந்துகாசியிற்சென்றிடவிலையவர்துளங்கித்
திருந்துமந்நகர்வாணர்தங்கிளையொடுஞ்செறிந்து
விரைந்துபோய்மணிகன்னிகைபுகுந்தனர்வெருவி. (௧௩௬)

இனிதுவித்தியதம்பயனீவதேயென்னத்
தனதுமந்திரமுடிபவர்செவியிடைச்சாற்றிப்
புனிதமாயதன்னுருத்திரவடிவருள்புரியு
மனகநாயகற்பணிந்துநின்றின்னவாறறைவார். (௧௩௭)

வெய்யதந்தியாய்வந்தொருதானவன்விரைவில்
வையகத்தையட்டெம்மையுங்கொல்லியவருவா
னையநின்னதாளரணமென்றடைந்தனமடியே
முய்யவேயருள்புரியெனப்போற்றியேயுறலும். (௧௩௮)

Digitized By Roja Muthiah Research Library

அகிலநாயகன்மந்திரத்தப்பரிசனர்க
டொகையினோடுபோயரணமென்றடைதருதொடர்பை
முகிலைநேருருக்கயாசுரன்காணுறாமுனியா
விகலியேமணிகன்னிகைவாயில்வந்திறுத்தான். (கஙகூ)

வாயில்வந்திறுத்துருமெனத்தெழித்தலுமதித்துக்
கோயிலெய்தியசனமெலாமுளங்குலைகுலையா
வாயகண்ணுதனிமலனைத்தழீஇமயக்கடையத்
தீயனன்னதுநாடியுமடும்வகைசெறுத்தான். (கச0)

செறுத்துமற்றவன்செல்லுழித்தேவர்களுய்யக்
கறுத்தகந்தரத்தண்ணலாங்கத்திறங்கண்டு
குறித்தெலாமடுமுக்கிரவடிவினைக்கொண்டு
நிறுத்துமண்டமேலுச்சியின்முடிதொடநிமிர்ந்தான். (கசக)

விண்ணுலாவியவமரருமுனிவரும்விழித்துக்
கண்ணினாடரிதெனவிழிபொத்தினர்கவல
வண்ணலாயிரகோடியாதவர்திரண்டதுபோ
லெண்ணிலாதபேரொளியொடுதோன்றினனெங்கோன். (கசஉ)

உக்கிரப்பெருவடிவுகொண்டெம்பிரானொருகா
னக்குமெல்லெனவுரப்பலுநடுங்கினவகில
மக்கொடுந்தொனியொழிந்திலதுகம்பலவயனு
மிக்கதேவருமவ்வொலிகேட்டலும்வெருண்டார். (கசங)

சொற்றவித்திறமுக்கிரவடிவொடுந்தோன்றிக்
கொற்றமால்கரியவுணன்முன்னெம்பிரான்குறுக
மற்றிவன்சிவனாமெனத்தேறியுமலைவா
னாற்றுநின்றனனயர்த்தனன்மலரயனுரையே. (கசச)

மதித்துவேழமாந்தானவனெதிர்தலும்வடவை
யுதித்தவன்னியுமச்சுறவெரிவிழித்தொருதன்
கதித்ததாள்கொடுதள்ளவேகயாசுரன்கவிழ்ந்து
பதைத்துவீழ்தலுமிதித்தனன்சிரத்தையோர்பதத்தால். (கசரு)

ஒருபதத்தினைக்கவானுறுத்திருகரத்துகிரால்
வெரிநிடைப்பிளந்தீரிருதாள்புடைமேவக்
குருதிகக்கியேயோலிடவவுணர்தங்குலத்துக்
கரியுரித்தனன்கண்டுநின்றம்மையுங்கலங்க. (கசசு)

கார்த்தசிந்துரத்தவுணர்கோன்விளிந்திடக்கரத்தா
லீர்த்ததோலினையீர்த்தலுமுலகுயிர்யாவுந்
தீர்த்தன்மேனிகொள்பேரொளிநோக்கியேதியங்கிப்
பார்த்தகண்ணெலாங்கதிரிழந்தலமரப்பதைத்த. (கசஎ)

ஆளுநாயகனஃதறிந்துயிர்த்தொகையனைத்தும்
வாளிலாதுகண்ணயர்வதுமாற்றுதன்மதித்து
நீளிருங்கரியுரித்திடுமதளினைநிமலன்
றோளின்மேற்கொடுபோர்த்தனனருள்புரிதொடர்பால். (கசஅ)



Digitized By Roja Muthiah Research Library

ஐயன்மிக்கதன்கதிரினைக்குருதிநீரருத
மையல்யானைவன்றோலைமேற்கொண்டனன்மறைத்தான்
செய்யகோளொடுகரியகோளிருவருஞ்செறிந்து
வெய்யபானுவினடுவுறக்கவர்ந்துமேவியபோல். (கசகூ)

மிகவுமெம்பிரான்றன்சுடர்மாற்றிமெய்தளரு
மகிலமேலவர்விழிக்கெலாந்தொல்கதிரருளித்
தகவிலச்சமுமகற்றியேகாத்தனன்றனக்கு
நிகருமேலுமின்றாகியேயமர்தருநிமலன். (கருo)

அந்தவேலையிலமரர்போற்றிசைத்தனரதுகேட்
டெந்தைமாமணிகன்னிகையாலயத்தேக
முந்துதந்திமாலவுணற்குவெருவிமொய்ம்பிழந்து
சிந்தைமான்றுவீழ்பரிசனர்யாவருந்தெளிந்தார். (கருக)

செறிவுபோகியசனத்திஞேரெழுந்தருட்டிறத்தாற்
கறைகொள்காலினன்குருதியென்பொடுதசைகாணு
விறைவனேயவன்றன்னையட்டானெனவெண்ணி
யறையுநேமிபோலாடினர்பாடினரார்த்தார். (கருஉ)

காசிவாணருமுனிவரும்பணிந்தனர்கழல்கள்
பூசையாற்றவும்புரிவித்துவழுத்தியேபோனு
ரீசன்வேழவன்றோல்புனைபேரருளிதுகாண்
பேசுவாமினியயன்சிரமேந்தியபெற்றி. (கருங)

வேறு.

முன்னமோர்வைகன்மாலுமுண்டகத்தயனுமாகப்
பொன்னின்மால்வரையினுச்சிப்பொலங்குவடொன்றினும்பர்
மன்னுழிமுனிவர்தேவர்வரம்பிலோர்வந்தன்னாரைச்
சென்னியால்வணக்கஞ்செய்துசெங்கரங்குவித்துச்சொல்வார். (கருச)

மூவரின்முதலானேருமுதலிடைமுடிவுமில்லாத்
தேவருமெவையுநல்குஞ்செல்வரும்பரமேலாகி
யோவரும்புவனத்துள்ளவுயிர்க்குயிராய்நின்றேரு
மேவரெங்களுக்குவல்லேயிருவருமிசைத்திரென்றார். (கருரு)

என்றுரைத்திடலும்வேதாவெம்பிரான்பிணித்தமாயை
தன்றலைப்படலால்யானத்தலைமையாம்பிரமமாகு
நன்றிதைத்தெளிதிரென்னநாரணன்றனுமற்று
யுன்றனைத்தந்தயானேயுயர்தரும்பிரமமென்றான். (கருசு)

இருவருமினையபேசிபெண்ணிலாவைகல்யாரும்
வெருவருநிலையதாகவெய்துயிர்த்தழன்றுமாறுய்ப்
பொருவருதருக்கஞ்செய்யப்போயினர்முனிவர்தேவ
ரொருவருமின்றிநம்மாலுற்றதிப்பெற்றியென்றே. (கருஎ)

போதலுமனையர்பின்னும்பூசல்செய்திட்டகாலை
வேதமுங்குடிலைதானும்வேறுவேறுருக்கொண்டெய்தி
வாதமதியற்றலென்றுமன்னுயிர்க்குயிராயார்க்குந்
தாதையாஞ்சிவனேவாய்மைத்தற்பரனென்றவன்றே. (கருஅ)

Digitized By Roja Muthiah Research Library

பண்டவருணர்ந்தவேதப்பனுவலுங்குடிலைவாக்குங்
கொண்டிலர்விலக்கிப்பின்னுங்கொடியவெம்பூசல்செய்யக்
கண்டுமற்றதனையன்னோர்கடுமுரண்டொலைக்குமாறு
கொண்டனன்கருணையார்க்குங்குறித்தருள்கூரும்பெம்மான். (௧௮௯)

அடிமுடியிலாதவள்ளலமலமாமொளியாய்விண்ணி
னடுவுறவந்துதோன்றநாரணன்றானும்வேதக்
கடவுளுஞ்சிவனுமென்றுகருதிலர்யாதோவிந்தச்
சுடரெனமருண்டார்மாயச்சூழ்ச்சியினீங்கலாதார். (௧௯0)

இயலதுதெரிந்துசோதியிடையதாயெம்மையாளக்
கயிலையிலுமையாளோடுகலந்துவீற்றிருக்குங்கோலச்
செயல்கொடுபரமனண்ணச்சிவனெனச்சிந்தைதேற்றிப்
புயலுறழ்மேனிப்புத்தேள்பொருக்கெனவெழுந்துதாழ்ந்தான். (௧௯௧)

மாயையோர்சிறிதுந்தீராமலரயனமதுதந்தை
யாயவன்போந்தானென்னுவச்சுதமூர்த்தியேபோ
னேயமோடெழுந்துதாழானெடியதன்னுச்சிச்சென்னித்
தீயதோர்வாயான்மேலாஞ்சிவனையுமிகழ்தலுற்றான். (௧௯௨)

முண்டகமிருந்தவைந்துமுகத்தவன்முதல்வன்றோற்றங்
கண்டனனிகழவந்தக்கருணையங்கடலுஞ்சீற்றங்
கொண்டிலன்சிறிதுமற்றேகொண்டனனென்னினெல்லா
வண்டமுமுயிரும்பின்னுமழிவுறாதிருக்குமோதான். (௧௯௩)

எகினமதுயர்த்தவண்ணலிரும்பவந்தொலைப்பவேனைப்
பகவர்தமகந்தைமாற்றப்பண்ணவர்மதர்ப்புச்சிந்த
மிகுபெருங்கருணைதன்னால்வேதநாயகனுள்ளத்து
மகிழ்வொடுபுரிந்தானென்பவயிரவக்கடவுடன்னை. (௧௯௪)

நீலுறுசுடரின்மெய்யுநெகிழிகளரற்றுந்தாளு
மாலமதுயிர்க்குஞ்செங்கேழரவவெற்றரையுஞ்சென்னி
மாலைகளநந்தகோடிவயின்வயின்பெயருமார்புஞ்
சூலமும்பரசுநாணுந்துடியுமேந்தியபொற்றோளும். (௧௯௫)

முக்கணுந்திங்களேபோன்முளைத்தவாளெயிறும்வன்னிச்
செக்கரஞ்சடையின்சீருஞ்செயிர்கெழுநகையுமாக
வுக்கிரவடிவுகொண்டாங்குதித்திடுவடுகன்றன்னை
மைக்கிளர்கண்டத்தெந்தைநோக்கியேவகுத்துச்சொல்வான். (௧௯௬)

திகழ்ந்தநஞ்சிறுவனுகுஞ்செங்கமலத்தோன்சென்னி
யிகழ்ந்ததுநம்மையுச்சியிருந்ததேயதனைவல்லே
யகழ்ந்தனைகரத்திலேந்தியவனுயிர்நல்கித்தம்மைப்
புகழ்ந்திடுமுனிவர்தேவர்புரந்தொறும்போதியன்றே. (௧௯௭)

போந்தனையனையர்தங்கள்புலவுடற்சோரிதானே
வாய்ந்ததோரையமாகவாங்குதிவாங்கும்வேலை
வீந்தவர்தமக்குமீட்டும்வியனுயிருதவியன்றே
ராய்ந்திடுமகந்தைமாற்றியண்டமேலடைதியம்மா. (௧௯௮)

Digitized By Roja Muthiah Research Library

முன்புடைத்தாகுமண்டமுகடுதோய்பதத்தின்மன்னி
மன்பதைக்குலங்கள்யாவும்வானவர்தொகையும்யாண்டுந்
துன்பறக்காத்தியென்றுதூயநல்லருளைநல்கி
யன்புடைக்கடலாமெங்கோனமலமாஞ்சோதிபுக்கான். (கசுகூ)

ஆதியங்கடவுளங்கணடைதலுமமலமாகுஞ்
சோதியுமனையர்காணாத்தோற்றமதாகமாயோ
னீதெலாந்தெரிந்துநிற்றலியற்கையன்றென்னாமுக்க
ணாதனையிறைஞ்சிவல்லேநடந்துதன்பதியிற்புக்கான். (கஎ0)

அளந்துமண்கொண்டமாயனகனகரடைதலோடுங்
கிளர்ந்தெழுகாரிவேதாக்கேழ்கிளருச்சிச்சென்னி
களைந்துதன்னகத்தாலேந்தக்காலுறுகுருதிநீத்தம்
வளைந்ததுபுவியைத்துஞ்சிமலரவன்றானும்வீழ்ந்தான். (கஎக)

சோரிநீர்நீத்தமாகித்துண்ணெனவுலகங்கொண்டு
மேருமால்வரையைச்சூழவெய்யதன்னுதற்கட்டீயாற்
சேரவேவறப்பித்தந்தச்செங்கமலத்தினானுக்
காருயிர்நல்கவோடுமவனுணர்ந்தெழுந்தானன்றே. (கஎஉ)

வேறு.

துயிலுணர்ந்தவராமெனத்தொல்லையிற், பயிலுநல்லுணர்வெய்தலும்பங்கயன்
வயிரவன்றன்மலரடிமீமிசை, யியலுமன்பொடிறைஞ்சியுரைசெய்வான். (கஎங)

நெற்றியங்கணிமலற்கியான்செயுங், குற்றமுண்டுகுணிப்பிலவன்னதாற்
பெற்றுளேனிப்பெரும்பழியீங்கினிச், செற்றமேதுந்திருவுளங்கொள்ளலை. (கஎச)

இன்மையாகவிமைப்பினுலகடும், வன்மைகொண்டவடுகநின்னாரரு [டுமால்.
ணன்மையாற்றொல்லைநல்லுணர்வெய்தினன், புன்மையாவும்பொறுத்திடல்வேண்

தீயதானசிறியவிச்சென்னியுந், தூயதாகத்தொழும்பினன்கண்டுழி
மாயைதீரமலர்க்கையிற்கோடிநீ, மேயசூலவியன்படையென்னவே. (கஎசு)

என்னவித்தகைபன்னியிறைஞ்சலுஞ், சென்னிநான்குடைத்தேவனைநோக்கியே
யன்னதாகவென்றையனருளியே, பொன்னின்மால்வரைநீங்கினன்போயினான்.()

காலவேகன்கனன்முகன்சோமக, னாலகாலனதிபலனாதியாச்
சாலநீடியசாரதர்தானையை, நீலமேனிநிமலனுதவினான். (கஎஅ)

எண்ணிலாவக்கணங்களொடெம்பிரா, னண்ணியொல்லைநவையுறுமாதவர் [ன்.
மண்ணின்மேயவனந்தொறும்வானவர், விண்ணினெல்லைதொறும்விரைந்தேகினா

மெய்யினூறும்வியன்குருதிப்புன, லையமாக்கொண்டனையர்தமாவிக
ளுய்யவேபின்னுதவியுளமெலாந், துய்யவாக்கினன்றொல்லருளாழியான். (கஅ0)

வடுகவண்ணலவ்வானவரூரெலாங், கடிதினீங்கிக்கருமத்தைநீங்குறு
நெடியமாலுறைநீள்புரம்போயினான், முடுகியேகினர்முன்கணநாதரே. (கஅக)

அந்தமில்கணமானவர்யாவரு, முந்தியேகமுதற்பெருவாயிலோன்
நிந்திரத்தலைவன்றடுத்தானரோ, நந்துமாழியுநாரணன்போலுளான். (கஅஉ)

காலவேகனையாதிக்கணத்தவ, ராலமென்னவவனொடுபோர்செய
மேலையோனங்குமேவியவனுடல், சூலமேற்கோர்ந்தித்துண்ணெனவேகினான்.கஅங

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

நிலமகளொருபுடைநிறங்கொள்பங்கய, மலர்மகளொருபுடைமருவப்பஃறலை[ஞன்.
குலவியபணியின்மேற்கொண்டன்மேனியான், றலைமையொடுறைதருதானநண்ணி

நிணங்கிளர்முத்தலைநெடியவேலிறை, கணங்களினிரையொடுகடிதுசெல்லமா, லணங்கினரோடெழாவையன்முண்மிசை, வணங்கிநின்றெந்தைநீவந்ததென்னென்முன். (கஅரு)

என்றலுங்கண்ணுதலிறைவன்யாமிவட், சென்றதுபலிக்குநின்றிருந்துசென்னியி
லொன்றியகுருதியேயுதவுவாயென, நன்றெனநாரணனவின்றுபோற்றியே.(கஅசு)

தன்னுதலதனிடைத்தனுதுசெங்கையி, னன்னகத்தாலொருநாடிவாங்கியே
யன்னதொர்பொழுதினிலரியுய்த்தானரோ, துன்னியகுருதிநீர்சூலியேற்பவே. ()

வீண்டிடுசோரியின்வெள்ளம்வெம்பணி, பூண்டதொர்கண்ணுதல்பொலங்கைச்சென்னிமே, லாண்டொருநூறுநூறவதியுய்த்தலு, மாண்டதுவேறொருமயக்கம்வந்ததே. (கஅஅ)

பாதியுநிறைந்ததுமில்லைபாணியின், மீதுறுபலிக்கலன்மிக்கவன்மைபோய்ச்
சீதரன்சோர்தலுந்திருவுஞாலமுங், காதலனிலைமையைக்கண்டிரங்கினர். (கஅகூ)

செஞ்சரணடைந்தயர்தெரிவைமார்தமை, யஞ்சலென்றருளியெம்மண்ணலச்சுத
னெஞ்சுறுமயலினைநீக்கியாங்கவ, னுஞ்செழுமாறுசெய்துறையுணீங்கினன்.(ககூ0)

நீங்கினன்பின்வருநெடியமாயனை, யீங்கினிதிருத்தியென்றியம்பவன்னவ
னேங்குநின்சூலமேலுற்றுளான்றனைப், பாங்குறவருள்கெனப்பகர்ந்துவேண்டவே.

கைத்தலையயன்றலைக்கபால்கொண்டுற்றவன், முத்தலைவேலினுமுடிந்தசேனையின்
மெய்த்தலைவன்றனைவிடுத்துத்தொல்லுயி, ரத்தலைநல்கியேயருள்செய்தானரோ. ()

மாலுலகொருவியேவடுகனன்னதோர், கோலமொடேகணங்குழுமிச்சூழ்தர
மேலுளபுவனமேன்மேவிவைகலும், பாலனஞ்செய்தனன்பலவண்டங்களும். ()

அடுவதொரிறுதியிலமலனாணையாற், கடவுளர்சென்னியுங்கமலனாதியோர்
முடிகளுமட்டியிர்முற்றுமாற்றிநுண், பொடிபடவியற்றுமாற்புவனம்யாவையும். ()

பொறியுறுமுயிர்களும்புவனம்யாவையு, மிறுதியாயழிவுறுமீமத்தெல்லையின்
மறையெனுஞாளியையுயர்த்துமற்றவ, னுறுவதோர்மகிழ்ச்சியாலுலவுமென்பவே.

வேறு.

கண்டகங்கொள்கபால்கொடுகாசினி, விண்டகந்தொறும்வெம்பலிக்குற்றது
முண்டகன்முதலோர்தமையெம்பிரான், றண்டகஞ்செய்தலையளியாகுமால். ககூசு

ஆற்றின்மல்குமவிர்சடையண்ணல்பாற், றோற்றுகின்றதொர்தூயவன்சோரிநீ
ரேற்றதன்மையியம்பினமீங்கினி, வேற்றுருக்கொண்டதன்மைவிளம்புவாம்.ககூஎ

வேறு.

முந்தொருஞான்றுமூவுலகும்போற்றிடு, மிந்திரனிமையவரினத்தொடேகியே
யந்தமில்கயிலையிலரனைப்போற்றுவான், வந்தனனகந்தையுமனத்திற்றூங்கியே. ()

பொன்கெழுகடிமதிற்பொன்னங்கோயின்முன், மின்கெழுவச்சிரவேந்தன்சேர்தலுங், கொன்கெழுபாரிடக்கோலந்தாங்கியே, முன்கடைநின்றனன்முடிவின்முன்னையோன். (ககூக)

Digitized By Roja Muthiah Research Library

நின்றிடுமொருவனைநெடிதுநோக்கியே, யின்றுனைக்கண்டனன்யாரையையநீ
மன்றவும்விருந்தினைவள்ளலைத்தொழச்,சென்றனன்வேலையென்செப்புகென்னவே

மற்றதுகாலையின்மகேசன்யாவதுஞ், சொற்றிலனுகியேசூர்த்தநோக்குட
னுற்றிடமேல்வருமூற்றமுன்னலன், செற்றமதாயினன்றேவர்செம்மலே. (உ0௪)

அண்டருமகந்தையனுற்றவுந்திறல், கொண்டனனென்றுதன்குலிசமாப்படை
கண்டகனெறிதலுங்கடவுண்மேற்படா, நுண்டுகளாகியேநொய்தின்மாய்ந்ததே. ()

மருத்துவன்வச்சிரமாய்ந்துபோதலும், புரத்தினையட்டருள்புனிதனவ்வழிக்
கிருத்திமவுருவினைநீங்கிக்கேழ்கிள, ருருத்திரவடிவினையொல்லைதாங்கினுன். (உ0௬)

உயர்ப்புறுசடிலநின் றூறுதண்புன, லயர்ப்புறுமகபதியகந்தைகண்டட
மயிர்ப்புறமெங்கணும்வந்துதோன்றலின்,வியர்ப்புவந்தடைந்தனமேனிமுற்றுமே.

எள்ளுதல்செய்திடுமிவன்றனுருயிர்,கொள்ளுதுமெனச்சினங்கொண்டதீயொடு,
மூள்ளுறுகாலெழீஇயொருங்குசென்றெனப், பொள்ளெனவுயிர்ப்பழல்புகையொ
டுற்றதே. (உ0௫)

குறுகினின்றூற்றலாற்குலிசமாப்படை, யெறிதருகொடியனையெய்தவேளெனச்
செறுகனல்விழியெனச்செப்பச்சேறல்போ, னெறிதருபுருவமுநெற்றிசேர்ந்தவே.

பற்றலர்புரங்களோவுலகின்பன்மையோ, முற்றுயிரீட்டமோமுடிக்கப்பேதை
யைச், செற்றிடல்வசையவன்செயலைக்காண்டுமென், றுற்றனன்முறுவலுமுதித்த
தொல்லையில். (உ0௭)

துடித்தனதுவரிதழுரப்பித்தூயவா, யிடித்தனசேர்ந்தனவிரண்டுகண்களும்
விடத்தினைநுகர்ந்தவன்வெகுளித்தீயினுக், கடுத்திடுதுணைவர்தமமைதிபோலவே.()

அக்கணமிவ்வகையார்க்குமாதியா,முக்கணனுன்முகன்முதலதேவரு
மிக்குளவுயிர்களும்வெருவவெய்யதோ, ருக்கிரவடிவுகொண்டிருந்துநின்றனன். ()

வேறு.

நிற்கின்றவெம்பெருமான்பெருஞ்சீற்றந்தனைநோக்கிநெஞ்சமாகுங்
கற்குன்றநடுநடுங்கப்பதைபதையாவஞ்சியவன்கழலின்வீழ்ந்தே
யெற்குன்றன்மாயமெலாந்தெரிந்திடுமோமாலயனுமின்னுந்தேரூர்
பொற்குன்றச்சிலையானேவினையேன்செய்பிழையதனைப்பொறுத்தியென்றான். ()

போற்றிப்பன்முறைதாழும்புரந்தரனையஞ்சலென்றுபுரிந்துநோக்கி
மேற்றிக்கில்வீழ்கின்றசெங்கதிரோவிதுவென்னவேலைமேற்றன்
சீற்றத்தீயினைவீசியாங்கவற்குவிடைகொடுத்துச்செல்கென்றேவி
யேற்றிற்செயரியணைமேலுறையுள்புகுந்துமையொடும்வீற்றிருந்தானெங்கோன்.()

வேறு.

கூற்றுவன்றனிக்கூற்றன்மந்திரம், வீற்றிருந்திடும்வேலைவாய்தனி
லாற்றல்சேர்புனற்கரசன்பால்விடு, சீற்றமானதோர்சிறுவனுனதே. (உ௧உ)

ஆனபாலனையம்புராசிதன், கானுலாந்திரைக்கரங்களாற்றழீஇத்
தானவேசனென்றனயனுயினு, னலாதியார்நற்றவஞ்செய்தார். (உ௧௩)

ஊழிபேரினுமுலகம்பேரினும், வாழிவாழியென்மைந்தநீயெனுக்
கேழிலாசிகள்கிளத்திப்போற்றினு, னூழிமால்கடற்கரசனென்பவே. (உ௧௪)

Digitized By Roja Muthiah Research Library

நசைகுலாவியநரலைகாத்திட, வசைவிலான்சிறிதழுதவேலையில்
வசையிலாதுயர்வானுமண்ணுமெண், டிசையும்யாவையுஞ்செவிடுபட்டவே. உகரு

நூன்முகத்தினோர்நுனித்துக்காணுறு, நான்முகத்தினோனுடியிவ்வொலி
வான்முகத்திடைவருமிதேதெனா, மீன்முகத்துலாம்வேலைமேவினான். (உகசு)

வேலைசேரவவ்வேலைவேலையுஞ், சாலவன்பினாற்றவிசொன்றிட்டுநீ
யேலமேவுகென்றிருத்தியான்பெறும், பாலனீங்கிவன்பார்த்தியாலெனா. (உகஎ)

கையினீட்டலுங்கடிதுவாங்கியே, யையன்றன்மடியதனிற்சேர்த்திடத்
துய்யபுல்லணங்தொடர்ந்துபற்றினான், மையன்மைந்தனுந்தனதுவன்மையால். ()

நார்த்தொடுத்தெனுநான்குதாடியு, மீர்த்துத்தூங்கலுமிணையில்வேதனு
மார்த்தியெய்தினனவன்கணேயவன், சீர்த்திகான்றெனச்சிந்திற்றெண்புனல். ()

காறொடர்ந்திழிகலங்குகட்புன, லாறுபோலியவகலந்தன்வழிச்
சேறன்மேயதுசெறிவுற்றீண்டியே, வேறொர்வேலைபோல்வேலைபுக்கதே. (உஉ0)

முக்கணாயகன்முனிவுதன்னிடைப், புக்ககாலையிற்புனல்வறந்திடு
மைக்கருங்கடல்வறுமைநீங்கிற்றான், மிக்கநான்முகன்விழியினீரினால். (உஉக)

பதுமனவ்வழிப்படர்மயிர்த்தொகை, மதலைகையினுமரபினீக்கியே
கதுமெனப்பலகரங்களாலெடுத், துததிதன்கையினுயிர்த்துநீட்டினான். (உஉஉ)

நீட்டியோரிறைநினைந்துநீயிது, கேட்டியொன்றியாங்கிளத்துவோமிவ
னேட்டிலாயதேனிதழிசென்னியிற், சூட்டுமெம்பிரான்முனிவிற்றோன்றினான். ()

கருதிடாதொருகடவுடன்னையும், வரமும்வேண்டலனேதுமற்றிவ
னொருவராலுமீறுற்றிடானரோ, பரமன்சீற்றமேயானபான்மையால். (உஉச)

தேவர்தேவர்கோன்றிசையினோர்வெரீஇப், போவரேயெனிற்பொருகிற்பாரெவர்
நீவிரேனுமுன்னிற்றலஞ்சுவீ, ரேவரேயிவனெதிர்நிற்பார்களே. (உஉரு)

ஆயுந்தொன்னெறியமரர்யாவரு, மீயுஞ்சாபம்வந்திவனைநேருமோ
காயுந்திண்டிறற்கடவுட்டன்மைசேர், தீயுந்தீயுநின்சிறுவன்வெம்மையால். (உஉசு)

நானுமஞ்சுவனளினைகாவலன், றானுமஞ்சுவன்றவறில்வேள்விசெய்
கோனுமஞ்சும்வெங்கூற்றுமஞ்சுமவ், வானுமஞ்சுமிம்மண்ணுமஞ்சுமே. (உஉஎ)

பாசனங்களேபரவஞாலமேற், றேசில்வெய்யகோல்செலுத்தியாங்கவ
ராசிசெய்யநீடரசுசெய்வனா, லீசனன்றியாரிவனைவீட்டுவார். (உஉஅ)

என்னுமாத்திரத்திவன்றனக்குநீ, நன்னலந்திகழ்நாமமொன்றினைப்
பன்னுகென்னநீபரித்தலாலிவன், றன்னதொண்பெயர்சலந்தரன்னெனா. (உஉகூ)

பேரிட்டொல்லையிற்பிரமன்றானுறை, யூரிற்போயினானுததிபற்பகல்
சீரிற்போற்றலுஞ்சிறுவன்காளையாய்ப், பாரிற்சேர்ந்தனனவுணர்பாற்பட்ட. (உ௩0)

சென்றுபாரிடைத்திசைகள்யாவையும், வென்றுவாசவன்விண்ணுளோர்நிதிக்
குன்றுசேர்தரக்கொடுமைசெய்தனன், றுன்றுகின்றதொல்லவுணர்சூழவே. (உ௩க)

பொன்னெடுங்கிரிதனிற்புத்தேளிரு, மன்னும்வைகலும்வானநாடெலாந்
தன்னைநேரிலான்றனவர்க்கெலா, நன்னயப்பொடுநல்கினனரோ. (உ௩உ)

Digitized By Roja Muthiah Research Library

வச்சிரப்படைமன்னன்பொன்னகர், நச்சும்வண்ணமோர்நகரஞ்செய்கென
வச்சலந்தரனருளத்தானவர், தச்சனவ்வழிசமைத்துநல்கினன். (உ௩௩)

பார்தண்மீமிசைபரிக்குநேமிசா, லாந்தரம்மெனவறையநின்றதோ
ரேந்தன்மாநகரிடையிற்றானவர், வேந்தர்போற்றிடவரசின்மேயினன். (உ௩௪)

காலநேமியாமவுணன்கன்னிகை, வேலைநேர்விழியிருந்தையென்பவள்
கோலநாடியேகுரவன்கூறிட, வேலவேமணந்தின்பமெய்தினன். (உ௩௫)

பாரிலவ்வழிப்பன்னெடும்பகல், சீரின்வைகினன்றேவர்யாவரு
மேருவுற்றனரவரைமேவியாம், போர்செய்வோமெனப்புகன்றுபோயினன். உ௩௬

துங்கவீரர்கடொழுசலந்தர, னங்கண்மேவனுமமரர்வெய்யவ
னிங்கும்வந்தனனென்செய்வோமெனாச், சிங்கங்கண்டதோர்கரியிற்றேம்பினர். ()

தேம்புகின்றவர்செய்வதோர்கிலார், பாம்பணைத்துயில்பவனையுன்னியே
யோம்புகென்றலுமுவணமீமிசை, யேம்பலோடும்வந்திமைப்பிலெய்தினன். உ௩அ

வருசலந்தரன்மாறுகொண்டெழ, விருபதாயிரம்யாண்டுபல்படை [ன்.
யுரியமாயைகொண்டுருத்தெழுந்துமால், பொருதும்வென்றிலன்புகழ்ந்துபோயின

கொண்டன்மேனியன்கொடியன்றன்னொடு, மண்டுபோரிடைமலையும்வேலையி
லண்டர்வாசவனஞ்சியாலமார், கண்டன்மேவியகயிலையெய்தினர். (உ௪0)

வே று.

அற்றாகின்றவேலையின்வேலையருண்மைந்தன்
பற்றார்தம்மைநாடினன்யாண்டும்பார்க்கின்றான்
கற்றாரேத்துங்கண்ணுதன்மேயகயிலாயத்
துற்றார்கொல்லென்றுன்னிவெகுண்டாளூர்போந்தான். (உ௪க)

தூண்டாவொற்றாற்பெற்றிடுசேனைத்தொகையோடு
மீண்டாநிற்பான்றென்கயிலைக்கென்றெழும்வேலை
வேண்டாவேண்டாநித்தனுடன்வெஞ்சமர்செய்யின்
மாண்டாயென்றாளில்லெனவாழுமதிவல்லி. (உ௪உ)

குலந்தனில்வந்தாள்கூறியமாற்றங்குறிக்கொள்ளா
னலந்தருகின்றசெய்வினையோரானவைபாரான்
புலந்தருசெற்றமீக்கொளயாதும்பொறையின்றிச்
சலந்தரனும்பேருண்மையதென்னச்சாதித்தான். (உ௪௩)

சோனாமேகம்போற்படைமாரிசொரிகின்ற
சேனாயூகஞ்சூழ்தரவாழித்திருமைந்தன்
போனானெங்கோன்றென்கயிலைக்கோர்புடையாக
வானாடுள்ளோனுங்கதுகாணாமறுகுற்றான். (உ௪௪)

தாண்டும்பாய்மாத்தேர்கரிவீரர்தற்சூழ
வீண்டும்வந்தான்றீயவனாவியிறும்வண்ணங்
காண்டும்மென்னாவாசவன்வானோர்கணமோடும்
வேண்டும்வெள்ளிக்குன்றுறுகோயின்மேவுற்றான். (உ௪௫)

வே று.

முந்தியவாயிலின்முறைபுரிந்திடு, நந்தியைவணங்கியுண்ணடுக்கஞ்செப்பலு
மந்தமில்பண்ணவனருளைநாடியே, யுந்திடவிந்திரனுறையுள்போயினன். (உ௪௬)

Digitized By Roja Muthiah Research Library

குணங்களின்மேற்படுகுழகன்மால்வரை, யணங்கொடுவீற்றிருந்தருளுமெல்லை
போய், வணங்கினன்றொழுதனன்வலியதுன்பினா, லுணங்குதன்மனக்குறையுரை
த்தன்மேயினான். (௨௪௭)

நிலந்தனைவளைந்தமுந்நீரில்வந்தவன், சலந்தரனெனும்பெயர்த்தறுகட்டானவன்
மலைந்தெமைவென்றிடமாசற்றோடினே, னலந்தருகின்றபொன்னாடுநீத்தனன். ()

வெந்துயரெய்தியேமேருவின்புடை, யுய்ந்தனன்யானெனவொளித்துமேவின
னந்தவண்ணத்தையுமறிகுற்றாங்கவன், வந்தனனவ்வழிமாலையுன்னினேன். ௨௪௯

மாலும்வந்தணுகியேமலைந்துதோற்றிடா, மேலுமங்கவன்றனைவியந்துபோயினா
னீலகண்டத்தனேநினதுமால்வரை, யேலவந்துற்றனனிதுவுங்கேட்டனன். ௨௫௦

ஈங்கும்வந்துற்றனனியாவதுன்னியோ, வாங்கதுதெரிகிலேனளியன்றன்பழந்
தீங்குறுசலந்தரன்றிறலும்வாழ்க்கையு, நீங்குதலுன்னுதிநிமலநீயென்றான். (௨௫௧)

வரையெறிபடையினன்மாற்றங்கேட்டுநின், பருவரலொழிகெனப்பகர்ந்துபோ
க்கியே, கருணையினீர்மையாற்கணிச்சிவானவ, னொருதனியாடலையுள்ளத்துன்னி
னான். (௨௫௨)

நான்றகுண்டிகையினனரைகொள்யாக்கைய, னூன்றியகோலினனோலைக்கையி
னன், மூன்றனல்வளர்ப்புறுமுனிவரேயெனத், தோன்றினன்றனக்கொருதோற்
றம்வேறிலான். (௨௫௩)

விம்மலையுற்றிடுவிரதர்க்காகமுன், கைம்மலையுரித்தவன்கயிலையென்றிடு
மம்மலையொருபுடையணுகுந்தானவர், செம்மலையெதிர்கொடுசெல்லன்மேயினான்.

இந்திரனிமையவரினத்தொடீண்டியே, வந்தனைசெய்தனன்மறைந்துபின்வர
வந்தணர்வடிவுகொண்டவுணர்காவலன், முந்துறவெய்தியேமுதல்வன்கூறுவான்.

எங்குளையாரைநீயெவரைநாடியே, யிங்குறுகின்றனையியம்புவாயென
வங்கணன்மொழிதலுமந்தண்வேதிய, சங்கையதில்வகைசாற்றக்கேளென்றான்.()

நிலந்தனிலுற்றுளேனேமிகாதலன், சலந்தரனென்பவன்றமியன்வானவ [றான்.
ருலந்திடநுதல்விழியொருவன்றன்னுடன், மலைந்திடவந்தனன்வல்லையீண்டென்

அவ்வுரைவினவியேயண்ணலெண்ணமுஞ், செவ்விதுசெவ்விதுநீதுண்டோவெ
னா, வெவ்வமில்புகழ்ச்சிபோலிகழ்ந்துகாட்டிடா, நவ்வியங்கைத்தலனகைத்துச்
செப்புவான். (௨௫௮)

கயிலையங்கிரியுறைகண்ணுதற்பிரா, னயலுறவிருப்பன்யானவனொடேயமர் [றான்.
றுயலுறுகிற்றியேன்முடிதியுய்ந்திடுஞ், செயலினைநினைத்தியேற்செல்கமீண்டென்

பண்ணவனினையனபகர்தல்கேட்டலு, மெண்ணமில்சலந்தரனெரியிற்சீறியே,
கண்ணழல்கதுவுறக்காயம்வேர்வெழத், துண்ணெனவுயிர்த்திவைசொற்றன்மேயி
னான். (௨௬௦)

சிறியவன்போலெனைச்சிந்தித்தீரியான், பெறுவதோர்சயமெலாம்பேசியாவதென்
னிறைவரையீண்டுநின்றெனதுவன்மையை, யறிகுதிரறிகுதிரந்தணீரென்றான். ()

என்றிவைசலந்தரனிசைப்பயாமுமுன், வன்றிறல்காணியவந்தனம்மெனாத்
தன்றிருவடியினாற்றரணியின்மிசை, யொன்றொருதிகிரியையொல்லைகீறினான். ()



Digitized By Roja Muthiah Research Library

ஆங்கதுகிரியொன்றாகவந்தனை, னீங்கிதுசென்னியிலேற்றிவன்மையாற்
றாங்குதல்வல்லையோவென்றுசாற்றலுந், தீங்குறுசலந்தரனினையசெப்புவான். ()

புங்கவர்யாரையும்புறங்கண்டேன்வரு,கங்கையையடைத்தனன்கார்கொள்வே
லையி, லங்கியையவித்தனனரியையென்றனை, னிங்கிதுதாங்குவதரியதோவெனா.()

புரத்தழல்கொளுவியோன்பொறித்தநேமியைக், கரத்திடையெடுத்தனன்கன
ங்கொண்டெய்தலி, னுரத்திடைப்புயத்திடையுயிர்த்துத்தாங்கியே, சிரத்திடை
வைத்தனன்றேவரார்க்கவே. (உசுரு)

செழுஞ்சுடர்ப்பரிதியைச்சென்னிகோடலா, லொழிந்திடுசலந்தரனுச்சியேமுதற்
கிழிந்ததுமுழுதுடல்கிளர்ந்துசோரிநீ, ரிழிந்ததுபுவிதனிலிழுமெனோசையால்.உசுசு

பரிதியங்கடவுளப்பதகன்றன்னுட, லிருபிளவாக்கியேயிறைவன்றன்னிடை [தே.
யுருவுகொண்டுற்றதிவ்வுலகம்யாவையுங், குருதியம்பெருங்கடல்வளைந்துகொண்ட

பாதலநிரயமாம்பாழியூடுநீ, போதெனவெருவைநீர்போந்ததாயிடை
யாதியங்கடவுளவ்வவுணன்சேனையைக், காதினன்விழிபொழிகனலின்றானையால்.

பரந்திடுமவுணர்தம்பகுதிவீட்டியே,கரந்ததொல்வடிவினைக்காட்டிநிற்றலும்,புரந்
தரன்முதலினோர்வணங்கிப்போற்றியெம்,மரந்தையையகற்றினையையநீயென்றார்

முன்புறுபுரந்தரன்முதலினோர்க்கெலா, மின்புறுதொல்லரசியற்றநல்கியே [ன்.
யன்புடன்விடைகொடுத்தமலநாயகன், றென்பெருங்கயிலைமேற்சேர்ந்துவைகினா

ஆவியையிழந்திடுமவுணர்காவலன், றேவியைவிரும்பியேதிருவினாயகன்
மாவிரதியரெனமற்றவன்மனைக், காவினுளிருந்தனன்கைதவத்தினான். (உஎக)

இருந்திடுமெல்லையிலேமக்கற்புடை, விருந்தையென்றிடுமவள்வேந்தன்செய்கை
யைத், தெரிந்திலளாற்றவுஞ்சிந்தைநொந்துமெய், வருந்தினளாய்ந்திடும்வண்ணங்
காண்கிலாள். (உஎஉ)

பரிதலுற்றிரங்கினள்பதைத்துச்சோர்ந்தன, ளொருதனித்திருக்கிலளுரையுமா
டல, டிரிதலுற்றுலவினள்செய்வதோர்கில, ளிருதலைக்கொள்ளியினெறும்புபோன்
றுளாள். (உஎங)

கல்வரையேந்தியகாளையைப்புணர், தொல்வரையூழினாற்றுன்பநீங்கலா
மெல்வரையன்னதோள்விருந்தைமேவினா, ளில்வரையகந்திடாவேமக்காவினுள்.

மடவரல்வருதலும்வைகுண்டந்தனிற், கடைமுறைபோற்றிடுமிருவர்காவல
ரடலரியாகியேயார்த்துமுன்னுற, விடியுறுமரவுபோலேங்கியோடினாள். (உஎரு)

மடந்தையங்கிரிதலுமடங்கலானவர், தொடர்ந்தனர்பின்வரத்துளங்கிச்சோலை
யி, னிடந்தனின்முனியெனவிருந்தவெய்யனை, யடைந்தனளடைதலுமஞ்சனீயெ
ன்றான். (உஎசு)

என்றருள்புரிதலுமிகல்வெஞ்சீயமாய்ப், பின்றொடர்காவலர்பெயர்வுற்றோடினார்
நின்றவளிருந்தவனிலைமைநோக்கியே,நன்றிவனியல்பெனநவில்வதாயினாள். உஎஎ

எந்தையெம்பெருமகேளெனதுகாதல, னந்தமிலீசன்மேலமருக்கேகினான் [றாள்.
வந்திலனின்னமுமாய்வுற்றான்கொலோ, வுய்ந்துளனேகொலோவுரைத்திநீயென்

Digitized By Roja Muthiah Research Library

இரங்கினளிவ்வகையிசைப்பமாதவன், வரங்கெழுதானையின்மன்னர்மாயையா
ற், குரங்கெனவீருருக்கொண்டுகொம்மென, வுரங்கிளர்சலந்தரனுடல்கொண்டெ
ய்தினார். (உஎகூ)

இருபிளவாமவனியாக்கைகொண்டுசென், றரிவைமுன்னிட்டனரதனைக்காண்
டலும், வெருவினள்பதைத்தனள்வீழ்ந்தரற்றினா, ளொருவினளுயிரெனவுணர்வுநீங்
கினாள். (உஅ0)

வருந்தலைவருந்தலைமங்கைநீயெனாக், கரந்தனையோச்சியேகாதனீர்மையா, லி
ருந்தவனெழுப்பலுமெழுந்துதேறியே, விருந்தைகைதொழுதிவைவிளம்பன்மேயி
னாள். (உஅக)

நின்னிகர்மாதவர்நிலத்தினில்லையா, லென்னுயிர்காத்தியேலெனதுநாயகன்
பொன்னுடலந்தனைப்பொருத்தியவ்வுயிர், தன்னையுமமைத்தனைதருதிநீயென்றாள்.

ஆயதுகாலையிலவுணன்யாக்கையை, யேயெனவொன்றுமாறியற்றிமாதவன்
மாயமதாகியேமறைந்துமற்றவன், காயமதிடைதனிற்கலந்துவைகினான். (உஅங)

புல்லியகுரங்கெனப்புகுந்தகள்வரு, மொல்லையின்மறைந்தனருயர்சலந்தரன் [ள்.
றொல்லுடல்புகுந்தரிதுண்ணென்றேயெழ, மெல்லியல்கண்டனள்வியந்துதுள்ளினா

உய்ந்தனன்கணவனென்றுளத்திலுன்னியே, வெந்துயரகன்றனள்விருந்தையெ
ன்பவள், வந்தனைபோலுமென்மகிணநீயெனா, வந்தமிலுவகையாலவனைப்புல்லி
னாள். (உஅரு)

புல்லியவிருந்தையைப்புணர்ந்துமாயவ, னெல்லியும்பகலுமோரிறையுநீங்கலா
னல்லியந்தேனுகரளியைப்போலவண், மெல்லிதழமுதமேமிசைந்துமேவினான்.()

காய்கதிர்நுழைவுறாக்கடிமென்காவினுண், மேயினன்பலபகல்வேளினூல்வழி
யாயதோர்வைகலினரனதாணையான், மாயமதயர்த்தனன்மலர்க்கண்டுஞ்சினான்.

துஞ்சியவேலையிற்றுணைவியாகிய, பஞ்சினின்மெல்லடிப்பாவைபார்த்திவன்
வஞ்சகன்வஞ்சகன்மாயனேயெனா, வஞ்சினனெஞ்சகமழன்றுநீங்கினாள்.(உஅஅ)

அருந்ததியன்னகற்பழிந்ததன்மையால், வருந்தினளுயிர்த்தனண்மாயம்யாவையும்
பொருந்தியதன்னுயிர்ப்போதநீர்மையாற், றெரிந்தனள்சீதரற்கிதனைச்செப்புவாள்.

மாவலியுடையதோர்மடங்கலாயினோர், காவலரிருவரக்காவலாளருன்
மேவலராயுறவேந்தனாகிநீ, யோவலைகுரங்கொடுதிரிதியொண்புவி. (உகூ0)

பொற்புறுகணவனைப்போலவந்தெனைப், பற்பகல்புணர்ந்தனைபகைவர்மாயையாற்
கற்புடைமனைவியைக்கவர்ந்துபோகநீ, சொற்படுபழியினைச்சுமத்தியாலென்றாள்.

இக்கொடுமொழிபுகன்றெரியைமூட்டியே, புக்குயிர்துறந்தனள்புலம்பியாங்கவ
ளக்குறுசுடலைநீறாடிவாடினான், மைக்கடன்மேனியன்மாலின்மூழ்கியே. (உகூஉ)

வேறு.

அத்துணைதன்னின்வானோரம்புயன்சயிலையேகி
நித்தனையிறைஞ்சிமாயோனிலைமையையுணர்த்தும்போழ்திற்
சத்தியங்கதனைத்தேர்ந்துதலையளிசெய்துதானோர்
வித்தினையுதவியீதுவிண்டுமுன்னிடுதியென்றாள். (உகூங)

Digitized By Roja Muthiah Research Library

ஈதலுமதனைவேதாவிருகையாலேந்திச்சென்னி
மீதுறக்கொண்டுபோந்துவிருந்தைதன்னீமந்தன்னிற்
றாதுறுபலியின்வித்தித்தடங்கடலமுதம்பெய்ய
மாதவன்முன்னமாங்கோர்துளவமாய்மலிந்ததன்றே. (௨௯௪)

தண்டுளவானதாங்கோர்தையலாய்நின்றகாலைக்
கண்டனன்றிருவின்கேள்வன்கனலிடைப்புகுந்தாண்மீது
கொண்டிடுகாதனீங்கியவள்வயிற்கூட்டம்வெஃக
வண்டருமயனுமாலுக்கருங்கடியியற்றியீந்தார். (௨௯௫)

கடியுறுதுளவமென்னுங்கன்னியைக்கொண்டுகெஞ்சக்
கொடியுறுதகைமைத்தானகோநகர்குறுகிவேறோர்
படியுறுபெற்றித்தல்லாப்பல்பெரும்போகமாற்றி
முடியுறுசூட்டுமோகமுடித்தனன்முளரிக்கண்ணன். (௨௯௬)

அவன்சலந்தரனைவீட்டுமொழியைவாங்கப்பன்னாட்
சிவன்கழல்வழிபட்டோர்நாட்செங்கணேமலராச்சாத்த
வுவந்தனன்விடைமேற்றோன்றியப்படையுதவப்பெற்று
நிவந்தனனதனால்வையநேமியானென்பமாதோ. (௨௯௭)

வேறு.

போற்றலார்தம்புரமடுபுங்கவன், வேற்றுருக்கொள்வியனருட்டன்மையைச்
சாற்றினாமினித்தன்னிகரில்லதோ, ரேற்றின்மேல்வருந்தன்மையியம்புவாம். ()

இன்னநான்குகத்தெல்லையிராயிர, மன்னுகின்றதொர்வைகலவ்வைகறான்
றுன்னுமுப்பதொக்கதொர்திங்களா, மன்னதாறிரண்டால்வருமாண்டரோ. ()

ஆண்டுநூறுசென்றாலயற்காயுவு, மாண்டுபோமதுமாற்கொருவைகலா
மீண்டுநூல்களெலாமிவைகூறுமாற், காண்டியாலிவைகற்றுணர்பேதைநீ. (௩௦௦)

ஆயதன்மையிலச்சுதற்காயுவு, மாயுமெல்லையின்மன்னுயிர்யாவையுந்
தேயுமண்டஞ்சிதைந்திடுமெங்கணும், பாயிருங்கனலேபரந்துண்ணுமால். (௩௦௧)

ஆனகாலையகிலமுமீமமாய்ச், சூநலங்கொடுதோன்றுமச்சூழலிற்
றானுலாவித்தனிநடஞ்செய்திடு, ஞானநாயகனாயகிகாணவே. (௩௦௨)

பெருகுதேயுப்பிரளயமன்னதிற், றருமம்யாவினுக்குந்தனித்தெய்வதம்
வெருவியாமிவண்வீடுதுமேலினிப், புரிவதேதெனப்புந்தியிற்சூழ்ந்ததே. (௩௦௩)

ஆறுலாஞ்சடையண்ணலைச்சேர்வனே, லீறிலாதென்றுமுற்றிடுவேனெனாத்
தேறியேயறத்தெய்வதஞ்செங்கணா, னேறதாயொரெழிலுருக்கொண்டதே. ௩௦௪

ஏற்றின்மேனிகொண்டீசன்முன்னேகியே, போற்றியானின்றுபொன்றிடுந்தன்மையை, மாற்றியாற்றல்வழங்கிநிற்கூர்தியாம், பேற்றையெற்குப்பிரானருளென்னவே. (௩௦௫)

வேறு.

இறத்தலையின்மையும்யானமாய்த்தனைப், பொறுத்திடுந்தன்மையும்பொருவில்வன்மையு, முறைத்திடுமன்பும்வாலுணர்வுநல்கியே, யறத்தனிக்கடவுளுக்கண்ணல்கூறுவான். (௩௦௬)

Digitized By Roja Muthiah Research Library

முதலயலிடைகடைமொழியநின்றிடுஞ், சதுர்வித்யுகந்தனிற்றருமத்தின்றிற
மிதுவெனநான்குமூன்றிரண்டொன்ருகிய,பதமுறையூன்றியேபடியிற்சேறிமேல்.

ஈங்குனதிடந்தனில்யாமெக்காலமு, நீங்கலமிருந்தனநீயும்வந்துநம்
பாங்கரினடைந்தனைபரிவொடேர்தியாய்த், தாங்குதியாரினுந்தலைமைபெற்றுளாய்.()

எண்ணுநந்தொண்டர்களியற்றுபாவமும், புண்ணியமாநமைப்புறக்கணித்துளார்
பண்ணியவறமெலாம்பாவமாகுமாற், றிண்ணமீதருமமறைதானுஞ்செப்புமே. ௲0௬

மைதவிரடியர்செய்பவமுமற்றுளார், செய்திடுதருமமுந்திரிபதாகியே
யெய்திடுகின்றதியாமுன்றன்னிடை, மெய்திகழுயிரெனமேவும்பான்மையால். ()

நின்னிடையாமுளோநீயுமூர்தியாய்,மன்னுதியெமதுபான்மற்றிதல்லதை[ய்தரோ.
யின்னுமோர்வடிவுகொண்டெம்மைப்போற்றுதி, யன்னதுமுணர்கெனவருளிச்செ

வேறு.

கூர்ந்தசூலக்கொடும்படைவானவன், சார்ந்துபோற்றுந்தருமக்கடவுளை
யூர்ந்திடுந்தனியூர்தியதாகியே, சேர்ந்திடும்படிசீரருள்செய்தனன். (௲௧௨)

அந்தநான்முதலாதிப்பிரான்றனைச், சிந்தைமேல்கொண்டசீருடையன்பர்முன்
னந்தியாகுநலம்பெறுமூர்திமேல், வந்துதோன்றும்வரம்புரிபான்மையால். (௲௧௩)

சாற்றுமவ்விடைக்கேதனைத்தாங்குபே, ராற்றலீந்தசெயலறிந்தல்லவோ [ன்.
மாற்றலார்புரஞ்செற்றுழிமாயவ, னேற்றின்மேனிகொண்டெந்தையைத்தாங்கினு

ஆதலாலரனவ்விடையூர்ந்திட, லேதமோவன்றிதுநிற்கதெண்டிரை
மீதுதோன்றும்விடத்தையுண்டானென, வோதினுயதனுண்மையைக்கேட்டிநீ. ()

வேறு.

நிருதர்தம்முடனவுணருமமரருநேர்ந்து
திருகுவெஞ்சினத்தொருபகன்முந்துபோர்செய்ய
விருதிறத்தினும்பற்பலர்வல்லையிலிறப்ப
வெருவியன்னதுகண்டனரமரினைவிடுத்தார். (௲௧௪)

மேலைவானவரவுணர்தங்கோவொடுவிரவிக்
காலமெண்ணிலவிருந்துபோர்செய்வதுகருதி
நாலுமாமுகத்திறையவன்பதத்தினைநணுகிச்
சீலமோடவன்ருண்மலர்பணிந்துரைசெய்வார். (௲௧௭)

ஒல்குமாயுளையுடையரேம்பற்பகலுளுற்று
மல்குபேரமரியற்றுவான்பாற்கடன்மதியா
வல்கலின்றியவமிர்தினைவாங்கியேயடிகே
ளல்குவாயெமக்கென்றலுமயனிவைநவில்வான். (௲௧அ)

ஆதிமாயவற்கிச்செயன்மொழிகுவமவனே
யோதவேலையைக்கடைந்தமுதளித்திடுமுண்டாற்
சாதல்வல்லையில்வந்திடாதென்றயன்சாற்றிப்
போதுநாமெனவவரொடும்பாற்கடல்புகுந்தான். (௲௧௯)

நனந்தலைப்படுபயங்கெழுதெண்டிரைநடுவ
ணனந்தன்மீமிசைத்துயிலுறுமூர்த்தியையணுகி
மனந்தவாதபேரன்பொடுநான்முகன்வழுத்த
நினைந்துகண்விழித்தொய்யெனவெழுந்தனனெடியோன். (௲௨0)

Digitized By Roja Muthiah Research Library

நீவிரிவ்விடைவந்தவாறென்னெனநெடியோன்
பூவின்மேல்வருபண்ணவனவுணர்கள்பொருவி
றேவர்வேந்தர்கள்வேண்டியகுறையினைச்செப்ப
வாவதென்றதற்கிசைந்தனனளித்திடுமருளால். (௩௨௧)

அருள்புரிந்தெழுமாயவன்மந்தரமதனை
யுருள்புரிந்திடுமத்தெனநிறுவியேயுடலாம்
பொருள்புரிந்திடுமதியினைமதலையாப்புரியா
விருள்புரிந்தவாசுகிதனைநாணெனயாத்தான். (௩௨௨)

ஒருபுறத்தினிலமரர்களொருபுறத்தவுண
ரிருபுறத்தினுமீர்த்திடநல்கியிப்புவிசூழ்
தருபுறக்கிரியினையமத்தடிமுடிதன்மெய்
வருபுறத்தினுங்கரத்தினும்பரித்தனன்மாலோன். (௩௨௩)

ஆனதன்மையின்மாயவன்பரித்துழியமரர்
கோனும்வானவர்யாவருமவுணருங்கோமான்
றானும்வாசுகிபற்றியேவலியுறுந்தகவால்
வாணிலாவுமிழ்பாற்கடன்மறுகிடமதித்தார். (௩௨௪)

மதித்தவேலையவ்வேலையினுடைந்தெனவாய்விட்
டதிர்த்ததேவருமுலைந்தனர்குலைந்தனவகிலங்
கதித்தமேருவுஞ்சலித்தனவொலித்தனகரிகள்
பதைத்துவெய்துயிர்த்தொடுங்கினநடுங்கினபணியே. (௩௨௫)

உடைந்துபோவதுகொல்லெனவமரர்களொருங்கே
தொடர்ந்ததம்பெருவலிகொடேமந்தரஞ்சுழலக்
கடைந்துவேலையைக்கலக்குழியீர்த்திடுங்கயிறு
யடைந்தவாசுகிபொறுக்கலாதயர்ந்ததையன்றே. (௩௨௬)

ஊன்றுபேதுறவெய்தியேயாற்றவெய்துயிர்த்துத்
தோன்றுவெஞ்சினங்கொண்டுமெய்பதைத்துநாத்துடிப்ப
வான்றவாயிரம்வாய்தொறுமாலகாலத்தைக்
கான்றதத்துணையளக்கருமுமிழ்ந்ததுகடுவே. (௩௨௭)

ஈற்றுக்கோடியினெழுமுகிற்கோடியினிருண்டு
கூற்றுக்கோடியின்யறங்கொடுதிசைதொறுங்குலவுங்
காற்றுக்கோடியின்விரைவினல்வடவையங்கடுந்தீ
நூற்றுக்கோடியிற்பரந்ததவ்விடமெலாநொய்தின். (௩௨௮)

ஓடலுற்றெழுந்தவ்விடஞ்சூழ்தலுமுலையா
வோடலுற்றனர்தானவரும்பராயுள்ளோ
ரோடலுற்றனர்முனிவரரோடலுற்றனரா
லோடலுற்றனருலகெலாம்படைத்திடுமுரவோர். (௩௨௯)

தண்டுழாய்முடிப்பண்ணவனினையதோர்தன்மை
கண்டுமந்தரங்காப்புவிட்டுள்ளமேற்கவற்சி
கொண்டுநாமின்றுபோற்றுதுமீதெனக்குறியா
வண்டராதியர்மேற்செலும்விடத்தின்முன்னடுத்தான். (௩௩0)

Digitized By Roja Muthiah Research Library

மேல்வருங்கொடுவிடத்தின்முன்னுறுதலும்வெகுண்டு
சாலவங்கதுதாமரைக்கண்ணன்மேற்றாக்கி
மூலமுள்ளதோர்வச்சிரமணிநிறமுருக்கி
நீலவண்ணமேயாக்கியதவனுநின்றிலனால். (௯௯௧)

கோலகாலமாயுலகெலாமடுந்தொழில்கொண்ட
வாலகாலமுன்னிற்கலாரரிமுதலானோர்
மூலகாலமுமிறுதியுமின்றியேமூவாக்
காலகாலன்வாழ்கயிலையையடைந்தனர்கடிதில். (௯௯௨)

மூந்துவெவ்விடஞ்சுடுதலாலிரிந்தவர்முக்க
ணெந்தையெம்பெருமாட்டிவாழ்கயிலையிலெவரும்
வந்ததற்புதநீரதோவெருவினுன்மைந்தர்
தந்தைதாயிடத்தன்றியேயாங்ஙனஞ்சார்வார். (௯௯௩)

வேறு.

ஆயவர்கயிலையில்மலற்காகிய, கோயிலின்முதற்பெருங்கோபுரத்திடை
நாயகநந்தியந்தேவைநண்ணியே, போயதெந்தயரெனப்புகன்றுபோற்றினர். ()

போற்றியபின்னுறப்புகுந்தவாறெலாஞ், சாற்றினர்கேட்டலுந்தருவர்தேவர்கள்[ன்.
வீற்றுறவவணிநீஇவேதன்மாறிசைக், கோற்றொழிலார்தமைக்கொண்டுபோயின

நடைநெறியருள்புரிநந்தியெம்பிரான், கடைநிலையைந்தவாங்காப்பிலெண்டிசை
யடைதருமன்னரையருளிநோக்கியிவ், விடைதனிலுறுதிரென்றியம்பியேகியே. ()

அருண்முறைநாடிமாலயனென்றுள்ளதோ, ரிருவரையமலன்முன்னெய்தவுய்த்
தலுங்,கருணையங்கடறிலைக்கண்டுபோற்றினர், பரவசமாயினர்பணிந்துபன்முறை.

போற்றினர்நிற்றலும்புரத்தைமுன்னடு, மாற்றலினும்பரானரிநின்மேனிதான் [ன்.
வேற்றுருவாயிவண்மேவிற்றென்னெனச்,சாற்றினன்யாவையுமுணருந்தன்மையா

மெய்வழிபாடுசெய்மேலையோர்க்கெலா, மூய்வழிபுரிபவனிலையவோதலு
மைவழிமேனியன்மானமுள்ளுற, வவ்வழியிலையனவறைதன்மேயினன். (௯௯௯)

வஞ்சினவவுணர்கள்வானமேலவர், வெஞ்சினவமரினில்விளிந்தவேலையி
லெஞ்சலிலாயுவுற்றிகல்செய்வாமெனப், புஞ்சமொடயனொடுபுகறன்மேயினர். ()

அன்னமென்கொடியினனையரோடுபோங், தென்னொடுகூறினன்யானெழுந்த
ரோ, வுன்னருள்பெற்றிலனுணர்ந்திடாமலே, மன்னியவமிழ்திவண்வருதல்வேண்
டினேன். (௯௪௧)

தானவரமரர்கள்சதுர்முகத்தவ, னேனையர்தம்முடனியானின்றெய்தியே
பாணிறைகடல்கடைபொழுதிற்பாயெரி, யானதுமருளுறவாலம்போந்ததே.(௯௪௨)

உன்றனதருள்பெறுவுண்மைநாடியே, யின்றுலகுயிரெலாமிறக்கவவ்விடஞ்
சென்றதியாவருந்தெருமந்தோடினர், நின்றவென்மெய்யையிந்நிறமதாக்கிற்றே.()

வேற்றுருவாக்கியென்மெய்யிற்றாக்கனு, மாற்றலனகன்றனனையர்தம்மொடே
யேற்றமதானவெம்மிடர்கள்யாவையு, மாற்றுநர்யாருளர்மற்றுநீயலால். (௯௪௪)

உன்னருள்பெறுமலவ்வுததிசேர்தலா, லின்னதொரின்னல்வந்தெய்திற்றுதலா
னின்னடியடைந்தனநீடுதீயெனத், துன்னியகொடுவிடந்தொலைக்கச்செல்லுமால்.

Digitized By Roja Muthiah Research Library

ஆரணம்யாவையுமறிந்துநாடொறும், பூரணவுமையொடுபொருந்தியின்னதா
மேரணவுருவுகொண்டிருக்கையெம்மையாள், காரணமன்றியேகருமம்யாவதோ.

தீயெனவெழுதருசீற்றவெவ்விட, மாயதைமாற்றியேயளியர்தங்களை
நீயருள்புரிகெனநீனிறந்திகழ், மாயவனுரைத்தனன்வழுத்திநிற்கவே. (௩௪௭)

மாதிரவிறைவரும்வானுளோர்களு, நீதியிலவுணருநின்றவெல்லையி
ஞதனைவழுத்தலுநம்பன்கேட்டரோ, வேதிவையரவமென்றியம்பலோடுமே. ()

வானவரவுணர்கண்மாதிரத்தவ, ரேனையர்வல்விடத்தின்னலுற்றுளார்
கோநகர்க்கடைதொறுங்குழுமியேத்தினு,ரானதிவ்வொலியெனவயன்விளம்பவே

கறுத்திடுமிடறுடைக்கடவுணந்தியைக்,குறிப்பொடுநோக்கியேகொணர்தியாலெ
னப், புறத்திலம்மேலவன்போந்துமற்றவர்,திறத்துடனுறையுளிற்செல்லவுய்ப்பவே

வந்தவர்யாவரும்வணங்கியீசனைப், புந்தியிலன்பொடுபோற்றியாற்றவு [வே.
நொந்தனம்விடத்தினுனெய்திலன்னதைச், சிந்தினையெமக்கருள்செய்தியென்ன

வேறு.

சுதெலாங்கேட்டமேலோனிறைவியைநோக்கியின்னோ
ரோதலாமாற்றமுன்றனுளத்தினுக்கியைவதாமோ
மாதுநீபுகறியென்னவந்துநின்னடைந்தார்வானோ
ராதலாலவர்க்குவல்லேயருள்புரிந்திடுதியென்றாள். (௩௫௨)

வண்டமர்குழலெம்மன்னைமற்றிவையிசைத்தலோடு
மண்டருமகிழ்ச்சியெய்தியாதியங்கடவுடன்பாற்
றொண்டுசெய்தொழுகுகின்றசுந்தரன்றனைநோக்கிக்
கொண்டிவண்வருதியாலக்கொடுவிடந்தனையென்றான். (௩௫௩)

என்றலுமினிதேயென்னுவிறைஞ்சினனேகியாண்டுந்
துன்றியவிடத்தைப்பற்றிச்சுந்தரன்கொடுவந்துய்ப்ப
வொன்றொருநிவலையேபோலொடுங்குறமலர்க்கைவாங்கி
நின்றிடுமமரர்தம்மைநோக்கியேநிமலன்சொல்வான். (௩௫௪)

காளகவுருவுகொண்டகடுவினையுண்கோவன்றே
னீளிடையதனிற்செல்லநெறிப்படவெறிகோவென்னு
வாளுறுமதிதோய்சென்னிவானவனருளவன்னுன்
றாளுறவணங்கிநின்றுசதுர்முகன்முதலோர்சொல்வார். (௩௫௫)

ஐயநீயன்றியாரிவ்வனல்விடமாற்றுநீரார்
செய்யகைக்கொண்டவாற்றற்சிறிதெனக்காட்டிற்றன்றே
வெய்யதோரிதனையின்னேவிட்டனையென்னிற்பின்னை
யுய்வரோயாருமின்னேயொருங்குடன்முடிந்திடாரோ. (௩௫௬)

முடிவிலாவுனக்கேயன்றேமுன்னுறுபாகமெல்லாம்
விடமதேயெனினுமாகவேண்டுதுமிதனைவல்லே
யடியரேமுய்யுமாற்றாலருந்தினையருண்மோவென்னக்
கடிகமழிதழிவேய்ந்தோன்கலங்கலீரினிநீரென்றான். (௩௫௭)

என்றனன்விரைவிற்றன்கையேந்தியவிடமுட்கொள்ளச்
சென்றதுமிடற்றிலன்னதிறத்தினையாருநோக்கி
யின்றெமதுயிர்நீகாத்தற்கிங்கிதுசான்றாயங்க
ணின்றிடவருடியென்றேநிமலனைப்போற்றலுற்றார். (௩௫௮)

Digitized By Roja Muthiah Research Library

போற்றலுமிடற்றிலெங்கோன்பொலன்மணியணியதென்ன
மாற்றருந்தகைமைத்தானவல்விடநிறுவியன்னார்க்
கேற்றநல்லருளைச்செய்யயாவருமிறந்தேயின்று
தோற்றினராகுமென்னச்சொல்லருமகிழ்ச்சிகொண்டார். (௬௫௯)

மாமகிழ்சிறந்துநிற்குமாலயன்முதலோர்தம்மைத்
தூமதிமிலைச்சுஞ்சென்னித்தொல்லையோனருளானோக்கிக்
காமருகடலையின்னுங்கடைதிராலமுதுண்டாகும்
போமினீரின்னேயென்னப்போற்றினர்வணங்கிப்போனார். (௬௬௦)

போனவர்தொன்மைபோலப்புணரியைக்கடைந்தகாலை
மேனிகழமிர்தமேலைவியன்பொருள்பலவும்வந்த
வானவர்தாமேபெற்றார்மற்றவைதம்மையால
மானதையமலனுண்டதவருயிரளித்ததன்றே. (௬௬௧)

கடல்விடநுகர்ந்ததொல்லைக்கடவுள்பின்னழிக்குங்காலை
யுடலுயிரகிலம்யாவுமொடுங்கியவிடமதன்றோ
சுடலையதாகுமந்தச்சுடலைகாணலையசோதி
நடநவில்கின்றவெல்லைநாடருந்தகைமைத்தஃதே. (௬௬௨)

அங்கதுமன்றியெந்தையகிலமுமுடித்தஞான்றி
னெங்கும்வெள்ளிடையதாகியீமமாமவ்வீமத்து
மங்கையுந்தானுமேவுமற்றிதுதவறேவன்னான்
கங்கையைமுடிமேற்கொண்டகாதைமேலுரைத்துமன்றே. (௬௬௩)

ஈசனையொருஞான்றம்மையெழில்பெறுகயிலைக்காவிற்
பேசலளாடலுன்னிப்பின்வராவிழியிரண்டுந்
தேசுறுகரத்தாற்பொத்தச்செறிதருபுவனம்யாவு
மாசிருள்பரந்ததெல்லாவுயிர்களும்வருத்தங்கொள்ள. (௬௬௪)

திங்களின்கதிருமேலைத்தினகரன்வெயிலுந்தீயின்
பொங்குசெஞ்சுடருமேலைப்புலவர்தங்கதிருமற்று
மெங்குளவொளியுமாய்வுற்றிருணிறம்படைத்தமாதோ
சங்கரன்விழியாலெல்லாச்சோதியுந்தழைத்தநீரால். (௬௬௫)

தன்னிகர்பிறரிலாததற்பரன்விழியிரண்டுங்
கன்னிகைகமலக்கையாற்புதைப்பவக்கணமதொன்றின்
மன்னுயிர்த்தொகைகட்கெல்லாம்வரம்பிலாவூழியாக
வன்னதோர்பான்மைநோக்கியருளுவானினைந்தானன்றே. (௬௬௬)

ஓங்குதன்னுதலினுப்பனொருதனிநாட்டநல்கி
யாங்கதுகொண்டுநாதனருள்கொடுநோக்கியாண்டு
நீங்கருநிலைமைத்தாகிநின்றபேரிருளைமாற்றித்
தீங்கதிர்முதலானோர்க்குச்சிறந்தபேரொளியையீந்தான். (௬௬௭)

மண்ணுறுபுவனத்துள்ளமாயிருண்முழுதுநீங்க
வுண்ணிகழுவகைமேல்கொண்டுயிர்த்தொகைசிறத்தலோடுங்
கண்ணுதலிறைவன்செய்கைகவுரிகண்டச்சமெய்தித்
துண்ணெனவிழிகண்மூடுந்துணைக்கரம்வாங்கினாளால். (௬௬௮)



Digitized By Roja Muthiah Research Library

சங்கரன் விழிகண்மூடுந்தனுதுகைதிறக்குமெல்லை
யங்குலியவையீரைந்துமச்சத்தால்வியர்ப்புத்தோன்ற
மங்கையத்தகைமைகாணுஉமற்றவைவிதிர்ப்பப்போந்து
கங்கையோர்பத்தாயாண்டுங்கடல்களிற்செறிந்தவன்றே. (௩௬௯)

ஆயிரநூறுகோடியணிமுகம்படைத்தியாண்டும்
பாயிருநீத்தமாகிப்பரவலுமதுகண்டஞ்சி
மாயனுமயனும்வானோர்மன்னனும்பிறரும்போற்றி
மீயுயர்கயிலைநண்ணிவிமலனையடைந்துதாழ்ந்தார். (௩௭0)

அடிமலர்தொழுதேயெந்தாயறிகிலோமிதுவோர்நீத்தங்
கடல்களுமன்றால்யாண்டுங்கல்லெனவிரைத்தியாரு
முடிவுறுதிறத்தாலண்டமுழுவதுங்கவர்ந்தமுன்னாள்
விடமெனப்பரித்தேயீதுவிமலநீகாத்தியென்றார். (௩௭௧)

என்றலுநதிகடோற்றமியம்பியெவ்வுலகுஞ்சூழ்போய்
நின்றவந்நீத்தந்தன்னைநினைத்தவணழைத்துநாத
னென்றுதன்வேணிமேலோருரோமத்தினும்பருய்ப்ப
மன்றலங்கமலத்தோனுமாலுமிந்திரனுஞ்சொல்வார். (௩௭௨)

மேதினியண்டமுற்றும்விழுங்கியகங்கையுன்றன்
பாதியாள்கரத்திற்றோன்றும்பான்மையாலனதுசென்னி
மீதினிற்செறிக்கும்பண்பால்விமலமாமதனிலெங்கண்
மூதெயினகரம்வைகச்சிறிதருண்முதல்வவென்றார். (௩௭௩)

இறைவன்வேணியுள்புக்கிருந்ததோர்கங்கைதன்னிற்
சிறுவதைவாங்கிமூவர்செங்கையுஞ்செறியநல்க
நிறைதருமன்பாற்றாழ்ந்துநிகழ்விடைபெற்றுத்தத்த
முறைநகரெய்தியங்கணுய்த்தனரனையநீத்தம். (௩௭௪)

அந்நதிமூன்றுதன்னிலயனகர்புகுந்தகங்கை
பன்னருந்திறலின்மிக்கபகீரதன்றவத்தான்மீளப்
பின்னருமிமையாமுக்கட்பெருந்தகைமுடிமேற்றங்கி
யிந்நிலவரைப்பிற்செல்லவிறையதில்விடுத்தல்செய்தான். (௩௭௫)

நானிலமிசையேயுய்த்தநன்னதிசகரரெல்லாம்
வானுயர்கதிபெற்றுய்யமற்றவரென்பிற்பாய்ந்து
மீனெறிதரங்கவேலைமேவியதிஃதொன்றல்லா
லேனையநதிகடொல்லையிடர்தனிலிருந்தவன்றே. (௩௭௬)

தொல்லையிலிறைவியங்கைத்தோன்றியகங்கைநீத்த
மொல்லையிலுலகங்கொள்ளாதடக்கியவுண்மையன்றோ
வல்லிருளனையகண்டத்ததியங்கடவுண்முன்னோர்
மெல்லியறன்னைவேணிமிசைக்கொண்டானென்னுமாறே. (௩௭௭)

மாதுமைவசத்தனாகிமருவுவானென்றியன்னா
னூதனதருளேயெல்லாநண்ணுவித்தருளும்வண்ணம்
பேதகமாகித்தானோர்பெண்ணுருக்கொண்டுமேவு
மாதலினவள்வந்துற்றதன்மையையறைவன்கேட்டி. (௩௭௮)

Digitized By Roja Muthiah Research Library

தொல்லையோர்கமலத்தண்ணலேன்றியேயிருந்தகாலைப்
பல்லுயிர்த்தொகுதிதன்னைப்படைப்பதுகருதிமுன்னர்
வல்லையிற்சனகனுதிமைந்தர்நால்வரையுநல்க
நல்லுணர்வெய்தியன்னோர்நற்றவராகியுற்றார். (௲௭௯)

அன்னதற்பின்னர்வேதனளிப்பதுமல்காதாக
வின்னலுற்றிரக்கமெய்தியாதினிச்செய்வதென்று
முன்னுறுகுமரரோடுமுகுந்தனதிடத்திலெய்திப்
பொன்னடிவணக்கஞ்செய்துதன்குறைபுகன்றுநின்றான். (௲௮0)

நின்றிடுகின்றகாலைநேமியங்கரத்துவள்ள
லின்றிதுநம்மான்முற்றுதீசனலன்றியென்று
நன்றுணர்முனிவரோடுநான்முகனேடும்வெள்ளிக்
குன்றினிலேகிநாதன்குரைகழல்பணிந்துசொல்வான். (௲௮௧)

அண்டர்கண்முதல்வகேண்மோவம்புயன்படைப்பினுள்ளங்
கொண்டனனதுமல்காதாற்குறையிதுநீக்குகென்ன
வண்டுளவத்தினுனைமைந்தரையயனைநோக்கி
நுண்டுகள்படவேயீசனெய்தெனவீறுசெய்தான். (௲௮௨)

ஏகனையாகிவைகுமெந்தைதன்னிடப்பாலான
வாகுவைநோக்குமெல்லைமற்றவனுமையாடோன்றப்
பாகமதிருத்தியன்னுட்பரிவொடுகலந்துமேவிக்
கோகனதக்கண்ணனைக்குமரரையயனைத்தந்தான். (௲௮௩)

தந்துழியீசன்றன்னைத்தனயருமயனுமாலும்
வந்தனைசெய்துபோற்றமாயவன்வதனநோக்கி
நந்தமதருளதாகுநங்கையோடினிதுசேர்ந்தா
முந்தையின்வேதாச்செய்கைமுற்றிடும்போதியென்றான். (௲௮௪)

என்னலுமுவகையெய்தியாமினியுய்ந்தோமென்று
வன்னையொடத்தன்றன்னையளியொடுவலஞ்செய்தேத்திப்
பின்னரும்வணக்கஞ்செய்துபெயர்ந்தனர்பின்புவேதா
மன்னுயிர்த்தொகுதியெல்லாம்வரன்முறைபடைக்கலுற்றான். (௲௮௫)

மாற்றலர்புரமூன்றட்டவானவனுமையாளோடும்
வீற்றிருந்தருளலாலேவிழைவுடனுண்பெண்மேவி
யாற்றவுமின்பமெய்தியாவிகள்பெரிதுமல்க
நாற்றிசைமுகத்தன்செய்கைநன்றுறநடந்ததன்றே. (௲௮௬)

தேனமர்கமலத்தண்ணல்செய்தொழின்முற்றுமாற்று
லானதன்னருளையாங்கோராயிழையாகநல்கி
மேனிகழ்கருணைதன்னுன்மேவுவதுணராயேனை
வானவர்போலெங்கோனைமதித்தனைமதியிலாதாய். (௲௮௭)

காமருவடிவாயெங்குங்காண்பதுசத்தியங்கண்
மாமயமாகிநின்றான்மன்னியசிவனுமீது
தூமறைமுதலாவுள்ளதொல்லைநூல்புகலுமன்னூர்
தாமொருபுதல்வன்றன்னைத்தந்தவாசாற்றுகின்றாம். (௲௮௮)

ததீசியுத்தரப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௯0௭.

---

Digitized By Roja Muthiah Research Library

# கயமுகனுற்பத்திப்படலம்.

பாகசாதனன்றொல்லைநாள்வானவப்படையோ
டேகியேயசுரர்க்கிறைதன்னைவென்றிகலில்
வாகைசூடியேவிஞ்சையர்முதலினோர்வாழ்த்தப்
போகமார்தருமுலகிடைமீண்டுபோய்ப்புகுந்தான். (௧)

பொன்னகர்க்கிறைபோதலும்பொறாமையிற்புழுங்கி
வன்னியுற்றிடுமலங்கல்போலுளநனிவாடி
வென்னளித்திடுமவுணர்தங்கோமகன்வினையேற்
கென்னினிச்செயலெனப்பெரிதுன்னியேயினைந்தான். (௨)

வெருவரும்படிமலைந்திடுமமரர்பான்மேவிப்
பொருதுவென்றிகொண்டெனக்குமப்பெரும்புகழ்புனைய
வொருவரெங்குலத்தில்லைகொலோவெனவுரையாக்
குருவிருந்துழியணுகியேவணங்கினன்கொடியோன். (௩)

பொற்றையின்சிறைதடிந்தவன்சுரரொடும்போர்மே
லுற்றகாலையிற்படையுடன்யான்பொருதுடைந்து
மற்றவற்குவென்னளித்தனனம்பெருமரபிற்
கொற்றவீரர்களியாவருமுடிந்தனர்கூற்றால். (௪)

கழியமாசினையடைந்தனமின்னலேகரையாம்
பழிகொள்வேலையிலழுந்தினமுடைந்திடுபகைவர்க்
கழிவுமுற்றனம்பெருந்திறலற்றனமவுண
ரொழியுமெல்லைவந்தெய்தியதோவிவணுரைத்தி. (௫)

சிறுவராயினோர்பெருமையிற்பிழைப்பரேற்றெருட்டி
யுறுதிபற்பலகொளுத்திமற்றவர்தமையுயர்ந்த
நெறியினுய்க்குதல்குரவர்தங்கடனதுநீயே
யறிதியாதலினுய்யுமாறுரைத்தியென்றறைந்தான். (௬)

உரைத்தவாசகங்கேட்டலுமன்னநீயுளத்தில்
வருத்தமுற்றிடலென்னவேதேற்றிமேல்வருவ
கருத்திலுன்னினன்றெரிதலும்வெதும்பியகாயத்
தரைத்தசாந்தினையப்பினன்போலவொன்றறைந்தான். (௭)

வேறு.

ஆதியம்பரமன்றாளேயடைதருபுனிதன்றொல்லை
வேதியர்தலைவனானவிரிஞ்சன்மெய்யுணர்விற்பூத்த
காதலன்புலன்களாயபகைஞரைக்கடந்தகாட்சி
மாதவமுனிவர்க்கீசன்வசிட்டனென்றுரைக்கும்வள்ளல். (௮)

அன்னவன்மரபின்வந்தோனறிஞர்க்குமறிஞன்மேலாய்
மன்னியநெறிக்கணின்றோன்மாகதனென்னும்பேரோ
னுன்னருமறைகள்யாவுமுணர்ந்தவனுயர்ந்தவீடு
தன்னையிங்கடைவனென்னாத்தவந்தனையியற்றலுற்றான். (௯)

Digitized By Roja Muthiah Research Library

ஆயவன்றன்பாலின்றோரசுரகன்னிகையைத்தேற்றி
யேயினையென்னினன்னாளெய்தியேயவன்றனோடு
மேயினகாலையாங்கோர்வேழமாமுகத்தனுங்க
ணாயகனாகத்தோன்றிநற்றவம்புரிவனன்றே. (௧௦)

நற்றவம்புரிதல்காணாநண்ணலர்புரங்கண்மூன்றுஞ்
செற்றவன்மேவிமேலாஞ்செல்வமுந்திறலுநல்க
மற்றவன்வானோர்தொல்சீர்மாற்றியெவ்வுலகுமாளுங்
கொற்றவனாவனென்றுகூறினான்குரவனானோன். (௧௧)

அவ்வுரைகேட்டலோடுமடித்துணையிறைஞ்சியீது
செவ்விதுசெவ்விதெந்தாய்செய்வனீபணித்ததென்ன
வெவ்வமில்புகருமற்றேயியற்றியசென்மோவென்ன
மைவரையனையமேனிமன்னவன்கடிதுமீண்டான். (௧௨)

மீண்டுதன்னிருக்கையெய்திவிபுதையென்றொருத்தியன்னாள்
காண்டகுமெழிலின்மிக்ககன்னிதன்குலத்தில்வந்தாள்
பூண்டகுநாணினோடும்பொருந்தினளவளையெய்தி
யீண்டொருமொழிகேட்டன்னாயென்னிடர்தீர்த்தியென்றான். (௧௩)

மன்னவர்மன்னன்கூறுமாற்றமங்கதனைக்கேளாக்
கன்னிகையாகிநின்றகாமருவல்லியன்னா
ளின்னடித்தொண்டுசெய்யுநிருதர்தங்குலத்துவந்தே
னென்னுனக்கியற்றுஞ்செய்கையிசைந்தனவிசைத்தியென்றாள். (௧௪)

உரையெனலோடுமன்னனுன்குலத்தோரைவிண்ணோர்
பொருதுவென்கண்டுமீண்டுபோனதையறிதியன்றே
மருவருங்குழலாய்போரில்வானவர்தம்மைவெல்ல
வொருவருமில்லைநின்னாலுற்றிடவேண்டுங்கண்டாய். (௧௫)

ஆங்கதற்கேதுக்கேட்டியம்பொன்மால்வரைத்தெனாது
பாங்கரிலரியநோன்புபயிலுமாகதன்பாற்சென்று
நீங்கல்செல்லாதுபன்னாணினைவறிந்தொழுகிக்காலந்
தீங்கறநாடியன்னான்செய்தவஞ்சிதைத்துச்சேர்தி. (௧௬)

சேருதியென்னினங்கோர்சிறுவனின்னிடத்திற்றோன்றிப்
பாருலகனைத்துமேலாம்பதங்களும்வலிதிற்கொண்டு
வீரரில்வீரனாகிவெம்பகைவீட்டியெங்க
ளாரனார்துடைக்குமன்னாயன்னவாறமைதியென்றான். (௧௭)

வேந்தனதுரையைக்கேட்டவிபுதையம்முனிவன்றன்பாற்
போந்தனதெண்ணமுற்றப்புதல்வனையளித்துமீள்வ
லேந்தனீயிரங்கலென்றேயேகினளிறைவன்வானோர்
மாய்ந்தனரினியென்றுன்னிமகிழ்ச்சியோடிருந்தானங்கண். (௧௮)

ஏகியவசுரர்கன்னியேமமால்வரையின்சார்போய்
மாகதன்பாற்சென்றன்னான்மாதவத்திறத்தைநோக்கி
யாகொடிதிவனேயல்லாதாரிதுபுரியுநீரார்
மோகமிங்கிவனையாக்கிமுயங்குவதெவ்வாறென்றாள். (௧௯)

Digitized By Roja Muthiah Research Library

நேமிகளனைத்துமாரநிவந்தெழும்வடவைதன்னை
மாமுகின்மாற்றவற்றோமாற்றவேவல்லதென்னிற்
காமவேளெடுத்தசெய்யகணையெலாமொருங்குசென்றித்
தோமில்சீர்முனியைவாட்டித்துறவையுமாற்றுமென்றாள். (௨௦)

வானுயர்தவத்தினிற்குமாகதன்யானேயல்ல
மேனகைவரினுநோக்கான்விண்ணவர்பகைஞர்தங்கள்
கோனிஃதுணரான்போலுங்குறுகிநீபுணர்தியென்றா
னானதற்கிசைந்தவாறுநன்றெனநகைத்துநின்றாள். (௨௧)

போந்தனென்மீண்டுமென்னிற்போற்றலர்க்குடைந்துசோரும்
வேந்தனென்னுற்றாயென்றுமீளவும்விடுப்பனம்மா
வேய்ந்தநேயத்திலென்பாலெய்திமற்றிவனேயெற்குக்
காந்தனேயாகநோற்றுக்காலமும்பார்ப்பனென்றாள். (௨௨)

என்றிவையுன்னியுற்றோர்க்கினிதருள்புரியும்வெள்ளிக்
குன்றுறைபெருமான்செய்யகுரைகழல்கருத்துட்கொண்டு
வன்றிறனோன்பின்மிக்கமாகதமுனிவனேரா
நின்றருந்தவத்தையாற்றநெடும்பகல்கழிந்ததன்றே. (௨௩)

மாதுசெய்தவத்தினாலும்வரன்முறைவழாதவூழி
னேதுவினாலுமங்கணிருங்களிற்றொருத்தலொன்று
காதலம்பிடியினோடுகலந்துடன்புணரக்காணூஉ
வாதரம்பெருகப்பல்கானோக்கினனருந்தவத்தோன். (௨௪)

மறந்தனன்மனுவின்செய்கைமனப்படுபொருளைவாளா
துறந்தனன்காமமென்னுஞ்சூழ்வலைப்பட்டுச்சோர்வுற்
றிறந்தனன்போலமாழ்கியின்னுயிர்சுமந்தானின்று
பிறந்தனனிணையகூட்டம்பெற்றிடுவேனேலென்றான். (௨௫)

என்றிதுபுகன்றுமுன்செய்தவக்குறைக்கிரங்கியென்று
நின்றதுபழியேயேனுநீடுமேற்காமச்சூர்நோய்
தின்றுயிர்செருக்குமந்தோசெய்வதிங்கெவனோவென்னா
வென்றிகொண்முனிவன்றானுமனத்தொடுவினவலுற்றான். (௨௬)

தீவிடந்தலைக்கொண்டாங்கேதெறுதருகாமச்செந்தீ
யோய்வதுசிறிதுமின்றியுள்ளுயிரலைக்கும்வேலை
யாவதெனிருக்கினின்னுமருந்தவங்கூடுமாவி
போவதிற்பயன்யாதென்னாப்புணர்ச்சிமேற்புந்திகொண்டான். (௨௭)

போவதற்கெண்ணும்போதிற்பொருவில்சீரசுரர்க்கெல்லாங்
காவலனேவல்போற்றுங்கன்னிகைமுனிவன்காமத்
தோய்வதும்பிறவுமெல்லாமொருங்குடனோக்கியெண்ணம்
யாவதுமுடிந்ததென்னாவெல்லையின்மகிழ்ச்சிபெற்றாள். (௨௮)

ஈங்கிதுகாலமாகுமிடனுமாமிதற்குவேறு
தீங்கிலையிணையகூட்டஞ்செய்தவஞ்செய்ததென்னா
வாங்கியநுதலினாளும்வல்விரைந்தெழுந்துதூயோன்
பாங்கரினணுகிப்பொற்றாள்பணிந்தனள்பரிவுகூர. (௨௯)

Digitized By Roja Muthiah Research Library

மின்னிடைபணிந்துநிற்பமெய்யுறுப்பனைத்துநோக்கிப்
பின்னருமான்மீக்கொள்ளப்பித்தரின்மயங்காநின்று
கன்னியுமென்னைவெஃகுங்காந்தருவத்தினொரு
மின்னவளாயினன்றேவென்னுயிருய்யுமென்னா. (௩0)

கருத்திடையுன்னியார்நீகன்னியோவென்னலோடு
மருத்திகொண்முனியைநோக்கியன்னதாமென்னநம்பால்
வரத்தகுங்கருமமென்கொல்வல்லையிலியம்புகென்றான்
விரத்தரிற்றலைவனாகிவீடுபெற்றுய்யநோற்றான். (௩௧)

முருந்தெனுமுறுவலாளுமுனிவநீகணவனாக
விருந்தவம்புரிந்தேன்பன்னாளின்றதுமுடிவதாகப்
பொருந்தினனீண்டுநின்னைப்புல்லியவந்தேனென்ன
வருந்துறாசமுதம்பெற்றமாக்கள்போன்மகிழ்ச்சியுற்றான். (௩௨)

என்பெருந்தவமும்பன்னாளென்பொருட்டாகநோற்ற
நின்பெருந்தவமுமன்றேநின்னுடனென்னையீண்டே
யன்புறக்கூட்டிற்றம்மாவடுகளிறென்னப்புல்லி
யின்புறவேண்டுநீயுமிரும்பிடியாதியென்ன. (௩௩)

மெல்லியளனையமங்கோர்வெம்பிடியாகித்தோன்றி
யெல்லையில்காதல்பின்னுமீதலுமுனிவன்றானு
மல்லலங்களிறதாகிவானுயர்புழைக்கைநீட்டிப்
புல்லினனூற்றந்தானேபுணர்ச்சியிற்சிறந்ததன்றே. (௩௪)

நையுறுமுள்ளமாதிநான்மையும்பொறியினண்ணி
யையுறுபுலனோரைந்துமாவியினெருங்கவன்னான்
மெய்யுறுபுணர்ச்சித்தாயவேட்கையின்மேவலுற்றுச்
செய்யுறுகாமமுற்றித்தீர்ந்திடுகாலைதன்னில். (௩௫)

அயன்முதற்றலைவர்வானத்தமர்சருபுலவராற்றுஞ்
செயன்முறைக்கடன்கள்யாவுஞ்சிந்தினன்சிதைக்கும்வண்ணம்
வயமுகத்தடவுகொண்டவயிர்த்திடுமருப்பினல்வாய்க்
கயமுகத்தவுணனங்கேகதுமெனவுதயஞ்செய்தான். (௩௬)

பற்றியபலகையொள்வாள்விதிர்த்தனன்பரவைஞாலஞ்
சுற்றினன்வரைகள்யாவுந்துகள்படத்துணைத்தாளூன்றி
யெற்றினனுருமேறஞ்சவிரட்டினனுலகமெல்லாஞ்
செற்றிடுங்கடுவதென்னத்திரிந்தனன்சீற்றமிக்கான். (௩௭)

அன்னதோர்பிடியுரோமமளப்பிலவவற்றிலாங்கே
மின்னிலங்கெயிற்றுப்பேழ்வாய்விளங்கெழிற்செக்கர்வாய்ந்த
சென்னியங்குடுமிவீரர்தெழித்தெழீஇச்செங்கைதன்னிற்
றுன்னிரும்படைகளோடுந்தோன்றினர்தொகையிலான்றோர். (௩௮)

இன்னவரோடுகூடியிபமுகத்தவுணனோர்ப்பத்
தன்னையும்பயந்தோன்றானுந்தளர்ந்தனரிரியல்போகி
முன்னுறுமுருவங்கொள்ளமுனிவரனுணர்வுதோன்ற
வுன்னிநின்றிரங்கியேங்கியூழ்முறைநினைந்துரைந்தான். (௩௯)

Digitized By Roja Muthiah Research Library

மாயமாங்காமமென்னும்வலையிடைப்படுநீங்குந்
தூயவன்முன்னநின்றதோகையைச்சுளித்துநோக்கி
நீயெவர்குலத்தில்வந்தாய்நினைந்ததென்கழறுகென்னச்
சேயிழைமரபும்வந்தசெய்கையுமுணர்த்திநின்றாள். (௪0)

வரன்முறையுணர்தலோடுமாகதமுனிவன்யானே
தரணியிலுயிர்களானசராசரந்தனக்குமேலாஞ்
சுரகுலந்தனக்குமின்றேதுன்புறுவித்தேனென்று
வெரியுறுதளிர்போல்வாடியின்னலங்கடலுட்பட்டான். (௪௧)

சிலபொழுதிரங்கித்தேறிச்சேயிழைமடந்தைநுங்கோன்
மெலிவுநின்னெண்ணந்தானும்வீடுபெற்றுய்யயான்முன்
பலபகல்புரிந்தநோன்பும்பாருலகனைத்தும்வானோ
ருலகமுமுடிந்தவேநீயொல்லையிற்போதியென்றான். (௪௨)

போதிநீயென்னலோடும்பொன்னடிவணங்கிச்சென்று
தாதலாந்தெரியலாகத்தயித்தியர்க்கிறைபாலெய்தி
யீதெலாமுரைத்தலோடுமெல்லையின்மகிழ்ச்சியாகிக்
காதல்கூர்தபனற்காணுங்காலையங்கமலம்போன்றான். (௪௩)

தாங்கருமுவகையோடுந்தானவர்க்கரசனண்ண
வீங்குறுமுனிவன்முன்போலினிதுநோன்பியற்றப்போனா
னாங்கவனுதித்தமைந்தரனைவருமுதல்வன்றன்னோ
டோங்கலின்குலங்கண்மேருவுடனடந்தென்னச்சென்றார். (௪௪)

சீற்றங்கொடறுகணுகமொருவழித்திரண்டதென்னக்
கூற்றம்பல்லுருவுகொண்டுலாயகொட்பென்னவூழிக்
காற்றெங்கும்பரவிற்றென்னக்கடலிடைப்பிறந்தநஞ்ச
மூற்றங்கொண்டுலாயதென்னவுலகெலாந்திரிதந்துற்றார். (௪௫)

மலையினைப்பொடிப்பரேனைமண்ணினைமறிப்பர்வாரி
யலையினைக்குடிப்பர்கையாலாருயிர்த்தொகையையள்ளி
யுலையினைப்பொருவுபேழ்வாயோச்சுவர்பரிதியோடு
நிலையினைத்தடுப்பர்சேடனெளிதரப்பெயர்வர்மாதோ. (௪௬)

தக்கதோரவுணரோடுந்தந்திமாமுகத்துவீரன்
றிக்கெலாமுலவியெல்லாத்தேயமுமொருங்கேசென்று
மக்களேயாதியானமன்னுயிர்வாரிநுங்கித்
தொக்கதோர்செந்நீர்மாந்தித்துண்ணெனத்திரியுமன்றே. (௪௭)

அத்திறம்வைகறோறுமவுணருமிறையுமேகிக்
கைத்துறுமுயிர்கள்யாவுங்கவர்ந்தனர்மிசைந்தாராகப்
பொய்த்தவர்வெறுக்கையென்னப்போயினவுயிர்கள்சால
வெய்த்தனர்முனிவர்தேவரிறந்ததுமறையினீதி. (௪௮)

முகரிமை * யடைந்தவன்றேன்முகத்தவனவுணரோடு
மகவிடமிசையேயிவ்வாறமர்தலுமனையதன்மை
தகுவர்கண்முதல்வனோர்ந்துதமதுதொல்குரவனான்
புகரினைவிடுப்பவன்றான்போந்திவைபுகலலுற்றான். (௪௯)

* முகரிமை - முதன்மை.

வேறு.

ஒள்ளிதாகியவுங்குலத்துற்றுள, மள்ளர்யார்க்குமோர்வான்குருவாயினேன் [ன்.
றெள்ளுபன்மறைத்திட்பமுந்தேர்ந்துளேன், வெள்ளியென்பதோர்மேதகுபேரினே

உங்குலத்துக்கொருமுதலாகிய, சிங்கமன்னதிறலினனுய்த்திட
லிங்குநின்புடையெய்தினன்மேனெறி, தங்குநன்னயஞ்சாற்றுதற்கேயென்றான்.()

குரவனுகிக்குறுகியசல்லியன், பரிவொடீதுப்கர்தலுமாங்கவன்
றிருவடித்துணைசென்றுவணங்கியே, கரிமுகத்தன்கழறுதன்மேயினான். (ருஉ)

இறுவதின்றியவெங்குலத்தோர்க்கெலா, மறிவனீயருளாலடியேற்கிவ
ணுறுதிகூறுகின்றாயிதனூங்கினிப், பெறுவதொன்றுளதேயெனப்பேசினான். ருங

அந்தவேலையவுணர்கள்யாவருஞ், சிந்தைமேல்கொண்டதீதினைநீத்திடா
வெந்தையார்தங்குரவரிவரெனா, வந்துபார்க்கவன்றாளில்வணங்கினார். (ருச)

சீதவான்முகிற்கோளெனுஞ்செவ்வியோ, னாதிதன்னருளாலவுணர்க்கிறை
போதகன்முகனைக்கிப்பொருவிலா, வோதிமாண்பினிவையுரைக்கின்றனன். ருரு

வேறு.

மீயுயர்தவத்தையாற்றாய்விமலனையுணராயொல்லார்
மாயமுந்திறலுஞ்சீரும்வன்மையுஞ்சிறிதுந்தேரா
யேயவிவ்வுடலநில்லாதென்பதுங்கருதாய்வாளா
போயினபன்னாளென்னீபுரிந்தனைபுந்தியில்லாய். (ருசு)

முப்பகைகடந்துமற்றைமுரட்பகைமுடித்திட்டைம்பான்
மெய்ப்பகைகடந்துநோற்றுவிழுத்தகுமாற்றல்பெற்றுத்
துப்பகைதொண்டைச்செவ்வாய்ச்சூரொடுபுணரும்வானாட்
டப்பகைகடந்துதொல்சீரடைந்திலைபோலுமன்றே. (ருஎ)

இம்மையிலின்பந்தன்னைப்புகழொடுமிழத்திமேலை
யம்மையிலின்பந்தானுமகன்றனைபோலுமன்றே
யும்மையுமின்பமென்பதுற்றிலையென்னிற்பின்னை
யெம்மையிலின்பந்துய்க்கவிசைந்துநீயிருக்கின்றாயால். (ருஅ)

ஆக்கமுந்திறலுஞ்சீருமாயுவுநலனுமேலா
மூக்கமும்வீடுமெல்லாந்தவத்தினதூற்றமன்றோ
நோக்குறுமிந்நாள்காறுநோற்கலாதினையவெல்லாம்
போக்குவதென்னைகொல்லோபுகலுதியிகலும்வேலோய். (ருகூ)

ஆற்றிடுதருமம்விஞ்சையரும்பெறன்மகவுசீர்த்தி
யேற்றிடுகொற்றமாற்றலிருநிதிபெருமையின்ப
நோற்றிடுவிரதஞ்சீலநுவலரும்போதம்யாவுங்
கூற்றுவன்கூவுஞான்றுகுறித்திடிற்கூடுமோதான். (சு0)

காலனாகியதோர்சேர்ப்பன்காலமாம்வலையைவீசி
ஞாலமாந்தடத்தில்வைகுநல்லுயிர்மீன்கள்வாரி
யேலவேயீர்த்துநின்றானிறுதியாங்கரைசேர்காலை
மேலவன்கையுட்பட்டுமெலிவொடுவீடுமன்றே. (சுக)

க0ங

Digitized By Roja Muthiah Research Library

சீரியதுடலமென்கைதெரிந்திலைநிலைத்தல்செல்லா
தாருயிர்வகையுமென்பதறிந்திலையாயுட்பன்னாட்
சாருதல்வேண்டுமென்னுந்தகைமையுநினைத்தியல்லை
பாருயிரிறப்பநுங்கியிருப்பதோபரிசுமாதோ. (௬௨)

மந்திரமில்லைமாயமில்லையோர்வரமுமில்லை
தந்திரமில்லைமேலோர்தருகின்றபடையொன்றில்லை
யந்தரவமரரெல்லாமனிகமாய்ச்சூழநின்மே
லிந்திரன்பொருவான்செல்லின்யாதுநீசெய்திமாதோ. (௬௩)

சிறியதோர்பயனைத்தூக்கித்தீயவர்செய்யுஞ்சூழ்ச்சி
யறிகிலவாகிவீழ்வுற்றகப்படுமாவுமீனும்
பறவையுமென்னவொல்லார்புணர்ப்பினிற்படுதியின்னே
விறலொடுவலியுஞ்சீருமேன்மையுமின்றியுற்றாய். (௬௪)

ஆதலினெவர்க்குமேலாமரன்றனையுன்னியாற்ற
மாதவம்புரிதியன்னான்வரம்பலகேட்டவெல்லாந்
தீதறவுதவும்பின்னர்த்தேவருன்னேவல்செய்வார்
மேதகுமுலகுக்கெல்லாம்வேந்தனாயிருத்தியென்றான். (௬௫)

சொன்னவைகேட்டலோடுந்தொழுதகையவுணர்தோன்றன்
முன்னிவையாவரேனுமொழிந்தனரில்லையானு
மின்னவைபுரிதறேற்றேனினித்தவமியற்றுகின்றே
னன்னவைபுரியுந்தன்மையருள்செயல்வேண்டுமென்றான். (௬௬)

வேறு.

ஐவினைசெய்பொறிகளெலாமரங்கமெனக்கறங்குமறிவடங்குகின்ற
மெய்வினையமந்திரமுந்தந்திரமுமங்கமுறுவிதியினோடு
கைவினையுமுட்கோளும்புறங்காப்பும்விரதஞ்செய்கடனுமேனைச்
செய்வினையுமுணர்வித்துமேருவின்பாற்றவம்புரியச்செல்லுகென்றான். (௬௭)

ஏவுதலுங்கயமுகத்தோனவுணரொடும்புகரடியினிறைஞ்சியங்கண்
மேவுவன்யானெனவுரையாவிடைகொண்டுநோற்றிடுவான்விரைவினேகக்
காவதமங்கோரிரண்டுகெடப்பளவுந்தானின்றுகண்ணினோக்கிப்
போவனினியெனமகிழ்ந்துமீண்டுபோயவுணர்பதிபுகுந்தானன்றே. (௬௮)

அக்காலத்தெதிர்வந்தவிறைவனுடன்புகுந்தவெலாமறையவன்று
னிக்காலந்தானன்றேவருள்செய்தீரெனவியம்பியேத்தியன்பான்
முக்கால்வந்தனைசெய்துவிடுத்திடப்போய்த்தன்பதத்தின்முன்னமேபோன்
மிக்கானும்வீற்றிருந்தான்கடவுளரும்புரந்தரனும்விழுமங்கொள்ள. (௬௯)

மாண்டகுமவ்வலியகலன்மருப்பதனையெதிர்ந்துதொல்லைவைப்பினீங்கு
மீண்டியதிண்காழிரும்பினெஃகமுதல்வியன்படைகளியற்கையென்னக்
காண்டகையதங்குரவனனைபுகருரையதனைக்கருத்துட்சேர்த்தி
யாண்டகைசேரிபமுகத்தோனவுணருடன்றவம்புரிவானகலுற்றான். (௭௰)

அங்கண்முகில்படிந்தறியாமேருவினுக்கொருசார்போயவுணர்வேந்தன்
றுங்கமிகுகருவிகளாய்வேண்டுவனகொணர்வித்துத்தூநீராடிச்
செங்கதிரோன்றனைநோக்கியாற்றுகடன்முடித்துமுன்னைத்தீர்வுநேர்ந்து
தங்கள்குரவன்பணித்தபெற்றியினான்மிக்கதவந்தன்னைச்செய்வான். (௭௧)

Digitized By Roja Muthiah Research Library

பொறியினுறுபுலனவித்துநவைநீக்கிக்கரணவியல்போக்கியாசான்
குறிவழியேதலைநின்றுமூலவெழுத்துடனைந்துங்கொளுவியெண்ணி
யறிவுதனிலறிவாகியுயிர்க்குயிராய்ப்பரம்பொருளாயமலமாகிச்
செறிதருகண்ணுதற்கடவுளடிபோற்றியவனுருவைச்சிந்தைசெய்தான். (எஉ)

வேறு.

ஆயிரமாண்டுபுல்லடகுமேயினு, ளாயிரமாண்டுசெல்புனலருந்தினு
ளாயிரமாண்டளவனிலநுங்கினான், மாயிரும்புவியுயிர்மடுக்கும்வாயினான். (எங)

காலமூவாயிரங்கழிந்தபின்முறை, மாலுறுமருத்தெனுமாவைத்தூண்டியே
மூலவெங்கனலினைமுடுக்கிமூட்டுரு, மேலுறுமமிர்தினைமிசைதன்மேயினான். எச

கண்டனரதுசுரர்கவலுஞ்சிந்தையர், திண்டிறலவுணனிச்செய்கைமுற்றுமே
லண்டமும்புவனமுமலைக்குமேயெனாக், கொண்டனர்தம்பதியறியக்கூறினார். எரு

கூறியசெயலினைத்தேர்ந்துகொற்றவ, னாறியவெகுட்சியனயர்ந்துசோர்வுறு
வீறியல்வாய்மையும்விறலுமாண்மையு, மாறியவோவெனாமறுக்கமெய்தினான். எசு

புலர்ந்தனனிரங்கினன்பொருமலெய்தினு, னலர்ந்தனனுயிர்த்தனனச்சங்கொண்டன, னுலந்தனன்போன்றனனொடுங்கித்தன்னுளங், குலைந்தனனவன்செயல்கூறற்பாலதோ. (எஎ)

ஈசனையன்றுகாறெதிரக்கண்டிலன், காய்சினமகன்றிடுகயமுகத்தினன்
றேசிகனருளினாற்றீயின்கண்ணுறீஇ, மாசறுதவஞ்செயமனத்துமுன்னினான். எஅ

சுற்றுறநாற்கனல்சூழநள்ளிடை, மற்றொருபேரழல்வதியவன்னதிற்
கொற்றவெங்கயமுகக்குரிசிலாணிறீஇ, நற்றவமியற்றினானதற்போற்றியே. (எகூ)

மேயினகொழும்புகைமிசைக்கொண்டாலெனத், தீயழனடுவுறச்செந்நின்றையி ரண்,டாயிரமாண்டையினவதியாருயிர்,நோயுறவிபமுகனேற்றலோம்பினான். (அ0)

புழைக்கையின்முகத்தினன்புனிதமார்தரு, தழற்சிகைமீக்கொளத்தனதுதாணிறீஇ, விழுத்தகநோற்றலைவியந்துநோக்குறீஇ, யழற்பெருங்கடவுளுமருள்செய்தானரோ. (அக)

அன்னதோரமைதியிலவுணன்மாசுடல், வன்னியினுறுத்துகாரிரும்பின்மாண்டது
பொன்னினுமணியினும்பொலிந்துபூத்தது,மின்னிவர்வச்சிரமிடனுஞ்சான்றதால்.

ஏற்றநந்தொன்மரபியல்வழாமலே, போற்றியவருமிவன்பொறையுமேன்மையு
நோற்றிடுதிட்பமுநுவலற்பாலவோ, தூற்றுதுமலரெனாவவுணர்தோன்றினார்.(அங)

வீசினர்நறுமலர்வியப்பினன்மொழி, பேசினர்புகழ்ந்தனர்பிறங்குமார்வத்தா
லாசிகள்புகன்றனரமரர்தானையை, யேசினரவர்தமதின்னனேக்குவார். (அச)

தளப்பெரும்பங்கயத்தவிசின்மீமிசை, யளப்பருங்குணத்துடனமர்ந்தநாயக
னுளப்படநோக்கினனுவந்துபூமுடி, துளக்கினனமரர்கடுணுக்கமெய்தினார். (அரு)

இன்னணமருந்தவமியற்றுமெல்லையிற், பொன்னவிர்சடைமுடிப்புனிதநாயக
னன்னதுநாடியேயவுணருக்கிறை, முன்னுறவந்தனன்மூரியேற்றின்மேல். (அசு)

வேறு.

வந்துதோன்றலுமற்றதுநோக்கியத், தந்திமாமுகத்தானவனேன்பொரீஇச் [ன்.
சிந்தையன்பொடுசென்னியிற்கைதொழு, தெந்தைதன்னையிறைஞ்சிநின்றேத்தினு

Digitized By Roja Muthiah Research Library

போற்றுகின்றுழிப்புங்கவனின்றுகா, ருற்றுநோன்பிலயர்ந்தனைநீயினிப்
பேற்றைவேண்டுவபேசினைகொள்கெனத், தேற்றமிக்கவன்செப்புதன்மேயினான்.

வேறு.

மாலயனிந்திரன்முதல்வரம்பிலோர், மேலுறுதகையினர்வெய்யபோரிடை
யேலுவரென்னினுமெனக்குவென்னிட, வாலமர்கடவுணீயருளல்வேண்டுமால். ()

எற்றுவவெறிகுவவீர்வவெய்குவ, குற்றுவமுதலியகுழுக்கொள்வான்படை
முற்றுறவரினும்யான்முடிவுறுவகை, யற்றமில்பெருமிடலளித்தல்வேண்டுமால்.()

மிக்கதோரமரரால்வியப்பின்மானுட, மக்களாலவுணரான்மற்றையோர்களாற்
றொக்குறுவிலங்கினுற்றுஞ்சிடாவகை, யிக்கணந்தமியனேற்கீதல்வேண்டுமால்.௯௧

என்னிகராகிவந்தொருவனென்னொடு, முன்னுறவெஞ்சமர்முயலுமென்னினு
மன்னவன்படையினுமழிவுறுவகை,பொன்னவிர்வேணியாய்புரிதல்வேண்டுமால்.

வரந்தருகடவுளர்முனிவர்மற்றையோ, ரிருந்திடுமுலகெலாமென்னதாணையிற்
றிரிந்திடுமாழியுங்கோலுஞ்சென்றிடப், புரிந்திடுமரசியல்புரிதல்வேண்டுமால்.(௯௩)

அன்றியுமொன்றுளதடியன்சூழ்ச்சியாற், பொன்றினும்பிறவியுட்புகாமைவேண்டுமா, லென்றலுநோற்றவர்க்கேதுமீபவ, னன்றவைபெறுகெனநல்கியேகினான். ()

பெற்றனன்படைகளும்பிறவுந்தன்புறஞ், சுற்றிடுகிளையெலாந்தொடர்ந்துசூழ்தர
வுற்றனன்காண்டகுமும்பருங்குவன், மற்றொருகயமுகனென்றுமாழ்கினர். (௯௫)

காமுறுபெருந்தருநாறுகாசினி, வீழுறுதூரொடுமெலிந்துநின்றன
வூழுறுபருவம்வந்துற்றகாலையிற், சூழுறுதொன்னிலையென்னத்தோன்றினான். ௯௬

அற்புதமெய்தினனலைகொள்வாரியிற்,புற்புதமாமெனப்புளகம்பூத்துளான்,சொற்பகர்வரியதோர்மதர்ப்பின்சும்மையான், சிற்பரன்கருணையிற்றிளைத்தன்மேயினான். (௯௭)

அன்னதுதேர்வுறீஇயவுணர்தொல்குல, மன்னனும்வெள்ளியுமதங்கமாமுகன்
றன்னைவந்தெய்தியேசயமுண்டாகெனப், பன்னருமாசிகள்பகர்ந்துமேயினார்.௯௮

தண்ணளியில்லதோர்தந்திமாமுக, னண்ணலங்கடகளிற்றமரர்கோனையும்
விண்ணவர்பிறரையும்வென்றுமீண்டபின், மண்ணுலகதனிடைவல்லையெய்தினான்.

வேறு.

புவனிதன்னிடைப்போந்தபின், னவுணர்கம்மியவறிஞனை
நவலுமன்பொடுநோக்குறூ, வுவகையாலிவையுரைசெய்வான். (௧00)

நாவலந்தருநண்ணுமித், தீவின்மேதகுதென்றிசைப்
பூவிலோர்நகர்புரிதியான், மேவவென்றுவிளம்பவே. (௧0௧)

பூவின்மேல்வருபுங்கவத், தேவுநாணுறுசெய்கையிற்
காவன்மாநகர்கண்டதிற், கோவிலொன்றுகுயிற்றினன். (௧0௨)

வேறு.

வெங்கண்மேதகுவேழமுகத்தனைத், தங்கடொல்பகைதாங்குவதாமெனச்
சிங்கமாற்றுந்திருமணிப்பீடமொன், றங்கவன்வைகவாற்றினனவ்விடை. (௧0௩)

இனைத்தியாவுமிமைப்பினிற்கம்மிய, னினைப்பினிற்செய்நிலைமையைநோக்கியே
சினத்தினீங்கியசெய்தவத்தேசிகன், மனத்தினூடுமகிழ்ச்சியின்மேயினான். (௧0௪)

காமர்தங்கியகாப்பியனந்நகர், தூமதங்கெழுதோன்முகற்காதலான்
மாமதங்கபுரமெனமற்றொரு, நாமமங்கதற்கெய்திடநாட்டினான். (௧0௫)

Digitized By Roja Muthiah Research Library

அந்தமாநகரைதெனக்கம்மியன், சிந்தைநாடினன்செய்திடுகாலையிற்
றந்திமாமுகத்தானவன்கண்ணுறீஇ, யந்தமில்லதொரார்வமொடேகினன். (௧0௬)

காதமங்கொருபத்தெனக்கற்றவ, ரோதுகின்றவொழுக்கமுமொன்றெனும்
பாதியெல்லைப்பரப்பும்பெறுநகர், வீதிநோக்கினன்விம்மிதமெய்தினன். (௧0௭)

அரக்கர்தொல்லையவுணர்க்கரசொடு, தருக்குதானவர்தம்முடனெய்தியே
பெருக்கமுற்றதன்பின்னவரின்னவ, ரிருக்கநல்கினனிந்நகர்யாவையும். (௧0அ)

அங்கண்மேவுமணிமணிக்கோயிலின், மங்கலத்தொடுவெல்லையினேகியே
சிங்கவேற்றின்சிரங்கெழுபீடமேல், வெங்கைமாமுகன்வீற்றிருந்தானரோ. ௧0௯

போந்துபின்னர்ப்பொருவருந்தானவர், வேந்தன்மாமகளானவிசித்திர
காந்திதன்னைக்கருதுநன்னுளினி, லேந்தன்முன்வரைந்தின்புறமேவினன். (௧௧0)

விண்ணின்மாதர்கண்மேதகுதன்குல, நண்ணுமாதர்களுகர்தம்மாதர்கள்
வண்ணவிஞ்சையர்மாதர்களாதியா,மெண்ணின்மாதரைப்பின்வரைந்தெய்தினன்.

பொன்னகர்க்கும்பொலங்கெழுபுட்பக, மன்னகர்க்குமவ்வானவரீண்டிய
வெந்நகர்க்குமிலாவளமெய்திய, வந்நகர்க்கணமர்ந்திடன்மேயினன். (௧௧௨)

சூழும்வானவர்தானவர்துன்னியே, தாழவேழுலகுந்தனதாணையால்
வாழிசேர்கொடுங்கோலொடுமென்னுபே, ராழிசெல்லவரசுசெய்தானவன். (௧௧௩)

ஆவுஞ்சங்கமுமம்புயமும்மலர்க், காவுமாமணியுங்கமலாலயத்
தேவும்பின்வருந்தேவருமாதரு, மேவல்செய்யவினிதிருந்தானரோ. (௧௧௪)

புந்திமிக்கபுகரும்புகருட, னந்தமற்றவவுணர்கண்மன்னனுந்
தந்தியின்முகத்தானவனுக்குநன், மந்திரத்துணையாயவண்வைகினர். (௧௧௫)

அன்னகாலையடுகரிமாமுக, மன்னன்முன்வரும்வாசவனுதியாந்
துன்னுவானவர்சூழலைநோக்கியே,யின்னதொன்றையியம்புதன்மேயினன்.(௧௧௬)

வைகலும்மிவண்வந்துழிநுங்கடம்,மொய்கொள்சென்னியின்மும்முறைதாக்கியே
கைகள்காதுறக்கால்கொடுதாழ்ந்தெழீஇச், செய்கநம்பணிதேவர்கணீரென்றான்.()

அன்னதோதலுமண்டர்கள்யாவரு,மன்னன்றனுமறுப்பதையஞ்சியே[யாற்றினர்.
முன்னரேநின்றுமொய்ம்புடைத்தோன்முகன்,சொன்னதோர்புன்றொழின்முறை

எழிலியூர்தியுமேனையவானவர், குழுவினோர்களுங்குஞ்சரமாமுகத்
தழிதகன்பணியல்கலுமாற்றியே, பழியெனும்பரவைப்படிந்தாரரோ. (௧௧௯)

கரிமுகத்துக்கயவனதேவலாற், பருவரற்பழிமூழ்குறுபான்மையைச்
சுரர்களுக்கிறைதொல்லைவிரிஞ்சன்மா, லிருவருக்குமியம்பியிரங்கினன். (௧௨0)

இரங்குமெல்லையிலிந்திரமுற்றுளந், தரங்கமெய்தித்தளர்ந்திடனீயென [னர்.
வுரங்கொள்பான்மையுணர்த்தியவனொடும், புரங்களட்டவன்பொற்றையிற்போயி

மாகர்யாவரும்வாசவனும்புடை, யாகவந்திடவம்புயன்மாலுமை
பாகன்மேயபனிவரைக்கோயிலு, ளேகினர்நந்தியெந்தைவிடுப்பவே. (௧௨௨)

கண்டுநாதன்கழலிணைதாழ்ந்துநற், றெண்டுகொணத்துதித்தலுமாங்கவ
னண்டரோடுமலமரலெய்தியே, வண்டுழாய்முடிவந்ததென்னென்னவே. (௧௨௩)

Digitized By Roja Muthiah Research Library

### வே று.

ஆனதோர்பொழுதின்மாலரனைநோக்கியோர், தானவன்கயமுகனென்னுந்தன்
மையான், வானவர்தமையெலாம்வருத்தினனவ, னூனமிறவம்புரிந்துடையவன்
னையால். (௧௨௪)

வெங்கயமுகத்தினன்விறலைநீக்குத, லெங்களுக்கரியதாலெவர்க்குமாதியாம்
புங்கவநினக்கதுபொருளன்றுகையா, லங்கவனுயிர்தொலைத்தருளவேண்டுநீ. ()

என்றுரைசெய்தலுமீசன்யாமிவ,னொன்றொருபுதல்வனையுதவித்தோன்முக [ருன்.
வன்றிறலவுணனைமாய்த்துமற்றவன், வென்றிகொண்டேகுவான்விடுத்துமேலென்

வீடியபற்றுடைவிரதர்க்கென்னினு, நாடியவரியவனவின்றவாய்மையைச்
சூடினர்சென்னிமேற்றொழுதகையரா, யாடினர்பாடினரமரர்யாருமே. (௧௨௭)

பாங்கரிலனையரைப்பரிந்துநோக்கியே, யீங்கினிநும்பதிக்கேகுவீரென
வாங்கவரெம்பிரானடியில்வீழ்ந்தனர், வீங்குறுகாதலால்விடைகொண்டேகினர்.

ஏகியவெல்லையிலெண்ணிலாவிதி, சேகரமிலைச்சியசென்னிவானவன் [ன்.
பாகமுற்றுலகெலாம்பயந்தசுந்தரத், தோகையைநோக்கியேயிதனைச்சொல்லுவா

யாம்பெருவிருப்புடனியற்றுவித்திடுந், தேம்படுதருவனந்தெரித்துஞ்செல்கென
வாம்பரிசருளினைவருவனுங்கெனக், காம்படுதோளுடைக்கவுரிகூறினள். (௧௩0)

ஆயதுகேட்டனனகிலம்யாவையுந், தாயெனவருளுமத்தையறன்னொடுஞ் [யினன்.
சேயுயர்விசும்பினைச்செறிதண்சோலையிற், போயினன்மறைக்கெலாம்பொருளதா

நீனுதற்கனல்விழிநிமலத்தேவெனுந், தானுவைப்போலவேதனதுபாதமுஞ்
சேணுடைச்சென்னியுந்தேவர்யாரினுங், காணுதற்கரியதக்கடிகொள்சோலையே.()

தேசுடைத்தருநிரைதிருவென்போடொடு, பாசடைத்தொகுதியும்பரித்துநிற்பன
வீசனுக்கருச்சனையியல்பினாற்றிட, நேசமுற்றுடையவர்நிலையதொக்குமால். ௧௩௩

பாலுறவருவதோர்பரைதன்மெய்யொளி, மேலுறுபைங்கொடிவேதநாயக
னேலுறுதாருகவனத்திலெய்தமுன், மாலுறுமங்கையர்வடிவம்போலுமால். ௧௩௪

கொடிகளுந்தருக்களின்குழுவுமாறுட, னடிகளங்கேகலுமனையர்செம்மையுஞ்,சு
டர்கெழுபசுமையுந்துவன்றியன்னதோர்,வடிவுகொண்டிருந்திடும்வண்ணம்போலு
மால். (௧௩௫)

பூந்தருநிரைகளிற்பொருவில்கோட்டிடைச், சேந்திடுநனைபலதிகழ்வபார்ப்பதி
காந்தனையன்பொடுகண்டுபோங்குளா, ரேந்தியநிபிகையென்னலானவே. (௧௩௬)

வான்றருவோர்சிலமலரின்கண்டொறுந், தேன்றுளிவிடுவனசிவனைக்கண்டுழி
யான்றதோரன்பினாகநெகிழ்ந்துகட், கான்றதோர்புனலெனக்கவின்றுகாட்டிய.

வண்டருவோர்சிலமருப்பில்வானிறங், கொண்டிடுமதுமலர்குழுமியுற்றன
வெண்டிருமலையிடைவீழுங்கங்கையிற், றண்டுளிசிதறியதன்மைபோன்றவே. ()

கற்றையஞ்சுடர்மணிகனகமேனைய, பிற்றையென்னுதருள்பெரியர்வண்மைபோன்
மற்றவணுள்ளபன்மரமுந்தம்பய, னெற்றையுமுலப்புறுநீகைசான்றவே. (௧௩௯)

காவதனியல்பினைக்கண்டுதன்னொரு, தேவியொடேயருள்செய்துசிற்பர
னாவியுள்ளுணர்வெனவதனுள்வைகுமோ, ரோவியமன்றிடையொல்லையேகினன்.

Digitized By Roja Muthiah Research Library

எண்டகுபெருநகையெய்தியைம்புலன், விண்டிடலின்றியேவிழியின்பாற்படக்
கண்டனள்கவுரியக்கடிகொண்மண்டபங், கொண்டிடுமோவியக்கோலம்யாவுமே.

பாங்கரில்வருவதோர்பரமனுணையா, லாங்கதனடுவணிலாதியாகியே [ன்பவே.()
யோங்கியதனியெழுத்தொன்றிரண்டதாய்த், தூங்குகைம்மலைகளிற்றோன்றிற்றெ

அன்னவையுமையவள்காணவாங்கவை, முன்னுறுபுணர்ச்சியின்முயற்சிசெய்
தலு; மென்னைகொலிதுவெனவெண்ணித்தன்னொடு,மன்னியமுதல்வனைவணங்கிக்
கூறுவாள். (௧௪௩)

மூலமாமெழுத்திவைமுயங்கிமால்கரிக், கோலமாய்ப்புணர்வதென்கூறுகென்றலு
மேலவார்கருங்குழலிறைவிகேளென, வாலமார்களத்தினனருள்செய்கின்றனன்.

வேறு.

முன்புநீகாண்டலின்மூலமாயுடையதோர்
மன்பெருந்தொல்பொறிமருவியீருருவுறீஇ
யன்பினுலானைபோற்புணருமாலாகையா
னின்பெருந்தகவினைநினைகிலாய்நீயுமே. (௧௪௫)

காட்சியாலிதுசெயுங்காரணம்பெற்றநின்
மாட்சிதான்யாமலான்மற்றியாருணர்குவா
ராட்சியாயுற்றதொல்லருமறைக்காயினுஞ்
சேட்செலாநிற்குநின்றிருவருட்செய்கையே. (௧௪௬)

என்னவேமுகமனுலெம்பிரானம்பிகை
தன்னொடேமொழியவத்தந்தியும்பிடியுமாய்த்
துன்னியேபுணர்வுறுந்தூயசெய்தொழில்விடா
முன்னமேபோன்றதான்முடிவிலாக்குடிலையே. (௧௪௭)

அக்கணத்தாயிடையைங்கரத்தவனருண்
முக்கணுல்வாயினுன்மும்மதத்தாறுபாய்
மைக்கருங்களிறெனுமாமுகத்தவன்மதிச்
செக்கர்வார்சடையனோர்சிறுவன்வந்தருளினுன். (௧௪௮)

ஒருமையாலுணருவோருணர்வினுக்குணர்வதாம்
பெருமையானெங்கணும்பிரிவரும்பெற்றியா
னருமையானேவருமடிதொழுந்தன்மையா
னிருமையாமீசனேயென்னநின்றருளுவான். (௧௪௯)

மருளறப்புகலுநான்மறைகளிற்றிகழுமெய்ப்
பொருளெனப்படுமவன்புவனமுற்றவர்கடம்
மிருளறுத்தவர்மனத்திடர்தவிர்த்தருளவோ
ரருளுருத்தனையெடுத்தவதரித்துளனவன். (௧௫௦)

வந்துமுன்னிருவர்தம்மலரடித்தலமிசைச்
சிந்தையார்வத்தொடுஞ்சென்னிதாழ்த்திடுதலுந்
தந்தையுந்தாயுமுன்றழுவிமார்புறவணைத்
தந்தமில்கருணைசெய்தருளினுரவ்வழி. (௧௫௧)

என்னரேயாயினும்யாவதொன்றெண்ணுதன்
முன்னரேயுனதுதாண்முடியுறப்பணிவரே
லன்னர்தஞ்சிந்தைபோலாக்குதியலதுனை
யுன்னலார்செய்கையையூறுசெய்திடுதிநீ. (௧௫௨)

Digitized By Roja Muthiah Research Library

சேயநன்மலர்மிசைத்திசைமுகன்மான்முத
லாயபண்ணவர்தமக்காருயிர்த்தொகையினுக்
கேயபல்கணவருக்கெத்திறத்தோர்க்குநீ
நாயகம்புரிதியானல்லருட்டன்மையால். (கருரு)

கானுறுங்கரடவெங்கயமுகத்தவனெனுந்
தானவன்வன்மையைச்சாடியேதண்டுழாய்
வானவன்சிறுமையுமாற்றியேவருகென
வானையின்முகவனுக்கைம்முகனருள்செய்தான். (கருச)

மோனமேகுறியதாமுதலெழுத்தருளிய
ஞானமாமதலைபானண்ணவேபூதவெஞ்
சேனையாயினவருள்செய்துசிற்பரையொடு
மானைமாமுகனெடுமமலன்மீண்டருளினன். (கருரு)

புங்கவர்க்கிறைவனும்புதல்வனைநோக்கிடா
நங்கடைத்தலையினிறுயகம்புரிகென
வங்கருத்தியொடிருத்தினனணிக்கோயிலுட்
சங்கரக்கடவுள்சுந்தரியொடுமருவினன். (கருசு)

தந்திமாமுகமுடைத்தனயனங்கணுகியே
முந்துபாரிடமெலாமொய்த்துமுன்சூழ்தர
நந்திவந்தனைசெயநான்முகன்முதலினோர்
வந்துவந்தடிதொழமகிழ்வொடேவைகினன். (கருஎ)

அன்னதற்பின்னரேயாயிரம்பெயருடைப்
பொன்னுலாநேமியான்புனிதனைக்காணிய
மின்னுதண்சுடர்விடும்வெள்ளிமால்வரைமிசைத்
துன்னிஞெலயச்சூழன்முன்னணுகினன். (கருஅ)

அந்தியார்சடைமுடியண்ணறன்னருளினு
னந்திதேவுய்த்திடநங்கையோர்பங்கனு
மெந்தைபாலெய்தியேயிணைமலர்த்தாடொழாப்
புந்தியார்வத்தொடும்போற்றிசெய்தருளவே. (கருகூ)

வேறு.

திருத்தனவ்விடைதனிநேமியான்றனை, யிருத்தியென்றருள்புரிந்திடத்தின்மே லிய, வொருத்தியைநோக்கியொன்றுரைப்பங்கேளென, வருத்திசெய்யாடலோன் றருளிற்கூறுவான். (கசு0)

சுதினையெம்மொடேபொருதிதோற்றனை, யாதியேனீபுனையணிகள்யாவையு மீதியால்வென்றனையென்னினெம்மொரு, பாதியாஞ்சசிமுதற்பலவுங்கோடியால்.

என்னவுமுமையவளிசைவுகோடலு, மன்னதொரெல்லையினரியைநோக்கியே தன்னிகரில்லவனிதற்குச்சான்றென, மன்னினையிருத்தியான்மாயநீயென்றான். ()

பற்றிகலின்றியேபழவினைப்பயன், முற்றுணர்ந்துயிர்களைமுறையின்வைப்பவன் மற்றிதுபுகறலும்வனசக்கண்ணினு, னற்றிறமிஃதெனநவின்றுவைகினன். (கசுரு)

இந்தவாறுயிடைநிகழுமெல்லையிற், சுந்தரன்முதலியவுழையர்சுற்றினோ ரந்தமில்பெருங்குணத்தாதியேவலிற், றந்தனர்காசொடுபலகைதன்னையே. (கசுச)

Digitized By Roja Muthiah Research Library

அதுபொழுதண்ணலுமரியைநோக்கியிம்,முதிர்தருகருவியைமுறையின்வைக்கெ
னக், கதுமெனவைத்தலுங்கவுரிநீமக், கெதிருறுகென்றுமுன்னிருத்தினாரோ.()

கவற்றினைமுன்னரேயுய்ப்பக்கண்ணுத, லவற்றினைப்பின்னுறவவளுமுய்த்தன
டவற்றியல்பல்லதோர்வல்லசாரியா, லெவற்றினுமேலையோரினிதினாடினார். ()

பஞ்செனவுரைசெய்வர்பாலையென்பரீ,ரஞ்செனமொழிவரஞ்சென்பரன்றியுந்,து
ஞ்சலினடமென்பர்துருத்தியீதென்பர், விஞ்சியமகிழ்வொடுவெடியென்றோதுவார்

அடியிதுபொட்டையீதென்பரஃதென, முடிவிலகுழூஉக்குறிமுறையின்மூந்துறக்
கடிதினிற்கழறினர்கவறுசிந்தினார், நொடிதருகருவிகளெதிரினாக்கினார். (கசுஅ)

வேறு.

ஏற்றானவனெய்தியவின்னருள்யாவதேயோ
தேற்றாமஃதியார்க்குமளப்பருஞ்செய்கையாலே
மேற்றானெதிராவுடனாடியமெல்லியற்குத்
தோற்றானெடுமாலயனாடவுந்தோற்றிலாதான். (கசுகூ)

ஒன்றாயபரஞ்சுடரோனுமைதன்னைநோக்கி
நன்றாயதுநின்வலியென்றுநகைத்துநம்மை
வென்றாயலைதோற்றனைமுன்னர்விளம்புமாற்றா
னின்றாரொடுபூணுமெமக்கினிநேர்தியென்றான். (கஎ0)

மூன்றாமுலகங்களுமாருயிர்முற்றுமுன்ன
மீன்றாளதுகேட்டலுந்தாணிகலாடலஞ்சி
வான்றாவியபேரடிமாயனைவல்லைநோக்கிச்
சான்றாமெனவைகினைநீயிதுசாற்றுகென்றாள். (கஎக)

சொல்லுமளவிற்சுடர்நேமியன்சூதுடைப்போர்
வெல்லுந்தலைகையோன்பரனென்றுவிளம்பலோடு
நல்லுண்மைசொற்றாய்திறநன்றிதுநன்றிதென்னாச்
செல்லுண்டவைம்பாலுமையாற்றச்சினம்புரிந்தாள். (கஎஉ)

பாராயலைகண்ணனுமாயினைபாலினாற்றாய்
தேராததுவொன்றிலையாவருந்தேரவொண்ணாப்
பேராதியோனவைகூறினுநீயிதுபேசலாமோ
காராமெய்யென்பர்மனமுங்கரியாய்கொன்மன்னோ. (கஎ௩)

ஏம்பாலிதுசொற்றனையாதலினென்றுமாயை
யோம்பாவருவாயுறுகைதவத்தூற்றமிக்காய்
பாம்பாதியென்னப்பகர்ந்தாள்பகர்கின்றவெல்லை
யாம்பாலுருவமஃதங்கணடைந்ததன்றே. (கஎச)

அவ்வாறவன்பாலணைகின்றதொர்போழ்திலாழிக்
கைவானவனுமதுகண்டுகவற்சியெய்திச்
செவ்வானுறழுமுடியோனடிசென்றுதாழா
வெவ்வாறெனக்கிவ்வுருநீங்குமிசைத்தியென்றான். (கஎரு)

காலாய்வெளியாய்ப்புனலாய்க்கனலோடுபாராய்
மேலாகியுள்ளபொருளாயவற்றிற்கும்வித்தாய்
நாலாயவேதப்பொருளாகிநண்ணுற்றநாதன்
மாலாயவனுக்கிஃதொன்றுவகுத்துரைப்பான். (கஎசு)



Digitized By Roja Muthiah Research Library

என்பால்வருமன்பினிசைத்தனையீதுபெற்றாய்
நின்பால்வருமின்னலைநீக்குவனீங்குகின்றாய்
தென்பாலுலகந்தனிலன்னதொர்தேயமீதின்
முன்பாலவனம்மெனவொன்றுளமொய்ம்பின்மிக்காய். (கஎஎ)

ஆங்கேயினிநீகடிதேகினையன்னகானிற்
பாங்கேயொருதொன்மரநின்றதுபார்த்ததுண்டே
யூங்கேபராரையின்மேயபொந்தொன்றினூடு
தீங்கேகுறப்போய்ப்பெருமாதவஞ்செய்துசேர்தி. (கஎஅ)

அஞ்சேலவணீயுறைகின்றதொர்காலையானே
யெஞ்சேயவனுங்கயமாமுகனெய்துவானச்
செஞ்சேவகனுக்கெதிர்கொண்டனைசென்றுகாண்டி
மஞ்சேயனையாயுனக்கிவ்வுருமாறுமன்றே. (கஎகூ)

வேறு.

என்னுமளவிற்றொழுதிறைஞ்சியினிதேத்தி
யன்னதொர்வனத்திடையமர்ந்ததொன்மரத்திற்
றுன்னுவனெனக்கடிதுசொல்லுதலும்யார்க்கு
முன்னவனுமேகெனமுராரியைவிடுத்தான். (கஅ0)

விட்டிடுதலுங்கயிலைநீங்கினன்விரைந்தே
கட்டழகின்மேதகையகாமனதுதாதை
சிட்டர்கள்பயின்றுறைதெனாதுபுலநண்ணி
மட்டொழுகுதொன்மரவனத்தினிடையுற்றான். (கஅக)

நன்மதியுடைப்புலவர்நால்வர்களுமுய்யச்
சின்மயமுணர்த்தியருடேவனமர்தாருத்
தன்மையதுபெற்றுநனிதண்ணிழல்பரப்புந்
தொன்மரவியற்கையதனிற்சிறிதுசொல்வாம். (கஅஉ)

பசுந்தழைமிடைந்தவுலவைத்திரள்பரப்பி
விசும்பளவுநீடியுயர்வீழினிரைதூங்கத்
தசும்பனையதீங்கனிகடாங்கியதுதாளால்
வசுந்தரையளந்தநெடுமாயவனைமானும். (கஅங)

அண்டநடுவாயவுலகேழினையுமந்நா
ளுண்டருளியொல்லைதனிலோர்சிறுவனாகிப்
பண்டுகரியோன்றுயில்கொள்பாசடைகடன்பாற்
கொண்டவடமன்னதொருகொள்கையதுடைத்தால். (கஅச)

மழைத்தபசுமேனியதுமாதிரவரைப்பில்
விழுத்தகையவீழினிரைவீசுவடதாருத்
தழைக்குலமருப்புமிசைதாங்கியிடைதூங்கும்
புழைக்கைகொடுமால்களிறுநாடுகரிபோலும். (கஅரு)

பாசடைதொடுத்தபடலைப்பழுமரத்தின்
வீசிநிமிர்கின்றபலவீழின்விரிகற்றை
பூசலிடுகூளியொடுபூதநிரைபற்றி
யூசல்பலவாடியெனவூக்கியனவன்றே. (கஅசு)

Digitized By Roja Muthiah Research Library

ஆல்வரையின்வீழ்நிரைகளாசுகமுடற்றப்
பால்வரையினெற்றிவருமாறிரவிபாகன்
கால்வரையினேகவெழுகந்துகமதென்னு
மால்வரையின்வீசுபலமத்திகையதொத்த. (கஅஎ)

ஆசறுதெனுதுதிசையாளுமிறையெண்ணில்
பாசமொடுநின்றதொருபான்மையஃதன்றேல்
வாசவனுமாகமிசைமாலிகையுமாமால்
வீசுபழுமாமரவிலங்கலுமவ்வீழும். (கஅஅ)

மாநிலமெலாந்தலைவழுத்தவருமன்னற்
கூனமுறுகாலைதனிலொண்குருதிவாரி
வானமுகில்கான்றனையமாண்டதொன்மரத்தின்
மேனிதருசெய்யபலவீழின்விரிமாலை. (சஅகூ)

இம்பருறையாலமிசையெம்முருவுகொள்ளா
வம்புலவுதண்டுளவமாயன்வருமென்று
வெம்பணிகடம்பதியின்மேவுவனபோலாந்
தம்பமெனவேதரைபுகுந்ததனிவீழ்கள். (ககூ0)

கடித்தனவெயிற்றினழல்காலவரவின்மே
னடிக்குமொருகட்செவிநமைக்குறுகுமென்றுத்
துடித்தனவெனத்தலைதுளக்கினவுரோமம்
பொடித்தனநிகர்த்துளபுனிற்றினுறுபுன்காய். (ககூக)

கிளர்ப்புறுகவட்டிலைகிடைத்தகிளையாவு
மளப்பில்புகைசுற்றிடவனற்கெழுவுகற்றை
துளக்குறுதரக்குழுவுதோன்றியதுபோன்ற
விளக்கழனிகர்த்துளவிரிந்தமுகையெல்லாம். (ககூஉ)

செருப்புகுசினத்தெதிர்செறுத்தமதவெற்பின்
மருப்பினையொசிப்பவன்வரத்தினியல்காணு
விருப்பமலிவுற்றதன்விழித்தொகைகளெங்கும்
பரப்பியநிகர்த்துளபயங்கெழுவுபைங்காய். (ககூ௩)

வெள்ளிபடுகின்றமதிவிண்படர்விமானங்
கள்ளிபடுபால்கெழுகவட்டினிடைதேய்ப்பத்
துள்ளிபடுகின்றளவிலோர்திவலைதொத்தப்
புள்ளிபடுமாறுமுயலென்பர்புவிமேலோர். (ககூ௪)

காவதமொரேழுளபராரைகணிப்பின்றூற்
றூவறுமுயர்ச்சியதனுக்குமதிசான்றே
பூவுலகமெங்குநிழல்போக்கிநெடிதோம்புங்
கோவதெனநின்றதுயர்கோளியெனுங்குன்றம். (ககூரு)

அவ்வகையதாருவினைநோக்கினனணைந்தான்
பவ்வநிறவண்ணறுயில்பாசடைகடம்மோ
டெவ்வகைசுமத்திரெனவேவினவவென்றே
வெவ்வரவினுக்கிறைவன்மேவியதுமான. (ககூகூ)

Digitized By Roja Muthiah Research Library

அந்தமில்பெருங்கடல்வளாகமனைத்துந்தன்
னுந்தியிலடைந்ததெனவோங்கல்கெழுமொள்வாள்
வந்துறையினிற்புகுவதென்னவடதாருப்
பொந்தினிடையேயணுகினனுலகுபூத்தோன். (௪கூஎ)

சத்தியுரையாலரிதனிப்பணியதான
வித்திறமிசைத்தனமினிச்சுரரைவாட்டு
மத்திமுகவெய்யவனையாதியருள்செய்யும்
வித்தகமுதற்புதல்வன்வென்றமையுரைப்பாம். (ககூஅ)

வேறு.

மூந்துவேழமுகத்தவனேவலா, னொந்துசிந்தைநுணங்கியதேவரு
மிந்திராதிபர்யாவருமைங்கரன், வந்ததோர்ந்துமகிழ்ச்சியின்மேயினர். (ககூகூ)

ஏதமின்மகிழ்வெய்தியவிந்திர, னாதியோர்கயிலாயத்தணுகியே
போதகத்துப்புகர்முகப்புங்கவன், பாதமுற்றுப்பணிந்துபரவினர். (௨00)

பரவல்செய்திடுபான்மையைநோக்கியே, கருணைசெய்துகயமுகத்தெம்பிரா
னுரையுநுங்கட்குறுகுறையென்றலும், வரன்முறைப்படவாசவன்கூறுவான். ௨0க

தொல்லைநாண்மதிசூடியசோதிபா, லெல்லைநீங்கும்வரந்தனையெய்தினன்
கல்லென்வெஞ்சொற்கயாசுரனென்பவ, னல்லல்செய்தனனாற்றவுமெங்களை. ௨0௨

பின்னுநங்களைப்பீடறவைகலுந், தன்னைவந்தனைசெய்யவுஞ்சாற்றினா
னன்னசெய்தனமன்றியுமெங்கள்பான், மன்னவேபுதிதொன்றுவகுத்தனன்.௨0௩

கிட்டித்தன்முன்கிடைத்துழிநெற்றியிற், குட்டிக்கொண்டுகுழையிணையிற்கரந்
தொட்டுத்தாழ்ந்தெழச்சொற்றனனாங்கதும், பட்டுப்பட்டுப்பழியிடைமூழ்கினேம்.

கறுத்துமற்றவன்கட்டுரைக்கின்றசொன், மறுத்தலஞ்சிவரும்பழிதன்னையும்
பொறுத்துநாணமும்போகவின்றந்தமுன், சிறப்பிலாவச்சிறுதொழில்செய்தனெம்.

ஆங்கவன்றனதாவியொடெங்குறை, நீங்குவித்திடநீவருவாயென
வோங்கனல்குழுமையவடன்னொரு, பாங்கர்வைகும்பராபரன்கூறினன். (௨0௬)

ஆதலானின்னடைந்தனமெம்முடை, யேதமாற்றுதியென்றுவழிபடஇ
மோதகாதிகண்முன்னுறவார்த்திடப், பூதநாதனருளிற்புகலுவான். (௨0எ)

அஞ்சலஞ்சலவுணர்க்கரசனும், விஞ்சுவேழமுகமுடைவீரனைத்
துஞ்சுவித்துந்துயர்தவிர்ப்போமெனக், குஞ்சரத்திருமாமுகன்கூறவே. (௨0அ)

இறைவனேடுமிமையவரெம்முடைச், சிறுமைநீங்கினசெல்லலுநீங்கின
மறுமையின்பமும்வந்தனவாலினிப், பெறுவதொன்றுளதோவெனப்பேசினர். ()

வேறு.

துன்பினையுழந்திடுசுரர்களிவ்வகை, யின்புறுகாலையிலீசன்றந்திடு
மன்புடைமுன்னவனானைமாமுக, முன்பனையடுவதுமுன்னினனரோ. (௨க0)

பொருக்கெனத்தவிசினின்றெழுந்துபூதர்க, ணெருக்குறுவாய்தலினெய்திநீள்க தி, ரருக்கனினிலகியவசலனென்பவன், றருக்கியபுயத்தின்மேற்சரண்வைத்தேறினன். (௨கக)

எறியங்கசலன்மேலிருந்துசெல்லுழிக், காரொடர்முகிலினங்கவைஇயகாட்சி போன், மாறில்வெம்பூதர்கள்வந்துசுற்றியே, கூறினரவன்புகழ்குலாயகொள்கையார். (௨க௨)

Digitized By Roja Muthiah Research Library

சாமரைவீசினர்தணப்பில்பன்மணிக், காம்ருதண்ணிழற்கவிகையேந்தினர்
பூமருமதுமலர்பொழிதன்மேயின, ரேமருபூதரிலெண்ணிலோர்களே. (௨௧௩)

துடியொடுசெல்லரிதோமிறண்ணுமை, கடிபடுகரடிகைகணையஞ்சல்லிகை
யிடியுறழ்பேரிகையிரலைகாகளங், குடமுழவியம்பினர்கோடிசாரதர். (௨௧௪)

சிந்தையிலுன்னினர்தீமைதீர்ப்பவன், வந்திடுகாலையின்மகத்தின்வேந்தனு
மந்தரவமரருமடைந்துபோற்றியே, புந்திகொளுவகையாற்போதன்மேயினார். ()

தாருவினறுமலர்தத்தங்கைகொடு, பேருணுதல்விழிப்பிள்ளைமீமிசை
சேருறவீசியேபுடையிற்சென்றனர், காரிணையடைதருகடவுள்வில்லென. (௨௧௬)

விரைந்தெழுசாரதவெள்ளமெண்ணில, நிரந்தனசூழ்தரவிமலன்மாமகன்
பெருந்தரையேகியேபிறங்குதோன்முகன், புரந்திடுமதங்கமாபுரமுன்போயினான்.

ஆயதுகயமுகத்தவுணற்கோடியே,வேயினர்புகறலும்வெகுட்சிகொண்டெழீஇ
யேயதன்படையெலாமெடுத்துமற்றவன், சேயுயர்தனதுபொற்றேரிலேறினான். ()

பல்லியமியம்பினபரிகள்சுற்றின, சில்லிகொளாழியந்தேர்கள்சூழ்ந்தன
வெல்லையிலிபநிரையாவுமொய்த்தன, வல்லியலவுணர்கள்வரம்பின்றீண்டினார். ()

ஆயிரவெள்ளமாமணிகஞ்சுற்றிடக், காய்கனல்விழியுடைக்கயமுகாசுர
னேயெனுமளவையிலேகிக்கண்ணுத, னாயகன்மதலைதன்படைமுனண்ணினான். ()

நண்ணியகாலையினவையில்பூதரு,மண்ணலங்கழலடியவுணருங்கெழீஇப்[க்கவே.()
பண்ணினர்பெருஞ்சமர்படையின்வன்மையால், விண்ணவர்யாவரும்வியந்துநோ

புதிதெழுவெயிலுடன்பொங்குபேரிரு, ளெதிர்பொருமாறுபோலினங்கொடானவ
ரதிர்கழற்பூதரோடமர்செய்தாற்றலர், கதுமெனவழிந்தனர்கலங்கியோடினார். ()

ஓடினரளப்பிலருயிரைச்சிந்தியே, வீடினரளப்பிலர்மெய்குறைந்துபி
னாடினரளப்பிலரகலுதற்கிடர், தேடினரளப்பிலர்தியக்கமெய்தினார். (௨௨௩)

ஒழிந்தனகரிபரியுலப்பிறேர்நிரை, யழிந்தனவித்திறமவுணர்தம்படை [ர்.
குழிந்திடுகண்ணுடைக்குறள்வெம்பூதர்கண், மொழிந்திடவரியதோர்விசயமுற்றின

உயர்தருதானவருடைந்ததன்மையும், புயவலிகொண்டுளபூதர்யாவருஞ்
சயமுடன்மேல்வருதகவுநோக்கியே, கயமுகவவுணர்கோன்கனலிற்சீறினான். ()

உளத்தினில்வெகுண்டுசென்றொருதன்கைச்சிலை, வளைத்தனனத்துணைவளைத்து
ப்பேரமர், விளைத்தனர்பூதர்களனையர்மெய்யெலாந், துளைத்தனன்கணைமழைசொ
ரிந்துதுண்ணென. (௨௨௬)

அரந்தெறுபகழிகளாகம்போழ்தலும், வருந்தினர்திறலொடுவன்மைநீங்கின
ரிரிந்தனர்பூதர்கள்யாருமோடினார்,புரந்தரனிமையவர்பொருமலெய்தவே.(௨௨௭)

கணநிரைசாய்தலுங்கண்டுமற்றது, மணிகிளர்கிம்புரிமருப்புமாமுக
னிணையறுமசலன்மேலேகிவல்லையி, லணுகினனிபமுகத்தவுணர்கோனையே.௨௨அ

காருடையிபமுகக்கட்வுண்மேலையோ, னேருறவருதலுநின்றதுதரைச்
சீருறுகயமுகத்தீயனோக்கியே, யாரிவண்பொருவதற்கணுகுற்றானென. (௨௨௯)

பரவியவொற்றர்கள்பணைமருப்புடைக், கரிமுகமுடையன்முக்கண்ணனைங்கர
னுருகெழுபூதன்மேலுறுகின்றான்சிவன், பெருமகனாகுமிப்பிள்ளைதானென்றார். ()

Digitized By Roja Muthiah Research Library

அன்னதுகேட்டலுமவுணன்சீறியே, பன்னருங்கலைதெரிபாகைநோக்கிநம் [வே.
பொன்னிரதத்தினைப்புழைக்கைமாமுகன், முன்னுறக்கடவுதிமொய்ம்பவென்ன

கேட்டிடுவலவையோன்கிஞ்சுகக்குரத், தாட்டிறற்பரியினந்தன்னின்மத்திகை
காட்டினன்றவறிலாக்கனகத்தேரினை, யோட்டினனைங்கரத்தொருவன்முன்னுற.

ஆயிடைக்கரிமுகத்தவுணனைங்கரத், தூயனையழல்விழிசுழலநோக்கியே
காயெரியெயிறுகக்கறைகொள்பற்களாற், சேயிதழதுக்கியேயினையசெப்புவான்.()

நுந்தையென்மாதவநோக்கிமுன்னரே, தந்திடுபெருவரந்தன்னைத்தேர்கிலை [லோ.
யுய்ந்தனைபோதிநின்னுயிர்கொண்டென்னெதிர், வந்தனையிறையதுமதியிலாய்கொ

அன்றிநீயமர்செயவமைதியென்னினும், வன்றிறலுனக்கிலைமைந்தவென்னெதிர்
பொன்றினரல்லதுபோர்செய்தென்னைமுன், வென்றவரிவரெனவிளம்பவல்லையோ

தேன்பெறுதருநிழற்றிருவின்வைகிய, வான்பெறுதேவரான்மக்களாலவ
ரூன்பெறுபடைகளாலொழிந்திடேனிது, நான்பெறுவரத்தியனவிலக்கேட்டியேல்.

பின்னரும்பலவுளபெற்றதொல்வர, மென்னைவெல்பவரெவரிந்திராதிபர்
தன்னிடர்தணிப்பவர்போலச்சார்ந்தனை, யுன்னைவென்றன்னவருயிருமுண்பனால்.()

பொருதெனைவென்றனைபோகவல்லையேல், வருதியென்றுரைத்தலும்வானுலாவிய
புரமெரிபடுத்தவன்புதல்வனவ்விடை, யருளுடனொருமொழியறைவதாயினான்.()

வேறு.

நிரந்தபல்படையுநாளுநிலைபெறநினக்குத்தொன்னாள்
வரந்தருகின்றவெந்தைவல்லைநின்னுயிரைவவ்விப்
புரந்தரன்முதலினோர்க்குப்பொன்னினாடுதவியன்னா
ரரந்தையுமகற்றிச்செல்கென்றருளினனெனக்குமன்றே. (௨௩௯)

உன்னுயிர்காத்தியென்னினுறுதியொன்றுரைப்பன்கேண்மோ
பொன்னகரதனையிந்தப்புரந்தரன்புரக்கநல்கி
யிந்நிலத்தரசுசெய்தேயிருத்தியஃதிசையாதென்னி
னின்னுயிர்முடிப்பனேர்ந்துநின்றனனினைவென்னென்றான். (௨௪0)

என்னலுமவுணன்பொங்கியெரியுகவிழித்துச்சென்றோர்
பொன்னெடுஞ்சிலையைவாங்கிப்பொருக்கெனப்புரிநாணேற்றி
மின்னுடைவடிம்பின்வாளிவீசலும்விமலனல்கு
முன்னவனெழுவொன்றேந்திமுரணொடுசிந்திநின்றான். (௨௪௧)

பொற்றனுமுரிந்துவீழப்புழைக்கையிற்பிடித்ததண்டா
லெற்றினனனையகாலையிபமுகத்தசுரனென்போன்
மற்றொருசிலையைக்கையால்வாங்கினன்வாங்குமுன்னர்ச்
செற்றனனதனைமைந்தன்றிசைமுகன்முதலோரார்ப்ப. (௨௪௨)

திண்டிறல்பெற்றவீரச்சிலைமுரிந்திட்டபின்னர்த்
தண்டமொன்றேந்தியீசன்றனயனோடெதிர்தலோடும்
விண்டதுசோரும்வண்ணம்வெய்தெனப்புடைத்துமாயாக்
கண்டகனுரத்திற்றாக்கக்கையறவெய்திநின்றான். (௨௪௩)

நடுங்கினன்சிந்தையொன்றுநவில்கிலனுணத்தாலே
யொடுங்கினன்கயவெஞ்சூரனுலந்தனன்போலநின்றா
னடும்பரிகளிறுதிண்டேரணிகெழுதானைபாரிற்
படும்படிநினைந்துமுன்னோன்பாசமொன்றுய்த்தானன்றே. (௨௪௪)

Digitized By Roja Muthiah Research Library

விட்டவெம்பாசமங்கண்வெய்யதோர்சேனைமுற்றுங்
கட்டியதாகமைந்தன்கணிச்சியுமதற்பினைவ
வட்டதாலதனைநோக்கியாடினரமரர்தானை
பட்டனவுணர்ந்துதீயோன்பதைபதைத்துயிர்த்துநொந்தான். (௨௪௫)

மூந்துதன்கரத்திலுள்ளமுரண்கெழுபடைகள்யாவுஞ்
சிந்தினனவைகளெல்லாஞ்சேர்ந்தனதிங்கள்சூடு
மெந்தையைவலஞ்செய்தேத்தியேவலினியன்றமாதோ
வெந்திறலவுணன்மேன்மேல்வெகுளித்தீக்கனலநின்றான். (௨௪௬)

நின்றவன்றன்னைநோக்கிநெடியபல்படைகளேவிற்
சென்றிவன்றன்னைக்கொல்லாசிவனருள்வரத்தின்சீரா
லின்றினிச்செய்வதென்னென்றிறைவரையுன்னியெந்தை
தன்றிருக்கோட்டிலொன்றுதடக்கையின்முரித்துக்கொண்டான். (௨௪௭)

தடக்கையிலேந்துகோட்டைத்தந்தியாமவுணன்மீது
விடுத்தலுமனையன்மார்பைவெய்தெனக்கீண்டுபோகி
யுடற்படிமிசையேவீழ்த்தியொல்லையிலோடித்தெண்ணீர்க்
கடற்படிந்தமலன்மைந்தன்கரத்தில்வந்திருந்ததன்றே. (௨௪௮)

புயலினத்தொகுதியொன்றிப்புவிமிசைவழுக்கிற்றென்னக்
கயமுகத்தவுணன்முந்நீர்க்கடலுடைந்தென்னவார்த்திட்
டியலுடைத்தேர்மேல்வீழாவெய்த்தனனவன்றன்மார்பில்
வியனதித்தாரையென்னவிரிந்தனகுருதிவெள்ளம். (௨௪௯)

ஏடவிழலங்கற்றிண்டோளிபமுகத்தவுணன்மார்பி
னீடியகுருதிச்சேந்நீர்நீத்தமாயொழுகும்வேலைப்
பாடுறவருங்காஞ்ஞென்றிற்பரத்தலினதுவேசெய்ய
காடெனப்பெயர்பெற்றின்னுங்காண்டகவிருந்ததம்மா. (௨௫0)

ஆய்ந்தநல்லுணர்வின்மேலோரறிவினுமணுகாவண்ண
வீந்ததொல்வரத்தான்மாயாவிபமுகத்தவுணன்வீழ்ந்து
வீந்தனன்போன்றுதொல்லைமெய்யொரீஇவிண்ணுமண்ணுந்
தீந்திடவெரிகண்சிந்தச்சீற்றத்தோராகுவானான். (௨௫௧)

தேக்கியநதிசேர்கின்றசென்னியன்செம்மறன்னைத்
தாக்கியவருதலோடுஞ்சாரதன்றோளினீங்கி
நீக்கருந்துப்பின்றாக்கிநீநமைச்சுமத்தியென்று
மேக்குயர்பிடரிற்றாவிவீற்றிருந்தூர்தலுற்றான். (௨௫௨)

மற்றதுகண்டதேவர்வாசவன்முதலோர்யாரு
மிற்றனன்கயவெஞ்சூரனெம்மிடர்போயிற்றன்றே
யற்றதெம்பகையுமென்னுவாடினர்பாடாநின்றார்
சுற்றியகலிங்கம்வீசித்துண்ணெனவிசும்புதூர்த்தார். (௨௫௩)

காமருபுயலின்றோற்றங்காண்டலுங்களிப்பின்மூழ்கி
யேமருகலாபமஞ்ஞையினமெனக்குலவுகின்றார்
தேமருமிதழியண்ணல்சிறுவனைத்தெரியாவண்ணம்
பூமலர்பொழிந்துநின்றுபுகழினைப்போற்றலுற்றார். (௨௫௪)

Digitized By Roja Muthiah Research Library

காப்பவனருளுமேலோன்கண்ணகன்ஞாலம்யாவுந்
தீப்பவனேனைச்செய்கைசெய்திடுமவனுநீயே
யேப்படுஞ்செய்கையென்னவெமதுளம்வெதும்புமின்ன
னீப்பதுகருதியன்றோநீயருள்வடிவங்கொண்டாய். (௨௫௫)

உன்னிடைப்பிறந்தவேதமுன்பெருநிலைமைதன்னை
யின்னதென்றுணர்ந்ததில்லையாமுனையறிவதெங்ங
னன்னையும்பயந்தோன்றானுமாயினையதனான்மைந்தர்
பண்ணியபுகழ்ச்சியாவும்பரிவுடன்கேட்டிபோலாம். (௨௫௬)

என்றிவரெகினமூருமிறையொடுமிறைஞ்சியேத்தி
நன்றிகொள்சிந்தையோடுநகையொளிமுகத்தராகி
மன்றவர்குமரன்றன்பால்வந்தனர்சூழ்தலோடு
மொன்றியகருணைநோக்காலுலப்பிலாவருள்புரிந்தான். (௨௫௭)

ஊய்ந்தனமினிநாமென்றுவேதிமமுயர்த்தோன்வெள்ளைத்
தந்தியன்யாரும்போற்றிச்சார்தலுஞ்சமரின்முன்னம்
வெந்தொழிலவுணன்காயவீந்திடுபூதர்தம்மை
யெந்தையங்கினிதுநோக்கியெழுதிரென்றருளிச்செய்தான். (௨௫௮)

அவ்வகையருளலோடுமரவெனவெழுந்துபோற்றி
மைவரைமிடற்றுப்புத்தேண்மைந்தனைவணங்கியேத்தி
யெவ்வமில்பூதர்யாருமீண்டினரினையவெல்லாஞ்
செவ்விதினுணர்ந்துகொண்டான்றேசிலாநிருதர்க்கீசன். (௨௫௯)

மந்திரியோடுஞ்சூழ்ந்துவருந்தினன்புலம்பிமாழ்கி
யுய்ந்தனன்போவல்யானென்றுன்னியோர்பறவையாகி
யந்தரத்திறந்தபுள்ளோடணுகியப்பதியைநீங்கிச்
சிந்தையிற்செல்லல்கூரச்செம்பொன்மால்வரையிற்சென்றான். (௨௬0)

தாழுறுசாரலூடுதபனனுமுணராத்தாருச்
சூழலொன்றுண்டாலங்கட்சுருங்கையோடிருந்தசேமப்
பூழையுட்புலம்பியுற்றான்பொன்னகரிறைக்குமங்க
ணூழிவெங்காலிற்சூழுமுலப்பில்பூதர்க்குமஞ்சி. (௨௬௧)

வானவர்பகைஞனந்தமதங்கமாபுரியைநீங்கிப்
போனதோர்காலைமற்றைப்புகருமோர்புள்ளதாகித்
தானுறையுலகுநண்ணித்தவமறைந்தல்லதாற்றி
யூனுடலோம்புவார்போலொருப்படாயோகிலுற்றான். (௨௬௨)

பூதருமன்னவேலைப்புரிசைசூழ்நகரம்போகி
நீதியிலவுணராகிநிறங்கிளர்படைகொண்டோரைக்
காதிவெஞ்சினப்போர்முற்றிக்களத்திடைவருதலோடு
மாதிதந்தருளுமைந்தனவ்விடையகன்றுமீண்டான். (௨௬௩)

மீண்டுசெங்காட்டிலோர்சார்மேவிமெய்ஞ்ஞானத்தும்பர்
தாண்டவம்புரியுந்தாதைதன்னுருத்தாபித்தேத்திப்
பூண்டபேரன்பிற்பூசைபுரிந்தனன்புவியுளோர்க்குக்
காண்டகுமனையதானங்கணபதீச்சரமதென்பார். (௨௬௪)

Digitized By Roja Muthiah Research Library

புரமெரிபடுத்தோன்றன்னைப்பூசனைபுரிந்தபின்ன
ரெரிவிழிசிதறுமாகுவெருத்தமேலினிதினேறிச்
சுரபதியயன்விண்ணோர்கடொழூதுடன்சூழ்ந்துபோற்ற
வரவெனமாலோன்வைகுமாலமாவனத்திற்புக்கான். (உரு)

கயமுகனுற்பத்திப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,களஉ.

---

# அனந்தன்சாபநீங்குபடலம்.

புக்கதொருபொழுதிலங்கண்முந்தோராலம்பொந்தினிடையிருந்தமலன்பொற்றாளுன்னி, மிக்கதவம்புரிமாலைங்கரத்துமுன்னோன்மேவியதுமனங்கொண்டுவிரைவினுங்கே, யக்கணமேயெதிர்சென்றுவழுத்திக்காணவம்மையளித்தருள்சாபமகறலோடுஞ், சக்கரமேமுதலியவைம்படைகளேந்தித்தனுதுதொல்லைப்பேருருவந்தனைப்பெற்றான். (க)

மாலோன்றொல்லுருவுதன்பான்மேவக்கண்டுமகிழ்சிறந்துசிவனருளைமனங்கொண்டேத்தி, மேலோன்றன்முன்னரெய்திவணக்கஞ்செய்துமீண்டுமவன்றனைத்துதித்துவிமலநீயென், பாலோங்குபூசனைகொண்டருளல்வேண்டும்பணித்தருள்கவாதிபராபரத்தின்பாலாய், மூலோங்காரப்பொருளாயிருந்தாண்முன்னமொழிந்தருள்சாபந்தொலைத்தமுதல்வவென்றான். (உ)

ஐங்கரன்றான்மாலுரைத்தமாற்றங்கேளாவன்னதுசெய்கெனவருளியங்கண்மேவக், கொங்குலவுமஞ்சனநீர்சாந்தமாலைகொழும்புகையேமுதலியனகொண்டுபோந்து, சங்கரனார்மதலைதனையருச்சித்தன்பாற்றாவறுபண்ணியம்பலவுஞ்சால்பிற்றந்து, பொங்கியபாலவியினொடுமுன்னமார்த்திப்போற்றியேயிஃதொன்றுபுகலலுற்றான்.

விண்ணுமம்புகல்கின்றதிங்கடன்னின்மிக்கமதிதனிலாறும்பக்கமாகு
மிந்நாளில்யானுன்னையருச்சித்திட்டவியற்கைபோல்யாருமினியீறிலாவுன்
பொன்னருமலரடியேபுகலென்றுன்னிப்பூசைபுரிந்திடவுமவர்புன்கணெல்லா
மந்நாளேயகற்றிநீயுலவாச்செல்வமளித்திடவும்வேண்டுமிஃதருள்கவென்றான். (சா)

மாயனுரைகேட்டலுநீமொழிந்தற்றாகமகிழ்ந்தனநின்பூசையெனமதித்துக்கூறி
யாயவனுமயன்முதலாவுள்ளோர்யாருமன்பினொடுவாழ்த்திசைப்பவாகுவென்னுந்
தூயதொருர்தியிலெய்திக்கணங்களானோர்சூழ்ந்துவரக்கயிலையெனுந்துகடீர்வெற்பி
னேயமுடன்போந்தரனைவணக்கஞ்செய்துநீடருள்பெற்றேதொல்லைநிலயத்துற்றான்

வேறு.

அற்றைநாளிலரியயனாதியோர், நெற்றியங்கணிமலன்பதங்களின்
முற்றுமன்பொடுமும்முறைதாழ்ந்தருள், பெற்றுநீங்கினர்பேதுறனீங்கினர். (சு)

கரிமுகம்பெறுகண்ணுதற்பிள்ளைதாள், பரவிமுன்னம்பணிந்தனர்நிற்புழி
யருள்புரிந்திடவன்னதொர்வேலையிற், பரிவினொலோர்பரிசினைக்கூறுவார். (எ)

எந்தைகேண்மதியெம்மையலைத்திடுந், தந்திமாமுகத்தானவற்செற்றியா
முய்ந்துநாங்களுனதடியோமிவண், வந்துநல்குகைம்மாறுமற்றில்லையே. (அ)



Digitized By Roja Muthiah Research Library

னென்னல்காறுங்கரில்கயாசுரன், முன்னராற்றுமுறைப்பணியெந்தைமுன்
னின்னகாட்டொட்டியற்றுதும்யாமென,வன்னசெய்திரென்ருனருணீர்மையான்.

இத்திறம்படுமெல்லையினின்றிடு, மத்தலைச்சுரர்யாவருமன்புறீஇக்
கைத்தலத்தைக்கபித்தமதாக்கியே, தத்தமத்தகந்தாக்கினர்மும்முறை. (௧0)

இணைகொள்கையையெதிரெதிர்மாற்றியே, துணைகொள்வார்குழைதொட்டனர் மும்முறை, கணைகொள்காலுங்கவானுஞ்செறிந்திடத், தணிவிலன்பொடுதாழ்ந்தெழுந்தேத்தினர். (௧௧)

இணங்குமன்புடன்யாருமிதாற்றியே, வணங்கிநிற்பமகிழ்சிறந்தான்வரை
யணங்கின்மாமகனவ்வியனேக்கியே, கணங்களார்த்தனகார்க்கடலாமென. (௧௨)

நின்றதேவர்நிமலனைநோக்கியே, யுன்றன்முன்னமுலகுளர்யாவரு
மின்றுதொட்டெமைப்போலிப்பணிமுறை, நன்றுசெய்திடநல்லருள்செய்கென. ()

கடனிறத்துக்கயமுகனத்திற, நடைபெறும்படிநல்கியமரர்கோ
னெடியமாலயனின்றுளருக்கெலாம், விடைபுரிந்துவிடுத்தனனென்பவே. (௧௪)

அம்புயக்கணரியயன்வாசவ, னும்பரவ்வரையொல்லையினீங்குறூத்
தம்பதந்தொறுஞ்சார்ந்தனர்வைகினர், தும்பியின்முகத்தோன்றலருளினல். (௧௫)

முந்தைவேதமுதலெழுத்தாகிய, வெந்தைதோற்றமியம்பினமிங்கினி
யந்தமில்குணத்தாண்டகைக்கோர்குணம், வந்ததென்னென்றிமற்றதுகேட்டிநீ. ()

வேறு.

நற்குணமுடையநல்லோருநாடொணுச், சிற்குணனுகுமச்சிவன்பராபரன் [தோ.
சொற்குணமூவகைத்தொடர்புமில்லதோர், நிர்க்குணனவன்செயனிகழ்த்தற்பால

பரவியவுயிர்க்கெலாம்பாசநீக்குவா, னருளினனுகியேயமலன்மாலயற்
கிருதொழின்முறையினையீந்துமற்றவைக், குரியனகுணங்களுமுள்ளவாக்கினன்.()

முடித்திடலியற்றுமெம்முதல்வனத்தொழி, றடுப்பரும்வெஞ்சினந்தன்னின்முற்றுமா, லடுத்தவப்பான்மையாலதன்கட்டாமதம், படுத்தினனத்திறம்பலருந்தேர்வரால். (௧௯)

மாமறையளப்பிலவரம்பிலாகமந், தோமறவுதவியோர்தொன்மரத்திடைக்
காமருமுனிவரர்கணங்கட்கன்னவை, தாமதகுணத்தனேற்சாற்றவல்லனே. (௨0)

வாலியநிமலமாம்வடிவங்கண்ணுதன், மேலவனெய்துமோவேதம்விஞ்சையின்
மூலமென்றவனையேமொழியுமோவிது,சீலமில்லார்க்கெவன்றேற்றும்வண்ணமே.

இமையவர்யாவருமிறைஞ்சுங்கண்ணுதல், விமலனன்றிறுதியைவிளைக்கும்பண்பினற், றமகுணனென்றியத்தன்மைசெய்கையா, லமைகுணமியற்குணமறியற்பாலதோ. (௨௨)

ஈத்தலுமளித்தலுமியற்றுவோர்க்குள, சாத்திகராசதந்தத்தஞ்செய்கையின்
மாத்திரையல்லதுமற்றவர்க்கவை, பார்த்திடினியற்கையாப்பகரலாகுமோ. (௨௩)

அக்குணமானவையளிக்குஞ்செய்கையாற்,றெக்குறுமியற்கையத்தொல்லையோர்கள்பா, லிக்குணமல்லதோரிரண்டுஞ்சேருமான், முக்குணநெறிசெலுமுனிவர்தேவர்போல். (௨௪)

Digitized By Roja Muthiah Research Library

நேமியாற்குருவெலாநீலமாயதுந், தோமறுகடலிடைத்துயில்கொள்பான்மையு
மேமுறுமகந்தையும்பிறவுமெய்துமேற், றாமதராசதந்தானுமுற்றவே. (௨௫)

அறிவொருங்குற்றுழியனையன்கண்ணுத, லிறைவனைவழிபடீஇயேத்தியின்னரு
ணெறிவ்ருதன்மையுநீடுபோதமும், பெறுதலிற்சாத்திகமுறையும்பெற்றுளான். ௨௬

மேனிபொற்கென்றலின்விமலவான்பொரு, ணானெனுமருட்கையினவையிலீச
னைத், தானுணர்தெளிவினிற்றவத்திற்பூசையி, லானதுகுணனெலாமயன்றனக்கு
மே. (௨௭)

ஆதலின்விருப்புடனல்லதெய்தினோ, ரோதியகுணவிதத்துறுவர்கண்ணுத
ணாதனுக்கனையதுநணுகுறாமையாற்,பேதைமையொருகுணமவன்கட்பேசுதல். ௨௮

மூன்றெனவுளபொருள்யாவுமுன்னமே, யீன்றவன்கண்ணுதலென்னுநான்மறை
சான்றதுவாகுமாற்றவத்தர்க்கென்னினு, மான்றதோரவன்செயலறியற்பாலதோ.

செங்கண்மான்முதலியதேவரேனையோ, ரங்கவரல்லவையகத்துள்வைகியே
யெங்குமாயாவையுமியற்றுகின்றதோர், சங்கரனொருகுணச்சார்பின்மேவுமோ. ()

ஈறுசெய்முறையினையெண்ணித்தாமதங், கூறினரல்லதுகுறிக்கொண்மேலையோர்
வேறொருசெய்கையின்விளம்பினாரல, ராறணிசெஞ்சடையமலனுக்கரோ. (௩௧)

வேறு.

என்றிவைபலவுந்தூயோனிசைத்தலுமினையவெல்லாம்
வன்றிறல்வெறுக்கையெய்திமயங்கலாற்றக்கனென்னும்
புன்றொழில்புரியுந்தீயோன்பொறுத்திலன்புந்திமீது
நன்றெனவறிதறேற்றானொருசிலநவிலலுற்றான். (௩௨)

முனிவகேள்பலவுமீண்டுமொழிவதிற்பயனென்வெள்ளிப்
பனிவரையுறையுநங்கோன்பகவனேயெனினுமாக
வனையவன்றனக்குவேள்வியவிதனையுதவேனீயு
மினியிவைமொழியல்போதியென்செயன்முடிப்பனென்றான். (௩௩)

வேறு.

வளங்குலவுதக்கனிதுபுகன்றிடலுந்ததீசிமுனிமனத்திற்சீற்றம்
விளைந்ததுமற்றவ்வளவில்வெருவியதுவடவையழல்விண்ணோர்நெஞ்சந்
தளர்ந்ததுபொன்மால்வரையுஞ்சலித்ததந்தக்குலகிரியுந்தரிப்பின்றாகி
யுளைந்தனவேலைகளேழுமொடுங்கியனநடுங்கியதிவ்வுலகமெல்லாம். (௩௪)

அக்கணமேமுனிவரன்றன்பெருஞ்சீற்றந்தனைநோக்கியந்தோவென்னா
லெக்குவடுமெக்கிரியுமெக்கடலுமெவ்வுலகும்யாவும்யாருந்
தக்கனொருவன்பொருட்டாற்றளர்ந்திடுமோவெனமுனிவுதணிந்துதற்கு
ழொக்கலொடுமவனெழுந்துசிறுவிதியின்முகநோக்கியொன்றுசொல்வான். (௩௫)

சங்கரனைவிலக்கியின்றுபுரிகின்றமகஞ்சிதைகதக்கநின்னோ
டிங்குறையுமமரரெலாமழிவுறவின்னேயென்னாவிசைத்துப்பின்ன
ரங்கணுறுமறையோர்தம்முகநோக்கியந்தணரிலழிதூ * வானீ
ருங்கள்குலத்தலைமைதனையிழந்திட்டீர்கேண்மினெனவுரைக்கலுற்றான். (௩௬)

---

* அழிதூ - பேடி.

Digitized By Roja Muthiah Research Library

பேசரியமறைகளெலாம்பராபரனீயெனவணங்கிப்பெரிதுபோற்று
மீசனையுமன்பரையுநீற்றொடுகண்டிகையினையுமிகழ்ந்துநீவிர்
காசினியின்மறையவராயெந்நாளும்பிறந்திறந்துகதியுறாது
பாசமதனிடைப்பட்டுமறையுரையாநெறியதனிற்படுதிரென்றான். (௩௭)

இனையநெறியாற்சாபம்பலவுரைத்துத்ததீசிமுனியிரண்டுபாலு
முனிவர்தொகைதற்சூழத்தானுறையுமாச்சிரமமுன்னிச்சென்றா
னினையவன்றன்பின்னாகத்தக்கனென்போன்பெருந்தகவுமாற்றானோன்பும்
புனைபுகழுஞ்செழுந்திருவுமாற்றலுமாமனச்செருக்கும்போயிற்றன்றே. (௩௮)

அனந்தன்சாபநீங்குபடலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௧,௨௧0.

---

# தானப்படலம்.

போனதோர்பொழுதிலவன்றுவசமிற்றமகத்துணிற்பொருக்கென்றெய்திக்
கானுலாவியகொடியுங்கழுகுமிடைந்தனயாருங்கலங்கத்தானே
மானமார்வேதவல்லிமங்கலநாணுங்கழன்றமற்றித்தன்மை
யானதோர்துன்னிமித்தம்பலவுண்டான்முடிவோன்கணவையுறாவோ. (௧)

வேறு.

இந்தவாறுதுன்னிமித்தங்கள்பலநிகழ்ந்திடவுஞ்
சிந்தைசெய்திலன்சி[illegible]வதுமஞ்சிலன்றீயோன்
றந்தைதன்னையுநாரணன்றன்னையுந்தகவான்
முந்துபூசனைபுரிந்தனன்முகமன்கண்மொழியா. (௨)

மற்றைவானவர்யாவர்க்குமுனிவர்க்குமரபா
லெற்றுவேண்டியவவையெலாநல்கியேயிதற்பின்
பெற்றமங்கையர்தமக்குமாமருகர்க்கும்பெரிது
மற்றமில்லதோர்மங்கலத்தொல்சிறப்பளித்தான். (௩)

நாலுமாமுகக்கடவுள்சேயித்திறநல்கி
மாலும்யாவருங்காத்திடத்தீத்தொழின்மகஞ்செய்
வேலைநோக்கியேதொடங்கினனவ்விடைவேள்விச்
சாலைதன்னிடைநிகழ்ந்தனசாற்றுவன்றமியேன். (௪)

முன்னரேதக்கனேவலும்வினைசெயன்முறையான்
மன்னுதேனுவோராடகச்சாலையின்மாடே
பொன்னின்மால்வரைநடுவுசேர்வெள்ளியம்பொருப்பை
யன்னதாமெனவன்னமாம்பிறங்கலையளித்த. (௫)

ஏதநீங்கியதீயபாலடிசிலுமெண்ணில்
பேதமாகியமுதிரையினுண்டியும்பிறவா
மோதனங்களும்வீற்றுவீற்றாகவேயுலகின்
மாதிரங்களிற்குலகிரியாமெனவகுத்த. (௬)

Digitized By Roja Muthiah Research Library

நெய்யினோடளாய்விரைகெழுநுண்டுகணீவிக்
குய்யினாவியெவ்வுலகமுநயப்புறக்குழுமி
வெய்யதாகியகருனைகடிசைதொறுமேவு
மையல்யானைகளாமெனவழங்கிற்றுமாதோ. (௭)

அண்ணல்சேர்வெந்தைதோசையேநொலையலேயாதிப்
பண்ணியங்களுந்தாரமுங்கனிவகைபலவு
மண்ணின்மேலுறுகிரியெலாங்குலகிரிமருங்கு
நண்ணினாலெனத்தொகுத்தனயாவருநயப்ப. (௮)

விருந்தினோர்கொளவிழுதுடன்பாறயிர்வெள்ளந்
திருந்துகங்கையும்யமுனையுமாமெனச்செய்த
வருந்துமுண்டிகள்யாவையும்வழங்குகோவதனிற்
பொருந்துகின்றதுதந்ததென்றுலதுபுகழோ. (௯)

தாவில்பாளிதமான்மதஞ்சாந்துதண்பனிநீர்
காவிவெள்ளடைசெழும்பழுக்காயொடுநறைமென்
பூவுமேனையபொருள்களுநல்கினபுகழ்சேர்
தேவர்கோமகன்பணிபுரிகின்றதோர்தேனு. (௧௦)

ஆவதிவ்வகையாவதுநல்கியேயங்கண்
மேவுகின்றதுமணியுமச்சங்கமும்வியன்சேர்
காவுமம்புயநிதியமுந்தக்கனுங்கடியோ
னேவலாலருட்சாலையிலடைந்தனவிமைப்பில். (௧௧)

கணிதமில்லதோர்பரிதிகண்மேனியிற்களுலு
மணிகளோர்புடைதொகுத்தனவாடகவரைபோ
லணிகொள்காஞ்சனமோர்புடைதொகுத்தனவம்பொற்
பணிகளாடைகளோர்புடைதொகுத்தனபடைத்தே. (௧௨)

மற்றும்வேண்டியபொருளெலாமுதவியம்மருங்கி
னுற்றவேலையத்தக்கனதேவலினெழுகா
கிற்றல்போற்றியமுனிவரர்யாவருநிலத்தோர்க்
கிற்றெலாமிவண்வழங்குதும்யாமெனவிசைத்தார். (௧௩)

வேறு.

இன்னவேலையிலிச்செயல்யாவையு, முன்னமேயுணர்முப்புரிநூலினர்
துன்னியேமனந்துண்டவந்தொல்லையி, லன்னசாலதனையணைந்தாரரோ. (௧௪)

சாலைகாண்டலுந்தக்கனையேத்தியே, பாலர்தன்மையிற்பாடினராடினர்
கோலமார்பிற்குலாவியவெண்டுகில், வேலையாமெனவீசிநின்றார்த்துளார். (௧௫)

மிண்டுகின்றவவ்வேதியர்தங்களைக், கண்டுவம்மின்கதுமெனநீரெனக்
கொண்டுசென்றுகுழுவொடிருத்தியே, யுண்டிதன்னையுதவுதன்மேயினார். (௧௬)

மறுவில்செம்பொன்மணிகெழுதட்டைக, ளிறுதியில்லனயாவர்க்குமிட்டுமே
னறியவுண்டிகனல்கியின்னோர்தமக், குறவினாரெனவூட்டுவித்தாரவண். (௧௭)

அன்னகாலையரும்பசிதீர்தரத், தன்னவுண்டுஞ்சுவையுடைத்தாதலா
அன்னியுன்னியிவ்வுண்டிகள்சாலவு, மின்னம்வேண்டுமெனவுரைப்பார்சிலர். ௧௮

குற்றமொன்றுளகூறுவதென்னினி, நற்றவஞ்செய்துநான்முகனுலிவ
னுற்றவுண்டியெலாமுணவோர்பசி, பெற்றிலோமெனப்பேதுறுவார்சிலர். (௧௯)

வீறுமுண்டிமிசைந்திடவேண்டும்வாய், நூறுநூறதெனநுவல்வார்தமை
யேறவெண்டுமிதிலமையாதெனச், சீறியேயிகல்செய்திடுவார்சிலர். (௨0)

புலவர்கோனகர்போற்றியதேனுவந், தலகிலிவ்வுணவாக்கியதாலெனுச்
சிலர்புகன்றனர்தேக்கிடவுண்மினோ, வுலவலீரெனவோதுகின்றார்சிலர். (௨௧)

அறிவிலாதவயன்மகன்யாகமின், றிறுதியாமென்றிசைத்தனரன்னது
பெறுதியேனுமிப்பேருணவேநமக், குறுதிவல்லையிலுண்மினென்பார்சிலர். (௨௨)

உண்டிலேமிவணுண்டதிலீதுபோற், கண்டிலேமொருகாட்சியுமின்பமுங்
கொண்டிலேமின்றுகொண்டதிலீசனுல், விண்டிலேமெனின்மேலதென்பார்சிலர்.

எல்லையில்லுணவீயுமித்தேனுவை, நல்லநல்லதொர்நாண்கொடியாத்திவண்
வல்லைபற்றிநம்மாநகரிற்கொடு, செல்லுதும்மெனச்செப்புகின்றார்சிலர். (௨௪)

மக்கள்யாவரும்வானவர்யாவரு, மொக்கல்யாவருமுய்ந்திடவாழ்தலாற்
றக்கனேற்றதவத்தினுமுண்டுகொன், மிக்கதென்றுவிளம்புகின்றார்சிலர். (௨௫)

மைந்தனிட்டனமாந்திடநான்முகன், றந்திலன்வயின்சாலவுமாங்கவன்
சிந்தைமேலழுக்காறுசெய்தானெனு, நொந்துநொந்துநுவலுகின்றார்சிலர். (௨௬)

குழுவுசேர்தருகுய்யுடையுண்டிகள், விழைவினேடுமிசைந்தனமாற்றவும்
பழுதிலாவிப்பரிசனர்தம்மொடு, மெழுவதெப்படியென்றுரைப்பார்சிலர். (௨௭)

இந்தநல்லுணவீண்டுநுகர்ந்திட, நந்தமைந்தரைநம்மனையாங்கொடு
வந்திலம்மினிவந்திடுமோவெனுச், சிந்தைசெய்தனர்செப்புகின்றார்சிலர். (௨௮)

அன்னபற்பலவார்கலியாஃமெனப், பன்னிநுங்கும்பனவர்கள்கேட்டன
ரென்னமற்றவையாவையுமார்தர, முன்னளித்துமுனிவரருத்தினர். (௨௯)

அருத்திமிச்சிலகற்றியருந்தவ, விருத்திமேவியவேதியர்தங்களை
யிருத்திமற்றொரிருக்கையில்வாசநீர், கரைத்தசந்தின்கலவைவழங்கினர். (௩0)

நளிகுலாவியநாவிநரந்தம்வெண், பளிதம்வெள்ளடைபாகுடனேனவை
யளியுலாவுமணிமலர்யாவையு, மொளிறுபீடிகையுய்த்தனர்நல்கினர். (௩௧)

அரைத்தசார்தமணிந்துமெய்யெங்கணும், விரைத்தபூந்துணர்வேய்ந்துபைங்கா
யடை, பரித்துநின்றபனவர்புத்தேளூறுந், தருக்களாமெனச்சார்ந்தனரென்பவே.

ஆனபான்மையிலந்தணர்யாவரு, மேனகாதலின்வெய்தெனவேகியே
வானமண்ணிடைவந்தெனவேர்கெழு, தானசாலதனையடைந்தார்களே. (௩௩)

அடையும்வேலையயனருள்காஃதலன், விடையினுலங்கண்மேவுமுனிவர [ளார்.
ரிடையறுதவர்க்கீந்தனரீந்திடுங், கோடையினுலெண்ணில்கொண்டலைப்போன்று

பொன்னைநல்கினர்பூணொடுபூந்துகி, றன்னைநல்கினர்தண்சுடரோனென
மின்னைநல்கும்வியன்மணிநல்கினர், கன்னியாவுங்கறவையுநல்கினர். (௩௫)

படியிலாடகப்பாதுகைநல்கினர், குடைகணல்கினர்குண்டிகைநல்கினர்
மிடையும்வேதியர்வேண்டியவேண்டியாங், கடையநல்கினரங்கைகள்சேப்பவே'

Digitized By Roja Muthiah Research Library

இந்தவண்ணமிறையதந்தாழ்க்கிலர், முந்துநின்றமுனிவரராண்டேறு
மந்தணாளர்க்கயினியொடாம்பொரு, டந்துநின் றுதயங்கினரோர்புடை. (௧௭)

அற்றமில்சிறப்பந்தணராயிடைப், பெற்றபெற்றபெருவளன்யாவையும்
பற்றிமெல்லப்படர்ந்தனர்பற்பல, பொற்றைசெய்தனர்போற்றினரோர்புடை. ()

வரத்திஞரும்வரம்பில்வெறுக்கைதம், புரத்தினுய்த்திடும்புந்தியிலன்னவை
யுரத்தினூற்றமக்கொப்பரும்வேதியர், சிரத்தின்மேற்கொடுசென்றனரோர்புடை.()

அரிதனூர்தியுமன்னமுங்கீழ்த்திசை, யரிதனூர்தியுமாங்கவன்மாக்களு
மரிதனூர்தியுமாருயிர்கொண்டிடு, மரிதனூர்தியுமார்ப்பனவோர்புடை. (௨0)

தானமீதுதயங்கியதேவரு, மேனையோர்களுமிவ்விடையீண்டலின்
மீனமார்தருவின்னென வெண்ணிலா, மானகோடிமலிகின்றவோர்புடை. (௨௧)

நரம்பின்வீணைஞரனுறும்வேய்ங்குழல், பரம்புதண்ணுமைபண்ணமைபாடனூல்
வரம்பினேய்ந்திடவானவர்நாடவே, யரம்பைமார்கணின்றுடினரோர்புடை.(௨௨)

தேவர்மாதருஞ்சிற்சிலதேவருந், தாவிலாமகச்சாலையின்வைகிய
காவுதோறுங்கமலமலர்ந்திடு, மாவிதோறுமுற்றுடினரோர்புடை. (௨௩)

வேதவல்லிவியப்புடனல்கிய, காதன்மாதருங்காமருவிண்ணவர்
மாதராருஞ்சசியுமகத்திரு, வோதிநாடியங்குற்றனரோர்புடை. (௨௪)

இனையபற்பலவெங்கணுமீண்டலிற், கனைகொள்பேரொலிகல்லெனவார்த்தன
வனையன்வேள்விக்ககன்கடல்யாவையுந், துனையவந்தவண்சூழ்ந்தனபோலவே.()

ஊனமேலுறுமும்பருமிம்பரு, மேனகாதலின்மிக்கவணீண்டுவ
வானயாறுவருநதியும்புவித், தானயாறுந்தழீஇயினபோன்றவே. (௨௬)

தானப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௨௫௬.

---

# வேள்விப்படலம்.

இகந்தசீர்பெறுமிப்பெருஞ்சாலையி, லகந்தைமிக்கவயன்பெருங்காதலன்
மகம்புரிந்ததுமற்றதுசிந்திடப், புகுந்தவாறும்பொருக்கெனக்கூறுகேன். (௧)

வேறு.

மருத்துழாய்முடிமாலயன்பாங்குறமகத்தின்
கருத்தனுகியதீயவன்முன்னமேகருதி
வரித்தமேலவர்தங்களைநோக்கியேமரபி
னிருத்துமுத்தழலென்றலுநன்றெனவிசைந்தார். (௨)

முற்றுநாடியவிருத்திஞேரணியின்முறையா
லுற்றவங்கியைவேதிகைப்பறப்பைமேலுய்த்துச்
சொற்றமந்திரமரபினற்பரிதிகள்சூழ்ந்து
மற்றுமுள்ளதோர்விதியெலாமியற்றினர்மன்னோ. (௩)

Digitized By Roja Muthiah Research Library

ஆங்குமுத்தழல்விதிமுறைசெய்தலுமயன்சேய்
பாங்கருற்றிடுமிருத்தினர்யாரையும்பாரா
நீங்கணுங்களுக்காகியசெய்கையைநினைந்து
தூங்கலின்றியேபுரிமினோகடிதெனச்சொன்னான். (௪)

சொன்னவாசகங்கேட்டலுமிருத்தினோர்தொகையின்
முன்னமாகியவம்மகந்தனக்கவிமுழுதும்
வன்னியாதியாஞ்சமிதையுந்தருப்பையுமற்று
மின்னபோல்வதுங்கொடுவழங்கினர்களாறிருவர். (௫)

அந்தவேள்விசெய்வித்தனரொருவராலவிக
ளெந்தையல்லவர்கொள்ளவேயவரவர்க்கிசைத்த
மந்திரந்தனைப்புகன்றனரொருவரவ்வானோர்
தந்தமைக்குறித்தழைத்தனரொருவர்பேர்சாற்றி. (௬)

மற்றவர்க்கெலாமமைந்திடுமவிகளைமலர்க்கை
பற்றியங்கிவாயளித்தனரொருவரப்பரிசி
னற்றநோக்கியேயிருந்தனரொருவரங்கதற்கு
முற்றுநல்லருள்புரிந்தனரொருவரம்முதல்போல். (௭)

இருத்தினோர்களும்பிறருமீதியற்றுழியாக
கருத்தனாகியதக்கனத்தேவரைக்கருதிப்
பரித்துநுங்குதிரென்றவிபுரிதொறும்பகர்ந்தே
யருத்தியுற்றனன்கடவுளர்தமக்கெலாமமுதின். (௮)

திருந்துகின்றநற்சுவையினுற்றூய்மையாற்றிகழு
மருந்துபோன்றனவென்னினுமுயிர்தொறுமனத்து
மிருந்தவெம்பிரானன்றியேமிசைதலினிமையோர்க்
கருந்துநீரலாநஞ்செனலாகியவவிகள். (௯)

வேள்விப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௨௯௫.

## உமைவருபடலம்.

பேசுமிவ்வேள்விபிதாமகன்மைந்த, னாசம்விளைந்திடநாடியயற்ற
மாசறுநாரதமாமுனியுற்றே, காசினிமேலிதுகண்டனனன்றே. (௧)

கண்டனனாலமர்கண்டனைநீக்கிப், புண்டரிகந்திகழ்புங்கவன்மைந்த
னண்டருடன்மகமாற்றினனன்னான், றிண்டிறல்கொல்லிதுசெய்திடலென்னா. (௨)

எண்ணியநாரதனெவ்வுலகுஞ்செய், புண்ணியமன்னதொர்பூங்கயிலாய
நண்ணிமுன்னின்றிடுநந்திகளுய்ப்பக், கண்ணுதல்சேவடிகைதொழுதற்றான். (௩)

கைதொழுதேத்தியகாலையன்னானை, மைதிகழ்கந்தரவள்ளல்கண்ணுற்றே
யெய்தியதென்னிவணிவ்வுலகத்திற், செய்தியதென்னதுசெப்புதியென்றான். (௪)

எங்கணுமாகியிருந்தருள்கின்ற, சங்கரனிம்மொழிசாற்றுதலோடு
மங்கதவேலையிலம்முனிமுக்கட், புங்கவகேட்டியெனப்புகல்கின்றான். (௫)

Digitized By Roja Muthiah Research Library

அதிர்தருகங்கையதன்புடைமாயோன், விதிமுதலோரொடுமேதகுதக்கன்
மதியிலியாயொர்மகம்புரிகின்றான், புதுமையிதென்றுபுகன்றனனம்மா. (௬)

ஈங்கிதுகூறலுமெம்பெருமான்றன், பாங்கரின்மேவுபராபரைகேளா
வாங்கவன்மாமகமன்பொடுகாண்பா, னோங்குமகிழ்ச்சியுளத்திடைகொண்டாள்.()

அங்கணனல்லருளாலனையான்றன், பங்குறைகின்றனள்பாங்கரினீங்கி
யெங்கள்பிரானையெழுந்துவணங்கிச், செங்கைகுவித்திதுசெப்புதலுற்றாள். (௮)

தந்தையெனப்படுதக்கனியற்று, மந்தமகந்தனையன்பொடுநோக்கி
வந்திடுகின்றனன்வல்லையிலின்னே, யெந்தைபிரான்விடையீகுதியென்றாள். (௯)

என்றலுநாயகனேந்திழைதக்க, னுன்றனையெண்ணலனும்பர்களோடும்
வன்றிறலெய்திமயங்குறுகின்றா, னின்றவன்வேள்வியிலேகலையென்றான். (௧0)

இறையிதுபேசலுமேந்திழைவேதாச், சிறுவனெனப்படுதீயதொர்தக்க
னறிவிலனாகுமவன்பிழைதன்னைப், பொறுமதியென்றடிபூண்டனண்மாதோ. (௧௧)

பூண்டனள்வேள்விபொருக்கெனநண்ணி, மீண்டிவண்மேவுவல்வீடருள்செய்யுந்
தாண்டவநீவிடைதந்தருளென்றாண், மாண்டகுபேரருள்வாரிதிபோல்வாள். (௧௨)

மாதிவைகூறலும்வன்மைகொடக்கன், மேதகுவேள்வியப்பினைநோக்குங்
காதலையேலதுகண்டனைவல்லே, போதுதியென்றுபுகன்றனன்மேலோன். (௧௩)

வேறு.

அரன்விடைபுரிதலுமம்மையாங்கவன், றிருவடிமலர்மிசைச்சென்னிதாழ்ந்தெழா
விரைவுடனீங்கியோர்விமானத்தேறினாண், மரகதவல்லிபொன்வரையுற்றாலென.

ஐயைதன்பேரருளனைத்துமாங்கவள், செய்யபொன்முடிமிசைநிழற்றிச்சென்
றெனத், துய்யதொர்கவுரிபாற்சுமாலிமாலினித், தையலார்மதிக்குடைதாங்கிநண்
ணினார். (௧௫)

துவரிதழ்மங்கலைசுமனையாதியோர், கவரிகளிரட்டினர்கவுரிபாங்கரி
லிவர்தருமோதிமமெண்ணிலாதவோ, ரவிர்சுடர்மஞ்ஞைபாலடைவதாமென. ௧௬

கால்செயும்வட்டமுங்கவின்கொள்பீலியு, மால்செயுநறுவிரைமல்கவீசியே
நீல்செயும்வடிவுடைநிமலைபாற்சிலர், வேல்செயும்விழியினர்மெல்லவேகினார். (௧௭)

கோடிகமடைப்பைவாள்குலவுகண்ணடி, யேடுறுபூந்தொடையேந்தியம்மைதன்
மாடுறவணுகியேமானத்தேகினார், தோடுறுவரிவிழித்தோகைமார்பலர். (௧௮)

நாதனதருள்பெறுநந்திதேவியாஞ், சூதுறழ்பணைமுலைச்சுகேசையென்பவண்
மாதுமைதிருவடிமலர்கடீண்டிய, பாதுகைகொண்டுபின்படர்தன்மேயினாள். (௧௯)

கமலினியனிந்திதையென்னுங்கன்னிய, ரமலைதன்சுரிகுழற்கானபூந்தொடை
விமலமொடேந்தியேவிரைந்துசெல்கின்றார்,திமி*லிடுகின்றதொல்சேடிமாருடன்.

அடுத்திடுமுல்கெலாமளித்தவம்மைசீர், படித்தனரேகினர்சிலவர்பாட்டிசை
யெடுத்தனரேகினர்சிலவரோர்தக, நடித்தனரேகினர்சிலவர்நாரிமார். (௨௧)

பாங்கியர்சிலதியர்பலருமெண்ணிலா, வீங்கியபேரொளிவிமானத்தேறியே
யாங்கவள்புடையதாயணுகிச்சென்றன, ரோங்கியநிலவுசூழுடுக்கள்போன்றுளார்.

தண்ணுறுநானமுஞ்சாந்துஞ்சந்தமுஞ், சுண்ணமுங்களபமுஞ்சுடரும்பூண்களு
மெண்ணருந்துகில்களுமிட்டமஞ்சிகை,யொண்ணுதலார்பரித்துமைபின்போயினார்

* திமிலம் - திமிலென்றாயது. ஆனந்தமிகுதியாற் பேரொலிசெய்கின்ற என்பது பொருள்.



Digitized By Roja Muthiah Research Library

குயில்களுங்கிள்ளையுங்குறிக்கொள்பூவையு, மயில்களுமஞ்சமுமற்றுமுள்ளவும்
பயிலுறவேந்தியேபரைமுன்சென்றன, ரயில்விழியணங்கினரளப்பிலார்களே. உ௬

விடையுறுதுவசமும்வியப்பின்மேதகு, குடைகளுமேந்தியுங்கோடிகோடியா
மிடியுறழ்பல்லியமிசைத்துமம்மைதன், புடைதனில்வந்தனர்பூதரெண்ணிலார். ()

அன்னவளடிதொழுதருள்பெற்றுேல்லையிற், பன்னிருகோடிபாரிடங்கள்பாற்படட
முன்னுறவேகினன்மூரியேற்றின்மேற், றுென்னெறியமைச்சியற்சோமநந்தியே.

இவரிவரித்திறமீண்டவெல்லைநீர், புவனமுமுயிர்களும்புரிந்துநல்கிய
கவுரியம்மானமேற்கடிதுசென்றரோ, தவனுறுவோன்மகச்சாலைநண்ணினுள். (உ௭)

ஏனுறுமானநின்றிழிந்துவேள்வியஞ், சாலையுளேகியேதக்கன்முன்னுறும்
வேலையிலுமைதனைவெகுண்டுநோக்கியே, சீலமிலாதவனிவையசெப்பினுன். (உ௮)

வே று.

தந்தைதன்னுேடுந்தாயிலாதவன், சிந்தையன்புறுந்தேவியானநீ
யிந்தவேள்வியானியற்றும்வேலையில், வந்ததென்கொலோமகளிர்போலவே. (உ௯)

மல்லல்சேருமிம்மாமகந்தனக், கொல்லைவாவெனவுரைத்துவிட்டது
மில்லையீண்டுநீயேகலாகுமோ, செல்லுமீண்டுநின்சிலம்பிலென்னவே. (௩0)

மங்கைகூறுவாண்மருகர்யார்க்குமென், றங்கைமார்க்குநீதக்கதக்கசீ
ருங்குநல்கியேயுறவுசெய்துளா, யெங்கடம்மையோரிறையுமெண்ணலாய். (௩௧)

அன்றியும்மிவணுற்றும்வேள்வியிற், சென்றவென்னையுஞ்செயிர்த்துநோக்குவாய்
நன்றதோவிதோர்நவையதாகுமா, லுன்றனெண்ணம்யாதுரைத்தியென்னவே. ()

ஏயமுக்குணத்தியலுஞ்செய்கையுட், டீயதொல்குணச்செய்கையாற்றியே
பேயொராடல்செய்பித்தன்றேவியாய், நீயுமங்கவனிலைமையெய்தினுய். (௩௩)

அன்னவன்றனேடகந்தைமேவலா, லுன்னையெள்ளினனுனதுபின்னுளோர்
மன்னுகின்றவென்மருகர்யாவரு, மென்னினும்மெனக்கினியர்சாலவும். (௩௪)

ஆதலாலியானவர்கள்பாங்கரே, காதலாகியேகருதுதொல்வளன்
யாதுநல்கினனிந்தவேள்வியி, லோதுநல்லவியுளதுநல்கினேன். (௩௫)

புவனியுண்டமால்புதல்வனுதியா, மெவரும்வந்தெனையேத்துகின்றனர்
சிவனுநீயுமோர்சிறிதுமெண்ணலீ, ருவகையின்றெனக்குங்கள்பாங்கரில். (௩௬)

ஏற்றின்மேவுநின்னிறைவனுக்கியா, ஞற்றும்வேள்வியுளவியுமீகலன்
சாற்றுகின்றவேதத்தின்வாய்மையு, மாற்றுகின்றனன்மற்றென்வன்மையால். ௩௭

அனையதன்றியீண்டடுத்தநிற்கும்யாள், றினையின்காறுமோர்சிறப்புஞ்செய்கல
னெனவியம்பலுமெம்பிராட்டிபாற், றனையவந்ததாற்றுமில்சீற்றமே. (௩௮)

சீற்றமாயதீச்செறியுயிர்ப்பொடே, காற்றினேடழல்கலந்ததாமெனத்
தோற்றியண்டமுந்தொலையிலாவியு, மாற்றுவானெழீஇமல்கியோங்கவே. (௩௯)

பாருமுட்கினபரவுபௌவமுந், நீருமுட்கினநெருப்புமுட்கின
காருமுட்கினகரிகளுட்கின, வாருமுட்கினரமரராயுளார். (௪0)

பங்கயாசனப்பகவன்றனுமச், செங்கண்மாயனுஞ்சிந்தைதுண்ணென
வங்களுட்கிஞரென்னிஞங்கவள், பொங்குசீற்றம்யார்புகலவல்லரே. (௪௧)

Digitized By Roja Muthiah Research Library

வேலையன்னதில்விமலையென்பவள், பாலினின்றதோர்பாங்கிதாழ்ந்துமுன்
ஞாலம்யாவையுநல்குமுன்றனக், கேனுகின்றதோவிளையசீற்றமே. (சஉ)

மைந்தர்யாரையும்வளங்கடம்மொடுந், தந்துநல்கியதாய்சினங்கொளா
வந்தமாற்றுவானமைந்துளாயெனி, னுய்ந்திடுந்திறமுண்டுபோலுமால். (சங)

அறத்தையீங்கிவனகன்றுளானெனச், செறுத்தியன்னதோர்சீற்றம்யாரையு
மிறைக்குமுன்னரேயீறுசெய்யுமாற், பொறுத்தியீதெனப்போற்றன்மேயினுள். ()

போற்றிநிற்றலும்புனிதைதன்பெருஞ், சீற்றமாயெழுந்தீயையுள்ளுற
மாற்றிவேள்விசெய்வானைநோக்கியே, சாற்றுகின்றனளினையதன்மையே. (சரு)

என்னைநீயிவணிகழ்ந்ததன்மையை, யுன்னலேனெனையுடையநாயகன்
றன்னையெள்ளினுய்தரிக்கிலேனதென், கன்னமூடுசெல்கடுவுபோலுமால். (சசு)

நிர்க்குணத்தனேநிமலனன்னவன், சிற்குணத்தனுய்த்திகழுவானொரு
சொற்குணத்தனுதொலைக்குநாளடு, முற்குணத்தினைமுன்னுமாறலால். (சஎ)

துன்றுதொல்லுயிர்தொலைவுசெய்திடு, மன்றுதாமதத்தடுவதன்றியே
நன்றுநன்றதுஞானநாயகற், கென்றுமுள்ளதோரியற்கையாகுமோ. (சஅ)

தீயதன்றடுஞ்செயலுநல்லரு, ளாயிலாவிகளழிந்துந்தோன்றியு
மோய்விலாதுழன்றலைவுறுமலே, மாய்வுசெய்திறைவருத்தமாற்றலால். (சகூ)

ஆனவச்செயலழிவிலாததோர், ஞானநாயகற்கன்றிநாமெனு
மேனையோர்களாலியற்றலாகுமோ, மேனகாவலும்விதியுமென்னவே. (ருo)

முன்னரேயெலாமுடித்தநாதனே, பின்னுமத்திறமளிக்கும்பெற்றியா
னன்னவன்கணேயனைத்துமாகுமா,வின்னபான்மைதானிறைவன்வாய்மையே.()

தோமிலாகமஞ்சுருதிசெப்பியே, யேமவிஞ்சைகட்கிறைவனுகியே
நாமறும்பொருணல்குமெந்தையைத், தாமதன்னெனச்சாற்றலாகுமோ. (ருஉ)

ஆதலாலவனைவருக்குமோர், நாதனுமரோவவற்குநல்லவி
யீதல்செய்திடாதிகழ்தியஞ்சியே, வேதம்யாவையும்வியந்துபோற்றவே. (ருங)

சிவனெனுந்துணைச்சீரெழுத்தினை, நுவலுவோர்கதிநொய்திலெய்துவா
ரவனையெள்ளினுயாரிதாற்றுவா, ரெவனையுய்குதியிழுதைநீரைநீ. (ருச)

வேறு.

முண்டகமிசையினேன்முகுந்தனுடியே
பண்டுணர்வரியதோர்பரனையாதியாக்
கொண்டிலரெள்ளியகொடுமையோர்க்கெலாந்
தண்டம்வந்திடுமெனமறைகள்சாற்றுமால். (ருரு)

ஈதுகேள்சிறுவிதியிங்ஙனேர்மகம்
வேதநாயகன்றனைவிலக்கிச்செய்தனை
யாதலாலுனக்கும்வந்தடைகதண்டமென்
ரோதினுளுலகெலாமுதவுந்தொன்மையாள். (ருசு)

இன்னனகொடுமொழியியம்பிவேள்விசெ
யந்நிலமொருவியிவ்வகிலமீன்றுளாண்
முன்னுளபரிசனமுறையின்மொய்த்திடப்
பொன்னெழின்மானமேற்புகுந்துபோந்தனள். (ருஎ)

Digitized By Roja Muthiah Research Library

அகன்றலையுலகருளயன்றன்காதலன்
புகன்றனவுன்னியுட்புழுங்கியைந்துமா
றுகன்றிருமலையிடைமுடுகிச்சென்றனள்
குகன்றனைமேலருள்கொடிநுசுப்பினாள். (௫௮)

ஒருவினனூர்தியையுமைதன்னாயகன்
றிருவடிவணங்கினள்சிறியதொல்விதி
பெரிதுனையிகழ்ந்தனன்பெருமவன்னவ
னரிதுசெய்வேள்வியையழித்தியென்னவே. (௫௯)

எவ்வமில்பேரருட்கிறைவனாகியோ
னவ்வியங்கரமுடைநாதனுதலி
னவ்வுரைகொண்டிலனாகவம்பிகை
கவ்வையொடினையனகழறன்மேயினாள். (௬0)

மேயினகாதலும்வெறுப்புநிற்கிலை
யாயினுமன்பினேற்காகவன்னவன்
றீயதோர்மகத்தினைச்சிதைத்தல்வேண்டுமென்
னாயகனேயெனநவின்றுபோற்றினாள். (௬௧)

உமைவருபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௩௨௬.

---

# வீரபத்திரப்படலம்.

அந்தவெல்லையெமையாளுடையவண்ணலகிலந்
தந்தமங்கைதனதன்பினைவியந்துதளருஞ்
சிந்தைகொண்டசெயன்முற்றியிடுமாறுசிறிதே
புந்தியுள்ளுறநினைந்தனனினைந்தபொழுதே. (௧)

பொன்னின்மேருவினிருந்திடுபொலங்குவடெலா
மின்னும்வெள்ளிமுனைமேற்கொடுவிளங்கியதென
மன்னுதண்சுடர்மதிக்குறைமிலைச்சுமவுலிச்
சென்னியாயிரமும்வான்முகடுசென்றுளிரவே. (௨)

விண்டலந்தனிலிலங்குசுடரின்மிடலினைக்
கண்டலந்தரவொதுங்குவனபோற்கதிருலா
மண்டலந்திகழ்முகந்தொறும்வயங்குபணியின்
குண்டலங்களினைகொண்டகுழைகொண்டுலவவே. (௩)

ஆன்றதிண்கடல்வறந்திடவிறந்ததனிடைத்
தோன்றுகின்றதொர்மடங்கல்வலியின்றுதொலைய
மூன்றுகண்கண்முகமாயிரமுமேவிமுனிவாற்
கான்றவங்கிகளினண்டமுழுதுங்கரியவே. (௪)

சண்டமாருதமுமங்கியுமொதுங்குதகவாற்
றுண்டமீதுறுமுயிர்ப்புடனெழுந்தசுடுதீ
யண்டகோளமுடனப்புறமுமாகியழியாக்
கொண்டலூடுதவழ்மின்னுவெனவேகுலவவே. (௫)

Digitized By Roja Muthiah Research Library

மலரின்வந்துறையுநான்முகன்முகுந்தன்மகவான்
புலவர்தம்புகழனைத்தையுநுகர்ந்தபொழுதிற்
சிலவொழுங்கொடிதழின்புடைகள்சிந்தியெனவே
நிலவுசெய்தபிறைவாளெயிறுநின்றிலகவே. (சா)

துண்டமீதினழலோவிதழின்வீழ்ந்தசுசியோ
மண்டுதீவிழிகள்கான்றகனலோமனமிசைக்
கொண்டதோர்வெகுளியாகியகொடுந்தழலதோ
வெண்டிசாமுகமுமாகியடுகின்றதெனவே. (எ)

தண்டலின்றுறையுமாவிகள்வெரீஇத்தளரமே
லண்டரண்டநிரைவிண்டிடவவற்றிடையுறுந்
தெண்டிரைக்கடல்கலங்கவடலுற்றசிவனிற்
கொண்டவார்ப்புமுழுதெண்டிசைகுலாய்நிமிரவே. (அ)

தராதலங்கண்முழுதுண்டுமிழுகின்றதகைசே
ரராவினங்கடமையங்கடகமங்கதமொடே
விராயமென்றொடிகளாவிடுபுவிண்ணுறநிமிர்ந்
திராயிரங்கொள்புயமெண்டிசையெலாஞ்செறியவே. (கூ)

வரத்தின்மேதகையவேதன்முதலானவலியோர்
சிரத்தின்மாலிகையடுக்கலவரென்புசெறிபூண்
பெருத்தகேழலின்மருப்பினுடனுமைபிறவு
முரத்தின்மேவுபுரிநூலொடுபெயர்ந்தொளிரவே. (க0)

குந்தம்வெம்பலகைதோமரமெழுக்குலிசம்வாள்
செந்தழற்கழுமுள்சூலமொடுபீலிசிலைகோன்
முந்துதண்டமவிராழிவசியாலமுதலா
மந்தமில்படைகளங்கைகடொறுங்குலவவே. (கக)

ஐயமாழைதனின்மாமணியிறுகியறிவார்
செய்யலாதுவருபேரணிகளோடுசிவணிப்
பையுலாவுசுடர்வெம்பணிகளானபணியு
மெய்யெலாமணியிடந்தொறுமிடைந்திலகவே. (கஉ)

நெஞ்சலஞ்சலமரும்பிறவிநீடுவினையிற்
சஞ்சலஞ்சலமகன்றதனதன்பர்குழுவை
யஞ்சலஞ்சலெனுமஞ்சொலெனவிஞ்சுசரண்மேற்
செஞ்சிலம்பொடுபொலங்கழல்சிலம்பமிகவே. (கங)

வே று.

அந்திவான்பெருமேனியன்கறைமிடறணிந்த
வெந்தைதன்வடிவாயவனுதல்விழியிடையே
வந்துதோன்றியேமுன்னுறநின்றனன்மாதோ
முந்துவீரபத்திரனெனுந்திறலுடைமுதல்வன். (கச)

அங்கவேலையிலுமையவள்வெகுளியாலடல்செய்
நங்கையாகியபத்திரகாளியைநல்கச்
செங்கையோரிரண்டாயிரம்பாதிசெம்முகமாய்த்
துங்கவீரபத்திரன்றனையடைந்தனடுணையாய். (கரு)

Digitized By Roja Muthiah Research Library

எல்லைதீர்தருபடைக்கலத்திறையுமவ்விறைவற்
புல்லுகின்றதோர்திறலுடைத்துணைவியும்போலத்
தொல்லைவீரனுந்தேவியுமேவருதொடர்பை
யொல்லைகாணுறுமகிழ்ந்தனர்விமலனுமுமையும். (௧௬)

தன்னைவந்தடைபத்திரைதன்னொடுதடந்தாண்
மன்னுவார்கழல்கலித்திடவலஞ்செய்துவள்ள
லன்னைதாதையைவணங்கியேயவர்தமைநோக்கி
முன்னநின்றுகைதொழுதனனிவைசிலமொழிவான். (௧௭)

மாலயன்றனைப்பற்றிமுன்றந்திடோமறவெங்
காலனாவியைமுடித்திடோவசுரரைக்களைகோ
மேலைவானவர்தம்மையுந்தடிந்திடோவேலை
ஞாலம்யாவையும்விழுங்குகோவுலகெலாநடுக்கோ. (௧௮)

மன்னுயிர்த்தொகைதுடைத்திடோவரம்பிலவாகித்
துன்னுமண்டங்கடகர்த்திடோநுமதுதாமலர்த்தாள்
சென்னியிற்கொடேயாவதொன்றென்னினுஞ்செய்வ
னென்னையிங்குநீர்நல்கியதெப்பணிக்கென்றான். (௧௯)

என்றவீரனைநோக்கியேகண்ணுதலெம்மை
யன்றிவேள்விசெய்கின்றனன்றக்கனவ்விடைநீ
சென்றுமற்றெமதவியினைக்கேட்டியத்தீயோ
னன்றுதந்தனனேயெனினிவ்விடைநடத்தி. (௨0)

தருதலின்றெனினனையவன்றலையினைத்தடிந்து
பரிவினாலவன்பாலுறுவோரையும்படுத்துப்
புரியுமெச்சமுங்கலக்குதியங்கதுபொழுதின்
வருதுமாயிடையேகுதியென்றனன்வள்ளல். (௨௧)

அந்தவேலையிற்பத்திரைதன்னொடுமடலின்
முந்துவீரனவ்விருவர்தம்பதங்களின்முறையாற்
சிந்தையன்புடன்வணங்கியேவிடைகொண்டுசிவனை
சிந்தைசெய்தவன்வேள்வியையழித்திடநினைந்தான். (௨௨)

உன்னிமற்றவணீங்கியேயாற்றவுமுருத்துத்
தன்னுயிர்ப்பினாலளவையில்கணங்களைத்தந்து
துன்னுகின்றமெய்வியர்ப்பினாற்சிலவரைத்தொகுத்து
வன்னிபோன்மயிர்க்காறொறுஞ்சிலவரைவகுத்தான். (௨௩)

மொழியினிற்பலபூதரையளித்தனன்முளரி
விழியினிற்பலபூதரையளித்தனன்வேணி
யுழியினிற்பலபூதரையளித்தனனுந்திச்
சுழியினிற்பலபூதரையளித்தனன்றூயோன். (௨௪)

தோளிலெண்ணிலாவீரரையளித்தனன்சுவையின்
கோளிலெண்ணிலாவீரரையளித்தனன்குளிர்பொற்
றாளிலெண்ணிலாவீரரையளித்தனன்றடக்கை
வாளிலெண்ணிலாவீரரையளித்தனன்வலியோன். (௨௫)

Digitized By Roja Muthiah Research Library

கையினிற்சிலபூதரையளித்தனன்களத்தில்
வெய்யமார்பினிற்கன்னத்திற்சிலவரைவிதித்தா
னையதோர்முழந்தாடனிற்சிலவரையளித்தான்
குய்யமீதினிலூருவிற்சிலவரைக்கொடுத்தான். (௨௬)

இன்னதன்மையில்வீரபத்திரனெனுமிறைவன்
றன்னைநேர்வருமெண்ணிலாவீரரைத்தந்து
துன்னுகின்றுழிப்பத்திரையென்பதோர்துணைவி
யன்னபண்பினிற்காளிகடொகையினையளித்தாள். (௨௭)

வீரபத்திரவுருத்திரன்வேறுவேறளித்த
சாரதர்க்குளங்கோர்சிலர்நீனிறந்தழைப்போர்
கோரபத்திரமணிக்கலன்மின்னுவிற்குலவக்
காரெனப்பொலிந்துருமெனக்கழறுகின்றனரால். (௨௮)

அக்குமாலையுமணிகளுமூடுக்கள்போலவிரப்
பக்கவாணிலாவெயிறுகள்பிறையெனப்பயில
மிக்குநீடியவடிவினராகியேமேலாஞ்
செக்கர்வானெனச்சேந்தெழுபூதர்கள்சிலரே. (௨௯)

அண்டரைத்தொலைவித்திடும்வீரனையடைந்தோர்
பிண்டமுற்றும்வானிறத்தினர்பூதரிற்பெரியோர்
பண்டிரைத்தொருமுனிமகன்பின்றொடர்பாலின்
றெண்டிரைக்கடற்றொகையெனக்கிளர்ந்தனர்சிலரே. (௩0)

வெம்பொன்மேனியரனுகுறினவர்தமைவிரைவிற்
பைம்பொன்மேனியராக்குமத்திருநிழல்பரப்பி
யம்பொன்மார்புடைமுகுந்தனில்வடிவுடையவராய்ச்
செம்பொன்மால்வரைநிரையெனத்தோன்றினர்சிலரே. (௩௧)

மேயவான்பசப்பூர்தருமேனியராகிக்
காயமித்துணையெனப்படாக்கணக்கினராகி
மாயர்கண்டுயில்சேக்கையைத்தங்கணேவகுத்துச்
சேயதொன்மரத்தொகையெனக்கெழீஇயினர்சிலரே. (௩௨)

வேறு.

அங்கவர்க்குளடல்விடையானனந், தங்கிநின்றுதயங்கினரோர்சிலர்
பொங்குசீற்றப்பொருதிறல்வாலுளைச், சிங்கமாமுகமாய்த்தெழித்தார்சிலர். (௩௩)

புழைகொள்கையுடைப்போர்வலியாளியின், முழைகொண்மாமுகமாகிமொய்த்
தார்சிலர், வழுவையானனமன்னினரோர்சில, ருழுவையின்முகமாகியுற்றார்சிலர்.

அலைமுகப்பரியானனமெய்தியே, கொலைமுகத்துக்குழீஇயினரோர்சிலர்
மலைமுகத்துமரைகளிறெண்குடன், கலைமுகத்துக்கவினடைந்தார்சிலர். (௩௫)

இளையர்தங்குழுவெண்ணிலவன்னர்கைப், புனையநின்றபொருபடையெண்ணில
வினைகொள்வன்மையும்வீரமுமிற்றென, நினைவதற்கரிதெங்ஙனிகழ்த்துகேன். ()

கையிலெண்ணில்படையினர்காய்கனற், செய்யபூணினர்தீக்கலுழ்கண்ணினர்
வெய்யசொல்லர்வெருவருமேனியர், வையம்யாவுமடுக்குறும்வாயினர். (௩௭)

கட்டுசெஞ்சடைக்கற்றையர்காய்ந்தெழு, வெட்டழற்குநிகர்வருநாவினர்
வட்டி * மாலைகண்மானுமெயிற்றினர், தொட்டமூவிலைச்சூலந்துளக்குவார். (௩௮)

* வட்டி - பலகறை.

துண்டமீதுசொரிதருந்தியின, ரண்டகூடமலைத்திடுங்கையினர்
சண்டமாருதந்தாழ்க்குஞ்செலவின, ருண்டுபோரென்றுளந்தளிர்ப்பெய்துவார். ()

மடித்தவாயினர்வானவரென்பினூற், றொடுத்தகண்ணிதுயல்வருமார்பினர்
தடித்ததோளர்தனித்தழலென்னினும், பிடித்துநுங்கும்பெரும்பசிமிக்குளார். (ச0)

கச்சிற்றீயவர்நானிலமங்கையு, மச்சுற்றெஞ்சவடிகள்பெயர்த்துளார்
கச்சைத்தோன்மிசைகட்டியதட்டி * ய, ருச்சிட்டம்மென்றுலகினையுண்கிலார். ()

சூழியானைதுவன்றியமால்வரைப், பாழியாகப்படர்செவிவாயின
ரூழிமாருதமுட்குமுயிர்ப்பின, ராழியாகவகன்றவகட்டினார். (சஉ)

ஆழ்ந்தசூர்ப்பசுங்கண்ணரடித்துணை, தாழ்ந்தகையர்தடக்குறுந்தாளினர்
வீழ்ந்துமிக்கவியனதரத்தினர், சூழ்ந்தபூதத்தொகையினர்யாவரும். (சங)

வேறு.

அத்தகைநின்றிடவண்ணலுடன்சேர், பத்திரகாளிபயந்திடுகின்ற
கத்துகடற்புரைகாளிகடம்மை, யித்துணையேயெனவெண்ணரிதாமால். (சச)

அந்தமில்பல்படையங்கையிலேந்தி, யுந்தியதும்பைகளுச்சிமிலைச்சிச்
சுந்தரமெய்தியதோற்றமதாகி, விந்தையெனச்சிலர்மேவினரன்றே. (சரு)

தோளின்மிசைத்திரிசூலமிலங்கக், கோளிலுயிர்ப்பலிகொள்கலனேந்தித்
தாளிடைநூபுரசாலமிலங்கக், காளிகள்போற்சிலர்காட்சிமலிந்தார். (சசு)

வாகு ο னியெங்குளவென்றிடமல்கு, மோகினிபோற்சிலர்மொய்த்தனர்மாயச்
சாகினி † போற்சிலர்சார்ந்தனரல்லா, யோகினிபோற்சிலருற்றனரம்மா. (சஎ)

அயிருறவண்டமனத்தையுமெற்று, வுயிரவிநுங்கியவுன்னியெழுந்தே
செயிரவியாதுதெழித்திடுதோன்றுள், வயிரவிபோற்சிலர்மன்னினர்மாதோ. (சஅ)

நீடலைமாலைநிலத்திடைதோய, வாடுறுபாந்தளணிக்கலன்மின்ன
வீடுறுவானுருமேறெனவார்த்தே, மோடிகளாமெனமொய்த்தனர்சில்லோர். (சகூ)

இவ்வகைமாதர்கள்யாவரும்வெவ்வே, றைவகைமேனியராய்வதனங்கள்
கைவகையெண்ணிலராய்க்கவின்மாட்சிச்,செவ்வியராய்ச்செருமேற்கிளர்கின்றார்.

வேறு.

கணாந்திகழனையபூதர்காரிகைமார்கள்யாரு
மணங்குறுகாளிதன்னோடாண்டகைவீரன்றாளிற்
பணிந்தனர்பரசியன்னார்பாங்கரில்விரவிச்சூழ்ந்து
துணங்கைகொடாடிப்பாடித்துள்ளியேபோதலுற்றார். (ருக)

ஈட்டமிக்கெழுந்துசெல்லுமின்னதோர்பூதர்தம்மின்
மோட்டிகற்பானுகம்பன்முதலியகணங்கண்முத்தி
வீட்டுடைத்தலைவனானவீரபத்திரன்முன்னாகி
யீட்டுடைப்பல்லியங்கள்யாவையுமியம்பிச்சென்றார். (ருஉ)

கொண்டுபேராற்றலோடுங்குலவியவீரன்றன்பா
லண்டமேலுரிஞ்சப்பல்வேறணிப்பெருங்கவிகைகொண்டும்
விண்டுலாங்கவரியீட்டம்வீசியுஞ்சேறலுற்றார்
தண்டனேபிறகிசிங்களுதியாந்தறுகட்பூதர். (ருங)

---

* தட்டி - அரையிற்கட்டும் உடைவிசேடம். இக்காலத்து அரைச்சல்லடமென்ப.
ο வாகு - அழகு. † சாகினி - பார்வதியினுடைய தோழிகளிலொருத்தி.

Digitized By Roja Muthiah Research Library

பாசிஐழமகளிர்சில்லோர்பத்திரைபாங்கராகித்
தேசுடைக்கவிகையீட்டந்திருநிழல்பரப்பவேந்தி
மாசறுகவரிவட்டம்வரம்பிலவிரட்டிப்பல்வே
ருசிகள்புகன்றுசெம்பொனணிமலர்சிதறிப்போந்தார். (௫௪)

படர்ந்திடுபுணரிபோலப்பார்முழுதீண்டித்தானை
யடங்கலுமார்க்குமோதையகிலமுஞ்செறியவிண்ணு
முடைந்ததவ்வண்டங்கொல்லோவுதுகொலோவிதுவோவென்ன
மிடைந்தபல்லண்டத்தோரும்விதிர்ப்பொடும்விளம்பலுற்ருர். (௫௫)

பூழிகளெழுந்தவம்மாபுவியெலாம்பரவித்தொல்பே
ராழியுமடைத்துவான்புக்கச்சுதன்பதங்காறேகி
யூழியின்முதல்வனூர்க்குமொலியினுலுடைந்தவண்டப்
பாழிகடொறுமுற்றெல்லாப்புவனமும்பரந்தவன்றே. (௫௬)

அங்கெழுபூழிதன்னுலவர்விழிகளுழுந்தீயாற்
செங்கையிற்படைகடேய்ப்பச்சிதறியகனலால்வைய
மெங்கணுமெரிகடுன்னியிரும்புகைப்படலமீண்டிக்
கங்குலும்பகலுங்காணுக்கடைப்பகல்போன்றதன்றே. (௫௭)

இப்பெருந்தானைசூழவெம்பிரானெழுந்துசீற்றத்
துப்புடனேகித்தக்கன்ருன்மகம்புரியுஞ்சாலை
வைப்பினையணுகித்தன்பால்வருபடைத்தலைவர்க்கொன்று
செப்பினனென்பமன்னேசேணுருமேறுநாண. (௫௮)

பற்றலர்புரமூன்றட்டபரமனையிகழ்ந்துநீக்கிச்
சிற்றினம்பொருளென்றுன்னிச்சிறுவிதியென்னுந்தீயோ
னிற்றிடுநெறியால்வேள்வியயற்றுமிச்சாலைவாயில்
சுற்றுடுசேமஞ்செய்துதுயக்கறக்காத்திரென்ருன். (௫௯)

என்றலுந்தானையோர்களெயிற்புறமுற்றுஞ்சூழ்ந்து
நின்றனர்வானினூடுநெருங்கினர்வாய்தருேறுஞ்
சென்றனர்கொடியதக்கன்சேனையாயெதிர்ந்தோர்தம்மைக்
கொன்றனரவருன்றுய்த்துக்கூற்றனுமுட்கவார்த்தார். (௬0)

வீரபத்திரப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௯௮௬.

---

## யாகசங்காரப்படலம்.

ஆர்த்தலுமிறைவிதன்ஞேடாண்டகைவீரன்வாசத்
தார்த்தொகைதூங்கும்யாகசாலையுளேகலோடுந்
தீர்த்தனைத்தலைவிதன்னைத்திசைமுகன்முதலோர்யாரும்
பார்த்தனருளந்துண்ணென்றுபதைபதைத்தச்சங்கொண்டார். (௧)

மடங்கலின்வரவுகண்டமானினம்போன்றும்வானத்
தடங்கியவுருமேறுற்றவரவினம்போன்றும்யாக்கை
நடுங்கினராற்றல்சிந்திநகையொரீஇமுகனும்வாடி
யொடுங்கினருயிரிலார்போலிவைசிலவுரைக்கலுற்ருர். (௨)

ஈசனுமுமையுமேவந்தெய்தினரென்பாரன்னார்
காய்சினமுதவவந்தகாட்சியர்காணுமென்பார்
பேசரிதந்தோவந்தோபெரிதிவர்சீற்றமென்பார்
நாசம்வந்திட்டதின்றேநம்முயிர்க்கெல்லாமென்பார். (௩)

தக்கனுக்கீறுமின்றேசார்ந்ததுபோலுமென்பார்
மிக்கதோர்விதியையாரேவிலக்கவல்லார்களென்பார்
முக்கணெம்பெருமான்றன்னைமுனிந்திகழ்கின்றநீரா
ரக்கணமுடிவரென்றற்கையமுமுண்டோவென்பார். (௪)

விமலனையிகழுகின்றான்வேள்வியேன்புரிந்தானென்பார்
நமையெலாம்பொருளென்றுன்னிநடத்தினன்காணுமென்பா
ரிமையவர்குழுவுக்கெல்லாமிறுதியின்றாமோவென்பா
ருமையவள்பொருட்டாலன்றோவுற்றதீங்கிதெலாமென்பார். (௫)

ஈடுறுபூதர்யாருமெங்கணும்வளைந்தாரென்பா
ரோடவுமரிதிங்கென்பாரொளித்திடற்கிடமேதென்பார்
வீடினங்காணுமென்பார்மேலினிச்செயலென்னென்பார்
பாடுசூழங்கிநரப்பட்டபல்களிறுபோன்றார். (௬)

அஞ்சினரினையகூறியமரர்களரந்தைகூரச்
செஞ்சரணதனைநீங்காச்சிலபெரும்பூதர்சூழப்
பஞ்சுறழ்பதுமச்செந்தாட்பத்திரையோடுசென்று
வெஞ்சினவீரன்வெய்யோன்வேள்விசெய்வதனைக்கண்டான். (௭)

இடித்தெனநக்குப்பொங்கியெரிவிழித்திகலியார்த்துப்
பிடித்தனன்வயக்கொம்போதைபிளந்ததுசெம்பொன்மேரு
வெடித்ததுமல்லன்ஞாலம்விண்டனவண்டம்யாவுந்
துடித்தனவுயிர்கண்முற்றுந்துளங்கினர்சுரர்களெல்லாம். (௮)

எழுகின்றவோசைகேளாவிடியுண்டவரவிற்சோரா
விழுகின்றார்பதைக்கின்றார்வாய்வெருவுகின்றார்களேங்கி
யழுகின்றாரோடுகின்றாரழிந்ததோவேள்வியென்று
மொழிகின்றார்மீளுகின்றார்முனிவருமிமையோர்தாமும். (௯)

வானவர்பிறரிவ்வாறுவருந்தினரென்னினங்க
ணேனையர்பட்டதன்மையியம்பரிதெவர்க்குமென்றா
னானதுபுகலவற்றோநளிர்புனல்வறந்தகாலத்
தானதோருருமேறுற்றவசுணமாத்தன்மைபெற்றார். (௧0)

வேலையங்கதனின்மேலாம்வீரருள்வீரனேகி
மாலயன்றானுமுட்கமகத்தின்முன்னடைதலோடுஞ்
சீலமதகன்றகொள்கைச்சிறுவிதியவற்கண்டேங்கிச்
சாலவுநடுக்குற்றுள்ளந்தளர்ந்தனன்றலைமைநீங்கி. (௧௧)

சாரதர்வளைந்தவாறுஞ்சாலையதுடையுமாறு
மாருமங்குற்றவானோரயர்வுறுமாறுநோக்கிப்
பேரஞருழந்துதேறிப்பெருந்திறலாளன்போல
வீரபத்திரனைநோக்கிவிளம்பினனினையதொன்றே. (௧௨)

Digitized By Roja Muthiah Research Library

இங்குவந்தடைந்ததென்கொல்யாரைநீயென்னலோடுஞ்
சங்கரன்றனதுசேயான்றக்கநின்வேள்விதன்னி
னங்கவற்குதவும்பாகமருளுதியதற்காவந்தப்
புங்கவனருளினாலேபோந்தனனீண்டையென்றான். (௧௩)

இத்திறம்வீரன்கூறவிருந்தவத்தக்கனுங்க
ளத்தனுக்குலகம்வேள்வியதனிடையவியின்பாக
முய்த்திடாதென்னவங்கணுறைதருமறைகணான்குஞ்
சுத்தமார்குடிலைதானுந்துண்ணெனவெழுந்துசொல்லும். (௧௪)

ஈறிலாவுயிர்கட்கெல்லாமிறையவனொருதானாகு
மாறிலாவரனேயல்லான்மகத்தினுக்கிறையாயுள்ளோன்
வேறொர்வானவனுமுண்டோவேள்வியிலவற்குநல்குங்
கூறுநீபாணியாதுகொடுத்தியாலென்றவன்றே. (௧௫)

தேற்றமில்சிதடனாகுஞ்சிறுவிதிகேட்பவின்ன
கூற்றினான்மறைகணான்குங்குடிலையுமொருங்குகூடிச்
சாற்றருமன்னானல்காத்தலைமைகண்டிறைவன்றோல்சேர்
போற்றியங்ககன்றுதத்தம்புகலிடம்போயவன்றே. (௧௬)

போதலுந்தக்கன்றன்னைப்பொலங்கழல்வீரன்பாரா
வேதமும்பிறவுங்கூறும்விழுப்பொருள்கேட்டியன்றே
யீதியெம்பெருமாற்குள்ளவின்னவியெனலுங்காணிற்
பேதையொடாடல்செய்யும்பித்தனுக்கீயேனென்றான். (௧௭)

ஆங்கதுகேளாவண்ணலம்புயனுதியாகிப்
பாங்குறவிரவும்வானோர்பல்குழுவதனைநோக்கி
நீங்களுமிவன்பாலானீர்நிமலனுக்கவிநல்காம
லீங்கிவணிகழுந்தன்மையிசைவுகொலுமக்குமென்றான். (௧௮)

என்றலுமனையர்தொல்லூழிசைவினாலதுகேளார்போ
லொன்றுமங்குரையாராகியூமரினிருத்தலோடு
நின்றதோர்வீரன்வல்லேநெருப்பெழவிழித்துச்சீறி
நன்றிவர்வன்மையென்னாநகையெயிறிலங்கநக்கான். (௧௯)

கடித்தனனெயிறுசெந்தீக்கான்றனன்கனன்றுகையிற்
பிடித்திடுமேருவன்னபெருந்திறற்கதையதொன்றாற்
றடித்திடுமகலமார்பத்தடவரையகடுசாய
வடித்தனன்றக்கனுள்ளம்வெருவரவரிமுன்வீழ்ந்தான். (௨0)

விட்டு * முன்வீழ்தலோடும்வீரருள்வீரத்தண்ணன்
மட்டுறுகமலப்போதில்வான்பெருந்தவிசில்வைகுஞ்
சிட்டனைநோக்கியன்னான்சிரத்திடையுருமுற்றென்னக்
குட்டினனொருதன்கையான்மேல்வருங்குமரனேபோல். (௨௧)

தாக்குதலோடுமையன்சரணிடைப்பணிவான்போல
மேக்குறுசென்னிசோரவிரிஞ்சனும்வீழவன்னான்
வாக்குறுதேவிதன்னைமற்றவர்தம்மைவாளான்
மூக்கொடுகுயமுங்கொய்தானிறுதிநாண்முதல்வன்போல்வான். (௨௨)

* விட்டு - வலித்தல்விகாரம்.

Digitized By Roja Muthiah Research Library

ஏடலர்ந்தொடையல்வீரனித்திறமிவரைமுன்னஞ்
சாடினனதுகண்டங்கட்சார்தருமிமையோர்யாரு
மோடினருலந்தார்வீழ்ந்தாரொளித்திடற்கிடமேதென்று
தேடினரொருவரின்றிச்சிதறினர்கதறுகின்றார். (௨௯)

வேறு.

இன்னதோர்காலையிலிரிந்துபோவதோர், மெய்ந்நிறைமதியினைவீரன்காணுறாத்
தன்னொருபதங்கொடேதள்ளிமெல்லெனச்,சின்னமதுறவுடறேய்த்திட்டானரோ.

அடித்தலங்கொடுமதியதனைத்தேய்த்தபின்,விடுத்தனன்கதிரவன்வெருவியோடலு
மிடித்தெனக்கவுளிடையெற்றினனவ, னுடுத்திரளுதிர்ந்தெனவுகுப்பத்தந்தமே.()

எறித்தருகதிரவனெயிறுபார்மிசைத், தெறித்திடவுயிரொரீஇச்சிதைந்துவீழ்தலும்
வெறித்தருபகனெனும்வெய்யவன்விழி,பறித்தனன்றகுவதோர்பரிசுநல்குவான்.()

தொட்டலும்பகன்விழித்துணையையித்திறம்,பட்டதுதெரிந்துயிர்பலவும்பைப்பைய
வட்டிகெூற்றுவனலமந்தோடலும், வெட்டினனவன்றலைவீரவீரனே. (உஎ)

மடிந்தனன்கூற்றுவனுகவாசவ, னுடைந்தனன்குயிலெனவுருக்கொண்டும்பரி,ல
டைந்தனனதுபொழுதண்ணல்கண்ணுறீஇத், தடிந்தனன்வீட்டினன்றடக்கைவா
ளினால். (உஅ)

அண்டர்கோன்வீழ்தலுமலமந்தோடிய, திண்டிறலங்கியைத்திறல்கொள்சேவகன்
கண்டனனங்கவன்கரத்தையொல்லையிற், றுண்டமதாகவேதுணித்துவீட்டினன்.

கறுத்திடுமிடறுடைக்கடவுட்டேவனை, மறுத்தவனல்கியவரம்பினுண்டியும்
வெறுத்திலையுண்டியாலென்றுவீரனு, மறுத்தனனெழுதிறத்தழலினக்களே. (௩0)

துள்ளியநாவொடுந்துணிந்தகையொடுந்,தள்ளுறவீழ்ந்திடுந்தழலின்றேவியை[னன்.
வள்ளுகிரைக்கொடுவலங்கொணாசியைக், கிள்ளினான்வாகையாற்கிளர்பொற்றோளி

அரிதுணைக்கின்னதோராண்ணசெய்திட, மொருதனித்திறலினனும்பர்மேலெழு
நிருதியைக்கண்டனனிற்றியாலெனுப்,பொருதிறற்றண்டினுற்புடைத்திட்டானரோ

வீட்டினனிருதியைவீரன்றன்பெருந், தாட்டுணைவீழ்தலுந்தடிதலோம்பினு,ஞோ
ட்டினன்போதிரென்றுரைத்துச்சென்னெறி, காட்டினனுருத்திரகணத்தர்க்கென்
பவே. (௩௩)

ஒழுக்குடனுருத்திரரொருங்குபோதலு, மெழுக்கொடுவருணனையெற்றிச்செங்
கையின், மழுக்கொடுகாலினைமாய்த்துமுத்தலைக்,கழுக்கொடுதனதனைக்கடவுள்கா
தினன். (௩௪)

எட்டெனுந்திசையினேனேங்கிவெள்கியே, யட்டிடுங்கொல்லெனவஞ்சிப்போற்
றலுங், கிட்டினன்வைதனன்கேடுசெய்திலன், விட்டனனுருத்திரர்மேவுந்தொன்
னெறி. (௩௫)

தாணுவினுருக்கொடுதருக்குபேரின, ரோணுடுபோதலுநடுநடுங்கியே
சோணிதபுரத்திறைதண்ணென்றேடுழி, வேணுவினவன்றலைவீரன்வீட்டினன்.()

மணனயர்சாலையின்மகத்தின்றெய்வதம், பிணையெனவெருக்கொடுபெயர்ந்து
போதலுங், குணமிகுவரிசிலைகுனித்துவீரனோர், கணைதொடுத்தவன்றலைகளத்தில்
வீட்டினன். (௩௭)

Digitized By Roja Muthiah Research Library

இரிந்திடுகின்றதோரெச்சனென்பவன், சிரந்துணிபடுதலுஞ்செய்கையிவ்வெலா, மரந்தையொடேதெரிந்தயன்றன்காதலன், விரைந்தவனெழுந்தனன்வெருக்கொள்சிந்தையான். (௩அ)

விட்டனன்றிண்மையைவெய்யதோர்வலைப், பட்டதொர்பிணையெனப்பதைக்குஞ்சிந்தையான், மட்டிடவரியவிம்மகமுமென்முனங், கெட்டிடுமோவெனுவிவைகினைத்தினன். (௩௯)

ஊறகனுன்முகத்தொருவன்வாய்மையாற், கூறியவுணர்வினைக்குறித்துநோற்றியானுறணிசெஞ்சடையமலன்றந்திட, வீறகல்வளம்பலவெய்தினேனரோ. (௪0)

பெருவளநல்கியபிரானைச்சிந்தையிற், கருதுதல்செய்திலன்கசிந்துபோற்றிலன், றிருவிடைமயங்கினன்சிவையைநல்கியே, மருகனென்றவனையான்மன்றவெள்ளினேன். (௪௧)

வேதநூல்விதிமுறைவிமலற்கீந்திடு, மாதியாமவிதனையளிக்கொணுதெனத்
தாதையோன்வேள்வியிற்றடுத்தியானுமிவ்,வேதமாமகந்தனையியற்றினேனரோ.()

தந்தைசொல்லாமெனுந்ததீசிவாய்மையை, நிந்தனைசெய்தனனீடுவேள்வியில், வந்தவென்மகடனைமறுத்துக்கண்ணுதன், முந்தையையிகழ்ந்தனன்முடிவதோர்கிலேன். (௪௩)

அன்றியும்வீரனின்றவியையீதியா, லென்றலுமவன்றனதெண்ணநோக்கியு
நன்றெனவீந்திலன்மறையுநாடிலேன், பொன்றிடவந்தகொலினையபுந்தியே. (௪௪)

அல்லியங்கமலமேலண்ணலாதியாச், சொல்லியவானவர்தொகைக்குநோற்றிட
வல்லபண்ணவர்க்கும்வேதியர்க்குமற்றவ, ரெல்லவர்தமக்குமோரிறுதிதேடினேன்.

துதிதருமறைப்பொருட்டுணிபுநாடியு, நதிமுடியமலனைநன்றுநிந்தியா
விதுபொழுதிறப்பதற்கேதுவாயினேன், விதிவழிபுந்தியுமேவுமேகொலாம். (௪௬)

எனத்தகுபரிசெலாமினைந்துதன்னுடை, மனத்தொடுகூறியேமாளுமெல்லையினினைத்தறிவின்மையைநிகழ்த்திஞவதென், னினிச்செயலென்னெனவெண்ணிநாடினுன். (௪௭)

பாடுறுசாரதர்பரப்பும்வேள்வியி, னூடுறுவீரனதுரமுஞ்சீற்றமுஞ்
சாடுறுபத்திரைதகவுங்கண்ணுறீஇ, யோடுவதரிதெனவுன்னியுன்னிமேல். (௪௮)

சென்றதோருயிரொடுசிதைந்ததேவர்போற், பின்றுவனென்னினும்பிழைப்பதில்லையால், வன்றிறல்வீரன்முன்வன்மையாளர்போ, னின்றிடறுணிபெனத்தக்கனிற்பவே. (௪௯)

வேறு.

கண்டுமற்றதுவீரபத்திரனெனுங்கடவுள்
கொண்டசீற்றமொடேகியேதக்கனைக்குறுகி
யண்டரோடுநீயீசனையிகழ்ந்தனையதனுற்
றண்டமீதெனவாள்கொடேயவன்றலைதடிந்தான். (௫0)

அற்றதோர்சென்னிவீழ்முனிறைவனங்கையினுற்
பற்றியாயிடையலமரும்பாவகற்பாராத்
திற்றியீதெனக்கொடுத்தனன்கொடுத்தலுஞ்செந்தீ
மற்றொர்மாத்திரைப்போதினின்மிசைந்ததுமன்றே. (௫௧)

மெல்லவேயெரியத்தலைநுகர்தலும்வேத
வல்லியாதியார்துணைவியர்தக்கன்மாமகளிர்
சில்லிருங்குழறாழ்வரச்செங்கரங்குலைத்தே
யொல்லையத்திறங்கண்டனர்புலம்பிவர்துற்றார். (௫௨)

அந்தவேலையின்மறைக்கொடிதன்னைமுன்னணுகி
முந்திவார்குழையிறுத்தனளேனையர்முடியுந்
தந்தநங்கையர்சென்னியும்வாள்கொடுதடிந்து
கந்துகங்கள்போலடித்தனள்பத்திரகாளி. (௫௩)

காளியாம்பெயர்த்தலைவியுங்கருதலர்தொகைக்கோ
ராளியாகியவீரனுமேனையண்டர்களைக்
கேளிராகியமுனிவரைத்தனித்தனிகிடைத்துத்
தாளிலரர்ப்பினிற்றடக்கையிற்படைகளிற்றடிந்தார். (௫௪)

மருத்துமூழியிலங்கியுமுற்றெனமாது
முருத்திரப்பெருமூர்த்தியும்வந்தெனவுயர்சீர்
தரித்தவீரனும்பத்திரகாளியுந்தக்கன்
றிருத்தும்வேள்வியைத்தொலைத்தனர்தனித்தனிதிரிந்தே. (௫௫)

அண்ணறன்மையுந்தேவிதன்னிலைமையுமயரும்
விண்ணுளோர்சிலர்நோக்கியேயாங்கணும்விரவி
யண்ணுகின்றனர்யாரையுந்தொலைக்குநரம்மா
வெண்ணிலார்கொலாம்வீரனுமிறைவியுமென்றார். (௫௬)

இற்றெலாநிகழ்வேலையின்வீரனதிசைவாற்
சுற்றுதானையரித்திறநோக்கியேசூழ்ந்த
பொற்றைபோலுயர்காப்பினைவீட்டியுள்புகுந்து
செற்றமோடுசென்றார்த்தனர்வானுளோர்தியங்க. (௫௭)

சூர்த்தநோக்குடைப்பூதருங்காளிகடொகையு
மார்த்தகாலையின்முனிவருந்தேவருமயர்ந்து
பார்த்தபார்த்ததோர்திசைதொறுமிரிதலும்படியைப்
போர்த்தவார்கடலாமெனவளைந்தடல்புரிய. (௫௮)

வேறு.

தியக்குற்றனர்வெருளுற்றனர்திடுக்கிட்டனர்தெருள்போய்த்
துயக்குற்றனர்பிறக்குற்றனர்தொலைவுற்றனர்மெலியா
மயக்குற்றனர்தலக்குற்றனர்மறுக்குற்றனர்மனமே
லுயக்குற்றனரிமையோர்களுமுயர்மாமுனிவரரும். (௫௯)

அளிக்கின்றனர்தமைத்தம்முனையருண்மக்களைமனையைக்
களிக்கின்றதொரிளையோர்தமைச்சுற்றந்தனைக்கருதி
விளிக்கின்றனர்பதைக்கின்றனர்வெருக்கொண்டனர்பிணத்தூ
டொளிக்கின்றனரவன்வேள்வியினுறைகுற்றதொர்மறையோர். (௬௰)

அலக்கட்பமிமையோர்களுமருமாமுனிவரரு
நிலக்கட்படுமறையோர்களுநெடுநீர்க்கடலாகக்
கலக்குற்றனர்வரையாமெனக்கரத்தாற்புடைத்துதிர்த்தா
ருலக் * கிற்றிரளாகச்சினத்துயர்மால்கரியொத்தே. (௬௧)

---

* உலக்கு - வலித்தல்விகாரம்.

முடிக்குந்திறற்பெருங்கோளரிமுழங்கிற்றெனமுரணு
விடிக்கின்றனர்கலைமானெனவிமையோர்தமைவிரைவிற்
பிடிக்கின்றனரடிக்கின்றனர்பிறழ்பற்கொடுசிரத்தைக்
கடிக்கின்றனரொடிக்கின்றனர்களத்தைப்பொருகளத்தில். (௬௨)

முறிக்கின்றனர்தடந்தோள்களைமுழுவென்புடனுடலங்
கறிக்கின்றனரடிநாவினைக்களைகின்றனர்விழியைப்
பறிக்கின்றனர்மிதிக்கின்றனர்படுக்கின்றனர்சங்கங்
குறிக்கின்றனர்குடிக்கின்றனர்குருதிப்புனறனையே. (௬௩)

எடுக்கின்றனர்பிளக்கின்றனரெறிகின்றனரெதிர்போய்த்
தடுக்கின்றனருதைக்கின்றனர்தடந்தாள்கொடுதைத்துப்
படுக்கின்றனர்தலைசிந்திடப்படையாவையுந்தொடையா
விடுக்கின்றனர்மடுக்கின்றனர்மிகுமூனினைப்பகுவாய். (௬௪)

நெரிக்கின்றனர்சிலர்சென்னியைநெடுந்தாள்கொடுமிதியா
வுரிக்கின்றனர்சிலர்யாக்கையையொருசிற்சிலர்மெய்யை
யெரிக்கின்றனர்மகத்தீயிடையிழுதார்கடத்திட்டே
பொரிக்கின்றனர்கரிக்கின்றனர்புகைக்கின்றனரம்மா. (௬௫)

அகழ்கின்றனர்சிலர்மார்பினையவர்தங்குடர்சூடி
மகிழ்கின்றனர்நகைக்கின்றனர்மதர்க்கின்றனர்சிவனைப்
புகழ்கின்றனர்படுகின்றதொர்புலவோர்தமைக்காணு
விகழ்கின்றனரெறிந்தேபடையேற்கின்றனரன்றே. (௬௬)

கரக்கின்றதொர்முனிவோர்களைக்கண்டேதொடர்ந்தோடித்
துரக்கின்றனர்பிடிக்கின்றனர்துடிக்கும்படிபடிமேற்
றிரக்குன்றுகொடரைக்கின்றனர்தெழிக்கின்றனர்சிலவூ
னிரக்கின்றதொர்கழுகின்றொகைக்கீகின்றனர்மாதோ. (௬௭)

நெய்யுண்டனர்தயிருண்டனர்பாலுண்டனர்நீடுந்
துய்யுண்டனரிமையோர்கடந்தொகைக்காமெனவுய்க்கு
மையுண்டதொரவியுண்டனர்மகவேள்வியில்வந்தே
நையுண்டவருயிர்கொண்டிடுநாளுண்டவரெல்லாம். (௬௮)

உகத்துக்கடையனலைக்கடலுவர்நீர்தணித்தெனவே
மகத்திற்றிரிவிதவேதியில்வைகுங்கனலதனை
மிகத்துப்புரவுளதென்றுகொல்வியப்பார்தமதுயிரி
னகத்துப்புனல்விடுத்தேவிரைந்தவித்தார்மகமழித்தார். (௬௯)

தடைக்கொண்டதொர்சிறைதோறுளசாலைக்கதவெல்லா
மடைக்கின்றனர்தழலிட்டனரவணுற்றவர்தம்மைத்
துடைக்கின்றனர்கலசத்தொடுதொடர்கும்பமும்விரைவா
லுடைக்கின்றனர்தகர்க்கின்றனருதிர்க்கின்றனருடுவை. (௭௦)

தவக்கண்டகத்தொகையார்த்திடத்தனிமாமகத்தறியிற்
றுவக்குண்டயரணிமேதகுதுகடீர்பசுநிரையை
யவிழ்க்கின்றனர்சிலர்கங்கையினலையிற்செலவிடுவார்
திவக்கும்படிவானேச்சினர்சிலவெற்றினர்படையின். (௭௧)

Digitized By Roja Muthiah Research Library

பங்கங்கள்படச்செய்திடுபதகன்மகந்தனிற்போய்க்
கங்கங்களைமுறிக்கின்றனர்கவின்சேரரமகளி
ரங்கங்களைக்கறிக்கின்றனரறுக்கின்றனரதனை
யெங்கெங்கணுமுமிழ்கின்றனரெறிகின்றனரெவரும். (௭௨)

படுகின்றவர்வருமூர்த்தியும்படர்மானமுந்தேருஞ்
சுடுகின்றனரவர்கொண்டிடுதொலைவில்படைக்கலமு
மிடுகுண்டலமுடிகண்டிகையெவையுந்தழலிட்டே
கடுகின்றுகளாகப்பொடிகண்டார்திறல்கொண்டார். (௭௩)

அடிக்கொண்டதோர்மகச்சாலையுளமர்வேதியையடியா
லிடிக்கின்றனர்பொடிக்கின்றனரிருந்தோரணத்தொகையை
யொடிக்கின்றனர்பெருந்தீயினையுமிழ்கின்றனர்களிப்பா
னடிக்கின்றனரிசைக்கின்றனர்நமனச்சுறுந்திறத்தோர். (௭௪)

தருமத்தினையடுகின்றதொர்தக்கன்றனக்குறவா
மருமக்களைப்பிடிக்கின்றனர்வாயாற்புகலொண்ணுக்
கருமத்தினைப்புரிகின்றனர்கரத்தாலவருரத்தே
யுருமுற்றெனப்புடைக்கின்றனருமிழ்வித்தனரவியே. (௭௫)

தறிக்கின்றனர்சிலதேவரைத்தலைமாமயிர்முழுதும்
பறிக்கின்றனர்சிலதேவரைப்பாசங்கொடுதறியிற்
செறிக்கின்றனர்சிலதேவரைச்செந்தீயிடைவதக்கிக்
கொறிக்கின்றனர்சிலதேவரைக்கொலைசெய்திடுங்கொடியோர். (௭௬)

காற்றிக்கினுமெறிகின்றனர்சிலர்தங்களைநல்லூன்
சேற்றுத்தலைப்புதைக்கின்றனர்சிலர்தங்களைச்செந்நீ
ராற்றுக்கிடைவிடுக்கின்றனர்சிலர்தங்களையண்டப்
பாற்றுக்கிரையிடுகின்றர்சிலர்தங்களைப்பலரும். (௭௭)

இடைந்தாரையும்விழுந்தாரையுமெழுந்தாரையுமெதிரே
நடந்தாரையுமிரிந்தாரையுநவையுற்றிடவிறந்தே
கிடந்தாரையுமிருந்தாரையுங்கிளர்ந்தாரையும்விண்மேற்
படர்ந்தாரையுமவர்க்கேற்றதொர்பலதண்டமும்புரிந்தார். (௭௮)

உலக்குற்றிடுமகங்கண்டழுதுளநொந்தனர்தளரா
மலக்குற்றிடுமணங்கோர்தமைவலிதேபிடித்தீர்த்துத்
தலக்கட்படுமலர்ப்பொய்கையைத்தனிமால்கரிமுனிவாற்
கலக்கிற்றெனப்புணர்கின்றனர்கணநாதரிற்சிலரே. (௭௯)

குட்டென்பதும்பிளவென்பதுங்கொல்லென்பதுங்கடிதே
வெட்டென்பதுங்குத்தென்பதுமுரியென்பதும்விரைவிற்
கட்டென்பதுமடியென்பதுமுதையென்பதுங்களத்தே
யெட்டென்பதொர்திசையெங்கணுமெவரும்புகல்வனவே. (௮0)

கையற்றனர்செவியற்றனர்காலற்றனர்காமர்
மெய்யற்றனர்நாவற்றனர்விழியற்றனர்மிகவு
மையுற்றிடுகளமற்றனரல்லான்மலரயன்சேய்
செய்யுற்றிடுமகத்தோர்களிற்சிதைவற்றவரிலையே. (௮௧)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

இத்திறம்யாரையுமேந்தருளையும், பத்திரைசேனையும்பரவித்தண்டியா
மெத்துறுமலைசெழுவேலையிற்பல, மத்துறுகின்றெனமகத்தைவீட்டவே. (அஉ)

செழுந்திருவுரத்திடைதெருமந்துற்றிடத், தொழுந்திறற்பரிசனந்தொலையமாயவ
னழுந்திடுகலலொடுமெயர்வுயிர்த்தவ, னெழுந்தனன்மகம்படுமிறப்புநோக்கினன்.()

திருத்தரும்வேள்வியைச்சிதைவின்றுகயா, னருத்தியிற்காத்ததுமழகிதாலெனு
க்,கருத்திடையுன்னினன்கண்ணன்வெள்கியே, யுருத்தனன்மானநின்றுளத்தையீ
ரவே. (அச)

பரமனையிகழ்ந்திடுபான்மையோர்க்கிது, வருவதுமுறையெனமனத்துட்கொண்
டிலன், றெருமருமுணர்வினன்றிறல்கொள்வீரன்மேற், பொருவதுகருதினன்பொ
ருவிலாழியான். (அரு)

உன்னினன்கருடனையுடைந்ததாதலுந், தன்னுறுசீற்றமாந்தழலையாங்கொரு
பொன்னிருஞ்சிறையபுள்ளரசனுக்கவு, மன்னதுவணங்கியேயரிமுனின்றதே. ()

நிற்றலுமதன்கையினீலமேனியான், பொற்றடந்தாள்வையாப்பொருக்கென்றே
றியே, பற்றினனைம்பெரும்படையும்வேள்வியுண், முற்றுறுபூதர்மேன்முனிவுற்றே
கினன். (அஎ)

எடுத்தனன்சங்கினையிலங்குசெந்துவ, ரடுத்திடுபவளவாயாரச்சேர்த்தியே [வே.
படுத்தனன்பேரொலிபரவைத்தெண்டிரைத், தடக்கடலுடைந்திடுதன்மைபோல

மீச்செலுமமரர்கள்புரிந்தவேள்வியந், தீச்சிகையுதவியசிலையைவாங்கியே
தாச்செலும்வசிகெழுசரங்களெண்ணில, வோச்சினன்வீரனதுரவுத்தானைமேல்.()

காளிகடொகைகளுங்கழுதினீட்டமுங், கூளிகடொகைகளுங்குழுமியேற்றெழீஇ
வாளிகடொகைசொரீஇமாயற்சூழ்வுறா, நீளிகல்புரிந்தனர்நிகரில்வன்மையார். கூ0

தண்டுளவலங்கலந்தடம்பொற்றோளுடை, யண்டனுந்தன்படையனைத்துநேர்
கொடு, மண்டமர்புரிதலைமற்றவெல்லையிற், கண்டனனகைத்தனன்கடவுள்வீரனே.

வெருவரும்பெருந்திறல்வீரன்றண்டுழா, யரியொடுபோர்செயவாதிநாயகன்
றிரைகடலுலகமுஞ்சிறிதுதானென, வொருபெருந்தேரினையுய்த்திட்டானரோ. ()

பாயிரந்தானெனப்பகரும்வேதமா, மாயிரம்புரவிகளளப்பில்கேதனங்
காயிரும்படைகண்மீக்கலந்ததாகிய, மாயிருந்தேரவண்வல்லைவந்ததே. (கூங)

தேரவண்வருதலுந்திறல்கொள்வீரனுற், பாரிடைவீழ்ந்தயர்பங்கயாசன
னுருயிர்பெற்றெனவறிவுபெற்றெழீஇ, நேரறுமகம்படுநிகழ்ச்சிநோக்கினன். (கூச)

அரிபொருநிலைமையுமாடல்வீரன, துருகெழுசெற்றமுமும்பர்தன்னிடை
யிரதம்வந்திட்டதும்யாவுநோக்கியே, கருதினன்யானுயுங்காலமீதென. (கூரு)

விண்ணிழிதேரிடைவிரைவினுன்முக, னண்ணினன்வலவனினகைமுட்கோல்
கொடு, துண்ணெனநடத்தியேதொழுதுவீரனும், புண்ணியன்றனக்கிதுபுகறன்மே
யினன். (கூசு)

நீறணிபவளமெய்நிமலனிற்கிதோர், வீறணிதேர்தனைவிரைவினுய்த்தனன்
றேறலர்தமையடுந்திறல்கொள்வீரநீ, யேறுதிதுனைவியோடென்றுபோற்றினன்.()



Digitized By Roja Muthiah Research Library

போற்றினனிரத்தலும்பொருவில்வேதன்மேற், சீற்றமுள்ளதிலொருசிறிதுநீங்கியே, யாற்றல்கொள்வீரனெம்மன்னைதன்னுட, னேற்றமொடதன்மிசையிமைப்பின்மேவினன். (௯அ)

மேவியகாலையில்வெலற்கருந்திறற், சேவகவடியனேன்றிறத்தைக்காண்கெனத்
தாவகறேரினைத்தண்டுழாய்முடிக், காவலன்முன்னுறக்கடாவியுய்ப்பவே. (௯௯)

வரனுறுநான்முகவலவனுய்த்திடு, திருமணித்தேர்மிசைத்திகழ்ந்தவீரன்முன்
னொருதனிவையமேலும்பர்க்காகவே, புரமடவருவதோர்புராரிபோன்றனன். ()

எல்லையில்பெருந்திறலிறைவனேறுதே,ரல்லியங்கமலமேலண்ணலுய்த்திடச் [ரே.
சொல்லருந்தானையின்றொகையைநீக்கியே, வல்லைசென்றிறுத்ததம்மாயன்முன்ன

பாருலகளவினும்பரந்தபைம்பொனந், தேரவணெதிர்தலுந்திருவுலாவிய
காருறழ்மேனியங்கண்ணன்கண்ணுதல், வீரனைநோக்கியோர்மொழிவிளம்பினன்.

வேறு.

தெழித்தவார்புனற்கங்கையஞ்சடைமுடிச்சிவனைப்
பழித்ததக்கனையடுவதல்லாலவன்பாலி
லிழுக்கிறேவரையடுவதென்வேள்வியையெல்லா
மழித்ததென்னைநீபுகலுதியாலெனவறைந்தான். (௧௦௩)

பாடல்சான்றிடுமாலிதுபுகறலும்பலரு
நாடுதொல்புகழ்வீரனன்றிதுவெனநகையா
வீடுசேரிமிலேறுடன்வயப்புலியேற்றன்
றூடல்செய்தல்போலொருமொழியுரைத்தனனன்றே. (௧௦௪)

எல்லையில்லதோர்பரமனையிகழ்ந்தவனியற்று
மல்லல்வேள்வியிலவிநுகர்ந்தோர்க்கெலாமறைமுன்
சொல்லுதண்டமேபுரிந்தனநின்னையுந்தொலைப்பாம்
வல்லையேலதுகாத்தியென்றனனுமைமைந்தன். (௧௦௫)

வீரனிங்கிதுபுகறலுஞ்செங்கண்மால்வெகுண்டு
பாரவெஞ்சிலைகுனித்தனனொலிபடுத்தி
யாரும்விண்முகிலொன்றுதன்வில்லொடுமெப்பு
மாரிபெய்தெனப்பகழியாற்பூதரைமறைத்தான். (௧௦௬)

கணங்கடம்மிசைமால்சரம்பொழிதலுங்காணூஉ
வணங்குதன்னொருநகைசெய்துவீரனுமமலன்
பணங்கொள்பஃறலைப்பன்னகக்கிறைவனுற்படைத்த
குணங்கொண்மேருவேயன்னதோர்பெருஞ்சிலைகுனித்தான். (௧௦௭)

செற்றமீக்கொளவையன்வில்வாங்கினன்சிறிதே
பற்றிநாணொலியெடுத்தலுமொடுங்கினபரவை
பொற்றையாவையுங்கீண்டனதுளங்கினபுவன
மிற்றைவைகலோவிறுதியென்றயர்ந்தனரெவரும். (௧௦௮)

கோளிலாகியபுற்றிடையோரராக்குறுகி
மீளில்வெஞ்சினக்குழவிகொண்டேகலின்வீரன்
றோளில்வாங்கியசிலையினிற்றூணியிற்றுதைந்த
வாளிவாங்கியுய்த்தொருதனிமாயனைமறைத்தான். (௧௦௯)

Digitized By Roja Muthiah Research Library

செங்கணான்றனைமறைத்தபின்மற்றவன்செலுத்துந்
துங்கவெங்கணையாவையும்பொடிபடத்தொலைப்ப
வங்கொராயிரம்பகழியையதெனப்பூட்டி
யெங்கணாயகன்றிருமணிப்புயத்தினேரெய்தான். (௧௧௦)

எய்யும்வெங்கணையாவையும்வீரருளிறையா
மையனுசுகமாயிரமோச்சினனகற்றி
யொய்யெனக்கரியோனுதன்மீமிசையொருதன்
வெய்யபொத்திரமேவினனவனுளம்வெருவ. (௧௧௧)

ஏவுதொல்கணைமாயவனுதலிடையிமைப்பின்
மேவுகின்றுழியனையவன்றளர்தலும்வீரன்
வாவுதேர்மிசையூன்றினன்சிலையைவார்கணையுந்
தூவுகின்றிலன்மாலிடர்நீங்குறுந்துணையும். (௧௧௨)

இன்னலத்துணையகன்றுமாலெதிர்தலுமெமது
மன்னுநேர்ந்தனனிருவரும்வரிசிலைவளையாப்
பொன்னின்வாளிகள்பொழிந்தனர்முறைமுறைபொருதா
ரன்னபான்மையர்செய்தபோர்யாவரேயறைவார். (௧௧௩)

மாறுகொண்டபோரிவ்வகைபுரிதலும்வயத்தால்
வீறுகொண்டுயர்முக்கணான்வெய்யதீவடவைக்
கூறுகொண்டதோர்படையினையோச்சலுங்குவட்டி
லேறுகொண்டலையனையவனுரத்திலெய்தியதே. (௧௧௪)

எய்துகாலையிலுளம்பதைபதைத்திடவிரங்கி
வெய்துயிர்ப்புடனுணர்வொரீஇயுளநனிமெலிந்து
நொய்தின்மையலைநீங்கலுமுகுந்தனைநோக்கிச்
செய்திபோரெனவுரைத்தனன்சரபமாந்திறலோன். (௧௧௫)

மெய்வதத்தினையாவர்க்கும்விரைவினிலிழைக்குந்
தெய்வதப்படைமுழுவதுஞ்செங்கண்மால்செலுத்த
வவ்வனைத்தையுமனையவப்படைகளாலகற்றிக்
கவ்வைமுற்றினனுதல்விழியளித்திடுங்கடவுள். (௧௧௬)

வேறு.

தேன்றிகழ்பங்கயத்திருவினாயகத்
தோன்றறன்படைக்கலந்தூண்டவெங்கணுஞ்
சான்றெனநின்றவன்றனயன்வீரமாம்
வான்றிகழ்படைதொடாவல்லைமாற்றவே. (௧௧௭)

அரியதன்பின்னுறவாதிவீரன்மேற்
பொருகணையளப்பிலபொழியமாற்றியோர்
சரமதுசெலுத்திமால்சார்ங்கமொன்றையு
மிருதுணிபடுத்தினனிறைவன்மைந்தனே. (௧௧௮)

பின்னுமத்துணைதனிற்பெருந்திறற்பெயர்
முன்னவனிருகணைமுறையினேச்சியே
பன்னகமிசைத்துயில்பகவனூர்திதன்
பொன்னிருஞ்சிறையினைப்புவியில்வீட்டினான். (௧௧௯)

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
R. M. DIST. TAMIL NADU - INDIA
Digitized By Roja Muthiah Research Library

ஆயதோரமைதியிலாழியங்கையான்
மாயவனுதலின்வரம்பில்கண்ணரை
மேயினகாதலின்விதிப்பவீரன்முன்
பாயிருண்முகிலெனப்பரம்பினாரரோ. (கஉ0)

அங்கவர்யாரையுமமலன்வெய்யகட்
பொங்கழல்கொளுவிநுண்பொடியதாக்கலும்
பங்கயவிழியினான்பரமனன்றருள்
செங்கையிலாழியைச்செல்கென்றேவினான். (கஉக)

விடுத்ததோர்திகிரியைவீரனங்கையாற்
பிடித்தவண்விழுங்கினன்பெயர்த்துமாயவ
னெடுத்திடுகதையினையெறியவன்னது
தடுத்தனன்றனதுகைத்தடம்பொற்றண்டினால். (கஉஉ)

வேறு.

சங்கார்செங்கைப்புங்கவனேவுந்தண்டம்போய்
மங்காவங்கண்வீழ்வதுகாணாவாள்வாங்கிப்
பொங்காநின்றேயுய்த்திடவெய்தும்பொழுதின்க
ணுங்காரஞ்செய்திட்டனனம்மாவுமைமைந்தன். (கஉங)

ஓய்யென்றையன்சீற்றமொடங்கணுங்காரஞ்
செய்யுங்காலத்தோவியமென்னச்செயனீங்கிக்
கையும்வாளுமாயவனின்றான்கடலூடே
வையம்முண்டுகண்டுயில்கின்றமாமாயன். (கஉச)

சான்றகன்மாயனச்சுறவெய்தித்தளர்காலை
மூன்றுகண்வீரன்யாதுநினைந்தோமுனிவெய்த
வான்றதோர்செற்றநீங்குதியென்னுவண்டத்தே
தோன்றியதம்மாகண்ணுதலீசன்சொல்லொன்றே. (கஉரு)

அந்தரமீதேவந்திடுசொல்லங்கதுகேளா
வெந்தைமனங்கொள்வெஞ்சினநீங்கியிடுபோழ்தி
லந்தின்மணித்தேருய்த்திடுபாகனதுநோக்கி
வந்தனைசெய்தேபோற்றியோர்மாற்றம்வகுப்பானால். (கஉசு)

வேறு.

அறத்தினையொருவிச்செல்லுமழிதகனுலகமெல்லா
மிறத்தலையெய்தவிங்ஙனியற்றியமகத்தின்மேவிப்
பெறத்தகுமவியைநுங்கும்பேதையேன்பிழையையெல்லாம்
பொறுத்தனைகொண்மோவென்னாப்பொன்னடிக்கமலம்பூண்டான். கஉஎ

பூண்டிடுமுலகந்தந்தபுங்கவன்றன்னைநோக்கி
யாண்டகைவீரனஃதேயாகவென்றருளலோடு
நீண்டதோர்மாயனன்னானீடருணிலைமைகாணாஉ
வீண்டிதுகாலமென்னாவேத்தினனியம்பலுற்றான். (கஉஅ)

பாரவெஞ்சிலையும்வீட்டிப்பல்படைக்கலமுஞ்சிந்திச்
சேரலருயிர்களுண்டதிகிரியுஞ்செல்லநுங்கிப்
போரிடையெனையும்வென்றுபுகழ்புனைந்திடுதியென்றால்
ዓ வீரநின்றகைமையாரேமுடிவுறவிளம்பவல்லார். (கஉகூ)

ஆசறுநெறியினீங்குமயன்மகனியற்றுகின்ற
பூசனைவிரும்பிவேள்விபுகுந்தனன்புந்தியில்லேன்
மாசறுபுகழாய்நின்ஞன்மற்றிதுபெற்றேனந்தோ
வீசனையிகழ்ந்தோர்தம்பாலிருப்பரோவெண்ணமிக்கோர். (கஉ௦)

ஆதிநாயகனையொல்லாரனையவர்ச்சேர்ந்தார்க்கெல்லாம்
வேதமேயிசையாநிற்கும்வியன்பெருந்தண்டமன்றே
வீதெலாமெம்மனோர்பாலியற்றியவினையதன்மை
நீதியாலெம்பாலன்றிநின்கணோர்குறையுமுண்டோ. (கஉக)

விழிதனின்முறுவறன்னின்வெய்துயிர்ப்பதனிலார்ப்பின்
மொழிதனிற்புவனமெல்லாமுதலொடுமுடிக்கவல்லோய்
பழிபடுவேள்விதன்னிற்பலரையும்படையினோடு
மழிவுசெய்திட்டதம்மாவடிகளுக்காடலன்றே. (கஉஉ)

உறுநர்தந்தொகைக்குவேண்டிற்றுதவியமுதல்வனேவு
முறையதையுன்னிவேள்விமுடிப்பதோராடலாகச்
சிறிதெனுமளவைதன்னிற்சிதைத்தனையன்றியெந்தா
யிறுதிசெய்திடநீயுன்னின்யார்கொலோவெதிர்க்குநீரார். (கஉங)

இறுதிசெய்திடலேசீற்றமின்பமேயாண்மையென்று
வறைதருசத்திநான்காமரன்றனக்கையைகாளி
முறைதருகவுரிபின்னோர்மும்மையும்பெற்றோரேனைப்
பெறலருஞ்சத்தியானிப்பெற்றியுமறைகள்பேசும். (கஉச)

அன்னதோர்பரிசாலீசனரும்பெருஞ்சத்தியென்னிற்
பின்னமன்றவற்கியானும்பெரிதுமன்புடையேன்முக்கண்
முன்னவன்றன்பாலீண்டென்மொய்ம்புடனிழந்தநேமி
யின்னுமங்கவன்றளர்ச்சித்திமைப்பினிலெய்துகின்றேன். (கஉரு)

முனிவுடனடிகளீண்டுமுறைபுரிந்ததனுக்கின்னன்
மனனிடைகொள்ளேனின்ஞன்மற்றிதுபெறுதலாலே
புனிதமாக்கொள்வன்றண்டம்புரிந்தனைபொறுத்திகுற்ற
மினியருள்புரிதியென்றுவிணையடியிறைஞ்சலோடும். (கஉசு)

வீரருள்வீரன்மாலோன்விளம்பியமாற்றங்கேளா
நாரணற்கன்புசெய்துநணியதோர்காலைதன்னிற்
பாரிடஞ்சூழநந்திபரவிடவுமையாளோடு
மூரிமால்விடைமேல்கொண்டுதோன்றினன்முடிவிலாதான். (கஉஎ)

தேங்கியகங்கைசூடுஞ்செஞ்சடைக்கடவுடோன்ற
வாங்கதுதெரிந்தவீரனச்சமோடங்கைகூப்பிப்
பாங்குறநிற்பமாலும்பங்கயத்தயனுந்தாழா
நீங்கியதாயைநேருங்குழவியினிலையராஞர். (கஉஅ)

கண்டனள்கவுரிவேள்விக்களத்திடைக்கழலுங்கையுந்
துண்டமுந்தலையுமார்புந்தோள்களுந்துணிந்துவீழ
வண்டருந்தக்கன்றனுமாவிபோய்க்கிடந்ததன்மை
கொண்டதோர்சீற்றநீங்கியருள்வரக்கூறுகின்றுள். (கஉகூ)

Digitized By Roja Muthiah Research Library

வேறு.

பொன்னார்சடையெம்புனிதன்றனைநோக்கி
முன்னாகியபொருட்குமுன்னோனேவேள்விக்கு
மன்னானவற்குமிமையோர்க்குமற்றெவர்க்கு
மென்னான்முடிவெய்திற்றென்றுரைக்குமிவ்வுலகே. (௧௪௰)

மற்றவர்கள்புந்திமயக்குற்றுனதுதொல்சீர்
சற்றுமுணராதுதவறுசெய்ததன்மையினாற்
செற்றமிகுவீரத்திருமகனாலிஞ்ஞான்று
பெற்றனரேயன்றோபெறத்தக்கதோர்பரிசே. (௧௪௧)

முந்துமிவரைமுடித்தியெனவெஃகியதுந்
தந்துமுடித்தாய்தனிவீரனாலனைய
ருய்ந்துகுறைபோயுயிர்பெற்றெழும்வண்ண
மிந்தவரமுமெனக்கருளாயெங்கோவே. (௧௪௨)

என்றுதொழுதாங்கெமையுடையாள்கூறுதனு
நன்றுன்னருளென்றுநகைசெய்துதன்பாங்கர்
நின்றதிறலோனைநேர்நோக்கியிம்மாற்ற
மொன்றுபகர்ந்தானுயிர்க்குயிராயுற்றபிரான். (௧௪௩)

ஈண்டைமகத்திலெமையிகழ்ந்துநின்சினத்தான்
மாண்டுசிதைவுற்றவலியிலோர்தம்முயிரை
மீண்டுமளித்துருவுமேனாளெனப்புரிதி
யாண்டகைநீயென்றேயரனருளிச்செய்தலுமே. (௧௪௪)

வீரனதற்கிசைந்துமேனாளனவிறந்தீர்
யாருமெழுதிரெனவுரைப்பவானவர்கள்
சோருமுனிவர்மறையோர்துயிலுணர்ந்த
நீரரெனவுயிர்வந்தெய்தநிலத்தெழுந்தார். (௧௪௫)

தண்டமியற்றுந்தனிவீரனாற்சிதைந்த
பிண்டமுழுதுருவும்பெற்றோர்மகம்புக்கு
விண்டசெயலுமுயிர்மீண்டதுவுங்கங்குலிடைக்
கண்டபுதியகனவுநிலைபோலுணர்ந்தார். (௧௪௬)

அந்தண்முனிவோரனைவோரும்வானவரு
மிந்திரனேயாதியிமையோர்களும்வெருவிச்
சிந்தைமருண்டுசிவனையிகழ்ந்ததனால்
வந்தபழியுன்னிவருந்திமிகவெள்கினரால். (௧௪௭)

பாணாரளிமுரலும்பைந்தார்புனைவீரன்
மானாகத்தன்னோர்மருங்காகத்தேவியுடன்
பூணாரரவப்புரிசடையெம்புண்ணியனைச்
சேணார்ககனந்திகழுஞ்செயல்கண்டார். (௧௪௮)

துஞ்சலகன்றசுராருமுனிவரு
நஞ்சமணிமிடற்றுநாயகனைக்கண்ணுற்றே
யஞ்சிநடுங்கவதுகண்டெவரிவர்க்குத்
தஞ்சமெமையல்லாலென்றுதளரேலென்றான். (௧௪௯)

Digitized By Roja Muthiah Research Library

என்றுங்கிசைத்தவிறைவனருணுடி
நன்றுலிதென்றுநனிமகிழ்ந்துமுன்னணித்தாச்
சென்றூர்தொழுதார்திசைமுகன்மாலாதியராய்
நின்றூரெவருநெறியாலிவ்வுரைப்பார். (௧௫0)

சிந்தையயர்வுற்றுச்சிறுவிதிதன்வேள்விதனி
லெந்தைநினையன்றியிருந்தேங்கள்கண்முன்னும்
வந்துகருணைபுரிந்தனையான்மைந்தர்க்குத்
தந்தையலதுபிறிதொருவர்சார்புண்டோ. (௧௫௧)

அற்றமிலன்பில்லாவடியேங்கள்பாலடிகள்
செற்றமதுபுரியிற்செய்கைமுதலானசெயல்
பற்றிமுறைசெய்பதமுளதோவஞ்சலென
மற்றெூர்புகலுளதோமன்னுயிருந்தானுளதோ. (௧௫௨)

வேதத்திறங்கடந்தவேள்விப்பலியருந்தும்
பேதைச்சிறியேம்பெரும்பகலுந்தீவினையி
லேதப்படாமேயிமைப்பிலதுதொலைத்த
வாதிக்கெவன்கொலளிக்கின்றகைம்மாறே. (௧௫௩)

இங்குன்னடிபிழைத்தோமெல்லோரும்வீரனெனுஞ்
சிங்கந்தன்கையாற்சிதைபட்டவாறெல்லாம்
பங்கங்களன்றேபவித்திரமாய்மற்றெங்க
ளங்கங்கட்கெல்லாமணிந்தவணியன்றே. (௧௫௪)

கங்கைமுடித்ததுவுங்காய்கனலையேந்தியதும்
வெங்கண்மிகுவிடத்தைமேனாளருந்தியது
நங்கையுமைகாணநடித்ததுவுமுற்பகலு
மெங்கண்மிசைவைத்தவருளன்றேயெம்பெருமான். (௧௫௫)

ஐயபலவுண்டறிவிலேநின்றனக்குச்
செய்யவருபிழைகள்சிந்தைமிசைக்கொள்ளாம
லுய்யும்வகைபொறுத்தியுன்னடியேயென்றலுமே
தையலொருபங்கன்றணிந்தனமாலஃதென்றான். (௧௫௬)

ஏற்றுத்தலைவனியம்புந்திருவருளைப்
போற்றித்தொழுதுதமபுந்திதளிர்ப்பெய்திக்
கூற்றைத்தடிந்தகுரைகழற்றாண்முன்னிறைஞ்சித்
தேற்றத்துடன்பாடியாடிச்சிறந்தனரே. (௧௫௭)

அன்னபொழுதத்தயன்முதலாந்தேவர்கண்மே
லுன்னவரியவொருவனருட்கண்வைத்து
நுந்நும்மரசுநமக்கேயளித்தனமான்
முன்னரெனவேமுறைபுரிதிரென்றுரைத்தான். (௧௫௮)

மாலயனேயாதியராம்வானவர்களெல்லோரு
மாலமிடற்றண்ணலருளின்றிறம்போற்றி
யேலமகிழ்வெய்தவிறந்தெழுந்தோர்தங்குழுவிற்
சீலமிலாத்தன்மகனைக்காணுன்றிசைமுகனே. (௧௫௯)

Digitized By Roja Muthiah Research Library

மாண்டதொருதக்கன்வயவீரன்றன்னருளா
லீண்டெனந்தன்னோடெழாவச்செயனேக்கிக்
காண்டகையநாதன்கழலிணைமுன்வீழ்ந்திறைஞ்சி
யாண்டெகமலத்தயனின்றுரைக்கின்றான். (௧௬0)

வேறு.

ஐயநின்வாய்மையெள்ளியழல்கெழுமகத்தையாற்றுங்
கையனதகந்தைநீங்கக்கடிதினிற்றண்டஞ்செய்து
மையுறுநிரயப்பேறுமாற்றிணையவனுமெம்போ
துய்யவேயருளுகென்னவுமாபதிகருணைசெய்தான். (௧௬௧)

இறையருள்கண்டுவீரனெல்லையங்கதனிலெந்தை
யறைகழல்கண்டுபோற்றியவற்றியல்வினவித்தாழாப்
பொறியுளதென்றுதக்கன்புன்றலைபுகுத்தவுன்னுக்
குறையுடலதனைப்பானுகம்பனைக்கொணர்தியென்றான். (௧௬௨)

வித்தகவலிகொள்பூதன்வீரபத்திரன்றன்முன்ன
ருய்த்தலுமதன்மேல்வேள்விக்குண்டியாம்பசுவுள்வீந்த
மைத்தலைகண்டுசேர்த்தியெழுகென்றான்மறைகள்போற்று
மத்தனையிகழுநீரராவரிப்பரிசேயென்னா. (௧௬௩)

என்றலுமுயிர்பெற்றங்கனெழுந்தவத்தக்கன்முன்ன
நின்றதோர்வீரற்கண்டுநெஞ்சுதுண்ணென்னவஞ்சித்
தன்றகவிழந்துபெற்றதலைகொடுவணங்கிநாணி
யன்றுசெய்நிலைமைநாடியரந்தையங்கடலுட்பட்டான். (௧௬௪)

அல்லல்கூர்ந்திரங்குகின்றவசமுகனடல்வெள்ளேற்றின்
மெல்லியலோடுமுற்றவிமலனதுருவங்காணூஉ
வொல்லெனவெருக்கொண்டாற்றவுற்றனனச்சமுற்றவ்
வெல்லையிலிறைவன்றக்காவஞ்சலையினிநீயென்றான். (௧௬௫)

அஞ்சலென்றருளலோடுமசமுகத்தக்கனெங்கோன்
செஞ்சரண்முன்னர்த்தாழ்ந்துதீயனேன்புரிந்ததீமை
நெஞ்சினுமளக்கொணுதானிணைதொறுஞ்சுடுவதையா
வுஞ்சனைவற்றைநீக்கியுனதருள்புரிந்தபண்பால். (௧௬௬)

அடியனேன்பிழைத்ததேபோலார்செய்தாரெனினுமென்போற்
படுவதேசரதமன்றேபங்கயத்தயனைநல்கு
நெடியவன்றுணையென்றுன்னிநின்பெருமாயையாலே
யடிகளையிகழ்ந்தேன்யாதுமறிகிலேன்சிறியேனென்றான். (௧௬௭)

காலையங்கதனிலம்மைகாளிதன்னோடுபோற்றிப்
பாலுறநின்றவீரபத்திரன்றனைவம்மென்றே
வேலவன்றேவியென்னவெரிந்புறநீவியன்னார்க்
கேலநல்வரங்களீந்தாளீசனுக்கன்புமிக்காள். (௧௬௮)

மீத்தருவிண்ணுளோரும்வேள்வியந்தேவுமாலும்
பூத்திகழ்கமலத்தோனும்புதல்வனுமுனிவர்தாமு
மேத்தினர்வணங்கிநிற்பவெம்மையாளுடையமுக்க
ணுத்தனங்கவரைநோக்கியிவைசிலவருளிச்செய்வான். (௧௬௯)

Digitized By Roja Muthiah Research Library

வம்மினென்றுபிரமனாதிவானவர்மகஞ்செய்போழ்தி
னம்மைநீரிகழ்ந்தியாருநவைபெறக்கிடந்ததெல்லா
மும்மையில்விதியாந்தண்டமுமக்கிதுபுரிந்தவாறு
மிம்மையின்முறையேநானுற்றிரங்கலீரிதனுக்கென்றான். (கஎ0)

வேறு.

இனைத்தருள்புரிதலுமெண்ணலாரையு, நினைத்தருள்புரிதருநிமலன்றாடொழாச், சினத்தொடுமகத்தைமுன்சிதைத்துளோனையு, மனத்தகுமன்பினால்வணங்கிப்போற்றவே. (கஎக)

வீரரில்வீரனும்விசயமேதகு, நாரியுமயல்வரநந்திமுன்செலப் [ன்.
பாரிடமெங்கணும்பரவமாதொடே, போரடல்விடையினான்பொருக்கென்றேகினா

கயிலையிலேகியேகவுரியோடரன், வியனகர்மன்றிடைவீற்றிருந்துழி
வயமிகுவீரற்குவானமேக்குற, வியலுமோர்பதமளித்திருத்தியாங்கென. (கஎங)

இருவர்தந்தாளையுமிறைஞ்சியன்னவர், தருவிடைபெற்றனனாகித்தக்கன
தூரியதோர்மகமடுமுலப்பில்பூதர்க, டிரைகடலாமெனத்திசைதொறீண்டவே. ()

தந்தைமுன்விடுத்ததோர்தடம்பொற்றேரயல்,வந்ததங்கதன்மிசைவயங்கொளாடலான், பைந்தொடியொடும்புகாப்பானுகம்பன, துந்திடவரனருளாலகிற்போயினான். (கஎரு)

போயினனதனிடைப்பொருவிறொல்பெருங், கோயிலினெய்தியேகுழுக்கொள்சாரதர், மேயினர்சூழ்தரவீரபத்திர, னேயதோர்துணைவியோடினிதுமேவினான்.

யாகசங்காரப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் க,ருசுஉ.

# அடிமுடிதேடுபடலம்.

இங்கிதுநிற்கமுன்னிறைவன்வந்துழி, யங்குறநின்றதோரமரர்தங்களுட்
செங்கமலத்துறைதேவன்றக்கனாந், துங்கமின்மைந்தனைநோக்கிச்சொல்லுவான்.

யாதுமுன்னுணர்ந்தனையாதுசெய்தனை, யாதவண்கருதினையாரிற்பெற்றனை
யாதுபின்செய்தனையாதுப்பட்டனை, யாதிவண்பெற்றனையாதுன்னெண்ணமே. (உ)

பொன்றுதலில்லதோர்புலவர்யாவர்க்கும், வன்றிறன்முனிவரர்தமக்கும்வையமேற், றுன்றியவந்தணர்தொகைக்குந்துண்ணெனக், கொன்றுயிருண்பதோர்கூற்றமாயினாய். (ங)

சீரையுந்தொலைத்தனைசிறந்ததக்கனும், பேரையுந்தொலைத்தனைபேதையாகிநின், னேரையுந்தொலைத்தனையேவல்போற்றுந, ராரையுந்தொலைத்தனையலக்கணெய்தினாய். (ச)

நின்னுணர்வல்லதுநிகரின்மேலவர், சொன்னதுமுணர்ந்திலைதொல்லையூழினா
லிந்நிலையாயினையிறையையெள்ளினாய், முன்னவனுயர்நிலைமுழுதுந்தேர்ந்தநீ.(ரு)



Digitized By Roja Muthiah Research Library

இயற்படுவளம்பெறீஇயீசன்மேன்மைக, ளயர்த்தனைநின்னளவன்றுமையரு,னுயிர்த்தொகைதமக்கெலாமுள்ளதாதலான்,மயக்கினையடைந்தனைமற்றென்செய்தினீ

முற்றுணர்வெய்தியேமுழுதளித்திடப், பெற்றவெங்கண்ணினும்பெரிதுமாமயக்
குற்றனமுற்பகலுதுகண்டின்றுபேச, னெற்றியங்கண்ணிறைனருளினீக்கினான். (எ)

ஆதலினருளுடையமலநாயகன், பாதமதருச்சனைபரிவிற்செய்குதி
பேதறுமிப்பவப்பெற்றிநீக்கியே, போதமொடின்னருள்புரிவனென்றலும். (அ)

மைதிகழ்முகத்தினன்மற்றதற்கிசைந், துய்திறமுணர்த்தினையுங்கள்கண்ணுமுன்
னெய்தியமையலுமெம்பிரானருள், செய்ததுமியம்புதிதெளிதற்கென்னவே. (கூ)

பொன்னிருஞ்சததளப்போதின்மீமிசை, மன்னியதிசைமுகன்மதலைமாமுக
முன்னுறநோக்கியேமுந்துங்கூறின, மின்னமுமக்கதையியம்புவோமெனா. (க0)

நாலுளதிசைமுகநாதன்சொல்லைநாண், மாலொடுபெற்பகன்மலைவுசெய்துநா
மேலதோர்பொருளெனவிமலன்வந்தருள்,கோலமதுன்னியேதொழுதுகூறுவான்.

வேறு.

பத்தினொடுநூறெதிர்படுத்தயுகநான்மை
யொத்தமுடிவெல்லையெனதோர்பகலதாகு
மத்தகுபகற்பொழுதுமந்தியொடுசெல்ல
நத்தமுறுநான்றுயிலினண்ணுவனவ்வேலை. (கஉ)

வாளுமொடுங்கும்பரிதிமாமதியொடுங்கு
நாளுமொடுங்குந்தமதுநாளுமொடுங்குற்றே
கோளுமொடுங்குங்குலிசபாணிமுதல்வானோர்
கேளுமொடுங்கும்புவனிகேடுபடுமன்றே. (கங)

மண்ணுலகிலாருயிர்வறந்திறுதியாகும்
விண்ணுறுபதங்களில்வியன்முனிவர்யாருந்
துண்ணெனவெருக்கொடுதுளங்கினர்கள்சூழா
வெண்ணுசனலோகமிசையெய்துவர்களந்நாள். (கச)

வாரிதிகளேற்றிறமும்வல்லையிலெழுந்தே
யாரியைதவஞ்செய்பதியாதியனவல்லாப்
பாரினையருந்தியொருபாகமதன்மேலு
மோரெழுபிலத்துலகமுண்டுலவுமன்றே. (க[illegible])

ஒண்டிகிரிமால்வரையுடுத்தநிலமுற்றுங்
குண்டுறுபிலத்தினொடுகூடும்வகைவீட்டி
யண்டருலகுண்டுநிமிர்ந்தப்புறனுமாகி
மண்டுபுனலேயுலகைமாற்றியிடுமன்றே. (கசு)

ஆனதொருவேலையிலொராலிலையின்மீதே
மேனிலவுதண்மதிமிலைந்தவன்மலர்த்தா
டானகமுறுத்தியொர்தனிக்குழவியேபோற்
கானுறுதுழாய்மவுலிகண்டுயிலுமாதோ. (கஎ)

கண்டுயிலுகின்றபடிகண்டுசனலோகத்
தண்டுமுனிவோர்புகழவாங்ஙனம்விழித்தே
பண்டைநிலனேடவதுபாதலமதாகக்
கொண்டன்மணிமேனியனோர்கோலவுருவானான். (கஅ)

Digitized By Roja Muthiah Research Library

கோலமெனுமோருருவுகொண்டுபிலமேகி
ஞாலமெவனுற்றதெனநாடியதுதன்னை
வாலியவெயிற்றினிடைவல்லைகொடுமீண்டு
மூலமெனவேநிறுவிமொய்ம்பினொடுபோனான். (௧௯)

அற்பொழுதுநாலுகமொராயிரமுமேக
வெற்பொழுதுதோன்றியதியான்றுயிலுணர்ந்தே
கற்பனையியற்றியகருத்தினினைபோழ்தி
னிற்புழியடைந்தனநெடும்புணரியெல்லாம். (௨௦)

அருத்திகெழுபாற்கடலராவணையின்மீதே
திருத்திகழுமார்புடையசெம்மல்புவிதன்னை
யிருத்தினமெயிற்றினிலெடுத்தெனநினைத்தே
கருத்தினிலகந்தைகொடுகண்டுயிலலுற்றான். (௨௧)

ஆனபொழுதத்தினிலளப்பிலிமையோரைத்
தானவரைமானுடவர்தம்மொடுவிலங்கை
யேனையவுயிர்த்தொகையையாவையுமளித்தே
வானகமும்வையகமுமல்கும்வகைவைத்தே. (௨௨)

மன்னியவுமிந்திரனைவானரசிலுய்த்தே
யன்னவனொழிந்ததிசையாளர்களையெல்லாந்
தந்நிலைநிறுத்தியதுதன்னைநெடிதுன்னி
யென்னையலதோர்கடவுளின்றெனவெழுந்தேன். (௨௩)

துஞ்சலுறுகாலைதனிற்றுஞ்சுமெழும்வேலை
யெஞ்சலிலுயிர்த்தொகுதியாவுமெழும்யானே
தஞ்சமெனையன்றியொருதாதையிலையார்க்கும்
விஞ்சுபொருள்யானெனவியந்தெனைநடந்தே. (௨௪)

மல்லலுறுமேலுலகுமாதிரமுமேனைத்
தொல்லுலகுமேருவொடுசுற்றுகடலேழு
மொல்லெனவிரைத்தெழுமுயிர்த்தொகையுமல்லா
வெல்லையில்பொருட்டிறனும்யானெடிதுநோக்கி. (௨௫)

இப்பொருளனைத்துமுனம்யான்பயந்தவென்றா
லொப்பிலையெனக்கெனவுளத்திடைமதித்தே
னப்பொழுதிலாரமுதவாழியிடையாழிக்
கைப்புயலகந்தையொடுகண்டுயிலல்கண்டேன். (௨௬)

அன்றவனைமாலெனவறிந்தனனறிந்துஞ்
சென்றனனகந்தையொடுசெய்யதிருவைகு
மன்றன்மணிமார்பமிசைவன்கைகொடுதாக்கி
யின்றுயிலுணர்ந்திடுதியென்றலுமெழுந்தான். (௨௭)

எற்றெழுமுராரிதனையாரையுரையென்றே
சாற்றுதலும்யாமுனதுதாதையறியாய்கொ
னாற்றலைகொண்மைந்தவெனநன்றெனநகைத்துத்
தேற்றிடினுநீதுயிறெளிந்திலைகொலென்றேன். (௨௮)

Digitized By Roja Muthiah Research Library

தந்தையெனவந்தவர்கடாமுதவுகின்ற
மைந்தர்கடமக்குரைசெய்வாசகமதென்ன
முந்துறவெமக்கிதுமொழிந்ததியல்பன்றா
லெந்தையெனவேநினைதியாம்பிரமமேகாண். (௨௯)

உந்தியிலிருந்துவருமுண்மையுணராமே
மைந்தனெனநீயெமைமனத்தினினைகுற்றா
யிந்தனமுதித்திடுமெரிக்கடவுளுக்குத்
தந்தையதுவோவிதுசழக்குரையதன்றோ. (௩௦)

நின்னுடையதாதையெனநீயுனைவியந்தா
யன்னதைவிடுக்குதியருந்தவவலத்தான்
முன்னமொருதூணிடைமுளைத்தனையவற்றா
லுன்னிலதுவேமிகவுயர்ந்தபொருளாமோ. (௩௧)

துய்யமகனும்பிருகுசொற்றசபதத்தா
லையிருபிறப்பினையடிக்கடியெடுத்தாய்
மெய்யவையனைத்தையும்விதித்தனம்விதித்தெங்
கையதுசிவந்துளதுகண்டிடுதியென்றேன். (௩௨)

வேறு.

அன்றவற்கெதிர்புகுந்தனையசொற்புகறலுங்
குன்றெடுத்திடுகரக்கொண்டல்போன்மேனியா
னன்றெனச்சிரமசைஇநகைசெயாவெகுளியாற்
பொன்றளிர்க்கரதலம்புடைபுடைத்துரைசெய்வான். (௩௩)

நச்சராப்பூண்டிடுநம்பனுன்சென்னியி
னுச்சியந்தலையினையுகிரினாற்களைதனு
மச்சமாய்வீழ்ந்தனையதுபடைத்தின்னமும்
வைச்சிலாய்நன்றுநீமற்றெமைத்தருவதே. (௩௪)

நேயமாய்முன்னரேநின்னையீன்றுதவிய
தாயும்யாமன்றியுந்தந்தையும்யாமுனக்
காயதோர்கடவுள்யாமடிகள்யாமைந்தநம்
மாயையாலின்றிவண்மதிமயக்குறுதிகாண். (௩௫)

பொன்னலாதாங்கொலோபூணெலாமிறைபுரி
மன்னலாதாங்கொலோமாநிலமாநிலந்
தன்னலாதாங்கொலோதருவதோர்வளமதி
லென்னலாதாங்கொலோவெச்சராசரமுமே. (௩௬)

எண்ணுவிப்போனுநானெண்ணுகின்றோனுநான்
கண்ணுதற்பொருளுநான்காண்டகும்புலனுநா
னெண்ணுதற்கரியனாரணக்கடவுளான்
விண்ணகத்தலைவனான்வேதமும்பொருளுநான். (௩௭)

ஆதிநானுருவுநானருவுநானிருளுநான்
சோதிநானத்தனான்றூயனான்மாயனான்
யாதுநான்பூதநான்யாருநான்சங்கரன்
பாதிநானவனுநான்பரமெனும்பொருளுநான். (௩௮)

Digitized By Roja Muthiah Research Library

என்றுபற்பலவுரைத்திடுதலும்யானெதிர்
சென்றுருத்திருவருஞ்செருவினைப்புரிதுமேல்
வென்றியுற்றவரரோமேலையோரெழுகென
வன்றிறற்போர்செய்வான்வந்தனன்மாலுமே. (௩௯)

ஏற்றெழுந்தோர்சிலையேந்தியேவாங்கிமால்
கூற்றிரும்படைமுதற்கொடியவெம்படையெலா
மாற்றருந்தன்மையால்வல்லையுய்த்திடுதல்கண்
டாற்றினன்குசைகளாலனையவெம்படைதொட. (௪0)

வேறு.

ஆங்கவையழிவுறவரியுந்தன்படை, வாங்கினன்விடுத்தலும்வருதல்கண்டியான்,
பாங்கரினின்றவென்படையையங்கையிற், றாங்கினின்றுய்த்தனன்றடுத்துமீண்ட
தே. (௪௧)

அப்படைமீண்டபினுதியாகிய, வொப்பருஞ்சிவனளித்துளதுபுங்கவ [ன்.
ரெப்பெரும்படைக்குமோரிறைவனுயது, மைப்புயன்மேனிமால்வழுத்திவாங்கின

மஞ்சனமுதலியமறுவில்பூசனை, நெஞ்சுறுபுலன்களினிரப்பியோச்சலு
மெஞ்சலிலமரர்களிரியமேற்செலு, நஞ்சினுங்கொடிதெனநடந்தவேலையே. (௪௨)

முன்னமேயெனக்குமம்முக்கணுயக, னன்னதோர்படையளித்தருளினனதை,
யுன்னியேவழிபடஇயொல்லையுய்த்தனன், வன்னிமேல்வன்னிசெல்வண்ணமென்
னவே. (௪௪)

ஒருதிறத்திருவருமுனுற்றியேவிய, வரனருள்பெரும்படைதம்மிலாடல்செய்
தெரிகனற்கற்றைகள்யாண்டுஞ்சிந்தியே, திரிதலுற்றுலகெலாஞ்செற்றுலாயவே. ( )

அப்படைதிரிதலுமவைகள்வீசிய, துப்புறழ்கொழுங்கனற்றுல்லைவானினு
மிப்புவிமருங்கினுமீண்டவானவர், வெப்புறவிரிந்தனர்விதிர்ப்புற்றேங்குவார். ( )

வீண்டனரொருசிலர்வெதும்பிவிம்மியே, மாண்டனரொருசிலர்வந்தநஞ்சமுண்
டாண்டவர்கழலிணையடைதும்யாமெனுக், காண்டகுகயிலையின்கண்ணுற்றூர்சிலர்.

காரெலாங்கரிந்தனககனந்தன்னொடு, பாரெலாமெரிந்தனபௌவப்பாற்படு[தேம்.
நீரெலாம்வறந்தனநிரந்தபல்லுயிர்ப், பேரெலாந்தொலைந்தனபின்னும்போர்செய்

இந்தவாறமர்புரிந்திட்டகாலையிற், றந்தையாரருளினுற்றமியன்மாமுகம்
வந்துநாரதனெனுமறுவின்மாமுனி, சிந்தைசெய்தெமக்கிவைசெப்பன்மேயினுன்.

நீர்முதனுமெனநினைந்துகூறியே, போர்முதலேசிலபுரிகின்றீர்கொலா
மோர்முதலன்றியேயில்லையுங்களி, லார்முதலிருவருமன்னபண்பினீர். (௫0)

பொருசமர்கருதியேபுகுந்தபோழ்தினு, மரியதோர்படையலதுலகந்தீப்பதோர்
வெருவரும்பெரும்படைவிடுத்திரப்படை, யருளியகடவுளையயர்த்திர்போலுமால்.

கடவுளைமறந்திரேற்கருதிநீர்பெறு, மடுபடைநாமமுமயர்த்திரோவது
நெடிதுநும்மனத்தினினினைந்துதேற்றுமின், விடுமினியமரெனவிளம்பிமேலுமே.

வாதியாவின்னுநீர்மலைதிரேயெனி,னுதியாயருவுருவானதோர்பொருள்,சோதியா
ய்நடுவுறத்தோன்றுங்காண்டிரென், றோதியாலெமக்கிவையுணர்த்திப்போயினுன்.

போயினனுரைத்தசொற்புந்திகொண்டிலந், தீயெனவுருத்திகல்செருக்குநீங்கல
மாயிரமாண்டுகோறமரியற்றின, மாயிரும்புவனமுமுயிருமாயவே. (௫௪)

Digitized By Roja Muthiah Research Library

இங்கிவையாவையுமிறுதியூழியி, னங்கியினடம்புரியண்ணலேக்கியே
தங்களிலிருவருஞ்சமர்செய்கின்றனர்,புங்கவர்தாமெனும்புகழைவெஃகினூர். (ருரு)

அறிவறைபோயினரகந்தையுற்றன, ருறுவதொன் றுணர்கிலருண்மையோர்கிலர்
சிறுவரிலிருவருஞ்சீற்றப்போர்செயா, விறுதிசெய்கின்றனருலகம்யாவையும். (ருசு)

ஈங்கிவர்செயலினையின்னுங்காண்டுமேற், றீங்குறுமுலகுயிர்சிதைந்துவீடுமா
லோங்கியகந்திலையுணர்த்திறுயிடைத், தாங்கரும்வெஞ்சமர்தணிந்துநிற்பரால். (ருஎ)

தம்மையேபொருளெனச்சாற்றுகின்றதும், வெம்மைசேர்வெகுளியும்வெறுத்து வீட்டியே, செம்மைசேர்மனத்தராய்த்திகழ்வர்தாமெனு, வெம்மையாளுடையவ னெண்ணினனரோ. (ருஅ)

வேறு.

ஆன்றதோரளவைதன்னிலடைந்ததுமரகந்தன்னில்
வான்றிகழ்பாருட்கங்குன்மதிபகறழுவுநென்னன்
ஞான்றதுதனில்யாங்கண்டுநடுக்குறாநடுவணுகத்
தோன்றினன்கனற்குன்றேபோற்சொல்லரும்பரத்தின்சோதி. (ருகூ)

தோற்றியசெய்யசோதிதொல்லமருழந்தியாங்கண்
மாற்றரும்படைகளாகவழங்கியவிரண்டும்வெளவி
யாற்றருந்தன்மைத்தாகவணுகுறாதகன்றுபோகிச்
சீற்றமுஞ்சமருநீங்கிச்சேணுறநோக்கிநின்றேம். (சு0)

நிற்றலும்யாங்கள்கேட்பநெடுவிசும்பிடையோர்வார்த்தை
தெற்றெனவெழுந்ததம்மாசிறுவிர்காணுமதுவன்மை
பற்றலர்புரமூன்றட்டப்ரமனேகாண்பான்சோதி
மற்றிதனடியுமீறும்வரன்முறைதேருமென்றே. (சுக)

கேட்டனமதனைநெஞ்சிற்கிளர்ந்தெழுசீற்றம்யாவும்
வீட்டினமெனினும்பின்னும்விட்டிலமகந்தைதன்னைக்
காட்டியவெமதுமுன்னேன்காண்பனும்வலியையென்ன
வீட்டுடன்விசும்பிற்சொற்றூர்யார்கொலென்றெண்ணிப்பின்னும். (சுஉ)

ஏனுறவெதிர்ந்தியாஞ்செயிகலினுக்கிடையூறாக
நீணிலமதனைக்கீண்டுநிமிர்ந்துவான்புகுந்துநீடு
மாணுறுசோதிதானுமறைமுனியுரைத்தவாறு
காணியவந்ததெம்மிற்கடந்தவான்பொருள்கொலென்றேம். (சுங)

நிதறுகாலின்வந்தசெந்தழலன்றுலீது
யாதுமொன்றறிதறேற்றாமிருவருமிதனையின்னே.
யாதியுமுடியுநாடியன்னதுகாண்டுமென்று
மாதவன்றனும்யானும்வஞ்சினமிசைத்துமன்னே. (சுச)

நீடுவானுருவிச்சென்றுநிலனுறவிடந்துபுக்கு
மோடிநாமொல்லைதன்னிலுற்றிதற்கடியுமீறு
நாடினலவற்றிலொன்றுநலம்பெறமுன்னங்கண்டோர்
பீடுயர்தலைவரீதேதணிவெனப்பேசிநின்றேம். (சுரு)

முடியினைக்காண்பனென்றேமொழிந்தனன்றமியனேனை
யடியினைக்காண்பனென்றேயரியுமங்கிசையாநின்று
னடைபயின்மழலையோவாநாகிளஞ்சிறுவர்வானிற்
சுடர்மலிகதிரைக்கையாற்றீண்டுவான்றுணியுமாபோல், (சுசு)

Digitized By Roja Muthiah Research Library

எரியுறழ்தறுகட்செங்கணிமிலுடையெருத்தம்யாரு
முருகெழுதழனிக்கூர்வாயொள்ளெயிறிலங்குதந்தங்
கருவரையனையமேனிக்கடுநடைக்குறுந்தாள்வெள்ளைக்
குரமொடுகண்ணனன்றோர்கோலமாங்கோலங்கொண்டான். (௬௭)

ஒருபதுநூறதாகும்யோசனையுகப்பினோடு
பருமையுமாகுமந்தப்பகட்டுருவாகிமுன்னந்
தரணியையிடந்துகீழ்போய்த்தடவியேதுருவிச்சென்று
நிரைபடுபுவனம்யாவுநீந்தியேபோயினானால். (௬௮)

பாதலநாடியன்னான்படர்தலும்யானுமாங்கோ
ரோதிமவடிவமாகியொல்லையிலெழுந்துமீப்போய்
மேதகுவிசும்பின்மேலாம்வியன்புவனங்களூடிப்
போதலுஞ்சோதிமுன்னம்போலமேல்போயிற்றம்மா. (௬௯)

முன்னமோரேனமாகிமுரணொடுபுவனிகீண்டு
வன்னியாயெழுந்தசோதிவந்ததோர்மூலங்காண்பா
னுன்னியேபோனமாலோனூக்கியேசெல்லச்செல்லப்
பன்னெடுங்காலஞ்சென்றபாதமுங்காணான்மாதோ. (௭0)

நொந்தனவெயிறுமேனிநுடங்கினநோன்மையாவுஞ்
சிந்தினபுனலுண்வேட்கைசேர்ந்தனவுயிர்ப்பினோடும்
வந்தனதுயரம்போனவஞ்சினமகந்தைவீந்த
மூந்தையிலுணர்வுமால்பான்முழுதொருங்குற்றதன்றே. (௭௧)

தொல்லையிலுணர்ச்சிதோன்றத்துண்ணெனத்தெளிந்தகண்ண
னல்லுறழ்புயலின்றோற்றத்தண்ணலங்களிற்றின்யாக்கை
மெல்லவேதரிக்கலாற்றான்வீட்டவுங்கில்லான்மீண்டு
செல்லவுமூற்றமில்லான்சிவனடிசிந்தைசெய்தான். (௭௨)

வேறு.

என்றுமுணர்வரியவெம்பெருமானுன்றிருத்தா
ளன்றியரணில்லையவற்றையருச்சித்திடவும்
பொன்றியதென்வன்மைபொறுத்திகுறையடியே
னென்றுமுணரேனென்றுளநொந்துபோற்றினனே. (௭௩)

ஆனபொழுதிலமலன்றிருவருளாற்
றேனுலவுதண்டார்த்திருமான்மிடலினனா
யேனவடிவோடெழுந்துபுவிப்பாலெய்தி
வானுறுசோதிக்கணித்தாவந்துவணங்கிநின்றான். (௭௪)

வேறு.

நின்றானொருபானெடுமாலதுநிற்கயான்முன்
பின்றாவகையாற்பெருஞ்சூளிவைபேசிவானிற்
சென்றாயிரமாண்டுதிரிந்துதிரிந்துநாடிக்
குன்றாதசோதிக்கொழுந்தின்றலைகூடலேன்யான். (௭௫)

மீளும்படியுநினையேன்வினையேனுமீளிற்
சூளும்பழுதாமதுவன்றித்துணிந்துமுன்ன
மூளுஞ்சுடரின்முதல்கண்டரிமூர்த்தியாவா
னாளென்பரென்னையழிவெய்துமிவ்வாற்றன்மன்னே. (௭௬)

Digitized By Roja Muthiah Research Library

எந்நாள்வரைசெல்லினுஞ்செல்லுகவின்னும்விண்போய்ப்
பொன்னார்முடிகண்டபினல்லதுபோகலேனென்
றுன்னுவதுகாணியபோதலுமுள்ளம்வெம்பி
மன்னுவுயிருமுலைந்தாற்றலுமாண்டதன்றே. (எஎ)

கண்ணுஞ்சுழன்றசிறைநொந்தனகாலுமோய்ந்த
வெண்ணுந்திரிந்ததுபோதிலெழுந்தசோதி
யுண்ணின்றசித்தரெனவேபலரொல்லைமேவி
விண்ணின்றலைபோயிதுவொன்றுவிளம்பலுற்றார். (எஅ)

வானார்பரஞ்சோதியினீற்றினைவாரிதன்னுண்
மீனார்தரவேதிரிகின்றதொர்வெள்ளையன்னந்
தானாமுணருஞ்சிறைபோகித்தளர்ந்துவன்மை
போனாலுநாடவருகின்றதுபோலுமம்மா. (எகூ)

அன்னந்தனக்கீதறிவின்மையதாகுமல்லாற்
பின்னொன்றுளதோதுணிவுற்றதொர்பெற்றிநோக்கி
னின்னுஞ்சிறிதுபொழுதேகினிறக்குமிந்த
மன்னுஞ்சுடரைச்சிவனென்றுமனங்கொளாதோ. (அ0)

மாலென்பவனுநிலங்கீண்டனன்வல்லையேகி
மூலந்தெரிவானுணராமன்மூரணுநீங்கிச்
சீலங்குறுகச்சிவனேசரணென்றுபைய
ஞாலந்தனில்வந்தனல்வெற்பினைநண்ணிநின்றான். (அக)

மூந்துற்றிதனையருள்செய்திடுமூர்த்திதானே
சிந்தைக்குண்மாசுதனைத்தீர்த்தருள்செய்யினுய்யு
மிந்தப்பறவையெனயானுமிதனைநாடிப்
புந்திக்குண்மையலொழிந்தேயவர்ப்போற்றிசெய்தேன். (அஉ)

ஈசன்னருளாலிவைகூறினரேகலோடு
மாசின்வழியாமகந்தைத்திறனாதியாய
பாசங்களைவீட்டியரன்புகழ்பன்னியேத்தி
நேசங்கொடுபூசனைசெய்யநினைந்துமீண்டேன். (அங)

வேறு.

வந்துகண்ணன்றனையணுகிவான்பொருள்யாமென்றிகலி
முந்துறுவெஞ்சமரியற்றிமுனிமொழியுமுணர்ந்திலமாற்
றந்தைவரவறியாமற்றாண்முடியுந்தேடலுற்றே
மந்தமுறும்வேலைதனிலவனருளாலவற்புகழ்ந்தேம். (அச)

ஈண்டுநிலனிருவிசும்பிற்கிளர்ந்துமடிமுடியுணரே
மீண்டுமவன்றன்னருளான்மிடல்பெற்றுவந்தனமா
லீண்டுசிவன்றனைவழிபட்டிருவருமன்னவன்றோற்றங்
காண்டுமெனயானுரைப்பக்கண்ணனுமங்கதற்கிசைந்தான். (அரு)

இருவருமச்சிவனுருவையியன்முறையாற்றாபித்து
விரைமலர்மஞ்சனஞ்சாந்தம்விளக்கழலாதியவமைத்துப்
பொருவருபூசனைபுரிந்துபோற்றிசெய்துவணங்குதலு
மெரிகெழுசோதிக்கணித்தாவெந்தையவண்வந்தனனே. (அசு)

Digitized By Roja Muthiah Research Library

மைக்களமுமான்மழுவும்வரதமுடனபயமுறு
மெய்க்கரமுநாற்புயமும்விளங்குபணிக்கொடும்பூணுஞ்
செக்கருறுமதிச்சடையுஞ்சேயிழையோர்பாகமுமாய்
முக்கணிறையாங்காணமுன்னின்றேயருள்புரிந்தான். (௮௭)

அவ்விடையாமிருவர்களுமமலன்றனடிவணங்கிச்
செவ்விதினின்றவனருளிற்றிளைத்திதனைச்செப்பினமாண்
மெய்வகையாமன்பின்றிவிளங்காநின்னியன்மறையு
மிவ்வகையென்றுணராதேயாங்காணற்கெளிவருமோ. (௮௮)

புந்திமயங்கிப்பொருங்காலையெம்முன்னிற்
செந்தழலின்மேனிகொடுசென்றருளித்தொல்லறிவு
தந்துநினையுணர்த்தித்தாக்கமருநீக்கினையா
லெந்திரம்யாமுன்னணின்றியற்றுகின்றாய்நீயன்றே. (௮௯)

உன்னையுணருமுணர்வுபுரிந்தாலுன்னைப்
பின்னையுணர்வேம்பெருமசிறியேஞ்செய்த
புன்னெறியையெல்லாம்பொறுத்தியாற்றஞ்சிறுவ
ரென்னசெயினுமினிதன்றோவீன்றவர்க்கே. (௯0)

இன்னுத்தகைசேரிரும்பினைவல்லோனிலங்கும்
பொன்னுக்கியபரிசுபோலேயெமையருளி
மன்னுக்கினையயர்த்தோமற்றுனையும்யாங்களுயிர்
தொன்னுட்பிணித்ததொடரகற்றவல்லோமோ. (௯௧)

வேறு.

என்றியம்பியாமேத்தலுமெதிருறநோக்கிக்
குன்றவில்லுடையொருவனீர்செய்தனகுறியா
வொன்றுமெண்ணலீர்நும்பெரும்பூசனையுவந்தா
மன்றுமக்கருள்பதந்தனையின்னும்யாமளித்தேம். (௯௨)

வேண்டுநல்வரங்கேண்மினீரென்றலும்விசும்பிற்
றாண்டவம்புரிபகவநின்சரணமேயரணாப்
பூண்டிடுந்தலையன்பருளென்றலும்புரிந்து
காண்டகுந்தழற்சோதியுளிமைப்பினிற்கலந்தான். (௯௩)

கலந்தகாலையில்யாங்கண்முன்றொழுதெழுங்காலைச்
சலங்கொள்பான்மையின்முன்னுறத்தேடுவான்றழலாய்
மலர்ந்தபேரொளிமீமிசைசுருங்கியேவந்தோர்
விலங்கலாகியதுலகெலாம்பரவியேவியப்ப. (௯௪)

அன்னதாஞ்சிவலிங்கருபந்தனையணுகி
முன்னமாகியேமும்முறைவலஞ்செய்துமுறையாற்
சென்னியாற்றொழுதேத்தியெம்பதங்களிற்சென்றேம்
பின்னரெந்தையைமறந்திலம்போற்றுதும்பெரிதும். (௯௫)

அரியும்யானுமுன்றேடுமவ்வனற்கிரியனல
கிரியெனும்படிநின்றதாலவ்வொளிகிளர்ந்த
விரவதேசிவராத்திரியாயினதிறைவற்
பரவியுய்ந்தனரன்னதோர்வைகலிற்பலரும். (௯௬)



Digitized By Roja Muthiah Research Library

ஆதலாலவனருள்பெறினவனியலறியு
மோதியாகுவரல்லரேற்பலகலேயுணர்ந்தென்
வேதநாடியென்னிறையுமன்னவனிலேவிளங்கார்
பேதைநீரருமாங்கவரல்லதுபிறரார். (௯)

மோகவல்வினையாற்றியேபவத்திடைமூழ்கும்
பாகரல்லவர்க்கெய்திடாதவனருள்பவமும்
போகமாற்றிடுதருமமுநிகர்வருபுனிதர்க்
காகுமற்றவனருணிலேபாகராமவரே. (௧௦)

நீயுந்தொல்வினைநீங்கலினெம்பிரானிலேமை
யாயுந்தொல்லுணர்வின்றுவந்தெய்தியதவனே
தாயுந்தந்தையுங்குரவனுங்கடவுளுந்தவமு
மேயுஞ்செல்வமுமனையவற்சார்தியாலென்றான். (௧௧)

அடிமுடிதேடுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௬௧௧.

---

## தக்கன்சிவபூசைசெய்படலம்.

மருமலரயனிவைவகுப்பநாடியே, புரிந்தனஃதெனப்புகன்றுதாதைதாள்
பரிவொடுசிறுவிதிபணிந்துகாசியாந், திருநகரதனிடைச்சேறன்மேயினான். (௧)

சென்றனன்காசியிற்சிறந்ததொன்மணி,கன்றிகையொருபுடைகங்கைவேலேயிற்,
பொன்றிகழ்செஞ்சடைப்புனிதற்காலய, மொன்றுமுன்விதித்தனனுணர்வுசேர்ந்
துளான். (௨)

அருளுருவாகியேயகிலமாவிக, டருவதுங்கொள்வதுமாகித்தானுவா
யுருவருவாகியவொப்பில்பேரொளித், திருவுருவொன்றினைச்சிவனுக்காக்கினான். ()

நாயகன்மொழிதருநவையிலாகம, மேயினமுறைதெரிவிரதனுகியே
பாய்புனல்புனைசடைப்பரமன்றன்மல, ராயிரம்யாண்டுகொறருச்சித்தேத்தினான்.()

அருச்சனைபுரிதலுமயன்றன்காதலன், கருத்துறுமன்பினைக்கண்டுகண்ணுதல்,
பொருக்கெனவெளிப்படப்புகழ்ந்துபொன்னுலாந், திருக்கழல்வணங்கினன்றெளி
வுபெற்றுளான். (௫)

அக்கையதாகியேயையநின்றனை, யிகழ்ந்தனனென்கணேயெல்லேயில்பவம் [ன்.
புகுந்தனவவையெலாம்போக்கிநின்னிடைத், தரும்பரிசன்பினைத்தருதியாலென்று

ஆயவைதொலேத்தளித்தவன்றன்பூசையி, னேயமதாகியேநிமலன்றன்கண
நாயகவியற்கையைநல்கிவல்லேயிற், போயினன்றக்கனும்புனிதனுயினான். (எ)

வேறு.

கங்கைச்சடையான்றனேத்தக்கனக்காசிதன்னி
லங்கர்ச்சனைசெய்திடப்போந்துழியம்புயன்மா
றுங்கத்திமையோரிறையாவருஞ்சூரமாதர்
சங்கத்தவருமகவெல்லேதணந்துபோனார். (அ)

Digitized By Roja Muthiah Research Library

போகுற்றவர்களனைவோரும்பொருவில்சீர்த்தி
வாகுற்றவீரன்சயந்தன்னைவழுத்தித்தங்கட்
காகுற்றதொல்லைத்தலந்தோறுமடைந்துமாதோர்
பாகத்தமலன்றனைப்பூசனைபண்ணலுற்றார். (௯)

ஆராதனைகள்புரிந்தேயனைவோருமெங்கும்
பேராதுநிற்கும்பெருமானருள்பெற்றுமெய்யிற்
றீராதசின்னங்களுந்தீர்ந்துசிறந்துதத்த
மூராகியதோர்பதமேவியுறைதலுற்றார். (௧0)

மேதக்கதக்கன்மகந்தன்னில்விரைந்துபுக்காங்
கேதத்தடிசின்மிசைந்தேபொருள்யாவுமேற்றுப்
பூதத்தரின்மாய்ந்தெழுந்தேதம்புரிகடோறும்
பேதைத்தொழிலந்தணர்யாரும்பெயர்ந்துபோனார். (௧௧)

என்றிங்கிவைகள்குரவோனிசைத்திட்டல்கேளா
நன்றென்றுசென்னிதுளக்குற்றுநனிமகிழ்ந்து
குன்றின்சிறைகொய்தவன்றந்தகுரிசிலுள்ளத்
தோன்றுங்கவலையிலனாகியவ்வும்பருற்றான். (௧௨)

தக்கன்சிவபூசைசெய்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௬எ௩.

---

# கந்தவிரதப்படலம்.

உரைசெறிமகவான்செம்மலும்பரிலிருப்பவிம்பர்
முரசெறிதானைவேந்தன்முசுகுந்தனென்னும்வள்ளல்
விரைசெறிநீபத்தண்டார்வேலவன்விரதம்போற்றித்
திரைசெறிகடற்பாராண்டசெயன்முறைவிளம்பலுற்றாம். (௧)

முந்தொருஞான்றுதன்னின்முசுகுந்தன்வசிட்டனென்னு
மந்தணனிருக்கையெய்தியடிமுறைபணிந்துபோற்றிக்
கந்தவேள்விரதமெல்லாங்கட்டுரைபெரியோயென்ன
மைந்தநீகேட்டியென்னுமற்றவைவழாதுசொல்வான். (௨)

எள்ளருஞ்சிறப்பின்மிக்கவெழுவகைவாரந்தன்னுள்
வெள்ளிநாள்விரதந்தானேவிண்ணவருலகங்காத்த
வள்ளறன்விரதமாகுமற்றதுபுரிந்தமேலோ
ருள்ளமேனினைந்தவெல்லாமொல்லையின்முடியுமன்றே. (௩)

பகிரதனென்னும்வேந்தன்படைத்தபாருலகையெல்லா
நிகரறுகோரனென்னுநிருதனங்கொருவன்வௌவ
மகவொடுமனையுந்தானும்வனத்திடைவல்லையேகிப்
புகரவன்றனதுமுன்போய்த்தன்குறைபுகன்றுநின்றான். (௪)

பார்க்கவனென்னுமாசான்பகீரதனுரைத்தல்கேளா
வேற்கரன்மகிழுமாற்றால்வெள்ளிநாள்விரதந்தன்னை
நோற்குதிமூன்றியாண்டுநுங்களுக்கல்லல்செய்த
மூர்க்கனுமுடிவனீயேமுழுதுலகாள்வையென்றான். (௫)

Digitized By Roja Muthiah Research Library

நன்றெனவினவிமன்னன்ஞாயிறுமுதலாநாளி
லொன்றெனும்வெள்ளிமுற்றுமுணவினைத்துறந்துமுன்பின்
சென்றிடுமிரண்டுநாளுந்திவாவினிலடிசின்மாந்தி
யின்றுயிலதனைநீத்தியாண்டுமூன்றளவுநோற்றான். (௬)

நோற்றிடுமளவிலையனுதியுடைச்செவ்வேல்வந்து
மாற்றலனுயிரையுண்டுவெல்லையின்மீண்டுசெல்லப்
போற்றியேபகீரதப்பேர்ப்புரவலன்றன்னூரெய்தி
யேற்றதொல்லரசுபெற்றானின்னுமோர்விரதஞ்சொல்வாம். (௭)

வாரிசமலர்மேல்வந்தநான்முகன்மதலையான
நாரதமுனிவனென்போனலத்தகுவிரதமாற்றி
யோரெழுமுனிவர்தம்மிலுயர்ந்திடுபதமுமேலாஞ்
சீரொடுசிறப்புமெய்தச்சிந்தனைசெய்தானன்றே. (௮)

நூற்படுகேள்விசான்றநுண்ணியவுணர்வின்மிக்கோன்
பார்ப்பதியுதவுமுன்னோன்பதமுறைபணிந்துபோற்றி
யேற்புறுமுனிவரானவெழுவகையோரில்யானே
மேற்படவிரதமொன்றைவிளம்புதிமேலோவென்றான். (௯)

முன்னவனதனைக்கேளாமுழுதருள்புரிந்துநோக்கி
யன்னதுபெறுதிதிண்ணமாறுமாமுகத்துநம்பி
பொன்னடிவழிபாடாற்றிப்பொருவில்கார்த்திகைநாணோன்பைப்
பன்னிருவருடங்காறும்பரிவுடன்புரிதியென்றான். (௧0)

நாரதன்வினவியீதுநான்புரிந்திடுவனென்னாப்
பாருலகதனில்வந்துபரணிநாளபராணத்தி
லோர்பொழுதுணவுகொண்டேயொப்பில்கார்த்திகைநாடன்னில்
வீரவேற்றடக்கையண்ணல்விரதத்தையியற்றலுற்றான். (௧௧)

தூசொடுகயத்தின்மூழ்கித்துய்யவெண்கலைகள்சுற்றி
யாசறுநியமமுற்றியான்றமைபுலத்தணுகித்
தேசிகன்றனதுபாதஞ்சென்னிமேற்கொண்டுசெவ்வேள்
பூசனைபுரிந்திட்டன்னான்புராணமும்வினவினானால். (௧௨)

கடிப்புனலள்ளித்தன்னோர்கைகவித்துண்டுமுக்காற்
படுத்திடுதருப்பையென்னும்பாயலிற்சயனஞ்செய்து
மடக்கொடிமாதர்தம்மைமறலியாமதித்துவள்ள
லடித்துணையுன்னிக்கங்குல்வதியுமுறங்காதுற்றான். (௧௩)

அந்நாள்செல்லப்பின்னருரோகிணியடைந்தகாலைச்
சந்தியாநியமமெல்லாஞ்சடக்கெனமுடித்துக்கொண்டு
கந்தவேள்செம்பொற்றண்டைக்கான்முறைவழிபட்டேத்தி
வந்தமாதவர்களோடும்பாரணமகிழ்ந்துசெய்தான். (௧௪)

பாரணம்விதியிற்செய்தோன்பகற்பொழுதுறங்குமாயி
னாரணமறையோர்தம்மிலம்பதிற்றிருவர்தம்மைக்
காரணமின்றிக்கொன்றகடும்பழியெய்துமென்னா
நாரதன்மாயம்வல்லோனிமைத்திலனயனஞ்சற்றும். (௧௫)

Digitized By Roja Muthiah Research Library

விழியொடுமிமைகூடாமேவெய்யவன்குடபால்வீழும்
பொழுதளவிருந்துமற்றைப்புறத்துளசெயலும்போற்றி
யழிவறுவிரதமிவ்வாறாற்றிருவருடமாற்றி
யெழுவகைமுனிவோருக்குமேற்றமாம்பதத்தைப்பெற்றான். (௧௬)

இந்தநல்விரதந்தன்னையீண்டொருமறையோனோற்று
முந்தியமனுவேயாகிமுழுதுலகதனையாண்டா
னந்தணனொருவன்பின்னுமவ்விரதத்தைப்போற்றிச்
சிந்தையினினைந்தாங்கெய்தித்திரிசங்குவாகியுற்றான். (௧௭)

ஈங்கொருமன்னன்வேடனிருவருநோற்றுவண்மை
தாங்கியவந்திமானேசந்திமானென்றுபேராய்
வீங்குநீருடுத்தபாரைமேலைநாட்புரந்தாரென்ப
வாங்கவர்பின்னாண்முத்தியடைவதுதிண்ணமம்மா. (௧௮)

இப்படியாரனாளில்விரதத்தையியல்பினோற்று
முப்புவனத்தின்வேண்டுமுறைமையையடைந்தநீரார்
மெய்ப்படுதொகையையாரேவிளம்புவரீதேயன்றி
யொப்பரும்விரதம்வேறுமொன்றுளதுரைப்பக்கேண்மோ. (௧௯)

வெற்பொடுமவுணன்றன்னைவீட்டியதனிவேற்செங்கை
யற்புதன்றன்னைப்போற்றியமரருமுனிவர்யாருஞ்
சொற்படுதுலையின்றிங்கட்சுக்கிலபக்கந்தன்னின்
முற்பகலாதியாகமூவிருவைகனோற்றார். (௨0)

முந்தியவைகலாதிமூவிருநாளுங்காலை
யந்தமில்புனலின்மூழ்கியாடையோரிரண்டுதாங்கிச்
சந்தியிற்கடன்கள்செய்துதம்பவிம்பங்கும்பத்திற்
கந்தனைமுறையேபூசைபுரிந்தனர்கங்குற்போதில். (௨௧)

நிறைதருகட்டிகூட்டிநெய்யினாற்சமைக்கப்பட்ட
குறைதவிர்மோதகத்தைக்குமரநாயகற்கருத்திப்
பிறவுளவிதியுஞ்செய்துபிரான்றிருப்புகழ்வினாவி
யுறுபுனல்சிறிதுமாந்தியுபவசித்திருந்தார்மாதோ. (௨௨)

ஆரணமுனிவர்வானோரங்கதன்மற்றைவைகல்
சீரணிமுருகவேட்குச்சிறப்பொடுபூசையாற்றிப்
பாரணம்விதியிற்செய்தார்பயிற்றுமிவ்விரதந்தன்னாற்
றாரணியவுணர்கொண்டதம்பதத்தலைமைபெற்றார். (௨௩)

என்றிவைகுரவன்செப்பவிறையவன்வினவியெந்தாய்
நன்றிவைபுரிவனென்னாநனிபெருவேட்கையெய்தி
யன்றுதொட்டெண்ணில்காலமவ்விரதங்களாற்றிக்
குன்றெறிநுதிவேலையன்குரைகழலுன்னிநோற்றான். (௨௪)

வேறு.

ஆனகாலையிலாறுமாமுகமுடையமலன்
கோனவன்றனக்கருளுவான்மஞ்ஞைமேல்கொண்டு
தானைவீரனுமெண்மருமிலக்கருஞ்சார
வானுளோர்களுங்கணங்களுஞ்சூழ்வுறவந்தான். (௨௫)

Digitized By Roja Muthiah Research Library

வந்ததோன்றுமன்னவர்மன்னவன்மகிழ்ந்து
கந்தவேளடிபணிந்தனன்கைதொழூஉப்பரவ
வந்தமில்பகல்விரதங்களாற்றினையதனா
லெந்தநல்வரம்வேண்டினையதுபுகலென்றான். (௨௬)

என்றகாலையின்முசுமுகமுடையவனெந்தாய்
நன்றுபாரெலாமெனதுசெங்கோலிடைநடப்பான்
வென்றிமொய்ம்பினனாதியாம்வீரரையெல்லா
மொன்றுகேண்மையிற்றுணைவராத்தருதியென்றுரைத்தான். (௨௭)

மன்னனிவ்வகைவேண்டுகோள்வினவுறுவள்ள
லன்னவாறுனக்குதவுவமென்றருள்புரிந்து
மின்னல்வாட்படைவீரமொய்ம்பன்முதல்விளம்புந்
துன்னுதானையந்தலைவரைநோக்கியேசொல்வான். (௨௮)

நோற்றல்கூடியமுசுகுந்தனும்மினுமெம்பா
லேற்றமேதகுமன்பினானெழுகடற்புவியும்
போற்றவைகுவானீவிர்களாங்கவன்புடைபோ
யாற்றல்சான்றிடுதுணைவராயிருத்திரென்றறைந்தான். (௨௯)

வேறு.

முழுதருட்புரிதருங்கடவுள்சொல்வினவியேமுடிவதில்லாச்
செழுமதித்தண்குடைச்சூர்குலந்தனையடுந்திறலினேங்கள்
பழிபடப்பானுவின்வழிவருஞ்சிறுமகன்பாங்கராகி
யிழிதொழிற்புரிகிலோமெனமறுத்துரைசெய்தார்யாரும்வீரர். (௩0)

ஞானநாயகனவர்மொழிதனைத்தேர்ந்துநம்முரைமறுத்தி
ரானதோர்பான்மையானீவிர்மானுடவராயவனிமன்னன்
சேனையாகிப்புறம்போற்றியேபற்பகற்சேர்திர்பின்னர்
வானுளோர்புகழவேநோற்றுநம்பக்கலில்வருதிரென்றான். (௩௧)

ஐயன்வாய்மொழியினால்வீரமொய்ம்புடையவனாதியானோர்
மையன்மானுடவராய்த்தொல்லைநாளுடையதோர்வன்மைநீங்கி
மெய்யெலாம்வியர்வுறப்பதைபதைத்தேங்கியேவிழுமமிக்குப்
பொய்யரேம்பிழைபொறுத்தருடியாலென்றுபொன்னடிபணிந்தார். (௩௨)

கமலமார்செய்யசேவடியின்மேற்றாழ்ந்துகைதொழுதுபோற்றிக்
குமரவேள்விடைதனைப்பெற்றுமானவரெலாங்கொற்றமன்னன்
றமர்களாயொழுகினார்நேமியம்படையுடைத்தருமமூர்த்தி
யமரர்கோனிளவலாயாங்கவன்பின்செலுமமைதியேபோல். (௩௩)

ஆயதோர்காலையின்முசுமுகத்திறையவனடல்வேற்கை
நாயகன்பொற்பதம்வந்தியாநிற்பநல்லருள்புரிந்தே
பாயபொன்சுடர்மணித்தோகையம்புரவியும்படைகளாகு
மாயிரும்பூதருந்தானுமந்நிலைதனின்மறைதலுற்றான். (௩௪)

வேறு.

மறைந்தனன்குமரனேகமன்னவன்மகிழ்ச்சிகொண்டு
சிறந்திகேருலூரென்னுந்திருநகரசின்மேவி
யறந்தருமாடவீதியளப்பிலபுரிவித்தாங்கே
நிறைந்திவீரர்தம்மைநிலைபெறவிருத்தினானே. (௩௫)

Digitized By Roja Muthiah Research Library

ஆயவர்தங்கட்கெல்லாமரும்பெறலாக்கமுள்ள
தேயமுங்கரிதேர்வாசித்திரள்களும்வரிசைமுற்றுந்
தூயபல்சனங்களாருந்தொகுதியுமுதவித்தண்ட
நாயகமுதல்வராகநல்கினன்ஞாலமன்னன். (௧௬)

அன்னதோர்காலந்தன்னிலரம்பையரவனியாளு
மன்னவர்தம்பாற்றோன்றிவளர்தலும்வாகைமொய்ம்பின்
முன்னவன்முதலோர்க்கெல்லாமுசுகுந்தவேந்தனந்தக்
கன்னியர்தம்மைக்கூவிக்கடிமணமியற்றுவித்தான். (௧௭)

அந்தமில்வன்மைசான்றவாடலம்புயத்தோன்புட்ப
கந்தியென்றுரைபெற்றுள்ளகன்னிகைதன்னைவேட்டுச்
சிந்தையின்மகிழ்வாற்சேர்ந்துசித்திரவல்லியென்னும்
பைந்தொடிதன்னையன்பாற்பயந்தனன்பதுமமின்போல். (௧௮)

அத்தகுபொழுதிற்பின்னையனகனேசனகனென்னும்
புத்திரர்தம்மைநல்கிப்புவனியாண்முசுகுந்தற்குச்
சித்திரவல்லியென்னுஞ்சீர்கெழுபுதல்விதன்னை
மெய்த்தகுவதுவைநீரால்விதிமுறைவழாமலீந்தான். (௧௯)

ஏனையவீரர்தாமுமியல்புளிவழாமல்வேட்ட
தேனிவர்குழலாரோடுஞ்சிறந்தவில்வாழ்க்கைபோற்றிப்
பானலங்குதலைச்செவ்வாய்ப்பாலரைநீலவேற்கண்
மானனையாரைநல்கிமனுகுலத்தொன்றியுற்றார். (௨௦)

சித்திரவல்லியென்னுஞ்சீருடைச்செல்வியங்கோர்
தத்தையைவளர்த்தலோடுந்தண்டகத்தருமன்றேவி
யத்தனிக்கிளியைவெஃகவாங்கவன்றூதர்போந்து
கைத்தலத்ததனைப்பற்றிக்கடிதினிற்கொடுபோயீந்தார். (௨௧)

அவ்வழிகிள்ளைகாணாளாயிழையயர்தலோடு
மெவ்வழிபோயிற்றோவென்றிறையவனுலகினூடி
மைவழிகின்றமேனிமறலிதன்றுணைவியாளுள்
கைவழியமருந்தன்மைகதுமெனவுணர்ந்தானன்றே. (௨௨)

பூதலம்புரந்தசெங்கோற்புரவலன்வீரமொய்ம்ப
ராதியர்தம்மைக்கூவியங்ஙனந்தூண்டவன்றே
ரேதமில்கரிதேர்வாசியெல்லையின்மறவர்சுற்ற
மேதியங்கடவுண்மூதூர்விரைந்துபோய்வளைந்துகொண்டார். (௨௩)

தன்னகர்வளைதலோடுந்தருமன்வந்தேற்றகாலை
யன்னவனொடுபோர்செய்தேயடுமுரண்டொலைச்சியம்பொன்
வன்னமென்கிள்ளைதன்னைவாங்கினர்மீண்டுதங்கண்
மின்னுளமகிழநல்கிவேந்தற்குவிசயஞ்செய்தார். (௨௪)

சித்திரவல்லிபின்னர்ச்சீர்கெழுசூல்கொண்டெற்று
மெய்த்தகுபலங்காய்வேண்டிவேண்டினள்வினவலோடு
முத்தணியலங்கற்றிண்டோண்முசுகுந்தனதுகொண்டேக
வத்திருமலைநன்னாட்டெக்களப்பிலோர்தம்மையுய்த்தான். (௨௫)

மஞ்சுசூழ்மலைநாடுள்ளார்மன்னவர்மன்னனானைக்
கஞ்சலரிகழ்தலோடுமாடலம்புயனுமேனைச்
செஞ்சிலைவீரர்தாமுஞ்சென்றனரங்நாட்டுள்ள
வெஞ்சுரமீரொன்பானும்வென்றொருபகலின்மீண்டார். (சசு)

பூண்டிடுகழற்கால்வீரர்பொற்புறுபுதல்வியானாள்
வேண்டியதீயபைங்காய்வியத்தகநல்கிப்பின்ன
ரீண்டுளதரணியெல்லாமேகியேதிறைகொண்டெங்கு
மாண்டையமன்னன்கோலுமாணையுநடக்கச்செய்தார். (சஎ)

கருமுதிர்கின்றகாமர்கற்பகவல்லியன்னா
ளெரிகிளரங்கிவன்மனென்பதோர்குமரன்றன்னை
யரியதோர்தவத்தின்சீராலளித்தனளதனைக்கண்டு
பெரிதுளமகிழ்ந்துமன்னன்பேரரசாட்சிசெய்தான். (சஅ)

வேறு.

அன்னகாலையில்வலாசுரனென்பதோரவுணன்
பன்னெடும்பெருஞ்சேனையுந்தானுமாய்ப்படர்ந்து
பொன்னினாட்டினைச்சுற்றியேயடர்த்தலும்புலவோர்
மன்னர்மன்னவனவனுடன்சிலபகன்மலைந்தான். (சகூ)

நிருதர்போற்றியவலாசுரன்றன்னொடுநேர்ந்து
பொருதுவென்றிலனாதலாற்பூதலம்புரக்குங்
குருதிவேற்படைமுசுகுந்தமன்னனைக்கூவி
வருதியென்றொருதூதனைவிடுத்தனன்மகவான். (ருo)

ஏயதூதுவனிருநிலம்புக்கனனிமையோர்
நாயகன்பணியுரைத்தலுநன்றெனவினவி
மாயிருந்திறல்வீரர்தம்படையொடும்வான்மேற்
போயினான்முசுகுந்தனென்றுரைபெறும்புகழோன். (ருக)

போனமன்னவன்புரந்தரன்பொன்னடிவணங்கித்
தானைவிண்ணவர்க்கதிபனாந்தலைமையைத்தாங்கி
மானினங்கண்மேன்மடங்கல்சென்றென்னவல்லவுணர்
சேனையங்கடல்யாவையுமிமைப்பினிற்செறுத்தான். (ருஉ)

சுற்றுநிற்புறுமவுணராஞ்சூழ்பெரும்பௌவம்
வற்றுகின்றுழிவலாசுரன்றன்னொடுமகவான்
செற்றநீரொடுசிலபகனின்றுபோர்செய்து
கொற்றமார்குலிசத்தினாலவனுயிர்குடித்தான். (ருங)

மன்னுதொல்புகழ்வலனுயிர்கோறலால்வலாரி
யென்னவோர்பெயர்பெற்றனன்வாகையுமெய்திக்
கொன்னுனைப்படைமுசுகுந்தவேந்தனைக்கொண்டு
பொன்னகர்த்திருக்கோயிலிற்புரந்தரன்புகுந்தான். (ருச)

காய்ந்தமாற்றலர்தம்வலிகடந்தெனைக்ககன
வேந்தனுக்கினைவீரமுமேதகுபுகழு
மீந்தெனக்குநற்றுணைவனுமாயினையிதனு
லாந்தரங்கமாஞ்சுற்றநீயல்லையோவென்றான். (ருரு)

Digitized By Roja Muthiah Research Library

என்றுமன்னனைநோக்கியேமுகமன்களியம்பிக்
குன்றுபோலுயர்தன்பெருங்கோயிலுட்கொடுபோய்
மன்றன்மாண்புனலாடியேமணிக்கலைபுனைந்து
சென்றுமாறொழுந்தேவனைப்பூசனைசெய்தான். (௫௬)

எயிலையங்கெரியூட்டியகண்ணுதலிமைய
மயிலுமைந்தனுமொருபுடைமகிழ்வுடன்மேவக்
கயிலையின்கணேயமர்தல்போலிருத்தலுங்கண்டான்
பயிலுமன்புடைமன்னவன்பரவசமானான். (௫௭)

ஆடினான்றொழுதேத்தினனடிகளைமுடிமேற்
சூடினானுளமுருகினான்றுள்ளினான்சுருதி
பாடினான்கரங்கொட்டினான்பகரொணாவுவகை
கூடினான்மொழிகுழறினான்பொடிப்புமெய்கொண்டான். (௫௮)

சிறந்தவெள்ளியங்கிரியின்மேற்கண்ணுதற்செல்வ
னுறைந்தவிப்பெருங்கோலத்தைக்கண்டுகண்டுளத்தே
நிறைந்தமாமகிழ்வெய்தியேயிருந்தனனெடுநாண்
மறந்தனன்கொலோபிறப்பினான்மயங்கியேயென்றான். (௫௯)

ஓவிலாமலேயொருபொருள்போற்றுவானுன்னி
மேவுகின்றவனவசமாய்விழிதுயின்றதுபோன்
மாவின்மாமுகம்வாங்கியுமயங்கியமன்னன்
றேவதேவனைநோக்கியேதொழுதிவைசெப்பும். (௬0)

வேறு.

ஏகனேபோற்றியார்க்குமீசனேபோற்றியம்மை
பாகனேபோற்றிமேலாம்பரஞ்சுடருருவேபோற்றி
மேகமார்களனேபோற்றிவிடைமிசைவருவாய்போற்றி
மோகமார்தக்கன்வேள்விமுடித்திடுமுதல்வாபோற்றி. (௬௧)

அம்புயாசனன்மாலினுமளப்பருந்திறத்தாய்போற்றி
நம்பனேபோற்றியெங்கணாதனேபோற்றிகோதில்
செம்பொனேமணியேபோற்றிசிவபெருமானேபோற்றி
யெம்பிரான்போற்றிமுக்கணிறைவனேபோற்றிபோற்றி. (௬௨)

பொங்கராவணிகளாகப்புனைதருபுனிதாபோற்றி
யங்கராகத்திற்பூதியணிந்திடுமாதிபோற்றி
வெங்கராசலத்தின்வன்றோல்வியன்புயம்போர்த்தாய்போற்றி
சங்கராபரமாபோற்றிதாணுவேபோற்றிபோற்றி. (௬௩)

முன்னெனும்பொருளுக்கெல்லாமுன்னவாபோற்றிமுப்பான்
மன்னுயிர்க்குயிரேபோற்றிமறைகளின்முடிவேபோற்றி
யென்னைமுன்வலிந்தாட்கொண்டேயிருநிலம்விடுத்தாய்போற்றி
நின்னுருக்காட்டியென்னைநினைப்பித்தநித்தாபோற்றி. (௬௪)

எவ்வெவர்தம்மையேனும்யாவரேயெனினும்போற்றி
னவ்வவரிடமாக்கொண்டேயவர்க்கருடருவாய்போற்றி
மெய்வருதெளிவினுன்னைவெளிப்படவுணர்ந்துளோர்க்குத்
தெய்வதபோகமுத்திசிறப்பொடுதருவாய்போற்றி. (௬௫)

௧௧௧

Digitized By Roja Muthiah Research Library

அம்புயமலர்மேலண்ணலச்சுதனாதிவானோர்
தம்பதமெமக்குநல்குந்தற்பராவென்றேயாரு
நம்புறுபொருட்டால்வேதநவின்றிடவடைந்தோர்க்கெல்லா
வும்பர்தம்பதமுமீயுமுலகுடைமுதல்வாபோற்றி. (சுசு)

உறைதருமமரர்யாருமுழையராய்ச்சூழநாப்பண்
மறைபயில்பெரியோருற்றுவழிபடவிருந்தாய்போற்றி
யறுவகையைந்துமாறுமாகியவரைப்பின்மேலா
மிறைவனேபோற்றிபோற்றியென்பிழைபொறுத்தியென்றான். (சுஎ)

இவைமுசுகுந்தன்கூறவெம்பிரான்கருணைசெய்தே
யவன்முகந்தன்னைநோக்கியாழியானளப்பில்கால
முவகையால்வழிபாடாற்றியும்பர்கோனிடத்தில்வைத்தான்
புவிதனிற்கொடுபோய்நம்மைப்பூசனைபுரிதியென்றான். (சுஅ)

என்றிவைமுக்கண்மூர்த்தியிந்திரன்கேளாவண்ண
நன்றருள்புரிதலோடுநனிபெருமகிழ்ச்சியெய்தி
யுன்றிருவுளமீதாயினுய்ந்தனனடியேனென்று
வென்றிகொண்மன்னர்மன்னன்விம்மிதனாகியுற்றான். (சுகூ)

இந்திரனமலன்பூசையிவ்வழிமுடித்தபின்னர்ச்
செந்தழலோம்பியேனைச்செய்கடன்புரிந்துவேறோர்
மந்திரம்புகுந்துதேனுவருகெனவல்லைகூவி
வெந்திறன்மன்னற்கந்நாள்விருந்துசெய்வித்தானன்றே. (எ0)

விருந்துசெய்வித்தபின்னர்விசித்திரக்கலையும்பூணுந்
தெரிந்திடுமணியுமுத்துந்தெய்வதப்படையுமற்றும்
பரிந்துடனுதவியின்னும்வேண்டுவபகர்தியென்னப்
புரந்தரனருளலோடும்புரவலனிதனைச்சொல்வான். (எக)

எவருந்தெரிதரேற்றாதிருந்திடுமிமையாமுக்கட்
பாவையோர்பாகன்றன்னைப்பரிவொடுகொடுத்தியைய
பூவுலகதனின்யான்போய்ப்பூசனைபுரிதற்கென்னத்
தேவர்கண்முதல்வன்கேளாவினையனசெப்பலுற்றான். (எஉ)

உந்தியாலுலகைத்தந்தவொருதனிமுதல்வன்முன்ன
மைந்தர்தாமின்மையாலேமன்னுயிர்த்தொகுதிக்கெல்லாந்
தந்தையாயிருந்ததங்கோன்சரணமேயரணமென்னாச்
சிந்தைசெய்தூழிகாலஞ்செய்தவமியற்றியிட்டான். (எங)

தவமுழந்திருந்தகாலைச்சாரதப்புணரிசுற்றக்
கவுரியுந்தானுமையன்கருணையால்வந்துதோன்றப்
புவிதனையளந்தமாயோன்பொள்ளெனவெழுந்துபோற்றிச்
சிவனடிவணக்கஞ்செய்துசெங்கையாற்றொழுதுநின்றான். (எச)

வேறு.

மாதொருபாகன்மகிழ்ந்தருள்செய்து, நீதவமாற்றிநெடும்பகனின்றா
யேதிவண்வேண்டுமியம்புதியென்னச், சீதரனின்னனசெப்புதலுற்றான். (எரு)

அந்தமிலாயுவுமாருயிர்காப்புஞ், செந்திருவோடுறைநிசெல்வமுமீந்தாய்
மைந்தனிலாமல்வருந்தினனெந்தாய், தந்தருளாய்தமியேற்கினியென்றான். (எசு)

Digitized By Roja Muthiah Research Library

குன்றினையாற்றிடுகோனிவைசெப்ப, நன்றெனவேநகையாநவையில்லா
வொன்றொருசெம்மலுனக்குதவுற்று, மென்றருள்செய்தனன்யாரினுமேலோன்.()

கழையிசைபோற்றுகருங்கடல்வண்ணன், முழுதுலகீன்றிடுமுற்றிழைபாதந்
தொழுதிலனின்றுதுதித்திலனன்பால், வழிபடுநீரின்வணங்கிலன்மாதோ. (௭௮)

வேறு.

முறையினாற்றனக்கிளையவளென்றேமுன்னினன்கொலோமூலமுநடுவு
மிறுதியும்மிலாப்பரமனுக்கெம்போலிவளுமோர்சத்தியெனநினைந்தனனோ
மறுவிலாமலைமகளெனவுளத்தேமதித்தனன்கொலோமாயவன்கருத்தை
யறிகிலேமுமையம்மைபாற்சிறிதுமன்புசெய்திலன்முன்புசெய்வினையால். (௭௯)

ஆன்றவைம்புலனொருவழிப்படுத்தியார்வம்வேரறுத்தையமொன்றின்றி
யூன்றிரிந்திடினுந்நிலைதிரியாவண்மையேபிடித்துலகங்கண்முழுது
மீன்றவெம்பெருமாட்டியைநீக்கியெம்பிரானையேவழிபடுமியற்கை
மூன்றுதாளுடையொருவனுக்கல்லாலேனையோர்களான்முடியுமோமுடியா. (௮௰)

அன்னகாலையிலெம்பெருமாட்டியாழியம்படையண்ணலைநோக்கி
யென்னைநீயிவணவமதித்தனையாலெம்பிராற்குநீயன்புளனன்றுன்
முன்னநீபெறுமதலையுமையன்முனிவினெல்லையின்முடிந்திடவென்னாப்
பன்னருங்கொடுமொழிதனையியம்பிப்பராபரன்றனைநோக்கியேபகர்வாள். (௮௧)

ஆனதோர்ப்பரப்பிரமமும்யானேயல்லதில்லையென்றறிவிலாப்பேதை
மானுடப்பெரும்பசுக்களையெல்லாமருட்டியேதிரிவஞ்சகன்முன்ன
ஞானநீரினாரறிவிலனன்றிநணுகுறுதரீயனுகிநிற்பதுவோ
வூனுலாவியவுயிரினுக்குயிராமொருவசெல்லுதும்வருகெனவுரைத்தாள். (௮௨)

இன்னவாறுரைத்தெம்பெருமாட்டியெம்பிரான்றனைக்கொண்டுபோமளவி
லன்னதன்மைகண்டச்சுதக்கடவுளலக்கணெய்தியேயச்சமுற்றயர்ந்து
தன்னுளந்தடுமாறிமெய்பனித்துத்தளர்ந்துநேமியந்தண்கரைக்கணித்தாய்
மன்னுபல்பொருட்கலந்தனைக்கவிழ்த்தவணிகனுமெனவருந்தினன்மாதோ. (௮௩)

அம்மைதன்பொருட்டாலிடையூறிங்கடைந்ததென்றுமாலகந்தனிலுன்னி
யெம்மையாளுடையிறையவன்றனையுமிறைவிதன்னையுமிளங்குமரனையு
மெய்மைசேர்வடிவாகவாங்கமைத்துவேதவாகமவிதிமுறைவழாமற்
பொய்மைதீர்ந்திடுமன்பினாற்பூசைபுரிந்துபின்னரும்வருந்தியேநோற்றான். (௮௪)

வேறு.

அனையதன்மையாலாண்டுபல்லாயிரகோடி
புனிதனுகியேநோற்றனனதுகண்டுபுழுங்கி
முனிவராயுளோரின்னமும்வருகிலன்முதல்வ
னினியருந்தவஞ்செய்பவரில்லையாலென்றார். (௮௫)

அந்தவெல்லையிற்சத்தியுஞ்சிவமுமாயனைத்தும்
வந்திடும்பரிசளித்தவரிருவரும்வரனுஞ்
சிந்தையின்மகிழ்வெய்தியேயம்மைசேவடியின்
முந்தியோடியேவணங்கினன்முழுதொருங்குணர்ந்தோன். (௮௬)

இறைவிதாண்மலர்பணிந்தபின்னெம்பிரான்பதமு
முறையினாற்பணிந்திருவர்தஞ்சீர்த்திகண்முழுது
மறையின்வாய்மையாற்பன்முறையால்வழுத்துதலு
நிறையுநல்லருள்புரிந்தனன்றனக்குநேரிலாதான். (௮௭)

Digitized By Roja Muthiah Research Library

மாதுநீயிவற்கருள்புரியென்னவம்மாது
சீதரன்றனைநோக்கியேநம்பெருந்தேவ
னோதும்வாய்மையும்யான்முனிந்துரைத்திடுமுரையும்
பேதியாவினியாவரேயன்னவைபெயர்ப்பார். (௮௮)

எங்கணாயகன்விழிபொழியங்கியாலிறந்து
துங்கமேன்மைபோய்ப்பின்முறைமுன்புபோற்றோன்றி
யுங்குன்மாமகனிருக்கவென்றுரைத்தனளுமையா
ளங்கதாகவென்றருளியேமறைந்தனனையன். (௮௯)

அம்மைதன்னுடனெம்பிரான்மறைதலுமண்ணல்
விம்மிதத்தொடுதன்பதிபுகுந்துவீற்றிருப்ப
மைம்மலிந்திடுமெய்யுடைக்காமவேள்வாரா
விம்மெனக்கடிதுதித்தனனவன்மனத்திடையே. (௯0)

வேறு.

வந்திடுங்காமவேள்வடிவுடைக்காளையாய்க்
கந்தமார்பூங்கணைகன்னல்விற்கைகொடே
மைந்தரானோர்களுமாதருங்காமமேற்
புந்திவைத்திடும்வகைபோர்புரிந்துலவினான். (௯௧)

தண்ணிழற்குடையெனச்சசிபடைத்துடையவ
னெண்ணமற்றொருபகல்யார்க்குமேலாகிய
கண்ணுதற்பகவன்மேற்கணைமலர்சிதறியே
துண்ணெனத்துகளதாய்த்தொலைதலுற்றனரோ. (௯௨)

பூழியாய்மாண்டுளான்பொருவிலாநல்லரு
ளாழியானாணையாலருவொடேயுருவமாய்
வாழிசேர்தொல்லைநாள்வளனொடுமன்னினான்
சூழிமால்கிரிதருந்தோகைசொற்றவறுமோ. (௯௩)

நிற்பமற்றித்திறநேமியான்முன்னைநா
ளற்புடன்வழிபடுமமலையைக்குமரனைத்
தற்பரக்கடவுளைத்தனதுமார்பிற்கொடே
பற்பகற்பணியின்மேற்பாற்கடற்றுஞ்சினான். (௯௪)

நீடவேதுயிலுமானெட்டுயிர்ப்பசைவினாற்
பீடுசேர்நாகணைப்பேருயிர்ப்பசைவினாற்
பாடுசூழ்தெண்டிரைப்பாற்கடலசைவினா
லாடியேவைகினாலகிலாவரடலார். (௯௫)

அன்னதோரமைதியிலசுரசேனைக்கெலா
மன்னனாயுற்றுளான்வாற்கலியென்பவ
னென்னைவானவரொடுமீடழித்தமர்தனின்
முன்னைநாள்வென்றனன்முடிவிலாமொய்ம்பினால். (௯௬)

அத்திறங்கண்டுநானமரரோடேகியே
பத்துநூற்றுத்தலைப்பாந்தண்மேற்றுயில்கொளுஞ்
சுத்தனைப்போற்றியேதொழுதுவாற்கலியினா
லெய்த்தனங்காத்தியாலெம்மைநீயென்றனன். (௯௭)

Digitized By Roja Muthiah Research Library

நஞ்சுபில்கெயிறுடைநாகமாம்பள்ளிமேற்
றுஞ்சும்வாலறிவினன்றுயிலைவிட்டேயெழீஇ
யஞ்சலீருங்களுக்கல்லலேயாற்றிய
வஞ்சனுருயிர்தனைவல்லையுண்டிடுதுமால். (௯அ)

என்றுதன்கையமைத்தேழொடேழுலகமுண்
டன்றொராலிலையின்மேலறிதுயின்மேவிய
மன்றலந்தண்டுழாய்மாலைசூழ்மௌலியா
னென்றுபேரன்பினுலொன்றெனக்குரைசெய்தான். (௯௯)

பார்த்தியாலெனதெனும்பைம்பொன்மார்பத்திடை
மூர்த்தியாய்வைகியமுதல்வியைக்குமரனைத்
தீர்த்தனைப்பூசனைசெய்துநின்றீவினை
யார்த்திநீங்குதியெனுவாதரத்தருளினன். (௧00)

அன்னவாறருள்செய்தேயனையர்மூவோரையும்
பொன்னுலாமார்பினும்பொள்ளெனவாங்கியே
யென்னதாங்கியகரத்தீந்தனனீதலுஞ்
சென்னிமேற்றாங்கினேனென்மாதவத்திண்மையால். (௧0௧)

வேறு.

அங்கதற்பின்முறையாகவச்சுதன்பாற்கடலகன்று
நங்குழுவெலாஞ்சூழநாவலந்தீவகத்தணுகி
யெங்கள்பிரானருணடஞ்செய்யெல்லையிலாத்தில்லைதனிற்
றுங்கமணிமன்றுதனைத்தொழுதுபரவசமானன். (௧0௨)

செல்லரியபரவசமாய்த்திருமுன்னேவீழ்ந்திறைஞ்சித்
தொல்லைதனிலறிவிழந்துதுணைவிழிகள்புனல்பெருகப்
பல்லுயிர்க்குமுயிராகும்பரமசிவபூரணத்தி
னெல்லைதனிற்புக்கழுந்தியெழுந்திலனீரிருதிங்கள். (௧0௩)

இத்திறத்தாலவசமதாயீறுமுதனடுவுமிலா
வத்தனதுதிருவடிக்கீழடங்கியேயானையினன்
மெய்த்துரியங்கடந்தவுயிர்மீண்டுசாக்கிரத்தடையத்
தத்துவமெய்யுணர்ச்சியெலாந்தலைத்தலைவந்தீண்டினவால். (௧0௪)

கண்டுயில்வானெழுந்ததெனக்கதுமெனமாயோனெழுந்து
புண்டரிகப்பதந்தொழுதுபோற்றிசெய்துபுறத்தேகித்
தெண்டிரைசூழ்புவிக்கரசுசெலுத்தியவாற்கலியுடனே
மண்டுபெருஞ்சமர்செய்துவல்லைதனியுயிருண்டான். (௧0௫)

வாற்கலிதன்னுயிருண்டுவாகைபுனைந்தேதிருமால்
சீர்க்கருணைநெறியதனுற்றேவருக்குமென்றனக்கு
மேற்கும்வகைவிடையுதவியிம்மெனவேமறைந்தேகிப்
பாற்கடலிற்பணியணைமேற்பண்டுபோற்கண்வளர்ந்தான். (௧0௬)

தேவர்குழாத்தொடுமீண்டுசிறந்திடுமித்துறக்கத்தி
லாவலுடன்வந்தேயானன்றுமுதலின்றளவும்
பூவைநிறங்கொண்டபுத்தேள்பொன்மார்பில்வீற்றிருந்த
மூவரையுமருச்சித்தேன்முதுமறைநூல்விதிமுறையால். (௧0௭)

Digitized By Roja Muthiah Research Library

மன்னர்க்குமன்னவநீவழிபடுதல்காரணமாத்
தன்னொப்பிலாதாரைத்தருகென்றாய்தந்திடுவ
தென்னிச்சையன்றேமாலிசைவுனக்குண்டாமாகிற்
பின்னைத்தந்திடுவனெனப்பெருந்தகையோன்பேசினனால். (க0அ)

பேசுதலுமுசுகுந்தன்பெயர்ந்துபாற்கடலிடைபோய்க்
கேசவனையடிவணங்கிக்கிட்டிநின்றுவேண்டுதலும்
வாசவன்றனிடந்தன்னில்வைத்திடுநம்முயிர்க்குயிரைப்
பூசனைசெய்கொடுபோந்துபூதலத்தினிடையென்றான். (க0கூ)

நன்றெனவேயிசைவுகொண்டுநாரணனைவிடைகொண்டு
சென்றுபுரந்தரற்குரைப்பச்சிந்தைதளர்ந்தேயிரங்கி
யன்றுதனையீன்றதனிப்புனிற்றாவையகலுவதோர்
கன்றெனவேநனிபுலம்பியொருசூழ்ச்சிகருதினனால். (கக0)

தேவர்பிரானவ்வளவிற்றெய்வதக்கம்மியன்செயலான்
மூவடிவுமூவிரண்டுமுறைவேறுவேறாக
வேவர்களும்வியப்பெய்தவிமைப்பின்முனமமைப்பித்துக்
காவலன்கைதனிற்கொடுப்பக்கைதவமென்றறிந்தனனே. (ககக)

ஆதியில்விண்ணவர்தச்சனமைத்திடுமூவிருவடிவும்
பூதலமன்னவன்வாங்கிப்புதல்வனொடுங்கவுரியொடும்
வீதிவிடங்கப்பெருமான்மேவியதாமெனவிருந்து
மேதமுரையாநெறியாலிவரவரன்றெனமொழிந்தான். (ககஉ)

துங்கமுறுமுசுகுந்தன்சொல்வினவிச்சுடராழிப்
புங்கவன்றன்மார்பமெனும்பொன்னூசலாட்டுகந்து
மங்கையொடுங்குமரனொடுமகிழ்ச்சியொடும்வீற்றிருந்த
வெங்கள்பிரான்றனைக்கொடுவந்திவராமோவென்றனனே. (ககங)

இந்திரனிவ்வாறுரைப்பவிமையாமுக்கட்பகவன்
முந்துதிறன்முசுகுந்தன்முகநோக்கிநின்பாலில்
வந்தனமாலெம்மையினிமாநிலத்திற்கொடுபோந்து
புந்திமகிழ்வாற்பூசைபுரிவாயென்றருள்செய்தான். (ககச)

ஊழிநாயகன்மகவானுணராமேயிஃதுரைப்பக்
கேழிலாப்பேருவகைகிடைத்தினிதுபணிந்தேத்தி
யாழியான்பூசனைகொண்டமர்ந்தவராமாமிவரை
வாழியாய்தருகவெனவாங்கினன்மன்னவர்மன்னன். (ககரு)

வாங்கியபின்னிமையவர்கோன்மன்னவனைமுகநோக்கி
யீங்கிவரையறுவரொடுமிருநிலத்தினிடைகொடுபோய்ப்
பூங்கமலாலயமுதலாப்புகல்கின்றதலந்தன்னிற்
றீங்கறவேவழிபாடுசெய்தியெனவிடைகொடுத்தான். (ககசு)

நன்றெனவேவிடைகொண்டுநானிலத்தினிடையிழிந்து
தென்றிசையாரூர்தன்னிற்சிவனுறைபூங்கோயில்புக்கு
மன்றல்கமழ்தண்டுளவோன்வழிபடவீற்றிருந்தோரை
வென்றியரியணைமீதில்விதிமுறையாற்றாபித்தான். (ககஎ)

Digitized By Roja Muthiah Research Library

கடனுகைநள்ளாறுகாருயல்கோளரியூர்
மடனுகமுத்தீனும்வாய்மியூர்மறைக்கான
முடனுகுந்தலமாறிலோராறுவடிவுகொண்ட
படநாகமதிவேணிப்பரஞ்சுடரையமர்வித்தான். (கக௮)

இப்படியேயொருபகலிலெழுவரையுந்தாபித்து
மெய்ப்பரிவில்வழிபாடுவிதிமுறையாற்புரிவித்துச்
செப்பரியபுகழாரூர்த்தேவனுக்குவிழாச்செய்வான்
முப்புவனங்களும்போற்றுமுசுகுந்தன்முன்னினனுல். (ககக)

அந்நாளிலிமையவர்கோனருச்சனைசெய்பரம்பொருளைக்
கொன்னூர்வேன்மன்னவன்கைக்கொடுத்ததொருகொடும்பவத்தாற்
பொன்னுட்டிற்றிருவிழந்துபுலையுருவந்தனைத்தாங்கிக்
கைந்நாகமிசையூர்ந்துகமலையெனும்பதியடைந்தான். (க௨0)

ஆரூரின்மேவியபின்னமலன்விழாப்போற்றுதற்குப்
பாரூருந்திரையூரும்பலவூரும்வருகவென்றே
வாரூருமுரசெறிந்துமதக்களிற்றின்மிசையேறித்
தேரூருஞ்செம்பொன்மணித்திருவீதிப்புடைசூழ்ந்தான். (க௨க)

பூங்கமலாபுரிவாழும்புங்கவனூர்க்கன்னதற்பி
னோங்குதிருவிழாநடத்தியொழிந்தபதிப்பண்ணவர்க்கு
மாங்கதுபோனிகழ்வித்தேயந்தமில்சீர்முசுகுந்தன்
பாங்கில்வரும்வீரருடன்பாருலகம்புரந்திருந்தான். (க௨௨)

ஆண்டுபலவப்பதியிலமலன்விழாச்சேவித்துக்
காண்டகையதவம்புரிந்துகடைஞர்வடிவினைநீங்கித்
தூண்டகையதோண்மகவான்றொல்லுருவந்தனைப்பெற்று
மீண்டுசுரர்பதிபுகுந்துவிபவ * முடன்வீற்றிருந்தான். (க௨௩)

விண்ணவர்கோனேகியபின்விரவுபுகழ்க்கருவூரி
லெண்ணரியபலகாலமிறையரசுசெலுத்தியபின்
மண்ணுலகம்புரக்கவங்கிவன்மனுக்குமுடிசூட்டித்
துண்ணெனவேநோற்றிருந்துதொல்கயிலைதனையடைந்தான். (க௨௪)

துங்கமிகுமுசுகுந்தன்றொல்கயிலையடைந்தபின்ன
ரெங்கள்விறன்மொய்ம்பினனுமிலக்கருடனெண்மர்களுந்
தங்கள்சிறூர்தமைவிளித்துத்தத்தமதுசிறப்புநல்கி
யங்கிவன்மன்பாலிருத்தியரியதவமாற்றினரே. (க௨௫)

மாதவமெண்ணிலவியற்றிமானுடத்தன்மையைநீங்கி
யாதிதனிலடலெய்தியருண்முறையாலனைவர்களு
மேதகுசீர்க்கந்தகிரிவிரைந்தேகிவேற்கடவுள்
பாதமலர்பணிந்தேத்திப்பத்திமைசெய்துற்றனரால். (க௨௬)

ஆகையாலயனறியாவருமறைமூலந்தெரிந்த
வேகநாயகன்விரதமெவரேனும்போற்றியிடி
னேகையானினைந்தவெலாமொல்லைதனிற்பெற்றிடுவர்
மாகமேலிமையவரும்வந்தவரைவணங்குவரே. (க௨௭)

கந்தவிரதப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க,௮00.

* விபவம் - செல்வம்.

# வள்ளியம்மைதிருமணப்படலம்.

வெள்ளியங்கிரியினோர்சார்விளங்கியகந்தவெற்பி
னள்ளுறுநகரந்தன்னினங்கையோடினிதுமேவு
மள்ளிலைவேற்கைநம்பியம்புவியெயினர்போற்றும்
வள்ளியைவதுவைசெய்தமரபினைவழாதுசொல்வாம். (க)

வேறு.

அயன்படைத்திடுமண்டத்துக்காவியாய்ப், பயன்படைத்தபழம்பதியென்பரா
னயன்படைத்திடுநற்றொண்டைநாட்டினுள்,வியன்படைத்துவிளங்குமேற்பாடியே

ஆயதொல்லையணிநகர்ஞாங்கரின், மீயுயர்ந்ததொர்வெற்புநிற்கின்றதாற்
பாயதெண்கட்பாரளவிட்டிடு, மாயவன்றன்வடிவெனநீண்டதே. (உ)

அரவுந்திங்களுமாறுமெல்லாரமுங், குரவுங்கொன்றையுங்கூவிளமும்மிசை, விர
வுந்தன்மையின்வெற்புவிண்ணோரெலாம், பரவுங்கண்ணுதற்பண்ணவன்போன்ற
தால். (ஈ)

வாலிதாகியவானருவித்திர, ணீலமேகநிரையொடுதாழ்தலிற்
றோலுநாலுந்துயல்வருமார்புடை, நாலுமாமுகன்போலுமந்நாகமே. (ரு)

குமரவேள்குறமங்கையொடிவ்விடை, யமருமாலதுகாண்பனென்றுசையாற்
றமரவானதிதானனுகுற்றிட, நிமிருகின்றதுநீள்கிரியன்னதே. (சு)

வேறு.

கன்னிறைத்திடுபூந்தண்டார்க்கடம்பணிகாளைபன்னாட்
பின்னைமைத்தொழின்மேற்கொண்டுபெட்புடனுழுகும்வண்ணம்
வள்ளியைத்தன்பால்வைத்துவள்ளிவெற்பென்னுநாம
முள்ளவக்கிரியின்மேன்மையுரைத்திடுமளவிற்றோ. (எ)

செய்யவெண்குன்றிவித்துஞ்சீர்திகழ்கழைவீழ்முத்தும்
பையரவினங்களீன்றபருமணித்தொகையுமீண்டிச்
சையமதெங்குஞ்சேர்தருராகாகணங்களெல்லாம்
வெய்யவனழற்காற்றுதவீழ்ந்தெனவிளங்குகின்ற. (அ)

கானுறுதளவம்பூத்தகாட்சியாற்கழைகளெல்லாந்
தூநகைமுத்தமீன்றதோற்றத்தாற்பொதும்பர்தன்னிற்
றேனமர்தொடையறாங்குஞ்செய்கையாற்சிலம்பின்சாரன்
மீனமுமதியும்பூத்தவிண்ணெனவிளங்கிற்றம்மா. (கூ)

கூட்டளிமுரலுநீலக்குண்டுநீர்ச்சுனைகள்யாண்டுங்
காட்டியபிறங்கல்யாருங்காணுறவள்ளலீண்டே
வேட்டுவர்சிறுமிக்காகமேவுதல்காண்பனென்று
நாட்டமெய்ம்முழுதும்பெற்றுநண்ணியதன்மைபோலாம். (க0)

விண்ணுயர்பிறங்கன்மீதுவிரிகின்றசுனைகண்மிக்குத்
தண்ணெனவிளங்கும்பெற்றிசூரியன்முதலோர்காண
மண்ணெனுமடந்தையாங்கோர்மதலையில்வரம்பிலாத
கண்ணடிநிரைத்துவைத்தகாட்சிபோன்றிருந்தமாதோ. (கக)

Digitized By Roja Muthiah Research Library

ஒள்ளிணர்க்கணியின்கொம்பருலவியேயசோகில்வாவி
வெள்ளிலிற்பாய்ந்துமந்தியின்கடுவுறைப்பமீள்வ
வள்ளியரிடத்துச்சென்ரேர்மானவப்பண்பிலோர்பாற்
பொள்ளெனவிரப்பான்புக்குப்புலம்பொடுமீண்டவாபோல். (கஉ)

தொகையுறுகுலேச்செங்காந்தடுடுப்பெடுத்தமருஞ்சூழ்விற்
சிகையுறுதோகைமஞ்ஞைசெறிந்துலாவுற்றதன்மை
யகையுறுகழைகொன்றுண்டவாரழல்சிதறவாங்கே
புகையுறுகின்றதன்மைபோலவேபொலிந்ததம்மா. (கரூ)

கண்டுதங்கேளிர்தம்மைக்கைகொடுபுல்லியில்லங்
கொண்டுசெல்பான்மையுன்னிவிலக்குறுகொள்கைத்தென்ன
விண்டொடர்செலவிற்ருரும்வெஞ்சுடர்க்கதிரைவெற்பிற்
றண்டலேகணியின்கொம்பாற்றழீஇக்கொடுதடுக்கலுற்ற. (கச)

நிறையழிகடமால்யானைநெடுவரைச்சிகரம்பாய்ந்து
விறலொடுமுழங்கவாங்கோர்விடரளைமடங்கல்கேளாக்
கறுவுகொள்சினத்திஞர்க்குங்கம்பலேகனகனெற்றுந்
தறியிடையிருந்தசீயத்தழங்குரலென்னலாமால். (கரு)

பறையடிப்பதனுற்சேணிற்பயன்விரிப்பார்போன்மாரு
யறையடிப்பார்ந்தளார்ப்பவகலிருவிசும்பேருர்ப்பக்
கறையடித்தொகுதியார்ப்பக்கடுந்திறலரிமாஞர்ப்பச்
சிறையடிக்கொண்டுசிம்புளார்த்திடத்திங்கள்செல்லும். (கசு)

இன்னபல்வளமைசான்றகிரிதனிலெயினரீண்டி
மன்னியதாங்கோர்சீறூர்வதனமாறுடையவள்ளல்
பின்னரேதன்பான்மேவப்பெருந்தவந்தன்னையாற்றிப்
பொன்னகரிருந்தவாபோற்புன்மையற்றிருந்ததம்மா. (கஎ)

ஆயதோர்குறிச்சிதன்னிலமர்தருங்கிராதர்க்கெல்லா
நாயகனுகம்பூண்டுள்ளோனுமவேனம்பியென்போன்
மாயிருந்தவமுன்செய்தோன்மைந்தர்கள்சிலரைத்தந்து
சேயிழைமகட்பேறுன்னித்தெய்வதம்பராவியுற்ருன். (கஅ)

அவ்வரைமருங்குதன்னிலேம்புலனெருங்குசெல்லச்
செவ்விதினடாத்துந்தொன்மைச்சிவமுனியென்னுமேலோ
னெவ்வெவர்தமக்குமெய்தாவீசனையுளத்துட்கொண்டு
சைவநல்விரதம்பூண்டுதவம்புரிந்திருத்தலுற்ருன். (ககூ)

சிறப்புறுபெரியபைங்கட்சிறுதலேச்சிலேக்கும்புல்வாய்
நெறிப்பொடுநிமிர்வுற்ருன்றநெடுஞ்செவிக்குறியதோகைப்
பொறிப்படுபுனிதயாக்கைப்புன்மயிர்க்குளப்புமென்கான்
மறிப்பிணையொன்றுகண்டோர்மருவவந்துலாவிற்றங்கண். (உ0)

போர்த்தொழில்கடந்தவைவேற்புங்கவனருளால்வந்த
சேர்த்திடுநவ்விதன்னைச்சிவமுனியென்னுந்தூயோன்
பார்த்தலுமிளமைச்செவ்விபடைத்திடும்பிறனிற்கண்ட
தூர்த்தனின்மையலெய்திக்காமத்தாற்சுழலலுற்ருன். (உக)



Digitized By Roja Muthiah Research Library

ஏமத்தின்வடிவஞ்சான்றவிலங்கெழிற்பிணையின்மாட்டே
காமத்தின்வேட்கைவைத்துக்கவலையாயவலமெய்தி
மாமத்தமனைபுக்கென்னமனக்கருத்துடைந்துவேறு
யூமத்தம்பயன்றுய்த்தார்போலுன்மத்தனுகியுற்றுன். (உஉ)

படவரவனையவல்குற்பைந்தொடிநல்லார்தம்பாற்
கடவுளர்புணர்ச்சியென்னக்காட்சியினின்பந்துய்த்து
விடலருமார்வநீங்கிமெய்யுணர்வெய்தப்பெற்றுத்
திடமொடுமுந்துபோலச்சிவமுனியிருந்துநோற்றுன். (உங)

நற்றவன்காட்சிதன்னுனவ்விபாற்கருப்பஞ்சேரத்
தெற்றெனவறிதறேற்றிச்செங்கண்மானுதவும்பாவை
மற்றதனிடத்திற்புக்காள்வரைபகவெறிந்தவைவேற்
கொற்றவன்முன்னஞ்சொற்றகுறிவழிப்படருநீராள். (உச)

வேறு.

மானிடத்தின்வருமைந்தன்முந்துநீ, மானிடத்தின்வருகென்றவாய்மையான்
மானிடத்தின்வயினடைந்தாண்மரு, மானிடத்தின்மானுகு * மம்மான்மகள். (உரு)

அனையகாலையிலாயிடைநீங்கியே, புனிதநவ்விபுனமெங்கணுமுலாய்ச்
சுனையினீருண்டொர்சூழலின்வைகியே, யினியமால்வரையேறிநடந்ததே. (உசு)

நடந்தநவ்விநலத்தகுவெற்பினி, லிடந்தொறுஞ்செறியேனற்புனமெலாங்
கடந்துபோயதுகாவல்கொள்வேட்டுவர், மடந்தைமார்கள்வரிவிழியென்னவே. ()

பிள்ளையீற்றுப்பிணுவெயின்சேரியி, னுள்ளமாதருளித்தலைக்கோல்கொடு
வள்ளிகீழ்புகுமாமுதல்வெளவியே, பொள்ளல்செய்திடுபுன்புலம்புக்கதே. (உஅ)

தோன்றலுக்குத்துணைவியைத்தொல்பிணை, தான்றரித்துத்தளர்ந்துதளர்ந்துபோய்
மான்றரற்றியுயிர்த்துவயிறுநொந், தீன்றுவள்ளியிருங்குழியிட்டதால். (உகூ)

குழைகுறுந்தொடிகோல்வளையேமுதற், பழையபூண்கள்பலவுடன்றுங்குறுந்
தழைபுனைந்துதனதுணர்வின்றியே, யுழைவயின்வந்துதித்தனளொப்பிலாள். (௩0)

கோற்றொடிக்கைக்குழவியைநோக்கியே, யீற்றுமான்பிணையெம்மினத்தன்றிது
வேற்றுருக்கொடுமேவியதீண்டெனு, வாற்றவேமருண்டஞ்சியகன்றதே. (௩க)

வேறு.

அன்னையெனவீன்றவரிணமருண்டோடியபின்
றன்னிணையிலாததலைவிதனித்தனளாய்க்
கின்னரநல்யாழொலியோகேடில்சீர்ப்பாரதித
னின்னிசையோவென்றயிர்க்கவேங்கியழுதிட்டனளே. (௩உ)

அந்தவளைவதனிலாறிரண்டுமொய்ம்புடைய
வெந்தையருளுய்ப்பவெயினர்குலக்கொற்றவனும்
பைந்தொடிநல்லாளும்பரிசனங்கள்பாங்கெய்தச்
செந்தினைமின்பைங்கூழ்செறிபுனத்துப்புக்கனரே. (௩௩)

கொல்லைபுகுந்தகொடிச்சியொடுகானவர்கோ
னல்லைநிகர்குழலாளம்மென்குரல்கேளா
வெல்லையதனிலெழுமொலியங்கேதென்று
வல்லைதனிலவ்வறும்புனத்தில்வந்தனனே. (௩ச)

* மருமானிடத்தின்மானுகும் என்பதற்கு விட்டுணுவின் வழித்தோன்றலாகிய விஷ்ணுயெச்சென்னும் அந்தணனிடத்திற் கந்கியா யவதரிக்கும் எனப் பொருள்கொள்க. அந்தணர் பிரமனுடைய புதல்வராதலால், விஷ்ணுயெச் என்பவனை விட்டுணுவின் மருமான் என்றார்.

Digitized By Roja Muthiah Research Library

வந்தான்முதலெடுத்தவள்ளிக்குழியில்வைகு
நந்தாவிளக்கனையநங்கைதனைநோக்கி
யிந்தாவிஃதோரிளங்குழவியென்றெடுத்துச்
சிந்தாகுலந்தீரத்தேவிகையிலீந்தனனே. (கரு)

ஈந்தான்சிலைநிலத்திலிட்டானெழுந்தோங்கிப்
பாய்ந்தான்றெழித்தானுவகைப்படுகடலிற்
றோய்ந்தான்முறுவலித்தான்றோள்புடைத்தான்றொல்பிறப்பி
னாந்தாமியற்றுதவநன்றாங்கொலென்றுரைத்தான். (கசு)

கொற்றக்கொடிச்சிகுழவியைத்தன்கைவாங்கி
மற்றப்பொழுதில்வயாவும்வருத்தமுமாய்ப்
பெற்றுக்கொள்வாள்போலப்பேணிப்பெரிதுமகிழ்
வுற்றுக்கனதனத்தினூறுமமிர்தூட்டினளால். (கஎ)

வென்றிச்சிலையெடுத்துமேலைப்புனமகன்று
குன்றக்குறவன்குதலைவாய்க்கொம்பினுடன்
மன்றற்றுணைவிதனைவல்லைகொடுசீறூரிற்
சென்றக்கணத்திற்சிறுகுடிலிற்புக்கனனே. (கஅ)

அண்டரமுதமனையமகட்பெற்றிடலான்
மண்டுபெருமகிழ்வாய்மாத்தாட்கொழுவிடையைக்
கெண்டி * யொருதன்கிளையோடினிதருந்தித்
தொண்டகமதார்ப்பக்குரவைமுறைதூங்குவித்தான். (ககூ)

காலையதற்பின்கடவுட்பலிசெலுத்தி
வாலரிசிமஞ்சண்மலர்சிந்திமறியறுத்துக்
கோலநெடுவேற்குமரன்விழாக்கொண்டாடி
வேலனைமுற்கொண்டுவெறியாட்டுநேர்வித்தான். (உ0)

இன்னபலவுமியற்றியிருங்குறவர்
மன்னன்மனைவிவடமீன்றனையனையாள்
கன்னிமடமகட்குக்காப்பிட்டுக்கானமயிற்
பொன்னஞ்சிறைபடுத்தபூந்தொட்டிலேற்றினளே. (உக)

நாத்தளர்ந்துசோர்ந்துநடுக்கமுற்றுப்பற்கழன்று
மூத்துநரைமுதிர்ந்தமூதாளர்வந்தீண்டிப்
பாத்திபடுவள்ளிப்படுகுழியில்வந்திடலால்
வாய்த்தவிவளுமம்வள்ளியெனக்கூறினரே. (உஉ)

தம்மரபினுள்ளதமராகியமுதுவ
ரிம்முறையாலாராய்ந்தியற்பேர்புனைந்துரைப்பக்
கொம்மைமுலையாள்கொடிச்சியொடுகுன்றவர்கோ
னம்மனையைநம்மகளென்றன்பால்வளர்த்தனனே. (உங)

முல்லைப்புறவமுதல்வன்றிருமடந்தை
கொல்லைக்குறிஞ்சிக்குறவன்மகளாகிச்
சில்லை o ப்புன்கூரைச்சிறுகுடிலிற்சேர்ந்தனளாற்
றொல்லைத்தனித்தந்தைதோன்றியமர்வுற்றதுபோல். (உச)

---

* கெண்டி - வெட்டி. o சில்லை - இழிவு.

Digitized By Roja Muthiah Research Library

மூவாமுகுந்தன்முதனாட்பெறுமமுதைத்
தேவாதிதேவன்றிருமைந்தன்றேவிதனை
மாவாழ்சுரத்திற்றம்மாமகளாப்போற்றுகையா
லாவாகுறவர்தவமாரளக்கவல்லாரே. (௪௫)

பொற்றொட்டில்விட்டுப்புவியின்மிசைதவழக்
கற்றுத்தளர்நடையுங்காட்டிக்கணிநீழன்
முற்றத்திடையுலவிமுறத்தின்மணிகொழித்துச்
சிற்றில்புனைந்துசிறுசோறட்டாடினளே. (௪௬)

முந்தையுணர்வுமுழுதுமின்றியிம்முறையாற்
புந்திமகிழ்வண்டல்புரிந்துவளர்செவ்விக்க
ணெந்தைபுயம்புல்லுவதற்கிப்பருவமேற்குமெனப்
பைந்தொடியினுக்கியாண்டுபன்னிரண்டுசென்றனவே. (௪௭)

ஆனபருவங்கண்டம்மனையுமம்மனையிற்
கோனுமொருதங்குலத்தின்முறைநோக்கி
மானின்வயிற்றுதித்தவள்ளிதனைப்பைம்புனத்தி
லேனல்விளையுளினிதளிக்கவைத்தனரே. (௪௮)

காட்டிலெளிதுற்றகடவுண்மணியைக்கொணர்ந்து
கூட்டிவிருளோட்டக்குருகுய்த்தவாறன்றோ
நீட்டுசுடர்வேற்குமரன்றேவியாந்தெள்ளமுதைப்
பூட்டுசிலைக்கையார்புனங்காப்பவைத்ததுவே. (௪௯)

சுத்தமெழுகிட்டுச்சுடர்கொளுவிப்பன்மணியின்
பத்திகுயின்றிட்டபழுப்பேணியிற்பாதம்
வைத்துமகிழ்ந்தேறிமகடேஉத்தினைப்புனத்தி
லெத்திசையுங்காணுமிதணத்திருந்தனளே. (௫0)

கிள்ளையொடுகேகயமேயன்றிப்பிறநிலத்தி
லுள்ளபறவையொருசார்விலங்கினொடும்
வள்ளிமலைப்புனத்தில்வந்துற்றனமாவும்
புள்ளுமயங்கல்பொருணூற்றுணிபன்றோ. (௫௧)

கட்டுவரிவிற்கருங்குறவர்கைத்தொழிலா
லிட்டவிதணத்திருந்தெம்பெருமாட்டி
தட்டைகுணிறழலைத்தாங்கித்தினைப்புனத்தைக்
கிட்டலுறுவண்ணங்கிளிமுதற்புள்ளோட்டினளே. (௫௨)

எய்யானவையுமிரலைமரைமான்பிறவுங்
கொய்யாதவேனற்குரல்கவர்ந்துகொள்ளாமன்
மையார்விழியாண்மணிக்கற்கவணிட்டுக்
கையாலெடுத்துக்கடிதோச்சிவீசினளே. (௫௩)

பூவைகாள்செங்கட்புறவங்காளாலோலந்
தூவிமாமஞ்ஞைகாள்சொற்கிளிகாளாலோலங்
கூவல்சேர்வுற்றகுயிலினங்காளாலோலஞ்
சேவல்காளாலோலமென்றூடிருந்திழையாள். (௫௪)

Digitized By Roja Muthiah Research Library

இந்தமுறையிலிவளேனற்புனங்காப்ப
வந்தவளவிலவளுக்கருள்புரியக்
கந்தவரைநீங்கிக்கதிர்வேலவன்றனியே
வந்துதணிகைமலையிடத்துவைகினனே. (௫௫)

வேறு.

சூரல்பம்பியதணிகைமால்வரைதனிற்சுடர்வேல்
வீரன்வீற்றிருந்திடுதலும்வேலையங்கதனில்
வாரியும்வடித்துந்தியும்வரிசையாலுறழ்ந்துஞ்
சீரியாழ்வல்லநாரதன்புவிதனிற்சேர்ந்தான். (௫௬)

வளவிதாகியவள்ளிமால்வரைதனில்வந்து
விளையுளாகியதினைப்புனம்போற்றிவீற்றிருந்த
புளினர்பாவையைக்கண்டுகைதொழுதுபுந்தியினி
லளவிலாததோரற்புதத்துடனிவையறைவான். (௫௭)

அன்னையாகியிங்கிருப்பவர்பேரழகனைத்து
முன்னியான்புனைந்துரைக்கினுமுலவுமோவுலவா
வென்னையாளுடையறுமுகன்றுணைவியாயிருப்ப
முன்னர்மாதவம்புரிந்தவரிவரெனமொழிந்தான். (௫௮)

வேறு.

கார்த்தினைப்புனங்காவற்கன்னியைப், பார்த்துமற்றிவைபகர்ந்துபோற்றிப்போய்
மூர்த்தமொன்றினின்மூன்றுபூமலர், தீர்த்திகைச்சுனைச்சிகரநண்ணினான். (௫௯)

தணிகையங்கிரிதன்னில்வைகிய, விணையில்கந்தனையெய்தியன்னவன்
றுணைமென்சீறடிதொழுதுபன்முறை, பணிதல்செய்திவைபகர்தன்மேயினான். ()

மோனநற்றவமுனிவன்றன்மகண், மானினுற்றுளாள்வள்ளிவெற்பினிற்
கானவக்குலக்கன்னியாகியே, யேனலைப்புரந்திதணின்மேயினாள். (௬௧)

ஐயனேயவளாகநல்லெழில், செய்யபங்கயத்திருவிற்கும்மிலை
பொய்யதன்றிதுபோந்துகாண்டிநீ, கையனேனிவண்கண்டுவந்தனன். (௬௨)

தாயதாகுமத்தையன்முன்னரே, மாயவன்மகண்மற்றுன்மொய்ம்பினைத்
தோயநோற்றனள்சொற்றவெல்லையிற், போயவட்கருள்புரிதியாலென்றான். (௬௩)

என்றவேலையிலெஃகவேலினு, னன்றுநன்றிதுநவையில்காட்சியோய்
சென்றிநீயெனச்செப்பித்தூண்டியே, கன்றுகாமநோய்க்கவலையுள்வைத்தான். ()

எய்யும்வார்சிலையெயினர்மாதரா, ளுய்யுமாறுதன்னுருவநீத்தெழீஇச்
செய்யபேரருள்செய்துசேவகன், மையன்மானுடவடிவந்தாங்கினான். (௬௫)

காலிற்கட்டியகழலன்கச்சினன், மாலைத்தோளினன்வரிவில்வாளிய
னீலக்குஞ்சியனெடியன்வேட்டுவக், கோலத்தைக்கொடுகுமரன்சென்றனன். ()

கிள்ளையன்னதோர்கிளவிமங்கைமாட், டுள்ளமோகந்தன்னுள்ளகந்தனைத்
தள்ளவெம்பிரான்றணிகைவெற்பொரீஇ, வள்ளியங்கிரிவயின்வந்தெய்தினான். ௬௭

வேறு.

மண்டலம்புகழுந்தொல்சீர்வள்ளியஞ்சிலம்பின்மேல்போய்ப்
பிண்டியந்தினையின்பைங்கூழ்ப்பெரும்புனத்திறைவிதன்னைக்
கண்டனன்குமரனம்மாகருதியவெல்லைதன்னிற்
பண்டொருபுடையில்வைத்தபழம்பொருள்கிடைத்தவாபோல். (௬௮)

Digitized By Roja Muthiah Research Library

பூமஞ்சார்மின்கொலென்னப்பொருப்பினிலேனல்காக்குங்
காமஞ்சாலிளைமையாளைக்கடம்பமர்காளைநோக்கித்
தூமஞ்சால்விரகச்செந்தீச்சுட்டிடச்சோர்ந்துவெம்பி
யேமஞ்சால்கின்றநெஞ்சனிதணினுக்கணியன்சென்றான். (சுகூ)

நாந்தகமலையவுண்கணங்கைகேண்ஞாலந்தன்னி
லேந்திழையார்கட்கெல்லாமிறைவியாயிருக்குநின்னைப்
பூந்தினைகாக்கவைத்துப்போயினார்புளினரானோர்க்
காய்ந்திடுமுணர்ச்சியொன்றுமயன்படைத்திலன்கொலென்றான். (எ0)

வாரிருங்கூந்தனல்லாய்மதிதளர்வேனுக்குன்றன்
பேரினையுரைத்திமற்றுன்பேரினையுரையாயென்னி
னூரினையுரைத்தியூருமுரைத்திடமுடியாதென்னிற்
சீரியநின்சீறூர்க்குச்செல்வழியுரைத்தியென்றான். (எக)

மொழியொன்றுபுகலாயாயின்முறுவலும்புரியாயாயின்
விழியொன்றுநோக்காயாயின்விரகமிக்குழல்வேனுய்யும்
வழியொன்றுகாட்டாயாயின்மனமுஞ்சற்றுருகாயாயிற்
பழியொன்றுநின்பாற்சூழும்பராமுகந்தவிர்தியென்றான். (எஉ)

உலைப்படுமெழுகதென்னவுருகியேயொருத்திகாதல்
வலைப்படுகின்றான்போலவருந்தியேயிரங்காநின்றான்
கலைப்படுமதியப்புத்தேள்கலங்கலம்புனலிற்றோன்றி
யலைப்படுதன்மைத்தன்றோவறுமுகனுடலெல்லாம். (எங)

செய்யவள்குமரிமுன்னந்திருநெடுங்குமரனின்று
மையலின்மிகுதிகாட்டிமற்றிவைபகருமெல்லை
யெய்யுடனுளியம்வேழமிரிதரவிரலையூத
வொய்யெனவெயினர்சூழவொருதனித்தாதைவந்தான். (எச)

ஆங்கதுகாலைதன்னினடிமுதன்மறைகளாக
வோங்கியநடுவணெல்லாமுயர்சிவநூலதாகப்
பாங்கமர்கவடுமுற்றும்பல்கலையாகத்தானோர்
வேங்கையினுருவமாகிவேற்படைவீரனின்றான். (எரு)

கானவர்முதல்வனுங்கேகதுமெனவந்துதங்கண்
மானினிதன்னைக்கண்டுவெள்ளியங்கிழங்குமாவுந்
தேனொடுகடமான்பாலுந்திற்றிகள்பிறவுநல்கி
யேனலம்புனத்தினின்றயாணர்வேங்கையினைக்கண்டான். (எசு)

ஆங்கவனயலாய்நின்றவடுதொழின்மறவரானோர்
வேங்கையினிலைமைநோக்கிவிம்மிதகீரராகி
யீங்கிதுமுன்னுற்றன்றாலித்துணைபுகுந்தவாற்றாற்
றீங்குவந்திடுதறிண்ணமென்றனர்வெகுளித்தீயார். (எஎ)

எறித்தருகதிரைமாற்றுமிருநிழற்கணியையின்னே
முறித்திடுவீர்களென்பார்முதலொடுவீழச்சூழப்
பறித்திடுவீர்களென்பார்பராரையைக்கணிச்சிதன்னாற்
றறித்திடுவீர்களென்பார்தாழ்க்கலீர்சற்றுமென்பார். (எஅ)

Digitized By Roja Muthiah Research Library

இங்கிவையுரைக்குந்தீயோர்யாரையும்விலக்கிடன்ன
னங்கைதன்வதனம்பாராநறுமலர்வேங்கையொன்று
செங்குரலேனற்பைங்கூழ்செறிதருபுனத்தின்மாடே
தங்கியதென்னைகொல்லோசாற்றுதிசரதமென்றான். (௭௯)

சந்தையாங்குரைத்தல்கேளாத்தையலும்வெருவியீது
வந்தவாறுணர்கிலேன்யான்மாயம்போற்றோன்றிற்றையா
முந்தைநாளில்லாதொன்றுபுதுவதாய்முளைத்ததென்றுச்
சிந்தைமேனடுக்கமெய்தியிருந்தனன்செயலிதென்றாள். (௮௦)

வேறு.

என்றிவைசொற்றபினேந்திழையஞ்சே, னன்றிவண்வைகுதிநாண்மலர்வேங்கை
யின்றுணையாயிவணெய்தியதென்றுக், குன்றுவன்வேடர்குழாத்தொடுபோனான்.

போனதுகண்டுபுனத்திடைவேங்கை, யானதொர்தன்மையையயனகன்று
கானவர்தம்மகள்காண்வகைதொல்லை, மானுடநல்வடிவங்கொடுநின்றான். (௮௨)

வேறு.

தொல்லையினுருக்கொடுதோன்றிநின்றவே,ளெல்லையின்மையலுற்றிரங்குவானென
வல்லிவர்கூந்தலாளருகுநிற்புறீஇ, நல்லருளாலிவைநவிறன்மேயினான். (௮௩)

கோங்கெனவளர்முலைக்குறவர்பாவையே,யீங்குனையடைந்தனனெனக்குநின்னிரு
பூங்கழலல்லதுபுகலொன்றில்லையா, னீங்கலனீங்கலனின்னையென்றுமே. (௮௪)

மாவியல்கருங்கணாய்மற்றுநின்றனைப், பாவியனீங்கியேபடரவல்லனோ [மே.
வாவியையகன்றுமெய்யறிவுகொண்டெழீஇப், போவதுகொல்லிதுபுகலவேண்டு

மைதிகழ்கருங்கணின்வலைப்பட்டேற்கருள், செய்திடலன்றியேசிறைக்கணித்தலை
யுய்திறம்வேறெனக்குளகொலீண்டுநின், கைதனிலிவ்வுயிர்காத்துக்கோடியால். ()

கோடிவர்நெடுவரைக்குறவர்மாதுநீ, யாடியசுனையதாயணியுஞ்சாந்தமாய்ச்
சூடியமலர்களாய்த்தோயப்பெற்றிலேன்,வாடினனினிச்செயும்வண்ணம்யாவதே.

புல்லிதுபுல்லிதுபுனத்தைக்காத்திடன்,மெல்லியல்வருதியால்விண்ணின்பால்வரும்
வல்லியர்யாவரும்வணங்கிவாழ்த்திடத், தொல்லியல்வழாவளந்துய்ப்பநல்குவேன்.

என்றிவைபலபலவிசைத்துநிற்றலுங், குன்றுவர்மடக்கொடிகுமரன்சிந்தையி
லொன்றியகருத்தினையுற்றுநோக்கியே, நன்றிவர்திறமெனநாணிக்கூறுவாள். (௮௯)

இழிகுலமாகியவெயினர்பாவைநான், முழுதுலகருள்புரிமுதல்வர்நீரெனைத்
தழுவுதலுன்னியேதாழ்ச்சிசெப்புதல், பழியதுவேயலாற்பான்மைத்தாகுமோ. ௯௰

இலைமுதிரேனல்காத்திருக்கும்பேதையா, னுலகருளிறைவர்நீருளமயங்கியென்
கலவியைவிரும்புதல்கடனதன்றரோ, புலியதுபசியுறிற்புல்லுந்துய்க்குமோ. (௯௧)

வேறு.

என்றிவைபலப்பலவுமேந்திழையியம்பா
நின்றபொழுதத்திலவணெஞ்சம்வெருக்கொள்ள
வென்றிகெழுதொண்டகம்வியன்றுடியியம்பக்
குன்றிறைவன்வேட்டுவர்குழாத்தினொடும்வந்தான். (௯௨)

Digitized By Roja Muthiah Research Library

வந்தபடிகண்டுமடமானடுநடுங்கிச்
சிந்தைவெருவிக்கடவுள்செய்யமுகநோக்கி
வெந்திறல்கொள்வேடுவர்கள்வெய்யரிவணில்லா
தய்ந்திடநினைந்துகடிதோடுமினியென்றாள். (௯௩)

ஓடுமினியென்றவளுரைத்தமொழிகேளா
நீடுமகிழ்வெய்தியவணின்றகுமரேச
ஞடுபுகழ்சைவநெறிநற்றவவிருத்த
வேடமதுகொண்டுவரும்வேடரெதிர்சென்றான். (௯௪)

சென்றுகிழவோன்குறவர்செம்மலெதிர்நண்ணி
நின்றுபரிவோடுதிருநீறுதனைநல்கி
வன்றிறன்மிகுத்திடுகவாகைபெரிதாக
வின்றியமையாதவளனெய்திடுகவென்றான். (௯௫)

பூதியினையன்பொடுபுரிந்தகுரவன்றன்
பாதமலர்கைகொடுபணிந்துகுறமன்னன்
மேதகுமிவ்வெற்பினில்விருத்தரெனவந்தீ
ரோதிடுதிர்வேண்டியதையொல்லைதனிலென்றான். (௯௬)

ஆண்டொழிலின்மேதகையவண்ணலிதுகேண்மோ
நீண்டதனிமூப்பகலநெஞ்சமருணீங்க
வீண்டுநும்வரைக்குமரியெய்தியினிதாட
வேண்டிவருகின்றனன்மெலிந்துகடிதென்றான். (௯௭)

வேறு.

மற்றவன்மொழியைக்கேளாநன்றுநீர்நவின்றதீர்த்த
மிற்றலுமாடியெங்கணேரிழைதமியளாகி
யுற்றனளவளுக்கெந்தையொருதனித்துணையதாகி
மற்றிவணிருத்திரென்னவழகிதாமன்னவென்றான். (௯௮)

இனையதோர்பொழுதிற்றந்தையேந்திழைதன்பாலேகித்
தினையொடுகிழங்குமாவுந்தீங்கனிபிறவுநல்கி
யனையவடுணையதாகவருந்தவன்றன்னைவைத்து
வனைகழலெயினரோடும்வல்லையின்மீண்டுபோனான். (௯௯)

போனதுமுதியோன்கண்டுபுனையிழைதன்னைநோக்கி
நானினிச்செய்வதென்கொனலிவதுபசிநோயென்னத்
தேனொடுகனியுமாவுஞ்செங்கையிற்கொடுப்பக்கொண்டு
வேனிலுமுடுகிற்றுண்ணீர்விடாய்பெரிதுடையேனென்றான். (௧00)

செப்புறுமனையமாற்றஞ்சேயிழைக்கிழத்திகேளா
விப்புறவரைக்குமப்பாலெழுவரைகடந்ததற்பி
னுப்புற'மிருந்ததெந்தாயொருசுனையங்கணேகி
வெப்புறலின்றித்தெண்ணீர்மிசைந்துபின்வருதிரென்றாள். (௧0௧)

பூட்டுவார்சிலைக்கைவேடர்பூவையேபுலர்ந்துதெண்ணீர்
வேட்டனன்விருத்தன்வெற்பில்வியனெறிசிறிதுந்தேரேன்
ளூட்டுணைவருந்துமென்றுதாழ்த்திடாதொல்லையேகிக்
காட்டுதிசுனைநீரென்றானறுமுகங்கரந்தகள்வன். (௧0௨)

Digitized By Roja Muthiah Research Library

முருகனதுரையையந்தமொய்குழல்வினவியெந்தாய்
வருகெனவழைத்துமுன்போய்வரையெலாங்கடந்துசென்று
விரைகமழ்சுனைநீர்காட்டவேனிலால்வெதும்பினான்போற்
பருகினன்பருகிப்பின்னரிஃதொன்றுபகர்தலுற்றான். (௧0௩)

ஆகத்தைவருத்துகின்றவரும்பசியவித்தாய்தெண்ணீர்த்
தாகத்தையவித்தாயின்னுந்தவிர்ந்திலதளர்ச்சிமன்னோ
மேகத்தையனையகூந்தன்மெல்லியல்வினையேன்கொண்ட
மோகத்தைத்தணித்தியாயின்முடிந்ததென்குறையதென்றான். (௧0௪)

வேறு.

ஈறின்முதியோனிரங்கியிரந்துகுறை
கூறிமதிமயங்கிக்கும்பிட்டுநின்றளவி
னாறுமலர்க்கூந்தனங்கைநகைத்துயிர்த்துச்
சீறிநடுநடுங்கியிவ்வாறுசெப்புகின்றாள். (௧0௫)

மேலாகியதவத்தோர்வேடந்தனைப்பூண்டிங்
கேலாதனவேயியற்றினீர்யார்விழிக்கும்
பாலாகித்தோன்றிப்பருகினாராவிகொள்ளு
மாலாலநீர்மைத்தோவையரியற்கையதே. (௧0௬)

கொய்தினைகள்காப்பேனைக்கோதிலாமாதவத்தீர்
மெய்தழுவவுன்னிவிளம்பாதனவிளம்பிக்
கைதொழுதுநிற்றல்கடனன்றுகானவரிச்
செய்கைதனையறியிற்றீதாய்முடிந்திடுமே. (௧0௭)

நத்துப்புரைமுடியீர்நல்லுணர்வுசற்றுமிலீ
ரெத்துக்குழுத்தீரிழிகுலத்தேன்றன்னைவெஃகிப்
பித்துக்கொண்டார்போற்பிதற்றுவீரிவ்வேடர்
கொத்துக்கெலாமோர்கொடும்பழியைச்செய்தீரே. (௧0௮)

சேவலாய்வைகுந்தினைப்புனத்திற்புள்ளினுடன்
மாவெலாங்கூடிவளர்பைங்குரல்கவரு
நாவலோய்நீருநடந்தருளுநான்முந்திப்
போவனாலென்றுபுனையிழையாள்போந்தனளே. (௧0௯)

பொன்னேயனையாண்முன்போகுந்திறநோக்கி
யென்னேயினிச்செய்வதென்றிரங்கியெம்பெருமான்
றன்னேரிலாதமருந்தந்திமுகத்தெந்தைதனை
முன்னேவருவாய்முதல்வாவெனநினைந்தான். (௧௧0)

அந்தப்பொழுதிலறுமாமுகற்கிரங்கி
முந்திப்படர்கின்றமொய்குழலாண்முன்னாகத்
தந்திக்கடவுட்டனிவாரணப்பொருப்பு
வந்துற்றதம்மாமறிகடலேபோன்முழங்கி. (௧௧௧)

அவ்வேலையில்வள்ளியச்சமொடுமீண்டுதவப்
பொய்வேடங்கொண்டுநின்றபுங்கவன்றன்பாலணுகி
யிவ்வேழங்காத்தருள்கவெந்தைநீர்சொற்றபடி
செய்வேனெனவொருபாற்சேர்ந்துதழீஇக்கொண்டனளே. (௧௧௨)



Digitized By Roja Muthiah Research Library

அன்னதொருகாலையறுமாமுகக்கடவுண்
முன்னொருசார்வந்துமுதுகளிற்றின்கோடொற்றப்
பின்னொருசார்வந்துபிடியின்மருப்பூன்ற
விந்நடுவேநின்றானெறுழ்வயிரத்தூணேபோல். (ககங)

கந்தமுருகன்கடவுட்களிறுதனை
வந்தனைகள்செய்துவழுத்திநீவந்திடலாற்
புந்திமயறீர்ந்தேன்புனையிழையுஞ்சேர்ந்தனளா
லெந்தைபெருமானெழுந்தருள்கமீண்டென்றான். (ககச)

என்னுமளவிலினிதென்றியானைமுக
முன்னிளவலேகமுகமாறுடையபிரான்
கன்னிதனையோர்கடிகாவினிற்கலந்து
தன்னுகருணைசெய்துதொல்லுருவங்காட்டினனே. (ககரு)

முந்நான்குதோளுமுகங்களோர்மூவிரண்டுங்
கொன்னார்வைவேலுங்குலிசமுமேனைப்படையும்
பொன்னார்மணிமயிலுமாகப்புனக்குறவர்
மின்னாள்கண்காணவெளிநின்றனன்விறலோன். (ககசு)

கூரார்நெடுவேற்குமரன்றிருவுருவைப்
பாராவணங்காப்பரவலுறாவிம்மிதமுஞ்
சேராநெடுங்காச்செங்கைகுவியாவியரா
வாராதகாதலுறாவம்மையிதுவோதுகின்றாள். (ககஎ)

மின்னேயனையசுடர்வேலவரேயிவ்வுருவ
முன்னேநீர்காட்டிமுயங்காமலித்துணையுங்
கொன்னேகழித்தீர்கொடியேன்செய்குற்றமெலா
மின்னேதணித்தேயெனையாண்டுகொள்ளுமென்றாள். (ககஅ)

உம்மையதனிலுலகமுண்டோன்றன்மகணீ
நம்மையணையும்வகைநற்றவஞ்செய்தாயதனா
லிம்மைதனிலுன்னையெய்தினோமென்றெங்க
ளம்மைதனைத்தழுவியையனருள்புரிந்தான். (கக௯)

எங்கண்முதல்வனிறைவிதனைநோக்கி
யுங்கள்புனந்தன்னிலுறைந்திடமுன்னேகுதியான்
மங்கைநல்லாயாமும்வருவோமெனவுரைப்ப
வங்கண்விடைகொண்டடிபணிந்துபோயினளே. (கஉ0)

வேறு.

வாங்கியசிலைநுதல்வள்ளியென்பவள், பூங்குரலேனலம்புனத்துளேகியே
யாங்கனமிருத்தலுமயற்புனத்தமர், பாங்கிவந்தடிமுறைபணிந்துநண்ணினாள். ()

நாற்றமுந்தோற்றமுநவிலொழுக்கமு, மாற்றமுஞ்செய்கையுமனமுமற்றதும்
வேற்றுமையாதலும்விளைவுநோக்கியே, தேற்றமொடிகுளையங்கிளையசெப்புவாள்.

இப்புனமழிதரவெங்ஙனேகினை, செப்புதிநீயெனத்தெரிவைநாணுறா [றாள்.
வப்புறமென்சுனையாடப்போந்தனன், வெப்புறும்வேனிலான்மெலிந்தியானென்

மைவிழிசிவப்பவும்வாய்வெளுப்பவு, மெய்வியர்வடையவுநகிலம்விம்மவுங்
கைவளைநெகிழவுங்காட்டுந்தண்சுனை, யெவ்விடையிருந்துளதியம்புவாயென்றாள். ()

Digitized By Roja Muthiah Research Library

சொற்றிடுமிகுஜேயைச்சுளித்துநோக்கியே, யுற்றிடுதுஜோயதாவுஜேயுட்கொண்டியான்,மற்றிவணிருந்தனன்வந்தெனக்குமோர், குற்றமதுரைத்தஜேகொடியைநீயென்றுள். (கஉ௫)

பாங்கியுந்தஜேவியும்பகர்ந்துமற்றிவை, யாங்கனமிருத்தலுமதஜேநோக்கியே [ன்.
யீங்கிதுசெவ்வியென்றெய்தச்சென்றனன், வேங்கையதாகிமுன்னின்றமேஜேயோ

கோட்டியசிஜேயினன்குறிக்கொள்வாளியன்,நீட்டியகுறியவாள்செறித்தகச்சினன்
வேட்டமதழுங்கியவிஜேவலோனெனத், தாட்டுஜேசிவந்திடத்தமியனேகிறுன்.()

வேறு.

காந்தள்போலியகரத்தினீர்யானெய்தகஜேயாற்
பாய்ந்தசோரியும்பெருமுழக்குறுபகுவாயு
மோய்ந்தபுண்படுமேனியுமாகியோரொருத்தல்
போந்ததோவிவண்புகலுதிர்புகலுதிரென்றுன். (கஉஅ)

வேழமேமுதலுள்ளனகெடுதிகள்வினவி
யூழிநாயகனிற்றலுமமக்குநேரொத்து
வாழுநீரருக்குரைப்பதேயன்றிநம்வன்மை
யேழையேங்களுக்கிசைப்பதென்னென்றனளிகுஜே. (கஉகூ)

ஐயர்வேட்டைவந்திடுவதுந்திஜேப்புனத்தமர்ந்து
தையல்காத்திடுகின்றதுஞ்சரதமோபறவை
யெய்யும்வேட்டுவர்கோலமேபோன்றனவிருவர்
மையறன்ஜேயுமுரைத்திடும்விழியெனமதித்தாள். (கஙo)

மனத்திலிங்கிவையுன்னியேதுஜேவியுமற்றைப்
புனத்திலேகிவீற்றிருந்தனளன்னதோர்பொழுதிற்
சினத்திடுங்கரியெய்தனமென்றசேவகன்போய்க்
கனத்தைநேர்தருகூந்தலாய்கேளெனக்கழறும். (கஙக)

உற்றகேளிருநீங்களேதமியனுக்குமக்குப்
பற்றதாயுளபொருளெலாந்தருவனும்பணிகண்
முற்றுநாடியேபுரிகுவன்முனிவுகொள்ளாது
சற்றுநீரருள்செய்திடுமென்றனன்றஜேவன். (கஙஉ)

அண்ணல்கூறியதிகுஜேதேர்ந்திடுதலுமைய
ரெண்ணமீதுகொலெம்பெருங்கிஜேக்கிதோரிழுக்கை
மண்ணினுட்டவோவந்ததுமறவர்தம்பேதைப்
பெண்ஜேயாதரித்திடுவரோபெரியவரென்றுள். (கஙங)

சீதரன்றருமமிர்திஜேயெயினர்கள்செய்த
மாதவந்தஜேப்பெண்ணினுக்கரசைமற்றெனக்குக்
காதனல்கியேநல்லருள்புரிந்தகாரிகையைப்
பேதையென்பதேபேதைமையென்றனன்பெரியோன். (கஙச)

என்றெங்கோனுரைசெய்தலுமடமகளிங்ஙன்
குன்றங்காவலர்வருகுவரவர்மிகக்கொடியோ
ரொன்றுந்தேர்கிலர்காண்பரேலெம்முயிரொறுப்பார்
நின்றிங்காவதென்போமெனநெறிப்படுத்துரைத்தாள். (கஙரு)

Digitized By Roja Muthiah Research Library

தோட்டின்மீதுசெல்விழியினுய்தோகையோடென்னைக்
கூட்டிடாயெனிற்கிழிதனிலாங்கவள்கோலந்
தீட்டிமாமடலேறிநம்மூர்த்தெருவதனி
லோட்டுவேனிதுநாளையான்செய்வதென்றுரைத்தான். (கஙகூ)

ஆதிதன்மொழிதுணைவிகேட்டஞ்சியையர்க்கு
நீதியன்றுதண்பனைமடலேறுதனீரிம்
மாதவித்தருச்சூழலின்மறைந்திருமற்றென்
காதன்மங்கையைத்தருவனென்றேகினள்கடிதின். (கஙஎ)

வேறு.

அங்கவெல்லையிலகமகிழ்ச்சியா, யெங்கடம்பிரானினிதினேகியே
மங்குல்வந்துகண்வளருமாதவிப், பொங்கர்தன்னிடைப்புக்குவைகினன். (கஙஅ)

பொள்ளெனத்தினைப்புனத்திற்பாங்கிபோய், வள்ளிதன்பதம்வணங்கிமானவேற்
பிள்ளைகாதலும்பிறவுஞ்செப்பியே, யுள்ளந்தேற்றியேயொருப்படுத்தினள். (கஙகூ)

இளையமங்கையையிருளையேனலின், விளைதரும்புனமெல்லநீங்கியே
யளவின்மஞ்ஞைகளகவுமாதவிக், குளிர்பொதும்பரிற்கொண்டுபோயினள். (கச0)

பற்றின்மிக்கதோர்பாவையிவ்வரை, சுற்றியேகிநீசூடுங்கோடல்கள்
குற்றுவந்துநின்குழற்குநல்குவ, னிற்றியீண்டெனநிறுவிப்போயினள். (கசக)

வேறு.

கோற்றொடியிருளைதன்குறிப்பினால்வகை, சாற்றினள்கன்றிடத்தையனிற்றது
மாற்றவுமகிழ்சிறந்தாறுமாமுகன், றேற்றினனெதிர்ந்தனன்றென்மைபோலவே.

வடுத்துணைநிகர்விழிவள்ளியெம்பிரா, னடித்துணைவணங்கலுமவளையங்கையா,
லெடுத்தனன்புல்லினனின்பமெய்தினன்,சுடர்த்தொடிகேட்டியென்றிதனைச்சொ
ல்லினன். (கசங)

உந்தையும்பிறரும்வந்துன்னைநாடுவர், செந்தினைவிளைபுனஞ்சேவல்போற்றிடப்
பைந்தொடியணங்கொடுபடர்திநாளையாம், வந்திடுவோமெனமறைந்துபோயினன்.

போந்தபினிரங்கியப்பொதும்பர்நீங்கியே, யேந்திழைவருதலுமிருளைநேர்கொடு
காந்தளின்மலர்சிலகாட்டியன்னவள், கூந்தலிற்சூடியேகொடுசென்றேகினள். ()

இவ்வகைவழிபடுமிருளைதன்னொடு, நைவளமேயெனநவிலுந்தீஞ்சொலாள்
கொய்வருதினைப்புனங்குறுகிப்போற்றியே,யவ்விடையிருந்தனளகம்புலர்ந்துளாள்

வளர்தருபுனந்தனில்வள்ளிநாயகி, தளர்ந்தனளிருத்தலுந்தலையளித்திடு
மிளந்தினையின்குரலீன்றுமுற்றியே, விளைந்தனகுறவர்கள்விரைந்துகூடினர். கசஎ

வேறு.

குன்றவாணர்கள்யாவருங்கொடிச்சியைநோக்கித்
தன்றுமேனல்கள்விளைந்தனகணிகளுஞ்சொற்ற
வின்றுகாறிதுபோற்றியேவருந்தினையினிநீ
சென்றிடம்மவுன்சிறுகுடிக்கெனவுரைசெய்தார். (கசஅ)

குறவரிவ்வகைசொற்றனசெவிப்புலங்கொண்டாங்
கெறியும்வேல்படுபுண்ணிடையெரிநுழைந்தென்ன
மறுகுமுள்ளத்தளாகியேமற்றவணீங்கிச்
சிறுகுடிக்குநல்லிருளையுந்தானுமாய்ச்சென்றாள். (கசகூ)

Digitized By Roja Muthiah Research Library

மானினங்களைமயில்களைக்கிளியைமாண்புறவை
யேனையுள்ளவைதங்களைநோக்கியேயாங்கள்
போனசெய்கையைப்புகலுதிர்புங்கவர்க்கென்றுத்
தானிரங்கியேபோயினளொருதனித்தலைவி. (௧௫0)

பூவையன்னதோர்மொழியினாள்சிறுகுடிப்புகுந்து
கோவில்வைப்பினுட்குறுகியேகொள்கைவேறாகிப்
பாவையொண்கழங்காடலள்பண்டுபோன்மடவா
ரேவர்தம்மொடும்பேசலள்புலம்பிவீற்றிருந்தாள். (௧௫௧)

மற்றவெல்லையிற்செவிலியுமன்னையுமகளை
யுற்றுநோக்கியேமேனிவேறாகியதுனக்குக்
குற்றம்வந்தவாறென்னெனவற்புறக்கூறிச்
செற்றமெய்தியேயன்னவடன்னையிற்செறித்தார். (௧௫௨)

வேறு.

ஓவியமனையநீராளுடம்பிடித்தடக்கையோனை
மேவினள்பிரிதலாலேமெய்பரிந்துள்ளம்வெம்பி
யாவியதில்லாளென்னவவசமாயங்கண்வீழப்
பாவையரெடுத்துப்புல்லிப்பருவரலுற்றுச்சூழ்ந்தார். (௧௫௩)

ஏர்கொண்மெய்நுடங்குமாறுமிறைவளைகழலுமாறுங்
கூர்கொள்கண்பனிக்குமாறுங்குணங்கள்வேறாயவாறும்
பீர்கொளுமாறுநோக்கிப்பெண்ணினைப்பிறங்கற்சாரற்
சூர்கொலாந்தீண்டிற்றென்றார்சூர்ப்பகைதொட்டதோரார். (௧௫௪)

தந்தையுங்குறவர்தாமுந்தமர்களும்பிறருமீண்டிச்
சிந்தையுள்ளயர்வுகொண்டுதெரிவைதன்செயலைநோக்கி
முந்தையின்முதியாளோடுமுருகனைமுறையிற்கூவி
வெந்திறல்வேலினாற்குவெறியயர்வித்தாரன்றே. (௧௫௫)

வெறியயர்கின்றகாலைவேலன்மேல்வந்துதோன்றிப்
பிறிதொருதிறமுமன்றாற்பெய்வளைதமியளாகி
யுறைதருபுனத்திற்றொட்டாமுளமகிழ்சிறப்புநேரிற்
குறையிதுநீங்குமென்றேகுமரவேள்குறிப்பிற்சொற்றான். (௧௫௬)

குறிப்பொடுநெடுவேலண்ணல்கூறியகன்னமூல
நெறிப்படவருதலோடுநேரிழையவசநீங்கி
முறைப்படவெழுந்துவைகமுருகனைமுன்னியாங்கே
சிறப்பினைநேர்துமென்றுசெவிலித்தாய்பராவல்செய்தாள். (௧௫௭)

மனையிடையம்மைவைகவனசரர்முதிர்ந்தசெவ்வித்
தினையினையரிந்துகொண்டுசிறுகுடியதனிற்சென்றா
ரினையதுநோக்கிச்செவ்வேளிருவியம்புனத்திற்புக்குப்
புனையிழைதன்னைக்காணான்புலம்பியேதிரிதலுற்றான். (௧௫௮)

கனந்தனைவினவுமஞ்ஞைக்கணந்தனைவினவுமேனற்
புனந்தனைவினவுமம்மென்பூவையைவினவுங்கிள்ளை
யினந்தனைவினவும்யானையிரலையைவினவுந்தண்கா
வனந்தனைவினவுமற்றைவரைகளைவினவுமாதோ. (௧௫௯)

Digitized By Roja Muthiah Research Library

வாடினன்றளர்ந்தானெஞ்சம்வருந்தினன்மையற்கெல்லை
கூடினன்வெய்துயிர்த்தான்குற்றடிச்சுவடுதன்னை
நாடினன்றிகைத்தானின்றுநடுங்கினனங்கைதன்னைத்
தேடினன்குமரற்கீதுதிருவிளையாடல்போலாம். (கசு0)

வல்லியைநாடுவான்போன்மாண்பகல்கழித்துவாடிக்
கொல்லையம்புனத்திற்சுற்றிக்குமரவேணடுநாள்யாமஞ்
செல்லுறுமெல்லைவேடர்சிறுகுடிதன்னிற்புக்குப்
புல்லியகுறவர்செம்மல்குரம்பையின்புறம்போய்நின்றான். (கசுக)

பாங்கிசெவ்வேளைக்கண்டுபணிந்துநீர்கங்குற்போதி
லீங்குவந்திடுவதொல்லாதிறைவியும்பிரியினுய்யா
ளீங்களிவ்விடத்திற்கூடநேர்ந்ததோரிடமுமில்லை
யாங்கவடன்னைக்கொண்டேயகலுதிரடிகளென்றாள். (கசுஉ)

என்றிவைகூறிப்பாங்கியிறைவனைநிறுவியேகித்
தன்றுணையாகிவைகுந்தையலையடைந்துகேள்வ
ருன்றனைவௌவிச்செல்வானுள்ளத்திற்றுணியாவிங்ஙன்
சென்றனர்வருதியென்னச்சீரிதென்றொருப்பாடுற்றாள். (கசுங)

தாய்துயிலறிந்துதங்கடமர்துயிலறிந்துதுஞ்சா
நாய்துயிலறிந்துமற்றந்நகர்துயிலறிந்துவெய்ய
பேய்துயில்கொள்ளும்யாமப்பெரும்பொழுததனிற்பாங்கி
வாய்தலிற்கதவைநீக்கிவள்ளியைக்கொடுசென்றுய்த்தாள். (கசுச)

அறுமுகவொருவன்றன்னையாயிழையெதிர்ந்துதாழ்ந்து
சிறுதொழிலெயினரூரிற்றீயனேன்பொருட்டாலிந்த
நறுமலர்ப்பாதங்கன்றநள்ளிருள்யாமந்தன்னி
லிறைவநீர்நடப்பதேயென்றிரங்கியேதொழுதுநின்றாள். (கசுரு)

மாத்தவமடந்தைநிற்பவள்ளலையிகுளைநோக்கித்
தீத்தொழிலெயினர்காணிற்றீமையாய்விளையுமின்னே
யேத்தருஞ்சிறப்பினும்மூர்க்கிங்கிவடனைக்கொண்டேகிக்
காத்தருள்புரியுமென்றேகையடையாகநேர்ந்தாள். (கசுசு)

முத்துறுமுறுவலாளைமூவிருமுகத்தினன்றன்
கைத்தலந்தன்னிலீந்துகைதொழுதிகுளைநிற்ப
மெய்த்தகுகருணைசெய்துவிளங்கிழாய்நீயெம்பாலின்
வைத்திடுகருணைதன்னைமறக்கலங்கண்டாயென்றான். (கசுஎ)

மையுறுதடங்கணல்லாள்வள்ளியைவணக்கஞ்செய்து
மெய்யுறப்புல்லியன்னாய்விரைந்தனைசேறியென்னா
வையனோடினிதுகூட்டியாங்கவர்விடுப்பமீண்டு
கொய்யுறுகவரிமேய்ந்தகுரம்பையின்கூரைபுக்காள். (கசுஅ)

விடைபெற்றேயிகுளையேகவேலுடைக்கடவுளன்ன
நடைபெற்றமடந்தையோடுநள்ளிருளிடையேசென்று
கடைபெற்றசீறூர்நீங்கிக்காப்பெலாங்கடந்துகாமன்
படைபெற்றுக்குலவுமாங்கோர்பசுமரக்காவுட்சேர்ந்தான். (கசுகூ)

Digitized By Roja Muthiah Research Library

செஞ்சுடர்நெடுவேலண்ணல்செழுமலர்க்காவிற்புக்கு
வஞ்சியொடிருந்தகாலைவைகறைவிடியல் * செல்ல
வெஞ்சலில்சீறூர்தன்னிலிறையவன்றனதுதேவி
துஞ்சலையகன்றுவல்லேதுணுக்கமுற்றெழுந்தாளன்றே. (கஎ0)

சங்கலைகின்றசெங்கைத்தனிமகட்காணாளாகி
யெங்கணுநாடிப்பின்னரிகுளையைவந்துகேட்பக்
கங்குலினவளுநானுங்கண்படைகொண்டதுண்டா
லங்கவளதற்பின்செய்ததறிகிலனன்றையென்றாள். (கஎக)

தம்மகட்காணவண்ணந்தாய்வந்துபுகலக்கேட்டுத்
தெம்முனைக்குறவர்செம்மறெருமந்துசெயிர்த்துப்பொங்கி
நம்மனைக்காவனீங்கிநன்னுதற்பேதைதன்னை
யிம்மெனக்கொண்டுபோந்தான்யாவனோவொருவனென்றான். (கஎ௨)

மற்றிவைபுகன்றுதாதைவாட்படைமருங்கிற்கட்டிக்
கொற்றவில்வாளியேந்திக்குமரியைக்கவர்ந்தகள்வ
னுற்றிடுநெறியைநாடவொல்லையிற்போவனென்னாச்
செற்றமொடெழுந்துசெல்லச்சிறுகுடியெயினர்தேர்ந்தார். (கஎ௩)

எள்ளுதற்கரியசீறூரிடைதனில்யாமத்தேகி
வள்ளியைக்கவர்ந்துகொண்டுமாயையான்மீண்டுபோன
கள்வனைத்தொடர்துமென்றேகானவர்பலருங்கூடிப்
பொள்ளெனச்சிலைகோல்பற்றிப்போர்த்தொழிற்கமைந்துபோனார். (கஎச)

வேடுவர்யாருமீண்டிவிரைந்துபோய்வேந்தனோடு
கூடினரிரலைதன்னைக்குறித்தனர்நெறிகடோறு
மோடினர்பொதும்பரெல்லாமுலாவினர்புலங்கள்புக்கு
நாடினர்சுவடுநோக்கிநடந்தனரிடங்களெங்கும். (கஎரு)

ஈங்கனமறவரோடுமிறையவன்றேடிச்செல்லப்
பாங்கரிலொருதண்காவிற்பட்டிமைநெறியானுற்று
ளாங்கனந்தெரியாவஞ்சியாறுமாமுகத்துவள்ளல்
பூங்கழலடியில்வீழ்ந்துபொருமியேபுகலலுற்றாள். (கஎசு)

கோலொடுசிலையும்வாளுங்குந்தமுமழுவும்பிண்டி
பாலமும்பற்றிவேடர்பலருமாய்த்துருவிச்சென்று
சோலையின்மருங்குவந்தார்துணுக்கமுற்றுளதென்சிந்தை
மேலினிச்செய்வதென்கொலறிகிலேன்விளம்பாயென்றாள். (கஎஎ)

வருந்தலைவாழிநல்லாய்மால்வரையோடுசூர
னுரந்தனைமுன்புகீண்டவுடம்பிடியிருந்தநும்மோர்
விரைந்தமர்புரியச்சூழின்வீட்டுதுமதனைநோக்கி
யிருந்தருணம்பியென்றுவிறைமகட்கெந்தைசொற்றான். (கஎஅ)

குறத்திருமடந்தையின்னகூற்றினைவினவிச்செவ்வேள்
புறத்தினில்வருதலோடும்பொள்ளெனக்குறுகியந்தத்
திறத்தினையுற்றுநோக்கிச்சீறிவெய்துயிர்த்துப்பொங்கி
மறத்தொழிலெயினர்காவைமருங்குறவளைந்துகொண்டார். (கஎகூ)

---

* வைகறைவிடியல் என்பதற்கு அற்றைநாட்பொழுது தன்னெல்லையோடறும் விடியற்காலமெனப் பொருள்கொள்க. வைகுதல்-கழிதலென்னும்பொருட்டு.

Digitized By Roja Muthiah Research Library

தாதையங்கதனைக்கண்டுதண்டலைகுறுகிநந்தம்
பேதையைக்கவர்ந்தகள்வன்பெயர்கிலனெமதுவன்மை
யேதையுமதியானம்மாவிவன்விறலெரிபாய்ந்துண்ணா
மூதையங்கானமென்னமுடிக்குதுமொல்லையென்றான். (௧௮0)

குறவர்கண்முதல்வன்றானுங்கொடுந்தொழிலெயினர்யாரு
மறிகடலென்னவார்த்துவார்சிலைமுழுதும்வாங்கி
யெறிசுடர்ப்பரிதித்தேவையெழிலிகண்மறைத்தாலென்ன
முறைமுறையம்புவீசிமுருகனைவளைந்துகொண்டார். (௧௮௧)

ஒட்டலராகிச்சூழ்ந்தாங்குடன்றுபோர்புரிந்துவெய்யோர்
விட்டவெம்பகழியெல்லாமென்மலர்நீரவாகிக்
கட்டழகுடையசெவ்வேற்கருணையங்கடலின்மீது
பட்டனபட்டலோடும்பைந்தொடிபதைத்துச்சொல்வாள். (௧௮௨)

நெட்டிலைவாளிதன்னைஞெரேலெனநம்மேற்செல்லத்
தொட்டிடுகையர்தம்மைச்சுடருடைநெடுவேலேவி
யட்டிடல்வேண்டுஞ்சீயமடுதொழில்குறியாதென்னிற்
கிட்டுமேமரையுமானுங்கேழலும்வேழந்தானும். (௧௮௩)

என்றிவைகுமரிசெப்பவெம்பிரானருளாற்பாங்கர்
நின்றதோர்கொடிமாண்சேவனிமிர்ந்தெழுந்தார்ப்புக்கொள்ளக்
குன்றவர்முதல்வன்றானுங்குமரருந்தமருமியாரும்
பொன்றினராகிமாண்டுபொள்ளெனப்புவியில்வீழ்ந்தார். (௧௮௪)

தந்தையுமுன்னையோருந்தமரும்வீழ்ந்திறந்ததன்மை
பைந்தொடிவள்ளிநோக்கிப்பதைபதைத்திரங்கிச்சோரக்
கந்தனத்துணைவியன்புகாணுவான்கடிகாநீங்கிச்
சிந்தையிலருளோடேகவனையளுந்தொடர்ந்துசென்றாள். (௧௮௫)

செல்லநாரதப்பேர்பெற்றசீர்கெழுமுனிநேர்வந்து
வல்லியோடிறைவன்றன்னைவணங்கிநின்செய்கையெல்லாஞ்
சொல்லுதியென்னவன்னான்றோகையைக்காண்டறொட்டு
மல்லல்வேட்டுவரையட்டுவந்திடுமளவுஞ்சொற்றான். (௧௮௬)

பெற்றிடுதந்தைதன்னைப்பிறவுளசுற்றத்தோரைச்
செற்றமொடட்டுநீக்கிச்சிறந்தநல்லருள்செயாமற்
பொற்றொடிதன்னைக்கொண்டுபோந்திடத்தகுமோவென்று
மற்றிவைமுனிவன்கூறவள்ளலுமஃதாமென்றான். (௧௮௭)

விழுப்பமதுளதண்காவில்விசாகன்மீண்டருளித்தன்பான்
முழுப்பரிவுடையநங்கைமுகத்தினைநோக்கிநம்மேற்
பழிப்படுவெம்போராற்றிப்பட்டநுங்கிளையையெல்லா
மெழுப்புதியென்னலோடுமினிதெனவிறைஞ்சிச்சொல்வாள். (௧௮௮)

விழுமியவுயிர்கள்சிந்திவீழ்ந்தநங்கேளிர்யாரு
மெழுதிரென்றருளலோடுமிருநிலத்துறங்குகின்றோர்
பழையநல்லுணர்வுதோன்றப்பதைபதைத்தெழுதற்கொப்பக்
குழுவுறுதமர்களோடுங்குறவர்கோனெழுந்தானன்றே. (௧௮௯)

Digitized By Roja Muthiah Research Library

எழுந்திடுகின்றகாலையெம்பிரான்கருணைவெள்ளம்
பொழிந்திடுவதனமாறும்புயங்கள்பன்னிரண்டும்வேலு
மொழிந்திடுபடையுமாகியுருவினையவர்க்குக்காட்ட
விழுந்தனர்பணிந்துபோற்றிவிம்மிதராகிச்சொல்வார். (கக0)

அடுந்திறலெயினர்சேரியளித்திடுநீயேயெங்கண்
மடந்தையைக்கரவில்வௌவிவரம்பினையழித்துத்தீரா
நெடுந்தனிப்பழியதொன்றுநிறுவினைபுதல்வர்கொள்ள
விடந்தனையன்னையூட்டின்விலக்கிடுகின்றருண்டோ. (ககக)

ஆங்கதுநிற்கவெங்களரிவையைநசையால்வௌவி
நாங்களுமுணராவண்ணநம்பெருங்காவனீங்கி
யீங்கிவட்கொணர்ந்தாயெந்தாயின்னினிச்சீறூர்க்கேகித்
தீங்கனல்சான்றவேட்டுச்செல்லுதிநின்னூர்க்கென்றார். (ககஉ)

மாதுலன்முதலோர்சொற்றமணமொழிக்கிசைவுகொண்டு
மேதகுகருணைசெய்துமெல்லியறனையுங்கொண்டு
கோதிலாமுனிவனோடுங்குளிர்மலர்க்காவுநீங்கிப்
பாதபங்கயங்கணோவப்பருப்பதச்சீறூர்புக்கான். (ககங)

தந்தையுஞ்சுற்றத்தோருஞ்சண்முகன்பாங்கரேகிச்
சிந்தையின்மகிழ்ச்சியோடுசிறுகுடியோரைநோக்கிக்
கந்தனேநமதுமாதைக்கவர்ந்தனனமதுசொல்லால்
வந்தனன்மணமுஞ்செய்யமற்றிதுநிகழ்ச்சியென்றார். (ககச)

சங்கரன்மதலைதானேதையலைக்கவர்ந்தானென்று
மங்கலவதுவைசெய்யவந்தனனிங்ஙனென்றுந்
தங்கள்சுற்றத்தோர்கூறச்சிறுகுடிதன்னிலுற்றோர்
பொங்குவெஞ்சினமுநாணுமகிழ்ச்சியும்பொடிப்பநின்றார். (ககரு)

குன்றவர்தமதுசெம்மல்குறிச்சியிற்றலைமைத்தான
தன்றிருமனையினூடேசரவணமுதல்வன்றன்னை
மன்றலங்குழலியோடுமரபுளியுய்த்துவேங்கைப்
பொன்றிகழதளின்மீதுபொலிவுறவிருத்தினானே. (ககசு)

அன்னதோர்வேலைதன்னிலறுமுகமுடையவள்ள
றன்னுழையிருந்தநங்கைதனையருளோடுநோக்கக்
கொன்னவில் * குறவர்மாதர்குயிற்றியகோலநீங்கி
முன்னுறுதெய்வக்கோலமுழுதொருங்குற்றதன்றே. (ககஎ)

கவலைதீர்தந்தைதானுங்கணிப்பிலாச்சுற்றத்தாருஞ்
செவிலியுமன்னைதானுமிகுளையுந்தெரிவைமாருந்
தவலருங்கற்பின்மிக்கதம்மகள்கோலநோக்கி
யிவளெமதிடத்தில்வந்ததெம்பெருந்தவமேயென்றார். (ககஅ)

அந்தநல்வேலைதன்னிலன்புடைக்குறவர்கோமான்
கந்தவேள்பாணிதன்னிற்கன்னிகைகரத்தைநல்கி
நந்தவமாகிவந்தநங்கையைநயப்பாலின்று
தந்தனன்கொள்கவென்றுதண்புனற்றாரையுய்த்தான். (கககூ)

---

* நவிலல் - செய்தல்.



Digitized By Roja Muthiah Research Library

நற்றவமியற்றுந்தொல்சீர்நாரதனை யகாலைக்
கொற்றமதுடையவேலோன்குறிப்பினலங்கியோடு
மற்றுளகலனுந்தந்துவதுவையின்சடங்குநாடி
யற்றமதடையாவண்ணமருமறைவிதியாற்செய்தான். (உ00)

ஆவதோர்காலைதன்னிலரியுநான்முகனும்வானோர்
கோவொடுபிறருஞ்சூழக்குலவரைமடந்தையோடுந்
தேவர்கடேவன்வந்துசேண்மிசைநின்றுசெவ்வேள்
பாவையைவதுவைசெய்யும்பரிசினைமுழுதுங்கண்டான். (உ0க)

கண்ணுதலொருவன்றானுங்கவுரியுங்கண்ணுற்கண்டு
தண்ணளிபுரிந்துநிற்பத்தண்டுழாய்முடியோனாதிப்
பண்ணவருவகைநீடிப்பனிமலர்மாரிவீசி
யண்ணலைவழிபட்டேத்தியஞ்சலிபுரிந்திட்டார்த்தார். (உ0உ)

அறுமுகமுடையவள்ளலன்னதுநோக்கிச்சீறூ
ரிறையதுமுணராவண்ணமிமையமேலணங்கினோடுங்
கறையமர்கண்டன்றன்னைக்கைதொழுதேனையோர்க்கு
முறைமுறையுவகையோடுமுழுதருள்புரிந்தானன்றே. (உ0ங)

வேறு.

அங்கவேலையினலரின்மேலவன், செங்கண்மாயவன்றேவர்கோமகன்
சங்கைதீர்தருந்தவத்தர்தம்மொடு, மங்கைபாதியன்மறைந்துபோயினன். (உ0ச)

போனவெல்லையிற்பொருவினாரதன், முனியற்றியசடங்குமுற்றநுங்
கானவேடுவர்கன்னிதன்னொடு, மானவேலனைவணங்கிப்போற்றினன். (உ0ரு)

வேறு.

மற்றதுகாலைதன்னின்மாதுலன்வள்ளிதன்னைக்
கொற்றவேலுடையநம்பிவதுவைசெய்கோலநோக்கி
யுற்றவிவ்விழிகடம்மாலுறுபயனெருங்கேயின்று
பெற்றனனென்றானன்னுவகையார்பேசற்பாலார். (உ0சு)

மெல்லிடைகொம்பென்றுன்னவிரைமலர்தழை * மேற்கொண்ட
புல்லியகுறவர்மாதர்பொருவில்சீர்மருகன்றானும்
வல்லியுமின்னேபோலவைகலும்வாழ்கவென்று
சொல்லியலாசிகூறித்தூமலரறுகுதூர்த்தார். (உ0எ)

செந்தினையிடியுந்தேனுந்தீம்பலகனியுங்காயுங்
கந்தமும்பிறவுமாகவிலைபொலிகலத்திலிட்டுப்
பைந்தொடியணங்குநீயும்பரிவுடனுகர்திரென்ன
வெந்திறலெயினர்கூறவியனருள்புரிந்தான்மேலோன். (உ0அ)

வேறு.

கிராதர்மங்கையும்பராபரன்மதலையுங்கெழுமி
விராவுசில்லுணாமிசைந்தனர்மிசைந்திடுதன்மை
முராரியாதியாந்தேவர்பான்முனிவர்பான்மற்றைச்
சராசரங்கள்பாலெங்கணுஞ்சார்ந்துளதன்றே. (உ0கு)

அனையகாலையிலறுமுகனெழுந்துநின்றங்கே
குனியும்வில்லுடைக்குறவர்தங்குரிசிலைநோக்கி
வனிதைதன்னுடன்சென்றியாஞ்செருத்தணிவரையி
லினிதுவைகுதுமென்றலுநன்றெனவிசைத்தான். (உக0)

* தழை - மரவுரி.

Digitized By Roja Muthiah Research Library

தாயும்பாங்கியுஞ்செவிலியுந்தையலைநோக்கி
நாயகன்பின்னர்நடத்தியோநன்றெனப்புல்லி
நேயமோடுபல்லாசிகள்புகன்றிடநெடுவேற்
சேயுடன்கடிதேகவேசிந்தையுட்கொண்டாள். (உகக)

பாவைதன்னுடன்பன்னிருபுயமுடைப்பகவன்
கோவினீங்கியேகுறவர்தங்குரிசிலைவிளித்துத்
தேவருந்தொழச்சிறுகுடியரசியல்செலுத்தி
மேவுகென்றவணிறுவியேபோயினன்விரைவில். (உகஉ)

இன்னதன்மைசேர்வள்ளியஞ்சிலம்பினையிகந்து
பன்னிரண்டுமொய்ம்புடையவன்பாவையுந்தானு
மின்னும்வெஞ்சுடர்ப்பரிதியும்போலவிண்படர்ந்து
தன்னையேநிகர்தணிகைமால்வரையினைச்சார்ந்தான். (உகங)

செச்சைமௌலியான்செருத்தணிவரைமிசைத்தெய்வத்
தச்சன்முன்னரேயியற்றியதனிநகர்புகுந்து
பச்சிளங்கொங்கைவனசரர்பாவையோடொன்றி
யிச்சகத்துயிர்யாவையுமுய்யவீற்றிருந்தான். (உகச)

அந்தவேலையில்வள்ளிநாயகியயில்வேற்கைக்
கந்தவேள்பதம்வணங்கியேகைதொழுதைய
விந்தைமால்வரையியற்கையையியம்புதியென்னச்
சிந்தைநீடுபேரருளினாலின்னனசெப்பும். (உகரு)

செங்கண்வெய்யசூர்ச்செருத்தொழிலினுஞ்சிலைவேடர்
தங்களிற்செயுஞ்செருத்தொழிலினுந்தணிந்திட்டே
யிங்குவந்தியாமிருத்தலாற்செருத்தணியென்றோர்
மங்கலந்தருபெயரினைப்பெற்றதிவ்வரையே. (உகசு)

முல்லைவாணகையுமையவண்முலைவளையதனுன்
மல்லன்மாநிழலிறைவரைவடுப்படுத்தமரு
மெல்லைநீர்வயற்காஞ்சியினணுகநின்றிடலாற்
சொல்லலாந்தகைத்தன்றிந்தமால்வரைத்தூய்மை. (உகஎ)

விரையிடங்கொளும்போதினுண்மிக்கபங்கயம்போற்
றிரையிடங்கொளுநதிகளிற்சிறந்தகங்கையைப்போற்
றரையிடங்கொளும்பதிகளிற்காஞ்சியந்தலம்போல்
வரையிடங்களிற்சிறந்ததித்தணிகைமால்வரையே. (உகஅ)

கோடியம்பியும்வேய்ங்குழலூதியுங்குர * லா
னீடுதந்திரியியக்கியுமேழிசைநிறுத்துப்
பாடியுஞ்சிறுபல்லியத்தின்னிசைபடுத்து
மாடுதும்விளையாடுதுமிவ்வரையதன்கண். (உககூ)

மந்தரத்தினுமேருமால்வரையினுமணிதோய்
கந்தரத்தவன்கயிலையேகாதலித்ததுபோற்
சுந்தரக்கிரிதொல்புவிதனிற்பலவெனினு
மிந்தவெற்பினிலாற்றவுமகிழ்ச்சியுண்டெமக்கே. (உஉ0)

---

* குரல் - ரோமம்.

Digitized By Roja Muthiah Research Library

வான்றிகழ்ந்திடுமிருநிலவரைபலவவற்று
ளான்றகாதலாலிங்ஙனமேவுதுமதற்குச்
சான்றுவாசவன்வைகலுஞ்சாத்துதற்பொருட்டான்
மூன்றுகாவியிச்சுனைதனிலெமக்குமுன்வைத்தான். (உஉ௪)

காலைப்போதினிலொருமலர்கதிர்முதிருச்சி
வேலைப்போதினிலொருமலர்விண்ணெலாமிருள்சூழ்
மாலைப்போதினிலொருமலராகவிவ்வரைமே
னீலப்போதுமூன்றொழிவின்றிநிற்றலுமலரும். (உஉஉ)

ஆழிநீரரசுலகெலாமுண்ணினுமளிப்போ
ரூழிபேரினுமொருபகற்குற்பலமூன்றாய்த்
தாழிருஞ்சுனைதன்னிடைமலர்ந்திடுந்தவிரா
மாழையொண்கணுமிவ்வரைப்பெருமையார்வகுப்பார். (உஉ௩)

இந்தவெற்பினைத்தொழுதுளார்பவமெலாமேகுஞ்
சிந்தையன்புடனிவ்வரையின்கணேசென்று
முந்தநின்றவிச்சுனைதனில்விதிமுறைமூழ்கி
வந்துநந்தமைத்தொழுதுளார்நம்பதம்வாழ்வார். (உஉ௪)

அஞ்சுவைகலிவ்வகன்கிரிநண்ணியெம்மடிக
டஞ்சமென்றுளத்துன்னியேவழிபடுந்தவத்தோர்
னெஞ்சகந்தனில்வெஃகியபோகங்கணிரப்பி
யெஞ்சலில்லதோர்வீடுபேறடைந்தினிதிருப்பார். (உஉ௫)

தேவராயினுமுனிவரராயினுஞ்சிறந்தோ
ரேவராயினும்பிறந்தபினிவ்வரைதொழாதார்
தாவராதிகடம்மினுங்கடையரேதமது
பாவராசிகளகலுமோபார்வலஞ்செயினும். (உஉ௬)

பாதகம்பலசெய்தவராயினும்பவங்க
ளேதும்வைகலும்புரிபவராயினுமெம்பா
லாதரங்கொடுதணிகைவெற்படைவரேலவரே
வேதன்மாலினும்விழுமியரெவற்றினுமிக்கார். (உஉ௭)

வேறு.

உற்பலவரையின்வாழ்வோரோரொருதருமஞ்செய்யிற்
பற்பலவாகியோங்கும்பவங்களிற்பலசெய்தாலுஞ்
சிற்பமதாகியொன்றாய்த்தேய்ந்திடுமிதுவேயன்றி
யற்புதமாகவிங்ஙனநந்தகோடிகளுண்டன்றே. (உஉ௮)

என்றிவைகுமரன்கூறவெயினர்தம்பாவைகேளா
நன்றெனவுவகையெய்திநாணிலவரைப்பினுள்ள
குன்றிடைச்சிறந்தவிந்தத்தணிகைமால்வரையின்கொள்கை
யுன்றிருவருளாற்றேர்ந்தேயுய்ந்தனன்றமியனென்றாள். (உஉ௯)

இவ்வரையொருசார்தன்னிலிராறுதோளுடையவெந்தை
மைவிழியணங்குந்தானுமாலயனுணராவள்ள
லைவகையுருவிலொன்றை * யாகமவிதியாலுய்த்து
மெய்வழிபாடுசெய்துவேண்டியாங்கருளும்பெற்றான். (உ௩0)

* ஐவகையுருவிலொன்றை - சிவசாதாக்கியம் அமூர்த்திசாதாக்கியம் மூர்த்திசாதாக்கியம் கர்த்திருசாதாக்கியம் கர்மசாதாக்கியம் என்னும் பஞ்சசாதாக்கியங்களுள் ஒன்றாய்ப் பீடலிங்கரூபமாய் உள்ள கர்மசாதாக்கியத்தை.

Digitized By Roja Muthiah Research Library

கருத்திடைமகிழ்வுமன்புங்காதலுங்கடவமுக்க
ஞொருத்தனைவழிபட்டேத்தியொப்பிலாநெடுவேலண்ணன்
மருத்தொடைசெறிந்தகூந்தல்வள்ளிநாயகியுந்தானுஞ்
செருத்தணிவரையில்வைகிச்சிலபகலமர்ந்தானன்றே. (உஙக)

தள்ளரும்விழைவின்மிக்கதணிகையினின்றுமோர்நாள்
வள்ளியுந்தானுமாகமானமொன்றதனிற்புக்கு
வெள்ளியங்கிரியின்பாங்கர்மேவியகந்தவெற்பி
லொள்ளிணர்க்கடப்பந்தாரோனுலகெலாம்வணங்கப்போனன். (உஙஉ)

கந்தவெற்பதனிற்சென்றுகடிகெழுமானநீங்கி
யந்தமில்பூதர்போற்றுமம்பொனாலயத்தினேகி
யிந்திரன்மகடூவாகுமேந்திழையினிதுவாழு
மந்திரமதனிற்புக்கான்வள்ளியுந்தானும்வள்ளல். (உஙங)

ஆரணந்தெரிதரேற்றுவறுமுகன்வரவுநோக்கி
வாரணமடந்தைவந்துவந்தனைபுரியவன்னாள்
பூரணமுலையுமார்பும்பொருந்துமாறெடுத்துப்புல்லித்
தாரணிதன்னிற்றீர்ந்ததனிமையின்றுயரந்தீர்த்தான். (உஙச)

ஆங்கதுகாலைவள்ளியமரர்கோனளித்தபாவை
பூங்கழல்வணக்கஞ்செய்யப்பொருக்கெனவெடுத்துப்புல்லி
யீங்கொருதமியளாகியிருந்திடுவேனுக்கின்றோர்
பாங்கிவந்துற்றவாறுநன்றெனப்பரிவுகூர்ந்தாள். (உஙரு)

சூர்க்கடல்பருகும்வேலோன்றுணைவியரிருவரோடும்
போர்க்கடல்கொண்டசீயப்பொலன்மணியணைமேற்சேர்ந்தான்
பாற்கடலமளிதன்னிற்பாவையர்புறத்துவைகக்
கார்க்கடற்பவளவண்ணன் * கருணையோடமருமாபோல். (உஙசு)

செங்கனல்வடவைபோலத்திரைக்கடல்பருகும்வேலோன்
மங்கையரிருவரோடுமடங்கலம்பீடமீதி
லங்கினிதிருந்தகாலையரமகளவனைநோக்கி
யிங்கிவள்வரவுதன்னையியம்புதியெந்தையென்றாள். (உஙஎ)

வேறு.

கிள்ளையன்னசொற்கிஞ்சுகச் o செய்யவாய், வள்ளிதன்மையைவாரணத்தின்பிணாப்
பிள்ளைகேட்பப்பெருந்தகைமேலையோ, னுள்ளமாமகிழ்வாலிவையோதுவான். ()

நீண்டகோலத்துநேமியஞ்செல்வர்பா, லீண்டைநீவிரிருவருந்தோன்றினீ
ராண்டுபென்னிரண்டாமளவெம்புயம், வேண்டிநின்றுவிழுத்தவமாற்றினீர். (உஙகூ)

நோற்றுநின்றிடுநுங்களையெய்தியா, மாற்றவும்மகிழ்ந்தன்பொடுசேருதும்
வீற்றுவீற்றுவிசும்பினும்பாரினுந், தோற்றுவீரென்றுசொற்றனந்தொல்லையில். ()

சொன்னதோர்முறைதூக்கியிருவருண், முன்னமேவியநீமுகிலூர்தரு
மன்னன்மாமகளாகிவளர்ந்தனை, யன்னபோதுனையன்பொடுவேட்டனம். (உசக)

---

* பவளவண்ணன் - காஞ்சிபுரத்தில் வீராட்டகாசேசுரரைப் பூசித்துக் கருநிறத்
தையொழித்துப் பவளநிறத்தைப் பெற்ற விட்டுணு.

o கிள்ளையன்னசொற்கிஞ்சுகம் என்பதற்கு கிளிபோன்ற நிரம்பாமொழியைப்பே
சும் முருக்கம்பூ என்பது பொருள். இங்ஙனம் பொருள்கொள்ளல் நச்சினார்க்
கினியார்க்குடன்பாடு.

Digitized By Roja Muthiah Research Library

பிளவுகொண்டபிறை * நுதற்பேதைநின், னிளையளாய்வருமிங்கிவள்யாம்பகர்
விளைவுநாடிவியன்றழன்மூழ்கியே, வளவிதாங்தொல்வடிவினைநீக்கினள். (உ௪உ)

பொள்ளெனத்தன்புறவுடல்பொன்றலு, முள்ளினுற்றவுருவத்துடனெழீஇ
வள்ளிவெற்பின்மரம்பயில்சூழல்போய்த், தெள்ளிதிற்றவஞ்செய்திருந்தாளரோ. ()

அன்னசாரலதனிற்சிவமுனி, யென்னுமாதவனெல்லையில்காலமாய்
மன்னிநோற்புழிமாயத்தினீரதாய்ப், பொன்னின்மானொன்றுபோந்துலவுற்றதே.

வந்துலாவுமறிதனைமாதவன், புந்திமாலொடுபொள்ளெனநோக்கலு
மந்தவேலையதுகருப்பங்கொள, விந்தமாதக்கருவினுளெய்தினள். (உ௪ரு)

வேறு.

மானிவடன்னைவயிற்றிடைதாங்கி, யானதொர்வள்ளியகழ்ந்தபயம்பிற்
றானருள்செய்துதணந்திடவங்கட், கானவன்மாதொடுகண்டனனன்றே. (உ௪சு)

அவ்விருவோர்களுமாங்கிவடன்னைக், கைவகையிற்கொடுகாதலொடேகி
யெவ்வமில்வள்ளியெனப்பெயர்நல்கிச், செவ்விதுபோற்றினர்சீர்மகளாக. (உ௪எ)

திருந்தியகானவர்சீர்மகளாகி, யிருந்திடுமெல்லையில்யாமிவள்பாற்போய்ப் [ம்.
பொருந்தியும்வேட்கைபுகன்றுமகன்றும், வருந்தியும்வாழ்த்தியுமாயைகள்செய்தே

அந்தமின்மாயைகளாற்றியதற்பின், முந்தையுணர்ச்சியைமுற்றுறநல்கித்
தந்தையுடன்றமர்தந்திடவென்ன, விந்தமடந்தையையாமணஞ்செய்தேம். (உ௪கூ)

அவ்விடைமாமணமாற்றியகன்றே, யிவ்விவடன்னுடனிம்மெனவேகித்
தெய்வவரைக்கணோர்சில்பகல்வைகி,மைவிழியாயிவண்வந்தனமென்றான்.(உரு0)

என்றிவைவள்ளியற்கையனைத்தும், வென்றிடுவேற்படைவீரனியம்ப
வன்றிறல்வாரணமங்கைவினாவி, நன்றெனவொன்றுநவின்றிடுகின்றாள். (உருக)

வேறு.

தொல்லையின்முராரிதன்பாற்றோன்றியவிவளும்யானு
மெல்லையில்காலநீங்கியிருந்தனமிருந்திட்டேமை
யொல்லையிலிங்ஙன்கூட்டியுடனுறுவித்தவுன்றன்
வல்லபந்தனக்கியாஞ்செய்மாறுமற்றில்லையென்றாள். (உருஉ)

மேதகுமெயினர்பாவைவிண்ணுலகுடையநங்கை
யோதுசொல்வினவிமேனாளுனக்கியான்றங்கையாகு
மீதொருதன்மையன்றியிம்மையுமிளையளானே
னாதலினுய்ந்தேனின்னையடைந்தனனளித்தியென்றாள். (உருங)

வன்றிறற்குறவர்பாவைமற்றிதுபுகன்றுதெளவை
தன்றிருப்பதங்கடம்மைத்தாழ்தலுமெடுத்துப்புல்லி
யின்றுனைத்துணையாப்பெற்றேனெம்பிரானருளும்பெற்றே
னென்றெனக்கரியதுண்டோவுளந்தனிற்சிறந்ததென்றாள். (உருச)

இந்திரனருளுமாதுமெயினர்தம்மாதுமிவ்வா
றந்தரஞ்சிறிதுமின்றியன்புடனளவளாவிச்
சிந்தையுமுயிருஞ்செய்யுஞ்செயற்கையுஞ்சிறப்புமொன்றாக்
கந்தமுமலரும்போலக்கலந்துவேறின்றியுற்றார். (உருரு)

* பிளவுகொண்டபிறை - எண்ணாட்டிங்கள்.

Digitized By Roja Muthiah Research Library

இங்கிவரிருவர் தாமுமியாக்கையுமுயிரும்போலத்
தங்களில்வேறின்றாகிச்சரவணதடத்தில்வந்த
புங்கவன்றன்னைச்சேர்ந்துபோற்றியேயொழுகலுற்றார்
கங்கையும்யமுனைதானுங்கலைகடலுடன்சேர்ந்தென்ன. (உ௫௬)

கற்றையங்கதிர்வெண்டிங்களிருந்துழிக்கனலிப்புத்தே
ளுற்றிடுதன்மைத்தென்னவும்பர்கோனுதவுமானு
மற்றைவில்வேடர்மானும்வழிபடல்புரிந்துபோற்ற
வெற்றியந்தனிவேலண்ணல்வீற்றிருந்தருளினானே. (உ௫௭)

கல்லகங்குடைந்தசெவ்வேற்கந்தனோர்தருவதாகி
வல்லியர்கிரியைஞான * வல்லியின்கிளையாய்ச்சூழப்
பல்லுயிர்க்கருளைப்பூத்துப்பவநெறி ο காய்த்திட்டன்ப
ரெல்லவர்தமக்குமுத்தியிருங்கனியுதவுமென்றும். (உ௫௮)

பெண்ணொருபாகங்கொண்டபிஞ்ஞகன்வதனமொன்றிற்
கண்ணொருமூன்றுவைகுங்காட்சிபோலெயினர்மாதும்
விண்ணுலகுடையமாதும்வியன்புடைதன்னின்மேவ
வண்ணலங்குமரனன்னார்க்கருள்புரிந்திருந்தானங்கண். (உ௫௯)

சேவலுங்கொடிமான்றேருஞ்சிறைமணிமயிலுந்தொன்னாண்
மேவருந்தகரும்வேலும்வேறுளபடைகள்யாவு
மூவிருமுகத்துவள்ளன்மொழிந்திடுபணிகளாற்றிக்
கோவிலின்மருங்குமுன்னுங்குறுகிவீற்றிருந்தமன்றே. (உ௬0)

ஆறிருதடந்தோள்வாழ்கவறுமுகம்வாழ்கவெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்ககுக்குடம்வாழ்கசெவ்வே
ளேறியமஞ்ஞைவாழ்கயானைதன்னணங்குவாழ்க
மாறிலாவள்ளிவாழ்கவாழ்கசீரடியாரெல்லாம். (உ௬௧)

புன்னெறியதனிற்செல்லும்போக்கினைவிலக்கிமேலா
நன்னெறியொழுகச்செய்துநவையறுகாட்சிநல்கி
யென்னையுமடியன் † ஆக்கியிருவினைநீக்கியாண்ட
பன்னிருதடந்தோள்வள்ளல்பாதபங்கயங்கள்போற்றி. (உ௬௨)

வேறு.

வேல்சேர்ந்தசெங்கைக்குமரன்வியன்காதைதன்னை
மால்சேர்ந்துரைத்தேன்றமிழ்ப்பாவழுவுற்றதேனு
நூல்சேர்ந்தசான்றோர்குணமேன்மைநுவன்றுகொண்மின்
பால்சேர்ந்ததண்ணீர்ப்புனலும்பயனாவதன்றே. (உ௬௩)

பொய்யற்றகீரன்முதலாம்புலவோர் ‡ புகழ்ந்த
வையற்கெனதுசிறுசொல்லுமொப்பாகுமிப்பார்
செய்யுற்றவன்மாலுமைபூசைகொடேவதேவன்
வையத்தவர்செய்வழிபாடுமகிழுமன்றே. (உ௬௪)

---

* முருகக்கடவுளுக்கு ஞானசத்தி தெய்வயானையம்மை; கிரியாசத்தி வள்ளியம்மை.

ο பவநெறி - பிறவிவழி.

† அடியன் - குறிப்புவினைமுற்று.

‡ கீரன் முதலாம் பொய்யற்ற புலவோர் - நக்கீரர் முதலாகிய பொய்யடிமையில்லாப் புலவர்கள்.

Digitized By Roja Muthiah Research Library

என்னாயகன்விண்ணவர்நாயகன்யானைநாம
மின்னாயகனான்மறைநாயகன்வேடர்நங்கை
தன்னாயகன்வேற்றனிநாயகன்றன்புராண
நன்னாயகமாமெனக்கொள்கவிஞ்ஞாலமெல்லாம். (௨௬௫)

வற்றாவருள்சேர்குமரேசன்வண்காதைதன்னைச்
சொற்றாருமாராய்ந்திடுவாருந்துகளறுமே
கற்றாருங்கற்பான்முயல்வாருங்கசிந்துகேட்க
உற்றாரும்வீடுநெறிப்பாலினுறுவரன்றே. (௨௬௬)

பாராகியேனைப்பொருளாயுயிர்ப்பன்மையாகிப்
பேராவுயிர்கட்குயிராய்ப்பிறவற்றுமாகி
நேராகித்தோன்றலிலதாகிநின்றான்கழற்கே
யாராதகாதலொடுபோற்றியடைதுமன்றே. (௨௬௭)

வள்ளியம்மைதிருமணப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௨,0௬௭.

---

தக்ஷகாண்டமுற்றுப்பெற்றது.

ஆக காண்டம் ஆறுக்குந் திருவிருத்தம் ௧0,௩௪௬.

---

## கந்தபுராணமுற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

வேலுமயிலுந்துணை.

கச்சியப்பசிவாசாரியர் திருவடி வாழ்க.

---

Digitized By Roja Muthiah Research Library

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். | தள்ளல். |
|---|---|---|---|---|
| ௮ | ௪0 | சூர்படை | சூர்ப்படை | |
| ௨௬ | ௨௮ | மஞ்சனி | மஞ்சனீர் | |
| ௫௪ | ௩௧ | தெவர்களெல்லாரும் | தேவர்களெல்லாரும் | |
| ௮௪ | ௧ | வாதியன்பரமன் | வாதியம்பரமன் | |
| ௧௨௮ | ௩௭ | | | *கூளி-இடபம். |
| ௧௫௬ | ௧௯ | வீறறிருக்கும் | வீற்றிருக்கும் | |
| ௨௪௧ | ௧௩ | நதியோரெழு | நதியோரேழு | |
| ௨௪௪ | ௨௭ | பிளிறெலிசேன்றிட | பிளிறெலிசென்றிட | |
| ௨௫0 | ௩0 | வீரிருவைகல் | வீரறுவருடங் | |
| ௩௨௬ | ௪ | முன்ணரே | முன்னரே | |
| ௩௨௭ | ௨ | கோணித்திறங் | கோணித்திறங் | |
| ௪௨௩ | ௨0 | சின்றுமாகியே | சின்னமாகியே | |
| ௪௨௫ | ௧௭ | புகன்லு | புகன்று | |
| ௪௫௯ | ௩0 | வீழ்ந்திடுகின்ற | வீய்ந்திடுகின்ற | |
| ௪௬௫ | ௨௪ | சர்ய்த்தான் | சாய்த்தான் | |
| ௪௯௯ | ௨ | மறிந்து | மறிந்த | |
| ௫௪௭ | ௧௧ | மெலுய | மேலுய | |
| ௫௬௮ | ௩௬ | கள்வனதற்றலென்று | கள்வனதாற்றலென்று | |
| ௬௧௩ | ௨௬ | வெரின்புடை | வெரிந்புடை | |
| ௬௩௪ | ௩௪ | நாழைகோலென்று | நாழைகொலென்று | |
| ௬௪௩ | ௧௧ | மொய்ம்புகளற்றன | மொய்ம்புகமற்றன | |
| ௬௮௭ | ௨௭ | தென்ப | தென்பா | |
| ௭௨0 | ௩௩ | தறுவா | தறுமா | |
| ௭௬௧ | ௨௩ | நுணுகியு | நுணிகிய | |
| ௭௭0 | ௧௪ | வஞ்சினன்வின்று | வஞ்சினனவின்று | |
| ௮௩௮ | ௪ | யேறவெண்டு | யேறவேண்டு | |
| ௮௮௩ | ௧0 | வண்மையே | வுண்மையே | |
| ௯0௭ | ௧௯ | விர்தைமால்வரை | விந்தமால்வரை | |

Digitized By Roja Muthiah Research Library